உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(ஆறாம் தொகுதி) 6/7

வம்பறா வரிவண்டுச் சருக்கம் - III வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் - I



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(ஆறாம் தொகுதி) 6/7

(பாடல் எண்கள் : 3155 - 3747)

வம்பறா வரிவண்டுச் சருக்கம் - (III)

வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் - (I)

கோவை - வழக்கறிஞர்

திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்

தொகுத்தியற்றிய

உரையுடன்

பதிப்பாசிரியர்

டாக்டர் இராச. வசந்தகுமார்

நிறுவன வேந்தர்

கற்பகம் உயர்கல்விகலைக்கழகம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்

கற்பகம் உயர்கல்விகலைக்கழகம்

(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

ஈச்சனாரி, கோவை - 21.

நூற்குறிப்பு

நூல் பெயர் : **பன்னிரண்டாம் திருமுறை**
(ஆறாம் தொகுதி) 6/7

மூல நூலாசிரியர் : **சேக்கிழார் சுவாமிகள்**

உரை நூலாசிரியர் : **சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார்,** B.A.

நூல் வகை : செய்யுள் மற்றும் உரைநூல்

வெளியீடு : **பன்னிரு திருமுறை ஆய்வு மையம்**
கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் (நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)
கோயம்புத்தூர்.

வெளியீட்டு எண் : **64**

வெளியிடும் நாள் : **23 - 06 - 2018**

பக்கங்கள் : **920**

தாள் : மேப்லித்தோ 80 gsm

அளவு : கிரவுன் 1/8

அச்சகம் : செஞ்சுடர் அச்சகம்
கோ.வா.பாளையம்,
போத்தனூர், கோவை – 23.
செல் : 98431 74238





திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (ஆறாம் தொகுதி) 6/7

பொருளடக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (ஆறாம் தொகுதி) 6/7

வழிபாட்டுக் கருத்தரங்கம்

23.06.2018, 24.06.2018 - சனி, ஞாயிறு

வம்பறா வரிவண்டுச் சருக்கம் III,
வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் I

எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும்
மன்னிய சீர்ச்சங்கரன் தாள்மறவாமை பொருள்அன்றே
துன்னிய வேடம் தன்னைத் துறவாதே தூய சிவம்
தன்னைமிகும் அன்பினால் மறவாமை தலைநிற்பார். - பெரியபுராணம்

பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன்அடி சேரா தார். - திருக்குறள் (10)

1. உயிரின் நோக்கம் / இலட்சியம் - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) "ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

3. வகுத்துக்கொண்ட நெறிகள்

1) சிவபூசை - விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை - திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் - நல்விழாப் பொலிவு காணுதல் - காண்பித்தல்.

அன்புடையீர் வணக்கம்.

4281 பாடல்களைக் கொண்ட பெரியபுராண தேவாமிர்தத்துக்கு 7 தொகுதிகளாக உரை வெளியிடத் திருவருள் கூட்ட 5 தொகுதிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் இத்தொகுப்பில் (6) இரண்டாம் காண்டம் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தின் மூன்றாம் பாகம் தொடர்கிறது. 6ஆம் தொகுதியில் வம்பறா வரிவண்டு சருக்கத்தில் இடம்பெற்றுள்ள ஏனைய நாயன்மார்களான ஏயர்கோன் கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர், சோமாசிமாறர் ஆகியோரது புராணங்களும், வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தில் இடம்பெற்றுள்ள சாக்கியர், மூர்க்கர், சிறுத்தொண்டர் ஆகியோரின் புராணங்களும் இடம்பெறவுள்ளன.

இந்நாயன்மார்களின் வரலாற்றுக் குறிப்புக்களைப் பதிப்புரையில் பதிப்பிக்க முனையும் பொழுதில் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் வாழும் சைவச் சிந்தனையாளர்களில் முதன்மையானவரும், பதிப்பாசிரியர் போன்றோரைச் சைவர்களாக உருவாக்குவதில் முனைப்புக் காட்டி வருபவரும் பன்னிரு திருமுறைகளுக்கும் சொல்லகராதி வெளிவர ஆசிரியராகவும், உறுதுணை நாயகராக இருப்பவரும், "வேண்டேன் புகழ்" என்று வாழ்பவருமான சைவத்திரு. இராம. இருசுப்பிள்ளை அவர்கள், தெய்வச்சேக்கிழாரைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி அஞ்சலில் அனுப்பியிருந்தார். அக்கட்டுரை எளியேனின் பதிப்புரை தயாரிக்கும் பணியை இலகுவாக்கியது. அக்கட்டுரையை அப்படியே கீழ்க்காணுமாறு பதிப்பித்து மகிழ்கிறோம்.

சேக்கிழாரின் வேட்கை

அருள்மொழித் தேவராகிய சேக்கிழார் பெருமான், அம்பலக் கூத்தனாம் ஆடலம் பெருமான் உலகெலாம் என அடியெடுத்துக் கொடுக்க, அதனைத் தொடக்கமாகக் கொண்டு நூலின் முதலில், நடுவில், இறுதியில் இடம்பெறுமாறு வைத்துத் தான் எழுத இருந்த திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணத்தை எழுதி முடித்தார். இப்பெருமானார்க்கு முதல் நூல்களாக கிடைத்தவை நம்பியாரூரர் எனும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இயற்றிய திருத்தொண்டத் தொகையும் அவரைச் சார்ந்து திருத்தொண்டத் தொகையை வகைப்படுத்திச் சொன்ன, நம்பியாண்டார் நம்பி அவர்களால் இயற்றப் பெற்ற திருத்தொண்டர் திருவந்தாதியும் ஆகும்.

சுந்தரர்பெருமான் திருத்தொண்டத் தொகையில் ஒன்பது திருக்கூட்டத்தாரையும் அறுபது தனியடியார்களையும் குறிப்பிட்டுள்ளார். நம்பியாண்டார் நம்பி அவர்கள் சுந்தரர் பெருமானையும், அவரின் தாய் இசைஞானியாரையும் தந்தையார் சடையனாரையும் சேர்த்து அறுபத்து மூன்று தனியடியார்கள் என்று குறிப்பிட்டார்.

இவ்வரலாற்று நூலில் இடம்பெற்றுள்ள அடியார்கள் அனைவரும் சுந்தரர் காலமாகிய கி.பி. 8—ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலத்தவர்கள். இவர்கள் எல்லாரும் சிவனடி மறவாச் சிந்தையர், உலகம் உய்ய நற்பணி புரிந்த திருவருட் செல்வர்களாகிய சிவனடியார்கள் ஆவர். இவர்தம் சிறப்புக்களைக் கூறவந்த சேக்கிழார்,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" எனவும்

"ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியலாது ஒன்றிலார்
ஈர அன்பினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ"

என்று கூறி அவர்களின் எளிமை, வேண்டாமை அன்ன விழுச்செல்வம் போற்றிய பண்பு, தன்னை வென்றாளும் தகைமை மிக்க வீரம், ஈசனுக்கும் அவர் அடியார்கட்கும் தொண்டு செய்வதே கடன் எனக் கொண்டு அவ்வாறு செய்து வாழ்ந்த பெருமை, நடுநிலையொடு விளங்கிய மனம், மொழி, செயல் ஆகியனவற்றை மேற்கொண்டு வாழ்ந்த வாழ்க்கைச் சிறப்பு என்பன போன்ற சிறப்பியல்புகளை மேற்கொண்டு வாழ்ந்த அடியார் பெருமக்களின் வரலாற்றுப் பெட்டகம் பெரிய புராணம் என்பதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

நாயன்மார்கள் எல்லாரும் சிவனார் திருவடியில் சேர்ந்து வாழ்கின்றார்கள் என்றாலும், சிலரை அம்மையப்பனாய் காட்சி தந்து தம்மொடு அழைத்துச் செல்கிறார் இறைவன். அவர்களில் பலரும் உயர்ந்த சாதியினர் இல்லை என்பதனை நினைத்துப் பார்க்கின்றபோது சேக்கிழார் பெருமான் இந்நூலில் சாதிவேறுபாடற்ற சமுதாயம் அமைய வேண்டும் என்பதற்காக அக்காலத்தில் இருந்த சாதி வேறுபாட்டினை நினைந்து நிகழ்ச்சிகளை அமைத்துள்ளது போலத் தெரிகின்றது.

"இறைவன் விசும்பினை ஊடு உமையம்மையொடு விடைமேல் தோன்றி, வென்ற ஐம்புலனால் மிக்கீர், விருப்புடன் இருக்க நம்பால், என்றும் இவ் இளமை நீங்காது" எனக்கூறி திருநீலகண்டரையும் அவர்தம் மனைவியாரையும் அழைத்துச் செல்கிறார். அவர் குயவர் சாதியைச் சேர்ந்தவர். வணிகர் குலத் தோன்றலாகிய இயற்பகையாரை பழுது இலாதாய் நண்ணிய மனைவியோடு நம்முடன் போதுக என்று இறைவர் அழைத்துச் செல்கிறார். வேளாண்குடித் தோன்றலான இளையான்குடிமாறனாரையும் அவர்தம் துணைவியாரையும் "ஏலவார் குழலியோடு இடப வாகனனாய்த் தோன்றி, அன்பனே அன்பர் பூசை அளித்த நீ அணங்கினோடும் என்பெரும் உலகம் எய்தி இன்பம் ஆர்ந்து இருக்க" எனக்கூறி அழைத்துச் செல்கிறார். மலாடர் கோமானாகிய மெய்ப்பொருள் நாயனார்க்கு எதிரே நின்று காட்சி தந்து "இடையறாமல் அவரை வழிபடும் கொள்கை ஈந்து" அழைத்துச் செல்கிறார். வேடர் குலத்தில் உதித்த திண்ணப்பன் எனும் கண்ணப்பனார்க்கு முன்னர்த் தோன்றி அவர் கையைப் பற்றி என் உலகத்தில் மாறு இலாதாய் என் வலத்தில் நிற்க எனக்கூறி அழைத்துச் செல்கிறார். வேளாண் குலத் தோன்றலான அரிவாள் தாய நாயனார்க்கு முன்னர் இடப வாகனனாய்த் தோன்றி உன் செயல் உயர்ந்து "உன் மனைவியோடு நம் உலகில் வாழ்வாயாக" என விடைமேல் ஏற்றிச் செல்கிறார். இடையர் குலத்தில் உதித்த ஆனாய நாயனாரை அவர் பாடியவண்ணமே அப்படியே கைலைக்கு அழைத்துச் செல்கிறார்.

வண்ணார் குலத்தினரான திருக்குறிப்புத் தொண்டர்க்கு உமாதேவியோடு காட்சி தந்து "மன்உலகு பிரியாது வைகுவாய்" எனக்கூறி அழைத்துச் செல்கிறார். சண்டேசுர நாயனார்க்குச் சோதி சொரூபமாய்த் தோன்றி, "உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்கு ஆகுவதாக; உனக்குச் சண்டீசர் பதம் தந்தோம்" எனக்கூறி அழைத்துச் செல்கிறார். அவர் அந்தணச் சாதியினர். வணிகர் குலத்துதித்த காரைக்கால் அம்மையாரை "அம்மையே" என அழைத்துத் தன் சேவடிக்கீழ் என்றும் இருக்கும் அருளைப் பொழிந்தார். இப்படிப் பால் வேறுபாடு இன்றி, சாதி வேறுபாடு இன்றி இறைவரே தோன்றி கைலைக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லியுள்ளதில் சண்டீசர் ஒருவர் மட்டும் உயர்ந்த சாதியினர். மற்ற அனைவரும் வேறுவேறு சாதியர். இவற்றை நினைத்துப்பார்த்தால், சேக்கிழார், திட்டம் இட்டே செய்திகளைத் தம் புராணத்தில் அமைத்துள்ளார் என்பது புரியும். அவர்தம் புரட்சி மனப்பான்மை நன்கு தெளியும்.

அக்கால மக்களிடையே பிணக்குகள், குழப்பங்கள் வரக்கூடாது; தன் குறிக்கோள் செவ்வனே நிறைவேறவேண்டும் என்ற சிந்தனைத் திறத்தால் ஞானசம்பந்தர்க்குப் பல நூறு பாடல்களைக் கொண்ட புராணம் பாடியுள்ளார். 4253 பாக்களைக் கொண்ட திருத்தொண்டர் புராணத்தில் ஞானசம்பந்தர் புராணத்திற்கு மட்டும் 1256 பாடல்கட்குமேல் ஒதுக்கியுள்ளார். இது அவரின் திட்டம் இட்டுச் செயல்படும் சிந்தனைத் திறத்தைக் காட்டுகிறது.

மேலும், அக்காலத்தில் அந்தணர் கால்களில் மற்றவர்கள் விழுவார்கள். அதனை மாற்றி அப்பூதி என்ற அந்தணரையும் அவர்தம் குடும்பத்தவரையும் வேளாளரான நாவுக்கரசர் காலில் விழவைத்திருப்பது பெரிய புரட்சியாகும். அதுவே போன்று திருநாளைப் போவாராம் நந்தனார் தில்லைக்குள் நுழைந்தால் தில்லைவாழ் அந்தணர்கள் தொல்லை தருவார்கள் என எண்ணி அஞ்சி உள் நுழையாமல் தில்லையின் எல்லையில் இருந்து தன் பிறப்பை எண்ணி அழுது புலம்புகின்றார். ஆனால் யாருக்காக பயந்து கொண்டிருந்தாரோ அவர்களையே அனுப்பி, இவரை வணங்கச் செய்து, "ஐயரே!" அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம் வாருங்கள்!" என அழைத்துச் செல்ல வைத்துள்ளார். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கிற போது சாதி வேறுபாடுகளை வைத்து ஏற்றத்தாழ்வு கருதும் இயல்பை மக்கள் மனத்தில் இருந்து நீக்க எண்ணி இவ்வாறு செய்தாரோ என எண்ண வேண்டியுள்ளது. வேறு வகையாகவும் இந்நிகழ்வுகளை அமைத்திருக்கலாம், இப்படி அவர் திட்டம் இட்டுச் செய்து காட்டிச் சென்றிருந்தாலும் இன்னும் சாதி ஒழிந்தபாடில்லை. அறிவுடைச் சமுதாயம் இந்த வேறுபாட்டை வைத்தே மக்களைச் சீரழித்து வருகின்றது. பாரதியார் சொன்னது போல "படிச்சவன் சூதும் வாதும் பண்ணினால் போவான் போவான்", "ஐயோ என்று போவான்" என்பது நடந்து கொண்டுதான் உள்ளது.

இன்றைய குழப்பங்களையும் கொந்தளிப்புகளையும் தொலைப்பது ஆடலம்பெருமான் அருளில் உள்ளது. விரைவில் அம்பலவாணப் பெருங்கூத்தன் ஆவன செய்து மக்கட் சமுதாயத்தை ஒருமைப்பாட்டு உணர்வுடன் வாழவைப்பான் என்பதில் ஆழங்காற்பட்டு வேண்டி நிற்போமாக! என்று நிறைவுசெய்து,

இதுவரை பதிப்பித்து வெளிவந்துள்ள நமது பன்னிரு திருமுறை ஆய்வுமைய நூல்களைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

முதல் திருமுறை	டிசம்பர் 27, 28 - 2014
இரண்டாம் திருமுறை	பிப்ரவரி 21, 22 - 2015
மூன்றாம் திருமுறை	ஏப்ரல் 18, 19 - 2015
நான்காம் திருமுறை	ஜீன் 27, 28 - 2015
ஐந்தாம் திருமுறை	ஆகஸ்டு 29, 30 - 2015
ஆறாம் திருமுறை	அக்டோபர் 24, 25 - 2015
ஏழாந் திருமுறை	டிசம்பர் 26, 27 - 2015
எட்டாம் திருமுறை - I	பிப்ரவரி 27, 28 - 2016
எட்டாம் திருமுறை - II	ஏப்ரல் 23 - 2016
ஒன்பதாம் திருமுறை	ஏப்ரல் 24 - 2016
பத்தாம் திருமுறை - I	ஜீன் 26, 27 - 2016
பத்தாம் திருமுறை - II	ஆகஸ்ட் 27, 28 - 2016
பத்தாம் திருமுறை - III	அக்டோபர் 22, 23 - 2016
பதினொன்றாம் திருமுறை - I	டிசம்பர் 24, 25 - 2016
பதினொன்றாம் திருமுறை - II	பிப்ரவரி 18, 19 - 2017
பதினொன்றாம் திருமுறை - III	ஏப்ரல் 29, 30 - 2017
பதினொன்றாம் திருமுறை - IV	ஜுன் 24, 25 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (முதல் தொகுதி) 1/7	ஆகஸ்டு 26, 27 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (இரண்டாம் தொகுதி) 2/7	அக்டோபர் 28, 29 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- முதல் பாகம்) 3(1)/7	டிசம்பர் 23 - 2017

பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- இரண்டாம் பாகம்) 3(2) 7	டிசம்பர் 24 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (நான்காம் தொகுதி) 4 7	பிப்ரவரி 24, 25 - 2018
பன்னிரண்டாம் திருமுறை (ஐந்தாம் தொகுதி) 5 7	ஏப்ரல் 21, 22 - 2018

ஏழு தொகுதிகளாகப் பெரியபுராணத்தைப் பதிப்பிக்கத் திருவருள் கூட்டுவித்த நிலையில் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பித்த உரை இருக்க இன்னொரு உரை புதிதாக எழுத முயற்சிக்க வேண்டிய தேவையில்லை என அடியார் பெருமக்கள் நினைத்ததற்கேற்ப, அப்பதிப்புரிமை பெற்றிருந்த சி.கே.எஸ் அவர்களின் குடும்பத்தினரை அணுகினோம். அவர்களும் மனமுவந்து ஒருமுறை மட்டும் பதிப்பிக்க அனுமதி அளித்தார்கள். அப்பதிப்புரிமையைக் கட்டிக் காத்துவந்தவர்கள் தெய்வத்திரு சிவக்கவிமணி அவர்கள் குடும்பத்தைச் சார்ந்த திரு. கண்ணாயிரம், திருமதி. மங்கையர்க்கரசி கண்ணாயிரம், திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர்களாவர். இந்நூல் பதிப்பு ஏற்பாடுகள் நடந்து வரும் நாட்களில் **5–4–2018** அன்று சிவபெருமான் திரு. கண்ணாயிரம் அய்யா அவர்களைத் தம் பணிக்காகக் கயிலைக்கு அழைத்துக் கொண்டார். அவர்தம் பணிகள் அங்கு தொடர சிவபரம்பொருளை வேண்டி மற்ற இருவருக்கும் மனமுவந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். அம்முறையில் ஆறாவது தொகுதியாக வெளியிடப்படும் இந்நூலை வெளியிட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திருவருள் கூட்டுவித்த நிலையில் கீழ்க்காண் அட்டவணைப்படி நிகழ்வுகள் நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (ஆறாம் தொகுதி)

வழிபாட்டுக் கருத்தரங்கம்

நிகழ்ச்சி நிரல்

சொற்பொழிவாளர்/நாள்/நேரம்	தலைப்பு	தொடர் பாடல் எண்கள்	பாடல் எண்ணிக்கை
பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள் 23.06.2018 சனி காலை 9.00 - 11.00	ஏயர்கோன் கலிக்காம நாயனார்	3155-3228	74
பேராசிரியர் **புரிசை நடராசன்** அவர்கள் 23.06.2018 சனி நண்பகல் 11.00 - 01.00	ஏயர்கோன் கலிக்காம நாயனார்	3229-3302	74
சிவத்திரு **மதன்முரளி** அவர்கள் 23.06.2018 சனி பிற்பகல் 02.00 - 04.00	ஏயர்கோன் கலிக்காம நாயனார்	3303-3375	73
சிவத்திரு **குடவாசல் இராமமூர்த்தி** அவர்கள் 23.06.2018 சனி மாலை 04.00 - 06.00	ஏயர்கோன் கலிக்காம நாயனார்	3376-3450	75
சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 24.06.2018 ஞாயிறு காலை 09.00 - 11.00	ஏயர்கோன் கலிக்காம நாயனார்	3451-3524	74
சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள் 24.06.2018 ஞாயிறு நண்பகல் 11.00 - 01.00	ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருமூலதேவ நாயனார்	3525-3563 3564-3591	39 28
சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள் 24.06.2018 ஞாயிறு பிற்பகல் 02.00 - 04.00	தண்டியடிகள் நாயனார் மூர்க்க நாயனார் சோமாசிமாற நாயனார் சுந்தரர் துதி சாக்கிய நாயனார் சிறப்புலி நாயனார்	3592-3617 3618-3629 3630-3634 3635 3636-3653 3654-3659	26 12 5 1 18 6
முதுமுனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள் 24.06.2018 ஞாயிறு மாலை 04.00 - 06.00	சிறுத்தொண்ட நாயனார்	3660-3747	88
மொத்தம்			593

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்டோருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு.மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,

இராச. வசந்தகுமார்
நிறுவன வேந்தர்
கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்
(நிகர்நிலைப் பல்கலைக்கழகம்)

இடம் : கோயமுத்தூர்
நாள் : 17.05.2018



உ
சிவமயம்

திருத்தொண்டர் புராணமும் - உரையும் - ஆறும் பகுதி

(வம்பறு வரிவண்டுச் சருக்கம் 3ம் பாகமும்,
வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் 1ம் பாகமும்)

பொருளடக்கம்

உ

சிவமயம்

ஆறாம் தொகுதியின் முன்னுரை

1. ஐந்தாம் பகுதி 1-6-50-ல் திருவருட் டுணைகொண்டு ஆச்சாள்புரம் என்னும் திருநல்லூர்ப் பெருமணப் பதியில் வெளியாயிற்று. அத்திருப்பதியிலேதான் திருஞானசம்பந்தப் பெருமான் திருமணத்திலே போதுநிலை முடிந்த வழி இறைவருடன் ஒன்றி உடனாகிய திருவடிப் பேறு பெற்றனர். அத்திருநாளிலே அவரது சரித நிறைவாகிய ஐந்தாம் பகுதி வெளியிடப் பெற்றது திருவருட் சம்மதமாகிய பெருமை. அப்போது மேலுள்ள பகுதிகள் விரைவில் வெளிவரத் திருவருள் கூட்டுக என்று பிரார்த்தித்தேன். எண்ணியார்திண்ணியாராகப் பெறினன்றே எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்துப் பெறுதல் கைகூடும். அடியேன் அவ்வாறு எந்தத் திண்மையும் பெற்றேனல்லேன். ஆதலின் அந்நாளினின்று இப்போது 2½ ஆண்டுகளின் மேலாகிய கால எல்லையில் இந்த ஆறும்பகுதியை அச்சுநிறை வேற்றி வெளியிடும் பேறு பெறுகின்றேன். VII பகுதியுடன் புராண உரை வெளியீடு நிறைவேறும். இன்னும் 500 திருப்பாட்டுக்களே அதிலுள் வெளிவர உள்ளன. அப்பகுதியுள்ளும் இப்போது 100 திருப்பாட்டுக்கள் வரை அச்சேறியுள்ளன. ஆதலின் எஞ்சியவையும் அச்சேறி இன்னும் ஓராண்டளவில் VII பகுதியுடன் புராண உரைத் திருப்பணி வெளியீடு நிறைவு கண்டு களிக்கத் திருவருளும் அன்பர்களாசியும் துணை நிற்பனவாக.

2. இப்பகுதியிற் பெருந் துணையாக நின்றன, திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்தின் அதிபர் ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் அருட்பெரும் கொடையும், என் அரிய உரிய நண்பர் Dr.சர்.ஆர்.கே.சண்முகம்செட்டியார் B.A.B.L., Kt.C.I.E.,அவர்கள் ஆதரவினால் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரின் பெருநன்கொடையும் ஆகும். இவை பற்றி எனது மனமார்ந்த நன்றியை முன்னரே அவ்வப்போதே தெரிவித்துள்ளேன்.

3. இப்பகுதியில் வெளிவந்துள்ள படங்களுள் திருவெஞ்சமாக் கூடற் படங்களை எடுத்துதவியவர் என் உறவினராகிய அன்பர், அரவக்குறிச்சி ரிவினியூ இன்ஸ்பெக்டர் திரு.C.S.கண்ணுயிர முதலியார் ஆவர். அந்தப் படங்கள் எடுக்கும் போது சடுதியில் நிகழ்ந்த தெய்விக அற்புதமாகிய, சிற்றாற்றின் மழைநீர் வெள்ளப் பெருக்கினையும், அஃது ஆசாரிய பெருமானும் ஆளுடைய நம்பிகளது அத்தலத் தேவார உண்மையினை உலகறியச் செய்த பெருமையினையும் பற்றி முன்னமே எனது அறிவிப்பில் வெளியிட்டிருக்கிறேன். இந்தத் தலப் படங்கள் எடுக்கும்போது ஒரு தெய்வீகத் திருவருள் வெளிப்பாடு நிகழ்ந்தது. இத்தலம் சிற்றாறு என்று நம்பிகள் தேவாரத்தில் போற்றப்பட்ட (இப்போது குழகனாறு, குடகனாறு என வழங்கும்) ஆற்றின் கீழ்க் கரையில் உள்ளது. அதன் பெயருக்கேற்ப அது சிறிய காட்டாறாகவே இப்போது உள்ளது. ஓர் ஆண்டில் பருவ காலத்தில் 3, 4 நாட்கள்தான் முரட்டுப் பெருக்காக நீர் பெருகிவரும். மற்ற நாட்கள் எல்லாம் அது வரட்டுப் பள்ளமாயிருக்கும். நம்பிகள் எழுந்தருளிய காலத்தில் இந்த ஆறு நீர்ப்பெருக்குடன் விளக்கியிருக்க வேண்டுமென்று கருத இடமிருக்கிறது. பதிகத்தில் ஒவ்வொரு திருப்பாட்டிலும் அந்நீர்ப் பெருக்கு, மலைப்பண்டங்களை வாரி அலைத்துவரும்

சிறப்புப் பற்றிய நம்பிகள் அருளியுள்ளார்கள். இப்போது, இதற்காகப் படம் எடுக்க அன்பர்கள் சென்றபோது ஒரு நாழிகைக்கு முன்தான் பருவமல்லாக் காலத்தில், எதிர்பாராத வண்ணமாக அந்த யாறு பெருகிப் பெருவெள்ளமாய் வந்தது தேவாரப் பதிக உண்மையை உலகுக்குக் காட்ட வந்தது போன்றிருந்தது. அதனைப் படத்திற் காணலாம். தெய்வத்திருவருள் வெளிப்பாடும் எந்தம் பரமாச்சாரியர்களாகிய நாயன்மார்களின் திருவாக்குக்களின் வாய்மைத் திறமும் கண்டு அன்பர்கள் போற்றி உய்வார்களாக. திருப்பாண்டிக் கொடுமுடிப் படங்களை அன்புடன் எடுத்துதவியவர் என் பேரன்பர் ஈரோடு இளைஞர் கல்விச் சங்கத் தலைவர் திரு.R.P.தங்கவேலு அவர்கள். திருப்பேரூர்ப் படங்களைப் பிளாக்குக்களாகவே அக்கோயில் அதிகாரிகள் உதவினார்கள். ஈழநாட்டுத் திருக்கோணமலைத் திருக்கோயில் முன்னிருந்த அமைப்பினைக் காட்டும் படம், இலங்கை அரசாங்கத்தில் Chief Translator in Tamil ஆக இருந்து ஓய்வு பெற்றிருக்கும் என் பேரன்பர் திரு.குல.சபாநாதன் அவர்கள் உதவினர். அத்திருக்கோயிலை போர்த்துகீசிய அரசினர் இடித்துத் தகர்த்தனர். அதன் முன் அவர்களே அதன் அமைப்பினைக் காட்ட வரை கீறிய படம் எழுதி வைத்திருந்தனர். அதனை மிக முயற்சியுடன் கண்டெடுத் துதவிய பெருமை அன்பர் திரு.குல. சபாநாதன் அவர்களுக்குரியது. திருக் காஞ்சிபுரம் படங்களைப் பட்டு ஜவுளி வியாபாரம் அன்பர் திரு.S.R.ஆதிநாராயண முதலியார் அவர்கள் உதவினர். ஏயர்கோன் கலிக்காம நாயனார் சரிதம் பற்றிய படங்களைப் பெறச் சீகாழி அன்பர் திரு.சோமசுந்தரம் பிள்ளை அவர்கள், ஷை கிராமம் கணக்கு திரு. வைத்தியலிங்கம் பிள்ளை, நிர்வாக அதிகாரி திரு.முத்துசாமி பிள்ளை, சீகாழி மிராசுதார் திரு. M.T.K.குழந்தைவேல் செட்டியார் ஆகிய இவர்கள் செய்த பேருதவி பற்றி முன்னமே அறிவித்திருக்கிறேன். திருக்கேதாரம் படங்களை மிக்க சிரமத்துடன் நேரிற்கண்டு பெற்று அனுப்பிய அன்பர் முத்துப்பட்டினம் திரு.சொ. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள். திருவொற்றியூர், ஞாயிறு, திருமயிலாப்பூர், திருக்கச்சூர்ப் படங்களை எடுத்து உதவியவர் அன்பர் திரு.P.E.காபாலி அவர்கள். இவர்கள் எல்லாருக்கும், மற்றும் இவ்வகையில் உதவிய எல்லா அன்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை அறிவித்துக் கொள்கிறேன்.

4. படிப்பவர்கள் இலகுவில் வாங்கிப் பயனடையும் பொருட்டு இப்பகுதியில் வரும் திருமூலதேவ நாயனார் - ஏயர்கோன் கலிக்காம நாயனார் - சிறுத்தொண்ட நாயனார் சரிதங்களைத் தனிப் பதிப்பாகவும் வெளியிட்டுள்ளேன்.

5. யாழ்ப்பாணம் அன்பர் திரு.மு.மயில்வாகனம் அவர்கள் இவ்வெளியீட்டைப் பற்றிய உதவியின் பொருட்டு அவ்வூர், ''இந்து சாதனம்'' பத்திரிக்கையில் விண்ணப்பம் வெளியிட்டுப் பொருள் திரட்டி உதவினர். அவர்களுக்கு என் நன்றி உரியது.

அன்பர்கள் ஆதரவும் திருவருளும் முன்னிற்க.

கோவை
சேக்கிழார் நிலயம்
1—2—1953

அடியேன்
C.K.**சுப்பிரமணிய முதலியார்**
உரை ஆசிரியர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஆறாம் தொகுதியின் இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இப்புராண உரை வெளியீட்டில் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தின் பிற்பகுதியும் வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தின் முற்பகுதியும் சேர்ந்த இந்த ஆறாவது பகுதியின் முதற்பதிப்பு உரையாசிரியர் சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்களால் **1-2-1953**-ல் வெளியிடப்பட்டது. அதன் பிறகு பதினாறு ஆண்டுகள் ஒன்பது திங்கள் கழித்து இதன் இரண்டாம் பதிப்பு வெளிவருவது திருவருளின் செயலாலாகும்.

இடைப்பட்ட இந்த நீண்டகால அளவில் பல செயல்கள் நிகழ்ந்து போயின. இவ்வுரை நூலின் முதற்பகுதியின் இரண்டாம் பதிப்பு உரையாசிரியர் அவர்களாலேயே 1960 ஆம் ஆண்டில் வெளியிடப்பெற்றது. அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார்கள். கால மாறுதலால் அச்சுக்கூலி, காகித விலை, கட்டடக் கூலி போன்ற செலவுகள் பல மடங்கு உயர்ந்து இவ்வுரைநூற் பகுதிகளின் மறுபதிப்புப் பணியை மிகவும் அரியதாக்கின. திருவருளின் துணையால் பிறகு இவ்விடையூறுகளை எல்லாம் ஒருவாறு கடந்து இவ்வுரை நூலின் இரண்டாம் பகுதி, மூன்றாம் பகுதியின் இருபாகங்கள் ஆகியவற்றின் இரண்டாம் பதிப்புக்கள் வெளியாயின. இன்று ஆறாவது பகுதியின் இரண்டாம் பதிப்பு வெளிவருகின்றது.

இவ்வுரைநூற் பகுதிகளின் இரண்டாம் பதிப்புக்களை அச்சிட்டு உதவும் பணியைச் சென்னை - இராயப்பேட்டை, திரு. மு. நாராயணசாமி முதலியார் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் வழக்கம்போல் இப்பகுதியையும் தமது முருகன் அச்சகத்தில் மிகவும் சிறந்த முறையில் அச்சிட்டு உதவியுள்ளார்கள். அவர்களுக்கு எனது கடப்பாடுடைய நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இவ்வுரை நூலின் ஏனைய மறு பதிப்புக்களும் தொடர்ந்து விரைவில் வெளிவரத் துணை செய்யுமாறு திருவருளை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்

க. மங்கையர்க்கரசி

சேக்கிழார் நிலையம்

கோயம்புத்தூர்

1-11-1969

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆறாம் தொகுதியின் மூன்றாம் பதிப்பின் முன்னுரை

இப்புராண உரை வெளியீட்டில் வம்பரு வரிவண்டுச் சருக்கத்தின் பிற்பகுதியும் வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தின் முற்பகுதியும் சேர்ந்த இந்த ஆருவது பகுதியின் முதற்பதிப்பு உரையாசிரியர் சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்களால் 1-2-1953-ல் வெளியிடப்பட்டது. அதன் பிறகு பதினறு ஆண்டுகள் ஒன்பது திங்கள் கழித்து இதன் இரண்டாம் பதிப்பு 1-11-1969-ல் என்னல் வெளியிடப்பட்டது. மேலும் 46-ஆண்டுகள் சென்று திருத்திய பதிப்பை நான் திருவருள் துணை கொண்டு வெளியிடுகின்றேன். கால மாறுபாட்டால் நூல் பதிப்பில் பல வியக்கத்தக்க மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. அச்சிடுதற்கான தாள்களின் விலை, கட்டடக்கூலி, படங்கள் அமைக்கும் முறை ஆகியவற்றிலும் மாறுதலும் செலவும் மிகுந்துவிட்டன. தமிழகத்தில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் பலர் இவ்வுரைப் பகுதிகளை விரும்பி வாங்குகின்றனர். அவர்கள் ஆதரவு இவ்வுரைப் பகுதிகளைத் தொடர்ந்து வெளியிட ஊக்கமளிக்கின்றது.

இப்பதிப்பை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய சிவகாசி அசோக் கணினி மையத்தின் உரிமையாளர் திரு.மு.அசோகன் அவர்களுக்கு என் நன்றி. இந்நூலின் அச்சுப்பணியில் படிநோக்கியும், இன்னும் பலவகையானும் உதவிய எங்கள் குடும்ப நண்பர் திரு. கி. சுதாகர் அவர்களுக்கும் என் நன்றிகள். எல்லாப் பகுதிகளின் மறு பதிப்புக்களும் தொடர்ந்து வெளிவரும். இறைவன் திருவருள் துணைபுரியும்.

இங்ஙனம்
க. மங்கையர்க்கரசி

சேக்கிழார் நிலையம்
கோயம்புத்தூர்
28-01-2015
(சிவக்கவிமணி ஐயா அவர்களின் குருபூசை நாள்)

முற்சேர்க்கை - 1

ஆறாம் தொகுதியிலுள்ள படங்கள்

வ. எண்	படத்தின் பெயர்	பக்க எண்
1.	**படம்-1 -பவாநி (திருநணு)** சுவாமி சந்நிதி, அம்மை விமானம், முன் கோபுரம். பவாநி-காவிரி கூடுதுறை, தலமரம் (இலந்தை-பதரிவனம்)	103
2.	**படம்-2 -திருமயிலை** திருக்கோயில், 'மட்டிட்ட புன்னை' மரமும், அம்மையார் மயிலுருவாய்ப் பூசித்த கோயிலும், திருஞானசம்பந்தர் - பூம்பாவையார் எழுந்தருளத் திருவுருவங்கள், வாயிலார் நாயனார் சந்நிதி.	122
3.	**படம்-3 -திருப்பாண்டிக்கொடுமுடி** கோயில் - வெளித்தோற்றம், முன் கோபுரம், உட்புறமிருந்து பார்வை சுவாமி சந்நிதி, காவிரிக்கரை	123
4.	**படம்-4 -திருப்பாண்டிக்கொடுமுடி** பிரமதேவர் கோயில் கொண்டுள்ள வன்னி மரம், வன்னிமரத்தடியில் பிரமதேவர், வன்னிமரத்தை அடுத்து விஷ்ணு கோயில், அம்மன் சந்நிதி உட்புறம் வன்னிமரத்திலிருந்து பார்வை சுவாமி கோயில் விமானமும், கோபுரமும், கணபதி விமானமும்.	126
5.	**படம்-5, 6, 7, 8 -திருப்பேரூர்** முன்கோபுரம், திருக்குளம், திருக்கோயில் வெளிப்புறத்தோற்றம், கனகசபை மண்டபத்தில் உள்ள திருவுருவங்கள். ஸ்ரீ நடேசப்பெருமான், ஸ்ரீ சிவகாமசுந்தரியம்மை அறுபத்து மூவர், சுவாமி கோயில்-விமானம்	127 131 134 135
6.	**படம்-9 -வெஞ்சமாக்கூடல்** வெஞ்சமாக்கூடல்-முன்கோபுரம் உள்தோற்றங்கள் வெள்ளம் கரை புரளும் சிற்றாறும் அதன் கரையில் கோயிலும் (குடகனுறு-குழகனாறு) வெஞ்சன், மனைவி, ஒரு தெய்வத்தின் சிரம் உற்சவ மூர்த்திகள்	138
7.	**படம்-10, 11 -திருக்கச்சூர்** உள்தோற்றம் விருந்திட்ட ஈசர் சந்நிதி இரந்திட்ட இல்லடி ஆலய அர்ச்சகர்கள் இருக்கும் வீதி மருந்தீசர் ஆலயம் (மலைமேலுள்ளது) இரந்திட்ட ஈசர் சந்நிதி (மருந்தீசர் ஆலயத்திற்குப் போகும் வழியில் உள்ளது) தல ஆலயம் (விருந்திட்ட நாதர் ஆலய முன்தோற்றம்)	252 253

முற்சேர்க்கை - 2

உ

சிவமயம்

பெயர் விளக்கம்

அணியாரூர் மணிப்புற்று - *3294.* திருவாரூரில் திருமூலட்டானத்துள் புற்றுவடிவாகிய திருமேனியினுள் இறைவர் எழுந்தருளி விளங்குமிடம்.

அநிந்திதையார் - *3360.* கயிலையில் உமையம்மையாரின் சேடியர் இருவருள் ஒருவர்; ஆளுடைய நம்பிகளாகிய ஆலாலசுந்தரரின் பொருட்டு இவ்வுலகில் வந்து அவதரித்துச் சங்கிலியார் என்ற திருநாமத்துடன் வளர்ந்து, திருவொற்றியூரில் அவரை மணந்து கொண்டவர்.

அவிமுத்தம் - *3567.* ஸ்ரீகாசி

ஆலக்கோயில் - *3328.* திருக்கச்சூரில் இறைவரது கோயிலின் பெயர்.

உத்தராபதியார் - *3705.* சிறுத்தொண்டரது அன்பு நுகர்ந்து, அவருக்கு அருளும் பொருட்டு வயிரவத் திருவேடம் தாங்கி வந்த இறைவர்.

உடைய அரசு - *3304.* திருநாவுக்கரசு நாயனார்; சைவசமய பரமாசாரியர்கள் நால்வருள் ஒருவர்.

ஏயர் கோக்குடி - *3159.* ஏயர்கோன் கலிக்காம நாயனார் அவதரித்த குடி.

ஓணகாந்தன்றளி - *3345.* காஞ்சிபுரத்தில் தேவாரப் பாடல் பெற்ற தனிக்கோயில். ஓணன், காந்தன் என்ற இருவர் பூசித்த இரண்டு தனிக்கோயில்களுடையது. தொண்டை நாட்டு 3-வது பதி.

கச்சி அனேகதங்காபதம் - *3346.* காஞ்சிபுரத்தில் தேவாரப் பாடல் பெற்ற தனிக்கோயில். விநாயகப் பெருமான் பூசித்த பதி. (அனேகதம் - யானை) தொண்டை நாட்டு 4-வது பதி.

கணபதீச்சுரம் - *3700.* திருச்செங்காட்டங் குடியில் இறைவரது திருக்கோயிலின் பெயர். கணபதி பூசித்தது.

கண்ணப்பர் - *3350. (63)* நாயன்மார்களுள் ஒருவர்.

கம்பையாறு - *3242.* காஞ்சிபுரத்தில் உள்ள ஆறு. இதன் கரையில் அம்மையார் தவஞ் செய்து சிவபூசை செய்தனர்.

குண்டையூர் கிழவர் - *(கிழார்) 3164.* ஆளுடைய நம்பிகளின் தொண்டனாராகிய வேளாளர்.

கொகுடிக் கோயில் - *3271.* திருக்கருப்பறியலூரின் கோயிலின் பெயர்; கோயிலின் அமைப்புப் பற்றிப் போந்த பெயர் என்பர். கொகுடி ஒருவகை முல்லை விசேடம்.

கோட்புலியார்- *3185.* ஆளுடைய நம்பிகளின் தொண்டராகிய வேளாளர். திருநாட்டியத்தான் குடியில் வாழ்ந்தவர். வனப்பகையார், சிங்கடியார் என்ற இரண்டு அம்மையரைப் பெற்றெடுத்த தந்தையார். அரசர் சேனாதிபதியார்.

சங்கிலியார் - 3350. ஆரூருடைய நம்பிகளின் தேவிமா ரிருவருள் இரண்டாவதவர்.

சந்தனத் தாதியார் - 3696. திருவெண்காட்டு நங்கையாரின் தாதியார்.

சரவணத்துத் தனயர் - 3743. முருகப்பெருமான்.

சாக்கிய நாயனார் - 3636. 63 நாயன்மார்களுள் ஒருவர். புறச்சமய வேடத்தைத் துறவாதே சிவனடிமைத் திறத்துள் நின்றவர்.

சிங்கடியார் - வனப்பகையார் - 3192. கோட்புலியாரின் திருமகளிர்: இவர்களை ஆரூருடைய நம்பிகள் மகண்மையாகக் கொண்டருளினர்.

சிறப்புலியார் - 3653. 63 நாயன்மார்களுள் ஒருவர்.

சிறுத்தொண்ட நாயனார் - 3659. 63 நாயன்மார்களுள் ஒருவர்.

சீராளதேவர் - 3676. சிறுத்தொண்ட நாயனாரின் திருமைந்தர்.

சோமாசி மாறர் - 3629. 63 நாயன்மார்களுள் ஒருவர்.

ஞாயிறு கிழவர் - 3361.சங்கிலியம்மையாரின் தந்தையார்

ஞாயிறு- 3361. சங்கிலி யம்மையார் அவதரித்து வளர்ந்த பதி. தொண்டை நாட்டில் திருவொற்றியூருக்கு அணிமையில் உள்ளது. தலவிசேடக் குறிப்புப் பார்க்க.

தண்டகமாந் திருநாடு - 3326. திருத்தொண்டை நன்னாடு.

தண்டியடிகள் - 3592. 63 நாயன்மார்களுள் ஒருவர்.

திருக்கச்சூர் - 3328. தொண்டை நாட்டு 26-வது பதி.

திருக்கழுக்குன்றம் - 3326 - தொண்டை நாட்டு 28-வது பதி.

திருக்காஞ்சி - 3337. காஞ்சிபுரம். தொண்டை நாட்டு முதற்பதி.

திருக்காமக் கோட்டம் - 3344. காஞ்சிபுரத்தில் காமாட்சி யம்மையார் தவஞ் செய் தமர்ந்து அறம் வளர்த்தருளும் தனித் திருக்கோயில்.

திருக்காளத்தி - 3347. தொண்டை நாட்டுப் பெரும் பதி. 19-வது பதி.

திருக்குளம் - 3283. கமலாலயம் - (திருவாரூர்)

திருக்கூடலையாற்றூர் - 3254. நடுநாட்டு 3-வது பதி.

திருச்சங்கமங்கை - 3637. சாக்கிய நாயனார் அவதரித்த பதி. தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்திற் கணிமையில் உள்ளது.

திருஞானசம்பந்தர் - 3308. சைவ சமய பரமாசாரியர் நால்வருள் முதலில் வைத்தோதப் படுவர்.

திருத் தினைநகர் - 3322. நடுநாட்டில் 5-வது பதி.

திருத்தேவாசிரியன் - 3460. திருவாரூரில் கோயிலினுள் முன்புறம் திருத் தொண்டர்

திருக்கூட்டம் நிறைந்துறையும் திருக்காளையார். திருத்தொண்டத் தொகை அருளிய இடம்.

திருநாவலூர் - *3323.* நடுநாட்டில் 8-வது பதி.

திருப்பருப்பதம் - *3352.* வடநாட்டில் பாடல் பெற்ற பதி. இதனை நம்பிகள் திருக்காளத்தியிலிருந்தபடி வணங்கிப் பாடியருளினார்.

திருப்பாண்டிக் கொடுமுடி - *3239.* கொங்கு நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று.

திருப் பெருமங்கலம் - *3155.* சோழநாட்டில் காவிரி வடகரைக் கீழ்பால் உள்ள பதி. ஏயர்கோன் கலிக்காம நாயனாரது பதி. வைப்புத் தலம்.

திருப்பேரூர் - *3242.* கொங்குநாட்டிற் சிறந்த பதி

திருமகிழ் - *3402.* திருவொற்றியூர்க் கோயிலினுள் உள்ள ஏவாத திருமகிழ மரம். சங்கிலி யம்மையாரைப் பிரியாதிருக்க நம்பிகள் இதன்கீழ் சபதஞ் செய்தனர்.

திருமுதுகுன்றம் - *3255.* நடுநாட்டு 9-வது பதி. இங்கு இறைவரிடம் பெற்ற 12000 பொன்னையும் நம்பிகள் திருமணிமுத்தாற்றினிற் புகவிட்டுத் திருவாரூர்க் குளத்தில் இறைவரருளாற் பெற்று எடுத்தனர்.

திருமாற்பேறு - *3349.* தொண்டை நாட்டு 13-வது பதி.

வடதிருமுல்லைவாயில் - *3431.* தொண்டை நாட்டு 22-வது பதி.

திருமேற்றளி - *3344.* காஞ்சிபுரத்தில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற தனிக் கோயில். தொண்டை நாடடு 2-வது பதி.

திருமூலட்டானம் - (திருவாரூர்) *3277.* திருவாரூர்ப் பூங்கோயிலில் புற்றிடங் கொண்ட பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம்.

திருமூல தேவ நாயனார் - *3563.* (63) நாயன்மார்களுள் ஒருவர். ''நம்பிரான் றிருமூலர்'' என்று திருத்தொண்டத் தொகையுள் நம்பிகளால் விதந்து போற்றப் பெற்றவர். திருமந்திரமாலை 3000 அருளியவர்.

திருவதிகை வீரட்டானம் - *3569.* நடுநாட்டில் 7-வது பதி.

திருவரத்துறை - *3448.* நடுநாட்டில் 1-வது பதி

திருவல்லம் - *3349.* தொண்டை நாட்டில் 10-வது பதி

திருவன்பார்த்தான் பனங்காட்டூர் - *3347.* தொண்டை நாட்டு 9-வது பதி.

திருவாத்தி - *3700.* திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத் திருக்கோயிலினுள் உத்தராபதியார் எழுந்தருளிய ஆத்திமரம்.

திருவாமாத்தூர் - *3446.* நடுநாட்டு 21-வது பதி.

திருவாரூர் - *3262.* சோழ நாட்டுப் பெரும் பதி. ஆளுடைய நம்பிகளுக்குப் பெருக அருளிய பதி.

திருவூறல் - *3437.* தொண்டை நாட்டு *12*-வது பதி.

திருவெஞ்சமாக்கூடல் - *3246.* கொங்கு நாட்டில் தேவாரப் பாடல்பெற்ற பதிகளுள் ஒன்று. வெஞ்சமன் என்ற சிற்றரசன் ஆண்டதனால் இப் பெயர்பெற்றது.

திருவெண்காட்டு நங்கையார் - *3676.* சிறுத்தொண்டநாயனாரின் தேவியார்.

திருவெண்ணெய் நல்லூர் - *3338.* ஆளுடைய நம்பிகளை இறைவர் ஓலை காட்டி வழக்கிட்டு ஆளாகக் கொண்ட பதி. நடுநாட்டில் *14*-வது பதி.

திருவெண்பாக்கம் - *3432.* தொண்டை நாட்டில் *17*-வது பதி. நம்பிகளுக்கு இறைவர் ஊன்றுகோ லருளிய பதி. இத்தலம் இப்போது பாண்டி (பூண்டி) நீர்த்தேக்க ஏரியினுள் அமிழ்ந்துள்ளது.

திருவேற்காட்டூர் - *3617.* தொண்டை நாட்டு *23*-வது பதி. மூர்க்கநாயனாரது பதி.

திருவொற்றியூர் - *3353.* தொண்டை நாட்டு *20*-வது பதி. புவியுட் சிவலோகம் போல்வது.

நிதிக்கோமான் - *3168.* குபேரன்.

பரவையார் - *3280.* ஆளுடைய நம்பிகளின் தேவிமா ரிருவருள் முதல்வர்.

பழையனூர்த் திருவாலங்காடு - *3436.* தொண்டை நாட்டு *15*-வது பதி.

புலியூர் *(தில்லை) 3264.* சிதம்பரம்.

பூங்கோயில் - *3602.* திருவாரூரில் இறைவரது கோயிலின் பெயர்.

பொதியமலை - *3565.* தென்றிசையில் அகத்திய மாமுனிவர் எழுந்தருளி யிருக்கும் மலை. தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று.

மூர்க்கநாயனார் - *3617. 63* நாயன்மார்களுள் ஒருவர்.

சோழநாட்டுப் பதிகள்:- இப்பகுதியுள் வரும் பெயர்கள்; இவை காவிரி வடகரையிலும் தென் கரையிலுமாக உள்ளன. குறிப்பு: (வ - வடகரை; தெ - தென்கரை; இலக்கங்கள் - தலவரிசை எண்கள்)

திரு அரிசிற்கரைப்புத்தூர் - *3214. (தெ -66)*

திரு ஆக்கூர் - *3654. (தெ.46)* சிறப்புலி நாயனாரது பதி.

திரு ஆலம் பொழில் - *3225. (தெ.10)*

திரு ஆவடுதுறை - *3216. (தெ.36)*

திரு ஆறை மேற்றளி - *3247.*வைப்புத் தலம்.

திரு ஆனைக்கா - *3229. (வ. 60)*

திரு இன்னம்பர் - *3248. (வ-45)*

திரு ஈங்கோய்மலை - *3239. (வ.63)*

திரு எதிர்கொள்பாடி - *3274. (வ-24)*

திரு ஐயாறு - *3225. (வ-53)*

திருக் கடவூர் வீரட்டானம் - *3299. (தெ.47)*

திருக் கண்டியூர் - *3225. (தெ.12)*

திருக் கருப்பறியலூர் - *3270. (வ.27)*

திருக் கலயநல்லூர் - *3221. (தெ.68)*

திருக் கழிப்பாலை - *3320. (வ.4)*

திருக் கற்குடிமலை - *3246. (தெ. 4)*

திருக் காறைட்டுமுள்ளூர் - *3273. (வ-32)*

திருக் குடந்தை - *3625. (தெ-26)* கும்பகோணம்; குடமூக்கு.

திருக் குருகாவூர் - *3309. (வ-13)*

திருக் கோலக்கா - *3307 (வ-15)*

திருக் கோளிலி - *3174. (தெ-123)*

திருச் சாய்க்காடு - *3301. (தெ-9)*

திருச் செங்காட்டங்குடி - *3660. (தெ-79)* சிறுத்தொண்ட நாயனாரது பதி.

திருச் செம்பொன்பள்ளி - *3303. (தெ-42)*

திருச் சோற்றுத்துறை - *3223. (தெ-13)*

திருத் துருத்தியும் திருவேள்விக்குடியும் - *3275. (தெ-37)*

திரு நல்லூர் - *3222. (தெ-20)*

திரு நள்ளாறு - *3297 (தெ-52)*

திரு நறையூர்ச்சித்தீச்சரம் - *3215. (தெ-65)*

திரு நனிபள்ளி - *3302. (தெ-43)*

திரு நன்னிலத்துப் பெருங்கோயில் - *3240. (தெ-73)*

திரு நாகேச்சரம் - *3219. (தெ-29)*

திரு நாட்டியத்தான்குடி - *3187. (தெ-118)* கோட்புலி நாயனாரது பதி.

திரு நின்றியூர் - *3303. (வ-19)*

திரு நீடூர் - *3305. (வ-21)*

திருப் பழமண்ணிப்படிக்கரை - *3272. (வ-30)*

திருப் பனையூர் - *3206. (தெ-73)*

திருப் பாச்சிலாச்சிராமம் - *3232. (வ-62)*

திருப் புறம்பயம் - *3250. (வ-46)*

திருப் புன்கூர் - *3161. (வ- 20)* திருப்பெருமங்கலத்துக்குத் தென்பால் ஒரு நாழிகை யளவில் உள்ளது. நந்தனுர் வழிபட்டுத் திருப்பணிசெய்த பதி. ஏயர் கோன் கலிக்காம நாயனுர் வழிபட்டுத் திருப்பணி யனேகமும் செய்து 24 வேலி நிலமும் கொடுத்த பதி.

திருப்பூந்துருத்தி - *3225. (தெ-11)* திருநாவுக்கரசு நாயனுர் திருமடம் அமைத்துப் பல நாள் தங்கி எழுந்தருளியிருந்த பதி. திருஞானசம்பந்த நாயனுரும் அத்திருமடத்தில் எழுந்தருளி யிருவரும் அளவளாவியிருந்த பெருமையுடையது.

திரு மயானம் - *(திருக்கடவூர்) 3299. (தெ-48)*

திரு மழபாடி - *3226. (வ-54)*

திரு வலஞ்சுழி - *3222. (தெ-25)*

திரு வலம்புரம் - *3301. (தெ.44)*

திரு வலிவலம் - *3197. (தெ-121)*

திரு வாஞ்சியம் - *3214. (தெ-70)*

திரு வாழ்கொளிபுத்தூர் - *3272. (வ-29)*

திரு வீழிமிழலை - *3211. (தெ-61)*

திரு வெண்காடு - *3302. (வ-11)*

ஆளுடைய நம்பிகள் - திருநாவலூராளி *3163;* நாவலூர் மன்னவனுர் *3170;* நாவலூர் நாவலனுர் *3176;* முனைப்பாடித் தலைவர் *3218;* பரவையார் தனித் துணைவர் *3283;* முனைப்பாடித் திருநாடர் *3284;* நாவலர் தங் காவலனுர் - *3293;* திருவாரூர்த் தம்பிரான் றேழர் - *3312;* தமிழ்வேந்தர் - *3402.*

முற்சேர்க்கை - 3

உ

சிவமயம்

மேற்கோள் நூலகராதி (3155—3747)

(எண்கள் - பாட்டு எண்கள்)

3561 தேவா - 3565 - 3569 - 3572 - 3576 - 3587 - 3592 [illegible] - 3593 - 3594 - 3636 - 3643 - 3644 - 3649 - 3650 - 3651 - 3658 - 3674 - 3703 - 3721 - 3728 - 3734 - 3736 - 3739 - 3745.

திருப்புகழ் - 3205 தேவா.

திருமந்திரம் - 3210 தேவா - 3214 தேவா - 3272 - தேவா -3295 தேவா - 3347 தேவா - 3369 - 3380 - 3394 - 3447 தேவா - 3452 - 3454 - 3459 தேவா - 3522 - 3563 - 3564 வகை - 3564 - 3565 - 3575 - 3586 - 3589 - 3603 - 3634 - 3654 - 3736.

திருவருட்பயன் - 3448 தேவா - 3476.

திருவாசகம் - 3169 - 3179 - 3180 - 3184 - 3196 தேவா - 3198 - தேவா - 3210 தேவா - 3214 தேவா - 3216 தேவா - 3219 - அடி தேவா - 3221 தேவா - 3248 - 3251 - 3271 - 3272 தேவா - 3287 - 3290 3302 தேவா - 3303 தேவா - 3308 தேவா - 3311 - 3320 - 3325 - 3350 - 3352 தேவா - 3372 - 3380 - 3381 - 3391 - 3394 - 3407 - 3415 - 3428 - 3430 தேவா - 3431 தேவா - 3342 தேவா - 3447 தேவா - 3451 - 3453 - 3454 - 3457 தேவா - 3463 தேவா - 3479 - 3483 - 3487 - 3488 - 3492 - 3493 - 3504 - 3517 - 3527 - 3542 - 3552 - 3561 தேவா - 3565 - 3571 - 3583 - 3586 - 3624 3632 - 3634 - 3640 - 3644 - 3650 - 3652 - 3663 - 3666 - 3694 - 3722 குறிப்பு. பக். 861 & 3738.

திருவிசைப்பா - 3196 தேவா - 3211 - 3272 தேவா - 3404 - 3486 - 3507 - 3520 - 3571 - 3574 - 3598 - 3600.

திருவிளையாடற் புராணம் - 3210 தேவா - 3251 - 3281 - 3327 - 3429 - 3447 தேவா - 3448 தேவா - 3450 தேவா - 3571 - 3656.

திருவுந்தியார் - 3488 3625.

தொல்காப்பியம் - 3161 - 3164 - 3361 - 3423 - 3457 தேவா - 3458 - 3469 - 3552 - 3564 வகை - 3591 வகை - 3640 - 3662.

நன்னூல் - 3161. **நாலடியார்** - 3275 தேவா - 3504 - 3719.

புறம் - 3205 தேவா - 3333 - 3447 - 3552 - 3615.

பதினோராம் திருமுறை - அம்மையார்.

அம்மை மூத்த திருப்பதிகம் - 3210 - 3216 தேவா.

அற்புதத் திருவந்தாதி - 3238 தேவா - 3302 தேவா - 3436 - 3516 - 3620.

இரட்டைமணிமாலை - 3216.

திருக்கயிலாய ஞான உலா - 3274 தேவா - 3359 தேவா 3421.

பட்டினத்தார் - 3574 - 3647.

கோயினான்மணிமாலை - 3300 தேவா - 3457 தேவா - 3734.

திருக்கழுமலமும்மணிக்கோவை - 3329 - 3337 - 3457 - தேவா - 3613.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - *3275 - 3557 - 3624 - 3653.*

திருத்தொண்டர் திருவந்தாதி - *3381 - 3615 - 3619 - 3629 - 3636.*

திருநாவுக்கரசு நாயனார் திருவேகாதசமாலை - *3304 - 3568.*

திருமறம் - (கல்லாடர்) - *3350.* (நக்கீரர்) - *3350.*

திருமுருகாற்றுப்படை - *3355 - 3361. 3361 - 3671 - 3743.*

திருவாரூர் மும்மணிக்கோவை - *3404.*

பொன்வண்ணத்தந்தாதி - *3211 - 3289* தேவா - *3636* வகை.

விநாயகர் இரட்டைமணிமாலை - *3272* தேவா.

க்ஷேத்திரக்கோவை - *3587.*

பேரூர்ப்புராணம் - *3270 - 3404 - 3429 - 3487 - 3661.*

போற்றிப்பஃறொடை - *3510 - 3591 - 3722* குறிப்பு - பக்.*861*

மணிமேகலை *3638.* **மாபாடியம்** - *3707.* **வேதம்** - *3586 - 3670.*

குறிப்பு:- தேவா - என்பது குறிப்பிட்ட பாட்டின் கீழே வரும் தேவாரப் பதிகக் குறிப்பில் உள்ளது என்றும், வகை என்பது குறித்த பாட்டின் கீழ்வரும் வகை நூற் பொருளில் உள்ளது என்றும் கொள்க.

முற்சேர்க்கை -4

உ
சிவமயம்

அருஞ்சொற்றொடர் அகராதி

(3155—3747)

(எண்கள் - பாட்டு எண்கள்)

முற்சேர்க்கை -5

உ

சிவமயம்.

நன்றியுரை

திருஞானசம்பந்த நாயனார் புராண உரை நிறைவெய்தி வெளியாயினமையின் 7, 8 மாதங்களாகியும் மேலே தொடர்ந்து அச்சுவேலைகள் நடக்கும் வசதிகள் பெறாமல் வருந்தினேன். புராண உரை அச்சு நிறைவேற மேலால் வேண்டும் பொருள் அவசியங்களைத் தெரிவித்துத் திருப் பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் அதிபர் ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகளிடம் விண்ணப்பித்துக் கொண்டேன். அவர்கள் மனமுவந்து ``ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும், இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும், இன்னே செய்யவும் வேண்டும்'' என்ற நியதியின்படி உடனே அகமும் முகமும் மலர்ந்து ரூ.3,000 (மூவாயிரம்) வெண்பொற்காசுகள் அளித்து ஆசிகூறி யருளினார்கள். முன்னரும் இதற்குப் பெரும்பொருள்கள் உதவி யருளியுள்ளார்கள். அவர்கள் திருவடிகளுக்கு என் மனமார்ந்த கடப்பாடுடைய நன்றியைச் செலுத்துகின்றேன். சைவ உலகமும் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளது. அவர்களும் அவர்கள் திருமரபும் நீடுவாழ்க.

சேக்கிழார் நிலையம்,

கோவை

C.K. சுப்பிரமணிய முதலியார்

பதிப்பு உரை ஆசிரியன்

1—5—1951



ஏயர்கோன் கலிக்காம நாயனார் (ஆனி - ரேவதி)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

29. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் (409 திருப்பாடல்கள்)

தொகை

"…..ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்….."

—திருத்தொண்டத் தொகை-(5)

வகை

கொற்றத் திறலெந்தை **தந்தைதன் றந்தையெங் கூட்டமெல்லாந்**
தெற்றச் சடையாய்! **நீனதடி யேந்;** திகழ் **வன்றொண்டனே**
மற்றிப் பிணிதவிர்ப் பா?னென் றுடைவா ளுருவியந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடியேயர் சீர்க்குடியே.

—திருத்தொண்டர் திருவந்தாதி-(35)

விரி

3155. நீடு வண்புகழ்ச் சோழர்நீர் நாட்டிடை நிலவு
மாடு பொன்கொழி காவிரி வடகரைக் கீழ்பால்
ஆடு பூங்கொடி மாடநீ டியவணி நகர்தான்
பீடு தங்கிய **திருப்பெரு மங்கலப்** பெயர்த்தால். 1

புராணம்:- ஏயர்கோன் கலிக்காம நாயனரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்த முறையானே, வம்பறு வரிவண்டுச் சருக்கத்தில் இரண்டாவதாக ஏயர்கோன் கலிக்காம நாயனரது புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:- ஏயர் கோக்குடியின் வந்த கலிக்காமனரது அடியவர்களுக்கும் நான் அடியேனவேன். **ஏயர்** - குடிப் பெயர். **ஏயர் பெருமகன்**-(*881*) என்ற விடத்துரைத்தவை பார்க்க. (II.*1136*) **கோன்** - தலைமை குறித்து நின்றது; குடித்தலைமையும் அரசர் சேனபதித் தலைமையும் குறித்தது. இந்நாளிலும் சேனபதிக்கு "மாட்சிமை தங்கிய" என்று மன்னர்க்குரிய சிறப்புடன் கூறும் மரபு காண்க.

அடியார்க்கும் - உம்மை முன் துதித்த அடியார்களுடனே என்று இறந்தது தழுவிய எச்சவும்மை. சிறப்புமாம். நம்பிகளுடன் கலிக்காமனரது தொடர்பும் நட்பும் பின்னர்த் திருவருளால் வருவன என்பது இச்சரிதத்துட் காண்க. கழறிற்றறிவாரது வரலாறும் இவ்வாறேயாம். இங்குத் திருவருள் உணர்த்த முன்னுற உணர்ந்து துதித்தவாறுகும்.

வகை:- "கொற்றத்திறல்… தவிர்ப்பான்" என்று - இது கலிக்காமனர் உடைவாள் கொண்டு தம் வயிற்றிடைக் குத்திக்கொள்வதன் முன் கூறிய வஞ்சினமொழி. வெற்றியினையும் வலிமையினையு முடைய எந்தையும், அவர் தந்தையும், அவர் தந்தையும், அவர்களையன்றி எங்கள் கூட்டமெல்லாமும் துன்றச் சடையினை உடைய பெருமானே! உன் அடியேம். அவ்வாறிருக்கவும் தேவரீர் வலிய ஆட்கொண்ட வன்றொண்டனே எனது இந்தப் பிணியினை தவிர்ப்பவன் என்று கூறி உடைவாளை உருவி வயிற்றினைக் கீறி

நோயினைத் தவிர்த்துக் கொண்டவர் கலிக்காமனுராவர். அவரது திருமரபு ஏயர்களது சிறப்புடைய குடியாகும். ஏகாரம் - ஈற்றசை.

தந்தை ... அடியேம் - இக்கருத்தை விரிநூல் "எம்பிரா னெந்தை தந்தை" (ஏயர் - புரா.392 =3546) என்ற பாட்டில் ஆசிரியர் எடுத்து விரிவுரை செய்தல் காண்க; **திகழ்வன்றொண்டனே** - நாங்கள் வழி வழி அடியோம் என்று விடாது பற்றி நிற்க, ஆளல்லேன் என்று சொல்லி மறுத்தவரை வலிய ஆண்ட ஒருவர் என்ற குறிப்புப் பற்றி நின்றது; **மற்று இப்பிணி** - பிணி வருதற்கு மற்று இயைபில்லையேனும் அருளால் வந்தது என்பது குறிப்பு. **தெற்ற** - நெருங்க; **தேற்றம்** என்பது தெற்றம் என நின்றதென்றலுமாம். **தவிர்** - உயிரினையும் துறந்த; **உயிர்** எனபது அவாய் நிலையான் வந்தது. **பகைதவிர்** என்ற குறிப்புமாம்.

பெயரும் குடியும் பண்பும் தொகைநூல் பேசிற்று. அவற்றோடு அடிமைத் திறத்தின் உறைத்த பண்பும், சரித வரலாறும் வகை நூல் உரைத்தது. இவை விரிந்த வகை விரிநூலுட் கண்டுகொள்க.

இனி, இப்புராணத்தை 409 திருப்பாட்டுக்களாற் கூறுகின்றுர் ஆசிரியர். அவற்றுள் 1-8 வரை திருப்பாட்டுக்களில் ஏயர்கோன் கலிக்காமனுரது நாடு - நகரம் - குடி - குலம் - அடிமை - பண்பு முதலிய சிறப்புக்களையும் ஆளுடைய நம்பிகள் சிவபெருமானைத் தூதுவிட்டதனுக்குச் சினந்து இழிப்ப வந்த செயலையும் கூறியருள்கின்றுர். அதன்மேல் 9-382 பாட்டுவரையில் நம்பிகள் திருத்தொண்டத்தொகையருளிய பின், பல தலங்களையும் வணங்கித் திருவொற்றியூர் சார்ந்து, "பிரியே"னென்று சபதம் செய்து, சங்கிலியாரை மணந்து, பின் திருவாரூரை நினைந்து சபதந் தவறியமையாற் கண் மறையப்பெற்று, வரும் வழியில் காஞ்சீ புரத்தில் இடக்கண் பெற்றுத், திருவாரூர் சேர்ந்து மற்றைக் கண்ணும் பெற்றுப், பரவையார் மாளிகையிற் செல்லவொட்டாமல் பரவையார் ஊடல் கொள்ள அதை நீக்க இறைவரைத் தூதுவிட்டு எழுந்தருளியிருந்தது வரை உள்ள வரலாறுகளைக் கூறுகின்றுர். அதன் பின் 383 முதல் 409 வரை அச்செயல் பற்றி ஏயர்கோனுர் சினந்து நம்பிகள்பால் பகைமை பூண்ட செயலையும், இறைவன் ஏவலால் சூலைநோயுற்றதும், அந்நோய் நீக்க நம்பிகளை இறைவர் ஏவ, அது தெரிந்து, ஏயர்கோனுர் வயிற்றிடை உடைவாளாற் குத்திக்

பாடல் எண்கள்	கூறும் பொருள்
1-8	ஏயர்கோன் கலிக்காமரது நாடு - நகரம் - குடி - குலம் - அடிமை - பண்பு முதலிய சிறப்புக்கள்; சுந்தரர் சிவபெருமானைத் தூதுவிட்டதனால் சினந்து கொள்ளுதல்.
9-382	சுந்தரர் வரலாற்றின் மத்திய பாகம்; சங்கிலியார் திருமணம் - கண் இழந்து பின் பெறுதல் - இறைவரைத் தூது விடல்
383-409	தூதுச் செயலுக்காக ஏயர்கோன் சினந்து பகைமை பூண்டது - சூலை நோய் பெற்றது - நோய்தீர நம்பிகள் வருவதை ஏற்காது உடைவாளால் உயிர்துறக்க முயற்சிக்க - நம்பிகளும் அவ்வாறே முயல இறைவர் எழுந்தருளி நன்மை நிகழல்.

3156. இஞ்சி சூழ்வன வெந்திரப் பந்திசூழ் ஞாயில்;
மஞ்சு சூழ்வன வரையென வுயர்மணி மாடம்;
நஞ்சு சூழ்வன நயனியர் நளினமெல் லடிச்செம்
பஞ்சு சூழ்வன காளையர் குஞ்சியின் பரப்பு.

கொண்டு நோயும் உயிரும் தீரக் கிடந்தமையும், அது கண்ட நம்பிகள் தாமும் அவ்வுடைவாளினால் உயிர் துறக்கத் துணிந்தபோது இறைவரருளால் கலிக்காமனார் உயிர் பெற்றெழுந்து உடைவாளைப் பற்றிக்கொள்ள, இருவரும் நண்புரிமை பெற்ற நிலையினையும் கூறிச் சரித நிறைவாக்குகின்றார். இதனால் கலிக்காமனார் சரித அமைதியையும், நம்பிகள் சரிதம் மூன்றொடர்ச்சி பெற்று, மேல், கழறிற்றறிவார் நாயனார் வரலாற்றிற் [illegible] வரும் நிலையினையும் உணர்ந்துகொள்க. இதனை ஆசிரியர் 3162-ல் கூறுதல் காண்க.

விரி:- 3155. (இ-ள்) : நீடு...நாட்டினை - நீடிய பெருமையுடைய (சோழர்களது நீர்வளமுடைய நாட்டினிலே; நிலவு...கீழ்பால் - நிலவுப் பெற்ற பக்கங்களில் பொன் கொழிக்கும் காவிரியினது வடகரையில் கிழக்குத் திசையிலே; ஆடு...நகர் தான் - ஆடும் பூங்கொடிகளையுடைய மாடங்கள் நீடியுள்ள அழகிய நகரானது; பீடு...பெயர்த்து - பெருமை தங்கிய திருப்பெருமங்கலம் என்னும் பெயரினை உடையது. (ஆல் - அசை.)

(வி-ரை) : நீடு...கீழ்பால் - அரச மரபும், நாட்டு வளமும், நீர்ச் சிறப்பும் ஒருங்கு கூறிய நயம் காண்க.

காவிரி வடகரைக் கீழ்பால் - காவிரியின் வடகரையில் உள்ள பகுதிகளில் கிழக்கில் உள்ள.

கீழ்பால் - நகர் - பெயர்த்து என்க. **ஆடு பூங்கொடி மாடம் நீடிய அணி -** இதனால் நகரச் சிறப்புக் கூறியபடி.

அணிநகர் - கை புனைந்த அலங்காரமன்றி இயல்பாகவே அழகுடைய நகரம்.

பீடு - பெருமை. இது மாறாத சிவமங்கலப் பெருமை. பெருமங்கலம் என்றது நகர்ப் பெருமையினை விளக்கியபடி. **தங்கு**தலாவது தலைவராகிய நாயனார் உயிர் துறந்த ஞான்றும் மாறாது மங்கலம் பொருந்தச் செய்த நிலை.

பெயர்த்து - பெயரினை உடையது. **பெருமங்கலம்** என்றலே யமையுமாயினும் மேலும் **பெயர்த்து** என்றது பெயருக்கேற்ற பண்புடையது என்ற குறிப்புப்படக் கூறியதாம். இச்சரிதத்தில் நாயனாரின் தேவியார் திருமணத்தினன்று புனைந்த மலர்க்கூந்தலினை அறியப்பெற்ற பின், திருவருளால் மீள வளரப்பெற்றனர். இச்சரித்தில் நாயனார் தம்மைத்தாம் உயிர் துறந்தமையால் இழக்க நின்ற மங்கலத்தினை அவர் மீள உயிர் பெற்றெழுந்தமையால் அம்மையார் மீளப்பெற்றனர். இச்சரிதக் குறிப்பும் பெறத் **திருபெரு மங்கலப் பெயர்த்து** என்று கூறிய நயமும், அக்குறிப்பேற நகர்**தான் -** பெயர்த்தால் என்று ஈரிடத்தும் அசை புணர்த்தி ஓதிய நயமும் கண்டுகொள்க.

தான் - ஆல் - அசை.

3156. (இ-ள்) இஞ்சி...ஞாயில் - திருமதில் சூழப்பெற்றுள்ளன எந்திர வரிசைகளாற் சூழப்பட்ட மதில் ஞாயில்கள்; மஞ்சு... மாடம் - மேகங்களாற் சூழப்படுவன மலைகள் போல உயர்ந்த அழகிய மாடங்கள்; நஞ்சு சூழ்வன நயனியர் - விடத்தின் தன்மை போலக் கொடுமை நிறைந்த கண்களையுடைய பெண்களது; நளின மெல்லடிச் செம்பஞ்சு - மெல்லிய தாமரைபோன்ற அடிகளில் ஊட்டிய செம்பஞ்சுக் குழம்பு; சூழ்வன - சூழப்படுவன; காளையர் குஞ்சியின் பரப்பு - இளங்காளையர்களது முடிமயிர்களின் பரப்பு.

(வி-ரை) ஞாயில் இஞ்சி சூழ்வன; மாடம் மஞ்சு சூழ்வன; குஞ்சியின் பரப்புப் பஞ்சு சூழ்வன என்று கூட்டுக. **நஞ்சு சூழ்வன** என்றவிடத்து சூழ்வன என்பது பெயரெச்சம்: **ஏனைச் சூழ்வன** என்பவை வினைமுற்று.

எந்திரப்பந்தி சூழ்ஞாயில் - பகைவர்கள் மதிலைக் கடந்து புகாமைப் பொருட்டு மதில்களிற் பலவகை இயந்திரங்கள் வைக்கப்படுவன: இவை நெருப்பு உமிழ்வன, நூற்றுவரைக் கொல்வன, முதலியனவாகப் பலவகையாயுள்ளன.

இந்நாளிலும் கோட்டைமதில்களிலும் வாயில்களிலும் பலவகை இயந்திரங்கள் வைக்கப்படுதல் காண்க. **ஞாயில்** - மதிலுறுப்பு. **இஞ்சி** - மதில்: **சூழ்வன - சூழல்** சூழ்ச்சியுடன் எண்ணி அமைக்கப்படுதலும் குறிப்பு.

மாடம் மஞ்சு சூழ்வன - என்பது மாடங்களின் உயர்ச்சி குறித்தது.

காளையர் குஞ்சியின் பரப்பு நயனியர்களது அடிச்செம்பஞ்சு சூழ்தல் - தலைவியர் ஊடிய வழி, ஊடல் தீர்த்தற் பொருட்டுக் காளையர் அவர்கள் அடியில் பொருந்த வீழ்தலா லாவது. ஊடலில் இவ்வாறு நிகழ்தலும் மரபென்பர். **நஞ்சு சூழ்வன** - என்றது பெருங் கோபக் குறிப்பு. **நஞ்சு** - விடத்தன்மை குறித்தது.

நயனியர் - கண்ணேக்கினுலே காமநோய் புலப்படுப்பாரென்பது குறிப்பு: "ஒருநோக்கு நோய் நோக்கு" (குறள்) "செருவெழுந் தனுவ தொன்றும்" (2996) என்று இதன் தன்மையினைக் குறித்தல் காண்க.

காளையர் - என்றதனல் இத்தன்மையின் நிகழும் ஆண்மக்களின் பருவ முணர்த்தியபடி.

குஞ்சியின் பரப்பு - ஆண்மக்களின் பரந்து நீண்ட தலைமயிரின் தன்மை குறித்தபடி. **குஞ்சி** - இங்கு ஆண்மக்களின் தலைமயிர் குறித்தது.

குஞ்சி ஞாயில் - என்றதனல், நாடு நகரச் சிறப்பும், மாடம் - என்றதனல் நகர வளமும், **நயனியர் - காளையர்** என்றதனல் மகிழ்ச்சியுடைய மக்களின் வளமும் கூறப்பட்டன. இதனையே மேல்வரும் பாட்டில் தொடர்ந்து சொல்லுதல் காண்க.

சூழ்வன - என்பன இப்பாட்டில் சொற்பின்வருநிலை. இவை பல பொருளாக மதிப்பிடவரும் நிலை ஆசிரியரது கவி நலச்சிறப்பு. 553 முதலியவை பார்க்க. 2

3157. (இ-ள்) : விழவு... வீதி - விளக்கமுடைய அழகிய வீதிகள் விழாக்களை நீங்காதிருந்தன; முழவு...அரங்கம் - அடர்ந்த கூந்தலையுடைய பெண்களின் ஆடரங்கங்கள் முழா முழக்கத்தினை நீங்கா திருந்தன; மழவு... முன்றில் - மங்கலம் பொலிகின்ற அழகிய

3157. விழவ ருதன விளங்கொளி மணிநெடு வீதி;
முழவ ருதன மொய்குழ லியர்நட வரங்கம்;
மழவ ருதன மங்கலம் பொலிமணி முன்றில்;
உழவ ருதநல் வளத்தன வோங்கிருங் குடிகள். 3

முற்றங்கள் சிறார்களை நீங்காதிருந்தன; உழவு...குடிகள் - செழிப்புடைய பெருங்குடிகள் உழவுத்தொழிலின் நீங்காதநல்ல வளங்களைக் கொண்டிருந்தன.

(வி-ரை) அருதன - சொற்பொருட் பின்வருநிலை; நீங்காதிருக்கும் நிலை குறித்தன.

வீதி, அரங்கம், முன்றில், குடிகள் - இந்நான்கு வகையையும் பின் வைத்தன. முறையே நீங்காது அவை கொண்டு விளங்கும் விழவு முதலியவற்றின் சிறப்பினை முன்னுணர்த்தற்கு.

முழவருதன அரங்கம் - இவை தெருவுதொறும் உள்ள நாடக மேடைகள். "கலிவார் வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலுந் திருவையாறே" (6) "மலர் வந்த மடவார்கள் நடமாட முழவதிர" (ஷை 1); **முழவு** - மத்தளவோசை.

மணிமுன்றில் - மனைகளின் முற்றங்கள். மழவருதன முன்றில் - மழவாகிய சிறார்கள் முற்றங்களில் விளையாடும் தன்மை குறித்தது.

மழவருதன அரங்கம் - பொலி - "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு" என்ற கருத்தினை உட்குறித்தது. முன் 1908, 1909 பாட்டுக்களில் இதனை விரித்தமை காண்க. **மங்கல - மழவு** - என்று கூட்டியுரைப்பதும் சிறப்பு.

உழவருத நல் வளத்தன - குடிகள் - இப்புராணமுடைய நாயனார் வேளாளராதற் குறிப்பினால் அச்சிறப்புப்பற்றிக் கூறிய நயம் கண்டுகொள்க. இஃது ஆசிரியரது தெய்வக் கவிநலச் சிறப்புக்களுள் ஒன்று. ஆளுடைய பிள்ளையார், சண்டீச நாயனார், திருநீல நக்க நாயனார், கண்ணப்பர், ஆளுடைய அரசுகள், திருநாளைப் போவார், அதிபத்தர் முதலியோர் புராணங்களுள்ளும் அவ்வவர் மரபுச் சிறப்புக் காட்டும்படி அவ்வந் நாடு நகரங்களின் பொலிவு கண்டு காட்டிய நயங்களும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

நல்வளம் - உழவினால் வரும் வளங்களின் ஈடற்ற உயர்வும், ஏனைத் தொழில் வளங்களிற் படும் குற்றங்களில்லாமையும் குறிப்பு. 3

3158. (இ-ள்) நீரினில்... குழுமி - கங்கையாற்றினைக் கொண்டு விளங்கும் சடைமுடியினையும், நெற்றிக் கண்ணினையும், மேகம்போல விளங்கும் கண்டத்தினையும் உடைய சிவபெருமானிடம் பேரன்புடையவர்கள் கூடி; பாரின்...பெருமையால் - உலகில் மிக்கதாகிய ஒப்பற்ற பெருமையினாலே; பரமர்... மிக்கது - சிவபரஞ்சுடரின் திருவடிகளையே துதிக்கின்ற சிறப்பினாலே மிகுந்தது; சிவபுரி...சிறப்பால் - அச்சிறப்பினாலே அது சிவபுரி என்று சொல்லப்படும் தகுதியினை யுடையது.

(வி-ரை) நீர் - சிறப்பினாலே கங்கையாற்றினைக் குறித்தது. **நீரினிற் பொலிதல்** -

3158. நீரி னிற்பொலி சடைமுடி நெற்றிநாட் டத்துக்
காரி னிற்றிகழ் கண்டர்தங் காதலோர் குழுமிப்
பாரின் மிக்கதோர் பெருமையாற் பரமர்தாள் பரவுஞ்
சீரின் மிக்கது சிவபுரி யெனத்தகுஞ் சிறப்பால். 4

3159. இன்ன வாழ்பதி யதனிடை **யேயர்கோக் குடிதான்**
மன்னி நீடிய **வளவர்சே னுபதிக் குடியாந்**
தொன்மை மேவிய தொடர்ச்சியா னிகழ்வது தூய
பொன்னி நாட்டுவே ளாண்மையி லுயர்ந்தபொற் பினதால். 5

நீரைச்சூடி விளங்குதல். **காதலோர்** - அன்பு காதலாய் முற்றி விளைந்த பேரன்பர்கள்.

காதலோர் குழுமிப் பாரின் மிக்கதோர் சீர் - இப்புராணத்து வரலாற்றினுள் "எம்பிரா னெந்தை தந்தை தந்தையெங் **கூட்டமெல்லாந், தம்பிரானீரே**யென்று **வழிவழி** சார்ந்து வாழும், இம்பரின் மிக்க வாழ்க்கை" *(3546-392)* என்றுவரும் கருத்தின் முற்குறிப்பு.

பாரின் மிக்கது ஓர் பெருமை - உலகில் வரும் ஏனை எல்லாப் பெருமைகளிலும் இஃதே மிக உயர்ந்தது என்பதாம்.

பரமர் தாள் பரவும் - தாள் - தாள்களையே என்று பிரிநிலை யேகாரம் தொக்கது. "தம்பிரா னீரே" *(3546)*.

சிறப்பால் - அச்சிறப்பினுலே; **சிறப்பால் - எனத்தகும்** - என்று கூட்டுக.

மிக்கது - முன்கூறிய திருப்பெரு மங்கலமாகிய அந்நகர் என்று எழுவாய் முன் *(3155)*பாட்டினின்றும் வருவிக்க. முன் இரண்டு பாட்டுக்களால் உலகியல் நிலையில் நாடு நகர் வளங் கூறினுர். இப்பாட்டினுல் உயிரியல் நிலையின் சிறப்பினுற் கூறினுர். 4

3159. (இ-ள்) இன்ன... குடிதான் - இத்தன்மைத்தாகிய வாழ்வுடைய பதியினிடத்தே ஏயர் கோக்குடியானது; மன்னி... குடியாம் - நிலைபெற்று வழிவழி வளர்ந்து வருகின்ற சோழர்களது சேனுபதிக் குடியாகிய; தொன்மை...நிகழ்வது - பழமை பொருந்திய தொன்று தொட்டு வரும் தொடர்ச்சியினுலேயே பொலிவது; தூய...பொற்பினது - தூய்மையுடைய காவிரி நாட்டில் வேளாண்மைத் திறத்தால் உயர்ந்த அணிநலம் வாய்ந்தது;(ஆல் - அசை).

(வி-ரை) ஏயர் கோக்குடி - குடியாம்: (அது) நிகழ்வது - பொற்பினது என்று கூட்டி முடிக்க.

ஏயர் - ஹே ஹயர் என்பது ஏயர் என மருவியது. இஃதே கேகயர் - என வழங்கலாயிற்றென்பர். **ஏயர்** - குடிப் பெயர். **கோ-** தலைமை குறித்தது.

சேனுதிபதிக் குடியாம் - சேனுதிபதியாக வரும் தன்மை ஒரு குடியின் வழிவழி மரபுரிமையாக வந்தது முன்னைநாள் வழக்கு. *881*-ல் உரைத்தவை பார்க்க.

ஏயர் கோக் குடி - கோ - தலைமை என்பது முதனூலாகிய "ஏயர்கோன் கலிக்காமன்"

3160. அங்கண் மிக்கவக் **குடியினி லவதரித் துள்ளார்**
கங்கை வாழ்முடி யார்தொண்டர் கலிக்காம ரென்பார்
தங்க ளுயக ரடிபணி வாரடிச் சார்ந்து 6
பொங்கு காதலி னவர்பணி போற்றுதல் புரிந்தார்.

என்ற திருத்தொண்டத் தொகையானும், வழிநூலாகிய "ஏயர் கோக்குடியேயர்" என்று திருத்தொண்டர் திருவந்தாதியானு மறிக.

தொன்மை மேவிய தொடர்ச்சி - பழங்கால முதல் இடையறாது தொடர்ந்து வழி வழி வருவது. நிகழ்தல் - விளங்குதல்.

வேளாண்மை - உழவுச் செல்வம்; **பொற்பாவது** - செழிப்பும் தகுதியும் சிறப்புமாம்: **வேளாண்மையில்** - வேளாண்மை காரணமாக எங்க. **நாட்டு** - நாட்டின்; நாட்டுத் சிறப்பாயுரிய என்றலுமாம்.

வேளாண்மையிற் பொலிவது - இப்புராணமுடைய நாயனார் (வேளாளராதல்) குறிப்பு. வரும் பாட்டுப் பார்க்க. 5

நிகழ்ச்சியானிறைவது - என்பதும் பாடம்.

3160. (இ-ள்) அங்கண்... அவதரித்துள்ளார் - அவ்விடத்துப் பெருமையால் மிகுந்த அந்தக் குடியிலே வந்து அவதரித்துள்ளவர்; கங்கை...என்பார் - கங்கை வாழும் சடைமுடியினை யுடைய சிவபெருமானின் திருத்தொண்டராகிய கலிக்காமர் எனப்படுபவர்; தங்கள்...புரிந்தார் - தம் பெருமானின் திருவடி பணிவார்களின் திருவடிகளைச் சார்பாகக் கொண்டு மேன்மேல் வளரும் மிக்க அன்பினாலே அவ்வடியவர் பணியினை விரும்பிச் செய்து வந்தார்.

(வி-ரை) அங்கண் - அ - முன்கூறிய அந்த ஏயர் கோக்குடி என அகர மிரண்டும் முன்னறி சுட்டு.

கங்கை...தொண்டர் - சிவனடியார்; **என்பார்** - எனப்படுவார்.

தங்களுயகர்...புரிந்தார் - தாம் சிவனுக்குத் தொண்டு பூண்டொழுகியதுடன் சிவனடியார்கள் பணியினை அதனினும் மிக்க அன்புடன் விரும்பிச் செய்தனர் என்பது. **சார்ந்து** - சார்பாகக் கொண்டு. **பொங்குதல்** - மேன்மேல் அதிகரித்தல். போற்றுதல் - விரும்பி மேற்கொள்ளுதல். **புரிதல்** - இடைவிடாது நினைத்தல் - சொல்லுதல் - செய்தல். இதனால் இந்நாயனார் சிவபத்தியேயன்றிச் சங்கம பத்தியிலும் சிறந்தவர் என்பது, அவ்விரண்டனுள்ளும் அடியார் பணியே சிறக்க மேற்கொண்டொழுகினர் என்பதும் கூறப்பட்டன. இவர் வழிவழி சிவனடிமையிற் சிறந்தொழுகினர் என்பது மேல் (3546) கூறப்படுதல் காண்க.

கலிக்காமர் என்பார் - உள்ளார் என்க: எழுவாய் பின் வைக்கப்பட்டது. அவரது அடியார்க்கடியராந் தன்மையை முடித்துக் காட்டுதற் பொருட்டு. 6

3161. புதிய நாண்மதிச் சடைமுடி யார்**திருப் புன்கூர்க்**
கதிக மாயின திருப்பணி யனேகமுஞ் செய்து,
''நிதிய மாவன நீறுகந் தார்கழ'' லென்று
துதியி னுற்பர வித்தொழு தின்புறு கின்றார், 7

3161. (இ-ள்) புதிய... செய்து - புதிதாய் முளைத்த இளஞ்சந்திரனைச் சூடிய சடைமுடியினையுடைய சிவபெருமானது திருப்புன்கூருக்கு மேலான அனேகந் திருப்பணிகளையும் செய்து; நிதியமாவன...இன்புறுகின்றார் - திருநீற்றை விரும்பிய சிவபெருமானது திருவடியே தமக்குச் செல்வமானது என்று துதிகளாற் போற்றி வணங்கி யின்பமடைகின்றாராகிய அக்கலிக்காமனார்,

(வி-ரை) புதிய நாண்மதி - புதிய மூன்றாம்பிறைச் சந்திரன். அமாவாசை மறைவினின்றும் அன்று மீளத் தோன்றுதல் கருதிப்புதிய என்றார். **நாள்** - இளமை குறித்தது. **புதிய - நாள்** - ஒருபொருட் பன்மொழி. இளமையின் மிகுதி குறித்தது. **திருப்புன்கூர்க்கு அதிகமாயின திருப்பணி அநேகம் செய்தல் என்றது** - அப்பதியில் எழுந்தருளிய இறைவருக்கே யன்றி அப்பதியினுக்கும் என்ற குறிப்பு: **அதிகமாயின - அநேகம்** என்ற பன்மையும் இக்குறிப்பு ஒரு காலத்தில் மழை மறுத்து நாடு வருந்தக் கண்டு ஏயர்கோனார் மழையினை வேண்டிப் பன்னிரு வேலி நிலம் தந்து இறைவர்பாற் குறையிரந்து இங்கு வரங்கிடக்க, இறைவரருளாற் பெருமழை பெய்து எங்கும் பெரு வெள்ளமாயிற்று; பின்னர் அப்பெருமழையினைத் தடுக்க மேலும் பன்னிரு வேலி நிலம் தந்து வேண்ட, அது நின்ற தென்பது வரலாறு. ''வையக முற்று மாமழை மறந்து வயலி னீரிலை மாநிலந் தருகோம், உய்யக் கொள்கமற் றெங்களை யென்ன வொளிகொள் வெண்முகிலாய்ப்பரந் தெங்கும், பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலிகொண்டருளும், செய்கை'' என்று ஆளுடைய நம்பிகள் இவ்வரலாற்றைப் பொறித்து வைத்த திருவாக்கைக் காண்க. முன்னர் மழை பெய்யப்பன்னிரு வேலியும், பின்னர் மழை ஓயப் பன்னிரு வேலியுமாகத் தருதலின் **அதிகமாயின** என்று இக்குறிப்புப் பெறுவித்தல் காண்க; ஒருகாலத்து' தமக்கு நேர்ந்த நோய் நீங்குதற் பொருட்டுக் கலிக்காமனார் பன்னிரு வேலி நிலம் தந்தனர் என்ற வரலாறும் ''ஏத நன்னில மீரறு வேலி யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்து'' என்று நம்பிகளது திருவாக்கால் பெறப்படுகின்றது. இவையேன்றி ஏயர்கோனார் திருப்புன் கூரிறைவரையே ஆன்மார்த்தமாக வழிபட்டு நற்றிருப்பணிகள் அனேகமுஞ் செய்தனர் என்ற வரலாறும் கேட்கப்படுகின்றது. **திருப்பணி அநேகம்** என்றது இக்குறிப்பு. திருப்புன்கூர் நாயனாரது பதியாகிய திருப்பெருமங்கலத்துக்கு அருகில் தெற்கில் ஒரு நாழிகையளவில் உள்ளது. (தொகுதி I பக். 507, 508 தலவிசேடம் பார்க்க)

''**நிதியமாவன...கழல் என்று** - இது நாயனார் உட்கொண்டொழுகிய குறிக்கோள். ''அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற னடித்தலமே'' (திருவிருத்தம்) ''நெதிய மென்னுள போகமற் றென்னுள நிலமிசை நலமாய, கதிய மென்னுள.. ஏத்துதல் புரிந்தோர்க்கே''; (அம்பர் மாகாளம் - பண் - நாட்டராகம். பிள்.) முதலியவை காண்க.

3162. **நாவ லூர்மன்னன் நாதனைத் தூதுவிட்டதனுக்**
"கியாவ ரிச்செயல்புரிந்தன!" ரென்றவ ரிழிப்பத்
தேவர் தம்பிரா னவர்திறந் திருத்திய வதற்கு
மேவ வந்தவச் செயலினை விளம்புவா னுற்றேன். 8

"பாரோடு விசும்பாட்சி யெனக்குமது பாதமலர்" (கழநீர்ப்பதிகம்) என்று கூறும் கழற்றிற்றறிவார் நாயனார் கருத்தும் காண்க.

நீறுகந்தார் - திருநீற்று நெறியே சிவநெறியாவது என்பதை, மெய்ப்பொருணாயனார் ஏனாதியார், புகழ்ச் சோழர் முதலியோர் சரிதங்களால் அறிக. நீறு உகந்தார் என்பது நீற்றினை விரும்பியணிந்தார் என்பதன்றி, நீறு ஆகு பெயராய் நீற்றுநெறி நின்றார் திறத்தினை உணர்த்தித் திருநீற்றின் அடிமைத் திறத்தினை உகந்து அருள்பவர் என்று குறிப்பு முணர்த்திற்று.

என்று - என்பது மனநிலை, **பரவி** - வாக்குநிலை, **தொழுது** - மெய்ந்நிலை. என்று திரிகரண வழிபாடுங் காண்க.

இன்புறுகின்றார் - அடிமைத்திறம் பற்றி நின்று அதில் இன்புற்று வாழ்தல் அன்புடைமையின் சிறப்பு. "ஆடுவதும் பாடுவது மானந்த மாகநினைத் தேடுவது நின்னன்பர் செய்கை பராபரமே" (தாயுமானார்): "சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்..." (திருவா.)

இன்புறுகின்றார் - இன்புறுகின்றாராகிய கலிக்காமனார். வினைப்பெயர்; இன்புறுகின்றார் - அவர் **இழிப்ப** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இவ்வாறன்றி வினைமுற்றாகவே வைத்து உரைப்பினு மிழுக்கில்லை. நிகழ் காலத்தாற் கூறியதனால் இஃது அவரியற்கை என்றுணர்த்தியபடி. "முந்நிலைக் காலமுந் தோன்றுமியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற்கிளத்தல் வேண்டும்" (தொல்.சொல்.வினை.43) என்பதிலக்கணம். இதனையே "முக்காலத்தினு மொத்தியல் பொருளைச், செப்புவர் நிகழுங் காலத் தானே" என நன்னூலார் வகுத்துரைத்ததும் காண்க. இப்பாட்டினால் அரன்பணியும், முன்பாட்டினால் அடியார் பணியுமாக நாயனரது அடிமைத் திறத்தினியல்பு கூறப்பட்டது.7

3162. (இ-ள்) நாவலூர்... தூது விட்டதனுக்கு - திருநாவலூர்த் தலைவராகிய நம்பியாரூரர் சிவபெருமானைப் பரவையார்பால் தூதாக அனுப்பியதனுக்கு;யாவர்... இழிப்ப - இவ்வாறு செயல் செய்வோர் யாவர்! என்று அவர் குறைகூற; தேவர் தம்பிரான்...திருத்திய தேவ தேவராகிய சிவபெருமான் அவரது அக்கருத்தினைத் திருத்தும் பொருட்டு; அதற்கு...உற்றேன் - அதற்குப் பொருந்த வந்த அவ்வருட் செயலின் வரலாற்றினைச் சொல்லப் புகுகின்றேன்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) இப்பாட்டினால் நாயனரது சரித வரலாற்றின் சுருக்கமும் அமைப்பும் கூறப்பட்டன. சரிதம் பின்னர் (புரா.283/3537 முதல் புரா.408/3562வரை) உள்ள பாட்டுக்களிற் கூறப்படுதல் காண்க.

வேறு

3163. திருத்தொண்டத் தொகையருளித் திருநாவ லூராளி
கருத்தொன்று காதலினாற் கனகமதிற் றிருவாரூர்
ஒருத்தர்கழன் முப்பொழுது முருகியவன் பொடுபணிந்து
பெருத்தெழுமெய் யன்பினாற் பிரியாதங் குறையுநாள், 9

இப்பாட்டினால் சரிதத்துக்குப் பதிகம் போலச் சுருக்கம் கூறித்தோற்றுவாய் செய்துகொண்டு, நம்பியாரூரர் வரலாறு பற்றி இச்சரிதம் நிகழ்தலால், அவர்திருத்தொண்டத் தொகை யருளியது முதல் பரவையா ரூடலினைத் திருவாரூர்ப் பெருமான் றூது சென்று தீர்த்த துணையாலே இனிதமர்ந்தருளியது வரை, அவரது வரலாற்றினை முறையே கூறி, அவ்வாறு நம்பிகள் பெருமானைத் தூதுவிட்ட செய்தி கேட்டுக் கலிக்காமனார் வெம்பி நம்பிகள்பால் செற்றங்கொண்டார் என்று இச்சரித்தினைத் தொடங்கி விரித்து முடித்தனர் ஆசிரியர். இதனால் நம்பிகளது சரிதமும், முன், தடுத்தாட்கொண்ட புராணத்திறுதியில் விடுத்த இடத்தினின்று இச்சரித நிகழ்ச்சிவரை உடனே கூறிச் செல்லும் கவிநயமுங் கண்டுகொள்க.

நாவலூர் மன்னர் - திருநாவலூரில் அவதரித்த நம்பியாரூர். **மன்னர்** - தலைவர்; மன்னராகிய நரசிங்கமுனையரையர்பால் வளர்ந்த காரணக் குறிப்பும்பட நின்றது.

நாதனைத் தூது விட்டதனுக்கு - நாதன் - தம் இறைவராகிய திருவாரூர்ப் பெருமான். தூதுவிட்ட செய்தி பின் 3477 (புரா.323) முதல் 3528 (374) வரை வரும் பாட்டுக்களாற் கூறப்படும். **விட்டதனுக்கு** - விட்டமைபற்றி.

"**யாவர் - புரிந்தனர்!**" **என்று இழிப்ப- யாவர் புரிந்தனர்** -செற்றங்கொண்ட அவலக் குறிப்புப் பற்றிய வினா. வேறு ஒருவருமிலர் என்பது. **இழித்தல்** - குறைவுபடக் கூறுதல்.

திருத்திய - திருத்துதற்கு - திருத்தும் பொருட்டு.

திருத்திய - மேவ வந்த - செயல் என்க. செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

வந்தவச் செயல் - இறைவர் இவ்விருவருக்குமிடையாடிச் செய்த செயலும், கலிக்காமனாரது செயலும், நம்பிகளது செயலும் கூடிய தொகுதி. **செயல்** - பால் பகா அஃறிணை. 8

3163. (இ-ள்) திருத்தொண்டத்தொகை அருளி - திருத்தொண்டத்தொகையாகிய திருப்பதிகத்தினை அருளிச் செய்தபின்; திருநாவலூராளி - திருநாவலூர்த் தலைவராகிய நம்பியாரூர்; கருத்தொன்று காதலினால் - மனம் ஒன்றுபட்ட பெருவிருப்பத்தினாலே; கனகமதில்... பணிந்து - பொன்மதில் சூழ்ந்த திருவாரூரில் எழுந்தருளிய ஒருவராகிய தியாகேசப் பெருமானுடைய திருவடிகளை ஒவ்வொரு நாளும் மூன்று போதிலும் மனமுருகிய

3164. தாளாண்மை யுழவுதொழிற் றன்மைவளந் தலைசிறந்த
வேளாளர் குண்டையூர் கிழவரெனு மேதக்கோர்
வாளார்வெண் மதியணிந்தார் மறையவராய் வழக்கினில்வென் 10
ருளாகக் கொண்டவர்தா ளடைந்தன்பா லொழுகுவார்.

அன்பினொடும் பணிந்து; பெருத்து...நாள் - பெருகி மேன்மேல் வளர்கின்ற மெய்யன்பினாலே பிரியாமல் அத்திருப்பதியில் தங்கிய காலத்தில்;

(வி-ரை) திருத்தொண்டத் தொகை அருளி - இது திருத்தொண்டர் புராணத்திறுதியிற் கூறப்பட்டது. (347 - 348); அத்தொண்டர் சரிதத் தொண்டர் பெரிய இவ்வாற்றாற் கூறினர்.

கருத்தொன்று காதல் - மனத்தினை வேறொன்றிலும் வைக்காமல் சிவனிடத்தே ஒன்றவைத்த பெருவிருப்பம். இது சிவயோகம் எனப்படும். **காதல்** - நாயகன் நாயகிகளிடையே நிகழ்வது; இங்கு ஆன்மநாயகனாகிய சிவபெருமானிடத்து நிகழும் அன்பின் மேன்மை குறித்தது. "ஒன்றி யிருந்து நினைமின்கள்" (தேவா).

ஒருத்தர் - சிவபெருமான்; வேதங்களுள் "**ஒன்று**" என்று சொல்லும் பரம்பொருள். இங்குத் தியாகேசரைக் குறித்து நின்றது.

ஒருத்தர் கழல் முப்பொழுதும் - எண்ணலங்காரச் சுவைபடக் கூறியது.

உருகிய அன்பு - மனம் உருகுதற்குகாரணமாகிய அன்பு.

பெருத்தெழும் மெய்யன்பினால் - மேன்மேல் வளர்கின்ற உண்மை அன்பினாலே கருத்தொன்று காதல் மனமுருகிப் பணியக் காரணமாயிற்று; அது மெய்யன்பாய் விளைந்து பெருத்தெழுந்தது; அதனால் முப்பொழுதும் வணங்கிப் பிரியாது உறைந்தனர் எனக் காரணகாரியத் தொடர்பு கொண்டு உரைத்துக் கொள்க. திருநாவலூராளி - பிரியாது உறையும் நாளில் குண்டையூர்க் கிழவர் - அடைந்து அன்பால் ஒழுகுவார் - படி சமைத்தார் என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து உரைத்துக்கொள்க. 9

3164. (இ-ள்) தாளாண்மை...மேதக்கோர் - தமது தாளாண்மையினால் உழவுத் தொழிலின் வரும் தன்மை வளங்களால் மிக்க சிறப்புடைய வேளாளராகிய குண்டையூர் கிழார் என்ற மேம்பாடுடைய பெரியார்; வாளார்வெண்...ஒழுகுவார் - ஒளி பொருந்திய வெண்பிறைச் சந்திரனை யணிந்த சிவபெருமான் மறையவராகி வழக்கிட்டு வென்று ஆளாகக் கொண்ட நம்பியாரூரரின் திருவடிகளைச் சார்வாக அடைந்து அன்பு பூண்டு ஒழுகுவராய்;

(வி-ரை) தாளாண்மை - விடா முயற்சி. **தாள்** - முயற்சி; **ஆண்மை** - ஆளும் தன்மை. "தாளாற்றி" (குறள்).

தாளாண்மை உழவு தொழிற்றன்மை வளம் - உழவுத் தொழிற் பெரு முயற்சி

3165. செந்நெல்லும் பொன்னன்ன செழும்பருப்புந் தீங்கரும்பின்
இன்னல்ல வமுதுமுத லெண்ணில்பெரும் பலவளங்கள்
மன்னியசீர் வன்ரொண்டர்க் கமுதாக வழுவாமற்
பன்னெடுநாட் பரவையார் மாளிகைக்குப் படிசமைத்தார். 11

யினுலே வரும் நேரியவளங்கள். இவை நெல் முலியனவும், காய்கனி முதலியனவும், இவைகொண்டு பெறும் பிறவுமாம்; இவற்றை மேல்வரும் பாட்டில் விரித்தல் காண்க.

வேளாண் குண்டையூர் கிழவர் - வேளாளர் என்பதனுல் மரபுச் சிறப்பினையும், **குண்டையூர்க் கிழவர்** என்பதனுல் ஊர்பற்றிய பெயர்ச்சிறப்பினையும் கூறியபடி. **கிழவர்** - கிழார் மரூஉ. இது வேளாளர் மரபுக்கு வழங்கும் சிறப்புப் பெயர். இது முன்னுள் மிகுதியும் வழக்கிலிருந்தது; இந்நாள் அருகி வழங்குவதாயிற்று. தனிப் பெயர் கூருது ஊர்பற்றிக் கூறியது மரபின் சிறப்புணர்த்திற்று. (தொல். பொருள் - மரபு - 74 உரை) தேவாரப் பதிகத்தினுள் இவ்வூரினையே சிறப்பித்தமை காட்டும் குறிப்புமாம்.

ஆளாகக்கொண்டவர் தாள் அடைந்து - ஆளாகக்கொண்டவராதலின் அவர் தாளடைந்து எனக் காரணக் குறிப்புப்பட ஓதினுர்.

வழக்கினில் வென்று ஆளாகக்கொண்டவர் - தடுத்தாட்கொண்ட வரலாறு; நம்பியாரூரர் வரலாற்றில் குண்டையூர் கிழார் ஈடுபட்டு அன்பு செய்து ஒழுகினுர் என்பது.

அன்பால் ஒழுகுவார் - இவ்வொழுக்க நிலை பற்றிய செயலை மேற்பாட்டிற் கூறுவார். 10

3165. (இ-ள்) செந்நெல்லும்... பலவளங்கள் - செந்நெல்லும் பொன்போன்ற செழும் பருப்பும் இனிய கரும்பாகிய இனிய நல்ல அமுதும் முதலாகிய அளவில்லாத பெரிய பல வளங்களையும்; மன்னியசீர்... அமுதாக - நிலைபெற்ற சிறப்புடைய வன்ரொண்டராகிய நம்பியாரூரருக்குத் திருவமுதாக உதவும் பொருட்டு; வழுவாமல்... படிசமைத்தார் - தவிராமல் பல நீண்ட நாட்கள் பரவையாரது திருமாளிகைக்குப் படிகொடுத்து வந்தார்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டு உரைக்க நின்றன.

(வி-ரை) செந்நெல் - செந்நெல்லின் மேன்மை பற்றி அரிவாட்டாய நாயனுர் புராணமும், பிறவும் பார்க்க.

பொன்னன்ன செழும் பருப்பு - பொன்னிறம் பருப்பின் உயர்வு காட்டுவது.

தீங்கரும்பின் இன்னல்ல அமுது - இன் - நல்ல - இனிய என்பது சுவையினையும் - **நல்ல** என்பது குணத்தினையும் குறித்தது. **அமுது** என்ருர் நேரே உணவாகப் பயன்படுதற் குறிப்பு.

வன்ரொண்டர்க்கமுதாக - "வழக்கினில் வென்ருளாக் கொண்டவர்" என்று முன்பாட்டிற் கூறியதற் கேற்ப **வன்ரொண்டர்** என்ருர்.

3166. ஆனசெய லன்பின்வரு மார்வத்தான் மகிழ்ந்தாற்ற
வானமுறை வழங்காமல் மாநிலத்து வளஞ்சுருங்கப்
போனகநெற் படிநிரம்ப வெடுப்பதற்குப் போதாமை
மானவழி கொள்கையினன் மனமயங்கி வருந்துவார், 12

படி - படித்தரம்; தினந்தோறும் அமைக்கும் அளந்த படிக் கட்டளை. **சமைத்தல்** - அளவிட்டுச் செலுத்துதல். *11*

3166. (இ-ள்) ஆனசெயல்...ஆற்ற - ஆயின அச்செயலை அன்பின் வழிவரும் மிக்க ஆசையால் மனமகிழ்ந்து செய்வதற்கு; வான முறை...சுருங்க - மழை முறைப்படி பெய்யாமையால் பெருநிலத்தின் வளங்கள் சுருங்கியபடியாலே; போனகம்... போதாமை - அமுதாகிய நெல்லும் பிற படித்தரங்களும் கொண்டு செலுத்துவதற்குப் போதா நிலைமையினால்; மானவழி...வருந்துவார் - மானமழிந்த கொள்கையினாலே மனமயங்கி (குண்டையூர் கிழார்) வருந்துவாராகி;

(வி-ரை) ஆன - ஆயின, முன் பாட்டிற் கூறலாயின; ஆக்கமான என்ற குறிப்புமாம்.

ஆற்ற - ஆற்றுதற்கு; **ஆற்றப்** - **போதாமை** என்று கூட்டுக.

வானம் முறை வழங்காமை. வானம் - மழை; **முறை** - பருவ முறையாகிய நிலையும், மாதமும்மாரி என்ற நிலையும் குறித்தது; **வழங்காமல்** - வழங்காமையால்.

வளம் - உழவினால் வரும் விளைபொருள்கள்.

போனக நெற்படி - **போனகம்** - உணவு; **படி** - படித்தரம்.

நெற்படி - என்றதனால் நெல் முதலாகிய உணவுக்குரிய பண்டங்களெல்லாம் கொள்ளப்படும்.

எடுப்பதற்கு - எடுப்பித்துக் கொண்டுபோய்ச் செலுத்துவதற்கு.

போதாமை - போதாமையால்.

மானம் அழி கொள்கை - மானம் - பெருமை. உயிர்பற்றிய கடமைகளில் கொண்ட ஊக்கமாகிய உணர்ச்சி குறித்து நின்றது. உலகர் கொள்ளும் ஏனைய பெருமைகள் பாச சமபந்தமாதலின் ஈண்டைக்குப் பொருந்தா என்க.

இயல்பின்வரும் - என்பதும் பாடம். *12*

3167. (இ-ள்) வன்றொண்டர்... நினைந்து - "வன்றொண்டரது திருவாரூரின் மாளிகைக்கு நெற்படி எடுத்து உய்ப்பதற்கு இன்று குறைபாடு நேர்கின்றதே;யான் என்ன செய்வேன்!" என்று எண்ணி; துன்றுபெரும்...எய்தி - மிக்கபெருங் கவலையினால் வருந்தி; உண்ணுதே...கொள்ள - உணவு கொள்ளாமல் அன்றிரவில் துயின்றனராக; அங்கணராகிய சிவபெருமான் அவர்பால் வந்து அருள் செய்வாராய்:

3167. "வன்றொண்டர் திருவாரூர் மாளிகைக்கு நெல்லெடுக்க
இன்றுகுறை யாகின்ற தென்செய்கே!" னெனநினைந்து
துன்றுபெருங் கவலையினற் றுயரெய்தி யுண்ணதே
அன்றிரவு துயில்கொள்ள வங்கணர்வந் தருள் புரிவார், 13

(வி-ரை) வன்றொண்டர் - இப்பெயராற் கூறினமை பற்றி முன் 3164-ல் உரைத்தவை பார்க்க.

குறை ஆகின்றது - குறை பண்டங்களிற் குறைபாடும், அதுகாரணமாக நியதமாகக் கொண்ட செயலாற்ற இயலாமையாற் போந்தகுறைபாடும் குறித்தது.

உண்ணதே - கவலையினல் - துயில்கொள்ள - வன்றொண்டர்க்கு அமுதுபடி சமைக்கக் குறையாயினமையின் அதனைத் தமக்கு நேர்ந்த குறையென்று கொண்டு உணவு உண்ணராயினர். உண்ணது கிடத்தல் மனத்துயரங் காட்டும் அறிகுறி. "அமுது செய்யாதே" (1561) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

உண்ணதே துயில் கொள்ள - அருள்புரிவார் - உண்ணதே கவலையினல் துயில் கொண்டமையினலே எனக் காரணப் பொருள் கொள்க.

துன்றுபெருங் கவலையினல் - அடியாரைப் பற்றிய பெருங் கவலையாதலின் அங்கணர் வந்து அது தீர அருள் புரிவாராயினர் என்பது "தாள்சேர்ந்தார்க்கல்லால் மனக்கவலை மாற்ற லரிது" என்ற திருக்குறளினலும் பெறப்படுதல் காண்க.

அருள்புரிவார் - அருளி - ஏவ - என வரும்பாட்டுடன் முடிக்க. 13

3168. (இ-ள்) ஆரூரன்...அருளி - "ஆரூரனுக்குப் படி அமைப்பதற்காக உன்னிடத்து நெல்லினைத் தந்துள்ளோம்" என்று கூறி; நீருருஞ்... யேவ - கங்கை தவழ்கின்ற சடைமுடியினையுடைய பெருமானர் குபேரனை ஏவியிட அதனலே; பேரூர்... ஓங்கியது - பெரிய அவ்வூரின் எல்லை முழுதும் நெல்மலையாகிய பெருக்கம் மேகங்கள் தவழும் நீண்டவிசும்பும் மறையும்படி நிறைந்து உயர்ந்தது; **ஆல் - அசை.**

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ஆரூரன்றனுக்கு...அருளி - இது குண்டையூர் கிழாருக்கு இறைவர் கனவில் அருளியது.

நிதிக்கோமான்றனை ஏவ - நிதிக்கோமான் - அளகைக் கிறைவனகிய குபேரன்; குபேரன் சிவபிரான்றோழர். அட்ட திக்குப் பாலகர்களுள் ஒருவராய், நிதிக்கு அரசராய்ச், சிவபிரா னேவலின்படி அடியார்களுக்கு வேண்டிய வளங்களை அங்கங்கும் கொண்டு உய்க்கும் நியமத்துட்பட்டவர். இளையான்குடி மாற நாயனர் வரலாறும் (445). குங்குலியக்கலய நாயனர் வரலாறும் (844) பிறவும் பார்க்க.

ஏவ - நென்மலையாகக் குண்டையூரில் கொண்டு உய்க்கும்படி ஏவ - இதுபின் விளைவின லறிக.

3168. "ஆரூரன் றனக்குன்பா னெற்றந்தோ" மென்றருளி
நீரூருஞ் சடைமுடையார் நிதிக்கோமான் றனையேவப்
பேரூர்மற் றதனெல்லை யடங்கவுநென் மலைப்பிறங்கல்
காரூரு நெடுவிசும்புங் கரக்கநிறைந் தோங்கியதால். 14

பேரூர்... ஓங்கியதால் - பேரூர் - பெரிய ஊர்; இங்குக் குண்டையூரைக் குறித்தது. மலைப்பிறங்கல் மலை போன்ற பெருக்கு. **பிறங்கல்** - உயர்ச்சியுமாம். **விசும்பும் கரக்க- கரத்தல்** - மறைத்தல். விசும்பு கரக்க என்றது உயர்ச்சி குறித்தது.

ஏவ ஓங்கியது - இறைவர் ஏவுதலும் செயல் நிகழ்ச்சியும் உடனிகழ்ந்த விரைவு குறித்தது.

ஆரூரன்தனக்கு உன்பால் நெல் தந்தோம் - ஆரூரன்றனக்கு - ஆரூரருக்குப் படி சமைப்பதற்காக; இஃது ஆரூரருக்கே நேரே தரப்பெறாமல் குண்டையூர் கிழாருக்குத் தரப்பெற்றமை என்னையோ? எனின், குண்டையூர் கிழாரின் மனக்கவலை தீர்தற்கும் அவரது திருப்பணி நிறைவேறக் காண்பதற்குமாக இறைவர் அருள் வைத்தபடி என்க. மேற்கூறப்படுவனவும் காண்க.

அடங்கவும் - முழுவதும் - ஊர் எல்லை நெல்மலையின் உள்ளே அடங்க என்ற குறிப்புமாம்.

பிறங்கி - பிறங்க - என்பனவும் பாடங்கள். *14*

3169. (இ-ள்) அவ்விரவு...கண்டே - குண்டையூர் கிழார் அன்று இரவு விடியற் காலையில் துயிலுணர்ந்த தெழுவாராய் அதனைக் கண்டே; எவ்வுலகின்... அதிசயித்து- "இதுதான் எந்தவுலகத்தின் விளைந்த நெல்மலை" என்று அதிசயம் கொண்டு; செவ்விய... போற்றி - சிவந்த பொன்மேரு மலையினை வில்லாக வளைத்த சிவபெருமானின் திருவருட் செயலினைத் துதித்து; கொவ்வைவாய்... தொழு தெழுவார் - கோவைக் கனிபோன்ற வாயினையுடைய பரவையாரின் கொழுநராகிய நம்பியாரூரரையே தொழுதெழுவாராகி,

(வி-ரை) அவ்விரவு - இறைவர் தமது கனவில் வந்து சொல்லிய அவ்விரவு என்று அகரம் முன்னறி சுட்டு

புலர்காலை உயர்ந்தெழுவார் - குண்டையூர் கிழாரென்னும் எழுவாய் அவாய் நிலையான் வருவிக்க (*3164*); **உணர்ந்து** - துயிலுணர்ந்து; புலர்காலே உணர்ந்து என்றதனல் இது வைகறைக்கண வென்பதும், அதனல் உடன் பயன்றருவதென்பதும் கருதப்படும். "புலர்வுறும் வைகறை" (*2106*) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

அதுகண்டே - அது - ஊர் எல்லையடங்கவும் விசும்பு கரக்க ஓங்கிய நெல்மலை; **அது - இது** - இரண்டும் பொருள் ஒன்றனையே சுட்டின; **அது** என்பது முன் காணுது இன்னதென்றிய வாராத கனவு நிலை குறித்த சேய்மைச் சுட்டு; **இது** - கண்ட பின் மனத்தினுட் கொண்டு கருதவருதலின் அண்மைச் சுட்டு.

3169. அவ்விரவு புலர்காலை யுணர்ந்தெழுவா ரதுகண்டே
"யெவ்வுலகி னென்மலைதா னிது?" வென்றே யதிசயித்துச்
செவ்வியபொன் மலைவளைத்தார் திருவருளின் செயல்போற்றிக்
கொவ்வைவாய்ப் பரவையார் கொழுநரையே தொழுதெழுவார், 15

அதிசயித்து - அதிசயம் - கண்ணுற் கண்டாராயினும் இன்னதென் றறியவாரா மையின் நிகழ்ந்த பெருமிதம். "அதிசயம் கண்டோமே" (திருவா).

திருவருளின் செயல் - அருள் - காரணம்; **செயல்** - அதனால் நிகழ்ந்த வெளிப் பாடாகிய பொருள்.

கொவ்வைவாய் - கொவ்வை - கோவைக்கனி. கோவை என்பது **கொவ்வை** என மருவி வந்தது.

கொழுநரையே - ஏகாரம் தேற்றம். திருவருள் வெளிப்படுதற்குக் காரணமாய் நின்ற உரிமை பற்றியது. **கொழுநர்** - தலைவர் என்பது குறிப்பு.

தொழுதெழுவார் - தொழுதலும் எழுதலும் உடனிகழ்ந்த நிலை குறித்தது. "கொழுநற் றொழுதெழுவாள்" (குறள்) என்புழிப் போல **கொழுநரையே** என்ற குறிப்பும் காண்க.

எழுவார் - போந்தார் - என மேல் வரும் பாட்டுன் முடிக்க,

எழுவார் - எழுவாராகி - முற்றெச்சம். *15*

3170. (இ-ள்) நாவலூர்... லெடுக்கலாகும் - திருநாவலூர்த் தலைவராகிய நம்பியாரூரருக்காகச் சிவபெருமான் கருணை செய்த நெல், ஆதலின் இதனை இங்கு யாவர்களாற் சுமந்தெடுக்க முடியும்? (ஒருவராலுமியலாது); இச்செயல்...யான் என்று போந்தார் - இந்தச் செயலினை அவர்க்குச் சொல்ல நான் போவேன் என்று போயினார்; புகுந்தவாறு...ஏவ - நிகழ்ந்த படியினைத் தேவதேவராகிய சிவபெருமான் நம்பியாரூரருக்குச் சொல்லி ஏவியருளியபடி; நம்பியும்...போந்தார் - ஆரூர் நம்பிகளும் எதிரே சென்றருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) மன்னனார்க்கு - மன்னர் - தலைவர்; **மன்னனார்க்கு** - மன்னவருக்குத் தரும்பொருட்டு.

நாயனார் - தலைவர் - இறைவர்; "நாயனீரே" (774); **நாதனார்** என்ற பாடமு முண்டு.

மன்னனார்க்கு நாயனார் அளித்த நெல் - இங்கு யாவரால் எடுக்கலாகும் - கொடுத்தாரும், கொடுக்கப் பெற்றாரும், கொடைப் பொருளும் பெரியனவாதலின் வேறு பிறரால் எடுக்கலாகாது என்பது; இங்கு யாவரால் - இந்நிலவுலகத்தில் நாதனார் அருளினாலன்றி வேறு எவரால்? வினா எவராலும் எடுக்கலாகாதென எதிர்மறை குறித்து நின்றது; "பயனென்கொல்?" (குறள்) என்புழிப்போலக் கொள்க.

வேறு

3170. "நாவலூர் மன்ன னார்க்கு நாயனா ரளித்த நெல்லிங்
கியாவரா லெடுக் கலாகு?; மிச்செய லவர்க்குச் சொல்லப்
போவன்யா" னென்று போந்தார்; புகுந்தவா றருளிச் செய்து
தேவர்தம் பெருமா னேவ நம்பியு மெதிரே சென்றார். 16

இச்செயல் முன் - "திருவருளின் செயல்" (3169) என்ற செயலும், அது யாராலும் எடுக்கலாகாத் தன்மையும்.

புகுந்தவாறு - ஏவ - இச்செயலினையும், கிழார் வரும் நிலையினையும், முன்னமே இறைவர் நம்பியாரூரருக்கு அருளிச் செய்து அதனைச் சென்று காண்பாய் என்று ஏவியருளினர் என்க. நம்பிகள்பால் திருவாரூரிலே தாராது குண்டையூரில் தந்து அங்கு நம்பிகளுக்கு அறிவித்து ஏவியருளியவாறு பற்றி முன் (3168) உரைக்கப்பட்டது. **குண்டையூர் கிழாரின் அடிமைத் திறமும், நம்பி ஆரூரரின் பெருமையும், இறைவரருள்புரியும் எளிமையும், பரவையாரின் வள்ளண்மையும் ஒருங்கே வெளிப்பட்டு** உலகர் அறிந்துய்யவும், நம்பிகள் இது பற்றிய திருப்பதிகம் அருளி ஆள் வேண்டிட அவ்வாறே அருளும் திறமும் உலகர் கண்டுய்யவும் போந்த அருளின் நிகழ்ச்சி என்க. மேல் வருவன (3171 - 3182) பார்க்க. "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும், கேட்பான்புகி லளவில்லை கிளக்கவேண்டா" (திருப்பாசுரம்) என்ற திருவாக்குக் காண்க. திருவரத்துறை யிறைவர் முத்துச் சிவிகை முத்துச் சின்னங்கள் முதலியவற்றை யருளி அடியார்க் கறிவித்துப், பிள்ளையாருக்கும் அறிவித்தருளியபடியினையும் (2093-2105), ஏயர்கோனார்பால் சூலையினை வைத்து, அது தீரும் வண்ணத்தினை அவர்பாலும் ஆரூர் நம்பிகள் பாலும் தனித்தனியே அறிவித்தருளும்படியினையும் (3543-3548), இவ்வாறு வரும் பிற அருளிப்பாடுகளையும் நோக்குக.

நம்பியும் - நாயனாரது ஏவலினைக் கேட்ட நம்பிகளும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

எதிரே - தம்மிடம் அறிவிக்கப் போந்த குண்டையூர் கிழாரின் எதிரே. 16

3171. (இ-ள்) குண்டையூர் கிழவர்...நின்று - குண்டையூர் கிழவரும் எதிர்கொண்டு வந்து குற்றமற்ற வாய்மையுடைய தொண்டனாராகிய நம்பியாரூரருடைய திருவடியில் தொழுது நிலமுறவிழுந்து எழுந்து நின்று; பண்டெலாம்... என்று - முன் காலமெல்லாம் அடியேன் தேவரீருக்குச் செய்து வந்த பணிவிடை எனக்கு இன்று முட்டுப்பாடுற்றபோது தேவர் பெருமானாராகிய சிவபெருமானார் தாமே நெல் மலையினை அளித்தருளினர் என்று சொல்லி;

(வி-ரை) எதிர்கொண்டு - நம்பியாரூரரை எதிர் கொண்டு வந்து.

கோதில் வாய்மை - கோதில் - என்றது தன்மை விளக்கி நின்றது.

3171. குண்டையூர் கிழவர் தாமு மெதிர்கொண்டு கோதில் வாய்மைத்
தொண்டனுர் பாதந் தன்னிற் றெழுதுவீழ்ந் தெழுந்து நின்று
``பண்டெலா மடியேன் செய்த பணியெனக் கின்று முட்ட
அண்டர் தம்பிரானுர் தாமே நெென்மலை யளித்தா`` ரென்று, 17

3172. ``மனிதரா லெடுக்கு மெல்லைத் தன்றுநென் மலையி னுக்கம்;
இனியெனுற் செய்ய லாகும் பணியன்றி`` தென்னக் கேட்டுப்
``பனிமதி முடியா ரன்றே பரிந்துமக் **களித்தார்** நெல்`` லென்
றினியன மொழிந்து தாமுங் குண்டையூ ரெய்த வந்தார். 18

பண்டெல்லாம்... பணி - முன்னுளிலெல்லாம் அடியேன் உமக்கு அமுதுபடி சமைத்து வந்த பணி.

அண்டர் தம்பிரானுர் தாமே - நான் வேண்டிக் கொள்ளாமலே அவர் தாமே தமது கருணைப் பெருக்கினுலே. **என்று - என்ன** என வரும் பாட்டுடன் முடிக்க.

அளித்தார் - கருணையினுல் அருளினுர் என்ற குறிப்பு. 17

3172. (இ-ள்) மனிதரால்...என்ன - இத்த நெல்மலையின் பெருக்கம் மனிதர்களால் சுமந்தெடுக்கும் அளவுட்பட்டதன்று; இனி, இஃது என்னுற் செய்யக் கூடிய பணியன்று என்று சொல்ல; கேட்டு - (நம்பியாரூரர்) அதனைக் கேட்டு; பனிமதி... மொழிந்து - ``குளிர்ந்த சந்திரனை முடித்த சிவபெருமானன்றே அருள் சுரந்து இந்நெல்லினை உமக்கு அளித்தார்'' என்று இனிய மொழிகளைக் கூறி; தாமும்...வந்தார் - தாமும் குண்டையூரினைச் சார வந்தருளினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மனிதரால்... ஆக்கம் - மனிதரால் சுமந்தெடுத்து இங்குக் கொண்டு வந்து உய்க்கும் அளவில் அடங்குவதன்றெனவே, இறைவரருளப்பூதங்களாலேதான் இயல்வது என்றது. **ஆக்கம்** - பெருக்கம்.

இனி... இது - இது - இந்நெல்லைச் சுமந்து வந்து திருமாளிகையில் உய்க்கும் பணி. **செய்யலாகும் - செய்யக்கூடிய.**

பனிமதி... நெல் என்று - இறைவர் தாமே உமக்கு நெல் அளித்தார் என்பது என் பொருட்டளித்தாராயின் திருவாரூரில் அளித்திருப்பர்; அவ்வாறன்றிக் குண்டையூரில் அளித்து உமக்கு அருளியமையால் உமது அன்பின் பொருட்டேயளித்தனர் என்றவாறும். **இனியன** - இனிமையான மொழிகளை. தாமும் - அவருடனே தாமும் கூடி.

நென் மலையினுக்கம் — என்பதும் பாடம். 18

3173. விண்ணினை யளக்கு நெல்லின் வெற்பினை நம்பி நோக்கி
அண்ணலைத் தொழுது போற்றி யதிசய மிகவுமெய்தி
"எண்ணில்சீர்ப் பரவை யில்லத் திந்நெல்லை யெடுக்க வாளுந்
தண்ணில வணிந்தார் தாமே தரிலன்றி யொண்ணா" தென்று. 19

3173. (இ-ள்) விண்ணினை...நோக்கி - *ஆகாயத்தை அளாவ உயர்ந்த நெற்குவியலை நம்பி ஆரூரர் நோக்கி; அண்ணலை...எய்தி - பெருமையுடைய பராவிய சிவபெருமானைத் தொழுது மிகவும் அதிசயம் அடைந்து; "எண்ணில்...ஒண்ணாது" என்று - "அளவில்லாத சிறப்பினையுடைய பரவையாரது திருமாளிகைக்கு இந்நெல்லினை எடுத்துச் சேர்க்க ஆளினையும் குளிர்ந்த சந்திரனை அணிந்த சிவபெருமான் தாமே தந்தருளினாலன்றி வேறெவ்வாற்றாலு மியலாது" என்று துணிந்து,*

(வி-ரை) அளக்கும் - *உயரத்தினை அளப்பது போன்று மேல் ஓங்குதல்.*

மிகவும் அதிசயம் எய்தி - *"அதிசயித்து" (3169)*

***எண்ணில் சீர்ப் பரவை* இல்லத்து** - இல்லத்துக்குரியவர் மனைவியாரேயாகும் குறிப்புப் பெறப் **பரவையார் இல்லம்** என்றார். பரவையாரது பெருஞ் சிறப்பு இந்நெல்லினைப் பற்றி "இன்றுங்கள் மனை எல்லைக்குட்படு நெற்குன்றெல்லாம் அவ்வவரே எடுத்துக்கொள்க" என இங்கு மேலும் விளங்க நிற்கும் தன்மை காண்க. *(3182).*

எண்ணில் சீர் - இல்லம் என்று கூட்டி இனி இறைவர் இருமுறை திருவடி தோயத் தூது தர எழுந்தருளும் பெருஞ்சிறப்பும் குறிக்க வைத்த நயமும் கண்டுகொள்க. இதுபற்றிப் பின் (3516) உரைப்பனவும், முன் திருநகரச் சிறப்பில் (90-91) விதந்து எடுத்துரைத்தவையும் பார்க்க.

எடுக்க - எடுத்துக்கொண்டு உய்க்க; "அட்டித்தர" என்பது பதிகம்.

ஆளும் தரிலன்றி - நெல் தந்ததன்றி ஆளும் என உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை.

தாமே தரிலன்றி - இறைவருடைய அருட் செயல்கள் அவரருளானன்றி அளத்தற்கொண்ணா என்பது குறிப்பு. ஏகாரம் பிரிநிலை.

ஒண்ணாது - பிறரெவராலும் எடுத்தற்கியலாது.

என்று - எய்திப் - பாடுதலும் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *19*

3174. (இ-ள்) ஆளிட வேண்டிக் கொள்வார் - ஆள் தரும்படி வேண்டிக் கொள்வாராகி; அருகு...எய்தி - அருகில் உள்ள திருப்பதியாகிய திருக்கோளிலியிலே தம்

3174. ஆளிடவேண் டிக்கொள்வா ரருகுதிருப் பதியான
கோளிலியிற் றம்பெருமான் கோயிலினை வந்தெய்தி
''வாளன கண்மடவாள் வருந்தாமே'' யெனும்பதிகம்
மூளவருங் காதலுடன் முன்றொழுது பாடுதலும்,

பெருமானின் திருக்கோயிலினில் வந்து சேர்ந்து; ''வாளன...பதிகம் - வாளன கண்மடவாள் வருந்தாமே'' என்ற சொற்றொடரினையும் குறிப்பினையுமுடைய திருப்பதிகத்தினை; மூள... பாடுதலும் - மேன்மேலும் பெருகிவரும் பெருவிருப்பத்துடனே திருமுன்பு தொழுது பாடுதலும்,

(வி-ரை) ஆள் இட - ஆள் தர.

அருகு திருப்பதியான கோளிலி - குண்டையூரினின்றும் நேர் தெற்கில் மட்சாலை வழி அரைநாழிகையளவில் உள்ளது திருக்கோளிலி.

குண்டையூர் - திருவாரூரினின்றும் தென்கிழக்காய்த் திருஏமப்பேறூர், திருக்காறுயில், திருவலிவலம் என்ற இவற்றின் வழியாய் மட்சாலைவாழி 10 நாழிகை யளவில் அடையத் தக்கது. குண்டையூர் பெருந்தலமன்றாதலால் நம்பிகள் அருகில் உள்ளதும் சத்தவிடங்கத் தலங்களுள் ஒன்றும் ஆகிய திருக்கோளிலிக்குச் சென்று பதிகம் பாடியருளினார் போலும். குண்டையூரின் எல்லையடங்கவும் நென்மலைப் பிறங்கல் ஓங்கி ஆளியங்காவாறு வழி அடைத்ததாதலின் அருகு உள்ள பதியிற் சென்றனர் என்று கருதவுமிடமுண்டு. இந்நென்மலை பின்னர்த் திருவாரூர் அடங்கவும் நிறைந்து (3179) நெறிபலவும் போக்கரிதாக நிறையும் (3180) திறமும் இங்குக் கருதுக.

வாளன கண்மடவாள் வருந்தாமே என்னும் பதிகம் - பதிகக் கருத்துரைத்தது; பதிக முதற்பாட்டு; நெல்விட ஆள் வேண்டுவதன் காரணம் கூறும் வகையால் இது பதிகக் குறிப்புமாயிற்று. பதிக முழுதும் இக்குறிப்பு விரவி வருதலும் காண்க. திருமுதுகுன்றப் பதிகமும் இவ்வாறே காணத் தக்கது.

மூளவரும் காதல் - மேன்மேற் பெருகும் பெருவிருப்பம்; **மூளு**தலாவது இந்நெல்லினால் இனித் திருவாரூர் வாழ்வாரும் அடியார்களும் பயன்பெற உள்ள நிலை பற்றி எழுவதாம்.

முன் - திருமுன்பு; காலத்தால் முன்னர் என்றலுமாம். பதிகம் பாடுமுன் தொழுது பாடுதல் மரபு. பதிகம் பாடித் திருவாக்குக் கேட்ட **பின்பு** தொழுதல் மேற்காண்க. ''தொழுதேத்தி'' (3176).

பாடுதலும் — நிகழ்ந்தது — என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 20

வேறு

3175. "பகற்பொழுது கழிந்ததற்பின் பரவைமனை யளவன்றி
மிகப்பெருகு நெல்லுலகில் விளங்கியவா ரூர்நிறையப்
புகப்பெய்து தருவனநம் பூதங்க" ளெனவிசும்பில்
நிகர்ப்பரிய தொருவாக்கு நிகழ்ந்தது நின் மலனருளால் 21

திருக்கோளிலி

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

நீள நினைந்தடியே னுமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள் வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை யெம்பெருமா னவை யட்டித்தரப் பணியே. (1)

கொல்லை வளம்புறவிற் றிருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம்பரவுந் திரு நாவல வூரனவன்
நெல்லிட வாட்கள் வேண்டி நினைத் தேத்திய பத்தும்வல்லார்
அல்லல் களைந்துலகி லண்டர் வானுல காள்பவரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— பரவையார் வருந்தாமே ஆரூருக்கு நெல்லெடுக்க ஆள் தரவேண்டும். *3174*-ல் ஆசிரியர் கூறியவாறும், "ஆளிலை எம்பெருமான் அவையட்டித்தரப் பணியே"*(1)*, "பரவை பசிவருத்தம் அது நீயுமறிதியன்றே"*(6)*, "பரவையவள் வாடுகின்றாள்" *(8)*, "நெல்லிட ஆட்கள் வேண்டி" *(11)* என்ற பதிகப் பகுதிகளும் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1)* நீள நினைந்து - நீள - முன்னை நிலையிலும், அத்தொடர்பாறு இம்மையிலும், இனி வருங்காலத்தும் என்பது குறிப்பு. **மடவாள் -** பரவையார். *8*-ம் பாட்டும் பார்க்க.

வாடி வருந்தாமே - அடியார்க் கமுதளிக்க நெல்லில்லாமைபற்றி வருந்தாமல்; **அட்டித்தர** - கொண்டு உய்த்தல். **அட்டிற்றர** என்று பாடங்கொண்டும், **அட்டில் -** சமையலறை எனக் கொண்டும் சமையலறையில் தர என்றுரைப்பாருமுண்டு;—**(2) உமை - பங்குடையாய்** "மாதர் நல்லார்வருத் தமதுநீயு மறிதி யன்றே" (3) "இடத்தில் வைத்தாய்";-(4)(5) (6) (7) (ஷ) ஆதலின் பரவையாரின் வருத்தம் நீ அறிவாய் என்பது குறிப்பு. **அண்டமதாயவன் -** விசுவரூபி. அவையே தானேயாய் (போதம்);—**(4) பூசல்** - குற்றம்; **அல்லல்** - வாட்டம்;—**(6) குரவு** - மயிர்ச்சாந்து; குராமலருமாம். **அறிதி -** உயிர்க்குயிராய் அமர்ந்து உயிர்களின் நிகழ்ச்சிகளை உடனிருந்தறிவாய்;—**(8) எப்பொழுதும் - நீள (1); — நெல்லிட ஆட்கள் வேண்டி** - பதிகக் குறிப்பு.

தலவிசேடம்:- திருக்கோளிலி - முன் *2413*-ன் கீழ் உரைத்தவை பார்க்க.

3175. (இ-ள்) நின்மலனருளால் - சிவபெருமானது திருவருளினாலே; நிகர்ப்பரியது ஒரு வாக்கு - ஒப்பற்ற ஓர் திருவாக்கு; பகற்பொழுது...என - "பகற்பொழுது கழிந்தபின்பு

3176. தம்பிரா னருள்போற்றித் தரையின்மிசை விழுந்தெழுந்தே
உம்பரா லுணர்வரிய திருப்பாதந் தொழுதேத்திச்,
செம்பொனேர் சடையாரைப் பிறபதியுந் தொழுதுபோய்
நம்பரா ரூரணைந்தார் நாவலூர் நாவலனுர். 22

பரவையாரது மனையளவு மட்டுமன்றி மிகப்பெருகும் இந்நெல்லினை உலகில் விளங்கிய திருவாரூர் நிறையப் புகும்படி கொண்டு நம்முடைய பூதகணங்கள் சேர்த்துத்தருவன" என்று; விசும்பில் நிகழ்ந்தது - ஆகாயத்தில் உண்டாயிற்று.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) "பகற்பொழுது... பூதங்கள்" என - இது பதிகங்கேட்டவுடன் இறைவர் விசும்பிடை நின்று கூறிய அசரீரி வாக்கு.

பகற்பொழுது கழிந்ததற்பின் - சிவகணங்களின் செயல் மக்கள் கண்ணுக்குப் புலப்படா வகை நிகழுமாதலால் நென்மலை முழுதும் குண்டையூரினின்றும் 10 நாழிகையளவில் திருவாரூரில் உய்க்கும் நிலை, மக்கள் காணுவண்ணம் **பகற்பொழுது கழிந்ததற்பின் - பெய்து தருவன** என்றுர்.

பரவை மனையன்றி - ஆரூர் நிறைய - பின் விளைவு (3182) காண்க. இந்நெல்மலை முழுதும் பரவையார் மாளிகை யொன்றின்கட் சேர்க்க இயலாதென்பது கருத்து. பரவை யில்லத்து எடுக்க ஆள் (3173) வேண்டிய நம்பியாரூரருக்கு இந்நெல் பரவையார் மனையளவின்றி ஆரூர் நிறையப் பெய்யப் பெறுவன என்றபடி.

உலகில் விளங்கிய - உலகத்தில் "ஊழிவெள்ளமும் கொள்ளாக் கழனி ஆரூர்" என்றும், "முன்னே பின்னே திருவாரூர் கோயிலாக்கொண்ட நாளே" என்றும், மேலும் புகழநின்ற பண்பினுலும் திருத்தொண்டத் தொகை பெறநின்ற பண்பினுலும், பலவாற்ருனும் விளக்கம் பொருந்திய.

நம் பூதங்கள் - நம் சிவகணங்களாகிய குண்டைக் குறட் பூதங்கள்; "நீடு தேவர் நிலைகளும் வேண்டிடின், நாடு மைம்பெரும் பூதமு நாட்டுவ" (16) என இவைகளின் தன்மையை நூன்முகத்தே உரைத்தவை இங்கு நினைவு கூர்தற்பாலன.

விசும்பில் - அருளால் - வாக்கு நிகழ்ந்தது என்க. அசரீரி வாக்கு என்பார் **நிகர்ப்பரிய** என்றுர். ஒலி வெளிப்படுதற்குரிய கருவிகளின்றி நிகழ்வதாலும், சிவனருள் புலப்பட வருதலானும் **நிகர்ப்பரி**தாயிற்று. 21

3176. (இ-ள்) தம்பிரான்...எழுந்தே - தம் பெருமானுரது திருவருளினைத் துதித்து நிலத்தின்மேல் விழுந்து எழுந்தே; உம்பரால்...ஏத்தி - தேவர்களாலும் உணர்தற்கரிய திருவடிகளைத் துதித்துப் பரவி; செம்பொன்நேர்...போய் - செவ்விய பொன்போல விளங்கும் சடையினையுடைய சிவபெருமானைப் பிற பதிகளிலும் வணங்கிச் சென்று; நம்பர்...நாவலனுர்

3177. பூங்கோயின் மகிழ்ந்தருளும் புராதனரைப் புக்கிறைஞ்சி
நீங்காத பெருமகிழ்ச்சி யுடனேத்திப் புறம்போந்து
பாங்காஞர் புடைசூழ்ந்து போற்றி சைக்கப் பரவையார்
ஓங்குதிரு மாளிகையி னுள்ளணைந்தா ராரூரர். 23

- திருநாவலூரில் வந்தருளிய நாவலராகிய நம்பியாரூரர் இறைவரது திருவாரூரை வந்து சேர்ந்தனர்.

(வி-ரை) அருள் - அசரீரியால் நிகழ்ந்த அருளிப்பாடாகிய மொழி.

உம்பரா லுணர்வரிய - இவ்வருளின் தன்மை தேவர்க்கு மறிவரிது என்றபடி; "நெடுவிசும்பும் கரக்க" (3168) "விண்ணிலோ அளக்கரும்" (3173) முதலியவற்றின் குறிப்பும் காண்க. சிறப்பு உம்மை தொக்கது.

பொன் - பொன்னின் விளக்கமாகிய ஒளி

பிற பதியும் - பிறபதிகளிலும் - ஏழனுருபு தொக்கது.

பிற பதிகளாவன - திருக்கோளிலிக்கும் திருவாரூருக்கு மிடையிலும் அயலினையிலும் உள்ளன. இவை திருவலிவலம், திருநெல்லிக்காவல், திருக்காறாயில், திருமாப்பேறூர் முதலாயின என்பது கருதப்படும்.

நாவலனூர் - "உயர் நாவல் தனிநாதன்" (223); "தமிழ்நாதன்" (232) முதலாக வருவன பார்க்க. **நம்பர் -** தாம் நம்பியடைதற்கிடமானவர் என்பதும், உயிர்கள் மேவுதற்குரியவர் என்பதும் குறிப்பு. "நம்பும் மேவும் நசையா கும்மே." 22

3177. (இ-ள்) வெளிப்படை. பூங்கோயிலின் கண் மகிழ்ச்சியுடன் எழுந்தருளியுள்ள புற்றிடங் கொண்ட பெருமானை, உள்ளே புகுந்து வணங்கி, இடையறாத பெருமகிழ்ச்சியுடன் துதித்துப், புறத்திற் போந்து, பரிசனங்கள் முதலாயினர்கள் பக்கத்திற் சூழ்ந்து துதிக்கச் சென்று, பரவையாரது ஓங்குகின்ற திருமாளிகையின் உள்ளே நம்பியாரூரர் அணைந்தருளினர்.

(வி-ரை) பூங்கோயில் - திருவாரூர்க் கோயிலின் பெயர் (135).

புராதனர் - மிகப் பழமையானவர். "முன்னை பின்னை" என்ற திருத்தாண்டகக் கருத்துப் பார்க்க.

பூங்கோயில்... ஏத்தி - குண்டையூர் சென்று திருக்கோளிலியில் பதிகம் பாடி அருள்பெற்றுத் திருஆரூரில் மீண்ட நம்பியாரூரர் நேரே தமது திருமாளிகையில் எழுந்தருளாது பூங்கோயிலினுட் புக்கு வணங்கிய பின்னரே திருமாளிகையுட் செல்கின்றார். இம்மரபு குறிக்கத் தக்கது. அவனருளா லல்லது ஒன்றையும் செய்யாத சீவன்முத்தரது தன்மைகளே இவ்வாறு விளைவன. திருமுதுகுன்றத்திற் பெற்ற பொன்னையும் (3292), திருப்புகலூரிற் பெற்ற பொன்னையும் (3208) நம்பிகள், ஆட்களின் மூலம் திருமாளிகையுட் போக்கித் தாம் பூங்கோயிலினுட் சென்று இறைவரை வணங்கிச் செல்லும் நிலையும், இவ்வாறு வரும் பிறவும் இங்கு நினைவுகூர்தற்பாலன.

3178. கோவைவாய்ப் பரவையார் தாமகிழும் படிகூறி
மேவியவர் தம்மோடு மிகவின்புற் றிருந்ததற்பின்
சேவின்மே லுமையோடும் வருவார்தந் திருவருளின்
ஏவலினு லவ்விரவு பூதங்கண் மிக்கெழுந்து, 24

3179. குண்டையூர் நென்மலேயைக் குறட்பூதப் படைகவர்ந்து
வண்டுலாங் குழற்பரவை மாளிகையை நிறைவித்தே
அண்டர்பிரான் றிருவாரூ ரடங்கவுநென் மலையாக்கிக்
கண்டவரற் புதமெய்துங் காட்சிபெற வமைத்தனவால். 25

நீங்காத - ஒருகாலும் இடையருத; இது நம்பிகளது இடையருத சிவராஜ யோகத்தினியல்பு.

பாங்கானுர் - அங்கு மேவினுர்கள்; பரிசனங்கள் முதலோர். **பாங்கு** - உரிமையுமாம்.

ஓங்கு திருமாளிகை - இறைவர் தூதராக இருமுறை எழுந்தருளும் பெருமைக் குறிப்பு. 23

3178. (இ-ள்) கோவைவாய்... இருந்ததற்பின் - கோவைக் கனிபோலும் திருவாயினேயுடைய பரவையார் மகிழும்படி நிகழ்ந்த செயல்களே எல்லாம் எடுத்துக் கூறி அவரோடுங் கூடி மிக இன்பமுடன் இருந்த பின்பு; சேவின்மேல்... ஏவலினுல் - இடபத்தின்மேல் உமையம்மையாருடனே எழுந்தருளி வரும் இறைவரது திருவருளின் ஏவுதலினுலே; அவ்விரவு...மிக்கெழுந்து - அந்த இரவிலே சிவபூதங்கள் மிக்க எழுந்து;

(வி-ரை) கூறி - குண்டையூரிற் கண்டவற்றையும், இறைவர்பால் வேண்டியதனேயும், இறைவர் அசரீரியாக அருளியதனேயும் கூறி.

மிக இன்புற்று இருந்ததற்பின் - இறைவரின் அருட்டிறங்களே எண்ணி எண்ணி மகிழ்ந்து திளேத்திருந்த பின். அந்நாள் முழுதும் அவ்வெண்ணங்களே மிக்கன என்பது.

சேவின்மேல் உமையோடும் வருவார் - சிவபெருமான். இத்தன்மையாற் கூறியது ஈண்டு அருளின் வெளிப்பாடு குறித்தற்கு.

ஏவலினுல் - நென்மலேயினேத் திருவாரூரிற் கொண்டுய்க்கும்படி ஏவி யருளியபடி.

பூதங்கள் - சிவகணமாகிய பூதங்கள். "குறட்பூதப் படை" (3179) என மேற்கூறுதல் காண்க. "குண்டைக்குறட் பூதம்" (தேவா).

மிக்கெழுந்து - கவர்ந்து - நிறைவித்தே - ஆக்கி - அமைத்தன என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 24

3179. (இ-ள்) குண்டையூர்...நிறைவித்தே - அக்குறட் பூதப் படைகள் குண்டையூரிலிருந்த நென்மலேயைக் கைக்கொண்டு எடுத்துச் சென்று, வண்டு

3180. அவ்விரவு புலர்காலை யாரூரில் வாழ்வார்கண்
"டெவ்வுலகில் விளைந்தனநெல் மலையிவை" யென் றதிசயித்து
"நவ்விமதர்த் திருநோக்கி னங்கைபுகழ்ப் பரவையார்க்
கிவ்வுலகு வாழவரு நம்பியளித் தன" வென்பார். 26

3181. நீக்கரிய நெற்குன்று தனைநோக்கி நெறிபலவும்
போக்கரிதா யிடக்கண்டு மீண்டுந்தம் மில்புகுவார்
"**பாக்கியத்தின் றிருவடிவாம் பரவையார்க்** கிந்நெல்லும்
போக்குமிட மரிதாகு" மெனப்பலவும் புகல்கின்றார்; 27

உலவுதற்கிடமாகிய கூந்தலையுடைய பரவையாருடைய திருமாளிகையின்கண் நிறையச் செய்தே; அண்டர்பிரான்...ஆக்கி - தேவர் பெருமானது திருவாரூர் முழுவதும் நெல்மலையாக உய்த்து; கண்டவர்...அமைத்தன - கண்டவர்கள் யாவரும் அற்புதமடையும் காட்சியை அமைவு செய்தன; (ஆல் - அசை)

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

*(**வி-ரை**) **கவர்ந்து** - கைக்கொண்டெடுத்து. **மாளிகையை நிறைவித்தே** - இது முதலிற் செய்த செயல். மாளிகையிடங் கொள்ளுமளவும் நிறைவு செய்தன. ஏகாரந் தந்து பிரித்துக் கூறியதும் அப்பொருட்டு. ஏகாரம் பிரிநிலை.*

***திருவாரூர் அடங்கவும் நென்மலை ஆக்கி** - இது திருமாளிகையினை நிறைவாக்கிய பின் எஞ்சிய நென்மலையைப் பற்றிய செயல், **அடங்கவும்** - முழுவதும். **மலை ஆக்கி** - நகரின் திருவீதிகளெங்கும் மலைபோலக் குவித்து.*

அற்புதமெய்தும் காட்சி - நெல்மலையினைக் கண்டவர்கள் அற்புதமாகிய மெய்ப்பாட்டுடன் காணத் தக்க காட்சி; **அற்புத**மாவது, நெல்மலைகளின் அளவேயன்றி, அவை போந்தவாறும், வகையும், பிறவும் அறியமுடியாதபடி உள்ளத்தெழும் பெருமித உணர்ச்சி. "அற்புத மறியேனே" (திருவா). மேற்பாட்டுப் பார்க்க. *25*

3180. (இ-ள்) அவ்விரவு புலர்காலை - பூதங்கள் அவ்வாறு ஆரூர் அடங்க நென்மலையாக்கிய அந்த இரவு விடியும் காலையில்; ஆரூரில்...அதிசயித்து-திருவாரூரில் வாழ்வார்கள் பார்த்து "இந்நெல் மலைகள் எவ்வுலகில் விளைந்தன?" என்று அதிசயப்பட்டு; நவ்வி...என்பார்-"மானின் கண்போன்ற மதர்த்த திருநோக்கினை உடைய நங்கையாராகிய புகழினை உடைய பரவையாருக்கு இவ்வுலகம் வாழும் பொருட்டு வந்தருளிய நம்பிகள் அளித்தன இவை" என்று பற்பலவும் சொல்வார்களாகி;

(வி-ரை) அவ்விரவு-இறைவரது ஏவலினால் பூதங்கள் நெல்லினைக் குண்டையூரினின்றும் திருவாரூரின்கண் கொண்டுய்த்த அந்த இரவு என அகரம் முன்னறிசுட்டு. "அவ்விரவு" (*3178*). **புலர்காலை** - இரவு நீங்கி விடியும் நேரத்தில்.

எவ்வுலகின்...அதிசயித்து - இது திருவாரூர் வாழ்வார்கள் நெல்லினைக் கண்ட போது

3182. வன்றெண்டர் **தமக்களித்த நெற்கண்டு** மகிழ்சிறப்பார்
**''இன்றுங்கண் மனையெல்லைக் குட்படுநெற் குன்றெல்லாம்
போன்றங்கு மாளிகையிற் புகப்பெய்து கொள்க''** வென
வென்றிமுர சறைவித்தார் **மிக்கபுகழ்ப் பரவையார்.** 28

முதலில் எழுந்த அவர்களது மன நிகழ்ச்சி; **கண்டு அதிசயித்து** - கண்டதனல் அதிசயமடைந்து; "அதிசயம் கண்டாமே" (திருவா).

நவ்விமதர்த் திருநோக்கின் - நவ்வி - மான். இங்குப் பெண்மான் பார்வை குறிக்கும். "விழியாற் பிணையாம்" (சிற்.கோ). மான் நோக்காவது மருண்ட பார்வை. அன்பு புலப்படுக்கும் பார்வை என்பது உட்குறிப்பு (3182); பின் கூறும் வரலாற்றின் முன்குறிப்பு. **பரவையார்க்கு அளித்தது** என்க. **அளித்தது** - அளிக்கப்பட்டது. **நம்பி** - நம்பிகளால்.

இவ்வுலகு வாழவரும் - "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போதுவார்" (35). 26

3181. (இ-ள்) நீக்கரிய...நோக்கி - விலக்குதற்கு அரிதாகிய நெற்குன்றினை நோக்கி; நெறிபலவும்...புகுவார் - வழிகள் பலவும் போதற்கு அரியன வாயிடலான் அதனைக் கண்டு மீளவும் தமது வீடுகளிற் புகுவார்களாய்; பாக்கியத்தின்...திருவுருவேயாகிய - "பாக்கியத்தின் திருவுருவேயாகிய பரவையாருக்கும் இந்த நெல்லினைக் கொண்டு சேர்க்கும் இடம் அரிதாகும்" என்று இவ்வாறு பலவும் சொல்வார்களாக;

(வி-ரை) நீக்கரிய - வழிகாணும்படி விலக்குதற்கரிதாகிய; **நெறிபலவும் போக்கரிதாயிட** - வீதிகள் பலவும் செல்லுதற்கருமையாக வழி அடைபட.

மீண்டும் தம் இல்புகுவார் - மனையினின்றும் வீதி வழி வெளிச்செல்ல முற்படுவார் அஃதியலாமை கண்டு மீளவும் தமது மனையினுட் புகுவாராகி.

பாக்கியம் - சிவபுண்ணியம். **பரவையார்க்கும்** - எனச் சிறப்பும்மை தொக்கது. **இந்நெல்லும்** - உம்மை - முன் தமது மாளிகையளவிற் சேர்த்தனேடு இதனையும் என இறந்தது தழுவிய எச்சவும்மை; **பலவும்** - இவ்வாறு தத்தம் மனத்தெழுந்த கருத்துக்கள் பலவற்றையும்.

புகல்கின்றுர் - சொல்கின்றுர்களாக; ஆரூர் வாழ்வார்கள் புகல்கின்றுராகப் - பரவையார் முரசறைவித்தார் என முடிக்க. 27

3182. (இ-ள்) மிக்கபுகழ்ப் பரவையார்-மிகுந்த புகழினையுடைய பரவையார்; வன்றெண்டர்... சிறப்பார் - தமக்கு வன்றெண்டராகிய நம்பிகள் அளித்த நெல்லினைக் கண்டு மிக்க மகிழ்ச்சி பொருந்தியவராய்; இன்று....அறைவித்தார்- "இன்று உங்கள் மனைகளின் எல்லைக்குட்படும் நெல் எல்லாம் அவ்வவரும் தத்தம் செல்வமிக்க மாளிகைகளினுட் புகும்படி எடுத்துப் பெய்து கொள்க" என்று வெற்றி முரசம் அறையும்படி செய்வித்தார்.

3183. அணியாரூர் மறுகதனி லாளியங்கப் பறையறைந்த
பணியாலே மனைநிறைத்துப் பாங்கெங்கு நெற்கூடு
கணியாமற் கட்டிநகர் **களிகூரப்** பரவையார்
மணியாரம் புனைமார்பின் **வன்றொண்டர் தமைப்பணிந்தார்.** 29

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) வன்றொண்டர் - *முன் 3164-3165-ல் உரைத்தவை பார்க்க. தொண்டை யூர் கிழார் உட்கொண்டு வழிபட்ட கருத்தைக் குறித்துநின்றது.*

மகிழ்சிறத்தல் - *மகிழ்ச்சி மீக்கூர்தல்.*

"இன்று உங்கள்... கொள்க" என - *இது பரவையார் திருவாரூர் வாழ்வார்க்கு முரசறைந்து அறிவித்த செய்தி. இது பரவையாரின் பெருமையினைப் புலப்படுத்துவதாகும். நம்பிகள் பரவையார் பொருட்டுப் பொன்னும், பிறவும் வேண்டி இறைவரைப் பாடிப் பெறுகின்றார் எனச்சில அறிவில்லா மாக்கள் சிலரிடை வழங்கும் ஒரு பிழைபாடான எண்ணம் மிகத் தவறென்பது இதனால் விளங்கும். அவ்வவர் மனை எல்லைக்குட்பட்ட அளவு நெல்லை அவ்வவரே எடுத்துக் கொள்ளக் கடவர் என்பதாம். "கோவைவாய்ப் பரவையார்" (3178); "கொவ்வைவாய்ப் பரவையார்" (3169) என்றவை யெல்லாம் இவ்வாறு அருள் கனிந்த மொழிகள் வெளிவரும் இயல்பின் குறிப்புப்பட நின்றன. வற்காலத்தின் கொடுமையால் மக்கள் நெல்பெறாது வருந்தும் அந்நாளில் பரவையார் செய்த செயல் காலத்தினாற்செய்த பெருநன்றியுமாதல் கருதுக.*

பொன்றயங்கு மாளிகை - திருவருட் செல்வ நெல் நிறைதற் குறிப்பு.

புகப்பெய்து கொள்க - தாமே எடுத்துக்கொள்க.

வென்றி - ஈடணைத்திரயம் என்பவற்றுள் பொருட்பற்று அற எறிந்த வெற்றி.

முரசறைவித்தல் - அவ்வவர்க்குத் தனித்தனியாக வன்றி யாவரும் அறியும்படி பொது அறிவிப்பு நிகழ்த்தும் மரபு. தனித்தனி அறிவிக்க நெறியிடங்கொடாமையும் குறிப்பு. மேல்வரும் பாட்டில் "மறுகதனில் ஆளியங்கப் பறையறைந்த" என்பது காண்க. 28

3183 (இ-ள்) அணியாரூர்...களி கூர - அழகிய திருவாரூரின் வீதிகளில் ஆட்கள் செல்லும் வழியுண்டாகப் பறைசாற்றுவிக்கப் பணித்தமையினாலே தத்தம் மனைகளை நிறைவித்தும் அவரவர்களுக்குள்ள பக்கவிடங்களிலெங்கும் நெற்கூடுகளை அளவின்றிக் கட்டி நகரமக்கள் மகிழ்ச்சி பெருகக் கண்டு; பரவையார்...பணிந்தார் - பரவையார் மணி ஆரம் பூண்ட மார்பினையுடைய வன்றொண்டரை வந்து பணிந்தனர்.

(வி-ரை) *மறுகதனில் ஆளியங்க* - வீதிகளில் மக்கள் நடந்து செல்ல இயலாதபடி நென்மலை நிறைந்திருந்த நிலை நீங்கி ஆட்கள் செல்ல வழியுண்டாக; "நெறிபலவும் போக்கரிதாயிடக் கண்டு" *(3181)* என்றது காண்க.

3184. நம்பியா ரூரர்திரு வாரூரி னயந்துறைநாட்
செம்பொற்புற் றிடங்கொண்டு வீற்றிருந்த **செழுந்தேனைத்**
தம்பெரிய விருப்பினெடுந் **தாழ்ந்துணர்வி னுற்பருகி**
இம்பருட னும்பர்களு மதிசயிப்ப வேத்தினர். 30

பறையறைந்த பணி - முன் பாட்டிற் கூறிய கட்டளை. **கணியாமல்** - அளவில்லாமல் - எண்ண முடியாதபடி. **நெற்கூடு கட்டி** - நெல்லைக் கூடுகட்டிச் சேமித்து. **நகர் களிகூர** - நகர மக்கள் மகிழ; **நகர்** - நகர மக்கள் - ஆகு பெயர். **நகர் களி கூரக் கண்டு** என்க. ``ஈத்துவக்கும் இன்பம்`` (குறள்).

பரவையார்...பணிந்தார் - தாம் அவ்வின்பம் பெறுவதற்குக் காரணர் வன்றொண்டரேயாம் என்பது கருதிப் பணிந்தனர்.

வன்றொண்டர் - இப்பெயராற் கூறுதல் பற்றி முன் உரைத்தமை பார்க்க. *(3164-3167-3182).* *29*

3184. (இ-ள்) நம்பி ஆரூரர்...நாள் - நம்பி அரூரர் திருவாரூரின்கண் விருப்பத்தோடும் தங்கி எழுந்தருளியிருந்த நாட்களிலே; செம்பொன்...தேனை - சிவந்த பொன் மயமாகிய புற்றினை இடமாகக் கொண்டு எழுந்தருளியிருந்த செழுந்தேனாகிய இறைவரை; தம் பெரிய...பருகி - தமது பெரிய விருப்பத்தினேடும் வணங்கி உணர்ச்சி உள்ளூர அருந்தி அநுபவித்து; இம்பருடன்...ஏத்தினர் - இம் மண்ணுலகத்தார்களோடு விண்ணுலகத்தார்களும் வியப்படையும்படி துதித்தருளியிருந்தனர்.

(வி-ரை) புற்றிடங்கொண்டு...தேனை - புற்றிடங்கொண்ட பெருமானை; வன்மீகநாதரை; தேனை - இறைவரைத்தேன் என்றது உவமையாகுபெயர்; தேன் இனித்து -உடலுக்கு நலம் செய்வது போன்று உணர்வுக்குள் ஆனந்தமாகி இனித்து உயிருக்கு இன்பஞ் செய்பவர். "அந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த, பொந்தை நினைத்தொறுங் காண்டோறும் பேசுந்தோறு மெப்போதும், அனைத்தெலும் புண்ணெகவானந்தத் தேன் சொரியும் குனிப்புடையான் "(திருவா); "தேனே" (தேவா).

உணர்வினுற் பருகி - தேன் என்றதற்கேற்பப் **பருகி** என்ருர். தேனை வாயினுற் பருகுதல் போல இறைவராகிய தேனை உணர்வினுல் அநுபவித்தல் என்பதாம்; ஈண்டு பருகுதல் அநுபவித்தல்.

தாழ்ந்து - வணங்கி; **தாழ்தல்** - விரும்புதல் என்றலுமாம். படிதல் என்ற குறிப்பும்பட நின்றது; தேன் உள்ள இடத்தில் வண்டுகள் சென்று தாழ்ந்து மொய்த்து உண்ணுதல் போலே என்பது.

இம்பருட னும்பர்களும் - தேவர்கள் திருவாரூருக்கு வந்து தேவாசிரியனில் முறையிருந்தும் தியாகேசரை வணங்கியும் நலம்பெறத் திரண்டுள்ளாராதலின் இவ்வுலகத்தாரோடு அவர்களும் கூடிக் கண்டு அதிசயித்தனர். 3186 பார்க்க.

3185. குலவுபுகழ்க் கோட்புலியார் குறையிரந்து தம்பதிக்கண்
அலகில்புக ழாரூர ரெழுந்தருள வடிவணங்கி
நிலவியவன் றொண்டரஃ திசைந்ததற்பின் னேர்ந்திறைஞ்சிப்
பலர்புகழும் பண்பினார் மீண்டுந்தம் பதியணைந்தார். 31

இம்பர் - இவ்வுலகம். **உம்பர்** - அவ்வுலகர். அந்தரத்து மேலவர் - உலகர்.

ஏத்தினார் - ஏத்தியிருந்தருளினார். 30

3185. (இ-ள்) குலவுபுகழ்க் கோட்புலியார் - விளங்கும் புகழினையுடைய கோட்புலியார்; குறையிரந்து...அடி வணங்கி - தமது பதியினிடத்து அளவற்ற புகழினையுடைய நம்பியாரூரர் எழுந்தருள வேண்டுமென்று அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கிக் குறையிரந்து நின்று; நிலவிய...இறைஞ்சி - நிலைபெற்ற வன்றொண்டர் அதனை இசைந்த பின்னே மீண்டும் அவர் திருமுன்பு வணங்கி; பலர் புகழும்...அணைந்தார் - எல்லாரும் புகழத் தக்க பண்புடைய அக் கோட்புலியார் மீளவும் தமது திருப்பதியினுள் சென்று அணைந்தனர்.

(வி-ரை) குறையிரத்தல் - தமது குறையாகிய விருப்பத்தைக் கூறி வேண்டுதல்; இக்குறையாவது தமது பதியில் நம்பி ஆரூரர் எழுந்தருளுதல்.

குலவுபுகழ் என்றது அவரது அன்பின் மேன்மையும் சரித வரலாறும் குறிக்க எழுந்தது. அவர்தம் புராணம் பார்க்க.

அலகில் புகழாரராதலின் எனக் கோட்புலியார் குறையிரந்து விண்ணப்பித்ததற்குக் காரணக் குறிப்புப்படக் கூறியவாறு.

அடிவணங்கிப், பின்... அவர் இசைந்தருள, இறைஞ்சி அணைந்தார் - எனக் கூட்டி முடிக்க.

பண்பினார் - கோட்புலியார்; **இறைஞ்சிப்பின், அப்பண்பினார்** - எனக் கூட்டுக.

தொண்டரது விசைந்ததற்பின் - நேர்ந்ததற்பின் - என்பனவும் பாடங்கள். *31*

3186. (இ-ள்) தேவர்...அருள் பெற்று - தேவர்கள் ஒருபுறமாக ஒதுங்கி வழிவிட்டு நிற்கத் திருத் தொண்டர்கள் உட்சென்று நெருங்கி வழிபடும் செல்வம் நிறைந்த திருவாரூரினைக் காவல் பூண்டு தனியரசாளுகின்ற புற்றிடங் கொண்ட பெருமானது திருவடிகளை வணங்கித் திருநாவலூரராகிய நம்பிகள் அருள்விடை பெற்றுக்கொண்டு; நம்பர்...அணைவார் - சிவபெருமானது பிற பதிகளிலும் சென்று உமைபங்கரைப் பணிந்து பாடும் விருப்பினாலே சென்றணைவாராகி;

வேறு

3186. தேவ ரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்
காவல் கொண்டு தனியாளுங் கடவுட் பெருமான் கழல்வணங்கி
நாவலூரர ரருள்பெற்று நம்பர் பதிகள் பிறநண்ணிப்
பாவை பாகர் தமைப்பணிந்து பாடும் விருப்பிற் சென்றணைவார், 32

3187. மாலு மயனு முணர்வரியார் மகிழும் பதிகள் பலவணங்கி
ஞால நிகழ்கோட் புலியார்தந் நாட்டி யத்தான் குடிநண்ண
ஏலும் வகையா லலங்கரித்தங் கவருமெதிர் கொண்டினிதிறைஞ்சிக்
கோல மணிமா ளிகையின்க ணூர்வம் பெருகக் கொடுபுக்கார். 33

(வி-ரை) தேவரொதுங்க ...மிடையும் - தேவர்கள் உட்புகும் காலம் பார்த்துத் திருநந்திதேவ ராணையின்படி புறவாயிலிற் காத்திருப்ப, அவர்களை விலக்கித் தொண்டர்கள் எக்காலமும் தடையின்றிப் பணி செய்ய உட்செல்ல உள்ள; இஃது எல்லாப் பதிகளுக்கும் பொதுவாயினும் திருவாரூருக்குரிய சிறப்புத் தன்மை. 137 முதலியவை பார்க்க.

திருவாரூர் காவல்கொண்டு தனியாளும் - "அயிரா வணமேரு தானே றேறியமரர்நா டாளாதே யாரூ ராண்ட" (தேவா).

கடவுட் பெருமான் - தேவதேவர்; புற்றிடங்கொண்டார்; தியாகேசர் என்றலுமாம்.

வணங்கி அருள் பெற்று - பிறபதிகளுக்குச் செல்லும்போது விடைபெற்றுச் செல்லும் மரபு.

நம்பர்...விருப்பில் - கோட்புலியாரது வேண்டுதலுக்கிரங்கி அங்குச் செல்வாரேனும் அங்குமட்டுமன்றி அதனேடு இடையிற் காணும் பிறபதிகளிலும் வணங்கிச் செல்லும் மரபும் விருப்பமும் குறித்தது; சிவன் கோயில் வழிபாட்டின் ஆர்வமிகுதல் பக்குவமுடைய உயிர்களின் மாட்டு நிகழ்வது.

அணைவார் வணங்கி நண்ண - என மேல் வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 32

3187. (இ-ள்) மாலும்...வணங்கி - விட்டுணுமூர்த்தியும் பிரமதேவனும் அறிதற்கரிய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று; ஞாலம்...நண்ண - உலகிற் பரவிய புகழுடைய கோட்புலியாரது திருநாட்டியத்தான் குடியினைச் சென்று சேர; ஏலும்...கொடுபுக்கார் - பொருந்தும் வகையினுல் பதியினை அலங்காரம் செய்து அவரும் வரவு எதிர்கொண்டு மகிழ்ச்சியோடும் வந்து பணிந்து, அழகிய மணிகளையுடைய தமது திருமாளிகை யினிடத்து ஆசை மீக்கூரக் (நம்பிகளை உடன்) கொண்டு உட்புகுந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3188. தூய மணிப்பொற் றவிசிலெழுந் தருளி யிருக்கத் தூநீரால்
சேயமலர்ச் சேவடிவிளக்கித் தெளித்துக்கொண்டச் செழும்புனலால்
மேய சுடர் மாளிகை யெங்கும் விளங்க வீசி யுளங்களிப்ப 34
ஏய சிறப்பி லர்ச்சனைக ளெல்லா மியல்பின் முறைபுரிவார்.

(வி-ரை) பதிகள் பல - இவை திருவாரூரினின்றும் திருநாட்டியத்தான்குடிக்குச் செல்லும் வழியில் இடையிலும் அருகிலும் உள்ளன. இவை திருவாரூர், திருப்பயற்றூர், மாவூர் முதலாயின என்பது கருதப்படும்.

ஞாலம் நிகழ் - உலகில் புகழ் பரவி நிகழும்; ஞால நிகழ் நாட்டியத்தான்குடி என்று கூட்டி உரைக்கவும் நின்றது.

ஏலும் வகையால் - நம்பியாரூரரது நல்வரவின் சிறப்பினுக்குத் தகுதியாகப் பொருந்தும் அளவினாலே; தமது என்றலுமாம். 33

அவரும் - அந்தக் கோட்புலியாரும் என முன்னுறக் கூட்டு.

3188. (இ-ள்) தூய...இருக்க - தூய்மையாகிய மணிகளிழைத்த பொற்பீடத்தின்மேல் (நம்பிகள்) தூநீரால்... விளக்கி - தூய்மையாகிய நீரினாலே அவரது செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை விளக்கி; தெளித்துக்கொண்டு - அந்நீரைத் தம்மேல் தெளித்துக்கொண்டு; அச்செழும் புனலால்...வீசி - அந்தச் செழிய நீரினாலே பொருந்திய ஒளியினையுடைய திருமாளிகை முழுதும் விளங்கும்படி வீசி; உள்ளம் களிப்ப... புரிவார் - மனமகிழப் பொருந்திய சிறப்பினையுடைய வழிபாட்டு முறைகளெல்லாவற்றையும் இயல்பினால் விதி முறைப்படி செய்வாராகி,

(வி-ரை) எழுந்தருளியிருக்க - நம்பியாரூர் என்ற எழுவாய் வருவிக்க.

(நம்பி) எழுந்தருளியிருக்க - (கோட்புலியார் அவரது) சேவடி விளக்கித் - தெளித்துக்கொண்டு - வீசி - புரிவார் - ஏந்தி (3189)- எடுத்துத் தாங்கி - நிரைத்தே- இறைஞ்சி - அளித்தார் (3190) என இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. கோட்புலியார் என்ற எழுவாய் தொக்கு நின்றது.

குறிப்பு: இவ்விடத்தில் புராணம் 34-வது பாட்டாக.

"ஆண்ட நம்பி யுடன்வந்த வன்ப ரோடும் புறத்தணைந்து
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ தியிற் போந்து
பூண்ட காதன் மிகுதியினாற் புனைமங் கலதூ ரியமொலிப்ப
ஈண்டு புகழ்க்கோட் புலியார்மா ளிகையை யெய்தி யுள்ளணைந்தார்"

என்றதொரு பாட்டுக் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் முதற்பதிப்பிற் (1859) காணப்படுகின்றது. மற்ற பதிப்புக்களிலும், அவர்களது இரண்டாம் பதிப்பிலும் (1870) இது காணப்படவில்லை; இச்செய்யுள் இடைச் செருகலாயிருக்குமோ என்ற ஐயப்பாடுகளை எனது (சிவக்கவிமணியினது) **சேக்கிழார்** என்ற நூலில் 211-212 பக்கங்களிற் சொல்லியிருக்கின்றேன்.

3189. பூந்தண் பனிநீர் கொடுசமைத்த பொருவில் விரைச்சந் தனக்கலவை
வாய்ந்த வகிலி னறுஞ்சாந்து வாச நிறைமான் மதச்சேறு
தோய்ந்த புகைநா வியினறுநெய் தூய பசுங்கர்ப் பூரமுடன்
ஏய்ந்த வடைக்கா யமுதினைய வெண்ணின் மணிப்பா சனத்தேந்தி, 35

தெளித்துக்கொண்டு - தம் மேனிமேல் தெளித்துக்கொள்ளுதல் அதனுட் குளித்துத் தூய்மை பெறும் நிலை.

செழும் புனல் - செழுமை -நம்பிகளின் திருவடிச் சம்பந்தத்தாற்போந்தது.

மாளிகை எங்கும் புனல் வீசுதல் - மாளிகையினைப் புனிதமாக்கும் பொருட்டு.

சிறப்பிற் - புரிவார் - என்க. **அர்ச்சனைகள்** - இங்கு வழிபாட்டு முறைகளைக் குறித்து நின்றது. அவை மேற்கூறப்பட்டுள்ளன.

இயல்பின் முறை - இயல்பாவது வலிந்து மேற்கோடலின்றி உள்ளூர எழும் அன்பினுல் தன் இயல்பாக வருவது; முறை - நூல் விதிமுறை.

புரிவார் - புரிவாராகி; முற்றெச்சம். 34

3189. (இ-ள்) வெளிப்படை. அழகிய குளிர்ச்சியுடைய பனிநீர் கொண்டு அரைத்த ஒப்பற்ற சந்தனக் கலவையும், பொருந்திய அகிற் கட்டையின் மணமுடைய சாந்தும், மணங்கமழும் கத்தூரிக் குழம்பும்; புகைதோய்ந்த, இனிய மணமுடைய புனுகும், பச்சைக் கற்பூரமும் ஆகிய இம்மெய்ப் பூச்சுக்களுடனே பொருந்தவரும் அடைக்காயமுதும் இவ்வாறுகிய பண்டங்களைத் தனித் தனி அளவில்லாத அழகிய தட்டுக்களில் எடுத்தேந்தியும்,

(வி-ரை) பூந்தண் பனிநீர் - பூ - பூவினின்றும் எடுக்கப்படும்; **தண்மை** - குளிர்ந்த; பரிசம். குணமுமாம். **சமைத்தல்** - பனிநீர் கூட்டி அமைத்தல்.

மான்மதம் - கத்தூரி. **தோய்ந்த புகை** - புகை தோய்ந்தாற் போலும்; புகைத் தெடுக்கும் வாசனைக் கூட்டுப்பண்டமுமுண்டு. **நாவி** - புனுகு.

பசுங்கர்ப்பூரமுடன் - உடன் என்ற உருபு தந்து, இதுவரை கூறிவந்த வாசனைப் பண்டங்களின் வகைகளை வேறு பிரித்தார்.

அடைக்காயமுது - தாம்பூலம்; அடைக்காயமுது என்பது பழங்காலக் கல் வெட்டுக்களிற் காணும் சொற்றெடர்.

எண்ணில் மணிப்பாசனத்து ஏந்தி - பாசனம் - தட்டு - பாத்திரம்; **எண்ணில்** என்றுர் வகைகள் பலவாதலின் தனித்தனி ஏந்துதற் பொருட்டு; **ஏந்துதல்** - எடுத்தல்.

சந்தனமெனவே — கர்ப்பூர முதல் — என்பனவும் பாடங்கள். 35

3190. வேறு வேறு திருப்பள்ளித் தாமப் பணிகண் மிகவெடுத்து
மாறி லாத மணித்திருவா பரண வருக்கம் பல தாங்கி
ஈறில் விதத்துப் பரிவட்ட மூழி னிரைத்தே யெதிரிறைஞ்சி
ஆறு புனைந்தா ரடித்தொண்ட ரளவில் பூசை கொளவளித்தார். 36

3190. (இ-ள்) வேறு...எடுத்து - வெவ்வேறு வகையாகிய திருப்பள்ளித் தாமத்துக்குரிய அலங்கார மாலை வகைகளை மிகவும் எடுத்தும்; மாறிலாத...தாங்கி - ஒப்பற்ற மணிகளாலாகிய திருவாபரண வகைகள் பலவற்றையும் தாங்கி எடுத்தும்; ஈறில்...நிரைத்தே - எல்லையில்லாத பலவிதங்களிலும் பரிவட்டங்களை முறைப்படி வரிசையாக வைத்தே; எதிரிறைஞ்சி - எதிரில் நின்று வணங்கி; ஆறு....அளித்தார் - கங்கையை முடித்த சிவபெருமானின் திருவடித் தொண்டர் அளவில்லாத பூசை முறைகளையும் ஏற்றுக் கொள்ளும்படி செய்தனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வேறு...பணிகள் - திருப்பள்ளித்தாமப் பணிகள் - மாலை - கண்ணி - இண்டை முதலாகிய மலர் மாலை அணிவகைகள்.

மாறிலாத மணித்திருவாபரண வருக்கம் பல - இவை பொன் - மணி - இவற்று லாகியவை. **வருக்கம்** - வகையினையும், **பல** - தொகையினையுங் குறித்தன; **மாறு** - ஒப்பு. "மாறன்மையின்...இளையாரையு மெறியான்" (சீவகசிந். 2261); **மாறில்** - ஒளி மாறுதல் இல்லாத என்றலுமாம்.

பரிவட்டம் - துகில் - உத்தரியம் முதலாயின. இறைவருக்கும் அடியார்க்கும் சாத்துவன பரிவட்டமெனப்படுதல் மரபு; **ஊழின்** - முறைப்படி; **நிரைத்தல்** - வரிசைபெற அமைத்தல்.

அடித்தொண்டர் - நம்பியாரூரர்; **தொண்டர்பூசைகொள்** - என்க. **கொள்ளுதல்** - ஏற்றுக்கொள்ளுதல். 36

3191. (இ-ள்) செங்கோலரசன்...கோட்புலியார் - செங்கோன்மையுடைய சோழ அரசனது அருள் உரிமையுடைய சேனாதிபதியாகிய கோட்புலியார்; நங்கோமானை... இறைஞ்சி - நமது பரமாசாரியராகிய தலைவரைத் திருநாவலூரின் மன்னவரை நட்புரிமையினாலே தமது அரண்மனையில் திருவமுது செய்வித்து வணங்கி; தலைசிறந்த... போற்றுவார் - பெருகும் கடல் போன்ற மிகச் சிறந்த பெருவிருப்புடையராகி மேலும் துதிப்பாராகி;

(வி-ரை) செங்கோல் அரசன் அருள் உரிமைச் சேனாபதியாம் கோட்புலியார் - "ஏயர் கோக்குடிதான், மன்னி நீடிய வளவர் சேனாபதிக் குடியாம்" (3159) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

செங்கோல் அரசன் - சோழன்; அரசன் பெருமை கூறியபடி; **அருள்உரிமைச் சேனாபதி - அருள்** - அரசனது அருளுக்குத் தகுதியுடையராய்; **உரிமை** - வழி வழி மரபின்

3191. **செங்கோ லரச னருளுரிமைச் சேனு பதியாங் கோட்புலியார்**
நங்கோ மானை நாவலூர் நகரார் வேந்தை நண்பினுற்
றங்கோ மனையிற் றிருவமுது செய்வித் திறைஞ்சித் தலைசிறந்த
பொங்கோ தம்போற் பெருங்காதல் புரிந்தார்; பின்னும் போற்றுவார், 37

வரும் உரிமை பெற்ற சேனுபதித் தன்மை.

உரிமைச் சேனுபதியாம் - இக்குடியினின்றே சேனுபதிகளை அரசர் தேர்ந்தெடுக்கும் உரிமை குறித்தது; ஏனுதிநாதர் மன்னர்க்கு வாட்படை பயிற்றும் தொல்குடித் தாயத்தின் வந்தார் என்ற வரலாறும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது;

அருளுரிமை - மன்னன் அருள்பெறும் உரிமை. By Appointment என்னும் நவீனர் வழக்கம் காண்க. இவ்வுரிமைக்கு விளைநிலம் - பட்டம் முதலிய பகுதிகளும் முன்னுளில் அரசர் வழங்கும் மரபும் உண்டு.

நம் கோமானை நாவலூர் நகரார் வேந்தை - நம் கோமான் - நமக்குரிமையாகிய சைவ சமய பரமாசாரியர் என்பது குறிப்பு; **கோமான்** - தலைவர். **வேந்து** - அதிபதி; ஈண்டு இவ்வாற்ருற் குறித்தது அரசரருளுரிமைச் சேனுபதியாங் கோட்புலியாரால் வழிபடற்குரிய அரசராகிய ஏற்றமுடைமை குறித்தற்கு; அன்றியும் அமைச்சர் - அரசர் சேனுபதி முதலியோர் மகளிரை அரசர் மணக்கும் வழக்குண்மையின், ஈண்டுக் கோட்புலியார் தமது மக்களிருவரையும் அடிமைகொள்ளும்படி நம்பிகளை வேண்டிநிற்கும் தன்மையினை அமைதிப்படுத்தற் குறிப்புமாம்; நங் **கோமான்** நாவலூரார் **வேந்து** என இரண்டு தன்மையாற் கூறியது அன்பர் பெருமானுந் தன்மையும் அதனுடன் அரசர்பெருமானுந் தன்மையும் குறிப்பது. "பெருமைசா லரசர் காதற் பிள்ளையாய்" (*152*) நம்பிகள் வளர்ந்த தன்மையும் குறிப்பு.

கோமனை - அரசர்களது அரண்மனைக்கேற்ற சிறப்புச் சேனுபதியார் மனைகளுக்கும் உண்டு என்பது குறிப்பு. சேனுபதிகளை மேன்மை தங்கிய (His Excellency) என்ற கண்ணியப் பட்டத்துடன் அழைக்கும் இந்நாள் மரபும் காண்க.

தலைசிறந்த - பெருங் காதல் என்று கூட்டுக.

பொங்கு ஓதம் - பொங்கும் கடல்; ஓதம் பொங்குதல்போல மேன்மேற் பெருகும் காதல் என்க.

தலைசிறந்த பொங்கு ஓதம் என்றே கூட்டித் தலை உவாநாளில் பொங்கும் கடல்போல் என்றலுமாம்.

காதல் புரிதலாவது - காதலால் வரும் செயல் எல்லாம் - செய்தல்.

போற்றுவார் - போற்றுவாராய்; முற்றெச்சம்.

போற்றுவார் - கொணர்ந்து - பணிவித்துத் - தொழுது - சொல்லுவாராய் - *(3192)*- **என** *(3193)* என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க. ***37***

3192. ஆறா விருப்பின் மற்றவர்தா மருமை யான்முன் பெற்றெடுத்த
தேனார் கோதைச் **சிங்கடியார் தமையு** மவர்பின் றிருவுயிர்த்த
மானார் நோக்கின் **வனப்பகையார் தமையுங்** கொணர்ந்து வன்றொண்டர் 38
தூநாண் மலர்த்தாள் பணிவித்துத் தாமுந் தொழுது சொல்லுவார்.

3192. (இ-ள்) ஆறா விருப்பின் மற்றவர் - குறையாத அன்போடு விருப்பமுடைய அக்கோட்புலியார்; தாம்...கொணர்ந்து - தாம் அருமையாக முன்னே பெற்றெடுத்த தேன் பொருந்திய மாலையணிந்த சிங்கடியார் என்னும் மகளாரையும் அவர் பின்னே, திருமகள் போற் பெற்ற மான்போலும் மருண்ட பார்வையுடைய வனப்பகையார் என்னும் அம்மையாரையும் அழைத்துக்கொண்டு முன்வந்து; வன்றொண்டர்...பணிவித்து - வன்றொண்டராகிய நம்பிகளின் தூய புதிதான தாமரை போன்ற பாதங்களில் வணங்கும்படி செய்து; தாமும் தொழுது சொல்லுவார் - தாமும் வணங்கிச் சொல்வாராகி.

(வி-ரை) ஆறாவிருப்பு - குறையாத விருப்பம்.

திருவுயிர்த்த - பெற்ற - ஈன்ற; **உயிர்த்தல்** - மகவு பெறுதல் - பிறப்பித்தல்.

சிங்கடி - வனப்பகை - கோட்புலியாரது இரண்டு பெண்மக்கள். அந்நாளில் பெண்மக்களுக்குப் பெயரிடும் மரபு காண்க. இவ்வாறு வரும் பல பெயர்கள் பழங்காலக் கல்வெட்டுக்களாலு மறியப்படுவன.

தேனார் கோதைச் சிங்கடி - "சேடார் பூங்குழற் சிங்கடி" (நாட்டியத்தான் குடி - 10-நம்பி தேவா) என்ற பதிகக் கருத்துப் போற்றப்பட்டது.

தேனார் கோதை - மானார் நோக்கின் - ஒருவரை அணிநலத்தாலும், மற்றவரை உடலியல் நலத்தாலும் உரைத்தமை காண்க. இரண்டும் இருவர்பாலும் கூட்டி யுரைக்க வைத்த குறிப்பு; 3193 பார்க்க.

கொணர்ந்து - பெண்ணியல்பாகிய நாண் முதலிய குணங்களாலே அவர்தாமே நம்பிகளெதிர் வரமாட்டாராதலின் அழைத்துக் கொண்டு வந்தார் என்க.

பணிவித்து - மணமாகும் வரை பெற்றோர் சொற்படி அமைவது பெண்ணியல்பாதலின் பணிவித்து என்றார். 38

3193. (இ-ள்) "அடியேன்...வேண்டும்" என - "இவர்கள் அடியேன் பெற்றெடுத்த மக்கள்; இவர்களை அடிமையாக ஏற்றுக்கொண்டருளித் தேவரீரது மணமுடைய மலரடிகளைத் தொழுதுய்ந்திருக்கும்படி கருணை புரியவேண்டும்" என்று சொல்ல; பரவையார்தங் கொழுநனார் - பரவையாரது கணவனாராகிய நம்பிகள்; தொடிசேர்...எனக்கொண்டு - தொடிகளை யணிந்த தளிர்போன்ற கையினையுடைய இவர்களிருவரும் எனக்குத் தூய்மையுடைய மக்களேயாவார்கள் என்று திருவுளம் பற்றி ஏற்றுக்கொண்டு;

3193. "அடியேன் பெற்ற மக்களிவ; ரடிமையாகக் கொண்டருளிக்
கடிசேர் மலர்த்தா டொழுதுய்யக் கருணை யளிக்க வேண்டு" மெனத்
"தொடிசேர் தளிர்க்கை **யிவரெனக்குத் தூயமக்க**" ளெனக்கொண்டப்
படியே மகண்மை யாக்கொண்டார் பரவை யார்தங் கொழுநனார். 39

அப்படியே...கொண்டார் - அவ்வாறே மக்கண் முறைமையாகும்படி கொண்டருளினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) "அடியேன்...வேண்டும்" என இதுகோட்புலியார் நம்பிகளை நோக்கிக் கூறியது; **அடிமையாகக் கொண்டருளி** என்றும், **மலர்த்தாள் தொழுது உய்ய** - என்றும் கூறியன இவர்களைத் திருமணஞ் செய்து உரிமைப் பொருளாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்னும் குறிப்புடையன; **உய்ய** - இவர்களை உய்யச் செய்ய.

"தொடிசேர் மக்கள்" எனக்கொண்டு - இது நம்பிகள் திருவுள்ளத்துக் கொண்ட துணிபு. அதன் விளைவாகிய சொல்லும் செயலும் மேல்வருவன காண்க. **கொண்டு** - உட்கொண்டு - துணிந்து.

தொடிசேர் தளிர்க் கையிவர் - இயற்கை நலமும் செயற்கை வளமும் இருவர்பாலும் ஒன்றுபோல அமைந்தமை குறிப்பு. **தொடி** - கைவளைவகை; **தளிர்** - மாந்தளிர் போன்ற; செம்மை மென்மை முதலிய பண்புகள் கொண்ட; **தூய** - "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப், பண்புடை மக்கட் பெறின்" (குறள்) என்றபடி, பிறந்தகம், புக்ககம் என்ற இரண்டிடமும் தூய்மையாகும்படி வாழ்வளிக்கவல்ல என்ற குறிப்பு.

அப்படியே - மனத்துட்கொண்டபடியே; துணிந்தவாறே.

மகண்மையாக் கொண்டார் - தாம் பெற்ற மக்களேயாகும் முறைமை தந்து ஏற்றுக்கொண்டார். "பிறப்பித்தெடுத்த பிதாவாக" *(3196)* ஒருவர் தந்த கொடைப்பொருளைப் பெறுபவர் ஏற்றுக்கொண்டாலன்றிக் கொடை முற்றுப்பெறுதலில்லை என்பது நூன்முறையாதலின் **கொண்டார்** என்றார்.

மகண்மை - மகளாராந் தன்மை; **மகன்மை** - மகனாந்தன்மை என்பதுபோல; "அன்பினன் மகன்மை கொண்டார்" *(151)*; **மகண்மையா** - ஈன்ற பெண்மக்கள் முறைமையாக; ஆ-ஆக.

அப்படியே - அரன்போல வேண்டுபவர் வேண்டியதே ஈதல் அன்றோ அடியவர்க்கும் கடன்? எனில், கோட்புலியார் சொன்னவாறே என்ற குறிப்புமாம். என்னை? அடிமையாகக் கொண்டருளுதலும், மலர்த்தாள் தொழுதுய்யச் செய்தலும் என்றிரண்டுமே அவர் வேண்டினர்; அவ்விரண்டு தன்மைகளும் மகண்மை (புதல்வியர்) முறையினும் பொருந்துமாகலான் என்க.

பரவையார்தங் கொழுநனார் - முன்னமே பரவையார் தங் கொழுநனாராதலின் கோட்புலியார் உட்கொண்டபடி மணத்தால் இவர்களை ஏற்கும் நிலையில்லை என்று காரணக்

3194. கோதை சூழ்ந்த குழலாரைக் குறங்கின் வைத்துக் கொண்டிருந்து
காத னிறைந்த **புதல்வியராங் கருத்துட் கசிவா** லணைத்துச்சி
மீது கண்ணீர் விழமோந்து வேண்டு வனவுங் கொடுத்தருளி
நாதர் கோயில் சென்றடைந்தார் நம்பி தம்பி ரான்ரோழர். 40

குறிப்புப்படக் கூறிய கவிநலமும் காண்க; பின்னர்ச் சங்கிலியார் பரவையார் வேறு; அது பண்டை விதியின் விளைவு என்க. மறையவர்க்கு, மறையவர் மரபில் வந்தவர்கள் எல்லா வருணத்தாருள்ளும் மணம் நிகழ்வது முந்தைநாள் நீதிநூல் முறை என்பது கண்டு நினைவு கூர்தற்பாலது. 39

3194. (இ-ள்) கோதை... வைத்துக்கொண்டிருந்து - மாலையணிந்த கூந்தலையுடைய அப்பெண்களை மடியில் வைத்துக்கொண்டிருந்து; காதல் நிறைந்த - மிக்க அன்பு நிறைந்த புதல்வியர்களாகும் கருத்தினாலே உள்ளங் கசிய அணைத்து உச்சிமேல் தமது கண்ணீர் விழும்படி உச்சிமோந்து; வேண்டுவனவும் கொடுத்தருளி - அவர்க்குத் தாம் வேண்டுவனவற்றையுங் கொடுத்தருளி; நாதர்...தோழர் - நம்பியாரூரராகிய தம்பிரான்தோழர் இறைவரது திருக்கோயிலினைச் சென்றடைந்தருளினார்.

(வி-ரை) கோதை சூழ்ந்த குழலார் - "தேனார் கோதைச் சிங்கடி" (3192) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

குறங்கு - துடை. துடையின்மேல் வைத்தல் மக்களைப் பாராட்டும் வகை. பின்னர் வரும், அணைத்தல் - உச்சிமேற் கண்ணீர் விழ மோத்தல் முதலியனவும் இவ்வாறே.

உச்சிமீது கண்ணீர் விழமோந்து - உட்கசிவினால் போந்த அன்புக் கண்ணீர் உச்சி மோந்தபோது அவர்களது உச்சிமேல் விழும் என்க.

வேண்டுவன - அவர்க்கென்று தாம் விரும்பியனவாகிய பொருள்களும் ஆசியும்.

தம்பிரான்ரோழர் - பரவையார்தங் கொழுநனார் என்ற முன் பாட்டின் கருத்தைத் தொடர்ந்த வரலாற்றுக் குறிப்புப்படக் கூறியபடி. 40

3195. (இ-ள்) வென்றி...இறைஞ்சி - வெற்றி பொருந்திய வெள்ளை எருதினைக் கொடிமேல் உயர்த்தியருளும் விமலராகிய சிவபெருமானது கோயிலின் திருக்கோபுரத்தினை வணங்கி; ஒன்றும்...பணிந்து - ஒன்றிய உள்ளத்தினோடும் அன்பினாலே உச்சிமேற் கூப்பிய கைகளுடனே திருக்கோயிலினுள்ளே சென்று புகுந்து பணிந்து; பதிகம் "பூணாண்" என்றெடுத்து - திருப்பதிகத்தினைப் "பூணாண்" என்று தொடங்கி; கொன்றை... கோட்புலியாரை - கொன்றை சூடிய சிவபெருமானது அருளின் உரிமை பற்றி அப்பதிகத்தினுள்ளே கோட்புலியாரைச் சிறப்பித்துப் பாடியருளினார்.

(வி-ரை) ஒன்றும் உள்ளம் - இரண்டற ஒன்றாகப் பொருந்திய உள்ளம்; இறைவரையன்றி வேறொன்றும் நினையாத நிலை **ஒன்றும்** - எனப்பட்டது.

3195. வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர் திருக்கோ புரமிறைஞ்சி
ஒன்று முள்ளத் தொடுமன்பா லுச்சி குவித்த கரத்தோடுஞ்
சென்று புக்குப் பணிந்து திருப்பதிகம் "**பூண**" ணென்றெடுத்துக்
கொன்றை முடியா **ரருளுரிமை சிறப்பித் தார்கோட் புலியாரை.** 41

3196. சிறப்பித் தருளுந் திருக்கடைக்காப் பதனி னிடைச்சிங் கடியாரைப்
பிறப்பித் தெடுத்த பிதாவாகத் தம்மை நினைந்த பெற்றியினுன்
மறப்பில் வகைச் "சிங் கடியப்ப" னென்றே தம்மை வைத்தருளி
நிறப்பொற்புடைய விசைபாடி நிறைந்த வருள்பெற் றிறைஞ்சுவார், 42

பூணண் - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

அருளுரிமை - அருள் உரிமை காரணமாக; இறைவரது திருப்பதிகத்தினுள் கோட்புலியாரது பெருமையினைக் கூறவந்தகாரணம்,அவர், இறைவரது அருளுக்கு உரியராந் தன்மையே என்பது. திருச்சாத்தமங்கைத் திருப்பதிகத்தில் திருநீல நக்கரையும், திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகத்தினுள் சிறுத்தொண்ட நாயனுரையும் ஆளுடைய பிள்ளையார் சிறப்பித்ததும், திருப்பழனத் திருப்பதிகத்துள் அப்பூதியாரை அரசுகள் சிறப்பித்ததும், மற்றும் இவ்வாறு வருவனவும் கண்டு நினைவுகூர்தற்பாலன. ஆளுடைய நம்பிகள் வரலாற்றினுள் இது சரித அகச் சான்ருக வரும் சிறந்த இடமாதலின் ஈண்டுக் காரணங் கூறினர்.

கோட்புலியாரைச் சிறப்பித்தார் - என்க. வினைமுற்று. முன் வந்தது ஆர்வம் மிகுதி பற்றிய விரைவு குறித்தது. சிறப்பித்தமை அவர் வழிபடும் ஊர் என்று பதியினைக் கூறியதனுல் அறிக. பதிகம் 10-வது பாட்டிற் "கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி" என்றது காண்க. பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க. *41*

3196. (இ-ள்) சிறப்பித்தருளும் திருக்கடைக்காப் பதனினிடை - அவ்வாறு கோட்புலியாரைச் சிறப்பித்தருளும் பதிகத் திருக்கடைக்காப்பினிலே; சிங்கடியாரை... பெற்றியினுல் - சிங்கடியாரைப் பெற்றெடுத்த பிதாவாகவே தம்மை உட்கொண்டு துணிந்த தன்மையினுலே; மறப்பில் வகை - அத்துணிபு மறவாது நிலைத்திருக்கும்படி; சிங்கடியப்பன்... வைத்தருளி - சிங்கடியப்பன் என்ற தன்மையாலே தம் பெயரைப் பொறித்து வைத்தருளி; நிறப்பொற்புடைய...இறைஞ்சுவார் - நிறம் என்னும் இசைப் பண்பின் அழகு பொருந்தப் பண் இசையினைப் பாடி நிரம்பிய அருளினைப் பெற்று வணங்குவாராகி,

(வி-ரை) சிறப்பித்தருளும் திருக்கடைக் காப்பு - முன் பாட்டிற் சிறப்பித்தார் (*3195*) என்றது பதிகத்துள் இன்ன திருப்பாட்டு என்று காட்டியருளியவாறு.

பிதாவாக - நினைந்த பெற்றி - மக்கள் எனக்கொண்டு -(*3193*) என்று முன் கூறியபடி துணிந்த தன்மை; **நினைதல்** - துணிதல்; **பெற்றி** - தன்மை.

பெற்றியினால் தம்மை வைத்து - என்று கூட்டுக. வைத்தற்குக் காரணங் கூறியவாறு; **சிங்கடியப்பன்** என்ற தேவாரத்தின் கருத்தினையும் பொருளினையும் விளக்கிக் காட்டியவாறுமாம்.

தம்மை வைத்தலாவது - தம் பெயரை அவ்வாறு கூறிப் புனைந்து பெறுத்தல் (முத்திரீகரித்தல்); **என்றே** - ஏகாரம் சிறப்பு.

நிறப் பொற்புடைய இசை - **நிறம்** - இசைப் பாகுபாடுகள். "நிறப்பாலை யெய்தவுள்ளன" (2139) தாளநிலையில் எய்தவைத்த நிறம் (சிலப். அரங். 26-36 உரை.) இப்பதிகம் தாள நிறைவின் அமைதிபெற வருதல் காண்க.

இறைஞ்சுவார் - இறைஞ்சுவாராகி; இறைஞ்சுவார் - எழுந்தருளினர் என (மேல் வரும்) பாட்டுடன் கூட்டுக.

பிறப்பித்தெடுத்த பிதாவாக - ஈன்று வளர்த்த தந்தையாராகவே; அவ்வாறு நேர் வரும் பிதாவல்லாதிருந்தும் அவ்வாறு ஆகத் தம்மை ஆக்கிக்கொண்டு என ஆக்கச் சொல்லின் பொருள் விரித்துக்கொள்க. "அன்பினான் மகன்மை" "பாலூட்டலால் மகன்மை", "எடுத்தலால் (சுவீகாரம்) மகன்மை" என்று பலவாறு வரும் மகன்மை - தந்தை - முறைகள் போலக் கொள்க. ஈண்டுப் பிறப்பித்தெடுத்த பிதாவாகத் தம்மை எண்ணித் துணிந்து 42
கொண்ட முறையால் **அப்பன்** என்றார் என்பது.

திருநாட்டியத்தான்குடி

திருச்சிற்றம்பலம் **பண்-தக்கராகம் 7-ம்திருமுறை**

பூணா ணாவதொ ரரவங்கண் டஞ்சேன் புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீ ராகிலும் பெருமையை யுணர்வேன் பிறவே னாகிலு மறவேன்
காணீ ராகிலுங் காண்பனென் மனத்தாற் கருதீ ராகிலுங் கருதி
நானே லும்மடி பாடுத லொழியேன் னாட்டியத் தான்குடி நம்பீ. (1)

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் **சிங்கடி யப்பன்** திருவா ரூர னுரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் றொண்டீர் பாடநும் பாவம்பற் றறுமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:—அருளுரிமை சிறப்பித்தார் கோட்புலியாரை (3195) என்றும், சிங்கடியாரை...தம்மை வைத்தருளி (3196) என்றும் கூறியவாற்றால் ஆசிரியர் பதிகக் குறிப்புணர்த்தியமை கண்டு கொள்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:—(1) இப்பதியில் ஆளுடைய நம்பிகளுக்கு இறைவர் பாம்பு தரித்தது முதலாக அச்சந்தரும் வடிவுடனே காட்சி தந்தருள அதுகண்டு நம்பிகள் இவ்வாறு பாடியருளினர் என்று வரலாறு கூறுவர்; 2-3 பாட்டுக்களும் பார்க்க. **பூண் நாண் ஆவதோர்**

அரவம் - பூண் நாண் - பூணூல். ஐந்தலையரவினைப் பூணூலாகச் சிவபிரான் அணிவர் என்ற நிலை; **புறங்காடு** - உலகம் வீந்த சுடலை; **பேணீர் ஆகிலும்** - என்னை நீர் விரும்பீராயினும்; **பிறவேனாகிலு மறவேன்** - பிறவா நிலை-வீட்டு நிலை - பெறினும் உம்மை மறவேன். முத்தநிலையினும் உயிர்சிவானுபவத்துக்குரியது என்பது ஞானநூல்; **காணீராகிலும் கருதீராகிலும்** - நீர் காணவும் கருதவும் செய்தலினால் நான் காணவும் கருதவும் கூடும்; ஆனால் அவ்வாறு நீர் காண்பதனையும் கருதுவதனையும் நான் அறியமாட்டேனாயினும் நான் உம்மைக் காண்பதனையும் கருதிப் பாடுவதினையும் ஒழியேன்; **நாட்டியத்தான்குடி** - சிவபெருமான் எழுந்தருளியபடி; **நாட்டியத்தான்** - கூத்தன் - சிவபெருமான். **நாட்டியம்** - கூத்து. இங்கு எல்லாவுயிர்களையும் ஆட்டுவிக்கும் அருட்கூத்தன் என்று பொருள் கொள்க. **நம்பி** - நம்பி அடையத்தக்கவன்;—(2) **கச்சு** - இடையில் அணியும் உடைவகை; **கவர்வன்**- கண்ணாரக் காண்பேன்; **துச்சேன்**-இழிதகையேன் - துட்டன். **துச்சு** - கீழான செய்கை. "துச்சான செய்திடினும்" (திருவிசைப்பா); **சொல்லாய்திப்பிய மூர்த்தி - திப்பியம்** - திப்யம் என்றது வடமொழி; தூய்மை; மேன்மை. திப்பிய மூர்த்தியாயினும் துச்சேனுடைய மனத்தினுட் புகுந்து நீங்காது வீற்றிருக்கின்ற தன்மையினை விளங்கச் சொல்லுக; **இடர்களை வைச்சே களைந்திடவல்ல - வினைத் தீர்வின் பொருட்டுத் துன்பங்களை அனுபவிக்கக் கொடுத்தே தீர்க்கின்ற வல்லமைத் தன்மை; மாணிக்க வண்ணர்**- தலச்சுவாமி பெயர்; (இரத்தினகிரி நாதர்); **நச்சேன்** - விரும்பமாட்டேன்;—(3) **அஞ்சாதே உமக்காட் செயவல்லேன்**-1-ம் பாட்டின் கருத்தினைத் தொடர்ந்து கூறியது; கோத்திட்டைப் பதிகத்துள், "உமக்காட்செய வஞ்சுதுமே" என்பது வேறு நிலையாதலின் மாறுபாடில்லை என்க. பிறவியை வேண்டாமையும் வேண்டுதலுமாக வரும் பதிகக் கருத்துக்கள் போலக் கண்டுகொள்க; "**யாதினுக்கு**" - ஆட்செய்வதல்லால் வேறெதனுக்கு. "ஆளாயினி யல்லே னெனலாமே" "வேண்டிக்கொள்வேன் றவ நெறியே" (தேவா); **மங்கை** - தல அம்மை பெயர்; **மஞ்சு** - மேகம்;—(4) **கல்லேனல்லேன்** - கற்கமாட்டேன்; மேல்வரும் **நில்லேனல்லேன்** முதலியனவும் இவ்வாறே கொள்ளத்தக்கன; **அடிமை கல்லாதே** - அடிமைத் திறத்தில் நிற்கக் கல்லாமல்; **நின்வழி** நில்லேனல்லேன் என்றும், **நின்வழி** நின்றார் என்றும் இருபுறமும் கூட்டியுரைக்க நின்ற இடைநிலைத் தீபம்; **நின்வழி நின்றார்** - சிவதவ வொழுக்கமுடைய அடியவர்கள்; **நீதி** - நியதி - நெறி; **உமக்கல்லாற் பிறருக்கு** என்க;—(5) **கருதாதார் தமைக் கருதேன்**-"திருமுண்டந் தீட்டமாட்டா தஞ்சுவாரவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாறே" (திருவா); "காணா கண்வாய் பேசாதப் பேய்க ளோடே" (திருவிசைப்பா); **ஒட்டீர்** - நீர் என்னுடன் ஒட்டிப் பசுத்தன்மையடையாது வேறாக நிற்பீர்; **ஒட்டுவன்** - உம்மை ஒன்றி நினைவேன்; **அடிமைப்பட்டேன் - ஆகிலும்** - அடியார்க்கடியேனாவேன்; அதனுடன்; **நட்டேன்** - நட்புப் பூண்டேன்;—(6) **படப்பாற்றன்மை** - படவேண்டிய-அனுபவிக்க வேண்டிய-பான்மை-நியதி-ஊழ்; **படுத்தாய் என்று அல்லல் பறையேன்** - துன்பம் செய்தாய் என்று அலர் தூற்றமாட்டேன்; **பறைதல்** - சொல்லுதல்; **அல்லல்** - அலர். அல்லாத சொல்; **குடப்பாச்சில்** - மேற்கில் உள்ள திருப்பாச்சிலாச்சிராமம் என்னும், **கோக்குளிர்வானே** - அரசனுக்குத் தண்ணருள் புரிந்தவரே என்றும் பொருள் தோன்றுகின்றது; **மடப்பால்** - புதிய தன்மை; **நடப்பீர்**-விலகுவார் போல் நடத்தல் செய்வீர்; **அடிக்கே** - அடிச்சுவட்டினைப் பற்றி;—(7) **ஐவாய் அரவு** - ஐந்தலை நாகம்; **அழகா** - அரவும் மதியும்

ஒன்றுபடுத்துதல் அழகன்றாயினும் அழகுடைப் பொருந்தலைத்தலை உமது அழகு என்பது; **எய்வான் வைத்ததோர் இலக்கினை யணைதர நினைந்தேன்** - அம்பு எய்பவர் அப்புத்தொடுத்து எய்பவர் ஓர் இலக்கு வைத்து எய்தல்போல நீர் ஓர் இலக்கு-குறி-வைத்து இப்பிறவியிற் செலுத்தினீர். அதனை மறவாமற் கடைப்பிடித்தேன்-குறிக்கொண்டேன்; **உள்ளமுள்ளளவும்...அடைந்தேன்** அவ்வாறு நினைந்தவாக்கேற்ப நான் செய்யும் செயல் இஃது என்றபடி; **உகவீர்** - என்னை ஏற்காதவர் போல்வீர்;—(8) **கலியேன்**-மெலியேன்; **ஒன்றாக**-ஒரு பொருளாக; **கண்கணீர்பில்கும்**- வருத்தத்தால் கண்ணீர் சொரிந்தும். இதுவுமொரு பொருளாக; மானிட வாழ்க்கை தரவந்தேதுவன்றி வருத்தத்தால் மயங்குவார்; **வலியேமாகிலும்**-பல துன்பங்களை வலியோம்; **உமையல்லால் ஒருவரை நலியேன்**-என் துன்பங்களுக்கு உம்மையல்லால் வேறு ஒருவரையும் குறைகூறமாட்டேன்; **ஒருவரை** - ஒருவரையும்;—(9) **கொண்டார் கொள்ள**- சிலர் கொண்டு புறங்கூற - அலட்டுற்று; **தொழுவார் தொழக்கண்டு - தொழுதேன்** - ஞானத்தால் தொழுவோரைக் கண்டேன்; 'ஞானத்தாற் றொழுவார்கள் தொழக்கண்டு... நாமுந் தொழுவோம்' (குறுந்);—(10) **கூடா மன்னரை...கோட்புலி** இது நம்பிகள் திருவாக்கு. "அருளாரிவர சிறப்பித்தார் கோட்புலியாரை" (3195) என்று ஆசிரியர் காட்டியருளிய பகுதி; **கூடாமன்னர்** - தம் அரசர்க்குப் பகையான அரசர்; **கூட்டத்து** - அவர்கள் தனித்தன்றிப் பலர்கூடிப் போரில் வந்தெதிர்த்தபோது; **வென்றி** - வேந்தர்க்குற்றுழி அவன் ஏவல்வழி விரைந்தோடிச் சென்று பெற்ற வெற்றி, **கொடிறன்**- விடாப்பிடியுடன் வினை செய்யும் தன்மையுடையவன்; **சென்னி** - சோழன்; **சென்னி நாடார் தொல்புகழ் நாட்டியத்தான்குடி** - சோழநாட்டுப்பதி; **நாளும்**-எந்நாளும்; **சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூரன்** - நம்பிகள் பதிகந்தோறும் பல திறங்களாலும் தம் பெயர் பொறித்தல் மரபு. ஈண்டு இவ்வாற்றால் வைத்தமை பற்றி ஆசிரியர் (3195) விரித்தமை காண்க. இவ்வாறே "வனப் பகையப்பன்" என வருவனவும் காண்க. "நாணியூரன் வனப்பகையப்பன்" "ஆரூரன் வனப்பகையவளப்பன்" (தேவா); **பாடீராகிலும்** - உரிய வகையால் பாடவல்லீரல்லீராகிலும். "கோழைமிடறாக" (பிள்-தேவா-வைகா). கோட்புலியாரது வலிமைபற்றி அவர் புராணம் பார்க்க.

தலவிசேடம்:— திருநாட்டியத்தான்குடி - சோழ நாட்டில் காவிரித் தென் கரையில் 118-வது பதி. சுவாமி ஆரூர் நம்பிகளுக்கு அஞ்சத் தக்க அடையாளங்களுடன் காட்சி தந்தார் என்பது பதிகப் பாட்டுக்களிற் குறிக்கப்பட்டன என்பர். சுவாமி அம்மை பெயர்கள் பதிகத்துட் காண்க. கோட்புலிநாயனரது பதி; அவர் தம் புராணமும் பதிகமும் ஈண்டுப் புராண வரலாறுகளும் பார்க்க; கோட்புலி நாயனர் புராணத்துக் கூறப்பட்ட செய்தி நம்பிகள் இங்குவந்து பாடிய பின்னைப் பல நாட்கழித்து நிகழ்ந்திருத்தல் வேண்டும். அப்போது அவர் பெண்கள் சிங்கடி வனப்பகை யிருவருக்கும் கல்யாணமாகித் தம் மனை வாழ்க்கை வேருகக் கொண்டிருந்தனர் என்பதும் ஈண்டுக் கருதப்படும். நாட்டியத்தான்குடி என்று இறைவர் பெயரால் ஊர்ப்பெயர் வழங்கும் பெருமையுடைய பதி. சுவாமி பெயர் - **மாணிக்கவண்ணர்**. (இரத்தினகிரிநாதர்); அம்மை - **மலர்மங்கைநாயகி**; பதிகம் 1.

இது மன்னர் நாட்டியத்தான்குடி என்றிருந்து, இப்போது மாவூர் ரோடு என்று

3197. அங்கு நின்று மெழுந்தருளி யளவி லன்பி னுண்மகிழச்
செங்க ணுதலார் மேவுதிரு **வலிவ லத்தைச் சேர்ந்திறைஞ்சி**
மங்கை பாகர் தமைப்பதிகம் "**வலிவ லத்துக் கண்டே**"னென்
றெங்குநிகழ்ந்த தமிழ்மாலை யெடுத்துத் தொடுத்த விசைபுனைவார், 43

மாற்றப்பட்டிருக்கும் நிலையத்தினின்றும் வடமேற்கே மட்சாலை வழி 3½ நாழிகையளவில் அடையத்தக்கது.

குறிப்பு: இறைவர் பெயரால் அமைந்திருந்த சிறந்த நிலயப் பெயரைச் சிலர் சூழ்ச்சியால் இவ்வாறு மாற்றியமைத்தமை வருந்தத் தக்கது. இதுபோலன்றி, இதற்கு மாருக, முன்னர் வேறு பெயராலமைந்த நிலயப் பெயரை இறைவர் சார்பு பற்றிய பதியாக நிலயப் பெயர் மாற்றப் பாடுபட்டு மாற்றச் செய்த நல்லன்பர்களும் இருக்கிருர்கள். (உதாரணம்: வெட்டாறு என்றிருந்தது அன்பரின் முயற்சியால் விற்குடி என மாற்றப்பட்டது காண்க.) இந்நிலயத்தினையும் முன்னைத் திருப் பெயரால் நன்கு வழங்கச் செய்தல் நன்மை பயக்கும்.

3197. (இ-ள்) அங்குநின்றும்...உளமகிழ - அப்பதியினின்றும் எழுந்தருளிச் சென்று அளவில்லாத அன்பினுலே மனமகிழ்ச்சி பெற்று; செங்கண்... இறைஞ்சி - சிவந்த நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவலிவலத்தினைச் சென்று சேர்ந்து வணங்கி; மங்கை...என்று - உமையம்மையாரை ஒருபாகத்தில் உடைய இறைவரைப் பாடும் பதிகம். "வலிவலத்துக் கண்டேன்" என்ற முடிபினுடன்; எங்கும்...இசை புனைவார் - எங்கும் விளங்கிய தமிழ் மாலையினைத் தொடங்கித் தொடுத்த இசையினைச் சூட்டுவாராகி,

(வி-ரை) திருவலிவலம் - திருநாட்டியத்தான் குடியினின்றும் திருவாருருக்குச் செல்லும் வழி இடையில் உள்ளது.

"வலிவலத்துக் கண்டேன்" என்று - இது பதிகத்தின் மகுடக் குறிப்பினுலே பதிகக் கருத்துக் கூறியபடி. "வலிவலந்தனில் வந்து கண்டேனே" என்பது பதிகம்.

எங்கும் நிகழ் திருத்தமிழ்மாலை - எல்லாவிடத்தும் பெருமை விளங்கப் பரவிய செந்தமிழ்த் திருப்பதிகம். "ஒலிகொளின்னிசைச் **செந்தமிழ்** பத்தும்" என்பது திருக்கடைக் காப்பு. **எங்கும் நிகழ்ந்து**-"ஒலிகொள் இன்னிசை" (பதிகம்) என்றபடி ஒலிவடிவாயினமையால் அவ்வொலி அலைகள் பாம்பரையில் எங்கும் பரவி நிகழ உள்ள தன்மையும் குறிப்பு. இந்நாள் (Radio) ஒலிபரப்பியின் தத்துவம் காண்க. புகழ் பரவுதலுமாம்.

எடுத்து - தொடங்கி; **தொடுத்த-மாலை** என்றதற்கேற்பத் தொடுத்த என்ருர். **தொடை-** என்ற யாப்பினுறுப்பு வழக்கும் காண்க; **இசை** - இசையினையுடைய பாட்டுக்கு வந்தது. "**இன்னிசைச் செந்தமிழ்**" என்ற பதிகமும் காண்க.

3198. "நன்று மகிழுஞ் சம்பந்தர் நாவுக் கரசர் பாட்டுகந்தீர்"
என்று சிறப்பித் திறைஞ்சிமகிழ்ந் தேத்தியருள்பெற் றெழுந்தருளி
மன்றி னிடையே நடம்புரிவார் மருவு பெருமைத் திருவாரூர்
சென்று குறுகிப் பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல்பணிந்து. 44

புனைவார் - என்று சிறப்பித்து என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. ***புனைவார்*** - *புனைவாராகி; முற்றெச்சம்.*

மருவு திருவலிவலம்—என்பதும் பாடம். *43*

3198. (இ-ள்) நன்று...எழுந்தருளி - நன்மை விளங்கி மகிழும் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் என்றிருவருடைய திருப்பாட்டுக்களைக் கேட்டு மகிழ்ந்தருளினீர் என்று சிறப்பித்து வணங்கி மகிழ்ந்து துதித்துத் திருவருள் பெற்று மேலே எழுந்தருளிச் சென்று; மன்றினிடையே...பணிந்து - திருவம்பலத்தினிடமாகக் கூத்தியற்றும் பெருமான் எழுந்தருளிய பெருமையுடைய திருவாரூரினிற் சென்று சேர்ந்து பூங்கோயிலினுள் எழுந்தருளிய புற்றிடங்கொண்ட பெருமானின் செம்பொன் போன்ற திருவடிகளைப் பணிந்து.

(வி-ரை) நன்று...என்று-இது பதிகத்தினுள் "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை, சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானை" என்ற ஐந்தாம் பாட்டினைக் குறிப்பது. **நன்று மகிழும் - பாட்டு** என்று கூட்டுக. **நல்லிசை** என்றது பதிகம்; திருஞானசம்பந்த நாயனார்-திருநாவுக்கரசு நாயனார் என்ற பெருமக்களிருவருடைய திருப்பாட்டுக்களில் இறைவர் மிக்க விருப்புடன் மகிழ்வர் என்பதாம். இவ்வுண்மை அவர்தம் புராணங்களுட் பல்லாற்றானும் இனிது விளங்குதல் கண்டுகொள்க. இதனை நம்பிகள் எடுத்துக்காட்டிப் பாராட்டுதல் பெருஞ் சிறப்பு; இவ்வுண்மைச் சிறப்பு நம்பிகள் திருப்பாட்டுக்களுக்கு மொக்கும்.

மன்றி னிடையே நடம்புரிவார் - அம்பலக் கூத்தர்; தியாகராசரும் நடராசரும் ஒருவரே என்பது முன்னர் "ஆரூரில் வருக நம்பால்" (254) என்றவிடத் துரைத்தவாற்றானும், அவ்வாறு வந்த நம்பிகளுக்கு ஆரூரர் பெருமான் "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்று முதலெடுத்துக் கொடுத்தமையானும், அவ்வாறு தில்லையினைப்பற்றித் திருவாரூரிற் றொடங்கிய முதனூல் திருவாக்குத், தில்லையில் இறைவர் "உலகெலாம்" என்று அடி எடுத்துக்கொடுக்க அங்கு நிறைவெய்தியவாற்றானும், பிறவாற்றானும் அறியப்படும். இவ்வுண்மை பற்றியே நடராசப் பெருமான் பிற்காலத்தில் ஒருகால் திருவாரூரில் எழுந்தருளியிருந்தார் போலும்; **மருவு**-என்ற எதிர்காலக் குறிப்பும் காண்க.

பூங்கோயிற் பெருமான் செம்பொற் கழல் பணிந்து - நம்பிகள் திருவாரூர் சென்றவுடன் பரவையார் திருமாளிகைக்கு நேரே செல்லாது பூங்கோயிலுக்குச் சென்று உடைய பெருமானை வணங்கிய பின்னர்ச் செல்வது காண்க. இதுபற்றி முன் உரைத்தவையும் நினைவுகூர்க.

பூங்கோயில் - திருவாரூர் கோயிலின் பெயர்; முன் உரைத்தவை (135) பார்க்க. *44*

3199. இறைஞ்சிப் போந்து பரவையார் திருமா ளிகையி லெழுந்தருளி
நிறைந்த விருப்பின் மேவுநா ணீடு செல்வத் திருவாரூர்ப்
புறம்பு நணிய கோயில்களும் பணிந்து போற்றிப் புற்றிடமாய்
உறைந்த பெருமான் கழல்பிரியா தோவா வின்ப முற்றிருந்தார். 45

3199. (இ-ள்) இறைஞ்சி... மேவுநாள் - வணங்கிச் சென்று பரவையாரின் திருமாளிகையில் எழுந்தருளி நிறைந்த விருப்பினுடனே பொருந்தியிருக்கும் நாட்களிலே; நீடு...போற்றி - நீடிய செல்வத் திருவாரூரின் புறம்பிலே அணுக உள்ள திருக்கோயில்களையும் சென்று பணிந்து துதித்து; புற்றிடமாய்...உற்றிருந்தார் - புற்றிடங் கொண்டு நீங்காதெழுந்தருளிய பெருமானின் திருவடிகளைப் பிரியாது இடையருத இன்பம் பெற்று வீற்றிருந்தருளினுர்.

இந்நான்கு பாட்டுக்களும் ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) பரவையார் திருமாளிகையில் - இறைவரால் ஆளாகக் கொள்ளப்பெற்றுத் தவநெறியும் பெற்றமையால், நம்பிகள் தமக்கென ஓருரும் இடமும் இல்லாது இறைவருடைய இடங்களே தமதிடமாக்கொண் டொழுகினர்; ஆதலின் திருவாரூரில் பரவையார் திருமாளிகையையும் திருக்கோயிலினையுமே தமதிடமாக் கொண்டனர் என்பது குறிப்பு; இவ்வாறு முன்னுரைத்தவையும் பின் வருபவையும் பார்க்க.

நணிய கோயில்கள் - திருவாரூரினை அடுத்து அணிமையில் உள்ள பல கோயில்கள். இவை திருவிளமர், திருமாலுமங்கை, திருச்சாத்தமங்கை, திருப்பள்ளியின் முக்கூடல் முதலாயின என்பது கருதப்படும்.

பிரியாதே - புறம்பு நணிய கோயில்களுக்குச் சென்று தொழுது அவ்வந்நாளே திருவாரூருக்குத் திரும்பிவந்து சார்ந்தார் என்பது.

ஓவா இன்பம் - நீங்காத இன்பம். வெளியே கோயில்களைச் சென்று வணங்கினுலும் அவ்வந்நாளே திருவாரூருக்குத் திரும்பிவந்து புற்றிடங்கொண்டாரை ஒரு நாளும் இடைவிடாது வணங்கியபடியால் இடையருு இன்பம். **ஓவுதல் -** நீங்குதல்.

புறம்பு நணிய - புறம்பாயினும் அணிமையில் உள்ள. 45

திருவலிவலம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி**

ஊனங் கத்துயிர்ப் பாயுயிர்க் கெல்லா மோங்கா ரத்துரு வாகிநின் றானை
வானங் கத்தவர்க் கும்மளப் பரிய வள்ள லையடி யார்கடம் முள்ளத்
தேனங் கத்தமு தாகியுள் ளூறுந் தேனைத் தினைத் தற்கரி யானை
மானங் கைத்தலத் தேந்தவல் லானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. (1)

நல்லிசை ஞானசம் பந்தனு நாவுக் கரசரும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லிய வேசொல்லி யேத்துகப் பானைத் தொண்ட னேனறி யாமை யறிந்து

கல்லி யென்மனத் தைக்கசி வித்துக் கழலடி காட்டியென் களைகளை யறுக்கும்
வல்லியல் வானவர் வணங்கநின் றானை வலிவ லந்தனில் வந்துகண் டேனே. (5)

கலிவ லங்கெட வாரழ லோம்புங் கற்ற நான்மறை முற்றன லோம்பும்
வலிவ லந்தனில் வந்துகண் டடியேன் மன்னு நாவலா ரூரன்வன் றொண்டன்
ஒலிகொ ளின்னிசைச் செந்தமிழ் பத்து முள்ளத் தாலுகந் தேத்தவல் லார்போய்
மெலிவில் வானுல கத்தவ ரேத்த விரும்பி விண்ணுல கெய்துவர் தாமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—நல்லிசை ஞானசம்பந்தனும் நாவுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை உகந்த இறைவரை வலிவலந்தனில் வந்து கண்டேனே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) ஊன் அங்கத்து உயிர்ப்பாய் - ஊனாய் மெய்யினுள் உடம்பினுள்ளே தோயாதே உயிர்ப்பின் உருவாய் நின்று; "மெய்யுளே யுயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக் கென்னுளே நிற்கும்" (அரசுகள்-குறுந்.) **உயிர்க்கெல்லாம் ஓங்காரத் துருவாகி நின்றான் -** பஞ்சாக்கர வடிவாகிய தன் உருவத்துள்ளே உயிர்களெல்லாம் ஒடுங்க நின்றவர் இறைவர்; **வான் அங்கத்தவர்க்கும் -** விண்ணுலகத்தவர்களாகிய தேவர்களுக்கும்; வானோர்க்கும். **தேனங்கத் தமுதாகி -** தேனாகிய அங்கத்திலுள் இனிக்கும் அமுதமாகித் தித்தித்து; **தேனம்-அம்**-சாரியை; **அங்கைத் தலத்து மான் ஏந்த** என்க;—**(2) செல் அடியே நெருக்கி -** அடியார்கள் செல்லும் செந்நெறியிலேயே ஒட்டிப் பின்பற்றி; **சித்தி**-இம்மைநலம்; **முத்தி -** வீடுபேறு; குறை - வேண்டுவன;—**(3) ஆழியனை யகன்றே யுயர்ந்தானை -** "ஓங்கி யாழ்ந் தகன்ற நுண்ணியனே" (திருவா. சிவபு.) **ஆழியன்**-ஆழமுடையன்; **உயர்ந்தான் -**(ஆயினும்) பணிவார்க்கு அணியான்; **கூழையர் -**பின்னணியில் நிற்பவர். அடியார் கூட்டத்தில் கடையில் நிற்பவராகி; "கடைக் கூழை சென்மின்கள்" (திருவா. படையெழுச்சி); **பொய்யே குடி ஓம்பி -** உலக வாழ்க்கையில் ஆசையின்றிப் பற்றுது வாழ்ந்து; **குழைந்து...வாழியர் -** அன்புடன் மெய்யடியார் திறத்துக் குற்றேவல் செய்து வாழ்பவர்; **குழுப் பெய்தல் -** கூட்டத்துக்கு வேண்டுவன புரிதல்;—**(4) அண்ணித்து -** அணுகி யின்பந் தந்து; "அண்ணிக்குந் தீங் கரும்பை" (தாண்); **ஆத்தான்**-ஆத்தன் (ஆப்தன்) என்பது ஆத்தான் என நின்றது; அடியேன் றனக்கென்றும் ஆத்தானை என்க; **சோத்தான் -** துதிபெறுதற்குரியவன்; **சோத்தம்**-துதி; **சுடர் மூன்று**-சூரியன் சந்திரன்-தீ; **மாத்தான் -** உயர்வுடையான்; **மகத்** என்பது **மாத்து** என நின்றது; **மாத்து -** பெருமை;—**(5) நல்லிசை...ஏத்துகப் பானை**-ஆளுடைய பிள்ளையாரும் ஆளுடைய அரசுகளும் அருளிய பாடல்களாகிய தேவாரங்களை இறைவர் மகிழ்ந்து அருளும் திறம் போற்றப்பட்டது. இதனை ஆசிரியர் (3198) உரை செய்து குறித்துக் காட்டியருளியது காண்க. **சொல்லியவே சொல்லி ஏத்து -** அவர்கள் தேவாரங்களையே சொல்லிச் சொல்லி ஏத்துதலை; **ஏத்து -** ஏத்துதல்; போற்றுதலை. **ஏத்து -** முதனிலைத் தொழிற்பெயர். **நல்லிசை** என்பதனை நாவுக்கரசருடனும் கூட்டுக. **இசை**-புகழ்; கீதம் என்றலுமாம். அவர்களது நற்றமிழ் உகப்பானாயினும் எனது அறியாமையறிந்தும் என்னையும் ஆட்கொள்பவன் என்பது. **கல்லி -** தோண்டி ; அகழ்ந்து; **கல்லுதல் -** தோண்டுதல். **கசிவித்து -** பெரிய ஊற்றாகவன்றிக் கசியும்படியேனும் செய்து; இளகச் செய்து; "கல்லைப் பிசைந்து கனியாக்கி" (திருவா). **களைகள் -** வேண்டாத

3200. செறிபுன் சடையார் **திருவாரூர்த் திருப்பங் குனியுத் திரத்திருநாள்**
குறுக வரலும் **பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க**
நிறையும் பொன்கொண் டணைவதற்கு நினைந்து நம்பி **திருப்புகலூர்**
இறைவர் பாதம் பணியவெழுந் தருளிச் சென்றங் கெய்தினூர். 46

குற்றங்கள் (உழவு); களைபோல்பவற்றைக் களை என்றூர்; **வல்லியல்**-வலிய இயல்புடைய;—(6) **பாடுமா - ஆறு** - என்பது **ஆ** என நின்றது; ஏனை யாவும் இவ்வாறே, **பனுவுமா** -பன்னும் - சொல்லும் - ஆறு; **கூற** - எடுத்துக் கூறி வேண்ட; **குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை ஆண்டு** - திருவெண்ணெய்நல்லூரில் தடுத் தாட்கொண்டதும், திருத்துறையூரில் தவநெறி தந்ததும், திருவதிகையில் திருவடி சூட்டியதும், திருவாரூரில் திருத்தொண்டத்தொகை பாட அருளிஅடியரோடு கூட்டியதும் முதலிய வரலாறுகளைக் குறிக்க;—(7) **பந்தித்த வல்வினைப் பற்று** - மூலமலமும் மூல கன்மமும்; **பிறவி...பரப்பு** - அளவில்லாத பிறவிகள். **சந்தித்த திறலார் பணி பூட்டி-சந்தித்தல்**-திருவடி ஞானங் கூடுதல்; **திறல்ஆர்** - வலிமை பொருந்திய; **பணி பூட்டி** - பணியில் தம்மைப் பூட்டி; ஒப்புவித்து; மேற்கொண்டு;—(8) **வந்தடைந்தவர்க்கே யிடமாகி - வந்து** - தேவர் - மன்னர் முதலிய நிலைகளை விட்டுத் தம்மையே பற்ருக வந்து. **வந்து-என்பது இசையெச்சம். வவ்வி** - என்னைத் தன்னுள்ளாக்கி;—(9) **அரக்கன்** - இராவணன்; **முற்றும் பின்னையாய் முன்னமே முளைத்தானை** - முன்கூறிய அருளிப்பாடுகள் நிகழ்ந்த மிகப் பழங்காலத்துக்கும் முன்னே நின்றவன்; **பின்னையாய்** - அவை பிற்பட்டொழிய; "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" (தேவா);—(10) **அந்தணன்** - பிரமன்; **ஏன்ற** - செருக்கியெழுந்த; **அத்தலையினில்** ஏற்று என்க. **அத்தலையினில்** என்பது இசையெச்சம். **மாவிரதத்த** - மாவிரதம் என்ற உட்சமயச் கோலத்தையுடைய; **சான்று காட்டுதற் கரியவன்** - "தனக்குவமை யில்லாதான்" (குறள்); **தன்னிலா மனத்தார்**-தற்போத மில்லாது சிவனையே நினையும் மனத்தவர்கள்; **மான்று** - "மயங்கி மான்று மனங்கருதி நின்றீரெல்லாம் மனந்திரிந்து மண்ணின் மயங்காது... சேர்மின்களே" (பிள். தூங்கானை மாடம்-4);—(11) **கலிவலங்கெட ஆரழலோம்பும்** என்றது உலகங் காக்கச் செய்யும் பொது வேள்விகளை. **மறைமுற்றன லோம்பும்** என்றது வைதிகர்கள் மனை தோறும் வளர்க்கும் முத்தீ; முன்னையது நகரின் புறத்தே யாகசாலைகளில் செய்யப்படுவது; **வந்து**-நாட்டியத்தான் குடியினின்றும் வடகிழக்காகத் திருவாரூர் செல்பவர் நேரே செல்லாது தென்கிழக்காக 4 நாழி வழி தேடி வந்து கண்டாராதலின் **வந்து** என்றூர். ஏனைய பாட்டுக்களிலும் இவ்வாறே கொள்க; **ஒலிகொள் இன்னிசை** - இசை (பொருட்) சத்தம் பற்றியது; **செந்தமிழ்**-பொருளைப் பற்றியது; இயற்றமிழ் என்றலுமாம்.

தலவிசேடம்:—திருவலிவலம்-முன் *2413*-ன் கீழ் உரைக்கப்பட்டது பார்க்க.

3200. (இ-ள்) செறி..வரலும் - (அந்நாளிலே) செறிந்த புன் சடையினை உடைய சிவபெருமானது திருவாரூர்த் திருப்பங்குனி உத்திரத் திருநாளானது அணுக வரவே; பரவையார்... நினைந்து - பரவையார் கொடுப்பதற்கும் திருவிழாவில் அடியார்களுக்கு வேண்டுவன வெல்லாம் குறைபாடின்றிச் செய்வதற்கும் நிறைவாகிய பொன்னினைக் கொண்டு

வருதற்கு எண்ணி; நம்பி...எய்தினார் - நம்பிகள் திருப்புகலூர் இறைவரின் திருவடிகளைத் தொழுவதற்கு எழுந்தருளிப் போய் அங்குச் சேர்ந்தருளினார்.

(வி-ரை) திருவாரூர்...குறுகவரலும் - முற்றிங் கொண்ட பெருமானைக் கும்பிட்டு நம்பிகள் ஓவா இன்பமுற்றிருந்த அந்நாளில் திருப்பங்குனி உத்திரத் திருநாள் அணுக வந்தது. "அந்நாளிலே" என்பது சொல்லெச்சம்; திருப்பங்குனி உத்திரத் திருநாள் திருவாரூரில் மிகச் சிறப்புடையது. 48 நாட்கள் கொண்டாடப்படுவது. இதனுள் விநாயகர், சுப்பிரமணியர், சந்திரசேகரர் முதலாகச் சண்டேசர் இறுதியாக அவ்வம் மூர்த்திகளுக்குத் தனித்தனி விழாக்கள் உண்டு. பங்குனி உத்திரநாளில் வீதிவிடங்கராகிய ஸ்ரீ தியாகேசப் பெருமான் உருத்திரபாத தரிசனந் தந்து ஆழித்தேர் ஊர்ந்து திருவீதி எழுந்தருளுவது பெருஞ் சிறப்பாகும்.

பரவையார் கொடைக்கு விழாவிற் குறைவறுக்க- அத்திருவிழாவில் பரவையார் விழாக் காணவரும் அவ்வவர்க்கும் வேண்டிய வேண்டியவாறு பொன் மணி துணி முதலியவற்றை எல்லாம் கொடுப்பதும் அடியார்களுக்கு அமுது உறையுள் முதலிய எல்லாம் குறைவின்றி உபசரித்துச் செய்வதும் வழக்கமாகும். அதன் பொருட்டு நம்பிகள் இறைவரிடம் பொன் வேண்டுவதும் வழக்கமாம். பின்னர்த் திருமுதுகுன்றத்திலும் திருப்பாச்சிலாச்சிராமத்திலும் பொன் வேண்டிப்பெறும் வரலாறுகளும் காண்க. அவையும் அவ்வப்பங்குனி உத்திரவிழாவின் பொருட்டே என்க. இவையொன்றுங் காணமாட்டாத வீணர்கள் சுந்தரர், பரவையாருக்குத் தரப் பொன் இறைவரிடம் வேண்டுவதும் இறைவர் தருவதும் பற்றி மனம் போனவாறு பேசுதல் அறியாமை என்றொதுக்குக. "சுந்தரன் பொன்னைப் பாடுவான்" என்பாதியாக இவ்வறியாமையே பற்றிப் பாட்டுப் பாடிவிட்ட புலவனுமுண்டு. என்னே? இவர்கள் மதியீனமிருந்தவாறு? உலகம் உண்மை கண்டு பெரியோர்பால் அபசாரப்படாது உய்வதாக.

கொடைக்கு விழாவில் குறைவறுக்க - கொடைக்கும் விழாவிற்குறைவறுக்கவும். **கொடை** - பொன் முதலியவற்றைக் கொடுத்தல். இது யாவர்க்கும் செய்யப்படும்; **குறைவறுத்தல்** - அடியார்க்கு அமுது படைத்தல் முதலாகிய உபசரிப்பு வகை. கொடுப்பதற்குப் பொருளின்மையாகிய குறைவில்லாதிருக்க என்றனர் முன் உரைகாரர்கள். **குறைவறுத்தல்** - அடியார்க்கு அமுது உறையுள் முதலாக வேண்டிய உபசரிப்புக்கள் செய்தல் என்பது "கண்ணுதலான் திருத்தொண்டராணர்க்கெல்லாம் கோதில்புகழ்ப் பாண்டிமா தேவி யார்மெய்க் குலச்சிறையார் **குறைவறுத்துப்** போற்றிச் செல்ல" (2788); "குறைவறுத்தார் பஞ்சவனர்" (கழறிற். புரா - 95) "குறைவறுப்பேவி" முதலியவை காண்க. திருவிழாவில் இவ்வாறு செய்யும் நியமங்கள் மிகப் பெரிய சிவபுண்ணியங்களாம் என்பது சிவாகம நூற்றுணிபு. அமர்நீதி நாயனர் புராணம் முதலியவை பார்க்க.

பொன்கொண் டணைவதற்குத் திருப்புகலூர் இறைவர் பாதம் பணிய - நம்பிகள் திருவாரூரிலே தம் இறைவர்பாலே பொன் வேண்டிப் பெற்றிருக்கலாமே? எனில், அற்றன்று; தாம் ஆன்மார்த்த நாயகராகக் கொண்டு வழிபடும் உடைய நாதரிடத்துப் பொன் முதலிய எந்தக் காமியங்களையும் வேண்டலாகாது என்பது சிவாகம விதி. பூசாபலன் கன்மபலன் முதலிய எல்லாவற்றையும் உடைய நாதருடைய வரதத் திருக்கையில் அர்ப்பணம்

3201. சென்று விரும்பித் திருப்புகலூர்த் தேவர் பெருமான் கோயில்மணி
முன்றில் பணிந்து வலங்கொண்டு முதல்வர் முன்பு வீழ்ந்திறைஞ்சித்
தொன்று மரபி னடித்தொண்டு தோய்ந்த வன்பிற் றுதித்தெழுந்து
நின்று பதிக விசைபாடி நிகழ்ந்த கருத்து நிகழ்விப்பார், 47

செய்தல் வேண்டும் என்பது சிவாகமங்களில் விதித்த பூசாவிதி. ஆதலின் திருவாரூரில் புற்றிடங் கொண்டவராகிய தம் உடையவர்பால் ஆரூர் நம்பிகள் பொன் முதலியவற்றை வேண்டிற்றிலர். திருப்புகலூரிலும் திருப்பாச்சிலாச்சிராமத்திலும் திருமுது குன்றத்திலுமே சென்று வேண்டிப் பெற்று அதனைத் திருவாரூர் விழாவில் அடியார்க்குக் குறைவறுக்க உதவியருளினர்.

பரவையார் கொடைக்கு - நம்பிகள் தந்த பொருள்களை எல்லாம் திருவாரூரில் பரவையார், அவ்வவர் வேண்டியவாறு கொடுத்தார் என்பது முன்னர்க் குண்டையூர் நெல்லினை அவ்வவர் மனை எல்லைக்குட்பட்ட அளவு அவ்வவரே எடுத்துக்கொள்க எனப் பறை சாற்றுவித்துக் கொடுத்தவாற்றானுமறிக. 46

3201. **(இ-ள்)** வெளிப்படை. சென்று விரும்பித் திருப்புகலூரிலே தேவதேவராகிய இறைவரது திருக்கோயிலில் மணிமுற்றத்தில் வணங்கி வலமாக வந்து முதல்வரது திருமுன்பு நிலமுறவிழுந்து வணங்கிப் பழைய மரபின் வரும் திருவடித் தொண்டிலே ஊறிய அன்பினாலே துதித்து எழுந்து நின்று திருப்பதிக இசையினைப் பாடித் தாம் எண்ணி வந்த கருத்தினை விண்ணப்பிப்பாராகி;

(வி-ரை) சென்று...நிகழ்விப்பார் - நினைந்தபின் திருப்புகலூர் சேர்ந்தருளியதும், சேர்ந்தபின் வழிபட்டுப் பாடி நின்றதும் இவ்வாறு ஒரு பாட்டிற் சுருங்கக் கூறியருளியது செயலின் விரைவு குறித்தற்கு.

தொன்றுமரபின் அடித்தொண்டு தோய்ந்த - பழமையாக வரும் திருவடி வழி பாட்டு முறையில் உள்ளூறிய; **மரபு** - நெறி; குருமரபின் வந்த சிவ தவநெறி; இவ்வாறன்றி **மரபு** வழிவழி வந்த குலம் என்பாருமுண்டு; **தொன்று** - தொன்று தொட்டு வந்த.

நிகழ்வித்தல் - விண்ணப்பித்தல்; **நிகழ்விப்பார்**-முற்றெச்சம்; **நிகழ்விப்பார் - கும்பிட்டு** என்று மேல் வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க.

நினைந்த-முன்பாட்டில் **நினைந்து** என்ற எண்ணம்.

பதிகவிசை பாடி-இப்பதிகம் கிடைத்திலது! 47

3202. (இ-ள்) *சிறிது...ஒழிய* - சிறிது நேரம் கும்பிட்டு நின்று பின்னர் மனம் அங்கு நிற்க; *வறிது...அணையார்* - (நினைந்த பொன் பெறாது) வறிதே புறத்துப் போந்து பக்கத்தில் எந்தத் திருமடத்திலும் சென்று அணையாமல்; *வன்றொண்டர்...அருகிருப்ப*- வன்றொண்டராகிய நம்பியாரூரர் அறிவு பெருகிய அன்பர்களுடனே அழகிய திருமுற்றத்தில் ஒரு பக்கமாக எழுந்தருளியிருப்ப; *மறி..எய்தியதால்* - மானேந்திய வன்மையினையுடைய

3202. சிறிது பொழுது கும்பிட்டுச் சிந்தை முன்ன மங்கொழிய
வறிது புறம்போந் தருளியயன் மடத்திலணையார் வன்றொண்டர்
அறிவு கூர்ந்த வன்பருட னணிமுன் றினிலோ ரருகிருப்ப
மறிவண் கையா ரருளாலோ மலர்க்கண் டுயில்வந் தெய்தியதால் 48

இறைவரது திருவருளாலேயோ (அறியோம்) அவரது மலர்போன்ற திருக்கண்கள் துயில்வந்து பொருந்தப் பெற்றன.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) சிந்தை முன்னம் அங்கு ஒழியப் புறம்போந்து - மனம் அங்குத் தங்கி நிற்கத் திருமேனி மட்டில் புறமுற்றத்திற் போந்து. **அயல் மடத்தில் அணையார் முன்றிலின் அருகிருப்ப** என்க. வழிபாட்டு நேரங்களிலன்றி மற்றை நேரங்களில் திருக்கோயிலினும் திருமுற்றத்திலும் தங்குதல் பெரியோர் மரபன்று; விதியுமன்று. என்னை? அவ்வாறு தங்கின் உடம்பின் உபாதிவசத்தாலும் மற்றும் பலப் பல அபசாரங்களுக்கு இடமாதலானென்க; **அருகு**-ஒருபுடை-பக்கம்.

அருளாலோ - திருவருளாலேயோ? யாம் அறியோம் என்றபடி.

திருமுற்றத்தில் துயிலலாகாது என்பது விதியாதலின் அதற்கு மாறாக; வழிபாட்டு முறையும் விதியுமறிந்து ஒழுக்கத்தினும் சிறந்த நம்பிகளுக்குத் துயில் வந்தது. அவரும் துயில் கொண்டனர் எனின், அஃது இறைவர் திருவருளினாலன்றி நேராது என்பார் **அருளாலோ** என்ற உடம்பாட்டு வினைவினாற் கூறினார்; "தம் மேலைச் சார்புணர்ந்தோ" *(1961)* "தம் பெருமா னருளாலேயோ" *(1891)* என்பன முதலியவை பார்க்க. **அருளாலே** என்ற பாடமுமுண்டு.

அறிவுகூர்ந்த - நம்பிகளுடனிருக்கும்பேறு வாய்த்தவர்களின் பண்பு. *48*

3203. (இ-ள்) துயில் வந்தெய்த - அவ்வாறு கண்களில் துயில் வந்து பொருந்த; தம்பிரான் றோழர்...உயரம்பண்ணி - தம்பிரான் தோழராகிய நம்பி ஆரூரர் அங்கு இறைவர் கோயில் திருப்பணிக்குப் பயன்பட நின்ற சுட்ட மட்பலகைகளுட் பலவற்றைக் கொணரச் செய்து உயரமாக ஆக்கி; தேன்...மேவினார் - தேன் உண்ணும் வண்டுகள் பொருந்திய மலர் மாலை சூடிய குடுமியினையுடைய திருமுடிக்குத் தலையணையாக உத்தரியமாகிய ஒளியுடைய வெண்பட்டினை அதன்மேல் விரித்துப் பள்ளி கொண்டார்.

(வி-ரை) துயில்வந்தெய்த - இயல்பாக வரவேண்டாத நேரத்தில் வந்து எய்திற்று என்பது குறிப்பு.

தம்பிரான் தோழர் - தோழராதலின் இச்செயலுக்கு உரிமைப்பாடு உடையவர் என்பது குறிப்பு. முன்பாட்டிலும் இவ்வாறே அயல் மடத்தில் அணையாது முன்றிலினில் இருந்துகிடந்த செயல் **வன்றொண்டராந்** தன்மை என்ற குறிப்புப் பற்றியதும் காண்க.

சுடுமட்பலகை - செங்கல். அந்நாளில் சோழநாட்டில் உள்ள கோயில்கள்

3203. துயில்வந் தெய்தத் **தம்பிரான் ரேழ** ரங்குத் திருப்பணிக்குப்
பயிலுஞ் **சுடுமட் பலகைபல கொணர்வித் துயரம் பண்ணித்தேன்**
அயிலும் சுரும்பார் மலர்ச்சிகழி **முடிமே லணையா** வுத்தரிய
வெயிலுந் தியவெண் பட்டதன்மேல் விரித்துப் பள்ளி மேவினுர். 49

பெரும்பான்மையும் செங்கல்லினுலே திருப்பணி செய்யப்பட்டன என்பது சரித உண்மை. அவை மிக நன்ருகவும் செம்மையாகவும் செம்பொற்கட்டிகள் போல அமைந்தன என்பதும் பழைய கோயில்களிற் காணலாம். **பலகை** என்ற குறிப்புமது. மரப்பலகை இழைத்துச் செம்மை செய்தது போல என்பது. **சுடும்** - சுடப்பட்ட.

பலகொணர்ந்து உயரம் பண்ணி - உயரமுடைய தலையணையின் மேல் தலையைக் கிடத்தித் துயில வேண்டுமென்பது உடற்சுகத்துக்குரிய நூல் விதி; **பல** என்றதனுல் இரண்டுக்கு மேற்பட்டதென்பது குறிப்பு. முன்னைநாட் செங்கல் அளவு கருத மூன்று அல்லது நான்கும் கொள்ளலாம். **அணியா** என்று பாடங்கொண்டு முடியிற்சூடிய மலர்மாலைகளைக் கற்றையாக்கி வைத்துக்கொண்டு என்றுரைப்பாருமுண்டு.

முடிமேல் அணையா - தலையை மேல் வைக்கும் தலையணையாக; **ஆ**-ஆக என்பது ஈறு கெட்டு ஆ என நின்றது.

தேன்...முடி-திருவருளாணையின்படி (273) நம்பிகள் மண வேள்வியில் அன்று கொண்ட கோலத்துடனே உலகில் சரித்தருளினுராதலின் முடியில் எப்பொழுதும் மலர்மாலை அணிந்தருளுவர்; **தோழர்** என்ற குறிப்பும் காண்க.

உத்தரிய...விரித்து - வலிந்த பரிசமுடைய மட்பலகைகளைத் தலையணையாக்கிக் கொள்ளத் தலையைச் சார்த்தற்குரியபடி மென்மை தருதற்கு உத்தரிய வெண்பட்டினை அதன்மேல் விரித்தருளினுர். உத்தரியம் வெண்பட்டாலியன்றது. நம்பிகள் கொண்ட தோழர் கோலத்துக்குரியது. திருநாகைக்காரோணப் பதிகமும் பிறவும் பார்க்க.

முடிமேலணியா—என்பதும் பாடம். 49

3204. (இ-ள்) சுற்றும்... அளவில் தம்முடனிருந்த தொண்டர்களும் துயிலும்போது; துணை... பரவைகேள்வனுர் - தாமரை மலர் போன்ற இரண்டு திருக்கண்களையும் பற்றிக்கொண்ட துயில் நீங்கப் பள்ளியுணர்ந்தாராகிப் பரவையார் கணவனுராகிய நம்பியாரூரர்; வெற்றி... கண்டு - வெற்றி பொருந்திய இடபத்தை உடைய சிவபெருமான் திருவருளாலே, வெந்த மட்செங்கல்லே விரிந்து ஒளிவீசும் செம்பொன்னுலாகிய திண்ணிய கல்லாகியவற்றைக் கண்டு புகலூர்... போற்றி - திருப்புகலூர் இறைவரது திருவருளைத் துதித்து,

(வி-ரை) கண்பற்றும் துயில் - இயல்பாய்ப் பொருந்தாது வந்து பற்றிய என்றது குறிப்பு.

பள்ளி உணர்ந்தார் - துயில் விட்டு எழுந்தார். பள்ளி உணர்ந்தாராகி; முற்றெச்சம்; உணர்ந்தார் கண்டு - போற்றிப் பாடினுர்-என வரும்பாட்டுடன் முடிந்தது.

3204. சுற்றுமிருந்த தொண்டர்களுந் துயிலு மளவிற் றுணைமலர்க்கண்
பற்றுந் துயினீங் கிடப்பள்ளி உணர்ந்தார் **பரவை கேள்வனுர்**
வெற்றி விடையா ரருளாலே **வேமண் கல்லே விரிசுடர்ச்செம்**
பொற்றிண் கல்லா யினகண்டு புகலூ ரிறைவ ரருள்போற்றி. 50

3205. தொண்டருணர மகிழ்ந்தெழுந்து **துணைக்கைக்** கமல முகைதலைமேற்
கொண்டு கோயி லுட்புக்குக் குறிப்பி லடங்காப் பேரன்பு
மண்டு காத லுறவணங்கி வாய்த்த மதுர மொழிமாலை
பண்டங் கிசையிற் “றம்மையே புகழ்ந்”தென் றெடுத்துப்பாடினுர். 51

வேம் மண்கல்லே - வெந்த மண்ணுலாகிய செங்கல்லே. **வேம்** - வேகும்; வெந்ததனுலாகிய.

விரிசுடர்ச் செம்பொற்றிண் கல். விரிசுடர்-ஒளி வீசும்; செங்கல் செம்பொற் கல்லாயினது. **திண்கல்** - பொன்னுதலின் செறிவுடைய திரண்ட கட்டிக்கல்; **திண்மை**-உலோகங்களில் வைத்துப் பொன்னினது செறிந்த தன்மை [illegible] பற்றி கூறியதும்; பொற்பாளங்களைச் செங்கல் போன்ற அளவுபட வார்த்துச் சேமிக்கும் வழக்கும் காண்க.

போற்றி-எழுந்து-புக்கு-வணங்கிப்-பாடினுர் - என வினைமுற்றுடன் கூட்டி முடிக்க.

50 **கல்லாயிட—கனகமாக—**என்பனவும் பாடங்கள்

3205. (இ-ள்) தொண்டர் உணர-உடன் துயில்கொண்ட அடியார்களும் துயில் நீங்க; மகிழ்ந்து...புக்கு மகிழ்ச்சியுடன் எழுந்து இரண்டு கைகளையும் தாமரை முகைபோலச் சேர்த்துத் தலையின்மேற் கூப்பிக்கொண்டு திருக்கோயிலினுள் புகுந்து; குறிப்பில்... வணங்க - தமது அறிவிற் குறிக்கொள்ளும் அளவிலடங்காத பேரன்பு செறிந்த ஆசையோடும் வணங்கி ; வாய்த்த... பாடினுர் - வாய்ப்புடைய இனிய தமிழ் மொழிமாலையினைப் பண்தங்கிய இசையுடன் “தம்மையே புகழ்ந்து” என்று தொடங்கிப் பாடியருளினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) எழுந்து - திருமுற்றத்தில் ஒருமருங்கு பள்ளிகொண்ட இடத்தினின்றும் எழுந்து; **துணைக் கைக்கமல முகை தலைமேற்கொண்டு** - இரண்டு கைகளையும் அஞ்சலியாகத் தலைமேற் கூப்பிய நிலையில் கூடிய கைகளிரண்டும் தாமரை மொட்டுப் போல இருந்தன என்பது.

குறிப்பில் அடங்காப் பேரன்பு - அன்பு பெருகிச் சென்றமையால் அது செலுத்தப்படும் இடத்தில் அளவு கடந்து குறிநிலைகொள்ளாது மேற்செல்லுதல் பற்றிக் **குறிப்பில் அடங்கா** என்றுர்.

மண்டுகாதல் - குறிப்பிலடங்காப் பேரன்பு, செறிந்த காதலாய் விளைந்தது.

வாய்த்த - ஈண்டுப் பொருளுக்கும் அருளுக்கும் ஏற்றபடி வந்து வாய்க்கப்பெற்ற.

பண் தங்கு இசை - பண் - பதிகப்பண்ணாகிய கொல்லிப்பண்; **இசை பண் தங்குதலாவது** - பண்ணோடு இசை பொருந்தி நிகழ்ந்து மாறுகொள்ளாதிருத்தல்.

வாழ்த்து மதுர—என்பதும் பாடம். *51*

திருப்புகலூர்

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி - 7-ம் திருமுறை**

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ் சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை **புகலூர் பாடுமின் புலவீர்காள்**
இம்மை யேதருஞ் சோறுங் கூறையு மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற் கியாது மையுற வில்லையே. (1)

செறுவி னிற்செழுங் கமல மோங்குதென் புகலூர் மேவிய செல்வனை
நறவப் பூம்பொழி லாவ **லூரன் வனப்ப கையப்பன் சடையன்றன்**
சிறுவன் வன்றொண்ட னூரன் பாடிய பாடல் பத்திவை வல்லவர்
அறவ னாரடி சென்று சேர்வதற் கியாது மையுற வில்லையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—புலவீர்! உலகில் பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூரைப் பாடுமின்; இம்மையே சோறுங் கூறையும் தரும்; இடர்கெடும்; அம்மையே சிவலோகமாள்வதற்கியாது மையுறவில்லையே என்று இறைவர் தமக்குச் செங்கல் செம்பொன்னாக்கித் தந்தருளியதனைப் பாராட்டும் முகத்தால் உலகரை வழிப்படுத்தியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:— (1) தம்மையே - பாடப்படுகின்ற அவர்களையே **இச்சைபேசுதல்** - தம் கருத்து எதுவாயினும் அவர் இச்சை வழியே பேசுதல்; **கூறை**-துணி; சோறுங் கூறையும் என்ற இரண்டும் இம்மை வாழ்வுக் கின்றியமையாதன என்பது;—**(2) மிடுக்கு**-ஆண்மை - விறல். **வில்லுக்கு விசயன்** - என்க. இது பழமொழியாய் வில் திறத்துக்கு எடுத்துக்காட்டாகப் பேசப்படுவது; **பாரி** - கடையெழு வள்ளல்களுள் ஒருவர்; "பாரி வேள்பாற் பாடினை செலினே" (புறம்.105) "வன்புகழ் பாரிகாரி யென்றிசை வாது கூறி"(திருப்புகழ்). **அடுக்கு மேல்**-அவ்வாறு பாடுதல் கூடுமாயின்; அதன் அருமை தோன்றக் கூறியது. **பொடி**-திருநீறு;—**(3) காணியேல்** - விளை நிலங்களாயின்; **காணியேல்...ஓம்புமே என்று**-நிலமுடைமை, கல்வி, சுற்றமும் விருந்தும் ஓம்புதல் என்ற தன்மைகளிலராயினும் என்பது இசையெச்சம்; ஏனைப் பாட்டுக்களின் கருத்துப்போல; **பூணி** - எருது; **ஆணி** - ஆதரவு;—**(4) நரைகள்** - பல அங்கங்களிலும் நரைத் தன்மை; **மெய்தளர்தல்**-திரைத்தன்மை; **மூத்து** - மூப்புத் தன்மை; **உடல் நடுங்கி** - பிணித் தன்மை; **அரையன்**-அரசன்; தலைவன்:—**(5) சழக்கன்** - கொடியவன்; **வழக்கு** - நல்வழக்கு; **பஞ்ச துட்டன்** - பொய், கொலையாதி ஐம்பெரும் பாதகங்களும் செய்தோன்; **சாது**-நல்லவன்; **பொன் செய் - செய்** - உவம உருபு; **உஞ்சு** - உய்ந்து. மரூஉ;— **(6) புலம்** - விளை நிலம்; **வெறி** - மலர் தேன் முதலியவற்றின் மணம்; **அலமருதல்** - வருந்துதல்;—(7) **நொய்ம்மை** - கீழ்மை; **கண்குழிதல்** - பசி - வறுமை முதலியவற்றால்

3206. பதிகம் பாடித் திருக்கடைக்காப் பணிந்து பரவிப் புறம்போந்தே
எதிரி லின்ப மிம்மையே தருவா ரருள்பெற் றெழுந்தருளி
நிதியின் குவையு முடன்கொண்டு நிறையு நதியுங் குறைமதியும்
பொதியுஞ் சடையார் **திருப்பனையூர்**ப் புகுவார் புரிநூன் மணிமார்பர். 52

கண் குழிப்படைதல்; **ஆயம்** - கூட்டத்தார்;—(8) **எள் விழுந்திடம் பார்த்தல் - ஈக்குமீகிலாத்தன்மை** - உலோபம்; கூட்டத்தில் எள் விழுந்தாலும் அதனையும் பிறர் கொள்ளவிடாது தேடும் தன்மை; ஈத்துவக்கொடாத தன்மை. **மைந்தன்** - ஆண்மையின் வல்லமை; **புள்ளலாம் சென்று சேரும்** - பறவைகள் எல்லாம் கூட்டத்துடன் இருக்கைகளாகத்துச் சென்று சேரும் இடமாகிய; புட்கள் பிறரால் வெருட்டப்படாமல் அச்சமின்றி வாழும் நல்லிருக்கை என்பது; உயிர்கள் மலவாதனை தாக்காது அச்சமற்றுத் தங்கி நல்வாழ்வு பெற இருப்பதோர் இடம் சாரும் என்பது குறிப்பு. **புகலூர்** என்ற பெயர்ப் பொருளும் குறிப்பு; **அள்ளல்**-சேறு. இங்கு உலக வாழ்வின் துன்பங்கள் என்ற பொருளில் நின்றது;—(9) **மூற்று** - நற்குணங்களின் தொகுதி; **பொத்தில் ஆந்தைகள் பாட்டறு**-நெய்தற் கரு; புகலூர் நெய்தற்றிணைச் சார்புடைமை காண்க. திருப்புன்னைப் பதிகமும் பார்க்க;—(10) **வேலன்**-குமரன் போன்ற இளையோன்; அழகன்; "முருகனே-பரனே - விடங்கனே" (290 பார்க்க). **பொய்கை வாவி** - திருக்கோயிலினைச் சூழ்ந்துள்ள பெரிய பொய்கை; **மேதிபாய்தல்**-வாவியிலுள்ள நீர்ப் பூக்களை மேய்வதன் பொருட்டு; (1273-1423 பார்க்க); **ஐயன்** - பெருமையுடையவன்;—(11) **செறு** - வயல்கள்; **நாவலூரன்...ஊரன்** - நம்பிகள் இங்குத் தம்மை ஊராலும் வரலாற்றானும் பருவத்தானும் பெயரானும் அறிவித்துப் பொறித்து வைத்துக் குறித்தமை பேரன்பின் எழுந்த மகிழ்ச்சிக் குறிப்பு. (3205).

தலவிசேடம்:— திருப்புகலூர் (16) தொகுதி - II முருக நாயனார் புராணத்திறுதியி லுரைக்கப்பட்டது.

3206. (இ-ள்) பதிகம்...போந்தே - திருப்பதிகத்தினைப் பாடித் திருக்கடைக் காப்பும் சாத்தித் துதித்துப் புறத்திற்போந்து; எதிரில்...எழுந்தருளி - ஒப்பில்லாத இன்பத்தினை இம்மையிலேயே தருவாராகிய திருப்புகலூர் இறைவரது அருள்விடை பெற்று எழுந்தருளிச் சென்று; நிதியின் குவையும் உடன்கொண்டு - திருப்புகலூரிற் பெற்ற செம்பொற் கட்டிகளையும் உடனே கொண்டு; நிறையு நதியும்.. மணிமார்பர் - நிறையும் நீரினை யுடைய கங்கையினையும் கலைகுறைந்து வந்தடைந்த மதியினையும் சேர உட்பொதிந்து வைத்த சடையினையுடைய சிவபெருமானது திருப்பனையூரினுட் புகுவாராகிய முப்புரி நூலினையும் மணி வடங்களையு மணிந்த மார்பினையுடைய நம்பிகள்.

(வி-ரை) புறம் - திருக்கோயிலின் புறம்பு.

எதிரில்...தருவார் - திருப்புகலூரிறைவர். திருப்பதிகக் கருத்துப் போற்றப்பட்டது. **எதிரில்** - இணையில்லாத. **அருள் பெற்று** - அருள் விடை பெற்று.

நிதியின் குவை - செம்பொற் கட்டிகள். **குவை** - திரட்சி-திரண்ட கட்டிகள்; **குவி**-பகுதி.

3207. செய்ய சடையார் திருப்பனையூர்ப் புறத்துத் திருக்கூத் தொடுங்காட்சி
எய்த வருள வெதிர்சென்றங் கெழுந்த விருப்பால் விழுந்திறைஞ்சி
ஐயர் தம்மை "யரங்காட வல்லா ரவரே யழகிய"ரென்
றுய்ய வுலகு பெறும்பதிகம் பாடி யருள்பெற்றுடன் போந்தார். 53

நிறையும் நதி - குறைமதி - முரண் அணி; நிறைவாய்ப் பெருகி வந்த நதியைச் சிறுகச் செய்தும், குறைந்து வந்த மதியைப் பெருகச் செய்தும் அருளிய எல்லாம் வல்லவர் என்பது குறிப்பு.

பொதிதல் - நெருங்கியிடம்பெறச் செருகி வைத்தல்.

மார்பர் புகுவார் - புகுவார் - புகுவாராகி; **எதிர் சென்று** என்று மேல் வரும் பாட்டுடன் முடிக்க.

புரிநூல் மணி மார்பர் - நூலும் மணி வடங்களும் பூண்ட மார்பர். உம்மைத் தொகை; வைதிகத் திருவும் மன்னவர் திருவும் உடையவர். தடுத்தாட்கொண்ட புராணம் பார்க்க. **மணி** - அழகுடைய என்றலுமாம்.

திருப்பனையூர் புகுவார் - திருப்புகலூரினின்றும் திருவாரூருக்கு வருமிடையில் உள்ளது திருப்பனையூர். திருவாரூர் செல்லும் சாலைக்கு இதன் வழியாய்ச் செல்வது சுருங்கிய வழியாதலின் புகுவார் என்றார். **புகுதல்** - ஊர்ப்புற எல்லையினைச் சார்தல். 52

3207. (இ-ள்) செய்ய சடையார்...அருள - செம்மையாகிய சடையாராகிய சிவபெருமான் திருப்பனையூரின் புறத்திலே திருவருட் கூத்தினோடும் எதிர் காட்சி பொருந்தக் காட்டியருள; அங்கு...இறைஞ்சி - அவ்விடத்தே (ஊர்ப்புறத்திலே) எதிர் சென்று மேலோங்கிய விருப்பத்தினாலே நிலமுற விழுந்து வணங்கி; ஐயர்தம்மை - இறைவரை; அரங்காட...பாடி - "அரங்கில் ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே" என்ற கருத்துடையதாய் உலகம் உய்யப் பெறும் வாழ்வு தரும் திருப்பதிகத்தினைப் பாடி; அருள்...போந்தார் - திருவருளினைப் பெற்று உடனே சென்றருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) புறத்து - ஊர் எல்லைப் புறத்தில்.

திருக்கூத்தொடும் காட்சி எய்த அருள - ஆனந்தக் கூத்தாடிக் காட்சி தர.

அங்கு - காட்சி தரக்கண்ட அவ்விடத்தே; ஊர் எல்லைப்புறத்தே.

அரங்காட வல்லார் அவரே அழகியரே-பதிகக் கருத்துக்காட்டுமாறு; பாட்டுத் தோறும் வரும் முடிபுகளின் குறிப்புப் பார்க்க. முதற் பாட்டு முடிபு பார்க்க.

உலகு உய்யப் பெறும் பதிகம் என்க. உய்யப் பெறுதலாவது உறுதிப் பொருளை இதனால் உபதேசிக்கப் பெற்று உய்யும் வழி பெறுதல்.

ஐயரரங்கிலாடுமா—என்பதும் பாடம். 53

திருப்பனையூர்

பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

மாட மாளிகை கோபு ரத்தொடு மண்ட பம்வள ரும்வளர் பொழிற்
பாடல்வண் டறையும் பழனத் திருப்பனையூர்த்
தோடு பெய்தொரு காதி னிற்குழை தூங்கத் தொண்டர்கள் துள்ளிப்பாட நின்
ருடு மாறுவல் லாரவரே யழகியரே. (1)

வஞ்சி நுண்ணிடை மங்கை பங்கினர் மாத வர்வள ரும்வளர் பொழிற்
பஞ்சின் மெல்லடியார் பயிலுந் திருப்பனையூர்
வஞ்சி யும்வளர் நாவ லூரன் வனப்பகை யப்பன் வன்றொண்டன்
செஞ்சொற் கேட்டுகப்பா ரவரே யழகியரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *3207-ல் ஆசிரியர் காட்டியருளியது காண்க.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) வண்டு பாடலறையும் பழனம் எனக. **பாடல்-பண்; ஒரு காதினில்** என்பதனை முன்னும் பின்னும் (தோடு - குழை என்ற) ஈரிடத்தும் தனித்தனிக் கூட்டுக; **துள்ளுதல் -** ஆனந்தத்தின் மெய்ப்பாடு; இறைவர் நடங்கண்டு அன்பர்கள் ஆனந்தக் கூத்தாடுவர்; எதிர் காட்சியாக நாம் கண்டு பாடிய பதிகம்; ஆதலின் இவ்வாறு போற்றினர். மேல் வரும் பாட்டுக்களும் இவ்வாறே; — **(2) நெய்யாடி -** பெயர்; **நெய்யாடல் -** விழா;— **(3) வினை தீர்ப்பராய் விடில்**-வினை தீரும் பருவம் வந்து சேர்ந்தபோது;— **(4) தோளுமாகமும் தோன்ற நட்டமிட்டு -** கூத்துக் கண்ட காட்சிக் குறிப்பு;— **(5) அங்கைத்தீ -** தீ ஏந்திய நிலை;— **(6) சோணாட்டவர் பரவிய பாவிரி புலவர் -** ஆளுடைய பிள்ளையார் இத்தலத்துப் பதிகத்துப் பாராட்டிய தன்மைக் குறிப்புப் போலும்;— **(7) திரங்கல் -** தோல் சுருங்குதல்; **துரங்கன் வாய் பிளந்தான்-**திருமால்; "மாவாய் பிளந்தான்" **தூமலர்த் தோன்றல்-**பிரமன்;— **(9) குண்டு -** ஆழம்.

தலவிசேடம் :— **திருப்பனையூர்-** சோழ நாட்டில் காவிரித் தென்கரை 73-வது பதி; இங்கு நம்பியாரூரருக்கு இறைவர் திருநடனக் காட்சியுடன் எதிர் காட்சி கொடுத்தருளிய வரலாற்றுக் குறிப்புப் பதிகத்துக் காணத்தக்கது; பராசரர் பூசித்துப் பேறு பெற்றனர். கரிகாற் சோழருக்குத் துணை செய்தபடியால் விநாயகர் துணையிருந்த பிள்ளையார் எனப் பெயர் வழங்கப்பெறுவர். சுவாமி - **சௌந்தர நாதர்;** அம்மை - **பெரியநாயகி;** தீர்த்தம் - **அமிர்த புஷ்பகரணி** - பதிகம் 2.

இது நன்னிலம் நிலயத்தினின்றும் தென் கிழக்கே (மட்சாலை) கரைவழியே ஒரு நாழிகையளவில் உள்ளது.

3208. (இ-ள்) வளமல்கிய...எழுந்தருளி-வளம் பொருந்திய சிறப்புடைய திருப்பனையூரில் வாழ்கின்றவர்கள் துதிக்க எழுந்தருளிப் போய்; அளவில்...புக - அளவு

3208. வளமல் கியசீர்த் திருப்பனையூர் வாழ்வா ரேத்த வெழுந்தருளி
அளவில் **செம்பொ னிட்டிகைக ளான்மே** னெருங்கி யணியாரூர்த்
தளவ முறுவற் **பரவையார் தம்மா ளிகையிற் புகத்**தாமும்
உளமன் னியதம் **பெருமானுர் தம்மை வணங்கி** யுவந்தணைவார், 54

காண முடியாத செம்பொற் கட்டிகளாகிய செங்கற்கள் ஆட்களின்மேல் நெருங்கி அழகிய திருவாரூரின் கண் முல்லை அரும்பு போன்ற முறுவலினையுடைய பரவையாரது திருமாளிகையிலே புக; தாமும்...உவந்தணைவார் - தாமும் தமதுளத்தில் நிலைத்த தமது பெருமானுராகிய புற்றிடங் கொண்டாரை வணங்கி மகிழ்வுடன் அணைவாராகி,

(வி-ரை) இட்டிகை - செங்கல். **பொன் இட்டிகைகள்** - செங்கல் வடிவமைந்த செம்பொற் கட்டிகள்.

ஆள்மேல்...புக - ஏவலாட்கள் தாங்கிச் சென்று பரவையார் திருமாளிகையினுள் சென்று சேர்க்க. பொற்கட்டிகளின் மிக்க கனத்தால் **ஆள்மேல்** என்ருர்.

தாமும்...உவந்தணைவார் - தாம் அவர்களுடன் நேரே திருமாளிகையிற் செல்லாது தமது உள நிறைந்த இறைவரைச் சென்று வணங்கிய பின்னரே அங்குச் சென்றருளுவார். இம்மரபு பற்றி முன்னர்ப் பலவிடத்தும் உரைக்கப்பட்டது; பின்னும் கண்டு கொள்க; இதனை உலகர் உள்ளங்கொண்டு ஒழுகும் பொருட்டு ஆசிரியர் அங்கங்கும் வற்புறுத்தி எடுத்துக் காட்டி யருளுதல் வழக்கு.

உளமன்னிய - தமது உள்ளத்தைவிட்டு நீங்காது, என்றும் எண்ணத்தில் நிலைபெறக் கொண்டிருக்கின்ற.

தாமும் அணைவார் - ஆட்கள் புகுத அதன்பின் தாமும் என்ற இறந்தது தழுவிய எச்ச உம்மை.

தம்பெருமானுர் தம்மை-தம்-இருமுறை வந்தது இருபாலும் ஒட்டி நிகழும் தன்மை குறித்ததற்கு.

உவந்தணைவார் - வந்து - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. **அணைவார்** - அணைவாராகி; முற்றெச்சம். **54**

3209. (இ-ள்) வந்து...நாள் - எழுந்தருளிப் போந்து பரவைப் பிராட்டியார் மகிழும்படி தங்கியிருந்து பொருந்தியிருக்கும் நாட்களிலே; அந்தணுரூர்...இறைஞ்சி- அழகிய குளிர்ந்த திருவாரூரின் பக்கத்தில் அணித்தாக உள்ள கோயில்கள் பலவற்றையும் சென்று வணங்கி; சிந்தை...காவலனுர் - மனமகிழ மிக விருப்பத்தோடும் தேவர் பெருமானுகிய புற்றிடங்கொண்ட பெருமானது திருவாரூரினை முற்பட வணங்கி முனைப்பாடி நாட்டவர்களின் தலைவராகிய நம்பியாரூரர் இனிதாக எழுந்தருளியிருந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன. **உவந்தணைந்தார்** (54) என்பது பாடமாயின் தனி முடிபுகளாக உரைத்துக்கொள்க.

3209. வந்து பரவைப் பிராட்டியார் மகிழ வைகி மருவுநாள்
அந்த **ணூரூர் மருங்கணிய கோயில் பலவு** மணைந்திறைஞ்சிச்
சிந்தை மகிழ விருப்பினொடுந் தெய்வப் பெருமா டிருவாரூர்
முந்தி **வணங்கி யினிதிருந்தார்** முனைப்பா டியர்தங் காவலனார். 55

3210. பலநா ளமர்வார் பரமர்திரு வருளா லங்கு நின்றும்போய்ச்
சிலைமா மேரு வீரனார் **திருநன் னிலத்துச்** சென்றெய்தி
வலமா வந்து கோயிலினுள் வணங்கி மகிழ்ந்து பாடினார்
தலமார் கின்ற **"தண்ணியல்வெம் மை"**யினா னென்னுந் தமிழ்மாலை. 56

(வி-ரை) பரவைப் பிராட்டியார் மகிழ வைகி - *மகிழ்ச்சியாவது சேர் பொருளைத் திருப்பங்குனி உத்தர விழாவிற் பல வகையாலும் கொண்டு (நேர்ந்து) அடியார்க் களித்ததனால் ஆயது.*

ஆரூர் மருங்கு அணிய கோயில்கள் பலவும்-*முன் உரைக்கப்பட்டன. இவை எண்ணிறந்தவை உள்ளன;*

தெய்வப் பெருமாள் - தேவதேவர்; தேவர்கள் வந்து முறையிருந்து வழிபடும் சிறப்புக் குறித்தது; திருக்கூட்டச் சிறப்புப் பார்க்க.

திருவாரூர் முந்தி வணங்கி - திருவாரூரினை நாளும் வணங்கிப் பின் அணிய கோயில்களைச் சென்று வணங்கி மீண்டு திருவாரூரிற் சேர்ந்தவாறே, ஒருநாளும் திருவாரூரை விட்டு நீங்கி அகலாது இனிதமர்ந்தார் என்பதாம்.

முனைப்பாடியர்தம் காவலனார் - திருமுனைப்பாடி நாட்டினரது தலைவர் என்று நம்பிகளது திருவவதாரம் பற்றி உரைத்தார்; திருவாரூரில் மகிழ்ந்திருப்பது தமது உலகத் தொடர்பன்றி அதனின்றும் சிறந்த உயிர்த் தொடர்பு பற்றி என்பதறிவித்தற்கு. 55

3210. (இ-ள்) பலநாள்...போய் - பல நாட்கள் அவ்வாறு திருவாரூரில் விரும்பி எழுந்தருளி யிருந்த நம்பிகள் இறைவரது திருவருளாலே அங்கு நின்றும் சென்று; சிலை...மகிழ்ந்து - பெரிய மேருமலையினை வில்லாகவுடைய வீரனாராகிய இறைவர் எழுந்தருளியுள்ள திருநன்னிலத்துப் பெருங் கோயிலினைச் சென்று சேர்ந்து வலம் வந்து திருக்கோயிலில் சென்று வணங்கி மகிழ்ச்சி பொருந்தி; தலமார்கின்ற... தமிழ்மாலை - இந்நிலவுலகின் நிலவி விளங்குகின்ற "தண்ணியல் வெம்மையினான்" என்று தொடங்கும் தமிழ்மாலையினை; பாடினார்- பாடியருளினார்.

(வி-ரை) அமர்வார் - முன் சொன்னவாறு திருவாரூரிலே தங்கியபடியே அணிமையில் உள்ள கோயில்களுக்குச் சென்று சென்று மீண்டு எழுந்தருளியிருப்பாராகிய நம்பிகள்; **அமர்வார்**-வினைப்பெயர்.

திருவருளால் - திருவருட் குறிப்பாகிய விடை பெற்று மேல் வரலாற்றின் விளைவுகள் நிகழ வேண்டிய காரணம் பற்றிய திரு அருளினாலே.

சிலை-வில்; சிலையாகிய மேருவினைப் பிடித்த வீரனார்.

தலம் ஆர்கின்ற- தலம் - இந்நிலவுலகம்; **ஆர்தல்** - புகழ் நிறைந்து விளங்குதல்.

தண்ணியல் வெம்மையினான் - தட்பமுடைய வெம்மை; முரண் அணி; "அங்கங் குளிர்ந்தன லாடு மெங்களப்பன்" (அம்மை. மூத்த. பதிகம்); **தண்ணியல்**பாவது கருணை; **வெம்மை** - சங்காரம்; சங்காரமும் அருளேயாம் என்பது.

திருநன்னிலம்-இது மாடக்கோயில் என்னும் பெருங்கோயில்களுள் ஒன்று. 56

திருநன்னிலத்துப் பெருங்கோயில்

திருச்சிற்றம்பலம் **பண்-பஞ்சமம். 7-ம் திருமுறை**

தண்ணியல் வெம்மையினான் றலை யிற்கடை தோறும்பலி
பண்ணியன் மென்மொழியா ரிடங் கொண்டுழல் பண்டரங்கன்
புண்ணிய நான் மறையோர் முறை யாலடி போற்றிசைப்ப
நண்ணிய நன்னிலத்துப் பெருங் கோயி னயந்தவனே. (1)

கோடுயர் வெள்ளெயிற்றுத் திகழ் கோச்செங்க ணான்செய்கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங் கோயி னயந்தவனைச்
சேடியல் சிங்கிதந்தை சடை யன்றிரு வாரூரன்
பாடிய பத்தும்வல்லார் புகுவார்பர லோகத்துளே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—சிவபெருமான், கோச்செங்கணான் செய்கோயிலாகிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:— *(1)* தண்ணியல் வெம்மையினான்-இறைவர் ஏந்தியாடும் தீ உயிர்களுக்குப் பிறவி வெப்பம் தீரத் தண்மை செய்து குளிர்விக்கும் தன்மை பொருந்தியது; **பலி-இட**-என்க; **பண்டரங்கன்** - பண்டரங்கம் என்னும் கூத்துடையவன்; **பெருங்கோயில்**-மாடக்கோயில்; கோச்செங்கட் சோழ நாயனார் சிவனுக்கு அமைத்த மாடக்கோயில் எழுபதினுள் ஒன்று. *10*-வது பாட்டுப்பார்க்க; **நயந்தவன்**-விரும்பி வீற்றிருப்பவன்; **முறையால்** - ஆகம நூல் விதித்த முறைப்படி;—***(2)*** **மாதவம் செய் மலை மங்கை** - உமையம்மை தவஞ் செய்த வரலாறு கந்த புராணத்துட் காண்க; தவஞ் செய்து மணஞ் செய்து கொண்டமையால் **ஒருபங்கினன்** என்றார்; **உளங்கிளர் கங்கை** - "சலமுகத்தால்" (திருவா); **பொழில் - மதிதடவ** - பொழிலின் உயர்ச்சி குறித்தது;— ***(3)*** **கச்சியின்** - காஞ்சிபுரத்தில் மேவியவர். **கருப்பூர்** - வைப்புத் தலங்களுள் ஒன்று; **நொச்சி - புனல்** - பூசைக் கின்றியமையாதவை; "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு" (திருமந்); "குடங்கைநீரும் பச்சிலையும்" (திருவிளையாடல்);—***(5)*** **பிலம் தரு - தரு** - உவம வுருபு;—***(6)*** **பெண்** - கங்கை;—***(7)*** **தொடைமலி - மலி** - உவமவுருபு;— ***(8)*** **குராவோடு**-"குராமலரோ டராமதியம்" (தாண்); **நளிர்தரு** - குளிர்ச்சி செய்கின்ற;—***(9)*** **தமர்** - சிவன் சுற்றம் அடியார்;—***(10)*** **செம்பியர்கோன் - நரபதி** - கோச்செங்கட் சோழ

3211. பாடி யங்கு வைகியபின் பரமர் **வீழி மிழலை**யினில்
நீடு மறையான் மேம்பட்ட வந்த ணாளர் நிறைந்தீண்டி
நாடு மகிழ வவ்வளவு நடைக்கா வணம்பா வாடையுடன்
மாடு கதலி பூகநிரை மல்க மணித்தோ ரணநிரைத்து. 57

அரசர்;—**(11) கோடு**-*கொம்பு.* ***சிங்கி*** - *சிங்கடி;* ***சடையன் திருவாரூரன்*** - *தந்தை பெயர் கூட்டித் தம் பெயர் கூறும் நவீனர் வழக்குக் காண்க.*

தலவிசேடம்:— **திருநன்னிலத்துப் பெருங்கோயில்** *காவிரித் தென்கரை 71-பதி. மாடக்கோயில்களுள் ஒன்று; மதுவனம் என வழங்கப்படுவது; சாலிருகத் தேன்கூடு ஒன்று விளக்குச் சுடருருவாகத் திருக்கோயிலினுள் இன்றும் இருக்கின்றது; பூசிக்கப்பட்டு வருகின்றது;* **(குறிப்பு)** *இக்கோயில் மிகவும் பழுதுபட்டுக் கதவுகள் தாழ் இல்லாமல் கவனிப்பாரின்றிக் கிடக்கின்றது. இதனைச் செப்பனிட்டுத் திருப்பணி செய்தல் சிறந்த சிவபுண்ணியம்; அவ்வாறு செய்வது இறைவன் பணியாதலோடு கோச்செங்கட்சோழ நாயனாருக்குப் பணியும், ஆளுடைய நம்பிகளுக்குப் பணியுமாம். தற்போது இருபத்தொன்றாம் நூற்றாண்டில் கோயில் நல்லபடி திருப்பணி செய்யப்பட்டு, குடமுழுக்குச் செய்யப்பட்டு அடியார்கள் ஆதரவில் நல்லபடியாகப் பூசைகள் நடைபெற்று வருகின்றன என்பதைப் பதிப்பாசிரியர் பதிவு செய்கிறார். உரையாசிரியர் கனவு நிறைவேறியது. சுவாமிகோயில் கட்டுமலைமேலுள்ளது. சுவாமி* - **பிரகேசுரர் - மதுவநேசுவரர்;** *அம்மை-* **பிரகேசுவரி-மதுவந நாயகி;** *தீர்த்தம்* - **பிரம தீர்த்தம்;** *கோயிலுக்கு வடக்கில் உள்ளது. பதிகம் 1. அம்மை கோயிலும் அகத்தியர் கோயிலும் கீழே உள்ளன.*

இது நன்னிலம் (செந்நாலூர்) நிலயத்தினின்றும் மேற்கே கற்சாலை வழி 1½ நாழிகை அளவில் உள்ள திருச்சுரத்தை யடைந்து அதனின்றும் பின்னும் மேற்கே 1½ நாழிகை அளவில் அடையத் தக்கது. (இதினின்றும் தென்மேற்கே மாப்பிள்ளைக்குப்பம் மட்சாலை வழி 3 நாழிகையளவில் திருவாஞ்சியம் உள்ளது.) இப்பதிக்கு மோட்டார் வண்டி வசதி உண்டு.

3211. (இ-ள்) வெளிப்படை. அங்குப்பாடி, எழுந்தருளியிருந்த பின்பு இறைவரது திருவீழிமிழலையில் உள்ள நீடிய வேத வொழுக்கத்தால் மேம்பட்ட அந்தணர்கள் திரண்டு கூடி நாடெங்கும் மகிழும்படி அவ்வளவும் நடைக்காவண மிட்டுப் பாவாடை விரித்துப் பக்கங்களில் வாழை கமுகுகள் வரிசையாகப் பொருந்தச் செய்து அழகிய மணிமாலைகள் தூக்கிய தோரணங்களை வரிசைபெறக் கட்டி,

(வி-ரை) நீடுமறையால் மேம்பட்ட அந்தணாளர் - "தெரிந்த நான்மறையோர்" (8) "நான்மறையோர்" (5) **வேத வேதியர்** (10) என்று நம்பிகளது பதிகத்தும், இவ்வாறே பிள்ளையாரது இப்பதியின் பதிகங்களிலும் பாராட்டப்பட்ட பெருமையுடையோர் என்பது குறிப்பு; "வீழி ஐஞ்ஞூற்றந்தணர்" என்பர். "ஐஞ்ஞூற்றந்தண ரேத்தும்" (திருவிசைப்பா).

அவ்வளவும் - நன்னிலத்தினின்றும் திருவீழிமிழலை அளவும். முழுதும் - உம்மை முற்றும்மை. ஆறு வடமேற்காக 6 நாழிகையளவு தூரம் உண்டு.

3212. வந்து நம்பி தம்மையெதிர் கொண்டு புக்கார்; மற்றவருஞ்
சிந்தை மலர்ந்து திருவீழி மிழலை யிறைஞ்சிச் சேண்விசும்பின்
முந்தை யிழிந்த மொய்யொளிசேர் கோயி றன்னை முன்வணங்கிப்
பந்த மறுக்குந் தம்பெருமான் பாதம் பரவிப் பணிகின்ருர், 58

நடைக்காவணம் - காவணம்-பந்தர். **பாவாடை**-கால் நிலம்படாது மிதித்து நடத்தற்காக இடும் பரந்த ஆடை; **பரவுதல்** - பரந்து இருக்க இடப்படுதல்.

கதலிபூக நிரை - தோரண நிரை - முன்னையன பக்கங்களிற் கட்டப்படுவன; பின்னையன மேலே கட்டப்படுவன; ஆதலின் வேறுபிரித் தோதினர். **நிரைத்தல்** - வரிசைபெறக் கட்டுதல்.

மணித் தோரணம் - மணிமாலைகளை இடையிடைத் தொங்க வைத்த தோரணங்கள். **மணி** - அழகு என்றலுமாம். 57

3212. (இ-ள்) வந்து...புக்கார் - இங்கு வந்து நம்பிகளை எதிர்கொண்டு புகுந்தனர்; மற்று அவரும்...இறைஞ்சி - அந்நம்பிகளும் மனமலர்ந்து சென்று திருவீழிமிழலையினை வணங்கி; சேண்...வணங்கி - நீண்ட ஆகாயத்தினின்றும் முன்னுளில் இழிந்து வந்த மொய்த்த ஒளியுடைய திருக்கோயிலினை முன்னே வணங்கி; பந்தம்... பணிகின்ருர் - மலபந்தங்களை அறுக்கும் தம் பெருமானின் திருவடிகளைத் துதித்துப் பணிகின்ருராகி,

(வி-ரை) மற்று அவரும் - அவ்வாறு எதிர்கொண்டு அழைக்கப்பட்ட அந்நம்பிகளும்; **மற்று** - வினைமாற்றில் வந்தது; **அவர்** - அகரம் முன்னறி சுட்டு; **இறைஞ்சி** - சென்று இறைஞ்சி; சென்று என்பது சொல்லெச்சம்.

சேண் விசும்பின் - கோயில் - திருவீழிமிழலை விமானம் விட்டுணுவினல் ஆகாயத்திலிருந்து கொணர்ந்து தாபிக்கப்பட்டதென்பது வரலாறு; அதனல் விண்ணிழி கோயில் எனப்படும்.

பந்தம் அறுக்கும் - அடைந்தார்க்கு மலபந்தங்களை நீக்குகின்ற இறைவர்.

பணிகின்ருர் - முற்றெச்சம். பணிகின்ருராகி; **பணிகின்ருராகிப் பரவிச் - சாத்தி** என மேல் வரும் பாட்டுடன் முடிக்க. 58

3213. (இ-ள்) படங்கொள்...பெருமானை - படத்தையுடைய பாம்பின் மேல் பள்ளிகொள்ளும் விட்டுணுவும் தாமரை மலரில் இருக்கும் பிரமதேவனும் துதித்தற்கரிய விடங்கராகிய தேவ தேவரை; விரவும்...சாத்தி - பொருந்திய மயிர்ப் புளகத்துடனே துதித்து "அடங்கல் வீழி கொண்டிருந்தீர்; அடியேனுக்கு மருளும்" என்ற கருத்தினையும் முடிபினை யுடைய பெரிய செவ்விய சொற்பொருளமைந்த தமிழ் மாலையைச் சாத்தி; அங்குச்சாருநாள் - அங்குத் தங்கி எழுந்தருளியிருக்கும் நாட்களிலே,

(வி-ரை) படம் - பாம்பின் படம்; **அரவு** - விட்டுணு பள்ளிகொள்ளும் ஆதிசேடன்.

விடங்கன் - உளியினுற் செதுக்கப்படாத திருமேனியுடையவன்; (டங்கம்-உளி).

3213. படங்கொ ளரவிற் றுயில்வோனும் பதுமத் தோனும் பரவரிய
விடங்கன் விண்ணோர் பெருமானை விரவும் புளக முடன்பரவி
"அடங்கல் வீழி கொண்டிருந்தீ ரடியே னுக்கு மருளு"மெனத்
தடங்கொள் செஞ்சொற் றமிழ்மாலை சாத்தி யங்குச் சாருநாள். 59

3214. "வாசி யறிந்து காசளிக்க" வல்ல மிழலை வாணர்பாற்
றேசு மிக்க திருவருள்முன் பெற்றுத் **திருவாஞ்சியத் தடிகள்**
பாச மறுத்தாட் கொள்ளுந்தாள் பணிந்து"**பொருவனு**"ரென்னும்
ஆசில் பதிகம் பாடியமர்ந் **தரிசிற் கரைப்புத் தூரணைந்தார்**. 60

விண்ணோர் பெருமான்; விட்டுணு முதலியோர் தம்மைப் பற்றித் தேவர்கள் தலைவர் என்ற குறிப்புமாம்.

அடங்கல் வீழி...அருளும்என - இது பதிகத்தின் மகுடமும் கருத்துமாம். பதிகம் (10) பார்க்க

தடங்கொள் செஞ்சொல்-தடம்-பெருமை; பொருளின் பெருமை குறித்தது. "நற்றமிழ்" பதிகம் (10) பார்க்க. 59

3214. (இ-ள்) வாசி - அருள் பெற்று - வாசிதெரிந்து படிக்காசு அளிக்க வல்லவராகிய திருவீழிமிழலை இறைவரிடம் சிவவொளி மிகுந்த திருவருள் விடையும் முன் பெற்றுச் (சென்று); திருவாஞ்சியத்தடிகள்...அமர்ந்து - திருவாஞ்சியத்தில் உயிர்களின் பாசங்களை அறுத்து ஆட்கொள்ளும் இறைவரின் திருவடிகளை வணங்கிப் "**பொருவனார்**" என்று தொடங்கும் குற்றமில் திருப்பதிகம் பாடியருளி அங்கு விரும்பி எழுந்தருளியிருந்து (பின்பு); அரிசிற்கரைப் புத்தூர் அணைந்தார் - அரிசிற் கரைப்புத்தூரினை அணுகச் சென்று சேர்ந்தருளினர்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) வாசி... மிழலைவாணர் - திருஞானசம்பந்த நாயனருக்கு வாசியுடன் படிக்காசும், அரசுகளுக்கு வாசியில்லாக் காசும் தந்தருளிய வரலாறு குறிக்கப்பட்டது. 2467-ம், "இருந்துநீர் தமிழோடிசை கேட்கு மிச்சையாற் காசு நித்த னல்கினீர்" (பதிகம்) என்றதும் காண்க. அதுபற்றி அவ்வவர் புராண வரலாறுகளும் பார்க்க.

தேசுமிக்க திருவருள் - சிவஞான வொளி மிகுதியின் கண்ணே அறியப்படும் அருள் வெளிப்பாடாகிய விடை.

பாசம் அறுத்து ஆட்கொள்ளும் தாள் - இப்பகுதியில் வந்து அடைந்தோர்களது பாசம் என்க; **ஆட்கொள்ளும் -** ஆளாகக் கொண்டு முத்தி நல்கும். பொது வகையானன்றித் தலவரலாறின் சிறப்புக் குறிப்பு.

பொருவனார் - பதிகத்தின் தொடக்கம்; முதற் குறிப்பு; பதிகம் பார்க்க.

மாசில் - குற்றத்தை இல்லையாகச் செய்யும் உபாயமறிவிக்கும் திறமுடைய; "அடியாரை ஊழ்வினை நலிய வொட்டாரே" என்பது முதலாக வரும் பதிகக் கருத்துப் பார்க்க.

அணைந்தார் - அணுகச் சென்று சார்ந்தனர் என்க; அங்குச் சேர்ந்து வழிபட்டது மேல்வரும் பாட்டிற் கூறப்படுதல் காண்க. 60

திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம் **பண்-சீகாமரம், 7-ம் திருமுறை**

நம்பி னுர்க்கருள் செய்யு மந்தணர் நான்ம றைக்கிட மாய வேள்வியுட்
செம்பொனேர் மடவா ரணிபெற்ற திருமிழலை
யும்ப ரார்தொழு தேத்த மாமலை யாளொ டும்முட னேயுறைவிடம்
அம்பொன் வீழிகொண்டீ ரடி யேற்கு மருளுதிரே. 1

விடங்கொண் மாமிடற் றீர்வெள்ளைச்சுரு ளொன்றிட்டு விட்ட காதி னீரென்று
திடங்கொள் சிந்தையினுர் கலிகாக்குந் திருமிழலை
மடங்கல் பூண்ட விமானமும் **மண்மிசை வந்தி ழிச்சிய** வான நாட்டையும்
அடங்கல் வீழிகொண்டீ ரடியேற்கு மருளிதிரே. 2

வேத வேதியர் வேத நீதிய ரோதுவார்விரி நீர்மிழலையுள்
ஆதி"வீழி கொண்டீ ரடியேற்கு மருளு"கென்று
நாத கீதம்வண் டோது வார்பொழி னுவ லூரன்வன் றொண்ட னற்றமிழ்
பாதமோ தவல்லார் பரனோடுங் கூடுவரே. 10

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *3213*-ல் ஆசிரியரும் பதிகத் திருக்கடைக்காப்பில் நம்பிகளும் காட்டுதல் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு :— (1) நம்பினுர்க் கருள்செய்யும் - வேள்வி என்று கூட்டுக. **அருள்செய்யு மந்தணர்** என்று கூட்டினுமாம்; **மடவார்-பொன்-அணி பெற்ற** என்க; **அம்பொன்** - பொன்போன்ற; **வீழி** - வீழிமிழலையாகிய பதியினை இடமாக; **அடியேற்கும்** - ஈண்டு உமது இயல்பாக யாவருக்கும் அருளுதல் போல அடியேற்கும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; தகுதியில்லாத எனக்கும் என்று சிறப்பும்மையுமாம்;—**(2) வெள்ளைச் சுருள்** - வெண் சங்கக் குழை. **சுருள்** - சுருண்டதுபோன்ற வட்டவடிவ முள்ளதனைச் சுருள் என்றார்; இவ்வாறன்றி இடது காதில் வெள்ளை ஓலையின் சுருளாலாகிய தோடு என்றுரைப்பினு மமையும்; **திடங்கொள் சிந்தையினுர்** - வைதிக நெறி ஒழுக்கத்தில் மாறுது நிற்கும் உறைப்புடையவர். **அந்தணர்கள்** - முனிவர்கள். **கலிகாக்கும்** - கலியின் துன்பம் வாராமே காக்கும். "கலியை வாராமே செற்ருர்" (தேவா); **மடங்கல்** - சிங்கம். **பூண்ட** - சிங்கம் தாங்கிய கோலத்துடன் அமைத்த நிலை;—**(3) ஊனை உற்றுயிராயினீர்** - உயிர், ஊனுடம்பில் நின்று இயக்குதல் போல நீர் உயிரினை உடம்பாகக்கொண்டு உண்ணின்றியக்குகின்றீர்; **ஒளிமூன்று** - தீயும் ஞாயிறும் திங்களும்; **தெளிநீர்** - சுத்தோதகம் என்பர் வடவர்; **தேன்** - திருமஞ்சனப் பண்டம்; **விண்ணிலான** - விண்ணின்றிழிந்த;—**(4) பந்தம் வீடிவை பண்ணினீர்**-"பந்தம்

3215. செழுநீர் நறையூர் நிலவுதிருச் சித்தீச் சரமும் பணிந்தேத்தி
விழுநீர் மையினிற் பெருந்தொண்டர் விருப்பினேடு மெதிர்கொள்ள
மழுவோ டிளமான் கரதலத்தி லுடையார் **திருப்புத் தூர்**வணங்கித்
தொழுநீர் மையினிற் றுதித்தேத்தித் தொண்டர் சூழ வுறையுநாள். 61

வீடு தரும் பரமன்" (300) "பந்தமு மாய்வீடு மாயினார்க்கு" (திருவா) **பந்தம்** - [illegible] முதல் மறைப் பிறுகிய நான்கும். **வீடு** - முத்தித் திருவருள்; முந்தொழிலார் இறைவருள் அடங்கும்; **பண்ணினீர்** - உயிர்களுக்கு ஆக்கினீர்; **மதிர்ப்பிதிர்க் கண்ணியீர்** - பிறைமதியை முடித்தவரே; **வான நாடியர்** - தேவநாட்டுப் பெண்கள்;—(5) **புரிசை மூன்று** - புரமதில்; திரிபுரம்;—(6) **எறிந்த** - "தாதைதாள் மழுவினலெறிந்த"; **இடந்த** - தமது கண்ணினை இடந்த. **இடத்தல்** - தோண்டுதல்; **ஏத்து பத்தர்கட்கு** - இவர் முதலாக ஏத்தும் அடியார்கட்கு;—(7) **சந்தி** - காலை மாலை நண்பகல்கள்;—(8) **பாரிடம்** - பூதகணம். பாரிடம் சூழ்தரப் பயில்வீர் என்று கூட்டுக; **இருந்து...நல்கினீர் - தமிழோடிசை** - ஆளுடைய பிள்ளையாரும் அரசுகளும் அருளிய இசை பொருந்திய திருப்பதிகங்கள். **காசுநல்கினீர்** - நித்தம் படிக்காசு நல்கிய வரலாறு அவர்கள் புராணங்களுட் காண்க;—(9) **தூயநீரமுதாய...சொல்லினீர்** - இஃது இத்தல வரலாறுகளுள் ஒன்று போலும்; **மேய நீர்... பொருளாய** - பலபேற்ற கருத்தை வினவிக் கசிந்து வழிபடும் அடியவர்க்கு மெய்ப் பொருளாகிய வீடுபேற்றை அருளுபவர். "பரந்துல கேழும் படைத்த பிரானை, இரந்துணி பொய்யர்களெற்றுக் கிரக்கும்?, நிரந்தரமாக நினையு மடியார், இரந்துண்டு தன்னடி பெறச் செய்தாரே" (திருமந்). **மெய்ப்பொருள்** - "ஊனத் திரளை நீக்கு மதுவும் உண்மைப் பொருள் போலும்" (பின். தேவா. அண்ணாமலை) **மெய்ப்பொருள்** - வீடுபேறு;—(10) **வண்டு நாதகீதம்-ஓது-பொழில்** என்க;

3215. (இ-ள்) செழுநீர்...ஏத்தி - செழுமையாகிய நீர்ச் சிறப்பினையுடைய நறையூரில் நிலைபெற்ற திருச்சித்தீச்சரத்தினையும் பணிந்து துதித்து; விழுநீர்மையினில்...வணங்கி - நிலமுற விழுந்து வணங்கித் தாழும் தன்மையினை யுடைய பெருமை வாய்ந்த திருத்தொண்டர்கள் விருப்பத்தோடும் எதிர்கொள்ளச்சென்று, மழுவினேடும் இளமான் கன்றைத் திருக்கரத்தில் ஏந்திய சிவபெருமானது திருப்புத்தூரினை வணங்கி; தொழு நீர்மையில்...உறையும் நாள் - தொழுது வழிபடும் விதிமுறைப்படி வணங்கித் துதித்தப் பரவி அங்குத் தொண்டர்கள் சூழ எழுந்தருளிய நாட்களில்,

(வி-ரை) செழுநீர் - காவிரிக் கரையாதலாலும் காவிரி நீர் பாய்தலாலும் நீர் வளம் பற்றிக் கூறினர். "வாரும் மருவி மணிபொன் கொழித்துச் சேரும்" என்றது முதலாக வருவன பதிகக் குறிப்புக்கள். "செழுநீர் நறையூர்" (5) **நறையூர்** - ஊர்ப்பெயர்; **சித்தீச்சரம்** - கோயிலின் பெயர்; நறையூரில் உள்ள கோயில் என்பது.

சித்தீச்சரமும் - உம்மை முன் **அணைந்தார்** என்ற அரிசிற்கரைப்புத்தூரை அணையச் சார்ந்தவர் வழியில் இதனையும் என இறந்தது தழுவிய எச்சவும்மை.

பணிந்தேத்தி - அரிசிற் கரைப்புத்தூரைச்சார அணைந்த நம்பிகள் இடையில் இப்பதியினைப் பணிந்து பாடியருளினார்.

விழுநீர்மை - "தாழ்வெனுந் தன்மை யோடு சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ் பெறலரிது" (சித்தி) என்று இதன் அருமைப் பாட்டினை ஞான சாத்திரம் விரித்துக் கூறிற்று. "வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன்" (பிள். தேவா. ஆலவாய்) என்ற திருவாக்கும் இத்தன்மையினைப் பேசியது. **பெருந்தொண்டர்** என்ற குறிப்புமிது.

மழுவோடு...உடையார் - மானும் மழுவும் இரு கையிலும் ஏந்தியவர்; சிவபெருமான். **தொழுநீர்மை** - தொழுதற்கு விதித்த முறை.

மழுநீடிளமான் மறிகரத்தில்—என்பதும் பாடம். *61*

திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருச்சிற்றம்பலம் **பண்-குறிஞ்சி-7-ம் திருமுறை**

நீரும் மலரு நிலவுஞ் சடைமேல், ஊரும் மரவ முடையா னிடமாம்
வாரும் மருவி மணிபொன் கொழித்துச், சேருந் நறையூர்ச் சித்தீச் சரமே. (1)

போரார் புரமெய் புனித னமரும், சீரார் நறையூர்ச் சித்தீச் சரத்தை,
ஆரூ ரன்சொல் லிவைவல் லவர்கள், ஏரா ரிமையோ ருலகெய் துவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சித்தீச்சரம் இறைவரது இடமாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- ***(1)*** **நீரும்** என்றெழுந்த குறிப்பினால் ஆசிரியர் **"செழுநீர் நறையூர்"** என்று நீர்ச் சிறப்புப்பற்றி இப்பதியினைக் குறிப்பிட்டார். பதிகத்தினுள் மற்றும் பார்க்க. "நீருலாவு" என்ற பிள்ளையார் பதிகமும் பார்க்க. **அருவி** - காவிரி; ***(2)*** **அளைப்பை** - நஞ்சுப்பை; இவை பாம்பின் வாயினுள் பற்களின் மேற்பகுதியில் உள்ளன; **துளைக்கை** - துளையையுடைய கை; துதிக்கை; ***(3)*** **இகழுந்தகையோர்** - பகைவர்; முகமே-திகழ்-முகம்போல விளங்கும்; ***(4)*** **வரைத்தோள் வரையால் இறக்கொள்** - மலையினை மலையால் அழித்த என்பது கவிநயம். **இறக்கொள்** - இறச் செய்தலும் பின்னர் ஏன்று கொள்ளலும்; "மிதிகொள் சேவடி" (அரசுகள் - கோயில்); ***(6)*** **ஆன்ஆர் அடல்ஏறு** - இடபம்; **அமர்தல்** - விரும்புதல்; ***(8)*** **புரியும் மறையோர்** - **புரிதல்** - இடைவிடாது சொல்லுதல்;- ***(9)*** **முனிவன்** -தக்கன்; **மாணமை** - சிறவாமை; அழித்தான் என்பதனை மாணமை செய்தான் என்றது மங்கல வழக்கு; **பாண்** - பாணர் மரபு; **சேணார்** - நெடுந்தூரமும் கேட்க ஒலிக்கும்; ***(10)*** **குறியில் வழுவா** - வைத்த குறிதவறாத; **நெறியில்...வழுவா நியமத்தவர்கள்** - அந்தணர்கள்; 8-வது பாட்டுப் பார்க்க. சித்தர்கள் என்றலுமாம். இப்பதியின் பெயர் சித்தர்கள் பூசித்தமையாற் போந்த தென்பர். சுவாமி பெயரும் பார்க்க; ***(11)*** **போரார்** - பகைவர்கள்.

தலவிசேடம்:- திருநறையூர் சித்தீச்சரம்-முன் (IV - 619) உரைக்கப்பட்டது. சுவாமி **சித்தநாதர்;** அம்மை **அழகம்மை;** தீர்த்தம் - **பிரமதீர்த்தம்;** பதிகம் 4.

3216. புனித ஞர்முன் **புகழ்த்துணையார்க் கருளுந் திறமும் போற்றிசைத்து**
முனிவர் போற்ற வெழுந்தருளி மூரி வெள்ளக் கங்கையினிற்
பனிவெண் டிங்க ளணிசடையார் **பதிகள் பலவும்** பணிந்துபோந்
தினிய நினைவி லெய்தினு ரிறைவர் **திருவா வடுதுறையில்**. 62

கும்பகோணத்தினின்றும் தெற்கே நீடாமங்கலம் கற்சாலை வழி 2 நாழிகையில் உள்ள சாக்கோட்டையினின்றும் தென்கிழக்கே 4½ நாழிகையளவில் உள்ள திருவரிசிற் கரைப்புத்தூரினின்றும் தென்கிழக்கே 2 நாழிகையளவில் உள்ளது.

3216. (இ-ள்) *புனிதனார்...போற்றிசைத்து - இறைவர் முன்னரில் புகழ்த்துணை நாயனாருக்கு இப்பதியில் படிக்காசு அருள் செய்த அருட்டிறத்தினைப் போற்றிப் பாடி; முனிவர் போற்ற எழுந்தருளி-முனிவர்கள் போற்ற எழுந்தருளிச் சென்று; மூரி...போந்து - பெரிய வெள்ளமாகப் பெருகும் கங்கையினில் குளிர்ந்த சந்திரனையும் அணியும் சடையினையுடைய இறைவர் எழுந்தருளிய பதிகள் பலவற்றையும் பணிந்து சென்று; இனிய...திருவாவடுதுறையினில் - மகிழ்ச்சி பொருந்திய திருவுள்ளத்தொடும் போய் இறைவரது திருவாவடுதுறையில் வந்து சேர்ந்தருளினர்.*

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) புகழ்த்துணையார்க்கருளும் திறமும் போற்றிசைத்து - *பதிகம் 6-வது பாட்டுப் பார்க்க. "அகத்தடிமை செய்யுமந்தணன்" என்று புகழ்த்துணையாரைச் சிறப்பித்து அவருக்கு நித்தமும் காசு அருளிய சரிதம் போற்றப்பட்டது காண்க.*

முனிவர் போற்ற - *அந்தணர்கள்; சிவ வேதியர்கள்.*

பதிகள் பலவும் - *அரிசிற்கரைப் புத்தூரினின்றும் திருவாவடுதுறையிற் சேரும் இடையில் அனேகம் பதிகள் உள்ளன; இவை திருச்சிவபுரம், திருநாகேச்சரம், திருவிடைமருதூர், தென் குரங்காடுதுறை முதலாயின என்பது கருதப்படும்.*

இனிய நினைவு - *மனமகிழ்ச்சி;* **நினைதொறும் இனிப்ப வருவது இறைவரது நினைவு;** *"நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும், அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன் சொரியுங் குனிப்புடையான்" (திருவா)*

எய்தினர் - *வினைமுற்று முன் வந்தது விரைவுக் குறிப்பு.*

மூரிவெள்ளம் - *பெருவெள்ளம்; அடங்காத நீர்ப் பெருக்கு.*

கங்கையினில் திங்கள் அணிதல் - *ஒரு சேர அணிதல்; "வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை, யிளந்திங்களும் மிருக்குஞ் சென்னி" (அம்மை - இரட்டை மணிமாலை 1); "அப்புனலிற், சரிகின்ற திங்களோர் தோணி பொக்கின்றது" (பொன்வண். அந்தாதி - 67)*

திரு அரிசிற்கரைப் புத்தூர்

திருச்சிற்றம்பலம் **பண்-இந்தளம்-7-ந் திருமுறை**

மலேக்குமக ளஞ்ச மதக ரியை யுரித்தீ ரெரித்தீர் வருமுப் புரங்கள்
சிலேக்குங்கொலேச் சேவுகந் தேற்றெழியீர் சில்பலிக் கில்கடோறுஞ் செலவொழியீர்
கலேக்கொம்புங் கரிமருப் பும்மிடறிக் கலவம் மயிற் பீலியுங் காரகிலும்
அலேக்கும் புனல்சே ரரிசிற் றென்கரை யழகார் திருப்புத்தூ ரழகனீரே. (1)

அகத்தடிமை செய்யு மந்தணன்ரு னரிசிற் புனல் கொண்டுவந் தாட்டுகின்ருன்
மிகத்தளர் வெய்திக் குடத்தையு நும்முடி மேல்விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவ னுக்கு நித்தற் படியும் வருமென் றெருரு**காசினே** நின்றநன்றிப்
புகழ்த்துணே கைப்புகச் செய்து கந்தீர் பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. (6)

காரூர் மழைபெய்து பொழியருவிக் கழையோ டகிலுந்திட் டிருகரையும்
போரூர் புனல்சே ரரிசிற் றென்கரைப் பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதர்தம்மை
யாரூர னருந்தமி ழைந்திஞேடைந் தழகா லுரைப்பார்களுங் கேட்பவருஞ்
சீரூர்தரு தேவர் கணங்களொடு மிணங்கிச் சிவலோகம தெய்துவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—தோழமை முறையில் இறைவரின் அருட் செயல்களே வியந்து பாராட்டியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* ***சிலேத்தல்*** - பேரொலி செய்தல்;—(2) திருமால் கண்ணிடந்து பூசித்து ஆழிபெற்ற வரலாறு போற்றப்பட்டது;—**(3) தரிக்குந்தரை** - தரையின்றெழில் விரித்துரைத்தது; "மண்டானு முரந்தருங் கடினமாகித் தரித்திடு முணர்ந்து கொள்ளே" (சித்தி. சூ. 2-66); "மண்கடின மாய்த்தரிக்கும்" (உண்மைவிள-9); **சவிதா** - சூரியன்; **திரைக்கைகளால் வாரிமோதி** - அலேயாகிய கை; உருவகம்;—**(6)அகத்தடிமை செய்யும் அந்தணன்** - திருமேனி தீண்டிப் பணி செய்தலும், மற்றும் திருக்கோயிலுள் அணிமையாகப் பல பணி செய்தலும் உரிமையாக்கொண்ட சிவவேதியன். **அந்தணன்** - (ஆகிய) **புகழ்த் துணே என்று** கூட்டுக. "அங்கணர் கோயி லுள்ளா வகம்படித் தொண்டுசெய்வார்" (தில்-புரா.4); புகழ்த்துணே நாயனுர் புராண வரலாறு பார்க்க. அச்சரித ஆதரவு. புகழ்த்துணேயாரது அன்பின் பெருமை "புடைசூழ்ந்த புலியதண்மே லரவாட வாடி பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணே" என்ற திருத்தொண்டத் தொகையானுமறியப்படும்;—**(7)எச்சம்** - யாகம். (யக்ஞம்); **தெழித்தல்** - அழித்தல், தண்டித்தல்; **விழிக்கும் தழைப்பீலி**-கண் போன்ற அமைப்பும் தழைபோன்ற வடிவும் உடைய மயிற்பீலி;—**(8) பறைக் கண் நெடும் பேய்** - பறையினேப் போன்று பெரிதாய் அகன்று வட்டமாகிய கண்களேயுடைய பேய்; "பறைபோல் விழிகட் பேய்" (அம்மை - மூ - தி); **பாரிடம்** - பூதம்;—**(9) மழைக் கண்** - மேகம் போல மையிட்ட கண். மேகம் போன்ற கருவிழியினே யுடைய கண் என்றலுமாம்; உருவுவமம்; மேகம் போன்று கைமாறின்றிக் கருணே பொழியும் என்று பண்புவமமுமாம்;—**(10) கடிக்கும் அரவால்** - வாசுகியைக் கடைகயிருகக் கொண்டு; **ஒடிக்கும்** - அழிக்கும்;—**(11) போரூர்புனல்** - போர் செய்தல் போல மோதியலேக்கும் வெள்ள நீர் பொருது.

3217. விளங்குந் திருவா வடுதுறையின் மேயார்கோயில்புடை வலங்கொண்
டுளங்கொண் டுருகு மன்பினுட னுள்புக் கிறைஞ்சி யேத்துவார்
வளங்கொள் பதிக "மறையவ" னென்றெடுத்து **வளவன்** செங்கணான்
தளங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொன் மாலைசாத்தினார். 63

தலவிசேடம்:— திரு அரிசிற் கரைப்புத்தூர் - *முன் உரைக்கப்பட்டது. 2301-ன் கீழ்ப் பார்க்க.*

3217. (இ-ள்) விளங்கும்...வலங்கொண்டு - விளங்குகின்ற திருவாவடுதுறையில் எழுந்தருளிய இறைவரது திருக்கோயிலினைச் சுற்றி வலமாக வந்து; உளங்கொண்டு... ஏத்துவார் - உள்ளத்தினைத் தன் வசமாக்கி உருக்குவார் அன்பினோடும் திருக்கோயிலினுக்குள்ளே புகுந்து வணங்கிப் போற்றுவாராகி; வளங்கொள்... எடுத்து - வளமுடைய திருப்பதிகத்தினை "மறையவன்" என்று தொடங்கி; வளவன்... சிறப்பித்து - கோச்செங்கட் சோழரது இடம் பொருந்திய பிறப்பினைச் சிறப்பித்துப் போற்றி; தமிழ்ச் சொன்மாலை சாத்தினார் - தமிழ்ச் சொல் மாலையாகிய அத்திருப்பதிகத்தினைச் சாத்தி யருளினார்.

(வி-ரை) விளங்கும் - அருள் விளங்கும்; உலகு விளங்குதற்குக் காரணமாகிய; இவ்விளக்கமாவது இங்குத் திருமூல நாயனார் பசுக்கள் உய்யும்படி சிவாகமப் பொருளைத் திருமந்திரமாகத் தமிழில் வெளிப்படுத்தி யருளியதும், பிறவுமாம். அவர் சரிதம் பார்க்க. இத்திருப்பதிகத்தினுள், இறைவரருள் பலவும் விளங்கக் கண்டு அடைந்தேன் என்ற கருத்துப் பற்றியும் **விளங்கும்** என்றார்.

மறையவன் - இது பதிகத் தொடக்கம். முதற் குறிப்பு.

வளவன் செங்கணான் - கோச்செங்கட் சோழ நாயனார். **தளங்கொள் பிறப்பு** - முன்பு சிலந்தியாயிருந்து பணி செய்த அந்தத்தலத்திலேயே அரசராக வந்து பிறந்த பிறவி; **"தொடர்ச்சி"** என்ற பதிகம் இக்குறிப்புத்தருவதாம்; **தலம் தளம்** என வந்தது. வடமொழி வழக்கு. **தளம்** மேன்மை என்றனர் முன் உரைகாரர்கள்.

சிறப்பித்து - போற்றி - துதித்து; பதிகப் பாட்டுப் பார்க்க.

மறையவன் என்றெடுத்துச் சிறப்பித்துச் சாத்தினார் - என்று இப்பதிகம் இன்னதென விளங்க வைத்தது. பின்னரும் நம்பிகள் இப்பகுதியில் வந்து அருளிய "யாறெனக்குற வமரர்க ளேறே" என்பது முதலிய பதிகங்களினின்றும் பிரித்துணர்த்தும் பொருட்டு ஆசிரியர் காட்டிய பேரருட்டிறமாகும். சொல்லாலும் பொருளாலும் கண்டுகொள்ளும் வண்ணம் சுட்டிக்காட்டிய நயமும் காண்க.

ஏத்துவார் - வினைப் பெயர். ***ஏத்துவார் - சாத்தினார்*** என்க.

63

புடை - பக்கமாகச் சூழ்ந்து; புடையின் கண்.

திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி-7-ம் திருமுறை**

மறைய வனெருு மாணிவந் தடைய வார மாயவ ஞருயிர் நிறுத்தக்
கறைகொள் வேலுடைக் காலனைக் காலாற் கடந்த காரணங் கண்டுகண் டடியேன்
இறைவ னெம்பெரு மானென்றெப் போது மேத்தி யேத்திநின் றஞ்சலி செய்துன்
அறைகொள் சேவடிக் கன்பொடு மடைந்தே னுவ டுதுறை யாதியெம் மானே. (1)

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி சித்திரப் பந்தர் சிக்கென வியற்றச்
சுருண்ட செஞ்சடை யாயது தன்னைச் சோழ னுக்கிய தொடர்ச்சிகண் டடியேன்
புரண்டு வீழ்ந்துநின் பொன்மலர்ப் பாதம் போற்றி போற்றி யென்றன்பொடு புலம்பி
அருண்டென் மேல்வினைக் கஞ்சிவந் தடைந்தே னுவ டுதுறை யாதியெம் மானே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—திருவாவடுதுறை எம்மானே! தேவரீரது அருளிப்பாடுகள் பலவற்றையும் கண்ணுல் கண்டு வல்வினைக் கஞ்சி வந்தடைந்தேன்; காத்தருள்வாயாக. இப்பதிகத்தில் 5 பாட்டுக்களே கிடைத்துள்ளன! ஏனையவை சிதலரித் தொழிந்தன போலும்!

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) **மறையவன்** - மார்க்கண்டேயர்; **மாணி** - பிரமசாரி; **வாரம்** - அன்பு; **ஆருயிர் நிறுத்த** - அப்போது இறவாமற் காத்ததன்றி என்றும் அழியாமல் நின்று இருக்கவும் அருள; **அறைகொள்** சிலம்பு சத்திக்கும்; **அறை** - அடியவர்கள் வந்தடைந்து அறை கூவும் ஒலி என்று கொண்டு அவ்வொலியை ஏற்றுக்கொள்ளும் என்றலுமாம்; **நறைகொள்** என்று பிரித்தோது வாருமுண்டு. அது பிழை;—(2) **தெருண்ட** - தெளிந்த; **சித்திரம்** - அழகும் அமைதியும் குறித்தது; **சிக்கென** - விரைவாக; யானையினுற் சிதைவுண்ட அவ்வப்போதே இடைவிடாது; **சோழனுக்கிய** - சோழர் மரபில் அரசிளங் குமாரனுக வரவும், அரசாளவும் செய்த; **தொடர்ச்சி** - முற்பிறவியின் காரணமாகி அந்தப் பதியிலே வந்த பிறவியின் தொடர்பும், முன்னைநிலை யறிவுடன் பிறந்த அறிவின் தொடர்ச்சியும், அன்பின் தொடர்ச்சியுமாம். **புரண்டு வீழ்தல் - புலம்புதல்** அன்பின் முதிர்வினுலாவன; **அருண்டு** - விதிர் விதிர்த்து; நடுங்கி. இத்திருப்பாட்டின் கருத்தின் மேம்பாட்டினை ஆசிரியர் மேல் (3217) எடுத்துக் காட்டியருளினர்;—(3) வழிபட்டார்க்கருள்பவன் சிவன் என்ற உண்மை திருமால் கண்ணிடந்து அருச்சித்து ஆழி பெற்ற வரலாற்றினுலறியப்படும் நிலைபற்றி அச்சரிதம் கண்டு அடியேனும் வந்து அடைந்தேன் என்றபடி; **புகழினுல்** - தாமரைக் கண்ணன் என்ற புகழ் பற்றி; **புரிந்து** - அவனது அன்பை எண்ணி; **தேவதேவ** - பெருந்தேவனுகிய அரிக்கும் தேவனுதல் குறிப்பு; **அகழும்** - அகழ்ந்து என்னை ஆழத்தில் ஆழ்த்தும்; ஒன்றன்மேலொன்ருய் மூண்டு வந்து பிறவிக்குழியில் மீளாதபடி அமுக்குதலால் **அகழும் வல்வினை** என்ருர்; (4) **கேழல்** - பன்றி; **பொர** என்பது எதுகை நோக்கிப் **போர** என வந்தது; **வான்படை** - பாசுபதாஸ்திரம். **வான்** - பெருமை; ஏனை எவற்ருலும் இதனை வெல்லமாட்டாத முதன்மை;—(5) **ஒக்க** - ஒரே காலத்தில் ஒன்றுபோலவே; முப்புரஞ்செற்று அதில் இருந்த மூவர்களை மட்டும் காத்தருளிய சரிதம். **மூன்னிய மூவர்**

3218. சாத்தி யங்கு வைகுநாட் டயங்கு மன்ப ருடன்கூடப்
பேர்த்து மிறைஞ்சி யருள்பெற்றுப் பெண்ணுேர் பாகத் தண்ணலார்
தீர்த்தப் பொன்னித் தென்கரைமேற் றிகழும் பதிகள் பலபணிந்து
மூர்த்தி யார்த மிடைமருதை யடைந்தார் முனைபாடித் தலைவர். 64

- "எண்ணுடை மூவர்" (திருவாசகம் தோணேக்); "[illegible]" என்று பதிகத்தில் (திருப்புன்கூர் 8-வது திருப்பாட்டு) இதனை நம்பிகள் [illegible] விரித்தருளுதல் காண்க.

தலவிசேடம்:— திருவாவடுறை III - பக்கம் 430 பார்க்க.

3218. (இ-ள்) சாத்தி...அருள் பெற்று-முன் கூறிய தமிழ்ச் சொல்மாலையினைச் சாத்தி அங்கு எழுந்தருளியிருக்கும் நாளிலே விளங்கும் அன்பர்களுடனே கூடப் பின்னரும் வணங்கி அருள்விடை பெற்றுச் சென்று; பெண்ணுேர்...பணிந்து - உமையம்மையாரை ஒரு பாகத்தில் உடைய இறைவரது தீர்த்தமாகிய காவிரியின் தென்கரைமேல் விளங்கும் பதிகள் பலவற்றையும் பணிந்துபோய்; மூர்த்தியார்...தலைவர் - இறைவரது திருவிடைமருதூரிற் சென்று முனைப்பாடி நாட்டுத் தலைவராகிய நம்பிகள் அணைந்தருளினர்.

(வி-ரை) சாத்தி - "சாத்தினுர்" என்று முன் பாட்டிற் கூறி முடித்ததனைத் தொடர்ந்து கூறியது. **பேர்த்தும்**-மீண்டும் மீண்டும்; பலநாளும்.

தீர்த்தப்பொன்னி-தீர்த்தம்-தூய்மை, பரிசுத்தம்; அதனைச் செய்யும் நீருக்கு ஆகிவந்தது; "தீர்த்தன்" என்று இறைவரைக் கூறுவதும் இப்பொருட்டு.

பதிகள் பல-இவை திருவாவடுதுறைக்கும் திருவிடைமருதூருக்கு மிடையில் காவிரித் தென்கரையில் உள்ளவை. இவை திருக்கோழம்பம், திருச்சாத்தனூர், தென்குரங்காடுதுறை முதலியன என்பது கருதப்படும்.

தென்கரைமேல் - இருபதிகளும் உள்ள தென்கரை வழியாகவே நம்பிகள் சென்றருளினர் என்பது. மேல்-என்றதனுல் காவிரியின் தென்கரையும் அதன் கிளைகளாய்த் தென்புறமுள்ள கிளை ஆறுகளின் தென்புறமும் கொள்ளப்படும்.

மூர்த்தியார்-பெருந்தலைவர்; "மகாலிங்கம்" என்னும் இடை மருதீசர்தன்மை குறிக்கப்பட்டது. "எந்தை பிரானே" என்ற பதிகக் குறிப்பும் காண்க.

முனைப்பாடி - நம்பிகள் அவதரித்த நாடு; அந்நாட்டரசரால் வளர்க்கப்பட்டன ராதலின் இவரும் அந்நாட்டுத் தலைவர் என்பதும் குறிப்பு. 64

3219. (இ-ள்) வெளிப்படை. நிலைபெற்ற மருதினிடமாக விரும்பி எழுந்தருளியுள்ள இறைவரை வணங்கி இனிய தமிழ்ச் சொல்லாகிய மலர்களை மாலையாகப் புனைந்து வணங்கித் துதித்துச் சென்று, திருத்தொண்டர்களுடனே அந்த நல்ல பதியினின்றும் நீங்குகின்றுராய்ச்; சிவபெருமானது திருநாகேச்சரத்தை நினைந்து சென்று திருக்கோயிலினுள் புகுந்து வலங்கொண்டு இறைவர் திருவடிகளை வணங்கினர்.

3219. மன்னு மருதி னமர்ந்தவரை வணங்கி மதுரச் **சொன்மலர்கள்**
பன்னிப் புனைந்து பணிந்தேத்திப் பரவிப் போந்து தொண்டருடன்
அந்நற் பதியி லிருந்தகல்வா ரரனூர் **திருநா கேச்சரத்தை**
முன்னிப் புக்கு வலங்கொண்டு முதல்வர் திருத்தாள் வணங்கினூர். 65

(வி-ரை) மருது - திருவிடைமருதூர் என்னும் பதி என்றும், அப்பெயர் போந்த காரணமாகி அப்பதியிலுள்ள மருதமரம் என்றும் உரைக்க நின்றது; "அந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த, பொந்தைப் பரவி நாம் பூவல்லி கொய்யாமோ" (திருவா).

சொன்மலர்கள் பன்னிப் புனைந்து - சொல்லாகிய மலர்களை ஆய்ந்து தெரிந்தெடுத்து மாலையாகப் புனைந்து; **பன்னுதல் - புனைதல்**-சொற்களுக்கும் மலர்களுக்கும் ஒக்கும்; **பன்னுதல்** - ஆய்தல்; **புனைதல்** - தொடுத்தல்; ஏகதேச வுருவகம்; **பன்னுதல்**-பலமுறையும் பலவாறும் ஒருபொருளைச் சொல்லுதல் என்ற வழக்கும் காண்க.

ஏத்திப் பரவி - ஏத்துதல் - பதிகத்தால் போற்றுதல். **பரவுதல்** - தோத்திரித்தல்.

முன்னிப்புக்கு - நினைந்தவாறே சென்று திருக்கோயிலினுள் புகுந்து என விரைவு தோன்றக் கூறியவாறு. *65*

திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி. 7-ம் திருமுறை**

கழுதை குங்குமந் தான்சுமந் தெய்த்தாற் கைப்பர் பாழ்புக ழற்றது போலப்
பழுதி னூனுழந் துட்டடு மாறிப் படுசு ழித்தலைப் பட்டன னெந்தாய்
அழுது நீயிருந் தென்செய்தி மனனே யங்கணூவர னேயென மாட்டா
இழுதையே னுக்கோ ருய்வகை யருளா யிடைம ருதுறை யெந்தைபி ரானே. (1)

அரைக்குஞ் சந்தனத் தோடகி லுந்தி யைவ னஞ்சுமந் தார்த்திரு பாலும்
இரைக்குங் காவிரித் தென்கரை தன்மே லிடைம ருதுறை யெந்தைபி ரானை
உரைக்கு மூர னொளிதிகழ் மாலை யுள்ளத் தாலுகந் தேத்தவல் லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையு மின்றி நாதன் சேவடி நண்ணுவர் தாமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—"இழுதை யேனுக்கோ ருய்வகை யருளாய் இடைமருதுறை எந்தை பிரானே" என்ற பதிகத்தின் மகுடம் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) "கழுதை குங்குமந்தான் சுமந்து"-பயனற்ற செயல் என்பது குறிக்க வழங்கும் பழமொழி. **எய்த்தால்-** வருந்தினூலும்; உம்மை தொக்கது. **கைப்பர்**-இகழ்வர்; **பாழ்**-வீண்; வருந்திச் சுமந்த பொருள் உயர்ந்ததாயினும் அதனூல் அக்கழுதைக்கு ஒரு பயனுமில்லை என்பது; **போல - அதுபோல்; பழுதில்...பட்டனன்** - வீணே உடல் சுமந்து தடுமாறி அலைகின்றேன். உடலாற்பெறும் பயனை

3220. பெருகும் பதிகம் "**பிறையணிவா ணுதலாள்**"பாடிப் பெயர்ந்து, நிறை
திருவின் மலியுஞ் சிவபுரத்துத் தேவர் பெருமான் கழல்வணங்கி
உருகுஞ் சிந்தை யுடன்போந்தே, யுமையோர் பாகர் தாமகிழ்ந்து
மருவும் **பதிகள் பிறபணிந்து, கலய நல்லூர் மருங்கணைந்தார்.** 66

அடைந்தேனில்லை. "ஊனடைந்த உடம்பின் பிறவியே" "பாவப் பிறவித்தளையே" என்றுந் றொடக்கத் திருவாக்குக்கள் காண்க; **அழுது** - வினை கழித்தற் கிரங்கி; **இழுதையேன்**-அறிவில்லாதவன்; **உய்வகை...பிரானே** - பதிகக் கருத்து;—(2) **அரைத்த மஞ்சளதாவகை** - பழமொழி. அரைத்த மஞ்சள் உடனே பயனற்றுத் தன்மை கெட்டு வீணாவது போல விரைவில் நரை மூப்பு முதலிய ஏறித் தேய்ந்து உடலை வீண் கழித்தேன்; **இரைப்பன்** - வீணன்; வெற்றெலியினான்; வினை ஆராய்பவனே போலன்;—(3) **புன்னுனை...போலும்**-பழமொழி; புல் நுனியில் உள்ள பனி சூரியனைக் கண்ட போது விரைவில் மறைவது போல அநித்தியமாகிய-நிலையில்லாத; **நாளும்...என்றிருந்து** - இன்பம் இன்று வரும் நாளை வரும் என்றென்று ஏமாந்து;—(4) **முந்தி...நலிய** - முற்பிறப்பிற் செய்த தீவினைகள் இப்போது வந்து வருத்த; நம்பிகளது சரிதக் குறிப்பும், ஞானநூற் றுணிபுணர்த்தியதும் ஆம்;—(5) **அழிப்பர்** - அழிவு செய்வோர்; **ஐவர்** - ஐம்புலன்கள்; **காற்பெய்து** - துன்பமெல்லாஞ் செய்து அதனுள் அழுந்தச் செய்து; **விழித்து** - மயக்க நீங்கி அறிவு பெற்று;—(6) **குற்றம்...பெருக்கி** - குற்றமும் குணமுமாகிய வினைகளை விரவப் பெரிதும் செய்து; **எற்றுளேன்**-எதன் பொருட்டு வாழ்கின்றேன்;—(7) **கொடுக்ககிற்றிலேன் ஒண்பொருள் தன்னை** - பொருள் தேடுதலெல்லாம் தம் பொருட்டன்றிப் பிறர்க்குக் கொடுத்தலின் பொருட்டே என்பது;—(8) **ஐவகை யரைய ரவராகி** - "மாறி நின்றெனை மயக்கிடும் வஞ்சப் புலனைந்து" (திருவா);—(9) **ஏழை**-வலியில்லாத; சிறிய **வாழை** - கல்வாழை, மலைவாழை முதலாகப் பழுக்காத வாழை வகைகள்; "வாழைதான் பழுக்கும் நமக்கென்று" - பழமொழி; **கூழைமாந்தர்** - அறிவில்லாத மக்கள். கடையில் தள்ளப்பட்டோர்; **செல்கதி** - அவர் போகும் வழி;—(10) **நரைப்பு...இன்றி**-(2-ம் திருப்பாட்டில்) வரும் என்றஞ்சிய நரை முதலியன; **நடலை**- வஞ்சனை.

தலவிசேடம்:— **திருவிடைமருதூர்**-III - பக். 434 பார்க்க.

3220. (இ-ள்) பெருகும்...பெயர்ந்து - இன்பம் பெருகும் "பிறையணி வாணுதலாள்" என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடி அங்குநின்றும் சென்று; நிறை...போந்தே- குறைவில்லாத நிறைவாகிய சிவச்செல்வம் நிறையும் திருச்சிவபுரத்தில் சேர்ந்து தேவர் தலைவராகிய சிவபெருமான் திருவடிகளை வணங்கி உருகும் சிந்தையுடனே மேற்சென்று; உமையோர்...பணிந்து - உமையம்மையைப் பாகத்தில் உடைய இறைவர் தாம் மகிழ்ந்து பொருந்தும் பதிகள் பிறவற்றையும் பணிந்து சென்று; கலயநல்லூர் மருங்கு அணைந்தார்-திருக்கலயநல்லூரின் பக்கத்தில் அணைந்தருளினர்.

(வி-ரை) பெருகும் - இன்பம் பெருகுதற்கு ஏதுவாகிய; **இன்பம்** - சொல்லெச்சம்; இது சிவனடிமைத் திறத்தின் வரும் குறையாத இன்பம்; **பெருக்கும்** என்பது பெருகும் என நின்றது.

பிறையணி வாணுதலாள் - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

திரு - சிவத் திரு; முத்திச் செல்வம்.

பதிகள் பிற - இவை சிவபுரத்திற்கும் கலேய நல்லூருக்கும் இடையில் உள்ளவை என்பது கருதப்படும். இப்போது தெரியக்கூடவில்லே. 66

திருநாகேச்சரம்

திருச்சிற்றம்பலம் **பண் - பஞ்சமம். 7-ம் திருமுறை**

பிறையணி வாணுதலா ளுமை யாளவள் பேழ்கணிக்க
நிறையணி நெஞ்சனுங்க நீல மால்விட முண்டதென்னே
குறையணி கொல்லேமுல்லே யளேந் துகுளிர் மாதவிமேற்
சிறையணி வண்டுகள்சேர் திருநா கேச்சரத் தானே. (1)

கொங்கணே வண்டரற்றக் குயிலும் மயிலும் பயிலுந்
தெங்கணே பூம்பொழில்சூழ் திருநா கேச்சரத் தானே
வங்க மலிகடல்சூழ் வயணுவல வூரன் சொன்ன
பங்கமில் பாடல்வல்லா ரவர்தம் விணேபற் றறுமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—திருநாகேச்சரத்தானே! என விளித்து விடமுண்டது, அறமுரைத்தது முதலாகிய அருளிப்பாடுகளே விணுவுமுகத்தால் பாராட்டித் துதித்தது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:— (1) பிறை அணி - பிறை போன்ற; **அணி** - உவம வுருபு. **பேழ்கணிக்க** - அஞ்ச; **அனுங்க** - வருந்த;—**(2) புரிதல்** - நினேதல்; **குரவம்...அரும்ப** - குராவின் அரும்புகள் பாம்பின் பற்கள் போன்று மென்மை - வெண்மை - கூர்மை கொண்டன. "அரவின் வாயில் முள்ளெயி றேய்ப்ப அரும் பீன்று, குரவம்பாவை முருகமர் சோலேக் குற்ருலம்" (பிள். தேவா - குறிஞ்சி); **செருந்தி செம்பொன் மலர்** - "செருந்தி செம்பொன்மலர் திருநெல்வேலி" (பிள். தேவா);—**(3) பாலன்** - மார்க்கண்டர்; **வீடுவித்துக் கருத்தாகியது** - வீட்டிப், பின் உயிர்ப்பித்து அருளியது;— **(4) குன்றமலே** பல குன்றுகளேச் சாரலிற்கொண்ட மலே; **இடையாள்** - உமை;—**(5) திரை** - காவிரி நீரின் அலேகள்;—**(6) மாதவத்தின்...போர்த்தது** - தாருகவனத்து இருடிகள் செய்த அபிசார யாகத்தில் எழுந்து அவர்களால் ஏவப்பட்ட சிங்கம் - புலி - யானே இவற்றை அடர்த்துத் தோலேப் போர்த்த சரிதம்; கந்தபுராணம் முதலிய மாபுராணங்களுட் காண்க;— **(7) நின்ற விம் மாதவம்** - இறைவர் தென்முகமாகி வீற்றிருந்த நிலே;—**(8) அர** - வாசுகி;— **(9) அங்கியல் யோகு** - மூன்ருவது பாட்டுப் பார்க்க; **அங்கி** - தீயின் தன்மை; அங்கி

3221. செம்மை மறையோர் திருக்கலைய நல்லூ ரிறைவர் சேவடிக்கீழ்
மும்மை வணக்கம் பெறவிறைஞ்சி முன்பு பரவித் தொழுதெழுவார்
கொம்மை மருவு "குரும்பைமுலை யுமையா"ளென்னுந் திருப்பதிகம்
மெய்ம்மைப் புராணம் பலவுமிகச் சிறப்பித் திசையின் விளம்பினார். 67

இயல் - **அங்கியல்** எனநின்ற தென்றலுமாம்;—(10) **விரவாகியது** - அமைந்துள்ளதும் ஏற்றவாறு விரவி நின்றது.

தலவிசேடம்:— **திருநாகேச்சரம்**-III பக்கம் 436 பார்க்க.

குறிப்பு:—இத்திருப்பதிகத்தில் முன் பகுதியில் கூறிய இறைவரின் அருட் செயல் ஒவ்வொன்றும் பிற்பகுதியில் பதியின் நகர வளமாக அருளிய நயம் காண்க.

3221. (இ-ள்) செம்மை...தொழுதெழுவார் - செம்மை நெறியில் நின்று ஒழுகும் மறையோர்கள் வாழும் திருக்கலயநல்லூ ரிறைவர் சேவடிகளின் கீழ் முக்கரணங்களும் ஒன்றிய வணக்கம் பொருந்த வணங்கித் திருமுன்பு தோத்திரித்துத் தொழுது எழுவாராகி; கொம்மை...திருப்பதிகம் - பெருமையுடைய "குரும்பை முலை மலர்க்குழலி" என்று தொடங்கும் திருப்பதிகத்தினை; மெய்ம்மை...விளம்பினார் - மெய்ம்மையாகிய மாபுராண வரலாறுகள் பலவற்றையும் சிறப்பாக எடுத்துக் கூறிப் பண் இசை பொருந்தப் பாடியருளினர்.

(வி-ரை) செம்மை - சைவ ஒழுக்கத்துள் நிற்கும்; **மறையோர்** - கலைய நல்லூர் மறையோர் வாழும் பதி என்பது; "திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர்" என்புழிப்போல.

மும்மை வணக்கம் - மனம், மொழி, மெய் என்னும் மூன்று கரணங்களும் ஒன்றித்துப் பொருந்தும் வணக்கம்.

எழுவார் - **விளம்பினார்** - என்று கூட்டுக. **எழுவார்** - முற்றெச்சம்.

குரும்பைமுலை மலர்க்குழலி என்பது பதிகத் தொடக்கம். "மலர்க்குழலி" என்றதனை **உமையாள்** எனப் பொருள் விரித்துக்கொண்டார்.

மெய்ம்மை...சிறப்பித்து - பதிகத்துள் ஒவ்வோர் பாட்டிலும் மாபுராண வரலாறுகளுள் ஒவ்வொன்றைச் சிறப்பாக விரித்து மிக அழகாகப் போற்றியிருந்தல் காண்க. இவற்றைக் குறிக்கொள்ளும்படி ஆசிரியர் வைத்தருளிய ஆணை.

இசை - பதிகப் பண்ணாகிய காந்தாரம். இப்பதிகம் பயின்று ஓதப்பட்டு வருதலும் காண்க.

மெய்ம்மைப் புராணம் - மாபுராணங்களுட் பேசப்படும் வரலாறுகள் அனைத்தும் மெய்யேயாம்; ஒவ்வோர் மெய்ம்மையினை உணர்த்துவன; மெய்யாகிய (சத்) இறைவரைப் பற்றியன என்ற பலவும் கொள்க. 67

திருக்கலயநல்லூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினைநன் கறிந்து
விரும்புவரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியவூர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ வறுபதம்பண் பாட
வணிமயில்க ளடமாடு மணிபொழில்சூ ழயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலரும் கலயநல்லூர் காணே. (1)

தண்புனலும் வெண்மதியுந் தாங்கியசெஞ் சடையன்
றருமரையோன் றலைகலனாக் காமரமுன் பாடி
யுண்பலிகொண் டுழல்பரம னுறையுமூர் நிறைநீ
ரொழுகுபுன லரிசிலின்றென் கலயநல்லூ ரதனை
நண்புடைய நன்சடைய னிசைஞானி சிறுவ
னுவலர்கோ னாரூர னுவினயந் துரைசெய்
பண்பயிலும் பத்துமிவை பத்திசெய்து நித்தம்
பாடவல்லா ரல்லலொடு பாவமிலர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகப் பாட்டுக் குறிப்பு:— குரும்பைமுலை...வேட்டருளிச் செய்த - இது பார்வதியம்மையார் திருமண வரலாறு குறித்தது; கந்தபுராணம் பார்க்க; (தவங்காண் படலம், பார்வதியம்மையார் திருமணப் படலம் முதலியவை.) **குறிப்பு:—** திருமணம் செய்து உலகுக்குப் போகபோக்கியங்களைத் தந்தருளும் குறிப்பு. **அறிந்து** - புலப்படுத்தி; **கண்வளரும்** - கண்போல வளரும் என்றும், கண்துயிலும் என்றிருபொருளும்பட நின்றது தமிழ் நலம்; **கமலங்கண் முகமலரும்** - கமலம் கண் போலவும் முகம்போலவும் மலர்கின்ற:—(2) திருமாலுக்குச் சக்கரம் கொடுத்ததும் அந்தகாசுர வதமும் குறித்தபடி; **மேதை** - அறிவுப் பெருமை; நகர நீர்வளம் குறிப்பது;—(3) சண்டீசர் சரிதம் குறித்தது; சண்டீசர் புராணச் சரித ஆதரவு. பின் இரண்டடிகள் நகரச் சிறப்பும் மக்கட் சிறப்பும் உரைத்தபடி:—(4) "தேயமா ரொளிக ளெல்லாஞ் சிவனருட் டேச தென்னார்" (சித்தி) என்ற உண்மையைக் குறிக்கும் வரலாறு கூறப்பட்டது. ஒளிகள் எல்லாம் தீயின்கூறு கொண்டன; தீ இறைவரது நெற்றிக்கண்ணின் விளக்கம் என்பது; இச்சரிதம் நிகழ்ந்தது ஒரு கற்பத்தின் சம்பவம்; **அரிசில்** - காவிரிக் கிளையானதொரு சிற்றாறு; **ஓமப் புகையால் - முகில்போன்றணி கிளர்தல்** - வேள்விப் புகை மழைக்குக் காரணம் என்ற காரணக் குறிப்புத் தோன்றக் கூறியது. **போன்ற** - அஃதேயாகிய; "விளைத்த வன்புமிழ்வார் போல" (772); "சிவத்தைச்சார அணைபவர்போல" (752) முதலியவற்றிற்போலக் கொள்க. "மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகை நாளும், விண்ணிற் புகைகாட்டும் வீழி மிழலையே" (தேவா); இப்பாட்டால் அந்தண ரொழுக்கமும் அதன் பயனும் கூறப்பட்டன; **கலிகடி** என்றது காண்க;—**(5) நிற்பான்** - குறையிரந்து நிற்பான்; ஈண்டு வேண்டிக்கொண்ட அமரர்களில் முதல்வனாய் வந்து நிற்பானாகிய விட்டுணு என்ற பொருளில் வந்தது. **முதலா** என்றதூஉ

காண்க. திரிபுரமெரித்த வரலாறு; **சொற்பால பொருட்பால** - சொல்லின் பான்மை கொண்டனவும் அதற்கியையும் பொருளின் பான்மை கொண்டனவுமாம் அறிய என்க. **பால** - அகர வீற்றுப் பலவின்பாற் பெயர்; இவற்றைத் **தோத்திரங்கள்** என்பதனை வருவித்துக் கூட்டுக. **கலைபயில்** - அந்தணரொழுக்கத்தின் சிறப்பு;—(6) தக்கயாக சங்காரம் கூறியபடி; **பெற்றிமை யொன்றறியாத தக்கன்** - சிவனது முழுமுதற்றன்மை அறியாத என்ற அடைமொழிகள், அவ்வறியாமையினால் நேர்ந்த சிதைவுக்குக் காரணம் என்று காரணக் குறிப்புப்பட நின்றன. இதனைப் பெருந்தேவர் என்பதனுடன் கூட்டுக. அவர்களுடன் கூட்டும்போது **பெற்றிமை**யாவது தக்கனது செயல் சிவாபராதமாம் என்ற தன்மை; **பெருந்தேவர்** - எச்சன் முதலியோர்; **சிரம், தோள், பல், கரம், கண்** - எச்சனது சிரம் - இந்திரனது தோள் - சூரியனது பல் - தீயின் கரம் - பகன் என்னும் மற்றொரு சூரியனது கண்-இவை பீடழிந்தன; **பீடு**-பெருமை; **அருள் பெருகு** - இத்தண்டனைகளும் அருளின் சொரூபம் என்றபடி. "நாயகனே தண்டித்தாற் சயமன்றே யவரவர்க்கு" (திருவா - சாழல்); முன்னர்த் தண்டித்துப் பின்னர் அருளும் செய்த என்றலுமாம்; **கற்றின...கவர்** - கரும்பின் மூளைகள் கறிபோன்றிருக்கப் பசுக்கள் கழுநீர் மலர்களைச் சென்று உண்ணுமூர்; **கமழ்** - மணம் வீசும்; **கவர்** - உண்ணும்;—(7) **இலங்கையர்...ஊன்றி** - இராவணனை மலையின்கீழ் அடர்த்த செய்தி; **நிலம்...ஆகாசமாகி** - அட்டமூர்த்தமாந் தன்மை; **நிற்பனவு நடப்பனவாம்** - எல்லாமாந் தன்மை; (2824); **நிலங்கள்** - நில வகைகள்; **கேதகை** - தாழை; **கலங்குபுனல்** - பெருகிய வெள்ளம்;—(8) சிவனது அளவிலாற்றலுடைமை குறித்த செய்திகள் குறிக்கப்பட்டன; நிமிர்ந்தோன்-வைத்தவன். கண்டன் - விடையூர்பவன் - விமலன் - உமை பாகன் எனக் கண்டுகொள்க. **வன்னி** - வன்னித் தழை; **சோலை...துதிக்க** - சோலை இப்பறவைக்கெல்லாம் இருப்பிடம்; குயில், மயில், வண்டு, கிளி இவை எல்லாம் தத்தம் அளவில் கூவித்துதிசெய்ய; கசிந்த மனத்தவர் இருபோதும் அடிபணிவர் என்க; **கிளிதுதிக்க** - "பாரிசையும் பண்டிதர்கள் பன்னளும் பயின்றேத்தும் ஓசை கேட்டு - கிள்ளை - வேதங்கள் பொருட் சொல்லும்" (பிள். தேவா. மிழலை); **கசிந்த மனம்** - கடவுள் வழிபாட்டிற் கின்றியமையாத பண்பும் பயனுமாம்;—(9) **தாருகனைப் பொருது பொன்றுவித்த பொன்**. வீரி - காளி - பத்திரை என்ப. **பொன்** போன்றாளைப் பொன் என்றார்.

பொருளினை-என்பதும் பாடம். தாருகன் வதமும், காமனை எரித்ததும் குறிக்கப்பட்டன. **கரும்புனை** - மிகப் பசிய புன்னை மரங்கள். புன்னை - **புனை** என வந்தது இடைக்குறை; **புனை...காட்டும்** - தன்மை யணியினை உள்ளுறுத்த உருவகம். **முத்து** - முத்துப் போன்ற மொட்டு; **பொன்** - தாது; **பவளம்** - பூவின் உள்ளிருக்கும் செவ்விய இளங்கொட்டை; "பொன்னவிழ்ப்பனமலர்ப் புன்னை" (*1113*);—(*10*) **முன்னாள் - அயன் - வழிபாடு செய்ய இருந்த** - தலவரலாறு குறித்தது; **கண்** - கணுக்கள்;—(*11*) **காமரம்** - சீகாமரப்பண். **நிறைநீர்** - முன் கூறியவை எல்லாம் நீர்ச் சிறப்புப் பற்றியன என்று முடித்துக் காட்டியவாறு. இச்சிறப்பு வெள்ளக் காலத்தில் இன்றும் காணவுள்ளது; **நண்பு** - சிவன் பாலன்பு என்ற பொருளில் நின்றது; சிவனே எஞ்ஞான்றும் உயிர்களுக்கு நண்பு செய்து எடுப்பவன் என்றறிந்து, என்றும் ஏனை நட்புக்கள் எல்லாம் அழியத் தக்கன என்பதும் கண்டு என்றும் அந்நண்பினையே பிடித்து அவ்வழிபாட்டிற் சிறந்த என்க. "மாதொரு பாகனர்க்கு...மேம்படு சடையனர்" (*149*); **நண்புடைய** என்றதனை **இசை ஞானி ஆரூரன்**

3222. அங்கு நின்று **திருக்குடமூக் கணைந்து** பணிந்து பாடிப்போய்,
மங்கை பாகர் **வலஞ்சுழியை** மருவிப் பெருகு மன்புருகத்
தங்குகாத லுடன்வணங்கித் தமிழாற் பரவி, **யரசினுக்குத்**
திங்கண் முடியா ரடியளித்த திருநல் லூரைச் சென்றணைந்தார். 68

என்பவற்றுடனும் கூட்டுக. இங்கு நம்பிகள் தமது தந்தை, தாய், வயது (சிறுவன்), ஊர், பேர், பண்பு முதலிய எல்லாம் ஒருசேரப் பெறவைத்த சிறப்புக் காண்க. **பண்பயிலும் -** இறைவனது பண்பும் அவன் வெளிப்பட இருக்கும் பதியின் பண்பும் பலவாறு பயிலக்காட்டும்.

தலவிசேடம்:— திருக்கலயநல்லூர்-காவிரித் தென்கரை 68-வது பதி; இப்போது சாக்கோட்டை என வழங்கப்படுகின்றது; உயிர்களை அடைத்த கலயம் (கும்பம்-குடம்) நீர்ப் பெருக்கு ஊழியில் தங்கிய இடமாதலின் இப்பெயர் பெற்றதென்பர்; நீர்வளமுள்ள அரிசிலாற்றின் தென்கரையில் உள்ள தென்பது பலபடியாலும் பதிகத்துப் பாராட்டப்பட்ட பெருமையுடையது; பதிகத்துள் இறைவரது அருளிப்பாடாகிய மெய்ம்மைப் புராணம் பலவும் விரிவாய்ப் பதிகப்பாட்டுக்களிற் போற்றப்பட்ட பெருமையும் மறையவர்கள் வாழும்பதி என்பதும் பதிகத்துப் பாராட்டப்பட்ட பெருமையும் உடையது. சுவாமி - **அமிர்தகலாநாதர்;** அம்மை - **அமிர்தவல்லி** - பதிகம்;

இது கும்பகோணம் நிலயத்துக்குத் தெற்கே நீடா மங்கலம் கற்சாலை வழியில் 2 நாழிகையில் அரிசிலாற்றின் தென் கரையில் உள்ளது.

குறிப்பு:—பூசையின் பொருட்டு அரி (விட்டுணு) சொல்லின் வழி வந்தமையால் அரி சொல் ஆறு எனப் பெயர் பெற்றதென்றும் இப்போது மருவி அரிசிலாறு என வழங்குவதென்றும் கூறுப.

3222. (இ-ள்) அங்கு...போய் - அப்பதியினின்றும் திருக்குட மூக்கினை அணைந்து வணங்கித் திருப்பதிகம் பாடிச் சென்று; மங்கை...பரவி - உமைபாகராகிய இறைவரது திருவலஞ் சுழியினைச் சார்ந்து, பெருகும் அன்பு உள்ளத்தினை உருகச் செய்ய நிரம்பிய பெரு விருப்பத்துடன் வணங்கித் தமிழ்ப் பதிகத்தினலே போற்றி செய்து; அரசினுக்கு...சென்றணைந்தார் - மதியினைச் சடையில் அணிந்த பெருமானர் திருநாவுக்கரசருக்குத் திருவடியினைச் சூட்டியருளிய திருநல்லூரினைச் சென்று சேர்ந்தருளினர்.

(வி-ரை) திருக்குடமூக்கு - திருவலஞ்சுழி - திருநல்லூர் - நம்பிகள் யாத்திரை யாகச் சென்றருளிய வழி குறிக்கப்பட்டது.

தங்குகாதல் - நிலைபெற்று மாருத பெரு விருப்பம்; **தங்கு -** அப்பதியிற்றங்கும் என்றலுமாம்.

தமிழ் - தேவாரத் திருப்பதிகம்; **தமிழாற் பரவி** - நம்பிகள் வேதாகமங்களாலும் பரவிப் போற்றலாமாதலின் அதனிற் பிரித்துணரத் **தமிழால்** என்ருர். இயல்பு குறித்த தென்றலும்.

3223. நல்லூ ரிறைவர் கழல்போற்றி நவின்று நடுவு நம்பர்பதி
எல்லா மிறைஞ்சி யேத்திப்போந் திசையாற் பரவுந் தம்முடைய
சொல்லூ தியமா வணிந்தவர்தஞ் **சோற்றுத்துறையின்** மருங்கெய்தி
அல்லூர் கண்டர்கோயிலினுள்ளடைந்துவலங்கொண்டடிபணிவார் 69

அரசு - திருநாவுக்கரசர்; ***அரசினுக்கு...அடியமளித்த*** - திருநாவுக்கரசர் புராணம் (1459-1461) பார்க்க.

திங்கள் முடியார் - வேண்டுவார் வேண்டிய ஈயுந் திருவருளுடைமை குறிப்பு.

திருக்குடமூக்கு - திருவலஞ்சுழி - திருநல்லூர் - இம்மூன்று பதிகளுக்கும் நம்பிகளது பதிகங்கள் கிடைத்தில. 68

3223. (இ-ள்) நல்லூர்...நவின்று - திருநல்லூர்ப் பெருமானது திருவடிகளைத் துதித்துப் பாடி; நடுவு...போந்து - இடையிலே உள்ள இறைவர் பதிகள் எல்லாவற்றையும் வணங்கித் துதித்துச் சென்று; இசையால்...எய்தி - தமிழிசையினாலே துதிக்கின்ற தமது பதிகங்களைப் பயனுக விரும்பி ஏற்று அணிந்துகொண்டருளிய இறைவரது திருச்சோற்றுத் துறையின் பக்கத்திற் சேர்ந்து; அல்லூர்...பணிவார் - விடந்தங்கிய கண்டராகிய சிவபெருமானது திருக்கோயிலுனுள்ளே அடைந்து வலமாகச் சூழ்ந்து வந்து திருவடிகளிற் பணிவாராகி,

(வி-ரை) போற்றி நவின்று - துதித்துத் திருப்பதிகம் பாடி; **நவிலுதல்** - பதிகம் பாடுதல் என்ற பொருளில் வந்தது.

நடுவு நம்பர்பதி எல்லாம் - இவை திருநல்லூருக்கும் திருச்சோற்றுத் துறைக்கும் இடையில் உள்ளன. இவை திருப்பாலைத்துறை, திருச்சக்கரப்பள்ளி முதலியன என்பது கருதப்படும்.

நடுவு நம்பர்பதி - இவைகட்கு நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!

தம்முடைய சொல் ஊதியமா அணிந்தவர் - "மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" (216) என்று கூறியருளக் கேட்டு மகிழ்ந்தவர்; **ஊதியம்** - இலாபம்; ஏனையோர் பாடல்கள் அவ்வவர்க்கும் சிவானந்தப் பெரு வாழ்வு தேடித் தந்து அவ்வவர்க்கும் ஊதியம் தருவன; நம்பிகளின் சொற்கள் அஃதேயுமன்றி இறைவரால் தமக்கு ஊதியமாக அணியப்படுவன என்பது; "பித்தனே மறையோன்?" என்ற இகழ்ச்சிச் சொல்லினையே புகழ்ச்சி மொழியாகக் கொண்டு ஏற்று அணிந்த வரலாற்றுக் குறிப்புமாம்.

அல்லூர் கண்டர் - அல் - இருள்; இங்குக் கருமை நிறமுடைய விடத்தினைக் குறித்தது; ***ஊர்தல்*** - பொருந்துதல்.

பணிவார் - பரவியபின் - பணிந்து முன்னுவார் (3224) - பணிந்து - வணங்கி - இறைஞ்சித் - தாழ்ந்து - பள்ளிகொள்ள (3225) - அருள - உணர்ந்து - ஏறி - அணைந்தார் (3226) என்று முடிபு படுத்திக்கொள்க.

ஏத்திப்போய்—என்பதும் பாடம். 69

3224. "**அழனீ ரொழுகி யனைய**"வெனு மஞ்சொற் பதிக மெடுத்தருளிக்
கழனீ டியவன் பினிற்போற்றுங் காதல் கூரப் பரவியபின்
கெழுநீர் மையினி லருள்பெற்றுப் போந்து பரவை யார்கேள்வர்
முழுநீ றணிவா ரமர்ந்தபதி பலவும் பணிந்து முன்னுவார், 70

3225. தேவர் பெருமான் **கண்டியூர்** பணிந்து திருவை யாறதனை
மேவி வணங்கிப் **பூந்துருத்தி** விமலர் பாதந் தொழுதிறைஞ்சிச்
சேவில் வருவார் **திருவாலம் பொழிலிற்** சேர்ந்து தாழ்ந்திரவு
பாவு சயனத் தமர்ந்தருளிப் பள்ளி கொள்ளக் கனவின்கண், 71

3224. (இ-ள்) அழனீர்...எடுத்தருளி - "அழனீர் ஒழுகியனைய" என்று அழகிய சொற்களாலாகிய திருப்பதிகத்தினைத் தொடங்கியருளி; கழல்...பரவியபின் - திருவடிகளைப் பெருகிய அன்பினலே துதிக்கின்ற பெருவிருப்பம் மேலும் மிகும்படி போற்றியபின்; கெழு...போந்து - உரிமையாகிய தன்மையில் இறைவரது திருவருள் பெற்று மேற்சென்று; பரவையார்...முன்னுவார் - பரவையாரது கணவராகிய நம்பிகள் முழுமையும் திருநீற்றினை அணியும் இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் பதிகள் பலவற்றையும் பணிந்து மேலும் செல்ல எண்ணுவாராகி,

(வி-ரை) "அழனீர் ஒழுகி அனைய" எனும் - இது பதிகத் தொடக்க மாகிய முதற் குறிப்பு. **எடுத்து** - தொடங்கி; அழலே நீர்போல வடிந்தது போன்ற என்பது இறைவரது செஞ்சடையின் சிறப்பு. தன்மை விரவிய உவமவணி.

நீடிய அன்பினிற் - கழல் போற்றும் என்க.

கெழுநீர்மை - பொருந்தும் தன்மை. **கெழுவுதல்** - பொருந்துதல்.

முழு நீறு - முழுமையும் வீந்த காலத்திற் பெறும் சங்கார காலத்து நீறு; முழுமையைத் தரும் நீறு என்ற குறிப்புமாம்.

பதி பலவும் - சோற்றுத்துறையின் அணிமையில் உள்ளவை; தண்டங்கோறை - திருவேதிகுடி முதலாயின என்பது கருதப்படும். இப்பதிகளில் நம்பிகள் பாடிய பதிகங்கள் கிடைத்தில! **70**

3225. (இ-ள்) தேவர் பெருமான்...வணங்கி - தேவ தேவராகிய சிவபெருமானுறையும் திருக்கண்டியூரினைப் பணிந்து சென்று திரு ஐயாறதனைச் சென்று பொருந்தி வணங்கி; பூந்துருத்தி...இறைஞ்சி - திருப்பூந்துருத்தி யிறைவரது திருப்பாதங்களைத் தொழுது பணிந்து; சேவில்...தாழ்ந்து - இடபத்தில் வரும் இறைவரது திருவாலம் பொழிலின்கண் சேர்ந்து வணங்கி; இரவு...கனவின்கண் - அன்று இரவிலே பரவும் பள்ளி நிலையினில் அமர்ந்தருளிப் பள்ளிகொண்டிருக்க, அற்றை நாளிலே கனவின் கண்ணே,

(வி-ரை) பாவு சயனம் - பாவுதலாவது உடல் முழுதும் பரப்ப நிலத்தில் கிடத்தியமர்தல். கைகால் முதலியவற்றை முடக்கிப் பள்ளிகொள்ளுதல் உடல் நலத்துக் கியைவதன்று என்பது மருத்துவநூற் கருத்து; **பாவு சயனம்** - பரப்பிய படுக்கை என்றலும் ஆம்.

3226. “**மழபா டியினில் வருவதற்கு நினைக்க மறந்தா யோ**”வென்று
குழகா கியதங் கோலமெதிர் காட்டி யருளக் குறித்துணர்ந்து
நிழலார் சோலைக் கரைப்பொன்னி வடபா லேறி நெடுமாடம்
அழகார் வீதி மழபாடி யணைந்தார் நம்பி யாரூரர். 72

தேவர்பெருமான் றிருப்பழனத் திருவையாறு நெய்த்தானம்—[illegible] 71

3226. (இ-ள்) மழபாடியினில்...என்று - திருமழபாடியின்கண் வருதற்கு நினைக்கவும் மறந்துவிட்டாயோ? என்று; குழகாகிய...குறித்துணர்ந்து - இளமையாகிய தமது உரிய திருக்கோலத்தைக் காட்டியருளிச் செய்ய, அதனைக் குறிப்பிற் கொண்டு துயிலுணர்ந்தெழுந்து; நிழலார்...ஆரூரர் - நிழல் பொருந்திய சோலைகள் சூழ்ந்த கரையினையுடைய காவிரியின் வடகரையில் ஏறிச் சென்று நெடிய மாடங்களையுடைய அழகிய வீதிகள் பொருந்திய திருமழபாடியினை நம்பியாரூரர் அணைந்தருளினர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்கநின்றன.

(வி-ரை) நினைக்க மறந்தாயோ? - வருவதற்கு மறந்தாயோ என்றலே அமையுமாதலின் நினைக்க மறந்தாயோ? என்ற தென்னை? யெனின்; நம்பிகள் சிவயோக நிலையினராகி எஞ்ஞான்றும் “பேரா வொழியா மறவா நினையா” என்றபடிக்குள்ள தன்மையுடையராதலின் மறப்பிலர்; நினைப்பின் நீக்கமே மறத்தலாம்; ஆதலின் மறந்தாயோ என்பது பொருந்தாமையின் இங்குக் குறித்தது மழபாடியில் வருதலாகிய சிறப்பு நினைவேயாம் என்பார் **நினைக்க** என்றார் என்க. “யாரை நினைக்கேனே” என்ற பதிக விளக்கமும் சரிதச் சான்றும் ஆம்.


குழகு - இளமை; அழகு என்றலுமாம். **குழகாகிய தம்கோலம்** - என்றும் மாறாது ஒருபடித்தாய் நிற்கும் தமது இன்பமயமாகிய திருக்கோலம்; பதிகத்துப் “பொன்னார் மேனியனே” என்பது முதலாகத் தொடங்கிப், பலபடியும் பாராட்டப்பட்டது. இக்கோலம் எதிர் காட்டக் கண்ட காட்சியின் குறிப்பு. காளையாந் திருவடிவங் காட்டி, “யாமிருப்பது கானப்பேர்” என்று அருளியதும், அத்திருப்பதிகமும் இங்கு நினைவு கூர்தற்பாலன.


குறித்து உணர்ந்து - குறித்தலாவது கனா நிகழ்ச்சிகளுட் பல நனவின்கண் செவ்விதின் வாராது போதலின் அவ்வாறின்றி அம்முழுமையும் நனவின் வருமாறு குறி வைத்துத் துயிலுணர்தல்.

பொன்னி வடபால் ஏறி - காவிரியின் தென்கரை வழியே உள்ள தலங்களை வழிபட்டுத் திருவாலம் பொழிலிற் சேர்ந்தாராதலின். அங்கிருந்து மழபாடிக்கு வடக்கு நோக்கிக் காவிரியையும் கொள்ளிடத்தையும் தாண்டிச் சென்று; கொள்ளிடம் காவிரியின் பிரிவுகளுள் ஒன்றாதலின் வேறு பிரித்துக் கூறாது **பொன்னி வடபால்** என்றமைந்தார்; **பால்** - பக்கம். வட பக்கமுள்ள இரண்டு கிளையாறுகளையும் குறித்தது. 72


(பாட்டு-2225)

(பவாநி) திருநணு





பவாநி-சுவாமி சந்நிதி



பவாநி-அம்மை விமானமும்-
முன் கோபுரமும்.



பவானியும் காவிரியும் கூடுமிடம்.
கூடுதுறையும் ,கோயிலும்



பவாநி-தலமரம்-(இலந்தை-பதரிவனம்)
கோயிலின் வெளிச்சுற்றில்
தென்மேற்கில் உள்ளது

படம்-1

திருச்சோற்றுத்துறை

திருச்சிற்றம்பலம் **பண் - கௌசிகம் 7-ம் திருமுறை**

அழனீ ரொழுகி யனைய சடையும், உழையீ ருரியு முடையா னிடமாம்
கழைநீர் முத்துங் கனகக்குவையும், சுழனீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. (1)

இலையா லன்பா லேத்து மவர்க்கு, நிலையா வாழ்வை நீத்தா ரிடமாந்
தலையாற் ருழுந் தவத்தோர்க் கென்றுந், தொலையாச் செல்வச் சோற்றுத்துறையே. (9)

சுற்ருர் தருநீர்ச் சோற்றுத் துறையுண், முற்ரு மதிசேர் முதல்வன் பாதத்
தற்ரு ரடியா ரடிநா யூரன், சொற்ரு னிவைகற் ருர்துன் பிலரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவரது இடம் சோற்றுத்துறையே. இதனுள் இறைவரது இலக்கணங்கள் பலவும் பேசப்பட்டன. (பிள். திருநெல்லிக்கா - பார்க்க).

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) அழல்நீர் ஒழுகி அனைய சடை - நெருப்பே உருகி நீர்போல் ஒழுகினற்போலும் சிவந்த சடை; செஞ்சடை; **உழை** - மான்; **கழை** - கரும்பு; **கழைநீர் முத்து** - கரும்பினின்றும் விளையும் நீர்மையுடைய முத்து; **சுழல் நீர்** - சுழலும்படி அலைத்து வரும் நீர்;—**(2) பண்டை வினைகள்** - மூல கன்மங்கள் முதலிய பழவினைகள்; **இடையறுத அன்பு** - இடையில் எக்காலமும் அறுதலில்லாத அன்புடைய;—**(3) ஆலும்** - அசைந்தாடும்;—**(4) பளிக்குத்தாரை போல் நூல்** - பவளம்போற் றிகழும்; மார்பில் பூணூல் வளைந்து கிடத்தல் பவள மலையிற் பளிங்குத் தாரை கிடந்ததுபோல உள்ளதென்பது; உரு உவமம்;—(5) கூற்றுக்கு உதையும், ஒல்கா விதிக்கு வதையும் செய்த என்க. **ஒல்குதல்**- வளைதல். ஈண்டுத் தலைவணங்குதல் குறித்தது; **விதி** - படைத்தற்ருெழிலுடைய பிரமன்; **விதித்தல்** - படைத்தல்; விதி செய்பவனை விதி என்ருர்; **வதை** - சிரங்கிள்ளுதல்; **மைந்து**- வல்லமை; **திதையும்** - செறியும்;—**(6) பேதை** - பேதையாகிய (பெண்) அம்மையைப் பாகமுடைய; பேதைமையுடை என்றலுமாம்; பேதைமையாவது கடலில்வந்த அமிர்தத்தைத் தாம் உண்ணுது அமரருக்கு ஈந்து; விடத்தைத் தாம் எடுத்து உண்டமை; **எரியைக் காலும்** - எரிபோன்ற தளிர்களைக் காட்டித் தழைகின்ற; **சூதம்** - மா;—**(7) சிறந்தார்...துறந்தார்** - பற்றுக்களை விட்டோர்;—**(8) ஓமக்கனல்** - ஓமத்தில் எழுந்து அவியுண்பது போன்று உண்ட என்பது குறிப்பு; **சேக்கை** - பள்ளியறை;—**(9) இலை** - அருச்சிக்கும் தழை; **நிலையா வாழ்வை நீத்தார்** என்றதனுல் நிலைத்த பெருவாழ்வு தருபவர் என்பது குறிப்பு; **தொலையாச் செல்வம்** - அளவில்லாத சிவச் செல்வம்; **அற்ருர் அடியார்** - வேறு பற்று அற்றவர்களாகிய அடியவர்கள்.

தலவிசேடம்:— **திருச்சோற்றுத்துறை** - III - **பக். 473** பார்க்க.

திருக்கண்டியூர் - திருப்பூந்துருத்தி - திருவாலம்பொழில் - இவற்றிற்கு நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!

3227. அணைந்து திருக்கோ புரமிறைஞ்சி யன்பர் சூழ வுடன்புகுந்து
பணங்கொ ளரவ மணிந்தார்முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொ ளருளின் றிறம்போற்றிக் கொண்ட புளகத்துடனுருகிப்
புணர்ந்தவிசையாற்றிருப்பதிகம் "**பொன்னுர்மேனி**" யென்றெடுத்து, 73

3228. "**அன்னே யுன்னை யல்லாலியா ருரை நினைக்கே**" னெனவேத்தித்
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது புறம்பணைந்து
மன்னும் பதியிற் சிலநாள்கள் வைகித் தொண்ட ருடன்மகிழ்ந்து
பொன்னிக் கரையி னிருமருங்கும் பணிந்து மேல்பாற் போதுவார். 74

திருவையாறு - *நம்பிகள் இந்த யாத்திரையிற் பாடியருளிய பதிகமும் கிடைத்திலது! "பரவும் பரிசு" என்ற பதிகம் பின்னர் அருளப்பட்டது. (3881-கழறிற்-புரா-134 பார்க்க.)*

3227. (இ-ள்) *அணைந்து...புகுந்து* - சேர்ந்து திருக்கோபுரத்தை வணங்கி அன்பர்கள் உடன் சூழ்ந்துவரத் திருக்கோயிலின் உள்ளே புகுந்து; *பணங்கொள்...வீழ்ந்து* - படத்தினையுடைய பாம்பினை அணிந்த இறைவரது திருமுன்பு பணிந்து நிலமுற வீழ்ந்து எழுந்து; *பரங்கருணை...எடுத்து* - அளக்கலாகாத கருணைத் தன்மையினை உட்கொண்ட பேரருளின் திறத்தினைத் துதித்துத் திருமேனி முழுதும் மயிர்க்கூச்செறிய உள்ளமுருகி இசையுடன் கூடிய திருப்பதிகத்தினைப் "பொன்னுர், மேனி" என்று தொடங்கி,

(வி-ரை) பரங்கருணைக் குணங்கொள் அருள் - பரங்கருணையாவது அளவைகட் கெல்லாம் அப்பாற்பட்டது; பேரருள் என்றபடி; "நினையா வென்னெஞ்சை நினைவிப்பானை" என்று அரசுகள் விதந்து பாராட்டிய அருளின் தன்மை; பரங்கருணையாய் முகிழ்த்த அருள்;

கொண்ட - திருமேனி முழுதும் இடங்கொண்ட.

புணர்ந்த இசை - பண் நட்டராகமாகிய பதிக இசை; இயல்பிற் றுனே வந்து சொல்லோடு பொருந்திய என்பார் **புணர்ந்த** என்றூர். *73*

3228. (இ-ள்) *அன்னே...புறம்பணைந்து* - "அன்னே! உன்னையல்லாலினியாரை நினைக்கேன்" என்று துதித்து ஒப்பற்ற பெருமையினையுடைய பதிகமாலையினைச் சாத்தி வணங்கிப் புறத்தே அணைந்து; *மன்னும்... மகிழ்ந்து* - நிலைபெற்ற அத்திருப்பதியில் சிலநாள்கள் எழுந்தருளித் திருத்தொண்டர்களுடன் கூடி மகிழ்ந்தருளி; *பொன்னிக் கரையின்...போதுவார்* - காவிரியின் கரையில் இரண்டு பக்கமும் உள்ள **பதிகளைப் பணிந்து** மேற்குத் திசை நோக்கிச் செல்வாராகி;

(வி-ரை) "அன்னே...நினைக்கேன்" என - இது பதிகத்தின் மகுடமும் கருத்துமாம்; "யாரை நினைக்கேன்" என்றது இறைவர் "நினைக்க மறந்தாயோ?" என்ற சரித வரலாற்றுக்கு அகச்சான்றுகும்.

தன் நேரில்லாப் பதிகமலர் - தன் - தனக்கு; **நேர் -** ஒப்பு; இப்பதிகத்தின் ஒப்பற்ற தன்மை அதனை இந்நாளிலும் பெரிதும் மக்கள் விரும்பிப் பயின்று வருதலானுமறியப்படும். இப்பதிகத்தினுள் இறைவரை அன்னே, கேள், எம்மான், அண்ணு எனப் பலபடப் பாராட்டிய உரிமைத் திறம் காண்க.

திருச்சோற்றுத்துறை

திருச்சிற்றம்பலம் **பண் - கௌசிகம் 7-ம் திருமுறை**

அழனீ ரொழுகி யனைய சடையும், உழையீ ருரியு முடையா னிடமாம்
கழைநீர் முத்துங் கனகக்குவையும், சுழனீர்ப் பொன்னிச் சோற்றுத் துறையே. (1)

இலையா லன்பா லேத்து மவர்க்கு, நிலையா வாழ்வை நீத்தா ரிடமாந்
தலையாற் ருழுந் தவத்தோர்க் கென்றுந், தொலையாச் செல்வச் சோற்றுத்துறையே. (9)

சுற்ருர் தருநீர்ச் சோற்றுத் துறையுண், முற்ரு மதிசேர் முதல்வன் பாதத்
தற்ரு ரடியா ரடிநா யூரன், சொற்ரு னிவைகற் ருர்துன் பிலரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவரது இடம் சோற்றுத்துறையே. இதனுள் இறைவரது இலக்கணங்கள் பலவும் பேசப்பட்டன. (பிள். திருநெல்விக்கா - பார்க்க).

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) அழல்நீர் ஒழுகி அனைய சடை - நெருப்பே உருகி நீர்போல் ஒழுகினாற்போலும் சிவந்த சடை; செஞ்சடை; **உழை** - மான்; **கழை** - கரும்பு; **கழைநீர் முத்து** - கரும்பினின்றும் விளையும் நீர்மையுடைய முத்து; **சுழல் நீர்** - சுழலும்படி அலைத்து வரும் நீர்;—**(2) பண்டை வினைகள்** - மூல கன்மங்கள் முதலிய பழவினைகள்; **இடையருத அன்பு** - இடையில் எக்காலமும் அறுதலில்லாத அன்புடைய;—**(3) ஆலும்** - அசைந்தாடும்;—**(4) பளிக்குத்தாரை போல் நூல்** - பவளம்போற் றிகழும்; மார்பில் பூணூல் வளைந்து கிடத்தல் பவள மலையிற் பளிங்குத் தாரை கிடந்ததுபோல உள்ளதென்பது; உரு உவமம்;—(5) கூற்றுக்கு உதையும், ஒல்கா விதிக்கு வதையும் செய்த என்க. **ஒல்குதல்**- வளைதல். ஈண்டுத் தலைவணங்குதல் குறித்தது; **விதி** - படைத்தற்றொழிலுடைய பிரமன்; **விதித்தல்** - படைத்தல்; விதி செய்பவனை விதி என்றார்; **வதை** - சிரங்கிள்ளுதல்; **மைந்து**- வல்லமை; **திதையும்** - செறியும்;—**(6) பேதை** - பேதையாகிய (பெண்) அம்மையைப் பாகமுடைய; பேதைமையுடை என்றலுமாம்; பேதைமையாவது கடலில்வந்த அமிர்தத்தைத் தாம் உண்ணாது அமரருக்கு ஈந்து; விடத்தைத் தாம் எடுத்து உண்டமை; **எரியைக் காலும்** - எரிபோன்ற தளிர்களைக் காட்டித் தழைகின்ற; **சூதம்** - மா;—**(7) சிறந்தார்...துறந்தார்** - பற்றுக்களை விட்டோர்;—**(8) ஓமக்கனல்** - ஓமத்தில் எழுந்து அவியுண்பது போன்று உண்ட என்பது குறிப்பு; **சேக்கை** - பள்ளியறை;—**(9) இலை** - அருச்சிக்கும் தழை; **நிலையா வாழ்வை நீத்தார்** என்றதனால் நிலைத்த பெருவாழ்வு தருபவர் என்பது குறிப்பு; **தொலையாச் செல்வம்** - அளவில்லாத சிவச் செல்வம்; **அற்ருர் அடியார்** - வேறு பற்று அற்றவர்களாகிய அடியவர்கள்.

தலவிசேடம்:— **திருச்சோற்றுத்துறை** - III - **பக். 473** பார்க்க.

திருக்கண்டியூர் - திருப்பூந்துருத்தி - திருவாலம்பொழில் - இவற்றிற்கு நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!

3227. அணைந்து திருக்கோ புரமிறைஞ்சி யன்பர் சூழ வுடன்புகுந்து
பணங்கொ ளரவ மணிந்தார்முன் பணிந்து வீழ்ந்து பரங்கருணைக்
குணங்கொ ளருளின் றிறம்போற்றிக் கொண்ட புளகத்துடனுருகிப்
புணர்ந்தவிசையாற்றிருப்பதிகம் "**பொன்னார்மேனி**"யென்றெடுத்து, 73

3228. "**அன்னே யுன்னை யல்லாலியா ருரை நினைக்கே**" னெனவேத்தித்
தன்னே ரில்லாப் பதிகமலர் சாத்தித் தொழுது புறம்பணைந்து
மன்னும் பதியிற் சிலநாள்கள் வைகித் தொண்ட ருடன்மகிழ்ந்து
பொன்னிக் கரையி னிருமருங்கும் பணிந்து மேல்பாற் போதுவார். 74

திருவையாறு - *நம்பிகள் இந்த யாத்திரையிற் பாடியருளிய பதிகமும் கிடைத்திலது! "பரவும் பரிசு" என்ற பதிகம் பின்னர் அருளப்பட்டது. (3881-கழறிற்-புரா-134 பார்க்க.)*

3227. (இ-ள்) *அணைந்து...புகுந்து - சேர்ந்து திருக்கோபுரத்தை வணங்கி அன்பர்கள் உடன் சூழ்ந்துவரத் திருக்கோயிலின் உள்ளே புகுந்து; பணங்கொள்...வீழ்ந்து - படத்தினையுடைய பாம்பினை அணிந்த இறைவரது திருமுன்பு பணிந்து நிலமுற வீழ்ந்து எழுந்து; பரங்கருணை...எடுத்து - அளக்கலாகாத கருணைத் தன்மையினை உட்கொண்ட பேரருளின் திறத்தினைத் துதித்துத் திருமேனி முழுதும் மயிர்க்கூச்செறிய உள்ளமுருகி இசையுடன் கூடிய திருப்பதிகத்தினைப் "பொன்னார், மேனி" என்று தொடங்கி,*

(வி-ரை) பரங்கருணைக் குணங்கொள் அருள் - பரங்கருணையாவது அளவைகட் கெல்லாம் அப்பாற்பட்டது; பேரருள் என்றபடி; "நினையா வென்னெஞ்சை நினைவிப்பானை" என்று அரசுகள் விதந்து பாராட்டிய அருளின் தன்மை; பரங்கருணையாய் முகிழ்த்த அருள்;

கொண்ட - திருமேனி முழுதும் இடங்கொண்ட.

புணர்ந்த இசை - பண் நட்டராகமாகிய பதிக இசை; இயல்பிற் றானே வந்து சொல்லோடு பொருந்திய என்பார் **புணர்ந்த** என்றார். 73

3228. (இ-ள்) அன்னே...புறம்பணைந்து - "அன்னே! உன்னையல்லாலினியாரை நினைக்கேன்" என்று துதித்து ஒப்பற்ற பெருமையினையுடைய பதிகமாலையினைச் சாத்தி வணங்கிப் புறத்தே அணைந்து; மன்னும்... மகிழ்ந்து - நிலைபெற்ற அத்திருப்பதியில் சிலநாள்கள் எழுந்தருளித் திருத்தொண்டர்களுடன் கூடி மகிழ்ந்தருளி; பொன்னிக் கரையின்...போதுவார் - காவிரியின் கரையில் இரண்டு பக்கமும் உள்ள **பதிகளைப் பணிந்து** மேற்குத் திசை நோக்கிச் செல்வாராகி;

(வி-ரை) "அன்னே...நினைக்கேன்" என - இது பதிகத்தின் மகுடமும் கருத்துமாம்; "யாரை நினைக்கேன்" என்றது இறைவர் "நினைக்க மறந்தாயோ?" என்ற சரித வரலாற்றுக்கு அகச்சான்றாகும்.

தன் நேரில்லாப் பதிகமலர் - தன் - தனக்கு; **நேர்** - ஒப்பு; இப்பதிகத்தின் ஒப்பற்ற தன்மை அதனை இந்நாளிலும் பெரிதும் மக்கள் விரும்பிப் பயின்று வருதலானுமறியப்படும். இப்பதிகத்தினுள் இறைவரை அன்னே, கேள், எம்மான், அண்ணா எனப் பலபடப் பாராட்டிய உரிமைத் திறம் காண்க.

பொன்னிக்கரையின் இருமருங்கும் - இதுவரை காவிரித் தென்கரை வழியே சென்றருளிய நம்பிகள், இறைவரால் நினைவிலூட்டப்பெற்ற இதன் பின், இருமருங்கும் சென்று வழிபட்டனர் என்பதாம்; இவ்வாறு சென்றருளிப் பணிந்த பதிகள், வடகரையில் திருஅன்பிலாலந்துறை, திருத்தவத்துறை, வடகரைத் திருமாந்துறை முதலியனவும், தென்கரையில் திருக்கானூர், திருநியமம், திருவேங்கூர் முதலியனவுமாம் என்பது கருதப்படும். இவற்றுக்கு நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!

மேல்பால் - காவிரியின் வரவு நோக்கியவாறே மேற்குத் திசையில். **போதுவார் - அணைந்து** - என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடித்துக்கொள்க. 74

திருமழபாடி

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித் தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ பாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினி யாரை நினைக்கேனே. (1)

ஏரார் முப்புரமு மெரி யச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழ பாடியுண் மேயவனைச்
சீரார் நாவலர்கோ னாரூர னுரைத்ததமிழ்
பாரோ ரேத்தவல்லார் பர லோகத் திருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் 3228 காட்டியருளியபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பொன்னார் மேனி - பொன் - பொன் நிறம்; பொன்போன்ற திருமேனி; "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி" (கழறிற்); **மின்னார் செஞ்சடை** - "பொலிந் திலங்கு மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ் சடை; **மிளிர்** - சடையின் மேலும் விளங்கும்; **மாணிக்கம்** - தலச்சுவாமி பெயர் - "வயிர மணித்தூண்" என்ற குறிப்புப் பதிக முழுதும் குறித்தல் காண்க;—(2) கீளும் கோவணமும்; **கேள்** - சுற்றம்;—**(3) எம்மான்** - தந்தை; **எம்மனை** - தாய்; சுற்றம் என்ற பொருளில் வந்தன;

பிறந்தே இறந்து - பிறந்தும் இறந்தும்;—**(4) பண்டே...ஒழிந்தேன்** - திருத்தொண்டத் தொகை அருளிய உட்கோளும் அடிமைத் திறமும் குறிக்கப்பட்டன; **தொடராமை** - பிறவியில் மேலும் மேலும் வாராதபடி;—**(5) அருத்தம்**-செல்வம்; உள்ளீடு என்றலுமாம்; **தமிழ்** - வீடுபேற்றுக்கேதுவாகிய தமிழ்;—**(6) நாளார்** - காலம்; ஆர்விகுதி சிறப்புக் குறித்த திணை வழுவமைதி; **மாளாநாள்** - நித்தியமாகிய வீடுபேறு;—**(7) மைந்து** - அழகு; வலிமையுமாம்;—**(9) குறியே** - குறிக்கொண்ட பொருளே; "குறுமா ணுருவன் றற்குறி யாகக் கொண்டாடும்" (தேவா);—**(10) கொங்கை** - கொங்கையினையுடைய அம்மை.

3229. செய்ய சடையார் **திருவானைக் காவி லணைந்து** திருத்தொண்டர்
எய்த முன்வந் தெதிர் கொள்ள விறைஞ்சிக் கோயி லுட்புகுந்தே
ஐயர் கமலச் சேவடிக்கீ ழார்வம் பெருக விழுந்தெழுந்து
மெய்யு முகிழ்ப்பக் கண்பொழிநீர் வெள்ளம் பரப்ப விம்முவார். 75

3230. ``மறைக ளாய நான்கு``மென மலர்ந்த செஞ்சொற் தமிழ்ப்பதிகம்
நிறையுங் காத லுடனெடுத்து நிலவு மன்பர் தமைநோக்கி
``இறையும்பணிவா ரெம்மையுமா ளுடையா``ரென்றென் றேத்துவார்
உறையூர்ச் சோழன் மணியாரஞ் சாத்துந் திறத்தை யுணர்ந்தருளி, 76

தலவிசேடம்:— **திருமழபாடி** - III -பக் 828 பார்க்க.

3229. (இ-ள்) வெளிப்படை. சிவந்த சடையினையுடைய இறைவரது திருவானைக்காவில் அணைந்து திருத்தொண்டர்கள் சேர முன்னே வந்து எதிர்கொள்ள வணங்கித் திருக்கோயிலினுள்ளே புகுந்து இறைவரது தாமரைபோன்ற திருவடிகளின் கீழே ஆசைபெருக விழுந்து எழுந்து திருமேனி முழுதும் உரோம புளகம் போர்ப்பக் கண்களினின்றும் ஆனந்த வெள்ளம் பாயத் திளைப்பாராகி,

(வி-ரை) செய்ய-சிவந்த; செம்மை தருகின்ற என்றலுமாம்.

எய்த - ஒருசேர - ஒன்று கூட வர; பொருந்த என்றலுமாம்.

விம்முதல் - அன்பு மீதூரத் திளைத்தலால் உடல் அசைதல். 75

3230. (இ-ள்) மறைகளாய...எடுத்து - "மறைகளாயின நான்கும்" என்று தொடங்கி விரிந்த செஞ்சொற்களாலாகிய தமிழ்ப் பதிகத்தினை நிறையும் பெருவிருப்பத்துடன் தொடங்கி; நிலவும்...ஏத்துவார் - நிலை பெறும் அன்பர்களைப் பார்த்து "இறையும் பணிவார் எம்மையு மாளுடையாரே" என்றென்றேத்துவார்; உறையூர்...உணர்ந்தருளி - உறையூர்ச் சோழரது மணியாரத்தை இறைவர் அணிந்து ஏற்றுக்கொண்டருளிய திருவருட்டிறத்தினை உணர்ந்தருளி,

(வி-ரை) மறைகளாய நான்கும் - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு. **அன்பர்...என்றென்று ஏத்துவார்** - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம். "இறைவ னென்றடி சேர்வா ரெம்மையு மாளுடை யாரே" என்பது முதலாக அடியார் வணக்கமாகிய இக்கருத்தினைப் பதிகப் பாட்டுதோறும் காண்க; "எம்மையுமாளுடை யாரே" என்பது மகுடம்; இப்பதிகம் நம்பிகள் தம்மை எதிர்கொள்ள வந்த அடியார்களை நோக்கி அருளியது என்பதனை ஆசிரியர் அறிவித்தபடி; **என்றென்று ஏத்துவார் என்றென்று**-பாட்டுத்தோறும்; பலமுறையும்; **ஏத்துவார்** - இஃது அடியாரைப் போற்றியபடி என்பதாம்.

உறையூர்ச்சோழன்...உணர்ந்தருளி - இச்சரித வரலாறு மேல்வரும் பாட்டில் விரிக்கப்படுவது. **உணர்ந்தருளி** - திருவுள்ளக் குறிப்பிற் கொண்டு அதனல்; வினையெச்சம்

3231. வளவர் பெருமான் மணியாரஞ் சாத்திக் கொண்டுவரும்பொன்னிக்
கிளருந் திரைநீர் மூழ்குதலும் வழுவிப் போகக் கேதமுற
அளவி றிருமஞ் சனக்குடத்து ளதுபுக் காட்ட வணிந்தருளித்
தளரு மவனுக் கருள்புரிந்த தன்மை சிறக்கச் சாற்றினார். 77

காரணப்பொருளில் வந்தது. உணர்ந்தருளிச் சாற்றினார் என மொழி மாற்றி முடிக்க. **சோழன்** - சோழனுடைய என ஆறும் வேற்றுமைத் தொகை. **ஆரம்**- ஆரம் - ஆரத்தை; இரண்டனுருபு விரிக்க. **சாத்தும்** - இறைவர் அணிந்து கொள்வார்; "ஆரங்கொண்ட" (பதிகம்) பதிகத்துள் 7-வது திருப்பாட்டில் இச்சரிதம் போற்றப்படுதலால் ஆசிரியர் இதனை விதந்தெடுத்துக் காட்டியருளினார். **இறையும்** - சிறிதேனும்.

உறையூர்ச் சோழன் - உறையூர் திருவானைக்காவின் அண்மையில் உள்ளது; சோழரது தலைநகரங்களுள் ஒன்று. 76

3231. (இ-ள்) வளவர் பெருமான்...கேதமுற - சோழ அரசர் மணியாரம் அணிந்து கொண்டபடியே காவிரியின் கொழிக்கும் அலைகளையுடைய நீரிலே மூழ்குதலும் அது நீரினுள் தவறி வீழ்ந்து போக அதனால் அரசன் வருத்தமுற; அளவில்.... அணிந்தருளி - அளவில்லாத திருமஞ்சனக் குடத்தினுள் அது புகுத மஞ்சனம் ஆட்டியபோது அதனை இறைவர் அணிந்தருளி; தளரும்...சாற்றினார் - மனந்தளர்ந்திருந்த அவ்வரசனுக் கருள்புரிந்த தன்மையினைச் சிறப்பித்து ஏத்தியருளினார்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) இத்திருப்பாட்டுத் "தாரமாகிய பொன்னி" என்ற பதிகத் திருப்பாட்டினை விரிவுரை செய்து, அதிற்குறித்த இத்தலச் சரித வரலாற்றினை விளக்கியது.

சாத்திக்கொண்டு - அணிந்துகொண்டபடியே.

கிளருந் திரைநீர் - அலைப்பெருக்குடைய நீர்ப்பருவக் குறிப்பு.

வழுவிப்போக - நழுவி நீரினுள் வீழ்ந்துவிட.

கேதமுற - அரசன் வருந்த; **கேதம்** - வருத்தம்.

அளவில் - அளவு படுத்தி அறியமுடியாத பெருமையுடைய. திருமஞ்சனப் பணிக்கருவிச் சிறப்பு.

அதுபுக்கு ஆட்ட... அருள் புரிந்த தன்மை - ஆரம் நழுவியபோது அரசன் "இறைவரே நீர் இதனை ஏற்றுக்கொண்டருளுக" என வேண்ட, அவ்வாறே அதனைத் திருமஞ்சனக் குடத்துள் புகச்செய்து அத்திருமஞ்சன நீரினை ஆட்டும் போது நீரினுடனே அதனைத் தமது திருமேனியில் அணிந்தருளினார் என்பது "நின்மல! கொள்ளென வாங்கே, ஆரங்கொண்ட" என்ற பதிகத்தாற் பெறப்படும்.

சிறக்க - யாவரும் சிறப்பா யறியும்படி; ***சாற்றினர்*** - எடுத்துப் போற்றினர். தலவரலாறுதலின் இறைவரது அருளின் பெருமை குறிக்க அதனைச் சிறக்கச் சாற்றினர் என்பது.

திருவாரம் - என்பதும் பாடம். 77

திருவானைக்கா

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம். 7-ம் திருமுறை**

மறைகளாயின நான்கும் மற்றுள பொருள்களு மெல்லாந்
துறையுந் தோத்திரத் திறையுந் தொன்மையு நன்மையு மாய
அறையும் பூம்புன லானைக் காவுடை யாதியை நாளும்
இறைவ னென்றடி சேர்வா ரெம்மையு மாளுடையாரே. (1)

தார மாகிய பொன்னித் தண்டுறை யாடி விழுத்தும்
நீரி னின்றடி போற்றி நின்மல கொள்ளென வாங்கே
ஆரங் கொண்டவெம் மானைக் காவுடை யாதியை நாளும்
ஈர முள்ளவர் நாளு மெம்மையு மாளுடை யாரே. (7)

ஆழி யாற்கரு ளானைக் காவுடை யாதிபொன் னடியின்
நீழ லேசர ணுக நின்றருள் கூர நினைந்து
வாழ வல்லவன் ரொண்டன் வண்டமிழ் மாலைவல் லார்போய்
ஏழு மாபிறப் பற்று வெம்மையு மாளுடை யாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் முன் (3230) காட்டியருளியவாறு கண்டுகொள்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) துறையும் தோத்திரம் - துறைகளிலுமாகிய தோத்திரம்; **தோத்திரத்து இறை** - தோத்திரங்களுக் கெல்லாம் நுதலிய பொருளாகிய முதல்வன்; வேதங்களும் எவ்வகைக் கீதங்களும் எப்பொருளையேனும் எத்தெய்வத்தை யேனும் சொல்லினும் அவற்றிற்கெல்லாம் பொருளாகும் முழு முதல்வன்; **இறையும், தொன்மையும், நன்மையும் ஆகிய ஆதி** - என்று கூட்டுக; **நாளும் சேர்வார்** என்க. **இறைவன் என்று** - இவரே முழுமுதல்வன் என்றுட் கொண்டு; **சேர்வார்** - சேரும் அடியவர்கள்; "எதிர்கொள்ள வந்து நிலவும் அன்பர்" (3230); **எம்மையும்** - உம்மை ஆட்கொள்ளத் தகுதிபெருத எம்மையும் என்று இழிவு சிறப்பும்மை;—**(2) வங்கம்** - கப்பல்; **வங்கமேவிய** என்றது வேலைகளின் பொதுவியல்பு; **வஞ்சகர்கள்** - தேவர்கள், முதல்வனுதலின் முதலில் வந்தவிடத்தினை நீ உண்டபின் நாங்கள் பின்னர் எழுந்த அமுதினைப் பின் உண்போம் என்று வேண்டிய நயப்பாடு **வஞ்சம்** எனப்பட்டது; **அடராமை** - வருத்தாதபடி;—**(3) நேரிழை** - கங்கை; **கொன்றை... அரவங்கள்** - உம்மைத் தொகை; **ஏலுமாறு** - பொருந்திய வகையால்;—**(4) பந்தம்** - தன்னின் நீங்காது பிணிப்பவன்;— (5) தீ கணையாக அரவம் நாணுகக், கல் சிலையாகக் கொண்டு என்க; **கல்** - மேரு மலை; **வளையும் சிலை** - வளையும் வில்; இதனல் வளையாத கல்லினை என்பது கொள்ளக் கிடக்கும்

3232. சாற்றி யங்குத் தங்குநாட் டயங்கும் பவளத் திருமேனி
நீற்றர் கோயி லெம்மருங்குஞ் சென்று தாழ்ந்து நிறைவிருப்பாற்
போற்றி யங்குநின்றும்போய்ப் பொருவிலன்பர் மருவியதொண்
டாற்றும் பெருமைத் **திருப்பாச்சி லாச்சி ராமஞ்** சென்றடைந்தார். 78

நயம் காண்க; —(6) **விலையிலி** - விலை அளவுபடாத; **கலன்** - சங்கு மணிப்பூண் முதலியவற்றை அணியாக் கொண்டமை குறித்து நின்றது;—(7) **தாரம்** - ஆதாரம் என்பது தாரம் என நின்றது; தாரகம் - தாங்குவது என்க. **விழுத்துநீர்** - விழுமிய ஆற்றுநீர்; **''நின்மல கொள்''** என இறைவரே இதனைத் தேவியாரே ஏற்றுக்கொண்டதாக என்று; **ஆங்கே** - அவ்வாறே; இது தல சரிதங்களுள் ஒன்று; மேல் ஆசிரியர் (3231) இதனை விதந்தெடுத்துக் காட்டியமை இதன் சிறப்பினை யுணர்த்தும்;—(8) **உரவம்** - வலிமை; **இரவும்-பகலும்** - இறைவரை எப்போதும் மறவாதேத்துதல் வேண்டும் என்பது; —(9) **காலனைக் காலாற் கலங்கச்** செய்வானை என்றும், காமனைக் கலங்கக் கண் சிவந்தானை என்றும் உரைக்க; **கலங்க** என்பதனை ஈரிடத்தும் கூட்டுக; **காலனும் காமனும்** உயிர் போயபின் உயிர்ப்பிக்கப் பெற்றபடியால் நிலைகலங்குதல் மட்டும் நிகழ்ந்ததென்பது குறிப்பு; **அலங்கல்** - அழகு; **பொரும்** - அலைத்துவரும்;—(10) **ஆழியான்** - சக்கரமுடைய விட்டுணு.

தலவிசேடம்:- திருவானைக்கா - தொகுதி III- பக்கம் 675 பார்க்க.

3232. (இ-ள்) சாற்றி...நாள் - முன் கூறிய தமிழ்மாலை சாற்றி அத்திருப்பதியில் தங்கியிருக்கும் நாட்களிலே; தயங்கும்...போற்றி - விளங்கும் பவளம் போன்ற திருமேனியில் திருநீற்றினையுடையவரது திருக்கோயில்கள் எப்பக்கத்தும் உள்ளனவற்றைச் சென்று பணிந்து நிறையும் விருப்பினாலே துதித்து; அங்கு நின்றும் போய் - அங்கிருந்து மேல்சென்று; பொருவிலன்பர்...அடைந்தார் - ஒப்பற்ற தொண்டர்கள் பொருந்திய திருத்தொண்டு செய்யும் பெருமையுடைய திருப்பாச்சிலாச்சிராமத்தினைச் சென்று அடைந்தருளினர்.

(வி-ரை) சாற்றி - முன் பாட்டிற் கூறியவாறு பதிகம் சாற்றி முற்றுவித்து; **பவளத் திருமேனி நீற்றர்** - பவளம் போன்ற திருமேனிமேல் திருநீற்றினை உடைய இறைவர். "பவளம்போன் மேனியிற் பால் வெண்ணீறும்" (தேவா.)

கோயில் எம்மருங்கும் சார்ந்து—இவை திருச்சிராப்பள்ளி, உறையூர் (திருமூக்கீச்சரம்), திருக்கற்குடி முதலாயின என்பது கருதப்படும்.

போற்றி - இப்பதிகங்கள் கிடைத்தில!

பொருவில் - ஒப்பற்ற; **பொரு** - ஒப்பு.

பொருவில்...பெருமை - இப்பதியில் வழி வழியாய்ச் சிவனடிமைத் திறத்து நின்ற கொல்லிமழவன் சரிதக்குறிப்பும், அவர் போன்ற தொண்டர்களின் பணியும் பெற வைத்தார். ஆளுடைய பிள்ளையார் புராணம் (2209—2218) பார்க்க. அதன் முன்னும் அந்நாள் முதல்

3233. சென்று திருக்கோ புரமிறைஞ்சித் தேவர் மலிந்த திருந்துமணி
முன்றில் வலங்கொண் டுள்ளணைந்து முதல்வர் முன்னம்வீழ்ந்திறைஞ்சி
நன்று பெருகும் பொருட்காத நயப்பும் பெருக நாதரெதிர்
நின்று பரவி நினைந்த பொரு ளருளா தொழிய நேர்நின்று, 79

3234. **அன்பு நீங்கா வச்சமுட னடுத்த திருத்தோ ழமைப்பணியால்**
பொன்பெ ருத திருவுள்ளம் புழுங்க வழுங்கிப் புறம்பொருபால்
முன்பு நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பா டுடையார்போல்
என்பு கரைந்து "பிரானார்மற் றிலையோ?" வென்ன வெடுக்கின்றார். 80

இந்நாள் வரையும் தொண்டர் பணிவிடைகளின் பெருமை இப்பதியில் நிகழ்ந்து வந்ததென்பது **தொண்டாற்றும்** பெருமை என்பதனுற் பெறவைத்தார். இனி, நம்பிகளால், முன்னிலைப் படுத்தி இங்குப் பதிகம் பாடநின்ற பெருமையுடைய தொண்டர்களின் தன்மைக் குறிப்புமாம்.
78

3233. (இ-ள்) சென்று... வீழ்ந்திறைஞ்சி - சென்று திருக்கோபுரத்தினை வணங்கித் தேவர்கள் பெருகியுள்ள திருந்தப்பாடுடைய அழகிய திருமுற்றத்தினை வலமா வந்து உள்ளே அணைந்து இறைவரது திருமுன்பு நிலமுற விழுந்து வணங்கி; நன்று...பரவி - நன்மை பெருகும் பொருள் பெறும் காதலினுல் அவ்விருப்பம் பெருக இறைவரெதிரே நின்று துதித்து; நினைந்த...நேர்நின்று - தாம் எண்ணிய பொருளினை இறைவர் அருளாதொழியத் திருமுன் புக்கு நேரேநின்று,

(வி-ரை) தேவர் மலிந்த திருந்து மணிமுன்றில் மலிதல்ாவது உட்புக்குச் சேவை செய்வதற்குக் காலம் பார்த்தும், உத்தரவை எதிர்நோக்கியும் கூடிக் காத்துக் கிடத்தல்.

நன்று பெருகும் பொருள் - நன்மை பெருகும்படி சிவ புண்ணியமாகிய மாகேசுர பூசைக்கும் ஆண்டவர் திருவிழாவுக்கும் பயன்படும் பொருள்.

காதல் நயப்பு - காதலினுல் வந்த விருப்பம்.

பரவி - பரவிய பின்னும்; உம்மை தொக்கது.

நினைந்த பொருள் - நினைந்து விரும்பி வேண்டிய பொருள்.

அருளாதொழிய - இறைவர் அருள்புரியாது நிற்க.

நேர் நின்று - திருமுன்பு நின்றவாறே - திருமுன்பு விட்டகலாது அங்கிருந்த படியே.
79

3234. (இ-ள்) அன்பு நீங்கா...பணியால்-அன்பு மாருத அச்சத்துடனே பொருந்திய திருத்தோழமைப் பணிவிடையினுலே; பொன் பெருத...அழுங்கி - தாம் விரும்பியவாறே இறைவர்பாற் பொன் கிடைக்கப் பெருத திருவுள்ளத்தில் புழுக்கம் நிகழ வருந்தி; புறம் பொருபால்...உடையார்போல் - புறம்பு நின்ற திருத்தொண்டர்களை முகநோக்கி முறைப்பாடு உரைப்பவர் போல; என்பு...எடுக்கின்றார் - எலும்பும் கரைந்துருகப் "பிரானுர் மற்றிலையோ?"

வேறு

3235. நித்தமு நீங்கா நிலைமையி னீங்கி
நிலத்திடைப் புலங்கெழும் பிறப்பால்
உய்த்தகா ரணத்தை யுணர்ந்துநொந் தடிமை
யொருமையா மெழுமையு முணர்த்தி
**''யெத்தனை யருளா தொழியினும் பிரானு
ரிவரலா தில்லையே?''** யென்பார்
''வைத்தனன் றனக்கே தலையுமென் னாவு''
மெனவழுத் தினார்வழித் தொண்டர். 81

என்ற கருத்துட் கொண்ட மகுடம் அமையப் பதிகத்தினைத் தொடங்குகின்றாராய்.

(வி-ரை) அன்பு நீங்கா அச்சமுடன் - அன்பு நிகழ்ந்தபோது அச்சமுறார், அச்சம் வந்தபோது அன்பும் நிலைபெறா; அவ்வாறன்றி ஈண்டு இரண்டும் ஒருங்கே நிகழ்ந்தன. ''அச்சந், தாய்தலை யன்பின் முன்பு நிற்குமே'' (574) என்ற கருத்துக் காண்க.

அடுத்த தோழமைப் பணியால் - பதிகத்தின் வரும் கருத்து; தோழமை உரிமைபற்றி எழுந்தது என்பதாம்.

பொன் பெறாத - தாம் வேண்டியவாறு பொருள் பெறாத காரணத்தால்; **பொன் -** அந்நாளில் பொற்காசுகளே நாணயமாக வழங்கி வந்தன என்பது சரித வரலாற்றாலறிக.

புறம் பொருபால்...உடையார்போல் - இறைவரது திருமுன்பு நின்றபடியே அவரது முகமாகப் பாராமல், அப்புறம் திரும்பிப் புறம்பு நின்ற தொண்டர்களை முகநோக்கி முறைப்பாடு அறிவிப்பார்போல; **முறைப்பாடு உடையார் -** முறை அறிவிப்பார்; **முகப்பே -** முக நோக்கி.

என்பு கரைந்து - அன்பினால் எலும்பும் கரைய உருகி.

''பிரானார் மற்றிலையோ?'' என்ன - இது பதிகக் கருத்தும் குறிப்புமாகிய மகுடம்; இதன் கருத்தினை மேல்வரும் பாட்டில் ஆசிரியர் விரித்தல் காண்க.

எடுக்கின்றார் - பதிகம் தொடங்குகின்றாராகி; முற்றெச்சம். எடுக்கின்றார் - உணர்த்தி - என்பார் - வழுத்தினர் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க 80

3235. (இ-ள்) நித்தமும்...நொந்து - ஒருநாளும் நீங்குதலில்லாத நிலைமையின் (திருக்கயிலையினின்றும்) நீங்கி இந்நிலத்தினிடத்தின் அறிவுடன் பொருந்தும் பிறவியினிடத்துச் செலுத்திய காரணத்தை மனத்தில் உணர்ந்து வருந்தி; அடிமை...உணர்த்தி - அடிமைத் திறத்தின் ஒருமைப்பாடானது ஏழுபிறப்பிலும் தொடரும் நிலையினை எடுத்துக்கூறி; ''எத்தனை...என்பார் - எவ்வளவும் திருவருள் புரியாதொழிந்தாலும் பிரானார் இவரல்லாது இல்லையோ?'' என்பாராய்;

வைத்தனன்...வழித் தொண்டர் - "வைத்தனன் றனக்கே தலையுமென் நாவும்" என்று தொடங்கித் துதித்தருளினர் வழித்தொண்டராகிய நம்பிகள்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பதிகப்பாட்டின் யாப்பின்படியே சரிதம் கூறத்தொடங்கும் யாப்பமைதி காண்க. இஃது ஆசிரியரது கவி மரபுகளுள் ஒன்று.

நித்தமும்... உணர்ந்து - நொந்து - திருக்கயிலாயத்தினின்றும் மண்ணிலே வந்த பிறவியின் காரணத்தை உணர்ந்து மனம் வருந்தி; இவ்வரலாறு திருமலைச் சிறப்பிலும் தடுத்தாட்கொண்ட புராணத்திலும் விரித்துரைக்கப்பட்டது.

நித்தமும் நீங்கா நிலைமையின் - நீங்குதலாவது, திருமேனி யிருப்பினலே பிரியினும் நினைவினலே ஒருபோதும் பிரியா நிலையிற் பிரிதல்; இது கயிலையினின்றும் பிரிந்து வரும்போது "மையன் மானுட மாய்மயங் கும்வழி யைய னேதடுத் தாண்டருள் செய்யென" (38) வரங் கேட்டு அவ்வாறே அருளப் பெற்றுப் போந்த வரலாற்றினலறியப்படும்; இவ்வாறன்றி நித்தமு நீங்கா நிலைமையாகிய திருக்கயிலைத் திருத்தொண்டி னிலையினின்றும் நீங்குதல் என்றுரைத்தனர் முன்னுரைக்காரர்கள்;

நிலத்திடைப் புலங்கெழும்பிறப்பால் உய்த்த காரணத்தை உணர்ந்து நொந்து-புலங்கெழுமுதல் - இவ்வுலக நினைவினல் மூடப்படுதல்; **உய்த்த** - செலுத்திய; "தென்புவிமீது தோன்றி...அணைவா யென" ஆணையிட்ட; **பிறப்பால்** - பிறவியிலே; **ஆல்** என்ற மூன்றனுருபு ஏழனுருபின் கண் வந்தது; உருபு மயக்கம்; காரணமாவது "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத் தொண்டத் தொகை தர" (35) என்பது; "மாதர் மேன்மனம் போக்கிட" என்றது அதன் வழித்தாய்வந்த துணைக்காரணம்; **காரணத்தை உணர்ந்து நோத**லாவது தென்றிசை வாழ்ந்திடவுள்ள யாத்திரைகளும் அடியார் பணிகளும் நிகழவும், குறித்த இருமணங்களுள் எஞ்சி நின்ற திருமணம் நிகழ்ந்திடவும் உள்ள மேற்சரித வரலாறுகள் நடைபெறுதற் கின்றியமையாத பொருள் அருளப்பெறுது வருந்துதல்.

அடிமை ஒருமையாம் எழுமையும் உணர்த்தி - அடிமை ஒருமை - அடிமைத் திறத்தில் இரண்டுற மனம் வையாது சிவனேடு ஒன்றித்து நின்ற ஒருமைப்பாடு; **எழுமையும்** - ஏழுவகைப் பிறவியின் கண்ணேயும்; **உணர்த்தி** - அடியார் மாட்டு உரைப்பார் போன்று இறைவரிடம் விண்ணப்பித்து; ஒருமையாம் எழுமையு மடிமைத்திறம் இப்பதிகத்துட் பாட்டுத்தோறும் கண்டுகொள்ளத் தக்கது. 5-8-10-11-பாட்டுக்கள் பார்க்க; "உய்த்தனன் தனக்கே திருவடிக் கடிமை யுரைத் தக்கா லுவமனே யொக்கும்" என்ற முதற்பாட்டின் கருத்தினை எடுத்துக் காட்டும் வகையால் விரித்தபடி; பதிகம் 10-வது திருப்பாட்டுச் சிறப்பாய் எடுத்துக் காட்டப்பட்டது.

எத்தனை...என்பார் - இது பதிகக் கருத்தாகிய குறிப்பு. **எத்தனை** - எத்தனையும்; முற்றும்மை தொக்கது; "ஏழு பிறவியிலும் உணர்த்திச் சிறிதும் அருளா தொழியினும்" என்றுரைப்பாரு முண்டு.

வைத்தனன்...என - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

வழித்தொண்டர் - திருக்கயிலைத் தொண்டின் தொடர்ச்சியும், நம்பிகள் அவதரித்த மரபு "மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும்" மரபாதலும் குறிப்பு.

வன்றொண்டர்—என்பதும் பாடம். 81

திருப்பாச்சிலாச்சிராமம்.

திருச்சிற்றம்பலம் பண் - **தக்கராகம்**

வைத்தனன் றனக்கே தலையுமென் னாவு நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி
உய்த்தனன் றனக்கே திருவடிக் கடிமை யுரைத்தக்கா லுவமனே யொக்கும்
பைத்தபாம் பார்த்தோர் கோவணத் தோடு பாச்சிலாச் சிராமத்தெம் பரமர்
பித்தரே யொத்தோர் நச்சில ராகி **லிவரலா தில்லையோ பிரானார்**. (1)

ஏசின வல்ல விகழ்ந்தன வல்ல வெம்பெரு மானென்றெப் போதும்
பாயின புகழான் பாச்சிலாச் சிராமத் தடிகளை யடிதொழப் பன்னாள்
வாயினாற் கூறி மனத்தினா னினைவான் வளவய னாவலா ரூரன்
பேசின பேச்சைப் பொறுக்கிலா ராகி லிவரலா தில்லையோ பிரானார். (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் முன் (3235) காட்டியருளியவாறு கண்டுகொள்க; குறிப்பு: (1)இப்பதிகம் இறைவர் திருமுன்பு நின்றவாறே புறம்பு நின்ற அன்பர்களை முகநோக்கி முறைப்பாடு உரைப்பார்போல் அருளிச்செய்யப்பட்டது; (3234); **இவரலாது** - என்ற அணிமைச் சுட்டினால் நம்பிகள் அணிமையில் நின்று சுட்டிக் கூறிய திறம் வெளிப்பட உணரப்படும்; (2) இப்பதிகம் 12 திருப்பாட்டுக்களைக் கொண்ட சிறப்புடையது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) வைத்தனன் றனக்கே தலையும் என் நாவும் நெஞ்சமும் - " வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சுந் தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனை" (தேவா); **தனக்கே** - ஏகாரம் பிரிநிலை; "நித்தமுநீங்காநிலைமை" (3235) என்ற கருத்து; **வைத்தனன் - வைத்தலாவது** படைத்தளித்தல்; "பிறவிதானும் வகுத்தது" (சித்தி); **உவமனே ஒக்கும்** - உவமை யளவா யொழியும்; **பைத்த** - பையினை உட்கொண்ட; **ஓர்** - ஒருசிறிதும்; **நச்சிலர்** - விருப்பமில்லார்; **இவரலா தில்லையோ பிரானார்** - இவர் எங்கெங்குமுள்ளவராதலின் வேறு இவர் விளங்கும் இடங்களிலும் பெறுவேன் என்பது குறிப்பு. **பிரானார்** - அருள் தந்து ஆட்கொள்ளும் தலைவர். இல்லையோ என்ற ஓகாரம் இல்லையே என்ற ஏகாரப் பொருளில் வந்தது. எமக்குப் பதியாகிய பற்றுக்கோடாவர் - சாருமிடமாவார்-பிறரில்லையே ஆதலின் இவர்பாலே தான் வேண்டவுள்ளது. இதுவே கற்புடைய மங்கையர் பண்பு - ஆசிரியர் காட்டியருளியவாறு- பதிக இறுதிப் பாட்டும் பார்க்க. **பிரானார்** - அருள் தந் தாட்கொள்ளும் தலைவர்;—**(2) அடிகள்**-மிக்க பெருமையுடையாரைக் குறிக்கும் சிறப்பு மொழி; **பின்னையே** - இப்போதருளாது பின் காலத்திலே; "பின்னை யென்னார் பெருமானடிகளே" (தேவா);—**(3) உற்ற** - பயன் கைவரப்பெற்ற; **உள்ளமே**

- எண்ணிய அளவே; "காதல் நயப்புப் பெருக" "நினைந்த" (3233); **அன்னம் சூழ்தரு** - **பொய்கை** என்க; **பெற்றபோது** - பதிகம் பாடி விண்ணப்பித்தபோது; **(4) நாச்சில...என்கிலர்** - இவர் நமர் - இவர் பிறர் என்றும், இது நன்று-இது தீது என்றும் நாவினால் சில மொழிகளாலேனும் கூறுவாரலர்; **பூச்சு** - விளக்கமும்; சிறப்பு உம்மை தொக்கது; **பலரையும்...தரகிலர்** - பலர்க்கு அருள்பவர்; எனக்கு ஒரு பேச்சுமிலர்; நினைந்த தொன்றைத் தருவதுமிலர்;—**(5) எயில்** - மதில்; **வாட்டிய** - அழித்த; **புரிந்தவந்நாளே** - இடைவிடாது நினைந்து சொல்லிய அந்நாளிலேயே; **அடிமை** - **புரிந்த** - என்க; **புரிதல்** - இடைவிடாது சொல்லுதல்; "இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார்" (குறள்); **போகுநாள் வீழுநாளாகி** - வீணே கழிந்து இறப்பதற்கேதுவா யொழிகின்ற நாள் சிவனை விரும்பிய நாளாக ஆகி; **போகு நாள்** - சாதல் நாள்; **வீழுநாள்** - விரும்பும் நாள்; **வீழ்தல்** - விரும்புதல்; **ஆகி** - ஆதலினாலே; "இருள்சே ரிருவினையும் சேரா" என்ற திருக்குறட் கருத்தும் சொல்லும் பொருளும் காண்க; **இறைப்போதில்** - சிறிய காலத்திலே; **இறை** - சிறிது; கணத்திற் பிரிந்து போதல்; விரைவாய்ப் போதல் என்றும், இறைப் போதாயினும் பிரிதல் என்றும் உரைக்க நின்றது; **யாது சொன்னாலும்** - நினைந்த அளவிலே அருள்பவர் அடியேன் மறவாது எத்தனையும் சொன்னாலும் என்பது குறிப்பு;—**(6) செடித்தவம்** - பொய்த்தவம்; **அடித்தவம்** - வழிவழி யடிமை செய்யும் தவம்; **ஆவதும்** - அவ்வாறுவதனையும்; **பிடித்த வெண்ணீறே** - "பெருந்தவத் தோர்களுக் கெல்லாம் ஆசை கெடுப்பது நீறு" (தேவா) என்னும் தன்மையே பொருந்திய திருநீற்றினையே; அணியும் தவத்தவர்களுக்குப் பிறிதொன்றிலும் ஆசையின்றித் தன்னையே பற்றச் செய்யும் திருநீற்றினையே இவர் பூசியும், நான் அடித்தவமல்லாரையும் ஆரையுமறியேன் ஆவது மறிந்தும் இவ்வாறு அருளாது புறக்கணிப்பதாகில்; **பிடித்த** - அத்தன்மை கொண்ட; அடியார் பற்றுகப் பிடித்த என்றலுமாம்;—**(7) மெய்யரே யொத்தோர் பொய் செய்வதாகில்** - பற்றுக் கோடாகக் காட்டிப் பற்றுத்தராதொழியில்;—**(8) நிணம்** - மாமிசம்; **நெஞ்சமே** - சிவன்பாலன்பு கொண்ட மனமே; **தஞ்சம்** - பெறத் தக்க - அடையத் தக்க - உறுதிப் பொருள்; **கணம்** - ஒவ்வொரு கணமும்; முற்றும்மை தொக்கது; **படிந்து** - வணங்கி; நம்பிகளின் கூர்ந்த அன்பு நிலைக்குச் சிறந்த அகச்சான்று; 5-6-8-10-11 பாட்டுக்களுமிவ்வாறே காண்க. **பணம்** - படம்; நாகமணி என்றலுமாம்; **பிணம்...ஆடுவதாகில்** - உலக நிலையாமையினையும் தமது நிலைத்த தன்மையினையும் காட்டக் காட்டிலாடுவார், நிலையாமையினை உணர்ந்து சிவனையே பற்றி ஒழுகும் எனக்கு அருள வேண்டும் என்பது குறிப்பு;—**(9) குழைத்து** - நெஞ்சமுருக; **இழைத்த நாள் கடவார்-இழைத்தநாள்** - குறித்த ஆயுள்நாளின் எல்லை; **கடவார்** - அவ்வெல்லையினைக் கடக்க விடமாட்டார்; **பிழைத்தது பொறுத்து ஒன்று ஈகிலராகில்**-நினைந்து வேண்டியதனைத் தராமைக்கு என் பிழை காரணமாகில் அதனைப் பொறுத்து என்க;—**(10) துணிப்படும் உடை** - உரிவையுடை; **துணிப்படும்** - துண்டப்படுத்திப் பெற்ற - **பிணிப்பட ஆண்டு** - அடியான் என்று பிணித்து - கட்டுப்படுத்தி ஆட்கொண்டு; தடுத்தாட் கொண்ட வரலாற்றின் குறிப்பு. **பணிப்பு** - அருள்செய்து வழிப்படுத்தல்;—**(11) ஒருமையே...உருகும்** - இக்கருத்தை ஆசிரியர் முன் (3235) "அடிமை ஒருமையா மெழுமையும்" என விரித்தமை காண்க; **அருமையாம் புகழார்** - பேரடியார் என்பது; ஆளுடைய பிள்ளையாரின் இத்தல வரலாற்றுக் குறிப்புமாம்; **பெருமைகள் பேசி** - தடுத்தாட்

3236. இவ்வகை பரவித் திருக்கடைக் காப்பு'மேசின வல்ல' வென் றிசைப்ப
மெய்வகை விரும்பு தம்பெரு மானார் விழுநிதிக் குவையளித் தருள
மைவளர் கண்டர் கருணையே பரவி, வணங்கி,யப் பதியிடை வைகி
எவ்வகை மருங்கு மிறைவர் தம்பதிக ளிறைஞ்சியங்கிருந்தனர்சிலநாள். 82

கொண்ட குறிப்பு; **சிறுமைகள் செய்யில்** - *செய்வீராயின் அருளாமை;—(12)* **ஏசின...பாயின புகழான்** - *பதிகக் குறிப்பு; ஏச்சாய்ப் போலக் காணப்படினும் புகழ் பரவியதேயாம் என்றபடி;* **பாயின** - *பரவின;* **பேசின-** *இகழ்ச்சிக் குறிப்பால் பேசின;* **ஏச்சு** - *மிக்க இகழ்ச்சி வெளிப்படும் பேச்சு; 3236 பார்க்க.*

தலவிசேடம்:— திருப்பாச்சிலாச்சிராமம் - *முன் ஆளுடைய பிள்ளையார் புராணத்துரைத்தவை பார்க்க. (2217-2218).*

3236. (இ-ள்) இவ்வகை...இசைப்ப- இவ்வாறு துதித்து "ஏசின அல்ல" என்று திருக்கடைக் காப்பும் சேர்த்திப்பாட; மெய்வகை....அளித்தருள- மெய்யன்பினையே விரும்பும் தம் பெருமானார் தூய நிதிக்குவையினை அளித்தருளவே; மைவளர்... வைகி - திருநீலகண்டராகிய இறைவரது பெருங்கருணையினையே துதித்துவணங்கி அந்தப் பதியினிடத்து எழுந்தருளி; எவ்வகை...சிலநாள் - பக்கத்தில் எப்பாலும் உள்ள இறைவரின் பதிகளைச் சென்று வணங்கி மீண்டும் அங்கு எழுந்தருளிச் சில நாட்கள் இருந்தருளினர்.

(வி-ரை) இவ்வகை - முன் இரண்டு பாட்டுக்களிலும் கூறிய வகையினாலே; **திருக்கடைக்காப்பும்...இசைப்ப** - முன் பாட்டுக்களில் "இவரலாதில்லையோ பிரானார்" என்று ஏச்சும் இகழ்ச்சியும்படப் பாடியதுடன், திருக்கடைக் காப்பிலும் அதற்கு மாறுக அல்ல என்று இசைப்ப என்று, உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; அதற்கு மாறுக என்பது இசை யெச்சம்.

மெய்வகை விரும்பு தம்பெருமானார் - மெய்வகை - மெய்யன்பின் நிலை; மொழிகளின் நிலையன்றி உள்ளத்தின் மெய்ம்மை நிலையினையே; பிரிநிலை ஏகாரம் தொக்கது; மொழிகளின் நிலையன்றி என்பது இசையெச்சம்.

தம்பெருமானார் - பிணிப்பட வாண்டு ஏவலாளராகக் கொண்ட தலைவர்; (பதிகம்-10)

கருணையே - முன்னர்த் தாழ்த்த அருளின்மையின்றித் திருவுளத்துட்கொண்ட கருணையினையே; இங்குக் **கருணை**யாவது பாடப் பணித்துப் பாடல் கேட்டு மகிழ்தல்; "அருச்சனை பாட்டேயாகும்" (216) "பித்தனென்றே பாடுவாய்" (219) என்ற முற்சரித வரலாறுகள் இங்கு நினைவு கூர்தற்பாலன.

எவ்வகை மருங்கும் இறைவர்தம் பதிகள் - இதுவரை போந்தது போல மேற்கு நோக்கியே செல்லாது பலபக்கமாகவும் காவிரியினிருகரையாகவும் சென்றருளினர் என்பது; இவை இன்னவென்று தெரியக்கூடவில்லை; திருப்பாச்சிலாச்சிராமத்தின் அருகிலும் சுற்றிலுமுள்ள பதிகள் போலும்! 82

3237. அப்பதி நீங்கி யருளினுற் போகி
யாவினஞ் சாடுவார் நீடும்
எப்பெயர்ப் பதியு மிருமருங் கிறைஞ்சி
யிறைவர்பைஞ் ஞீலியை யெய்திப்
பைப்பணி யணிவார் கோபுர மிறைஞ்சிப்
பாங்கமர் புடைவலங் கொண்டு
துப்புறழ் வேணி யார்கழ றொழுவார்
தோன்றுகங் காளரைக் கண்டார். 83

3237. (இ-ள்) அப்பதி...போகி - அந்தப் பதியினை நீங்கி அருள்விடை பெற்றுச் சென்று; ஆவினஞ்சு...இறைஞ்சி - ஆனைந்து என்னும் பஞ்சகவ்வியத்திருமஞ்சன மாடியருளும் இறைவர் நீடியுள்ள எல்லாப் பதிகளையும் காவிரியின் இரண்டு கரைப் பக்கங்களிலும் சென்று வணங்கி; இறைவர்...எய்தி - இறைவரது திருப்பைஞ்ஞீலியினைச் சென்று சேர்ந்து; பைப்பணி... தொழுவார் - நச்சுப் பையினையுடைய பாம்பினை அணிந்த சிவபெருமானது கோயிற் றிருக்கோபுரத்தினை வணங்கிப் பக்கத்துச் சுற்றி வலங்கொண்டு வந்து பவளம் போன்ற சடையினையுடைய இறைவரது திருவடிகளைத் தொழுவார்; தோன்று...கண்டார் - முன்னே காட்சிப்பட நின்ற கங்காள வேடங்கொண்ட இறைவரைக் கண்டார்.

(வி-ரை) அருளினுல் - அருள் விடை பெற்று.

எப்பெயர்ப் பதியும் இருமருங்கு - இவை, திருச்செந்துறை, திருவாலந்துறை, திருத்துறையூர், திருப்பராய்த்துறை முதலாயின என்பது கருதப்படும். நம்பிகளது பதிகங்கள் கிடைத்தில! **எப்பெயர்ப்பதியும் -** எல்லாப் பதிகளிலும்.

பைப்பணி - பை - நச்சுப் பை; **பணி -** பாம்பு. **துப்பு -** பவளம்.

தொழுவார்...கண்டார் - தொழுவாராகிய நம்பிகள், தம் முன்பு இறைவரைக் கங்காள வேடமுடையவராகக் கண்டனர். கங்காள வேடத்தாராக இவருக்கு இறைவர் எதிர் காட்சியளித்தனர். "ஆரணீய விடங்கரே" என்ற பதிகமும், அதன் கருத்தினை ஆசிரியர் மேற்பாட்டில் விரிப்பதுவும் காண்க.

இத் திருவேடங் கண்ட காரணமே பதிகம் அவ்வா றருளப்பட்டதென்பது. 83

3238. (இ-ள்) கண்டவர்... இறைஞ்சி - முன் கூறியவாறு கங்காள வேடராக இறைவரைக் கண்ட நம்பிகள் காதலினுலே தம் திருக்கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர்வெள்ளம் பொழியக் கைகள் கூப்பி வணங்கி; வண்டமர்...கூற்றுக - வண்டுகள் விரும்பி வாழும் கூந்தலையுடைய பெண்களின் உள்ளத்தை கவர்கின்றபடி வரும் இறைவரது திருவடியினைக் கண்டு அவர்கள் கொண்ட மயலினுலே விளைவுகின்ற பொருளுடைய சொற்களாக வைத்து; குலவு...புனைந்தார் - விளங்கும் சொல் "காருலாவிய" என்று தொடங்கித் தேவதேவரைத் துதித்து - 'ஆரணீய விடங்கரே" என்ற மகுடங் கொண்ட அருந் தமிழ்மாலை புனைந்தருளினார்.

3238\. கண்டவர் கண்கள் காதனீர் வெள்ளம்
பொழிதரக் கைகுவித் திறைஞ்சி
வண்டமர் குழலார் மனங்கவர் **பலிக்கு**
வருந்திரு வடிவுகண் டவர்கள்
கொண்டதோர் மயலால் வினவுகூற் றுருகக்
குலவுசொற் "**காருலா விய**"வென்
றண்டர்நா யகரைப் பரவி" **யா ரணிய**
விடங்கரா" மருந்தமிழ் புனைந்தார். 84

(வி-ரை) காதல் நீர் கண்கள் பொழிதர - பெருக; **காதல் நீர்** - ஆனந்தக் கண்ணீர்.

வண்டமர்...வடிவு - பிட்சாடனத் திருவுருவம்; தாருகாவனத்து இருடியர் மனைவிமார்களிடம் இத் திருவுருவுடன் இறைவர் சென்று அவர்களை மயங்கச் செய்து அவர்கள் மனங்களைக் கவர்ந்த வரலாறு கந்தபுராணத்துட் காண்க.

மயலால் அவர்கள் வினவு கூற்றுருக - அத் திருவடிவத்தினைக் கண்டு அதில் ஈடுபட்டு மயங்கி அவர்கள் அவரை விளித்துப் பேசும் காதற் சொற்களாகிய பொருள் கொண்டு.

இது பதிகக் கருத்தும் குறிப்புமாக ஆசிரியர் காட்டியவாறு; "மங்கை மார்பலர் வேண்டிக் காதல் மொழிந்த சொல்" *(11)* என்ற பதிகத்தினை ஆசிரியர் பொருள் விரித்தவாறு.

"காருலாவிய" என்று - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

"ஆரணீய விடங்க" ராம் அருந்தமிழ் - ஆரணீய விடங்கரே என்று பாட்டுத் தோறும் முடிபுகொண்டு இறைவரை விளித்து வினவிய தமிழ்ப் பதிகம்; **ஆம்** - முடிபுகொண்ட; **ஆரணீயம்** - வனத்தின் வரும்; வனத்தைப் பற்றிய; ஆரண்யம் - காடு; விடங்கர் - உளி படாத திருமேனியுடையவர்; ஒருவரால் ஆக்கப்படாது தாமாகச் சமைந்த இயற்கைத் திருவடிவம்; மேலே வேறு அணிந்து மறைக்கப்படாத நக்க வடிவம் என்பதும் குறிப்பு.

வண்டறை—என்பதும் பாடம். *84*

திருப்பைஞ்ஞீலி

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி. 7-ம் திருமுறை**

காரு லாவிய நஞ்சை யுண்டிருள் கண்ட வெண்டலை யோடுகொண்
டூரெ லாந்திரிந் தென்செய் வீர்பலி யோரி டத்திலே கொள்ளுநீர்
பாரெ லாம்பணிந் தும்மை யேபர விப்ப ணியும்பைஞ் ஞீலியீர்
ஆர மாவது நாக மோசொலு **மார ணீய விடங்கரே.** (1)

அன்னஞ் சேர்வயல் சூழ்பைஞ் ஞீலியி லார ணீய விடங்கரை
மின்னு நுண்ணிடை மங்கை மார்பலர் வேண்டிக் காதன் மொழிந்தசொன்
மன்னு தொல்புகழ் நாவலூரன்வன் றொண்டன் வாய்மொழி பாடல்பத்
துன்னி யின்னிசை பாடு வாருமை கேள்வன் சேவடி சேர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—முன் ஆசிரியர் (3237—3238) எடுத்துக் காட்டியவாறு கண்டுகொள்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) கார் - கருமை நிறம்; மேகம் என்று கொண்டு மேகத்தின் தன்மை - கைம்மாறு கருதாத உதவி - கொண்ட என்றதும் குறிப்பு; **உலாவுதல்** - பெறுதல்; **நீர் ஓரிடத்திலே பலிகொள்ளும்** - என்க; ஊர் எல்லாம் திரியாது எம் ஒருவரிடத்திலே தங்கும் என்ற காதற் குறிப்புடைய சொல்; **பாரெலாம்...பணியும்** - உலகமெல்லாம் வந்து இங்கு உம்மை வணங்கும்; நீர் வேறெங்கும் போதல் வேண்டா என்பது; **ஆரமாவது நாகமோ சொலும்** - ஆரம் பாம்பானால் அணுக வந்து பலி எப்படி இடுவர்? என்பது குறிப்பு. "நீயுலக மெல்லா மிரப்பினு நின்னுடைய, தீய வரவொழியச் செல்கண்டாய்—தூய, மடவரலார் வந்து பலியிடா ரஞ்சி, விடவரவ மேலாட மிக்கு" (அற்.அந்-57) என்ற அம்மையார் திருவாக்கின் கருத்து இங்கு நினைவுகூர்தற்பாலது; மயல் கொண்டு அணுக வரும் பெண்கள் பாம்புகண் டஞ்சிக் கூறிய கூற்றுமாறு கண்டுகொள்க; இப்பதிகத்தினுள் வரும் ஏனைய வினைக் கூற்றுக்களும் இவ்வாறே உய்த்துணர்ந்து கொள்ளற்பாலன;—**(2) சிலைத்து... பிரானிரே** - முன் "ஆரமாவது நாகமோ?' (1) என்றவிடத் துரைத்த குறிப்புக்கள்; **மூசெனும் - மூசு** - பாம்பின் இரைச்சல் காட்டும் ஒலிக்குறிப்புச் சொல்;—**(3) துன்னவாடை** - தைத்த ஆடை; **சுடலையில்...தவிரும்** - காதற் குறிப்பு;—**(4) செந்தமிழ்த் திறம் வல்லிரோ?** - செந்தமிழுக்கே சிறப்பாயுரிய அகப்பொருள் இயல் வல்லிரோ என்றது காதற்சொற் குறிப்பு; **செங்கண் அரவம்...இடகிலோம்** - முன்(1) கூறிய குறிப்பு; **அந்திவானம்** - பசும்பொன்னிறம்; காதற் குறிப்பு;—**(5) கண்ணிறைளொடும் கூறராய் - ஆறு தாங்கிய சடையரோ** என்ற இவை இரு மனைவியரை உடைய நீர் அவர்களுடனே கூடி நின்றே பிறர் மனைவியர்க்கு மையல் செய்வது தகாது என்பது காதல் விளையும் குறிப்பு;—**(6) வளை கொள்வதே தொழிலாகி** - மையல் தருவதற் கென்றே; **இரவு மிம்மனை யறிதிரே...வல்லிரே** - இரவில் வருக என்ற குறிப்பு;—**(7) காதல்** - அகப்பொருள் விளைவாகிய காதலும் அடிமைத் திறமாகிய காதலும் குறிப்பு;—(8)கங்காள வேடம்; **அத்தியீருரி போர்த்திரோ?** - "கொலைக் களிற்றுரி போர்த்த தம் மேனி குழைந்து காட்டினர் விழைந்தகொள் கையினர்" (1141) என்ற கருத்துக் காண்க;—**(9) அக்கும் ஆமையும்** பூணுது வருக என்ற குறிப்பு; **அக்கு** - உருத்திராக்கம்; எலும்பு என்றலுமாம்;—**(10) கையொர்...விடங்காக நின்று** - விடங்க வேடத்தில் மையல் கொண்டு கூறும் மொழிகளின் குறிப்பு;—**(11) மின்னும்...சொல் - வன்றொண்டன் வாய்மொழி பாடல்** - இறைவர் பலிக்கு வரும் விடங்க வேடங் கண்டு மயங்கிய பெண்கள் வினவிய மொழியாக வைத்து அவ்வுரிமைப்பட நம்பிகள் கூறியது என்றது பதிகக் கருத்து என்பதாம். ஆசிரியர் உரைத்தது(3238) பார்க்க.

தலவிசேடம்:— திருப்பைஞ்ஞீலி-III-பக். 690 பார்க்க.

3239. (இ-ள்) பரவி... பெற்று- (முன் கூறியவாறு) துதித்துத் திருப்பதிகத்தினைத் திருக்கடைக்காப்புச் சாத்தித் திருமுன்பு வணங்கி அருள்விடை பெற்று; கரவில்... இருந்து - கரவு இல்லாத அன்பர் கூட்டத்தினைத் தொழுது அவர்களுடன் கலந்து இனிதாக அமர்ந்து இருந்தருளி; போந்தருளி - மேலே சென்றருளி; விரவிய...வணங்கி - பொருந்திய திருவீங்கோய்மலை முதலாக இறைவரின் பதிகள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு

3239. பரவியப் பதிகத் திருக்கடைக் காப்புச்
சாத்திமுன் பணிந்தருள் பெற்றுக்
கரவிலன் **பர்கடங் கூட்டமுந் தொழுது**
கலந்தினி திருந்துபோந் தருளி
விரவிய **வீங்கோய்** மலைமுத லாக
விமலர் தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை யணிதிருப் பாண்டிக்
கொடுமுடி யணைந்தனர் கொங்கில். 85

போந்து; குரவலர்...கொங்கில் - கொங்கு நாட்டினில் குராமலர்கள் அரும்புதற்கிடமாகிய சோலைகள் அணி செய்யும் திருப்பாண்டிக் கொடுமுடியினை அணைந்தருளினார்.

(வி-ரை) திருக்கடைக்காப்புச் சாத்தி - பதிகக் கருத்தை விளக்குதலால் திருக்கடைக்காப்பினை விதந்தெடுத் தோதினர்.

கரவில் அன்பர் - நெஞ்சிற் கள்ளங் கபடு இல்லாத அன்பர்கள்; "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால், விரவாடும் பெருமானை" (தேவா); **கரவு-** மனத்திற் கொள்ளும் கபடம்; கள்ளம். இவ்வன்பர்கள் திருப்பாச்சிலாச்சிராமத்தில் நம்பிகளால் முகநோக்கிப் பாடப்பெற்றாராய் உடன் வந்தவர்கள் போலும்.

அன்பர்தங் கூட்டமும் தொழுது கலந் தினிதிருந்து - அன்பர்களைத் தொழுதலும் அவருட னிருத்தலும் சீவன்முத்தராகிய அணைந்தோர் தன்மையாம்.

விரவிய - இடையிற் பொருந்திய; கொங்கிற் புகுமுன் வழியிடை விரவிய.

குரவலர் சோலை அணி...கொடுமுடி - குரவு - "குராமலர்" (தேவா); "குறியதன் கீழாக் குறுகலும் அதனோ, டுகர மேற்றலும்" என்பதிலக்கணம். குரா என்றது குரவு என நின்றது.

ஈங்கோய்மலை - நம்பிகள் பதிகம் கிடைத்திலது!

விமலர்தம் பதிபல - இவை காவிரிக் கரையில் திருப்பைஞ்ஞீலியினை அடுத்துக் கரை அளவில் உள்ளவை. இவ்வாறுள்ள பழைய கோயில்கள் பல இன்றும் காவிரிக்கரையில் காணப்படுவன. 85

3240. (இ-ள்) கொங்கினில்...குறுகி - கொங்குநாட்டிலே காவிரியின் தென்கரையில் உள்ள கறையூர்ப் பாண்டிக்கொடுமுடித் திருக்கோயிலின் முன்னே சேர்ந்து; சங்கவெண்... தொழுது - சங்கினா லியன்ற குழையினை அணிந்த இறைவரைத் திருக்கோயிலினைச் சூழ்ந்து வலஞ்செய்து சார்ந்து திருவடிகளில் அன்பினாலே வணங்கி மேன்மேலும் பொங்கிய ஆசை மேலும் பெருகத் தொழுது; புனிதர் பொன்மேனியை நோக்கி - இறைவரது பொன்னார்ந்த திருமேனியை நோக்கி; இங்கிவர்...எடுப்ப - "இங்குள்ள இவரை மறக்கவொண்ணாது" என்று திருவுள்ளதில் எழுந்த மெய்க் குறிப்பினாலே தொடங்க,

3240. கொங்கினிற் பொன்னித் தென்கரை **கறையூர்க்**
கொடுமுடிக் கோயின்முன் குறுகிச்
சங்கவெண் குழைய ருழைவலஞ் செய்து
சார்ந்தடி யன்பினிற் ருழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது,
புனிதர்பொன் மேனியை நோக்கி
"இங்கிவர் தம்மை மறக்கவொண் ணு"தென்
றெழுந்தமெய்க் குறிப்பினி லெடுப்ப. 86

(வி-ரை) கொங்கு - கொங்கு நாடு. முன் பாட்டினும் "கொங்கில்" (3239) என்ருர்; இதுவரை காவிரி வடகரையிலும் இரு கரைகளிலுமாகச் சோழ நாட்டில் யாத்திரை செய்தருளிய நம்பிகள், இங்குக் காவிரி - வடகரை தாண்டி வடகரைப் பதிகளில் (63-வதாக) இறுதிக்கண்ணின்ற திருவீங்கோய் மலையினை வணங்கிச் சோணுடு நீங்கிக் கொங்கு நாடாகிய வேற்று நாட்டுக்குள் யாத்திரை சென்றருளும் நிலை குறித்ததற்கு.

கறையூர்க் கொடுமுடிக் கோயில் - "கறையூரிற் பாண்டிக் கொடுமுடி" என்பது பதிகம். பாண்டியன் ஒருவனது கறைநோய் தீர்த்த காரணத்தால் இப்பெயர் பெற்றதென்பது தலவரலாறுகளுள் ஒன்று. **கொடுமுடி** - இறைவர் பெயர். மேருவின் பெருஞ் சிகரங்களுள் ஒன்றென்பது வரலாறு; அதனை இடமாகக் கொண்டு இறைவர் விளங்க வீற்றிருத்தலின் கொடுமுடிநாதர் என்றே பெயர் வழங்குவர். கொடுமுடியின் கோயில் என்க. (2236 பார்க்க.)

குழையர் உழை - குழையாருடைய கோயிலின் பக்கத்துச் சுற்றி வலமாக.

பொங்கிய வேட்கை பெருகிட - முன்னமே உள்ளடங்காமல் மேலெழுந்து பொங்கிய பெருவிருப்பம் மேலும் பெருக.

பொன்மேனி - பொன்னுர்ந்த அழகுடைய திருமேனி. "பொன்னுர் மேனியனே" (தேவா). **அடியிணையினில்** - என்பதும் பாடம்.

இங்கிவர்... எடுப்ப - இங்கு இறைவரது திருமேனிப் பொலிவினில் ஈடுண்டு உள்ளூர அழுந்திவிட்டமையால் இனி இவரை எப்போதும் மறக்கவொண்ணுது என்று திருவுளத்தில் மெய்க்குறிப்பு நிகழ, அதனுலே அக்கருத்துத் தோன்ற; **மெய்க்குறிப்பு** - உண்மை; சத்தாகிய குறிப்பு. **மெய்** - திருமேனி என்றலுமாம். 86

3241. (இ-ள்) அண்ணலார்...கொள்பவர் - "அண்ணலாரின் திருவடிகளை நான் மறப்பினும் அவரது திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை எண்ணியநாவே இனியசுவை பெருக இடையருமற் சொல்லும்" என்ற இக்குறிப்பினைத் தமது உறைப்புடைய உணர்விலுலே கொள்பவராகி; மற்றுப் பற்றிலேன்...நமச்சிவாயத் திருப்பதிகம் - "மற்றுப் பற்றெனக் கின்றி" என்று தொடங்கிச் செழுமையாகிய தமிழினுலே பொருந்திய அன்பினுலே கட்டுப்பாடு பெறும்படி நமச்சிவாயத் திருப்பதிகத்தினைச் சொல்லியருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3239. பரவியப் பதிகத் திருக்கடைக் காப்புச்
சாத்திமுன் பணிந்தருள் பெற்றுக்
கரவிலன் **பர்கடங் கூட்டமுந் தொழுது**
கலந்தினி திருந்துபோந் தருளி
விரவிய **வீங்கோய்** மலைமுத லாக
விமலர் தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை யணி**திருப் பாண்டிக்**
கொடுமுடி யணைந்தனர் கொங்கில். 85

போந்து; குரவலர்...கொங்கில் - கொங்கு நாட்டினில் குராமலர்கள் அரும்புதற்கிடமாகிய சோலைகள் அணி செய்யும் திருப்பாண்டிக் கொடுமுடியினை அணைந்தருளினார்.

(வி-ரை) திருக்கடைக்காப்புச் சாத்தி - பதிகக் கருத்தை விளக்குதலால் திருக்கடைக்காப்பினை விதந்தெடுத் தோதினார்.

கரவில் அன்பர் - நெஞ்சிற் கள்ளங் கபடு இல்லாத அன்பர்கள்; "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால், விரவாடும் பெருமானை" (தேவா); **கரவு-** மனத்திற் கொள்ளும் கபடம்; கள்ளம். இவ்வன்பர்கள் திருப்பாச்சிலாச்சிராமத்தில் நம்பிகளால் முகநோக்கிப் பாடப்பெற்றாராய் உடன் வந்தவர்கள் போலும்.

அன்பர்தங் கூட்டமும் தொழுது கலந் தினிதிருந்து - அன்பர்களைத் தொழுதலும் அவருட னிருத்தலும் சீவன்முத்தராகிய அணைந்தோர் தன்மையாம்.

விரவிய - இடையிற் பொருந்திய; கொங்கிற் புகுமுன் வழியினை விரவிய.

குரவலர் சோலை அணி...கொடுமுடி - குரவு - "குராமலர்" (தேவா); "குறியதன் கீழாக் குறுகலும் அதனோ, டுகர மேற்றலும்" என்பதிலக்கணம். குரா என்றது குரவு என நின்றது.

ஈங்கோய்மலை - நம்பிகள் பதிகம் கிடைத்திலது!

விமலர்தம் பதிபல - இவை காவிரிக் கரையில் திருப்பைஞ்ஞீலியினை அடுத்துக் கரை அளவில் உள்ளவை. இவ்வாறுள்ள பழைய கோயில்கள் பல இன்றும் காவிரிக்கரையில் காணப்படுவன. *85*

3240. (இ-ள்) கொங்கினில்...குறுகி - கொங்குநாட்டிலே காவிரியின் தென்கரையில் உள்ள கறையூர்ப் பாண்டிக்கொடுமுடித் திருக்கோயிலின் முன்னே சேர்ந்து; சங்கவெண்... தொழுது - சங்கினா லியன்ற குழையினை அணிந்த இறைவரைத் திருக்கோயிலினைச் சூழ்ந்து வலஞ்செய்து சார்ந்து திருவடிகளில் அன்பினாலே வணங்கி மேன்மேலும் பொங்கிய ஆசை மேலும் பெருகத் தொழுது; புனிதர் பொன்மேனியை நோக்கி - இறைவரது பொன்னார்ந்த திருமேனியை நோக்கி; இங்கிவர்...எடுப்ப - "இங்குள்ள இவரை மறக்கவொண்ணாது" என்று திருவுள்ளதில் எழுந்த மெய்க் குறிப்பினாலே தொடங்க,

3240. கொங்கினிற் பொன்னித் தென்கரை **கறையூர்க்**
கொடுமுடிக் கோயின்முன் குறுகிச்
சங்கவெண் குழைய ருழைவலஞ் செய்து
சார்ந்தடி யன்பினிற் ருழ்ந்து
பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது,
புனிதர்பொன் மேனியை நோக்கி
"இங்கிவர் தம்மை மறக்கவொண் ணு"தென்
றெழுந்தமெய்க் குறிப்பினி லெடுப்ப, 86

(வி-ரை) கொங்கு - கொங்கு நாடு. முன் பாட்டினும் "கொங்கில்" (3239) என்ருர்; இதுவரை காவிரி வடகரையிலும் இரு கரைகளிலுமாகச் சோழ நாட்டில் யாத்திரை செய்தருளிய நம்பிகள், இங்குக் காவிரி - வடகரை தாண்டி வடகரைப் பதிகளில் (63-வதாக) இறுதிக்கண்ணின்ற திருவீங்கோய் மலையினை வணங்கிச் சோணுடு நீங்கிக் கொங்கு நாடாகிய வேற்று நாட்டுக்குள் யாத்திரை சென்றருளும் நிலை குறித்ததற்கு.

கறையூர்க் கொடுமுடிக் கோயில் - "கறையூரிற் பாண்டிக் கொடுமுடி" என்பது பதிகம். பாண்டியன் ஒருவனது கறைநோய் தீர்த்த காரணத்தால் இப்பெயர் பெற்றதென்பது தலவரலாறுகளுள் ஒன்று. **கொடுமுடி** - இறைவர் பெயர். மேருவின் பெருஞ் சிகரங்களுள் ஒன்றென்பது வரலாறு; அதனை இடமாகக் கொண்டு இறைவர் விளங்க வீற்றிருத்தலின் கொடுமுடிநாதர் என்றே பெயர் வழங்குவர். கொடுமுடியின் கோயில் என்க. (2236 பார்க்க.)

குழையர் உழை - குழையாருடைய கோயிலின் பக்கத்துச் சுற்றி வலமாக.

பொங்கிய வேட்கை பெருகிட - முன்னமே உள்ளடங்காமல் மேலெழுந்து பொங்கிய பெருவிருப்பம் மேலும் பெருக.


பொன்மேனி - பொன்னுர்ந்த அழகுடைய திருமேனி. "பொன்னுர் மேனியனே" (தேவா). **அடியிணையினில்** - என்பதும் பாடம்.

இங்கிவர்... எடுப்ப - இங்கு இறைவரது திருமேனிப் பொலிவினில் ஈடுண்டு உள்ளூர அழுந்திவிட்டமையால் இனி இவரை எப்போதும் மறக்கவொண்ணுது என்று திருவுளத்தில் மெய்க்குறிப்பு நிகழ, அதனுலே அக்கருத்துத் தோன்ற; **மெய்க்குறிப்பு** - உண்மை; சத்தாகிய குறிப்பு. **மெய்** - திருமேனி என்றலுமாம். 86

3241. (இ-ள்) அண்ணலார்...கொள்பவர் - "அண்ணலாரின் திருவடிகளை நான் மறப்பினும் அவரது திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை எண்ணியநாவே இனியசுவை பெருக இடையருமற் சொல்லும்" என்ற இக்குறிப்பினைத் தமது உறைப்புடைய உணர்வினுலே கொள்பவராகி; மற்றுப் பற்றிலேன்...நமச்சிவாயத் திருப்பதிகம் - "மற்றுப் பற்றெனக் கின்றி" என்று தொடங்கிச் செழுமையாகிய தமிழினுலே பொருந்திய அன்பினுலே கட்டுப்பாடு பெறும்படி நமச்சிவாயத் திருப்பதிகத்தினைச் சொல்லியருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

திருமயிலை




திருமயிலை-திருக்கோயில்



திருமயிலை-வடக்குப் பிரகாரத்தில்
'மட்டிட்ட புன்னை'மரமும் அதன் அருகில்
அம்மையார் மயிலுருவுடன்
பூசித்த ஐதீகத்திருக்கோயிலும்




திருமயிலை-வடக்குப் பிரகாரத்தில்
'மட்டிட்ட புன்னை'மரமும் அதன் அருகில்
அம்மையார் மயிலுருவுடன் பூசித்த
ஐதீகத்திருக்கோயிலும்
(பழைய படம்)



திருமயிலை-பூம்பாவையார் சந்நிதி
திருஞானசம்பந்தர்-பூம்பாவையார்
மூலத்தானத் திருவுருவங்கள்





திருமயிலை-வாயிலார் நாயனுர்
சந்நிதி வாயிலும்,மூலத்தானத் திருவுருவமும் - பாட்டு-4078

படம்-2

திருப்பாண்டிக்கொடுமுடி

பாட்டுக்கள் (3239-3241)



கொடுமுடி-கோயில் வெளித்தோற்றம்



கொடுமுடி கோயில்-முன் கோபுரம்-
உட்புறமிருந்து பார்வை -பாட்டு (3239)



கொடுமுடி- சுவாமி சந்நிதி



கொடுமுடி-காவிரிக்கரை

படம்-3

3241. "**அண்ணலா ரடிகண் மறக்கினு நாம**
வஞ்செழுத் தறியவெப் பொழுதும்
எண்ணிய நாவே யின்சுவை பெருக
விடையரு தியம்பு"மென் றிதனைத்
திண்ணிய வுணர்விற் கொள்பவர் "**மற்றுப்**
பற்றிலே" னெனச்செழுந் தமிழால்
நண்ணிய வன்பிற் பிணிப்புற நவின்றார்
நமச்சிவா யத்திருப் பதிகம். 87

(வி-ரை) அண்ணலார்... இயம்பும் என்று - இது பதிகக் குறிப்பு; "நற்றவாவுனை நான்மறக்கினுஞ் சொல்லும் நா நமச்சிவாயவே" என்ற தேவாரத்தின் பொருள் விரித்தவாறு.

நாம அஞ்செழுத்து - இறைவரது திருநாமமாகிய திருவைந்தெழுத்து; "ஐந்தெழுத்தின் நாமத்தான்காண்" (தேவா).

"அறிய எப்பொழுதும் எண்ணிய நாவே - இயம்பும்" - **அறிய** - மனம் அறிந்துகொள் வதனால்.

எப்பொழுதும் எண்ணிய நா - இடைவிடாது நாவானது திருவைந்தெழுத்தைத் தழும்பேறச் சொல்லிக்கொண்டிருக்கும்; ஈண்டு **எண்ணுதல்** என்ற மனத்தின் செய்கை அதனால் இடைவிடாது தூண்டப்பட்டுத் தானே சொல்லிப் பழகுதல் என்ற பொருளில் வந்தது; உட்கரணமாகிய மனமும் அதனாற் றூண்டப்பட்ட புறக்கருவியாகிய நாவும் ஒருதன்மைப்பட்டுப் பழகியதனால் மனத்தின் செயல் நாவின் செயலேயாயிற்று; **எண்ணுதல்** - அளவறிந்து சொல்லுதல் என்ற குறிப்புடனும் நின்றது; **நாவே** - மனம் மறக்கினும் நா தானே என ஏகாரம் பிரிநிலை. தேற்றமுமாம்.

இன்சுவை பெருக - நாவின் றொழிலாகக் கூறியதற்கேற்பச் சுவை என்றார். இரண்டும் பிணைந்து இயன்றமையால் மனத்தின் றொழிலாகிய **எண்ணுதல்** நாவிற்கும், நாவின் றொழிலாகிய **சுவை** மனத்துக்கும் ஏற்றப்பட்டன. "ஆலைப்படுகரும்பின் சாறுபோல அண்ணிக்கும் ஐந்தெழுத்தின் நாமம்" (தேவா) என்று அரசுகள் இதனை அருளுதல் காண்க.

என்றிதனை - என்ற இக்குறிப்பினை; **என்ற இதனை** என்பது என்றிதனை என நின்றது.

திண்ணிய உணர்வு - திட்பமாவது அன்பி னிலையினின்றும் பிறழாத உறைப்பு; **உணர்விற் கொள்ளுதல்** - மனத்தினுள் ஊன்றி வைத்தல்.

மற்றுப் பற்றிலேன் - பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு; **என** - என்று தொடங்கி.

செழுந்தமிழ் - செழுமை - மெய்ப்பொருளாகிய திருவைந்தெழுத்தினை உட்கொண்டு எடுத்துக்கூறும் தன்மை.

பிணிப்புறுதல் - பிறழாது ஒன்றுபடச் சேர்த்துக் கட்டப்படுதல்; **பிணிப்புற** - வினையெச்சம்; இதனை நவின்ற தாம் பிணிக்கப்பெறுதலால் எனக் காரணப்பொருளில்

வந்தது; இதனைப் பயிலும் உலகவர் அன்பிற் பிணிப்புறும் பொருட்டு என்று உரைக்கும் குறிப்புமுடையது.

நமச்சிவாயத் திருப்பதிகம் - பதிகத்தின் பெயர். உட்கொண்ட பொருளினாற் போந்த பெயர். கோளறு பதிகம் - திருநீற்றுப் பதிகம் என்புழிப்போலக் காண்க; பயன் பற்றியும், ஏகபாதம், மொழிமாற்று முதலியவை யாப்பமைதி பற்றியும், இவ்வாறு பிற அமைதிகள் பற்றியும் பதிகப் பெயர்கள் வருதல் காண்க.

முன் பாட்டில் "இங்கிவர் தம்மை மறக்க வொண்ணாது" என்பது உண்ணின்றெழுந்த அருளின் குறிப்பும் இப்பாட்டில் அதனாற் போந்து உணர்வினுள் ஊன்றிய கருத்தும், பதிக முதற்குறிப்பும், பதிகப் பெயரும் கூறியவாறு கண்டு கொள்க. மேற்பாட்டில் பதிகப் பயன் கூறுதலும் காண்க. திருவைந்தெழுத்துப் பற்றியதனோடு, தலம் பற்றிய பதிகமாயு மிருக்கும் தனிச் சிறப்புடைய திருப்பதிகமாதலின் இத்துணையும் எடுத்துக் காட்டியது ஆசிரியரது தெய்வக் கருணைக் கவிநலமாம். மேலும் இதன் சிறப்பினை வரும் பாட்டிலும் பயன் கூறுமாற்றாற் கூறுதலும் காண்க. *87*

திருப்பாண்டிக்கொடுமுடி

திருச்சிற்றம்பலம் பண் - பழம்பஞ்சுரம்-7-ம் திருமுறை

நமச்சிவாயத் திருப்பதிகம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேனி னிப்பிற வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை **யூரிற் பாண்டிக் கொடுமுடி**
நற்ற வாவுனை **நான்ம றக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே.** (1)


கோணி யபிறை சூடி யைக்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணி யபெரு மானைப் பிஞ்ஞகப் பித்த னைப்பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்ட றைகொன்றைத் தார னைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்ட னூரன் சொல்லிவை சொல்லு வார்க்கில்லை துன்பமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் முன் (*3241*) காட்டியவாறு கண்டுகொள்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (*1*) எனக்குப் பற்று மற்றின்றி என்க; **பெற்றலும்** - பெறுதலும்; அவ்வாறு பாவிக்கப் பெற்றதனால் பிறந்தேன்; இந்நிலை பெற்றலும், பிறவாத தன்மை எய்தினேன் என்க. **பிறந்தேன்** - வினைப் பெயர்; பிறந்தேனாகிய - பிறவியில் வந்த - நான். **உனை நான்...நமச்சிவாயவே** - முன் ஆசிரியர் இதன் உரை விரித்தருளினர் (*3241*); நமச்சிவாயவே - ஏகாரம் பிரிநிலை;—**(*2*) ஏத்துவார்** - ஏத்தக் கடமைப்பட்டவர்கள் அது செய்யாமல் இகழ்ந்தும் மறந்தும் உள்ள நாட்கள் கெட்ட நாள்கள் என்பது. ஆதலின் அவர்களைப் பொருளாகக் கருத மாட்டேன் என்க. **வட்ட வாசிகை** - வட்டவடிவா யமைந்த திருவாசிபோல அமைத்த மாலை; **இட்டன்** - அன்புடையவன்; **நட்டவா** - கொடுமுடியினை விரும்பிவரே;

திருப்பாண்டிக்கொடுமுடி



கொடுமுடி-பிரமதேவர்
கோயில் கொண்டுள்ள வன்னி மரம்



கொடுமுடி-வன்னிமரத்தடியில்
பிரமதேவர்



கொடுமுடி-வன்னிமரத்தை
அடுத்து விஷ்ணு கோயில்



கொடுமுடி-அம்மன் சந்நிதி



கொடுமுடி-உட்புறம் வன்னி
மரத்திலிருந்து பார்வை
சுவாமி கோயில் விமானமும்,
கோபுரமும். விமானத்துக்கு
அருகில் தெரிவது
கணபதி விமானம்

படம்-4

திருப்பேளூர்



திருப்பேளூர் × முன்கோபுரமும் திருக்குளமும் - பாட்டு-3242



திருப்பேளூர்-திருக்கோயில் வெளிப்புறத்தோற்றம்

படம்-5

3242. **உலகெலா முய்ய வுறுதியாம் பதிக**
முரைத்துமெய் யுணர்வரு வொருமை
நிலவிய சிந்தை யுடன்றிரு வருளா
னீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்து தண் பனிமலர்ப் படப்பைக்
குலவுமீ கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினார் முறுகுமா தரவால். 88

கொடுமுடியில் நிலைபெற்றவரே;—(3) **ஓவுநாள்** - நாட்கணக்கினின்று நீங்கிய - நீக்கப்பட்ட - நாட்கள்; "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" (அரசு. தேவா) என்ற கருத்து; உய்வழிபாடு இல்லாமல் கழியும் நாட்களை உள் உணர்வு அழியும் நாட்களாகவும், உயிர்போகு நாட்களாகவும், உயிர் போயினபின் உடல் பாழை பின்போற் காயும் நாட்களாகவும் கருதுவேனன்றி வாழும் நாளாகக் கருத மாட்டேன் என்க. **கருதேன்-** இவற்றை நாட்களாகக் கருதேன்; ஆதலின் எனது நா - சொல்லும் என்பதாம்; **பாவு** - பரவும்; **நாவலா** - நாவன்மையானது வேதாகமங்களைச் சொல்லுதல்;—(4) **கல்லை உந்தி** - மலைப்பண்டங்களை - பெருங்கற்களை - அலைத்துக்கொண்டு; **வளம் பொழிந்து இழி** - மலைப்பண்டங்களை அலைத்து வருதலால் அக்குறிஞ்சி வளங்களை இங்குக்கொண்டுவந்து பொழிந்து இறங்கும்; **இழிதல்** - கீழிறங்குதல்; (5) **அஞ்சினார்க் கரணாதி** - அஞ்சி வந்தடைந்தார்களுக்கு அபயம் கொடுக்கும் காவலனாவாய்; **ஆதி** - ஆவாய்; **நல்கினாய்க்கு அழிகின்றது என்** - நல்கின உனக்குக் குறையாவ தென்னையோ?;—(6) **ஏடு** - ஏடு போன்ற; உயர்ந்த - எளிய - என்றலுமாம் (எடு - பகுதி - **ஏடு** - எடுத்தலுடையது); **பாடு** - பெருமை; **சேடன்** - அறிவிற் சிறந்தவன்; (7) **விண்டன** - நீங்கின; **கோடு** - கரை;—(8) **கோலினாய்** - வளைத்தாய்; (9) **சாரணன்** - பற்றுக்கோடா யுள்ளவன்;—(10) **வண்டு - பாண்** - அறை என்க; பாண் - இசை; அறை பாடுதற் கிடமாகிய; **பாம்பு அரை நாணன்** - பாம்பினை அரை நாணாக வுடையவன்.

தலவிசேடம்:— திருப்பாண்டிக்கொடுமுடி - 2236-ம் பாட்டின்கீழ் உரைக்கப்பட்டது.

3242. (இ-ள்) உலகெலாம்...உரைத்து - உலகெல்லாம் உய்யும்படி உறுதிதருவதாகிய நமச்சிவாயத் திருப்பதிகத்தினை அருளிச்செய்து; மெய்யுணர்வரு...நீங்குவார் - மெய்யுணர்வு இடையறாத ஒன்றிய தன்மை நிலைபெற்ற சிந்தையினுடனே திருவருள் விடைபெற்று அங்குநின்றும் போவாராகி; பாங்கு...போந்து - பக்கத்தில் உள்ள நல்ல பதிகள் பலவற்றையும் முன்னே வணங்கி இறைவரின் திருவடிகளைத் துதித்துச் சென்று; தண் பனிமலர்...ஆதரவால் - குளிர்ந்த மலர்கள் நிறைந்த ஆற்றின் பக்கத்தின் குளிர்ந்த நிலங்களையுடைய விளக்கமாகிய மேல் கொங்குநாட்டிலே காஞ்சிமாநதியின் கரையிலே உள்ள திருப்பேரூரினை மேலெழும் பேரன்பினாலே சென்று சேர்ந்தருளினர்.

(வி-ரை) உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம் - நமச்சிவாயத் திருப்பதிகம். உலகுய்யவும் உறுதியாவது திருவைந்தெழுத்தாகிய மகாமந்திரம். இஃதே ஆதி மந்திரம், மகாமந்திரம் என்பனவாதியாக விதந்து பேசப்படுவது; உயிருக்கு உறுதிப்பயனாகிய சிறந்த வீடுபேற்றைத் தருவது; இதன் தன்மைகள் முன்னர் உரைக்கப்பட்டன; கடைப்பிடிக்க. இவை உண்மை விளக்கம், திருவருட் பயன் முதலிய ஞானநூல்களினும் சிவாகமங்களினும் அநுபவமுடைய தேசிகர்பால் அறிந்துகொள்ளத் தக்கன. **உறுதி ஆம்** - உறுதி செய்யும்; ஆகச் செய்யும். "இங்குன் புண்ணிய மணத்துள் வந்தார், யாவரும் என்பாற் சோதி யிதனுள்வந் தெய்தும்" (3145) என்று இறைவர் தந்த ஆணையின்படி அங்கு வந்தார்களுக்கெல்லாம் உய்யுநெறி காட்டி வீடுபெறும் தகுதி பெறுவித்து முத்திக்கு விடுத்திட ஆளுடைய பிள்ளையார் நமச்சிவாயத் திருப்பதிகத்தினையே அருளிய வரலாறு ஈண்டு நினைவுகூர்தற்பாலது. "மாயிரு ஞாலமுய்ய வழி" (3145) என்றும், "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவாயச் சொலாம்" (3146) என்றும் ஆண்டு ஆசிரியர் உரைத்தருளியவையும் நினைவுகூர்க.

மெய்... சிந்தை - "இங்கிவர் தம்மை மறக்கவொண் ணாதென் றெழுந்தமெய்க் குறிப்பு" (3240); "இதனைத் திண்ணிய உணர்வினிற் கொள்பவர்" (3241) என்று முன் கூறிய தன்மைபெற்ற சிந்தை என்க; அச்சிந்தையின் நிலைமாறுதபடி.

திருவருளால் - திருவருள் விடை பெற்றதனால்.

பாங்கு நற்பதிகள் - இவை மேல் கொங்குநாட்டிலும், அங்குக் காவிரிக் கரையிலும் உள்ள பல பழைய சிவாலயங்களும், குன்றுதோறாடல்களாகிய கோயில்களுமாம் என்பது கருதப்படும். மூலனூர் - சிவன்மலை - சென்னிமலை - ஊதியூர் மலை - பெருந்தலையூர் - குரக்குத் தளி முதலாயின என்பது கருதப்படும்.

பனிமலர்த் தண் படப்பை என்க. நீலகிரி - வெள்ளிமலைச் சாரல்கள் அணி யனவாதல் **தண் - பனி** என்ற ஒருபொருட் பன்மொழிகளின் குறிப்பு.

மீகொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர் - முன்னர் "கொங்கில்" (3239); "கொங்கினில்" (3240) என்ற ஆசிரியர் இங்கு "மீகொங்கு" என்றார். "மீகொங்கிலணி காஞ்சிவாய்ப், பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாமன்றே" (கோயில் - நம்பிகள்) என்ற தேவார ஆட்சி போற்றப்பட்டது காண்க. முன் கூறியது கொங்குநாடு என்ற பெரும் பகுதி. **அக்கொங்கில்** - என்ற பாடம் பிழை.

இங்கு **"மீகொங்கு"** என்றது அதன் உட்பிரிவாகிய மேற்குக் கொங்குநாடு. கொங்குநாடு, கீழ்கொங்கு, மேல்கொங்கு, வடகொங்கு என மூன்று பெரும் உட்பிரிவுகளை யுடையது; இங்கு **மீ** என்றது மேற்கு என்ற பொருளைக் கொண்டது.

காஞ்சி - ஆறு. இது பேரூருக்கு மேற்கில் 25 நாழிகையளவில் வெள்ளிமலைச் சாரலில் வன்னி மூலத்தில் எழுந்து ஓடிவந்து பேரூர்வழி வரும்வரை **காஞ்சிநதி** எனப் பெயர்பெற்றும், அதன் கீழ்க் காவிரியிற் கூடும்வரை **நொய்யல்** எனப்பெயர் பெற்றும் விளங்கும் ஓர் ஆறு. காவிரியின் உப நதிகளுள் ஒன்று. எப்போதும் நீரூற்றுடன் வற்றாது ஓடும். இது காவிரியுடன் கூடும் இடத்தில் **நொய்யல்** என்ற இருப்புப்பாதை நிலையத்தை அமைத்துள்ளார்கள். இதனுள் இடப்படும் இறந்தோ ரெலும்புகள் நாளடைவில் கல்லாக

ஆகிவிடும் தன்மை இன்றும் காணப்படும்சிறப்புடையது; சிறு புண்களும் போல் கொங்குச் செழிப்பு விளக்கும் 32 அணைகளையுடையதொரு சிறப்புமுடையது. இதன் நீர் பல நோய்களை நீக்கும் தன்மையும் இன்றும் காணப்பெறும். இதன் சிறப்புக்கள் பேரூர்ப் புராணத்துள் கச்சியப்ப முனிவர்பெருமானால் விதந்து போற்றப்பட்டுள்ளன.★

பேரூர் - ஊர்ப்பெயர்; இது முன்னாளில் மிகப் பெரிய நகரமாக விளங்கிய தென்பது தேச சரிதத்தாலும் பழைய கல்வெட்டுக்களாலும் தெரிகிறது.

இது மேலைச் சிதம்பரம், ஆதிபுரி, பிறவாநெறி முதலிய பற்பல காரணப்பெயர்களால் விளங்க வழங்கப்படும். பேரூர்ப் புராணம் பார்க்க; "பேரூர் மன்று ளாடிய பட்டிப் பெருமான் **பிறவா நெறியானே**" என்ற நம்பிகள் (ஊர்த்தொகை) திருவாக்குக் காண்க; தில்லையம்பலவர் நடத்தினை இங்கு நம்பிகளுக்குக் காட்டினார் என்பது மேல்வரும்

★ இந் நதிச்சிறப்பினைப் பற்றிச் சில பொருள்கள் ஈண்டுத் தரப்படுகின்றன:

கலியிடைக் கன்ம முற்றுங் காதிநா சஞ்செய் மாண்பாற்
கலிகன்ம நாசி னிப்பேர் கைக்கொளு மினைய காஞ்சி
ஒலிநதி விருத்த கங்கை யுறுபிர யாகை யென்னப்
பலபரி யாயப் பேரும் பற்றுமா வுலகம் போற்ற. (37)

நிவந்தெழு புனற்பூங் காஞ்சி நெடுங்கரை மருங்கு நண்ணித்
தவஞ்செபந் தியானம் யோகந் தனிமகந் தரும மாற்றின்
அவந்தெறும் பயனொ ரோவொன் றனந்தமாய் விளையு மந்தப்
பவந்தெறுங் காஞ்சி மேன்மை பகரலாந் தகைமைத் தன்றே. (38)

— **பேரூர்ப் புராணம்-தீர்த்தப் படலம்-கச்சியப்ப முனிவர்.**

- **ஆர்த்தெ**ழுந்தே,

யந்நாட் பகீரதற்கா யார்த்தெழுந்த கங்கையைப்போ
லிந்நாட் பலவுலக மீடேறப்—பொன்னுற்
பொலிந்த ரசிதப் பொருப்பி லுலாவி
மலிந்தபொருள் பற்பலவும் வாரிக்—கலந்து
தொடும்பொருளை யெல்லாஞ் சுவர்ணமய மாக்கி
விடும்பரிசாற் காரணப்பேர் மேவிக்—கடும்பவநோய்
யாவு மகற்றி யறம்பொருளின் பாக்கியலை
வாவி வருங்காஞ்சி மாநதியான்— (92-95)

- **திருப்பேரூர்க் கிள்ளைவிடுதூது-வித்துவான்-கந்தசாமி முதலியார்.**

பேரூர்ப் புராணம் 2-ம் பதிப்பு - பதிப்பாசிரியர் முன்னுரையும், பண்டைய சரித வரலாறும் பார்க்க.

உரைத்தநாற் பயனுட் பெரும்பய னாய தொள்ளிய **வீடஃ துறலால்**
தரைத்தலைப் **பேரு** ரென்மர்கள் சில; ரெத் தலத்தினுஞ் சாற்று**நாற்பயனும்**
நிரைத்தலிற் **பேரு** ரென்மர்கள் **பலரே;** நீடிய வாதிமா நகரை
இரைத்தெழு கடல்போல் **வளத்தினும் பேரு** ரென்மர்கள் பற்பலா **யீரரே.**

- **திருநகரப்படலம் (1)**

போட்டி விளைத்,

தூருரெல் லாஞ்சின்ன வூராயப் புறங்கொடுக்கப்,
பேரு ரெனத் திகழ்பே ரூரினுன்—,

-**கிள்ளைவிடு தூது (92)**

திருப்பேரூர்-கனகசபை மண்டபத்தில் உள்ள திருவுருவங்கள்



ஸ்ரீ விநாயகர்




ஸ்ரீ அகோர வீரபத்திர மூர்த்தி




ஸ்ரீ ஆறுமுகவர்




ஸ்ரீ யானை உரி போர்த்த மூர்த்தி



ஸ்ரீ பிட்சாடன மூர்த்தி



ஸ்ரீ ஆலங்காட்டுக் காளியம்மன்



ஸ்ரீ ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி



ஸ்ரீ அக்னி வீரபத்தி மூர்த்தி

இத்திருமண்டபம் மதுரை அளகாத்திரி நாய்க்கரால் அமைக்கப்பட்டது
(கி.பி.1642-ஆண்டு)

படம்-6

3243. அத்திருப் பதியை யணைந்துமுன் றம்மை
யாண்டவர் கோயிலிற் புகுந்து
மெய்த்தவர் சூழ வலங்கொண்டு முன்பு
மேவுவார் தம்மெதிர் **விளங்க**
நித்தனார் தில்லை மன்றுணின் றாட
னீடிய கோலநேர் காட்டக்
கைத்தலங் குவித்துக் கண்களா னந்தக்
கலுழிநீர் பொழிதரக் கண்டார். 89

பாட்டினாலும், இப்பதியின் பெருமான் இத்திருநடனக்காட்சியைத் தில்லையில் நம்பிகளுக்குக் காட்டியருளினர் என்பது "பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற்றம்பலத்தே பெற்றாம்" என்ற நம்பிகளது திருவாக்காகிய அகச்சான்றாலும் பெறப்படுதலின் இப்பதி தில்லையம்பதியே யாகும் என்ற உண்மை விளங்கும்; இவ்வுண்மையினை ஆசிரியர் ஈண்டு இப்பதியில் நம்பிகள் வழிபட்ட வரலாற்றினைத் தில்லையின் வழிபாடு கூறிய (250—253) அந்த யாப்பிலும் சந்தத்திலும் யாத்த வகையாலும், ஈரிடத்திலும் முறையே அவ்வப்பாட்டுக்களின் பொருளும் கருத்தும் ஒற்றுமை பெறக் கூறிய திறத்தாலும், ஈண்டு "உலகெலாம்" என்றும் இறைவர் தந்த முதன்மொழி கொண்டு தொடங்குதலானும், பிறவாற்றானும் அறியவைத்த ஆசிரியரது அருட்குறிப்புக்கொண்ட கவிநலத்தின் தெய்வ மணம் கண்டுகொள்க. "உலகெலா முய்ய" (3242) என்ற இத்திருப் பாட்டுப் "பெருமதில் சிறந்த" (250) என்ற பாட்டின் பொருளும், மேல்வரும் "அத்திருப்பதியை" (3243), "காண்டலுந் தொழுது" (3244), "அந்நிலை நிகழ்ந்த" (3245) என்ற பாட்டுக்கள், முறையே, "வையகம் பொலிய" (251) "ஐந்து பேரறிவும்" (252), "தெண்ணிலா மலர்ந்த" (253) என்ற பாட்டுக்களின் **கருத்தும்** பொருளும் விளங்க வைத்து நிற்பன காண்க. பேரூர் குறுகினார் மூறுகு மாதரவால் - புகுந்தார் - திருவணுக் கன்றிருவாயில்; தில்லை மன்றுணின்றாடல் - நேர்காட்ட.... கண்டார் - வெளியே ஆடுகின்றாரை அஞ்சலி மலர்த்தித் - தாழ்ந்தெழுந்தான்; பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம் புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்க=ஐந்து பேரறிவும்...ஆனந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து; பொன் மணிமன்றுள்... **புரிநடங் கும்பிடப் பெற்று** லென் னிப்புறம்போ யெய்துவது= **திரு நடங் கும்பிடப் பெற்று** மண்ணிலே வந்த பிறவியே - வாலிதா மின்பமாம்; என்றிவ்வாறு ஒற்றுமை கண்டு கொள்க.

குலவுமக்கொங்கில், குலவுமிக்கொங்கில் - என்று முன் பதிப்புக்களிலெல்லாம் கொண்ட பாடங்கள் தவறு. 88

3243. (இ-ள்) அத்திருப்பதியை...வலங்கொண்டு - அந்தத் திருப்பதியாகிய திருப்பேரூரினை அணைந்து, முன்னால் தம்மை ஆண்டருளிய இறைவரது திருக்கோயிலினுள்ளே புகுந்து, மெய்த்தவர்களாகிய அடியார்கள் புடைசூழ வலமாக **வந்து;** முன்பு மேவுவார் - திருமுன்பு சென்று சேர்வாராகிய நம்பிகள்; தம்மெதிர்...காட்ட - தம்மெதிரே இறைவனார் தில்லையம்பலத்திலே நின்றாடுகின்ற நீடிய திருக்கோலத்தினையே

3244. காண்டலுந் தொழுது வீழ்ந்துட னெழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்கத்
தாண்டவம் புரியுந் தம்பிரா **னுரைத்**
தலைப்படக் கிடைத்தபின் சைவ
ஆண்டகை யாருக் கடுத்தவந் நிலைமை
விளைவையா ரளவறிந் துரைப்பார். 90

இங்குக் காட்டியருள; கைத்தலம்...கண்டார் - இரண்டு கைகளையும் சிரமேற் கூப்பிக் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் ஆறுபோலப் பெருகிவரக் கண்டருளினர்.

(வி-ரை) முன் தம்மை ஆண்டவர் - திருவெண்ணெய் நல்லூரிலும், அதன் முன் திருக்கயிலையிலும் தம்மை ஆளாகக் கொண்ட இறைவனுர்.

மெய்த்தவர் - உண்மை யடியார்கள். நம்பிகளுடனே சூழ்ந்து திருக்கோயிலில் இறைவரை வணங்கப்பேறு பெற்றது மெய்த் தவப் பயனும் என்பது. திருக்கோயில் வழிபாடு அடியார்களுடன் கூடிச் செய்யத் தக்கது என்ற குறிப்புமாம்.


நித்தனுர்...கோலம் விளங்கக் - காட்ட - தில்லைத் திருநடனத்தின் காட்சியே இங்குக் காணும்படி விளக்கமாகக் காட்டியருள; திருவீழிமிழலையில் திருப்புகலிக் காட்சியும், திருமருகலிற் றிருச் செங்காட்டங்குடிக் காட்சியும் ஆளுடைய பிள்ளையாருக்கு இறைவர் அருளிய நிலைகள் இங்கு நினைவுகூர்தற்பாலன; ஒரு பதியிற் கும்பிட்டு வழிபட்டால் அப்பதியின் இறைவரின் திருவடையாளங்கள் முதலிய திருமேனியின் கோலங்கள் முழுதும் மனத்துட் பதியும்படி கண்டு வைத்து வழிபட வேண்டுமென்ற நிலையுங் காட்டப்பட்டது.

நேர் காட்டக் - கண்டார் - காட்டக் காண்பது உயிரியல்பு. இந்நினைவின் உறைப்புப் பற்றியே, பின்னர்த் தில்லையில், இக்காட்சியே கண்டு பேரூரிற்கண்ட நிலை சிறப்பித்துப் "பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்ருும்" (தேவா) என்றருளிச் செய்கின்ருர்.

ஆனந்தக் கலுழிநீர் - ஆனந்த வெள்ளமாகி அருவிபோலப் பாய்ந்தொழுகும் கண்ணீர்; **கலுழி** - காட்டாறு; நீர்ப் பெருக்கு; பெரு வெள்ளம் என்றலுமாம்.

வலங்கொடுதிருமுன்—என்பதும் பாடமாம். *89*


3244. (இ-ள்) காண்டலும்...எழுந்து - முன் கூறியவாறு காட்டக் கண்டவுடனே தொழுது நிலமுற விழுந்து உடன் எழுந்து நின்று; கரையில்...உருக்க - கரை காணுத பேரன்பானது எலும்பினையும் உருகச் செய்ய; பூண்ட...பொங்க-இயைந்த ஐம்புலங்களாலும் அறியப்படாத பேர் ஆனந்தம் தம்முள்ளே கலந்து மெய்யுணர்வினிலே நிறைந்து மேம்பட; தாண்டவம்...கிடைத்தபின் - ஆனந்தப் பெருங்கூத்தியற்றும் தம் பெருமானுரை நேரே பெறும்படி கிட்டிய பின்னர்; சைவ...உரைப்பார் - சைவ ஆண்டகையாராகிய நம்பிகளுக்குப்


திருப்பேரூர் "மீகொங்கில் அணிகாஞ்சிவாய்ப் பேரூர் பெருமான்" -(நம்பி.தேவா.கோயில்.௧௦).
கோமுனிவர் ஸ்ரீ நடேசப்பெருமான் ஸ்ரீ சிவகாமசுந்தரியம்மை பட்டி முனிவர் பாட்டுக்கள்- 3243-3244

திருப்பேரூர்-பட்டீச்சுரம்



திருப்பேரூர்-அறுபத்து மூவர்



திருப்பேரூர்-சுவாமி கோயில்-விமானம்

படம்-8

3245. அந்நிலை நிகழ்ந்த வாரருள் பெற்ற
வன்பரு ரின்ப வெள்ளத்து
மன்னிய பாடன் மகிழ்ந்துடன் பரவி
வளம்பதி யதனிடை மருவிப்
"பொன்மணி மன்று ளெடுத்தசே வடியார்
புரிநடங் கும்பிடப் பெற்றால்
என்னினிப் புறம்போ யெய்துவ" தென்று
மீண்டெழுந் தருளுதற் கெழுவார், 91

பொருந்திய அந்நிலைமையின் அதீதமாகிய ஆனந்தத்தின் விளைவினை அளவறிந்துரைக்க வல்லவர் யாவர்? (ஒருவருமிலர்.)

(வி-ரை) காண்டலும் - *முன் கூறியபடி திருவருள் காட்டக் காணலும்.*

பூண்ட ஐம்புலனிற்... பொங்க - பூணுதல் - ஒவ்வொரு புலனும் உரிய ஒவ்வோர் பொறியினைப் பொருந்தியறிதலாற் **பூண்ட** ஐம்புலன் என்றார்; **ஐம்புலனிற் புலப்படா இன்பம்** - ஐம்பொறிகளுக்கும் விடயமாகிய ஐம்புல னின்பங்களுக்குப் படாத பேரின்பம். புலன்களுக்கு மெட்டாத என்க; ஐம்புலனாலும் அறியப்படாத சிவானந்த இன்பம். **ஐம்புலனிலும்** என முற்றும்மை தொக்கது.

புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்க - புலனின்பம் புணரு முணர்வு வேறு; இங்கு அவற்றாற் புலப்படா இன்பம் புணர்வுறும் மெய்யுணர்வு - சிவானந்த போக பூமி - வேறு; இது சிவஞான அருட்புவனமாகிய அருளுணர்விற் பொங்கிற்று என்பது.

தாண்டவம்... கிடைத்தபின் - அருட் கூத்து ஆடும் தம் பெருமானை வெளிப்படக் கை வரும்படி நேர் பெற்றபின்; **தலைப்படுதல்** - கிட்டுதல்; கிடைக்கப்பெறுதல்.

சைவ ஆண்டகையார்...நம்பிகள்; **ஆண்டகைமை** - அன்பின் உறைப்பாகிய வீரம்.

அடுத்த அந்நிலைமை விளைவு - பெற்ற சிவானந்தத்தின் விளைவாகிய போகம்.

யார் - உரைப்பார் - யார் என்ற வினா ஒருவருமிலர் என்று எதிர்மறை குறித்து நின்றது; ஆதலின் எம்மாற் சொல்லலாகாதது என்பது குறிப்பெச்சம்.

குறிப்பு:— இப்பாட்டினையும் "ஐந்து பேரறிவும்" என்ற திருப்பாட்டினையும் ஒப்பிட்டுக் காண்க. *90*

3245. **(இ-ள்)** அந்நிலை...அன்பனார் - அத்தன்மை நிகழப் பெற்ற நிறைந்த அருளினைப் பெற்ற அன்பனாராகிய நம்பிகள்; இன்பவெள்ளத்து...பரவி - இன்பப் பெருக்கிலே நிலைத்த திருப்பாட்டினை மகிழ்ச்சியோடும் பாடித் துதித்து; வளம்பதி...மருவி - வளம் பொருந்திய அப்பதியினிடைத் தங்கியிருந்தருளி; பொன்மணி...என்று - அழகிய பொன்னம்பலத்தினில் எடுத்த சேவடியினையுடைய கூத்தப்பெருமானார் புரிநடனத்தினைக் கும்பிடும் பேறு பெற்றால்

3246. ஆயிடை நீங்கி யருளினாற் போவா
ரருவரைச் சுரங்களும் பிறவும்
பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து
மேயவண் டமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து
சேயிடை கழியப் போந்துவந் தடைந்தார்
தென்றிசைக் கற்குடி மலையில். 92

இனிப் புறமே சென்று கிடைக்கப்பெறும் பொருள் வேறென்ன உள்ளது? (ஒன்றுமில்லை) என்ற கருத்துடனே; மீண்டு - அங்கு நின்றும் புறப்பட்டு; எழுந்தருளுதற் கெழுவார் - செல்வதற்குத் துணிந்தெழுவாராகி;

(வி-ரை) அந்நிலை நிகழ்ந்த - "அடுத்த அந்நிலைமை" (3244) என்று முன்பாட்டிற் கூறி முடித்த அந்த என அகரம் முன்னறி சுட்டு; நிலையாவது முன் கூறிய சிவானந்த அனுபவநிலை. **நிகழுந்த** - நிகழப்பெற்ற.

மன்னிய பாடல் - இப்பதிகம் கிடைத்திலது!

மருவி - சிலகாலம் தங்கியிருந்து.

"பொன்மணி... எய்வது" என்று - இக்கருத்துடன் கூடிய பதிகம்பாடி அருள்விடை பெற்று என்பது. நடம் கும்பிடப் பெறுதலே எல்லாவற்றிலும் சிறந்த பேறு; வீடுதரும் தன்மையுடையது; ஆதலின் இதனைவிட்டுப் புறம்போய்ப் பெறுவதுதான் யாது? ஒன்றுமில்லை என்பதாம்; "கும்பிடப் பெற்று மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதா மின்பமாம்" என்ற கருத்து; **என்று** - என்ற பொருள் கொண்ட பதிகம் பாடியருளி; இப்பதிகமும் கிடைத்திலது.

மீண்டு - முன் 3244-ல் உரைத்தபடி இறைவர் வயமேயாகித் தன்னை மறந்த அழுந்திய நிலையினின்றும் வெளிப்பட்ட நிலையின் மீண்டு என்க.

எழுந்தருளுதற்கெழுவார் - அங்கு நின்றும் புறப்பட்டுச் செல்வதற்கு எழுவாராகி; **எழுவார் - நீங்கி** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இவ்வாறன்றி, உலகியல் வழக்கில் போகின்றேன் என்னாது, வருகின்றேன் - போய்வருகின்றேன் என்று விடைபெறும் மரபுக்கு ஏற்ப இங்கு உரைத்துக் கொள்வதுமாம். 91

3246. (இ-ள்) ஆயிடை...செல்வார் - அவ்விடத்தினின்றும் நீங்கி அருள் விடைபெற்றுச் செல்லும் நம்பிகள்; அருவரை...பரவி - கடத்தற்கு அரிய மலைக்கானங்களும் மற்றும் நிலங்களும் பெருகிப் பாய்கின்ற நதிகளுமாகிய பலவற்றையும் கடந்து சென்று இறைவர் பதிகள் பலவற்றையும் வணங்கிப் பொருந்திய வளப்பமுடைய தமிழ்த் திருப்பதிகங்களாலே துதித்து; வெஞ்சமாக் கூடலும் பணிந்து - திருவெஞ்சமாக் கூடலினையும் தொழுது; சேயிடை...மலையில் - நெடுந்தூரம் கடந்து சென்று தென்றிசையில் உள்ள திருக்கற்குடி மலையில் வந்து அடைந்தருளினர்.

வெஞ்சமாக்கூடல் (பாட்டு-3246)



வெஞ்சமாக்கூடல்-முன்கோபுரம்



உள்தோற்றம்



வெஞ்சமாக்கூடல்- உள்தோற்றம்




வெள்ளம் கரை புரளும் சிற்றாறும்
அதன் கரையில் கோயிலும்(பழைய படம்)
(குடகனாறு-குழகனாறு)



1 மனைவி 2 வெஞ்சன் 3 ஒரு தெய்வத்தின் சிரம்
(கீழ்ப்பாகம் மண்ணுள் புதைக்கப்பட்டுள்ளன)



வெஞ்சமாக்கூடல்-வெள்ளம் கரை
புரண்டோடும் காட்சி(பழைய படம்)



வெஞ்சமாக்கூடல் -
உற்சவ மூர்த்திகள்

படம்-9

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ஆயிடை நீங்கி - ஆயிடை - அவ்விடத்தினின்றும்; **இடை-**இடம்; இடையினின்றும். நீக்கப் பொருளில் வரும் ஐந்தனுருபு தொக்கது.

அருளினால் - அருள்விடை பெற்று.

அருவரை... கடந்து - கற்சுரங்களுங் கட்டாறுகளுமாயுள்ளன மேல் கொங்கு நாட்டின் நிலையும் அதனை ஒட்டிய கீழ் கொங்கின் நிலையுமாம். "கானகமுந், துன்று மணிநீர்க் கான்யாறுந் துறுகற் சுரமுங் கடந்தருளி" (வெள்-சருக்-15), "கற்சுரமு நீருருங் கான்யாறு நெடுங்கானும் பலகழிய" (கழறிற்.புரா.164) முதலியவை பார்க்க.

பதிபல - இவை - மூலனூர், தென்னிலை, கருவூர் முதலாயின என்பதும்,

நதிகள் - அமராவதி - நன்காஞ்சி - சிற்றாறு - குழகனாறு முதலியன என்பதும் கருதப்படும்.

வெஞ்சமாக் கூடல் - கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற பதிகளுள் ஒன்று. தலவிசேடம் பார்க்க.

சேயிடை கழிய - இடையிலே பட்ட நெடுந்தூரம் நாடு கடந்து.

தென்றிசை - கொங்கு நாட்டின் தெற்குத் திசையில் உள்ள. 92

திருவெஞ்சமாக்கூடல்

திருச்சிற்றம்பலம் பண்- கொல்லிக்கௌவாணம். 7-ம் திருமுறை

எறிக்குங் கதிர்வே யுதிர்முத் தமொடு மிலவங்கத் தக்கோல மிஞ்சி
செறிக்கும் புனலுட் பெய்து கொண்டு மண்டித் திளைத்தெற்று சிற்றா றதன்கீழ்க் கரைமேல்
முறிக்குந் தடமா முடப்புன்னை ஞாழல் குருக்கத் திகண்மேற் குயில் கூவலறா
வெறிக்குங் கலைமா **வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே** (1)

வஞ்சி நுண்ணிடையார் மயிற்சாயனல்லார் வடிவேற் கணல்லார் பலர் வந்திறைஞ்சும்
வெஞ்சமாக் கூடல் விகிர்தா வடியேனையும் வேண்டுதியே யென்றுதான் விரும்பி
வஞ்சியா தளிக்கு வயனா வலர்கோன் வனப்பகை யப்பன்வன்றொண்டன் சொன்ன
செஞ்சொற் றமிழ்மாலைகள் பத்தும் வல்லார் சிவலோகத்திருப்பது திண்ணமன்றே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— "வெஞ்சமாக்கூடல் விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே!" என்ற கருத்து; பதிகம் 10-வது பாட்டும், பதிகத்தின் மகுடமும் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) எறிக்கும் - காற்றினால் மிகவும் அசைக்கப்பட்டு மோதும்; **வேயுதிர் கதிர்முத்தம்** என்க; முத்துக்கள் பிறக்கு மிடங்களுள் மூங்கிலுமொன்று; முத்தம் - இலவங்கம் - தக்கோலம், இஞ்சி இவை மலைபடுபண்டங்கள். இங்குக் குறிஞ்சி நிலப்பகுதியாதலானும், சிற்றாறு கோடைக்கானல் மலைத் தொடரிற் சேர்ந்த பெருமாள்மலை,

வராகமலைகளினின்றும் தோன்றிப் பெருகி வருதலாலும் குறிஞ்சிக் கருப்பொருளாகிய இம்மலைப் பண்டங்களை அலைத்து வருதல் கூறினார். மேல்வரும் பாட்டுக்களிலும் இவ்வாறே கண்டுகொள்க. "காடும் மலையும் நாடு மிடறிக் கதிர் மாமணி சந்தனமு மகிலுஞ், சேடனுறையும், மிடந்தான் விரும்பித் திளைத்தெற்று சிற்றாறு" (8) என்று இதனை நம்பிகள் நன்கு தெரித்தருளுதல் காண்க. **வெறிக்கும் கலைமா** - தாமிச்சையாய்ப் பூத்துத் திரியும் கலைமான் கூட்டம்; **வெஞ்சன்** என்ற அசுர அரசனது நகரமாதலின் வெஞ்சமாக்கூடல் எனப் பெயர்பெற்றது. **கூடல்** - குழகனாறும் சிற்றாறும் கூடுகின்றமையால் போந்த பெயர். மேல் அணிமையில் இஃது அமராவதியினுடன் கூடிப் பெருகி ஓடுகின்றது; **விகிர்தன்** - இப் பதியின் சுவாமி பெயர். **வேண்டுதியே** - ஏகாரம் விரும்பி ஆட்கொள்வையோ? என்ற வினைக்குறிப்பு; வேண்டுதி என்ற விண்ணப்பமுமாம்; **முடப்புன்னை** - நேரே வளராது முடங்கிக்கொண்டு கோணல்களுடன் வளரும் இம்மரத்தினியல்புணர்த்தியது. மேல், நெடுந்தாட்டெங்கு, குறுந்தாட்பலவு, நிரையார் கமுகு என்பன சாதியாக வருதல் காண்க. தமிழ் நயமும் காண்க; **செறிக்கும் புனல் - துளங்கும் புனல் - திரையார் புனல்** - முதலியன சிற்றாற்றின் நீர்செறிந்த தன்மைக்குறிப்பு;—(2) **மணி, சந்தனம், அகில்** -மலைபடு பண்டம்; **மதில் மாளிகை, கோபுரம், மண்டபம்** - இவையிந்நகர் முன்னாளிற் செழித்தோங்கிய அரசன் றலைநகராயிருந்த நிலை குறித்தன; **கமுகு** முதலியனவை பொழிலாகச் செழித்த மருத நில வளங்கள்; சிற்றாறு பிறந்த இடம் மலைசார்ந்த குறிஞ்சிநிலமென்பதும், அது பாய்ந்து வளஞ் செய்வது மருதநில மென்பதும் குறிப்பு;—(4) **அகில் - சாமரை** - முதலியவை குறிஞ்சிக் கரு. **சாமரை** - சாமரையாகப் பயன்படும் கவரிமான் வால்மயிர் குறித்தது; காரிய ஆகுபெயர்; **நலசாமரை** - ஆலயங்களிலும் பெரியோரிடத்தும் உபசாரப் பொருள்களாய் நன்மைதரப் பயன்படுதல் குறிப்பு; **அரங்கு** - ஆடல் பயிலுமிடம்:—(5) **துளை வெண்குழை** - சங்கினைத் துளைத்து எடுத்து வடிவாக்கிய குழை; "சங்கக் குழையார் செவியா" (தேவா); **சுருள்** - ஓலைச் சுருளாலாகிய; சுருள் போன்றமைந்த; **தூங்கும்** - தொங்கும்; வடிந்த காது; **களையே** -கள்; தேன்; கள்ளையே என்பது எதுகை நோக்கிக் **களையே** என நின்றது; பிள்ளை என்பது **பிளை** என நின்றது. **வெள்ளை** என்பதும் இவ்வாறே;—(6) **உழுவார்க்கரிய** - உழவில் எவர்க்குமரிய;—(7) **நரையேறு** - வெள்ளை விடை; **துத்தி** - உச்சிக்கொண்டை; படத்தின் உச்சி; **படம் ஆயிரம்...அரவு** - இறைவர் பூணும் பாம்பின் இயல்பு குறித்த அடைமொழிகள்;—(8) **காடு, மலை, நாடு** - முல்லை - குறிஞ்சி, மருதம் என்ற திணைகளையும் குறித்தன; **சேடனுறையும் இடம்** - பாதாள உலகம்; **விரும்பி** - நோக்கி; கடலினை நேரே சென்று சேராமையால் விரும்பி என்றார்; **வேடர்** - திருவேடத்தார்; நிலம்பற்றி **வேடர்** குலங்குறித்த தென்றலுமாம்;—(9) **கொங்கு** - மணம்; நாடு குறித்ததென்றலுமாம்; **கொடுகொட்டி** - இயம்; **வீணை** - கையில் ஏந்திய நிலை; "மிக நல்ல வீணை தடவி" "நல்வீணை வாசிக்குமே" (தேவா); **துங்கார் புனல்** - பெரிய நீர்; பெருமையுடைய என்றலுமாம்; வெங்கார் - **வெம்மை** - விருப்பம்;- **(10) இடையும் சாயலும் கண்ணும்** - சிறந்த இயல்பு குறித்தன; **நல்லார்** - பெண்கள்; **வஞ்சி** - கொடி; **"வெஞ்சமாக்கூடல்...வேண்டுதியே" என்றுதான் விரும்பி** - நம்பிகள் பதிகக் கருத்தினை எடுத்துக் காட்டியவாறு; **வஞ்சியாதளிக்கும் வயல்** - என்றது செய்திக்குத் தக்கவாறு மருது வளந்தரும்; "செய்பவர் செய்திப் பயன் விளைக்குஞ் செய்" (போதம்); **வஞ்சியாதளிக்கும் நாவலர் கோன்** - என்று கூட்டி யுரைப்பினுமமையும்.

தலவிசேடம்:- **திருவெஞ்சமாக்கூடல்** - இது கொங்கு நாட்டுப் பாடல் பெற்றதலங்கள் ஏழனுள் ஐந்தாவது பதி; வெஞ்சன் என்னும் அசுர அரசனது தலைநகரமாதலின் இப்பெயர் பெற்றது. கோட்டையின் அடையாளங்கள் காணப்படுவன; ஊர் மண்மேடிட்டுப்போய்க், கோயில் பள்ளத்தில் இருக்கின்றமை இதன் பழைமையைக் காட்டும் அடையாளங்களுள் ஒன்று; சுவாமிபெயர் பதிகப்பாட்டுத் தோறும் உள்ளது; குழகனாறு என்னும் சிற்றாறு கோயிலின் மேல்புறம் அணிமையில் ஓடுகின்றது; சுவாமி - **விகிர்தேசுவரர்;** அம்மை - **பண்ணினேர்மொழி**; தீர்த்தம் - **குழகனாறு**; பதிகம் 1. இது கருவூரினின்றும் தென்மேற்கில் அரவக்குரிச்சிக் கற்சாலைவழி 10 நாழிகையளவு சென்று பின் தெற்குநோக்கி மட்சாலைவழி 2½ நாழிகையளவில் அடையத் தக்கது. சிற்றாறு என்னும் குழகனாற்றின் தென்கரையில் உள்ளது.

திருப்பேரூர் - (வைப்புத்தலங்களுள் ஒன்று); இத்தலத்துக்கு நம்பிகள் எழுந்தருளிப் பதிகம் பாடின செய்தி புராணத்துட் கூறப்பட்டது; பதிகமிருந்து இறந்து போயிருக்க வேண்டும்; நம்பிகள் ஊர்த்தொகையிற் "பேரூருறைவாய் பட்டிப்பெருமான் பிறவா நெறியானே" என்று போற்றி யருளியுள்ளார்; நம்பிகளது கோயிற் பதிகத்தினுள் இத்தல இறைவர் தில்லையம்பலத்தில் நம்பிகளுக்கு ஆடல் காட்டக் கண்டு அருளிய சிறப்புப் போற்றப்பட்டது; சுவாமி பெயர் **திருவான்பட்டி யுடையார்** என்பது பழங்காலத்துக் கல்வெட்டுக்களிற் கண்டது. இப்பெயர் அரசுகளது காப்புத் திருத்தாண்டகத்தினுள்ளும் (10) "**ஆன்பட்டியும்**" என்று போற்றப்பெற்றுள்ளது. இப்பதி ஆதிபுரி, பிறவாநெறி முதலாகப் பற்பல காரணப் பெயர்களையுடையது. காஞ்சிநதி, பிரமதீர்த்தம் முதலிய பல சிறந்த தீர்த்தங்களையுடையது; காஞ்சிநதி, தேவாரத்தில் **அணிகாஞ்சி** எனப்பெற்ற பெருமையுடையது; இதனுள் இடப்பட்ட எலும்புகள் கல்லாய் - விளைவது இன்றும் காணலாம். பிரமதீர்த்தம் எவ்வகைநோய்களையும் போக்கிச் சுகந்தரும் குணமுடையது; இன்றும் காணத்தக்கது. நாரதர், காலவர், விசுவாமித்திரர், பட்டிமுனி, கோமுனி, காமதேனு, இந்திரன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றமையும்; முசுகுந்தன், கரிகாற் சோழன், குசத்துவசன், குலசேகரன், திரிலோக சோழன் முதலிய அரசர்கள் வழிபட்டுப் பேறு பெற்றமையும், பிற சிறப்புக்களும் தல புராணத்தினுள் பேசப்பட்டன. கச்சியப்ப முனிவரியற்றிய இத்தலபுராணம் சிறந்து விளங்கும் பெருமையுடையது. மதுரை அழகாத்திரி நாயக்கரால் அமைக்கப்பட்ட கனகசபை சிறந்த சிற்பவிளக்கமுடையது; ஏறக்குறை 60 ஆண்டுகளின் முன் வாழ்ந்த கோயம்புத்தூர் வித்வான் கந்தசாமி முதலியார் (அடியேனின் தந்தையார்) இப்பதியிற் பேரன்பு பூண்டு பல திருப்பணிகள் செய்ததோடு திருப்பேரூர்க் கிள்ளைவிடுதூது, பேரூர் மும்மணிக் கோவை, பேரூர்ப் பச்சை நாயகியம்மையார் ஊசல், மரகதவல்லியம்மன் மாலை, போற்றிக் கலிவெண்பா, பச்சைநாயகியம்மையார் ஆசிரிய விருத்தம் முதலிய பிரபந்தங்கள் பலவற்றையும் இயற்றியுள்ளார்கள்; இவையேயன்றி பேரூர்ப் பட்டிப்புராணம் என்னும் பிறவாநெறிப் புராணம், பச்சைநாயகியம்மை பிள்ளைத் தமிழ், அரசம்பல விருத்தம், திருப்பேரூர்ச் சிகையறுத்தான் வண்ணம், கண்ணாடி விடுதூது, விளக்குவிடு தூது, மரகதமஞ்சரி, பட்டீச்சுரக்கோவை, பச்சைநாயகியம்மன் பந்தடி, திருப்பேரூர்ப்பட்டி விநாயகர் ஆனந்தக் களிப்பு, மருதாசலபதி தாய்மகளேசல், உயிர்வருக்க மாலை முதலிய நூல்களும், பிரபந்தங்களும், தனிப் பாடல்களும் உண்டு.

வேறு

3247. **வீடு தருமிக் கற்குடியில் விழுமி யாரைப் பணிந்திறைஞ்சி**
நீடு விருப்பிற் றிருப்பதிக நிறைந்த சிந்தை யுடன்பாடிப்,
பாடும் விருப்பிற் றொண்டருடன் பதிகள் பலவு மணைந்திறைஞ்சித்
தேடு மிருவர் காண்பரியார் **திருவாறை மேற்றளி** சென்றடைந்தார். 93

இது கோயம்புத்தூர் புகைவண்டி நிலயத்தினின்றும் மேற்கே கற்சாலைவழி மூன்று நாழிகையளவில் அடையத் தக்கது. மோட்டார்பஸ் வசதியுண்டு.

3247. (இ-ள்) வீடு...பாடி - முத்திதரும் இந்தக் கற்குடிமலையில் விழுமிய நாதரைப் பணிந்து நிலமுற வீழ்ந்திறைஞ்சிப், பெருவிருப்பினாலே அன்பினால் நிறைந்த சிந்தையோடு திருப்பதிகம்பாடி; பாடும்...இறைஞ்சி - மேலும் திருப்பதிகங்கள் பாடித் துதிக்கும் விருப்பினாலே திருத்தொண்டர்களுடனே பற்பல பதிகளையும் சென்று வணங்கி; தேடும்...அடைந்தார் - மேலும் கீழுமாகத் தேடிய மால் பிரமர் இருவர்க்கும் காண்பதற்கரியவராகிய சிவபெருமானது திருஆறை மேற்றளியினைச் சென்று அடைந்தருளினர்.

(வி-ரை) இக்கற்குடி - கற்போர் மனம் நம்பிகளுடன் அப்பதியினில் அடைந்திருத்தலால் இகரச்சுட்டினாற் கூறினார்.

விழுமியார் - கற்குடி யிறைவரது பெயர். "**கற்குடியில் விழுமியானைக் கற்பகத்தை**" (தாண்டகம்); "கற்குடிக் கற்பகத்தை" (நம்பிகள்).

பணிந்திறைஞ்சி - பணிதல் - அஞ்சலிகூப்பி வணங்குதல்; இறைஞ்சுதல் - நில முற வீழ்ந்து வணங்குதல்.

பாடும் விருப்பில் - மேலும் மேலும் சென்று அங்கங்கும் பாடித் தொண்டு செய்யும் விருப்பினாலே; "அருச்சனை பாட்டேயாகும் ஆதலான் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று, தடுத்தாட்கொண்ட ஞான்று ஆண்டவர் பணித்தருளி யமையால் அத் திருத்தொண்டு செய்யும் விருப்பினால் என்றது குறிப்பு.

பதிகள் பலவும் - இவை, திருச்சிராப்பள்ளி, திருவெறும்பியூர், திருவேங்கூர், திருக்காட்டுப்பள்ளி, திருவாலம் பொழில், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருவேதிகுடி, திருத்தண்டங்குறை, திருப்புள்ளமங்கை ஆலந்துறை, திருச்சக்கரப்பள்ளி; திருப்பாலைத்துறை, திருச்சேலூர், திருநல்லூர் முதலிய என்பது கருதப்படும்.

குறிப்பு:— திருச்சிராப்பள்ளியினின்றும் காவிரி, குடமுருட்டியாறு, இவற்றின் தென்கரை வழி அடுத்து ஒரு பாதை நீளச்செல்கின்றது; அஃது அரசங்குடியினின்றும் திருக்காட்டுப்பள்ளிவரை (10 நாழிகை) சிற்றடிப் பாதையாகவும், பின்பு பெரும் பாதையாகவும் உள்ளது; இது சுருங்கிய நேர்வழியாதலின் இவ்வழியே நம்பிகள் சென்றிருத்தல் கூடுமென்பது கருதி மேல் உரைக்கப்பட்டது.

தேடும் இருவர் - அடியும் முடியும் தேடும் மாலும் அயனும்.

அக்கற்குடி — என்பதும் பாடம். 93

திருக்கற்குடி

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம். 7-ம் திருமுறை**

விடையா ருங்கொடியாய் வெறி யார்மலர்க் கொன்றையினுய்
படையார் வெண்மழுவா பர மாய பரம்பரனே
கடியார் பூம்பொழில்சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
அடிகே ளெம்பெருமா னடி யேனையு மஞ்ச லென்னே. (1)

அலையார் தண்பொழில்சூழ்ந் தழ காகி விழவமருங்
கலையார் மாதவர்சேர் திருக் கற்குடிக் கற்பகத்தை
இலையார் வாணுதலாள் நல்ல சிங்கடி யப்பனுரை
விலையார் மாலைவல்லார் வியன் மூவுல காள்பவரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— திருக்கற்குடி மன்னிநின்ற எம்பெருமானே! அடியேனையும் அஞ்சலென்னே; என்று நீடுவிருப்பிற் றிருப்பதிகம் நிறைந்த சிந்தையுடன் பாடியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பரம் - எப்பொருளுக்கும் அப்பாற்பட்டவர்; "அடியேனையும் அஞ்சலென்னே" பதிகத்தின் கருத்தும் மகுடமுமாம்; **அடிகேள்** - பெரியோரே;— **(2) அறவா** - "அற வாழி யந்தணன்" (குறள்);—**(3) மலைமேல் மாமருந்தே** - இங்கு மலையின் மேல் மன்னி நின்ற மருந்து போல்வார் என்றும், மலையில் உள்ள மருத்துப் பண்டங்கள் போலச் சிறந்தவர் என்றும் உரைக்க நின்றது;—**(5) சந்து** - பெருமை; புகழ்; **கந்து** - மணம்; **ஏன்று கொள்ளுதல்** - ஏற்றுக் கொள்ளுதல்; வீழ்ந்து படாமல் தாங்கிக் கொள்ளுதல்;—(7) தணியாத விருப்பம் விளைக்கும்;—**(8) நிலனே...ஆகி** - ஐம்பூதங்களையும் திருமேனியாகக் கொண்டு; இவை இறைவரின் எட்டு மூர்த்தங்களுள் வருவன; **புலனே** - அறியப்படுபவன்; **கனலே** - அழற்றூணுய் நின்றவரே!;—**(9) பெரும் பாலன்** - மார்க்கண்டேயர்; **விரும்பா** - விருப்பம் விளைப்பவரே!

குறிப்பு:— 8-வது திருப்பாட்டில் லகரமும் னகரமும் எதுகையாக வந்தன.

தலவிசேடம்:— திருக்கற்குடி - தொகுதி III பக்கம் 680 பார்க்க.

3248. (இ-ள்) செம்பொன்...மகிழ்வார்க்கு - செம்பொன் மேருமலையை வில்லாக வளைத்த சிவபெருமானுரது திருஆறை மேற்றளியிலே இறைவர் திருவடிகளைப் பணிந்து நாடோறும் மகிழ்ந்து எழுந்தருளிய நம்பிகளுக்கு; அருள்கூட - மேலும் பதிகள் சென்று வணங்கும்படி திருவருள் விடைகூடியதனுலே; உம்பர்....அணைவார் - தேவர்கள் வந்து

3248. செம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனா ராறை மேற்றளியில்,
நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி நாளு மகிழ்வார்க் கருள்கூட
உம்பர் போற்றுந் தானங்கள் பலவும் பணிந்து போந்தணைவார்
இம்பர் வாழ **வின்னம்பர் நகரைச்** சேர வெய்தினார். 94

வணங்கும் பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று போந்து அணைவாராகி நம்பிகள்; **இம்பர்...எய்தினார்** - இவ்வுலகிலுள்ளார் வாழும் பொருட்டுத் திருவின்னம்பரினைச் சேரச் சார்ந்தருளினர்.

(வி-ரை) மேருச் சிலை வளைத்த - மேருவைச் சிலையாக (வில்லாக) வளைத்த என்றும், மேருவாகிய சிலை (மலை)யினை வளைத்த என்றும் இரண்டுபொருளும் நின்றது.

மகிழ்வார்க்கு - அருள்கூட - மகிழ்வுற எழுந்தருளும் நம்பிகளுக்கு மேல் செல்லும்படி திருவருள் விடையும் குறிப்பும் கூடியதனாலே; **கூட** - காரணப் பொருளில் வந்த வினையெச்சம்.

உம்பர் போற்றும் - சிவ வழிபாட்டுக்குரிய சாதனங்கள் விண்ணுலகிற் பெறுமையாலே இப்புவனியில் வந்து வழிபடும் என்க. "புவனியிற் போய்ப்பிறவாமை யினாளும் போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்றவாறு" (திருவா.)

தானங்கள் பலவும் - பல பதிகளையும். இவை திருச்சத்திமுற்றம், திருப்பட்டீச்சுரம், திருப்பழையாறை, திருப்பழையாறை வடதளி, திருவலஞ்சுழி முதலாயின என்பது கருதப்படும். இதுவரை கிழக்கு நோக்கிப் போந்தருளிய நம்பிகள் இங்குக் குடமுருட்டி, காவிரியாறுகளைக் கடந்து, வடக்கு நோக்கிச் சென்றணைகின்றார். இனிச்சாரும் திரு இன்னம்பரும், அதன்மேற் சென்றருளும் திருப்புறம்பயமும் வடக்கு நோக்கிய யாத்திரையினைக் குறிக்கின்றன; இஃது "அங்க மோதியோர் ஆறைமேற்றளி நின்றும் போந்துவந் தின்னம்பர்த், தங்கி னேனையு மின்ன தென்றில ரீச னாரெழு நெஞ்சமே...புறம்பயந் தொழப் போதுமே" என்ற தேவாரத் திருவாக்கின் அகச்சான்றினால் விளங்கும் சரித ஆதரவு பெற்றது.

இம்பர் வாழ - மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடவே (35) நம்பிகள் திருவாணைக் குறிப்பின்படி வந்தவதரித்தா ராதலின் **இம்பர்வாழ** என்றார்; நம்பிகளின் அருளிப்பாடுகளினால் உலகம் பயன் பெற்று ஈடேறுதல் குறிப்பு.

வாழும்—என்பதும் பாடம்.

திருவாறை மேற்றளி - இதன் பதிகம் கிடைத்திலது!

தலவிசேடம்:— திருவாறைமேற்றளி - அமர்நீதி நாயனார் புராணத் திறுதியில்-பக்கம் 94 பார்க்க.

3249. ஏரின் மருவு மின்னம்பர் மகிழ்ந்த வீசர் கழல் வணங்கி
ஆரு மன்பிற் பணிந்தேத்தி யாரா வருளா லங்கமர்வார்
போரின் மலியுங் கரியுரித்தார் மருவும் **புறம்ப யம்போற்றச்**
சேரு முள்ள மிக்கெழமெய்ப் பதிகம் பாடிச் செல்கின்றார்; 95

வேறு

3250. "அங்க மோதியோ ராறை மேற்றளி" யென்றெ டுத்தமர் காதலிற்
பொங்கு செந்தமி ழால் விரும்பு "புறம் பயந்தொழப்போதுமென்"
றெங்கு மன்னிய வின்னி சைப்பதி கம்பு னைந்துட னெய்தினார்
திங்கள் சூடிய செல்வர் மேவு திருப்பு றம்பயஞ் சேரவே. 96

3249. (இ-ள்) ஏரின்...அமர்வார் - அழகினாலே பொலிகின்ற திருவின்னம்பரில் மகிழ்ந்தெழுந்தருளிய இறைவர் திருவடிகளை வணங்கி நிறைந்த அன்பினாலேபணிந்து துதித்து தெவிட்டாத அருளினாலே அங்கு விரும்பித் தங்குவாராகிய நம்பிகள்; போரின்...செல்கின்றார் - போர்த்தொழிலின் மிக்க யானையினை உரித்தருளிய இறைவர் எழுந்தருளிய திருப்புறம்பயத்தினை வழிபடுதற்குச் சென்று சேரும் திருவுள்ளத் தன்பு மீக்கூர மெய்த்திருப்பதிகத்தினைப் பாடிக் கொண்டு செல்கின்றாராகி,

(வி-ரை) ஏரின் மருவும் - ஏர் - அழகு.

ஆரும் அன்பில் - ஆரா அருளால் - ஆரும் - ஆரா - முரண் அணிச்சுவைபடக் கூறியது; **அன்பு** - நிறைவுபடும்; **அருள்** எஞ்ஞான்றும் தெவிட்டாது பெருகும்.

பணிந்து ஏத்தி - இப்பதிகம் கிடைத்திலது!

சேரும் உள்ளம் மிக்கெழ மெய்ப்பதிகம்பாடிச் செல்கின்றார் - ஒரு பதியினை நோக்கிச் செல்லும்போதே அதனைச் சேர்வோம் என்று துதித்துக்கொண்டே செல்லுதல் அதில் வைத்த ஆர்வப் பெருக்கினைக் காட்டுவதாம். "முதுகுன்றடைவோமே" "சோற்றுத் துறை சென்றடைவோம்" "காழிசேர்மினே" (தேவா) முதலியவை காண்க. **உள்ளம் -** உள்ளத்தின் வேட்கை குறித்தது. "நினைத்தன" (பதிகம்).

பாடிச் செல்கின்றார் - பாடியவாறே செல்வாராகி; பதிகம் மேற்பாட்டில் விரிக்கப்படும்.

மெய்ப் பதிகம் - "மெய்த் திருவாக்கெனு மமுதம்" (2986); **மெய்ம்மை** - அழிவுறாத சத்தாந்தன்மை. 95

3250. (இ-ள்) அங்கமோதி...என்று - "அங்க மோதியோ ராறை மேற்றளி" என்று தொடங்கி விருப்பமிக்க ஆசையினாலே பொங்கும் செந்தமிழினாலேதாம் "விரும்பும் புறம்பயந் தொழப்போதுமே" என்று; எங்கும்...புனைந்து - எங்கும் நிலைபெற்ற இன்னிசையினையுடைய திருப்பதிகத்தை அருளிச் செய்து; திங்கள்...சேரவே - சந்திரனைத் தரித்த செல்வராகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருப்புறம்பயத்தினைச் சேரும்படி; உடன் எய்தினார் - உடன் சென்றருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அங்கமோதி... என்றெடுத்து - பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

அமர் காதல் - மிக்க காதல்; **அமர்தல்** - பிரியாது நிலைபெறுதல்; விரும்புதல் என்றலுமாம்.

காதலிற் பொங்குதலாவது மீக்கொண்ட காதல் காரணமாக உள் நிறைந்து பொங்கிமேல் வழிதல் போலத் தடையிலாது முயற்சியின்றித் தானே வருதல்.

செந்தமிழ் இன்னிசை - இயலும் இசையும் கூடிய நிலை குறித்தது; **இசை** - கொல்லியாகிய பண்ணமைதியும் தாள அமைதியும் பாவமைதியும் ஆதிய நிலையெல்லாவற்றின் தொகுதி; "தமிழ்ச் சீரினல்" என்பது பதிகம் (10).

"புறம்பயத் தொழப் போதும்" என்று - இது பதிகக் குறிப்பும் கருத்துமாகிய மகுடம்; பதிகத்தின் "புறம்பயந் தொழப் போதுமே" என்று பாட்டுத்தோறும் முடிபு வருதல் காண்க. **உடன்** -விரைவாக; ஆர்வங் குறித்தது.

செல்வர் - முத்திச் செல்வமுடையவர்; "**செல்வப்** புறம்பயம்" என்பது பதிகம்.

சேரவே- எய்தினர் என்று கூட்டுக. வினைமுற்று முன் வந்தது செயல் முற்றியதன் விரைவு குறித்தது. 96

திருப்புறம்பயம்

திருச்சிற்றம்பலம் பண்-கொல்லி. 7-ம் திருமுறை

அங்க மோதியோ ராறை மேற்றளி நின்றும் போந்துவந் தின்னம்பர்த்
தங்கி ஞேமையு மின்ன தென்றில ரீச ஞெரெழு நெஞ்சமே
கங்கு லேமங்கள் கொண்டு தேவர்க ளோதி வானவர் தாந்தொழும்
பொங்கு மால்விடை யேறி செல்வப் புறம்ப யந்தொழப் போதுமே. (1)

துஞ்சி யும்பிறந் துஞ்சிறந் துந்து யக்க ருதம யக்கிவை
யஞ்சி யூரன் றிருப்பு றம்பயத் தப்ப னைத்தமிழ்ச் சீரினல்
நெஞ்சி னுலே புறம்ப யந்தொழு துய்து மென்று நினைத்தன
வஞ்சி யாதுரை செய்ய வல்லவர் வல்லவர் வானுல காள்வரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் முன் காட்டியருளியவாறு கண்டுகொள்க. (3250); பிறவியிறவிகளின் மயக்கினை உலகர் நீங்க வடையும் சாதனங்களை உபதேசித்தது உட்குறிப்பு. (பதிகம் 10)

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) அங்கம் - வேதாங்கங்களாகிய ஆறு; **ஓர்** - எண்ணுகின்ற; **இன்னதென்றிலர்** - அருள் செய்தாரிலர்; **கங்குல் ஏமங்கள்** - இரவில் உரிய யாமங்கள்; **கொண்டு** - காலங் குறிக்கொண்டு; **ஏறி**-பெயர்; ஏறியவருடைய;— **(2) பதி**-ஊர்; **பண்டையரல்லர்** - பண்டைக் காலந் தொட்டு உடனுள்ளவரல்லர்; இடையில் வந்து இடையில் நீங்குவர்; சிவன் ஒருவரே "பண்டு மின்றும் என்று முள்ள

பொருளாவார்"; ஆதலின் - என்பது சொல்லெச்சம்; பெண்டிரும் - வாழ்க்கையும் நிலையென்ற நினைப்பொழி; **எல்லி** - இரவு; மல்லிகை - சண்பகம் முதலிய பூக்கள் மாலையில் மலர்ந்து இரவு முழுதும் மணம் வீசு மியல்புடையன;—(3) **புறம்... தளர்ந்து** - இவை மூப்பின் முடுகிய நிலை; **தளர்ந்து... ஆண்மை** - அவ்வாறு தளர்ந்தபின் அறத்தினை இடைவிடாது நினைப்பதும் செய்தலும் ஆளுதலும் அரிய; **திறம்பியாது** - ஆதலின் திறம்புதலின்றி; **தயங்காமல்** - தாமதியாமல்; ஆதலின் என்பது சொல்லெச்சம்; **சிறுகாலை நாம் உறு வாணிபம்** - சிறுபோதிலே; விரைவிலே; ஈண்டு **அறம்** - சிவ தர்மம்;—(4) **கூற் றொருவரை... திண்ணமே - கூற்று** - அடித்து; **கூறைகொண்டு** - துணியினையும் வழிப்பறி செய்து; **கொலைகள் சூழ்ந்த களவு** - கொலையும், எண்ணமிட்டுச் செய்த களவும்; **குற்றுதல்** - கொலை வகையும், **கூறைகொள்ளுதல்** - களவு வகைகளும் குறித்தன; **எல்லாம்** - இத்தீமைகளின் பலவகைகள் எல்லாம்; **செற்றொருவரை... தீமைகள்** - கொலை களவாதியாகப் பிறரைச் செறுத்துச் செய்யும் தீங்குகள்; **தீமைகள் இம்மையே வரும்**- தீமைகளின் பயன் இம்மையிலேயே வந்து, செய்தார்பாற் சாரும்; இது கன்ம நியதி - இறைவரது ஆணை; **தீமை** - தீமையின் பயன்; **திண்ணம்** - உறுதி; தவருத உறுதிப் பாடு; இம்மை வினைப் பயன் மறுமையில் வரும் என்பர்; ஆனல் இக்கலிகாலத்தில் இம்மையே வரும் என்பதும், மிக்க நல்வினையும் தீவினையும் இம்மையே பலிக்கும் என்பதும் நூன் முடிபுகளாம்;—(5) **கள்ளி** - கள்ளங்கொண்டு; கள்ளமாக; **பறையும்படி**-நீங்கும்படி; **தெள்ளிதா** - தெளிவு பெற்று; **நள்ளி** - நண்டு;—(6) **பகடு** - தேர்; **கடை** - இறுதியில்; **தேரைவால்** - தேரையில் வால் எவ்வாறு காணப்படாது தேய்ந்துள்ளதோ அதேபோல இல்லையாகும் என்பது. உருவகம்;—(7) **முன்னை...ஆதலின்** - இஃது உண்மை நூல்களின்றுணிபு; **முன்னமே** - அங்ஙனம் மூடும் முன்னமே; **தியக்காது** - மயங்காது; **புன்னைக்கன்னி** - புன்னை **அரும்புகள்; கழிக்கண் நாறும் - கழி** - கடற்கழி; புன்னை நெய்தற் கருப்பொருளாதலின் கடற்கழியருகில் மலர்ந்து மணம் தருவன; கழியின் தீ நாற்றத்தை மாற்றிமேலெழுந்து மணந் தரும் என்பதும் குறிப்பு;—(8) **மலம்** - மும்மலங்களும்; **வல்வினை** - பழவினை - மூலமலங்களின் பயன்; **சலம்** - சஞ்சலம்; துயர்;—(9) **பண்டு...பாவமும்** - பழமலங்கள்; தீமையும் அதனல் வரும் பாவமும்; **அரியன** - அரியசாதனங்கள்; **தொண்டு** - தொண்டாக; அடிமைத்திறத்தில்;—(10) **துஞ்சியும்...அஞ்சி** - பிறவியிறவிகளால் வருந்துன்ப நீங்காத மயக்கத்தினை அஞ்சி; இது பதிகத்தினுட் குறிப்பு; பிள்ளையார் தேவாரம் 5-வது பாட்டுப் பார்க்க. **தமிழ்ச்சீர்** - "எங்கும் மன்னிய இன்னிசைப் பதிகம்" (3250); **நெஞ்சினலே...நினைத்தன** - "சேருமுள்ளமிக்கெழு" (3249) என்று ஆசிரியர் இதனை எடுத்துக் காட்டியருளினர்.

தலவிசேடம்:— **திருப்புறம்பயம்** - சோழநாட்டில் காவிரிக்கு வடகரை 46-வது பதி; 2139-ம் பாட்டின் கீழ்ப் பார்க்க.

3251. (இ-ள்) அப்பதிக்கண்...எதிர்கொள்ளவே - அந்தப் பதியிலே வாழ்ந்த தொண்டர்களும் "அன்று திருவெண்ணெய் நல்லூரிலே ஒப்பற்ற தனியாகிய வேதியனய்

3251. அப்ப திக்க ணமர்ந்த தொண்டரு "மன்று வெண்ணெய்நல் லூரினில்
ஒப்ப ருந்தனி வேதி யன்பழ வோலை காட்டிநின் றாண்ட வர்
இப்ப திக்கண்வந் தெய்த வென்ன தவங்க" ளென்றெதிர் கொள்ளவே
முப்புரங்க ளெரித்த சேவகர் கோயில் வாயிலின் முன்னினார். 97

வந்த இறைவரால் பழவோலையினைக் காட்டி நின்று ஆட்கொள்ளப் பெற்ற நம்பிகள் **இந்தப்** பதியில் வந்து சேர என்ன தவங்களைச் செய்தோம்" என்று மகிழ்ந்து எதிர்கொள்ளவே; முப்புரங்கள்...முன்னினார் - திரிபுரங்களையும் எரித்த இறைவரது திருக்கோயிலின் வாயில் முன்பு வந்து சேர்ந்தனர்.

(வி-ரை) "அன்று... தவங்கள்" என்று இது திருப்புறம்பயத்தின் தொண்டர்கள் எண்ணியும் சொல்லியும் மகிழ்ந்த கருத்து.

ஒப்பரும் தனிவேதியன் - "ஒப்பரும் - தனக்குவமையில்லாதான்" (குறள்); **தனி -** "ஒன்றே பதி" (போதம்); "தனியாய் நின்றான்" (198) "ஒருவன்" (174) என்றபடி அவ்வழக்கினும் வேறு யாரும் தன் பக்கம் சேர்வோரின்றித் தனியாய் நின்றவன் என்ற குறிப்புமாம்; **தனிவேதியன் -** *175-178* பார்க்க.

அன்று - தடுத்தாட்கொண்ட அன்று - முன்னை நாளில்; பண்டு நிகழ்ந்து.

அன்று... ஆண்டவர் - அம்மையாரால் ஞானவமுதூட்டப்பெற்ற சிறப்பால் ஆளுடைய பிள்ளையாரையும், கன்மிதப்பிற் கடல் கடந்து போந்த தன்மையாலும் சூலை தந்தாட்கொள்ளப்பெற்ற சிறப்பினாலும் ஆளுடைய அரசுகளையும் உலகர் தேற்றமாக அறிந்து பாராட்டுதல்போல், நமபிகளை இச்சிறப்பினால் அறிந்து போற்றுவர். *1443-1484* முதலியவை பார்க்க.

எய்த - எய்தப் பெறுவதற்கு; பெறுதற்கரிய இப்பெரும்பேறு கிடைப்பதற்கு.

என்ன தவங்கள் - எத்தகை பெருந் தவங்கள் செய்தோம்! என்று அற்புதக் குறிப்புப்படக் கூறியபடி; செய்தோம் என்பது சொல்லெச்சம்; பெருந்தவம் முன்னர்ச் செய்திருந்தாலன்றி இப்பேறு பெறுதல் அரிதென்பது கருத்து.

சேவகர் - ஆண்மையும் வெற்றியுமுடையார்; "தந்திமேல் விடைமே லழகர் சேவகஞ் செய்தவாறு" (திருவிளை.புரா - விருத்-பட *1*); "புரஞ்செற்ற கொற்றச் சேவக னுமங்கள் பாடிப் பாடி" (திருவா-பொற்சு.*16*)

முன்னினார் - முன்பு சார்ந்தருளினர்.

தவஞ் செய்தோ மெனவெதிர் கொள்ள— என்பதும் பாடம். 97

3252. (இ-ள்) நீடு...அணைந்து - நீண்ட திருக்கோபுரத்தின் முன்பு வணங்கி நிலைபெற்ற திருத்தொண்டர்களுடனே திருக்கோயிலினுள் சேர்ந்து; ஆடல்...நின்று - ஐந்தொழிற் பெருங்கூத்து இயற்றும் சிவபெருமான் திருவடிகளைத் துதித்துக் கைகூப்பித் தொழுது நின்று;

3252. நீடு கோபுர முன்பி றைஞ்சி நிலாவு தொண்டரொ டுள்ளணைந்
தாடன் மேவிய வண்ண லாரடி போற்றி, யஞ்சலி கோலிநின்
றேடு லாமலர் தூவி யெட்டினெ டைந்து மாகு முறுப்பினுற்
பீடு நிலத்தின் மேற்பெரு கப்ப ணிந்து வணங்கினர்; 98

ஏடுலாம்...வணங்கினர் - இதழ்கள் விரிந்த புதிய மலர்களைத் தூவி எட்டு அங்கத்தாலும் ஐந்து அங்கத்தாலும் வணங்கும் முறையினாலே பெருமை நீடிய நிலத்தின்மேல் விருப்பம் பெருகப் பல முறையும் பணிந்து வணங்கினர்.

(வி-ரை) நீடுதல் - உயரத்தினாலன்றிச் சிவத்தன்மை காட்டும் பெருமையினாலும் நீளுதல்.

கோபுரம் முன்பு இறைஞ்சுதல் - கோபுரத்தைத் தூலலிங்கமாகக் கண்டு நிலமுற வணங்கியபின் கோயிலினுட் புகுதல் வழிபாட்டு முறை.

நிலவு தொண்டர் - நிலவுதலாவது அடிமைத் திறத்திற் பிறழாது நிலைபெற்றிருத்தல்; **வாழ்வு** - தாழ்வு முதலிய எல்லா நிலைகளினும் சலியாது அடிமை செய்தல்; "இடரினுந் தளரினும்" என்ற பிள்ளையாரது திருப்பதிகமும் பிறவும் பார்க்க.

ஆடல் - ஐந்தொழில் அருட்கூத்து; பிள்ளையாரது இத்தலப்பதிகம் பார்க்க; நிலையாமைகளையும் கன்ம நிச்சயத்தையும் கூறி உலகரைத் தேற்றிய நம்பிகளது பதிகமும் காண்க. **அஞ்சலி கோலி** - கைகளை அஞ்சலியாகக் கூப்பி.

ஏடுலா மலர்தூவி...பணிந்து - புது மலர்களைத் தூவி நிலமுற வீழ்ந்து அட்டாங்க பஞ்சாங்கமாக வணங்கி; இது வழிபாட்டு முறை. "நின்று மலர்தூவி."

பீடு - பெருமை; **பீடுநீடு நிலம்** - இறைவர் கோயிற் றிருமுற்றமாகும் பெருமையுடைய நிலம்; இஃது ஏனை நிலம் எதற்குமில்லாத சிறப்பு; **பெருக** - விருப்பம் பெருக என்றும், பலமுறையாகப் பெருக என்றும் இரட்டுற மொழிந்து கொள்க.

தொண்டருடன் பணிந்து—என்பதும் பாடம். 98

3253. **(இ-ள்)** அங்கு...புறத்தணைந்து - அவ்விடத்து நீடிய திருவருளினைப் பெற்று மனத்துள்ளே ஆர்வம் மிகுதலின் மேலெழுந்து பொழியும் அன்பினாலே பொங்கும் புதிய பூவைப்போன்ற பாதங்களின் முன்னே பணிந்தேத்தி அங்குநின்றும் மீண்டு புறத்திற் சேர்ந்து; எங்குமாகி...இறைஞ்சுவார் - எங்கும் நீக்கமற முழுதும் நிறைந்து நின்றவராகிய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளிய இடங்களில் உள்ள நிலைபெற்ற திருக்கோலங்களைச் சென்று வணங்குவாராகி (நம்பிகள்); அருள் தாவில்...ஏகினர் - அருள்பெற்ற குற்றமற்ற அன்பர்கள் உடன் சூழ்ந்துவர அவர்களுடனே சென்றனர்.

(வி-ரை) ஏத்தி - இப்பதிகம் கிடைத்திலது!

3253. அங்கு நீடருள் பெற்று ளார்வ மிகப்பொ ழிந்தெழு மன்பினுற்
பொங்கு நாண்மலர்ப் பாத முன்பணிந் தேத்தி மீண்டு புறத்தணைந்
தெங்கு மாகி நிறைந்து நின்றவர் தாமகிழ்ந்த விடங்களிற்
றங்கு கோல மிறைஞ்சு வாரருட் டாவி லன்பரோ டெய்தினார். 99

வேறு

3254. வம்புநீ டலங்கன் மார்பின் வன்றொண்டர் வன்னி கொன்றை
தும்பைவெள் ளடம்பு திங்க டூயநீ ரணிந்த சென்னித்
தம்பிரா னமர்ந்த தானம் பலபல சார்ந்து தாழ்ந்து
கொம்பனா ராட னீடு **கூடலை யாற்றூர்** சார, 100

எங்குமாகி நிறைந்து நின்றவர் - எங்கும் நிறைதல் இறைவரது வியாபகத் தன்மை காட்டும் குணங்களுள் ஒன்று; சர்வவியாபகம் என்பது வடமொழி; **நின்றவர்** - எல்லாமாய் நிற்பவர்; எல்லாவற்றுள்ளும் நீங்காது நிற்பவர்; இத்தன்மை நின்ற திருத்தாண்டகம் - திருவுருத்திரம் முதலியவற்றுட் பேசப்படுவது.

மகிழ்ந்த இடங்களிற் றங்குகோலம் - எங்கும் நிறைந்து நின்றவரை எங்கும் காணலாமே; அதன் பொருட்டுப் பல இடங்களுக்கும் செல்வானேன்? எனின், சிலவிடங்களில் மகிழ்ந்து தயிரினெய் போல விளங்கியும், மற்ற இடங்களில் விளங்காது பாலினெய்போல மறைந்தும் வீற்றிருப்பார் இறைவராதலின், விளங்கி உள்ள இடங்களிற் சென்று கண்டு வணங்குதல் வேண்டப்படும் என்க; "அவன் மற்றிவ்விடங்களிற் (பத்தரது திருவேடமும் சிவாலயமும்) பிரகாசமாய் நின்றே" என்று சிவஞான போதத்தினுள் (சூ.12) மூன்றுமதிகரணத்துள் சிவாலய வழிபாட்டின் இன்றியமையாமைக்கு ஏதுக் கூறியவாற்றான் அறிக; **தங்குகோலம்** என்ற குறிப்புமிது; வெளிப்பட நின்றிடுதல்.

இறைஞ்சுவார் - வினைப்பெயர்.

தாவில் அன்பரோடு - குற்றமற்ற மெய்யன்பர்கள். 99

3254. **(இ-ள்) வம்பு...வன்றொண்டர்** - மணமிகுந்த மாலையினை அணிந்த மார்பினையுடைய நம்பிகள்; வன்னி...தாழ்ந்து - வன்னி, கொன்றை, தும்பை, வெள்ளடம்பு, சந்திரன், தூயநீராகிய கங்கை யிவற்றைச் சூடிய தலையினையுடைய தம் பெருமானாகிய இறைவர் விரும்பி யெழுந்தருளிய பதிகள் பலவற்றையும் சென்று சேர்ந்து வணங்கி; கொம்பனார்...சார - பசுங்கொம்பு போன்ற பெண்களின் ஆடல்மிக்க திருக்கூடலை யாற்றூரினைச் சாரவும்;

(வி-ரை) வம்பு நீடு...வன்றொண்டர் - வம்பு - வாசனை; **அலங்கல்** - மலர்மாலை; **வம்புநீடு - வன்றொண்டர்** என்று கூட்டி வன்பு பேசி வழக்கிட்டு ஆட்கொள்ளப்பெற்ற என்றுரைத்தலுமாம்; இப்புராணத்தில் பின்னர் "வம்பெனவாண்டு கொண்டா னொருவனே" (3546) எனவரும் குறிப்பும் காண்க.

3255. செப்பரும் பதியிற் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் செல்லு மொருவழி யுமையா ளோடு
மெய்ப்பரம் பொருளா யுள்ளார் வேதிய ராகி நின்ருர்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரர் முன்பு. 101

வன்னி... அணிந்த சென்னி - இறைவர் சடையிற் சூடிய பொருள்கள் வன்னியிலை முதலியன; **வெள்அடம்பு** - அடம்பு ஒருவகைச் செடி; **தூயநீர்** - கங்கை; **பதிகள் பல பல சார்ந்து** வணங்குதற்கேற்பப் பலவற்றையும் அணிந்த கோலம் பற்றிக் கூறியது தெய்வக் கவிநயம்; "தங்கு **கோல** மிறைஞ்ச" (3253) என்று முன் கூறிய குறிப்புக் காண்க.

தானம் பலபல - இவை திருப்புறம்பயத்தினின்றும் வடக்கே 1½ நாழிகையளவில் கொள்ளிடத் திருநதியினைக் கடந்துசென்று கொள்ளிடத்தின் வடகரையிலும் வடக்கே திருமுதுகுன்றம் நோக்கிச் செல்லும் இடையிலும் உள்ளவை; கோவந்தபுத்தூர், பழுவூர், கடம்பூர்க்கரக்கோயில், கடம்பை இளங்கோயில், முதலாயின என்பது கருதப்படும்.

கொம்பனர் - பசிய இளங்கொம்புபோல் அசையுமியல்புடையவர்; "கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்" (தேவா).

சாரச் - சேரார் (ஆகி) - செல்லும் ஒரு வழி - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. **சார** - அருகாக வர; சாரவும் என்று சிறப்பும்மை விரிக்க. *100*

3255. **(இ-ள்)** செப்பரும் பதியிற் சேரார் - சொல்லுதற்கரிய அத்திருப்பதியிற் சென்று சேராராகி; திருமுதுகுன்றை...ஒருவழி - திருமுதுகுன்றத்தினை நோக்கி ஒப்பரிய புகழினையுடைய நம்பிகள் செல்கின்ற அவ்வழியிலே; உமையாளோடு...உள்ளார் - உமையம்மையாருடன் கூடி மெய்ப்பரம் பொருளாகியுள்ளவராகிய சிவபெருமான்; வேதியராகி முப்புரி நூலுந்தாங்கி - வேதியர் வடிவங்கொண்டு முப்புரி நூலினையும் தாங்கிக்கொண்டு; நம்பியாரூரர் முன்பு நின்ருர் - அந்நம்பியாரூரது முன்பாக நின்றருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

குறிப்பு - முன்பாட்டு நம்பிகள் செய்கையும் பின்பாட்டு இறைவர் செய்கையும் குறித்து நின்றமையும், இரண்டினிலும் தம்பிரானுந் தோழருமாகப் பிணைந்து பேசப்பட்டமையும் குறிக்கொளள்த் தக்கன.

(வி-ரை) செப்பரும் பதியில் சேரார் - முன் கூறிய அந்தப் பதியில் என முன்னறி சுட்டு வருவிக்க; சேராராகி; சேராமல்.

திருமுதுகுன்றை நோக்கிச் செல்லும் ஒரு வழியில் - என்க; கூடலையாற்றூர் இடையே இருப்பவும் அங்குச் சென்று வணங்காது செல்லும் அவ்வழியில்; "இவ்வழி போந்த" என்பது பதிகம்.

3256. நின்றவர் தம்மை நோக்கித் நெகிழ்ந்தசிந் தையராய்த் தாழ்வார்
"இன்றியா முதுகுன் றெய்த வழியெமக் கியம்பு"மென்னக்
குன்றவில் லாளி யாருங் "கூடலை யாற்றூ ரேறச்
சென்றதிவ் வழிதா" னென்று **செல்வழித் துணையாய்ச்** செல்ல. 102

உமையாளோடும் மெய்ப்பரம் பொருளாயுள்ளார் - "அருளது பாயார்" என்றபடி; **உமையாள்** - அருள்; **உள்ளார்** - என்றும் அழியாது உள்ளவர்; சத்து. பதிகம் பார்க்க.

வேதியராகி - முப்புரிநூலும் தாங்கி - வேதியராகி என்றது பிறப்பு. **புரிநூல் தாங்கி** - உரிய அங்கமும் உணர்த்தியபடி; **ஆகி** - ஆக்கச் சொல் வெளிப்பாடு இயல் புணர்த்திற்று; **முப்புரிநூல்** - வேடம் மேற்கொண்ட செயற்கை குறித்தது; **ஆகி** - வெளிப்பட்டு. **ஒருவழி** - ஒப்பற்ற சிவநெறியாகிய பெருவழி என்ற குறிப்புமாம்.

வன்றொண்டர் (3264) —புகழார் செல்லும் வழி - உள்ளார் - முன்பு நின்றார் (3255) என இரண்டு பாட்டுகளையும் முடித்துக் கொள்க.

உள்ளார் - நின்றார் - முன்னமே யாண்டும் நிறைந்து உள்ளவர் ஆயினும் வெளிப்பட்டு நின்றார். 101

3256. (இ-ள்) நின்றவர்...தாழ்வார் - முன்கூறியவாறு தாம் செல்லும் ஒரு வழியில் நின்றவராகிய இறைவரை நோக்கி நம்பிகள் உருகிய மனத்தினையுடையவராய் வணங்கி; இன்று...என்ன-"இன்று நாம் திருமுதுகுன்றத்தினைச் சென்று சேர்வதற்கு உரிய வழியினை எமக்குச் சொல்லும்" என்று கேட்க; குன்ற வில்லாளியாரும்...என்று - மலையை வில்லாக ஏந்திய இறைவரும் கூடலையாற்றூர் ஏற இவ்வழி சென்றது என்று கூறி; செல்வழித்துணையாய்ச் செல்ல - செல்லும் இடத்து வழித்துணையாகத் தாமும் உடன் செல்ல,

(வி-ரை) நின்றவர் - முன் கூறியபடி நம்பிகள் செல்லும் ஒரு வழி அவர் முன்பு நின்ற வேதியர்; நம்பிகளுள்ளும் நின்று தம்மை நோக்கும்படி செய்தவர் என்ற குறிப்புமாம்.

நெகிழ்ந்த சிந்தையராய் - "நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சியால்" (186) என்று இவ்வாறு நெகிழ்ச்சியுண்டாதற்குக் காரணத்தை முன் விரித்தவாறு கண்டு கொள்க; வேடம் மாறினும் பொருட்டன்மையின் முன்னைத் தொடர்புபற்றி நெகிழ்ச்சி கிளைப்பதாயிற்று என்க.

தாழ்வார் - வணங்குவராய்; தாழ்தல் - விரும்புதலுமாம்.

வழி - வழிச்செல்வோராதலின் வழி வினவினர்.

கூடலையாற்றூர் ஏற - கூடலை யாற்றூரினைச் சார அதனை அடைந்து அவ்வழியாக.

சென்றது இவ்வழி - வழிச்செல்வோரது செல்கை வழியின்மேல் ஏற்றி உரைத்தல் மரபு.

3257. கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் றொடர்வார்க் காணார்
வண்டலர் கொன்றை யாரை "**வடிவுடைமழு**"வென்றேத்தி
"**அண்டர்தம் பெருமான் போந்த வதிசய மறியே**"னென்று
கொண்டெழும் **விருப்பி னோடுங் கூடலை யாற்றூர் புக்கார்.** 103

செல்வழித் துணையாய் - ஆன்மாக்கள் செல்லும் சென்ம யாத்திரை தோறும் வழித்துணையாகி நீங்காது உடனிருந்து செல்பவர் (மார்க்க சகாயர்) என்ற குறிப்பும் காண்க. "வழிவிடுந் துணைபின் போத வழித்துணை யாகி யுள்ளார்" (*418*) என்றபடி ஏனையோர் எல்லோரும் வழிவிடுவோரேயாவர்; சிவன் ஒருவரே எப்பிறவியிலும் எந்நாளும் உயிர்களுக்கு நீங்காத வழித்துணை யாவார் என்பது.

செல்லத் - தொடர்வார் - காணார் என்று வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. *102*

3257. **(இ-ள்)** கண்டவர்...காணார் - முன் கூறியபடி செல்வழித்துணையாய்த் தம்முடன் செல்லக் கண்ட நம்பிகள் அவரைக் கைகூப்பித் தொழுது பின் அவ்வாறு தொடர்வாரைக் காணாராகி; வண்டலர்...ஏத்தி - வண்டுகள் ஊதி மலர்த்தும் கொன்றையினைச் சூடிய இறைவரை "வடிவுடைமழு" என்று தொடங்கித் துதித்து; அண்டதர்தம்...என்று - தேவ தேவராகிய இறைவர் "வேடங் காட்டிக்கூட வந்து மறைந்து போயின அதிசயத்தை இன்னதென்றறியேன் என்று கூறிப் பதிகம்பாடி; கொண்டெழும்...புக்கார் - தம்மைப் பற்றிக்கொண்டு மேலெழுகின்ற விருப்பத்தினுடனே திருக்கூடலை யாற்றூரினிற் புகுந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தொழுது - வழி அறிவித்தமைக்கும், செல்வழித் துணையாய் உடன்செல்ல ஒருப்பட்டுத் தொடர்ந்த செயலுக்கும் நன்றி செய்யும் முறையிலே தொழுது;

பின் தொடர்வார் - வழித்துணையாய்ச் செல்ல ஒருப்பட்டுத் தொடர்ந்தவரை; இரண்டனுருபு விரிக்க; **தொடர்வார்** வினைப்பெயர்.

காணார் - சடுதியில் மறைந்து போயினமையாற் காணாராகி; **காணார் - ஏத்திப் புக்கார்** என்றுகூட்டுக; **காணார்** - முற்றெச்சம்.

கொன்றையாரை - வேதிய வேடங் காட்டிக் கூறி மறைந்தவர் சிவபெருமானே என உணர்ந்தமையால்.

வடிவுடை மழு - பதிகக் கருத்தாகிய முதற்குறிப்பு; மகுடமுமாம்.

கொண்டெழும் விருப்பினோடும் - புக்கார் - இறைவனார் கூறி மறைந்தருளிய திருவருட் செயலினாற் பற்றிக் கொள்ளப்பட்டு அங்குச் சேரவேண்டுமென்று எழுந்த பெருவிருப்பினோடும். *103*

திருக்கூடலையாற்றூர்

திருச்சிற்றம்பலம் பண் - புறநீர்மை. 7-ம் திருமுறை

வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் **புரிகுழ லுமை**யோடுங்
கொடியணி நெடுமாடக் **கூடலை** யாற்றூரில்
அடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (1)

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆடலு கந்தானை யதிசய மிதுவென்று
நாடிய வின்றமிழா லுவல வூரன்சொற்
பாடல்கள் பத்தும் வல்லார் தம்வினை பற்றறுமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—முன் ஆசிரியர் (3257) உரைத்தவாறு கண்டு கொள்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) வடிவுடைமழு - மழுவைத் தாங்குவது உயிர்களைப் புனிதஞ் செய்யும் தொழிலால் வருவது. "மங்கல மழுவாற் கொல்லை யெடுத்தா னன்று" (592) என்ற கருத்துப் பார்க்க; **வடிவு** - அழகு; வண்ணம்;

உமையோடும் - அம்மையோடும் கூட வேதியராகி நின்றார் என்பது; "உமையாளோடும்" (3255) என்றதற்கு அகச்சான்று. அம்மையோடும் எனப் பதிகப் பாட்டுத்தோறும் கூறுதல் காண்க. இறைவரது அருளினையே இவ்வாறு கூறினார் என்றலுமாம். **புரிகுழலம்மை** என்பது இப்பதியில் அம்மைபெயர்; கூடலையாற்றூருக்கு வழிகாட்டிப் போந்தாராதலின் இப்பதியிற் சுவாமி பெயர் **நெறி காட்டு நாயகர்** என வழங்கும்; "குறிகளும் அடையாளமும் கோயிலும், நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்" (தேவா-பாசுரம்); **கூடலையாற்றூரில் அடிகள் இவ்வழி போந்த** - என்றதனால் இறைவர் வழிகாட்டிக் கூடலையாற்றூரின்அணிமைவரை எழுந்தருளி மறைந்தனர் என்பது கருதப்படும்; "காணார் - ஏத்திக் கூடலையாற்றூர் புக்கார்" (3257) என்பதனாலும் இக்குறிப்புப் பெறப்படும்: **அறியேனே** - முன் கண்டபோது அறிந்திலேனாயினேன்; திருவதிகையில் இறைவர் திருவடி சூட்டி மறைந்தபோதும் "தம்மானை அறியாத" (தேவா) என்றது காண்க. "இவ்வழி போந்த வதிசய மறியேனே" பதிகக் கருத்தாகிய மகுடம். **அடிகள்** - ஐயன் - ஆர்வன் - **அந்தணன்** - ஆதி - அத்தன் - **அழகன்** - அறவன் - ஆலன் - ஆடலுகந்தான் என்று இப்பதிகத்தினுள் நம்பிகள் இறைவரது கருணைப் பெருக்கினைப் பாராட்டும் அருமைப்பாடுகள் குறிக்க; இதனையே "கொண்டெழும் விருப்பினோடும்" (3257) என்று அருளினர். **குறிப்பு** - இப்பதிகம் செல்வழித் துணையாய் உடன் றொடர்ந்து வந்த இறைவர் மறைந்தருளிய இடத்தினின்று பாடியருளியவாறே நகரினுள் வரும்போது பாடப்பட்டது:—**(2) கொய்** - மலரரும்புகள்;—**(3) ஆர்வன்** - அடியார்க்கருளும் செயலில் ஆர்வமுடையோன்; **(4) சந்து** - பெருமை; அழகு; **அணவுதல்** - உடன் விரவுதல்; **அந்தணன்** - முன் காட்டிய வேதிய வடிவம்; முனிவர் என்றலுமாம்;—**(5) வேதியர்** - முன்பு காட்டிய உருவக் குறிப்பு; வேதியராகிய ஆதி என்று கூட்டுக.—**(6) வித்தகம்** -

பெருமை; நன்மை; பெருமையாவது உலகம் புனருற் பத்திக்குக் காரணமாகிய நாதத்தை உளதாக்குதல்; வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (தேவா)—**(7) குழை** - இலைக்கொத்துக்கள்; **அழகன்** - இறைவர் தம் முன்பு காட்டிய வடிவத்தில் நம்பிகளது மனம் கடுண்டு விருப்பம் மிகுந்த நிலைகாட்டிற்று; **(9) கோலமதுருவாகி** - வேதியர் கோலங்கொண்டு காட்டிப் போந்த சரிதக் குறிப்பு; அகச்சான்று; **(10) ஆடல்** - காட்டிக் கூறி மறைந்த திருவிளையாட்டுச் சரிதக் குறிப்பாகிய சான்று.

தலவிசேடம்:— **திருக்கூடலையாற்றூர்** - நடுநாட்டில் மூன்றுவது பதி; திருமணி முத்தாறும், வசிஷ்ட நதி கூடிய பின்வரும் வடவெள்ளாறும் கூடும் இடத்தில் உள்ளமையால் இப்பெயர் பெற்றது; வசிட்ட நதி வடவெள்ளாற்றுடன் கூடிய பின் நிவாநதி என வழங்கப் பெறும். ஆளுடைய நம்பிகள் திருப்புறம்பயத்தினின்றும் வடக்கு நோக்கிப் பல பதிகளையும் வணங்கித் திருமுதுகுன்றத்திற்குச் செல்ல நினைந்து செல்பவர், வழியில் கூடலையாற்றூரிற் சேராது செல்லும்போது, அவ்வழியில் வேதியர் வடிவுடன் நின்ற இறைவரைத் திருமுதுகுன்றத்துக்கு வழி எது என்று வினவக், "கூடலையாற்றூர் ஏறச்சென்றது இவ்வழி" என்று நெறிகாட்டி உடன் வந்து நகரணிமையில் மறைய, நம்பிகள், "மறையவனு ரிறையவனுர்" என்றுணர்ந்து வியந்து "**வடிவுடைமழு**" என்ற பதிகம்பாடி அடைந்த பெருமை பெற்ற பதி. விரிவு புராணத்துட் காண்க. (3254-3259) (ஏயர்கோன் - புரா 100—104) அதுகாரணமாகச் சுவாமி - **நெறிகாட்டுநாதர்** எனப்படுவர்; அம்மை - **புரிகுழனுயகி**; பதிகம் 1.

இது சிதம்பரத்தினின்றும் மேற்கே செல்லும் குமாரகுடிக் கற்சாலையில் 4 நாழிகையளவில் அடையத்தக்கது. இவ்வழியில் 1½ நாழிகையளவு மட்சாலையிற் செல்லுதல் வேண்டும். இவ்வழி நிவாநதியின் தென்கரையில் உள்ளது; (2) திருமுதுகுன்றம் நிலயத்தினின்றும் திருமணி முத்தாற்றின் வடகரையில் கிழக்கு நோக்கிச் செல்லும் கற்சாலைவழி 6 நாழிகையளவில் எறும்பூரையடைந்து, நிவா நதியைக் கடந்து தென்மேற்கில் 2 நாழிகையளவில் அடைவது மற்றொரு வழி; (3) திருமுதுகுன்றம் நிலையத்தினின்று தெற்கிலேனும் திருப்பெண்ணுகடம் நிலையத்தினின்று கிழக்கிலேனுங் கற்சாலைகள் வழி நிவாநதி வடகரை வழி 4 நாழிகை வந்து அவ்வழி நிவாநதியினைத் தாண்டி 2 நாழிகையில் நதியின் தென்கரையில் திருஎருக்கத்தம்புலியூரை அடைந்து அங்கு நின்றும் நிவாநதியின் தென்கரை வழியாய்க் கிழக்கில் 4 நாழிகையளவில் இதனை அடைவது மற்றுமொரு வழி; திருப்புறம்பயத்தினின்றும் தெற்கு நின்று நம்பிகள் வந்த வழி வேறு; எவ்வழியேயாயினும், ஆறு கடந்தும், மட்சாலை, ஒற்றையடிப்பாதைகளின் வழிச் சிரமத்துடன்தான் இவ்வூர் சேரத்தக்கது: மழை நாளில் மிகக் கடினம்.

3258. **(இ-ள்)** கூடலையாற்றூர்...புக்கு - திருக்கூடலை யாற்றூரில் மேவும் கொன்றை மாலை சூடிய சடையினையுடைய இறைவரது பெருமையினுலுயர்ந்த திருக்கோயிலினுள்ளே புகுந்து; பெருகிய...பொங்க - பெருகி எழும் ஆசையானது மேலும் அதிகரிக்க; ஆடகப் பொதுவில்...போந்து - பொன்னம்பலத்தில் ஆடுகின்ற சத்திக்கின்ற வீரக்கழலை யணிந்த திருவடிகளை வணங்கித் துதித்து நீடுகின்ற திருவருள் விடை பெற்றுச் சென்று; திருமுதுகுன்றில்

3258. கூடலை யாற்றூர் மேவுங் கொன்றைவார் சடையி னூர்தம்
பீடுயர் கோயில் புக்குப் பெருகிய வார்வம் பொங்க
ஆடகப் பொதுவி லாடு மறைகழல் வணங்கிப் போற்றி
நீடருள் பெற்றுப் போந்து **திருமுது குன்றி னேர்ந்தார்.** 104

3259. தடநிலைக் கோபு ரத்தைத் தாழ்ந்துமுன் னிறைஞ்சிக் கோயில்
புடைவலங் கொண்டு புக்குப் போற்றினர் தொழுது வீழ்ந்து
நடநவில் வாரை"**நஞ்சி யிடை**" யெனுஞ் செஞ்சொன் மாலைத்
தொடைநிகழ் பதிகம் பாடித் தொழுதுகை சுமந்து நின்று. 105

சேர்ந்தார் - திருமுதுகுன்றத்திற் போய்ச் சேர்ந்தனர்.

(வி-ரை) பீடு உயர் - "பீடி னுலுயர்ந்தோர்களூர்" (தேவா); **பீடு** - பெருமை.

பெருகிய ஆர்வம் பொங்க - முன்னமே பெருகியுள்ள பெருவிருப்பார்வம் மேன்மேலும் அதிகரிக்க.

ஆடகப் பொது - பொன்னம்பலம்; **ஆடகம் -** பொன் - இங்கு ஞானமயமான சிற்றம்பலம் என்ற பொருளில் வந்தது; புறத்துப் பொன் வேய்ந்து விளங்குகின்றது அதன் புறத்தோற்றமாகிய குறியீடு.

நீடு அருள் - என்றும் நீடுகின்ற திருஅருள் விடை.

நேர்தல் - சென்று சேர்தல். ***104***

3259. (இ-ள்) தடநிலை...இறைஞ்சி - பெரிய நிலைகளையுடைய திருக்கோபுரத்தைக் கும்பிட்டு நிலமுற வீழ்ந்து வணங்கி; கோயில்...வீழ்ந்து - திருக்கோயிலினுள் பக்கத்திற் சுற்றி வலங்கொண்டு உள்ளே புகுந்து துதித்தனராகித் தொழுது நிலமுற விழுந்து எழுந்து; நடநவில்வாரை...பாடி - அருட் கூத்தாடும் இறைவரை "நஞ்சியிடை" என்று தொடங்கும் செஞ்சொல்லாலாகிய மாலைத் தொடையாக நிகழும் திருப்பதிகம் பாடி; தொழுது...நின்று - தொழுது கைகூப்பி நின்று,

(வி-ரை) புடை - உள்ளே திருக்கோயிலின் திருமாளிகையினைச் சூழ்ந்து. **போற்றினர் -** போற்றினராகி; முற்றெச்சம். **நடம் நவில்வார் -** கூத்தியற்றுபவர்; ஆடுபவர். **கூத்தாவது** உலகுக்கருளும் மெய்த்தொழி லைந்து.

நவிலுதல் - இயற்றுதல்; நடநவிலுதல் என்பது மரபு வழக்கு; சொல்லுதல் என்று கொண்டு, தமது கூத்தாடலினாலே உலகுக்கு அறிவுறுத்துதல் என்றலுமாம்.

இக்குறிப்பினையே பற்றி முன் பாட்டிலும், **பொதுவிலாடும் அறை கழல்** என்றதும் காண்க. **அறைதல் -** சொல்லுதல்.

"நஞ்சியிடை" எனும் - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

மாலைத் தொகைநிகழ் - கோவைபடத் தொடுத்த நிலைவிளங்கும்; **மாலை - தொடை**

3260. நாதர்பாற் பொருடாம் வேண்டி நண்ணிய வண்ண மெல்லாங்
கோதறு மனத்துட் கொண்ட குறிப்பொடும் பரவும் போது
தாதவிழ் கொன்றை வேய்ந்தார் தரவருள் பெறுவார் சைவ
வேதியர் தலைவர் மீண்டு "**மெய்யில்வெண் பொடி**"யும் பாட, 106

- இச்சொற்கள் மலர்மாலைக்கும் செய்யுளுக்கும் ஒக்கும்.

கைசுமந்து - இருகைகளையும் தலைமேலே உயரக்கூப்பி அஞ்சலித்தல் **சுமத்தல்** எனப்பட்டது.

நின்று - பரவும்போது - என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

தடவரைக் கோபுரம் — என்பதும் பாடம். *105*

3260. (இ-ள்) நாதர்பால்...போது - இறைவனிடத்திலே பொருள் பெறவேண்டிக் கூடியபடியினை எல்லாம் குற்றமில்லாத மனத்தினுள்ளே கொண்டருளிய உட்குறிப்பினோடும் துதிக்கும்போது; தாதவிழ்...பெறுவார் - இதழ்கள்விரியும் கொன்றைமாலையைத் தரித்த இறைவர் பொருள் தரும் அருளினைப் பெறுவாராகி; சைவ...பாட - சிவவேதியர் பெருமானாகிய நம்பிகள் மீண்டும் "மெய்யில் வெண்பொடி" என்று தொடங்கும் திருப்பதிகத்தினையும் பாடவே,

(வி-ரை) நாதர்பால்...குறிப்பொடும் பரவும் - பதிகக் குறிப்புப் பார்க்க. "உம்மை நச்சுவார், துஞ்சி யிட்டாற் பின்னைச் செய்வதென்"(1), "ஏத்துவார்க் கம்மை செய்வதென்?" (4), "பாடிப் படைத்த பொருளெலாமுமையாளுக்கோ?" (5) முதலியனவாகப் பதிகப் பாட்டுக் கருத்துக்களின் உட்குறிப்புப் பார்க்க.

நண்ணிய வண்ணம் - வந்து கூடிய நிலைகள்; உட்குறித்த கருத்துக்கள்; **மனத்துட் கொண்ட குறிப்பு** - தமது விருப்பத்தினைப் புலப்பட வெளியிட்டுக் கூறாது மனத்தினுள்ளே குறிவைத்து.

தரஅருள் பெறுவார் சைவ வேதியர் தலைவர் - பொருளினை வேண்டியவாறே தரப்பெறுவாராகி; திருப்பாச்சிலாச்சிராமத்திற் போலத் தர அருள் பெருமைக் குறிப்பன்றித் தரும் குறிப்புப் பெற்று; **சைவ வேதியர்** - சிவமறையோர்; **தலைவர்** - அவர்களுள் உயர்ந்தோர்.

மீண்டும் - தம் உள்ளக் குறிப்புடன் முன் "**நஞ்சியிடை**" என்ற பதிகத்தினைப் பாடியதனோ டமையாது, மேலும்; இறைவர் தர அருளும் திருவுள்ளக் கிடையினைக் கண்டு மேலும்; "எழுபிறப்பும் எங்கள் நம்பி" என்று தர அருள்பெறும் உரிமைபற்றி வற்புறுத்தி "**நம்பி**" என்று பாடிய குறிப்புக் காண்க.

மெய்யில் வெண்பொடி - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு. **மெய்யில்**

3261. பனிமதிச் சடையார் தாமும் **பன்னிரண் டாயி** ரம்பொன்
நனியருள் கொடுக்கு மாற்ரு னல்கிட, வுடைய நம்பி
தனிவரு மகிழ்ச்சி பொங்கத் தாழ்ந்தெழுந் தருகு சென்று
கனிவிட மிடற்றி ஞர்முன் பின்ஞென்று கழற லுற்ருர்; 107

வெண்பொடியும் - என்று தொடங்கும் பதிகத்தினையும்; முன் "நஞ்சியிடை" என்று தொடங்கிய பதிகத்தினோடு இதனையும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

பாட - நல்கிட - என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. **106**

3261. (இ-ள்) பனிமதி...நல்கிட - குளிர்ந்த சந்திரனைச் சூடிய சடையினையுடைய இறைவரும் பன்னிரண்டாயிரம் பொன்னை மிகவும் அருள் புரியும் வகையால் கொடுத்தருளினராக; உடைய நம்பி...கழறலுற்ருர் - ஆளுடைய நம்பிகள் தாம் பெற்றெழுந்த மகிழ்ச்சி பொங்க வணங்கி எழுந்து அருகே சென்று கனிவிடமுடைய கண்டத்தார் முன் மேலும் ஒரு செய்தியினைச் சொல்வாராகி;

(வி-ரை) பனிமதி - பனி - குளிர்ச்சி; **தாமும்** - நம்பிகள் பாடத் துதித்தேற்ப இறைவரும் என்று. உம்மை எச்சவும்மை.

நனி அருள் கொடுக்கு மாற்ருல் - மிகவும் அருள்புரியும் வகையாலே; மிக்க அருளாவது 12000என்ற தொகையின் அளவுப் பெருக்கம்; அன்றேயன்றி மேலும் அதனை ஆற்றிற் புகப்பெற்றுத் திருவாரூர்க் குளத்தில் அவர் பெறக் கொடுத்தலும்; மாற்று நிறையக் கொடுத்தலுமாகிய மேற்செய்ய நின்ற அருளும் குறித்தது.

அருகு சென்று - பொருள் வேண்டிப் பாடி வணங்கி நின்ற இடத்தினின்றும் பின்னும் அருகு அணைந்து; இடத்தானன்றி மேல் வேண்டிக்கொள்ளும் உரிமைப்பாட்டானும் அருகில் என்ற குறிப்புமாம்.

கனி விடம் - கனி - முதிர்ந்த; களங்கனி போன்ற என்றலுமாம்.

முன் பின்ஞென்று - பின் - பின்னும்; உம்மை தொக்கது. முன்னர்ப் பொருள் வேண்டியுரைத்துப் பெற்றதன் மேலும் ஒரு செய்தி; முன் கேட்டதனுடனே பின்னும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. **முன் பின்** - முரண் அணிச்சுவை.

கழற லுற்ருராகி - என முற்றெச்சமாம். கழற லுற்ருராகி - என்ன என மேல் வரும்பாட்டுடன் கூட்டுக. கழறல் - உறுதிச்சொல். கழலுதல் - நெருங்கல்; இடித்துரைத்தல்.
107

3262. (இ-ள்) அருளும்...என்ன - "தேவரீர் கொடுத்தருளும் இந்தப் பொன்னெல்லாம் அடியேனுக்குத் திருவாரூரில் உள்ளவர்கள் மருளவும் வியப்பவும் அங்கே வரப்பெறவேண்டும்" என்று விண்ணப்பிக்க; தெருளுற...என்ருர் - இறைவனர் தெளிந்தறியும்படி வானிலே எழுந்த திருவாக்கினுலே "செழிப்பையுடைய திருமணிமுத்தாற்றிலே இட்டு இப்பொன் முழுமையினையும் திருவாரூர்க் குளத்தினிற் போய்ப் பெற்றுக் கொள்ளுக" என் றருளிச்செய்தனர்.

3262. ``அருளுமிக் கனக மெல்லா மடியனேற் காரூ ருள்ளோர்
மருளுற வியப்ப வங்கே வரப்பெற வேண்டு`` மென்னத்,
தெருளுற வெழுந்த வாக்காற் ``செழுமணி முத்தாற் றிட்டுப்
பொருளினை முழுது மாரூர்க் குளத்திற்போய்க் கொள்க`` வென்றார். 108

3263. என்றுதம் பிரானார் நல்கு மின்னருள் பெற்ற பின்னர்
வன்றொண்டர் **மச்சம் வெட்டிக் கைக்கொண்டு** மணிமுத் தாற்றிற்
பொன்றிர ளெடுத்து நீருட் புகவிட்டுப் போது கின்றார்
``அன்றெனை வலிந்தாட் கொண்ட வருளிதி லறிவே``னென்று, 109

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அருளும் - கொடுத்தருளிய; **கனகமெல்லாம்** - 12000 பொன்குவைகள் முழுதும்.

அடியனேற்கு - அங்கே - வரப்பெறுதல் வேண்டும் என்று கூட்டுக.

மருளுற - வியப்ப - முன்னர், வரத் தாமதித்தல் கண்டு கண்டு மருளுதலும், பின்னர்ப் பதிகம் பாடிய அளவில் வரப் பெறுதல் பற்றியும் திருமுதுகுன்றத்தில் ஆற்றினில் இட்டுத் திருஆரூர்க் குளத்தினில் வருதல் பற்றியும் வியப்புறுதலும் பின்னர்ச்சரித நிகழ்ச்சியில் காண்க. அதன் முற்குறிப்பு. **அங்கே** - திருவாரூரிலே; **ஆரூர் உள்ளோர்** - பரவையாரும் அவர்மூலம் ஆரூரில் உள்ளார் பிறரும்.

தெருளுற - தெளியும்படி; **தெருள்** - அறிவு விளக்கம்; **வாக்கால்** - அசரீரியாகிய தமது ஞானகாயத் திருமேனியில் எழுந்த அருள் ஒலி வடிவாகிய வாக்கினாலே;

என்றார் - கனிவிட மிடற்றினாராகிய இறைவர் என்ற எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க

போய் - ஆரூர்க் குளத்திற் - கொள்க - என்க. *108*

3263. **(இ-ள்)** என்று...பின்னர்- முன்கூறியபடி தமது பெருமானார் தந்த இனிய திருவருள் வாக்கினைப் பெற்ற பின்பு; வன்றொண்டர்...கொண்டு - வன்றொண்டராகிய நம்பிகள் மச்சம் (பொற்றுண்டம்) வெட்டி யெடுத்துக்கொண்டு; மணிமுத்தாற்றில்... போதுகின்றார் - திருமணி முத்தாற்றிலே பொற் குவியலை எடுத்து நீரினுள்ளே புகப்பெய்து செல்கின்றவர்; "அன்றெனை...அறிவேன்" என்று - "அன்று என்னைத் (திருவெண்ணெய் நல்லூரிலே) வலிய ஆட்கொண்ட திருவருளினை இச்செயலில் மெய்ப்பட அறிவேன்" என்று;

(வி-ரை) நல்கும் இன்னருள் - திருவாக்கு; **மச்சம்** - பொன்னின் மாற்று ஒப்பு நோக்குதற்கு அக் குவையினின்றும் வெட்டி எடுத்துக் கொள்ளும் சிறு பொற்றுண்டம்; பொன் வினைஞர் அத்துறையில் வழங்கும் மரபுப் பெயர் - **வெட்டி** - பொற்கட்டியினின்றும் சிறு துண்டம் **வெட்டி** எடுத்தல் மரபு. இறைவர் தந்தவை பொற்கட்டிகளாக இருந்தன என்பது.

3264. மேவிய காதற் **றொண்டு விரவுமெய் விருத்தி பெற்றார்**
"ஆவியின் விருத்தி யான வந்தணர் புலியூர் மன்றிற்
காவியங் கண்டர் கூத்துக் கண்டுகும் பிடுவ" தென்று
வாவிசூழ் தில்லை மூதூர் வழிக்கொள்வான் வணங்கிப் போந்தார். 110

பொன்றிரள் - பொற்றிரள் எனற்பாலது எதுகை நோக்கி இயல்பாய் நின்றது.

புகவிட்டு - புகும்படி இட்டு என்றும், புகும்படி விட்டு என்றும் உரைக்க நின்றது.

போதுகின்றார் - வினைப்பெயர்; போதுகின்றாராகிய நம்பிகள்; போதுகின்றார் - என்று - என்று போந்தார் என மேல் வரும் பாட்டுடன் முடிக்க.

அன்று - முன்னாள்; பண்டறி சுட்டு; திருவெண்ணெய் நல்லூரில் வலிய வந்து ஓலைகாட்டித் தடுத்தாட்கொண்ட அன்று என்க;

அருள் இதில் அறிவேன் - அருள் இன்னும் உள்ள தன்மையினை இச்செயல் நிகழ்ச்சியில் தெளிந்துகொள்வேன்.

இதில் - இனி இவ்வாக்கு நிறைவேற அருளும் நிலையினையே; திருவாக்கின்படி திருவாரூர்க் குளத்தில் இப்பொன்னெல்லாம் தரும் நிலை.

மச்சம்வேண்டி—என்பதும் பாடம். ***109***

3264. **(இ-ள்)** மேவிய...பெற்றார் - பொருந்திய பெருவிருப்பத்தினாலே திருத்தொண்டினுடன் கூடிய நிலை தமது பிறவித் தொழிலாகப் பெற்ற நம்பிகள்; ஆவியின்...மன்றில் - ஆன்ம லாபத்துக்குரிய தொழில் புரியும் அந்தணர்கள் வாழும் திருப்புலியூர்த் திருவம்பலத்திலே; காவியங் கண்டர்...என்று, - நீலகண்டராகிய இறைவரது திருக்கூத்தினை நேரே கண்டு கும்பிடுவோம் என்று எண்ணி; வாவிசூழ்...போந்தார் - பொய்கைகள் சூழ்ந்த திருத்தில்லையாகிய பழம்பதியினை நோக்கிச் செல்லும் பொருட்டு இறைவரை வணங்கிச் சென்றருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மேவிய காதல் தொண்டு விரவு மெய் விருத்திபெற்றார் - பெரு விருப்புடன் தொண்டு செய்வதே தமது உடம்பினாலாய பிறவித்தொழிலாகப் பெற்றவர்; **மெய்விருத்தி** - உடம்பினால் செய்யும் உறுதொழில்; "மாதொரு பாகனார்க்கு வழிவழி யடிமை செய்யும், வேதியர் குலத்துட்டோன்றி" னாராதலின் விருப்புடன் அகம்படித் தொண்டு செய்தல் உறுதொழிலாயிற்று; அதுவேயுமன்றி, அடியானைத் தடுத்தாட்கொள்ளப் பெற்ற ஞான்று, "அருச்சனைபாட்டே யாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று இறைவர் ஏவியருளியபடி மெய்த்திருவாக்கின் றொண்டு செய்து செல்லுதலும் விருத்தியாயிற்று; **விருத்தி** - தொழில்; சீவனோபாயம் என்பர். இவையேயன்றித் தமக்கு வேறு தொழிலில்லாமையால் அத்தொண்டினை ஏற்றுக்கொள்ளும் இறைவர்க்கும் இவரைக்

காத்தல் கடனுயிற்று; அதுபற்றியே பொருள் வேண்டிய வேண்டியவாறே வேண்டிய வேண்டிய காலத்தும் இடத்தும் பெறலாயினர் என்ற குறிப்பெல்லாம் கண்டுகொள்க.

ஆவியின் விருத்தி - பிறவிப்பயன் - ஆன்ம லாபம் என்பது இராமநாதச் செட்டியார் குறிப்புரை; முன்னர் மெய்விருத்தியைக் கூறினர்; இங்கு உயிர்க்குறுதிப் பயன் கூறப்பட்டது. "ஊனுலு முயிராலு முள்ளபயன் கொளநினைந்து" (*1421*) என்ற கருத்து ஈண்டு வைத்துக் காணற்பாலது; "ஊனடைந்த உடம்பின் பிறவியே, தானடைந்த உறுதியைச் சாருமால்...தாடொழ" (*2*) என்பதும், பிறவும் காண்க. ஈண்டு **விருத்தி** என்றது உறுதிப் பயன் என்ற பொருள் தந்து நின்றது; **விருத்தியான - புலியூர் மன்று** - என்று கூட்டுக.

மெய்விருத்தி - ஆவியின் விருத்தி - ஆக்கச் சொல் உளதாக்கும் என்ற பொருள் தந்துநின்றது. ஈண்டு, இவ்வாறன்றி, **மெய்விருத்தி** - மெய்ம்மையான சித்தவிருத்தி என்றும், **ஆவியின் விருத்தி - அவி** - என்பது **ஆவி** என முதனீண்டதென்று கொண்டு வேள்விகளை வேட்டலே தமது தொழிலாகக் கொண்ட என அந்தணருடன் கூட்டியும் உரைத்தனர் முன் உரைகாரர்கள்.

கும்பிடுவது - இது நம்பிகள் திருவுள்ளத்துட் கொண்ட துணிபு.

வழிக்கொள்வான் - வழிக்கொள்ளும் பொருட்டு; செல்லும் பொருட்டு.

வணிங்கி - திருமுதுகுன்றரை வணங்கி விடைபெற்று.

கும்பிடுவனென்று—என்பதும் பாடம். *110*

I **திருமுதுகுன்றம்**

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லிக் கௌவாணம். 7-ம் திருமுறை**

நஞ்சியிடை யின்று நாளை யென்றும்மை நச்சுவார்
துஞ்சி யிட்டாற் பின்னைச் செய்வ தென்னடி கேள்சொலீர்
பஞ்சியிடப் புட்டில் கீறு மோபணி யீரருள்
முஞ்சியிடைச் சங்க மார்க்குஞ் சீர்முது குன்றரே. (1)

முத்திமுத் தாறு வலஞ்செ யும்முது குன்றரைப்
பித்த னுைப் பானடித் தொண்ட னூரன் பிதற்றிவை
தத்துவ ஞானிக ளாயி னூர்தடு மாற்றிலார்
எத்தவத் தோர்களு மேத்து வார்க்கிட ரில்லையே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:—ஆசிரியர் (*3260*) காட்டியருளியவாறு கண்டுகொள்க.

குறிப்பு:—நாதர்பாற் பொருள் வேண்டிய திருவுள்ளக் குறிப்பு; "இன்று நாளை யென்றும்மை நச்சுவார் துஞ்சியிட்டாற் பின்னைச் செய்வதென்" (*1*) என்றும், "இளைப்பறியீ

ரிம்மை யேத்துவார்க் கம்மை செய்வதென்" (4) என்றும், "பாடிப் பணைத்த பொருளெலா முமையாளுக்கோ" (5) என்றும், பிறவாறும் வரும் பதிகக் குறிப்புக்களா லறியப்படும்; "கையிலொன்றும் காணமில்லை" "மற்றைக் கண்டான் றரா தொழிந்தால்" "முன்னைறத் தரகில ராகில்" என்பன போன்று வெளிப்படையாய் இங்கு வேண்டு வரல்லர்; பொருள் வேண்டிய கருத்தினைக் குறிப்பினா லுணர்த்துகின்றார்; இதனைப் "பித்த னொப்ப ராய்த் தொண்ட னூரன் பிதற்றிவை" (11) என்று நம்பிகள் பதிகத்தால் தாமே அறிவித்தருளுதல் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) நஞ்சியிடை - இடை நஞ்சு என மாற்றுக; இடையில் வருந்தி; நைஞ்சு என்பது நஞ்சு என நின்றது; **நைஞ்சுபோதல் -** உணர்ந்து வருந்துதல்; **இன்று நாளை என்று -** நாள்தோறும்; **நச்சுதல் -** விரும்புதல்; பலகாலும் வேண்டுதல் என்ற குறிப்புமாம்; **துஞ்சியிட்டால் -** இறந்து போனால் **பின்னைச் செய்வதென்?** வருந்தி வேண்டுபவர்க்கு ஆயுள்வரையும் கொடாமல் இருந்தால் அவர்கள் வேண்டுவது பெறாதே இறந்துபடின் அப்புறம் அவர்களுக்கு என்ன செய்யப் போகிறீர்?; **பஞ்சியிடப் புட்டில் கீறுமோ - புட்டில் -** அம்புப் புட்டில்:அம்பறாத்தூணி என்பர். அதனுள் இடும் அம்பு முதலிய ஆயுதங்களின் கூர்மையினால் அதன் உட்பக்கங்கள் கீறி ஊறுபடாதபடி பஞ்சு இடுதல் மரபு. பஞ்சு இட்டால் புட்டில் கீறி ஊறுபடாதவாறு போல நச்சுவார்க்கு ஏதேனும் தந்தொழிந்தால் உம்மைக் கேட்டுத் தொல்லைப்படுத்தமாட்டார் என்பதுகுறிப்பு. **முஞ்சியிடை... முதுகுன்றரே -** முதுகுன்றத்தின் நீர்வளம் கூறியபடி; வளமுடையீரே! ஆதலின் தருதல் வேண்டு மென்பது குறிப்பு. **முஞ்சி -** நீர்வளமுள்ள இடங்களில் முளைக்கும் ஒருவகைப் புல்; பிரமசாரிகள் அரைஞாண் இதனாலாக்கப்படும். "முஞ்சி நாணுற முடிந்தது சாத்திய அரையில்" (509), முஞ்சிப்புற் புதரில் ஏறிச் சங்கம் வளைகள் வயிறுளைந்து சத்திக்கும் என்பது; "திடலேறிச் சுரிசங்கம் வெண்முத்தங் கீன்றலைக்கும் திருவையாறே" (தேவா); எனது வேண்டுதல் முஞ்சியிடைச் சங்கமார்த்தல் போல வீணே கழியாது, கேட்டுப் பயன் பெற வேண்டுமென்ற குறிப்புமாம்; **(2) திரிந்தக்கால் -** பலிக்குச் சென்று திரிந்தால்; திரிந்தால் தாமரை போன்ற சேவடிகள் வருந்தாவா? இப்பதிகத்தினுள் இறைவர் பலிதேர்ந்துழல்கின்றமை பற்றிப் பலவாறும் போற்றுதல் காண்க. **மூரி -** வலிமை; **களிறு -** மலைபடுபொருள்; குறிஞ்சிக் கரு;—**(3) கண்டகர்...சீர் - வேள்வி முழக்கு -** இவை குறிஞ்சிநில மக்கள் செய்யும் வழிபாட்டு முழக்கு; கண்ணப்ப நாயனார் புராணம் பார்க்க;— **(4) விளைப்பு -** மேல் விளைவு; **அளை -** புற்று; பொருள் வேண்டிய உள்ளக் குறிப்பு;— **(5) அம்மைச் செய்வதென் உமையாளுக்கோ? -** அடியாருக்கும் அதில் பங்குண்டு என்பது குறிப்பு; **அடியாரும் நீரும்** என்றது அடியாரும் நீருமாகச் சேர்ந்து பாடிப்பெற்றதாதலின் அவர் பங்கு பெறுதற்குரியார் என்பது குறிப்பு; 8-வது பாட்டும் பார்க்க;★ —**(6) கோடு -** மலைச் சிகரம்; **யானை (பிடி) - ஆளி -** குறிஞ்சிக் கரு; **முழை -** குகை;—**(7) ஆளி -** சிங்கம்; **குறத்தி -** குறிஞ்சி நில மக்கள்; **கன்றிடும் -** ஈனும்; **குறத்திகள் முன்றிலிடைப் பிடிகன்றிடும் -** பெண்மை இனம் பற்றிப் பெண் யானைகள் குறத்திகள் உள்ள முற்றத்திற் கன்று ஈன அதற்கு அவர்கள் வேண்டும் துணைக் காரியங்கள் செய்குவர் என்பது குறிப்பு. மலைவாணர் யானை முதலிய மிருக இனங்களுடன் பழகும் நிலையும் குறித்தது; **செடிச்சிகள் -** இழிந்தோர்; **குன்றில் -** மலையிடங்கள்;—**(8) மந்தி -** பெண் குரங்கு; **கடுவன் -** ஆண் குரங்கு; **மந்தி...உண்பழ நாடி -** விலங்கினத்துள்ளும்

★ இஃது இந்நாள் தொழிலாள ரியக்கக் கருத்தின் முளைபோலும்!

காணும் அன்பு நிகழ்ச்சி; உமது மலைவாழும் விலங்கினமும் அன்புச் செயல்கள் செய்தலால், நீர், உமக்கு அடிமைப்பட்ட வாழ்வுடைய எனக்கு ஈந்து அளிப்பது கடன் என்றது குறிப்பு;— **(9) செட்டி** - வாணிபம் செய்யும் சாதியீரே!; முருகனுக்குச் செட்டி என்று பெயர் வழங்கும் முறை குறித்தது; **செட்டி...நிற்பதே** - உமது தேவி ஊர்தோறும் அறங்களெல்லாம் செய்யவும் நீர்பிச்சை ஏற்பது தகாது; ஆதலின் "நான் பலி ஏற்பவன்; உனக்குப் பொருள் தருதல் எவ்வாறு?" என்று கூறிக் கழித்தலும் தகாது என்ற குறிப்பு. **முட்டி** - சார்ந்து;—**(10) எத்திசையும்... கொண்மினோ?** - எல்லா வுயிர்களிடத்தும் பொதுநோக்கால் எழுந்தருளினும் பத்தி செய்வார் பக்கல் சிறப்பு நோக்கால் அருள்புரிதல் வேண்டுமென்பது குறிப்பு; **எத்திசையும்...வலஞ் செய்யும்** - திருமணிமுத்தாறு எல்லாத் திசைகளிலும் திரைகளால் நீரினை வீசிப் புக்குவளம் செய்யினும் திருமுதுகுன்றத்தினிற் சிறப்பாகக் கரைகளின் மேல் முத்தி வலஞ் செய்து வழிபடும் என்பது. உமது ஆறுதானும் இவ்வாறு செய்தால் அதுபோல் நீரும் செய்தல் வேண்டுமென்பதும், ஆதலின் அடியானுகிய என் பக்கம் சிறப்பாக அருள்புரிதல் வேண்டுமென்பதும் குறிப்பு; **முத்தி** - மெதுவாக ஒத்தி வருடுதல்; **(11) பித்தனொப்பான்...பிதற்றிவை** - மனக் கருத்தினைப் புலப்படுத்தாது வேறு வகையாற் கூறுதலின் **பித்தன் - பிதற்று** என்றார்; **பித்தனொப்பான்** - அடிமைத் திறத்தினிற் பித்துக் கொண்டவன்; **தத்துவ ஞானிகள்...தடுமாற்றிலர்** - ஞானிகள் இதன் உட்பொருள் காணுதலில் மயங்கிலர்; **எத்தவத்தோர்** - ஏனையோர்.

II திருமுதுகுன்றம்

திருச்சிற்றம்பலம் ("நம்பி" என்ற திருப்பதிகம்) **பண்-தக்கேசி 7-ம் திருமுறை**

மெய்யைமுற் றப்பொடிப் பூசியோர் நம்பி வேதநான் கும்விரித் தோதியோர்நம்பி
கையிலோர் வெண்மழு வேந்தியோர் நம்பி கண்ணு மூன்றுமுடை யாயொரு நம்பி
செய்ய நம்பிசிறு செஞ்சடை நம்பி திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்த நம்பியென்னை யாளுடை நம்பி யெழுபிறப்பு மெங்க ணம்பி கண்டாயே. (1)

கரத்தி நம்பி கசியாதவர் தம்மைக் கசிந்த வர்க்கிம்மையோ டம்மையி லின்பம்
பெருக்கு நம்பி பெருகக் கருத்தா * * * (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—முன் ஆசிரியர் (3260) உரைத்தருளியவாறு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) மெய்யை - மெய்யின்கண்; **ஐ**-உருபு மயக்கம்; **நம்பி** - நம்பி அடையத் தக்கவர்; **என்னை யாளுடைய நம்பி** - அடிமை கொண்டதனுல் பொருள் தந்து காக்கக் கடமைப் பட்டவர் என்பது குறிப்பு; **எழு பிறப்பு மெங்கணம்பி** - "அடிமை ஒருமையா மெழுமையும்" (3235); -**(3) பொருளால் வரு நட்டம்** - ஐந்தொழிற் பொருள் காட்டும் திருக்கூத்து; **பொழுது** - காலம்; **விண்** - முதலியன இடம்;—**(4) உயிர்க்கெல்லா மமுதா வூறு நம்பி** என்க; **உயிர்க்கெல்லாமுரிய** என்று பின்னுங் கூட்டுக;—**(6) இரித்த** - சிதைந்தோடச் செய்த;—**(7) பின்னை** - இலக்குமி;— **(8) சொல்லை... நின்ற நம்பி** - சொல்லும் பொருளுமானவர்; **இல்லை** - வீடுகள் தோறும்;— **(9) குரு** - பெரிய - **பொய்ச்சமண் பொருளாகி** - பொய்ச் சமணத்திலும்

3265. மாடுள பதிகள் சென்று வணங்கிப்போய், மங்கை பாகர்
நீடிய **கடம்பூர்** போற்றி, நிறைந்தவா னந்தக் கூத்தர்
ஆடிய தில்லை மூதூ ரணைந்தணி வாயில் புக்குச்
சேடுயர் மாட நீடு செழுந்திரு வீதி சார்ந்தார். 111

அவர்க்கேற்றவாறு விளங்குபவன்; **(10) கசியாதவர்தம்மைக் கரத்தி** - அன்பினால் உருகாதவர்பால் விளங்காமல் ஒளித்திருப்பவர்; **கசிதல்** - அன்பினால் உள்ளம் உருகுதல்; **குறிப்பு** - இப்பாட்டில் பின் மூன்று அடிகள் சிதலாயின!

தலவிசேடம்:— திருமுதுகுன்றம் - தொகுதி III - பக்கம் 331 பார்க்க.

3265. **(இ-ள்)** மாடுள...போற்றி - பக்கத்தில் உள்ள பதிகளிற் சென்று இறைவரை வணங்கிப் போய் உமைபாகராகிய இறைவர் நீடி எழுந்தருளியுள்ள திருக்கடம்பூரினை வணங்கித் துதித்து; நிறைந்த...புக்கு - நிறைந்த ஆனந்தக் கூத்தர் நடஞ் செய்யும் **தில்லை மூதூரினை** அணைந்து அழகிய நகர் வாயிலினுட் புக்கு; சேடுயர்...சார்ந்தார் - பெருமையினுலுயரும் மாடங்கள் நிலை பெற்று விளங்கும் செழுமையாகிய திருவீதியினைச் சார்நதருளினர்.

(வி-ரை) மாடுளபதிகள் - திருமுதுகுன்றத்தினின்றும் திருத்தில்லை செல்லும் இடையிலும் பக்கங்களிலும் உள்ள பதிகள்.

நிறைந்த ஆனந்தம் என்று கூட்டி ஆனந்தத்தின் முழுமை என்றுரைத்துக் கொள்க. "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூர ணனந்தமே" (தாயுமானர்).

நிறைந்த - எல்லாப் புவனங்களிலும் நிறைவாகிய; **நிறைந்த மூதூர்** என்று கூட்டியுரைப்பினு மமையும்; "எப்புவனங் களுநிறைந்த திருப்பதியினெல்லையினை யிறைஞ்சி யேத்தி" (1444) என்றதும், ஆண்டுரைத்தவை பார்க்க.

அணிவாயில் - நகரத்தின் திருவாயில்; இது மேற்குத் திருவாயில் என்பது கருதப்படும்; கோயிற்றிருவாயில் மேற்பாட்டிற் கூறப்படும்.

சேடு உயர் மாடம் -தில்லைவாழந்தணர்களும் மடபதிகளும் வாழும் மாடங்களாதலின் **சேடுயர்** என்றார்; **சேடு** - பெருமை.

திருவீதி - "மாதவங்க ணல்குந் திருவீதி நான்குந் தொழுது" (2063); **சார்ந்தார்** - "சார்புணர்ந்து" (குறள்).

கடம்பூர் - இதன் விவரம் விளங்கவில்லை.

மாடுளபதிகள் - எருக்கத்தம்புலியூர் - முதலாயின என்பது கருதப்படும். 111

3266. **(இ-ள்)** நலமலி அலங்கல் மார்பர் - நன்மைமிகும் மாலை தாங்கிய மார்புடைய நம்பிகள்; பொற்றிரு...நண்ணி - அழகிய திருவீதியினை வணங்கிப் புண்ணியத்தின் விளைவாகி ஓங்கி விளங்குகின்ற நல்ல திருவாயிலினைச் சேர்ந்து; மற்றதன்...வணங்கி - அதன் முன்பு நிலமுற விழுந்து வணங்கி; உட்புகுந்து - உள்ளே புகுந்து; பைம்பொன்...கொள்வார் -

3266. பொற்றிரு வீதி தாழ்ந்து புண்ணிய விளைவா யோங்கும்
நற்றிரு வாயி னண்ணி நறைமலி யலங்கன் மார்பர்
மற்றதன் முன்பு மண்மேல் வணங்கியுட் புகுந்து பைம்பொற்
சுற்றுமா ளிகைசூழ் வந்து தொழுதுகை தலைமேற் கொள்வார், 112

பசும்பொன் வேய்ந்த இடங்களையுடைய சுற்றுத் திருமாளிகையினைச் சூழ்ந்து வலம் வந்து தொழுது கைகளைத் தலைமேற்கொள்வாராகி,

(வி-ரை) புண்ணிய...வாயில் - புண்ணியம் - சிவபுண்ணியம்; முன் செய்த அளவில்லாத சிவபுண்ணியங்களின் மேலீட்டினலே மக்கள் இத்திருவாயிலிற் புகும்பேறு பெறுவர் என்பது கருத்து; "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சிக்கில், நல்லறிவு சற்றே நகும்" என்ற பொருளை ஈண்டு வைத்துச் சிந்திக்க; "வாயி, லப்பதியில் வாழ்பெரியோ ருள்ளம் போல, ஓங்குநிலைத் தன்மையவாயகில முய்ய வுமைபாக ரருள்செய்த வொழுக்க மல்லாற், றீங்குநெறி யடையாத தடையு மாகிச் செந்நெறிக்க ணிகழ்வாய்மை திருந்து மார்க்கந் தாங்குலவ நிலவி" *(1165)* என்று இக்கருத்தை முன் விரித்துரைத்தாராதலின், இங்குப் "புண்ணிய விளைவு" என்றமைந்தார்; இது மேற்குக் கோபுரவாயில் என்று கருதுக.

பைம்பொற் சுற்று மாளிகை - பொன் வேய்ந்தமைந்த இடங்களையுடைய சுற்றுத் திருமாளிகைப் பத்தி. தலைமேற்கொள்வார் - புக்கு - இறைஞ்சி - என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

அலங்கல் மார்பர் - அலங்கல் - உரியஅடையாள மாலையாகிய தாமரை மாலை; இறைவரது ஆணையின்படி *(273)* வேள்வியிற் கொண்ட மணக் கோலத்துடன் சரித்தாராதலின் அதன் குறிப்புமாம்.

நலமலி அடங்கல் — என்பதும் பாடம். ***112***

3267. **(இ-ள்) ஆடிய...இறைஞ்சி -** ஆனந்தக் கூத்தர் ஆடும் திருமுன்பாகிய அழகிய பொற்கோபுரத்தின் வழியே உட்சென்று வணங்கி; ஓங்கும்...நண்ணுற - பெருகும் ஒளிவளர்கின்ற பொன்னம்பலத்தில் ஆடுகின்ற சேவடியைச் சார; உள் நிறைந்து... பாய - உள்ளே நிறைந்து நீடுகின்ற ஆனந்த வெள்ளமாகிய கண்ணீர் இரு கண்களினின்றும் விடாது பொழிய,

(வி-ரை) ஆடிய திருமுன்பு - கூத்தப்பெருமானின் நேர் திரு முன்புள்ள; இது நடராசரின் நேர் முன்பாகிய உட்கோபுரம்; கொடி மரம் உள்ள திருவாயில். இதனைத் திருவணுக்கன்றிருவாயில் என்பாருமுண்டு.

கோபுரத்தின் ஊடுபுக்கு - கோபுர வாயிலின் வழியே உள்ளே புகுந்து; வாயிலும் கோபுரத்தின் அங்கமேயாகி யடங்குதலின் கோபுர **வாயிலின் ஊடு என்னது கோபுரத்தின் ஊடு** என்றார்.

3267. ஆடிய திருமுன் பான வம்பொனின் கோபு ரத்தின்
ஊடுபுக் கிறைஞ்சி யோங்கு மொளிவளர் கனக மன்றில்
நாடகச் செய்ய தாளை நண்ணுற வுண்ணி றைந்து
நீடுமா னந்த வெள்ளக் கண்கணீர் நிரந்து பாய, 113

3268. பரவுவாய் குளறிக் காதல் படிதிருப் படியைத் தாழ்ந்து
விரவுமெய் யங்க மைந்து மெட்டினும் வணங்கி வேட்கை
யுரனுறு திருக்கூத் துள்ள மார்தரப் பெருகி நெஞ்சிற்
கரவிலா தவரைக் கண்ட நிறைவுதங் கருத்திற் கொள்ள, 114

ஒளிவளர் கனகமன் - ஒளியாகிய இறைவர் வளர்ந்தாடும் பொன்னம்பலம்; "ஓங்குமொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடும்" (கோயிற் புராணம்).

நாடகச் செய்ய தாள் - ஆடும் சேவடி; எடுத்த திருவடி.

நண்ணுற - அணுகச் செல்ல.

உள் நிறைந்து...பாய - **உள் நிறைந்து பாய** - உள்ளே நிறைந்தமையால் மேல்பொங்கி வழிய; **வெள்ள** - **நீர்** என்க; **நிரந்து** - வரிசைப்பட இடையறாது பரவி. **பாய்தல்** - வழிதல்.

அம்பொனீள் கோபுரம்;—என்பதும் பாடம். ***113***

3268. **(இ-ள்)** பரவுவாய் குழறி - துதிக்கின்ற வாய் தழுதழுத்துக் குழறி; காதல்...தாழ்ந்து - பெரு விருப்பம் படியும் திருக்களிற்றுப்படியினை வணங்கி; விரவும்...வணங்கி - மெய் பொருந்திய ஐந்தங்கம் எட்டங்கம் என்ற முறையில் வணங்கி; வேட்கை... பெருகி - பெருகிய ஆசை வலுப்படத் திருநடனம் மெய்யுணர்வினுள்ளே நிறைந்து மேன்மேலும் பெருகி; நெஞ்சில்...கொள்ள - தமது திருவுள்ளத்தினுள் கரத்தல் இல்லாது வெளிப்பட்டு நின்ற இறைவரைத் திருப்பேரூரிற் கண்ட அக்காட்சி நிறைவாகத் தம் கருத்தில் கொள்ள;

(வி-ரை) பரவுவாய் குழறி - பரவுகின்ற திருவாய் அவ்வாறு செய்ய இயலாது குழறித் தழுதழுத்து.

காதல்படி திருப்படி - திருக்களிற்றுப் படி; 251-ம் பாட்டின் கீழ் இதுபற்றி உரைத்தவை - தொகுதி I பார்க்க. **காதல்படி** - பேரன்பு அழுந்தும்; **படிதல்** - பொருந்திக் கிடத்தல்.

அங்கம் ஐந்தும் எட்டினும் வணங்கி - ஐந்து அங்கம் நிலமுற வணங்குதலும், எட்டு அங்கம் நிலமுற விழுந்து வணங்குதலும் செய்து; இவை முறையே பஞ்சாங்க அட்டாங்க நமக்காரம் எனப்படுவன; இவற்றின் விரிவு முன்னர் உரைக்கப்பட்டது.

வேட்கை உரனுறு - பேரன்பின் வலிமை பொருந்திக் கிடந்த; **உரன்** - திண்மை-அறிவு; "உரனென்னுந் தோட்டியான்" (குறள்-பரி.உரை.)

வேறு

3269. "மடித்தாடு மடிமைக்க"ணென்றெடுத்து மன்னுயிர்கட் கருளுமாற்ருல்
அடுத்தாற்று **நன்னெறிக்க ணின்ருர்கள் வழுவிநரகரணையாவண்ணம்**
தடுப்பானைப் **பேரூரிற் கண்டநிலை சிறப்பித்துத்** "தனிக்கூத்தென்றும்
நடிப்பானை நாமனமே பெற்றவா"றெனுங்களிப்பா னயந்து பாடி, 115

நெஞ்சிற் கரவிலாதவர் - ஒருசிறிதும் ஒளிக்காமல் தமது முழு ஆனந்தத்தினையும் உள்ளே நிறைய வெளிப்பட நின்றவர்; "கரவார்பால் விரவாடும் பெருமான்" (தேவா). வேட்கை -பெருகி என இயையும்.

கரவிலாதவரைக் கண்ட நிறைவு - "தில்லை மன்றுணின் ருட னீடிய கோல"த்தை நேர்காணத் திருப்பேரூரில் கண்ட மெய்யுணர்வினுள் நிறைந்த காட்சி அங்குக் கண்ட காட்சியினையே இங்கும் முழுமையும் காணும் நிலை.

கருத்திற் கொள்ளுதல் - மனத்தினுள் நிறைந்து கிடக்கப் பெறுதல்.

அரனுறு—என்பதும் பாடம். *114*

3269. **(இ-ள்)** மடித்தாடும்...எடுத்து - "மடித்தாடும் அடிமைக் கண்"என்று தொடங்கி; மன்னுயிர்கட்கு...சிறப்பித்து - உலகில் உயிர்களுக்கு அருளும் வகையினல் இறைவரை அடுத்துச் செய்யும் சிவநெறியினின்றவர்கள் தவறி இயமன் கைப்பட்டு நரகில் அணையாதபடி தடுத்தாட்கொள்ளும் இறைவரைத் திருப்பேரூரில் கண்டு வழிபட்ட நிலையினைச் சிறப்பித்து; தனிக்கூத்து...பாடி - ஒப்பற்ற தனிக்கூத்தினை ஆடுகின்றவரை மனமே! நாம் கிடைக்கப்பெற்ற பேறுதான் என்னே! என்று பெரு மகிழ்ச்சியினல் விரும்பிப்பாடி,

(வி-ரை) மடித்தாடும் அடிமைக்கண் - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு; பதிகம் பார்க்க.

மன்னுயிர்கட்கு...தடுப்பானை - உயிர்களுக்கு அருள்புரியும் வகையாலே - தடுப்பான் என்று கூட்டுக.

அடுத்தாற்றும்நன்னெறிக் கண் நின்ருர்கள் - முன்னை வினையின் வழித்தோன்றி அவ்வினைப் பயனை அனுபவித்துக் கழிக்கும் வகையாலே அவ்விதிவழி அறநெறியில் நிற்பவர்கள்; **வழுவி** - அந்நெறியினின்றும் விலகி - தவிர்ந்து; **நரகணையா வண்ணம்** - வழுவியதன் காரணமாக நரக லோகம் செல்லும் வழிபோகாதபடி; **தடுப்பான்** - தடுத்தாட் கொள்பவர்; நம்பிகள் தமது சுயசரித நிலைபற்றி எண்ணித் திருவருளைப் போற்றிய குறிப்பும் கண்டுகொள்க; தமக்குச் செய்த பேர்அருள்கள் எல்லாவற்றிலும் இதுவொன்றே மிகச் சிறந்தது என்பது நம்பிகள் திருவுள்ளத்தினுள் ஊன்றிக் கிடந்த தென்க.

நின்ருலும் வழுவினர்கள் என்ற பாடமுமுண்டு. அப்பாடத்துக்கு, அறத்தின் நன்னெறியிலே நிற்பினும் பிறவியில் வந்த வினைப்பயன் துய்ப்பதனேடு அமையாது புதிது

3270. மீளாத வருள் பெற்றுப்புறம் போந்து திருவீதி மேவித் தாழ்ந்தே
ஆளான வன்றொண்ட ரந்தணர்க டாம்போற்ற வமர்ந்து வைகி,
மாளாத பேரன்பாற் பொற்பதியை வணங்கிப்போய், **மறலி வீழத்**
தாளாண்மை கொண்டவர்தங் கருப்பறிய லூர்வணங்கிச் சென்றுசார்ந்தார். 116

புதிது வினைகளைத் தேடிக்கொள்ளும் வகையால் வழுவியவர்கள் என்றுரைத்துக்கொள்க; இப்பொருட்கு **நன்னெறிக்கண் நின்றாலும்** என்றதற்கு உலக விதிப்படி நல்லநெறி சென்றாலும், என்றுரைத்து, **நன்னெறி** - உலகியல் நெறியாகிய இல்லற முதலிய நிலைகள் என்று கொள்க;ஈண்டு நம்பிகள் புத்தூரில் முயன்ற திருமணம் உலகியலில் நன்னெறியே யன்றித் தீநெறி எனப்படா நிலையும் காண்க; ஆயினும் உயிர், பேரூர் பிறவியில் விழுந்துவிடாது **ஈடேறும்** வகையால் முன்னர் வேண்டிய வரத்தின்படி அது வழுவேயாகி முடிந்து, தடுக்கப்பட நின்ற இயையும் கண்டுகொள்க. **தடுப்பானை** தடுத்தாட் கொள்ளும் இறைவரை.

பேரூரிற் கண்ட நிலை சிறப்பித்து - பதிகம் இறுதிப் பாட்டிற் "பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றாம்" என்பதனை ஆசிரியர் காட்டியருளியபடி.

தனிகூத்து என்றும் நடிப்பானை - புலியூர்ச் சிற்றம்பலத்தே கண்ட காட்சி.

பெற்றவாறு - காணப்பெற்ற பேற்றின் அருமைப்பாடுதான் என்னே! என வியந்தது; "பெற்றாமன்றே" என்ற பதிக மகுடத்தின் பொருள் விரித்துக்காட்டியபடி; **களிப்பு** - பேரானந்த விளைவு; பெறுதற்கரிய பொருள் பெற்றபோது விளையும் உள்ள நிகழ்ச்சி; **115**
நயப்பு - விருப்பம்.

3270. **(இ-ள்)** மீளாத...தாழ்ந்தே - பிரியாவிடை அருளப்பெற்றுப்புறத்துப் போந்து திருவீதியினை அணைந்து தொழுதே; ஆளான...வைகி - இறைவருக்கு ஆளாயின வன்றொண்டராகிய நம்பிகள், அந்தணர்கள் தம்மைப் போற்ற, விரும்பி அங்குத் தங்கியருளி; மாளாத...போய் - ஒழியாத பேரன்பினாலே அழகிய அத்திருப்பதியினை வணங்கிச் சென்று;மறலி...சார்ந்தார் - இயமன் வீடும் படி தாளாண்மை கொண்ட இறைவரது திருக்கருப்பறியலூரினை வணங்கிப் போய்ச் சார்நதருளினர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மீளாத அருள் - பிரியா விடை; மீளாத அங்கு - நின்று பிரிய முடியாத; **திருவீதி** - "மாதவங்கள் நல்குந் திருவீதி நான்கும்"; கூத்தப் பிரான் திருத்தேரில் எழுந்தருளும் மாடவீதி.

அந்தணர்கள் - தில்லைவாழந்தணர்கள்; **அந்தணர்கள் தாம் போற்ற** - "பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே" என்ற திருப்பதிகத்தைக் கேட்ட அந்தணர்கள், நம்பிகளை நோக்கித் தில்லைபோல வேறு ஒரு தலமும் உலகில் இல்லையாயிருப்பவும் பேரூரினை இங்குச் சிறப்பித்த தென்னை? என வினவ, நம்பிகள் தில்லையம்பலத்திற் போலவே பேரூரில் அரசம்பலத்திலும் கூத்தப்பெருமான் எப்போதும்

ஆனந்த நடனம் புரிந்தருளுவர் என்றுரைக்க, அது கேட்டு, அவ்வந்தணர்கள் அங்குச் சென்று அவ்வாறே கண்டு, **அழகிய திருச்சிற்றம்பலம்** என்றொரு தலத்தையும் தாபித்து வணங்கி மீண்டுவந்தனர் என்பது பேரூர்ப்புராணம்; **வன்றொண்டர் அந்தணர்கள் தாம் போற்ற** என்பது அக்குறிப்புத் தருவது; **வன்றொண்டர்** என்ற பேரூர்ப் புராணமும் கருதுக.

ஆரூரர் பேரூரை யணைந்திறைஞ்சிப் போய்த்தில்லை
நீரூருஞ் சடையாரை நேர்வழுத்தும் பதிகத்திற்
"பேரூரர் பெருமானைப் பெற்றா" மென் றிசைத்ததமிழ்
சீரூருந் தில்லைவா ழந்தணர்தஞ் செவிக்கேட்டார். (1)

தம்பிரான் றோழரவர் தமைநோக்கி வினவுவார்
"எம்பிரா னமர்தில்லை யித்தலம்போ லொருதலமும்
உம்பரார் தொழுமுலகி லுயர்ந்திருப்ப திலையன்றே!
நம்பிபே ரூர்ச்சிறப்ப நயந்தெடுத்த தென்?" னென்றார். (2)

மாண்டகுணத் தந்தணர்கள் வினவுதலும் **வன்றொண்டர்**
நீண்டமகிழ் வினராகி நிலைமையவர்க் கருள்செய்வார்
"ஈண்டுநடம் புரிவதுபோ லெம்பிரான் போதிவனத்
தாண்டுமன வரதமுநல் லானந்த நடம்புரியும்" (3)

பேரூர்ப்புராணம் - அழகிய திருச்சிற்றம்பலப் படலம்

பதியை வணங்கிப் போய் - பதியினை விட்டுப் புறப்படும்போது நகர் எல்லையில் பதியை வணங்கிச் செல்லுதல் சிறந்த மரபு.

தாளாண்மை - இரட்டுற மொழிதலால் முயற்சி என்றும், தாளினாலேசெய்த ஆண்மை (உதைத்துருட்டியது) என்றும் கொள்ள வைத்தது கவி நலம்.

கருப்பறியலூர் வணங்கி - ஊரினைத் தூரத்தே கண்டு வணங்கி; **சார்ந்தார்**-ஊரினுள் சார்ந்தனர்.

குறிப்பு - முதன்முறை திருத்தில்லை வழிபாடும் (250—253) திருப்பேரூர்வழிபாடும் (3242—3245) தனித்தனியே நந்நான்கு பாட்டுக்களால் ஆசிரியர் கூறிய வொற்றுமை நயம் பற்றி முன் (3242—3245) உரைக்கப்பட்டது. அதன் பின் ஈண்டு இரண்டாம் முறைத் திருத்தில்லை வழிபாட்டினைப் பேரூரும் தில்லையும் கூடியவாற்றால் ஐந்து (3266—3270) திருப்பாட்டுக்களா லருளிய திறமும் கருதத்தக்கது. முன்போலவே இவற்றின் பொருளொற்றுமை நயமுஞ் சிந்தித்துணரத்தக்கது. *116*

கோயில்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி. 7-ம் திருமுறை**

மடித்தாடு மடிமைக்க ணன்றியே மனனேநீ வாழு நாளுந்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
கடுத்தாடுங் கரதலத்திற் றமருகமு மெரியகலுங் கரிய பாம்பும்
பிடித்தாடி புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே, (1)

பாரூரு மரவல்கு லுமைநங்கை யவள்பங்கன் பைங்க ணேற்றன்
ஊரூரன் றருமனார் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
ஆரூரன் றம்பிரா னாரூரன் **மீகொங்கி லணிகாஞ் சிவாய்ப்**
பேரூரர் பெருமானைப் புலியூர்ச்சிற் றம்பலத்தே பெற்றா மன்றே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—முன் ஆசிரியர் (3269) காட்டியருளியவாறு கண்டு கொள்க. திருப்பேரூர் வழிபாடும் (3242—3245), முன்னர்த் திருத்தில்லை வழிபாடுங் கருதுக.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) மடித்தாடும் அடிமை - ஒருதாளை மடித்து ஊன்றியும் ஒருதாளை மடித்துத் தூக்கியும் ஆடுகின்ற திருவடிக் கீழ்ச் செய்யும் அடிமைத்திறம்; **அடிமைக் கண் அன்றியே வாழும் நாளும்** - அடிமைத்திறத்தின்றும் வழுவி நிகழும் நாள்களிலே; **தடுத்தாட்டி** - மேற்செல்லாதபடி தடுத்துத் தமது புரத்துக்குட் கொண்டு புகுத்தி; காலனார் கைப்படாது தாமே வினைப்போகந்துய்ப்பித்து ஆட் கொள்ளுதல் கருத்து. **தருமனார்** - இயமன்; **தமர்** - "கால பாசம் பிடித்தெழு தூதுவர்" - இயமன் தூதர்கள்; **செக்கிலிடுதல்** - இது முதலியவை நரகத் தண்டனைகள்; போற்றிப் பஃறொடை பார்க்க. **கடுத்து** - கடுக; விரைவுபட; **எரிஅகல்** - தீயைக் கொண்ட அகல்; **கரிய பாம்பு** - மிகவும் விடத்தன்மையுடைய குறிப்பு. **பிடித்தாடி**-பெயர்; ஆடுபவர்; ஆடுபவராகிய பெருமானைஎன்க; **பெற்றாமன்றே** - பெற்றவாறு தான் என்ன பெரும பேறு என்று மகிழ்ந்தது; "பெற்றவா றெனுங்களிப்பால்" (3269) என்று ஆசிரியர் இதனை உரைத்தருளினர்;—**(2) பேராது**-பெயர்தலின்றி-நீங்காது; **பேராது...பிரியாது உள்கி** - காமத்திற் சென்றார்களும் பிரியாது உள்குகின்றனர்; திருஅடித் தொண்டர்களும் பிரியாது உள்குகின்றனர். ஆனால் அடித்தொண்டர் பிரியாது உள்கும் திறம்வேறு; முன்னையது அழியும் தன்மையும், சிறிது அளவே நிற்கும் தன்மையும், வெறுப்பும் துன்பமும் உளதாக்கும் தன்மையு முடையது; பின்னையது அவ்வாறன்று என்பார் **அது போலன்றியே** என்றருளினார். **சீரார்ந்த அன்பர் - திருவினார்** - என்றமையும் இக்கருத்து; வரும்பாட்டும் பார்க்க. **ஓராது** - அத்தன்மைகளை எண்ணாது; **பேராளர்** - பெரியோர்;— **(3) நரியார்...பரிசு** -இஃது ஒரு பழமொழியை உள்ளடக்கி நிற்பது; ஒரு நரி ஆடுபோல வேடம்பூண்டு பட்டிக்குள் புகுந்து பாழ்படுத்தி வர அதனை அறிந்தவனால் புடைக்கப்பட்டு இறந்த கதைபோல என்று எடுத்துக் காட்டியபடி; **பக்கு** - துண்டம்; **நரியார்** - ஆர் விகுதி இகழ்ச்சிக் குறிப்பு. **கள்ளம்** - கள்ளவேடம். "நரி விருத்தம தாகுவர் நாடரே" என்பதற்கும், இதற்கும் திருத்தக்கதேவர்பாடியதாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அச்சிட்ட நரி விருத்தம் என்னும் நூலின் கதையைக் கூறுவாரும் உளர். இந்நரியின் கதை பஞ்ச தந்திரத்தும் உள்ளது; **(4) கருமை**-துன்பானுபவங் குறித்தது; **மண்ணுலகம்... பெருமையார்**-இதுநம்பிகள் காலத்து நாட்டு நடப்பு நிகழும்வழக்குக்குறித்தது; பல்லவர் மரபு சோழ நாட்டை அரசாண்டகாலம்; பல்லவ அரசுக்குப் பணிந்து அவர்க்கு அரசுரிமையாகிய திறையினைக் கொடாது மறுத்த சிற்றரசர்களுக்குத் தில்லைக் கோயிலில் வழிபடவும், அருணீறும் மாலை முதலியவை பெறவும் உள்ள உரிமையினைத்தரத் தில்லைவாழந்தணர்கள் மறுப்பது அந்நாள் வழங்கியதொரு வழக்கம்; சோழர்க்கன்றி

முடிசூட்டமாட்டோம் என்று மறுத்துத் தில்லைவாழந்தணர்கள் இந்நாட்டினையே விட்டகன்று சேர நாட்டிற் புகலடைந்த செய்தி கூற்றுவ நாயனர் புராணத்துட் காண உள்ளது; அந்நாளில் அரசாங்க உலகியல் நடைமுறை கோயில் நடை முறையுடன் பிணைந்து நிகழ்ந்த வழக்கு இவற்றினின்றும் அறியப்பெறும். பௌத்தாசாரியனுடன் ஈழநாட்டு அரசன் சமய வாதத்துக்கு வந்து திருவாதவூரடிகளால் புத்த வாதம் நிகழ்த்தப்பெற்ற காலத்தில், சோழ அரசனும் வந்து, அந்நிகழ்ச்சியில் உடனிருந்து கண்டனன் என்று திருவாதவூரடிகள் வரலாறு அறிவிக்கின்றது; பிற்காலத்தில் முகமதியர் படையெடுப்பின்போது நடேசப் பெருமானையும் எழுந்தருளுவித்து உடன்கொண்டு தில்லை வாழந்தணர்கள் சோழர் தலைநகராகிய திருவாரூரில் பூங்கோயிலினுள் காவல் பெற்றனர் என்பது சரிதம். அதுபோழ்து நடேசப் பெருமானர் எழுந்தருளியிருந்த தனித் திருமண்டபம் இன்று கோயிற் காரியாலயமாக விளங்குகின்றது; இந்நாளிலும் கோயிற் காரியங்கள் உலகியல் அரசாங்க நிகழ்ச்சிகளுடன் இணைக்கப்பட்டு நிகழ்கின்றன; **ஆனல் தகாத வழிகளில் நிகழ்வதுதான் பெரிதும் வருந்தத் தக்கது!** **பெருமையார்** - என்ற குறிப்புக் கவனிக்கற்பாலது; மறுக்கம் - கோயில் வழிபாட்டுரிமைகளை மறுத்தல்;—(5) **கருமான்** - கருநிறமுடைய தொருவகை மான்; **உரும்**-இடி; **உலவா**-கெடாத; அழியாத; ஏனை உலக இன்பங்கள் போலன்றி இறைவர் தரும் இன்பம் என்றும் அழியாதது;—(6) **உய்த்து ஆடி** - நிலையற்ற உலக இன்பங்களுள் மனத்தினைச் செலுத்தி; **ஆடுதல்**- அனுபவித்துமகிழ்ந்து கிடத்தல்; **ஊன் கண்ணேட்டம்** - உலகியலில் அறியப்படும் கண்ணேட்டம் என்ற அளவாலும்; **பித்தாடி** - உயிர்களின் பாவம் தீர்ப்பதே பித்தாக ஆடுபவர்;—(7) **முட்டாத**-முட்டுப்படாத;—(8) **கல்தானும் குழையுமாறு** - இறைவரருள் கல்லையும் குழைவிக்கும்; "கல்லைப் பிசைந்து கனியாக்கி" "கல்லை மென்கனியாக்கும் விச்சை" (திருவா); "கல்லேனும் ஐயவொரு காலத்திலுருகும்... கருணைக்கிணங்காத வன்மையையும் நான்முகன் கற்பிக்க ஒரு கடவுளோ?" (தாயுமானர்); **தானும்** - சிறப்பும்மை; **எற்றனும்** - எவ்வாற்றலும்; **பெற்று** - எருது;—(9) **தாடுடைய** - **தாடுதல்** - தடுத்து வருத்துதல்; **மோடு உடைய** - **மோடு** - அறியாமை; முருடு; **மூடை** - தீநாற்றம்; **மூடம்வைத்தல்** - வினைவயத்தால் அறியாமையிற் புகுத்தி வினை கழிப்பித்தல்; **பீடு** - பெருமை;

(10) **மீகொங்கு** - மேல் கொங்குநாடு. கொங்குநாடு, மேற்கு-வடக்கு-கிழக்கு என்று மூன்று பெரும் பிரிவுகளை உடையது; **காஞ்சி** - நதி; **அணி** என்ற அடைமொழி என்றும் வற்றத அதன் நீர்ச் சிறப்பினல் வரும் வளம் குறித்தது; **பேரூர்** - திருப்பேரூர்; **பேரூரர்...பெற்றும்** - இதனை ஆசிரியர் (3269) விரித்தமை காண்க;"பேரூரிற் கண்ட நிலை"

தலவிசேடம்:— **கோயில்** - (சிதம்பரம்) முன் உரைக்கப்பட்டது.

3271. (இ-ள்) கூற்றுதைத்தார்...புகுந்து - இயமனை உதைத்த இறைவரது கொகுடிக் கோயிலினைச் சேர்ந்து திருக்கோபுரத்தைத் தொழுது உள்ளே புகுந்து; அன்பர் சூழ...எய்த - அன்பர்கள் உடன் சூழ்ந்துவரப் பொருந்திய பெருவிருப்பத்திலே வணங்கித் துதித்து அளவில்லாத பெருமகிழ்ச்சி மனத்தினுட் பொருந்த; போற்றிசைத்து...வைகி - துதி செய்து புறத்திலே வந்தணைந்து அந்தப் பதியினில் தங்கி; புனிதரவர்...புனைந்து - புனிதராகிய

வேறு

3271. கூற்றுதைத்தார் **திருக்கொகுடிக் கோயி** லண்ணிக்
கோபுரத்தைத் தொழுதுபுகுந் தன்பர் சூழ
ஏற்றபெருங் காதலினு லிறைஞ்சி யேத்தி
யெல்லையிலாப் பெருமகிழ்ச்சி மனத்தி லெய்தப்
போற்றிசைத்துப் புறத்தணைந்தப் பதியில்வைகிப்
புனிதரவர் தமை**நினையு மின்பங்** கூறிச்
சாற்றியமெய்த் திருப்பதிகஞ் "**சிம்மாந்**" தென்னுந்
தமிழ்மாலை புனைந்தங்குச் சாரு நாளில், 117

இறைவரை நினைந்ததனுல் வரும் இன்பத்தை எடுத்துக் கூறிச் சொல்லிய திருப்பதிகம் "**சிம்மாந்து**" என்று தொடங்கும் தமிழ்மாலையினைப் புனைந்து சாத்தி; அங்குச் சாருநாளில் - அங்குத் தங்கியிருந்த நாள்களில்;

(வி-ரை) கொகுடிக் கோயில் - கொகுடி என்னும் வடிவிலமைந்த கோயில்; கொகுடி - முல்லை விசேடம்; முல்லையினையுடைய கோயில் என்பதுமாம்.

புனிதர்...கூறி - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம்.

நினையும் இன்பம் - இறைவரை நினைத்தலே இன்பந் தருவதாம். "**நினைத்தொறும்...** எப்போதும், அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன் சொரியும், குனிப்புடையான்" (திருவா.) "அறுசுவை யதனினு மறுசுவை யுடைத்தாய்க், காணினுங் கேட்பினுங் **கருதினுங்** களிதருஞ், சேணுயர் மருத **மாணிக்கத் தீங்கனி**" (*11-ந் திருமுறை - திருவிடை -மும் -கோ-10*).

சிம்மாந்து—இது பதிகத் தொடக்கம். ***117***

திருக்கருப்பறியலூர்

திருச்சிற்றம்பலம் **பண்-நட்டராகம். 7-ம் திருமுறை**

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து திறம்பா வண்ணங்
கைம்மாவி னுரிவைபோர்த் துமைவெருவக் கண்டானைக் **கருப்பறியலூர்க்**
கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடுங் **கொகுடிக் கோயில்**
எம்மானை **மனத்தினு னினைந்தபோ தவர்நமக் கினிய** வாறே. (1)

கலைமலிந்த தென்புலவர் கற்றேர்தம் மிடர்தீர்க்குங் கருப்பறியலூர்க்
குலைமலிந்த கோட்டெங்கு மட்டொழுகும் பூஞ்சோலைக் கொகுடிக் கோயில்
இலைமலிந்த மழுவானை **மனத்தினு லன்புசெய் தின்ப** மெய்தி
மலைமலிந்த தோளுரன் வனப்பகையப் பன்னுரைத்த வண்டமிழ்களே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— புனிதரவர்தமை நினையுமின்பங் கூறுதல்; ஆசிரியர் ***(3271)*** எடுத்துக்காட்டி யருளியபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* **சிம்மாந்து** - மிகமகிழ்ந்து; **சிம்புளித்து** - கண்களை மூடிக்கொண்டு; "பாட லாட லருத செம்மாப் பார்ந்து" (அரசு.ஆரூர்.குறிஞ்சி:10); **கொகுடிக்கோயில்** - கொகுடி - முல்லை விசேடம்; **சிம்மாந்து...வண்ணம் -மனத்தினுனினைந்தபோது** - எனக் கூட்டுக. "நினையு மின்பம்" பதிகப் பாட்டுத் தோறும் மகுடம் பார்க்க (3271);— **(2) நீருரும்** என்பது **நீற்றுரும்** என நின்றது; **மேனியராய்...நிறைந்து** -திருநீறணிந்து - சிவசின்னம் பூண்டு - நினைந்து; 3, 4,6,9,10, பாட்டுக்களும் பார்க்க. மேனியராகத் தியானித்து என்று நினையும் வகை கூறியது என்றலுமாம்; **நிறைந்து... மதியானை** - இறைவரைக் காற்று - தீ - ஞாயிறு - மதி என்ற வடிவங்களாகக் கண்டு தொழலாம் என்பது; "வேற்ருகி விண்ணுகி நின்ருய் போற்றி" (தாண்);—(3) **முட்டாமே** - தவிராது; **மூன்று போதும்** - "சந்தி மூன்றிலுந் தாபர நிறுத்திச் சகளி செய்திறைஞ்சு" (நம்பி); காலை - நண்பகல் - மாலை என்பன; **கொட்டாட்டுப் பாட்டாகி நின்ருனை** - ஆடல் பாடல்களில் விளங்குபவனை; **எட்டான மூர்த்தி** - அட்ட மூர்த்தத்துள்ளான்; "நிலநீர்...எண்வகையாய்ப் புணர்ந்து நின்ருனை" (திருவா);**—(4) விருந்தாய்** - புதிதான; ஞான அமுதப் பொருள்விருந்து; **வினைபோக நினைந்தபோது** என்று கூட்டுக;**—(5) பொடி** - திருநீறு; **தேன்** - தேன் வண்டு; **அடியேறு** - திருஅடியிற் பூண்ட;**—(6) வாய்மை** - அகத்தூய்மை குறிப்பது. "அகத்தூய்மை வாய்மையாற் காணப்படும்" (குறள்). **பொடி பூசி** - புறமும் அகமும் தூய்மைதரப் பூசி; "பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்." (141); **பூசை** - சிவபூசை; இஃது ஆன்மார்த்தம் பரார்த்தம் என்ற இருவகையு முள்ளிட்டது; முன் (3) கூறியது ஆன்மார்த்த பூசை;**—(7) நோய்** - பிறவி; தீவினை - பண்டைப் பழவினை;**—(8) பறையாத** - நீங்காத; வினைகளும் எனச் சிறப்பும்மை தொக்கது; **(9) பாடியாடி - நினைந்தபோது** என்று கூட்டுக;**— கம்**-நீர்; கங்கை ஆர்ந்த என்பது கங்கார்ந்த என நின்றது;**—(10) பண்தாழ் இன் இசை - தாழ்தல்** - மிக்கு விளங்குதல்;**—(11) தென்கலை** என்க; தமிழ்; **மட்டு** - தேன் - கள்; **இலை** - இலையின் வடிவம்; **மனத்தினுலன்புசெய் தின்பமெய்தி** - இப்பதிகம்திருக்கோயிலில் கும்பிட்டு வழிபட்ட போதன்றிப் புறத்தே முன்கூறிய அப்பதியில் வைகியபோது மனத்தினுல் நினைந்து தியானத்தினுள் கண்ட அகக் காட்சியின்பம் என்று ஆசிரியர் (3271) கூறியருளியது சரித அகச்சான்று.

தலவிசேடம்:— திருக்கருப்பறியலூர் - காவிரி வடகரை 27-வது பதி; மேலைக் காழி - தலைஞாயிறு - என வழங்கப்படும். "கொகுடிக் கோயில்" (பதிகம்) என்பது இப்பதியின் கோயிலின் பெயர். இந்திரன் அகந்தையுடன் கயிலைக்குச் சென்ற போது இயக்கர் வடிவத்துடன் இறைவர் முன்னே வர, அறியாது அவர்மேல் தனது வச்சிரப் படையினை ஏவி இடர்ப்பட்டுப், பின் தெளிந்து, வணங்கி அந்தக் குற்றம் நீங்க இங்கு வந்து வழிபட்டுப் பேறடைந்தான் என்பது தலவரலாறு. சுவாமி - **குற்றம் பொறுத்த நாதர்**; அம்மை - **கோல்வளை நாயகி**; தீர்த்தம் - **இந்திர தீர்த்தம்**. பதிகம் 2.

இது திருப்புன்கூரினின்றும் மேற்கில் மட்சாலை வழி 2 நாழிகையில் மண்ணிப் பள்ளத்தை அடைந்து அங்கு நின்றும் வடக்கே மட்சாலை வழி ½ நாழிகையில் அடையத் தக்கது. வைத்தீசுவரன் கோயில் நிலயத்தினின்றும் 5 நாழிகையில் உள்ளது. 2153 பாட்டின் கீழ்க் குறிப்புக்களும் பார்க்க.

3272. கண்ணுதலார் விரும்புகருப் **பறிய லூரைக்**
கைதொழுது நீங்கிப்போய்க் கயல்கள் பாயும்
மண்ணிவளம் படிக்கரையை நண்ணி யங்கு
மாதொருபா கத்தவர்தாள் வணங்கிப் போற்றி
எண்ணில்புகழ்ப் பதிகமு "**முன் னவ**" னென் றேத்தி
யேகுவார் **வாழ்கொளிபுத் தூ**ரெய் தாது
புண்ணியனூர் போம்பொழுது நினைந்து மீண்டு
புகுகின்றார் "**தலைக்கல**" னென் றெடுத்துப்போற்றி; 118

3272. (இ-ள்) கண்ணுதலார்...போய் - கண்ணுதலாராகிய இறைவர் விரும்பி எழுந்தருளிய திருக்கருப்பறியலூரினைக் கைதொழுது வழிபட்டுச் சென்று; கயல்கள்...ஏகுவார்- கயல் மீன்கள் பாய்தற்கிடமாகிய நீர்வளமுடைய திருப்பழமண்ணிப் படிக்கரையினைச்சேர்ந்து அங்கு உமையொரு பாகமுடையவராகிய இறைவர் திருவடிகளை வணங்கித் துதித்து அளவற்ற புகழினையுடைய திருப்பதிகத்தினையும் "முன்னவன்" என்று தொடங்கிப் பாடித் துதித்து மேலே செல்வாராகி; வாழ்கொளிபுத்தூர்...போற்றி - திருவாழ்கொளிபுத்தூரினைச் சேராது புண்ணியனூராகிய நம்பிகள் போகும்போது நினைந்துகொண்டு மீண்டு திரும்பித் "தலைக்கலன்" என்று தொடங்கித் துதித்துக்கொண்டு அங்குப் புகுகின்றாராகி;

(வி-ரை) மண்ணிவளம் படிக்கரை - இது பழமண்ணிப்படிக்கரை என்ற பதி; **பழமண்ணி** - என்பது மண்ணியாறு முன்னர் ஓடிய வழி.

எண்ணில் புகழ்ப் பதிகம் - பதிகத்தின் சிறப்புணர்த்தியபடி; பதிகக்குறிப்பும் பாட்டுக் குறிப்பும் பார்க்க.

முன்னவன் - பதிக முதற் குறிப்பாகிய தொடக்கம்.

வாழ்கொளிபுத்தூர் எய்தாது...போம்பொழுது - நினைந்து மீண்டுபுகுகின்றார் - திருக்கருப்பறியலூரினின்றும் மேற்கு நோக்கிப் பழ மண்ணிப் படிக்கரை செல்கின்ற நம்பிகள் இடையில் உள்ள திருவாழ்கொளிபுத்தூரினைச்சேர்ந்து வழிபட்டுச் செல்லுதல் மரபும் கடமையு மாதலின்; அவ்வாறு அதிற் சேராது செல்லும் போது **நினைவு**கொண்டு மீண்டுவந்து சேர்கின்றார். "வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை **மறந்**தென்னினைக்கேனே" என்ற பதிகத்தின் மகுடம் இதன் அகச்சான்றாகும். இவ்வாறே "**நீடூர்** பணியா விடலாமே" (நம்பி) என்று நினைந்து மீண்டு போந்து திருநீடூரினை வந்து வழிபட்ட வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது.

புகுகின்றார் - முற்றெச்சம்; புகுகின்றார் -போற்றி-எய்தி என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடித்துரைத்துக் கொள்க.

தலைக்கலன் - பதிக முதற் குறிப்பு; **எடுத்து -** தொடங்கி.

போற்றி - துதித்தவாறே; "பாடியே" என்று மேற்கூறுதல் காண்க. இப்பதிகம் தலத்தைச் சாருமுன் வழியல் அருளியது; பதிகக் குறிப்பும் பதிக மகுடமும் பார்க்க.

புண்ணியனுர் - சிவபுண்ணிய விளைவாயுள்ளவர். "முடிவிலாத சிவபோக முதிர்ந்து முறுகி விளைந்ததால்" (வெள்.சருக்.2) *118*

திருப்பழமண்ணிப்படிக்கரை

திருச்சிற்றம்பலம் **பண்-நட்டராகம். 7-ம் திருமுறை**

முன்னவ னெங்கள் பிரான் முதல் காண்பரி தாயபிரான்
சென்னியி லெங்கள் பிரான் றிரு நீல மிடற்றெம்பிரான்
மன்னிய வெங்கள் பிரான் மறை நான்குங்கல் லானிழற்கீழ்ப்
பன்னிய வெங்கள் பிரான் பழ மண்ணிப் படிக்கரையே. (1)

பல்லுயிர் வாழுந் தெண்ணீர்ப் பழ மண்ணிப் படிக்கரையை
அல்லியந் தாமரைத்தா ராரூர னுரைத்ததமிழ்
சொல்லுதல் கேட்டல்வல்லா ரவர்க் குந்தமர்க்குங் கிளைக்கும்
எல்லியு நண்பகலுமிடர் கூருத லில்லை யன்றே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவனது இடம் பழமண்ணிப்படிக்கரையே; இறைவரின் தன்மைகள் இவையிவை; அன்புடையீர்! அவரை அடைந்து வழிபடுமின்! என்றது. இறைவர் புகழ்களைக் கூறுதல்பற்றி இதனை **"எண்ணில் புகழ்ப்பதிகம்"** என்றுர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1)* **முன்னவன்** - "முன்னைப் பழம்பொருட்குமுன்னைப் பழம்பொருள்" (திருவா); "மூளத்தானை எல்லார்க்கு முன்னேதோன்றி" (தேவா); **முதல்** -அடியும் முடியும் ஆகியமூலம்; அளவிலாற்றலுடைமை - பேரருளுடைமை முதலிய இறைமைக் குணங்கள் கூறப்பட்டன; எங்கள் பிரானது இடம் என்க. **இடம்** என்பது சொல்லெச்சம்; ஆறனுருபு விரிக்க; **திருநீலமிடற்றெம்பிரான்** -தலச்சுவாமிபேர்;—*(2)* **அண்டம் கபாலம் சென்னி** - அண்டமுகட்டுக்கப்பாலும் நீண்ட சென்னியை யுடையவன்; **தொண்டு** - தொண்டர்கள்; **ஏத்தி-** ஏத்தப் பெறுபவன்; சென்னியானும், ஏத்தப்படுபவனும், ஆகிய இறைவர் நின்றுடும் இடம்; **சென்னி-ஏத்தி** என்பன பெயர்கள்; "விடையேறி", "பிறை சூடி" என்புழிப்போல; *(3)* இப்பாட்டு அடியார்களை நோக்கி அன்பு செய்யும் திறங்களைக் கூறியது. **உமரோடெமர்** - "உம்மன்பினே டெம்மன்புசெய் தீசன்னுரைகோயில்" (தேவா); "கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற் காட்செய்மின் குழாம்புகுந்து" (திருப்பல்லாண்டு) **வாடுமிவ் வாழ்க்கைதன்னை- வாழ்க்கை** - உலக வாழ்க்கைப் பற்றுக்கள்; **வாடுதல்** - வெறுத்தல்; "தொண்டர்காள் தூசிசெல்லீர்; பத்தர்காள் சூழப்போகீர்" (திருவா-படையாட்சி - 2);—**(4) அடுதல்** - சங்கரித்தல்; **கெடுதல்** - கேடுறும் வகை; **நடுதல்** - ஊன்றுதல்; வலித்து அழுத்துதல்; **கோல்** - அம்பு; **நரி கான்றிட்ட** - நரி நிணத்தை உண்டு கழித்த; **படுதலை** - இறந்தார் தலையோடு; மண்டை ஓடு; **புரிந்தான்**-நினைந்து நீங்காது எடுத்தான்;—**(5) அலையார் கதிர்** - அலைபோல வீசும் ஒளி;—**(7) படுத்தவன்** - பொருட்படுத்தி அருளீந்தவன்; **(8) அட்டபுட்பம்** - புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை

என்பவற்றின் பூக்கள்; இவை புலரி முதலிய காலங்களில் (வேறுபாடு; புட்பவிதி பார்க்க; அகப்பூசையில் கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்னும் இவை அட்ட புட்பமாக இதய கமலத்தில் அஞ்செழுத்தாலமைந்த இறைவரது ஞானத் திருமேனியிற் சாத்தல் வேண்டுமென்பது விதி; (போதம் - மாபாடியம் -9-3); **பரியவன்** - பெரியவன்; **(9) பற்றர்** - இப்பதியினை இடமாகப் பற்றி வாழ்பவர்;— **(10) பல்லுயிர் வாழும் தெண்ணீர் வாழும்** - உயிர் வருக்கங்கள் அனைத்தையும் செழிக்கச் செய்யும் - வாழ்விக்கும் - என்று பிறவினைப்பொருள் கொள்க; இனி, இங்கு இவ்வாற்றின் மடுக்களில் முதலைகள் முதலிய பல உயிர்களும் வாழ்தலும் குறிப்பு; **அல்லி**-அகவிதழ்; **தாமரைத் தார்** - அந்தணர்களுக்குரியது; **சொல்லுதல்...கிளைக்கும்-எல்லியும் நண்பகலும்** - எல்லாருக்கும் எல்லாக் காலத்தும்; **கூருதல்** - மிகுதல்.

தலவிசேடம்:— **திருப்பழமண்ணிப்படிக்கரை**-சோழநாட்டில் காவிரி வடகரை 30-வது பதி; இலுப்பைப் பட்டு என்று வழங்கப்படுகின்றது;இறைவர்விடமுண்ட போது அம்மையார் அஃது உட்செல்லாதுறக் கையினாற்றடுத்துக் கழுத்தளவில் நிறுத்தியதால் திருநீலகண்டங் காட்டினர் என்பது தலவரலாறு; சுவாமி அம்மை பெயர்கள் காண்க; **"திருநீலமிடற்றெம்பிரான்"** என்ற சுவாமி பெயர் பதிகத்துப் போற்றப்படுதல் (1) காண்க; பாண்டவர்கள் வழிபட்ட ஐந்து இலிங்கங்கள் உண்டு; பதிகம் 1. சுவாமி— **திருநீலகண்டர்**;அம்மை - **அமிர்தகரவல்லி.**

இது வைத்தீசுவரன் கோயில் நிலயத்தினின்றும் மேற்கில் மட்சாலை வழி 6 நாழிகையில் அடையத்தக்கது; இடையில் 1½ நாழிகையில் திருப்புன்கூரையும், அங்கு நின்று மேற்கே 2 நாழிகையில் மண்ணிப் பள்ளத்தையும், அங்கு நின்றும் மேற்கே 1½ நாழிகையில் திருவாழ்கொளிபுத்தூரையும் (வாளொளிபுத்தூர்- வாளப்புற்றூர் என வழங்கும்) அடைந்து, அங்கு நின்றும் மேற்கே 1 நாழிகையில் அடையத்தக்கது.

திருவாழ்கொளிபுத்தூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி. 7-ம் திருமுறை**

தலைக்க லன்றலை மேற்றரித் தானைத் தன்னை யென் னைநினைக் கத்தரு வானைக்
கொலைக்கை யானையுரி போத்துகந் தானைக் கூற்றுதைத்தகுரை சேர்கழ லானை
அலைத்த செங்கண்விடை யேறவல் லானை யானை யாலடி யேனடி நாயேன்
மலைத்த செந்நெல்வயல் **வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தைமறந்தென்னினைக்கேனே**

வளங்கி ளர்பொழில் வாழ்கொளி புத்தூர்மாணிக்கத் தைமறந்தென் னினைக் கேனென்
றுளங்கி ளர்தமி ழூரன்வன் றெண்டன் சடையன் காதலன் வனப்பகை யப்பன்
நலங்கி ளர்வய ளுவலர் வேந்த னங்கை சிங்கடி தந்தை பயந்த
பலங்கி ளர்தமிழ் பாடவல் லார்மேற் பறையு மாஞ்செய்த பாவங்க டானே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— 3272 பார்க்க. பதிகக் குறிப்பு ஆசிரியர் கூறியருளியவாறு; வாழ்கொளிபுத்தூரெய்தாது போம்பொழுது நினைந்து மீண்டு புகுகின்ற கருத்துடன் பாடியது; பதிகம் சரித அகச்சான்றாகிய ஆதரவு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) **தலைக்கலன்** - தலை மாலை; "தலைமாலை தலைக்கணிந்து" (தேவா) "தலைக்கூத்தலை மாலையணிந்த தென்னே" (நம்பி); **தன்னை யென்னை நினைக்கத் தருவானை** - "தன்னை நினையத் தருகின்றான்" (நாரையூர்-விநா-இரட். 1); **ஆணையால்** -மறந்து மேற்சென்ற என்னை நினைக்கச் செய்து மீண்டு வருமாறு பணித்த ஆணை; **மலைத்த** -ஒன்றோடொன்று பொருவதுபோல வளைந்த; **மறந்து என்னினைக்கேன்** - சரித ஆதரவு;—(2) **பாவிக்கொள்ளுத லாவது**-முழுதும் நிரம்பித் தன்வய மாக்கிக்கொள்ளுதல்; **கடை**-தலைவாயில்; வாயில் முன்கடை;—(3) **வெந்த நீறு** - உலகங்கள் ஊழியில் அழிதலாற் பெற்ற நீறு; **வேதமால்விடை**-வேதங்களில் அறமே விடையாவது என்றும், திருமால் விடையாய்த்தாங்கினன் என்றும் வரும் இரண்டு கருத்தும் சேர்த்துக் கூறியது; **ஆறு அலைத்த** - கங்கை அலைபுரண்ட; **சொன்முனியாதே** - பித்தன் என்று இகழ்ந்த சொல்லினையும் பொறுத்து;—(4) **செல்லும்** -செலுத்தும்; —(5) **திளைக்கும்** - பகைமையில் ஆரவாரிக்கும்;—(6) **வேடனு யென்றொடும் வந்து மருவினன் -வேடனாய்** -இறைவர் அருச்சுனன் பொருட்டு வேட வடிவம் எடுத்து;கோயம்புத்தூர் சில்லா துடியலூர் என்ற தலத்தினருகு நம்பிகள் செல்லும்போது காட்டினுள் வேடனாக எழுந்தருளி இறைவர் வழி காட்டினர் என்பதொரு தலவரலாறு குறித்ததென்று கூறுவாருமுளர்;—(7) **எந்தையை...பிரானை** - "என்றாயோ டென்னப்ப னேழேழ் பிறவியும், அன்றேசிவனுக்கெழுதிய ஆவணம்"(திருமந்திரம்); "எந்தை தந்தை தந்தையெங் கூட்டமெல்லாம்" (ஏயர்.392); **சந்து** - சந்தனமரம்; (8) **கானவானையின்... கள்ளப்பிள்ளை** - குவலயாபீட மென்னும் யானையின் கொம்பினைப் பிடுங்கி அந்த யானையை அது கொண்டேயடித்துக் கொன்ற கண்ணனாகிய திருமால்;—(9) **காளை** - விடலை; நன்று தீதறியா மூர்க்கன் என்ற பொருளில் வந்தது; (10) **பூதிப்பைப்புலித்தோல்** -பையும் தோலும்; புலித்தோலினாலாகிய பூதிப்பை என்றலுமாம்; **இருந்துண்தேரர்-நின்றுண்சமணர்**-இவை புத்த சமண குருமார் வழக்குகளைக் குறித்தன; **ஏசநின்றவன்** - அவ்வவர் வினைப்பயன் துய்க்க அருளுவார் அவர்களது ஏச்சினிடமும் முனியாது நின்றவர்; **மருந்து** - பிறவி நோய் தீர்க்கும் மருந்து;—(11)**பொய்யன்**-வெளிப்படாதவன்;—(12) **சடையன்...தந்தை**-நம்பிகள் சரிதக் குறிப்புக்கள்; **பயந்த**-சொன்ன; **பறைதல்**-நீங்குதல்.

தலவிசேடம்:—**திருவாழ்கொளிபுத்தூர்** - சோழநாட்டில் காவிரி வடகரை 29-வது தலம். இது வாளொளிபுத்தூர் -வாளப்புற்றூர் எனவும்வழங்கும்; விட்டுணு பூசித்த மாணிக்க லிங்கத்தைக் கொண்டமையின் வடமொழியில் "அரதனபுரம்" என வழங்கப்பெறும்; சுவாமி பெயர் மாணிக்க வண்ணர் என்பதும் காண்க; நம்பிகள் திருப்பதிகத்துள் "**மாணிக்கத்தை**" என்று பாட்டுத்தோறும் போற்றுதலும் காண்க; விண்டு பூசித்ததும், அருச்சுனன் பூசித்ததும் ஆகிய குறிப்புக்களும் பதிகத்துட் காணப் பெறுவன. அருச்சுனன் வாளினைப் புற்றில் ஒளித்தமையால் வாளொளி புற்றூர் என்று தலப் பெயர் வழங்குவதாமென்பதும் வரலாறு. பழ மண்ணிப்படிக்கரை நோக்கிச் செல்கின்ற நம்பிகள் வழிநடையில் உள்ள இப்பதியினை அடையாது போம்பொழுது திருவருளினால் நினைந்து மீண்டுவந்து வழிபட்ட பெருமையுடையது (3272).சுவாமி **மாணிக்க வண்ணர்**; அம்மை - **வண்டமர்பூங்குழலி**; பதிகம் 2.

3273. திருப்பதிகம் பாடியே சென்றங் கெய்தித்
தேவர்பெரு மானுர்தங் கோயில் வாயில்
உருப்பொலியு மயிர்ப்புளகம் விரவித் தாழ்ந்தே
யுள்ளணைந்து பணிந்தேத்தி யுருகு மன்பாற்
பொருப்பரையன் மடப்பாவை யிடப்பா லானைப்
போற்றிசைத்துப் புறம்போந்து தங்கிப் பூமென்
கருப்புவயல் வாழ்கொளிபுத் தூரை நீங்கிக்
காளுட்டு முள்ளூரிற் கலந்தபோது. 119

இது திருப்புன்கூரினின்றும் மண்ணிப்பள்ளத்தை பணிந்து அங்கிருந்து மேற்கே மட்சாலையில் 1½ நாழிகையில் உள்ளது; பழமண்ணிப் படிக்கரைக்குச் சொல்லியவை பார்க்க.

குறிப்பு:—நம்பிகள் பதிகம் 12 திருப்பாட்டுக்களைக் கொண்ட சிறப்புடையது.

3273. (இ-ள்) திருப்பதிகம்...எய்தி-திருப்பதிகம் பாடிப்போய் அப்பதியில் சேர்ந்து; தேவர்பெருமானுர்தம்...பணிந்தேத்தி - தேவர் தலைவராகிய இறைவரது திருக்கோயிலின் வாயிலில் திருமேனியில் விளங்கும் மயிர்க்கூச்சுப் பொருந்த வணங்கி உள்ளே அணைந்து பணிந்து துதித்து; உருகும்...போற்றிசைத்து - மலையரசன் மடமகளாரை இடப்பாகத்தில் வைத்த இறைவரைத் துதி செய்து; புறம்போந்து...போது- வெளியே போந்து தங்கியிருந்து அழகிய மெல்லிய கரும்புகளையுடைய அந்தத் திருவாழ்கொளி புத்தூரை நீங்கிச் சென்று திருக்காளுட்டு முள்ளூரினை அணுகியபோது,

(வி-ரை) பாடியே - பாடிக்கொண்டபடியே.

உருப்பொலியும் - திருமேனி முழுதும் மேல் விளங்கும். இஃது இறைவர் நினைப்பித்தருள மீண்டுவந்து வழிபட்ட அருளிப் பாட்டின் நினைவினல் ஆகியது.

மயிர்ப்புளகம் விரவி - மயிர்க்கூச்செறிதல் பொருந்தி.

பூமென் கருப்பு வயல் - பூத்தபின் பயன்படும் ஒருவகை மெல்லிய கரும்பு.

கலந்த - அருகில் அணைந்த. *119*

3274. (இ-ள்) காளுட்டு முள்ளூரை...கண்டு - (அவ்வாறு) திருக்காளுட்டு முள்ளூரினைச் சேரும்பொழுது கண்ணுதலாராகிய இறைவர் எதிரே காட்சி கொடுத்தருளக் கண்டு; தூநாண்...என்று - தூய்மையான புதிதாகிய மெல்லிய மலராகிய கொன்றையினை யணிந்த சடையினையுடைய இறைவரின் செம்மையாகிய துணைப்பாத மலர்களைக் கண்டு தொழுதேன் என்ற கருத்தினைப் புலப்படுத்தி; வானுளும்...சாத்தி - தேவருலகத்தையும் பணிகொள்ளும் தன்மையுடைய "வள்வாய்" என்று தொடங்கும் வளப்பமுடைய தமிழின் தொடைமாலையினை அழகு பொருந்தச் சாத்தி; தேனுரும்... செல்வார் - தேன் பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் பக்கத்தே சூழ்ந்த திருஎதிர்கொள்பாடியினை மேவச் செல்வாராய்,

3274. காஞட்டு முள்ளூரைச் சாரும் போது
கண்ணுதலா ரெதிர் காட்சி கொடுப்பக் கண்டு
**``தூநாண்மென் மலர்க்கொன்றைச் சடையார் செய்ய
துணைப்பாத மலர்கண்டு தொழுதே``**னென்று
வாஞளுந் திருப்பதிகம் **``வள்வா``** யென்னும்
வண்டமிழின் ருெடைமாலே மலரச் சாத்தித்
தேஞருமலர்ச்சோலை மருங்கு சூழ்ந்த
திருவெதிர்கொள் பாடியினை யெய்தச் செல்வார், 120

(வி-ரை) சாரும்போது - புறநகரினைச் சார்ந்தபோது; முன்பாட்டில் **கலந்த** என்றது அணுக வந்த என்றதாம்.

எதிர்காட்சி - நகரினுள்ளே செல்லு முன்னே புறநகரில் எதிர் தோன்றிக் காணக் காட்டும் காட்சி; திருக்கழுமலம், திருப்பனையூர் முதலிய பதிகளின் வழி பாட்டு வரலாறுகள் ஈண்டு நினைவுகூர்தற் பாலன.

''தூநாண்மென்...தொழுதேன்'' என்று - இது பதிகக் கருத்தாகிய குறிப்பு; பதிக மகுடம் காண்க.

''வள்வாய்'' என்னும் - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

வண்டமிழின் தொடைமாலை மலரச்சாத்தி - பதிகத் திருப்பாட்டுக்களின் சொல் - பொருள் - இசை - அருள் - வளங்கள் குறிக்க **வண்மை** யுடைய என்ருர்; **தொடைமாலை** - ஒவ்வொரு திருப்பாட்டும் **தொடை** எனப்படும்; **மாலை** - அவையனைத்தும் சேர்ந்த நிலை; **மலர** - விளங்க; **சாத்தி** - தொடை மாலை என்றதற்கேற்பச் **சாத்தி** என்ருர்; உயர்ந்த தமிழ் இலக்கியப் பண்புகள் இப்பதிகத்துட் காணப்படும்.

துணைப்பாதம் - இரண்டு பாதங்கள்; "உற்ரு ரிலாதார்க் குறுதுணையா"கும் பாதம் என்ற குறிப்புமாம்.

வாஞளும் திருப்பதிகம் - வானவர்தங்கோனை, உலகம் விழுங்கி யுமிழ்ந்தானை நான் முகத்திஞனை, உலகந்தாஞய், பூதங்களந்தாய், எண்குணத்திஞனை, நாளை,யின்று, நெருநலாய், தேவர்கள் சூளாமணியை, விண்ணவர்தங்கோனை, அமரர் கடம் பெருமானை, பலவுருவுந் தன்னுருவே யாய பெருமானை, மேவியவெந் நரகத்தி லழுந்தாமை நமக்கு மெய்ந்நெறியைத் தான் காட்டும் வேதமுதலானை,—என்றிவ்வாறு பலவும் இறைவரின் முழுமுதற்றன்மைகளையும், தேவர் பெருமாஞந் தன்மைகளையும் கூறிய நிலை குறிக்க **வாஞளும்** 'வானவர்களை ஆட்கொண்டு செலுத்தும்'' என்ருர். திருக்கடைக்காப்பில் ''வானவர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே'' என்று பதிகப்பயன் கூறியருளியதும் குறிப்பு; **வாஞளும்** - பயின்ருரை வாஞளவைக்கும். *120*

திருக்காறைட்டுமுள்ளூர்

திருச்சிற்றம்பலம் **பண்-கொல்லிக் கௌவாணம். 7-ம் திருமுறை**

வள்வாய மதிமிளிரும் வளர்சடையி ஞனை மறையவனை
வாய்மொழியை வானவர்தங் கோனைப்
புள்வாயைக் கீண்டுலகம் விழுங்கி யுமிழ்ந் தானைப்
பொன்னிறத்தின் முப்புரிநூ ஞன் முகத்தி ஞனை
முள்வாய மடறழுவி முடத்தாழை யீன்று
மொட்டலர்ந்து விரைநாறு முருகுவிரி பொழில்சூழ்
கள்வாய கருங்குவளை கண்வளருங் கழனிக்
காறைட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே. (1)

திரையினுர் கடல்சூழ்ந்த தென்னிலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியி ஞனை
கரையினுர் புனல்தழுவு கொள்ளிடத்தின் கரைமேற்
காறைட்டு முள்ளூரிற் கண்டுகழ ஞெழுது
உரையினுர் மதயானை நாவலா ரூர
ஞரிமையா லுரைசெய்த வொண்டமிழ்கள் வல்லார்
வரையினுர் வகைஞால மாண்டவர்க்குந் தாம்போய்
வானவர்க்குந் தலைவராய் நிற்பரவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் 3274ம் திருப்பாட்டில் விளக்கியபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) வள்வாய் - வளைந்த வாயினையுடைய; **வள்**-பகுதி; **வள்வாயமதி**-இஃது அருமையான தமிழாட்சி; **மறையவனை வாய்மொழியை**-மறை அவன் வாய்மொழி என்பது; **புள்வாயை...உமிழ்ந்தான்** - கண்ணன்; விட்டுணு; **பொன்னிறத்தின்...முகத்திஞனை**-பிரமஞகி நின்ற சிவன்; தேவர்களை இயக்குபவர்; பிள்ளையாரது சிவபுரத் தேவாரம் காண்க. "அரியாகிக் காப்பான் அயஞய்ப் படைப்பான், அரஞ யழிப்ப வனுந் தானே" (ஞான உலா). **முள்வாயமடல்** - ஓரங்களில் முட்களையுடைய மடல்; **தழுவுதல்** - மூடுதல்; **முடத்தாழை** - தாழை மரங்கள் நேராய் வளராது முடங்கி வளரும் இயல்பு குறித்தது; **ஈன்று** - பூத்து; **கண்வளரும்** - இதழ்கள் குவிந்த நீலே; கண்போல வளர்கின்ற என்றும் இரட்டுற மொழிந்துகொள்க; துயிலும் என்ற குறிப்புமாம். **கண்டு தொழுதேனே** -இறைவர் எதிர் காட்சி கொடுப்பக் கண்ட தன்மை; சரித அகச்சான்று (3274); **காறைட்டுமுள்ளூரில்** ஊரைச் சாரும்போது;—**(2) ஒரு** - ஒப்பற்ற; **ஒருமேக...புனைந்தவனை** - இறைவர் எல்லாமாய் நின்ற தன்மை; "அவையே - யாய்"(போதம்.2. சூத்); **பொரு** - அலைகள் பொருந் தன்மை; **பொரு** -பொருதல்; ஈண்டு அலைகள் மோதி அலைத்தல் பொருதல் எனப்பட்டது; **திருமேவு செல்வம் திரு** - அருட்டிரு; அருளாகிய செல்வம்; **கருமேதி...மேவும்** - எருமைகள் மடுக்களில் தாமரைப் பூக்களை மேய்தல் அவற்றின் உயர் பண்பு குறித்தது (1273);—**(3) எண் குணத்திஞன்** - "எண் குணத்தான்" (குறள்); சைவாகமங்களுட் கூறப்பட்ட தென்பர் பரிமேலழகர். **சுரும்புயர்ந்த**

கொன்றை - தேனின் பொருட்டுக் கொன்றைப் பூக்களை வண்டுகள் மிக மொய்த்துச் சூழும்; **அரும்புயர்ந்த** - தாமரை அரும்புகள் நீரினிற் படர்கொடிகளின் மேலே தண்டு நீண்டு உயரும் தன்மை; **அரவிந்த...விளையாடும்**-"சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலி கதிர்வீச, வீற்றிருந்த வன்னங்காள்" (பிள்.தேவா.தோணி - பழந்தக்க-6) "செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு மிலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல், வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம் வீற்றிருக்கு மிழலை யாமே" (1-9-மேகரா-மிழலை-2); **கரும்புயர்ந்து... விளை** - தன்மையணி; கரும்பு உயர விளைதல்-நெல் நெருங்கி விளைதல்; செழிப்பும் பயன்மிகுதியும் காட்டுவன - கரும்பு போல உயர்ந்து நெல்விளை என்றுரைத்தலுமாம்; கரும்பும் நெல்லும் பக்கம் பக்கம் விளைக்கும் பயிர்கள் என்பது சேர்த்துக் கூறிய கருத்து; "கரும்பல்ல நெல்லென்ன" (65); -(4) **பூளை** - சிவபெருமானுக்குச் சாத்தும் பூக்களுள் ஒன்று; புனலாகி...ஐந்தாய் - புவனமாய் நின்ற தன்மை; புனல் முதலிய பூதங்கள் ஐந்து என்றபடி; **நாளை - யின்று - நெருநலாய்** - காலங்களாய் நின்ற தன்மை; **நெருநல்** - நேற்றைப்பொழுது - எதிர்-நிகழ்வு - இறந்த காலங்கள்; **ஆகாச...மதி** - அட்ட மூர்த்தக் குறிப்பு; **நின்ற** - நின்ற திருத்தாண்டகம் பார்க்க; **பரன்** - அப்பாற்பட்டவன்; அவையேயாய் நின்ற தன்றி வேருயும், உடனயும் நிற்கும் தன்மை; **சூழல்** - நெருங்கிச் சூழ்வன; **காளைவண்டு** - இளவண்டு; ஆண் வண்டு என்றலுமாம்; **பாட - ஆலும்** - பாட்டுக்கேற்ப அசையும் என்ற குறிப்புமாம்; - **(5) செருக்கு வாய்** - இடை நுழைக்கும் பற்களையுடைய வாய்; கோபமுடைய என்றலுமாம்; **சூளாமணி** - தலையணி; **முருக்கு வாய்மலர்** - முருக்கமரத்தின் செம்மலர்; **ஒக்கும்** - செந்நிற ஒற்றுமை; **முன்னிலை** - "மன்னுசிவன் சந்நிதியில் மற்றுலகஞ் சேட்டித்தது" (போதம் - 5) என்றபடி தனது சந்நிதிக்கண் உலகத்தைச் சேட்டிப்பித்தற்குரிய இயைபு; உலகவியல்கள் தம்மைத் தாக்காது சாட்சி மாத்திரையாய் நிற்றல்; "இரவிபோல் நிற்குமரன்" (போதம் - 5); "என்று மறையி னியல்" என்று கூறிய மறையின் கருத்து; இது தமிழ்மறை; **இருக்கு** - வேதம்; **வாய்** - பயிலுதல்; **எழுபிறப்புள்** - ஏழு சுரங்களிலும்; **நிதியம் வழங்குதல்** - வேள்விகளிற் செய்யும் தானங்கள். கற்றோர்க்கும் மற்றோர்க்கும் நிதி வழங்குதலுமாம்; **நகர்** - இடங்கள்; **கருக்கு** - வாள் போன்ற கூர்மை; **பெண்ணை** - பனை; மடல் குறித்தது; **(6) விடை யரவக் கொடி- அரவவிடை** - என்று மாற்றிப் பாம்பணைப் பள்ளியுடைய திருமால் என்று கொண்டு, விடைக்கொடி என்க. **விடை ஏந்தும்** - என்றதனல் இரட்டுற மொழிதலால் விடையாகிய ஊர்தியினல் ஏந்தப்படும் என்று உரைக்கவும் நின்றது தமிழ்நலம். இப்பொருளில் **ஏந்தும்**- ஏந்தப்படும் என்று செயப்பாட்டு வினையாகப் பொருள் கொள்க; **வெள்ளத்து** - பாற்கடலினுள் இருக்கும்; **அடியிணையும் திருமுடியும்** - நிரனிறை; **தையல்... ஆட** - நீராட்டுச் சிறப்பு; **குங்குமம்** - அப்பெண்களின் மெய்ப்பூச்சு; குங்கும மரங்கள் என்றலுமாம்; **கடைகள் விடுவார்** - வயலில் நீர் தேக்கமுருது கடைக் கழிவு நேர்படுத்தும் பொருட்டு; **குவளை களைவாரும்** - குவளைக் கொடிகள் நீர் ஓட்டத்தைத் தடை செய்யாது களையாகப் பறித்து வாரி எறிவார்; **வாரும்** - பறிந்து வாரி எறியும்; - **(7) குரு** - பரிய; **குரு...திரைவாய்**- "திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தால், முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்" (1041) என்று ஆசிரியர் இக்கருத்தை அழகுபட விரித்தமை காண்க; -(8) **இழை** - "ஒன்பது போலவர் மார்பினிலிழை" (தேவா);

தழைதழுவு...அருகே - மூன் 3-வது பாட்டுப் பார்க்க. **கண்... நெல்** - தண்மையும் செந்நிறமுமுடைய நெல்; **தடந்தாள** பருத்த தாள்களையுடையன; **மென்கரும்பு** - கரும்பின் ஒருவகை; **கழை** - கரும்புத் தண்டுகள்; **தழுவி** - பிணைத்து; **தேன்** - தேன்கூடு; - **(9) குனிவினிய கதிர்மதியம்** - குனிவு - வளைதல்; குனி மதியம் என்க; **பனி உதிரும்** - குளிர்ந்த கங்கைநீர்த் திவலை; கங்கைப் பெருக்கினைச் சுருக்கிப் பனிபோலத் திவலையாய் உதிர்க்கும்; **உதிரும்** - என்ற கருத்து; உதிரச் செய்யும்; உதிர்தற் கிடமாகும்; "பரந்தெழுந்த பொற்கங்கை பனிபோ லாகச், செறுத் தானை" (தேவா); **துனிவு**-நெடிது கலாய்த்தல்; வெறுப்பு. "துனியும் புலவியுமில்லாயில்" (குறள்); "நாணின்றி வரினெல்லாந் துனிப்பேன் யான்" (கலித் - 67-16); **துனிவினிய தூயமொழி** - துனியை வெளிப்படுத்தும் மொழியாயினும் இனிமையும் தூய்மையுமுடைய மொழி; **நல்லார்**-பெண்கள்; **நல்லார் - சேர் சோலை** என்று கூட்டி உரைக்க. **சேர்** - சொல்லெச்சம்; **கண் வளரும்**-1-ம் பாட்டுப் பார்க்க;— **(10) மேவிய - காட்டும் வேதமுதலான்** - இறைவன் உயிர்களுக்கு அறிவு கொடுத்து அறநெறி காட்டி வீடுபெறத் துணையாய் நிற்கும் நிலை; **காட்டும் வேத முதலான்** - காட்டும் வேதம் என்றும், காட்டும் முதலான் என்றும் கூட்டுக. **காவி**-கருங்குவளை;— **(11) கானாட்டுமுள்ளூரிற் கண்டு** -ஊரருகில் எதிர்காட்சி காட்டக் கண்டு; சரித அகச்சான்று; **உரையினர் மதயானை** - தமிழ்ப் பெருவளமுடையர்; **மதயானை** - கட்டுமீறி எண்ணியவாறெல்லாம் மதம் சொரிந்துலவும் மத யானைபோல எண்ணியவா றெல்லாம் தமிழ் வளம் சொரிபவர்; இப்பதிகத்தின் எண்ணிறந்த தமிழ் வளம் கண்டு களிக்கத் தக்க தமிழ்ப் புலமை விருந்தாதல் காண்க.

தலவிசேடம்:—**திருக்கானாட்டுமுள்ளூர்** - சோழ நாட்டில் காவிரி வடகரை 32-வது பதி; கானாட்டாம் புலியூர் என வழங்கப்படும்; பதஞ்சலி முனிவர் பூசித்த தலம் என்பது சுவாமி பெயராற் காண்க. சுவாமி - **பதஞ்சலிநாதர்**; அம்மை **கானார்குழலி; கோல்வளைக் கையம்மை.** பதிகம்-1.

இது சிதம்பரத்திலிருந்து 18 நாழிகையளவில் உள்ளது; சிதம்பரத்திலிருந்து தென்மேற்கில் 15 நாழிகையில் (மோட்டார் வசதி உண்டு) கற்சாலையில் மன்னார்குடியை அடைந்து, அங்குநின்றும் தெற்கு மட்சாலை வழி 2 நாழிகை தெற்கு ஓமாம் புலியூர் செல்லும் வழியில் 2 நாழிகை வழி சென்று, கிழக்கே திரும்பி (மட்சாலை) 1நாழிகையில்அடையத் தக்கது.

3275. (இ-ள்) எத்திசையும்...வந்து - எல்லாத் திசைகளில் உள்ளோர்களும் தொழுது துதிக்க "மத்தயானை" என்று தொடங்கித் "திருஎதிர்கொள்பாடியினை அடைவோம்" என்கின்ற சித்தநிலையாகிய திருப்பதிகத்தினைப் பாடி வந்து; செல்வமிகும்...அருள் பெற்று - அருட்செல்வ மிகுந்த செழுந்திருக் கோயிலினை வணங்கிச் சேர்ந்து இறைவரைத் திருவடி வணங்கி அப்பதியில் தங்கித் திருவருள் விடை பெற்றுப்போய்; திருவேள்விக்குடியில்... வாழ்ந்தார் - திருவேள்விக் குடியிற் சேர்ந்து முத்தியளிக்கும் சிவபெருமானைத் திருத்துருத்தியினையும் கூட்டி "மூப்பதிலை" என்று தொடங்கும் திருப்பதிகம்பாடித் துதித்து வாழ்வு பெற்றனர்.

இவ்வைந்து பாட்டுகளும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3275. எத்திசையுந் தொழுதேத்த "**மத்த யானை**"
யெடுத் "**தெதிர்கொள் பாடியினை யடைவோ**" மென்னுஞ்
சித்தநிலைத் திருப்பதிகம் பாடி வந்து
செல்வமிகு செழுங்கோயி லிறைஞ்சி நண்ணி
அத்தர்தமை யடிவணங்கி யங்கு வைகி
யருள் பெற்றுத் **திருவேள்விக் குடியி** லெய்தி
முத்திதரும் பெருமானைத் "துருத்தி கூட"
"**மூப்பதிலை**" யெனும் பதிக மொழிந்து வாழ்ந்தார். 121

(வி-ரை) *மத்தயானை* - பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

"**எதிர்கொள்பாடியினை அடைவோம்**" என்னும் இது பதிகக் கருத்தாகிய மகுடம்; "எதிர்கொள்பாடி யென்ப தடைவோமே" (பதிகம்-2); இது வரும் வழியிற் பாடி அருளியது;திருமுன்பு பாடிய பதிகம் கிடைத்திலது!

திருவேள்விக்குடி - துருத்தி (கூட)- இவ்விரண்டும் எதிரெதிராய்க் காவிரியின் இருகரையிலும் உள்ளன. இரண்டும் சேர்ந்து ஒரு தலமாகக் கருதப்படும். "திருத்துருத்தியும் வேள்விக்குடியும்" என்ற பிள்ளையார் பதிகமும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. **கூட** - சேர்த்து - ''**வேள்விக்குடி *தண்டுருத்தி* எங்கோன்**'' என்பது பதிகம். "பகலிடம் புகலிடம்...துருத்தியார்;...இரவிடத் துறைவர் வேள்விக்குடியே" (பிள்.தேவா).

மூப்பதிலை - பதிக முதற் குறிப்பும் தொடக்கமுமாம்.

வாழ்ந்தார் - வாழ்வு பெற்றார்; **சிவபூசையும் வழிபாடுமே உயிர்களுக்கு நல்வாழ்வாவது** என்பது குறிப்பு.

சித்தநிலைத் திருப்பதிகம் - உலக நிலையாமையை வற்புறுத்தி மனங்கொண்டு நிறுத்தும் திருப்பதிகம். பதிகக் குறிப்புப் பார்க்க.

பாடிநைந்து—என்பதும், **செல்வமலி**—என்பதும் பாடங்கள். ***121***

திருஎதிர்கொள்பாடி

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம். 7-ம் திருமுறை**

மத்தயானை யேறி மன்னர் சூழ வருவீர்காள்
செத்த போதி லாருமில்லைச் சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த வுள்ள மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயி **லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே.** (1)

முத்து நீற்றுப் பவள மேனிச் செஞ்சடை யானுறையும்
பத்தர் பந்தத் தெதிர்கொள் பாடிப் பரமனை யேபணியச்
சித்தம் வைத்த தொண்டர் தொண்டன் சடைய னவன்சிறுவன்
பத்த னூரன் பாடல் வல்லார் பாதம் பணிவாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—"இறைவரது கோயில் திருமதிற்கோபுரப் பாடியினை அணைவோம்" என்றெழுந்த திருவுள்ளக் குறிப்பாகிய மகிழ்ச்சி; (3275) ஆசிரியர் காட்டியருளியது. பதிக மகுடம் பார்க்க. இப்பதிக முழுவதும் யாக்கை நிலையாமை செல்வ நிலையாமை முதலிய குறிப்புக்களை வற்புறுத்தும் சிறப்புடையது.

குறிப்பு:—இப்பதிகம் வரும் வழியிற் பாடியது; திருமுறையுட் பாடிய பதிகம் கிடைத்திலது!

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) மத்தயானை - மதயானை; யானை மத்தகம் என்று மாற்றி யானையின் பிடரியில் என்றலுமாம்; **மத்த...வருவீர்** - செல்வ முதலியவற்றின் மிகுதியாலாகிய அனுபோக வகைகளின் சிறப்பு; **மன்னர் சூழ வருதல்** - மன்னரும் பணிந்து சிறப்புச்செய்யும் நிலை குறித்தது; **செத்த...இல்லை** - உடலில் உயிருள்ளளவும் மட்டும் வருவன இவை; இறைவன் அருள் அதன் பின்னரும் பிறவிதோறும் தொடர்ந்து துணை செய்வது என்பது குறிப்பு; **வைத்த...வேண்டா** - பிறழாத சிந்தையுடன் பணிக என்பது;—**(2) தோற்றம்...உண்டாம்** - பிறப்பு, இறப்பினைத் தந்தே விடும் என்பது உறுதி; **மனைவாழ்க்கை துயரம்** - (தரும்) என்க; **துயரம்** - துயரத்துக்கிடமாயது; **மாற்ற...முண்டாடு-** நிலைபேறில்லாத வாழ்வு வஞ்சனையாய் முடியும்; இவையெல்லாம் நிலையாக இறைவரை அடைதற்குரிய காரணங்கள்; **(3) செடி** - துன்பம்; சிதைவு; **வீழ்தல்** - இறந்துபடுதல்;—**(4) மூவர்** - அயன்-அரி-அரன்; **இருவர்**-சத்திசிவம்; **முதல்வனவனே**-பரமசிவம்; **(5) அரித்து**-சிறிது சிறிதாய் இடைவிடாது வருத்தி அழித்து; **ஐவர்** - ஐம்புலன்; **ஆறலைப்பான் பொருட்டால்** - அறிவைப் பறித்துக் கொள்ளைகொள்ள; **ஆறலைத்தல்** - வழிப்பறி செய்தல்; **பல்வாய்...சேர்தல்** - இறந்த பின் வாய்திறந்த வண்ணம் சுடலைசேர்தல்; **வரிக்கொள் துத்தி** - வரிகளையுடைய தலையணி அணிந்த; **வில்லி** - வில்லையுடையவரது;—**(6) பொத்தடைப்பான் பொருட்டல்** - வஞ்சமாகிய துவாரங்களுள்ளே அகப்படுத்த வைக்கும் வகை காரணமாக, பொத்தடைத்தல் - பொறிகளுள்ளே படவைத்தல்; **பொத்தல்** - துளைத்தல் - "பொத்தநூற்கல்லும்" (நாலடி-376); **பொருட்டால் அதனாலே** - அது காரணமாக என்றபொருளில் வந்தது; **நைய வேண்டா** - வருந்தவேண்டா; **இம்மை ஒத்த - அம்மை அருளும் - இம்மை** -இங்கு இப்போது; **அம்மை**-அங்கு-மறுமையில்; பக்குவமாம்போது; **(7) கூசநீக்கி-கூசம்**-கூச்சம் என்பர்; **குற்றம்** மிகுதி பற்றிச் செற்றமும் காமமும் பின்னர்த் தனிக் குறிக்கப்படுதலால் இங்குக் குற்றம் அறுவகையுள் ஏனை நான்குமாம்; **அன்பு சேர்த்தி** -கேடு தரும் குணங்களை நீக்கியதனோடு நில்லாது, வீடுதரும் அன்பினைக் கைக்கொண்டு; அன்பு நெறி சேராவிடில் குற்றங்களை நீக்கிய மட்டிற் பயனில்லை என்பதாம்; **அன்பு** - இறைவர்பாற் செலுத்துவது; குற்றம் நீங்கிய ஒழுக்கமே வீடுதரும்; இறைபணி வேண்டா என்பாரை நோக்கிக் கூறியது மேல்வரும் பாட்டில் இதனை விரிவாய் உறுதிபடக் கூறல் காண்க;—**(8) இன்பம்...உண்டு - இன்பம்**-உலகவின்பம்; **ஏழை** - வலியற்ற; **மோழைமை** - அறியாமை; **மூட்டை**-கீழ்மை; **அன்பரல்லார்...சேரார்-** எதிர்மறையாற் கூறியது உறுதிகுறித்தற்கு;—**(9) எள்தனை** - எள்ளினளவும்-சிறிதும்; **தனை-** அளவு. **வந்து...காட்டும்-எந்தை** - என்று கூட்டுக;—**(10) மருது...மால்** - கண்ணன் கதை; கண்ணனாய் வந்த விட்டுணு; **சுருதி** - கேட்கப்படுவது; கேட்கப்படுவதாக; **முத்து** - முத்துப் போன்ற; **பத்தர்பந்தம்** - பத்தர்கள் மனத்துட் பந்தித்து வைக்கும்; **தொண்டர்** - தொண்டர்களுக்கு.

தலவிசேடம்:— **திருஎதிர்கொள்பாடி** - சோழ நாட்டில் காவிரி வடகரை 24-வது பதி; மேலைத் திருமணஞ்சேரி என வழங்குவது; 25-வது பதியாகிய மணஞ்சேரி என்ற பதி இதனை அடுத்து மிக அணிமையில் (½ நாழிகையளவு) கிழக்கில் உள்ளது; மணக்கோலத்துடன் வந்த அன்பனுகிய அரசகுமாரனொருவனை இறைவர் மாமனுய் **எதிர்கொண்டு** அழைத்துச் சென்ற வரலாற்றினுல் இப்பெயர் பெற்ற தென்பர்; ஐராவதம் பூசித்துப் பேறு பெற்ற பதி; சுவாமி பெயர் பார்க்க; சுவாமி - **ஐராவதேசுவரர்;** அம்மை - **மலர்க்குழனுயகி;** பதிகம் 1.

இது வேள்விக்குடியினின்றும் வடக்கே கரைவழியாய் 1½ நாழிகையில் உள்ளது.

திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும்

திருச்சிற்றம்பலம் "மூப்பது மில்லை" எனும் பதிகம் **பண் - நட்டராகம்.**
7-ம் திருமுறை

மூப்பது மில்லை, பிறப்பது மில்லை, யிறப்பதில்லைச்
சேர்ப்பது காட்டகத் தூரினு மாகச்சிந் திக்கினல்லாற்
காப்பது வேள்விக் குடிதண் டுருத்தியெங் கோனரைமேல்
ஆர்ப்பது நாக மறிந்தோமே ஞமிவர்க் காட்படோமே. (1)

கூடலர் மன்னன் குலநாவ லூர்க்கோ னலத்தமிழைப்
பாடவல் லபர மன்னடி யார்க்கடி மைவழுவா
நாடவல் லதொண்ட ஞரூர ஞட்படு மாறுசொல்லிப்
பாடவல் லார்பர லோகத் திருப்பது பண்டமன்றே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆட்படுமாறு சொல்லி நிந்தைத் துதியாகப் பாடித் துதித்தது. பதிகம் 10ம் பாட்டுப் பார்க்க. **குறிப்பு:** இப்பதிகம் - முதல் முறை நம்பிகள் இப்பதியினை வழிபட்டபோது பாடியருளியது; இரண்டாம் முறை பாடியருளியது (திருவொற்றியூரினின்றும் வரும் இடையில்) காந்தாரப்பண் - மின்னுமா மேகங்கள் என்ற பதிகம்,நோய் நீங்கப் பெற்றுப் பாடியருளியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—மூப்பதுமில்லை...ஊரினமாக - ஆர்ப்பது நாகம் முதலியவை மக்கள் நிலையில் எட்டாத இறைமைத் தன்மைகள்; இவ்வாறு எட்ட முடியாதவராதலின் நாம் ஆட்படிற் பயன் என்? என்றது குறிப்பு; மேல் வரும் பாட்டுக்களிற் கூறுவனவு மிவ்வாறே கண்டுகொள்க. நிந்தைத் துதிகள்; **வேள்விக்குடி தண் துருத்தி** - இரண்டும் சேர்ந்து ஒரு பதி; "துருத்திகூட" என்று ஆசிரியர் இதனைக் குறித்தனர். (3275); **காப்பது** - இடமாகக் கொண்டு உலகைக் காப்பது; "காப்புக்களே", காப்புத் திருத்தாண்டகம் என்பன காண்க;—(2) **கட்டக்காடு** - வறிய மயானம்; **காட்சியொண்ணுர்** - எட்டா நிலை; **தூய நெய்** - பசுவின்நெய்; இதுவே வேள்விக்குரியது; **வட்டக் குண்டம்** - ஓம குண்டத்தின் வடிவம்; இது பெரும்பான்மை பற்றிக் கூறியது;

வேறு

3276. காட்டுநல் வேள்விக் கோலங் கருத்துற வணங்கிக் காதல்
நாட்டிய வுள்ளத் தோடு நம்பியா ரூரர் போற்றி
ஈட்டிய தவத்தோர் சூழ வங்குநின் றேகி யன்பு
பூட்டியாட் கொண்டார் மன்னுந் தானங்க ளிறைஞ்சிப் போந்து. 122

அட்டம் கொண்டு - விரும்பி; (3) **பேரும்...உடையார்** - பலபேறுடையார் என்பது இகழ்ச்சிக் குறிப்பும் பட நின்றது; **ஒற்றியூர்** - ஒற்றி வைத்த ஊர் என்று இகழ்ச்சிப்பட உரைத்தது; **காரும்** - மைந்நிறமுடைய; கைப்புடையர் என்றலுமாம்;—(4) **கண்டன** - தாந்தாம் கண்டவாறு என்றும், மனம் போனவாறெல்லாம் (இகழ்ச்சிக் குறிப்பு) என்றும் உரைக்க நின்றது; **மானைத் தோல்** - மான்றோல்; ஐகாரம் எதுகை பற்றி வந்த அசைநிலை; **மான்தோல், புலித்தோல், யானைத்தோல்**-தோல் மூன்றும் உரைத்தது; இவையெல்லாம் இகழ்ச்சிப் புகழ்ச்சி; இகழ்வது போலப் புகழ்தல் இலேசவணியின்பாற் படுவன;—(5) **ஊட்டிக் கொண்டுண்பதோர் - ஊண்** - மேம்பட்ட தொழில் செய்து பெறும் சீவனம்; **பாட்டிக்கொண்டு** - பாடச் செய்து உடன்கொண்டு; **பாம்பு சுற்றி ஆட்டிக் கொண்டுண்பது** - பாம்பாட்டிப் பிழைக்கும் தொழில்;—(6) **குறவனார்...மணவாட்டி -மகனார்** - முருகப் பெருமான். **மணவாட்டி** - தேவியார்; **மகனார் மணவாட்டி குறவனார்மகள்** - (குறச்சாதிப் பெண்) என்க; **மறவனார்** - வேடுவன்; **மறவனார் - குறவனார்** - ஆர் விகுதிகள் இகழ்ச்சிக் குறிப்பு;—(7) **ஒருபெற்றியர்** - சொல்லலாகாத பித்துப்போன்ற ஒருவகை நிலை - (இகழ்ச்சிக் குறிப்பு); ஒரேதன்மை -மாறாத நிலை என்பது பொருள்; **முத்தவை தம்மனை** - பாட்டன்; பாட்டி; **தவ்வை** - தாய்; "எந்தை தந்தை தந்தையெங் கூட்டமெல்லாம், தம்பிரா னீரே" (ஏயர்.புரா-392); **செத்தவர்...அத்தவம் -** இகழ்ச்சிக் குறிப்பு;—(8) **அம்பரம்** - அப்பாற்பட்டது;—(9) **சிந்துரம்** - இங்குச் சிந்துரம் போன்ற சிவப்பு நிறங்குறித்தது; **சிந்துரக்கண்ணன்** - செங்கண்மால்; **அந்தரஞ்செல்வது** - தேடத்தேட அப்பாற் கடந்து செல்வது;—(10) **கூடலர் மன்னன்** - பகைவரையும் அடிப்படுத்தி ஆளும் தலைவன்; **ஆட்படுமாறு சொல்லி-** ஆட்படோமே என்ற கருத்து ஆட்படும் வகை குறித்த புகழ்ச்சி என்று பதிகக் கருத்துக் காட்டியபடி; **பண்டம் - உறுதி.**

தலவிசேடம்:— **திருத்துருத்தி III** பார்க்க; **வேள்விக்குடி** - திருத் துருத்திக்குச் சொல்லியவையும், முன் உரைத்தவையும் பார்க்க.

3276. **(இ-ள்)** காட்டுநல்...வணங்கி - அங்கு இறைவர் காட்டிய நல்ல திருமணக் கோலம் தமது மனத்துட் பொருந்த வணங்கி; காதல்...போற்றி - பெருவிருப்பம் ஊன்றிய உள்ளத்தினோடு நம்பிகள் துதித்து; ஈட்டிய...ஏகி - பல காலம் முயன்று சேர்த்த தவத்தினையுடைய திருத்தொண்டர்கள் சூழ்ந்துவர அங்கு நின்றும் புறப்பட்டுச் சென்று; அன்பு...போந்து-அன்பினாலே பிணைத்துத் தம்மை ஆட்கொண்ட இறைவர் நிலைபெற எழுந்தருளியுள்ள பதிகளை வணங்கிச் சென்று,

வேறு

3277. எஞ்சாத பேரன்பிற் றிருத்தொண்ட ருடனெய்தி
நஞ்சாருங் கறைமிடற்ரு ரிடம்பலவு நயந்தேத்தி
மஞ்சாரும் பொழிலுடுத்த மலர்த்தடங்கள் புடைசூழுஞ்
செஞ்சாலி வயன்மருதத் திருவாரூர் சென்றடைந்தார். 123

(வி-ரை) வேள்விக் கோலம் - திருவேள்விக்குடியில் இறைவர் மணவாளக் கோலத்துடன் **கல்யாணசுந்தரர்** என்ற பெயருடன் உள்ளார்.

கருத்துற - மனத்தில் ஊன்றி அழுந்த.

காதல் நாட்டிய உள்ளம் - பெரு விருப்பம் மிகக் கொண்ட நிலை.

ஈட்டிய தவத்தோர் - பல பிறவிகளில் செய்து சேர்த்த பெருந்தவத்தையுடைய அடியார்கள்; அவ்வாறு சலியாது முயன்றதவப் பெருந் தொண்டர்களுக்கேயன்றி நம்பிகளைச் சூழ்ந்து வணங்கும் பேறுபெறுதலரிது என்பது குறிப்பு; "மெய்த்தவர் சூழ வலங்கொண்டு" *(3243)*.

அன்பு பூட்டி - ஆட்கொண்டவர் - அன்பினை உளதாகச் செய்து தடுத்தாட் கொண்டவர்; "ஆளாயினி யல்லேனென லாமே" (பதிகம்).

குறிப்பு:— காட்டுநல்...போற்றி என்ற கருத்தும் வழிபாடு முற்றிய நிலையும் அங்கு முன்பாட்டிற் "பதிக மொழிந்து வாழ்ந்தார்" என்றதனுற் பெற்றமையானும், **ஈட்டிய...**போந்து என்ற, பின் இரண்டடிகளின் பொருள் மேல் வரும்பாட்டில் எஞ்சாத... ஏத்தி என்ற இரண்டடிகளாற் பெறுவதனாலும், இப்பாட்டின்றியே பொருள் தொடர்ந்து செல்லுதலானும், இவ்வொரு பாட்டுக் கென யாப்பு மாறுதல் அமைதியின்மையானும், பிறவாற்றானும் இப்பாட்டு ஐயப்பாடுள்ளவற்றுள் ஒன்ருகுமோ என்று கருத இடமுண்டு.* ***122***

3277. **(இ-ள்)** எஞ்சாத...எய்தி - எஞ்ஞான்றும் குறைவுபடாத பேரன்பினையுடைய திருத்தொண்டர்களுடனே கூடிச் சென்று; நஞ்சாரும்...ஏத்தி - விடம் பொருந்திய கரிய கண்டத்தினையுடைய இறைவர் பதிகள் பலவற்றையும் பணிந்து துதித்து; மஞ்சாரும்...அடைந்தார் - மேகங்கள் பொருந்திய சோலைகள் சூழ்ந்த பூந்தடாகங்கள் பக்கங்களிற் சூழ்கின்ற செந்நெல் வயல்கள் மிகுந்த மருதநிலங்களையுடைய திருவாரூரினைச் சென்று அடைந்தார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) எஞ்சாத பேரன்பு - எக்காலத்தும் எவ்வாற்றானும் குறைவுபடாது மேன்மேல் மிகுகின்ற பேரன்பு; இறைவரிடமும் நம்பிகளிடமும் பேர் அன்புடைய திருத்தொண்டர்கள்.

---

* ***சேக்கிழார்*** *பக்கம் 219 பார்க்க.*

3278. செல்வமலி திருவாரூர்த் தேவரொடு முனிவர்களும்
மல்குதிருக் கோபுரத்து வந்திறைஞ்சி யுள்புக்கங்
கெல்லையிலாக் காதன்மிக வெடுத்த மலர்க் கைகுவித்துப்
பல்குதிருத் தொண்டருடன் பரமர்திரு முன்னணைந்தார். 124

இடம்பல - இவை, திருஅழுந்தூர், திருவழுவூர், திருப்பயற்றூர், திருத்திலதைப்பதிமுற்றம், திருஅம்பர்மாகாளம், திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில், திருக்கொண்டீச்சுரம், திருவிற்குடி, திருப்பள்ளியின் முக்கூடல் முதலாயின என்பது கருதப்படும். நம்பிகள் நின்ற நாள் யாத்திரை போந்தருளியமையாலும், திருவாரூர் மேற்செல மனம் வைத்த ஆர்வத்துடன் வருகின்றமையாலும் திருவேள்விக்குடியினின்றும் தெற்கு நோக்கிச் செல்லும் நேர்வழியிடையிலும் வழியணிமையிலும் உள்ள பதிகளாகிய இவற்றைக் கொண்டுரைக்கப்பட்டது ; இவைகட்கு நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!

மஞ்சாரும்... வயன்மருதம் - திருவாரூரின் நீர்வளம் நிலவளம் முதலிய சிறப்புக்கள்; நம்பிகளின் ஆர்வ மிகுதியினையும் திருவுள்ளத் தெழுந்த இனிய செழுங் கருத்துக்களையும் குறிக்கும் நிலை கண்டுகொள்க.

மஞ்சாரும் பொழிலுடுத்த - "அன்றின் முட்டா தடையும் சோலை யாரூர்" "செந்தண் பவளந் திகழுஞ் சோலை" "தினைத்தா ளன்ன செங்கா லன்னை சேரும் திருவாரூர்" "ஆயம் பேடை யடையும் சோலை யாரூர்" "செருந்தி செம்பொன் றிகழுஞ் சோலை" (ஆரூர்-செந்துருத்தி) என்று பின்னர் இவ்வாறே பன்னூட் பிரிந்த "எல்லையிலாக் காதன்மிக" (3278) அணையும்போது நம்பிகளது மனத்தெழும் கருத்துக்களை இங்கு வைத்துக் காணும்படி அவரது திருவுள்ளத்துட் புகுந்து காட்டியருளிய ஆசிரியரது தெய்வக் கவிநலம் கண்டனுபவிக்கத்தக்கது.

பொழிலுடுத்த மலர்த்தடங்கள்...மருதம் -மேகங்கள் சோலைகளைச் சூழ்வன; சோலைகள் மலர்த் தடங்களை உள்ளடக்கி வைத்து அவற்றைச் சூழ்வன; அத்தடங்கள் தாமும் பலபுறமுமிருத்தலால் வயல்களைச் சூழ்வது; அவ்வாறுள்ள வயல்கள் மிக்க மருதம் திருவாரூர் நகரைச் சூழ்வது என்றிவ்வாறு முறையே பலவற்றையும் ஒருங்கு கண்டுகொள்க. **உடுத்தல்** - சூழ்தல். *123*

3278. (இ-ள்) செல்வமலி... இறைஞ்சி - செல்வ நிறைந்த திருவாரூரிலே தேவர்களுடனே முனிவர்களும் நெருங்கியுள்ள திருக்கோபுரத்தினை அணுகி வந்து வணங்கி; உள்புக்கு - திருக்கோயிலினுள்ளே புகுந்து; அங்கு...கைகுவித்து - அங்கு அளவில்லாத காதல் மிகுதியினாலே சிரத்தின்மேலே கைகளைக் கூப்பி; பல்கு...அணைந்தார்-மிகுந்த திருத்தொண்டர்களுடனே கூடி இறைவரது திருமுன்பு அணைந்தருளினர்.

(வி-ரை) செல்வமலி திருவாரூர் - நிறை செல்வத் திருவாரூர் என விதந்து பேசப்படும்; இங்குச் செல்வம் என்றது உலகத்திருவும் முத்தித் திருவுமென்னும் இரண்டையுங் குறித்தது. 86-வது பாட்டுப் பார்க்க; **திருஆர்ஊர்** என ஊர்ப்பெயரை விளக்கியபடியுமாம்.

3279. மூவாத முதலாகி நடுவாகிமுடியாத
சேவாருங் கொடியாரைத் **திருமூலட் டானத்துள்**
ஓவாத பெருங்காத லுடனிறைஞ்சிப் புறம்போந்து
தாவாத புகழ்ப்பரவை யார்திருமா ளிகைசார்ந்தார். 125

தேவரொடு முனிவர்களும் மல்குதிருக்கோபுரம் - "தேவரொதுங்கத் திருத்தொண்டர் மிடையுஞ் செல்வத் திருவாரூர்" - **தேவாசிரியன்** என்பன முதலியவை காண்க;திருத்தொண்டர்களன்றி ஏனையோர் உள்ளே புகும் காலம் பார்த்து நந்திபெருமானது ஆணையை எதிர் நோக்கித் திருவாயிலில் முறை யிருப்பர் என்பது.

பல்கு திருத்தொண்டருடன் - இவர்கள் அங்குத் திருக்கோயிலிற் குழுமியிருக்கும் திருத்தொண்டர்கள். முன் "எஞ்சாத பேரன்பிற் றிருத்தொண்டருடன்" (*3277*) என்றது வேறு; அவர்கள் முன் நம்பிகளுடன் கூடி வந்தணைந்தோர்.

பரமர் - புற்றிடங்கொண்ட பெருமான்; வரும் பாட்டுப் பார்க்க. *124*

3279. **(இ-ள்)** மூவாத...கொடியாரை-எஞ்ஞான்றும் மூத்தல் இல்லாத முதலும் நடுவும் ஆகி முடிதலு மில்லாதவராகிய இடபம் நிறைந்த கொடியினையுடையவரை; திருமூலட்டானத்துள்... இறைஞ்சி - திருமூலத்தானத்தினுள் ஒழியாத பெரு விருப்பத்தினுடன் வணங்கி; புறம்போந்து - புறத்தே போந்தருளி; தாவாத... சார்ந்தார் - கெடுதலில்லாத புகழினையுடைய பரவையம்மையாரது திருமாளிகையினைச் சார்ந்தருளினர்.

(வி-ரை) மூவாத...முடியாத-இறைமைக் குணங்கள்; **மூத்தல்** - காலக்கோட்பட்டுப் பழமையாதல்; **முடிதல்** - இறத்தல்; **முதல்** - முதல்வன்; **நடுவாகி** - எல்லாப் பொருள்களுள்ளும் உயிர்களுள்ளும் கலந்திருக்கும் நிலை **நடு** எனப்பட்டது.

திருமூலட்டானத்துள்-என்றும் எங்கும் உள்ள இறைவரைத் திருமூலட்டானத்துள் வெளிப்படக் கண்டு என்க; **திருமூலட்டானம்** - புற்றிடங்கொண்ட பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம்;திருமூலட்டானத்து இறைவரை என்னாது இறைவரைத் திருமூலட்டானத்துள் என்றது எங்கும் நிறைந்த பரமசிவமாகிய இறைவர் ஒருவரே இங்குத் திருமூலட்டானத்துள்ளும், அங்குத் திருமுதுகுன்றத்தினும், மற்றும் அங்கங்குப் பதிகளிலும், குறிகளிலும், கோயில்களிலும் எழுந்தருளியிருப்பவர் என்ற குறிப்புப் பெறும் பொருட்டு; திருமுதுகுன்றத்திற் பெற்று ஆற்றில் விடுத்த பொன்னினை இங்கு இறைவரருளால் இனிக் குளத்திலெடுக்கவுள்ள நிலையாதலின்அது குறிக்க இவ்வாற்றாற் கூறினார். இனி இங்குத் திருவாரூரில் அருளும் பதிகமும் திருமுதுகுன்றினைப் பற்றியதாதலும் கருதுக.

திருமூலட்டானம் - வேறு; வீதிவிடங்கராகிய தியாகேசர் சந்நிதி வேறு.

ஓவாத - **ஓவுதல்** - நீங்குதல்; "ஓவுத லோவு திருப்பணி";"ஓவுநாள்."

இறைஞ்சிப் புறம்போந்து...அணைந்தார் - ஒரு திருப்பதியினை அணைந்தவுடன் முதலிற் செய்யும் கடமையாக இறைவர் கோயிலையடைந்து வணங்கிய பின்னரே தம் ஏனைச்

3280. பொங்குபெரு விருப்பினொடு புரிகுழலார் பலர்போற்றப்
பங்கயக்கட் செங்கனிவாய்ப் பரவையா ரடிவணங்கி,
"யெங்களையு நினைந்தருளிற்" றென்றியம்ப, வினிதளித்து
மங்கை நல்லா ரவரோடு மகிழ்ந்துறைந்து வைகுநாள். 126

செயல்களுட் புகுதல் முந்தையோராகிய பெரியோர் நிலை; சிவபாத இருதயர் திருவாலவாயிற் சேர்ந்ததும் ஆலவாயுடையாரைச் சென்று வணங்கிய பின்னரே பிள்ளையாரது திருமடத்திற் சார்ந்ததும், பிறவும் இங்கு நினைவுகூர்தற்குரியன. இதனை விடுத்து இந்நாள் மாக்கள் ஒரு பதியினை அணைந்தபோது, தம் பிற காரியங்களையெல்லாம் முதலிற் செய்து பின்னரே கோயிலிற் சேர்தலும் அவ்வாறும் செய்யாதொழிதலும் வருந்தத் தக்கன.

தாவாத புகழ் - பின்னர்ப் பரமனுர் இருமுறை தூது சென்ற புகழ்; **புகழ்** என்பதைப் பரவையாருக் கன்றித் திருமாளிகைக்குங் கொள்ளலாம். பரவையார் திருமாளிகைக்குத் 'தாவாத புகழ்' என்பது தாவுதலைத் தடுப்பாரெவர்? என்ற குறிப்புடன் நின்றது. 90-3516-பாட்டுக்கள் பார்க்க. 125

3280. (இ-ள்) பொங்குபெரு...அடி வணங்கி-மேன்மேல் அதிகரிக்கும் பெரு விருப்பத்தினுடனே பின்னிய புரிந்த கூந்தலையுடைய தோழியர்கள் துதிக்கத் தாமரை மலரைப் போன்ற கண்களையும், கொவ்வைச் செங்கனி போன்ற வாயினையுமுடைய பரவையம்மையார் வந்து (நம்பிகளது) திருவடிகளில் வணங்கி; எங்களையும்... இயம்ப - எங்களையும் நினைந்து எழுந்தருளிய தேவரீரது கருணைக்கு யாம் தகுதியுடையோமோ என்று கூற; இனிதளித்து...வைகுநாள் - அவருக்கு இனிய மொழி யுரைத்து மங்கை நல்லாராகிய அவருடனே மகிழ்ச்சியுடன் வதிந்திருக்கு நாளிலே,

(வி-ரை) புரிகுழலார் - தோழியர்கள்.

விருப்பினுடன் - போற்ற என்றும், **விருப்பினுடன் -அடிவணங்கி - இயம்ப** என்றும் கூட்டியுரைக்க நின்றது.

எங்களையும் நினைந்தருளிற்று - சிவபெருமானையே நினைத்தலன்றி வேறு நினையாத திருவுள்ளத்தில் நினைக்கத் தகாத எங்களையும் என உம்மை இழிவு சிறப்பும்மை; **அருளிற்று**- எழுந்தருளியது; அருள் துணைவினை எனக்கொண்டு, நினைந்தெழுந்தருளியது என்றலுமாம். நீண்ட நாட்பிரிந்த நிலைக்குறிப்பும் படக் கூறியது.

இனிது அளித்து - மலர் முகம் அளித்து இனியன கூறி.

மங்கை நல்லாரவர் - மங்கையருள் நல்லாராகிய அவர்; பரவையம்மையார்.

வைகுநாள் - புகல - என மேல் வரும் பாட்டுடன் கூட்டுக.

அங்கயற்கண்—என்பதும் பாடம். 126

3281. "நாயனுர் முதுகுன்றர் **நமக்களித்த நன்னிதியந்**
தூயமணி முத்தாற்றிற் புகவிட்டேந்; துணைவரவர்
கோயிலின்மா ளிகைமேல்பாற் **குளத்திலவ ரருளாலே**
போயெடுத்துக் கொடுபோதப் போதுவா" யெனப்புகல, 127

3281. (இ-ள்) வெளிப்படை; "தலைவராகிய திருமுதுகுன்றத்தில் எழுந்தருளிய சிவபெருமான் நமக்கு அருளிய நன்னிதியமாகிய பொன்னினைத் தூய திருமணிமுத்தாற்றிலே புகும்படி இட்டோம்; அதனைத் துணைவராகிய அப்பெருமானது இத்திருக் கோயிலின் மாளிகையின் மேல்பாலுள்ள (கமலாலயத்) திருக்குளத்திலே அவர் திருவருளாலே போய் எடுத்துக்கொண்டு வருதற்கு உடன் போதுவாயாக!" என்று (நம்பிகள்) சொல்ல,

(வி-ரை) நாயனுர் முதுகுன்றர் - நாயனுராகிய திருமுதுகுன்றத்து இறைவர்;பெயரடைமொழி பண்பு குறித்து நின்றது; **நாயனுர்** - தலைவர்; 759 - 774 முதலியவை பார்க்க.

நாயனுர் அளித்த - நாயனுராதலின் - அடியாரைக் காக்கும் கடமை பற்றி அளித்த என்று காரணப் பொருள்பட நின்றமையும் காண்க.

நன்னிதியம் - அசுத்த மாயாபுவன போகவகைப் பொருளாயினும் இறைவர் பாற் பெறும் அருட் பண்டமாதலின் **நன்மை** யுடையதாம் என்பது; "அறத்தாற்றினீட்டப்பட்ட; அனையவை புனிதமான திறத்தாலே" (திருவிளை - புரா. வாதவூ-உ. ப. படலம் 62).

புக இட்டோம் - புகும்படி ஆற்றில் இட்டோம். **புக** - அங்கு நின்றும் இங்குப் புகும்படி;விட்டோம் என்று பிரித்துரைப்பினுமமையும்.

துணைவரவர் கோயில் மாளிகை - பூங்கோயிலின் மாளிகை; **துணைவரவர்**- திருமுதுகுன்றத்தின் நாயனுர்; இங்குத் திருவாரூர்ப் புற்றிடங்கொண்டார் எழுந்தருளும் **பூங்கோயி**லைத் திருமுதுகுன்றத்து நாயனுரது கோயிலாகக் கூறியது அவரே இவர்; எங்கும் நிறைந்த முதல்வர் என்ற அனுபவ நிலை; **அவரருளாலே** என்ற கருத்துமது; **அவரரு**ளாவது திருமுதுகுன்றில் நம்பிகள் வேண்டியவாறே இறைவர் "செழுமணி முத்தாற் றிட்டிப் பொருளினை முழுது மாரூர்க் குளத்திற் போய்க் கொள்க" என்று தம்பிரானுர் நல்குமின்னருள் (3263); அவ்வாற்முற் பொன் முழுதும் நம்பிகளின் கைப் புகுமளவும் திருமுதுகுன்றரின் அருட்கடமைப் பாடாதல் நியமமாம் என்ற குறிப்பும் கண்டுகொள்க.

மேல்பாற்குளம் - இது கமலாலயம் என்று விளக்கமாய் வழங்கப்படுவது; இது பற்றி நமிநந்தியடிகணுயனுர் புராணத்தும், பிறுண்டும் பார்க்க.

கொடுபோத - கொண்டு வர; **போதுவாய்** - உடன் செல்வாயாக என்ற ஏவல்.

நமக்களித்த - நமக்கு என்றது பரவையாரை உள்ளிட்ட உளப்பாட்டுத் தன்மைப் பன்மை; மேல்வரும் பாட்டில் "என்னுடைய நாதன்" என்றும், "உனக்குத் தருவது" என்றும் தனிப்படுத்தி ஒருமையிற் கூறுதலின் காரணம் மேற்காண்க.

3282. ''என்னவதி சயமிதுதா? னென்சொன்ன வா?'' றென்று
மின்னிடையார் சிறுமுறுவ லுடன்விளம்ப, மெய்யுணர்ந்தார்
''நன்னுதலா! யென்னுடைய நாதனரு ளாற்குளத்திற்
பொன்னடைய வெடுத்துனக்குத் தருவது பொய் யா''தென்று. 128

புகல - விளம்ப - என்று இறைஞ்சி - அணைந்தார் - *என மேல்வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடிக்க.* ***127***

3282. (இ-ள்) *மின்னிடையார் - அதுவேபோல் மின்போலும் இடையினை உடைய பரவையம்மையார்; என்ன...என்று - இதுதான் என்ன அதிசயம்! சொல்லியவாறுதான் என்னே! என்று அற்புதத்துடன்; சிறுமுறுவலுடன் விளம்ப - புன்முறுவலுடன் சொல்ல; மெய்யுணர்ந்தார்...பொய்யாதென்று - மெய்யுணர்வுடையவராகிய நம்பிகள் ''நல்லநுதலினை யுடையவளே! என்னுடைய நாயகனரது திருவருளாலே இக்குளத்தினின்றே பொன் முழுதும் எடுத்து உனக்கு நான் தருவது பொய்யாகாது'' என்று கூறி,*

(வி-ரை) ''என்ன...வாறு'' என்று - *இது பரவையார் அதிசயப்பட்டுக் கூறிய மொழி. இஃதியலாதென்ற குறிப்புடன் கூறிய ஐயப்பாடு புலப்படும் மொழியுமாம்;* **என்ன அதிசயம்? என்சொன்னவாறு? -** *வினுக்கள் அதிசயமும் இயலாமைக் குறிப்பும்பட நின்றன.* **என் செய்தவாறு** *என்பது பாடமாயின் நீர் பொன்னை ஆற்றிலிட்டது தக்கதன்று என்ற குறிப்புப்பட உரைத்த மொழி என்க.*

சிறு முறுவல்- *இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற நின்ற புன்முறுவல்; இக்கருத்துப் பதிகத்துட் காண்க. மேல் 3286-3287-ல் ஆசிரியர் இதனைக் காட்டியருளியதும் காண்க; ''பரவையிவ டன் முகப்பே'' (பதிகம்).*

மெய்யுணர்ந்தார் - மெய் - *இறைவர் -சத்-மெய் முழுதுமாகும் தன்மையினை;*

என்னுடைய நாதன் - உனக்குத் தருவது - என்னுடைய *என்றது பரவையார் என் சொன்னவாறு? என்ன அதிசயம் ? என்று இறைவரருளினில் ஐயப்பாடுடையார் போற் கூறியதனல் பிரித்துக் காட்டியபடியாம்; முன்னர்* **நமக்களித்த நன்னிதியம்** *என்ற நம்பிகள் இங்கு* **எடுத்து உனக்குத் தருவது** *என்று பிரித்து உரைப்பதும் அக்கருத்தாதலுடன் ஐயப்பாடு கொண்ட நீயே உன் கையில் ஏற்று அடியார்களுக்குப் பங்குனி உத்திரத் திருவிழாவில் அமுதூட்டி உபசரிக்கும்படி தருவது; நீயே காணும்படி- என்ற குறிப்புமாம்.*

பொய்யாது - *உறுதி;நிச்சயம் என்றபடி எதிர்மறை உறுதி குறித்தது.*

பொன் அடைய - *ஒன்றும் குறையாமல் 12,000 பொன் முழுமையும்; மாற்று-உரை-சிறிதும் தாழாமலும் என்றலும் குறிப்பு; 3290-3291 பார்க்க.* ***அடைய -*** *பொன்னை நீ அடையும்படி; பெறும்படி என்றும், பொன் பெற்றுப் பயனடைய என்றும் முதுகுன்றத்தில் அடைந்தது போல இங்கு - அடைய -பெற - என்றும் கொள்ள நின்றது.* ***128***

3283. ஆங்கவரு முடன்போத வளவிறந்த விருப்பினுடன்
பூங்கோயி லுண்மகிழ்ந்த புரா தனரைப் புக்கிறைஞ்சி,
ஓங்குதிரு மாளிகையை வலம்வந்தங் குடன்மேலைப்
பாங்குதிருக் குளத்தணைந்தார் பரவையார் தனித்துணைவர். 129

3283. (இ-ள்) ஆங்கு அவரும் உடன் போத - ஆங்குத் தம்முடன் அப்பரவையாரும் வர; அளவிறந்த...வலம் வந்து - அளவு கடந்த விருப்பத்துடன் பூங்கோயிலினுள் மகிழ்ந்தெழுந்தருளியுள்ள புனிதராகிய இறைவர் திருவடிகளை அக்கோயிலுட் புகுந்து வணங்கி ஓங்கிய திருமாளிகையினை வலமாகச் சுற்றி வந்து; பரவையார் தனித்துணைவர் - பரவையாருடைய தனித் துணைவராகிய நம்பிகள்; அங்கு...அணைந்தார் - அவ்விடத்தினின்றும் உடனே மேலைப் பக்கத்திலுள்ள கமலாலயத் திருக்குளத்தில் அணைந்தருளினர்;

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) ஆங்கு - குளத்திற் என்று இடக்குறிப்பும் அப்பொழுதே என்று காலக் குறிப்பும், அவ்வாறே என்று பண்புக் குறிப்பும்பெற நின்றது.

அவரும் - ஐயப்பட்ட பரவையாரும்; உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

அளவிறந்த விருப்பினுடன் - என்றதனைப் புக்கிறைஞ்சி என்றதனுடனும், வலம் வந்து என்றதனுடனும், அணைந்தார் என்றதனுடனும் தனித் தனிக் கூட்டியுரைத்துக் கொள்க. முதனிலைத் தீபம்.

புக்கிறைஞ்சி - வலம் வந்து - அணைந்தார் - "அவனருளாலல்லது ஒன்றையும் செய்யாகுக", "ஏகனுகி யிறைபணி நிற்க" என்ற சிவஞான போதம் பத்தாஞ் சூத்திரக் கருத்துக்கள் ஈண்டு வைத்துச் சிந்திக்கற்பாலன."அவரருளாலே போயெடுத்துக் கொடு போத" (3281) என்றும், "என்னுடைய நாதனருளாற் குளத்தில் எடுத்து உனக்குத் தருவது" (3282) என்றும் முன் கூறியவையும் காண்க. நம்பிகள் தற்போத முனைப்பென்பது சிறிதுமின்றி இறைவன் றிருவருளிலே நீங்காது கலந்து நின்று அதனுல் மும்மலவாதனையும் நீங்கிய பரமாசாரியர் என்பது ஈண்டு மனங்கொளற்பாலதாகிய உண்மை;இதனை ஆசிரியர் அங்கங்கும் நம்பிகளின் அருட் செயல்களில் வைத்து விரித்துக் காட்டும் தெய்வக் கவிநலம் கண்டுகொள்க.

உடன்-வலம் வந்த உடனே; உடன்-அணிமையில் உள்ள என்றலுமாம்.

மேலைப்பாங்கு-மேற்குப் பக்கத்திலுள்ள; ஏழனுருபு தொக்கது; பாங்கு என்றூர் திருக்கோயிலினை அடுத்து உள்ள நிலை குறித்தற்கு; திருக்கோயிலுக்கும் திருக்குளத்துக்கு மிடையே ஒரு திருவீதிதான் இப்போது காணப்படுவது.

பரவையார் தனித் துணைவர் - பரவையார் இங்கு நேரே உடனிருக்க இவ்வாறு கூறுதல் அவரது ஐயப்பாடு நீக்கித் திருவருளுக் காளாந்தன்மை புலப்படுத்தி ஆட்கொள்ளும் ஆசாரியராம் தன்மைப் பெரு நலம் குறித்தற் கென்க; தனி என்ற குறிப்புமிது. பொன்னைத் தாமே சென்றெடுத்துத் தரலாமாயினும் நம்பிகள் அவரையும் ''உடன் போதுவாய்''

3284. மற்றதனில் **வடகீழ்பாற் கரைமீது** வந்தருளி
முற்றிழையார் தமைநிறுத்தி முனைப்பாடித் திருநாடர்
கற்றைவார் **சடையாரைக் கைதொழுது** குளத்திலிழிந்
தற்றைநா ளிட்டெடுப்பார் போலங்குத் தடவுதலும், 130

என்று கூட்டிச்சென்ற குறிப்புமிதுவே என்க; பிறர் பிறவாறெல்லாமெண்ணி அபசாரப்படுதல் உண்மையறிவில்லாமையாலா மென்க; இது பற்றிய மேல் அருட் சரித விளைவு வரலாறும் காண்க; **துணைவர்** என்ற குறிப்பும் கருதுக; **தனித் துணைவர்** - தம்மையடைந்த அடியார்கள் யாவர்க்கும் நல்லாறு செலுத்தும் துணைவரே யாயினும், பரவையாருக்குச் சிறப்பாகிய துணைவர் என்பது.

புராதனர் - கால எல்லை கடந்த பழமை; "முன்னே பின்னே" என்ற திருத் தாண்டகக் கருத்துக் காண்க.

புனிதர் கழல்—என்பதும் பாடம். 129

3284. (இ-ள்) மற்றதனில்... வந்தருளி - அக்குளத்தின் வடகிழக்குப் பக்கம் உள்ள கரையின்மேல் வந்தருளி; முற்றிழையார் தமை நிறுத்தி - பரவையாரை நிறுத்தி; முனைப்பாடித் திருநாடர் - திருமுனைப்பாடி நாடராகிய நம்பிகள்; கற்றைவார்...தடவுதலும் - கற்றையாகிய நீண்ட சடையினையுடைய சிவபெருமானைக் கைதொழுது திருக்குளத்தினுள்ளே இறங்கி அன்று அப்போதுதானே போகவிட்டு எடுப்பவர்போல அங்குத் தடவுதலும்,

(வி-ரை) "வடகீழ்பாற் கரையின்மீது - இது திருக்கோயிலினின்றும் நம்பிகள் போந்தருளிய மேலைத் திருவாயிலுக்கு அணிமையில் உள்ளது; ஈசானனுக்குரிய வடகிழக்காகிய பெருமையும் உடையது; இங்கு **மாற்றுரைத்த பிள்ளையார்** என்று இச்சரித சம்பந்தமாகிய பெயருடன் பிள்ளையார் கோயில் உள்ளதும் காணலாம்.

முற்றிழையார் - தொழில் நிரம்பிய அணிகளை அணிந்த பரவையம்மையார்; தொழில் முற்றிய இழை; வினைத்தொகை.

கற்றைவார் சடையாரைக் கைதொழுது - திருவருள் வெளிப்பட உள்ள பெருஞ் செயலிற் புகுகின்றாராதலின் இறைவரைத் தொழுதுபுகுகின்றார். இஃது எஞ்ஞான்றும் சிவனை மறவாது தம் செயலற்ற பெரியோர் நிலை - "தழைத்த வஞ்செழுத் தோதினர் **ஏறினார்** தட்டில்" (544); "உலகுய்ய நடமாடுங் கழலுன்னியழல்புக்கார்"(1072) "அஞ்செழுத்தோதிப் பாற்ற டம்புனற் பொய்கையில் மூழ்கினார் பணியால்" (1635) என்பன முதலியவை காண்க.

அற்றைநாள் இட்டு எடுப்பார்போல் - அங்குத்தடவுதல் - அன்றே அப்பொழுது தான் புகவிட்டுத் தடவி எடுக்க முயலும் பாவனை போல்.

இழிந்து - உள்ளிறங்கி.

தடவுதலும் (3284), ஒழிந்தருள - மொழிந்தருளத் - தனித்தொண்டர் (3285),

3285. நீற்றழகர் பாட்டுவந்து திருவிளையாட் டினினின்றும்
மாற்றுறுசெம் பொன்குளத்து **வருவியா தொழிந்தருள**
"ஆற்றினிலிட் டுக்குளத்திற் றேடுவீ! ரருளிதுவோ?
சாற்று"மெனக் கோற்ருெடியார்மொழிந்தருளத் தனித்தொண்டர், 131

போற்றிசைத்து(3286), ஏத்துவார் (3287), என்று - பரவுதலும் (3288), எடுத்துக் - கரையேற்றப், பொழிந்திழிந்தது - தொழுதார் (3289) என்று இந்த ஆறு பாட்டுக்களையும் கூட்டி முடிபுகொள்க. *130*

3285. (இ-ள்) நீற்றழகர்...ஒழிந்தருள - திருநீற்றழகராகிய இறைவர் நம்பிகளது பாட்டினை உவந்தாராகித் திருவிளையாட்டினை உட்கொண்டு மாற்றுப் பொருந்திய செம்பொன்னினைத் திருக்குளத்தில் வருவிக்கா தொழிந்தருள; ஆற்றினிலிட்டு... மொழிந்தருள - "ஆற்றினிற் போட்டுக் குளத்தினிலே தேடுவீர்! அருள் இருந்தது இவ்வாறுதானோ? கூறுவீர்!" என்று கோற்ருெடியாராகிய பரவையம்மையார் மொழிந்தருளவே; தனித் தொண்டர் - ஒப்பற்ற தொண்டராகிய நம்பிகள்,

(வி-ரை) நீற்றழகர் - சிவபெருமான். **நீறு** - சங்காரக் குறிப்பு; சங்காரத்தின் பின் புனருற்பவம் நிகழ்தல்போல ஈண்டு முன் மறைந்த பொன் மீளத்தரப்படும் நிலைக்குறிப்பு.

பாட்டு உவந்து - நம்பிகள் இனிப்பாடும் திருப்பதிகத்தினைக் கேட்டலில் விருப்பமுற்று; "பண்ணி னேரு மொழியாளென் றெடுத்துப் பாடப் பயன்றுய்ப்பான்" (1533) என்பது முதலியவை காண்க. "படியிலா நின்பாட்டிற் பெருவிருப்பன் பரமனென்ப, தடியனே னறிந்தனன்" (நால்வர் - நான்மணிமாலை) என்றும், "உறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு மெனவிருந்து...நினைத்தோழமை கொண்டான்" என்றும் இதனை விதந்து போற்றினுர் பிற்காலத்து விளங்கிய சிவப்பிரகாசர்.

திருவிளையாட்டினின்று - வருவியா தொழிந்தருள - சிறிது தாமதித்தலே ஈண்டுத் திருவிளையாட்டு எனப்பட்டது;அதன் பயனாவது பரவையம்மையார் தாம் கொண்ட கருத்தினையே உறுதி என்றுகொண்டு மீண்டும் "ஆற்றினில்...சாற்றும்" என மகிழ்ந்து கேட்கும் இன்பம் சிறிதுநேரம் பெறவைத்தலும், பின்னர் நம்பிகள் பொன்பெற வேண்டிப் பதிகம் பாட வைத்தலும், அதனுல் உலகின்புற வைத்தலும், பிறவுமாம்.

மாற்றுறு செம்பொன் - உயர்ந்த மாற்றினை உடைய - "ஆயிரத்தெட்டு மாற்ருக வொளிவிடும் பொன்" (தாயுமா). **மாற்று உறு** - முன் கொடுத்ததனிலும் உறை தாழ்ந்து சிறிது மாறுதல் பெறும் பொன் என்ற பிற் சரிதக் குறிப்பும் ஆம்.

வருவியா தொழிதல் - சிறிது நேரம் தாழ்த்தல்.

ஆற்றினில்...அருளிதுவோ? - இஃது ஆற்றிலிட்டுக் குளத்திற்றேடுதல் என்ற பழமொழியை உள்ளடக்கி வினவியபடி; வீண் காரியம் என்றது உட்கோள்; ஆற்றினில் புக இட்டபொருள் ஆற்றினில் அவ்விடத்துத் தேடினும் அகப்படுதல் அரிதாயிருக்க, அங்கு விட்டு முற்றும் வேருகிய குளத்திற்கிட்டுதல் இயலாத காரியம் என்றபடி பழமொழி ஈண்டு

3286. "முன்செய்த வருள் வழியே முருகலர்பூங் குழற்பரவை
தன்செய்ய வாயினகை தாராமே தாரு" மென
மின்செய்த நூன்மார்பின் வேதியர்தா முதுகுன்றிற்
"பொன்செய்த மேனியினீ" ரெனப்பதிகம் போற்றிசைத்து. 132

முதுகுன்றின் மணிமுத்தாறும் ஆரூரின் கமலாலயக் குளமுமாகப் போலும் மிகவும் பொருத்தமாய்ப் பரவையாரது நகைக்கிடமாதல் காண்க; "ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய ஆதரைப் போல்" (திருநல்லூர் -திருவிருத்தம்.) என்று இதனை வினைக் காரியத்துக்கு உவமித்தல் காண்க.

அருள் இதுவோ? - உமது அருள் எம்பால் நிகழ்வது இவ்வாறோ? "அவரருளாலே" (3281) "என்னுடைய நாதனருளால்" (3282) என்று விதந்து பேசிய அருளின் தன்மை இதுதானோ என்ற குறிப்பும்படக் கூறியது.

மொழிந்தருள - பரவையம்மையார் மொழிந்தமையே பின்னர் வரும் அரிய திருப்பதிகத்துக்குக் காரணமாகி உலகமுய்யும் வழியாய் வருதலின் அருள என்றார்.

கோற்றொடி - அழகிய வளையல் : பெண்.

தனித்தொண்டர் - இருவருள்ளே பரவையார் அவ்வாறு கூறத் திருவருளுண்மையில் தனித்து நின்ற என்றதும் குறிப்பு; தனி - ஒப்பற்ற. **131**

3286. (இ-ள்) "முன் செய்த...தாரும்" என - மணம் அவிழும் பூக்களை முடித்த குழலினையுடைய பரவையாரது சிவந்த வாயின் நகை செய்யாதபடி, முன்னர்த் திருமுதுகுன்றத்திற் செய்த அருளின்படியே பொன்னினைத் தந்தருள்வீர் என்ற கருத்துடன்; மின்செய்த...வேதியர்தாம் - விளங்கும் பூணூலை அணிந்த மார்பினையுடைய நம்பிகள்; முதுகுன்றில்...போற்றிசைத்து - திருமுதுகுன்றத்திலே எழுந்தருளிய பொன்போன்ற திருமேனியுடையவரே என்று தொடங்கிய திருப்பதிகத்தினுற் றுதிசெய்து,

(வி-ரை) நகை தாராமே - முன் செய்த அருள் வழியே - தாரும் - என்று கூட்டுக. முன்செய்த அருளாவது "செழுமணி முத்தாற் றிட்டிப், பொருளினை முழுது மாரூர்க் குளத்திற்போய்க் கொள்க" (3262) என்று முன்னர்த் திருமுதுகுன்றிற் பொன் தந்து சொல்லியருளிய திருவாக்கு. அருள் வழியே - அவ்வருளின்படியே; முன்செய்த அருள்வழியன்றியும் எஞ்ஞான்றும் எவ்விடத்தும் தோழமைத் திறத்தினுல் நம்பிகள் வேண்டிய வேண்டியாங்குத் தருபவர் இறைவர்; எனினும், முன்செய்த அருளின் வழியே தாரும் என்றது ஈண்டுப் பொன் தருவது இறைவரது திருவாக்கு நிறைவேறுதலுமாகும் என்று இறைவர்பால் இரட்டைக் கடமையாதல் நினைவூட்டியவாறும். நம்பிகள் பொன்பெறுதல் திருவாரூர்ப் பெருமான்பால் வேண்டாது பிற பதிகளில் வேண்டிப் பெறுவது பற்றி முன் உரைத்தவை பார்க்க; ஈண்டுத் திருமுதுகுன்றரைப் போற்றுதல் அக் கருத்தும் பற்றியது.

முருகலர் பூங்குழல் - மலர்களை அலரும் பருவத்தே அணிதலும், அவை குழலில்

3287. முட்டவிமை யோரறிய முதுகுன்றிற் றந்தபொருள்
சட்டநான் பெருதொழிந்த தளர்விஞற் கையறவாம்
"இட்டளத்தை யிவளெதிரே கெடுத்தருளு" மெனுந்திருப்பாட்
டெட்டளவும் பொன்காட்டா தொழிந்தருள வேத்துவார், 133

அணிந்தபோது புதுப்பூவாய் அங்கு மலர்தலும், மரபும் பயனும் பற்றியன. "வம்பமருங் குழலாள் பரவை" (2); "பூத்தாருங் குழலாள்" என்பது பதிகம்.

பரவைதன் செய்யவாயின் நகைதாராமே தாரும் - என்றதனல் பரவையார் நம்பிகளுடனே நின்று நகைத்துப் பரிகசித்து மொழிந்தமை பெறப்படும்; "பரவையிவடன்முகப்பே" என்ற பதிகம் இதற்கு அகச்சான்று.

நகை தாராமே - நகை செய்யாதபடி; தாராமே தாரும் - என்றது சொல் அணிநலம்; முரண்டொடை என்பர்.

"முன் செய்த...தாரும்" என - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம்.

மின்...வேதியர் - நம்பியாரூரர்.

"பொன்செய்த மேனியினீர்" என - பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு. பொன் செய்த - செய்த - உவமவுருபு; மின் செய்த - செய்தல் - புலப்படுத்துதல் - விளைத்தல்.

சாராமே தாரும்— என்பதும் பாடம். ***132***

3287. (இ-ள்) முட்ட இமையோர்...எனும் - தேவர்கள் எல்லாரும் அறியும்படி திருமுதுகுன்றத்திலே தந்தருளிய பொருளினை விரைவில் நான் பெருது விட்ட தளர்ச்சியினல் வந்த செயலற்ற தன்மையதாம் துன்பத்தை இந்தப் பரவையின் எதிரிலே தீர்த்தருளும் என்னும் கருத்துடைய; திருப்பாட்டு...ஏத்துவார் - எட்டாவது திருப்பாட்டின் அளவும் பொன்னை இறைவர் அங்கு வருவித்துக் காட்டாமல் ஒழிய மேலும் துதிப்பாராகி,

(வி-ரை) முட்ட இமையோர்அறிய முதுகுன்றில் தந்த பொருள் - முட்ட - எல்லாரும்;தேவர்கள் அறியத் திருமுதுகுன்றத்திற் பொன் தந்தமை "உம்பரும் வானவரும் முடனே நிற்கவே யெனக்குச், செம்பொன்னைத் தந்தருளித் திருமுது குன்றமர்ந்தீர்" (2) என்ற பதிகத்தால் விளங்கும் அகச்சான்றுடையது; இதனல் நம்பிகள் இறைவரைப் பொன் வேண்டிய செயலும் அவர் அருளியதும் உலகினர் எவரும் அறிய நிகழ்ந்தனவல்ல என்பதும் பெறப்படும்; ஆயின் "இங்கு உம்பரும் வானவரும் அறிய" என்று கூறியது "இறைவரே! உமது அருளுக்கும் திருவாக்குக்கும் சான்ருக மண்ணவ ரன்றி விண்ணவர் உள்ளார்; நீர் மறுக்க இயலாது" என்று தோழமைத்திறத்தால் அவருக்கு நினைவூட்டுவார்போன்ற குறிப்புடையது.

சட்ட நான் பெருதொழிந்த தளர்விஞல் - சட்ட - செப்பமாக - செவ்விதாய்; "சட்டவினியுளது சத்தேகாண்" (போதம்9-2); "சட்ட என்பது செப்பப் பொருட்டாயதோர் அகரவீற் றிடைச்சொல்" (போதம் -மாபாடியம்); சட்ட - விரைவாக என்றலுமாம்; "சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன்" (திருவா).

3288. **''ஏத்தாதே யிருந்தறியே''** யெனுந்திருப்பாட் டெவ்வுலகுங்
காத்தாடு மம்பலத்துக் கண்ணுளனுங் கண்ணுதலைக்
''கூத்தா! தந் தருளாயிக் கோமளத்தின் முன்'' னென்று
நீத்தாருந் தொடர்வரிய நெறிநின்றார் பரவுதலும். 134

பெருதொழிந்த தளர்வு - பெருமை காரணமாக வந்த தளர்ச்சி.

கையறவாம் இட்டளம் - கையறவு - செயலற்ற தன்மை; **இட்டளம் - துன்பம்.**

இவள் எதிரே - இவள் - என்ற அணிமைச் சுட்டுப் பரவையாரும் அங்கு உடனிருத்தலைக் குறிக்கும். "இவள்தன் முகப்பே" "இவள் வாடுகின்றாள்" என்பன பதிகம்; **எதிரே** - இவள் கண் முன்னே - இவள் காணும்படி; இவள் கொண்ட ஊடற்பாடும் (3282) துணிவு (3285) மாகியவற்றுக்கு மாறாக உணர்ந்து கொள்ளும்படி.

பொன்பெறாத - கையறவாம் - இட்டளத்தைக் கெடுத்தருளும் - துன்பம் நீங்குமாறு பொன் கொடுத்தருளும் என்றபடி. "தந்தருளாய்" என்பது பதிகம்.

எனும் - என்ற கருத்துடைய.

திருப்பாட்டு எட்டளவும் - "உம்பரும்" என்ற 2-வது பாட்டு முதல் "பரசாருங் கரவா" என்ற எட்டாவது பாட்டுவரை; இப்பாட்டுக்கள் எல்லாம் இக்கருத்துடையன என்பது **இட்டளங்கெடவே (யருளீர்)** என்ற பதிக மகுடத்தினால் அறியப்படும். இங்கு எட்டுப் பாட்டளவும் இறைவர் **பொன் காட்டா தொழிந்தருளினர்** என்பதும், அதன் மேல் ஒன்பதாவது பாட்டில் அரிது வேண்டின அளவிற் பொன் கொடுத்தருளினர் என்பதும் மேல்வரும் பாட்டிற் கூறுவார். இவ்வாறு ஒரு பதிகத்தினுள் இன்னின்ன பாட்டில் இன்னின்ன நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன என்று எடுத்துக் காட்டியருளுதல் ஆசிரியரது தெய்வ வருட்கவி நலம்; "பண்ணினேர் மொழி" என்ற பதிகம் பற்றி "உண்ணீர்மை"; (1533) என்ற விடத்தும், "மட்டிட்ட புன்னை" என்ற பதிகம் பற்றி "எடுத்த பாட்டினில்" (2987) என்ற இடத்தும் ஆசிரியர் உரைத்தவையும், பிறவும் ஒப்பு நோக்குக.

காட்டா தொழிந்தருள - பொன் காட்டாமையும், பின்னர்க் காட்டுவது போலவே அருளிப்பாடேயாம் என்பது, "எக்கிர மத்தி னுலு மிறைசெய லருளே யென்றும்" என்று வருவனவாதி ஞான நூன்முடிபுகளாற் கண்டுகொள்க.

ஏத்துவார் பரவுதலும் -என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக; **ஏத்துவார் -** ஏத்துவாராகி - முற்றெச்சம். **133**

3288. (இ-ள்) ஏத்தாதே...திருப்பாட்டு - எப்போதும் ஏத்தாமல் இருந்தறியேன் என்ற கருத்துடன் அத்தொடக்கமுடைய திருப்பாட்டினை; எவ்வுலகும்...கண்ணுதலை - எல்லாவுலகங்களையும் காத்து ஆளுகின்றாராய்த் திருவம்பலத்தின்கண் உள்ளாராகிய கண்ணுதற் பெருமானை; கூத்தா!...என்று - அருட்பெருங் கூத்தனே! இந்தக் கோமளமாகிய பரவையின் முன்னே தந்தருள்வாயாக! என்று; நீத்தாரும்... பரவுதலும் - நீத்தார்களாகிய துறவிகளாலும் தொடர்தற்கரிய நெறியில் நின்ற நம்பிகள் துதித்தலும்,

3289. கொந்தவிழ்பூங் கொன்றைமுடிக் கூத்தனூர் திருவருளால்
வந்தெழுபொன் நிரளெடுத்து வரன்முறையாற் கரையேற்ற,
அந்தரத்து மலர்மாரி பொழிந்திழிந்த தவனியுள்ளோர்
''இந்தவதி சயமென்னே! யார்பெறுவா'' ரெனத்தொழுதார். 135

(வி-ரை) ''ஏத்தாதிருந்தறியேன்'' என்னும் திருப்பாட்டு; இது பதிகத்துள் ஒன்பதாவது திருப்பாட்டு. அதன் கருத்தினை இங்கு ஆசிரியர் உரைத்தருளுகின்றமை காண்க.

''எனும்'' திருப்பாட்டு - என்று தொடங்கும் பாட்டு; முதற் குறிப்பு.

எவ்வுலகும் காத்து ஆடும் - இறைவரது ஆடல் எல்லா வுலகங்களையும் சிருட்டி முதலிய ஐந்தொழில் செய்து காத்தலேயாம் என்பது.

அம்பலத்துக் கண்ணுளன் -அம்பலம் - திருமன்று; (1) **கண்ணுளன்** - அத் திருமன்றத்தின் கண்ணே உள்ளவன். **கண்** - ஏழனுருபு; (2) **கண்ணுள்** - கூத்து; **கண்ணுளன்** - கூத்தாடுபவன்; (3) **கண்** - அருட்கண்; **கண்ணுளன்** - அருட்கண். அருணோக்க முடையவர் என்று மூன்று பொருளும் பெற வைத்த தமிழ் நலம் கண்டுகொள்க.

கண்ணுளனுங் கண்ணுதல் - சொல்லணி.

கூத்தா! - கூத்தனே!; திருவாக்கு அருளியபடி செய்யாது தாழ்க்கும் இதுவும் உமக்கு ஓர் கூத்தா? என்ற வினைக் குறிப்பும் காண்க.

இக்கோமளத்தின்முன் தந்தருளாய் - என்க; **தந்தருளாய்** என்ற முற்றுவினையினை முன் வைத்தது விரைவுக் குறிப்பு. **கோமளம்** - மென்மை,அழகு,இளமை என்றவற்றின் தொகுதி. இத்தன்மைகள் எல்லாங் கொண்ட அருமைப்பாடுடைய பரவையார்; **கோமளம்** - கோமளத்தினை உடையாளைக் குறித்து நின்றது. ''பரவையிவள் தன் முகப்பே கூத்தா தந்தருளாய்'' என்பது பதிகம்.

நீத்தாரும் தொடர்வரிய நெறி நின்றூர் - ஆரூர் நம்பிகள்; ஈண்டு இவ்வாற்றூற் கூறியது, பொன் வேண்டுதலும் பெண்ணைப்பற்றி எடுத்துக் கூறுதலும் பற்றிப் பொன்னசை பெண்ணசைகளின் தொடர்புடையார் என்று கொண்டு தவறுபட்டு அபசாரப்படுவோ ருளராயின் அவர்களைத் தெருட்டி ஈடேற்றும் கருணைத்திறம் பற்றி என்க. **நீத்தாருந் தொடர்வரிய நெறிநிற்றல்;** ''ஏத்தா திருந்தறியேன்'' என்ற பதிகத் திருப்பாட்டானும் பெறப்படும். ''துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா'' என்று இதனை எடுத்துக் கூறினர் சிவப்பிரகாசர். **தொடர்வரிய** - பின்பற்றுதல் அரிதாகிய; இந்நெறி நிற்றற்கரிதாகிய என்றலுமாம். ***134***

3289. (இ-ள்) கொந்தவிழ்பூ...திருவருளால் - கொத்துக்களாக மலர்கின்ற கொன்றைப்பூக்களை முடித்த அருட் கூத்தப் பெருமானது திருவருளினாலே; வந்தெழு... கரையேற்ற - வந்தெழுந்த பொற்குவையினை எடுத்து முறைப்படி நம்பிகள் கரையேற்ற;

அந்தரத்து...இழிந்தது - தேவர்களுலகத்தினின்றும் பூமழை பொழிந்து வீழ்ந்தது; அவனியுள்ளோர்...தொழுதார் - இந்நிலவுலகத்திலுள்ளோர்கள் இந்த அதிசயம்தான் இருந்தவாறென்னே! இவ்வாறு வேறு யார்தாம் பெறவல்லர்? (ஒருவருமிலர்) என்று கூறித் தொழுதார்கள்.

இவ்வாறு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) கூத்தனுற் பொன் வரப்பெறும்; (9) திருப்பாட்டில் "கூத்தா" என்ற தன்மையால் நம்பிகள் இறைவரை விளித்து வேண்டிப் பெற்றமையால் அப்பெயராலே கூறினர்; விளித்து வேண்டிய அந்தக் கூத்தனர் என்று சுட்டு விரிக்க; ஏனைப் பாட்டுக்களில் "அடியேன்" என்ற நம்பிகள் இப்பாட்டில் "கொடியேன்" என்றமை கருதுக.

திருவருளால் - "தந்து அருள்வாய்" என்ற அருள்; "அருளால்" (3281 - 3282) என்றதும் கொள்க.

வந்தெழு பொன் - வந்தெழுந்தது - அவ்வாறு வந்த பொன்னை என்க; பொன் வந்தமை வேறு கூருது ஆற்றலாற் பெற வைத்தார்;முன்னர்ப் பொன் தந்தமை உலகறியார்; அதுபோல இங்கு வந்தமையும் என்பார் வெளிப்படையாகக் கூறாராயினர்.

வரன்முறையாற் கரையேற்ற - 12000 பொன்னையும் எவ்வாறு எடுத்து ஏற்ற வேண்டுமோ அவ்வாற்ருல் என்பதாம்; வரப்பெற்ற அந்த முறை.

மாரி - பொழிந்திழிந்தது - மலர் மழை வீழ்ந்தது; இழிந்தது - உயர்வுப்பொருள் குறித்தது; "வீழ்க தண்புனல்" (தேவா).

இந்த...பெறுவார் என - இது பொன் வரக்கண்ட உலக மக்கள் கூற்று; தொழுதார் - திருவருள் வெளிப்பாட்டினை வணங்கினர்.

வருமுறையால்—என்பதும் பாடம். 135

திருமுதுகுன்றம்

திருச்சிற்றம்பலம் பண் - நட்ட ராகம். 7-ம் திருமுறை

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை யரைக்கசைத்தீர்,
முன்செய்த மூவெயிலு மெரித்தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவ டன்முகப்பே
என்செய்த வாறடிகே ளடியேனிட் டளங்கெடவே. (1)

உம்பரும் வானவரும் முடனேநிற்க வேயெனக்குச்
செம்பொன்னைத் தந்தருளித் திகழும்முது குன்றமர்ந்தீர்
வம்பம ருங்குழலாள் பரவையிவள் வாடுகின்ருள்
எம்பெரு மானருளீ ரடியேனிட் டளங்கெடவே. (2)

பரசா ருங்கரவா பதினெண்கண முஞ்சூழ
முரசார் வந்ததிர முதுகுன்ற மமர்ந்தவனே
விரைசே ருங்குழலாள் பரவையிவ டன்முகப்பே
அரசே தந்தருளா யடியேனிட்ட ளங்கெடவே. (8)

ஏத்தா திருந்தறியே னிமையோர் தனி நாயகனே
மூத்தா யுலகுக்கெல்லா முதுகுன்ற மமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் **பரவையிவ டன்முகப்பே**
கூத்தா! தந்தருளாய் கொடியேனிட் டளங்கெடவே. (9)

பிறையா ருஞ்சடை**யெம் பெருமானருளா** யென்று
முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில் வயனுவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதாஞ்சிவ லோகமதே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *3286, 3288* பாட்டுக்களில் ஆசிரியர் காட்டியருளியபடி கண்டுகொள்க. எனக்குத் தந்த பொன்னைப் பரவை வாடாது காண இவடன் முகப்பே கூத்தா! தந்தருள்வாய் என்பது; "எம்பெருமானருளாய்" (பதிகம்-10); **குறிப்பு** - இப்பதிகம் திருவாரூர்க் கமலாலயத் திருக்குளக் கரையில் வடகீழ்ப்பக்கம் திருப்படியில் நீரினுள் நின்றபடி நம்பிகள் திருமுதுகுன்றத் திறைவரை நோக்கிப் பாடியருளியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பொன் செய்த மேனி- பொன்போன்ற திருமேனி; **செய்த** - உவமவுருபு; "பொன்னூர் மேனியனே" (தேவா) "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி"; **முன் செய்த** - முன்னர் வரம் பெற்று உலகை அழிவு செய்த; **மின் செய்த** - விளக்கமுடைய; **முகப்பே**-முன்பு; கண்காண; **என் செய்தவாறு**-பொன்வரத் தாழச் செய்து நகைக்கிடமாகும்படி செய்தபடி என்னே! **இட்டளம்** - துன்பம்; **கெடவே**-கெடச் செய்யும்;**—(2) உம்பரும்...தந்தருளி** - "முட்ட இமையோரறிய முதுகுன்றிற்றந்த பொருள்" (3287) என்று இதனை ஆசிரியர் விரித்தருளினர்; இவ்வானவர் இங்கு வழிபட வந்திருப்போர்; **வம்பமருங் குழலாள்** - "முருகலர் பூங்குழற் பரவை" (3286) என்று இதனை உரை வகுத்தருளினர் ஆசிரியர். "விரை சேருங் குழலாள்" (8) "பூத்தாருங் குழலாள்" (9) என மேலும் வருவன காண்க. கூந்தலின் இயற்கைமணங் குறித்த தெனினுமமையும். அப்பொருளில் **பூ**-என்பது பூவின் மணம் என்றுரைத்துக் கொள்க;**— (3) பத்தா**-பத்தி செய்தற்கிடமானவரே!; **முத்தா** - இயல்பாகவே பாசங்களினீங்கியவரே!; **மைத்தாரும்**-மைதீட்டிய; மைபோன்ற கரிய என்றலுமாம்;"வாடாமே" என்பன தந்தருளப் பெற்ற பொருள் கைக்கு வரப் பெருது அடியார் பணி முட்டுப்பாடு பெறுதல் வாட்டம். **"குணம்"** என மேற்பாட்டில் வரும் குறிப்புமிது;—(4) **அங்கணனே** - அங்கண்மையுடையவரே! அங்கணனைதலில் எனக் காரணக் குறிப்புப் படக்கூறியது;—(5) **"மையாரும் மிடறு...செய்யார் மேனி"** - விரோத அணி;**—(6) நெடியான்...இறைஞ்ச-**

3290. ஞாலம்வியப் பெய்தவரு நற்கனக மிடையெடுத்து
மூலமெனக் கொடுபோந்த வாணியின்முன் னுரைப்பிக்க,
நீலமிடற் றவரருளா லுரைதாழப், பின்னுநெடு
மாலயனுக் கரியகழல் **வழுத்தினார்** வன்றொண்டர். 136

முன் "உம்பரும் வானவரும் உடனே நிற்க" (2) என்று குறித்த இவ்விருவர்கள் இறைஞ்சுதற் பொருட்டு இங்கு வந்துள்ளோர் என்பது; **படியாரும் இயலாள்-படி** - இதன்படி என; உயர்ந்த இலக்கணத்துக் குதாரணமாகக் கூறும் இயல்;—(7) **கொந்து** - பூங்கொத்துக்கள்; **வந்தணவும் - அணவுதல்** - அருகுசார்தல்;—(8) **பதினெண்கணம்** - அமரர் முதல் போக பூமியர் ஈறாக வகுக்கப்படும் பதினெட்டு வகைத் தேவச் சாதியர். "உம்பரும் வானவரும் என்று கூறிய இரு வகையுள் மேல் நெடியா னான்முகனும் என்ற விடத்து **உம்பரும்**-ஈண்டு **"வானவரும்"** குறிக்கப்பட்டனர்; **முரசார்** - முரசு முழக்குவோர்; **அதிர** - அதிர்க்க-முழக்க-எனப் பிறவினைப் பொருள் கொள்க; **ஆர்** - சிறப்பு விகுதி என்று கொண்டு முழவுகள் இயற்றுபவரின்றியும் தாமே வந்ததிர என்றலுமாம்; **விரை**-மலர் மணம்; இயற்கை மணம் என்றலுமாம்;இவ்வெட்டாவது பாட்டளவும் இறைவர் பொன் வருவியா தொழிந்தனர் என்பது ஆசிரியர் (3287) காட்டக் காணப்படும் பொருள்;—(9) **ஏத்தாதிருந்தறியேன்** - இங்கு இதன்பொருட்டன்றி, என்றும் எங்கும் ஏத்துதலை மறந்தறியேன்; ஆதலின் பாட்டுக் கேட்பதற்காக நீர் தாழ்க்க வேண்டா என்பது குறிப்பு; "பாதமே மனம் பாவித்தேன்" "நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" முதலியவை காண்க; **மூத்தாயுலகுக் கெல்லாம்** - முன்னே தோன்றியதனால் முதுகுன்ற மெனப்படும் பொருள் குறித்தது; **கூத்தா** - 3288-ன் கீழ் உரைத்தவை பார்க்க; **கொடியேன்**-முன் எல்லாப் பாட்டுக்களிலும் **அடியேன்** என்ற நம்பிகள் ஈண்டுக் **கொடியேன்** என்றது அடியேனாயின் முன்னரே வரப் பெற்றிருப்பேன்; அடியேனாதலன்றி, நான் கொடியேனாதலின் இதுவரை பெற்றிலேன் என்பது குறிப்பு. இப்பாட்டிற் பொன்வரப் பெற்றனர் என்பது ஆசிரியர் (3288-3289) காட்டக் கண்டுகொள்க;—(10) **முறையால்...வணங்கும்** - 6-8-9 பார்க்க; **முறையாவது** அவ்வவர்க்கேற்ற வரன்முறை. **மறையார்**-மறையவர்; **குரிசில்** - மேம்பட்டவர்; **இறையார்** - இறை - மேன்மை; **இறை-** (**"அருளாய்"** என்று செய்த) விண்ணப்பம் என்றலுமாம்.

தலவிசேடம்:— திருமுதுகுன்றம் - முன் தொகுதி III பக்கம் 331 பார்க்க.

3290. (இ-ள்) ஞாலம்...எடுத்து - முன் கூறியபடி உலகத்தார்கள் எல்லாம் வியந்து அற்புதமடையும்படி வந்த நல்ல பொன்னில் இடையில் எடுத்து; மூலமென...உரைப்பிக்க -மாற்றுக்கு மூலமாகத் தாம் மச்சம் எடுத்து வந்த மாற்றாணியோடு ஒப்பிடும்படி உரைத்துப் பார்க்க; நீலமிடற்றவர்...தாழ - திருநீலகண்டராகிய சிவபெருமானது திருவருளினாலே மாற்றுத் தாழ்ந்திருக்க; பின்னும்...வன்றொண்டர் - நெடுமாலுக்கும் பிரமனுக்கும் அரிய திருவடிகளை வன்றொண்டராகிய நம்பிகள் பின்னரும் துதித்தனர்.

(வி-ரை) ஞாலம் வியப் பெய்திய செயல் முன் பாட்டிற் கூறினார்.

நற்கனகம் - இறைவர்பாற் பெறுதலானும் அடியார்களுக்குப் பயன்படுதலானும் **நற்கனகம்** என்றூர்; ஏனேயோர்பால் எல்லாம், **கனகம்** மாயாகாரியப் பண்டமாய் மயக்கத்துக்கும் பிறவிக்கும் ஏதுவாய் நிற்கும்; ஆளுடைய அரசுகள் திருப்புகலூரில் திருமுற்றத்தில் திருவருளால் வந்த செம்பொன்னு நவமணியும் ஆகியவற்றையெல்லாம் கையாலும் தீண்டாது திரு உழவாரத்தினில் ஏந்திப் பூங்கமல வாவியினிற் புக எறிந்தருளிய வரலாறு இங்கு நினேவு கூர்தற்பாலது. ஆனுல் அங்கு அரசுகளது நன்னிலேமையினே உலகுக்குக் காட்டுவாராகி இறைவர் அவ்வாறு உழவாரம் நுழைந்த விடமெல்லாம் பொன்னும் மணியும் வர அருள் செய்தார்;அத்திருவருள் வழியே அரசுகளது நன்னிலேயாகிய உண்மை நிலே நாட்டப்பட்டு உலகமறிந்து உய்திபெற்றது; ஈண்டும் திருப்பங்குனி உத்திரத் திருநாளின் அடியார் பொருட்டு நம்பிகள் வேண்ட இறைவர் அருளிய பொன், ஆற்றிலிட்டுக் குளத்தில் எடுக்கப் பெற்று உலகமறிந்து உய்தி பெற்றது; முன்னரும் "நன்னிதியம்" *(3281)* என்றமை காண்க.

இடை எடுத்து - பொன்னில் இடையே எடுத்து; நிறுத்து எடுத்து என்பர் முன் உரைகாரர்.

மூலம் எனக் கொடுபோந்த ஆணி - உரைத்துப் பார்த்து மாற்றறியும்படி வெட்டிக்கொண்ட உரையாணி. மூலம்; இதனேக் கொண்டு மீதப் பொன்னே மாற்று அளவு காண்பதால் இது **மூலம்** எனப்பட்டது; **ஆணி** - உரையாணி - "தொண்டர்க்காணி" *(1896)*; "தொண்டராணிப் பொன்" (அரசு. தேவா); **ஆணி எனக் கொடுபோந்தமை** - "மச்சம் வெட்டிக் கைக்கொண்டு" *(3263)* என்ற விடத்துக் காண்க.

ஆணியின்முன் உரைப்பிக்க - வந்த பொன்னிடை எடுத்து ஆணியினேயும் அதனேயும் உறைகல்லில் தனித்தனி உறைப்பித்து ஒப்புப் பார்க்க; இது பொன்னினே உயர்வு தாழ்வு காணும் முறை.

அருளால் உரைதாழ - திருவருளாற் பெற்ற பொருள் திருவருளால் ஆற்றில் இட்டுக் குளத்திற் பெறும்போது அவ்வாறே தரப்படும் என்று கொள்ளாது தாம் உரை பார்க்க மச்சம் வெட்டிக் கைக்கொண்டமையாலே உரைதாழச் செய்தருளினர் இறைவர்; "இத்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க், கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும்"...அருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்தும்"..."பற்றுமின் னென்றவர் பற்று முற்றொளித்துந், தன்னே ரில்லோன் றனே யான தன்மை" (திருவா-அண்டப்பகுதி. *130 - 145)*; இனித், திருவிளேயாட்டினினின்று பொன்றரத் தாழ்த்தமை போலவே நம்பிகள் பாட்டுவந்து ஈண்டும் உரைதாழ அருளினர் என்றலுமாம்; "அடங்காத ஆதரவான், மகவுமகிழ்ந் துவப்பார்கள் வன்மைபுரி செயலினுல், இகழ்வனவே செய்தாலு மிளம்புதல்வர்க் கின்பமே, நிகழுமது போல்" *(சாக்.நாய -புரா-10)* என்னும் கருத்து ஈண்டு வைத்துக் காணற்பாலது; "பாட்டுவந்து" *(3285-3291)*.

பின்னும் வழுத்தினுர் - என்று கூட்டுக; வரப் பொன்பெற முன்னர் வழுத்தியது போலவே, மாற்றுயர்ந்துவரப் பின்னரும் வழுத்தினுர் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; "மீட்டும்" *(3291)* வழுத்திய பதிகம் கிடைத்திலது!

3291. மீட்டுமவர் பரவுதலு மெய்யன்ப ரன்பில்வரும்
பாட்டுவந்து கூத்துவந்தார் படுவாசி முடிவெய்தும்
ஓட்டறுசெம் **பொன்னொக்க ஒருமாவுங் குறையாமற்**
காட்டுதலு மகிழ்ந்தெடுத்துக் கொண்டுகரை யேறினார். 137

மாலயனுக்கரிய பிரான்-*திருவருட் செயல் அறியவரியது என்பது குறிப்பு.* ***136***

3291. (இ-ள்) மீட்டும் அவர் பரவுதலும் - மீண்டும் நம்பிகள் அதுபற்றித் துதித்தலும்; மெய் அன்பர்...காட்டுதலும் - மெய் அன்பராகிய அவரது அன்பினில் ஊற்றெடுத்து வருகின்ற பாட்டினை மகிழ்ந்து கூத்துவந்த பெருமானார் உண்மையாகிய குறைவு நீங்கிய மாற்றுயர்ந்த செம்பொன்னை ஒரு மாப்பொன் தன்மையும் குறையாமல் காட்டுதலும்; மகிழ்ந்தெடுத்துக் கொண்டு கரை ஏறினார் - மகிழ்ச்சியுடன் கைக்கொண்டு குளத்தின் கரையினை ஏறியருளினார்.

(வி-ரை) மீட்டும் அவர் பரவுதலும் - பின்னும் "வழுத்தினார்" என்றபடி மேலும் பரவியவுடனே.

மெய் அன்பர் - "மெய்யுணர்ந்தார்" (3282) என்றவிடத் துரைத்தவை பார்க்க; **மெய்-** இயற்கை யடைமொழி.

அன்பில் வரும் பாட்டு - அன்பே காரணமாக ஊறி வெளிவரும் பாட்டு.

பாட்டுவந்து கூத்துவந்தார் - பாட்டுக் கேட்கும் காரணமாக ஓர் திருவிளையாட்டினை மேற்கொள்பவர். **உவந்து -** உவத்தலினால்; "பாட் டுவந்து திருவிளை யாட்டினின்று" (3285) என்று முன்னர்ப் பொன் வருவியா தொழிந்த நிலையிற் கூறியதும் காண்க; **"கூத்தா"** என்ற பதிகமும், அது குறித்தே முன்னரும் (3288) கூறியதும் காண்க.

படுவாசி - உளதாக்கிய மாற்றுக் குறைவு; **வாசி** -குறைவு என்ற பொருளில் வந்தது; "வாசி தீரவே" (தேவா).

வாசி குறைவெய்தும் - மாற்றுக் குறைவு நீங்கிய.

ஓட்டுஅறு - ஒட்டு என்பது எதுகை நோக்கி ஓட்டு என நின்றது; ஒட்டு - ஒப்பு.

ஒருமாவும் குறையாமல் - மா - மிகச் சிறிய அளவு. ஒன்றில் இருபதில் ஒருபங்கு 1/20 கொண்ட அளவு என்பர்.

காட்டுதலும் - எனவே முன்னர் உரைதாழ நின்றது அவ்வாறு காட்டிய அளவேயன்றிப் பொன்னின் தன்மையிற் குறைவின்று என்றபடி. இறைவர் உண்ணின்று காட்டிய அளவே உயிர் காணவல்லது என்பது ஞான நூன்முடிபு.

எடுத்துக்கொண்டு கரை ஏறினார் - அதுவரை குளத்தின் வடகீழ்பாற் படித்துறையில் நீரினுள் நின்றிருந்த நம்பிகள் கரை ஏறினார் என்பதாம். இந்த இடத்தில் இப்போது "மாற்றுறைத்த பிள்ளையார்" கோயில் விளங்குகின்றது.

3292. கரையேறிப் பரவையா ருடன்கனக மானதெலாம்
நிரையாளிற் சுமையேற்றி நெடுநிலைமா ளிகைபோக்கித்
திரையேறும் புனற்சடிலத் **திருமூலட் டானத்தார்**
விரையேறு மலர்ப்பாதந் தொழுதணைந்தார் வீதியினில். 138

கரை ஏறினுர் - நம்பிகள் கரை ஏறியவதனுல் உலகம் உண்மை அருள் நெறியினை உணரந்து கரையேறிற்று; ஆதலின் ஏறினுர் என்பது ஏற்றினுர் எனப் பிறவினைப் பொருள் கொள்ளவும் நின்றது.

பாட்டுத் தந்த கூத்தனுர்—என்பதும் பாடம். ***137***

3292. (இ-ள்) கரையேறி - கரையினில் ஏறிப்போந்து; பரவையாருடன்...போக்கி - பொன்னெல்லாம் வரிசைப்பட ஆள்களின்மேற் சுமையாக ஏற்றுவித்துப் பரவையம்மையாருடனே நீண்ட நிலையினையுடைய திருமாளிகையிற் செல்லவிடுத்து; திரையேறும்...தொழுது - அலை வீசும் கங்கையைத் தாங்கிய சடையினையுடைய திருமூலட்டானேசுவரரது மணமுடைய மலர் போன்ற திருவடிகளைச் சென்று தொழுது (அதன்பின்); வீதியினில் அணைந்தார்-(நம்பிகள்) திருவீதியில் எழுந்தருளி வந்தனர்.

(வி-ரை) கனகமான தெல்லாம் - சுமை ஏற்றிப் பரவையாருடன் - மாளிகை போக்கி என்க.

நிரை ஆளிற் சுமையேற்றி - *12,000* பொன் பெரும்பார மாதலின் ஒருவராற் சுமக்கலாற்ருது ஆளிற் சுமை ஏற்றல் வேண்டப்பட்டது. **நிரை** - ஒழுங்குபட; சுமையின் ஒழுங்கு; பல ஆட்களின் மேல் என்ற குறிப்புமாம்; **சுமை**-பாரம்.

கனகமானதெல்லாம் சுமை ஏற்றி மாளிகை போக்கிப் பரவையாருடன் தொழுது என்று கூட்டி உரைத்தலுமாம். பொன்னைத் திருமாளிகையிற் சேர்த்தலுக்கு பணி ஆட்களே போதும் என்பது; என்னை? "செம்பொன் இட்டிகைகள் ஆள்மேனெருங்கி யணியாரூர்...பரவையார்தம் மாளிகையிற்புகத் தாமும்...பெருமானுர் தம்மை வணங்கி யுவந்தணைந்தார்" (*3208*) என்ற வரலாறு போலக் காண்க.

திருமூலட்டானத்தார் - பாதம் தொழுது - "புராதனரைப் புக்கிறைஞ்சி"ப் (*3283*) போந்து அருள் வழியே பொன்வரப் பெற்ருராதலின், மீண்டு திரும்பும் போதும் அவரைத் தொழுது திருமாளிகையிற் சேர்தல் மரபு. இவை, எல்லாம் இறைவர் செயலேயாய்க் காணும் பெரியோர் செய்கை.

வீதி - இறைவர் கோயிலின்புறம் உள்ள வீதி;பரவையாரது திருமாளிகைக்குச் செல்லும் வழி பூங்கோயிலின் தெற்குத் திருவாயிலின் புறத்துத் தெற்கு நோக்கிச் செல்லும் திருவீதியில் உள்ளது.

நிரையேயாளிற் சுமத்தி—என்பதும் பாடம். ***138***

3293. வந்துதிரு மாளிகையி னுட்புகுந்து மங்கலவாழ்த்
தந்தமிலா வகையேத்து மளவிறந்தா ரொலிசிறப்பச்
சிந்தைநிறை மகிழ்ச்சியுடன் சேயிழையா ருடனமர்ந்தார்
கந்தமலி மலர்ச்சோலை நாவலர்தங் காவலனார். 139

3294. அணியாரூர் மணிப்புற்றி னமர்ந்தருளும் பரம்பொருளைப்
பணிவாரங் கொருநாளிற் பாராட்டுந் திருப்பதிகந்
தணியாத வானந்தந் தலைசிறப்பத் தொண்டருடன்
பணிவாய்ப்பே ரருள்வினவித் தொழுதாடிப் பாடுவார், 140

3293. (இ-ள்) வந்து...புகுந்து - வந்து பரவையம்மையாரது திருமாளிகையினுள்ளே புகுந்து;மங்கல வாழ்த்து...சிறப்ப - அளவற்ற பேர்கள் எல்லையற்ற வகையால் ஏத்துகின்ற மங்கல வாழ்த்தின் ஒலி சிறந்து ஏங்க;கந்தமலி...காவலனார் - மணம் பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருநாவலூரவர்களின் காவலராகிய நம்பிகள்; சிந்தை நிறை...அமர்ந்தார் - மன நிறைவாகிய மகிழ்ச்சியோடும் பரவையாருடனே விரும்பி எழுந்தருளி யிருந்தனர்.

(வி-ரை) வந்து - முன் பாட்டிற் கூறியவாறு திருவீதியிலணைந்து வந்து.

அளவிறந்தார் அந்தமிலா வகை ஏத்தும் மங்கலவாழ்த்து ஒலி சிறப்ப - என்று கூட்டுக.

சேயிழையார் - பரவையம்மையார்.

நாவலர் - நாவலூரர் என்றது நாவலர் என நின்றது.

காவலனார் - தலைவர். 139

3294. (இ-ள்) அணியாரூர்...ஒருநாளில் - அழகு பொருந்திய திருவாரூரில் மணிப்புற்றிடமாக விரும்பி எழுந்தருளிய பெருமானை நியதமாகப் பணிவாராகிய நம்பிகள் அங்கு ஒரு நாளில்; பாராட்டும்...தலைசிறப்ப - இறைவரைப் போற்றுகின்ற திருப்பதிகத்தின் கண் தணிதலில்லாத ஆனந்தம் மேலிட; தொண்டருடன்...பாடுவார் - திருத்தொண்டர்களுடனே துணிவுபடப் பேரருளின் திறங்களைத் தனித்தனி வினவுகின்ற வகையாலே தொழுதும் ஆடியும் பாடுவாராகி (நம்பிகள்).

(வி-ரை) அணி ஆரூர் - "அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்பது முதலாக வரும் திருத்தாண்டகங்கள் பார்க்க.

அமர்ந்து அருளும் - விரும்பி யிடங்கொண்டிருந்து உயிர்களுக்கு அருள்புரியும்.

பணிவார் - பாடுவார் - என்று கூட்டுக; **பாடுவார் - ஏத்தி - இன்புற்றார்** என வரும்பாட்டுடன் முடிக்க. **பாராட்டும்** - திருவருள் நிலைகளைப் பலவாறும் எடுத்துத் துதிக்கின்ற.

3295. பண்ணிறையும் வகை "பாறு தாங்கி" யென வெடுத்தருளி
உண்ணிறையு மனக்களிப்பா லுறுபுளக மயிர்முகிழ்ப்பக்
கண்ணிறையும் புனல்பொழியக் கரையிகந்த வானந்தம்
எண்ணிறந்த படிதோன்ற வேத்திமகிழ்ந் தின்புற்றார். 141

தணியாத... வினவி - இது பதிகக் கருத்தாகிய குறிப்பு; பலபடப் பாராட்டுதலும் பொருள் வினவுதலும் பதிகப் பாட்டுத்தோறும் கண்டுகொள்க.

தணியாத ஆனந்தம் தலைசிறப்ப - குறைவுபடாத சிவானந்தமாகிய பெருமகிழ்ச்சியின் அனுபவம் மேன்மேலும் சிறந்தோங்க; **தலை சிறத்தல்** - ஓங்குதல்.

தொண்டருடன் - பொருள் வினவி - தொண்டர்களுடன் கலந்து இறைவர் பெருமைகளை அறியார் போன்று வினவிப்பாடுதல் திருவருளிற்றிளைக்கும் வகைகளுட் சிறந்தது; "அன்பரொடுமரீஇ" என்பது (போதம்-12 சூத்.) ஞான நூன் முடிபு.

இது சீவன்முத்தர்களின் தன்மைகளுள் ஒன்றாகப் பேசப்படும். திருக்கண்டியூர் பிள்ளையார் பதிகமும், திருவாரூரில் முதன் முறை சாரும்போது மூவர் பதிகங்களும் பார்க்க. திருத்தொண்டின் சிறப்புடைய பதி திருவாரூர் என்பதும் குறிக்கொள்ளத்தக்கது; "பத்தர் காள்பணிந் தேத்தி னேன்பணி யீர்" என்ற பதிக அகச்சான்று காண்க.

துணிவாய பேரருள் - முடிந்த முடிபாகிய பேரருளாவது சிவனருள் வகையேயாம்; **துணிவு** - முடிந்த முடிபு.

துணிவாய பொருள் வினவி—என்பதும் பாடம். *140*

3295. (இ-ள்) பண்ணிறையும்...எடுத்தருளி - பண்ணின் இசை நிறைவுகொள்ளும் வகையாலே "பாறுதாங்கி" என்று தொடங்கியருளி; உண்ணிறையும்...தோன்ற - மனத்தின் உள்ளே நிறைகின்ற மகிழ்ச்சியினாலே திருமேனியில் மயிர்ப்புளகாங்கிதம் கொள்ளவும் கண்கள் நிறைய நீர்பொழியவும் எல்லையில்லாத ஆனந்தம் எண்ணிறந்தபடி தோன்றவும்; ஏத்தி மகிழ்ந்து இன்புற்றார் - துதித்து மகிழ்ந்து இன்பமடைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பண் நிறையும் வகை - பண் - பதிகப் பண்ணாகிய கொல்லிப் பண்; பண் - இசைப் பொதுமை உணர்த்திற் றென்றலுமாம்.

"பாறு தாங்கி" என - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு. **பாறு**-பேய்.

உண்ணிறையும்... தோன்ற - மயிர்ப்புளகமுண்டாதல் - கண்ணீர் பொழிதல் - ஆனந்தம் வெளித் தோன்றுதல் இவை உள்ளே நிறைந்த மனக்களிப்பினால் வரும் மெய்ப்பாடுகள். **கரை இகந்த ஆனந்தம் உள் நிறைந்தபடி தோன்ற** - மிக்க ஆனந்தம் உள்ளே நிறைந்தபடியினை வெளித் தோற்றத்தால் கருதலளவையால் அறியும்படி வெளிப்பட; **எண்** - எண்ணம்.

ஏத்தி - மகிழ்ந்து - இன்புற்றார் - ஏத்துதல் - வாக்கின் தொழில்; **மகிழ்தல்** - மனத்தின் தொழில்; **இன்புறுதல்** - உள்ளே நிறைந்து புறத்தில் நிகழும் மெய்ப்பாடுகளாலாகிய மெய்யின் தொழில் என மூன்று கரணங்களும் கொள்க. **141**

திருவாரூர்

''நமக்கடிகளாகிய அடிகள்'' என்ற பதிகம்.

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**

பாறு தாங்கிய காட ரோடுபடு தலைய ரோமலைப் பாவையோர்
கூறு தாங்கிய குழக ரோகுழைக் காத ரோகுறுங் கோட்டிள
ஏறு தாங்கிய கொடிய ரோசுடு பொடிய ரோவிளங் கும்பிறை
ஆறு தாங்கிய சடைய **ரோநமக் கடிக ளாகிய வடிகளே.** (1)

படிசெய் நீர்மையிற் **பத்தர் காள்பணிந் தேத்தி னேன்பணி மீரருள்**
வடிவி லான்றிரு நாவ லூரன் வனப்ப கையப்பன் வன்றொண்டன்
செடிய னாகிலுந் தீயனாகிலுந் தம்மை யேமனஞ் சிந்திக்கும்
அடிய னூரனை யாள்வ **ரோநமக் கடிக ளாகிய வடிகளே.** (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— தொண்டருடன் துணிவாய பொருள் வினவித் திருஅருளினைப் பாராட்டி மகிழ்ந்தின்புற்றது. *3294-3295*-ல் ஆசிரியர் காட்டியருளியபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பாறு-பேய்; **தாங்கிய** - தங்கிய; **படுதலையர்** - பிரமனது மண்டை ஓட்டினைப் பலிப்பாத்திரமாக ஏந்தியவர்;இறந்த பிரமவிட்டுணுக்கள் தலைகளை மாலையாக உடையவர் என்றலுமாம். **குறுங்கோட்டு இளஏறு** - குறுகிய கொம்பினையுடைய இள எருது; **சுடு பொடியர்** - உலகம் சங்கரிக்கப்பட்டதனா லுளதாகும் நீறு; **பிறை ஆறு** - பிறையும் (கங்கை) ஆறும் தாங்கிய சடை என்க; **நமக்கு அடிகளாகிய அடிகள்** - மிகப் பெரியோர்; நமக்கடிகளாகிய அடிகள் - நம்மைக் காப்பதே தொழிலாகக் கொண்டவராகிய நாம் பரவும் அடிகள். பதிக முழுதும் ஓகாரங்கள் எல்லாம் வினா; ஆனந்த அநுபவ மிகுதியில் வரும் அறிவினாக்கள்; **''பணிந்தேத்தினேன்''** *(10)* என்றபடி இவை "பாராட்டும்" வகைகள் *(3294)*;**—(2) இட்டிதாக** - விரைவாக; **நமக்கு... ஏத்துவீர்** - அவ்வவரும் மனங்கொண்டவாறு அன்பு செய்வீர்; **பட்டி ஏறு** - கூட்டத்தில் உள்ள ஏறு; **பட்டி** - அடங்காது தனிச் செல்லும் என்ற குறிப்பும். சிலேடை; **அட்டி ஆளவும்** - படிமுடி ஆட்கொள்ளவும்; **கிற்பர்** - வல்லவர்;**—(3) குன்றிபோல்வதோர் உருவர் - குன்றி** - குன்றிமணி; ஒருபுறம் சிவப்பும் ஒருபுறம் கருமையும் (அம்மை - கரிய - பசிய; அப்பர் - சிவப்பு) கொண்ட வடிவமாதலின் குன்றி போல்வது என்றார். **குறிப்பாகி** - சங்கார காரணனாகிய வதனால் - முழுமுதல்வனாகிய தலைவர் தாமே என்ற குறிப்பு. **''இன்றியே... உடையராயிலராவரோ - இலர்** - பொருளில்லவர் ஐயமேற்பவர்; இவர் இலராதல் உண்மையில் பொருளில்லாமை பற்றியோ அன்றி எல்லாமுடையராயும் இல்லவராகியோ; பின் கூறியதே பொருள் என்றது வைப்பு முறையாற் பெறவைத்தார்;''பரந்துல கேழும்

3296. இன்புற்றங் கமர்நாளி லீறிலரு மறைபரவும்
வன்புற்றி னரவணிந்த மன்னவனா ரருள்பெற்றே
அன்புற்ற காதலுட னளவிறந்த பிறபதியும்
பொன்புற்கென் றிடவொளிருஞ் சடையாரைத் தொழப்போவார்; 142

படைத்த பிரானை, யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும்" (திருமந்), **அன்றியே** - இலராதலன்றி; **மிகஅறவர்** - எல்லா அறங்கட்கும் இடமாகுவர்; -(4) **செய்யர்** - **வெள்ளை நீற்றர்** - விரோதவணி; **மானை மேவிய** - மான் கண் போன்ற; **மேவிய** - உவம உருபு; -(5) **கோணல்** - வளைவுடைய; **கொடுகொட்டி... காலர்** - **கொடுகொட்டி** - திரிபுரமெரித்த காலையில் சிவனுடியகூத்து; பதினோராடல்களுள் ஒன்று; **காலர்** - ஆடும் காலினை உடையவர்; **நாணதாக** - அரைச்சாத்தும் கயிறாக; அரைநாண்; -(6) **சாய்** - **அம்பு** - திரிபுரமெரித்த நாள் அம்பாக வந்த கருவியின் தன்மை குறித்ததுபோலும்; **மூடனேனுக்கு** - திருத்தொண்டர்களின் முன்னே தம்மைச் சிறியராயொழுகும் நிலை; -(7) **நமராங்காள்** - நம்மவர்களே; (8) **நீடு வாழ்பதி** - நிலைத்த இருப்பிடம்; **இலயம்பட ஆடுவார்** - கூத்தின் பாகுபாடுகள் அனைத்தும் ஒன்றிக்கைபட ஆடுதல்; -(9) **நமணநந்தியும்** - **தருமசேனனும்** - சமண குருமார் பெயர் மேற்கொள்ளும் வகை; அவை **நந்தி** - **வீரன்** - **சேனன்** - என்ற முடிபுகள் கொள்ளும் வழக்கு; (பிள்-ஆலவாய்- கொல்லி - 4, 6 பார்க்க.) **குமண மா மலை** - பெருமலை; **குமணம்** - அழகில்லாத; விகாரமாகிய; குமணனது மாமலை என்பாருமுண்டு; **மலைக் குன்று** - பெருமலையின் சாரலில் உள்ள சிறு குன்று - உருவுஉவமம்; **கூறையொன்று இன்றியே** - சமண குருமார் உடையின்றி நக்க உருவத்துடன் சரித்தல் குறிப்பு; **ஞமண...ஞோணமென்றோதி** - சமணர் மந்திரங்களின் வகைக் குறிப்பு; மூக்கினால் உச்சரிக்கும் மெல்லெழுத்துக்களா லாகியவை; "மூக்கினான் முரன் றோதி' (தேவா); **யாரையுநாணிலா** - யார் பக்கமும் நாணமில்லாதொழுகும்; ஆளுடைய அரசுகள், பிள்ளையார் இவர்களது அருட் செயல்களால் முன்னரே பெரும்பான்மை அழிவுபட்டொழிந்த சமணம் முற்றும் அழியாது அதற்கு ஏறக்குறைய முந்நூறாண்டுகளின் பின் நம்பிகளின் நாளினும் அங்கங்கும் சிறிது சிறிது தலைகாட்டிச் சைவத்தினைப் பழித்துத் திரிந்ததென்பது சரித வரலாற்றானறியப்படும். அகச்சான்று; இந்நாளினும் அத்தகைய சமணம் உளது என்பதும் கருதுக. **சமணரால் பழிப்பு** - புறச்சமயங்களுட் பெரும்பான்மை பற்றிச் சமணத்தைக் கூறினும் இனம் பற்றி ஏனைய புத்தம் முதலியன வேதாகமநிந்தகரையும் உடன் கொள்க; -(10) **படி செய்** - **நீர்மை** - இதன்படி என்று உலகர் படியெடுத்து ஒழுகும் மேல் வரிச் சட்டமாகக் கொள்ளும்படி அன்பு செய்யும் தன்மை; **அருள் பணியீர்** - என்க; **அருள்** - அருளின் வண்ணங்கள்; **வடிவிலான்** - உருவில்லவன்; **செடியன்** - இழிசெயல் செய்வோன்; **தீயன்** - தீமை செய்வோன்; **தன்மையே** - அடிகளையே.

3296. **(இ-ள்)** இன்புற்று அங்கு அமர்நாளில் - இன்பம் பொருந்தி அங்கு விரும்பி எழுந்தருளியிருக்கும் நாட்களிலே; ஈறில்...அருள் பெற்றே - அளவில்லாத அரிய வேதங்கள் துதித்தேத்துகின்ற வலிய புற்றின் அரவினை அணிந்த மன்னவனாரது திருவருள் விடைபெற்றே; அன்புற்ற காதலுடன் - அன்பினானிறைந்த பெரு விருப்பத்தினோடும்; அளவிறந்த... தொழப்

3297. பரிசனமு முடன்போதப் பாங்கமைந்த பதிகடொறுங்
கரியுரிவை புனைந்தார்தங் கழலிருழுது மகிழ்ந்தேத்தித்
துரிசறுநற் பெருந்தொண்டர் **நள்ளாறு தொழுவதற்குப்**
புரிவுறுமெய்த் திருத்தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கணைந்தார். 143

போவார் - அளவில்லாத பிற பதிகளிலும் பொன்னொளியும் கரிது என்று சொல்லும்படி ஒளிமிக்கு விளங்கும் சடையினையுடைய இறைவரைத் தொழுதெழுந்து போவாராகி;

(வி-ரை) ஈறில் அருமறை - "வேதங்கள் அநந்தம்" என்பர்; அளவில்லாத சாகை, உபசாகைகளோடு கூறியன.

வன்புற்றின் அரவு அணிந்த மன்னவனார் - வலிய புற்றில் வாழும் அரவு என்பது அரவுகளின் இயல்பு குறித்தது; இறைவர் பூணும் அரவுகள் புற்றில் வாழ்வன என்பதன்று; **அரவணிந்த வன்புற்றின் மன்னவனார்** என்று மாற்றி புற்றிடங்கொண்டார் எனப் பொருள் கொள்ளுதலுமாம்.

அருள் பெற்றே - அருள் விடைபெற்றே. **பிறபதியும் - போவார்** - என்று கூட்டுக.

பொன்புற்கென்றிட ஒளிரும் சடை - புற்கென - ஒளி குறைந்து வறிதாகக் காட்ட; சடை பொன்னினும் மிக்கு விளங்கும் என்பது. ***142***

3297. **(இ-ள்)** பரிசனமும் உடன் போத - பணி செய்யும் பரிசனங்களும் தம்முடன் வர; பாங்கமைந்த...மகிழ்ந்தேத்தி - பக்கத்தில் உள்ள பதிகளிலெங்கும் சென்று யானைத் தோலினைப் போர்த்த இறைவர் திருவடிகளைத் தொழுது மகிழ்ச்சியுடன் துதித்து;துரிசறுநற் பெருந் தொண்டர் - குற்றந் தீர்க்கும் நல்ல பெரிய தொண்டராகிய நம்பிகள்; நள்ளாறு...புக்கணைந்தார் - திருநள்ளாற்றினைத் தொழுவதற்கு நினைந்து சென்று சிவ சிந்தனை மறவாத உண்மைத் திருத்தொண்டர்கள் எதிர்கொள்ள அங்குப் புகுந்து அணைந்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) பரிசனமும் உடன்போத - பரிசனம் - பணி செய்யும் ஏவலாளர்கள்; சுவாமிகளுடன் பரிசனங்கள் செல்வதனை முன் "புடையெங்கு மிடைகின்ற பரிசனமுந் துயில்கொள்ள" (230) என்ற விடத்துக் குறிப்பாலுணர்த்தினர் ஆசிரியர். இங்கு இவர்களை மீண்டும் எடுத்து விதந்து கூறவேண்டுவ தென்னையோ? எனின் உலக நிலையில் பரிசனங்கள் ஓரளவு பணி செய்து துணையாவதன்றி வேண்டிய அங்கங்கும் முற்றத்துணையாய் வருவதில்லை; நம்பிகள்பால் முற்றவும் உள்ளும் புறம்பும் வழித்துணையாய் நின்று வேண்டிய இடத்தெல்லாம் துணை செய்து உதவுபவர் இறைவர் தாமேயாம் என்பதனை இனி வரும் வரலாற்றில் திருக்குருகாவூரில், பொதி சோறளித்தும், திருக்கச்சூ ராலக்கோயிலில் சோறிரந்து கொணர்ந்தளித்தும் அருளுமாற்றால் விளங்க வைக்கின்றார் இறைவர் என்பது குறிப்பால் அறிக. **பரிசனமும்** - உடனின்று உதவும் துணையாய் எண்ணப்படும் பரிசனமும் என்று உம்மை சிறப்பு.

3298. விண்டடவு கோபுரத்தைப் பணிந்துகர மேற்குவித்துக்
கொண்டுபுகுந் தண்ணலார் கோயிலினை வலஞ்செய்து
மண்டியபே ரன்பினெடு மன்னுதிரு நள்ளாறர்
புண்டரிகச் சேவடிக்கீழ்ப் பொருந்தநில மிசைப்பணிந்தார். 144

பாங்கு அமைந்த பதிகள் பாங்கு பக்கம்; இவை முன்னர் உரைக்கப்பட்டன. திருவிளமர், திருப்பள்ளியின் முக்கூடல் முதலாயின என்பது கருதப்படும்.

துரிசறு நற் பெருந் தொண்டர் - திருவாரூர் நம்பிகள். **துரிசு அறும்** - வந்து அடைந்து வழிபடும் மக்களது துரிசுகள் அறுதற் கேதுவாகிய; அறுவிக்கும்.

புரிவுறும் - இறைவரது பணிகளையும் அடியார் பணியினையுமே எப்போதும் நினைந்திருப்பவர்; **புரிதல்** - இடைவிடாது செய்தல்; **திருத்தொண்டர்** - திருநள்ளாற்றில் உள்ள தொண்டர்கள்; **எதிர்கொள்ள** - வந்து எதிர்கொள்ளச் சென்று.

புக்கு - திருநள்ளாற்றினுள்ளே புகுந்து. ***143***

3298. **(இ-ள்)** விண்தடவு...புகுந்து - ஆகாயத்தை அளாவிய திருக்கோபுரத்தின் முன்பு நிலமுறப் பணிந்து எழுந்து கைகளை உச்சிமேற் குவித்துக் கொண்டு உள்ளே புகுந்து;அண்ணலார்...வலஞ் செய்து - நம்பிகள் திருக்கோயிலினை வலமாக வந்து; மண்டிய... பணிந்தார் - மிக்கெழுந்த பேரன்பினேடும் நிலை பெற்ற திருநள்ளாற் றிறைவரின் தாமரை போன்ற அழகிய திருவடிகளிலே பொருந்தும்படி நிலமுற வீழ்ந்து வணங்கினர்.

(வி-ரை) விண் தடவுதல்-விண்ணின்மேல் மிக உயர்தல்.

அண்ணலார் - நம்பிகள்; **அண்ணலார் கோயில்** என்று கூட்டி இறைவரது கோயில் என்றுரைப்பாரு முண்டு;

மண்டிய - செறிந்து மிக்கு மேலெழுந்த.

நள்ளாறர் - "நள்ளாறனை அமுதை" என்பது பதிக ஆட்சி.

சேவடிக்கீழ்ப் பொருந்த நிலமிசைப் பணிந்தார் - அடி யென்பது நிலமுற உள்ள தென்பது ஏனையோர்க்கு ஒக்குமாயினும் இறைவர்பால் உபசார மாத்திரையாய் நிற்கும்; அவ்வுபசார வழக்கே பற்றி இவ்வாறு கூறினர். இறைவர் திருமுன்பு நிலமுற வீழ்ந்து பணிதல் தம்மை முழுதும் அவர் வசமாக்கும் நிலை காட்டுவதாம். ***144***

3299. **(இ-ள்)** அங்கணரை...போய் - இறைவரை வணங்கித் துதித்துத் திருவருள் விடை பெற்றுத் தொழுது சென்று; மங்குலணி...வந்தெய்தி - மேகங்கள் தவழும் அழகிய மாடங்கள் நிறைந்த திருக்கடவூரில் வந்து சேர்ந்து; திங்கள்...பணிந்து - சந்திரன் வளர்தற்கிடமாகிய திருமுடியினை உடைய இறைவரது திருக்கடவூர்த் திருமயானத்தினையும் வணங்கி; பொங்கும்...போற்றி - மேன்மேல் பொங்கும் இசையினையுடைய திருப்பதிகத்தினை "மருவார் கொன்றை" என்று தொடங்கிப் போற்றி,

(வி-ரை) அங்கணர் - திருநள்ளாறர்; **அருளினல்** - அருள்விடை பெற்று.

3299. அங்கணரைப் பணிந்தேத்தி யருளினாற் றெழுதுபோய்
மங்குலணி மணிமாடத் **திருக்கடவூர்** வந்தெய்தித்
திங்கள்வளர் முடியார்தந்**திருமயா னமும்** பணிந்து
பொங்குமிசைப் பதிக "**மருவார் கொன்றை**"யெனப்போற்றி. 145

3300. திருவீரட் டானத்துத் தேவர்பிரான் சினக்கூற்றின்
பொருவீரந் தொலைத்தகழல் பணிந்து "**பொடி யார்மேனி**"
மருவீரத் தமிழ்மாலை புனைந்தேத்தி மலைவளைத்த
பெருவீரர் **வலம்புரத்துப்** பெருகார்வத் தொடுஞ்சென்றார். 146

ஏத்தி - இப்பதிகம் இப்போது கிடைத்துள்ள பதிகத்தின் வேறு என்பது கருதப்படும்.

திருமயானமும் பணிந்து - உம்மை - திருக்கடவூரிலே பணிந்ததன்றித் திருமயானத்தினையும் என இறந்தது தழுவிய எச்சவும்மை.

திருமயானம் - திருக்கடவூரும் திருமயானமும் ஒரே பதியின் இரு கூறுகளாக அமைந்து வழிபடப்படுவன; "திருக்கடவூர் மயானம்" என்ற வழக்கும் காண்க. கடவூர் என்பது **ஊர்**; பதி; அதனுள் திருமயானம் ஒருதலம்; வீரட்டம் ஒரு தலம். "கடவூர் மயானத்து" என்றும், "கடவூர்தனுள் வீரட்டத்து" என்றும், "கடவூரின் மறையோரேத்தும் மயானத்து" என்றும் வரும் பதிகம் பார்க்க.

பொங்கும் இசை - இசை வளரப் பயிலப்படும் தன்மை குறித்தது.

மருவார் கொன்றை - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

போற்றி - பணிந்து - ஏத்திச் - சென்றார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.
145

3300. **(இ-ள்)** திரு வீரட்டானத்து...பணிந்து - திருக்கடவூர்த் திருவீரட்டானத்திலே அமர்ந்தருளும் தேவதேவரது, கோபமுடைய கூற்றுவனுடைய பொரு வீரத்தினைத் தொலைத்த திருவடியினைப் பணிந்து; "பொடியார் மேனி" என்று தொடங்கும் அன்பு மிக்க தமிழ்மாலையினைப் புனைந்து துதித்து; மலைவளைத்த...சென்றார் - பொன் மலையினை வில்லாக வளைத்த பெரு வீரராகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருவலம்புரத்திலே பெருகிய ஆர்வத்தோடும் சென்றருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) திருவீரட்டானம் - திருக்கடவூரில் கால சங்காரம் செய்த இறைவர் எழுந்தருளியுள்ள கோயில்; "யமன் கடவூர்."

சினக் கூற்றின் பொரு வீரம் தொலைத்த கழல் - கூற்று - காலன் - இயமன்; பொருவீரம் - பொருகின்ற வெற்றியுடைய வீரம் - ஆண்மை.

பொடியார் மேனி - பதிக முதற் குறிப்பும் தொடக்கமுமாம்.

மருவு ஈரம் தமிழ்மாலை - ஈரம் - குளிர்ச்சி; ஈண்டு அன்பு குறித்தது; "என்னமுதே எனக்கார்துணை நீயலதே" என்ற பதிக மகுடத்திற் போதரும் அன்பு நிறைந்த நிலைக் குறிப்பு.

மரு - வீரத் தமிழ்மாலை - என்று வீரம் பொருந்திய என்றலுமாம்; வீரமாவது அன்பின் முதிர்ந்த விளைவு - "ஈர வன்பினர் யாதும் குறைவிலார், **வீர** மென்னுல் விளம்பும் தகையதோ?" (*144*) என்ற கருத்துக் காண்க.

மலைவளைத்த பெருவீரர் - வளையாத மலையை வளைத்த பெரு வீரமன்றி, அவ்வாறு வளைத்த வில்லின் சேவகம் செய்யாமலே சிரித்து வெற்றிகொண்ட பெரு வீரமும் குறித்தது; **வளைத்த** - மட்டேயன்றிப் பயன்படுத்தாத என்ற குறிப்பும் காண்க.

இப்பதிகக் குறிப்பு ஒன்றும் ஈண்டு ஆசிரியர் காட்டியருளவில்லை. இப்பதிகத்திற் காணப்படும் "அடியேற் கெளிவந்த தூதனை" "செய்த துரிசுகள் பொறுக்கும்" என்பவை இனிமேல் வரும் நிகழ்ச்சிகளைக் குறிப்பன; ஆதலின் இப்போது உள்ள "செம்பொன்மேனி" என்ற (தக்கேசிப் பண்) இப்பதிகம் பின்னர் வேருெரு சமயம் பாடியருளப்பட்டதென்பது கருதப்படும்; ஆயினும் அவ்வாறுள்ள வரலாறு ஆசிரியர் கூறியருளாமையானும், திருநள்ளாற்றுக்கு நம்பிகள் பதிகம் இஃதொன்றே கிடைத்துள்ளமையானும் இப்பதிகம் ஈண்டுத் தந்து குறிப்புக்களும் தரப்படுவன. *146*

திருநள்ளாறு

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி. 7-ம் திருமுறை**

செம்பொன்மேனிவெண் ணீறணி வானைக் கரிய கண்டனை மாலயன் காணுச்
சம்பு வைத்தழ லங்கையி னுனைச் சாம வேதனைத் தன்னெப்பி லானைக்
கும்ப மாகரி யின்னுரி யானைக் கோவின் மேல்வருங் கோவினை நங்கள்
நம்ப **னைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே**. (1)

மறவ னையன்று பன்றிப்பின் சென்ற மாயனை நால்வர்க் காலின்கீ ழுரைத்த
அறவ னையம ரர்க்கரி யானை **யமரர் சேனைக்கு நாயக னுன**
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற கோனை நான்செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறைவி ரியுநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (7)

மாதி னுக்குடம் **பிடங்கொடுத் தானை** மணியி னைப்பணி வார்வினை கெடுக்கும்
வேத னைவேத வேள்வியர் வணங்கும் விமல னையடி **யேற்கெளி** வந்த
தூத னைத்தன்னைத் தோழமை யருளித் தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்
நாத னைநள் ளாறனை யமுதை நாயி னேன்மறந் தென்னினைக் கேனே. (8)

செறிந்த சோலைகள் சூழ்ந்தநள் ளாற்றெஞ் சிவனை நாவலூர்ச் சிங்கடி தந்தை
"மறந்து நான்மற்று நினைப்பதே" தென்று வனப்ப கையப்ப னூரன்வன் ருெண்டன்
சிறந்த மாலைகொ டைஞ்சினே டைஞ்சுஞ் **சிந்தை யுள்ளுரு கிச்செப்ப வல்லார்க்**
கிறத்து போக்கில்லை வரவில்லை யாகி யின்ப வெள்ளத்து ளிருப்பர்க ளினிதே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—*திருநள்ளாற் றிறைவரை நாயேனேன் மறந்து என்னினைக்கேன்.* "மறந்து நான்மற்று நினைப்பதேது" *(பதிகம் 10)*

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) செம்மை - வெண்மை - கருமை - விரோத அணி; முரண்டொடையுமாம். **கும்பமாகரி**-குடம் போன்ற மத்தகத்தையுடைய பெரிய யானை; **கோவின் மேல்வரும் கோ - கோ** - பசு; எருது; **கோ**-தலைவர்; **(2) பரசுவார்**- துதிப்பவர்; **குரை...கோனை** - கடலேழு; வரையேழு; உலகேழு; என்பது;—**(3) பூவில் வாசம்** - பூவில் மணம் போல எங்கும் அத்துவிதமாகப் பரந்து கலந்திருப்பவன்; **புவியை...வெளி** - ஐம்பூதங்கள்; **காமரம்** - சீகாமரப்பண்; **(4) நீங்ககில்லானை** - நீங்கமாட்டாதானை;—**(5) ஏழையேற்கெளிவந்த பிரானை** - நம்பிகள் சரித அகச்சான்று; மேல் 8-வது பாட்டுப் பார்க்க; **(6) காமகோபன்** - காமனைச் சினந்து எரித்தவன். இவ்வரிய சொற்றொடரின் தமிழ்ச்சுவை அநுபவிக்கத் தக்கது; **சொற்பதப் பொருள்... சோதியை - சொற்பதம்**-சொல்லாயும் அதன் காரணமாயும் உள்ள உரைகள்; சத்தப் பிரபஞ்சம் என்பர்; **பொருள்** - உரையால் நுதலப்படும் பொருட் பிரபஞ்சம்; "உரையின் வரையும் பொருளினளவும் இருவகைப்பட்ட எல்லை" (பட்டினத்து அடிகளார் - கோயி னான்மணி மாலை); **இருள் அறுத்த**லாவது இவை மயக்கங்களை உணர்த்தாது உண்மைஞான முணர்த்தும்படி காட்டுதல்; **வெண்ணெய்நல்லூரில்... ஆளது கொண்டநற்பதம்** - நம்பிகளை தடுத்தாட் கொண்ட சரிதவரலாற்றின் அகச்சான்று; **நற்பதம்** - திருவடி; **பதம்** - சொல் என்று கொண்டு, "இவன் என் அடியான்" என்று சொன்ன நல்ல திருவாக்குடையவன் என்றலுமாம்;— **(7) மறவன்** - வேடன்; **பன்றிப்பின் சென்ற** -அருச்சுனன் பொருட்டு வேடனாகிப் பன்றியைத் துரத்தி ஓடிய வரலாறு; **நால்வர்**- சனகாதி முனிவர்கள்; **அறவன்** - அறமுரைத்தவன்; **அறம் உரைத்தவனை** என்று விகுதி பிரித்துக் கூட்டுக. **அமரர் - சேனைக்கு நாயகன்** - முருகப்பெருமான்; தேவசேனாபதி; **நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்** - "துரிசுகள்" என மேற்பாட்டிற் கூறுவதும், "யான் செய்யுந் துரிசுகளுக் குடனாகி" (தேவா) என்பதும் காண்க;—**(8) உடம்பு - இடம்**- உடம்பில் ஓர் இடம் என்றும், இடப்பாகம் என்றும் சிலேடை நயம்பட உரைக்க நின்றது; **வேதன்** - வேதங்களைச் சொன்னவன், வேதங்களாற் சொல்லப்பட்டவன் என்றும், வேதிப்பவன் என்றும் உரைக்க நின்றது; **வேதித்தல்** - வினைகெடுத்து உயிரைத் தன் மயமாக்குதல்; **அடியேற் கெளிவந்த தூதன்** - பரவையார் ஊடல் தீர்க்கத் தூது சென்ற வரலாறு; இது பின்னர் நிகழ்வது; **துரிசுகள்** - குற்றங்கள்; இப்பதிகம் பின்னர் அருளப்பட்டதாமென்று கொள்ள நின்ற ஆதரவுகள் இவை;—**(9) நாமம்** - இராவணன் (அழுபவன்) என்ற பெயர்;—**(10) "மறந்து...நான்மற்று - நினைப்பதேது** என்று பதிகக் கருத்தும் குறிப்புமாம்; **சிந்தை வல்லார்க்குப்** பதிகத்தினைப் பயிலும் முறை; **இறந்துபோக்கு** - இறப்பு; **வரவு** - பிறவி; **இன்ப வெள்ளம்** - மீளா நெறியில் துய்க்கப்படும் சிவானந்தம்.

தலவிசேடம்:—திருநள்ளாறு - தொகுதி III பக்கம் 551 பார்க்க.

திருக்கடவூர்த் திருமயானம்

திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம். 7-ம் திருமுறை**

மருவார் கொன்றை மதிசூடி மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரம னிந்திரற்குந் தேவர் நாகர் தான வர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப் பெரிய பெருமா னடிகளே. (1)

மாட மல்கு **கடவூரின்** மறையோ ரேத்து **மயானத்துப்**
பீடை தீர வடியாருக் கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூர னம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற் பாவ மான பறையுமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—அடியார்க்குப் பீடை தீர அருளுபவர் திருக்கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே. (பதிகம்-10 பார்க்க.)

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) **மரு** - மணம்; வாசனை; **விடைமேல் வருவார்** - பிள்ளையார் பதிகமும் பார்க்க; **பெரிய பெருமானடிகள்** - இப்பதியிற் சுவாமி பெயர்; பதிக மகுடம் இதுவே யாதல் காண்க;—(2) உமை ஓர் பாகம் பெண் - ஒரு பாகம் ஆண் என்று கூட்டுக;—(3) **பல்லுயிர்க்கும் தாயும் தந்தையும் ஆய** - என்க; **பேய்கள்** - சிவபூதங்களாகிய நற்கணங்கள்;—(4) **இறையராவர் எல்லார்க்கும்** - சங்கார காரணராகிய முதல்வரே உலகிற்கு முழுமுதல்வர் என்ற ஞானநூல் முடிபு உணர்த்தியது. (போதம்.1. சூத்); **எல்லார்க்கும்** - எல்லா உயிர்களுக்கும் தேவர்களுக்கும்; **இல்லைஎன்னது அருள்செய்வார்** - "பின்னை என்னுர் பெருமானடிகளே" (தேவா)—(5) **கொத்தார் கொன்றை** - சரக்கொன்றை; **மருப்பும் ஆமைத்தாலியார்** - யானைக் கொம்பும் ஆமை ஓடும் அணிந்தவர்; **தாலி** - பூண் என்ற பொருளில் வந்தது;—(6) **துணிவார்** - துணித்து நீளமாக வளர்ந்து கிழிக்கப்பட்ட; **துதைந்து** - உடுத்து; **பஞ்சவடி** - மயிர்ப்பூணூல்; மாவிரதியர் என்னும் உட்சமயத்தார் அணிவது;மானக்கஞ்சாற நாயனுர் புராணம் பார்க்க;பணி மேலிட்ட பாசுபதர் - பாம்புகளைப் பூண்ட பாசுபத வேடத்தார்; **பணி** - பாம்பு; **பாசுபதம்** - உட்சமயங்களாறனுள் ஒன்று; **பிணிவார்** - பிணித்து நீண்ட;—(7) **ஊர்தான்...ஆரூர்** - ஏழுலகும் தம்முடையனவாகவுடைய அவருக்கு ஊர் ஒற்றியூரும் ஆரூருமாவன; **ஒற்றியூர்** - ஒற்றிவைத்த ஊர்; **ஆரூர்** - ஊரை உடையவர் இன்னுரென்றறிய வாராது யாருடைய ஊர் என்று வினவப்படும் குறிப்புடன் கூறியது காண்க; நம்பிகளின் பிராட்டியர் இருவருள் ஒருவர் திருவாரூரிலும், மற்ற ஒருவர் திருவொற்றியூரிலுமாக வந்த குறிப்பும் காண்க;—(8) இப்பாட்டு அம்மையாருடன் வேடனுய் வந்து அருச்சுனனது தவநிலை கண்டு அவனுடன் போர் செய்து பாசுபதம் அளித்த வரலாறு குறித்தது; **நாடாவண்ணம் செருச்செய்து** - அவன் தம்மை அறிந்து கொள்ளாதவாறு போரிட்டு; **ஆவநாழி** - அம்பருத் துணி; இனம்பற்றிப் பாசுபதாத்திரமும் உடன் கொள்க;—(9) **வேள்வி** - தக்கன் வேள்வி; **ஏழைத் தலைவர்** - ஐயமேற்றுண்ணும் தன்மையராயினும் தலைவர்; **பேழை** - பெரிய;—

(10) பீடை தீர - துன்பம் நீங்க; ***பீடை***- கோள்களின் கொடுமைப் பீடிக்கப்படும் **நிலை;** ***பீடை...சீர்*** - பதிகக் கருத்தும் குறிப்புமாம்.

தலவிசேடம்:— திருக்கடவூர் மயானம் - காவிரித் தென்கரை - 48-வது பதி தொகுதி III பக்கம் 568 பார்க்க.

திருக்கடவூர்

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம். 7-ம் **திருமுறை**

பொடியார் மேனியனே புரி நூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வள ரங்கையி னங்கையொடுங்
கடியார் கொன்றையனே **கட வூர்தனுள் வீரட்டத்தெம்**
அடிகே ளென்னமுதே யெனக் கார் துணை நீயலதே. (1)

காரா ரும்பொழில்சூழ் கட வூர்த்திரு வீரட்டத்துள்
ஏரா ரும்மிறையைத் துணை யாவெழி லுவலர்கோன்
ஆரூ ரன்னடியா னடித்தொண்ட னுரைத்ததமிழ்
பாரோ ரேத்தவல்லார் பர லோகத் திருப்பாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "என் அமுதே! எனக் கார்துணை நீயலதே" என்ற பதிக மகுடம் காண்க; "**துணையா** - உரைத்த" (பதிகம்,10)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- ***(1)*** **பொடி** - திருநீறு; **வேல் வளர்** - வேலினையுடைய; **அங்கையின்** - கையினுடனே; **மங்கை** - உமை அம்மை; **வளர் கங்கையின் மங்கையொடும்** - என்பதும் பாடம்; **அமுதே** - கால சங்காரம் செய்து உயிர் தருதலின் அமுதம் போன்றவர்; இங்குச் சுவாமி பெயர் (அமுத கடேசர்) கலயர் - என்பதும் குறிப்பு. **ஆர் துணை நீயலதே** - எதிர்மறையாற் கூறியது உறுதிப் பொருள் குறித்தது; இறப்பு வாராமல் அதனுல், பிறப்பும் வாராமற் காத்தலின் உயிர்களுக்கு உற்ற துணையாவார் இவ்விறைவரே என்பது;— ***(2)*** **கறை**-விடம்;— ***(3)*** **உயிர்** - நடுநிலைத்தீபம்; காலனுயிர் கொன்றுய்; மறையோனுக்குயிர் கொடுத்தாய் என முன்னும் பின்னுமாக இருவழியும் கூட்டுக;— ***(4)*** **என் ஆராவமுதே** - என்க; **ஆரா** - என்றும் நிறைவு பெறுத;— ***(5)*** **உயிருட் புகுந்தாயின்னம் போந்தறியாய்- புகுதல்** - நீக்கமின்றி உயிர்க்குயிராய் உள்ளே நிறைதல்; **போந்தறியாய்** - நிறைதலில் விட்டு அறியாதவர் என்றதாம்;— ***(6)*** **மண்... கால்**- ஐம்பூதங்கள்;— ***(7)*** **எரியார்** - தீப்போன்ற செம்மையுடைய; **இளநாகம்** - "முற்ற லாமையிள நாகம்" (தேவா) **நரியாரும் சுடலை** - சுடலையின் இயற்கையடை;— ***(8)*** **வேரு உன்அடியேன்** - "திருவின் மிக்கார் யாவரையும் வேறடிமை யாவுடைய" *(183)*; **தேறேன்** - பொருளென்று மதியேன் - கொள்ளேன்;— ***(9)*** **கயம்** - நீர்; நீர் நிலை என்றலுமாம்;அயனே - ஐயன் என்பது அயன் என நின்றது;—***(10)*** **துணையா** - துணை என்று போற்றி; **துணையா உரைத்த** - என்று கூட்டுக; துணையாக என்பது துணையா என நின்றது.

3301. வரையோடு நிகர்புரிசை வலம்புரத்தார் கழல்வணங்கி
உரையோசைப் பதிக "மெனக் கினி" யோதிப் போய்ச்சங்க
நிரையோடு துமித்தூப மணித்தீப நித்திலப்பூத்
திரையோதங் கொண்டிறைஞ்சுந் திருச்சாய்க்கா டெய்தினுர். 147

தலவிசேடம்:- திருக்கடவூர் - காவிரித் தென்கரை-47-வது பதி. தொகுதி III பக்கம் 565 பார்க்க.

3301. (இ-ள்) வரையோடு...கழல் வணங்கி - மலையோடோத்த மதிலையுடைய திருவலம்புரத்தில் எழுந்தருளிய இறைவர் திருவடிகளை வணங்கி; உரை...போய்- சொல்லும் பொருளும் ஒத்தியையும் "எனக்கினி" என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடியருளி மேற்சென்று; சங்க நிரையோடு...கொண்டிறைஞ்சும் - சங்கு வரிசைகளாகிய வாத்தியங்களுடனே, அலைநுரைத்திவலைகளாகிய தூபத்தையும், நவமணிகளாகிய தீபத்தையும், முத்துக்களாகிய பூக்களையும், அலைகளாகிய கைகளினுற் கடல் ஏந்திக்கொண்டு வழிபாடு செய்தற்கிடமாகிய;திருச்சாய்க்காடு எய்தினுர் - திருச்சாய்க்காட்டினை அணைந்தனர்.

(வி-ரை) வரையோடு நிகர் - ஓடு - மூன்றனுருபு வரையை நிகர் என இரண்டனுருபாய் வந்தது.

உரை ஓசைப் பதிகம் - உரை - பொருள்; ஓசை - சொல்; சொல்லும் அதன் பொருளும் ஒத்தியைந்து நடக்கும் பதிகம். உரைக்கப்படும் பண்ணமைதியாகிய ஓசையினை உடைய என்றலுமாம்; இப்பொருளில் ஓசை பதிகப்பண்ணுகிய காந்தாரப் பண் குறித்தது.

பதிகம் "எனக்கினி" - ஓதி - எனக்கினி என்று தொடங்கும் பதிகம் பாடியருளி; முதற் குறிப்பு.

போய் - அத்திருப்பதியினை அகன்று மேற் சென்று;

சங்கநிரையோடு... கொண்டிறைஞ்சும் - சங்கநிரை - வாத்தியமாக; இது வழி பாட்டு முறையில் வரும் ஓர் உபசார வகை; தூபம், தீபம், பூ இவை இன்றியமையாத வேறு வகை; இன்றியமையாத உபகரணங்களின் வகையாம். ஆதலின் முன்னதனை ஓடு உருபு தந்து வேறு பிரித்துக் கூறினுர்.

துமித்தூபம் - அலைநீர்த் திவலைகள் தூபப் புகையாகவும், மணித்தீபம் - நவமணிகள் தீபங்களாகவும், நித்திலப்பூ - முத்துக்கள் வெண் மலர்களாகவும், திரை - இவற்றை ஏந்தும் கைகளாகவும், ஓதம் - வழிபடும் அன்பராகவும் உருவகப் படுத்தினுர்; இஃதேசதேசவுருவகம். சிவமயமாகிய தெய்வக்கண் கொண்டு காண்பார்க்கே இவ்வுருவக நிலை காணப்படும்; 1905 -1907 முதலியவை பார்க்க. ஓதம் - பூசைக்குரிய நீரும் குறித்தது. "வம்பு லாமலர் நீரால் வழிபட்டு...இறைஞ்சலின்" (57) என்று காவிரிக்குச் சொல்லியவை இங்கு நினைவு கூர்தற்பாலன. தற்குறிப்பேற்ற அணியும் உருவகமும் விரவி வந்தது.

ஓதம் தூப தீபம் பூக்கொண்டிறைஞ்சும் - திருச்சாய்க்காடு - இப்பதி கடற்கரையில் உள்ள நிலையும் உணர்த்தப்பட்டது. 147

திருவலம்புரம்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம். 7-ம் திருமுறை**

எனக்கினித் தினைத்தனைப் புகலிட மறிந்தேன்
பனைக்கனிப் பழம்படும் பரவையின் கரைமேல்
எனக்கினி யவன்றமர்க் கினியவ னெழுமையும்
மனக்கினி யவன்றன **திடம்வலம் புரமே.** (1)

வருங்கல மும்பல பேணுதல் கருங்கடல்
இருங்குலப் பிறப்பர்த மிடம்வலம் புரத்தினை
அருங்குலத் தருந்தமி ழூரன்வன் றொண்டன் சொற்
பெருங்குலத் தவரொடு பிதற்றுதல் பெருமையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— எழுமையும் எனக்கினியவன் றன திடம்வலம் புரமே" என்ற பதிக மகுடம் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) இனி எனக்குத் தினைத்தனைப் புகலிடம் - இதுவரை எனக்குப் பற்றுக்கோடாகிய புகலிடம் காணாதிருந்த நான் ஒரு சிறிது பற்றுக்கோடு உள்ளதென்று; **தினைத்தனை** - தினையின் அளவு; "தினைத்தனையுள்ளது" (திருவா) **தனை** - அளவு; **பனைக்கனிப் பழம்** - பனையின் கனிந்த பழம்; **பரவை** - கடல்; **எழுமை** - எழுவகைப் பிறப்பு; **மனக்கு** - உயிருக்கு; **மனம்** - உயிர்; "மனமணி யிலிங்கமாக" (தேவா) வலம்புரமேயிடம் என்க; **இடம் வலம்புரம்** - சொல்லணி; **பனை**- நெய்தற்கரு;— **(2) வளைந்த** - பயன்படுத்தப் படாது வளைந்த மட்டில் அமைந்து புரம் எரிதர; **அரவுரியிரந்தவன்** - பாம்பும் யானை உரியும் அணிந்து பிச்சை ஏற்பவன்? **(3) நெருப்புமிழ்** - தீப்போன்ற மூச்சுக்காற்று; தீவிடம் என்றலுமாம்; **கூறணி கொடுமழு** - துண்டப்படுத்தும் வளைந்த வடிவுடைய மழுவாயுதம்: **அழல்வளர்** - தீயை ஒரு கையில் வளர்க்கின்ற;—**(4) கொங்குஅணை சுரும்புண நெருங்கிய - கொங்கு** - தேன். வண்டுகள் தேன் உண்ணும்படி நெருங்கிய பாளைகளையுடைய; **புடைதர** - மோத - ஒரு சொல்; **புடைத்தல்** - மோதுதல்; பக்கத்தில் தர - **புடை** - பக்கம் - என்றலுமாம். அலைகள் மோத;—**(5) கொடுமழுவிரகினன்** - கொடிய மழுவினை ஏந்திய தொழில் உடையவர்; **கொடு** - வளைந்த வடிவு என்றலுமாம்; **விரகு** - தொழிலுபாயம்; **சிறுமையில்**-சிறிய செயலினாலே; ஈண்டுச் சிரித்தே எரித்த செயல் குறித்தது; **நிரவவல்லவன்** - அழிக்க வல்லவன்; **வல்லமை** - வேறெவர்க்கு மியலாத ஆண்மை; **படுமணி..அடைகரை** - மணிகளும் முத்தும் பவளமும் மணலுடன் கலந்து அடையும் கரையினையுடைய; **படுதல்** - உண்டாதல்;—**(6) கடம்** - மாதம்; **கயல்...அணைகரை** - கூட்டமாக நெருங்கியநெடிய பனைகளுடன் அடம்புக் கொடி படர்ந்து பொருந்திய பக்கங்களில் கயல் மீன்கள் வலம்புரி சலஞ்சலம் என்ற சங்குகளோடு கூடி வாரிக்கொண்டு பெரிய கடல் அணைகின்ற கரையினையுடைய; **கயல் - வலம் புரி சலஞ்சல மணம் புணர்ந்து** என்று கூட்டுக; **மருங்கொடு** - மருங்கின் கண் - **ஓடு** - ஏழனுருபுப் பொருளில் வந்தது; கடவுளதிடம்

3302. தேவர்பெரு மான்றன்னைத் **திருச்சாய்க்காட் டினிற்பணிந்து**
பாவலர்செந் தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடிப்போய்
மேவலர்தம் புரமெரித்தார் **வெண்காடு பணிந்தேத்தி**
நாவலர்கா வலரடைந்தார் **நனிபள்ளித் திருநகரில்.** 148

கரையிடத்தையுடைய வலம்புரம் என்று கூட்டுக;—(7) **வரி** - இசைப்பாட்டு; **புரி** - சூழ்ந்து; ஆலாபனம் என்பர்; **நரிபுரி** - **புரிதல்** - வாழ்தல், நாடியடைதல்; **புரிசுரிவரி** - **புரி** - பின்னிய; **சுரிவரி** - சுழல் வண்டு; **எரிஎரி** - உலகம் எரிகின்ற தீ; சங்கார காலத்தில் வரும் தீ - ஊழித் தீ;—(8) **பாறு - பேய் - பாறணி முடைதலை** - பேய்கள் கொண்டு விளையாடும் முடைநாற்ற முடைய மண்டை ஓடு; **கலன்** - அணிகலம்; **மாறணி வேலுடை** ஒன்றற்கொன்று மலைந்து அழகுபொருந்த வரும் அலைகளையுடைய இடமும், வயலும் அழகிய பொழிலும் வெவ்வேருகப் பொருந்த உடைய; **அது** - பகுதிப் பொருள் விகுதி; நெய்தலும் மருதமும் மயங்கிய திணை மயக்கம் குறித்தது;—(9) **சட சட விடுபெணை** - சல சல என்ற சத்தமுடைய பனந்தோப்பு; **இடவகை பட** - இடத்திற்பொருந்த; பரப்பாக; **வடகம்** - மேலாடை; **வடகத்தொடு பலிகலந் துலவிய-** என்பது இறைவர் பிட்சாடனராகப் பலிக்கு வந்தபோது பலியிட வந்த தாருகவனத்து இருடி பன்னியர் மால்கொண்டு மேலாடை நழுவநின்ற நிலை குறித்தது; **வடகத்தொடு பலி கலந்துலவிய** - இடவந்த பலியுடனே மேலாடையினையும் கலந்து வீழ்த்து உலாவும்; **கடை கடை** - முன் கடைதோறும்; **இடிகரை** - அலைகளால் இடிக்கப்பெறும் மணற்கரை;—(10) இப்பாட்டின் கருத்து விளங்கவில்லை; **(11) வரும் கலம்** - கடலில் வரும் மரக்கலம்;மணிகள் என்றலுமாம்; **கருகடலிறங்குறப் பிறப்பர்** - கடல் வாழ்நர்; நெய்தனில மக்கள்; **பெருங்குலம்** - சிவனடியார் கணம்.

தலவிசேடம்:— திருவலம்புரம் - காவிரித் தென்கரை 44-வது பதி; தொகுதி IV பக்கம் 201 பார்க்க.

3302. (இ-ள்) தேவர் பெருமான் தன்னை...பாடிப்போய் - தேவர்கள் பெருமானைத் திருச்சாய்க்காட்டினிலே வணங்கிப் பாக்களின் தன்மை விளங்கும் செந்தமிழ் மாலையாகிய திருப்பதிகத்தினைப் பாடியருளி மேற்சென்று; மேவலர்தம்... ஏத்தி - பகைவர்களது திரிபுரங்களையும் எரித்த இறைவரது திருவெண்காட்டினை வணங்கித் துதித்து அதன் பின்பு; நாவலர் காவலர்...திருநகரில் - நாவலர் பெருமானுகிய நம்பிகள் சென்று திருநனிபள்ளித் திருநகரத்தினை அடைந்தருளினுர்கள்.

(வி-ரை) பாவலர் செந்தமிழ் மாலைத் திருப்பதிகம் - பா-அலர் - பா-பாட்டின் தன்மைகள்; **அலர்** - விளங்கும்; இஃது இத்திருப்பதிகத்தின் தன்மை குறித்தது. இத்திருப்பதிகம் இப்போது கிடைத்திலது!

மேவலர் - பகைவர்; முப்புரவாணர்களாகிய அசுரர்.

பணிந்தேத்தி - "படங்கொணுகம்" என்ற திருப்பதிகம் போற்றிசைத்து.

நாவலர் காவலர் - தமிழ் நாவலர் பெருமான்; திருநாவலூரார் தலைவர் என்றலுமாம்.

148

திருச்சாய்க்காடு - நம்பிகள் பதிகம் கிடைத்திலது! தலவிசேடம் - காவிரி வடகரை 9-வது பதி; தொகுதி IV பக்கம் 205 பார்க்க.

திருவெண்காடு

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம். 7-ம் திருமுறை

படங்கொ ணுகஞ் சென்னி சேர்த்திப் பாய்பு லித்தோ லரையில் வீக்கி
அடங்க லாரூ ரெரியச் சீறி யன்று மூவர்க் கருள்பு ரிந்தீர்
மடங்க லானைச் செற்று கந்தீர் மனைக டோறுந் தலைகை யேந்தி
விடங்க ராகித் திரிவ தென்னே வேலை சூழ்வெண் காடனீரே. (1)

விரித்த வேத மோத வல்லார் வேலை சூழ்வெண் காடு மேய
விருத்த னாய வேதன் றன்னை விரிபொழிற்றிரு நாவ லூரன்
அருத்தி யாலா ரூரன் ரெண்ட னடியன் கேட்ட மாலை பத்துந்
தெரித்த வண்ண மொழிய வல்லார் செம்மை யாளர் வானு ளாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—வேலை சூழ் வெண்காடனீரே! தலை கையேந்தி விடங்கராகித் திரிவதென்னே? விழித்துகந்த வெற்றி யென்னே? என்பன முதலியனவாக இறைவரின் அருட் செயல்களை வினவும் வகையாற் பரவியது. "அடியன் கேட்ட மாலை."

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* அடங்கலார் - பகைவர்; மூவர் - முப்புரங்களின் அரக்கர்களுள் அன்பர் மூவர்; மடங்கலான் - நரசிங்கம்; விடங்கர் - அழகிய நக்க உருவம்; தாமாகவே மேற்கொண்ட தென்பதும் குறிப்பு;—(2) முன்னை வேடம் இழித்துகந்தீர் - சிவனும் சத்தியுமாய் முன்கொண்டவேடத்தை மாற்றினீர்; இமையவர்க்கும்...உகந்தீர் - மோனநிலை மேற்கொண்டீர்; உயர்தவம் - கல்லாலின் கீழ் அமர்ந்த குரு மூர்த்த வேடம்; தாதை காண அழிந்துகந்த - தாதை -விட்டுணு-வெற்றி - காத்தற் கடவுளான விட்டுணுவும் காக்க மாட்டாமையால் தாமே முழுமுதல்வர் என்றறிவித்தமை;—(3) பாரிடம் - பூதகணம்; பாரிடம் உம் - பாதம் போற்ற என்க;பாரிடமும் போற்ற என்றலுமாம். உம்மையன்றே - வாய் திறவாமல் வாளா இருத்தலின் உம்மைத் தானே வினவுகின்றேன் என்று அவரது கவனத்தைப் பெறக் குறித்தழைக்கும் மொழி; **கரணம்** - படிறு செய்யும் கோலம்; (4) பண்ணுளீராய்ப் பாட்டு மானீர் - "பாட்டிற் பண்ணும்" (தேவா) "இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க, அன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க" (திருவா); "அறிவானுந் தானே அறிவிப்பான் றானே, அறிவா யறி கின்றான் றானே" (அம்மையார் -அற்-அந்); பாட்டினிற் பண் உள்ளது; பண்ணினுள்ளவர் பாட்டிலும் உள்ளவர் இறைவர்; அத்துவிதக் கலப்பு உணர்த்தியபடி; "அவையே யாய்" நிற்கும் நிலை; கண்ணுளீராய்-உள்ளே

3303. நனிபள்ளி யமர்ந்தபிரான் கழல்வணங்கி **நற்றமிழின்**
புனிதநறுந் தொடைபுனைந்து திருச்செம்பொன் பள்ளிமுதற்
பனிமதிசேர் சடையார்தம் பதிபலவும் பணிந்துபோய்த்
தனிவிடைமேல் வருவார்தந் திருநின்றி யூர்சார்ந்தார். 149

விரவியிருப்பவராக; **காணும் வண்ணம் மண்ணுணீராய்** - உலகில் வெளிப்படக் காணும்படி; **மதியம் வைத்தீர்** - பிறையினைக்காணும் தோறும் அதுகொண்டு இறைவரையும் அங்கே காணும்படி பிறையினைக் காணவைத்தீர்; **(5) குடம்** - திருமஞ்சனக்குடம்; **வடம்**- அணிகலம்;— **(6) மாறுபட்ட** - பகைத்த; **கூறு** - ஒரு பாகம்; **கொடி**-கொடி போல்வாராகிய உமையம்மையார்; **வேறுபட்டு** - வேற்றுக்கோலம் காட்டி;—**(7) ஏழில்** - இசை; ஏழு சுரங்களை உடையது; **(8) குரவு** - குராமலர்; **கொங்கை மாதர் கங்கை**- மாதராகிய கங்கை; **பழிகள்** - குற்றங்கள்; முன் வந்தனவும் இனி வருவனவுமாகிய பழிச்சொற்கள்; "பட்ட வார்த்தை படநின்ற வார்த்தை வாராமே தவிரப் பணிப்பானை" (நம்பி-ஆரூர்-தக்கேசி-2); "கட்டமும் பிணியும்...விட்ட வேட்கை வெந்நோய்" - என்பனவும் காண்க; **(9) நிச்சயத்தால்...நினைப்புளார்** - பிறழாத உறுதியாகிய பற்று;— **(10) வேலைசூழ்** - கடற்கரையின் அணிமையில் உள்ள; **கேட்ட மாலை பத்தும்** - என்னே? என்று வினவாகக் கேட்டுப் பரவிய; **மாலை பத்து** - ஒவ்வொரு பாட்டும் தனித்தனி **மாலை** எனப்படும்; "பனுவல்" என்றும் கூறுப.

தலவிசேடம்:— திருவெண்காடு - காவிரி வடகரை 11-வது பதி; தொகுதி IV பக்கம் 213 பார்க்க.

3303. (இ-ள்) நனிபள்ளி...புனைந்து - திருநனிபள்ளியில் விரும்பி எழுந்தருளியுள்ள பெருமான் திருவடிகளைப் பணிந்து நல்ல தமிழின் இனிய தூய நறிய மாலையினைப்புனைந்து; திருச்செம்பொன்பள்ளி...பணிந்துபோய் - திருச்செம்பொன்பள்ளி முதலாகக் குளிர்ச்சி பொருந்திய சந்திரனை முடித்த சடையினையுடைய இறைவர் பதிகள் பலவற்றையும் வணங்கிச் சென்று; தனிவிடைமேல்...சார்ந்தார் - ஒப்பற்ற இடபத்தின்மேல் வரும் இறைவரது திருநின்றியூரினைச் சார்ந்தருளினர்.

(வி-ரை) நற்றமிழின் புனித நறுந்தொடை - நன்மை, இனிமை, தூய்மை, நறுமை என்பன இப்பதிகச் சிறப்புக்கள். இவற்றைத் தனித்தனி இப்பதிகத்தினுள் வைத்துக் கண்டுகொள்க; "நாதிலன்" "நாடுடை நம்பெருமான்", "நானுடைய மாடு", "நங்கட்கருளும்", "காலமு நாழிகையும் நனிபள்ளி மனத்தினுள்கி" என்பன முதலியவை சிந்திக்க.

பதி பலவும் - இவை திருப்பறியலூர், திருவிளநகர், திருமயிலாடுதுறை, திருக்கஞ்சாறு முதலாயின என்பது கருதப்படும்.

தனிவிடை - தனி - ஒப்பற்ற; ஒன்று என்றலுமாம். "நரை வெள்ளேறொன் றுடையானை" "ஊர்வதோர்விடை யொன்றுடையான்" "ஒன்று கொலாமவ ரூர்வது தானே" (தேவா).

திருநனிபள்ளி

திருச்சிற்றம்பலம் **பண் - பஞ்சமம். 7-ம் திருமறை**

ஆதியன் ஞதிரையன் னயன் மாலறி தற்கரிய
சோதியன் சொற்பொருளாய்ச் சுருங் காமறை நான்கினையும்
ஓதிய னும்பர்தங்கோ னுல கத்தினு ளெவ்வுயிர்க்கும்
நாதிய னம்பெருமா னண்ணு மூர்நனி பள்ளியதே. (1)

காலமு நாழிகையுந் நனி பள்ளி மனத்தினுள்கிக்
கோலம தாயவனைக் குளிர் நாவல வூரன்சொன்ன
மாலை மதித்துரைப்பார் மண் மறந்துவா னேருலகிற்
சாலநல் லின்பமெய்தித் தவ லோகத் திருப்பாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—"நம்பெருமான் நண்ணுமூர் நனிபள்ளியதே" என்றபதிக மகுடம் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— ஆதிரையன் - "ஆதிரை நாளுகந்தான்" (தேவா); **சொற்பொருளாய்** - சொல்லுக்கெல்லாம் பொருளாயுள்ளவன்; **ஓதியன்... உலகத் தினுளெவ் வுயிர்க்கு நாதியன்** - எண்பத்துநான்கு நூறுபிரமாம் யோனிபேதம்... உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான் (தேவா); **நாதியன்** - நாதன்; தலைவன்; ஆதரவு தருபவன்;—**(2) உறவிலி** - "ஆருற்றார்" (திருவா); **அற இலகும்** - அறமுற்றி; **இலகுதல்**-விளங்குதல்; **வண்டு மருளார் மொழி அறையும்** "வண்டு மருள் பாடும்" **மருள்** - இசை வகை; **நற(வு)**-தேன்;—**(3) அமர்ந்தான்** - விரும்பினான்; **தீ...புகுந்தான்**- உடலில் உயிர்த் தீ உருவாய்ப் போந்து உயிருள்ளளவும் நிற்பவன்; **மாடு** - செல்வம்;—**(4) இடமாமலை...நாளுடை** - ஏழ்மலையு மேழ்கடலும் சூழ்ந்த எல்லா நாடுகளையும் தன்னதாகவுடையவன்;—**(5) பண்ணற்கரிய** - கால்விரலால் வட்டமாகக்கீறி எடுக்கப்பட்ட ஆழியாதலின் வேறு யாவராலும் செய்தற்கரிய; **படைத்து** - கால்விரலால் வட்டங்கீறி உளதாக்கி; **கண்ணற்கருள் புரிந்தான்** —"சலந்தரனைப் பிளந்த சுடராழி செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக்கருளி" (தேவா-நம்பி-கலயநல்லூர்-2); **கருதாதவர்**-தக்கன்; **உண்ணற்கு** - உண்டதன் பொருட்டு; **ஓட உதைத்துகந்து** - வீரபத்திரரால் தக்கயாக சங்காரம் நிகழ்த்தி; **(6) ஆரணன்** - வேதங்களின் பொருளானவர்;—**(8) நுண்ணியனாய்** - யானேது மறியாமே என்னுள் வந்து" (தேவா). **ஏழ்பிறப்பும்...நங்கட் பிணி களைவானாகிய அருமாமருந்து** என்க;—**(9) ஞானம்** - சிவஞானங் குழைத்த அமுது;—**(10) காலமு நாழிகையும்...உள்கி** - இடை விடாது எக்காலமும் நினைந்து; **தவலோகம்** - சிவனுலகம்; தவத்தின் பயனாகிய உலகம்; **தவம்** சிவபூசை.

தலவிசேடம்:— திருநனிபள்ளி - காவிரித் தென்கரை 43-வது பதி; தொகுதி III பக்கம் 416 பார்க்க.

3304. **நின்றியூர் மேயாரை** நேயத்தாற் புக்கிறைஞ்சி
ஒன்றியவன் புள்ளுருகப் பாடுவா **ருடையவர**
சென்றுமுல கிடர்நீங்கப் பாடியவே ழெழுநூறும்
அன்றுசிறப் பித்தஞ்சொற் றிருப்பதிக மருள்செய்தார். 150

3304. **(இ-ள்)** நின்றியூர்...இறைஞ்சி - திருநின்றியூரில் எழுந்தருளிய இறைவரை அன்பினுலே திருக்கோயிலினுள்ளே புகுந்து வணங்கி; ஒன்றிய...பாடுவார் - ஒன்று பட்ட அன்பு நிறைய உள்ளுருகும்படி பாடுவாராகி; உடைய அரசு...அருள் செய்தார் - ஆளுடைய அரசுகள் எக்காலத்திலும் உலகம் துன்பம் நீங்கி யின்பமடையும்படி பாடியருளிய ஏழெழுநூறு பதிகங்களைப் பற்றி அன்று பாராட்டிப் போற்றி அழகிய சொற்களானமைந்த திருப்பதிகத்தினை அருளிச் செய்தனர்.

(வி-ரை) பாடுவாராகி - அருள் செய்தார் எனக்கூட்டி முடிக்க. **உடைய அரசு** - ஆளுடைய அரசுகளாகிய திருநாவுக்கரசர்.

என்றும் உலகு இடர் நீங்கப்பாடிய - உலகம் என்ஞான்றும் இடர் நீங்கியுய்யும் பொருட்டே அரசுகள் பாடியருளினர் என்பது; **என்றும்** - பாடிய அற்றை நாளில் பற்பலவாறும் உலகம் இடர்நீங்கினமை சரித வரலாற்றினு லறியப்படும். அற்றை நாள் மட்டிலன்றி அன்று போலவே பின்னர் எக்காலத்தும் அப்பயனை உலகம் பெற்றுவரும் என்பதாம். அன்று உலகம் இடர் நீங்கியமை அப்பூதியார் திருமகனுரரவுவிடந் தீர்ந்துய்ந்தது; திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்ந்தது; திருமறைக்காட்டிற் கதவம் திறந்தது; திருப்பழையாறை வடதளியில் சமணர் செய்த மறைப்பு நீங்கி ஈசர்க்கு விமானமாக்கியது; என்பனமுதலியவாற்ருனறிக. அவ்வாறுள்ள பயன் ஏற்ற பெற்றி இத்திருப்பதிகங்களை அன்புடன் பயிலும் அன்பர்கள் இன்றும் பெற்று வருதல் கண்கூடு.

ஏழெழுநூறு - 7 X 700 = 4900 பதிகங்கள்; "பதிகமே ழெழுநூறு பகருமா கவியோகி" (11-ம் திருமுறை - திருநாவுக்கரசர் திருவேகாதசமாலை) என்ற நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்குக் காண்க; "ஏழெழு நூறிரும் பனுவ லீன்ற வன்றிரு நாவினுக்கரையன்" என்பது நம்பிகள் பதிகம்.2)

சிறப்பித்து - திருப்பதிகத்துட் போற்றி; **பனுவல்**-பதிகம். திருமுறை கண்ட புராணத்தினுள் (15) "ஒரு நாற்பத்தொன்பதனுயிரமதாக" என்பது பதிகப் பாட்டுக்கள். 150

திருநின்றியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி**

திருவும் வண்மையுந் திண்டிற லரசுஞ் **சிலந்தி யார்செய்த செய்பணி கண்டு**
மருவு கோச்செங்க ணுன்றனக் களித்த வார்த்தை கேட்டுநுன் மலரடி யடைந்தேன்
பெருகு பொன்னிவந் துந்து பன் மணியைப் பிள்ளைப் பல்கணம்பண்ணையு ணண்ணித்
தெருவுந் தெற்றியு முற்றமும் பற்றித் திரட்டுந் தென்றிரு நின்றியூ ரானே. (1)

அணிகொ ளாடையம் பூணணிமாலை யமுது செய்தமு தம்பெரு தண்டி
யிணைகொ ளேழமு நூறிரும் பனுவ லீன்றவன்றிரு நாவினுக் கரையன்
கணைகொள் கண்ணப்ப னென்றிவர் பெற்ற காத லின்னரு ளாதரித் தடைந்தேன்
திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியுஞ் செல்வத் தென்றிரு நின்றியூ ரானே. (2)

காது பொத்தரைக் கின்னர ருழுவை கடிக்கும் பன்னகம் பிடிப்பருஞ் சீயங்
கோதின் மாதவர் குழுவுடன் கேட்பக் கோல வானிழற் கீழறம் பகர
ஏதஞ் செய்தவ ரெய்திய வின்ப மியானுங் கேட்டுநின் னிணையடி யடைந்தேன்
நீதி வேதியர் நிறைபுக ழுலகி னிலவு தென்றிரு நின்றியூ ரானே. (6)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—சிவபெருமானது அருட் பெருஞ் செயல்களை எடுத்துப் போற்றி, "அச்செயல்களைக் கேட்டு நானும் வந்தடைந்தேன்" என்றது; குறிப்பு - ஒவ்வொரு திருப்பாட்டிலும் ஒன்றும்பலவுமாகச் சிவனின் அருட் செயல்களின் சரிதங்கள் அருமைப்பட விரிக்கப்பட்டுள்ளன. மிகவும் அரிய பதிகம். முழுதும் பாராயணஞ் செய்யத் தக்கது. இதனுள் இறுதி மூன்று பாட்டுக்கள் கிடைத்தில! சிதலரித்தொழிந்தன போலும்!

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) சிலந்தி-கோச்செங்கணான் வரலாறு பற்றியது - தேவாரங்கள் பலவும், கோச்செங்கட் சோழ நாயனார் புராணமும் பார்க்க. சிலந்தியார் - செய்த பணி கண்டு கோச்செங்கணான்றனக்குத் திருவும் வண்மையும் - அரசும் அளித்த - என்று கூட்டுக; சிலந்தியார் - பன்மை சிவன்பாலடிமை செய்த சிறப்புணர்த்திற்று; செய்பணி - செய்யத்தக்க பணி; சிலந்தியாராக நின்றபோது செய்த என்றும், அதுவே கோச் செங்கணானபோது அளித்த என்றும் உரைக்க; மருவு - சிலந்தியாயிருந்த உயிரே கோச்செங்கணானுள் பொருந்திய; பெருகு...திரட்டும் நீர்ச்சி சிறப்புக் குறித்தது; நெற்றி - திண்ணை; பற்றி - பற்றியிருந்து;—(2) அணிகொள் - இறைவர் அணிந்தனவும் கொண்டனவுமாகிய; ஆடை, பூண்-அணி-மாலை அணிந்தன; அமுது - உட்கொண்டது; "உண்ட கலமு முடுப்பனவுஞ் சூடுவனவு முனக்காகச்" செய்தமையால்; (1261); செய்து - உரிமையாகச் செய்யப் பெற்றமையால்; அமுதம் - வீடுபேறு; முத்தி - தண்டி, சண்டீசர்; இணைகொள் - தமக்குத் தாமே இணையான; வேறு இணையிலாத; இணைகொள்...திருநாவினுக்கரையன் - இதனை ஆசிரியர்முன் (3304) எடுத்துக்காட்டி யருளினர்; கணைகொள் - கண்ணையிடந்த கணை - (அம்பு); முன்னை நிலையில் அருச்சுனனாகித் தவம் செய்து கணை-பாசுபதம்-இறைவர்பாற் கொண்ட என்ற குறிப்புமாம்; காதல் இன் அருள்-காதல் காரணமாகப் பெற்ற இனிய அருள்; ஆதரித்து- ஆதரவாகக்கொண்டு; திணைகொள்செந்தமிழ் - செந்தமிழுக்கே சிறப்பாயுரிய அகம் புறம் என்ற பாகுபாடு; இச்சிறப்பு ஏனை - எம்மொழிக்கு மில்லாமை எடுத்துக்காட்டியபடி; பைங்கிளி தெரிதல் - மக்கள் பயில்வது கேட்டுக் கிளிகள் தெரிதலாம். "பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோது மோசை கேட்டு, வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லு மிழலை" (தேவா); தெரியும்; "பெரிதிலங்கும் மறை கிளைஞரோ தப்பிழை கேட்டலாற், கருதுகிள் ளைக்குலந் தெரிந்து தீர்க்குங் கடற் காழியே" (தேவா);—(3) முந்நூற்றறுபது வேலி...பரசிராமர் - பரசிராமர் இங்கு வழிபட்டு இறைவருக்கு 360

வேலி நிலமும், பூசிக்க 300 வேதியர் குடிகளையும் கலசநீர் வார்த்துக் கொடுத்தனர் என்றது வரலாறு; இங்குக் கூறிய பரசிராமர் "இதழி வேணி யார்தங் கழல்பரவிப், பரசு பெறுமா தவமுனிவன் பரசிராமன் பெறுநாடு" (491) என்ற இடத்துத் கூறப்பட்ட முனிவரோ அல்லது அப்பெயருடைய வேறொருவரோ என்பது ஐயப்பாடு;—(4) காமதேனு வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறு குறித்தது; **இரவி நீள்சுட ரெழுவதன் முன்னம்** - இரவி எழுவதன் முன் என்னுது இரவி **நீள்சுடர் - எழுவதன் முன்னம்** - என்றது அருணுேதயத்தின் முன்னர் என்றபடி; இது சூரியனுதிக்க ஐந்து நாழிகையாயுள்ள பொழுது; **மூலேக்கலசங்கள் -** மூலேயாகிய கலசங்கள்; திருமஞ்சன மாட்ட உதவுதலின் கலசம் எனப்பட்டது; வடிவு ஒருபுடை ஒப்புமையுங் குறிப்பு; நான்கு மூலேக்காம்புகள் தற்புருட முதலிய நான்கும், பால்மடி ஈசானமுகமுமாகச் சிவாகமங்களுள் விதித்த ஸ்நபன அங்கம் காட்டும் குறிப்புமாம்; தேனு முத்திரை என்னும் சிவ முத்திரை வழக்கும் காண்க. **தொடர்ந்த** - வழிபட்ட; **பரவி உள்கி வன்பாசத்தை அறுத்து** - பரவுதலாலும் உள்குதலாலும் பாச நீக்கமும், **வந்து நுன்பாதத்தை யடைந்தேன்** - என்றலால் சிவப்பேறும் குறிப்பாலுணர்த்தப்பட்டன; "ஏக ஞகி யிறைபணி நிற்க" என்றும், "அயரா அன்பி னரன்கழல் செலுமே" என்றும் வரும் போதம் 10-11-ம் சூத்திரக் கருத்துக்கள் காண்க; மொழி மனம் மெய் என்ற மூன்றுனும் ஒன்றித்த வழிபாடும் குறிக்கப்பட்டது கண்டுகொள்க. **அத்தகு** -அத்தகுதி; அகரம் பண்டறிசுட்டு; சிறப்புணர்த்திற்று;—(5) **சந்தி- மூன்றிலும் - நல்கிய** - காலே - நண்பகல் - மாலே என்ற மூன்றும் சந்தி எனப்படும்; **தாபர நிறுத்தி** - தாபரத்தினுல் - விதித்த மண் முதலியவற்றுல் - சிவலிங்கம் தாபித்து; **சகளி செய்து இறைஞ்சு** - அத்தாபரத்தின்கண் பாவனே, மந்திரம், செயல் என்ற மூன்றுனும் அகமும் புறமும் சிவாகம விதிப்படி பூசிக்கும்; **பொதியிற் சேர்வு** - பொதிகையிலிருக்கையும் அங்குக் காட்சி காண வரமும்; இந்திரர்களுள் ஒருவன் வழிபட வாஞட்சி யருளியதும் தல வரலாறுகளுள் ஒன்று;—(6) ஆலநிழலில் அறமுறைத்த வரலாறு குறிக்கப்பட்டது; **காது பொத்தரைக் கின்னரர்** - இறைவரின்றி உபதேச மொழிகள் சிறிதும் புறஞ் செல்லாது முழுதும் செவிப்புலனுழையும்படி காதுகளேப் பொத்தியபடியிருந்த கின்னரர்; பசுக்கள் முதலியவை, சத்தம் கேட்கும்போது செவிகளே ஒருமுகமாகக் குவித்துக்கொள்ளும் இயல்பும் காண்க. **உழுவை** - புலி; **பன்னகம் -** பாம்பு; **சீயம்** - சிங்கம்; **மாதவர் குழ** - முனிவர்கள்; (நால்வர்?) **ஆல்நிழற் கீழறம் பகர** - இவ்வாறு புலி முதலியவையும், கின்னரர் முனிவர்களும் கேட்க ஆலநிழலில் இறைவர் அறம் சொன்ன வரலாற்றுக் கேற்ப உள்ள திருவுருவம் பரதகண்டத்தின் வடக்கில் சிந்து நதிக்கரையில் புதைந்திருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட மொகஞ்சோதாரோ ஹரப்பா என்ற மிகப் பழ நகரங்களிற் கண்ட சிலாவுருவங்களுட் பெறப்பட்டுள்ளன; தென்னுட்டில் உள்ள கோயில்களுள் இத்தகைய உருவம் காணப்படவில்லே. **காது பொத்தரைக்கின்னரர்** என்றது "போர்த்த நீள்செவி யாளரந் தணர்க்குப் பொழில்கொளானிழற் கீழறம் புரிந்து" (திருப்புன்கூர்-7) என்றவிடத்து நம்பிகள் அருளியவாற்றுலும்; ஏனேப், புலி நாகம் முதலியவற்றுக்கும் கின்னரர் முதலியோர்க்கும் அருளியது "இயக்கர் கின்னரர் நமனெடு வருண ரியங்கு தீவளி ஞாயிறு திங்கள், மயக்கமில்புலி வானரர் நாகம் வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம், அயர்ப்பொன் றின்றி நின் றிருவடி யதனே யாச்சித் தார்பெறு மாரருள்" (மேற்படி-6) என்றதனுலு மறிக. **போர்த்த** - பொத்திய; **நீள்செவி** - உபதேசங் கேட்கும்

3305. அப்பதியி லன்பருட னமர்ந்தகல்வா ரகலிடத்திற்
செப்பரிய புகழ்நீடூர் பணியாது செல்பொழுதில்
ஒப்பரிய வுணர்வினு னினைந்தருளித் தொழலுறுவார்
மெய்ப்பொருள்வண் டமிழ்மாலை விளம்பியே மீண்டணைந்தார். 151

வசதிப் பொருட்டு நீண்டசெவியினைப் பெற்றனர் என்பர். **ஏதஞ் செய்தவர் - ஏதம் -** நன்மை - நற்செயல் என்ற பொருளில் வந்த அரிய வழக்கு; "ஏத நன்னில மீரறு **வேலி**" (தேவா) என்றது காண்க. இதனை வகர உடம்படு மெய்யாய் வந்தமை எண்ணாது, **வேதம் செய்தவர்** என்று பிழைபடக் கொண்டு, வேதங்கள் இறைவர் வாக்கன்று - **இருடிகள் -** முனிவர்கள் வாக்கு என்ற தம் பிழைபட்ட நவீனக் கொள்கைகளுக்குத் தேவார ஆதரவு **தேடி** அபசாரப்படுவோரு முளர்; **ஏதம்** என்றதற்குரிய மேற்கோளாக **எய்திய - இன்பம் - இயானும் இணையடி** என்று மேல் வருவனவற்றையும் அவர் ஓரா**ராயினர்; (7)** ஐராவதம் வழிபட்டுப் பேறு பெற்ற வரலாறு; **கோடு நான்குடைக் குஞ்சரம் -** நான்கு கொம்புகளையுடைய யானை; ஐராவதம்; இந்திரனது யானை; **பீடும் வான்மிசைப் பெருமையும் - பீடு -** மண்ணின்மேல் காட்டானையாகத் திரிக என்ற துர்வாசரது **சாப** விமோசனம்; **விண்மிசைப் பெருமை** - மீளவும் தேவலோக **இருப்பு; பேடை...கிள்ளையுமென - மஞ்ஞை** -மயில்; **கன்று** - மான்கன்று; **பிள்ளைக்கிள்ளை -** கிளிப்பிள்ளை; இவை இயலாலும் நடையாலும் பேச்சாலும் பெண்களுக்கு உவமமாயி**ன;** என - போல; உவமவுருபு; என்று சொல்லும்படி; **என நிலாவு** - என்று கூட்டுக.

தலவிசேடம்:— திருநின்றியூர் - தொகுதி III பக்கம் 415 பார்க்க. காவிரி வடகரை 19-வது பதி.

3305. **(இ-ள்)** அப்பதியில்...அகல்வார் - அப்பதியின்கண் அன்பர்களுடன்கூடி விரும்பி எழுந்தருளியிருந்துமேற்செல்வாராகி; அகலிடத்தில்...செல்பொழுதில் - சொல்லுதற்கரிய தாகிய புகழ் நீடூரினைப் பணியாமற் செல்லும்போது; ஒப்பரிய...தொழலுறுவார் - ஒப்பில்லாத மெய்யுணர்வினால் நினைந்தருளி வந்து தொழுவதனை மேற்கொள்வாராகிய நம்பிகள்; மெய்ப்பொருள்...மீண்டணைந்தார் - மெய்ப்பொருளை விரிக்கும் வளப்பமுடைய தமிழ்மாலைத் திருப்பதிகம் பாடியே மீண்டு வந்து அணைந்தருளினர்.

(வி-ரை) அகலிடத்தில் செப்பரிய புகழ் நீடூர் - அகலிடம் - இடமகன்ற நிலவுலகம்; புகழினையுடைய நீடூர் என்றும், புகழ் நீடும் ஊர் என்றும் சிலேடை நயம்படக் கூறிய கவிநலம் காண்க. "செல்வ நீடூர் திருநீடூர்" (முனையடுவார் புரா.1)

பணியாறு செல்பொழுதின் - திருநின்றியூரினின்றும் செல்லும்பொழுது அணிமையில் உள்ள திருநீடூரிற் சென்று பணியாது மேலே செல்லத் தொடங்கியபோது;

ஒப்பரிய உணர்வினால் உணர்ந்தருளி - ஒப்பரிய உணர்வு - மெய்யுணர்வு; இது எஞ்ஞான்றும் சிவனை மறவாத நிலையினால் உண்டாவது; செல்லும் வழியில் ஒரு

3306. ''மடலாரும் புனனீடூர் மருவினர்தாள் வணங்காது
விடலாமே'' யெனுங்காதல் விருப்புறுமத் திருப்பதிகம்
அடலார் சூலப்படையார் தமைப்பாடி யடிவணங்கி
உடலாரு மயிர்ப்புளகம் மிகப்பணிந்தங் குறைகின்ருர், 152

சிவாலயம் இருப்பின் அடியார்கள் அதனைச் சென்று வழிபட்டன்றி மேற்செல்லலாகாது என்பது விதி; அவ்விதி கடந்து செல்வது பிழையாமென்பது உணர்வினில் தானே உணர வருவது மெய்யுணர்வின் இலக்கணம். ''நானேது மறியாமே யென்னுள் வந்து நல்லனவுந் தீயனவுங் காட்டா நின்ருய்'' (தேவா).

தொழல் உறுவார் - தொழுவதனை மேற்கொண்டார்.

மெய்ப்பொருள் வண் தமிழ்மாலை - உண்மைப் பொருளைப் பற்றி வெளிப்போந்த வளப்பமுடைய திருப்பதிகம்; **மெய்ப்பொருள்** - மெய்யுணர்வினுல் வருவது; **வண்மை-** அதனை உலகுக்கறிவித்து உய்விப்பது. **விளம்பியே** - பாடி யருளியவாறே; ஏகாரம் அதன் **வண்மை** உணர்த்திற்று; மேற்பாட்டும் பார்க்க. இப்பதிகம் மீண்டணையும் வழியில் அருளியது. ***151***

3306. **(இ-ள்)** மடலாரும்...திருப்பதிகம் - ''இதழ்களையுடைய பூக்கள் நிறைந்த நீர்வளமுடைய திருநீடூரில் பொருந்தி எழுந்தருளியுள்ள இறைவர் திருவடிகளை வணங்காமல் விட்டுச்செல்லலாமோ? என்னும் ஆசையினைப் புலப்படுக்கும் விருப்பம் பொருந்திய அந்தத் திருப்பதிகத்தினுல்; அடலார்...அடி வணங்கி - வல்லமையுடைய சூலப்படையினையுடைய இறைவரைப் பாடி அவர் திருவடிகளை வணங்கி; உடலாரும்...மிக - திருமேனி முழுதும் மயிர்ப்புளகம் மிகுதியும் உண்டாக; பணிந்து - நிலம் பொருந்த வணங்கி; அங்கு உறைகின்ருர் - அப்பதியில் தங்கியருளுகின்ருராகி,

(வி-ரை) ''மடலாரும்... விடலாமே'' எனும் - இப்பதிகக் கருத்தாகிய குறிப்பு. ''நிறை புனற்கழ னிச்செல்வ நீடூர்ப், பாரு ளார்பர வித்தொழ நின்ற பரமனைப்பணி யாவிட லாமே'' என்பது பதிகம். பதிக மகுடம் பார்க்க; **மடல் -** இதழ்கள்; இங்கு இதழ்களையுடைய மலர் என்ற பொருளில் வந்தது.

புனல் - நீர்ச்சிறப்பு; **வணங்காது விடலாமே** - பணியாது மேற்செல்லலாகுமோ? ஆகாது என்றபடி.

காதல் விருப்புறும் - காதலாய் விளையும் பெருவிருப்பம் பொருந்திய; பதிகப் பாட்டுப் பொருள்களும் குறிப்பும் பார்க்க.

உடலாரும் மயிர்ப்புளகம் மிக - திருமேனி முழுதும் நிறைந்த புளகாங்கித மிகப் பொருந்த; **மிக -** மிகும்படி.

உறைகின்ருர் - அமர்ந்து என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக; **உறைகின்ருர் -** முற்றெச்சம். ***152***

3307. அங்கணினி தமர்ந்தருளாற் **றிருப்புன்கூ ரணைந்திறைஞ்சிக்**
கொங்கலரு மலர்ச்சோலைத் **திருக்கோலக் காவணையக்**
கங்கைசடைக் கரந்தவர்தா **மெதிர்காட்சி கொடுத்தருளப்**
பொங்குவிருப் பாற்றொழுது திருப்பதிகம் போற்றிசைப்பார். 153

3308. **திருஞான சம்பந்தர் திருக்கைக ளாலொற்றிப்**
பெருகார்வத் துடன்பாடப் பிஞ்ஞகனா் கண்டிரங்கி
அருளாலே திருத்தாள மளித்தபடி சிறப்பித்துப்
பொருண்மாலைத் திருப்பதிகம் பாடியே போற்றிசைத்தார். 154

3307. **(இ-ள்)** அங்கண் இனிதமர்ந்து - அங்கு இனிதாக அமர்ந்தருளி; அருளால் - அருள் விடைபெற்று; திருப்புன்கூர் அணைந்திறைஞ்சி - திருப்புன்கூரில் அணைந்து வணங்கி மேற்சென்று; கொங்கலரும்...அணைய - மணமிகுந்த சோலைகள் சூழ்ந்த திருக்கோலக்காவினை அணையவே; கங்கை...கொடுத்தருள - கங்கையினைச் சடையிலே கரந்த இறைவர் தாம் நகர்ப்புறத்திலே எதிர்காட்சி கொடுத்தருள; பொங்கு...போற்றிசைப்பார் - மேன்மேல் அதிகரிக்கின்ற மிக்க விருப்பத்துடனே தொழுது திருப்பதிகம் பாடித் துதிப்பாராகி,

(வி-ரை) அருளால்- அருள் விடைபெற்று மேற்சென்று.

கொங்கலரும் மலர்ச்சோலைக் கோலக்கா - தலப்பெயரைப் பொருள் விரித்தபடி; **கொங்கு -** மணம்; **அலர்தல் -** விரிந்து வீசுதல்; **கோலம் -** அழகு; **கா-** சோலை; காரணப்பெயர் என்றற்கேற்ப இன்றும் விளங்குவது காண்க; **அணைய -** அணையும்போது.

எதிர் காட்சி கொடுத்தருள - "கோலக் காவினிற் கண்டுகொண் டேனே" என்ற பதிக மகுடம் இதற்கு அகச்சான்றாகும்.

போற்றிசைப்பார் - போற்றிசைத்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. போற்றுவார் அருளிப்பாட்டினைப் போற்றிப் பாடினார் என்க.

திருப்புன்கூர் அணைந்திறைஞ்சி - இதுபோழ்து நம்பிகளருளிய பதிகம் கிடைத்திலது! "அந்தணாளன்" என்ற பதிகம் பின்னர் அருளியது. ***153***

3308. **(இ-ள்)** திருஞானசம்பந்தர்...அளித்தபடி சிறப்பித்து - திருஞான சம்பந்த நாயனார் திருக்கைகளாலே தாள இசை ஒத்தறுத்துப் பெருகும் ஆர்வத்துடனே பாட இறைவனார் அது கண்டு இரங்கித் திருவருளாலே திருப்பொற்றாளம் கொடுத்தருளிய படியினைப் பாராட்டித் துதித்து; பொருள் மாலை...போற்றிசைத்தார் - மெய்ப்பொருள் விளங்கும் மாலையாகிய திருப்பதிகத்தினைப் பாடியே துதித்தருளினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருஞானசம்பந்தர்...அளித்தபடி - திருத்தாளம் பெற்ற வரலாறு முழுமையும் சுருக்கிக்கூறிய கவிநயம் கண்டுகொள்க; **திருஞானசம்பந்தர் திருக்கைகளா**

லொற்றி - "தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினுர்" (1967) என்ற நிலைபெற்ற நாளை அடுத்த நாள் தாளம் பெறுதலால் திருஞான சம்பந்தர் என்ற இப்பெயராற் கூறினுர். நம்பிகள் பதிகத்துள் இத்திருப்பெயராற் கூறியமையும் குறிப்பு.

ஒற்றி - ஒத்தித் தாள ஒத்தறுத்தது.

இரங்கி - பிள்ளையாரின் பங்கயத்தினின் மிக்க மென்மையான கைம்மலர்கள் நோம் என்று இரங்கி; **''பாடலுக் கிரங்கும்''** நம்பிகள் பதிகம் (8) பார்க்க.

திருத்தாளம் அளித்தபடி சிறப்பித்து - அளித்த வரலாற்றினைப் பாராட்டி. பதிகம் (8) பார்க்க. திருத்தாளமுடையார் கோயில் எனப் பெயர் இன்றும் வழங்குதல் காண்க. இத்தலத்தில் நிகழ்ந்த அற்புதமாதலின் அதனைக் கூறிப்போற்றினுர்; அவ்வற்புத அருள்நிகழ்ச்சி நடந்தது என்ற உண்மை பற்றிய தேவாரச் சான்றுமாம்.

பொருள்மாலைத் திருப்பதிகம் - இறைவரது பேரருட்டன்மைகளும் அவர் நம்பிகளை ஆட்கொண்ட வண்ணங்களும் பொருள்களாக எடுத்துக் கூறிய திருப்பதிகம். 154

திருக்கோலக்கா

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி. 7-ம் திருமுறை**

புற்றில் வாளர வார்த்த பிரானைப் பூத நாதனைப் பாதமே நினைவார்
பற்று வான்றுணை யெனக்கெளி வந்த பாவ நாசனை மேவரி யானை
முற்ற லார்திரி புரமொரு மூன்றும் பொன்ற வென்றிமால் வரையரி யம்பாக்
கொற்ற வில்லங்கை யேந்திய கோனைக் கோலக் காவினிற் கண்டுகொண்டேனே. (1)

அன்று வந்தெனை யகலிடத் தவர்முன் னுள தாகவென் ருவணங் காட்டி
நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த நித்தி லத்திரட் டொத்தினை முத்திக்
கொன்றி னுன்றனை யும்பர் பிரானை யுயரும் வல்லர ணங்கெடச் சீறுங்
குன்ற வில்லியை மெல்லிய லுடனே கோலக் காவினிற் கண்டுகொண்டேனே. (5)

நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞான சம்பந் தனுக்குல கவர்முன்
ருள மீந்தவன் பாடலுக் கிரங்குத் தன்மை யாளனை யென்மனக் கருத்தை
யாளும் பூதங்கள் பாடநின் ருடு மங்க ணன்றனை யெண்கண மிறைஞ்சுங்
கோளி லிப்பெருங் கோயிலு ளானைக் கோலக் காவினிற் கண்டுகொண் டேனே. (8)

கோட ரம்பயில் சடையுடைக் கரும்பைக் கோலக் காவுளெம் மானைமெய்ம் மானப்
பாட ரங்குடி யடியவர் விரும்பப் பயிலு நாவலா ரூரன்வன் றெண்டன்
நாடி ரங்கிமுன் னறியுமந் நெறியா னவின்ற பத்திவை விளம்பிய மாந்தர்
காட ரங்கென நடநவின் ருன்பாற் கதியு மெய்துவர் பதியவர்க் கதுவே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவர் எதிர்காட்சி கொடுத்தருளப் பெருவிருப்பாற் கண்டு கொண்டு அவருடைய அருளியப்பாடுகள் பலவற்றையும், தமக்கெளிவந்தருளிய

தன்மையினையும், திருஞான சம்பந்த நாயனாருக்குத் தாளமீந் தருளிய கருணையினையும், மற்றும் மெய்ப்பொருள் பலவற்றையும் போற்றியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) பாதமே தொழுவார் பற்றுகின்ற பெரிய **துணைவர்;** பாதமே தொழுவார்க்குத் துணைவராயும் எனக்கும் எளிவந்தவர். அல்லாதல்லாத **எனக்கும்** என்க; உம்மை தொக்கது; **வான்** - பெரிய; **பாதமே** - ஏகாரம் பிரிநிலை; **மேவரியான்** - ஆன்ம முயற்சி - போதங்களாற் சென்று பொருந்தலரியவர்; "சென்றடையாத திருவுடையான்" (தேவா); **முற்றலர்** - பகைவர்; **வரை வில்லாக, அரி அம்பாக - அங்கை ஏந்திய** என்று கூட்டுக; "எயிலார் சாய எரித்த" (பிள்-தேவா-கோலக்; 5); **அம்பா-** அம்பாக; **அரி** - விட்டுணு; **கோலக் காவினிற் கண்டுகொண்டேனே** என்ற குறிப்பு நகர்ப்புறத்து எதிர்காட்சி கொடுப்பக் கண்ட சரித நிலை குறித்தது. "காழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே" என்றது கருதத்தக்கது;—**(2) தோளி** - தோள்களையுடைய **உமை** அம்மையார்; **தழல்மதி** - கயநோயுடைய மதி; சந்திர சாபம் குறித்தது; **தழல் - தீ** - தீப்போல உள்ளிருந்து அழிக்கும் என்ற பொருளில் வந்தது; பிரிந்தார்க்குத் தழல் போல வெம்மைதரும் என்றலுமாம்; தனக்கென்று வேறு ஒளியின்றித் தழலுருவாயின இரவியினல் ஒளிபெற்று விளங்கும் மதி என்றலும் பொருந்தும்; **குர** - குரா மலர்; **வெறி**-மணம்;—**(3) பாட்டகத்து இசையாகி**-"பாட்டிற் பண்ணும்" (தேவா); **பரிவு இனியான்** - அன்பினுள் இனிக்கின்றவன்; அன்பு செய்யச் செய்யச் சுவைதருபவன்; **நாட்டகத் தேவர் செய்கையுளான் - நாட்டகம்-** வான நாட்டில்; எந்நாட்டிலுமுள்ள என்றலுமாம். "நாடிரங்கி முன்னறியுமந் நெறியால்" (10); "நாட்டகத் தேவர்கள் நாடரும் பொருளே" (திருவா); **கோட்டகம்** - கரைகளிடையே; **கோடு** - கரை;—**(4) ஆத்தம் ஆளுகந்தானை** - நம்பிகள் சரித அகச்சான்று; **ஆத்தம்** - அன்பு உரிமை; ஆப்தம் என்றது ஆத்தமென நின்றது; **மடமான்** - மான் போன்ற உமையம்மையார்; **குருமாமணி** - குருவாகி வந்தருள்பவர்;—**(5) அன்று...ஒளித்த** - மணப்பந்தலில் யாவருங் காணவந்ததும், **ஆளதாக என்று** - "என் அடியான் இந்நாவலா ரூரன்" என்றதும், **ஆவணங் காட்டி** - ஆளோலை காட்டிய வரலாறும், **நின்று வெண்ணெய் நல்லூர்மிசை ஒளித்த** - வெண்ணெய் நல்லூரில் வழக்குவென்று திருக்கோயிலில் போய் ஒளித்ததும் ஆகிய நம்பிகள் சரிதப் பகுதிக்குப் பேராதரவாகிய அகச்சான்று; **முத்திக் கொன்றினன்-** முத்தி நிலையில் முத்தான்மாக்களுடன் பிரிப்பின்றி ஒன்றித்து நிற்பவர்; **மெல்லியலுடனே** - தாமும் தேவியாருமாக எதிர்காட்சி கொடுப்பக் கண்ட குறிப்பு:—**(6) காற்று... நின்றானை** - ஐம்பூதங்களுள் நிறைந்த நிலை; **மால்விடையான்** - காத்தற் றொழில் குறித்தது; **நீற்றுத் தீயுரு - ஊழித்தீ; நீற்று** - நீற்றுகின்ற தீ; **தொழுமவன்** - மார்க்கண்டர்; **போக்குவான் வந்த கூற்றை** என்று கூட்டுக **வந்த** - சொல்லெச்சம்; **போக்குவான்** - போக்கும் பொருட்டு; **கூற்றை உயிர் நீக்கிடத் தாளால் தீங்கு செய்** என்று கூட்டுக; **கழல்** - வெற்றிக் குறிப்பு;—**(7) குழகன்** - அழகன்; "குழகன் கோலக்கா" (பிள்.தேவா - 3);—(8) திருஞான சம்பந்த நாயனாருக்கு இப்பதியிற் றிருப்பொற்றாளம் அளித்த சரிதம் போற்றப்பட்டது. ஆசிரியர் (3308) எடுத்துக்காட்டி யருளினர்; சரித ஆதரவு. **ஆளும் பூதங்கள்** - சிவபெருமானால் ஆளப்படும் எனப் பிறவினைப் பொருள் கொள்க; "குழுக்கொள் பூதப் படையான்" (பிள்.

3309. மூவாத முழுமுதலார் முதற்கோலக் காவகன்று
தாவாத புகழ்ச்**சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி**
நாவார்முத் தமிழ்விரகர் நற்பதங்கள் பரவிப்போய்
மேவார்தம் புரஞ்செற்ருர் **குருகாவூர்** மேவுவார், 155

தேவா.கோலக்.4); இறைவராணைப்படி உலகை ஆளும் என்றலுமாம்;—(9) **இரங்கியவென்றி** - ஆற்றல் அழித்ததற்கு மேலாய், இரக்கங் கொண்டதே பெருவெற்றி என்பது குறிப்பு. **பரக்கும்...அரியானை** - பாரளிக்கும் அரசர் தமது உலகபோக உயர்வு தோன்றச் செயல் செய்கின்றமையால் அவர்கள் வந்து பணிதற்கரியவன் என்ருர்; உலகபோகம் நிலையழிந்தபோதே இறைவர்பாற் பணிவு வரும் என்பது; **சிரக்கண். தீர்த்த** - சிரம் கண் வாய் செவி மூக்கு என்ற அவயவங்களைக் கொண்ட உடம்பினைக் கொடுத்து, அதனுள்ளே வாழும் உயிருடன் அறியவாராதபடி தாமும் பிணைந்து நின்று, தீவினைகளைப் பயன் தூய்ப்பித்துத் தீர்க்கும்; தக்க யாகத்தில் தேவர்கள்பால் செய்த வீரங்கள் என்றலுமாம்; -(10) **கோடரம் - கோடர்** - சிகரம்; (குவடு?) **அம்** - சாரியை; **கோடரம்பயில்**-சிகரமாக முடித்துக் கட்டிய; **மெய்ம்மானப் பாடர்** - உண்மையும் பெருமையும் கொண்ட பாட்டுக்களைப் பாடுபவர்களாகி; **பாட்டர்** - என்பது பாடர் என நின்றது. **பாடு** - பெருமையெனக் கொண்டு பெருமையையுடையோர் என்றலுமாம். இப்பொருளில் **மானப்பாடு** - இருபெயரொட்டு; **அம்குடி அடியவர்** - அழகிய குடிமைக் கண் அடியினை அடைந்தவர்; அடியே குடியாக அடைந்தவர்; **அம்**-அழகிய; **நாடிரங்கு...நெறியால்** - உலகம் உய்ய; **இரங்கி** - அன்பினுற் குழைந்து; **காடு அரங்கென**- சுடுகாடே ஆடரங்காக; **நடநவிலுதல்** -கூத்தாடுதல். **நவிலுதல்** - மரபு வழக்கு; **பதி** - நிலையான இருப்பிடம்; **பதி** - பதிந்த என்றதும் குறிப்பு; **அது** - நடமுடையான்பாற் சாருநிலை.

தலவிசேடம்:— **திருக்கோலக்கா** - காவிரி வடகரை 15 -வது பதி; IV பார்க்க. (பாட்டு 2002-ன் கீழ்).

3309. (இ-ள்) மூவாத...அகன்று - எஞ்ஞான்றும் மூப்படையாத முழு முதல்வராகிய சிவபெருமானது சிறந்த திருக்கோலக்காவினை நீங்கி; தாவாத...இறைஞ்சி - கெடாத புகழினையுடைய சண்பை என்னும் சீகாழிப் பதியினை வலமாகச் சுற்றிவந்து நிலமுறத் தாழ்ந்து வணங்கி; நாவார்...பரவிப்போய் - நாவார்ந்த முத்தமிழ் விரகராகிய திருஞானசம்பந்த நாயனுர் திருவடிகளைத் துதித்துச் சென்று; மேவார்தம்...மேவுவார் - பொருந்தாத பகைவர்கள் வாழும் முப்புரங்களையும் அழித்த சிவபெருமானது திருக்குருகாவூரினைச் சார்வாராகி,

(வி-ரை) மூவாத - மூப்படையாத; மூப்படைதல் அழிவுகாட்டும். எனவே இறப்பும், அதனைத் தொடர்ந்து பிறவியும் வரும்; மூவாத எனவே அழிவில்லாது என்றும் ஒரு தன்மையாயிருத்தல் குறிப்பு.

முழுமுதலார் - தமக்கு மேற்பட்ட முதன்மை யுடையார் இலராவர்; முதலாருடைய என ஆறனுருபு தொக்கது.

3310. உண்ணீரின் வேட்கையுட னுறுபசியான் மிகவருந்திப்
பண்ணீர்மை மொழிப்பரவை யார்கொழுநர் வரும்பாங்கர்க்
கண்ணீடு திருநுதலார் காதலவர் கருத்தறிந்து
தண்ணீரும் பொதிசோறுங் கொண்டுவழிச் சார்கின்றார். 156

முதற் கோலக்கா - முதல் - சிறப்பு.

தாவாத புகழ்ச்சண்பை - தாவாத - கெடாத; **சண்பை** - சீகாழியின் 9-வது பெயர்.

சண்பை வலங்கொண்டு தாழ்ந்திறைஞ்சி - சீகாழிப் பதியினுள்ளே மிதிக்காது நகரினையே வலம் வந்து வணங்கி என்க; ஆளுடைய பிள்ளையார் திருவவதாரஞ் செய்த பெரும்புகலி, யுள்ளுநான் மிதியேனென் றூரெல்லைப் புறம் வணங்கி நம்பிகள் அப்பதியினை வணங்க இறைவர் எதிர்காட்சி கொடுத்தருளினார் (258) என்பது முன்னர்க் கூறப்பட்டது; அவ்வரலாற்றினை இங்கு நினைவு கூர்க.

நாவார் முத்தமிழ் விரகர் - முத்தமிழும் பிள்ளையாரது திருவாக்கிற் பொலிவெய்தின என்பார் **நாவார்** என்றார்.

முத்தமிழ் விரகர் நற்பதங்கள் பரவிப்போய் - பிள்ளையார் அவதரித்த தலம் என்றதனாலே அங்கு மிதித்து உட்செல்லாது போந்தாராதலின், அவர் திருவடிகளைத் துதித்து மேற்சென்றருளினர் என்க.

மேவார்...மேவுவார் - மேவார் - பகையினர்; முப்புரவாணர்.

மேவார்...மேவுவார் - விரோதவணி என்னுஞ் சொல்லணி, மேவுவார் - மேவுவாராகி; முற்றெச்சம்; **பரவையார் கொழுநர்** என்ற எழுவாய் மேற்பாட்டிலுள்ளதனுடன் கூட்டுக.

நற்பதிகம் — என்பதும் பாடம். 155

3310. (இ-ள்) உண்ணீரின்...வரும்பாங்கர் - உண்ணும் நீரின் வேட்கையுடனே பொருந்திய பசியினாலும் மிகவும் வருந்திப் பண்ணின் நீர்மை பொருந்திய மொழியினையுடைய பரவையம்மையார் கணவராகிய நம்பிகள் வரும் பக்கத்திலே; கண்ணீடு...கருத்தறிந்து - கண்பொருந்திய திருநெற்றியினையுடைய சிவபெருமான் தம்பாற் காதலுடைய நம்பிகளது கருத்தினை யறிந்தாராதலின்; தண்ணீரும்...சார்கின்றார் - தண்ணீரினையும் பொதிசோற்றினையும் உடன் கொண்டு அவ்வழியிலே சார்கின்றாராய்,

(வி-ரை) உண்நீரின் வேட்கை - தாகம் என்பர். நீர்வேட்கை என்பதே யமையும்; **உண்** - என்பது மிகையாம் பிறவெனின்? உண்ணும் நீர் தக்கபடி வேறுயமைக்கவும் கொள்ளவும் படுதல் வேண்டிய நிலை குறிக்க உண்ணீர் எனப்பட்டது; "வெயிலின்வைத், தாற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப, மடாஅ வொருவன் விடாஅ வேட்கை, தெண்ணீர்க் குற்றமன்று" (திருவிடை-மும். கோவை-6) என்ற பட்டினத்து அடிகளார் திருவாக்கும் காண்க; "தண்ணீரமுதம்" (புராண வரலாறு-72) என்று இதனை விதந்து வேறு கூறியதும் கருதுக.

உறுபசி - உறு - பெரியோரிடத்தும் ஓரோர்பொழுது **வந்து** தாக்கும் தன்மையுள்ள; "**கனல் வாதை வந்தெய்தின்**" (தாயுமா)என்று பெரியோர்களிடம் ஓரோர்கால் வந்து தோற்றப்படுவதன்றி ஏனையோரிடத்துப்போல எப்பொழுதும் உண்பதே தொழிலாயிருக்கும்படி வாராது என்ற குறிப்புப்படக் கூறியது ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

பண்ணீர்மை மொழி - உயர்ந்த சாதிப் பெண்களின் குரலில் பண் அமைந்திருத்தலின் மொழிகள் பண்ணின் தன்மை பொருந்தி வெளிவரும் என்பது.

வருந்தி - பசியும் நீர்வேட்கையும் வருத்தினும் அவற்றை அறியாது - பொருட்படுத்தாது - சிவத்தொண்டிற் பிறழாது செல்லுதல் பெரியோரியல்பு; "வழிபோம் பொழுது மிகவிளைத்து வருத்த முறநீர் வேட்கையோடும், அழிவாம் பசி**வந்தணைந்த திடவு** மதற்குச் சித்த மலையாதே, மொழிவேந் தருமுன் னெழுந்தருள்" (*1569*) என்ற அரசுகள் சரிதப் பகுதி ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

கண்நீடு திருநுதலார் கண்நீடு - என்பது அருட்கண் நீடியிருப்பவாராதலின் என்று காரணக் குறிப்புப் பெறநின்றது.

காதலவர் - எஞ்ஞான்றும் மறவாது தம்பாற் பெருவிருப்புடையவர்.

கருத்தறிந்து - கருத்து - உடல் வருத்தம் நோக்காது பணியினிற்கும் கருத்து; பசி நீர்வேட்கை வருத்தத்தினை நம்பிகள் அறியாது பணியினின்றுராதலின், அவரது கருத்தினுள் இருந்து, உயிர்க்குயிராகிய இறைவராதலின் அவற்றையெல்லாம் அறிந்தருளி என்பது; "கண்டு காட்டலின்" (போதம்-*11*-சூ.) என்றவிடத்து "ஈண்டு அவனும் அவற்றது (உயிர்களது) விடயத்தை யுணரும்" என்று மேற்கோள் எடுத்துக்கூறி யதிகரணம் வகுத்தருளியதும், "முதல்வனும் உயிர்களா னுணரப்படும் விடயத்தை உடனின் றுணருவன்" என்று உரைவகுத்து விரித்தமையும், ஆண்டுரைத்தவையும் இங்கு வைத்துக் கண்டுகொள்க.

தண்ணீரும் பொதிசோறும் - நீர்வேட்கை தீர்க்கத் தண்ணீரும், உறுபசி தீர்க்கச் சோறும் என்று நிரனிரையாக் கொள்க; **பொதிசோறு** - கறியும் கூட்டு உணவு வகைகளும் கூட்டிக் கட்டியசோறு. கட்டுச்சோறு என்பது உலக வழக்கு; பசியினும் கொடியதாய் வருத்தும் சிறப்புப்பற்றி நீர் வேட்கையும், நீரும் முன் வைக்கப்பட்டன;

வழிச்சார்கின்றார் - வழி - நம்பிகள் எழுந்தருளி வரும் வழியில்; **சார்கின்றாராகி** - முற்றெச்சம். சார்கின்றார் - வேடங்கொண்டிருந்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. "தன்கடன் அடியேனையுந் தாங்குதல், என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று ஆண்டானுக்கும் அடிமைக்கும் முறையே கடமைகள் வகுத்த அரசுகள் திருவாக்கும், ஆண்டவன் கடமையை முன்வைத்த வைப்பு முறையும் கருதுக.

கண்நுதலார் - சார்கின்றார் - வேதியராய் - வரவு பார்த்து இருந்தார் என்று மேற்பாட்டுடன் கூட்டி அமைத்துக்கொள்க.

காதல் வர - என்று பாடங் கொள்வாருமுண்டு. *156*

3311. வேனிலுறு வெயில்வெம்மை தணிப்பதற்கு விரைகுளிர்மென்
பானன்மலர்த் தடம்போலும் பந்தரொரு பாலமைத்தே
ஆனமறை வேதியரா யருள்வேடங் கொண்டிருந்தார்
மானமருந் திருக்கரத்தார் வன்றொண்டர் தமைப்பார்த்து. 157

3311. (இ-ள்) வேனிலுறு...அமைத்தே - வேனிலிற் பொருந்தும் வெயிலின் வெப்பத்தினைத் தணிப்பதற்கு மணமும் குளிர்ச்சியும் உடைய மெல்லிய செங்கழுநீர்த் தடாகம் போலும் பந்தரை ஒருபால் உண்டாகச் செய்தே; மானமரும் திருக்கரத்தார் - மான் பொருந்திய கையினையுடைய இறைவர்; ஆனமறை... கொண்டு - ஆகிய மறைவேதியராக அருளுடைய திருவேடத்தினை மேற்கொண்டு; வன்றொண்டர் தமைப்பார்த்து - நம்பிகள் வருகின்றதை எதிர்பார்த்து; இருந்தார்- எழுந்தருளியிருந்தார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வேனிலுறு வெயில் வெம்மை தணிப்பதற்கு - வேனிற் காலமாதலின் வெயிலில் நடந்துவந்த வெப்பத்தினையும், இங்குத் தங்கிப் பொதிசோறுண்டு இளைப்பாறுதற்குரிய நேரத்தில் மூளும் வெப்பத்தினையும் தணிக்க.

தடம் - தடாகம்; மலர்வாவி; **தடம் போலும் பந்தர்** - குளிர்ச்சிதரும் தொழில் பற்றிய உவமம்; **ஒருபால்** - நம்பிகள் வரும் வழியில் ஒரு பக்கம்; வரும் வழியில் அவர் உட்புகும்படி அமைத்தார் என்பது, **அமைத்து** - எண்ணமாத்திரையில் உளதாகக் கண்டு.

ஆன மறைவேதியராய் - ஆன-விதி முறைப்படி அமைவதான; **மறைவேதியர்- மறை** என்பது தொழில் முதலிய பண்பினைப் புலப்படுக்க என்றும், **வேதியர்** - என்பது சாதியினையும் உணர்த்தலிற் கூறியது கூறலன்மையுணர்க; **மறை** - உண்மை நிலையினை மறைக்கும் என்றலுமாம்; இப்பொருளில் **மறை ஆன** என்று கூட்டி உரைத்துக் கொள்க; **ஆன** - மேற்கொண்ட.

அருள் வேடம் கொண்டு - கருணை புலப்படக் கொள்ளும் திருவேடத்தினை மேற்கொண்டு; இவ்வேடம் ஏனையோர் வேடம்போல மாயாகாரிய உருவமன்று; கருணையே திருமேனியாகக் காட்டி என்பது; "குறித்ததொன் றுக மாட்டாக் குறைவில ளுத லானும்...நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி னாலே" (சித்தி 1-95) என்பது ஞானநூலின் முடிபு.

பார்த்து இருந்தார் - என்று கூட்டுக. இறைவர் செயலை முன்னும், வன்றொண்டர் தமை என்று தொண்டர் செயலைப் பின்னும் வைத்து வினைமுற்றினையும் முன் வைத்த வைப்புமுறை குறிக்கற்பாலது. "அவனரு ளாலே அவன்றாள் வணங்கி" (திருவா); "ஆட்டுவித்தா லாரொருவ ராடா தாரே" (தேவா) என்பன முதலிய திருவாக்குக்களா லயறிப்படுமாறு இறைசெயல்...உயிரின் செய லிரண்டனுள் இறைவரருளும் செயலே முன்னிகழ்வதாம் என்பது உண்மை; "குழகர் வழி பார்த்திருப்ப" "...தம்பிரான் தோழர் புகுந்து இருந்தார்" என மேல்வரும் பாட்டிற்கூறும் முறையும் காண்க.

3312. குருகாவூ ரமர்ந்தருளுங் குழகர்வழி பார்த்திருப்பத்
திருவாரூர்த் தம்பிரான் ேறாழர்திருத் தொண்டருடன்
வருவாரப் **பந்தரிடைப் புகுந்துதிரு** மறையவர்பாற்
பெருகார் வஞ் **செலவிருந்தார் "சிவாயநம"** வெனப்பேசி. 158

வன்றொண்டர் - வலிமையாய்ப் பேசினும் விடாது தாமே வலிந்து தொண்டாக - ஆளாகக் கொண்டமையால், அவர் வருந்தாமைக் காத்தல் தமது கடமையாயிற்று என்ற குறிப்புப் பெற இப்பெயராற் கூறினுர். "வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர் வாழ்வு தந்தார்" (நம்பி - திருவெண்ணெய் நல்லூரும் திருநாவலூரும்-2)

வன்றொண்டர் தமைப் பார்த்து - "தம்மை யடைந்தார் வினைதீர்ப்ப தன்றேதலையா யவர்தங் கடனு வதுதான்" (அரசு) என்ற இறைவர் கடமையும் காண்க. *157*

3312. (இ-ள்) குருகாவூர்...இருப்ப - திருக்குருகாவூரில் விரும்பி வீற்றிருந்து அருள்புரியும் குழகராகிய இறைவர் முன் கூறியவாறு வன்றொண்டர் வரும் வழியைப் பார்த்திருந்தாராக; திருவாரூர்த் தம்பிரான் றோழர்...புகுந்து - திருவாரூரில் உள்ள தம்பிரான் தோழராகிய வன்றொண்டர் திருத்தொணடர்களோடும் வருவார் அந்தப் பந்தருள்ளே புகுந்து; திருமறையவர்பால்...எனப்பேசி - திருமறையவராய் அங்கிருந்தவரிடம் மிக்க ஆர்வஞ் சென்றமையாலே அவரருகு "சிவாயநம" என்று சொல்லி யமர்ந்தனர்.

(வி-ரை) குருகாவூர்...இருப்ப - முன் கூறியவாறு இருப்ப என்க. **வழி பார்த்தல்**- அவ்வழியே நம்பிகள் வருவதனை எதிர்பார்த்தல்.

திருவாரூர்த் (தம்பிரான்) தோழர் - திருவாரூரில் வாழும் தோழர் என்க. **தம்பிரான்றோழர்** - நம்பிகளுக்கு அடியார் வழங்கிய பெயர். (*273 -275*)

திருவாரூர்த் தம்பிரான் என்று கூட்டி யுரைப்பினும் அமையும்.

அப்பந்தரிடைப் புகுந்து -அவ்வழியிற் பந்தரினுள்ளே புகுந்து; அப்பந்தர் உருவாலும் திருவாலும் இடத்தாலும் அவ்வழி வருவார் உட்புகாமல் போக இயலாதபடி அமைக்கப்பட்ட நிலை குறித்தது. அப்பூதி நாயனுரது தண்ணீர்ப் பந்தரினுள் அவ்வழிப்போந்த ஆளுடைய அரசுகள் புகுந்தமை பற்றிய நிகழ்ச்சிகள் ஈண்டு நினைவுகூர்தற்பாலன.

திருமறையவர் - முன் "மறைவேதியர்" (*3311*) என்றதனையே தொடர்ந்து கூறியது; **மறையவர்** வேடத்தினுள் மறைந்து நின்றவர்; மறைகளுக்குப் பொருளாவார் என்ற குறிப்பும் காண்க.

மறையவர்பால் - இருந்தார் என்று கூட்டுக.

பெருகார்வஞ் செல - "நேசமுன் கிடந்த சிந்தை நெகிழ்ச்சி" (*186*), "கண்ட தோர் வடிவா லுள்ளங் காதல்செய் துருகா நிற்கும்" (*188*) என்றவையும், பிறவும் பார்க்க; தம்மை யறியாமலே அவர்பால் நம்பிகளின் ஆர்வஞ் சென்றது.

3313. ஆலநிழற் கீழிருந்தா ரவர்தம்மை யெதிர்நோக்கிச்
"சாலமிகப் பசித்தீரிப் பொதிசோறு தருகின்றேன்;
காலமினித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
ஏலநறுங் குளிர்தண்ணீர் குடித்திளைப்புத் தீரு"மென. 159

"சிவாயநம" எனப்பேசி - பெரியோர்கள் சந்தித்தபோது முதலில் இறைவர் பெயர் சொல்லித் துதித்துப் பின் அளவளாவத் தொடங்குதல் மரபு. இங்கு இம்மரபு, **தம்மை** யறியாமலே முன்னின்ற இறைவரை நம்பிகள் துதித்ததாகிப், பயன் தந்தமை கூறிக்**கொள்க.** பெரியோர் மரபுகள் எல்லாம் இவ்வாறு வரும் பயன் பற்றியன என்க.

பேசி - சொல்லி. *158*

3313. (இ-ள்) ஆலநிழல்...எதிர் நோக்கி - ஆலமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த இறைவர் முன் சொன்னவாறு இருந்த நம்பிகளை எதிர்நோக்கி, "சாலமிக... தீரும்" என - **"நீர்** மிக அதிகமாய்ப் பசித்தீர்; என்னிடம் உள்ள இந்தப் பொதிசோறு தருகின்றேன்; **இனியும்** காலம் தாழ்க்காமல் இதனை ஏற்றுக்கொண்டு இங்கு இனிமையாய் உண்டு பொருந்தும்படி நல்ல குளிர்ந்த தண்ணீரினைக் குடித்து இளைப்பைத் தீர்வீராக" என்று சொல்ல,

(வி-ரை) ஆல நிழற் கீழ் இருந்தார் - மறையவராகிய சிவபெருமான்; **வினைப்பெயர்;** அங்கு ஏனையோர் பந்தரின்கீழ் இருந்தார். இவர் ஆலநிழற்கீழ் இருந்தார் என்றதொரு தொனியும் காண்க.

அவர் தம்மை - "சிவாயநம" எனப்பேசித் தம்பால் வந்திருந்த நம்பிகளை; **அவர் -** முன்னறிசுட்டு

சால மிகப் பசித்தீர் - சால மிக - மிகவும் அதிகமாக; ஒருபொருட் பன்மொழி **மிகுதி** குறித்தது. பசியினை, முகவாட்டம் - மேனியிளைப்பு - முதலிய புறத்தே **தோற்றும்** மெய்ப்பாடுகளாலன்றி உள்ளே நின்றபடி அறிந்தார் என்பது முன்னர்க் கருத்தறிந்து என்றதனால் அறியப்பட்டது.

இப்பொதிசோறு - தம்முன் இருந்த பொதி சோற்றினைக் காட்டி **இப்பொதி** என்றார்; **தருகின்றேன் -** தருதல் ஒப்பவனது உரை; நான் அநாதிசைவன்; நீர் நம்மருளால் அதிகரித்து வழிவழிவரும் ஆதிசைவர்; இவ்வொப்புமையால் நான் தரும் சோறு கொள்ளத்தகும் என்பது குறிப்பு; மறையவர் சொல்லியவாறேமேல் நம்பிகளும்"மறை முனிவர் **தரும்** பொதிசோறு" *(3315)* என்பதும் காண்க.

காலம் இனித் தாழாதே - இனியும் தாழ்த்தலால் பசியும் அதனால்வரும் வருத்தமும் மிகும் என்று பரிவுடன் கூடிய கருணைமொழி.

கைக்கொண்டு - ஏற்றுக்கொண்டு; கையில் ஏற்றுக்கொண்டு என்பதும் குறிப்பு; **இங்கு** - இப்பந்தரிடையே; இது வழியிடை - உணவு கொள்ளத்தக்க இடம் இது என்ற குறிப்புமாம்.

3314. வன்றெண்ட ரதுகேட்டு "மறைமுனிவர் தரும்பொதிசோ
றின்றுநமக் கெதிர்விலக்க லாகா" தென் றிசைந்தருளிப்
பொன்றயங்கு நூன்மார்பர் தரும்பொதிசோ றதுவாங்கிச்
சென்றதிருத் தொண்டருடன் றிருவமுது செய்தருளி, 160

ஏல நறுங் குளிர் தண்ணீர் குடித்து - **ஏல** - பொருந்த; பொதிசோற்றுணவுக்குப் பொருந்த உள்ள: **நறுமை** - இனிமை; **குளிர் தண்ணீர்** - குளிர்ந்த நீரே குடிக்கத் தக்கது என்பது மருத்துவ நூல்விதி; நோய் கொண்டவர்க்கே வெந்நீர் விதிக்கப்படும். இங்குக் கூறிய நீர் மறையவனுர் உடன்கொண்டு வந்தது.(*3310*).

இளைப்புத் தீரும் - **இளைப்பு** - பசி - தாகம் - வெயில் வெப்பம் - வழிநடை முதலிய பலவற்ருலும் நேர்ந்த இளைப்பு; **தீரும்** - இளைப்பினின்றும் நீங்குவீராக.

என - என்று சொல்ல. ***159***

3314. (இ-ள்) வன்றெண்டர்...இசைந்தருளி - வன்றெண்டர் அதனைக் கேட்டு "மறைவேதியராகிய இவர் தருகின்ற இந்தப் பொதிசோற்றினைக் கைக்கொள்ள இசையாது இன்று மறுப்பது நமக்குத்தகாது" என்று கருதி இசைந்தருளிச் செய்து; பொன்தயங்கு...வாங்கி - பொன் விளங்கும் நூலணி மார்பினையுடைய இறைவர் தருகின்ற பொதிசோற்றினை வாங்கிக்கொண்டு; சென்ற...செய்தருளி - உடன்சென்ற திருத்தொண்டர்களுடனே திருவமுது செய்தருளி,

(வி-ரை) வன்றெண்டர்...இசைந்தருளி - **வன்றெண்டர்** - முன் "வன்றெண்டர்" (*3311*) என்றதும் காண்க. **மறை முனிவர்** - மறையவர் வேடத்துள் மறைந்து நின்ற முனிவர்.

பொதிசோறு...ஆகாது-இது நம்பிகள் மனத்துள் எண்ணியது. திருவருட் குறிப்பினுல் எழுந்த கருத்து.

எதிர் விலக்கல் - மறுத்து ஏதேனும் சொல்லி இசையாது விலக்குதல். **இன்று...ஆகாது** வரும் வழியிடையிலும் முன் அறியாதாரிடத்தும் இவ்வாறு தரப்படும் சோற்றினை ஏதேனும் காரணம்பற்றி விலக்குதலன்றி, ஏற்பது பெரியோரது மரபன்றுயினும், இன்று இஃது அவ்வாறு மறுக்கற்பாலதன்று என்பதாம். இஃது இறைவரின் அருட்பார்வையாலும் சொல்லாலும் ஆகியதேயன்றி நம்பிகளது பசிவருத்தத்தா லாயதன்று.

பொன் தயங்கு நூன்மார்பர் - மறையவராய் நின்ற இறைவனுர்; **பொன்** - பொன்ஒளி; **தயங்குதல்** - விளங்குதல்; **பொன்னுர் மார்பர்** - **நூன்மார்பர்** - என்று தனித்தனிக் கூட்டுக; **சோறு அது-அது**-பகுதிப் பொருள் விகுதி.

சென்ற - உடன்வந்த; **சென்று** - என்ற பாடம் சிறப்பிலது. ***160***

3315. (இ-ள்) எண்ணிறந்த...பண்ணியபின் - அளவில்லாத பரிசனங்கள் எல்லாரும் இனிதாக உண்ணும்படி செய்த பின்பு; அம்மருங்கு...அருந்த - அந்தப் பக்கத்துப்பசித்து

3315. எண்ணிறந்த பரிசனங்க ளெல்லாரு மினிதருந்தப்
பண்ணியபின் னம்மருங்குப் பசித்தணைந்தார் களுமருந்த
உண்ணிறைந்த வாரமுதா யொருகாலு முலவாதே 161
புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால்.

வந்தணைந்தவர்களும் உண்ண; உண்ணிறைந்த...பொலிந்தது - உள்ளே நிறைந்த இனியஅமுதம் போல ஒரு சிறிதும் எவ்வாற்றானும் குறைவில்லாதபடி புண்ணிய மறைவேதியர் தாம் கருணையுடன் தந்த பொதிசோறு விளங்கிற்று; (ஆல் - அசை).

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) எண்ணிறந்த பரிசனங்கள் - நம்பிகளுடன் அளவில்லாத பரிசனங்கள் யாத்திரையில் தொடர்ந்து சென்றார்கள் என்பது விளங்குகின்றது; ஆளுடைய அரசுகளது தனித்த யாத்திரை இதனுடன் ஒப்பு நோக்கி உணரற்பாலது. நம்பிகளின் பரிசனங்களைப் பற்றிப் பின் 3329-லும் பார்க்க.

எல்லாரும் - உடனிருந்த தொண்டர்களும் பரிசனங்களல்லாத பிறரும்; பரிசனங்களாய் வந்த எல்லாரும் என்றலுமாம்.

அம்மருங்குப் பசித்தணைந்தார்களும் - வழிக்கரையில் தண்ணீர்ப்பந்தருடன் பொதிசோறு மருத்தலின் அவ்வழியே செல்வோர்களுட் பசித்து வந்தவர்கள். இவ்வாறாகிய பசு தர்மங்களும் செய்யத்தக்கவை என்ற நிலையினை அறஞ்சொன்ன இறைவர் தாமே செய்து காட்டியவாறும்; நம்பிகள் பரிசனங்கள் இவர்கள்பாற் பட்டபோது இதுவே பதி தருமமாகும்; பசித்தணைந்த ஏனையோர்பாற்பட்டபோது அதுவே பசு தருமமாகும். இறைவர் செய்தமையால் இவற்றின் பயன்கள் முறையே அவை செய்யப்பட்டார்பாற் சார்ந்தன. இறைவர் தந்த பொதிசோறு ஒன்றேயாயினும் அதனை உண்டார் பிறரெல்லாம் நம்பிகள் போலப் புனிதர்களாயுயர்ந்தாரலர் என்பதும் காண்க; மேல் வருவதன் கருத்தும் கருதுக.

உண்ணிறைந்த...பொலிந்ததால் - உண்ணிறைந்த ஆரமுதாய் - உலவாக் கோட்டையாகிய அமுதமாகி.

உண்ணிறைதல் - எடுக்க எடுக்கக் குறையாது உள்ளே நிறைந்து பொலிதல்; **ஆரமுது** - பொதிசோறு.

அமுதாய் - அமுதம் போல என்றலுமாம்.

புண்ணியனார் - எல்லாப் புண்ணியங்களின் பயனானவர் சிவபெருமான்.

அளித்த பொதிசோறு - தண் அளியுடன் கொடுத்தருளிய சோறு; ஈண்டு, நீர் வேட்கையாலும் பசியாலும் மிக வருந்திவரும் தம் அடியாராகிய நம்பிகளுக்கு அளித்தது சாலும்; ஏனைப் பரிசனங்களுக்கும் மற்றும் அணைந்தோர்களுக்கும் அளித்த தன் இயைபு என்னை? எனின், அவர்களும் பசியான் வருந்தி யணைந்தமை காரணமாக நம்பிகள் பொருட்டு

3316. சங்கரனுர் திருவருள்போற் றண்ணீரின் சுவையார்ந்து
பொங்கிவரு மாதரவா லவர்நாமம் புகழ்ந்தேத்தி
அங்கயர்வாற் பள்ளியமர்ந் தருகணைந்தார் களுந்துயிலக்
கங்கைசடைக் கரந்தாரப் பந்தரொடுந் தாங்கரந்தார். 162

வந்த தண்ணளி எல்லார்க்குமாயிற்று என்க; புவனத்தில் உண்மையில் நீரும் உணவுப்பொருளும் உளவாக்கி எல்லாவுயிர்க்கும் பசி தீர்க்க வுதவுபவர் இறைவரேயாம் என்று மறக்கற்பாலதன்று; ஆயின் ஈண்டுப் **பொதிசோறே**யாகி உண்ணப்பெற்றது நம்பிகளது சார்பினுலும் அங்கு அவ்வவர் வந்து சார்ந்த ஊழ்வினையாகிய நியதியாலுமாம்; ஏனையோர் பக்கல் பயன் வேறு என்பது **அணைந்தார்களும்** என்ற உம்மையாலும் பெறப்படும். ***161***

3316. (இ-ள்) சங்கரனுர்...ஆர்ந்து - சங்கரனுருடைய திருவருளினைப் போலப் பெற்ற தண்ணீரையும் அருந்தி அதன் சுவையும் நிறைந்து; பொங்கிவரும்...புகழ்ந்தேத்தி- மேன்மேலும் அதிகரித்து மிகுகின்ற அன்பினுலே அவரது திருநாமமாகிய திருவைந் தெழுத்தினையே புகழ்ந்து துதித்து; அங்கு...துயில - அவ்விடத்தில் உடல் இளைப்பினுலே நம்பிகள் பள்ளிகொண்டு துயிலவும், பக்கத்தில் அணைந்தவர்களும் துயிலவும்; கங்கை...கரந்தார் - கங்கையைச் சடையிலே ஒளித்தவராகிய சிவபெருமான் அந்தப் பந்தருடனே தாமும் ஒளித்தருளினுர்.

(வி-ரை) சங்கரனுர் - சுகத்தைச் செய்பவர் என்பது சொற்பொருள்; இங்கு வழியிடை எதிர்பார்த்திருந்து பொதிசோறும் தண்ணீரும் கொடுத்து இளைப்பு நீக்கிச் சுகம் செய்தவர் என்ற காரணக் குறிப்புப்பட இப்பெயராற் கூறிய நயம் காண்க.

திருவருள் போற் - சுவை ஆர்ந்து - அருள் இனிப்பது போலத் தண்ணீரும் இனிப்பது என்பதாம்; சோறு அருந்திய அளவெல்லாம் முன்கூறி முடித்தபின், நீரின் சுவை ஆர்தலைக் கூறியது, உணவு உண்டு முடிந்த நிலையினன்றி, உணவு கொள்ளும் இடையில் நீர் உண்ணலாகாது என்ற மருத்துவ நூலோர் முடிபு குறித்தற்கு.

அவர் நாமம் புகழ்ந்து ஏத்தி - அவர் நாமமாவது திருவைந்தெழுத்து; "ஆலைப்படுகரும்பின் சாறு போல வண்ணிக்கு மைந்தெழுத்தின் நாமத் தான்காண்"(தேவா); முன்பு, இருந்தார் "சிவாயநம" வெனப்பேசி (3312) என்றது காண்க. நம்பிகள் தமையறியாமலே அச்சிவ மறையவரது நாமத்தையே துதிக்கின்ருர்; யாது நன்மையாவர் மூலம் வரினும் அவை யாவும் சிவனருள் என்று கொண்டு சிவனைத் துதித்தல் பெரியோரியல்பு. "வழுக்கி வீழினும் திருப்பெய ரல்லால் மற்று நானறியேன் மறு மாற்றம்" (நம்பி - தேவா) என வருவதும், "நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே" (நம்பி) என்றதும் கருதுக.

அங்கு அருளாற் பள்ளி அமர்ந்து - அருளால் - அருள்வயப்பட்டு; அருள் வயத்தாலன்றி, அது துயிலுதற் கான இடமும் காலமுமல்ல என்பது குறிப்பு. "அருளாலோ?"

3317. சித்தநிலை திரியாத திருநாவ லூர்மன்னர்
அத்தகுதி யினிற்பள்ளி யுணர்ந்தவரைக் காணாமை
"இத்தனையா மாற்ற மறிந்திலே" னெனவெடுத்து
மெய்த்தகைய திருப்பதிகம் விளம்பியே சென்றடைந்தார். 163

(3202) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; **அங்கு** - அந்த வழியிடைக் கண்ட அப்பந்தரிடையே; **பள்ளி அமர்ந்து** - துயின்று; நம்பிகள் என்ற எழுவாய் தொக்குநின்றது. **அருகணைந்தார்களும்** - உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

சடைக்கரந்தார்...தாம்கரந்தார் - கரந்தார் - முன்னையது வினையாலணையும் பெயர்; பின்னையது வினைமுற்று; சொற்பின் வருநிலை. **162**

3317. (இ-ள்) சித்தநிலை... பள்ளியுணர்ந்து - மனநிலையின் ஒருசிறிதும் திரிதல் இல்லாத திருநாவலூர்த் தலைவராகிய நம்பிகள் அவ்வாற்றினிலே துயிலுணர்ந்து. அவரைக் காணாமை - அந்த மறைவேதியரைக் காணாமையால்; "இத்தனையாம்... எடுத்து" - "இத்தனை யாமாற்றம் அறிந்திலேன்" என்று தொடங்கி; மெய்த்தகைய...சென்றடைந்தார் - சத்தாந் தன்மையுடைய திருப்பதிகத்தினைப் பாடியருளியவாறே திருக்குருகாவூரினைச் சென்றடைந்தார்.

(வி-ரை) சித்தநிலை திரியாத - துயிலும்போதும் சித்தம் திரியாது அறிதுயில் கொண்டு சிவயோக நிலையில் சிவனை மறவாநிலையில் உள்ள; திரியாதவராயினும் இறைவர் காட்டினாலன்றி அறியுமாறில்லை என்பது குறிப்பு.

அத்தகுதியினிற் பள்ளி உணர்ந்து - அந்த நிலையில் நின்றவாறே துயிலுணர்ந்து.

காணாமை - காணாதபடியால்; **அவரை** - மறைவேதியராய்க் காணநின்று பொதிசோறும் நீரும் அளித்த அவரை; முன்னறிசுட்டு.

"இத்தனையா மாற்ற மறிந்திலேன்" என இப்பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு; **மாற்றம்** - மாறுதல்; **எடுத்து** - தொடங்கி.

மெய்த்தகைய - மெய்விளங்கும் தன்மையுடைய; **சென்று** - அவ்விடத்தினின்றும் திருக்குருகாவூருக்குச் சென்று. **163**

திருக்குருகாவூர் வெள்ளடை

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம், 7-ம் திருமுறை**

இத்தனையா மாற்ற மறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவார் பிறரெல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்க முளைத்தெழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. (1)

ஆவியைப் போகாமே தவிர்த்தென்னை யாட்கொண்டாய்
வாவியிற் கயல்பாயக் குளத்திடை மடைதோறுங்

காவியுங் குவளையுங் கமலஞ்செங் கழுநீரும்
மேவிய குருகாவூர் வெள்ளடை நீயன்றே. (2)

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநன் கலனுக வுண்பலிக் குழல்வானே
காடுநல் லிடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே. (3)

வளங்கனி பொழின்மல்கு வயலணிந் தழகாய
விளங்கொளி குருகாவூர் வெள்ளடை யுறைவானை
இளங்கிளை யாரூரன் வனப்பகை யவளப்பன்
உளங்குளிர் தமிழ்மாலை பத்தர்கட் குரையாமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவரே! இத்தனையாம் மாறுதல் அடியேன் அறிந்திலேன்; தேவரீர் குருகாவூர் வெள்ளடை நாதர் நீரே யன்றே? தேவரீர் எனது பசியினைப் போக்கினீர்; ஆவியைப் போகாமே தடுத்து ஆண்டருளினீர். இது சரித ஆதரவான பதிகம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) இத்தனை ஆம் மாற்றம் - இவ்வளவும் ஆகும் மாறுதல்;முன்கூறிய சரித வரலாறு காண்க; **இத்தனையாமாற்றை** - என்பது பாடமாயின் **ஆற்றை** - ஆற்றினை (வழியை) என்க; **அறிந்திலேன்** - சித்தநிலை திரியா திருப்பினும் உமது திருவருள் காட்டினலன்றி யறியுமாறில்லை;ஆதலின் அறிந்திலேன் என்றதாம்; **பிறரெல்லாம்** - பிறர் உம்மைப் பித்தர் என்னினும் நான் இனி அவ்வாறு சொல்லமாட்டேன் என்பது குறிப்பு; **முத்தினை...வித்தனே** - அருமைப்படப் பாராட்டிப் போற்றியது; **வெள்ளடை** - சுவாமி பெயர்; **(2) ஆவியை... ஆட்கொண்டாய்** - இச்சரித வரலாற்றுக் குறிப்பாகிய ஆதரவு; **(3) பாடுவார் பசிதீர்ப்பாய்** - சரித ஆதரவு; பாடுவாரது பசியினைத் தீர்ப்பீராயினும் நீர் உண்ணப் பலிதிரிவீர் என்று பாராட்டியது;**—(4) வெப்பொடு பிணியெல்லாம்** - பிறவிப்பிணி யுள்ளிட்ட எல்லாம்; மேல் (5) **வரும்பழி** என்றதும் காண்க; **(5) வரும்** - வரக்கடவதாகிய; பழி - பிறவியால் வரும் கேடு;**—(6) பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் - பண்** தமிழ் மொழியின் சிறப்பியல்பாகிய பண்; **பழத்தினிற் சுவை** - அத்துவிதக் கலப்பு; **கண்ணிடை மணி** - காணுமுபகாரம்; **கடுவிருட் சுடர்** - காட்டு முபகாரம்; பாடும் தமிழ் காரணமாகச் சுவை அமுது தந்து கண் காண நின்று ஒளித்தபின் உமது தன்மை விளங்க அறியவைத்தீர் என்றதொரு குறிப்பாகிய உள்ளுறையும் காண்க; **மண்ணிடை....வாராமே** - சரித ஆதரவு:**—(7) போந்தனை** - மறைந்து போயினை; **நோந்தனை** - வருந்துமளவு; **நுன்னலது** - உன்னையல்லாமல் வேறொன்றனையும் "மற்றுப் பற்றெனக்கின்றி" "மற்று நானறியேன் மறுமாற்றம்" முதலியவை காண்க; **சாந்தனை வரும் மேலும்** - மேலும் மேலும் இறத்தல் பிறத்தல்;தடுத்தாட்கொண்ட வரலாறும் குறிப்பு: இச்சரித வரலாறும் குறிப்பு; மேல்வரும் இரண்டு பாட்டுக்களும் பார்க்க;**— (8) மலக்கு** - துன்பம்; **சலச்சல மிடுக்கு** - மிகவும் துன்பம் செய்யும் வன்மை; **கடுந்துயர்** - மரணத் துன்பம்; **-(9) படுவிப்பாய்** - ஆளாக்குவாய்; **அல்லாதாரது** (தொடக்கினைக்)

3318. குருகாவூ ரமர்ந்தருளுங் குழகனார் கோயிலினுக்
கருகார்பொற் கோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்புக்கு
வருகாதல் கூரவலங் கொண்டுதிரு முன் வணங்கிப்
பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகினார். 164

கெடுவிப்பாய் என்க; தொடக்கினை என்பது சொல்லெச்சம்; ``மறைப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வையுற'' என்பது சிவஞானபோதம்; **விடுவிப்பாய்** - செல்லவிடுதல்; **(10) இளங்கிளை** - சிறுவன்; இளையவன்; **உரை** - உரைக்கத்தக்க பொருள்.

தலவிசேடம்:— திருக்குருகாவூர்-தொகுதி IV பக்கம் 219 பார்க்க; காவிரி வடகரை, சோழநாட்டு 13-வது தலம்.

3318. (இ-ள்) குருகாவூர்...அணைந்திறைஞ்சி - திருக்குருகாவூரின் கண் விரும்பியிருந்து அருள்புரிகின்ற இறைவரது திருக்கோயிலினுக்கு அருகே சார்ந்து நிறைந்த அழகிய திருக்கோபுரத்தை அணைந்து வணங்கி; உள்புக்கு...வணங்கி - உள்ளே புகுந்து நிரம்பின பெருங்காதல் கூர வலம்வந்து இறைவரது திருமுன்பு வணங்கி; பருகா...பருகினார் - முன் பருகப்படாத இனிய அமுதம்போலும் சிவபெருமானைக் கண்களினாலே பருகினார்.

(வி-ரை) வருகாதல் - இறைவர் தம்பாற் செய்த பேரருள் காரணமாக வரும் பேரன்பு.

பருகா இன்னமுதத்தைக் கண்களாற் பருகினார் - பருகாத இனிய அமுதமாவார் இறைவர்; முன்னர் இவ்விறைவரே மறை வேதியராய்க் கண்முன் வந்தருளியும் அவரை அவரே யென்று காணாமையின் அவரளித்த அமுதத்தினைப் பொதிசோறென்று பருகினாரே யன்றி அவரது திருவருளை இறைவரதென்று கண்டு பருகினாரல்லர்; அவ்வாறு அவர் வெளிப்பட்டு நின்ற பந்தரின் இடத்திற்பருகாது இங்கு பருகினார் என்க. **பருகுதல் -** வாயின் றொழில் இங்கு அநுபவம் நுகர்ச்சி என்ற பொருளில் கண்களின் றொழிலாகக் கூறப்படுதலின் **கண்களால்** என விசேடித்தார்; அமுதம் தேவர்கள் வாயிற் பருகினாற் போலப் பருகப் படாமையின் **பருகாவின்னமுதம்** என்றும், காட்சி வாயிலாகத் தரிசித்துப் பேரானந்த மடைதல் பருகுதலோ டொத்தலின் **கண்களாற் பருகினார்** என்றும் கூறினர் என்பது ஈண்டு ஆறுமுகத் தம்பிரானார் உரைக்குறிப்பு. இக்கருத்தையே தொடர்ந்து மேற்பாட்டிற் **''கண்ணார்ந்த வின்னமுதை''** என்பதுங் காண்க.

குருகாவூர் மணிவயிரக் கொழுந்தனார்—என்பதும் பாடம். *164*

3319. (இ-ள்) கண்ணார்ந்த...தொழுதிறைஞ்சி - கண்ணிறைந்து நுகர நின்ற இனிய அமுதமாகிய இறைவரை; கையாரத் தொழுதிறைஞ்சி - கைகள் குளிரத் தொழுது வணங்கி; பண்ணார்ந்த...பணிந்தேத்தி - பண்ணிறைந்த திருப்பதிகத்தினைப் பாடியே வணங்கித் துதித்து உள்நாடும்...புறத்தெய்தி - உள்ளத்தினுள்ளே சிவயோக நிலையில் நாடி நுகரும் பெருங்காதலுடையவராகிய நம்பிகள், புறத்திலே வந்து; நண் ஆர்வம்...இருந்தார் - பொருந்திய

3319. **கண்ணுர்ந்த வின்னமுதைக்** கையாரத் தொழுதிறைஞ்சிப்
பண்ணுர்ந்த திருப்பதிகம் பாடியே பணிந்தேத்தி
உண்ணுடும் பெருங்காத லுடையவர்தாம் புறத்தெய்தி
நண்ணுர்வத் தொண்டருட னங்கினிது நயந்திருந்தார். 165

3320. அந்நாளிற் றம்பெருமா னருள் கூடப் பணிந்தகன்று
மின்னுர்செஞ் **சடைமுடியார் விரும்புமிடம் பலவணங்கிக்,**
கன்னுடு மெயில்புடைசூழ் **கழிப்பாலை தொழுதேத்தி,**
தென்னுவ லூர்மன்னர் திருத்தில்லை வந்தடைந்தார். 166

பெரிய அன்பு மிகுதியும் உடைய திருத்தொண்டர்களுடனே கூடி அத்திருப்பதியினிடத்து இனிதாக விரும்பி எழுந்தருளியிருந்தார்.

(வி-ரை) கண் ஆர்ந்த இன்னமுதை - கண் ஆர்தல் - கண்களால் நிறையக் கண்டு நுகர்தல்; **அமுது -** அமுது போல்வாரை அமுதென்றதுபசாரம்.

கண்ணுர்ந்த - கையார - "கண்ணுரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்" (அம்மை - அற்.அந்.); "கையாரத் தொழுதருவி கண்ணுரச் சொரிந்தாலும்" (திருவிசைப்பா)

பண்ணுர்ந்த திருப்பதிகம் பாடியே - இப்பதிகம் கிடைத்திலது!

உள்நாடும் பெருங்காதலுடையவர் - உள் நாடுதல் - சிவயோக நிலையில் இறைவரை உள்ளத்தில் கண்டு கூடிச் சிவாநந்த நுகர்ச்சியில் திளைக்கும் பேரார்வமுடையவர் நம்பிகள்;"பன்னுளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினுர்" (327) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; "தேடுவன் றேடுவன் றிண்ணெனப் பற்றிச் செறிதர, ஆடுவ ளுடுவ ளுமாத் தூரெம் மடிகளைக், கூடுவன் கூடுவன் குற்றம தற்றென் குறிப்போடே" "ஓர்ந்தன ளோர்ந்தன னுள்ளத்துள் ளேநின்ற வொண்பொருள்" "தேடுவன் றேடுவன் செம்மலர்ப் பாதங்க ளுடொறும், நாடுவ ளுடுவ ளுபிக்கு மேலேயோர் நால்விரல்...மகிழ்ந்துளே யாடுவ ளுடுவன்" (திருவாமாத்தூர்) என்பனவாதி நம்பிகள் திருவாக்குக்கள் காண்க; "தன்னையா ளுடையபிரான் சரணுர விந்தமலர், சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்து" (328) முதலியவையும் பார்க்க.

பெருங் காதலுடையவர் - இது நம்பிகளது இயல்பு குறித்தது.

நண் ஆர்வத் திருத்தொண்டர்-நண்-நம்பிகளுடன் கூட இறைவர்பாற் பொதிசோறுண்டு இறைவர் கரந்தமை யறிந்து கூடவே வந்து பொருந்திய; **ஆர்வம் -** இறைவரது அந்த அருளிப்பாட்டில் ஈடுபட்டதனுல் அன்புமிக்க. உடன் நண்ணிய.

நயந்து - விரும்பி; **இனிது** - இன்பம் பொருந்தி. *165*

3320. (இ-ள்) அந்நாளில்...அகன்று - அந்நாளிலே தம் பெருமானது திருவருள் விடை பெற்றுப் பணிந்து அங்கு நின்றும் நீங்கிப் போய்; மின்னுர்...வணங்கி - ஒளிவிளங்கும் சிவந்த சடையினையுடைய இறைவர் விரும்பி வீற்றிருக்கும் இடங்கள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு; கல்நாடும்...ஏத்தி - கல்லினுலியன்ற அழகிய மதில்

பக்கத்திற் சூழ்கின்ற திருக்கழிப்பாலையினைத் தொழுது துதித்து; **தென்நாவலூரர்... அடைந்தார்** - தென்நாவலூரில் அவதரித்த தலைவராகிய நம்பிகள் திருத்தில்லை நகரின்கண் வந்து அடைந்தனர்.

(வி-ரை) அருள்கூட - திருவருள் பொருந்த விடை பெற்று; **அருள்** - கூடும்படி பணிந்து என்று கூட்டி உரைத்தலுமாம்.

இடம்பல வணங்கி - இவை (தென்) திருநெல்வாயில், திருமயேந்திரப்பள்ளி, திருநல்லூர்ப் பெருமணம் முதலாயின என்பது கருதப்படும். இவற்றிற்கு நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில! இவற்றை வணங்கிக் கொள்ளிடத் திருநதி கடந்து நம்பிகள் வடக்கு நோக்கிச் சென்றருள்கின்றார்.

கல்நாடும் எயில் - கல் எயில்- நாடும் எயில் - என்று தனித்தனிக் கூட்டுக; **கல் எயில்** - கல்லாலியன்ற மதில். **நாடும்** - நாடத்தக்க; அழகிய.

கழிப்பாலை - திருக்கழிப்பாலையினை; **கன்னடு மெயில் புடைசூழ் கழிப்பாலை** - இத்திருக்கோயில் முன்னர்ப் பெருந் திருக்கோயிலாகக் கொள்ளிட நதியின் வடகரையில் இருந்தமை அறியப்படும்; அஃது ஆற்றின் வெள்ளத்தில் அழிவுபட்டமையால் இப்போது சிவபுரியில் (3 திருநெல்வாயில்) சிறு தனியாலயமாகத் தாபிக்கப்பட்டுள்ளது. தலவிசேடம் பார்க்க. "கழியார் செல்வமல்கும்" (10) என்ற பதிகம் இதன் முன்னைப் பெருமை குறிப்பது. **ஏத்தி** - திருப்பதிகம் பார்க்க.

அருள்கூர—மருங்கணைந்தார்—என்பனவும் பாடங்கள். *166*

திருக்கழிப்பாலை

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம். 7-ம் திருமுறை**

செடியேன் றீவினையிற் றடுமாறக் கண்டாலும்
அடியா னாவவென தொழிதல் தகவாமே?
முடிமேன் மாமதியும் மரவும் முடன்றுயிலும்
வடிவே தாமுடையார் மகிழுங் கழிப்பாலையதே. (1)

பரிசே ரில்புகழான் பரமன் பரமேட்டி
கழியார் செல்வமங்குங் கழிப்பாலை மேயானைத்
தொழுவா னாவலர்கோ னாரூர னுரைத்ததமிழ்
வழுவா மாலைவல்லார் வானோருல காள்பவரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—என்னை விலை ஆவணமுடையான்; என் வினை தீர்த்தாட் கொண்டவன்;அவனது இடம் கழிப்பாலையதே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) செடியேன் - குற்றமுடையவன்; **ஆவ** - இரக்கச்சொல்; **தகவாமே** - தகவன்று; வினா எதிர்மறை குறித்தது; **மதியும் அரவும் உடன் துயிலும் - துயிலுதல்** - ஈண்டுத் தங்குதல் என்ற பொருளில் வந்தது; பகைப்பொருள்களைப்

3321. சீர்வளருந் திருத்தில்லைத் திருவீதி பணிந்துபுகுந்
தேர்வளர்பொற் **றிருமன்று ளெடுத்தசே வடியிறைஞ்சிப்**
பார்வளர மறைவளர்க்கும் பதியதனிற் பயின்றுறைவார்
போர்வளர்மே ருச்சிலையார் **திருத்தினைமா நகர்புகுந்தார்.** 167

பகைதீர்த் துடனிருக்கவைத்தல் இறைமைக்குணம்; "பாம்போடு திங்கள் பகை தீர்த்தாண்டாய்" (தேவா);அதுபோல் என்வினையின் கொடுமை தீர்த்து உடன் வைக்கவேண்டும் என்பது குறிப்பு; **வடிவே** - ஏகாரம் தேற்றம்; மேல் 3-5 பாட்டுக்களு மிக்கருத்தன;—**(2)** இறைவர் தமக்குச் செய்த பேரருளை வியந்து போற்றியது;—**(3) நின் அருளில் ஒறுத்தாய் -** அருட்குணங் காரணமாக என் குற்றங் கண்டபோது ஒறுத்தாய் - தண்டித்தாய்; ஒறுத்தல் - அருட்குணம் "ஒறுத்தா லொன்றும் போதுமே" (திருவா); மேல் 5-வது பாட்டும் பார்க்க; "தந்தைதாய்...அடித்துத் தீய பந்தமு மிடுவார்...இந்த நீர் முறைமை யன்றே வீசனுர் முனிவு மென்றும்" (சித்தி.2-15); **அறியாமல் -** பிறர் அதன் கொடுமையினை அறியாதபடி; **(4) சுரும்பார்...அடியார் -** அடியார்களிலக்கணம்; **அடியாரோடும் -** தொண்டரோடு கூடுதல் - அணைந்தோர் தன்மை; (போதம்-12 -ம் சூத்) சைவத்திறத்தின் ஞான நூல்க ளுட்கண்ட அரிய உண்மைகளுள் ஒன்று; **விரும்பேனுன்னை யல்லால் -** எதிர்மறை உறுதி குறித்தது; **(5) விலை ஆவணமுடையாய் -** ஆவணங் காட்டி ஆட்கொண்டமை; "மோதுவிப்பா யுகப்பாய் முனிவாய்" (தேவா); **-(6) வினைகளவைபோகக் காத்தாய் -** என்க; பார்த்தாயுனக்கு என்பது **பார்த்தானுக்கு -** என நின்றது; **-(7) பருத்தாள் வன் பகடு -** யானை; **பரு**-பரிய; **வன்** வலிய; **பகடு** - ஈண்டு யானை என்றபொருளில் வந்தது; **படம்**-போர்வை; **(8) உடைத்தாய் -** அழித்தாய்; **-(9) மெய்யே நின்றெரியும் விளக்கு** - சத்துச் சொரூபமாக நிலைபெற்று ஒளிவிடும் விளக்கு; **(10) சேர்இல் -** சேர்தல் இல்லாத; **சேர் -** முதனிலைத் தொழிற்பெயர்; சேர்தல்; **கழியார் செல்வம் -** கடற்கழியின் வழி வந்து சாரும் முத்து-பவளம் முதலிய மணிகளும் ஏனைக் கடல்படு பண்டங்களாகிய செல்வங்களும்.

தலவிசேடம்:— **திருக்கழிப்பாலை -** சோழநாட்டுக் காவிரி வடகரை 4-வது பதி; தொகுதி III பக்கம் 361 பார்க்க.

III-வது முறை - தில்லை வழிபட்டது.

3321. (இ-ள்) சீர்வளரும்...புகுந்து - சிறப்புக்கள் பெருகும் திருத்தில்லைப்பதியின் திருவீதியினை வணங்கி உள்ளே புகுந்து; ஏர்வளர்...இறைஞ்சி - அழகு வளரும் திருப்பொன்னம்பலத்தில் ஆடுகின்ற தூக்கிய திருவடியினைப் பணிந்து; பார்வளர...உறைவார் - உலகம் வாழும்பொருட்டு வேத ஒழுக்கங்களை வளர்க்கின்ற அத்திருப்பதியில் பணிந்து தங்குவாராகிய நம்பிகள்; போர்வளர்...புகுந்தார் - போரில் மிக விளங்கிய மேருமலையாகிய வில்லினையுடைய சிவபெருமானது திருத்தினைமா நகரினுள்ளே சென்று புகுந்தருளினர்.

(வி-ரை) சீர்வளரும்...புகுந்து - இது நம்பிகள் தில்லையிற் சென்று வழி பட்டமை மூன்றுவது முறையாகும். திருமுதுகுன்றினின்றும் வரும் வழியில் பேரூர்ப் பெருமானை நினைந்து பாடி வழிபட்டது இரண்டாவது முறையாகும். 3265 முதல் 3270 வரை பார்க்க.

3322. **திருத்திளைமா நகர்மேவுஞ் சிவக்கொழுந்தைப் பணிந்துபோய்**
நிருத்தனு ரமர்ந்தருளு நிறைபதிகள் பலவணங்கிப்
பொருத்தமிகுந் திருத்தொண்டர் போற்றுதிரு நாவலூர்
கருத்தில்வரு மாதரவாற் கைதொழச்சென் றெய்தினூர். 168

ஏர்வளர்...இறைஞ்சி - பொற்றிருமன்று - பொன்னம்பலம்; எடுத்த சேவடி தூக்கிய திருவடி; (குஞ்சித பாதம்); "இனித்த முடைய எடுத்தபொற் பாதம்" (தேவா). உயிர்களைப் பிறவிக்குழியினின்றும் எடுத்த திருவடி என்பதுமாம்.

பார்வளர மறைவளர்க்கும் பதி - மறை - மறையொழுக்கமாகிய எரிவளர்த்தல் முதலியவை; ஆகுபெயர்; "கற்ருங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" (தேவா); "வருமுறை யெரிமூன் ரோம்பி மன்னுயி ரருளான் மல்க.... அருமறை நான்கி னோடா றங்கமும் பயின்று வல்லார்" (354); "அறுதொழில் ஆட்சியாலே யருங்கலி நீக்கி யுள்ளார்" (355); "முழுதுல கினையும் போற்ற மூன்றெரி புரப்போர்" (355) என்பன முதலியவை காண்க.

பதியதனிற் பணிந்து உறைவார் - அப்பதியிலே வந்து வணங்கி அதன்புறத்து உறைவார் என்க. 2063-2064 பார்க்க. பணிதல்மட்டும் தில்லையின் கண்ணும், உறைதல் அதற்குத்தக்க வேறு இடத்தினுமாகக் கொள்பவர்; **உறைவார்** - வினைப்பெயர்; உறைவாராகிய நம்பிகள்; **உறைவார் - புகுந்தார்** என்று கூட்டி முடிக்க; இவ்வாறுகூறியதனுலும் உறையுமிடம் வேறென்பது குறிப்பாலுணர்த்தப் பட்டது.

போர்வளர் மேருச் சிலையார் - போரின் பொருட்டு வளர்ந்த மலை; **வளர்தல்** - ஈண்டு விளங்கிய என்னும் பொருட்டு.

திருத்திளைமா நகர் புகுந்தார் - முதன்முறை திருத்திளை நகரினின்றும் கிழக்கு நோக்கித் திருத்தில்லையில் எழுந்தருளினர்; இம்முறை திருத்தில்லையினின்றும் மேற்குநோக்கிச் சென்று திருத்திளை நகரினிற் புகுந்தனர். திருத்திளை நகர்வழிபாடு இஃது இரண்டாவது முறை.

தில்லை...இறைஞ்சி - முதன்முறை மிக விரிவாகவும்,இரண்டாம்முறை அதனிற் சுருங்கவும் அருளினுர். இது மூன்ரும் முறையாதலின் அதனினும் சுருங்க இரண்டு பாட்டுக்களாற் கூறி யமைந்தார்.

தில்லை - திருத்திளை நகர் - இம்முறையில் நம்பிகள் அருளிய பதிகள் கிடைத்தில! ***167***

3322. (இ-ள்) திருத்திளைமா நகர்...போய் - திருத்திளைமா நகரத்திற் பொருந்த அமர்ந்தருளும் சிவக்கொழுந்தாகிய இறைவரை வணங்கிச் சென்று; நிருத்தனூர்...வணங்கி - ஆனந்தக் கூத்தனுராகிய இறைவர் விரும்பி எழுந்தருளியிருக்கும் நிறைந்த பதிகள் பலவற்றையும் வணங்கிக்கொண்டு சென்று; பொருத்தமிகும்...எய்தினூர் - மிகப்பொருத்தமுடைய திருத்தொண்டர்கள் போற்றுகின்ற திருநாவலூர் மனத்தினுள்ளே

வருகின்ற அன்பினுலே அங்குச் சென்று தொழுது வணங்கும் பொருட்டுப் போய் அதனை அடைந்தனர்.

(வி-ரை) திருத்தினைமா நகர்...பணிந்துபோய் - இம்முறையிற் பாடிய பதிகம் கிடைத்திலது!; முன்முறை அருளிய பதிகம் - பதிகக் குறிப்பு - தலவிசேடம் முதலியவை தொகுதி I பார்க்க. தலமரம் **கொன்றை; திருத்தினைநகர்** - இத்தலம் தீர்த்தனகிரி என்று மருவி வழங்கப்படுகிறது. ஜாம்புவர் பூசித்துப் பேறுபெற்றனர். அவர் பூசித்தலிங்கம் அம்மை கோயிலில் உள்ளது. பெரியான் - ஜங்கமர்-(இறைவர் கொண்டு எழுந்தருளிய கோலம்.) இவை கோயிற் சுவரில் உள்ளன. பச்சந்த தேசிக ராதீனத்துக் குமாரமலை மருந்தர் இத்தல புராண மியற்றியுள்ளார் என்பர்.

நிறைபதிகள் பல -இவை திருச்சோபுரம், திருமாணிகுழி, திருப்பல்லவனகரம், திருமுண்டீச்சுரம், திருக்குணபர வீச்சுரம், திருவதிகை வீரட்டம், திருவாமூர், சித்தவடம், திருமணம் வந்த புத்தூர் முதலியன என்பது கருதப்படும். இவற்றுள் திருவதிகையினை வழிபடுதல் முன்முறையிற் போலவே கொள்ளப்படுதல் வேண்டும்.

229-230 - பாட்டுக்கள் பார்க்க: அப்பதிகம் முன்னர்க் குறிக்கப்பெற்றது; தொகுதி I பார்க்க. ஏனையவற்றின் நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!.

பொருத்தமிகும்... திருநாவலூர் - பொருத்தமிகும் - **நாவலூர்** என்றும், திருத்தொண்டர் போற்று **திருநாவலூர்** என்றும் தனித்தனிக் கூட்டுக.

பொருத்தமிகுந் திருநாவலூர் - கருத்தில் வரும் - ஆதரவு - பொருத்தமாவதது- திருநாவலூரினின்றும் திருமணத்தின் பொருட்டுப் புறப்பட்ட நம்பிகள் திருவெண்ணெய் நல்லூரிலே தம்மை இறைவர் தடுத்தாட்கொண்ட நிலையில் அங்கு நின்றும் மீண்டும் திருநாவலூர் பணிந்து பணிமேற் சென்றனர். ஈண்டு, மீண்டும் வந்தது தாம் அவதரித்த பதி என்ற அபிமானம் பற்றியதனு லன்றித் தலயாத்திரையில் கண்ட இடங்களெங்கும் சென்று வணங்கும் முறை பற்றிய தென்பது **பொருத்த** மெனப்பட்டது. **கைதொழ** - என்றதுமிக் குறிப்பு.

திருத்தொண்டர் போற்றும் திருநாவலூர் - ஆளுடைய நம்பிகள் திருவவதரித்த பதியாதல் பற்றி அடியார்கள் போற்றும் என்க.

கருத்தில் வரும் ஆதரவால் - நினைவில் வந்த மிக்க அன்பினுலே; பதியின் அணிமையில் வந்தபோது முன்னினைவுகள் எல்லாம் திருவுள்ளத்தே வந்தன. *168*

3323. (இ-ள்) திருநாவலூர் மன்னர்...கேட்டு - திருநாவலூர்த் தலைவராகிய நம்பிகள் வருகின்றுரென்ற செய்தியினைக் கேட்டு; பெருநாமம்...உள் அணைய-பெரிய புகழினையுடைய அந்தப் பதியில் உள்ளவர்களும் திருத்தொண்டர்களும் தங்களுக்குரிய பெரிய வாழ்வு வருகின்ற திருநாள் என்று கொண்டு பதியினை அலங்கரித்து நகர்ப்புறத்தே வந்து எதிர்கொண்டழைத்துக் கொண்டு உள்ளே செல்ல; செருநாகத்து...அணைந்தார் - போர் வல்ல யானையின் தோலைப்போர்த்த இறைவரது செழுங்கோயிலினுள்ளே அணைந்தருளினர்.

3323. "**திருநாவ லூர்மன்னர்** சேர்கின்ற" ரெனக்கேட்டுப்
பெருநாமப் பதியோருந் தொண்டர்களும் "**பெருவாழ்வு**
வருநா" ளென் றலங்கரித்து வந்தெதிர்கொண் டுள்ளணையச்
செருநாகத் துரிபுனைந்தார் செழுங்கோயி லுள்ளணைந்தார். 169

3324. மேவியவத் தொண்டர்குழா மிடைந் "தர" வென்றெழுமோசை
மூவுலகும் போயொலிப்ப முதல்வனார் முன்பெய்தி
ஆவியினு மடைவுடையா ரடிக்கமலத் தருள்போற்றிக்
"கோவலனுன் முக" னெடுத்துப் பாடியே கும்பிட்டார். 170

(வி-ரை) திருநாவலூர்...கேட்டு - *இஃது அவ்வூரவரும் தொண்டர்களும் கேள்விப்பட்ட செய்தி.*

பதியோரும் தொண்டர்களும் - *பதியோர் வேறு; தொண்டர்கள் வேறு; பதியோர் தமது அந்தப் பதியினுக்கும் நம்பிகளுக்கும் உள்ள உலகியற் றொடர்பு பற்றி வருபவர்கள்; தொண்டர்கள் அவ்வாறன்றி நம்பிகளுக்கும் தம் இறைவராகிய சிவபெருமானுக்கும் உள்ள உயிரியற் றொடர்பு பற்றித் திருத்தொண்டெனு நிலையில் உரிமை பூண்டு வருபவர்கள்.*

"பெருவாழ்வு வருநாள்" என்று - *வரவு தமக்குப் பெரியதோர் சிறப்பாகிய வாழ்வு வரும் நாளாகும் என்று உட்கொண்டு.*

செருநாகம் - போர் குறித்து வந்த யானை; **நாகம்** - யானை.

பெருநாமப் பதியோர் - நாமம் - புகழ்; பெருமை என்றலுமாம். இப்பதி திருநாமநல்லூர் என வழங்கும் வழக்கும் கருதத்தக்கது. *169*

3324. (இ-ள்) மேவிய... ஒலிப்ப - எதிர்கொள்ளப் பொருந்திய அந்தத்தொண்டர் கூட்டம் நெருங்கி "அரகர" என்று முழக்குதலாலுளதாகிய ஓசை மூன்றுலகங்களிலும் சென்று ஒலி செய்ய; முதல்வனார் முன்பு எய்தி - இறைவரது திருமுன்பு சார்ந்து; ஆவியினும்... அருள்போற்றி - உயிரினும் சிறந்தவராய் அடைதற்குரிய சிவபெருமானது திருவடிக் கமலங்களின் அருளினைப்போற்றி; "கோவலனுன் முகன்"... கும்பிட்டார் - "கோவலனுன்முகன்" என்று தொடங்கித் திருப்பதிகத்தினைப் பாடியே கும்பிட்டருளினர்.

(வி-ரை) அர என்று எழும் ஓசை - நம்பிகளது வரவு தமது பெருவாழ்வு ஆகும் என்றும், அது சிவபெருமான் றிருவருளாலே வந்தது என்றும், கொண்டார்களாதலின் அரனமை முழக்கம் செய்து போற்றினர்; **எழும்**-எழுப்பிய; முழக்கிய என்று பிறவினைப் பொருள் கொள்க.

மூவுலகும் போய் ஒலிப்ப - ஒலி அலைகள் பரம்பரையிற் சேணிலும் சென்றொலிக்கு மென்பது இற்றைநாள் வானொலி இயக்கத்தினல் நேரே அறியப்படுதலின், இஃது உண்மை நவிற்சியேயாம். அன்றியும் இம்முழக்கத்தின் பயன் மூவுலகும் பெற நிற்பதும் குறிக்க.

3325. நலம்பெருகு மப்பதியி னுடியவன் பொடுநயந்து
குலம்பெருகுந் திருத்தொண்டர் குழாத்தோடு மினிதமர்ந்து
சலம்பெருகுஞ் சடைமுடியார் தாள்வணங்கி யருள்பெற்றுப்
பொலம்புரிநூன் மணிமார்பர் பிறபதியுந் தொழப்போவார், 171

மூவுலகு-மேல் நடுக் கீழ் உலகங்கள்.

ஆவியினும் அடைவுடையார்-ஒருவர்க்குத் தன் உயிரினும் சிறந்து பயன் செய்பவர் இறைவர் என்பதாம். "என்னில் யாரு மெனக்கினி யாரில்லை, யென்னிலும்மினி யானொரு வன்னுளன், என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக், கென்னுளேநிற்கு மின்னம்ப ரீசனே" (தேவா) என்று இக்கருத்தினைத் தேற்றம்பட ஆளுடைய அரசுகள் அருளுதல் காண்க; **அடைவு** - அடையத்தக்க சார்பு. "அடைவு திருத்தாண்டகம்" என்பதும், அத்திருப்பதிகக் கருத்தும் கருதுக.

"கோவல னுன்முகன்" எடுத்து - பதிகத்தின் தொடக்கமாகிய முதற்குறிப்பு; **போற்றி எடுத்து** என்க. **கோவல னுன்முகன்** - என்று தொடங்கும் திருப்பதிகம்.

திருநாவலூர் பண்-நட்டராகம் - இத்திருப்பதிகம் இப்போது அருளியது. பிற பதிப்புக்களில் குறித்திருந்தவாறே முன்முறை நம்பிகள் இப்பதியினை வழிபட்ட வரலாறு கூறுமிடத்தில் தவறாகத் தரப்பட்டது; **பதிகப் பாட்டுக் குறிப்புக்களும்**, தலவிசேடமும் I-பாட்டு 224-ன் கீழ்ப் பார்க்க. இத்தலத்திற் சுக்கிரன் வழிபட்டுப் பேறுபெற்றனன். சுவாமி பெயர்-**பக்தசனேசுவரர்** என்றும், அம்மை பெயர் **மனோன்மணியம்மை** என்றும் வழங்குவர். நம்பிகள் சந்நிதி தனிக் கோயிலாக வெளிச்சுற்றில் தென்கிழக்கில் உள்ளது; **வரதராசர்** என்ற பெயரால் விட்டுணு சந்நிதியும் உண்டு. கோயிலுக்கும் மேற்புறம் கோமுகி தீர்த்தம் என்ற சிற்றோடையும், தெற்கில் ½ நாழிகையளவில் திருக்கெடில நதியும் உள்ளன; இத்தலபுராணம் திருவெண்ணெய்நல்லூர் இராசப்ப கவிராயர் இயற்றியுள்ளார். 170

3325. (இ-ள்) நலம் பெருகும்...நயந்து - நன்மைகள் பெருகுதற்கிடமாகிய அத்திருப்பதியிலே நாடிய அன்பினுலே விரும்பி;குலம்...அமர்ந்து - குலம் மிகுகின்ற திருத்தொண்டர் கூட்டங்களுடனே இனிதாக வீற்றிருந்தருளி;சலம்...அருள் பெற்று - கங்கையாறு பெருகுதற்கிடமாகிய சடைமுடியினையுடைய இறைவர் திருவடிகளை வணங்கி அருள்விடை பெற்று; பொலம்புரி நூல்...போவார் - அழகு விளங்கும் பூணூல் அணிந்த மணிமார்பினை உடைய நம்பிகள் பிற பதிகளையும் சென்று தொழுவதற்குப் போவாராகி,

(வி-ரை) நலம் பெருகும் - நன்மைகள் பெருகுதற்குக் காரணமாகிய. பெருகும்-பெருக்கும் - பெருகச்செய்யும் எனப் பிறவினையாகக் கொள்வதுமாம்.

நாடிய அன்பு - நாடி வந்தடைந்த அன்பு.

3326. தண்டகமாந் திருநாட்டுத் தனிவிடையார் மகிழ்விடங்கள்
தொண்டரெதிர் கொண்டணையத் தொழுதுபோய்த் தூயநதி
வண்டறைபூம் புறவுமலை வளமருதம் பலகடந்தே
எண்டிசையோர் பரவுதிருக் கழுக்குன்றை யெய்தினார். 172

குலம்பெருகும் திருத்தொண்டர் குழாம்-குலம் - *இவையாவது ஈண்டு* அவ்வவர் செய்யும் சரியையாதி தொண்டுகளின் வகை *குறித்தது.* **குழாம்** - *எல்லாருங்கூடிய* தொகுதி; குலம் - உலகியற் குலமரபு குறித்ததாகக் *கொண்டு பல குலத்தவரும் என்று* குறிப்புப்பட உரைத்தலுமாம்; "நாடவர் நாடறி கின்ற*குலமிலராகக் குலமதுண்டாக*" (*தேவா*); "தேவர் பெருமா னெழுச்சி...யாவரென்னு துடன்*சேவித்தெல்லாக் குலத்தி லுள்ளோரும்*, *மேவ* வன்பர் தாமுமுடன் சேவித்து" (*1892*); "எழுச்சி *சேவித் துரைஞ்ஞ, வெங்கு மெல்லா* ரும்போத விழிவு தொடக்கிற்றெனையென்று" (*1889*)"*ஆதலாலே குளித்தடுத்த தூய்மை* செய்தே யகம்புகுந்து, வேத நாதர் பூசனையைத் *தொடங்க வேண்டும்*" (*1890*) *என்ற* வரலாற்றின் கருத்துக்களை ஏற்ற பெற்றி ஈண்டு வைத்துக்காண்க. **குலம்** - *பெருமை என்றலுமாம்.*

சலம் பெருகும்-சலம் -கங்கையாறு; *பெருகுதலாவது பொங்கிப் புகுந்து*, சிறு பனி போலாகச் செறிந்து, பின் உலகிற் கேற்கப் *பெருகி* வீழ்தல்; "*சல முகத்தா லவன்சடையிற் பாயுமது*" (திருவா-சாழல்).

பொலம்புரி நூல்மணி மார்பர் - பொலம்-*அழகு*; **மணி** - *நவமணி மாலைகள்*; "மன்னவர் திருவுந் தங்கள் வைதிகத் திருவும் பொங்க" (*165*); "*சுடர்*மணிக்கலன்கள் சாத்தி" (*320*); "மெய்யினிற் றுவளு நூலும்" (*331*) என்றபடி திருமணக்கோலத்துடனே சரிப்பவர் நம்பிகள்.

போவார்-தொழுது - கடந்தே - எய்தினார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *171*

3326. (இ-ள்) தண்டகமாந் திருநாட்டில்...போய் - திருத்தொண்டை நன்னாட்டிலே ஒப்பற்ற இடபத்தையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடங்கள் பலவற்றையும், அங்கங்கும் திருத்தொண்டர்கள் எதிர்கொண்டு அழைத்துக்கொண்டு உள்ளே செல்லத், தொழுதபடியே சென்று; தூயநதி...கடந்தே - தூய நீரினையுடைய ஆறுகளும், வண்டுகள் சத்திக்கும் பூக்களையுடைய முல்லைப்புறவு நிலங்களும், மலைகளும் மருத நிலங்களும் ஆகிய பலவற்றையும் கடந்து சென்றே; எண்டிசையோர்...எய்தினார் - எட்டுத் திசைகளினுமுள்ள மக்களும் துதித்துப் பாராட்டும் திருக்கழுக் குன்றத்தினை அடைந்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தண்டகமாந் திருநாடு - தொண்டை நாடு; (*2858 பார்க்க.*)

தனிவிடையார் - தனி - ஒப்பற்ற; ஒன்று என்றலுமாம். "ஊர்வதோர் விடையொன் றுடையானை" "நரைவெள்ளே றொன்றுடை யானை" (தேவா).

3327. தேனுர்ந்த மலர்ச்சோலைத் திருக்கழுக்குன் றத்தடியார்
ஆறுத விருப்பிஞெடு மெதிர்கொள்ள வடைந்தருளித்
தூநாண்வெண் மதியணிந்த **சுடர்க்கொழுந்தைத் தொழுதிறைஞ்சிப்**
பாநாடு மின்னிசையின் றிருப்பதிகம் பாடினுர். 173

மகிழ் விடங்கள் தொழுது - இவை திருப்புறவார் பனங்காட்டூர், திண்டீச்சுரம், திருஅச்சிறுபாக்கம், உருத்திரகோடி முதலாயின என்பது கருதப்படும். இவற்றுள் முன்னையிரண்டும் நடுநாட்டுத் தலங்கள்; திருநாவலூரினின்றும் திருக்கழுக்குன்றம் செல்லும் வழியிடையில் உள்ளன.

நதி-புறவு-மலை-வளமருதம்-பல-நதியும், புறவும், மலையும், மருதமும் ஆகிய பலவற்றையும் என்று எண்ணும்மை விரிக்க; **நதி** - பெண்ணையாறு, வராகநதி பாலாறு முதலியன: **புறவு** - இடையே பரந்துகாணும் சிறுகாடுகள்; **மலை** - திண்டி வனம், செஞ்சிமலை, அச்சிறுபாக்கம்.

திருவெண்குன்றம் முதலியவற்றின் தொடர்பாய் அங்கங்கும் சிதறிக் காணும் சிறு குன்றுகளின் வெளி.

வள மருதம் - வளம் - அடைமொழி, முன்கூறிய இடையில் உள்ள ஏனைப் புறவுமலை முதலியவை அத்துணை வளமுடையனவல்ல என்ற குறிப்புடன் நின்றது; **மருதம்** - நாட்டின் பகுதி.

எண்டிசையோர் பரவு - எல்லாத் திசையினின்றும் மக்கள் வந்து வழிபடும் நிலை குறித்தது; இது இந்நாளினும் கண்கூடாகக் காணப்படும் உண்மை. தலவிசேடம் தொகுதி III பக்கம் 728 பார்க்க.
172


3327. (இ-ள்) தேனுர்ந்த...அடைந்தருளி - தேன் நிறைந்த மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருக்கழுக்குன்றத்தில் உள்ள அடியவர்கள் குறைவுபடாத விருப்பத்தோடும் வந்து எதிர்கொண்டு அழைத்துச்செல்ல அணைந்தருளி; தூநாள்...இறைஞ்சி - தூய புதிய வெள்ளிய பிறையினைச் சூடிய சுடர்க்கொழுந்து போல்வாராகிய சிவபெருமானைத் தொழுது நிலமுற வணங்கி; பாநாடு...பாடினுர் - பாக்களின் பண்பு நாடும் இனிய இசையினையுடைய திருப்பதிகத்தினைப் பாடி யருளினுர்.

(வி-ரை) தேன் - தேன் வண்டுகள்; **தேன்** என்றலுமாம்.

ஆறுத விருப்பு - என்றும் குறையாது மேன்மேல் மிகுகின்ற பெருவிருப்பம்.

தூ-நாள்-வெண் மதி - பிறைச் சந்திரன்; **தூ** - தூய்மை; தூய்மையாவது முன் மனைவியர்பால் அபசாரமும், அது காரணமாகச் சாபமும், அதனுல் உடல் தேயும் நோயும், கொண்டு, மாயும் நிலையினின்றும் சிவபெருமானை அடைந்தமையால் அவை யாவும் நீங்கித் தூய்மையாக்கப்பட்ட நிலை. **நாள்** - புதிதாக முளைக்கும் நிலை.

சுடர்க் கொழுந்து - சுடர்க்கொழுந்து போல்வாரைச் சுடர்க்கொழுந்தென்றுர். வேதங்களே குன்றமாய் நிற்றலின், அதன் உச்சியில் விளங்குதலின், ஞானச்சுடரின் உச்சி




திருக்கச்சூர்ஆலக்கோயில் -தல ஆலய உள்தோற்றம்
விருந்திட்ட ஈசர் சந்நிதி




திருக்கச்சூர் ஆலக்கோயில் -இரந்திட்ட இல்லடி ஆலய அர்ச்சகர்கள் இருக்கும் வீதி
(பழைய படம்) -பாட்டு-3332

படம்-10

திருக்கச்சூர்



திருக்கச்சூர் ஆலக்கோயில்-மருந்தீசர் ஆலயம்
(மலைமேலுள்ளது)(பழைய படம்) - பாட்டு-3330



திருக்கச்சூர் ஆலக்கோயில்- இரந்திட்ட ஈசர் சந்நிதி(மலைமேலுள்ள மருந்தீசர் ஆலயத்திற்குப் போகும் வழியில் உள்ளது)(பழைய படம்)



திருக்கச்சூர் ஆலக்கோயில்-தல ஆலயம்
(விருந்திட்ட நாதர் ஆலய முன்தோற்றம்)(பழைய படம்)
-பாட்டு-3328

படம்-11

என்பதாம்; "வேத வாகமச் சென்னியில் விளைபொருள்" (திருவிளை - புரா); **மதியணிந்த சுடர்** - என்றதனுல் இரவி - மதி - முதலிய ஒளிகளுக்கு ஒளிதரும் பொருள் என்பதும் குறிப்பு; "வெளிறு தீரத்தொழுமின்" (4) "ஞான மூர்த்தி" (7) என்ற பதிகக் கருத்துக்கள் காண்க.

தொழுதல் - கைகளாற்றொழுதல்; **இறைஞ்சுதல்** - நிலமுற வீழ்ந்து வணங்குதல்.

பாநாடு மின்னிசை - பா - பாக்களின் - செய்யுள் உறுப்புக்களின் - மேன்மைப் பண்பு; **நாடுதலாவது** உத்தமமான பண்புகள் எல்லாம் தாமே சேர்ந்தமைதல்; சொற்பண்பும் இசைப்பண்பும் ஒத்திசையும் தன்மை; **இசை** - இங்குப் பதிகப் பண்ணாகிய நட்டபாடைப் பண் குறித்தது. *173*

திருக்கழுக்குன்றம்

திருச்சிற்றம்பலம் — பண்-நட்டபாடை. 7-ம் **திருமுறை**

கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவம் வினைக டாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் றேவர் பிரானிடங்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (1)

பல்லில் வெள்ளைத் தலையன் ருன்பயி லும்மிடங்
கல்லில் வெள்ளை யருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரடோ ளூரன் வனப்பினுற்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழு மின்களே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—எங்கள் பிரானதிடம் திருக்கழுக்குன்றமே; "பாவம்வினைக டாம்பல நீங்க, வெளிறு தீரச் சென்று தொழுமின்" என்று கருணையினுல் உலகத்தவரை வழிப்படுத்தியது; (ஆற்றுப்படை.)

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) கொன்று செய்த - கொடுமை - கொன்ற கொடுமையால் வந்த பாவம்; **நின்ற பாவம் வினைகள் தாம்பல** - வேறெவ்வாற்றுலும் வரும் ஏனைப் பாவமும் தீவினைப் பயனும்; கொலைப்பாவம் ஒன்றே ஏனை எல்லாப் பாவங்களும் கூடிய தொகுதிக்கும் சமமாகும் எனக், கொன்ற கொடுமை என்றும், பாவம் வினைகடாம்பல என்றும் பிரித்துக் காட்டியவாறு; **சென்று சென்று** அடுக்குப் பலமுறையும் சென்று என்றதாம். இயன்ற அளவிற் சென்று என்றலுமாம்; **தொழுமின்** - ஏனை உலக மக்களை நோக்கிக் கூறியது; ஆற்றுப்படுத்த வகை; மேல்வருவனவும் இவ்வாறே கண்டுகொள்க; **கன்று** - யானைக் கன்று; **கன்று - பிடி** - குறிஞ்சிக் கரு; **(2) இறங்கி** - ஆணவமுனைப் பெழுச்சியினின்றும் கீழிறங்கி - வணங்கி; **நிறங்கள் செய்த மணிகள்** - பலநிறமுடைய மணிகள்; இவை நித்தில மொழிந்த ஏனையவை; **நித்திலம்** - முத்து; பிரித்துக் கூறியது சிறப்பு நோக்கி; இவை மலையிற் படுவன; **வெள்ளை யருவி** - தெளிந்த நீருடன்

வீழும் அருவி;—(3) **நீள** - மிகவும்; **ஆளும்** - உயிர்களை அடிமைப்படுத்தி ஆளும்; **அல்கி** - வலிகுன்றி;—(4) **வெளிறு** - அறியாமை. "அரியகற் றுசற்றுர்...அரிதே வெளிறு" (குறள்); இங்கு அறியாமையைச் செய்யும் ஆணவமலங் குறித்தது; ஆகுபெயர்; **முளிறு** - ஒளி; கூர்மை என்றலுமாம்; **பிளிறு** - யானையின் முழக்கம்; **களிற்றிளேடு** என்பது எதுகைநோக்கிக் **களிறிளேடு** எனவந்தது;—(5) **புலேகள்** - கொலே முதலாகிய குற்றங்கள்; **குட்டியொடுமுசு - பாயும்** - குரங்குகள் குட்டியோடு தாவிப் பாய்ந்து செல்லுமியல்பு குறித்தது; **புறவு** - முல்லேப்புறவு;—(6) **மடம்** - ஈண்டு ஏழைமை; ஏனையவற்றை உணராமை குறித்தது; "ஏழையடி யாரவர்கள்" (தேவா) **உற** - கொள்ள; **மனத்தே யுற** - மனத்தில் பொருந்தவைக்க; **உறப்பயிலும்** - என்று கூட்டுக; மேல்வரும் பாட்டும் பார்க்க; **கடம்** - காடு; **அரவு** - பாம்பு; **அரவன்** - பாம்பினைப் பூண்டவன்;—(7) **உற - ஆடி** - என்று கூட்டுக; **உற** - உறும்படி; பொருந்த; **ஆடி** - ஆடுபவர்; பெயர்; **நவிலும்** - விளங்கும்; **ஊனம்** - பிறவி பற்றிய அறியாமை; **ஞானமூர்த்தி** - ஊனத்தை ஒழிப்பவன் என்றது குறிப்பு; **தேன்** - வண்டு வகை; **கானமஞ்ஞை - மஞ்ஞை** - மயில்; குறிஞ்சிக் கரு; **கானம்** - முல்லேயிற் கூடுதல் திணேமயக்கம்; (8) **அந்தமில்லா அடியார்**- எல்லேயில்லாத அடிமைத் திறம் பூண்ட அடியார்கள்; "அந்தமில் புகழா னன்புக் களவின்மை கண்டேன்" (593); **மடமுடைய** என்றும், **ஊனமில்லா** என்றும், **அந்தமில்லா** என்றும் அடியார் தன்மைகளேப் பற்றி எடுத்துப் பாராட்டியவாறும் காண்க; **உற - வந்து - சேர** என்று கூட்டி முடிக்க. "நாடி நாரண னுன்முக னென்றிவர், தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ...அம்பலத்தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே" (அரசுகள் -கோயில்- குறுந்) என்ற கருத்து ஈண்டு வைத்துச் சிந்திக்கத்தக்கது; **மலர்கள்** - பாதமலர்கள்; மாலொடு நான்முகன் சிந்தை செய்த மலர்கள் அடியார் மனத்தே உறவந்து - சேரவே என்க;—(9) **பிழைகள்** - வினேப்பன்மைகளும், மலமும், மலவாதனேயும்; **மழைகள்** - மேகங்கள்; **குழை** - வளேதல்; **கலித்து** - இடித்து; **மழைகள் - சொரியும்** - மேகங்கள் செறிந்து மிக்கு இடித்து உயர்ந்த மூங்கில்களும் வளேயும்படி முத்துப்போன்ற பரிய நீர்த்துளிகளேப் பெய்யும் என்க. **முத்தம்** - முத்துப்போன்ற பரிய வெள்ளிய நீர்த்துளிகள்; ஆகுபெயர்; மழைகள் கலித்துச் சொரியும் என்று கூட்டுக; இவ்வாறன்றிக் **கலித்து** - கலித்தலால் - இடித்து மழைகள் சொரிதலால் என்று காரணப் பொருளில் வரும் வினேயெச்சமாகக் கொண்டு, மழைகள். கலித்து மூங்கில்கள் முத்தஞ் சொரியும் என்றுரைத்தலுமொன்று; இப்பொருளில் **குழை** - தண்ணென்ற குழைவு காட்டும் ஒளி; **குழை** - துளே; **குழைகொள்** - இனித் துளேபட நின்ற; இப்போது துளேபடாத என்று கொள்க; (**குழை**- துளே என்பதற்குக் கோடி நுண் டுகிலுங் குழையும் (சீவக-1369) என்ற வழக்குக் காண்க;—(10) **தலேயன்** - தலேயை ஏந்தியவன்; **வெள்ளேயருவி** (2); **மல்**-வலிமை; **சொல்லல்**- சொன்னவை; பாட்டுக்கள்; **வனப்பு**-அழகு; இசைப்பாகுபாடு என்ற குறிப்புமாம்; "பாநாடு **இன்னிசையின்**" (3327) "வனப்பு" - இசைப் பாகுபாடு 953-ல் உரைத்தவை பார்க்க.

தலவிசேடம்:— **திருக்கழுக்குன்றம்** - தொகுதி III பக்கம் 728 பார்க்க.

3328. (இ-ள்) பாடிய...போய் - முன் கூறியவாறு பாடிய அந்தப் பதியினிடத்து

3328. பாடியவப் பதியின் கணினிதமர்ந்து பணிந்துபோய்
நாடியநல் லுணர்வினொடுந் **திருக்கச்சூர் தனைநண்ணி**
ஆடகமா மதில்புடைசூ **ழாலக்கோ யிலினமுதைக்**
கூடியமெய் யன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்தார். 174

இனிதாக விரும்பிச் சிலநாள் எழுந்தருளியிருந்து வணங்கி அருள்விடை பெற்றுச்சென்று; நாடிய...நண்ணி - இறைவரையே நாடியிருக்கும் நல்ல உணர்வினோடு திருக்கச்சூரினை அடைந்து; ஆடகமாமதில்...புறத்தணைந்தார் - பொன் வேலைப்பாடமைந்த பெரிய மதில் புடையிலே சூழ்ந்த திரு ஆலக்கோயிலில் எழுந்தருளிய அமுதார் (போன்ற) இறைவரைக் கூடிய மெய்யன்பினாலே உள்ளுருகக் கும்பிட்டுப் புறத்திலே அணைந்தருளினர்.

(வி-ரை) பாடிய - பாடப்பட்ட என்று பிறவினையாகக் கொள்க. பாடுதற்கிடமாகிய - பாடுதற்குப் பொருளாகிய என்றலுமாம். **பாடிய அப்பதி** - அத்திருப்பதிகம் "இடம் - கழுக்குன்றமே" என்று பதியினைப் பற்றியே போற்றியவாறு காண்க.

இனிதமர்ந்து - சிலநாள் என்பது இசையெச்சம்.

நாடிய நல்லுணர்வு-சிவனையே உள்ளத்தில் எப்போதும் நாடிக் கண்டு கொண்டிருந்த நல்ல உணர்வு; "நாடிய அன்பொடு" (3325) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; சிவயோகத்திற் றிளைக்கும் உள்ளுணர்வு.

நாடிய...நண்ணி - சிவயோக நினைவினில் அழுந்திய உணர்ச்சியோடு சென்றாராதலின் உலகியல் நிகழ்ச்சிகளை மறந்த நிலையினின்றார் என்பதாம்; பின்னர், நம்பிகளைத் தொடர்ந்தோ அன்றி முன்சென்றோ நிற்கும் முறையினையுடைய பரிசனங்கள் நம்பிகள் திருக்கோயிலினில் வழிபட்டுப் புறத்தணைந்தபின் அமுது செய்யும் பொழுதாகவும் குறுகாராயினர் எனவரும் மேற் சரித வரலாற்றுக்குக் காரணம் உணர்த்தப்பட்டது; நம்பிகள் உலகை மறந்த யோகத்திற் சிவனைக் கண்டுகொண்டவாறே விரைவிற் சென்றருளினர் என்பதாம்.

ஆடகம் - பொன்னாலியன்ற வேலைப்பாடுடைய மதிற் பகுதிகள்.

ஆலக்கோயிலின் அமுதை - கச்சூர் - ஊர்ப்பெயரும், **ஆலக்கோயில்** - கோயிலின் பெயருமாம்; பூங்கோயில், பெருங்கோயில் என்றாற்போல்; **அமுது** - என்றது பின்னர்ப் பசிதீர நம்பிகளுக்குக் கருணையினால் அமுதளித்தருளும் வரலாற்றுக் குறிப்புப்படக் கூறியதாம். ஆலக்கோயிலுளிருப்பினும் அவர் அமுதமேயாவர் என்ற நயம்படக் கூறியதுமாம். (**ஆலம்** - விடம்.)

கூடிய - மனத்துள்ளே கண்டவாறே புறத்திலும் கிடைக்கும்படி வந்துகூடிய. 174

3329. (இ-ள்) அணைந்தருளும்...பொழுதாக - கும்பிட்ட பின் திருக்கோயிற்புறத்தில் அணைந்த அந்நேரத்தில் திருவமுது செய்தருளும் காலம் ஆயிடவும்; கொணர்ந்து...குறுகாமை - கொண்டுவந்து திருவமுது ஆக்கி உதவும் பரிசனங்களும் வந்து சேராமையினாலே; முனைப்பாடிப் புரவலனார் - திருமுனைப்பாடி நாட்டின் தலைவராகிய நம்பிகள்; தணந்த...புறத்திருந்தார் - நீக்கிய பசியினால் வந்த வருத்தத்தினாலே தமது பெருமானது

3329. **அணைந்தருளு மவ்வேலை யமுதுசெயும் பொழுதாகக்**
கொணர்ந்தமுது சமைத்தளிக்கும் பரிசனமுங் குறுகாமைத்
தணந்தபசி வருத்தத்தாற் றம்பிரான் றிருவாயிற்
புணர்ந்தமதிற் புறத்திருந்தார் **முனைப்பாடிப் புரவலனுர்.** 175

திருவாயிலினுடன் கூடிய திருமதிலின் புறத்தே தங்கியிருளினர்.

(வி-ரை) அமுது செயும் பொழுது ஆக - அமுது செய்தற்குரிய காலம்; இது "கடும்பகற்போது" (3330) என்றும், "உச்சம்போது" (பதிகம்) என்றும் ஈண்டு அறியப்படும். காலைக் கடன்களும், இறைவர் வழிபாடும் முடித்தபின் நண்பகல் என்னும் உச்சிப்போதி லன்றி உணவு கொள்ளாமை நம் முந்தையோர் கொண்ட நல்வழக்கு என்பது ஈண்டு அறிவிக்கப்பட்டமை காண்க; இஃது உடலுக்கு நல்வாழ்வும் நீடிய ஆயுளும் தருவது என்பது மருத்துவ நூலோர் கண்ட உண்மை. Noon Break fast System−நண்பகலுக்கு முன் உண்ணுமை - என்று இதனைப் புதிதோர் முறையாகக்கொண்டு கையாளுவர் சில நவீனர். **ஆக** - ஆகவும்; சாரவும்; சிறப்பு உம்மை தொக்கது.

கொணர்ந்து அமுது சமைத்து அளிக்கும் பரிசனமும் குறுகாமை - அமுது கொணர்ந்தாயினும் சமைத்தாயினும் அளிக்கும் என்க; சமைத்தளித்தற்குப் போதிய இடையிருப்பின் சமைத்தும், அஃதில்லையேல் கொணர்ந்தும் அளிக்கும் என்க; **கொணர்தல்** - பின்னர் இறைவர் செய்தருளியபடி அந்தணர் மனைகளிலிருந்து வேண்டிப் பெற்றுக் கொணர்தல். உணவு அமைத்தற்குரிய சாதனங்களைக் கொண்டுவந்து என்றலுமாம். சோறு விலைக்கு வாங்கிக் கொணர்தல் என்பது முன்நாளில் இல்லை; சோற்று வாணிபம் பிற்காலத்தில் வந்து முளைத்துப் பரவிக் கேடுகள் பலவற்றுக்கும் காரணமாகும் தீய வழக்கங்களுள் ஒன்று; **பரிசனம்** - நம்பிகளுடனே தலயாத்திரையில் இத்தகைய சமையற் பரிசனமும் ஏவலாளரும் உடன் சென்றனர்; ஆளுடைய பிள்ளையாருடன் பல்லாயிரம் பரிசனமும் பிறரும் உடன் சென்றமையும், துறவற நிலையின ராதலின் ஆளுடைய அரசுகளுடன் அவ்வாறு பரிசனங்கள் தொடராமையும் கண்டு நினைவுகூர்க. **குறுகாமை** - குறுகாமையால்; வராத காரணத்தால்.

தணந்த பசி வருத்தம் - தணந்த - நீக்கிய; சிவயோகத்தின் நிலைத்த காரணத்தால் முன்னர்த் தம்மை அணையாது நீக்கிய என்பதாம். "பசி வந்திடப் பறந்துபோம்" என்ற உலகியல் நீதிக்கு மாருக நீக்கிய என்க; "கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான் கண்மூடி மவுனியாகித், தனியே யிருப்பதற் கெண்ணினேன்" (தாயுமானுர்) என்று யோகிகள் பாலும் ஒரோர்கால் வந்து வருத்தம் செய்வது பசிநோய் என்று காட்டியநிலை காண்க; "பசிநோய் செய்த பறிதான்" "பாடுவார் பசிதீர்ப்பாய்" (நம்பி.தேவா.) என்று நம்பிகள் இதனை எடுத்துக் கூறுதல் காண்க. "வழி போம் பொழுது மிகவிளைத்து வருத்த முறநீர் வேட்கையொடும், அழிவாம் பசிவந்தணைந்திடவு மதற்குச் சித்த மலையாதே, மொழிவேந் தருமுன் னெழுந்தருள" (1569) என்ற அரசுகள் வரலாறும் காண்க; "ஓவா - தழுவான் பசித்தானென் றுங்கிறைவன் காட்டத், தொழுவான் றுயர் தீர்க்குந் தோகை...அப்ப, னருளாலே, யூட்டுதலும்" (ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை), "தாதையொடு வந்த வேதியச் சிறுவன்,

3330. வன்றொண்டர் **பசிதீர்க்க மலையின் மேல் மருந்தானார்**
மின்றங்கு வெண்டலையோ டொழிந்தொருவெற் றோடேந்தி
அன்றங்கு வாழ்வாரோ ரந்தணராய்ப் புறப்பட்டுச்
சென்றன்பர் முகநோக்கி யருள்கூரச் செப்புவார், 176

றளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த, வன்றெ "போவென் றழைப்ப" (கழுமல மும்மணிக்கோவை-1) என்று வரும் ஆளுடைய பிள்ளையார் வரலாறுகளும் கருதுக; (**குறிப்பு** *- ஈண்டுக் குறித்த பசி வேறு என்பது.)*

திருவாயிற் புணர்ந்த மதிற் புறத்திருந்தார் - *உச்சிக்கால வழிபாடு முடிந்தவுடன் கோயில் திருக்கதவம் திருக்காப்பிடும் நிலையும், அதன்பின் பசி முதலிய வேட்கையுடையோர் மற்றெவரும் திருக்கோயிலினுள்ளே தங்கலாகாத நிலையும் காரணமாக மதிற்புறத்தே திருவாயிலில் இருந்தனர் என்பதாம்.*

மூனைப்பாடிப் புரவலனர் - புரவலனரேனும் என்று சிறப்பும்மை விரித்துரைத்துக் கொள்க; புரவலனராயினும் தமக்குப் பசி வந்தடரும் நியதியின்பாற் படுவர் என்பதும், எவ்வுயிரினுள்ளும் உயிர்க்குயிராய் நிற்கும் இறைவர் அதனை அறிந்து ஊட்டினலன்றி உயிர்கட்குச் செயலில்லை என்பதும், **புரவலனர்** என்று குறிப்பாலுணர்த்தியருள இப்பெயராற் கூறினர். "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்த லரிது" (குறள்); ஈண்டு நம்பிகள் பரிசன முதலியவனவாகிய அரசர் திருவெல்லா முடையாராயினும் பசியால் வருந்தியிருக்க நேர்ந்தது திருவருள் புலப்படுக்கும் நியதி. *175*

3330. (இ-ள்) வன்றொண்டர் பசிதீர்க்க - வன்றொண்டரது பசியினைத் தீர்க்கும் பொருட்டு; மலையின்மேல் மருந்தானர் - மலையின்மேல் உள்ள மருந்து ஆகிய இறைவர்; மின்தங்கு...புறப்பட்டுச் சென்று - ஒளியுடைய வெண்டலையாகிய கபாலமாகிய பலிப்பாத்திரத்தை ஒழித்து வெறும் ஒரு திருவோட்டினை ஏந்திக் கொண்டு அன்று அவ்வூரில் வாழ்பவராகிய ஒரு அந்தணர் போலக் கோலங்கொண்டு புறப்பட்டுப் போய்; அன்பர்முக நோக்கிச் செப்புவார் - அன்பராகிய நம்பிகளது முகத்தைப் பார்த்துச் சொல்லுவாராய்,

(வி-ரை) மலையின் மேல் மருந்தானர் - மலைகளில் உள்ள மருந்துகள் சிறந்த குணமுடையவை எனப்படும். இங்குப் பசிநோய் தீர்த்தலின் இறைவரை மருந்தென்ற துருவகம். முன்னர் **அமுது** - *(மரணந் தவிர்ப்பது) (3328)* என்றதும் காண்க; இங்கு இறைவர் மலையின்மேல் எழுந்தருளியிருப்பதும் குறிப்பு; **மருந்தானர்** - ஆக்கச்சொல் இயல்புகுறித்த அளவில் நின்றது. "மலைமேல் மருந்தே" (பதிகம் -5) என்ற பதிக ஆட்சி போற்றப்பட்டது.

வெண் தலை ஓடு ஒழிந்து - இறைவர் பலியேற்கும் பலிப்பாத்திரம் பிரம கபாலமாகிய மண்டையோடு என்பர்; இங்கு அதனை விட்டு என்க.

3331. "மெய்ப்பசியான் மிகவருந்தி யிளைத்திருந்தீர்; வேட்கைவிட
இப்பொழுதே **சோறிரந்திங் கியானுமக்குக் கொணர்கின்றேன்;**
அப்புறநீ ரகலாதே சிறிதுபொழு தமரு" மெனச்
செப்பியவர் **திருக்கச்சூர் மனைதோறுஞ் சென்றிரப்பார்,** 177

ஒரு வெற்று ஓடு- வெறும் ஓர் ஓடு; உலகர் அறியாமைப் பொருட்டு வெற்றோடேந்தி வந்தார்.

அன்று அங்கு வாழ்வார் ஓர் அந்தணராய் - அன்று - காலம்; **அங்கு** - இடம். **வாழ்வார்** - வாழ்பவராகிய; அவ்வூராராகிய; **அந்தணராய்** - அந்தணர் வேடம்பூண்டு; அந்தணர் போல. **புறப்படுதல் -** மறைந்த நிலையினின்றும் வெளிப்படுதல்; 3334-ம் பார்க்க.

முக நோக்கி - பசியின் வருத்தமும் இளைப்பும் முகத்தின் பொலிவினுற் றெரிந்தார் போன்று நோக்கிக் கூறுவார்.

அருள் கூர - அருள் மிகத் தோன்ற; "ஓதக்கண்டேன்" (9) என்றது பதிகக் குறிப்பு; **ஓதல் -** அருள்மொழி கூறல்.

செப்புவார் - செப்புவாராகி; முற்றெச்சம்; செப்புவார் - செப்பி - இரப்பார் - புக்கு - கொண்டு - கொண்டுவந்தார் என்று இம்மூன்று பாட்டுக்களையும் சேர்த்து வினைமுடிபு கொள்க.

ஒரு **வேற்றெருடு**—என்பதும் பாடம். *176*

3331. (இ-ள்) மெய்ப்பசியால்...இளைத்திருந்தீர்; மெய்யால் வரும் பசியினுல் மிகவருந்தி இளைப்படைந் திருந்தீர்; வேட்கைவிட...கொணர்கின்றேன் - உமது பசித்தாபம் நீங்கும்படி இப்பொழுதே சோறு இரந்து உமக்குக் கொண்டு வருகின்றேன்; அப்புறநீர்...அமரும் எனச் செப்பி - "நீர் இங்கு நின்றும் அப்புறம் நீங்காமல் சிறிது நேரம் இங்கு அமர்ந்திரும்" என்று சொல்லி; அவர்...இரப்பார் - அவ்வந்தணர் திருக்கச்சூரின் மனைகள் தொறும் போய் இரப்பாராகி;

(வி-ரை) "மெய்ப்பசியால்...அமரும்" என - இஃது இறைவர் நம்பிகள் முகநோக்கிக் கூறியது; நம்பிகளது பசியின் முடுகிய நிலையினைத் தாம் அறிந்து கொண்ட தன்மையினையும், ஆதலின் அதற்கேற்பச் சோறு கொணர்தல் மிக விரைவில் நிகழும் நிலையினையும், வேறெங்கும் போந்தால் தாமதமும் மேலும் இளைப்பும் உளதாம் என்று தாம் அளிகூரும் தன்மையினையும் புலப்படுத்தக் கூறியபடி காண்க.

மெய்ப்பசி - மெய் - உடம்பு; உடம்பின் உபாதிகளுள் ஒன்றுகிய பசி; நோய் கொண்டார்பால் சிலபோது பசியெனப் போலித்தோற்ற முண்டாவது போலன்றி, உண்மையான பசியின் நிலை; **இப்பொழுதே -** விரைவு, நம்பிகளை ஆற்றுவிக்கும் குறிப்பு.

சோறு இரந்து - அந்தணர் மனைகளில் உச்சிப்போதிற் பிரமசாரிகள் முதலாயினோர்

3332. வெண்டிருநீற் றணிதிகழ விளங்குநூ லொளிதுளங்கக்
கண்டவர்கண் மனமுருகக் கடும்பகற்போ திடும்பலிக்குப்
புண்டரிகக் **கழல்புவிமேற் பொருந்தமனை தொறும்புக்குக்**
கொண்டுதாம் **விரும்பியாட் கொண்டவர்முன் கொடுவந்தார்.** 178

சோறு இரக்கும் வழக்குண்மை புலப்படுத்துதல் *காண்க; வழக்குண்மையாலே தான்* **நம்பிகள்** ஐயப்படாது உடன்பட்டிருந்தருளினர் என்க.

அகலாதே... அமரும் சிறிது பொழுது - *தாம் தாமதமின்றி விரைவில் வரும்* **குறிப்பு; அப்புறம் அகலாது** - என்றதும் வேகமாய் வந்து அவரைக் கண்டு கொள்ளுதல் **பிழையாத** இடம் குறித்தன.

மனைதோறும் சென்றிரப்பார் - *அந்தணர்கள் மனைகள்தோறும் என்க;* "ஊரூர் **திரிய**" - பதிகம்.

வேட்கைவிட - வேட்கை - சோற்றின் *விருப்பம்;* **விட** - *நீங்க.* ***177***

3332. (இ-ள்) வெண்திருநீற்று...துளங்க-வெள்ளிய *திருநீற்றின் அழகு* **விளங்கவும்,** விளங்கிய முந்நூலின் ஒளி அசைந்து வீசவும்; கண்டவர்கள் மன முருக - காணப்பெற்றவர்கள் மனமெல்லாம் உருகவும்; கடும் பகற்போது...பொருந்த - **கடிய** உச்சிப்போதில் இடப்பெறும் பிச்சைக்காகத் தாமரைபோன்ற திருப்பாதங்கள் **நிலத்தின்மேற்** பொருந்தவும்; மனைதொறும் புக்குக்கொண்டு - வீடுகள்தோறும் சென்று சென்று **இரந்த** சோற்றினை எடுத்துக்கொண்டு; தாம்...கொடுவந்தார் - தாமே விரும்பித் **தடுத்து** ஆட்கொண்டருளிய நம்பிகள் முன் கொண்டுவந்தருளினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன. இறைவர் **வந்ததும்,** நம்பிகளிடம் சொல்லிச் சென்றதும், சோறிரந்து கொடு வந்ததும் விரைந்து தொடர்ந்து நிகழ்ந்த செய்திகளாதலின் இம்மூன்று பாட்டுக்களையும் ஒரு முடிபுபடக் கூறிய **கவிநயம்** கண்டுகொள்க.

(வி-ரை) வெண் திரு நீற்று...துளங்க - திருநீறும் புரிநூலும் சைவ அந்தணரின் தோற்றமாகிய அடையாளம்; **திகழ - துளங்க** - மிக விளக்கமாகக் கண்டோர் மனங் **கவர; துளங்குதல்** - உடலசையுந்தோறும் பூணூலும் துவண்டு அசைதல்.

கண்டவர்கள் மனமுருக - "கண்டா லடியார் கவலாரே" "ஊரூர் திரியக் கண்டாலடியார் உருகாரே" - (பதிகம்)

கடும் பகற்போது - "உச்சம்போது" - (பதிகம்)

கடும் பகற்போது இடும்பலிக்கு - மனை வாழ்வினர், ஒருவர் வந்து கேளாமல் தாமாகவே உச்சிப்போதில் பலியிடும் மரபும் குறித்தது.

புண்டரிகக் கழல் புவிமேற் பொருந்த - வெயிலில் கால்தேய நடந்து சென்று.

3333. இரந்துதாங் கொடுவந்த வின்னடிசி லுங்கறியும்
"அரந்தைதரும் பசிதீர வருந்துவீ" ரெனவளிப்பப்
பெருந்தகையார் **மறையவர்தம் பேரருளின் றிறம்பேணி**
நிரந்தபெருங் காதலினு னேர்தொழுது வாங்கினுர். 179

புக்கு கொண்டு - (வீடுதோறும்) உள்ளே புகுந்து இடும் பலியினை ஓட்டிற் கொண்டு.

தாம் விரும்பி யாட்கொண்டவர்பாற் கொடுவந்தார் - சோறிரந்தும் கொண்டுவந்ததன் காரணம் தாம் விரும்பி வலிய ஆட்கொண்டமையால் எனக் கூறியபடி.

178

3333. (இ-ள்) இரந்து...அளிப்ப - மறையவர்தாம் இரந்துகொண்டு வந்த இனிய சோறும் கறிகளுமாகிய அவற்றை "வருத்தம் செய்யும் பசி தீரும்படியாக உண்பீராக!" என்று அளிக்க; பெருந்தகையார்...வணங்கினுர் - பெருந்தகையாராகிய நம்பிகள் அம்மறையவருடைய பெருங் கருணையின் திறத்தினைப் பாராட்டி வரன்முறையால் திருவுள்ளத்து எழுந்த பெரிய காதலினுல் அவர் முன்பு வணங்கி வாங்கினுர்.

(வி-ரை) இரந்து...கறியும் - இரந்து கொண்டுவந்தவை இனிய சோறும், அதற்கு வேண்டும் கறி முதலியவைகளும், உண்ணுதற்கு வேண்டும் பிற சாதனங்களுமாம் என்பது.

அரந்தை தரும் பசி - அரந்தை - துன்பம்; முன்னர்த் "தணந்த பசி" *(3329)* "மெய்ப்பசியான் மிகவருந்தி" *(3331)* என்றவை காண்க.

அரந்தை... அளிப்ப - கருணையுடன் இன்சொற் கூறிக் கொடுக்க என்றது குறிப்பு. அளியின்றித் தரும் பண்டம் எத்துணைச் சிறந்தனவாயினும், இன்றியமையாதனவுமாயினும் உயர்ந்தோர் விரும்பார்;அவை பயனும் படா.

பேரருளின் றிறம்பேணி - வாங்கினுர் - "மனைவியார் தாம் படைத்த மதுர மிக வாய்ந்த கனி" *(1740)* என்றவிடத் துரைத்தவை பார்க்க; "முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" "முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானு, மின்சொ லினதே யறம்" (குறள்) என்பன முதலிய நீதிநூல் வகுத்த உண்மைகள் காண்க; "கேளல் கேளிர் வேளாண் சிறுபத, மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத், தாமிரந் துண்ணுமளவை, யீன்ம ரோவிவ் வுலகத் தானே" *(புறம்-74)* எனச், சிறையிற் கிடந்து, தண்ணீர் தாவென்று பெருது, பெயர்த்துப்பெற்றுக், கைக்கொண்டிருந்து, உண்ணுன் சொல்லித் துஞ்சிய சேரமான் கணைக்காலிரும்பொறையின் பாட்டின் உள்ளுறை ஈண்டுக் கருதத்தக்கது.

பெருந்தகையார்... பேணி வாங்கினுர் - அம்மறையவர் கொணர்ந்த இரப்புச் சோற்றைத் தமது பசிதீர்த்தல் கருதி வாங்கினுரல்லர்; அவரது பெருங் கருணையின் றிறம் பாராட்டி அவர் பொருட்டே வாங்கினுர் என்பது குறிப்பு; தாமே யிரந்து பெறுதலும், தமக்காகச் சென்று பிறர் இரந்துபெறுதலும் தன்மையால் ஒன்றேயாமாதலின், "இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற், பரந்து கெடுக வுலகியற்றியான்" என்றபடி எம் பரமாசாரியராகிய தமிழ் நாவலர் பெருமான் இரப்புச் சோற்றினுல் தம் பசிதீர வயிறு நிரப்பவேண்டி

3334. வாங்கியவத் திருவமுது வன்றொண்டர் மருங்கணைந்த
ஓங்குதவத் தொண்டருட னுண்டருளி யுவந்திருப்ப
ஆங்கருகு நின்றூர்போ லவர்தம்மை யறியாமே
நீங்கினா ரெப்பொருளு நீங்காத நிலைமையினார் 180

வாங்கினாரல்லர் என்பது பெறப்படும். **பெருந்தகையார்** - என்ற குறிப்புமது; முன்னரும் "மறைமுனிவர் பொதிசோறு - எதிர் விலக்கலாகாது" (3314) என்ற கருத்தினால் பொதிசோறு வாங்கி உண்ட நம்பிகளது செயல் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

***நிரந்த* பெருங்காதல்** - இவ்வாறு வரும் நிலைமைகளால் மேன்மேலுமுறுமே நம்பிகளது திருவுள்ளத் தெழுந்த பேரார்வம். *179*

3334. (இ-ள்) வாங்கிய...உவந்திருப்ப - மறையவனார் அளிப்ப அவ்வாறு வாங்கிய அத்திருவமுதினை வன்றொண்டாராகிய நம்பிகள் தம்பக்கல் அணைந்த மிக்க பெருந்தொண்டர்களுடனேகூடத் திருவமுது செய்தருளிமகிழ்ந்திருக்க; ஆங்கருகு நின்றூர்போல் - அங்கு அருகிலே நின்றவர் போலவே; அவர் தம்மை...நிலைமையினார்- எந்தப் பொருளினின்றும் நீங்கலாகாத முழுநிறைவுடைய நிலைமையினராகிய அம்மறையவர் தம்மை அவ்வன்றொண்டர் அறியாதபடி அங்கு நின்றும் மறைந்தருளினர்.

(வி-ரை) வாங்கிய அத்திருவமுது - வாங்கிய - முன்கூறியபடி தொழுது வாங்கிய; அகரம், மறையவனார் இரந்து கொடுவந்து அருந்துவீர் என அளிக்கத் தாம் வாங்கிய என முன்னறிசுட்டு; **அமுது** - அமுதினை; இரண்டனுருபு விரிக்க; **அமுதினை - உண்டருளி** என்க.

மருங்கு அணைந்த ஓங்குதவத் தொண்டருடன் - முன்னர்த் திருக்குருகாவூரில் உடன் வந்தணைந்ததுபோல ஈண்டும் நம்பிகள் மருங்கு அங்குத் தொண்டர் வந்தணைந்தனர் என்க; **ஓங்கு தவம்** - நம்பிகளின் பொருட்டு இறைவரே கடும்பகற்போது பாதம் வருந்த மனைதோறும் சென்று இரந்த சோற்றினை, அவர் உண்பதுபோலவே தாமும் உண்ணும் பேறு பெரிய மிக்க முன்னைத் தவத்தானன்றி இயலாதென்பது குறிப்பு.

தொண்டருடன் உண்டருளி - அன்பர்களாவார் தொண்டர்களுடனன்றித் தனித்துண்ணலாகா தென்பது குறிப்பு. "கண்ணுதற் கன்ப ரோடும், விதிமுறை தீபமேந்தி மேவுமின் னடிசி லூட்ட" (*851*); "ஈங்கு நமக்குத் தனியுண்ண வொண்ணுதீச னடியாரிப், பாங்கு நின்றூர் தமைக்கொணர்வீர்" (சிறுத்.புரா.76) என்பன முதலியவை பார்க்க; முன்னர்த் திருகுருகாவூரிலும் "பொதிசோ றதுவாங்கிச், சென்றதிருத் தொண்டருடன் றிருவமுது செய்தருளி" (*3314*) என்றதும் கருதுக.

ஆங்கருகு நின்றூர்போல் அவர்தம்மை அறியாமே நீங்கினார் - அங்கு நின்றவர் போல இருந்த மறையவர்; நின்றவர்போலிருந்தவாறே மறைந்தனர்.

போல் நீங்கினார் - அருகு நின்றபோதும் அவர் இன்னாரென்று அறியவில்லை; அதுபோலவே அவர் நீங்கினபோதும் உருக் காணவில்லை.

3335. திருநாவ லூராளி சிவயோகி யார்நீங்க
வருநாம **மறையவனு ரிறையவனு ரெனமதித்தே**
"பெருநாதச் சிலம்பணிசே வடிவருந்தப் பெரும்பகற்கண்
உருநாடி யெழுந்தருளிற் றென்பொருட்டா" மெனவுருகி, 181

தம்மை அவர் அறியாமே - அவர் - நம்பிகள்; **அவர் தம்மை அறியாமே அருகு ஆங்கு நின்றுர்** என்றும், **அவர் தம்மை அறியாமே ஆங்கு நீங்கினுர்** என்றும் முன்னும் பின்னுமாக ஈரிடத்தும் கூட்டுக. நேரில் நின்றபோது காண இயலாது, மறைந்து நீங்கியபோது அவர்தான் எனக்காணச்செய்வது இறைவரது அருட்டிறம்; "மறையவனு ரிறையவனு ரெனமதித்தே" என மேற்பாட்டிற் கூறுதல் காண்க.

அறியாமே நீங்கினுர் எப்பொருளும் நீங்காத நிலைமையினுர் - நீங்கினுர் - வெளிப்பட்ட நிலையினின்றும் மறைந்த நிலையில் நின்றுர் என்பது பொருள்; எங்கும் நிறைந்தவர் இறைவராதலின் நீங்கமாட்டாதவர் ஆதலின் வெளி உருவம் காட்டாது மறைந்தனர் என்று கொள்க என எச்சரிப்பார் போன்று "எப்பொருளும் நீங்காத நிலைமையினுர்" என்று அறிவித்தமை ஆசிரியரது தெய்வக் கவிநலம்.

நீங்கினுர் - நீங்காத நிலைமையினுர் - முரண் அணிச் சுவைபடக் கூறியபடியுமாம்.
180

3335. (இ-ள்) திருநாவலூராளி...மதித்தே - சிவயோகியாராய் மறையவர் வேடங் கொண்டுவந்த இறைவர் மறைந்து நீங்கத் திருநாவலூர்த் தலைவராகிய நம்பிகள் முன்வந்த புகழுடைய மறையவனுர் இறையவனுரேயாவர் என்று துணிந்து; பெருநாதச் சேவடி...உருகி - பெரிய நாதமுடைய சிலம்பினை அணிந்த செம்மையாகிய திருவடியிணை வருந்த உச்சிப்போதில் உருவு தாங்கி என் பொருட்டாக எழுந்தருளி நடந்து எழுந்தருளிற்றே! என்று மனமுருகி,

(வி-ரை) சிவயோகியார் - மறையவராய் வந்த சிவபெருமான்; **யோகம்** - கூடுதல்; **சிவயோகியார்** - அந்தணர் வேடத்துடன் கூடியசிவபெருமான்.

நாமம் - புகழ்; **நாமமறையவனுர்** - பெயர் மாத்திரையால் மறையவரெனப்பட்டார் என்ற குறிப்புமாம்.

மதித்தே - கண்ட செயல்களால் காணுத சிவனைத் துணிந்தே; **மதித்தல்** - காரணங்களால் பொருணிச்சயம் செய்தல்.

பெருநாதச் சிலம்பு - நாதம் - சுத்த மாயையாகிய குடிலை; **பெருமையாவது** மறை முதலிய எல்லாவற்றுக்கும் காரணமாயிருத்தல்; இச்சிலம்பொலிவழியே சென்றுல் சிவனை அடையலாம் என்று "திருச்சிலம் போசை ஒலிவழி யேசென்று, நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற" என ஞானசாத்திரம் முழக்குதல் காண்க. திருச்சிலம்போசை கேட்கப் பெற்றதனுலே கழறிற்றறிவார் நாயனுர் இறைவரது திருவருள் கூடிய துணிபினைத் தினமும் பெற்று வந்த வரலாறும் கருதுக.

பெருநாத...பொருட்டாம் - "கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென், றுச்சம் போதா லூரூர் திரியக் கண்டா லடியா ருருகாரே" என்ற பதிகக் கருத்து; ஈண்டுப் "பெருநாதச்

வேறு

3336. "**முதுவா யோரி**" யென்றெடுத்து முதல்வனார்தம் பெருங்கருணை
"**யதுவா மிது**" வென் றதிசயம்வந் தெய்தக் கண்ணீர் மழையருவிப்
புதுவார் புனலின் மயிர்ப்புளகம் புதையப் பதிகம் போற்றிசைத்து
மதுவா ரிதழி முடியாரைப் பாடி மகிழ்ந்து வணங்கினார். 182

***சிலம்பணி சேவடி*"** என்று நாதச் சிலம்பு பற்றிக்கூறியது, "இவர் இறைவர் தாமே" **என்று** காணத் துணையாயிருந்தமை குறிப்பா லுணர்த்தற்கென்க.

பெரும் பகல் - நண்பகல்; "உச்சம் போதால்" பதிகம்.

உருநாடி - "ஒருநாம மோருருவ மொன்று மில்லா"த இறைவர் மறையவராகிய **ஓர்** உருவத்தை மேற்கொண்டு; அகண்டி தமாகியவர் கண்டிடத்தப்பாக் காணப்பட்டு.

எழுந்தருளிற்று - எழுந்தருளிய பெரிய அருள் இருந்தவாறு தானென்னே **என்று** அதிசயப்பட்டது.

என் பொருட்டாம் - மிக எளியவனாகிய என் பொருட்டு என்பது.

என் பொருட்டா மெனவுருகி - அவரது அளவிடற்கரிய பெருமையும் **தமது** அளவிடற்கரிய சிறுமையும் எண்ணவே மனமுருகி; "இத்தனையு மெம்பரமோ **வைய** வையோ வெம்பெருமான் றிருக்கருணை யிருந்தவாறே" (தேவா). ***181***

3336. (இ-ள்) முதுவாயோரி...இதுவென்று - முதுவாய் ஓரி என்று தொடங்கி, இறைவனாரது பெருங் கருணைத் திறம் அதுவேயாகும் இச்செயல் என்ற கருத்துடன்; அதிசயம்...போற்றிசைத்து - அதிசயம் பொருந்தக் கண்ணீர் மழை யருவிபோலப் பெருக, வார்ந்த அப்புதுப் புனலில் திருமேனி முழுதும் மயிர்க்கூச்சினாலே மூடத், திருப்பதிகம் பரவித் துதித்து; மதுவார்...வணங்கினார் - தேன் பொருந்திய கொன்றை சூடிய முடியினையுடைய சிவபெருமானைப் பாடி மகிழ்ச்சி பொருந்த வணங்கினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) "முதுவாய் ஓரி" என எடுத்து - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

"முதல்வனார்தம்...இது" என்று - இது பதிகக்கருத்தாகிய குறிப்பு. "அதுவே யாமா றிதுவோ" என்ற பதிகத்துப் பொருள் காட்டியவாறு.

பெருங்கருணை - முன் பாட்டிற் கூறிய செயல்கள் கருணைத் திறத்தை எடுத்துக் காட்டின; சேவடி வருந்த வருதல், உருவெடுத்து வருதல், பெரும் பகற்கண் வருதல், மனைதோறும் சென்று வருதல், மிகப் பசித்தீர் என்று இன்மொழி கூறிச்சோறு கொண்டுவந்து ஊட்டுதல், "ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற், கிரப்பினிளிவந்த தில்" (குறள்) என்று வகுத்த இழிவுபடும் இரப்புத் தொழிலும் செய்தல் முதலாயின.

அதிசயம் - இத்துணையும் அடியான் பொருட்டு ஆண்டான் செய்தமை உணர்ந்ததனால் வரும் பெருமிதமாகிய மனநிலை.

கண்ணீர் மழையருவிப் புதுவார் புனலின் - மிக்க கண்ணீர் பொழிதலினுல் உடல் முழுதும் நனேதல் குறித்தது.

புனலின் மயிர்ப்புளகம் புதைய - புளகம்படச் சிலிர்த்து நின்ற மயிர், கண்ணீர் அருவியினுல் நனைந்து கவிய.

கண்ணீர் மழையும் புளகமும் - அதிசயத்தின் கண் வந்த மெய்ப்பாடுகள்.

போற்றிசைத்து - வாக்கின் ருெழில். **மகிழ்ந்து** - இவ்வாறு மன மெய்ம்மொழி என்ற மூன்றினுலும் வழிபட்டதனுல் வரும் ஆனந்தம். *182*

திருக்கச்சூர் ஆலக்கோயில்

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லிக் கௌவாணம்

முதுவா யோரி கதற முதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே
மதுவார் கொன்றைப் புதுவீ சூடு மலேயான் மகடன் மணவாளா
கதுவாய்த் தலேயிற் **பலிநீ கொள்ளக் கண்டா லடியார் கவலாரே**
அதுவே யாமா றிதுவோ! கச்சூ ராலக் கோயி லம்மானே. (1)

கச்சே ரரவொன் றரையி லசைத்துக் **கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கென்**
றுச்சம் போதா லூரூர் திரியக் கண்டா லடியா ருருகாரே
இச்சை யறியோ மெங்கள் பெருமா னேழேழ் பிறப்பு மெனேயாள்வாய்
அச்ச மில்லாக் கச்சூர் வடபா லாலக் கோயி லம்மானே. (2)

பிறவா யிறவாய் பேணுய் மூவாய் பெற்ற மேறிப் பேய்சூழ்தல்
துறவாய் மறவாய் சுடுகா டென்று மிடமாக் கொண்டு நடமாடி
ஒறுவாய்த் தலேயிற் **பலிநீ கொள்ளக் கண்டா லடியா ருருகாரே**
அறவே யொழியாக் கச்சூர் வடபா லாலக் கோயி லம்மானே. (6)

காதல் செய்து களித்துப் பிதற்றிக் கடிமா மலரிட் டுனேயேத்தி
யாதல் செய்யு மடியா ரிருக்க வையங் கொள்ள வழகிதே
ஓதக் கண்டே னுன்னே மறவே னுமையாள் கணவா வெனேயாள்வாய்
ஆதற் பழனக் கழனிக் கச்சூ ராலக் கோயி லம்மானே. (9)

அன்ன மன்னும் வயல்சூழ் கச்சூ ராலக் கோயி லம்மானே
யுன்ன முன்னு மனத்தா ரூர **ளூரு ரன்பேர் முடிவைத்த**
மன்னு புலவன் வயனு வலர்கோன் செஞ்சொ ஞவன் வன்ருெண்டன்
பன்னு தமிழ்நூன் மாலே வல்லா ரவரெந் தலேமேற் பயில்வாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—முன்னர் *(3336)* ஆசிரியர் காட்டி யருளியவாறு. இறைவர் தம்பாற் செய்த பெருங் கருணேயிற் றிளேத்து மகிழ்ந்து வணங்கியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) முதுவாய் ஓரி கதற முதுகாட் டெரிகொண் டாடல் முயல்வானே. ஓரி - குள்ளநரி. நண் பகற்பொழுது பாலேக்குரியது; "கால வேனிலிற் கடும்பகற் பொழுதினேப் பற்றிப், **பாலேயுஞ்** சொல்லலாவன" *(1092)*. இங்கு நண்பகற்

பொழுதின்கண் இறைவர் போந்து திருவமுது செய்வதை செய்கின்றாதலின் அந்திகழ்ச்சிக்குரிய எரிகாடு - ஓரி - பேய் (6) முதலியவை பற்றிக் கூறுகின்ற தமிழ்ப்பாமாலை, இறைவரையேபற்றிக் கூறுகின்ற சிவமணமும் கண்டுகொள்க. "புலன்ஐந் -செந்நெறி" "தமிழ்நூல் மாலை" **(10) புதுவீ** - புதிய பூ; **முயலுதல்** - பண்டுச் செய்தல் என்னும் பொருளில் வந்தது; **கதுவாய்** - விரிந்தகன்ற வாய்; **அடியார் கவலாரே** - ஏகாரம் வினா; கவல்வார் என உடன்பாடு குறித்தது; இரக்கச் சுவை; உருகாரே (2); (6); அடியாரிருக்க அமுதுகொள்ளழகிதே (9); இப்பதிகம் இச்சரிதப் பகுதிக்கு மிக்க அகச்சான்றாகிய ஆதாரம் தருவது; "**அதுவே யாமா றிதுவோ?**" பெருங்கருணை யதுவாம் இது (3336) என்று ஆசிரியர் இதன் பொருளை விரித்துக் காட்டி யருளினர்; மேற்பாட்டிலு மிவ்வாறே; **அது** - கருணை; **இது** - காட்டிச் செய்த செயல்; **கச்சூர்** - ஊர்ப் பெயர்; **ஆலக்கோயில்** - கோயிலின் பெயர்; 3-ம் பாட்டுப் பார்க்க;—(2) **கச்சேர் அரவு** - கச்சாகிய அழகிய பாம்பு; **கழலும் சிலம்பும் கலிக்க** - "உருநாதச் சிலம்பணி சேவடி" (3335); **உச்சம் போதால்** - இறைவர் போந்து மனைதோறும் சோறிரந்த நேரம்; **ஊரூர்** - மனைதோறும்; **உருகாரே** - மனமுருகி வருந்தாரோ; **இச்சை** - இவ்வாறு செய்யலாகாத செயலை அருள் பற்றிச் செய்வதற்குரிய உமது இச்சாசத்தி; **ஏழேழ் பிறப்பு** - ஏழுலகத்தும் வரும் ஏழ்வகைப் பிறப்பு; எழுகின்ற எழுவகை என்றலுமாம்; **எழுதல்** - பிறத்தல். **வடபால்** - கோயில் ஊரின் வடக்கிருப்பது. "வடபாலை";—**(3) சால** - மிகுதியாக; **அவை...துறந்தேன்** - திருக்கோயில்களின் வழிபாட்டினால் வரும் பயன் கூறப்பட்டது; **மால்** - மயக்கம்; ஆணவ மறைப்பு; **வினை** - கன்மமலம்; வாசனை மலமும் மூலகன்மமும் உள்ளிட்டுக் கூறியவாறு; **கோலக் கோயில்...ஆலக்கோயில்** - இக்கோயிலின் அழகும் சிறப்பும் எடுத்துப் போற்றி யனுபவித்தவாறு; **கல்லால்** - இத்தல மரம் **ஆல்**; அதனால் இப்பெயர் பெற்ற தென்பர். **ஆல் நிழற்கீழ்அறங்களுரைத்த** - தலம் பற்றிய இக்குறிப்புபடக் கூறியருளியது;—**(4) சடையும்...ஒளியானே** - இறைவரைப் போற்றியது; **கடையும்...கலந்தெங்கும்** - நகரச் சிறப்பினையும், **புடையும்...சழனி** - நாட்டு வளத்தினையும் போற்றியபடி; மேல் 5-9-10 பார்க்க. **திருமாமகள் புல்கியடையும்**- இவ்வளங்களை இந்நாட்டுக்கும் நகருக்குத் தருவதற்கன்றி, அவ்வாறு தந்து தழுவித் தான் பயன் பெறுதற்குத் திருமகள் வந்தடைகின்ற என்பதாம்; **கழனி** - வயல்; **பழனம்** - வயல் சூழ்ந்த சோலை; —**(5) விதி - வினையின் பயன் - விதி** - நியதி; **விதிப்பவர்** - பயனை ஊட்டுபவர் என்க; **விரவார்** - பகைவர்; **எழுந்து** - எழுந்தவுடன் முதற் கடமையாக; **காலை** - அதிகாலை; புலர்காலை; **மாலை மதியே** - இன்பப் பொருள் என்றது. "மாசில் வீணையும் மாலை மதியமும்" (தேவா); **மலைமேல் மருந்தே** - "வன்றொண்டர் பசி தீர்க்க மலையின்மேன் மருந்தானார்" (3330) என்று ஆசிரியர் இதனை எடுத்தாண்டு இதன் அருமைப் பாட்டினைக் காட்டி யருளுதல் காண்க; **மறவேன் அடியேன்** - அடியான் பொருட்டு ஆண்டவன் செய்த இவ்வருளிப்பாடு எந்நாளும் மறக்க முடியாதது என்றதாம்;—**(6) பிறவாய்...மறவாய்** - சிவபெருமானின் இறைமைக் குணங்கள்; **பேணாய்** - விருப்பு வெறுப்பில்லாதவர்; **மறவாய்** - உயிர்களுக்கு ஆவனவற்றையே எப்போதும் செய்தலை மறவாய்; **ஒறுவாய்த்தலை - ஒறு** -செத்த; **வாய்** - பிளந்த வாய்; **அற** - அறுதல்; நீங்குதல்; **அறவே** - நீங்குதலை; **ஒழியாய்** - நீங்கமாட்டாய்; இங்கு இறைவர் வந்து உடனாகி இருந்து காட்சி தந்தும் செய்துமிருந்தவர் காணாது நீங்கினராதலின் அதுபற்றி உடனாயிருந்து நீங்கி வேறாக உள்ள நிலையினையும் நீங்கமாட்டாய் என்றபடி. **அறவே** -

முற்றும் என்றலுமாம்; கண்ணுற் காணுவிடினும் வந்தநீ இறைவன் என்று காட்டி நிற்கின்றவதனல் முற்றும் நீங்காய் என்க; இக்கருத்தை "நீங்கனு ரெப்பொருளு நீங்காத நிலைமை யினர்" (3334) என்று ஆசிரியர் முன் விரித்துக் காட்டியருளியமை காண்க;—(7) **பொய்யே...கொள்வானே** - பாசாங்கு செய்து பொய்யாகப் புகழ்ந்தாலும் அப்புகழ்ச்சிக்குரிய அம்மட்டில் பயன் தருபவர்; இது நம்பிகள் தம்மைப் பற்றிக் கூறிய நிலைக்குறிப்பு; **மெய்யே...நினைகண்டாய்** - அவ்வாறிருப்பவும் மெய்யாக நினைக்கும் மெய்யடியார்களை நினைப்பினுள் நின்று அருளவேண்டுமென்பது மிகையன்றே? என்றபடி; இஃது அடியார் பொருட்டுச் செய்து கொண்ட விண்ணப்பம்; அரசுகளது "பசுபதி"த் திருவிருத்தப் பதிகம் பார்க்க; **நினை கண்டாய்** - இறைவர் நினைப்பதுவே அருள் செய்தலாம் என்பது; **செய்யாய்** - செம்மையுடையவன்; **வெளியாய்** - ஞானவெளியில் இருப்பவன்;—(8) **ஊனை...உணர்வில்லேன்** - பசியே பெரிதாக எண்ணிச்சோற்றினை உண்டேன்; அதனைத்தந்தவனை இன்னவனென்று நினைவுகொள்ளும் உணர்வில்லாதவ ஞனேன் என்ற சரிதக் குறிப்பும் காண்க; **நாறு** - நாற்றம்; மணம்; **மானை** - மான்விழியினை; **மறைத்திட்ட** - மேனியை மறையப்போர்த்த; **(9) காதல்...அடியார்** - உண்மையடியா ரிலக்கணம்; சரித ஆதரவாகிய அகச்சான்று; **ஆதல்** - ஏவலாகும் தொழில்கள்; **ஓதக்கண்டேன்** - நீ சொல்லியசொற்களை; இன்மொழிகள் ஓதுதலை; (3331) (3333); இதனை "அருள் கூரச் செப்புவார்" (3330) என்றருளினர் ஆசிரியர். **ஆதல்** - விளைவு மிகுதியும் ஆக்கமுடைய; **எனை ஆள்வாய்** - சரிதக் குறிப்பு;—(10) **அன்ன மன்னும்** - நீர்வளம் குறித்தது; **உன்ன முன்னும்** - நினைக்க முற்படும்; **ஆரூரன்பேர் முடிவைத்த** - ஆரூரர் என்ற பேரைத் தாய் தந்தையராற் சூட்டப்பெற்ற; **பேர் முடிவைத்தல்** - பெயர் சூட்டல்; நாமகரணம் செய்தல்; குலதெய்வமாகிய திருவாரூர்ப் பெருமான் பெயராதலின் அதனை **முடியில் சூட்ட** என்றார்; **ஆரூரர்** என்ற பெயர்க் காரணம் கூறியவாறு; "அடிப் பேராரூரன்" (தேவா); **புலவன் செஞ்சொல்** - தமிழ்நூல்; நண்பகற் பொழுதினைப் பற்றிப் பாலைத்திணையைக் கொண்டு தமிழ் வளம் பற்றி இறைவர் தன்மைகளை அவர் செய்த பேரருள் விளங்கப் பாடிய திறம்; **வன்றொண்டன்** - இப்பெயரையே குறிக்கொண்டு ஈண்டு "வன்றொண்டர் பசிதீர்க்க" (3330) என்று இவ்வருளின் பகுதியினைத் தொடக்கம் செய்து காட்டிய திறம் காண்க: **மாலை வல்லார் அவர் எம்தலைமேற் பயில்வாரே** - இஃது அன்பர்கள் பொருட்டுப் பயன் கூறியமொழி.

தலவிசேடம்:— திருக்கச்சூர் ஆலக்கோயில் - தொண்டை நாட்டு 26-வது பதி. ஊர்ப்பெயரும் கோயிற் பெயரும் சேர்ந்து வழங்கும் பெயர்; நன்னிலத்துப் பெருங்கோயில், வைகன் மாடக்கோயில் என்பன போல. விட்டுணு அமுதம் பெறும்பொருட்டுக் கச்சபமாய் - (ஆமை) - இருந்து வழிபட்ட ஊராதலின் கச்சூர் எனப்படும்; கோயிலினுள் **ஆல்** - தலமரம் ஆதலின் ஆலக்கோயில் எனப்படும்; கசப ஊர் என்பது கச்சூர் என்று மருவி வழங்கியது போலும்; தீர்த்தம் - **கூர்ம தீர்த்தம்** (கூர்மம் - ஆமை) எனப்படுதலும் காண்க; இங்கு ஆரூர் நம்பிகள் பொருட்டு இறைவர் அந்தணராய் வந்து ஊரில் அந்தணர் மனைதோறும் நண்பகற்போதில் சென்று சோறிரந்து கொண்டுவந்து ஊட்டி மறைந்த வரலாறு மேலே புராணத்திலுரைக்கப்பட்டது; பதிகம் அப்போது அருளப்பட்டது; கோயிலுக்கு மேற்கே மலையடிவாரத்தில் விட்டுணுவுக்கு (அமுதம்) மருந்தளித்த **மருந்தீசர்** எழுந்தருளியுள்ளார்; நம்பிகளுக்கு விருந்திட்ட இலிங்க மூர்த்தி கோயிலினுள் தரிசிக்க உள்ளார்; மலைமேல் **விருந்திட்ட நாதர்** கோயில்; **மலைமேல் மருந்தே** என்று நம்பிகளால்

3337. வந்தித் திறைவ ரருளாற் போய் மங்கை பாகர் மகிழ்ந்தவிடம்
முந்தித் தொண்ட ரெதிர்கொள்ளப் புக்கு முக்கட் பெருமானைச்
சிந்தித் திடவந்தருள்செய்கழல்பணிந்துசெஞ்சொற்றொடை புனைந்தே
அந்திச் செக்கர்ப் பெருகொளியா ரமருங் **காஞ்சி** மருங்கணைந்தார். 183

இவரும் **மருந்து** என்று போற்றப்பட்டனர்; தொண்டை நாட்டிலுள்ள தியாகராசர் சந்நிதிகள் பலவற்றுள் இஃது ஒன்று; சுவாமி - **விருந்திட்ட நாதர்**; அம்மை - **உமையம்மை; தியாகர் - அமுதத்தியாகர்**; தீர்த்தம் - **கூர்மதீர்த்தம்**; மரம் - **ஆல்**; பதிகம் 1.

இப்பதி சிங்கப்பெருமாள் கோயில் நிலையத்தினின்றும் வடமேற்கில் 1 நாழிகையளவில் அடையத்தக்கது.

3337. (இ-ள்) வந்தித்து...போய் - வணங்கி இறைவரது அருள்விடை பெற்று அங்கு நின்றும் போய்; மங்கை பாகர் மகிழ்ந்த இடம் - உமைபாகராகிய சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் பிறபதிகளை; முந்தி...புக்கு - அங்கங்கும் முன்பு தொண்டர்கள் வந்து எதிர்கொண்டு அழைத்துச் செல்லப்புகுந்து; முக்கட் பெருமானைச் சிந்தித்திட....புனைந்தே - நினைக்க முன்வந்து அருள்புரியும் முக்கட்பெருமான் திருவடிகளைப் பணிந்து செஞ்சொற்றொடை மாலைகளாகிய திருப்பதிகங்களைப் பாடியருளி; அந்தி... மருங்கணைந்தார் - மாலைச் செவ்வந்தி போலும் பெருகும் ஒளி பொருந்திய திருமேனியினையுடைய திருவேகம்பவாணர் விரும்பி எழுந்தருளியுள்ள திருக்காஞ்சிபுரத்தின் பக்கம் வந்தணைந்தனர்.

(வி-ரை) வந்தித்து - முன் கூறியபடி வணங்கி; **வந்தித்தல்** - என்பது நன்றி பாராட்டும் வகையில் செய்யும் வணக்கம் என்ற குறிப்புடன் நின்றது; **அருளால்** - அருள் விடைபெற்று: **போய்** - மேலே மேற்றிசை நோக்கிச் சென்று.

மங்கை பாகர் மகிழ்ந்த இடம் - இறைவர் மகிழ்ந்து அருளிய பிற பதிகள். இவை திருக்கச்சூராலக் கோயிலுக்கும் திருக்காஞ்சீபுரத்துக்கும் இடையில் பாலாற்றின் கரையிலும் கரை அணிமையிலும் உள்ளவை; இவை பாலாறும் சேயாறும் கூடுதுறையில் உள்ள திருமுக்கூடல், திருவில்வலம், திருமாகறல், திருக்குரங்கணின் முட்டம் முதலியன என்பது கருதப்படும்.

சிந்தித்திட வந்து அருள்செய் பெருமானைக் கழல்பணிந்து - என்று கூட்டுக.

சிந்தித்திட வந்தருளும் கழல் - என்று வருதல் திருவடியின் செயலாக வைத்து உரைப்பினுமமையும்; **சிந்தித்திட** - நினைத்த அளவில்; திருவருளின் விரைவு குறித்தது; **சிந்தித்தல்** - ஒன்றே திருவருள் பெறுதற்கு மூலம் என்பதாம். **சிந்தித்திடவே** என்க; "ஏதும் பெறுவிடில் நெஞ்சுண்டன்றே - அடித்தாமரை சென்று சேர்வ தற்கே" (கழுமல - மும்-கோவை-*12*.)

செஞ்சொற்றொடை - திருப்பதிகங்கள்; இவை கிடைத்தில.

அந்திச் செக்கர்ப் பெருகு ஒளியார் - அந்திச் செக்கர் வானம்போலும் திருமேனியின் பெருகும் ஒளி; **பெருகும்**-அந்திச் செக்கர் ஒளி காலம் செல்லச் சிறுகிக் கழிந்து இருள் பரவும்; இறைவர் திருமேனிச் செக்கர் அவ்வாறன்றி நினைப்பின் அளவுக்கேற்பப் **பெருகும்** என்பதாம்.

3338. "**அன்று வெண்ணெய் நல்லூரி** லரியு மயனுந் தொடர்வரிய
வென்றி மழவெள் விடையுயர்த்தார் வேத முதல்வ ராய்வந்து
நின்று சபைமுன் வழக்குரைத்து நேரே தொடர்ந்தாட்கொண்டவர்தாம்
இன்றிங்கெய்தப்பெற்றேம்"மென்றெயில்சூழ்காஞ்சி நகர்வாழ்வார், 184

3338. (இ-ள்) வெளிப்படை. "திருமாலும் பிரமதேவனும் தொடர்ந்து அறிதற் கரியவராய் நீண்டு நின்ற வெற்றியுடைய இளைய இடபத்தைக் கொடிமேல் உயர்த்திய இறைவர் முன்னுளில் அன்று திருவெண்ணெய் நல்லூரிலே வேதியர் தலைவராக வெளிவந்து நின்று சபையார் முன்பு வழக்குப் பேசி, நேரே முன்னைத் தொடர்புபடத் தடுத்து ஆட்கொள்ளப் பெற்றவராகியநம்பிகள் தாமே இன்று இப்பதியினில் எழுந்தருளும் பெரும்பேறு பெற்றேம்" என்று உட்கொண்டு மதில் சூழ்ந்த காஞ்சிபுர நகரில் வாழ்வார்கள்,

(வி-ரை) இப்பாட்டினுல் நம்பிகளின் நல்வரவு கேட்ட காஞ்சிபுர நகர மாந்தரின் மிக்க மன மகிழ்ச்சியும் அதன் காரணமும் கூறப்பட்டது. மேல் வரும் பாட்டினுல் அம்மகிழ்ச்சியாகிய மனநிலை புறச் செயல்களாக உருப்பட்ட நிலை கூறப்பட்டது.

"**அன்று...பெற்றேம்**" என்று - இது காஞ்சி நகர வாணர்கள் மனத்துள் எண்ணி மகிழ்ந்த கருத்து.

அன்று - உலக மறியவந்த முன்னை ஒரு நாள்; உலகமறியசுட்டு; நாடிக்காண மாட்டாப் பொருள் நேரில் தாமே உலகர் யாவரும் காணும்படி வந்து; நம்பிகளது சரித வரலாறுகளில் இறைவர் நேரே வந்து வழக்குரைத்து நம்பிகள் மறுக்கவும் ஆளாகக் கொண்ட பகுதியே மக்களது உள்ளத்தைக் கொள்ளைகொண்டு அவரைப் போற்ற நின்றது; அரசுகள் சரிதத்தில் சூலை தந்து நேரே யாட்கொண்டருளிய பகுதி மக்களை அவர்பாற் பிணித்தமை போல; "நீண்டவரை வில்லியார் வெஞ்சூலை மடுத்தருளி நேரே முன்னு, ளாண்டவரசு" (*1446*) என்று ஆளுடைய பிள்ளையார் உட்கொண்டமை காண்க.

வேத முதல்வராய் - மறைபயிலும் அந்தணர் பெருமானுக.

தொடர்ந்து - கயிலையில் செய்த முன்னை அடிமைத் திறத்தினுல் அதனையே தொடர்ந்து.

ஆட்கொண்டவர் - ஆட்கொள்ளப்பட்டவர். பிறவினை தன்வினையாக வந்தது; **தாம்**- தாமாகவே.

எய்தப் பெற்றேம் - எய்தும் பெரும்பேறு பெற்றேம். ***184***

3339. (இ-ள்) வெளிப்படை. பொருந்திய மகிழ்ச்சி மேலும் மிகப்பெருக வீதிகளில் அழகிய தோரணங்களை நாட்டியும், பெருகும் தீபங்களும் நிறைகுடங்களையும் அகிலின் தூபங்களையும் கொடிகளையும் ஏந்தியும், செல்வமுடைய மனைகளை அலங்கரித்தும், தெற்றிகளில் ஆடல் முழவுகள் சத்திக்கப், பெருகியதொண்டர்களுடனே கூடி அப்பதியின் புறத்திலே போய் நம்பிகளை எதிர்கொண்டனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3339. மல்கு மகிழ்ச்சி மிகப்பெருக, மருகு மணித்தோ ரணநாட்டி
அல்கு தீப நிறைகுடங்க ளகிலின் றூபங் கொடியெடுத்துப்
செல்வ மனைக ளலங்கரித்துத் தெற்றி யாடன் முழவதிரப்
பல்கு தொண்டருடன் கூடிப் பதியின் புறம்போ யெதிர்கொண்டார். 185

3340. ஆண்ட நம்பி யெதிர்கொண்ட வடியார் வணங்க வெதிர்வணங்கி
நீண்ட மதிட்கோ புரங்கடந்து நிரைமா ளிகைவீ தியிற்போந்து
பூண்ட காதல் வாழ்த்தினுடன் புனைமங் கலதூ ரியமொலிப்ப
ஈண்டு **தொண்டர் பெருகுதிரு வேகாம் பரஞ்சென் றெய்தினர்.** 186

(வி-ரை) மணித்தோரணம் - மணி - அழகிய; மணி மாலைகள் தூக்கிய என்றலுமாம்.

அல்குதீபம் - ஒளிமிகும் விளக்குக்கள்; **அல்குதல்** - பெருகுதல்; நிறைகுடம் - புண்ணிய நீர் நிறைந்த குடங்கள்; பூரண கும்பங்கள் என்பர்.

எடுத்து - தீபம், குடம், தூபம், கொடி இவற்றை ஏந்தி.

தெற்றி - சித்திரக்கூடங்கள்; முற்றத்தில் நீண்ட திண்ணைகள் என்றலுமாம். **ஆடல் முழவு அதிர்தல்** - மங்கலங் காட்டும் உபசார வகைகளுள் ஒன்று; "நடமாட முழவதிர, தேந்தாமென்று அரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்"; (தேவா); ஆடல் முழவு - ஆடலுக்கேற்ப முழக்கும் முழவு; ஆடலும் முழவும் என்றலுமாம்.

பல்கு தொண்டர் - பல்குதலாவது சரியை வகைகள் முதலாகப் பற்பல தொண்டுகளிலும் பயிலுதல்; தொண்டர்கள் என்ற இவர்கள் வேறு; முன்கூறியபடி மங்கலஞ் செய்த காஞ்சி நகர் வாழ்வார் வேறு; அவர்கள் நகர மாந்தர்.

வாழ்வார் தொண்டருடன் கூடி - எதிர் கொண்டார் - என்க; சிறப்புப்பற்றி **உடன்** உருபைத் தொண்டர்களுடன் சேர்த்து ஓதினர். *185*

3340. (இ-ள்) ஆண்ட....வணங்கி - இறைவரால் தடுத்தாட் கொள்ளப்பட்ட நம்பிகள் தம்மை எதிர்கொண்டு அழைத்த அடியார்கள் வணங்க; அவர்களைத் தாமும் எதிர் வணக்கம் செய்து; நீண்ட...போந்து - நீண்ட மதிலையும் கோபுரத்தையும் கடந்து வரிசையாகிய மாளிகைகள் பொருந்திய மாடவீதியிற் போய்; பூண்ட....ஒலிப்ப - மேற்கொண்ட பெருவிருப்பத்தோடு பொருந்திய மங்கல இயங்கள் ஒலி செய்ய; ஈண்டு...எய்தினர் - நெருங்கிய தொண்டர்களின் கூட்டம் பெருகும் திருவேகாம்பரத் திருக்கோயிலினைச் சென்று அடைந்தருளினர்.

(வி-ரை) எதிர்கொண்ட அடியார் வணங்க - நம்பிகளும் எதிர் வணங்கி என்க; **நம்பிகள் வணங்கி** என்ற வாக்கியத்தினுள் **அடியார் வணங்க** என்று வைத்துக்கூறிய தமிழ்நயம், நம்பிகள் அடியார்களை வணங்க முற்பட, அவர் அவ்வாறு வணங்குமுன் அடியார்கள் வணங்க, அதனால் நம்பிகளின் வணக்கம் எதிர்வணக்கமாயிற்று என்ற குறிப்புடன் நின்றது; "வந்தெதிர் கொண்டு வணங்கு வார்முன் வன்றொண்ட ரஞ்சலி கூப்பி வந்து" (269) என்று திருவாரூரில் அடியவர் எதிர் கொண்டது பற்றிக் கூறியதும், "அன்பின்

3341. **ஆழி நெடுமா லயன் முதலா மமரர் நெருங்கு கோபுரமுன்**
பூழி யுறமண் மிசைமேனி பொருந்த வணங்கிப் புகுந்தருளிச்
சூழு மணிமா ளிகைபலவுந் தொழுது வணங்கி வலங்கொண்டு
வாழி மணிப்பொற் கோயிலினுள் வந்தா **ரணுக்க வன்றொண்டர்.** 187

வந்தெதிர் கொண்டசீ ரடியா ரவர் களோ நம்பி யாரூரர் தாமோ, முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமை யாலெதிர் வணங்கி" (244) என்று திருத்தில்லையில் அடியார்கள் எதிர்கொண்ட முறைபற்றிக் கூறியதும் ஈண்டு நினைவுகூர்தற்பாலன.

நீண்ட - என்பதனைக் **கோபுரத்து**டனும் கூட்டுக.

நிரை மாளிகை வீதி - வரிசையாக விளங்கும் மாளிகைகளையுடைய மாடவீதி; இறைவர் திருத்தேர் விழாவில் உலாப் போதும் திருவீதி.

வாழ்த்தினுடம் தூரியம் ஒலிப்ப - காதல் வாழ்த்தினுடன் ஒத்தியைந்து மங்கலப் பொருள் புலப்படுத்துதலால் தூரியம் **ஒலிப்ப** என்றார்.

காதல் வாழ்த்து - நம்பிகள்பாற் கொண்ட காதலால் மக்கள் வீதியில் இருமருங்கும் வாழ்த்தும் ஒலி.

ஈண்டு தொண்டர் பெருகு திரு ஏகாம்பரம் - ஈண்டுதல் - திருக்கோயிலில் வந்து கூடுதல்; **பெருகு** - பலவாறும் வருதலால் பெருகும்; காஞ்சிபுரமும் திருவாரூரினைப் போலவே தொண்டர் கூட்டம் பெருகும் சிறப்புடையது என்ற குறிப்புமாம்.

திருஏகாம்பரம் - திருஏகம்பர் எழுந்தருளியுள்ள திருக்கோயில்; திரு **ஏகம்பம்** எனப்படும்; இது வேறு; திரு **ஏகாம்பரம்** என்ற பெயர் வழக்கு வேறு; ஏகாம்பரம் - **ஆம்பரம்** - மாமரம்; **ஏகம்** - ஒப்பற்றது - ஒன்று; **ஏகம் ஆம்பரம்** - ஏகாம்பரம் என மருவி வழங்குவது. இத்திருக்கோயிலில் உள்ள அம்மை தவமிருந்த **மாவடி** என்னும் மாமரத்தினுற் போந்த பெயர்; **ஏகம்பம் - கம்பம் -** இறைவர் எழுந்தருளிய இடம் - கோயில்; கம்பர் - கம்பன் - "கச்சி மாநகர்க் கம்ப மிருப்பதே" - "கம்பவாணர்" என்பன முதலிய வழக்குக்கள் காண்க. *186*

3341. (இ-ள்) ஆழி...புகுந்தருளி - சக்கரத்தினையுடைய நெடிய விட்டுணு பிரமன் முதலாகிய தேவர்கள் நெருங்கியிருக்கும் திருக்கோபுரத்தின் முன்பு புழுதி படிய நிலத்தின்மேல் தமது திருமேனி பொருந்தும்படி வணங்கி உள்ளே புகுந்தருளி; சூழும்...வலங்கொண்டு - சூழ்ந்துள்ள அழகிய திருமாளிகைகள் பலவற்றையும் தொழுது வணங்கிக்கொண்டு சுற்றி வலமாக வந்து; வாழி...வன்றொண்டர் - திருவணுக்கன் றொண்டராகிய வன்றொண்டர் வாழ்வுடைய மணிப்பொற் கோயிலாகிய திருவேகம்பர் திருமாளிகையினுள் வந்தருளினர்.

(வி-ரை) ஆழி...அமரர் நெருங்கு கோபுரம் - அமரர்கள் கோபுரவாய்தலில் உட்புகும் காலம் பார்த்துத் திருநந்திதேவ ராணையினை எதிர் நோக்கிக் காத்திருக்கின்றனர் என்பது. "வாய்தல் பற்றித், துன்றிநின்றார் தொல்லை வானவரீட்டம் பணியறிவான், வந்துநின் றாரயனுந்திரு மாலும்" (கச்சி - திருவிருத்தம்).

3342. கைகள் கூப்பி முன்னணைவார் கம்பை யாறு பெருகிவர
ஐயர் தமக்கு மிகவஞ்சி யாரத் தழுவிக் கொண்டிருந்த
மையு லாவுங் கருநெடுங்கண் **மலையா ளென்றும் வழிபடுபூஞ்**
செய்ய கமலச் சேவடிக்கீழ்த் திருந்து காத லுடன்வீழ்ந்தார். 188

பூழி பொருந்த - கோபுரத்தின் முன்பு திருமேனி நிலம் பொருந்துதலாற் பூழி படிய வணங்கும் நிலை குறித்தது. பூழி - புழுதி.

சூழுமணி மாளிகை பலவும் தொழுது வணங்கி - கச்சித் திருக்கோயிலினுள் புறச்சுற்றிலே திருக்கச்சி மயானம் முதலாகிய பல திருமாளிகைகள் உள்ளனவாதலின் அவற்றைத் தனித்தனி வணங்கிக்கொண்டு திருக்கோயிலை அவ்வாறு வலமாக வந்தருளினர் என்பதாம்.

மணிப்பொற் கோயில் - திருவேகம்பர் திருமாளிகை.

வாழி - வாழ்வு தருவது என்ற பொருளில் நின்றது; அசையெனினுமாம்.

அணுக்க வன்றொண்டர் - முன்னைய நிலையிற் றிருக்கயிலையினும், இந்நிலையில் வழியடிமை செய்யும் வேதியர் குலத்துட் டோன்றிய நிலையினும் அணுக்கன் றொழில் செய்யும் உரிமையுடையவர் என்பதாம்.

வந்தார் - பயனிலை முன்வந்தது விரைவு குறித்தது. *187*

3342. (இ-ள்) கைகள்...அணைவார் - கைகளைச் சிரமேற் கூப்பிக் கொண்டு திரு முன்பு அணைவாராகிய நம்பிகள்; கம்பையாறு...சேவடிக்கீழ் - கம்பை நதி பெருக்கெடுத்து வரக்கண்டு இறைவரது திருமேனிக்காக மிகவும் பயந்து தமது திரு உடம்பு நிறையத் தழுவிக்கொண்டிருந்த மை பொருந்திய கரிய நீண்ட கண்களை யுடைய மலைமகளாகிய அம்மையார் நித்தமாக வழிபடுகின்ற செம்மையுடைய தாமரை போலும் சேவடிகளின் கீழே; திருந்து...வீழ்ந்தார் - திருந்தும் பெரு விருப்புடனே வீழ்ந்தனர்.

(வி-ரை) முன் - திருமுன்பு; திரு ஏகம்பர் சந்நிதியின் முன்பு.

அணைவார் வீழ்ந்தார் - என்று கூட்டி முடிக்க; அணைவார் - அணைவாராகிய நம்பிகள்; வினைப்பெயர்.

பெருகிவர ஐயர் தமக்கு மிக அஞ்சி - பெருகி வருதலால் இறைவர் திருமேனிக்கு வெள்ளத்தாற் பழுது நேரும் என அஞ்சி; **ஐயர் தமக்கு** - ஐயரது திரு மேனிக்காக.

ஆரத் தழுவிக் கொண்டிருந்த - ஆர - நிறைய; முழுதும்.

தழுவிக்கொள்ளுதல் - வெள்ளத்தால் அலைக்கப்படாதபடி காக்கத் தாமே தழுவிக் காவலாக மறைத்துக் கொள்ளுதல்.

என்றும் வழிபாடு - சேவடி - உன் பூசை எப்போதும் நம்பால் முடிவதில்லை என்று பெருமான் அருளியபடி நித்தமாக நிகழும் பூசை; இவ்வரலாற்றைத் திருக் குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துட் (*1134—1145*) காண்க. *188*

3343. வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி யெழுந்து மெய்யன்பால்
வாழ்ந்த சிந்தை யுடன்பாடி மாரு விருப்பிற் புறம்போந்து
சூழ்ந்த தொண்ட ருடன் மருவு நாளிற் றெல்லைக் **கச்சிநகர்த்**
தாழ்ந்த **சடையா ராலயங்கள் பலவுஞ்** சார்ந்து வணங்குவார், 189

3343. (இ-ள்) வீழ்ந்து...புறம்போந்து - முன்கூறியவாறு நிலமுற விழுந்து துதித்துப் பரவசப்பட்டு விம்மி மேலெழுந்து மெய்யன்பினுலே வாழ்வடைந்த மன நிறைவுடனே பாடியருளியபின் மாறுதல் இல்லாத விருப்பினுடனே புறத்திலே போந்தருள; சூழ்ந்த...நாளில் - தம்மைச் சூழ்ந்த திருத்தொண்டர்களுடனே கூடியிருக்கும் நாள்களிலே; தொல்லை...வணங்குவார் - பழைமையாகிய கச்சிமா நகரத்திலே தாழ்ந்த சடையினையுடைய இறைவனுர் எழுந்தருளியுள்ள ஆலயங்கள் பலவற்றையும் சார்ந்து வணங்குவாராகி, 189

(வி-ரை) வீழ்ந்து போற்றிப் பரவசமாய் விம்மி எழுந்து - அம்மையார் "என்றும் வழிபடுஞ் சேவடி"கள் என்ற எண்ணம் கொண்டு அத்திருவடிக் கீழ் வீழ்ந்தபோது அந்த அருளிப் பாட்டினை எண்ணப் பரவசமாய்க் கிடந்து விம்மினுர்; அதன்பின் எழுந்து பாடினுர்.

மாருவிருப்பிற் புறம்போந்து - புறம் போகுதல் விருப்பம் நிறைந்த பின்னர் நிகழ்தல் இயல்பாம். ஆயின் இங்கு நம்பிகள் விருப்பம் மாருதவாறே - நிறைந்த விருப்பில் நின்றவாறே - புறம் போந்தனர் என்பது.

சூழ்ந்த தொண்டர் - நம்பிகளுடன் வந்தாரும், அங்கு வந்து சூழ்ந்தாரும்.

தொல்லை - மிகப் பழமை; கச்சிமா நகரின் அழியாத தொன்மை.

ஆலயங்கள் பலவும் - கச்சியில் உள்ள எண்ணிறந்த சிவாலயங்கள். *189*

3344. (இ-ள்) சீரார்...இறைஞ்சி - சிறப்புப் பொருந்திய திருக்காஞ்சி புரத்தில் நிலைபெற்ற திருக்காமக் கோட்டத்தில் அணைந்து பணிந்து; நீரார்...மேவி - கங்கையைச் சூடிய சடையினையுடைய இறைவர் விரும்பி எழுந்தருளி யிருக்கும் நீடிய கச்சித் திருமேற்றளியினை அடைந்து; ஆரா...பரவினுர் - நிறைவு படாது பெருகும் அன்பினுலே பணிந்து துதித்து அளவற்ற பெருமையுடைய "நுந்தா வொண்சுடரே!" என்று தொடங்குகின்ற உலக நிறைந்த பெருமையுடைய திருப்பதிகத்தைப் பாடி மகிழ்ந்து போற்றினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) திருக்காமக் கோட்டஞ் சென்றிறைஞ்சி - "அறப்பெருஞ் செல்வக் காமக் கோட்ட மணைந்திறைஞ்சினுர்" (2896) எனப் பிள்ளையார் வழிபட்டமை கூறியது காண்க. ஆண்டுரைத்தவை பார்க்க. சத்திபீடம். கச்சி எல்லையில் எல்லாக் கோயில்களுக்கும் இஃதொன்றே அம்மை ஆலயம். அம்மையாரது தவத்திற் குறிக்கொண்ட பொருளாய் இறைவர் இருத்தலில் இஃதும் "**சடையா ராலயமா**" யிற்று.

திருமேற்றளி - திருஏகம்பத்தின் மேற்றிசையில் உள்ள தனிக்கோயில்; முன் உரைத்தவை பார்க்க.

3344. **சீரார் காஞ்சி மன்னுதிருக் காமக் கோட்டஞ் சென்றிறைஞ்சி,**
நீரார் சடையா ரமர்ந்தருளு நீடு திருமேற் றளிமேவி
ஆரா வன்பிற் பணிந்தேத்தி யளவி ''னுந்தா வொண்சுட''ராம்
பாரார் **பெருமைத் திருப்பதிகம்** பாடி மகிழ்ந்து பரவினார். 190

''நுந்தா ஒண்சுடர்'' ஆம் திருப்பதிகம் - பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு. பதிகமே கெடாத ஒள்ளிய ஞானச் சுடராம் என்றதும் குறிப்பு.

ஆரா அன்பு - குறையாத அன்பு; **பாரார் பெருமை** - உலகம் போற்றும் பெருமை.

பணிந்தேத்தும் அளவில்—என்பதும் பாடம். **190**

திருக்கச்சிமேற்றளி

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம்.**

நுந்தா வொண்சுடரே **நுனையே நினைத்திருந்தேன்**
வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தா யெந்தைபிரான் றிருமேற் றளியுறையும்
எந்தா யுன்னையல்லா லினியேத்த மாட்டேனே. (1)

பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரு ரும்புறவிற் றிருமேற் றளிச்சிவனை
ஆரூரன் னடியா னடித் தொண்ட னாரூரன் சொன்ன
சீரூர் பாடல்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நுந்தா வொண்சுடரே! எந்தாய்! ஏறே! ஐயா! மலையே! உன்னையல்லால் இனியேத்த மாட்டேனே. உனையே நினைந்திருந்தேன்; நினைதலும் இவ்வூனுடலம் புகுந்தாய்; போயறியாய்; நினையாதிருந்தாலும் வேறு வந்தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருள்; அடியார்க்குத் தொண்டுபட்டு இனிப் பிறவாமை கேட்டொழிந்தேன்; நுன் அடைந்தேன்; ஏற்றுலென்குறை? என் இடரைத் துறந்தொழிந்தேன்; நீ மாலாயின தீர்த்தருள் செய்யு மெய்ப்பொருள்; நின்னை நினைதலுமே நின்னினையப் பணித்தாய்; உன்னையல்லா லுடலில் உயிருள் ளளவும் நாவதனல் வேறுரையேன் = என்றிவ்வாறு இறைவனை நினையும் தன்மைகளும் அவர் அருளுந் தன்மைகளும் பயனும் தூக்கி உலகரை வழிப்படுத்தி உரைத்தது; இச்சிறப்புப் பற்றியே ஆசிரியர் இதனைப் பாரார் **பெருமைத் திருப்பதிகம்** என்றருளினார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) நுந்துதல் - தூண்டுதல்; **நுந்தா ஒண்சுடர்** - தூண்டாவிளக்கு, சுயஞ்சோதி; ''ஒண்சுடரே'' **-(6) நுனையே நினைந்திருந்தேன்** - வேறொன்றையும் எண்ணாது உன்னையே மனத்துட் கொண்டிருந்தேன்; ''ஒன்றியிருந்து நினைமின்கள்'' (தேவா); இது சிவயோக நிலை; **வந்தாய் போயறியாய்** - நிலையாக குடிகொண்டாய்; **போயறிதல்** - மறைதல்; **-(2) ஆள்தான்...பட்டு** - உனக்கு ஆளான

3345. ஓண காந்தன் றளிமேவு மொருவர் தம்மை யுரிமையுடன்
பேணி யமைந்த தோழமையாற் பெருகு மடிமைத் திறம்பேசிக்
காண மோடு பொன்வேண்டி "நெய்யும் பாலுங்"கலைவிளங்கும்
யாணர்ப் பதிக மெடுத்தேத்தி யெண்ணி னிதிபெற் றினிதிருந்தார். 191


காரணத்தால் உன் அடியார்க்குத் தொண்டு செய்யும் பெரும் பேறு பெற்றேன்; ஆண்டானுக்கு அடிமை செய்தலின் பயன் அடியார் பணி என்பதாம். "கும்பிட்ட பயன்" (2920); திருத்தொண்டத் தொகை பாடி அருளிய வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது; **கேட்டேன்...ஒழிந்தேன்** - இனிப் பிறவா வரம் ஒன்றையே கேட்டமைந்தேன்;வேறொரு வரமும் வேண்டுதலின்று; சேடு - ஆர் - சேடு - பெருமை; **மாட்டே - மாடு** செல்வம்; எதுகை நோக்கி ஒற்றிரட்டித்தது;—(3) **மோழுந்து** - சோம்பியிருந்து; **வேறு** - தனியாக; அறியாவாறு; "நினையா வென்னெஞ்சை நினைப்பிப்பானை" (தேவா); -(4) **உற்றூர்...அடைந்தேன்** - நம்பிகள் சரிதக் குறிப்பு; "ஆளாயினியல்லே னெனலாமே"; உலகியல் வாழ்வைத் துறந்து சிவனடிமையே செய்யப் புகுந்த நிலை; தவநெறி; -(5) **மெய்ம்மால்** - உடம்பு முதலியவற்றின் வைத்த மயக்கம்; ஆணவமல மறைப்பு; **மெய்ப்பொருள்** - மெய்யல்லாதவற்றை மெய்எனக் கொண்ட மாலினைத் தீர்த்து மெய் இது என்று உணர்த்தும் பொருள் என்றது **எம்மான்...ஒழிந்தார்** - இது உலகரை நோக்கி உலகியல்பு கூறியது; (6) **நானேல்...புகுந்தாய்**-1-ம் பாட்டுப் பார்க்க. **ஊனுரிவ்வுடலம் புகுந்தாய்** - ஊனுட் புகுந்தாய்; **நினைவு** - மாயையினுலான கரணம்; இவ்வாறு வருவதுஇறைவரது கருணைத்திறம் என்பது; -(7) செய் - வயல்; **செய்யார் பைங்கமலம் - செய்** - சிவந்த நிறமுடைய எனலுமாம்; -(8) **இனி...உயிருள்ளளவும்** - உலகரை வழிப்படுத்திக் காட்டிய அருளிப்பாடு; -(9) **நிலையாய்...பணித்தாய்** - "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க் கென்றும் பெருந்துணை" (தேவா); உலகப் பற்றுவிட்டுச் சிவனையே நினைவோர்க்கு அந்நினைவு மாறுதிருக்கும் சிவயோக நிலையினைக் கூட்டுவிப்பார் என்பது; **மலையே** - சலியாத பெருந்துணையே; **மலைபோன்றவரை மலை** என்றூர்;—(10) **பல்லவன் ஊர்** - நம்பிகள் காலத்தில் காஞ்சிபுரம் பல்லவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்தது என்ற அகச் சான்று. "உரிமையாற் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும், பெருமையார்" (நம்பி - கோயில்).

தலவிசேடம்:—திருக்கச்சி மேற்றளி - தொகுதி III 718-ம் பக்கம் மற்றும் தொகுதி II பக்கம் 997 பார்க்க.


3345. **(இ-ள்)** வெளிப்படை. திருவோண காந்தன் றளியில் எழுந்தருளிய இறைவரை உரிமையினேடு விரும்பிக் கொண்ட தோழமைத்திறம் பற்றிப் பெருகி வளரும் அடிமைத் திறத்தினைச் சொல்லி, காணத்தினேடு பொன்னை விரும்பி, "நெய்யும் பாலும்" என்று தொடங்கும் கலைகளின் தன்மை விளங்குகின்ற அழகிய திருப்பதிகத்தினை எடுத்துப் போற்றி எண்ணில் நிதியங்களைப் பெற்று இனிதாக எழுந்தருளியிருந்தார்.

(வி-ரை) ஓணகாந்தன்றளி மேவும் ஒருவர் - திருஓண காந்தன் றளி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய சிவபெருமான்.


கச்சித் திருமேற்றளி




கச்சித் திருமேற்றளி-பாட்டு-3344



ஈழநாடு
திருக்கோணமலை கோயில்




கச்சித் திருமேற்றளி
(உள்ளிருந்து பார்வை)




ஈழநாடு
திருக்கோணமலை கோயிலின் படம்
(போர்த்துகீசியர் இதைத் தகர்ப்பதன் முன் தாங்கள் எழுதிவைத்த படம்)


படம்-12




திருஒற்றியூர்



திருஒற்றியூர்-திருக்குளம்



திருஒற்றியூர்-
மாணிக்கத்தியாகராஜர் சந்நிதி



திருஒற்றியூர்-வடிவுடைநாயகி சந்நிதி

படம்-13

உரிமையுடன்...அடிமைத்திறம் - உரிமையுடன் பேணி யமைந்த தோழமை - இறைவர் தாமே விரும்பி எடுத்துக்கொண்ட தோழராந் தன்மை; "தோழமை யாக வுனக்கு நம்மைத் தந்தனம்" (273) என்று இறைவர் பேசிக்கொண்ட தோழராந் தன்மை; **பேணி -** இறைவர் விரும்பி; **உரிமையுடன் -** என்பதனை **அடிமைத்திறம்** என்பதனோடும் கூட்டுக.

பெருகும் அடிமைத்திறம் - பெருகுதல் - அடிமை செய்தற்கண் சோர்வுபடாது மேலும் மேலும் ஆர்வமிகுதல்.

தோழமையாற் பேசி - என்று கூட்டுக; **அடிமைத்திறம் பேசுத**லாவது அடிமைத் திறம்பற்றிப் பேசினும் அப்பேச்சுத் தோழராந் தன்மைபற்றிக் கொண்ட அமைப்பினையுமுடையதா யிருத்தல். பதிகப் பாட்டுக்கள் பார்க்க.

காணம் - காசு; **பொன் -** அணிகளுக்காகத் தக்க படிக்குள்ள பொன்; "காண மில்லை" (பதிகம்).

நெய்யும் பாலும் - கலை விளங்கும் யாணர்ப் பதிகம் - "நெய்யும் பாலும்"- பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு; **கலை -** கலைகளின் பொருள்நூற் கலையமைதியும்; **யாணர் -** அழகு.

எண்ணில் நிதி - அளவில்லாத நிதியம்; இரட்டுற மொழிதலால் **எண் + நில்** என்று பிரித்து. தமது எண்ணத்தில் - கருத்தில் - நின்ற என்றலுமாம். நிதி பெறக் கருதிப் பாடியமை பற்றிப் பதிகக் குறிப்புப் பார்க்க.

திறம் பெருக—என்பதும் பாடம். ***191***

திருவோண காந்தன்றளி

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம்.

நெய்யும் பாலுந் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்ய லுற்றாற்
கையி லொன்றுங் காண மில்லைக் கழல டிதொழு துய்யி னல்லால்
ஐவர் கொண்டிங் காட்ட வாடி யாழ்கு ழிப்பட் டழுந்து வேனுக்
குய்யு மாறென் றருளிச் செய்யீ ரோண காந்தன் றளியு ளீரே. (1)

ஓவ ணமே லெருதொன் றேறு மோண காந்தன் றளியு ளார்தா
மாவ ணஞ்செய் தாளுங் கொண்டு வரைது கிலொடு பட்டு வீக்கி
கோவ ணமேற் கொண்ட வேடங் கோவை யாகவா ரூரன் சொன்ன
பாவ ணத்தமிழ் பத்தும் வல்லார் பறையுந் தாஞ்செய்த பாவந் தானே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு: காணமோடு பொன்வேண்டி எடுத்து உரிமையுடன் பேணி யமைந்த தோழமையாற் பெருகும் அடிமைத்திறம் பேசியது; ஆசிரியர் காட்டி யருளியபடி. ***(3345)***

பதிகப் பாட்டுக் குறிப்பு:—*(1)* **நெய்யும்...செய்யலுற்றால் -** நெய், பால், தயிர் திருமஞ்சனப் பொருள்கள்; **பூசனை -** திருமஞ்சனம் பூசைத் தொடக்கம். தொடக்கம் கூறவே ஏனை அலங்காரம், திருவமுது, புகை, ஒளி, அருச்சனை முதலியவை எல்லாங் கொள்ளப்படும்;

நித்தல் பூசனை - என்றதனால் நம்பிகள் நாடோறும் உடையவர் பூசையாகிய பெருந் தவநெறி கைக்கொண்டொழுகிய நிலை புலப்படும். "சந்தி மூன்றிலுந் தாபர நிறுத்திச் சகளி செய்திறைஞ்சு" (திருநின்றியூர்-5); "காலையிலு மாலையிலுங் கடவுளடி பணிந்து கசிந்த மனத்தவர் பயிலும்" கலயநல்லூர் (8); "வேண்டிக் கொள்வேன் றவநெறியே" (துறையூர்); "ஆகம சீலர்க் கருணல்கும் பெம்மானே" (பரவையுண் மண்டளி) முதலியனவாய் வரும் நம்பிகள் திருவாக்குக்கள் காண்க; **நித்தல் பூசனை செய்யலுற்றால் கையிலொன்றும் காணமில்லை** - நம்பிகள் பொன் வேண்டுவதெல்லாம் ஆண்டவரது சிவபூசைக்கும் அடியார் பூசைக்குமேயாம் என்பதற்கு அகச்சான்று;—(2) இப்பாட்டிலும் மேல்வருவனவற்றிலும் தோழமை உரிமையினாலே நிந்தைத் துதியாக வரும் தன்மை கண்டுகொள்க; **வாய் திறவாள்** - பேசமாட்டாள்; சிறு துளியாக வருதலின்றி, வாய் திறந்து பெருவெள்ளமாக ஆரவாரித்து வரமாட்டாள் என்பது சிலேடை; **வயிறுதாரி**- வயிறு பெருத்தவர்; பேருண்டி உண்பவர்; **குமரன் பிள்ளை** - சிறுவர்; சிறுபிள்ளை; **தேவியார் கோற்றட்டி ஆளார்** - பணியாளரின் தராதரம் தெரிந்து ஊட்டி உதவமாட்டார். **உங்களுக்காட் செய்ய மாட்டோம்** - ஒரு வீட்டில் ஆளாக நன்கு பணி செய்வதென்றால், அது, மனைவியர் பிள்ளைகள் என்றவர்களின் நலம் பற்றி நடைபெறல் வேண்டும்; இங்கு உமது வீட்டில் இருமனைவியருள் ஒருவர் வாய் திறவார்;மற்றொருவர் கோற்றட்டி ஆளார்; பிள்ளைகளுள் ஒருவர் மூத்தவர் பெருத்த பேருண்டியாளர்; ஏனையவர் சிறுபிள்ளை; இத்தகைய குடும்ப மாகிய உங்களுக்கு ஆளாகப் பணிசெய்ய மாட்டோம் என்பது. இவ்வாறே மேல் "மதியுடையவர் செய்கை செய்யீர்" "ஆபத் காலத் தடிகே ளும்மை ஒற்றி வைத்திங் குண்ண லாமோ?" (3) "இல்லை யென்னீர் - உண்டுமென்னீர்" (4) "ஓடிப் போகீர் பற்றுந்தாரீர்" (5); "உலகுய்ய வைத்த - காமக்கோட்ட மூண்டாக நீர் போய் ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே?" (6); "மெய்ம்மை சொல்லி ஆள மாட்டீர்; ஏதும் வேண்டீர் ஏதுந்தாரீர்; ஏது மோதீர்;உம்மை யன்றே" (7); "வாழ் வதாரூர்; ஒற்றி யூரே லும்ம தன்று...ஊருங்காடு; உடையும் தோலே" (9); "கோவணமேற் கொண்ட வேடங் கோவையாக" (10) என்பவற்றின் பொருள்களும் கண்டுகொள்க;—(3) **பெற்றபோதும் பெறாத போழ்தும்** - இன்பத்திலும் துன்பத்திலும்; **பேணி** - ஒன்று போலவே விரும்பி; **மற்றோர் பற்றிலர்** - உம்மையன்றி வேறொருவரையும் பற்றாகக் கொள்ளார்; **மதியுடையவர் செய்கை செய்யீர்** - இப்போது வேண்டியது தாராது நீர் வாளா இருப்பது மதியுடையவர் செய்கையன்று என்பது; சொல்லாமற் சொல்லியபடி; **அற்ற** - செல்வமற்ற; **அலந்த** - துன்பப்பட்ட; **ஆபத்(துக்) காலத்து...உண்ணலாமோ** - நீர் தாராவிடில் உம்மை ஒற்றிவைத்துப் பொருள் பெற்றுச் சீவிக்கலாமோ? **ஒற்றி** - கடன் பெற வைக்கும் **ஈடு** - பணயம்;—(5) **பாணி** - தாள ஒத்து; -(6) **உலகுய்யவைத்த காமக் கோட்ட மூண்டாக**- காமக் கோட்டத்தினுள் அம்மையார் 32 அறங்களையும் செய்து உலகு புரக்கும் நிலை குறித்தது; காமக்கோட்டம் போற்றிய நிலை-3344 பார்க்க; **மார்பு நீங்கா** - மேனியில் ஒரு கூறுகொண்ட; **உண்டாக** - உம்முடையதாயிருக்கவும்; சிறப்பு உம்மை தொக்கது;—(7) **பொய்ம்மையாலே போது போக்கி** - அழியுந் தன்மையுடைய மாயை காரியங்களைத் தந்து காலம் பார்த்திருந்து; **புறத்துமில்லை அகத்துமில்லை** - அகம்புற மென்னாதே நிற்கு நிலை - **மெய்ம்மை சொல்லி** - மெய்ப்பொருளை உபதேசித்து; **ஏதும் வேண்டீர்** -

3346. அங்க ணமர்வா **ரனேகதங்கா பதத்தை யெய்தி** யுள்ளணைந்து
செங்கண்விடையார் தமைப்பணிந்து "தேனெய்புரிந்" தென்றெடுத்த தமிழ்
"தங்கு மிடமா"மெனப்பாடித் தாழ்ந்து **பிறவுந் தானங்கள்**
பொங்குகாத லுடன்போற்றிப் புரிந்தப் பதியிற் பொருந்துநாள்; 192

எம்மிடத்தில் எதனையும் விரும்புவதில்லை; உங்ஙனமாய்(ப) - பாராமுகமாய் வாளா இருப்பாரை முகத்தில் இடித்துக் காட்டிக்கூறும் மொழி; "உங்ஙனத்தாரோ" என்பது;—(8) **வலையம்** - உயிர்கொள்ளும் பாசம்; **ஈவான்** - மரணத்தைக் கொடுக்கும் பொருட்டு; **ஈதல்-** செய்தல் என்னும் பொருளில் வந்தது; **ஈர்வான்** - எய்யாது ஈர்வான் என நின்றதெனினுமாம். **சிலையமைந்த -சிலை** - கல்; **சிலை அமைத்த** - கல்போன்று இளகுதலில்லாத; சிலை - சிலையின்றன்மை குறித்தது. ஆகுபெயர்; கலையமைத்த - கலைகளில் விலக்குக என்று கூறப்பட்ட; **வருடை** - மாச்சரியம்; பொறாமை; **உலையமைத்து** - கொதிக்கும்படி வைத்துக்கொண்டு;—(9) **வாரம்-** அன்பு; **ஒற்றியூர்** - ஒற்றி - பணயம் வைத்த ஊர்; **ஆரூர்** - யாருடைய ஊர்; இவை சிலேடை. **ஊரும் காடு** - ஊர் ஊராதலின்றிக் காடாயிற்று; **ஊர்-**உறையும் இடம்;—(10) **ஓவணம்** - பேரழகு; **ஆவணஞ்செய் தாளுங் கொண்டு - ஆவணம்** - ஓலை; அடிமையோலை; தடுத்தாட்கொண்ட சரிதக் குறிப்பாகிய அகச்சான்று; **கோவண மேற்கொண்ட - வேடம்** - பலிக்குச் செல்லும் பிச்சை வேடம்; **கோவையாக** - அதனையே பொருளாகக்கொண்டு.

தலவிசேடம்:—திருஓணகாந்தன்றளி - தொண்டை நாட்டு 3-வது பதி; ஓணன், காந்தன் என்னும் அசுரர்கள் பூசித்தமையால் இப்பெயர் பெற்றது;இரண்டு சந்நிதிகள் தனித்தனியாய்த் தனிப்பிரகாரத்துடன் ஒரே ஆலயத்துள் உள்ளன. "அருளிச்செய்யீர்; தளியுளீரே!" என்ற பன்மைகள் இக்குறிப்புடையனபோலும்; (கச்சி ஏனைய பதிகங்கள் பார்க்க); ஆளுடைய நம்பிகள் இங்குப் பதிகம் பாடிப் பொன் பெற்ற வரலாறு புராணத்துட் காண்க; சுவாமி - **ஓணேசுவரர் - காந்தேசுவரர்;** அம்மை - **காமாட்சி யம்மை;** பதிகம் 1; இத்தலத்துள் சலந்தரன் பூசித்த மூர்த்தி தென்புறம் தனியாலயத்தில் உள்ளார். நம்பிகள் பதிகம் பாடியபின் சந்நிதியின் முன்புறமுள்ள மாமரத்தினின்றும் பொன் உதிர்ந்ததாக ஐதிகம் கூறுவர்.

இத்தலம் திருகச்சி யேகம்பத்துக்கு மேற்கில் சர்வ தீர்த்தத்திலிருந்து சிறிது வடமேற்காக 1/2 நாழிகை யளவில் உள்ளது.

3346. (இ-ள்) அங்கண் அமர்வார் - அப்பதியில் விரும்பி எழுந்தருளி யிருப்பவராகிய நம்பிகள்; அனேகதங்காபதத்தை...தாழ்ந்து - திருக்கச்சி அனேகதங் காபதத்தினைச் சேர்ந்து திருக்கோயிலினுள்ளே அணைந்து சிவந்த கண்ணையுடைய இடபத்தை உடையாராகிய இறைவரை வணங்கித் "தேனெய் புரிந்து" என்று தொடங்கிய திருப்பதிகத்தினை "இறைவர் தங்குமிடமா மிது" என்ற கருத்துப் போதப் பாடியருளி வணங்கி;பிறவும் போற்றி - இறைவர் தானங்கள் பிறவற்றையும் மேன்மேல் அதிகரிக்கும் பெருவிருப்புடன் சென்று துதித்து; புரிந்து...பொருந்தும் நாள் - இடைவிடாத நினைவுடனே அந்தக் கச்சித் திருப்பதியிலே பொருந்த வீற்றிருக்கும் நாள்களில்,

3347. பாட லிசையு பணியினுற் பாவை தழுவக் குழைகம்பர்
ஆடன் மருவுஞ் சேவடிகள் பரவிப் பிரியா தமர்கின்றூர்
நீட மூதூர்ப் **புறத்திறைவர் நிலவும் பதிக** டொழவிருப்பால்
மாட நெருங்கு **வன்பார்த்தான் பனங்காட் டூரில்** வந்தடைந்தார். 193

(வி-ரை) அங்கண் - கச்சிமா நகரத்திலே; **அனேகதங்காபதம்** - இது திருக்கச்சி அனேகதங் காபதம் என்ற தலம்; வடநாட்டில் உள்ள இப்பெயர் கொண்ட பதியுடன் மயங்கற்பாலதன்று; "கச்சி யனேகதங்காபதமே" என்ற பதிகமகுடம் பார்க்க.

"தேனெய் புரிந்து" என்றெடுத்த தமிழ் - இப்பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு; **எடுத்த** - தொடங்கிய.

"தங்குமிடமாம்" எனப் பாடி - இப்பதிகக்கருத்தும் குறிப்புமாம்; எம்பெருமானதிடம் - எரியாடியிடம் என்பன வாதியாகப் பதிகப் பாட்டுக்களில் வருவன காண்க; இறைவரது "இடம் திருக்கச்சி யனேகதங்காபதமே" என்பது.

பிறவும்...போற்றி - இவை கச்சி யெல்லையில் உள்ள அளவில்லாத தானங்கள் - பதிகள்; **தானங்கள்** - கச்சிப் பதியில் உள்ள தனிப் பதிகளின் பெயர் வழக்குப் பார்க்க. காஞ்சித்தானம், இறவாத்தானம், முதலியவை காண்க; "இறைவர் தாமகிழ்ந் தருளிய பதிக ளெண்ணி றந்தவத் திருநக ரெல்லை" (*1153*) என்றது பார்க்க.

அப்பதி - திருக்கச்சிப்பதி; **பொருந்தும்** - விரும்பி அமர்ந்த.

பொருந்துநாள் - அமர்கின்றூர் - வந்தடைந்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. ***192***

3347. (இ-ள்) பாட இசையும் பணியினுல் - பாடுதற்கு இசைகின்ற பணி செய்யப் பெற்றதனுல்; பாவை தழுவ...அமர்கின்றூர் - அம்மையார் தழுவக் குழைந்து காட்டிய திருவேகம்பரது அருட்கூத்தாடுந் திருவடிகளைத் துதித்துப் பிரியாது விரும்பி எழுந்தருளி யிருக்கின்ற நம்பிகள்; நீட...விருப்பால் - மிகப் பழமையாகிய அந்தக் கச்சிமூதூரின் புறத்திலே நிலவுகின்ற பதிகளைத் தொழும் விருப்பத்தினுலே சென்று; மாடம்...வந்தடைந்தார் - மாடங்கள் நெருங்கி விளங்கும் வன்பார்த்தான் பனங்காட்டூரிலே வந்தடைந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பாடவிசையும் பண்பினுல் - பிரியா தமர்கின்றூர் - என்று கூட்டுக. அங்குப் பிரியாதமர்கின்ற நிலை பாட்டுப்பாடப் பொருந்தும் தன்மை காரணமாம். பாடும் பண்பு பெறப்பட்டமையாலே அங்குநின்றும் பிரியாது தங்கியருளினூர் என்க; ஏகம்பரைப் பாடுதலில் அத்துணை விருப்பமும் ஆர்வமும் கொண்டிருந்தனர் என்பதாம். "**பாட இசையும்**" - பாடப் பணித்து ஆட்கொண்ட திறம் காண்க (*216*). **அமர்கின்றூர்** - அமர்கின்றூராகிய நம்பிகள்; வினைப்பெயர்; **அமர்தல்** - விரும்பி வீற்றிருத்தல்.

பாவை தழுவக் குழைகம்பர் ஆடல் மருவும் சேவடிகள் - கம்பர் - திருவேகம்பர்; ஏகம்பரின் கருணையின் எளிமை குறித்தது; **ஆடல்** - உலகை ஆளும் ஐந்தொழில் அருட்கூத்து; ***1140—1141*** பார்க்க.

பரவி - அரிய இப்பதிகங்கள் கிடைத்தில!

நீட மூதூர் - மிக நீண்டு செல்லும் பழமையுடைய கச்சி நகர். "தொல்லைக் கச்சிநகர்" (3343); தன் சூக்கும ரூபம் பிரளயங்களினும் அழியாதிருக்கும் நிலை; "பல ஊழிக ணின்று நினைக்குமிடம் வினை தீருமிடம்" (10) என்ற பதிகம் பார்க்க; (நூற்பா - அனேகதங் காவதம்)

புறத்திறைவர் நிலவும் பதிகள் - இவை காஞ்சி நகருக்கு அப்பாற்பட்ட பல பதிகள்; முன் "பிறவும் தானங்கள்" (3346) என்றவை அவ்வெல்லைக்குட் பட்டவை; "இருந்து காதநான் குட்பட வகுத்து" (1162) என்று இதன் எல்லை வகுத்தது காண்க.

பாடலிசையும்—புனற்புறத்தினிலவும்—என்பனவும் பாடங்கள். 193

திருக்கச்சி அனேகதங் காவதம்

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

தேனெய் புரிந்துழல் செஞ்சடை யெம்பெரு மானதி டந்திக ழைங்கணையக்
கோனை யெரித்தெரி யாடி யிடங்குல வானதி டங்குறை யாமறையா
மானை யிடத்ததோர் கைய னிடம்மத மாறு படப்பொழி யும்மலைபோல்
யானை யுரித்த பிரான திடங்கலிக் கச்சி யனேகதங் காவதமே. (1)

வீடு பெறப்பல ஊழிக ணின்று நினைக்கு மிடம்வினை தீருமிடம்
பீடு பெறப்பெரி யோர திடங்கலிக் கச்சி யனேகதங் காபணிடம்
பாடு மிடத்தடி யான்புக ழூர னுரைத்தவிம் மாலைகள் பத்தும்வல்லார்
கூடு மிடஞ்சிவ லோக னிடங்கலிக் கச்சி யனேகதங் காவதமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அனேகதங் காவதம் இறைவர் தங்குமிடமாம். ஆசிரியர் (3346) காட்டி யருளியவாறு. தங்குமிடம் என்று பாட்டுத்தோறும் பலபடப் பாராட்டிய தன்மை கண்டுகொள்க; **குறிப்பு:** இப்பதிகம் மிக எளிய இனிய தாளவொத்துடன் சிறுவர் சிறுமியர் பாடி யாடி மகிழத்தக்க சிறந்த அமைப்புடன் விளங்குகின்றது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) புரிந்து உழல் - எம்பெருமான் - என்று கூட்டுக; **தேன் -நெய்** - திருமஞ்சனப் பண்டங்கள்;இனம் பற்றி ஏனைய எல்லாங் கொள்க. **புரிந்து** - இடைவிடாது எண்ணி; **உழல்** - என்ற இலேசால் மிகவிருப்பமுடைய செயல் குறிக்கப்பட்டது; **ஐங்கணை அக்கோன்** - மன்மதன்; **குலவான்** - மேன்மையுடையவர்; **மறையாம் மானை** - மறைஒலி செய்யும் மான்; மறைகள் துதிக்கும் என்றலுமாம்; **மானை...கையன்** - மானேந்திய கையினை உடையவர்; **ஆறுபட** - ஆறுபோற் பெருக; **மலைபோல்** - மலையினைப் போற்பெரிய **கலி** - ஆரவாரம் மிக்க;— (2) **ஓரி** - நரி; **குடகத் தி(ல்)லை**-மேலைச் சிதம்பரம் என்னும் **பேரூர்;** இத்தலம் கொங்கு நாட்டில் கோவன்புத்தூருக் கருகில் உள்ளது; 3242—3245 பாட்டுக்களும், ஆண்டுரைத்தவையும் பார்க்க;—(3) **கொடிகள்** - மல்லிகை முல்லை முதலிய பூங்கொடிகள் செறிந்த சோலையகம்; **கொடி** - காக்கை என்று கொண்டு. "குயிற்குஞ்சு முட்டையைக்

காக்கைதன் கூட்டிட்டால், அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின் றதுபோல்" (திருமந்திரம்-2-152) என்றபடி, காக்கையின் கூட்டில் இனம் பிரித்தறிய வராத பருவத்தே அக்காக்கைகளிடையே குயில் (குஞ்சு) கூவும் என்றுரைத்தலுமாம்; **செடி கொள்** - தீமைமிக்க; தீய; **வினைப்பகை தீரும்** என்றது பாச நீக்கமும், **திருவாகும்** என்றது சிவப்பேறும் குறித்தன; **திருமார்பு அகலத்து** - உமை அம்மை கூறுகொண்ட மார்புடைய; வரும் பாட்டுப் பார்க்க; அம்மையின் முலைச் சுவடணிந்த மார்புடைய என்றலும் ஆம்;—(4) **கொங்கு** - மணம்; **சங்கு... கொண்டு** - சங்கக் குழையணிந்த செவிபோன்ற சங்கங்களைக் கொண்டு; **கொண்ட அருவி** என்றது **கொண்டருவி** என நின்றது. **அருவித் திரள் பாய வியர்த்து அழல் போலுடைத்து - அம் மழு** - அழல்போல எரித்தலால் அருவி போல வியர்வை பாய; (5) **பயில...வைத்தவிடம் - பயிலப் புகுதல்** - சிவன் பணி - சிவயோகம் - நெறி பயிலத் தொடங்குதல்: **ஒருநெறி சித்தம் வைத்த** - என்க; மனம் ஒன்றிய - வேறென்றிலும் செல்லாத - நெறி; **திருவான்** - முத்தித் திருவின் தலைவர்- சிவபெருமான்; **மனங்கொள வைத்தவிடம்** - மனம் பதிந்து நிற்கும் பண்பு கொளச் செய்த;—(6) **தண்டமுடை...துயர் தீர்க்கும்** - இறப்பின் (மரணம்) துன்பம் போக்கும்; **தண்டம்** - தண்டு ஆயுதம்; தண்டனை என்றலுமாம்; "இவர் செய்திக்குத் தக்க செயலுறுத்துவீர் என்று, வெய்துற்றுரைக்க...மறம் போற்றி (போற்றிப் பஃறொடை-40-53); **தமர்** - இயமன் தூதர்;"கால பாசம் பிடித்தெழுதூதுவர்" (தேவா); **அமரைச் செய்யும் வன்றுயர்** - அமரிற் செய்வதுபோன்ற வலியதுன்பம். **பிண்டமுடை...ஆக்கையை நீக்குமிடம் - ஆக்கை** - உடல்; **நீக்கும்** - மேல் வாராமற் செய்யும் - பிறவியில் வாராமே தடுக்கும் - இடம் என்றபடி; **அண்டமுடை** - எல்லா அண்டங்களையும் உடைமையாக;—(7) **கட்டு மயக்கம்** - மலத்தினுல் வரும் அறியாமை; "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும், மருள்" (குறள்) **வீட்டும்** என்பது எதுகை நோக்கி விட்டும் என நின்றது;**வீட்டும்** - இருளைப் போக்கும்; **குயிற்பேடை...மணம் புணரும்** - நிலவளம் குறித்தது; வரும் பாட்டும் பார்க்க; (8) **புல்லி** - பெயர்; எல்லா வுயிர்களுள்ளும் "தாவியவ னுடனிருந்தும்" (தேவா) என்றபடி தழுவியவன்; புல்லியிருப்பவர்; புல்லியிடமாதலின் நாம் தொழுது உய்வோ மென்னுது பகைத்தவர் என்க; **வில்லி** - வில்லை ஏந்தியவர்; **கொல்லி** - கொன்றவர்; (9) **சங்கையர்** - சிவனே பதி என்ற உறுதியறி வில்லாதவர்; **சங்கை** - ஐயப்பாடு; (10) **பலவூழிகள் நின்று** - பலவூழிகளிலும் அழியாது நிலைபெற்று.

தலவிசேடம்:—திருக்கச்சி அனேகதங் காவதம்—தொண்டை நாட்டு 4-வது பதி;திருக்கச்சியிலுள்ள (அனேகதம்-யானை) விநாயகர் பூசித்த தலம் என்பது பொருள்: இங்குக் குபேரன் முதலியோரும் வழிபட்டுப் பேறு பெற்றனர்;"ஆனையுரித்த பிரான திடம்" (பதிகம்) என்றதற்கேற்ப "ஆனையுரித்தான் வயல்" என்று பெயர் வழங்கும் வயல்கள் கோயிலுக்கு மேற்கே உள்ளன; சுவாமி - **அனேகதங்காபதேசுரர்;** அம்மை - **காமாட்சியம்மையார்;** பதிகம் 1.

இது திருக்கச்சி யேகம்பத்திற்குத் தென்மேற்காய்ப் புத்தேரித் தெருவுக்கு மேற்கில் வயல் வெளியில் உள்ளது; வடநாட்டு இப்பெயருள்ள திரு அனேகதங்கா வதத்துடன் மயங்கா திருத்தற் பொருட்டு இது **கச்சி** யனேகதங்காவதம் என்று **கச்சி**யுடன் சேர்த்துப் பெயர் வழங்கப்படும்.

3348. செல்வ மல்கு **திருப்பனங்காட் டூரிற்** செம்பொற் செழுஞ்சுடரை
அல்ல லறுக்கு மருமருந்தை வணங்கி யன்பு பொழிகண்ணீர்
மல்க நின்று"**விடையின்மேல் வருவா**"ரெனும்வண்டமிழ்ப்பதிகம்
நல்ல விசையி னுடன்பாடிப் போந்து புறம்பு **நண்ணுவார்.** 194

3348. (இ-ள்) செல்வ மல்கு...வணங்கி - செல்வம் நிறைந்த திருப்பனங் காட்டூரிலே எழுந்தருளிய செம்பொன் போன்ற ஒளியுடைய செழுஞ்சுடரைப், பிறவித் துன்பத்தினை அறுக்கும் அரிய மருந்துபோல்பவரைப் பணிந்து; அன்பு...நின்று - அன்பு மேலீட்டினாலே பொழியும் கண்ணீர் பெருக நின்று; விடையின் மேல்...பாடி - "விடையின்மேல் வருவானை" என்று தொடங்கும் வண்மையுடைய பதிகத்தினை நல்ல இசை பொருந்தப் பாடி; போந்து புறம்பு நண்ணுவார் - புறம்பு போந்து சேர்வாராகி,

(வி-ரை) செல்வம் - அருட் செல்வம்;**திருப்பனங்காட்டூர்** - திருவன்பார்த்தான் பனங்காட்டூர்.

செம்பொற் செழுஞ்சுடர் - செம்பொன் போன்ற செழிய சுடர் போன்றவர்.

அல்லல் - துன்பங்களுள் எல்லாம் மிக்க கொடுமையுடைய பிறவித் துன்பம்;**மருந்து** - மருந்து போன்றுரை மருந்தென்ற துபசாரம்.

அன்பு பொழி - அன்பு காரணமாக வருகின்ற; "அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ்" (குறள்).

"**விடையின்மேல் வருவான்**" இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

வண் தமிழ்ப் பதிகம் - வண்மையாவது சிறந்த உறுதிப் பொருள் பயத்தல். சாராதார் சார்வென்னே - உணராதார் உணர்வென்னே - அறியாதார் அறிவென்னே - என்பன முதலிய உறுதிப் பொருள்களை உணர்த்துதல் காண்க.

நல்ல இசை - பதிகப் பண்ணாகிய இனிய சீகாமரப் பண்.

செல்வச் செழுஞ்சுடர்—பிறவும் நண்ணுவார்—என்பனவும் பாடங்கள். *194*

3349. (இ-ள்) மன்னு...போய் - நிலைபெற்ற திருமாற் பேறு என்னும் பதியினை அணைந்து வணங்கிச் சென்று, திருவல்லத்தினைச் சேர்ந்து வணங்கிப் போய்; சாரும் மேல்பால்...வணங்கி - சார்கின்ற மேற்குப் பக்கத்தில் சடைக்கற்றை பின்னி விளங்கும் முடியினையுடைய இறைவர் எழுந்தருளிய இடங்கள் பலவற்றையும் விரும்பி வணங்கி; பெருந்தொண்டர்...சேர்ந்தார் - பெருந்தொண்டராகிய நம்பிகள் உச்சியில் மேகங்கள் தோய்கின்ற பெரிய முடிகளையுடைய திருக்காளத்தி மலையினைச் சேர்ந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மன்னு...இறைஞ்சிப் போய் - திருக்கச்சியினின்றும் தென் மேற்காகச் சென்று திரு வன்பார்த்தான் பனங்காட்டூரினை வழிபட்டு, அங்கு நின்றும் மீண்டு திருக்கச்சி வழியே

3349. மன்னு **திருமாற் பேறணைந்து** வணங்கிப் பரவித் **திருவல்லந்**
தன்னு ளெய்தி யிறைஞ்சிப்போய்ச் சாரு மேல்பாற் சடைக்கற்றைப்
பின்னன் முடியா **ரிடம்பலவும்** பேணி வணங்கிப் பெருந்தொண்டர்
சென்னி முகிரேய் தடங்குவட்டுத் **திருக்கா ளத்திமலை**சேர்ந்தார். 195

வடக்கில் சென்று திருமாற்பேறு வணங்கி, அங்குநின்றும் மேற்பாற் சென்று திருவல்லத்தினை வணங்கினுர் என்க.

மேல்பால்...இடம் பலவும் - இவை திருக்கரபுரம் முதலியவை.

பின்னல் - புரித்ததுபோலும் உருவுடைய.

சென்னி மூகில் தோய் தடங்குவட்டு - மேகங்கள் தவழ்தற்கிடமாகிய பெரிய சிகரங்கள்; மலையின் உயர்ச்சி குறித்தது.

திருக்காளத்தி மலை சேர்ந்தார் - திருவல்லத்தி னின்றும் மேல்பாற் போய்ப் பல பதிகளை வணங்கினுர் என்றதனுல் நெடுந்தூரம் சென்று அங்குநின்றும் வடகிழக்காகப் போய் நேரே திருக்காளத்திமலை சேர்ந்தருளினர். ஆளுடைய பிள்ளையாரும் அரசுகளும் திருக்காரிகரை இறைஞ்சித் திருக்காளத்திமலை சேர்ந்த வழி வேறு. *195*

திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

திருச்சிற்றம்பலம் **பண் - சீகாமரம். 7-ம் திருமுறை**

விடையின் மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையிலன் புடையானை யாவர்க்கு மறியொண்ணு
மடையில்வா ளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் **சாராதார் சார்வென்னே.** (1)

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் னடித்தொண்டன் னடியான்சொல் லடிநாய்சொல்
லூரூர னுரைசெய்வா ருயர்வானத் துயர்வாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சிவபெருமானையே சார்தல் வேண்டும்; உணர்தல் வேண்டும்;அறிதல் வேண்டும்; அவனடிமைக்கட் குழைதல் வேண்டும்; அவ்வாறு சாராதார் சார்வு, உணராதார் உணர்வு முதலியவை பயனற்றவை; அவை பொருளல்ல.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1)* அடையில் அன்புடையான் - வந்து சரணடைந்தவர்பால் அன்பு கொண்டு உய்யச் செய்பவன். சார்ந்தாரைக் காப்பவன் சிவன்;அவ்வாறு சாராதார் சார்வென்னே? வேறு எச்சார்பும் சார்பன்று. இவ்வாறே மேல்வரும் பாட்டுக்கள் எல்லாம் கொள்க; "மடையில் வாளை பாய" (தேவா-கோலக்கா); நீர்வளம் குறித்தது;— ***(3)* எண்ணுர் நாண்மலர் - எண் ஆர் -** விதிப்படி கொய்து

பொருந்திய; **எண்** - எட்டு;அட்டபுட்பம் என்று கூறினார். **எண் - நினைவு** - அகம் **என்று** கொண்டு கொல்லாமை, வாய்மை முதலிய அகப்பூசை விதியில் நினைக்கத்தக்க என்ற **குறிப்பும்** பட நின்ற நயம் காண்க; **படிறன்** - நிந்தைத்துதி;—(4) **கோணுதார்** - வஞ்சம் **முதலிய** தீமைகளில்லாதவர்; **பெற்று** - எருது; (5) **உரம்** - மனத்திண்மை; **உரமென்னும் பொருளானை** - அன்பின் உறைப்பினையே பொருளாகக் கொள்பவர்; **உருகில் உள் உறைவான்** - "உள்ள முருகி லுடனுவர்" (தேவா); **சிரம்** - தலை ஓடு; சிரமாலை; **கலன்** - அணிகலன்; பலிப்பாத்திரமுமாம்;—(6) **எயிலார்** - மும்மதிலுடைய புரவாணர்; **பொக்கம் - பொய்ம்மை - தீமை; வெயிலால்...**தி - உயிர்கள் வாழ்ந்து கன்மானுபவங்களால் வினை தீர்ந்துய்தற் பொருட்டுப் புவனங்களைத் தந்தவன் **என்பது;** வெயில் காற்று மின் தீ என்பன போகந் துய்த்தற் குதவுவன; **ஆனய்** - இவற்றுள்ளும் நிறைந்து நின்று உதவுபவர். **ஆனய்** - என்ற சொல் கொண்டு வெவ்வேறு பொருள் கொள்ளும் மதாந்தரங்கள் (மதபேதங்கள்) கூறுவன பொருளல்ல; ஈண்டு, நின்றதிருத்தாண்டகம், திருவுருத்திரம் இவற்றின் கருத்துக்கள் கருதி உணரத்தக்கன; **பயில்வான்** - விளங்கி வீற்றிருந்தருள்பவர்; **அடிமைக்கட் பயிலாதார்** - அடிமை செய்தலே பழக்கமாகக் கொள்ளாதார்;—(7) **காலம்** - ஆயுள்; **அறியாதார்** - அறிவில் எப்போதும் கொள்ளாதார்;—(8) **வஞ்சமற்ற மனத்தாரை மறவாத** - **வஞ்சம்** - பொய் - நடலை - முதலிய தீக்குணங்கள்; இவை இல்லாத மனத்துடன் அடிமை செய்வார்பால் எப்போதும் அருள் புரிபவன் சிவன்; **மஞ்சுற்ற** - மேகங்கள் தவழும்படி உயர்ந்த; **எங்கள் நெஞ்சத்துப் பிரானை** - என்க; எங்கள் நெஞ்சில் நிலையாக வீற்றிருப்பானை; "என் நெஞ்சு நீங்கா இறைவன்" "பாதமென் நெஞ்சு ளிருக்கவே" (தேவா) என்பன முதலியவை காண்க; **எங்கள்** - உரிமை குறித்த சிறப்புப் பன்மை; சீரடியார்களை உளப்படுத்திய பன்மையுமாம்;—(9) **மழையான்** - மேகம்போன்ற கரியமேனியுடையவன்; விட்டுணு; **உழையா** - பக்கத்தில்; **உள்க** - அடிமுடி எல்லை காணுது நினைக்க; **வானத்து** - வானத்தின்மேலும்; **குழையாதார்** - அகங்குழைதல் அன்பின் உறைப்பினுல் வருவது; அடிமைத்திறத்தில் குழையாதவர் - அன்பில்லாதவர்கள் என்றபடி; "ஈசனுக் கன்பில்லார்" (சித்தி) என்ற திருப்பாட்டுக் காண்க; இறைவன் அடிமைத் திறத்தன்றி வேறு உலகு உயிர்கள் மேற் செய்யும் குழைவுகள் பயனற்றவை; அவை பிறவிக்கே யேதுவாவன என்பது ஞான நூன்முடிபு; ஆதலின் அவை என்னே என்றுர்;—(10) **படி** - திருமேனி நிறம்; சீரூரும்...**ஆரூரன்** - ஆரூரர் என்ற நம்பிகளின் பெயர்க்காரணம்; **உயர் வானத்து உயர்வாரே** - உயர் வானம் - சிவன் உலகம்; உயர்ந்த விண்ணுலகம் என்று கொண்டு அந்த விண்ணுலகினும் மேலாக என்றலுமாம்.

தலவிசேடம்:—திருவன்பார்த்தான் பனங்காட்டூர்—என்னும் **திருப்பனங்காடு** - தொண்டை நாட்டின் 9-வது பதி; வன்பாக்கம் என்னும் கிராமத்தினை அடுத்து இருத்தலாலும், பனை தலமரமாதலாலும் இப்பெயர் பெற்றது; அகத்தியர் புலத்தியர் என்ற பேரிருடியர் இருவர் பூசித்த தலம்; அந்த இரு சந்நிதிகளும் உள்ளன; (1) அகத்தியர் - பூசித்தது; சுவாமி - **தாள்புரீசுரர் - பனங்காட்டு நாதர்;** அம்மை - **அமிர்தவல்லி; (2)** இதன் வடகிழக்கில் புலத்தியர் பூசித்தது; சுவாமி - **கிருபாநாதேசுரர்;** அம்மை - **கிருபாநாயகி;** மரம் - **பனை;** தீர்த்தம் - **ஜடாகங்கை;** பதிகம்.

3350. **தடுக்க லாகாப் பெருங்காதற் றலைநின் றருளுங் கண்ணப்பர்**
இடுக்கண் களைந்தாட் கொண்டருளு மிறைவர் மகிழ்ந்த காளத்தி
அடுக்கல் சேர வணைந்துபணிந் தருளா லேறி **யன்பாறு**
மடுப்பத் திருமுன் சென்றெய்தி மலைமேன் மருந்தை வணங்கினுர். 196

இது திருக்கச்சி ஏகம்பத்தினின்றும் தெற்கே நாலு நாழிகையில் ஐயன்குளத்தை யடைந்து, மேற்கே திரும்பி ஆற்காட்டுப் பாதையில், 4 நாழிகை சென்று அங்கு நின்றும் வடக்கில் 3/4 நாழிகை சென்று அடையத் தக்கது; பாலாறு, வேகவதி யிரண்டையும் இடையில் கடக்கவேண்டும்.

திருமாற்பேறு—திருவல்லம் இந்த இரண்டு பதிகளின் நம்பிகள் பதிகங்கள் கிடைத்தில!

3350. (இ-ள்) தடுக்கலாகா...கண்ணப்பர் - தடுக்கமுடியாத பெரிய காதலிற் றலை சிறந்து நிற்கும் கண்ணப்ப நாயனுரது; இடுக்கண்...அணைந்து - துன்பத்தை நீக்கி ஆட்கொண்டருளும் சிவபெருமான் மகிழ்ந்து எழுந்தருளிய திருக்காளத்தி மலையினைச் சாரஅணைந்து; பணிந்து...ஏறி - அம்மலையினை நிலமுற வணங்கித் திருவருள் பெற்று மேல் ஏறி; அன்பு ஆறு...வணங்கினுர் - அன்பு ஆருகப் பெருகி மூழ்குவிக்க இறைவர் திருமுன்பு சென்று சேர்ந்து மலைமேல் மருந்து போன்ற இறைவரை வணங்கினுர்.

(வி-ரை) தடுக்கலாகாப் பெருங்காதற் றலைநின்றருளும் - அணையை முறித்தோடும் பெருவெள்ளம் போல முழுதும் இறைவர்பாற் பெருங்காதல் மயமேயாகி, அதனை அளவுபடுத்தித் தடைசெய்து நிற்கும் உடலும் உட்கரண புறக்கரணங்களும் உலகச் சார்புகளும் முதலாகிய யாவும் வலியற் றொழிந்து நிற்கும் நிலையில் முதல்வராகிய; "சிறை பெரு நீர்போல்" (திருவா); "அளவிறந்த காதலினு, லுண்ணிறையுங் குணம்நான்கு மொருபுடை சாய்ந்தன" (291) "மனக்காத லளவின்றி வளர்ந்து பொங்க, நின்றநிறை நாண்முதலாங் குணங்களுட னீங்கவுயி ரொன்றுந் தாங்கி" (319) முதலிய மன நிலைகள் காண்க.

தலை நின்றருளும் - ஒப்பாரும் மிக்காரு மின்றிச் சிறந்து மேனின்று; "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை" (திருவா).

இடுக்கண் களைந்து - இறைவர் திருக்கண்களில் உதிரம் வடியக்கண்ட புண்ணினைப் பற்றிய துன்பம்; 814; 818-822;825 பார்க்க. "அளவிலாப் பரிவில் வந்த இடுக்கண்" (597); **இடுக்கண்** - "நிலைதளர்ந்தெ, னத்தனுக் கடுத்ததெ னத்தனுக் கடுத்த தென்னென் றன்பொடுங் கனற்றி, யித்தனை தரிக்கிலன்" (நக்கீரதேவர் - திருக்கண்ணப்ப தேவர் திருமறம்); **இடுக்கண் களைந்து** - "ஒல்லை நம்புண் ணொழிந்தது பாராய்" (கல்லாட தேவர் - திருக்கண்ணப்ப தேவர் திருமறம்) **ஆட்கொண்டருளுதல்** - "நல்லை நல்லை" எனப் பெறுதல். (மேற்படி திருமறம்); "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்பவென், னன்புடைத் தோன்ற னில்லு கண்ணப்பவென், றின்னுரை யதனெடும்" (நக் -திருமறம்); "என் வலத்தில் மாறிலாய் நிற்க" என்றருளியதும் ஆம்.

அடுக்கல் - மலை; **சேர அணைந்து** - அருகிற் சார்ந்து; **பணிந்து** - மலையினை அடி

3351. வணங்கி யுள்ளங் களிகூர மகிழ்ந்து போற்றி மதுரவிசை
யணங்கு **"செண்டா"** டெனும்பதிகம் பாடி யன்பாற் கண்ணப்பர்
மணங்கொள் மலர்ச்சே வடிபணிந்து வாழ்ந்துபோந்து மன்னுபதி
இணங்கு தொண்ட ருடன்கெழுமி யின்புற் றிருக்கு மந்நாளில். 197

பணிந்து; ஆளுடைய பிள்ளையார் திருமலையினைக் கண்டு தோன்றிய இடத்திலேயே "அவனிமேற் பணிந்தெழுந் தஞ்சலி மேற்கொண்டு" திருப்பதிகம் பாடி யருளியதும், **(2919),** "மலையடிவாரஞ் சாரவந்து தாழ்ந்தார்" (2920) என்றதும், ஆளுடைய அரசுகள் **"காளத்தி** மொய்வரையின் முழ்வரையிற், சென்னியுறப் பணிந்தெழுந்து" (1609) என்றதும் **காண்க.**

அன்பு ஆறு மடுப்ப - "அன்பெனு மாறு கரையது புரள" (திருவா. போற்றித்திருவகவல்-81) **அன்பு ஆறு** - உருவகம்: கரை கடந்தோடுதலால் **ஆறு** எனப்பட்டது; **மடுத்தல்** - அமிழ்த்துதல்; "ஞான வாரி மடுத்து" (சி. சி. 8-16); செலுத்துதல் என்று கொண்டு ஆறு பெருகி ஈர்த்துச் செல்ல என்றலுமாம்.

மலைமேல் மருந்து - "மலையின்மேல் மருந்தானார்" (3330) என்றதும், ஆண்டுரைத் தவையும் பார்க்க; "அங்கண் மாமலை மேல் மருந்தை" (1613). 196

3351. (இ-ள்) வணங்கி...போற்றி - வணங்கி மனத்தின் கண்ணே களிப்பு மீக்கூர மகிழ்ச்சியுடன் பொருந்தத் துதித்து;மதுர இசை...பாடி - இனிய இசை மிகுந்த "செண்டாடும்" என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடி; அன்பால்...போந்து - அன்பினாலே திருக்கண்ணப்ப தேவருடைய மணமுடைய தாமரை மலர் போன்ற செம்மைபெற்ற திருவடிகளைப் பணிந்து வாழ்வடைந்து புறம்பு போந்து; மன்னுபதி...நாளில் - நிலைபெற்ற அத்திருப்பதியிலே இணங்கு தொண்டர்களுடன் அன்பு பொருந்தக் கூடி இன்பமுற்று எழுந்தருளியிருக்கும் அந்நாள்களில்,

(வி-ரை) அணங்கு - கூடிய; கலந்த; விரும்பும் என்றலுமாம்.

மதுரவிசை - பதிகப் பண்ணுகிய இசை; பண் நட்டராகம்.

அன்பால்...வாழ்ந்து - திருக்கண்ணப்ப தேவரை வணங்கி அதனால் தாம் பெருவாழ்வடைந்து; முன்னர் ஆளுடைய அரசுகளும் பிள்ளையாரும் இவ்வாறு வணங்கியமை காண்க. நம்பிகளும் முன்னர்த் திருத்தொண்டத் தொகையுள் வைத்துப் போற்றி யருளினர்; இங்கு நேரே வணங்கினர்.

இணங்குதொண்டர் - இணங்குதல் - அன்பு பெருகச் சார்தல்; பொருந்துதல்; "அன்பரொடு மரீஇ" (12-சூத்.போதம்);இணங்கத்தக்க என்றதும் குறிப்பு.

கெழுமுதல் - அன்பால் இன்பம் பெருகக் கூடுதல். உடன் **இன்புற்று** என்பதும் காண்க.

அந்நாளில் இருந்திறைஞ்சிப் - பாடிக் களிசிறந்தார் - என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

பாடி அன்பர் - உடன் விரும்பி—என்பனவும் பாடங்கள். 197

3352. வடமா திரத்துப் பருப்பதமுந் திருக்கே தார மலையுமுதல்
இடமா வரனுர் தாமுவந்த வெல்லா மிங்கே யிருந்திறைஞ்சி
நடமா டியசே வடியாரை நண்ணி னுர்போ லுண்ணிறைந்து
திடமாங் கருத்திற் றிருப்பதிகம் பாடிக் காதல் சிறந்திருந்தார். 198

3352. (இ-ள்) வடமாதிரத்து...இறைஞ்சி - வட திசையிலே உள்ள சீபர்ப்பதமும் திருக்கேதாரமலையும் முதலாகச் சிவபெருமான் விரும்பி எழுந்தருளும் இடமாகக் கொண்ட எல்லாவற்றையும் இங்கிருந்தபடியே வணங்கி; நடமாடிய...பாடி - ஆனந்தக் கூத்தாடும் சேவடியிணையுடைய இறைவரை நேரே கண்டு பொருந்தியவர்போல உள்ள நிறைந்து உறுதிப்பாடுற்ற கருத்துடனே திருப்பதிகம் பாடியருளி; களி சிறந்திருந்தார் - மிக மகிழ்ந்தருளினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) வடமாதிரம் -வடதிசை; வடநாடு குறித்தது.

பருப்பதம் - சீபர்பத மலை; ஸ்ரீ சைலம் எனவும்படும்; **திருக்கேதார மலை** - இமயமலைச் சாரலில் உள்ளது.

முதல் - முதலாக; முதலியனவாக;திருக்கயிலாயம், திரு அனேகதங்காவதம், திருஇந்திர நீலப்பருப்பதம் முதலியவை.

இங்கே இருந்திறைஞ்சி - இங்குத் திருக்காளத்தியிலிருந்தவாறே வணங்கி; ஆளுடைய பிள்ளையாரும் இவ்வாறே வடநாட்டுத் தலங்களையும், திருக்கோகரணத்தையும் இங்கிருந்தே வணங்கிப் பாடி யருளியமை காண்க. 2925-2926 பார்க்க. ஆளுடைய அரசுகளும் இங்கு வணங்கிய குறிப்பினுலே திருக்கயிலையினை நேரே கண்டு வணங்கக் காதலித்து வடநாட்டிற் சென்றருளியதும் நினைவு கூர்க. (1612)

நண்ணினுர்போல்...கருத்தில் - இத்துணை நெடுந்தூரத்தின் இடை பிரிந்திருப்பினும் மனக்கண்முன் தியானத்தில் நேரே கண்டவாறு உறுதிப்பட்ட எண்ணத்திற் கொண்டு; "பொருந்திய தேச கால இயல்பகல் பொருள் களெல்லாம், **இருந்துணர் கின்ற ஞானம்** யோகநற் காண்ட லாமே" (சித்தி. அளவை -13) என்றபடி ஞானயோகக் காட்சியில், மானதமாக வன்றி, நேரே புலப்படக் கண்டு என்க.

காதல் சிறத்தல் - மிக மகிழ்தல்.

மலைமுதலாம்—தாமகிழ்ந்த—என்பனவும் பாடங்கள். 198

திருக்காளத்தி

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம்.**

செண்டாடும் விடையாய் சிவ னேயென் செழுஞ்சுடரே
வண்டா ருங்குழலா ளுமைபாக மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கண நாதனெங் காளத்தியாய்
அண்டா வுன்னையல்லா லறிந் தேத்த மாட்டேனே. (1)

காராரும் பொழில்சூழ்கண நாதனெங் காளத்தியுள்
ஆரா வின்னமுதை யணி நாவலா ரூரன்சொன்ன
சீரூர் செந்தமிழ்கள் செப்பு வார்வினை யாயினபோய்ப்
பேரா விண்ணுலகம் பெறு வார்பிழைப் பொன்றிலரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— காளத்திக் கணநாதரே! உம்மையல்லால் மற்றொருவரையும் அறிந்தேத்த மாட்டேன்!

பதிகப் பாட்டுக் குறிப்பு:— *(1)* செண்டு ஆடும் - கையில் செண்டினையுடைய; "காளையாந் திருவடிவாற், செங்கையினிற் பொற்செண்டும்" (கழறிற்.புரா-112); செண்டினால் ஏவல் பெறும் (விடை) என்றலுமாம்; **வண்டாருங் குழலாள்** - இயற்கை மணமுடைய கூந்தலாதலின் சூடும் மலர்களானன்றி இயல்பாகவே வண்டுகள் நிறையும் என்க; "கொங்குதேர் வாழ்க்கை" என்ற இறைவரது பாட்டும், அதுபற்றிய திருவிளையாடற் சரித வரலாறும், அஃது இத்தல அம்மையின் கூந்தலின் இயற்கை மணத்தைப் பற்றி யெழுந்தமையும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன; **கண்டார் காதலிக்கும்** - "மேவினார் பிரிய மாட்டா விமலனார்" (818) என்று கண்ணப்ப நாயனார் கூறும் கருத்து; ஆண்டுரைத்தவை பார்க்க; மேவினார் பிரியாமைக்குக் காரணம் கண்டார் காதல் கொள்ளுதல்; **கண்டார்** - இவரது பரங்கருணைத் திறத்தினை உணர்ந்த பக்குவர்; இவரால் முன்பே காணப்பட்டவர் என்ற குறிப்புமாம். "இவர் காணு முன்னே அங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்த" (753) என்றும், அதன்பின் "ஏகநா யகரைக் **கண்டார்**" (754) என்றும் வந்த கருத்துக்கள் காண்க. இங்குக் கண்டார் என்பது கண்ணப்பர் என்ற குறிப்புடன் நிற்பது கண்டுகொள்க; "வந்தவர் குருதி **கண்டார்**" (874); "ஊனுக் கூனெனு முரைமுன் **கண்டார்**" (821); "நின்றசெங் குருதி **கண்டார்**" (823); "குருதிபாயக் **கண்டனர்**" (824); மருந்து **கைக்கண்டேன்**" (825) "காணும் நேர்பாடு" (826) என்பன முதலியவை காண்க. **காணப்பட்ட** "கணநாதன்" என்றது திருத்தாண்டகம். **கணநாதன்** - காளத்தி இறைவரது பெயர். கணநாதன் என்பது திருத்தாண்டகம். **கணநாதனெங் காளத்தியாய்**-"காளத்தி காணப்பட்ட கணநாதன்காண்" (தாண்); இப்பெயர் இன்றும் இத்தலத்தில் வழக்கில் உள்ளது;—**(2) இடர்த்துணை** - இடர் நீக்கும் துணை; "நோய் மருந்து" என்றாற்போல; நான்கனுருபு தொக்கது;—**(3) படை** - படையின் தன்மை; **பகலோன்** - சூரியர்களுள் ஒருவன்;"சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை, வாரி நெரித்தவா றுந்தீபற" (திருவா); இது தக்கயாகத்தில் சிவனேவலால் வீரபத்திரர் செய்த வீரங்களுள் ஒன்று;—**(4) மறி** - மான்; **குறி** - குறிக்கோள்; **குரு** - அறிவுச் சுடர் கொளுத்தி அஞ்ஞானத்தைப் போக்குபவன்; **அறிவே** - ஞானமே திருமேனியாக உடையவர்;—**(5) நஞ்சேன்** - நைந்தேன் என்பது எதுகை நோக்கி நின்றது; **துஞ்சேன்** - இறவியில்லேன்; நம்பிகள் திருக்கயிலைக்குச் சென்ற வரலாறு கருதுக; ஒருகாற் றிருக்காளத்தியுட் டொழுதே (னாதலின்) துஞ்சேன் எனக் காரணக் குறிப்பும் தந்து நின்றது;—**(6) செய்யவன்** - செம்மை செய்பவன்;—**(7) காதன்மையால் - காதல் கொண்டு - அறியேன்** - என்று கூட்டுக; காதன்மையால் அறியேனாயினும் **குடியாக்** கொண்ட என்று இறைவரது கருணைத்திறம் போற்றியவாறு; **முடியால் - முயங்கும்** - முடிசாய்த்து அடி கூடுதல்; **முயங்குதல்** - பொருந்துதல்;—**(10) பேராவிண்ணுலகம் -**

சிவனுலகம்; ஏனை விண்ணவருலகம் புக்கவர் பேர்தல் (பிறத்தல்) உடையவர்கள் என்பது குறித்தலின் **பேரா** என்பது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

குறிப்பு:—இப்பதிகத்து **உன்னையல்லால்** அறிந்தேத்த மாட்டேனே என்பன வாதியாக வரும் மகுடங்களில் எதிர்மறையாற் கூறியன உறுதி குறித்தன.

தலவிசேடம்:- **திருக்காளத்தி** - தொகுதி II பக்கம் 436 பார்க்க. தொண்டை நாட்டின் 19-வது பதி.

சீபர்ப்பதம்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை**

மானும்மரை யினமும்மயி லினமுங்கலந் தெங்குந்
தாமேமிக மேய்ந்து தடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமர முரிஞ்சிப்பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழி னீழற்றுயில் சீபர்ப்பத மலையே. (1)

நல்லாரவர் பலர்வாழ்தரு வயனூவல வூரன்
செல்லலுற வரியசிவன் சீபர்ப்பத மலையை
யல்லலவை தீரச்சொன்ன தமிழ்மாலைகள் வல்லார்
ஒல்லைச்செல வுயர்வானக மாண்டங்கிருப் பாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இயற்கை வளங்கள் பலவற்றுலும் நிறைந்து மனிதர் செல்லுதற்கரியதாய்ச் சிவன் உறைகின்ற பதி சீபர்ப்பத மலையே. இப்பதிகத்துள் இங்கு வாழும் மான், மயில், யானை, கிளி, ஏனம் முதலிய பிராணிகளின் செயல்கள் பற்றியே பதியின் வளம் போற்றப்பட்டிருத்தல், ஓர் ஆண்டின் பெரும் பாகமும் இங்கு மனித சஞ்சாரமின்றி இப்பிராணிகளே வாழ்தற்கிடமாவது இது என்ற குறிப்புத் தருவதாம். தலவிசேடம் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **சுனை நீர்களை** - இம்மலையில் இயற்கையானமைந்த பல சுனைகள் உள்ள நிலைக்குறிப்பு; **பூமா - தேமா** - மாவின் வகைகள்; (2) **இனங்கள்** - யானைகள் கூட்டம் கூட்டமாய்க் கூடி வாழ்ந்து திரியும் நிலைக் குறிப்பு;- (3) **புனம்** - தினைப்புனம்; குறிஞ்சிக் கரு;- (4) **புனம்** - இதும் தினைப்புன நிகழ்ச்சி குறித்தது; அத்திணைக்குரிய மக்கள் தொழில் முதலாகியவையும் குறிப்பு; மேல்வரும் 7-வது பாட்டும் பார்க்க;- (5) **யானைக் குலம்** - யானை ஏனம் முதலியவை குறிஞ்சிக்குரிய விலங்குகள்; **சூளறுதல்** - பிரமாணம் செய்தல்போன்ற நிகழ்ச்சி; (7) **அப்போது... தொழில்'' என்று** -இப்பாட்டுத் தினைப்புனங் காக்கும் வேடர் சிறுமியர் கிளிகளிடம் பேசும் முறையாக அமைந்த கவிநயமுடையது; அழையாது முன் இருந்தேன் - என வேடர் சிறுமியரது கருணைத்திறமும் குறித்த நயம் காண்க; (8) இறைவரை அரியும் அயனும் அறியாராயினும் ஈண்டுக் கரியின் இனமும் பிடியுடன் களித்துக் கண்டு மகிழும் என்பது;- (10) **செல்லலுற அரிய** என்றது இதில் மக்கள் சார்தற்கரிய நிலை குறித்தது.

தலவிசேடம்:—சீபர்ப்பதம் - தொகுதி III பக்கம் 762 வடநாட்டுப் பதி.

திருக்கேதாரம்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை.**

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணான்மல ரோனுங்
கீழ்மேலுற நின்றான்றிருக் கேதார மெனீரே. (1)

நாவின்மிசை யரையன்னொடு தமிழ்ஞானசம் பந்தன்
யாவர்சிவ னடியார்களுக் கடியானடித் தொண்டன்
தேவன்றிருக் கேதாரத்தை யூரன்னுரை செய்த
பாவின்றமிழ் வல்லார்பர லோகத்திருப் பாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இவ்வுலக வாழ்வு மாயம்; உள்ளது போலக் காட்டி **ஒரு நாள்** அழிவது திண்ணம்; சுருங்கிய இவ்வாழ்வினிடை பேரும் துன்பங்கள் பல; **ஆதலின் மரணம்** வருமுன் இறைவனது திருக்கேதாரம் என்று சொல்லுங்கள். **குறிப்பு:- என்னீரே - நேரிற்** சென்று வழிபடுதல் அரிதாயினும் வாயினால் போற்றுங்கள். கருணையினால், **உலகரை** வழிப்படுத்தியது; தாமும் திருக்காளத்தியிலிருந்தபடியே பாடிய குறிப்புமாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) வாழ்வாவது... திண்ணம் - வாழ்வு இவ்வுலக வாழ்வு; ஒருநாள் அழிவது திண்ணம்; **வாழ்வு ஆவது - ஆவது** - என எண்ணப்படுவது; **பாழ்போவது** - பாழிற் கழிவது; **இது** - வாழ்வு; **பறி** - பறித்தல்; இடும்பை. **ஆதலின் தாழாது** என்க. ஆதலின் என்பது சொல்லெச்சம்; **தடங்கண்ணன்** - திருமால்;- (2) **பறி-** உடம்பு;உதிரம் நிறைத்த சால்போல்வதனால் **பறி என்றார்;** நீர் இறைக்கத் தோலினால் றைத்த கூட்டினைப் பறி என்பது இந்நாளிலும் **கொங்கு** நாட்டில் வழங்கும் வழக்கு; **நரி கீறுவது** - இறந்தபின் இடுகாட்டில் நரி கீறித் தின்பது; **குறிகூவிய...**நாள்குறித்து - எடுத்துரைத்த வினைப்பயன் முடிவுறும் நாள் எல்லை; "வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற், றினைப்போ தளவு நில்லாது"; **அறமுளதால்** - அந்நாள் வருமுன் செய்து கோடற் குரிய சிவதருமங்கள் உள்ளன; **அறிவானிலுமறிவான்** - அறம் செய்ய அறிவோர்களுள்ளத்தினின்று அவ்விருப்பத்தினை அறிபவன்; "அறஞ்செய விரும்பு;" **நல்நீரொடு...இடுவார்** - அன்னதானம் செய்வோர்; **நல் நறு நீரொடு** - உண்பதற்கு நல்ல நறுநீர் தருதலின் இன்றியமையாமை கருதி வேறு பிரித்தும், முதலில் வைத்தும், சிறப்புக்காட்டும் **ஒடு** வுருபு தந்தும் ஓதினார்;- (3) **ஒருக்காலர் - தேவச்சாதியர்களுள்** ஒரு வகையினர்; **கொம்பு** - ஊன்றுகோல்; **இருக்கு** - வேதப் பொதுமை குறித்தது; **இருக்கால் -** வேத மந்திரங்களுடன்; **ஒருக்கால் - இருக்கால்** சொல்லணி; **பொற்பொடி** - பொற்சுண்ணம்; பொன் கலந்த சுண்ணம் என்றலுமாம்;- (4) **உழக்கே உண்டு** ஒருழக்கு அரிசி யளவு உணவு கொண்டு; உணவின் அளவு குறித்தது; "உண்பது நாழி"; ஏகாரம் உலோபத்தினால் உணவும் குறைத்துண்டு என்ற குறிப்புப்படவும் நின்றது; **படைத்தீட்டி வைத்திழப்பார்கள் - படைத்தல்** - தேடுதல்; **வைத்தல்** - சேமித்து வைத்தல்; **இழப்பார்** - கள்வர் அரசர் மரணம் முதலிய பல வகைகளால், தேடி செல்வப்பயனை அனுபவியாமல்

இழக்கும் உலோபியர்; **வழக்கே எனில்** - செல்வமுள்ளவர் அறமியற்றுதல் வேண்டுமென்பது அறுநூல் விதித்த வழக்கே என்று சொன்னுல்; **பிழைக்கேம்** - உயிர் வாழேம்; இறப்போம்; **மதி மாந்திய** - மந்தமதியுடைய; **சழக்கு**-துன்பம்; **கிழக்கே சலமிடுதல்** - கிழக்கு நோக்கி நின்று உரிய மந்திரங்களுடன் சூரியனுக்கு அர்க்கிய நீர் இறைத்தல்; மறைவழி ஒழுகுவோர்; **(5) நாளோடிய** - ஆயுள் நாள் கண்டு உயிர்கொள்ள விரைந்து வருகின்ற; **நமனுர்தமர்** - இயமன்றூதுவர்; **அதுவே எனில் இதுவே** - அஃது எனச் சேய்மையில் உள்ளது சொல்லும்போது இஃதே என அணிமைக்கண் வருவதாகும் என்பதாம். நம்பிகள் இப்பதிகத்தை இப்பதியினிற் செல்லாது இங்குத் திருக்காளத்தியினின்று கண்டவாறே அருளினர் என்ற வரலாற்றின் அகச்சான்று; **கீளோடு அரவு அசைத்தான்** - அரவைக் கோவணமாகக் கீளுடனே சேர்த்துப் பூண்டவர்;—**(6) தவமாவது தம்மைப் பெறிலன்றே** - "தன்னைப் பெறுவதன் மேற் றவமில்லை"; தம்மைப் பெறுவதாவது ஆன்ம தத்துவ இயல்பினை யுள்ளபடி அறிந்து சாதனை வழியில் நிற்றல்; ஆன்மரூபம், ஆன்மசுத்தி, ஆன்ம தரிசனம் என்ற மூன்று காரியங்கள். **குளியீர்...குமரி** - குருக்ஷேத்திரம், கோதாவரி, குமரி இவற்றில் மானசீகமாகக் கண்டு நீராடுங்கள்; **தெளியீர் உளம்** - உள்ளத்திற் றெளியுங்கள். கோதாவரி, தெற்கும் குருக்கேத்திரம் சீபர்ப்பதம் வடக்கும் எல்லையாகக் கொண்டு; "நண்ணி ஞர்போ லுண்ணிறைந்து திடமாங் கருத்தில்" (3352);—**(7) பண்ணின் தமிழ்** - "பண்ணிடைத் தமிழொப்பாய்" (தேவா) என்றபடி தமிழுக்குச் சிறப்பாயுரியது பண்ணமைதி என்றதாம்; **கண்ணின்** - கண்களுக்கு உரிய; **கிண் என்று** - ஒலிக்குறிப்பு;— **(8) இனமாய் நின்று** - யானைகள் கூட்டமாய் நின்று ஒருமித்த கருத்துடன் தொழில் செய்யு நிலை; (3)ம் பாட்டும் பார்க்க; **(9) பொதி** - உடலாகிய சுமை; **அவம்** - வீண்; **அவமாவது** - இறப்பது; **மதிமாந்திய** 4-வது பாட்டுப் பார்க்க; **குழி** - பாசத் தழுக்குழி;— (10) இப்பாட்டில் தேவாரம்பாடி அருளிய மூவர் முதலிகள் பெயரும் வருதல் இதன் சிறப்பு; **நாவின்...சம்பந்தன்** - முதன்மை பற்றி இவ்விருவரையும் கூறி, அவர் முதலாக **யாவர்** - (யாவராயினும்).

தலவிசேடம்:—திருக்கேதாரம் - முன் 2925-ல் உரைத்தவை பார்க்க.

1. சென்னையிலிருந்து, 1363 நாழிகை டெல்லி. அதினின்று 153 நாழிகை **ஹரித்துவாரம்.** அதுவரை **ரயில்** வண்டிப் பிரயாணம்.

2. ஹரித்வாரமிருந்து 16 நாழிகை ரிஷிகேசம், 44-நாழிகை தேவப்ரயாகை, 20 மைல் **கீர்த்திநகர்.** இதுவரை **சர்வீஸ் மோட்டார்** .

3. கீர்த்திநகரிலிருந்து 3 நாழிகை ஸ்ரீநகர். **நடைப் பிரயாணம்.** ஸ்ரீநகரிலிருந்து 23 நாழிகை **ருத்ரப்பிரயாகை** வரை சர்வீஸ் மோட்டார்.

4. ருத்ரப்ரயாகையிலிருந்து **நடை பாதை.** மலை யேற்றம் இறக்கம்.

   ருத்ரப்ரயாகையிலிருந்து 5 நாழிகை சத்தோலி, 2 நாழிகை ராம்பூ, 4 நாழிகை அகஸ்த்தியமுனி. அங்கு **அகஸ்த்தியர் கோயில் இருக்கிறது.** அதினின்று சௌடி 2 நாழிகை, சந்திரபுரி 2 நாழிகை, குண்டுசட்டி 5 நாழிகை, **குப்தகாசி** 2 நாழிகை. இங்குச் **சிவாலயம் நடராஜர் திருவுருவ தெரிசனம்.**

3353. அங்குச் சிலநாள் வைகியபின் னருளாற்போந்து பொருவிடையார்
தங்கு மிடங்க ளனேப்பலவுஞ் சார்ந்து தாழ்ந்து தமிழ்பாடிப்
பொங்கு புணரிக் கரைமருங்கு புவியுட் சிவலோகம் போலத்
திங்கள் முடியா ரமர்ந்ததிரு வொற்றி யூரைச் சென்றடைந்தார். 199

---

5. அதினின்று நாலாசட்டி 1 நாழிகை, லவ்யூருங்சட்டி 3 நாழிகை, பேகண்டா 2 நாழிகை, பாடா 2 நாழிகை, பதல்பூர் 3 நாழிகை, ராம்பூர் 2 நாழிகை. **கௌரி குண்டம் 6 நாழிகை.** இஃது **அநேகதங்காபதம்** என்று கயிலாயாத்ரிகர் சதாசிவச் செட்டியார் குறிப்பிடுகிருர். இங்கு அம்மை கோயிலும் உமா மகேசரும் இருந்து **காட்சி** அளிக்கிருர்கள். வெந்நீர் ஊற்று மகாவிசேஷமாக இருக்கிறது.

6. இதினின்று ஐங்கல்சட்டி 2 நாழிகை, ராம்பாரா 2 நாழிகை, **கேதார நாத் 3 நாழிகை. இந்த ஏழுமைலும்** கடுமையான ஏற்றம். கேதாரம் போனதும் கேதாரநாதரைக் கண்டதும் அளவற்ற ஆனந்தம்.

இஃது, இதனை நேரிற் கண்டு வழிபட்ட அன்பர் திரு.ராம.சொ.திருநாவுக்கரசு செட்டியார் (முத்துப்பட்டணம் - காரைக்குடி) அன்புடன் அனுப்பி உபகரித்தனர். கேதாரநாதர் படமும், கோயில் படமும் அனுப்பி உதவினர். என் மனமார்ந்த பெருநன்றி அவர்க்கு உரியது. அந்தப் படங்கள் இப்பகுதியில் வருகின்றன.

குறிப்பு:—இந்த இரண்டு பதிகங்களும் அங்குச் சென்று கண்டவாறே இங்கே மனத்தால் கண்டு அருளப்பட்டன என்பது இவற்றின் அகச்சான்றுகளினுல் நன்கு புலப்படும். இதனை ஆசிரியர் 3352-ல் "இங்கே இருந்திறைஞ்சி, நடமா டியபசே வடியாரை நண்ணி ஞர்போ லுண்ணிறைந்து, திடமாங் கருத்தில்" (3352) என்று காட்டியருளினர். இஃது "தேச கால வியல்பகல் பொருள்க ளெல்லாம், இருந்துணர்கின்ற" யோகக் காட்சிப்பாலது.

முதலாம் இடமா அரனு ருவந்த எல்லாம் (3352)- இவை வடநாட்டுப் பிற பதிகள்; திருஇந்திரநீலபர்ப்பதம், திருஅனேகதங்காபதம் முதலாயின என்பது கருதப்படும்; இவைகட்கு நம்பிகளது பதிகங்கள் கிடைத்தில! திருநொடித்தான்மலை (திருக்கயிலாயம்) பின்னர்க் காணலாம். (வெள்ளானைச் சருக்கம் இறுதி).

3353. (இ-ள்) அங்கு...பின் - அப்பதியில் (திருக்காளத்தியில்) சில நாள்கள் தங்கி யருளியபின்;அருளாற் போந்து - அருள்விடையினைப் பெற்றுப் போய்; பொருவிடையார்... தமிழ்பாடி - போர் விடைப்பாகராகிய சிவபெருமான் எழுந்தருளிய ஏனைப் பதிகள் பலவற்றையுஞ் சென்று சார்ந்து வணங்கித் தமிழ்ப்பதிகங்களைப் பாடித் துதித்தருளி; பொங்கு...சென்றடைந்தார் - அலைகள் பொங்கி வருகின்ற கடலின் கரையின் பக்கத்திலே இந்நிலவுகத்தினிலே சிவலோகத்திற் போலவே, சந்திரனை முடியிலேதரித்த இறைவர் விரும்பி எழுந்தருளிய திருவொற்றியூரைச் சென்று சேர்ந்தருளினர் (நம்பிகள்).

(வி-ரை) அருளாற் போந்து - திருவருள் விடைபெற்றுச் சென்று; "தென் புவி மீது தோன்றி" (37) என்று திருக்கயிலையில் இறைவர் அருளிய ஆணையின் வழியே இப்புவியில் வந்த நம்பிகள் அவ்வாணைக்குக் காரணமாகிய இருவருள், முன், திருவாரூரிற் கண்ட

3354. அண்ண **ருடர்ந்தா வணங்காட்டி** யாண்ட நம்பி யெழுந்தருள
எண்ணில் பெருமை யாதிபுரி யிறைவ ரடியா ரெதிர்கொள்வார்
வண்ண வீதி வாயிரெறும் வாழை கமுகு தோரணங்கள்
சுண்ண நிறைபொற் குடந்தூப தீப மெடுத்துத் தொழவெழுங்கால், 200

அம்மையாரின் நிகழ்ச்சிகள் போக, எஞ்சிய ஒருவரைப் பற்றிய நிகழ்ச்சிகள் இனி இங்குத் திருவொற்றியூரிற் காணவேண்டிய தொடர்பு உள்ளமையால், அவற்றின் பொருட்டு திருவருள் கூட்டுவிக்க அதன் வழியே போந்து என்ற குறிப்புங் கண்டுகொள்க.

இடங்கள் எனைப்பலவும் - இவை திருக்காரிகரை, திருக்கள்ளில், புண்ணிய கோடீசுவரர் கோயில் முதலியன என்பது கருதப்படும்.

தமிழ் பாடி - நம்பிகளின் இப்பதிகங்கள் கிடைத்தில!

புவியுட் சிவலோகம்போல...அமர்ந்த - திருவாரூரிற் புற்றிடங் கொண் டெழுந்தருளுதல் போல, ஈண்டும் படம்பக்கம் இருக்கை கொண்டு புற்றிடங்கொண் டருளுதலும், தியாகேசரது சிறப்பும், தேவாரத் திருப்பதிகங்களிற் காட்டி யருளப்பட்ட சிவத்துவவிளக்கமாகிய எண்ணிறந்த பெருமைகளும் உட்கொண்டு கூடியபடி. இனித், திருக்கயிலையில் நின்றும் போந்த நம்பிகளின் சரிதப்பகுதிகளுள் தொடர்பாகி முன் திருவாரூர்க் கோயில் வாயிலில் கமலினியார் காட்சி தொடர்ந்த பகுதிகள் போக, எஞ்சிய அநிந்திதையாரின் காட்சி முதலியன இங்குத் திருக்கோயிலினுள் இறைவர் முன்பு நிகழ்வனவாதலின் அங்குத் திருக்கயிலையில் இறைவர் மகிழ்ந்தமைபோல இங்கும் விரும்பி யெழுந்தருளினர் என்ற சரிதக் குறிப்பும் காண்க; "தொடர்ந்து" என்ற மேற்பாட்டின் குறிப்பும் காண்க. *199*

3354. (இ-ள்) அண்ணல்...எழுந்தருள - இறைவர் தாமே வந்து தொடர்ந்து ஓலை காட்டித் தடுத்து ஆட்கொண்டருளிய நம்பிகள் எழுந்தருள அது கேட்டு; எண்ணில்...எதிர் கொள்வார் - அளவற்ற பெருமையுடைய ஆதிபுரி என்னும் திருவொற்றியூரில் இறைவரது அடியவர்கள் அவரை எதிர்கொள்வார்களாய்; வண்ணவீதி...தொழ எழுங்கால் - அழகிய வீதிகளில் வாயில்கள்தோறும் வாழையும் கமுகும் தோரணங்களுமாக நாட்டியும் தூக்கியும், சுண்ணமும் பொன்னுலியன்ற நிறைகுடங்களும் தூபதீபங்களும் ஏந்தியும், எதிர்சென்று தொழுவதற்கு எழுந்தபோது,

(வி-ரை) தொடர்ந்து - திருக்கயிலையில் தந்த வரமொழியினைத் தொடர்ந்து என்க; ஆளாந் தன்மையில் தொடர்பினைப்பற்றி என்ற குறிப்புமாம்; "ஆலுமறை சூழ்கயிலை யின்கணருள் செய்த, சாலுமொழி யால்வழி தடுத்தடிமை கொள்வான்"(*174*).

ஆவணங் காட்டி ஆண்ட நம்பி - இவ்வருளிப்பாடே உலகறியப் போற்றப் பட்டதாதலின் அஃதே அடியார் உள்ளத்தில் முற்பட எழுந்தது; ஆளுடைய அரசுகளை வெஞ்சூலை மடுத்தருளி நேரே ஆட்கொண்ட அருட் செயலும், பிள்ளையாரை ஞானஅமுது அருளி ஆட்கொண்டமையும் போல, முதற்கண் உலகறிந்து போற்ற நிற்கும் தன்மை; அண்ணலினுல் ஆட்கொள்ளப்பட்ட; **ஆண்ட** - ஆட்கொள்ளப்பட்ட; செயப்பாட்டு

3355. வரமங் கலநல் லியமுழங்க வாச மாலை யணியரங்கிற்
புரமங் கையர்க ணடமாடப் பொழியும் வெள்ளப் பூமாரி
அரமங் கையரு மமரர்களும் வீச வன்ப ருடன்புகுந்தார்
பிரமன் றலையிற் பலியுகந்த **பிரானார் விரும்பு** பெருந்தொண்டர். 201

வினையாகப் பொருள் கொள்க.

எண்ணில் பெருமை - எண் - நில் - எண்ணத்தில் நிற்க வரும் என்றலுமாம்.

ஆதிபுரி - திருவொற்றியூரின் திருப்பெயர்கள் பலவற்றுள்ளும் சிறந்த பெயர்.

அடியார் எதிர்கொள்வார் - எழுங்கால் - பெருந்தொண்டர் - புகுந்தார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க; எழுங்கால் என்ற எச்சம் பிறவினை முதல் வினையின் வினைகொண்டு முடிந்தது.

வீதி வாயில் தொறும் - வீதியின் மனைகளின் வாயில்கள்; வீதிகளின் முகப்புக்கள் என்றலுமாம்.

வாழை கமுகு நாற்றித், **தோரணங்கள்** நிரைத்து, என்று வினையெச்சங்களை இடத்துக்கேற்ப விரிக்க.

சுண்ணமும் குடமும் தூபமும் தீபமும் என உம்மைகள் விரித்துரைத்துக் கொள்க. உம்மைத்தொகை.

எடுத்தல் - ஏந்துதல்; தொழ நம்பிகளை எதிர்சென்று தொழுவதற்கு. 200

3355. (இ-ள்) வர மங்கலம்...முழங்க - மேலான நல்ல மங்கல வாத்தியங்கள் முழங்கவும்; வாசமாலை...நடமாட - மணம் பொருந்திய மலர்மாலைகளால் அணிசெய்யப்பட்ட ஆடரங்குகளில் அந்நகரத்தில் உள்ள ஆடற் பெண்கள் நடமாடவும்; பொழியும்...வீச - மேலிருந்து பொழிகின்ற வெள்ளமாகிய பூமழையினை வான் அரமகளிர்களும் தேவர்களும் வீசவும்; அன்பருடன்...பெருந்தொண்டர்- பிரமகபாலத்தில் விரும்பிப் பலிகொள்ளும் சிவபெருமான் விரும்பும் பெருந் தொண்டராகிய நம்பிகள் தம்முடன் வந்த அன்பர்களுடனே கூடி நகரத்தினுள்ளே புகுந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வரமங்கலம் - மேலான மங்கலம்.

வாசமாலை அணி அரங்கு - வாசமாலை - இந்நாளிற் காணப்படும் காகிதம் முதலிய போலிப் பொருள்களாலான மாலையன்றி, உண்மையான மணமுள்ள பூமாலைகள். **புரம்**-நகர்;மேல் **அரமங்கையர்** செயல் கூறுதலின் அதனின் வேறு பிறித்துணர்தற்குப் புரமங்கையர் என்றடைமொழி தந்தோதினர்; பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

அரமங்கையர் - இவர்கள் வானில் உள்ளவர்கள்; தேவச் சாதிப் பெண்கள். "வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட" (முருகு).

அன்பருடன் - இவர்கள் நம்பிகளுடன் வந்த அடியார்கள்.

3356. ஒற்றி யூரி னுமையோடுங் கூட நின்ற ருயர்தவத்தின்
பற்று மிக்க திருத்தொண்டர் பரந்த கடல்போல் வந்தீண்டிச்
சுற்று மணைந்து துதிசெய்யத் தொழுது தம்பி ரானன்பர்
கொற்ற மழவே றுடையவர்தங் **கோயில் வாயி லெய்தினார்.** 202

புகுந்தார் - பதியினுள்ளே புகுந்தார்; அடியவர்கள் தொழ எழுவதற்கும் நம்பிகள் புகுதற்கும் நேரம் ஒத்திருந்த தென்பதாம்; **புகுந்தார் - பெருந் தொண்டர்** என வினைமுற்று முன்வந்தமை ஆர்வத்தினால் வரும் விரைவு குறித்தது.

முன்பாட்டினால் அடியார் செயலும், இப்பாட்டினால் அவர்களின் வேறாகிய நகரமாந்தார் முதலியோரின் செயல்களும் குறிக்கப்பட்டன.

மங்கல இயங்கள் முழங்குதலும் - அரங்கில் - மங்கையர்கள் நடமாடுதலும் - நித்தியமாய் நிகழும் நகரமங்கலங்களும்,நம்பிகள் வருகையின் பொருட்டு நிகழும் சிறப்பு மங்கலங்களுமாம், "தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்", "வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர" (தேவா). 201

3356. (இ-ள்) ஒற்றியூரில்...தொண்டர் - திருவொற்றியூரிலே உமையம்மையாருடனே கூடி நிலைபெற்று வீற்றிருந்தருளும் சிவபெருமானாரது உயர்ந்த தவத்தில் மிகவும் பற்றுடைய திருத்தொண்டர்கள்; பரந்த...துதிசெய்ய - பரவிய கடல்போல வந்து நெருங்கிக் கூடிச் சுற்றிலும் அணைந்து துதிக்க; தம்பிரான் அன்பர் - சிவபெருமா னன்பராகிய நம்பிகள்; தொழுது - திருத்தொண்டர் கூட்டத்தினைத் தொழுது; கொற்ற...எய்தினார் - வெற்றி பொருந்திய இளமையுடைய இடபவேற்றினை உடைய இறைவரது திருக்கோயில் வாயிலினை வந்தடைந்தனர்.

(வி-ரை) நின்றார் - நிலைபெறக் கலந்து வெளிப்பட வீற்றிருந்த இறைவர்; படம்பக்க நாதர்.

நின்றார் உயர்தவம் - நின்றாருடைய உயர்ந்த தவம்;தவமாவது சிவபூசை; சரியையாதி நால்வகைப்பட்ட நெறிகள்; **நின்றார் -** நின்றார் வகுத்த; நின்றாரைப் பற்றிய என்றலுமாம். **உயர் -** இஃதே ஏனை எல்லாச் சமயங்கள் வகுக்கும் எல்லாவற்றினும் உயர்வுடையது என்பது; **பற்று -** அன்பும் அது காரணமாக வரும் ஒழுக்கமும்.

அணைந்து துதிசெய்ய - "தொழ எழுங்கால்" (3354) என்றபடி எழுந்து போந்து அணைந்து தொழுதுத் துதிக்க என்க.

தொழுது - தொண்டர் கூட்டத்தினை நம்பிகள் தொழுது; அவர்கள் தொழுததனைக் கூறாது **(நம்பிகள்)** தொழுது என்றது, அவர்கள் தொழுததனைப் பற்றாமலே நம்பிகள் தொழுதனர் என்ற குறிப்புத் தருதற்கு. இவ்வாறே முன்னர்த் திருவாரூரிலும் "வந்தெதிர்கொண்டு வணங்குவார் முன் வன்றொண்ட ரஞ்சலி கூப்பி வந்து" (269) என்ற குறிப்பும் காண்க; திருத்தில்லையில் "முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமை யாலெதிர் வணங்கி" (244) என்றதும் கருதுக.

3357. வானை யளக்குங் கோபுரத்தை மகிழ்ந்து பணிந்து புகுந்துவளர்
கூன லிளவெண் பிறைச்சடையார் கோயில் வலங்கொண் டெதிர்குறுகி
ஊனு முயிருங் கரைந்துருக வுச்சி குவித்த கையினுடன்
ஆன காத லுடன் வீழந்தா ராரா வன்பி னாரூரர். 203

பரந்த கடல்போல் - உருவுவமம்; பரப்புப் பொதுத் தன்மை. கடல்போல் ஒலி எழத் துதிசெய்ய என்று கூட்டி உரைத்தலுமாம்; இப்பொருட்கு வினைபற்றிப் பொருந்த உவமையாகக் கொள்க.

ஏறு உடையவர் - ஏற்றினைக் கொடியாகவும் ஊர்தியாகவும் உடைய சிவபெருமான்; கொடி உயர்த்துதல் வெற்றிக்குறி யாதலின் **கொற்ற - ஏறு** என்றார். 202

3357. (இ-ள்) வானை அளக்கும்...புகுந்து - ஆகாயத்தை அளப்பதுபோல நீண்டு மேலுயர்ந்த திருக்கோபுரத்தை மகிழ்ச்சியுடனே நிலமுற வீழ்ந்து வணங்கி உள்ளே புகுந்து; வளர்...எதிர்குறுகி - வளர்கின்ற வளைந்த இளைய வெள்ளிய பிறையினைச் சூடிய சடையினை உடைய இறைவரது திருக்கோயிலினுள்ளே திருமாளிகையினை வலமாக வந்து இறைவரது திருமுன்பு சார்ந்து; ஆரா அன்பின் ஆரூரர்-நிறைவு படாத பேரன்பின் பெருக்கினாலே நம்பியாரூரர்;ஊனுமுயிரும்...வீழ்ந்தார் - ஊனும் உயிரும் கரைந்து உருக உச்சியின்மேற் கூப்பிய கையினுடனே விளைந்த பெருவிருப்பினோடும் நிலமுற வீழ்ந்தனர்.

(வி-ரை) அளத்தல் - அளப்பதுபோல் உயர்தல்; தற்குறிப்பேற்றம்.

வளர் கூனல் - இள - வெண் - பிறை - வளர் - வளரும் தன்மை பெற்ற; **கூனல்** - வளைவுடைய; குறை நோயினால் உள்ளுடைந்து கூனியது போலும் என்றது குறிப்பு; கூன்-நல் என்று பிரித்து வளைவுடையதாயினும் நல்ல என்றலுமாம்; **இளமை** - இனிக் கலைபெற்று முதிரவுள்ள தன்மையும் புதிதின் தோன்றியமையும் குறித்தது; **வெண்மை** - மறைவு பெற்ற இருளினின்றும் நீங்கி விளங்கும் வெள்ளிய கோலம்.

எதிர் - திருமுன்பு.

ஊனும் உயிரும் கரைந்து உருக - ஊன் உருகுதல் - அன்பின் விளைவாகிய மெய்ப்பாடு; **உயிர் உருகுதல்** - அன்பின் விளைவாகிய நிலை.

ஆனகாதல் - ஆதல் - விளைதல்; கூர்தல்.

வீழ்ந்தார் - காதல் தள்ளியதுபோல நிலமிசை விழுந்து பணிந்தார்.

அன்பின் வீழ்ந்தார் - அன்பினால் விழுந்தார் என்று கூட்டுக. அன்பினையுடைய ஆரூரர் என்று கூட்டினுமமையும். முன்பாட்டிற்போல ஈண்டும் பயனிலை முன் வந்தது ஆர்வத்தானாகிய விரைவுக் குறிப்பு. 203

3358. (இ-ள்) ஏட்டு வரியில்...திருநுதலார் - ஏட்டின் வரியினிடையே "ஒற்றி நகர் நீங்கலாக" என்னும் எழுத்தினைப் புகுத்தி எழுதும் எழுத்தறியும் பெருமானாகிய, கண்பூத்த திருநுதலினை உடைய பெருமானது; நறும்பொன்...எழுந்து - நறிய அழகிய கமலச்

3358. ஏட்டு வரியி **"லொற்றிநகர் நீங்க" லென்னு மெழுத்தறியும்**
நாட்ட மலருந் திருநுதலார் நறும்பொற் கமலச் சேவடியிற்
கூட்டு முணர்வு கொண்டெழுந்து கோதி லமுத விசைகூடப்
"பாட்டும் பாடிப் பரவி"யெனும் பதிக மெடுத்துப் பாடினர். 204

சேவடியிற் கூட்டுகின்ற உணர்ச்சியினை மேற்கொண்டு எழுந்து; கோதில்...பாடினர்-குற்றமில்லாத அமுத இசை பொருந்தப் "பாட்டும் பாடிப் பரவி" என்று தொடங்கும் முதலையுடைய திருப்பதிகத்தினை தொடங்கிப் பாடியருளினர்.

(வி-ரை) ஏட்டுவரியில்...எழுத்தறியும் - இஃது இத்தலத்தின் விளக்கமாய் வழங்கும் பழஞ்சரிதம்; முன், "வரியை, நெருக்கி முன்றிரு வொற்றியூர் நீங்கல் என்றெழுது, மொருத்தர்" (*1116*) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

எழுத்தறியும்....திருநுதலார் - கண்ணின் பார்வை செய்து தெரிந்த பின்பே எழுத வேண்டுதலின் '**நாட்ட மலரும்**' என்ற குறிப்பாற் கூறினர்.

சேவடியிற் கூட்டும் உணர்வு - இறைவரது திருவடிச் சார்புபற்றியே கூறுதல் குறிக்கத்தக்கது.

உணர்வு கொண்டெழுந்து என்றது அன்புமீதூர்தலின் பரவசப்பட்டு வீழ்ந்தவர் பின்பு ஓர் உணர்ச்சி கொண்டனர்; அவ்வுணர்ச்சியாவது இறைவர்சேவடியிற் கூடும் உணர்வு; அது பற்றுக்கோடாகக் கொண்டு எழுந்தனர் என்றவாறும்.

கோதில் அமுத இசை கூடுதல் - பதிகப் பண்ணகிய குறிஞ்சிப்பண் வந்து நேர்ந்து பொருந்துதல்; "கூடல் குறிஞ்சி" என்றபடி இனிக் கூடல் நிகழும் திணை ஒழுக்கக் குறிப்புமாம்; **அமுத இசை** என்றது இக்குறிப்பு.

பாட்டும் பாடிப் பரவி எனும் - பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

எடுத்து - தொடங்கி.

என்ன எழுத்தறியும்—கூட்டுமுணர்வும்— என்பனவும் பாடங்கள். 204

3359. (இ-ள்) பாடி...புறம் போந்து - திருப்பதிகம் பாடித் தம் அறிவு ஆனந்த பரவசமாதற் கேதுவாகிய பேரன்பானது தம் உள்ளத்தினைப் பற்றிக்கொள்ளப் புறத்திற் போந்து; நீடு...போற்ற - நீடிய விருப்பினாலே பேரன்பு நிறைந்த அன்பர்பலர்களும் துதிக்க; தேடுமயனும்...கும்பிட்டு - தேடுகின்ற பிரமதேவரும் திருமாலும் அறிதற்கரியனவாகிய இறைவரது திருவடிகளை வழிபாட்டு நிலை கூடிநின்ற எல்லாக் காலங்களிலும் அணைந்து கும்பிட்டு; இனிது இருந்தார் - நம்பிகள் அத்திருப்பதியிலே இனிதாக எழுந்தருளியிருந்தார்.

(வி-ரை) அறிவு...பற்றுதலாவது - தமது அறிவு வசமிழந்து சிவானந்தத்தின் வசமாகத்தக்க அன்பு மீதூர்தல்; அந்நிலையினின்றும் மீண்டு புறம் போந்தனர் என்க.

கூடும் காலங்கள் - வழிபாட்டுக் குரிய பூசைக்காலங்கள்.

3359. பாடி யறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம்போந்து
நீடு விருப்பிற் பெருங்காத னிறைந்த வன்பர் பலர்போற்றத்
தேடு மயனுந் திருமாலு மறிதற் கரிய திருப்பாதங்
கூடுங் காலங் களிலணைந்து பரவிக் கும்பிட் டினிருந்தார். 205

காலங்களிலணைந்து கும்பிட்டு - *பூசைக்காலங்களில் எல்லாம் திருக்கோயிலில் அணைந்து வழிபட்டு.*

இனிது இருந்தார் - *மன ஒருமைப்பாட்டினில் மகிழ்ந்து அமர்ந்தருளினர்.*

பரவசமாய் - *என்பதும் பாடம்.* ***205***

I. திருவொற்றியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

பாட்டும் பாடிப் பரவித் திரிவார், ஈட்டும் வினைக டீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே, ஓட்டுந் திரைவா யொற்றி யூரே. (1)
ஒற்றி யூரு மரவும் பிறையும், பற்றி யூரும் பவளச் சடையார்
ஒற்றி யூர்மே லூர னுரைத்த, கற்றுப் பாடக் கழியும் வினையே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— *வினைகள் தீர்ப்பார் கோயில் திருவொற்றியூரே. பாடிப் பரவித் திரிவார் ஈட்டும் வினைகள் தீர்ப்பார் (1); தன்னை முன்னம் நினைக்கத் தருவான்(4); வினையை வீட்ட (7)* என்பன நம்பிகளது முன்னை நிலைச் சரிதக் குறிப்பும், அதனைத் தொடர்ந்து இனி இங்கு நிகழவுள்ள நிகழ்ச்சிகளின் குறிப்பும் பட நிற்கின்றமை காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பாட்டும் பாடிப் பரவித் திரிவார் - பாட்டும். சொலவல கீதம் பாடுதலன்றிப் பாட்டும்பாடி; **பரவி** - பாட்டினாலும் உரையினாலும் **துதித்து; திரிவார்** -அதுவன்றி வேறு தொழில் செய்யாது அதுவே தொழிலாய்த் தலங்கள் தோறும் திரிபவர்; இது நம்பிகள் சரிதக் குறிப்புப்பட நிற்றல் காண்க; **ஈட்டும் வினைகள் -** முன் ஈட்டியவையும் இனி ஈட்டப்படுவனவும் ஆகிய வினைகள்; இதுவும் நம்பிகள் சரிதக் குறிப்புப்பட நிற்றல் காண்க; கயிலையில் பெற்ற இறைவராணையின் வழிவந்த இப்பிறவியின் எஞ்சிய பகுதி இங்கு அனுபவித்துத் தீரநின்றதும் காண்க. இக்கருத்தினை மேல் (3382-ல்) நம்பிகள் திருவாக்கில் வைத்து ஆசிரியர் விரித்தலும் காண்க. **காட்டும் கலமும் திமிலும் கரைக்கே ஓட்டும் திரை - கலம்** - மரக்கலம்; **திமில்** - சிறு படகு; திரை - இவற்றைக் கரையிற் செலுத்தும் அலைகள்; **காட்டும்** - உலக அண்டம், கோள வடிவினதாதலால் கடல் வளைவுக்குள் நின்று மேலேறி வரவர முதலில் உச்சிமட்டும் தோன்றிப், பின்னர்ச் சிறிது சிறிதாக முழுமையும் தோன்றும் நிலைகுறித்தது. "விடுங்கலங்க ணெடுங்கடலி னின்று தோன்றும்" *(ஒற்றி - தாண் 4);* **ஓட்டும்** - செலுத்தும்; **கரைக்கே திரை ஓட்டும் -** பிறவிக்கடலுட்பட்டு அலையும் உயிர்களைக் கரை சேர்த்தும் குறிப்பு; திரையின்மேல் வைத்துக் கூறப்பட்டது. "மனமெனுந் தோணிபற்றி...கடலோடும்போது - உனையுனு முணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே" என்ற திருநேரிசை ஈண்டுக் கருதத்தக்கது;

சங்கிலியார் வரலாறு

3360. இந்த நிலைமை யாரிவரிங் கிருந்தார்; **முன்பே யிவர்க்காக**
அந்தண் **கயிலை மலைநீங்கி யருளாற் போந்த வநிந்திதையார்**
வந்து புவிமே லவதரித்து வளர்ந்து **பின்பு வன்ரொண்டர்**
சந்த விரைசூழ் புயஞ்சேர்ந்த பரிசு தெரியச் சாற்றுவாம். 206

---

(2) பந்தும்...பாவை சிந்தை கவர்வார் - அகப்பொருட்டுறை; தாய்கூற்று; **பந்தும் கிளியும் பயிலுதல்** - இளமங்கைப் பருவம் குறித்தது; "பூவை தந்தாள் பொன்னம் பந்து தந்தா ளென்னைப் புல்லிக் கொண்டு, பாவைதந் தாள்பைங் கிளியளித்தா ளென்றன் பைந்தொடியே" (திருக்கோவை-200); "கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயரும்" (தேவா); "மாதராள், பொற்கூட்டிற் பூவையை வாங்கி யதனோடுஞ், சொற்கோட்டிக் கொண்டிருந்த வேல்வைக்கண்—" (ஞானவுலா); **பாவை** - பாவைபோன்ற பெண்; **பாவை சிந்தை கவர்வார் - எந்தம் அடிகள்** - சங்கிலியம்மையாரையும், நம்பிகளையும் குறிப்பா லுணர்த்தி நின்றன;—(4) **என்ன தெழிலு நிறையுந் கவர்வான்** - அகப்பொருட்டுறை; தலைவிகூற்று; புன்னை...புறவு; நெய்தற்கரு; **தன்னை முன்ன நினைக்கத் தருவான்** - நான் நினைப்பதன்முன் தான் நினைத்துத் தன்னை நினைக்கும் மருள்தருவான்; அவனை நினைத்தற்கும், முன்னர் அவன் அருள் புரியவேண்டு மென்பது; நம்பிகள் சரிதக் குறிப்புமாம்; **உன்னப்படுவான்** - தன்னை முன்னந் தந்தபின் நினைப்பினுள் வருபவன்;—(5) **உணங்கல்** -பலிச்சோறு; **வணங்கும் (இடை)** - துவளும்; மெல்லிதாதலின் வளையும்; **வணங்கும் மடவார்** என்று கூட்டியுரைப்பினுமமையும்; (6) **அடைவார்...உடையான்** - நம்பிகள் சரித நிகழ்வும், மேல் விளைவும் குறிப்பு;—(7) **சென்ற** - உலகை நாசம் செய்து மேற் சென்ற; வினையை வீட்ட - நம்பிகள் சரிதக் குறிப்பு; (8) **பவளப்படியான்** - பவளம்போன்ற திருமேனி; **வினைகள் தீர்ப்பார்** - சரிதக் குறிப்பு; மேற்பாட்டிலும் எற்றும் வினைகடீர்ப்பார் என்பது காண்க: **ஓதம்** - கடல்; ஒற்றும் - மோதும்;—(10) **ஒற்றி ஊரும்** - ஒன்றுபட்டு வாழும்; உரைத்த - அகரவீற்றுப் பலவின்பாற்பெயர்.

தலவிசேடம்:— **திருவொற்றியூர்** தொகுதி III பக்கம் 741 பார்க்க. தொண்டைநாட்டு 20-வது பதி.

3360. **(இ-ள்)** இந்த...இருந்தார் - மேற்கூறியவாறு இந்த நிலைமையாராகி நம்பிகள் இங்குத் திருவொற்றியூரில் இருந்தருளினர்; முன்பே...அநிந்திதையார் - (நம்பிகள் இவ்வாறு சேர்வதற்கு) முன்பாகவே இவர் பொருட்டு அழகிய குளிர்ந்த கயிலை மலையினை நீங்கி இறைவரது திருவருள் ஆணையின்படி தென்றிசைப் பிறவியிற் போந்த அநிந்திதையார்; வந்து...சாற்றுவாம் - வந்து நிலவுகலத்தின் மேல் அவதரித்து, வளர்ந்து, பின்னர் (இந்நாள்) வன்றொண்டரின் மணஞ் சூழ்ந்த புயத்தினைச் சேர்ந்த வரலாற்றினை யாவருக்கும் அறியும்படி சொல்லப் புகுகின்றோம்.

(வி-ரை) இது கவிக்கூற்று; இதுவரை நம்பிகளது சரித நிகழ்ச்சியில் உடன்போந்த நம் மனத்தை எச்சரித்து, இனி, முன்னைத் தொடர்புடைய மற்றொரு வரலாற்றில் புகுதற்குச் சித்தம் செய்தவாறு. இவ்வாறு முன்னர்ப் பரவையார் வரலாற்றுத் தொடக்கத்திலும் வேறு பிரித்துத் தொடங்கிய நிலை (277)யும் கண்டு கொள்க; முன் சரித நிகழ்ச்சிகளைச் சுருங்கக்கூறித் தொடர்ந்து கொண்ட தன்மையும், இனிக்கூறும் சரிதத்துக்குத் தோற்றுவாய்

3359. பாடி யறிவு பரவசமாம் பரிவு பற்றப் புறம்போந்து
நீடு விருப்பிற் பெருங்காத னிறைந்த வன்பர் பலர்போற்றத்
தேடு மயனுந் திருமாலு மறிதற் கரிய திருப்பாதங்
கூடுங் காலங் களிலணைந்து பரவிக் கும்பிட் டினிருந்தார். 205

காலங்களிலணைந்து கும்பிட்டு - பூசைக்காலங்களில் எல்லாம் திருக்கோயிலில் அணைந்து வழிபட்டு.

இனிது இருந்தார் - மன ஒருமைப்பாட்டினில் மகிழ்ந்து அமர்ந்தருளினர்.

பரவசமாய் - என்பதும் பாடம். **205**

I. திருவொற்றியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

பாட்டும் பாடிப் பரவித் திரிவார், ஈட்டும் வினைக டீர்ப்பார் கோயில்
காட்டுங் கலமுந் திமிலுங் கரைக்கே, ஓட்டுந் திரைவா யொற்றி யூரே. (1)
ஒற்றி யூரு மரவும் பிறையும், பற்றி யூரும் பவளச் சடையார்
ஒற்றி யூர்மே லூர னுரைத்த, கற்றுப் பாடக் கழியும் வினையே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:— வினைகள் தீர்ப்பார் கோயில் திருவொற்றியூரே. பாடிப் பரவித் திரிவார் ஈட்டும் வினைகள் தீர்ப்பார் (1); தன்னை முன்னம் நினைக்கத் தருவான்(4); வினையை வீட்ட (7) என்பன நம்பிகளது முன்னை நிலைச் சரிதக் குறிப்பும், அதனைத் தொடர்ந்து இனி இங்கு நிகழவுள்ள நிகழ்ச்சிகளின் குறிப்பும் பட நிற்கின்றமை காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பாட்டும் பாடிப் பரவித் திரிவார் - பாட்டும். சொலவல கீதம் பாடுதலன்றிப் பாட்டும்பாடி; **பரவி** - பாட்டினாலும் உரையினாலும் துதித்து; **திரிவார்** -அதுவன்றி வேறு தொழில் செய்யாது அதுவே தொழிலாய்த் தலங்கள் தோறும் திரிபவர்; இது நம்பிகள் சரிதக் குறிப்புப்பட நிற்றல் காண்க; **ஈட்டும் வினைகள்** - முன் ஈட்டியவையும் இனி ஈட்டப்படுவனவும் ஆகிய வினைகள்; இதுவும் நம்பிகள் சரிதக் குறிப்புப்பட நிற்றல் காண்க; கயிலையில் பெற்ற இறைவராணையின் வழிவந்த இப்பிறவியின் எஞ்சிய பகுதி இங்கு அனுபவித்துத் தீரநின்றதும் காண்க. இக்கருத்தினை மேல் (3382-ல்) நம்பிகள் திருவாக்கில் வைத்து ஆசிரியர் விரித்தலும் காண்க. **காட்டும் கலமும் திமிலும் கரைக்கே ஓட்டும் திரை - கலம்** - மரக்கலம்; **திமில்** - சிறு படகு; திரை - இவற்றைக் கரையிற் செலுத்தும் அலைகள்; **காட்டும்** - உலக அண்டம், கோள வடிவினதாதலால் கடல் வளைவுக்குள் நின்று மேலேறி வரவர முதலில் உச்சிமட்டும் தோன்றிப், பின்னர்ச் சிறிது சிறிதாக முழுமையும் தோன்றும் நிலைகுறித்தது. "விடுங்கலங்க ணெடுங்கடலி னின்று தோன்றும்" (ஒற்றி - தாண் 4); **ஓட்டும்** - செலுத்தும்; **கரைக்கே திரை ஓட்டும்** - பிறவிக்கடலுட்பட்டு அலையும் உயிர்களைக் கரை சேர்த்தும் குறிப்பு; திரையின்மேல் வைத்துக் கூறப்பட்டது. "மனமெனுந் தோணிபற்றி...கடலோடும்போது - உனையுனு முணர்வை நல்கா யொற்றியூருடைய கோவே" என்ற திருநேரிசை ஈண்டுக் கருதத்தக்கது;

சங்கிலியார் வரலாறு

3360. இந்த நிலைமை யாரிவரிங் கிருந்தார்; **முன்பே யிவர்க்காக**
அந்தண் **கயிலை மலைநீங்கி யருளாற் போந்த வநிந்திதையார்**
வந்து புவிமே லவதரித்து வளர்ந்து **பின்பு வன்றெண்டர்**
சந்த விரைசூழ் புயஞ்சேர்ந்த பரிசு தெரியச் சாற்றுவாம். 206


---

(2) பந்தும்...பாவை சிந்தை கவர்வார் - அகப்பொருட்டுறை; தாய்கூற்று; **பந்தும் கிளியும் பயிலுதல்** - இளமங்கைப் பருவம் குறித்தது; "பூவை தந்தாள் பொன்னம் பந்து தந்தா ளென்னைப் புல்லிக் கொண்டு, பாவைதந் தாள்பைங் கிளியளித்தா ளென்றன் பைந்தொடியே" (திருக்கோவை-200); "கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயரும்" (தேவா); "மாதராள், பொற்கூட்டிற் பூவையை வாங்கி யதனேடுஞ், சொற்கோட்டிக் கொண்டிருந்த வேல்வைக்கண்—" (ஞானவுலா); **பாவை** - பாவைபோன்ற பெண்; **பாவை சிந்தை கவர்வார் - எந்தம் அடிகள்** - சங்கிலியம்மையாரையும், நம்பிகளையும் குறிப்பா லுணர்த்தி நின்றன;—(4) **என்ன தெழிலு நிறையுங் கவர்வான்** - அகப்பொருட்டுறை; தலைவிகூற்று; புன்னை...புறவு; நெய்தற்கரு; **தன்னை முன்ன நினைக்கத் தருவான்** - நான் நினைப்பதன்முன் தான் நினைத்துத் தன்னை நினைக்கும் மருள்தருவான்; அவனை நினைத்தற்கும், முன்னர் அவன் அருள் புரியவேண்டு மென்பது; நம்பிகள் சரிதக் குறிப்புமாம்; **உன்னப்படுவான்** - தன்னை முன்னந் தந்தபின் நினைப்பினுள் வருபவன்;—(5) **உணங்கல்** -பலிச்சோறு; **வணங்கும் (இடை)** - துவளும்; மெல்லிதாதலின் வளையும்; **வணங்கும் மடவார்** என்று கூட்டியுரைப்பினுமமையும்; (6) **அடைவார்...உடையான்** - நம்பிகள் சரித நிகழ்வும், மேல் விளைவும் குறிப்பு;—(7) **சென்ற** - உலகை நாசம் செய்து மேற் சென்ற; வினையை வீட்ட - நம்பிகள் சரிதக் குறிப்பு; (8) **பவளப்படியான்** - பவளம்போன்ற திருமேனி; **வினைகள் தீர்ப்பார்** - சரிதக் குறிப்பு; மேற்பாட்டிலும் எற்றும் வினைகடீர்ப்பார் என்பது காண்க: **ஓதம்** - கடல்; ஒற்றும் - மோதும்;—(10) **ஒற்றி ஊரும்** - ஒன்றுபட்டு வாழும்; உரைத்த - அகரவீற்றுப் பலவின்பாற்பெயர்.


தலவிசேடம்:— **திருவொற்றியூர்** தொகுதி III பக்கம் 741 பார்க்க. தொண்டைநாட்டு 20-வது பதி.

3360. **(இ-ள்)** இந்த...இருந்தார் - மேற்கூறியவாறு இந்த நிலைமையாராகி நம்பிகள் இங்குத் திருவொற்றியூரில் இருந்தருளினர்; முன்பே...அநிந்திதையார் - (நம்பிகள் இவ்வாறு சேர்வதற்கு) முன்பாகவே இவர் பொருட்டு அழகிய குளிர்ந்த கயிலை மலையினை நீங்கி இறைவரது திருவருள் ஆணையின்படி தென்றிசைப் பிறவியிற் போந்த அநிந்திதையார்; வந்து...சாற்றுவாம் - வந்து நிலவுகலத்தின் மேல் அவதரித்து, வளர்ந்து, பின்னர் (இந்நாள்) வன்றெண்டரின் மணஞ் சூழ்ந்த புயத்தினைச் சேர்ந்த வரலாற்றினை யாவருக்கும் அறியும்படி சொல்லப் புகுகின்றேம்.


(வி-ரை) இது கவிக்கூற்று; இதுவரை நம்பிகளது சரித நிகழ்ச்சியில் உடன்போந்த நம் மனத்தை எச்சரித்து, இனி, முன்னைத் தொடர்புடைய மற்றொரு வரலாற்றில் புகுதற்குச் சித்தம் செய்தவாறு. இவ்வாறு முன்னர்ப் பரவையார் வரலாற்றுத் தொடக்கத்திலும் வேறு பிரித்துத் தொடங்கிய நிலை (277)யும் கண்டு கொள்க; முன் சரித நிகழ்ச்சிகளைச் சுருங்கக்கூறித் தொடர்ந்து கொண்ட தன்மையும், இனிக்கூறும் சரிதத்துக்குத் தோற்றுவாய்



ஞாயிறு-பூதேரீசுரர்
(புஷ்பரதேஸ்வரர்) ஆலயம்



ஞாயிறு - சங்கிலி
நாச்சியார் திருவுருவம்



ஞாயிறு-பூதேரீசுரர் (புஷ்பரதேஸ்வரர்) ஆலயம் -
உட்புறத்தோற்றம், கர்ப்பக்கிருகம்



ஞாயிறு-ஞாயிறுகிழார் மனை-பாட்டு-3361
சங்கிலிநாச்சியார் திரு அவதாரம் செய்து வளர்ந்த மனை(பழைய படம்)
(படத்தின் மத்தியில் காணும் சர்க்கார் சர்வே கல் மனையின்
தென்மேற்கு மூலையின் எல்லையைக் காட்டுவது).

படம்-17

உ
சிவமயம்

தலவிசேடம் - ஞாயிறு :- இப்பதி சென்னையிலிருந்து வடகிழக்குத் திருவொற்றியூர் வழி செல்லும் வடகீழ் இருப்புப் பாதையில் 17 நாழிகை யளவில் உள்ள மீஞ்சூர் நிலையத்திலிருந்து வடமேற்கே 2 நாழிகையில் குசஸ்தல ஆற்றைக் கடந்து வடக்கில் 1½ நாழிகையில் உள்ளது. இது சங்கிலி நாச்சியார் அவதரித்து வளர்ந்த பெருமையுடையது. பழய சிவாலயம் உண்டு. சோழர் காலத்துத் திருப்பணி யுடையது. சுவாமி - பூதேரீசுவரர் (புஷ்பரதேசுவரர்) அம்மை - சொர்ணாம்பிகை. சுவாமி அம்மை கோயில்களுக்கிடையே காரணீசுவரர் சந்நிதி உண்டு. மற்றும் இரண்யேசுவரர், கபாலீசுவரர், ஜம்புகேசுவரர் என்ற மூன்று சந்நிதிகளும் உண்டு. காசியாத்திரையாக இவ்வழி வந்த ஒரு சோழ அரசர், இங்குத் தடாகத்து நடுவில் தனியாய் மலர்ந்திருந்த அழகியதொரு தாமரை மலரைப் பறிக்க முயன்றபோது, கண் மறைந்ததாகவும் யாத்திரை செய்து திரும்புகையில் திருப்பணி செய்வதாக அவர் பிரார்த்தித்தவுடன் அரைக்கண் பார்வை பெற்றதாகவும், அவ்வாறே திரும்பிவந்தபோது, அந்தத் தாமரையின்மேல் இறைவர் பேரொளியுடன் ஞாயிறு ஆகத் தோன்றியதாகவும், அந்த இடத்தில் கருப்பக்கிருகம் அமைத்துத் திருப்பணி செய்தபின் கண் ஒளி முழுதும் பெற்றதாகவும், அதுமுதல் இத்தலத்துக்கு ஞாயிறு என்று பெயர் வழங்குவதாகவும் வருவது கர்ணபரம்பரை வரலாறு.

திருக்கயிலையில் அம்மை சேடியார் இருவருள் ஒருவராகிய அநிந்திதையார், நம்பியாரூரர் பொருட்டுச் சிவனருள் ஆணைவழியே இவ்வுலகில் வந்து, இத்தலத்தில் ஞாயிறுகிழாரின் திருமகளாராக அவதரித்து வளர்ந்து திருவொற்றியூரை அடைந்து கன்னிமாடத்தில் தங்கிப், பூத்திருப்பணி செய்து நம்பியாரூரரை மணந்து கொண்ட வரலாறு புராணத்துட் காண்க. அவர் அவதரித்து வளர்ந்த திருமனை ஞாயிறுகிழார் மனை என்று வழங்கி வருகின்றது. அஃது அடையாளங்களுடன் இரண்யேசுரர் ஆலயத்துக்கு வடகிழக்கில் உள்ளது. அந்த வமிசத்தார் ஒரு முருகேச முதலியார் காலம் வரை குடியிருந்து வந்து, பின் அண்மையில் ஒரு முகமதியருக்கு விற்றுவிட்டுச் சென்னைக்குக் குடிபோய்விட்டனர் என்று அறியப்படுகின்றது. அந்த மனையை மீட்டுச், சைவர்கள் வணங்கும் திருமடமாக அமைத்துப் பாதுகாத்து வழிபடுவது சைவ மக்களின் பெருங் கடமையும் உத்தமமாகிய சிவபுண்ணியமுமாகும். சைவ உலகம் இதைச் செய்யுமா?

திருவாரூரில் பரவை நாச்சியார் திருமனை தனியாலயமாக உள்ளதன்றோ? திருப்பூந்துருத்தியில் திருநாவுக்கரசர் பெருமகனார் தாமே அமைத்த திருமடமும், திருநல்லூரில் அமர்நீதி நாயனார் அமைத்துப் பேறுபெற்ற திருமடமும், சீகாழியில் திருஞானசம்பந்த நாயனார் திருஅவதரித்த திருமனை(இடம்)யும் என்ற இவை போல்வன சைவ சமயத்தினர்களின் விலைமதிக்க முடியாத பெரும் சேமநிதிகளல்லவா? இவற்றையெல்லாம் பாதுகாத்து வழிபடுதல் சைவர்களின் பெருங் கடமையல்லவா? திருவருள் கூட்டுக.

படம்-18

3361. **நாலாங் குலத்திற் பெருகுநல முடையார் வாழு ஞாயிற்றின்**
மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க **திருஞா யிறுகிழவர்**
பாலா தரவு தருமகளா ராகிப் பார்மே **லவதரித்தார்**
ஆலா லஞ்சேர் கறைமிடற்ரு **ரருளான் முன்னை யநிந்திதையார்.** 207

செய்து கொண்ட தன்மையும் ஆகக் கவி யமைதியும் கண்டு களிக்கற்பாலது.

இந்த நிலைமை...இருந்தார் - இதுவரை தொடர்ந்து கூறிவந்த சரிதப் பகுதியை முடித்து நிறுத்திக் கொண்ட நிலை; இதன் தொடர்ச்சி மேலே (3378-ல்) வைத்துக் கண்டு கொள்க.

அந்தண்...அநிந்திதையார் -திருமலைச் சிறப்புப் பார்க்க.

அருளால் - இறைவரது அருளாணையினால்; திருக்கயிலையினின்றும் பிரிந்து கன்ம பூமியாகிய நிலவுலகிற் பிறவியிற் செலுத்துதலும் அருளேயாம் என்பது.

அநிந்திதையார் - கயிலையில் முன்னை நிலையில் அம்மையாரின் பெயர். (நிந்தையில்லாதவர் என்பது பெயர்ப் பொருள்.)

வந்து புவிமேல் அவதரித்து வளர்ந்து - நிலவுலகில் வந்தது முதல் நம்பிகள் அணையும் வரை உள்ள அம்மையாரின் சரிதப் பகுதி.

பின்பு...பரிசு - திருமண வரலாற்றுப் பகுதி.

தெரிய -யாவரும் அறியும்படி. 206

3361. (இ-ள்) நாலாங்குலத்தில் - வேளாளர் மரபிலே; பெருகு...ஞாயிற்றின் - பெருகி வளர்கின்ற நன்மைகளையுடைய மக்கள் வாழ்கின்ற ஞாயிறு என்னும் பதியிலே;மேலாம்...மிக்க - மேன்மை பொருந்திய ஒழுக்கமுடைய வேளாண்மையிற் சிறந்த; திருஞாயிறு கிழவர்பால் - திருஞாயிறு கிழவர் என்னும் பெரியாரிடத்து; ஆதரவு தரும் மகளாராகி - அன்பு தரும் மகளாராக; முன்னை அநிந்திதையார் - முன்னை நிலையில் அநிந்திதையார் என்ற பெயருடன் விளங்கிய அம்மையார்; ஆலாலம்...அருளால் - ஆலாலவிடம் பொருந்தியதனாலே நீலகண்டராகிய சிவபெருமானது திருவருளாணையினாலே; பார்மேல் அவதரித்தார் -இவ்வுலகின்மேல் அவதாரஞ் செய்தனர்.

(வி-ரை) நாலாங்குலம் - அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்று முன்னைப் பழந்தமிழ் நூல்களில் வகுக்கப்பட்ட நான்கு குலங்களுள்ளே நான்காவதாக வகுக்கப்பட்ட வேளாளர் குலம்;இதற்கு இவ்வாறன்றிப் பிராமணன் முதலிய நாற்குலத்து - வகுப்பினுள் நாலாவது என்று கொண்டும், சூத்திரன் என்று வருவித்துக் கொண்டும், அப்பெயர்க்கு உரிமையில்லாது இந்நாளிற் கொள்ளப்படும் பல இழிவுப் பொருள்கள் கொண்டும் இடர்ப்பட்டு இந்நாட் பெரும்பூசலுக்கு இடம் செய்து இடர்ப்படுத்துவோர் பலர். "வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது, இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" (தொல்.பொருள். மரபியல் 80). இதுபற்றி 401-ன் கீழ் உரைத்தவையும் பார்க்க.

பெருகுநலம் உடையார் - சிறந்த ஒழுக்க முடைய குடிமக்கள் என்பது. இங்குக் கூறியவர்கள் அந்தணர் வேளாளர் முதலிய குடிகள் பலரும்.

3362. மலையான் மடந்தை மலர்ப்பாத **மறவா வன்பின் வந்தநெறி**
தலையா முணர்வு வந்தணையத் தாமே யறிந்த சங்கிலியார்
அலையார் வேற்கட் சிறுமகளி ராயத் தோடும் விளையாட்டு
நிலையா யினவப் **பருவங்க டோறு** நிகழ நிரம்புவார், 208

ஞாயிற்றின் - ஞாயிறு என்ற பதியிலே.

மேலாங் கொள்கை வேளாண்மை - மெய்ம்மையினிற் சிறந்த வேளாளரின் தன்மை. "மெய்ம்மைநிலை வழுவாத மேன்மைநெறி விழுக்குடிமைச், செம்மையினுற்" *(1606)* "நம்பு வாய்மையி னீடு" *(449)* என்பன முதலியவை காண்க.

ஞாயிற்றின் மேலாம் கொள்கை - ஞாயிறு - சூரியன் என்று கொண்டு, சூரியனை விட மேலாக விளங்கும் புகழுடைய என்ற குறிப்புமாம். "பலர்புகழ் ஞாயிறு" (முருகு).

திருஞாயிறு கிழவர் - கிழவர் - வேளாளர்களுக்குரிய சிறப்பாகிய மரபுப் பெயர்; இது **கிழார்** என வழங்கும். கிழமையை உடையோர் என்பது பொருள். நிலத்திற்குரிய உரிமை குறித்தது; "செல்லான் கிழவ னிருப்பி னிலம்புந், தில்லாளினூடி விடும்" (குறள்). இப்பெயர் பெரும்பாலும் ஊர்பற்றியே வழங்கப்படும்; செங்குன்றூர்கிழார் - கோவூர்கிழார் - குண்டையூர் கிழார் முதலியவை காண்க; அவ்வூரில் முதன்மைபெற்று எல்லாராலும் விளக்கமாயறியப்படுதல் கருத்து. ஞாயிறு என்னுமூரின் முதன்மையுடையோர் என்பதாம்.

ஆதரவு தரு மகளாராகி - ஆதரவு - அன்பு - மேம்பாடு என்றலுமாம். **தரும்** - அவரால் ஆதரவு பெறும் மகளார் என்பதன்றி அவருக்கு ஆதரவு- பெருமை - சிறப்பு - தரும் மகளாராயினுர் என்பதாம்.

பார் மேல் - கன்மபூமியாகிய நிலவுலகத்தில்;புவனியில்.

அருளால் முன்னை அநிந்திதையார் - முன்னர்த் திருமலைச்சருக்கத்திற் போந்த முன்னை வரலாற்றின் ருெடர்பு முற்றும் அறிவித்த கவிநயம் கண்டுகொள்க (33-37); இப்பாட்டால் ஊரும், மரபும், பெற்ருேரும்,முன்சரிதமும் கூறியவாறு. 207

3362. **(இ-ள்)** மலையான்...நெறி-மலையரசன் மகளாராகிய உமையம்மையாரது மலர் போன்ற பாதங்களை மறவாத அன்பு பூண்டுவந்த ஒழுக்கத்தின்; தலையாம்...அணைய - முன்னை யுணர்வு வந்து பொருந்த; தாமே அறிந்த சங்கிலியார் - அதனைத்தாமே இயல்பில் அறிந்தவாறே வந்தவதரித்துச் சங்கிலியார் என்னும் திருநாமம் பூண்ட அம்மையார்;அலையார்...நிகழ - அலைத்தற்ருெழில் பொருந்திய வேல் போன்ற கண்களையுடைய சிறு மகளிர் கூட்டத்தோடும் விளையாட்டுக்களின் நிலைமைகள் அவ்வப் பருவங்கள் முறையே வந்து நிகழ; நிரம்புவார் - வயது நிரம்புவாராக,

(வி-ரை) மலையான்...வந்தநெறி - முன்னை நிலையில் திருக்கயிலையில் உமைஅம்மையாருக்குத் திருப்பணி செய்த நிலையினை மறவாத முன்னுணர்வுடன் அம்மையார் இவ்வுலகில் அவதரித்தார் என்பது. இவ்வாறு முன்னை நிலை உணர்வுடன் உதித்தல் சிவனருளாலாவது. கோச்செங்கட் சோழ நாயனுர், "ஆதிமூர்த்தி யருளான்முன்

3363. சீர்கொண்ட மரபில் வருஞ்செயலே யன்றித் தெய்வ நிகழ்தன்மை
பாரி லெவரு மதிசயிக்கும் பண்பில் வளரும் பைந்தொடியார்
வாரு மணிய வணியவாம் வளர்மென் முலைக ளிடைவருத்தச்
சாரும் பதத்திற் றந்தையார் தங்கண் மனைவி யார்க்குரைப்பார். 209

னறிந்து பிறந்து" (மேற்படி புரா. 12), "முன்னைப் பிறப்புணர்ந்து, பெற்ற முயர்த்தார்க் காலயங்கள் பெருக அமைத்து மண்ணுண்ட" வரலாறு காண்க. இவ்வாறு வருதல் மிக அரியதாய்ச் சிவனை நோக்கி முயன்ற முன்னைப் பெருந்தவத்தால் அன்றி ஆவதன்று.

தலையாம் உணர்வு வந்தணைய - தலை ஆம் - மேன்மை பெறுகின்ற; சிறப்பு ஆகும். **வந்தணைய** - அருளால் வந்து பொருந்த.

தாமே யறிந்த - வேறொருவாற்றானும் பிறராலும் அறிவிக்கப்படாமல் தம் இயல்பினாலேயே உள்ளூற அறிந்த. பரவையார் திறத்தில் "தங்கள் பனிமலைவல்லி பாதங் கூடுமன் புருகப் பாடுங் கொள்கை" (281) என்றது காண்க.

சங்கிலியார் - முன் கூறியவாறு அவதரித்த அநிந்திதையாருக்குச் சங்கிலியார் என்று பெயரிட்டனர்; அந்தச் சங்கிலியார் என்க. இவ்வளவும் குறிப்பெச்சத்தான் வருவித்துரைத்துக் கொள்க.

அலையார் வேற்கண் - அலை - முதனிலைத் தொழிற்பெயர். அலைத்தலாகிய தொழில் பொருந்திய.

வேற்கண் - வேல் போன்ற கண்; மெய்யும் வினையும் பற்றிவந்த உவமத்தொகை.

விளையாட்டு நிலையாயின அப்பருவங்கள் - இவை; அம்மானை, நீராடல், பொன்னூசல் முதலாகப் பிள்ளைத்தமிழ் நூல்களிற் பேசப்படுவன. தோணோக்கம், பூவல்லி முதலியனவாய்த் திருவாசகத்தில் வருமவற்றுள் இப்பருவநிலைக் கேற்ற பெற்றியும் கொள்க.

நிகழ - விளையாட்டுநிலை யாயினவை ஏற்ற அவ்வப்பருவங்களில் வந்து நிகழ; **நிலையாயின** - அகரவீற்றுப் பலவின்பாற் பெயர்; **அப்பருவங்கள்** - உரிய அவ்வப் பருவங்கள்; **நிரம்புவார்** - வயது கூடி வளர்வாராகி; **நிரம்புவார் - சாரும் பதத்தில் -** என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

விளையாடும் - என்பதும் பாடம் *208*

3363. **(இ -ள்)** சீர்கொள்...அன்றி - (அவ்வாறு பருவ நிரம்புநாளில்) சிறப்புக் கொண்ட குல வொழுக்க நெறியில் வரும் செயல்களே யல்லாமல்; தெய்வ நிகழ் தன்மை - தெய்வத்தன்மை விளங்கும் பண்புகளும் (விளங்க); பாரில்... பைந்தொடியார் - உலகில் எல்லாரும் அதிசயப்படும் பண்பிலே வளர்ந்து வருகின்ற பைந்தொடியாராகிய சங்கிலியம்மையார்; வாரும்...பதத்தில் - கச்சுமணியும்படி சமீபித்த பருவமுடைய வளர்கின்ற தனங்கள் இடையினை அலைக்கும்படி சார்கின்ற பருவத்தில்; தந்தையார்... உரைப்பார் - அவர் தந்தையார் தமது மனைவியாருக்கு எடுத்துச் சொல்லுவாராய்,

(வி-ரை) மரபில் வரும் செயல் - மரபு - குலம்; இவர் அவதரித்த வேளாண் மரபுக்கேற்றவாறு; வருகின்ற பருவங்கள் எல்லாக் குலத்திலும் ஒப்ப நிகழ்வனவாயினும்

3364. "**வடிவுங் குணமு நம்முடைய மகட்கு மண்ணு ளோர்க்கிசையும்**
படிவ மன்றி மேற்பட்ட பரிசாம் பான்மை யறிகிலோம்;
கடிசேர் மணமு மினிநிகழுங் கால"மென்னக் கற்புவளர்
கொடியே யனைய மனைவியா "ரேற்கு மாற்ருற்கொடு"மென்ருர். 210

அவற்றுக்கு உரியனவாய் வெளிப்பாடு பெறவரும் செயல்கள் மரபு ஒழுக்கத்துக் கேற்றவாறு நிகழ்வன என்பது; **மரபு** - முறை என்றலுமாம்.

தெய்வ நிகழ் தன்மை - தெய்வத்தன்மை வெளிப்படுதல். உலகியலின் நீங்கி இறைவன் பற்ருகிய செயல்கள் விளங்குதல்.

அதிசயிக்கும் - இப்பருவத்துக்கு மேற்பட்ட முதுக்குறைவும் இறைபாலன்பும் கண்டு உலகில் எவரும் பெருமிதப்பட்டு வியக்கத்தக்க.

வாரும் அணிய அணிய ஆம் - **வார்** - கச்சு; **வாரும்** - மேலாடையே யன்றிக் கச்சும் என்று உம்மை எதிரது தழுவிய எச்சவும்மை; **வாரும் அணிய** - மேலாடையும் கச்சும் அணியும்படி.

அணிய ஆம் - பருவ நெருங்கிய - சமீபித்த - நிலையினவாகிய; **அணிய ஆம் - முலைகள்** - என்று கூட்டுக; **வளர்** - பூரித்துப் பெருக்கும்.

முலைகள் இடைவருத்தச் சாரும்பதம் - முலைகள் பெருத்து வளர்தலால் அப்பாரம் தாங்க மாட்டாது இடை துவளச் சாரும்; **இடை** - இடையை; இரண்டனுருபு தொக்கது. "துணைமுலைகள் கொண்டநுசுப் பொதுங்குபதம்" (*1721*)

உரைப்பார் - உரைப்பாராகி; **உரைப்பார் - என்ன** என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *209*

3364. **(இ -ள்)** நம்முடைய மகட்கு - நம்முடைய மகளுக்கு;வடிவும் குணமும்- வடிவமும் குணங்களும்; மண்ணுளோர்க்கு...அறிகிலோம் - உலகினர்களுக்குப் பொருந்தும் தன்மை யளவில் அமைவதன்றி மேம்பட்ட தன்மையால் அமைகின்ற நிலையினை என்னென்று அறிகிலோம்; கடிசேர்...காலம் 'என்ன - காப்பு அமைந்த திருமணமும் இனி நிகழ்தற்குரிய காலம் என்று சொல்ல; கற்பு...என்ருர் - கற்புப் பெருக வளரும் கொடியே போன்ற மனைவியார் "நமக்குப் பொருந்தும்படியினுல் திருமணஞ் செய்து கொடும்" என்று சொன்னுர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வடிவும்...அறிகிலோம்- இது தந்தையார் தம் மனைவியாருக் குரைத்தது.

வடிவும் குணமும் - புறமும் அகமும் ஒன்று போலவே; வடிவம் - திருமேனி வனப்பின் சிறப்பு. **குணம்** உட்பெருமை; **குணம்** - நற்குணம்.

மண்ணுளோர் - மண்ணுலகத்தோராகிய ஏனைப் பெண்கள்.

மேற்பட்ட பரிசாம் பான்மை - மானிடத்தன்மையின் மேம்பாடு; தெய்வப் பண்பு நிகழவுள்ள தன்மை; Superhuman என்பர் நவீனர்; **பரிசும் ஆம் - பரிசு** - புறத்திற்

3365. தாய ரோடு தந்தையார் பேசக் கேட்ட சங்கிலியார்
"ஏயு மாற்ற மன்றிது; **வெம் பெருமா னீசன் றிருவருளே**
மேய வொருவர்க் குரியதியான்;வேறென் விளையு?" மெனவெருவுற்
றுய வுணர்வு மயங்கிமிக வயர்ந்தே யவனி மிசைவிழுந்தார். 211

காண உள்ளது **பான்மை** - அதற்குக் காரணமாகிய உள்நிலை; பூண் (3366-ல்) **தன்மை - பண்பு** என்பனவும் இக்கருத்தன.

அறிகிலோம் - அதன் காரணம் அறியகில்லோம்.

கடிசேர்...காலம் - மணம் செய்தற்குரிய காலம்; ஆதலின் மணவுறவோரின் மேம்பட்ட பரிசாயினமையால் அதற்கேற்றபடி உள்ள மணமகனைத் தேடி மணஞ் செய்து கொடுத்தல் வேண்டும்; உனது கருத்து என்னை? என்பது குறிப்பெச்சத்தால் கொள்க. இதையறிந்த மனைவியார் "ஏற்குமாற்றால் கொடு" என்றது காண்க.

ஏற்குமாறு - குலநலத்துக்கும் பண்புக்கும் குணநலத்துக்கும் ஏற்றபடி; **கொடும்** - மணஞ்செய்து கொடுங்கள். **கடிசேர்காலம்** - பன்னிரண்டைப் பிராயம். **210**

3365. (இ-ள்) தாயரோடு...சங்கிலியார் - தம் தாயாரும் தந்தையாரும் இவ்வாறு பேசுதலைக் கேட்ட சங்கிலியார்; ஏயும்...விளையும்? என - இது என்பாற் பொருந்தும் பேச்சன்று; எம்பெருமான் திருவருளே முற்றும் பொருந்திய ஒருவருக்கு நான் **உரியது;** இதனின் வேறாக இவர்கள் நினைப்பது என்னை் விளையுமோ என்று; வெருவுற்று...விழுந்தார் - வெருக்கொண்டு ஆகிய உணர்வு மயங்கி மிகவும் மூர்ச்சித்து நிலத்தின்மேல் **விழுந்தார்.**

(வி-ரை) தாயாரோடு தந்தையார்-பேச-தாயாரும் தந்தையரும் பேசுதலை.

ஏயும் மாற்றம் - தம்பாற் பொருந்தும் சொல்.

எம்பெருமான்...உரியதியான் - இது முன்னையநிலை யறிவு பெற்ற தன்மையினால் சங்கிலியார் தாமே யறிந்த (3364) நிலையிற் பெற்ற அறிவு. மேல் 3367 பார்க்க. இச்சொல் ஏற்றதன்று என்று துணிந்தமைக்குக் காரணம் கூறியபடி.

திருவருளே மேய - முழுதும் திருவருளே அடைந்த.

உரியது யான் - உரியனியான் என்னாது, உரியது என்று அஃறிணையிற் கூறியது நாயகி, தம்மை நாயகனது உடைப் பொருளாகவே வைத்துக் கொண்டொழுகும் தமிழ் வழக்குப் பற்றி என்க; "அந்தமுறை யாலவர்க்கே யுரியது நான்" (1297) என்று திலகவதியம்மையார் கூறிய நிலையும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

வேறென் விளையும் என - இவர் கூறிய மாற்றத்தினாலே வேறே எவ்வாறு என்ன தீமை விளையுமோ என்றஞ்சி; **வேறென் விளையும்** என்ற அதனின் வேறாக எது விளையும் ஒன்றும் விளையாது என்று எதிர்மறை வினாக்குறிப்புப்பட உரைத்தலும் குறிப்பு. **211**

3366. **(இ-ள்)** பாங்கு...பரிந்தெடுத்தே பக்கத்தில் நின்ற தந்தையாரும் தாயாரும் (அது கண்டு) பதைத்துப் பரிவுடன் அவரை எடுத்தே; ஏங்கும்...தாங்கி - "வருந்தும் உள்ளத்தை

3366. பாங்கு நின்ற தந்தையார் தாயார் பதைத்துப் **பரிந்தெடுத்தே**
ஏங்கு முள்ளத் தினராகி. "யிவளுக் கென்னே வுற்ற?"தெனத்
தாங்கிச் சீத விரைப்பனிநீர் தெளித்துத் தைவந் ததுநீங்க
வாங்க சிலைநன் னுதலாரை "வந்த துனக்கிங் கென்?"னென்ருர். 212

உடையாராய் இவளுக்கு என்னே வந்தது" என்று கலங்கி அவரை அணைத்துத் தாங்கி; சீத...நீங்க - குளிர்ந்த மணமுடைய பனிநீரைத் தெளித்துத் தடவிவிடவே அவரது மயக்கமும் அயர்ச்சியும் நீங்க; வாங்கு...என்ருர் - வளைந்த வில் போன்ற நல்ல நுதலினையுடைய அவரை "இங்கு உனக்கு வந்தது யாது?" என்று கேட்டார்கள்.

(வி-ரை) பாங்கு நின்ற - தந்தையாரும் தாயாரும் முன் கூறியவாறு பேசும் போது சங்கிலியார் அடுத்து நின்று கேட்டிருந்தார் என்பது. இதனை முன்பாட்டிற் பேசக் கேட்ட சங்கிலியார்" என்ற இடத்து வெளிப்படக் கூறுது விட்டனர், இவர் பக்கத்து நின்றதனை அப்பெற்ருேர்கள் உட்கொண்டாரிலர் என்பதுணர்த்துதற்கு.

பதைத்தல் - பரிதல் - ஏங்குதல் - தம்மால் அன்பு செய்யப்பட்ட பொருளின் கண் சடுதியில் நேரும் சோர்வு கண்டபோது அன்புடையார் பால் நிகழும் நிகழ்ச்சிகள்; **பதைத்தல்** - அச்சத்தால் உடம்பு முழுதும் குலுங்கும் மெய்ப்பாடு - நடுக்கம்; **பரிதல் -** இரங்குதல்; **ஏங்குதல் -** மனம் வருந்துதல்; புறநிகழ்ச்சியாகிய பதைத்தல் கண்டவுடன் முதலில் நிகழ்வது; அதன் பின்னரே அதனை எண்ணுதலும் பரிவு கூர்தலும் உளவாகும்; ஆதலின் அம்முறையில் வைத்தார்.

எடுத்தே தாங்கி - கீழே விழுந்தாரை முதலில் எடுத்துத் தாங்குதல் முதற்கண் செய்யத்தக்க உதவி; First aid என்பர்.

நீர் தெளித்துத் தைவந்து - முகத்தில் குளிர்ந்த நீர் தெளித்தலும் கண்களையும் முகத்தையும் தடவுதலும் மூர்ச்சை யடைந்தாரை மீள உணர்ச்சி வரும்படி செய்ய முதலிற் செய்யும் தீர்வு முறைகள்; குளிர்ந்த நீர் தெளித்தலால் இரத்த ஓட்டத்தை உண்முகப்படுத்தி அதிகரிக்கச் செய்து அதன் மூலம் உணர்ச்சிக்குரிய நரம்புக் கருவிகளை ஊக்கப்படுத்துதல் மருத்துவ நூலோர் மரபு: **தைவருதல்-**நீர் தெளித்தலால் உளதாகும் பயனைப் பரவச் செய்தலும் உணர்ச்சி குன்றிய பகுதிகளை ஊக்குதலும் குறித்தது.

தந்தையார் தாயார் பதைத்துப் பரிந்தெடுத்தே ஏங்கு முள்ளத்தினராகி - அப்பூதி நாயனுரின் மகனுர் மூத்த திருநாவுக்கரசு, அரசுகளது திருவமுதுக்காகக் கொணர்ந்த இலையினைத் தாயார் பால் வைத்துத் தளர்ந்து படிமேல் வீழ்ந்தபோது அதுகண்டு இவ்வாறே அவர் தாயாருந் தந்தையாரும் **உளம் - பதைத்தனர்;** உற்று நோக்கி விளங்கிய குறிகளால் விடத்தினுல் வீந்தானென்று துணிந்தனர்; ஆனுல் **துளங்குத லின்றித்** தொண்டர் அமுது செய்வதற்குச் சூழ்வாராயினர் (1810); அங்கு அன்பரை அமுதூட்டும் ஆர்வமாகிய சிவன் பணியே அவர்களை விழுங்கி முன்னின்றது, அதனில் உலகியல் உணர்வாகிய பற்றுக்கள் தாழ்ந்து மறைந்தன; ஆதலின் அவர்கள் துளங்குத லிலராய் மேலே தொழில் செய்தனர். ஆண்டுரைத்தவை பார்க்க. இங்கு அவ்வாறு சிவன்பணி ஒன்றும் முன்னிற்காமையின்

3367. என்று தம்மை ஈன்றெடுத்தார் வினவ **மறைவிட்** **டியம்புவார்**
“இன்றென் னிறத்து நீர்மொழிந்த **திதுவென் பரிசுக் கிசையாது**
வென்றி விடையா **ரருள்செய்தா ரொருவர்க் குரியே னியானினிமேற்**
சென்று **திருவொற்றி யூரணைந்து சிவனா ரருளிற் செல்வ**”னென, 213

உலகப் பற்றாகிய மகண்மை ஆசையொன்றே நின்றது; ஆதலின் இத்தந்தையார் **தாயார்** வருந்தினர்; மேல்வரும் இவர்களது செயலும் அவ்வளவிலே நின்றொழிந்தன; “மற்ற மாற்றம் மறைத்தொழுக” (3368); “மனமருண்டார்” (3369); “அஞ்சி நங்கை செயலேயுடன் படுவார்” (3370) (3371) “ஈசர்க்கேற்ற பணிவிரும்பிக் கன்னிமாடத்தில் உறைகின்றீர்” என்று கண்கணீர்த் தாரை ஒழுக, உரைக்கின்றார், “போனார் தம்பதியில்” என்று வருவன வெல்லாம் காண்க. இவ்வேறுபாடுகள் உய்த்துணரத் தக்கன. **தந்தையார் தாயார் - ஆர் -** விகுதிகள் சங்கிலியாரை மகளாராகப் பெற்ற பெருந்தவச் சிறப்புணர்த்தின.

என்னோ உற்றது - என்னோ - யாது தீமையோ?; **என் - நோ** - என்று பிரித்து என்ன நோய் என்றலுமாம்.

வந்தது - இடநோக்கி, உணர்வு மயங்கி அயர்ந்து விழுதற்குக் காரணமாக நேர்ந்தது என்ற பொருள் தந்தது.

அது நீங்க - அது - உணர்வு மயக்கம் - அயர்ச்சி - இவற்றால் படிமேல் வீழ்ந்த நிலை; **நீங்குதல்** - முன்னை உணர்வுடன் எழுதல்.

வாங்கு சிலை நன்னுதலாரை - வாங்குதல் - வளைதல்; வளைந்த வில் போன்ற நெற்றியுடைமை பெண்களிற் சிறந்த அழகும் அமைப்பும் குறிப்பது; இங்கு முகத்தில் நீர் தெளித்துக் கண்களைத் தைவந்தமையால் அதன் விளைவாக நுதல் கோட்டி (வளைத்து) எழுந்தனர் என்ற குறிப்பும் தந்து நின்றது; நுதல் வளைத்தல் கருத்து மாறுபாடு குறிப்பதுமாம் என்பர்.

வாங்கு நுசுப்பு நுதலாரை - வாங்கு நுசுப்பின் மகளாரை - என்பனவும் பாடங்கள். ***212***

3367. **(இ-ள்)** என்று...இயம்புவார் - தம்மைப் பெற்றெடுத்த தந்தையாரும்; தாயாரும் முன் கூறியபடி கேட்கத்,தங்கருத்தை மறையாமற் சொல்வாராய்; இன்றென்...இசையாது- இன்று என்னைப் பற்றி நீர் சொல்லியவை எனது தன்மைக்குப் பொருந்தாது; வென்றி... உரியேன் யான் - வெற்றி பொருந்திய இடபத்தினை உடைய சிவபெருமானார் திருவருள் செய்யப் பெற்றாரொருவருக்கு நான் உரியவள்; இனிமேல்...செல்வன் என - “இனிமேற் போய்த் திருவொற்றியூரிற் சேர்ந்து சிவபெருமானாரது திருவருள் வழியிலே செல்வேன்” என்று சொல்ல.

(வி-ரை) மறை விட்டு - இங்குத் தந்தை தாயர் கேட்ட வினாவுக்குத் தமது நாயகனைப் பற்றி விடைகூறவேண்டி வருவதால் நாணத்தால் அதனை மறைத்தலை விட்டு; இஃது இந்நாட்டில் தமிழ் மக்களின் நாகரிக இயல்பு என்பது தமிழிலக்கணம்

3368. அந்த மாற்றங் கேட்ட வர்தா மயர்வும் பயமு மதிசயமும்
வந்த வுள்ளத் தினராகி மற்ற மாற்ற **மறைத்தொழுகப்**
பந்த நீடு மிவர்குலத்து நிகரா மொருவன் **பரிசறியான்**
சிந்தை விரும்பி மகட்பேச விடுத்தான்; **சிலருஞ்** சென்றிசைத்தார். 214

அகப்பொருணூல்களாலுமறிக; தலைவியின் கருத்தினை உயிர்த் தோழி தானும் நாண நாட்டம், நடுங்க நாட்டம் முதலிய வகைகளால் உய்த்துணர்தலன்றி, நேரே மொழிய வாராத நிலைகளும், தலைவி கூற்றுக்களாக வருவன வற்றின் நுட்பங்களையும், குறிப்பறிதல் முதலிய துறைகளின் நயங்களையும் உணர்தல் ஈண்டுப் பயன் தரும்.

மறைவிட்டு இயம்புவார் - ஆனல் இங்குச் சங்கிலி அம்மையார் அவ்வாறுள்ள பெண்ணியல்பின் நீங்கியவரோ? எனின், அற்றன்று; தமது வாழ்க்கையின் உள்ளுறையினையே மாறுபடுத்தத்தக்க கேடு வரும்போது உண்மையை வெளிப்படக் கூறும் நிலை யிஃது ஆதலானும், கேட்பவர் தாயும் தந்தையுமே யாதலானும் இஃதொக்கு மென்பது; இவரது பெண்தன்மையின் சிறந்த பண்புகளை மேல்வரும் வரலாற்றின் பல பகுதிகளிலும் கண்டு கொள்க; "அவர்தாம் திருவாரூரின் கண் மகிழ்ந்துறைவது" (புரா.242), "பாங்கியர்க்கு மொழிய" (மேற்படி 254), "எதிர் விளம்பார் ஒன்றியநா ணுடும்மடவா ருடனுதுங்கி உட்புகுந்தார்" (மேற்படி 256); "பாவியே னிது கண்டேன்" (மேற்படி 261) என்பன முதலியவை காண்க.

இன்றென்... இசையாது - வேறெவனுக்கும் ஏற்கும்படி மணமுடித்துக் கொடுத்தல் என் தன்மைக்குப் பொருந்தாது என்பதாம்;இதனை மணமுடித்தல் என்னுது "நீர் மொழிந்தது" என்று கூறிய நிலை, பெண்ணியல்பாகிய நாணின் பகுதியாதலன்றியும் வேருெருவனின் மணம் என்றதனை வாயாலுஞ் சொல்லலாகாது என்ற கற்பின் பகுதியுமாம்.

ஒருவர்க் குரியேன் - இது இசையாது என்றதற்குக் காரணம் கூறியவாறு; முன்னமே உரியேனுய் விட்டமையால் இசையாது என்றபடி; ஒருவர் - ஒப்பற்றவர் என்ற குறிப்புமாம்.

அருள் செய்தார் ஒருவர்க்கு உரியேன் - என் உரிமை நாயகர் முன்னமே சிவபெருமானல் அருளிச் செய்யப் பட்டுள்ளார் என்றது **செய்தார்** என்ற இறந்த காலக் கூற்றின் குறிப்பு.

இனிமேல்...செல்வன் - இனிமேல், அத்திருமணம் கூடும் வரையில் திரு வொற்றியூரில் அணைந்து அருள்வழியே இருந்து அருள்வழியே அதனைப் பெறுவேன் என்பதாம். **யான் - உரியேன்** என்றும், (ஆதலின்), **யான் செல்வேன்** என்றும் இருவழியும் காரணப் பொருள்படக் கூட்டுக.

என - என்று சொல்ல. 213

3368. (இ-ள்) அந்த மாற்றம்... உள்ளத்தினராகி - அந்த மாற்றத்தினைக் கேட்டு அத் தந்தையாரும் தாயாரும் அயர்ச்சியும் பயமும் அதிசயமும் பொருந்திய மனத்தை யுடையவர்களாகி; மற்ற...ஒழுக - மற்ற அம்மாற்றத்தைப் பிறர் அறியாமல் மறைத்து

ஒழுக;பந்த நீடும்...பரிசறியான் - பலவழிகளிலும் இவர்களுடன் குலத்தால் நிகராகியிருந்து இவர்களது குலத்தால் ஒப்புடைய ஒருவன் இத்தன்மை யறியாதவனாய்; சிந்தை விரும்பி மகட்பேச விடுத்தான் - மனவிருப்பத்தோடும் மகளை மணம் பேசச் சிலரை அனுப்பினான்; சிலரும் சென்றிசைத்தார் - (அவ்வாறு விடுக்கப்பட்ட) அந்த மக்கள் சிலரும் அவ்வாறே சென்று சொன்னார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மாற்றம் சொல்; விடை; தாம் எண்ணிய நிலையினின்றும் மாறிய தன்மை என்ற குறிப்பும் காண்க; தமது சுற்றப்பாசத் தொடர்பாகிய தன்மையினின்று மாறும் பண்பு என்றதும் குறிப்பு. மேலும் **மற்ற மாற்றம்** என்பது காண்க.

அயர்வும் பயமும் அதிசயமும் - "இது என் பரிசுக்கு இசையாது" என்று தொடர்பறக் கூறியமையால் அயர்வும்; "ஒருவர்க்குரியேன்" என்றமையால் அதனை யறியாது நாம் சொன்னவை சிவாபராத மாதலின் பயமும்; "இனித் திருவொற்றியூர் சேர்ந்து சிவனருளிற் செல்வேன்" என்றது கேட்க அதிசயமும் முறையே விளைந்தன.

மற்ற மாற்றம் மறைத்தொழுக - உலகினர்க்கு இவை விளங்கலாகாமையின் உலகரறியாதபடி மறைத்து ஒழுகினர்;அம்மையார் விரும்பியவாறு திருவொற்றியூரில் அவரை வைத்துப் பிரிய மனம் ஒருப்படாமையானும் மறைத் தொழுகினர் என்க.

பந்தம் நீடும்...ஒருவன் - பந்தம் - சுற்றத் தொடர்பு மட்டும்; **பந்தம்** - பாசத் தொடர்பு என்ற குறிப்புமாம். **நீடுதல்** - பலவாற்றானும் நீண்டு செல்லுதல்; **குலத்து நிகராம்** - குலப்பெருமையளவில் ஒப்புடையவன்; முன்னர் "**அருள் செய்தார் ஒருவர்**" ***(3367)*** என்றதுடன் இதனை ஒப்புநோக்கி வேற்றுமை கண்டு கொள்க.

பரிசறியான் - பரிசு - அம்மையாரின் பண்புகள். அவையாவன: "மரபில் வருஞ் செயலே யன்றித் **தெய்வ நிகழ்தன்மை, பாரி - லெவரு மதிசயிக்கும்** பண்பும்" *(3363)*; குணமும் - மண்ணுளோர்க்கிசையும் படிவமன்றி மேற்பட்ட **பரிசாம் பான்மையும் (3364);** முன் *(3364—3367)* உரைத்த நிகழ்ச்சியும் முதலியவை. இவற்றுள், முன்கூறிய நிகழ்ச்சியினை உலகரறியாது மறைத்து ஒழுகினர் பெற்றோராதலின் அதனைப் பிறர் அறியாமை இயல்பேயெனினும், அதன் முன்னர்க்கூறிய பண்புகளும் பரிசும் உலகரறியக் கிடந்தமையால் இவனும் அறிந்து தன்தகைமையேலாமை தெரிந்து அதனிற் கருத்துச் செலுத்தாது ஒதுங்க வேண்டியவன் எண்ணாது கருமந் துணிந்தமையின் **அறியான்** என்ற இக்குறிப்புப்படக் கூறினார்; அம்மையார் பரிசேயன்றித் தன்பரிசுமறியான் என்பதும் குறிக்கப் பரிசு என்று பொதுமையிற் கூறினார்; அறியாது துணிந்த இச்செயல் தன் உயிருக்கே யன்றித், தன்னேவல் வழிச்சென்றோர் உயிர்க்கும் கேடாய் விளையத்தக்க **பரிசும் அறியான்** என்ற குறிப்புமாம்.

சிந்தை விரும்பி மகட் பேச விடுத்தான் - மகட்பேச - மகளை மணம் பேச; **சிந்தை விரும்பி** - மகட்பெற்றோரிசைவு பெறும் வரை சிந்தையில் வைத்து விருப்பம் செலுத்துதல் மரபன்றென்பது குறிப்பு. **விடுத்தான்** - அம்மையாரின் பெற்றோரிடத்துச் சிலரைவிடுத்தான் என்று விரித்துக் கொள்க; **விடுத்தார்** என்பது பாடமாயின் விடுக்கப்பட்டாராகிய என்க.

3369. தாதை யாரு மதுகேட்டுத் தன்மை **விளம்பத் தகாமையினுல்**
ஏத மெய்தா வகைமொழிந்து போக்க, வவராங் கெய்தாமுன்
தீதங் கிழைத்தே யிறந்தான்போற் செல்ல விடுத்தா ருடன்சென்ருன்;
மாத ராரைப் பெற்ருர்மற் றதனைக் கேட்டு மனமருண்டார். 215

அவனது ஊரும் பேரும் முதலியவை கூற வேண்டாமையின் ஆசிரியர் கூருது விடுத்தனர்; **ஒருவன் பரிசறியான்** என்ற இலேசானும் அவை ஈண்டு வேண்டத் தகாதனவென்பதும் அறியவைத்தார்.

சிலரும் - அவ்வொருவனுல் விடுக்கப்பட்ட அந்தச் சிலரும் என்க; **ஒருவன்** என்றமையால் அவன் உற்ருர் பிறரெவரையும் உசாவினவனன்று என்பதும்; **சிலர்** என்றமையால் மூதறிவோர் பலரது சார்பின்று என்பதும் குறிப்பு.

சென்று இசைத்தார் -தந்தையார்பாற்சென்று தாம் வந்த செய்தியை இசைத்தார் என்று விரிக்க.

சிந்தை மகிழ்ந்து—என்பதும் பாடம். *214*

3369. (இ -ள்) தாதையாரும்...போக்க - சங்கிலியம்மையாரின் தந்தையாரும் அதனைக் கேட்டு இதுபற்றிய இங்கு நிகழ்ந்த முன்கூறிய தன்மைகளினுல் இசையாமை வெளிப்படச் சொல்லக்கூடாமையினுலே, வந்த அவருக்கு மன வருத்த முதலிய சங்கடங்கள் வாராத வகையினுலே வேறு மொழிந்து அவர்களைச் செல்ல விடுக்க; அவர் ஆங்கு எய்தாமுன் - அவர்கள் தம்மைவிடுத்த அவனிடத்தே சென்று சேர்வதற்கு முன்னே; தீது அங்கு இழைத்தே யிறந்தான் போல் - அங்குத்தான் ஒரு பெருந்தீங்கு புரிந்ததனுல் இறந்து பட்டவன் போல; செல்லவிடுத்தாருடன் சென்ருன் - (அவன்) தான் செல்லும்படி விடுத்த அவர்களுடனே இறந்தொழிந்தான்; மாதராரை... மனமருண்டார் - அம்மையாரைப் பெற்ருேர்களும் மற்ற அதனைக் கேட்டு மனம் மருட்சியடைந்தனர்.

(வி-ரை) தன்மை - இங்குச் சங்கிலியார்பால் உற்ற தன்மைகள்; முன் கூறிய பண்பும் குணமும் நிகழ்ச்சிகளும் ஆகியவற்றின் தொகுதி.

விளம்பத் தகாமை - மாற்றம் மறைத்தொழுகிய (*3368*) காரணத்தாற்சொல் லக்கூடாமை.

ஏதம் எய்தாவகை மொழிந்து போக்க - இஃது உலகியல் வழக்குநெறி; தீமைபயக்காதவாறு உண்மையை ஒருவாறு மறைத்துப் பிறிது மொழியால் மறுத்தல்; **ஏதம்-** உறவினருள் நேரும் பிணக்கும் அதனுல் வரக்கூடிய கேடுகளும்; இது பொய்ம்மை நெறியாகாதோ எனின் தீமைபயக்காதவாறு குற்றமற்ற நன்மைபயத்தல் கருத்தாகலின் ஆகாதென்பது; "பொய்ம்மையும் வாய்மை யிடத்த, புரைதீர்ந்த, நன்மை பயக்கும் மெனின்"(குறள்); அப்பூதி நாயனுர் "இப்போ திங்கவ னுதவான்" (*1814*) என்றதுபோல வருவன இறை அன்புபற்றி நிகழ்வன இக்குறிப்புடையன; உலகியல் நல்வாழ்க்கை நெறியில் ஒப்புரவுபற்றி இவ்வழக்கு மிகவும் கையாளத்தக்கது; "ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல், ஓகோ கொடிது கொடிதம்மா!" என்று இதனையே விரித்தல் காண்க.

3370. **"தைய லார்சங் கிலியார்தந் திறத்துப் பேசத் தகாவார்த்தை
உய்ய வேண்டு நினைவுடையா ருரையா"** ரென்றங் குலகறியச்
செய்த விதிபோ லிதுநிகழச், சிறந்தார்க் குள்ள படிசெப்பி,
நையு முள்ளத் துடனஞ்சி, நங்கை செயலே யுடன்படுவார், 216

அவர் ... சென்றான் - விடுத்தார் தம்மை விடுத்தானிடம் சென்று சேர்ந்து சொல்வதன்முன் அவன் அவருடனே இறந்து பட்டான். அவர்கள் அங்குச் சேர்வதில்லையாதலின் **எய்துமுன்** என்றது **எய்தாமுன்** என்றார்.

ஆங்கு - விடுத்தானிடம்; இவ்வாறன்றி எய்த உடனே இறந்தான் என விரைவுப் பொருளில் வந்தது; மருந்து தின்னுமுன் நோய் தீர்ந்தது என்புழிப்போல - **என்பர்** ஆறுமுகத்தம்பிரானார்.

தீது அங்கு இழைத்தான் போல் - அங்கு - சங்கிலியார் திறத்து; மிக்க தீதுபட ஒரு செயல் இழைத்தாரே மரண தண்டனைக்குள்ளாகுவர்; இங்கு அவன் மரணத்திற் குள்ளாயினமையால் தீதிழைத்ததன் பயனாக இறந்தான் என்னும் படி தோன்றிற்று என்பார் **போல்** என்றார்; **இழைத்தான் போல்** - அவன் செயல் அங்குச் சாராமையானும், தீமை என்று அறியாமையானும் **போல்** என்றார்; அறியாது உண்ணினும் நஞ்சு கொன்றே விடுமாதலின் தீமை இழைத்ததே போலப் பலன் தந்தது என்க.

செல்ல விடுத்தாருடன் சென்றான் - விடுத்தார் - விடுக்கப்பட்டார்; தன்னால் விடுக்கப்பட்ட அச்சிலருடன் தானும் இறந்தான்; **சென்றான்** - இங்கு இயமனூருக்குச் சென்றான் - இறந்தான் - என்ற பொருளில் வந்தது; மங்கல வழக்கு; எண்ணத்தகாததை எண்ணியதும், அதனை ஏவல் வழி உடன்பட்டுச் சொல்லியதும் ஒன்று போலவே குற்றங்களாம்; ஈண்டுச் சிவாபராதமும் கற்புநிலை பற்றிய அபராதமும் கூடி உயிர் நீக்கும் தண்டத்திற் குள்ளாக்கின; பேசத்**தகா வார்த்தை,** உய்யவேண்டு நினைவுடையா ருரையார்" என மேற்கூறுதல் குறிக்க.

மாதரார் - சங்கிலியம்மையார்.

உடன் சென்றார் — என்பதும் பாடம். **215**

3370. **(இ-ள்)** தையலார்...என்று - தையனல்லாராகிய சங்கிலியாரைப் பற்றிப் பேசத்தகாத வார்த்தையைச் சாவாமல் உய்ந்திருக்க வேண்டுமென்னும் எண்ணமுடையவர்கள் பேசமாட்டார்கள் என்று; அங்கு உலகறிய - அங்கு உலகர் அறியும்படி; செய்த...நிகழ - இறைவர் அமைத்த விதிபோல இது நிகழ்ந்ததாக; சிறந்தார்க்கு... செப்பி - தங்குலத்திற் பெரியோர்களுக்கு நிகழ்ந்தவற்றை உள்ளபடியே சொல்லி; நையும்...உடன்படுவார் - வருந்திய உள்ளத்துடனே அச்சமடைந்து நங்கை சங்கிலியார் உரைத்த செயலினையே உடன்பட்டுச் செய்வாராகி,

(வி-ரை) "தையலார்...உரையார்" என்று - இஃது உலகர் அறிந்துய்ந்து செல்லத்தக்க தொரு விளக்கமாகிய உண்மை என்றபடி: **உய்ய வேண்டும் நினைவு உடையார்** - உலகில் உயிருடன் இருக்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்கள்; **உய்தல்** - இங்குப்

3371. "**அணங்கே யாகு மிவள்செய்கை யறிந்தோர் பேச வஞ்சுவரால்;**
வணங்கு மீசர் திறமன்றி வார்த்தை யறியாள் மற்றென்றுங்;
குணங்க ளிவையா; **மினியிவடான் குறித்தபடியே** யொற்றிநகர்ப்
பணங்கொ ளரவச் சடையார்தம் பாற்கொண்டணை வோ"மெனப்பகர்வார், 217

பிழைத்து உயிருடனிருத்தல் என்ற பொருளில் வந்தது; இதனை உடன் பேசினுல் அதன் பயனுக இறப்போம் என்பதுறுதியாதலின், அவ்வார்த்தை பேசாமலிருந்து இன்னும் சிலகாலம் உயிர்வாழ்வோம் என்று முடிவு கண்டு; **நினைவுடையார் - தகாத வார்த்தை - உரையார்** என்க.

அங்கு உலகு அறியச் செய்த விதிபோல்-உலகு - உலகர்; அறிவுறுத்திய விதி வாக்கியமாகிய உண்மை.

இது நிகழ - இது - இந்நிகழ்ச்சி; மகட் பேசச் சிலரை விடுத்தவன் தானும் அச்சிலரும் ஒருங்கிறத்தல்.

அறியச் செய்த விதிபோல் இது நிகழ - இது நிகழ்ந்தது அவ்வவர் கன்மானுபவமேயன்றி உலகை அறிவுறுத்தற் பொருட்டன்று; ஆனுல் அதனுல் உலகறிவுறுத்தப்பட்டது; ஆதலின் அறியச் செய்த விதி **போல** நிகழ என்ருர்.

சிறந்தார் - குல மரபிற் சிறந்த பெருமக்களும் அறிவின் முதியோர்களும்; அந்நாளில் இவ்வாறு சிறந்தோர்களின் வழி உலகம் நடந்ததாதலின் அவர்க்குச் சொல்லின் அவரால் உலகம் வழிப்படும் என்பது கருதி அவர்க்குச் செப்பினுர் என்க; அன்றியும் குலமரபிற் சிறந்தோர்க்கு அந்நாளில் இத்தகைய மணப்பேச்சு முதலிய மரபுச் செயல்களை முறைப்படுத்தத் தக்க சில உரிமைகளுமிருந்தன. **உள்ளபடி** - இதுகாறும் நிகழ்ந்தவற்றை எல்லாம் உள்ளவாறு; முன்னர் "மறைத்தொழுக" *(3368)* என்றும், "விளம்பத் தகாமையினுல் ஏதமெய்தா வகைமொழிந்து" *(3369)* என்றும் கூறியபடிக்கன்றி உள்ளதனை உள்ளபடியே செப்பினுர் என்க.

நங்கை செயலே - முன்னர் நிகழ்ச்சிகளில் தம் எண்ணப்படி செய்தனர்; இங்கு அவ்வாறன்றி நங்கை செயலே உடன்பட்டனர்; ஏகாரம் பிரிநிலை; தேற்றமுமாம். **நங்கை**-பெண்ணிற் சிறந்தாரைக் கூறும் வழக்கு.

உடன் படுவார் - முற்றெச்சம்; உடன்படுவார் -*(3370)* பகர்வார் *(3371)* என்று *(3372)*சென்றணைந்தார் *(3373)* என மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க.

செய்த விதுபோலது - உள்ளத்தினராகி—என்பனவும் பாடங்கள். *216*

3371. **(இ -ள்)** அணங்கே...அஞ்சுவராய் - தெய்வத் தன்மையே யாகும் இவளது செய்கையினை உணர்வுடைய மக்கள் பேசவும் பயப்படுவர்; வணங்கும்...மற்றென்றும் - தம்மால் வணங்கப்படும் சிவபெருமான் திறங்களைப் பற்றிய பேச்சுக்களையன்றி வேறு வார்த்தைகளைப் பேசுதலை இவர் அறியார்; குணங்கள் இவையாம் - இவர் குணங்கள் இத்தன்மையன; இனி, இவள்தான்...அணைவோம் எனப் பகர்வார் - இனி, இவர் தாமே குறிக்கொண்டு சொல்லியபடியே திருவொற்றியூரில் பணத்தையுடைய பாம்பினை முடித்த

3372. பண்ணுார் மொழிச்சங் கிலியாரை நோக்கிப் பயந்தா ரொடுங்கிளைஞர்
"தெண்ணீர் முடியார் திருவொற்றி யூரிற் சேர்ந்து செல்கதியுங்
கண்ணுார் நுதலார் திருவருளா லாகக் கன்னி மாடத்துத்
தண்ணுார் தடஞ்சூ ழந்நகரிற் றங்கிப் புரிவீர் தவ" மென்று, 218

முடியாராகிய இறைவர் பாலே கொண்டு செல்வோம் என்று உட்கொண்டு சொல்வராய்,

(வி-ரை) அணங்கே - தெய்வமே; ஏகாரம் தேற்றம். மானுடமன்றி அணங்கே என்றலுமாம்; இப்பொருளில் ஏகாரம் பிரிநிலை.

அறிந்தோர் இவள் செய்கை பேச அஞ்சுவர் - அறிந்தோர் - அவ்வாறுள்ள இவரது தெய்வத்தன்மையினை அறிந்தவர்கள்; பேச -பேசவும்; உம்மை தொக்கது; **பேச அஞ்சுதலாவது** -பேச ஒண்ணுப் பெருமை யாதலின் பேசினுல் தவறு நேர்ந்து தீமைபயக்குமென்று கருதி அச்சங் கொள்ளுதல்.

ஈசர் திறமன்றி மற்ருென்றும் வார்த்தை அறியாள் - என்க; "வண்டல் பயில் வனவெல்லாம், - அண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று" (1721).

குணங்கள் இவை - அறிந்தோர் இவளைப்பற்றி பேச அஞ்சுவர்; இவள் பேசுவது ஈசர்திறம்; இவையே இவளது குணங்களாம்; ஆதலின் இவள் குறித்தபடியே கொண்டணைவோம் என்று தம் துணிபுக்குக் காரணங் கண்டவாறு.

குறித்தபடி - குறி வைத்துக் கூறியபடி; குறித்த திறம் (3367) முன் உரைத்தவாறு.

என - என்று துணிந்து; இப்பாட்டிற் கூறியவை தாதையரும் கிளைஞரும் துணிபு கொள்வதற் காதரவாய் எழுந்த குறிப்புக்கள்.

வணங்க—வணங்கி—என்பனவும் பாடங்கள். 217

3372. **(இ-ள்)** பயந்தாரொடும் கிளைஞர் - பெற்றவர்களோடும் சுற்றத்தார்களும் கூடி; பண்ணுார் மொழிச் சங்கிலியாரை நோக்கி -பண்ணீர்மை நிறைந்த மொழியினையுடைய சங்கிலியாரைப் பார்த்து; தெண்ணீர்...சேர்ந்து - தெளிந்த நீரினை முடித்த இறைவரது திருவொற்றியூரினை அணைந்து; செல்கதியும்...ஆக - இனிமேற் செல்கதியும் கண்பொருந்திய திருநுதலினையுடைய பெருமானது திருவருளே யாக; கன்னிமாடத்து...தவமென்று - குளிர்ந்த தடங்கள் சூழ்ந்த அந்நகரிலே கன்னிமாடத்திலே தங்கியிருந்து தவம் புரிவீர் என்று கூறி,

(வி-ரை) பயந்தார் பெற்ருேர். பயத்தல் - ஈனுதல்; மகவுபெறுதல்; பயந்தார் - அஞ்சினுர் என்ற பொருளும் படநின்றது; "நையுமுள்ளத்துடனஞ்சி" (3370).

செல்கதியும் திருவருளால் (அதுவே) ஆக - என்க.

செல்கதியும் - பெறவேண்டிய உறுதிப்பொருளும்; வீடு பேறு; மக்கள் கருதியடையச் செல்லும் முடிந்த நிலையதுவே யாதலின் வீடுபேறே கதி எனப்பட்டது. "செல்கதி முன்னளிப்பார்" (1608).

3373. பெற்ற தாதை சுற்றத்தார் பிறைசேர் முடியார் விதியாலே
மற்றுச் செயலொன் றறியாது மங்கை யார்சங் **கிலியார்தாஞ்**
சொற்ற வண்ணஞ் செயத்துணிந்து, துதைந்த செல்வத்தொடும், புரங்கள்
செற்ற சிலையார் திருவொற்றி யூரிற் கொண்டு சென்றணைந்தார். 219

கதியும் - மணமகனை யடையச் சாரும் நிலையே யன்றி, உயிர்க்கு உறுதியாகச் சாரும் நிலையும் என உம்மை இறந்தது தழுவிற்று. **செல்கதியும் திருவருளாலாக** என்றது "அருள் செய்தா ரொருவர்க் குரியேன்" (3367) என்றமையால் நாயகனைப் பெறுதல் பெறப்பட்டது; அவ்வருளே மேல் தொடர்ந்து அஃதாகவே "செல்கதி"க்கு வழியாக உதவ என்றதாம்; இது பெற்றாரும் சுற்றமும் கொண்ட விருப்பம்; "பந்தமு மாய்வீடு மாயினார்க்கு" (திருவா-பொற்.20) "பந்தமும் வீடும் பரப்புகின்றீர்" (தேவா).

செல்கதியும் அதுவாருகவே தங்கித் தவம் புரிவீர் என்க. அங்கு இறைவர் இக பரமிரண்டும் உறுதி பயப்பர் ஆதலின் தவம் செய்து இகத்தின் நன்மையும் இறுதியில் வீடும் பெறுவீராக என்றபடி.

என்று - என்று கூறி; இது சங்கிலியாரை நோக்கிப் பயந்தாருடன் கிளைஞர் கூறியது.

திருவருளாகி—என்பதும் பாடம். *218*

3373. **(இ -ள்)** பெற்ற தாதை...விதியாலே - ஈன்ற தந்தையாரும் சுற்றத்தார்களும் பிறையைத் தரித்த முடியினையுடைய சிவபெருமான் விதித்த திருவருளினாலே; மற்றுச் செயலொன்றறியாது - வேறு செயலொன்றினையும் அறியாதவர்களாய்; மங்கை...துணிந்து - மங்கையார் சங்கிலியார்தாம் சொன்ன வண்ணமே செய்யத் துணிவு கொண்டு; துதைந்த...சென்றணைந்தார் - திரண்ட செல்வமுடனே கொண்டு, திரிபுரங்களை அழித்த வில்லாளியாராகிய சிவபெருமானது திருவொற்றியூரிலே அவரையும் உடன் அழைத்துக் கொண்டு சென்று அணைந்தார்கள்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) விதியாலே...அறியாது - சங்கிலியார் குறிப்பின்படிக்குச் செயல் செய்வதன்றி வேறென்றனையும் இவர்கள் அறியமுடியாமற் செய்தது திருவருளின் நியதி-விதி - என்பதாம்;அவ்விதியாவது மற்றுச் செயல் ஒன்றினையும் அறியாது மறைத்தது இறைவரது திரோதான சத்தியாதலின் முடியார் விதியாலே அறியாது என்றார்.

அறியாது...துணிந்து - அறியாமையால் துணிந்து என்று காரணப்பொருளில் நின்றது.

சொற்ற வண்ணம் - முன்(3367) உரைக்கப்பட்டது.

துதைந்த செல்வத்தொடும் - அவர் திருவொற்றியூரில் தங்கியிருக்கத் தக்க அமைப்புக்களும், வசதிகளும் அளித்தற்பொருட்டுத் திரண்ட செல்வம் கொண்டு சென்றனர். **செல்வத்தொடும் -(அவரைக்) கொண்டு** என்க.

கொண்டு - சொற்ற அந்தச் சங்கிலியாரையும் அழைத்துக் கொண்டு. *219*

3374. சென்னி வளர்வெண் பிறை யணிந்த சிவனுர் கோயி லுட்புகுந்து
துன்னுஞ் சுற்றத் தொடும்பணிந்து **தொல்லைப் பதியோ ரிசைவினுற்**
கன்னி மாட மருங்கமைத்துக், கடிசேர் முறைமைக் **காப்பியற்றி,**
மன்னுஞ் **செல்வந் தகவகுத்துத்** தந்தை யார்வந் தடிவணங்கி, 220

3374. **(இ-ள்)** சென்னி...பணிந்து - தலையிலே வளர்கின்ற வெள்ளைப் பிறையினைச் சூடிய சிவபெருமானுரது திருக்கோயிலினுள்ளே புகுந்து நெருங்கிய சுற்றத்தாரொடும் கூடி வணங்கி; தொல்லை...அமைத்து - பழமையாகிய அந்தப் பதியவர்களுக்கு அறிவித்து அவர்களுடைய இசைவினுலே கோயிலின் பக்கத்திலே கன்னிமாடம் அமைத்து; கடிசேர்...வகுத்து - காவல் பொருந்தும் முறைப்படி காப்புக்களையும் செய்து அதற்குமேல் ஆதரவுக்கு உரித்தாக நிலைபெற்ற செல்வங்களையும் தக்கபடி வகுத்து வைத்து; தந்தையார்...வணங்கி - தாதையார் வந்து (சங்கிலியாரை) அடிவணங்கி,

(வி-ரை) தொல்லைப் பதியோர் இசைவினுல் -பதியோர் - ஊரவர்; தொண்டை நாட்டில், கோட்டம், நாடு, நத்தம், ஊர் முதலிய பிரிவுகள் உண்டு; அவ்வவற்றிலும், முற்றும் ஆணை செலுத்தும் பேரரசின் கீழே தம்மாட்சி முறையாக அவ்வவற்றையும் தனியாட்சிபுரியும் ஆட்சி முறைகளும் உண்டு; ஒவ்வோர் ஊரிலும் ஊர்த்தலைவர் - ஊர்ச்சபையோரும் இதன் பொருட்டுத் தமக்குள்ளே நியமிக்கப்பெற்று ஊராட்சிபுரிந்து வந்தார்கள்; அவ்வவ்வூரவரும் இனிதுண்டு தீங்கின்றி உலகியல் நல்வாழ்வு வாழும் நிலையில் ஊர்க்காவல் அமைத்து நடத்த வேண்டுவது அவர்களது பொறுப்பு. அவர்கள் நாட்டாண்மை ஊரார் முதலிய பெயர்களாலறியப்படுவர்; **பதியோரின்** தேர்தல் முறை உரிமை முதலியவற்றை உத்தரமேரூர்ச் சாசனத்தாலும், பழங் கல்வெட்டுக்களாலும், பழஞ்சரிதங்களாலும், அத்தாபனங்களை நினைவூட்டி நின்று இந்நாளிலும் அரைகுறையாய் உயிரற்று அங்கங்கு வழங்கக் காணும் தொண்டை நாட்டு வழக்குக்களானும் அறிக; **பதியோர்** என்பது ஊர்க்காவல் மேற்கொண்ட கிராமச்சமுதாயம் என்னும் ஊர்ச்சபையோர் என்ற பொருள் தந்து நின்றது; வேற்றூரிலிருந்து நிலைக்குடியாக இவர்கள் இங்கு வந்து தங்குதலினுலும், கோயில் மருங்கில் (பொது இடத்தில்) கன்னிமாடம் அமைப்பதனுலும், உலகியலில் ஊரவரின் பாதுகாவல் பெறவேண்டிய நிலைமையில் உள்ளதனுலும் பதியோர் இசைவினுல் கன்னிமாடம் அமைத்தல் வேண்டப்பட்ட தென்க. ஊரவரின் நல்லொழுக்க வாழ்க்கைக்குரிய இத்திட்டங்கள் இந்நாளில் சுதந்தரம் என்ற பெயரால் மறைந்து கேடுபட்டு வருதல் வருந்தத்தக்கது.

கடிசேர் முறைமைக் காப்பு - கடி - காவல்; இது மாடத்தின் மதில் முதலியனவாகிப், பிறர்பார்வை செல்லாத அமைப்புக்கள்; **முறைமைக் காப்பு - சேடியர்** - ஏவற்பெண்டிர் முதலிய உயிருள்ள காவல்முறை; **முறைமை** - இக்காவலாளர் பெண்டிர்களேயாக நியமிக்கும் நகரப் பொதுக்காவல் அமைதி; **பதியோர் இசைவு** என்றது பொதுவாக நாட்டின் அரசாங்கக் காவலாம்;இங்குக் கூறியது சிறப்பாக அவ்வவர் தத்தமக்கேற்பத் தாம் தாம் வகுத்துக்கொள்ள வேண்டிய சிறப்புக் காவலமைதி; வாழும் மாடம் மட்டுமன்றித், திருப்பணியும் திரைசூழ் ஒருபாலாவது எனவரும் மேற்பாட்டுப் பார்க்க.

3375. "யாங்க ளுமக்குப் பணிசெய்ய **வீசர்க் கேற்ற பணிவிரும்பி**
ஓங்கு கன்னி மாடத்தி லுறைகின் றீ"**ரென்** றுரைக்கிருர்
தாங்கற் கரிய கண்கணீர்த் தாரை யொழுகத் தரியாதே
ஏங்கு சுற்றத் **தொடுமிறைஞ்சிப் போனு** ரெயில்சூழ் தம்பதியில். 221

மன்னும் செல்வம் தகவகுத்து - அம்மையாரது வாழ்வும், ஏவலாளர் முதலியோரின் வாழ்வும் ஒழுங்குபட நடத்தற்கு வேண்டப்படும் செல்வம்; இவை உணவுப்பண்டங்களும் உடை முதலியனவும் தவத்திற்குரிய பொருள்களும், பண்டங்களாகவும் பண்டமாற்ருற் பெறுவனவாகவும் விலைக்குப் பெறுவனவாகவும் வருவன; **மன்னும்** - இவற்றை இடையீடின்றிப் பெறுதற்குரிய; **தகவகுத்தலாவது** அளவினுலும், பெறவரும் நியமம் எளிமை முதலியவாற்ருலும் கன்னி மாடத்தின் செயல் முறைக்குத் தக்கவாறு அமைத்தல்.

தந்தையார் வந்து அடிவணங்கி - வந்து - கன்னி மாடத்துக்கு வந்து; **அடி**-அம்மையாரின் திருவடிகளை; ஈண்டுப் பெற்ற தாதையார் ஐங்குரவருள் ஒருவராதலின் தமது மகளாரை அடி வணங்கல் தகுதியாமோ? எனின், தகுதியே என்க; ஈண்டு, அம்மையார் "விடையார் அருள் செய்தார் ஒருவர்க்குரியேன்; இனிச் சென்று சிவனுரைருளிற் செல்வன்" (3367) என்று **துணிந்து**, பிறந்த இல்லின் தொடர்புகளை நீத்து வந்தாராதலின் தாதை மகளார் என்ற முறைமை யற்று விட்டது; மேல் சிவனருள் பெற்ற அடியார்க்குரியவராயும், உலக வாழ்வுவிட்டுச் சிவன் பணியே செய்யும் தவம் பூண்டவராயும் நின்றமையால் பணியத்தக்கவராயினர் என்பதாம்; இது பற்றியே, முன்னர் "இவளுக் கென்னே வுற்றது? வந்த துணைக்கிங்கென்?" (3366) என்று ஒருமையிற் கூறிய நிலையும், ஈண்டு, மேல், "உமக்கு"— "உறைகின்றீர்" (3375) என்று கூறும் சிறப்புப்பன்மையும் இக்கருத்தினை உணர்த்தும் கவிநலமும் கண்டுகொள்க.

கன்னிமாடம் - கன்னிப் பருவத்துள்ள பெண்கள் தவநிலை ஒழுக்கத்துடன் தனித்து வாழும் இடங்கள். 220

3375. **(இ -ள்)** யாங்கள்...உரைக்கின்ருர் - "நாங்கள் உமக்கு வேண்டிய பணிகளைச் செய்து கொண்டிருக்க, நீர் இறைவருக்கேற்ற பணி செய்தலையே விரும்பி ஓங்கும் கன்னிமாடத்தில் தங்குகின்றீர்" என்று சொல்கின்ருராகி; தாங்கற்கரிய...தரியாதே -உள் அடக்குதற்கரியதாகிய கண்ணீர்த்தாரை கண்களினின்றும் பெருகி ஒழுகியிடத் தரிக்கலாற்ருதவராகி; ஏங்கு...பதியில் - ஏங்குகின்ற சுற்றத்தாரோடும் கூடிச் சங்கிலியாரை வணங்கி மதில் சூழ்ந்த தமது பதியாகிய ஞாயிற்றினிடத்துப் போயினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) யாங்கள்...உறைகின்றீர் - இது தாதையார் அம்மையாரிடம் விடைபெற்றுப் பிரியும்போது பிரிவாற்ருது துரைத்த மொழிகள். இனி எமக்குள் தாதையார் மகளார் என்ற உறவு நிலை நீங்கியது; நாங்கள் உமது பணியாளராக நீர் இறைவர் பணியாளராக உள்ள தொடர்பு ஒன்றே உளதாக உலகப்பற்று விட்டது என்பதாம். கையறுநிலைத் துன்ப மொழிகள் போன்ற தன்மையும் மன வருத்தமும் காண உரைத்த கவிநலம் கண்டுகொள்க.

3376. காதல் புரிந்து தவம்புரியுங் கன்னி யாரங் கமர்கின்ருர்
பூத நாதர் கோயிலினிற் காலந் தோறும் புக்கிறைஞ்சி
நீதி முறைமை வழுவாது தமக்கு **நேர்ந்த பணிசெய்யச்**
சீத மலர்ப்பூ **மண்டபத்துத் திரைசூ ழொருபாற் சென்றிருந்து.** 222

உரைக்கின்ருர் - போனுர் - துன்பமிகுதியினால் உரை முடிவு பெருது **பிரிந்து** சென்றனர் என்பது குறிக்க உரைக்கின்ருர். "தாங்கற்கரிய கண்கலுழீர்த் தாரை ஒழுகத் **தரியாதே** போனுர் தம்பதியில்" என்று முடித்தருளினர்.

தாங்கற்கரிய...தரியாதே போனுர் - பிரிவு தாங்க மாட்டாத நிலைபற்றிக் **கண்ணீர்** பெருகியது; **தரியாதே -** பிரியவும் மாட்டாராய் நிற்கவும் மாட்டாராய்ப் போனுர் **என்றதாம்.**

ஏங்கு சுற்றம் - தாதையரின் நிலைஅஃதாகச், சுற்றத்தார் பிரிவுநிலை ஏக்கம் **என்றதாம்.**

இறைஞ்சி - திருவருளை வணங்கி விடைபெற்று. ***221***

3376. **(இ-ள்)** காதல்...அமர்கின்ருர் - பேரன்புடன் இடைவிடாது நினைந்து தவம் **செய்யும்** கன்னியாராகிய சங்கிலியம்மையார் அங்குக் கன்னிமாடத்தில் விரும்பித் தங்குவாராய்; பூதநாதர்...இறைஞ்சி - பூதநாதராகிய இறைவரது திருக்கோயிலில் வழிபாட்டுக்குரிய காலங்களிலெல்லாம் புக்கு வணங்கி; நீதி...பணிசெய்ய - அமைத்து நீதி மரபு முறைமை வழுவாமல்தமக்கு நேர்ந்த திருப்பணியினைச் செய்யும் பொருட்டு; சீத...சென்றிருந்து - குளிர்ச்சியுடைய மலர்கள் நிறைந்த திருப்பூ மண்டபத்துள் சுற்றிலும் திரையாற் சூழப்பட்ட ஒருபக்கத்தில் சென்று சேர்ந்து.

(வி-ரை) காதல் புரிந்து - காதலால் இடைவிடாது நினைந்து; **புரிதல்**-இடைவிடாது நினைத்தல்; எப்போதும் சொல்லுதல் என்றலுமாம்; **காதல் -** பெருவிருப்பம்; **அங்கு -** கன்னிமாடத்தில்; சங்கிலியார் அங்கு அமருநாளில் செய்யும் செயல்கள் இரண்டு வகையின; அவை கன்னிமாடத்திலும் திருக்கோயிலிலும் செய்யப்படுவன; கன்னிமாடத்தில் செய்வது காதல் புரிந்து செய்யும் தவம்; இது சிவபூசை, தியானம், தோத்திரம் முதலாயின; கோயிலிற் செய்வது திருமாலைத்திருப்பணி; இவை இங்கு வேறுவேருக வகுத்துக் காட்டப்படுதல் கண்டுகொள்க.

காலம் - வழிபாட்டுக்குரியனவாய்த் திருப்பள்ளியெழுச்சி முதல் திருப்பள்ளியறைக் காலம் வரையில் உள்ள காலங்கள்; **காலந்தோறும் - புக்கு** என்க; இக்காலங்களிலன்றி ஏனைக்காலங்களில் கன்னிமாடத்தில் அமர்ந்திருந்தனர் என்க.

நீதிமுறைமை - செய்ய - தமது மரபுக்கும் பருவத்துக்கும் தன்மை நிலைக்கும் நியமித்த முறை தவருதபடி தமக்குக் கூடிய பணியினைச் செய்யும் பொருட்டு; சிவபெருமான் பணிகளும் அவ்வவர் நீதிமுறைப்படி இயற்றல் வேண்டுமென்க; "மறந்துமய னினைவின்றி வருபிறப்பின் வழிவந்த, அறம்புரிகொள் கையராயே யடித்தொண்டி னெறிநின்ருர்" (1052) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க;அவ்வாறே திருநாளைப் போவார் சென்ற அவ்வழியேநின்ற திருநீலகண்டர், கலியர், அதிபத்தர் முதலாகிய நாயன்மார்களும் செய்த திருப்பணி முறைகளின் தகுதிகளை உய்த்துணர்ந்து கொள்க. **செய்ய -** செய்யும் பொருட்டு; காரணப்பொருளில் வந்த வினையெச்சம்.

3377. **பண்டு கயிலைத் திருமலையிற் செய்யும் பணியின் பான்மைமனங்**
கொண்ட உணர்வு தலைநிற்பக் குலவு மலர்மென் கொடியனையார்
வண்டு மருவுந் திருமலர்மென் மாலை காலங் களுக்கேற்ப
அண்டர் பெருமான் முடிச்சாத்த வமைத்து வணங்கி யமருநாள், 223

செய்யச் - சென்றிருந்து - என்று கூட்டுக.

சேர்ந்திருந்து—என்பதும் பாடம். *222*

3377. **(இ-ள்)** பண்டு...தலைநிற்ப - முன்னுளில் கயிலைத் திருமலையிற் செய்யும் திருப்பணியின் தன்மையே தொடர்ந்து மனத்துட் கொண்ட முன்னையுணர்ச்சி தம்முள் ஓங்கி நிற்க; குலவுமலர் மென் கொடியனையார் - விளக்கமுடைய மலர்கள் பூத்த கொடி போன்ற சங்கிலியார்; வண்டு...அமரும்நாள் - வண்டுகள் மொய்த்துப் பொருந்தும் திருமலர்களாலாகிய மெல்லிய மாலைகளைக் காலங்களுக்கு ஏற்றபடி தேவதேவரது திருமுடியிலே சாத்துதற்கு அமைத்துக் கொடுத்து விரும்பி வீற்றிருக்கும் நாளிலே;

(வி-ரை) பண்டு...பான்மை - திருமலைச் சருக்கத்துட்கூறிய வரலாறுகள் பார்க்க. "எமையாளுடைய நாயகி, கொங்கு சேர்குழற் காமலர் கொய்திட" (*33*) என்றது காண்க.

பான்மை...உணர்வு - சங்கிலியார், திருஅருளாலே முன்னையுணர்வுடன் வந்துதித்து வளர்ந்தனர் என்பது முன் (*3362*) உரைக்கப்பட்டது; அவ்வுணர்வின் ருெடர்ச்சியினுலே மனம் அதனை உட்கொண்டு விருப்பமீதூர்ந்தது; **தலை நிற்றல்** - சிறத்தல்; முன்னிற்றல்.

மலர்மென் கொடியனையார் - மலர்களே அவயவங்களாகப் பூத்த கொடி போன்றவர்; "திருவளர்தாமரை...தெய்வ, மருவளர் மாலையோர் வல்லியினெல்கி" (திருக்கோவை-*1*) என்றது காண்க.

வண்டு மருவும் - புதிதின் மலரும் பூக்களாதலின் வண்டுகள் சூழ்ந்திருந்தன என்பது; "வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார்" (*1936*); இவ்வாறு வண்டுகள் மொய்க்கப் பூமாலை தொடுத்தல் இன்றும் திருவாலவாயில் மீனுட்சியம்மையார் சந்நிதியில் திருப்பூமண்டபத்தில் நேரே காணத் தக்கது.

மலர் மென்மாலை காலங்களுக்கேற்பச் சாத்த - வைகறை முதலிய பூசைக் காலங்களில் அவ்வக்காலத்துக் கேற்றபடி மலர்கள் சாத்தும் விதிபற்றிப் புட்பவிதி முதலியவற்றுட் காண்க. சிவாகமங்கள் படிக்க. "அமைத்துச் சாத்தும்காலை" (*560*); "ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங் களிலமைத்து" (*1026*) என்றவையும், ஆங்காங்கு உரைத்தவையுங் காண்க.

அமைத்துச் -சாத்தி - வணங்கி - என்க.

தலைசிறப்ப—என்பதும் பாடம். *223*

3378. **(இ-ள்)** அந்தி...ஆரூரர் - அந்திபோலும் வண்ணமுடைய ஒருவராகிய இறைவரது திருவருளினுலே வந்த நம்பியாரூரர்; கந்தமாலை...ஆதலால் - மணமுடைய மாலையணிந்த

3378. அந்தி வண்ணத் தொருவர்**திரு வருளால் வந்த வாரூரர்**
கந்த மாலைச் **சங்கிலியார் தம்மை காதன் மணம்புணர**
வந்த **பருவ மாதலால் வகுத்த தன்மை வழுவாத**
முந்தை விதியால் வந்தொருநாள் முதல்வர் கோயி லுட்புகுந்தார். 224

3379. அண்டர் பெருமா னந்தணரா யாண்ட நம்பி யங்கணரைப்
பண்டை முறைமை யாற்பணிந்து பாடிப் பரவிப் புறம்போந்து
தொண்டு செய்வார் திருத்தொழில்கள் கண்டு தொழுது செல்கின்றார்
புண்ட ரீகத் **தடநிகர்பூந் திருமண் டபத்தி** னுட்புகுந்தார். 225

சங்கிலியாரைக் காதல் மணத்தினாற்பொருந்த வந்த பருவம் இதுவாதலினால்; வகுத்த...விதியால் - இறைவர் வகுத்த தன்மையினின்று வழுவாத நியதியின்படி முந்தை விதியினாலே; வந்து...புகுந்தார் - ஒருநாள் தமது திருமாளிகையினின்றும் வந்து இறைவரது திருக்கோயிலினுள்ளே புகுந்தருளினர்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அந்தி வண்ணத் தொருவர் - சிவபெருமான்; **அருளால் வந்த** - அருளினாலே இவ் உலகில் திருநாவலூரில் வந்த - அவதரித்த - என்பது; திருவொற்றியூருக்கு வந்த என்ற குறிப்புமாம்.

காதல் மணம் - இயற்கை மணம்; தமிழ் அகப்பொருள் நூல்களுட் பேசப்படும் களவு-கற்பு என்பனவற்றுள் களவியலிலுட் கொண்ட இயற்கைப் புணர்ச்சியின் பகுதி; இது மனிதர் முயற்சியின்றி விதிகூட்ட வருவது; **முந்தை** விதியால் என்பது காண்க. விதிமணம் தந்தை தாயர் சடங்குகளுடன் கொடுப்பக் கொள்வது.

பருவம் - நிகழ வேண்டும் காலம்.

வகுத்த - இறைவனாணையால் வகுத்த; **முந்தை விதியால்** - திருமலைச் சிறப்பிற் கூறியவிதி.

வகுத்த தன்மை வழுவாத - நியதி பிறழாத. 224

3379. (இ-ள்) அண்டர்...நம்பி - தேவதேவராகிய இறைவர் வேதியர் ஒருவராக வந்து நேரே ஆட்கொண்டருளிய நம்பிகள்; அங்கணரை..போந்து - சிவபெருமானை முன்னையே முறையினாலே வணங்கிப் பாடித் துதித்துப் புறத்திற் போந்து; தொண்டு...செல்கின்றார் - பலவகையாலும் திருத்தொண்டுகள் செய்வார்களாகிய அடியவர்களது திருத்தொழில்களைக் கண்டு வணங்கிச் செல்கின்றாராய்; புண்டரீ கத்தடம்...புகுந்தார் -தாமரைப் பொய்கைபோன்ற திருப்பூமண்டபத்தினுள்ளே புகுந்தருளினர்.

(வி-ரை) அந்தணராய் ஆண்ட - கிழவேதியராக வந்து தடுத்தாட் கொண்டருளிய; தடுத்தாட்கொண்ட புராணம் பார்க்க.

பண்டைமுறைமையாற் பணிதலாவது முன்னர்த் "திருப்பாதங் கூடுங் காலங்களி

திருப்பூமண்டபமும்; சங்கிலியாரைக் காணுதலும்

3380. அன்பு நாரா வஞ்செழுத்து நெஞ்சு **தொடுக்க வலர்தொடுத்தே**
என்புள் ளுருகு மடியாரைத் தொழுது நீங்கி வேறிடத்து
முன்பு போலத் **திரைநீக்கி முதல்வர் சாத்தும் பணிகொடுத்து**
மின்போன் மறையுஞ் சங்கிலியார் தம்மை விதியாற் கண்ணுற்ருர். 226

லணைந்து பரவிக் கும்பிட்டு" (3359) என்றவாறு அம்முறைமைப்படியே வழிபட்டு வருதல்; **பண்டை முறைமையால் - முறை** - ஊழ் - நியதி - எனக்கொண்டு சிவனருளிய முன்னை விதியினுலே என்றும், முன் திருக்கயிலையிற் ருெடர்ந்த மரபினுலே என்றும் கூடிய முற்குறிப்புக்களும் காண்க.

முன்னர் "**முந்தை விதியால்**" (3378) என்றதும், "மேல் **விதியால்**" (3380) என்பதும் காண்க; முன் கூறியது அந்த ஒரு நாள் கோயிலுள் **வந்து புகுந்த** செயலுக்கும், ஈண்டுக்கூறுவது பணிந்து **திருத்தொழில் கண்டு** செல்கின்ற செயலுக்கும், மேற்கூறுதல் சங்கிலியாரைக் காணலுறுதற்கும் ஆமாதலின் கூறியது கூறலன்மையும் உணர்க;அன்று நிகழ்ந்த அச்செயல்கள் ஒவ்வொன்றும் முந்தை விதி செலுத்த நிகழ்ந்தன என்பதாம்.

புறம் போந்து - இறைவரது திருமாளிகையின் புறத்தே சுற்றுமுள்ள புறத்திருமுற்றத்தினுள் சென்று.

தொண்டு செய்வார் திருத்தொழில்கள் கண்டு தொழுது - இறைவர்க்காகச் செய்யும் திருத்தொண்டின் தொழில்களும் கண்டு வணங்கற்குரியன என்பது;இவை திருநந்தனவனத் தொழில்கள்; திருமுற்றம் விளக்குதல்;திருப்பரிவட்டம், பொற்புடைப்பணிகள், விளக்குக்கள், முதலியவற்றை விளக்குதல், திருவுழவாரமிடுதல், முதலாகவரும் சரியைத்திருத்தொழில்கள்;இவை வெவ்வேருகப் புறத்திரு முற்றத்தில் பல இடங்களில் நிகழ்வனவாதலின் **தொழில்கள்** என்று பன்மையாற் கூறியது மன்றிக், **கண்டு - தொழுது** - என்று பிரித்துக்காட்டியருளிச், **செல்கின்ருர்** என நிகழ்காலத்துத் தொடர்ந்த வினைமுற்றெச்சமும் தந்தோதினுர்.

புண்டரீகத்தடம் நிகர் திருப்பூமண்டபம் - என்க; பற்பல வகைப்பூக்களும் சேர்ந்திருப்பதாலும், எங்கும் நீருடன் படுத்துக் குளிர்ந்திருப்பதாலும், திருப்பூமண்டபம் தாமரைத்தடம் போன்ற தென்ருர், வினையும் மெய்யும் பற்றியெழுந்த உவமம். ஞானத்திருவாகிய அம்மையார் இருக்குமிடம் என்றதும் குறிப்பு.

திருப்பணிகள்—என்பதும் பாடம். 225

3380. (இ-ள்) அன்பு...தொழுது நீங்கி - அன்பே நாராகத் திருவைந்தெழுத்தாகிய மலர்களை நெஞ்சம் தொடுக்கவும் தாம் கைகளால் அலர்களைத் தொடுத்தே உள்ளே எலும்பும் உருக மனமுருக நிகழும் அடியார்களைத் (நம்பிகள் கண்டு) தொழுது நீங்கிப் பின்பு; வேறு இடத்து-அங்குப்பிறிதோர் தனியிடத்தில்; முன்பு போல...கொடுத்து-முன்பு போலத் திரையினை நீக்கி இறைவர்க்குச் சாத்துகின்ற பணிகளாகிய மாலைகளைக் கொடுத்து வந்து; மின்போல்...கண்ணுற்ருர் - மின்னலைப்போலக் கணத்தில் மறையும் சங்கிலியம்மையாரை விதியினுலே கண்ணுற்றனர்.

(வி-ரை) அன்பு நாரா...அடியார் - இது திருப்பூமாலை தொடுக்கும் பணி செய்யும் அடியாரியல்பைக் குறித்துக் காட்டியபடியும், அங்கு அவ்வடியார்கள் இத்தன்மையரா யிருந்தனர் என்றபடியுமாம். அன்புமாறாது மனத்திலுள் திருவைந்தெழுத்தை உரு எண்ணிக்கொண்டு வாய்பேசாமல் கைகளாற் பூமாலை தொடுத்தல் வேண்டு மென்பது விதி; இதுபற்றி முன்னர், "வாயும்கட்டி" (559) என்றவிடத்தும், பிறண்டு முரைத்தவை பார்க்க; **அன்பு - நார்** - என்பன ஒரு பொருட் கிளவி; **நார்** - ஈண்டு அன்புக்கும் பூத்தொடுக்கும் நாரினுக்கும் பொருந்தக் கூறியது சொல்லணிநயம். அன்புநார் என்றதற்கேற்ப ஐந்தெழுத்தாகிய மலர் என்க.

அஞ்செழுத்தும் நெஞ்சு தொடுத்தலாவது - நெஞ்சினுள் திருவைந்தெழுத்தினையும் இடையறாது உருவெண்ணிக் கொண்டிருத்தல்; தியானித்தல்;இவ்வகை சிவாகமங்களுட் கண்டுகொள்க. இதுபற்றி முன்னர்ப் பலவிடத்தும் உரைக்கப்பட்டவையும் நினைவுகூர்க. **தொடுத்தல்** - பற்றிக் கொண்டிருத்தல் என்க. **தொடுக்கத் -தொடுத்தே** - சொற்பின்வருநிலை; **தொடுத்தே** - கைகளால் என்பது சொல்லெச்சம்;

என்பும் உள்ளுருகும் என்க; **என்பும்** எனச் சிறப்பும்மை விரிக்க; "அன்புள்ளுருகி யழுவ னரற்றுவன், என்பு முருக விராப்பக லேத்துவன்" (திருமந் - 9-332); "குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய, வற்புத மான வமுத தாரைகள், எற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ, துள்ளங் கொண்டோ ருருச் செய்தாங்கு" (திருவா -அண்டப்பகுதி).

அடியாரைத் தொழுது - முன்னர்த் "திருத்தொழில்கள் கண்டு தொழுது" (3379) என்றதும், ஈண்டு "தொடுக்கத் - தொடுத்தே - உருகும் அடியாரைத் - தொழுது" என்றதும் காண்க; இங்குத் தொழிலும் பயனும் தொழில் செய்வோரும்ஒருங்கே தொழுதற்குரியன.

தொழுது - நம்பிகள் என்ற எழுவாய் முன்பாட்டிலிருந்து வருவிக்க.

வேறிடத்து - திருப்பூமண்டபத்தினுள் முன்னர்க்கூறியபடி தொழுத அடியார்கள் தொழில் செய்த இடத்தினின்றும் வேறு தனியிடத்தில் என்க; "பூமண்டபத்துத் **திரைசூழ் ஒருபாற்** சென்றிருந்து" (3376) என்றமையால் அங்கு இதுவேறு எவரும் பார்க்க முடியாத தனியிடம் என்றும், அதனைச் சுற்றிலும் திரைசூழ்ந்திருந்தது என்றும் அறிக.

முன்பு போல - முன்னாட்களின் வழக்கம்போல; திரைக்குள்ளாலிருந்து பணி செய்தலும், பணி முற்றியபின் காலங்களுக்கேற்பத் திரை நீக்கிப் பணிகள் கொடுத்துச் சென்று மறைதலும் போல; **பணி** - பணிசெய்த மாலைகள்; **கொடுத்து** - இறைவர்க்குச் சாத்தும்படி கொடுத்து.

நீக்கிக் - கொடுத்து - மறையும் - எனத் தொடர்ந்து கூறியது இச்செயல்கள் தொடர்ந்து விரைந்து நிகழ்ந்தன என்று குறித்தற்பொருட்டு; **மின் போன் மறையும்** என்ற உவமையும் இப்பொருட்டு; சடுதியில் தோன்றல் - நிற்றல் - மறைதல் என்ற மூன்று செயலாலும் வினைபற்றி வந்தது; ஒளியும் நுடங்குதலும் மெய்பற்றி வந்தன.

விதியால் - பண்டை விதியாகிய ஊழ்வினை கடைகூட்டியமையால்; திருமலைச் சருக்கம் பார்க்க; 3382-ம் பார்க்க. இப்பாட்டுக் **காட்சி** என்னும் அகப்பொருட்டுறை; முன்

3381. **கோவா முத்துஞ் சுரும்பேருக் கொழுமென் முகையு மனையாரைச்**
சேவார் கொடியார் திருத்தொண்டர் **கண்ட போது சிந்தை**நிறை
காவா தவர்பாற் **போய்வீழத்** தம்பாற் காம னார்துரந்த
பூவா ளிகள்வந் **துறவீழத்,** தரியார் புறமே போந்துரைப்பார், 227

பரவையார்பாலும் இவ்வாறே நிகழ்ந்த காட்சித் துறையும் (285) காண்க; இஃதும் கயிலையிற் கண்டு பிரிந்த காட்சியின் தொடர்ச்சி என்க.

என்புள்ளுருக்கும் — என்பதும் பாடம். *226*

3381. **(இ -ள்)** கோவா...அனையாரை - கோக்கப்படாத முத்தினையும், வண்டுகள் மொய்த்துண்ணாத கொழுவிய மெல்லிய அரும்பினையும் போன்றாராகிய அவ்வம்மையாரை; சேவார்...கண்டபோது - இடபம்பொருந்திய கொடியினையுடைய இறைவரது திருத்தொண்டராகிய நம்பிகள் கண்டபொழுது; சிந்தை...வீழ - தமது மனம் நிறையினாற் காக்கப் பெறாமல் அவர்பாற் போய் வீழவும்; தம்பால்...உறவீழ - தம்மிடத்து மன்மதன் விட்ட மலரம்புகள் வந்து உற வீழவும்; தரியார்...உரைப்பார் - ஆற்றமாட்டாதவராய்ப் புறம்போந்து சொல்வாராகி,

(வி-ரை) கோவா...அனையார் - சங்கிலியம்மையார்; **கோவாமுத்து** - முத்து இப்பிகள் - மூங்கில் முதலிய எந்தப் பிறப்பிடத்தினின்று பிறந்தாலும், பிறந்தபோது தொளையின்றி இயல்பாகிய ஒளிவீசி முழுமையாய் நிற்கும். அதன் பின்னரே தொளையிட்டுக் கோத்து மாலையாக்கி மக்கள் அணிகுவர்; **கோவா** (கோக்கப்படாத) என்றதனாலும் பிறரால் விரும்பி அணியப்படாத என்றவாறும்.

சுரும்பு ஏறாக் கொழுமென் முகை - வண்டுகள் மொய்த்து உண்ணாத கொழுவிய மெல்லிய அரும்பு.

கொழுமுகை - என்றதனால் அணிமையில் அலர்ந்து மணந்தரும் பருவம் குறித்தபடி; **சுரும்பு ஏறா** - என்றது பிறரால் மணநுகரப் படாமை குறித்தது; இவையிரண்டும் சங்கிலியாரது பெண்தன்மை நிறைந்த பருவமும், ஆயின், இன்னும் மணஞ் செய்யப்பெறாத கன்னியராம் நிலையும் குறித்தன; இவ்வாறன்றி, இவை, சங்கிலியாரின் தூய்மை குறித்தன என்பாருமுண்டு.

இவ்வொரு பொருட்கு இரண்டு உவமைகள் கூறியது என்னையோ? எனிற் கூறுதும்:—

முத்து - "தொடுகடன் முத்தும்...**எங்கும் - விரும்பினர்பாற் சென்று** மெய்க்கணியாம்" (திருக்கோவை - 248) என்றபடி சென்று பிறர் மெய்க்கணி யாகாநிலை குறித்து நின்றது,

கொழுமுகை - தான் இருக்குமிடத்து வண்டு தேடிவந்து மணநுகர்ந்து அலர்த்தித் தேனுண்ணும் நிலை போல, இங்கு பிறன் எவனும் மணந்த நிலையின்மை குறித்து நின்றது; எனவே அம்மையார் மனம் சென்று பிறர்க்குரிமை யாகாமையும், அம்மையார்பாற் பிறர் மனம் **வந்து** புகாமையும் ஆகிய நிலைகளுக்கு உவமையாயின; **முத்து** - தீட்டுதல் வேண்டாத இயல்பாகிய பிறப்பும் ஒளியும் குறித்தது; **முகை** - மணம் குறித்தது; மெய்யும் வினையும்பற்றி எழுந்த உவமைகள்.

சுரும்பு ஏருக் கொழுமென் முகை - ஈண்டு, புலவர், ஒருவன் பரிசறியான் அம்மையாரது பெற்றோர்பால் மகட்பேசிய நிலையுளதே? எனின்; அஃது இருபாலினுமன்றி, ஒருபால் நிகழ்ந்த செயலாதலின் ஒன்றும் பயனிலதாய் வீணேயொழிந்தது என்க; கணக்கில் வாராதென்றொழிக; "எந்தையுமெம் மனையுமவர்க்கெனைக் கொடுக்க விசைந்தார்கள், அந்தமுறை யாலவர்க்ககே யுரியதுநான்" (1297) என்ற திலகவதியம்மையார் வரலாற்றின் நுட்பத்தினை ஈண்டுவைத்து நோக்கி வேற்றுமை கண்டு கொள்க. பெற்றோர் பேசிய மணப்பேச்சுக் கேட்ட அளவிலே அம்மையார் அது தம்பாற் சாராது விலக்கித் தாம் அருள் செய்தார் ஒருவருக்கு முன்னரே உரிமைப்பட்டவராய் நின்ற நிலையை உணர்த்தி விட்டமையும் காண்க. அதன் பின்னர்ப் பரிசறியான் மகட்பேசவிட்ட வார்த்தை பெற்றவர்கள்பாலன்றி அம்மையார்பாற் சாராமையானும், அது கேட்ட பெற்றோர் மனத்தின்பாலும் அது உட்புகையானும் அஃது ஈண்டைக்கு எண்ணவரும் பொருளன்றென்றுவிடுக்க; "தகுமகட் பேசினேன் வீயவே நூல்போன சங்கிலிபாற், புகுமணக் காதலினல்...அருளாலிவ் வியனுலக, நகும்வழக் கேநன்மை யாப்புணர்ந்தான்" (திருத்தொண்டர் திருவந்தாதி - 69) - என்றது நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கு; ஈண்டு, "மகட்பேசினேன் வீயவே நூல்போன" என்றது நூலிழந்தநிலை குறிக்குமென்று கொண்டு, நம்பிகள் செயல், தாம் தாம் கொண்டொழுகும் அறுதலி மணம் முதலியகோட்டிகளுக்கு ஆதரவாகக் கூறிப் பிணங்குவாருமுளர்;இது பற்றி வாக்குவாதங்களும் பூசல்களும் தமிழறிந்தா ரென்பவரிடை அணிமையில் மிகவும் நிகழ்ந்தன; இவை பொருந்தாமை முன் உரைக்கப்பட்டது;**நூல்போன** - நூல் போன என்று உலகவர் பிழைபடக்கூறும் என்க. நூற்றுறை போகிய என்ற குறிப்புடனும் நின்றது. **உலகநகும் வழக்கே நன்மையா** - என்றது பரிசறியா உலகம் பழிச்சுதலை ஒரு பொருளாகக் கொள்ளாது நன்மையாம்படி என்றதாம். "நாடவர் பழித்துரை பூணது வாக" (திருவா) "நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப, நாமு மவர் தம்மை யார்ப்ப வார்ப்ப" (திருவா).

கோவா முத்தும் - சுரும்பேறா முகையும் அனையாரை - மணஞ் செய்யப் பெறாத கன்னிகையார் என்று குறித்தபடியாம்; என்னை? நம்பிகளது செந்நெறி நிற்கும் திருவுள்ளம் பிறிதுவழியிற் செல்லாமை குறித்தற்கு எடுத்துக்காட்டியவாறு; இனிப், பெண்களைக் காமத்தோடு நோக்குதலும் எண்ணுதலும் திருக்கோயிற் குற்றங்களாம் என்று சிவாகமங்கள் விதித்திருப்பவும் பரமாசாரியராகிய நம்பிகள்பால் இவ்வாறு நிகழ்ந்த தென்னையோ? என்னின், அது முந்தை விதிப் பயனாகிய ஊழ்கூட்ட ஆகியது என்பதாம். "முந்தை விதியால்" (3378); "விதியாற் கண்ணுற்றார்" (3380); "சிந்தைநிறை காவாது" (3381) என்றனவும்; "என்னை யுள்ளந் திரிவித்தாள்" (3382);"ஆளாம் விதியால் வாழு மெனைவருந்தித், தன்னு ரருளால் வரும்பேறு தவத்தா லணையா வகைதடுத்தே" (3386) என்பனவும், பிறவும், முன்னுரைத்தனவும், பின் நிகழ்ச்சிகளும் கண்டு கொள்க.

கண்டபோது - "விதியாற் கண்ணுற்றார்" (3380) என்றபடி கண்டபோது.

சிந்தை நிறை காவாது - சிந்தையானது நிறையினாற் காக்கப்படாமல்.

போய்வீழ - சென்று விருப்பத்தினுள் அழுந்த; **வீழ** - இகழ்ச்சிக்குறிப்பும் படநின்றது. **வீழ்தல்** - விரும்புதல்; "தாம் வீழ்வார்" (குறள்).

3382. "இன்ன பரிசென் றறிவரிதா; லீங்கோர் மருங்கு திரைக்குள்ளாற்
பொன்னு மணியு மலர்ந்தவொளி யமுதி லளாவிப் புதியமதி
தன்னு ணீர்மை யாற்குழைத்துச் சமைத்த மின்னுக் கொடிபோல்வாள்
என்னை யுள்ளந் திரிவித்தாள்; யார்கொ''லென்றங் கியம்புதலும், 228

சிந்தை போய்வீழ - என்றும், **வாளிகள் - வந்துற வீழ** - என்றும் வரும் கவி நயம் காண்க; ஒன்று போகவும் மற்றொன்று அதனிடத்தில் வரவுமாக இவ்வாறும் நிகழ்வு என்றதும், **போய்** என்றதும் **வந்து** என்றதும் கவிநலம்; **வாளிகள் வந்து உறவீழ** - இங்கு விழ என்றது உறு செய்யாது கீழே வீழ என்ற குறிப்புப்பட நின்றது; என்னை? நம்பிகள்பால் மேல் நிகழ்வன காமன் வயப்பட்ட காமச் சேட்டைகளாகாது சிவபெருமானது திருவருள் வழியே ஊழ்வினையின் விளைவாக நிகழ்வனவாம் என்க.

தரியார் - தரியாராகி; **உரைப்பார்** - உரைப்பாராய்.

உரைப்பார் - இயம்புதலும் (3382) - நின்றார் - விளம்புவார் - என்ன - என - மருண்டார் (3383) என்று இம்மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடிபுகொள்க. 227

3382. **(இ-ள்)** "இன்ன பரிசு என்று அறிவரிதால் - இதுதான் இன்ன தன்மையது என்று அறிதல் அரிதாயிருக்கின்றது; ஈங்கு...கொடிபோல்வாள் - இவ்விடத்தில் தனியாக ஒரு பக்கத்தில் திரையினுள்ளே, பொன்னும் மணிகளும் கூடி மலர்ந்த ஒளி அமுதத்துடன் கலந்து புதிய சந்திரனுடைய உண்ணீர்மையாலே குழைத்து ஆக்கிய மின்னற் கொடிபோலும் பெண்; என்னை...யார்கொல் - என்னை உள்ளந்திரியும்படி செய்தனள்;அவள் யார்?"; என்று அங்கு இயம்புதலும் - என்று அங்குக் கூறுதலும்,

(வி-ரை) "இன்ன...யார் கொல்?" என்றது நம்பிகள் யாரையும் நோக்கி வினவாது தமக்குள் உரக்க எண்ணியது; தமக்குத் தாமே சொல்லியதுமாம்; சொல்லாய்க் கேட்கப்படவே அருகு நின்றனர் விடைகூறினர் என்க; முன்னர்ப் பரவையாரைக் கண்டபோதும் இவ்வாறே "என்மனங்கொண்ட...இளங்கொடிதான் யார்? என்ன" (293) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

இன்ன பரிசு என்று அறிவரிதால் - முன்பாட்டிற் கூறியகாட்சியின் விளைவைத் தமக்குள் நினைந்து ஆராய்ந்துரைக்கும் கூற்று; இஃது ஐயம் என்ற அகப்பொருட் டுறையின்பாற் படும்; **யார்கொல்?** என்று முடித்தலும் காண்க.

ஈங்கோர்...மின்னுக்கொடி போல்வான் - காட்சிப்பொருளை விரித்தவாறு; **பொன் - மணி - மலர்ந்த ஒளி** யாவது செயற்கையானன்றி இயல்பிற் பொருந்திய ஒளி; **மலர்ந்த** - தம் இயல்பால் உண்ணின்று வெளிப்பட என்பது குறிப்பு.

அமுதில் அளாவி - அமுதத்தினுட் பெய்து; அமுதத்தின் வழியே விரவி வரச் செய்து; **அளாவுதல்** - ஈண்டுத் தன்மை விரவச் செய்தல் என்ற பொருளில் வந்தது.

புதியமதி தன்னுள் நீர்மையாற் குழைத்து - புதியமதி - புதிதின் முற்றித் தோன்றும் முழுமதி; **உள் நீர்மை** - மதியினுள்ளீடாக நிற்கும் தட்பம்; **குளிர்ச்சி**.

3383. அருகு நின்றார் விளம்புவா "ரவர்தா **நங்கை சங்கிலியார்;**
பெருகுந் தவத்தா லீசர்பணி பேணுங் கன்னியா" ரென்ன,
"இருவ ராலிப் பிறவியையெம் பெருமா னருளா லெய்து வித்தார்;
மருவும் பரவை யொருத்தி; யிவள்மற்றை யவளா"மெனமருண்டார். 229

நீர்மை - தன்மையென்றும், நீரின்குணம் என்றும் இருபொருளும்பட நின்றது; **குழைத்தல்** - வெப்பந்தணித்தல்.

சமைத்த மின்னுக் கொடிபோல்வாள் - இவ்வாறு பண்படுத்தப்பட்டமின்னற் கொடிபோன்று தோன்றிய அம்மை; "மின்போல் மறையும்" (3380) என்று இதற்குத் தோற்றுவாய் செய்தமை காண்க; **மின்னுக்கொடி** - கண்டாரையும் தொட்டாரையும் உடன் கொல்லலும், கொடிய பேரொளியும், வெப்பமும், வேகமும் உடையது; ஆனால் இஃதும் அஃதே போன்ற ஒளியாயிருப்பினும் அதற்கு மாறாகத் தட்பமும் அமுதநிலையும் கொண்டுள்ளது; இவ்வாறு அதன் தன்மைகள் மாறுதற்குள்ள காரணங்களைக் கற்பிக்கின்றார்; மின்னின், இறத்தலைச் செய்யுந் தன்மை மாற்ற **அமுதில் அளாவி** என்றும், வெப்பத்தினைக் குறைக்க **மதிதன்னுள் நீர்மையாற் குழைத்து** என்றும் கூறினர்; இந்நாளில் **40 ஆயிரம் 20 ஆயிரம் என்ற அளவுபடும்** மின்சார சத்தியின் நாசகாரியம் மிக்க வேகத்தைக் குறைத்து **200 அளவுபடச்** சுருக்கி இல்லங்களில் ஒளியும் வெப்பமும் தந்து உதவி உலவச் செய்வதற்கு அதனை அமுதம் போன்ற ஆமணக்கு விளக்கெண்ணெயின் வழிச்செலுத்தி வாங்கும் நிலைகள் ஈண்டுக் கருதத்தக்கன. **சமைத்த** - ஆக்கிய - அமைத்த.

என்னை - இறைவனுக் "காளாம் விதியால் வாழும் எனை" (3384) என்று இதன் கருத்தை மேல் விரித்தல் காண்க; வலிமிக்க என்னையும் என்று ஆணவச்செயற் குறிப்புப்பட உரைகூறுதல் தவறு.

உள்ளம் திரிவித்தாள் - முன் கூறியவாறுள்ள அன்பு நிலையிற்றிரியாத என் உள்ளத்தினை மாறுபடச் செய்தனள். "வானந் துளங்கிலென்...ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே" என்றபடி சிவனன்பி னுறைப்பினால், வேறெதனாலும் திரியாத உள்ளத்தையும் என்று சிறப்பும்மை விரிக்க; "என் மனங்கொண்ட" (293) என்று இவ்வாறே முன் கூறியதும் காண்க. தவநெறி வேண்டிப் பெற்று அந்நெறியே பிறழாது நின்றவராதலின் இவ்வாறு கூறினார் என்க.

இயம்புதலும் - தமக்குத் தாமே கூறுதலும். 228

3383. **(இ-ள்)** அருகு நின்றார் விளம்புவார் - அங்கு அருகே நின்றவர்கள் சொல்வார்களாய்; "அவர்தாம்...கன்னியார்" என்ன - அவர்தாம் நங்கை சங்கிலியார் என்பவர்;பெருகும் தவத்தினாலே இறைவரது திருப்பணிகளை விடாது பற்றிச் செய்யும் கன்னியாராகும் என்று கூற; "இருவரால்...அவளாம்" என மருண்டார் - "இருவர் பொருட்டால் எம் பெருமான் திருவருளாலே இப்பிறவியை எனக்குக் கூட்டுவித்தருளினர்; முன் பொருந்தும் பரவை அவர்களுள் ஒருத்தியாம்; இவள் அவ்விருவருள்ளே மற்றையவள் போலும்" என்று மன மருட்சி யடைந்தனர்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்த ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அருகு நின்ருர் - நம்பிகள் அவர்களை நோக்கி வினவாவிடினும் நம்பிகள் கொண்ட ஐயப்பாட்டினைக் கேட்டு அருகுநின்ருர், உலகியல்பின் வழித்தாமே விடைகூறுகின்ருர்;இயம்பியபோது கேட்டு அங்கு அருகு நின்ருர்கள்.

நங்கை சங்கிலியார் - "அவர்நங்கை பரவையார் சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியார்" (293) என்று முன்னர்ப் பரவையாரையும் இவ்வாறே அங்கு முன்னின்றவர்கள் அறிவுறுத்தியமை காண்க.

நங்கை - பெண்களிற் சிறந்தாரை நங்கை என்பதும், ஆடவருட் சிறந்தாரை நம்பி என்பதும் மரபு.

பெருகுந் தவத்தாற்...பேணும் கன்னியார் - அவரது தவத்தினைப் பற்றிய அன்பின் குணநலனும் மணஞ் செய்யப் பெருத கன்னிப்பருவமும் குறித்தபடி காண்க. இஃது மேலும் வினவுக்கு இடமின்றி அறிவிக்கு முறையும் மரபுமாம். முன்னை நிலையின் தவத்தின் பயனுகிய அன்பு நெறியும், அது பற்றி ஈண்டும் நாளும் செய்து ஈட்டப்படும் தவநெறியும் கூடுதலின் **பெருகும் தவம்** என்ருர்.

"இருவரால்...மற்றையவளாம்" என மருண்டார் - இது நம்பிகளின் அழுந்திய அறிவினுள்ளே முன்னை நினைவு தலைக்கூடத் தம்மனத்துட் கொண்ட தெளிவு. **மருட்சி** - காணுது கண்டு கொண்ட பொருளின் வழித் தோன்றும் பெரு வியப்பாகிய மனநிலை; **இருவர்** - அநிந்திதையார் - கமலினியார்; **இப்பிறவியை எய்து**வித்தார் - திருமலைச் சருக்க வரலாறு.

பிறவியை அருளால் எய்துவித்தார் - கன்மங்களை அனுபவித்துக் கழித்து வீடுபெற உதவுதலின் இறைவர் பிறவிதருதலும் **அருளே**யாம் என்பது ஞான நூற்றுணிவு; இனி அம்மட்டிலுலன்றி நம்பிகளது இப்பிறவி அவ்விருவர் மட்டிலேயாக அமைந்து மேல் ஏதும் வினைச்சார்புக்கு இடமின்றி நிகழ அருள் பெற்றமையால் அச் சிறப்பு வகையானும் **அருளால்** என்ருர். **அருளால்,** நம்பிகளது திருவவதாரம் ஏனை உயிர்களின் கன்மவசமாகிய பிறவி போன்றதன்று; தென்றிசை வாழவும் திருத்தொண்டத் தொகை தரவும் சிவத்திருவருள், அம்மையார் இருவரை முன்னிலையாக ஒரு காரணமாய்க் கொண்டு நிகழ்வித்த செயல் என்ற குறிப்புமாம். **இருவரால்** - இருவர் முகமாக.

மருவும் -முன்னர் வந்து பொருந்திய. இப்பாட்டுத் **தெளிதல்** என்ற அகப் பொருட்டுறை யமைதி கொண்டது காண்க.

இம்மூன்று பாட்டுக்களும் முறையே காட்சி ஐயம் தெளிதல் என முன்னர்த் திருவாரூரில் பரவையார் திறத்தில் நிகழ்ந்தவையே போல முறையே அமைந்த ஒப்புமையும் கண்டுகொள்க; இனி, அங்குப் பரவையார் திறத்தும் நம்பிகள் பால் நிகழ்ந்த அவ்வாறு காட்சி முதலிய துறைகளின் நிகழ்ந்தவை முன் உரைக்கப்பட்டன. *288-289-290-317-318* முதலியவை பார்க்க. ஆயின் ஈண்டுச் சங்கிலியம்மையார் திறத்து அவை நிகழ்ந்தமை ஆசிரியர் கூருது, நம்பிகள் திறத்தின் நிகழ்ச்சிகளையே பற்றிக் கூறித், திருமணம் வரை மேற் செல்லுதலின் அவை நிகழவில்லை என்பது கருதலளவையாற் றுணியக் கிடக்கின்றது; இஃதென்னையோ நிலை? எனின், சங்கிலியார் முன்னையறிவுடன் வந்து தாம், திருஅருள்

3384. "மின்னார் சடையார் தமக்காளாம் விதியால் வாழு மெனைவருத்தித்
தன்னா ரருளால் வரும்பேறு தவத்தா லணையா வகைதடுத்தே
என்னா ருயிரு மெழின்மலருங் கூடப் பிணைக்கு மிவடன்னைப்
பொன்னா ரிதழி முடியார்பாற் பெறுவே"னென்று போய்ப்புக்கார். 230

பெற்ற ஒருவர்க்கு அருள்வழியே முன்பே உரிமையாயினமை உணர்ந்து, அவ்வாறே செயல்கள் நிகழ்ந்தமை முன் உரைக்கப்பட்டது; ஆதலின் அத்துறைகளின் நிகழ்ச்சிகள் வேண்டப்படவில்லை என்பதாம். 229

3384. (இ-ள்) மின்னார்...வருத்தி - மின்போன்ற சடையினையுடைய இறைவருக்கே ஆளாகி ஒழுகுகின்ற விதியின்படி வாழ்வதே கருமமாகப் பூண்டு வாழும் என்னை வருத்தஞ் செய்து; தன் ஆரருளால்...வகை தடுத்தே - இறைவரது திருவருளால் வருகின்ற பேற்றினை நான் அணையாதபடி தனது தவத்தினால் தடை செய்தே; என்...இவள்தன்னை - எனது அரிய உயிரினையும் அழகிய மலர்களையும் ஒரு சேரக் கட்டுகின்ற இவளை;பொன்னார்...புக்கார் - பொன் போன்ற நெருங்கிய கொன்றை மாலை சூடிய முடியினையுடைய இறைவரிடம் பெறுவேன் என்று சென்று மீண்டும் திருக்கோயிலினுள்ளே போய்ப் புகுந்தனர்.

(வி-ரை) சடையார்க்கு ஆளாம் விதியால் வாழும் எனை - முன்னை நிலையில்இறைவர் சாத்தும் மாலையும் நீறும் எடுத்துச் சாத்துகின்றஅணுக்கன் றொண்டராயிருந்த நம்பிகள் அவ்விதியின்படியே இப்பிறவியிலும் "மாதொரு பாக னார்க்கு வழி வழி யடிமை செய்யும், வேதியர் குலத்துட் டோன்றி" னார்; அன்றியும் அதன் மேல் தவநெறியே வேண்டியவாறு பெற்று அவ்விதியால் வாழ்கின்றார்; இவையெல்லாம் உள் அடக்கி **ஆளாம் விதியால் வாழும் எனை** - என்றார்.

தன் ஆரருள் - நிறைந்து பொருந்திய இறைவரது திருவருள்; **பேறு** - தவநெறியில் இடையறாது நின்றிடலும் வழி பட்டுவருதலும் முதலியவைகள் காண்க.

தவத்தால் அணையா வகை தடுத்தே - தவத்தால் - இப்பெண் தான் செய்யும் தவத்தினாலே **பேற்றினை அணையா வகை** என்று கூட்டுக; தவத்தினால் அணையா வகை தடுத்தலாவது, சங்கிலியாரது தவங்காரணமாக அவருடன் மணம் நிகழ, அது காரணமாக ஆளாம்விதியால் வாழும் சிவன் அடிமைத் திறத்திற்கு இடையூறு பட விளைத்தல்.

உயிரும் மலரும் கூடப்பிணைத்தலாவது - இறைவர்க்காக மலர்களைக் கூட்டிக் கட்டுதல் போல என்னையும் தன் வசத்தாக்கிக் கட்டுப்படுத்துதல்.

இவள் தன்னை இதழிமுடியார் பாற் பெறுவேன் - இவள் இதழி முடியாருடைய அடிமையும் அவர் உடைமையுமாதலின் **இவளை ஆண்ட** அவர்பால் பெறுவேன் என்றார். நம்பிகள் தாம் எதை வேண்டினும் அதைத், தமது **முனைப்பு** முயற்சியாற் பெறாது, சிவன் அருள்வழி நின்று பெறுவோர் என்றும், தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் சிவனுக்கு அர்ப்பணம் செய்தவர் என்றும், முன்னர்ப் பரவையாரையும், பொன் முதலியவற்றையும் சிவனருள் வழி நின்று பெற்றவர் என்றும் ஆதலின் சிவனிடம் போய் இவடன்னைப்

3385. மலர்மே லயனு நெடுமாலும் வானு நிலனுங் கிளைத்தறியா
நிலவு மலருந் திருமுடியுநீடுங் கழலு முடையாரை
உலக மெல்லாந் **தாமுடையா ராயு மொற்றி யூரமர்ந்த**
இலகு சோதிப் பரம்பொருளை யிறைஞ்சி **முன்னின்** றேத்துவார், 231

பெறுவேன் என்று போனுர் என்றும் ஈண்டு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு; நம்பிகளைச் சுற்றம் முதலிய உலகச் சூழல்கள் எல்லாவற்றினின்றும் பிரித்துச் சிவபெருமான் தனக்கே யாட் செய்யும்படி கொண்டு விட்டமையால் அவருக்கு நேரும் அவை யாவும் சிவனருள் வழியே நேர்வன; அவற்றைச் சிவனே காட்டுவித்தலும் கூட்டுவித்தலும் வேண்டியது முறைமையாம்; ''மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்'' என்றும், ''திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென் றெண்ணி'' (தேவா.) என்றும் வருவன நம்பிகளது சிவ வாழ்க்கையின் நிலை; ஆதலின் சிவனிடம் பெறுவேன் என்று சென்றுர் என்பதாம். உலகில் எல்லா வுயிர்க்கும் வரும் அனுபோகங்களையும் வினைப்பயன்களையும் கூட்டு விப்பவன் சிவனேயாம். ஆனுல், அவை அவ்வுண்மையினை உணராது யாவும் தமதுயிர்முயற்சியால் வருவன என்ற ஆணவ மறைப்பினுல் மயங்கி உழல்வன; நம்பிகள் முற்றும் உண்மையுணர்ந்த நிலையினராதலின் சிவனே தருபவன்;அவனே தலைவன் என்று ஒழுகிவந்தனர் என்பதும் உணரத்தக்கது. மேல் ''உனக்குத் தருகின்றேம்'' (3389) என்பதுங் கருதுக. இனி, நம்பிகள் தம்பிரான் **றேழ**ராதலின் ஈண்டு நிகழ்ந்த காட்சி முதலியவற்றின்பின், பாங்கற் கூட்டம் என்ற அகப்பொருட்டுறைகளின் முறையே தம் ஆருயிர்த் தோழராகிய சிவன்பாற் பெறுவேன் என்று போனுர் என்ற குறிப்புப்பட நிற்றலும் காண்க. மேல் **''நண்பா னினைந்து''** (3388) என்பதும் கருதுக. 230

3385. **(இ-ள்)** மலர்மேல்...உடையாரை - தாமரை மலரின் மேல் இருக்கும் பிரமதேவனும் நெடிய விட்டுணுவும் முறையே ஆகாயத்தினும் நிலத்தின் கீழும் கிளைத்து அறியமாட்டாத, பிறைவளர்கின்ற திருமுடியினையும் நீடிய கழலினையும் உடைய இறைவரை; உலகமெல்லாம்...ஏத்துவார் - உலகங்களை யெல்லாம் தாம் உடையவரா யிருந்தும் ஒற்றிஊரில் விரும்பி எழுந்தருளிய விளங்குகின்ற ஒளிப்பிழம்பாகிய பரம்பொருளை வணங்கித் திருமுன்பு நின்று துதிப்பாராகி,

(வி-ரை) அயனும் மாலும் - முறையே - **வானும் நிலனும்** நினைத்து அறியா **முடியும் கழலும்** என்று நிரனிறையாகக் கொள்க; **கழல் - காலணி** மணிவடம்; அஃதணியும் திருவடிக்காகி வந்தது.

உலகமெல்லாம் - உடையாராயும் - ஒற்றிஊர் அமர்ந்த - ஒற்றிஊர் - ஒற்றி வைக்கப்பட்ட ஊர் என்ற சொற்பொருட் சிலேடை நயம்படக் கூறியது; உம்மை உயர்வு சிறப்பும்மை; உலகமுழுதும் உடையாராயிருந்தும் திருவொற்றியூரினை விரும்பியருளினுர் என்பது திருவொற்றியூரது தனிச் சிறப்பு உணர்த்திற்று.

உலக முழுவதிலும் நிறைந்து இருப்பினும் அங்கெல்லாம் இறைவர் பாலினெய் போல மறைந்து நிற்பர்; உத்தமப் பெருந்தலங்களிலும் சிவாலயங்களிலும் தயிரினெய்போல

3386. "மங்கை யொருபான் மகிழ்ந்ததுவு மன்றி மணிநீண் முடியின்கட்
கங்கை தன்னைக் கரந்தருளுங் காத லுடையீ! ரடியேனுக்
கிங்கு நுமக்குத் திருமாலை தொடுத்தென் னுள்ளத்தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத் தந்தென் வருத்தந் தீரு"மென, 232

வெளிப்பட விளங்கிநிற்பர் என்பது ஞான சாத்திரம். அப்பொருட் குறிப்புப்பட "**உலகமெல்லா முடையாராயும், ஒற்றியூர் அமர்ந்த இலகு சோதி**" என்றார். **அமர்தல்** - விரும்பி வீற்றிருத்தல். "அவன் மற்றிவ் விடங்களிற் **பிரகாசமாய் நின்றே,** அல்லாதவிடத்து அப்பிரகாசமாய் நிற்றலான்" (போதம்-12 சூத்). **231**

3386. **(இ-ள்)** மங்கை...உடையீர்! - மலை மங்கையாராகிய உமையம்மையாரை ஒரு பாகத்தில் மகிழ்ந்து வைத்ததுமல்லாமல் அழகிய நீண்ட திருமுடியினிடத்தே கங்கையம்மையாரையும் மறைத்து வைத்தருளும் பெரு விருப்பமுடையீரே!; இங்கு... சங்கிலியை-இங்கு உமக்குத் திருமாலையினைத் தொடுத்துக் காட்டியும் எனது கட்டுநின்ற உள்ளமாகிய தொடையினை அவிழ்த்தும் செயல் புரிந்த சங்கிலியாரை; அடியேனுக்கு - அடியேனாகிய எனக்கு; தந்து...என - தந்தருளி எனது வருத்தத்தினைத் தீரும் என்று கூறி,

(வி-ரை) இப்பாட்டு நம்பிகள் இறைவர்பால் வேண்டிக்கொண்ட நிலை கூறிற்று.

மங்கை...உடையீர் - பரவையார் ஒருவர் முன்னமே மனைவியாராயிருக்க, மேலும் சங்கிலியாரையும் மணம்புரிய வேண்டிக் கொள்வது என்னை? என்று இறைவர் கேட்டருளி, அருள் செய்யாவிடின், அதற்கு விடையாக நீர் மங்கை ஒருபால் இருக்கச் சடையுள் ஒருத்தியைக் கரந்த நிலைபோல நானும் வேண்டுகிறேன்; உமக்கு ஏற்றதாயின நிலையே எனக்கும் ஏற்றதாகும் என இவ்வாறு நம்பிகள் தோழமை நிலையினால் கூறிய தன்மை கண்டுகொள்க; "நண்பால் நினைந்து" என்பதும், முன் "முடியார்பாற் பெறுவேன்" என்றதும் காண்க; "உம்மைப் போலென்னைப் பாவிக்க மாட்டேன்" "மூன்று கண்ணுடை யாயடி யேன்கண் கொள்வதே கணக்கு வழக்காகில்" (திருவொற்றியூர்) (நம்பி-தேவா); **கங்கை** -கங்கை நங்கை. **கரந்த -** உமையம்மையார் அறியாமல் நீர் மறைத்து வைத்தமைபோலவே யானும் பரவையார் அறியாமல் இந்த மணத்தை விரும்புகின்றேன் என்ற குறிப்பு.

காதல் உடையீர் - உமது அச் செயலுக்குக் காதல் காரணமாதல்போல ஈண்டு உம்பால் என் வேண்டுகைக்கும் அஃதே காரணமாமென்பது.

திருமாலை தொடுத்து - என் உள்ளத் தொடை அவிழ்த்த - ஒரே செயலில் ஒரு புறம்மாலை தொடுத்தலும் அப்போதே மற்றொருபுறம் தொடையைப் பிணிப்பு அவிழ்த்தலும் செய்யும் சதுரப்பாடு என்ற சங்கிலியாரின் மேன்மை தம்மனத்துப், பதிந்தமை தோன்றக் கூறியதுடன், தமது உள்ளம் கட்டுடைந்து அவர்பாற் சென்ற நிலையும் கூறியபடியாம்.

திங்கள் வதனச் சங்கிலி - "புதியமதி தன்னு ணீர்மையாற் குழைத்துச் சமைத்த" (3382) என்றது காண்க. காதல் வெப்பத்தினால் உயிர்போம் நிலையினை வராது காக்கும் அமுதகலைகளை உடையவர் என்பது குறிப்பு. மேல் "**உயிர் காக்க**" என்பதும் (3390) காண்க. **உயிர் காக்க** என்பது **ஆண்டு நின்றீர்** என்பதுடனும் கூட்டி யுரைக்க நின்ற நயம் கண்டுகொள்க.

3387. அண்ண லார்முன் பலவுமவ ரறிய வுணர்த்திப் புறம்பணைந்தே,
"**எண்ண மெல்லா மும‌க்கடிமை யாமா றெண்ணு**மென்னெஞ்சிற்
றிண்ண மெல்லா முடைவித்தாள்; செய்வதொன்றுமறியேனியான்
தண்ணிலாமின் ஞெளிர்பவளச்சடையீ!ரருளு" மெனத்தளர்வார், 233

தந்து - அவள் தம் சுற்றம் பற்று எல்லாந் துறந்து உமது உடைப்பொருளாய் நின்றமையால் அவளை நீரே தருதற்குரியீர் என்பதாம்; "முடியார்பாற்பெறுவேன்" (3384) என்றதும் இக்குறிப்பு; இவ்வாறே முன்னர் நம்பிகள் பரவையாரைத் திருவாரூர்ப் பெருமான்பால் வேண்டிப் பெற்ற நிலையும் ஈண்டுக் கருதத் தக்கது.

வருத்தம் - காதற்றுன்பம்; அனுபவித்துக் கழிக்க நின்ற கன்மசேடத்தால் வரும் துன்பம் என்று உலகைத் தெருட்டும் நிலையின் குறிப்பும்பட நின்றது. **தீர்த்தல்** - போக்குதல்; கழிப்பித்தல்.

இது நம்பிகள் இறைவர் திருமுன்பு நின்று திருவாக்கினுல் வேண்டிக் கொண்டது. 232

3387. **(இ-ள்)** அண்ணலார்முன்...புறத்தணைந்தே - இவ்வாறு இறைவரது திருமுன் பலவற்றையும் அவர் அறியும்படி உணரச் செய்து புறத்திற் போந்து; எண்ணமெல்லாம்...அருளும் எனத்தளர்வார் - நான் எண்ணுகின்ற எண்ணங்கள் எல்லாம் உமக்கு அடிமையே யாகும் நிலைகளையே எண்ணுகின்ற எனது நெஞ்சினது உறுதிப்பாடாகிய வலிமை எல்லாமும் உடையும்படி செய்தனள்; மேற் செய்யக்கடவது ஒன்றனையும் யான் அறியேன்; குளிர்ந்த பிறைச் சந்திரன் விளங்குகின்ற பவளம் போன்ற சடையினை உடையவரே! அருள் செய்யும் என்று எண்ணித் தளர்வாராய்,

(வி-ரை) எண்ண மெல்லாம்... அருளும் - என்று இப்பாட்டிற் கூறியது கோயிலின் புறத்தணைந்தே நம்பிகள் எண்ணமிட்டுச் சொன்னது.

அவர் அறிய உணர்த்தி - இறைவர் எல்லாவற்றையும் இருந்தாங்கு ஒருங்கே அறிபவர்; ஆயினும் இவ்வாறு எடுத்து அவர் அறியும்படி உணர்த்துதல் அவர்பாற் கொண்ட அன்பினை உறுதிப்படுத்திப் பக்குவப்படுத்தும் பயன் தருவதாம் என்க. நம்பிகள் அவர்பாற் சென்று முறைப்பாடு சொல்லுதல் உலகினை அறிவுறுத்தும் பயன் கருதியதுமாம்; **அறிய உணர்த்தி** - என்றதுபசாரம்; "**உணர்வினு லுணர வொண்ணு** வொருவரை யுணர்த்த வேண்டி" (462)

புறத்தணைந்தே - புறம் - இறைவரது திருமாளிகையின் புறம்; புற முன்றில்; இதன்மேல் மாலையில் நம்பிகள் சென்று ஒருமருங்கு இருந்து நினைந்து மனம் அழிந்தது கோயிலின் புறத்து உள்ளே வேறிடம்.

எண்ண மெல்லாம்...என்நெஞ்சு - "நெஞ்சம் முமக்கே யிடமாகவைத்தேன்" "வைத்தனன் றனக்கே தலையுமென் னுவும் நெஞ்சமும் வஞ்சமொன் றின்றி" (நம்பி - தேவா) முதலியவை காண்க. எண்ணமெல்லாம் அடிமையாமாறு எண்ணுதலாவது இடையருது சிவயோக நிலையில் நெஞ்சை நிறுத்துதல்; "நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" என்று இந்நிலையினைப் புறக்கருவிகளும் பயின்ற பண்பினை நம்பிகள் கூறுவது

3388. மதிவாண் முடியார் மகிழ்கோயிற் புறத்தோர் மருங்கு வந்திருப்பக்,
கதிரோன் மேலைக் கடல்காண மாலைக் கடலைக் கண்டயர்வார்,
முதிரா முலையார் **தம்மைமணம் புணர்க்க வேண்டி** முளரிவளை
நிதியா னண்பர் தமக்கருளு **நண்பா னினைந்து** நினைந்தழிய. 234

காண்க; "நாடுவன் நாடுவன் நாபிக்கு மேலேயோர் நால்விரல்" என்ற திருவாமாத்தூர்த் திருப்பதிகமும் கருதுக; "மறக்குமா றிலாத வென்னை" (பிள்.); "எண்ணுகே னென்சொல்லி எண்ணுகேனே, எம்பெருமான் திருவடியே யெண்ணினல்லால் கண்ணிலேன்' (அரசுகள்); "எண்ணு திரவும் பகலுநா னவையே யெண்ணு மதுவல்லால்" (திருவா) என்றிவ்வாறே எந்தம் பரமாசாரியர்கள் அருளியனவும் கருதுக; எக்காலமும் இடை யறாது சிவபெருமானே நம் தலைவர் என்பதும் அவருக்கு நாம் மீளா அடிமைகள் என்பதும், நாம் பிழையே செய்யினும் அவர் கணந்தோறும் நம்பால் அருளே செய்து வரும் பெருங் கருணையாளர் என்பதும், எண்ணிக்கொண்டவாறே வாழ்தல் உய்யும் வழியா மென்பது காட்டப்பட்டவாறு.

திண்ணம் - திண்மை; உறுதிப்பாடு; சிவனையன்றிப் பிறிதொன்றிலும் எவ்வாற்றுலும் மனம் புகாத உறைப்பு; **நிறைகாவாது** (3381) என்றது காண்க. **உடைவித்தாள்** - தீங்குநெறியடையாத தடையாய்க் காவல்புரிந்த நிறை என்னும் மதிலைத் தகர்த்தாள்; சிவனடிமையே நினையும் நம்பிகள் மனம் இங்குப் பிறிதொன்றினிற் செல்ல வழியுண்டாயினதை நிறையாகிய மதில் உடைந்ததனுலாகியது என்றுர். ஆயின், இது சிவனருளாகிய நியதியால் விளைந்தமையின் சிவனையன்றி நம்பிகள் மனம் ஈண்டும் புறத்திற் சென்றிலது என்பது உய்த்துணரத் தக்கது. சிவன்பாற் பெறுவேன் என்ற துணிபும், அவ்வாறே வேண்டி நின்றமையும் இந்நிலையினை மாறுபடுத்துவதன்றி அதனையே உறுதிப்படுத்துவதும் காண்க. நிறையின் றிண்மையினை மதிலாக வைத்து உரைத்தது உருவகம்.

நிலா - மின் - ஒளிர் - சடையீர் - வருந்தி வந்தடைந்தாரைக் காத்து வளரச் செய்யும் அருட்டிறம் குறிப்பு; நிலாவும் நெஞ்சமுடைந்து குறைந்தடைந்தனன் என்பது வரலாறு; ஈண்டு நம்பிகளும் அந்நிலையின் அடைந்தனர் என்பது மேல் **உயிர்காக்க (3390)** என்றதனுற் பெறப்படும்.

புறம்பணைவார்—என்பதும் பாடம். 233

3388. **(இ-ள்)** மதிவாள் முடியார்...இருப்ப - சந்திரனது ஒளி வீசும் முடியினையுடைய இறைவர் மகிழும் திருக்கோயிலின் புறத்தே ஒருபக்கத்தில் (நம்பிகள்) தங்கியிருக்க; கதிரோன்...அயர்வார் - சூரியன் மேல் கடலைச்சேரும் காலமாகிய அப்போது மாலையாகிய கடலினைத் தாம் கண்டு அயர்வாராய்; முதிரா...வேண்டி - முதிராத இளமுலையவராகிய சங்கிலியாரை மணம் புணர்தலை விரும்பி; முளரி...நினைந்து அழிய - பதுமநிதியும் சங்கநிதியும் உடைய குபேரனின் நண்பராகிய சிவபெருமான் தமக்கு அருள்புரியும் தோழமையாகிய உரிமையினுலே நினைந்து நினைந்து மனமழிய,

(வி-ரை) மதிவாண் முடியார் - முன்பாட்டிற் கூறிய குறிப்பு.

கோயிற் புறத்தோர் மருங்கு - இது தமது திருமாளிகையினன்றி அன்றிரவு கோயிற்புறத்து நம்பிகள் தங்கிய தனியிடம். முன்னர்ப் பரவையார் திருமணத்தின் முன் திருவாரூரில் தேவாசிரியனில் நம்பிகள் தங்கி நின்ற வரலாறு ஈண்டு நினைவு கூர்தற்பாலது; **ஓர்மருங்கு** -ஒருபுறமாக ஒதுங்கிய இடம் என்பதும் குறிப்பு.

கதிரோன்...அயர்வார் - **கதிரோன்** - சூரியன்.

மேலைக்கடல் காண - சூரியன் - மேல்பாற்புகும் மாலைக்காலம் வர; **மாலைக் கடலைக் கண்டு** - அதன் மேல்வரும் மாலை இரவு என்ற கடத்தற்கரிய கடல்போன்ற துன்பந்தரும் காலம்; மாலையினையும் கடலினையும் கண்டு என்றுரைத்தலுமாம்; இவையிரண்டும் துணைபிரிந்தாரைத் துன்புறுத்துவன. நிலவுவெளிப்பட வருந்துதல், இரவுறுதுயரங் கடலோடு சேர்த்தல், கடலொடுபுலத்தல், பொழுதுகண்டு மயங்கல் முதலிய அகப்பொருட்டுறைகள் காண்க. **அயர்வார்** - முன்னர்த் திருவாரூரில் இக்கால நிகழ்ச்சிப்பண்புகளை விரிவுற (298-313) உரைத்தமையின் இங்கு **அயர்வார்** என்று குறிப்பிற் கூறிய மட்டினமைந்தார். மேல் நினைந்து **நினைந்தழிய** என்பது ஈண்டு விரித்துரைத்துக் கொள்ள வைத்த குறிப்பு.

முதிரா முலையார் - இளமையும் கன்னித் தன்மையும் குறித்தது.

முளரி வளை நிதியான் - குபேரன்; முளரி நிதியான் - வளைநிதியான் - என்று தனித்தனிக் கூட்டுக; **முளரி**-தாமரை, பதுமம்; வளை - சங்கம் - "சங்கநிதி பதுமநிதி யிரண்டும் தந்து" (தேவா); **நிதியான் நண்பர்** - குபேரன் றோழர் என்பது சிவபெருமான் பெயர்களுள் ஒன்று; "மித்திரவச் சிரவணற்கு விருப்பன் றான்காண்" (தேவா);-மித்திரவச்சிரவணன் - குபேரன்.

நண்பால் நினைந்து - தம்பிரான் தோழர் என்ற நட்புரிமையினாலே இதனை வேண்டி நினைந்து; "பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால், ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை யெய்துதற்கே" (திருக்கோவை-19-பாங்கற் கூட்டம்) என்ற நிலை ஈண்டு வைத்துணர்தற்பாலது.

நினைந்து நினைந்து - பலவாறும் எண்ணமிட்டு; **அழிதல்** - நெஞ்சமுடைதல். 234

3389. **(இ-ள்)** உம்பர்...எய்தி - தேவர்கள் உய்யவும் உலகம் உய்யவும் ஒலிபொருந்திய கடலினின்றும் எழுந்த விடத்தை உண்டருளிய தம் பெருமானார் (தாமே ஆட்கொண்டருளிய) வன்றொண்டரிடத்தில் எழுந்தருளி; இம்பர்...ஒண்ணா - இவ்வுலகில் எத்தன்மையாருக்கும் அடைய முடியாத; இருந்தவத்துக் கொம்பைச் சங்கிலியை - பெரியதவமுடைய கொம்பு போன்ற சங்கிலியை; உனக்கு...ஒழிக என்ன - உனக்குத் தருகின்றோம்; நீ மனத்துக் கொண்ட கவலையினை ஒழிவாயாக; என்று கூறியருள,

(வி-ரை) இப்பாட்டு முன் கூறியவாறு நம்பிகள் கூறியமுறை கேட்டு இறைவரது அருளிச் செயல் கூறிற்று.

உம்பர் உய்ய - உலகுய்ய - தேவர்களுய்ய - உலகத்தவர்களும் உய்ய - என்று பிரித்துக் கூறியது ஈண்டு இனி இறைவரருளால் நிகழவுள்ள திருமணத்தின் இருபாலாருக்கும்

3389. உம்ப ருய்ய வுலகுய்ய வோல வேலை விடமுண்ட
தம்பி ரானுர் வன்ருெண்டர் தம்பா லெய்திச் "சங்கிலியை
இம்ப ருலகி லியாவர்க்கு மெய்த வொண்ணு விருந்தவத்துக்
கொம்பை யுனக்குத் தருகின்றேங்; கொண்டகவலை யொழி"கென்ன. 235

நிகழும் அருட்பயனும் அதனுல் உலகம் பெறும் பயனும் குறித்தது.

பிரானுர் - தொண்டர்பால் எய்தி - தலைவர் தமது தொண்டரிடம் நாடிப் போந்தமை அருளின் பெருமை; வன் தொண்டராதலின் பிரானுர் எய்தினர் என்ற கடமையும் குறித்தது; இங்கு நனவு நிலையில் இறைவர் நம்பிகளுக்கு நேரே காட்சி தந்தருளினர் என்பது கருதத்தக்கது. சங்கிலியார் திறத்துக் **கனவிற்றேன்றினுர்** *(3391)* என்றும், "உணர்ந்தெழுந்து அவ்விரவின் கண்...கண்துயிலார்" *(3407)* என்று விளங்கக் கூறுதல் காண்க.

இருந் தவத்துக் கொம்பைச் -சங்கிலியை என்று கூட்டுக.

கொம்பை - கொம்பு போன்றுரைக் **கொம்பு** என்றது உபசாரம்.

இம்பருலகில்...ஒண்ணு முன்னர்ப் பரவையாரைச் "சென்றும்பர் தரத்தார்க்குஞ் சேர்வரியார்" *(293)* என்றது காண்க. அங்கு உரைத்தவர் முன்னே நின்ற மக்கள்; இங்கு இறைவர் தமது திருவாக்கினுலே "யாவர்க்கு மெய்த வொண்ணு இருந்தவம்" எனப்பெற்றது சங்கிலியாரது பெருந்தவத்தின் சிறப்பு; "சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ" *(3404)* என்பது மிக்கருத்தது. அவரை அடைதற்கு உரிமை அவரினும் மேம்பட்ட தவத்தை உடைய நம்பிகளுக்கே உண்டு என்பார்போல **"சால வென்பா லன்புடையான் - மேருவரையின் மேம்பட்ட தவத்தான்"** *(3393)* என்று இறைவர் ஈண்டே நம்பிகளையும் தமது திருவாக்கினுற் கூறியருளும் நிலையும் தவத்தின் சிறப்பாகும். 235

3390. **(இ-ள்)** அன்று...உறுதியளித்தீர் - முன்னைநாளில் அன்று திரு வெண்ணெய் நல்லூரிலே நீரே வந்து வலிய ஆட்கொண்டருளி ஒன்றும் அறியாத நாயினேனுக்கும் உறுதி தந்தருளினீர்; உயிர்காக்க - எனது உயிரினைப் போகாமே காக்கும் பொருட்டு; இன்றும்...நின்றீர் - (அதுபோலவே) இன்றும் இவளை எனக்கு மணம் புணரச் செய்ய ஏற்றுக் கொண்டீர்; எனப் போற்றி - என்று துதித்து; மன்றல்...வன்றெண்டர் -(அவரது) மணங்கமழும் தாமரை மலர்போன்ற சேவடிக் கீழே வீழ்ந்து வணங்கி மகிழ்ந்தனர் வன்றெண்டர்.

இவ்வாறு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அன்று...உறுதியளித்தீர்-இங்கு நம்பிகள் தம்மை இறைவர் திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட் கொண்டது பேர் அருளின் திறம் என்று போற்றுகின்றுர். **வலிய** -ஆளல்லேன் என்று மறுப்பவும் வலிந்து வழக்கிட்டு என்றபடி; மணப்பந்தரில் "இவன் என் அடியான்" என்று இறைவர் **கூறியபோது** உலகச்சூழலின் மயக்குட்பட்டு ஒரு மணம் புரிய நின்ற மணமகனுகிய நம்பிகளும் சுற்றத்தாரும் அதனை வெறுத்துச் சினந்தனர்; பின்னர், வெண்ணெய் நல்லூரில் வழக்கு வென்று, மறைந்து,

3390. "அன்று வெண்ணெய் நல்லூரில் வலிய வாண்டு கொண்டருளி
ஒன்று மறியா நாயேனுக் குறுதி யளித்தீ, **ருயிர்காக்க,**
இன்று மிவளை மணம்புணர்க்க வேன்று நின்றீ!"ரெனப்போற்றி
மன்றன் மலர்ச்சே வடியிணைக்கீழ் வணங்கிமகிழ்ந்தார் வன்றொண்டர். 236

விடை மேற்றொன்றி **உணர்த்தி ஆளாகக் கொண்ட போதே** நம்பிகள் அஃது இறைவரது பேரருளிப்பாடு என்று மகிழ்ந்தனர். உலக மயக்கினின்றும் பிரித்துத் தம்மைத் தொடர்வறத்தொடர்ந்து வந்து ஆட்கொண்டதனையும், அது, கயிலையில் தந்த வரமென்பதனையும், அஃதே உயிர்க்குறுதியாவதென்பதனையும் உணர்ந்தனர். இங்கும் அவ்வரத்தினையும், கயிலையில் பெற்ற ஆணையினையும், அவற்றின் தொடர்ச்சியாக இத்திருமணம் இனி நிகழ்வதாகும் என்பதனையும் உணர்ந்தனர். ஆதலின், **அன்று** - உறுதி அளித்தீர்; **இன்றும்** - ஏன்று நின்றீர்" எனத் தொடர்புபடுத்திக் கூறினர்; **இன்றும்** - அதுபோலவே இன்றும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

உயிர்காக்க - உயிர்காக்க - உறுதியளித்தீர் என்றும், உயிர்காக்க - ஏன்று நின்றீர் என்றும் முன்னும் பின்னும் கூட்டியுரைக்க இடையில் வைத்தருளினர்; இடைநிலைத் தீபம்.

ஒன்றும் அறியா - இறைவர் வந்து தடுத்த செயலினை அருள் என்று சிறிதும் அறியாத; இன்றும் இங்கும் இத்திருமணம் உமது ஆணைவழி நிகழ்வதாகிய நிலை என்றும் அறியாத என்று பின்னும் வருவித்துரைத்துக் கொள்க.

ஏன்று நின்றீர் - தருகின்றோம் என்று உடன்பட்டீர்; இசைந்து நின்றீர்.

ஏலுதல் - மேற்கொள்ளுதல்; உடன்படுதல்.

உயிர்காக்க - அன்று உயிர்காக்க உறுதியளித்தமையாவது உயிர் உலகச்சூழலிற் புறம்போகிக் கன்ம வீட்டம் கொண்டு பிறவிக்காளாகாது தடுத்துக்காத்த செயல். இன்று உயிர்காக்க ஏன்று நின்றீர் என்றது காதல் காரணமாக உயிர் போகு நிலையினின்றும் காக்கும் செயல். "அவள்பா லின்று மேவுதல் செய்யீராகில் விடுமுயிர்" (3509) எனப் பின்னர்க் கூறும் அத்தன்மை காண்க.

வன்றொண்டர் - முன்னரும் (3389) "வன்றொண்டர் தம்பால்" என்றார். இந்நிகழ்ச்சிகள் யாவும் அவரது வன்றொண்டராந் தன்மைபற்றியே வருவன என்பதுணர்த்தியபடி.

அன்று...உறுதியளித்தீர் - இதனை நம்பிகள் என்றும் மறவாது பலவிடத்தும் பன்னிப்பன்னிப் பாராட்டி மகிழ்ந்து துதிக்கின்றார்;"அன்று வந்தெனை யகலிடத்தவர் முன்னுள தாகவென் றுவணங் காட்டி, நின்று வெண்ணெய்நல் லூர்மிசை யொளித்த" (திருக்கோலக்கா-5); "வெண்ணெய் நல்லூரி, லற்பு தப்பழவாவணங் காட்டி, யடிய னுவெனை யாளது கொண்ட" (திருநள்ளாறு-6) என்பன முதலியவை காண்க.

ஏத்துவாராய் (3385);-என (3386) - உணர்த்தி - தளர்வார் (3387) - இருப்ப - அயர்வார் - அழிய (3388) - எய்தி - என்ன (3389) - எனப்போற்றி - மகிழ்ந்தார் - வன்றொண்டர் (3390) என்று இவ்வாறு பாட்டுக்களையும் கூட்டி முடிபுபடுத்திக் கொள்க. மருண்டார் - (3383) - புக்கார் (3384) என்று மனமருட்சியுடன் புக்க நம்பிகள்பால் அம்மருட்சி

3391. ஆண்டு கொண்ட வந்தணனா ரவருக் கருளிக், கருணையினால்,
நீண்ட கங்குல் யாமத்து நீங்கி, வானில் நிறைமதியந்
தீண்டு கன்னி மாடத்துச் சென்று, திகழ்சங் கிலியாராந்
தூண்டு சோதி விளக்கனையார் தம்பாற் கனவிற் றோன்றினார். 237

நீங்கி மகிழ்வுண்டாம்வரை இடையீடின்றி ஒரே தொடர்பாய்க் கூறும் கவிமரபும் நயமும் கண்டுகொள்க. **236**

3391. **(இ-ள்)** ஆண்டு...அருளி - ஆளாகக் கொண்டருளிய அந்தணனாராகிய இறைவர் அவருக்கு அவ்வாறு அருளிச் செய்து; கருணையினால் - பேரருளினாலே நீண்ட...நீங்கி - பொழுது நீண்ட இரவிடையே யாமத்தில் நீங்கி; வானில்...சென்று ஆகாயத்தில் நிறைந்த மதி தீண்டுகின்ற உயர்ந்த கன்னிமாடத்திலே சென்று; சங்கிலியாராம்...தோன்றினார் - சங்கிலியாராகிய தூண்டும் சோதியினை உடைய விளக்குப் போன்ற அம்மையார்பால் கனவிலே தோன்றியருளினார்.

(வி-ரை) கருணையினால் - அருளி என்றும், **கருணையினால் - நீங்கிச்**-சென்று என்றும், **கருணையினால் - தோன்றினார்** என்றும் மூன்றிடத்தும் கூட்டுக.

நீங்கி - சென்று - நீங்குதலும் செல்லுதலும், இறைவர்பாற் கூறுவது உபசாரம்; அவர் எங்கும் நீக்கமற நிற்கின்றவர்; போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியர். இவை, வெளிப்படாது மறைதல் வெளிப்படுதல் என்ற பொருள் அளவில் கொள்ளத்தக்கன.

தூண்டு சோதி விளக்கு அனையார் - "தூண்டா விளக்கன்ன சோதி" (*1488-* III-பக்-497) என்ற விடத்துரைத்தவையும், "தூண்டு சுடரனைய சோதி" (III-பக்-647) என்றதும் பார்க்க; **தூண்டுசோதி** - விட்டு ஒளிவிளங்கும் சோதி; உலகத்தாரை அறிவு கொளுத்தி நன்மையில் தூண்டும் என்ற குறிப்புமாம். இங்கு இறைவராற் றூண்டப்பட்டு இனி விளங்க உள்ள விளக்கு என்பதும் குறிப்பு.

தம்பாற் கனவில் தோன்றினார் - முன் "**தம்பாலெய்தி**" (*3389*) என்றவிடத்துரைத்தவை பார்க்க; இறைவர் உயிர்களுக்கு அருள்புரிய வெளிப்பட்டு உணர்த்தும் நிலைகள் பலவகைப்படும்; மூவகைப்பட்ட பசுக்களுக்குத் தன்மை முன்னிலை படர்க்கை (குரு) யிடங்களில் வெளிப்பட்டு உணர்த்தும் நிலைகள் ஞானநூல்களில் விளக்கப்படுவன; இனி "நனவிலுங் கனவிலு நாளுந் தன்னொளி, நினைவிலுமெனக்கு வந்தெய்து நின்மலன்" (பிள் - தேவா கருக்குடி-*1*); "உன்னியுன்னி யுறங்குகின் றேனுக்குத், தன்னை வாய்மூர்த் தலைவனு மாசொல்லி" (அரசு - வாய்மூர்); "கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி, நனவிலு நாயேற் கருளினை போற்றி" (திருவா) என்பன முதலியவை கனாநிலையினும் நனவிலும் இறைவரது வெளிப்பாடு உணர்த்தின; இனி, அசரீரியாக விண்ணில் நிறைந்த ஒலியால் உணர்த்துவதும், வேற்றுக் கோலங்களில் வந்தருளுவது முதலியவையும் உண்டு; இவை அவ்வவர் நிலைகளுக்கேற்ப நிகழ்வன; இவ்வேறுபாடு கொண்டு திருவருணிலையினும், உணர்த்தப்பெறுவோர் நிலையினும் ஏற்றத்தாழ்ச்சி காணுதல் பிழையாம்; "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்பும், கேட்பான் புகிலளவில்லை; கிளக்க வேண்டா" என்பது ஆணையாதலின். **237**

3392. தோற்றும் பொழுதிற் சங்கிலியார் தொழுது விழுந்து பரவசமாய்
ஆற்ற வன்பு பொங்கியெழுந் "தடியே னுய்ய **வெழுந்தருளும்**
பேற்றுக் கென்யான்செய்வ?"தெனப், பெரிய **கருணைபொழிந் தனைய**
நீற்றுக் கோல வேதியரு நேர்நின் றருளிச் செய்கின்ருர், 238

3392. **(இ-ள்)** தோற்றும்...எழுந்து - அவ்வாறு இறைவர் தமது கனுவிலே தோன்றக் கண்டபொழுது சங்கிலியார் தொழுது நிலமுறவிழுந்து பரவசராகி மிகவும் அன்பு வெள்ளமாகப் பொங்கி நிகழ எழுந்து; அடியேன்...என - அடியேன் உய்யும் பொருட்டுத் தேவரீர் எழுந்தருளி வரப்பெற்ற பெரும் பேற்றுக்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன் என்று துதிக்க; பெரிய...அருளிச் செய்கின்ருர் - பெரிய கருணையே மேலே பொழிந்தாற் போல விளங்கும் திருநீற்றுக் கோலத்தினை உடைய வேதியாராகித் தோன்றிய இறைவரும் நேரே நின்று சொல்லியருள்கின்ருராகி;

(வி-ரை) தோற்றும்பொழுது...என - இந்நிகழ்ச்சிக்களும் மேல் (*3392-3396; 3405-3407*) வருவனவும் சங்கிலியார்பாற் கனுநிலையில் நிகழ்ந்தவை; மேல் "எய்தியபே ரதிசயத்தா **லுணர்ந்து எழுந்து**" (*3407*) என்பது காண்க.

"அடியேனுய்ய எழுந்தருளும் பேற்றுக்கு என் யான் செய்வது?" என - இது சங்கிலியார் கனுவிற்கண்ட இறைவரை நோக்கிக் கூறியது; **யான் என் செய்வது** என்க. கைம்மாறு என்பது சொல்லெச்சம்; "எதிர்செய்குறை யென் கொல்?" (*1338*).

கருணை பொழிந்தனைய நீற்றுக்கோல வேதியர் - இஃது இறைவர் காட்சிதந்த கோலம்; ஆளுடைய அரசுகளுக்குத் திருமறைக் காட்டிலும் (*1541*) திருக்கயிலையிலும் (*1628*), நம்பிகளுக்குத் திருவெண்ணெய் நல்லூரிலும், திருவாதவூரடிகளுக்குத் திருப்பெருந் துறையிலும் நனுவிற் காட்டிய திருக்கோலங்கள் இங்கு நினைவு கூர்தற் பாலன. இஃது அவருக்குக் கைவந்த பழங்கோலம் போலும்.

கருணை பொழிந்தனைய நீற்றுக் கோலம் - திருநீற்றின் பொலிவு, உள்ளிருக்கும் உருக்காணுத பெருங்கருணை பொங்கி யிடங்கொள்ளாது மேலே பொங்கி வழிவது போலிருந்தது என்பதாம். வெண்மை அருளாகிய சத்துவத்தின் நிறம் என்ப. உருவும் பயனும் பற்றிவந்த உவமம்.

பொழிகின்ற —என்பதும் பாடம். 238

3393. **(இ-ள்)** வெளிப்படை. "சார்கின்ற பெரிய தவத்தினையுடைய சங்கிலியே! கேட்பாயாக; என்னிடத்தில் மிகவும் அன்புடையவன்;மேருமலையினும் மேம்பட்ட தவத்தினை உடையவன்;திருவெண்ணெய் நல்லூரில் எல்லாரும் காண யான் ஆளாகக் கொள்ளும் உரிமைபெற்றவன்; உன்னை வேண்டி என்பால் இரந்தனன்; வாரணிந்த முலையுடையாய்! நீ அவனை மணஞ் செய்து மகிழ்ந்து அணைவாயாக" என்று அருளிச் செய்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3393. "**சாருந் தவத்துச்** சங்கிலிகேள்! சால வென்பா லன்புடையான்;
மேரு வரையின் மேம்பட்ட தவத்தான்; வெண்ணெய் நல்லூரில்
யாரு மறிய யாளுள உரியா; னுன்னை யென்னையிரந்தான்;
வார்கொண் முலையாய்! நீயவனை மணத்தா லணைவாய்மகிழ்ந்"தென்றார். 239

(வி-ரை) "சாரும் தவத்துச் சங்கிலி கேள்...மகிழ்ந்து" இந்து இறைவர் அருளியது; **சாரும்** - சாரத்தக்க; "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" (குறள்); **தவம்** - சிவனை நோக்கிச் செய்யப்படுவது;மலச் "சார்புகெட வொழுகுதல்"; **தவம்-சாரும்** என்னின் வேறெவ்வகைகளையும் கொள்ளவருமாதலின் தகாத ஏனையவற்றை விலக்கச் **சாரும் தவம்** என்றார்; பிறிதினியைபு நீக்கிய விசேடனம்.

சாரும் - தவம் - தம் கணவரைச் சார்தற்காகச் செய்யும் தவம் என்ற குறிப்புமாம். முன்னர்ப் பரவையார் திறத்தும் "மணிகண்டர் கழல்வணங்கிக் கணவரை முன் பெறுவாள் போல" (315) என்றது காண்க.

தவத்துச் சங்கிலி - தவத்தான் - என இருபாலும் **தவம்** பற்றிக் கூறியது இவர்களது நிலைகளும் தொடர்பும் தவத்தாற் சிவச் சார்பாகிய தவச் சார்புபற்றி நிகழ்வனவேயன்றி, ஏனை உலகவரிற்போலப் பவச்சார்புபற்றி நிகழ்வன அல்ல; என்றும் அவ்வாறு கருதுதல் அபசாரமென்றும் உணர்த்துதற்பொருட்டு.

சால என்பாலன்புடையான் - தவத்தான் - உரியான் - என்று இன்னார் எனக் கூறுது அருளியது முன்னமே சங்கிலியார் அறிந்த முன்னையறிவின் றொடர் புணர்வு பற்றி; 3395-ம் பார்க்க.

யான் ஆள உரியான் - "எம்பெருமா னீசன் றிருவருளே மேய வொருவர்க்குரியதியான்" (3365) எனவறிந்துள்ளாராதலின் அவ்வாறு 'அருள்மேய ஒருவன் இவன்" என்றறிவித்தபடி.

உன்னைத்தரும்படி என்னை யிரந்தான் - என்க. இரத்தல் - வேண்டுதல்.

மணத்தால் அணைவாய் - விதிமணம் புரிந்து கொள்வாயாக;"தக்க விதி மணத்தால் - நல்கியருளும் பொழுது" (3395) என்று மேற் கூறுதல் காண்க.

மகிழ்ந்து - அணைவாய் என்க;மனமுவந்து ஏற்றுக்கொள்க என்றதாம். மகிழ்ந்திருந்து பின்பு நம்முலகில் அணைவாய் என்ற குறிப்புமாம். "கலந்தணைவாய்" (37).

அவனை - முன்னிற சுட்டு.

யாருங்காண—என்பதும் பாடம். 239

3394. **(இ-ள்)** ஆதி...பொழுதின்கண் - ஆதிதேவர் அவ்வாறு அருளிச் செய்த பொழுதில்; மாதரார்...செந்நின்று - அழகுமிகுந்த சங்கிலியாரும் விட்டுணுவும் பிரமனும் அறிதற்கரிய குளிர்ந்த தாமரை மலர் போன்ற திருவடியின் கீழே பொருந்த விழுந்து நேர்நின்று; வேத முதல்வர்...விளம்புவார் - வேதமுதல்வராகிய இறைவரது திருமுன்பு நடுக்கம் பொருந்தித் தொழுது சொல்வாராகி,

3394. ஆதி தேவர் முன்னின்றங் கருளிச் செய்த பொழுதின்கண்,
மாத ரார்சங் கிலியாரு மாலு மயனு மறிவரிய
சீத மலர்த்தா மரையடிக்கீழ்ச் சேர்ந்து வீழ்ந்து செந்நின்று
வேத முதல்வர் முன்னடுக்க மெய்தித்தொழுது விளம்புவார், 240

(வி-ரை) ஆதிதேவர் - எல்லாத் தேவர்களுக்கும் முற்பட்டவர்; ஆதியாகிய - முதன்மையுடைய - தேவர் என்றபடியுமாம் "முளைத்தானை யெல்லார்க்கு முன்னே தோன்றி" (தேவா); **முன்** - தமது முன்பு.

முன் நின்று - தாமே பொறுப்பு ஏற்றுக்கொண்டு முன்னின்று என்பதுமாம்.

மாதரார் - அழகு நிறைந்த; மாதர் - அழகு. மாதர் - பெண் என்றலுமாம். மேல் வருவன பெண்களி னியல்புபற்றியன என்பது குறிப்பு.

சேர்ந்து - திருவடியில் முடி பொருந்த.

செந்நின்று - நேரே நின்று; இஃது இறைவர் முன்பும், சிவ பூசையிலும் உடம்பை நேரே நிறுத்த வேண்டும் என்னும் முறைபற்றியது;"தறியிருந்தாற் போலத்தம்மை நிறுத்தி" (திருமந்) "சுருட்குஞ்சி யுடனலையச் செந்நின்று" (1948).

நடுக்க மெய்தி - இறைவர் அறியாத தொன்றை அறிவிப்பார் போன்று விண்ணப்பிக்கத் தொடங்குதலின் நடுக்க மெய்தினர்; "வேண்டத்தக்க தறிவோய் நீ" என்ற உண்மையினை முற்றும் அறிந்தவர் சங்கிலியார்;ஆயினும் ஆர்வத்தினல் விண்ணப்பிக்கின்றாராதலின் நடுங்கினர் என்க; உண்மை அறிந்தோர்க்கே இவ்வாறு மெய்ப்பாடு உளதா மென்க.

விளம்புவார் - என்பார் (3395) - பின்னும் - உரைப்பார் - என்றார் (3396) என்று கூட்டிமுடிக்க. 240

3395. **(இ-ள்)** எம்பிரான்... உரியேன் - எம் பெருமானே! தேவரீர் அருளிச் செய்த அவருக்கு நான் உரியவள்;இமையோர்...மேற் கொண்டேன் - தேவர்கள் பெருமானே! தேவரீரது அருட் கட்டளையைத் தலைமேற் கொண்டு பூண்டேன்; தக்க...ஒன்று உளது என்பார்- தகுந்த விதிமணத்தின்படி நம்பியாரூரருக்கு என்னைக் கொடுத்தருளும்போது, இமயக்கொம்பாகிய உமையம்மையாரை ஒரு பாகத்தில் கொண்ட தேவரீருக்குச் சொல்கின்ற திறம் ஒன்று உள்ளது என்பாராய்,

(வி-ரை) எம்பிரானே! - தம்பிரானே - முன்னர் உடன்பாட்டுக் குறிப்பும், பின்னர் அதனில் சில மாறுபாட்டுக் குறிப்பும் உணர்த்துகின்றாராதலின் இரண்டு விளிகள் பட அமைத்துக் கூறினர்; இது கவிநயம். **இமையோர் தம்பிரான்** - என்று வேறுபடுத்திய குறிப்புக் காண்க.

அருளிச் செய்தார் - உம்மால் அருளிச் செய்யப்பட்டார்; செயப்பாட்டுவினை; மணம் பற்றி முன்னர்க் கைலையில் அருளிப்பாடும், இன்று ஈண்டுக் கனவில் அருளிப்பாடும்

3395. எம்பிரானே!**நீரருளிச் செய்தார்க் குரியேன் யானி**மையோர்
தம்பி ரானே!யருடலைமேற் கொண்டேன்; **றக்க விதிமணத்தால்**
நம்பி யாரூ ரருக்கென்னை நல்கி யருளும் பொழுதிமயக்
கொம்பி னாகங் கொண்டீர்க்கு கூறுந் திறமொன் றுளதென்பார், 241

உள்ளடக்கி நின்றது.

தக்க - விதி மணத்தால் - களவு கற்பு என்ற இருதிறத்தினுள் இது விதிமணம் எனப்படும். ஊரவரறிய ஈண்டுச் சிறப்பு உரிமையாளராகிய இறைவரால் தரப்பட்டு மேல்உரிய சடங்குடன் நிகழ்த்தப்படும் மணத்தின் மூலம்; "கண்ணிறைந்த பெருஞ் சிறப்பிற் கலியாணஞ் செய்தளித்தார்" (3420) என்பது காண்க.

என்னை நல்கியருளும் பொழுது - பெற்றேரையும் பதியையும் சுற்றத்தையும் விட்டுச் சிவனரருளிற் சென்றமைந்தாராதலின் அவரை மணஞ் செய்து கொடுக்கும் உரிமை பொதுவாயும் சிறப்பாயும் திருஒற்றியூர் இறைவர்பால தாயிற்று என்பார் **நல்கியருளும்** என்றார்; சிவனடிமையேயாந் திறம்.

இமயக் கொம்பின் ஆகங்கொண்டீர்க்கு - என்றும், மேல் "எம்பிராட்டி திருமுலை தோய் - மார்பீர்!" என்றும் இக்குறிப்புப்படக் கூறுதல் (3396) உமையம்மையாரை நீர்பிரியாது ஒருபாகத்து வைத்தல் போல் என் நாயகராகும் நம்பியும் என்னைப் பிரியாதுடனிருக்க வைத்தல்முறை என்பது குறிப்பு. முன்னர் (3386) நம்பிகள் இவ்வாறே இறைவர்பால் வைத்துப் போற்றும் குறிப்பும் காண்க.

கூறும் திறன் ஒன்று உளது - திருமணத்தின் முன்னர்க் குறிக்கொள்ள வேண்டிக் கூறும் செய்தி ஒன்றுண்டு என்பதாம். ***241***

3396. **(இ-ள்)** பின்னும்...உரைப்பார் - புரிந்த சடைமுடியாராகிய இறைவர் திருமுன்பு மிகவும் நாணமுற்றுத் தொழுது மேலும் சொல்வாராகி; "மன்னும்...அணிமார்பீர்!" என்றார் - நிலைபெற்ற திருவாரூரினிடத்தே அவர் தாம் மகிழ்ச்சியுடன் நிரந்தரமாக எழுந்தருளுவர் என்னும்தன்மையினை அறிந்து அதற்கேற்றவாறு அருள் செய்தல் வேண்டும்; எமது பிராட்டியாகிய மலைவல்லியாரது திருமுலை தோய்ந்த மின்னுகின்ற வெண்புரிநூலினை உடைய அழகிய மார்பினையுடையவரே! என்று கூறினர்; குன்றா விளக்கனையார் - குறையாத விளக்குப் போன்ற சங்கிலியார்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பின்னும் பின்னல் - சொற்பின் வருநிலை என்ற சொல்லணி; **பின்னல்** - பின்னியது போன்று புரித்த சடை; **பின்னும் - உரைப்பார்** என்று கூட்டுக; **பின்னும்** - மேலும் தொடர்ந்து,

பெருக நாணி - மிகவும் நாணமடைந்து; **நாண்** - பெண்மையின் இயல்புக் குணங்கள் நான்கனுள் முதலாவது; தம் நாயகர் தம்மைப் பிரியாது தமக்கே உரியராய் உடனே இருக்க

3396. பின்னும் பின்னன் முடியார்முன் பெருகநாணித் தொழுதுரைப்பார்
"மன்னுந் திருவா ரூரின்க ணவர்தா மிகவு மகிழ்ந்துறைவ
தென்னுந் தன்மை யறிந்தருளு மெம்பி ராட்டி திருமுலைதோய்
மின்னும் புரிநூ லணிமார்பீ!" ரென்றார் **குன்று விளக்கனையார்.** 242

விரும்புதல் பெண்மையின் இயல்புக் குணம்; ஆயின், அதனைப் பிறர்பால் அறிவித்தலும், அதற்குத் துணை செய்யக் குறிப்பாற் கூறுதலன்றி வெளிப்படையாய்க் கூறுதலும் நாணத்தால் பெண்கள் செய்யார்; முன்னர் "மறைவிட் டியம்புவார்" (3367) என்ற குறிப்பும் காண்க. ஈண்டு அதனைக் குறிப்பாற் கூறும் திறம் மேற்காண்க. **எம்பிராட்டி** - முன்னைநிலையின் றொண்டின் உரிமை.

மன்னும்...அறிந்தருளும்- திருவாரூரில் மிகவும் மகிழ்ந்துறைவது என்னும் தன்மையறிந்து அதற்கு ஏற்றபடி நெறிசெய்து அருளுவீர் என்றதனால் அவரது பிரிவும், திருஆரூரில் வேறுமொரு நாயகிக்கு உரியராந்தன்மையும், பிரியாமைக் குரிய நிபந்தனை அமைக்க வேண்டுதலும் குறிப்பால் உணர்த்திய நிலை கண்டு கொள்க. அதனை அவ்வாறே உட்கொண்ட இறைவர்,மேல் "உனை இகந்து போகாமைக்கொரு சபதம்...அவன் செய்வான்" (3397) என்றருளுவதும் காண்க.

குன்று விளக்கு அனையார் - குன்று - கெடுதலில்லாத; வினைபற்றி வந்த உவமம்; முன்னர்த் தூண்டு சோதி விளக்கனையார் (3391) என்ற விடத்துரைத்தவை பார்க்க. தூண்டும் விளக்காயினும் குன்றுதலில்லாதது என்க. 242

3397. **(இ-ள்)** மற்று...கொண்டு - மற்று அவரது (சங்கிலியாருடைய) மொழிகளை ஏற்றுக்கொண்டு; வன்றொண்டர்...உரை செய்வார் - வன்றொண்டரது மன நிலையினையும் திருவொற்றியூரில் அமர்ந்தருளிய பெருமானார் திருவுளங்கொண்டருளி உரைப்பாராகி; பொற்றொடியாய்...என அருளி - பொன்னாலாகிய தொடியினை அணிந்தவளே! உன்னைவிட்டுப் பிரிந்து போகாமலிருத்தற்கு அந்தரங்கமாகப் பொருந்தும் நிலையினாலே அவன் ஒரு சபதம் செய்வான் என்றருளிச் செய்து,

(வி-ரை) மற்று அவர் தம் உரை - மற்று - உரை - தமது இசைவினை ஒருவாறு அளவுபடுத்திய உரை என்ற குறிப்புடன் நின்றது; **மற்று** - மாறுபடுக்கும்; **கொண்டு** - ஏற்றுக்கொண்டு; மேற்பூண்டு கொண்டு. **வன்றொண்டர்** - முன்னும், இனியும் இப்பெயராற் கூறும் குறிப்புப்பற்றி முன் உரைக்கப்பட்டது. (3390-3399-3401).

வன்றொண்டர்... உணர்ந்தருளி - நிலைமை யாவது இறைவர்பதிகள் சென்று சென்று கும்பிட்டும் பாடியும் வரும் வாழ்க்கை;-"பிறபதியும் நயந்த கோலஞ் சென்று **கும்பிடவே கடவேனுக்கு**" (3401).

உணர்ந்தருளி - எல்லாம் அறிந்த இறைவரை இங்கு **உணர்ந்தருளி** என்றருளியது என்னை? எனின், எல்லாமுணர்தல் பொதுவுணர்வு; ஈண்டுக் கூறியவுணர்வு ஆன்மாக்களின் அறிவிச்சை செயல்களைத் தொழிற் படுத்தற்காக இறைவர் தமது சத்தியை அதிட்டித்து நின்று மேற்கொள்ளும் சிறப்பு உணர்வு.

வேறு

3397. மற்றவர்தம் முரைகொண்டு **வன்றொண்டர் நிலைமையினை**
ஒற்றிநக ரமர்ந்தபிரா னுணர்ந்தருளி! யுரைசெய்வார்,
"**பொற்றொடியா! யுனையிகந்து போகாமைக் கொருசபதம்**
அற்றமுறு நிலைமையினு **லவன்**செய்வா னெனவருளி, 243

3398. வேயனைய தோளியார் பானின்று மீண்டருளித்,
தூயமன மகிழ்ந்திருந்த தோழனுர் பாங்கணைந்து,
"நீயவளை மணம்புணரு நிலையுரைத்தோ; மதற்கவள்பால்
ஆயதொரு **குறையுன்னு லமைப்பதுள**" தென்றருள, 244

உரை செய்வார் - என அருளி - என்று கூட்டுக.

இகந்து போகாமைக்கு - இகத்தல் - நீத்தல் - விடுதல்; **போகாமைக்கு** - போகாதிருத்தற் பொருட்டு.

அற்ற முறு நிலைமையினுல் - தனித்த நிலைமை; அந்தரங்கமாகிய உண்மைநிலை. "அற்ற மெனக்கருள் புரிந்த" (3406). **அற்றம்** - வருத்தம் எனக்கொண்டு, இதனைச் சங்கிலியார்பாற் சேர்த்தி நீ வருந்தும் நிலையினுலே என்றுரைப்பர் இராமலிங்கத் தம்பிரானுர்; **அற்றம்** - விருப்பம் - காதல் எனக் கொண்டு உன்மேல் காதல் கொண்ட காரணத்தால் என்றதும் குறிப்பாம் என்பர் இராமநாதச் செட்டியார். "வம்பணிமென் முலையவர்க்கு மனங்கொடுத்த" என்பது காண்க.

அருளி - மீண்டருளி - அணைந்து - அருள - (3398) வன்றொண்டர் வணங்கி - என்ன - செய்க என - அருள் செய்தார் (3399) என்று இம் மூன்று பாட்டுக்களையும் கூட்டி வினை முடிபு கொள்க. *243*

3398. **(இ-ள்)** வேய் அனைய...மீண்டருளி -மூங்கில் போன்ற தோளினையுடைய சங்கிலியாரிடத்தினின்றும் மீண்டு சென்றருளி; தூயமனம்...அணைந்து - தூய்மையுடைய மனத்தில் மகிழ்ச்சி கொண்டிருந்த தோழனுரிடத்து வந்துஅணைந்து;நீ அவளை...என்றருளி - "நீ அந்தச் சங்கிலியை மணம் செய்து கொள்ளும் நிலையினை அவளிடம் சொன்னேம்; அதற்காக அவளிடம் உன்னுல் அமைக்க வேண்டியதாகிய குறை ஒன்று உள்ளது" என்று அருளிச் செய்ய;

(வி-ரை) வேயனைய தோளியார் - "வேயனைய தோளுமை" என்னும் தேவார ஆட்சி போற்றப்பட்டது; உமையம்மையாருக்குத் தொண்டு செய்தலின் அத்தன்மை பெற்றவர் என்ற குறிப்புமாம்.

மீண்டருளி - அணைந்து - அங்கு நின்றும் மறைந்து இங்கு வெளிப்பட்டு; மீளுதலும் அணைதலும் இறைவர்பாற் கூறுதல் உபசாரம்.

தூய மனம் - பின்னர் (3402) நம்பிகள் இறைவர்பால் வேண்டிக்கொள்வது பற்றி, நம்பிகள்பால் வேறுபடக் கூறி அபசாரப்படுவாரு முளராதலின், அவர்கள் அவ்வாறு

3399. வன்றொண்டர் மனங்களித்து வணங்கி "யடி யேன்செய்ய
நின்றகுறை யா" தென்ன, "நீயவளை மணம்புணர்தற்
கொன்றியுட னேநிகழ வொருசபத மவள்முன்பு
சென்றுகிடைத் திவ்விரவே செய்க"வென வருள்செய்தார். 245

அபசாரப்பட்டுச் சிவாபராதத்துக்காளாகி நரகிலழுந்தா வண்ணம் கருணையினுல் ஆசிரியர் எச்சரித்துத் தெருட்டியருளியவாறு; நம்பிகளது திருவுள்ளம் எவ்விதமாகிய மாசுமற்று விளங்குவது என்க. இதுபற்றி மேலும் (1402) காண்க.

தோழனுர் - உயிர்ப்பாங்கர்; "முடியார்பாற் பெறுவேன்" (3384); 'நண்பால்" (3388) என்ற விடங்களிலுரைத்தவை பார்க்க. ஈண்டும், பின்னர்ப் பரவையார் திறத்தும் இறைவர் நிகழ்த்தும் அருள் விளையாடல்களைப் பற்றிப் பிழைபடக் கூறுவார் இத்தன்மையினைக் குறிக்கொள்ளக் கடவர். ஈண்டு இப்புராணமுடைய ஏயர்கோன் கலிக்காமர் சரிதவரலாற்றின் குறிப்பும் கண்டு கொள்க.

உன்னுல் அமைப்பது ஒரு குறை உளது - என்க.

அமைப்பது - நிறைவேறச் செய்வது; **குறை** - மேற் செய்ய நின்ற கடன்; **அதற்கு** - அது முடிப்பதற்கு; **ஒருகுறை** - என்றதனுல் அவ்வளவு மட்டிலன்றி வேறு தடையிலது என்பதும், மற்று அவளது இசைவும் குறிப்பிற் கூறியவாறு கண்டுகொள்க. மேலும் "**குறை**" (3398) என்பது காண்க. *244*

3399. **(இ-ள்)** வன்றொண்டர்...யாது? என்ன - வன்றொண்டராகிய நம்பிகள் மன மகிழ்ந்து பணிந்து அடியேனுற் செய்யப்பட வேண்டிய குறையாவது யாது? என்று வினவ; நீ அவளை...என அருள் செய்தார் - நீ அவளை மணஞ்செய்து கொள்வதற்கு, நீங்காது ஒன்றித்து அவளுடனே உறைவதாக ஒரு சபதத்தினை அவள் முன்பு நீ சென்று சேர்ந்து இவ்விரவிலேயே செய்வாயாக என்று அருளிச் செய்தார்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) செய்ய நின்ற குறை - செய்யக் கடவதாய் எஞ்சிநின்ற செயல் - கடமை; செய்து நிறைவாக்க நிற்பதாதலின் **குறை** எனப்பட்டது.

ஒன்றி உடனே நிகழ - ஒன்றுதல் - சேர்தல். **உடனே நிகழ்தல்** - பிரியாது உடனிருத்தல்.

ஒன்றுதல் - அகமாகிய மனவொருமைப்பாடும், **உடனிகழ்தல்** புறமாகிய உடனுறைதலும் குறித்தலின் கூறியது கூறலன்மையுணர்க; இது திருவொற்றியூரில் பிரியாது அமர்தல் குறித்தது;

அவள் முன்பு சென்று கிடைத்து இவ்விரவே செய்க - அவள் முன்பு - என்றது அவள் நேரில் கண்டும் கேட்டும் நிற்க என்றதாம்; **சென்று கிடைத்து** என்றது முற்பட்டுச் செல்ல வேண்டியதும் கிட்டுவதும் உன் செயலாக நிகழ்தல் வேண்டுமென்றதாம்; **இவ்விரவே** என்றது சபதம் நிகழும் காலம் குறித்தது - "**காலமது வாகவே**" (3409)

3400. "என்செய்தா லிதுமுடியு மதுசெய்வ னியா;னதற்கு
மின்செய்த புரிசடையீ! ரருள்பெறுதல் வேண்டு"மென,
முன்செய்த முறுவலுடன் முதல்வரவர் முகநோக்கி
"யுன்செய்கை தனக்கினியென் வேண்டுவ?"தென் றுரைத்தருள, 246

என்பது காண்க; **மணம் புணர்தற்குச் - சபதம் செய்க** என்றது மணம் புணர்தற்கு இன்றியமையாத முற்செயலாக என்றதாம்.

நிகழ்வ தொரு—என்பதும் பாடம். 245

3400. **(இ-ள்)** என் செய்தால்...யான் - எந்தச் செயலைச் செய்தால் இத்திருமணம் முற்றுப்பெறுமோ அதனை யான் செய்வேன்; மின்செய்த புரிசடையீர் - மின்னொளி விளங்கும் புரித்த சடையினையுடைய இறைவரே!; அதற்கு அருள் பெறுதல் வேண்டுமென - அதற்குத் தேவரீரது திருவருளை அடியேன் பெற வேண்டும் என்று சொல்ல; முன் செய்த... முகநோக்கி-முன்னுற் றோன்றும் புன்சிரிப்புடனே முதல்வராகிய இறைவர் அவரது முகத்தினை நோக்கி; உன் செய்கை...வேண்டுமென்று - சபதம்செய்வதாகிய உனது செயலை நீ முடித்தற்கு இனி என்ன வேண்டுவது என்று; உரைத்தருள - வினவியருள,

(வி-ரை) இது - இத்திருமணம்; **முடியும்** - நிறைவேறும்; **அது** - என்ன செய்தால் முடியுமோ அதனை; "ஒரு சபதம் செய்க" என்று இறைவர் பணித்தாராதலின் இதனை முடித்தற்குச் சபதஞ் செய்ய வேண்டுவதுண்டாயின் அதனை என்பதாம்; சபதம் செய்து மணம் பெறுதல் வழக்கில் இல்லையாதலின் இவ்வாறு உடன்பட்டு வினவிக் கூறினர்.

அதற்கு...வேண்டும்-சடையீரே! அதனுக்கு உமது அருள் பெற வேண்டும்; சடையீராகிய உமது அருட்செயலின் துணையும் ஒன்று வேண்டும் என்பது.

முன் செய்த முறுவல் - முன் செய்த - முன்னே சிறப்பாகத் தோன்றும்; **முறுவல்**- புன்னகை; பின்னர்ச் சங்கிலியாருக்கு உணர்த்திய (3405) வகையால் நம்பிகள்பாற் செய்யும் இத்திருவருள் நிலை வேறு என்பது குறிப்பு.

உன்செய்கை...என்வேண்டுவது - இனி அவள்பால் சென்று சபதம் செய்து மணமுடித்துக் கொள்வது உன் கடமையும் பொறுப்புமாம்; அவ்வாறிருக்க மற்றுச் செய்ய வேண்டுவதொன்று மில்லையே என்பது வினவின் குறிப்பு.

முதல்வர் தாம்—என்பதும் பாடம். 246

3401. **(இ-ள்)** வம்பணி...வன்றொண்டர் - கச்சு அணிந்த இளமுலையாராகிய சங்கிலியாருக்குத் தம் மனத்தை ஒப்புக் கொடுத்த வன்றொண்டர்; நம்பர் இவர்...குறிப்பால் - நம்பராகிய இறைவர் இவர் பிறபதிகளிலும் விரும்பி எழுந்தருளியிருக்கும் திருக்கோலங்களை அங்கங்கும் சென்று சென்று கும்பிடுதலே கடனாகவுடைய எனக்கு இது தடையாகும் என்று கொண்ட திருவுள்ளக் குறிப்பினாலே; தம் பெருமான்...இரப்பார் - தம் பெருமான் திருமுன்பில் தாம் வேண்டுகின்ற குறையினை இரப்பாராகி,

3401. வம்பணிமென் **முலையவர்க்கு மனங்கொடுத்த வன்றொண்டர்**
"நம்பரிவர் **பிறபதியும் நயந்தகோ லஞ்சென்று**
கும்பிடவே கடவேனுக் கிதுவிலக்கா" மெனுங்குறிப்பாற்
றம்பெருமான் **றிருமுன்பு தாம்வேண்டுங் குறையிரப்பார்,** 247

(வி-ரை) வம்பணி மென் முலையவர் - நங்கை சங்கிலியார்; **வம்பு**-கச்சு; மங்கைப்பருவம் குறித்தது; **மனங் கொடுத்தல்** - மனமுழுதும் அவர்பால் வைத்துத் தம் வசமறுதல்.

"**நம்பரிவர்...இது விலக்காம்" எனுங் குறிப்பால்** - நம்பிகளது திருவுள்ளத்திற் சபதம் செய்வதனால் விளையும் விளைவுபற்றி எழுந்த குறிப்பு. **இது**-இவ்வாறு சபதம் செய்தல்; **விலக்கு**-தடை; **குறிப்பு**-மனநிகழ்ச்சி; "அர்ச்சனைபாட்டே யாகுமாதலான் மண்மே னம்மைச், சொற்றமிழ் பாடு கென்றான்" (216) என்ற சிவனாணையின்படி அங்கங்கும் சென்று பாடிவருவதே கடமையாகவுடையேன்; சங்கிலியாரைப் பிரியாமைக்குச் சபதஞ் செய்தல் திருவொற்றியூரினைப் பிரியலாகாது என்றதாகும்; அதனால் ஏனைப் பதிகளிற் சென்று கும்பிடுதலுக்குத்தடையாம் - என்று உட்கொண்டனர்; சங்கிலியாரையும் உடனழைத்துப் பிறபதியும் கும்பிடலாமே எனின்? அற்றன்று; அவ்வாறு செய்தல் உலகவாழ்க்கையிற் கட்டுண்டுழலும் எம்போன்ற கடையேமாகிய ஏனைமக்களுக்கே இயல்வதொரு செயலாம்; முன்னரும், இனியும், பரவையாரையும் நம்பிகள் உடன்கொண்டு செல்லாமையும் கண்டுகொள்க; நம்பிகள் இவ்விருவர்பால் நேர்ந்த விளைவு கழியும் வகையளவினால் உலகவாழ்விற் சென்றனரேயன்றி மற்றை அவரது வாழ்வெல்லாம் சிவவாழ்வேயாகி உலகுக்குறுதி பயத்தற்கே நிகழ்ந்தன என்பதும் உய்த்துணர்ந்து கொள்க; "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதி லாத்திருத் தொண்டத்தொகைதரப், போதுவார்" (35) என்று நம்பிகள் திருவவதார உள்ளுறை விளக்கப்பட்டது;இரண்டு திருமணங்களும் அவ்வுள்ளுறைக்குத் துணையாய் நிற்குமளவே நிகழ்ந்தன; ஏனை உலகவாழ்வுகளின் நிகழ்ச்சிகள் எவையும் சாராமல் இறைவர் தடுத்தாட் கொண்டதும் காண்க. ஆதலின் உலகருள் ஒருவராகச், கடையேமாகிய எம்போலியர் வாழ்க்கையினுடன் ஒருங்கு வைத்து நம்பிகளது தூய சிவவாழ்க்கையினை எண்ணுதல் பெருஞ்சிவாபராதமாம்; "தூயமனம்" (3398) என்றதும் காண்க. இறைவரை மகிழின் கீழே தங்குமிடங் கொள்ளும்படி நம்பிகள் வேண்டிய திறத்தினையும் இக்கருத்துக்களின் றொடர்பு பற்றி உணர்ந்து கொள்க; ஈண்டும், பின்னர்ப், பரவையார் திறத்தும் நிகழ்பவைகளைப் பற்றி மாறுபாடாகச் சில மந்தமதிகள் கூறும் புறங்கூற்று மொழிகள் பொருளற்றன என்றொதுக்குக.

வேண்டும் குறை -தமக்குச் செய்ய வேண்டிய உதவி - உபகாரம்.

இரப்பார் - இரந்து வேண்டுவார்; உலகர்க்கு ஒவ்வாது போன்று உள்ள நிலையாதலின் இரந்து வேண்டுதல் வேண்டப்பட்டது.

உரைப்பார்—என்பதும் பாடம். *247*

3402. (இ-ள்) சங்கரர்...மொழிகின்றார் - சங்கரராகிய இறைவர் திருவடிகளைப் பணிந்திருந்து தமிழ்வேந்தராகிய நம்பிகள் சொல்வாராய்; மங்கைதனை...வந்தால் - மங்கையாகிய சங்கிலியைப் பிரியாதிருப்பதற்குரிய சபதத்தைச் செய்வதற்காக அங்கு உமது

3402. **சங்கரர்தாள்** பணிந்திருந்து **தமிழ்வேந்தர்** மொழிகின்றார்
"மங்கையவ டனைப்பிரியா **வகைசபதஞ்** செய்வதனுக்
கங்கவளோ டியான்வந்தா **லப்பொழுது கோயில்விடத்**
தங்குமிடந் திருமகிழ்க்கீழ்க் கொளவேண்டு" மெனத்தாழ்ந்தார். 248

திருமுன்பு நான் வந்தால்; அப்பொழுது...வேண்டும் என - அப்பொழுது திருக்கோயிலினை விட்டு நீங்கித் தேவரீர் தங்கும் இடம் திருமகிழின் கீழே இடமாகக் கொண்டெழுந்தருள வேண்டும் என்று; தாழ்ந்தார் - வணங்கினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) சங்கரர் - சுகத்தைச் செய்பவர் என்ற காரணக் குறிப்புப் படக் கூறியவாறு.

தமிழ்வேந்தர் - நம்பிகள்; மேற்கூற நின்ற வேண்டுதலுள் தமிழ்வளமிக்க தன்மைக் குறிப்பு.

அங்கு -திருக்கோயிலிற் றிருமுன்பு; **அப்பொழுது தங்குமிடம் கோயில்விடத் திருமகிழ்க்கீழ்க் கொள்ள** வேண்டும் என்க. அவ்வொரு கணம் திருக்கோயிலினின்று மறைந்து திருமகிழின் கீழ் விளங்கி நிற்க என்பதாம்; **அப்பொழுது**-அவளுடன் நான் வரும்அச் சிறிய நேரம் என்பதாம்; **தங்குமிடம் -** விளங்க வீற்றிருக்கும் இடம். **கோயில்விட - மகிழ்க்கீழ் -** என்றது சிவபெருமானது பொதுவகையாகிய எங்கு நிறையும் தன்மையன்றிச் சிறப்பு வகையாற் சிவலிங்கக் குறியினிடத்து விளங்கும் விளக்கம். விறகிற் றீப் போலவும், பசுவின் உடல் முழுதும் நிறையும் பால் முலையினிடத்து விம்மி வெளிப்படுவது போலவும் சிவக்குறியினிடத்துச் சிவனைக் கண்டார்க்குச் சிவன் விளங்குவன் என்பது ஆகமம். இங்கு நம்பிகள் வேண்டுவது அவ்வாறு விளங்காது மறைந்து நிற்றலையேயாம் என்க. இவ்வாறன்றிக், கோயிலின் அப்பொழுது இல்லாமல் மகிழ்க்கீழே இருப்பது வேண்டினார் நம்பிகள் என்னில் அஃது இறைமைக் குணங்களுள் இன்றியமையாது சிறந்ததாகிய, எங்கும் நீக்கமற நிறைகின்ற தன்மையுடன் மாறுபட்டு இறைவராலியலாத தொன்றாகும் என்க; "நீங்கினா ரெப்பொருளு நீங்காத நிலைமையினார்" (3334) என்ற கருத்துக் காண்க.

மகிழ்க்கீழ்த் தங்குமிடம் கொள வேண்டும் - எனத் தாழ்ந்தது, சங்கிலியாரை வஞ்சிக்கும் எண்ணமாம் என்று ஈண்டுச் சிலர் குறை காண்பர்; அற்றன்று;நம்பிகள் திருவுள்ளம் சங்கிலியாருடன் இன்பமுற்றிருப்பதினும், பதிதோறும் சென்று கும்பிடுதலிலேயே முனைந் திருந்ததாதலின் அதுவே அவரது உள்ளம் மிக நாடி அதற்குரிய வழி தேடியது என்க; இது சபதம் செய்தும் அதனைக் கடத்தலால் வரத்தக்க துன்பத்தையும் பொருட்படுத்தாது நீங்கியதனாலும், அதுபற்றிய துன்பங்களை மனமார அனுபவிக்கத் துணிந்ததனாலும் புலனாகும். *248*

3403. **(இ-ள்)** தம்பிரான் தோழரவர்...கொண்டருள - தம்பிரான் றோழராகிய நம்பிகள் தாம் அவ்வாறு வேண்டிக்கொள்ள; உம்பர்...செய்வாராய் - தேவர் தலைவராகிய இறைவரும் அதற்குத் தாம் இசைவாராகி; நம்பி...என்றருள - நம்பி! நீ கூறியபடியே நாம் செய்வோம்

3403. தம்பிரான் ரேழரவர் தாம்வேண்டிக் கொண்டருள
உம்பர்நா யகருமதற் குடன்பாடு செய்வாராய்
"நம்பிநீ சொன்னபடி நாஞ்செய்து"மென்றருள
"எம்பிரா னே!யரிய தினியெனக்கென்?"எனவேத்தி, 249

3404. அஞ்சலிசென் னியின்மன்ன வருள்பெற்றுப் புறம்போதச்
செஞ்சடையா **ரவர்மாட்டுத் திருவிளையாட் டினைமகிழ்ந்தோ?**
வஞ்சியிடைச் **சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ?**
துஞ்சிருண்மீ **ளவுமணைந்தா ரவர்க்குறுதி சொல்லுவார்.** 250

என்றருளிச் செய்ய; எம்பிரானே!...என்? என ஏத்தி - எம் பெருமானே! இனி எனக்கு எச்செயல்தான் அரியதாகும்; (கிடைத்தற்கரிய தொன்றுமில்லை) என்று துதித்து,

(வி-ரை) தோழரவர் - வேண்டிக் கொண்டருள - என்றருள - தோழ ராதலின் அவர் வேண்ட மருது உடன்பட்டுரைத்தனர் என்பது குறிப்பு. முன்னர்த் "தோழனர்" (3398); "நண்பால்" (3388) என்றவை காண்க.

உடன்பாடு செய்வாராய் - உடன்படுவாராய்; அதற்கு, **உடன்...கூடவே** - அதனுள்ளேயே; **பாடு செய்வாராகி** - அதற்கு மாறுபாடும் உடன் செய்வாராகி என்ற பிற்சரித விளைவுக் குறிப்பும் ஆம்; **பாடு** -மாறுபாடு; இது கவிநயம்.

நம்பி...செய்தும் - நம்பி - நம்பியே! விளி; **நம்பி** - நம்புதல் கொண்டு என்ற தொனியும் காண்க.

எனக்கு இனி அரியது என்? - ஒன்று மரியதில்லை என்று வினு எதிர்மறை குறித்தது. **249**

3404. **(இ-ள்)** அஞ்சலி...போத - தலையின்மேற் கைகளை அஞ்சலியாகக் கூப்பி அருள் விடைபெற்றுப் புறம்பு போக; செஞ்சடையார் - சிவந்தசடையினையுடைய சிவபெருமான்; அவர்...மகிழ்ந்தோ? அந்நம்பிகளிடத்து ஒரு திருவிளையாட்டினை மகிழ்ந் தெண்ணியோ?; (அன்றி,) வஞ்சியிடை... பெருமையோ? - வஞ்சிக்கொடி போன்ற இடையினையுடைய சங்கிலியாரது இடைவிடாத வழியடிமைப் பெருமையினை எண்ணியோ? (அறியோம்); துஞ்சிருள்...சொல்லுவார் - தூங்கும் இருளிலே மீண்டும் அவர்பால் அவர்க்குறுதி சொல்லுவாராகி; **மீளவும் அணைந்தார்** - மீண்டும் அணைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அருள்பெற்று - திருவருள் விடைபெற்று; **புறம் -** தங்கிய கோயிற் புறமாகிய இடத்தின் புறத்தே தமது திரு மாளிகைக்கு.

அவர்மாட்டு - நம்பிகளிடத்து; **வழியடிமைப் பெருமையோ? -** முன்னர்த்

திருக்கயிலையிற் செய்த அடிமைத்திறத்தின் பெருமைபற்றியோ? ; **வழி** - அதன் வழியே நிலவுலகத்தில் அந்நிலைவோடும் செய்து வரும் "ஏகனாகி இறைபணி" நிற்கும் பெருமை; மகிழ்ந்தோ? பெருமையோ? என்று இவ்வாறு ஐயவினாக்கள் போல இரண்டு வினாக்களை வைத்து, நிகழும் காரணம் இன்னதென்று உய்த்துணரத்தக்க இயல்புடன் அதனுள்ளே சரித நிகழ்ச்சிக் குறிப்பும் பெறக் கூறுதல் ஆசிரியது சிறந்த தெய்வக் கவிநலங்களுள் ஒன்று; "தம்மேலைச் சார்புணர்ந்தோ? சாரும் பிள்ளைமை தானோ?" (1961); "அருளாலேயோ? மேனியினி லேயு மசைவினயர்வாலோ? அறியோம்" (1891) என்றவை காண்க; ஈண்டுச் சங்கிலியார்பால் தாமே மீளவந் தருளிய செய்தியை நம்பிகள் பின்னர்ச் சரித விளைவானன்றி அறியமாட்டாது நிற்றலின் சங்கிலியாரது வழியடிமைப் பெருமையே காரணம் என்று கருதியுணரவைத்தார்; "அவர்க்குறுதி சொல்லுவார்" என்று மேல் விளக்குதலும் காண்க. **வழியடிமை** - சங்கிலியார் அவதரித்த வேளாளர் குலம் சிவனுக்கு வழிவழியடிமை செய்யும் செம்மை யுடையது என்ற குறிப்பும் காண்க. "வல்லவா றதற்கே பிறந்தவே ளாளர் **வழிவழி யடிமையா யுள்ளார்**" (பேரூர்ப் புராணம்-பள்ளுப்படலம்-38); "மேலாங் கொள்கை வேளாண்மை மிக்க திருஞா யிறுகிழவர்" (3361) என்ற குறிப்பும் காண்க.

திருவிளையாட்டு - இறைவர் உயிர்களிடத்துச் செய்வன எல்லாம் ஐந்தொழில் திருவிளையாட்டின் பாற்படும் என்ப; உயிர்க்குறுதி செய்யும் பயத்தன என்றலும் உண்மைநூற் றுணிபாம்.

"சொன்னவித் தொழில்க ளென்ன காரணந் தோற்ற வென்னின் முன்னவன் **விளையாட்**டென்று மொழிதலு மாமு யிர்க்கு, மன்னிய புத்தி முத்தி வழங்கவுமருளான் முன்னே துன்னிய மலங்க ளெல்லாந் துடைப்பதுஞ் சொல்ல லாமே" (சித்தி-1-57). "திருவிளையாட்டு" (3505).

துஞ்சு இருள் - "பேயு முறங்கும் பிறங்கிருள்" (3476) "ஊரெலாந் துஞ்சி யுலகெலாம்...பாடவிந்த" (11-ம் திருமுறை - திருவாரூர்-மும்-கோ. 26).

துஞ்சுதல் - **ஈண்டு** உறங்குதல்; **துஞ்சிருள்** - இரவு நடுயாமவேளை; பின்னர்ப் பரவையாரிடம் நம்பிகளுக்காக இறைவர் இருமுறை தூது சென்ற காலமும் இஃதேயாதலும், ஆண்டு மிவ்வாறே இருமுறை சென்றருள்வதும் காண்க. "தூங்கிருள் நடுநல்யாமம்" (திருவிசைப்பா).

அவர்க்குறுதி சொல்லுவார் - இறைவர் இவ்வாறு நம்பிகளது திருவுள்ளத்தின் அந்தரங்கத்தினை அவரறியாமே சங்கிலியார்பால் மீளவும் சென்றறிவித்தல் சங்கிலியாருக்கு உறுதி கூறுதற் பொருட்டே என்று முன்கூறிய ஐயவினாக்களை விடுத்த முறையும் காண்க.

சொல்லுவார் - அணைந்தார் - என்று கூட்டுக. 250

3405. **(இ-ள்)** சங்கிலியார்...சார்ந்தருளி - சங்கிலியம்மையாரிடத்து முன்பு போலத் தோன்றியருளி; நங்கை...கடவன் - நங்கையே! நம்பி ஆரூரன் உனக்கு விருப்பத்துடனே சபதம் செய்வான்; அங்கு...குறித்தருள - ஆனால் அச்சபதத்தினை அங்குத் திருக்கோயிலில் நம் எதிரில் செய்வதற்கு நீ இசையாதே மணம் விரியும் மலர்கள் நிறைந்த மகிழமரத்தின்

3405. சங்கிலியார் தம்மருங்கு **முன்போலச் சார்ந்தருளி**
"நங்கையுனக் காரூர னயந்துசூ ளுறக்கடவன்;
அங்குநமக் கெதிர்செய்யு மதற்குநீ யிசையாதே
கொங்கலர்பூ **மகிழ்க்கீழே கொள்க**"வெனக் குறித்தருள, 251

கீழே கொள்வாயாக" என்று குறித்து அருள் செய்ய,

(வி-ரை) முன் போலச் சார்ந்தருளி - முன் வந்த கோலத்திலே கனவிலே சேர்ந்தருளி.

சூளுறக்கடவன் - சபதம் செய்வான்; **சூள்** - சபதம்; **சூள் உற** - சபதம் செய்ய; **உறக்கடவன் - செய்வான்;** செய்ய இசைந்துள்ளான் என்பது.

அங்கு நமக்கெதிர் - அங்கு-அப்போது -அவ்விடத்தில் - எனக் காலமும் இடமும் குறித்தது.

நமக்கு எதிர் - நமது எதிரிலே; திருமுன்பில்.

நமக்கு - நம்முடைய; வேற்றுமை உருபுமயக்கம்.

எதிர் - ஏழனுருபு விரிக்க.

இசையாதே - கொள்க - என்று கூட்டுக; **இசையாதே** - இசையாமல்; வினை எச்சமாயன்றி ஏவல் வினைமுற்ருகக் கொள்ளினுமாம்.

கொங்கு அலர் பூமகிழ் - மகிழமரத்தின் இயல்பினை விரித்தவாறு, "மகிழினிது கந்தம்" என்றபடி இனிய மெல்லிய மணம் விரிந்து வீசும்பூக்களை "அளவிறப்பக்கொண்டு விளங்குவது மகிழ்; **கொங்கு** - மணம்; **அலர்** - விரிந்து வீசுதல். வரளும் பருவத்திலும் வீசுதல்.

கொள்க -சபதம் செய்யக் கேட்டு ஏற்றுக் கொள்க.

கொள்வதென—என்பதும் பாடம். *251*

3406. **(இ- ள்)** மற்றவரும் கைகுவித்து - அதுகேட்ட அச்சங்கிலியாரும் கைகூப்பித் தொழுது; "மாலயனுக் கறிவரியீர்...பெற்றதியான்" என - மாலுக்கும் அயனுக்கும் அறிவதற்கரியவரே! உண்மையாகிய அந்தரங்கத்தை எனக்கு அருளிச் செய்த அதனல் அடியேனை ஏற்றுக்கொள்ளப் பெற்றேன் யான் என்று கூறி; கண்கள்...எழுந்தார் - கண்களினின்றும் பெருந்தாரையாக நீர்பெருகி வழிய வெற்றியினையுடைய இளம் விடையாராகிய இறைவர் சேவடிக்கீழே விழுந்து பணிந்து எழுந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மற்றவரும் - மற்றும் அதுகேட்ட சங்கிலியாரும்; **மற்று** - என்றது முன்னுரைத்ததனை ஒருவாறு மாற்றும் என்ற குறிப்புடன் நின்றது; இக்குறிப்புப்பட முன்னரும் **மற்றவர்தம்** *(3397)* என்றது காண்க.

3406. மற்றவருங் கைகுவித்து "மாலயனுக் கறிவரியீர்!
அற்றமெனக் கருள்புரிந்த வதனிலடி யேனுகப்
பெற்றதியா" னெனக்கண்கள் பெருந்தாரை பொழிந்திழிய
வெற்றிமழ விடையார்தஞ் சேவடிக்கீழ் வீழ்ந்தெழுந்தார். 252

அற்றம் - உண்மை - இரகசியம் - *அந்தரங்கம்; முன், "அற்றமுறு நிலைமையினல்"* *(3397)* என்றது காண்க.

அதனில் - அதனுல்; அருளிய அச் செயலினுல்; ***அதனில் அடியேனுகப் பெற்றது யான்*** - அருள்புரிந்த அச்செயலின் மூலம் யானும் ஒரு அடியேனாக ஏற்றுக் கொள்ளப் பெற்றனன் என்பது போதருகின்றது; ***அதனில்*** - அற்றம் அருள்புரிந்த அதனினும் - பேற்றினும் - அடியேனுகப் பெற்றது பெரும்பேறு என்ற குறிப்பும் காண்க.

கண்கள் பெருந்தாரை பொழிந்திழிய - இஃது இறைவரால் அடிமையாக ஏற்றுக்கொள்ளப் பெற்ற அருளின் செயல் கண்டபோது அவரது அளவிறந்த பெருங்கருணையினையும் தமது அளவிறந்த சிறுமையினையும் எண்ண எண்ணப் பெருகும் அன்புக் கண்ணீர்; "எத்தனையு மரியநீ யெளியை யானு யெனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்...இத்தனையு மெம்பரமோ வையா வையோ வெம்பெருமான் றிருக் கருணையிருந்த வாறே' (தேவா - தாண்) என்ற மனநிலையினுல் வருவது. இப்படி எப்போதும் எண்ணியதனுல் அரசுகளது திருவடிவம் "மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாரும் திருவடிவும்", "வந்திழி கண்ணீர் மழையும்", "மழைவாரு மிணைவிழியும்" என்று போற்றப்பட்டது.

கண்களி னின்றும் நீர் பெருந்தாரையாகப் பொழிந்து வழிய என்க. ***நீர்*** - சொல்லெச்சம்; பொழியப்பட்டு என்னும் செயல்பாட்டு வினை பொழிந்து எனச் செய்வினையாக நின்றது; கண்ணீர் பொழிதல் - பணிதல் இவை கனு நிலையினும் நிகழ்வன.

252

3407. **(இ-ள்)** தையலார்...எழுந்தருள - தையலாராகிய சங்கிலியாருக்கு முன் கூறியபடி அருளிச் செய்து சடை முடியினை உடைய பெருமான் மறைந்து நீங்க; எய்தியபோது அதிசயத்தால் உணர்ந்தெழுந்து - இந்நிகழ்ச்சி பொருந்தப் பெற்ற அப்போது அதிசயமாகிய மனநிலையினுலே துயிலுணர்ந்து எழுந்து; அவ்விரவின்கண்...கண்துயிலார் - அந்த இரவிலே சிவந்த சடையினையுடைய இறைவரது பெருங்கருணையின் றிறத்தினை எண்ணி எண்ணி நின்றமையால் உறக்கம் பெருதவராகி; ஐயமுடன் - ஐயத்தினுடனே; அருகுதுயில்... எழுப்பி - தம்மருகே துயில்கின்ற சேடியர்கள் பாலணைந்து எழுப்பி;

(வி-ரை) எழுந்தருள - மறைந்தருள; **எய்தியபோது** - இவ்வாறு பொருந்தப்பெற்ற போது.

அதிசயம் - "அதிசயம் கண்டாமே" *(திருவா.)*

உணர்ந்து - எழுந்து - துயில்நீங்கி விழித்து எழுந்து.

3407. தையலார் தமக்கருளிச் சடாமகுட ரெழுந்தருள
எய்தியபோ ததிசயத்தா **லுணர்ந்தெழுந்தவ்** விரவின்கட்
செய்யசடை **யாரருளின் றிறநினைந்தே கண்டுயிலார்**
ஐயமுட னருகுதுயில் சேடியரை யணைந்தெழுப்பி, 253

உணர்தல் - துயில்நிலையினின்றும் நனவுநிலை யடைதல். முன்னது சொப்பனம் என்றும், பின்னது சாக்கிரம் என்றும் கூறப்படும் அவத்தைகள்.

அவ்விரவின்கண்... நினைந்தே - அவ்வோரிரவிலே இருமுறை தம் பொருட்டுத் தோன்றி யருள்புரிந்த கருணைப் பெருக்கினை எண்ணியதனுல்.

அவ்விரவின்கண்...கண்டுயிலார் - என்று பின்னரும் கூட்டுக; **நினைந்தவை** இரவின் முற்பகுதி நிகழ்ச்சிகள்; **துயிலாமை** பிற்பகுதி வைகறைவரை நிகழ்ச்சி.

கண்டுயிலார் - துயிலார் என்றலே யமையுமாயினும், கண்மூடும் முயற்சி தானுந் நிகழாமை குறிக்கக் கண் துயிலார் என்ருர்; நல்ல கனவு காணில் அவ்விரவு அதன்பின் துயில் கொள்ளாது திருநீறணிந்து சிவனை நினைந்திருத்தல் வேண்டுமென்பது விதி. ஈண்டும் அக்கனுவின் நிகழ்ச்சிகளின் பின்னர்ச் சங்கிலியாரும் அவ்வாறே சிவனருளை நினைந்து துயிலாதிருந்தனர் என்பதாம்.

ஐயமுடன் - ஐயம் என்றது கனவின் நிகழ்ச்சிகள் உண்மையானவையோ? அன்றி, நோய் - பிறழ்வுணர்ச்சி - முன்னினைவு - முதலியவற்ருல் நிகழும் பொய்படும் காட்சியோ? என்பது முதலிய ஐயப்பாடு; மெய்யாயில் அவ்வாறே கொள்ளப்பட்டுப் பலன் தருவனவோ? பிறிதுபடப் பொருள் கொள்ளத் தக்கனவோ? என்றலுமாம். கனவுடம்பிற்கு நனவுடம்பு வேருதலின் இவ்வாறு நிகழ்ந்தது யாதென ஐயம் உண்டாயிற்றென்பர் இராமலிங்கத் தம்பிரானுர்.

அருகுதுயிர் சேடியர் - "கடிசேர் முறைமைக் காப்பியற்றி" (3374) என்றபடி பணிவிடைகளுக்கும் காவலுக்குமாக நியமம் பெற்ற சேடியர்;அகப்பொருளியல்பில் இவர்கள் தோழி, உயிர்ப்பாங்கி முதலாகப் பேசப்படுவர்; தலைவி தனது மணம் பற்றிய நிலைகளைத் தான் பிறர்பாற் கூருது பாங்கியின் துணைகொண்டு நிறைவேறச் செய்தல் அகப்பொருட் டமிழிலக்கண வரம்பு; இவ்வாறே, முன்னர்ப், பரவையாரும் நம்பிகளைப் பற்றிய வரலாற்றினை அருகிருந்த சேடியை வினுவி யறிந்த (317) வரலாற்றையும் இங்கு நினைவு கூர்க. தலைவன் தன் பாங்கனுக்கு அறிவித்துப் பாங்கற் கூட்டமாகிய நிகழ்ச்சிகள் நிகழப்பெறும் நிலையும் காண்க.

எழுப்பிப் -பாங்கறிய மொழிய என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; கனு நிகழ்ச்சிகள் நனவில் உள்ளபடி நினைவு கூர்தலின் அருமையும், அவ்வாறு நினைக்க வரினும் எளிதின் மறத்தலும் இயல்பாதலின் சேடியர் தாமாகத் துயிலுணர்ந்து விழிக்கும்வரை நில்லாது உடன் அணைந்தெழுப்பி யறிவித்தனர் என்க. அன்றியும், அப்போது வைகறை அணுகும் வேளையாகத் திருப்பள்ளியெழுச்சிக்கு மலர் தொடுக்கும் பொழுது ஆக நின்றமை மேற்பாட்டிற் கூறுதல் காண்க; அவ்விரவே சபதம் நிறைவேற உள்ளமையால் நம்பிகள்

3408. நீங்குதுயிற் பாங்கியர்க்கு **நீங்கலெழுத் தறியுமவர்**
தாங்கனவி லெழுந்தருளித் தமக்கருளிச் செய்ததெலாம்
பாங்கறிய மொழியவவர் பயத்தினுட **னதிசயமுந்**
தாங்கு மகிழ்ச் சியுமெய்தச் சங்கிலியார் தமைப்பணிந்தார். 254

வருமுன்பே சேடியர் இவ்வரலாறுகளை உணர்ந்திருத்தல் வேண்டுவதும் அவசியமாயிற்று என்க. **253**

3408. **(இ-ள்)** துயில் நீங்கு பாங்கியர்க்கு - (இவ்வாறு) துயிலின் நீங்கும் சேடிமார்களிடம்; நீங்கல்...மொழிய-"நீங்கல்" என்ற எழுத்தினை எழுதி அதனால் எழுத்தறியும் பெருமாள் எனப் பெற்ற திருவொற்றியூரிறைவர் தாமே தமது கனவில் இருமுறையும் எழுந்தருளித் தம்பால் அருளிச் செய்தவற்றையெல்லாம் முறைமைபெற அறியும்படி சொல்ல;அவர்...பணிந்தார் - அச்சேடியர்கள் அச்சத்துடனே அதிசயமும் பொருந்திய மகிழ்ச்சியும் கொள்ளச் சங்கிலியாரைப் பணிந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) துயில் நீங்கு - என்க; நீங்குதலை முன்வைத்தது அச்செயல் நிகழ்ச்சியின் விரைவுகுறித்தது; சேடியர் தம் தலைவியின் ஏவலுக்குத் துயிலிலும் சாக்கிராவத்தையை ஒட்டியே நிகழ்ந்தனர் என்பதாம்.

"**நீங்கல்**" - "திருவொற்றியூர் நீங்கலாக" என்று வரிப்பிளந்து எழுதும் எழுத்தறிபவர்; இதனால் அவர் எழுத்தறியும் பெருமானெனவும் வழங்கப்படுவர்; இதுபற்றி முன் (*1116*) உரைத்தவை பார்க்க; "எழுத்தறியும் பெருமானை" (*1600*), "ஏட்டு வரியி லொற்றியூர் நீங்கலென்ன வெழுத்தறியு, நாட்ட மலருந் திருநுதலார்" (*3358*); இவ்வரலாறு முன் (*1116*-ன் கீழ் *II*) உரைக்கப்பட்டது.

தாம் - தாமாகவே திருவருளால் முன்வந்து என்பதாம்.

அருளிச் செய்ததெலாம் - இருமுறையும் முன் கூறியவாறு நிகழ்ந்தவையும் சொல்லியருளியவையும் அடங்க **எலாம்** என்றார். அருளிச் **செய்தவெலாம்** என்று பன்மையிற் கூறுது **அருளிச் செய்தது** என ஒருமையாற் கூறினர்;அவை எல்லாம் அவரது ஒரே பொருள்பற்றிய அருளிப்பாடு என்னும் ஒன்றனுள் அடங்கி நிற்பது குறிக்க.

பாங்கு - முறைமை; **பாங்கு அறிய** - பாங்காகிய (பாங்கி) தன்மையுடன் உட்கொள்ள என்ற குறிப்புமாம்.

பயம் - அதிசயம் - மகிழ்ச்சி - இறைவரின் அருட்செயல்களைப் பற்றிய நிகழ்ச்சி களாதலின் அச்சத்துடன் மேற்கொள்ள வேண்டுதலால் பயமும்; பெறற்கரிய பேர் அருளின் றிறங் கண்டாராதலின் **அதிசயமும்;** தம் தலைவிக்குத் திருமணம் நிகழ வரும் சிறப்பில் அவர்க்குத் தாம் பணி செய்யப் பெறுவதற்கு **மகிழ்ச்சி**யும் கொண்டனர்.

பணிந்தார் - சங்கிலியார் நேரே இறைவரது திருவருளுக் கிலக்காய், நின்ற பெருமைபற்றிப் பணிந்தார். **254**

3409. சேயிழையார் **திருப்பள்ளி யெழுச்சிக்கு** மலர்தொடுக்குந்
தூயபணிப் **பொழுதாகத்** தொழில்புரிவா ருடன்போதக்,
கோயிலின்முன் காலமது வாகவே குறித்தணைந்தார்
ஆயசப **தஞ்செய்ய வரவுபார்த்** தாரூரர். 255

3409. (இ-ள்) திருப்பள்ளி எழுச்சிக்கு...பொழுதாக - இறைவரது திருப்பள்ளி யெழுச்சிக்கு உரிய மலர் மாலைகள் சாத்தத் தொடுக்கும் தூய திருப்பணிக்குரிய பொழுது ஆயினமையால்; சேயிழையார் - சங்கிலியார்; தொழில் புரிவார் உடன்போத - உடன் கூடித் தொழில் புரியும் சேடியர்கள் தம்முடனே செல்ல; கோயிலின் முன் - திருக்கோயிலின் முன்பு; ஆரூரர் - நம்பிகள்; வரவுபார்த்து - சங்கிலியாரின் வரவைப் பார்த்து; ஆயசபதம் செய்ய - முன்னர் இறைவரது ஆணையினலாகிய சபதத்தினைச் செய்வதற்காக; காலமது...அணைந்தார் - ஏற்றகாலம் அதுவேயாக எண்ணிக் குறித்து வந்தணைந்தனர்.

(வி-ரை) திருப்பள்ளி யெழுச்சிக்கு - திருப்பள்ளி எழுச்சி என்னும் வழிபாட்டுக் காலத்துக்குரிய; இது வைகறைப்பொழுதிற் செய்யப்படுவது; இது பற்றி முன் ஆளுடைய அரசுகள் அருள்பெறு நேரமாகிய திருப்பள்ளி எழுச்சியினைப் பற்றி உரைத்தவை பார்க்க. (1333)

திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் - அவ்வக் காலத்துக்கு ஏற்றனவாய் விதிக்கப்பட்ட அவ்வம்மலர்களைத் தொடுக்க வேண்டுதலின் ஈண்டுத் திருப்பள்ளி எழுச்சிக்கு என்றுர்.

தூயபணி - மலர்தொடுத்தல் மிகத்தூய்மையுடைய பணி என்பதாம். இது பற்றி முன் முருகநாயனுர் புராணத்தும், எறிபத்த நாயனுர் புராணத்தும், முன் 3380-லும் உரைத்தவை பார்க்க.

பணிப்பொழுது ஆக - பணி செய்தற்கு உரிய பொழுது வர.

தொழில் புரிவார் - ஏவலராகிய சேடியர்கள்;இவர்கள் சங்கிலியாரது கனு நிகழ்ச்சியை அவர் சொல்லக் கேட்டவர்கள்.

சேயிழையார் - போத - என்று கூட்டுக. **சேயிழையார் கோயிலின்முன் போத** என்றும், **ஆரூரர் - கோயிலின்முன் அணைந்தார்** என்றும் இருவழியும் கூட்டுக; இருதிறமும் அங்குச் சந்திப்பது அவ்வோரிடமாதலின், அது குறிக்கும் **கோயிலின் முன்** என்றதொரு சொற்றொடர் ஈரிடத்தும் இயையும்படி இடையில் வைத்தார்.

காலமது ஆகவே குறித்து - "இவ்விரவே செய்க" (3399) என்று இறைவர் அருளினுராதலின், அதற்கிசைந்த நம்பிகள், நங்கை சங்கிலியாரைச் சந்தித்துக் கேட்டற்கும், இரவு கழியு முன் சபதம் செய்தற்கும் உரிய காலம் அதுவே பொருந்தியதென்று குறிவைத்து; முன்னராயின் சங்கிலியார் கன்னிமாடத் திருப்பாராதலின் அங்குச் செல்ல இயலாது; பின்னராயின் இரவு கழிந்துவிடும்; ஆதலின் ஏற்றகாலம் அஃதே என்று குறிவைத்தனர் என்க; இனம் பற்றி இடமு மதுவாகவே குறித்து என்க. நம்பிகள் இறைவர்பால் வேண்டிக் கொண்ட செய்தியும் குறிக்கொண்டு என்பது.

3410. நின்றவரங் **கெதிர்வந்த நேரிழையார் தம்மருங்கு**
சென்றணைந்து தம்பெருமான் றிருவருளின் றிறங்கூற,
மின்றயங்கு நுண்ணிடையார் **விதியுடன்பா டெதிர்விளம்பார்**
ஒன்றியநா **ணொடுமடவா ருடனொதுங்கி யுட்புகுந்தார்.** 256

வரவு பார்த்து - சங்கிலியார் மலர் தொடுக்கும் பணிசெய்து வரும் வரவினை எதிர் **பார்த்து;** சங்கிலியார் வருமுன்பே நம்பிகள் அணைந்தனர் என்க. மேற்பாட்டுப் பார்க்க.

அணைந்தார் - ஆரூரர் - வினைமுற்று முன் வந்தது விரைவுக் குறிப்பு. **255**

3410. (இ-ள்) நின்றவர்...கூற - வரவு பார்த்து நின்றவராகிய நம்பிகள் அங்கு **எதிரில்** வந்த சங்கிலியார் பக்கத்திற் சென்று சேர்ந்து தம் இறைவரது திருவருளின் திறங்களை எடுத்துச் சொல்ல; மின் தயங்கு...விளம்பார் - மின் போலத்துவளும் நுண்ணிய இடையினையுடைய சங்கிலியார் அவ்வாறு விதித்ததற்குத் தமது உடன்பாட்டினை அவர் எதிரே **கூறுராகி;** ஒன்றிய...புகுந்தார் - இயல்பிற் பொருந்திய நாணத்துடன் சேடியர்களுடனே கூடி **ஒதுங்கிச்** சென்று கோயிலினுள்ளே புகுந்தனர்.

(வி-ரை) நின்றவர் - முன்கூறியபடி சங்கிலியாரது வரவை எதிர்பார்த்து நின்றவராகிய நம்பிகள்.

எதிர்வந்த நேரிழையார் தம்மருங்கு சென்றணைந்து - தம் எதிரில் முன்பு **வந்த** சங்கிலியாரிடம் தம் கருத்தினைக் கூறி வெளிப்படுக்கும் அளவு அணுகி; இதனால் **நம்பிகள்** அவர் வருமுன்னரே அங்குச் சார்ந்தனர் என்பதும், அவர் வரும்போது நெருங்காது **வழிதந்து** ஒருபுறம் ஒதுங்க வேண்டியவர் இச் செய்தி அறிவித்து இசைவுபெற்று அவர் முன்பு **சபதம்** செய்ய வேண்டிய நிலையில் அவ்வளவிற்கு அவர் மருங்கு சென்றணைந்தனர் என்றும், "**அவள்** முன்பு சென்றுகிடைத் திவ்விரவே செய்க" (3399) என்று இறைவர் **ஆணையிட்** டருளினராதலின் தாமே முற்படச் சென்று பேசத் தொடங்கினர் என்றும் கொள்க.

தம் பெருமான் றிருவருளின் திறம் கூற - திறம் - சபதம் செய்க என்ற **ஆணையும்,** மற்றும் அதன் வரலாறும்; இருவர்க்கும் பெருமானுதலிற் **தம் பெருமான்** என்ருர். **இத்திறம்** தமது செயலாயினும் இறைவர் அருளிய வழி நிகழ்வது என்பார் தம் பெருமான் திருவருளின் றிறம் என்று அவர்பாற் சார்த்திக் கூறினர்.

மின்தயங்கும் நுண்ணிடையார் - மின்போலத் துவளும் **நுண்ணிய** இடையினையுடைய சங்கிலியார்; இடை, மின்போலத் துவளுதலும், சிறிதாய் இருத்தலும் பெண்களின் உடற்கூற்றின் உயர்ந்த இலக்கணம் என்ப. **தயங்குதல்** - விளங்குதல்; மயங்குதல் என்று கொண்டு மின்னும் இடைக்கொப்பாகாது மயங்கும் என்றுரைத்தலுமாம்.

விதி உடன்பாடு எதிர் விளம்பார்... ஒதுங்கி - இஃது மிக உயர்வாகிய **தன்மை** நவிற்சியணி; **விதி** - இறைவரது திருவருள் முறைமை; விதிக்கு என நான்கனுருபு **விரிக்க;** **உடன்பாடு** - அதற்குத் தாம் உடன்பட்ட நிலையினை; உடன்பாட்டினை; இரண்டனுருபு தொக்கது; **எதிர்விளம்பார்** - தம் நாயகராக வரும் நம்பிகளின் எதிரில் வெளிப்படச் சொல்லாதவராகி; **விளம்பார்** - எதிர்மறை வினை முற்றெச்சம்; சொல்லமாட்டாதவாராய் என்றதும் குறிப்பு.

3411. அங்கவர்தம் பின்சென்ற வாரூர "ராயிழையீர்!
இங்குநான் பிரியாமை யுமக்கிசையும் படியியம்பத்
திங்கண்முடி யார்திருமுன் போதுவீர்!" ரெனச்செப்பச்
சங்கிலியார் கனவுரைப்பக் கேட்டதா தியர்மொழிவார், 257

ஒன்றிய...ஒதுங்கி -எதிர் விளம்பாமைக்கும் ஒதுங்குதலுக்கும் காரணம் பெண்மைக் குணமாகிய நாணம் என்றதாம்; **மடவார்** - சேடியர். **மடவாருட னொதுங்குதல் -** அவர்கள் கூட்டத்தினுடன் ஒதுங்கி மறைந்து கொள்ளுதல்.

எதிர் விளம்பாமையும் நாணுடன் ஒதுங்குதலும் முதலியன தலைவனைக்கண்ட போது தலைவியர்கள் பால் நிகழ்வன; ஈண்டு மொழிபெற வருந்துதல் - மொழிபெறுது கூறல் - நாணிக் கண்புதைத்தல் - குறையுற்று நிற்றல் - முதலாக வரும் அகப்பொருட்டுறைகள் நினைவு கூர்தற்பாலன.

விதியுடன்பட்டெதிர் விளம்பார் - என்பன பாடமாயின், விதியினை உடன் பட்டாராயினும் அதனை எதிரிற் கூறமாட்டாராய் என்க. இதற்கு இவ்வாறன்றி, விதியாகிய உடன்படுதலும் எதிர்மறுத்தலும் கூறுதவராய் என்று உரைவகுத்தனர் இராமலிங்கத் தம்பிரானார்.

"**விதியுடன் பாட் டெதிர் விளம்பார் -** என்பது பாடமாயின் விதிப்படி உடன் பட்டமையால் எதிர் மொழி கொடாராய் என்றுரைக்க" என்பதும் மேற்படி தம்பிரானாருரை.
256

3411. **(இ-ள்)** அங்கு...ஆரூரர் - அவ்விடத்துத் திருக்கோயிலினுள் அவர்கள் பின்னே சென்ற நம்பிகள்;"ஆயிழையீர்!...போதுவீர்!" எனச் செப்ப - "பெண்களே! இவ்வூரினின்றும் நான் பிரிந்து போகாத நிலையினை உங்கள் கருத்துக் கிசையும்படி சூளுரைத்துச் சொல்வதற்குச் சந்திரனைச் சூடிய முடியாரது திருமுன்பு வருவீர்களாக" என்று சொல்ல; சங்கிலியார்...மொழிவார் - சங்கிலியார் கண்ட கனவு வரலாற்றினை அவர் சொல்ல முன்னமே கேட்டிருந்த சேடிமார்கள் விடை சொல்வார்களாகி,

(வி-ரை) அங்கு - அவர் கோயிலினுள் உட்புகுந்த அவ்விடத்து; **அவர்** - மடவாருடன் உட்புகுந்த சங்கிலியார் பின்.

ஆயிழையீர் - சங்கிலியார் மடவாருடன் கூடி ஒதுங்கிச் சென்றாராதலின் அவர் அனைவரையும் உள்ளடக்கிப் பன்மையிற் கூறினார்; முன்னர் நேரிழையார் (சங்கிலியார்) ஒருவர் தம்மருங்கு சென்றணைந்து கூறினார்; அவர் எதிர் விளம்பாமல் சேடியருடன் ஒதுங்கிச் சென்றாராதலின் அனைவரையும் பொதுவாகக் கூட்டி விளித்துப் பன்மையில் வினவினார்.

உமக்கு இசையும்படி - சங்கிலியாரையும் உள்ளிட்ட அவர் அனைவரையும் குறித்துக் கேட்பினும் சங்கிலியாரது இசைவினையே அவர்கள் வெளிப்படுப்பாராதலின், **உமக்கு -** என்றது உம்தலைவியாகிய சங்கிலியாருக்கு என்ற பொருள் குறித்து நின்றது; **போதுவீர் -** என்றதும் இக்கருத்து.

3412. "எம்பெருமா! னிதற்காக வெழுந்தருளி, **யிமையவர்கள்**
தம்பெருமான் றிருமுன்பு சாற்றுவது தகா" தென்ன
நம்பெருமான் வன்றொண்டர் நாதர்செய லறியாதே
"கொம்பனையீர்! யான்செய்வ தெங்?" கென்று கூறுதலும், 258

***திங்கள் முடியார் திருமுன்* -** *முன்னர் இறைவரிடம் தாம் வேண்டிக் கொண்டதன் குறிப்பு உள்வைத்துக் கூறியபடி. (3402)*

கனவுரைப்பக் கேட்ட தாதியர் - இது *முன் உரைக்கப்பட்டது. 3407,3408* **பார்க்க.**

ஆரூரர் - செப்பத் - தாதியர் - மொழிவா(ராய்) - எம்மை, வன்றொண்டர் - **என்று** *கூறுதலும் (3412), என- எனத்துணிந்து - என - (போய்) அணைந்தா(ராய்);* **காண -** *வலம்வந்து - என நின்று - (அப்) புரவலனார் விளம்பினார் (3414)* **என்று இந்நான்கு** *பாட்டுக்களையும் கூட்டி முடித்துக் கொள்க.*

இவை குறையுற வுணர்தல் முதலிய அகப்பொருட் (றுறைகளின்) **இயல்பின் வருதல்** *காண்க.* **257**

3412. **(இ-ள்)** *"எம்பெருமான்!...தகாது" என்ன - "எம் பெருமானுவாரே!* **இதன்** *பொருட்டுத் தேவரீர் எழுந்தருளிச் சென்று தேவர்களின் தலைவராகிய இறைவரது திருமுன்பு சொல்வது தகுதியன்று" என்று கூற; நம்பெருமான்...அறியாதே - நமது பெருமானுராகிய வன்றொண்டர் இறைவரதுசெயலினை அறியாதே; "கொம்பனையீர்...எங்கு?"* **என்று** *கூறுதலும் - "கொம்பு போல்பவர்களே! பின்னை யான் சபதம் செய்வதுதான் எங்கே?" என்று கூறுதலும்,*

(வி-ரை) எம்பெருமான்! - இது நம்பிகளை நோக்கித் தாதியர் விளித்தது; தமது தலைவிக்கு நாயகராக வருபவர் என அறிந்தாராதலின் தங்களுக்குப் பெருமான் எனக் கூறியது அக்குறிப்பு. இஃது அண்மைவிளி யாதலின் இயல்பாயிற்று. தலைவியினது கருத்தினைக் குறிப்பாலுணர்த்தியபடி காண்க.

இதற்காக - இமையவர்கள் தம்பெருமான் -திருமுன்பு - சாற்றுவது தகாது - இது மிகச் சிறிய காரியம்; **பெருமான் திருமுன்பு -** அது மிகப்பெரிய உயர்ந்த இடம்; இச்சிறிய மொழிகளை அப்பெரிய திருமுன்பு சொல்வது தகுதியன்று - ஏற்றதன்று என்பவை குறிப்பு. இறைவர் "அங்கு நமக் கெதிர்செய்யும் அதற்கு நீ இசையாதே" என்று முன் கட்டளை யிட்டதனைக் (3405) கேட்டு அறிந்துள்ளாராதலின் அவ்விடத்தினை மாற்றுதற்குத் தாதியர் கைக்கொண்ட உபாயம் இது; சபதம் செய்யும் இடம் எங்காயினும் அது செய்யும் செயலுக்கு உடன்பட்ட குறிப்பினாலும், பின்னர் "மகிழ்க்கீழே அமையு" மெனக் கூறலானும் தலைவியாரது உடன்பாடு குறிப்பா லுணர்த்தப்பட்டது காண்க. இவ்வாறுணர்த்துதலும், தலைவி தாமே கூறுது தோழியர் மூலம் உணர்த்துதலும் தமிழிலக்கணத்துள் அகப்பொருளி னியலென்க.

நாதர்செய லறியாதே - உயர்ந்த தூய இடமாகிய இறைவர் திருமுன்பில் இது சாற்றத் தகாதென்றமையால் இதில் வேறுமொரு கருத்து இருத்தல் கூடு மென்பதுய்த்துணரத் தக்கது.

3413. மாதரவர் "மகிழ்க்கீழே யமையு"மென, மனமருள்வார்
"ஈதலரா கிலுமாகு மிவர்சொன்ன படிமறுக்கில்;
ஆதலினு லுடன்படவே யமையு"மெனத் துணிந்"தாகிற்
போதவீ" ரெனமகிழ்க்கீ ழவர்போதப் போயணைந்தார். 259

என்னை? யாவரும் தத்தங் காரியத்தின் நலங்கருதி மிக உயர்வாகிய பொருளினையே நாடுவது இயல்பாதலான்; அன்றியும் எவ்விடமேயாயினும் இறைவர் எங்கும் நிறைந்துள்ளவராதலின் எவ்விடமும் அவர் திருமுன்பேயாதலும் உண்மை; இங்ஙனம் உய்த்துணரத் தக்கதாயினும், நம்பிகள் இவர் மொழியினுள் நாதர் செயலினை அறியாது, மேல் "செய்வது யானெங்கு?" என்று வினவியது மேல் விளைவு கருதி இறைவரது திரோதான சத்தியின் செயலாலெென்க.

எங்கு - வேறு எங்கு? வேறு என்பது (இசையெச்சம்.)

கொம்பு அனையீர் - **கொம்பு** - பூங்கொம்பு *258*

3413. **(இ - ள்)** மாதரவர்...மருள்வார் - அதற்கு அப்பெண்கள் திருமகிழின் கீழே செய்தலே பொருந்தும் என்று சொல்ல, அது கேட்டு மனமருட்சி யுடைவராய்; ஈதலராகிலும்...அமையும் எனத் துணிந்து - இவர் சொன்னபடி செய்யமறுத்தால் ஈது பழிச்சொல் லாகிலுமாம்; ஆகையினுல் அவ்வாறே செய்வதற்கு உடன்படுதலே பொருத்தம் என்று துணிவுகொண்டு; ஆகில்...போய் அணைந்தார் - அஃது உமது கருத்தாகில் அவ்வாறு நான் சபதம் செய்வதற்கு உடன் வருவீராக என்று கூறி அவர்கள் மகிழின் கீழே செல்லத் தாமும் போய் அணைந்தாராகி,

(வி-ரை) மாதரவர் - முன் கூறியவாறு மொழிந்த தாதியர்; **அவர்** - முன்னறி சுட்டு.

மகிழ்க்கீழே அமையும் - அமையும் - செய்தல் அமையும். **அமையும் - சாலும்** - போதும்; முன் **இதற்காக** -*(3412)* என்று இதனைச் சிறியகாரியம் என்ற குறிப்புப்படக் கூறியதனைத் தொடர்ந்து அதற் கிதுபோதும் என்ற பொருள்படக் கூறியதும் காண்க. **மகிழ்**- மகிழமரம்.

மருள்வார் - தாம் இறைவரை வேண்டிய நிலை இவர்கள் திருவருளால் அறிய வந்து தமக்கே இடர்ப்பாடாக சேர்ந்ததனைக் குறித்து மனமருட்சி விளைந்தது; **மருட்சி** - மேற் செயல் துணியமாட்டாது மனமயங்கும் உள்ள நிகழ்ச்சி.

"**ஈது...அமையும்**" **எனத்துணிந்து** - இது நம்பிகள் மனமருட்சியில் இருவழியும் எண்ணமிட்டு ஆய்ந்து ஒருவழி துணிபு கொண்ட நிலை; **அலர்** - பழிச்சொல்; பலரறிந்து புறங்கூறுதல், **ஈது** - இந்நிகழ்ச்சி; **மறுக்கில் - ஈது அலராகிலுமாகும்** என்க.

மறுத்தலாவது - அவர் குறித்தபடி மகிழ்கீழ்ச் சபதம் செய்யாமை; மணம் நிறைவேருமையுடன் அலரும் ஆகும்.

அலர் - பெண்களை வஞ்சிக்க முயன்ருர் என்ற பழிச் சொல். குறித்தபடி செய்யின் பதிதோறும் கும்பிடும் கடமைக்கு விலக்காதல் ஒன்றுமே நிகழும்; ஆனலும் அதுபற்றி இறைவரருளை எவ்வாற்ருனும் பெறலாம்; பழிச்சொல்லை மாற்றலரிது; ஆதலின்,

மகிழின் கீழே சபதம்

3414. **தாவாத பெருந்தவத்துச் சங்கிலியா ருங்காண**
மூவாத திருமகிழை முக்காலும் வலம்வந்து
"மேவாதிங் கியானகலே" னெனநின்று விளம்பினார்
மூவார்தண் புனற்பொய்கை முனைப்பாடிப் புரவலனார். 260

உடன்படவே அமையும் என்றிவ்வாறெல்லாம் எண்ணி அவர் கூறிய அவ்வாறே செய்யத் துணிந்தனர் என்க.

ஆகில் - உமது கருத்து இஃதேயாகில்; **அவர்போத** - அவர்களும் உடன் செல்ல.

அணைந்தார் - அணைந்தாராய்; முற்றெச்சம். அணைந்தார் - விளம்பினார் என்று மேற்கூட்டுக. முற்றாகக் கொள்ளினும் இழுக்கில்லை. **259**

3414. (இ-ள்) தாவாத...காண - கெடாத பெருந் தவமுடையாராகிய சங்கிலியாரும் காணும்படி; மூவாத...வலம் வந்து - என்றும் அழியாத திருமகிழினை மூன்று தரமும் வலமாகச் சுற்றி வந்து; மேவாதிங்கு...விளம்பினார் - இங்குப் பொருந்தியிராது நான் நீங்கமாட்டேன் என்று நின்று திருந்தச் சபதமாக எடுத்துச் சொன்னார்; பூவார்...புரவலனார் - பூக்கள் நிறைந்த குளிர்ந்த நீர்த்தடங்களையுடைய திருமுனைப்பாடி நாட்டின் தலைவராகிய நம்பிகள்.

இந்நான்கு பாட்டுக்களும் செயலும் பொருளும் தொடர்ந்து ஒரு முடிவுபடுத்தி உரைக்க நின்றன.

(வி-ரை) தாவாத பெருந்தவத்துச் சங்கிலியார் - முன்பு, "சாருந் தவத்துச் சங்கிலி" *(3393)* என்றதும் அவ்விடத்துரைத்தவையும் பார்க்க.

தாவாத - கெடாத - அழியாத; இத்தன்மை பற்றி முன்னர்க் குறித்ததனோடு ஈண்டும் குறித்தமை அங்குத் தொடக்கம்பெற்ற நிகழ்ச்சி இங்கு இப்பாட்டின் நிகழ்ச்சியுடன் முடிகின்றமையின் அது குறித்தற்கு. "தாவே வலியும் வருத்தமும் கேடும்";

சங்கிலியாரும் காண - சேடியர் மட்டுமன்றிச் சங்கிலியாரும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை. நம்பிகள் தம்பொருட்டு இது செய்யத் தாம் கண்ணாற் கண்டிருப்பதும் பாவமாம் என்று பின்னர் எண்ணி வருந்தும் சங்கிலியாரும் என்று உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்த தென்றலுமாம்.

மூவாத - மூத்தலில்லாத; அழியாத;பழையதாய் முற்றி அழியாது எந்நாளும் இருக்கின்ற. **முக்காலும் வலம் வருதல்** சபதம் செய்தற்குரிய முன்னங்கமாகிய சடங்கு. **நின்று விளம்புதல்** என்பதும் சடங்கு.

"**மேவாது இங்கு அகலேன்**" என்றது சபதம்; வாயினாற் கூறும் பகுதி; மூன்று முறை வலம் வருதலும் நின்று கையுயர்த்திச் சூளுரைத்தலும் மெய்ச் சடங்கு; **மெய்ச்சபதவினை** - என மேற்கூறும் குறிப்பும் காண்க. **யான் இங்கு மேவாது அகலேன்** என்க.

பூவார் தண்...புரவலனார் - இச்சபத வினை முடித்தலின், நம்பிகள்பால், உள் தடுமாற்றம் புறத் தடுமாற்றத்தை விளைக்க, அது கருவிகளின் தடுமாற்றத்தை விளைக்க,அது

3415. **மேவியசீ** ராரூரர் **மெய்ச்சபத வினைமுடிக்கக்**
காவியினேர் கண்ணுருங் கண்டுமிக மனங்கலங்கிப்
"**பாவியே னிதுகண்டேன் றம்பிரான் பணியா**"லென்
ருவிசோர்ந் தழிவாரங் **கொருமருங்கு மறைந்தயர்ந்தார்,** 261

செயல்முறை மெய்ம்முயற்சியினை விரைந்து நிகழாது தடுக்கச் செயலில் தாமதம் நிகழ்ந்தமை குறிக்க, இப்பகுதி விரைந்துபடிக்க இயலாதவாறு யாப்பும் சொல்லும் பொருளும் அமைதிபெற நிற்கின்றது ஆசிரியரது தெய்வக் கவிநலம்.*

விளம்பினுர் - திருத்தமாக உரத்துக் கூறுதல் குறிப்பு. *260*

3415. **(இ-ள்)** மேவியசீர்...முடிக்க - பொருந்திய சிறப்பினையுடைய நம்பியாரூரர் மெய்ச்சபதமாகிய வினையினை இவ்வாறு நிறைவேற்ற; காவியினேர்...கலக்கி - நீலமலர் போன்ற கண்ணினையுடைய சங்கிலியாரும் அதனைக் கண்டு மனம் மிகவும் கலங்கி; பாவியேன்...என்று - தம்பிரானருளிச் செய்தமையினுலே பாவியேன் இதனைக்கண்டேன் என்று நினைந்து; ஆவி...அயர்ந்தார் - உயிர் சோர மனம் அழிவுறுவாராகி அங்கு ஒருபுறம் மறைந்து அயர்ந்தனர்.


(வி-ரை) மேவியசீர் - மேவிய - சிறப்புக்கள் இவரை நாடியடைந்து தாம் சிறப்புப் பெற்றன என்பது.

மெய்ச் சபத வினை முடிக்க-மெய் -உடம்பு என்ற குறிப்புத் தந்து நின்றது. கால்கள் வலம்வரக், கைதூக்க, வாய் சூளுறவு கூற என்றிவ்வாறு உடம்பின் புறக்கருவிகள் தம்மளவிலே தொழிற்பட, மனம் மருண்டு தடுமாறி ஒருவாறு தேறித் துணிந்தும் நிலைபெருது அலையச், செயல் முற்றிய நிலைக்குறிப்பு. **மெய்** - உண்மை. நம்பிகள் வேண்டியவாறே இறைவர் அங்கு மகிழின் கீழ் வெளிப்பட வீற்றிருந்தமையின் இஃது அவர் திருமுன்பு செய்த உண்மைச் சபதமாய் முடிந்தது. இவ்வாறன்றி நம்பிகள் முன் எண்ணியருளியவாறு திருக்கோயிலில் இறைவரது திருமுன்பு செய்திருக்கக் கூடுமாயின் அதன் நிலை வேறும் என்பது தொனி.


காவியினேர் கண்ணுர் - சங்கிலியார்; **இன்** - சாரியை. **நேர்** -உவம வுருபு. "காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டும்" (தேவா); கண்ணின் தன்மைகளாகிய அன்பு - மென்மை - இனிமை முதலியவை முற்றும் கொண்ட நோக்கமுடைமை குறிக்க இங்கு இவ்வுவமை கூறி ஓதினுர்; "பைங்குவளைக் கார்மலரால்...எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த" (திருவா. திருவெம்பாவை-*13*). என்னை? நம்பிகள்பால் வைத்த அன்பின் பெருக்கினுலே அவர் தம்மைப் பிரியாதிருக்க இச்சபத வினை முடியக் காண்டலான் என்பது.

கண்டு - வெறும் பார்வையளவானன்றி மனமுள்ளுறக் கண்டு என்பதாம். இஃது அனுபவம் கலந்தது; "கண்களா னந்தக் கலுழிநீர் பொழிதரக் கண்டார்" (*3253*); "சங்கிலியாருங் **காண**" (*3414*) என்றதும், பின்னர் "இது **கண்டேன்**" என்பதும் காண்க;


*இது பற்றி சேக்கிழார் பார்க்க.




திருஒற்றியூர்-உற்சவ மூர்த்திகள்



திருஒற்றியூர்க் கோயில்
திருக்கலியாண மண்டபம்




திருஒற்றியூர்-மகிழ மரமும்
விநாயகர் சந்நிதியும்
''மூவாத திருமகிழ்-பாட்டு--3414



திருஒற்றியூர்
சுந்தரர்-சங்கிலியம்மையார்
மூலத்தானத் திருவுருவங்கள்
(பழைய படம்) -பாட்டு-3423

படம்-14


திருக்கேதாரம்




திருக்கேதாரநாதர் (வடநாடு)
திருமூலட்டானேசுவரர் திருவுருவம்
(பழைய படம்) - பாட்டு-2924-3352



திருக்கேதாரம் (வடநாடு)
திருக்கோயில்



திருக்கேதாரம் (வடநாடு)
திருக்கோயிலும் கோபுரமும்



திருக்கேதாரத்தில் சம்பந்த
சுவாமிகளின் திருப்பதிகக் கல்வெட்டு



திருவஞ்சைக்களம்
சேரமானூர் - சுந்தரர் திருமடம்(பழைய படம்)
(திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் உபயம்)

படம்-15

3416. திருநா வலூராளி தம்முடைய **செயன்முற்றிப்**
பொருநாகத் துரிபுனைந்தார் கோயிலினுட் புகுந்திறைஞ்சி
"அருணாளுந் தரவிருந்தீர் செய்தவா றழகி!"தெனப்
பெருநாம மெடுத்தேத்திப் பெருமகிழ்ச்சி யுடன்போந்தார். 262

காட்சி என்னும் அகத்துறையே அகப்பொருள் நிகழ்ச்சிப் பகுதிகளுக்கெல்லாம் தோற்றுவாயாகி முதலில் நிற்பதும் கருதுக.

மிகமனங்கலங்கி...அயர்ந்தார் - இறைவர் திருமுன்பு சபதவினை முடித்தல் என்பது இயல்புக்கு மாறாகியதொரு வலிந்த செய்கை; இதனைத் தமது நாயகர் தம் பொருட்டுச் செய்வதற்குத் தாம் காரணமாயிருந்தது கொடுமை என்று எண்ணிச் சங்கிலியார் வருந்தி மனம் அழிந்து அயர்ந்தனர். **ஒருமருங்கு மறைதல்** இத்தகைய தகாத செயலுக்குக் காரணமாயிருந்த தம்மை மறைத்துக்கொள்ளுதல் ஒரு குற்றம் செய்தார்பால் நிகழும் மெய்ப்பாடு. ***அழிதல்*** - மனமுடைதல்; **இது** - சபதவினை காணுதல்.

பாவியேன் - பாவம் செய்தேனாதலின் என்று தம்மைத்தாம் நொந்து கொண்டது. "பாவியேன் கண்டவண்ணம்" (*818*) என்று கண்ணப்பர் இரங்கியது காண்க.

தம்பிரான் பணியால் - "அவர் தாம் திருவாரூரின்கண் மிகவு மகிழ்ந்துறைவது" (*3395*) என்றது மட்டில் சங்கிலியார் கூறினாரன்றி, அதற்குப் பரிகாரம் ஒன்றும் கூறினாரலர்; "பிரியாமைக்கு ஒரு சபதம் செய்வான்" என்றதும், "நமக் கெதிர் செய்வதற்கு இசையாதே மகிழ்க்கீழே கொள்க" என்றதும் இறைவர் தாமே பணித்தவை. ஆதலின் அவர் **பணியால்** என்றார். இறைவர் பணித்திராவிடின் சங்கிலியாரது அன்பு கனிந்த திருவுள்ளம் இதில் தாழாது என்பதாம். ஆயின், இறைவர் இவ்வாறு கொடிய செயலினை நம்பிகள் செய்யவும்,அதனைச் சங்கிலியார் காணவும் பணித்தது அருளுடைய பரமாகிய இறைவர்பா லருளின்மையோ? எனின், அற்றன்று; இருவர்பாலும் வைத்த பேரருளின் றிறத்தாலே இவ்வாறு பணித்தருளினர் என்க; நோயின்றன்மைக் கேற்ப வலிந்த முறை செய்தும் தீர்க்கும் மருத்துவன் போல என்று கண்டுகொள்க; இம்மாபுராணத்தினுள் வருவனவாய் உலகர்க்கு மிகக் கொடியனவாகக் காண்பனவாகிய எத்துணையோ செயல்கள் எல்லாம் இறைவர் பணித்த வழியாகிய அருட்செய்கைகளேயாமாறும் இங்கு நினைவுகூர்க. இக்கருத்தினை மேற் பாட்டில் நம்பிகள் **மகிழ்ந்து** துதிக்குமாற்றாலும் காண்டுகொள்க.

அயர்தல் அறிவழிதல். தம்பிரான் பணியென்று கண்டுவைத்தும் அயர்ந்தது பெண்மையின் இயல்பென்க. "மேற்றானீ செய்வனகள் செய்யக் கண்டு வேதனைக்கே யிடங்கொடுத்து நாளு நாளு மாற்றேன்" (தாண் -ஆவடுதுறை). ***261***

3416. (இ-ள்) திருநாவலூராளி...முற்றி - திருநாவலூர்த் தலைவராம் நம்பிகள் தமது செயலாகிய சபதவினையினை முடித்து; பொருநாகத்துரி புனைந்தார்...இறைஞ்சி - பொருகின்ற யானையின்தோலை அணிந்த இறைவரது திருக்கோயிலினுள்ளே புகுந்து வணங்கி; "அருள்நாளும்...அழகிது" என-நாளும் அருளேதரஇருந்த இறைவரே! தேவரீர் செய்த ஆறு

3417. **வார்புனையும்** வனமுலையார் வன்ரெண்டர் **போனதற்பின்**
தார்புனையு மண்டபத்துத் தம்முடைய பணிசெய்து
கார்புனையு மணிகண்டர் செயல்கருத்திற் கொண்டிறைஞ்சி
ஏர்புனையுங் **கன்னிமா டம்புகுந்தா ரிருள்புலர.** 263

இது அழகாயிருந்தது என்று; பெருநாமம்...போந்தார் - அவரது உயர்ந்த நாமமாகிய திருவைந்தெழுத்தினை எடுத்து மிகத் துதித்துப் பெருமகிழ்ச்சியுடனே புறம் போந்தனர்.

(வி-ரை) தம்முடைய செயல் - தமக்கு இறைவர் பணித்த சபதவினை. "ஒருசபதம் அவள் முன்பு சென்று கிடைத் திவ்விரவே செய்க" என்ற செயல்;(3399).

கோயிலினுள் புக்கு - கோயிலினுள்புக நின்ற நம்பிகள், அங்குப் போகாமல் சேடியர் கூறியபடி மகிழின் கீழ்ச் சபதம் செய்ய வந்தணைந்தனராதலின் அச்செயல் முற்றியபின் கோயிலினுள்ளே புகுந்தனர்.

நாளும் அருள் தர இருந்தீர் இது செய்தவாறு - அழகு! என்க. **நாளும்** - நாணளும்; அனுதினமும்; எந்நாளும் என்றதனுல் இனி, இச்சங்கட நிலைமையினின்றும் நீங்கப் பெறுதற்கும் என்றது குறிப்பு. **தர** என்றது மக்குறிப்பு; **இது செய்தவாறு அழகு** - இவ்வாறு மகிழ்க்கீழே கொள்ளும்படி அவர்களுக்குப் பணித்தது. இதனைக் கருதலளவையால் நம்பிகள் துணிந்து கொண்டனர் என்க. நம்பிகளுக்கும் இறைவர்க்கும் மட்டில் அமைந்த இச்செய்தியினை (மகிழின்கீழ் இறைவர் விளங்க வீற்றிருப்பதும் அங்குச் சபத முடிப்பதுமாகிய செய்தியினைச்) சங்கிலியாரும் தோழியருமறியச் செய்தல்.

அவர் பெருநாமம் மிக ஏத்தி - இறைவரது பெருந்திருநாமமாகிய திருவைந்தெழுத்தினுல் துதித்து; "ஆலைப் படுகரும்பின் சாறு போல, அண்ணிக்கு மஞ்செழுத்தினுமைத் தான்காண்" (தாண்). திருவருள் வெளிப்பாடு கண்ட போதெல்லாம் இவ்வாறு சீபஞ்சாக்கரத்தைப் பலமுறை செபித்தல் வேண்டுமென்பது விதியும் மரபுமாம்.

அழகு - இகழ்ச்சிக்குறிப்பு உட்கொண்ட புகழ்ச்சிமொழி. தோழமையாற் கூறியது.


பெருமகிழ்ச்சியுடன் போந்தார் - இப்போது நிகழ்ந்தது அருள்; இது போல இனித் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகளிலும் காக்க நிற்பதும் அருளே; என்ற துணிபு உணர்ந்தமையால் மகிழ்ந்தனர். குறித்த சபத முடிந்தமையால் திருமணமும் நிறைவாகப் பெறும் மகிழ்ச்சியுமாம். இவ்வாறன்றிச் சங்கிலியாரும் திருவருட்பணி என்றுணர்ந்திருந்தும் மனமழிந்தயர்ந்தது மென்மையாகிய பெண்மை யன்பினியல்பு; ஈண்டு நம்பிகள் நிலை திருவருட் டுணிபுடைய ஆண்மையினியல்பு.

போந்தார் - தமது திருமாளிகையிற் சென்றனர்.


அழகிதென எடுத்தேத்தி - "பொன்னவிலுங் கொன்றையினய்; **'போய் மகிழ்க் கீழிரு' வென்று, சொன்னவெனைக் காணுமே சூளுறவு மகிழ்க்கீழே,** என்ன வல்ல பெருமானே" (திருவெண்பாக்கம் - 9) என்பது தேவார அகச்சான்று. *262*

3417. **(இ-ள்)** வார்புனையும் வனமுலையார் - கச்சணிந்த அழகிய முலையினை யுடைய சங்கிலியம்மையார்; வன்ரெண்டர்...பணி செய்து - வன்ரெண்டராகிய நம்பிகள் அவ்விடம்


திருப்பெருமங்கலம்



வன்றொண்டர் திருவுருவம்
திருப்பெருமங்கலம்-வன்றொண்டர்
கோயிலில் உள்ளது-
மூலத்தானம்(பழைய படம்)



திருப்பெருமங்கலம் -
ஏயர்கோன் கலிக்காம நாயனர்
உற்சவமூர்த்தி திருஉருவம்
வன்றொண்டர் கோயிலில் உள்ளது
(பழைய படம்)



திருப்பெருமங்கலம்-பழைய ஊர் கிராம நத்தம்-
ஊர் இருந்த இடம்(பழைய படம்)

படம்-16

விட்டுச் சென்றபின்னர். மாலைகள் கட்டும் திருப்பூமண்டபத்திலே அணைந்து தமது திருப்பணியினைச் செய்து முடித்து; கார்புனையும்...இறைஞ்சி - மேகத்தை ஒத்த அழகிய கண்டத்தினையுடைய இறைவரின் அருளிச் செயல்களைத் தமது கருத்தினுட் கொண்டு பணிந்து; ஏர்புனையும்...இருள்புலர - அழகு பொருந்திய கன்னிமாடத்தினுள்ளே இருள் நீங்கி விடியும் பொழுது புகுந்தனர்.

(வி-ரை) இப்பாட்டு நம்பிகள் சபதம் முடித்தபின் நங்கை சங்கிலியாரது செயலைக் கூறிற்று; முன்பாட்டில் நம்பிகள் செயலைக் கூறியதுபோல. அது முன்னர் நிகழ்ந்ததனல் அந் நிகழ்ச்சி முறைபற்றி முன்னர் உரைத்தார்.

போனதற்பின் - என்றது காண்க; மகிழின் கீழிருந்து முதலில் நீங்கியவர் நம்பிகள்.

வார்புனையும்...பணிசெய்து - சபதவினை முற்றியபின் நம்பிகள் திருக்கோயிலுட் சென்று விண்ணப்பித்துச் சென்றாராகச், சங்கிலியார் திருப்பூமண்டபத்தினுட்சென்று தமது நியதியாகிய பணிசெய்து முடித்துப் பின் இறைஞ்சிப் போந்தனர்.

தம்முடைய பணி - தாம் நியதியாய் அன்று வரை செய்து வந்த பூமாலைப் பணி;(3376-3377). தமக்கு உலகியலில் இன்பத்துன்பங்கள் நேரும்போது தாந் தாம் மேற்கொண்டுள்ள சிவப்பணி அடியார் பணிகளைக் கைந்நழுவ விடுவார் பலர்; சங்கிலியாரது இந்தச் சிவவாழ்க்கை யொழுக்கம் உலகர் கண்டு பின்பற்றின் நலந்தரும்.

கார்புனையும் மணிகண்டர் - புனையும் - உவமஉருபு. **கார்** - மேகம்; **கார்** - கருமை நிறம் என்று கொண்டு கருநிறத்தைப் புனைந்து கொண்ட என்றலுமாம்;இப்பொருளில் **புனையும்** - என்பதற்கு வைத்த என்று பொருள்கொள்க.

செயல் - இருபாலும் இறைவர் செய்த அருளிப்பாடுகள்.

கருத்திற் கொள்ளுதல் - மறவாது மனத்தில் வைத்து எண்ணுதல்.

இருள்புலரப் - புகுந்தார் - என்று கூட்டுக; **இருள்புலர்தல்** - இருள் நீங்கிப் பொழுது விடிதல்; **இருள்** - புலரியிருள்; திருப்பள்ளி எழுச்சிக்கு மலர்தொடுக்கும் பொழுதாகிய வைகறையாமத்திற் சென்ற அம்மையார் தம் செயல் முற்றிப் புலரும்பொழுது மீண்டனர் என்க.

இனி, **இருள்** என்பது திருக்கயிலை நிகழ்ச்சி காரணமாக வந்த இவ்வுலக வாழ்வினைக் குறிப்பாலுணர்த்தியதாகக் கொண்டு, அவ்வினைப் பயன் அன்று முற்றி நீங்கச் சென்று புகுந்தார் என்றலும் குறிப்பு. அன்றே திருமண நிகழுநா ளாதலின், முன்னட்களில் நாடோறும் பணிமுற்றி மீண்டு வந்து புகுந்தது போலன்றி அன்று இருள் புலரப்புகுந்தார் என்றதும் அக்குறிப்பு;இனிப், **புலர** - புலரும் பொருட்டு என்று கொண்டு, உலகத்தார் திருவருளின் உண்மை கண்டு அறியாமை நீங்க என்ற குறிப்புப்பட நின்றமையும் காண்க.

புனையும் - இப்பாட்டில் நான்கடிகளினும் **புனையும்** என்பது சொற்பின் வருநிலை; அன்று கலியாணத்தின் பொருட்டுச் சங்கிலியாரைப் பூண்புனைந்து அலங்கரிக்கும் பொருள் நிகழ்ச்சிக்கேற்ப நின்ற சொல்லமைதி.

3418. **அன்றிரவே** யாதிபுரி யொற்றிகொண்டா ராட்கொண்ட
பொன்றிகழ்பூண் வன்றொண்டர் புரிந்தவினை முடித்தருள
நின்றபுகழ்த் திருவொற்றி யூர்நிலவு **தொண்டர்க்கு**
மன்றல்வினை செய்வதற்கு மனங்கொள்ள வுணர்த்துவார், 264

3418. (இ-ள்) அன்றிரவே - அன்றைய இரவிலே; ஆதிபுரி...முடித்தருள - ஆதிபுரியாகிய ஒற்றியூரை உடையவராகிய இறைவர் தாம் ஆட்கொண்ட பொன்விளங்கும் அணிகளை அணிந்த வன்றொண்டர் நினைந்த மணச் செயலை முடித்துக் கொடுக்கும் பொருட்டு; நின்ற புகழ்...உணர்த்துவார் - நிலைபெற்ற புகழினையுடைய திருவொற்றியூரில் நிலவும் தொண்டர்களுக்கு அக்கலியாணத்தினைச் செய்து முடிக்கும்படி மனங்கொள்ளும்படி உணர்த்துவாராய்,

(வி-ரை) அன்றிரவே - சபதவினை முற்றிய அன்றிரவிலேயே.

இரவு - வைகறையில் சபதவினை முற்றிய பின்னும் புலருமுன்னும் எஞ்சி யிருந்த இராப்பொழுது.

வினைமுடித்தருள - ஒற்றிகொண்டார் - தொண்டர்க்கு - மன்றல் வினை செய்வதற்கு மனங்கொள்ள அன்றிரவே - உணர்த்துவார் - என்று கூட்டி உரைத்துக் கொள்க.

ஆதிபுரி - திருவொற்றியூரின் முதற்பெயர்; **ஒற்றிகொண்டார்** - ஆதிபுரியாயிருந்தும் அதனை ஒற்றியாக உகந்து கொண்டவர் என்றது கவிநயம்.

ஒற்றிகொண்டார் - ஆதிபுரியாகிய ஒற்றியூரை உகந்திடங் கொண்டவர் என்க. ஆதிபுரியை ஒற்றிக்கொண்ட சிவபிரானால் ஆட்கொள்ளப்பட்டவராகிய வன்றொண்டர்; ஆதிபுரி - திருவொற்றியூர் என்பது முன்னுங் குறித்தது காண்க. "எண்ணில் பெருமை ஆதிபுரி" *(3359)*.

ஆட்கொண்ட - வன்றொண்டர் - புரிந்தவினை - முடித்தருள - தம்மால் வலிந்து ஆளாகக் கொள்ளப்பட்ட வன்றொண்டராயின காரணத்தால் அவர் எண்ணிய வினையை முடித்துக் கொடுத்தருள வேண்டிய கடமைப்பாடுபற்றி என்பது குறிப்பு.

தொண்டர்க்கு - மன்றல் வினை செய்வதற்கு - மனங்கொள்ள உணர்த்துவார் - முடித்தருளக் கொண்ட தமது அருளின் நினைவினை (சங்கற்பத்தை) நிறைவேற்றுவதற்காக அந்த மணவினையைச் செய்வதற்குத் தமது திருவொற்றியூர்த் தொண்டர்க்கு அறிய உணர்த்துவாராகி; **மன்றல்வினை** - கல்யாணச் சடங்குகள்; **மனங்கொள்ள** - தெளிவுபட; **உணர்த்துவார்** - கனவில் பலர்க்கும் ஒருங்கே தோன்றி ஆணையிடுதல்; *1068; 2094-2097* - என்ற இவை முதலியவை பார்க்க.

உணர்த்துவார் - உணர்த்துவாராகி; முற்றெச்சம்.

உணர்த்துவார் - உணர்த்துதலும் - தொண்டர் - எழுவார் - *(3419)*-பதியோருடன் ஈண்டிச் - செய்தளித்தார் - *(3420)* என்று இம்மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. ***264***

3419. "**நம்பியா ரூரனுக்கு நங்கைசங் கிலிதன்னை
இம்பர்ஞா லத்திடைநம் மேவலினுன் மணவினைசெய்
தும்பர்வா ழுலகறிய வளிப்பீ**"ரென் றுணர்த்துதலுந்
தம்பிரான் றிருத்தொண்ட ரருடலைமேற் கொண்டெழுவார், 265

3419. **(இ-ள்)** "நம்பியாரூரனுக்கு...அளிப்பீர்" என்று உணர்த்துதலும் - நம்பியாரூரனுக்கு நங்கையாகிய சங்கிலியை இவ்வுலகத்திலே நமது கட்டளையினுலே சடங்குகளுடன் கல்யாணஞ் செய்து தேவருலகத்துள்ளோரும் அறியும்படி கொடுப்பீர்களாக என்று உணர்த்தியருளுதலும்; தம்பிரான்...மேற்கொண்டெழுவார் - தம்பெருமானின் திருத்தொண்டர்கள் அவ்வருளிப் பாட்டினைத் தலைமேலே தாங்கி எழுவார்களாகி,

(வி-ரை) "**நம்பி... அளிப்பீர்!**"—இஃது இறைவர் திருவொற்றியூர்த் திருத்தொண்டர்களுக்குக் கனவில் உணர்த்தி யருளிய ஆணை; **நம்பி** - ஆடவரிற் சிறந்தோன்;

இம்பர் ஞாலத்திடை - மணவினை செய்து அளிப்பீர் - திருக்கயிலையில் நம்பிகள் "அவர் மேன்மனம் போக்கிடக், காதன் மாதருங் காட்சியிற் கண்ணினுர்" (35) என்ற வரலாற்றின்படி பெறநின்ற செயலாய் இவ்வுலகில் மணவினை நிகழச் செய்து என்றபடி.

நம் ஏவலினுல் அளிப்பீர் - என்றது, "திருவொற்றியூர் அணைந்து சிவனுரருளிற் செல்வன்" (3367), "செல்கதியும் கண்ணுர் நுதலார் திருவருளாலாக" (3372) என்று நம்பால் தம்மை ஒப்புவித்தன ராதலின் சங்கிலியாரை மணஞ் செய்தளிப்பது நமது கடன்; ஆதலின், நம் ஏவலினுல் நீர் அளிப்பீர் என்றபடியாம்.

மணவினை செய்து - கற்பியலின் விதித்தபடி நூல் விதிச் சடங்குகள் எல்லாம் செய்து.

உம்பர் வாழ் உலகறிய - மணவிதியின்படி உள்ள சடங்குகளில் தீக்கடவுள் முன்னர் உரிய அவ்வத் தேவர்களை அவ்வவர்க்கும் உரிய மந்திரங்களால் விளித்து அவிகொடுத்து வேள்வி நிகழ்த்துதலால் **உம்பர்** அறிய என்ருர்.

உம்பரும் வாழ் உலகும் அறிய என்றுபிரித்து தேவர்களும் இங்கு வாழும் நிலவுலகத்தவரும் அறியும்படி என்றுரைக்கவும் நின்றது.

உணர்த்துதல் - துயிலினிடையே உணரச் செய்து கட்டளை யிடுதல்.

தலைமேற் கொண்டு எழுவார் - தலைமேற் கொள்ளுதல் - முதற் பெருங்கடமையாகத் தாங்குதல்; **எழுதல்** - முயலுதல்; "உடனெழுந்தார்." *265*

3420. (இ-ள்) மண்ணிறைந்த...திருத்தொண்டர் - உலகில் நிறைந்த பெருஞ் செல்வத்தினை உடைய திருவொற்றியூரில் நிலைபெற்று வாழும் எண்ணிறைந்த திருத்தொண்டர்கள்; எழில் பதியோருடன் ஈண்டி - அழகிய அந்தத் திருப்பதியில் உள்ளவர்களுடனே கூடிவந்து; உள்நிறைந்த...செய்தளித்தார் - மனம்நிறைந்த மகிழ்ச்சியுடனே தேவர்கள் கற்பக முதலிய தேவதருக்களின் மலர்களை மழைபோலப் பொழியக் கண் களிகொள்ள நிறைந்த பெரிய சிறப்புக்களுடன் கல்யாணத்தைச் செய்து முடித்தனர்.

சங்கிலியார் திருமணம்

3420. மண்ணிறைந்த பெருஞ் செல்வத் திருவொற்றி யூர்மன்னும்
எண்ணிறைந்த திருத்தொண்ட ரெழிற்பதியோ ருடனீண்டி
உண்ணிறைந்த மகிழ்ச்சியுட னும்பர்பூ மழைபொழியக்
கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் **கலியாணஞ் செய்தளித்தார்.** 266

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மண்ணிறைந்த பெருஞ் செல்வம் - உலகிற் சிறந்த செல்வங்களை உடைய நகரச் சிறப்பு. "சுற்றிவண் டியாழ்செயுஞ் சோலையுங் காவுந் துதைந்திலங்கு, பெற்றிகண் டால்மற்றி யாவருங் கொள்வர் பிறரிடை நீ, ஒற்றி கொண்டாயொற்றி யூரையுங் கைவிட் டுறுமென்றெண்ணி, விற்றிகண் டாய்மற்**றிதுவொப்ப தில்லிடம்** வேதியனே" (திருவிருத்தம்) என்று அரசுகள் சுவைபட அருளுதல் காண்க.

எண்ணிறைந்த - இறைவரது திருவருள் தம் எண்ணத்தில் நிறைவித்த.

தொண்டர் எழிற்பதியோருடன் ஈண்டி - தொண்டர்கள் ஏனைய அந்நகர மாந்தருடன் பெருகக் கூடி. **தொண்டர்** வேறு; **பதியோர்** வேறு; **தொண்டர்** - இறைவரால் உணர்த்தப்பட்டோர். *(3418)* **பதியோர்** - மணவினைக் குடனிருந்து காரியம் செய்யும் ஊரவர்.

உம்பர் பூமழை பொழிய - "உம்பர்வா ழுலகறிய" *(3419)* மணவினைகள் செய்யப்படுதலின் அவர்கள் ஏற்றுப் பூமழை பொழிந்தனர்.

கண்ணிறைந்த பெருஞ்சிறப்பு - மணவினை செய்யும் அணிகள் முதலிய சிறப்புக்கள்.

கலியாணம் - சுபங்களிற் சிறந்தது என்பது பெயர்ப் பொருள்; கல்யாண குணங்கள் என்புழிப்போல; அது மணத்திற்காகி வந்தது; இவ்வாறே பரவையார் திருமணமும் இறைவரது ஆணையினால் அடியார்கள் கூடிச் செய்தமை முன் உரைக்கப்பட்டது ஈண்டு நினைவு கூர்தற்பாலது *(324-326)*

எயிற்பதியோர்—செய்தமைத்தார்—என்பனவும் பாடங்கள். ***266***

3421. **(இ-ள்)** பண்டுநிகழ் பான்மையினால் - முன்னை நாளில் நிகழ்ந்த நியதியினாலே; பசுபதிதன்...வன்றொண்டர் - பசுக்களுக் கெல்லாம் பதியாகிய சிவபெருமானது திருவருளினாலே, வண்டுகள் மொய்க்கும் மலர்களைச் சூடிய கூந்தலை யுடைய சங்கிலியம்மையாரைத் திருமணம் செய்து கூடிய வன்றொண்டர்; புண்டரிகத்தவள்... தூநலத்தினை - திருமகளின் அழகமைப்பினை வென்ற அவரது தூய பெண் நலத்தினை; கண்டு...காதலினால் - பெருவிருப்பத்தினாலேயே கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அனுபவித்து விரும்பியிருந்தனர்.

(வி-ரை) பண்டு நிகழ் பான்மை - முன்னர்த் திருக்கயிலையின் நிகழ்ச்சியின் விளைந்த, நியதி; ஊழ்; "நற்பெரும் பான்மை கூட்ட" *(285)*; "பண்டை விதி கடைகூட்ட" *(288)* என முன்னர்ப் பரவையார் திறத்துக் கூறிய கருத்தினைத் தொடர்ந்து கூறியவாறு; இரண்டற்கும்

3421. **பண்டுநிகழ் பான்மையினாற் பசுபதிதன் னருளாலே**
வண்டமர்பூங் குழலாரை மணம்புணர்ந்த வன்றொண்டர்
புண்டரிகத் தவள்வனப்பைப் புறங்கொண்ட தூநலத்தைக்
கண்டுகேட் டுண்டுயிர்த்துற் றமர்ந்திருந்தார் காதலினல். 267

நிகழ்ச்சி ஒன்ருதலின்;இது செய்யின் இது விளையும் என்று பண்டு தொட்டு நிகழும் விதியின்படி இஃதும் நிகழ்ந்தது எனப் பொது விதியினைக் குறித்த தென்றலுமாம். **பான்மை-**ஊழ்-''பான்முறை தின்று'' (நீதி நெறி விளக்கம் 50).

பசுபதி - பசு - உயிர்கள்; **பசுபதி** - உயிர்களுக்குத் தலைவர் என்ற இத்தன்மையாற் கூறியது, ஈண்டுச் சுந்தரரையும், அநிந்திதை கமலினி என்ற இருவரையும் இங்குச் செலுத்தி நுகர்வித்தும், மேல்வினைகள் ஏருமற் காத்தும், தம்பாற் செலுத்தி யாட்கொண்ட நாயகராகிய நிலைபற்றி.

வண்டமர் பூங்குழல் - புதிய பூக்களைச் சூடிய கூந்தல்; புதிய பூக்களாதலின் தேனுண்ண வண்டுகள் மொய்த்தன. இனி, உத்தம வியலுடையாராகலின் அவரது கூந்தலின் இயல்பாகிய நறுநாற்றங் கண்டு வண்டுகள் விரும்பி வரும்படி அழகிய கூந்தல் என்றலுமாம். ''அஞ்சிறைத் தும்பி!...மொழிமோ...கூந்தலின் நறியவுமுளவோ நீ யறியும் பூவே'' என்ற இறையனர் திருவாக்குக் காண்க. திருமணத்திலும், பின்னரும் பூக்கள் சூடி அலங்கரிக்கப்பெற்றவர் என்பதும் குறிப்பு.

மணம் - ஈண்டு விதிமணம் குறித்தது;''தக்க விதிமணத்தால்'' (3395).

புண்டரிகத்தவள் வனப்பை - புண்டரிகத்தவள் - ஈண்டுச் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகளைக் குறித்தது; அவள் அழகிற் சிறந்தவள் என்பது மரபாதலின்; **வனப்பை** என்ற குறிப்புமது; அழகினைப் பற்றிய அளவில் ஒப்புமை கொள்க என்றபடி; **வனப்பு** -மேனியைப் பற்றிய பெண்மை நலங்களாகிய அமைப்பு முற்றுங்கொள்க. ''கன்னிதன் வனப்பு''; (2994) என்று தொடங்கிப் பூம்பாவையாரது வனப்பின் தன்மைகளை ஆசிரியர் (2995-3008) விரித்தருளிய வகை எல்லாம் ஈண்டு வைத்துக் கொள்ளத்தக்கன.

புறங்கண்ட - வெற்றி கொண்ட; அதனினும் மேம்பட்ட.

தூநலம் - தூய்மையாகிய பெண்மை நலங்களெல்லாவற்றின் றெகுதி; தாம் வீழ்வார் மென்றெட் டுயிலி னினிதுகொல், தாமரைக் கண்ணு னுலகு'' என்ற குறளின் கருத்து ஈண்டுணர்த்தப்படுதல் காண்க.

கண்டு...காதலினல் - காதல் - பெருவிருப்பம்; பெண்ணின்பாற் பெறும் இன்பம் ஐம்புலவின்பங்க ளாதலின் காணுதல் முதலிய ஐம்பொறிகளின் விடய நுகர்ச்சிகளும் கூறினர்; ''கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள'' என்ற திருக்குறளின் சொல்லும் பொருளும் போற்றப்பட்ட திறம் காண்க. இது தமிழ் அகப்பொருணயம் கூறியபடி. **அமர்ந்திருத்தல்** - விரும்பி யிருத்தல்; ''பன்னுளும் பயில்யோகம் பரம்பரையின் **விரும்பினர்**'' (327) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

3422. **யாழின்மொழி யெழின்முறுவ லிருகுழைமேற் கடைபிறழும்**
மாழைவிழி வனமுலையார் மணியல்குற் றுறைபடிந்து
வீழுமவர்க் கிடைதோன்றி மிகுபுலவிப் புணர்ச்சிக்கண்
ஊழியா மொருகணந்தா னவ்வூழி யொருகணமாம். 268

காதலினால் - முன்னை நாட் கண்ட காதல் காரணமாக; "வேறுவேறு காலங்களில் வேறுவேறு பொருள்களா னனுபவிக்கப்படுவன ஒருகாலத்து இவள் கண்ணே யனுபவிக்கப்பட்டன என்பதாம்" என்பது பரிமேலழகருரை. "மண்ணின்மேற், கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு, மொண்டொடி கண்ணே யுளவென்று - பண்டையோர், கட்டுரையை மேம்படுத்தாள்" என்பது நம்பிகளின் தோழமை கொண்ட கழறிற்றறிவார் நாயனார் திருவாக்கு. (உலா)

அமர்ந்திருந்தார் - இதன் தன்மையினை மேல் 3423-ல் விரிக்கின்றார். 267

3422. **(இ-ள்)** யாழின்...துறை படிந்து - யாழினுமினிய மொழியினையும், அழகிய பல்வரிசையினையும், இரு காதுகளிலுமணிந்த மகரக் குழைகளின்மேலே கடைப் பார்வை பிறழ்ந்து செல்லும் மாவடுவைப் போன்ற கண்களையும், சந்தனக்கோலமெழுதிய தனங்களையும் உடைய, சங்கிலியாரது அழகிய அல்குலாகிய தடத்தின் துறையிலே முழுகி; வீழும் அவர்க்கு - அழுந்துகின்ற நம்பிகள் சங்கிலியார் என்ற இருவர்க்கும்; இடைதோன்றி மிகு புலவிப் புணர்ச்சிக்கண் - இடையே உண்டாகி மிகுகின்ற புலவியிலும் புணர்ச்சியிலும் (முறையே); ஊழியாம்...கணமாம் - ஒரு கணம் ஓரூழியாக நீட்டிக்கும்; அவ்வோரூழி ஒரு கணமாகச் சுருங்கும்.

(வி-ரை) மொழி - முதலியவை முன்பாட்டிற் "கண்டு கேட்டு" என்று குறித்த வெவ்வேறு அனுபவங்களுக்கிடமாகிய தானங்களைக் குறித்தன; **மொழி - முறுவல் - விழி - முலை** முதலியனவற்றை உடையார் என்க.

யாழின் மொழி - யாழ் - யாழொலியினைக் குறித்தது; ஆகு பெயர்; **இன் -** ஐந்தனுருபு. "முரன்றயா ழொலியினதாய்" (1363); யாழ்ஒலியி னினிய மொழி என்க; "குழலினிது யாழினி தென்பதம் மக்கண், மழலைச் சொற் கேளா தவர்" என்ற விடத்து யாழொலி மொழிக்கு உவமிக்கப் பட்டது காண்க.

முறுவல் - பல் வரிசை; முறுவல் - நகை; நகைக்குக் கருவியாகிய பல்வரிசைக்கு வந்தது.

குழைமேல் - காதுகளிலணிந்த குழைகளின் மேல் கடைவிழி பிறழும்படி கண்கள் நீண்டிருத்தல் பெண்களின் உத்தம இயல். **கடை - கடைக்கண்**; கடைக்கண் பார்வை என்ற பொருளில் வந்தது.

மாழை விழி - மாழை - மாவடு; மெய்பற்றி வந்த உவமை.

அல்குல் துறைபடிந்து - அல்குல் - கடிதடம்; **துறை** - படிந்து என்றதற்கேற்பத் தடமாகவைத்துத் **துறை** என்றார்; **படிதல்** - தோய்தல்; துறையின் அமர்ந்தவாறே மூழ்குதல்.

வீழும் அழுந்தும்; **வீழ்தல்** - விரும்புதலுமாம்.

அவர்க்கு இடைதோன்றிமிகும் - இடை - ஏழனுருபு. **அவர்** - நம்பிகள் சங்கிலியார் என்றிருவர்.

புலவிப் புணர்ச்சிக்கண் - புலவியும் புணர்ச்சியுமாகிய இரண்டு நிலைகளினும்.

புலவிக்கண் - ஒரு கணம் ஊழியாம்; **புணர்ச்சிக்கண்** அவ்வூழி ஒரு கணமாம் என்று முறை நிரனிறையாகப் பொருள் கொள்க. **ஊழி** மிகநீடித்த காலக்கூறு; **கணம்** - மிகக் குறுகிய காலக்கூறு.

புலவி - "அஃதாவது இருவர் நெஞ்சும் புணர்ச்சி விதும்பாது புலக்கக்கருதிய வழி ஒருவரோடொருவர் புலத்தல்" என்பர் பரிமேலழகர். உண்மையாகிய வேறு ஒரு காரணமுமின்றித் தாமே ஒரு காரணங் கற்பித்துக் கொண்டு ஊடுதல்.

படிந்து வீழுமவர்க்கிடை தோன்றி மிகு - இருவருள் ஒருவரிடை உளதாகி மற்றவரிடைச் சேறலால் **இடை** என்றும், காரணமின்றி வருவிக்க நிகழ்வதனுல் **தோன்றி** என்றும், அவ்வாறு தோன்றிய தன்மை மிக்கவழி பயன் றருதலால் **மிகு** என்றும் கூறினுர்.

படிந்து வீழுமவர் என்றதனுல் முன்னர்ப் புணர்ச்சியும், **மிகுபுலவிப் புணர்ச்சிகண்** -என்றலால் அதன் பின்னர்ப் புலவியும், அதன் பின்னர் அது தீர்ந்து புணர்ச்சியும் கூறியவாறு; **அவ்வூழி** என்ற முன்னறிசுட்டும் வைப்பு முறையும் இக்கருத்தன. இப்புலவி இன்ப நுகர்ச்சிக்குத் துணை நின்று அதனை மிகுவிப்பதென்பது தமிழ் அகப்பொருணூல்களிற் பேசப்படும் உண்மை; "துனியும் புலவியு மில்லாயிற் காமங், கனியுங் கருக்காயு மற்று", "ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங், கூடி முயங்கப்பெறின்" என்பவை காண்க; இன்னு மிவற்றின் இயல்பெல்லாம் அகப்பொருள் நூல்களினும் திருக்குறளினுள் புணர்ச்சி விதும்பல், புலவி, புலவி நுணுக்கம் முதலிய பகுதிகளிலும் கண்டுகொள்க.

புலவிக்கண் ஊழியாம் ஒருகணந்தான் - என்றது புலவி நிற்கும் காலம் ஒரு கணமேயாயினும் அஃது ஊழியேபோல நீடித்தது என்பது; **தானும்** என்ற சிறப்பும்மையும் **ஊழியே** என்ற தேற்றேகாரமும் விகாரத்தாற்றொக்கன. **ஆம்** ஆக்கச் சொல் உவமை குறித்தது.

புணர்ச்சிக்கண் அவ்வூழி ஒருகணமாம் - புணர்ச்சி நிகழும் காலம் நீண்டதாயினும் ஒரு கணமேபோல விரைந்து கழியும் என்பது; உலக இன்பங்கள் விரும்பிய வழி நிகழ்ந்தபோது காலம் விரைந்து செல்லக் காண்டலும், விரும்பாத நிகழ்ச்சிகள் நேர்ந்தபோது காலம் மெல்லச் செல்வதுபோல் காண்டலும் கண்கூடு; பேரின்பத்தினுமிவ்வாறே கண்டுகொள்க. உம்மையு ஏகாரமும் முன்கூறியவாறே தொக்கன. **அவ்வூழி** - புலவியில் ஒரு கணம் ஊழியாகக் கண்ட அந்த என **அகரம்** முன்னறிசுட்டு. இதனுல் புலவியின்பின் புணர்ச்சி நிகழ்ந்ததனைக் குறிப்பிற் கூறியவாறு. இவையெல்லாம் பெருங் காவிய மாதலின் தமிழ் அகப்பொருணலம் பற்றிக் கூறிய அளவாம். ஈண்டுச் சங்கிலியாருடன் கூடி யின்ப நிகழ்ந்தவை முன்பாட்டினுலும்,அவ்வின்பம் பெருக நிகழ்ந்தமை இப்பாட்டினுலும் கூறினுர்; இவ்வாறே பரவையாருடன் கூடிய நிலையினும் (327-329) இரண்டு பாட்டுக்களாற் கூறிய நிறையும் நியமமும் கவிநயமும் கண்டுகொள்க.

3423. **இந்நிலையிற் பேரின்ப மினிதமர்வா** ரிறையுறையும்
மன்னுபுக **ழொற்றியூ ரதனின்மகிழ் சிறப்பினுற்**
சென்னிமதி புனைவார்தந் திருப்பாதந் தொழுதிருந்தார்
முன்னியகா லங்கள்பல முறைமையினுல் வந்தகல. 269

இனி, இவ் வின்பம் ஏனை உலகர் போன்று இழிந்த காமத்திற் சென்றெழுந்து மேல் வினைகள் பெருக ஏதுவாகக் கழியாது இறைவரது சிவயோக மாகிய பேரின்பத்துள் ளடங்கி உடலூழாய்க் கழிந்த நிலையினை மேல்வரும் பாட்டில் "இந் நிலையிற் பேரின்ப மினிதமர்வார்" (3423) என்று தொடங்கிக் கூறும் திறனும், இது போலவே முன்னர்ப் பரவையார் கூட்டத்தின் நிகழ்ச்சியினைத் "தன்னையா ளுடைய பிரான் சரணுர விந்தமலர், சென்னியிலுஞ் சிந்தை யினு மலர்வித்து" (328) என்று கூறிய திறனும் கண்டு கொள்க.

நம்பிகள்பால் அறியாமையாற் பலசொல்லி அபசாரப்படும் மாக்கள் இந்நுட்பங்களைக் கண்டு உய்தி பெறுவாராக. 268

3423. **(இ-ள்)** இந்நிலையில்...இனிதமர்வார் - முன் கூறியபடி இவ்வாறுள்ள நிலைமையில் பேரின்ப நுகர்ந்து இனிதாக விரும்பி எழுந்தருள்வாராகிய நம்பிகள்; இறையுறையும் மன்னுபுகழ்... தொழுது - இறைவர் எழுந்தருளியுள்ள நிலைபெற்ற புகழினையுடைய திருவொற்றியூரினில் தங்கி மகிழும் சிறப்பினுலே சிரத்திற் பிறை சூடிய இறைவரது திருப்பாதத்தினைத் தொழுது கொண்டு; முன்னிய... அகல - எண்ணிய காலங்கள் பலவும் வருமுறையிலே தொடர்ந்து வந்து செல்ல; இருந்தார் - எழுந்தருளியிருந்தனர்.

(வி-ரை) இந்நிலையில் - முன் இரண்டு பாட்டுக்களிலும் கூறிய இந்தச் சிற்றின்பமாகிய நுகர்ச்சி நிலைமையிலே; **பேரின்பம் இனிது அமர்வார்** - பேரின்பத்தினை இனிதாக நுகர்ந்து கொண்டு விரும்பி எழுந்தருளியிருப்பாராகி; சிற்றின்ப நுகர்ச்சியினுள் பேரின்ப நுகர்தலாவது, "**பெற்றசிற் றின்பமே பேரின் மாயங்கு, முற்ற வரும்பரி** சுந்தீபற; முளையாது மாயையென் றுந்தீபற" என்ற திருவுந்தியாரினுள் விளக்கப்பட்ட நிலையின் அனுபவம்; "உடம்புடைய யோகி கடா முற்றசிற் றின்பம், அடங்கத்தம் பேரின்பத் தாக்கிற்—றொடங்கி, முளைப்பது மொன்றில்லை முடிவதுமொன் றில்லை, யிளைப்பதுமொன் றில்லை யிவர்" (76) என்ற திருக்களிற்றுப் படியார் இதனை மேலும் விளக்குதல் காண்க. "ஏடுதரு மலர்க்குழலார் மூலைத்தலைக்கே யிடைக்கே யெறிவிழியின் படுகடைக்கே கிடந்துமிறை ஞானங், கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்" (சித்தி 10-5) என்ற ஞானநூன் முடிபு இதனை நன்குவிளக்குதலும் காண்க. முன்னர் 327-328-329 பாட்டுக்களின் கீழ் உரைத்தவையும் பார்க்க. **அமர்தல்** - விரும்புதல்;"பயில்யோகம் பரம்பரையின் **விரும்பினுர்**" (327)

இனிது அமர்வார் - இருந்தார் - என்று கூட்டுக.

சென்னி மதிபுனைவார் - தொழுது - சென்னியின்கண் மதிபுனைவாரது என்றும், மதிபுனைவார் பாதம் சென்னியாற் றொழுது என்றும் உரைக்க நின்றது; "சரணுர விந்தமலர் சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்து" (328) என்றது காண்க.

3424. **பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின்**
கொங்கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல்
அங்கணையத் திருவாரூ ரணி**வீதி யழகரவர்**
மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டருளும் வகைநினைந்தார். 270

பல - காலங்கள் - வந்தகல இருந்தார் - என்று கூட்டுக. இருந்தார் - அப்போது பலகாலங்கள் வந்தகல என்று குளகமாக்கி அக்காலத்தில் தென்றல் வந்தணைய என்று மேற்பாட்டுடன் கூட்டி முடித்தலுமாம்.

காலங்கள் பல - பருவகாலங்கள் பலவும்; **பல** என்றதனுல் குறைந்தது மூன்று பருவங்களாயினும் குறித்தல் வேண்டும். **பருவம் -** பெரும் பொழுது என்பர்; "இல்லிருத்தல் முல்லை" "கூடல் குறிஞ்சி"; என்பவாகலானும், "காரு மாலையு முல்லை குறிஞ்சி, கூதிர் யாம மென்மனுர் புலவர்" (தொல். பொ. அகத். 6), "பனியெதிர் பருவமு முரித்தென மொழிப" (மேற்படி-7) என்றும், "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு" (மேற்படி-9) என்றும் கூறுபவாகலானும், ஈண்டு இல்லிருக்கையும் - கூடலும் - பிரிவும் உரிப்பொருளாகக் கொண்ட முல்லை, குறிஞ்சி, பாலைத் திணை யொழுக்கம் நிகழ்வன வாதலானும், அவற்றின் முதற் பொருளாகிய கார்காலம் முதல், இளவேனில் வரை உள்ள காலங்கள் அவ்வம் முறைமையின் வந்து கழிந்தன என்க; எனவே நம்பிகள் சங்கிலியாரை மணம் புணர்ந்தது கார்காலமென்பதும், பிரிவுற்றது இள வேனிற் காலமென்பதும் கருத நின்றன. "**பங்குனித்** திருநாளுக்குப் பண்டுபோல் வருவா ராகி" (3497) என்றும் "**வசந்தம்**" (3425) என்றும் கூறுதலுங் கருதுக.

முன்னிய காலங்கள் பல - பெற்ற சிற்றின்பமே பேரின்பமாய் முற்றவரும் தன்மையில் இறைவர் பாதமே நினைந்திருத்த காலங்கள் என்க. **முன்னுதல் -** இடைவிடாது நினைத்துச் சிவயோகம் கூடுதல்; **முறைமை**யாவது - காலப் பருவங்கள் தொடரும் முறைமை; சிவயோக நிலைபேறு பெற்று நின்ற முறைமையில் என்றலும் குறிப்பு. 269

3424. **(இ-ள்)** பொங்குதமிழ்...தென்றல் - மேன்மேலும் பொங்கி வளர்கின்ற தமிழ்க்கிருப்பிடமாகிய பொதியமலையினிற் றேன்றி, பூஞ்சந்தன மரங்களின் மணத்தில் அளவளாவி குளிர்ந்த நீர்ச் சாரலின்கண் வளர்ந்த செழுமையுடைய தென்றற்காற்று; அங்கணைய - அங்குத் திருவொற்றியூரில் வந்துசார; திருவாரூர்...நினைந்தார் - திருவாரூரில் அழகிய வீதிவிடங்கப் பெருமான் மங்கலமாகிய திருவிழா நாட்களில் வசந்தவிழாத் திருவோலக்கத்தினைக் கொண்டருளும் தன்மையினை நினைந்தனர் (நம்பிகள்).

(வி-ரை) பொங்குதமிழ் - வழக்காறற்றொழிதலு, வளர்ச்சியின்றி நிற்றலும், இலக்கண வரம்பின்றி நிகழ்தலும் முதலிய தடைகள் இல்லாமல் மேன்மேல் வளம்பெற்று வளரும் தமிழ் என்றதாம். ஏனைய மொழிகள் எல்லாவற்றினும் தமிழின் மேம்பாடு குறித்தது. "ஞால மளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" (970) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

தமிழ்ப் பொதியமலை - தமிழுக்கிருப்பிடமாகிய தமிழ்முனிவர் அகத்தியனுர் வீற்றிருக்கும் பொதிகைமலை; தமிழ்முனிவரது மலை என்க. **தமிழ் -** இனிமை என்று கொண்டு கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் தரும் பொதியமலை என்றலுமாம்.

3425. வெண்மதியின் கொழுந்தணிந்த **வீதிவிடங் கப்பெருமாள்**
ஒண்ணுதலார் புடைபரந்த வோலக்க மதனிடையே
பண்ணமரு மொழிப்பரவை யார்பாட லாடறனைக்
கண்ணுறமுன் கண்டுகேட் டார்போலக் கருதினர். 271

பொதியமலைப் பிறந்து பூஞ் சந்தனத்தின் கொங்கணைந்து - "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவன்" என்பன முதலியவை காண்க. **அணைந்து** - விரவி; **கொங்கு - மணம்; பிறந்து** - பொதியமலையின் குளிர்ந்த சாரலினின்று தோன்றி; **பிறத்தல்** - தோன்றுதல் - தொடங்குதல். "பிறந்த தெங்கள் பிரான்மல யத்திடை , சிறந்தணைந்தது தெய்வநீர் நாட்டணி" (313) என்று முன்னர்ப் பரவையார் திறத்து நிகழ்ந்த கருத்துக்களை இங்குவைத்து ஒப்புமை கண்டு கொள்க. **பிறந்து - கொங்கணைந்து** என்றதனால் தண்மையும் மென்மையும் நறுமையுமுடைமை குறிக்கப்பட்டன. **பூ** - அழகு; மணமுமாம்.

குளிர் சாரலிடை வளர்ந்த - குளிர்சாரல் என்றது பொதியமலையே யன்றி ஏனைய குளிர்மிக்க மலைச் சாரல்களும், நீர்வளமிக்க சோலைப்பகுதிகளும், காவிரி நீர் நாட்டுப் பகுதிகளும் குறித்தது; ***சாரல்*** - சார்ந்து வரும் இடங்கள்; **வளர்ந்த** - பிறந்த தன்மைக்கு மாறுபாடின்றி ஏற்றவாறே வளர்ச்சியும் பெற்று என்றது குறிப்பு. கொழுமை - மாந்திய முதலிய வளங்களை உடைமை.

அங்கு அணைய - அங்குத் தொண்டை நாட்டில் திருவொற்றியூரில் அத்தென்றல் வந்து சார; ***அணைய - நினைந்தார்*** - என்று கூட்டுக; இவ்வாறன்றி **அங்கு** - திருவாரூரில் என்று கொண்டு, அங்குத் தென்றல் அணைய அக்காலத்தில் வசந்தம் கொண்டருளும் வகை என்றுரைப்பாருமுளர்.

திருவாரூர் அணிவீதி அழகர் - வீதி விடங்கப் பெருமான்; தியாகேசர்.

மங்கலநாள் வசந்தம் எதிர்கொண்டருளும் - மங்கலநாள் திருவிழா. **வசந்தம்** அத்திருவிழாவில் ஆருவது திருநாள் என்பர்.

அங்கணைய - வகை நினைந்தார் - தென்றல் - பருவத்தையும் நீர் நாட்டையும் திருவாரூரினையும் நினைவூட்ட இத்துணையும் நினைந்தனர்.

எதிர் கொண்டருளும் வகை - ஏற்றருளும் விழாச் சிறப்பு. இவ்வாறு உலகானுபவப் பொருள்கள் இறைவரது தொடர்பு பற்றி நினைவூட்டும் நிலை பெரியோர்களது செம்மை சேர் மனநிலை; இத்தன்மையில் உலகின்பப் பொருள்களை பற்றுகக் காணும் தன்மை பெறப் பழகுதலே சிவயோகத்தின் பண்பு. இப்பயிற்சி மிக்க நலம் தருவதொன்றும். 270

3425. **(இ-ள்)** வெண்மதியின்...அதனிடையே - வெள்ளிய மதியின் கொழுந்தாகிய பிறைச்சந்திரனை அணிந்த வீதிவிடங்கப் பெருமானது அழகிய நெற்றியை உடைய பெண்கள் பக்கங்களிற் பரவிச் சூழ்ந்த திருவோலக்கத்தின்கண்; பண் அமரும்...ஆடல்தனை - பண்ணினீர்மை பொருந்திய மொழியினையுடைய பரவையம்மையாரது பாடலினையும் ஆடலினையும் முறையே; கண்ணுற...கருதினர் - நேரே கண்களிற் பொருந்தக் காணவும் கேட்கவும் பெற்றனர்போலவே கருதினர் (நம்பிகள்).

3426. பூங்கோயி லமர்ந்தாரைப் புற்றிடங்கொண் டிருந்தாரை
நீங்காத காதலினு னினைந்தாரை நினைவாரைப்
பாங்காகத் தாமுன்பு பணியவரும் **பயனுணர்வார்**
"ஈங்குநான் மறந்தே" னென் றேசறவான் மிகவழிவார், 272

(வி-ரை) **வீதிவிடங்கப் பெருமாள்** தியாகேசர்; இப்பெயரின் பொருளும் வரலாறும் பற்றித் (130) திருவாரூர்த் திருநகரச் சிறப்புப் பார்க்க.

ஒண்ணுதலார் புடைபரந்த ஓலக்கம் - பெண்கள் பக்கங்களிலெல்லாம் பரவிச் சூழக் கொலு வீற்றிருக்கும் நிலை; 'பத்தர்க ளோடு பாவையர் சூழ" (அரசு.ஆரூர்.குறிஞ்சி); இப்பெண்கள் கும்பிட வந்தாரும் ஆடல்பாடல்களியற்றி உபசரிப்பாருமாம். **ஓலக்கம்-** கொலு வீற்றிருக்கும் நிலை. கொலுமண்டபமுமாம்.

பண் அமரும் மொழி - பண்ணின் நீர்மை இயல்பாகவே அமைந்த மொழியினையுடைய;

பாடல்தனையும் ஆடல்தனையும் - என்று தனை என்பதை இரண்டிடத்தும் தனித்தனிக் கூட்டியும் எண்ணும்மை விரித்தும் உரைத்துக் கொள்க.

ஆடல்தனைக் கண்டு பாடல் தனைக் கேட்டார் - என்று எதிர் நிரனிறையாகக் கூட்டிக் கொள்க; ஆடலுடன் பாடல் ஒருசேர நிகழ்தலினுல் **தனை** என ஒருமையாற் கூறியும், அதனை ஓரிடத்துக் கூட்டியும், ஒருவினை கொண்டு முடித்தும் வைத்தருளினுர். இற்றைநாட் பேசும்படக் காட்சி அமைப்பினை நினைவுகூர்க.

கண்ணுற முன் - அகக்கண்ணினுலே யன்றிப் புறக்கண்ணுலும் முன் பொருந்த என்பது.

போலக் கருதினுர் - கருத்தில் ஊன்றிய நோக்கினுலே அக்காட்சி புறக்காட்சி நிகழ்ந்தது போலவே யிருந்தது; உருவெளிப்பாடு முதலிய அகப்பொருட்டுறைகள் காண்க. மேல் இதனைத் தொடர்ந்து பிரிவாற்ரு நிலையில் அருளும் திருப்பதிகமும், அதனை ஆசிரியரது "மிக நினைந்து ஏசறவாய்" என்று விளக்கியருளும் நிலையும் காண்க. "எத்தனைநாள்பிரிந்திருக்கே னென்னுரு ரிறைவனையே (தேவா).

கண்டுகொண்டார்—என்பதும் பாடம். *271*

3426. *(இ-ள்)* பூங்கோயில்...நினைவாரை - பூங்கோயிலினுள் விரும்பி வீற்றிருப்பவரைப், புற்றினை இடமாகக் கொண்டு வீற்றிருப்பவரை, இடையருத பெருவிருப்பத்தினுலே தம்மை நினைந்திருக்கும் அடியவர்களைத் தாம் நினைந்திருப்பவரை; பாங்காக... பயனுணர்வார் - முறைமையாகத் தாம் முன்னுட்களிற் பணிய அதனுல் வரும் சிவானந்தமாகிய பெரும்பயனை உணர்ச்சியிற் கொள்பவராகி; ஈங்கு நான்...மிக அழிவார் - இவ்விடத்து நான் மறந்திருந்தேன் என்று வருந்தி மிகவும் மனமழிவாராகி.

(வி-ரை) **பூங்கோயில்...நினைவாரை** - ஈண்டுக் கூறியவை மூன்றும் புற்றிடங்கொண்ட பிரானுராகிய திருமூலட்டான நாதரை நினைந்த வகை; மேற்பாட்டிற் கூறும் (3427) மூன்றும் வீதிவிடங்கராகிய தியாகேசரை நினைந்தவகை. மேற்பாட்டில் (3427)

வரும் மூன்றும் ஒருமையாற் கூறியது தோழமையால் தம்முடன் **ஒன்றித்து** நிகழும்தன்மையுடையார் என்ற குறிப்புமாம். பதிகத்துள் "இறைவனே" என்று **ஒருமையாற்** போற்றியதும், "துரிசுகளுக்கு உடனாகி" என்றதும், பிறவும் காண்க.

நீங்காத... நினைவாரை - எல்லாவுயிர்களையும் பொது வகையால் **நினைந்தருள்** பவராயினும் இடையறாக் காதலின் நினைவாரைச் சிறப்பு வகையால் நினைவார் **இறைவர்** என்பதாம். "சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல், சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்— சார்ந்தடியார், தாந்தானச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல், ஆய்ந்தார்முன் செய்வினையு மாங்கு" (போதம் - 10) என்று இவ்வுண்மையினை ஞானசாத்திரம் **விளக்குதல்** காண்க. "மறந்தானைத் தன்னினையா வஞ்சர் தம்மை யஞ்செழுத்தும் வாய்நவில **வல்லோர்க்** கென்றுஞ், சிறந்தானை" (தாண் - திருநாகேச்சுரம்-6), "எத்தனையும் பத்தர்பத்திக் **குளைவானை** யல்லாதார்க் குளையாதானை"(தாண் - கீழ்வேளூர் 3) **"மறவாதே தன்றிறமே வாழ்த்துந் தொண்டர் மனத்தகத்தே யனவரத மன்னி நின்ற திறலானை"** (தாண். திருமுதுகுன்றம் -8) என்பன முதலிய எண்ணிறந்த திருவாக்குக்கள் காண்க.

நினைந்தாரை நினைவாரை - நினைந்தபின்னர் அவர் நினைந்தவற்றை யீய நினைவார் என்றபடி.

பாங்காக - ஆளாகும் முறைமையாலே; **பாங்கு** - பண்பு; **பாங்கு** - தோழமை என்ற குறிப்புமாம். "என்னுடைய தோழனுமாய்" என்ற பதிகம் பார்க்க.

பணிய வரும் பயன் உணர்வார் - பயன் - பணிந்தமையால் பெற்ற பெரும்பேறாகிய பேரருளின் றிறங்கள். சரித நிகழ்ச்சிகள் எல்லாம் காண்க.

முன்பு - முன்னைநிலையினும், அதனைத் தொடர்ந்த இந்நிலையினும் இதற்கு முன்னாகை.

உணர்வார் - உணர்வாராகி; முற்றெச்சம்; உணர்வார் - மனம் அழிவார் - மிக நினைந்து - இயம்பி -இரங்கினார் என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. உணர்வாராகி அதனாலே அழிவார் - நினைந்து என்க.

ஈங்கு நான் மறந்தேன் என்று - பயனை உணர்ந்தமையால் இங்கு அவரை நான் மறந்திருந்தேன் என்று வருந்தினார்; ஈண்டு மறந்தேன் என்பது பிரிந்திருந்தேன் என்ற அளவில் பொருடந்து நின்றது; நம்பிகள் எந்நாளும் திருவாரூரை மறந்திருக்கவில்லை யாதலின்; "பிரிந்திருக்கேன்" என்ற தேவாரமும் பார்க்க.

ஏசறவு - பெறற்கரிய பொருளைப் பிரிந்திருந்தமையின் வரும் வருத்தம்;திரு வாசகத்தினுள் **"திருவேசறவு"** என்ற பகுதியின் திருப்பாட்டுக்கள் பார்க்க.

மிக அழிதல் - மனமிக அழிதல் - நைந்து படுதல். 272

3427. **(இ - ள்)** மின் ஒளிர்...மகிழ்ந்தானை - மின்போல ஒளிவிடும் சிவந்த சடையினை உடையவரை, வேதங்களின் முதல்வராக உள்ளவரை, நிலைபெற்ற புகழை உடைய திருவாரூரினை மகிழ்ந்தவரை; மிகநினைந்து - (பிரிவாற்றாமையால்) மிகவும் நினைந்து; பன்னிய சொல்...இரங்கினார் - பலமுறையும் அடுக்கிய சொற்களையுடைய "பத்திமையும் அடிமையையும் கைவிடுவான்" என்று தொடங்கும் சொல்லும் பொருளுமுடைய பழம்

3427. மின்னொளிர்செஞ் சடையானை வேதமுத லானானை
மன்னுபுகழ்த் திருவாரூர் மகிழ்ந்தானை **மிகநினைந்து**
பன்னியசொற் ''**பத்திமையு மடிமையையுங் கைவிடுவான்**''
என்னுமிசைத் திருப்பதிக மெடுத்தியம்பி யிரங்கினுர். 273

பஞ்சுரத்தின் பண் இசைபொருந்திய திருப்பதிகத்தினை எடுத்துப் பாடி இரங்கினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மிக நினைந்து - பலபடியாலும் அழுந்த நினைந்து.

மிக நினைந்து பன்னிய சொல் - பன்னுதல் - ஒரே பொருளைப் பல திறத்தாலும் அனுபவித்துச் சொல்லுதல்; ''எத்தனைநாட் பிரிந்திருக்கேன் என்னுரு றிறைவனையே'' "எவ்வணநான் பிரிந்திருக்கேன்'' ''எங்ஙனநான் பிரிந்திருக்கேன்" "எப்பரிசு'' "என்னுக'' "என்செய'' ''எற்றுளனுய்'' என்பனவாகப் பாட்டுத்தோறும் பன்னிவரும் முடிபுகளையும், அவற்ருற் றெரியவரும் மனமழிந்த நிலையினையும் காண்க; இப்பதிகம் நம்பிகளின் பதிகங்களில் வழக்கமாக வரும் பத்துப்பாட்டுக்களின் மேலும் இரண்டு பாட்டுக்கள் கொண்டு விளங்குதலும்; தேவிமார் இருவர் காரணமாக வந்த வினைநிகழ்ச்சிகளின் நினைவுகொண்டு விளங்குதலும் காண்க.

''**பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் என்னும்** - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பும், பதிகக் கருத்துமாம்; **பத்திமை** - அகநிலை; **அடிமை** - புறநிலை; **கைவிடுவான்** - நழுவ விடுவானுகி.

இசை - பதிகப்பண்ணுகிய பழம்பஞ்சுரப் பண்ணிசை.

இரங்கினுர் - இரங்குதல் - மனமழிந்து தந்நிலைக்குத்தாமே வருந்துதல். *273*

திருவாரூர் - (திருவொற்றியூரிற் பாடியருளியது)

திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம். 7-ம் திருமுறை**

பத்திமையு மடிமையையுங் கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோ யதுவிதனைப் பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கே னென்னுரு றிறைவனையே. *(1)*

ஏழிசையா யிசைப்பயனு யின்னமுதா **யென்னுடைய**
தோழனுமா யான்செய்யுந் துரிசுகளுக் குடனுகி
மாழையொண்கண் **பரவையைத்தந்** தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னுரு றிறைவனையே. *(10)*

வங்கமலி கடனஞ்சை வானவர்க டாமுய்ய
நுங்கியமு தவர்க்கருளி **நொய்யேனைப் பொருட்படுத்துச்**
சங்கிலியோ டெனைப்புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்குலக்கப் பிரிந்திருக்கே னென்னுரு றிறைவனையே. *(11)*

பேருரு மதகரியி னுரியானைப் பெரியவர்தஞ்
சீருருந் **திருவாரூர்ச் சிவனடியே திறம்விரும்பி**
ஆரூர னடித்தொண்ட னடியன்சொ லகலிடத்தில்
ஊரூர னிவைவல்லா ருலகவர்க்கு மேலாரே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—திருவாரூரிறைவனையே எங்கு நான் மறந்திருக்கேன்; எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என்று ஏசறவால் மனமழிந்து இரங்கிப் போற்றியது.

குறிப்பு:—இத்திருப்பதிகம் நம்பிகளது திருவுள்ளக் குறிப்பேயன்றிச் சரித அகச்சான்று பலவும் பெற நின்ற பெருஞ்சிறப்புடையது. 10-11 பாட்டுக்களில் இறைவரது திருவருளின் ஆணைவழியே பரவையாரையும் சங்கிலியாரையும் மணந்து கொண்ட வரலாறுகள் பெறப்படுவன. "போய்மகிழ்க்கீ ழிருவென்று, சொன்னவெனைக் காணுமே சூளுறவு மகிழ்க்கீழே, என்னனல்ல பெருமானே" "சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோள்" "பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கு மெனக்கும் பற்றாய பெருமானே" என்பன முதலிய தேவாரத் திருக்குறிப்புக்கள் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) **பொத்தினநோய் அது இதனை** - நோயினை உள்ளே வைத்துப் பொதிந்த உடம்பினைக் கொண்ட பிறவி; 3, 4 பாட்டுக்கள் பார்க்க. **அது** -உடம்பு என்ற உருவங் கொண்டு, மறைந்து நிற்கும் நோயே ஆகிய அது; பண்டறி சுட்டு; **பொருள் அறிந்தேன் போய்த்தொழுவேன்** - உண்மையினை அறிந்தேனாதலின் அதன் பற்றினை விட்டுப் போய் இறைவரைத் தொழும் நியமத்தில் நின்றேன்;ஆதலின் என்பது சொல்லெச்சம்; **நோய்** - வினைப்போகம்; "மூலநோய்" (தேவா); (2) **ஐவணமாம்பகழி** - காம னம்புகளாகிய ஐந்து மலர்கள்; வண்ணம் - வணம் என நின்றது; **வண்ணம்** - வகை என்ற பொருளில் வந்தது; **வெவ்வணமாம்** -சிவந்த தீயாகிய; **விழிசெய்த** - விழித்த; **அணவுதல்** - பொருந்துதல்;—(3) **சங்கு அலக்கும்** - **அலக்குதல்** - அலையச் செய்தல்; **அலக்கண்** - துன்பம்; **அலக்கும்** - துன்பம் செய்யும்; **உலக்க** - அழிவுபெற - முடிவுபெற; 11-வது பாட்டுப் பார்க்க.

செறிவு - சேர்தல்;—(4) **இங்ஙனம்** - இவ்வுலகத்திடை; **அங்ஙனம்** -முன் அருளிய அவ்வாறு; **எங்ஙனம்** - எவ்வாறு தரித்து;—(5) **அப்பெரிய** - அகரம் உலகறிசுட்டு; **அணைவு** - சேர்தல்; **பரிசு** - வகை - தன்மை;—(6) **வன்நாகம் நாண்; வரை வில்; அங்கி கணை; அரி பகழி** - **நாகம்** - வாசுகி என்னும் பாம்பு; **நாண்** - வில்லின் கயிறாக; **வரைவில்** - மேருமலையே வில்லாக; **அங்கிகணை** -அக்கினியே கணையின் கூர்-நுனி - முனையாக; **அரிபகழி** - விட்டுணு அம்பாக; **தன் ஆகம் உறவாங்கி** - தனது மார்பு பொருந்த வளைத்து; **வாங்குதல்** - வளைத்தல்; வில்வாங்கி என்பது மரபு. "குன்ற வார்சிலை நாண ராவெரி வாளி கூரரி காற்றின் மும்மதில், வென்றவாறெங்ஙனே" (பிள்.தேவா - சீகாமரம் - ஆமாத்தூர்-1) **எரித்த தன்மையன்** - தம் தன்மையா லெரித்ததன்றி, வில் முதலியவற்றானன்று என்பது குறிப்பு; **முன்னை** - முற்பட; ஏனையவெல்லாம் பின்னைவும் இதனையே முதன்மையாகவும்; **என்னை** - என்ன பயன் கருதி;—(7) **வன் சயமாய்** - வலிய வெற்றி பொருந்த; **அடியான்** - மார்க்கண்டேயர்; **சயம்** - வெற்றி; **உரம்** - மார்பு;

3428. பின்னெருநா டிருவாரூர் தனைப்பெருக நினைந்தருளி
உன்னவினி யார்கோயில் புகுந்திறைஞ்சி யொற்றிநகர்
தன்னையக லப்புக்கார் **தாஞ்செய்த சபதத்தான்**
முன்னடிக டோன்ருது கண்மறைய மூர்ச்சித்தார். 274

முனித்து உகந்த - முன்னர் முனிவும் (சினம்), பின்னர் உவப்பும் கொண்டு; **உவத்தல்** - கூற்றுவனை உயிர் தந்து ஆணையிட்டருளுதல்; **அடைவு** - சார்தல்; அடைதல்;— (8) **அந்நெறி** - அகரம் - உயர்ந்தோர் செல்லும் அந்த என்ற உலகறி சுட்டு; **செந்நெறியை** செம்மைநெறி; சிவநெறி; நெறியாலடையப்படும் பொருளுக்கு வந்தது; **என் அறிவான்** - வேறெதனை அறியும்படி;— (9) **கற்றுள வான்கனி** - "கற்றதனலாயபய"னகிய பொருள். "ஈசனெனும் கனி" (அரசு); **கருத்தார உற்று உளன்ஆம்** - உள்ள நிறைந்து ஒளித்திருந்த முதல்வனகிய; **இருவர்** - அயன் மால்; **எற்று உளனய்** - எதனை உடையேனகி;—(10) **ஏழ் இசையாய் இசைப்பயனய்** - இசையாயும் அதன் பயனகவும் உள்ளவர். "இன்னிசை வீணையி லிசைந்தோன் காண்க, வன்ன தொன்றவ்வயி னறிந்தோன் காண்க" (திருவா; திருவண்டப்பகுதி-35-36) "அறிவானுந் தானே அறிவிப்பான் ருனே, அறிவா யறிகின்ருன் ருனே" (அம்மை அற்.அந்.20) என்றதும், அதனை எடுத்தாண்டு மாதவச் சிவஞான முனிவர் போதம் 11-வது சூத்திர உரையில் விளக்குவதும் ஈண்டுவைத்துக் காண்க. **என்னுடைய தோழனுமாய்** - நம்பிகள் தம்பிரான் ரேழராகிய வரலாறு;"தோழமையாக உனக்கு நம்மைத் தந்தனம்" (273); **ஆய்** - ஆக்கச்சொல் இறைவர் தம்மை ஆக்கிக் கொண்டருளிய நிலை குறித்தது; **யான் செய்யும் துரிசுகளுக்குடனகி** - **துரிசுகள்** - குற்றங்கள்; **உடனகி** - உடனே நின்று; உடன்பட்டு என்றலுமாம்; எங்கும் நிறைந்த வராதலின் துரிசுகளிலும் உடனகியே நிற்பர் என்பது; "மணவேள்விக் கோலத்துடன் மண்மேல் விளையாடுக" என்றதும், தாம் வேண்டிக் கொண்டவாறே மகிழ்க் கீழே எழுந்தருளியதும் முதலிய அருளிப்பாடுகளைக் குறித்தது. **மாழை** -மாவடு; **பரவையைத் தந்தாண்டான்** - என்றது பரவையார் திருமண வரலாற்றினையும் மேல் **சங்கலியோ டெனைப்புணர்த்த** - என்றது சங்கிலியார் திருமணத்தின் வரலாற்றினையும் குறித்த சரித அகச்சான்றுகள்; **(11) நுங்கி** - விழுங்கி; விரைவாக உண்டு; **சழக்கனேன்** - குற்றமுள்ளவன்; **எங்குலக்க** - முன் 3-ம் பாட்டுப் பார்க்க:— **(12) பேர் ஊரும் மதகரி** - பெரிதாக வரும் மதத்தினையுடைய யானை; **திருவாரூர்ச் சிவனடியே திறம் விரும்பி** - நேரில் காணது மனத்தால் அந்தஅடிமைத் திறத்தினை மிக நினைந்து; இப்பதிகம் திருவாரூரைப் பற்றியதாயினும் அங்கு அருளப்படாது திருவொற்றியூரில் அதனை மிக நினைந்து பாடப்பட்டதென்பதற்குரிய அகச்சான்று; **குறிப்பு** - இப்பதிகம் மிக மன உருக்கம் புலப்படும் அரிய கருத்தும் இசையமைதியும் கொண்டது; முற்றும் மனனங்கொள்ளத் தக்கது.

3428. **(இ-ள்)** பின்னெருநாள்...நினைந்தருளி - பின்னர் ஒரு நாள் திருவாரூரினை மிகவும் பெருக நினைந்து கொண்டு; உன்ன...இறைஞ்சி - நினைக்க இனிமை தருபவராகிய ஆதிபுரி ஒற்றிகொண்டாரது திருக்கோயிலினுட் புகுந்து வணங்கி; ஒற்றிநகர்...புக்கார் - திருவொற்றியூரினை நீங்கப் புகுந்தனர்; (அப்போதே); தாஞ்செய்த...மூர்ச்சித்தார் - தாம் செய்த சபதத்தின் காரணத்தினலே முன்னே செல்ல அடிவைக்கும் நிலை தோன்ருது கண் ஒளி மறைய மூர்ச்சித்தனர்.

3429. செய்வதனை யறியாது திகைத்தருளி நெடிதுயிர்ப்பார்
"மைவிரவு கண்ணார்பாற் சூளுறவு மறுத்ததனால்
இவ்வினைவந் தெய்தியதா" மெனநினைந்"தெம் பெருமானை
எய்தியவித் துயர்நீங்கப் பாடுவே" னெனநினைந்து. 275

(வி-ரை) பின் - முன்கூறியபடி திருவாரூரிறைவரை நினைந்து மருவாற் றிருப்பதிகம் அருளிய பின்.

பெருக நினைந்தருளுதலாவது தடுக்கலாகாதபடி ஆசை தம்மை மேற்கொண்டு வலிந்தெழுமாறு நினைவு கூர்தல்.

உன்ன இனியார் - ஆதிபுரி இறைவர்; "எம்மானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக்கினிய வாறே" (தேவா - நம்பி - கருப்பறி); "நினைத்தொறும்...ஆனந்தத் தேன்சொரியும்" (திருவா). இனிப் பின்னரெல்லாம் இவரை நினைத்தலேயன்றி நேரே கண்டு வழிபடுமாறில்லை என்ற குறிப்பும் **உன்ன** என்றதனால் பெறப்படும்;மேல் "மீளா நிலைமை" என்பதும் காண்க.

புகுந்திறைஞ்சி - விடைபெற்றுச் செல்லும்வகையாற் கோயிலினுள்புக்கு வணங்கி.

அகலப்புக்கார் - திருவொற்றியூர் எல்லையினைக் கடந்து அடிபெயர்த்தார்.

தாஞ்செய்த சபதம் - மகிழ்க்கீழே தங்குமிடம் கொள்ளும்படி தாமே செய்து கொண்டவினை என்பது.

அடிகள் முன் தோன்றாது -அடிகள் பெயர்த்து முன்வைக்கும் நிலைதோன்றாதவாறு.

மூர்ச்சித்தார் - எதிர்பாராதவாறு சடுதியில் நேர்ந்த துன்பமாதலின் அவசமாயினர்; மூர்ச்சையுறுதல் சிறிது போது மயங்கும் நிலை. **274**

3429. **(இ-ள்)** செய்வதனை...நெடிதுயிர்ப்பார் - மேற் செய்யப்படுவதின்னது என்றதனை அறியாமல் திகைத்துப் பெருமூச்சு விடுபவராகிய நம்பிகள்; மைவிரவு...என நினைந்து - மைதீட்டிய கண்களையுடைய சங்கிலியாரிடத்துச் செய்த சத்தியத்தினை மீறிய காரணத்தினாலே இந்தத் தீவினைப் பயன் வந்து பொருந்தியதாகும் என்று நினைந்து; எம்பெருமானை...என நினைந்து - எம் பெருமானை என்பாற் பொருந்திய இத்துன்பம் நீங்கும்படி பாடுவேன் என்று எண்ணி,

(வி-ரை) செய்வதனை...நெடிதுயிர்ப்பார் - இவை மூர்ச்சை தெளிந்த பின் நம்பிகள் அடைந்த நிலைகள்;மேற்செய்வது தோன்றாமை - திகைத்தல் - நெடிதுயிர்த்தல் என்பவை ஒன்றன்பின் ஒன்றாக வருவன. **நெடிதுயிர்த்தல்** - பெருமூச்சு விடுதல்; **உயிர்ப்பார்** - உயிர்ப்பாராகிய நம்பிகள்; வினையாலணையும் பெயர்.

உயிர்ப்பார் - நினைந்து (*3429*) உரைப்பார் - பரவி - நினைவார் - (*3430*) போந்து - பாடி (*3431*) - வருவார் - அடைந்தார் (*3432*) என்று இந்நான்கு பாட்டுக்களையும் முடித்துக்கொள்க.

மைவிரவு...எனநினைந்து - சூளுறவு - சபதம்.

மறுத்தல் - மீறி நடத்தல்; **மறுத்ததனுல் இவ்வினைவந்தெய்தியதாம் என நினைந்து** - சபதத்தைக் கடந்ததனுல் இவ்வாறு கண் மறைந்தது என்று நினைந்து துணிந்து.

இனி, ஈண்டு, இவ்வாறு சபதத்துக்கு மாருக நடந்தபோது கண்மறையுமோ? ஆயின், இந்நாளில் "நான் சொல்வது சத்தியம்; முழுதும் சத்தியம்; சத்தியமன்றி வேறில்லை; கடவுளறியச் சத்தியம்" என்று சூளுரைத்துப் பொய்யே யன்றிச் சிறிதும் மெய்யின் கலப்புமில்லாது மனமாரப் பொய்ச்சான்று கூறுவோர் அதனுல் ஒரு துன்பமுமின்றிச் சுகமாய்மிக்கு நிகழும் காலத்தில் இதனை யார் நம்புவார்? என்று கூறி எக்கலிப்போர் பலருளர். அவரெல்லாம் காலத்தினியலும், அவ்வவர் நிலையும், காலமும் பிறவும் சார்ந்து செல்லும் கன்மநியதியும் அறிந்திலர். உண்மையின் விளக்கம் யுகந்தோறும் மாறுபடும் என்பது ஞான நூல்களின் துணிபு மட்டுமேயன்றி அனுபவத்தும் கண்டது. இதுபற்றியே தருமதேவதை முதல் யுகத்தில் நான்கு கால்களாலும், இரண்டாவதில் மூன்று கால்களாலும்,மூன்ருவது நான்காவது யுகங்களில் முறையே இரண்டு கால்களாலும், ஒரு காலாலும் நடக்கும் என்பர். நான்காவதாகிய கலியுகத்தில் அதன் தன்மைக் கேற்றவாறு சத்தியத்தின் வெளிப்பாடு மெத்தென நிகழும்; ஆனுலும் எவ்வாற்ருனும் நிகழ்ந்தேவிடும்; பிறழாது. உடனே நிகழாமை கண்டு உண்மைக் கிடமில்லை என முடித்து வாய் வேண்டின சொல்லித் திரிதல் அடாது;"செம்பொன் மேனிவே ருகி **நாலாம், பொய்யுகத் தவர்க்குத் தக்க** பொருந்துருவாகி மன்னும்" (திருவிளை.புரா - இரசவா - 30);"உவாவள ரனைய கானத் **துறுகலி யுகத்தை யஞ்சித், துவாபர யுகவந் தத்திற்** ஹெக்கனர் தவங்க ளாற்றும், அவாவறு வசிட்டர் வச்ச ரகத்தியர் வாம தேவர், தவாதநல் லொழுக்கஞ் சான்ற சவுனக ராதியானேர்"(8); "பரவிய வாண்டு நூற்றுப் பத்துற முடிவு செய்யும், பிரம சத்திரயா கத்தைப் பேணினர் வளர்க்க லுற்ருர்" (9) என்ற பேரூர்ப் புராணம் நைமிசப்படல வரலாறும், பிறவும் கருதுக. காலத்தினுல் உண்மையின்நிலை மாறுமோ? என்னின், மாறுதுதான்; ஆனுல் அதன் வெளிப்பாட்டு நிலைமாறும் என்க; ஆண்டுதோறும் வரும் பெரும்பொழுது சிறுபொழுது என்ற காலக் கூறுபாட்டுக்கேற்ப உலகுயிர்களின் முயற்சி ஒழுக்கம் முதலியவை அவை தம்மாலன்றியே மாறுபடக் காண்டல் கண்கூடு; காலம் என்றதொரு தத்துவம் உண்டு; அது வித்தியாதத்துவங்க ளேழனுள் ஒன்று;"காரியங்கள், காலமே தரவே காண்டுங்; காரணன் விதியி னுக்குக், காலமுங் கடவு ளேவ லாற்றுணைக் கார ணங்காண்" (1-10) என்ற சிவஞான சித்தியாரும் காண்க; சபதம் பொய்த்து மாறுபட்டவர்களின் சரிதங்களையும் முடிவுகளையும் நன்கு தெரிந்து சென்ருல் இவ்வுண்மை விளங்கும்*

சூளுறவு மறுத்ததனுல் இவ்வினை வந்து எய்தியதாம் - இது காட்சி, கருதல், உரை என்ற மூன்றளவைகளானும் தொகுத்துக் கண்ட முடிபு.

---

* இதுபற்றி எனது அனுபவத்தில் கண்ட பலவற்றுள் சில உதாரணங்கள் இங்குச் சொல்லத் துணிகின்றேன். ஒன்று: பெருஞ்செல்வர் ஒருவர்; கிரிமினல் கோர்டில் சாட்சிப் பெட்டி ஏறிப் பொய்ச்சூள் உரைத்தார்;அது முடிந்து பெட்டியை விட்டுக் கீழிறங்கும் போதே கண் மறைந்துவிடப் பிறருதவி கொண்டு கையாலும் காலாலும் தடவி வழியறிந்து சென்றனர். கண் மறைந்தது மறைந்ததுதான். அவர் இறக்கும் வரை அவ்வாறே. இனி, மற்ஹென்று: சிவில் கோர்டில்

மைவிரவு கண்ணார் - சங்கிலியார்.

எய்திய வித்துயர் நீங்க எம்பெருமானைப் பாடுவேன் - எங்க; **எய்திய** - வினைக் கீடாக வந்து பொருந்திய; எனது செயலின் விளைவாக வந்த.

இத்துயர் நீங்க எம்பெருமானைப் பாடுவேன் - தகாதவற்றைச் செய்து அதன் பயனைத் துன்பம் வந்தபோது இறைவரைப் பாடினால் அது நீங்கி விடுமோ? இவ்வாறாகிய கொள்கைகள் அல்லவை செய்தொழுகுவார் மறைந்து கொள்ளவும் தீயவற்றைத் துணிந்து செய்யவும் இடந்தருகின்றன என்று அறைகூவுவோர் பலர் இந்நாளிற் காணப்படுகின்றனர்; தீச்செயல்களில் உயிர்களைப் புகுத்துவது அறியாமை மயமாகிய இருள் மலத்தின் செயலாம்; அது தீச்செயல் என்று தெளிந்து தீர்வுதேடுதல் இறைவன் அறிவிக்க அறியப்படும் அறிவின் செயல்; ஆதலின் அவ்வறிவின்உதவி கொண்டே தீர்வுதேடுதல் அறிவு பெற்ற நியமமாகும். விதிகடந்து அல்லவை செய்து பிணிகளைத் தேடிக் கொண்டானொருவன் மருத்துவனை நாடி அவன் றுணை கொண்டு நோயினின்றும் நீங்க முயலுதல் போல, ஈண்டு இறைவரைப் பாடுதல் தமது தவறிய செயலால் விளைந்த துன்பம் நீங்குதற்கு மருந்தாகுமென்பது உண்மை நூற்றுணிபு; நோயினையும் அது வந்த வரலாற்றினையும் உண்மைபெற மருத்துவனிடம் முறையிட்டபோது மருத்துவன் அதன்மூலம் வந்தவாற்றிற் கேற்றபடி மருந்தும்பாகமும் வகுத்துத் தீர்ப்பது போலக், கன்ம வைத்தியநாதராகிய இறைவரும் கன்ம விளைவாகிய நோயினை அனுபவித்துக் கழிப்பிக்க ஏற்ற காலம் முதலிய பாகங்களை வகுத்துத் தீர்ப்பர். அவரை எண்ணுதலும் துதித்தலும் அத்தீர்வுக்கு அவர் விதித்த பக்குவங்களும் மருந்துகளுமாகும். கன்மநோய் அனுபவித்தன்றிக் கழியா தென்பது உண்மை; மக்கள் தாங்கள் செய்த குற்றத்தை உணர்ந்து கழிவிரக்கங்கொண்டு உண்மையாகக் கசிந்து உருகி உருகி அவனை நோக்கி முறையிடுவரேல் அவன் இரங்கி அவர் தந் துயர் தீர்த்தல் ஒருதலை என்று ஈண்டு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு. பாவமன்னிப்பு என்பது சைவசமயக் கொள்கைகளுக்கு உடன்பாடன்று; அது கிறித்துவம் முதலிய புறச்சமயிகள் கொள்கையாம்; அஃதே மக்களைத் தீய செயல்களுட் புகுத்தும் தூண்டுகோலாய் நிற்கும்; ஆனால் சைவசமயங் கண்டவுண்மையாவது இறைவரை எண்ணித்துதித்தலால் அஃது அந்நோய்க்கு மருந்தாக நின்றுஅதனுள் இறைவர் விளங்கிக் **கன்மபரிபாகம்** நிகழ அருளிக் **கன்மானுபவத்தை உடலூழாய்க்** கழியவோ, அன்றி **விரைந்து அனுபவித்துக் கழிய**வோ, அன்றி வேறு அவ்வவர் **துன்பம் அறியாமற் கழிய**வோ, அன்றி **வேறெவ்வாறே ஊட்டுவித்து** அருள் புரிவன் என்பதாம். "ஆட்பா லவர்க் கருளும் வண்ணமுமாதி மாண்பும், கேட்பான் புகி லளவில்லை கிளக்க வேண்டா! கோட்பா லனவும் வினையுங் குறுகாமை யெந்தை, தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்க தக்கார்" என்ற திருப்பாசுரமும், "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்"என்றற் றொடக்கத்த திருவாக்குக்களும் ஈண்டுக் கருதத் தக்கன. "தொழுவார் வினை மாயுமே", "வினைஓடுமே" என வருவன எல்லாம் இவ்வா

பெருஞ்செல்வர் ஒருவர்- சாட்சிப் பெட்டியேறிப் பொய்ச்சூள் உரைத்தனர்; அது வாறாக நோய் கிடந்து ஒரு மாதத்தில் இறந்துபட்டனர். இப்படி அனேக முண்டு. ஆதலின் உலகீர்! சபதம் பொய்த்த விளைவு உடன் காணாதது கொண்டு இல்லை என்று முடித்துத் திரிந்து கேடு சூழ்ந்து கொள்ளாது முன்னோர் கண்ட உண்மை நெறிநின்று ஒழுகி உய்யுங்கள். -சிவக்கவிமணி

வேறு

3430. "**அழுக்கு மெய்கொ**" **டென் றெடுத்த**சொற் பதிக
மாதி நீள்புரி யண்ணலை யோதி
வழுத்து நெஞ்சொடு தாழ்ந்துநின் றுரைப்பார்
மாதொர் பாகனுர் மலர்ப்பத முன்னி
"**இழுக்கு நீக்கிட வேண்டு**"மென் றிரந்தே
யெய்து வெந்துயர்க் **கையற வினுக்கும்**
பழிக்கும் வெள்கிநல் லிசைகொடு பரவிப்
பணிந்து சாலவும் பலபல நினைவார், 276

றறியத் தக்கன. ஈண்டும், மேல்வரும் வரலாறுகளிலும் பலபடியும் மனம் போனவாறு பிதற்றும் "அறியா வாய்மை எண்டிசை மாக்கள்" இவற்றை யெல்லாம் உணர்ந்து உய்வார்களாயின் நலமாகும். *275*

3430. **(இ-ள்)** அழுக்கு மெய் கொடு என்று...ஓதி - "அழுக்கு மெய்கொடு" என்று தொடங்கும் சொற்பதிகத்தினை நெடிய ஆதிபுரி இறைவரைத் துதித்து; வழுத்து... உரைப்பார் - போற்றுகின்ற மனத்துடனே நிலமுறவீழ்ந்து வணங்கி முன்பு நின்று சொல்வாராகி; மாதொர்பாகனுர்...உன்னி - உமையாரின் மலர்போன்ற பாதங்களை நினைந்து நினைந்து; இழுக்கு...இரந்தே - குற்றத்தினை நீக்கிட வேண்டும் என்று வேண்டிக்கொண்டு; எய்து...நினைவார் - அங்கு வந்து பொருந்திய கொடிய துன்பமுடைய கையறுநிலைக்கும் நேர்ந்த பழிக்கும் வெட்கமடைந்து நல்ல இசையினுல் தோத்திரித்துப் பணிந்து மிகவும் பலபலவாறு நினைவாராகி,

(வி-ரை) "**அழுக்கு மெய்கொடு" என்று** - இது பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

நீள் ஆதிபுரி அண்ணல் - என்க; திருவொற்றியூரிறைவர். இப்பதிகம் திருவொற்றியூ ரெல்லையினைக் கடந்து நின்ற இடத்திற் பாடிய குறிப்பு.

"**இழுக்கு நீங்கிட வேண்டும்" என்று** - இது பதிகக் கருத்தாகிய குறிப்பு என்று ஆசிரியர் காட்டியருளியவாறு.

எய்து வெந்துயர்க் கையறவினுக்கும் பழிக்கும் வெள்கி - கையறவு - பற்றுக் கோடிழந்த நிலை; கண்ணிழந்தமையால் தம்மைப் பாதுகாக்கவும் நெறி காணவும் தம்மால் இயலாது பிறருதவியை நாட நின்ற நிலை; **பழி** - சபதம் பிழைத்தமையாற் கண்ணிழந்தார் என்றும், மங்கையார்பாற் சூளுறவு பிழைத்த வன்கண்ணர் என்றும், பிறவாறும் உலகர் கூறும் பழிச்சொல்.

சாலவும் பலபல நினைவார் - பதிகத்துள் வரும் பற்பல வகைக் கருத்துக்களும் பார்க்க. 276

திருவொற்றியூர்

திருச்சிற்றம்பலம் பண் - தக்கேசி, 7-ம் திருமுறை

அழுக்கு மெய்கொடுன் றிருவடி யடைந்தே னதுவு நான்படப் பாலதொன் றானால்,
பிழுக்கை வாரியும் பால்கொள்வ ரடிகேள் பிழைப்ப னாகிலுந் திருவடிப் **பிழையேன்**
வழுக்கி வீழினுந் **திருப்பெய ரல்லான் மற்று நானறி யேன்மறு மாற்றம்**
ஒழுக்க வென்கணுக் கொருமருந் துரையா யொற்றி யூரெனு மூருறை வானே. (1)

கட்ட னேன்பிறந் தேனுனக் காளாய்க், காதற் சங்கிலி காரண மாக,
எட்டி னுற்றிக ழுந்திரு மூர்த்தி யென்செய்வானடி யேனெடுத் துரைக்கேன்,
பெட்ட னாகிலுந் திருவடிப் பிழையேன் பிழைப்ப னாகிலுந் திருவடிக் கடிமை,
யொட்டி னேனென்னை நீசெய்வ தெல்லா மொற்றி யூரெனு மூருறைவானே (2)

கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே கட்டி யேபலர்க் குங்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே அத்தா **என்னிடர் ஆர்க்கெடுத் துரைக்கேன்**
சங்கும் இப்பியுஞ் சலஞ்சல முரல வயிரம் முத்தொடு பொன்மணி வரன்றி
ஓங்கு மாகடல் ஓதம்வந் துலவும் ஒற்றி யூரெனும் ஊருறை வானே" (3)

ஈன்று கொண்டதோர் சுற்றமொன் றன்றால் யாவ ராகிலென் அன்புடை யார்கள்
தோன்ற நின்றருள் செய்தளித் திட்டாற் சொல்லு வாரையல் லாதன சொல்லாய்
மூன்று கண்ணுடை யாய்அடி யேன்கண் கொள்வ தேகணக் குவ்வழக் காகில்
ஊன்று கோலெனக் காவதொன் றருளாய் ஒற்றியூரெனும் ஊருறை வானே" (4)

வழித்த லைப்படு வான்முயல் கின்றே னுன்னைப் போலென்னைப்பாவிக்கமாட்டேன்
சுழித்த லைப்பட்ட நீரது போலச் சுழல்கின் றேன்சுழல் கின்றதென் னுள்ளங்
கழித்த லைப்பட்ட நாயது போல வொருவன் கோல்பற்றிக் கறகற விழுக்கை
ஒழித்து நீயரு ளாயின செய்யா யொற்றி யூரெனு மூருறை வானே. (5)

மானை நோக்கியர் கண்வலைப் பட்டு வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சித்
தேனை யாடிய கொன்றையி **னாயுன் சீல முங்குண முஞ்சிந்தி யாதே**
நானு மித்தனை வேண்டுவ தடியே **னுயிரொ டுநர கத்தழுந் தாமை**
ஊன முள்ளன தீர்த்தருள் செய்யா யொற்றி யூரெனு மூருறை வானே. (6)

"மற்றுத் தேவரை நினைந்துனை மறவே னெஞ்சி னாரொடு வாழவு மாட்டேன்
பெற்றி ருந்து பெறாதொழி கின்ற பேதை யேன்பிழைத் திட்டதை யறியேன்
முற்று நீயெனை முனிந்திட வடியேன் கடவதென்னுனை நான்மறவேனேல்
உற்ற நோயுறு பிணிதவிர்த் தருளா யொற்றி யூரெனு மூருறை வானே" (7)

கூடி னாய்மலை மங்கையை நினையாய் கங்கை யாயிர முகமுடை யாளைச்
சூடினாய் என்று சொல்லிய புக்கால் தொழும்பனே னுக்குஞ் சொல்லலு மாமே
வாடி நீயிருந் தென்செய்தி மனமே வருந்தி யானுற்ற வல்வினைக் கஞ்சி
ஊடி னால்இனி யாவதொன் றுண்டே ஒற்றி யூரெனும் ஊருறை வானே. (8)

மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய் மைந்த னேமணி யேமண வாளா
அகத்திற் பெண்டுக ணானொன்று சொன்னா **லமையேற் போகுரு** டாவெனத் தரியேன்
முகத்திற் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்கேன்? முக்க ணாமுறை யோமறை யோதீ
உகைக்குந் தண்கட லோதம்வந் துலவு மொற்றி யூரெனு மூருறை வானே. (9)

ஓலம் வந்துல வுங்கரை தன்மே லொற்றி யூருறை செல்வனை நாளும்
ஞாலந் தான்பர வப்படு கின்ற நான்ம றையங்க மோதிய நாவன்
சீலந் தான்பெரி தும்மிக வல்ல சிறுவன் வன்றொண்ட னூர னுரைத்த
பாடல் பத்திவை வல்லவர் தாம்போய்ப் பரகதி திண்ண நண்ணுவர் தாமே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிக் குறிப்பு:—"இழுக்கு நீக்கிட வேண்டு மென்றிரந்தே யெய்து வெந்துயர் கையறவினுக்கும் பழிக்கும் வெள்கிச் சாலவும் பலபல நினைந்து பாடியது என்று ஆசிரியர் (3430) காட்டியருளினர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:— அழுக்கு மெய்கொடு உன்றிருவடி அடைந்தேன் - அழுக்கு - பொய் முதலிய தூய்மையில் குப்பை செறிந்த நிலை; உட்கரணங்களின் தூய்மையற்ற நிலையும், புறமாசுகளேயன்றி அவையும் கழுவப்படும் தன்மையிற் சிவனை எண்ணுதல் வேண்டும் நிலையும் குறித்தது; "புறந்தூய்மை நீரானமையு **மகந்தூய்மை,** வாய்மையாற் காணப் படும்" (குறள்); **அதுவும்** - அவ்வாறடைந்த அதன் பயனுகிய விளைவும்; "**பிழுக்கை...வாரியும் பால்கொள்வர்**" - இஃதோர் பழமொழி; ஆடுகளிற் பால் கறக்கும்போது அவை அதனிற் சிலபோது பிழுக்கை வீழ்த்திடும்; அதனை வாரி எடுத்து விட்டுப் பாலினைக் கைக்கொள்ளும் வழக்குக் குறித்தது; அதுபோல் என் அழுக்குக்களை நீக்கித் தூய்மைப்படுத்தி என் அன்புடைய பணிகளை மட்டும் ஏன்று கொள்ள வேண்டுமென்பது; **பிழைப்பன்... பிழையேன்** - நான் உலகநிலைத் திறத்திற் பிழை செய்யினும் உனது திருவடிக் கன்பின் றிறத்தில் ஒரு பிழையும் செய்யேன்; "ஒருவரை மதியா துருமைகள் செய்து மூடியு முறைப்பனுய்த் திரிவேன்" மிகைபல செய்தேன்" (திரு முல்லைவாயில்) என்ற செயல்கள் உலக நிலைபற்றிய பிழைகளாம்;இவை சிவா பராதங்களாகா; இவை ஏனை உயிர்களுக்கும் தமக்குமுள்ள உலக நிலைத் தொடர்பு பற்றி ஒழிவன. சிவாபராதங்கள் வேறு; அவை கழுவாயில்லாதவை; இவற்றையே ஈண்டுத் "திருவடிப்பிழையேன்" என்றருளினர் நம்பிகள். "வேறு செய்வினை திருவடிப் பிழைத்த லொழிய விங்குளார் வேண்டின செயினும்" (1146) என்று இதனை முன்னர் வேறு பிரித்துக் காட்டியருளியமையும் காண்க. ஆண்டுரைத்தவையும் பார்க்க. (II பக்.920). புண்ணியங்களாகிய நல்வினைகளும் இவ்வாறே. சரியையாதி பதிபுண்ணியங்கள் வேறு; கா வளர்த்தல், குளம் தொடுதல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், மருத்துவச்சாலை வைத்தல், துணி அன்னம் முதலியவை கொடுத்தல் முதலாகிய பசு புண்ணியங்கள் வேருவன. பதிபுண்ணிங்கள் படிப்படியாகச் சிவனை நினைந்தவாறே சிவலோகம் பெறுவித்தல் முதலிய பயன்களைத் தந்து, முடிவில் திருவடி சார்தலாகிய வீடுபேறு பெறுவிக்கும்; பசுபுண்ணியங்களோ, அவ்வாறன்றிச் சுவர்க்காதி போகங்களைத் தந்து சிவனினை வின்றியே சென்று மீளப் பிறவிக் கேதுவாவன. இவையிரண்டன் வேற்றுமை அறியாத மாக்கள் பலர் இந்நாளில் இவையிரண்டும் ஒன்றென மயங்கியும், பதி புண்ணியங்களைத் தத்தம் மனம்போனவாறே பசுபுண்ணியங்களோ டொப்ப மதித்து அந்த அளவை கொண்டளந்து இழித்தும் கொடும் பாவத்துக்காளாகி மீளா நரகடைவதற்கே விரைந்து திரிகின்றனர்! அந்தோ! இவர்களறியாமை இரங்கற்பாலது!; **வழுக்கி...மறுமாற்றம்** - இன்பத் துன்பங்களில் எதுவரினும் எஞ்ஞான்றும் சிவனு மத்தை மறவாது இடைவிடாது சொல்லுதல் ஒரு நல்ல வழக்கு. அது செய்து பழகுதல் மிக்க நன்மை தரும். "நான் மறக்கினும் சொல்லுநா நமச்சி வாயவே" என்பது நம்பிகள் திருவாக்கு (திருப்பாண்டிக் கொடுமுடி); இஃது எளிதில் வருவதன்று. தவப்பயனுக நீண்டநாட் பழக்கத்தால் அமைதல் வேண்டும். **ஒழுக்குதல்** - கண்ணுக்கு மருந்து இடுதல்; கண்நோய் மருந்துகள் பெரும்பான்மையும் நீர்த்தன்மையாய் (துளிகளாய்) ஒழுக்க விடுதல் குறிப்பு; **உரையாய்** - சொல்லி யருளுவீர்;—**(2) கட்டனேன்**

- துன்பமுடையேன்; **பெட்டன்** - பொய்யன்; **பெட்டனுகிலும் திருவடிப் பிழையேன்** - முன்பாட்டில் "பிழைப்பினுகிலும்" என்ற கருத்து; **ஒட்டினேன்** - ஒட்டு - பிரிப்பின்றி ஒன்றுபடுதல்; அத்துவிதமாதல்; "உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி" "ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்" (தேவா); **எட்டினுல் - திகழும் திருமூர்த்தி** - அட்டமூர்த்தம்;—(3) **களைகண்** - ஆதரவு பற்றுக்கோடு; **அங்கை...அமுதே** - அங்கையின் வைத்த நெல்லிக்கனி உள்ளீட்டின் வரந்தை களை வெளிப்பட அறிவித்து நிற்றல் போல, இறைவர் தமது அருளினைக் காண்பார்க்குப் புலப்படுத்தி நிற்கின்றார் என்பது; "அங்கையி னெல்லிக் கனியெனக் காயினன்" (திருவா); **அமுது** - இறைவர்; **ஓங்கும்** - ஓங்கும் என்பது ஒங்கும் என எதுகை நோக்கிக் குறுகி நின்றது; செய்யுள் விகாரம்; "ஓங்கு மாகட லோதநீராடிலென்" (அரசு);—(4) **ஈன்று...அன்றுல்**-உலக நிலைத் தொடர்பாகிய சுற்றங்கள் இப்பிறவியில் தேடிக் கொள்ளப்பட்டவை யல்ல; **யாவராகிலென்...சொல் வாய்** - யாவரேயாயினும் அன்புடையவர்கள் தம்மை உம்வசமாக ஒப்புவித்திட்டால் அவர்கள் பக்கல் அல்லாத வார்த்தைகளைச் சொல்லமாட்டீர்; இஃது இச்சரித நிகழ்ச்சிக் குறிப்புப் போலும்; **மூன்று... ஆகில்** - தேவரீர் மூன்று கண்ணுடையீராயிருந்தும் அடியேனுக்கு உள்ள இரண்டு கண்களையும் ஒளியிழக்கச் செய்வதே அருளாகில்; **ஊன்று...அருளாய்** - கண்ணிழப்பித்த நீர் அதற்கு ஈடாக வேறு பற்றுக்கோடாவது அருளுவீர்; **ஊன்றுகோல்** - இங்குப் பற்றுக்கோடு என்ற பொருளில் வந்தது; ஊன்றிச் செல்வதற்கு ஒரு சிறு கோலினையும் தாமாகத் தேடிக்கொள்ள இயலாது அதனையும் இறைவர்பாற் பெற வேண்டினர் நம்பிகள் என்பதன்று. "கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக் கொடுக்கும்" என்ற பழமொழிக்கேற்ப வேண்டியவாறு. திருவுள்ளக் குறிப்பின் வழி வேறு பற்றுக்கோடு தாரும் என்பதாம்; நம்பிகளது வேண்டுகை மெய்த் திருவாக்காதலானும் அஃது இறைவரது திருவருள் வழியே நிகழ்வதாதலானும் இறைவர் ஊன்று கோலொன்றனையே அடுத்து அருளுதல் காண்க. (3433); —(5) **வழித்தலை... முயல்கின்றேன்** சூளுரைத்தவாறு இனி நான் இங்குத் தங்காது மேற்செல்ல முயல்கின்றேன்; **உன்னைப்போல்** - நீர் இங்கு என்னைப் பாவித்தருளி நடைபெறுத்தியது போல்; **சுழித்தலைப்பட்ட நீரது போல** - பழமொழி; நீர்ச் சுழியில் உள்ள நீரானது நிலைபேறின்றிச் சுழலுமாபோல; வினைபற்றி வந்த உவமம்; **சுழல்கின்றேன்...உள்ளம்** -நான் மயங்கிச் சுழல என்மனமும் தடுமாறிச் சுழல்கின்றது; **கழித்தலைப்பட்ட நாயது போல** - நாயினை ஒரு கோலினிற் பிணித்து இழுத்தல் போல; இஃதும் வினைபற்றி யெழுந்த உவமம்; கையறு நிலைக்கேற்ப இப்பதிகத்தினுள் வரும் உவமை நயங்கள் காண்க; ஆசிரியர் நம்பிகளைத் "தமிழ்நாதன்" "தமிழ் நாவலர் பெருமான்" என்று பாராட்டும் கருத்துக்களைக் ஈண்டுக் கருதுக; (6) **மானை நோக்கியர்...வேண்டுவது** - சரித நகழ்ச்சி குறித்த அகச்சான்று; முன்னைக் கயிலை நிகழ்ச்சி வரலாற்றுக் குறிப்புமாம்; **மானை** - மான்கண்ணினை ஒத்த; **உன் சீலமும் குணமும் சிந்தியாதே** - யாவராயினும் வினைப் பயனை ஊட்டுவித்தே கழிப்பிக்கும் அருள்; **உயிரொடு நரகத் தழுந்தாமை** - கண்ணொளியிழந்து வாழ்தல் நரக வாழ்வேயாம் என்றது. **ஊனம்** - குற்றம்;—(7) **நெஞ்சினுரொடு வாழவும்** - அவ்வாறு நான் மறவாமை யேயன்றி மறந்த மனத்தவ ரோடு கூடி வாழவும் என்று உம்மை இறந்தது தழுவியது; **பெற்றிருந்து...அறியேன்** - முன்னமே உனது அருளைப் பெற்றிருந்தும் இங்குப் பெரு தொழிந்த பேதை; ஆனுல் அவ்வாறு பெருதொழிவதற்கும் கண்ணிழத்தற்கும் உரியதாக

நான் செய்தபெரும் பிழை யின்னதென்பதனை அறியேன்; "சூளுறவு மறுத்ததனல் இவ்வினை வந்தெய்தியதா மென நினைந்து" (3429) என்றதனுடன் மாறுபடுகின்ற தெனின்; மாறுபடாது; திருவடிப்பிழையேன் என்று பதித்தினுள் அருளியவாற்ருல் இஃது இத்தகைய துன்பம் வருவித்தற்குரிய தன்றென்பது நம்பிகளது துணிபாகிய திருவுள்ளமாதல் காண்க; அதுபற்றியன்றே அதனை நீக்கும்படி விண்ணப்பித்தவாறு மென்பதாம்; மேல் **முற்று நீயெனை முனிந்திட வடியேன் கடவதென்?** என்ற கருத்தும் காண்க; **மறவேனேல்...அருளாய்** - என்றது தீர்வுபெறும் வகை;—(8) **கூடினுய்...புக்கால்** - இதனை முன் (3386) விரித்தருளியது காண்க; **சொல்லலும்** - அதுபோல அடியேனுக்கும் சொல்லுதலும் என்க;—(9) **மகத்தில்...சனி** - மகநட்சத்திரத்தில் சனி சஞ்சரிக்கும் காலம் மிகத் துன்பம் தரும் கால மென்பது சோதிட நூற்றுணிபு. **எனக்குச் சனி ஆனுய்** என்க. **சனி** - சனிபோல; வினைபற்றியெழுந்த உவமம்; அவ்வாறு துன்பம் சேர்தலும் வினை பற்றியேயாம். **அகத்தில்...வாழ்வேன்** - நம்பிகள் தமது அற்றை நிலையினை உலக இல்வாழ்க்கை நிலையினில் வைத்து மேல்வரும் அனுபவமாக எண்ணியது;—(10) **ஓலம்** - ஓலமிடும் ஒலியுடைய கடல் நீர்; **சீலம்...வல்ல** - நம்பிகளது தூய சிவ நிலை ஒழுக்கம் குறித்தது.

குறிப்பு:—திருவொற்றியூரின் எல்லை கடந்தவுடன் கண்ணிழந்த நம்பிகள் அங்கு நின்றவாறே வழித்தலைப்பட்டு மேற் சென்றனர். திருமுல்லைவாயிலை அடைந்து "அடியேன் படுதுயர் களையாய்" என வேண்டிக்கொண்டு, அந்நிலையே திருவெண்பாக்கம் சென்று முறையிட்டபோது இறைவர் அவருக்கு ஊன்று கோலருளி, "நாம்இங்கு உளோம் நீர்போகீர்" என்றருளினர். அதன்மேல் நம்பிகள், திருவாலங்காடும் திருஊறலும் வணங்கித் திருக்கச்சி யேகம்பம் சென்று பணிந்தனர்; மறைந்த **இடக்கண்** பெற்றனர்;அங்கு நின்றும் போந்து திரு ஆமாத்தூர், திருநெல் வாயிலரத்துறை, திருவாவடுதுறை என்ற இவற்றைப் பணிந்து திருத்துருத்தியில் வணங்கித் தம் மேனியில் உற்ற புதிய பிணியினின்றும் நீங்கினர்; பின்னர்த் திருவாரூர் சேர்ந்து வணங்கி வலக்கண்ணையும் பெற்றருளினர். இப்போதருளிய இத்தலப்பதிகங்கள் யாவும் மனத்தை மிக உருக்கும் தன்மை வாய்ந்தன. சோகச்சுவையுட் கொண்ட தமிழ் வளமுடையனவாய்ச் சிறந்து விளங்குவன. சொல்லும் பொருளும் யாப்பும் சிறந்தன. சரிதத்திற்குச் சிறந்த அகச்சான்ருகவு முள்ளன. பெரும்பான்மை இவை தக்கேசிப் பண்ணில் அமைந்த நிலையும் காண்க. **அரசுகள் பதிகங்களுட் டிருத்தாண்டகமும்; பிள்ளையார் பதிகங்களுள் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் வருவனவும், நம்பிகள் பதிகங்களுள் தக்கேசிப் பதிகங்களும் எத்தகையோரையும் மனமுருக்கும் தன்மையிற் பெரிதும் சிறந்தன என்பதும் கருதுக.** இவற்றை அன்பர்கள் ஊன்றிப் பயின்று பயன் பெறுவார்களாக. நம்பிகளது திருவுள்ளமே தமது திருவுள்ளமாக நின்று ஆசிரியர் பெருமான் இப்பகுதியினை அதன் நிலைக்கேற்ற விரைவும் தகுதியும்பட 38 பாட்டுக்களிற் கூறிச் சென்றருளும் (274—311) கவியமைதியும் கண்டுகொள்க.

3431. **(இ-ள்)** அங்கு...அதுவாக - அங்கு அப்போது இறைவர் செய்யும் அருள் அஃதேயாகி அமைந்திட; அங்கை கூப்பி - அழகிய கைகளைச் சிரமேற் கூப்பி வணங்கி; ஆரூர் தொழ...போந்து - திருவாரூரினைச் சென்று தொழுவதற்கு நினைந்தவாறே பொங்கி எழுகின்ற பெருவிருப்பத்தினுலே திருவொற்றியூரினில் மீளாத நிலைமையினை மேற்கொண்டு

3431. அங்கு நாதர்செய் யருளது வாக
வங்கை கூப்பியா ரூர்தொழ நினைந்தே
பொங்கு காதன்மீ ளாநிலை மையினாற்
போது வார்வழி காட்டமுன் போந்து
திங்கள் வேணியார் **திருமுல்லை வாயில்**
சென்றி றைஞ்சிநீ டியதிருப் பதிகஞ்
"**சங்கிலிக் காக வென்கணை மறைத்தீ**"
ரென்று சாற்றிய தன்மையிற் பாடி, 277

உடன் செல்வோர்கள் தமக்கு வழிகாட்டியிட முன்னே சென்று; திங்கள் வேணியார்...இறைஞ்சி - சந்திரனைச் சூடிய சடையினை உடைய இறைவரது திருமுல்லைவாயிலிற் சென்று வணங்கி; நீடிய...பாடி - பெருமை நீடிய திருப்பதிகத்தினைச் "சங்கிலியின் பொருட்டு என் கண்களை மறைத்தீர் என்று ஏத்திய தன்மை விளங்கும்படி பாடியருளி,

(வி-ரை) அங்கு...அருள் அதுவாக - நம்பிகள் விண்ணப்பித்தும் இறைவர் வாளா இருந்தனர்; **அது** - வாளா இருந்தமை;அதனையே **அருள்** என்றார். இறைவர் செய்வன யாவும் அவ்வந் நிலையில்காணும் அருளேயாவன என்பது; "எக்கிர மத்தி னாலு மிறைசெய லருளே யென்றும்" (சித்தி-2-15).

காதல் மீளா நிலைமையினால் - ஆரூர் தொழும் காதல் காரணமாகத் திருவொற்றியூரின் மீண்டணைய எண்ணாது, கண்ணிழந்தமையும் பொருட்படுத்தாது மேலே தொடர்ந்து செல்லும் நிலையினை மேற்கொண்டு; **மீளா நிலை** - அன்று அந்நிலை யிற்றிரும்பாமை யேயன்றி இனி, மேலும் மீண்டு வாராமையும் குறிப்பு; சரிதம் காண்க.

போதுவார் வழிகாட்ட - உடன் போதுவார்களாகிய பரிசனங்கள் கைப்பற்றி வழிகாட்டிச் செல்ல; இதனை "ஒருவன் கோல்பற்றிக் கறகற இழுக்கை" (பதிகம்) என்றிழிவு தோன்ற வருளினர் நம்பிகள்.

நீடிய திருப்பதிகம் - நீடிய - நம்பிகளது சரித நிகழ்ச்சியினைப் பற்றி உள்ள நிலையினையும் அன்பின் உறைப்பினையும் உள்ளவாறு பளிங்கு போலப் புலப்படுக்கும் பெருமையினால் நீடிய.

"**சங்கிலிக்காக என்கணை மறைத்தீர்" என்று சாற்றிய தன்மை** - பதிகக் கருத்தும் குறிப்புமாம்; (பதிகம் (2)) பதிகத்தின் மகுடமாகிய பிரார்த்தனையை மேற்பாட்டிற் கூறுவார்; **தன்மை** - குறிப்பு. **277**

3432. **(இ-ள்)** தொண்டைமானுக்கு... பரவி - தொண்டைமானுக்கு முன்னாளில் அருள்கொடுத்தருளிய பழமையாகிய வள்ளன்மையும் புகழுமுடைய திருமுல்லைவாயி லிறைவரைக் "கொண்ட எனது வெவ்விய துயரினைக் களைந்திட வேண்டும்" என்று துதித்து மேற்சென்று; குறித்த... வருவார் - தாம் குறிக்கொண்ட பெருவிருப்பின் வழியே வழிச்செல்ல

3432. **தொண்டை மானுக்கன் றருள்கொடுத் தருளுந்**
தொல்லை வண்புகழ் **முல்லைநா யகரைக்**
"**கொண்ட வெந்துயர் களை**"கெனப் பரவிக்
குறித்த காதலி னெறிக்கொள வருவார்
வண்டு லாமலர்ச் சோலைகள் சூழ்ந்து
மாட மாளிகை **நீடுவெண் பாக்கங்**
கண்ட தொண்டர்க ளெதிர்கொள வணங்கிக்
காயு நாகத்தர் கோயிலை யடைந்தார். 278

வருவாராகி; வண்டுலாம்...வணங்கி - வண்டுகள் மொய்க்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்து மாட மாளிகைகள் நீடி விளங்கும் திருவெண்பாக்கத்தினைக் கண்ட தொண்டர்கள் எதிர் கொள்ள அறிந்து வணங்கி; காயும்...அடைந்தார் - கோபிக்கும் யானையை உரித்த வராகிய இறைவரது திருக்கோயிலினை அடைந்தருளினர்.

இந் நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தொண்டைமானுக் கன்று அருள் கொடுத்தருளும் - இது தல சரிதம்; "சொல்லரும் புகழான்" (10) என்ற பதிகமும் தல விசேடமும் பார்க்க.

தொல்லை வண்புகழ் - மிகப் பழமையும் வள்ளன்மையுமுடைய புகழ். திருக்குறிப்புத் தொண்ட நாயனூர் புராணத்துள் முல்லைத்திணை பற்றிய கருத்துக்கள் காண்க.

"**கொண்ட வெந்துயர் களைக**" **என** - இது பதிகத்தின் பிரார்த்தனை; "அடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே" என்பது பதிகத்தின் மகுடம்.


குறித்த காதலின் நெறிக்கொள - குறித்த காதல் - திருவாரூரினைச் சென்றடையும் பெருவிருப்பம்; **குறித்த** - குறியாகக் கொண்ட; **நெறிக்கொள** - அவ்வழிச் செல்ல.

கண்ட தொண்டர்கள் எதிர்கொள - தாம் எழுந்தருளுதலைக் கண்ட அப்பதியில் தொண்டர்கள் வந்து எதிர்கொள்ள; **வெண் பாக்கம் வணங்கி** என்று கூட்டுக.


மாட மாளிகை நீடு வெண்பாக்கம் - இத்தலம் இப்போது பூண்டி நீர்த்தேக்கம் என்னும் பரந்த ஏரியினுள் அகப்பட்டு நீரினுள் மறைந்துள்ளது; தலவிசேடம் பார்க்க; **நீடு**- என்பது பிற்றைஞான்று நீரினுள்ளே பொதிந்து நிலைபெற நின்ற என்ற குறிப்பும் தந்து நின்றது.

காயும் நாகத்தர் - காய்தல் - கோபித்தல் என்ற பொருளில் வந்தது; **காயும்** - தம்மாற் காயப்படும்என்றலுமாம். **நாகம்** - யானை; கோபமுடைய யானை என்க;நாகம் - **பாம்பு** என்று கொண்டு பாம்பினை அணியாக உடையவர் என்றலுமாம். 278

வடதிருமுல்லைவாயில் பாட்டு-3431




வடதிருமுல்லைவாயில்-முன்கோபுரம்-வெளித்தோற்றம்





வடதிருமுல்லைவாயில் -
கோயில் உட்பார்வை-சுவாமி விமானமும், கிழக்குப்பார்த்த நந்தியும்





வடதிருமுல்லைவாயில் -
தலவிருட்சம்

தொண்டைமான் களிற்றைக் கட்டிய முல்லைக்கொடியை
வாளால் வீசுதலும், மாசிலாமணீஸ்வரர் வெளிப்பட்டதுமாகிய
கோலம்(வெளிமண்டபத்திலுள்ள தூணில் உள்ளது.) - பாட்டு 3432
வடதிருமுல்லைவாயில்- (பழைய படம்)

படம்-19

(வட) திருமுல்லை வாயில்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி, 7-ம் திருமுறை**

திருவுமெய்ப் பொருளும் செல்வமு மெனக்குன் சீருடைக் கழல்களென்றெண்ணி
ஒருவரை மதியா துறுமைகள் செய்து மூடியு முறைப்பனுய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய்! வாயினு லுன்னைப்
பரவிடு **மடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே.** (1)

விண்பணிந் தேத்தும் வேதியா மாதர் வெருவிட வேழமொன் றுரித்தாய்
செண்பகச் சோலை சூழ்திரு முல்லை வாயிலாய்! தேவர்தம் மரசே!
தண்பொழி லொற்றிமாநக ருடையாய்! **சங்கிலிக் காவென்கண் கொண்ட**
பண்ப! நின் னடியேன் படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (3)

மற்றுநான் பெற்ற தார்பெற வல்லார்?வள்ளலே! கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணமெனக் கொள்ளுங் கொள்கையான் மிகைபல செய்தேன்
செற்றுமீ தோடுந் திரிபுர மெரித்த திருமுல்லை வாயிலா யடியேன்
பற்றிலே னுற்ற படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (6)

"சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையி லின்ப மவன்பெற வெளிப்பட் டருளிய விறைவனே"யென்று
நல்லவர் பரவுந் திருமுல்லை வாயி லுதனே நரைவிடை யேறி!
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய் பாசுப தாபரஞ் சுடரே. (10)

விரைதரு மலர்மே லயனெடு மாலும் வெருவிட நீண்ட வெம்மானைத்
திரைதரு புனல்சூழ் திருமுல்லை வாயிற் செல்வனை நாவ லாரூரன்
உரைதரு மாலையோ ரைஞ்சினே டஞ்சு முள்குளிர்ந் தேத்த வல்லார்கள்
நரைதிரை மூப்பு நடலையு மின்றி நண்ணுவர் விண்ணவர்க் கரசே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் முன் (3431-3432) காட்டியருளினர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) திருவு மெய்ப்பொருளும்...எண்ணி - இது நம்பிகள் உட்கொண்டு உலகிற் சரித்த நிலை; இறைவரையே தஞ்சமாக் கொண்ட உறைப்புடையவர்கள் உலகில் வேறெவரையும் பொருளாக மதித்து ஒழுக வேண்டியதில்லை; "உறையினுர் மதயானை நாவலா ரூரன்" (நம்பி-கானட்டு முள்ளூர் -10) என்ற கருத்துமிது; "நாமார்க்கும் குடியல்லோம்" "அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை" என்பனவாதியாக அரசுகள் அருளியனவும் காண்க. **திரு** - அருட்டிரு; **மெய்ப்பொருள்** - ஞானம்; **செல்வம்** - ஏனைப் பொருள்கள்; **கழல்கள்** - கழல்களே இவையாகக் கொண்டமையால் கழல்கள் இவற்றையெல்லாந் தருவன; **ஒருவரை** - வேறொருவரையும்; **உறுமைகள்** - உலகியலிற் பொருந்தாதன; **ஊடுதல்** - பிணங்குதல்; **உறைத்தல்** - பிறர்சார்பின்றித் தம் வயமாய் முனைந்து ஒழுகுதல்;இதனையே "மிகைபல செய்தேன்" (6) என்று மேற் கூறுதலும் காண்க. **(2) இலயம் - சதி.** கூத்தின் அங்கங்களாகிய பாகுபாடு;

திருப்புகழ் - "இறைவன் பொருள்சேர் புகழ்"—**(3) மாதர்** - உமையம்மையார்; **செண்பகச் சோலைசூழ்** - இத்தலம் சண்பகவனம் என்றும் வழங்கப்பெறும்; **ஒற்றி மாநக ருடையாய்** - திருவொற்றியூரினின்றும் நேரே இங்கு எழுந்தருளியமை குறிப்பு; **சங்கிலிக்காவென் கண் கொண்ட பண்ப** - இதன் குறிப்பினை ஆசிரியர் பதிகத்தின் உட்குறிப்பாகக் காட்டியருளினார் (3431); **பண்ப** - அருட் பண்புடையோய்; கண்கொண்ட செயல் கொடியதாகக் காணினும் அஃது உனது அருட்பண்புக்கு மாறுபாடன்று என்பது குறிப்பு;—**(4) பொன்னலங் கழனி...செந்நெலங் கழனி** - பாலியின் நீர்வளங் குறித்தது; இவ்வளம் பாலியாற்றான் வருவதென்பது மேற்பாட்டிற் கூறுதல் காண்க; **விரைமருவி - வண் டிசைபாட** - "சுரும்பல்லி குடைநீலத் துகளல்ல பகலெல்லாம்" (65); **அலவன்** - நண்டு; **அந்நலம்...உறங்கும்** - நண்டுகளின் அனுபவ நல்லறிவு நுட்பம் காட்டியபடி; **பல் நலம்** - பலபல திறத்து நலங்களையும்;—**(5) சந்தன...பாலி** - பாலியாற்றின் நீர்வளம்; திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் பார்க்க; **வடகரை முல்லைவாயில்** - பாலியின் வடகரையில் உள்ள தலம்; **பந்தனை** - வினையின் மூலம்;—**(6) மற்று...வல்லார்** - சிவனது அருள்பெற்ற இறுமாப்பிற் றிளைத்தல்;"எனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே" (திருவா) "இறுமாந் திருப்பன் கொலோ?" (அரசு); **கள்ளமே...கொள்கையால்** - பித்தனென் றேசிய தனையே துதியாகக் கொண்டமை குறிப்பு; **பற்றிலேன்** - "மற்றுப் பற்றெனக் கின்றி" (நம்பி);—**(7) மணி கெழு...கண்ணார்** - ஆடற் பெண்களின் வருணனை; **எல்லியும் பகலும் பணி** - இரவும் பகலு மிடையறாது சிவனை நினைத்துத் துதிக்கும் பணி; "வாயினா லுன்னைப் பரவிடு மடியேன்"; **பணி அது** -"இன்னும் பல்லாறுல கினினம்புகழ்பாடு" என்று அருள்செய்தான் (222) என்று பணித்த அந்த என்று **அது** - முன்னறிசுட்டு; இதனை மேல்வரும் பாட்டில் "அன்று...ஆட்கொண்ட" என்று விரிப்பது காண்க; **(8) அன்று...சம்புவே**-நம்பிகள் சரித அகச்சான்று; **திரிதர்வேன்** -திரிந்தலைவேன்; **கண்ட** - கண்டுகொண்ட; பற்றிய;—**(9) மட்டுலா...இட்டனே** - மார்க்கண்டேயர் வரலாறு; **மட்டுலா...மாணி** - மார்க்கண்டேயர்; **மட்டு** - வாசனை; **மாணி** - பிரமசாரி; **வணங்கும்** - வழிபாட்டின் உறைப்பு;—**(10) 'சொல்லரும்... இறைவனே" என்று நல்லவர் பரவும்** - இறைவர் இத்தலத்திற் செய்த அருளின் வெளிப்பாடு. தலவிசேடம் பார்க்க. இந்த அருட்பெருமையைக் குறிக்கொள்ள ஆசிரியர் (3432) எடுத்துக் காட்டியருளியமை காண்க;

முல்லை (கொடி) தலமாம்; **சூழ் கொடி முல்லை** - தன்னுள் இறைவரது திருமேனி மறையும்படி புதராகச் சூழ்ந்த முல்லைக்கொடி; **கட்டிட்டு** - கட்டும்படி - பிணிக்கும்படி -செய்து; பிணிப்பித்ததும், அது காரணமாகத் தாம் வெளிப்பட்டமையும் அருளிப்பாடு; **எல்லையிலின்பம்** - பேரானந்தப் பெருங்கடல்; வீடுபேறுமாம்; **என்று - பரவும்** - இறைவரை இவ்வருளிப்பாடு பற்றித் துதிக்கும்; **நல்லவர்** - தகுதியாலே நல்லவர்களே இவ்வாறு பரவுவர் என்பது; அருள் வெளிப்படக் கண்டும் அல்லவர் வினைவயத்தால் பரவமாட்டார் என்பது குறிப்பு; **ஏறி** - பெயர்; ஏறுபவர்; **கலைப்பொருள்** - எல்லாக் கலைகளும் முடிந்த முடிபாக நுதலும் பொருளாவார்—**(11) நரை - திரை - மூப்பு** - உடலின் புறத்து நலிவு நிலைகள்; **நடலை** - வஞ்சனை; அகத்தின் நலிவு; **உள் குளிர்ந்து** - மனமுவந்து; அரசு - அரசாட்சி

3433. அணைந்த தொண்டர்க ளுடன்வல மாக
வங்க ணாயகர் கோயில்முன் னெய்திக்
குணங்க ளேத்தியே பரவியஞ் சலியாற்
குவித்த கைதலை மேற்கொண்டு நின்று
வணங்கி **"நீர்மகிழ் கோயிலு ளீரே"**
யென்ற வன்றொண்டர்க் **கூன்றுகோ லருளி**
இணங்கி லாமொழி யா "லுளோம்; போகீ!"
ரென்றி யம்பின ரேதிலார் போல. 279

தலவிசேடம்:—வட திருமுல்லைவாயில் - தொண்டை நாட்டின் 22-வது பதி; சோழ நாட்டில் சீகாழிக்கருகு கடற்கரையில் உள்ள காவிரி வடகரை 7-வது பதியாகிய (தென்) திருமுல்லை வாயிலினின்றும் பிரித்தறியும்படி வடதிருமுல்லை வாயில் எனப்படும்;இங்கு முல்லைக்கொடியே தலமரமாதலின் முல்லைவாயில் எனப்பட்டது; முல்லையின் அடியில் அதுவாயிலாக இறைவர் வெளிப்பட்ட இடம் என்பது பொருள். சண்பக வனம் எனவும் பெயர் பெறுமென்பது "செண்பகச் சோலை சூழ்" (2) என்ற பதிகத்தாற் காண்க, இங்கு வேட்டையின் பொருட்டு யானையின் மேல் வந்த தொண்டைமான் என்ற அரசனது யானையின் காலில் முல்லைக் கொடி சுற்றியதனால் அது மேற்செல்லமாட்டாது தடைபடச் செய்தருளியபோது, அரசன் முல்லைக் கொடியை வாளினால் வீசியபோது, அஃது இறைவர் திருமேனியிற்பட்டு இறைவர் வெளிப்பட்டருள, அது கண்ட அரசன் கவன்றுவருந்த, அவனுக் கருள்கொடுத்தருளினார் என்பது தலவராறு. இது பதிகம் 10-வது திருப்பாட்டிற் போற்றப்பட்டது; வாளினால் வீசியதாற் சிதைவுண்ட வடு இன்றும் சிவலிங்கத் திருமேனியிற் காண உள்ளது. முருகப்பெருமான் பூசித்த பதி. திருமால் வழிபட்ட வரலாற்றினை முன்னர், "அங்கண் முல்லையின் றெய்வமென் றருந்தமி ழுரைக்கும், செங்கண்மால் தொழும்" (1095) என்று ஆசிரியர் அருளினர்; சோழன், காமதேனு, வசிட்டர் முலியோரும் வழிபட்டுப் பேறுபெற்ற குறிப்புக்களும் காணப்படுவன; சுவாமி சந்நிதானத்தில் மிகப் பெரிய இரண்டு எருக்குத் தூண்கள் உள்ளமை காணப்படும். **சுவாமி - பாசுபதேசுவரர்;** இப்பெயர் **பாசுபதா** என்று பதிகத்துட் போற்றப்பட்டது; அம்மை - **கொடியிடை நாயகி;** தலமரம் - **முல்லை;** தீர்த்தம் - **பாலி;** பதிகம் 1.

இஃது அம்பத்தூர் (M.S.M.) நிலையத்தினின்றும் வடமேற்கே மட்சாலை வழி 1½ நாழிகையளவில் அடையத் தக்கது. ஆவடி நிலையத்தினின்றும் வடகிழக்காய் மட்சாலை வழி 2½ நாழிகையளவில் அடையலாம்.

குறிப்பு:—தொண்டைமானுக்கு அருளிப் படைத்துணையாக நந்திதேவரை இறைவர் அனுப்பியருளினர் என்றும், கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் நந்தி அந்த வரலாறு குறிப்பதென்றும் கூறுவர். சுவாமி தீண்டாத் திருமேனி. சந்தனக் காப்பிடுதல் வழிபாட்டு முறை.

3433. **(இ-ள்)** அணைந்த...எய்தி - முன்கூறியபடி எதிர்கொள வந்தணைந்த தொண்டர்களுடன் கூடி வலமாக வந்து அங்கண்மையுடைய இறைவரின் திருக்கோயிலின் முன் வந்து சேர்ந்து; குணங்கள்...வணங்கி - இறைவரின் அருட்பெருங் குணங்களை எடுத்துத்

துதித்தே போற்றி செய்து வணங்கி; நீர்வன்றொண்டர்க்கு - "தேவரீர் மகிழும் இத்திருக்கோயிலினுள் வீற்றிருக்கின்றீரோ?" என்று கேட்ட வன்றொண்டருக்கு; ஊன்றுகோல்...போல - இறைவர் ஊன்றுகோல் ஒன்று கொடுத்தருளி இணக்கமில்லாத மொழிகளால் "யாம் உள்ளோம்; நீர்போகீர்" என்று அன்னியர் போலச் சொல்லியருளினர்.

(வி-ரை) அணைந்த - முன்பாட்டிற் கூறியபடி தாம் வருவதைக் கண்டு எதிர் கொள்ள வந்தணைந்த; **தொண்டர்களுடன்** - கண்ணிழந்த நிலையாதலின் தொண்டர்கள் தம்முடன் முன்செல்ல என்றது குறிப்பு. **கோயில்** - இறைவரது திருமுன்பு.

"நீர் மகிழ் கோயிலுள்ளீரே?" என்ற வன்றொண்டர்க்கு - இஃது இறைவரை நோக்கி நம்பிகள் வினவியது; **உள்ளீரே** - என்றதனால் தாம் நேரே கண்களாற் காண இயலாமையினைக் குறிப்பிலுணர்த்தியவாறு; தமக்கு அருள் செய்யாமையில் அங்குக் கோயிலில் விளக்கமாக வீற்றிருத்தலில்லை என்று கூறியதும் குறிப்பு. **மகிழ் கோயில் உள்ளீரே** - திருவொற்றியூரிலும் பூ மகிழ்க்கீழும் கோயிலுள்ளும் மாறித் தங்கியதனை அறிந்தாராதலின் இங்கு மகிழடியிலா? அன்றிக் கோயிலினுள்ளா? என்றிரண்டி லொன்றனை உறுதிப்பட அறியவினவியது போன்ற குறிப்பும் காண்க; **மகிழ் - கோயில்** - பழமொழி போல வழங்கியதாகக் கொள்க.

ஊன்றுகோல் அருளி - "ஊன்று கோலெனக் காவதொன் றருளாய்" (திருவொற்றி - 4) என்று கேட்ட அஃதேயாக ஈண்டு ஊன்றுகோல் அருளினர் என்பதாம். **ஊன்றுகோல் அருளுதல்** - பற்றுக்கோடாகிய அருள் உள்ளமை காட்டுதலாம்.

இணங்கிலா மொழியால் ஏதிலார் போல உளோம் போகீர் என்றியம்பினர் என்க. **இணங்கிலா மொழி**யாவது இணக்கமாக அன்பு காட்டாது அன்னியர் போலக் கூறுதல்; "ஒன்னலரைக் கண்டாற்போல் உளோம் போகீர் என்றானே" என்ற நம்பிகள் திருவாக்கு இதற்குச் சிறந்த அகச்சான்று; **ஏதிலார்** - ஏதும் பற்றில்லாத அன்னியர். **போல** - உண்மையாக **ஏதிலார்** அன்று என்பதாம்.

உளோம் போகீர் - கோயிலுளீரே என்று கேட்டமையின், நாம் இருக்கின்றோம் - நீர் போவீராக என்றது இறைவர் திருவாக்கு. இக்கோயில் இதனால் உளோம் போகிர் புரம் என வழங்கும் வழக்கும் கல்வெட்டுக்களிற் காண உள்ளது. இது சரித அகச்சான்று.

ஏத்தியே பரவி - இப்பதிகம் வேறு; இது கிடைத்திலது. மேற்பாட்டிற் கூறும் பதிகம் ஊன்றுகோலருளி உளோம் போகீர் என்ற பின்னர் அத்திருவருளை எண்ணிப் போற்றிப் பாடியது. *279*

3434. **(இ-ள்)** பிழை...எடுத்து - "பிழையுளன பொறுத்திடுவர்" என்று தொடங்கி; மழைதவழும்...மன்னவனார் - மேகங்கள் தவழ்தற்கிடமாகிய உயர்ந்த மதில்களையுடைய திருநாவலூரின் தலைவராகிய நம்பிகள்; பெண்பாகம்...பாடினார் - உமையம்மையாரை ஒரு பாகத்தில் இருத்தலை விரும்பிய பெருமானை, திருவெண்பாக்கத்தினை மகிழ்ந்தவரை, சங்கராபரணம் என்று அடியார் போற்றப் பாம்பினை அணிந்த இறைவரைப் பாடினார்.

(வி-ரை) பிழை...எடுத்து - பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

பெண்பாகம்... இறையானை என்றது கருணைக்கிருப்பிட மாதலையும், **வெண்பாக்கம்**

வேறு

3434. "**பிழையுளன பொறுத்திடுவ**" ரென்றெடுத்துப் பெண்பாகம்
விழைவடிவிற் பெருமானை வெண்பாக்க மகிழ்ந்தானை
இழையெனமா சுணமணிந்த விறையவனைப் பாடினார்
மழைதவழு நெடும்புரிசை நாவலூர் மன்னவனார். 280

மகிழ்ந்தான் என்றது வெளிப்பட்டருளியுள்ள இடத்தினையும் **மாசுணம் அணிந்தான்** - என்றது தீமையையும் நன்மையாக ஏற்றுக்கொள்ளும் நிலையினையும் உட்குறிப்பாகக் கொண்டு நம்பிகள் தமது குறையினை விண்ணப்பித்த குறிப்புக்களாம். "ஒண்ணுதலி பெருமானார்" (*6*), "சேயிழையோ டுடனாகி" (*4*), "நுண்ணிடையாள் பாகமா" (*5*), "வாரிடங்கொள் வனமுலையா டன்னோடும்" (*8*), "கோயிலிங் கிருந்தாயோ" (*9*), "வெண்பாக்க மிடங்கொண்ட" (*11*), "விட நாகன்" "பையரவா" (*2 - 3*) என்பன பதிகம்; **விழை** - விரும்பும்; **இழை** - சங்கராபரணம்; **மாசுணம்** - பாம்பு.

மழை - அதற்குக் காரணமாகிய மேகம் என்ற பொருளில் வந்தது; ஆகுபெயர்; **புரிசை** - மதில். *280*

திருவெண்பாக்கம்

திருச்சிற்றம்பலம் **பண் - *சீகாமரம்*. 7-ம் திருமுறை**

"**பிழையுளன பொறுத்திடுவ**" ரென்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலமென்கண் மறைப்பித்தாய்!
"குழைவிரவு வடிகாதா **கோயிலுளா யோ?**"வென்ன
உழையுடையா னுள்ளிருந்து "**உளோம்போகீ**"ரென்றானே. (*1*)

"பொன்னவிலுங் கொன்றையினாய்! **போய்மகிழ்க்கீ ழிரு**"வென்று
சொன்னவெனைக் காணாமே"**சூளுறவு மகிழ்க்கீழே**
என்னவல்ல பெருமானே! யிங்கிருந்தா யோ?"வென்ன
ஒன்னலரைக் கண்டாற்போ "லுளோம்போகீ" ரென்றானே. (*9*)

மான்றிகழுஞ் சங்கிலியைத் தந்துவரு பயன்களெல்லாந்
தோன்றவருள் செய்தளித்தா யென்றுரைக்க "வுலகமெல்லா
மீன்றவனே! வெண்கோயி லிங்கிருந்தா யோ?"வென்ன
வூன்றுவதோர் கோலருளி யுளோம்போகீ ரென்றானே. (*10*)

ஏராரும் பொழினிலவு **வெண்பாக்க மிடங்கொண்ட**
காராரு மிடற்றானைக் காதலித்திட் டன்பினொடுஞ்
சீராருந் **திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த**
ஆரூரன் றமிழ்வல்லார்க் கடையாவல் வினைதானே. (*11*)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—"நீர் மகிழ் கோயிலுளிரே!" என்று கேட்க நற்குத இறைவர் **ஊன்றுகோல்** அருளி "உளோம் போகீர்" என்றியம்பின வரலாற்றினைப் பற்றிப் பாடியது (3434)

பதிகப் பாட்டுக் குறிப்பு:— (1) பிழையுளன...பிழைத்தக்கால் - என் செயலிற் பிழைகளிருந்தால் அவற்றைப் பொறுத்து அருளும் செய்பவர் என்ற துணிவினால் பிழை செய்தால்; இது நம்பிகள் மனங்கொண்ட துணிவு; **பழி** - அடியானுடைய கண்களை ஒளியிழக்கச் செய்தது; **படலம்** - கண்ணினுள் பார்வைக்குதவும் பகுதி; மறைக்கும் பகுதி என்றலுமாம். இப்பொருளில் படலம் உண்டாக்கிக் கண்ணை மறைத்தாய் என்க; **படலம்** - படலத்தால்; **குழை** காதணி; **வடி (காது)** - தொங்கிய; தொங்கிய காதுடைமை பழங்கால வழக்கு. **கோயிலுளாயே** நம்பிகள் இறைவரைக் கேட்டது; **உளோம் போகீர்** - இறைவர் அருளிய விடை; இவையும் இப்பதிகத்துள் வரும் ஏனையவும் சரித ஆதரவுகளாகிய அகச்சான்றுகள்!. "ஊன்றுவதோர் கோலருளி" (10) "ஒன்னலரைக் கண்டாற்போல்" (9) என்பன முதலியவை பார்க்க;—**(2) இடை - தலை** - பின்வருவன முன் இருந்தன. **நடை**- ஒழுக்கம்; சிவவாழ்வு;—**(3) ஒன்று** - வேறொன்றும்;—**(4) சேயிழை யோடுடனுகியும்** என்று உம்மை விரிக்க. இதனைப் "பெண்பாகம் விழைவடிவிற் பெருமானை" (3434) என்று சிறப்பாக வேறு எடுத்துக் காட்டினர்; **சேயிழை** - அருட்குறிப்பு - (5) (8) பார்க்க;—(5) **பொன் இலங்கு** - பொன்னின் நிறம்போல நிறம் விளங்கும்; **இலங்கு** - உவமவுருபு; **இருபாலடியார்** - இருபுறமும் ஒழுங்கின் நின்று என்க. நம்பிகளுடன் வந்தாரும் பதியி லிருந்தாரும் என்றலுமாம்; **உன்னதம்** - பெருமிதமாகிய மகிழ்ச்சி;—**(6) மலர்** விரிகின்ற; **மலர்ந்த** - விளங்கும்;—**(7) இருந்தீரே** - ஏகாரம் வினு;—**(8) வார் இடங்கொள்** - கச்சு அணிந்த; **பாரிடம்** - பூதம்;—**(9) நவிலும்** - போன்ற; உவம உருபு; **"போய்மகிழ்க்கீழ் இரு" என்று சொன்ன** இது நம்பிகள் சபதத்திற்கு முன் இறைவரை வேண்டிக்கொண்டது (3402); **சொன்ன எனைக் காணுமே** - அவ்வாறு வேண்டிய நான் அறியாதபடி; **சூளுறவு மகிழ்க்கீழே** என்ன - இஃது இறைவர் சங்கிலியாருக்கு உணர்த்தியருளியது (3405); இது நம்பிகள் கருதலளவையால் அறிந்த நிலை. தாமும் இறைவருமே அறிந்ததன்றிப் பிறர் அறியாத இதனைச் சங்கிலியார் சேடியர் அறிய வந்தமையின் இறைவர் உணர்த்தினுலன்றி இது விளைந்திராது என்றறிதல். வெதிரேகச் சொல் என்ப; **ஒன்னலரைக் கண்டாற்போல்** - உளோம் போகீர் என்றுரைத்தல் அன்பிற்கு மறுதலைப்பட்டார்பால் நிகழும் சொல்லாதல் குறிப்பு; நம்பிகள் தோழமை முறையால் இறைவர் செயலை இவ்வாறு பகைமைத் திறம்படப் பொருள் கொண்டு பாடி அருளினும், ஆசிரியர், எல்லாவுயிர்களிடத்திலும் எஞ்ஞான்றும் கருணையே யன்றிப் பிறிது நிகழாத இறைவரது செயலை இவ்வாறு சொல்ல மாட்டாராய் அன்பின் ரேற்றம்பட "இணங்கிலா மொழியால் ஏதிலார் போல" (3433) என்று இதற்கு உரைவிரித்த நயம் கண்டுகொள்க; இப்பாட்டுச் சரிதத்தின் மிக உயர்ந்த அகச்சான்று; மேல்வரும் பாட்டும் பார்க்க;—(10) **மான் திகழும்** - மானின் மருண்ட பார்வைபோன்ற பார்வை விளங்கும்; **மான்** -மான்கண்; ஆகுபெயர்; **திகழ்** - உவம உருபு; **வருபயன்கள்**- இவ்வுலகில் வந்தவதரித்ததன் பயனுகிய கன்மானுபவம்; **தோன்ற** - பொருந்த; **உலகமீன்ற**-என்றது நிமித்த காரணராந் தன்மை குறித்தது. **வெண்கோயில்** - திருவெண்பாக்கக் கோயிலின் பெயர்;—**(11) வெண்பாக்கம்** - தலப்பெயர்; இவ்வொருபாட்டில் தெரியவைத்தார்;

3435. முன்னின்று முறைப்பாடு போன்மொழிந்த மொழிமாலைப்
பன்னுமிசைத் திருப்பதிகம் பாடியபின் "**பற்றாய**
என்னுடைய பிரானருளிங் கித்தனைகொ லா"மென்று
மன்னுபெருந்தொண்டருடன் வணங்கியே வழிக்கொள்வார், 281

காதலித்திட் டன்பினெடும் - நம்பிகளின் கண்ணிழந்த கடுந்துன்பத்தினும் பிறழாத அன்பின் உறைப்பு; ***சீராரும்... ஆரூரன்*-** நம்பிகளுக்கு ஆரூரன் எனப் பெயர்போந்த காரணம் விளக்கிற்று; திருவாரூர்ப் பெருமானது அடிக்குடியாகிய பரம்பரையாதலின் பெற்றோர்களால் இப்பெயர் சூட்டப்பட்டதென்பது. முன்னர், "ஆதி சைவ னாரூரன்" (205) என்றதனால் நம்பிகளது பேரனாரும் (பாட்டனார்) இப்பெயர் பூண்டவர் என்பது விளங்கும். ஆண்டும், 150ன் கீழும் உரைத்தவை பார்க்க.

தலவிசேடம்:—திருவெண்பாக்கம் - தொண்டை நாட்டில் 17வது பதி. நம்பியாரூரரது சரித நிகழ்ச்சி பற்றித் **திருவுளம் பூதூர் - உளோம் போகிர்புரம்** எனவும் அணிமைபற்றி வழங்கப்பட்டதொரு பதியுமுண்டு. வெண்பாக்கம் வேறு. இவையிரண்டும் இப்போது சென்னைக் குடிதண்ணீர்த் தேக்கமாக்கப்பட்ட பரந்த ஏரியாகிய பூண்டி நீர்த்தேக்கத்தினுள் அகப்பட்டுள்ளன. இங்கிருந்த சிவ மூர்த்திகளை எடுத்து வேறிடத்துத் தாபித்துள்ளனர். திருவுளோம் போகிபுரம் என்றது பழங் கல்வெட்டுக்களிற் கண்ட பெயர்; இக்கல்வெட்டுக்கள் அந்தப் பெயர்க் கோயிலினுட் பல இருந்தன. திருவொற்றியூரினின்றும் கண்ணிழந்த நிலையில் போந்த ஆளுடைய நம்பிகளுக்கு இறைவர் இங்கு ஊன்று கோலருளி "உளோம் போகீர்" என்று அருளி விடுத்த நிகழ்ச்சி புராணத்துட் காண்க. பதிகமும் பார்க்க. சுவாமி - **வெண்பாக்க நாதர்;** அம்மை - **மின்னலொளியம்மை; கனிவாய் மொழி யம்மை;** தலமரம் - **இலந்தை;** பதிகம் 1. ஊன்று கோலுடன் நம்பிகள் திருவுருவம் உண்டு. நம்பிகளுக்கு மின்போல விட்டுவிட்டு அம்மை வழி காட்டியருளினர் என்பர். இத்தலம் திருவள்ளூர் நிலையத்தினின்றும் வடமேற்காய்த் திருப்பாசூர் போகும் கற்சாலை வழி 3½ நாழிகையளவில் வடக்கில் ஊற்றுக் கோட்டைக்குப் போகிற பாதையில் மட்சாலையில் 5 நாழிகை யளவில் அடையப்பட்டு வந்தது. இப்போது நீர்த்தேக்கத்தினுள் மூழ்கி விட்டபடியால் சென்றடையாத திருவுடனாகி விளங்குகின்றது.

3435. **(இ - ள்)** முன் நின்று...பாடியபின் - திருமுன்பு நின்று முறைப்பாடு உரைப்பார் போன்று மொழிந்த சொன்மாலையாகிய பன்னும் இசையுடன் கூடிய திருப்பதிகத்தினைப் பாடிய பின்பு; பற்றாய என்னுடைய...என்று - "ஆதரவாகிய என் பெருமானாரது திருவருள் இங்கு இத்தனை அளவேயிருந்தது போலும்" என்று உட்கொண்டு; மன்னு...வழிக்கொள்வார் - நிலைபெற்ற பெரிய தொண்டர்களுடன் இறைவரை வணங்கி மேலே வழிச் செல்வாராகி,

(வி-ரை) முறைப்பாடு போல் மொழிந்த தமிழ்மாலை - இப்பதிகத்தினை நம்பிகள் இறைவர்பால் தம் குறைகளை எடுத்தியம்பி முறையிட்டதுபோல அருளினாரன்றி, உண்மையில் அது மகிழ்ச்சியுடன் அன்பு ததும்ப இறைவரது அருளைப் போற்றிப் புகழ்ந்தபடியேயாம் என்று குறிக்கப் **போல் மொழிந்த** என்றார். "காதலித்திட் டன்பினொடும்" (11) என்றது காண்க; அன்றியும் இப்பதிகம் "கோயிலுளீரே" என்று நம்பிகள் கேட்க,

3436. அங்கணர்தம் பதியதனை யகன்றுபோ யன்பருடன்
பங்கயப்பூந் தடம்பணைசூழ் **பழையனூ ருழை**யெய்தித்
தங்குவா **ரம்மைதிருத் தலையாலே வலங்கொள்ளுந்**
திங்கண்முடி யாராடுந் **திருவாலங் காட்**டினயல். 282

அதற்கு ஊன்று கோலருளி "உளோம் போகீர்" என்று இறைவர் விடையும் அருளிய பின்னர், அவ்வருளிப்பாட்டினைத் தோழமை முறையினாற் பாராட்டிப் போற்றிய திறமும் கண்டு கொள்க.

பன்னுமிசை - பன்னுதல் - பலவாறும் எடுத்து இயம்புதல்; **இசை** - பதிகப் பண்ணுகிய சீகாமரம்; **இசை** - புகழ் என்றலுமாம்.

பற்றுய... என்று ஊன்றுகோலருளி "உளோம் போகீர்" என்ற இந்த அளவே ஈண்டு இறைவரது அருள் போலும் என்று துணிந்து; "அங்கு நாதர்செயருளதுவாக" *(3431)* என்றவிடத் துரைத்தவை பார்க்க. **பற்று** - பற்றுக்கோடு; ஆதரவு. ஊன்றுகோல்தானும் ஓர் ஆதரவாக ஏற்றமை குறிப்பு.

பெருந்தொண்டர்- பெருமை - நம்பிகளுடன் பணி செய்துடனிருக்கும் பெரும் பேறு.

வழிக்கொள்வார் - மேலே திருவாரூரை நோக்கிய வழியிற் செல்வாராகி; முற்றெச்சம்; வழிக்கொள்வார்-போய்-எய்தித் -தங்குவார் *(3436)* -ஏத்துவார் -போய்-அணைந்தார்*(3437)* என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க. *281*

3436. **(இ-ள்)** அங்கணர்...போய் - அங்கண்மை யுடையாராம் இறைவரது அத்திருப்பதியினை நீங்கிச் சென்று; அன்பருடன்...எய்தி - அன்பர்களுடனே கூடி மேற்சென்று தாமரைகள் மலர்தற்கிடமாகிய தடங்களும் பணைகளும் சூழ்ந்த பழையனூரின்கண்ணே சேர்ந்து; அம்மை திருத்தலையாலே...அயல் - காரைக்காலம்மையார் திருத்தலையினாலே வந்து வலங்கொண்டருளும், சந்திரனை முடியிற் சூடிய இறைவர் திருக்கூத்தாடும் திருவாலங்காட்டின் பக்கத்து; தங்குவார் - தங்குவாராகி,

(வி-ரை) பழையனூருழை - பழையனூரின்கண்; **உழை** - ஏழனுருபு; **எய்தி**-சேர்ந்து; பழையனூரும் திருவாலங்காடும் ஒருபதியாக ஒன்று சேர்த்துப் பாடப்பெறுவன; *1606-2909* பாட்டுக்களும் "பழனை யுடையார் தாமே" (அரசு - தாண்); "பழயனூ ராலங்காட்டெம் மடிகளே" (பிள்) என்ற தேவாரங்களும் பார்க்க. நம்பிகளும் "பழயனூர் மேய ஆலங்காடா" என்பதும் காண்க.

தங்குவார்...திருவாலங்காட்டின் அயல்-பழயனூரினை எய்திய நம்பிகள் அங்குத் தங்காது, மேற்சென்று அணிமையில் உள்ள திருவாலங்காட்டினை நோக்கிச் சென்று அதனுள்ளும் சென்று சேராது, அதன் **அயலில்** - (அருகாக) ஓரிடத்தில் தங்குவாராகி என்றபடி; திருவாலங்காட்டிற் சேராமைக்குக் காரணம் அம்மை திருத்தலையாலே வலங்கொள்ளும் பெருமைபற்றி என்பார் உடம்பொடுபுணர்த்தி ஓதியருளினர். இத்தன்மையினை முன்னர், ஆளுடைய பிள்ளையார் இப்பதியினுட் சேராது புறத்துத்தங்கிய

3437. முன்னின்று தொழுதேத்தி "**முத்தா**"வென் றெடுத்தருளிப்
பன்னுமிசைத் திருப்பதிகம் பாடிமகிழ்ந் தேத்துவார்
அந்நின்று வணங்கிப் போய்த் **திருவூற லமர்ந்திறைஞ்சிக்**
கன்னிமதின் மணிமாடக் **காஞ்சிமா நகரணைந்தார்.** 283

சரித நிகழ்ச்சி பற்றி அங்கு விரித்து விளக்கினுராதலின், ஈண்டுச் சுருக்கிச் சுட்டினமட்டி லமைந்தார். 2905-2909 பாட்டுக்களும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **அம்மை** - காரைக் காலம்மையார்; இவ்வாறு **அம்மை** என்ற மட்டில் கூறியமைவது சைவமரபு; அவரது அளக்கலாகாப் பெருமைபற்றி அவர் பெயரைத் தானும் சொல்லாது **அம்மை** - எனப் போற்றும் மரபு காட்டப்பட்டது காண்க; முன்னர் "இம்மையிலே புவியிலுள்ளோர் யாருங் காண வேழுலகும் போற்றிசைப்ப **வெம்மை யாளுமம்மை** திருத் தலையாலே நடந்து போற்று மம்மையப்பர் திருவாலங்காடாம்" (2907) என்று அருளிக் காட்டிவிட்ட படியால் ஆசிரியர் ஈண்டு **அம்மை** என்ற மட்டில் அமைத்துக் கூறியமைந்த மரபும் திறமும் கவிநலம் காண்க. அம்மை மூத்ததிருப்பதிகம் என்ற பெயர்வழக்கும் காண்க. இம்மரபினை ஒட்டியே "அறிவானுந் தானே யறிவிப்பான் றுனே" என்றேதிய **அம்மை** 'அறிவா யறிகின்றுன்றுனே' எனவு மோதியதூஉ மென்க" என்று மாதவச் சிவஞான முனிவர் சிற்றுரையில் கூறிப்போந்தனர் (போதம்-சூத் 11.).

திருத்தலையாலே வலங் கொண்ட வரலாறு அம்மையார் புராணத்துட் காண்க. (1778); **வலங்கொண்ட** என்னுது **வலங்கொள்ளும்** - என்றது இன்றும் அங்கு அம்மை இறைவர் திருவடிக்கீழ்ப் பாடிக்கொண்டு ஆனந்தஞ் சேர்ந்தெழுந் தருளி யிருக்கின்ற நிலை குறித்ததற்கு.

திங்கள் முடியார் ஆடும் - ஊர்த்துவ தாண்டவம் என்னும் திருவடியை மேலே உயரத்தூக்கி அண்டமுற நிமிர்ந்தாடும் திருக்கூத்தை இயற்றியருளி; ஆடுதல் நித்தியமாய் நிகழ்தலின் **ஆடும்** என்றுர். இத்தலம் இரத்தின சபை எனப்படும்; இறைவரது ஐம்பெருமன்றுகளில் ஒன்று. தலவிசேடம் III தொகுதி I பக். 750 பார்க்க. 282

3437. **(இ-ள்)** முன்நின்று...ஏத்துவார் - திரு முன்பு நின்று வணங்கித் துதித்து "முத்தா" என்று தொடங்கியருளிப் பன்னும் இசையினையுடைய திருப்பதிகத்தினைப்பாடி மகிழ்ச்சியுடனே துதிப்பாராகி; அந்நின்று...போய் -அந்நிலைக்கண் நின்று வணங்கி மேலே சென்று; திருஊறல் அமர்ந்திறைஞ்சி -திருஊறல் என்னும் பதியினை விரும்பிச் சென்று வணங்கி; கன்னி...அணைந்தார் - பகைவரால் அழிக்கப்படாத திருமதிலினையும் அழகிய மாடங்களையுமுடைய காஞ்சிமா நகரத்தினை வந்து அணைந்தருளினர்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) முன்நின்று தொழுது - பதியின் புறத்து அயலில் திருக்கோயிலை நோக்கியவாறே திருமுன்பு நின்று வணங்கி; முன்னரும் "முன்னின்று - மொழிந்த" என்றுர்; கண்ணொளி யிழந்த நிலையாதலின் முன்னிற்றல் மாத்திரையால் அமைந்து அகக்கண்ணுற் கண்டு வணங்கி என்பது குறிப்பு.

"முத்தா" என்று எடுத்தருளி - பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

பன்னுமிசை - பன்னும் - 3435 பார்க்க. **இசை** - பதிகப்பண்ணகிய பழம் பஞ்சுரம்.

அந்நின்று - அங்கு நின்றும்; அந்நிலையினின்றவாறே; என்றலுமாம்.

அந்நிலையே என்ற பாடமுமுண்டு.

திருவூறல் அமர்ந்து இறைஞ்சி - அமர்ந்து விரும்பி.

கன்னிமதில் - பகைவரால் அழிக்கப்படாத மதில்; மதில் எடுத்த ஞான்று உள்ளவாறே உள்ளது.

காஞ்சிமாநகர் - முத்தித்தலங்கள் ஏழனுள் ஒன்றாகிய பெருநகர்; தொண்டை நாட்டின் தலைநகர்; என்பன முதலிய பெருமைகள் குறிக்க **மாநகர்** என்றார்.

குறிப்பு:—திருவொற்றியூர் எல்லையினைத் தாண்டியவுடன் கண்மறைந்தநிலையில் வழிகொண்ட நம்பிகளது அந்தத் துன்ப நிலையில் வழிச் செலவை இடையில் தங்கவைத்தல் முதலாகிய இடையீடின்றி துன்பம் நீடிக்காது வரலாறு கூறிப்போகும் கவிநயம் கண்டுகொள்க; நம்பிகள் திருவொற்றியூரினின்றும் புறப்பட்டுத் திருக்காஞ்சி மாநகரம் அணையும் வரையில், ஊன்றுகோ லருளப்பெற்ற திருவெண்பாக்கத்தில் அவ் வருளிப்பாட்டின் பொருட்டு ஒருவினை முடிபுகாட்டி, **இயம்பினர் (3433) பாடினர் (3434)** என்று வினைமுற்றுத் தந்து முடித்ததன்றி, ஏனைய பதிகளில் எல்லாம் வினையெச்சங்களால் கூறிக்கொண்டு செலுத்திக், காஞ்சியில் ஒரு கண் பெறும் அருளிப்பாடு குறிக்க **அணைந்தார்** என வினைமுற்றுந் தந்து முடித்தல் காண்க. 283

திருவாலங்காடு

திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம். 7-ம் திருமுறை**

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா **பழைய னூர்மேய**
அத்தா வாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே. (1)

பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்த னாலங் காடன்றன் **னடிமைத் திறமே யன்பாகிச்**
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவ னூர னொண்டமிழ்கள்
பத்தும் பாடி யாடுவார் பரம னடியே பணிவாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—பண்டை வினைக ளவைதீர்க்கும் குறிப்புப் பற்றிப் பரமன் அடிமைத் திறமே யன்பாகிப் பாடியருளியது; பதிகம் 3-4-7-8 பாட்டுக்களும், திருக்கடைக் காப்பும் (10) பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) முத்தா - இயல்பாகவே பாசங்களினீங்கியவரே; **முத்தி**-சிவானந்த பரபோகப் பெருவாழ்வு; **சிங்கமே** - தலைமைபற்றிய உருவகம்; **சித்தித்திறம்** - முத்திநெறி; **பத்தர் பலர்** - அம்மையார் - ஆளுடைய அரசுகள் - ஆளுடைய பிள்ளையார் முதலாயின பெரியோர்; **அடியார்க் கடியேனுவேனே** - அடிமைத் திறமே யன்பாகிப் போற்றும் நிலை; **முத்தா - முத்தி, சித்தா - சித்தி, பத்தா - பத்தர்** - சொற்பின் வரு நிலையாகிய சொல்லணி; தமிழ் நயம்;—**(2) பொய்யே செய்து** - பொய் வாழ்வு வாழ்ந்து; திருவொற்றியூர் வரலாற்றுக் குறிப்பு; **மெய்யா மெய்யர் மெய்ப் பொருளே** - சொற் பொருட் பின் வருநிலை;—**(3) பாண்டாழ் வினைகள் - பண்டு** என்பது எதுகை நோக்கி முதனீண்டு வந்தது; செய்யுள் விகாரம்; **ஆழ்** - ஆழ்த்தும்; பிறவினை; **பாண்** - தாழ்ச்சியுமாம். **பண்டாழ் (7); பாழாம் வினைகள் (8) பாழாம்** - பாழாக்கும் என்றதும் பார்க்க; நம்பிகளது சரிதம் பற்றிய திருவுள்ளக் குறிப்பு; "வேலங்காடு...மறந்தொழிந்தேன்" (5) என்றதும் காண்க; **ஆண்டா** - ஆட்கொண்டவரே;—**(4) மறி** - மான்; மான் கண்ணைக் குறித்தது; ஆகுபெயர்; **மறிநேர்...அழிந்தேன்** - நம்பிகளது சரித விளைவும் நிகழ்ச்சிகளும் பற்றிய குறிப்பு; **பறியா** - பறிக்கலாகாத; வலிய;**அறிவே** - அறிவுத் திருமேனி; (சித்);—**(5) வேல் அங்கு ஆடு - வேல்** - வேலின் தன்மையாகிய கூர்மையும் கொலைத் தொழிலும் குறித்தது; ஆகுபெயர்; **ஆடு** - பொருந்தும்; போலும் என வுவமவுருபாகப் பொருள் கொள்ளலுமாம்; **மறந்தொழிந்தேன்** முற்றவும் மறந்தேன்; **நெறிமறந்து - மறந்து** - "உன் சீலமுங் குணமும் சிந்தியாதே" (தக்கேசி-ஒற்றி-6) என்ற கருத்து; இப்பகுதி சங்கிலியார் திறத்து நிகழ்ச்சியைச் சிறப்பாயு முணர்த்தி நின்றது;—**(6) எண்ணார்** - சிவனைச் சிந்தியாத பகைவர்; முப்புரவாணர்; **கண்ணாய் உலகம் காக்கின்ற கருத்தா - கண்ணாய்** - காட்டக்காணும் தன்மையுடைய கண் உருவத்தைக் காணும்படி அதனோ டொருங்கியைந்து நின்று காட்டி அவ்வுருவத்தைக் காண்கின்ற ஆன்மாப் போல, அறிவிக்க அறியு மியல்பையுடைய அவ்வான்மா, விடயத்தை யறியும்படி முதல்வன் அதனொடியைந்து நின்று அறிவித்து அறிந்து வருதலால் உலகத்தைக் காக்கின்றவன் (போதம்-11-சூத்-பிண்டப் பொழிப்பு); "காட்டக்கண் டிடுந்தன்மையுடைய கண்ணுக் கேயுமுயிர் காட்டிக்கண் டிடுமாபோல, வீசனுயிர்க் குக்காட்டிக் கண்டிடுவனித்தை, ஆயுமறி வுடையனு யன்பு செய்ய...மாயமெலா நீங்கியரன் மலரடிக் கீழிருப்பன் மாறாத சிவானுபவ மருவிக் கொண்டே" (சித்தி -11-1); **கண்ணாய் - ஆய்** - ஆக்கச் சொல் போல என்று உவமவுருபாய் வந்தது; **கண்** - காட்டப்படும் தன்மை; **கருத்தா** - கர்த்தரே -முதல்வரே; காத்தலே கருத்தாக - தொழிலாக - உடையவரே என்றலுமாம்; இமைகள் கண்ணைக்காத்தல் போல உலகத்தைக் காக்கும் இறைவரே என்றலுமாம்; "கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்" (99) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; **திருத்தலாகாதாய்** - எவ்வாற்றானுங் குறைபாடெதுவும் இல்லாதவரே!; "ஒன்றாலுங் குறை வில்லை" (தேவா-ஒற்றி-தாண்); **பலரும்**-"பலர் போற்றும்" (1); **பண்ணா ரிசைகள்** -அம்மை மூத்த பதிகங்கள்-அரசுகள், பிள்ளையார் இவர்கள் தேவாரப்பதிகங்களாகியவற்றின் பண்கள்; **அண்ணா** - எல்லாருக்கும் மூத்தவரே; அணுகப் படாதவரே என்றலுமாம்;—**(7) வண்டார் குழலியுமை** - தல அம்மை பெயர்; **விண்டார்** - அறத்தின் வழுவியவர்; (விள் - நீங்குதல்); பகைவர்; (**விள்** - மாறுபடுதல்);—**(8) பேழ்வாய் அரவு** - திறந்த வாயினையுடைய பாம்பு; **(9) ஏழேழ்படி கால்** - எழுகின்ற ஏழுவகைப் பிறப்பும்; **ஈமப் புறங்காட்டில்**

3438. தேனிலவு பொழிற்கச்சித் **திருக்காமக் கோட்டத்தில்**
ஊனில்வள ருயிர்க்கெல்லா மொழியாத கருணையினால்
ஆனதிரு வறம்புரக்கு மம்மைதிருக் கோயிலின்முன்
வானில்வளர் திருவாயில் வணங்கினார் வன்றொண்டர். 284

ஆடல் புரிவான் - அம்மை மூத்த திருப்பதிகங்கள் பார்க்க;—**(10) சித்தர் சித்தம் வைத்த** - சித்தரை மனம்வைத்த; **சித்தர்** - இறைவர்; சித்தி தருபவர்; (1) பார்க்க; **சிறுவன்** - நம்பிகளது வயதின் இளமை குறித்தது; **பாடியாடுவார்** - பாடி அவ்வானந்தத்தை நுகர்ந்தமையால் ஆனந்தக் கூத்தாடுபவர்.

தலவிசேடம்:—திருவாலங்காடு III - முதல் பாகம்: பக். 750-பார்க்க. திருக்குளம் பெரிது; குளத்திற்கு வடகிழக்கு, கோயிலுக்கு வடமேற்காக இறைவருடன் ஆடிய காளி கோயில் உள்ளது; "ஆடினார் காளி காண வாலங்காட் டடிகளாரே" (அரசு - திருநேரிசை); "கொடிய வெஞ்சினக் காளி...செருக்கழிவுற வழியாக், கடவுளாடலால் வென்றதோர் **வடவனங்** கண்டான்" (கந்தபு.வழிநடை-8); இதன் கிழக்கில் ஒரு நாழிகை யளவில் மட்சாலை வழிப் பழயனூர் உள்ளது; இங்கும் சிவன் கோயில் உண்டு. நீலியின் வஞ்சனையால் உயிர்துறந்த வணிகனுக்குக் கூறிய சொற் பிழையாது 70 பேர் வேளாளர் தீப்பாய்ந்து உயிர்கொடுத்த தீக்குழி இப்போது நீலிகுளம் என்ற பெயருடன் ஒரு குளமாக உள்ளது. அதன் கரையில் 70 பேரின் உருவங்களும் நீலியின் உருவமும் உள்ளன. 1080-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

3438. **(இ-ள்)** தேன்நிலவு...கோட்டத்தில் -தேன் வண்டுகள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்கச்சிக் காமக்கோட்டத்தில்; ஊனில்வளர்... திருக்கோயிலின் முன் - ஊன்பொருந்த வந்து வளரும் எல்லா உயிர்களிடத்தும் கொண்ட நீங்காத கருணையினாலே ஆயின தருமங்களை எல்லாம் வளர்த்து அருளுகின்ற காமாட்சி யம்மையாரது திருக்கோயிலின் முன்பு; வானில்...வன்றொண்டர் - ஆகாயத்தில் உயர்ந்த திருவாயிலின் முன் வன்றொண்டராகிய நம்பிகள் வணங்கினார்.

(வி-ரை) திருக்காமக் கோட்டம் - காமாட்சி அம்மையார் தவஞ் செய்து அறம் வளர்க்கும் வளைவுட்பட்ட இடம். "புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப் பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்" (*1148*).

ஊனில்... அறம்புரக்கும் அம்மை - காமாட்சியம்மையார்; இவ்வரலாறு முன்னர்த் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துட் கூறப்பட்டது காண்க.

ஊனில் வளர் உயிர்க்கெல்லாம் - சிருட்டியில் வந்த பலபல திறப்பட்ட பக்குவமுடைய உயிர்களுக்கெல்லாம் அவ்வவற்றின் தன்மைக் கேற்ப.

அம்மை திருக்கோயிலின் முன் - வாயில் - வணங்கினார் - எல்லாவுயிர்களுக்கும் ஒப்பக் கருணைபுரிந்து அறம் வளர்க்கின்றாராதலின் அவரது திருவருளை முதலில் நாடி வணங்கி நம்பிகள் பெற்றனர் என்க. ஆளுடைய பிள்ளையாரும் இங்கு வணங்கியமை முன் உரைக்கப்பட்டது (2897); **வாயில்** - கண்ணொளி யிழந்த நிலையாதலின் வாயிலினின்றவாறே வணங்கினார் என்க.

3439. தொழுதுவிழுந் தெழுந்தருளாற் றுதித்துப்போய்த் **தொல்லுலகம்**
முழுதுமளித் தழித்தாக்கு முதல்வர்திரு வேகம்பம்
பழுதிலடி யார்முன்பு புகப்புக்குப் பணிகின்ருர்
"இழுதையேன் றிருமுன்பே யென்மொழிவே"னென்றிறைஞ்சி, 285

ஊனில்வளர்... அறம்புரக்கும் அம்மை - எண்ணிறந்த உயிர்த்தொகுதியுள் சிருட்டிக்குள்ளாக எடுக்கப்படும் உயிர்களைப் புவனபோகங்களைத் தந்து வளர்த்தல் அம்மையின் கருணைத் தொழில், ஆயின் அப்பனது தொழில், காத்தலுடன் அழித்தலும் மீள ஆக்கலும் முதலிய ஐந்தொழில்களுமாம் என்று **உலகம் முழுதும் அளித்தழித்தாக்கும்** என மேற்பாட்டிற் கூறும் கருத்தினை உன்னுக; மேல் **முதல்வர்** என்ற கருத்தும் காண்க. ஆயின் அத்தொழில்களுள்ளும் அவ்வத் தொழிலுக்கேற்பச் சிவ சத்தியும் விளங்குவதாம் என்க.

284

3439. **(இ-ள்)** தொழுது... போய் - தொழுது நிலமுற விழுந்து எழுந்து அருளினலே துதிசெய்து மேற்சென்று; தொல்லுலகம்... புகப்புக்கு - பழமையாகிய உலகங்களை எல்லாம் காத்தும் அழித்தும் மீளப்படைத்தும் ஐந்தொழில் செய்யும் முதல்வருடைய திருவேகம்பத்தினுள்ளே குற்றமில்லாத அடியார்கள் முன்னே புகத் தாம் அவர் பின்னே சென்று புகுந்து; பணிகின்ருர் - வணங்குகின்றவராகி; இழுதையேன்...என்று இறைஞ்சி - பொய்யனுகிய நான் தேவரீரது திருமுன்பு நின்று என்ன சொல்வேன்! என்று வணங்கி,

(வி-ரை) தொழுது...போய் - இது திருக்காமக் கோட்டத்திற் செய்த வழிபாடு.

அருளால் துதித்து - இறைவரை வணங்குதற்கும் அவரருள் வேண்டும் என்பதாம்; "அவனருளாலே அவன்ருள் வணங்கி" (திருவாசகம்); இனி, ஏனைய பதிகளில் இறைவரை முன்னர் வணங்கிப் பின்னரே அவ்வழிபாட்டின் றொடர்ச்சியாக இறைவியை வழிபடுதல் வழக்கும் விதி மரபுமாய் நிகழ்ந்தன; மேலும் சிவபெருமானைப் பற்றியன்றி வேறெருவரையும் வணங்காத நியமமுடையவர்கள் எந்தம் பெருமக்களாகிய பரமாசாரியர்கள்; ஈண்டு நம்பிகள் அம்மையாரைத் தனியாக முன்னர் வணங்கினர்; அஃது அவருக்குக் கண் கொடுத்தற் கேதுவாகத் **திருவருளால்,** நிகழ்ந்த தென்பதுமாம்; "ஊனில்வள ருயிர்க்கெல்லா மொழியாத கருணையினுல் ஆனதிரு வறம்புரக்கு மம்மை" என்ற குறிப்புமிது. "நீடு காமங்களவரவர்க் கருளி" (*1153*) என்று இறைவரையும், அதன்முன் "மனையறம் புரக்குங் கருணையினுல், நண்ணு மன்னுயிர் யாவையும் பல்க" (*1148*) என்று அம்மையாரையும் கூறிய தன்மைகள் இங்கு நினைவு கூர்தற்பாலன. "மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த விடக்கண் கொடுத்தார்" (*3441*) என்று இக்குறிப்பினைமேல் வரும் பாட்டிற் காட்டுதலும் காண்க.

தொல்லுலகம்...முதல்வர் - அளித்தல் - காத்தல் அளித்தலை முதலில் வைத்த குறிப்பு அம்மையாரது கருணையிடமாக இருந்து ஈண்டியற்றும் தொழிற் சிறப்பு. **திரு ஏகம்பம்** - இறைவர் கோயில். காமாட்சி அம்மையார் எழுந்தருளிய திருக்காமக் கோட்டம் வேருகத் தனிக் கோயிலாகவும், இறைவர் எழுந்தருளிய திருவேகம்பம் வேறு தனிக்கோயிலாகவும்

3440. "**விண்ணுளா ரமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட**
கண்ணுளா! கச்சியே கம்பனே! கடையானேன்
எண்ணாத பிழைபொறுத்திங் கியான்காண வெழிற்பவள
வண்ணா! கண் ணளித்தருளா!" யெனவீழ்ந்து வணங்கினார். 286

உள்ளன; வரலாறுகள் முன்னர்த் திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணத்துட் கூறப்பட்டன. இரண்டிற்கு மிடையே 1/2 நாழிகையளவு இடை உண்டு.

பழுதில் அடியார் முன்பு புகப் புக்கு - பழுதில் அடியார் என்றது **இழுதையேன்** என்று நம்பிகள் தம்மை உட்கொண்டு கூறியமையால் அவ்வாறு ஏதும் பழுதில் லாதவர்கள் என்று அவர்கொண்ட கருத்து; நம்பிகளை உடன் கொண்டு முன் செல்லும் பேறு பெற்றவர்கள் என்ற குறிப்புமாம். பழுதினை இல்லையாகச் செய்யும் என்றலுமாம்; **முன்பு புகப்புக்கு** - கண்காணாமையால் அடியார்கள் வழி காட்டி முன்னே செல்லத் தாம் அவர்கள் பின் சென்று; அடியார்களைப் பின் பற்றிச் செல்லும் முறைப்படி என்ற குறிப்புமாம். திருத்தொண்டத்தொகை யருளியவராதலின் என்ற கருத்தும் காண்க. இக்கருத்தினையே தொடர்ந்து மேல், திருவாரூரிலும் "திருத்தொண்டர் விரவுவா ருடன் கூடி - இடை தெரிந்து...அணைந்தார்" (3458) என்பதும் கருதுக. சிவஞான போதம் 12-ம் சூத்திரக் கருத்தும் காண்க.

பணிகின்றார் - இறைஞ்சி - என வீழ்ந்து வணங்கினார் எனமேற் பாட்டுடன் கூட்டி முடிக்க.

பணிகின்றார் - முற்றெச்சம் - பணிகின்றாராகி.

இழுதையேன் - இழுதை - பொய்; அறியாமை என்றலுமாம்; **இழுதை** - பேய் என்று கொண்டு பேயனேன் என்றுரைப்பாரு முண்டு.

இழுதையேன்...என்மொழிவேன் - பொய்யனாதலின் தேவரீரது திருமுன்பு நின்று ஏதும் சொல்லத் தகுதியுள்ளனல்லேன், என்று காரணக் குறிப்புப் படக் கூறியபடி; "தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின், றன்னெஞ்சே தன்னைச் சுடும்" (குறள்) - தாம்செய்த பொய்யினையும் தாம் வேண்டுவதனையும் உயிர்க்குயிராக உள்ளிருந்தே இறைவர் அறிவாராதலின்,எடுத்து அவரறிய மொழிவதற்கு ஒன்றுமில்லை என்ற குறிப்புமாம். பிழையுடன்பட்டு அறிவித்தவாறு; **என்** - வினா ஒன்றுமில்லை என எதிர்மறை குறித்தது,

இறைஞ்சுதல் - அஞ்சலி கூப்பி வணங்குதல். 285

*3440.***(இ-ள்)** விண்ணுளார்...கண்ணுளா! - விண்ணுலகத்தை ஆளும் தேவர்கள் அமுதத்தை உண்ணும் பொருட்டு மிக்க பெரிய விடத்தினை உண்டருளிய கண்ணுளரே!; கச்சி ஏகம்பனே! - திருக்கச்சித் திரு ஏகம்பத்தில் வீற்றிருக்கின்றவரே!; கடையானேன்...என - கடையவனாகிய நான் எண்ணாமற் செய்த பிழையினைப் பொறுத்தருளி இங்கு அடியேன் காணும்படி அழகிய பவளம் போன்ற வண்ண முடையவரே கண் அளித்தருள வேண்டும் என்று வேண்டிக்கொண்டு; வீழ்ந்து வணங்கினார் - நிலம் பொருந்த விழுந்து வணங்கினார்.

3441. பங்கயச்செங் கைத்தளிராற் பனிமலர்கொண் டர்ச்சித்துச்
செங்கயற்கண் மலைவல்லி பணிந்தசே வடிநினைந்து
பொங்கியவன் பொடுபரவிப் போற்றியவா ரூரருக்கு
மங்கைதழு வக்குழைந்தார் மறைந்தவிடக் கண்கொடுத்தார். 287

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) விண்ஆள்வார்... கண்ணுளா! - **விண்ஆள்வார்** என்றது மேலாகிய விண்ணுலகத்தினை ஆள்வோராயினும் விடத்தினை மாற்றலாகாது வருந்தினர் என்பது குறிப்பு. **மிக்கபெரும்** - பெரிய கொடுமை குறித்தது.

மிக்கபெரு விடமாயினும் என்று சிறப்பும்மை தொக்கது.

கண்ணுளா - அருமைப்பாடு குறித்தது. அருளுக்கம் செய்பவர் என்ற குறிப்பு; "**ஆலந் தானுகந் தமுதுசெய் தானை**" என்ற பதிகம் பார்க்க. விடமுண்டு அமுதீந்தமை போலப் பிழைபொறுத் தேன்றுகொண்டு கண்ணளிப்பாய்என்பது குறிப்பு.

கச்சி ஏகம்பனே - என்பது அவர் வெளிப்பட்டருளும் இடமும், **பவள வண்ணு** என்பது அவரது வண்ணமும், **விடமுண்ட** என்பது அவரது தன்மையும் குறித்தன; "முன்ன மவனுடைய நாமங் கேட்டாள்" (தேவா) என்ற திருவாக்குக் கருதுக. பின்னர்த் திருவாரூரிலும் இவ்வாறே இம்மூன்று தன்மைகளாற் பரவியமையும் (3462) காண்க.

கடையானேன் எண்ணுத பிழை - பிழை செய்யும் நோக்கத்துடன் எண்ணிச் செய்த பிழையன்று என்பது; "புந்தி நண்ணுத வினை" (சிவப்-30); "உன்சீலமுங் குணமும் சிந்தியாதே" (நம்பி - ஒற்றி-தக்கேசி-6) என்றது காண்க. எண்ணிச் செய்த பிழையாயின் பொறுத்தலரிது; கன்மபலன் அனுபவிக்கச் செய்தே கழித்தல் வேண்டும்; இஃது எண்ணுத பிழையாதலின் அனுபவித்த அளவின்றி, இனிமேலு மனுபவம் வேண்டாது பொறுத்தல் கூடுமென்பது குறிப்பு.

இங்கு - இவ்விடத்து; முன் திருமுல்லைவாயில், திருவெண்பாக்கம் முதலிய இடங்களிற் போலன்றி, இங்கே என்பது.

காணப் பவளவண்ணு கண் அளிப்பாய் - மற் றென்றன்பொருட்டுமன்றி உனது அழகிய பவள வண்ணத்தைக் காணும் பொருட்டுக் கண் அளிப்பாய் என்றது பவளவண்ணு! என்றழைத்த விளியின் குறிப்பு; "எம்மானைக் காணக்கண் அடியேன் பெற்ற வாறே" என்ற பதிகம் காண்க. "கண்காள் காண்மின்களோ?"(தேவா).

பிழை பொறுத்தின்றியான்—என்பதும் பாடம். 286

3441. (இ-ள்) பங்கயச் செங்கைத் தளிரால்...நினைந்து - தாமரைமலர் போன்ற செங்கைத்தளிர்களாலே குளிர்ச்சியுடைய மலர்களைத் தூவி அருச்சனை புரிந்து செங்கயல் மீன்போன்ற கண்களையுடைய மலைவல்லியாகிய உமையம்மையார் பணிந்த திருவடிகளை நினைந்து; பொங்கிய...ஆரூரருக்கு - மேன்மேல் மிக்குஎழும் அன்பினேடு முன் கூறியவாறு பரவித் துதித்த நம்பியாரூரருக்கு; மங்கை...கொடுத்தார் - உமை மங்கை

3442. ஞாலந்தா னிடந்தவனு நளிர்விசும்பு கடந்தவனு
மூலந்தா னறிவரியார் **கண்ணளித்து முலைச்சுவட்டுக்**
கோலந்தான் காட்டுதலுங் குறுகிவிழுந் தெழுந்துகளித்
"**தாலந்தா னுகந்தவ**"னென் றெடுத்தாடிப் பாடினார். 288

தழுவக்குழைந்த திருமேனியினையுடைய திருவேகம்பர் மறைந்த இடது கண்பார்வையினைக் கொடுத்தருளினார்.

(வி-ரை) பங்கயம்...பணிந்த சேவடி - அம்மையார் சிவபூசை செய்து பணிந்த திருவடிகள்; வரலாறு திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் உரைக்கப்பட்டது.

பங்கயம் என்றது நிறமும் வடிவும், **தளிர்** - என்றது மென்மையுங்குறித்தன.

மலைவல்லி பணிந்த - மலையரசன் மகளாராகிய நிலையில் பணிந்த என்றது குறிப்பு; **பணிந்தமை** - உலகுயிர்கள் கண்டு அவ்வாறு தாமும் ஒழுகி உய்யும் பொருட்டாம்;தாம் ஈன்ற உயிர்களை நல்வழி காட்டி உய்விக்கும் கருணை என்பது.

அன்பொடு பரவிப் போற்றிய - முன் பாட்டிற் கூறியபடி துதித்து; **பரவுதல்** - குணங்களை எடுத்துக் கூறுதல்; **பரவிப் போற்றுத**லாவது பரவும் வகையினால் துதித்தல்; இப்பதிகம் கிடைத்திலது!

மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண் கொடுத்தார் - குழைந்தாராதலின் எனக் காரணக் குறிப்புப் படக் கூறியபடி;இடப்பாகம் அம்மை கூருகலின் அம்மையாரை முன் வணங்கி அருள்பெற்ற நிலையால் **இடக்கண்** கொடுத்தார் போலும்; "கண் அளித்து முலைச் சுவட்டுக் கோலந்தான் காட்டுதலும்" (3442) என்பது காண்க. "உமை நங்கை ஏத்திவழிபடப் பெற்ற" என்ற பதிகமும் பார்க்க. ஏனை **வலக்கண்** திருவாரூரிற் கொடுத்தருள நின்றமையும் காண்க.

குறிப்பு:—கண் மறைந்த இடம் திருவொற்றியூரும்; இடக்கண் பெற்றது கச்சி ஏகம்பமும்; வலக்கண் பெற நின்றது திருவாரூருமாம். இவை மூன்றும் பிருதிவித் தலங்களாவன. "ஒடுங்கி (மலத்து) உளதாம்" என்றபடி யாது யாண்டு ஒடுங்கியது, அஃது ஆண்டுநின்றே மீள உளதாம் என்பது உண்மை; "முழுதும் அளித்து, அழித்து ஆக்கு முதல்வர்" (3430) என்ற குறிப்பும் காண்க. அன்றியும் மண் என்ற முதற்பூதத்தின் தன்மையே சிருட்டியாகிய தோற்றத்திற் குரியதாம் நிலையினையும் கருதுக. 287

3442. **(இ - ள்)** ஞாலந்தான்...அறிவரியார் - நிலத்தைக் கீண்டு தேடிய திருமாலும் குளிர்ந்த ஆகாயத்தைக் கடந்த பிரமதேவனும் முறையே அடிமுடிகளின் முடிபினை அறிதற்கரிய இறைவர்; கண்அளித்து....காட்டுதலும் - அம்மை தழுவ முலைச்சுவடணிந்த தமது கோலத்தை ஒரு கண் கொடுத்துக் காணும்படிக் காட்டுதலும்; குறுகி...பாடினார் - அணுகி நிலமுற விழுந்து எழுந்து மகிழ்ந்து "ஆலந்தானுகந்தவன்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடி ஆனந்தக் கூத்தாடினார்.

(வி-ரை) ஞாலந்தானிடந்தவன் - விசும்பு கடந்தவன் - இடந்ததனாலும் கடந்ததனாலும் அறிவரியார் என்பார் அவ்வச் செயல்களை அவ்வவரோடும் உடம்பொடு புணர்த்தி ஓதினார்; முறையே அடிமுடிகளின் என்பது குறிப்பெச்சம்.

முலைச்சுவட்டுக் கோலம் - முலைச் சுவடணிந்தருளிய தமது திருக்கோலத்தை "மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு வளைத்த மும்புடன் முலைச்சுவடணிந்தார்" (*1143*) என்றவிடத் துரைத்த இவ் வரலாறு காண்க. இதனையே மேலும் (*3444*) கூறி முடித்தல் காண்க.

கண்ணளித்துக் - கோலம் - காட்டுதலும் - "காட்டுவித்தா லாரொருவர் காணாதாரே" (தேவா); புறக் கண்ணின்றியும் அகக்கண் கொண்டு சிவயோக நிலையிற் கண்டுகொண்டிருந்த நம்பிகளுக்குப் புறக்கண்ணுங் கொடுத்து அதனாலும் காணும்படி காட்டியருளினார் என்பதாம்; "காணக் கண்ணடியேன் பெற்ற வாறே" என்ற பதிகக்கருத்துக் காண்க; முதலில் அம்மையாரை வணங்கி யருள்பெற்றுப் (*3439*) போந்தமையால் அம்மையாரது முலையின் சுவடணிந்த கோலமே காட்டினார் என்பதும் குறிப்பு. "மங்கை தழுவக் குழைந்தார்...கண் - கொடுத்தார்" (*3341*) என்ற குறிப்பும் காண்க. "தட மார்பு நீங்காத் தைய லாளுல குய்ய வைத்த, காரிரும் பொழிற் கச்சி மூதூர்க் காமக் கோட்ட முண்டாக" (ஓணகாந்தன்றளி - *6*) என்று போற்றிய பெருமை காண்க. *288*

திருக்கச்சியேகம்பம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி. 7-ம் திருமுறை**

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை யாதி யையம ரர்தொழு தேத்துஞ்
சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை யென்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் **கம்பனெம் மானைக் காணக் கண்ணடி யேன்பெற்றவாறே.** (*1*)

எள்க லின்றி யிமையவர் கோனை **யீச னைவழி பாடுசெய் வாள்போல்**
உள்ளத் துள்கி யுகந்துமை நங்கை வழிபடச் **சென்று நின்றவா கண்டு**
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி வெருவி யோடித் தழுவவெளிப்பட்ட
கள்ளக் கம்பனை யெங்கள் பிரானைக் காணக்கண்ணடியேன் பெற்றவாறே. (*10*)

பெற்ற மேறுகந் தேறவல் லானைப் பெரிய வெம்பெரு மானென்றெப் போதுங்
கற்ற வர்பர வப்படு வானைக் "**காணக் கண்ணடி யேன்பெற்ற**" **தென்று**
கொற்ற வன்கம்பன் கூத்தனெம் மானைக் குளிர்பொ ழிற்றிரு நாவலா ரூரன்
நற்ற மிழிவை யீரைந்தும் வல்லார் நன்னெ றியுல கெய்துவர் தாமே. (*11*)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—நம்பிகளுக்கு இடதுகண் கொடுத்துத் திருவேகம்பர் தமது கோலத்தைக் காணக் காட்டுதலும் களித்துக் கண்டு "காணக் கண் அடியேன் பெற்றவாறே" என்று மகிழ்ந்து பாடியது. பதிக மகுடமும், *11*-வது பாட்டும் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) ஆலந்தான் - ஆலம் - விடம்; **தான் -** தன்னையும்; சிறப்பும்மை தொக்கது; **சீலம் -** இயம்பு - நற்குணம். சரித்திரம் - அன்பர்கட் கெளியராந் தன்மை; **ஏலவார் குழலாள் உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற -** அம்மையார் வழிபட்டு வரம் பெற்ற வரலாறு;திருக்குறிப்புத் தொண்டநாயனுர் புராணம் பார்க்க; தலவிசேடமாகிய சிறப்பாதலானும், உயிர்களெல்லாம் இன்பம் பெறும் பொருட்டு அம்மை அறம் வளர்க்கும் தலமாதலானும் அம்மையா ரருள் வழியே கண் பெற்றமையானும் பதிகப் பாட்டுத்தோறும் இதனைப் போற்றுதல் காண்க; **என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற** - "மாறிலாத இப்பூசனை யென்றும் மன்ன" (1146);— **(2) உற்றவர்க்குதவும்** - அல்லலுற்று வழிபட வந்துற்று வேண்டியவர்; சரிதக் குறிப்பு; "பற்றினுர்க்கென்றும் பற்றவன் - பாவிப்பார் மனம்பாவிக் கொண்டானை" என்பதும் குறிக்கொள்க; மகிழ்ச்சியாற் பலதிறமும் பரவியநிலை; மேலும் "அல்லறீர்த்தருள் செய்யவல்லானை" (5) "நண்ணினுர்க்கென்று நல்லவன்றன்னை" (7) பந்தித்த வினைப்பற் றறுப்பானை (8) என்பனவும் காண்க;—**(3) மால்விடை** - திரிபுர மெரித்தபோது விட்டுணுவிடையாகி இறைவரைத் தாங்கினுர் என்பது வரலாறு; "தடமதில்க ளவை மூன்றுந் தழலெரித்த வந்நாளில், இடபமதாய்த் தாங்கினுன் றிருமால்காண் சாழலோ" (திருவா); **கனலா -** கனலால் எரிய; **பெரியகம்பர் -** அம்மையார் பூசித்த திருவேகம்ப நாதர்; மேலும் **நல்லகம்பன், கள்ளக்கம்பன், வெள்ளக்கம்பன்** என்ற மூன்று மூர்த்திகளும் உண்டு. பிரமனுற் பூசிக்கப்பட்டவர் **வெள்ளக் கம்பர்;** "மலர்ப்பொகுட்டணை மேலவன் வழிபடும் **வெள்ளக்** கம்பனை" (காஞ்சிப் புரா; திருவேகம்பப் படலம்-86); விட்டுணுவாற் பூசிக்கப்பட்டவர் கள்ளக்கம்பர்; "மருள்புரி கருத்தினுன் மாய னேத்தலிற், கருதுமப் பெயரிய **கள்ளக்கம்பனை**" (மேற்படி 87); உருத்திரனுற் பூசிக்கப்பட்டவர் **நல்லகம்பர்.** "உருத்திர னலத்தகு மொருமை பூண்டுயர், கருத்தொடும் வழிபடு **நல்லகம்பனை**" (88); இம்மூவரொடும் திருவேகம்பரும் கூடி ஒருவரே நால்வகை உருவத்துடன் இங்குத் தனி வீற்றிருந் தருள்கின்றனர். கரு தரு நல்லனே கள்ளன் வெள்ளனேர், திருவேகம்ப னென்று தன்னெடு, மருமலர்க் கவிழிணர் மாவி னீழல்வா, ழொருவனே நால்வகை யுருவ மேவினுன்" (மேற்படி 89). மேல் "**நல்ல கம்பனை**" **(5),** "**கள்ளக்கம்பனை**" (10) என்று அருளுதல் இவ்வொற்றுமை கருதிய தென்க;—**(4) குண்டலம்** - மகரக்குழை யெனும் காதணி; **வண்டு அலம்பு - அலம்புதல்** - சத்தித்தல்; **(5) அங்கம்** - ஆறு அங்கங்கள்; **(6) கடல் வளரும் சங்கம்** - சங்குகள் உண்டாகும் பல விடங்களுள் கடலில் விளைவன சிறப்புடையன என்பது; **கங்கையாளன்** - கங்கையைத் தரித்தவன்; **கம்** - பிரம கபாலம்; அதனைக் கையிலேந்தியவன் என்றலுமாம்;—**(7) நாம்** -அடியவர்களுள்ளிட்ட நாம்;—**(8) சிந்தித்து...திகழ்வானை** - கண்பெறும் முன் நம்பிகள் கண்ட நிலைக்குறிப்பு; **கந்தவார் சடை** - சடைக்குக் கந்தமாவது அதிற்கூடிய கொன்றை கூவிளம் முதலியவற்றுலாவது; **கந்தம்-** மணம்; —**(9) வரங்கள் பெற்று உழல்** - வரங்கள் பெற்றும் நல்வழிச் சேராது உழன்ற; **பெற்றும்** என்க - சிறப்பும்மை விகாரத்தாற் றெக்கது; **நிரந்தரம்** - அழிவு; இல்லையாக; **நிர்க்கண்டகன்** - கடிய தண்டம் விதித்தவன். **கரங்கள் எட்டு** - "எண்டோள் வீசிநின் றுடும் பிரான்றனை";—**(10) வழிபாடு செய்வாள் போல்** நித்தியமாய்நிகழும் அருட் பூசனையிருக்க, அற்றைக்கு ஒரு நிமித்தம் பற்றி வழிபடுவாள் போல என்க; **நின்றவாகண்டு...வெளிப்பட்ட** - பூசித்துத் தழுவிய வரலாறு; **(11) காண...என்று** - பதிகக்குறிப்பு.

3443. பாடிமிகப் பரவசமாய்ப் பணிவார்க்குப் **பாவையுடன்**
நீடியகோ லங்காட்ட நிறைந்தவிருப் புடனிறைஞ்சிச்
சூடியவஞ் சலியினராய்த் தொழுதுபுறம் போந்தன்பு
கூடியமெய்த் தொண்டருடன் **கும்பிட்டங் கினிதமர்வார்** 289

3443. **(இ-ள்)** பாடி...பணிவார்க்கு - முன் கூறியவாறு மிகக் களித்து மிகவும் பரவசப்பட்டுப் பணிவாராகிய நம்பிகளுக்கு; பாவையுடன்...காட்ட - அம்மையாருடன் கூடிய பழைமையாக நீண்ட திருக்கோலத்தை இறைவர் காட்டக் கண்டு; நிறைந்த...புறம்போந்து - நிறைந்த விருப்பத்துடனே வணங்கிச் சிரமேற் கூடிய அஞ்சலி செய்தாராகித் தொழுது திருக்கோயிலின் புறம்பேபோய்; அன்பு...இனிதமர்வார் - அன்பினுற் கூடிய மெய்யடியார்களுடனே கூடிக் கும்பிட்டுக் கொண்டு அப்பதியில் இனிதாக விரும்பி வீற்றிருப்பாராகிய நம்பிகள்,

(வி-ரை) பணிவார் - நம்பிகள்; வினைப் பெயர்.

பாவையுடன் நீடிய கோலம் - அம்மையப்பராய் உள்ள நித்தியமாகிய கோலம்; "தொன்மைக் கோலமே நோக்கி" (திருவா-கோத்). முன்பாட்டிற் கண்கொடுத்துக் காணக் காட்டியது முலைச்சுவட்டுக் கோலம்; அஃது ஒரு நிலையாகிய சிறப்புக் கோலம்; இஃது என்றும் எங்குமுள்ள பொதுக் கோலம்; "அம்மையப்பரே யுலகுக் கம்மையப்ப ரென்றறிக, வம்மையப்ப ரப்பரிசே வந்தளிப்பர்" (களிறு-1).

அன்பு கூடிய - அன்பு பெருகிய; அன்பினுல் வந்து கூடிய; அன்பினுற் பிணைக்கப்பட்ட என்ற குறிப்புமாம்.

மெய்த் தொண்டருடன் கும்பிட்டு -; "அன்பரொடு மரீஇ" (போதம் - 12); இறை வழிபாட்டில் அன்பரொடு கூடியிருத்தல்பெரும் பயனும் சிறப்பும் தருவது.

அமர்வார் - நம்பிகள்; வினைப்பெயர்; அமர்வார் - போற்றிப் - பரவி - அகல்வார் (ஆகி) - (3444) - எடுத்து - என்று - பாடிப் போய் - வழிக்கொள்கின்ருர் - (3445) - சென்றிறைஞ்சிப் போந்து - அணைந்தார் (3446) என மேல் வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடித்துக் கொள்க. 289

3444. **(இ-ள்)** மாமலையாள்...போற்றி - பெரிய மலைவல்லியாராகிய காமாட்சி யம்மையாரின் முலைச்சுவட்டையும் வளைகளின் தழும்பையும் தாங்கிய மதியும் கொன்றைப்பூக்களும் மலிந்த நீண்ட சடையாரைத் துதித்து; அருள் அதுவாக - அங்கு இறைவர் செய்யும் திருவருள் அவ்வளவேயாகியிட; தேமலர்... கடந்து - தேன் பொருந்திய மலர்களையுடைய நீண்ட சோலைகள் சூழ்ந்த காஞ்சித் திருநகரத்தினைக் கடந்து, பாமலர்...பரவி - பாட்டுக்களின் தன்மைகள் விரிந்து கிடக்கும் மாலையாகிய திருப்பதிகத்தினைத் திருவாரூரின் மேற் பாடித் துதித்து; அகல்வார் - அங்கு நின்றும் மேற் செல்வாராகி,

(வி-ரை) மாமலையாள்...சடையாரைப்போற்றி - திரு ஏகம்பரைத் துதித்து; இப்பதிகங்கள் கிடைத்தில!

3444. மாமலையாண் முலைச்சுவடும் வளைத்தழும்பு மணிந்தமதிப்
பூமலிவார் சடையாரைப் போற்றியரு ளதுவாகத்
தேமலர்வார் பொழிற்காஞ்சித் திருநகரங் கடந்தகல்வார்
பாமலர்மா லைப்பதிகந் திருவாரூர் மேற்பரவி, 290

அருள் அதுவாக - இறைவர் அங்குச் செய்த அருள் அஃதே - அம்மட்டே - அமைய; **அது -** அஃதே; ஏகாரம் பிரிநிலை தொக்கது; **அது -** இடக் கண் கொடுத்த அந்நிலை என்று முன்னறிசுட்டு; "அருளதுவாக" (3431) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; "அருள் இத்தனைகொலாம்" (3435) என்றதும் காண்க.

திருவாரூர் - மேற்பதிகம் - பரவி அகல்வார் என்க. **பரவி -** பரவிக்கொண்டவாறே; **அகல்வார் - பரவி -** என்று வினையெச்சத்தினைப் பின்வைத்தார் அகல்வதாகிய செயலின் முன்னரே நினைதலும் பரவுதலுமாகிய செயல்கள் நிகழ்கின்ற விரைவினைப் புலப்படுத்தற்கு.

மாமலர் மாலைப்பதிகம் - மேல் வரும் பாட்டிற் கூறப்படும் பதிகம். "சொன் மலர்கொண் டிட்டன" (10) என்ற பதிகத்திற் கேற்பப் பாமலர்மாலை என்றார். 290

3445. **(இ-ள்)** அந்தியும்...ஆர்வத்துடனசைவால் - அந்தியும் நண்பகலும் என்று தொடங்கி விருப்பத்தோடும்; எந்தைபிரான்...என்று - எம் பெருமானின் திருவாரூரினை என்றைக்குச் சென்று சேர்வேன் என்ற குறிப்புடனே; சந்த...போய் - சந்த நிறைந்த இசை பொருந்தப் பாடிச் சென்று; தாங்கரிய...வழிக்கொள்கின்றார் - தாங்குதற்கரிய பெருவிருப்பமாகிய பேரன்பு வந்து சேர்ந்தபடியால் அன்பர்களோடு மகிழ்ச்சியோடும் வழிச் செல்வாராகி,

(வி-ரை) "அந்தியு நண்பகலும்" என எடுத்து - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

"எந்தை பிரான் றிருவாரூர் என்று கொலெய்துவது" என்று - இது பதிகக் கருத்தும் உட்குறிப்புமாம். "தென்றிருவாரூர் **புக்கு** எந்தை பிரானாரை என்று கொலெய்துவதே" என்று வரும் பதிக மகுடம் காண்க; எந்தை பிரானாரை - என் னுயிர்க்கின்னமுதை - இடுபலி கொள்ளியை - ஏழுலகாளியை - என் மணியை - எம்மிறையை - என்று பதிகத்துட் பலவாற்றாலும் பன்னி ஆரூரில் இறைவரை எய்துவ தென்று கொல்? என்றருளியிருப்பினும் பிரானது திருவாரூரினை எய்துவ தென்பதே கருத்தாகக் காண்க என்று ஆசிரியர் காட்டியவாறு. என்னை? "தென்திருவாரூர் **புக்கு**" என்றும், "எல்லை **மிதித்து**" என்றும், "என்றன் மனங்குளிர", "எண்ணிய கண்குளிர" என்றும் வருவனவற்றாலும், இடப்பெயர்ச்சியால் ஆரூர் என்ற ஊரினை நீங்கி நின்ற அளவே யன்றி, ஆரூர்ப் பிரானாரை ஒரு போதும் மறந்து நீங்கினா ரல்லராகலானும், [மிக நினைந்து (3427)-ஒரு நாள் மிக நினைந்த சிந்தையராய் (3903) - "ஆரூரானை மறக்கலுமாமே" (பதிகம்)]. தென் திருவாரூர் என்னும் ஊரினைச் சென்று எய்துவ தென்றுகொல் என்பதே பதிகக் கருத்தாம். இதுபற்றியே "பதிகம் **திருவாரூர் மேற்** பரவி" (3444) என்றும், "**திருவாரூர்** என்று கொல் எய்துவது என்று" என்றும் அருளினர். நம்பிகளது இத்திருவுள்ளக் கருத்து "**சடையான் மேவிய ஆரூரைப்...**பன்னெடுஞ் சொன் மலர் கொண் டிட்டன பத்து" (10)

3445. "**அந்தியுநண் பகலு**"மென வெடுத்தார்வத் துடனசைவால்
"**எந்தைபிரான் றிருவாரூ ரென்றுகொலெய் துவ**"தென்று
சந்தவிசை பாடிப்போய்த் **தாங்கரிய வாதரவு**
வந்தணைய **வன்பருடன் மகிழ்ந்துவழிக் கொள்கின்றார்.** 291

என்ற திருக்கடைக் காப்பினில் விளங்குதலும் காண்க.

சந்த இசை பாடி - இசை - பண்; இசை அமைந்த பதிகம்; **இசை -** இப்பதிப் பண்ணாகிய புறநீர்மை; இப்பண்ணுக் குரிய நேரம் விடியற் காலமாம்; எனவே நம்பிகள் காஞ்சிபுரத்தினின்றும் திருவாரூரை நோக்கி வைகறை யாமத்தில் புறப்பட்டு வழிக்கொண்டருளினர் என்பது கருதப்படும்; தமது எஞ்சிய இன்னலாகிய இருள் நீங்கும் காலம் என்ற குறிப்பும் தருவது. *1333*-ம் பாட்டும் கருதுக.

தாங்கரிய ஆதரவு - உள்ளடக்கிப் பொறுத்தற்கரிய பேரன்பு -ஆசை.

அன்பருடன் - "தொண்டருடன்" (*3443*) என்றது காண்க.

வழிக் கொள்ளுதல் - பயணப்பட்டு மேற் செல்லுதல். *291*

திருவாரூர்

திருச்சிற்றம்பலம் **பண் - புறநீர்மை, 7-ம் திருமுறை**

அந்தியு நண்பகலு மஞ்சு பதஞ்சொல்லி
முந்தியெ ழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் **தென்றிரு வாரூர்புக்**
கெந்தை பிரானாரை யென்றுகொ லெய்துவதே. (1)

நின்ற வினைக்கொடுமை நீங்க விருபொழுதுந்
துன்று மலரிட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றன் மணங்கமழுந் **தென்றிரு வாரூர்புக்**
கென்றன் மனங்குளிர வென்றுகொ லெய்துவதே. (2)

முன்னை முதற்பிறவி மூதறி யாமையினாற்
பின்னை நினைந்தனவும் பேதுற வும்மொழியச்
செந்நெல் வயற்கழனித் **தென்றிரு வாரூர்புக்**
கென்னுயிர்க் கின்னமுதை யென்றுகொ லெய்துவதே. (3)

மின்னெடுஞ் செஞ்சடையான் **மேவிய வாரூரை**
நன்னெடுங் காதன்மையா லூரன் கோனூரன்
பன்னெடுஞ் சொன்மலர்கொண் டிட்டன பத்தும்வல்லார்
பொன்னுடை விண்ணுலக நண்ணுவர் புண்ணியரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—"எந்தைபிரான் றிருவாரூர் என்றுகொ லெய்துவது?" என்பதாம்; ஆசிரியர் (3445)-ல் காட்டியருளியவாறு; பதிகத் திருக்கடைக் காப்பும் பார்க்க; "மேவிய ஆரூரை - சொன்மலர் கொண்டிட்டன."

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) அந்தி - காலை - மாலை நேரங்கள்; இரவும் பகலும் சந்திக்கும் நேரங்களாதலால் இவை **சந்தி** எனவும் படும்; **நண்பகல்** - நடுப்பகல்; இஃதும் சந்தி எனப்படும்; "முட்டாத முச்சந்தி" "சந்தி மூன்றிலும் தாபர நிறுத்திச் சகளி செய்திறைஞ் சகத்தியர்" என்பன காண்க; **அஞ்சுபதம்** - திருவைந்தெழுத்து;இதனுள் ஒவ்வோர் எழுத்தும் ஒவ்வோர் பதமாகப் பொருள் தருதலாற் **பதம்** என்றார்; "பதமஞ்சும்" (தேவா.); **அந்தியும்... சொல்லி** - சந்தி செய்து; "அந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே" (தேவா); **முந்தி...மூடாமுன்** - பழைய வினைப்பயத்தால் சிந்தை மறந்து இறப்பு வருதற்கு முன்; **பழையவல் வினை** - சஞ்சிதம்; **பராமரியா** - ஆலோசித்து;ஆராய்ந்து; **தென்றிருவாரூர்** - ஆரூரில் இறைவரது பூங்கோயில் இருக்கும் பகுதி தென்றிருவாரூர் எனப்படும்; "செல்வமல்கிய தென்றிரு வாரூரான்" "செடிக ணீக்கிய தென்றிரு வாரூரான்" "தேசமல்கிய தென்றிரு வாரூரான்" எனவரும் பிள்ளையார் தேவாரங்களும், "தேங்கமழ் சோலைத் தென்னாரூர்த் திருமூலட்டானனன்" என்ற அரசுகள் திருவாக்கும் காண்க; **கொல்** - அசை;— **(2) நின்றவினைக் கொடுமை** நீங்க - நம்பிகளது சரிதக் குறிப்பு; **நின்ற** - எஞ்சி நின்ற; **இருபொழுது** - காலை மாலைகள்; "காலையிலு மாலையிலுங் கடவுளடி பணிந்து" (கலயநல்லூர்) **தென்றல்** - **3424;—(3) முன்னை முதற் பிறவி** - இப்பிறவிக்குக் காரணமாய் அடுத்து முன்னின்ற பிறவி நிலை; **முன்னை... ஒழிய** - நம்பிகளது சரிதக் குறிப்பு. **முதறியாமை** - **முதுமை** - தொன்மை; அறிவில்லாமை; **பேதுறவு** - மயக்கம்; **பின்னை நினைந்தன** - கழிவிரக்கம்;**—(4) கொல்ல நினைப்பனவும் குற்றமுமற்று** - கொல்ல **நினைத்தல்தானும்** ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்று; ஏனைக் குற்றமெனப்படுவன எல்லாம் ஒரு புறமும், கொலை நினைவு ஒன்று மற்றொரு புறமுமாக ஒப்புடையன என்பது;—(5) **கடுவரிமா** - கொடிய நீண்ட மாமரம்; **மா** - மாமரத்தினை; **மாக்கடலுட் காய்ந்தவன்** - மாமரத்தைக் கடலினுள் துண்டப்படுத்தி வீழ்த்தியவன்; முருகன்; **வன்தலைவாய் அடு புலி** - தன்மை நவிற்சி அணி; **அரி** - மாவயிரம்; சிங்கம் என்று கொண்டு, சிங்கனையும், மாவாய் நின்ற சூரனையும் என்றலும் ஒன்று. **கடுமை** - உரம் - வேகம்; **வரி** - பொரியுமாம். **சுடுபொடி** - ஊழியிற் சங்காரத்தில் வெந்த சாம்பல்;"வெந்த சாம்பல் விரை" (தேவா); **கொள்ளி** - கொள்பவன்; பெயர்**—(6) சூழ் ஒளி...கதிரோன்** - அட்ட மூர்த்தம்; **உலகாளி** - உலகாள்பவர்; **ஏழ் இசை - ஏழ் நரம்பின் ஓசை** - ஏழு இசைகளும் முறையே எழும் தானங்கள்; **உலகாளி** - உலகை ஆள்பவர்; **ஆளி** - பெயர்;**—(7) வம்பனை** - **வம்பு** - மணம்; புதுமையுமாம். **வைப்பனை** - தம்முள் ஒடுங்குதற் கிடமானவரை; **ஒப்பு அமரா** - ஒப்பில்லாத;**—(8) பாறு** - பருந்து; **பாறணி வெண்டலை** - கழுகுகள் வாழும் காட்டில் கிடக்கும் வெண்தலை; கபாலம்; மண்டையோடு; **ஏறு** - இடபக்கொடி;**—(9) எண்ணிய கண்குளிர** - காண எண்ணியவாறு கண்ணார;**—(10) ஆரூரைச் - சொன்மலர் கொண்டிட்ட** - ஆரூரைப் பாடிய. "ஆரூரைப் பத்தி மலர்தூவ" (பிள்).

3446. (இ-ள்) மன்னு...இறைஞ்சி - வழியிடையில் பொருந்திய திருப்பதிகள் தோறும் வன்னியொடு வில்வத்தினையும் தலையின்மேற் சூடி மகிழ்ந்தாராகிய இறைவரின்

3446. மன்னுதிருப் பதிகடொறும் வன்னியொடு கூவிளமுஞ்
சென்னிமிசை வைத்துவந்தார் கோயிலின்முன் சென்றிறைஞ்சிப்
பன்னுதமிழ்த் தொடை சாத்திப் பரவியே **போந்தணைந்தார்**
அன்னமலி வயற்றடங்கள் சூழ்ந்த**திரு வாமாத்தூர்.** 292

திருக்கோயில்களின் முன் சென்று வணங்கி; பன்னு தமிழ்...போந்து - பன்னிய தமிழ் மாலைகளைச் சாத்தித் துதித்துச் சென்று; அன்னமலி...திருஆமாத்தூர்- அன்னங்கள் மலிந்த வயல்களும் தடாகங்களும் சூழ்ந்த திரு ஆமாத்தூரினை; அணைந்தார் - சேர்ந்தருளினர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மன்னு திருப்பதிகள் தொறும் - காஞ்சிபுரத்தினின்றும் திருவாரூர் போகும் வழியில் பொருந்திய பதிகளில் எல்லாம்; இவை திருவில்வலம், திருக்குரங்கணின் முட்டம், புரிசை நாட்டுப் புரிசை, திருவெண்குன்றம், திண்டீச்சரம், திருப்புறவார் பனங்காட்டூர் முதலாயின என்பது கருதப்படும். இவை காஞ்சிபுரத்தினின்றும் நேர் தெற்குநோக்கிச் செல்லும் சாலைவழியில் உள்ளன; பெரும்பாலும் மட்சாலை வழியேயாம்; இவைகட்கு நம்பிகள் பதிகம் கிடைத்தில!; இவை பெரும்பான்மை வைப்புத்தலங்கள். தேவாரப் பாடல் பெற்ற பதிகளும் சில; நம்பிகள் பதிகங்களிலும் வைப்பாயுள்ளனவும் சில.

பன்னுதமிழ்த் தொடை சாத்தி - பதிகங்கள் பாடி;இவை சிதலரித் தொழிந் தனபோலும்!. 292

3447. **(இ-ள்)** அங்கணரை... வணங்கி - அங்கண்மையுடையவரைத் திருஆமாத் தூரில் எழுந்தருளிய அழகராகிய இறைவரைத் திருவடியில் வணங்கி; தங்கும்...போய் - தங்கும் இசையினையுடைய திருப்பதிகத்தினைப் பாடி மேற் சென்று; தாரணிக்கு...கடந்து - உலகுக் கெல்லாம் மங்கலமாக விளங்கும் பெருமையுடைய தொண்டைவள நாட்டினைக் கடந்து மேற்சென்று;செங்கண்...நீர்நாடு - கோச்செங்கட் சோழநாயனர் திருவவதரித்த சிறப்புக்கள் நாடிவந்தடைகின்ற நீர்நாடு என்னும் சோழ நாட்டினை;அணைந்தார் - சென்றணைந்தருளினர்.

(வி-ரை) அங்கணரை - பசுக்களுக்குத் தாயகமாய் விளங்குதல் குறிப்பு. **ஆமாத்தூர் அழகர் - அழகர் -** இத்தலத்துச் சுவாமிபெயர்; "அழகியரே யாமாத்தூரைய னரே" (தாண்). தலச் சுவாமி பெயரும் அம்மைபெயருங் காண்க.

தங்கும் இசை - தங்குதல் - நிலைபெறுதல்; தங்கலோசையினை உடைய இசை என்ற குறிப்புமாம்;இங்குத் தங்கலோசையாவது பாட்டின் ஒவ்வோரடியிலும் முதற்சீர்கள் சொற்பொருட் பின்வருநிலையாய் இருமுறை அடுக்கி வருதலின் விரைந்து தொடர்ந்து பாட இயலாது ஓசை தங்கிச் செல்லுதல்; "காண்டனன் காண்டனன்" "பாடுவன் பாடுவன்"; "தேடுவன் றேடுவன்" என்பவை போல் எல்லாப் பாடல்களிலும் வருவனவும், அடிதோறும் இறுதிச் சீரில் ஓசை தங்குதலும் காண்க. **இசை** - பதிகப் பண்ணாகிய பண் - கொல்லிக் கௌவாணம் என்ற குறிப்புமாம்; சிவயோக நிலையில் இறைவர் திருவடிக் கூட்டத்திற் பிரியாது தங்கிய என்ற குறிப்பும் காண்க.

3447. அங்கணரை யாமாத்தூ ரழகர்தமை யடிவணங்கித்
தங்குமிசைத் திருப்பதிகம் பாடிப்போய்த் **தாரணிக்கு**
மங்கலமாம் பெருந்தொண்டை வளநாடு கடந்தணைந்தார்
செங்கணவள வன்பிறந்த சீர்நாடு நீர்நாடு. 293

தாரணிக்கு மங்கலமாம் பெருந்தொண்டை வளநாடு - நிலமடந்தைக்கு மங்கலம் தரும் வளநாடு - தொண்டை நாடு என்பது; **மங்கலமாவது** ஒரு நாட்டினுக்கு இன்றியமையாது வேண்டப்படும் சீரும் சிறப்பும் தரும் இயல்பு; நாடுமுழுதும் சிவமயமாய் விளங்கும் சிறப்புப் பற்றித் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்துள் உரைத்தவை பார்க்க; அம்மையார் தவஞ்செய்து வரம் பெற்ற தன்மையால் உலகுய்ய வைத்த அறங்கள் எல்லாம் வளர்க்கும் காமக் கோட்டத்தை உடையதா யிருத்தலும் குறிப்பு. தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து என்றபடி சான்றோர்களை உடைமையாகிய தனிச் சிறப்பு முணர்த்தியபடி; "எவ்வழி நல்லவராடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம்); "உலகினிற் கெல்லா மங்கலந்தரு மழவிளம் போதகம்"; (2046) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

வளநாடு - அந்நாளில் தொண்டை நாடு சோழ நாட்டின் ஒரு பகுதியாகச் செயங்கொண்ட சோழ **வளநாடு** என்று பெயர் பெற்றிருந்தது. **வளநாடு** - பெரு நாட்டின் உட்பிரிவு; சோழர்களின் ஆட்சி பரவிய காரணத்தால் இப்பெயர் பெற்றது.

மங்கலமாம் - ஆக்கச்சொல் உவமை குறித்ததெனக் கொண்டு மங்கல நாண்போல என்றுரைப்பர் இராமலிங்கத் தம்பிரானர்.

செங்கண்...நீர்நாடு - சோழ நாட்டில் அவதரித்த பெரியோர் பலராயினும், அருளால் முன்னறிந்து பிறந்தமையாகிய பிறப்பின் சிறப்பும், சிவனுக்கு 78 மாடக்கோயில்கள் அமைத் தரசாண்ட சிவபுண்ணியச் சிறப்பும் பற்றிக் கோச்செங் கணரின் பிறப்பினைப் பற்றி நாட்டுக்குச் சிறப்புக் கூறினர்; **நீர்நாடு** - காவிரி நாடு; சோழநாடு. **பிறந்த - நீர்நாடு** என்றது படை எடுப்பென்றதாலன்றிப் பிறப்புரிமையால் சோழர்க்குரியது என்பது குறிக்கப் **பிறந்த** என்றதாம். **293**

திருஆமாத்தூர்

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லிக் கௌவாணம்**

காண்டனன் காண்டனன் காரிகை யாடன் கருத்தனாய்
ஆண்டன னண்டன னமாத் தூரெம் மடிகட்காட்
பூண்டனன் பூண்டனன் பொய்யன்று சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித் தல்லா தவர்கட்கே. (1)

ஓர்ந்தன னோர்ந்தன னுள்ளத்துள் ளேநின்ற வொண்பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன் சென்று திருவொற்றி யூர்புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன் சங்கிலி மென்றோ டடமுலை
ஆர்ந்தன னார்ந்தன னமாத் **தூரைய னருளதே.** (4)

தேடுவன் றேடுவன் செம்மலர்ப் பாதங்க **ளநொறும்**
நாடுவ னூடுவ னுபிக்கு மேலேயோர் நால்விரல்
மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே
ஆடுவ னூடுவ னுமாத் தூரெம் மடிகட்கே. (9)

ஐயனை யத்தனை யாளுடைய யாமாத்தூ ரண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொரு ளான விமலனை
மையனை மையணி கண்டனை வன்றெண்ட னூரன்சொற்
பொய்யொன்று மின்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—சிவயோக நிலையிற் பிரியாது இறைவருடன் கூடி நின்ற நிலை குறித்தது; திருவொற்றியூர்ச் சரித நிகழ்ச்சியுள்ளும் திருவருளே நிகழக் கண்டு நின்ற நிலையும் குறிப்பு. இப்பதிகம் மிக அருமையான சிவயோகம் பற்றிய பெரும் பொருள்களை உடையது. நம்பிகளது நிலையினை நன்கு விளக்குவது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—காண்டனன் - கண்டான்; **காண்டல்** - செய்தல்; படைத்தல் என்றலுமாம். "முனைவன்கண்டது" **காரிகை** - அம்மை; **கருத்தன்** - தலைவன்; **ஆண்டனனுதலாற் ஆட்பூண்டனன்** என்க; **மீண்டனன்** -விலகினேன்; **வேதவித்து** - வேத வொழுக்க முடையோர்; **வித்து** - அறிஞர்.—(2) **கூடுவன்** - சிவயோக நிலை; **குறிப்பு**- மனத்தினுள் தியான உறைப்புப் பற்றிய குறிக்கோள். "குறிப்பினுலே கூப்பினுன் றுபரத்தை" (தேவா) "குறித்த பூசை" **(1241); (3) ஆய்ந்தவன்** - என்னுல் உள்ளே ஆராய்ந்த இடத்துத் தெளியப்பட்டவன்; செயப்பாட்டுவினை;—**(4) ஓர்ந்தனன்... ஒண்பொருள்** - சிவராஜயோகம்; **சேர்ந்தனன்...அருளதே** - நம்பிகளது சரித நிகழ்ச்சியும், அதனை அருள் நிகழ்ச்சியாகவே கண்ட நிலையும் குறிப்பு; **அது அருளே** என்க. ஏகாரம் பிரிநிலை; ஏகாரம் பிரித்துக் கூட்டுக; **ஆர்தல்** - நிறைவு பெற வினைப்போகம் நுகர்தல்;— **(5) நீதி...செய்யருள்** - நீதி நிறைந்த அன்றே அருள் செய்யும் என்றபடி; **நீதி** - நியதி; இறைவர் விதித்த ஒழுக்கநிலை; **அன்றவன்** - அன்றே - அநாதியே - உள்ளவன். **(6) ஆமாத்தூரையும்... பூண்டவன்** - ஆமாத்தூரை விரும்பி வீற்றிருத்தல் போலவே என்னெஞ்சும் இடமாகக் கொண்டு என்னை ஆளாக ஏற்றவர்; "கண்ணி னுற்கழல் காண்பிட மேதெனிற், புண்ணி யன்புக லூருமென் னெஞ்சுமே" (அரசு); **புரளவே - பூண்டவன்** - என்க; **நேடல்** - தேடுதல்;—**(7) உயிர்தங்கட்கு - எண்ணவன்** என்றும், **காண்டுமென்பாரவர் தங்கட்குக் கண்ணவன்** என்றும் கூட்டுக; **எண்** - மதிப்பு - எண்ணம் - எண்ணத்திலுள்ளவன். **பாகம் பெண்ணவன்** என்க; **அண்ணவன்** - உயிர்கட்கு அணிமையானவர்;—**(8) பொன்னை... போகவிடா** - நம்பிகளது சரிதக் குறிப்பு **அன்னவன்** - அத்தன்மையுடையோன்; **என்னவன்** - என்னை உடையோன்; தலைவன்;—**(9) நாடுவன்...நால்விரல்** - சிவராஜயோகம்; **நாபிக்கு மேலேயோர் நால்விரல்** - யோகத்தானங்களுள் ஒன்று; அநாகதத்தானம்; இருதயம்; அங்குள்ள உருத்திர மூர்த்தியை நாடுவேன் என்றும் கூறுவர். "மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற, பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற, **கோலித்த குண்டலி** யுள்ளே செழுஞ்சுடர், ஞாலத்து **நாபிக்கு நால்விரற்**

3448. அந்நாட்டின் மருங்கு **திரு வரத்துறையைச் சென்றெய்தி**
மின்ஞரும் படைமழுவார் விரைமலர்த்தாள் பணிந்தெழுந்து
சொன்மாலை மலர்க் "**கல்வா யகி**"லென்னுந் தொடை சாத்தி
மன்ஞர்வத் திருத்தொண்ட ருடன்மகிழ்ந்து வைகிஞர். 294

கீழே" (திருமந். 3-32) முதலாக வரும் திருமூலர் திருவாக்குக்களும் கருதுக; **மாடுவன் -** செய்வேன். **மாடுதல் -** செய்தல்; சேரச் செய்தல். "ஏடுமலி கொன்றையா விந்துவிள வன்னி, மாடவல செஞ்சடையெம் மைந்தனிடம்" (திருநள்ளாறு, திருவிரா -இந்த - 1), "அஞ்செழுத் தாலுள்ள மரனுடைமை கண்டரனை யஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில் - அஞ்செழுத்தாற், **குண்டலியிற் செய்தோமங்** கோதண்டஞ் சானிக்கில் அண்டனஞ் சேடனமங்கு" (போதம்-9-3); சிவோகம்பாவனை செய்தல்; **வன்கை...ஆடுவன்** - பிராணயாமஞ் செய்து சிவோகம்பாவனையில் அரனை உள்ளே கண்டு கொண்டானந்தித் திருத்தல்; நம்பிகள் சிவயோக நிலையினைப் பற்றி நின்று உலகுக்குதவ வந்தவர் என்னும் நிலைக்குறித்தது; மேல்வரும் பாட்டும் பார்க்க;—**(10) உற்றவர் -** உலகியற் பிறப்பினல் உறவாவார்; ஒழிந்து (வந்து) **உற்றனன்** என்க; **தம்மை ஒழிந்து -** உலகப்பற்று நீங்கி; **உள்பொருள் -** உள்ளும் பொருள் என்பர். **உள்ளத்துள் பொருள் பற்றுதலாவது -** உயிர்க்குயிராய் ஒளித்து விளங்கும் இறைவனை உள்ளே சிவயோகத்தாற் கண்டு பற்றிக் கொள்ளுதல்; "சிக்கெனப் பிடித்தேன்" (திருவா); "என்னுளே தேடிக் கண்டு கொண்டேன்" (தேவா); **அற்றனன்** பிற பற்றெல்லாம் அற்றனன்; "அற்றவர்க்கற்ற சிவன்" (தேவா); **அடியார்கட் காட்பெற்றனன் -** அடியார்களுக்காட் செய்யப் பெறுதல் சிவனடிப் பேற்றினும் பெரும் பேறு என்பது; **பிறவாமைக்கே -** இனிப் பிறவாமை பெறும் பொருட்டே; **பெயர்த்தும் பெயர்த்தும் -** பிறவி ஒன்றினுலொன்று மேன்மேல் தொடர்ந்து வருதல் குறிக்க அடுக்கிக் கூறினர்;—**(11) மையன் -** வஞ்சகன்; கள்வன்; "உயிர்தொறு மொளித்து நின்ற கள்வனை" (திருவிளை - புரா - மண்சு - பட); "எனதுள்ளங்கவர் கள்வன்" (தேவா); **மையனை - மையல் - நை -** மயக்கங் கெட்ட; **மையம் -** நடுவு நிலைமையுமாம். **புலம்பல் -** அன்பு மேலீட்டால் ஆனந்தக் கண்ணீர்வார வாய் குழறிப் போற்றுதல் - சிவப்பிரகாச தேசிகர் குறிப்புக்கள். **மையணி - மை -** மை போன்ற கரிய விடம்; ஆகுபெயர்.

தலவிசேடம்:—**திருஆமாத்தூர்** III முதல் பாகம்: பக். 314 பார்க்க. **ஆமாத்தூர் -** பசுவுக்குத் தாயகமான ஊர்; ஆமாதாவூர் என்பது ஆமாத்தூர் என மருவிற்று.

3448. **(இ-ள்)** அந்நாட்டின்...எய்தி - அத்திரு நாட்டின் எல்லைக்குள் ஒரு பக்கத்தில் உள்ள திருநெல்வாயில் அரத்துறையினைச் சென்று சேர்ந்து; மின் ஆரும்... எழுந்து - ஒளிபொருந்திய படையாகிய மழுவை ஏந்திய இறைவரின் மணமுடைய மலர் போன்ற பாதங்களை நிலமுறவீழ்ந்து வணங்கி எழுந்து; சொன்மாலை...சாத்தி - சொன்மலர் மாலையாகிய "கல்வா யகில்" என்று தொடங்கும் மாலையினைச் சாத்தி; மன் ஆர்வம்...வைகினர் - நிலை பெற்ற ஆர்வத்தினையுடைய திருத்தொண்டர்களோடும் மகிழ்ச்சி பொருந்தி எழுந்தருளி யிருந்தனர்.

(வி - ரை) **அந்நாட்டின் மருங்கு** - அந்நாளில் நடு நாடு, சோழ அரசமரபினராகிய பல்லவர்களுக் குட்பட்டிருந்தமையால், **அந்நாடு** - என்பது சோழ நாட்டினையே குறிப்பதாம்; **அகரம்** - முன் **நீர்நாடு** என்று கூறிய அந்த என முன்னறிசுட்டு; **மருங்கு** - ஒரு புறமாக.

மருங்கு - சோழர்களுக் குட்பட்ட சிற்றரசர்களாகிய முனையதரையர் மரபினர்களால் ஆளப்பட்ட குறிப்பு. அரசாட்சி பற்றிய நடுநாடு என்ற பிரிவு பிற்காலத்தது.

சொன்மலர் மாலை என்க; **மாலைத்** (யாகிய) **தொடை** என்று கூட்டுக.

"**கல்வாயகிலும்**" பதிகத் தொடக்கமாகிய முதற்குறிப்பு.

அந்நாளில் திரு ஆமாத்தூரினின்றும் விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டை - வழியே நேரே தென்மேற்காய்த் திருநெல்வாயிலரத்துறையினை அடைந்து, நிவா நதியைக் கடந்து செல்லும் பாதை ஒன்று வழக்கிலிருந்தது; ஆளுடைய அரசுகள் தில்லையினின்றும் மேற்கே திருநாரையூர் சென்று சீகாழிக்கு எழுந்தருளியதும், ஆளுடைய பிள்ளையார் திருநெல் வாயிலரத்துறையினின்றும் மீண்டு சோழநாட்டுப் பதிகளைக் கும்பிட்டுத் திருநாரையூர் - திருக்கருப்பறியலூர் வழியே போந்து சீகாழிக்கு எழுந்தருளியதும், ஆகிய வழிகளை ஈண்டுக் கருதுக.

குறிப்பு:—நம்பிகள் திரு ஆமாத்தூரினின்று திருவாரூருக்கு எழுந்தருளும் நிலையில் திருநெல்வாயிலரத்துறை, திருவாவடுதுறை, திருத்துருத்தி இவற்றை வழிபட்டுப் போந்தருளினர் என்ற சரிதப் பகுதிக்கு "எற்றே யொருகண் ணிலன்; நின்னையல்லால் நெல்வாயி லரத்துறை நின்மலனே, மற்றேலொரு பற்றிலன்" என்றும், "கண்ணி லேனுடம் பில்வடு நோயாற் கருத்த ழிந்துனக் கேபொறை யானேன்... திருவாவடுதுறையுள், அண்ண லேயெனை யஞ்சலென் றருளா யாரெனக்குற வமரர்க ளேறே" என்றும், "என்னை நான் மறக்குமா றெம்பெரு மானை யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை" (திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்) என்றும் வரும் அவர் திருவாக்குக்கள் பெரிய அகச்சான்றுகளாய் விளங்குகின்றன; நம்பிகள் ஒரு கண்ணின்றி இப்பதிகளை வழிபட்டனர் என்பது இவற்றுள் விளங்கும். 294

திருநெல்வாயி லரத்துறை

திருச்சிற்றம்பலம் — பண் - இந்தளம். 7-ம் திருமுறை

கல்வா யகிலுங் கதிர்மா மணியுங் கலந்துந் திவருந் நிவவின் கரைமேல்
நெல்வா யிலரத் துறைநீ டுறையுந் நிலவெண் மதிசூ டியநின் மலனே
நல்வா யில்செய்தார் நடந்தா ருடுத்தார் நரைத்தா ரிறந்தா ரென்று நானிலத்திற்
சொல்லாய்க் கழிகின் றதறிந் தடியே னுய்யப் போவதோர் சூழல் சொல்லே. (1)

புற்று டரவ மரையார்த் துகந்தாய் புனிதா பொருவெள் விடையூர் தியினுய்
எற்றே யொருகண் ணிலனின் னையலா னெல்வா யிலரத் துறைநின் மலனே
மற்றே லொருபற் றிலனெம் பெருமான் வண்டார் குழலாண் மங்கைபங் கினனே
யற்ருர் பிறவிக் கடனீந்தியேறி யடியே னுய்யப் போவதோர்சூழல் சொல்லே. (3)

நீரூ ருந்நெடு வயல்சூழ் புறவி னெல்வா யிலரத் துறைநின் மலனைத்
தேரூர் நெடுவீதி நன்மா டமலி தென்னு வலர்கோ னடித்தொண்டு பண்ணி
யாரூ ரனுரைத் தனநற் றமிழின் மிகுமாலை யோர்பத் திவைகற்று வல்லார்
காரூர் களிவண் டறையா னைமன் னவராகி விண்முழு தாள்பவரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஒரு கண்ணிலேன்; உன்னை யன்றி ஒரு பற்றிலேன்; அடியேனுய்யப் போவதோர் சூழல் சொல்லே என்றது; பதிக மகுடம் பார்க்க. **குறிப்பு:—** இப்பதிகம் தமிழ் இலக்கிய நயமும் நீதி ஞான மொழிகளின் நயமும், தத்துவ நிச்சயமாகிய உபதேச நயமும் செறிந்த அருமைப்பாடுடையது. திருக்குறட் கருத்துக்களும் காணப்படுவது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) கல்வாய் - கல் - மலை; மலைபடுபண்டமாகிய; இதனை **மணி**யுடனும் கூட்டுக; **நிவ -** நிவா நதி; ஈற்றேகாரம் குறுகி வந்தது; **நிலா -** என்பது **நில** என வருவது போல; **உந்திவருதல்** நீர்சிறப்பு மிகுதி; **நீடு உறையும் -** பழமையாக உறைகின்ற; **நல்வாயில்...சொல்லாய்க் கழிகின்றது -** யாக்கை நிலையாமை; **சொல்லாய்க் கழிகின்ற**தாவது சொல் மாத்திரை அளவிற் போய் ஒழிவது; விரைவுக் குறிப்பு. **நல்வாயில் செய்தல் -** குழவி பிறந்த மகிழ்ச்சி நலம் பகர்ந்து சடங்கு செய்தல்; **சூழல் -** உபாயம்;**—(2) நிலையாத இம்மண்ணுலகில் -** நிலையாமையே நிரம்பிய உலகு; கணந்தோறும் அழிவு பெறுகின்ற நிலை. **பொறிவாயில்...அவிய -** "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்கம்" (குறள்) என்ற திருக்குறட் சொல்லும் பொருளும் ஆட்சி;**—(3) எற்றே ஒரு கண்ணிலன் - நின்னையலால் மற்றொரு பற்று மிலேன் -** நம்பிகளது சரிதங் குறித்த அகச்சான்று; **(4) கோடு** கொம்பு; **கோங்கு -** மரவகை; **ஓடுபுனற் கரையா மிளமை -** விரைந்தோடும் யாற்றின்கரை இடிவது போல இளமை விரைவிற் கரைந்து இடிந்து கழியும்; "இடிகரை" யொத்த திளமை; **உறங்கி விழித்தா லொக்குமிப் பிறவி -** "உறங்குவது போலுஞ் சாக்கா; டுறங்கி, விழிப்பது போலும் பிறப்பு" (குறள்) என்ற திருக்குறளாட்சி, யாக்கை நிலையாமையும் விரைந்து தொடரும் பிறவிச் சூழலும் குறித்தது;**—(5) கல்பொழிய -** மலைமேல் மழைபொழிய. **கல் -** மலை; **மயிலார் -** மயில் போன்ற சாயலினை உடைய பெண்கள்; **அலம்வந்து -** வருந்தி - துன்பப்பட்டு;**—(6) கனகம் -** பொற்சன்னம்; **நெல் வால் -** நெல்லின் சிறிய கூரிய நுனியும்; நுனிதானும் இழிவு சிறப்பும்மை தொக்கது. **அலந்தேன் -** வருந்தி யொழிந்தேன்;**—(7) சிகரம் -** மலையுச்சி; **மணக்கோலமதே பிணக்கோலமதாம் பிறவி -** மணமென மகிழ்வர் பின்னே பிணமெனச் சுடுவர் - என்ற ஞானம்;"மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய், அணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகையொலி யாய்கழியக், கணமதனிற் பிறந்திறுமிக் காயத்தின் வரும்பயனை, உணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க் கொன்றுமிலை" (பழியஞ்சின படலம்-40) என்ற திருவிளையாடற் புராணம் ஈண்டு நினைவு கூர்தற்பாலது; **அகரம் முதலி னெழுத்தாகி நின்றாய் -**எழுத்துக்களுள் அகரம் விரவி நின்று முதலுமாதல் போல இறைவர் உயிர்களினறிவினுள்ளே அறிவாகி விரவி நின்று முதல்வனுமாவன்; "அகர முதல வெழுத்தெல்லா மாதி, பகவன் முதற்றே யுலகு" (குறள்) என்ற திருக்குறட் கருத்து

3449. பரமர்திரு வரத்துறையைப் பணிந்துபோய்ப் பலபதிகள்
விரவிமழ விடையுயர்த்தார் விரைமலர்த்தா டொழுதேத்தி
உரவுநீர்த் தடம்பொன்னி யடைந்தன்ப ருடனுடி
அரவணிந்தா ரமர்ந்ததிரு வாவடுதண் டுறையணைந்தார். 295

ஆளப்பட்டது; இதனைப்பின் வந்த ஞானசாரியர் உமாபதி சிவனுர் "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு, நிகரிலிறை நிற்கு நிறைந்து" (திருவருட் பயன் - 1) என்று ஞான சாத்திரத்தினுள் விரித்தல் காண்க. **எழுத்து முதலின் அகரமாகி நின்றுய்** என்க; **ஆகி** - உவமப் பொருள். தந்து நின்றது; அகரம் போல; (8) **பண்டே... பெற்றேன்** - இறைவரது திருநாமத்தைப் பயில்வதற்கு மிக்க முன்னைத் தவம் வேண்டப்படும் என்பதாம்; **செய்த பாக்கியம்** - தவஞ்செய்து தேடிய பயன்; **நாமம்** - திரு வைந்தெழுத்து; இந்நாளில் இறைவன் றிருநாமத்தைப் பயிலுதற்குக் கூசுவோரும், பயிலாது நிற்பதோடன்றி, அதனைப் பழிப்போரும் பலராயினர். பயில்வோர் சிலராகக் காண்டும். இதன் காரணம் முன்னைத் தவப் பயனில்லாதாரே பலராதல் என்க. "இவர்பல ராகின்ற காரண நோற்பார், சிலர்; பலர் நோலா தவர்" (குறள்) என்பது பொய்யா மொழி; "திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் றிறமொருகாற் பேசாராகில்...அளியற்ருர் பிறந்தவா றேதோ வென்னிற், பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றுரே" (தாண்) என்ற திருவாக்கு ஈண்டு நினைவு கூர்தற்பாலதாம்; (9) **மாணு உருவாகி** - மாணி (வாமனன்) உருவாகி வந்து மண் கொண்ட பின் மாணு (மாணலல்லாத - பெரிய) உருவு எடுத்து மண் அளந்தான்; **நீள் நீள்** - அடுக்கு மிகுதி குறித்தது; மிக நீண்ட; **வாணுர்** - வாளார் என்பது எதுகை நோக்கி வாணுர் என நின்றது; "நீணுதல் செய் தொழிய"(பிள். பிரமபுரம்-9) "மாணி பால்கறந்தாட்டி வழிபட, நீணுல கெலாமாளக் கொடுத்தவன்" (குறுந்.கோயில் -4); **பலவின்கனி ஈயது போல்** - பலாப்பழத்தின் ஆசையாற் சென்று அதன் பிசின் ஒட்டி இறந்தொழியும் ஈப்போல (பழமொழி) "உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப் பழத் தீயினெப்பாய், விழைதருவேனை" (திருவா.நீத்-விண்-46); **போல்வதன் முன்** - பலாப் பழத்தில் ஒட்டி அகப்பட்ட ஈ இறப்பது போல இறந்து வீழ்வதன் முன்; **கனி ஈ(ர்)ந்தது** - என்று பாடங்கொண்டு பெண்ணேயுற்ற வடிவுவமமாக உரைப்பாருமுண்டு.—(11) **அடித் தொண்டு** - சிவபூசை; தவநெறி; **யானை** - அயிராவதம்.

தலவிசேடம்:—**திருநெல்வாயிலரத்துறை** -2113-ன் கீழ்ப் பார்க்க. இத்தலத்து அருணகிரியார் திருப்புகழினுள் ஆளுடைய பிள்ளையார் இங்கு முத்துச்சிவிகை பெற்ற வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. "கொச்சையிற் சதுர்வேதச் சிறுவ நிற்கருட்கவிகை நித்திலச் சிவிகை யைக்கொடுத் தருளீசன்".

3449. **(இ-ள்)** பரமர்...போய் - இறைவரது திருவரத்துறையினைப் பணிந்து மேற்சென்று; பலபதிகள்...தொழுதேத்தி - பதிகள் பலவற்றிலும் சேர்ந்து இளைய இடபக் கொடியினை உயர்த்திய இறைவரின் மணமுடைய மலர் போன்ற திருவடிகளைப் பணிந்து துதித்து; உரவு...ஆடி - பரந்த நீரையுடைய பெரிய காவிரியினைச் சேர்ந்து அன்பர்களுடனே நீராடி;

3450. அங்கணைவார் தமையடியா ரெதிர்கொள்ளப் புக்கருளிப்
பொங்குதிருக் கோயிலினைப் புடைவலங்கொண் டுள்ளணைந்து
"**கங்கைவாழ் சடையாயோர் கண்ணிலே**"னெனக்கவல்வார்
"**இங்கெனக்கா ருற**" வென்னுந் திருப்பதிக மெடுத்திசைத்தார். 296

அரவணிந்தார்...அணைந்தார் - பாம்பினை அணிந்த இறைவர் விரும்பி எழுந்தருளிய **தண்ணிய** திருவாவடுதுறையினை அணைந்தனர்.

(வி-ரை) பலபதிகள் விரவி...ஏத்தி - திருநெல்வாயிலரத்துறையினின்றும் நம்பிகள் திருஎருக்கத் தம்புலியூரின் அணிமையில் நிவாநதியைக்கடந்து அங்கு நின்றும் நேர் தெற்கே செயங்கொண்ட சோழபுரம் வழியாகச் செல்லும் பாதை வழியே சென்று, திருஆப்பாடியின் அணிமையில் கொள்ளிடத்தைக் கடந்து காவிரியை அடைந்தனர் என்பது கருதப்படும்; இவ்வாறன்றித் திருநெல்வாயிலரத்துறையினின்றும் நிவாவின் வடகரை வழியே போந்து கூடலையாற்றூரின் அணிமையில் நிவாநதியினைக் கடந்து நேர் தெற்குப்பாதை வழியே கொள்ளிடங் கடந்து காவிரியைக் கஞ்சனூர், கோடிகா இவற்றின் அருகில் அணைந்தனர் என்றலும் பொருந்தும்.

முன்னர்க் கூறியபாதையில் இடையில் உள்ள பதிகள் கோவந்தபுத்தூர், விசயமங்கை, கொட்டையூர், குடமூக்கு முதலாயின; பின்னர்கூறிய பாதையில் இடைப்பட்டன திருப்பனந்தாள், திருமங்கலக்குடி, கஞ்சனூர் முதலாயின; காவிரி கடந்தவுடன் திருவாவடுதுறையினை அணைந்தனர் என்கின்றாராதலின் பின் கூறிய பாதை வழியே போந்தமை வலியுறுத்தப்படும்.

உரவு நீர் - பரந்தோடுகின்ற நீரினை உடைய.

அன்பருடன் ஆடி - தொடர்ந்து வந்த அன்பர்களுடனே காவிரியிற் குளித்து; அன்பருடன் என்பது அணைந்தோர் தன்மை; இதனை விடாது எங்கும் கூறுதல் குறிக்க.

தண் ஆவடுதுறை - என்க. **தண்மை** - பிறவி வெப்பந் தீர்க்கும் தன்மை. 295

3450. **(இ-ள்)** அங்கணைவார்...புக்கருளி - அங்குத் திருவாவடுதுறையினில் அணைவாராகிய நம்பிகளை அடியார்கள் எதிர்கொண்டு வரவேற்கப் பதியினுள்ளே புகுந்தருளி; பொங்கு... உள் அணைந்து - சைவமெய்த் திருப் பொங்கும் திருக்கோயிலினைப் புடைவலங் கொண்டு சுற்றிவந்து உள்ளே சென்று திருமுன்பு சேர்ந்து; கங்கை... கவல்வார் - கங்கைநதி வாழ்கின்ற சடையினை உடையவரே! ஒரு கண்ணில்லேன் என்று கூறிக் கவல் கின்றாராகி; இங்கெனக்கார் உறவு...இசைத்தார் - இங்கு எனக்கு யார் உறவு? என்ற கருத்தினை உடைய திருப்பதிகத்தினைத் தொடங்கிப் பாடியருளினர்.

(வி-ரை) திருப்பொங்கு கோயில் - என்க; **திரு** - சைவ மெய்த் திரு. திருப் பொங்குதலாவது திருமூலதேவ நாயனார் 3000 ஆண்டுகள் அரசின் கீழே, சிவயோகத்தமர்ந்திருந்து திருமந்திரத்தினைப் பிறவி விடந் தீர்ந் துலகத்தோருய்ய அருளியதும், கழுமல ஊரர்க் கம்பொன் ஆயிரமும் உலவாக்கிழியாய் இறைவன் அளித்துச்

சிவவேள்விகளைப் பெருகச் செய்ததும், பின்னர்த் திருமாளிகைத்தேவர், நமசிவாய தேசிகர் முதலாகிய பெரியோர் மென்மேல் வந்தருள வுள்ளதுமாகிய சிறப்புக்கள். பரமகுருநாதர்கள் வழிவழி வந்து சிவத்துவத்தை உலகில் விளங்கச் செய்தல்.

புடைவலங் கொள்ளுதல் - திருமதிலின் உட்பக்கத்தே பொன் மாளிகையினை வலமாகச் சுற்றிவருதல்.

உள் அணைந்து - இறைவர் திருமுன்பு சார்ந்து.

கங்கை வாழ் சடையாய்!- இது பதிகத் தொடக்கம்; **ஓர் கண்ணிலேன்** - பதிகத்தின் உட்குறிப்பு. பதிகம் 2-வது பாட்டுப் பார்க்க.

"**இங்கெனக்கு ஆர் உறவு" - என்னும்** - இது பதிகக் குறிப்பாகிய முறையீடு; "ஆர் எனக்குறவு அமரர்களேறே" என்பது பதிக மகுடம்; நம்பிகளது திருவாவடுதுறைப் பதிகங்களிரண்டும் தக்கேசிப் பண்ணில் அமைந்தன. அவற்றுள் "**மறையவன்**" என்று தொடங்கும் பதிகம் முன்முறை வந்து வழிபட்டபோது அருளப்பட்டது; இம்முறை அருளியது "கங்கை வாழ் சடையாய்" என்ற இத்திருப்பதிகம்: மிகவும் மனமுருக்கும் தன்மை வாய்ந்தது.
296

திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம் **பண்-தக்கேசி. 7-ம் திருமுறை**

கங்கை வாழ்சடை யாய்கண நாதா கால காலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றுனே பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே தீர்த்த னேதிருவாவடு துறையுள்
அங்க ணவெனை யஞ்சலென் றருளா யாரெ னக்குற வமரர்க ளேறே. (1)

மண்ணின் மேன்மயங் கிக்கிடப் பேனை வலிய வந்தெனை யாண்டுகொண் டானே
கண்ணி லேனுடம் பில்லடு நோயாற் கருத்த ழிந்துனக் கேபொறை யானேன்
தெண்ணி லாவெறிக் குஞ்சடை யானே தேவ னேதிரு வாவடு துறையுள்
அண்ண லேயெனை யஞ்சலென் றருளா யாரெ னக்குற வமரர்க ளேறே. (2)

வெண்ட லைப்பிறை கொன்றையு மரவும் வேரி மத்தமும் விரவிமுன்மு டித்த
இண்டை மாமலர்ச் செஞ்சடை யானை யீச னைத்திரு வாவடு துறையுள்
அண்ட வாணனைச் **சிங்கடி யப்ப னணுக்க வன்றொண்ட** னூர்வத்தா லுரைத்த
தண்டமிழ்மலர் பத்தும்வல் லார்கள் சாத லும்பிறப் பும்மறுப் பாரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் (3450) காட்டியருளியவாறு; **குறிப்பு** - இப் பதிகத்துள் தலச்சுவாமி பெயர்(4), அம்மை பெயர் (3), தியாகேசர் பெயர்(6) போற்றப்பட்டமை சிறப்பு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) எனையஞ்சலென்றருளாய்;...யாரெனக் குறவு ஏறே இது பதிகக் குறிப்பாகிய மகுடம்;—(2) **மண்ணின்மேல்... ஆண்டுகொண்டானே** நம்பிகளைத்தடுத்தாட்கொண்ட சரிதக் குறிப்பாகிய அகச்சான்று; **கண்ணிலேன்... பொறையானேன்** - சரித ஆதரவாகிய குறிப்பு. **அடுநோய்** - திருவொற்றியூரிற் கண்ணிழந்த நிலையில் மேற் சென்ற நீண்ட யாத்திரையில் நம்பிகளது திருமேனியிற் புதிதாய்ப்பற்றியதொரு வெப்பு நோய்;"புதியபிணி" (3453); இது திருத்துருத்தியில் நீங்கப் பெற்றனர். **உனக்கே பொறையானேன்** - கண்ணிருந்தாற்றுமாகத் தேடிச் செய்துகொள்ள வருவனவற்றையும் கண் இழந்தமையாற் றேடமாட்டாமை யானபடியால் எல்லாவற்றையும் தருதல் இறைவர்பாற் சுமை யாதல் குறிப்பு; **பொறை** - பாரம்;"தன் கடன் அடியேனையுந் தாங்குதல்"; உனக்கே - ஏகாரம் பிரிநிலை. "உறவி லேனுனை யன்றிமற் றடியேன்; யரெனக்குறவு" என்பன காண்க;—(3) **ஒப்பிலா முலையாள்** - தல அம்மை பெயர்; **முப்புரங்களை...வல்லானே** - "மூவெயில் செற்ற...காவ லாளரென் றேவின பின்னை" (நம்பி-புன்கூர்);—(4) **கொதி** - கோபம்; மனக் கொதிப்பு;**அடுநோய்**-(2) பாட்டுப் பார்க்க;—(5) **அரக்கன்** - இராவணன்; **இந்து சேகரன்**-பிறையைச் சூடியவர்; —(6) **ஒரு பிழை** - சபதம் பொய்த்தமை; **திருவாரூர்ச் செம்பொனே** - இத்தலத்துத் தியாகேசர் பெயர் **செம்பொற்றியாகர்; அறவன்** - தருமசொரூபி; "அறவாழி அந்தணன்" (குறள்) என்புழிப்போல அறத்தின் வழி உலகை ஆள்பவன்; "அமரர்நா டாளாதே ஆரூராண்ட, அயிரா வணமே" என்று தியாகேசரை அரசராகக் கருதலின் இங்கு **அறவன்** என்றார்; (7) **விதிமுதலே** - விதிக்கின்ற முதல்வன்; **விதித்தல்** - படைத்தல்; விதிமுகத்தால் மறைகளுள் கூறும் விதிவாக்கியங்களாகிய தர்மத்தைச் செய்- உண்மையைச் சொல் என்பன வாதியாக வருவனவற்றால் உலகத்தைச் செலுத்தும் முதல்வன் என்றலுமாம்; **மெய்யன்** - சத்துப் பொருள்;—(8) **பரமேட்டி** - அப்பாற் பட்டவன் - மேலானவன்; **தீதிலா மலை** - மலை, வெள்ள நீர் - யானை - சிங்கம் - பாம்பு முதலியவை என்ன இடமாயிருந்தும் அவற்றை உடைய ஏனை மலைகள் தீமைக்கிடமாதல் போலத் தீமையில்லாத மலை; **சேவகம்** - வீரம்; "தந்திமேல் விடைமேலழகர் சேவகம் செய்தது" (திருவிளை. புரா);—(9) **வழித்துணை** - பிறவிப் பயணத்திற் றனித் துணையாய் உடன் வருபவர்; **மருந்து** - உடன் வந்து பிறவி நோய் தீர்ப்பவர்; **மாசிலாமணி** - தலச் சுவாமி பெயர்; **ஈடு** - இடப்பெறுதல்; தொழிற்பெயர்; **ஆனே** - பெருமை குறித்தது;—(10) **சிங்கடியப்பன்** - நம்பிகள் சரிதப் பகுதிக் குறிப்பு; **அணுக்கன்** - அகம்படித் தொண்டு செய்பவர்; தோழர் என்ற குறிப்புமாம்; **சாதலும் பிறப்பும்** - சாதலை முன் கூறினர், இப்போது பிறப்பு நேர்ந்துவிட்டமையின் அடுத்து வருவது அஃதே யாதலின்; மேலே **பிறப்பு** என்றது இனிவரும் பிறவி.

தலவிசேடம்:—திருவாவடுதுறை III - முதல் பாகம்: பக். 430 பார்க்க.

3451. **(இ-ள்)** திருப்பதிகம்...போய் - திருப்பதிகம் பாடியருளித் துதித்து வணங்கித் திருவருள் விடை பெற்று மேற்சென்று; விருப்பினொடும்...இறைஞ்சி - விருப்பத்துடனே திருத்துருத்திப் பதியினை அடைந்து இறைவரின் திருவடிகளை ஆசையுடன் திருக்கோயிலினுள்ளே புகுந்து வணங்கி; அடியேன் மேல்...வணங்குவார் - அடியேன் உடம்பின் மேல் வந்த நோயின் துன்பத்தினை என்பால் நில்லாது தீர்த்தருள வேண்டும் என்று வணங்குவாராகி,

3451. திருப்பதிகங் கொடுபரவிப் பணிந்துதிரு வருளாற்போய்
விருப்பினொடுந் **திருத்துருத்தி தனைமேவி** விமலர்கழல்
அருத்தியினாற் புக்கிறைஞ்சி "**யடியேன்மே லுற்றபிணி**
வருத்தமெனை யொழித்தருள வேண்டு" மென வணங்குவார், 297

3452. பரவியே பணிந்தவர்க்குப் பரமர்திரு வருள்புரிவார்
"**விரவியவிப் பிணியடையத் தவிர்ப்பதற்கு வேருக**
வரமலர்வண் டறைதீர்த்த வடகுளத்துக் குளி" யென்னக்
கரவிறிருத் தொண்டர்தாங் கைதொழுது புறப்பட்டார். 298

(வி-ரை) *அருத்தி* - ஆர்வம் - ஆசை; **புக்குக் கழல் இறைஞ்சி** என்க.

"**அடியேன்...வேண்டும்**" **என** - இது நம்பிகள் செய்த விண்ணப்பம்; **உற்ற பிணி** - புதிதின் வந்து பொருந்திய; "புதியபிணி" (3453); "உற்றநோய்" பதிகம் (5).

வணங்குவார் - வணங்குவாராகி - முற்றெச்சம். வணங்குவார் - பணிந்தவர்க்கு என மேற் பாட்டுடன் கூட்டி முடிக்க. *297*

3452. **(இ-ள்)** பரவியே...புரிவார் - துதித்து வணங்கிய நம்பிகளுக்கு இறைவர் திருவருள் புரிவாராய்; விரவிய... என்ன - பொருந்திய இப்பிணி முழுதும் தீர்வதற்குத் தனியாக நன்மையுடைய மலர்களில் வண்டுகள் பாடும் தீர்த்தத்தினையுடைய வடகுளத்திற் குளிப்பாயாக என்று அருளிச் செய்ய; கரவில்...புறப்பட்டார் - கரவில்லாத திருத்தொண்டராகிய நம்பிகள் கைகூப்பி வணங்கி புறப்பட்டருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) "**விரவிய இப்பிணி...குளி**" - இஃது இறைவர் நம்பிகளுக்கு அருளிய ஆணை; **விரவிய இப்பிணி** - இடையே வந்த புதிய பிணி.

வேருக - இதற்கென்று தனியாக; வேருகக் குளித்தலாவது நித்த நியமத்தின் பொருட்டும், ஆலய சேவையின் பொருட்டும், குளித்து வந்த நியமங்களின் வேருகப் பிணி நீங்க என்றெண்ணிக் குளித்தலாம்.

வடகுளம் - திருக்கோயிலினுள் இறைவரது திருமாளிகையின் வடபுறத்துத் திருமுற்றத்தில் உள்ளது; இதன் கரையில் நம்பிகளது ஆலயம் தனியாக உள்ளது; நம்பிகளின் திருவுருவம் ஒருகண் பார்வையுடன் நின்ற திருக்கோலமாக எழுந்தருளியுள்ளநிலை மனத்தை உருக்கும் அற்புதத் திருக்கோலமாம்; கண்டு வழிபடத்தக்க பெருமை வாய்ந்தது; நோய் நீக்கத்தின் பொருட்டும், பிறவுமாக இன்றும் அன்பர்கள் பலர் இங்கு வழிபட்டு இக்குளத்தில் நியமமாக மூழ்கி வரம் பெறுகின்றார்கள்; வர...தீர்த்தம் என்ற குறிப்புமிது; வரமலர் - தாமரை; மலர் (279); **தீர்த்தம்** - தூய்மை; அதனைச் செய்யும் நீருக்கு வந்தது; ஆகுபெயர்; "ஆர்த்த பிறவித் துயர் கெடநா மார்த்தாடும் தீர்த்தன்" (திருவா).

கரவில் திருத்தொண்டர் - கரவாவது வஞ்சனை முதலிய மனக் குற்றங்கள்; "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை" (தேவா).

3453. மிக்கபுனற் **தீர்த்தத்தின் முன்னணைந்து வேதமெலாந்**
தொக்கவடி வாயிருந்த துருத்தியார் தமைத்தொழுது
புக்கதனின் முழுகுதலும் **புதியபிணி யதுநீங்கி**
அக்கணமே மணியொளிசேர் திருமேனி யாயினார். 299

புறப்பட்டார் - இவ்வரம் பெற்ற இடமாகிய இறைவர் திருமுன்பினின்றும் வடகுளத்தினைச் சார்தற்கு எழுந்தருளினார்.

குறிப்பு:—பிணி வருத்தம் ஒழித்தருள வேண்டும் என்று பரவிய பதிகம் கிடைத்திலது! இப்போது உள்ள "மின்னுமா மேகங்கள்" என்ற பதிகம் வடகுளத்திற் குளித்து நோய் நீங்கி "அக்கணமே மணியொளி சேர் திருமேனி யாயின" (3453) பின் மகிழ்ந்து போற்றியது. 298

3453. **(இ-ள்)** மிக்க...அணைந்து - மிகுந்த நீரினையுடைய வடகுளமாகிய அத்தீர்த்தத்தின் முன் சென்று சார்ந்து; வேதமெலாம்...தொழுது - வேதங்கள் எல்லாம் கூடிய வடிவமேயாயிருந்த திருத்துருத்தி யிறைவரைத்தொழுது; புக்கதனில்... நீங்கி - அத் தீர்த்தத்தினுள்ளே புகுந்து முழுகினவுடன் புதிய பிணி நீங்கி; அக்கணமே... ஆயினார் -அந்தக் கணத்திலேயே மணியின் ஒளி பொருந்திய திருமேனியாக ஆயினார்.

(வி-ரை) மிக்க புனல் தீர்த்தத்தின்முன் - மிக்க - இறைவரது அட்ட மூர்த்தங்களுள் ஒன்றாகி அகமும் புறமுந் தூய்மை செய்யும் அருட்டன்மை மிகப்பெற்ற என்ற குறிப்பு. **தீர்த்தம்** - தூய்மை என்பது அதனையுடைய நீருக்கு ஆகி, மேலும் அந்நீர் நிற்கும் குளத்துக்காகி வந்தது. இருமடியாகு பெயர்; விளக்கிருக்கும் இடத்தையும் விளக்கென்றாற் போல.

வேத மெலாம் தொக்க வடிவாயிருந்த - வேதங்களிற் கூறப்படும் இறைமைத் தன்மைகள் யாவும் ஒருங்கே தொகுதியாய்க் கூடி விளங்க வெளிப்பட்டுக் காண வீற்றிருக்கும் இறைவர்.

துருத்தியார்தமைத் தொழுது - அதனிற் - புக்கு முழுகுதலும் - நீராடும்போது இறைவரைத் தொழுது துதித்து மூழ்குதல் வேண்டுமென்பது விதி; "உடையான் பொற்பாத, மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்" "பாதத் திறம் பாடி யாடேலோ ரெம்பாவாய்" "வித்தகர்தாள், - வாயார நாம்பாடி, ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்" "நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப், பங்கயப் பூம் புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்" என்பன முதலாக வரும் (திருவெம்) திருவாசகக் கருத்துக்கள் காண்க. இங்கு, அதன் மேலும், இறைவரது ஆணைவழிக் குளிக்கின்றாராதலின் அவரை நினைந்து தொழுதல் சிறப்பு விதியுமாம். "கங்கை யாடிலென் காவிரியாடிலென்...எங்குமீச னெனாதவர்க் கில்லையே" "கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை, ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல், ஒடு நீரினை யோட்டைக் குடத்தட்டி, மூடி வைத்திட்ட மூர்க்கனொ டொக்குமே" (அரசுகள் - **பாவநாசத்** திருக்குறுந்தொகை) என்ற திருவாக்குக்கள் ஈண்டு நினைவு கூர்தற்பாலன. இறைவரது அருளே இந்நீரினுக்கு இத்தன்மை தந்ததாம் என்ற உணர்வுடன் போற்றிக் குளித்தல் வேண்டுமென்பது ஆணை.

3454. **கண்டவர்க ளதிசயிப்பக்** கரையேறி யுடைபுனைந்து
மண்டுபெருங் காதலினுற் கோயிலினை வந்தடைந்து
தொண்டரெதிர் "மின்னுமா மேக" மெனுஞ் சொற்பதிகம்
எண்டிசையு மறிந்துய்ய வேழிசையா லெடுத்திசைத்தார். 300

புதியபிணி - முன் இல்லாது இடையில் நேர்ந்த பிணி. இது வெப்புக் காரணமாக நம்பிகளது உடலைப்பற்றிய நோய் என்பது கர்ணபரம்பரை.

அக்கணமே... ஆயினர் - அக்கணமே - முழுகிய அப்பொழுதே; "உற்றநோய் இற்றையே யறவொழித் தானை" பதிகம் (5); **மணி ஒளிசேர் திருமேனி - மணி** - செம்மணி; மணியின் ஒளி அதனின்றும் பிரிக்கப் படாத இயல்பின் உள்ளது போல் இங்கு நம்பிகளது திருமேனியிற் பெற்ற ஒளியும் அவரது திருமேனியின் இயல்பாகிய முன்னை ஒளி என்பது குறிப்பு; "கண்களெண் ணிலாத வேண்டுங் காளையைக் காண" (171) என்பது முதலியவை காண்க;அழகராகிய இறைவரது திருமேனியழகு வாய்க்கப் பெற்ற தன்மையால் **சுந்தரர்** என்ற திருநாம முடைமையும், சிறுவயதில் தெருவிற் சிறுதேருருட்டும் பொழுது நரசிங்க முனையர் என்னும் நாடுவா ழரசர் கண்டு பரவருங்காதல் கூர்ந்தமையும், "அங்க ணுேரொளி யாயிர ஞாயிறு பொங்கு **பேரொளி** போன்றுமுன் ருேன்றிட", "வென்ற**பேரொளி**யார்" என்ற தன்மைகளும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன; **சேர்** - முழுகுதலினுல் முன்னிலைமை வரப்பெற்ற; **திருமேனி ஆயினுர்** - ஆக்கச்சொல் முன்னை நிலைவந்தது என்ற பொருடந்து நின்றது.

நீங்க—என்பதும் பாடம். 299

3454. **(இ-ள்)** கண்டவர்கள் அதிசயிப்ப - கண்டவர்கள் அதிசயமடையும்படி; கரை ஏறி...அடைந்து - வடகுளத்தின் கரையினை ஏறி ஈரம்மாற்றி வேறு ஆடைபுனைந்து கொண்டு, மிகுந்த பெரிய காதலினுலே திருக்கோயிலினை வந்து சேர்ந்து; தொண்டர் எதிர் - தொண்டர்களுக் கெதிரில்; மின்னுமா மேகம் எனும் சொற்பதிகம் - மின்னுமா மேகம் என்று தொடங்கும் சொல் நிறைந்த திருப்பதிகத்தினை; எண்திசையும்... எடுத்திசைத்தார் - எட்டுத் திக்குக்களில் உள்ளவர்களும் அறிந்து உய்யும்பொருட்டு ஏழிசைகளும் பொருந்த எடுத்துப் பாடியருளினுர்.

(வி-ரை) கண்டவர்கள் அதிசயிப்ப - மூழ்குமுன் இருந்த நம்பிகள் திருமேனியிற் சார்ந்த பிணிப்பட்ட நிலையினையும், மூழ்கி எழுந்தவுடனே அது நீங்கி மணியொளி சேர் திருமேனியாயின நிலையினையும் நேரிற் கண்ட மக்கள் அந்தோ ஈது ஓர் அதிசயம் கண்டேம் என்று அதிசயம் கொள்ள; "அதிசயங் கண்டாமே" (திருவா).

உடைபுனைந்து - குளிக்கும்போது அணிந்திருந்த ஈர உடையினை நீக்கி வேறு உலர்ந்த உடையினை அணிந்து.

கோயிலினை - திருமாளிகையினை; **வந்து** - வடகுளத் தீர்த்தக் கரையினின்றும் கோயிலுக்கு வந்து.

தொண்டர் எதிர் - இப்பதிகம் கோயிலினுள் இறைவர் திருமுன்பன்றிக் கோயிலில் அங்குக் கூடியிருந்த திருத்தொண்டர்களெதிரே பாடியருளப்பட்டது; "என்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை...நான் மறக்குமாறு என்னை?" என்று பதிகத்துள் இறைவரைப் படர்க்கை யிடத்து வைத்துக் கூறும் வகையால் இப்பதிகம் தொண்டர்களின்முன் பாடியருளப் பட்ட தென்பது போதரும்; தொண்டர்களைத் தவிர ஏனை உலகர்களை முன்னிலைப் படுத்திப் பேசும் நிலை எந்தப் பெருமக்களிடம் நிகழாதென்பது; உலகரை வழிப்படுத்தி ஆணையிடும் நிலை வேறு.

எண்டிசையும் அறிந்துய்ய - "நான் பெற்ற இன்பம் பெறுகவிவ் வையகம்" (திருமந்) என்றபடி இவ்வருட் பெருமையினை அறிந்து உலக முய்யச் செய்தல் பதிகக்குறிப்பாகும். தம்பால் இறைவர் செய்த பேரருளை வியந்து போற்றும் வகையும் ஒரு குறிப்பாம்.

மின்னுமா மேகம் - பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு. 300

திருத்துருத்தியும் திருவேள்விக் குடியும்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம், 7-ம் திருமுறை**

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடில்படக் கரையொடுந் திரைகொணர்ந் தெற்றுங்
அன்னமாங் காவிரி யகன்கரை யுறைவா
ரடியிணை தொழுதெழு மன்பரா மடியார்
சொன்னவா றறிவார் **துருத்தியார் வேள்விக்**
குடியுளா ரடிகளைச் செடியனே னயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெரு மானை
யென்னுடம் படும்பிணி யிடர்கெடுத் தானை. (1)

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுர நீறெழச் செற்ற
வங்கையான் **கழலடி யன்றிமற் றறியா**
னடியவர்க் கடியவன் றொழுவனூ ரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையாற் றொழுதுதந் நாவின்மேற் கொள்வார்
தவநெறி சென்றம ருலகமாள் பவரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—இறைவர் தம்பாற் செய்த அருளிப் பாட்டினை வியந்து போற்றி அதனை உலகுய்யும்படி தொண்டர்களின் எதிரே பாடியது. (3454)

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) இழிந்தருவி - இழிந்து வரும் அருவி; **வெடில் பட** - ஒலிக்குறிப்பு; **வெடிபட** - என்பது பாடமாயின் முழக்கம்; நறுமண மூமாம்; **அன்னமாம்** - அன்னங்கள் விளையாடும்; **அடியார் சொன்னவாறு அறிவார்** - அடியார்கள் முன்னின்று முறையிடுமவற்றை அறிந்து அருள்புரிபவர்; நம்பிகளது சரிதக் குறிப்பு; **சொன்னவாறறிவார்** - தலத்துச் சுவாமி பெயர்க் குறிப்பும் காண்க; **துருத்தியார்... வேள்விக்குடியுளார்** - எதிர் எதிராகக் காவிரியின் இருகரையிலும் உள்ளவை; தலவிசேடம் பார்க்க. (III - முதல் பாகம் : பக். 421 பார்க்க) **மறக்குமாறு என்னே** - என்க; **அடிகளே** - எம்பெருமானே - இடர் கெடுத்தானே நாயேன் மறக்குமாறென்னே? என்று கூட்டுக; **என்னே** எவ்வாறு; எங்ஙனம்; மறக்குமாறில்லை என, வினு எதிர்மறை குறித்தது; இவர் தன்மை யறிவாரார்? (தேவா) என்புழிப்போல; செயப்படுபொருள் பின்னர் வந்ததும், மறக்குமாறின்மை முன் வைத்ததும் உறுதிப் பொருட்டு. இப்பதிகம் இவ்வாறு முடிபு கொள வைத்த தனிச் சிறப்புடையது; **பிணியிடர்** பிணியாகிய இடர் என்றும், பிணியால் வரும் இடர் என்றும் உரைக்க நின்றது;— **(2) கூடுமாறுள்ளன** - அங்கங்குங் வந்து கூடும் கிளைநதிகளும் கால்களும்; வெள்ளத்தால் வந்து சேரும் மற்றைப் பண்டங்களும் என்றலும் குறிப்பு; மேற்பாட்டுப் பார்க்க. **மறித்தல்** - அழித்தல்; **ஏனல்** - தினை; **ஐவனம்** - மலையரிசி (683); குறிஞ்சிக் கருப்பொருள்கள்; **மாடு** - பக்கம்; **கோங்கம் - மருதம்** - பெருமரங்கள்; **பொருது**- அலைத்துப் பறித்து; **குலை** - செய்கரை; **செடியனேன்**- தீயவன்;—**(3) யானையின் கொம்பு**- மலைபடு பண்டம்; குறிஞ்சிக்கரு; **கூட்டெய்தி** - கூடிச் சேர்ந்து; **தவம்...மூழ்க - போகர்** - காமியம் பற்றித் தவநிலை நிற்போர்; **யோகர்** - சிவயோகியர்; **புலரி** - வைகறை; விடியல்; **தொடர்ந்தடும் கடும்பிணி** - இடையில் கூடித் தொடர்ந்து வருத்தும் நோய்;—**(4) சந்தனத்துண்டம்** - சந்தன மரக்கட்டைகள்; **சந்தனம் - அகில் - மிளகு** - குறிஞ்சிக் கரு; **கறி** - கார்ப்பு என்றலுமாம்; **அருவிகள்** - பலமுகமாகவும் மலையினின்றும் பெருகி வந்து கூடும் நிலை; **புன்புலங்கவர** - மலைச்சாரலில் உள்ள புன்புலக்கானங்களின் பொருள்களை வெள்ளத்தில் அலைத்துக் கொண்டு ஓட; **கடலுற விளைப்பதே கருதி** - கடலைச் சார ஓடும் முகமாய்; "கருங்கடல் காண்பதே கருத்தாய்" (7-8); **கருத்து** தற்குறிப்பேற்ற அணி; **கைபோய் எறியும்** - அலைகளை வீசும்; **ஆசு** - குற்றம்;—**(5) வேங்கை** - குறிஞ்சிக்கரு; வேங்கை மலர்கள் மிக உதிர்ந்து கிடத்தலின் அவற்றை அலைத்து வருதலை **மலர் உந்தி** என்றார். **பொன்மலர்** - பொன்போன்ற நிறமுடைய மலர்; வேங்கைமலர்கள் பொன்னிறமுடையன; **இழிந்திழிந்தருவி** - பலபடியும் பல அருவிகள் வந்து கூடுதல் குறிப்பு; **சுழிந்திழி** - வெள்ளத்தின் வேகத்தினல் நீர்ச் சுழிகளுடன் வழிகின்ற; "மாலினுந்திச்சுழி மலர்தன் மேல்வரும், சால்பினல்" (53); **உற்றநோய்** - இடையில் வந்து பொருந்திய பிணி; "புதிய பிணி" (3453); **பிதற்றுதல்** - பலவாறும் போற்றுதல்; **இற்றையே** - இன்றைக்கே - (குளத்தில் மூழ்கின) இப்பொழுதே; "அக்கணமே" (3453); **உற** - அந்தமுற; **உறவு** பொருந்துதல் என்று கொண்டுரைத்தலுமாம்;—**(6) பொன்** - பொற் சன்னங்கள்; "செம்பொன் வார்கரை" (57); **பொன்னி** என்ற பெயரும் காண்க. இதுபற்றி முன் (57) உரைத்தவை பார்க்க; **வரன்றி** - மணலுடன் வாரிக்கொண்டு; **உம்** - அசை; **நன்மலர்** - கரையிருமருங்கும், மலை - காடு இவற்றில் வரும் வழியிலுமுள்ள மலர்ச் சோலைகளின் மலர்கள்; **அகழுமா அருங்கரை** - வெள்ள நீர் இருகரையினையும் கீண்டு ஓடுதல். குறிப்பு:

3455. பண்ணிறைந்த தமிழ்பாடிப் பரமர்திரு **வருண்மறவா**
தெண்ணிறைந்த **தொண்டருடன் பணிந்தங்க ணுறைந்தேகி**
உண்ணிறைந்த பதிபிறவு முடையவர்தாள் வணங்கிப்போய்க்
கண்ணிறைந்த திருவாரூர் முன்றோன்றக் காண்கின்றார்; 301

வளம்படப் பெருகி - நீர்ப் பெருக்கினாலும் எருச்சத்துக்களை அலைத்து வந்து பரவுதலாலும் நிலங்களை வளம்படச் செய்து; **ஆடுவார் பாவம் தீர்த்து** - காவிரியின் புண்ணிய நீரின் இயல்பு; இஃது இன்றும் கண்கூடாகக் காண்பது; **அஞ்சனம்** - கரிய அழுக்குக்கள்; **அலம்பி** - கழுவித் தூயதாக்கி:—**(7) மராமரம்** - குறிஞ்சிக் கரு; **காம்பீலி** கவரிமயிர்; மூங்கிலுமாம். **உரையும்** - உரைக்கும்: பிறவினை; **உலகறி பழவினை** - இந்நோய் வினைப்பயன் என்று உலகம் புற அடையாளத்தாற் கண்டு கூறும்படி தோற்றமுடைய வினைவிளைவு;— **(8) உகள** - பாய; துள்ள; **தேர்தல்** - தெளிதல்; **ஆருமாறு** - நிரைய நுகரும் வகை;—**(9) பொன்கள் - வளம்பட** - 6-ம் பாட்டுப் பார்க்க. **பீழ்ந்து** - வேருடன் பறித்து; **விலங்குமாறு** - நினையாது ஒழிதல்:—**(10) மாறலார்** - பகைவர்; **அடியவர்க்கடியவன்** - திருத்தொண்டத் தொகை அருளிய குறிப்பும், வரலாறும் காண்க. **தொழுவன்** - அடித்தொண்டன்; **கங்கையார் காவிரி** கங்கையும் தன் தூய்மை கருதி வந்தாடும் காவிரி;"கங்கை யிற் புனிதமான காவிரி"; கங்கையின் பகுதியே காவிரியாகப் பெருகியது என்றலுமாம்.

தலவிசேடம்:—திருத்துருத்தியும் வேள்விக்குடியும் - III - முதல் பாகம் : பக். 421 பார்க்க.

3455. **(இ-ள்)** பண் நிறைந்த...மறவாது - பண்பொருந்திய தமிழாகிய அத்திருப்பதிகத்தினைப் பாடி இறைவர் செய்த பேரருளினை மறவாமல்; எண் நிறைந்த...உறைந்து - எண் நிறைந்த திருத்தொண்டர்களுடனே கூடி இறைவரை வணங்கி, அத்திருப்பதியில் தங்கி யிருந்து; ஏகி - புறப்பட்டு மேற் சென்று; உள் நிறைந்த...போய் நினைவில் எப்போதும் நிறைவிற் கொண்ட இறைவரது பிறபதிகளிலும் இறைவரின் திருவடிகளை வணங்கிப் போய்; கண்ணிறைந்த...காண்கின்றார் - கண்ணாரக்காணும் காட்சி நிறைந்த திருவாரூர் தம் எதிரே தோன்றக் காண்கின்றாராகி;

(வி-ரை) பண் நிறைந்த தமிழ்பாடி - தமிழ் - முன்கூறிய (3454) மின்னுமா மேகங்கள் என்ற திருப்பதிகம்; பண் - பதிகப்பண்ணாகிய காந்தாரப் பண்.

திரு அருள் மறவாது - "என்னை நான் மறக்குமாறு" என்று பாடியருளிய படியே மறவாமல்.

எண்ணிறைந்த - எண்ணத்தில் சிவனை நிறைவு கொண்ட; **நிறைதல்** - வேறொன்றற்கு மிடமில்லாது பொருந்துதல்; சிவனையே எப்போதும் நினைவிற் கொண்ட என்பதாம்; நம்பிகளது எண்ணத்தில் குடி கொண்ட என்றலுமாம்;"அடியவர்க் கடியவன் றொழுவ னாரூரன்" (10) என்ற பதிகக் குறிப்பு.

தொண்டருடன் பணிந்து - வடகுளத்திற் குளித்துப் புதிய பிணி நீங்கிக் கோயிலினை அடைந்து இறைவரது திருமுன்பு செல்லாது அங்குக் கூடியிருந்த தொண்டர்களெதிரே பதிகம் பாடியருளினமையால் (3454), அங்குநின்றும் அத்திருத் தொண்டர்களுடன் கூடி இறைவர்

3456. **அன்றுதிரு நோக்கொன்று லாரக்கண் டின்புறுர்**
நின்றுநில மிசைவீழ்ந்து நெடிதுயிர்த்து நேரிறைஞ்சி
வன்றெண்டர் **திருவாரூர் மயங்குமா லேயிற்புகுந்து**
துன்றுசடைத் **தூவாயார் தமைமுன்னந் தொழவணைந்தார்.** 302

திருமுன்பு சென்று பணிந்து என்க. தொண்டரெதிர் எடுத்திசைத்தல் இறைவரது ஒப்பற்ற அருளினைப் பாராட்டி அடியவர்கள்பால் எடுத்துச் சொல்லி அவர்களுடன் கூடியனுபவித்தல்; இதனுல் அவர்களுக்குத் திருவருளினை அறிவித்தலுடன் தமது மகிழ்ச்சி அன்பர்களுடன் கூடி எண்ணியபடியால் பெருக நிகழும் பயனும் உளதாகும்.

தொண்டர்கள் - நம்பிகளுடன் போந்தவர்கள்; வட குளத்துக் குளி என்று பரமர் திருவருள் பெற்றபடி நம்பிகள் குளிக்கச் சென்றபோது இத்திருத் தொண்டர்கள் அவர் குளித்து வருமளவும் கோயிலின்கண் தங்கினர், குளிக்கும்போதும் உடன்செல்லல் மரபன்றுதலின்; குளித்து வந்தபோது கண்ட நிலேயினுலே திருமேனி பிணி நீங்கிய நிலே தொண்டர்கள் அறியவாராது; ஆதலின் நீங்கள் காணும் இவ்வாறு இடர் கெடுத்தானே நான் மறக்குமா றென்னே? என்று திருவருளினைப் பாராட்டும் வகையாற் றிருப்பதிகம் அருளிய குறிப்பும் காண்க.

உள் நிறைந்த - எப்போதும் தமது உள்ளத்திற் கொண்டிருந்த;"இன்னும் பல்லாறுல கினினம்புகழ் பாடென்றுறு பரிவின்......அருள் செய்தான்" (222) என்றபடி தடுத்து ஆட்கொள்ளப் பெற்ற அன்றே இறைவரது ஆணே பெற்றுராதலின் அன்று முதலாக இறைவர் பதிகளே நினைந்து நினைந்து சென்று சென்று வணங்குதலே நியமமாக எண்ணத்தில் கொண்ட என்பதாம்; பிறவும் - பிறவற்றின் கண்ணும்; ஏழனுருபு தொக்கது.

கண்ணிறைந்த - கண்டகண் மீளாதபடி தெவிட்டாத காட்சியின் அழகு நிறைந்த; "அணியாரூர்" "குளிராரூர்" "விழவாரூர்" "வளராரூர்" "தண்ணுரூர்" என்று அரசுகள் போற்றும் திறம் கருதுக. "சோலேயாரூரானே" "பழனத் திரு அணியாரூரானே" "தாமரைப் பொய்கையாரூரானே" என்று பலவாறும் மனத்தின்கண் நிறையக் கண்டுகொண்டு நம்பிகள் திளேத்திருந்த என்றலுமாம்.

காண்கின்ருர் - காண்கின்ருராகி; முற்றெச்சம். காண்கின்ருர் - இன்புறுர் - நின்று இறைஞ்சிப் புகுந்து - அணேந்தார் என வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

உறைந்தேத்தி—என்பதும் பாடம். **301**

3456. **(இ-ள்)** அன்று...இன்புறுர் - அன்று தமது ஒரு திருக்கண்ணினுல் நிறையக் கண்டும் இன்பம் முற்றப் பெறுதவராய்; வன்றெண்டர் - வன்றெண்ட ராகிய நம்பிகள்; நின்று...இறைஞ்சி - ஊரினைக் கண்ட அவ்விடத்தே நின்று நிலத்தின்மேல் விழுந்து எழுந்து பெருமூச் செறிந்து நேரே வணங்கி; திருவாரூர்...புகுந்து - பொழுது மயங்கும் மாலேப் போதினில் திருவாரூரினுள்ளே புகுந்து; துன்றுசடை...அணேந்தார் நெருங்கிய சடையினையுடைய தூவாயாராகிய இறைவரை முன்னே தொழுவதற்கு அணேந்தருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) திருநோக்கு ஒன்றால் - காஞ்சியில் மீளப்பெற்ற ஒரு கண் (இடக்கண்) பார்வையினால்.

ஆரக்கண்டும் - என்று உம்மை விரிக்க; **இன்புறார்** - ஆர்வம் நிறையப் பெறாராகி; இங்கு **இன்புற்றார்** - என்று பாடங்கொள்வாருமுண்டு; பின்னர் "வாழ்ந்த மலர்க் கண்ணொன்று லாராமன் மனமழிவார்" (3461) என்றும், "கண்களாற் பருகுதற்கு; மருவார்வத் துடன்மற்றைக் கண்தாரீர் எனவணங்கி" (3462) என்றும் வருவனவாற்றால் அப்பாடத்தின் பொருத்தம் ஆராயத்தக்கது.

நின்று - மேலடி எடுத்துச் செல்லுதலை நிறுத்தி நின்று.

நிலமிசை வீழ்ந்து - தலத்தினைக் கண்ட இடத்தே நிலமுற விழுந்து வணங்குதல் முறை; இங்கு அவசமானார் போல விழுந்து என்ற குறிப்புமாம்.

நெடிதுயிர்த்தல் - பெருமூச்செறிதல்; இஃது ஆற்றாமையுடன் கூடிய வருத்தத்தால் நிகழ்வது; முன் எல்லாம் இரண்டு கண்ணுடன் கண்டவர் இப்போது ஒரு கண்ணால் பார்க்க மன மாற்றாத வருத்தத்தால் நெடிதுயிர்த்தார்.

நேர் இறைஞ்சி - எழுந்து நேர் நின்று வணங்கி; நகரை நேர் நோக்கி என்றலுமாம்.

மயங்கு மாலை - சூரியன் அத்தமனமான பின், ஒளி மங்கி இருள் புகுதும் அந்தி வேளை; கண் மயங்கும் நேரம்; காட்டுமொளி குறைதலாற் கண்பார்வை மயங்கும் கண்ணின் மயக்கத்தை அஃது உளதாகும் நேரத்தின் மேலேற்றிக் கூறியபடி. இவ்வாறன்றி, **மயங்குதல்**-கலத்தல் என்று கொண்டு (இரவும் பகலும்) மயங்கின மாலைக்காலம் என்பாருமுண்டு.

தூவாயார் - பரவையுண் மண்டளித் திருக்கோயிலில் எழுந்தருளிய இறைவர் பெயர்; **தூ** - உண்ணுகின்ற; **வாயார்** - வாயினை உடையவர்; ஊழிப்பெரு வெள்ளம் திருவாரூர் மேற் பரவி மூழ்குவிக்காமை அவ்வெள்ளத்தினை உண்பவர் என்ற காரணம் பற்றி வந்த பெயர் என்பது வரலாறு.

பரவையுண் மண்டளி - என்ற பெயர்ப் (**பரவை** - கடல்; **உண்** - பெருகிவாராமல் உண்கின்ற) பொருளும் காண்க. "தூவாயா!" என்ற இப்பதிகத் தொடக்கம் காண்க; அக்குறிப்புப்பட இப் பெயராற் கூறினார். இதனையே "தூவாயா" என்றெடுத்தே (3557) என மேற் கூறுதலும் காண்க. தலவிசேடம் பார்க்க.

முன்னம் - திருமூலட்டானத்தில் சென்று தொழுவதன் முன்னம்.

குறிப்பு - திருவாரூரினுள் மயங்குமாலையில் புகுதலும், துவாயாரை முன்னந் தொழுது பாடுதலும், அங்கு வேறிருந்து பின்னர்த் திருமூலத்தானத்துள் இடைதெரிந்து திரு அத்தயாமத்து இறைஞ்ச அணைவதும் ஆகிய இந்நிலைகள், நம்பிகள் திருவாரூருள்ளும் திருக்கோயிலுள்ளும்

3457. பொங்குதிருத் தொண்டருட னுள்ளணைந்து புக்கிறைஞ்சித்
துங்கவிசைத் திருப்பதிகந் "**தூவாயா!**" வென்றெடுத்தே
"**இங்கெமது துயர்களைந்து கண்காணக் காட்டா**"யென்
றங்கணர்தம் முன்னின்று பாடியருந் தமிழ்புனைந்தார். 303

பிரானுர் திருமுன்பும் அடியார்கள் திருமுன்பும் ஒரு கண்ணில்லாத அந்நிலையிற் சென்று காணவும் காணப்படவும் மனம் ஒருப்படாது வருந்திய தன்மை குறிப்பன.

தூவாயார் - என்பதற்கு முன் உரைத்தவாறன்றித், தூ ஆயார் - பற்றுக் கோடாயினவர்; **தூ** - பற்றுக் கோடாதலை; "மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு, மினந்தூய்மை தூவா வரும்" என்ற திருக்குறளானுணர்க; தூய்மை யுடைய வேத சிவாகம வாக்கியராதலின் தூவாயா ரென்றலுமொன்று என்றுரைத்தனர் இராமலிங்கத் தம்பிரானுர். 302

3457. **(இ-ள்)** பொங்கு... இறைஞ்சி - பெருகும் திருத்தொண்டர்களுடனே கூடிக் கோயிலின் உள்ளே சேர்ந்து திருமுன்பு புகுந்து வணங்கி; துங்க... எடுத்தே -பெருமையுடைய இசையோடும் கூடிய திருப்பதிகத்தினைத் "**தூவாயா!**" என்று தொடங்கி; இங்கு...என்று - இங்கே எம்முடைய துன்பத்தினைப் போக்கிக் கண்காணும்படிக் காட்டுதல் வேண்டும் என்ற கருத்துடன்; அங்கணர் தம்...புனைந்தார் - இறைவர் திருமுன்பு நின்று பாடி அரிய தமிழ்ப் பதிகமாகிய மாலையினைப் புனைந்தருளினர்.

(வி-ரை) துங்க இசை - துங்கம் - உயர்ச்சி; பதிகப் பண்ணுகிய பண் பஞ்சமம்.

"**தூவாயா!**" - பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு; உண்ணுகின்ற வாயினை யுடையவரே!; **தூ** - உண்ணுதல். எம் துக்கங்களைப் போக்குபவர் என்பதும் குறிப்பு.

"**இங்கெமது...காட்டாய்" என்று** - பதிகக் கருத்தாகிய குறிப்பு; **எமது** - பதிகத்துள் தொண்டு செய்வார் - நல்லன சொல்லுவார் - ஆகமசீலர் என்றிவ்வாறு அடியார்களைக் குறித்து வேண்டுதலின் **எமது** என்று பன்மையிற் கூறினர்.

அங்கணர் - அங்கண்மை - கண்ணேட்டம் - உடையவர்; அழகிய கண்ணுடையவர் என்றலுமாம். கண்பெறக் கேட்கின்றமையால் கண்ணுடையவரே கண் தரவல்லவர் என்ற குறிப்பும்பெற இத்தன்மை பற்றிக் கூறினர்.

தமிழ் - தமிழ்ப் பதிகமாகிய மாலை. 303

திருஆரூர்ப் பரவையுண் மண்டளி

திருச்சிற்றம்பலம் **பண் - பஞ்சமம். 7-ம் திருமுறை**

தூவாயா தொண்டுசெய் வார்படு துக்கங்கள்
காவாயே கண்டுகொண் டாரைவர் காக்கிலும்
நாவாயா **லுன்னையே நல்லன சொல்லுவேற்**
காவாவென் பரவையுண் மண்டளி யம்மானே. (1)

கரந்தையும் வன்னியு மத்தமுங் கூவிளம்
பரந்தசீர்ப் பரவையுண் மண்டளி யம்மானை
நிரம்பிய வூர னுரைத்தன பத்திவை
விரும்புவார் **மேலையார் மேலையார் மேலாரே.** (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—"தூவாயா! இங்கெம் துயர்களைந்து கண்காணக் காட்டாய் என்று பாடியது. (3457) ஆசிரியர் காட்டியருளியவாறு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) தூவாயா - சுவாமி பெயர்; **துக்கங்கள் காவாயே** - துயர்கள் நலிவு செய்யாமற் காக்க வேண்டும்; **காவாய்** - காக்க;ஏகாரம் தேற்றம்; **ஐவர்காக்கினும்** - மாறி நின்று மயக்கும் வஞ்சப் புலனைந்தும் என்னை உன்வழிச் செல்லாது சிறைப்படுத்திக் காவல் புரியினும்; 4-வது பாட்டுப் பார்க்க; **நாவாயால்...சொல்லுவேற்கு** - நாவினால் உன்னை நன்மையே சொல்லித் துதிப்பவனாகிய எனக்கு; **ஆவா!** - இரக்கச் சொல்; **என்** - என்று அபயம் சொல்க; நல்லன சொல்லுவார் (3); ஐவர் காக்கிலும் **(4);— (2) புலவர்க்கு** - தம்மை உளப்படுத்திப் படர்க்கையிற் கூறிய நயம் காண்க; நினைவாரை - (5) ஆகமசீலர் **(6); போற்றலாந்தன்னானே - தன்னைப் புகழ்ந்திடும் தற்சோதி** - போற்றலாகும் அளவும் புகழும் புகழ்களெல்லாம் உன்னையே வந்து சாரும் சுயஞ்சோதியே; புலவர் எவ்வாறும் எவ்வளவும் போற்றினும் அவை யாவும் உன்னையே வந்து சாரும் தன்மை என்றபடி**;—(3) நாமாறுது** - நாவினால் இடையறுது; **போமாறென்? - நீ** அருளாவிடில் அவர்க்குப் போமிடம் எது; **போக்கு** - புகல்; **ஆமாறென்** அருள் செய்தால் உமக்கு என்ன நட்டம்? ; "என்றான் கெட்டது!" (திருவா); அருள் செய்யாமலிருந்து வேறு உமது அருளை என்ன செய்வது உம் கருத்து; வேறு உமக்கு ஆகும் வழி எது? **(4) நோக்குவே னுன்னையே...காக்கிலும் 1**-வது பாட்டில் ஐவர் காக்கிலும் என்ற கருத்து; எனது கண்ணால் உன்னையே நன்கு நோக்குதலல்லாது வேறு எதையும் நோக்காதிருந்தேனை அது செய்யாதவாறு கெடுப்பித்து அகமேட்டினையே காக்கின்றார்; **வாக்கென்னும்... ஆர்க்கின்றேன்** - கண்ணாற் காணமற் காக்கினும் வாக்கினால் மாலைபுனைந்து அதனால் உன்னை மனத்துட் கட்டுகின்றேன்; **ஆர்த்தல்** - கட்டுதல்; **ஆர்த்தல்** - வியந்தெழுதல் என்ற குறிப்புமாம்**;—(5) நெஞ்சே...நினைவாரை** - உன்னையன்றி நெஞ்சில் வேறெதனையும் எண்ணாத என்னையும் என் போன்றாரையும்; காண இயலாமையாயினும் அதனால் மனம் வேறுபட்டு வருந்தி யொழியாது உன்னை நினைப்பினுட் கொண்ட என்பார் **நெஞ்சே நினைவாரை** என்றார்; கண்ணில்லாவிடினும் நினைக்க நெஞ்சுண்டு என்பது; 'ஏதும் பெறாவிடி னெஞ்சுண் டன்றே" (பட்டினத்தார்; கழுமலமும் - கோ-12)**;—(6) ஆகமசீலர்** - சிவாகமங்களின் வழி ஒழுகிச் சிவபூசை செய்வோர். "தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுவோர்" "முதற்சைவ ராமுனிவர்" (ஆதிசைவர்); **தண்தமிழ் நூற் புலவாணர்க் கோரம்மானே** - "புலவர்க்கு" (2)**;—(7) விண்டானே - புலவாணர்** - சங்கப்புலவர்; **அம்மான்** - தலைவர் (மறையாகமங்கள்) சொன்னவரே; **மேலையார்... மேலாய எண்டானே - மேலையார்** மக்களுள் உயர்ந்தோர்; (அவரின்) **மேலையார்...** தேவருள் உயர்ந்தோர்; **மேலாய எண்** - அவர் எல்லார்க்கும் மேலாகிய தேவதேவ தேவராக

3458. ஆறணியுஞ் சடையாரைத் தொழுதுபுறம் போந்தங்கண்
வேறிருந்து திருத்தொண்டர் விரவுவா ருடன்கூடி
ஏறுயர்த்தார் **திருமூலட் டானத்து ளிடைதெரிந்து**
மாறிறிரு வத்தயா மத்திறைஞ்ச வந்தணைந்தார். 304

எண்ணப்படுபவர்; **எழுத்தோடு... கண்டானே**- எழுத்தும் சொல்லும் பொருளும் என்ற தமிழ் இலக்கணப் பகுதிகள் எல்லாவற்றையும் முன் சங்கத்திலிருந்து ஆய்ந்தவர் - தலைச் சங்கப்புலவர்; முன்பாட்டில் "தண்டமிழ் நூற்புலவாணர்க்கோ ரம்மான்" என்றதனைத் தொடர்ந்து கூறியது; "கூடலிருய்ந்த வொண்டீந்தமிழ்" (திருக்கோவையார்); தமிழ் நூற் பொருளாராய்ந்து பொருணூல் கண்டருளிய வரலாற்றுக் குறிப்புமாம்; "சொல்லுவார் சொற்பொருளெல்லாஞ் சோதிப்பான்" (தேவா.) "உரையின் வரையும் பொருளினளவு, மிருவகைப்பட்ட வெல்லையுங் கடந்து" (கோயினுன்) என்ற குறிப்புமாம்; **காணுதல்** செய்தல் என்றலுமாம். "முதல்வன் கண்டது முதனூல்" (தொல்); **கண்டனைக் கொண்டிட்டுக் காட்டாயே** - கண்கொடுத்துக் காட்டியருளுவாய்; "கண்காணக் காட்டாய் என்று" (3457) என்று இதனைப் பதிகக் கருத்தாக ஆசிரியர் எடுத்துக் காட்டியருளியது காண்க. **அண்டானே** - அண்டனே;—(8) **கார்முகில்** - மிகக்கருமை குறித்தது; மெய்பற்றியதனுடன் பயன் பற்றியவுவமுமாம்; **கூற்றுன்** - சொல்லுக்கிலக்கியமாக வுள்ளவர்; **கூற்று** - சொல்;—(9) **நல்லன செய்வினை செய்யாத** என்க; **கண்டதே கண்டதே காமுறும்** எண்ணிப் பாராது கண்டகண்டவாறு மனவிச்சை செலுத்தும்; **காமுறும்** - இச்சிக்கும்; **கூறுமாறு** - கூறத்தக்கபடி;—(10) **மேலையார் மேலையார் மேலாரே** - விரும்புவார் மேலானவர்கள்; அவர்கள் மேலை வானவர்க்கும் மேலாவர் என்று பயன் கூறியவாறு.

தலவிசேடம்:—**திருவாரூர்ப் பரவையுண் மண்டளி** - சோழ நாட்டிற் காவிரித் தென்கரை 89-வது பதி; இது **துலாநாயனுர்** கோயில் என்று வழங்கப் பெறும்; ஒரு காலத்துத் திருவாரூரின் மேல் வருணன் ஏவலாற் பெருகி எழுந்து வந்த கடலை உண்டு நிலைபெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றது; தூவாய் நாயனுர் என்பது துலாநாயனுர் என உலக வழக்கில் மருவியது. **தூவாயா** என்ற பெயர் பதிகத் தொடக்கமாதல் காண்க; (**தூ** - உண்கின்ற; **பரவை** கடல்; **உண்**- உண்கின்ற); **மண்தளி** - நிலவுலகத்தில் கடலுள் மூழ்கிவிடாது நிலைத்த கோயில் என்பது; துர்வாச முனிவர் பூசித்துப் பேறு பெற்ற பதி; இவர் திருவுருவம் விநாயகர் கோயிலில் தாபித்து வழிபடப் பெறுகின்றது. சுவாமி - **மண்டலேசுவரர்;** சுவாமியின் திருமேனி பளிங்குபோல விளங்குவது. அம்மை - **பஞ்சினு மெல்லடியாயம்மை;** பதிகம் 1.

இது திருவாரூர்க் கீழை வீதியில், பெரிய கோயில் மகாரத நிலைக்கு அணிமையில் தென் மேற்கில் உள்ளது.

3458. **(இ-ள்)** ஆறணியும்...புறம்போந்து - கங்கையை முடித்த சடையினை உடைய இறைவரைத் தொழுது புறத்திற் போந்து; அங்கண் வேறிருந்து - அங்கு வேறுமோர் தனியிடத் தெழுந்தருளித் தங்கியிருந்து; திருத்தொண்டர்...கூடி - தம்முடன் பொருந்த

3459. ஆதிதிரு வன்பரெதி ரணையவவர் முகநோக்கிக்
கோதிலிசை யாற் "குருகு பாய" வெனக் கோத்தெடுத்தே
ஏதிலார் போல்வினவி யேசறவாற் றிருப்பதிகங்
காதல்புரி கைக்கிளையாற் பாடியே கலந்தணைவார், 305

வருவார்களாகிய திருத்தொண்டர்களுடனே கூடி; ஏறுயர்த்தார்...வந்தணைந்தார் - இடபக் கொடியினை உயர்த்திய இறைவரது திருமூலத்தானத்தின்கண் ஏற்ற சமயம் அறிந்து ஒப்பற்ற திருஅத்தயாமக் கால வழிபாட்டின்போது சார்ந்து வணங்க வந்து அணைந்தருளினர்.

(வி-ரை) அங்கண் வேறிருந்து - அத்திருக் கோயிலின் பக்கத்தில் தனியிடத்தில் தங்கி.

விரவுவார் திருத்தொண்டருடன் கூடி - தம்முடன் வந்தாரும் திருவாரூரில் வந்தாரும் ஆகிய திருத்தொண்டர்களுடனே.

திருமூலட்டானத்துள் - பூங்கோயிலினுள் புற்றிடங் கொண்ட பெருமான் திருமுன்பு.

இடைதெரிந்து - செல்லத் தக்க காலமறிந்து; திருவத்தயாம வழிபாட்டு நேரம் தெரிந்து சென்றனர் என்பது; வழிபாட்டுக் காலமல்லாக் காலத்தில் செல்லலாகாது என்பது குறிப்பு; முன் 3456-ன் கீழ் உரைத்த குறிப்புக்களும் இங்குப் பார்க்கத் தக்கன.

மாறில் திருவத்தயாமம் - மாறின்மை - வேண்டிய வேண்டியாங்கு வரம் தரப்பெறும் தன்மையில் ஒப்புயர்வற்ற வழிபாட்டுக் காலம் திருவத்தயாம மாகும் என்னும் தன்மை.

வந்து அணைந்தார் - பூங்கோயிலின் பக்கம் வந்து சார்ந்தனர்; உள்ளணைந்தமை மேற் கூறுவார். (3460)

விரவ வவருடன் கூடி—என்பதும் பாடம். 304

3459. **(இ-ள்)** ஆதி... அணைய - ஆதியாகிய இறைவரது திருத்தொண்டர்கள் அங்கு எதிரே வந்தணையக் கண்டு; அவர் முகநோக்கி - அவர்கள் முகத்தினை நோக்கி; கோதில்...வினவி - குற்றமற்ற இசையினோடு "குருகு பாய" என்று கோவை செய்து தொடங்கியே அயலார் போல வினவி; ஏசறவால்...கலந்தணைவார் - வருத்தத்தினாலே திருப்பதிகத்தினைக் காதல் புலப்படுக்கும் கைக்கிளைத்திணையில் வைத்துப் பாடியவாறே அவர்களுடன் கலந்தணைவாராகி,

(வி-ரை) ஆதி - எல்லார்க்கும் முன்னவர்;"தேசமுமை யறிவதற்கு முன்னோ" (அரசு); நிமித்த காரணர் என்றலுமாம்.

திரு அன்பர் எதிர் அணைய - நம்பிகள் திருக்கோயிலினை யணையும்போது அன்பர்கள் எதிரே வந்து எதிர்கொள்ளும் நிலையிற் சார.

அவர் முக நோக்கி - பதிகத்தினுள் "உணர்த்த வல்லீர்களே" என்பன வாதியாக முன்னிலைப் படுத்தி வருவன எல்லாம் எதிர் வந்த அன்பரை நோக்கித் தமது வருத்தத்தினை உணர்த்திப் புள்ளினங்களின் மேல்வைத்து வினவுவது போல் விண்ணப்பித்தபடி.

3460. சீர்பெருகு திருத்தேவா சிரியனைமுன் சென்றிறைஞ்சிக்
கார்விரவு **கோபுரத்தைக் கைதொழுதே** யுட்புகுந்து
தார்பெருகு பூங்கோயி றனைவணங்கிச் சார்ந்தணைவார்
ஆர்வமிகு **பெருங்காத லாலவனி மேல்வீழ்ந்தார்.** 306

கோத்து எடுத்தே - புள்ளினங்கள் பலவற்றின் செயல்களும் விரவும்படி அவற்றை விளிக்கும் வகையில் தொகுத்து.

ஏதிலார் போல் வினவி - ஏதிலார் - அயலார்; முன் தொடர்ச்சியில்லாத அந்நியர்; "எந்தை யிருப்பது மாரூர் அவர் எம்மையு மாள்வரோ கேளீர்" என்று முதலில் திருவாரூருக்கு வந்தபோது அருளிய நிலையினும் நம்பிகள் தொண்டர்களை நோக்கி வினவினர்; அந்நிலை வேறு. அதனுள் ஒற்றுமையில் ஒற்றுமை நயமும், இங்கு ஒற்றுமையில் வேற்றுமை நயமும் புலப்பட அருளிய தமிழ் நயம் காண்க.

ஏசறவு - வருத்தம்; எண்ணி ஏக்கற்ற உரிய பொருள் பன்னுளும் கிடைக்கப் பெறுத கவலையுடன் கூடிய மனநிலை.

காதல்புரி கைக்கிளை - விருப்பத்தின் மீக் கூர்தலினல் விளைந்த ஒருதலைக் காமத்தின் மன நிலை; **கைக்கிளை** - ஒருதலைக் காமம்; "ஒரு மருங்கு பற்றிய கேண்மை. இஃது ஏழாவதன் தொகை எனவே ஒருதலைக் காமமாயிற்று" என்பர் நச்சினர்க்கினியர் (தொல்.பொ-1).

கலந்து - எதிர் அணைந்த அன்பர்களுடன் கூடி; **கலத்தல்** - முன்னைக் கேண்மை நிகழ அளவளாவி ஒன்று கூடுதல். 305

3460. **(இ-ள்)** சீர்...இறைஞ்சி - சிறப்புப் பெருகுகின்ற திருத்தேவாசிரியன் என்னும் மண்டபத்தினை முன்னர்ச் சென்று வணங்கி; கார் விரவு...உட்புகுந்து - மேகந் தவழ்கின்ற திருக்கோபுரத்தினைக் கைகூப்பி வணங்கி உள்ளே புகுந்து; தார்பெருகு...அணைவார் - மாலைகள் மிக்கு விளங்குகின்ற பூங்கோயில் என்னும் திருமாளிகையினை வணங்கிச் சார்ந்து அணைவாராய்; ஆர்வமிகு...வீழ்ந்தார் - ஆசை பெருகுகின்ற பெரு விருப்பத்தினலே நிலத்தின்மேல் வீழ்ந்தார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) திருத்தேவாசிரியனை முன் சென்று இறைஞ்சி - "பூங்கோயிலிற் சோதி மாமணி நீள்சுடர் முன்றில்சூழ், மூதெயிற்றிரு வாயின்முன் னுயது"(136) "தேவா சிரிய னெனுந்திருக் காவணம்" (137); திருமுன்றிலினுள்ளணைந்தவுடன் முதலிற் காண உள்ளது தேவாசிரிய னுதலின் அதனை **முன்** இறைஞ்சினர்; அன்றியும் அடியார் கூட்டம் நிறைந்துள்ள இடமதுவே யாதலின் அடியார்களை முன் வணங்கிச் செல்லும் முறையாலும் **முன்** இறைஞ்சினர் என்க.

கார்விரவு கோபுரம் - இது தேவாசிரியனை வணங்கிச் சென்றவுடன் உள்ள சுவாமி கோயில் முதற் கோபுரம்; இது நம்பிகளுக்கு "எதிர்காணக் காட்டும்படி எதிர் தோன்றி நிற்க"

(336) "தில்லைவா ழந்தணர்தம் மடியார்க்கு மடியேன்" என்று திருத்தொண்டத் தொகைக்கு அடியெடுத்துக் கொடுத்தருளின இடம்.

பூங்கோயில் - புற்றிடங் கொண்டாரும் தியாகேசரும் எழுந்தருளியிருக்கும் திருமாளிகை.

பெருங் காதலால் அவனி மேல் வீழ்ந்தார் - காதல் தள்ள நிலமிசை வீழ்ந்தார்; தம்வச மிழந்தமையால் தம் செயலாக நிலம் பொருந்த வீழ்வதன்றி, உடல் கீழே விழும் நிலை என்றது குறிப்பு.

தேவாசிரியன்முன்—என்பதும் பாடம் 306

திருவாரூர்

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி, 7-ம் திருமுறை**

குருகுபா யக்கொழுங் கரும்புக ணெரிந்தசா
றருகுபா யும்வய **லந்தணு ரூரரைப்**
பருகுமா றும்பணிந் தேத்துமா றுந்நினைந்
துருகுமா றும்மிவை யுணர்த்தவல் லீர்களே. (1)

பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கணென் னத்தகு மடிகளா ரூரரை
மறக்ககில் லாமையும் வளைகணில் லாமையும்
உறக்கமில் லாமையு முணர்த்தவல் லீர்களே. (2)

நித்தமா கந்நினைந் துள்ளமேத் தித்தொழும்
அத்தனம் பொற்கழ லடிகளா ரூரரைச்
சித்தம்வைத் தபுகழ்ச் சிங்கடி யப்பன்மெய்ப்
பத்தனூ ரன்சொன்ன பாடுமின் பத்தரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—முன் (3459) ஆசிரியர் காட்டியருளியவாறு. இது கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின்பாற்படும் என்பர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) குருகு - நாரைகள் முதலிய பறவைகள்; **பாய -** கரும்புச் சோலைகளின் ஊடே பாய்தலால்; **கொழுங் கரும்புகள் நெரிந்த சாறு -** கொழுவிய கரும்புகள் முரிந்து நெரிந்ததால் ஓடிய சாறு; **அருகுபாயும் வயல் -** பக்கத்தில் உள்ள வயலில் பாய்தற்கிடமாகிய; கரும்புப் பயிரின் வளமும் நீர் வளமும் குறித்தவாறு; **ஆரூரரைப் பருகுமாறும் -** பருகுதல்; உருவகம்; மிக்க நீர்விடாய் கொண்டவன் நீர்பருகும் ஆர்வம் போன்று அவரது அருளினைக் கண்வழி மடுந்து அனுபவித்தல்; இதனை ஆசிரியர் பருகா........பருகுதற்கு (3462) என்று விரித்தருளுதல் காண்க. "தின்பன் கடிப்பன் றிருந்துவன் றானே" (திருமந்.9-332); "பருகுவ னன்ன ஆர்வத்த னாகி"; **நினைந்து உருகுமாறு -** நினைந்து நினைந்து மனமுருகுதல்; **உணர்த்த வல்லீர்களே -** அவர்பாற் சென்று

உணர்த்துவீர்களா? வினு விண்ணப்பங் குறித்தது; வல்லுவீராகிற் உணர்த்துங்கள் என்றபடி; தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்ருது தலைவன்பால் **தூது** விடுத்தல் என்னும் அகத்துறை; இப்பதிக முழுதும் இவ்வாறே காண்க. இதன் இயல்பெல்லாம் அகப்பொருணூல்களுட் கண்டுகொள்க; "காதல்புரி கைக்கிளையாற் பாடியே" (3459) என்று ஆசிரியர் இதனை விளக்கியது காண்க. **தூது** கைக்கிளைப் பகுதியைச் சார்ந்தது; இஃது எதிரணைந்த அன்பர்களை முக நோக்கிக் கூறிய தென்பதும் ஆசிரியர் காட்டியருளியது காண்க; முன்னரும் "அவர் எம்மையு மாள்வரோ கேளீர்." என்று அருளியதும், நினைவு கூர்க;—(2) **எம் கிள்ளைகாள் - எம் பூவைகாள் - எம்** என்பது தூதுசெலுத்துவோரை அன்பினுற் றம்மவ ராக்கிக் கொள்ளும் நிலை. **அறக்கண் என்னத்தகும்** - "இனையவகை - யெண்ணிறந் தோர்க் கருள்புரிந்து, முனைவரவர் வீற்றிருந்த" என்றதும் திருநகரச் சிறப்பில் மனுநீதிச் சோழர் சரித விளைவாகிய திருவருள் வெளிப்பாடும் காண்க. **அறக்கண்** - அறத்துக் கிருப்பிடம்; அறவுருவன்; "நீதிபலவும் தன்னதுரு வாமென மிகுத்த தவ நீதியொடு தானமர்விடம்" (தேவா); இறைவர் இங்கு "அறவாழியந் தண" ராய்த் தியாகேசராகி அரசாட்சி புரியும் நிலையும் கருதுக. மேற்பாட்டில் "**ஆளும்**" என்னும் குறிப்பும் காண்க. மறக்க கில்லாமை முதலியன பிரிவாற்ருது வருந்தும் தலைவியின் நிலைகள்;—(3) **சூழும்** - சுற்றிலும் பல பக்கங்களிலும்; **வாழுமாறு** முதலியவையும் முன்கூறிய நிலைகள்; **வாழுமாறு** - பிரிவாற்ருமையால் இறந்து படாது "உயிரொன்றும் தாங்கி" நின்ற நிலை என்பது குறிப்பு (318); இன்னும் உயிர் மட்டும் தங்கியிருக்கின்ற தென்பது; "கொல்லாது சூலைநோய்" (1322); **வளை கழலுதல்** - ஆற்ருமையால் உடல் மெலிந்து வளை நில்லாது கழலுதல். **எனக்கு ஊழுமாறு** - ஊழினைப்பற்றி நினைந்திரங்குதல்; (4) **அக்கிரமங்கள்** - தனித்துப் பிரிய விட்டுப் பார்த்திருந்து வருத்துதல் தகாத செயல் என்பது; "தக்க தன்று தமது பெருமைக்கே" (தேவா); **அ**-அந்த என்று கொண்டு, தமது நியதியாகிய அந்தக் கிரமப்படியே என்றலும் குறிப்பு. **வக்கிரம்** - திறம்புதல்; **உக்கிரம்** - கோபம்; அவர் அக்கிரமங்கள் செய்யினும் அடியோம் அடிமைத் திறத்திற் பிறழ்தலேனும் அவர்பாற் பிணங்குதலேனும் செய்திலோம் என்பது;—(5) **அலை** - அலைத்தல்; வருத்துதல்; **கலைகள் சோர்தல் வளைகழலுதல் முலைகள் பீர்கொள்ளுதல்** - பிரிவாற்ருமையின் வரும் நிலைகள்; **பீர்** - பீர்க்கம்பூ நிறமுடைய பசலை; "காமத்தீக்கனன் றெரிந்துமெய் உண்டவாறும்" என்று இதன் காரணத்தை மேற்பாட்டில் விரித்தல் காண்க;—(6) **மெய் உண்டவாறு** உடம்பைச் சுருக்கி இளைக்கச் செய்தவாறு; (7) **ஆனலம்** -புதுநலம்; ஆனைந்து என்றலுமாம்; **ஆன்** - ஆன்மா என்று கொண்டு உயிரின் நலம் என்றலுமாம். **பயந்து** - பசப்புற்று; **பொன் ஊனலம்** - பொன் பிதிர்ந்ததன்ன பசலை; இது பிரிவாற்ருமையான் வருவது; **தேன்** - இனிமை; (8) **அற்றம்** துன்பம்; மெலிவு; **பற்று - பாடு - உற்று** - பற்றுக்கோடாகிய நிலைகள்; (9) **குரவநாற** - குராமலர்கள் மணஞ் செய்ய; **பாடநின்று அரவமாடும்** - குயிலும் வண்டும் பண்பாட அப்பாட்டுக் கேள்வியில் ஈடுண்டு தம்மை மறந்து அரவங்கள் ஆட; **பரவி - பாடி - உருகி** - பிரிவாற்ருத தலைவியின் செயல்கள்;—(10) **ஆடும் அம்பொற்கழல்** தியாகேசரது அசபா நடனம் குறித்தது; **பாடுதல் - பணிந் தேத்துதல் - ஊடுதல்** - இவை பிரிந்த தலைவிமாட்டுத் தலைவனது உருவெளிப்பாடு கண்டு நிகழ்வன; (11) **நித்தமாக** மறவாது; இடையருது; **சிங்கடியப்பன்** - நம்பிகளின் சரிதக் குறிப்பு. **சொன்ன** - சொன்னவற்றை.

3461. வீழ்ந்தெழுந்து கைதொழுது முன்னின்று விம்மியே
வாழ்ந்தமலர்க் கண்ணொன்று லாராமன் மனமழிவார்
"ஆழ்ந்ததுயர்க் கடலிடை நின் றடியேனை யெடுத்தருளித்
தாழ்ந்தகருத் தினைநிரப்பிக் கண்டாரீ' ரெனத் தாழ்ந்தார். 307

3462. திருநாவ லூர்மன்னர் திருவாரூர் வீற்றிருந்த
பெருமானைத் திருமூலட் டானஞ்சேர் பிஞ்ஞகனைப்
பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு
மருவார்வத் துடன் "**மற்றைக் கண்டாரீ**'ரெனவணங்கி, 308

***3461.* (இ-ள்)** வீழ்ந்தெழுந்து...விம்மியே - முன் கூறியவாறு வீழ்ந்தபின் (நம்பிகள்) எழுந்து கை கூப்பித் தொழுது திருமுன்பு நின்று விம்மி விம்மி; வாழ்ந்த...மனமழிவார் - வாழ்வு பெற்ற மலர் போன்ற கண் ஒன்றனுற் கண்டு நிறைவுபெருமல் மனமழிவாராகி; ஆழ்ந்த...தாழ்ந்தார் - மிக ஆழமாகிய துன்பக் கடலினின்றும் அடியேனை மேலே எடுத்தருள் செய்து விரும்பிய கருத்தை நிறைவாக்குவித்துக் கண்கொடுத்தருளுவீர் எனத் தாழ்ந்து வணங்கினர்.

(வி-ரை) வீழ்ந்து - முன் பாட்டிற் கூறியவாறு நிலமிசை விழுந்ததன் பின்னர்.

வாழ்ந்த மலர்க் கண் ஒன்ருல் - திருவொற்றியூரில் இழந்த கண்களிரண்டனுள். மூலைச்சுவட்டுக் கோலமுடைய **திருவேகம்பரை** "காணக் கண்ணடியேன் பெற்றவாறே" என்றபடி இறைவரது திருக்கோலம் காணும் வாழ்வு பெறும் பொருட்டே அவ்வொரு கண் பெற்றமையால் அதனை **வாழ்ந்த மலர்க்கண்** என்ருர்.

கண் ஒன்று- இடது கண்; **கண் ஒன்ருல் -** ஒரு கண்ணுற் கண்ட காட்சி.

ஆராமல் - ஆர்த்திபெருமல்; ஆர்தல் - நிறைவு - அமைதி; **மனமழிதல் -** மனம் உருகி நைதல்.

ஆழ்ந்த...எடுத்தருளி - ஆழ்ந்த - நிலைகாணுதவாறு மிக ஆழமுடைய; நான் அழுந்திய என்றலுமாம்; **கடல்** உருவகம்; கடல் என்றதற் கேற்ப **எடுத்து** என்ருர். "என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத்து" (சித்தி) என்றுற்போல.

தாழ்ந்த கருத்தினை நிரப்பி - தாழ்தல் - விரும்புதல்; சபதம் பிழைத்த பெரும் பிழையினையும் பொறுத்தருள வேண்டுதலின் **தாழ்வாகிய** என்ற குறிப்புமாம்; இப்பொருளில் தாழ்ந்த (தாழ்வாகிய) கருத்தாயினும் அதனை என்று இழிவு சிறப்பும்மை விரிக்க. **கருத்தாவது** யாது? எனில் **கண்தாரும் -** என்ற இஃதேயாம் என்றபடி.

தாழ்ந்தார் - தாழ்ந்து வணங்கினுர். ***307***

***3462.* (இ-ள்)** திருநாவலூர் மன்னர் - திருநாவலூர்த் தலைவராகிய நம்பிகள்; திருவாரூர்... இன்னமுதத்தை - திருவாரூரில் வீற்றிருந்த பெருமானைத் திருமூலட்டானத்தில் எழுந்தருளியுள்ள பிஞ்ஞகராகிய இறைவரை வாயினுற் பருகலாகாத இனிய அமுதம் போன்றவரை; கண்களாற் பருகுதற்கு - கண்களினுற் கண்டு அனுபவித்தற் பொருட்டு;

வேறு

3463. "**மீளா வடிமை**" யென்றெடுத்து மிக்க தேவர் குலமெல்லாம்
மாளா மேநஞ் சுண்டருளி மன்னி யிருந்த பெருமானைத்
"**தாளா தரிக்கு மெய்யடியார் தமக்கா மிடர்நீர் தரியீ**"ரென்
ருளாந் திருத்தோ ழமைத்திறத்தா லஞ்சொற் பதிகம் பாடினுர். 309

மருவார்வத்துடன்... வணங்கி - பொருந்திய பேரன்பினேடும் "மற்றைக் கண் தாரீர்" என்ற கருத்துடன் வணங்கி.

(வி-ரை) பெருமானை - பிஞ்ஞகனை - அமுதத்தை - இவ்வாறு மூன்று திறத்தாற் கூறும் கருத்துப் பற்றி முன் (*3434*)லும், பிறுண்டும் உரைத்தவை பார்க்க,

பருகா இன் அமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு - இது முன் "பருகுமாறும்" என்ற பதிகப்பகுதிக்கு உரைவகுத்துக் காட்டியபடி; ஆண்டுரைத்தவை பார்க்க.

மருவு ஆர்வம் - கண்ணெனன்றுற் கண்டு ஆராத ஆர்வம்.

மற்றைக் கண் தாரீர் - மற்றைக் கண்ணுவது காஞ்சிபுரத்தில் பெற்ற இடக்கண்ணன்றி ஏனைய வலக்கண் - இது நம்பிகளது திருவுள்ளக் குறிப்பு. மேற்பாட்டில் "தாளாதரிக்கும்...தரியீர்" என்பது பதிகக் குறிப்பு-(பதிகம்-2)

வீற்றிருக்கும்—என்பதும் பாடம். *308*

3463. **(இ-ள்)** "மீளா அடிமை" என்றெடுத்து - மீளா அடிமை என்று தொடங்கி; மிக்க...பெருமானை - மிகுந்த தேவர் கூட்டமெல்லாம் இறந்து படாதபடி தாம் விடத்தினை உண்டு அருளிச் செய்து நிலைபெற்றிருந்த இறைவரை; தாள்... என்று - உமது திருவடியை அன்புடன் பேணும் உண்மை யடியார்களுக்கு ஆகும் துன்பங்களை நீர் தரிக்க மாட்டீரே என்ற குறிப்புடனே; ஆளாம்... பாடினுர் - அடிமையும் திருத்தோழமையும் ஆகிய திறத்தோடு அழகிய சொற்றிருப்பதிகத்தினைப் பாடியருளினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மீளா அடிமை - பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு.

மிக்க...பெருமானை- இக்கருத்தே பட "விண்ணுள்வா ரமுதுண்ண மிக்க பெரு விடமுண்ட, கண்ணுளா" (*3440*) என்று முன்னர்க் காஞ்சிபுரத்தின் நிகழ்ச்சியிலும் கூறும் குறிப்புக் காண்க.

தாளாதரிக்கு மெய்யடியார் - "மீளா வடிமை யுமக்கே யாளாய்...ஆளாயிருக்கு மடியார்" என்ற பதிகத்தை விளக்கியவாறு. **ஆதரித்தல்** - இடையருது பேணி அன்பு செய்தல்; **மெய்யடியார் - மெய்** - இயற்கை யடைமொழி.

மெய் அடியார் தமக்கு ஆம் இடர் - ஆம் - அடியார்கள் தமது வினை தீர்ந்து உய்தற் பொருட்டு நீர் நியதியின்படி ஊட்டுவிக்க அவ்வாறு அவர்பால் வரலாகும்; **இடர்** - இடரையும்; நீரே ஊட்டுவிப்பினும் அதனை அவர் அனுபவித்தற்கண் அவர்படும் துன்பத்தையும் என்று உம்மைவருவிக்க.

தரியீர் - தரிக்கமாட்டாத கருணையுள்ளவரே! என்று துதித்தபடி; பதிகம் பார்க்க.

ஆளாந் திருத்தோழமைத் திறத்தால் - ஆளாந் தன்மையும், அதனுடன் பொருந்தவுள்ள திருத்தோழராந் தன்மையும் இரண்டும் விரவிப் பொருந்தும் வகையால்; "வாழ்ந்து போதீரே" "நீரே பழிப்பட்டீர்" என்பன முதலிய பதிகப் பாட்டுக்களின் தன்மையினை விளக்கி யருளியவாறு. **309**

திருவாரூர்

திருச்சிற்றம்பலம் **பண் - செந்துரு(த்)தி. 7-ம் திருமுறை**

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுள்ளே கனன்று முகத்தான் மிகவாடி
யாளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் **வாழ்ந்து போதீரே.** (1)

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகே **ளென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்**
மற்றைக் கண்டான் றரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. (2)

அன்றின் முட்டா தடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்று முட்டாப் பாடு மடியார் **தங்கண் காணாது**
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே. (3)

செந்தண் பவளந் திகழுஞ் சோலை யிதுவோ திருவாரூர்
எந்தம் மடிகே ளிதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் **மடியார் தங்கண் காணாது**
வந்தெம் பெருமான் முறையோ வென்றால் வாழ்ந்து போதீரே. (5)

தினைத்தா ளன்ன செங்கா லன்னை சேரும் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போன் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தா மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி யடியா ரிருந்தால் வாழ்ந்து போதீரே. (6)

ஆயம் பேடை யடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
ஏயெம் பெருமா னிதுவே யாமா **றுமக்காட் பட்டோர்க்கு**
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. (7)

கழியாய்க் கடலாய் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை யிகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீ ரடிகேள் **பாடும் பத்தரோம்**
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. (8)

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை யிதுவோ திருவாரூர்
பொருந்தித் **திருமூ லத்தா னம்மே யிடமாக் கொண்டீரே**
இருந்து நின்றுங் கிடந்து மும்மை யிகழா தேத்துவோம்
வருந்தி வந்து முமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. (10)

காரூர் கண்டத் தெண்டோண் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லத்தா னத்தே யடிப்பே ராரூரன்
பாரூ ரறிய **வென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்**
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:—ஆசிரியர் காட்டி யருளியவாறு காண்க. (3462-3463)

பதிகப் பாட்டுக் குறிப்பு:—(1) மீளா அடிமை - பெத்த நிலை - முத்தி நிலை இரண்டிலும் என்றென்றும் நீங்காத அடிமைத் திறம்;உண்மை நூல்களின் முடிபு; "ஆளாயினி யல்லேனென லாமே", "ஒருமையே யல்லே னெழுமையு மடியேன்" (நம்பி); **மூளாத் தீப்போல்...சொன்னக்கால்** - உள்ளே மனம் வெதும்பிப் புறத்தோற்றத்திற் காட்டாது தம் வருத்தத்தை எல்லாம் உள் அடக்கி முறையிடுதல்; வாளா - ஆங்கு=வாளாங்கு; **வாழ்ந்து போதீரே** - பதிகத்தின் மகுடம்; துன்ப மேலீட்டினுல் மனம் புழுங்கி உரைக்கும் தன்மை; நீரே வாழ்ந்து போம்; நாங்கள் எக்கேடு கெட்டாலு முமக்காவ தென்ன என உலக வழக்கில் உரிமை பற்றிக் கூறும் நிலை;இதனை ஆசிரியர் "ஆளாந் திருத்தோழமைத் திறத்தால் பாடி" (3463) என்று அடிமைத் திறத்தின் மாறுபடாத நிலையினை வகுத்துக் காட்டி யருளுதல் காண்க. "இருந்து நின்றுங் கிடந்து மும்மை யிகழா தேத்துவோம்" (10); "இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை யிகழா தேத்துவோம்" (8) என்ற பதிக அகச்சான்றும் காண்க. "ஏசின வல்ல விகழ்ந்தன வல்ல" (நம்பி); **வாளாங்கு** - ஒன்றும் விடை பகராதும் வேண்டுகையை நிரப்பாமலும்; "வாய்தான் திறவீர்" (9); (2); **விற்று...அல்லேன்** - **ஒற்றி** - மீட்டுக்கொள்ளும் உரிமையுடன் ஒரு பொருளைப் பிறன் வசம் ஒப்படைக்கும் கடன் வகை; **விற்றுக் கொள்ளுதல்** - பிரதிபலன் எவ்வித நிபந்தனையு மின்றிப் பெற்றுப் பொருளைப் பிறன் வசமாக முழு உரிமையுடன் விற்பனை செய்து விடுதல்; (இவற்றை முறையே mortgage and sale என்பது நவீன வழக்கு); என்னை மீட்க முடியாதவாறு எல்லா வுரிமையுடன் உமக்குக் கொடுத்து விட்டேன்; **மீளா அடிமை-(1)** என்றதன் விரிவு; "ஒற்றியூரே லும்மதன்று" "ஒற்றியூரென்ற வூனத்தி னுலது தானே" "உம்மை ஒற்றி வைத்திங் குண்ண லாமோ" (தேவா); **கொத்தை** - குருடு; **நீரே பழிப்பட்டீர்** - குற்றமொன்றும் செய்யா திருப்பவும் கண்ணை மறைத்தமையால் பழி உம்மேல தாயிற் றென்பதாம்;திருவாரூரிற் செல்வதற்குத் திருவொற்றியூரிற் செய்யும் அந்தச் சபதந் தடையாயிருத்தல் கூடாதென்ற தமது எண்ணத்தினை முன்னர் இறைவர்பால் வேண்டி விண்ணப்பித் துள்ளாராதலின் இவ்வாறு கூறினுர் என்க; **மற்றைக்கண்** - காஞ்சிபுரத்தில் தந்த இடதுகண் போக எஞ்சிய கண்; வலக்கண்;—**(3) அன்றின் முட்டாதடையும்** - என்றது இணைபிரியாத அன்றில்கள் போலத் திருவாரூரை நம்பிகள் அணைவதாம் என்றபடி;

3464. பூத முதல்வர் புற்றிடங்கொண் டிருந்த புனிதர் வன்றொண்டர்
காதல் புரிவே தனைக்கிரங்கிக் **கருணைத் திருநோக் களித்தருளிச்**
சீத மலர்க்கண் கொடுத்தருளச் செவ்வே விழித்து முகமலர்ந்து
பாத மலர்கள் மேற்பணிந்து வீழ்ந்தா ருள்ளம் பரவசமாய். 310

கன்று...போல காலி - பசுக் கூட்டம்; எருமை முதலியன; கன்றுகள் மடியில் முட்டி உண்ணப் பால் சுரக்கும் என்பது; **போல** - உவமை; அதுபோல அடியார்கள் உம்மிடம் வந்து இடித்திடித்து வேண்டு மளவு அருள் சுரத்தல் வேண்டும்; அவ்வாறு சுரவாது அவர்கள் துன்பமுற வைத்தால் என்றபடி; "வருமேனிச் செங்கண்வரால் மடிமுட்டப் பால்சொரியும்" (1273); **தங்கண்...விழுந்தால்** - கண்ணில்லாமையால் வழியிடறித் துன்பப்பட்டால்; **குன்று** - மேடு என்ற பொருளில் வந்தது ;—(4) **அருத்தி** - அன்பு; **மறுமைப் பணித்தால்** - பின்னே அருள்வதென்றால்;—(5) **இதுவோ?** - ஒற்றைக்கண் பார்வை யாதலின் அழகு முழுமையும் காண இயலாமைக் குறிப்பு; 5-ம் பார்க்க. **பாடுமடியார்** - தமது பணியின் தன்மை பற்றிக் கூறியது;"பாடுவாய் நம்மை" (217) என்று ஆணையிட்டபடி பாடி அடிமை செய்யும் என்றது குறிப்பு. ஆணையின் வழியே பணி செய்யும் அடியவனைத் துன்பமின்றி வைத்தல் தலைவர்க்குக் கடன் என்பதும் குறிப்பு. **பாடுமடியார் (3-6); ஆட்பட்டோர் (7) பாடும் பத்தரோம் (8); (6) தினைத்தாளன்ன செங்கால்** - மெய்யும் உருவும் பற்றி வந்த உவமை; சிவந்து மெல்லிதாய் நீண்டிருத்தல் ஈரிடத்தும் பொதுத்தன்மை; **தனத்தாலின்றி மெலிந்து கண்காணாது - வாடி** - கண்ணிழந்த வருத்தத்தாற் பொருள் வேண்டுதலையும் ஒழிந்து மனம்வாடி;—(7) **ஆயம் பேடை**-பறவைக் கூட்டம்; **மாயம்...காயம் காட்டி** - "மாலுங் காட்டி வழிகாட்டி வாரா வுலக நெறியேறக், கோலங் காட்டி யாண்டாயை" (திருவா-ஆனந்த மாலை-3);—(8) **கலன்** - கடல் கடக்கும் மரக்கலம்; **இழியா... தேத்துவோம்** - வாழ்ந்து போதீரே என்று வசைமொழிக் குறிப்புப்படக் கூறுதல் இழிகுலத்தோர் வழக்கு; நாங்கள் அவ்வாறன்றி இழிவில்லாத குலத்திற் பிறந்தவரானதால் இவ்வாறு கூறியது ஏத்துகின்ற வகையின் பாற்படும் என்றதாம்;—(9) **பேயோடேனும்...பிறர்** - உம்மை இழிவு சிறப்பு; **காய்தான்...கொண்டக்கால்** - விரும்பி ஏற்றுக் கொண்டால் அவர்கள் காய் கேட்கவும் கனிதனைக் கொடுக்கும் விரைந்த அன்பன்றே வேண்டுவது. அஃதன்றி வேண்டிய அதனையும் கொடாமை முறையன் றென்பது; **நாய்தான் போல...திரிந்து** - வேண்டப் படாத இடத்தும் காலத்தும் முன்னை நன்றியினால்; அணுகித் திரிவதற்கு வினை பற்றி வந்த உவமம்; **வாய்தான் திறவீர்** - வாய் திறந்து ஒரு விடையேனும் சொல்லீர்; இப்பாட்டில் மூன்றடிகளுள் மூன்று உவமைகள் கூறிய அழகு காண்க;—(9) **இதுவோ திருவாரூர் - 5-10** பார்க்க;—(10) **செருந்தி செம்பொன் மலர்** - பிள் - நெல்வேலி 1-ம் பார்க்க; **திருமூலத்தானம்-11**-ம் பார்க்க. இப்பதிகம் திருமூலத்தானத்தில் வீற்றிருக்கும் புற்றிடங் கொண்டார்பால் விண்ணப்பித்தது; அப்பெருமானிடத்தே நம்பிகள் வழியடிமைப்பட்டனர் என்பது பற்றி மேல் 11-ம் பார்க்க; **இருந்து... ஏத்துவோம்** - வாழ்ந்து போதீரே என்பது இகழ்ச்சி யன்றித் துதிசெய்யும் ஒரு வகையே என்பதாம்;

*குறிப்பு:—இத்திருப்பதிக உண்மை அனுபவத்தில் வரக்கூடிய சிறப்புடையது. இதனைப் பயின்று கண் பெற்றவர்களை நான் அறிவேன்.

3465. விழுந்து மெழுந்தும் பலமுறையான் மேவிப் பணிந்து மிகப்பரவி
எழுந்த களிப்பி னலாடிப் பாடி யின்ப வெள்ளத்தில்
அழுந்தி **யிரண்டு கண்ணாலு** மம்பொற் புற்றி னிடையெழுந்த
செழுந்தண் பவளச் **சிவக்கொழுந்தி னருளைப் பருகித் திளைக்கின்றார்;** 311

"நின்று மிருந்துங் கிடந்து நடந்தும், என்றும் சிவன்றாள் நினை"; தமக்காகப் பரிகாரம் தேடிக் கண் பெறாத மனப் புழுக்கத்தாற் பாடியருளியமையால் இங்குப் பயன் கூறவில்லை.*

3464. **(இ-ள்)** பூத...புனிதர் - பூதபதியாகிய புற்றிடங் கொண்ட பெருமானார்; வன்றொண்டர்...இரங்கி - வன்றொண்டராகிய நம்பிகள் காதலால் இடையறாது வேண்டிய வேதனைக்கு இரங்கியருளி; கருணை...கொடுத்தருள - தமது அருட்டிரு நோக்கம் செய்து குளிர்ந்த மலர் போன்ற கண் பார்வையினைக் கொடுத்தருளினாராக; செவ்வே...பரவசமாய் - செவ்வையாகப் பார்வையோடு கூடிய விழியினை விழித்து முகமலர்ச்சி யடைந்து உள்ளம் தம் வசமிழந்து பரவசப்பட்டு இறைவரின் திருவடி மலர்களின் மேல் பணிந்து வீழ்ந்தனர்.

(வி-ரை) பூத முதல்வர் - சிவபூத கணங்களுக்கு நாயகர்; உயிர்களுக்கெல்லாம் ஒரு தனி நாதராகிய பசுபதி என்றலுமாம்.

காதல்புரி வேதனை - காதல் காரணமாக வரும் துன்பம். **வேதனைக்கு** - வேதனையை நீக்க.

கருணைத் திருநோக்களித்தருளி - அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்க மெய்த (753); முன்னர் நம்பிகளைக் கண்ணிழப் பித்ததும் இறைவரது கருணையேயாம். ஆனால் அது மறக்கருணை; இப்போது செய்தது அறக்கருணை நோக்கம்.

கண் கொடுத்தருள - கண்பார்வை கொடுக்க.

செவ்வே விழித்தலாவது குருடர் பார்க்கும் பார்வை போலன்றிப் பொருள்களை நேரே மலர்ந்து பார்க்கும் செவ்விய பார்வை. 310

3465. **(இ-ள்)** விழுந்து...பரவி - நிலம் பொருந்த விழுந்தும் பின் எழுந்தும் பல முறைகளாலும் பொருந்திப் பணிந்து மிகவும் துதித்து; எழுந்த...அழுந்தி - மேன் மேல் அதிகரித்து எழுந்த மகிழ்ச்சியினாலே ஆடியும் பாடியும் இன்பப் பெருக்கில் மூழ்கியும்; இரண்டு...திளைக்கின்றார் - இரண்டு கண்களாலும் அழகிய பொற்புற்றினிடமாக முளைத்தெழுந்த செழிய குளிர்ந்த பவளம் போன்ற சிவக்கொழுந்தாகிய இறைவரது திருவருளைப் பருகி அனுபவத்தில் மூழ்கினவராகி,

(வி-ரை) விழுந்து... அழுந்தி - கண்பெற்ற பெருமகிழ்ச்சியினால் நிகழும் அளவுபடாத மெய்ப்பாடுகள்.

பலமுறையான் - அட்டாங்க பஞ்சாங்க திரியாங்கமாகவும், அவையும் பல முறையாகவும்.

பரவி - பாடி - பரவுதல் - துதித்தல்: **பாடுதல்** - கீதம் பதிகம் முதலியவை பாடுதல்;

3466. கால நிரம்பத் தொழுதேத்திக் கனக மணிமா ளிகைக்கோயில்
ஞால முய்ய வருநம்பி நலங்கொள் விருப்பால் வலங்கொண்டு
மாலு மயனு முறையிருக்கும் வாயில் கழியப் புறம்போந்து
சீல முடைய வன்பருடன் றேவா சிரியன் மருங்கணைந்தார். 312

இன்பவெள்ளத்தில் அழுந்தி - இன்பத்தை நீர்ப்பெருக்காக உருவகித்தார்; **அழுந்தி** - என்றது நம்பிகளை அவ்வின்ப வெள்ளம் தன்னுள் அடக்கி மேலெழுந்தது என்ற குறிப்பாம்.

இரண்டு கண்ணாலும் - பருகித் திளைக்கின்றார் - முன் ஒரு கண்ணாற் கண்டு களித்தார்; ஆயின் அதனால் மனம் நிறைவு பெறவில்லை; இப்பொழுது மற்றக்கண்ணும் பெற்றதனால் இரண்டு கண்ணாலும் பருகினார் என்பதாம்; உம்மை முற்றும்மை; **கண்களால் பருகினார் - பருகுதல்** - வாயின் றொழில்; அதனை இங்குக் கண்ணின் றொழிலாக உபசரித்தார்; "பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு" (3462); **திளைக் கின்றார் - திளைத்தல்** - ஆனந்தானுபவத்தில் மூழ்குதல்; திளைக்கின்றாராய்; முற்றெச்சம்; **திளைக்கின்றார் - ஏத்தி** என வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

எழுந்து களிப்பினால்—என்பதும் பாடம். *311*

3466. **(இ - ள்)** காலம்...ஏத்தி - அந்த வழிபாட்டுக் காலம் நிரம்பும் வரை தொழுது துதித்து; ஞாலம்... நம்பி - உலக முய்யும் பொருட்டுத் திருவவதரித்த நம்பிகள்; கனக மணிமாளிகைக் கோயில் - பொன்மயமாகிய அழகிய அப்பூங்கோயிலின் திருமாளிகையினை; விருப்பால்... புறம் போந்து - விருப்பத்தினால் வலமாகச் சுற்றி வந்து விட்டுணுவும் பிரமனும் முறைகிடந்து காத்திருக்கும் திரு வாயிலினைக் கடந்து புறத்திற் போந்து; சீலமுடைய... அணைந்தார் - தவவொழுக்க முடைய அன்பர்களுடனே தேவாசிரியனின் பக்கத்தே அணைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

(வி-ரை) காலம்நிரம்ப - மாறிறிருவத்தயாமத் திறைஞ்ச வந்தாராதலின் (3458) அந்த அத்தயாமமாகிய வழிபாட்டுக் காலம் முடிய; அத்தயாம முடியும்வரை ஏத்தியிருந்தனர்; அதன்பின் கோயில் திருக்காப்பிடப் பெறுமாதலின் வலங்கொண்டு புறம் போந்தனர் என்பதாம்;"அங்கெய்தாக் காலத்தின்" "காலமெல்லாந் துதித்திறைஞ்சி" என்பவையும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

முறையிருத்தல் - முறையீடுகளை விண்ணப்பிக்கக் காலம்பார்த்துக் காத்திருத்தல்.

வாயில் - இது முதற்றிருவாயில்; நம்பிகளுக்கு இறைவர் வெளிப்பட்டுக் காட்சிதந்து திருத்தொண்டத் தொகைக்கு அடியெடுத்துக் கொடுத்தருளிய இடம்;"கொடிநெடுங் கொற்றவாயில்" (336). இல்வாய் என்பது முன்பின்னாகத் தொக்கது. 6-ம் வேற்றுமைத் தொகை; இலக்கணப் போலி.

சீலமுடைய அன்பர் - நம்பிகளுடன் தொடர்ந்து வந்தோரும் திருவாரூரிற் கலந்த அன்பர்களும்; **சீலம்** - சிவத்தவ ஒழுக்கத்திற் பிறழாமை.

3467. நங்கை பரவை யார்தம்மை நம்பி பிரிந்து போனதற்பின்
தங்கு மணிமா ளிகையின் கட் **டனிமை கூரத் தளர்வார்க்குக்**
கங்குல் பகலாய்ப் பகல்கங்கு லாகிக் கழியா நாளெல்லாம்
பொங்கு காதன் மீதூரப் புலர்வார் சிலநாள் போனதற்பின், 313

ஞாலமுய்யவரு நம்பி - ''மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதிலாத் திருத்தொண்டத் தொகைதரப் போதுவார்'' என்றது ஈண்டு நினைவு கூர்தற் பாலது. *312*

3467. **(இ-ள்)** நங்கை...போனதற்பின் - நங்கை பரவையார் தம்மை நம்பிகள் பிரிந்து போனபின்; தங்கு...தளர்வார்க்கு - தாம் தங்கும் அழகிய மாளிகையின்கண் தனிமை மிக்கதனுல் தளர்பவருக்கு; கங்குல்...எல்லாம் - நாள்கள் முற்றும் இரவு பகலேயாகவும், பகல் இரவேயாகவும் ஆகிக் கழிய; பொங்கு...போனதற்பின் - மேன்மேல் அதிகரிக்கும் ஆசையானது மேலோங்க வருந்துவாராகி சிலநாட்கள் கழிந்த பின்னர்;

(வி-ரை) தனிமைகூர -தனித்திருத்தலால் வரும்-பிரிவினுலாகிய துன்பம் மிகுதிப்பட; **தனிமை** - அதனுல் வரும் துன்பத்துக்காகி வந்தது.

கங்குல் பகலாய்ப் பகல் கங்குலாகிக் கழியா நாள் - கங்குல் பகலாதல் - பிரிவாற்ருமையால் கண் துயில்பெருது விழித்திருத்தலின் இரவே பகல்போலாகும் நிலே; இரவுறு துயரங் கடலொடு சேர்த்தல், நிலவுவெளிப்பட வருந்தல் என்பன முதலிய அகப்பொருட்டுறைகளில் இத்தன்மை பேசப்படும்; **பகல் கங்குலாதல் -** நாயகனது சந்நிதியின்மையால் பொலிவும் ஒளியுமிழந்து இருள்பொதிந்து நிற்றலும் பகலிற் செல்லும் மனவெழுச்சியின்றி யிருத்தலுமாம் - இரவுக்குரிய புணர்வு, நினைவு, அயர்வு முதலியன பகற்போதிலும், பகற்போதுக்குரிய விழிப்பு, காம வின்ப நீக்கம், புறம்போதல் முதலியன இராப்போதிலும் இவர்பால் நிகழ்தலின், **''கங்குல் பகலாய்ப் பகல்கங்கு லாகிக் கழிய''** என்ருர்; நங்கை பரவையார் இரு பெயரொட்டு; எழுவாய்; இது மேல்வரும் ''இடைப் பட்டார்'' (*3469*) என்பது கொண்டு முடியும்; தளர் வாராகிய அவ்வம்மையாருக்கு; வினையாலணையும் பெயர்; நான்கனுருபேற்று வந்தது; இவை ந.சிவப்பிரகாச தேசிகர் குறிப்பு.

கழியா நாளெல்லாம் - கழியாமை - ''ஊழியா மொருகணந்தான்'' (*3422*) என்ற கருத்துக் காண்க; கழியாத நாட்களிலெல்லாம்.

காதல் மீதூரப் புலர்வார் - மீக்கொண்டெழுந்த காதல் மிகுதியினுல் புலர்வாராகி; **புலர்தல் -** மனம் வெதும்புதல்.

சிலநாள் போனதற்பின் - இவ்வாறு புலர்வாராய்ச் சில நாட்கள் சென்ற பின்பு. *313*

3468. **(இ-ள்)** செம்மை...வார்த்தை - செம்மை நெறியென்னும் சிவநெறி சேரும் திருநாவலூராளியாகிய நம்பிகள் திருவொற்றியூரிற் சேர்ந்து பணைத்த தனங்களையுடையாராகிய சங்கிலியம்மையாரை விளக்கமிக்க மணஞ்செய்துகொண்ட உண்மையான செய்தியை; தாம்... உரைப்ப - செய்தியறிவதற்காகத் தாம் அவரிடத்து

3468. செம்மை நெறிசேர் திருநாவ லூார ரொற்றி யூர்சேர்ந்து
கொம்மை முலையார் சங்கிலியார் தம்மைக் குலவு மணம்புணர்ந்த
மெய்ம்மை வார்த்தை தாமவர்பால் விட்டார் வந்து கட்டுரைப்பத்
தம்மை யறியா வெகுளியினுற் றரியா நெஞ்சி னொடுந்தளர்வார். 314

ஏவியனுப்பிய மக்கள் வந்து நிச்சயமாகக் கூற; தம்மை... தளர்வார் - தம்மையறியாத படியே எழுந்த சினத்தினாலே தரிக்கலாற்றாத நெஞ்சி னோடும் தளர்வராகி;

(வி-ரை) செம்மை நெறி - சிவநெறி; தவநெறியினை வேண்டிப் பெற்று மேற்கொண்டொழுகிய நெறி.

கொம்மை - வட்டம்; அழகு; திரட்சி (பிங்); **குலவுமணம்** - விளக்கம்பொருந்திய மணம்; **விளக்க**மாவது உலகர் யாவருமறிய நிகழும் விதிமணம்; இதனைக் கற்பியல் என அகப்பொருள் நூல்கள் பேசுவன; இது களவியல் மணத்தினின்றும் வேறாகியது என்றறிவிக்கக் **குலவு** என்ற அடைமொழி தந்தோதினார்; "தக்க விதி மணத்தால்" (3395) என்றதும், இறைவர் ஆணையின்படி "திருத்தொண்ட ரெழிற்பதியோ ருடனீண்டிக், கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கல்லியாணம் செய்தளித்தார்" (3420) என்றதும் கருதுக. **குலவும்** - இறைவர் விதித்தபடி நிகழும்.

மெய்ம்மை வார்த்தை - உண்மைகளைக் கட்டுரைப்ப என்று கூட்டுக; முன்னர்ப் பிறர்பாற்கேட்டுப், பின்னர் அதன் உண்மையினை அறியச் சிலரை அனுப்பி, அவர்கள் கண்டு வந்து அஃதுண்மையே என்று கூற என்ற அளவில் விரித்துக் கொள்க; காரைக்காலம்மையார் புராண நிகழ்ச்சிகள் ஈண்டு நினைவுகூர்தற் பாலன. (1756-1757); பிறர்பாற் கேட்டபொருளை அவ்வாறே நம்பிவிடாமல் தாம் சிலரை ஒற்று அனுப்பி உறுதிப்படுத்திக்கொண்டு மேல் தொழில் புரிதல் வேண்டுமென்பது உலகியல் நீதிநூல்; முன் உரைத்தவையும் பார்க்க.

மெய்ம்மை வார்த்தை - இத்துணையும் குறிக்க **மெய்ம்மை** என்றார். **கட்டுரைத்தல்** - உறுதியாகக் கூறுதல்.

தம்மை அறியா வெகுளி - தம்மையும் அறியாது பெண்ணியல்பால் வந்த சினம்; தாமே துணிந்து நினைந்து மேற்கொண்டதன்று என்பதாம். உம்மை தொக்கது; கற்புடைய மடவார் கணவர்பாற் சினத்தலாகாது என்பது நீதியாகலின் வெகுளுதல் பொருந்தாது; ஆனால் இங்கு அவரையும் அறியாமலே சினம் போந்தது என்பதாம். தம்மையும் கோபத்தையும் வேறு பிரித்தற்கரிய கோபம் என்றும் கூறுவர்.

தரியாமையாவது - தமக்கே உரியதாகிய தம் நாயகரது இன்பம் பிறர்க்கு முரித்தாகக் கண்டு பொறுக்கலாற்றாமை.

தளர்தல் - தரியாமை காரணமாக உடல் தளர்ச்சியுறுதல்; இதன் தன்மையினை வரும் பாட்டிலுரைப்பார்.

கொம்மை முலை, மெய்ம்மை வார்த்தை, செம்மைநெறி - பண்புத்தொகை; **விட்டார்**- வினையாலணையும் பெயர்; **அறியா - தரியா** - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள் (ந.சிவ.தேசிகர் குறிப்பு). *314*

3469. மென்பூஞ் சயனத் திடைத்**துயிலு மேவார் விழித்து மினிதமரார்;**
பொன் பூந் **தவிசின் மிசை யமரார்; நில்லார்; செல்லார்;** பறம்பொழியார்
மன்பூ வாளி மழைகழியார்; மறவார்; நினையா ரென்செய்வார்
என்பூ டுருக்கும் புலவியோ பிரிவோ விரண்டி னிடைப்பட்டார். 315

3469. **(இ-ள்)** மென்பூ...அமரர் - மெல்லிய மலர்கள் பரப்பிய சயனத்திலே தூங்குவதையும் விரும்பார்;(தூங்காவிடில் விழித்திருப்பாரோ எனின் அவ்வாறு) விழிப்புடனும் இனிதாகவிருத்தலையும் விரும்பமாட்டார்; பொன்பூந் தவிசின்... புறம்பொழிவார் - சயனத்தின் மேவாராகிப் பொன்புனைந்த அழகிய ஆசனத்திருப்பரோ எனின் அதன்மேலும் இருக்கமாட்டார்; (ஆசனத்தின் இராராயின்) எழுந்து நிற்பரோ எனின் அஃதும்மாட்டார்; நடக்கவுமாட்டார்; நடந்து புறம்பு செல்லவுமாட்டார்; மன்... கழியார் - மன்மதனுடைய பூ அம்புகள் இடைவிடாது மழை போல வீழ்தலையும் விலக்கமாட்டார்; மறவார்... என்செய்வார் - நம்பிகளை மறக்கவும் மாட்டார்; (ஆயின் நினைப்பரோ எனின் செற்றத்தால்) நினைக்கவும் மாட்டார்; என்னதான் செய்வார்?; என்பூடு... இடைப்பட்டார் - எலும்பினையும் உள் உருக்கும் புலவியினிடத்தோ? அன்றிப் பிரிவினிடத்தோ? என்றறியமாட்டாது இவ்விரண்டனிடையிற் பட்டனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மென்பூ...அமரார் - உடல் தளரும் ஏனையோர் உலகியலில் படுக்கையிற் கிடப்பர்; உறங்குவர்; உறங்கியமையால் உடல் ஓய்வு பெறும்; பின்னர்த் தளர்வு நீங்கி வலுப்பெற்றெழுவர் என்பது உடல் பற்றிய மருந்துநூல் முடிபு; இங்குத் தளர்ச்சியுற்ற பரவையார் அவ்வாறு செய்ய லாற்றுதவராயினர் என்பது சயனத்திடைத் **துயிலுமேவார்** என்றதன் கருத்து;துயில்பெறுவிடினும் ஓய்வு பெற்றுச் சயனத்தின்மீது அமைதியாக இருப்பினும் ஒருவாறு உடற்றளர்ச்சி நீங்கும்; மனம் புலர்ந்து உள் வெதும்பியமையால் அவ்வாறு இனிதமர்த்தலும் ஆற்றுராயினர் என்பது. **மேவுதல்** - விரும்புதல்; "நம்பும் மேவு நசையா கும்மே" (தொல்.)

பொன்பூ...புறம் பொழியார் - சயனத்திடை இனிதமர்த லாற்றுதபோது பூந்தவிசில் இருக்கலாம்;அஃது இயலாதாயின் எழுந்து நிற்றல் அன்றி மாளிகை யினுள்ளாற் சுற்றி வருதல், அன்றிப் புறத்தே சென்று மனமாறுதல் என்றிவற்றிலொன்று செய்யலாம்; இவையெவையும் செய்யவு மாற்றுராயினர் என்பது.

மன் பூவாளி மழைகழியார் - முன்சொன்ன நிலைகளின் காரணம் கூறியவாறு; **மன்** - வெற்றியுடைய மதனனது; மதன் என்பதன் இடைக்குறை; **பூவாளி** - மலரம்புகள்; **மழைகழியார்** - மழைபோல அடர்ந்து பெய்யும் மதனம்புகளுக் குட்படாதபடி விலகமாட்டார்.

மறவார் நினையார் - மறவார் - இந்நிலைகளுக் கெல்லாம் காரணமாகிய அவரை மறந்து விடலாமோ எனின் மறக்கவும் இயலாதவராயினர்; புலத்தல் காரணமாக வேனும் அவரது நினைவு அகலாதாயிற்று; **நினையார்** - மறக்க இயலாவிடின் நினைவில் வைப்பரோ எனின்

3470. ஆன கவலைக் கையறவா லழியு நாளி லாரூரர்
கூன லிளவெண் பிறைக்கண்ணி முடியார் கோயின் முன்குறுகப்
பானல் விழியார் மாளிகையிற் **பண்டு செல்லும் பரிசினாற்**
போன பெருமைப் பரிசனங்கள் புகுதப் பெறாது புறநின்றார். 316

புலர்தலின் நினைக்கவுமாட்டார் என்க. "நினைந்ததும் மறந்ததும் இலாத நெஞ்சினுள்".

என்செய்வார் - மென்பூ... புறம்பொழியார் - என்றவை புறத் தொழில்கள்; **மறவார் நினையார்** - அகத்தொழில்; எனவே புறம் அகம் என்ற இரண்டாலும் எத்தொழிலும் செய்ய வியலாதபோது வேறென்னதான் செய்வார் என்றபடி. காரணம் **பூவாளி மழைகழியாமையாம்** என்று குறிக்க இடையில் வைத்தார்; **என்செய்வார்** - ஒன்றும் செய்ய இயலாமை என எதிர்மறை குறித்தது. கவிக்கூற்று.

என்பூடு... இடைப்பட்டார் - புறம் அகம் என்ற இரண்டு கருவிகளாலும் எத் தொழிலும் செய்ய இயலாதபோது அவர் நிலைதானென்னை? எனின்; அஃதின்ன தாமென்ற றிவித்தபடி; புலவியோ அன்றிப் பிரிவோ என்ற இரண்டு நிலைகளின் இடையிலே பட்டு நின்றனர் என்பதாம். **புலவி** - உடலின் மிகுதி.

இடைப்படுதலாவது புலவியுமாகாது பிரிவுமாகாது வருந்தும் நிலை; என்னை? கூடிய வழியன்றிப் புலவி நிகழாதாதலானும் இங்குக் கூட்டம் நிகழாமையானும் இது கைக்கிளையே யன்றிப் புலவியாகாது; மனத்தாற் பிரிதலில்லாமையானும், மன நினைவு இடையறாது நிகழ்தலின் உருவெளிப்பாடு முதலியவை உண்மையானும் பிரிவுமாகாது; பின்னை என்னையோ இவர் நிலை? எனின், இவையிரண்டி னிடைப்பட்டதோர் தனித்த நிலை என்பதாம்.

என்பு ஊடு உருக்கும் புலவி - புலவியின் இயல்பு குறித்தது; எலும்பையும் உருக்கும் தன்மை வாய்ந்தது என்க; **என்பூடுருக்கு** மென்பதைப் பிரிவினுடனுங் கூட்டுக.

இப்பாட்டுப் பிரிந்தார் மன நிலையினையும், வேறொரு பெண்ணை மணந்த நாயகனிலை கேட்ட நாயகியின் உள்ள நிலையினையும், இனிது விளங்க உரைக்கும் சதுரப்பாடுடைய மிக உயர்ந்த அகப்பொருட் சுவையுடையது; குறிக்கொள்க.

மிசையிரார் — வன்பூவாளி — நினையார் — வாய் விள்ளார் — என்பனவும் பாடங்கள். **315**

3470. (இ-ள்) ஆன...நாளில் - முன் கூறியவாறு உளவாகிய கவலையுடன் கூடிய செயலறு நிலையினாலே மனமுடைந்து வருந்தும் நாளில்; ஆரூரர்... குறுக - நம்பி யாரூரர் வளைந்த பிறைச் சந்திரனாகிய கண்ணி சூடிய முடியினை யுடைய இறைவரது திருப்பூங்கோயிலின் முன்பு சேர; பானல்...பரிசனங்கள் - குவளைமலர் போன்ற கண்களையுடைய பரவையாரது திருமாளிகையில் முன்னெல்லாம் போகும் தன்மையினாற் சென்ற பெருமையுடைய பரிசனங்கள்; புகுத...புறநின்றார் - மாளிகையின் உள்ளே செல்ல வாயில் பெறாமற் புறத்தே நின்றார்கள்.

3471. நின்ற நிலைமை யவர்கள்சிலர் நிலவு திருவா ரூரரெதிர்
சென்று மொழிவார் "திருவொற்றி யூரி னிகழ்ந்த செய்கையெலாம்
ஒன்று மொழியா வகையறிந்தங் குள்ளார் தள்ள மாளிகையில்
இன்று புறமுஞ் சென்றெய்தப் பெற்றி லோ"மென் றிறைஞ்சினுர். 317

(வி-ரை) ஆன - முன் இரண்டு பாட்டிலும் கூறியவாற்ருல் உளவாகிய; ஆக்கச் சொல் காரணங் குறித்தது.

கவலைக் கையறவு கவலையுடன் கூடிய செயலற்ற நிலை; **கையறவு** - வருத்தம்; கவலை - பிரிவாற்ருமையினுலும், **கையறவு** - தம் நாயகர் வேறு பெண் ஒருத்தியை மணந்து மனங் கொடுத்தார் என்றதனுலும் விளைந்தன. **கையறுதல்** - ஒரு செயலும் செய்யலாற்ருத நிலை. பெரும்பான்மை உயிர் போன்றதொன்றை இழந்த போது உள்ள நிலையினைக் குறிக்க வழங்கும் சொல்.

அழிதல் - மனமுடைந்து மெலிவு பெறுதல்.

கூனல்... பிறை - பரவையாரது மனமழிந்த நிலை போலவே உள்ளுடைந்து உடல் வளைந்த இளம்பிறை என்றது குறிப்பு. **கண்ணி** - முடிமாலை;"கூனற்றிங் கண் குறுங்கண்ணி" (தேவா-பிள்).

கோயில் முன் குறுக - நம்பிகள் திருக்கோயிலின் முன் அணையும்போது பரிச னங்கள் பரவையார் திருமாளிகைக்குச் சென்றனர்; நம்பிகள் கோயில் முன் குறுகியது திருவத்தயாம நேரம் என்பது முன் (3458) உரைக்கப்பட்டது. திருவாரூரினை மயங்கு மாலையிற் புகுந்த நம்பிகளுடன் போந்த பரிசனங்கள் திருவத்தயாம நேரம் வரை அவரது பணி மேலிட்டு உடனிருந்தனராதலாலும், திருவொற்றியூரின் நிகழ்ச்சிகளும் பிறவும் பரவையார் தெரிந்து கொண்டமையால் வரும் மாறுபாடுகளின் விளைவினை உட்கொண்டன ராதலாலும், ஊரெலாம் துஞ்சும் அந்நெடு நேரம் வரை தாழ்த்துச் சென்றனர் என்க; ஆயின் இதுபோழ்து சென்றமை நம்பிகள் செல்லுமுன் சென்று ஆவன அறிந்து செய்தற் பொருட்டு என்க. திருக்கோயில் வழிபாட்டில் பரிசனங்கள் உடனிருக்க வேண்டாமையும் காண்க. அங்கு அடியவர்களே உடனிருத்தற் குரியார் என்ற குறிப்பு முன் "திருத்தொண்டர் விரவுவாருடன் கூடி" (3458) என்றவிடத்துக் காட்டப்பட்டது.

பண்டு செல்லும் பரிசு - முன் காலமெல்லாம் போகும் தன்மை.

பானல் விழியார் - இரவில் மலரும் குவளையினைக் கூறியது பரவையார் "துயிலும் மேவா" ராய் (3469) நின்ற நிலைக் குறிப்புப் பெறுதற்கு.

பெருமையாவது நம்பிகளின் பணிவிடைகளைச் செய்யும் பெரும்பேறு வாய்க் கப்பெற்ற நிலை. "கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்" என்ற அவ்வடிமைத் திறத்தின் பெருமையை ஆசிரியர் காட்டியருளியது காண்க. அவர்கள் குண நிறைவுக் குறிப்புமாம். ஏனைய உலகியற் பரிசனங்கள் போன்ரு ரல்லர் என்பது.

புகுதப் பெருது புறநின்ருர் - இதன் காரணம் உணர்த்தற் கெழுந்தது வரும் பாட்டு; அந் நிகழ்ச்சிகளை பரிசனங்களின் வாக்கின் வைத்துக் கூறச்செய்தல் கவிநயம். *316*

3472. மற்ற மாற்றங் கேட்டழிந்த மனத்த ராகி வன்றொண்டர்
"உற்ற விதனுக் கினியென்னே செயலென் றுணர்வா **ருலகியல்பு**
கற்ற மாந்தர் சிலர்தம்மைக் காதற் பரவை யார்கொண்ட
செற்ற நிலைமை யறிந்தவர்க்குத் **தீர்வு சொல்லச் செலவிட்டார்.** 318

3471. **(இ-ள்)** *நின்ற...மொழிவார் - முன் கூறியவாறு புறத்தே நின்ற நிலைமையினை அப் பரிசனங்களுட் சிலர் நிலவும் நம்பியாரூரர்பால் சென்று அவர்க்கெதிரே சொல்வார்களாகி; "திருவொற்றியூரில்... பெற்றிலோம்" என்று - "திருவொற்றியூரிலே நிகழ்ந்த செய்திகள் எல்லாவற்றையும் ஒன்றும் விடாது முழுமையும் அறிந்ததனாலே, அங்கு உள்ளவர்கள் புறம்பு தள்ளியமையால் இன்று திருமாளிகையின் புறத்திலேயும் சென்று சேரப் பெற்றோமில்லை" என்று கூறி; இறைஞ்சினர்-வணங்கினர்கள்.*

(வி-ரை) இது - பரவையார் திருமாளிகையினுட் புகுதப் பெறாது புறம்பு நின்ற பரிசனங்களுட் சிலர் அச்செய்தியினை நம்பிகளிடம் அறிவித்தமை கூறுகின்றது. முன்பாட்டில் **புகுதப் பெறாது புறநின்றார்** - என்றதனை விரித்துரைத்தபடி.

நின்ற நிலைமை - மொழிவார் - என்று கூட்டுக. **நிலைமை** - நிலைமையினை; இரண்டனுருபு விரிக்க. **நின்ற** - திருமாளிகைப் புறத்தே நின்ற.

அவர்கள் சிலர் - அப் பரிசனங்களுட் சிலர்; இவ்வாறன்றி, **நிலைமையவர்கள்** என்று கூட்டி நிலைமை அடைந்த பரிசனங்கள் என்று உரைத்தனர் முன்னுரை காரர்கள்.

நிலவு - அருள் வாழ்வின் நிலைபெற்ற என்க.

மொழிவார் - என்று - என்று கூட்டுக; மொழிவார்- மொழிவார்களாகி; முற்றெச்சம்; **என்று** - என்று கூறி.

செய்கை எலாம்...வகை - நிகழ்ச்சிகள் ஒன்றும் ஒழியாது எல்லாவற்றையும்.

அறிந்து - தள்ள - என்று கூட்டுக. அறிந்த காரணத்தினால் தள்ள; **அறிந்து** - காரணப் பொருளில் வந்த வினையெச்சம். **உள்ளார்** - அங்குள்ள மாதர்கள்.

தள்ள - பெற்றிலோம் - தள்ளியமையாலே; காரணங் குறித்தது. **புறமும்** - சிறப்பும்மை; **இன்று மாளிகையின் புறமும் சென்றெய்த** என்க; **இன்று** - முன்னெல்லாம் மாளிகையினுள் உரிமையாற் சென்ற நாங்கள் இன்று புறமும் சென்று எய்தப் பெற்றிலோம் என்பது, **இன்று புறமும்** - என்றவற்றின் குறிப்பு.

இறைஞ்சினர் - இதற்கு மாற்று நிகழ்த்தினன்றி மேற்செயல் ஒன்றும் நிகழ்தல் இயலாமைபற்றிய முறையீடு குறித்த வணக்கம். *317*

3472. **(இ-ள்)** *மற்ற...மனத்தராகி - மற்ற மாற்றத்தினை அப் பரிசனங்கள்பாற் கேட்டு அழிந்த மனத்தினை உடையவராகி; வன்றொண்டர்...உணர்வார் - நம்பிகள் வந்துற்ற இந்நிலையினுக்குத் தீர்வாக "இனி என்னே செய்யக் கடவது?" என்று உணர்ச்சியிற் றேர்வாராகித் தெளிந்து; உலகியல்பு...செலவிட்டார் - உலகியல்பினை நன்கறிந்து தகவியற்றும்*

3473. நம்பி யருளாற் சென்றவரு நங்கை பரவை யார்தமது
பைம்பொன் மணிமா ளிகையணைந்து பண்பு புரியும் பாங்கினுல்
வெம்பு புலவிக் கடலழுந்து மின்னே ரிடையார் முன்னெய்தி
"எம்பி ராட்டிக் கிதுதகுமோ?" வென்று பலவு மெடுத்துரைத்தார். 319

நிலை கைவந்த மாந்தர்கள் சிலரைக் காதலையுடைய பரவையார் மேற்கொண்ட கோப நிலைமையின் தன்மையினை அறிந்து அதற்கேற்றவாறு அவருக்கு அது தீரும் வகையினைச் சொல்லிச் சினந் தணிவிக்கும்படிச் செல்ல விடுத்தனர்.

(வி-ரை) மற்ற மாற்றங் கேட்டு - மற்று - தாம் எதிர் பார்த்ததற்குமாருகிய; **மாற்றம்** - சொல், மனம் மாறுபட்ட நிலை, என்று இரட்டுற மொழிந்து கொள்ள வைத்த கவிநயம் கண்டு கொள்க.

அழிந்த மனம் - மனமழி தலாவது- மனமுடைந்து வருந்துதல்.

உற்ற - எதிர்பாராது வந்து பொருந்திய; **இதனுக்குச் செயல்** - இந்நிலையினை மாற்றுதற்கு; உரிய செய்கை - உபாயம்;நான்கனுருபு பகைப்பொருளில் வந்தது; "பிணிக்கு மருந்து" என்புழிப் போல.

உணர்வார் - செலவிட்டார் - என்று கூட்டி முடிக்க; **உணர்வார்** - உணர்வாராய்த் தெளிந்து. தெளிந்து என்பது குறிப்பெச்சம்.

உலகியல்பு கற்ற - உலகியல் அறிவும், அனுபவமும், வினை செயல் வகை முதலிய ஆற்றல்களும் உடைய; உலகியலில் எவ்வெந் நிலையில் யார் யார்க்கு எவ்வெவ்வகையில் எடுத்துக்கூறினுல் செயல் முடியுமோ அவ்வவ்வகை கூறிச் செயலினை முடிக்கும் ஆற்றல்வகை எல்லாம் அடங்க **உலகியல்பு கற்ற** எனப்பட்டது; இவ்வாருகிய செயல்களில் அனுபவ முதிர்ந்த என்க.

செற்ற நிலைமை யறிந்து - பரிசனங்கள் கூறக் கேட்ட மட்டிலன்றி அவரது செற்றத்தின் அளவு முதலாகிய தன்மைகளை நேரே அறிந்து; **செற்றம்** - கோபம். "செற்றம்" (3526) (3474); தன் மட்டிலடங்குவதன்றி மேல் எழுந்து செலும் நிலையில் ஓங்கிய என்பது குறிப்பு. தணியாக் கோபமென்பர்.

தீர்வு - அது தணியும் வகைக்கு உள்ள மொழிகள். தீர்வுசெய்யும் மொழிகளைத் தீர்வென்றுர்.

செலவிட்டார் —செல்லும்படி ஏவி விடுத்தனர்.

கேட்டொழிந்த—என்பதும் பாடம். *318*

3473. **(இ-ள்)** நம்பி...அணைந்து - நம்பிகளின் அருளாணையின் வழியே சென்ற அம் மாந்தர்களும் நங்கை பரவை யம்மையாருடைய பைம் பொன்னணிந்த அழகிய திருமாளிகையினைச் சென்றணைந்து; பண்பு...பாங்கினுர் - செற்றந் தணிவிக்கும் பண்பினைச் செய்யும் தன்மையினுடன்; வெம்பு...எய்தி - மனத்தினை வெதும் பச்செய்தற் கேதுவாகிய

3474. பேத நிலைமை நீதியினாற் பின்னும் பலவுஞ் சொன்னவர்முன்
மாத ரவரு மறுத்துமனங் கொண்ட செற்ற மாற்றாராய்
"ஏத மருவு மவர்திறத்தி லிந்த மாற்ற மியம்பிலுயிர்
போத லொழியா" தெனவுரைத்தா ரவரு மஞ்சிப் புறம்போந்தார். 320

புலவியாகிய கடலினுள்ளே அழுந்திக் கிடக்கும் மின்போன்ற இடையினையுடைய பரவையார் முன்பு சேர்ந்து; எம்பிராட்டிக்கு...எடுத்துரைத்தார் - எம் பெருமாட்டியின் பெருந்தன்மைக்கு இவ்வாறு ஊடியிருந்து நாயகரை வெறுத்தல் தகுதியாமோ? என்று இவ்வாறாகிய பலவற்றையும் எடுத்துச் சொன்னார்கள்.

(வி-ரை) அருளால் - நம்பிகளின் பணிசெய்ய ஏவப்பெற்றது ஒரு அருளிப் பாடு - அருட் பேறு - என்பதாம்.

பண்பு புரியும் பாங்கு - பண்பு - செற்றம் தணிவிக்கும் நல்ல நிலை; **புரிதல்** - கைவரச் செய்யும் நிலை; செய்தல்; **பாங்கினால்** - அதற்குத் தக்கவாறு தம்மை அமைத்துக் கொண்டு ஒழுகும் தன்மையுடனே; **பாங்கினால் - எய்தி உரைப்பார்** - என்க; இதற்கு இவ்வாறன்றிப், **பாங்கினால் - அழுந்தும்** என்று கூட்டி, இச்செயலைப் பரவையார்பாற் சார்த்திக் கற்பை யவாவிய நிலைமையால் பிணக்கென்னும் பெருங் கடலுளழுந்திய என்றுரைப்பர் இராமலிங்க அடிகள்; இனிய மொழிகளைக் கூறும்தன்மையால் என்பது சுப்பராய நாயகர் உரை; நன்மை செய்கின்ற உரிமையினால் என்பது இராமநாதச் செட்டியார் குறிப்புரை.

வெம்பும் - வெதுப்பும்;வெதும்புதல் செய்தற் கேதுவாகிய என்று பிறவினைப் பொருள் கொள்க.

புலவிக் கடல் அழுந்தும் - புலவியைக் கடலாக உருவகித்தார், கடத்தற் கருமை பற்றி; **அழுந்தும்** - மிக ஆழ்ந்து வருந்தும்; கடல் என்றதற்கு கேற்ப அழுந்தும் என்றார்.

மின் நேர் இடையார் - புலவி வருத்தத்தாற் மிகத் துவளுதல் குறிக்க ஈண்டு மின் என்றுவமித்தார்.

எம்பிராட்டி - எம் தலைவி; **பிராட்டி** - மேன்மை குறித்தது. பெருமையும் உரிமையும் பாராட்டும் வகையால் செற்றம் தணிவித்தல் உலகியல்பு. கற்றார் கையாளும் முறைகளுள் ஒன்று; இது சாமோபாயம் எனப்படும். **இது** - இவ்வாறு நாயகர்பாற் பிணங்குதல்; **தகுமோ?** - ஓகார வினா தகாது என எதிர்மறை உணர்த்திற்று.

பலவும் - இவ்வாறாகிய தக்க பல செய்திகளையும், மொழிகளையும்.

எடுத்துரைப்பார்—என்பதும் பாடம் 319

3474. **(இ-ள்)** பேத நிலைமை...சொன்னவர் முன் - முன்னர்ச் சாம உபாயம்பற்றிக் கூறியவர்கள், அதன் மேல் பேத நிலைமையினை மேற் கொண்டு அந்த நீதியின் உபாயம் பற்றி மேலும் பலவாற்றானும் செற்றம் தணியுமாறு எடுத்துச்சொன்ன அம்மாந்தர்களின்

3475. போந்து புகுந்த படியெல்லாம் பூந்தண் பழன முனைப்பாடி
வேந்தர் தமக்கு விளம்புதலும் வெருவுற் றயர்வார் துயர்வேலை
நீந்துந் துணையாம் புணைகாணார் நிகழ்ந்த சிந்தா குலநெஞ்சிற்
காந்த வழிந்து தோய்ந்தெழார் கங்கு லிடையா மக்கடலுள். 321

முன்பு; மாதர்... மாற்றுராய் - அந்த மாதர் பரவையம்மையாரும் அக் கூற்றுக்களை மறுத்துத் தாம் மேற்கொண்ட செற்றத்தினை மாற்றுதவராகி; ஏதம்... என உரைத்தார் - தீமை பொருந்திய அவர் (நம்பிகள்) திறம்பற்றி இந்த மாற்றங்களை மேலும் சொன்னீர்களானால் எனது உயிர் போகுதல் தவறாது என்று சொன்னார்; அவரும்... போந்தார் - அவர்களும் பயந்து போயினார்கள்.

(வி-ரை) பேத நிலைமை நீதியினால் முன்னர்க் கூறிய சாமோபாயம் பற்றிய உரைகளை, அவ்வுபாயம் விரும்பியபடி பயன்றராமையாலே. விடுத்து, அடுத்த உபாயமாகிய **பேதம்** என்னும் தன்மையினை உட்கொண்ட நீதிபற்றி;இவ்வுபாயம் பற்றிச் சொல்லும் முறைகளைப் பிள்ளைத்தமிழ் நூல்களுள் அம்புலிப் பருவப் பகுதியிற் பரக்கக் காணலாம்; **பேத நிலைமை நீதியினால் -** ஊடலுக்குரிய ஒழுக்கத்தினால் என்பர் இராமநாதச் செட்டியார்.

பின்னும் பலவும் - முன் சாமோபாயத்தாலுரைத்த பலவற்றின் மேலாக, இவ்வுபாயத்தைத்தொடர்ந்து மேலும் பலவாறாகிய மொழிகளையும்.

ஏதம் மருவும் அவர் - என்பாற் றீங்கு செய்தலின் குற்றமுடைய அந்நம்பிகள்.

உயிர் போதல் ஒழியாது - நான் உயிர் நீப்பது உறுதி என்றபடி; **போதல் -** தாம் வலிந்து போக்குதல் தற்கொலைப் பழியாமாதலின் அவ்வாறன்றி உயிர் தானே போய்விடுவது என்ற குறிப்பு காண்க.

புறம் - திருமாளிகையினை நீங்கிப் புறம்பு. 320

3475. (இ-ள்) போந்து...விளம்புதலும் - (முன் கூறியபடி பரிசனங்கள்) போந்து நிகழ்ந்தபடி எல்லாவற்றையும் அழகிய குளிர்ந்த வயல்களை யுடைய திருமுனைப் பாடி நாட்டின் தலைவராகிய நம்பிகளுக்கு அறிவித்தலும்; வெருவுற்று அயர்வார் - (நம்பிகள்) அச்ச முற்று வருந்துவாராய்; துயர்வேலை...காணார் - துன்பக் கடலினின்றும் நீந்திக் கரையேறுதற்குரிய துணையாகும் தோணிபோன்றாரைக் காணாமையின்; சிந்தாகுலம்... அழிந்து - நேர்ந்த மன வேதனை நெஞ்சத்தினைச் சுட மனமழிந்து; கங்குல் இடையாமக் கடலுள் - இராத்திரியின் நடுயாமமாகிய கடலுள்ளே; தோய்ந்து எழார் - முழுகி மேல் எழ மாட்டாராயினர்.

(வி-ரை) புகுந்தபடி - நிகழ்ந்தவாறே; **எல்லாம் -** எல்லாச் செய்கைகளையும்.

வெருவுற்று - எதிர்பாராது சடுதியில் நேரும் துன்பம் வெரு எனப்படும்.

3476. அருகு சூழ்ந்தார் துயின்று திருவத்த யாமம் பணிமடங்கிப்
பெருகு புவனஞ் சலிப்பின்றிப் **பேயு முறங்கும் பிறங்கிருள்வாய்**
முருகு விரியு மலர்க்கொன்றை **முடிமே லரவு மிளமதியுஞ்**
செருகு மொருவர் தோழர்தனி வருந்தி யிருந்து சிந்திப்பார், 322

துயர் வேலை நீந்தும் புணையாம் துணைகாணார் - துன்ப மிகுதியினைக் கடலாகவும், அதனைக் கடத்தற்குத் துணையாவாரைப் புணை ஆகவும் உருவகித்தார்; **காணார்** - உலகியல்பு கற்ற மாந்தர் சொல்லியும் பயனில்லாமையால் மனிதருள்ளே துணை செய்வார் பிறரிலர் என்பார் **காணார்** என்றார்.

சிந்தா குலம் - சிந்தை ஆகுலம் என்பது ஒரு சொன்னீர்மைத்தாய் வந்தது.

ஆகுலம் - துன்பம்; **காந்துதல்** - வெதுப்புதல்; சுடுதல்.

கங்குலிடை யாமக் கடலுள் தோய்ந்து எழார் - கங்குல் இடையாமம் - பாதி யிரவு; நள்ளிரவு; அர்த்தயாமம் என்பது வடமொழி வழக்கு; **கங்குல் இடையாமத்தைக்** கடலாக உருவகித்தார் உலகுயிர்களை எல்லாம் தன்னுள் அகப்படுத்தி அவத்தை பேதங்களுட்படுத்தி யலைத்தலால்; மேல் வரும்பாட்டில் **பிறங்கிருள்வாய்** என்பதும் காண்க. **தோய்தல்** - அழுந்துதல். *321*

3476. **(இ-ள்)** அருகு... பிறங்கு இருள்வாய் - பக்கத்திற் சுற்றி யிருந்தவர்களும் 'துயின்று, திருவத்தயாம வழிபாடும் நிறைவேறிப், பெருகும் உலகத்தினுள் ளோர்களும் நடத்தல் ஒழிந்து, பேயும் துயிலும் மிக்க நள் இருளிலே; முருகு... தோழர் - மணம் வீசும் கொன்றை மலர்களைச் சூடிய சடைமுடிமேல் பாம்பினையும் இளம்பிறைச் சந்திரனையும் செருகும் ஒப்பற்ற இறைவர் தோழராகிய நம்பிகள்; தனி... சிந்திப்பார் - தனியே வருத்தத்துடன் இருந்து சிந்திப்பாராகி,

(வி-ரை) அருகு சூழ்ந்தார் - (*3466*) தேவாசிரியன் மருங்கே அணைந்திருந்த நம்பிகளைச் சுற்றிச் சூழ்ந்திருந்த பரிசனங்களும் அன்பர்களும்.

திருஅத்தயாமம் பணிமடங்கி - திரு அத்தயாமம் என்னும் திருக்கோயில் வழிபாடும், அதற் கங்கமாக நிகழும் நாள் வழிபாட்டு முறைகளும் நிறைவாகிக் கோயில் திருக்காப்பிட்டு; **மடங்குதல்** - நிறைவேறி முடிவாதல்.

பெருகு புவனம் சலிப்பின்றி - பெருகு என்றது உலக வியாபாரங்களுட்பட்டு உயிர்கள் ஓயாமல் அலைந்து திரியும் நிலை குறித்தது; **புவனம்** - சரம் அசரம் என்ற இருவகை யுயிர்கள்; **சலிப்பு** - (சலனம்) அலைதல் - திரிதல் - அசைதல்.

பேயும் உறங்கும் பிறங்கு இருள் - பேய் - வாயு சரீரத்துடன் இருளிற் சஞ்சரித்துப் பிறவுயிர்களை அலைக்கும் உயிர்கள் அடையும் ஒருவகை நிலை; **பேயும்** - இரவில் இயங்கும் பேய்களும் இயங்காத நள்ளிரவு என உம்மை உயர்வு சிறப்பு.

பிறங்கு இருள் - இருளுக்குப் பிறங்குதலாவது கூர்ந்த நிலையில் தன்னைக் காட்டி நிற்கும் நிலை. "ஒரு பொருளுங் காட்டா திருளுருவம் காட்டும்" (திருவருட்பயன் - *23*); "கருகு மையிரு ளின்கணம்" (*454*).

3477. "முன்னை வினையா லிவ்வினைக்கு மூல மானுள் பாலணைய
என்னை யுடையாய்! நினைந்தருளா யிந்த யாமத் தெழுந்தருளி
அன்ன மனையாள் புலவியினை யகற்றி லுய்ய லாமன்றிப்
பின்னை யில்லைச் செய"லென்று பெருமா னடிக டமைநினைந்தார். 323

முருகு...செருகும் - கொன்றைமுடி - உயர்வும், **அரவுமிள மதியும்** - தாழ்வும் குறித்தன; தாழ்வான பொருள்களை உயர்த்தும் கருணையினையும், **அரவு மதியும்** - பகைப் பொருள்களைப் பகைதீர்த்து உடன் வைக்கும் கருணையினையும் குறிப்பா லுணர்த்தின; "மெய்ம்மையும் பொய்ம்மையு மாயி னுர்க்குச் சோதியு மாயிருளாயி னுர்க்கு" (திருவா) என்றும், "பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்" (தேவா) என்றும் வரும் திருவாக்குக்கள் காண்க; ஈண்டு நம்பிகளது திருவுள்ளக்குறிப்பினை உட்கொண்டு கூறியவாறு.

ஒருவர் - ஒப்பற்றவர்; "ஒன்றே பதி" என்றபடி ஒன்றுகிய பதி; "தானே தனிமன்றுட் டன்னந் தனி" (திருமந்).

தனி வருந்தி யிருந்து - தனிமையாய் வருந்தி நின்று; **ஒருவர் தோழர் தனி** என்றது ஒருவர் தோழராந் தன்மைக் கேற்றபடி இருவரும் தனியாயினர் என்ற கவிநயமும் காண்க.

சிந்திப்பார் - சிந்திப்பாராய்; முற்றெச்சம்; சிந்திப்பார் - நினைந்தார் என வரும் பாட்டுடன் முடியும்; சிந்தித்ததன் பயனுக நினைந்தார் என்க. *322*

3477. **(இ-ள்)** முன்னை... நினைந்தருளாய் - என்னை ஆளுடைய பெருமானே! முன்வினையின் பயனுக இவ்வினைக்குக் காரணமாகி நின்ற பரவையாரிடம் நான் சேர்வதற்கு நினைந்தருள் செய்யீர்!; இந்தயாமத்து... என்று - இந்த நடுயாமத்தில் தேவரீர் எழுந்தருளி அன்னம் போன்ற அவளது புலவியை நீக்கினுல் உய்யலாமே யன்றி வேறு செயல் இல்லை என்று வேண்டி; பெருமான்... நினைந்தார் - இறைவரது திருப்பாதங்களை நினைந்தார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) முன்னை வினையா லிவ்வினைக்கு மூலமானுள் - முன்னை வினை - பண்டு திருமலையின் நிகழ்ச்சி; **இவ்வினை** - இங்கு நேர்ந்த இத்துன்ப நிலை வரையில் உள்ள நிகழ்ச்சிகளின் தொகுதி; **வினையால் வினைக்கு மூலம்** - முன்னை வினையின் விளைவாக வந்த இவ்வினை வருதற்குக் கருவி. **மூலம்** - வினை வெளிப்படுதற்குப் பயன்படும் கருவி. **மூலமானுள்** - பரவையார். பழைய வினையால் இப்பிறவியின் விளைவுக்கு மூலமாயி னுளுடைய பக்கத்தை யடையுமாறு.

அணைய நினைந்தருளாய் - இறைவர் செயலெலாம் நினைப்பு மாத்திரை அளவானே நிகழ்வனவாதல் குறிப்பு; "இச்சாமாத்திரம் பிரபோ சிருட்டி" "நினையா தார் புரமெரிய நினைந்த தெய்வத் தேரானை" (தேவா).

எழுந்தருளிப் புலவியினை அகற்றில் - எழுந்தருளி என்றது அருள் புரிந்து என்ற மட்டில் பொருள் தந்து நின்றது; **அகற்றுதல்** - நீக்குதல்.

3478. அடியா ரிடுக்கண் டரியாதா ராண்டு கொண்ட தோழர்குறை
முடியா திருக்க வல்லரே? முற்று மளித்தாள் பொற்றளிர்க்கைத்
தொடியார் தழும்பு முலைச்சுவடு முடையார் **தொண்டர் தாங்காணும்**
படியா லணைந்தார் நெடியோனுங் காணு வடிகள் படிதோய. 324

அகற்றில் உய்யலாம் அன்றிப் பிறிது செயல் இல்லை - உய்வதற்கு வேறு வழி இல்லை என்று உறுதிப்பொருள் தர உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் கூறினர்.

என்னை உடையாய் - என்னை உடைமைப் பொருளாய் ஆளாகக் கொண்டமையால் என்று வேண்டுதலுக்குக் காரணங் குறித்தவாறு; இக்கருத்தே பற்றி மேலும் உரைத்தல் காண்க;"நான் உமக்கு - அடியேனாகில் நீர் எனக்கு தம்பிரானாரேயாகில்" (*3482*); "வலிய ஆட்கொண்ட பற்றென்" (*3509*);

பெருமானடிகள் தமை - பெருமானின் திருவடிகளை; பெருமானாகிய அடிகளை என்று ஒரு சொல்லாகக்கொண்டுரைத்தலுமாம்; "அவர் எம்பெருமா னடிகளே" (தேவா).

என்னை யுடையா னிணைந்தருளில் — என்பதும் பாடம் 323

3478. **(இ-ள்) அடியார்...வல்லரே?** அடியவர்களின் துன்பங்களைத் தரிக்கலாற்றாத இறைவர் தம் அடியா ராதலோடு தம்மால் ஆளாகக் கொள்ளப்பட்ட தோழராகிய நம்பிகளது குறையினை முடிக்காமலிருக்க வல்லராவரோ?; முற்றும்...உடையார் - உலக முழுதும் ஈன்ற காமாட்சி யம்மையாரின் அழகிய தளிர் போலுங் கையிலணிந்த வளையின் தழும்பும் முலையின் சுவடும் உடைய இறைவர்; தொண்டர்...படிதோய் - விட்டுணுவும் காணாத திருவடிகள் நிலம் பொருந்தத் தொண்டராகிய நம்பிகள் காணும்படியால் வந்தணைந்தனர்.

(வி-ரை) அடியார்... வல்லரே - இது கவிக்கூற்று; ஏகாரம் வினா; வல்லரல்லர் என எதிர்மறை குறித்தது. தொண்டர்காண அணைந்ததற்குக் காரணங் கூறியவாறு; அன்புடையாரை அறிவன் சிவன் என்பது இறைவரியல்பாக ஞான சாத்திரங் கண்ட உண்மை; **குறை** - வேண்டும் காரியம்.

முற்றும் அளித்தாள் - உலக முழுதும் ஈன்றளித்த உமையம்மையார்.

கைத்தொடியார்...உடையார் - திருவேகம்பர் அம்மையாரின் வளைத் தழும்பும் முலைச்சுவடும் அணிந்த வரலாறு; திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம் (*1143*) பார்க்க. விரிவு காஞ்சிப் புராணம் தழுவக்குழைந்த படலமும், பிறவும் பார்க்க.

நெடியோனும் காணு அடிகள் படிதோயத் தொண்டர் தாங்காணும்படியால் அணைந்தார் என்க;தொண்டர்தம் பெருமை கூறியபடி; **படிதோய** - நிலம் பொருந்த. **தொண்டர்** - நம்பிகள்; அவர் கண்டவாறு வரும் பாட்டிற் காண்க.

முற்றும்... உடையார் - இறைவரது கருணையின் எளிமை குறித்தது. 324

3479. **(இ-ள்)** தம்பிரானார் எழுந்தருள - இறைவர் எழுந்தருளி வரக்கண்டு; தாங்கற்கரிய... முகிழ்ப்ப - தாங்குதற்கரிய பெருமகிழ்ச்சியினாலே உடலில் எல்லா அவயவங்களும் கம்பித்து,

3479. தம்பி ரானு ரெழுந்தருளத் தாங்கற் கரிய மகிழ்ச்சியினுற்
கம்பி யாநின் றவயவங்கள் கலந்த புளக மயிர்முகிழ்ப்ப
நம்பி யாரூ ரருமெதிரே நளின மலர்க்கை தலைக்குவிய
அம்பி காவல் லவர்செய்ய வடித்தா மரையின் கீழ்விழுந்தார். 325

3480. விழுந்து பரவி மிக்கபெரு விருப்பி னேடு மெதிர்போற்றி
எழுந்த நண்பர் தமைநோக்கி "யென்னீ யுற்ற" தென்றருளத்
தொழுந்தங் குறையை விளம்புவார்"யானேதொடங்குந் துரிசிடைப்பட்
டழுந்து **மென்னை இன்னமெடுத் தாள வேண்டு முமக்"கென்று,** 326

அதனேடு உடல் முழுதும் மயிர்ப்புளகம் முகிழ்ப்ப; நம்பியாரூரரும்... குவிய - நம்பியாரூரரும் இறைவர் திருமுன்பு தாமரை மலர் போன்ற கைகள் தலையின்மேல் ஏறிக்குவிய; அம்பிகா வல்லவர்... வீழ்ந்தார் - அம்மைபாகராகிய இறைவரின் சிவந்த திருவடித் தாமரையின் கீழ்ப் பொருந்த நிலமுற விழுந்தனர்.

(வி-ரை) தம்பிரானுர் - தம்மை ஆளாகக் கொண்டதம் பெருமானடிகள் என்ற நிலையை நினைந்து வேண்டினுராதலின் தம்பிரானுர் என்ற தன்மையாற் கூறினுர்.

அவயவங்கள் கம்பியா நின்று - என்க; **கம்பித்தல் -** உடல் நடுக்கம் கொள்ளுதல்; "ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே, யாக வென்கை கண்கள் தாரை யாற தாக வையனே" (திருவா).

கலந்த மயிர்ப்புளகம் முகிழ்த்தல் - மயிர்க்கூச் செறிதல்.

அம்பிகா வல்லவர் - அம்பிகையின் நாயகர்; சிவபெருமான்; **வல்லவர்** என்பது வலவர் என்பதன் விரித்தல் விகாரமாகக் கொண்டு, அம்பிகைக்கு வலப்பக்கத்தினர் என்றுரைத்தலுமாம். பரவையார்பாற் றூது செல்ல நின்றுராதலின் அம்மை தொடர்பு பற்றிக் கூறினுர். **325**

3480. **(இ-ள்)** விழுந்து...என்றருள - திருவடியில் வீழ்ந்து துதித்து மிகுந்த பெரிய விருப்பத்தினேடும் எதிரில் போற்றி எழுந்த தோழனுரை நோக்கி "நீ இயைந்த வருத்தம் யாது?" என்று (இறைவர்) கேட்டருள; தொழும்...விளம்புவார் - தொழுகின்ற தமது குறையினை எடுத்துச் சொல்லுவாராய் (நம்பிகள்); யானே... உமக்கென்று - "நானே தொடங்கிக் கொண்ட குற்றத்தினுட்பட்டு வருந்துகின்ற என்னை அக்குற்றத்தினின்றும் இன்னமும் மேலெடுத்து ஆட்கொண்டருள வேண்டுவது உமக்குக் கடமை" என்று கூறி,

(வி-ரை) நீ உற்றது என்? - என்க.

உற்றது - உற்ற துன்பம்; வருத்தம் என்றது நம்பிகளின் உள்ளுணர்வு நிறைந்த பெருமானுதலின் அறிய நின்றது; ஆயின் மேல் வினவ நின்றதென்னை? எனின், உலக நிலையியலின் பொருட்டென்க: மேல்வரும் நிகழ்ச்சிகள் யாவும் இவ்வாறே உய்த்துணர்ந்து கொள்ளத்தக்கன.

3481. "அடியே னங்குத் திருவொற்றி யூரி **னீரே யருள்செய்ய**
வடிவே லொண்கட் **சங்கிலியை மணஞ்செய் தணைந்த திறமெல்லாங்**
கொடியே ரிடையாள் பரவைதா னறிந்து "தன்பா லியான்குறுகின்
முடிவே'னென்று துணிந்திருந்தா ளென்னுன் செய்வ"தெனமொழிந்து, 327

யானே தொடங்கும் துரிசிடைப்பட்டு அழுந்தும் என்னை - துரிசு - குற்றம்; **யானே தொடங்கும்** - நானே மேற்கொண்டு செய்துகொண்ட செயலின் பயனாக; சங்கிலியார்பாற் கொண்ட காதலும் செய்த சபதமும் அதனைத் தவறியதும் முதலியவற்றின் விளைவாக; **இன்னம்** - முன்னர் ஆட்கொண்டமைபோல மேலும்; "தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி" (நம்பி.தேவா).

உமக்கு - உமக்குக் கடன்; கடமை என்பது இசை யெச்சம்.

(நம்பி) என்று (3480) - என மொழிந்து (3481) - என (3482) - விண்ணப்பம் செய்த நம்பி முகநோக்கித் - தம்பெருமான் - அருள் செய்தார் (3483) என்று இந்நான்கு பாட்டுக்களையும் கூட்டி முடிக்க.

தொடக்குத்துரிசு—என்பதும் பாடம். 326

3481. **(இ-ள்)** அடியேன்... திறமெல்லாம் அங்குத் திருவொற்றியூரிலே தேவரீரே அருள்புரிய, வடித்த வேல் போன்ற ஒள்ளிய கண்களையுடைய சங்கிலியாரை அடியேன் மணஞ் செய்து அணைந்த தன்மைகளை எல்லாம்; கொடியேர்... துணிந்திருந்தாள் - கொடி போன்ற அழகிய இடையினையுடைய பரவையார் தானே அறிந்து கொண்டு தன்னிடம் நான் வந்தால் உயிர் விடுவேன் என்று துணிந்திருந்தாள்; என... மொழிந்து - ஆதலால் நான் செய்வது யாது என்று கூறி,

(வி-ரை) அங்கு - திருவாரூரில் விண்ணப்பிக்கின்றாராதலின் அங்கு என்று சேய்மைச் சுட்டினாற் கூறி அங்குத் திருவொற்றியூரில் என்றார்; **அங்கு** அசை என்பாருமுண்டு.

நீரே அருள் செய்ய - இத்துன்பம் நீர் அருள் செய்ததன் காரணமாகத் தொடர்ந்து வந்ததாதலின் அதனைத் தீர்த்தல் உமது கடன் என்றது குறிப்பு.

மணஞ் செய்தணைந்த - மணத்தாற் சேர்ந்த; மணஞ் செய்து பின் இங்கு வந்தணைந்த என்றலுமாம்.

திறம் எல்லாம் - இடையிட்ட சரித நிகழ்ச்சிகள் எல்லாம்.

தான் அறிந்து - பிறர் கேட்டு அறிந்ததனோ டமையாது தாமே தக்காரை ஏவி அறிந்து என்க; ஏகாரம் தொக்கது; "மெய்ம்மை வார்த்தை தாமவர்பால் விட்டார் வந்து கட்டுரைப்ப" (3468); "ஒன்று மொழியா வகையறிந்து" (3471); தான் அசை என்பாருமுண்டு.

முடிவேன் - முடிதல் - உயிர் துறத்தல் (3474); "முடியே னினிப்பிறவேன்" (நம்பி. தேவா); கொடி - கொடிபோன்ற; **ஏர்** - அழகிய; உவமஉருபு தொக்கது; ஏர் - உவம உருபு என்றலுமாம்.

3482. "நாய னீரே! நானுமக்கிங் **கடியே னுகி னீரெனக்குத்**
தாயி னல்ல தோழருமாந் தம்பி ரானு ரேயாகில்
ஆய வறிவு மிழந்தழிவே னயர்வு நோக்கி யவ்வளவும்
போயிவ் விரவே பரவையுறு புலவி தீர்த்துத் தாரு"மென; 328

துணிந்திருந்தாள் - இருக்கின்ருள் என்பது துணிவு பற்றி இறந்த காலத்தாற் கூறப்பட்டது என்பர் இராமலிங்க அடிகளார்.

கொடிநேரிடையாள்—என்னே செய்வது—என்பனவும் பாடங்கள். 327

3482. **(இ-ள்)** நாயனீரே... தம்பிரானுரே யாகில் - என் தலைவரே! நான் இங்குத் தேவரீருக்கு அடியேனேயானல், தேவரீர் எனக்குத் தாயினும் நல்ல தோழருமாகும் பெருமானுரேயானல்; ஆய... தாரும் என - ஆகிய அறிவும் இழந்து மனமுடைவே னுடைய வருத்தத்தைக் கண்டு பரவையின் மாளிகையளவும் போய் இவ்விரவிலேயே அவள்பால் அதிகரித்துப் பொருந்திய புலவியைத் தீர்த்தளிக்க வேண்டும் என்று விண்ணப்பிக்க,

(வி-ரை) நாயனீரே! - தலைவரே!; **நாயன்** - தலைவர். "அழகிது நாயனீரே" (774); "நாயனு மடிமையு நாட்டியதாகும்"; ஏகாரம் விளியுருபு.

இங்கு - இந்நிலையில்; இவ்விண்ணப்பம் பற்றிய நிகழ்ச்சியில்; இங்கு அசை யென்பாருமுண்டு.

அடியேனுகில் - தம்பிரானுரேயாகில் - அடியேன் என்பதும் பிரானுர் என்பதும் திண்ணமே யானல் - உண்மையேயானல்;

தாயின் நல்ல - தாயினும் நல்ல; உயர்வு சிறப்பும்மை தொக்கது.

தோழருமாம் தம்பிரானுரேயாகில் - தான் அடியேனுகில் என்பதனுலே அவர் பிரானுராவது உடன் பெறப்படும்; ஆதலின் தம்பிரானுரேயாகில் என்பது வேண்டாது கூறினுர் என்னில், அற்றன்று; அடியேன் என்ற நிலையினை நீரே வலிய அமைவுபடுத்தி ஏற்றுக் கொண்டீர் என்ற குறிப்புப் பெறக் கூறினுர் என்க; **தோழருமாம்** - தலைவராதல் மட்டிலன்றித் தோழருமாகிய என உம்மை இறந்தது தழுவியது. ஏகாரம் - தேற்றம்.

அடியேன் - என்றும், **தோழருமாம்பிரானுர்** - என்றும் இரண்டு காரணம் கூறியது அவர்பால் தாம் இவ்வாறு விண்ணப்பித்தற்கும் அவர் இணங்கி யியற்றுதற்கும் உள்ள உரிமையும் அமைதியும் குறிப்பதற்கு;

தோழருமாம் - என்றது "பாங்கனை யானன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால், ஈங்கெனை யார்தடுப் பார்மடப் பாவையை எய்துதற்கே" (பாங்கற் கூட்டம் - பாங்கனை நினைதல்-11-திருக்கோவை) என்பதாதி அகப் பொருட்டுறைகளின் குறிப்புப்பட நின்றது.

3483. அன்பு வேண்டுந் தம்பெருமா னடியார் வேண்டிற் றேவேண்டி
முன்பு நின்று விண்ணப்பஞ் செய்த நம்பி முகநோக்கித்
"துன்ப மொழிநீ யாமுனக்கோர் தூத ளுகி யிப்பொழுதே
பொன்செய் மணிப்பூண் பரவைபாற் போகின் றோ"மென்றருள் செய்தார். 329

தாயினு நல்ல - "தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்" (பிள் - தேவா - திருக்கோணமலை - 51); "தாயவ னுலகுக்கு" (மேற்படி திருவல்லம்-2); "தாயுமா யெனக்கே" (அரசுகள் - திருச்சிராப்பள்ளி-4) "தாயினு நல்ல சங்கரனுக் கன்பர்" (மேற்படி ஆதிபுராணக் குறுந் - 9) என்பன முதலியவை காண்க; இத்திரு வாக்குக்களிற் காண்கின்றவாறு.

"**தாயினு நல்ல**"-என்ற அடைமொழியைத் "**தம்பிரானு**" ரோடு சேர்த்தாது "**தோழர்**" என்பதனொடு புணர்த்திய தென்னையோ? எனின், குழவிக்கு வேண்டிய எத்தொழிலும் செய்யும் தாயின் தன்மை தோழனுந் தகுதியோடே பொருந்துவதாகும் குறிப்புப்பட என்க.

ஆய அறிவும் இழந்து - உம்மை இறந்தது தழுவியதென்று கொண்டு, செயற்கை யறிவே யன்றி இயற்கை அறிவும் இழந்து என்பர் இராமலிங்க அடிகள்;

அவ்வளவும் - மாளிகையின் சிறு தூரத்தின் அளவும் என்றதலின் உம்மை சிறப்பும்மை; அந்த மாளிகையின்கண்ணும் என்ற ஏழனுருபு விரித்துரைத்தலுமாம்; இப்பொருளில் உம்மை இழிவு சிறப்பு.

இவ்விரவே - ஏகாரம் பிரிநிலை; துன்ப மிகுதிக் குறிப்பு உணர்த்திற்று.

தீர்த்தாண்டருளும்—என்பதும் பாடம் 328

3483. **(இ-ள்)** அன்பு... வேண்டி - அன்பு ஒன்றனையே விரும்பி தமது ஆன்ம நாயகர் தம் அடியாராகிய நம்பிகள் யாது விரும்பினுரோ அதனையே தாமும் அருள விரும்பினுராகி; முன்பு... நோக்கி - தமது திருமுன்பு நின்று விண்ணப்பஞ் செய்த நம்பிகளது முகத்தினை நோக்கி; துன்பம் ஒழிநீ... அருள் செய்தார் - நீ உன் துன்பத்தினை நீக்கக் கடவாய்; நாம் உனக்காக ஓர்தூதனுகி இப்பொழுதே பொன்னுலும் மணியாலும் புனைந்த அணிகளைப் பூண்ட பரவையிடம் செல்கின்றோம் என்று அருளிச் செய்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அன்பு வேண்டும் தம்பெருமான் - "வேண்டுதல் வேண்டாமை யிலா" னுகிய இறைவர் தமது அருள் சுரத்தற்கு அடியார்பால் வேண்டுவது அன்பு ஒன்றுமே யாம் என்பது; **அன்பு** - அன்பே; பிரிநிலை ஏகாரம் தொக்கது;

அடியார் வேண்டிற்றே வேண்டி - அடியார் வேண்டுமதனையே தாமும் திருவுள்ளங் கொண்டு; "வேண்டத் தக்க தறிவோய்"..."வேண்டி நீயா தருள் செய்தாயானு மதுவே வேண்டினல்லால்" (திருவா); அடியார் வேண்டுவன முற்றுப்பெறும் அளவாவன அவற்றையே இறைவன் திருவுள்ளத்துக் கொள்ளும் நிலையளவேயாம். இறைவரது

3484. எல்லை யில்லாக் களிப்பினரா யிறைவர் தாளில் வீழ்ந்தெழுந்து
வல்ல பரிசெல் லாந்துதித்து வாழ்ந்து நின்ற வன்றொண்டர்
"முல்லை முகைவெண் ணகைப்பரவை முகில்சேர்மாடத் திடைச்செல்ல
நில்லா தீண்ட வெழுந்தருளி நீக்கும் புலவி"யெனத்தொழுதார். 330

திருவருள் வழியே அடியார் வேண்டுவதும் பொருந்தினுல் அவ்வளவே அவ்வேண்டுகை நிறைவேறும் அளவென்பது திருவாசகம். ஆனுல் இங்கு அந்த முறையும் நிலையும் மாறி,அடியார் வேண்டுகையினை நிறைவேற்றத் திருவுளங்கொண்டு இறைவர் அதனையே தாமும் வேண்டினுர் என்றுர்;அடியாரது அடிமைத்திறத்தின் உறைப்பும், இறைவர் அவர் எண்ணமுடிப்பதிற் கொண்டருளிய ஆர்வமும் குறித்தற்கு.

உனக்கு ஓர் தூதனுகிப் போகின்றேம் - என்க. **உனக்கு** - உன் பொருட்டு; **தூதன்** - தூதுகாணும் அகப் பொருட்டுறைகளின் கருத்தினை இங்கு வைத்துக் காண்க.

இப்பொழுதே - முன் "இவ்விரவே" (*3482*) என்றதற்கிணங்க, அதனினும் விரைந்து **இப்பொழுதே** - என்றுர்; அது போழ்து பின்னிரவாய்க் கழிந்து செல்லும் கால எல்லையும் குறிப்பு. *329*

3484. **(இ-ள்)** எல்லையில்லா... வன்றொண்டர் - அளவில்லாத மகிழ்ச்சியை உடையவாராகி இறைவர் திருவடிகளில் விழுந்து எழுந்து இயன்ற தன்மைகள் எல்லாவற்றுலும் துதித்து வாழ்வடைந்து நின்றவராகிய வன்றொண்டர்; முல்லை...எனத் தொழுதார் - முல்லை யரும்பு போன்ற வெள்ளிய பற்களை யுடைய பரவையினது மேகந் தவழ உயர்ந்த மாளிகையின்கண்ணே சென்றருளுவதற்காக இனி இங்கு நில்லாது விரைவில் எழுந்தருளிச் சென்று அவளது புலவியினை நீக்குவீராக என்று சொல்லித் தொழுதனர்.

(வி-ரை) எல்லையில்லாக் களிப்பினராய் - இறைவரே தூது செல்ல ஒருப்பட்டருளினுராதலின் "முன்னவனே முன்னின்றுல் முடியாத பொருளுளதோ" (*132*) என்றபடி அச்செய்தி முற்றுப் பெற்றேவிடும் என்ற உறுதிப் பாட்டினுல் தம் கருத்து முற்றியதாகவே கொண்டு அளவில்லா மகிழ்ச்சியினுட் பட்டனர்.

தாளில்...நின்ற - அளவுகடந்தெழுந்த மகிழ்ச்சியின் மெய்ப்பாடுகள்; **வல்ல பரிசெலாம்** - தாம்வல்ல - தம்மாலியன்ற - ஆற்றுலெல்லாம்.

நகை - நகைக்கு இருப்பிடமான பல்வரிசை குறித்தது.

முகில்சேர் மாடம் - உயர்ச்சி குறித்தது.

வெண்ணகைப் பரவை - என்றது இறைவர் தூதுவரக்காணும் பரவை புலவி நீங்கி மகிழ் கொள்ளுதல் ஒருதலை என்ற குறிப்பினுற் கூறியது. "அணிமுறுவல் அரும்பரவை" (*294*).

3485. **அண்டர்** வாழக் கருணையினு லால கால மமுதாக
உண்ட **நீலக் கோலமிடற் றொருவ** ரிருவர்க் கறிவரியார்
வண்டு வாழு மலர்க்கூந்தற் பரவை யார்மா ளிகைநோக்கித்
தொண்ட ஞர்தந் துயர்நீக்கத் **தூத ஞரா** யெழுந்தருள, 331

3486. தேவா சிரியன் **முறையிருக்குந் தேவ ரெல்லாஞ் சேவித்துப்**
போவார் தம்மில் வேண்டுவார் போத வொழிந்தார் புறத்தொழிய
ஓவா வணுக்கச் சேவகத்தி லுள்ளோர் பூத கணநாதர்
மூவா முனிவர் யோகிகளின் முதலா ஞர்கள் முன்போத, 332

ஈண்ட - விரைவாக; ***நீக்கும் புலவி*** - என மாறிக் கூறியதும் விரைவுக் குறிப்பு. 330

*3485. **(இ-ள்)** அண்டர்... அறிவரியார்* - தேவர்கள் வாழும் பொருட்டு அருளினுலே ஆலால விடத்தினையே அமுதாக உண்டு அதனுல் நீலகண்டராகிய ஒருவரும் இருவராகிய பிரம விட்டுணுக்களுக்கு அறிதற் கரியவரும் ஆகிய இறைவர்; வண்டு...நோக்கி - வண்டுகள் மொய்த்துள்ள மலர்களைச் சூடிய கூந்தலையுடைய பரவையாரது திருமாளிகையை நோக்கி; தொண்டனுர்தம்... எழுந்தருள - தொண்டனுராகிய நம்பிகளின் தூதராக எழுந்தருளிச் செல்ல,

(வி-ரை) ஆலகாலம் - ஆலால விடம்.

உண்ட நீலக் கோல மிடறு - விடம் உண்டதனுல் அது தங்கி நீலமாயின கழுத்து; மேலும் "கடல் விளைத்த ஆலம் இருண்ட கண்டத்தான்" (*3488*) என்பது காண்க. கொடியதாகிய விடத்தினை அமுதாக உண்டு கண்டத் தடக்கியது போலவே பரவையார்பாற் றூதாகிய, தாழ்வாக உலகர் கொள்ளும் இச்செயலினையும் பரமனுர் மேற்கொண்டருளினர் என்ற குறிப்புப் பட இத்தன்மையாற் கூறினுர். இச்செயலினைப் பற்றியே இப்புராணத்தில் ஏயர்கோன் கலிக்காமனுர் வெகுண்டமையும், நம்பிகளும் பிழை யுடன்பட்டு (*3541*) மேற்சரிதம் விளைந்தமையும் இங்குக் கருதத்தக்கன.

கோலமிடறு - கோலமாவது உயிர்களை உய்விக்கும் அழகு; உண்ட - உண்ணு தலாலாகிய.

ஒருவர் இருவர்க் கறிவரியார் - எண் பற்றிய சொல்லணி.

நொக்கி - குறிக்கொண்டு.

தூதனுராய் - "உனக்கோர் தூதனுகி" (*3483*) என்ற இறைவர் கூற்றுக் காண்க; ***ஆய்*** - ஆக்கச்சொல் தாமே அவ்வாறு தம்மை ஆக்கிக்கொண்டு என்ற பொருளில் வந்தது.

தொண்டனுர்தம் துயர் நீக்க - தொண்டராதலின் அவரது துயர் நீக்கும் கடப்பாடுடைமைபற்றி எனக் காரணக் குறிப்புப்பட நின்றது; அண்டர் வேண்ட ஆலமுண்டவர் தொண்டர் வேண்டத் தூதராய் வரமாட்டாரோ? என்ற நயம் பற்றி வந்ததும் காண்க. ***331***

3487. **அருகு பெரிய தேவருட னணைந்து** வருமவ் விருடிகளும்
மருவு நண்பு நிதிக்கோனு முதலா யுள்ளோர் மகிழ்ந்தேத்த
தெருவும் விசும்பு நிறைந்துவிரைச் செழும்பூ மாரி பொழிந்தலையப்
பொருவி லன்பர் விடுந்தூதர் புனித வீதி யினிற்போத, 333

3486. **(இ-ள்)** தேவாசிரியன்... புறத்தொழிய - தேவாசிரியன் திருவாயிலில் வரங்கிடந்து காத்திருக்கும் தேவர்கள் எல்லாரும் சேவித்துப் போவார்களுள் வேண்டுபவர்கள் மட்டும் உடன்போக, ஒழிந்தவர்கள் புறத்திற் போக; ஓவா... முன்போத - நீங்காத திரு அணுக்கத் தொண்டில் உள்ளோர்களும் சிவ பூத கணநாதர்களும் மூத்தலில்லாத முனிவர்கள் யோகிகளுள் முதன்மை பெற்றவர்களும் முன்பு செல்ல,

(வி-ரை) தேவாசிரியன் முறையிருக்கும் - தேவாசிரியனிடத்துக் குறையிரந்து கிடக்கும்; **முறையிருத்தல்** - வரங்கிடத்தல்;"பூவார் திசைமுக னிந் திரன் பூமிசை, மாவா மூகலத்து மான்முதல் வானவர், ஓவா தெவரு நிறைந்துறைந்துள்ளது, தேவா சிரிய னெனுந்திருக் காவணம்" *(137)*.

வேண்டுவார் போத ஒழிந்தார் புறத்தொழிய - வேண்டுவார் - வேண்டத் தகுதியுடையோர்; **ஒழிந்தார்** - தகுதியில்லாத ஏனையோர்; **போத** - உடன்போக.

ஓவா அணுக்கச் சேவகத்தில் உள்ளோர் - நீங்காது அணுகிப் பணிபுரிவோர்; **பூத கணநாதர்** - சிவகணத் தலைவர்கள்.

மூவா முனிவர் - யோக சாதனையால் மூப்பில்லாத நிலைமை பெற்றவர்கள், "சந்ததமு மிளமையொ டிருக்கலாம்" (தாயுமா). 332

3487. **(இ-ள்)** அருகு... ஏத்த - பக்கத்தில் நந்திபெருமானுடனே அணைந்து வரும் அந்த இருடிகளும் பொருந்திய நண்புடைய குபேரனும் முதலாக உள்ளவர்கள் மகிழ்ந்து துதிக்கவும்; தெருவும்... பொழிந்தலைய - திருவீதியும் வானமும் நிறைந்து மணமுடைய செழிய பூமழை பொழிந்து பரவ; பொருவில்... போத - ஒப்பற்ற அன்பராம் நம்பிகள் விட்ட தூதராகிய இறைவர் தூய திருவீதியிற் போத,

(வி-ரை) பெரியதேவர் - திருநந்தி பெருமான்;"பெரிய தேவரைச் சென்று கொணர்கென்" (வெள் - சருக். 44); சிவகணங்களுக் கெல்லாந் தலைவராதலானும், கோயில் நாயகராதலானும் இப்பெயர் பெற்றுர்.

நண்பு நிதிக்கோன் - குபேரன்; சிவபெருமானுக்குத் தோழர் எனப்படுவர். "மித்திரவச் சிரவணற்கு விருப்பன் கண்டாய்"(தாண்); "தனதனற் றேழா" (திருவிசைப்பா); "தனதனிற் சார்ந்தநற் றேழன்" (பேரூர்ப்புரா - பள் - பட - 37).

பூமாரி அலைய - பூமழை பரவ; பொழிந்து; பொழியப்பட்டு. 333

3488. **(இ - ள்)** மாலும்... என்ன - திருமாலும் பிரமதேவரும் காண்பதற்கரிய இறைவரது தாமரைபோன்ற திருவடிகளைச் சிரமேற்ருங்கி வந்து வணங்குதற்குரிய காலம் இது என்று

3488. மாலு மயனுங் காணாதார் மலர்த்தாள் பூண்டு வந்திறைஞ்சுங்
கால மிது "வென் றங்**கவரை யழைத்தா லென்னக்** கடல்விளைத்த
ஆல மிருண்ட கண்டத்தா னடித்தா மரைமேற் **சிலம்பொலிப்ப**
நீல மலர்க்கட் பரவையார் திருமா ளிகையை நேர்நோக்கி, 334

3489. இறைவர் விரைவி னெழுந்தருள வெய்து மவர்கள் **பின்றொடர**
அறைகொ டிரைநீர் தொடர்சடையி **லரவு தொடர,** வரிய விளம்
பிறைகொ ளருகு நறையிதழிப் பிணையல் **சுரும்பு தொடர,** வுடன்
மறைக டொடர, வன்றொண்டர் மனமுந் தொடர வரும்பொழுது, 335

அவர்களை அழைத்தாற்போல; கடல்விளைத்த... சிலம்பு ஒலிப்ப - கடலில் வந்தெழுந்த விடம் தங்கியதனால் இருள்கொண்ட கண்டத்தினை உடைய இறைவரது திருவடித் தாமரையின்மேல் சிலம்பு சத்திக்க; நீல... நோக்கி - நீலமலர் போன்ற கண்களையுடைய பரவையாரது திருமாளிகையினைக் குறித்து நேர் நோக்கி,

(வி-ரை) காணாதார் - காணுதற்கரியவர்.

காணாதார் வந்திறைஞ்சும் காலம் இது என்று அவரை அழைத்தா லென்ன - அவர்கள் முயன்றும் முன்னர்க் காணாதார் இங்கு எளிதில் கண்டு இறைஞ்சத்தக்க காலமிது என்று அவ்விருவரையும் அழைத்தது போலச் சிலம்பு ஒலித்தன என்பது. "திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று, நிருத்தனைக் கும்பிடென்றுந் தீபற" (உந்தி); திருவடியை அணுகச் செய்து உயிர்களை முத்திநெறி கூடச் செய்தல் சிலம்பின் ஒலியின் பயனாதலின் **அழைத்தால் என்ன** என்றார்; **என்ன -** உவமவுருபு; வினை பற்றியஉவம முள்ளுறுத்த தற்குறிப்பேற்ற அணி.

காலம் இது - "இறைவன் கிளர்கின்ற காலமிக் காலம்" (4); "காலமுண் டாகவே காதல் செய்துய்ம்மின்...பிரான்றன் னடியவர்க்கு, மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே" (5) (திருவா - பாண்டிப் பதிகம்) என்ற திருவாக்குக்களின் கருத்துக்கள் ஈண்டுக் கருதத்தக்கன.

அவரை - "மாலும் அயனும்" என்ற அவ்விருவரையும்.

கடல் விளைத்த ஆலம் - விளைத்த - விளைவிக்கப்பட்ட; கடலில் விளைவிக்கப்பட்ட என்பதைக் கடல் விளைத்த என்றுபசரித்தார்; இடத்து நிகழ் பொருள் இடத்தின்மேல் ஏற்றப்பட்டது. **ஆலம் இருண்டகண்டம் - ஆலம் -** விடம்; **ஆல மிருண்ட -** ஆலத்தால் இருண்ட.

நீல மலர் - குவளை; இது பெண்களின் கண்ணுக்கு உவமிக்கப்படும்; நீல மலர் போன்ற கண்; மெய் பற்றிய உவமம்.

நேர் நோக்கி - நேராக அதனையே குறிவைத்து. 334

குறிப்பு:- 3486 - 3487 - 3488 இம்மூன்று பாட்டுக்களும் சில பிரதிகளில் இல்லை.

3490. பெருவீ ரையினு மிகமுழங்கிப் பிறங்கு மதகுஞ் சரமுரித்து
மருவீ ருரிவை புனைந்தவர்தம் மருங்கு சூழ்வார் நெருங்குதலால்
திருவீ தியினி லழகரவர் மகிழுஞ் **செல்வத் திருவாரூர்**
ஒருவீ தியிலே சிவலோக முழுதுங் காண வுளதாமால். 336

3489. **(இ-ள்)** இறைவர்...எழுந்தருள - இறைவர் விரைவாக எழுந்தருள; எய்து...பின்றொடர - முன் கூறியவாறு பொருந்த வருகின்ற அவர்களெல்லாம் அவர்பின் தொடர்ந்து வர; அறைகொள்...அரவு தொடர - சத்தித்து வரும் அலைகளையுடைய கங்கைநீர் பொருந்திய சடையில் பாம்புகள் தொடர; அரிய...சுரும்பு தொடர - அருமையாகிய இளம்பிறையின் அருகே தேன் பொருந்திய கொன்றை மாலையில் வண்டுகள் தொடரவும்; உடன் மறைகள் தொடர - உடனே வேதங்கள் தொடரவும்; வன்றொண்டர் மனமும் தொடர - இவற்றோடும் வன்றொண்டரது மனமும் உடன் தொடரவும்; வரும்பொழுது - இவ்வாறாக வரும்பொழுது,

(வி-ரை) திருவீதியில் இறைவர் எழுந்தருளும் பொழுது அவரைத் தொடர்ந்து சென்றாரையும் சென்ற பொருள்களையும் கூறுவது இத்திருப்பாட்டு.

எய்துமவர்கள் - முன் மூன்று பாட்டுக்களினும் குறிப்பிட்டவர்கள். இவர்கள் இறைவரது **பின்** தொடர்ந்தவர்கள்.

அறைகொள்...சுரும்பு தொடர - நீர் தொடர் சடையில் அரவும், பிறையினருகு இதழிப் பிணையலில் சுரும்பும் தொடர; **அறை** - ஓசை; இரைச்சல்; **இறைவருடனே** திருமேனித் தொடர்பு கொண்டன.

உடன் மறைகள் தொடர - இறைவரைத் தம்முள் வைத்தலால் உடன் தொடர்ந்தன.

வன்றொண்டர் மனமும் தொடர - வன்றொண்டர் திருமேனி மட்டில் தேவாசிரியன் மருங்கு நின்றதன்றி, அவரது மனம் இறைவரைப் பின்பற்றிச் சென்றது என்பதாம்; உம்மை முன்கூறிய ஏனையவையே யன்றி **மனமும்** என இறந்தது தழுவிய எச்சவும்மை; இனி, **மனமும்** என்பதற்குப் பிரியாது சிவயோக நிலையிற் கூடியிருக்கும் நம்பிகளது மனமும் என்று சிறப்பும்மை யாக்கி உரைத்தலுமாம்; பிரியாது கூடியிருந்தாலும் இங்கு உலகியல் நிலையில் நடிப்பார் போன்று இறைவர் போதலும் அவர் மனந் தொடர்தலுமாகிய செயல்கள் நிகழ்ந்தன என்பதாம். "ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே, எறிவிழியின் படுகடைக்கே கிடந்து மிறை ஞானங், கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக் குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர்" (சித்தி - 10) என்ற கருத்து ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. உலகியல் நிலையில் இவ்வாறு நம்பிகள் மனந்தொடர்ந்த தன்மைபற்றி மேல் 3502-3503 பாட்டுக்களிற் கூறுதல் காண்க.

இத்திருப்பாட்டு மிகுந்த இசை நயமும் பொருணயமும் கவிநயமும் பொருந்தி விளங்குவதாகும். 335

3490. **(இ-ள்)** பெருவீரையினும்...நெருங்குதலால் - பெரிய கடலினும் மிக்க முழக்கம்

3491. **ஞால முய்ய வெழுந்தருளு நம்பி** தூதர் பரவையார்
கோல மணிமா ளிகைவாயில் குறுகு வார்முன் கூடத்தம்
பாலங் கணைந்தார் புறநிற்பப் பண்டே தம்மை யர்ச்சிக்கும்
சீல முடைய மறைமுனிவ ராகித் தனியே சென்றணைந்தார். 337

செய்து விளங்கும் மதயானையினை உரித்து அத்தோலைப் போர்த்த அப்பெருமானது பக்கத்தே முன்கூறியபடி சூழ்ந்து வருவார்கள் நெருங்கி வருதலாலே; திருவீதியினில்...உளதாமால் - திருவீதியில் எழுந்தருளும் அழகராகிய இறைவர் மகிழும் அச்செல்வத் திருவாரூரின் ஒரு வீதியிலே சிவலோகம் முழுதும் காண உளதாயிற்று.

இந்த ஆறு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பெருவீரை - பெரிய கடல்.

சூழ்வார் - முன் நான்கு திருப்பாட்டுக்களிலும் கூறப்பட்ட பல்வேறு திறத்தினர்.

திருவீதியினில் அழகர் - வீதியில் எழுந்தருளிய அழகராகிய வீதிவிடங்கர்.

திருவாரூர் ஒரு வீதியிலே சிவலோக முழுதுங்காண - சிவலோகமுழுதும் என்றது சிவலோகத்துட் காணப்படுவோர் இத்திருவீதியிலும் காணப்படுதலால் ஒப்புமை கூறப்பட்டது. **நெருங்குதலால் - காண உளதாமால்** என்று கூட்டுக.

வீதியிலே என்றூர் இங்குச் சூழ்வோர் அனைவரும் வீதி அளவில் நின்றுவிட, இறைவர் மட்டும் தம்மைப் பூசிக்கும் அந்தணர் வடிவுடன் இம்முறையில் திருமாளிகையினுள் எழுந்தருளுதல் குறிப்பு. மேல் வரும் முறையில் இறைவர் தாமாந்தன்மை அறிவுறு கோலத்தோடு மருங்கு சூழும் கணத்தவர் முதலிய அனைவருடன் மாளிகையினுள் எழுந்தருளுதலால் "**அத்திருமாளிகை தென்பால் வெள்ளித் திருமலை போன்ற தன்றே**" *(3516)* என்பது காண்க.

அழகர் - இறைவர்; **மகிழும் செல்வத் திருவாரூர்** - திருத்தாண்டகப் பதிகங்களும் பிறவும் காண்க.

ஒரு வீதியிலே முழுதும் காண - **ஒரு** சுட்டுப் பொருள் தந்து நின்றது; ஏகாரம் பிரிநிலை; உம்மை - முற்றும்மை. **காண** -காண்பதுபோல.

உளதாமால் - காலமயக்கம்; உரிவை - உரித்தலால் பெறப்படுவது. 336

3491. **(இ-ள்)** ஞாலம்... தூதர் - உலக முய்யும் பொருட்டு வந்தவதரித் தருளிய நம்பிகளின் தூதராகிய இறைவர்; பரவையார்... குறுகுவார் - பரவையாரது அழகிய மணிகள் அணிந்த திருமாளிகையின் வாயிலிற் சேர்வாராய்; முன்கூட... புறநிற்ப - முன்னரே தம்பாலின் அங்கு அணைந்தவர்கள் எல்லாரும் புறத்திலே நிற்கப்பணித்து; பண்டே... சென்றணைந்தார் - நீண்ட நாளாகத் தம்மை அருச்சனை புரியும் சீலம் உடைய சிவ வேதிய முனிவராகிய கோலத்துடன் தனியே சென்று சேர்ந்தனர்.

(வி-ரை) ஞால முய்ய எழுந்தருளு நம்பி - "மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத், தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப், போதுவார்" (35) என்று தொடக்கத்திற் கூறிய கருத்தை ஈண்டு நினைவு கூர்தற்பொருட்டு எடுத்துரைத்தவாறு; என்னை? ஞாலமுய்தற் பொருட்டுத் திருமலையில் நம்பிகளது காட்சி நிகழ, அதனால் "மாதர்மேன் மனம் வைத்தனை தென்புவி, மீது தோன்றியம் மெல்லிய லாருடன், காத லின்பங் கலந்த ணைவாய்" என இறைவராணை நிகழ, அந்நியதியின்படி புவித் தோற்றம் நிகழ, அந்நிகழ்ச்சியினைக் கூட்டுவிக்கும் பொருட்டு இறைவர் தூதராயெழுந்தருளினார் என்க. "செய்வானும் செய்வினையு மதன் பயனும் சேர்ப்பானும்" (சாக் புரா.5) என்றபடி ஈண்டுச் செய்வினைப் பயன் கூட்டுவிப்பாராய் இறைவர் தூதரானார் என்பது குறிப்பு; இங்கு இத்தூதின் நிலைபற்றி உண்மையறிய லாற்றாது குறை கூறப் புகுவோர் நம்பிகளது சரிதம் பற்றிய இந்நிகழ்ச்சியேயன்றி உலகில் எல்லா உயிர்களின் எல்லா வினைப்பயன்களையும் இடை நின்று கூட்டுவிப்பவர் இறைவரேயாம் என்ற உண்மை நிலையைக் கருதித் தெளியக்கடவர்.

முன்கூட.... புறநிற்ப - கணங்கள் - தேவர் - முனிவர் முதலியோர்கள் திருமாளிகையின் புறத்தே திருவீதியளவில் நின்றுவிட; இதுபற்றியே முன் 'ஒரு வீதியிலே சிவலோக முழுதும் காண" என்றார். **முன்கூட - அணைந்தார்** - முன்னே சென்றவர்கள்.

பண்டே...தனியே சென்று அணைந்தார் - பண்டே - நீண்ட காலமாக; வயது முதிர்ந்த; **சீலம்** - தவவொழுக்கம்; **தனியே** - உடன் வந்தவர்களின்றி; "நீடிய பேதையா ளுடனின்றி" (447) என்ற கருத்தும் ஈண்டு வைத்துக் கருதத்தக்கது; பின்னர்த் "தாமாந் தன்மை யறிவுறு கோலத் தோடும்" (3515) என்பதனை இங்கு வைத்து ஒப்பு நோக்குக.

தனியே - "மாதரார் தாமிருந்த, இடவகையிற் றனிபுகுதோம்" (3697) என்ற நிலையினையுடையராய்த் தம்மைக் காட்டி நடிக்கும்பிரானார் இங்குப் பரவையார் தனியிருந்த திருமாளிகையில், பாதியிரவில் அதற்கு மாறாகத் தனியே புகுந்தாரே? எனின், பண்டே தம்மை அர்ச்சிக்கும் மறை முனிவர் கோலமும் சீல முடைமையும் அவ்வொழுக்கத்தினை இகவாமற் காத்தன என்பது குறிக்க இவற்றை முன் கூறிக் காட்டிய நயம் காண்க.

ஆகி - ஆக்கச் சொல் உருவமாறுதலை மேற் கொள்ளுதல் குறித்தது. ஆக்கிக்கொண்டு இவ்வாறு அருளினாலே நினைந்தவாறே நினைந்த மேனி கொள்ளுதல் இறைவரியல்பென்க. (சித்1-65; சிவப்-15).

மறைமுனிவராகித் தனியே சென்று அணைந்தார் - இவ்வாறு ஒருமுறைக் கிருமுறை தூது செல்லுதலும், முதலில் மறை முனிவராகித் தனியே செல்லுதலும், பின்னர்த் தாமாந்தன்மை அறிவுறு கோலத்தோடு செல்லுதலும் முதலிய செயல்கள் இறைமைத் தன்மையோடு இயைவனவோ? இவற்றின் தன்மை என்னை? எனின், இவை, உயிர்கள் வினைப்பயன்களைத் துய்த்து ஈடேறச் செய்தற்கண் முன்னவன் செய்யும் அருள் விளையாட்டுக்களேயா மென்க; இவற்றின் காரணமும் நிகழ்ச்சி முறையும் நம்மாற் காண முடியாது; ஆதலிற் கேட்டலுமாகாது என்பது இறைவனாணையாம். உயிர்கள் வினைத்திறத்தாற்

3492. சென்று மணிவா யிற்கதவஞ் செறிய வடைத்த வதன்முன்பு
நின்று "பாவாய்! திறவா"யென் றழைப்ப, நெறிமென் குழலாரும்
ஒன்றுந் துயிலா துணர்ந்தயர்வா "ருடைய நாதன் பூசனைசெய்
துன்றும்புரி நூன் மணிமார்பர்போலு மழைத்தா" ரெனத்துணிந்து, 338

பலதிறப்படுவன; ஆதலின் அவ்வவர்க்குச் செய்யும் அருளின் வண்ணமும் பலபல ஆவன; "ஆட்பா லவர்க்கருளும் வண்ணமு மாதி மாண்புங், கேட்பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா" (திருப்பாசுரம்) என்ற ஆணையும், அதற்கு, "அருளும் திறம், நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால், ஓது மெல்லை யுலப்பில வாதலின், யாது மாராய்ச்சி யில்லையாம்" *(2731)* என்ற ஆசிரியரது விளக்கமும் கண்டு உளங் கொள்ளத் தக்கன. *337*

3492. **(இ-ள்)** சென்று...அழைப்ப - முன் கூறியவாறு தனியே சென்றணைந்து நெருங்க அடைத்த அழகிய அவ்வாயிற் கதவத்தின் முன்பு நின்று, "பாவையே! கதவந்திறவாய்" என்று அழைத்திட; நெறிமென்...அயர்வார் - நெறித்த மெல்லிய கூந்தலையுடைய பரவையாரும் ஒரு சிறிதும் துயிலாமல் விழித்திருந்து வருந்துபவர்; உடைய நாதன்...எனத்துணிந்து - "என்னை ஆளுடைய இறைவரது பூசையினைச் செய்யும் நெருங்கிய முப்புரிநூலினை அணிந்த மார்பினையுடைய முனிவர் போலும் வந்தழைத்தனர்?" என்று துணிந்து,

(வி-ரை) செறிய அடைத்த கதவமதன் முன்பு - என்க.

செறிய - நெருங்க; நன்றாக; பிணக்கினால் எளிதிற் றிறக்க வியலாதபடி அடைத்த என்ற குறிப்பு.

பாவாய் என்றழைத்துக் கடை திறவாய் என்ன - என்க.

கடை - (கதவம்) என்பது வருவிக்க; **பாவாய்!** அடைத்த கதவின் முன் வெளி நிற்பவர்கள் உள் இருப்போரை விளித்து உரைத்தல் பற்றி அழைத்தார்; "அஞ்சொலீர்! பலி! என்னும்" (தேவா - ஐயாறு.); "வாட்டடங்கண் மாதே" "நேரிழையாய்" (திருவா-திருவெம்.)

நெறிமென் குழலார் - பரவையார்; **நெறி** - நெறித்தலாவது கருமணல் ஒழுங்கு போலச் சிறு சுருள்களுடன் தொடர்ந்து இருத்தல்; **மென்மை** - மெல்லிய மயிர்களுடைமை உயர்ந்த இலக்கணம்.

ஒன்றும் துயிலாது உணர்ந்து - **ஒன்றும்** - ஒரு சிறிதும்; காலத்துவந்து பொருந்தத்தக்க என்றலுமாம்; **ஒன்றுதல்** - பொருந்துதல்; **துயிலாது** - துயில் பெறாது; **உணர்ந்து** - விழித்து இருந்து.

உடைய பெருமான் தம்மை ஆளுடைய நாயகராகிய புற்றிடங் கொண்ட இறைவர்.

துன்றும் புரிநூல் மணிமார்பர் -சிவ வேதியராகிய அந்தணர்.

போலும் அழைத்தார் - போலும் - முழுதும் துணிவு பெறாத நிலை; அதன் காரணம்

3493. "**பாதி மதிவாழ்** முடியாரைப் பயில்பூ சனையின் பணிபுரிவார்
பாதி யிரவி லிங்கணைந்த தென்னெ?" வென்று பயமெய்திப்
பாதி யுமையா டிருவுருவிற் பரம ராவ தறியாதே
பாதி மதிவா ணுதலாரும் பதைத்து வந்து கடைதிறந்தார். 339

வரும் பாட்டிற் கூறுவது காண்க; உயர்ந்த நிலையில் உள்ள அவர், காலமும் இடமும் தகாத நிலையில் வந்தமை ஐயப்பாட்டின் துணிவு பெருமைக்குக் காரணம்.

துணிந்து - அழைத்தவர் இன்னுர் என்பதை மட்டில் துணிந்து; ஏனைக் காரணம் முதலியவை துணியாமை மேற்காண்க.

பாவா யென்றழைப்ப—நெறித்துச் சுழல் மென் குழலாரும்—என்பதும் பாடம். *338*

3493. **(இ-ள்)** பாதி... பயமெய்தி -பிறைச்சந்திரன் வாழ்தற்கிடமாகிய சடைமுடியினை உடைய இறைவரை விளக்கமுடைய பூசனையின் பணிசெய்கின்ற முனிவர் நடு இரவில் இங்கு வந்தணைந்த காரியம் யாதோ என்று அச்சமெய்தி; பாதி.... அறியாதே - அவர் தமது திருவடிவிற் பாதியாகிய ஒரு கூற்றிலே உமையம்மையாரையுடைய பரமரே ஆவர் என்பதை யறியாமல்; பாதிமதி... திறந்தார் - அரைச்சந்திரன் போன்ற நெற்றியையுடைய பரவையாரும் பதைப்புடனே வந்து வாயிலைத் திறந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பாதிமதி - முதிராத இளம்பிறை; **பாதி** - வளர்ச்சிக் குறையுடைய என்ற மட்டில் பொருள் தந்து நின்றது.

பயில் பூசனையின் பணி - பயில் - விளங்கும்; சிறந்த பிறப்பினின்றும் பழகிய என்ற குறிப்புமாம்.

இன் - பூசனையாகிய இனிய பணி; இனிமை - தமக்கும் உலகுக்கும் வீடுபேருகிய பயன் தருதல்.

பாதி இரவில் இங்கு அணைந்தது என்னே என்று பயம் எய்தி - பாதி இரவு - வரத்தகாத நேரம்; ('பேயு முறங்கும் பிறங்கிருள் வாய்" *(3476)*;) என்பதும் இங்கு வரத்தகாத இவ்விடத்து என்பதும் குறிப்பு.

பயம் எய்தி - தம்பாலுள்ள குறை காரணமாமோ என்ற நினைவினுல் வந்த அச்சம்.

பாதி யுமையாள்...அறியாதே - வந்து அழைத்தவர் சிவபெருமானே என்பதைச் சிறிதும் தெரியலாற்ருது; அக்குறிப்புக்கள் தானும் அறிந்த இடத்துப் பரவையார் கொண்ட மனமழிந்த நிலையினை மேல் *(3513—3514)* உரைப்பது காண்க; **அறியாதே** - அறிந்திருப்பாராயின் இங்கு, மேல் *(3495—4399)* வருமாறு மறுத்து வலிந்துரைத்திருக்க மாட்டார் என்பது குறிக்க **அறியாதே** என்று அமைதி வகுத்தமை காண்க.

பாதி மதிவாள் நுதலார் - பரவையார்; பாதிமதி - அரைப்பிளவாகிய சந்திரன்.

3494. மன்னு முரிமை வன்றொண்டர் வாயிற் றூதர் வாயிலிடை
முன்னின் றுரைக் கண்டிறைஞ்சி "முழுது முறங்கும் பொழுதின்கண்
என்னை யாளும் பெருமானிங் கெய்தி யருளி னாரென்ன
மின்னு மணிநூ லணிமார்பீ! ரெய்த வேண்டிற் றென்?"னென்றார். 340

அர்த்த சந்திரன் என்பர். இது பெண்களின் நெற்றிக்கு மெய்யும் உருவும் பற்றி உவமிக்கப்படும்; **வாள் நுதல்** என்ற குறிப்புமிது; **பாதிமதி - மதி** - புத்தி ஆலோசனை என்ற குறிப்புடன் - இந்நிலையில் புத்திக் குறைவுடனின்ற என்ற பொருளுந்தர நின்றது; "தேய் மதியன்" (திருவா) என் புழிப்போல.

பதைத்து - பதைத்தல் பயத்தின் விளைவு; **கடை** - கதவம்.

குறிப்பு:—இந்நிலையில் இறைவரது தூது பாதிப் பயனுடன் நின்றுமீண்டும் வருதலுடன் முழுப்பயனும் தந்து நிறைவாவது என்ற குறிப்புத்தர இப்பாட்டில் **பாதி** என்று நான்கடியிலும் எதுகை வைத்து சொற் பொருட் பின்வரு நிலையில் அருளிய கவிநயமும் கண்டு கொள்க. 339

3494. **(இ-ள்)** மன்னும்... இறைஞ்சி - நிலைபெற்ற தோழராகும் உரிமையுடைய வன்றொண்டரது காரணமாக வரும் தூதராகிய இறைவர் வாயிலின் முன்னே நின்றாரைப் பரவையார் கண்டு வணங்கி; முழுதும்...கண் - உலகத்துயிர்கள் யாவையும் துயிலும் இந்த நடு இரவிலே என்னை யாளுடைய இறைவரே இங்கு எழுந்தருளி வந்தார் என்பதுபோல, விளங்கும் அழகிய நூலணிந்த மார்பினை யுடையவரே! தேவரீர் இங்கு வரவேண்டிய காரணமென்ன? என்று வினவினார்.

(வி-ரை) உரிமை...தூதர் - தோழராகும் உரிமையினாலே விடுக்கப்பட்டுப் போந்த அவர் தூதர், நம்பி தூது விடுத்தற்கும் இறைவர் இசைந்து தூதுசெல்வதற்கும் இருபாலும் ஒன்று போலவே தோழராந்தன்மையே உரிமை தந்தது என்பதாம்.

வாயில் - காரணம்; **வாயில் தூதர்** - வாயிலாக வரும் தூதர். **வாயிற்றூதர்** - வாயிலிடை; சொற்பின் வருநிலை; வாயில் - திருமாளிகை வாயில்;

தூதர் நின்றாரை - தூதராய் வந்து நின்றாரை.

முழுதும் உறங்கும் பொழுது - உலகத்துள்ள உயிர் வருக்கமெல்லாம் துயிலும் நள்ளிரவு.

என்னை...என்ன - என்னையாளுடைய நாயகராகிய இறைவரே (சிவபெருமானே) இங்கு நேரில் எழுந்தருளி வந்தாற்போல; **என்ன** - போல; உவம உருபு; அருச்சிக்கும் முனிவர் வந்தது இறைவரே வந்தருளியது போலாம் என்க. அருச்சகரையே இறைவராகக் கொண்டு வணங்கும் மரபும் குறிப்பு. **என்ன** - என்ற உண்மைக் குறிப்பு உட்பெற என்றுரைக்க நின்றமையும் காண்க.

3495. கங்கைநீர் கரந்த வேணி கரந்தவ ரருளிச் செய்வார்
"நங்கைநீ மறுது செய்யி ஞன்வந்த துரைப்ப"தென்ன,
அங்கயல் விழியி ஞரு **"மதனைநீ ரருளிச் செய்தால்**
இங்கெனக் கிசையு மாகி லிசையலா"மென்று சொல்லி, 341

3496. "என்னினைந் தணைந்த தென்பா லின்னதென் றருளிச் செய்தால்
பின்னைய தியலு மாகி லா"மெனப், பிரானுர் தாமும்
"மின்னிடை மடவாய்! நம்பி வரவிங்கு வேண்டு"மென்ன,
நன்னுத லாருஞ் "சால நன்று! நம் பெருமை" யென்பார், 342

எய்த வேண்டிற்று என்? - இங்கு வரவேண்டிய காரணம் என்ன? **வேண்டிற்று**- வேண்டும் குறை.

என்றூர் - என்று வினவினூர். **விடுத்த தூதர்—மார்பர்**—என்பனவும் பாடங்கள்.

340

3495. **(இ-ள்)** கங்கை நீர்...அருளிச் செய்வார் - கங்கை யாற்றுப் பெருக்கினைக் கரந்துள்வைத்த சடையினை மறைத்து வந்த இறைவர் அருளிச் செய்வாராகி; நங்கை...என்ன - நங்கையே! நீ மறுக்காமல் அதனுக் கிணங்குதல் செய்வாயாகில் நான் வந்த செய்தியினை உரைக்கலாம் என்று கூற; அங்கயல்...சொல்லி - அழகிய கயல்மீன் போலும் கண்களை உடைய பரவையாரும் "அதனை நீர் இன்னதென்று முன்னர் அருளிச் செய்தீராஞல் ஈண்டு அஃது எனக்கு இசைவதே யாகில் இணங்குதல் கூடும்" என்று கூறி,

(வி-ரை) நீர் கரந்த வேணி கரந்தவர் - சொல்லணி; **நீர் கரந்த** - பெருநீரினை வெளிப்படாது உள்ளே அடக்கிவைத்த; **கரந்தவர்** - மறைத்தவர்; அர்ச்சகர் வேடமாய் வந்தாராதலின் சடையினையும் தாமாந்தன்மையினையும் கரந்தார்

நங்கை - பெண்களி லுயர்ந்தவரைக் குறிக்கும் மகடூஉச் சிறப்புப் பெயர்; "அவர் நங்கை பரவையார்" - *(293)*.

செய்யின் - நான் வந்த காரியத்தை எடுத்து உரைக்கும்படி செய்வாராகில்; **உரைப்பது** - உரைக்கப்படுவதாம்.

அதனை - வந்த காரணத்தினை; முன்னம் அருளிச் செய்தால் என்க; முன்னம் என்பது குறிப்பெச்சம்.

இங்கு எனக்கு இசையுமாகில் இசையலாம் - தேவரீர் வந்த காரியம் என் மனதிற் கிசையுமாகில் செய்ய இசையலாம்; மனதிற் கிசைதல் - மனம் பொருந்துதல்;மனதிற்குப் பொருந்தினும் தம்மாற் செய்தற் கியல்வது - செய்யக்கூடியதாதலும் வேண்டும்; அதனை மேல்வரும் பாட்டிற் "**பின்னைய தியலு**மாகில்" *(3496)* என்று கூறுதல் காண்க; இயல்வதாயினும் மனமிசையாதாயின் செய்யக்கூடாமையாதலின் அதனை முதற்கண் இங்குக் கூறினூர்.

341

3497. "பங்குனித் திருநா ளுக்குப் பண்டுபோல் வருவா ராகி
யிங்கெனைப் பிரிந்து போகி யொற்றியூ ரெய்தி யங்கே
சங்கிலித் தொடக்குண் டாருக் கிங்கொரு சார்வுண் டோ? நீர்
கங்குலின் வந்து சொன்ன காரிய மழகி" தென்றூர். 343

3496. **(இ-ள்)** என் நினைந்து...ஆம் என - என்னிடம் எதை எண்ணித் தேவரீர் அணைந்தது என்று அருளிச் செய்யின் அதன்மேல் அஃது இயல்வதேயாயின் என்னால் ஆகும் என்று கூற; பிரானுர்...என்ன - இறைவனும் மின்போன்ற இடையினை உடைய பெண்ணே! இங்க நம்பி வர வேண்டுவதேயாம் என்று சொல்ல; நன்னுதலாரும்...என்பார் - அது கேட்டுப் பரவையாரும் மிகவும் நன்று; நமது பெருமை இருந்தவாறு என்பாராய்.

(வி-ரை) என்னினைந்து என்பால் அணைந்தது அதனை இன்ன தென்று - என்க; **பின்னை** - அதன்மேல்; அவ்வாறருளிச் செய்ததன்பின்; **ஆம்** - செய்யலாகும்; இசையலாகும்.

நம்பி இங்கு வரவேண்டும்; அதுவே நான் நினைந்து உன்பால் வேண்டிவந்தது என்ன என்க. அதுவே நான் நினைந்து உன்பால் வேண்டி வந்தது என்பது இசையெச்சம்.

வேண்டும் என்ன - வேண்டுதல் வேண்டாமையிலராயும், தம்பால் யாவரும் வேண்டுவன வேண்டுவதல்லது தாம் ஒருவரை எதுவும் வேண்டும் நிலையில்லாராயும் உள்ள இறைவர் இவ்வாறு வேண்டுவது பரவையாரது தவப்பெருமை! என்க.

சால நம்பெருமை - இகழ்ச்சிக் குறிப்புப்படக் கூறியது; அற்றாயினும் உண்மைக் குறிப்பும் படநிற்பது காண்க.

வரப்பெற வேண்டும்—என்பதும் பாடம். **342**

3497. **(இ-ள்)** பங்குனி...வருவாராகி - பங்குனித் திருவிழாவுக்காக வழக்கம் போல மீண்டு வருவாராகி; இங்கெனைப் பிரிந்து போகி - இங்கு என்னைவிட்டுப் பிரிந்து சென்று; ஒற்றியூர்...சார்வுண்டோ? திருவொற்றியூரினைச் சார்ந்து அங்கே சங்கிலித் தொடக்கினாலே பிணைக்கப்பட்ட அவருக்கு இங்கு வருவதற்கு ஏற்ற சார்வும் ஒன்றுண்டோ?; நீர்...என்று - "நீர் இந்த நடு இராத்திரியில் வந்து மேற்கொண்டு சொன்ன இக்காரியம் மிக அழகியதாம்" என்று சொன்னுர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பங்குனித் திருநாளுக்குப் பண்டுபோல் வருவா ராகி; இது நம்பிகள் முன்னை நாள்களில் எல்லாம் சென்று வந்த முறைமை. திருவாரூரினின்றும் பிரிந்து எங்குச் சென்றாலும் அங்கங்கும் பொன்பெற்றுப் பண்டுபோலத் திருவாரூருக்குப் பங்குனி விழாவுக்கு மீண்டுவரும் வழக்கு; இம்முறை அவ்வாறு பிழைத்துத் திருவொற்றியூர் சென்று சங்கிலித் தொடக்குண்டார் என்ற கருத்து மேல் உரைக்கப்படுதல் காண்க.

சங்கிலித் தொடக் குண்டாருக்கு - சங்கிலித் தொடக்கு - சங்கிலியாரை மணந்து கட்டுண்டு - சங்கிலியாலே பிணைப்பட்டு என இருபொருள்பட வந்த சிலேடை; சங்கிலி

3498. நாதரு மதனைக் கேட்டு "நங்கைநீ நம்பி செய்த
ஏதங்கண் மனத்துக் கொள்ளா தெய்திய வெகுளி நீங்கி
நோதக வொழித்தற் கன்றோ நுன்னையான் வேண்டிக் கொண்ட
தாதலின் **மறுத்தல் செய்ய வடா**"தென வருளிச் செய்தார். 344

3499. அருமறை முனிவ ரான ஐயரைத் தைய லார்தாம்
"கருமமீ தாக நீரிக் கடைத்தலை வருகை மற்றும்
பெருமைக்குத் தகுவ தன்று; லொற்றியூ ருறுதி பெற்றுர்
வருவதற் கிசையே னீரும் போ"மென மறுத்துச் சொன்னுர். 345

போன்று பிணைக்கும் சங்கிலியார் என்ற உவமத்தினையும் உள்ளுறுத்தி நிற்பது காண்க; "என்னு ருயிரு மெழின்மலருங் கூடப் பிணைக்கு மிவள்" (3384), "சிந்தைநிறை காவா தவர்பாற் போய்வீழ" (3381), "என்னை யுள்ளந் திரிவித்தாள்" (3382) என்பன முதலியவை காண்க. திருவொற்றியூரினின்றும் பிரியாமைக்குச் சபதத்தாற் கட்டுண்ட சரித நிகழ்ச்சியும், அதனைத் தொடர்ந்த பிறவும் குறிப்பு.

இங்கு ஒரு சார்வு உண்டோ? - **சார்வு** - சாரத்தக்க பற்று; **சார்வு** - சாரும் பொருள்.

அழகிது - இகழ்ச்சிக் குறிப்பு. **நீர்** - இதனை மேற்பூண்டு வரத்தகாத நீர் என்பதும், **கங்குலின்** - வரத்தகாத நேரம் என்பதும், **வந்து சொன்ன** - சொல்லவும் தகாததனைச் சொன்ன என்பதும் குறிப்பு. 3499 பார்க்க. 343

3498. **(இ-ள்)** நாதரும் அதனைக் கேட்டு - இறைவரும் அம்மொழியைக் கேட்டு; நங்கை நீ... நீங்கி - நங்கையே! உன்பால் நம்பி செய்த குற்றங்களை மனத்துள் வையாது, பொருந்திய புலவியினை நீங்கி; நோதகவு...வேண்டிக் கொண்டது - துன்பஞ் செய்யும் தன்மையினை நீக்குதற் கல்லவோ உன்னை நான் வேண்டிக் கொண்டேன்; ஆதலின்... அருளிச் செய்தார் - ஆதலாலே நீ என் சொல்லினை மாறுபாடு செய்தல் தகாது என்று அருளிச் செய்தனர்.

(வி-ரை) நங்கை நீ - செற்றந் தணிப்பதற்கு **நங்கை** - என உயர்ச்சிக் குறிப்புப்பட விளித்தவாறு. **நம்பி** - என்று கூறியதும் அக்குறிப்பு.

ஏதங்கள் - அவை பலவாயினும் அவை எல்லாம் மனத்துக் கொள்ளாதொதுக் கற்பாலன என்பது குறிப்பு.

நோதகவு - நோவுறுத்தலின் தன்மை; **நோ** - துன்பமுறுதல்; முதனிலைத் தொழிற் பெயர். தகவு - தன்மை; **நோவுதக** என்பர் அடியார்க்கு நல்லார்.

"நான்... அடாது" என - நான் வேண்டிக்கொண்டதன் பொருட்டாதல் மறுத்தல் செய்ய அடாது. **செய்ய** - செய்தல். **நோதக வொழிதற்கு** — என்பதும் பாடம். 344

3499. **(இ-ள்)** அருமறை... தையலார்தாம் - அரிய மறைமுனிவராய் வந்த இறைவரை நோக்கிப் பரவையாரும்; கருமமீதாக... தகுவதன்றுல் - குறித்த செயலிதுவேயாக மேற்பூண்டு

3500. நம்பர்தா மதனைக் கேட்டு **நகையுமுட் கொண்டு மெய்ம்மைத்**
தம்பரி சறியக் காட்டார் தனிப்பெருந் தோழ ரூர்தம்
வெம்புறு வேட்கை காணுந் திருவிளை யாட்டின் மேவி
வம்பலர் குழலி ரூர்தா **மறுத்ததே கொண்டு மீண்டார்.** 346

நீர் இந்த வாயிலின்கண் வருவது மேலும் உமது பெருமைக்குத் தக்கதன்றாகும்; ஒற்றியூர்... போமென - ஒற்றியூரின்கண் நிலைபேறு உடைய உறுதியினைப் பெற்ற அவர் இங்கு வருவதற்கு நான் இசையமாட்டேன்; நீவிரும் போமின் என்று; மறுத்துச் சொன்னார் - எதிர்மறுத்துக் கூறினர்.

(வி-ரை) மறை முனிவரான ஐயர் - ஆன - ஆக்கச்சொல் அவ்வேடம் பூண்டுவந்த என்ற பொருடந்து நின்றது; **ஐயர்** - பெருமையுடையோர்; யாவர்க்கும் மேலாம் பெருமையுடைய இறைவரைக் குறித்து நின்றது.

கருமம் ஈதாக - இஃதும் ஒரு செய் தொழிலாகக் கொண்டு; இழிவு சிறப்பும்மை தொக்கது; **மீதாக** - என்று கொண்டு இதனை ஒரு மேம்பட்ட செயலாக வைத்து என்றலுமாம்.

இக்கடைத்தலை - இவ்வாயிலின் கண்; **கண்** - ஏழனுருபு. வாயிலினின்றவாறே இப் பேச்சுக்கள் நிகழ்ந்தன என்பது குறிப்பு; வீட்டினையே இவ்வாயில் என்றார் என்பதுமாம்.

மற்றும் - மேலும்; **உம்பெருமை** - உடைய பெருமானது பூசனை செய்யும் அருச்சகராகிய உமது பெருமை; திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட பெருமானை அருச்சிக்கப் பெற்ற பிறவி பெரும் பேறுடையது என்பதாம்; அஃதன்றியும் முப்போதுந் திருமேனி தீண்டுவாராயும், திருவாரூர்ப் பிறந்தாராயும் உள்ள பல சிறப்புக்களையும் குறித்தது. **மற்று உம் பெருமை** - மேற்கொண்ட இவ்வேடமே யன்றி அதனுள் மறைந்துள்ள உமது உண்மை நிலையின் பெருமை என்றதும் குறிப்பு.

ஒற்றியூர் உறுதி பெற்றார் - உறுதி - நிலைபேறான தன்மை; சங்கிலியார் திருமணமும் சபதமும் குறித்தது;மணம் பற்றித் தொடர்ந்த இல்வாழ்க்கைத் தன்மை.

உறுதி பெற்றார் வருவதற் கிசையேன் - உறுதி பெற்றமையால் - பெற்றாராதலின் எனக் காரணக் குறிப்புடன் நின்றது.

நீரும் போம் - மீக்கொண்ட வெகுளிக் குறிப்பு.

கரும மீதாகில்—வருதல் நுந்தம்—என்பனவும் பாடங்கள். *345*

3500. **(இ-ள்)** நம்பர்தாம்... காட்டார் - இறைவனார் அம்மாற்றத்தினைக் கேட்டுச் சிரிப்பினையும் உள்வைத்து, தம் மெய்யாகிய பரிசினை அவர் அறியும்படி வெளிக்காட்டாராகி; தனி... மேவி - தம் ஒப்பற்ற பெருந் தோழராகிய நம்பியினது மனம் வெதும்பும் வேட்கையினைக் காணுகின்ற திருவிளையாட்டினை மேற்கொண்டு; வம்பலர்... மீண்டார் - மணம் கமழ்கின்ற கூந்தலையுடைய பரவையார் மறுத்துரைத்த அம்மொழியினையே ஏற்றுக்கொண்டு மீண்டருளினர்.

3501. தூதரைப் போக விட்டு வரவுபார்த் திருந்த தொண்டர்
"நாதரை யறிவி லாதே **னன்னுதல் புலவி நீக்கிப்**
போதரத் தொழுதே"னென்று புலம்புவார் பரவை யாரைக்
காதலி னிசைவு கொண்டு வருவதே கருத்துட் கொள்வார், 347

(வி-ரை) நகையும் உட்கொண்டு - தம்மை அறிந்து கொள்ளாத நிலையிற் பரவையார் மொழிந்தது கண்டு போந்த சிரிப்பினை வெளிக்காட்டாது.

தம் மெய்ம்மைப்பரிசு - என்க; "தாமாந்தன்மை" (3515); **அறியக்காட்டார்** - "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தேவா) என்றபடி இறைவர் நேரே, வெளிப்பட்டு எழுந்தருளி நின்றாலும், அவர், தம்மை அறியக் காட்டினாலன்றி உயிர்கள் அவரை அறியும் ஆற்றலில்லையாதல் பின்னர்க் காட்ட நிற்பது மேற்காண்க. காட்டாமைக்குக் காரணம் திருவிளையாட்டெனு மேற்கூறுதலும் காண்க.

தனிப்பெரும் தோழனர் - நம்பிகள் தோழனராதலின் வேட்கை காண என்க. **விளையாட்டின் மேவி** - விளையாட்டினை விரும்பி; **மேவுதல் - விரும்புதல்.**

வேட்கை காணுதலாவது - வேட்கை மிகுதியான் வரும் நிலையினையும் வெளிப்படும் சொற்களையும் கண்டும் கேட்டும் நுகர்தல்.

மறுத்ததே கொண்டு - மறுதலித்த அச்சொல்லையே முடிபாக எடுத்துக் கொண்டு. 346

3501. **(இ-ள்)** தூதரை... தொண்டர் - தூதராக இறைவரைப் போக விட்டபின் அவர் செய்கை முற்றி மீண்டு வருதலையே எதிர் நோக்கியிருந்த தொண்டராகிய நம்பிகள்; நாதரை... புலம்புவார் - என் தலைவராகிய இறைவரை அறிவில்லாத நான் நன்னுதலாகிய பரவையினது புலவி தீர்த்து வரும் பொருட்டு வணங்கி வேண்டினேன் என்று புலம்பிடுவார்; பரவையாரை... கருத்துட் கொள்வார் - பரவையாரைக் காதல் பெருக இசைவித்துக்கொண்டே மீள்வார் என்றே கருத்தினுட் கொள்வாராகி,

(வி-ரை) பரவையாரை...கருத்துட் கொள்வார் - பரவையாரை இசைவுபடுத்தியே இறைவர் மீள்குவர் என்று துணிந்தனராதலின் நாதரைத் தூது விடுத்த அதற்கு இரங்கிப் புலம்புவாராயினர்.

அறிவிலாதேன் - தகாத செயலாதலின் அறிவில்லேன் என்றார்; பின்னரும் "பிழையுடன் படுவாராகி" (3542) என்பது காண்க.

நன்னுதல் - பரவையார்பாற் கண்ட குணநலம் குறிப்பு; மேற்பாட்டிலும் "நன்னுதல்" (3502) என்பது காண்க.

தொழுதேன் - தொழுது வேண்டினேன். **புலம்புவார்** - பலவாறும் வருந்துவார்.

புலவிநீக்க — என்பதும் பாடம். 347

3502. போயவண் மனையி னண்ணும் புண்ணிய ரென்செய் தாரோ
நாயனுர் தம்மைக் கண்டா னன்னுதல் மறுக்கு மோதான்
"ஆயவென் னயர்வு தன்னை யறிந்தெழுந் தருளி ஞர்தாஞ்
சேயிழை துனிதீர்த் தன்றி மீள்வது செய்யா" ரென்று, 348

3503. வழியெதிர் கொள்ளச் செல்வர்; வரவுகா ணுது மீள்வர்
அழிவுற மயங்கி நிற்ப ரசைவுட னிருப்பர்; "நெற்றி
விழியவர் தாழ்த்தா" ரென்று மீளவு மெழுவர்; மாரன்
பொழிமலர் மாரி வீழ ஒதுங்குவர்; புன்க ணுற்ருர். 349

3502. (இ-ள்) போயவள்...என்செய்தாரோ - இங்கு நின்றும் சென்று அவளது மனையினைச் சேரும் புண்ணியராகிய இறைவனுர் என்னசெய்தனரோ?; நாயனுர்... மறுக்குமோதான் - இறைவரைக் கண்டால் நன்னுதலாகிய பரவைதான் மறுப்பாளோ?; ஆய என்...என்று - பொருந்திய எனது வருத்தத்தினை அறிந்து எழுந்தருளிய இறைவனுர் அவளது சிறு கலகத்தினைத் தீர்த்தலான்றி மீள மாட்டார் என்றுட்கொண்டு,

(வி-ரை) இப்பாட்டுத், தூதின் முடிவுபற்றி நம்பிகள் மனத்துள் எண்ணிய ஐயங்களையும் அதற்குத்தாமே துணிவு பூண்ட நிலைகளையும் குறித்தது.

போய் அவள் மனையில் நண்ணும் - இது போழ்தினுள் அவள் மனையில் இறைவர் சேர்ந்திருப்பர் என்று எண்ணிய குறிப்பு.

என் செய்தாரோ? - ஐயம்; ஐயர் செயல் எவ்வாறு தொடங்கி எவ்வாறு முடிந்ததோ? என்றபடி.

நாயனுர்...மறுக்குமோ தான் - ஐயத்தின் நீங்கி ஒருவழித் துணிதற்குரிய காரணம்.

தான் மறுக்குமோ - என்க; மறுக்கமாட்டாள் என்று வினு எதிர்மறை குறித்தது.

ஆய - மூண்ட; ஆகிய; **அறிந்து எழுந்தருளினுர்தாம்** - தாமே அறிந்து எழுந்தருளி ஞராதலின் என்று காரணக் குறிப்புப்பட நின்றது; அறிந்து சென்ருராதலின் **துனிதீர்த்தன்றி மீளார்** - என்ற முடிபுக்குரிய ஏது; **துனி** - சிறுகலாம், சிறு ஊடல்; "துனியும் புலவியும்" (குறள்).

தீர்த்தன்றி மீள்வது செய்யார்-எதிர்மறைகள் தீர்த்தே மீள்குவர் என உறுதி குறித்தன.

மீள்வதும் — என்பதும் பாடம். *348*

3503. **(இ-ள்)** வெளிப்படை. தூதர் மீண்டு வரும் வழி நோக்கி எதிர் கொள்ளும்படி சிறிது தூரம் செல்வார்; அவர் வரக்காணுமையால் மீண்டு வருவார்; மனம் வருந்த மயங்கி நிற்பார்; சோர்வுடனே ஓர்புறம் இருப்பார்; நெற்றிக்கண்ணினையுடைய இறையவர் தாமதித்தார் என்று மீண்டும் எழுவார்; மதனன் பொழியும் மலரம்புகள் மழைபோல வந்து வீழ ஒதுங்குவார்; இவ்வாறு துன்பமுற்றனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3504. பரவையார் தம்பா னம்பி தூதராம் பாங்கிற் போன
அரவணி சடையார் மீண்டே **யறியுமா றணையும்** போதில்
இரவுதான் பகலாய்த் தோன்ற வெதிரெழுந் தணையை விட்ட
உரவுநீர் வெள்ளம் போல வோங்கிய களிப்பிற் சென்றார். 350

இவை இறைவர் தூதுபோய் மீளுமளவும் உள்ள இடையில் கால நீட்டிப்பில் தரிக்கலாற்றாது நின்ற நம்பிகளின் மன அலைவும் மெய்ப்பாடுகளும் குறித்தன.

(வி-ரை) இப்பாட்டு முன் இரண்டு பாட்டுக்களில் கூறியவாறு நம்பிகள் மனத்தினுள் எண்ணமிட்டு இருக்கும் போழ்து, உடல் ஓரிடத்தில் அமைந்து இருக்கவும் தரிக்கவுமாற்றாது உழலும் மெய்ப்பாடுகளைக் குறித்தது. இம்மன நிலையினையும் இதன் மெய்ப்பாடுகளையும் பற்றிப் பரவையார் நிலையினை முன் (3469)ல் விரித்துரைத்தவாற்றாலும் கண்டுகொள்க. தன்மைநவிற்சியணி.

வழி எதிர் கொள்ளச் செல்வர் - முன் பாட்டில் முடித்தவாறு தூதர் பரவையாரின் துனி தீர்த்த நற்செய்தி கூறுவதை விரைவில் கேட்கும்பொருட்டு எதிர் செல்வார் என்பது.

அழிவுற - மனம் அழிந்து; வருந்தி நைந்து.

அசைவு - சோர்வு; நடுக்கம் என்றலுமாம்.

நிற்பர் இருப்பர் - மீளவும் எழுவர் - மனம் அழிந்து அலைதலின் உடலும் அவ்வாறே ஒரு நிலையில் நிற்கலாற்றாது அலைதல் குறித்தது. நிற்கலாற்றாது, சிறிதுபோது இருப்பர்; இருக்கவுமாற்றாது சிறிது போதில் எழுவர் என்க.

தாழ்த்தார் - தாமதிக்கமாட்டார் என்றுரைப்பினுமமையும்.

மாரன்... ஒதுங்குவார் - மாரனது மலரம்புகள் நம்பிகள்பால் செயலற்று வீழ்ந்தன என்பது **வீழ** என்ற குறிப்பு. **ஒதுங்குதல்** - அவற்றின் இலக்கினுட்படாது விலகுதல்; **புண்கண்** - துன்பம். *349*

3504. **(இ-ள்)** பரவையார்...போதில் - பரவையாரிடத்தில் நம்பிகளின் தூதராகும் தன்மையிற் சென்ற அரவணிந்த சடையவராகிய இறைவனார் அங்கு நின்றும் மீண்டு தாமாந்தன்மை யறியும்படி உள்ள கோலத்துடனே வந்து அணைந்தபோது; இரவு...தோன்ற - அந்த நடு இரவானது இருளின்றிப் பகல் போலப் பேரொளியுடன் விளங்கியிட; எதிர் எழுந்து - நம்பிகள் அவருக்கெதிரே எழுந்து; அணையை...போல - அணையை உடைத்தெழுந்து பரந்த நீர்ப்பெருக்கினைப் போல;ஓங்கிய...சென்றார் - மிகுந்த களிப்பினுடனே எதிர்கொண்டு சென்றனர்.

(வி-ரை) நம்பி தூதராம் பாங்கு - நம்பிகளது தூதராகும் தன்மை; முறைமை; நிலைமை; **ஆம்** - ஆக்கச்சொல், அந்நிலையினராகத் தம்மை ஆக்கிக் கொண்டு தம்மை அருச்சிக்கும் முனிவர் கோலம் பூண்டு என்ற குறிப்புடையது.

அறியுமாறு பரவையாரிடத்தில் அருச்சகர் கோலத்திற் சென்றது போலன்றி நம்பிகள்பால் தாமாந்தன்மை அறியும் கோலத்துடன்.

3505. சென்றுதம் பிரானைத் தாழ்ந்து திருமுக முறுவல் செய்ய
ஒன்றிய விளையாட் டோரா "ருறுதிசெய் தணைந்தா"ரென்றே
"அன்றுநீ ராண்டு கொண்ட வதனுக்குத் தகவே செய்தீர்
இன்றிவள் வெகுளி யெல்லாந் தீர்த்தெழுந் தருளி"யென்றார். 351

இரவுதான் பகலாய்த்தோன்ற - இருளடர்ந்த நடு இரவு பகல் போன்ற ஒளியுடன் தோன்ற; இது பேரொளியுடைய இறைவராகிய இரவியின் வருகையாலாகியது; இரவி வந்தபோது இரவு பகலாகும் இயல்பு குறித்தது; **தோன்ற** - தோற்றத்தின் அளவே யன்றி இரவு உண்மையிற் பகலாகவில்லை என்பது; இறைவரைக் கண்ட மாத்திரையில் நம்பிகளின் மனத்தின் எழுந்த உவகையால் முன் கொண்டிருந்த துன்பறிலை நீங்கி உவகை போந்தமையால் அந்த இரவே பகலாக விளங்கிற்று என்பதுமாம்.

அணையை விட்ட உரவு நீர் வெள்ளம் போல - அணையினுற் றடுப்புண்டு தேங்கி நின்ற நீர்ப்பெருக்கு அணை உடைந்தபோது மிக்க வேகத்திற் செல்வது போல; "சிறைபெரு நீர்போல" (திருவா), **உரவு** -(நீர்ப்) பெருக்கு; "ஊரங்கணநீர் உரவு நீர்சேர்ந்தக்கால்" (நாலடி).

தூதராய்ப்பாங்கில் — அணையுமாறறியும் — என்பனவும் பாடங்கள். 350

3505. **(இ-ள்)** சென்று...தாழ்ந்து - போய்த் தம் பெருமானுரை வணங்கி; திருமுகம் முறுவல் செய்ய - அவரது திருமுகமானது சிறுநகை காட்டக் கண்டு; ஒன்றிய... என்றே - பொருந்திய திருவிளையாட்டினை உணராதவராகிப் புலவியை நீக்கி இசைவு செய்து வந்தனர் என்றே எண்ணி; அன்று... என்றார் - தேவரீர் அன்று என்னை ஆளாகக் கொண்டருளிய அச்செயலுக்கு ஏற்ற தன்மையாகவே இன்றும் அருள் செய்தீர், இவளுடைய புலவியை எல்லாம் தீர்த்து எழுந்தருளிய அதனுலே என்று சொன்னார்.

(வி-ரை) திருமுகம் முறுவல் செய்ய - தம்பெருமானது திருமுகம் தம்மை நோக்கிச் சிறுநகை செய்ய அது கண்டு; **செய்ய** - செய்யக் கண்டு; அங்குப் பரவையார் மறுத்தது கேட்டு அவர் அறியாமை கண்டு "நகையுட் கொண்டது" (3500) போலவே, ஈண்டு நம்பிகள்பாலும் அவரது, "வெம்புறு வேட்கை காணும் திருவிளையாட்டின் மேவி" (3500) முறுவல் செய்தருளினர்.

ஒன்றிய விளையாட்டு - ஒன்றிய அச்சிறுநகையினுட் பொருந்திய; இறைவர் மேற்கொண்ட என்றலுமாம்; "திருவிளையாட்டு" (3500).

உறுதிசெய்து - இசைவுபடுத்தி; "யாம் உனக்கோர் தூதனுகிப் - பரவைபாற் போகின்றேம்" (3483) என்று மேற்கொண்டு சென்ற காரியத்தை நிறைவேற்றி; ஆனால் முன்னர் இறைவர் பரவைபால் தூதனுகிப் போகின்றேம் என்றருளினுரேயன்றிப் புலவி நீக்கி முடிக்கின்றேம் என்றாரிலர்; மேல், அதுபோலன்றி, "இன்னம் அவள்பாற் போய்...இப்போதே நீ குறுகுமா கூறுகின்றேம்" (3510) என்று உறுதி கூறுவதும் காண்க.

ஆண்டு கொண்ட அதனுக்குத் தகவே செய்தீர் - ஆட்கொண்ட நன்மை போலவே உறுதி செய்த அருளும் செய்தீர் என்றபடி; **அதனுக்குத்தகவே** - அதற்கொத்தபடியே; **அன்று ஆண்டு கொண்ட** - என்றது திருவெண்ணெய் நல்லூரில் தடுத்தாட் கொண்ட

3506. அம்மொழி விளம்பு நம்பிக் கையர்தா மருளிச் செய்வார்
"நம்மைநீ சொல்ல நாம்போய்ப் பரவைதன் னில்ல நண்ணிக்
கொம்மைவெம் முலேயி ளுட்குன் **றிறமெலாங் கூறக்** கொள்ளாள்
வெம்மைதான் சொல்லி **நாமே வேண்டவு மறுத்தா**"ளென்ருர். 352

அருட் செயலைக் குறித்தது;அன்று வலிந்து திருவிளையாட்டால் அருளியது போலவே இன்றும் வலிந்து அருள நின்றீர் என்று இந்நிகழ்ச்சியின் உண்மைக் குறிப்புத் தருவதும் காண்க.

இன்று... எழுந்தருளி - நம்பிகள் தாமே தம்மனத்துட் செய்து கொண்ட முடிபு; 3502 - பார்க்க.

எழுந்தருளி - எழுந்தருளி அதனலே; **எழுந்தருளி - தகவே செய்தீர் -** என்று கூட்டுக.

351

3506. **(இ-ள்)** அம்மொழி... அருளிச் செய்வார் - அந்த மாற்றத்தினை விளம்பும் நம்பிகளுக்கு இறைவனர் தாம் அருளிச் செய்வாராய்; நம்மை நீ... கூற - நம்மிடம் நீ வேண்டிக் கொண்டபடியே நாம் சென்று பரவையினுடைய இல்லத்தினைச் சேர்ந்து பணைத்தெழுந்த விருப்பம் தருகின்ற தனங்களையுடைய அவளுக்கு உனது திறங்களை எல்லாம் எடுத்துச் சொல்லவும்; கொள்ளாள் - ஏற்றுக் கொள்ளாதவளாகி; வெம்மை தான் சொல்லி - விரும்பு மொழிகளையே சொல்லி; நாமே வேண்டவும் மறுத்தாள் என்ருர் - நாமே வேண்டிக் கொள்ளவும் கேளாது மறுத்து விட்டாள் என்று அருளிச் செய்தார்.

(வி-ரை) அம்மொழி - முன்பாட்டிற் கூறியபடி இறைவரது திருவிளையாட்டினை உணராது நம்பிகள் கூறிய நன்றிமொழி.

நம்மை - நம்பால்; உருபு மயக்கம்; **சொல்ல** - சொன்னபடி; சொன்னதனலே.

கொம்மை - பணைத்த; திரண்ட; **வெம்மை** - விருப்பம் விளைக்கின்ற சொற்கள்.

கொள்ளாள் - ஏற்றுக் கொள்ளாதவளாகி; முற்றெச்சம்; **கொள்ளாள் - சொல்லி - மறுத்தாள்** - என்று முடிக்க.

வெம்மைதான் சொல்லி நாமே வேண்டவும் - வெம்மை - விருப்பம் என்று கொண்டு, அவள் விரும்பத் தக்கனவாகிய இதமாகிய நல்ல வார்த்தைகளை எடுத்துச் சொல்லி நாமே வேண்டவும் என்று கூட்டியுரைக்க.

வெம்மைதான் சொல்லி மறுத்தாள் - கடிய மொழிகள் கூறி மறுத்தனள் என்று கூட்டியுரைக்கவும் நின்றது; முன் "கரும மீதாக நீரிக் கடைத்தலைவருகை மற்றும் பெருமைக்குத் தகுவ தன்ருல்...நீரும்போம்" (3499) என்றது. **தான்** - வெம்மை தானேயன்றி வேறில்லை.

நாமே வேண்டவும் - ஏகாரம் உயர்வு குறித்த பிரிநிலை; **வேண்டவும்** -உம்மை உயர்வு சிறப்பு; வேண்டிய தன்மை; "நுன்னையான் வேண்டிக் கொண்டதாதலின் மறுத்தல் செய்ய வடாது" (3498) என்று முன் கூறியது.

3507. அண்ணலா ரருளிச் செய்யக் கேட்டவா ரூரர் தாமுந்
துண்ணென நடுக்க முற்றே தொழுது "நீ ரருளிச் செய்த
வண்ணமு மடியா ளான பரவையே மறுப்பாள்? நாங்கள்
எண்ணலா ரடிமைக் கென்ப தின்றறி வித்தீ"ரென்று, 353

திறமெலாம் கூற - "நம்பி செய்த ஏதங்கள் மனத்துக் கொள்ளா தெய்திய வெகுளி நீங்கி, நோதக வொழித்தற்கு" *(3498)* என்றது. *352*

3507. **(இ-ள்)** அண்ணலார்... தொழுது - முன் கூறியவாறு இறைவனுர் அருளிச் செய்ததனைக் கேட்ட நம்பியாரூரரும் துண்ணென்று நடுக்கமுற்று அவரை வணங்கி; நீர்... மறுப்பாள் - தேவரீர் அருளிச் செய்த தன்மையினையும் உமது அடியாளாகிய பரவையே மறுக்கவல்லவள்?; நாங்கள்... என்று - நாங்கள் அடிமைத் திறத்தின் வைத்து எண்ணுதற்கு உரியரல்லோம் என்பதனை இன்று அறியச் செய்தீர் என்று கூறி,

(வி-ரை) துண்ணென நடுக்க மெய்தி - உறுதி செய்தணைந்தா ரென்றேகொண்டு எய்திய முன்கூறிய மகிழ்ச்சியெல்லாம் உடனே மாறி அதி விரைவில் மெய்ந் நடுக்கமுற்று.

நீர்... மறுப்பாள் - தலைவராகிய நீர் சொன்ன கட்டளையை அடியாளாகிய பரவையோ மறுக்க வல்லவள்? ஏகார வினு வல்லளல்லள் என்று எதிர் மறை குறித்தது; **வண்ணமும்** - வண்ணத்தினையும்; "வண்ணமும் வடிவும்" (திருஞா.தேவா); **வண்ணம்** - கட்டளை; பொருள்; உம்மை உயர்வு சிறப்பு.

நாங்கள்... என்பது - எண்ணலார் - எண்ணப்படாதவர்; எண்ணத்தில் வரத்தகாதவர்; **அடிமைக்கு** - அடிமைக்காக; அடிமையின் பொருட்டு; **நாங்கள்** - பரவையாரையும் உளப்படுத்திய பன்மை; பரவையாரை உளப்படுத்திய தென்னை? எனின், "என்னைத் தன்னடி யானென் றறிதலுந், தன்னை நானும் பிரானென் றறிந்தேனே" (குறுந்) என்றவாறு, பரவையார் மறுத்தற்குக் காரணம்பிரானென் றறியாமை; அவ்வறியாமைக்குக் காரணம் இறைவர் அவளைத் தன் அடியாளென் றறியாமை என்பார் "**எண்ணலார் அடிமைக்கு**" என்றூர்; அவளை அடிமை என்று எண்ணுமையால் இசைவித்தல் செய்யாமையாலும், தமது கருத்து முற்றுவித்தல் செய்யாமையின் தம்மையும் அடியானென் றறியாமை புலப்படுதலானும் **நாங்கள் அடிமைக்கு** எண்ணலார் என்று உளப்படுத்திக் கூறினுர்; புலவி நீக்கிச் சேர்த்தல் இருபாலும் சாரும் செயலாதலின் "**நாங்கள்**" என்றூர் என்றலுமாம். புலவியினுல் பிரியினும் அன்பாற் பிரியாமையின் உளப்படுத்தியவாறுமாம்.

என்பது - என்பதனை; இரண்டனுருபு தொக்கது.

இன்று அறிவித்தீர் - இதுவரையும் நாங்கள் அடியோம் என்றெண்ணியிருந்தது தவறு என்பதனை இன்று அறியும்படி செய்தீர்; அன்புரிமை காரணமாகத் தலைவரிடம் பிணங்கிக் கூறும் மொழி; மேல் வரும் பாட்டில் "நான் மிகை உமக்கின்றூனல்" *(3508)* என்றதும், அதன்மேல் "இன்று என் அடிமை நீர்வேண்டாவிட்டால் *(3509)* என்றதும் இக்கருத்து.

3508. வானவ ருய்ய வேண்டி மறிகட னஞ்சை யுண்டீர்
தானவர் புரங்கள் வேவ மூவரைத் தவிர்த்தாட் கொண்டீர்
நான்மறைச் சிறுவர்க் காகக் காலனைக் காய்ந்து நட்டீர்
யான்மிகை யுமக்கின் றுனு லென்செய்வீர் போதா? தென்றுர். 354

என்று - என்றுர் என வரும்பாட்டுடன் முடிக்க.

எண்ண ஆர் அடிமைக்கு என்பது பாடமாயின் அடிமையாக எண்ணுதற்கு நான் ஆர்? - என்ன பொருத்த முடையேன்? - என்க;"யானு ரென்னுடைய யடிமை தானியாதே" (திருவிசைப்பா). *353*

3508. **(இ-ள்)** வானவர்... உண்டீர் - தேவர்கள் உய்யும் பொருட்டு அலை கடலில் எழுந்த பெருவிடத்தினை உண்டீர்; தானவர்... ஆட்கொண்டீர் - அசுரர்களின் முப்புரங்களும் எரிந்து போக அவற்றுள் இருந்த அடியவர்களான மூவர்களை மட்டும் வேவாது தவிர்த்து ஆட்கொண்டீர்; நான்மறை... நட்டீர் - நான்மறை வல்ல சிறுவராகிய மார்க்கண்டேயரைக் காக்கும் பொருட்டுக் கூற்றுவனை உதைத்து (அவ்வந்தணனை) அடிமை கொண்டீர்; நான்மிகை... என்றுர் - இத் தன்மையுடைய பெருங்கருணையாளராகிய உமக்கு நான் இன்று மிகையானுல் மீண்டு வாராது வேறென் செய்வீர்? என்றுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

3508. **(வி-ரை) நஞ்சையுண்டீர் - ஆட்கொண்டீர் - காய்ந்து நட்டீர்** - என்ற மூன்று தாரணங்களும் இறைவரது கருணைப் பெருக்கினை விளக்கி அவர் அடியாரைக் காக்கும் தன்மையை எடுத்துக் காட்டின; இத்தன்மையுடைய நீர் என்னைக் காவா தொழியின் உமக்கு யான் மிகை என்றதே உமது துணிபு என்று கூறி நொந்து கொண்டவாறு. சிலரேயாயினும் பலரேயாயினும் செய்யும் கருணைப் பெருக்குடையீர்.

மூவர் - திரிபுரங்களில் இருந்த அடியார்களான மூன்று அசுரர்கள்; பரமவிரதன், பரமயோகன், பரமகுணன் என்பவர்; வேறு பெயர்களு முரைப்பர். **தவிர்த்து** - வேவாமல் தடுத்து;"மூவெயில் செற்ற ஞான்றுய்ந்த மூவரில்" (தேவா - நம்பி); "மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள்செய்தார்" (ஞான.தேவா).

நான் மறைச்சிறுவர் - மார்க்கண்டேயர்.

காய்ந்து நட்டீர் - காய்ந்து கருணை செய்தீர்.

மிகை - வேண்டத் தகாதவன்; வெறுத்துத் தள்ளப்பட்டவன்.

போதாது என் செய்வீர் - வாளா திரும்பி வராமல் வேறு என்ன செய்வீர்; **போதாது** - திரும்பிவராது; **இன்று உமக்கு நான் மிகையானுல்** என்க; **இன்று** - முன் வலிந்தும் ஆட்கொள்ளவேண்டி நின்ற யானே இன்று உமக்கு மிகையானேன் என்ற குறிப்பு; மேல் "அன்று வலிய ஆட்கொண்ட பற்றென்?" (*3509*) என்பதும் காண்க.

3509. "ஆவதே செய்தீ **ரின்றென் னடிமைநீர் வேண்டா விட்டால்**
பாவியேன் றன்னை **யன்று வலியவாட் கொண்ட பற்றென்?**
நோவுமென் னழிவுங் கண்டீர் நுடங்கிடை யவள்பா **லின்று**
மேவுதல் செய்யீ ராகில்விடுமுயி" ரென்று வீழ்ந்தார். 355

மூவரைத் தடுத்தாட் கொண்டீர்—என்பதும் பாடம். *354*

3509. **(இ-ள்)** ஆவதே செய்தீர் - தகுதியாவதே செய்தீர்; இன்று...பற்று என்? - இன்று எனது அடிமையைத் தேவரீர் விரும்பாவிட்டால் அடிமைக்கு எண்ணவாராத பாவியேனுகிய என்னை அன்று நான் மறுப்பவும் திருவெண்ணெய் நல்லூரில் வைத்து வலிய ஆளாக்கொண்ட பற்று எதற்காக; நோவும்... கண்டீர் - எனது வருத்தத்தினையும் மனம் நைதலையும் கண்டுள்ளீர்; நுடங்கு... உயிர் என்று - துவளும் இடையினையுடைய பரவையிடத்தில் இன்றே நான் சென்று சேரும்படி செய்யீராகில் உயிர்விடும் என்று சொல்லி; வீழ்ந்தார் - திருவடியில் வீழ்ந்தனர்.

(வி-ரை) ஆவதே செய்தீர் - வருத்தமிகுதியால் எதிர்மறைப் பொருட் குறிப்புடன் வந்த இகழ்ச்சிக் குறிப்பு வழக்கு.

இன்று வேண்டா விட்டால் - அன்று வலிய ஆட்கொண்ட பற்று என்? - அன்று வலிந்து ஈர்த்து ஆட்கொண்ட நீர் இன்று ஆளாக எண்ணுது கைவிடுதல் நீதியன்று என்பது; **நீதியன்று** என்பது குறிப்பெச்சம்.

நோவும் என் அறிவும் - நோ - வருத்தம்; **அழிவு-** அது காரணமாக வருவது; **கண்டீர்-** கண்கூடாக நேரில் அறிந்துள்ளீர்.

மேவுதல் செய்யீ ராகில் - மேவுதல் - நான் மேவும்படி; மேவுவித்தலை செய்தல் - நிலையினை உளதாக்குதல்; **இன்று** - இன்றே; ஏகாரம் தொக்கது.

உயிர்விடும் - என்க; முன்பின்னுக வந்தது விரைவுக் குறிப்பு; விடுப்பேன் என்னுது **விடும்** - என்றது எனது முயற்சியின்றி உயிர் தானே நீங்கிவிடும் என்றதாம்.

வீழ்ந்தார் - நிற்கலாற்ருது தளர்ந்து அவர் திருவடியில் வீழ்ந்தனர். வரும் பாட்டைப் பார்க்க.

என்றன் அடிமை — இன்னம் மேவுதல் — என்பனவும் பாடங்கள். *355*

3510. **(இ-ள்)** தம்பிரான்...நோக்கி - தம்பிரானுர் அதனைக் கண்டு அவ்வாறு தரிக்கலாற்ருது தளர்ச்சியினுல் தம் அடிக்கீழ் வீழ்ந்த நம்பிகளை அருளாலே நோக்கி; "நாம்... நீங்கு" என்ருர் - நாம் மீண்டும் ஒருமுறை அவளிடம் தூதுபோய் அந்தக் கொம்பு போன்ற பரவையை நீ இப்போதே சென்று அடையும்படி சொல்கின்ருேம்; உன்னை வருத்துகின்ற துன்பத்தினை நீங்குவாயாக! என்றருளினர்; வினையெலாம் விளைக்க வல்லார் - வினைப்பயன்களை யெல்லாம் அவ்வவ்வுயிர்கள்பாற் கூட்டுவிக்க வல்ல எம்பெருமானுர்.

3510. தம்பிரா னதனைக் கண்டு தரியாது தளர்ந்து வீழ்ந்த
நம்பியை யருளா னேக்கி, "நாமின்ன மவள்பாற் போயக்
கொம்பினை யிப்போ தேநீ குறுகுமா கூறு கின்றேம்
வெம்புறு துயர்நீங்" கென்ருர் **வினையெலாம் விளைக்க வல்லார்.** 356

3511. மயங்கிய நண்ப **ருய்ய வாக்கெனு மதுர வாய்மை**
நயங்கிள ரமுத நல்க நாவலூர் மன்னர் தாமும்
"உயங்கிய கலக்க நீக்கி யும்மடித் தொழும்ப னேனைப்
பயங்கெடுத் திவ்வா றன்றே பணிகொள்வ" தென்றுபோற்ற, 357

(வி-ரை) தரியாது... நம்பி - முன்பாட்டில் "வீழ்ந்தார்" என்றதனை விளக்கியவாறு.

அருளால் நோக்கி - அருட்பார்வை செய்து; அஃது இடர்நீக்கி உய்விக்கும் பார்வை.

இன்னம் - மேலும் ஒருமுறை; **குறுகுமா** - குறுகும்படி; **ஆறு** என்பது ஈறு தொக்கு **ஆ** என நின்றது.

வெம்புறு துயர்- உள் வெதும்புதலினுல் உளதாகும் துன்பம்.

வினை எலாம் விளைக்க வல்லார் - முன்னர் "வெம்புறு வேட்கை காணும் திருவிளையாட்டின் மேவி" (3500) என்றதனுள் **விளையாட்டாவது அவ்வவரும் தத்தம் வினைப்பயன்களை அவ்வவரே துய்க்கும்படி செய்து பார்த்திருத்தல்;** அரனது விளையாட்டாவது வினையை விளைவித்தலே -அனுபவிக்கச் செய்து பார்த்திருத்தலே - யாம் என்பது. "வல்லார்கள் வல்ல வகையாற் றொழில் புரித, லெல்லா முடனே யொருங்கிசைந்து - செல்காலே; முட்டாமற் செய்வினைக்கு முற் செய்வினைக்குஞ் செலவு, பட்டோலே தீட்டும் படிபோற்றி...அல்ல லுறுத்து மருநரகங் கண்டுநிற்க. வல்ல கருணை மறம்போற்றி— பல்லுயிர்க்கும்; இன்ன வகையா லிருவினைக்க ணின்றருத்தி, முன்னைமுத லென்ன முதலில்லோ—னல்வினைக்கண்; எல்லா வுலகு மெடுப்புண் டெடுப்புண்டு, செல்காலம் பின்னரகஞ் சேராமே,-நல்லநெறி; யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல், உய்யு நெறிசிறிதே யுண்டாக்கி..." (போற்றிப்பஃறொடை) என்றற் றொடக்கத்த திருவாக்குக்கள் காண்க. இறைவர் வினையெலாம் விளைக்கும் தன்மைபற்றி மேலும் மெய் கண்ட ஞானநூல்களுட் கண்டுகொள்க.

வினை...வல்லார் -முன்முறை செயல் முற்றுப்பெருமையின் காரணக் குறிப்பு.

கூடுமா கூறுகின்றேம்—என்பதும் பாடம். 356

3511. **(இ-ள்)** மயங்கிய... நல்க - தெளிவுறுது மயக்கமுற்ற நண்பராகிய நம்பிகள் உய்யும் பொருட்டுத் தமது திருவாக்காகிய இனிமையும் உண்மையும் இன்பமும் பொருந்திய அமுதத்தினை இவ்வாறு அருளியிட; நாவலூர் மன்னர் தாமும் - திருநாவலூரர் பெருமானுகிய நம்பிகளும்; உயங்கிய...என்று போற்ற - வருத்தம் விளைத்த கலக்கத்தினை நீக்கி உம் திருவடித் தொண்டனுகிய என்னை அச்சம் கெடுத்து இப்படி யன்றே தொண்டு கொள்வது! என்று துதிக்க.

3512. அன்பர் மேற் கருணை கூர வாண்டவர் மீண்டுஞ் செல்லப்
பின்புசென் றிறைஞ்சி நம்பி பேதுற லோடு மீண்டார்;
முன்புடன் போதா தாரு முறைமையிற் சேவித் தேகப்
பொன்புரி சடையார் **மாதர் புனித மாளிகையிற் சென்றார்.** 358

(வி-ரை) மயங்குதல் - சித்தம் துணிவு பெறாமை; கலக்கம்.

அமுதம் - தரியாது தளர்ந்து வீழ்ந்த சோர்வு தீர்ந்து உய்ய வருதலின் **அமுதம்** என்றார்.

வாய்மை - மெய்த் திருவாக்கெனு மமுதம்; முன்னர்க் (3483) கூறியதும் வாய்மையே; "உனக்கோர் தூதனாகி யிப்பொழுதே...பரவைபாற் போகின்றோம்" (3483) என்று தூதனாய்ச் செல்கின்ற அளவே அங்குக் கூறினாராதலின்; இங்கு "இப்போதே நீ குறுகுமா கூறுகின்றோம்" என்ற நிலையினுடன் ஒத்துப் பார்க்க; இக்கருத்தேபற்றி ஈண்டு "**வாய்மை நலங்கிள ரமுதம்**" என்றார்; "போதியோ வென்னு மன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (2986); முன்னே கூறியது திருவிளையாட்டின் பொருட்டாதலின், இங்கே இம்முறை "வாய்மை" என்றார் என்று ஈண்டு முன் கூறியது வாய்மை யன்று என்னும் குறிப்புப்பட விசேடவுரை காண்பாருமுண்டு; முன்காட்டியவாற்றால் அது பொருளன்மை கண்டு கொள்க.

உயங்கிய - வாடிய; **உயங்குதல்** - வாடுதல்.

அடித் தொழும்பனேனைப் பயங்கெடுத்துப் - பணி கொள்வது - "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்" என்றபடி தொண்டனைக் காப்பது தலைவர் கடன் என்பது குறிப்பு.

இவ்வாறன்றே பணிகொள்வது - தம் கருத்து நிறைவேறிற் றென்று நம்பிகள் துதித்த வகை. 357

3512. **(இ-ள்)** அன்பர்... செல்ல - அன்பர்பாற் கருணை பெருக இறைவனார் இவ்வாறு மீளவும் செல்வாராக; பின்பு சென்று...மீண்டார் - அவர் பின்னே சிறிது தூரம் சென்று வணங்கி நம்பிகள் மயக்கத்தோடு மீண்டனர்; முன்பு...ஏக - முன் முறையிலே உடன் செல்லாதவர்களும் முறைமைப்படி சேவித்துப் பின்செல்ல; பொன்புரி...சென்றார் - பொன்போன்று ஒளிவிளங்குகின்ற புரித்த சடையினையுடைய இறைவரும் பரவையாரது தூய திருமாளிகையிற் சென்றருளினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) கருணைகூரச் செல்ல - என்க. **கூர** - கூர்தலினால்.

பின்பு சென்று இறைஞ்சி - வழிச்செல விடுப்பாரைச் சிறிது தூரம் (7 அடி அளவு என்ப) பின் சென்று வழி விடுவித்து விடைகொள்ளும் மரபு குறித்தது.

பேதுறவோடும் - மயக்கத்துடனே; **பேதுறவு** - இன்னதென்று துணியமாட்டாத துன்பநிலை.

முன்புடன் போதாதாரும் - முன்னர், "வேண்டுவார் போத, ஒழிந்தார் புறத்தொழிய" (3486) என்றபடி முன்பு உடன் தொடர்ந்து செல்வதாகும்.

3513. மதிநுதற் பரவை யார்தா மறையவர் போன பின்பு
முதுமறை முனியாய் வந்தா ரருளுடை முதல்வ ராகும்
அதிசயம் பலவுந் தோன்ற வறிவுற்றே யஞ்சிக் "**கெட்டேன்!;**
எதிர்மொழி யெம்பி ரான்மு னென்செய மறுத்தே!" னென்பார். 359

முறைமையில் சேவித்து - முறைமையாவது அவ்வவர்க்கேற்ற நிலே. அருச்சகர் கோலங்கொண்டு சென்ற முன்போலன்றி, ஈண்டு இறைவர் "தாமாந்தன்மை அறிவுறு கோலத்தோடு" (3515) செல்கின்ருராதலின் அம்முறைமைக் கேற்றவாறு என்றலுமாம்; இவர்களே மேற் குறிப்பது (3515—3516) காண்க.

புனித மாளிகை - ஒருமுறைக் கிருமுறை இறைவர் எழுந்தருளும் பேறு பெறுதலின் **புனிதம்** என்ருர். இதனேயே வெள்ளித் திருமலே (3516) என்பது காண்க. முன்னர்த் தொடக்கத்தில் அவதாரஞ்செய் மாளிகை (90) என்ருர்.

மாளிகையிற் சென்ருர் - முன்பு சென்ற செலவினே எட்டுத் திருப்பாட்டுக்களாற் (3485-3492) கூறிய ஆசிரியர், ஈண்டு இவ்வொருபாட்டின் ஒரு பகுதியில் முடித்தருளினர், நம்பிகளுக்கருளும் விரைவு குறித்தற்கு. 358

3513. **(இ-ள்)** மதிநுதல்...பின்பு - மதிபோன்ற நெற்றியினே உடைய பரவையார் மறையவராய் வந்தவர் சென்ற பின்னர்; முதுமறை...அறிவுற்றே - முதிய மறைமுனிவர் கோலத்துடன் வந்த அவர் அருளுடைய இறைவரேயாம் என்ற நிலே தோற்றும் அதிசயம் பலவும் தோன்ற அறிந்து; அஞ்சி...என்பார் - அச்சங்கொண்டு "கெட்டேன்! எம் பெருமான் திருமுன்பு எதிராக மொழி தந்து என்ன செய்ய மறுத்தொழிந்தேன்" என்று வருந்துவாராய்,

(வி-ரை) மதிநுதல் - மதியுடைய நுதல் என்று கொண்டு மதியுடைமையினுலே தோன்ற என்றும் குறிப்பும் தரநின்றது. "**மதியினுலே** சென்னியிளம் பிறையணிவார் கோயில் வாயிற் றிசைநோக்கிக் கைதொழுதாள்" (2373); முன்னர்ப் "பரமராவ தறியாதே பாதி மதிவா ணுதலாரும்" (3493) என்றதனே இதனுடன் ஒப்பிட்டுக் கவிநயங் கண்டுகொள்க.

அருமறை முனியாய் வந்தார் - அர்ச்சகராகிய கோலத்துடன் வந்தவர்; "பண்டே தம்மை யர்ச்சிக்கும் சீலமுடைய மறைமுனிவராகி" (3491); "முப்போது மர்ச்சிப்பார் முதற்சைவ **ராமுனிவர்**" (முப் - தீண் - புரா-1); **ஆய்** - ஆக்கச் சொல் அக்கோலந் தாங்கி என்ற பொருள் தந்து நின்றது.

ஆளுடைய முதல்வராகும் அதிசயம் - ஆகும் - என்று காணுதற் கேதுவாகிய என்ற பொருள் தந்தது. **அதிசயம் பல** - அவரது கோலமும், ஒழுக்கமும், வந்த நேரமும், பேசிய சொல்நிலேயும், ஒளியும் முதலியவை; புட்ப வருஷம் பொழிதல் முதலியவை என்றுரைப்பாரு முண்டு; அது பொருளன்றென்க; இவ்வாறு இறைவர் தம்மையறியக் காட்டாது வெளிப்படும் போதெல்லாம் அவ்வக்கோலங்கள் மறைந்த பின்னரே அறிய வைக்கும் சரிதங்களே ஈண்டு நினைவு கூர்க. "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தேவா); **அருளுடைய** - வந்ததன் காரணம் கூறியபடி.

3514. கண்டுயி லெய்தார் வெய்ய கையற வெய்தி "யீங்கின்
றண்டர்தம் **பிரானுர் தோழர்க் காகவர்ச் சிப்பார் கோலங்**
கொண்டணைந் தவரை யானுட் கொண்டிலேன் பாவியே" னென்
றெண்சுடர் வாயி லேபார்த் துழையரோ டழியும் போதில், 360

கெட்டேன் - தமது பெருந்தவறு கண்டபோது வருத்த மிகுதிக்கண் வருவதோரிடைச்சொல்.

என் செய மறுத்தேன்? - ஏன் மறுத்தேன்; இறைவர் அருளிய மொழியைக் கேட்டு அதன்படி ஒழுகலன்றி வேறு என்ன செயல்தான் எனக்குண்டு என்பது.

என்பார் - என்று பார்த்து - அழியும் **போதில்** - என வரும்பாட்டுடன் முடிக்க. **என்பார்** - என்பாராகி; முற்றெச்சம்.

முதிர்மறை—ஆளுடைய முதல்வர்—என்பனவும் பாடங்கள் 359

3514. **(இ-ள்)** கண்...எய்தி - கண்ணுறக்கம் கொள்ளாதவராகி வெவ்விய செயலிழந்த வருத்தம் கொண்டு; ஈங்கு...பாவியேன் என்று - இங்கு இன்று தேவர்கள் பெருமனுர் தாமே தம் தோழராகிய நம்பிக்காக அருச்சகர் கோலந்தாங்கி வந்தணைந்தவரை நான் இன்னுரென்று தெளியாதேன் பாவியானேன் என்று இரங்கி; ஒண்...போதில் - ஒள்ளிய விளக்கமுடைய வாயிலினை நோக்கியவாறே பாங்கிமாருடனே மனமழிந்து வருந்தும் போதில்;

(வி-ரை) கையறவு - செயலிழந்த நிலையின் வரும் துன்பம்.

ஈங்கு உட்கொண்டிலேன் பாவியேன் - முன் பாட்டில் வந்தவர் முதல்வராகும் தன்மை அதிசயங்களால் அறிவுற்று அஞ்சிய நிலை கூறினுர். இப்பாட்டால் அவர் அவ்வாறு வருதற்குரிய ஏதுவினை மேலும் கருதி யுணர்ந்தமை கூறினுர். **பிரானுர் - அணைந்தவரை** - பிரானுர் அணைந்தார்; அவரை என்க; **உட்கொள்ளுதல்** மனத்துள் ஆய்ந்துணர்ந்து அதற்குத் தக ஒழுகுதல் என்ற பொருளில் வந்தது.

பாவியேன் - பாவியேனுதலின் என்று தம்மைத் தாமே நொந்துகொண்டு வருந்தியது; பாவித்திலேன் என்றுரைத்தலுமாம்.

சுடர் வாயிலே பார்த்து - இறைவரைப் புலவி மிகுதியினுலே "நீரும் போம்" என்று மறுத்துப் போக்கியபின் மன அமைதியின்றிய கலக்கத்தால் வாயிலைச் செறிய அடைத்தலின்றி யிருந்தனராதலின் அதனைப் பார்த்து என்க. இவ்வாயில் வழியே முன் வந்தனர்; இன்னும் வருவரே என்ற மனங்கலங்கிய நிலையினுல் வாயிலே பார்த்தழிந்தனர்; இது (உயர்ந்த) தன்மை நவிற்சியணி. **வாயில்** தூது என்றலுமாம்.

உழையர் - பக்கத்திலிருப்போர்; தோழியர்கள்.

அவர்களோடு அழிதலாவது அவர்களும் தம் தலைவியாரது நோயிற்கலந்து அனுபவித்தனர் என்பது.

3515. வெறியுறு கொன்றை வேணி விமலருந் **தாமாந் தன்மை**
அறிவுறு கோலத் தோடு மளவில்பல் பூத நாதர்
செறிவுறு தேவர் யோகர் முனிவர்கள் சூழ்ந்து செல்ல
மறுவில்சீர்ப் பரவை யார்தம் மாளிகை புகுந்தார் வந்து. 361

இன்றிங் கண்டர்—என்பதும் பாடம், *360*

3515. **(இ-ள்)** வெறி...விமலரும் - மணம்மிக்க கொன்றையைச் சூடிய சடையினை உடைய இறைவரும்; தாமாந் தன்மை அறிவுறு கோலத்தோடும் - இறைவர் என்று கண்டார் அறியும்படி வெளிக்காணும் திருக்கோலத்துடனே; அளவில்...செல்ல - அளவற்ற பல பூதகண நாதர்களும் நெருங்கிய தேவர்களும் யோகர்களும் முனிவர்களும் தம்மைச் சூழ்ந்து செல்ல; மறுவில்...வந்து - குற்ற மற்ற சிறப்பினையுடைய பரவையாரது திருமாளிகையின்கண் வந்து புகுந்தருளினர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தாமாந்தன்மை அறிவுறு கோலம் - முன் தம்மைக் கண்டோர் அறிவுறுதபடி அருச்சகர் கோலம் கொண்டணைந்து போலன்றி, இப்போது இறைவர்தாம் என்று அறியும் படியுள்ள கோலம். அவை, பேரொளி, சடைமுடி முதலிய தம் அடையாளங்கள்; பூதநாதர் முதலியோர் சூழ்தல் முதலாயின.

பூதநாதர் - சிவபூத கணநாதர்கள்; **யோகர்** - யோகத்தாற் சிவனை விடாது உட்கொண்டோர்.

வந்து மாளிகை புகுந்தார் - என்க; வினைமுற்று முன் வந்தது விரைவுக் குறிப்பு; **வந்து** (நேரே) **மாளிகை புகுந்தார்** - என்றமையால் வாயில் அடைப்பின்றி நின்றமை குறிக்கப்பட்டது. "மணிவாயிற் கதவஞ் செறிய வடைத்தவதன் முன்பு நின்று பாவாய் திறவாயென்றழைப்ப" (*3492*) என முன்னர்க் கூறியது கருதுக.

செறிவுறு தேவர் - அனேகராதலின் செறிவுறு என்றார்; **செறிதல்** - நெருங்குதல்.

மறுவில் சீர் - உத்தம குணங்களின் வழுவின்மையும், அதனாலாய சிறப்பும். முன்னர்அறியாது "நீரும் போம்" உமது பெருமைக்குத் தகுதியன்று" என்றவாறெல்லாம் கடிந்து மறுத்தவை அவர்பாற் குற்றமாகாமையும், அதனாலே இறைவர் மீளவும் எழுந்தருளக் காரணமாயின சிறப்பும் குறிப்பாலுணர்த்தியவாறு.

பரவையார் தம் மாளிகை - பரவையார் திருமாளிகையே தமது மாளிகையாக் கொண்டார் என்பது **தம்** என்றதன் குறிப்பு. இதனால் வரும் பாட்டிற்குத் தோற்றுவாய் செய்தவாறும் காண்க. *361*

3516. **(இ-ள்)** பாரிடத்தலைவர்...நிறைதலாலே - பூத கணநாதர்கள் முதலாகப் பலவகைப்பட்ட கணநாதர்களும் தேவர்களும் நேர்மை பொருந்திய முனிவர்களும் சித்தர்களும் இயக்கர்களும் நிறைந்தமையாலே; பேரருளாளர்...மாளிகைதான் -

3516. பாரிடத் தலைவர் முன்னும் பல்கண நாதர் தேவர்
நேர்வுறு முனிவர் சித்த ரியக்கர்க ணிறைத லாலே
பேரரு ளாள ரெய்தப் பெற்றமா ளிகைதான் றென்பாற்
சீர்வளர் கயிலை வெள்ளித் திருமலை போன்ற தன்றே. 362

3517. ஐயரங் கணைந்த போதி லகிலலோ கத்துள் ளாரும்
எய்தியே செறிந்து சூழ வெதிர்கொண்ட பரவை யார்தாம்
மெய்யுறு **நடுக்கத் தோடு மிக்கெழு மகிழ்ச்சி பொங்கச்**
செய்யதா ளிணைமுன் சேர விரைவினுற் சென்று வீழ்ந்தார். 363

பெருங்கருணையாளராகிய சிவபெருமான் எழுந்தருளி வரும் பேறுபெற்ற அத்திரு மாளிகை தானே; தென்பால்...அன்றே - தென்றிசையிலே சிறப்புமிக்க கயிலையினைத் தன்னகத்துக் கொண்ட வெள்ளித் திருமலை போன்றது அப்பொழுதே.

(வி-ரை) பாரிடம் - பூதம்; பேய்; இங்குச் சிவபூதங்களைக் குறித்தது; "பேயாய, நற்கணத்தி லொன்றாய நாம்" (அற் - அந்). **முன்னும்** - முதலாகிய; **பல்கணம்** - சிவ கணங்களின் பல வகைகள்.

நேர்வுறும் - நேர்வு - நேர்மை; அருள் - ஒழுக்கம்; ஒப்பு என்பாருமுண்டு.

நிறைதலாலே - திருமலை போன்றது - உவமைக்குக் காரணங் கூறியபடி; இவர்கள் நிறைதல் பற்றி முன்னர்த் திருமலைச் சிறப்பிற் கூறியமையும், (*14-21*); ஆளுடைய அரசுகளுக்கு இறைவர் திருவையாற்றிற் கயிலைக் காட்சி அருளிய இடத்துக் கூறியவையும் (*1639—1643*) பார்க்க.

பேரருளாளர் எய்தப் பெற்ற மாளிகைதான் - "நீரும்போம்" எனக் கடிந்து மறுத்த பின்னரும் பொறுத்து அருள்புரிய வந்தமையும், "ஒளிவளர் செய்யபாதம் வருந்தவோ ரிரவு மாறு, தளிவரு மன்பர்க் காக வங்கொடிங் குழல்வீ ராகி, எளிவந்து" போந்தமையும் குறிக்கப் **பேரருளாளர்** என்றார். பேரருளாள ராதலின் எனக் காரணக் குறிப்புடன் நின்றது; **தான்** - மாளிகை தானே என உறுதிப் பொருள் குறித்தது; **எய்தப்பெற்ற** - பூதர் முதலியோர் நிறைதலால் மட்டுமன்றிப் பேர் அருளாளர் எய்தப்பெற்றமையால் என்க.

தென்பால்...திருமலை - வடபால் உள்ள திருமலை போலத் தென்பாலில் உள்ள தொரு திருமலை.

கயிலை வெள்ளித் திருமலை - கயிலையைத் தன் முடியிலே கொண்ட வெள்ளிமலை. மாளிகை வெள்ளி மலையாகவும், அதனுள் இறைவர் போந்து நின்ற இடம் கயிலையாகவும் கொள்க. கயிலை என்னும் வெள்ளிமலை என்பார் முன் உரைகாரர்கள்; கயிலைமலை வெள்ளி மலையின் உயர்ந்த பல சிகரங்களுள் மிக வுயர்ந்த முடி; திருமலைச் சிறப்பிலுரைத்தவை பார்க்க.

அன்றே - அப்பொழுதே;அசையென் றுரைதுக்குவாரு முண்டு.

அன்பாற் சீர்வளர்—என்பதும் பாடம். ***362***

3518. அரியயற் கரியார் தாமு மாயிழை யாரை நோக்கி
"**உரிமையா லூர னேவ** மீளவு முன்பால் வந்தோம்;
முருகலர் குழலா யின்ன முன்புபோன் மருதே நின்பாற்
பிரிவுற வருந்து கின்ருன் வரப்பெற வேண்டு" மென்ருர். 364

3517. **(இ-ள்)** ஐயர்...சூழ - எல்லாவுலகங்களிலுள்ளவர்களும் பொருந்தி நெருங்கிச் சூழ இறைவர் அங்கு எழுந்தருளிய போது; எதிர்கொண்ட.... பொங்க - அவரை வரவேற்று எதிர்கொண்ட பரவையார் தாம் உடம்பில் பொருந்திய விதிர் விதிர்ப்புடனே மிக்கு மேலெழுகின்ற மகிழ்ச்சி மேன்மேற் பொங்க; செய்ய... வீழ்ந்தார் - அவர் செம்மையுடைய திருவடியிணையின் முன்பு பொருந்த விரைந்து சென்று வீழ்ந்தனர்.

(வி-ரை) சூழ அணைந்த போதில் - என்க; **சூழ** -சூழும்படி; **சூழ்தல்** - முன் உரைக்கப்பட்ட பாரிடத் தலைவர் முதலாயினரன்றி ஏனைய மக்கள் முதலாயினேரும், வந்து சூழ்தல் குறித்தது; முன் கூறியவர்கள் கயிலையில் இறைவருடன் இருக்கத்தக்கார்;இங்குக் கூறிய **அகில லோகத்துள்ளோர்** - அவ்வாறன்றி அன்று இறைவர் அத்திருமாளிகையில் யாவருங் காண எழுந்தருளியபோது கண்டு வந்து சூழும் பேறு மட்டில் பெற்ற இந்நிலவுலகம் முதலிய உலகத்தினர்கள்; **உள்ளாரும்** - உம்மை கயிலையில் இறைவருடன் உள்ள கணங்கள் முதலியவர்களுடன் கூடி இருக்கத் தகாத இவர்களும் என்று இழிவு சிறப்பு; இவர்களை இப்பாட்டில் வேறு பிரித்துக் கூறியது மிக்கருத்து **மெய்யுறு நடுக்கத்தோடும் மிக்கெழு மகிழ்ச்சி** - முன்னர் எதிர்மொழிந்து கடிந்து மறுத்துப் போக்கிய அபராதத்தின் பொருட்டு நடுங்கினர்; ஐயர் தம்மீது வைத்த பெருங் கருணையினல் மீள எழுந்தருளியதன் பொருட்டு மகிழ்ச்சி மிக்கெழுந்தது.

செய்ய தாளிணை - செம்மை செய்யும் திருவடிகள் - "கண்டு கொள்ளென்று காட்டிய, சேய மாமலர்ச் சேவடி" (திருவா - சென்னி-5)

வீழ்ந்தார் - வீழ்தல் - தமது முயற்சியின்றி அடியற்ற மரம் போல வீழ்தல் என்றது குறிப்பு. *363*

3518. **(இ-ள்)** அரியயற்கு... நோக்கி - மாலுக்கும் பிரமனுக்கும் அறிதற்கரியவராகிய இறைவரும் பரவையாரை நோக்கி; உரிமையால்... வந்தோம் - தோழன் என்ற உரிமையினலே, நம்பியாரூரன் ஏவ மீண்டும் உன்னிடம் இப்போது வந்தோம்; முருகலர்... வேண்டும் - மணம் வீசுகின்ற கூந்தலையுடைய பரவையே! முன்புபோல மறுக்காதபடி உன்னைப் பிரிந்தமையால் வருந்துகின்ருனகிய நம்பி உன்பால் வரப்பெறுதல் வேண்டும்; என்ருர் - என்று அருள்செய்தார்.

(வி-ரை) அரி அயற்கு அரியார்- அரிக்கும் அயனுக்கும் அறிவரியார்; அவர்களுக் கரியாராயினும் அடியவர்க் கெளிவந்தவர் என்பது குறிப்பு.

ஆயிழையார்- ஆய்ந்த அணிகளை அணிந்தவர்; **ஆய்தல்** - நுணுக்கம்; **இழை** - நூல், எனக்கொண்டு நுணுகிய நூல்களை ஆராய்ந்த மதிநுட்பமுடையார் என்ற குறிப்புப்பட உரைக்கவும் நின்றது. "ஆயிழையாய்" (போதம் 7-சூத் 3-அதி. வெண்பா)

3519. பெருந்தடங் கண்ணி ஞரும் பிரான் முன்பு மிகவு மஞ்சி
வருந்திய வுள்ளத் தோடு மலர்க்கரங் குழன்மேற் கொண்டே
“அருந்திரு மறையோ ராகி யணைந்தீர்முன் னடியேன் செய்த
இருந்தவப் பயனு மென்ன **வெய்திய நீரோ?** வென்பார், 365

என்றவிடத்து மாதவச் சிவஞான முனிவர் சிற்றுரையில் உரைத்தவை பார்க்க. “மதிநுதற் பரவையாரும்” (3573) என்று முன் உரைத்த குறிப்பும் காண்க.

உரிமையால் ஊரன் ஏவ - உரிமை - தம்பிரான் றோழர் என்ற உரிமை; பாங்கற் கூட்டம் என்ற அகப்பொருட் பகுதிகளை ஒப்பு நோக்குக. **ஊரன்** - நம்பியாரூரன்; **ஏவ** - ஏவியதனால்; தமது எளிவரும் தன்மை குறித்தபடி.

மீளவும் உன்பால் வந்தோம் - “நீரும்போம்” (3499) என மறுத்துப் போக்கிய பின்னும் உன்பால் வருதல் தகுதி யன்றாயினும் முன் வந்தது போலவே மீளவும் வந்தோம் என உம்மை இறந்தது தழுவியது; **ஏவ** - அவ்வாறு வந்ததற்குக் காரணம் கூறியபடி; **உன்பால்** - உன் தகுதியும் நோக்கி என்ற குறிப்பும் தருவது.

முருகலர் குழலாய்! - இயற்கை மணமுடைய கூந்தல் என்றது; பெண்களில் உத்தம விலக்கண முடையார்க்கு இயைவது; “அரிவை கூந்தலி னறியவு முளவோ நீ யறியும் பூவே” (குறுந்); இதனால் குணமேன்மையும் குறித்தபடி; முன்புபோல் மறாது இசைவதற்குரிய தகுதி குறித்தவாறும்.

முன்புபோல் மறாதே - இதனாலும், **மீளவும் வந்தோம்** என்றதனாலும், முன்னர் வந்தவர் தாமேயாம் என்று குறிப்பா லுணர்த்தியவாறு; மேல் இக்கருத்துணர்ந்தே **“முன் எய்திய நீரோ?”** (3519) என்று பரவையார் வினவியதும் காண்க.

பிரிவுற வருந்துகின்றான் - பிரிவு உற - பிரிவு என்னும் நிலை உற்றதனாலே என்று காரணப் பொருளில் வந்தது; பிரிவுற்றமையால்; **நின்பாற் பிரிவுற** என்றும், **நின்பால் வரப்பெற வேண்டும்** என்றும் ஈரிடத்தும் கூட்டியுரைக்க வைத்த நயம் காண்க. **“அணியிழை,** தன்னோய்க்குத் தானே மருந்து” (குறள்) என்ற உண்மை புலப்பட வைத்த கவிநயமும் கண்டுகளிக்க.

வரப்பெற வேண்டும் - வரப்பெறுதலை நீ இசைதல் வேண்டும் என்க; **பெற** - பெறுதலின் இசைவு.

வருந்துகின்றான்—வருந்துகின்றானாகிய நம்பி என வினைப்பெயர். *364*

3519. **(இ-ள்)** பெருந்தடம் கண்ணினாரும்... கொண்டே - பெரிய விசாலமாகிய கண்களையுடைய பரவையாரும் இறைவர் முன்பு மிகவும் அச்சங்கொண்டு வருத்தம் பொருந்திய வுள்ளத்துடனே மலர் போன்ற கைகளைக் கூந்தலின் மேலே கூப்பிக்கொண்டே; அடியேன் செய்த... நீரோ - அடியேன் முன்னையிற் செய்த பெரிய தவத்தின் பயன் போல இப்பொழுது எழுந்தருளிய தேவரீரோ?; முன் - முன்பு; அருந்திரு... அணைந்தீர் - அரிய திருமறை முனிவராகிய அருச்சகர் கோலத்துடன் எழுந்தருளினீர்?; என்பார் - என்று சொல்வாராய்;

3520. துளிவளர் கண்ணீர் வாரத் தொழுதுவிண் ணப்பஞ் செய்வார்
**"ஒளிவளர் செய்ய பாதம் வருந்தவோ ரிரவு மாறு
தளிவரு மன்பர்க் காக வங்கொடிங் குழல்வீ ராகி
எளிவரு வீரு மாஞ** லென்செய்கே னிசையா" தென்றார். 366

(வி-ரை) பெருந்தடங் கண்ணினரும் - முன்னர் "அங்கயல் விழியினரும்" (3495) என்ற இடத்துப் பரம ராவ தறியாத நிலை; இங்கு அறிந்தபோது கண்ணோட்டம் பரந்து சிறந்ததென்று குறிப்பித்தது கவிநயம்; **பெரும் - தடம்** - ஒரு பொருட் பன்மொழி மிகுதி குறித்தது. குறுக்கும் நெடுக்குமாக நீண்டு அகன்ற எனினுமாம்.

அஞ்சி - பிராஞரை முன்னர் மறுத்து எதிர்மொழி **கூறி** - வலிந்து - போக்கியதனை எண்ணிய அச்சம். **"அருமறை...நீரோ?"** என்பது இதன் காரணம் குறித்தவாறு.

அடியேன் செய்த இருந்தவப் பயனும் என்ன எய்திய - செய்த - முன் செய்த; **இருந்தவப் பயனும் என்ன - பெருந் தவத்தினாலன்றி இறைவர் இவ்வாறு ஒரு முறைக் கிருமுறையும் வலிய எழுந்தருளி ஆட்கொள்ளும் பேறுகிட்டாதென்பது; எய்திய** - இப்பொழுது எழுந்தருளிய.

நீரோ - மறையோராகி முன் அணைந்தீர் - என்று கூட்டுக. **என்பார்** - முற்றெச்சம்.

எய்தினர்—என்பதும் பாடம். *365*

3520. **(இ-ள்)** துளிவளர்...விண்ணப்பஞ் செய்வார் - துளிகளாக வந்து பெருகும் கண்ணீர் வழியத் தொழுது விண்ணப்பஞ் செய்வாராகி; ஒளிவளர்... வருந்த - ஒளி வளர்தற் கேதுவாகிய செம்மை தருகின்ற திருவடிகள் நோவ; ஓர் இரவு- ஓர் இராத்திரி முழுதும்; மாறு - மாறுதலில்லாது;அளிவரும் அன்பர்க்காக - நிலைபெற்ற அன்பினை உடைய அடியவர் பொருட்டு; அங்கொடிங்கு... எளிவருவீருமானல் - அங்கும் இங்குமாக அலைவீராகி எளிதாக எழுந்தருளுவீருமானல்; என்... என்றார் - இசைவுபடாது வேறென் செய்ய வல்லேன் என்று சொன்னர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) துளிவளர் கண்ணீர் வார - துளிகளாக முன்னர்த் தோன்றிப் பின் ஊற்றுப் போலத் தொடர்ந்து பெருகிக் கண்ணீர் வழிய.

ஒளிவளர் செய்ய பாதம் - அடியார்கள்பால் சிவஞான ஒளி பெருகச் செம்மை தரும் திருவடி; "ஒளிவளர் விளக்கே" (திருவிசைப்பா).

ஓர் இரவு - இரவு முழுமையும் என முற்றும்மை தொக்கது; **ஓர்** - ஒப்பற்ற என்ற குறிப்பும் காண்க.

மாறு அளிவரும் அன்பர் - நம்பிகள்; **அளி** - இறைவர்பால் வைத்த உள்ளூறிய அன்பு; "அளிவள ருள்ளத் தானந்தக் கனியே" (திருவிசைப்பா); **மாறு** - இடையறாது;

3521. **"நங்கைநின் றன்மைக் கேற்ற நன்மையே மொழிந்தா" யென்று**
மங்கையோர் பாகம் வைத்த வள்ளலார் விரைந்து போகத்
திங்கள்வா ணுதலி ருருஞ் **சென்றுபின் னிறைஞ்சி மீண்டார்;**
எங்களை யாளு நம்பி தூதர்மீண் டேகு கின்றார், 367

"ஆரூரானை மறக்கலுமாமே" "மாணிக்கத் தைமறந் தென்னினைக் கேனே" "எனக்கார் துணை நீயலதே" "உன்னையல்லா லினி யாரை நினைக்கேனே" "காணீ ராகிலுங் காண்பனென் மனத்தாற் கருதீ ராகிலும், கருதி, நானே லும்மடி பாடுத லொழியேன்" "எங்ஙனநான் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே" "எழுபிறப்பும் மெங்கணம்பி கண்டாயே" "எனையஞ்ச வென்றருளா யாருறவெனக்கு" "என்னை நான் மறக்குமா றெம்பெருமானை" என்றற்றொடக்கத்த எண்ணிறந்த திருவாக்குக்கள் நம்பிகளது திருவுள்ளத்தின் மாறாத அளிவரும் அன்புடைமையினை விளக்குதல் காண்க. இவ்வாறன்றி, **மாறாது** என்பதனை "ஓர் இரவும் மாறாது" என்று கூட்டி ஓர் இரவு முழுமையும் இடைவிடாது என்றுரைப்பினும் அமையும். "அங்கொடிங்கு உழல்வீராகி எளிவருவீருமானால் என்பது இக்கருத்துப்பட நின்றதும் காண்க. **மாறாமை** - மனம் மாறுபடாமையுமாம்.

அங்கொடிங்கு உழல்வீராகி - அங்கு - நம்பிகள் இருக்கும் இடம் தேவாசிரியன் மருங்கு (3466).

இங்கு - பரவையார்தம் திருமாளிகை; **உழலுதல் -** ஒருமுறைக் கிருமுறை அடி வருந்த நடத்தல்; மறுத்து வலிந்து போக்கிய பின்னரும் சார்தல் என்றதும் குறிப்பு.

எளிவருவீரும் - அரியாராகிய நீர் எளியராக வருவீராகி; ஏவலாள் போல அலைவீருமாகி.

எளிவருவீரும் - உம்மை உழல் வீராதலின்றியும் என இறந்தது தழுவியது.

அன்பர்க்காக எளிவருவீருமானால் என் செய்கேன் இசையாது - தேவரீர் உழன்று எளிவருதல் கருதி அதன் பொருட்டு இசைகின்றேன்; என்பது; அன்பர்க்காக, அரியவராகிய தேவரீர் எளியராய் வரும்போது அவர்க்காக அடியேன் இசைதலே தகுதி என்றதுமாம்; **இசையாது என் செய்கேன்** என்க. சொல் வைப்பு முறை மாறியதும், எதிர் மறைகளும் உறுதியும் விரைவும் மனந்தடுமாறி நிலை நின்ற அமைதியும் குறித்தன. *366*

3521. **(இ-ள்)** "நங்கை... மொழிந்தாய்" என்று - "நங்கையே! உன்னுடைய உயர்ந்த தன்மைக்குத் தகும்படி நன்மையே உரைத்தாய்" என்று பரவையாரை நலங்கூறிப் பாராட்டி; மங்கையோர்...போக - உமையம்மையாரை ஒரு பாகத்தில் வைத்த வள்ளலாராகிய இறைவர் விரைந்து செல்ல; திங்கள்... மீண்டார் - சந்திரன் போன்ற ஒளி பொருந்திய நெற்றியினையுடைய பரவையாரும் சிறிது தூரம் பின்சென்று வணங்கி மீண்டனர்; எங்களை... ஏகுகின்றார் - எங்களை ஆட்கொண்டருளும் நம்பிகளின் தூதராகிய இறைவர் மீண்டு அவர்பாற் செல்கின்றாராக,

(வி-ரை) நங்கை! - பெண்களிற் சிறந்தவளே!

வேறு

3522. ஆதியு மேலு மாலய நாடற் கருளாதார்
தூதினி லேகித் தொண்டரை யாளுந் தொழில் கண்டே
வீதியி லாடிப் பாடி மகிழ்ந்தே மிடைகின்றார்
பூதியி னீடும் பல்கண நாதர் புகழ்வீரர், 368

நின் தன்மைக்கேற்ற நன்மையே - நினது அத்தன்மைக்குப் பொருந்திய நலப்பாடே; முன் "முருகலர் குழலாய்!" என்று தொடங்கிய குறிப்பும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

மங்கையைப் பாகம் வைத்த வள்ளலார் - வள்ளன்மையுடன் கருணையையும் உடையவர் என்பது.

விரைந்து போக - செயல் நிறைவை அறிவித்து வினை முடிபாக்கும் தீவிரம்; மேல் (3523) இதன் காரணம் கூறுவார்.

திங்கள் வாணுதலினார் - பரவையார்; "மதிநுதற் பரவையார்" (3513) என்று ஆண்டு தொடங்கியவாறே முடித்தபடி; ஆண்டுரைத்தவை பார்க்க.

சென்றபின் இறைஞ்சி - வழிவிடும் நிலையும், வழிவிட்டு விடைகொள்ளும் நிலையும் குறித்தது; நம்பிகளும் இவ்வாறே "பின்பு சென் றிறைஞ்சி மீண்ட" நிலை (3512) காண்க; முன்முறையில் மறுத்து "நீரும் போம்" (3499) என்று போக்கியபோது இம்மரபு பிறழ்ந்தமை அப்போதிலிருந்த மனநிலை காரணமாக நிகழ்ந்த தென்க.

நம்பி தூதர் - பரவையார்பால் தாமாந்தன்மை அறிவுறு கோலத்தோடு வந்தமையால் **"மங்கை பாகர்"** என்றதும், நம்பிகள் பால் செல்லும் நிலைபற்றி அதற்கேற்பத் **தூதர்** என்றதும் கருதுக. இவ்வாறு தூதாகச் சென்றமை நம்பிகள் திருவாக்கில் வரும் பல அகச்சான்றுகளாலும் விளங்குவதாம்; "அடியேற் கெளிவந்த தூதனை" (நள்ளாறு); "தூதனை யென்றனையாள் தோழனை" (கானப்பேர்) என்பன முதலிய பலவும் காண்க.

ஏகுகின்றார் - ஏகுகின்றாராகி; முற்றெச்சம்.

ஏகுகின்றார்—ஆளும் தொழில்—என்று வரும்பாட்டுடன் முடிக்க. 367

3522. **(இ-ள்)** ஆதியும்... அருளாதார் - அடியினையும் முடியினையும் முறையே மாலும் பிரமனும் நாடிக் காணுதற்கு அருளாத இறைவர்; தூதினில்...தொழில் கண்டே - தாமே தூதாகச்சென்று தொண்டனை ஆட்கொள்ளும் அந்த அருட்செயலை கண்டே; பூதியில்... வீரர் - அனுபூதியில் சிறந்து திளைக்கின்ற பலவகைப் பட்ட சிவபூத கணநாதர்களும் புகழுடைய வீரர்களும்; வீதியல்... மிடைகின்றார் - அத்திருவீதியிலே ஆடியும் பாடியும் மகிழ்ச்சியோடு நெருங்குகின்றார்களாகி;

3523. அன்னவர் முன்னும் பின்னும் மருங்கு மணைவெய்த
மின்னிடை யார்பா லன்பரை யுய்க்கும் விரைவோடுஞ்
சென்னியி னீடுங் **கங்கை ததும்பத்** திருவாரூர்
மன்னவ ரைம் மறையவ ரைர்பால் வந்துற்றார். 369

(வி-ரை) ஆதியும் மேலும் - மாலயன் நாடற்கு - ஆதி - அடி; **மேல்**-முடி; ஆதியினை மாலும்,மேலினை அயனும் முறையே நாடற்கு என்று நிரனிறையாகக் கூட்டுக.

மாலயற் கருளாதார்... தூதினில் ஏகித் தொண்டரை ஆளும் - அவர்கள் ஆட்படாமையின் அருளாதார்; தொண்டர் ஆட்பட்டமையால் அருளினர் என்பது. அரியயற்கு அருளாத காரணம் பற்றி இலிங்க புராணத் திருக்குறுந்தொகை பார்க்க. "தேவர்கள் ஆள்கொடுத் தெம்போ லரனை யறிகிலர்" (திருமந்திரம்) என்பது முதலியவை பார்க்க.

ஆளும் தொழில் கண்டே - இறைவரது அடியார்க்கெளிவரும் பெருங் கருணையை நேரே கண்டு.

பூதி - அனுபூதி; சிவானுபூதி; **பூதியில் நீடுதல்** - யோக நிலையில் உள்ளே எப்போதும் சிவானந்தத்தில் திளைத்திருத்தல்; உள்நிறைந்த சிவானுபூதியினை இங்குப் புறத்திலும் கண்டு மகிழ்ந்தனர். **சிவானுபூதி** - சிவனை உள்ளே கண்டுகொண்டு அவனது அருளில் திளைத்து மூழ்கிய அனுபவநிலை; "மாறாத சிவானுபவ மருவிக் கொண்டே" (சித்தி-11—1); மெய்யே கண்டுகொண்டி ருப்பர் ஞானக் கடலமு தருந்தி னேரே" (சிலப்-98) என்பனவாதி ஞானநூல் உண்மைகள் காண்க. **பூதி** - விபூதி - திருநீறு என்றனர் முன் உரைகாரர்கள்.

புகழ் வீரர் - பாரிடத் தலைவர் முதலாக முன் (3516) சொல்லப்பட்டவர்கள்; வீரமாவது சிவனடிமைத் திறத்தால் வருவது; "வீர மென்னால் விளம்புந் தகையதோ?"

கணநாதப் புகழ்வீரர் - என்று பாடங் கொள்வாருமுளர். மேல் பல வகையினரைக் கூறி "முன்னும் பின்னும் மருங்கும்" என்று முறைமையும் வகுத்தலின் அது பொருந்தாமை யறிக. 368

3523. **(இ-ள்)** அன்னவர்... அணை... வெய்த - அத்தகையோர்கள் தமது முன்னும் பின்னும் பக்கங்களிலும் முறைமைப்படி சார்ந்து வர; திருவாரூர் மன்னவனார் - திருவாரூரினை அரசாளும் தியாகராசர்; மின்னிடையார்... விரைவோடும் - மின்போன்ற இடையினை உடைய பரவையாரிடத்துத் தம் அன்பராகிய நம்பிகளைச் சேர்க்கின்ற விரைவினோடும்; சென்னியில்... ததும்ப - தமது தலையிலே நீடிய கங்கையாறு அலைத்து மோத; அம்மறையவனார்பால் வந்துற்றார் - அந்த மறையோராகிய நம்பிகளிடம் வந்து சேர்ந்தருளினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

(வி-ரை) அன்னவர் - முன் கூறிய அத்தகை கணநாதர் புகழ் வீரராகிய அவர்கள்.

முன்னும் பின்னும் மருங்கும் - இறைவரது முன்னரும் பின்னரும் பக்கங்களிலும் அவ்வவர் முறைமைக் கேற்ப.

3524. அன்பரு "மென்பா லாவி யளிக்கும் படிபோனர்
என்செய்து மீள்வா ரின்னமு" மென்றே யிடர்கூரப்
பொன்புரி முந்நூன் மார்பினர் செல்லப் பொலிவீதி
முன்புற நேருங் கண்ணிணை தானு முகிழாரால். 370

மின்னிடையாள்... விரைவோடும் - இம்முறை மீண்டு செல்லும்போது இறைவர் விரைவின் ஏகுதலின் காரணம் கூறியபடி; தளர்ந்து வீழ்ந்த நம்பிகளது இடுக்கண் கண்டு தரியாது (3510) போந்தாராதலின் விரைவின் ஏகினர்.

சென்னியில்.. ததும்ப - சென்னியில் சடைக்கற்றையின் கரையினளவில் நிறைந்து நிற்கும் பரந்த நீராதலின் ஐயர் விரைவின் ஏகிய அசைவினல் நீர் ததும்பிற்று என்பது கவிநயம். கருணை வெள்ளம் ததும்ப என்பது குறிப்பு.

மன்னவனர் - மறையவனர்பால் வந்துற்ருர் - மன்னர் மறையவரிடம் தேடி வருதல் தகுதி என்ற சொற்சுவைபடக் கூறியது கவிநயம்; **மறையவனர்** - சிறப்புக் குறித்தது; **திருவாரூர் மன்னவனர்** - தியாகராசர்.

மன்னவனர்தா மன்பினர்தம் — என்ற பாடமுமுண்டு. 369

3524. **(இ-ள்)** அன்பரும்...இடர்கூர - அன்பராகிய நம்பிகளும் "என்னிடத்து உயிரினை அளிக்கும்படி ஏன்று சென்றவராகிய இறையவர் இன்னமும் என்ன செய்து மீள்குவரோ?" என்றே வருத்தம் மிக; பொன்புரி... முகிழாரால் - பொன்னுற் புரித்திட்டது போன்ற பூணூல் அணிந்த மார்பினையுடைய இறைவர் செல்லப் பொலிவு பெற்ற அத்திருவீதியினை எதிர் நோக்கும் தமது கண்களை இமைக்கா திருந்தனர்.

(வி-ரை) ஆவி அளிக்கும்படி - "அவள்பால் இன்று மேவுதல் செய்யீராகில் விடுமுயிர்" (3509) என்றபடி நீங்கும் "நிலையிலிருந்த உயிரினைத் தரும்படி; **ஆவி** - ஆவி போன்ற பரவையை என்ற குறிப்புப்பட உரைத்தலும் ஆம்; **என்பால்** - என்பாற் பொருந்த;"என்னின் னுயிராமன்னமென" (297); "ஆவி நல்குவ ராரூரை யாண்டவர், பூவின் மங்கையைத் தந்தெனும்" (302) என்று முன் கூறிய கருத்துக்கள் காண்க; மேற்பாட்டிலும் "உயிர் நல்கும்" (3525) என்பதும் காண்க.

இன்னமும் என் செய்து மீள்வாரோ? என்க; **இன்னமும்** - முன்னர்ச் சென்ற காரியம் நிறைவு செய்யாது மீண்டமை போல இன்னமும் என உம்மை இறந்தது தழுவிற்று; **என் செய்து** - நிறைவு செய்வதும் அது செய்யாமையும் அவர் செயலே யன்றி மற்றும் உயிர்களின் செயலாவது ஒன்றுமில்லை என்பதும் குறிப்பு.

இடர் கூர - கூர்தல் - மிகுதல்; **கூர** - கூர்தலினல்; கூர - நேரும் கண்ணிணை முகிழார் - எனக் காரணப் பொருளில் வந்தது.

வீதி முன்புற நேரும் கண்ணிணை - தானும் முகிழார் - வீதியினை எதிர் நோக்கிய வண்ணம் பார்த்த கண்கள் இமையாராயினர்; **முன்புற நேரும்** - இறைவரது வரவினை எதிர்நோக்கும்.

3525. அந்நிலை மைக்கண் மன்மதன் வாளிக் கழிவார்தம்
மன்னுயிர் நல்குந் தம்பெரு மானுர் வந்தெய்த
முன்னெதிர் சென்றே மூவுல குஞ்சென் றடையுந்தாள்
சென்னியில் வைத்**"தென் சொல்லுவ" ரென்றே தெளியாதார்,** 371

3526. "எம்பெரு மானீ! **ரென்னுயிர் காவா திடர்செய்யுங்**
கொம்பனை யாள்பா லென்கொடு வந்தீர் குறை?" யென்னத்,
தம்பெரு மானுந் "தாழ்குழல் **செற்றந் தணிவித்தோம்;**
நம்பி யினிப்போய் மற்றவ டன்பா லணு"கென்ன, 372

தானும் - உம்மை முற்றும்மை; சிறப்பும்மையுமாம்;மனம் இடர்கூர வருந்துதலோடு கண் தானும் என்றலுமாம். **முகிழ்த்தல்** - இமைத்தல் - மூடுதல்.

முகிழாதால்—என்பதும் பாடம். *370*

3525. **(இ-ள்)** அந்நிலைமைக் கண்... எய்த - (நம்பிகள்) அந்நிலையில் நின்ற போது மன்மதனின் அம்புகள் வீழ இடைந்த நம்பிகளது நிலை பெற்ற உயிரினைத் தந்தருளும் தம் பெருமானுர் வந்து சேர; முன் எதிர்...வைத்து - அவர் திரு முன்பு எதிர்கொண்டு சென்றே மூவுலகங்களும் சென்று அடையும் அவர் திருவடிகளைச் சிரத்தில் வைத்துப் பணிந்து; என்...தெளியாதார் - என்ன சொல்வார் என்றே தெளியாதாராகி,

(வி-ரை) மன்மதன் வாளிக்கழிவார் - என்ற துபசாரம்; உலகியல் பற்றிக் கூறியதாம். நம்பிகள் காமவசப்பட்டு வருந்தினுர் என்பதன்று. இது பற்றி முன் உரைத்தவை பார்க்க; எவ்வண்ண நிற்பினும் சிவன்பாலன்றிச் சிந்தை பிறழாத சிவயோக நிலையின் நிற்பது நம்பிகள் திருவுள்ளம் என்பது ஈண்டுக் கருதத்தக்கது. "சீவன் முத்தர் சிவமேகண் டிருப்பர்" (சித்தி - *11—1*).

உயிர் நல்கும் - முன் **"ஆவியளிக்கும்படி போனுர்"** (*3524*) என்றது காண்க.

மூவுலகுஞ் சென்றடையும் தாள் - மூவுலகிலும் உள்ள எல்லாவுயிர்களும் துன்பநீக்கத்தின் பொருட்டுச் 'சென்று புகலடையும் திருவடி. இவ்வாறன்றிச் சங்கார காலத்து யாவும் திருவடியினெடுங்கிச் சிருட்டிக் காலத்து ஒடுங்கிய முறையே தோற்றும் திருவடி என்று உரைத்தனர் முன் உரைகாரர்.

என் சொல்லுவர் என்றே தெளியாதார் - முன்முறை "உறுதிசெய் தணைந் தார் என்றே" (*3505*) எண்ணிக் கொண்டதற்கு மாருக நிகழ்ந்தமையால் இம்முறை தெளியாராயினுர். இதனலே "என் கொடுவந்தீர் குறை" என்று மேல் வினவலாயினர். **தெளியாதார்** - தெளியாராகி; முற்றெச்சம்.

தெளியாதார்—என்ன—என வரும் பாட்டுடன் முடிக்க. *371*

3526. **(இ-ள்)** "எம்பெருமானீர்!... குறை" என்ன - "எம் பெருமானே! எனது உயிரைக் காவல் செய்யாது துன்பம் செய்கின்ற கொம்பு போன்ற பரவையிடத்தினின்றும் யாது

3527. நந்தி பிரானார் வந்தருள் செய்ய நலமெய்துஞ்
சிந்தையு ளார்வங் கூர்களி யெய்தித் திகழ்கின்றார்
"பந்தமும் வீடு நீரருள் செய்யும் படிசெய்தீர்
எந்தை பிரானே! யென்னினி யென்பா லிடர்?"என்றார். 373

குறை கொண்டு வந்தீர்?" என்று வினவ; தம்பெருமானும்... என்ன - தமது பெருமானாகிய இறைவரும் "தாழ்ந்த குழலினையுடைய பரவையினது புலவியினால் வந்த கோபத்தினைத் தணியச் செய்தோம்; நம்பியே! இனி நீ போய் அவள்பாற் சேர்வாயாக" என்று அருள,

(வி-ரை) என்னுயிர் காவாது இடர் செய்யும் கொம்பனையாள் - உயிர் காத்தல் - உயிரைப் பாதுகாத்தல்; **இடர் செய்யும்** - பாதுகாத்தல் நாயகியின் கடனாயிருப்பவும் அதனைச் செய்யாமையே யன்றி இடரையும் செய்யும் என்பது; இடர் செய்தலினாலே காவாது என்றுரைப்பினுமாம்; **கொம்பு அனையாள்** - உவமை, உணர்வின் குறைவு காட்டும் குறிப்புமாம்.

குறை என் கொடுவந்தீர் - என்க; **குறை** - முன்னர்க் கொண்டு வந்தது போலச் செயல் நிறைவேறாத நிலை; **என்கொடு** - வேறும் ஒன்றை என்றது குறிப்பு.

தாழ்குழல் - பரவையார்; வினைத்தொகையன்மொழி; **தாழ்தல்** - வணங்குதல் என்ற குறிப்புடன் நின்றது; **தாழ்** - முன்னர் வணங்காது நின்றதுபோ லன்றி அடியில் வீழ்ந்து தாழ்ந்த என்ற குறிப்புக் காண்க. "தாளினைமுன்சேர விரைவினாற் சென்று வீழ்ந்தார்" (3517).

செற்றம் - புலவி காரணமாக வந்த சினம்; "செற்ற நிலைமை" (3472). 372

3527. **(இ-ள்)** நந்தி...அருள் - செய்ய - நந்தி என்னும் திருநாமமுடைய எம் பெருமானார் வந்து இவ்வாறு அருளிச்செய்ய; நலமெய்தும்... திகழ்கின்றார் - நன்மை பொருந்தும் திருவுள்ளத்திலே ஆசை மிகுதலினாலே உண்டாகிய மகிழ்ச்சி பொருந்தி விளங்குகின்றாராகி; பந்தமும்...என்றார் - பந்தத்தையும் வீட்டையும் நீரே உயிர்களுக்கு அருளும் நிலைக் கேற்றவாறே செய்தருளினீர்! எம் பெருமானீரே! இனி எனக்கு என்ன துன்பம் உள்ளது? என்று போற்றினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) நந்திபிரானார் - நந்தி - இறைவர் திருநாமங்களுள் ஒன்று; உயிர்களின் வினைத்துயரை நந்துதல் (குறைத்தல் - ஒழித்தல்) செய்பவன்; இங்கு நம்பிகளது துன்பமுழுதும் ஒழித்தமை குறிக்க இப்பெயராற் கூறினார்; இப்பெயர், இறைவரது கோயில் நாயகரும், அவரால் முதல் உபதேசம் பெற்றவரும், நம் குரு மரபுக்கெல்லாம் முதற் குருவுமாக உள்ளமையால் திருநந்தி தேவருக்கு வழங்கலாயிற்று.

ஆர்வம் கூர்களி - ஆர்வம் மிகுதலினால் வரும் களிப்பு.

3528. **என்றடி விழு நண்பர்தம் மன்புக் கெளிவந்தார்**
"சென்றணை நீயச் சேயிழை பா" லென் றருள்செய்து
வென்றுயர் சேமேல் வீதி விடங்கப் பெருமாடம்
பொன்றிகழ் வாயிற் கோயில் புகுந்தார் புவிவாழ. 374

பந்தமும் வீடும் நீர் அருள் செய்யும்படி - தகுதிக்கேற்ப உயிர்களுக்குப் பிறவியும் வீடும் நீரே தருகின்ற முறைமைப்படி; "பந்தமு மாய்வீடு மாயினருக்கு" "பந்தமும் வீடும் படைப்போன் காண்க" (திருவா); இவையே ஐந்தொழிற் பெருங் கூத்தை உணர்த்துவன; "பந்தம் வீடு தரும்பர மன்கழல்" (300) என இக்கருத்தையே முன்னரும் பரவையாரைப் பற்றிய நிலையினும் உரைத்தது காண்க. ஆண்டுரைத்தவை பார்க்க.

செய்யும்படி செய்தீர் - படி - உவம உருபு. உயிர்களுக்குப் பந்தமும் வீடும் தருவது போலவே என்பால் முன்னர்த் துன்பமும் இப்பொழுது அதினின்றும் விடுதி பெறும் இன்பமும் செய்தீர்; **பந்தம்** - துன்பம்; **வீடு** - இன்பம்; எல்லாம் உம் செயலே என்று போற்றிய நிலை.

இனி என்பால் இடர் என்? என்க; வினா, இன்மை குறித்தது. *373*

3528. **(இ-ள்)** என்றபடி... எளிவந்தார் - முன் கூறியவாறு சொல்லித் தமது திருவடியில் வீழ்ந்த நண்பராகிய நம்பியினது அன்புக்கு எளிமையாய் வந்த இறைவர்; சென்றணை... அருள் செய்து - "நீ அந்தப் பரவையி னிடம் சென்று சேர்வாயாக" என்று அருளிச் செய்து; வீதிவிடங்கப் பெருமாள்தாம் - அந்த வீதிவிடங்கப் பெருமாளாகிய தியாகேசர்; வென்றுயர் சேமேல் - வெற்றி பொருந்திய மேன்மையுடைய இடபத்தின் மேலே எழுந்தருளி; பொன்திகழ்... புவிவாழ - பொன் விளங்கும் திருவாயிலினையுடைய தமது திருப்பூங்கோயிலினுள்ளே உலகம் வாழும்படி புகுந்தருளினர்.

(வி-ரை) என்று - முன் (3527) கூறியவாறு சொல்லி.

நண்பர் - நம்பிகள்; **நண்பு** - தோழமை; தோழமை பற்றியே தூது சென்றாராதலின் அக்குறிப்புப்படக் கூறியவாறு; "உரிமையா லூர னேவ" (3518).

அச்சேயிழை - "என்னுயிர் காவா திடர்செய்யும் கொம்பனையாள்" (3526) என்று நீ கொண்ட அந்த என முன்னறிசுட்டு; நீ நம்மை விரும்பி வேண்டிய அந்த; உனக் கினியளாய் "முல்லை முகைவெண் ணகைப்பரவை" முன் கூறிய அந்த என்று உரைப்பனவுமாம்.

வென்று உயர் சே - வெற்றியும் உயர்வும் பொருந்திய இடபம்; "சேவேந்து வெல்கொடியான்"; **சே** - இடபம்.

வீதிவிடங்கப் பெருமாள் - வீதியில் எழுந்தருளும் சுயம்பு, தியாகேசர்.

பொன் திகழ் வாயிற் கோயில் - பொன்னாற் பொலியச் செய்த திருவாயில்; **பொன்** இலக்குமி என்று கொண்டு இலக்குமி வரங்கிடந்து விளக்கமுற்ற என்றலுமாம்; **கோயில்**- பூங்கோயில்.

வேறு

3529. தம்பிரா ஞர்பின் சென்று தாழ்ந்தெழுந் தருளான் மீள்வார்
"எம்பிரான் வல்ல வா" றென் றெய்திய மகிழ்ச்சி யோடும்
வம்பலர் குழலார் செம்பொன் மாளிகை வாயி னேக்கி
நம்பியா ரூரர் காத னயந்தெழுந் தருளும் போது 375

3530. **முன்றுயி லுணர்ந்து சூழ்ந்த பரிசன** மருங்கு மொய்ப்ப
மின்றிகழ் பொலம்பூ மாரி விண்ணவர் பொழிந்து வாழ்த்த
மன்றல்செய் மதுர சீத சீகரங் கொண்டு **மந்தத்**
தென்றலு மெதிர்கொண் டெய்துஞ் சேவக முன்பு காட்ட, 376

புவி வாழப் புகுந்தார் -புவிவாழ்தல் - அத்திருக்கோயிலில் விளங்க வீற்றிருப்பதனுல் அங்கு வந்தடையும் உயிர்கள் எல்லாம் உய்தி பெறுதல். *374*

3529. (இ-ள்) தம்பிரானுர்... மீள்வார் - தம் பெருமானுரின் பின்பு சிறிது தூரம் சென்று வழிவிட்டு வணங்கி எழுந்து அருள்விடை பெற்று மீள்வாராகி; எம்பிரான்... மகிழ்ச்சியோடும் - எமது பெருமானின் "எல்லாம் வல்லவாறுதான் என்னே!" என்று, பொருந்திய மகிழ்ச்சியுடனே; வம்பலர்...எழுந்தருளும் போது - மணம் விரிகின்ற கூந்தலையுடைய பரவையாரது செம்பொன் விளங்கும் திருமாளிகையின் வாயிலை நோக்கி நம்பியாரூரர் காதலால் விரும்பி எழுந்தருளும்பொழுது,

(வி-ரை) பின்சென்று...மீள்வார் - மரபின்படி சிறிது தூரம் பின் சென்று வழிவிட்டு வணங்கி விடைகொள்ளும் முறை; முன் *(3521)* உரைத்தவை பார்க்க.

"எம்பிரான் வல்லவாறு!" என்று - இது நம்பிகளின் மனத்தின் அற்புத உணர்ச்சியின் எழுந்த எண்ணம். சிறிது போதினில் முன்முறை சென்றபோது "நாமே வேண்டவும் வெம்மைதான் சொல்லி மறுத்தாள்" *(3506)* என்று மீண்டருளியதும், பின்முறை "தாழ்குழல் செற்றந் தணிவித்தோம்" *(3526)* என்றதும் ஆகிய இந்த இவ்விரண்டு நிலைகளும் இவரையன்றி யில்லையாதலின் **வல்லவாறு!** என்று அற்புதமடைந்த தன்மை. இதற்கு இவ்வாறன்றி, எம்பிரானது வல்லமையால் முடிவதாயிற்று - நிறைவேறிற்று - என்றுரைப்பர் முன் உரைகாரர்; அவர் இது முடிந்ததென்பது அவாய்நிலையால் வந்ததென்றும், **ஆறு** - என்பதற்கு ஆற்றல் என மூன்றனுருபு விரித்தும் பொருள் கூறுவர்.

வம்பலர் குழலார் - "முருகலர் குழலாய் *(3518)* என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. மேலும் "வண்டுலாங் குழலார்" *(3534)* என்பதும் காண்க.

காதல் நயந்து - காதலால் விரும்பி; **நோக்கி -** குறித்து. *375*

3530. (இ - ள்) முன்...மொய்ப்ப - முன்னரே துயில் நீங்கி விழித்து எழுந்து சூழ்ந்த பரிசனங்கள் பக்கத்தில் நெருங்கிச் சூழ; மின்திகழ்...வாழ்த்த - ஒளியுடைய அழகிய தெய்வ மலர்மழையினைத் தேவர்கள் பொழிந்து வாழ்த்த; மன்றல் செய்... முன்பு காட்ட - மணம்

3531. **மாலை**தண் கலவைச் சேறு மான்மதச் சாந்து பொங்குங்
கோலநற் பசுங்கற் பூரங் குங்கும முதலா யுள்ள
சாலுமெய்க் கலன்கள் கூடச் சாத்தும்பூ ணுடை வர்க்கம்
பாலன பிறவு மேந்தும் பரிசன முன்பு செல்ல, 377

விளங்கும் இனிய குளிர்ந்த நீர்த் திவலைகளுடன் கூடி மெல்லிதாய்த் தென்றலும் எதிர்கொண்டு செல்லும் பணியை முன்னே செய்துவர,

(வி-ரை) முன் துயிலுணர்ந்து சூழ்ந்த - முன் - நம்பிகள் துயிலுணர்த்தி ஏவு முன்னமே பரிசனத்தின் கடமைப்பாடுடைய நிலை குறித்தது.

துயிலுணர்தல் - விழித்தல்.

விண்ணவர் பூமாரி பொழிந்து வாழ்த்த என்க; இது திருவருள் வெளிப்பாடு கண்டபோது தேவர்கள் செய்தல்.

மன்றல் செய் - மணம் வீசும்; **சீகரம்** - நீர்த்தூவல்; தென்றல் நீர்த்தூவலுடன் வீசிற்று; நீர் கலத்தல் குளிர்ச்சியை மிகுதிப்படுத்தியது என்பது.

மந்தத் தென்றல் - மெல்லிதாய் வீசும் தென்றற் காற்று; மந்தமாருதம் என்பர்.

எதிர்கொண்டு எய்தும் சேவகம் - நம்பிகளை எதிர்கொண்டு வந்து கவரி வீசி உபசரிப்பது போன்ற பணி; **எதிர் கொள்ளுதல்** - தற்குறிப்பேற்றம்; **தென்றல் எதிர்கொண்டு** - என்றதனால் நம்பிகள் தேவாசிரியனின்றும் போந்து, வடக்கு நின்றும் தெற்கு நோக்கி எழுந்தருளினர் என்றும், பரவையார் திருமாளிகை தெற்குத் திருவாயிலினின்றும் தெற்கே உள்ளதென்றும் கருத இடமுண்டு; இந்நாளில் பரவை யார் திருமாளிகை என்று வழங்கும் கோயிலும் இவ்வாறே அமைந்துள்ளதும் காண்க.

முன்பு - காலத்தாலும் இடத்தாலும் முன்பு.

காட்ட - நிலைமை புலப்படுத்த. *376*

3531. **(இ-ள்)** மாலை...முதலாயுள்ள - மாலையும், குளிர்ச்சியுடைய கலவைக் குழம்பும், கத்தூரி கலந்த சந்தனமும், மிக்க அழகிய நல்ல பச்சைக் கற்பூரமும், குங்குமமும் முதலாக உள்ள; சாலும்...செல்ல - திருமேனியிற் பொருந்தும் அணிகளும், ஒருங்கே தரிக்கும் பூணுடை வகைகளும், தகுதியுடைய பிறவும் ஆகிய இவற்றைத் (ஏந்தும்... செல்ல-) தாங்கிவரும் பரிசனங்கள் முன்னே போக,

(வி-ரை) கலவைச் சேறு - வாசனைப்பண்டம் சேர்த்துக் கலந்த குழம்பு. **மான்மதச் சாந்து** - கத்தூரியுடன் கூட்டி சந்தனம்.

மெய்க்கலன்கள் - மெய்யில் அணிவன; மெய்பூச்சும் அணிகளும்.

ஆடைவர்க்கம் - உடைவகை; ஆரவர்க்கம் என்பது பாடமாயின் முத்தாரம் முதலியன என்க. முன்னர் **மாலை** என்றது மலர்மாலைகளை.

3532. இவ்வகை யிவர்வந் தெய்த, வெய்திய விருப்பி னோடு
மைவளர் நெடுங்கண் ணாரு மாளிகை யடைய மன்னுஞ்
செய்வினை யலங்கா ரத்துச் சிறப்பணி பலவுஞ் செய்து
நெய்வளர் விளக்குத் தூப நிறைகுட நிரைத்துப் பின்னும், 378

பாலன - இவ்வகையைச் சார்ந்தன; **பிறவும்** - தாம்பூலம் பழம் முதலியவை.

இவைமுன்னமே பரவையார் மாளிகையில் செல்வதற்கு நம்பிகள் கொணர்ந்தவை. **ஏந்தும்** - ஏந்திச் செல்லும்.

பரிசனம் முன்பு செல்ல -பரிசனம் - முன்னர் நம்பிகளுடன் வந்தாரும், அன்று திருவாரூரில் அப்போது சேர்ந்தாரும். இவர்களுள் ஒரு கூனனும் ஒரு குருடனும் சார்ந்தமையும், அவ்வாறு சார்ந்து மாலை - தாம்பூலங்களை ஏந்திச் செல்லப் பெற்ற பேற்றினால் முறையே நம்பிகள் திருவருளால் கூன் நீங்கப்பெற்றும், கண் விழிக்கப்பெற்றும் நலம் பெற்றமையும் வரலாறுகளாம். இவை "திருவாரூரன் பொன்முடிமேல், ஏற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடுதருமக், கோற்றொழுத்து கூனனுங் கூன்போய்க் குருடனும் கண்பெற்றமை, சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே" (திருவந்தாதி-48) என்றும், இதனைச் "சடையார் தூதுதருந் திருநாட்கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப் பாதம், யானும் பரவித் தீர்க்கின்றே னேழு பிறப்பின் முடங்ககூன்" (3938 - கூற்றுவர் புரா - 9) என்றும் உரைத்தருளிய வாற்றால் அறியப்படும்.

பாலினம்—என்பதும் பாடம். 377

3532. **(இ - ள்)** இவ்வகை...எய்த - இவ்வாறாக இவர் வந்து சார; (இதனிடையில்); எய்திய...செய்து - பொருந்திய விருப்பத்தினோடும் மைதீட்டிய நீண்ட கண்ணையுடைய பரவையாரும் மாளிகை முற்றிலும் நிலைபெற்ற செய்தொழிலால் மிகும் அலங்காரத்துக்குரிய சிறப்புடைய அணிகள் பலவற்றையும் செய்து; நெய்வளர்...நிரைத்து - நெய் நிறைந்த விளக்குக்களையும் தூபங்களையும் நீர்நிறைகுடங்களையும் வரிசைபெற அமைத்து; பின்னும்- அதன் மேலும்,

(வி-ரை) இவர் - நம்பிகள் பரிசனங்களை யுள்ளிட்ட இவர்கள் என்றலுமாம்.

எய்திய விருப்பினோடும் - நம்பிகளைக் "காதல் நயந்து" (3529) என்றதற்கேற்பப் பரவையாரை **எய்திய விருப்பினோடும்** என்றது இருபாலும் விருப்பம் மூண்ட நிலை குறித்தது.

மைவளர் நெடுங்கண்ணாரும் - முன்னர்ப் புலவியாற் சிவந்திருந்த கண்கள் இப்போது புலவி நீங்கியதனால், "கருங்குவ ளைச்செவ்வி யோடிக் கெழுமினவே" (கோவை) என்றபடி, அது மாறிக் கண்ணோட்டமுடன் நீண்டன என்பது குறிப்பு. "பெருந்தடங் கண்ணி னாரும்" (3519) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; **மைவளர்** என்றது இப்பொழுது மையிட்டு அணி செய்யப்பட்டதென்ற குறிப்புமாம்.

அடைய - முற்றும்.

3533. பூமலி நறும்பொற் ருமம் புனைமணிக் கோவை நாற்றிக்
காமர்பொற சுண்ணம் வீசிக் கமழ்நறுஞ் சாந்து நீவித்
தூமலர் வீதி சூழ்ந்த தோகையர் வாழ்த்தத் **தாமும்**
மாமணி வாயின் முன்பு வந்தெதி ரேற்று நின்ருர். 379

மன்னும்... சிறப்பணி - நிலைபெறச் செய்த கைபுனைந்த அலங்காரங்களைத் திருத்திச் சிறக்கச் செய்து;இவை நிலையான அலங்காரங்களைச் சிறப்புக் காணக் கவின் செய்தல்; இப்போது செய்யும் அலங்காரங்கள் மேற்பாட்டிற் கூறுவார்.

நெய்வளர் விளக்கு - நெய்விளக்குக்கள் குணம் மிகுந்தன; **தூபம்** - வாசங்கமழ் புகை.

நிரைத்தல்—வரிசைபட அமைத்தல். *378*

3533. **(இ-ள்)** பூமலி... நாற்றி - பூக்கள் பொலிந்த மணமுடைய அழகிய மாலைகளையும், மணிகள் புனைந்த கோவைகளையும் தொங்க வைத்து; காமர்...நீவி - விருப்பம் தரும் பொற் சுண்ணத்தை வீசி மணமுடைய நறிய சந்தனத்தால் மெழுகி; சூழ்ந்த தோகையர் வாழ்த்த - சுற்றிலுமுள்ள தம் தோழியர்கள் வாழ்த்துக்களைச் சொல்ல; தூமலர் வீதி - தூய்மையாகிய மலர்கள் நிறைந்த திரு வீதியிலே; மாமணி வாயில் முன்பு வந்து - பெரிய மணிகள் பொருந்திய திருவாயிலின் முன்பு வந்து; தாமும் - (பரவையார்) தாமும்; எதிர் ஏற்று நின்ருர்- (நம்பிகளை) வரவேற்று நின்றனர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பூ...தாமம் - பூமாலைகள்; **பொன்** - அழகு; **நறுமை** - மணம்; **தாமம்** - பூமாலைகள்; மணமலர் மாலைகள்.

மணிக்கோவை - மணிமாலைகள்; இவை வேறு.

நாற்றுதல் - அங்கங்கும் அளவு பெறத் தொங்க வைத்தல்.

பொற் சுண்ணம் - வாசனைப் பொடி; **வீசுதல்** - பலவிடமும் பரவத் தூவுதல்; **நீவுதல்**- மெழுகுதல்; **காமர்** - விரும்பத்தக்க; காமம் மருவும் என்பர் நச்சினர்க் கினியர்.

சூழ்ந்த தோகையர் - தோழியர்; **வாழ்த்தல்** - பாராட்டுதல்.

தூமலர் வீதி வாயில் முன்பு - என்க; வீதிவாயில் என்றது முன்வாயில்; **வீதி தோகையர்** - அத்தெருவிலுள்ள பெண்கள் என்றுரைத்தனர் முன் உரைகாரர்; **தூமலர் வீதி**- இப்பொழுது மலர்மாலைகளால் அணி செய்த வீதி; தேவர்கள் மொழிந்த தெய்வ மலர்கள் (3530) நிறைந்த வீதி என்ற குறிப்புமாம்.

வாயில் முன்பு - வாயிலின் வெளிப்புறத்து; முதலில் இறைவர் வந்து அழைத்ததும், (மணிவாயில்-3472) அப்போது மீண்டு அவர் போயினபின் தாம் வாயிலே பார்த்து அழிந்ததற் கிடமாகியதும் ஆகிய அத்திருவாயிலே இப்போது வரவேற்க நின்றது என்பது

3534. வண்டுலாங் குழலார் முன்பு வன்ரெண்டர் வந்து கூடக்
கண்டபோ துள்ளக் காதல் வெள்ளத்தின் கரைகா ணுது
கொண்டநா ணச்சங் கூர வணங்கவக் குரிசி லாருந்
தண்டளிர்ச் செங்கை **பற்றிக் கொண்டுமா ளிகையுட் சேர்ந்தார்.** 380

குறிப்பார் **தூமணி** - என்ற இரண்டு அடைமொழிகளாற் சிறப்பித்தார்.

தாமும் - தோழியர்களுடனே தாமும் என எச்சவும்மை. புலந்திருந்த தாமும் எனச் சிறப்பும்மையுமாம்.

எதிர் ஏற்று நின்ருர் - எதிர் வரவு ஏற்கும் நிலையில் நின்றனர். இருதிறமும் ஒரே காலத்தில் அன்பினு னிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பிரிப்பின்றி ஒரு முடிபாகத் தொடர்ந்து இவ்வைந்து பாட்டுக்களாற் கூறிய நயமும், நான்காவது பாட்டில் இருவர் செய்கையும் சேரவைத்துக் கூறிய நயமும், புலவி தீர்ந்த பின்பு இருபாலும் அன்பு நிறைந்த நிலையின் நிகழ்ச்சிகளை இழுமென்னும் ஓசையின் வேறு யாப்பாற் ருெடங்கிக் கூறிய நயமும், முன் கூறிய ஐஞ்சீர்க் கலிநிலைத்துறை விருத்தத்தினின்று இங்கு அறுசீர்க் கழிநெடில் விருத்தமாகத் தொடங்கிய நயமும் கவிநலங்களாம். 379

3534. (இ-ள்) வண்டுலாம்...கூட - அவ்வாறு நின்ற, வண்டுகள் உலவுதற் கிடமாகிய கூந்தலையுடைய பரவையார் தமது முன்பு வன்ரெண்டராகிய நம்பிகள் வந்து சேர; கண்டபோது... கரைகாணுது - கண்டபொழுது உள்ளத்திலே எழுந்த காதற் பெருக்கத்தின் எல்லை காணமாட்டாராகி; கொண்ட.... வணங்க - மேற்கொண்ட நாணும் அச்சமும் மிகுதியாகப் பெருக அவரை வணங்க; அக்குரிசிலாரும்... சார்ந்தார் - அந்தப் பெருமையுடையராகிய நம்பிகளும் அவரது குளிர்ந்த தளிர் போன்ற செவ்விய கையினைப் பற்றிக்கொண்டு திருமாளிகையினுள்ளே புகுந்தனர்.

(வி-ரை) வண்டுலாங் குழலார்- 3485-3529 - பார்க்க.

வன்ரெண்டர் - முன்னரும் இப்பெயராற் கூறிய குறிப்பும் நினைவு கூர்க. 3484 முதலியவை பார்க்க.

கண்டபோது - என்றது காட்சி காரணமாகிய நிகழ்ச்சியினையும், **உள்ளக் காதல்... வணங்க** - என்றது அதனுல் விளைந்த அகநிகழ்ச்சியினையும் குறித்தன.

நாண் அச்சம் - பெண்மைக்கு இயல்பாகிய நாண் முதலிய நாற்குணங்களும் இவை ஈண்டு வெளிப்பட்டன என்ற பொதுமைக்குறிப்பும், மூண்ட புலவியினுல் தாம் செய்தவற்றையும் சொல்லியவற்றையும் எண்ணியதனுல் நாணும், தமது நாயகராகிய தலைவர்பாலினும் இறைவர் பாலினும் செய்த அபசாரங்களை எண்ணியதனுல் அச்சமும் கொண்டனர் எனச் சிறப்புக் குறிப்பும் போந்தன; நாற் குணங்களுள் மடம் பயிர்ப்பு என்ற ஏனையவை இயைபின்மையின் இங்கு வெளிப்படாது நின்றன என்க. **கொண்ட** - நினைதலால் மேற்கொண்ட.

3535. **இருவருந் தம்பி ரானுர் தாமிடை யாடிச் செய்த**
திருவருட் கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றிச் சிந்தை
மருவிய வின்ப வெள்ளத் தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப
ஒருவரு ளொருவர் மேவு நிலைமையி லுயிரொன் ருனுர். 381

குரிசில்- பெருமையுடையார்; புலவியாற் செய்தவற்றை மனங்கொள்ளாது அன்பு மிகுந்து போந்த நிலைக் குறிப்பு.

செங்கை பற்றிக்கொண்டு மாளிகையுட் சார்ந்தார் - இச்செயலே மனநிலையைப் புலப்படுத்திற்று என்க. அன்பின் முதிர்வு.

காதல் கரைகாணுது - ஊடலை மறந்து கூடற்கட் சென்ற மனநிலையாலாகியது என்பர் முன் உரைகாரர். *380*

3535. **(இ-ள்)** இருவரும்... போற்றி - (நம்பிகளும் பரவையாரும் ஆகிய) இருவரும் தம் பெருமானுர் தாம் இருவரினிடையே போந்து தம்பாற் செய்த திருவருட் கருணைப் பெருக்கினது திறத்தைத் துதித்து; சிந்தை... வாய்ப்ப - மனத்துள்ளே பொருந்திய இன்பப் பெருக்கினுள்ளே அழுந்திய ஒன்றிய நிலை சார்தலினுலே; ஒருவருள்... ஒன்ருனுர் - ஒருவருள்ளே ஒருவர் பொருந்தும் நிலைமையில் இருவர்களும் கூடி உயிர் ஒன்ருக ஆயினர்.

(வி-ரை) இடையாடி - இருவர்பாலும் இங்குமங்குமாகச் சென்று பிணக்கு நீங்கச் செய்த; "நடுவிடையாடி" (*1643*).

திருவருட் கருணை வெள்ளத்திறம் - அருள் - கருணை - ஒரு பொருளன; **அருள்** - எல்லா உயிர்களின் மேலும் செல்வது; **கருணை** - அது கூர்ந்து சிறப்பிற் புலப்பட வருவது; "அருள் வித்திட்டுக் கருணைநீர் பாய்ச்சி" (குமரகுரு); **வெள்ளம்**-பெருக்கு; **திறம்** - இருவர்பாலும் தனித்தனிச் சென்றது இருவரையும் கூட்டும் ஒரே நிலை பற்றியாகலின் **திறம்** - என ஒருமையாற் கூறினுர்.

போற்றி - கூடல் நீங்கிச் சேர்ந்த நிலையில் முதற்கண் நிகழ்ந்தது இறைவர் அருளைப் போற்றுதலேயாம்; இஃது அடிமைத்திறம் பூண்ட அன்பினில் ஊறித்தம் வசமற்ற வாழ்க்கையுடையாரிடமே யன்றிப் பிறர்பாலியலாதென்க.

சிந்தை... வாய்ப்ப - இன்பவெள்ளத் தழுந்திய - மனநிலையே தாமாக அதனுள் மூழ்கிய; **புணர்ச்சி** - உள்ளக் கலப்பு.

அழுந்திய - மூழ்கும்படி என்பர் முன் உரைகாரர்.

வாய்ப்ப - வாய்த்தலால்.

ஒருவருள்... உயிர் ஒன்ருனுர் - இவர் நிலையினுள் அவரும் அவர் நிலையினுள் இவருமாக ஒன்றுதல்; **ஒன்றுதல்** - இரண்டறுதல்; "ஒன்றி யிருந்து நினைமின்கள்" (தேவா); **உயிர் ஒன்றுதல்** - ஆன்மநேயக் கலப்பு;"ஒருவரொருவரிற் கலந்த வுணர்வால்" (*3484*)

3536. **ஆரணக் கமலக் கோயின் மேவிப்புற் றிடங்கொண் டாண்ட**
நீரணி வேணி யாரை நிரந்தரம் பணிந்து போற்றிப்
பாரணி விளக்குஞ் செஞ்சொற் பதிகமா லைகளுஞ் சாத்தித்
தாரணி மணிப்பூண் மார்பர் தாமகிழ்ந் திருந்த நாளில், 382

3537. **“நம்பியா ரூரர் நெஞ்சி னடுக்கமொன் றின்றி நின்று**
தம்பிரா னுரைத் தூது தையல்பால் விட்டா”ரென்னும்
இம்பரின் மிக்க வார்த்தை யேயர்கோ னுர்தாங் கேட்டு
வெம்பினு; ரதிச யித்தார்; வெருவினுர்; விளம்ப லுற்றுர், 383

“அன்பு பெருகத் தழுவவிரைந் தவரு மார்வத் தொடுதழுவ, வின்ப வெள்ளத் திடைநீன்று மேற மாட்டா தலைவார்போல், என்பு முருகி யுயிரொன்றி யுடம்பு மொன்று மெனவிசைந்தார்” (3812-கழறிற் - 65); “சேரர் பெருமா னெதிர்சென்று, தலைநாட் கமலப் போதனைய சரணம் பணியத்தாவில் பல கலைநாட்டமுத வாரூரர் தாமுந் தொழுது கலந்தனரால்” (4247-வெள். சருக்.19); “சிந்தை மகிழுஞ் சேரலனுர் திருவாரூர ரெனுமிவர்கள், தந்த மணிமேனிகள் வேரு மெனினு மொன்றுந் தன்மையராய், முந்த வெழுங்கா தலிற் றெழுது முயங்கி” (4248 மேற்படி 20) என்ற நிலைகளில் இக்கருத்தை ஆசிரியர் நன்கு விளக்குதல் காண்க. ஈண்டு இவ்வாற்றுன் ஒருமைப் படுத்திக் கூறிய தன்மை தெய்வ அருட் கவியின் பெருமித மாட்சி என்க. “பன்னுளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினுர்” “சரணுர விந்தமலர், சென்னியிலுஞ் சிந்தையிலு மலர்வித்து...மின்னிடையா ளுடன்கூடி விளையாடிச் செல்கின்றுர்” (328) என்ற அளவில் முன்னருங் கூறி யமைந்த அருட்கவி மாட்சிமையும் ஈண்டு வைத்துக் கண்டுகொள்க. “காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ, ராகத்து ளோருயிர் கண்டனம்” (திருக்கோவை - 71) என்ற கருத்து ஈண்டு வைத்து சிந்திக்கத்தக்கது. 381

3536. **(இ-ள்)** ஆரண... போற்றி - வேதமூலம் வெளிப்படும் பூங்கோயிலின் கண்ணே பொருந்திப் புற்றினை இடமாகக் கொண்டு ஆட்சிபுரியும், கங்கையை அணிந்த சடையாரை இடைவிடாது வணங்கித் துதித்து; பார்... சாத்தி - உலகத்தை அழகு விளங்கச் செய்யும் திருப்பதிகங்களாகிய மாலைகளையும் சாத்தி; தாரணி...நாளில் - தாமரை மலர் மாலையினை அணிந்த மணியாரங்களைப் பூண்ட மார்பினையுடைய நம்பிகள் தாம் மகிழ்ச்சியுடனே அங்கு வீற்றிருந்த நாட்களில்,

(வி-ரை) ஆரணக் கமலக் கோயில் - ஆரணம் - வேதம். “வேத மூலம் வெளிப்படு மேதினிக், காதன் மங்கை யிதய கமலமாம்” (43) என்ற கருத்து; ஆண்டுரைத்தவை பார்க்க.

கமலக் கோயில் - பூங்கோயில்; வேதம் புகழும் கமலாலயம் என்பர் முன் உரைகாரர்.

ஆண்ட - ஆட்சிபுரிகின்ற; “ஆரூராண்ட அயிரா வணமே” (தேவா).

நிரந்தரம் - பணிந்து போற்றி - சாத்தி - எப்போதும்; வழிபடுங் காலமெல்லாம்; முன்னரும் “தன்னையா ளுடையபிரான் சரணுர விந்தமலர், சென்னியினுஞ் சிந்தையினு மலர்வித்து... சாத்தி” (328) என்ற நிலை காண்க.

3538. **"நாயனை யடியா னேவுங் காரிய நன்று!** சால
ஏயுமென் றிதனைச் செய்தான் றொண்டனு! மென்னே? பாவம்!
பேயனேன் பொறுக்க வொண்ணாப் **பிழையினைச் செவியாற் கேட்ப**
தாயின **பின்னு மாயா திருந்ததென் னாவி!"** யென்பார், 384

நாளில் - அக்காலத்தில் மேல்வரும் நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன; அவையாவன; என்க. *382*

3537. **(இ-ள்)** நம்பியாரூரர்... விட்டார் என்னும் - ஆரூராகிய நம்பிகள் சிறிதும் மனநடுங்காமல் அச்சமின்றி நின்று தம் பெருமானாரை பெண்ணொருத்தியிடத்துத் தூது விட்டார் என்கின்ற; இம்பரின் மிக்க வார்த்தை -இவ்வுலகிலே பரந்த பழிச் சொல்லை; ஏயர்கோனார்தாம்...விளம்பலுற்றார் - ஏயர்கோன் கலிக்காமனார் தாம் கேட்டு மனம் புழுங்கினார்; அதிசயப் பட்டார்; அச்சங்கொண்டார்; மேல் வருமாறு சொல்லத் தொடங்கினார்,

(வி-ரை) நெஞ்சில் நடுக்கம் ஒன்று இன்றி - நெஞ்சில் நடுக்கமாவது செய்யத் தகாத செயல் செய்தலில் மனம் துணியாது நடுங்குதல். தீவினையஞ்சுதலால் வருவது; **ஒன்று -** ஒன்றும் - ஒரு சிறிதும் என்னும் பொருளில் வந்தது. முற்றும்மை தொக்கது.

தம்பிரானாரைத் தூது தையல்பால் விட்டார் என்னும் இம்பரின் மிக்க வார்த்தை - தம்பிரானாரை அடியார் தூது விட்டமை ஒரு பிழை; அதுவும் தையல் பால் விட்டார் என்பது மற்றொரு பெரும்பிழை என்பார், தூது தையல்பால் என மாற்றி உரைத்தார்; இதனை மேல் இரண்டு பாட்டுக்களிற் பிரித்து விரித்தல் காண்க. **இம்பரின் மிக்க வார்த்தை -** இவ்வுலகில் மிகுந்த பழிச்சொல். **மிக்க -** பழிப்பால் மிகுந்த; "பழியும் புகழும் பெருக்கில் பெருகும்" (கோவை) என்றபடி பழிச்சொல் இவ்வுலகில் விரைவிற் பரவும் தன்மையுடையது என்பது குறிப்பு.

வெம்பினார்...அதிசயித்தார் - வெருவினார் - வெம்புதல் - இத்தகைய தகாத செயலும் செய்யலாமோ என மனம் வெதும்புதல் - புழுங்குதல் - மிக்க சினங்கொள்ளுதல்; **அதிசயித்தல் -** இன்றளவும் கேட்டுமறியாததென்று வியப்பு அடைதல்; **வெருவுதல் -** இது நினைத்தற்கும் கேட்டற்கும் ஒண்ணாதது தென அஞ்சுதல்; **வெரு -** சடுதியில் நேரும் அச்சம். "வெருக் கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய்" (*1953*). (*1*) தையல்பால் தூது விட்டமை பற்றி **அச்சமும்,** (*2*) அடியான் சொற்படி ஆண்டரன் சென்றமை பற்றி **அதிசய**மும், (*3*) ஆண்டானை அடியான் ஏவியது பற்றி **அச்ச**மும் கொண்டார்.

விளம்பலுற்றார் - மேல் வருமாறு சொல்லத் தொடங்கினாராகி. *383*

3538. **(இ-ள்)** நாயனை... நன்று - தலைவரை அடியவன் ஏவுதல் செய்யும் தொழில் மிக நன்று!; சால... தொண்டனும் - மிகப் பொருத்தமாவதென்று இக்காரியத்தைத் துணிந்து செய்பவனும் ஒரு தொண்டன் எனப்படுவானும்!; என்னே பாவம் - இது என்ன பாவம்; பேயனேன்... ஆவி என்பார் - நான் பேயேனாதலின் பொறுக்க வொண்ணாததாகிய இப்பெரும் பிழையினைக் காதினாற் கேட்க நேர்ந்த பின்பும் எனது உயிர் நீங்காது இருந்தது என்பாராகி,

3539. "காரிகை தன்பாற் செல்லுங் காதலா லொருவ னேவப்
பாரிடை நடந்து செய்ய பாததா மரைக ளோவத்
தேரணி வீதியூடு செல்வது வருவ தாகி
ஓரிர வெல்லாந் தூதுக் குழல்வரா மொருவ!"ரென்று, 385

(வி-ரை) நாயன் - தலைவர்; எசமானர்.

நன்று - இழிவுக் குறிப்புத்தந்து நின்ற பழிச்சொல்; **நன்று** - தீது என மறுதலைப் பொருள் தந்து நின்றது; **காரியம்** - செயல் என்ற பொருளில் வந்தது.

சால ஏயும் என்று - மிகவும் பொருத்தமுடையதென்று கொண்டு; எண்ணி; **ஏய்தல்** - பொருந்துதல். **சால நன்று** - மிக நன்று என்பதுமொன்று.

தொண்டனும் - ஆம் - சினத்தினல் எதிர்மறைப்பொருளில் வரும் வியப்புக் குறிக்கும் இடைச்சொல்; "விறலில் மேதகு மவுணராம் வலியிலார் மிகவும், வறிய ராகிய தேவரா மேலவர்" என்ற கந்தபுராணம் காண்க; **ஆம்** - தகுதியின்மைப் பொருள் தரும் இடைச் சொல்லுமாம்.

என்னே பாவம் - இஃது எத்தனை பெரும் பாவச் செயல்.

பேயனேன்...ஆவி - பேயேன் - பேய்த்தன்மையுடையேன்; பேய்த்தன்மை யாவது மெய்யுணர்ச்சியின்றி வெறுவியதாத் திரிதல்;"பித்தனேன் பேதையேன் பேயே னுயேன் பிழைத்தனகள்" (தேவா); கேட்கவுந் தகாத பெரும் பிழையாகிய சிவாபராதத்தைக் கேட்ட பின்னும் உயிர் போகாது உடல்தாங்கி நிற்றல் இங்குப் பேய்த்தன்மையாகிய மெய்யுணர்ச்சியின்மை எனப்பட்டது. இதனைப் **பொறுக்கவொண்ணு...ஆவி** ஆதலின், பேயனேன் எனக் காரணப் பொருள்பட மேற்றொடர்ந்து கூறுதல் காண்க.

பொறுக்க வொண்ணு - தீர்வு தேடாது உடல் தாங்கலாகாத; **பொறுத்தல்** - உடல் தாங்குதல்.

பின்னும் - உம்மை இழிவு சிறப்பு.

கேட்பதாயின் பின்னும் என் ஆவி மாயாதிருந்தது - என்க. தகாத கேள்வி கேட்ட மாத்திரையில் உயிர் போதல் தலையன்பின் றிறம்; இதனல் தலையன்பின்மை தெரிந்தமையால் **பேயனேன்** என்ருர்; **இருந்தது - என் ஆவி** - எழுவாய் பின் வந்தது இழிவு மிகுதிக்கண் வந்த விரைவுக் குறிப்பு. உயிர் மாயாது தாழ்த்திருந்த தாமத நிலை குறிப்பார் கேட்ட என்றெழியாது **செவியாற் கேட்பதாயின** என்று நீட்டித்தார் "கண்டு இங்குநின் றங்குவந் தத்துணையும் பகர்ந்த" என்ற திருக்கோவையாரின் குறிப்புப் போல. **கேட்பது** - கேட்பதென்பது.

ஆயினபின்னும் - நேர்ந்த பிறகும்; **செவியால்** என்பது வேண்டாது கூறலாகிய விதப்பு மொழி; இச்செவி இக்கொடுமொழியைக் கேட்க என்ன தீவினை செய்ததோ என்ற குறிப்புப்பட நின்றது; "விதப்புக் கிளவி வேண்டியது விளக்கும்"; "வழுக்கியும் **வாயாற்** சொலல்" என்றாற்போல; **இருந்தது** - இருந்ததே என்க; **என்பார்** - என்று வருந்திக் கூறுவாராகி. 384

3540. "நம்பர்தா மடிமை யாற்ரு ராகியே நண்ணி ஞரேல்
உம்பரார் கோனு மாலு மயனுநே ருணர வொண்ணு
எம்பிரா னிசைந்தா லேவப் பெறுவதே!யிதனுக் குள்ளங்
கம்பியா தவனே யான்முன் காணுநா ளெந்நா?" ளென்று, 386

3539. **(இ-ள்)** ஒரு பெண்ணினிடத்துச் சாரும் காதல் காரணமாக ஒருவன் ஏவியதனுல் அதற்குட்பட்டு நிலத்தின் மேல் நடந்து சென்று செம்மையாகிய திருவடித் தாமரைகள் நோம்படி, தேர் செல்லும் அணிவீதியின் வழியே போவதும் வருவதுமாகி ஓர் இரவு முழுமையும் ஒப்பற்ற ஆண்டவர் தூதாக உழல்வாராம்! என்று கூறி,

(வி-ரை) ஏவ - ஏவியதனுலே.

காரிகை...காதலால் - பெண்ணிடத்துச் சாரு மாசையால் என இழிவுக்குறிப்பும், ஒருவன் - என இகழ்ச்சிக் குறிப்பும் படக் கூறியதாம். **காதலால் ஏவ** - பெண்ணிடம் சாரும் ஆசையால் மயங்கி விதி விலக்குக் கடந்து ஏவ என்பதாம்.

நோவ நடந்து - செல்வதும் - வருவதும் ஆகி - என்க; அருமைபட இரங்கிக் கூறியதாம். **பாத தாமரை** - தாமரை போன்ற பாதம்; **தாமரை** மலருக்காயிற்று.

தேரணி வீதியூடு - தேரிலும் ஏனைய அயிராவணம், இடபம் முதலிய ஊர்திகளிலும் ஊர்ந்து செல்வதன்றி இறைவரை நிலமுற நடந்து செல்லக் கண்டறியாத வீதியில் என்பது குறிப்பு. தேரோடுகின்ற அழகிய திருவீதி; "ஆழித்தேர் வித்தகன்" (தேவா).

ஒருவர் ஓர் இரவெல்லாம் உழல்வராம் - என்க; **ஒருவர்** - ஒப்பற்றவர் என்ற அருமைப்பாடு; முன் **ஒருவன்** என்றும், இங்கு **ஒருவர்** என்றும் கூறும் வேற்றுமை கண்டு கொள்க.

உழல்வராம் - ஒருவன் ஏவ - ஒருவர் - நடந்து - இரவெல்லாம் உழல்வாராம்; இதுவும் செய்யத் தகுந்ததொரு காரியமாமோ! என்று செற்றமும் பரிவும் பற்றி அச்செயலைப் பன்னிப் பன்னிக் கூறியது.

ஓர் இரவெல்லாம் - என்றது கால நீட்டிப்பையும், **வீதியூடு** - என்றது இட நீட்டிப்பையும், **பாத தாமரை நோவ நடந்து** - என்றது முயற்சி நீட்டிப்பையும், **செல்வது வருவதாகித் தூதுக்கு உழல்வதாம்** - என்றது செயல் நீட்டிப்பையும் செயலின் தாழ்வு நீட்டிப்பையும் குறிப்பாலுணர்த்தின. 385

3540. **(இ-ள்)** நம்பர்... நண்ணினுரேல் - இறைவர் தாம் அடியார் துன்பம் பொறுது எழுந்தருளி வந்தாராகில்; உம்பரார் கோனும்... ஏவப் பெறுவதே - தேவராசனுகிய இந்திரனும் விட்டுணுவும் பிரமனும் நேர் உணரவும் இயலாதவராகிய எமது பெருமான் அவ்வாறிசைந்து வந்தாலும் ஏவுதல் செய்யலாமோ?; இதனுக்கு... எந்நாள் என்று - இப்பாவச் செயலுக்கு மனநடுங்காதவனே என் முன்னே காணும் நாளும் எந்நாளோ? என்று சொல்லி;

3541. "அரிவைகா ரணத்தி ஞலே யாளுடைப் பரமர் தம்மை
இரவினிற் றூது போக வேவியங் கிருந்தான் றன்னை
வரவெதிர் காண்பே ஞகில் வருவதென் ஞங்கொ?"லென்று
விரவிய செற்றம் பற்றி விள்ளுமுள் ளத்த ராகி, 387

(வி-ரை) அடிமை ஆற்ருராகியே - தாம் அடிமை நெறியினில் நின்று ஒழுகிக் காட்டுபவராகியே; **ஆறு** - நெறி என்றலுமாம். **அடிமையற்ருராகியே** - என்பது பாடமாயின் தாழ்வாகிய இச்சிறு வேலையைத் தானும் ஏவிச் செய்விப்பதற்குரிய அடிமைகள் ஒருவரும் தமக்கு இல்லாது தாமே போந்தாராஞலும் என்றுரைக்க. நம்பர் தமக்கு அடிமை செய்வாராக வேறு அடிமையற்றுப் போய்த் தாம் இவ்வாறு இகழ்வு செய்தேனும் இவ்வடியவனைப் பெறவேண்டு நிலையினில் வந்தாராயினும் என்றலுமாம்; **ஆறு** - வழி.

இசைந்தால் - பெரும் கருணையினல் இசைந்தாலும் என்க. சிறப்பும்மை தொக்கது.

ஏவப் பெறுவதே? - ஏகாரம் வினு; ஏவப் பெறுவது தக்கதன்று என எதிர் மறைப் பொருள் தந்தது. **ஏவப்பெறுதல்** - ஒரு சொல்.

இதனுக்கு... எந்நாள் - இப்பெரும் பிழையைச் செய்ய மன நடுங்காதவனைக் காணுவதும் ஒரு நாளோ?

கோனும் மாலும் அயனும் - எண்ணும்மைகள். சிறப்பு முணர்த்தின.

உள்ளங் கம்பியாதவன் - ஏனை எவர்களுக்கும் மன நடுங்கும் இச்செயலைச்சிறிதும் நடுங்காது செய்தவன்.

முன் - கண்ணுற் காணும்படி; "தீயாரைக் காண்பதுவும் தீது" என்பாராகலின் அவ்வாருகிய பெருந்தீங்கு என்பார் **காணுநாள்** - என்ருர். 386

3541. (இ-ள்) "அரிவை... என்ஞங் கொல்" என்று - பெண்ணின் பொருட்டு ஆளுடைய பரமசிவனை இரவிலே தூது செல்லும்படி ஏவி அங்கே இருந்தவனை என் எதிர்வரக் காண்பேஞகில் என்ன விளைந்துவிடுமோ? என்று; விரவிய... உள்ளத்தராகி - மூண்ட சினத்திஞலே வெடிப்பது போன்று விம்மும் உள்ளத்தினை யுடையாராகி;

(வி-ரை) அரிவை காரணத்திஞலே - இகழ்ச்சிக் குறிப்புப்படக் கூறியது. முன்னும் (3539) கூறியது காண்க. **அரிவை** - பெண்ணின் ஊடல் தீர்க்கும் என்க.

ஏவி அங்கு இருந்தான் - ஏவி அதன் பின்னும் உயிர் தாங்கியிருந்தான் என்றதும் குறிப்பு; ஏவியபின், வீதியில் அவர் நடக்கவும் தான் இருந்த விடத்தே சுகமாய் இருக்கவும் உள்ளவன் என்பதும் குறிப்பு. **அங்கு** - பரவையார் மாளிகையில் என்றலுமாம்.

இரவினில் - உலகியல் ஏவலாளரும் தொழில் செய்யாத இரவினில் ஏவி.

வரவெதிர்... என்ஞங்கொல் - எதிர் வரக் காண்பேஞகில் என்க; **எதிர்வர** - தாம் அவரைக் காணச் செல்வதில்லை யாயினும் அவரே வரக்கண்டால் என்க. **இருந்தான்** -

3542. ஈறிலாப் புகழி னோங்கு மேயர்கோ னூர்த **மெண்ணப்**
பேறிது பெற்றார் கேட்டுப் பிழையுடன் படுவா ராகி
வேறினி யிதற்குத் தீர்வு வேண்டுவார் விரிபூங் கொன்றை
ஆறிடு சடைய ருக் **கதனைவிண் ணப்பஞ் செய்து,** 388

இருந்தவன் - வினைப்பெயர்; அவரது பெயராற் கூறுது இவ்வாறு கூறியது செற்றம்பற்றி; அங்கு இருந்தானை இங்கு வர என்க; விதிவசத்தாற் காண நேரின் என்க. **எதிர்** - என் கண்ணெதிர்; **வருவது** - விளைவது; **கொல்** ஐயப்பொருள் தரும் இடைச் சொல். **என்னாங்கொல்** - வினு என்ன கொலைப்பழி விளையுமோ; என்ற நயங்குறித்தது. **சிவாபராதத்தினைக் கண்டபோது அது செய்தாரைக் கொல்லுதலும், அது கூடாதபோது தாம் இறந்து படுதலும், அல்லது அவ்விடம் விட்டகலுதலும் செய்க என்பது விதியாதலின்** இவற்றுள் எது செய்ய நேருமோ என்பார் **என்னும் கொல்** என்றார். **கொல்** - (ஏவல்) கொல்லுதலே துணியத்தக்கது என்ற குறிப்புப்பட நிற்றல் காண்க; யாரைக் கொல்வது என்ற செயப்படுபொருள் வெளிப்படாமையின் தம்மையே கொல்க என்ற உட்குறிப்பும் கொண்டது. பிற் சரித விளைவில், நம்பிகளே எதிர் வரவும், அதனைக் காண்பதற்கு முன் கலிக்காமனார் தம்மையே கொலைசெய்து கொள்வதும் ஆகிய நிகழ்ச்சிகளின் முற் குறிப்பும் காண்க. **தூய அன்பின் விளைந்தெழுபவை மெய்த்திருவாக்குக்களாகப் பின்னர் பலிப்பது நியதி.**

விரவிய செற்றம் - பொருந்தத் தக்க; தகாத சினமே விலக்கத் தக்கது; இஃது அவ்வாறன்றி அன்பின் பெருக்காற் பொருந்த வருவது என்பதாம்; **விரவுதல்**- பொருந்துதல்; **செற்றம்** - செறுத்தலினை உட்கொண்டு பின்னர் விளைவிக்கும் நிலைக்குறிப்பு.

விள்ளும் உள்ளம் - விள்ளுதல் - பிளந்து வேறுபடுதல்; உள்ளே மூண்டெழுதல்; **உள்ளத்தராகி ஓங்கும்** - என வரும் பாட்டுடன் முடிக்க. **விள்ளுதல்** - சொல்லுதல் என்று கொண்டு, மனமானது உள்ளே நின்று கூற என்றலுமாம். **உள்ளம்** என்ற குறிப்புமது.

387

3542. **(இ-ள்)** ஈறிலா...கேட்டு - எல்லையில்லாத புகழுடனே ஓங்கும் ஏயர்கோன் கலிக்காமனாருடைய இவ்வாறு எண்ணப்படுவதாகிய இப்பேற்றினைத் தமக்குரிமையாகப் பெற்ற நம்பிகள் இதனைக் கேட்டு; பிழை உடன்படுவாராகி - தாம் செய்தது பிழை என்று உடன்படுவாராய்; வேறு இனி...வேண்டுவார் - இனி இதற்கு வேறாகத் தீர்வுதன்னை வேண்டுவாராய்; விரிபூங் கொன்றை... விண்ணப்பஞ் செய்து - விரிந்த அழகிய கொன்றையினையும் கங்கையினையும் அணிந்து கொண்ட சடையினையுடைய சிவபெருமானிடம் அதனை விண்ணப்பம் செய்து,

(வி-ரை) ஈறு இலாப் புகழினோங்கும் - புகழ் - விள்ளும் உள்ள முடைமையே **புகழ்** எனப்பட்டது.

ஓங்கும் - என்றது இப்புகழினால் அதுவே ஆறாக அந்நம்பிகளுக்கு நண்பருமாகும் பெருமையினை இனிப் பெற நிற்பது குறித்தது;“தூது விட்டவர்க்கே நண்பாம் வள்ளலார்”

3543. நாடொறும் பணிந்து போற்ற நாதரு மதனை நோக்கி
நீடிய தொண்டர் தம்மு ளிருவரு மேவு நீர்மை
கூடுதல் புரிவா ரேயர் குரிசிலார் தம்பான் மேனி
வாடுறு **சூலை தன்னை யருளினர்** வருந்து மாற்றல். 389

(3563) என்று ஆசிரியர் இதனை அவரது **புகழின்** சிறப்பாக எடுத்து முடித்து வடித்துக் காட்டி யருளுதல் காண்க.

எண்ணப்பேறு - எண்ண வருவதாகிய பேறு; செற்றம் பற்றிய நிலையே பேருகும் என்பதாம். பெரியோர்களது திருவுள்ளத்தினுள் எவ்வாறேயாயினும் **எண்ணம் வரப் பெறுதலே ஒருவருக்குச் சிறந்த பாக்கியம் என்பதும்**, அதுவே அவனுக்குத் திருந்தும் வழி தருவதாகும் என்பதும் மூதறிஞர் துணிபு; "கூவிப் பணிகொள்ளாது ஒறுத்தா லொன்றும் போதுமே" (திருவா);

பேறிது பெற்ருர் - நம்பிகள்; கலிக்காமஞர் **செற்றம் பற்றி எண்ணியதனைப் பேறெனக் கொண்ட பெருமை வாய்ந்தவராதலின் அவ்வாற்ருற் கூறினர்.**

பிழை உடன் படுவாராகி - தாம் செய்தது பிழை என்பதனை உடன்பட்டு ஒப்புக்கொள்வாராகி; நம்பிகளது இப்பெருந்தன்மை உலகுக்கு வழிகாட்டி நிற்பதாம். இது கண்டு தக ஒழுகினல் மக்கள் நலம் பெறுவர் என்பது துணிபு.

இனி இதற்கு வேறு தீர்வு - என்க; **தீர்வு** - கழுவாய்; பிராயச்சித்தம் என்பது வடமொழி வழக்கு; **இனி** - தீங்கு நிகழ்ந்து விட்டமையான் மேற்செய்யக் கடவது என்பதாம். **வேறு தீர்வு** - சிவாபாரத மாதலின் ஏனைய பழிகள் போலன்றித் தனித்திறம் படைத்த பெருங் கழுவாய் வேண்டப்படுவதென்றபடி. **இதற்கு** - சிவாபாரதத்துக்கு - கலிக்காமஞரது; செற்றத்துக்கு என்றலுமாம்.

வேண்டுவார் - வேண்டுவாராகி; முற்றெச்சம்.

விரிபூ...விண்ணப்பஞ் செய்து இறைவரால் ஆளாகக் கொள்ளப்பட்டாராதலின் தாம் வேண்டுவனவற்றை யெல்லாம் அவர்பால் விண்ணப்பித்தே பெறும் நியமம் குறித்தது; அன்றியும் சிவாபாரதத்துக்கு அவனருளே யன்றி வேறு கழுவாய் நூல்களுள் வகுக்கப்படாமையின் சடையார்பால் விண்ணப்பித்தனர் என்றலுமாம்; **சடையார்** - பிழைத்தாரையும் பொறுத்தற்கிடமாகிய சடை என்றது குறிப்பு.

விண்ணப்பஞ் செய்து போற்ற - என வரும்பாட்டுடன் முடிக்க. 388

3543. (இ-ள்) நாடொறும் பணிந்து போற்ற - நாள்தோறும் வணங்கித் துதிக்க; நாதரும்...புரிவார் - இறைவரும் அதனைத் திருவுளங் கொண்டு அன்பினல் நீடிய தொண்டர்க ளிருவரும் தம்முள் நண்பு பூண்டு பொருந்தும் நீர்மையினைக் கூடுமாறு அருள் செய்வாராய்; ஏயர் குரிசிலார்...வருந்துமாற்றல் - ஏயர் கோனர்பால் அவர் திருமேனி வாடும்படி வருந்தச் செய்யும் வழியினலே சூலை நோயினை அருளிச் செய்தனர்.

இவ் வெட்டுப் பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) நாடொறும் பணிந்து போற்ற - முன் கூறியவாறு விண்ணப்பித்துத் துதிக்க; **ஆன்மார்த்த பூசையில் ஆளுடையார்பால் வேண்டுவனவற்றை விண்ணப்பிக்கலா மென்றும், ஒன்றும்வேண்டாது பூசித்துப்பூசையின் பலனையும் அவர் பாலே அர்ப்பணம் செய்தல் வேண்டுமென்றும் இவ்வாறு இரண்டு மரபுகளுண்டு.** இவை காமியம், நிட்காமியம் எனப்படுவன. சிவபூசையில் இலயாங்கம் போகாங்கம் என்றவற்றுள், இலயாங்க பூசை என்ற பகுதியின் இறுதியில், "வேண்டுவனவற்றை விண்ணப்பிக்க" என்று சிவாகமங்கள் விதிக்கின்றன. அம்முறை பற்றி நாள்தோறும் நம்பிகள் தம் ஆளுடையாராகிய ஆரூர்ப் பெருமானிடம் விண்ணப்பித்துப் போற்றினர் என்க. திலகவதியம்மையார் தமது தம்பியாராகிய மருணீக்கியார் பொருட்டுச் "சுடரொளியைத் தொழுதென்னை, ஆண்டருளி நீராகி லடியேன்பின் வந்தவனை, ஈண்டுவினைப் பரசமயக் குழிநின்று மெடுத்தருள, வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனர்" *(1311)* என்ற வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது.

நாடொறும் - இவ்வாறு ஒரு நாளன்றிப் பல நாளும் இடை விடாது என்க.

நாதரும் - அதனை நோக்கி - நோக்கி - திருஉள்ளத்திற் கொண்டு ஆளும் கருணை கூர்ந்து; **நோக்குதல்** - அதனுள் ஊன்றிக் கருதுதல்.

நீடிய - அன்பினால் நீடிய; பழமையால் நீடிய என்றலுமாம்; அன்பினால் நீடுதலாவது இறைவர்பால் வைத்த அன்பின் பெருக்கமொன்றே காரணமாகப் பெருகுதல்; ஈண்டு, உயர்குடியிற் பிறந்து விளங்கும் கலிக்காமனார் நம்பிகள் பாற் செற்றங் கொண்டு பிணங்கியதும், நம்பிகள் அதனை உடன்பட்டதும் ஆளுடைய இறைவர்பால் வைத்த அழுந்திய அன் பொன்றே காரணமாய் நிகழ்ந்தமை குறிக்க; தொண்டின் றிறத்தில் நீடிய காலத்தால் மிகப் பழையதாகிய; இருவர் பாலும் நீடிய தொண்டு, நம்பிகள்பால் வழிவழி யடிமை செய்யும் வேதியர் என்றதும், "ஆளாயினி யல்லே னெனலாமே" என்றதும், கயிலையிலும் பணி செய்தமையும், காண்க; கலிக்காமனார்பால் "எந்தை தந்தை தந்தையெங் கூட்டமெல்லாம், தம்பிரா னீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும், இம்பரின் மிக்க வாழ்க்கை **யென்னை**" *(3546)* என்ற அவரது திருவாக்குக் காண்க.

தம்முள் இருவரும் மேவும் நீர்மை கூடுதல் - ஒருவருள் ஒருவர் நட்புரிமையிற் பொருந்தும் தன்மையினை விளைவித்தல்; **இருவரும்** - இங்கு நம்பிகள் மட்டில், பிழையுடன்பட்டுக் கலிக்காமனார்பால் நட்புக் கொண்டனர்; கலிக்காமனார் நம்பிகள் பால் வெறுப்பும் சீற்றமும் கொண்டனர்; இவ்வாறு இருவருள் ஒருவர் மட்டிலன்றி **இருவரும்** என உம்மை முற்றும்மை. **மேவும்** - அன்புடன் கலந்திருக்கும் - **நீர்மை** - தன்மையைத் திருவுளங்கொண்டு; **கூடுதல்** - ஒன்று சேர்தலை; **புரிவார்** - செய்ய விரும்புவாராகி;

ஏயர் குரிசிலார்...வருந்துமாற்றால் - பிழை யுடன்பட்ட நம்பிகள்பால் அதனை மாற்றும் நிலை புரியாது கலிக்காமனார்பால் இறைவர் சூலை தந்து வருத்திய நிலை என்னையோ? எனின், "ஆட்பா லவர்க் கருளும் வண்ணமும் மாதி மாண்புங், கேட் பான்புகி லளவில்லை கிளக்க வேண்டா" (தேவா) என்பது திருஅருள் ஆணை; ஆதலின் அதுபற்றி நாம் ஆராய்தற்குரிய

3544. **ஏதமில் பெருமைச் செய்கை** யேயர்தம் பெருமான் பக்கல்
ஆதியா ரருளு சூலை யினல் செய்வேல் குடைவ தென்ன
வேதனை மேன்மேற் செய்ய மிகவதற் குடைந்து வீழ்ந்து
பூதநா யகர்தம் **பொற்ருள் பற்றியே** போற்று கின்ருர், 390

ரல்லோம். இனி, இதுவேயுமன்றி, இறைவர் தாமே சிவமும் சத்தியுமாயிருந்து எல்லாவுயிர்களுக்கும் போகங்களைக் கூட்டுவித்து நுகரச் செய்தருளுகின்ருர்; போகங்கள் நுகர்தற்குரிய உடலையும் கரணங்களையும் போக பண்டங்களையும் தம் சத்தி கொண்டு தாமே கொடுத்தருளிப் போக நுகர்ச்சிக் கண்ணே துணையும் செய்கின்ருர்; "போகியா யிருந்து யிர்க்குப் போகத்தைப் புரித லோரார்" (சித்தி 1-70) என்று உடன் பாட்டிலும், "வில்லாடன் மார னிருப்பவும் யோகம் விளைத்த வந்நாட், புல்லா திருந்தன வெல்லா வுயிருந்தம் போகத்தையே" என இறைவர் செயலன்றியில்லை என்று எதிர் மறையிலும் இவ்வுண்மைகள் பேசப்படுதல் காண்க; அகப்பொருளிலும், இயற்கைப் புணர்ச்சி என்ற பகுதியில் "அன்ன மென்னடை யரிவையைத் தந்த, மன்னிருந் தெய்வத்தை மகிழ்ந்துரைத்தது" என்னும் கருத்துடைய "தெய்வத்தை மகிழ்ந்தது" என்ற துறையினை விளக்கும் "கிளைவயி னீக்கியிக் கெண்டையங் **கண்ணியைக் கொண்டுதந்த,** விளைவையல்லால்விய வேனய வேன்றெய்வ மிக்கனவே" (6) என்ற திருக்கோவையாரும் காண்க; ஈண்டு நம்பிகள் பாற் பிரிவு புலவி - தூது முதலியவற்ருல் வரும் துன்பம் உலகியல் நோக்கிற்கு அவ்வாறு காணப்படினும், உண்மை நிலையில் இடையருத சிவயோக நெறி நின்ற அப்பரமாசாரியர்பால் அவை சாராத தன்மையும் நாம் மனங்கொள்ளத்தக்கதாம். கலிக்காமனுர் அவைபற்றிச் செற்றங்கொண்ட நிலை அவற்றை உலகியல் வழக்கினளவில்வைத்துக் கண்டதனு லாகியதேயன்றி மற்றில்லை;"காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" (தேவா) என்றபடி இவ்வுண்மைகளைக் கலிக்காமனுருக்கு இறைவர் காட்டியருளுதலே இச்சரித நிகழ்ச்சியாம் என்க. ஆயின் இவ்வாறு காட்டி அறிவிக்கும் உபதேசம் ஈண்டுக் கலிக்காமருக்குச் சூலை வர, அவர் வாள் கொண்டு வயிற்றைக் கிழிக்க, அதுகண்டு நம்பிகள் தாமும் முடிவேனென்று அவ்வாளைப் பற்ற, **அருளினல்** கலிக்காமனுர் உய்ந்து எழுந்து நம்பிகள் செயலைமாற்றி நட்பாயின நிலைமைகளின் விளைவால் உளதாயிற்று; வேறு அறிவிப்பு மொழிகளாலன்று என்பதும் கண்டுகொள்க. போகங் கூட்டுவிக்கும் எல்லாவுயிர்களுக்கும் இவ்வாறு நிகழ்தலில்லையே எனவும், கலிக்காமனுரை வருந்தச் செய்யாது வேறு வழியால் இறைவர் அறிவித்திருக்கலாமே எனவும் மேலும் மேலும் வினவுதல் திருவருள் செல்லும் வழிகள் மனிதர் அறிவுக்குள் அகப்படாமையினை அறியாதார் செயலே யாமென்றொழிக. (3557—3559 பார்க்க); கலிக்காமனுர் விதிவழியே இறைவர்பால் வைத்த அன்பு காரணமாகவே செற்றங்கொண்டாரேனும் இறைவரது திருவருள் உயிர்களிடத்து நிகழும் வழிகள் பலவே ருதலும், நம்பிகளது சிவயோக நிலையும், அவர் உலகினைத் தெருட்டி ஆட்கொள்வதற்கு இறைவரது பணியினுல் வந்த நிலையும் மேல் இறைவரால் காட்டியருளப் பெறும் தன்மையில் விளங்கினர் என்பதும் ஈண்டு மனங் கொளற்பாலன; இறைவர் செய்யும் நிக்கிரகங்கள் அருளின் பாலனவேயாம் என்ற சிவாகம ஞானநூல் முடிவாகிய உண்மையும் இங்குக் கருதப்படுதல் வேண்டும்; இங்கு **"அருளினுர்"** என்ற குறிப்புமது. அன்றியும், இறைவரது திருவருட் செயல்கள் மக்களின் பசுபோதங் கொண்டு ஆராயத்தக்கன என்று புகுதலும் பிழையாகு மென்க.

வாடு - முதனிலைத் தொழிற் பெயர்; **தன்** - சாரியை;**அருளினர்**- கருணை பாலித்தார் மறக்கருணை.

வருந்துமாற்றால் அருளினர் என்க; **ஆறு** - இங்கு அறிவுறுத்தும் வழி என்ற பொருளில் வந்தது; **வருந்தும்** - வருந்தச் செய்யும் என்று பிறவினைப் பொருள் கொள்க. "மருத்துவன் சில வியாதி - **அறுத்துக் கீறித் தீர்த்திடும்;** சில நோய் - கட்டி - பாலும் கலந்துடன் கொடுத்துத் தீர்ப்பன்" (சித்தி-2-33) என்ற உண்மை இங்கு காணற்பாலது. 389

3544. **(இ-ள்)** ஏதமில்... பக்கல் - குற்றமில்லாத பெருமை கொண்ட செய்கையினையுடைய ஏயர் பெருமானிடம்; ஆதியார்... செய்ய - இறைவர் அருளிய சூலையானது அனலிற் காய்ச்சிய வேல்குடைவது போல மேன்மேலும் வேதனையைச் செய்ய; மிக அதற்கு... போற்றுகின்றார் - அதற்கு மிகவும் உள்ளுடைந்து வருந்தி விழுந்து பூதநாயகராகிய சிவபெருமானுடைய பொன்னடிகளைப் பற்றிக் கொண்டு துதிப்பாராகி,

(வி-ரை) ஏதமில் பெருமைச் செய்கை - இறைவர்பாலே தமது உயிரினும் சிறந்த அன்பு பூண்டு அதன்வழியே ஒழுகிய தொண்டின் உறைப்புடையாராதல் குறிப்பு. சரித நிகழ்ச்சியின் பல பகுதிகளிலும் வைத்து இத்தன்மை விளங்கக் கண்டு கொள்க. **பக்கல்** - பக்கம்; மொழியிறுதிப் போலி;

அருளும் சூலை - அருளுருவாகி வந்ததென்பது குறிப்பு. முன்பாட்டில் **அருளினர்** (3543) என்றதும், ஆண்டுரைத்த குறிப்புக்களும் காண்க; ஆளுடைய அரசுகள் பக்கல் இறைவன் சூலை நோய் அருளிய வரலாறுகள் ஈண்டு நினைவு கூர்தற்பாலன; "மலையாள் மணவாளன் மலர்க்காழல் வந்தடையு, மிவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர்செய் குறை யென்கொல்?" (1338) என்று அரசுகள் சூலையினைப் போற்றிய தன்மையும் கருதுக. **அருளும்**- "சூலை வேதனை தன்னைக் கண்டரு நெற்றிய ரருள" (1314)

அனல் செய் வேல் குடைவ தென்ன - அனல் செய் - அனலிற் காய்ச்சுதலைச் செய்யப்பட்ட; **செய்** என்பது காய்ச்சுதலைச் செய்யப்பட்ட என்ற பொருளில் வந்தது; காய்ச்சுதல் இடநோக்கி அவாய் நிலையான் வந்தது; **செய்** - செயப்பாட்டு வினை;**அனல்** - ஏழனுருவு தொக்கது; **அனல் செய்** - அனலின் தன்மை செய்ப்பட்ட என்றலுமாம்.

அனல் செய் வேல்குடைவது - உள்ளே கூரிய உளைதல் செய்து வேதனை விளைத்தற்குவமை; கூரிய வேல் ஒன்றே போதிய தாயினும் விரைவும் சுடுவேதனையும் கூடி வேதனை மிகுதற்கும் அனல் செய்தலும் சேர்த்துக் கூறினார். அது போலச் சூலைநோ யொன்றுமே தன்னியல்பில் உட்குடைந்து வேதனை செய்யப் போதியதாயினும், ஆதியார் அவ்வாற்றால் அருளுதலினால் அது விரைவும் மிகுதிப்பாடும் பெற்ற தென்ற பொருளிலும் வைத்துக் கண்டுகொள்க; இக்கருத்தினை "இன்னம் புண்செய் நோவின் வேலெறிந்தாற் போலும் புகல்வதொன்றென்றார்" (சிறுத்.புரா-50-3709) என்று மேல் வேறோருவமையில் விளக்குதல் காண்க. இவ்வரிய உவமை நயத்தினையே "எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன் மருமத்தி னெறிவேல் பாய்ந்த, புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா லெனச் செவியிற் புகுத லோடும்" என்று கம்பன் எடுத்தாண்டு மேலும் விளக்க முயலுதல் காண்க. **என்ன** - உவமவாசகம்.

3545. **சிந்தையால் வாக்கா லன்பர் திருந்தடி போற்றி செய்ய**
எந்தமை யாளு மேயர் காவலர் தம்பா லீசர்
"வந்துனை வருத்துஞ் சூலை **வன்றொண்டன் றீர்க்கி லன்றி**
முந்துற வொழியா" தென்று மொழிந்தருள் செய்யக்கேட்டு, 391

உடைந்து - உடைதல் - உள்ளே உடல் வலி சிதறி நைதல்.

பூதநாயகர் - பூதம் - உயிர்கள்; "பூத பரம்பரை பொலிய" (*1898*); உயிர்களைக் காக்கும்தலைவர்; இடநோக்கிக் காக்கும் கடமைப்பாடு பற்றிக் கூறினார்.

பூதம் - சிவ பூதங்கள் என்றலுமாம். **பற்றி** - சரணாகக் கொண்டு;

போற்றுகின்றார் - இதனை மேற்பாட்டில் விரிக்கின்றார்; முற்றெச்சம்; **போற்றுகின்றாராகிப் - போற்ற** என்க. **போற்றுதல்** - ஈண்டு வழிபடுதல் துதித்தல் என்ற பொருளில் வந்தது.

ஏவும் சூலை—என்பதும் பாடம். *390*

3545. **(இ-ள்)** அன்புடைய அந்த வேயர் பெருமானார் மனத்தாலும் வாக்கினாலும் இறைவரின் சீர்செய்யும் திருவடிகளைப் போற்ற; எந்தமை...ஈசர்- எமது தலைவராகிய ஏயர்கோனார் பக்கம் இறைவர் எழுந்தருளி; வந்து உன்னை...அருள் செய்ய- வந்து உன்னை வருத்துகின்ற சூலைநோய் வன்றொண்டன் தீர்த்தாலான்றி வேறு வழியால் முன்னால் நீங்காது என்று மொழிந்து அருளிச் செய்ய; கேட்டு - அதனைக் கேட்டு,

(வி-ரை) சிந்தையால்...போற்றி செய்ய - நோயினால் உள்ளுடைந்து உடல் வீழ்ந்துவிட்ட படியால் மனத்தாலும் வாக்கினாலும் என்று மன மொழிகளிரண்டுமே கூறினார்; **அன்பர்** - கலிக்காமனார்.

திருந்து அடி - உயிர்கள் திருந்துதற் கேதுவாகிய அருள் புரியும் திரு அடி; திருத்தும் என்பது.

எந்தமை ஆளும் - எம் தலைவர்; **ஆளுதல்** - பத்தி வைராக்கிய நெறியினை உலகுக்குக் காட்டி வழிப்படுத்துதல்; நாயனார் என்ற தன்மையின் பொருள்.

வந்து உனை வருத்தும் - நம் அருளினாலே உன்பால் வந்து என்பது குறிப்பு. **வந்து** - உன் உடல்பற்றின நிலை முதலிய உலகியற் காரணங்களாலன்றி மற்றொரு வகையான் அருளப்பட்டு வந்து என்ற குறிப்புந் தந்து நின்றது. ஈசர் வந்து என்று கூட்டி உரைத்தனர் முன் உரைகாரர்கள்.

தீர்க்கிலன்றி - ஒழியாது - எதிர்மறையாற் கூறியது உறுதி குறித்தற்கு; **முந்துற** -முன்னே; முற்பட - விரைவாக; இங்கு இறைவர் அருளிய இவ் வெருளில் மெய்மொழி பின்னர் நிகழ்ச்சியில் வன்றொண்டர் தீர்க்காமலே தீர்ந்தமையாற் பிழைபடுமோ? எனின், படாது; என்னை? நோய் தீர்தல் உடலினுள் உயிர் இருக்கும் நிலையினன்றி உயிர் தீர்ந்து

3546. "எம்பிரா! **னெந்தை தந்தை தந்தையெங் கூட்ட மெல்லாந்**
தம்பிரா னீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும்
இம்பரின் மிக்க வாழ்க்கை யென்னைநின் றீருஞ் சூலை
வம்பென வாண்டு கொண்டா னொருவனே தீர்ப்பான் வந்து!" 392

போந்த நிலையினன்று; உயிர் போமாயின் அது நோய்த்தீர்வெனப் படாது; இதுபற்றியே மேல் "உயிரி னேடுஞ் சூலையும் தீர்ந்ததன்றே"(*3551*) என்பாராயினர்; ஈண்டு **முந்துற** என்றது வன்றெண்டன் தீர்க்கிலன்றி உயிர் போவதன் முன் தீர்வு பொருந்த என்ற குறிப்பும் தந்து நிற்றல் காண்க. வன்றெண்டன் வரவினல் உயிர் போக உடன் தீர்தலன்றி இச்சூலை அதன் முன்னர் ஒழியாது என்னும் குறிப்பும் காண்க.

மொழிந்தருள் செய்ய - சூலை தந்தருளியதே யன்றி மொழிந்தும் அருளிச் செய்தனர். எச்சவும்மை தொக்கது; இம் மொழியும் சூலை போலவே மிக்க வேதனைக்கிடமாதலும், அதனுலே நாயனுர் வாள் கொண்டு குடர்கிழித்து உயிர் நீத்தலும் பின்னிகழ்ச்சிகளாதல் காண்க. *391*

3546. **(இ-ள்)** எம்பிரான்! எம் பெருமானே!; எந்தை தந்தை... என்னை - எனது தந்தையும் அவர் தந்தையும் மேலும் அவர் தந்தையும் எமது கூட்ட முழுவதும் எங்களைக் காக்கும் பெருமானுர் தேவரீரே என்று வழிவழியாகத் தேவரீரது திருவடிச் சார்புபற்றியே வாழ்ந்து வருகின்ற இவ்வுலகிற் பெருகிய வாழ்க்கையினையுடைய இத்தன்மையனுகிய என்னை; நின்று...வந்து - பெருகி நின்று வருத்தும் சூலையினை வம்பாகத் தேவரீரால் ஆண்டுகொள்ளப்பட்ட ஒருவனே வந்து தீர்ப்பவன்?

(வி-ரை) எம்பிரான் - எம் பெருமானே!; விளி முன்கூறியபடி முன்னின்று மொழிந்த இறைவரை நோக்கிக் கூறியது.

எந்தை...வழிவழிச் சார்ந்து வாழும் - என் தந்தையும், அவர் தந்தையும், தந்தை இன்னும் இருமரபும் பற்றி எல்லாரும் என்க. **வழிவழிச் சார்ந்து** வழி வழியாகத் தொடர்பு விடாமற் சிவச்சார்பு பூண்டு. **நீரே** ஏகாரம் தேற்றம்; பிரி நிலையுமாம்.

கூட்டம் - குலம் - குடும்பம்.

வாழும் இம்பரின் மிக்க வாழ்க்கை அது பற்றி வாழ்ந்து வருவதனுல் உலகில் சிறக்க நிகழும் வாழ்க்கை;"மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையினுர்" (*1915*) என்றும், "மறிவளருங் கையார் பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மையினுன்" (*2210*) என்றும், இவ்வாறு வருவன பலவும் காண்க. **இவ்வாறு எண்ணும் திறமும் தகுதியும் விளங்கப் பெருமை கொள்ளுதலே அன்பின் றிறமாய் ஒருவனைச் சிவனடிச் செலுத்தி உய்விக்க வல்லது;** இவ்வெண்ணங்கள் தாமும் இந்நாள் மக்களுள் மறைந்து வருதல் வருந்தத் தக்கது.

என்னை பெருமிதம் படக்கூடிய திறம். **தம்பிரான்** - தங்கட்குக் கடவுள்;

வம்பென ஆண்டு கொண்டான் ஒருவனே - கூட்டமெல்லாம் வழிவழிச் சார்புடன் வாழ்ந்து வரும் என்னோயினை அவ்வாறன்றி இன்று புதிதாகவும் வலிந்தும் ஆட்கொள்ளப்பட்ட

3547. "மற்றவன் றீர்க்கிற் றீரா தொழிந்தெனை வருத்த னன்ருல்;
பெற்றமே லுயர்த்தீர்! செய்யும் பெருமையை யறிந்தா ரியாரே?
உற்றவன் ரெண்டற் கேயா முறுதியே செய்தீ" ரென்னக்
கற்றைவார் சடையார் தாமு மவர்முன்பு கரந்தா ரன்றே. 393

ஒருவனே வந்து தீர்ப்பவன்; தீர்ப்பது தகுதியாமா? ஆகாது. என ஓகாரவினு எதிர்மறைப் பொருள் தந்தது.

வம்பு - எவரும் செய்யாத புதுமை; வல்வழக்கு என்ற குறிப்பும் தருவது; **ஒருவனே** இகழ்ச்சிக் குறிப்புப்பட நின்றது. **ஏ**-வினு;

கொண்டான் -கொள்ளப்பட்டான்; செயப்பாட்டு வினை. 392

3547. **(இ-ள்)** மற்றவன்...நன்ருல் - மற்று அந்த வன்ரெண்டன் தீர்ப்பதினும் அந்நோய் தீராமல் என்னை வருத்தலே நன்ருகும்; பெற்றமேல்...யாரே - இடபக் கொடியினை உயர்த்த பெருமானே! தேவரீர் செய்யும் அருளிப்பாடுகளின் பெருமையினை யாவரே அறிந்தவர்?; உற்ற...செய்தீர் என்ன - புதிதாகப் பொருந்திய வன்ரெண்டனுக்கே ஆகின்ற உறுதியினையே செய்தீர் என்று கூறி வருந்த; கற்றை...அன்றே - கற்றையாக நீண்ட சடையினையுடைய பெருமானும் அவர் முன்பு நின்றும் அப்பொழுதே மறைந்தருளினர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மற்றவன் - அருணெறி வழியடிமைத் திறத்தின் வேருகிய அவன் - அயலவன்- என்பது குறிப்பு. **தீர்க்கில்** - தீர்ப்பதினும்.

தீர்க்கில் தீராதொழிதல் நன்ருல் -தீர்ப்பதனை விடத் தீராமலே என் உயிர் ஒழிதல் நலமேயாம்; **நன்ருல்** - உறுதிப் பொருள் தந்தது. **நன்மை**யாவது பத்தி நெறியிற் பிழை படாதிருத்தல். மற்று அவன் தீர்த்தல் உடல் ஆசையினுல் பிழைக்குடன் பட்டுச் சிவாபாரதத்துக் குடன்பட்ட பாவம் சாரச் செய்யும்; ஆதலால் தீராதொழிதல் நன்று என்ருர்.

பெற்றம்... யாரே - செய்யும் பெருமை - பெருமையாவது சிறியதைப் பெரிதாக்கியும், பத்திவைராக்கியச் சார்பாகிய பெருமையினைச் சிறிதாக்கியும் அருளிச் செய்தல்; **பெருமை** - அதன் (உட்கிடை) உள்ளுறையினைக் குறித்தது; **யாரே** - ஒருவருமிலர் என, வினு இன்மை குறித்த எதிர்மறை; உமது அருட்பெருமையின் உள்ளீடு எவராலும் அறிதற்கரிது என்றபடி; **பெருமை** - இகழ்ச்சிக் குறிப்புடனும் நின்றது. பெருமை யில்லாதவருக்கும் பெருமையுண்டாக்குவர் என்பதும் குறிப்பு.

உற்ற... செய்தீர் - ஏகாரங்களிரண்டும் பிரிநிலை; **உற்ற** வம்பென ஆண்டு கொண்டதனுல் உற்ற; **ஆம் உறுதி** - (மேன்மை) ஆக்கம் தரும் நன்மை. **ஆம்** - உமக்குப் பொருந்திய என்றலுமாம்.

கரந்தார் - கரத்தல் மறைதல்.

அன்றே - அப்பொழுதே; கலிக்காமனார் நேரே முன்பு முறையிட்டதற்கு மறுமொழி ஒன்றும் தராது என்க. மேல்விளைவு நிகழ்தற் பொருட்டுத் திரோதான சத்தியால் மறைவு

3548. வன்றொண்டர் தம்பாற் சென்று வள்ளலா ரருளிச் செய்வார்
"இன்றுநம் மேவ லாலே யேயர்கோ னுற்ற சூலை
சென்றுநீ தீர்ப்பா யா"கென் றருள்செயச் சிந்தை யோடு
நன்றுமெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினர் நாவ லூரர். 394

செய்தபடியாம்; நம்பிகள் சங்கிலியார் திறத்து இடையாடின போது இறைவர் செய்தவை ஈண்டுக் கருதத் தக்கன.

தீர்க்க—அறிவார்—என்பனவும் பாடங்கள். *393*

3548. **(இ-ள்)** வன்றொண்டர்... அருளிச் செய்வார் - வன்றொண்டரிடத்து வள்ள லாராகிய இறைவர் அருளிச் செய்வாராகி; இன்று நம்... அருள் செய - இன்றைக்கு நமது அருளாணையினாலே ஏயர்கோன்பால் பொருந்திய சூலையினை "நீ சென்று தீர்ப்பாயாக!" என்று அருளிச் செய்ய; சிந்தையோடு...நாவலூரர் - மனத்துடன் உடலும் நன்கு மகிழ்ச்சி யடைந்து நாவலூர் நம்பிகள் துதித்து வணங்கினர்.

(வி-ரை) வன்றொண்டர் தம்பாற் சென்று - சென்று என்பது ஈண்டு வெளிப்பட்டு என்ற பொருளில் வந்தது.

நம் ஏவலாலே உற்ற சூலை - நீ தீர்ப்பாயாக - நமது ஏவலாலே பொருந்திய அதனை நம் ஏவலாலே நீ போய்த் தீர்க்க. நோய்த்தீர்வு முறைகளில் எது எதனால் விளைந்ததோ அக்காரணம் பற்றியே அது தீர்க்கத் தக்கது என்பது ஒருவகை முறை. ஒப்பு முறை மருத்துவம் (Homeopathy) என்பர். அக் குறிப்புப்பட நிற்றல் காண்க. **சென்று** - செல்லுதலினாலே என்ற குறிப்பும் காண்க.

சென்று - அவன் அழையாமல் நீயே முற்பட அவனிடம் சென்று என்க. பிழையல்லாததைப் பிழை என்று கொண்டதன் பொருட்டும், நம்பிகள் விருப்பப் படி நட்புப் புரியவும் அவர்பாற் சூலையினை ஏவியதனோடு நம்பியாற்றீரும் என்று அருளிய இறைவர், பிழை யுடன்பட்டு நட்பு வேண்டியதன் பொருட்டு நம்பிகளைக் கலிக்காமனார் பாற் செலுத்திய நிலை ஊன்றி உணரத் தக்கது. **இருதிறமும் ஒப்ப நாடி அருள்புரியும் இறைவரது கருணையின் விளக்கம் காண்க.** மேல் விளைவினும் கண்டுகொள்க.

ஆக - என்பது ஈற்றகரம் கெட்டு நின்றது. வியங்கோளின் அகரந் தொகுத்தல் விகாரம். **ஆக** - ஆசி புரிந்து, தீர்க்கும் சத்தி கொடுத்த அருள் மொழி.

நன்று சிந்தையோடு மெய்ம்மகிழ்ந்து மகிழும் தன்மை **சிந்தைக்கே** யாதலின் **ஒடு** உருபை அதனுடன் சார்த்தி ஓதி, **மெய்** (உடல்) யினை அதனைச் சாரப் பின்வைத்தார். உடல் மகிழ்தலாவது சிந்தை மகிழ்ந்தமையால் உளவாகும் மெய்ப்பாடுகளாகிய மயிர் முகிழ்த்தல், பரவசமாதல், விதிர்த்தல், ஆனந்தக் கண்ணீர் பொழிதல் உடல் பூரித்தல் முதலிய அடையாளங்கள் வருதல்; **நன்று** - மிகவும். *394*

3549. அண்ணலா ரருளிச் செய்து நீங்கவா ரூரர் தாமும்
விண்ணவர் தம்பி ரானு ரேவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங் காதலாற் கலிக்கா மர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வருதிறஞ் செப்பி விட்டார். 395

3549. **(இ-ள்)** அண்ணலார்...நீங்க - இறைவர் முன் கூறியபடி மொழிந்தருளிச் செய்து மறைந்தருள; ஆரூரர்...செல்வார் - நம்பியாரூரரும் தேவதேவராகிய இறைவரது அருளாணையினுலும் விரைந்து செல்வாராகி; கண்ணிய...காதலால் - ஏயர்கோனுரது நட்பினைக் கருதிய மனத்தினுள்ளே எழுந்த பெரு விருப்பத்தினுலும்; கலிக்காமர்க்கு... செப்பிவிட்டார் - அக்கலிக்காமனுருக்கு வந்த வலிய **சூலையினைத் தீர்க்கும்** பொருட்டுத் தாம் வருகின்ற நிலையினைச் சொல்லி வரத் தூதுவரையனுப்பினுர்.

(வி-ரை) அண்ணலார் - "செய்யும் பெருமையை அறிந்தார் யாரோ?" என்று ஏயர்கோனுருங் கூறியபடி அறிதற்கரிய பெருமையினையுடையவர்.

ஏவலால் - காதலால் - இறைவரது ஏவலும் தமது காதலும் ஆகிய இரண்டு காரணங்களாலும் நம்பிகள் கலிக்காமர்பால் விரைந்து செல்லுதலும், செப்பிவிடுதலும் ஆகிய இரு செயல்களையும் உடன் நிகழ்த்தினுர்; எண்ணும்மைகள் தொக்கன.

செல்வார் - செல்வாராகி;முற்றெச்சம்; **செல்வார்- செப்பிவிட்டார்** என்று கூட்டுக.

கண்ணிய கருதிய;**கண்ணுதல்** குறிக்கொண்ட நோக்கம் வைத்து உணர்தல்; கருதுதல்;"கண்ணிருள்" என்றவிடத்து (போதம்-சிறப்புப்பாயிரம்) கருதி யுணரப்படும் என்றுரைத்தமை காண்க. ஈண்டுக் கருதி யுணர நின்ற பொருளாவது கலிக்காமனுர் தம்பாற் கொண்ட செற்றத்தினுள்ளே நின்ற சிவன்பாலுறைப்புடைய அன்பின்றிறம். ஏயர்கோனுரது நட்பைக் கருதுகின்ற; ஏயர்கோனுரது சூலையைத் தீர்க்கக் கருதுகின்ற; சிவபிரான் கட்டளையைக் கருதுகின்ற என்று பலவும் உரைக்க நின்றது.

திண்ணிய சூலை - திண்மையாவது இறைவரது திருவருட் கருவியாய்க் குறித்த பயனை விளைத்துவிடும் வலிமை; ஈண்டு பயனுவது அன்பு காரணமாகப் பகைப் பட்டாரை நட்புக்கூட்டுதல்; **திண்ணிய** - பெருநோய் செய்து பிறிதெவ்வாற்றுனும் தீராத என்ற குறிப்பும் தருவது.

வருதிறம் - தாமே வரும் செயல்; **திறம்** - ஈண்டு வலிய செயல் என்ற குறிப்பு முடையது.

செப்பி விடுதலாவது—அறிவிக்கும்படி தூதரை ஏவுதல் 395

3550.**(இ - ள்)** நாதர்தம்... வருத்த - இறைவரது திருவருளினுலே வந்து பொருந்திய சூலையும், அதன்மேல் அவ்விறைவர் மொழிந்தருளக் கேட்ட துன்ப மொழியும் தம்மை மிகவும் வேதனை செய்ய; மீண்டும்... கேட்டு - அதன் மேலும் வன்றெண்டாது வரவினையும்

3548. வன்றொண்டர் தம்பாற் சென்று வள்ளலா ரருளிச் செய்வார்
**"இன்றுநம் மேவ லாலே யேயர்கோ னுற்ற சூலை
சென்றுநீ தீர்ப்பா யா"**கென் றருள்செயச் சிந்தை யோடு
நன்றுமெய்ம் மகிழ்ந்து போற்றி வணங்கினூர் நாவ லூரர். 394

செய்தபடியாம்; நம்பிகள் சங்கிலியார் திறத்து இடையாடின போது இறைவர் செய்தவை ஈண்டுக் கருதத் தக்கன.

தீர்க்க—அறிவார்—என்பனவும் பாடங்கள். *393*

3548. **(இ-ள்)** வன்றொண்டர்... அருளிச் செய்வார் - வன்றொண்டரிடத்து வள்ள லாராகிய இறைவர் அருளிச் செய்வாராகி; இன்று நம்... அருள் செய - இன்றைக்கு நமது அருளாணையினுலே ஏயர்கோன்பால் பொருந்திய சூலையினை "நீ சென்று தீர்ப்பாயாக!" என்று அருளிச் செய்ய; சிந்தையோடு...நாவலூரர் - மனத்துடன் உடலும் நன்கு மகிழ்ச்சி யடைந்து நாவலூர் நம்பிகள் துதித்து வணங்கினர்.

(வி-ரை) வன்றொண்டர் தம்பாற் சென்று - சென்று என்பது ஈண்டு வெளிப்பட்டு என்ற பொருளில் வந்தது.

நம் ஏவலாலே உற்ற சூலை - நீ தீர்ப்பாயாக - நமது ஏவலாலே பொருந்திய அதனை நம் ஏவலாலே நீ போய்த் தீர்க்க. நோய்த்தீர்வு முறைகளில் எது எதனுல் விளைந்ததோ அக்காரணம் பற்றியே அது தீர்க்கத் தக்கது என்பது ஒருவகை முறை. ஒப்பு முறை மருத்துவம் (Homeopathy) என்பர். அக் குறிப்புப்பட நிற்றல் காண்க. **சென்று** - செல்லுதலினுலே என்ற குறிப்பும் காண்க.

சென்று - அவன் அழையாமல் நீயே முற்பட அவனிடம் சென்று என்க. பிழையல்லாததைப் பிழை என்று கொண்டதன் பொருட்டும், நம்பிகள் விருப்பப் படி நட்புப் புரியவும் அவர்பாற் சூலையினை ஏவியதனோடு நம்பியாற்றீரும் என்று அருளிய இறைவர், பிழை யுடன்பட்டு நட்பு வேண்டியதன் பொருட்டு நம்பிகளைக் கலிக்காமனுர் பாற் செலுத்திய நிலை ஊன்றி உணரத் தக்கது. **இருதிறமும் ஒப்ப நாடி அருள்புரியும் இறைவரது கருணையின் விளக்கம் காண்க.** மேல் விளைவினும் கண்டுகொள்க.

ஆக - என்பது ஈற்றகரம் கெட்டு நின்றது. வியங்கோளின் அகரந் தொகுத்தல் விகாரம். **ஆக** - ஆசி புரிந்து, தீர்க்கும் சத்தி கொடுத்த அருள் மொழி.

நன்று சிந்தையோடு மெய்ம்மகிழ்ந்து மகிழும் தன்மை **சிந்தைக்கே** யாதலின் **ஒடு** உருபை அதனுடன் சார்த்தி ஓதி, **மெய்** (உடல்) யினை அதனைச் சாரப் பின்வைத்தார். உடல் மகிழ்தலாவது சிந்தை மகிழ்ந்தமையால் உளவாகும் மெய்ப்பாடுகாளகிய மயிர் முகிழ்த்தல், பரவசமாதல், விதிர்த்தல், ஆனந்தக் கண்ணீர் பொழிதல் உடல் பூரித்தல் முதலிய அடையாளங்கள் வருதல்; **நன்று** - மிகவும். *394*

3549. அண்ணலா ரருளிச் செய்து நீங்கவா ரூரர் தாமும்
விண்ணவர் தம்பி ரானு ரேவலால் விரைந்து செல்வார்
கண்ணிய மனத்தின் மேவுங் காதலாற் கலிக்கா மர்க்குத்
திண்ணிய சூலை தீர்க்க வருதிறஞ் செப்பி விட்டார். 395

3549. (இ-ள்) அண்ணலார்...நீங்க - இறைவர் முன் கூறியபடி மொழிந்தருளிச் செய்து மறைந்தருள; ஆரூரர்...செல்வார் - நம்பியாரூரரும் தேவதேவராகிய இறைவரது அருளாணையினுலும் விரைந்து செல்வாராகி; கண்ணிய...காதலால் - ஏயர்கோனரது நட்பினைக் கருதிய மனத்தினுள்ளே எழுந்த பெரு விருப்பத்தினுலும்; கலிக்காமர்க்கு... செப்பிவிட்டார் - அக்கலிக்காமனருக்கு வந்த வலிய **சூலையினைத் தீர்க்கும்** பொருட்டுத் தாம் வருகின்ற நிலையினைச் சொல்லி வரத் தூதுவரையனுப்பினர்.

(வி-ரை) அண்ணலார் - "செய்யும் பெருமையை அறிந்தார் யாரோ?" என்று ஏயர்கோனருங் கூறியபடி அறிதற்கரிய பெருமையினையுடையவர்.

ஏவலால் - காதலால் - இறைவரது ஏவலும் தமது காதலும் ஆகிய இரண்டு காரணங்களாலும் நம்பிகள் கலிக்காமர்பால் விரைந்து செல்லுதலும், செப்பிவிடுதலும் ஆகிய இரு செயல்களையும் உடன் நிகழ்த்தினர்; எண்ணும்மைகள் தொக்கன.

செல்வார் - செல்வாராகி;முற்றெச்சம்; **செல்வார்- செப்பிவிட்டார்** என்று கூட்டுக.

கண்ணிய கருதிய ;**கண்ணுதல்** குறிக்கொண்ட நோக்கம் வைத்து உணர்தல்; கருதுதல்;"கண்ணிருள்" என்றவிடத்து (போதம்-சிறப்புப்பாயிரம்) கருதி யுணரப்படும் என்றுரைத்தமை காண்க. ஈண்டுக் கருதி யுணர நின்ற பொருளாவது கலிக்காமனர் தம்பாற் கொண்ட செற்றத்தினுள்ளே நின்ற சிவன்பாலுறைப்புடைய அன்பின்றிறம். ஏயர்கோனரது நட்பைக் கருதுகின்ற; ஏயர்கோனரது சூலையைத் தீர்க்கக் கருதுகின்ற; சிவபிரான் கட்டளையைக் கருதுகின்ற என்று பலவும் உரைக்க நின்றது.

திண்ணிய சூலை - திண்மையாவது இறைவரது திருவருட் கருவியாய்க் குறித்த பயனை விளைத்துவிடும் வலிமை; ஈண்டு பயனுவது அன்பு காரணமாகப் பகைப் பட்டாரை நட்புக்கூட்டுதல்; **திண்ணிய** - பெருநோய் செய்து பிறிதெவ்வாற்ருனும் தீராத என்ற குறிப்பும் தருவது.

வருதிறம் - தாமே வரும் செயல்; **திறம்** - ஈண்டு வலிய செயல் என்ற குறிப்பு முடையது.

செப்பி விடுதலாவது—அறிவிக்கும்படி தூதரை ஏவுதல் 395

3550.(இ - ள்) நாதர்தம்... வருத்த - இறைவரது திருவருளினுலே வந்து பொருந்திய சூலையும், அதன்மேல் அவ்விறைவர் மொழிந்தருளக் கேட்ட துன்ப மொழியும் தம்மை மிகவும் வேதனை செய்ய; மீண்டும்... கேட்டு - அதன் மேலும் வன்ருெண்டாது வரவினையும்

3550. நாதர்தம் மருளா னண்ணுஞ் சூலையு **மவர்பாற் கேட்ட**
கேதமும் வருத்த மீண்டும் **வன்றொண்டர் வரவுங் கேட்டுத்**
"தூதனு யெம்பி ரானை **யேவினுன் சூலை தீர்க்கும்**
ஏதமிங் கெய்த வெய்தி லியான்செய்வ தென்னு?"மென்பார், 396

3551. "மற்றவ னிங்கு வந்து தீர்ப்பதன் முன்னுன் மாயப்
பற்றிநின் றென்னை நீங்காப் **பாதகச் சூலை தன்னை**
உற்றவிவ் வயிற்றி னேடுங் கிழிப்ப" னென் றுடைவா டன்னுற்
செற்றிட **வுயிரி னேடுஞ் சூலையுந் தீர்ந்த தன்றே.** 397

கேட்டு; தூதனுய்... என்பார் - தூதனுக எமது பெருமானை ஏவினுகிய நம்பி இங்கு வந்து எனது சூலை நோயினைத்தீர்க்கும் படியான பெருங்கேடும் பொருந்த வருமேயாகில் யான் செய்வதென்னுமோ என்பாராகி,

(வி - ரை) சூலையும் - கேதமும் - வருத்த என்க. **கேதம் - துன்ப** மொழி; சூலை வருத்தியதன் மேலாக இறைவர்பாற் கேட்ட மொழி வேருக அதிகத்துன்பம் செய்தமையால் வேறு பிரித்தோதினுர். **அவர் - இறைவர்; கேட்ட கேதம் -** முன் (3545) கூறியது.

மீண்டும் - அவற்றின் மேலும்; **வரவும் -** முன்னவற்றின் மேல் இதுவும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

ஏவினுன் சூலை தீர்க்கும் ஏதம் - சூலை தீர்தலை விரும்பி இறைவரை வேண்டி னுரேனும் (3544-3545), இறைவரைத் தூதாக ஏவினுல் அது தீரும் நிலையைக் கெடுதியாகவே கொண்டனர்; **ஏதம் -** கேடு; **ஏவினுன் -** ஆரூரர்; வினையாலணையும் பெயர்.

ஏதம் இங்கு எய்த எய்தில் - எய்தில் - பொருந்தினுல்; **எய்த -** எய்தும்படி; **எய்தில் -** வன்றொண்டன் எய்தினுல் என்றலுமாம்; வன்றொண்டன் வரில் இறைவர் அருளியபடி சூலை தீரும்; அது தீர அவனுல் தீர்க்கப்படும் ஏதம்எய்தும் என்பதாம்.

இங்கு - இவ்விடத்தில்; நான் உயிருடன் உள்ள இப்போது என்றலுமாம்; மேற்பாட்டுப் பார்க்க.

செய்வதென்னும் - என்னுகுமோ; எது விளையுமோ? நான் செய்வது என்னை என ஆலோசித்தார் என்பாருமுண்டு.

என்பார் - என்று - செற்றிட - என மேல்வரும் பாட்டுடன்முடிக்க.

யான் செய்வதென்னே என்று—என்பதும் பாடம். 396

3551. **(இ-ள்)** மற்றவன்... முன் - மற்றவன் இங்கே வந்து நோய் தீர்ப்பதற்கு முன்னே; நான்...சூலை தன்னை - நான் இறக்கும் வேதனை அளவு என்னைப் பற்றி நின்று நீங்காத இந்தப் பாதகமுடைய சூலைநோயினை; உற்ற... என்று - அது பொருந்தித் தங்குதற் கிடமாகிய வயிற்றினெடுங் கிழித்து அழித்து விடுவேன் என்று துணிந்து; உடைவாள்... செற்றிட - உடைவாளினுலே வயிற்றினைக் கிழித்திட; உயிரினேடும்... அன்றே - உயிரினுடனே சூலை நோயும் அப்போதே தீர்ந்தது.

3552. கருதரும் பெருமை நீர்மைக் கலிக்காமர் **தேவி யாரும்**
பொருவருங் கணவ ரோடு போவது புரியுங் காலை
"மருவியிங் கணைந்தார்நம்பி" யென்றுமுன் வந்தார் கூற
"ஒருவரு மழுதல் செய்யா தொழிக" வென் றுரைத்துப்பின்னும், 398

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மற்றவன்- அருள் ஒழுக்கத்திற்கு வேறுனவன். அயலவன் என்பது குறிப்பு; மற்று அவன் என்றலுமாம்; **மற்று** - முன் (3550) கூறியபடி "ஏவினுன்" ஆகிய என்பது.

தீர்ப்பதன் முன் - சூலை தன்னைக் கிழிப்பேன் என்று கூட்டுக. **கிழித்தல் -** ஈண்டுத் துணிவுபடுத்தி அழித்தல் எனும் பொருளில் வந்தது. அவன் தீர்ப்பதன்முன் நானே அதனை அழித்தொழிப்பேன் என்றது அடியார்பால் விளங்கும் வீரம். "வீரமென்னுல் விளம்புந் தகையதோ?" (144); "வானந் துளங்கிலென்...ஆட்பட்ட வுத்தமர்க்கே" (தேவா); இப்புராணத்தில் வரும் அடியார்கள் பலர் தம் உயிரையும் பொருட்படுத்தாது பற்பல வீரச் செயல்களை இங்கு நினைவு கூர்க.

பாதகச்சூலை - சிவாபாரதம் செய்தானது தொடர்புக்கு உடன்பட வைத்தலால் பாதகச்சூலை என்றுர்.

உற்ற இவ்வயிற்றி னேடும் கிழிப்பன் - சூலையைக் கிழித்து ஒழித்தலே கலிக்காமனுர் இங்குக் கருதியதாயினும், அது வயிற்றை யிடமாகப் பற்றி நிற்றலாலும் அது பற்றிநின்ற வயிற்றினையும் உடன் கிழித்தலான்றி அதனை வேறு பிரித்துக் கண்டு கிழித்தல் இயலாதாதலானும் **உற்றவிவ் வயிற்றினேடும்** என்றுர். உற்ற - பிரிக்கலாற்ருது பொருந்திய. இவ்வெல்லா ஏதங்களும் பொருந்துதற் கிடம் தந்த என்பதும் குறிப்பு.

உடைவாள் தன்னுற் செற்றிட - உடைவாள் - வளவர் சேனுபதிக் குடியில் வந்து அத்தொழிலும் புரிவாராதலின் உடைவாளினை எப்போதும் உடையவராயினர்; அதனுடன் உடைவாள் கொண்டோச்சிப் பகைவரைக் கிழித்தலும் வல்லராயினர்; ஆதலின் பாதகச் சூலையாகிய பகையினை எளிதினிவ்வாறு கிழித்துத் தீர்க்கவும் வல்லராயினர் என்க. "ஏயர் கோக்குடிதான், மன்னி நீடிய வளவர் சேனுபதிக் குடியாம்" (3159); **செற்றிட** - என்ற குறிப்புமது; **செறுதல்** - அழித்தல். பகையை வீட்டல் இங்கு வயிற்றைக் கிழித்தல் குறித்தது.

உயிரினேடும் சூலையும் தீர்ந்தது - மங்கல வழக்கு; **உயிரினேடு** சிறப்பு நோக்கி ஒடு உருபை உயிருடன் சார்த்தி ஓதினுர்; **சூலையும்-** உம்மை இழிவு சிறப்பு; வெல்ல வந்ததாயினும் அது செய்ய மாட்டாது தான் தீர்ந்தது என்று எளிமைபடக் கூறியவாறு. **அன்றே** - அப்பொழுதே.

நான்மாயப்பற்றி நின்று - நான் மாயும்படி இறக்கும் அத்தனை வேதனை செய்து பற்றி ஊன்றி நின்று; **மாய** - மாயும்படி; முற்குறிப்பு. 397

3552. **(இ-ள்)** கருதரும்...தேவியாரும் - நினைத்தற்கும் அரிய பெருமையும் அன்புமுடைய கலிக்காமனுரின் தேவியாரும்; பொருவரும்...காலை - தமது ஒப்பற்ற கணவருடனே உயிர் துறந்து உடன் தாமும் போவதனை விரும்பி அதற்குரிய நிலையினை

அமைக்கும் காலையில்; மருவி...கூற - நம்பிகள் இங்குப் பொருந்தி அணுக அணைவாராயினர் என்று முன் வந்தவர்கள் சொல்லக் கேட்டு; ஒருவரும்...பின்னர்- ஒருவரும் அழுதலைச் செய்ய வேண்டாம் என்று உடனிருந்தார்க்கெல்லாம் சொல்லிப் பின்னரும்.

(வி-ரை) கருதரும் பெருமை நீர்மை - கருதரும் - கருதலளவையானும் அறிதற்கரிய; **பெருமை** - அளவு காண்டற்கருமை; **நீர்மை** அன்பு; பேரன்பு - இங்குக் கற்பின்றிறம் குறித்தது. **பெருமையினைக்** கலிக்காமனூர் தேவியார் என்னுமிருவர்பாலும் சார்த்துக.

தேவியாரும்... புரியும் - கணவனிறந்தபோது அவருடனே தாமும் உயிர் துறத்தல் கற்பு நிலை வழக்கு என்ப; புகழனுர் இவ்வுலகைவிட்டகன்றபோது மாதினியார் "சுற்றமுடன் மக்களையுந் துகளாக வேநீத்துப், பெற்றிமையா லுடனென்றும் பிரியாத வுலகெய்துங், கற்புநெறி வழுவாமற் கணவனு ருடன் சென்றுர்" (1293) என்றும், கலிப்பகையார் உயிர்நீத்த செய்தி கேட்டபோது "அவர்க்கே யுரியதுநா னுதலினுல், இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்பன்" (1297)எனத் திலகவதியார் துணிந்தனர் என்றும் அரசுகள் புராணத்துள் வரும் வரலாறுகள் இங்கு நினைவு கூர்தற்பாலன; ஆண்டுக் காணும் கலிப்பகையாரும் இச்சரிதமுடைய கலிக்காமனுரும் வேளாள மரபினராதலுடன் அரசன் சேனைப் பற்று முடையாராதலும் காண்க. கணவரிறந்தபோது மனைவியர் அவருட னுயிர்நீத்தல் இம்மரபிற் கற்பு நிலைக் குறியாகப் பெரு வழக்கிலிருந்தமை பலவாற்றுனும் துணியப்படும். **போவது** - இங்கு உயிர் நீத்துப் பிரியா வுலகிற்குப் (கணவருடன்) போவது; **புரிதல்-** விரும்புதல் மட்டுமன்றி அந்நிலைக் காவனவற்றுள் அமைதல் என்ற குறிப்பு முடையது. "நல்லோள் கணவனெடு நனியழற் புகீஇச், சொல்லிடை யிட்ட பாலை நிலையும்" (தொல் - பொருள் - புறத்திணை-24); "காதலர் இறப்பிற் கனையெரி பொத்தி, ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்காது, இன்னுயிர் ஈவர் ஈயாராயின், நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்...பத்தினிப் பெண்டிர் பரப்புநீர்ஞாலத்து" (மணி); "எமக்கெம், பெருந்தோட்கணவன் மாய்ந்தென வரும்பற, வள்ளித ழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (புறம்-246) என்பன முதலியவை இவ்வழக்குண்மையைக் காட்டுவன.

காலை - அப்போது; இறைவர் கலிக்காமர்க்குக் கனுவில் அருளிச் செய்து மறைந்தாரென்பது கருதப்படுமாதலின் அதிகாலை நேரம் என்ற குறிப்பும் தருவது.

இங்கு அணைந்தார் என்று முன்வந்தார் கூற - அணைந்தார் - அணுக வருவாராயினர் - அணைகின்றுர் என்க; இறந்தகாலக் குறிப்பு விரைவுபற்றி வந்தது; **முன்வந்தார்** - அறிவிப்பின்பொருட்டு முன்வந்த பரிசனங்கள். **வந்தார்** - வினையாலணையும்பெயர்.

ஒருவரும்..ஒழிக என்றுரைத்து கலிக்காமனார் உயிர் துறந்தமை கண்டு பரிசனங்கள், சுற்றத்தார், சேடியர் முதலியோர்கள் துக்கித்து அழுதனர் என்ற குறிப்பால் உணர்த்திய கவிநயம் காண்க. உயிருடன் சூலையும் தீர்ந்தது (3551) என்று முன்பாட்டிற் கூறிய ஆசிரியர் அதன்பின் இந்நிகழ்ச்சிகளை விரிக்க வேண்டாமையின், கூறுதொழிந்தனர். ஆயின், தேவியாரது திண்ணிய அன்பின் செயல்கூறி, மேல் நிகழ்ச்சிகள் கூற வேண்டியிருத்தலின் ஒருவரும் அழுதல் செய்யாதொழிக என்ற ஆணைதந்த அளவின் அவற்றை உய்த்துணரவைத்த தன்மையும் காண்க. அழுதல் செய்யா தொழிக என்றமையால் அழுதவரை நோக்கிக் கூறிய நிலை புலப்படும்.

3553. கணவர்தஞ் செய்கை தன்னைக் கரந்து **"கா வலரை நம்பி**
அணைவுறும் பொழுது சால வலங்கரித் தெதிர்போ"மென்னப்
புணர்நிலை வாயிற் றீபம் பூரண கும்பம் வைத்துத்
துணர்மலர் மாலை தூக்கித் தொழுதெதிர் கொள்ளச் சென்றார். 399

ஒருவரும் அழுதல் செய்யாது ஒழிக - என்றமையால் தாம் அழுதல் செய்யாமையும் புலப்படும்; என்னை? தாம் கணவரைப் பிரிந்த நிலை எண்ணினலன்றே துக்கம் புலப்பட்டு அழுதல் செய்ய நேரும். தாம் கணவரோடு உடன் போவது புரிந்தாராதலின் அழுது வறிதே அமர்ந்திலர் என்க. "விடுமின் வெகுளி வேட்கைநோய் மிகவோர் கால மினியில்லை, உடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடுடன் போவதற்கே யொருப்படுமின்" (திருவா - யாத்.பத்.5) என்ற திருவாக்கிற்காணும் உறுதிப்பாட்டுடனின்றனர் இங்கு அம்மையார் என்க.

பின்னும் - மேலும் சொல்வாராகி; **பின்னும் - என்ன** என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. 398

3553. **(இ - ள்)** காவலரை - காவலாளர்களை நோக்கி; கணவர்... கரந்து - கணவனரது செயலினை மறைத்து; நம்பி... என்ன - நம்பிகள் இங்கு அணையும் போது திருமனையை மிகவும் அலங்காரஞ் செய்து எதிர் சென்று நல் வரவேற்று அழையுங்கள் என்று ஏவியிட; புணர்நிலை;... சென்றார் - (அதுகேட்ட அப்பரிசன மாந்தர்களும்) செறிந்த நிலையினையுடைய வாயிலில் விளக்கும் நிறைகுடமும் வைத்து கொத்துக்களையுடைய மலர் மாலைகளையும் தொங்கவிட்டு வணங்கி எதிர் கொள்ளச் சென்றார்கள்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) கணவர் தம் செய்கை தன்னைக் கரந்து - கரத்தல் - இச் செய்கை நிகழ்ந்ததனை வெளியிற் புலப்படுத்தாது மறைத்தல்; அழுகையை ஒழிதல் மாத்திரமன்றி வேறு சொற்களாலேனும், அந்நிகழ்ச்சியைக் குறிக்கும் பிற குறிப்புக்களாலேனும் பிறரறியாமல் வைத்தல்.

கணவர்தம் செய்கை - தம் - தாமே செய்து கொண்ட; **செய்கை -** உயிரினை மாய்த்துக் கொண்டமை.

காவலர் - சுற்றத்தார் - இற்காவலாளர் - பணியாளர்; நோக்கி என வருவித்துக் காவலரை நோக்கி - என்ன என்க; **சால அலங்கரித்து -** திருமனையினை என்பது இசை எச்சம்; **அலங்கரித்தல் -** மேற் கூறப்படுவது; இது பெரியோரை வரவேற்கும் நிலையாகிய மரபு. **காவலர்** கணவனர் என்று கொண்டு, அவரை நம்பி காண அணைவுறும் பொழுது என்றுரைக்கவும் நின்றது; இப்பொருளில், முன்வந்த பரிசனங்களை நோக்கி என்பதை முன்பாட்டினின்றும் வருவிக்க.

காதலரை நம்பி என்று பாடம் கொண்டு **காதலர் -** விருப்ப முடையோர் சிலரை என்றுரைத்தார் முன் உரைகாரர், இதன் பொருத்தம் ஆராயத்தக்கது.

3554. செம்மைசேர் சிந்தை மாந்தர் சென்றெதிர் கொண்டு போற்ற
நம்மையா ளுடைய நம்பி **நகைமுக மவர்க்கு நல்கி**
மெய்ம்மையாம் விருப்பி னோடு மேவியுட் புகுந்து மிக்க
மொய்ம்மலர்த் தவிசின் மீது **முகமலர்ந் திருந்த போது,** 400

என்ன - என்று ஆணையிட்டு ஏவ; முன் "ஒருவரும் அழுதல் செய்யாதொழிக" என்றது ஒரு கூற்று; இங்கு "நம்பி...போம்" என்றது அதனின் மேம்பாடாகிய மற்றொரு கூற்று; இவ்வேறுபாடு குறிக்க, இதனைப் **பின்னும் - என்ன** என வேறு பிரித்துக் கூறினமையுடன், வேறு பாட்டினாலும் கூறியருளினார்;"கணவரோடு போவது புரியும்" (3552) என்றது கற்புநிலை; மேல், இங்குக் கூறிய சிவன் அடியவர்களை உபசரிக்கும் நிலை வேறு. இது சிவபுண்ணியமாம். முன்னையது புண்ணியலோகப் பயனும் பின்னையது சிவலோகப் பயனாகிய வீடுபேறும் தரவல்லன; ஆதலின் உயிர் துறந்து கணவரோடு உடன்போவதற் கொருப்பட்ட அம்மையார், அதனைத் தவிர்த்து உயிர் தாங்கிச் சிவனடியாரை யுபசரித்து வரவேற்றலை விரும்பிச் செய்தனர். இது செயற்கரிய பெருஞ்செயல் என்பது தேற்றம். இவ்வம்மையார் மானக்கஞ்சாற நாயனார் திருமகளார்; மணநாளன்று தம் கூந்தலை அரிந்து மாவிரதியார் விரும்பியவாறே கொடுக்க நின்ற அதன் மூலம் திருவருள் வெளிப்பாட்டுக்குத் துணைக் காரணமாய் விளங்கினர்; இளம்போதில் இத்தன்மை வாய்ந்த இவர் இங்கும் அவ்வாறே அடியார் பணிசெய்து மேலும் அருள் வெளிப்பாட்டுக்குத் துணைநின்ற தன்மை காண்க. முன்பு அங்கு அடியில் அரிந்த கூந்தல் அருளால் பின்னை அன்றே புனைந்த மலர்க்குழலாய் (901) வளரப்பெற்றது; இங்கும் அவ்வாறே உயிர்நீத்த கணவனார் அன்றே அருளால் உயிர் பெற்றெழுந்து கேளிரேயாகி எழுவதும் பெற நின்றனர்; திருவருளின் பண்புபெற்ற இவ்வம்மையாரின் பெண்மைப் பெருநலம் கண்டு ஒழுகி உய்தி பெறுவாராயின் உலகம் இன்புற்று ஓங்கி உய்திபெறும்.

தீபம் -கும்பம் - மாலை - மங்கலப் பொருள்கள்; இவற்றால் வாயில் அலங்கரித்துப் பெரியாரை எதிர் கொள்ளுதல் மரபு.

தீபம்...தூக்கி - திருவாரூரினின்றும் திருப்பெரு மங்கலத்துக்கு நம்பிகள் வந்து சாரும் கால இடையில் இவர்கள் இது செய்யலாயினர் என்க.

சென்றார் - அம்மையாரால் ஏவப்பெற்ற காவலர்களாகிய நன் மாந்தர் முதலியோர்; இவர்களைச் **"செம்மை சேர் சிந்தை மாந்தர்"** என்று மேல் வரும்பாட்டிற் சிறப்பித்தல் காண்க. 399

3554. **(இ-ள்)** செம்மைசேர்...போற்ற - செம்மை பொருந்திய சிந்தையினை உடைய மாந்தர்கள் போய் எதிர்கொண்டு வரவேற்றுத் துதித்து வணங்க; நம்மை... நல்கி - நம்மை ஆளுடைய நம்பிகள் அவர்க்கு இன்முகம் அளித்து; மெய்ம்மையாம்...போது - உண்மை ஆகும் விருப்பத்தினோடும் பொருந்தித் திருமனையினுள்ளே புகுந்து மிகுதியாகப் பரப்பிய மலராசனத்தின் மேல் முகமலர்ச்சி யுடனே வீற்றிருந்த பொழுது,

3555. பான்மையர்ச் சனைக ளெல்லாம் பண்பினில் வழாமை யேய்ந்த
நான்மறை தொடர்ந்த வாய்மை நம்பியா ரூரர் கொண் "டிங்
கியான்மிக வருந்து கின்றே னேயர்கோ னார்தா முற்ற
ஊனவெஞ் சூலை நீக்கி யுடனிருப் பதனுக்"கென்றார். 401

(வி-ரை) செம்மை சேர் சிந்தை மாந்தர் - முன்பாட்டில் அம்மையாரால் "அலங்கரித்து எதிர்போம்" என்று ஏவப்பெற்ற பரிசனங்கள், சுற்றத்தார், முதலாயினோர்; **செம்மை** - செப்பமுடைய நிலை; ஈண்டுச் **செம்மையாவது** தமது தலைவர் இவ்வாறு உயிர் நீத்ததனால் நேர்ந்த தமது துன்பம் ஒரு சிறிதும் புறந்தோற்றாதவாறு மனையலங்கரித்தலும், தமது சொல் செயல் முகக்குறி முதலியவற்றாலும் பிறர்க்குத் தெரியாதவாறும் தமது தலைவியாராகிய அம்மையார் ஏவலுள் அடங்கி ஒழுகுதல். இனிச், **செம்மைசேர்** - செம்மை நிலையினை நம்பிகளருளாலும் இறைவரருளாலும் சாரவுள்ள என்ற குறிப்புமாம். நம்பிகளை இந்நிலையில் எதிர்சென்று வரவேற்கும் பேறு பெற்ற செம்மையும் குறித்தது. அடியார்களை வழிபடும் வழிவந்தவர் என்பதும் குறிப்பு.

போற்ற - வந்தித்து வணங்கி யழைக்க.

நம்மை ஆளுடைய நம்பி - ஆளுடைய நம்பி என்ற தொடருக்குப் பொருள் குறித்தவாறு; ஈண்டு இவ்வாற்றாற் கூறியது சிவனடிமைப் பண்பிற் பிறழாத நிலையினைத் தம் ஒழுக்கத்தால் உலகுக்கு அறிவுறுத்தி வழிப்படுத்தும் தன்மை குறித்தற்கு. இவ்வாறே முன், "நந்தமை யாளுமோர் காவலர்" என்று ஒப்பக் கூறியது நோக்கற்பாலது.

அவர்க்கு நகை முகம் நல்கி என்க. **அவர்** - எதிர்கொள்ள வந்த மாந்தர்; **நகைமுகம் நல்குதல்** - வரவேற்பை ஏற்று மகிழ்ச்சிக் குறியாக இன்முகம் காட்டுதல். நகையோடு கூடிய முகமலர்ச்சியைக் காட்டி; மூன்றும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை.

மெய்ம்மையாம் விருப்பினோடு மேவி - மெய்யடிமைத் திறமே பற்றி உளதாகிக் கலிக்காமனாரது நட்பினை விரும்பும் மனநிலை பொருந்தி; **ஆம்** - ஆக்கச் சொல் இந்நிலை இனி உண்மையேயாகி நிறைவுறும் என்ற குறிப்புப்பட நின்றது; **ஆதல்** - விளைதல்.

தவிசு-நம்பிகளுக்கென்று அமைத்த ஆசனம். 400

3555. **(இ - ள்)** பான்மை... வழாமை - விதிப்படிக்குரிய அருச்சனைகளை யெல்லாம் விதித்த தன்மையில் தவறாதபடி செய்ய; ஏய்ந்த... நம்பியாரூரர் - பொருந்திய நான்கு வேதங்களையும் தொடர்ந்து கொண்ட வாய்மையினையுடைய நம்பியாரூரர்; கொண்டு - அவற்றை ஏற்றுக்கொண்டு; இங்கு... என்றார் - இப்பொழுது ஏயர்கோன் கலிக்காமனாருடைய மிக்க துன்பஞ் செய்யும் வெவ்விய சூலையினை நீக்கி அவருடனே மகிழ்ந்திருத்தல் நேராததற்கு நான் மிகவும் வருந்துகின்றேன் என்று சொல்லியருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வழாமை - கொண்டு என்று கூட்டுக.

3556. மாதர்த மேவ லாலே மனைத்தொழின் மாக்கண் "மற்றிங்
கேதமொன் றில்லை; யுள்ளே பள்ளிகொள் கின்ரு" ரென்னத்
"தீதணை வில்லை யேனு மென்மனந் தெருளா தின்னம்
ஆதலா லவரைக் காண வேண்டு" மென் றருளிச் செய்தார். 402

பான்மை அர்ச்சனைகள் எல்லாம் - சிவனடியார்களையும் சிவாசாரியர்களையும் உபசரிக்கும் முறை இங்கு அர்ச்சனை எனப்பட்டது; **பான்மை** - ஆகமவிதிப் பகுப்பு; சிறப்பு மிக்க எனினுமாம். **அர்ச்சனை** - தூப தீப பாத்தியம் அர்க்கியம் முதலியவை. 16 வகை உபசாரங்கள்.

பண்பினில் வழாமை - பண்பாவது செய்யும் முறை; **அர்ச்சனைகள்** என்பது உபசாரப் பகுதிகளையும், **பண்பு** - என்பது அவை செய்யும் முறைகளையும் குறித்தன. **ஏந்த** என்று பாடங் கொண்டு முன்கூறிய அர்ச்சனைப் பகுதிகளாகிய பாத்திய அர்க்கியம் சாந்தம் புட்பம் தூப தீபம் முதலியவற்றை ஏந்த என்பது இராமநாதச் செட்டியார் குறிப்பு; "கதுமெனக் கணவனுரைக் கண்ணுதற் கன்பரோடும்; விதிமுறை தீப மேந்தி" (851) என்றதும்; "நங்கை பரவை யார்திருமா ளிகையி னண்ண நன்னுதலார், பொங்கு விளக்கு நிறைகுடமும் பூமா லைகளும் புகையகிலும், எங்கு மடவா ரெடுத்**தேந்த**" (3817 - கழறிற் - புரா.70); "இனிய பஞ்ச வாசமுட னடைக்கா யிலையு **மேந்தினுர்**" (மேற்படி 77) என்பனவும் காண்க.

நான்மறை தொடர்ந்த வாய்மை - வேதவுண்மைகளையே விளக்கும் திருவாக்குக்களாகிய தேவாரங்களை அருளும்; **தொடர்தல்** - கருத்துக்களை எடுத்து விரித்தல்; **நான்மறை தொடர்ந்த வாய்மை** - சிவாகமங்கள் என்ற குறிப்புமுடையது.

கொண்டு - ஏற்றுக்கொண்டு; அங்கீகரித்து.

ஊனவெஞ்சூலை - ஊனம் - கொடுந்துயர் என்ற பொருளில் வந்தது; **வெம்மை** - கொடுமை;இந்த இரண்டு அடைமொழிகளும், **ஊனம்** - வயிற்றினைக் கிழித்தலாலாகிய உடற் சேதத்தினையும், **வெம்மை** - உயிர் நீக்கிய கொடுமையினையும் செய்யும் நிலை என்ற சரித நிகழ்ச்சியின் உண்மை நம்பிகளது மெய்வாக்கினைப் பற்றி விளக்கி நிற்றல் காண்க; **வாய்மை** - என்றதும் இக்குறிப்பு; **வருந்துகின்றேன்** - நிகழ்ந்தவை பற்றிய குறிப்பும் தருவது காண்க. **இங்கு** - இப்போது; இடம் காலமும் குறித்தது.

ஊன வெஞ் சூலை நீக்கி உடன் இருப்பதனுக்கு - மிக வருந்துகின்றேன் - சூலையினை நீக்கி அவருடன் கூடி மகிழ்ந்திருக்கும் நிலையை விரும்பினேனுதலின் அது இன்னும் நேராமை பற்றி வருந்துகின்றேன் என்பதாம்; அவர் சூலை வாய்ப்பட்டுக் கிடக்கின்றமையால் நன்னிலையின்றி உடனிருத்தல் கூடப் பெருமை வருத்தத்தின் காரணம் என்றபடி. சூலை நீக்கமும் உடனிருக்கும் இன்பமும் விரும்பியபடியாம்; அவரைக் காணுது செல்லும் கணந்தோறும் வருத்தம் பயப்பதாம் என்க. **401**

3556. **(இ-ள்)** மாதர் தம் ஏவலாலே - அம்மையாரின் ஏவுதலின்படி; மனைத்தொழில்... என்ன - மனையிற் ருெழில் செய்யும் பரிசனங்கள் "இங்குவேறு கெடுதி ஒன்றுமில்லை; அவர் (கலிக்காமனுர்) உள்ளே பள்ளிகொள்கின்ருர்" என்று நம்பிகளிடம் கூற; தீது

3557. வன்றொண்டர் பின்னும் கூற, மற்றவர் தம்மைக் காட்டத்
துன்றிய குருதி சோரத் தொடர்குடர் சொரிந்துள் ளாவி
பொன்றியே கிடந்தார் தம்மைக் கண்டபின் "புகுந்த வாறு
நன்"றென மொழிந்து "நானு நண்ணுவே னிவர்முன்"பென்பார், 403

அணைவில்லையேனும்... அருளிச் செய்தார். (நம்பிகள் அது கேட்டு) தீமையின் சார்வு இல்லையாயினும் எனது மனம் இன்னும் தெளிவு பெறவில்லை; ஆதலினாலே அவரை நான் காண வேண்டும் என்று அருளிச் செய்தனர்.

(வி-ரை) மாதர் - கலிக்காமனாரின் தேவியார்; முன் (3552-3553) கூறியவையும் இங்குக் கூறியவையும் அந்த திருமனையின் நிகழ்ச்சிகள் யாவும் அம்மையாரே உளங்கொண்டு ஆணையிட்டு நடாத்தி வந்த முறையினை நன்கு விளக்கும். மனையின் நிகழும் நடை முறைகளுக்கெல்லாம் தலைவியாரே பொறுப்புள்ள தலைவியாவார் என்ற பெண்மை நலம் பற்றி நீதி விளங்குதல் காண்க; சிறுத்தொண்ட நாயனார் புராணத்தினுள் உத்தராபதியார் எழுந்தருளியபோது மனைக்கடனுடையாராய், "மனையறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை" யம்மையின் செயல் நிகழ்ச்சிகள் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

ஏவலாலே மனைத்தொழில் மாக்கள் என்ன - தலைவியர் ஏவியவாறே அமைந்து பணி செய்யக் கடமைப் பட்டவர்கள் பரிசனங்கள் என்பது; **தொழில்** - மாக்கள் என்றது மிக்குறிப்பு. **மனைத்தொழில்** - நான்காம் வேற்றுமைத் தொகை.

மற்றும் ஏதம் ஒன்று இல்லை - மற்றும் ஏதம் - நீங்கள் கூறிய வெஞ்சூலையினைத் தவிர வேறு கெடுதி; துன்பம்; **ஒன்று** - ஒன்றும் என முற்றும்மை தொக்கது. உயிர் நீங்கியதனால் இனி வரக்கடவதாகிய ஏதம் ஒன்றுமில்லை என்ற குறிப்புடனும் நின்றது; **உள்ளே** - மனையினுள்ளே.

தீது அணைவு இல்லையேனும் இன்னம் என் மனம் தெருளாது - நீங்கள் கூறுவது உண்மையேயாயினும் என்றபடி. **அணைவு** - அணைந்தது.

இன்னம் - நீங்கள் தீதணைவில்லை என்று உறுதி கூறக் கேட்டபின்னும்; **மனம் தெருளாது** - என் உள்ளம் தெருட்சி - அமைதி - அடையவில்லை. கலக்கம் நீங்க வில்லை.

தெருளாது - தெருட்சியாவது மனநிலை அறிவுற்றுத் தெளிவு பெறுதல். இது போன்றே அப்பூதியார் புராணத்தினுள் "இப்போ திங்கவ னுதவான்" என்று அப்பூதியார் கூறக்கேட்ட ஆளுடைய அரசுகள் "இவ்வுரை பொருந்தென் னுள்ளம்; என் செய்தனிதற்கொன் றுண்டால்" (1815) என்று அருளிய நிலை இங்கு நினைவு கூர்தற்பாலது. சிவனருள் நிறைவினுள் அடங்கித் திளைத்து நிற்கும் எந்தம் பெருமக்களின் உள்ளத்தினுள் நிறைந்து இறைவர் தாமே காட்டி நடத்துவிப்பாராதலின் அவர்களறிவு உண்மை நிலைகளைத் தெள்ளிதி னறிதல் எளிதென்க.

ஆதலால் காணவேண்டும் - அவர் தீதணைவின்றி யிருப்பினும் என் மனந் தெருளாமையினால் அவர் பொருட்டன்றி என் பொருட்டே - அது தெருட்சி பெறும் பொருட்டுக் - காண வேண்டும் என்பது.

அருளிச் செய்தார் - காண்பது கருதி மொழிந்த அளவே மேல் இறைவர் அருளிப் பாட்டுக்கு வழியாக நிகழ்வது என்றது குறிப்பு. 402

3557. **(இ-ள்)** வன்றொண்டர்... காட்ட - வன்றொண்டர் அது கேட்ட பின்னரும் இவ்வாறு சொல்ல மற்று அவர்கள் (அழைத்துச் சென்று) அவரை (கலிக்காமனரை)க் காட்ட; துன்றிய...கண்டபின் - நிரம்பிய இரத்தம் வெளிவந்து தொடர்ச்சியாகிய குடர் வெளிப் போந்து உயிர் நீங்கியே கிடந்த அவரைக் கண்டவுடனே; புகுந்த... மொழிந்து - நிகழ்ந்தவாறு நன்று! என்று கூறி; நானும்... என்பார் - நானும் இவர்முன் இவ்வாறே சார்வேன் என்பாராகி,

(வி-ரை) பின்னும் - "தீதணைவில்லை - உள்ளே பள்ளி கொள்கின்றார்" என்று கூறக் கேட்டபின்னரும்; உள்ளே பள்ளி கொள்கின்றாராதலின் சென்று காணக்கூடாத நேரம் என்பது கேட்ட பின்னும் என உம்மை சிறப்பும்மை; "இடைதெரிந் தருள வேண்டும் - துயில்கொளு மிறைவன்" (475) என்புழி வெளிப்படும் உட்குறிப்புப் போலக் கொள்க. **பின்னும் கூற** - முன் பாட்டிற் கூறிய அதுவேயுமன்றி அக்கருத்தினையே வற்புறுத்தி மேலும் கூற என்றுரைப்பாரும் உண்டு; இப்பொருளில் உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

காட்ட - உள் அழைத்துக் கொண்டு சென்று காட்ட; **மற்றவர்** - மனைத் தொழில் மாக்கள் கூறியவாறுமன்றித், தாம் எதிர்பார்த்தவாறு சூலையுடனுமன்றிக் **கிடந்தார்** என்பது **மற்று** என்பதன் குறிப்பு.

துன்றிய குருதி சோர - துன்றுதல் - மிகுதல்; சோர - சோர்ந்து என்ற வினையெச்சத்திரிபு.

தொடர் குடர் - குடர் என்னும் வயிறுள்பட்ட அன்னக் குழாய் நீண்டு சுருண்டுள்ள தொன்றுதலின் **தொடர்** என்றார். **சொரிதல்** - வாள் செறுதலாலாகிய தொளையின் வழியே ஊறுண்டு வெளியில் நீண்டு தொங்கிக் கிடத்தல். **தொடர் குடர்** - வினைத்தொகை.

உள் ஆவிபொன்றியே - உள் ஆவி இவற்றினுள் பொருந்திய உயிர்; **ஆவி பொன்றுதல்** - உயிர் நீங்குதல்.

கிடந்தார் - சோர - சோர்ந்ததனுலும், **சொரிந்து** - சொரிந்ததனுலும் ஆவி பொன்றினர் என் காரணக் குறிப்புப்படக் கூறியதுமாம்; மிக்க குறுதி வெளிப்படின் உயிர்போம் என்பதும், குருதி நீரே உயிர் தாங்கும் சத்துடையது என்பதும் இந்நாள் ஆங்கில மருத்துவ நூலாராய்ச்சியிற் கண்ட உண்மைகள். குருதி போனதால் மரணம் (Death due to loss of blood) என்றும், குருதிப்புனலுள் சிகப்பும் வெண்மையுமாகிய இருவகைப் புழுப்போன்ற தாதுக்களே உயிர் தாங்க உதவுவன (red and white corpusles) என்றும் கூறுவர் நவீனர்; இதுபற்றி"... மௌ்ளநின் றூரும் புழுவி னெழுங்கோ!... இன்ன தியானென் றறியே னென்னை, யெங்குந் தேடினன் யாதினுங் காணேன்" (திருவிடை-மும்-கோ13) என்பது பட்டினத்து அடிகள் திருவாக்கும் காண்க.

தொடர் குடர் - மேலே, வாயினை ஒரு கோடியாகவும், கீழே அபானத்துளையை மற்றொரு கோடியாகவும் கொண்டு நீண்டதோர் குழாயாக, இடையில் வயிறும் அதைச்

3558. கோளுறு மனத்த ராகிக் குற்றுடை வாளைப் பற்ற
ஆளுடைத் தம்பி ராரு ரருளினு லவரு முய்ந்து
"கேளிரே யாகிக் கெட்டே" னெனவிரைந் தெழுந்து கையில்
வாளினைப் பிடித்துக் கொள்ள வன்ருெண்டர் வணங்கி வீழ்ந்தார். 404

சார்ந்த குடலின் சிறுகுழாய்ப் பகுதியும் பெருங்குழாய்ப் பகுதியுமாக (Small & Large Intestines) தொடர்ந்த நிலைபட உள்ளது உணவுச் சீரணக் கருவி என்பதும் நவீனரும் கண்டவுண்மை; **தொடர்** - என்ற கருத்துக் காண்க. **குடர்** - குடல் எனவும் வழங்கும். **சொரிதல்** -ஊறுண்டு வயிற்றிற் குற்றுப்பட்ட துளை வழியாக வெளியில் வந்து வழிந்தது போலத் தொங்குதல்.

கண்டபின் - கண்டவுடனே.

புகுந்தவாறு நன்று - **புகுந்தவாறு** - நிகழ்ந்தபடி; **நன்று** எதிர்மறைக் குறிப்புப்பட நின்ற துன்பமொழி. **புகுந்த** - தீங்கு வந்து அடைந்த; நான் வந்த என்றலுமாம்.

நானும் இவர் முன் நண்ணுவேன் - இவர் சென்றது போல நானும் உயிர் துறந்து செல்வேன்; **நண்ணுதல்** - உடல் விட்டபின் சாருமிடத்திற்கு என்பது குறிப்பெச்சம். உம்மை- இவருடன் இவர்போலவே என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; **முன்** - முன்பு. இடம் குறித்தது. **முன்** - இவர் செல்லுமுன்; முன்பாக என்றலுமாம்.

என்பார் - முற்றெச்சம். என்பாராகி - மனத்தராகிப் பற்ற என வரும்பாட்டுடன் கூட்டுக.

இவர் - முன்பு கிடந்த கலிக்காமனுரைச் சுட்டிய அணிமைச் சுட்டு. 403

3558. **(இ-ள்)** கோளுறும்... பற்ற - தற்கொலைத் துணிவுகொண்ட மனத்தினை உடையவராகி அதன்பொருட்டுக் குத்திக்கொள்வதற்குரிய அவ் வுடைவாளினைத் தம் கையாற் பற்றியிட; ஆளுடை... உய்ந்து - ஆளுடைய தம் இறைவனுரது திருவருளினுலே அக்கலிக்காமனுரும் மீள உயிர் பெற்று; கேளிரே...பிடித்துக்கொள்ள - நட்புடையவரேயாகிக் கெட்டேன்! என்று விரைவுடனே எழுந்து நம்பிகள் கையிற் பற்றிய வாளினைப் பிடித்துக்கொள்ளவே; வன்ருெண்டர் வணங்கி வீழ்ந்தார்- வன்ருெண்டராகிய நம்பிகள் வணங்கி வீழ்ந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) கோள் - தற்கொலை துணிந்த கொள்கை; **உறுதல்** அதனுற் கொள்ளப்பட்ட நிலை.

குற்று உடை வாள் - **குற்று** - குத்துதல்;"நெற்குறுபாட் டொலி பரக்கும்" (1049); **குற்று** - **குறுகிய** - சிறிய - என்ற குறிப்பு முடையது; இது கலிக்காமனுர் வயிற்றிடைக் குத்திக்கொண்டு அவர்பாலிருந்த உடைவாள் (3551). உடையிற் செருகும் வாள் **உடைவாள். குற்று** குற்றிக்கொண்ட என்றலுமாம்.

பற்றுதல் - விரைவிற் பறித்துப் பிடித்தல்.

3559. மற்றவர் வணங்கி வீழ, வாளினை மாற்றி யேயர்
கொற்றவ ருரு நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்;
அற்றைநா ணிகழ்ந்த விந்த வதிசயங் கண்டு வானோர்
பொற்றட மலரின் மாரி பொழிந்தனர் புவனம் போற்ற. 405

ஆளுடை... உய்ந்து - ஆளுடை - இருவரையும் ஆட்கொண்ட; ஆளாக வுடைய; **அவரும் -** ஆவி பொன்றிக் கிடந்த அவரும் (கலிக்காமனாரும்); உம்மை சிறப்பு; **உய்ந்து - உய்தல் -** ஈண்டு மீள உயிர் பெறுதல் குறித்தது.

கேளிரேயாகி - முன்னிருந்த பகைமையும் செற்றமும் ஒழிந்து நண்பரேயாகி; இந்த மாறுதல் முன் கூறிய எல்லா நிகழ்ச்சிகளின் மூலமாக இறைவரருளால் கலிக்காமனாரது உயிர் (சூக்கும் சரீரத்துள்) நுண்ணுடலினுள் தங்கிய நிலையில் உளதாயினவாறு அவ்வச் செயல்களின் றொடர்ச்சிகளுள் வைத்து உய்த்துணர்ந்து கொள்க. **அருளினால் -** என்பது இத்துணையும் ஒன்று சேர்த்துக் கூறியபடியாம்; **கேளிர் -** நண்பர்; பெரும்பான்மை நட்புமிகுதி யுடைமைபற்றி உறவினர்க்கும் வரும்.

“கெட்டேன்” என விரைந்தெழுந்து - கெட்டேன் என்ற சொல் வாக்கினின்று எழுதலும், உடல், கிடந்த நிலையினின்று எழுதலும் ஒருங்கே விரைவின் உடனிகழ்ந்தன என்க;“தொழுதெழுவாள்” (குறள்) என்புழிப் போல.

கையில் வாளினைப் பிடித்துக் கொள்ள - நம்பிகள் கையிற் பற்றிய உடை வாளினை அவர்குறிக்கொண்ட செயல் செய்யாதவாறு தம் கையால் இறுகப் பிடித்துக் கொள்ள;“அரசனும் பெரியோர் செய்கை, யிருந்தவா றிதுவென் **கெட்டே**னென்றெதிர் கடிதிற் சென்று, பெருந்தடந் தோளாற் கூடிப் பிடித்தனர் வாளுங் கையும்” (596) என்ற எறிபத்த நாயனார் புராணவரலாறும். “தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை, ஏறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண்டு” (829) என்ற திருக்கண்ணப்பதேவர் புராண வரலாறும் ஈண்டு நினைவு கூர்தற் பாலன.

வன்றொண்டர் வணங்கி வீழ்ந்தார் - தாம் வேண்டியவாறு பிழைநீங்கும் நண்பு பெற்றமையாலும், இறைவரருள் வெளிப்பட்ட இடமாதலாலும் நிலமுற வீழ்ந்து வணங்கினர்; பகை நீங்கிய எறிபத்த நாயனாரும் புகழ்ச்சோழ நாயனாரும் (முன் குறித்த அந்நிகழ்ச்சியிற்) றிருவருள் வெளிப்பாட்டின்பின் ஒருவரை யொருவர் அடிவீழ்ந்து வணங்கிய நிலையும் (599) காண்க. மேற்பாட்டுப் பார்க்க. **404**

3559. **(இ-ள்)** மற்று... வீழ - இவ்வாறு நம்பிகள் வணங்கி வீழக் கண்டு; வாளினை... வீழ்ந்தார் - ஏயர் கோனாரும் வாளினை அகற்றி நம்பிகளின் சத்திக்கும் கழலணிந்த திருவடிகளில் பணிந்து வீழ்ந்தனர்; அற்றைநாள்.... போற்ற - அன்று நிகழ்ந்த இந்த அதிசயத்தினைக் கண்டு தேவர்கள் இந்நிலவுலகத்தவர்கள் துதிக்கச் சிறந்த அழகிய கற்பக முதலிய மலர்களை மழைபோலப் பொழிந்தனர்.

(வி-ரை) மற்று - முன் கூறியவாறு. அவர் - நம்பிகள். **வாளினை மாற்றி -** நம்பிகள் பற்றிய வாளினை ஏயர்கோனார் பிடித்துக்கொண்ட பின், நம்பிகள் அதனை விட்டு நிலமிசை வீழ்ந்து வணங்கியதனால் அந்த வாள் ஏயர்கோனார் கையில் வந்தது; அதனை மாற்றினார்

3560. **இருவரு மெழுந்து புல்லி யிடைவிடா நண்பிஞலே**
பொருவரு மகிழ்ச்சி பொங்கத் **திருப்புன்கூர்ப்** புனிதர் பாதம்
மருவினர் போற்றி நின்று, வன்ரெண்டர் தம்பி ராஞர்
அருளினை நினைந்தே **"யந்த ளுள" னென்** றெடுத்துப் பாடி, 406

என்பது; **மாற்றுதல்** பிடித்த நிலையினின்றும் மாற்றுதல்; வேருக எறிந்துவிடுதல்.

குரைகழல் - குரைத்தல் - ஒலித்தல்; **கழல்** - வீரக்கழல்; கழலையணிந்த திருவடிக்கு வந்தது தானியாகுபெயர்; ஏயர்கோனுரது பகைமையை நீக்கி வெற்றி கொண்ட குறியாகக் **கழல்** என்றுர். **கழல்** - ஈண்டு வெற்றிக்குறி என்ற பொதுமையை உணர்த்திய குறிப்புமாம். நம்பிகள் அரசர் திருவுடையாராதலின் அணிந்த கழல் என்பதுமாம். ஏயர்கோனுர் வணங்கி வீழ்ந்தபோது நம்பிகள் திருவடி பெயர்க்கக் கழல் ஒலித்த குறிப்புமாம்.

வீழ்ந்தார்- தன் வயமிழந்து வீழ்ந்தனர் என்பது; தமது முன்னை நினைவுகளையும், தாமே பிழைபட்டதனையும் நினைந்து மனமுருகிய நிலையிஞல் அவசமாயினர்; இரண்டிடத்தும் **வீழ்ந்தார்** என்றது அவர் வீழ்ந்த கருத்துப் பற்றியே இவரும் வீழ்ந்தார் என்ற குறிப்பும் தருவது காண்க.

புவனம் போற்ற வானோர் -மலரின்மாரி பொழிந்தனர் என்க; **புவனம்** - நிலவுலகத்துள்ளோர்; வானோர் சிவனருள் வெளிப்பாடு கண்டு பொழிந்தனர்; உலகரும் அது கண்டு போற்றினர் என்க. **புவனம்** -இடவாகு பெயர். 405

3560. **(இ-ள்)** இருவரும் எழுந்து புல்லி - இருவரும் (வீழ்ந்து வணங்கிய நிலையினின்றும்) எழுந்து தழுவிக் கொண்டு; இடைவிடா...பொங்க - இடையருத நண்பினுடனே ஒப்பற்ற மகிழ்ச்சி மேன்மேலும் பொங்க; திருப்புன்கூர்...நின்று - திருப்புன்கூரிற் சென்று அங்கு விளங்க வீற்றிருந்தருளிய இறைவர் திருவடிகளிற் பொருந்த வணங்கித் துதித்து நின்று வன்ரெண்டர்... பாடி - வன்ரெண்டராகிய நம்பிகள் தம் பெருமானுரது திருவருளினை நினைந்து "அந்த ளுளன்" என்று தொடங்கிப் பாடியருளி,

(வி-ரை) இருவரும் எழுந்து புல்லி - எழுந்து - "வன்ரெண்டர் வணங்கி வீழ்ந்தார்" (3558); "ஏயர் கொற்றவனுரும் நம்பி குரைகழல் பணிந்து வீழ்ந்தார்" (3559) என்றபடி இருவரும் வீழ்ந்த நிலையிற் கிடந்தார்களாதலின் அந்நிலையினின்றும் எழுந்து; **புல்லுதல்** - தழுவிக்கொள்ளுதல், இஃது அன்புடையார் தலைப்பெய்யும் கூட்டத்தின் நிகழும் மெய்ப்பாட்டுவகை.

இடைவிடா நண்பு முன்போலன்றி, இடையருத தொடர்புடைய நட்பு.

திருப்புன்கூர் - திருப்பெருமங்கலத்தின் மிக அணிமையில் வடகிழக்கில் 2 நாழிகையளவில் உள்ள பதி; இங்குக் கலிக்காமனுர் அதிகமாயின திருப்பணி யனேகமுஞ் செய்தும், 12+12=24= வேலி நிலங்கள் விட்டும் தமது அபிமானத் தலமாகக் கொண்டு

3561. சிலபகல் கழிந்த பின்பு திருமுனைப் பாடி நாடர்
மலர்புகழ்த் திருவா ரூரின் **மகிழ்ந்துடன் வந்த வேயர்**
குலமுதற் றலைவ ருருங் கூடவே குளிர்பூங் கோயில்
நிலவினர் தம்மைக் **கும்பிட் டுறைந்தனர்** நிறைந்த வன்பால். 407

வழிபட்டு வந்தனர்; ஆதலின், இங்குத் திருவருள் வெளிப்பாடு கண்டவுடன் அந்நன்றியின் பொருட்டு அங்குச் சென்று இறைவரை வணங்கினர்.

மருவினர் போற்றி நின்று - மருவினர் போற்றி - மருவினராகிப் போற்றி. மருவிப்போற்றி; **மருவினர்** - முற்றெச்சம்; **மருவுதல்** - அடிசேரப் பொருந்தும் வணக்கம் செய்தல்.

இருவரும் போற்றி நின்று - வன்றொண்டர்- பாடி - இருவரும் போற்றுதல் செய்தனர்; அவருள் வன்றொண்டர் ஒருவரே பதிகம் பாடினர்; இருவர்பாலும் சரித நிகழ்ச்சிகளும் பிணைந்து நிகழ அந்நிலையினில் இரண்டு திறத்தினையும வேறு பிரித்துக் காட்டும் கவிநயம் கண்டுகொள்க; இவ்வாறே மேல்வரும் பாட்டிலும் காண்க.

"அந்தணாளன்" என்று - அநதணாளன் என்பது பதிகத் தொடக்கம்; இதனுள் ஏயர்கோனரது அடிமைத் திறத்தினைச் சிறப்பித்தும், (பதிகம் 2-3 பாட்டுக்கள்) சூலைதந் தாட்கொண்ட வரலாற்றின் அருளிப் பாட்டைப் போற்றியும் அருளிச் செய்துள்ளமை காண்க. பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க.

பாடிச் சிலபகல் கழிந்த பின்பு என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. போற்றி நின்று, வன்றொண்டர் பாடி, அதன்பின் சிலபகல் கழிந்தபின் என்க. **406**

3561. (இ - ள்) சிலபகல் கழிந்தபின்பு - சில நாட்கள் இவ்வாறு செல்ல; திருமுனைப்பாடி நாடர் - திருமுனைப்பாடி நாடராகிய நம்பிகள்; மலர்புகழ்...வந்த - விரிந்த புகழினையுடைய திருவாரூரிலே மகிழ்ச்சியுடன் தம்முடன் கூடத் தொடர்ந்து வந்த; ஏயர்...கூடவே - ஏயர் மரபில் வந்த தலைவராகிய கலிக்காமனருடன் கூடவே; குளிர் பூங்கோயில்...அன்பால்- குளிர்ந்த பூங்கோயிலின்கண் நிலைபெற எழுந்தருளிய இறைவரைக் கும்பிட்டு நிறைந்த அன்பினாலே அங்குத் தங்கியருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பகல் - நாள் என்ற பொருளில் வந்தது.

திருமுனைப்பாடி நாடர் - ஆரூர் நம்பிகள்; நாடர் - உடன் வந்த - ஏயர் - தலைவனருங் கூடவே - ஆரூரில் - பூங்கோயில் நிலவினர் தம்மைக் கும்பிட்டு என்று கூட்டி முடிக்க. ***நிறைந்த அன்பால் உறைந்தனர்*** - என்க.

மகிழ்ந்துடன் வந்த - கலிக்காமனர் நம்பிகளோடும் கூடி மகிழ்ந்து திருவாரூருக்கு உடன் சென்று அவருடனே புற்றிடங்கொண்ட இறைவரைத் தொழுதிருந்தனர் என்பது ஏயர்கோனரது அபிமானத் தலமாகிய திருப்புன்கூருக்கு நம்பிகளும், நம்பிகளது திருத்தலமாகிய திருவாரூருக்கு ஏயர்கோனரும் உடன் போந்தமை சிவன் பால் அன்பின்

உரிமைத் திறத்தின் பண்பாலாகியது. ஆளுடைய பிள்ளையாரின் திருத்தாயர் பிறந்த தவத் திருநனிபள்ளி மறையோர் முதலியோர் "சடையாரை யெங்கள் பதியினிற் கும்பிட்டருள அங்கே யெழுந்தருள வேண்டும்" என (2010) விண்ணப்பித்துக் கொடு போந்த வரலாறும், அது போல்வன பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன. **நிலமும் நாடும் மனையும் உடற்சுற்றமும் போன்ற பாச சம்பந்தமான பற்றுக்களானன்றிச் சிவசம்பந்த மொன்றே கருதி அளவளாவுதல் எந்தம் பெருமக்கள் பண்பாகும்.**

குளிர் பூங்கோயில் - குளிர்ச்சியுடைய நீர்ப்பூவாகிய தாமரை போன்ற கோயில்; பூங்கோயில் என்ற பெயர்க் காரணக்குறிப்பு; "அனையதனுக் ககமலரா மறவனர் பூங்கோயில்" (135); இக்குளிர் பிறவிவெப்பத்தை மாற்றும் தன்மையுடையது என்பதும் குறிப்பு. ஈண்டுக் கலிக்காமனர் கொண்டிருந்த மூண்ட சினத்தினையும் மாற்றித் தண்ணிய நட்பு உளதாகச் செய்த குறிப்புமாம்.

நாடர் - தலைவனருங் கூடவே நிலவினரைக் கும்பிட்டுறைந்தனர் என்க.

நிறைந்த அன்பால் உறைந்தனர் - என்பதாம். மனத்தினுள் முன்னர்ப் பகைமை யிருந்த இடத்தில் அதனைப்போக்கி அன்பு நிறைதலினல் என்க.

நண்பால்—என்பதும் பாடம். 407

திருப்புன்கூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி, 7-ம் திருமுறை**

அந்த ணளனுன் னடைக்கலம் புகுத வவனைக் காப்பது காரணமாக,
வந்த காலன்ற னுருயி ரதனை வவ்வி னய்க்குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை **நீயெனை நமன்றமர் நலியி னிவன்மற் றென்னடி யானென** விலக்குஞ்
சிந்தை யால்வந்துன் றிருவடி யடைந்தேன்செழும்பொ ழிற்றிருப் புன்கூருளானே. (1)

"வையக முற்று மாமழை மறந்து
வயலி னீரில மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை" யென்ன
வொளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளுஞ்
செய்கை கண்டுநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. (2)

ஏத நன்னில மீரறு வேலி **யேயர் கோனுற்ற விரும்பிணி தவிர்த்துக்**
கோத னங்களின் பால்கறந் தாட்டக் கோல வெண்மணற் சிவன்றன்மேற்சென்ற
தாதை தாளற வெறிந்தசண் டிக்குன் சடைமிசைமல ரருள்செயக் கண்டு
பூத வாளிநின் பொன்னடி யடைந்தேன் பூம்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே. (3)

நற்ற மிழ்வல்ல ஞான சம்பந்த
ஞவினுக் கரச ஞளைப்போ வானும்
கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கண் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே. (4)

இயக்கர் கின்னரர் யமனொடு வருண
ரியங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
யர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றி நின் றிருவடி யடைந்தேன்
செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானே, (6)

கம்ப மால்களிற் றின்னுரி யானைக் காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச் செழும்பொ ழிற்றிருப் புன்கூ ருளானை
உம்ப ராளியை யுடையவள் கோனை யூரன் வன்றொண்ட னுள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன வருந்தமி ழைந்தோ டைந்தும் வல்லவ ரருவினை யிலரே. (10)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஏயர் கோனரது அடிமைத் திறத்தினைப் பாராட்டுதலும், அவர் பிணி தவிர்த்து அருளியவகையால் அவருடன் தமக்கு நட்புச் செய்தருளிய அருளிப் பாட்டினைப் போற்றுதலும் இறைவரை உயிர்கள் வந்தடைதற்குரிய காரணங்களை எடுத்துக் காட்டுதலும் குறிப்பு. பாட்டுத் தோறும் ஈற்றடிகள் பார்க்க.

பதிகப் பாட்டுக்கு குறிப்பு:- (1) அந்தணாளன் - மார்க்கண்டேயர்; காரணமாக வவ்வினுய்க்கு என்று கூட்டுக. **வந்த** - ஆயுள் எல்லை குறித்த நாள் வந்ததென்று உயிர் கொள்ள வந்த; **காலன்** - காலத்தை அறுதியிட்டு அளந்து காலத்தால் வந்தான் என்ற குறிப்புப்பெறக் **காலன்** என்றார்; **காலம்** - நியதியாதி தத்துவங்களின் றொழிற் பாட்டினுக்குள் நின்று இறைவராணையின் வழி ஏனை உயிர்களின் காலத்தை அறுதியிட்டுக் கொண்டு செல்லும் ஆற்றலுடையது காலனது உயிராதலின், **ஆருயிர்** என்றார்; **ஆர்** - நிறைதல்; வலிமை நிறைதல் குறித்தது; **வவ்வுதல்** - நீக்குதல் குறித்தது; **வவ்வினுய்க்கு-** வவ்விய உன்னிடத்து என நான்கனுருபு ஏழனுருபுப் பொருளில் வந்தது; **இவன் மற்றென் அடியானென விலக்கும் சிந்தையால்** - இவன் என் அடியான்; உனது ஆணையுட்பட இயைபில்லை என்று விலக்கித் தம் உலகஞ் சார்வித்தல்; "அலமந்த போதாக அஞ்சேலென் றருள்செய்வான்" (பிள் - ஐயாறு-1) என்ற திருவாக்கும், அரசுகளது காலபாராயணத் திருக்குறுந் தொகைப் பதிகமும், **கந்தபுராணத்தினுள் வீரவாகுதேவர் தமது தம்பியரைக் கொணரும்படி**

காலனுக்கு எழுதிவிட்ட ஆணையும். அதன்படி அவன் அவர்களுடனே வந்து விண்ணப்பித்த வரலாறும் (அக்கினி முகாசுரன் வதை 211—229). இவைபோல்வன பிறவும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன. காலன் கைப்படுதலைத் தவிர்ப்பவன் காலகாலனே; இப்பிறவியினிறுதியிற் காலன் வேதனை தவிர்ப்பதன்றி, இனியும் பிறவியில் வாராது காத்தலால் மேலும் அவ்வேதனை யில்லாது செய்பவன் என்று தமக்குறுதி சொல்வது போற் சொல்லி உலகை வழிப்படுத்தி உபதேசித்தபடியாம் - இச்சரித்திரத்தினுட் காலனைத் தவிர்த்து ஏயர்கோனுருக்கு மீள வுயிரருளிய குறிப்பும் காண்க;—(2) ஒரு காலம் மழை மறுத்திடப் புன்கூர் இறைவரிடம் மழைவேண்டி ஏயர்கோனுர் இறையிரந்து மழை பெய்யின் அதற்காகப் பன்னிருவேலி நிலம் தானமளிப்பேன் என்று வரங்கிடந்தார்; அதனுக்கிரங்கி இறைவர் பெருவெள்ளமாக மழையினை அருள, அவ்வெள்ளம் தவிர்க்க வேண்டி மேலும் பன்னிருவேலி தானமளித்து வரங்கிடந்து அவ்வாறே அருளப் பெற்றனர். இந்நிலம் **இருபத்து நான்கு வேலி** எனக் குறிப்புப் பெற்று வழங்கலாயினமை இன்றும் நிகழ்வதாம். இச்சரிதம் பற்றித் திருவருளைப் போற்றி ஏயர்கோனுரது அடிமைத் திறத்தினையும் பாராட்டியது இத்திருப்பாட்டு. **"வையகமுற்றும்...எங்களை என்ன** - இது ஏயர்கோனுர் வரங்கிடந்த நிலை; அவர் குடிமக்களின் நலத்திற் பொறுப்புள்ள நிலத்தலைவராதல் **மாநிலந் தருகோம்** என்றதனுலும் குடிகளின் பொருட்டு வரங்கிடந்து பூதானமும் செய்தமையாலும் அறியப்படும்; அரசர் சேனைத் தலைவராதற் குறிப்பும் காண்க. **பெயர்த்தும்** - என்றமையால் முன்னளித்த 12 வேலி கொண்டமையுடன் மீண்டும் 12 வேலி கொண்டு என்பது பெறப்படுதல் காண்க; **வெண்முகில்** - கருமுகிலினும் சிறந்து எங்கும் பரந்து செறிந்து அதிக காலம் மிக்க நீர்ப்பெயல் தரும் தன்மையுடையது; **ஒளி** - மின்னுடன் கூடிய வெண்மை ஒளி;"பொன்னம் பலத்துறை புண்ணிய னென்பர் புயன்மறந்த, கன்னன்மை தீரப் புனிற்றுக் கலிக்காமற் கன்றுபுன்கூர், மன்னு மழைபொழிந் தீரறு வேலிகொண் டாங்கவற்கே, பின்னும் மழைதவிர்த் தீரறு வேலிகொள் பிஞ்ஞகனே" (கோயிற்றிருப் பண்ணியர் விருத்தம் 54) என்று நம்பியாண்டார் நம்பிகள் இதனைப் போற்றிய திருவாக்கும் காண்க;—(3) **ஏத நன்னிலம் - ஏதம்** - பெருமை; நன்மை; **"ஏதம்** செய்தவ ரெய்திய இன்பம்" (திருநின்றி -6-தக்கேசி நம்பி); **ஈரறு வேலி** - பெயர்த்தும் கொளத்தந்த பன்னிரு வேலி; **வேலி தந்த** ஏயர் என அடைமொழியாக்குக; **இரும்பிணி** - இச்சரிதம் பற்றிய சூலை நோயின் குறிப்பு; **கோதனங்களின் அருள் செய்** - சண்டீசர் சரிதம்; **பூத ஆளி - பூதம்** - உயிர்கள்; **பூத ஆளி** - உயிர்களை ஆட்கொள்ளும் தலைவன்; பசுபதி என்ற பொருள்;—(4) **குற்றம் செய்யினும்** - உம்மை எதிர்மறை குறித்தது; உலக நிலை பற்றிக் குற்றமாகக் காணப்படினும், இவை எவையும் குற்ற மன்று என்பது; **கற்ற சூதன்** - மூர்க்கநாயனார்;"கற்ற சூதால்" (மூர்க்கர் - புரா-7=3624) என்று இத்தொடரினை ஆசிரியர் எடுத்தாண்டு விளக்குதல் காண்க; சமணரைக் கழுவேற்றல் - சமணம் புகுந்து இகழ்தல் - குலநிலை பிறழ்தல் - சூதாடல் கல்லெறிதல் - வாய் எச்சில் நூலால் மேல்வலயமிழைத்தல்- இறைச்சி யூட்டல் - வாய்நீ ருமிழ்தல், தலைச் சருகிய இலைப்பூச் சூட்டல், செருப்படியால் மிதித்தல் முதலியவை - திரு முன்பு தலைமயிரினை எரித்தல் என்பன முதலிய இவை உலக நிலையினும் ஏனையோர்க்கு விதித்த நிலையினும் வைத்துக் குற்றமாக அறியார் கூறுவன என்பது குறிப்புப் போலும். எந்தம் பெருமக்கள் சரிதங்களுள் இப்பாட்டிற்குப் பொருள் காணும் நிலையிலாயினும் **குற்றம்**

3562. அங்கினி தமர்ந்து நம்பி யருளினால் மீண்டும் போந்து
பொங்கிய திருவின் மிக்க தம்பதி புகுந்து பொற்பிற்
றங்குநா ளேயர் கோனார் **தமக்கேற்ற தொண்டு செய்தே**
செங்கண்மால் **விடையார் பாதஞ் சேர்ந்தனர் சிறப்பி னோடும்.** 408

காண ஆராய்ச்சி புரிதல் சிவாபராதமாம். முன் குறித்தவை உலகர் கூறும் வகை என்பதற் குதாரணமாகக் குறித்தவை. இதுவும் ஓரளவு அபராதமே! பெரியோரும் என் எண்ணத்துள் நிறைந்த இறைவரும் பொறுத்தருளுதல் கடன்!;—**(5) நஞ்சு கண்டவர்** - விட்டுணுவாதி தேவர்கள். **இரிய** - நிலைகுலைந்து பலபுறமும் ஓட; **பித்த** - பிறர் உண்ணில் சாதல் விளைக்கவல்லது நஞ்சு; அது கண்டு அவர் தப்பி ஓட அதனை உண்டு சாவைக் கோருபவர் போல நின்றது பித்தர் நிலை என்றபடி; அடைந்தார்க்கு அருள்புரிதலிற் பித்துடையவர் என்ற குறிப்புமாம், **சீலம்** - பேரருள்; அன்று அவர்களைக் காத்ததுமன்றி அதனை உலகறியக் கண்டத்தில் வைத்து இனி யிது கண்டேனும் உயிர்கள் வந்தடைந்து உய்க என்று கொண்ட அருட்சீலம்; **(6) இயக்கர்... அர்ச்சித்தார் பெறும் ஆரருள்** - இவை பற்றிப் புராண சரிதங்கள் பலவும் காண்க; **அயர்ப்பு** - மறத்தல்; **ஒன்று** - ஒன்றும்; சிறிதும்; முற்றும்மை தொக்கது; **(7) போர்த்த நீள்செவி போர்த்த** - பொத்திய; **நீள்செவி** - நீண்ட காதுகளையுடைய; "காது பொத்தரைக்கின்னரர்...குழுவுடன் கேட்ப ஆனிழற் கீழறம் பகர" (நம்பி. தேவா - நின்றி-6); இறைவரது உபதேசம் நிரம்பக் கேட்பதற்கும் புறம்போகாது முற்றும் கேட்பதற்கும் உதவும் பொருட்டு நீண்ட செவியினைவேண்டிப் பெற்றதனுடன், அவற்றைக் கைகளினால் ஒருபுறம் - பொத்திக் கேட்டனர் இரண்டு கின்னரர்கள் என்பது வரலாறு. **அந்தணாளர்** - ஈண்டு அக்கின்னரர்களைக் குறித்தது. **அறம் புரிந்து** - அறமுதனான்கனையும் தெரியும்படி செய்து; சொல்லாமற் சொல்லி **தீர்த்தன்** - தூய்மை செய்பவன்;"நாமார்த்தாடுந் தீர்த்தன்" (திருவா);—**(8) மூவெயில் செற்ற ஞான்று** - திரிபுர சங்காரத்தின் போது; **உய்ந்த மூவர்** - அவற்றுள் இறைவரருளால் வேவாது தப்பிய அன்பர் மூவர்; **கோயில் காவலாளர்** - துவார பாலகர்; **ஒருவன் - முழா முழக்க** - மூவரில் இருவர் காவலராக, ஒருவன் முழக்க; "எண்ணுடை மூவரிராக்கதர்க ளெரிபிழைத்து" என்ற திருவாசகமும் காண்க. (தோணோக்); **மாவை நோக்கி** - மாவின் வடுவகிர் போன்ற கண்ணுடையவர்; உமாதேவியார். "மாவின் வடுவகி ரன்னகண்ணீர்" (திருவா);—**(9) அறிவினான்...புரிந்து - அறுவகைச் சமயம்** - உட்சமயங்க ளாறு;"ஆறு சமயத் தவரவரைத் தேற்றுந் தகையன" (அரசு - விருத் - இன்னம்பர்); "அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய்" (சித்தி); **அருள் புரிந்து** - அவ்வவர் தகுதிக் கேற்பப் படி முறையில் அறிவு விளக்கம் செய்து என்க; **ஆர்**- நிறைந்த; நிறைதலாவது அவ்வவரும் தாந்தாங் கண்டதே பொருள் என்று அமைவு பெற; இது கன்மக் கூறு பாட்டினால் முழுவுண்மை விளங்க வைக்காத திரோதான சத்தியின் செயல். **குறிகொள்பாடல்** - இறைவரைக் குறிக்கொண்ட சாமவேதம்; **நாள்** - ஆயுள்; **செறிவு** - அருளின் மிகுதிப்பாடு;—**(10) உம்பராளி** - தேவர்களை ஆள்பவர்; தேவ தேவர்; **ஆளி** - ஆள்பவர் - பெயர்.

குறிப்பு: இத்திருப்பதிகம் மிகச் சிறப்புடையது;பாராயணம் செய்தல் பெரும்பயன் தரும்.

3563. **நள்ளிரு ளுய ளுரைத் தூதுவிட் டவர்க்கே நண்பாம்**
வள்ளலா ரேயர் கோனுர் மலரடி வணங்கிப் புக்கேன்
உள்ளுணர் வான ஞான முதலிய வொருநான் குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறுந் திருமூலர் பெருமை செப்ப. 409

தலவிசேடம்:—திருப்புன்கூர் - I (பாட்டு - *261*) பார்க்க.

3562. **(இ-ள்)** அங்கு...போந்து - அத்திருவாரூரில் இனிதாக விரும்பி எழுந்தருளி யிருந்து நம்பிகள்பால் அருள்விடை பெற்று மீண்டும் தமது திருநகரத்தினிற் சென்று சேர்ந்து; பொற்பில் தங்குநாள் - அழகியதாக எழுந்தருளி யிருந்த காலத்தில்; ஏயர்கோனுர்... செய்தே - ஏயர்கோனுர் தமக்கேற்றனவாகிய திருப்பணிகளைச் செய்தே; செங்கண்... சிறப்பிளேடும் - சிவந்தகண்ணையும் பெருமையினையுமுடைய விடையினையுடைய இறைவரின் திருவடிகளைச் சிறப்பினேடும் சேர்ந்தனர்.

(வி-ரை) அங்கு - முன்பாட்டிற் கூறிய அத்திருவாரூரில்; முன்னறிசுட்டு.

அருளினுல் - அருள்விடை கொடுப்பப் பெற்று.

பொங்கிய திருவின் மிக்க - முன்னரே பீடு தங்கிய தெய்வத் திருப் பெருமங் கலமாயிருந்த அந்நகர் இப்பொழுது இறைவர் செய்த அருளிப்பாட்டினுலும் நம்பிகளின் நட்புச் சேர்ந்த சிறப்பினுலும் அப்பெரிய **திரு** மேலும் பொங்கிற்று என்பதாம்.

பொற்பில் தங்குதல் - தமது சிவச்சார்பாகிய இயல்பினுல் வாழ்தல்.

தமக்கு ஏற்ற தொண்டு - இறைவன்பாலும் அடியார்பாலும் பணி செய்தல்;"அடிபணி வாரடிச் சார்ந்து, பொங்கு காதலி னவர்பணி போற்றுதல் புரிந்தார்" (*3160*);"சடைமுடி யார்திருப் புன்கூர்க் கதிகமாயின திருப்பணி யனேகமுஞ் செய்து, நிதிய மாவன நீறுகந் தார்கழ லென்று, துதியி னுற்பரவித் தொழுது" (*3161*) என்றவை காண்க.

செய்தே - ஏகாரம் தேற்றம்; தொண்டே செய்து என்று ஏகாரம் பிரித்துக் கூட்டுக.

செங்கண்...மால்விடை - சிவந்த கண்ணையுடைய திருமாலாகிய விடை என்றலுமாம்.

சிறப்பிளேடும் சேர்ந்தனர் என்க; **சிறப்பாவது** சிவசிந்தனை மறவாத அன்பு. *408*

3563. **(இ-ள்)** நள்ளிருள்... வள்ளலார்- நடு இரவிலே தமது தலைவரைத் தூதாக விடுத்த நம்பிகளுக்கே நண்பராக ஆகிய வள்ளலாராம்; ஏயர்கோனுர் மலரடி வணங்கி -ஏயர்கோனுருடைய மலர் போன்ற திருவடிகளை வணங்கி (அத்துணை கொண்டு); உள்ளுணர்வான...செப்ப - உள்ளே உணரத்தக்கதாகிய ஞானம் முதலாகிய ஒரு நான்கின் உண்மையினைத் தெளிவிக்கும் இனிய தமிழினுற் கூறும் திருமூலதேவ நாயனுரது பெருமையினைச் சொல்வதற்கு; புக்கேன் - இனிப் புகுகின்றேன்.

(வி-ரை) நள்இருள் - நடு இரவில்;"பாதி இரவில்" (*3493*); திணிந்த இருளில் என்ற குறிப்புமாம்.

இருளில் - தூது விட்டவர் - என்க; **இருள் -** இருளின்கண்; ஏழனுருபு தொக்கது; **நள் இருள் - நாயனுர்** என்றே கூட்டி இரவில் ஆடுகின்ற நாயனுராகிய இறைவர் என்றலுமாம். **இருள் -** சங்காரகாலம்; **நன் இருள் - நள் -** நட்புச் செய்யும் - புலவி தீர்த்து ஒன்றுவிக்கும் கருத்துடன் கூடிய அவ்விரவிலே என்ற குறிப்பும்பட நின்றது.

தூது விட்டவர்க்கே நண்பாம் - தூது விட்டதன் பொருட்டுப் பகைமை பூண்டு தாம் வெறுத்த அந் நம்பிகளுக்கே என ஏகாரம் தேற்றம்.

நள் இருள்... வள்ளலார் -ஏயர்கோன் கலிக்காமர் சரித முழுமையும் திரட்டிய சாரமாய் எடுத்துக் காட்டியது கவிநயம்.

செப்பப் - புக்கேன் என்று கூட்டுக. **புக்கேன் -**புகுகின்றேன்; இறந்தகாலம் நிகழ்காலப் பொருளில் வந்தது காலவழுவமைதி.

உள்ளுணர்வான ஞானம் - உள்ளத்தால் அனுபவத்தில் உணரப் படுவதன்றி உரையால் உரைக்கலாகாத ஞானம்; அதனையும் கூறும் என்று திருமூலர் பெருமை குறித்தவாறு.

முதலிய - முதலாக; சிறப்புடைய முடிந்த முடிபாகிய.

ஞான முதலிய ஒரு நான்கு - நான்கனுட் பயனுக வுள்ளது ஞானமாதலின் அதனைச் சுட்டிப் படிமுறையாகிய ஏனையவற்றை அதனுள் அடங்க வைத்தார். "சிறப்புடைப் பொருளை முற்படக் கிளத்தல்"; "நலஞ் சிறந்த ஞானயோகக் கிரியா சரியையெலாம், மலர்ந்த மொழித் திருமூல தேவர்" *(28)* என்று முடித்துக் காட்டியருளுவதும் காண்க; நான்கு - ஞானம் யோகம் கிரியை சரியை என்பன.

உண்மை - உண்மை நிலைகளை; **தெள்ளும் -** தெளிய அறிவிக்கும்; பிறவினைப் பொருளில் வந்தது.

ஞான முதலிய ஒரு நான்கு உண்மை - இவை சிவாகமங்களுள் இறைவனுல் அருளப்பட்டன. இவற்றை இனிய தமிழினுல் திருமந்திரத்தினுல் அருளியவர் திருமூல தேவர்; எனவே இறைவர் அவ்வாகமங்களைத் தமிழினன்றி (வேறு) வடமொழியில் அருளினுர் என்பது கருதக் கிடக்கின்றது; "ஆகமம் செப்ப வந்தேனே" (திருமந் - *1-73*); "இங்கியான் வந்த காரணம், நீலாங்க மேனி நேரிழை யாளொடு, மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின், சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே" (மேற்படி *76*) (இங்கு வேதம் என்பது ஆகமம் ஞானம் என்ற பொருளில் வந்தது).

தெள்ளு தீந்தமிழ் - "என்னை நன்றுக யிறைவன் படைத்தனன், **றன்னை நன்றுகத் தமிழ்ச் செய்யு** மாறே" (மேற்படி *81*).

உண்மை - இறைவரது சத்திய வாக்காகிய சிவாகமம்.

பெருமை - செப்ப - ஏனைச் சரிதங்கள் போல இவ்வுலகிற்பிறந்து அடிமை செய்து திருவடி யடைந்த நிலை என்பதின்றித், திருமூல தேவ நாயனுர் திருக்கயிலையில் அருள் பெற்ற சிவயோகியராகி இந்நிலவுலகில் வழிக்கொண்டு போந்த காலத்து, மூலன் என்னும் இடையன் உடலில் பரகாயப் பிரவேசம் என்ற சித்தி வழியாகப் புகுந்து, திருவாவடுதுறையிற் போதியின்

கீழ் அனேக காலம் சிவ யோகத்திருந்து திருமந்திரமருளினுர் என்ற அளவே இப்புராணத்தினுட் பேசப்படுவதாம். அஃது அவரது சரிதம் எனப்படாது பெருமை கூறும் அளவால் அமைதலின் **பெருமை செப்ப** என்ருர். 409

தலவிசேடம்:—(1) **திருப்பெருமங்கலம்** - இஃது இப்பெயராலே இன்றும் வழங்குகின்றது. ஏயர்கோன் கலிக்காமனுரது பதி. அவரது திருமனே இருந்த இடம் முதலிய அடையாளங்கள் ஒன்றும் கிடைத்தில! இங்குக் கோயிலில் அவரது திருஉருவம் இல்லே. வைத்தீசுவரன்கோயிலி (புள்ளிருக்கு வேளுர்) னின்றும் மேற்கே மட்சாலே வழி 2 நாழிகை யளவில் அடையத் தக்கது; திருப்புன்கூருக்கு வடக்கே ஒரு நாழிகை யளவில் உள்ளது.

(2) **திருப்புன்கூர்** - முன் உரைக்கப்பட்டது.

சரிதச் சுருக்கம்:- ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணம்—சோழ நாட்டிலே அணிநகரம் **திருப்பெருமங்கலம்.** அதில் சோழர்களின் சேனுபதிக் குடியாகிய **ஏயர்கோக்குடி வேளாண்மை**யிற் சிறந்து விளங்கியது. அதனுள் வந்தருளியவர் **கலிக்காமனுர்.** அவர் சிவனடியார் பத்தியிற் சிறந்து வாழ்ந்தனர். தமது பதிக்கு அணிமையில் உள்ள திருப்புன்கூரில் அதிகமான அநேகம் திருப்பணிகளும் செய்து திருநீற்றுச் செல்வமே செல்வம் எனக்கொண்டு அந்நெறியில் ஒழுகி விளங்கினுர். மானக்கஞ்சாற நாயனாரின் திருமகளை மனைவியாகப் பெற்றவர். மணநாளன்று சுவாமிக்காக கூந்தலை அரிந்த நிகழ்வுகளை நினைவில் கொள்ள வேண்டும். அந்நாளில் நம்பியாரூரர் இறைவரைப் பரவையாரது ஊடலேத் தீர்ப்பதற்காகத் தூது செல்ல ஏவியது கேட்டு மிகவும் சினந்து இழித்துரைத்தனர். அதுகேட்டு நம்பிகள் பிழையுடன்பட்டு அவரது நட்பினேப் பெறவேண்டி இறைவர்பால் விண்ணப்பித்தனர். அவரருளியவாறே அந்நட்பினேயும் பெற்றருளினர்; அவ்வரலாற்றின் விரிவே இப்புராணமாகும்;அதுவருமாறு:—

குண்டையூர் நெற்கொண்டது

திருத்தொண்டத் தொகையினே அருளிச் செய்தபின்னர் நம்பிகள் திருவாரூரில் புற்றிடங் கொண்டாரை முப்பொழுதும் அன்புடன் பணிந்து அங்கு எழுந்தருளி யிருந்தனர். அந்நாளில் குண்டையூர்க் கிழார் என்னும் வேளாளர் பெருந்தகையார் நாடோறும் நம்பிகளது திருமாளிகைக்குத் தவிராது பலநாளும் அமுதுபடி கொடுத்து வந்தார்; அப்போது மழைவளஞ் சுருங்கியமையால், படி எடுக்கப்போதாமையால், அவர் மனம் வருந்திப் பெருங் கவலேயினுல் துயரெய்தி அமுது செய்யாது துயில் கொண்டனர். அன்றிரவு இறைவர் அவர் கனவிலே வந்து "ஆரூரனுக்காக உனக்கு நெல் தந்தோம்" என்றருளிக் குபேரனுக்கு ஆணேயிட, அவ்வூர் முழுதும் வானமளாவும் நெல்மலேயாய்க் குவிந்தது. காலேயில் அது கண்டு அதிசயித்துக் களித்த குண்டையூர்கிழார் அதனே எடுக்கப் போதிய ஆளில்லாமையால் நம்பிகளிடம் சென்றறிவித்தனர். அதுகேட்ட நம்பிகள் அவருக்கு முகமன்சொல்லித் தாமும் குண்டையூர் வந்து சார்ந்தனர். நெல்லின் மலேயினே நோக்கி இதனே எடுக்க ஆளும் இறைவரே தரிலன்றி ஒருவராலும் எடுக்க வியலாதென்று அருகில் உள்ள **திருக்கோளிலி** என்னும் பதியினிற் சென்று, நெல்லிட ஆள் வேண்டி இறைவரை "நீள நினேந்தடியேன்" என்ற பதிகம் பாடியருளினர் - இறைவரது அருளால் அன்றிரவு பூதங்கள் அதனே ஆரூரிற் கொண்டு

சேர்க்கும் என்று ஒரு வாக்கு ஆகாயத்தில் எழுந்தது. அது கேட்டு நம்பிகள் தொழுது சென்று திருவாரூர் சேர்ந்தருளினர். அன்றிரவே இறைவர் ஏவலினால் சிவபூதங்கள் அந்நெல்மலை முழுதும் கவர்ந்து திருவாரூர் வீதி முழுமையும் ஆளியங்கா வண்ணம் நிரப்பின. பிற்றைநாட் பகல் ஆரூர் வாழ்வார் கண்டு அதிசயித்து நம்பிகளுக்கு இறைவர் அளித்தன என்று மகிழ்ந்தனர். ஆளியங்கா வண்ணம் தெரு முழுமையும் அடைத்த நெல்லைக் கண்டு பரவையார் மகிழ்ந்து அவ்வவர் மனையெல்லை அளவு உள்ள நெல்லை அவ்வவர் எடுத்துக் கொள்க என்று பறைசாற்றச் செய்தனர். திருவாரூர் நகர் வாழ்வார் அவ்வாறே கொண்டு மகிழ்ந்தனர். நம்பிகள் இறைவரைக் கும்பிட்டெழுந்தருளியிருந்தனர்.

திருநாட்டியத்தான்குடி - கோட்புலியார் - வனப்பகை - சிங்கடி

அந்நாளில் **திருநாட்டியத்தான்குடி**யினின்றும் கோட்புலி நாயனார் வந்து நம்பிகளைக் குறையிரந்து தமது பதியினுக்கு அழைத்துச் சென்றனர். அங்குத் தமது திருமாளிகையில் நம்பிகளை எழுந்தருளுவித்துச் சந்தனம், பூ முதலிய எல்லா உபசாரங்களையும் பூசனையினையும் முறைப்படி மிக்க விருப்பத்தோடும் செய்வித்து வணங்கினர்; பின்னர்த் தம் மக்களாகிய சிங்கடி, வனப்பகை என்ற இருவரையும் கொணர்ந்து நம்பிகளைப்பாதம் பணிவித்து "அடியேனின் மக்களாகிய இவர்களை அடிமையாக ஏற்றுக் கொண்டருளித் தேவரீரது திருவடிகளைத் தொழுதிருக்கும்படி கருணை செய்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். நம்பிகள் "இவர்கள் எனக்குத் தூய மக்கள்" என்றுகொண்டு அவர்களை மடியிலிருத்தி உட்கசிவினால் உச்சி மோந்து வேண்டுவனவும் கொடுத்து மகண்மையாகக் கொண்டருளினர். பின்பு இறைவரது திருக்கோயிலுக்குச் சென்று வணங்கிப் "பூணாண்" என்று தொடங்கும் திருப்பதிகம் அருளிச்செய்து, அதன் திருக்கடைக்காப்பில் "சிங்கடியப்பன்" என்றே தம்மை வைத்துப் பாடிக் கோட்புலியாரது அருளுரிமையினையும் சிறப்பித்தருளினர். அங்கு நின்றும் திருவலிவலத்தை வணங்கிப் பாடிய திருப்பதிகத்தில் திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் பாட்டுகந்தீர் என்று அருளிச் சென்று, திருவாரூரினை அடைந்து இறைவரை வணங்கி எழுந்தருளியிருந்தனர்.

திருப்புகலூர்-செங்கல் செழும்பொன்

அந்நாளில் திருவாரூர்த் திருப்பங்குனி உத்திரத் திருநாள் அணுகியது. அதற்குப் பரவையார், விழாவில் அடியார்களுக்குக் குறைவறுக்கும் பொருட்டுப் பொன் கொண்டணைவதற்கு நினைந்து நம்பிகள் **திருப்புகலூருக்கு** எழுந்தருளி அங்கு இறைவரை வணங்கிப் பாடித் தமது கருத்தினை நிகழ்வித்துக் கும்பிட்டுப், பொன் பெருமையால் வறிது புறம்போந்து, திருமுன்றிலின் ஒரு மருங்கு அமர்ந்திருந்தனர்; அப்போது திருவருளாலேயோ துயில் வந்தெய்த, அங்குத் திருப்பணிக்குப் பயிலும் சுடுமட்பலகை பல கொணர்வித்து உயரம் பண்ணி அதன்மேல் வெண்பட்டு உத்தரியம் விரித்துப் பள்ளியமர்ந்தனர். சுற்றியிருந்த தொண்டர்களும் துயின்றனர். சிறிதளவில் நம்பிகள் பள்ளியுணர்ந்தெழுந்தனர். இறைவர் திருவருளாலே வேமண் கல்லே பொன்னாயிருந்தமை கண்டனர்; மகிழ்ந்தெழுந்து இறைவரை வணங்கித் "தம்மையே புகழ்ந்து" என்ற பதிகம் பாடித் துதித்து விடைபெற்றுப் போந்து, இடையில் திருப்பனையூர் தொழுது, திருவாரூரில் அணைந்து, பொற்கட்டிகளைத் திருமாளிகையிற் போக்கிப் புற்றிடங் கொண்டாரைத் தொழுது சென்று அமர்ந்திருந்தருளினர். அந்நாள்களில்

திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருவீழிமிழலை, திருவாஞ்சியம் பணிந்து, **அரிசிற்கரைப்புத்தூரினை** அணைந்து வழிபட்டு அங்குப் புகழ்த்துணையாருக்கு இறைவர் அருளிய திறத்தினைப் போற்றிப் பாடியருளினர்; அங்குநின்றும் பல பதிகளையும் வணங்கிச் சென்று **திருவாவடுதுறை**யினை யணைந்து கோச்செங்கணுர் செய்த திருப்பணியினைச் சிறப்பித்துப்பாடி வைகினர்; பின்னர்க் காவிரித் தென்கரையில் உள்ள **திருவிடைமருதும், திருநாகேச்சரமும்** பணிந்து, **திருக்கலயநல்லூரினை** அணைந்து, மெய்ம்மைப் புராண சரிதங்கள் பலவற்றையும் போற்றித் திருப்பதிகம் அருளிச் செய்தனர். பின்பு, **திருக்குடமூக்கு, திருவலஞ்சுழி, நல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு** பணிந்து, **திருவாலம் பொழிலில்** அணைந்து பணிந்து இரவு அங்குத் தங்கித் துயின்றருளினர். அப்போது இறைவர் அவரது கனவிலெழுந்தருளி "மழபாடியினில் வருதற்கு நினைக்க மறந்தாயோ?" என்று வினவித் தமது கோலங் காட்டியருள, உணர்ந்து, காவிரியின் வடபால் ஏறித் திருமழபாடியினை அணைந்து வணங்கிப் "பொன்னுர் மேனி" என்றெடுத்து "உன்னையல்லா லினி யாரை நினைக்கேனே" என்று பாடித் துதித்தபின் காவிரியின் இருகரையிலும் உள்ள பதிகளை வணங்கி மேல்பாற் போதுவார் **திருவானைக்காவில்** எழுந்தருளினர். அங்கு இறைவரைப் பணிந்து பரவி, இறைவர் உறையூர்ச் சோழனது மணியாரத்தைச் சாத்திக்கொண்டருளிய திறத்தினைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடி அங்குத் தங்கினர். அந்நாளில் இறைவரின் பதிகள் பலவும் சென்றிறைஞ்சித் **திருப்பாச்சிலாச்சிராமத்தினை** அணைந்தனர்.

திருப்பாச்சில்-பொன்

அங்கு இறைவர் திருமுன்பு நின்று பொருட்காதல் பெருக விரும்பிப் பரவ, இறைவர் தாம் நினைந்த பொருள் தாராதொழியவே நேர் நின்று திருத்தோழமைப் பணியால் உள்ளம் புழுங்கிப்புறம் பொருபால் நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பாடு உரைப்பார் போல "எத்தனை யருளா தொழியினும் இவரலா தில்லையே பிரானுர்" என்ற கருத்துடன் "வைத்தனன் றனக்கே" என்ற திருப்பதிகம் பாடியருளினர். அவ்வளவில் இறைவனுர் நிதிக்குவை யளித்தருள மகிழ்ந்து, அங்கு வைகி அம் மருங்குள்ள பதிகளையும் வணங்கிச் சிலநாள் அமர்ந்திருந்தனர். அதன்பின் **திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை** முதலாகிய பதிகளையும் வணங்கிப் போய்க் காவிரியைக் கடந்து கொங்கு நாட்டில் **திருக்கறையூர்ப் பாண்டிக்கொடு முடியை** அணைந்தனர்.

கொங்குநாடு-திருப்பேரூர்

அங்கு இறைவரது பொன் மேனியை நோக்கி இவரை நான் மறக்கினும் எனது நா இடைவிடாது அவரது நாம அஞ்செழுத்தினைச் சொல்லும் என்று **நமச்சிவாயத் திருப்பதிகத்தினை** அருளிச் செய்தனர். அதன்பின் அங்கு நின்றும் பல பதிகளை வணங்கிச் சென்று,மேல்கொங்கில் அணிகாஞ்சிவாய்ப் **பேரூரினை** ஆதரவினேடும் அடைந்தருளினர். அங்கு நித்தனுர் தில்லை மன்று ணின்றுடல் நீடிய கோல நேர்காட்டக் கண்டு பேர் ஆனந்தத்துட் டிளைத்துப் பாடி மகிழ்ந்தனர். அங்கு நின்றும் அருளினுற் போய் அருவரைச் சுரங்களும் நதிகளும் பலபல கடந்து, பல பதிகளும் பணிந்து, **திருவெஞ்சமாக் கூடலும்** வணங்கிப் போய்த், திருக்கற்குடி மலையில் எழுந்தருளினர்.

சேர்க்கும் என்று ஒரு வாக்கு ஆகாயத்தில் எழுந்தது. அது கேட்டு நம்பிகள் தொழுது சென்று திருவாரூர் சேர்ந்தருளினர். அன்றிரவே இறைவர் ஏவலினல் சிவபூதங்கள் அந்நெல்மலை முழுதும் கவர்ந்து திருவாரூர் வீதி முழுமையும் ஆளியங்கா வண்ணம் நிரப்பின. பிற்றைநாட் பகல் ஆரூர் வாழ்வார் கண்டு அதிசயித்து நம்பிகளுக்கு இறைவர் அளித்தன என்று மகிழ்ந்தனர். ஆளியங்கா வண்ணம் தெரு முழுமையும் அடைத்த நெல்லைக் கண்டு பரவையார் மகிழ்ந்து அவ்வவர் மனையெல்லை அளவு உள்ள நெல்லை அவ்வவர் எடுத்துக் கொள்க என்று பறைசாற்றச் செய்தனர். திருவாரூர் நகர் வாழ்வார் அவ்வாறே கொண்டு மகிழ்ந்தனர். நம்பிகள் இறைவரைக் கும்பிட்டெழுந்தருளியிருந்தனர்.

திருநாட்டியத்தான்குடி - கோட்புலியார் - வனப்பகை - சிங்கடி

அந்நாளில் **திருநாட்டியத்தான்குடி**யினின்றும் கோட்புலி நாயனர் வந்து நம்பிகளைக் குறையிரந்து தமது பதியினுக்கு அழைத்துச் சென்றனர். அங்குத் தமது திருமாளிகையில் நம்பிகளை எழுந்தருளுவித்துச் சந்தனம், பூ முதலிய எல்லா உபசாரங்களையும் பூசனையினையும் முறைப்படி மிக்க விருப்பத்தோடும் செய்வித்து வணங்கினர்; பின்னர்த் தம் மக்களாகிய சிங்கடி, வனப்பகை என்ற இருவரையும் கொணர்ந்து நம்பிகளைப்பாதம் பணிவித்து "அடியேனின் மக்களாகிய இவர்களை அடிமையாக ஏற்றுக் கொண்டருளித் தேவரீரது திருவடிகளைத் தொழுதிருக்கும்படி கருணை செய்தருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். நம்பிகள் "இவர்கள் எனக்குத் தூய மக்கள்" என்றுகொண்டு அவர்களை மடியிலிருத்தி உட்கசிவினல் உச்சி மோந்து வேண்டுவனவும் கொடுத்து மகண்மையாகக் கொண்டருளினர். பின்பு இறைவரது திருக்கோயிலுக்குச் சென்று வணங்கிப் "பூணன்" என்று தொடங்கும் திருப்பதிகம் அருளிச்செய்து, அதன் திருக்கடைக்காப்பில் "சிங்கடியப்பன்" என்றே தம்மை வைத்துப் பாடிக் கோட்புலியாரது அருளுரிமையினையும் சிறப்பித்தருளினர். அங்கு நின்றும் திருவலிவலத்தை வணங்கிப் பாடிய திருப்பதிகத்தில் திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் பாட்டுகந்தீர் என்று அருளிச் சென்று, திருவாரூரினை அடைந்து இறைவரை வணங்கி எழுந்தருளியிருந்தனர்.

திருப்புகலூர்-செங்கல் செழும்பொன்

அந்நாளில் திருவாரூர்த் திருப்பங்குனி உத்திரத் திருநாள் அணுகியது. அதற்குப் பரவையார், விழாவில் அடியார்களுக்குக் குறைவறுக்கும் பொருட்டுப் பொன் கொண்டணைவதற்கு நினைந்து நம்பிகள் **திருப்புகலூருக்கு** எழுந்தருளி அங்கு இறைவரை வணங்கிப் பாடித் தமது கருத்தினை நிகழ்வித்துக் கும்பிட்டுப், பொன் பெருமையால் வறிது புறம்போந்து, திருமுன்றிலின் ஒரு மருங்கு அமர்ந்திருந்தனர்; அப்போது திருவருளாலேயோ துயில் வந்தெய்த, அங்குத் திருப்பணிக்குப் பயிலும் சுடுமட்பலகை பல கொணர்வித்து உயரம் பண்ணி அதன்மேல் வெண்பட்டு உத்தரியம் விரித்துப் பள்ளியமர்ந்தனர். சுற்றியிருந்த தொண்டர்களும் துயின்றனர். சிறிதளவில் நம்பிகள் பள்ளியுணர்ந்தெழுந்தனர். இறைவர் திருவருளாலே வேமண் கல்லே பொன்னுயிருந்தமை கண்டனர்; மகிழ்ந்தெழுந்து இறைவரை வணங்கித் "தம்மையே புகழ்ந்து" என்ற பதிகம் பாடித் துதித்து விடைபெற்றுப் போந்து, இடையில் திருப்பனையூர் தொழுது, திருவாரூரில் அணைந்து, பொற்கட்டிகளைத் திருமாளிகையிற் போக்கிப் புற்றிடங் கொண்டாரைத் தொழுது சென்று அமர்ந்திருந்தருளினர். அந்நாள்களில்

திருநன்னிலத்துப் பெருங்கோயில், திருவீழிமிழலை, திருவாஞ்சியம் பணிந்து, **அரிசிற்கரைப்புத்தூரினை** அணைந்து வழிபட்டு அங்குப் புகழ்த்துணையாருக்கு இறைவர் அருளிய திறத்தினைப் போற்றிப் பாடியருளினர்; அங்குநின்றும் பல பதிகளையும் வணங்கிச் சென்று **திருவாவடுதுறை**யினை யணைந்து கோச்செங்கணுர் செய்த திருப்பணியினைச் சிறப்பித்துப்பாடி வைகினர்; பின்னர்க் காவிரித் தென்கரையில் உள்ள **திருவிடைமருதும், திருநாகேச்சரமும்** பணிந்து, **திருக்கலயநல்லூரினை** அணைந்து, மெய்ம்மைப் புராண சரிதங்கள் பலவற்றையும் போற்றித் திருப்பதிகம் அருளிச் செய்தனர். பின்பு, **திருக்குடமூக்கு, திருவலஞ்சுழி, நல்லூர், திருச்சோற்றுத்துறை, திருக்கண்டியூர், திருவையாறு** பணிந்து, **திருவாலம் பொழிலில்** அணைந்து பணிந்து இரவு அங்குத் தங்கித் துயின்றருளினர். அப்போது இறைவர் அவரது கனவிலெழுந்தருளி "மழபாடியினில் வருதற்கு நினைக்க மறந்தாயோ?" என்று வினவித் தமது கோலங் காட்டியருள, உணர்ந்து, காவிரியின் வடபால் ஏறித் திருமழபாடியினை அணைந்து வணங்கிப் "பொன்னுர் மேனி" என்றெடுத்து "உன்னையல்லா லினி யாரை நினைக்கேனே" என்று பாடித் துதித்தபின் காவிரியின் இருகரையிலும் உள்ள பதிகளை வணங்கி மேல்பாற் போதுவார் **திருவானைக்காவில்** எழுந்தருளினர். அங்கு இறைவரைப் பணிந்து பரவி, இறைவர் உறையூர்ச் சோழனது மணியாரத்தைச் சாத்திக்கொண்டருளிய திறத்தினைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடி அங்குத் தங்கினர். அந்நாளில் இறைவரின் பதிகள் பலவும் சென்றிறைஞ்சித் **திருப்பாச்சிலாச்சிராமத்தினை** அணைந்தனர்.

திருப்பாச்சில்-பொான்

அங்கு இறைவர் திருமுன்பு நின்று பொருட்காதல் பெருக விரும்பிப் பரவ, இறைவர் தாம் நினைந்த பொருள் தாராதொழியவே நேர் நின்று திருத்தோழமைப் பணியால் உள்ளம் புழுங்கிப்புறம் பொருபால் நின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பாடு உரைப்பார் போல "எத்தனை யருளா தொழியினும் இவரலா தில்லையே பிரானுர்" என்ற கருத்துடன் "வைத்தனன் றனக்கே" என்ற திருப்பதிகம் பாடியருளினர். அவ்வளவில் இறைவனுர் நிதிக்குவை யளித்தருள மகிழ்ந்து, அங்கு வைகி அம் மருங்குள்ள பதிகளையும் வணங்கிச் சிலநாள் அமர்ந்திருந்தனர். அதன்பின் **திருப்பைஞ்ஞீலி, திருவீங்கோய்மலை** முதலாகிய பதிகளையும் வணங்கிப் போய்க் காவிரியைக் கடந்து கொங்கு நாட்டில் **திருக்கறையூர்ப் பாண்டிக்கொடுமுடியை** அணைந்தனர்.

கொங்குநாடு-திருப்பேரூர்

அங்கு இறைவரது பொன் மேனியை நோக்கி இவரை நான் மறக்கினும் எனது நா இடைவிடாது அவரது நாம அஞ்செழுத்தினைச் சொல்லும் என்று **நமச்சிவாயத் திருப்பதிகத்தினை** அருளிச் செய்தனர். அதன்பின் அங்கு நின்றும் பல பதிகளை வணங்கிச் சென்று,மேல்கொங்கில் அணிகாஞ்சிவாய்ப் **பேரூரினை** ஆதரவினேடும் அடைந்தருளினர். அங்கு நித்தனுர் தில்லை மன்று ணின்றுடல் நீடிய கோல நேர்காட்டக் கண்டு பேர் ஆனந்தத்துட் டிளைத்துப் பாடி மகிழ்ந்தனர். அங்கு நின்றும் அருளினுற் போய் அருவரைச் சுரங்களும் நதிகளும் பலபல கடந்து, பல பதிகளும் பணிந்து, **திருவெஞ்சமாக் கூடலும்** வணங்கிப் போய்த், திருக்கற்குடி மலையில் எழுந்தருளினர்.

கூடலை யாற்றூர்

அங்கு இறைவரை வணங்கிப் பதிகம் பாடிப் பலபதிகள் பணிந்து சென்று, **திருவாறை மேற்றளி, திருவின்னம்பர்** பணிந்து பதிகம்பாடியே **திருப்புறம் பயம்** சென்று வணங்கி, மேல், இறைவர் மகிழ்ந்த பல பதிகளிலும் வணங்குவாராய்த் **திருக்கூடலையாற்றூர்** சார எழுந்தருளி அங்குச் சேராது **திருமுதுகுன்றத்தினை** நேர்நோக்கிச் செல்வாராயினர். அப்போது அவ்வழியில் இறைவர் வேதியர் ஒருவராகி வந்து நம்பிகள் முன்பு நின்றனர். அவரை நோக்கித் திருமுதுகுன்றம் எய்த வழி எது? என்று நம்பிகள் கேட்க, அவர் திருக்கூடலையாற்றூரெய்தச் சென்ற திவ்வழிதான்! என்று சொல்லித் தாமும் வழித்துணையாகி உடன் சென்றனர். சிறுபொழுதில் அவர் காணுது மறைந்தருள, நம்பிகள் "அடிகளிவ் வழிபோந்த அதிசய மறியேனே" என்ற கருத்துடன் "வடிவுடை மழுவேந்தி" என்ற திருப்பதிகம்பாடிக் கூடலையாற்றூர் சென்று மிக்க ஆர்வத்தோடு பணிந்து துதித்துத் திருமுது குன்றத்தினை அணைந்தனர்.

திருமுதுகுன்றம்-12000 பொன் பெற்று ஆற்றிலிடுதல்

அங்கு இறைவரை முறையினுலே வழிபட்டு "நஞ்சியிடை" என்ற பதிகத்தினைப் பாடித் தாம் பொருள் வேண்டிய வந்த திருவுள்ளக் குறிப்பினேடே வணங்கித் துதிக்கும்போது இறைவர் 12000 பொன் கொடுத்தருளினுர். அது கண்டு நம்பிகள் மகிழ்ந்து தாழ்ந்து அருகு சென்று "தேவரீர் அருளும் இப்பொன்னெல்லாம் ஆரூர் உள்ளோர் மருளுற வியப்ப ஆங்கே வரப்பெற வேண்டும்" என்று விண்ணப்பித்தனர். அதற்கு இறைவர் "இப்பொன்னை யெல்லாம் இங்குத் திருமணி முத்தாற்றில் இட்டுப் போய்த் திருவாரூர்க் குளத்தினிற் கொள்க" என்றருள நம்பிகள் மச்சம் வெட்டிக் கைக்கொண்டு அப்பொருளை யெல்லாம், அன்று என்னை வலிய ஆண்ட அருளை இதில் அறிவேன் என்று வணங்கி ஆற்றினில் இட்டனர்.

அங்கு நின்றும் அருள் விடை பெற்றுத், திருத்தில்லையினை அணைந்து திருவம்பலக் கூத்தரது அருட் பெருங் கூத்தினைக் கண்டு கும்பிடுவார் இறைவரைப் பேரூரிற் கண்ட நிலை சிறப்பித்துப் பாடியருளினுர்; அதன்பின் அங்கு நின்றும் **திருக்கருப்பறியலூர் - திருப்பழமண்ணிப் படிக்கரை** என்ற பதிகளை வணங்கித் திருவாழ் கொளிப்புத்தூரினை எய்தாது சென்றவர் மீள நினைந்து வந்து வணங்கி "மறந் தென்னினைக்கேனே" என்ற பதிகம் பாடித் துதித்தனர். அங்கு நின்றும் **திருக்கானுட்டு முள்ளூர், திருஎதிர்கொள்பாடி, திருவேள்விக்குடி** முதலிய பதிகளைக் கும்பிட்டுத் திருவாரூரில் அணைந்தனர். பின் ஒரு நாள் பரவையாரையும் உடன் கொண்டு திருமுதுகுன்றில் இறைவர் தந்த பொருளை எடுப்பதற்குக் குளத்தின் வடகீழ்க் கரையினை அணைந்து அற்றைநா ளிட்டெடுப்பவர் போல் தடவினர். திருவிளையாட்டினை உவந்து இறைவர் பொன்வருவியா தொழியக் கண்டு, "ஆற்றனி லிட்டுக் குளத்தினிற் றேடுவார் அருளிதுவோ" என்று பரவையார் நகைத்து மொழிந்தருளவே, நம்பிகள், "பொன் செய்த மேனியினீர்" என்று தொடங்கிப் பரவையார் நகைக்காதபடி அடியேன் இட்டளங்கெடவே பொன்தாரும் என்று வேண்டினுர்; அதனுள் "ஏத்தாதிருந் தறியேன்" என்ற எட்டாவது திருப்பாட்டளவில் இறைவர் பொன்முழுதுந் தந்தருளக் கைக்கொண்டு பதிக நிறைவாக்கிப் பொன்னினை, மூலமெனக் கொடுபோந்த ஆணியின் முன் உரைப்பிக்க,

இறைவருளால் உரைதாழ, அதன் பொருட்டு இறைவரை வணங்க, உரை நிறை வெய்தப்பெற்றுக், கரையேறிக் கரைமேலாம் மாளிகையினிற் போக்கித் தாம் புற்றிடங் கொண்டாரை வணங்கி மகிழ்ந்திருந்தருளினர்.

அந்நாளில் நம்பிகள் இறைவரின் பிற பதிகளைச் தொழுவதற்கு நினைந்து சென்று திருநள்ளாறு, திருக்கடவூர் திருக்கடவூர்த் திருமயானம், திருவலம்புரம்; திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருநனிபள்ளி திருநின்றியூர் முதலிய தலங்களைப் பணிந்து திருநீடூரைப் பணியாது செல்பொழுதில் மீள நினைந்து வந்து "நீடூர் பணியா விடலாமே" என்ற திருப்பதிகம் பாடி வணங்கி அங்குத் தங்கினர். அதன் பின்பு திருப்புன்கூர் பணிந்து திருக்கோலக்காவினை அணைய இறைவர் எதிர் காட்சி கொடுத்தருளக் கண்டு வணங்கித் திருப்பதிகத்தாற் போற்றித் திருஞான சம்பந்தருக்குத் திருத்தாளம் அளித்த கருணையைச் சிறப்பித்துப் பாடியருளினர்.

குருகாவூர் பொதிசோறு

அங்கு நின்றும் திருக்குருகாவூருக்குச் சென்ற போது நம்பிகள் உண்ணீரின் வேட்கையுடனே பசியினலும் மிக வருந்தி வரும் இடத்தில் இறைவர் தண்ணீரும் பொதிசோறும் கொண்டு மறைவேதியாராய் வேடங்கொண்டு அவ்வழியிலே சார்ந்து குளிர்ந்த பந்தரும் அமைத்து வன்றெண்டரது வரவு பார்த்திருந்தார். நம்பிகள் தொண்டருடனே அந்தப் பந்தரிடைப் புகுந்து அம்மறையவர்பால் பெருகிய ஆர்வத்துடன் "சிவாயநம" எனப் பேசி அணுகி யிருந்தனர். இறைவர் நம்பிகளை நோக்கி "நீர் மிகவும் பசித்திருந்தீர். இப்பொதிசோறு தருகின்றேன். தாழாது கைக்கொண்டு உண்டு தண்ணீர் குடித்து இளைப்புத் தீரும்" என்று கூற, அதனை மறுக்கலாகாது என்று இசைந்தருளி ஏற்றுத் தொண்டருடன் நம்பிகள் சோறருந்தித் தண்ணீருங் குடித்து இளைப்புத் தீர்ந்தனர். நம்பிகளுடன் வந்தார்களுமே யன்றி அம்மருங்குப் பசித்து அணைந்தார்களும் அருந்தும்படி வேதியர் தரும் பொதிசோறு வளர்ந்து பொலிந்தது. அதன்பின் நம்பிகள் இறைவர் நாமத்தைப் புகழ்ந்து ஏத்தி அங்குச் சிறிது பள்ளி யமர்ந்தனர். அருகணைந்தார்களும் துயின்றனர்; அப்போது இறைவர் அப்பந்தருடன் தாமும் மறைந்தருளினர்; நம்பிகள் உணர்ந்து எழுந்து அவரைக் காணுமையால் இஃது இறைவர் செயலே யென்று கண்டு மிக்க ஆர்வத்துடன் "இத்தனை யாமாற்றை யறிந்திலேன்" என்று தொடங்கித் திருப்பதிகம் பாடித் திருக்கோயிலிற் சென்று வணங்கிப் பருகா இன்னமுதத்தைக் கண்களாற் பருகிப் பாடி ஆனந்தத்தில் திளைத்து அங்குத் தங்கியருளினர். அதன்பின் திருத்தில்லை சென்று வணங்கித், திருத்தினை நகரும் திருநாவலூரும் சென்று வணங்கிப், பிறபதிகளையும் வணங்கச் செல்வாராயினர்.

தொண்டை நாடு

திருத்தொண்டை நன்னட்டிற் பலபதிகளையும் கும்பிட எண்ணிச் சென்று திருக்கழுக்குன்றத்தினை வழிபட்டுத் திருக்கச்சூருக்கு எழுந்தருளி வணங்கி அங்குத் திருக்கோயிற் புறத்து அணைந்தனர். அப்போது அமுது செய்யும் பொழுது ஆயிற்று; அமுது சமைத்தளிக்கும் பரிசனங்கள் வந்து சேராமையால் பசி வருத்தத்துடன் நம்பிகள் திருவாயில் மதிற் புறத்திருந்தனர்.

திருக்கச்சூர்

அப்பொழுது மலைமேன் மருந்தாகிய இறைவர் அந்தணர் ஒருவராக வேடந்தாங்கிக் கையில் ஓடேந்திக் கொண்டுவந்து அருள்கூர அவரது முகநோக்கி,"நீர் மிகப் பசித்திருந்தீர்; உமது பசிதீர இப்போதே சோறு இரந்து கொண்டு வந்து உமக்குக்கொண்டு வருகிறேன்; இங்குவிட்டு நீங்காதே சிறிது பொழுது அமரும்" என்று சொல்லிச் சென்று திருக்கச்சூர்ச் செல்வ மனைகடோறும் புக்குப் பாத தாமரைகள் நிலம் பொருந்தவும், கண்டவர்கள் மனமுருகவும் கடும்பகலி லிடும்பலிக்குச் சென்று சோறு இரந்துகொண்டு தாம் விரும்பி யாட்கொண்டவர்முன் கொண்டு வந் தருளிப் "பசிதீர உண்க" என அளித்தனர். நம்பிகளும் அவரது பேரருளின் றிறத்தினைப் பாராட்டித் தொழுது வாங்கிப் பக்கத்தில் அணைந்த திருத்தொண்டர்களுடனே அத்திருவமுதினை உண்டு மகிழ்ந்திருப்ப,அவர் தம்மை யறியாதே இறைவர் மறைந்தெழுந்தருளினர். அது கண்டு நம்பிகள் வந்த மறையவனுர் இறையவனுர் தாமேயாம் என்று மதித்துக் கண்ணீர் சோரப் பதைத்து மன மிக உருகி "முதுவாயோரி" என்று பதிகம் பாடி மகிழ்ந்து வணங்கினுர். பின்னர் அங்கு நின்றும் புறப்பட்டுப் பல பதிகளையும் வணங்கித் திருக்காஞ்சிமா நகரத்தினை அணைந்தனர். அடியவர்கள் வந்து எதிர்கொள்ள, உட்புக்குத் திரு ஏகாம்பரம் பணிந்து மேலும் அங்குள்ள **திருக்காமக் கோட்டமும், திருமேற்றளியும்** வணங்கினர்; திருவோணகாந்தன்றளியில் தோழமையாற் பொருந்திய அடிமைத்திறம் பேசிப் பரவி எண்ணில்லாத நிதியம் பெற்றுப் பின் **திரு அனேகதங்காவதத்**தினையும் மற்றும் பதிகளையும் வணங்கி அங்கு எழுந்தருளியிருந்தனர். அதன்பின் **திருவன்பார்த்தான் பனங்காட்டூர், திருமாற்பேறு, திருவல்லம்** முதலிய பதிகளை வணங்கித் திருக்காளத்தி மலை சேர்ந்தனர். அங்கு இறைவரையும் பெருங்காதற்றலை நின்றருளும் கண்ணப்பரையும் வணங்கி இனி தமர்ந்தனர்; அந்நாளில் அங்கிருந்தவாறே **சீபர்ப்பதம், திருக்கேதார மலை** முதலாகிய வடநாட்டுப்பதிகளை வணங்கிப் பதிகம்பாடி யருளினர்;

திருவொற்றியூர்

அதன்பின் அங்கு நின்றும் போந்து பலபதிகளையும் வணங்கிக்கொண்டு **திருவொற்றியூர்** சார்ந்து முதல்வரை வணங்கித் திருப்பதிகம் பாடிக்கும்பிட்டு அங்கு எழுந்தருளியிருந்தனர். இதன்முன்பே, திருக்கயிலையிலிருந்து ஆணையின்படி போந்த சேடிமாருள் அநிந்திதை என்பவர், **ஞாயிறு** என்ற ஊரில் வேளாண் மரபிலே கொள்கைகளால் மேம்பட்ட வாழ்க்கையுடைய திருஞாயிறு கிழவர் என்பவருக்கு மகளாராய் அவதரித்துச், ***சங்கிலியார்*** என்னும் திருநாமம் பூட்டப்பெற்று, இறைவரருளால் வந்த நெறியின் முன்னையுணர்வு வரத் தாமே அறிந்த நிலையினராய் வளர்வாராயினுர். அவரது மரபுக்கேற்ற செயலே யன்றித் தெய்வத் தன்மையும் உலகோர் கண்டு அதிசயிக்கும்படி வளர்ந்து மணத்துக்கு உரிய பருவம் அடைந்தனர். அப்போது அவருக்கு ஏற்றவாறு மணமுடிக்கும் நிலைபற்றி அவர் தாயாரும் தந்தையாரும் ஒருநாட் பேசிக்கொண்டிருந்ததனைச் சங்கிலியார் கேட்டு, இறைவரது அருள் பொருந்திய ஒருவர்க்கே யான் உரியது இங்கு வேறு என்ன விளையுமோ என்று வெருவுற்று மயங்கி யயர்ந்து நிலமிசை வீழ்ந்தனர். பெற்றவர்கள் அது கண்டு பதைத்துப் பரிவுடன் எடுத்தே ஏங்கி "இவளுக்கு என்னே வுற்றது?" என்று அவரது முகத்தில் பனிநீர் தெளித்து உபசரிக்க மயக்க நீங்கிற்று. அப்போது அவர்கள் உனக்கு

நேர்ந்தது என்ன? என்று கேட்க, ஒன்றும் ஒளிக்காமல் "இன்று என்னைப் பற்றி நீங்கள் உரைத்தது என் தன்மைக்கு இசையாது; சிவபெருமான் திருவருள் பெற்ற ஒருவருக்கு நான் முன்னமே உரியவளாயினேன்; நான் இனிமேற் சென்று திருவொற்றியூரணைந்து சிவனருள் வழி தவம்புரிந்து வருவேன்" என்றார். அவர்கள் அதுகேட்டு அயர்வும் பயமும் அதிசயமும் கொண்டு, அந்த மாற்றத்தினை வெளிப்படுத்தாது மறைத்து ஒழுகி வந்தார்கள்; இவர்களோடு ஒத்த குலமுடைய ஒருவன் இதனை அறியானுகி அம்மையாரை விரும்பி மணம் பேசும் பொருட்டுச் சிலரை அனுப்பினன். அவர்களும் போந்து அவ்வாறே இசைந்தனர். அதனைக் கேட்ட தாய் தந்தையார் உண்மைத் தன்மையினை வெளிப்படுத்திச் சொல்லத் தகாமையினுலே வருத்தம் வராதவகையில் வேறு மொழிந்து அவர்களைப் போக்கினர். அவர்கள் சென்று அவனிடம் சேர்ந்து சொல்வதற்கு முன் அவன் அவர்களுடனே தீமை செய்து செத்தான்போல் இறந்துபட்டான். இது கேட்டுப் பெற்றோர்கள் மயங்கிச் சங்கிலியார் திறத்திலே பேசத்தகாத வார்த்தையை "தாம் உய்ந்திருக்க வேண்டும்" என்று எண்ணமுள்ள எவரும் சொல்ல மாட்டார் என்ற உண்மையை உலகமறியும் பொருட்டு இது நிகழ்ந்தது என்று கொண்டு, உண்மை நிலையினை உலகர் அறிய வெளிப்படுத்தி, அம்மை விருப்பத்தினையே உடன்படத் தீர்மானித்தார்கள். அவ்வாறே சுற்றத்தாருடன் அம்மையாரையும் உடன்கொண்டு திருவொற்றியூர் சேர்ந்து இறைவரைப் பணிந்து, அப்பதியவர்களுடைய இசைவினுலே திருக்கோயிற் புறத்திற் பக்கத்திலே கன்னிமாடம் அமைத்துச், சேடியர்களையும் பரிசனங்களையும் மற்றும் ஏவற் பரிசனங்களையும் தக்க செல்வமும் வகுத்துக் காவலும் அமைத்து, அதில் அம்மையாரை இருத்தித் தந்தையார் அவரை அடிவணங்கி "யாங்கள் உமக்குப் பணி செய்ய நீர் இறைவருக்கு ஏற்ற பணிசெய்து இப்பெரிய கன்னிமாடத்தில் உறைகின்றீர்" என்று தாங்குதற்கரிய கண்ணீர் பொழியத் தரியாது வணங்கித் தமது பதியிற் சென்றனர். அம்மையார் காலந்தோறும் சென்று இறைவரைப் பணிந்து திருப்பூமண்டபத்துள் திரைசூழ்ந்த ஒரு பக்கத்திருந்து அவ்வக்காலங்களுக் கேற்றபடி முன்னை நிலையிற் றிருக்கயிலையிற் றும் செய்து வந்தவாறே இறைவர்க்கு ஏற்ற பூமாலைகளைத் தொடுத்துக் கொடுத்து அமர்வாராயினர்.

நம்பிகள்

இந்நாளில் ஒருநாள் இவரது மணம் நிகழும் பருவமாதலினுல் முந்தை விதியின்படி நம்பிகள் இறைவரை வணங்கத்திருக்கோயிலுட் புகுந்து பணிந்து துதித்துப், புறம்போந்து அங்கு அடியார்கள் செய்யும்திருப்பணி விடைகளைக் கண்டு தொழுது செல்கின்றவர் திருப்பூமண்டபத்தினுட் புகுந்தார். அங்கு, அன்பே நாராகக் கொண்டு திருவைந் தெழுத்தினையும் நெஞ்சம் தொடுக்கக் கைகளால் மலர் தொடுத்து என்பும் உள்ளுருகப் பணிசெய்யும் அடியார்களைத் தொழுது சென்று, வேறோரிடத்தில் முன்பு போல், திரைநீக்கி இறைவர் சாத்தும் திருமாலையினைக் கொடுத்து மின்போல மறைந்த சங்கிலியாரை விதியினுலே கண்ணுற்றார். கோவைபடாத முத்தும் வண்டுகள் உண்ணுத கொழுமையுடைய மெல்லிய அரும்பினையும் போன்ற சங்கிலியாரைக் கண்டபோது நம்பிகளது சிந்தை நிறைகாவாது அவர்பாற் போய் வீழ்ந்தது. காமனது பூவாளிகள் வந்து வீழ்ந்தன. நம்பிகள் புறம்போந்து அங்கு உள்ளாரை நோக்கி "இங்குத் திரையினுள்ளே பொன்னும் மணியும் விளங்கும் புதிய

ஒளியுடன் அமுதுடன் கலந்த சந்திரனுடைய நீர்மையாலே சமைத்த மின்கொடி போல்வாள் என்னை உள்ளம் திரிவித்தாள்; அவர் யார்கொல்!'' என்ன, அவர்கள் "அவர்தாம் நங்கை சங்கிலியார்; பெரிய தவத்துடனே இறைரது பணியினைப் பேணும் கன்னியாராகும்'' என்றூர். அப்போது நம்பிகள் "இறைவர் இருவரால் இப்பிறவியில் என்னை அடைய வகுத்தருளினர்; அவருள் பரவையார் ஒருத்தி; இவள் மற்றையவளாகும்'' என மருண்டு, "இறைவரிடம் போய் விண்ணப்பித்து இவளைப் பெறுவேன்'' என்று உட்சென்று அவ்வாறே விண்ணப்பித்துப் புறத்துவந்து, ஒருபக்கம் இருந்து நினைந்து நினைந்து வருந்த, இறைவர் போந்து "பெருந்தவத்துச் சங்கிலியை உனக்குத் தருகின்றேம்; கவலை ஒழிக'' என்றருளிச் செய்தனர். நம்பிகள் மகிழ்ந்தனர். இறைவர் சங்கிலியார்பால் கனவில் எழுந்தருளச், சங்கிலியார் அன்பு பொங்க வணங்கி நின்றனர்; அவரை நோக்கி, "மேருமலையின் மேம்பட்ட தவத்தை யுடையானும், நாமே வலியஆட் கொள்ள உரியவனும், நம்பாற் பேரன்புடையவனும் ஆகிய வன்றொண்டன் உன்னைத் தரும்படி என்னை இரந்தான். அவனை நீ மணத்தினல் மகிழ்ந்து அணைவாய்'' என்றருளிச் செய்தனர். சங்கிலியார் வணங்கி எழுந்து நின்று, "இறைவரே! தேவரீர் அருளிச் செய்த ஒருவர்க்கு யான் உரியேன்தான். ஆனல் என்னை மணத்தால் அவருக்குக் கொடுத்தருளும்பொழுது அவர்தாம் திருவாரூரில் மகிழ்ந்துறைவராவர் என்பதனை அறிந்து அதற்குத் தக்கவாறு அருள்புரிய வேண்டும்'' என்று விண்ணப்பித்தார்.

சபதம்

இறைவர் "அவன் உன்னை விட்டு நீங்கிப் போகாதிருக்க ஒரு சபதம் செய்வான்'' என்று கூறி, அங்கு நின்று நீங்கி வன்றொண்டர்பால் எழுந்தருளி, "நீ அவளைவிட்டு நீங்காது உடனிருப்பதற்கு ஒரு சபதம் இவ்விரவே சென்று அவள் முன்பு செய்வாயாக'' என்றருளினர். அது கேட்ட நம்பிகள் இறைவரது பிற பதிகளிலும் சென்று கும்பிடக் கடவேனுக்கு இது விலக்காகும் என்ற குறிப்பினை உட்கொண்டு இறைவரை நோக்கி "அவ்வாறு அவளுடன் நான் சபதம் செய்வதற்கு வந்தால் அப்பொழுது கோயிலை விட்டுத் தேவரீர் தங்கும் இடம் திருமகிழின் கீழேயாகக் கொள்ளுதல் வேண்டும்'' என்று குறை யிரந்தனர்; இறைவரும் தம் தோழர் வேண்டியதற்குடன்பாடு செய்வராகி, "நம்பி நீ சொன்னபடி நாம் செய்வோம்'' என்று அருள, நம்பிகளும் மகிழ்ந்தனர். இறைவர் எழுந்தருளி நம்பிகள்பால் ஒரு திருவிளையாட்டினை மகிழ்ந்தோ? அன்றிச், சங்கிலியாரின் வழியடிமைப் பெருமையினலோ? மீளவும் அவ்விரவிலே சங்கிலியார்பால் முன்போலத் தோன்றி, "நங்கை! உனக்கு ஆரூரன் சபதம் செய்குவன்; ஆனல் நீ அச் சபதத்தினைத் திருக்கோயிலின் நம் முன்பு செய்தற்கு இசையாமல் திருமகிழின் கீழே கொள்ளக் கடவை'' என்று அருளிச் செய்யச், சங்கிலியாரும் கண்ணீர் வெள்ளம் பொழிய இறைவரை வணங்கி எழுந்தனர். இறைவர் இவ்வாறருளி நீங்கவே, தம்பக்கல் துயிலும் சேடியர்களை எழுப்பிச் சங்கிலியார் இறைவர் அருளிச் செய்த தெல்லாம் அவர்களறிய உரைத்தனர். அப்போது திருப்பள்ளி எழுச்சிக்கு மலர் தொடுக்கும் காலம் ஆகவே அதற்குரிய சேடியருடன் சங்கிலியார் செல்லத், தாம் சபதம் செய்தற்குரிய காலம் அதுவாகவே குறித்து நம்பிகளும் அணைந்து தமது பெருமானருளினைக் கூறச் சங்கிலியார்

நாணுடன் ஒருபுறமாக ஒதுங்கிக் கோயிலினுட் புகுந்தனர். நம்பிகள் சேடியரை நோக்கிச் சபதம் செய்ய இறைவர் முன்பு யாங்கள் என்ன, அவர்கள் "எமது பெருமானே! இதற்காக இறைவர் திருமுன்பு சென்று செய்வது தகா" தென்று கூற நம்பிகள் இறைவர் செயலினை அறியாது "அவ்வாறாயின் பின்னர் எங்குச் செய்வது?" என்று கேட்டனர். அதற்கு "அவர்கள் மகிழின்கீழே அமையும் என்னக் கேட்டு, மனமருண்டு இவர் சொன்னபடி செய்ய மறுத்தால் இஃது அலராகிலுமாகும்; ஆதலினால் உடன்படவே அமையும்" என்று துணிந்து அவ்வாறே வாருங்கள் என்று சொல்லி அவர்களுடன் மகிழின்கீழே அணைந்து பெருந்தவத்துச் சங்கிலியாருங் காணத் திருமகிழை மும்முறை வலம் வந்து, "இங்கு மேவாது நான் அகல மாட்டேன்" என நின்று சபதம் விளம்பினர். சங்கிலியாரும் அதுகண்டு "தம்பிரான் பணியாலே பாவியேன் இது கண்டேன்" என்று ஆவி சோர்ந்தழிந்து ஒருபுறம் மறைந்தயர்ந்தனர். நம்பிகள் இறைவரை வணங்கித் "தேவரீர் செய்தவா றழகிது" என்று துதித்து மகிழ்ந்து போந்தனர். சங்கிலியாரும் தமது பணிசெய்து வணங்கிக் கன்னிமாடம் புகுந்திருந்தனர்.

திருமணம்

அன்றிரவே, இறைவர் அந்நகரில் வாழும் தொண்டர்களுக்கெல்லாம் கனவிற்றோன்றி, "நம்பியாரூரனுக்கு நங்கை சங்கிலிதன்னை இவ்வுலகிலே நமது ஏவலினாலே கலியாணம் செய்து உலகறியக் கொடுப்பீராக" என்று கட்டளையிட்டருளிச் செய்தனர். அவ்வாறே அருள் தலைக்கொண்டு தொண்டர்களும் பதியவர்களும் மகிழ்ந்து நெருங்கிக்கூடி வானவர் பூமழை பொழியக் கண்ணிறைந்த பெருஞ்சிறப்பிற் கலியாணம். செய்தளித்தார்கள். வன்றொண்டரும் இறைவரருளாலே சங்கிலியாரை மணந்து அவருடன் கூடி அவரது தெய்வ நலத்தைக் கண்டு கேட்டுண்டுயிர்த்து உற்றுக் காதலினால் இனிது அமர்ந்தருளினர். அவர்களிடையே மிகு புலவிப் புணர்ச்சிக்கண் ஒருகணம் ஓர் ஊழியாகும்; ஓரூழி ஒருகணமாகும். இவ்வாறு திருவொற்றியூரிலே நம்பிகள் இறைவரைத் தொழுதிருக்கவே பலகாலங்கள் வந்து கழிந்தன. அந்நாளில் தென்றல் வந்துலவி வசந்த காலத்தினை நம்பிகளுக்கு நினைவூட்டிற்று.

சபதம் பிழைத்தல் - கண் மறைதல்

திருவாரூரிலே வீதிவிடங்கப்பெருமான் வசந்த விழாக் கொண்டருளுதலும் அத்திருவோலக்கத் தினிடையே பரவையார் பாடலாடல் புரிவதும் கண்ணின்முன் நேரே கண்டார் போலக் கருதி, "அப்பெருமானை மறந்திருந்தேன்" என்று ஏசறவினாலே மனமழிந்து "பத்திமையும் அடிமையையும்" என்று எடுத்து, "எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூரிறைவனையே" என்ற குறிப்புடன் திருப்பதிகம் பாடினர். பின் ஒருநாள் திருவாரூரை மிக நினைந்து திருவொற்றியூரினை அகலப் புக்கனர். தாம் செய்த சபதம் பிழைத்தமையால் கண்களிரண்டும் மறைந்தன. மூர்ச்சித்து மேற்செய்வதறியாது, "அழுக்கு மெய்கொடு" என்று தொடங்கிக் குற்றத்தீர்வு வேண்டித் திருவொற்றியூரிறைவரைப் பாடி

ஞர். அங்கு இறைவர் செய்யும் அருளதுவேயாகக் கைகுவித்துத் தொழுது திருவாரூரை நோக்கி, வழிக்கொள்வாராயினர். உடன்போதுவார்கள் வழி காட்டச் சென்று **திருமுல்லைவாயிலை** யடைந்து, "கொண்ட வெந்துயர் களைக" எனப்பரவி வழிக்கொண்டு **திருவெண்பாக்கத்தினை** அணைந்து கோயிலின் முன் நின்று தொழுது, இறைவரைக் "கோயிலுளீரே?" என்று வினவித் துதிக்க, ஊன்றுகோல் ஒன்றருளி "உளோம் போகீர்" என்றருளப் பெற்று வழிக்கொண்டு சென்று **திருவாலங்காட்டினை** வணங்கித் துதித்து, **திருக்காஞ்சிமாநகர** மணைந்தனர்.

இடது கண் பெற்றமை

அங்கு அறப்பெருஞ் செல்வக் காமக்கோட்டத்தில் எல்லாவுயிர்களுக்கும் கருணை புரிந்து அறம் வளர்க்கும் அம்மையை வணங்கித், திருஏகாம்பரத்தினை அணைந்து அம்மை அருச்சித்த திருவடிகளைவேண்டித் துதிக்க அம்மை தழுவக் குழைந்த அப்பெருமான், கண்ணளித்தருளி மறைந்த இடக்கண் கொடுத்துத் தமது கோலங்காட்டி யருளினர். நம்பிகள் மிக மகிழ்ந்து "எம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே" என்று பாடித் திளைத்து இன்புற்று அங்கு அமர்ந்திருந்தனர்.

திருத்துருத்தி - புதியபிணி நீங்குதல்

அங்கு இறைவர் செய்யும் அருள் அதுவாக, அங்கு நின்றும் திருவாரூரினை நோக்கி "எந்தை பெருமானாரூரர் என்று கொல் எய்துவதே" என்று துதித்துக் கொண்டு, அதனை நோக்கி வழிக்கொள்வாராய்ச் சென்று, **திருவாமாத்தூர், திருநெல்வாயி லரத்துறை, திருவாவடுதுறை** பணிந்து, **திருத்துருத்தியினை** அணைந்தனர். அங்கு இறைவரை வணங்கித், தம்மேல் வந்த புதிய பிணி நீக்குமாறு இறைவரை வேண்ட, அவரது ஆணையின்படி வேருக வடகுளத்துக் குளித்து அக்கணமே பிணிநீங்கப் பெற்று மணியொளிசேர் திருமேனி பெற்று விளங்கினர்.

வலக்கண் பெறுதல்

அங்கு நின்றும் போந்து பல பதிகளையும் வணங்கிச்சென்று திருவாரூர்முன் தோன்றக் காண்கின்றார், அதனை ஒருகண் நோக்கினுற்கண்டு, மனம் ஆராது நிலத்தில் வீழ்ந்து நெடிதுயிர்த்து வணங்கி, மயங்கு மாலை நேரத்தில் திருவாரூரினுள் அணைந்து திருப்பரவையுண் மண்டளியில் தூவாய்நாயகரைப் பணிந்து பாடிப்போந்து, வேறிருந்து தொண்டருடன் கூடித் திருமூலட்டானத்துள் இடை தெரிந்து திருவத்தயாமத்தில் இறைஞ்சுதற்காக வந்தணைந்து, காதல்புரி கைக்கிளையால் அன்பரெதிர் "குருகுபாய" என்று ஏசறவினுலே பதிகம் பாடிவந்து, திருத்தேவாசிரியனையும் பூங்கோயிலினையும் வணங்கி எழுந்து உட்புக்கு, ஒரு கண்ணுற்கண்ட காட்சியாலாராமல் மனமழிந்து பருகா இன் அமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு மற்றக் கண்ணையும் தாரீர் என்று, "மீளா அடிமை" என்ற பதிகம் பாடி வணங்கினர். புற்றிடங்கொண்ட புராணனர் இரங்கிக் கருணைத் திருநோக்கம் செய்து வலக்கண்ணையும் கொடுத்தருளச் செவ்வே விழித்து முகமலர்ந்து உள்ளம் பரவசமாய் பலமுறையும் வணங்கிப் புற்றிடங் கொண்ட சிவக்கொழுந்தினருளை இரண்டு கண்ணுலுங் கண்டு பருகித் திளைத்தனர்.

பின்பு திருக்கோயிலினை வலங்கொண்டு போந்து தேவாசிரியன் மருங்கணைந்து இருந்தருளினர்.

இவ்வாறிருக்க, நம்பிகள் பிரிந்து போனதற்பின் பரவையார், அவரது பிரிவாற்றாமையால் வருந்தினர். அதன்மேலும், அவர் திருவொற்றியூர் சேர்ந்து சங்கிலியாரை மணம் புணர்ந்த செய்தியினையும் தாம் அவர்பால் விட்டார்வந்து உரைக்க அறிந்து, தம்மையுமறியா வெகுளியினால் நெஞ்சம் தரியாது தளர்ந்தனராய்ப் புலவியும் பிரிவும் கூடிய இரண்டன்பாலும் பட்டு வருந்தினர். இந்நிலையில் நம்பிகள் திருவாரூரில் எழுந்தருளப், பரிசனங்கள் பரவையார் திருமாளிகையில் முன்புபோலச் செல்ல மாளிகைப் புறத்திலும் இடம்பெறாது தள்ளப்பட்டார்களாய் அதனை நம்பிகள் பால் வந்துரைத்தனர். நம்பிகள் உலகியல்பு கற்ற மாந்தர் சிலரைப் பரவையார் கொண்ட செற்றம் மாற்றித் தீர்வு சொல்லும்படி செலவிட்டார். அவர்கள் சென்று உலகியல்பிற் பலவும் எடுத்து இயம்பப், பரவையார் மறுத்துத் தமது செற்றத்தினை மாற்றாராகி நம்பிகளின் வார்த்தையினை மேலும் சொல்லினால் உயிர்போதல் ஒழியாது என்று கடிந்து சொல்ல, அவர்களும் அஞ்சி வந்து நம்பிகளிடம் அதனை அறிவித்துச் சென்றனர்.

இறைவர் தூது (முதன் முறை)

நம்பிகள் அந்நள்ளிரவில் வேறு துணைகாணாராய்த் துன்பக்கடலுள் மூழ்கிச் சிந்தித்துத் தமது பெருமானாகிய இறைவரை நினைந்தனர்; அவரும் வெளிப்பட்டு வந்து முன்னிற்க, வணங்கிப், பரவையாரது செற்றத்தினைத் தீர்த்து ஒன்றுவித்தல் வேண்டும் என வேண்டிக்கொள்ள, அவரும் இசைந்து சிவ கணங்கள் புடைசூழ அருச்சகர் வேடந்தாங்கிப் பரவையார் திரு மாளிகைக்குச் சென்று, அங்குச் செறிய அடைத்த திருவாயிலின் முன்னின்று, "பாவாய் திறவாய்" என அழைப்ப, அவரும் இறைவரின் அருச்சகர் இப்பாதியிரவில் அணைந்தார் என்று பயமெய்திக் கதவு திறந்து அவரைக் கண்டு, "இந்நள்ளிரவில் தேவரீர் இங்கு எய்தவேண்டிற் றென்னை?" என்றார். அதற்கு இறைவர் "நம்பி இங்கு வரப் பெற வேண்டும்; நம்பி செய்த ஏதங்கள் மனத்துக்கொள்ளாது வெகுளி நீங்கி நோதகவு ஒழிக" என்று கூறப், பரவையார் "இஃதொரு கருமமாக நீர் இக்கடைத்தலை வருகை உமது பெருமைக்குத் தகுவதன்று; நீரும்போம்" என்று மறுத்தனர். இறைவரும் நம்பியின் வெம்புறு வேட்கை காணும் திருவிளையாட்டின் மேவிப் பரவையார் மறுத்ததனையே கொண்டு மீண்டனர். இசைவு செய்வார் என்று மிக்க காதல் கொண்டு எதிர்பார்த்திருந்த தோழனாரிடம் இறைவர் மீண்டுசென்று, "நாம் உனது திறமெலாம் கூறி நாமே வேண்டவும் பரவை மறுத்தாள்" என்றார்.

இறைவர் தூது (இரண்டாம் முறை)

நம்பிகள் அதுகேட்டு நடுங்கித்,தேவரீர் அருளியவண்ணம் நன்று! அடியாளான பரவையோ மறுப்பாள்; நாங்கள் அடிமைக்கு எண்ணலார்! இன்று என் அடிமை நீர் வேண்டாவிட்டால் முன்னர் வலிய ஆளாகக் கொண்ட பற்று என்னை? இன்று பரவையின் புலவி தீர்த்து அங்கு மேவும்படி செய்யீராயின் விடும் உயிர்!" என்று தளர்ந்து வீழ்ந்தார். அதுகண்டு இறைவர் நம்பிகளை அருளால் நோக்கி, "நாம் இன்னமொரு முறை அவள்பாற் சென்று நீ அங்குமேவும் செயலைக் கூறுகின்றோம்; துயர் நீங்குக" என்று கூறிப் பரவையார்

திருமாளிகையினை நோக்கித் தூதராக முன் போலன்றித் தாமாந்தன்மை அறிவுறு கோலத்தோடு, தேவர் பூதர் முனிவர் சூழச்சென்றருளினார். இதற்கிடையில், பரவையார் அருச்சகராகி வந்தவர் ஆளுடைய முதல்வரேயாகும் அதிசயம் பலவும் தோன்ற, அவர்முன் என்செய மறுத்தோம் என்று கையறவு எய்தி, மனமழிந்து வாயிலே பார்த்து வருந்தியிருந்தனர். அவ்வளவில் இறைவரும் வந்து புகுந்தனர். பரவையார் விரைந்து சென்று அவரடியில் வீழ்ந்தனர். அவரை நோக்கி இறைவர்,"உரிமையினால் ஆரூர் நம்பி ஏவ மீளவும் உன்பால் வந்தோம். முன்புபோல் மாறாதே, நம்பி இங்கு வருதற்கு இசைவாயாக" என்றனர். அதுகேட்டுப் பரவையார்,"எனது பெருந்தவப் பயனாக முன் எய்தியவர் நீரோ? அன்பர்க்காகத் திருவடி வருந்த ஓரிரவு முழுதும் அங்குமிங்குமாக எளிவருவீராயில் இசையாது என்செய்வேன்" என்று வணங்க, இறைவரும் அவளுக்கு ஆசி கூறி எழுந்தருளி நம்பிகள்பால் சென்று பரவையார் இசைந்தமைகூறித் திருக்கோயிலில் எழுந்தருளினர்.

நம்பிகள் மகிழ்ந்து இறைவரை இறைஞ்சிப், பின்பு, கலவைச் சேறு, கலங்கள், பூணுடை வர்க்கம் முதலியவற்றை ஏந்திய பரிசனங்கள் முன்பு செல்லத் தாம் திருமாளிகையை வந்தணைந்தனர். பரவையார், திருமாளிகையை அலங்கரித்து விளக்கு நிறைகுடம் முதலியவற்றை வைத்துத் தாம் வாயிலின் முன்புவந்து நம்பியை எதிரேற்று நின்று, அவர் வந்து கூடிய அளவில் காதல் வெள்ளங் கரைகாணாது வணங்கினர். நம்பிகள் அவரது கையினைப் பற்றி உள்ளே சார்ந்தனர். இருவரும் இறைவர் இடையாடிச் செய்த கருணை வெள்ளத்திறத்தினைப் போற்றி ஒருவருளொருவர் மேவு நிலைமையில் உயிர் ஒன்றாகி மகிழ்ந்தமர்ந்திருந்தனர்.

ஏயர்கோன் கலிக்காமர்

அந்நாளில். நம்பிகள் நெஞ்சில் சிறிதும் நடுக்கமின்றிப் பெண்ணிடத்தில் இறைவரைத் தூதாக அனுப்பினர் என்ற இவ் வநீத மொழியினை ஏயர்கோன் கலிக்காமனார் கேட்டு, வெம்பினார்! வெருவினார்! மிக வருந்தினார். "தலைவரை அடியான் ஏவும் காரியம் நன்று;இதனைச் செய்பவனும் ஒரு தொண்டனாம்! பொறுக்க வொண்ணாத இப்பிழையினைப் பாவியேன் காதினாற் கேட்டும் என் உயிர் போகாதிருந்தது! பெண்ணாசையால் ஒருவன் ஏவினாலும் இறைவரும் இசைந்து ஓரிரவெல்லாம் தூதுக் குழல்வதா? இறைவர் இசைந்தாலும் அவரை ஒருவன் ஏவுவதும் ஆகுமா? இவ்வாறு செய்தவனை நான் காணப் பெற்றால் என்ன விளையுமோ?" என்று மனத்துட் செற்றம் பொருந்தி யிருந்தனர் கலிக்காமனார். இச் செய்தியைக் கேட்ட நம்பிகள், பிழை யுடன்படுவாராகி இதற்குத் தீர்வு வேண்டி, நட்புச் செய்யும் வண்ணம் இறைவரிடம் நாடோறும் பணிந்து போற்றினர். இறைவரும் அதனை நோக்கி, இவ்விருவரும் நண்பாகும் தன்மை செய்வாராகி, உடல் வாடும் நிலைபுரியும் கொடிய சூலைநோயினை ஏயர்கோனார் பால் ஏவியருளினர். அந்நோய் அவர் வயிற்றினுள் அனல்செய் வேல் குடைவதென்ன வேதனை மேன்மேலும் செய்தது. அவரும் அதற்குடைந்து வீழ்ந்து இறைவரைப் போற்றினார். இறைவர் அவர்பாற்றோன்றி "உன்னை வருத்தும் சூலை வன்றொண்டன் தீர்க்கிலன்றி முந்துற ஒழியாது" என்று மொழிந்தருளினர். அது கேட்டுக், கலிக்காமனார், "எம்பெருமானே! எந்தை தந்தை தந்தை எம் கூட்டமெல்லாம் நீரே எமது இறைவர் என்று கொண்டு வழிவழிச் சார்ந்து வாழும் வாழ்க்கையை யுடையேனக்கு என்னை நின்று வருத்தும் சூலையினைப், புதிதாக வம்பென ஆண்டு கொண்ட ஒருவனோ வந்து

தீர்ப்பவன்? அவன் தீர்ப்பதினும் தீராதொழிதல் நன்று; உமது பெருமையை யார்தாம் அறிந்தார்? வன்றொண்டர்க்கே ஆதுர உறுதியே செய்தீர்" என்று கூற, இறைவரும் அவர் முன்பு மறைந்தருளி, வன்றொண்டர்பாற் சென்று, "நம் ஏவலாலே ஏயர்கோனுற்ற சூலையினை நீ சென்று தீர்ப்பாயாக!" என்றருளினர். நம்பிகளும் வணங்கி மகிழ்ந்து அவ்வாறே சூலை தீர்க்கத் தாம் வரும் செய்தியை ஏயர்கோனாருக்குச் சொல்லியனுப்பினர். இறைவர்பாற் கேட்ட துன்ப மொழியும் சூலையும் தம்மை வருத்த, அதன் மேலும் வன்றொண்டர் வரவு பற்றிய கேள்வியும் பெற்ற ஏயர்கோனார் "எம்பிரானைத்தூதனாய் ஏவினான் வந்து தீர்ப்பதன்முன் என்னைப் பற்றி நின்று நீங்காப்பாதகச் சூலையினை அதற்கு இடங்கொடுத்திருக்கும் இவ் வயிற்றினோடும் கிழிப்பன்" என்று துணிந்து உடைவாளினாலே வயிற்றினைக் குத்திச் செற்றிட, உயிரினோடும் சூலையும் தீர்ந்தது. அதுகண்டு எண்ணுதற்கரிய பெருமையினை யுடைய மானக்கஞ்சாற நாயனாரின் திருமகளான கலிக்காமனாரின் தேவியாரும் ஒப்பற்ற தம் கணவருடனே தாமும் போகும் நிலைபுரியும் வேளையில், நம்பிகள் இங்குப் பொருந்த அணைந்தார் என்று முன் வந்தவர் கூறக் கேட்டு, "ஒருவரும் அழாதீர்கள்! காவலரை நம்பி அணையும்போது திருமனையை மிகவும் அலங்கரித்து எதிர் செல்லுங்கள்!" என்று பரிசனங்களைப் பணித்தனர். அவர்களும் பூரண கும்பமும் தீபமும் வைத்து வாயிலைப் பூமாலை தூக்கி அணிசெய்து நம்பிகளை எதிர்கொண்டனர்.

இறைவர் செய்த நட்பின்றிறம்

நம்பிகள் அவர்களுக்கு நகைமுக மளித்துப் பெருவிருப்பினோடும் திருமாளிகையினுட் புகுந்து தவிசின் வீற்றிருந்து, அவர்கள் விதிமுறை செய்த பூசனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, "ஏயர்கோனார்க்கு வந்த கொடிய சூலையினை நீக்கி அவருடன் இருத்தற்குக் காலம் தாழ்க்கின்றது பற்றி நான் மிகவும் வருந்துகின்றேன்" என்றருளினர். அதற்கு, அம்மையாரின் ஏவலாலே, மனைத் தொழில்மாக்கள் "இங்கே கெடுதி ஒன்றுமில்லை; அவர் உள்ளே பள்ளிகொள்கின்றார்" என்று கூறக் கேட்டு, நம்பிகள், "தீமையில்லை என்றாலும் இன்னம் என் மனம் தெருட்சி பெறவில்லை; ஆதலால் அவரைக் காணவேண்டும்" என்றனர். ஏவலாளரும் அவ்வாறே கொண்டு சென்று அவரைக் காட்டக், குருதி மிகவும்சோரக் குடர் சொரிந்து ஆவி நீங்கிக் கிடந்த அவரை நம்பிகள் கண்டனர். "புகுந்தவாறு நன்று! நானும் இவர்முன்பு நண்ணுவேன்" என்பாராகி, அக்கொள்கையினில் நம்பிகள் உறுதிகொண்டு குற்றுடைவாளைப் பற்றினர். அப்போது ஆளுடைய பெருமா னருளினாலே கலிக்காமனாரும் உயிர்பெற்று உய்ந்து, கேளிரே ஆகிக் "கெட்டேன்" என்று விரைந்தெழுந்து, நம்பிகள் கையினின்றும் வாளினைப் பிடித்துக் கொள்ள, அவர் வணங்கி வீழ்ந்தனர். ஏயர்கோனாரும் வாளினை மாற்றி நம்பிகளது திருவடிகளில் வீழ்ந்தனர். விண்ணவர் பூமாரி பெய்தனர். இருவரும் எழுந்து தழுவி இடைவிடாத நண்பினாலே மகிழந்து **திருப்புன்கூரிற்** சென்று இறைவர்பாதம் வணங்கித் துதித்தார்கள், நம்பிகள் திருவருட் பெருமையினைப் போற்றி "**அந்தணாளன்**" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடி வணங்கினர். சில நாட் கழிந்த பின் நம்பிகள் தம்கூடவே மகிழ்ந்துவந்த ஏயர்கோனாருடன் **திருவாரூரிற்** சேர்ந்து பூங்கோயிலின் இறைவரை வணங்கி நிறைந்த அன்பினாலே அங்குத் தங்கினர். அதன்பின் நம்பிகள்பால் அருள்விடைபெற்று ஏயர்கோனார் தமது பதிபுகுந்து தமக்கேற்ற பணிகள் செய்திருந்து இறைவரது திருவடி நீழல் அணைந்தனர்.

தலவிசேடமும் - சரிதக்குறிப்புக்களும்

திருப் பெருமங்கலம் - வன்றெண்டர் கோயில்: இது திருப்புன்கூரினை அடுத்து வடக்கே 1/2 நாழிகையளவில் உள்ளது; இதன் தென்புறம் **வன்றெண்டர் கோயில்** (விறன்மிண்டர் கோயில் என்று தவருக வழங்கப்படுவது) உள்ளது. இது ஒரு சிறு கோயில்; ஆயினும் சுவாமி, அம்மை, விநாயக சுப்பிரமணியர், சண்டேசர், நந்திதேவருடன் பூரண சிவாலயமாக உள்ளது. செங்கற் கட்டிடம். இதில் சுவாமியின் பின்புறம் நின்று வழிபடும் கோலத்துடன் வன்றெண்டர் (ஆளுடைய நம்பிகள்) திருவுருவம் உள்ளது; ஏயர்கோன் கலிக்காம நாயனரின் உற்வச மூர்த்தித்திருவுருவமும் உள்ளது. அடுத்து உள்ள தென்புறம் கோட்டையும் கிராம நத்தமும் கொண்ட கிராமம் இருந்ததாகவும், மேட்டில் பெரிய பழைய சிவாலயமாய் இது இருந்ததாகவும், அது கிலமாய்ப் போனபின் இங்குக் கொண்டு வந்து அமைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. ஆளுடைய நம்பிகள் இங்கு வந்து தங்கியிருந்து கலிக்காமனருக்குத்தாம் சூலை தீர்க்கவரும் திறம் செப்பிவிட்ட இடம் இது என்றும், இதனை அந்நினைவின் பொருட்டுக் கலிக்காமனர் பின்னளில் சிவாலயமாக வகுத்தனர் என்றும் கருதப்படுகின்றது. சீகாழியில் திருஞான சம்பந்தர் கோயிலில் சிவலிங்கத்தின் பின்புறம் நின்று வழிபடும் கோலமாக அமைந்திருக்கும் நிலை ஈண்டு நினைவுகூர்தற்பாலது. இக்கோயிலை விறன்மிண்டர், நம்பிகள்பால் சினம் கொண்டு வந்து தங்கிய இடம் என்று தவருக உணர்ந்துகொண்டு அதற்காகத் திருப்புன்கூர்ப் புராணத்துள் விறன்மிண்ட நாயனர் பூசித்த படலம் என்று ஒரு படலமும் வகுத்துக் கட்டிவிட்டார்கள். விறன்மிண்டருக்கும் இத்தலத்துக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. இந்த ஐயப்பாட்டினைப் பற்றித் தாம் பலரிடம் விசாரித்ததாகவும், சில ஆண்டுகளின் முன் மிகுந்த வயது சென்ற பறைக்குல அடியாரொருவர் இது **"வன்றெண்டர் கோயில்"**. என்று தமக்கு அறிவித்து ஐயத்தை நீக்கினர் என்றும் தருமபுர ஆதினம் ஸ்ரீமத். மவுன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அறிவித்தார்கள். வன்றெண்டர் கோயில் என்பது விறன்மிண்டர் கோயில் என்று வழுவி மருவி வழங்கப்படுகின்றது.

பெருமங்கலம்:—இக்கோயிலுக்கு வடக்கே 1/2 நாழிகையளவில் உள்ளது இப்போதுள்ள திருப்பெருமங்கலம் கிராமம்; அதன்வடபாகத்தில் பழைய கிலமாகிய சிவாலயம் உண்டு. அதன் சிவலிங்க மூர்த்தி பஞ்ச பூதங்களும்நேரே பூசித்து வழிபட வெளியில் வீற்றிருக்கின்றர். அந்தோ! அன்பர்கள் இவருக்கு ஒரு சிறு கட்டிடமாவது அமைத்து வழிபடும் நாளேதோ? கிராமநத்தம் 68 ஏக்கர்ப் பரப்புடைய பெரிய அளவுள்ளது. இப்போது பெரும்பாலும் வீடுகளின்றி நிற்கும் காலியிடமாக உள்ளது; வீடுகள் இதன் வடபுறத்தில்தான் உள்ளன. இந்தப் பரப்பு நத்தத்தில் குளங்கள் பல உண்டு. வீட்டுக் கிணறுகள் பலவும் கிடைக்கின்றன. பழைய வீடுகள் இருந்த அடையாளங்களும் காணப்படுகின்றன. இந்த இடத்தில்தான் **கலிக்காமனரது** திருமாளிகை இருந்திருக்கலா மென்று கருதப்படுகின்றது.

பன்னிரு வேலி:—பன்னிரு வேலி என்பது அந்நாளில் ஒரு குறிப்பிட்ட சிறந்த நிலப்பரப்பாக வழங்கியது போலும்; திருவாரூரில் "அஞ்சனை வேலி யாரூர்" (அரசு- தேவா) என்றபடி கோயிலும் குளமும் ஓடையும் முறையே ஐயைந்து வேலிப்பரப்புடையன போல. "ஏத நன்னில மீரறு வேலி யேயர் கோனுற்ற இரும்பிணி தவிர்த்து" என்றும், "பெய்யு மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப் பெயர்த்தும் பன்னிரு வேலி கொண் டருளும், செய்கை" என்றும் வரும்ஆளுடைய நம்பிகளது திருவாக்கினால் அறியப்படுகின்றபடி, ஏயர்கோன் கலிக்காம நாயனாரால் தமது பிணி தவிர்த்த அருளுக்காக 12 வேலியும், மழை பெய்ய 12 வேலியும், பெருமழை தவிர்ப்பதற்காக 12 வேலியுமாக நிலங்கள் தானம் செய்யப்பட்டன என்று கருத இடமுண்டு. "பன்னிரு வேலி" என்னும் பெயரால் இப்போதும் வழங்கப்படும் கிராமம் (நிலம்) மழை பெய்வதற்காகவும், பூசலாங்குடி என்றும் 12 வேலி நிலம் மழை தவிர்ப்பதற்காகவும் தானம் செய்யப்பட்டன என்று வழக்கில்தெரிய வருகின்றது. இவை மாயூரம் தாலுக்காவில் திருப்புன்கூருக்கு மேற்கில் 3 நாழிகை யளவில் உள்ளன; "இரும்பிணி தவிர்"க்கக் கொடுத்த 12வேலி நிலத்தைப் பற்றி ஆராய்ந்து அறியவுள்ளது. இவ்வரலாற்றைப் பிழையாக உணர்ந்து ஒரு இராஜேந்திர சோழன் தனது நாட்டுக்கு மழைபெய்யச் செய்யும் படிக்கும் அங்ஙனம் பெய்த பெருமழையைத்தவிர்க்கும் படிக்கும் சுந்தரமூர்த்திகளிடம் வேண்ட அவர் பாட, அதற்காக அவன் பன்னிரு வேலி நிலம் கொடுத்தான் என்று கதை புனைந்து "பன்னிருவேலி பெற்ற படலம்" என்று இத் தலபுராணத்திற் புகுத்திவிட்டனர்.

இவ்வாறு வடமொழியாளர் தமிழ்நாட்டுச் செய்திகளைப் பிறழ உணர்ந்து அவ்வாறே வடமொழியில் தலவரலாறுகள் முதலியவற்றை இயற்றிவிட, அவற்றை அவ்வாறே வடமொழி ஆதரவென்று கொண்டு மீளத் தமிழில் யாத்து வழங்கும்பிழைபட்ட வரலாறுகள் பலவுள்ளன. அவற்றை வழங்குவோர் ஆய்ந்தெடுத்து வழங்குதல் நலம் தரும்.

சரித ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

(Dr. M. **இராசமாணிக்கம்**, M.O.L.L.T., Ph.D. அவர்கள் உதவியன)

1. செய்யுள்-77 (3231)

"வளவர் பெருமான் மணியாரம்... ... ..." இச்செய்தி கி.பி.9-ம் நூற்றுண்டில் வாழ்ந்த சுந்தரரால் குறிக்கப்பட்டது. 7-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தராலும் குறிக்கப்பட்டது. ஆனுல் இச்செய்தி சங்கப்பாக்களில் இன்மையால், இந்நிகழ்ச்சி ஏறத்தாழ கி.பி.300-க்கும் 600-க்கும் இடையே நிகழ்ந்ததாக வேண்டும்.

2. செய்யுள்-107 (3261)

"உடைய நம்பி''—இப்பெயருடன் (உடைய நம்பி விலாசம் என்னும் பெயரில்) ஒருநூல் சுந்தரர் வரலாற்றை அறிவிக்கின்றது—தெலுங்கு பசவ புராணம்,பிரபாக சாஸ்திரியின் முகவுரை காண்க. இப்பெயர் மக்களிடையும் வழங்கி வந்தது. M.E.R. 72 of 1927 (S.I.I.V. 537, A.R.E. 1920, P, 98.)

3. செய்யுள்-136 (3290)

"பொன்னை உரைக்க ஆணி'' (கட்டளைக்கல்) பொன் அளவை - மா, (137) இச்செய்திகள் பல்லவர் காலக் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றது. இதே ஆணி சோழர் காலத்தில் "தண்டவாணி" எனப்பட்டது.

4. செய்யுள்-158 (3312)

"தம்பிரான் தோழர்''—"தம்பிரான் தோழர் மானக்கஞ்சாறர்'' - திருமுட்டம் கல்வெட்டு M.E.R., 1916., 216 of 1925 முதலிய கல்வெட்டுக்களிலும் இப் பெயரைக் காணலாம்.

5. செய்யுள்-181 (3335)

"சிவயோகியார்'' சிவயோகியர் சிவனையே நினைந்திருத்தலும், சிவத்தியானத்தால் பிறவித் தளையை அறுக்க முனைதலும் செய்பவர். உயிர் நீங்கும் தறுவாயில் உடல் முழுவதும்நீறு பூசிச் சிவமந்திரங்களைச் சொல்லிக்கொண்டு தம் மார்பில் தொங்க விடப்பட்டுள்ள சிவலிங்கத்தை வழிபடுவர். இத்தகையோர் நாயன்மார்கள் வாழ்ந்த பல்லவர் காலத்தில் தமிழகத்திலிருந்தனர். சோழர் காலத்தில இவர்கள் மிகப் பலராக இருந்தமை எண்ணிறந்த கல்வெட்டுக்கள் கொண்டு உணரலாம். திரு எறும்பியூர், திருபுவனை, திருஆரூர் முதலிய ஊர்களில் இருந்த மடங்களில் சிவயோகியரை உண்பிக்க நிவந்தங்கள் விடப்பட்டுள்ளன.

6. செய்யுள்-190 (3344)

காஞ்சி - திருக்காமக் கோட்டம்: திருக்காமக்கோட்டம் - இதனைச் சுந்தரர் தரிசித்தார். இது சங்கரரால் கட்டப்பட்டது என்று கூறப்படுதலால் சங்கரர் காலமாகிய கி.பி. 8-ஆம்

நூற்ருண்டில் இக்கோயில் கட்டப்பட்டதாதல் வேண்டும். (திருஞான சம்பந்தரும் இங்குவந்து வழிபட்டனர் என்றறியப்படுதலால் இஃது முன்னமே அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது கருதப்படும்.)

7.செய்யுள்-222 (3376)

திருவொற்றியூரில் சங்கிலியார்: சுந்தரர் காலமாகிய ஒன்பதாம் நூற்ருண்டில் ஆண்ட பல்லவ அபராசிதன், நிருபதுங்கன், வைரமேகன் இவர்கள் காலத்தில் திருவொற்றியூர்க் கோவிலில் பல நிவந்தங்கள் விடப்பட்டன. எனவே, அக்காலத்தில் அக்கோயில் சிறந்த நிலையில் இருந்திருத்தல் வேண்டும்.

8.செய்யுள்-247 (3401)

வன்தொண்டன்: இப்பெயர் சுந்தர்க்கே உரியது. இதனைப் பிற்கால மக்கள் இட்டுப் பெருமை கொண்டனர் என்பதைப் பல கல்வெட்டுக்களால் அறியலாம். அணுக்க வன்தொண்டன் (M.E.R. 524 of 1938.)

9. செய்யுள்-337 (3491)

சிவபெருமான் தலைமை அர்ச்சகர் வேடத்தில் பரவையாரிடம் தூது சென்ருர்: திருவாரூர்க் கோயில் அர்ச்சகர் ஞானசிவாசாரியார் மகளார் இசைஞானியார். அவர் மகனுர் சுந்தரர் எனவரும் கல்வெட்டுச் செய்தி இங்கு நோக்கத்தக்கது. (S.I.I.4. P.152)

10. செய்யுள்-398 (3552)

கலிக்காமர் மனைவியார் உடன்கட்டை ஏற விரும்பியது - சோழ அரசர்களுடன் சோழமாதேவியர் உடன் கட்டை யேறியதாகக் காணப்படும் பிற்காலக் கல்வெட்டுச் செய்திகளை நோக்க, இவ்வழக்கம் நாட்டில் வழக்கிலிருந்தது என்பது நம்பத்தகும்.

திருத்தங்களும் குறிப்புக்களும்

(அன்பர் இராவ்பகதூர் - தணிகைமணி -
V.S. செங்கல்வராயபிள்ளை, M.A. அவர்கள் உதவிய)

3156. நஞ்சு+சூழ்+வன+நயனியர்-நஞ்சு சூழ்ந்துள்ள வனம் (அழகிய) கண்களை உடையவர் - எனவும் பிரித்துப் பொருள் கோடலுமாம். ('வன முலை' 'வனபவளவாய்' - என்புழிப்போல. "வனநாயகம்".)

3164. அணிந்துள்ளமதியை மறைத்து வந்தாராதலின் "மறையவர்" என்றார். மறையவர் - மறைந்துவந்த அவர்.

3178. நம்பியும் பரவையும் இருவரும் மகிழ அளித்தாராதலின் 'உமையோடும் வருவார்' எனச் சத்தியையும் சேர்த்துக் கூறினார்.

3184. 'புற்று' - என்பதற்கேற்பத் 'தேன்' என்றார். 'புற்றுத்தேன்' என்பது மதிலிடுக்கு முதலியவற்றில் ஈக்களால் வைக்கப்படுந் தேன் - பதார்த்த இன சிந்தாமணி-" Vide lexin

3190. (பக்கம் 27) பதவுரையில் புகை நோய்ந்த புனுகு+ இனிய நறு நெற (புனுகு — Omitted).

3193. (பக்கம் 29) பதவுரையில் - வரி 7-மக்கண் முறைமை – May be மகள்களாம் முறைமை.

3226. 'குழகாகிய தங்கோலம்'—'மணங்கமழ் தெய்வத்திளநலங் காட்டி'— **திருமுருகாற்றுப்படை.**

3231. பக்கம் 75. வரி 2. தாரம்=நீர்.

3269. பக்கம் 120 "அடிமைக் கணன்றியே" என்பது பாடமாயின் மடித்து நடிக்கின்ற திருவடியினிடத்து மாறுபட்டு எனப் பொருள் கொள்க. ஈண்டு அடிமை என்பது மை விகுதி தன்மை உணர்த்தாது தன்மையுடைப் பொருளையே உணர்த்திப் பகுதிப்பொருள் விகுதியாய் நின்றது. 'இருமை வகைதெரிந்து' என்புழிப்போல." - **சாமிநாத பண்டிதர் குறிப்பு.**

3274. பக்கம் 131-விடை யரவக் கொடி - அரவம் - ஒலி; 'இடிபடு குரலுடை விடையினர்' (சேறை) சம்பந்தர் III – 86-4 'அதிரார் பைங்கண் ஏறு' - சம்பந்தர் (சிற்றேமம்) III – 42-4.

3295. பக்கம் 154-பதிகப்பாட்டு (1) பாறு - பருந்து, கழுகு.

3301. பக்கம் 164. வரி 18. "பாறு சேர்தலைக்கையர்" சம்பந்தர் I –135-1 (பராய்த்துறை).

3313. பக்கம் 181. வரி 4 ஏலம் (வாசனைப் பாடம்) இட்ட நறுந்தண்ணீர் எனலுமாம்.

3382. பக்கம் 254-பக்கம் 257 வரி 24 என்னே!=இது என்ன வியப்பு! மின்னுக்கொடி போல்வாள் உள்ளம் திரிவித்தாள்;(என்னே-இது என்ன வியப்பு!) என்றலுமாம்.

3384. பக்கம் 259-வரி 18. சங்கிலியார் பிணைக்கும் மலர் இறைவனடி கூடுதல் போலத் தன் உயிரும் அதனுடன் அவரால் பிணிக்கப்பட்டு இறைவனடி சேர்ப்பிக்கப்படும்—எனவும் தொனிக்கும்.

3386. பக்கம் 262-வரி 23. மாலை தொடுத்துத் தொடை அவிழ்த்த - முரணணி.

3388. முளரிவளை நிதி - வேண்டுவதைக் கொடுப்பதுபோல - இறைவனும் வேண்டியதைக் கொடுத்தருள்வான் - என்பதைக் குறிக்கப் பதுமநிதி சங்கநிதி குறிப்பிடப்பட்டன.

3391. பக்கம் 266. மதியம் **தீண்டு கன்னி**மாடம் - கன்னி (மணங்கூடித்) தீண்டப் படுவாள் என்பதைக் குறிக்கும்.

3392. பக்கம் 268- வரி 1. 'நீற்றுக்கோலம்', 'நீற்றுக்கோடி நிமிர்ந்து காட்டியும்' - திருவாசகம்.

8397. பக்கம் 271. "அற்றமுறு நிலைமையினால்' - சமயத்துக்கு ஏற்றபடி (வேறுவழி யில்லாமல்); அவமான நிலை வராவழிக்கு; அற்றம் - சமயம்; அவமானம்.

3409. வரவுபார்த்தாரூரர் - ஆரூரர் என்றார், ஒற்றியூரை "எவ்வளவு நாள் பிரிந்தேன் என் ஆரூர் இறைவனையே" எனத் திருவாரூரை நினைந்து செல்லக் கூடியவர் எனக் காட்டுதற்கு.

3424. எதிர்கொண்டருளும் வசந்தம் தம்மை (திருவாரூருக்கு வா என்று) எதிர் கொண்டழைத்தபடி ஓர் நினைவு வந்தது போலும்.

3453. 'வேதமெலாம் தொக்கவடி வாயிருந்த துருத்தியார் - சுவாமி பெயர் (இத் தலத்தில்) வேதேசுரர் - (சிவஸ்தலமஞ்சரி) ஆதலின்.

3472. பக்கம் 367-வரி 13. செற்றம் - பகைமை; நெடுங்காலம் நிகழ்வது. செற்றம் 'இகலொடு செற்ற நீக்கிய மனத்தினர்' - திருமுருகாற்றுப்படை உரை (நச்சினார்க்கினியர்)

3483. பொன் - மணி - பரவை என்பன பரவையின் பொன்போலும் மணி போலும் உயர்ந்த குணப்பண்புகளைக் காட்ட வந்தன.

3490. குஞ்சர - உரிவை புனைந்தவர் - என்பது தமது சோதித் திருவுருவை மறைத்துப் பூசை அர்ச்சகர் உருவை காட்டப் போகின்றார் ஆதலின்.

3491. ஞாலமுய்ய எழுந்தருளும் என்பதை நம்பியுடன் கூட்டாது தூதருடன் கூட்டியுரைக்கவும் நின்றது.

3492. 'பாவாய் திறவாய்' - என்பது பரவாய் திறவாய் என்பதும் பாடம்.

3496. மின்னிடை மடவாய்- மின் மறைவதுபோல உன் சினம் மறைதல் வேண்டும் என்பது தொனி.

திருப்புன்கூர் - முன் *(261 - ன் கீழ்)* உரைக்கப்பட்டது.

கற்பனை:- 1. சிவபெருமான்பால் அன்புமிக்க குடிகள் நெருங்கிச் சிவபுரி என்னும்படி விளங்குதல் ஒரு நகரத்துக்கு ஏனைய பெருமைகள் எல்லாவற்றிலும் மேம்பட்ட சிறப்பு. *(3158)*

2. வேளாளர்களுள் வழிவழி அரசர் சேனுபதிக் குடியரசாக வரும் ஒரு வகையும் உண்டு. *(3159)*.

3. சிவன்பணி செய்துவாழும் வாழ்க்கையே இன்பந்தருவது. *(3161)*

4. குருவின் மாளிகைக்கு நாடோறும் அமுதுபடி முதலானவற்றைப் படி சமைத்தல் சிவபுண்ணியமாம். *(3165)*

5. குருவின்பணி நியமம் முட்டுப்படின் பெரியோர் வருந்தி உண்ணுமலும் இருந்து இறைவரை வேண்டுவர். *(3167)*

6. குருவின்பணி நிறைவேறும்பொருட்டு வேண்டி வருந்துவோர்க்கு இறைவர் அருள்புரிவர். *(3168)*

7. குண்டையூர் கிழார் வேண்டியவாறே நென்மலே அருளியதுடன், அதனைத் திருவாரூருக்கு எடுக்கப் பூதங்களையும் இறைவர் ஏவியருளினுர். தாமே திருவாரூரில் நம்பிகளுக்கு நெல் தராது இவ்வாறு அருளியது குண்டையூர்க் கிழாருக்குக் குருபணியின் பலன் தருவதற்காம். "பனிமதி முடியா ரன்றே யுமக்குநெல் லளித்தார்" *(3132)* என்று நம்பிகள் இதனை விளக்குதல் காண்க.

8. திருவாரூரில் வாழ்வார்கள் அவ்வவர் மனையெல்லைக்குட் படுநெல் லெல்லாம் அவ்வவர் மாளிகையிற் புகப்பெய்து கொள்க எனப் பரவையார் பறைசாற்றி அளித்தனர்; இஃது அவரது முன்னைத்தவத்தின் பெருந்தன்மையும் புகழுமாம். அவ்வாறே நம்பிகள் ஒவ்வோர் முறையும் கொணர்ந்தளிக்கும் பொற்குவைகளும் அவ்வப் பங்குனி உத்திரவிழாக்களில் அடியார்களுக்குக் குறைவறுக்கும் பொருட்டுப் பயன்படுத்திய திறமும் காணப்படும். இதனுட் பரவையாரது பெருமையும் மேம்பாடும் கண்டு கொள்ளத்தக்கன.

9. நாட்டியத்தான்குடிக் கோட்புலியார் நம்பிகளை அழைத்துச் சென்று உபசரித்துத் தம் மக்களாகிய வனப்பகை சிங்கடி என்ற இருவரையும் அவர்பால் அளித்து அடிமையாகக் கொண்டருளும்படி வேண்டினுர். நம்பிகள் அவர்களைத் தமது தூய மக்களாக ஏற்றுக்கொண்டு, அவர்கட்கு வேண்டுவன அளித்துக், கண்ணீர் வார உச்சிமோந்து தம் பதிகங்களிலும் தம்மை அவர்களைப் பெற்றெடுத்த பிதாவாக வைத்துப் பாடியருளினுர். நம்பிகள் பொன்னுசை பெண்ணுசை கொண்டவர் எனப் பிதற்றும் மதியிலிகள் இவ்வுண்மைகளைக் கணிப்பாராயின் உய்குவர் *(3194-3196)*.

10. திருப்புகலூரில் செங்கல்லே செழும் பொன்னுக இறைவ ரருளாற்பெற்ற நம்பிகள், பொன் முதலியவற்றை வேண்டிப் பொய்ம்மையாளராகிய புன்மாக்களைப் பாடித்திரியும் புலவர்களை நோக்கி "நீவிர் அதனைவிட்டு இறைவரைப் பாடினுல் இம்மையே சோறும்

கூறையும் முதலிய எல்லாம் பெறலாம்'' என்று ஆற்றுப்படுத்திப் பதிகம் பாடியருளியது நம்பிகளது பெருங்கருணைத் திறத்தினையும் பரமாசாரியாராம் தன்மையினையும் புலப்படுத்துவதாம். (3205)

11. ஒருவனிடமிருந்து கைநழுவிப்போன பொருள்களையும் சிவனுக்காகச் (சிவார்ப்பணம்) என்று எண்ணுதல் வேண்டுமென்பதும், அவ்வாறு எண்ணினால் அதனை இறைவர் ஏற்றருளுவர் என்பதும் ஆன்றோர் மரபு. உறையூர்ச்சோழர் காவிரியில் நீராடும்போது முத்து ஆரம் நழுவிவிட, அதனைச் சிவனுக்காக என் றெண்ணினார். அது திருமஞ்சனக் குடத்துட் புகுந்து சிவன் முடியில் வீழ இறைவர் அதனைச் சாத்திக் கொண்டருளினர் என்ற வரலாற்றினை நம்பிகள் பதிகத்துள் வைத்துப் போற்றி, இவ்வுண்மையினைக் கண்டொழுகி உய்யும்படி உலகுக் குபதேசித் தருளினர். (3231)

12. திருப்பாச்சிலாச்சிராமத்தில் தாம் நினைந்த பொருளினை இறைவர் தராது தாழ்க்கத், தொண்டர்முகப்பே முறைப்பாடு உரைப்பார்போல் நம்பிகள் எத்தனை யருளா தொழியினும் பிரானா ரிவரல்லா தில்லையே? என்று தோழமைத்திறத்தாற் பாடிய நம்பிகளின் மொழியினை உகந்து பொருள் தந்தருளியமை இறைவர் அடியார்க் கெளிவரும் பெருங்கருணைத் திறம். (3235)

13. நான் மறக்கினும் எண்ணிய நாவே இடையறு தின்சுவை பெருக நாம அஞ்செழுத்தினை யென்றும் இயம்பும் என்றிதனைத் திண்ணிய உணர்விற் கொண்டு திருப்பதிகம் அருளினர் நம்பிகள். இவ்வாறு மனங் கலவாத போதும் புறக்கருவி கரணங்கள் சிவன்பா லீடுபடுதல் இடையறாத நீண்ட பழக்கத்தாலும் தவமுயற்சியாலுமே வருவதாம். இத்தன்மை வரப் பழகுதல் பெருநன்மை தரும். (3241)

14. சிவனையே எண்ணியிருப்பவர்கள் செய்யத்தக்க காரியங்களெவற்றையேனும் மறப்பினும் சிவனே உண்ணின்று நினைவூட்டி அவற்றை நிகழ்விப்பன் (3226). "அன்னே உன்னையல்லா லினி யாரை நினைக்கேனே" "வாழ்கொளிபுத்தூர் மாணிக்கத்தை மறந் தென்னினைக் கேனே", "நீடு ரானைப் பணியா விடலாமே", "அடிகளிவ் வழிபோந்த அதிசய மறியேனே" (தேவா).

15. தில்லை மன்றுணின் றாட னீடிய கோலத்தினைத் திருப்பேரூரில் நம்பிகளுக்கு இறைவர் நேர்காட்டி யருளக் கண்டனர். இவ்வாறு இறைவர் காட்டிடக் காணும்போது வருவது ஐம்புலனிற் புலப்படாத பேரின்பத்துடன் புணரும் மெய்யுணர்வாம். (3242)

16. நம்பிகள் திருமுதுகுன்றத்தினிற் பெற்ற 12000 பொன்னையும் திரு மணி முத்தாற்றினி லிட்டுத் திருவாரூர்க் குளத்தினில் அங்குள்ளோர் மருளுற வியப்ப அங்கேவரப் பெற வேண்டும் என்று வேண்டி அவ்வாறே பெற்றனர். இதுதிருவருட் செயல். எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரம்பொருள் தம் ஆட்பாலவர்கட்கருளும் வண்ணங்களைச் சோதிக்க வேண்டா என்பது கட்டளை. இங்குநின்ற பொருளை அங்குத் தருவதும், இங்கு நிகழ் ஒளி, ஒலி யிவைகளை அங்குக் காட்டுவதும் இவ்வுலகத்தில் மனிதனின் சிற்றறிவின் சிறு அமைப்புக்களாலே கூடுமாறு காண்கின்றோமானால் பேரறிவின் அமைப்புக்களில் எதுதான்கூடாது! ஆற்றினிலிட்டுக் குளத்தினிற்றேடினாற்போல என்னும் பழமொழியின் கருத்தும் காண்க.

17. திருக்குருகாவூரில் வழி நீர்வேட்கையுடன் பசியாலும் மிக வருந்தி நம்பிகள் அணையும்போது, இறைவர் மறையவராய் வந்து பொதிசோறும் தண்ணீரும் கொண்டு வழிச்சார்ந்திருந்து நம்பிகளையும் அருகணைந்தாரையும் ஊட்டி மறைந்தருளினர். திருக்கச்சூராலக் கோயிலினும் அவ்வாறே நகரினுட் சென்று சோறிரந்து கொண்டுவந்து ஊட்டியருளினர். எல்லா உயிர்களினுள்ளும் நிறைந்திருந்து அவ்வவர் கன்மத்துக் கேற்றவாறு இன்பதுன்பங்களை அறிந்து ஊட்டுபவர் சிவபெருமானே யன்றோ?

18. இறைவர், தாம் உலகர் கண்காண வெளிப்பட உருவங்காட்டி அருட் செயல் செய்யும்போது அவரை அன்னரென்று அறியமாட்டாது வைத்தலும், மறைந்தபோது அறிய வைத்தலும் அவர் வல்லமையாம். நம்பிகளுக்குத் திருவதிகைச் சித்தவட மடத்தில் திருவடி சூட்டிய நிலை, குருகாவூரிலும் கச்சூராலக் கோயிலிலும் சோறுதந்த நிலைகள், கூடலையாற்றூரில்கூட வழிபோந்த நிலை முதலியவை காண்க; இவை தேவார அகச்சான்றுகளால் விளங்க நிற்பனவும் காண்க.

19. திருக்குருகாவூரில் இறைவர் நம்பிகளுக்குத் **தாமே** பொதிசோறுந் தண்ணீருங் கொண்டுவந்து கொடுத்தருளினர்; திருக்கச்சூராலக் கோயிலில் அந்நகரின் செல்வ மனைதோறும் சென்று சோறு இரந்து கொணர்ந்தளித்தனர். இவ்வேறுபாடு என்னை எனின்? இதனுல் திருக்கச்சூர் வாழ்வார்களை ஈடேற்றும் பொருட்டுப் போலும் என்க. இறைவரது திருவிளையாட்டும் அருளும் வண்ணங்களுமாம்.

20. திருக்கயிலையினின்றும் போந்து முன்னை யுணர்வுடன் வந்து பிறந்து வளர்ந்தனர் சங்கிலியார். இவ்வாறு முன்னுணர்வுடன் வந்து பிறப்பது தவ வலிமையாலும் திருவருளாலும் சிலர்க்கே கிடைப்பதாம். கோச்செங்கட் சோழனர் சரிதமும், பிறவும் பார்க்க. (3362-3367-3377)

21. பெண்கள் பெற்றோர் உற்றார்களி னீங்கிச் சிவபெருமானது பற்றே பற்றுகக் கொண்டு கன்னிமாடத்தில் தங்கி உலகத் தொடர்பின்றிச் சிவன் பணியே செய்திருந்து, பின் திருவருள் பணித்தவழி மணம் செய்து கொள்ளும் வழக்கு முன்னுளில் உண்டு. (3374-3375); அவ்வாறு தவஞ்செய்யும் கன்னியரின் மணம் இறைவன் காட்டியருளியபடி தொண்டர்களால் முடிக்கப்படும்.

22. சிவனறிய உரைத்த சபதம் பிழைக்கின் யாவரேயாயினும் அதற்குரிய படி தண்டம் செய்யப்பெறுவர் என்பதனை உலகுக்குக் காட்டி உய்விப்பதற்கு நிகழ்ந்தது நம்பிகளது திருவொற்றியூர் நிகழ்ச்சியாம்.

23. கண்ணைக் கெடுத்த தெய்வம் கோலைக்கொடுக்கும் என்ற பழமொழி திருவொற்றியூரில் கண்ணிழந்த நம்பிகளுக்குத் திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் அருளியதன் வழிவந்தது போலும்.

24. காஞ்சி நகரில் இறைவர் இடக்கண் கொடுத்தருளியபோது "கம்பனெம்மானைக் காணக் கண்ணடியேன் பெற்றவாறே" என்று திருவருளைப் பாராட்டிப் போற்றித் திளைத்தனர் நம்பிகள். கண்பெற்ற பேறு இறைவனைக் காண்பதற்கே என்ற உண்மையினையும் வற்புறுத்தி யருளினர். ஆனல் திருவாரூரிற் புக்கபோது, அதனைக் காண்பதற்கு வாழ்ந்த மலர்க்கண் ணொன்று லாறக் கண்டின்புறார், மற்றொரு கண்ணையும் வேண்டிப் பெற்று

இரண்டு கண்ணுலும் புற்றிடங் கொண்ட பெருமானருளை ஆரப் பருகித் திளைத்தனர். இஃது அன்புமிக்க காதலின் விளைவாகும். (3465)

25. கற்புடைய நாயகியார்க்குத் தம் நாயகர் வேறெரு பெண்ணை மணந்தார் எனக் கேட்டபோது தரியாது புலவி மூள்வது இயல்பு. (3469)

26. தம்மையன்றி வேறு பற்றுக்கோடில்லாத அடியார்க்கு வரும் எத்தகைய வருத்தத்தையும் தீர்த்தல் ஆண்டவன் கடன். (3493)

27. இறைவர் அடியார்க்கருளும் திறங்கள் அளப்பில. அவை மனிதர் ஆராய்ச்சியுட்படா.

28. இறைவர் பரவையார்பால் நம்பிகளுக்காக ஒரு முறையன்றி இருமுறை தூதுசென்றது நம்பிகள்பால் வெம்புறு வேட்கைகாணும்படி மேற்கொண்ட திருவிளையாட்டின் றிறமும், பரவையாரது தவத்தின் றிறமுமாம்.

29. ஆண்டவர் திறத்தில் இழிவுபட யார்பாலேனும் சொற் செயல்கள் நிகழக் கண்டால் அவர்பாற் செற்றங்கொள்ளுதல் உறைப்புடைய அன்பின்றிறத்தால் வருவது.

30. வழி வழி இடையருது சிவனடிமைத் தன்மையிற் சார்ந்துவரும் வாழ்க்கை ஒருவற்குப் பெருமிதமாக எண்ணத் தகுதியுடைய பொருளாம்.

31. மாதர்பால் இறைவரை அடியாராகிய நம்பிகள் தூதுவிட்டமை காதினுலும் கேட்கத்தகாத பெரும் பிழையாகிய சிவாபராதம் என்று கொண்டனர் ஏயர்கோன் கலிக்காமனுர். இது நூல்வழிக் கொண்ட துணிபு.

32. நம்பிகள் அதனை அன்னதொன்றென்றே ஒப்பிப் பிழை யுடன் பட்டமை அவரது குணத்தின் நேர்மையினையும் பெறற்கரிய பெருந்தன்மையினையும் காட்டும்.

33. இவ்வாறு உடன்பட்டு ஒப்பிய உண்மையினைக் கடைப்பிடித் தொழுகிய செம்மையாளர் கலிக்காமனுர்; அப்படி யிருந்தும் சூலைநோயினை அவர்பால் ஏவி அவரை மிகக் வருத்தத்துக் குள்ளாக்கினர் இறைவர். இது எப்பொருள் எத்தன்மைத்தாயினும் சிவன் உடன்பட் டருளுவதே விதியாம் என்ற மெய்யுணர்வு தலைப்படவாராத குறைவு நோக்கிப்போலும் என்க.

34. வழிவழி வந்த பழ அடிமை உரிமையிற் பெருமித முற்று, அதனை உயிரினும் சிறந்ததாகக் கொண்டு, நம்பிகளால் சூலை தீர்க்கப் பெறுதலினும் உயிர்துறத்தல் நன்றென்று துணிந்து உயிர் துறந்தனர் கலிக்காமனுர். இஃது அன்பின் உறைப்பினுல் வந்த உயர்வாகிய இறுமாப்பு.

35. தம் பிழை யுடன்பட்டுத் தம்மீது செற்றங்கொண்டு வெறுத்த கலிக்காமனுரது நட்புப் பெறுதற்கு வாயில் வேண்டினர் நம்பிகள்; இது சிவனன்பின் நலத்தின் வைத்த நேரிய மனப்பண்பு.

36. கலிக்காமனுர் தேவியார் தமது கணவர் உயிர் துறந்தவுடன் அவருடனே போவது புரிந்து முயன்றனர். இது கற்பின்றிறம், மாதினியார் - திலகவதியார் - செயல்கள் ஈண்டுக் கருதத்தக்கன.

37. ஆயின் அதுபோழ்து நம்பிகள் தம் திருமனையில் வரவு கேட்டு, அதனைத்தவிர்ந்து ஒருவரு மழுதல் செய்யாது மனையலங்கரித்து அவரை எதிர்கொண்டு உரியபடி உபசரிக்க ஏவினர். முன்னையது கற்பினியலாகிய அறத்தின் பாலதாகிய புண்ணியப் பகுதியாய்ப் பசு தருமமாகும். பின்னையது சிவனடியார் பத்தியின் பாலதாகிய சிவபுண்ணியமாகிய பதிதருமமாகும். இஃது அதனின் உயர்ந்ததாய்ப் பரம்பரியத்தின் வீடுபேறு தரும் தன்மையுடையது. ஈண்டு அம்மையார் இதனை அறிந்தொழுகியதுபோல ஏனைய பெண்மணிகளும் மக்களும் அறிந்தொழுகின் நலமாகும். இஃது அரியதோர் சித்தாந்த உண்மையாகும். காரைக்காலம்மையார் தமது கணவன் தம்மை நீத்த செய்தி தெரிந்தவுடன் ஒழுகிய நிலை ஈண்டு நினைவு கூர்தற்பாலது. (1765)

38. ஈண்டு அம்மையாரது இல்லற வொழுக்க நிலையும், சிவனடிமைத் தனத்தின் ஒழுக்கநிலையும் மிக உயர்ந்த பண்பில் விளங்குவன. அவையே இச்சரித மேல் நிகழ்ச்சிக்குத் துணையாக நின்றன. அவை படிஎடுத்தொழுகற்பாலன. மனைவியாரின் அன்புநிலை கணவனுரது உய்திக்குத் துணையாயிருத்தலும் கருதற்பாலது.

39. சிவன்பாற் பிழைபட்ட தம்மால் சூலை தீர்ந்து நலம்பெறுதலை விரும்பாது கலிக்காமனுர் உடைவாளாற் குத்திக்கொண்டு உயிர் துறந்தனர் என்று தெரிந்தது நம்பிகள் தாமும் அவ்வாற்ருல் உயிர் துறக்கத் துணிந்தனர். இஃது அன்பின் செம்மையின் பாற்கொண்ட உறைப்பும், தமது குற்றத் தீர்வுபெறச்சூழ்ந்த நிலையும் ஆம்; இது பெரியோரியல்பு.

40. சூலை தீர்த்து நட்பாகுக என்றருளிய இறைவர், சூலையும் தீர்ந்தவழி சூலை தீர்ந்த உயிரினை மீட்டும் கொடுத்தருளி நம்பிகள்பால் நட்பாம் தன்மையையும் செய்தருளினர். இவை நம்பிகள் வேண்டியபடி அருளப்பட்டமையின் நம்பிகள் செய்தருளியமையேயாம். ஆட்பாலவர்க்கு இறைவர் அருளும் வண்ணம் அளவிட்டறிதற்கரியன.

ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணம் முற்றும்



திருமூல நாயனார் (ஐப்பசி - அசுவதி)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

30. திருமூலதேவ நாயனார் புராணம் (28 திருப்பாடல்கள்)

தொகை

"நம்பிரான் திருமூல னடியார்க்கு மடியேன்"

—திருத்தொண்டத்தொகை-(5)

வகை

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குல மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூல னாகின்ற வங்கணனே.

—திருத்தொண்டர் திருவந்தாதி-(36)

விரி

3564. அந்தியிளம் பிறைக்கண்ணி யண்ணலார் கயிலையினில்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மா லயன்முதலா மிமையவர்க்கு நெறியருளும்
நந்திதிரு வருள் பெற்ற நான்மறையோ கிகளொருவர், 1

புராணம்:- இது, திருமூலதேவ நாயனுர் சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி; சிலபிரதிகளில் இவர்பெயர் "திருமூலதேவநாயனுர்" எனக் காணப்பட்டமையானும், ஆசிரியர் புராண முடிபில் **"திருமூலதேவர்"** என்பதனுலும் அவ்வாறே பெயர் கொள்ளப்பட்டது. இனி, ஆசிரியர் நிறுத்த முறையானே, வம்பரு வரிவண்டுச் சருக்கத்தின், மூன்ருவது திருமூலதேவ நாயனுர் புராணங் கூறத் தொடங்குகின்ருர்.

தொகை:- நம் குருமரபின் பெருமானுராகிய திருமூலதேவரது அடியவர்களுக்கும் நான் அடியேனுவேன்.

நம்பிரான் - நம் குருமரபின் வழிவழி முன்னவர் என்ற குறிப்பு. **நம்** என்றமையால் சைவ மரபின் அனைவரையும், ஏன்? **பூதபரம்பரை அனைத்தையும்** - உளப்படுத்தியவாறு காண்க. இவர் நங்குரு மரபுக் கெல்லா முதற் குரு நாதராகிய நந்தி பெருமான்பால் அருள் பெற்றவர். இதனை ஆசிரியர் "நந்தி திருவருள் பெற்ற" (3564) என்று இப்புராணத் தொடக்கத்தில் விரித்தருளுதல் காண்க. "என்னுச்சி அடிமன்ன வைத்த பிரான்" என்ற வகைநூற் கூற்று மிக்கருத்தது. **"திருமூலன்"** - இப்பெயர்போந்த வரலாறு "திருமூல ராயெழலும்" (3577) என்று பின்னர் விரிக்கப்படும்; திருமந்திரமும் பார்க்க; இதனல் நாயனுரது பெயரும் பண்பும் கூறப்பட்டன.

வகை:- குடிமன்னு... புக்கு - குடிவளம் நிலைபெற்ற சாத்தனூரில் ஆமேய்ப்போனு கிய மூலன் என்னும் இடையன் கூனுடைய உடம்பிற்புகுந்து; முடி மன்னு... பரவிட்டு - சென்னியிலே நிலைபெற்ற வளைந்த பிறையினை உடைய சிவபெருமானை முழுமையாகிய தமிழின் படியிலே நிலைபெற்ற வேதங்களின்படியே துதிசெய்து; என்... பிரான் - என் உச்சியிலே தனது திருவடியைப் பொருந்த வைத்த பெருமான்; மூலன் ஆகின்ற அந்தணனே- மூலன் என்னும் பெயரையுடையவராகின்ற அருளாளராகும்.

குடி - குடிவளம்; **குரம்பை** - உயிர்போன உடம்பு; கூடு;"அருந்துயர்க் குரம்பையி னுன்மா நாடி" (சி. போ. சி. பாயி.); **புக்கு** - (பரகாயப் பிரவேசம்) கூடுபுகுதல் என்னும் சித்தியினுல் புகுந்து **கூனல்** - உள்வளைந்த தன்மை; **கூன் -நல்** என்று பிரித்துரைத்தலுமாம். **நற்பிறை**யாவது இறைவரைச் சரண் புகுந்த நன்மை. **பிறையாளன்** - பிறையினை உடையவன். இதனை ஆசிரியர் அந்தியிளம் பிறைக்கண்ணி யண்ணலார் என விரித்தருளினர்;"கூனற் றிங் கட் குறுங்கண்ணி" (பிள்.தேவா-நாகைக்கா -1). **முழுத்தமிழின்படி** - முழுமையாகிய -குறைவில்லாத - இலக்கண வரம்பு நிறைந்த தமிழ். ஏனைய தமிழ் போலன்றி முடிந்த முடிபுகளாகிய சைவசித்தாந்த சாரமாகிய வேத சிவாக மங்களின் முடிபுகளை யெல்லாம் உணர்த்துதலின் **முழுத்தமிழ்** என்றூர் என்றலும் ஆம்; **தமிழின்படி** - தமிழின் வழியாக; திருமந்திரங்கள் மூவாயிரமும் ஒரே படியாகிய நாற்சீர்விருத்தங்களாக "நாற்சீரினு னெறிவிளக்கி" மிளிரும்நிலை காண்க;"தன்னை நன்றாகத்தமிழ்ச் செய்யு மாறே" என்பது திருமந்திரம்; **வேதத்தின் சொற்படியே பரவிட்டு - வேதம்** - இங்கு வேத சிவாகமங்க ளிரண்டனையும்குறித்தது. வேத சிவாகமங்களுள் பேதம் யாம் கண்டிலம் என்றனர் அரதத்த சிவாசாரியர். திருமூலதேவ நாயனரும் பாயிரத்துள் வேதச் சிறப்பும் ஆகமச்சிறப்பும் ஒப்பக் கூறுதலும், "ஆகமம் செப்பலுற் றேனே" "திருக்கூத்தின், சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே" என்று வரலாறு ஒப்பக் கூறுதலும், "மதிஞர் வளமுற்ற வேதத்தை யோதியே வீடுபெற் றூர்களே" "குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடு, மொருநெறி யொன்றாக வேதாந்த மோதுமே" "பரனைப் பராபரங் காட்டி யுலகிற், றரனைச் சிவதன்மந் தானே சொல் காலத் தரனு யமரர்க ளர்ச்சிக்கு நந்தி, யுரனுகி யாகம மோங்குகின்றூனே" என்று பயனும் பண்பு மொப்பக் கூறுதலும், பிறவும் காண்க; **சொற்படியே** என்றது அவற்றிற் கூறும் வண்ணமே - கூறியவாறே - வடித்து எடுத்து என்றதாம். **பரவுதல்** - ஈண்டு இயல்பெடுத்துரைத்து உபதேசித்தல் என்றதாம்; **என்னுச்சி அடிமன்ன வைத்தபிரான்** - குரு மரபில் வழிவழி முன் வந்த குருநாதன் என்றது கருத்து, **நம்பிரான்** என்ற முதனூற் பொருளை வகுத்தபடி; இதனை "நெறியருளும் நந்தி திருவருள்பெற்ற" (3564) என்று விரித்தது விரி நூல்; **மூலனுகின்ற - மூலன்** - குருமரபின் முதல்வன்;இனி இரட்டுற மொழிதலால் **மூலன்** என்ற பெயரினையுடைய இடையனது உடம்பினுட் புக்குத் திருமூலராக **ஆகும்** என்ற சரித வரலாறு பற்றி உரைத்தலுமாம்; **ஆகும்** - ஆக்கச் சொல் இடையனது உடம்பின் தன்மையினின்றும் தமது உயிரின் தன்மை வேருக என்ற பொருள் குறித்தது. **திருமூலராய்**" (3577) என்பது விரிநூல்; **ஆகின்ற** -நிகழ்காலம் அவ்வாறே இன்றும் என்று மிருக்கும் நிலை குறித்தது. "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை,யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற்கிளத்தல் வேண்டும்" (தொல் - சொல் - வினை - 43); **அங்கணனே** -

அங்கண்மை யாவது வரைவின்றி எல்லா உயிர்களின் மேலும் செல்லும் அருளுடைமை; "அறனறிந் தொழுகு மங்கணுளனே" (கலித் - 144-70); துன்பமுற்ற பசுக்களைக் கண்டு "ஆவுற்ற துயரிவை நீங்க ஒழிப்பன்" (3575) என்று கொண்ட கருணையினுற் செயல் செய்த சரித நிகழ்ச்சிக் குறிப்பு; ஏகாரம் - தேற்றம்.

பெயரும் பண்பும் தொகை நூலாகிய முதனூல் பேசிற்று; ஊரும் பேரும் பண்பும் சரிதவரலாறும் பிறவும் வகை நூலாகிய வழிநூல் பேசிற்று; இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டு கொள்க.

விரி:- 3564. **(இ-ள்)** அந்தி...கயிலையினில் - மாலையிற்றேன்றும் இளம்பிறையாகிய கண்ணிமாலையினைச் சூடிய சிவபெருமானது திருக்கயிலை மலையிலே; முந்தை நிகழ்... நாயகமாகி - பழமையாக உள்ள திருக்கோயிலுக்கு முதற்பெருங் காவலராகிய முதன்மை பெற்று; இந்திரன்... நந்தி - இந்திரன், விட்டுணு, பிரமன் முதலாகிய தேவர்களுக்கு நெறியினை அருளிச் செய்யும் பணி பூண்ட நந்தி பெருமானுடைய; திருவருள்... ஒருவர் - திருவரு ளுபதேசத்தினைப் பெற்ற நான்மறைச் சிவயோகிகளாகிய பெரியவர் ஒருவர்.

(வி-ரை) அந்தி... அண்ணலார் - "கூனற்பிறையாளன்" (திரு வந்தாதி) என்ற வகை நூற்பொருளை விரித்தவாறு.

பிறைக்கண்ணி - அருளுடைமைக் குறிப்பும், ஞான ஒளிவளரச் செய்யும்குறிப்பும் தருவது; இறைவர் திருமுடியாகிய உயர்ந்த இடத்திலிருத்தலால் கலங்கரை விளக்கம் போல நெடுந்தூரத் திருப்பவர்களையும் இடமும் இயல்பும் காட்டி அழைக்கும் தன்மை குறித்தபடியுமாம் 252—253 பார்க்க.

பிறை அண்ணலார் - கயிலை - கயிலை மிக உயர்ந்த மலை; அண்ணலார் அதன் மேல் உயர்ந்து நிற்பவர்; பிறை அவரது நீண்ட திருமுடியின் மேலது என்ற குறிப்புக்களும் காண்க. உலகுக்கு மிக உயர்ந்த ஞான ஒளிபரப்பி நெறிகாட்ட வந்தவரது புராணமாதலின் இத் தன்மையாற் கூறியபடி.

முந்தை நிகழ் கோயில் - நீண்ட காலத்துப் பழங்கோயில்; முதன்மை பெற்ற கோயில் என்றலுமாம். **நிகழ்கோயில்** - எக்காலத்தும் **அழியாதிருக்கும் கோயில்** என்று முக்காலத்துக்கும் பொதுவாகிய நிகழ்கால வினைத்தொகையாற் கூறினர்; நொடித்தான்மலை ஊழியிலும் அழியாதது என்ற பொருட்குறிப்பு.

முதற்பெருநாயகம் - "கோயில் நாயகன்" (20); **நாயக**மாவது காவலாகிய அதிகாரம்.

நெறியருளும் - இஃது உட்செல்ல விடுக்கும் காலம் என்றும்; இஃது அவ்வாறு செல்ல விடாத காலம் என்றும், இவ்வழி செல்க - இவ்வழி செல்லற்க என்றும்காலுமும் இடமும் காட்டி விடுத்தும் தடுத்தும் வழிப்படுத்தும். **நெறி** - சிவநெறி, குரு நெறி, ஒளிநெறி, நன்னெறி என்றலுமாம்; இப்பொருளில் முனிவர் யோகியர்க்கே யன்றி **இமையவர்க்கும்** என்று எச்சவும்மை தொக்க தென்க.

நந்தி - திருநந்தி தேவர்; **நந்தி** - சிவபெருமானது பெயர்; அவர்பால் முதல் உபதேசம் பெற்ற நந்திதேவருக்கு ஆயிற்று; முதற்பெருநாயகமாகி - நெறியருளும் - நந்தி - என்பன

3565. மற்றவர்தா மணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்
கொற்றவனுர் திருக்கயிலை மலைநின்றுங் குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினு லுடன்சிலநா ளுறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார். 2

இறைவராகிய நந்தியினின்றும் பிரித்துணர வைக்கும் அடைமொழிகள். பிறிதினியைபு நீக்கிய விசேடணம்

நந்தி திருவருள் பெற்ற - நந்தி பெருமான்பால் நேரே உபதேசம் பெற்ற என்க. "நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின், நந்திக ளுல்வர் சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரம, ரென்றிவ ரென்னுே டெண்மருமாமே", "இருந்தேனென் னந்தி யிணையடிக் கீழே" (திருமந்திரம் - பாயிரம்) என்பன முதலியவை பார்க்க.

நான்மறை யோகிகள் - வேத சிவாகமங்களுள் பேசப்பட்ட சிவயோகங் கைவந்த பெரியார். பன்மை சிறப்பு; இவரது சிவயோக சாதனையால் வரும் இச் சரித நிகழ்ச்சிகள் பலவும் காண்க. "எண்ணிறைந்த வுணர்வுடையா ரீசரரு ளென வுணர்ந்தார்" (3586); "சிவயோகந் தலைநின்று, பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார்" (3587) என்பன முதலியனவாய் வருவன காண்க; யோகிகளுள் ஒருவர் என்றுரைப்பாருமுண்டு; ஒருவர் - ஒப்பற்றவர் என்ற குறிப்புமாம்; இவரது முன்னைப் பெயர் சொல்லப்படவில்லை. ஈண்டைக்கு வேண்டப் படாமை குறிப்புப் போலும். அவையெல்லாங் கண்டு சரிதங் காண்பாருமுண்டு.

இப்புராணம் அந்தி என்று அகரத்தில் தொடங்கிச் சாற்றுவாம் என மகர ஒற்றுடன் நிறைவாதல் பிரணவ வடிவான ஞானம் தர வந்தவரது சரிதம் என்ற குறிப்புத்தருவது. 1

3565. (இ-ள்) மற்றவர்தாம்...பெற்றுடையார் - அவர் தாம் மற்றும் அணிமா முதலாகிய அரிய எண்வகைச் சித்திகளையும் கைவரப் பெற்றுடையவர்; கொற்றவனுர்... கேண்மையினுல் - இறைவரது திருக்கயிலைமலையினின்றும் குறுமுனி எனப்படும் அகத்திய முனிவரிடத்துப் பொருந்தியதொரு கேண்மையாகிய தொடர்பினுலே; உடன்.. .வழிக்கொண்டார் - அவரோடு உடனுகச் சில நாள் தங்கியிருத்தலைக் கருதி அதன்பொருட்டு அவரிருப்பிடமாகிய நற்றமிழ்ப் பொருத்தமுடைய இனிய பொதிய மலையினைச் சேர்வதற்காக வழிக்கொண்டு செல்வாராயினர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அணிமாதி வருஞ் சித்தி - அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எண்வகைச் சித்திகள். இவை அட்டமாசித்திகள் எனப்படும்; அணிமா - அணுவினுஞ் சிறிய உருவம் கொள்ளுதல்; மகிமா - எங்கும் நிறைந்து நிற்கும் பெருமை கொள்ளுதல்; இலகிமா-மேருப்போல மிகப் பெரிதாயிருந்தும் எடுக்கும்போது இலகுவாயிருத்தல்; கரிமா - அணுப்போலிருந்தும் எடுக்குங்கால் மேருப் போலக் கனப்பது; பிராத்தி - எங்கும் செல்லும் ஆற்றலுடைமை; பிராகாமியம் - பரகாயத்தில் நண்ணுதல், ஆகாயத்தில் சஞ்சரித்தல், நினைந்த போகங்கள் எல்லாம் தானிருந்த

இடத்தே வரப்பெறுதல், தன் உடல் ஒளியினலே, இருந்தபடியே மண்ணிலும் விண்ணிலும் உள்ள பொருள்களெல்லாமும், கால மூன்றும் அறிதல்; **ஈசத்துவம்** - ஈசனென முத்தொழிலும் செய்து தேவரும் பணிகேட்ப நிற்றல்; **வசித்துவம்** - எவ்வுயிரையும் தன் வசமாக்குதல்; இவற்றினியல்பைத் திருவிளையாடற் புராணம் அட்டமாசித்தி யுபதேசித்த படலம் முதலியவற்றுள்ளும் இவரது திருமந்திரத்துள்ளும் காண்க.

வருஞ்சித்தி - சிவயோகியர்கள் இவற்றை விரும்பார்; ஆயினும் அவர்களை இவை நிழல்போலப் பிரியாது அடைந்து அவர்கள் பெருமைகளை உலகர்க்கு உணர்த்தி நிற்கும்; இவை அவர்களுக்கு விளையாட்டுப் போல உள்ளன. வரும் - தேடிவந்தடையும்; இங்கு நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகியராகிய இவர் இச்சிறிய சித்திகள் பெற்றுடையார் எனக் கூறவந்த நிலை என்னையோ? எனின், பின்னர், இச் சரித நிகழ்ச்சியிலே பசுக்களின் துன்ப நீங்க இடையனுடலில் பரகாயப் பிரவேசமும் (3576), தம்முடல் மறைந்தமை கண்டபோது அது தம்மை ஆகமப் பொருளைத் தமிழ் வகுப்பச் செய்தற்கு இறைவர் செய்த அருட் செயல் என்று இருந்தபடியே முழுதுணர்ந்த சிந்தையினில் நாடி உணர்தலும் (3585), பிறவும் நிகழ்வனவாதலின் அவற்றின் இயல்புணர்த்தற்கென்க.

கொற்றவனார் - இறைவருடைய; சிவபெருமானுடைய; **குறுமுனிபால்... கேண்மை - குறுமுனி** - அகத்தியர்; **கேண்மை** - சிவயோகியாராகிய நட்பு; தாழ்ந்த தென்றிசையை நேர்நிறுத்தத் தனிப்பெருமுனிவராகிய நிலையில் அகத்தியரைப் பொதியமலைக்கு அனுப்பிய வரலாறு கந்தபுராணத்துட் காண்க. (திருக்கல்யாணப் படலம்-50-59)

உடன் சிலநாள் உறைவதற்கு - இறைவரது திருக்கயிலையில் உறைந்த யோகியார் அகத்தியரோடு உடன் சிலநாள் உறைவதனை விரும்பிக் கயிலையை நீங்கி வழிக் கொண்டார்; **சிவனோடிருத்தலினும் பேரின்பம் சிவனை அணைந்தோருடன் இருத்தலாம் என்ற உண்மை** நோக்கி என்க. ஆயின் இவ்வாறு யோகியர் கொண்ட கருத்தினை, உயிர்கள் உய்யும் பொருட்டுத் திருமந்திரம் வெளிப்படுத்தும் பெருங் கருணை காரணமாக, நிறைவேற அருள் புரியாது தடுத்துத் திருவாவடுதுறையினில் இவரைப் பல்லாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருத்தியருளினர் இறைவர் என்பது மேல்காணப்படும். எத்தகைய பெரியோராயினும் திருவருள் கூட்டிய வழியேயன்றித் தாம்தாம் எண்ணியபடி காரியங் கைகூடப் பெறார் என்க. "வேண்டி நீயா தருள் செய்தா யானு மதுவே வேண்டினல்லால்" என்ற மணிவாசகங் காண்க.

நற்றமிழின் பொதியமலை - தமிழ் முனிவன் இருத்தலின் இவ்வாறு கூறினார். **நற்றமிழ்** - "ஞாலமளந்த மேன்மைத்தெய்வத்தமிழ்" (970); "தமிழ்ச் சொல் வடசொல் லெனுமவ்விரண்டு, முணர்த்து மவனை யுணரலு மாமே" (திருமந்); "தமிழ்ச்சொலும் வடசொலுந் தாணிழற் சேர" (தேவா). **தமிழின் நன்மையாவது இறைவரை எளிதின் உணர உணர்த்தி ஆட்படவைக்கும் தன்மை.**

பொதியமலை - இது பாண்டி நாட்டில் தெற்கில் உள்ளதோர் மலை; அகத்திய முனிவரிருப்பிடமாக விளக்கமா யறியப்படும்; "சந்தனப் பொதியத் தடவரைச் செந்தமிழ்ப்,

3566. மன்னுதிருக் **கேதாரம்** வழிபட்டு மாமுனிவர்
பன்னுபுகழ்ப் **பசுபதிநே பாளத்தைப்** பணிந்தேத்தித்
துன்னுசடைச் சங்கரனு ரேற்றதூ **நீர்க்கங்கை**
அன்னமலி யகன்றுறைநீ ரருங்கரையின் மருங்கணைந்தார். 3

பரமாசாரியன்'' என்று முன்னோர் உளங்குளிரப் போற்றுவர்; இது ''பொதியில்'' எனவும் வழங்கும் (சிலப்). **தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பொதுவிட மாயிருத்தலின்** இப்பெயர்பெற்ற தென்பர் மகாமகோபாத்தியாயர் உ.வே.சாமிநாதய்யர்.

வழிக்கொள்ளுதல் - வழியே பொருந்தச் செல்லுதல். 2

3566. (இ-ள்) மன்னு... வழிபட்டு - (கயிலையினின்றும் வழிக்கொண்ட யோகியார்) நிலைபெற்ற திருக்கேதாரத்தினை வணங்கி; மாமுனிவர்... ஏத்தி - பெரு முனிவர்கள் எடுத்துச் சொல்கின்ற புகழினையுடைய பசுபதி நேபாளத்தினைப்பணிந்து துதித்து; துன்னு... அணைந்தார்- நெருங்கி சடையிலே சிவபெருமானுர் சிரத்தில் ஏற்று வைத்தருளிய தூய நீரினையுடைய கங்கையாற்றினது, அன்னங்கள் நிறைந்த அகன்ற துறையின் நீர்மிக்க அரிய கரையின் பக்கத்தே வந்தணைந்தனர்.

(வி-ரை) திருக்கேதாரம் - இமயமலைச் சாரலில் உள்ளதொரு பதி; இது தேவாரப் பாடல்பெற்ற வடநாட்டுப் பதிகளுள் ஒன்ருக வைத்தெண்ணப்படும். இதனை, ஆளுடைய பிள்ளையாரும் நம்பிகளும் திருக்காளத்தியிலிருந்தபடியே பாடியருளினர். தலவிசேடங்களுக்குப் பதிகங்கள் பார்க்க.

மாமுனிவர்...நேபாளம் - நேபாளம் - இமயமலைச் சாரலில் வடகீழ்ப்புறம் உள்ள ஒருதனி அரசாங்கத்துட்பட்ட நாடு; பண்டு தொட்டு வரும் சுயேச்சையான முடிமன்னர்மரபினுல் ஆளப்படுவது; இந்நாடும் இவ்வரசர்களும் சைவ மரபில் மிகப் பற்றுடையவர்; சிவ வழிபாட்டினும் திருநீறும் அக்கமணியுமாகிய சிவசின்னங்களினும் மிகச் சிறந்த பத்தி வாய்ந்த ஒழுக்கமுடையவர்; இச்சிறப்புக் கருதி இது **பசுபதி நேபாளம்** எனப்படும். உருத்திராக்கம் விளையும் நாடு. **மாமுனிவர்** - பெருமுனிவர்களது பழைய ஆசிரமங்கள் பல இன்றும் விளங்குதல் குறிப்பு. மிகப் பெரிய சிவலிங்கத் திருவுரு வழிபடப்படும் இடங்கள் உள்ளன. சிவராத்திரி சிறப்பாகக் கொண்டப் பெறுவது.

சடை - ஏற்ற - என்க; **சங்கரனுர்** - சுகஞ் செய்கின்றவர். பகீரதனுக்காகக் கங்கையைச் சடையில் ஏற்று அவன் முன்னோர்களுக்குச் சுகம் செய்த குறிப்புப்பெற இப்பெயராற் கூறினுர். **சடையில் ஏற்றல்** - ஆயிரமா முகத்தினேடு பரந்து வந்ததை முழுதும் சடையில் ஏற்றலும், அடங்கச் செய்து பனிபோலாகச் சிறிதாக்கி உலகில் விடுத்தலும் குறித்தது.

தூநீர் - சகரர்களைப் புனிதமாக்கிக் கதியளித்த குறிப்புப் பெறத் **தூநீர்** என்ருர் ; இன்றும் அத்தன்மையுடன் விளங்குதல் கண்கூடு.

அகன்துறை - நீர் அருங்கரை - துறை அகலமுடையது; நீர் ஆழமுடைத்தாய்க் கரையருகிலேயே விளங்குவது என்பதாம். **அன்னமலி**-நீர்ச் செழிப்புக் குறித்தது. கபில முனிவர் சாபத்தாலே நீருகிய சகரர்கள் என்னும் தன் முன்னோர் நற்கதியடையும் பொருட்டுப் பகீரதன் முன் பிரமதேவனையும், பின் சிவபெருமானையும் நோக்கிப் பல்லாயிரம் ஆண்டுகள்

3567. கங்கைநீ டுறையாடிக் கருத்துறைநீள் கடலேற்றும்
அங்கணர்தா மகிழ்ந்தருளு மவிமுத்தம் பணிந்தேத்தி
மங்குல்வளர் வரைவிந்த மன்னுபருப் பதமிறைஞ்சித்
திங்களணி சடையர்திருக் காளத்தி மலைசேர்ந்தார். 4

தவஞ்செய்யக், கங்கைப் பெருக்கு வரவே, அது உலகை அழிக்காது சிவபெருமான் சடையில் ஏற்று அளவுபெற உலகில் விடுத்து அவர்களைப் புனிதர்களாக்கிக் கதியளித்தனர் என்ற வரலாறு மாபுராணங்களுட் கேட்கப்படும். 3

3567. (இ-ள்) கங்கை நீள் துறை ஆடி - கங்கை யாற்றினது நீண்ட துறையிலே நீராடி; கருத்துறை... ஏத்தி - பிறவித்துறையினையுடைய நீண்ட கடலினின்றும் கரையேற்றும் இறைவர் மகிழ்ந்து எழுந்தருளியிருக்கும் அவிமுத்தத்தினை (வாரணசி-காசியினைப்) பணிந்து துதித்து; மங்குல்வளர்... இறைஞ்சி - மேகங்கள் தங்குதற்கிடமாகிய விந்த மலையினையும் நிலைபெற்ற சீபர்ப்பத மலையினையும் வணங்கி; திங்களணி...சேர்ந்தார் - பிறையினைச் சூடிய சடையினையுடைய இறைவரது திருக்காளத்தி மலையினைச் சேர்ந்தனர்.

(வி-ரை) கங்கை நீள் துறை - "அகன் றுறை நீர் அருங்கரை" (3566) என முன்கூறியதை அனுவதித்தார்; நீள் - பெருமையினால் மிகும் என்று கொண்டு விசுவநாதர் சந்நிதிக்கெதிரில் உள்ள மணிகர்ணிகைத் துறையினைக் குறிப்பால் உணர்த்தியதாகக் கொள்வதுமாம்.

கரு துறை நீள் கடல் ஏற்றும் - கரு துறை - பிறவியாகிய இறங்குமிடம்; கரு - பிறவி; ஏறுதற் கருமை நோக்கி நீள் கடல் என்றார்; ஏற்றுதல் - கரை ஏற்றுதல். "நீள்சென் மக்கட லிடையிற்புக் கலையார்" (திருநா - ஏகாதசமாலை-4) "காசியிலிறக்க முத்தி" என்னும் பொருட்குறிப்பு.

அவிமுத்தம் - காசி; முத்தம் - நீங்குதல்; வி - சிறப்புக்குறிக்கும் முன் ஒட்டுமொழி; நாயகன் - விநாயகன்; நாசம் - விநாசம்; என்புழிப்போல; விமுத்தம்- விசேடமான நீங்குதல்; அகரம் எதிர்மறை விகுதி. பிறவிப் பெருங்கடலுள் புகும் நீங்குதலை இல்லாமை செய்வது என்ற குறிப்பும் காண்க.

அவிமுத்தம் - நீங்க வேண்டிய காலத்தும் நீங்காமை; தவஞ்செய்து பிரம தேவர்பால் காசியின் அரசுரிமை பெற்ற திவோதானன் என்னும் அரசன், அப்பதியில் தேவர்கள் வசிக்கலாகாதென்று வரம் பெற்று ஆண்டுகொண்டிருக்க, அவ்வரம் பொய்க்காதபடி சிவபெருமான் அங்கு அருவுருவமாக வீற்றிருந்தருளினர் என்றும், அதனால் அவிமுத்தம் எனப்பெயர் பெற்றதென்றும், தலமான்மியம் கூறும்.

விந்த வரை - என்க. மங்குல் வளர் - மேகமண்டலம்வரை நீண்ட உயர்ச்சி குறித்தது; விந்தமும் பருப்பதமும் என எண்ணும்மை விரிக்க; மன்னுதல் - சிவபெருமான் என்றும் நந்தியாகிய அம்மலையின்மீது நிலையாக வீற்றிருத்தல்; பருப்பதம் - சீசைலம், சீபர்ப்பதம் என்ப. தலவிசேடம் பதிகத்தின் கீழ்க்காண்க.

3568. நீடுதிருக் காளத்தி நிலவுதா ணுவைவணங்கி
ஆடுதிரு வரங்கான வாலவனந் தொழுதேத்தித்
தேடுமிரு வர்க்கரியார் திருவேகாம் பரம்பணிந்து
மாடுயர்மா மதிற்காஞ்சி வளநகரின் வைகினார். 5

திங்களணி சடையர் - "திங்கள்சேர் சடையார்" (753); அணி - கண்ணியாகச் சூடிய. சடைமுடியார் காளத்தி—என்பதும் பாடம். 4

3568. (இ-ள்) நீடு... வணங்கி - நீடும் திருக்காளத்தி மலையிலே நிலைபெற்று விளங்கும் தாணுவாகிய சிவபெருமானை வணங்கி; ஆடு...ஏத்தி - இறைவர் அருட்கூத்தியற்றும் திருமன்றங்களுள் ஒன்றாகிய திருவாலங்காடு என்ற பதியினைத்தொழுது துதித்து; தேடும்... பணிந்து - கீழும் மேலுமாகத் தேடிய அரிக்கும் அயனுக்கும் காணுதற்கரியராய் நிமிர்ந்தாராகிய சிவபெருமான் அமர்ந்தருளும் திரு ஏகாம்பரத்தினையும் பணிந்து; மாடுயர்... வைகினார் - உயர்ந்த பெரிய பொன்னாலாகிய மதில்களையுடைய திருக்காஞ்சிபுரம் என்னும் நீர்வளமுடைய அத்திருநகரில் தங்கினார்.

(வி-ரை) நீடு திருக்காளத்தி - நீடும் தென்கயிலை என்னும் சிறப்புக் குறித்தது.

தாணு - சிவன்; நிலைபேறுடையவர்; தூண்போலத் தாங்குபவர்; நிலவு தாணு - "மலையெழு கொழுந்து" என்றபடி மலைமிசை முளைத்தெழுந்த முதல்வர்.

ஆடு திருஅரங்கு - இறைவர் அருட்கூத்தாடும் ஐம்பெரு மன்றங்களுள் ஒன்றாகிய; திருவாலங்காடு - இரத்தின சபை; சிதம்பரம் பொற்சபை;மதுரை - வெள்ளிச் சபை; திருநெல்வேலி - தாமிர சபை; குற்றாலம் - சித்திரசபை என்பன இவ்வைந்து சபைகள்.

ஆலவனம் - திருவாலங்காடு; காரைக்காலம்மையார் இறைவரது எடுத்த திருவடிக்கீழ் என்றுமிருக்கும் பெருமையுடைய பதி.

திரு ஏகாம்பரம் - காஞ்சிபுரத்தில் இறைவர் எழுந்தருளிய திருவாலயம்; ஆம்பரம் - மாமரம்; ஏக ஆம்பரம்; ஒரு (ஒப்பற்ற)- வேதவடிவான - மாமரம்; இதனடியில் அம்மை பூசிக்க இறைவர் எழுந்தருளியுள்ளார்;"மா வமர்ந்தநம் மிருக்கை" (1130); ஏகாம்பரம் என்பது வேறு; ஏகம்பம் என்பது வேறு. மாடு - பக்கம் என்றலுமாம்.

காளத்தி - திருவாலங்காடு - திருவேகாம்பரம் இவற்றின் தலவிசேடங்களைப் பற்றி அவ்வவற்றின் பதிகங்களின் கீழ்ப்பார்க்க. 5

3569. (இ-ள்) நற்பதி... போய் - நல்ல பதியாகிய அந்தக் காஞ்சியிலே விரும்பித் தங்கியுள்ள சிவயோகியர்களாகிய முனிவர்களை விரும்பி அன்புடன் கலந்திருந்து சென்று; கற்புரிசை... இறைஞ்சி - கல்மதில் சூழ்ந்த திருவதிகை வீரட்டானத்தில் கூடி வணங்கி; கறைக்கண்டர்... அணைந்தார் - திருநீலகண்டத்தினை உடைய இறைவர் அற்புதமாகிய அருட் பெருந் திருக்கூத்தினை ஆடுதற்கிடமாகும் திருவம்பலத்தினைச் சூழ்ந்த திருவீதியினை உடைய பொற்பதியாகிய பெரும்பற்றப் புலியூரில் வந்து அணைந்தனர்.

3569. நற்பதியங் கமர்**யோக முனிவர்களை நயந்து**போய்க்
கற்புரிசைத் **திருவதிகை** கலந்திறைஞ்சிக் கறைக்கண்டர்
அற்புதக்கூத் தாடுகின்ற வம்பலஞ்சூழ் **திருவீதிப்**
பொற்பதியாம் **பெரும்பற்றப் புலியூரில்** வந்தணைந்தார். 6

(வி-ரை) நற்பதி - உயிர்களுக்குச் சிவபூசனையை விளங்கச்செய்து காட்டி உய்விக்கும் கருணைச் செயலினையும், எல்லா அறங்களையும் அம்மையார் செய்தற்கிடமாகிய பதி.

அமர்யோக முனிவர்கள் - சிவயோகத்தில் உறைப்புக்கொண்ட சிந்தையினையுடைய முனிவர்கள். இவர்களைப் பற்றி முன்னர்ச் "சத்தி தற்பர சித்த யோகிகளுஞ் சாத கத்தனித் தலைவரு முதலா, நித்த மெய்திய வாயுண்மெய்த் தவர்கணீடு வாழ்திருப் பாடியு மனேகம்" (*1159*) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. **அமர்தல்** - விரும்புதல்; வீற்றிருத்தல்.

யோக முனிவர்களை நயந்து - **நயத்**தலாவது விரும்பி உடனமர்தல்; இவரும் சிவயோகியராதலானும், கேண்மையினுற் குறுமுனிபாற் செல்கின்றுராதலானும் இங்குத்தன் ஒப்புடைய, அவரொப்புடைய, யோக முனிவர்களை நயந்திருந்தனர் என்பதாம். இவ்வியோகியரியல்பு பற்றிக் "காமனை முனிந்து நெடுஞ் சடை முடித்துக் கவின்ற கல்லாடைமேற் புனைந்தி, யாமெலாம் வழுத்துந் துறவியென் றிருந்து மொருத்திதனிளமுலைச் சுவடு, தோமுறக் கொண்டா ரெனச்சிறை யிடல்போற் **சுடர் மனக் குகையுளே கம்பத், தோமொழிப் பொருளை யடக்கியா னந்த முறுநர்வா ழிடம்** பல வுளவால்" என்ற காஞ்சிப் புராணக் (திரு நகர்ப் படலம்- *109*) கருத்தும் காண்க.

கற்புரிசைத் திருவதிகை - மும்மதிலெய்தி வீரம் நிகழ்ந்தமை குறிக்கப் புரிசை பற்றிக் கூறினர். பொன் வெள்ளி செம்பு மதில்களையுடைய புரங்களை இருந்தவாறே எரித்த எளிமையும் வலிமையும் குறிக்கக் **கற்**புரிசை என்று இலேசுபடக் கூறினர்; **கலந்து** - கூடி; கூடுதல் அதன்வழிச் செல்லுதல்.

அற்புதக் கூத்து - அற்புதம் - காணுந்தோறும் புதிது புதிதாயிருத்தல்; **ஆடுகின்ற அம்பலம்** - ஆடுதற்கிடமாகிய மன்றம். ஆடுதற்கு இறைவர் என்ற எழுவாய் அவாய் நிலையான் வந்தது,

திருவீதிப் பொற் பதி - "மாதவங்கள் நல்குந் திருவீதி நான்கும் தொழுது" (*2063*)- "பொய்ப்பிறவிப் பிணியோட்டுந் திருவீதி புரண்டு வலங்கொண்டு" (*1444*) என்றவை காண்க; இத்திருவீதிச் சிறப்பினை யுணர்த்துதற்கு **அம்பலஞ் சூழ்திரு வீதிப் பொற்பதி -**எனப் பதியின் சிறப்பினைத் திருவீதியொடு படுத்துக் கூறினர்.

பொற்பதி - அங்கங்கும் பொன்னுலாகிய பணிகள் பல செய்யப்பட்டு விளங்கும் பதி; விண்ணவரும் இரணியவர்மன் முதலியோரும் அணிந்த பொன்னம் பலமும், "திருப்பே ரம்பலஞ் செய்ய, தூய பொன்னணி சோழன்" என்றபடி திருப்பணி செய்த பேரம்பலமும், தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய திருவெல்லையும் முதலியன கருதத்தக்கன.

3570. எவ்வுலகு முய்யவெடுத் தருளியசே வடியாரைச்
செவ்வியவன் புறவணங்கிச் சிந்தைகளி வரத்திளைத்து
வவ்வியமெய் யுணர்வின்கண் வருமானந் தக்கூத்தை
அவ்வியல்பிற் கும்பிட்டங் காராமை யமர்ந்திருந்தார். 7

பொற்றில்லைக் கூத்து என்ற திரு மந்திரப் பகுதி காண்க. இரண்ய மயகோசமாம் திருத்தில்லை என்பாருமுண்டு.

பெரும் பற்றப்புலியூர் - ஏனைப் பற்றுக்களை எல்லாம் ஒழித்த துறவிகளுக்கும் பெரும்பற்றை விளைப்பது. ``துறந்தோ ருள்ளப் பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானை'' (தேவா). 6

3570. **(இ-ள்)** எவ்வுலகும்... வணங்கி - எல்லா உலகங்களும் உய்யும்படி தூக்கிய சேவடியினை உடைய கூத்தப்பெருமானைச் செம்மையாகிய அன்புபொருந்த வணங்கி; சிந்தை களிவரத்திளைத்து - மனத்தில் மகிழ்ச்சி வர அவ்வனுபவத்தில் அழுந்தித் தம் வசமற்று நின்ற; வவ்விய... கூத்தை - உயிர்ப் போதத்தினை விழுங்கி அதன்மேல் விளங்கும் மெய்யுணர்வாகிய சிவபோத நிலையில் வெளிப்படும் சிவானந்த அருட் கூத்தினை; அவ்வியல்பிற் கும்பிட்டு -முழுதும் பதிஞானமாகிய தன்மையிலே நின்று அனுபவித்து வழிபட்டிருந்து; அங்கு...அமர்ந்திருந்தார் - அத் திருப்பதியிலே ஆராமையினுலே விரும்பித் தங்கியிருந்தனர்.

(வி-ரை) எவ்வுலகும் உய்ய - விண்ணும் மண்ணும் பிறவுமாகிய உலக மெங்குமுள்ள எல்லா உயிர்களும் உய்திபெறும் பொருட்டு.

உலகுய்ய எடுத்தருளிய சேவடியார் - இஃது ஐந்தொழிற் கூத்தினை உணர்த்தியது; **எடுத்தருளிய** - தூக்கிய; பிறவிப் பெருங்குழியினின்றும் மேலே எடுத்த என்பதும் குறிப்பு. ``ஆட வெடுத்திட்ட பாதமன் ருேநம்மை யாட்கொண்டதே'' (அரசு - தேவா).

செவ்விய... திளைத்து - ஐந்தொழிற் கூத்தின் இயல்பினை முழுதும் அத் திருவடிவத்தில் வைத்து எண்ணி எண்ணிக் கண்டு ஆனந்தத் தழுந்தி.

அன்புற வணங்குதல்- சிந்தை களிவரத் திளைத்தல் - என்ற நிலை வேறு; இவை கருவி கரணங்களின் எல்லையளவு கண்டு ஆனந்தத் தழுந்துதல். மேல் **அவ்வியல்பிற் கும்பிட்டு** என்ற நிலை வேறு; அது தற்போதமிழந்த நிலையில் வெளிப்படுவதாய் ஞாதிரு ஞான ஞேயங் கடந்த சிவபோத அனுபவம்; **அவ்வியல்பில்** - அச் சிவபோத நிலையேயாகி; இது யோகியர்களால் காலமிடங் கடந்த சிவானுபூதிக நிலையில் அனுபவிக்கப்படும் சிவானந்த நிலை; ``பின்னர்த் தேவிருக்கை யமர்ந் தருளிச் சிவயோகந்தலை நின்று, பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்ந் திருந்தார்'' (3588) என்னும் நிலையில் மூவாயிரத் தாண்டு சிவபோதியி னிழலில் அமர்ந்திருக்கும் நிலையிஃதாகும். இதனை **ஆனந்தக் கூத்**தென்றும், முன்னையது ஐந்தொழிற் கூத்தென்றும் அற்புதக்கூத்து - சிவானந்தக் கூத்து முதலிய பகுதிகளுள்ளும், பிறுண்டும் கண்டு கொள்க. நின் றயங்கி யாடலே நினைப்பதென் னியமமே(தேவா) என்ற கருத்தும் காண்க. இவற்றினியல்புகளையும் அனுபவ நிலைகளையும் திருமந்திரத்தினுள் 9-ம்

3571. தடநிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
"அடல்விடையின் மேல்வருவா ரமுதுசெய வஞ்சாதே
விடமளித்த" தெனக்கருதி மேதினிக்கு வளநிறைத்தே
கடல்வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்தார். 8

தந்திரத்தினுள்ளும் மெய்கண்ட ஞான நூல்களுள்ளும் கண்டுகொள்க.

ஆராமை - ஆராமையினாலே; ஆராமையாவது மனநிறைவு பெறாமை.

காஞ்சிபுர வழிபாட்டினை இரண்டு பாட்டுக்களாலும், பெரும்பற்றப் புலியூரினை இரண்டு பாட்டுக்களாலும் உரைத்தருளினர்; இதுபற்றி முன் திருமலைச் சிறப்பில் உரைத்தவை பார்க்க.

எடுத்தாடிய—சிந்தை தெளிவர—அமைந்திருந்தார்—என்பனவும் பாடங்கள். 7

3571. (இ-ள்) தடநிலை...போய்- பெரிய நிலைகளையுடைய மாளிகைகள் நிறைந்த பெரும்பற்றப்புலியூரில் தங்கியிருந்து வணங்கி மேற்சென்று; அடல்...எனக்கருதி - வலிமையுடைய இடபத்தின் மேல்வரும் இறைவர் அமுது செய்யும்படி சிறிதும் அஞ்சாமல் விடத்தினைக் கொடுத்தது என்று கருதி; மேதினிக்கு...நிறையாத - உலகுக்கு எல்லா வளங்களையும் நிறையக் கொடுத்துக், கடலின் வயிற்றினை நிறைக்காத; காவிரியின் கரையணைந்தார் - காவிரியாற்றின் கரையினை அணைந்தனர்.

(வி-ரை) தடநிலை மாளிகை - இவை இறைவரது திருமாளிகையும் அதனைச் சூழ்ந்த அம்பலம்சூழ் திருவீதியில் தில்லைவாழந்தணர்களின் மாளிகைகளும்.

அடல் விடையின்... எனக்கருதிக் கடல் வயிறு நிறையாத - ஏனை ஆறுகள் போலக் காவிரியாறு கடலிற்போய்ப் பாய்வதில்லை; அதன்நீர் முதலிய வளமெல்லாம் தொடக்கத்திலிருந்து நிலங்களை வளம்படுத்தற்கே பயன்படுகின்றன; எஞ்சிய நீர் மிகக் குறைவாதலின் காவிரிப்பூம்பட்டினத்தருகில் காவிரி சங்கமுகத் துறையிலே கடலினுள் சென்று பாய்வதற்குப் போதியதன்றாம். அதற்குக் காவிரி கருதியதாக ஒரு காரணங் கற்பித்து இவ்வாறு கூறினர். தற்குறிப் பேற்ற அணி. சிவாபராதம் செய்தாரோடு இணக்கம் கூடாது என்று கூறும் விதியினை வலியுறுத்தல் கருத்து. "காணா கண்வாய் பேசாதப் பேய்களோடே" (திருவிசைப்பா); "அவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே" (திருவா) என்றற் றொடக்கத்த திருவாக்குக்களின் கருத்துக் காண்க; இக்கருத்தையே எடுத்தாண்டு ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தினுள் (வாதவூரடிகளுக்கு உபதேசித்த படலத்தில்) வையையாற்றுக்கு மற்றொரு வகையால் ஆக்கித் "தொடுத்த வறுமையும் பயனும்" என்ற பாட்டினுள் பாராட்டிப் போற்றி வைத்திருத்தல் காண்க.

இனி, இயற்பகை நாயனார் புராணத்தினுள் "வயல் வளந்தர வியல்பினி லளித்துப், பொன்னி நன்னதி மிக்க நீர்பாய்ந்து புணரி தன்னையும் புனிதமாக் குவதோர், நன்னெடும்பெருந் தீர்த்தம்" *(404)* என்றது இக்கருத்துடனே மாறு படுமோ? எனின், படாது; இது முன்னரே ஆண்டு விளக்கப்பட்டது காண்க. மிக்க நீர் என்றது வெள்ள காலத்திற் பெருகி மிகுந்த நீர் என்ற குறிப்புடைமையாலும், ஈண்டு "வயிறு நிறையாத" என்றமையால்

3572. காவிரிநீர்ப் பெருந்தீர்த்தங் கலந்தாடிக் கடந்தேறி
ஆவினருங் கன்றுறையு மாவடுதண் டுறையணைந்து
சேவில்வரும் பசுபதியார் செழுங்கோயில் வலம்வந்து
மேவுபெருங் காதலினற் பணிந்தங்கு விருப்புறுவார், 9

நிறைவுபட வழங்காது சுருங்கிய அளவில் மட்டும் தருவது (starvation diet) என்ற குறிப்புடைமையானும் அமையுமென்க.

இனி, ஈண்டு இத்தன்மையாற் காவிரியைச் சிறப்பித்தது, விதிவிலக்குக்களை உலகுக்குணர்த்தி வழிப்படுத்த வரும் சிவாகமமாகிய திருமந்திரம் வந்து வாய்ப்பதற்குப் பொருந்த உரைக்கும் தன்மை காட்டும் குறிப்புமாகும்.

என மலைத்து—கடல் வயிற்று—என்பனவும் பாடங்கள். 8

3572. **(இ-ள்)** காவிரி...கடந்தேறி - காவிரி நீராகிய பெருமையுடைய தீர்த்தத்தில் கலந்து நீராடி அதனைக் கடந்து அதன் தென்கரையில் ஏறிச் சென்று; ஆவின்...அணைந்து - பசுவின் கன்றாக உமை அம்மையார் அணைந்து தவஞ் செய்யும் திருவாவடுதுறையினை அணைந்து; சேவில்... வலம்வந்து - இடபத்தில் எழுந்தருளும் பசுபதியாராகிய இறைவனுருடைய செழுங் கோயிலினை வலம்வந்து வழிபட்டு; மேவு... விருப்புறுவார் - பொருந்திய பெருங் காதலினலே வணங்கி அங்கு விருப்ப முடையவராகி,

(வி-ரை) காவிரி நீர்ப் பெருந் தீர்த்தம் - பெருந் தீர்த்தமாகிய காவிரி நீர் என்க; **தீர்த்தம் -** தூய்மை செய்யும் தன்மையுடையது; நீர் என்ற அளவில் மட்டும் அதையும் ஏனைய ஆற்று நீர்கள் போல் அல்லாது, தீர்த்தமாம் (தூய்மை செய்வது) தன்மையும் உடையது காவிரியின் நீர் என்பதாம்; **நீர்த் தீர்த்தம் கலந்தாடி** என்றது **நீர் என்ற தன்மையால் உடலும், தீர்த்தம் என்ற தன்மையால் உயிரும் தூய்மை பெற்றன என்பார்** இரண்டும் சேர்த்துக் கூறிய தோடு **கலந்து** என்ற குறிப்பும் கூறினர்; **கலந்து -** "கங்கை யாடிலென்காவிரி யாடிலென்...எங்கு மீச னெனுதவர்க் கில்லையே" (தேவா-தனிக்குறுந்) என்றபடி இறைவரது தன்மை விரவும் நினைவுடன் என்ற பொருள் தருவது. முன்னர்க் "கங்கைநீ டுறையாடி" (3567) என்ற ஆசிரியர் இங்குக் "காவிரிநீர்ப் பெருந்தீர்த்தங் கலந்தாடி" என்றதும் கருதுக.

கடந்து ஏறி - காவிரியைக் கடந்து தென்கரையில் ஏறி; யோகியார் காவிரிக்கு வடக்கே திருத்தில்லையினின்றும் தெற்கு நோக்கி வருகின்றாராதலின் காவிரியைத் கடந்து ஏற வேண்டுவதாயிற்று.

ஆவின் அருங்கன்று உறையும் ஆவடு தண்துறை - உமையம்மையார் ஒரு காரணத்தால் பசுவின் வடிவுடன் போந்து இங்குத் தவஞ்செய்து அப்பசு வடிவம் நீங்கப்பெற்று வழிபட்டுறைகின்றார் என்பது தலவரலாறுகளுள் ஒன்று; **ஆவின் அருங்கன்று -** பசுவின் கன்று வடிவு பெற்ற அம்மையார்; இது காரணமாக இறைவர் **பசுபதியார்** எனப் பெற்றார் என்ற வரலாறும், மேல் "சேவில் வரும் **பசுபதியார்** செழுங்கோயில்" என்பதும் காண்க; **ஆவின் அருங்கன்று -** பின்னே போந்த

3573. **அந்நிலைமைத் தானத்தை யகலாத தொருகருத்து**
முன்னியெழுங் குறிப்பினுன் மூளுமா தரவெய்தப்
பின்னுமகன் றேகுவார்பேணவருங் கோக்குலங்கள்
பொன்னிநதிக் கரைப்புறவிற் புலம்புவன வெதிர்கண்டார். 10

வடிவமாதலானும், மலம் பற்றிய உயிர்களாகிய ஏனைப் பசுக்கள் போலாது சிவத்தினின்றும்போந்த சிவசத்தியாதலானும் **ஆ** என்னுது **ஆவின்** கன்று என்றுர். **அருங்கன்று** என அருமைபடக் கூறியது மிக்கருத்து. **ஆ அடுதுறை** - பசுத்துவம் நீங்கப் பெற்ற இடம், **ஆ** - பசு; **கோகழி** - என்பதும் இப்பொருட்டு, **கோ** - பசு.

சேவில் வரும் பசுபதியார் - **சே** - இடபம்; **பசுபதி** - உயிர்களுக்கெல்லாம் பதியாவார். இரட்டுற மொழிதலால் இங்குப் பசுவாக வந்து வழிபட்ட அம்மையாருக்குப் பதியாவார் என்றுரைக்கவும் நின்றது.

மேவு பெருங் காதலினுல்...விருப்புறுவார் - **மேவுதல்** பின்னரும் வந்து பொருந்தித் தங்கும் என்ற சரித நிகழ்ச்சியின் முற்குறிப்பு; **பெருங்காதல்** - முதலில் இறைவரைப் பணிந்தபோது உள்ள மனநிலை; **விருப்புறுவார்** - பின்னர் வந்து உறையும் மனநிலையின் முற்குறிப்பு. **உறுவார்** - என்ற எதிர்கால வினையெச்சக் குறிப்புமிது. இதனை மேற்பாட்டில் ஆசிரியர் விரித்தருளுதல் காண்க.

காவிரியின்நீர்த் தீர்த்தம்-காவிரிநீர்த் தீர்த்தங்கள்-என்பனவும் பாடங்கள். 9

3573. **(இ-ள்) அந்நிலைமை... ஆதரவெய்த** - அந்த நிலைமையிலுள்ள அப்பதியினை விட்டு நீங்காததோர் கருத்துத் திருவுள்ளத்தில் நினைய எழுகின்ற குறிப்பினுலே பெருகிய அன்பு பொருந்தக் கண்டும்; பின்னும் அகன்று ஏகுவார் - அதன் பின்னும் அதனைவிட்டு நீங்கிச் செல்வாராகிய யோகியார்; பேணவரும்... எதிர்கண்டார் - மேய்ப்பதற்காக அங்கு ஓட்டப்பட்டு வரும் பசுக் கூட்டங்கள் காவிரி நதியின் கரையிற் புறவினிடத்தே புலம்புவனவற்றை எதிரில் கண்டனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அந்நிலை...ஆதரவு எய்த - இது யோகியர் திருக்கோயிலில் வழிபடும் போது திருவருளினுல் அவர் மனத்துள் எழுந்த கருத்தும், அதனுல் அங்குத் தங்குதற்கு உற்ற பெரிய ஆசையும் குறித்தது. **அகலாதது ஒரு கருத்து** - வழியில் ஏனைய பதிகளைக் கண்டு நீங்கியது போல அந்தத் தலத்தையும் விட்டு நீங்காத நிலைமையில் அங்கு உறையும்படி எழுந்த எண்ணம். இக்கருத்து, எழுந்த காரணம் அவரையறியாமலே உள் வந்து நினைவில் எழுந்தது. இதன் காரணத்தைப் பின்னரே ஆராய்ந்து தெளிகின்றுர் (3585); **அந்நிலைமைத் தானத்தை** - அந்த நிலைமையில் கருத்து எழுந்த அவ்விடத்தை; **அந்நிலையாமை** - கன்று உறையும் அந்தநிலை என்றலுமாம். **அகலாத** -முன் தானங்களினின்றும் நீங்கி வந்து தென்றிசையில் சென்றதுபோல் நீங்காத; **மூளும்** - மேன்மேல் எழுகின்ற; **ஆதரவு** - காதல்; ஆசை; இது பிற்சரித விளைவுக் குறிப்பினுல் நிகழ்ந்தது.

3574. அந்தணர்தஞ் சாத்தனூ **ராமேய்ப்பார் குடித்தோன்றி**
முந்தைமுறை நிரைமேய்ப்பான் மூலனெனும் பெயருடையான்
வந்துதனி மேய்க்கின்ருன் வினைமாளா வாழ்நாளை
வெந்தொழில்வல் விடமுண்ண வீடிநிலத் திடைவீழ்ந் தான். 11

பின்னும் - அத் தானத்தை அகலாத ஆதரவு மூண்ட பின்னரும்; அதனுற் றடைபடாது என்க.

அகன்று ஏகுவார் - கண்டார் - என்க; முன்போல மேலே தெற்கு நோக்கிச் செல்வாராகிய யோகியார்.

பேண வரும் - மேய்ப்பதற்காகச் சேர்த்துக் கொண்டு வரப்பட்டு அந்த நதிக் கரைப் புறவில் கூடிய; **கரைப் புறவு** - காவிரித் தென்கரைப் புறவிடங்களில். இவ்விடம் **புறவு** எனப்பட்டது, மருதப் புறவாகிய நதிக்கரைச் சார்வில் பசுக்கள் மேய்ந்து தங்கக் கூடிய புல் செடி முதலியவை நிறைந்த குறுங்காடுகள்; முல்லைச் சார்புடையவை; மேய்ச்சற் புறம்போக்கு என்பது நவீன வழக்கு.

கோக்குலங்கள் புலம்புவன - புலம்புவனவாகிய நிலையில் இருந்த கோக்குலங்களை; **புலம்புதல்** - கதறுதல்; அம்மா என அலறி அழைத்தல். கண்ணீர் சோர்தல், முகங் கவிழ்தல் முதலிய மெய்ப்பாடுகளைக் கொள்ளுதல். "வெம்பிடு மலறுஞ் சோரு மெய்ந்நடுக் குற்று வீழும்" (*108*);"ஆத் தரியா தாகி முன்னெருப் புயிர்த்து விம்மி முகத்தினிற் கண்ணீர் வார்" (*112*) என்ற நிலைகள் காண்க.

குலங்கள் - கூட்டம் குறித்தது; **எதிர்** - தம்முன்; தம் எதிரே. *10*

3574. **(இ-ள்)** அந்தணர்தம்...பெயருடையான் - அந்தணர் வாழ்கின்ற சாத்தனூரில் பசுக்களை மேய்க்கின்றவர்களாகிய இடையர்கள் குடியிலே பிறந்து தனது முன்னோர்களது மரபின் தொழில்முறையிலே பசுக்களை மேய்த்து வருவானுகிய மூலன் என்ற பெயருடையவன்; வந்துதனி மேய்க்கின்ருன்... வீழ்ந்தான் - (ஊரினின்றும் நதிக்கரைப் புறவில் மேய்ச்சலிடை) தனி வந்து பசு மேய்க்கின்ருனுகை, அப்போது போகத்தின் எல்லை வினை ஒழிந்ததாதலின் அவனுடைய ஆயுளைக் கொடிய தொழிலுடைய பாம்பின் விடம் உண்டு ஒழித்துவிடவே உயிர்துறந்து நிலத்தில் வீழ்ந்தான்.

(வி-ரை) அந்தணர்தம்... சாத்தனூர் - இப்பதி திருவாவடுதுறையினை ஒட்டியதாக அதன் தென்புறம் உள்ளது என்றும்,திருஆவடுதுறையினை ஒட்டி ஒன்ருகச் சாந்தையூர் அணி ஆவடுதுறை என்று சேர்த்து வழங்குவதென்றும், சிறந்த அந்தணர்கள் நிறைந்தவூர் என்றும், அவ்வந்தணர்கள் திருவாவடுதுறையில் இறைவர்க்குப் பணி செய்பவர் என்றும் சேந்தனர் திருவிசைப்பா (திருவாவடுதுறை) வினுல் அறியலாம். "பொய்யாத வேதியர் **சாந்தை**மெய்ப் புகழாளர் ஆயிரம் பூசுரர் மெய்யே திருப்பணி செய்சீர்" (*1*); "சோதிமதிலணி சாந்தை மெய்ச்சுருதி விதிவழியோர் தொழும், ஆதியமரர் புராணன்" (*2*); "ஒழிவொன்றிலாப்பொன்னித் தீர்த்தமும் முனிகோடி கோடியா மூர்த்தியும், அழிவொன் றிலாச்செல்வச் **சாந்தையூரணியா வடுதுறை** யாடினுள்" (*8*) (திருவிசைப்பா) என்பன காண்க.

சாத்தனூர் என்பது **சாந்தை** என மருவி வழங்குவது.

ஆ மேய்ப்பார் குடி - இடையர் மரபு; கோபாலர் என்க.

முந்தை முறை - வழிவழி தன் முன்னோர்கள் செய்துவந்த பழைய முறைமையின்படி.

மூலன் எனும் பெயருடையோன் - மூலன் - என்பது அவன் பெயர்; இப்பெயர் அவன் உடலைப்பற்றி நின்று பின்னர் அவ்வுடலிற் புகுந்து எழுந்த யோகியாருக்கும் **திருமூலர்** என வழங்கலாயிற்று; "திருமூலரா யெழலும்" (3577).

தனிவந்து மேய்க்கின்றான் - நதிக்கரைப் புறவில் தனிவந்து என்க. மேய்க்கின்றானுடைய என்று ஆறனுருபு விரிக்க; **தனி** - துணையாகிய சிறுவர் ஒருவருமின்றி. "அங்கவளு மக்களுட னருஞ்சுற்ற மில்லாதாள்" (3581) என்று பின்னர் அவன் மனைவியைப்பற்றிக் கூறுதல் காண்க.

வினை மாள-உடல் வாழ்க்கை நிலைபெறும் எல்லையாக உள்ளது வினைப்போக மாதலின் அது கழிய என்க. "வினைப்போக மேயொரு தேகங்கண்டாய்; வினை தானொழிந்தாற், றினைப்போ தளவு நில்லாது" (பட்டினத்து அடிகள்) **மாள** - ஒழிய; எல்லை கழிய.

வாழ்நாளை - ஆயுட்காலத்தை; **வாழ்நாளை விடமுண்ண - உண்ணுதல்** - இங்கு விழுங்கித் தீர்த்தல் என்ற பொருளில் வந்தது.

விடம் - உண்ண - உண்ண - உண்டமையால் என்று காரணப்பொருளில் வந்தது. தன் மனையினின்றும் அன்று பகலே பசுக்களைக் கொணர்ந்து மேய்க்கின்ற அவன் சடுதியில் இறந்துபடுதற்கு வெளிப்படையான காரணம் விடந்தீண்டுதல் எனப்பட்டது;முன் பதிப்புக்களில் எல்லாம் **கூற்றுண்ண** என்றே பாடங் கொள்ளப்பட்டது; **விடமுண்ண** என்ற இப்பாடம் இங்குப் பரிசோதித்த பழம்பிரதியொன்றிற் கண்டது; சடுதியில் இறந்துபடவந்த காரணம் கூறுதலால் இந்தப் பாடம் மேற்கொள்ளப்பட்டது; சடுதியில் சாவு வரக்கூடிய இந்நாளிற் காணும் நெஞ்சடைப்பு முதலிய நோய்கள் முன்னாளில் தொழிலாளிகளிடையே பயின்று காணப்படாமையும் அறியப்படும்; **விடமுண்ண** என்றது ஊழ்வந் துறுத்தற்குற்ற புறத்தோற்றமாகிய காரணத்தையும், **வினைமாள** என்றது அதனை விளைக்கும் உட்காரணத்தையும் குறித்தன;"தனிப்பெருந் தருமந் தானோர் தயாவின்றித் தானை மன்னன், பனிப்பில்சிந்தையினி னுண்மைப் பான்மைசோ தித்தா லென்ன" (107); "வேந்தன்வழித்திரு மைந்த னுவி கொளவரு மறலி யூர்திக் கழுத்தணி மணியி னார்ப்போ வென்ன" (113) என்றும், "அன்ப ரன்புறு மார்வத்தி னளித்தபாங் கல்லாற்...புகலி காவலர்க்கிது பொருந்தா தென்ப துட் கொண்ட பான்மையோ ரெயிற்றிளம் பணியாய், முன் பணைந்தது போலவோர் முள்ளெயிற் றரவம்" (2955) என்றும் வரும் கருத்துக்கள் காண்க.

வீடி - மூர்ச்சை முதலியனவன்றி உயிர்போய் இறந்து என்பது குறிப்பு. 11

3575. **(இ-ள்)** மற்றவன்தன்...மோப்பனவாக - மற்று அவ்விடையனது உடம்பை அப் பசுக்கள் வந்து அணுகிச் சுற்றி வருதலும், கதறுதலும், சுழலுதலும், மோத்தலும் ஆக நிகழ்ந்து வருந்த; நற்றவ யோகியர் காண - நல்ல தவமுடைய இந்த யோகியார் அதனைக் கண்டு; நம்பர் அருளாலே - இறைவரது திருவருளினாலே, ஆ... உணர்கின்றார்-

3575. மற்றவன்றன் னுடம்பினையக் கோக்குலங்கள் வந்தணைந்து
சுற்றிமிகக் கதறுவன சுழல்வனமோப் பனவாக,
நற்றவயோ கியர்காணு, **நம்பரரு ளாலே "யா**
வுற்றதுய ரிவைநீங்க வொழிப்ப"னென வுணர்கின்ருர்; 12

"இப் பசுக்கள் பொருந்திய துன்பங்களாகிய இவற்றை நீங்கும்படி ஒழிப்பேன்" என்று தமது உணர்வினிற் கொள்கின்ருராய்;

(வி-ரை) மற்றவன்றன்....மோப்பனவாக - இவை பசுக்கள் தம்மை மேய்ப் போனிடம் கொண்ட அன்பின் பெருக்கினைக் குறிப்பன; வஞ்சனையற்ற தூய அன்பிற்கும், மனங்கரைந்துருகும் நிலைக்கும் எடுத்துக்காட்டாகப் பசுக்களையே ஆன்ருேர் கொண்டனர். "கற்ருவின் மனம் போல" என்பது முதலியவை காண்க, ஈண்டு இடையன் மிக்க அன்போடு பசுக்களைப் பேணிவந்தான் என்பது அவற்றின் இச் செயலாலே கருதப்படும்;"பசுக்களை மேய்க்கும் ஆயன் கோல் போடிற், பசுக்க டலைவனைப் பற்றி விடாவே" என்று திருமூலர் மற்றுமோர் கருத்துப்பற்றிக் கூறுதல் காண்க; "பேணவரும்" (3573) என முன் கூறியது காண்க. பசுக்கள் தம்மை அன்போடு பேணிய சண்டீசநாயனுர்பால் வைத்த அன்பின் பெருக்கினையும், அதனுல் நிகழ்ந்த செயல்களையும் பற்றி அவர் புராணத்துட் காண்க. (1235).

சுற்றி...மோப்பன - இவை துயரக் குறிகளான மெய்ப்பாடுகளும் செயல்களுமாம்.

மோப்பனவாக... காணு - மோப்பனவுமா யிருக்கும் அந்நிலையினைக் கண்டு. காணு - கண்டு.

நம்பர் அருளாலே உணர்கின்ருர் - ஆக்களின் துயர் நீங்க ஒழிப்பேன் என்ற கருத்து மனத்துள் வந்து எழ அதுபற்றி உணர்வு மேற்கொண்டமை நம்பர்அருளாலே வந்தது என்பதாம். என்னை? கயிலையினின்றும் குறுமுனிபாற் பொதிகைக்குச் செல்ல வழிக்கொண்டு செல்லும் யோகியர்க்கு, வழியில் உலகினரிடைக் காணும் இன்ப துன்பங்களில் மனம் செலுத்திக் கொண்டு தாமும் அவற்றுட்பட்டு உழலுதல் தகுதியன்று; உலகத்தில் உயிர்களது கன்ம பேதங்களுக்கு ஏற்ப இன்ப துன்பங்களை இறைவர் ஊட்டுவிக்கின்ருர்; அவற்றை நாம் தவிர்ப்பேம் என முயலுதல் பெரியோர் செயலன்று; "செத்தாரை யெல்லாம் பிழைக்க வைப்பேன்; நோயாளிகளை எல்லாம் நோய் தீர்ப்பேன்" என்றெழுதல் அறியார் செயலேயாம். ஆனுல் எந்தம் பேரருட் பரமாசாரியர்கள் இவ்வாறு செய்த சில அற்புதங்கள் பற்றி முன்னர் அங்கங்கும் விளக்கப்பட்டன; கடைப்பிடிக்க. ஆளுடைய பிள்ளையார் எலும்பு பெண்ணுக்கியதும், முயலகனேய் தீர்த்ததும், அரசுகள் அப்பூதியார் மகனரவுவிடந் தீர்த்ததும், நம்பிகள் கூனும் குருடும் தீர்த்து ஏவல்கொண்டதும், முதலை வாய்ப்பிள்ளை அழைப்பிப்பதும் முதலிய வற்றின் உட்கிடை வேறு; அவை இறைவர் செயல்கள்;"நானழிய வல்லதனுல்...தான்செய்யும் தன்மைகளை, ஆக்கியிடு மன்பர்க் கரன்" என்பது ஞானநூல்; இறை செயல்களேயாகிய அவற்றின் காரணங்கள் எம்போல்வா ராராயத் தக்கனவல்ல என்பது திருப்பாசுரப் பிரமாணத்தாற்போதரும். ஈண்டு யோகியர் போந்த செயலும் கருத்தும் வேருகியும், இவ்வாறு தாம் கருதாததோ ருணர் வினை மனங்கொளச் செய்தது திருவருள் என்றபடி; திருவருட் குறிப்பு உலகில் பசுக்களாகிய

3576. **"இவனுயிர்பெற் றெழிலன்றி யாக்களிடர் நீங்கா"வென்**
றவனுடலிற் றம்முயிரை யடைவிக்க வருள்புரியுந்
தவமுனிவர் தம்முடலுக் கரண்செய்து தாமுயன்ற
பவனவழி யவனுடலிட் றம்முயிரைப் பாய்த்தினார். 13

---

*உயிர்கள் பிறவிவிடந்தீர்ந் துய்யும்வழி காட்டுதலாம் என்பது "ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய" (3589) எனப் பின்னர்க் காட்டுதலாலுணர்க. ஈண்டு யோகியர் பசுக்களின்மேல் வைத்துத் துயர்நீங்க ஒழிப்பேன் என்றெழுந்த கருத்து, அப்பசுக்களை முன்னிலையாகக் கொண்டு உலகுயிர்களாகிய, பசுக்கள் என்று ஞானநூல்கள் பேசும், உயிர்களைத் துன்பநீங்கி இன்பமடையச் செய்வதற்கு யோகியர்மூலம் இறைவர் கொண்ட திருவருட் கிடையாகிய திருவுள்ளமேயாம் என்பார் **நம்பரருளாலே - உணர்கின்றார்** என்றார்; இங்குப் "**பசுக்கள் தம்மைப்பேணும் தலைவனை யிழந்து துயருற்று அவனைப் பெற வேண்டி நின்ற நிலைபோல, இவ்வுலகில் பக்குவமுடைய உயிர்கள் "கதிப்பாற் செல்ல ஏது நெறி என்றும் தலைவனை நனிகாணேன்" என்றும் அவனைப் பெற்று அடையும் வழிதேடித் துன்பமுறும் உயிர்களுக்கு ஞானோபதேசம் செய்யும் திருமந்திரம் யோகியர் மூலம் பெறவைத்தல் இறைவரது திருவுள்ளக் கருத்தாதல்** காண்க. (3586).*

நம்பரருளாலே ஒழிப்பன் - என்ற கூட்டியுரைப்பது மொன்று.

உணர்கின்றார் - என்று - பாய்த்தினர் என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

நற்றவம் - வரைவின்றி எல்லாவுயிர்களின் மாட்டும் செல்லும் பேரருளுடைமை குறிக்க **நற்றவ**மென்றார்.

மொய்ப்பன—அது நீங்க—என்பனவும் பாடங்கள். **12**

3576. **(இ-ள்)** இவன்...என்று - "இந்த இடையன் உயிர்பெற் றெழுந் தாலல்லது இப்பசுக்கள் துன்ப நீங்கமாட்டா" என்று உணர்ந்து; அவனுடலில்...தவமுனிவர் - அவனது உடலில் தமது உயிரைச் சேர்விக்க அருள்புரிகின்ற அத்தவ முனிவர்; தம் உடம்புக்கு அரண்செய்து - தம் திருவுடம்பினைக் காவலாகிய ஓர் இடத்தில் சேமித்து; தாம்...பாய்த்தினர் - தாம் பயின்று கைவந்த பிராணவாயுவை அடக்கும் உபாயத்தின் மூலமாக அவனது உடலினுள் தம் உயிரினைப் புகுவித்தார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) "இவன்...நீங்கா" என்று - பசுக்களின் துயர் நீங்குதல் வேண்டுமாயின் அதற்கு இஃதே உபாயம் என்று யோகியார் துணிந்த மனக்கருத்து. இடையனை உயிர்ப்பிப்பது அவனை இன்னும் சின்னாள் வாழவைக்க வேண்டும் என்ற கருத்தாலன்று; பசுக்களின் துன்பநீங்குதற்கு அஃதே வழி என்றதாம்.

எழில் அன்றி - இடர் நீங்கா - எதிர்மறையாற் கூறியது வேறு உபாயமில்லை என்ற துணிபை வற்புறுத்தி உறுதிகூறுதற்கு.

அவனுடலில் தம்முயிரை அடைவிக்க - இடையன் உயிர்பெற் றெழுவதற்கு அவனுயிரையே மீள வரச் செய்வது ஓர் உபாயம். ஆனுல் அவன்பொருட்டு யோகியார் அவனை உயிர்பெற் றெழச் செய்தல் வேண்டினரலர்; ஆக்கள் இடர் நீங்கச் செய்தலே கருதினர்;அன்றியும் வினைமாள ஆயுள் தீர்ந்த அவனுயிரையே மீட்டும் வரச் செய்தலும் கூடாத காரியம்; வேண்டாத காரியமுமாம். ஆதலின் பசுக்களுக்காகச் சிலபோது மட்டும் அவனை உயிர்பெற்றெழச் செய்து, பசுக்களைத் துயர் நீக்கி மனைகளிற் போக்குதலே கருதிய யோகிகள் அதன் பொருட்டுத் தம் உயிரை அவன் உடலிற் அடைவிக்கவே எண்ணினர். பின் நிகழ்ச்சியிலும் அதனையே செய்தனர். இவ்வாற்ருல் இறைவரருளும் இதனையே அவர் கருத்தில் எழச் செய்தது.

அருள் புரியும் தவ முனிவர் - யோகியார்; **அருள் புரியும்** - பசுக்களின் துயருக் கிரங்கியே எண்ணிச் செயல் செய்தாராதலின் **அருள்** புரியும் என்ருர்; **தவம்** - எண் சித்தி கைவந்த யோகமும் அருளுமுடைமை. "அளிகூர்ந்த அருளின ராய்" (3578).

தம் உடம்புக்கு அரண் செய்து - இடையனது உடலிற் தம் உயிரைப் புகுத்தி அவ்வுடலோடு ஆக்களைக் கொண்டு அந்தந்த மனைகளிற் செலுத்தி மீண்டும் வந்து தம் உடம்பிற்கு முன்போல மேற்செல்ல எண்ணினராதலின் அதுவரை தமது உடம்பை அரண்தருகாப்பில் வைத்துக் காவல் செய்தார். அரணுவது நரி, கழுகு, நாய் முதலிய பிராணிகளாலும் மக்களாலும் ஊறு செய்யப்படாது காக்கும் காவல்.

தாம் முயன்ற பவனவழி - தாம் முன் பல காலம் முயன்று கைவரப் பெற்ற பிராணுயாம நிலையின் வழி; **பிராகாமியம்** என்ற சித்தியினுலே வரும் இந்நிகழ்ச்சி குறிக்கத் தொடக்கத்தில் "அணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்" (3565) என்றதும் காண்க. **பவனம்** - வாயு; வாயுமூலமாக உயிரைச் செலுத்துதல்; "**காலும்** பிரம நாடி வழிக் கருத்துச் செலுத்த" (1716) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பவனவழி - தம் - உயிரை - அவனுடலிற் - பாய்த்தினர் - இஃது ஓர் உடம்பினுள் உயிர் புகும்தன்மை;"மால்கொடுத் தாவி வைத்தார்" (தேவா);இது பரகாயப் பிரவேசம் எனப்படும்; கூடுவிட்டுக் கூடுபாய்தல் என்பது;"ஆன்மாக்கள் மாறிப் பிறந்துவரும்" என்ற சிவஞான போதம் இரண்டாஞ் சூத்திரம் மூன்ரும் அதிகரணத்தினுள் இதனையே உதாரணமாக எடுத்துக் காட்டுல் காண்க. உலகில் ஆன்மாக்கள் பிறந்து வருதல் எல்லாம் இத் தன்மையே என்பது ஞானநூற் றுணிபு. தூலஉடல் விட்ட ஆன்மா "முன்னுடம்பு இறக்குங்கால் அடுத்த வினை காட்டும் கதிநிமித்தம் பற்றி உயிர் அவாவுமாறு மனஞ் செலுத்துதலான் அக்கதிக்கட் சேறற் கேதுவாய் எஞ்சிநின்ற புண்ணிய பாவ சேடத்தாற் சூக்குமதேக மாத்திரையாய்ச் சென்று அம்மனந் தள்ளிய கதிக்கு அமைந்த அக் கருவின்கட் படும்" என்ற உரை காண்க. இதனைப் பஞ்சாக்கினி வித்தை என்று வேதங்களுட் பேசப்படும்.

> "அரவுதன் ஞேலுரிவு மக்கனவும் **வேறு**
> **பரகாயம் போய்வருமப்** பண்பும்—பரவிற்

3577. பாய்த்தியபின் **திருமூல ராயெழலும்** பசுக்களெல்லாம்
நாத்தழும்ப நக்கிமோந் தணைந்துகனைப் பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளிப்பின்
நீத்ததுய ரினவாகி நிரந்துபோய் மேய்ந்தனவால் 14

குடாகாய வாகாயக் கூத்தாட்டா மென்ப
தடாதுள்ளம் போமா றது" (போதம் - 2-3-வெண்பா.)

ஆண்டுரைத்தவையும் காண்க.

இங்கு இடையனது வினைமாள ஆயுள் கழிந்து இறந்த உயிர் தனது கன்மநிலைக் கேற்றவாறு சென்று விட்டது;அவன் உடம்பு ஐம்பூதச் சேர்க்கை நீங்கிப் பிரிவுபடக் கிடந்தது. அதனை யாதொரு கன்மத் தொடர்பும் சம்பந்தமுமின்றிச் சிறிது நேரமட்டில் பசுக்களின் துயர் நீங்குதற்குக் கருவியாக்க யோகியார் எண்ணினார். வேறு சென்மத்திற்கும் இதற்கும் இஃதே இங்குள்ள வேறுபாடு.

உடலில் உயிரைப் பாய்த்தினார் - மேலிருந்து கீழ்ப்பாயும் இயல்புடைய நீரை ஒரு குடத்தினின்றும் வேறுமோர் குடத்திற்குப் பாய்ச்சுதல் போலக் கீழே நிலத்திடைக் கிடந்த இடைய னுடலில் மேலிருந்த தம் உயிரைச் செலுத்தினார். இடத்தால் மேல் கீழ் என்றது மட்டுமன்றித் தன்மையாலும் அவ்வாறே கொள்ளத்தக்கது. 13

3577. **(இ-ள்)** பாய்த்தியபின்...எழலும் - முன்கூறிய அவ்வாறு பாய்த்திய பின்னர்த் திருமூலராகி மேல் எழும்புதலும்; பசுக்களெலாம்... பின் - பசுக்கள் எல்லாம் அவனைக் கண்ட மகிழ்ச்சியுடனே நாத்தழும்பேற அவனுடலினை நக்கியும் மோந்தும் பக்கத்தில் அணைந்தும் கனைப்போடும் விரும்பியும் ஆக இவ்வாறு கொண்டு எழுந்த பெருமகிழ்ச்சியினால் வால்களை மேலே எடுத்துத் தூக்கித் துள்ளிப் பின்னர்; நீத்த... மேய்ந்தனவால் - துன்ப நீங்கியவையாய் வரிசைபெறச் சென்று மேய்ந்தன.

(வி-ரை) திருமூலரா யெழலும் - அவ்வுடம்பு வீடிக்கிடந்த முன்னை நிலையில் மூலன் என்றும், உயிர்பெற்றெழுந்த இந்நிலையில் திருமூலர்! என்றும், உடம்பு ஒன்றே உள் இருந்த உயிரின் வேறுபாடு நோக்கி உயர்வு தாழ்வுடைய இரு வேறு பெயர் பெற்றது. உயிரின் அளவே பெருமை என்னும் உண்மையினைத் தேற்றியவாறு. மனவசீகரக் கலைஞானம் கற்ற புலவன் மாணுக்கனது புலன்களைத் தன் வசமாக்கி, அவன் தன்னை மறக்கச் செய்து, வேறு கருத்தினைப் புகட்ட, அதன் வழியே நின்று தன்னை மறந்த நிலையில் அவன் சொற்செயல்கள் நிகழ்தல் இங்குக் காணத்தக்கது.(Mesmerism-Hypnotism)

பசுக்களெலாம்...மேய்ந்தனவால் - முன்னர்த் (3575) துயரத்தின் மெய்ப் பாடுகளைக் கூறினார்; இங்கு அது நீங்கிய மகிழ்ச்சியின் மெய்ப்பாடுகளையும் செயல்களையும் கூறுகின்றார்; நக்குதல்,மோத்தல், கனைப்பொடு நயத்தல்;வாலெடுத்துத் துள்ளுதல், நிரைந்து போய் மேய்தல் இவை களிப்பினாலாவன. சண்டீசர் நாயனார் புராணம் பார்க்க.

துயர் நீத்தனவாகி - என்க. விரைவுபற்றிப் பெயரெச்சவினை முன் வைக்கப் பட்டது. "வென்ற வைம்புலன்" (401) **நிரந்து போய்** - வரிசையாகச் சென்று,

3578. **ஆவினிரை மகிழ்வுறக்கண் டளிகூர்ந்த வருளினராய்**
மேவியவை மேய்விடத்துப் பின்சென்று மேய்ந்தவைதாங்
காவிரிமுன் றுறைத்தண்ணீர் கலந்துண்டு கரைஏறப்
பூவிரிதண் புறவினிழ லினிதாகப் புறங்காத்தார். 15

திருமூலராய் எழலும் - (வினைமாள) விடமுண்ணுதலால் வீடி நஞ்சூத்தன்மை; பெற்ற அவ்வுடம்பே பின்னும் யோகியார் இருத்தற்குத் தகுதிபெற்ற கருவியாக ஆகுமோ? எனின், ஆகும்; முன்னை வினைப்படி வந்த சாவுக்குக் காரணமாகிய நோய் அவ்வுயிருடன் ஒழிந்தது; அது, பின்னை அங்குப் புகுந்த வேறு உயிரினைத்தொடர்தற்கு இயைபில்லை என்க. அலகை கோட்பட்டார் செயலும் தன்மையும் எல்லாம் அலகையினுடையவேயாதல் காண்பதுபோலக் கொள்க. இவ்வுடலினின்றே யோகியார் பல்லாயிரம் ஆண்டு யோகிருந்து திருமந்திரம் அருள வேண்டுமென்பது இறைவரின் திருவுள்ளமாதலின், அவ்வருளே அவ்வுடம்பை அதற்கேற்றவாறு ஆக்கியதென்றலும் ஆம். இடையனே அன்று வீடியொழியாமலிருந்தாலும் இவ்வுடம்பு அவனுயிர்க்கு மேலும் சில ஆண்டுகளே கருவியாகும். ஆனல் யோகியார் உயிருக்குப் பல்லாண்டுகள் கருவியாய் அழியா திருந்தமையின் அஃது அவ்வுயிரின் தன்மையும் அருளின் தன்மையுமாதலும் கருதுக. *14*

3578. **(இ-ள்)** ஆவின் நிரை... அருளினராய் - பசுக்கூட்டங்கள் முன் கூறியபடி மகிழ்ச்சி பொருந்தக் கண்டு கருணைமிகுந்த அருள் கொண்டவராகி; மேவி... பின் சென்று - அவைகள் கூடி மேய்கின்ற இடங்களில் அவற்றின்பின்னே சென்று; அவைதாம்... கரை ஏற - அவைகள் தாம் காவிரியாற்றின் முன் துறையில் தண்ணீர் கலந்து உண்டு கரை ஏற; பூவிரி... புறங்காத்தார்- பூக்கள் விரிதற்கிட மாகிய குளிந்த புறவில் நிழல் உள்ள இடத்தில் இனிதாகத் தங்கவைத்துப் பாதுகாத்தனர்.

(வி-ரை) ஆவினிரை...அருளினராய் - பசுக்கள் துன்பநீங்கி யின்பமுறக் காண்பதே விரும்பி முன் கூறியபடி செயல் செய்தாராதலின் தாம் கருதியவாறே அவை மகிழக் கண்டபோது தாமும் மகிழ்ந்து அவற்றின்மேற் றண்ணளி செய்து கருணை பூத்தனர்.

மேய்விடத்துப் பின் சென்று - பசுக்கள் மேயும் இடத்தில் பின் செல்லுதல் அங்கங்கும் அவற்றுக்கு ஏதேனும் பயமும் கேடும் வாராது காத்துக் காவல் செய்தற் பொருட்டு.

காவிரி முன்றுறைத் தண்ணீர் - காவிரியின் முன்துறையில் ஓடும் தெளிந்த தண்ணீர்; **முன்றுறை** என்றார் உள்ளே நடுவுட் சென்றால் ஆழமாய் இருத்தலுடன் நீர் வேகமாய் ஓடுதலின் அமைதிபெற அருந்த லாகாமையால் பசுக்கள் தம் இயல்பாகவே கரையோரம் நின்று முன்றுறையிலே நீர் அருந்துவது இயல்பாம். இங்குக் **காவிரி** என்றது காவிரியினின்றும் பலவாகப் பிரிந்து செல்லும் கிளையாறுகள் ஒன்றுகிய வீரசோழனுறு; சாத்தனூருக்கு அருகில் வடக்கில் ஓடுவது.

தண்ணீர் கலந்துண்டு - பசுக்கள் புல் மேய்விடத்துப் பல பிரிவாகப் பிரிந்து மேய்வன, புல் அவ்வவை தமக்கு வேண்டுமளவு உணவு தேடிப் பெற்று உண்ணும்

3579. வெய்யசுடர்க் கதிரவனு மேல்பாலே மலையணையச்
சைவநெறி மெய்யுணர்ந்தோ **ரானினங்கள் தாமேமுன்**
பையநடப் பனகன்றை நினைந்துபடர் வனவாகி
வையநிகழ் **சாத்தனூர் வந்தெய்தப் பின்போனார்.** 16

பொருட்டு; ஆனால் நீர்த்துறையில் நீருண்ண அனைத்தும் சேர்ந்து சென்று நீர் உண்ணுவது இயல்பு; நல்ல நீர் ஒருசேர அனைத்துக்கும் ஓரிடத்திற் பெற உள்ளமை யால்;"மானினங்கள் கானிடைநின் றொருவழிச்சென் றேறுதுறை ஒளி நின்று" (791); **கலந்து-** கூடி என்றதாம். இவ்வாறு பசுக்கள் முதலியவை பிரிந்து மேய்வன - கூடி நீருண்பன - பின் நீழலமர்ந்து அசை விடுவன- மாலையில் கன்றுகளை நினைந்து மனையை நோக்கி மெல்ல நடப்பன என்ற இயல்புகள் எல்லாம் அவற்றின் வாழ்க்கைத் திறத்தினையும் அவசியங்களையும் உற்று நோக்கி இயற்கை தெரிந்த பெரும் புலவர்களே உள்ளவா றுரைக்கவல்லவர்; (புலா லுண்ணும் பிராணிகளின் வாழ்க்கை நிலைகள் வேறுதலும் கவனிக்க).

புறவின் நிழலின் இனிதாகப் புறங்காத்தார் - புல் உண்டும் நீர் அருந்தியும் பசியும் நீர் வேட்கையும் தீர்ந்த பின்னர், நிழல் உள்ள இடங்களில் பசுக்கள் அமைதி பெற இருந்து அசைவிட்டு இளைப்பாறும் இயற்கை குறித்தது. இவ்வியற்கைகள் எல்லாவற்றையும்பற்றி முன் சண்டீசர் - ஆனாயர் புராணங்களுள் உரைக்கப்பட்டன காண்க;நண்பகற் கால மாதலின் கதிரவன் வெப்பந் தாக்காதிருக்க நிழல் வேண்டப்படுவது. **புறங்காத்தல்-** பாதுகாத்தல்; ஒரு சொன்னீர்மைத்து.

மேய்த்தவர்தாம்—என்பதும் பாடம் 15

3579. **(இ-ள்)** வெய்ய...அணைய - வெப்பமிக்க சுடர்களையுடைய சூரியனும் மேற்கு மலையினைச் சேர; ஆனினங்கள்... வந்தெய்த - பசுக் கூட்டங்கள் ஒருவரும் செலுத்தாது தாமாகவே முன்னால் மெல்ல நடப்பனவும் தம் கன்றுகளை நினைந்து செல்வனவுமாகி உலகில் புகழ்பெற்று விளங்கும் சாத்தனூரில் வந்து சேர; சைவநெறி மெய் உணர்ந்தோர் - சைவ நெறியிலே உண்மை உணர்ந்த யோகியாராகிய திருமூலர்; பின்போனார் - அப்பசுக்கள் சென்ற வழியிலே அவற்றின் பின் போயினர்.

(வி-ரை) வெய்ய சுடர்க் கதிரவன் - சூரியன். வெயில் வெப்பமாதலின் பசுக்களைப் "புறவினிழலில் இனிதாகப் புறங்காத்தார்" என்று முன் கூறியது காண்க.

மேல்பாலே மலையணைய - மாலைப் பொழுது ஆகும் நேரம் வர; **மேல்பாலே மலை** - மேற்கு மலைகள்.

சைவ நெறி மெய் உணர்ந்தோர்- சிவாகம உண்மைகளை நந்தி திருவருள் உபதேசத்தால் அறிந்து சிவயோகம் தமது உணர்ச்சியிற் கைவந்தவர்; **சைவ நெறிமெய்-** வேத சிவாகம முடிபுகளாகிய உண்மைகள்; **உணர்ந்தோர் -** சுய அனுபூதிகத்தில் உள்ளுறப் பெறும் நிலை வந்தவர். **உணர்ந்தோர்- பின் போனார்** என்று கூட்டுக.

தாமே... ஆகி - வந்தெய்த - பசுக்கள் மேய்விடத்தினின்றும் மாலைப்போதில்

3580. போனவர்தாம் **பசுக்களெலா மனைதோறும் புகநின்றார்;**
மானமுடை மனையாளும் **"வைகியபின் றாழ்த்தா"ரென்**
றூனபயத் துடன்சென்றே யவர்**நின்ற வழிகண்டாள்**
"ஈனமிவர்க் கடுத்த" தென மெய்தீண்ட வதற்கிசையார், 17

தத்தம் மனைகளுக்குத் திரும்பும்போது வேறு ஒருவர் செலுத்தாமல் தாமே இடமறிந்து செல்லுமியல்பு குறிக்கத் **தாமே** என்றார்.

பைய நடப்பன- வயிறு நிறை மேய்ந்திருத்தலானும் மற்றும் தம் இயல்பானும் பசுக்கள் பைய நடப்பது அவற்றின் இயற்கை.

கன்றை நினைந்து படர்வன - அவற்றின் நினைப்பு அவை கன்றுகளை நினைந்து அம்மா என அழைத்து நடத்தலால் காணப்படும்; சில பசுக்கள் வாளா பைய நடப்பன; மற்றும் சில கன்றை நினைந்து அழைத்துப் படர்வன; இஃதவற்றின் வாழ்க்கை யியல்பு.

ஆகி - வந்து - எய்த என்று கூட்டுக; **எய்த** - ஊரெல்லை எய்தும் வரை என்க.

வையநிகழ் சாத்தனூர் - உலகிற் புகழ் மிக விளங்கும் ஊர். **நிகழ் -** எக்காலத்தும் நிகழ்வதாகலின் முக்காலத்துக்கும் பொருந்தும் என்று வினைத்தொகையாற் கூறினார். **நிகழ்தல்** - என்றும் புகழ் விளங்க இருத்தல்; **புகழா**வது அந்தணர் சிறப்பும் இச்சரித நிகழ்ந்த சிறப்புமாம்.

சாத்தனூர் - பின் போனார் - பசுக்கள் அந்த ஊரினைச் சார்ந்தவை என்றும், அது சாத்தனூ ரென்றும் யோகியார் அறியார்; ஆனால் பசுக்களைப் பின்பற்றிச் சென்றால் அவை தாமே தமதியற்கையறிவு கொண்டு ஊருக்குக்கொண்டு செலுத்திவிடுமென்னு மியல்புணர்ந்தா ராதலின் **பின்போனார்;** "கோவுடனே கூடிவரும் குருட்டாவு மூர்புகுதும்" (உமாபதி சிவம்); யோகியார் அவ்வூரறியாராய் அப்போதுதான் வந்தெய்துகின்றாராதலின் அவ்வூர் என்று முன்னறி சுட்டாற் கூறாது **சாத்தனூர்** என்று பெயர் கூறிச் சொல்லியதுமன்றி **வையநிகழ்-** என அதன் சிறப்பும் கூறினார். இது தெய்வக் கவிநயம். *16*

3580. **(இ-ள்)** போனவர்தாம்...நின்றார் - முன்கூறியவாறு பசுக்களின் பின் போன திருமூலர் பசுக்கள் எல்லாம் அவ்வவற்றின் மனைகள் தோறும் புக அவ்வெல்லை யளவில் நின்றனர்; மானமுடை....கண்டாள் - பெருமையுடைய அவ்விடையனின் மனைவியும் "தன் நாயகர் போது வைகிய பின்னும் வரத் தாழ்த்தனர்" என்று நினைத்த அச்சத்துடன் சென்றே அவர் நின்று கொண்டிருந்த வகையினைக் கண்டாள்; ஈனம்... இசையார் - இவருக்கு ஏதோ தீங்கு நேர்ந்துள்ளது என்ற கருதி அவர் மெய்தீண்ட அவர் அதற்கு இசையாராகி;

(வி-ரை) பசுக்களெலாம் மனைதோறும் புக நின்றார் - ஊர் எல்லை வரையும் பசுக்கள் ஒருங்குசேர வந்தன; அதன்பின் அவை தந்தம் மனைகள்தோறும் புக அங்கங்கும் பிரிந்து செல்ல வேண்டியவையாதலின் அதுவரையும் பின்பற்றி வந்த திருமூலர் மேலும் செல்ல இயலாமையால் அவ்விடத்து நின்று கொண்டு அவை மனைதோறும்புகுவதனைப் பார்த்து இருந்தார் என்பார் புக **நின்றார்** என்றார்; முன்னர்ப் **பின் போனார்** என்றமை காண்க. நின்ற இடம் ஊருக்குள்ளே புகும் வழியில் பொது இடம் என்பதாம்.

3581. அங்கவளு மக்களுட னருஞ்சுற்ற மில்லாதாள்
தங்கிவெரு வுறமயங்கி "யென்செய்தீர்?" எனத்தளர
"இங்குனக்கென் னுடனணைவொன் றில்லை"யென வெதிர்மறுத்துப்
பொங்குதவத் தோராங்கோர் பொதுமடத்தி னுட்புகுந்தார். 18

மானமுடை - மானம் - பெருமை; ஈண்டுக் கற்பு முதலிய பெண்மை நலம் குறித்தது.

வைகியபின் தாழ்த்தார் - வைகுதல்- நாள் எல்லை கழிதல் என்ற பொருளில் வந்தது; **வைகியபின் -** நாள் எல்லை அற்றபின்; நாட்போது கழிந்த பின்னும்;சிறப்பும்மை தொக்கது; **தாழ்த்தார் -** தன் நாயகன் மனைக்குத் திரும்பிவருதலைத் தாழ்த்தனர்;"போதும் வைகிற்று" (451) என்றதும், "வைகுறு" என்றதற்கு மாதவச் சிவஞான முனிவர் சூத்திரவிருத்தியுள் உரைத்தனவும் காண்க.

ஆனபயம் - உளதாகிய அச்சம்; நாயகனுக்கு என்ன தீங்கு நேர்ந்ததோ என்று எண்ணியதாலாகிய அச்சம். "ஆனபயம் ஐந்தும் தீர்த்து" (121)

அவர் நின்ற வழி - அவர்- உடம்பினைக் கண்ட அளவால், தன் கணவர் என்று மனைவி எண்ணிய அவர் என்றும், உடம்பிற்குள் புகுந்து நின்ற அவர் (திருமூலர்) என்றும்உரைக்க நின்றது; **நின்ற வழி - வழி** -தன்மை என்ற பொருளில் வந்தது; இரண்டனுருபு தொக்கது. **வழி -** இடம் என்றலுமாம்.

ஈனம் - எதுவோ ஓர் தீங்கு; புத்தி மாறக்கூடிய தொருநிலை; நோய் **என -** என்று கொண்டு.

மெய் தீண்ட - பற்றி மனைக்குக் கொண்டு செல்ல முயல.

இசையார் - இசையாராகி; **மறுத்துப் - புகுந்தார்** என்று வரும் பாட்டினுடன் முடிக்க. 17

3581. **(இ-ள்)** அங்கவளும்...மயங்கி - அங்கு அவளும் மக்களோடு அரிய சுற்றத்தாரையும் இல்லாதவளாதலின் தங்கிப் பயந்து மயங்கி; என் செய்தீர் எனத்தளர - என்ன செய்தீர் என்று மனந்தளர்ந்து வருந்த; இங்குனக்கு...எதிர் மறுத்து- இங்கு உனக்கு என்னுடன் தொடர்பொன்றுமில்லை என்று மறுத்து; பொங்கு... புகுந்தார் - மேன்மேலும் வளரும் பெருந் தவத்தினையுடைய திருமூலர் அவ்விடத்து ஒருபொது மடத்தினுள்ளே போய்ப் புகுந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அங்கவளும்... இல்லாதாள் - தனக்குத்துணையாக உள்ள சுற்றத்தவர்கள் இல்லாமையால் தானே தனிமையிற் றளர்வாளாயினுள் என்பது. **தங்கி -** அங்கே செயலற்று நின்று.

என்செய்தீர் என - துயரத்தில் வரும் இரக்கக் குறிப்பு.

தங்குதல் - வெருவுறல் -மயங்குதல் - தளர்தல் - இவை சடுதியில் நேர்ந்த பெருந் துன்பத்தினால் நேர்ந்த மெய்ப்பாடுகள்; திருமருகலில் "மறுமாற்ற மற்றொருவர்

3582. இல்லாள னியல்புவே றானமைகண் டிரவெல்லாஞ்
சொல்லாடா திருந்தவர்பா லணையாது துயிலாதாள்
பல்லார்முன் பிற்றைநா ளவர்க்கடுத்த பரிசுரைக்க
நல்லார்க ளவர்திறத்து நாடியே நயந்துரைப்பார், 19

கொடுப்பா ரின்றி" (2373) ஏங்கித் தளர்ந்த வணிகப் பெண்ணின் நிலை ஈண்டுக் கருதத்தக்கது.

இங்கு...என - இது திருமூலராகிய யோகியார் அந்த இடையன் மனைவிக்குச் சொல்லியது. இஃது அப்போது இடையனது உடலின் உள்ளிருந்த உயிரின் நிலை பற்றிக் கூறியது.

பொங்கு தவத்தோர் - இதன்முன் கயிலையில் செய்த பெருந்தவமேயன்றி இனி இங்குத்திருவாவடுதுறையிற் போதியடியில் யோகிருந்து பலகாலம் உலகுக்கருளச் செய்ய நின்ற அரும் பெருந்தவமும் குறிக்கப் **பொங்கு** என்றார்.

பொதுமடம் - ஊர்ப் பொதுவில் உள்ள மடங்களுள் ஒன்று; யாவரும் தங்கும் உரிமையுள்ள இடம். *18*

3582. **(இ-ள்)** இல்லாளன்... கண்டு - தன் கணவனது தன்மை வேறு பட்டு மாறியதனைத் தெரிந்து; இரவெல்லாம்... துயிலாதாள் - அன்று இரவு முழுமையும் யாவரிடத்தும் சொல்லுரையாமலிருந்து அவரிடம் அணையவியலாது, துயிலும் பெறாமலிருந்த அப்பெண்; பல்லார்முன்... உரைக்க - அடுத்த நாள் அவ்வூரிலுள்ளார் பலர் முன்னிலையில் அவரது தன்மையினைச் சொல்லவே; நல்லார்கள்... உரைப்பார் - அது கேட்ட நல்ல மக்கள் அவரது தன்மையினை அருகில் அணைந்து நாடியறிந்து அன்புடன் சொல்வார்களாகி,

(வி-ரை) இல்லாளன் - மனைக்கு - இல்லினுக்கு -உடையவன்; தலைவன்; கணவன். முன், தொடர்ச்சியில்லை யாயினவன் - என்றதும் குறிப்பு.

இயல்பு வேறானமை - அதுவரை கொண்டிருந்த இல்வாழ்க்கைத் தொடர்பினை மறுத்து மாறுப்பட்டதன்மை.

இரவெல்லாம் சொல்லாடாதிருந்து -இது மனவருத்தத்தால் விளைந்த தன்மை;**சொல்லாடுதல்** -பேசுதல். இல்லாளன் - இல்லாள் - என்பதன் ஆண்பால்.

அணையாது துயிலாதாள் - அவர் பக்கத்திற் சென்றிருக்கவு மாட்டாமையில் துயிலப் பெறாதவளாகி.

பிற்றை நாள் - அந்நாளின் பின்நாளிலே.

பல்லார் முன் பரிசு உரைப்ப - பல்லார் - அப்பதியிலுள்ள பெரியோர் பலர்; **பல்லார்** - பலர் என்பதன் விகாரம் **பரிசு** - தன்மை.

நல்லார்கள் - அவ்வாறுரைப்பக் கேட்ட பதியவர்களுள்ளே நல்லவர்களாயுள்ளோர்; அறிஞர்கள். **நன்மையாவது** - பிறரது துன்பங் கண்டு தரியாமையும் இரங்கிப் பணி செய்தலுமாம்.

3583. “பித்துற்ற மயலன்று; பிறிதொருசார் புளதன்று;
சித்தவிகற் பங்களைந்து தெளிந்தசிவ யோகத்தில்
வைத்தகருத் தினராகி வரம்பில்பெரு மையிலிருந்தார்;
இத்தகைமை யளப்பரிதால் யாராலு” மெனவுரைப்பார், 20

திறத்து நாடியே -அவர்பாற் சென்று அவர்திறத்தினை நன்கு ஆராய்ந்து அறிந்து; **நாடுதல்-** பலவகையாலும் அறிவினால் ஊன்றி ஆராய்தல்; **நாடியே** - ஏகாரம் தேற்றம். **நயந்து** - அன்புகொண்டு; **நாடிய**நிலை மேல் உரைக்கப்படும்.

உரைப்பார்-எனவுரைப்பார்-என்றுரைப்ப-என மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க.

இவர்க்கடுத்த—என்பதும் பாடம். *19*

3583. **(இ-ள்)** பித்துற்ற... உளதன்று - இது பித்துப் பொருந்திய மயக்கமன்று; பிறிதாகியதொரு சார்பு உள்ளதுமன்று; சித்தவிகற்பம்... இருந்தார் - சித்தத்தின் விகற்பகங்களை யெல்லாம் களைந்து தெளிந்த நிலையினில் சிவயோகத்தில் அழுந்திய கருத்தினை உடையவராகிய அளவற்ற பெருமையில் இருந்தனர்; இத்தகைமை... உரைப்பார் - இத்தன்மை எவராலும் அளவிடற்கரியது என்று துணிந்து எடுத்துச் சொல்வார்களாகி,

(வி-ரை) பித்துற்ற... உளதன்று - அங்குக் காணப்பட்டது அறிவைப்பற்றிய மாறுதலாதலின் அதற்கு அகமும் புறமுமாகிய இருவகைக் காரணங்கள் உள்ளன; ஒன்று அகத்தே உடம்பினுள்ளே பற்றும் அதிகப் பித்தம் முதலிய நோய்; மற்றொன்று புறத்தே நின்று வந்து பற்றும் பேய் முதலியவற்றின் பீடை; நாடிக் கண்ட அந்நல்லார்கள் இது பித்தம் அதிகரித்துப் பொருந்திய உள்நோய் காரணத்தாலுமன்று; **பிறிதொரு. சார்பு** எனப்படும் பேய் முதலிய பீடைகள் பற்றுதலானுமன்று; என்பார்; (1) பித்துற்ற மயலன்று; (2) பிறிதொரு சார்பு உளதுமன்று என்று கண்டனர்; **பித்து... மயல்** - பைத்திய மென்பர்.

பிறிதொரு சார்பு - வெளியிலிருந்து வந்து சார்புகொள்ளும் பேய் முதலிய பீடையினால் வரும் அறிவு மாறுபாட்டம்.

சித்த விகற்பம் களைந்து தெளிந்த -சித்த விகற்பமாவது வஞ்சப் புலன்களின் வழியே மனஞ் செலுத்துதலால் வரும் மயக்கம்;“ மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து” “சித்த விகாரக் கலக்கம்” (திருவா).

விகற்பமாவது - ஒன்றை மற்றொன்றாகக் கருதுவது. “பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும் **மருள்**” (குறள்); **களைதல்** - மயக்கஞ் சாராது காத்தல்; **தெளிதல்** - மெய்யுணர்தல்.

சிவயோகத்தில் வைத்த கருத்தினர் - சிவனொடு அறிவினால் இரண்டறக் கலந்து அழுந்திய மனத்தினர்.

வைத்தல் - ஊன்றுதல் - அழுந்துதல் - ஒன்றுதல்.

3584. ''பற்றறுத்த வுபதேசப் பரமர்பதம் பெற்ருர்போல்
முற்றுமுணர்ந் தனராகு; முன்னைநிலை மையிலுங்கள்
சுற்றவியல் பினக்கெய்தா'' ரென்றுரைப்பத், துயரெய்தி
மற்றவளு மையலுற மருங்குளுள்ளார் கொண்டகன்ருர், 21

வரம்பில் பெருமையிலிருந்தார் - யோகியாரின் நிலைமைகண்ட மனைவி ''ஈனம் இவர்க்கடுத்தது'' என்று கொண்டாள்; அவள் சொன்னதையும் அவரது மன மாறுபட்ட செய்கைகளையுமே புறத்தோற்றத்தாற் கண்டவர்களும் அவ்வாறே கொண்டார்கள்; அஃதாவது அவரது முன்னை நிலையினின்றும் வேறுபட்ட நோய் - பித்து முதலிய தாழ்வாகிய மாறுபாடு எனவே எண்ணினுர்கள். சார்பு நாடியே நயந்த நல்லோர்கள் அது தாழ்ந்த நிலையன்று; உலகச் சார்பான கீழ் நிலையன்று; சிவச்சார்பாகிய அளவற்ற பெரிய நிலை என்று கண்டார்கள் என்க. **வரம்பில்** - அளவில்லாத.

இத்தகைமை...யாராலும் என - இவ்வாறு இடையனின் நிலை ஒப்பற்ற பெரிய தன்மை யடைந்ததனை யாவராலும் அளக்கலாகாது என்று; இது பரகாயப் பிரவேசத்தால் புகுந்த உயிரின் மேம்பாடு என்பதனை உணரலாகாமையின் அவர் கூறியது. 20

3584. **(இ-ள்)** பற்றறுத்த... உணர்ந்தனராகும் - இருவகைப் பற்றுக்களையும் அறுத்த ஞானேபதேசத்திஞலே இறைவரின் திருவடிகளைப் பெற்ற சீவன் முத்தர்களைப் போல ஒருங்கே எல்லாவற்றையும் உணர்ந்த ஞானியாகுவர்; முன்னை... என்றுரைப்ப - முன்னை நிலைமைப்படி உங்கள் சுற்றத்தின் தொடர்பாகிய இயல்பினுட்படமாட்டார் என்று சொல்ல; துயர் எய்தி.. மையலுற - துன்பப்பட்டு அவளும் மயங்க; மருங்குள்ளார் கொண்டகன்ருர் - பக்கத்திலிருந்தவர்கள் அவளை அழைத்துக் கொண்டு நீங்கினுர்கள்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) பற்றறுத்த உபதேசம்...பெற்ருர்போல் - பற்றறுதற்குக் காரணமான உபதேசத்திஞலே; காரணத்தைக் காரியமாக உபசரித்தார்; **உபதேசம்** - சற்குருவின் ஞானேபதேசத்திஞல்; ''நந்திதிரு வருள் பெற்ற'' என்ற உண்மை இவர்களுக்கு ஏற்றவாறு விளங்கா நின்றது; உபதேசத்தானன்றிப் பற்றறுதல் இயலாது என்றதும் குறிப்பு. **பரமர்பதம் பெற்ருர்** - இப்பிறப்பிலே சிவனடியில் இரண்டற்ற அறிவு பொருந்தி உலகை மறந்த சீவன்முத்தர். **பற்றறுத்த - பரமர்** என்று கூட்டியுரைத்தலுமாம். ''பற்றற்ருன்'' (குறள்)

முற்றும் உணர்ந்தவராகும் - முழுஞானமும் பெற்றவர்; எல்லாமறியும் மெய்ஞ்ஞானம்.

முன்னை நிலை - முன் ஆமேய்ப்பானுயிருந்த அந்நிலைமை.

சுற்ற இயல்பு - உலகத் தொடர்பு.

பரம்பரமே—என்பதும் பாடம்

21

3585. இந்தநிலை மையிலிருந்தா ரெழுந்திருந்தாங் கானிரைகள்
வந்தநெறி யேசென்று வைத்தகாப் பினிலுய்த்த
முந்தையுடற் பொறைகாணார் **முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச்**
சிந்தையினில் வந்தசெய லாராய்ந்து தெளிகின்றார், 22

3585. **(இ-ள்)** இந்த நிலைமையிலிருந்தார் - முன்கூறிய இவ்வாறாகிய நிலைமையில் சாத்தனூர்ப் பொது மடத்தில் இருந்த திருமூலர்; எழுந்திருந்து..காணார் - அந்நிலையினின்றும் எழுந்து இருந்து அவ்விடத்துப் பசுக்கூட்டங்கள் ஊரை நோக்கி வந்த வழியினையே பற்றிச் சென்று பார்க்கத் தாம் வைத்த காவலின்கண் செறித்த தமது முன்னைய உடற்பொதியினைக் காணாராகி; முழுது உணர்ந்த... தெளிகின்றார் - முற்றுணர்வு கூடிய மெய்ஞ்ஞானம் பொருந்திய தமது சிந்தையினில் இச்செயல் நிகழ்ந்த நிலையினை ஆராய்ந்து தெளிவாராகி,

(வி-ரை) இந்த நிலைமையிலிருந்தார் - பசுக்களின் துயரை நீக்க எண்ணிப் பரகாயப் பிரவேசம் செய்து இடையனுடம்புடன் பசுக்களை ஊரில் மனை தோறும் செலுத்த, இடையன் மனைவி மெய் தீண்ட வர, அவளை மறுத்துத் தாம் பொது மடத்திலிருக்க; ஊரவர்வந்து நாட, என்றிவ்வளவும் தொடர்புகொள்ள நேர்ந்த நிலைமை; இத்துணையும் **இந்த நிலைமை** என்ற இரு சொற்களாற் சுட்டிப் பெற வைத்தார்.

எழுந்திருந்து - எழுந்து; **ஆனிரைகள் வந்தவழியே சென்று** - தாம் அங்குப் போகத் தொடங்கிய மேய்விடமும் உடலைக் காப்பில் வைத்த இடமும் தெரிந்து செல்வதற்கு ஆனிரைகள் வந்த வழியே சென்றால் அறியும் அடையாளம் பெறலாமாதலின் அவ்வழியினையே பற்றிச் சென்றார்.

வைத்த...பொறை - தாம் அடையாளம் பெற வைத்துச் சேமம்படச் செலுத்தி நீங்கிய தமது முன்னை உடல்; **உடற்பொறை** - உடலாகிய சுமை; வீடுபேறு கருதிய யோகியர்க்கு உடம்பும் சுமையாகத் தோன்றும் ஆதலின் **பொறை** என்றார். "மற்றுந் தொடர்பா டெவன்கொல் பிறப்பறுக்க, லுற்றார்க் குடம்பு மிகை" (குறள்).

வைத்த - உய்த்த - தாம்விட்டு நீங்கிய செயல் ஒன்றும், இடையனுடற்கண் நின்று அதற்குக் காப்புச் செய்த செயல் ஒன்றும் குறிக்க **வைத்த - உய்த்த** என்றார்.

முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தை - முற்றும் உணர்தலாகிய மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்ற சிந்தை. இஃது எண் சித்திவகையினாலும், நந்திபெருமான் திருவருள் ஞானோபதேசத்தினாலும் வருவது. மேலும் இதனையே "எண்ணிறைந்த உணர்வுடையார்" (3686) என்பதும் காண்க.

வந்த செயல் - உடற்பொறை மறைந்து விட நேர்ந்த செயலினை.

தெளிகின்றார் - தெளிகின்றாராகி; முற்றெச்சம். தெளிகின்றார் - உணர்ந்தார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க 22

3586. தண்ணிலவார் **சடையார்தாந் தந்தவா கமப்பொருளை**
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ்வகுப்பக்
கண்ணியவத் திருவருளா லவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த வுணர்வுடையா **"ரீசரரு"** ளெனவுணர்ந்தார். 23

3586. **(இ-ள்)** தண்ணிலவார்...கரப்பிக்க - குளிர்ச்சி பொருந்திய சந்திரன் நிறைந்த சடையினையுடைய மகா சதாசிவமூர்த்தி அருளினாலே தந்த சிவாகமங்களின் பொருளை நிலவுலகத்திலே திருமூலரது திருவாக்கின் மூலம் தமிழிலே வகுப்பதற்காகக் கருதிய அந்தத் திருவருளால் அந்த உடலினை மறைப்பித்தாராதலின்; எண்ணிறைந்த... உணர்ந்தார் - எங்கும் நிறைந்த முற்றுணர்வுடையவராகிய திருமூலர் அச்செயலினைச் சிந்தையில் தெளிந்து அஃது ஈசரருளாலாயிற்று என உணர்ந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) சடையார் தாம் தந்த ஆகமப் பொருளை-சிவபெருமான் தமது ஈசானமுகத்திற் சத்தியோசாத முதலிய ஐந்து திருமுகங்களாலும் அருளியவை காமிக முதலிய இருபத்தெட்டு ஆகமங்கள். அவற்றின் பொருளாவன சரியையாதி நாற்பாத நிலைகளும் முப்பொரு ணிச்சயமும் சாதனமும் பயனும் முதலியவை.

சத்தியோசாத முகத்தினின்றும் காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம் என்ற ஐந்து ஆகமங்களும், **வாமதேவத்**தினின்றும், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம் என்ற ஐந்தும், அகோரத்தின், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம் என்ற ஐந்தும், **தற்புரு**டத்தின் இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம் என்பவை ஐந்தும், **ஈசானத்தில்** புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேச்சுவரம், கிரணம், வாதுளம் என்ற எட்டும் ஆக இவ்வாறு இருபத்தெட் டாகமங்களும் சிவபெருமான் அருளியவை.

இவ்வைந்து முகங்களும் மகா சாதாசிவ மூர்த்தியின் ஈசான முகத்தில் உள்ளவை. "அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே" (திருமந்); "ஈசானஸ் ஸர்வவித்தியாநாம்" என்பது வேதம்; "மற்றவை தம்மை மகேந்திரத்திருந்துற்ற வைம்முகங்க ளாற்பணித் தருளியும்" "மகேந்திர மதனிற் சொன்ன வாகமம்" என்பன திருவாசகம்.

இவை கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகத்தியர் என்னும் சிவகோத்திர இருடியர் பொருட்டு முறையே அருளப்பட்டன. "அண்ண லருளா லருளும் சிவாகமம்" (திருமந்).

மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ் வகுப்பக் கண்ணிய அத்திருவருள் - இருடியர் மாமுனிவர்கள் முதலிய மேதையோர்க் கன்றி இந்நிலவுலகிலே மானுட மக்கள் அவ்வவர் பக்குவத்துக் கேற்ப அறிந்துய்யும் பொருட்டுத் திருமூலரது திருவாக்கின் மூலம் **தமிழில்** வகுத்தருளக் கருதி இறைவர் திருவுளங் கொண்டாரென்பது.

மண்ணின் மிசை - என்றதனால் இறைவர் அருளிய அவை பக்குவமுடைய மேதையோர்க்கு அருளப்பட்டன என்பது குறிக்கப்பட்டது. "அஞ்சன மேனி **யரிவையோர்**

3587. சுற்றியவக் குலத்துள்ளார் **தொடர்ந்தார்க்குத் தொடர்வின்மை**
முற்றவே மொழிந்தருள வவர்மீண்டு போனதற்பின்
பெற்றமீது துயர்த்தவர்**தாள் சிந்தித்துப்** பெருகார்வச்
செற்றமுதல் கடிந்தவர்தா **மாவடுதண் டுறைசேர்ந்தார்.** 24

பாகத்தன், அஞ்சொடிருபத்து மூன்றுள வாகமம், அஞ்சலி கூப்பி **யறுபத் தறுவரும்,** அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே" (திருமந்) "அறுபத்தறுவர் பிரணவ ராதி, அறிவுறக்கேட் டாராகமம்" (சைவ சமயநெறி) என்றும், "வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளி, துள்ளு வார்புனல் வேணியா ரருள் செயத் தொழுது, **தெள்ளு திறனெலாந்** தெரிய, உள்ளவாறு கேட்டருளினு லுலகையா ளுடையாள்" (*1127*) என்றதனுல் அம்மையார்க்கு இறைவர் ஆகமங்களை உபதேசித்தமையும் தெளியப்படும். இவ்வா ருகலின் நிலவுலகத்தோர்க்காக அப்பொருளைத் திருமூலர் வாக்கினுல் தமிழில் வரக்கருதி யருளினுர் இறைவர் என்க. திருமந்திரம் ஆகமப்பொருளையே கொண்டதென்று குறிப்பிக்க இருபத்தெட்டுத் திருவிருத்தங்களால் ஆசிரியர் இப்புராணத்தை ஆக்கியருளிய குறிப்பும் காண்க.

தமிழ் வகுப்பக் கண்ணி -தமிழில் வகுத்தலையே இறைவர் கருதியருளினர்; எனவே இறைவர்வகுத்த அவை தமிழினன்றி வேறு (வட) மொழியில் வெளியிட்டருளப் பட்டனவென்பது கருதப்படும்; "வேதந் தமிழால் விரித்தார்" (*2787*) என்றவிடத்துரைத் தவை பார்க்க. **கண்ணுதல்** - கருதுதல். "கண் இருள்" (போதம் - பாயிரம்).

கரப்பிக்க - ஈசர் அருள் என உணர்ந்தார் - இறைவர் அருளால் மறைத்த செயலை உள்ள அவ்வாறே உணர்ச்சியிற் றெளிந்தனர்; இஃதெவ்வாறோ? எனின் எங்கு நிறைவுடைய மெய்ஞ்ஞான முடையார்க்கு ஆகும் என்பார் "எண்ணிறைந்த உணர்வுடையா" ராதலின் என்று காரணக் குறிப்புப்பட உடம்பொடு புணர்த்தி ஓதினுர்.

தண்ணிலவார்...கரப்பிக்க உணர்ந்தார் - கரப்பித்த செயல்முன்னும் உணர்ந்த செயல் பின்னும் நிகழ்ந்தனவாதலின் இப்பாட்டில் அவ்வாறே வைப்பு முறையாயிற்று. எங்கும் நிறைந்த அறிவுடையார்க்கு இது கூடும். (*27; 1713*)

ஈசரருள் - உடலைக் கரப்பித்ததனேடு, ஆகமப்பொருளைத் தமிழில் வகுத்தலும் திருவருட் கருத்து என்பதனை உணர்ந்தனர் என்பதாம். உடற்பொறை காணுமைக்குக் காரணத்தினையே தெளிய எண்ணினுரேனும், இறைவர், அதனை உணர்த்தியதோடும் அதற்குத்தாம் கருதியருளினமையும் உடன் புலப்படுத்தினுர்; அதனுலனன்றே திருமூலர் உடனே திரு ஆவடுதுறை யணைந்து, யோகிருந்து, ஆகமப்பொருளாகிய திருமந்திரங்க ளருள்வதனை மேற்கொண்டனர் என்க. "என்னை நன்ருக விறைவன் படைத்தனன், தன்னை நன்ருகத் தமிழ்செய்யு மாறே" (திருமந் - திரு மூலர் வரலாறு). **23**

3587. **(இ-ள்)** சுற்றிய...மொழிந்தருள - சூழ்ந்துள்ளாராய்த் தொடர்ந்த அந்த இடையர் குலத்தவர்களுக்கு (அப்பதியினின்று ஆ மேய்விடம்வரையும் தம்மையே தொடர்ந்து வந்தார்களாகிய அவர்களறியும்படி) அவர்களுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்வும் இல்லை

என்ற உண்மையினை முழுதும் அறிவுறுத்தி உரைத்தருளினாராக; அவர் மீண்டு போனதற்பின் - அவர்களும் மீண்டு சென்றபின்னே; பெற்றம்...சிந்தித்து - இடபக்கொடியினை உயர்த்தி ஏந்திய இறைவரின் திருவடிகளைச் சிந்தனை செய்து; பெருகு... கடிந்தவர்தாம் - மேன்மேற் பெருகுமியல்புடைய ஆர்வம் கோபம் முதலியவற்றை வேரற அகழ்ந்து போக்கிய அத்திருமூலர்; ஆவடு தண்டுறை சேர்ந்தார் - அங்குநின்றும் திருவாவடு தண்டுறையினைச் சேர்ந்தனர்.

(வி-ரை) **சுற்றிய அக்குலத்துள்ளார் தொடர்ந்தார்க்கு - இவர்கள்** - இறந்த மூலன் என்னும் இடைமகனைச் சுற்றியவர்களாய் அக்குலத்துள்ள சுற்றத்தார்கள். இன்பிலும் துன்பிலும் சுற்றிச் சூழ்தலாற் **சுற்றம்** எனப்படுவர். முன்னர் அவன் மனைவியை **அருஞ்சுற்ற மில்லாதாள்**-(3581) எனப்பட்டதே? எனின் அங்குக் குறித்தது நெருங்கிய சுற்றமென்பதனை **அருஞ்** சுற்ற மென்றதனாற் காண்க. இங்குக் குறித்தவர்கள் தூரமாகிய சுற்றத்தார் என்னவும்படாது, சுற்றி அக்குலத்துள்ளார்; குலத்தால் ஒற்றுமை யுடையாராய் ஒருவாற்றாற் சுற்றுதற்குரியார்; திருமூலரை ஏனையோருடன் கூடிச் சுற்றிய என்றலுமாம். பதியவரும் ஏனையோரும் பதியின் எல்லையிற் பொதுமடத்தினின்றே நீங்கவும், குல அபிமானத்தால் இவர்கள் பின்னும் விடாது பசுக்கள் மேய்விடம்வரைத் தொடர்ந்தனர். "இல்லும் பொருளு மிருந்த மனையளவே...நல்ல, கிளைகுளத்து நீரளவே" (11-ம் திருமுறை-க்ஷேத்.வெ 14) என்ற கருத்தும் ஈண்டு வைத்துக் காணத்தக்கது. **உள்ளார்** - குறிப்பு வினைமுற்றெச்சம்; **தொடர்ந்தார்** - வினையாலணையும் பெயர்.

தொடர்வின்மை முற்றவே மொழிந்தருள - உடல் இடையனுடையதேயாயினும் அவர்களுடன் தமக்கு யாதொரு தொடர்புமில்லாத தன்மையின் வரலாற்றை அவர்கள் அறியும்படி திருமூலர் சொல்லியருளக் கேட்டு; **முற்றவே** - நிகழ்ச்சியானும் உண்மைத் தத்துவ நிலையானும், உயிர்தான் எண்ண வருவதென்றும் உடல் சடமாதலின் ஈண்டு எண்ண வாராதென்றும், பிற காரணங்களையும் காட்டி நீதிபுகட்ட. **தொடர்வு** - சம்பந்தம்.

பெற்றம்...சிந்தித்து - இனித், தாம் கருதியதும் வந்ததுமாகியவற்றைவிட்டு வேறு அருள் காட்டிய நிலையிற் புகுகின்றாராதலின் அவ்வருளைச் சிந்தித்தார் என்க.

பெருகு ஆர்வச் செற்ற முதல் கடிந்தவர் - திருமூலர்; ஆர்வம், செற்றம். குரோதம் முதலியவை விலக்கற்பாலனவாகிய தீக்குணங்கள். **முதல்**-வேர்-வேரறக் கடிந்தவர்; **கடிதல்**-வெறுத்து நீக்குதல்; "களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" (1784). பெருகு - பிறவி பெருகுதற்குக் காரணமாகிய என்றலுமாம்; **ஆர்வம்** - பெருவிருப்பம்.

ஆ - அடு தண்டுறை சேர்ந்தார்-துறை என்றதற்கேற்பத் **தண்** என்றார். **ஆ** - (பசுத்துவம்); வினை அடுவதாயினும் வெப்பமின்றித் தண்ணியதுறை என்றதும் குறிப்பு. "தண்ணியல் வெம்மையினன்" (நம்பிகள்); **சேர்ந்தார்** - மீண்டும் வந்தணைந்தார்; "அந்நிலைமைத் தானத்தை அகலாத தொருகருத்து, முன்னியெழுங் குறிப்பினால் மூளு மாதரவு" (3573) முன்னரே பெற்றனராதலின் அதனையே தொடர்ந்து சென்று **சேர்ந்தனர்** என்பதாம்; சாத்தனூரில் சிந்தையில் செயல் ஆராய்ந்தபோது தமிழில் ஆகமப் பொருள் வகுப்பதற்காக உடற்பொறை மறைக்கப்பட்டதென உணர்ந்தனரேயன்றி இன்ன இடத்தில்

3588. ஆவடுதண் டுறையணைந்தங் கரும்பொருளை யுறவணங்கி
மேவுவார் புறக்குடபான் மிக்குயர்ந்த வரசின்கீழ்த்
தேவிருக்கை யமர்ந்தருளிச் சிவயோகந் தலைநின்று
பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்த்திருந்தார். 25

அது நிகழ்வதென்று இடம் உணர்த்தப்படவில்லை.அது முன்னரே உணர்த்தப்பட்ட தாதலின்அதனைப் பற்றிக்கொண்டு சேர்ந்தனர் என்பதாம். **சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை''** (திருமந்). **24**

3588. **(இ-ள்)** ஆவடுதண்டுறை...மேவுவார் - திருவாவடுதுறையினைச் சேர்ந்து அங்குச் சிவபெருமானைப் பொருந்துமாற்றால் வணங்கி அங்குத் தங்குவாராகி;புறக்குடபால்... அமர்ந்தருளி - திருக்கோயிற் சுற்றின் புறத்திலே மேற்குப் பக்கத்திலே மிகவும் உயர்ந்த அரசமரத்தின் கீழே தேவாசனத்தில் அமர்ந்து எழுந்தருளியிருந்து; சிவயோகம்... புணர்ந்திருந்தார் - சிவராசயோகத்தின் மிக்கிருந்து இதய கமலத்தில் அரும்பொருளாகிய இறைவருடன் இரண்டறக் கூடி ஒன்றியிருந்தனர்.

(வி-ரை) அரும்பொருளை உறவணங்கி - அரும்பொருள் - சிவபெருமான், பெறுதற்கரிய பொருள்களெல்லாவற்றுள்ளும் அரியவர் அவரேயாகலான்; **உற** - விதிப்படி பொருந்த.

மேவுவார் - புணர்ந்திருந்தார் - என்று கூட்டுக. மேவுவாராகி; முற்றெச்சம்.

புறக்குடபால் மிக்குயர்ந்த அரசின்கீழ் - இவ்வரச மரம் அக்காலத்தில் திருக் கோயில் புறச்சுற்றில் மேற்குப் பக்கத்தில் இருந்தது; இப்போது திருமூலர் சந்நிதி உள்ள இடத்தின் மேற்கில் இருந்ததென்றும் தெரிகிறது. திருமூலர் சந்நிதி இப்போது கோயிலுக்குள் வாயில் இருக்கத்தக்கதாக அமைவுபடுத்திச் சேர்க்கப்பட்டிருக்கிறது; இவ்வமைப்பை நீக்கிப்பார்க்கின் அச்சந்நிதி புறக்குடபால் அமைதல் காணப்படும்.

மிக்குயர்ந்த அரசு - செறிந்து மிகவும் உயர்ந்து வளர்ந்த அரசமரம். இஃது இப்போது அங்கில்லை. இப்போது கோயில் அபிமுகத்தில் கிழக்குக் கோபுரத்தருகில் உட்புறம் உள்ளது. இது **படர் அரசு** என்ற ஒருவகையுட் சேர்ந்தது. பல பல ஆண்டுகள் சென்றால், இவ்வரசு சில நூறாண்டுகள் நின்று பின் கீழேசாய்ந்து வேரூன்றும்; அப்போது பழையமரமும் வேரும் அற்றுவிடும். இவ்வாறாக இவ்வரசு மேற்கிலிருந்து கோயிலினை வலமாக வந்து இப்போது கிழக்கு வாயிலினுக்கு;இருபுறமும் உள்ளதும் அவற்றுள் கீழைவாயிலுக்கு வடக்கிருக்கும் பகுதி கீழ்வீழ்ந்து பலம் அற்றுவருவதும், தெற்கிலிருக்கும் பகுதி வலுப்பட்டு வளர்வதும் காணலாம்.

தேவிருக்கை - தேவாசனம் என்பது ஒருவகை ஆசனம்; யோகாசனம் என்பர்; தெய்வத்தன்மை வாய்ந்த இருப்பு என்றலுமாம். இப்போது அங்குத் தாபிக்கப்பட்டிருக்கும் திருமூலர் திருவுருவம் காண்க.

சிவயோகம் தலைநின்று - தம் அறிவினைச் சிவத்தினிடத்திலே ஒன்றுபடப்

3589. ஊனுடம்பிற் **பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய**
ஞான முத னான்குமலர் நற்றிருமந் திரமாலை
பான்மைமுறை **யோராண்டுக் கொன்றாகப்** பரம்பொருளாம்
எனவெயி றணிந்தாரை **"யொன்றவன்றா"** னெனவெடுத்து, 26

பதியவைத்தல் சிவயோகம் எனப்படும். "ஒன்றி யிருந்து நினைமின்கள்" (தேவா). **தலைநிற்றல்**-சிறத்தல் .

பூவலரும் இதயம் - பூ - கமலம்; இதயகமலம். "மலர்மிசை ஏகினான்" (குறள்); **பொருள்** - மெய்ப்பொருள்.

இதயத்து - இதயத்திலே முன் அரும்பொருள் என்று கூறிய பொருளடங்கிய சிவனுடன் சேர்ந்திருந்தனர்;**புணர்தல்** - இரண்டறக் கூடுதல். 25

3589. **(இ-ள்)** ஊனுடம்பில்... உய்ய - ஊன் பொருந்திய இப்பிறப்பாகிய விடத் தொடக்கு. நீங்கி உலகத்திலுள்ளார்கள் உய்யும் பொருட்டு; ஞான முதல்.... - மாலை - ஞான முதலாகிய நான்கு நெறிகளும் விரிந்து காணும் நல்ல திருமந்திர மாலையினை; பான்மைமுறை... ஒன்றாக - பான்மை முறையினாலே ஓர் ஆண்டுக்கு ஒரு மந்திரமாக; பரம்பொருளாம்... அணிந்தாரை -பரம்பொருளாகியவரும் பன்றியின் கொம்பினை அணிந்தவருமாகிய இறைவரை;ஒன்றவன்தான் என எடுத்து - "ஒன்றவன்றானே" என்று தொடங்கி;

(வி-ரை) ஊன்...உய்ய - ஊனுடம்பிற் பிறவி - "ஊனடைந்த உடம்பின் பிறவி" (2). **ஊன்...விடம்** - தசை செறிந்த உடம்பெடுத்துப் பிறக்கும் பிறவியாகிய விடம். பிறவி விடம் - உருவகம். **உலகத்தோர்** - எல்லா உயிர்களும்.

நான்கும் - நான்கு பாதங்களும்; எண்ணலளவை யாகுபெயர்; முற்றும்மை.

பிறவி விடம் - பிறவியாகிய விடம்;விடத்தைப் போலவே மரணத்தை யின்றியமையாது உடன்கொண்டு வருதலின் பிறவியை **விடம்** என்று கூறினார். "தோற்ற முண்டேன் மரண முண்டு" (நம்பி - தேவா). முன்னர், "வெந்தொழில் வல் **விடமுண்ண**" (3573) என்று கொண்ட பாடத்தின் இயைபு இதனால் சிறந்து விளங்குதல் காண்க. இதற்கு இவ்வாறன்றி ஊனுடம்பி லிருந்துகொண்டே பிறவித் துன்பத்தை ஒழித்தல்கூடும் என்பதற்குச் சான்றுகள் திருமந்திரத்திற் பல கிடக்கின்றன; "அஞ்சனம் போன்றுடலையறு மந்தியில்..." (727) என்றுரைப்பாருமுண்டு; அது பொருந்துமாறு ஆராயத்தக்கது. இங்குக் குறித்தது பிறவியறுதல் திருமந்திர மாலையின் பயன் என்ற பொருள்;"அஞ்சனம் போன்றுடல்" என்ற பாட்டு இப்பிறவியில் சரீரசித்தி யுபாயம். (3-ம் தந்திரம்).

பான்மை முறை - பான்மையாவது இறைவர் வகுத்த நியதி; நியதியின் வழியே அமைந்து; ஓர் ஆண்டுக்கொன்றாக வெளிப்படுத்திய நிலை **பான்மை** எனப்பட்டது. சிவயோகம் கைவந்தமையாற் காலத்தை வென்ற முற்றறிவுடையோர்க்கு யோக நிட்டையில் ஓர் ஆண்டு ஒரு கணமாய்க் கழியும். உலகியலிலும் இதனை ஒருவாறு காணலாம். "அவ்வூழியொரு கணமாம்" (3422).

ஓராண்டுக் கொன்றாக - ஆண்டொன்றுக்கு ஒரு திருமந்திரமாக; இவ்வாறு ஓராண்டுக் கொன்றாக மூவாயிரம் ஆண்டுகளில் மூவாயிரம் திருமந்திரம் அருளினார் என்பது மேல்வரும் பாட்டானு முணர்க. ஆயின் இவ்வாறு ஆண்டுக் கொன்றாக 3000 திருமந்திரம் அருளினார் என்பதற்கு அகச்சான்றில்லை என்றும், அந்நாளில் **ஆண்டு** என்பது வேறு பொருளில் வழங்கி வந்ததோ என்பது தெரியவில்லை என்றும் ஈண்டு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு; திருவாவடுதுறையில் பலகாலம் போதியின்கீழ் இருந்து ஆகம உண்மைகளைத் தமிழில் இறைவராணையால் அருளினார் என்ற சரிதப் பகுதிகள் எல்லாம் திருமந்திரங்களால் பெறப்படுகின்றன. "இருந்தேனிக்காயத்தில் எண்ணிலி கோடி; இருந்தே னிராப்பக லற்ற விடத்தே" (80) "ஞானத் தலைவிதன் னந்தி நகர்புக்கு, வூனமி **லொன்பதுகோடி யுகந்தன்னுள்,** ஞானப் பாலாட்டி நாதனை யர்ச்சித்து, யானு மிருந்தேனற் போதியின் கீழே" (82); என்பன முதலியவை காண்க. ஈண்டு ஒன்பதுகோடி என்பது வகைப்பட எல்லை; (கோடி எல்லை என்றும், யுகம் நீண்டகால எல்லை என்றும் பொருள் தருவனபோலும்.) ஆண்டுக்கொன்றாக 3000 திருமந்திரம் அருளினார் என்பது இச்சான்றுகளுடன் முரணுமை யறிக. இங்கு இச்சிறு செய்திக்கு அகச்சான்று வேண்டுவதும் பிறவும் ஈண்டுத்தகாத ஆராய்ச்சி முறையாமென்று விடுக்க. காலங் கடந்த ஞானாதைய அருட் செயல்கள் நமது குறுகிய சில வாழ்நாளே யளவையாகக் கொண்ட ஆராய்ச்சி யெல்லையுட் படுவன வல்லவென்பது அறிஞர் துணிபு.

ஞான முதல் நான்கும் -ஞானம், யோகம், கிரியை, சரியை என்றிவ்வாறு ஞானத்தை முதலாக வைத்துக் கூறுதல் சிருட்டிக் கிரமம்; "சங்கரனை யடையும் நன்மார்க்கம் நாலவைதாம் ஞான யோக நற்கிரியா சரியையென நவிற்றுவதுஞ் செய்வர்" (சித்தி - 8), "நலஞ் சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலா மலர்ந்த மொழி" (3591) என்று மேற்கூறுதலும் காண்க. ஞானகுருவே இந்நான்குக்கும் குருவாவார் என்ப வாதலின் இங்கு ஞான முணர்த்தும் குருவாகி உபதேசிக்க வந்த நிலையின் அதனை முன்னர் வைத்து ஏனையவற்றைப் படி முறையிற் பின் வைத்துக் கூறிய தகுதியுங் காண்க.

நற் றிருமந்திரமாலை -"மந்திரமாலை" என்பது திருமூலர் இதற்கு இட்ட பெயர்;"மந்திரமாலை" (பாயிரம் 86); **நன்மை -** வீடு பேற்றின் மிக்கதொரு நன்மையில்லை யாதலின், வீடு காதலித்துக் "கதிப்பாற் செல்ல வேது நெறி" என்று அறிய ஆவல்கொள்ளும் மாணவர்க்கு அதனை அறிவுறுத்த வந்த ஆகம மாதல்குறித்தது.

ஒன்றவன்றான் என எடுத்து -"ஒன்றவன்றானே" என்பது திருமூலர் திருமந்திர மாலையின் முதற்பாட்டின் தொடக்கம்; "ஐந்து கரத்தனை" என்பது நூலுக்குப்புறம்பே செய்யப்படும் காப்பு எனப்படும் விநாயக வணக்கம்; "போற்றிசைத்து" என்ற அடுத்த பாட்டும் நூலுக்குப் புறம்பே சொல்லிய நூனுதலிய பொருளாம்.

பரம்பொருளாம் ஏன எயிறு அணிந்தாரைச் - சாத்தி என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக; எனவே இத் திருமந்திர மாலை முழுதும் சிவபெருமானைப் போற்றியதென்பதாம். என்னை? உலகுய்யச் சிவாகமப் பொருளாகிய பதி பசு பாச நிச்சயத்தினையும், உயிர்கள் சிவனை யடையும் நெறிகளையும் அவ்வாறடையும் அதனால் வரும் சிவானந்தமாகிய பயனையும், கூறுதலானும், உபதேசம் என்பது தொடங்கி இறுதியில் ஒன்பதாந் தந்திரத்துள்

3590. முன்னியவப் பொருண்**மாலைத் தமிழ்மூவா யிரஞ்சாத்தி**
மன்னியமூ **வாயிரத்தாண் டிப்புவிமேன் மகிழ்ந்திருந்து**
சென்னிமதி யணிந்தார்தந் திருவருளாற் றிருக்கயிலை
தன்னிலணைந் தொருகாலும் பிரியாமைத் தாளடைந்தார். 27

தோத்திரம் - சர்வவியாபி என்ற பகுதியுடன் "பேரும் பராபரன் பிஞ்ஞக னெம்மிறை, யூறுஞ் சகல னுலப்பிலிதானே" "வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே" என்று முடித்தலானும், இது சிவனுக்குச்சாத்தும் திருமந்திரமாலை யாமாறுணர்க. "கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே" என்பது நூனுதலிய பொருளாக நூன்முகத்துக் கூறுதலும் காண்க.

ஏனவெயி றணிந்தார் - சிவன். சங்கார காரணன் என்ற குறிப்பு; "கூற்றுதைத்தான்" என்றது நூன்முகம்.

பரம்பொருள் - எல்லாப் பொருளுக்கும் அப்பாற்பட்டவன்; இது, நூலிறுதியில் **"பேரும் பராபரன்"** என்ற கருத்தாதலும் கண்டுகொள்க. பண்புத் தொகையாகக் கொண்டு மேலாகிய பொருள் என்றலுமாம்.

எடுத்துச் - சாத்தி என வரும்பாட்டுடன் முடிக்க. 26

3590. **(இ-ள்)** முன்னிய...சாத்தி - நினைந்த அப்பொருளினையுடைய திருமந்திர மாலையாகிய தமிழ் மூவாயிரம் மந்திரங்களையும் சாத்தியருளி, மன்னிய...இருந்து - அதன் பொருட்டுப் பெற்ற மூவாயிரம் ஆண்டுகள் இவ்வுலகத்தின்கண் மகிழ்ந்து வீற்றிருந்து; சென்னிமதி...தாளடைந்தார் - திருமுடியில் ஞான சந்திரனைச் சூடிய சிவபெருமானது திருவருளினாலே அவர்தம் திருக்கயிலையினை அடைந்து என்றும் பிரியாதபடி சிவனது சீபாதநிழலிற் சேர்ந்தார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) முன்னிய - இறைவர் விரும்பியருளிய; "தமிழ் வகுப்பக் கண்ணிய அத்திருவருளால்" (3586) என்றது காண்க.

அப்பொருள் - சடையார் தாம் தந்த ஆகமப் பொருள்.

மாலை - சாத்தி - மலர்மாலை போல்வதால் மாலை என்றும் சாத்தி என்றும் கூறினர். மேல் "மலர்ந்த மொழி" (3591) என்றது காண்க.

தமிழ் மூவாயிரம் சாத்தி - மூவாயிரத்தாண்டு - மகிழ்ந்திருந்து ஓர் "ஆண்டுக் கொன்றாக" (3589) என்று முன்கூறியதனைத் தொடர்ந்து பொருள் கொள்க; முன் கூறியது தொடக்கம்; இங்குக் கூறியது முடிபு; **மன்னுதல்** - சிவயோகத்தால் நிலைபெற்றிருத்தல்.

இப்புவிமேல் மகிழ்ந்திருந்து - தாம் முன் இருந்த திருக்கயிலையில் இருத்தலுமின்றி, மேற்குறித்துப் போந்த பொதிகையிற் சேர்தலுமின்றி, இடைவழியில் இங்குத் தங்க நேரிடினும், திருவருள் கைவந்த வழியே இருந்தாராதலின் **மகிழ்ந்து** என்றார்.

3591. நலஞ்சிறந்த **ஞானயோ கக்கிரியா சரியையெலாம்**
மலர்ந்தமொழித் **திருமூல தேவர்**மலர்க் கழல்வணங்கி
அலர்ந்தபுகழ்த் திருவாரூ **ரமணர்கலக் கங்கண்ட**
தலங்குலவு **விறற்றண்டி யடிகடிறஞ்** சாற்றுவாம். 28

திருவருளால்- திருக்கயிலை தன்னில் அணைந்து - தாம் குறித்துப் போந்தபடி பொதிகையில் செல்லாது என்க. அதற்குக் காரணம் திருவருள் ஆணை தந்து செலுத்திய தென்றார்.

ஒருகாலும் பிரியாமை தாள் அடைந்தார் - முன்னர்ப் பிரிந்து போந்தமை போல இனி எக்காலமும் பிரியாதபடி என்க. **தாள் அடைதல்** - சிவசாயுச்சியத் துட் கலந்திருத்தல்; முன் இருந்தநிலை சிவயோக நிலை என்க. *27*

3591. **(இ-ள்)** நலஞ்சிறந்த... கழல் வணங்கி - நன்மை தருதலிற் சிறந்து விளங்கும் ஞானம் யோகம் கிரியை சரியை என்ற நான்கு நெறிகளும் விரிந்த மொழியினையுடைய திருமூல தேவரின் மலர்போன்ற திருக்கழல்களை வணங்கி (அதனாற் பெற்ற திருவருளின் துணைகொண்டு); அலர்ந்த... கண்ட - திசைகளில் எங்கும் விரிந்து பரவிய புகழினையுடைய திருவாரூரிலே அமணர்களது கீழாயின செயல்கள் கலங்குதலைச் செய்த; தலங்குலவு... சாற்றுவாம் - உலகில் விளங்கும் வலிமை பொருந்திய தண்டியடிகளது அடிமைத் திறத்தினை எடுத்துச் சொல்லப் புகுகின்றோம்.

(வி-ரை) இது கவிக்கூற்று. ஆசிரியர் தமது நியமப்படி இதுவரை கூறிப் போந்த சரிதத்தை முடித்துக் காட்டி மேல்வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தருளுகின்றார்.

நலஞ்சிறந்த... மலர்ந்த மொழி - இஃது இதுவரைக் கூறிப்போந்த சரித உள்ளுறையும் சரித சாரமுமாகும்.

நலஞ்சிறந்த - வீடுபேற்றுக்கு நெறிகளாகிய.

திருமூல தேவர் - நாயனாரது பெயர்; இவ்வாறு சில பிரதிகளில் இப்புராணப் பெயர் எழுதப்பட்டது.

கழல்- "கள்ளவினை, வென்று பிறப்பறுக்கச் சாத்தியவீ ரக்கழலும்" (போற்றிப் பஃறொடை) என்ற கருத்து. "பிறவிவிடந் தீர்ந்துலகத் தோருய்ய, ஞான முத னன்குமலர் நற்றிருமந்திரமாலை" (3589) என்றபடி, பிறவியறுக்க வழி தேடித் தந்த வெற்றிக் குறிப்புப்படக் **கழல்** என்றபடி; அணிமாதி சித்திகளும் யோகநிலையும் கூடிக், காலத்தையும் வெற்றிகொண்ட பண்பும் குறிப்பு.

அலர்ந்த புகழ்த் திருவாரூர் - இறைவர் ஆட்சிபுரிந் தமர்ந்தருளும் புகழ்.

அமணர் கலக்கங் கண்ட - விறல் - தண்டியடிகள் சரிதத் தோற்றுவாயும் உள்ளுறையுமாம்; சரித சாரம்; **அமணர் கலக்கமாவது** - ஆரூரில் அமணர்களது நிலைபேற்றினைக் கலங்கச் செய்து அப்புறப்படுத்தியது. **கண்ட - காணுதல்** - செய்தல்; "முதல்வன் தண்டது முதனூலாகும்."

கண்ட - குருடாயிருந்த விழிகள் விழிக்கப்பெற்றுத், தம் கண்ணாலே கண்ட என்பதும் குறிப்பு. "நாட்டமிகு" என்ற முதனூற் கருத்தை விரித்தபடியும், சரிதத் தோற்றுவாய்க் குறிப்புமாம்.

விறல் - அடிமைத் திறத்தின் உறைப்பினாற் போந்த வலிமை. "**வீர** மென்னால் விளம்புந் தகையதோ?" (**திறம்** - சரிதப்பண்பும் வரலாறும்.)

அமணர் கலக்கம் கண்ட - விறல் - என்பன வகை நூலாட்சி; ஆசிரியர் காட்டியருளியவாறு. *28*

சரிதச் சுருக்கம்:- திருக்கயிலையில் திருநந்தி தேவரின் அருள்பெற்றவராய்அணிமாதி சித்திகள் கைவரப் பெற்றுடையாராய் **யோகியார்** ஒருவர் இருந்தார். அவர் அகத்திய முனிவருடன் கூடிய நண்பினாலே அவருடன் சிலநாள் இருப்பதற்கெண்ணி வடகயிலையினின்று பொதிகை மலையினை நோக்கிப் புறப்பட்டு வழிக்கொண்டார்.

வழியே திருக்**கேதாரம்** பசுபதி **நேபாளம்** வழிபட்டுக், கங்கைக் கரையணைந்து நீராடிக், **காசிப்பதியினை** வணங்கி, **விந்தம் சீபர்ப்பதம்** திருக்**காளத்தி,** திரு**வாலங்காடு** பணிந்து, திருக்**காஞ்சிபுரம்** அணைந்து காமாட்சி யம்மையாரையும் திருவேகம்பரையும் பணிந்து, அங்குள்ள யோகமுனிவர்களுடன் விரும்பியிருந்து, சிதம்பரத்தை அடைந்து திருஅம்பலத்திலே இறைவரது **ஆனந்தக் கூத்தினைக்** கும்பிட்டுச் சிந்தை களிவரத் திளைத்து, அமர்ந்திருந்தார். அதன்பின் காவிரிக்கரையினை அணைந்து கடந்து ஏறித் **திருவாவடுதுறையினை** அணைந்து பணிந்தார். அங்கு அத்தானத்தை விட்டு நீங்காததோர் காதலும் விருப்பமும் திருவருளால் எழுந்தது.

அவர், பின்னும், அதனைவிட்டு நீங்கிச் செல்லும்போது காவிரிக்கரைப் புறவிலே பசுக்கூட்டங்கள் புலம்புவனவற்றைக் கண்டார். அவற்றை மேய்க்கின்றவன் **சாத்த**னூரில் உள்ள **மூலன்** என்னும் இடையன் விடந்தீண்டப்பட்டு அங்கு இறந்துகிடந்தான். அவன் உடம்பினைச் சூழ்ந்து கதறிப் புலம்பிப் பசுக்கள் வருந்தின. கருணையினாலே பசுக்களின் துன்பத்தை நீக்கவேண்டுமென்று யோகியார் எண்ணினார். அவற்றை மேய்ப்போன் உயிர்பெற் றெழுந்தாலன்றிப் பசுக்கள் துன்ப நீங்கா என்று கண்டார். தமது உடம்புக்குக் காவல் செய்துவைத்துப் பரகாயப் பிரவேசம் என்ற சித்தியினாலே யோகியார் தம் உயிரை இடையனது உடலிற் பாய்ச்சித் **திருமூலராய்** எழுந்தார். பசுக்கள் துன்ப நீங்கி மகிழ்ந்துபோய் மேய்ந்தன. அவற்றைக் காத்து நீரூட்டி நிழலமர்வித்து மாலையில் அவை பையத் தத்தம் மனைகளை நோக்கிச் செல்ல, அவற்றின் பின்போய் ஊர்ப்பொது எல்லையில் நின்றார். பசுக்கள் தத்தம் மனைகளைச் சேர்ந்தன.

பொழுது கழிந்தும் தன் கணவன் வராமை கண்டு கவலைப்பட்டு வந்த மூலனுடைய மனைவி, அவர் நின்ற நிலைகண்டு இவர்க்கு ஈனம் அடுத்தது என்று வந்து மெய்தீண்ட, அதற்கிசையாது "உன்னோடு எனக்கு ஒரு தொடர்புமில்லை" என்று மறுத்து, அங்கு ஒரு பொது மடத்திற் போய் யோகத்திலிருந்தார். பிற்றை நாள் இடையன் மனைவியும் ஊரவரும்

வந்து பார்த்து, அவர் பித்துற்ற மயலும் பிறிது ஒரு சார்பும் இலர் என்றும், சிவயோகி என்றும், தெரிந்து அவனைக் கொண்டு அகன்றார்கள்.

யோகியார் நதிக்கரைக்கு வந்து தம் உடம்பைத் தேடினார். அது காணப் படவில்லை. யோகச் சிந்தையால் ஆராய்ந்தார். சிவாகமப் பொருள்களைத்தமிழில் உலகுக்கு இவர் வாக்கினால் வெளிப்படுத்தத் திருவுளங் கொண்டு இறைவர், தம் உடலை மறைப்பித்தார் என்றறிந்தார்.

அதன்பின் திருவாவடுதுறையிற் சேர்ந்து இறைவரை வணங்கிக் கோயிலின் புறக் குடபால் மிக்குயர்ந்த அரசின்கீழ்ச் சிவயோக நிட்டை கூடியிருந்து சிவாகமப் பொருளை, ஓராண்டுக்கொன்றாக "ஒன்றவன் றானே" என்று தொடங்கி 3000 ஆண்டுகள் 3000 திருமந்திரங்களை அருளி உலகுக்கு உபகரித்தருளினார். பின்னர்த் திருவருளால் திருக்கயிலை சேர்ந்து என்றும் பிரியாது இறைவர் திருத்தாளடைந்தார்.

கற்பனை:—1.அணிமாதி சித்திகள் கைவரப் பெறுதல்மிக அரிய நிலை; அதனினும் மிக்க நிலை சிவயோகங் கைவருதல்.

2. திருக்கயிலையில் இறைவனுடனிருக்கும் இன்பத்தினும் அணைந்தோர் தன்மை பெற்ற அடியாருடனிருத்தல் மிக்க இன்பமுடைத்து.

3. அருஞ் சித்தி கைவந்த யோகியாராயினும் தாம் எண்ணியபடி காரியம் முடித்தல் இறைவரருளன்றி யியலாது. இங்குச் சிவயோகியாராகிய சித்தர் குறுமுனிபால் உற்ற கேண்மையினால் உடன் சிலநா ளுறைவதற் கெண்ணி வழிக் கொண்டார். ஆயின், இடையில் பசுக்களின் துயர்தீர்க்க எண்ணிச் செய்த செயலின் வழியே கண்ட சிவனருள் பற்றித் தடையுண்டு, ஆவடுதுறையில் போதி நிழலில் 3000 ஆண்டு மூலனுடலிற் றங்கி யோகமிருந்து சிவாகமப் பொருளை உலகுய்ய அருளி மீண்டு திருக்கயிலை யணைந்து மீளாநிலையிற் றிருத்தாள் அடைந்தனர்.

4. ஆகாய கமனம் - வானிற் செல்லுதல்- வல்ல சித்தராயிருந்தும் பொதிகை செல்ல எண்ணிய யோகியார் இடையில் சிவன் பதிகள் வழிபட்டுப் போந்தனர். இஃதே தலயாத்திரையின் முறை.

5. திருவாவடுதுறையுள் வந்து வழிபட்டபோது அந்நிலைமைத் தானத்தை அகலாததொரு கருத்து முன்னி எழுங்குறிப்பினால் யோகியர்க்கு ஆதரவு மூண்டது. இவ்வாறு பெரியோர்பால் சிவனருளின் முதற்குறிப்பு நிகழும். (3573)

6. பசுக்களின் துயரத்தைக் கண்டு இரங்கி அவற்றின் துன்ப நீங்கச் செய்வேன் என்று முற்பட்டார் யோகியார்; இவ்வாறு பிற உயிர்களின் துயருக்கிரங்குதல் பெரியோர்களின் தண்ணளி இயல்பு; இத்தன்மை வரவேண்டிச் சிவனை வேண்டுவர் பெரியோர். "எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங் கவுநின், றெய்வ வருட்கருணை செய்யாய் பராபரமே" என்று வேண்டினர் தாயுமானார். (3575)

7. பிற உயிர்க்கு நன்மை செய்யும் ஆசையும் ஒரோர்கால் துன்பத்துக் கிடமாகும். யோகியார் இங்கு இடையனுகிய மூலனுடம்பிற் புக்குச் செய்த கருணைச் செயலால், மூலன் மனைவி தீண்ட வருதலும், தாம் மறுத்தலும், அவன் சுற்றத்தாராற் ெறுடரப்படுதலும், பின்னர்த் (திருவருளால்) தம் உடல் கரப்பிக்கப் பெறுதலும் நிகழ்ந்தன. "ஈசனேடு டாயினு மாசை யறுமின்கள் ஆசைப் படப்பட வாய்வருந் துன்பங்கள்" என்பது திருமூலரது அனுபவத் திருவாக்கு.

8. சிவயோக முதிர்ச்சியினுல் எல்லாமறியும் அறிவு கூடும். இறைவரது திருவருட் செயல்களும் விளங்கும் (3586).

9. இறைவர்தாமே உயிர்களுய்ய அருளிய சிவாகமங்களின் பொருளைத் திருமூலர் வாக்கினுல் நற்றமிழின் வகுப்பத் திருவுளங் கொண்டு அவ்வாறே நிகழ்வித்தனர். இஃது இறைவர் உயிர்களின் மேல் வைத்த பெருங்கருணைத் திறம்; (3586).

தலவிசேடம்:- ஆண்டாண்டுரைக்கப்பட்டன.

தலங்களாவன:- 1. திருக்கேதாரம்; 2. பசுபதி நேபாளம்;3. அவிமுத்தம் (காசி); 4. விந்தம்; 5. ஸ்ரீபர்ப்பதம்; 6. திருக்காளத்தி; 7. திருவாலங்காடு; 8. திருக்கச்சி யேகாம்பரம்; 9. திருப் பெரும்பற்றப்புலியூர். 10. திருவாவடு துறை.

திருமூலதேவ நாயனுர் திருவடி வாழ்க.

திருமூலதேவ நாயனுர் புராணம் முற்றும்

குறிப்புக்கள்

I

துடிசைகிழார் - திரு. A. சிதம்பரனுர் எழுதியவை

(அ) ஆசிரியர் வரலாறு

சேக்கிழார் பெருமான் திருமூலநாயனுருடைய சரித்திரத்தின் **பிற்பகுதியைப்** பெரிய புராணத்தில் விரிவாகக் கூறி, **முற்பகுதியைப்** பற்றிச் சில குறிப்புக்கள் மாத்திரம் கொடுத்துள்ளார்.

அக் குறிப்புக்களைக் கொண்டும், அவர் செய்த நூல்களாகிய **"உபதேசம் முப்பது"**—**"மந்திரம் மூந்நூறு"**—**"தமிழ் மூவாயிரம்"** என்னும் நூல்களின் உட்சான்றுகளைக் கொண்டும் அவருடைய வரலாறு முழுவதும் விரிவாகத் தனியாக எழுதப்பட்டுள்ளது. அவ்வரலாற்றிலுள்ள **முற்பகுதியின்** சுருக்கத்தை ஈண்டுத் தருகின்ருேம்:—

"திருமந்திர ஆசிரியர் தம் தாய் தந்தையர் இட்ட **சுந்தரர்** என்ற பெயரோடு இளமையிலேயே தென் தமிழ் நாட்டகன் பொதியில் இருந்த திருமுனிவராகிய அகத்தியனுர் தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து, **உலக நூல்களைக்** கற்று, அதில் சிறப்புற்று விளங்கிச், சங்கத் தலைவராய் இந்த **அகத்திய**ருடைய நட்பைப் பெற்றுப்பின், அவருடைய ஆதரவில் **அறிவுநூல்**களைக் கற்பான்வடகயிலையில் நடைபெற்று வந்த குருகுலம் சென்று, அங்கே, சனகர் - சனந்தனர் - சனுதனர் - சனற்குமாரர் - சிவயோக மாமுனி - மன்றுதொழுத பதஞ்சலி - வியாக்கிரமர் ஆகிய எழுவருடன் முழுத்தமிழின்படி மன்னும்வேத ஆகமங்களை **நந்தி** யெம்பெருமானிடம் கற்றுத், தேர்வு முடிந்ததும் நந்தியெம்பெருமாஞல் **"நாதர்"** என்ற பட்டமும் அவருடைய அருளும் பெற்றுக் கயிலையிலேயே தவம் இயற்றிக் கொண்டு இருந்தார். அப்படி இருக்கும்போது, பதஞ்சலியும் வியாக்கிரமரும், கூத்தப்பெருமானுடைய ஆனந்த நடனக் காட்சியைக் காணத் தில்லைக்குப் போகப் புறப்படவே, அவர்களுடன் **சுந்தரநாதரும்** தில்லைசென்று, சின்ஞட்டங்கி நடன தரிசனம் செய்தபின், பதஞ்சலியும் வியாக்கிரமரும் தில்லையிலேயே ஆசிரமம் அமைத்துக் கொண்டு தங்கிவிட்டார்கள்.

சுந்தரநாதர் மாத்திரம் மறுபடியும் கயிலைசென்று தவம் இயற்றிக்கொண்டிருக்க, ஒருநாள் குறுமுனிபால் உற்றதொரு கேண்மையினுல் அவருடன் சில நாள் உறைவதற்கு எண்ணியவாராய், கயிலையினின்றும் புறப்பட்டு வழிநெடுக உள்ள சிவ தலங்களாகிய பசுபதி நேபாளம் - கேதாரம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு, திருவாவடுதுறை வந்து சேர்ந்தார். திருவாவடுதுறையில் காவிரியின் எதிர்க்கரையில் சாத்தனூர் இடையன் **மூலன்** என்பவன் வினைமாண்டு இறந்து போக, திருவருளால் ஆக்கள் எல்லாம் மூலனுடைய தேகத்தைச் சுற்றிச் சுற்றிக் கதற, அவ்வாக்களின் துன்பத்தை நீக்குவான் கருதி, தம்முடைய உடலுக்கு அரண் செய்து வைத்துவிட்டுத் தம்முடைய உயிரைச் சுந்தரநாதர் மூலனுடைய உடம்பில் பவனவழியாகப் பாய்த்தினுர். பாய்தலும் **மூலனுக** எழுந்தார். ஆக்கள் துயர் நீங்கின. அதன்பின் நடந்த வரலாறு புராணத்திலேயே உள்ளது காண்க.

திருமந்திரத்தைப் பற்றிப் பேசப் புகுமுன் திருமந்திர ஆசிரியருடைய வரலாறும் முழுதும் எல்லாரும் உ ணர வேண்டும் என்ற நோக்கத்துடன் சுருக்கமாகக் கூறப்பட்டது.

விரிவான வரலாறு கடா விடைகளுடனும் ஆதாரங்களுடனும் தனியாக எழுதப்பட்டு உள்ளது.

(ஆ) தமிழ் மூவாயிரம்

இந்நூல் "**திருமந்திரம்**" எனவும், "**மந்திரமாலை**" எனவும் பெயர்பெறும்.

சுந்தரநாதர் என்ற இயற்பெயரை உடைய திருமூலநாயனார் செய்தது மூன்று நூல்கள். அவை:—உபதேசம் முப்பது - மந்திரம் முந்நூறு - தமிழ்மூவாயிரம். முதலிரண்டு நூல்களும்மூலனுடைய உடலில்புகுமுன் செய்யப்பட்டது. மூலனுடைய உடலில் புகுந்தபின் செய்யப்பட்டது "**தமிழ்மூவாயிரம்**" ஒன்றே.

தமிழ் மூவாயிரத்துக்கு "மந்திரம்" எனப் பெயர் வருவானேன் என்றால்,

> **"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
> **மறைமொழி தானே மந்திரம் என்ப"**

என்ற தொல்காப்பியச் சூத்திரப்படி, நிறை மொழி மாந்தராகிய திருமூலநாயனாரால், சிவபெருமானது திருவருட் குறிப்பென்னும் ஆணையால், மறை பொருட் கூற்றுக்களையுடைய செய்யுட்களால் யாக்கப்பட்டிருத்தலினாலே '**மந்திரம்**' எனப்பட்டது.

இத்திருமந்திரம் என்னும் நூலானது பாயிரம் ஒன்றும், தந்திரங்கள் ஒன்பதுமாகப் பத்துப் பகுதிகளை யுடையது.

பாயிரம்:—(1) சிறப்புப் பாயிரம் (2) பொதுப்பாயிரம் (3) தற்சிறப்புப் பாயிரம் என முப்பகுதிகளாகத் திகழ்வது. 1- 156 பாட்டுக்களை யுடையது.

(இ) சிறப்புப் பாயிரம்

சிறப்புப்பாயிரம் என்பது திருமூலநாயனாருடைய மாணாக்கர்களால் பாடப்பட்டது. "குருமடவரலாறு" "திருமந்திரத் தொகைச் சிறப்பு" என்ற பகுதிகளைக் கொண்டது.

(ஈ) பொதுப்பாயிரம்

பொதுப்பாயிரம் என்பது (1) கடவுள் (2) மழை (3) நீத்தார் (4) அறம் (5) முடியுடைவேந்தர் என்ற ஐவகை வாழ்த்துக்களையுடையது,

"ஆயிரமுகத்தான் அகன்றதாயினும் பாயிரம் இல்லது பனுவ லன்றே" என்ற சூத்திரப்படி, திருமூலநாயனார் தாம் பாடிய நூலுக்குப் பாயிரம் கூறியுள்ளார்.

பாயிரத்திலே திருமூலநாயனாரால் கூறப்பட்ட 1—2—3—4 பகுதிகள் கடவுள் வாழ்த்திலும், 5-6 பகுதிகள் நீத்தார் வாழ்த்திலும், 7-ம் பகுதி முடியுடை வேந்தர் வாழ்த்திலும், 8ம் பகுதி மழை வாழ்த்திலும், 9-10 பகுதிகள் அறம் என்ற வாழ்த்திலும் அடங்குவனவாம்.

(உ) தற்சிறப்புப் பாயிரம்

தற்சிறப்புப் பாயிரம் என்பது, திருமூலநாயனுர் தம்முடைய குருபரம்பரையைப் பற்றியும், தம்முடைய வரலாற்றைப் பற்றியும் மாணுக்கர்களுக்குக் கூறும் பகுதியாகும்.

கடவுள் வாழ்த்து என்னும் பகுதியில் நம்நாயனுர் கடவுள் ஒருவனே என்றும், அவ்வொருவன் யாரென்ருல் கூற்றை உதைத்தவன் என்றும், அவன் தேவர்களால் "நக்கன்" என்று தொழப்படும் நாதன், என்றும், அவன் பெயர் 'சிவன் என்பதே' என்றும் கூறியதோடு சிவனுடைய குணங்களை எல்லாம் ஐம்பது செய்யுள்களில் விரிவாகக் கூறியுள்ளார்.

நம் நாயனுர் "சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே" என்றதாலும் "சிந்தை செய்து ஆகமம் செப்பலுற் றேனே" என்றதாலும், அக்காலத்து, அஃதாவது,கிமு3100-ல், வேத ஆகமங்கள் தலைதடுமாறி இருந்தமையாலும், திருவருட்டுணையால் அவைகளைப்பற்றி "வேதச் சிறப்பு", "ஆகமச் சிறப்பு" என்ற பகுதிகளில் கூறியுள்ளார்.

வேதத்தைவிட்ட அறம் இல்லை என்றும், வேதத்திலே ஓத்த் தகுந்த அறங்கள் எல்லாம் உள என்றும், தர்க்க வாதத்தை விட்டு, வளமுற்ற வேதத்தை ஓதியே அறிஞர் வீடுபெற்ருர்கள் என்றும், வேதமோடு ஆகமம் இறைவனுல் கொடுக்கப்பட்டது என்றும், வேதம் பொதுவும் ஆகமம் சிறப்பும் ஆகும் என்றும், நந்தியெம்பெருமான் மூலமாக நமக்குக் கிடைத்த ஆகமங்கள் காரணம் - காமிகம் - வீரம் - சிந்தம் - வாதுளம் - வியாமளம் - கலோத்தரம் - சுப்பிரம் - மகுடம் ஆகிய ஒன்பதே என்றும், அந்த ஒன்பது ஆகமங்களின் சாரங்களையே ஒன்பது தந்திரங்களாகத் தாம் பாடியதாகவும் கூறியுள்ளார்.

பாயிரத்தோடுங் கூடிய ஒன்பது தந்திரங்களைக் கொண்ட திருமந்திரம் என்னும் இந்நூலைக் "காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்,ஞாலத் தலைவனை நண்ணுவர்" என்று பயனும் கூறியுள்ளார்.

இதுவரை பாயிரத்தைப் பற்றிச் சுருக்கமாகக் கூறினேம். இனி, ஒன்பது தந்திரங்களைப் பற்றிச் சிறிது கூறி இதனை முடிப்போம்.

(ஊ) முதல் தந்திரம் (காரண ஆகமம்) (*157—322*)

ஞானமுதல் நான்கு பொருள்களாகிய ஞானத்தில் சரியை - ஞானத்தில் கிரியை - ஞானத்தில் யோகம் - ஞானத்தில் ஞானம் என்பனவற்றைக் கூறவந்த நாயனுர் முதலில் இறை - உயிர் - மலம் என்று சொல்லப்படுகின்ற மூன்றில், இறை எப்படி அநாதியோ, அப்படியே உயிரும் மலமும் அநாதி என்றும், மலத்தோடு கூடிய உயிர் தானே சென்று இறைவனை நண்ணுது என்றும், ஆனுல் இறைவன் நண்ணினுல் உயிரிடத்துள்ள மலம் ஒடுங்கி, ஞானம் பிரகாசித்து, உயிர் பேரின்பத்தை அனுபவிக்கும் என்றும் கூறி, இறைவன் உயிர்களை எவ்வாறு பக்குவப்படுத்துகின்ருன் என்பதையும் விளக்குகிருர்.

ஆன்மாக்களிடம் உள்ள மலம் நீங்கும் பொருட்டு இறைவன் கருணையினுல் ஆன்மாக்களுக்கு உடல் - கருவி - உலக இன்பங்களைக் கொடுத்து, உடல் - கருவிகளைக் கொண்டு உலக - இன்பங்களை அநுபவிக்கும் போது, நல்லது கெட்டது இன்னதென்றும், நிலை உள்ளது நிலையில்லாதது இன்னதென்றும் அறிந்து உய்ய வேதாகமங்களைக் கொடுத்து,

இளமை - செல்வம் - யாக்கை முதலியவற்றின் நிலையாமையை உணர்த்தி,வேதத்தில் விதிக்கப்பட்ட கொல்லாமை, புலால் உண்ணாமை, பிறர் மனை நயவாமை, அன்புடைமை, நடுவு நிலைமை, கள்ளுண்ணாமை முதலிய அறங்களைச் செய்து, தத்துவங்களை ஆய்ந்து, முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாக ஏறி, தத்துவ உருவம், தத்துவக் காட்சி, தத்துவசுத்தி, ஆன்மஉருவம் ஆன்மக்காட்சி, ஆன்மசுத்தி, சிவஉருவம், சிவக்காட்சி, சிவயோகம், சிவபோகம் ஆகிய இயல்புகளை உணர்ந்து, ஒப்பிலா ஆனந்தமாகிய உள்ஒளி புக்கு, செப்பரிய சிவங் கண்டு அப்பரிசாக அமர்ந்திருத்தலே ஆன்மா அடையும் நிலை என்று கூறி, உப்பானது அப்பினிற் கூடி ஒன்றுகுமாறு போல், செப்பிடிற் சீவன் சிவத்துள் அடங்கும் என்ற எடுத்துக்காட்டும் கூறிமுடித்துள்ளார்.

குறிப்பு:— திருமூலர் முதற்றந்திரத்தில் கூறிய அறங்களையே திருவள்ளுவரும் திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால்களில் கூறியுள்ளது நோக்கத்தக்கது.

(எ) இரண்டாம் தந்திரம் (காமிக ஆகமம்) (323—530)

முதற் றந்திரத்தில் கூறப்பட்ட அறநெறி - ஒழுக்க நெறியில் நின்றவர்கள் அடையும் நலமும், நில்லாதவர்கள் அடையும் துன்பமும் இத்தன்மையவென, இந்த இரண்டாம் தந்திரத்தில் **புராண** கதைகள் முகமாக எடுத்துக்காட்டி, உயிர்கள் அறவழி நிற்பதை வலியுறுத்துகின்றார்.

முப்புர நிருதர்களுடைய ஆட்சி, நடுநிலைமை தவறி, உலகமக்களுக்குத் துன்பத்தை விளைத்ததனுல், அகத்தியர் பரமேச்சுரருடைய ஆணையால் முப்புர நிருதர்களை விந்தம்-கிரவுஞ்சம் முதலிய இடங்களில் சண்டையிட்டு வென்று, பொதிய மலைவரை சென்று, நிருதர்களைப் பொதிய மலைக்கு வடபால் செல்லவொட்டாமல் தடுத்த வரலாறு **'அகத்தியம்'**என்ற தலைப்பிலும்; பரமேச்சுரனுடைய எட்டு வீரச் செயல்களாகிய திருக்கோவலூரில் அந்தகனை வதைத்ததும், திருப்பறியலூரில் தக்கன் வேள்வி தகர்த்ததும், திருக்கண்டியூரில் அயன் சிரத்தை அரிந்ததும், திருவிற்குடியில் சலந்தரனைக் கொன்றதும், திருவதிகையில் முப்புரத்தவர்களை வென்றதும், திருவழுவூரில் யானையை உரித்ததும், திருக்கடவூரில் காலனைக் காலால் உதைத்ததும், திருக்குறுக்கையில் காமனை எரித்ததும் **'பதிவலி'** என்ற தலைப்பிலும் - பார்வதி தவம் - முப்புர நிருத அரசர்களாகிய உடுக்கண்ணன் - மரைக்கண்ணன் - அறிவுடை மாலி என்பவர்களுக்கு அபயம் கொடுத்தது - அயனுக்கு வாளும் - அரிக்கு ஆழியும் - இராவணனுக்கு நாளும் - வாளும் - கொடுத்தது - விசார சருமருக்குச் சண்டிகேசுவர் பதம் கொடுத்தது - சூரபன்மன் வதம் முதலியவை **"இலிங்க புராணம்"** என்ற தலைப்பிலும்.

சக்கரம் பெற்ற தாமோதரன், தக்கன் வேள்வியில், சக்கரத்தை வீர பத்திரர் மேல்விட, அதனை அவர் அணிந்துள்ள வெண்டலை மாலையில் ஒன்று கவ்விக் கொள்ள, மால் அரன் தன்னை அர்ச்சித்து மீண்டும் சக்கரம் பெற்றவை **'சக்கரப் பேறு'** என்ற தலைப்பிலும்.

பின் ஒரு சமயம் அரியும் அயனும் பேதைமையாலே தாங்களே **'பிரான்'** என்று வாதிக்க, அவர்களிடைப் பரமன் அனலாய்ப் பரந்து நிற்க, அரி அடியையும், அயன்

முடியையும் தேட, முடியாதவர்களாய் ஓய்ந்துபோய் நிற்க, அவர்களுக்கு அரன் அருள் செய்த வரலாறு **'அடிமுடிதேடல்'** என்ற தலைப்பிலும்.

எலும்புங் கபாலமும் படைப்புக்கு முதற்காரணம் என்றும், எலும்புங் கபாலமும் எந்தைபிரான் ஏந்திலனேல் படைப்பு முதலிய ஐந்தொழில்கள் நடைபெறு என்றும் **'எலும்புங் கபாலமும்'** என்ற தலைப்பிலும்.

படைப்பு - காப்பு - அழிப்பு - மறைப்பு - அருளல் என்ற தலைப்புக்களில் ஐந்தொழில் விளக்கமும், அயன் - மால் - உருத்திரன் - மகேசன் - சதாசிவன் ஆகியோரால் படைத்த புவனங்களையும், எண்பத்து நான்கு நூறுயிர சீவபேதங்களையும் பரிபாலிக்கும் விவரமும்.

ஒருமலம் - இருமலம் - மும்மலம் உடைய சீவர்கள் உற்பவிக்கு முறை 'கருஉற்பத்தி' என்ற தலைப்பிலும், உற்பவித்த சீவர்கள் சிவநிந்தை - மாகேசுர நிந்தை - குருநிந்தை செய்யாமல் பெரியோரைத் துணைகொண்டு, சற்பாத்திரம் அசற்பாத்திரம் தெரிந்து ஒழுகினுல் இறைவன் பொன்னடி சேர்வர் என்றும் விளக்கியுள்ளார்.

(ஏ) மூன்ருந் தந்திரம் (வீர ஆகமம்) (531—863)

இத்தந்திரத்தில் எண் வகை யோகங்களாகிய கடிவு (இயமம்), **நோன்பு** (நியமம்), **இருக்கை** (ஆதனம்), **வளிநிலை** (பிராணுயாமம்), **தொகை நிலை** (பிரத்தியாகாரம்), **பொறைநிலை** (தாரணை), **நினைதல்** (தியானம்), **கலத்தல்** (சமாதி) ஆகியவைகளைப் பற்றியும், அவைகளால் ஏற்படும் பேற்றையும் அவைகளால் உண்டாகும் எண்வகைச் சித்திகளையும் கூறி, சித்திகளைப் பெறக் கருவியாயிருக்கும் உடம்பை அழியாதபடி நோயின்றி வைத்துக்கொள்ளக் கூடிய வழிகளைக் **'காயசித்தி'** என்ற தலைப்பில் கூறி, உடம்பினுள் உத்தமன் கோயில் கொள்ளும்படி உடம்பைப் பக்குவப்படுத்த முதன் முதல் அனுசரிக்க வேண்டிய **வாரசரம் - வாரசூலை - அமுரிதாரனை - ஆயுள் பரிட்சை - காலச்சக்கரம்** முதலியவைகளை விளக்கிப், பின், **கேசரியோகம் - பரியங்கியோகம் - சந்திரயோகம்** முதலியவைகளைப் பற்றி விவரித்துள்ளார்.

கேசரியோகம் அடயோகத்தின் பாற்படும். இது மிகவும் கடினமானது. பயிற்சிக்குச் சிரமமானது. எல்லோராலும் அனுசரிக்க முடியாதது.

பரியங்கியோகம் என்பது இல்லாளுடன் கூடிச்செய்வது. இது காதலனும் காதலியும் கருத்து ஒருமித்து ஆதரவுபட்டுச் செய்யும் சாதகம். இஃது எல்லோருக்கும் முடியாதது. தகுந்த காதலி அகப்படுவது அருமை. சுந்தர மூர்த்திநாயனுர் பரவையார் - சங்கிலியார் போன்றவர்களுக்கும், திருவள்ளுவர் - பாப்பம்மாள் (வாசுகி) போன்றவர்களுக்கும் ஏற்றது.

சந்திரயோகம் என்பது சந்திரன்கலை 16, சூரியன் கலை 12, தீக்கலை 64, தாரைக்கலை 4 ஆகத் தொண்ணூற்ருறு கலைகளையும் அறிந்து, வளர்பிறை - தேய் பிறைகளில் பயிலப்படும் யோகம் என்றும், எல்லாவற்றிலும் எண்வகை யோகமே (அட்டாங்க யோகம்) சிறந்ததென்றும் கூறிமுடித்துள்ளார்.

மேலே கூறப்பட்ட யோகமுறைகளை யெல்லாம் விவரமாகச் **'சிவயோகம்'** என்ற நூலில் விளக்கியுள்ளேன். இந்நூலிலே, வடமொழி நூல்களில் கூறப்பட்டுள்ள இராஜயோகம் - அடயோகம் - கர்மயோகம் - பக்தியோகம் - சாங்கிய யோகம் முதலியவைகளைப் பற்றியும் இருமுறைகளின்படி உள்ள யோகப் பயிற்சிகளின் பேதங்களையும் ஆண்டு விளக்கியுள்ளேன் கண்டுகொள்க.

(ஐ) நான்காந் தந்திரம் (சிந்தாகமம்) *(864—1393)*

இத்தந்திரத்தில் சிந்தாகமத்தின் முக்கியப் பகுதிகளாகிய அசபை - திரு அம்பலச்சக்கரம் - திரிபுரச் சக்கரம் - வயிரவி மந்திரம் - ஏரொளிச் சக்கரம்-சாம்பவி மண்டலச் சக்கரம் - புவனாபதிச் சக்கரம் - நவாக்கரி சக்கரம் முதலாகிய 13 தலைப்புக்களில், சக்கரங்கள் வரையும் விதமும், சக்கரங்களின் அறைகளில் அடைக்கப்படும் ஐந்தெழுத்துக்கள் - பீசங்கள் முதலியவைகளைப் பற்றியும், வழிபடும் முறைகளைப் பற்றியும் கூறியுள்ளார்.

சிதம்பரத்தில் மறைவிடத்தில் (இரகசியத் தானத்தில்) பதிக்கப்பட்டிருப்பதும் திருவாரூரில் தியாகப் பெருமான் மேனியில் இருப்பதும் திருவம்பலச் சக்கரமே யாகும்.

'அசபை' என்ற மந்திரத்தைப் பற்றித் தனியாக எழுதப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் எல்லாம் தீக்கை பெற்றவர்களுக்கு ஆசான் அறிவிக்கக் கூடிய பொருள்கள் ஆதலால் ஈங்கு இவ்வளவுடன் கூறி முடிக்கின்றேன்.

(ஒ) ஐந்தாம் தந்திரம் (வாதுள ஆகமம்) *(1394—1547)*

வாதுள ஆகம சாரமாகிய இத் தந்திரத்தில், சைவ பேதங்களையும், சரியையாதி நான்கு பாதங்களையும், சன்மார்க்கம் முதலிய நான்கு மார்க்கங்களையும், சாலோகம் முதலிய நான்கு பதங்களையும், மந்தம் முதலிய நான்கு தரங்களையும் இருபது தலைப்புக்களில் விரிவாகக் கூறி, ஆறு சமயங்களும் குருடர் யானை கண்ட கதையை ஒக்கும் என்றும், ஆதலின் ஆறு சமயங்களையும் கண்டு, அச்சமயங்களின் பொருள்களையும் உணர்ந்து தேறித், தெளிந்தால், கடைசியில், அறுசமய மார்க்கங்கள் அவமுடைய தென்றும், சிவகதியே கதி மற்றுள்ள வெல்லாம் பவகதி என்றும் ஒவ்வொருவரும் அறிவார் என்று விளக்கியுள்ளார்.

(ஓ) ஆறும்தந்திரம் (வியாமள ஆகமம்) *(1548—1675)*

வியாமள ஆகம சாரமாகிய இத் தந்திரத்தில், மும்மலமுடைய மானிட வர்க்கத்தில் பக்குவம் உடையோர்க்குச் சிவபெருமானே குருவாக வந்து, திரு நோக்கால், பரிசத்தால், திகழும் வாக்கால், பாவனையால், மிகு நூலால்,யோகப் பண்பால், பரவி வரும் அருத்திரியால் தீக்கை செய்து மலத்தைப் போக்கி, உபதேசம் செய்து, துறவுநிலை கூறித், தவத்தை மேற்கொள்ளச் செய்து வீடு பேற்றை அருளும் விதத்தை 14-தலைப்புக்களில் கூறிமுடித்துள்ளார்.

(ஔ) ஏழாந் தந்திரம் (காலோத்தர ஆகமம்) *(1676—2082)*

காலோத்தர ஆகம சாரத்தை இத் தந்திரத்தில் 30 பகுதிகளில் விளக்கியுள்ளார் திருமூலர்.

ஆறு ஆதாரங்களைப் பற்றியும், அண்டலிங்கம் - பிண்டலிங்கம் - சதாசிவ லிங்கம் - ஆத்மலிங்கம் - ஞானலிங்கம் - சிவலிங்கம் என்ற 1 முதல் 7 வரை யுள்ள தலைப்புக்களில் கூறியவற்றை **'சிவலிங்க உருவ விளக்கம்'** என்னும் நூலில் பரக்கக் கூறியுள்ளேன்.

சம்பிரதாயம் - திருவருள் வைப்பு - அருள் - ஒளி - சிவபூசை என்ற தலைப்புக்களில் கூறியவற்றை **சிவபூசை விளக்கத்திலும், குருபூசை** - மகேசுர பூசை - அடியார் பெருமை - போசன விதி - பிட்சாவிதி முதலிய தலைப்புக்களில் கூறியவற்றை **மாகேசுர பூசை விளக்கத்திலும்** விரிவாகக் கூறியுள்ளேன்.

ஞானிதன் ஆகம் தீயினுல் வெந்திடில், நாடெலாம் வெம்பும் என்றும், மண்ணினில் மழை விழா, வையகம் பஞ்சத்தால் வெதும்பும் என்றும், எண்ணிலா மன்னர்கள் அரசை இழப்பார், ஆதலின் ஞானியின் உடலைச் சமாதி செய்ய வேண்டுமென்றும் கூறிப், **பூரண குகைநெறி - சமாதிக் கிரியை** என்ற தலைப்பில் சமாதிக் - குகை செய்யும்முறை - சமாதியில் செய்யும் கிரியைகள் முதலியவைகளைப் பற்றி கூறியுள்ளார்.

'விந்துற்பனம்', 'விந்துசயம்', 'போகசர வோட்டம்' என்ற தலைப்புக்களில், விந்து உற்பத்தி முறை, விந்துவைக் கட்டி வீணைத் தண்டுடே வெளிப்புறத்தானேக்கி, காணுக்கண், கேளாச் செவி என்றிருப்பார்க்கு வாணுள் அடைக்கும் வழி முதலியவற்றை விவரித்துள்ளார்.

பின் ஆதித்தன் நிலையையும் ஆன்மாக்களின் இலக்கணமும் கூறி ஐந்திந்திரியங்களையும் அடக்கு முறைமையை "அஞ்சு மடக்கில் அசேதனமாம் என்றிட்டு, அஞ்சு மடக்கா அறிவறிந் தேனே" என்று தாம் அறிந்து அநுபவித்த முறையைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

பின் கடைசி ஐந்து தலைப்புக்களில் சற்குரு - அசற்குருவைப் பற்றிக் கூறிக், கூடா வொழுக்கம் இற்றெனக் கூறிக் கண்டித்து,மாந்தர் நல்வழியில் ஒழுக இதோபதேசம் செய்து முடித்துள்ளார். அவ்வுபதேசத்தில்,

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே"

"இக்காய நீங்கி இனியொரு காயத்திற்
புக்குப் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்(று)
அக்கால முன்ன அருள்பெற லாமே"

இவை முக்கியமானவை.

(க) எட்டாம் தந்திரம் (சுப்பிர ஆகமம்) (2083—2600)

திருமூல நாயனுர் சுப்பிர ஆகம சாரத்தை இத் தந்திரத்தில் 33 பகுதிகளில் விளக்கியுள்ளார்.

1-2-3-பகுதிகளில் **புரிஅட்டகாயம்** என்ற சூக்குமதேகத்தைப் பற்றியும், கூடுவிட்டுக் கூடுபாயும் முறைமையைப் பற்றியும் அவத்தை பேதங்களைப்பற்றியும், 4-ம் பகுதியில் தன்னை அறியும் அறிவைப்பற்றியும், 5-ம் பகுதியில் வேதாந்தம் - சித்தாந்தம் - நாதாந்தம் - போதாந்தம்- யோகாந்தம் - கலாந்தம் என்னும் ஆறு அந்தங்களைப் பற்றியும், 6-ம் பகுதியில் **இறை - உயிர் - மலம்** என்ற முப்பொருள்களைப் பற்றிக் கூறி **ஒலி அணு - ஒளி அணு - பொருள் அணு - உயிர் அணு** முதலியவைகளைப் பற்றியும், 7-ம் பகுதியில் தாடலை (தாள் + தலை) என்றதன் பொருள் விளக்கம் "காலுத் தலையும் அறியார் கலதிகள், **கால்** அந்தச் **சக்தி அருள்** என்பர் காரணம், பாலொன்று ஞானமே பண்பார் **தலை உயிர்**" என்று கூறி, கால் அந்த ஞானத்தைக் காட்ட வீடாகுமே என்று தெளிவு படுத்தியுள்ளார்.

8 முதல் 17 வரை உள்ள பகுதிகளில் காமம் - வெகுளி - மயக்கம் என்ற முக்குற்றம்; தத் - துவம் - அசீ என்ற முப்பதங்கள்; சிவபரம் - பரம்பரம் - தற்பரம் என்ற முப்பரங்கள்; சிவ - சீவ - பர துரியங்கள்; சீவன் முத்தி - பரமுத்தி - சிவமுத்தி என்ற மும்முத்திகள்; அரு - அருவுரு உரு என்ற மூவுருவங்கள்; சிவ - பர - சீவ கரணங்கள்; மாயப்பாழ், போதப்பாழ், வியோமப்பாழ் என்ற முப்பாழ்கள் முதலியவைகளைப் பற்றி விவரித்துள்ளார்.

18- ம் பகுதியில் காரிய உபாதியாகிய சீவ உபாதிகள் ஏழும், காரண உபாதியாகிய பர உபாதிகள் ஏழும் கூறப்பட்டுள்ளன.

19-ம் பகுதியில் உபசாந்தத்தைப் பற்றியும்; 20-ம் பகுதியில் உள்ளத்தே உணர்ந்த ஒருவனைப் புறத்தே கூருது அநுபவிக்கும் முறைமையும்; 21-ம் பகுதியில் சுழுமுனை நாடியின் ஊடு ஒடுங்கியுள்ள சோதியைப் பற்றியும்; 22-ம் பகுதியில் அச்சோதி தரிசனத்தின்போது உண்டாகும் அவத்தை நிலையையும்; 23-முதல் 27-வரை உள்ள பகுதிகளில், மாயை ஒழியும் விதமும், **விட்ட -விடாத - விட்டுவிடாத** இலக்கணைகளைப் பற்றியும்; தத்துவமசி வாக்கியம் சித்தாந்த முடிபையே குறிக்கின்ற தெனவும்; உடலானது மாயை நீங்கி ஒளி உருவத்தைப் பெறும் நிலையையும் கூறியுள்ளார்.

28 முதல் 32 வரையில் உள்ள பகுதிகளில் வாய்மை - அவா அறுத்தல் - ஞானி செயல் - பக்தி - முக்தி முதலியவைகளைப் பற்றி விவகரித்துள்ளார். 33 பகுதியில் காலினில் ஊறும் - கரும்பினிற் கட்டியும், பாலினுள் நெய்யும், பழத்தினுள் இரதமும், பூவினுள் நாற்றமும்போல் இறைவன் எங்கும் கலந்து நின்ற தன்மையைக் கூறி, உயிரானது விருப்பொடு விகிர்தனை நாடிச் செல்லும் பொற்கொடி போல, இறைவனை மனத்திடைக் கூடி மகிழ்ந்து இருக்கும் என்று கூறி முடித்துள்ளார்.

(கா) ஒன்பதாந் தந்திரம் (மகுட ஆகமம்) (2601—3000)

திருமூல நாயனுர் இத் தந்திரத்தில் மகுட ஆகமத்தின் சாரங்களை 22 பகுதிகளில் விவரித்துள்ளார். 1 முதல் 4-வரை உள்ள பகுதிகளில் குருமட தரிசனம் - ஞான குருதரிசனம் - பிரணவ சமாதி - ஒளி என்பனவற்றைக் கூறி, 5 முதல் 7 வரை உள்ள பகுதிகளில், தூல - சூக்கும - அதிசூக்கும பஞ்சாக்கரங்களின் தன்மைகளை விளக்கி, 8-ம் பகுதியில், **அற்புதக்** கூத்து, **தற்பரக்** கூத்து, **பொற்றில்லைக்** கூத்து, **சுந்தரக்** கூத்து, **பொற்பதிக் கூத்து,**

சிவானந்தக் கூத்து என்ற இறைவனின் ஐந்தொழில் நடனங்களைப் பற்றியும் ஆனந்தத்தாண்டவத்தைப் பற்றியும் கூறியுள்ளார். இங்கே கூறிய திருக்கூத்துக்களைப் பற்றி **"ஐந்தொழில் நடன விளக்கம்"** என்னும் நூலின் பரக்கக் காட்டியுள்ளேன். ஆண்டுக் கண்டுகொள்க.

9-ம் பகுதி முதல் 16 வரை உள்ள பகுதிகளில், ஆகாயப்பேறு, ஞானோதயம் சத்திய ஞானனந்தம், சொரூப உதயம், ஊழ், சிவதரிசனம், சிவசொரூப தரிசனம் முத்தி பேதம் முதலியவைகளைப் பற்றிக் கூறி, 17-ம் பகுதியில் மறைந்த பொருள்களைக் கொண்ட பாக்களின் தொகுதியைக் கூறியுள்ளார்.

18 முதல் 22-வரையுள்ள பகுதிகளில் மோனசமாதி - வரையுரை மாட்சி - அணைந்தோர் தன்மை - ஆகியவைகளைப் பற்றிக் கூறி எங்கும் நிறைந்துள்ள எம்மிறையை வணங்கித் தோத்திரம் செய்து ஆகமத்தை முடித்துள்ளார்.

(திருமூலர் திருவடி வாழ்க)

II

(Dr. M. **இராசமாணிக்கம்,** M.O.L., L.T., Phd., அவர்கள்)

1. **கேதாரம்** (செ3) இந்தியாவிலுள்ள மிகப்பழைய 12 இலிங்கங்களுள் இங்குள்ள இலிங்கமும் ஒன்று.
2. **நேபாளம்:** நேபாளத்தின் தலைநகரான கட்மண்டு நகரத்திற்கு வடக்கே இரண்டு கல் தொலைவில் பசுபதிநாதர் கோவில் உண்டு. அங்குப் பாசுபதர் சைவ மடம் அசோகன் காலத்திலேயே இருந்தது. அசோகன் கிமு 249-இல் தன்மகளான சாருமதி என்பவளுடன் அங்குச் சென்றான். அவள் அம்மடத்தைச் சேர்ந்து துறவியானாள். எனவே, நேபாளத்தில் உள்ள பசுபதிநாதர் கோவில் மிகப் பழமையானது என்பது அறியப்படும்.(Monograph on the Religious Sects in India, P. 62)
3. **செய்யுள் 4 பருப்பதம்:** ஸ்ரீசைலம் - இங்குள்ள இலிங்கம் மேற் சொன்ன பழைய சிவலிங்கங்களுள் ஒன்று. மேற்படி புத்தகம், பக் - 59.
4. செய் - 11: **சாத்தனூர்** என்பது ஊரின் பெயர்; ஆவடுதுறை என்பது கோயிலின் பெயர் என்பது ஆவ்வூர்க் கல்வெட்டால் அறியலாம்.
5. **திருவலிவலத்தில்:** திருமூல தேவர் திருமடம் இருந்தது. (சோழர் காலத்தில்) 116/ 1911.
6. டாக்டர் V.V.ரமணசாஸ்திரி, C.V.நாராயண ஐயர் போன்ற அறிஞர்கள் திருமூலரின் காலம் கி.பி.400—600 ஆக இருக்கலாம் என்று கருதுகின்றனர். (?)

சிவமயம்

பதிப்பாசிரியர் எழுதிய

நூன் முகம்

1. திருமூலர் வரலாற்றுச் சிறப்புக்கள்

*தி*ருமூலர் வரலாறு அவர்தம் புராணத்திற் சேக்கிழார் பெருமான் அருளியபடியினைச் சுருக்கி எழுதி இப்புராணத்திறுதியிற் சேர்த்திருக்கிறது.

(1) வரலாறு கயிலையில் நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர் அகத்தியரைக் கண்டு அவரோடு சிலநாள் இருக்க எண்ணங் கொண்டு தென்றிசையில் பொதிகையை நோக்கி வந்தார். வழியில் ஸ்ரீகாசி, திருத்தில்லை முதலாகிய பதிகளை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறையையடைந்து வணங்கினர். அப்போது அவருக்கு அந்நிலைமைத் தானத்தை விட்டு நீங்காததொரு வேட்கைக் குறிப்பு அவர் மனத்துள் எழுந்தது. ஆயினும் அவர் அப்பதியைக் கடந்து சென்றார். அப்போது அணிமையில் உள்ள **சாத்தனூரில்** காவிரிக் கரைப்புறவில் மேய்ந்த பசுக் கூட்டங்கள் அங்குச்சடுதியில் இறந்துகிடந்த ஆமேய்க்கும் இடையனது உடலைச் சுற்றிக் கதறிக் கண்ணீர் விட்டுப் புலம்புவதைக் கண்டார். யோகியார் அந்தப் பசுக்களின் மேல்வைத்த பெருங் கருணையினாலே அவற்றின் துக்கத்தைப் போக்க எண்ணினார். அந்த இடையன் சிறு போதாயினும் உயிர் பெற்றெழுந்தாலன்றி அவற்றின் துக்கம் நீங்காதென்பதும் கண்டார். ஆதலின் அவ்விடையனை உயிர் பெற்றெழச் செய்வதற்காகத் தாம் கைவந்த பரகாயப் பிரவேசம் என்னும் சித்தியின் வழியே தம் உயிரை அவனுடலிற் புகுத்த நினைத்து, அதற்காகத் தமது உடலைக் காவலாகிய ஓர் இடத்திற் சேமித்து வைத்தார்; தம்முயிரை அவனது உடலிற் பாய்ச்சித் **திருமூலராய் எழுந்தார்.** பசுக்கள் துன்பநீங்கி மகிழ்ந்து சென்று மேய்ந்தன. மாலையில்அவை, ஊரினுள் முன்னே தத்தமது மனைகளிற் செல்ல, அவற்றின் பின்னே சென்று ஊர் எல்லையில் நின்றார். இடையன் மனைவியும் சுற்றமும் வந்து சுற்றிக் கூவ, அவர்களை மறுத்து இரவு அங்கு ஒரு பொது மடத்திற் றங்கினார். மறுநாள் எழுந்து சென்று தம் உடலைத் தேடினார். அது காணப்படவில்லை. தமது **முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையினிலாராய்ந்து தெளிகின்றார்,** சிவபெருமான் தாமே அருளிய சிவாகமங்களின் பொருளைத் (திருமூலர்) தம் வாக்கினாற்றமிழ் வகுக்கும்பொருட்டு ஈசர்திருவருளால் அவ்வுடலை மறைப்பித்தார் எனத் தெளிந்தார். மீண்டு திருவாவடுதுறையை அடைந்து அங்குத்திருக்கோயிலின் மேல்பால் மிக்குயர்ந்த அரசமரத்தின் கீழே தேவிருக்கையமர்ந்து சிவனை நினைந்தவாறே 3000 ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்தார். "ஒன்ற வன்றான்" என்று தொடங்கி ஆண்டுக் கொன்றாக 3000 திருப்பாட்டுக்களாலே திருமந்திரமாலை என்னும் இத்திருமுறையாற் சிவபிரானைப் பாடிப், பின், திருக் கயிலையினை அடைந்தார். **ஞானம் யோகம் கிரியை சரியை** என்ற **நான்கனையும் கூறும்** இஃது **ஊனுடம்பிற் பிறவிவிடந் தீர்ந் துலகத்தோருய்யத் திருவருளாற் பாடப்பட்டது.** திருமூலர் ஆக்குதற்கும் அழித்தற்கும் ஆற்றலுடையராகிய

இம்மை மறுமை முக்காலப் பண்புமுணர்ந்த இருடிகள் என்பது யாப்பருங்கலவிருத்தி ("இலை நல" - 204 மந்).

(2) இவ்வரலாற்றுச் சிறப்புக்கள் பலவும் புராண இறுதியிற் **சிறப்புக்கள்** கற்பனை என்ற பகுதியில் உரைக்கப்பட்டன. கண்டுகொள்க.

(1) **பரகாயப்பிரவேசம்** என்பதோர் அருங்கலை, அஃது அட்டமாசித்திகளுள் ஒன்றாகிய பிராகாமியம் என்றதனுள் வைத்து எண்ணப்படும். நமது சிவயோகியார் கயிலையில் இருக்கும்போதே அணிமாதி வருஞ் சித்திபெற்றுடையாராய் விளங்கினர் என்று புராணத்தால் அறிகின்றோம். இவ்வல்லமையினாலேதான் அவர், இறந்துகிடந்த மூலன் என்னும் இடையனது உடம்பினுள் தம் உயிரைச் செலுத்தி எழுந்து அங்கிருந்த பசுக்களின் துயர்தீர்த்தார். அந்த இடையனது உடலினின்றேதான் ஆவடுதுறையில் போதியின்கீழ் 3000 ஆண்டு யோகிருந்து பசுக்கள் என்று சொல்லப்படும் உயிர்கள் பிறப்புத் துன்பம் நீங்கி இன்பமடைய சிவாகமங்களைத் திருமந்திரங்களாக ஓதியருளினர். இடையன் உடலும் யோகியாரின் உயிருமாக இருந்து நீண்டகாலம் தொழில் செய்ததும், அவ்வுடம்பினுடனே திருக்கயிலை சேர்ந்து திருத்தாளடைந்ததும் நிகழ்ந்தன. இஃது இச்சரிதத்திற் காணப்படும் பெருஞ் சிறப்புக்களும் ஒன்றாகும். இன்னும், பரகாயப் பிரவேசத்தால் நிகழ்ந்த இச்சரிதமானது "உடம்பே ஆன்மா; ஆன்மா என வேறு ஒன்றில்லை; இந்திரியங்களின் கூட்டமே ஆன்மா; அந்தக்கரணங்களின் தொழிற்பாடே ஆன்மா" என்றெல்லாம் கூறும் கொள்கைகள் கொண்ட சிறுசமய வாதிகளுக்கெல்லாம் தடுக்கலாகாத பெரிய மறுப்பு ஆகும். ஆயின், இவ்வாறு ஒரு கலை ஞானமும் உண்டோ? என்று ஐயப்பட்டுக் கூவுவாரும் உளர். மனோவசீகரக் கலைஞானம் (Mesmerism - Hypnotism) என்பதொன்றுண்டு. அதனை மறுக்க இயலாது. அஃது உதாரணங்களால் நேரே நிரூபித்துக் காட்டக் கூடிய தொன்று. அதில் மாணுக்கனது தன்னுணர்ச்சி முழுதையும் மாய்க்கச் செய்து அமிழ்த்திவிடுகிறான் ஆசிரியன். அதன்பின் ஆசிரியன் தனது உணர்ச்சியினை மாணுக்கனுட் புகுத்திவிடுகிறான். ஆசிரியன் சொல் வழியே, எண்ணிய வழியே, ஏவின வழியே மாணுக்கன் தன்னுணர்ச்சி யின்றித் தொழிலாதிகளைச் செய்கின்றான். தன் உடலினுள் அடங்காது வியாபகமாகிய அறிவையும் தொழிலையும் பெறுகின்றான். பேய் கோட்பட்டாரது சொல் செயல் ஆற்றல்கள் அவ்வுடம்புகளின் அளவுட்படாது அப் பேயின் சொல் செயல் ஆற்றல்களாகி நிகழ்கின்ற நிலைகளையும்ஈண்டுக் கருதுக.

(2) **இடையனுடலும் யோகியாரின் உயிரும்:—** இங்குத் திருவாவடுதுறையில் 3000 ஆண்டுகள் அரசடியில் சிவயோகத்திலிருந்து திருமூலர் திருமந்திர மருளுதற்குக் கருவியாயிருந்த உடல் சாத்தனூர் இடையனாகிய மூலனுடைய உடலாகும். அஃது அவ்விடையனுடைய கன்மத்துக் கேற்றவாறு அவனுக்கு இறைவனாற்றரப்பட்ட அசித்தாகிய மாயாகாரியமாகியதொரு பண்டம், "அசித்தாய், புவனபோகந் தனுகரணமு முயிர்க்காய் வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே" (சித்தி-2-53). இடையன் அவ்வுடலினுள் நின்று வாழ்ந்து அதனால் அனுபவிக்க

வேண்டிய கன்மங்கள் தீர்ந்தபடியினால் **"வினை மாள வாழ்நாளை விடமுண்ண"** வீடி இறந்தான். அந்தவுடல் இனிப் **பஞ்சபூதங்களுட்** பிரிந்து அழிவெய்த நின்றது. அதுபோலவே சிவயோகியார்க்கு அவரது வினைக்கீடாக இறைவர்தந்த உடல் அருளால் மறைக்கப்பட்டு நீங்கியது. இங்கு இடையனுடைய கன்மத்துக் கீடாய் நின்றவுடல் யோகியாரது மேற்செய் கன்மத்துக் கீடாய் நிகழுமாறு யாங்ஙனம்? எனின், அற்றன்று; உடல் என்பது கத்தி முதலிய ஆயுதங்கள் போலச் சடமாகியதொரு கருவியேன்றிப் பிறிதில்லை; அப்பண்டமானது உடையவன் தன் உள்ளத்தே நினைந்து ஆண்டபடி யெல்லாம் பணி செய்யும்; அல்லவன் கையிலே நின்றபோது கொலை முதலிய கொடுமைகள் செய்தற்குதவியதொரு கத்தியே, நல்லவன் கையிற் பட்டபோது பூசைக்குப் பழம் திருத்துதல் முதலிய நல்லன செய்வதற்குதவுதல் போல; யோகியாரின் ஆன்மாவினுள் புத்திதத்துவத்தின்கண் ஒடுங்கி நின்ற ஞானமே இடையனுடம்பில் நின்றபோது அதன் உரியகருவிகளுட்புக்கு வெளிப்பட்டு மேல் நிகழும் சிவ யோகத்துக்கும் திருமந்திரம் ஓதுவதற்கும் உதவிற்று.

தோற்பாவைக் கூத்துந் தொல்லை மரப்பாவை யியக்க முஞ்சீர்த்
தேர்ப்பாரிற் செலவும் வேறுய்ச் செலுத்துவோர் செய்தி தானும்
பார்ப்பாய வேடங் கட்டி ஆடுவார் பரிசு போலும்
ஆர்ப்பாய காயந் தன்னை யான்மாநின் றுட்டு மாறே. (சித்தி-4-24)

அரவுதன் றேலுரிவு மக்கனவும் வேறு
பரகாயம் போய்வருமப் பண்பும்—பரவிற்
குடாகாய வாகாயக் கூத்தாட்டா—மென்ப
தடாதுள்ளம் போமா றது. (போதம்-2-3; அதி-உதா)

என்று வரும் கருத்துக்கள் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

இனிச், சிற்றறிவும் சிறுதொழிலும் சிறிய ஆற்றலுமே பெற்ற இடையனுக்குக் கருவியாய் நின்ற அந்த உடம்பு, பேரறிவும் பெருந்தொழிலும் பேராற்றலும் உடைய யோகியாரது மேல் நிகழ்ச்சிகளுக்கு இடையூறாய் நில்லாது சாதனமாய் உதவியது யாங்ஙனம்? என்னில், அஃது அவ்வுடம்பின் பண்பாலாகியதன்று; யோகியாரது பேரறிவுள் நின்றியற்றிய திருவருட் செயலாலாகியது என்க.

"நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி
நாமல்ல நாமு மரனுடைமை—யாமென்னில்
எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்" (போதம்-10-2; அதி-உதா)

என்ற உண்மையினை ஏற்றபெற்றி ஈண்டு வைத்துக் கண்டுகொள்க. இனி, யோகியாரது உடலின் கண்ணே நிகழாது இவ்வாறு அதனை மறைப்பித்து மூலன் என்னும் இடையனது உடலின்கண் வைகிமேல் நிகழ்ச்சிகள் உளவாகச் செய்தல் என்னையோ? எனின், அது திருவருட் செயலினாலாயிற்று; அதன் காரணத்தை அறிய நாம் அருகரல்லோம். "...தனையுடையான் றுள்கள் வந்தனைசெய் திவற்றின் வலி யருளினால் வாட்டி, **வாட்டமின்றி**

யிருந்திடவும் வருஞ் செயல்க ளுண்டேல்; முந்தனுடைச் செயலென்று முடித்தொழுக வினைகள் மூளாவங் காளாகி மீளா னன்றே'' (சித்தி-10-3) என்ற உண்மை இங்கு யோகியார் செயலுள் வைத்துக் கருதற்பாலது. **"யானு மதுவே வேண்டினல்லால், வேண்டும் பரிசொன் றுண்டென்னி லதுவு நின்றன் விருப்பன்றே''** (திருவா - குழைத்த - 7) என்றும்,''மாயப்பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி, **ஆயக் கடவேன் நானேதான்? என்ன தோவிங் கதிகாரம்?''** (ஷை-8) என்றும் வரும் திருவாக்குக்களும் காண்க; அதுசரியே; இவை,யோகியார் முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையி லாராய்ந்து தெளிந்தபடி கண்ட திருவருட் குறிப்பின் படியே தாம் அமைந்து நின்று யோகிருந்து நிகழ்ந்த செயலுக்கு ஏற்புடையன. ஆனல் யோகியாருடலின் வழியின்றி இடையனுடம்பின் வழியே இதனை நிகழ்வித்த திருக்குறிப்புத்தான் என்னே? எனின், யோகியாரது உடம்பன்றி இடையனுடலே பின்நிகழ்ச்சிக்கு ஏற்ற கருவியாக அமைந்திருத்தலும் கூடும் என்று அஞ்சி நாம் எண்ணலாம் போலும். யோகியார் தமது முன்னை உடலினின்றவாறே தமது நலமேபற்றி அகத்தியரோடுடன் சிலநாளுறைவதற்குப் பொதிகை நோக்கிச் சென்றார். அதற்கே உதவியது அந்த உடம்பு. அதற்குமுன், கயிலையில் நின்றபோது அணிமாதி வருஞ் சித்தி பெறவும், முறையாலே நந்தி திருவருள் பெறவும் முன்னே உதவியது. ஆனல் திருவாவடுதுறையினை அணைந்து பணிந்தபோது அப்பதியினை அகலாத தொருகருத்து முன்னியெழுங் குறிப்பினல் மூளுமாதரவு எய்தியிடவும், பின்னு மகன்றேகுதற்கும் அவ்வுடம்பு கருவியாயிருந்தது. இடையனது உடம்பினையும் துன்புற்ற பசுக்களையும் கண்டபோதே பசுக்களின் துன்ப நீக்கும் எண்ணம் வர, அதற்கு இடையனுடம்பே கருவியாகக் கொண்டெழுந்தார். அஃதே யாருகப் பசுக்கூட்டத்தின் (உயிர்கள்) பிறவித் துன்பம் நீக்க வழிவகுக்க ஆகமப்பொருளை வகுத்து ஓதவும் அவ்வுடம்பே பொருத்த முடைத்தாயிற்றுப் போலும்! ஆனல் திருவருட் குறிப்பின் காரணங்களையும் வழிவகைகளையும் வினவவும் விடுக்கவும் நாம் அதிகாரிகளல்லோம்.

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகிலள வில்லை கிளக்க வேண்டா"

என்பது பரமாசாரியரது ஆணை. அதனுள் அமைந்து நிற்போம்.

(3) திருமூலர் யோகிருந்து திருமந்திரம் அருளிய காலம்

திருவாவடுதுறையில் திருக்கோயிலின் புறக்குடபாலில் (மேற்கில்) அரச மரத்தின் கீழே திருமூலர் நீண்டகாலம் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார் என்றும், அப்போது சிவாகமங்களைத் திருமந்திரமாக அருளினர் என்றும், திருவருளினலே இவைபோந்தன என்றும் புராண ஆதரவினல் அறிகின்றோம். அவரது திருமந்திரத் திருவாக்குக்களும் இதற்கு ஆதரவு தருகின்றன.

"சிவனவடு தண்டுறை, சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே" (78)

"சேர்ந்திருந் தேன்சிவ னவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவ னமங்க ளோதியே" (79)

"**இருந்தேனிக் காயத்தே** யெண்ணிலி கோடி
இருந்தே னிராப்பக லற்ற விடத்தே
இருந்தே **னிமையவ** ரேத்தும் பதத்தே
இருந்தேனென் னந்தி யிணையடிக் கீழே" (80)

"...என்னை நன்ருக விறைவன் படைத்தனன்
தன்னை நன்ருகத் தமிழ்ச் செய்யு மாறே. (81)

"ஊனமில்ஒன்பது கோடி யுகந்தன்னுள்
ஞானப்பா லாட்டி நாதனை யர்ச்சித்து
நானு மிருந்தேனற் **போதியின் கீழே**" (82)

என்பன திருமந்திரம்.

குறிப்பு: மேலே **இக்காயத்தே** என்றது இடையனுடைய உடலிற் புகுந்த பின் நின்ற நிலையில் அவ்வுடம்பைக் குறிப்பது போலும்; **எண்ணிலிகோடி** என்பது அளவுட் படாத காலம் என்று குறிப்பது போலும்.

"ஒப்பில் எழுகோடி யுகமிருந் தேனே" (74)

"ஊனமில் ஒன்பது கோடி யுகம்தன்னுள்" (82)

என்றவற்றுள்ளும் இவ்வாறே **கோடி** - எல்லை என்றும், **யுகம்** - நீண்டகாலம் என்றும் கொள்ளலாம் போலும்; "ஒருநாழி ஓருகமாம்", "ஊழியிற் பெரிதா நாழிகை யென்னும்" என்பனவாதி வழக்குக்கள் காண்க. அன்றியும், திருக்கயிலையிற் சேர் வினைப் பிரிந்துநின்ற யோகியார்க்கு இங்குத் தங்கும் கால நீட்டிப்பு யுகமாகக் கழிதலும் இயல்பே யாகும். அன்றியும், **மன்னிய மூவாயிரத் தாண்டிப்** புவிமேன் மகிழ்ந்திருந்து என்றே அளவுபடுத்திச் சேக்கிழார் பெருமான் அருளுதலும் இங்குக் கருதத்தக்கது.

நீண்ட ஆயுள்

இனி, இவ்வாறு பல்லாயிர ஆண்டுகளாக நீண்ட காலம் ஒருவர் உயிர் வாழ்ந் திருத்தல் கூடுமோ என்று கொண்டு பரிகசிப்பர் பலர். 80 : 90 ஆண்டு வயதுடையார்கள், கண்ணுடியி னுதவி யின்றிக் காணும் கண்களும், கோலூன்ருது நிமிர்ந்து நடக்கும்கைகால்களும், பொய்ப்பற்களில்லாது கரும்பைக் கடிக்கும் பற்களையும் உடையாரைக் கண்டாலும் அதிசயிக்கும் இந்நாள் மாக்கள் பரிகசிக்காமல் வேறென்னதான் செய்யவல்லர். பல்லாயிரம் ஆண்டுகள் நீளும் ஆயுள் படைத்தலும் கூடுமோ? எனின், கூடும்; என்னை? அது சிவயோக சாதனங்களால் இயல்வதென்க. மூச்சுக்கழிவே ஆயுளைக் கழிவு செய்யும் கருவியாகும். 21600 மூச்சுக்கள் ஒரு நாளின் எல்லை என்று ஒரு கணக்குக் கூறுவர் அறிந்தோர். அவ்வாறு 365 நாட்கள் ஓர் ஆண்டும் அவ்வாறு 100 கொண்டது ஓர் ஆயுள் என்பதாம். மூச்சுக்கள் ஒருநாளில் அந்தக் கணக்குக்குமேல் தீய ஒழுக்கம்முதலிய காரணங்களாற் செலவிடப் பெறுமாயின் நாட்கணக்குச் சுருங்கும். அந்த எல்லையளவு பிராணுயாமம் சிவயோகம் முதலிய சாதனைகளால் மூச்சுச் செலவு செய்யப்படாமல் நின்ருல் நாட்கள் நீடிக்கும்.

இவற்றைப் பற்றித் திருமூல தேவர் பல இடங்களில் அழுத்தமாய் விவரித்தருளி யிருக்கின்றார்.

"காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக் (571)
கூற்றை யுதைக்குங் குறியது வாமே" (574)

"நட்ட மிருக்க நமனில்லை தானே"

"மாசித்த மாயோகம் வந்துதலைப் பெய்தும்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே" (581)

"காலத்தை வெல்லுங் கருத்திது தானே" (581)

"புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந்
திறப்பட்டு நிச்சயஞ் சேர்ந்துட னின்றால்
உறப்பட்டு நின்றது உள்ளமு மங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே" (596)

என்பன முதலியவை காண்க. நம் யோகியார் சிவயோகங் கைவந்தவர் என்பது சரித வரலாறு. "நான்மறை **யோகிகள்** ஒருவர்" "அணிமாதி வருஞ்சித்தி பெற்றுடையார்" என்பன புராணத் திருவாக்கு.

(4) திருமூலர் காலம்

இதுபற்றி ஆராய்ச்சியாளர்களாகிய Dr.V.V. ரமணசாஸ்திரிகள், திருமந்திர மணி, திரு.துடிசைகிழார், அ.சிதம்பரனார் முதலிய அறிஞர்கள் பலரும் பலவாறு கண்டுள்ளார்கள். அம்முடிபுகள் அவரவர் எழுதிய நீண்ட விரிவான தனி உரைகளிற் கண்டுகொள்ளற்பாலன. அக்கருத்துக்களை ஈண்டுச் சுருக்கிக் குறித்து மேற்செல்வேன். திருமூலர், திருமந்திரம் 5ம் தந்திரத்துள் புறச் சமயங்கள் ஆறனையும் பற்றிச் சொல்லுதலால் அறுவகைப் புறச் சமயத்தார்களாகிய கோதமர், கணாதர், வாதராயணர், கபிலர், சைமினி, பதஞ்சலி என்பவர்களுக்குப் பிற்பட்டவர் என்றும், வீரம், வாதுளம் என்ற ஆகமங்களைச் சொல்வதால் அவற்றுள் விரிக்கப்பட்ட லிங்கபுராணத்துக்கும் வீரமாகேசுரர் சமயம் மேனிலை பெற்ற காலத்துக்கும் பிற்பட்டவர் என்றும், போதியினைச் சொல்வதால் புத்தாவதாரத்துக்குப் பிற்பட்டவர் என்றும், "தமிழ்ச் சாத்திரம் பொங்கி மிகாமை வைத்தான்" என்பதனால் தமிழில் ஞானநூல்கள் பலவுமில்லாத காலத்தவர் என்றும், 6-வது நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்றும் Dr.V.V.ரமணசாஸ்திரிகள் கருதுகின்றார்கள். ஆயின் இவ்வாராய்ச்சியிற் சில பொருள்களை நாம் மறவாது மனங்கொள்ள வேண்டியதுண்டு. "சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற்றேனே" "மூலாங்கமாக மொழிந்த திருக்கூத்தின், சீலாங்க வேதத்தைச் செப்பலுற் றேனே" "என்னை நன்றாக விறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே" என்பன திருமந்திரங்கள். "தண்ணிலவார்சடையார்தாந் தந்தவா கமப்பொருளை, மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ்வகுப்ப" என்பது புராணத் திருவாக்கு. இவற்றால் இறைவர் உலகுக்கு அருளிய 28 ஆகமங்களின் உட்பொருளைத் தமிழில் உலகுக்கு உபகரிக்கும் பொருட்டே திருமூலர் இங்கு வந்து 3000 ஆண்டு யோக மிருந்து திருமந்திரங்களை அருளினார் என்பது பெறப்படும். படவே, திருமூலர் அவ்வாறு

திருவாவடுதுறையில் எழுந்தருளித் திருமந்திரம் அருளிய காலம் சிவாகமங்களைச் சிவபெருமான் வகுத்தருளிய காலத்துக்கு நீண்ட காலத்துக்குப் பின் என்பது உறுதி. ஆனால் சிவாகமங்களும் வேதங்களைப் போலவே அநாதியே சிவ பெருமானால் அருளப்பட்டமையால் காலங் கடந்தவை. அவற்றுள்ளே எல்லாப் பொருள்களும் அடங்கின. அறுவகைச் சமயங்களின் நிலைகளும் பிறவும் அவற்றுட் பேசப்படுவனவே. பின் வந்த முனிவர் முதலிய ஆசிரியர்கள் அவற்றுள் ஒவ்வோர் பகுதியைத் தழுவித் தாந்தாம் ஒவ்வோர் சமயப்பகுதிகளை வகுத்துரைத்துப் பரப்பினார்கள். சிவாகமங்களுக்குப் பிற்பட்டவர் என்றதனாலேயே திருமூலர் இவ்வாசாரியர்களுக்கும் பிற்பட்டவராவர் என்பது பொருந்தாது. **போதியின்** சிறப்புப் புத்தரின் காலத்துக்கு முன்பே நம்நாட்டில் அநாதியாக அறியப்பட்டு வந்தது என்பதும் மறுக்கப்படாத உண்மை. இனித் திருமூலர் இங்கு வருங் காலத்தில் தமிழ் சாத்திரம் பொங்கி மிகா திருந்தன என்பதுவும் ஆராய்ந்தே கொள்ளவேண்டி நிற்கின்றது. "ஆரியமுந் தமிழு முடனே சொல்லிக் காரிகை யார்க்குக் கருணை செய்தானே" எனவரும் திருமந்திரம் முதலிய பெரிய ஆதாரங்களால் தமிழ் வடமொழியோடே உடன்றோன்றி முழுமையாகிய இலக்கிய இலக்கண வரம்புகள் பெற்று விளங்கிற்று என்பது புலனாகும். திருமூலர் சொல்லியதனால் **சிவாகமப் பொருள்கள்** தமிழில் விரிவாகப் பேசப்படாமலிருந்த நிலையில் இறைவரருள் வழியே அவற்றைத் தமிழில் செய்தார் என்பது மட்டுமே பெறப்படும். இனிப், "பன்மலர் தூவியதுபோல் அழகிய வடமொழிக்கிளவிகளை ஒவ்வோரிடத்தும் புதிது புதிதாய் வாரி யிறைத்த"'லால் அவர் வடமொழியாளர் என்றும், கயிலைத் தாழ்வரையினின்றும் தென்னிந்தியாவை வந்தடைந்தவர் என்றும் துணிபுகொண்டு எழுதுகிறார் Dr.V.V. ரமணசாஸ்திரிகள். சிவாகமப் பொருளை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறு தம்மை இறைவர் நன்றாகப் படைத்தனர் என்ற திருமந்திரத்தினாலேயே அவர் தமிழர் என்பது நன்கு புலப்படும்.

தமிழனல்லாதவன் பிறமொழியை எவ்வாறு நன்றாகத் தமிழாக்க முடியும்? தாயுமானார் வட மொழிக் கிளவிகளைப் புதிது புதிதாக வாரியிறைத்துப் பாடுகின்றார். "பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி புராந்தகி திரியம்பகி" என்பது முதலிய அவரது பல பாடல்களையும் காண்க. அதனாலே அவர் வடமொழியாளர் என்று சொல்லி விடக் கூடாதன்றோ? தமிழ் நாட்டிலிருந்து திருவருள் பெற்றுக் கயிலைக்குப் போந்த சிவயோகியார் திருமூலர் என்று கொள்வது முறையாகும். அன்றியும் அவர் குறுமுனிவருடன் "உற்றதொரு கேண்மை" யுடையவர் என்பதும் கருதுக. இனித் திருமந்திரமணி - துடிசைகிழார் - அ.சிதம்பரனார் திருமூலர் காலத்தைப் பற்றியும், மற்றும்,வேறொரு வகையாகச் சில சிறந்த ஆராய்ச்சிகள் செய்கின்றார். அவை இவ்வெளியீட்டுக்காக அவர் அன்புடன் எழுதி உபசரித்த கட்டுரையிலும், (இப்புராண உரையுடன் சேர்க்கையாக அச்சிடப்பட்டுள்ளது) திருப்பனந்தாள் ஆதீனம் வெளியிட்ட திருமந்திரப் பதிப்பில் அவர் எழுதி வெளியிட்டிருக்கும் **"திருமந்திர வரலாறு"** என்ற முகவுரையிலும் கண்டுகொள்ளத் தக்கன. திருமூலர், மூலனுடம்பிற் புகுமுன் இருந்த முன்னைய நிலையிற் பாண்டிய நாட்டினர் என்றும், அவர் பொதிய மலையில் அகத்தியரது தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்து தமிழ் நூல்கள் கற்றனர் என்றும், பின்னர், அவரது ஆசியுடன் கயிலைச் சாரற் குருகுலத்தைச் சார்ந்து அறிவு நூல்கள் கற்றுப், பின்னர்த் திருக்கயிலை சென்று நந்தி பெருமானருள் பெற்று யோகஞானநூல்களைக் கற்று "நாதர்" என்னும் பெயர் பெற்றனர் என்றும், அவருடைய பிதா மாதாக்கள் இட்ட இயற்பெயர்

"சுந்தரன்" என்றும், அவர் தமது திருமந்திரத்துக்கு இட்ட பெயர் **தமிழ் மூவாயிரம்** என்றும், அவர் தென்றிசை போந்தது கி.மு. 6000-க்கும் கி.மு. 3100-க்கும் இடைப்பட்ட காலமாம் என்றும் திருக்கயிலைக் குருகுலம் முடிந்து நடனதரிசனம் காணப் பதஞ்சலி வியாக்ரபாதர் இவர்களுடன் தில்லைக்கு வந்து தங்கி நடனதரிசனம் கண்டு வடகயிலை சென்று தவமிருந்தார் என்றும், கிமு 3100 அஃதாவது பாரதச்சண்டை முடிந்து கலியுகத் தொடக்கத்தில் குறுமுனிவரைக் காணத் தென்றிசைவந்தது இரண்டாவது முறை என்றும். 3000 ஆண்டுகள் திருவாவடுதுறையில் சிவயோகத்திலிருந்து திருமந்திரமருளிக் கி.மு. 100-ல் மீளவும் வடகயிலைசென்று பிறவா நெறி பெற்றனர் என்றும், திருமந்திரம் 9 தந்திரங்களும் முறையே நந்திபெருமான் பெற்ற 9 ஆகமங்களின் சாரம் என்றும், இது 10-ம் திருமுறையாக வகுக்கப்பட்டது போதம் 10-வது சூத்திரக் கருத்தினை உள்ளடக்கி நிற்றலால் என்றும் இவ்வாறு வருவன அவரது ஆராய்ச்சியிற் கண்ட முடிபுகளின் சுருக்கம்.

ஈண்டு, இவ்வரிய ஆராய்ச்சியும், அதன் முடிபுகளும் பன்னெடுங்காலம் திருமந்திரத்துட் பழகித் திளைத்துள்ள திருமந்திரமணி அவர்களின் மேலான அரிய ஆராய்ச்சிக்கண்களுக்கே புலனுவனவன்றி ஏனையோர்க்கு எளிதில் புலனுகும் தகையன அல்ல. இவை பெரும்பாலும் அவர்களது கருதலளவையின் துணை கொண்டே பெறப்படுதல் காணப்படும். சிறு துணுக்குக்களின் உதவிகொண்டு பெருஞ்சரிதத்தையே வகுத்துத் தலைக்கட்டி விடுதல் இவர்களுக்கு எளிதாகின்றது. காற்பெருவிரலின் ஒரு எலும்பினைக் கொண்டு அவ்வுடம்பின் முழுமையும் கண்டு நிர்மாணித்தான் என்றெரு ஆங்கில விஞ்ஞானியைப்பற்றிச் சொல்லும் வரலாறு இங்கு நினைவுக்கு வருகின்றது. இவ்வாராய்ச்சியின் முடிபுகள் மேலும் பற்பல பெரிய ஆராய்ச்சிகள் செய்யும் அவசியத்துக்கு நிலைக்களமாக விளங்குகின்றன. "(1) வசிட்ட முனிவரின் தங்கையை வியாக்கிரபாத முனிவர்மணந்து கொண்டார். வசிட்டர் இராமருடைய குலகுரு. இராமாயணப் போர் கி.மு. 6000 ஆகும். வியாக்கிரபாதரும் பதஞ்சலிமுனிவரும் திருமூலரும் ஒன்றுகத்தில்லைக்கு வந்து தவஞ்செய்து திருக்கூத்துக்கண்டார்கள்; ஆகையால் திருமூலர் காலம் கி.மு.6000 ஆகும் என்றும், (2) திருமூலர் தமிழில் 16 உயிரும் 35 மெய்யும் ஆக 51 எழுத்துக்கள் கூறுகிறர்; அது வட்டெழுத்துக்காலம்; கி.மு.3000-ல் பின்னரே தொல்காப்பியர் 12 உயிரும் 18 மெய்யுமாக ஆக 30 ஆக்கினர். அது சதுர எழுத்துக்காலம் என்றும், (3) திருமூலர் "கருக்குரு வாகிய கண்ணனுமாமே" என்று கூறியிருப்பதனுலும், அது பாரதச்சண்டை முடிந்து கண்ணன் இறந்த பின் அவனது குறையுடல் உருவத்தைக் குறிப்பதனுல் திருமூலர் பாரதப்போர் முடிந்த காலமாகிய 3100-ல் திருவாவடுதுறையில் வந்தார் என்றும் ஈண்டுத் துடிசைகிழார் அவர்கள் திருமூலரின் கால ஆராய்ச்சி செய்கின்றுர்கள்.

ஆனுல் ஈண்டும், நாம் இன்னும் சில பொருள்களை நினைவில் வைத்து இவற்றைப்பற்றித் துணிய வேண்டும் என்று தோன்றுகிறது. பற்பல ஆயிரக் கணக்கான ஆண்டுகள் சிவயோகத்தில் நிற்கக் கூடிய திருமூலரின் கால நிச்சயம் செய்வதில் இந்தத் தனித்தனி சம்பவங்களே உறுதுணையாகக் கொள்ள நிலைபெற மாட்டா. வியாக்கிரபாதரின் மகனர் உபமன்ய முனிவர் கண்ணனுக்குத் திருவடி சூட்டிச் சிவதீக்கை செய்த வரலாறு மாபாரதத்திலும், பெரியபுராண முதலியவற்றுலும் கேட்கப்படுவதனுல் மேற்கூறிய

இராமாயணப் போருக்கும் பாரதப் போருக்கும் 3000 ஆண்டுகள் இடையீடு படக்கூடுமே என்ற ஐயம் தோன்றுகின்றது. கண்ணான் என்பது திருமாலைக் குறிக்கும் பொதுப் பெயராய் வழங்கவும் காண்கின்றோம். "கமலநான் முகனுங் கார்முகி னிறத்துக் கண்ணனு நண்ணுதற் கரிய, விமலனே" (திருவா - அருட்-4); "கருங்கண்ணனை யறியாமை நின்றேன்" (திருக்கோ - 53); திருமூலரின் முன்னைப் பெயர் "சுந்தரன்" என்பதற்கு "மந்திரங் கொண்டு வழிபடுவோர்க்குச், சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்" என்று மந்திரம் 300-ம் ஆதரவாகக் காட்டப்பட்டதில் அந்நூல் இன்னும் வெளியாகவில்லை. அதன் பிரதி நமது திருமந்திரமணி அவர்களிடம் இருப்பதாக அவர்கள் சொல்ல அறிகின்றேன். அதனை அவர்களோ, அன்றி, அவர்தரப்பெற்று வேறு அன்பர்களோ, அச்சியற்றினுல் சைவவுலகத்துக்கப் பேருபகாரமாக இருக்கும். இனிச் **"சுந்தர ஞகமச்** சொல்மொழிந் தானே" (திருமந்திரம்) என்ற ஆதரவும் ஆதரவாகக் காட்டப்படுகிறது. எனக்குக் கிடைத்த எல்லாப் பதிப்புக்களிலும்,இது **"சுந்தர வாகமச் சொல்"** என்றே பாடமுள்ளது. இந்த இரண்டும் படர்க்கையில் அமைந்துள்ளன; தம்மைப் படர்க்கையில் வைத்துக் கூறுவது தேவாரம் திருக்கடைக் காப்பு முதலியவற்றிற் காணப்படுமாயினும் இவை கொண்டு துணிபு பெறுதல் எளிதில் அமையாதென் றஞ்சவேண்டியுள்ளது.

இவை எவ்வாருயினுமாகுக; திருமூலரது முன்னை நிலைபற்றிய பெயர், காலம், பயிற்சி முதலியவை பற்றி நாம் இத்தனை தூரம் பாடுபட்டு அலைவானேன்? அவை ஈண்டைக்கு வேண்டப்படாத பொருள்கள் என்பது அடியேனது கருத்து. பெரியபுராணத்துள் ஆசிரியர் திருவருட் டுணைகொண்டு நமக்கு அறிவிக்கப்பெறும் அளவில் நாம் அமைந்து பயன்பெற முயல்வதே நமது கடமையாம். பெரிய புராணத்துள் வரும் பெரியோர்களுள், சுந்தரமூர்த்தி நாயனுர், கோச்செங்கட் சோழநாயனுர் என்ற இருவரைத்தவிர வேறு எவருக்கும் முன்னை நிலையின் வரலாறுகளை விரித்துக் கூருத ஆசிரியரது ஆணையின் வழியே, நாமும் அமைந்து கொள்வதே முறையும் நலமுமாம். மேலும் ஆகம உண்மைகளைத் தமிழில் சொல்லக் கருவியாக உதவமாட்டாதென்று சிவபெருமானுல் மறைக்கப்பட்ட யோகியாரது முன்னைய உடலின் வரலாறுகள் பற்றிய ஆராய்ச்சி நமக்கு வேண்டப்படுவதன்று என்பதும் பொருந்தும். எனவே, திருமூலர் காலம் நமது ஆராய்ச்சிக் கெட்டாத காலம் என்று (Pre historic) முடிப்பது நலமாம் என்பது அடியேனது கருத்து.

II. திருமந்திரச் சிறப்புக்கள்

(1) யாப்பு

திருமந்திரம் முழுமையும் 4 சீர் கொண்ட ஒருவகைக் கலிவிருத்த யாப்பிலேயே இயற்றப் பெற்றது ஒரு தனிச்சிறப்பு. சிவானந்தானுபவங்களை எடுத்துச் சொல்வதற்கும் துதிப்பதற்கும் இஃதே மிகப் பொருத்தமுடையதென்று முன்னேர் கண்டு கையாண்டனர் போலும்!. பெரியபுராணம், கந்தபுராணம், கந்தப்புராணச் சுருக்கம், திருவிளையாடற் புராணம் என்ற இவற்றில் எல்லாம் கடவுள் வணக்கத் தொடக்கம் இவ்விருத்தப் பாவினுலே இயன்றன. கந்தரனுபூதியும் இந்த யாப்பேயாம்

(2) திருமந்திரப் பெயர்

இதன் பெயர் **திருமந்திர மாலை** என்பதாம். "ஞானமுதல் நான்குமலர் **நற் றிரு மந்திரமாலை**", "முன்னியவப் பொருள்மாலை" என்பன பெரியபுராணம். **"திருமந்திரம்"** என்றே இதன்பெயர் ஆதிமுதல் எங்கும் வழங்கப்படுதலும் காண்க. "மூலர் திருமந்திர மாலை" (திருத்தொண்டர் புராண வரலாறு) "ஊன்பற்றி நின்றவுணர் வுறு**மந்திரம்**" (85), "மறப்பிலர் நெஞ்சினுள் **மந்திரமாலை,** உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே" (86) என்பன திருமந்திரம் (பாயிரம்); இவ்வாறன்றித் **"தமிழ் மூவாயிரம்"** என்பது இதன் பெயர் என்று முடிக்கின்றார் திருமந்திரமணி அவர்கள். இம்முடிபு மேலும் ஆராய்ச்சிக் குரியதாய் நிற்கின்றது. அப்பெயர் நூலின் மொழியையும் அடங்கிய பாடலின் எண்ணையும் குறிக்கின்றதேயன்றி, அதன் பொருளியல்பைக் குறிக்கின்றதில்லை. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருத்தொண்டர் புராணம் என்பன முதலிய பெருநூற்களின் பெயர்களைக் காண்க. நூற்பெயர்கள் அவ்வவற்றின் பொருளியல்புகளை ஒருவாறு எடுத்துக் காட்டும்படி அமைவன. போகர் 800 திருமூலர் 1000 என்றெல்லாம் ஆசிரியர் பெயரும் பாடற் றொகையும்சேர்த்து வழங்குதல் வைத்திய நூற்களின்மரபு வழக்காய்க்காண்கின்றோம். "சிவயோகமிகு **மந்திரமா** முறையொன்று" என்பது திருமுறை கண்டபுராணம். பெரியபுராணத்துள் "முன்னியவப் **பொருள்மாலைத்** தமிழ்மூவாயிரம்" என்பது சரிதங்கூறுமுகத்தால் நூலின் மொழியும் பாடற்றொகையும் குறித்தபடி என்றெண்ண இடமுண்டு. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் **தமிழ்ச்செய்யு** மாறே" (81) என்னும் திருமந்திரத்தாலும், "உள்ளுணர் வான ஞான முதலிய வொருநான் குண்மை **தெள்ளு தீந் தமிழாற் கூறும்** திருமூலர்" (3563), "தண்ணிலவார் சடையார்தாந் தந்தவா **கமப்பொருளை,** மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினாற் **றமிழ்வகுப்ப"** (3586) என்ற பெரிய புராணத்தாலும் சிவாகமங்களின் பொருளைத் தமிழினாற் சொல்வதே இந்நூலின் கருத்து என்பதும், அதற்காகவே, இறைவர் திருமூலருடைய முன்னுடம்பை மறைப்பித்துச் சாத்தனூர் இடையனுடலி னின்றவாறே ஆவடுதுறையிற் சிவயோகத் திருக்கும்படி செய்தருளினர் என்ற சரிதவரலாறும் பெறப்படும். அதனை வற்புறுத்தி முடிக்கும் வகையாற் **"றமிழ்மூவாயிரம் சாத்தி"** என்று ஆசிரியர் அருளினர் என்பது பொருந்தும். பெரிய புராணத்தை வடமொழியில் அப்படியே மொழிபெயர்த்து "உபமன்ய பக்தவிலாசம்" என்று பெயரிட்டுச் செய்த வடமொழி ஆசிரியரும், "மந்திர மாலிகா" என்றே இந்நூலைக் கொண்டுள்ளமையும் காணப்படும்.

(3)திருமந்திரப் பாடற்றொகை

திருமந்திரம் 3000 என்பதே துணிபு. ஆனால் இப்போது உள்ள பதிப்புக்களிற் கண்டதொகை 3047; இப் பதிப்புக்களிற் காணாதவையும், ஆனால் பெரியோரது உரை நூல்களிற் காணப்படுபவையும், மற்றும் ஏட்டுப் பிரதிகளிற் காணப்படுபவையுமாக இப்போது மேலும் கிடைத்துள்ளவை 34 பாடல்கள். இவை சைவசித்தாந்த மகாசமாசப் பதிப்பிலும், திருப்பனந்தாள் திருமடத்தின் பதிப்பிலும் பதிக்கப்பட்டுள்ளன. Dr.V.V. ரமணசாஸ்திரியார் பதிப்பில் இவற்றின் மேலும் அதிகமாக,

"முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்-பின்னைப் பிறவியிற் பெற்ரு லறியலாம்
தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்-பின்னை யறிவது பேயறி வாமே"

(இது சில பாடபேதங்களுடன் 2318 பாட்டாக வந்துள்ளது) என்றும்,

"அண்ணன் முதலாவறுபதினு யிரம் - எண்ணிலி கோடி தொகுத்தவிவ் வாகமம்
அண்ண லறைந்த வறிவறி யாவிடின் - எண்ணிலி கோடியு நீர்மே லெழுத்தே"

என்றும் இரண்டு பாடல்கள் உள்ளன. ஆக இந்த 34+2=36ம் சேர்த்து இப்போது பெறப்படுவன 3083 பாடல்களாகும். இவ்வாறு அதிகமாக உள்ள பாடல்களைப் பற்றி Dr.V.V.ரமணசாஸ்திரிகள், திருமந்திரமணி துடிசைகிழார் அ.சிதம்பரனுர், சைவசித்தாந்த மகா சமாசத்தார் முதலிய பற்பல அறிஞர்கள் நீண்ட ஆராய்ச்சிகள் செய்து வெளியிட்டார்கள். சில பாடல்கள் இடநோக்கி இருமுறையும் மும்முறையும் வந்திருக்கின்றன. சில பாடல்கள் சிறு பாடபேதங்களுடன் வெவ்வேருக வந்துள்ளன. அவற்றை ஆய்ந்து சமாசப்பதிப்பில் வெளியிட்டுள்ளார்கள். இடைச்செருகல்களாகப் பிறரால் திருமந்திர நூலுள் பல பாட்டுக்கள் புகுத்தப்பட்டுள்ளன என்பது முன்கூறிய அறிஞர்கள் எல்லாருக்கும் ஒப்பமுடிந்த முடிபு. ஆனல் அவை எத்தனை என்றும், அவை யாவை என்றும் கண்டுபிடிப்பது எளிதன்று. Dr.V.V.ரமணசாஸ்திரிகள் நீண்டதோர் அரிய ஆராய்ச்சி செய்து, **பாயிரம்** ஏறக்குறைய முழுதும் திருமூலர் அருளியதன்று எனவும், அப்பகுதியில் உள்ள 112 பாட்டுக்களுள் தாம் குறித்த 67 பாடல்களே திருமூலர் அருளியன என்றும், ஏனைய 45 பாடல்கள் இடைச் செருகல்கள் என்றும் முடிபுகண்டு, அதற்குக் காரணங்களும் விரித்துக் கூறுகின்ருர். அவையெல்லாம் அவ்வவர் பதிப்புக்களிற் கண்டுகொள்ளத் தக்கன. பாயிரத்துள் Dr.V.V. ரமணசாஸ்திரிகள் ஒதுக்கிய பாடல்களை நீக்கிவிட்டால் இப்போது திருமூலர் சரிதத்துக்கு அவர்தம் திருவாக்காகவே கொண்டு காணும் அகச்சான்றுகள் எல்லாம் நீங்கிவிடும். ஆனல் அவை பெரும்பான்மை திருமூலர் சீடர்கள் செய்திருக்கலாம் என்றும் கருதுகிருர். (அவ்வாருயினும் அவையும் சரிதச் சான்றுகளாவதற்கிழுக்கில்லை.) 3000 என்ற தொகை எண் வரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை மேற் கொண்ட ஆராய்ச்சியிற் பாடல்களைத் துருவித் திருமூலர் வாக்கிவை - இடைச் செருகல்கள் இவை என்று சங்கடப்பட வேண்டிய அவசியமில்லை என்பது அடியேன் கருத்து. சிற்சில பாட்டுக்கள் வேறு சிலர் நுழைத்தவையாயினும் அவற்றையும் சேர்த்துப் படிப்பதில் குற்றமில்லை. ஆனல் நமது குறுகிய சிற்றறிவின் ஆராய்ச்சியினையே துணைக்கொண்டு திருமூலரின் பாட்டுக்களை ஒதுக்கிட நேர்ந்தால் அபசாரமும் பழியுமாகும் என்றஞ்சுவதே முறையாகும்.

தருமையாதீனம் வெள்ளியம்பலவாண முனிவர்பிரான் தமது ஞானவரண விளக்கப் பேருரையில் திருமந்திரச் செய்யுட்களைப் பெரிதும் எடுத்தாளுகின்ருர். அவற்றுட் சில இதுகாறும் வெளிவந்த பதிப்புக்களில் காணவில்லை. பல செய்யுட்கள் வேறுபட்டும் காணப்படுகின்றன. அவ்வுரை முற்றும் வெளிவந்த பின்னர் மேலும் பல செய்திகள் புலனுகலாம்.

இனி, **"முப்பது உபதேசம்" "மூந்நூறு மந்திரம்"** என்ற பகுதிகளைப் பற்றியும் நாம் கருத வேண்டியிருக்கிறது. இவையிரண்டும் மூவாயிரந் தமிழ் என்னும்

திருமந்திரமாலையின் வேருகிய தனி நூல்கள் என்றும், இவை இன்னும் அச்சேறவில்லை என்றும், இவை திருமூலர், சிவயோகியாராய் இருந்த முன்னைநிலையின் உடம்பில் இருந்தபோது அருளியவை என்றும், திருமந்திரமணியவர்களும் Dr.V.V. ரமணசாஸ்திரிகளும் கூறுகின்றார்கள்.

(4) 30 உபதேசம்

ஆனல் இப்போதுள்ள திருமந்திரப் பதிப்புக்களுள் முதலாம் தந்திரத்துள் முதற்பகுதியாக வகுக்கப்பட்டிருக்கும் **30 பாட்டுக்களும் உபதேசம்** என்ற தலைப்பில் விளங்குகின்றன. அவையே முழுமையாகிய தொரு தனிநூல் போலவும் அமைந்துள்ளன. அப்பகுதிதான் "மூலன் உரை செய்த முப்பதுபதேசம்" என்றும், அது **திருமந்திமாலை**யினுடன் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் பெரியோர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். அப்பகுதிக்குச் சேலம்போலீசு அசிஸ்டண்டு டிஸ்டிரிக்ட் சூபரிண்டண்டாக இருந்த திரு·சுந்தர முதலியார் அவர்கள் அரியதோர் உரை எழுதி வெளியிட்டுள்ளார்கள். நேபாளத்துச் சுவாமிகள் என்ற தவமுனிவர்பால் தாம்கேட்ட அரியபொருள்கள் பலவற்றையும் அதில் அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். முதற் றந்திரத்துள் வரும் ஏனைப் பகுதிகளினின்றும் வேருக இது தனிப்படக் காணப்படுகிறது. "முப்பது உபதேசம்" என்றது இஃதே என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகின்றது. "300 மந்திரம்" என்பதும் இவ்வாறே திருமந்திரமாலையின் வேறு ஒரு பகுதியாயோ அல்லது சில பகுதிகளாகவோ இருக்கும் போலும் என்னும் ஐயமும் எழுகின்றது. ஆராய்ச்சிக்காரர்களான பெரியார்கள் இவற்றைத் துணியக் கடவர்கள்.

(5) திருமந்திர மாலையின் முதனூல்

திருமந்திரமாலையின் முதனூல் "ஸ்ரீமந்திரமாலிகா" என்பதொன்றென்றும், அது முதலில் வடமொழியில் ஆக்கப்பட்டதெனக் கொள்வதற்கு இடமுண்டு என்றும், உபமன்யு பக்த விலாசத்திற் பகரும் வாய்மையை நோக்கின் இதன் முதல்நூட் வடமொழியில் உளது என்பது போதரும் என்றும் கருதி எழுதியுள்ளார் Dr.V.V. ரமணசாஸ்திரியார். உபமன்ய பக்த விலாசம் என்பது ஒரு தனி முதனூல் என்பதும், அதன் ஆதரவுகொண்டு பல உண்மைகள் துணியப்படும் என்பதும் அவருடைய கொள்கைகள். "தண்ணிலவார் சடையார்தாந் **தந்தவா கமப்பொருளை,** மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினற் **றமிழ்வகுப்ப"** என்பது பெரியபுராணம். இதனல் அந்த **ஆகமப்பொருள்** தமிழினன்றி வேறு ஒரு மொழியாலோ அல்லது வேறு வாயிலினலோ வெளிப்பட்டது என்பது போதருமேயன்றி, அப்பொருளைச் சொல்லும் வேறொரு **நூல்** உண்டென்றும் அஃதே தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது என்றும் போதராது; பொருளை எடுத்துத் **தனிப்பட மொழிவது** வேறு; **மொழிபெயர்ப்பது** என்பது வேறு. திருமந்திரப் பாட்டுக்களையும் தந்திர அமைப்புக்களையும் அவ்வவற்றின் வகுப்புக்களையும் பொருள்களையும் உற்று நோக்கின் அது வேறொரு நூலின் மொழிபெயர்ப்பென்பது சிறிதும் பொருந்தாமை நன்கு புலப்படும். பெரியபுராணத்தின்பின் அதனையே வடமொழியில் மொழிபெயர்த்துக் கொண்டு வெளிப்பட்டது "உபமன்ய பக்த விலாசம்" என்பது பல நல் அறிவாளர்களின் துணிந்த முடிபு. அவ்வாறே "திருமந்திரமாலை"

யினேயே சிற்சில பகுதிகளை வடமொழியில் மொழி பெயர்த்துக் கொண்டு வடமொழியில் ஸ்ரீமந்திரமாலிகா'' என்றதொரு நூல் உண்டென்றும் அதனேயே முதனூலாகக் கொண்டு, திருமூலர் மொழிபெயர்த்தார் என்றும் சிலர் அபிமானம் பற்றிக் கூறலாம். அவையும் அவைபோல்வனவும் எல்லாம் பொருந்தாத உரைகள் என்றெழிக. பெரியபுராணத்துடன் மாறுபடும் கொள்கைகள் எவையேனும் அவை கொள்ளத்தக்கனவல்ல. தள்ளத்தக்கனவேயாம் என்பது துணிபு.

(6) திருமந்திரம் சிவாகமப் பொருள்களின் சாரம்

திருமூலர், இறைவர்தாமே தந்த சிவாகமங்களின் பொருளேத் தமிழில் வகுத்தார் என்பதில் ஐயமில்லை. சிவாகமங்கள் (மூலாகமங்கள்) இருபத்தெட்டென்பதும் எல்லாருடைய துணிபு. அவற்றின் பெயர்கள் சிவாகமங்களுள்ளும் சித்தாந்த சாராவளி முதலியவற்றுள்ளும் பேசப்பட்டன. இவையன்றி, உபாகமங்களும் பல உள்ளன. "அரிவையோர் பாகத்தன், அஞ்சொ டிருப்பத்து மூன்றுள வாகமம்'' "அண்ண லருளா லருளுஞ் சிவாகமம்'' என்பன திருமந்திரம். இவற்றுள் வடித்தெடுத்த பொருள்தாம் திருமந்திரத்துள் வகைப்படுத்துப் பேசப் போந்தன என்று மேலே உரைக்கப்பட்டது. இவற்றுள், காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமள மாகுங் காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்ற பெயர்களாற் சுட்டி, "நவவா கமமெங்கள் நந்திபெற் றுனே'' (63) என்றதொரு பாட்டுத் திருமூலர் திருவாக்காகத் திருமந்திரம் பாயிரத்துட் காணப்படுகின்றது. இப்பாட்டினே ஐயப்பட்டு நீண்ட ஆராய்ச்சி செய்கின்றுர் Dr. V.V. ரமணசாஸ்திரிகள். அதிற்கூறிய ஆக மங்களின் தொகையைக் கூட்டினல் எட்டே ஆகமங்கள் பெறப்படுகின்றன என்றும், "இயாமள மாகுங் காலோத்தரம்'' என்றதனே "இயாமளம் ஆகுங்காலோத்ரம்'' என்று இரண்டாகப் பிரிப்பதற்கு இடமில்லை; ஏன்? என்றுல் "இயாமளம்'' என்னும் பெயருடைய திவ்யாகமம் (மூலாகமம்) கிடையாது என்றும், காலோத்தரம் என்பது காலஞானம், பிருகத்காலோத்தரம் என்ற பெயர்களுடன் வாதுளாகமத்தின் உபாகமமேயன்றி மூலாகமங்களின் ஒன்றுகாது என்றும், அது தேவிகாலோத்தரம் என்னும் உபாகமமே என்றும், இங்கு இயாமளமாகுங் காலோத்தரம் என்றது யாமளம் எட்டில் ஒன்றுகும் காலோத்தரயாமளமே என்றும், ஷ திருமந்திரப் பாட்டுப் பிறராற் புனேயப்பட்டது என்றும் அவர் துணிகின்றுர். இவற்றை அறிஞர் ஆராயக்கடவர். இக்கூற்றுக்கள் உண்மை நிலையினே விளக்குமாயின் நவவாகமம் (9 ஆகமம்) என்பது மாறி, ஷ பாட்டில் **ஏழு** மூல ஆகமங்களே குறிக்கப்பட்டன என்பது பெறப்படும். பெறப்படின், திருமந்திரம் ஒன்பது தந்திரங்களும் முறையே ஷ பாட்டிற் கூறிய ஒன்பது ஆகமங்களின் சாரம் என்பதும் மேல் ஆராய்ச்சிக்குரியதாய் நிற்கும். அன்றியும், சிவ ஆகமங்கள் சரியை முதலிய நாற்பத நெறிகளேயும் பொதுமையின் விளக்கி, அவற்றுள் சிலவற்றைச் சிறப்பாயுணர்த்துவன. திருமந்திரத் தந்திரங்களின் பொருள்களேயே சாரமாக ஒவ்வோராகமம் வைத்து விதந்துபேசும் என்பதும் பொருத்தமாகக் காணவில்லை. பொதுவாய்ச் சிவாகமங்களின் பொருளேப் பாகுபடுத்தி வடித்தெடுத்துத் திருமூலர் 9 தந்திரங்களாக 3000 பாட்டுக்களால் அருளினுர் என்பதே பொருத்தமாகக் காண்கின்றது.

(7) சிவாகமங்கள்

இனிச் சிவாகமங்கள் உண்மைப் பொருளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாக நான்கு பாதங்களாய் வகுத்துப் பேசுகின்றன. ஆயின் இவற்றுட் சிற்சில பகுதிகளைச் சில ஆகமங்கள் மிகுத்தும் குறைத்தும் பேசுவன. சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் காமிகம் முதல் சுப்பிரபேதம் வரை பத்தும் சிவபேத ஆகமங்களென்றும், மேல் விஜயம் முதல் வாதுள மீறுகவரும் பதினெட்டும் உருத்திர பேத ஆகமங்களென்றும் வகுக்கப்பட்டுள்ளன. இவையாவும் சதாசிவதேவராலே சுயமாகவே ஈசானமுகத்தினலே சொல்லப்பட்டன என்றும் கூறுவர். **"அஞ்சா முகத்தி லரும்** பொருள் கேட்டதே" (திருமந்). காமிகமாதி ஆகமங்களின் பெயர்களும் வகை தொகைகளும், தோற்றமும் கிரந்த சங்கியையும், அவற்றைக் கேட்டார் பெயர்களும் அவ்வவற்றின் உபாகமங்களும், இன்ன பிறவும் சிவாகமங்களின் முதற்கண் உள்ள தந்திராவதாரப் படலத்துள் விரிவாக மொழியப்பெற்றுள்ளன. "அஞ்சனமேனி" (57) என்றதிருமந்திரத்தின் விளக்கம் ஆண்டுக்கண்டு கொள்ளத்தக்கது. ஈண்டு **"அறுபத்தறுவர்"** ஆகமம் கேட்டவர் என்று குறிக்கப்பட்ட பிரணவர் முதல் மகா காளர் வரையுள்ள சிவ - ருத்திரர்களின் பெயர்களையும் ஆண்டுக் காண்க. காமிகம் - (1) தந்திராவதாரப் படலம் சுலோகம் 22 - 23 - "ஈசானவத்ரா" என்றும், "ஷட் ஷஷ்டிபிகி" என்றும் தொடங்குவனவற்றுள் சிவபேதம் (10) உருத்திரபேதம் (18), இவற்றைக் கேட்டோர் 66 பேர் என்பன முதலியவை காணப்படுகின்றன. திருமந்திரத்துள் வேதப் பொருள் அருகியும் சிவாகமப் பொருள் மல்கியும் எடுத்தோதப்பட்டுள்ளன. **தந்திரம் -** தன்னை யடைந்தோரைக் காப்பது; தத்துவ மந்திரப் பொருள்களை விளக்கிக் கூறுவது; தந்திரம் - சித்தாந்தம் - ஆகமம்- மந்திரம் என்பன ஒரு பொருள் மொழிகள்; (இவை சிவப்பிரகாச தேசிகர் குறிப்பு). இனி, இவற்றை உள்ளிட்டுத் தனித் தனி விளங்கும் உபாகமங்களுமுள்ளன. அவை நாரசிங்கம் முதல் விசுவான்மகம் ஈறுக 207 என்பர். கேட்போரது பரிபாக வேற்றுமையினலும், எடுத்துக் கொண்டு விளக்கப்படும் பொருள் வேற்றுமையாலும், சிவாகமங்களுள் சிற்சில பகுதிகள் வேறுபாடுடையவை போலத் தோன்றுவன. "...கடவுள், பாலரையுணர்த்து மேலவர் போலக், **கேட்போ ரளவைக் கோட்படு பொருளால்** அருளிய கலைகள் அலகில..." (சங்கற்ப நிரா - பாயிரம்). சரியை முதல் மூன்று பாதப் பொருள்களைக் கூறும் ஆகம பேதங்கள் கற்ப பேதத்தானும், ஆன்மாக்களின் கருத்து வேறுபாட்டானும் சிறுபான்மை அவ்வாறு வேறுபட நிகழ்ந்தன. ஆனல் ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாதலின் ஆண்டு வேறுபடுதல் அமையாதாயினும் ஆன்மாக்களின் மலபரிபாக தாரதம்மியத்திற் கேற்பத் தூலாருந்ததி முறையாக உணர்த்தும் மரபுபற்றிச் சில வேற்றுமையுடையன போலக் காணப்படுவன. அவ்வாறு மயங்காமைப் பொருட்டுச், சிவாகமங்களின் ஞானபாதப் பொருளைப் **பொது, உண்மை** என்றிருவகைப்படுத்துப் பன்னிரண்டு சூத்திரங்களாக ஆக்கி இறைவர் நந்திபெருமானுக்கு உபதேசித்தருளினர் என்பது சித்தாந்த வரலாறு. (பாடியம்). இவற்றின் விரிவு சிவஞான மாபாடியத்துச் சிறப்புப் பாயிர உரையிலும் பிறண்டும் கண்டுகொள்க. அவ்வாறு சிவாகமங்களின் ஞானபாதத்தின் உளவாகும் மலைவு தீர்த்தற்பொருட்டு இறைவர் அருளத் தாங்கேட்ட பொருள்களை நந்திபெருமான் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கு உபதேசித்தார். அந்தப் பரம்பரையில்

உபதேசம் பெற்றவர் திருமூலர். அவர் தாங்கேட்ட சிவகாமத் திரட்சிப்பொருளை 9 தந்திரங்களால் வகுத்து 3000 திருமந்திரங்களால் அருளினுர் என்க.

(8) திருமந்திரப் பொருளடக்கமும் அமைதியும்

திருமந்திரம் சிவாகமங்க ளெல்லாவற்றின் வடித்தெடுத்த சாரமாதலின் அவை **யெல்லாவற்றினும் பேசப்படும்** முப்பொரு ளுண்மையினையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நாற்பாதங்களைப் பற்றிய முடிபுகளையும் தனது இருதயத்தில் வைத்துப் போற்றுகின்றது. திரயீ என்று கூறப்படும் இருக்கு, எசுர், சாமம் என்ற மூன்று வேதங்களுள் நடுவணது எசுர்வேதம். அதன் நான்காவதாகிய நடுக்காண்டத்துள் நடுவணதாகிய 11-வது அநுவாகத்தின் நடுவணதாகிய 6-வது சூக்தத்தில் விளங்குவது திருவுருத்திரம். அதன் நடுவுள் சீபஞ்சாக்கரமும் அதனடுவுள் **சிவ** என்ற திருநாமமுமாம். இதனையே வேத மத்தியில் விளங்கும் **அட்சரத்துவயம்** என்பர். வேதபுருடன் சிவனை இருதயத்தில் வைத்துப் போற்றுகின்றுன் என்பது மிக்கருத்துப் பற்றியது. அதுபோலவே, ஈண்டுச் சிவாகம சாரமாகிய திருமந்திரமும் முப்பொருளுண்மையையும் ஞான முதல் நான்குண்மையினையும் தனது இருதயத்தானத்தில் வைத்துப் போற்றுகின்றது காணலாம். என்னை? திருமந்திரம் ஒன்பது தந்திரங்கள் கொண்டது. அவற்றுள் நடுவணது ஐந்தாந் தந்திரம். அதிலேதான் சரியையாதி சைவ நாற்பாதங்களையும், அவற்றின் பதங்களையும், வகைகளையும் வைத்துப் பேசுகின்றுர் திருமூலதேவ நாயனுர். இக்கருத்து "உள்ளுணர் வான ஞான முதலிய வொரு நான்குண்மை, தெள்ளுதீந் தமிழாற் செப்பும் திருமூலர்" என்று தொடங்கி "ஞானமுத னுன்குமலர் நற்றிருமந் திரமாலை" என்றும், "நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலாம், மலர்ந்தமொழித் திருமூல தேவர்" என்றும், அவர் வரலாற்றின் முத லிடை கடைகளில் மும்முறையும் வைத்து வற்புறுத்தி ஆசிரியர் சேக்கிழார் பெருமான் உணர்த்தி யருளியதனுலும் பெறப்படும். திருமந்திரத் தொகையாலும் 5-ம் தந்திரம் இடையாக வுள்ளது. இஃதிவ்வாருயின் திருமந்திரத்தினுள் ஐந்தாவதற்கு முன்னும் பின்னும் வரும் ஏனைத் தந்திரங்களின் பொருளும் அமைதியும் யாவை? எனிற் கூறுதும்.

(9) திருமந்திர அமைப்பு: பாயிரம்

திருமந்திரம் இறைவர்தாந் தந்த **ஆகமப் பொருளைத்** தமிழில் வகுத்துச் சொல்வதற் கெழுந்ததென்று கண்டோம். நான்மறைப்பொருளும் ஆகமப்பொருளும் ஒன்றே என்பது அறிந்தோர் துணிபு. **மந்திரம்** என்பது நினைப்பவனைக் காப்பது என்று பொருள்படும். "வஞ்சப் பிறவிக் கஞ்சிக்", கதிப்பாற் செல்ல ஏது நெறி? என்று, வீடு காதலித்து வந்து கேட்கும் பக்குவமுடையோருக்கு உரைப்பது மந்திர உப தேசம். மந்திரங் கேட்பதிலும், கேட்டுப் பயன் பெறுவதிலும் அவனுக்கு மன எழுச்சியும் உறுதிப்பாடும் இருந்தாலன்றிப் பயன்படாது. அவை வருதற்பொருட்டுத் தொடக்கத்துக் கூறப்படுவது இப்பாயிரம். வேத சிவாகமம் இரண்டும் இறைவனுற் செய்யப்பட்டன வாதலின் பிரமாணங்களாவன. இவற்றுள் வேதம் பொது நூலும் ஆகமங்கள் சிறப்புநூலுமாம்; சூத்திரமும் பாடியமும் போல. "வேதமொ டாகம மெய்யா மிறைவனுால்

ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக" (திருமந் - 2397); "சித்தாந்தம் வேதாந்தங் காட்டும் சிவனையே" (2394); இங்கு வேதம் என்பது வேதசிரம் வேதாந்தம் எனப்படும் அதன் ஞான பாதங்களாகிய உபநிடதங்களை. அவற்றுள் அதர்வசிகை முதலிய உபநிடதங்கள் கேட்போர் தத்தமக்குரிய சோபான முறையில் அறிந்து வருவதற்கேற்பத் தூலாருந்ததி நியாயம் பற்றி உண்மைப் பொருளை ஏகதேசத்திற் கூறும். சிவாகமங்கள் அவற்றுள் முடிந்த முடிபாகத் தெளிந்த பொருள்களைக் கூறும். அதனாலே அவற்றுக்குச் **சித்தாந்தம்** (முடிந்த முடிபு) என்று பெயர். "வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத் திறன்" (சித்தி - பாயி - 7); "வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்; ஆதிநூ லனாதியம லன்றருநூ லிரண்டும்; **ஆரணநூல் பொது; சைவ மருஞ்சிறப்பு நூலாம்;** நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது" (சித்தி - 8 - 15); "**உலகியல் வேதநூ லொழுக்க** மென்பதும், நில**வுமெய்ந் நெறிசிவ நெறிய** தென்பதும்" (ஞானபுரா - 820 - 2718); "வேதம் பசு; அதன் பால் மெய்யாகமம்" என்பன முதலியவை காண்க. ஆயின் இவற்றுள் "ஆகமம் ஒன்றே அமையும்; இரண்டு வேண்டா" எனின்? அற்றன்று சிறப்பு நூல் கற்கும் பக்குவம் வாராதார்க்குப் பொதுநூல் வேண்டப்படு மென்பது. அன்றியும் வேதம் மூன்று வருணத்தாருக்கு உரியதாகவும், ஆகமம் நான்கு வருணத்தார்க்கும் உரியது என்பதும் காண்க. வேதத்துள் விதிக்கப்படும் சிவபூசை முதலிய விதிகளுக்கு அவற்றின் முறைகளை வகுத்துக்கூறும் காமிக முதலிய ஆகமங்கள் இன்றியமையாது வேண்டப்படுவன; பஞ்சப் பிரமம் - பிரணவம் - பஞ்சாக்கரம் - பிராசாதம் முதலிய மந்திரங்களும், பதி பசு பாச முதலிய பொருள் வழக்கமும் திருநீற்றின் உத்தூளனம் - திரிபுண்டரம்- உருத்திராக்கந்தரித்தல், சிவலிங்க பூசை முதலிய தருமங்களும், பிறவும், வேதஞ் சிவாகம மிரண்டினும் ஒப்பக்காண்டலான் இரண்டும் பிரமாணங்கள். இரண்டினிலும் குறிக்கும் பொருள் ஒன்றேயாம். "சித்தாந்தத் தேமுத்தி சித்திக்கும்... சித்தாந்தம் வேதாந்தங் காட்டும் சிவனையே" (2394); "நாத னுரையிவை நாடி லிரண்டந்தம், பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே" (2397); சிவபெருமான் கல்லாலின் கீழ் நால்வர் முனிவர்களுக்கு அற முதலிய நான்கனையும் உரைத்து, ஞானமோன நிலையினையும் கைவரப் பண்ணினர்; மகேந்திர மலையினின்றும், அவற்றுள் ஞான முடிபாகிய சிவாகமங்களைத் தோற்றுவித் தருளினர்; "அறம்பொரு ளின்பம் வீடடைதல் நூற்பயன்" என்பர். அஃது எல்லா நூல்களுக்கும் பொதுவிதியாகும். அவற்றுள் ஒவ்வொன்றனையே பயப்பன சில நூல்கள்; அந்நான்கனையும் பயப்பன வேதங்கள்; முதல் மூன்று பொருள்களையும் அறிந்து, பின்னர் விட்டு நீங்கும் அளவே வீட்டுநூல் பெறப்பட்டுப் பயன்தரும்; வீடென்று துறவு முதலிய காரணங்களுள் வைத்தும் மற்றும் பொது வகையாலும் உணர்த்துமளவில் சாந்தி பெறுவன வேதங்கள். ஆனால் சிவாகமங்கள் அவை விட்டுச் சாந்திபெறும் நிலையினின்றுந் தொடங்கிச் சிவஞான முணர்த்தும் வகையால் வீட்டை யுணர்த்திச் சாதனங்களால் அதனைப் பெறுவிக்கும்.

"அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொரு ளின்பம்வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி" (தேவா-ஞானசம்-பழந்தக்கராகம்-6)

"நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் **கறமுறைத்தான்** காணேடீ" (திருவா - சாழல் - 16)

"அருந்தவருக் காலின்கீ **ழறமுதலா நான்கனையும்**
இருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ;
அருந்தவருக் **கறமுதலான்** கன்றளிச் செய்திலனேல்
திருந்தவருக் **குலகியற்கை** தெரியாகாண்" (திருவா - 11- 20)

என்றும்,

"திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே
அறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரான்"
(தேவா-ஞான-சீகாமரம்-புள்ளிருக்கு வேளூர்-6)

என்றும் வரும் திருவாக்குக்கள் சிந்திக்கத்தக்கன.

இவற்றுள் அற முதலிய நான்கனையும் உணர்த்தி **உலகியற்கை**யினைக் காட்டி **வீடுபெறும் வழியி னிற்பிப்பன** வேதங்கள் என்றும், ஆகமங்கள் சிவதன்மங்களைப் புகட்டி **வீடு பெறுவிப்பன** என்றும் காணலாம். வேதம் **உலகியல்** என்றும், ஆகமம் **சிவதன்ம** மெனவும் பெயரிட்டுக் கூறப்பட்டதும் காண்க. திருமந்திரத்தினுள் "வேதத்தை விட்ட அறமில்லை, வேதத்துள், ஓதத் தகுமற மெல்லா முள" (51) என்று வேதத்தையும், "பரனுய்ப் பராபரங் காட்டி யுலகிற், றரனுய்ச் **சிவதன்மந்** தானே சொல்காலம்" (61) என்று முறையே வேதங்களையும் **ஆகமங்**களையும் கூறுவதும் காண்க.

"ஏ! நன் மாணவகனே! பிறவியாகிய துன்பத்தினின்று நீங்கி வீடுபெறுதலே அறிவுடைய மக்களின் கடமையும் செயலுமாகும். அது சிவனை அடைந்தா லன்றிக் கைகூடாது. சிவன் ஒருவனே பதி; சிவனேடொக்கும் தெய்வம் தேடினுமில்லை (5); அவன் மூவர்க்கு மூத்தவன்; தாயினும் நல்லவன்; எல்லாரும் அவனைத் தொழுவ தல்லது அவன்றன்னுற் றொழப்படுவாரில்லை. அவன் சேர்ந்தறியாக் கையான் (திருவா); இடியு முழக்கமும் ஈசனுருவம். (மின்னுயுரு மானுன் - வேற்ருகி விண்ணுகி - காற்ருகி - இருநிலனுய்த் தீயாகி" என்பன முதலிய தேவாரங்கள் காண்க.) உண்மை இவ்வா றிருக்கவும், "மும்மூர்த்திகள்" என்ற வழக்கமுமிருந்து வருகின்றது. "மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றேயாம்" "சிவனரு ளல்லது ஒருந் தனித் தெய்வ மற்றிலை"; "இவை சங்கரன்றன் பெயர் தானே"; அயன் மாலாதியோர் சிவனது ஏவலால் மேவி அவன் தந்து இயக்கும் அதிகார சத்தி புண்ணியம் நண்ணலாலே தத்தம் தொழில் செய்கின்றனர். * * *

"சிவன் அருளினுலே உயிர்கள் உய்ந்து வீடடைதற் பொருட்டு வேதசிவாக மங்களைத் தாமே அருளிச் செய்தார். அவற்றின் வழி ஒழுகி வீடு பெறுவாயாக. அவற்றின் இயல்பு மேலே விரித்துக் கூறினேன். * * *

"சிவபெருமான் ஆகமப் பொருள்களை நந்தி பெருமானுக்கு உபதேசித்தார். அவர் கயிலையில் சனற்குமாரர் முதலிய முனிவர்களுக்கும், அவ்வழியே எனக்கும் மற்றும் சிலருக்கும் உபதேசித் தருளினுர். அப் பொருள்களைத் தமிழ்நாடுய்யத் தமிழிற் சொல்லும் பொருட்டே என்னைக் கயிலையிலிருந்து இங்கு வரச் செய்தருளினுர் இறைவர். "அரனடி நாடொறுஞ் சிந்தைசெய் தாகமம் செப்பலுற்றேன்" (75); "திருக்கூத்தின் சீலாங்க வேதத்தைச்

செப்பவந்தேன் (77). நான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுவதாக. இவற்றைக் கேட்டு அவற்றின் வழி ஒழுகி நீயும் கதிபெறுக"—என்று உபதேசித்து நூல் தொடங்கும் வகையால் அமைந்தது இப்பாயிரம். மந்திர உபதேசம் கேட்பதில் மாணுக்கனுக்கு மனவெழுச்சி சேரற் பொருட்டு அருளியது இப்பாயிரமாகும்.

(10) முதல் தந்திரம்

திருமந்திரம் 3000-மும் ஒன்பது தந்திரங்களாகப் பகுக்கப் பட்டுள்ளனவென்றும், அவற்றுள் உயிர் நாடியாகிய சைவசித்தாந்த உண்மைகளை விளக்கி நிற்பது நடுவணதாகிய ஐந்தாந் தந்திரமென்றும் முன்னே கூறினேம். அதன் முன்னே நிற்கின்ற ஒன்று முதல் நான்கு தந்திரங்களும், அந்தச் சிவஞானத்தைப் பெறுதற்கு நன் மாணுக்கன் தன்னை உள்ளும் புறம்பும் தகுதியுடையவனுக ஆக்கிக் கொள்ளுதற்குரிய **சாதனங்களையும்,** பின்னையனவாகிய ஆறு முதல் ஒன்பது வரை உள்ள நான்கும் ஞானம் பெறும் நிலையில் கண்டு பெறத்தக்கவையாகிய **பயன்களையும்** பற்றிப் பொது வகையால் உணர்த்துவன என்றும் கூறலாம். பால் நல்ல பொருளாயினும் தூய்மையில்லாத பாண்டத்தில் வைத்தாற் கெட்டுப் பயனில்லாது போகும். அஃதேபோலச் சிவஞானம் நல்லதுதான். உள்ளும் புறம்பும் தூய்மையில்லாதவனிடத்தில் வரும்போது பயனற்றுப் போவதுடன் கேடும் விளைத்துவிடும். ஆதலால் ஞானம் பெற முயல்பவன் முதலில் தன்னை அதற்கு உள்ளும் புறம்பும் தகுதியுடையவனுக ஆக்கிக் கொள்ளுதல் வேண்டுமென்று வற்புறுத்தி, அதற்குரிய சாதனங்களையும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வைத்து உபதேசிப்பது இம் முதற்றந்திரம். அதனோடு உபபலமாக வேண்டப்படும் சிலவற்றையும் கூறுகின்றது.

இம்முதற்றந்திரத்துள் வைத்துள்ள உபதேசம் என்னும் பகுதி திருமந்திரத்தினுடன் சேராத "மூல னுரைசெய்த முப்ப துபதேசம்" என்ற தனிநூல் என்று முன்னே குறிப்பிட்டோம். உடல், உயிர், செல்வம், இளமை என்னும் இவற்றில் அபிமானம் வைத்து அவற்றுட்பட்டு உழல்பவன் ஞானம்பெறத் தகுதியற்றவன். பெறுவதில் ஊக்கமும் அவனுக்கிராது. இவற்றின் நிலையாமையை உணர்ந்து, இவற்றுட் கிடக்கினும் பற்று வைக்காத மனநிலை பெற்றுப் புளியம்பழம்போற் சரிக்கும் நிலைதான் ஞானம் பெறுதற்கு முதற்படியாகும். ஆதலின் இத்தந்திரத்துள் யாக்கை நிலையாமை, செல்வநிலையாமை, இளமை நிலையாமை, உயிர் நிலையாமை முதலிய பகுதிகளால் இந்நிலையினை அறிவுறுத்துகின்றூர்.

"ஊரெ லாங்கூடி யொக்க வழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினின் மூழ்கி நினைப்பொழிந் தாரே" *(145)*

என்பது முதலிய மந்திரங்களால் யாக்கை நிலையாமையினை வற்புறுத்தி உபதேசிக் கின்றூர்.

"மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக்குக் கைபலி காட்டிய வாறே" *(147)*

"இடப்பக்க மேயிறை நொந்ததே யென்றுர் (நேர்ந்ததே - பாடம்.)
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே" (148)

"மையிட்ட கண்ணுளு மாடு மிருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே" (151)

"அன்புடை யார்க ளழுதகன் றுர்களே" (152)

"நாட்டுக்கு நம்பி நடக்கின்ற வாறே" (153)

"உடலுடைந் தாலிறைப் போதும் வையாரே" (158)

என்பன முதலியவை இப்பொருளைத் திருமூலர் அழகும் உறுதியும் பெறக்கூறும் உபதேசங்கள்.

இனிச், செல்வ நிலையாமையினை

"ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தவை கைவிட்ட வாறே" (171)

"உங்கள் செல்வத்தைக், கூற்றன் வருங்காற் குறிக்கலுமாமே" (172)

என்பன முதலியவாற்றல் வலியுறுத்துகின்றுர்.

"கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேரார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேரார் வியனுல கோரே" (177)

என்பன முதலியவற்றுற் செல்வ நிலையாமையினை வற்புறுத்துகின்றுர். அது போலவே உயிர் நிலையாமையினையும் எடுத்துணர்த்துகின்றுர்.

"அழைக்கின்ற போதறி யாரவர் தாமே" (187)

இனி, நிலையாமை பற்றிய உணர்ச்சி வந்தால் மட்டும் அமையாது. கொலை - புலை (புலால் உண்ணுதல்), பிறர்மனை நயத்தல், பெண்ணுசை, கள்ளுண்ணல் முதலிய தீயொழுக்கங்களை விட்டு விலகுதலும் வேண்டும். அவை உடலுக்கும் உயிருக்கும் ஒருங்கே தீமை பயப்பன; அறிவினைக் கெடுக்கும். அவை ஞானத்துக்குச் சிறிதும் இடம் கொடா.

கள்ளுண்ணுமை

"காமமுங் கள்ளுங் கலதிகட்கே யாகும்" (326)

"சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி யழிந்தது தம்மை மறத்தலால்" (332)

கொல்லாமை;

"பற்ருய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்ருேர் அணுக்க ளேக்கொல் லாமை" (197)

புலால் மறுத்தல்

கொலேயே களவுகட் காமம் பொய்கூறல்
மலேவான பாதக மாமவை நீக்கி" (200)

பிறர்மனே நயவாமை

"ஆத்த மனேயா ளகத்தி லிருக்கவே
காத்த மனேயாளேக் காமுறுங் காளேயர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாதார்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே" (201)

இனி, **நல்குரவின்** கேடும் அதனே வராமற் காக்கும் திறனேயும் பற்றி ஈண்டுக் கூறுகின்ருர், நல்குரவினுல் நலிந்து வருந்துவோனுக்கு ஞானத்தின் மனஞ் செல்லாது ஆதலான்.

"புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களு மன்பில ராளுர்
கொடையில்லே கோளில்லே கொண்டாட்ட மில்லே
நடையில்லே நாட்டி லியங்குகின் ருர்கட்கே" (202)

அறஞ் செய்தலின் அவசியத்தினேத் தானச்சிறப்பு, அறஞ்செய்வான் றிறம், என்ற தலேப்பின் கீழும், **அன்புடைமை**யின் இன்றியமையாமையினேயும், அன்பினுள்ளே சிவன் எழுந்தருளியிருந்து அன்பு செய்வாரைச் சிவனுக்கும் திறத்தினேயும் அன்புடைமை அன்புடையாரை அறிவான் சிவன் எனற் தலேப்பின் கீழும் ஆசிரியர் வற்புறுத்தி உபதேசிக்கின்ருர்.

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே" (270)

என்பது அறிஞர் யாரும் அறிந்து அடிக்கடி எடுத்துச் சொல்லும் பாட்டு. ஆனுல், அதில் "அன்பேசிவம்" என்ற அளவில் மேற்கோளும் தலேப்பும் கொள்வதனினும், "அன்பே சிவமாவது" என்று மொழிதல் பொருளுடையதாகும். கல்விகேள்விகளின் இன்றியமையாத பெருமையினேக் கல்வி - கல்லாமை - கேள்வி கேட்டமைதல் என்ற மூன்றுவகையா லுணர்த்தி வற்புறுத்துகின்ருர்.

கல்வி

"கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு" (291)
"துணையது வாய்வருந் தூயநற் கல்வியே" (294)
"ஆய்ந்துகொள் வார்க்கர னங்கே வெளிப்படும்" (296)
"கற்றவர் பேரின்ப முற்று நின்றுரே" (298)

கல்லாமை

"கல்லாதா ரின்பங் காணகி லாரே" (310)

"எல்லா வுயிர்க்கு மிறைவனே யாயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணுதே" (312)

"கற்றுஞ் சிவஞான மில்லாக் கலதிகள்" (318)

என்பன முதலியவை காண்க. "கல்லார் நெஞ்சி னில்லா னீசன்" "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை, மற்றவ ரறியா மாணிக்க மலையை" என்பனவாதி திருவாக்குக்களும் ஈண்டுச் சிந்திக்கத் தக்கன.

கேள்வி

"அறங்கேட்டு மந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்,
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் மீசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே" (300)

இவற்றுள் திருமூலர் ஞான மாணுக்கனுக்கு வேண்டப் படுவனவாகத் தாம் கருதும் கல்வி கேள்விகள் இத்தன்மையன என்று எடுத்துக் காட்டுகின்றுர். அஃதாவது **கல்வியாவது சிவனைக் கற்கும் கல்வியே; கேள்வியாவது சிவனைப் பற்றிக் கேட்கும் கேள்வியே** என்பது. திருக்குறளிலும், மற்றும் நீதிநூல்களிலும் பேசப்படும் கல்வி கேள்விகள் வேறு; அவை **உலகியல் பற்றிய** பொதுஞானத்தைப் பெறுவிக்கும் தன்மையே குறிக்கின்றன. ஈண்டு இவை **ஆன்மவியல் பற்றிச்** சிவ ஞானத்துக் கேதுவாவன. ஆனல் வேதங்களுட் போலவே பொதுமறையாகிய திருக்குறளினுள்ளும் உலகியற் கல்வி பல்கியும் இறைவனூற் கல்வி அருகியும் கூறப்பட்டுள்ளன. "கற்றதனு லாய பயனென்கொல்" (குறள்) என்பது முதலியவை காண்க. (இத்தன்மை பற்றியே திருக்குறளை முப்பாலி னுற்பான் மொழிந்த மொழி என்று போற்றினர்.)

நடுவு நிலைமை என்ற தலைப்பிற் பேசப்படும் பொருள்களு மிவ்வாறே கொள்ளப்படும். **அக்கினி காரியம், அந்தணரொழுக்கம்** என்னும் பகுதிகள் ஞானப்பேறு பெறுவோர்க்குரிய ஒழுக்கங்களை விளக்குவன. இவை எல்லாவற்றையும், ஞானம் பெறும் முயற்சியுடையோரையும் காக்கும் கடமை அரசனுடைய தாதலின் அதனை விளக்கி உபதேசிக்க அரசாட்சி முறை - இராசதோடம் என்ற பகுதி எழுந்தது. வானச் சிறப்பு என்ற பகுதி உலகம் நிலைபெற்ற வழியன்றி ஞான முதலிய வொன்றுமியலா; அதுபற்றி அதன் இன்றியமையாத தன்மையினை விளக்கியது. ஞானிகளுக்கும் உலகம் இருக்கவேண்டும்;

அதற்கு மழைவேண்டும். இங்கு இப்பொருள்கள் பற்றி ஏற்ற தலைப்புக்களின் கீழ் வரும் திருக்குறட் பகுதிகளை நினைவு கூர்க. அவை உலகியற் பயத்தனவாக நிற்பன; ஈண்டுக் கூறியவை சிவஞானம் பெறுவிக்கும் முயற்சிப்பயத்தனவாக உள்ள நிலையும் கருதுக. "மாதவன் நோன்பு - காவலன் காவலின்றி நிகழா" தென்பது அறிவார் துணிபு.

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக" (திருப்பாசுரம்)

என்றவிடத்து, "உலக மின்புறச், சந்த வேள்விகள் முதல் சங்கரர்க்கு முன், வந்தவர்ச்சனை வழிபாடு மன்ன" என்றும், "வீழ்புனல், நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால்" என்றும், "மன்னனை வாழ்த்தியது, அர்ச்சனை, மூளு மற்றிவை காக்கு முறைமையால்" என்றும் ஆசிரியர் சேக்கிழார் பெருமான் உரை செய்தருளிய பகுதிகளை இங்கு நினைவு கூர்க. "அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய், நின்றது மன்னவன் கோல்" (குறள்). இத்தந்திரத்துள்ளும், பின்வருவனவற்றினுள்ளும் வரும் அதிகாரம் பற்றிய உட்பகுதிகள் முன்பின்னாகச் சற்று முறைபிறழ்ந் திருப்பனவாகக் கருத இடமுண்டு. இந்த உட்பிரிவுகளை வகுத்தவர் திருமூலதேவநாயனார் தாமோ? அன்றிப் பின்வந்த அவரது அடியார் கூட்டத்தவர் களாகிய பெரியோர்களில் ஒருவரோ, பலரோ? என்பது ஆராய்ச்சிக்குரியது.

(11) உட்பிரிவுகளும் திருமந்திரமும் வந்த வகை

உட்பகுதிகளைப் பற்றியன்றித் திருமந்திரம் முழுமையும் பற்றியே இவ்வகையாகிய சில கருத்துக்கள் எழக்கூடும். திருமந்திரம் முழுமையும் ஆண்டுக்கொன்றாகத் திருவாவடுதுறையிற், போதியின் கீழே தவமிருந்தவாறே திருமூலர் அருளினார் என்பது அவர் திருவாக்கினாலும் புராண வரலாற்றினாலும் அறியக் கிடக்கின்றது.

"சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவ னாமங்க ளோதியே" (79)

"இருந்தேனிக் காயத்தே யெண்ணிலி கோடி
இருந்தே னிராப்பக லற்ற விடத்தே..." (80)

**"* * *புறக்குடபால் மிக்குயர்ந்த வரசின்கீழ்த்
தேவிருக்கை யமர்ந்தருளிச் சிவயோகந் தலைநின்று
பூவலரு மிதயத்துப் பொருளோடும் புணர்ந்திருந்தார்"**

(திருமூலர் புரா-25-3584)

ஞானமுத னான்குமலர் நற்**றிருமந் திரமாலை**
பான்மைமுறை **யோராண்டுக் கொன்றாகப்** பரம்பொருளாம்
ஏனவெயி றணிந்தாரை "யொன்றவன்றா னெனவெடுத்து"

(மேற்படி - 26 - 3589)

என்பன காண்க.

(12) திருமந்திரம் முழுமையும் கிடைத்த நிலை

திருமூலர் சிவயோகியாராதலால் 3000 ஆண்டுகளோ, அதற்கு மேலும் பல ஆண்டுகளோ தவங்கிடந்து தங்கியிருத்தல் கூடும். ஆனுல் அரசமரத்தின் கீழே தங்கித் **தேவிருக்கை** யமர்ந்திருந்தாராதலின் எடுமெழுத்தாணியுங் கொண்டு ஆண்டுக் கொருபாட்டாக எழுதிவைத்தாரென்று கொள்ளுதல் ஒருவாறு இயலாததுதான். ஆயினும் அவர் ஒரு பெரிய யோகியார் என்று அந்நாள் அவரைக்கண்ட உலகம் திண்ணமா யறிந்திருத்தல் வேண்டும். அவ்வாறறிந்தமையால் அந்நாள் உலகிற் பக்குவமுடையார் ஒரு சிலராவது அவரைச் சுற்றியும் சூழ்ந்தும் பணி செய்து காலம் பார்த்திருத்தல் இயல்பேயாம். திரு மூலர் அவ்வாறு சூழ்ந்திருக்கும் உலகரிற் பக்குவமுடையாரை ஆணையிட்டு இம்மந்திரங்களை எழுதிவைக்க நியமித்திருத்தலும் கூடும். ஆனுல் அவர்களும் திரு மூலரைப் போலவே 3000 ஆண்டு உடன் வாழ்ந்தார்கள் என்று கொள்ளுதல் கூடாமையின், ஒருவர்பின் ஒருவராய்ப் பிழைபடாது வழிவழி எழுதி வந்தார்கள் என்று கொள்ளலாம். அல்லது திருமூல தேவரே சிவயோகம் 3000 ஆண்டுகளும் கழிந்து திருமந்திர முற்றியபின் அப்போது கண்ட உலகினர்களிற் பக்குவமுடையார்பால் மந்திர முழுவதையும் கூறி எழுதிவிடுத்திருத்தலும் கூடும் என்றுலும் இழுக்கில்லை. திருமந்திர முழுமையும் அவ்வாறு நினைவிலிருந்து மறுமுறை சொல்ல முடியுமோ? எனின், "முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தை"யுடைய திருமூலர் முதலிய பெரியோர்க்கு அஃது இயலும்; வேறு எதுவும் இயலும். நம்மனோர்க்கு அஃதொரு பாகமும் இயலாமைகொண்டு நம் அளவுகோல் கொண்டே அவர்களை அளக்கலாகாது. மாணிக்கவாசக அடிகளார் தம்மிடம் வந்து கேட்ட மறையவராகிய இறைவருக்குத் தாம் அருளிய திருவாசக முழுமையும் நினைவிலிருந்தே **பாகுபடுத்திச்** சொல்லியருளினுர் என்ற சரிதமும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது. பெரியோர்கள் தாம் இறைவர்பால் அருளிய திருப்பாட்டுக்களை உலகர் கொண்டு வழிபட்டுய்யும் பொருட்டு மீளவும் உலக மக்களுக்குச் சொல்லி அருளுதல் சைவ மரபு என்பதும் காணலாம்.

திருநாவுக்கரசு நாயனுர் சமணர்கள் இட்ட சுண்ணும்புக் காளவாயினுள் இருந்து இறைவரைத் துதித்துய்ந்ததும், கடலினுட் கல்லில் மிதந்து வந்தபோது அருளியதும் ஆகியபதிகங்கள் அவர் வந்த பின், பிறர் தெளிந்துய்யும்படி அவரே சொல்லி யருளியதனுற்றுனே வெளிப்பட்டு இப்போது நாம் போற்றி யுய்கின்றேம் என்று கருதுதல் வேண்டும். அவ்வாறு நினைவிலிருந்து மீளச் சொல்லினுர் என்பதேயன்றி நந்தி திருவருள் பெற்ற திருமூலர் சிவயோகியார் ஆதலின், தம் பாட்டுக்கள் ஞானுகாயத்தில் அவ்வப்போது பதியப்பட்டுள்ளன வாதலின் அவற்றுள்ளிருந்து கண்டு மீளச் சொல்லுதலும் இயலும். என்னை? ஒவ்வோருயிரும் எண்ணும் எண்ணங்களும், சொல்லும் சொற்களும், செய்யும் செயல்களும் கர்ம ரூபமாக ஞானுகாயத்தில் அவ்வப்போதே பதியப்படுகின்றன. அஃது இறைவருடைய ஆணையாலாவது. அதனுல்தான் அவ்வவற்றுக்குரியவாறு கர்ம பலன்களை இறைவர் கூட்டியருளுகின்றுர் என்பது ஞானநூற்றுணிபு. "எழுதுங் கீழ்க்கணக் கின்னம்ப ரீசனே" (தேவா) என்பது இதனைக் குறிப்பதுபோலும். திருமூலர் யோகியாதலின் யோகக் காட்சியில் வல்லவர். யோகக்காட்சியாவது,

"பொருந்திய **தேச கால வியல்பகல் பொருள்க ளெல்லாம்**
இருந்துணர் கின்ற ஞான யோகநற் காண்ட லாமே" (சித்தி -அள- 13)

என்பதாம்.

(12-1) உபமன்ய முனிவரும் நம்பியாரூரரும்

இதற்கு, (சித்தி - பொழிப்) "அறிவைத் தடை செய்துநின்ற மலசத்திகளை இயம நியம முதலிய அட்டாங்கயோக சமாதியான் ஒருவாறு கெடுத்து **ஓரிடத் தொருகாலத்** திருந்தாங்கிருந்து (கொண்டே) **மூவிடத்து முக்காலத்துப்** பொருள்களையும் காண்கின்ற காட்சியாய் உயிரினோடுணர்வு தெரிவது யோகக் காட்சி யெனப்படும்" என்பது, மாதவச் சிவஞான யோகிகளுரை. தென்றிசையினின்றும் வரும் ஒரு சோதியைக் கண்டு, இஃது யாது? என்று கேட்ட முனிவர்களுக்கு உபமன்னிய மாமுனிவர், திருவருளைச் **சிந்தித்து,** அஃதுகயிலையினின்றும் அருள் வழிப்போந்த நம்பி ஆரூரர் அருள் வழியே மீண்டணைகின்றார் **என்றுணர்ந்து,** விடைபகர்ந்தார். இவ்வாறு முனிவர்கள் வினவியதும் உபமன்னியர் யோக நிலையில் இறைவர் தாளைச் சிந்தித்ததும் இறைவர் உணர்த்தியதும் ஆகிய இவற்றையெல்லாம், கயிலையை நோக்கி வெள்ளானையின் மேல் வந்தவாறே பதிகம் பாடிவரும் நம்பிகள் தமது யோகக் காட்சியின் வலிமையினா லுணர்ந்து "மந்திர மாமுனிவ ரிவனாரென நம்பெருமான், நந்தம ரூரனென்றான் நொடித் தான்மலை யுத்தமனே" என்று பாடவல்லவராயினர். இவ்வுண்மைகளும் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன. பின்வரும் ஆராச்சியுலகம் தத்தம் மனம் போனபடி யெல்லாம் எண்ணியும் பேசியும் எழுதியும் அபசாரப் படாதபடி இக்குறிப்புக்களை ஈண்டு எழுதநேர்ந்தது. மேல் இவற்றை ஆராய்ச்சியுலகம் அறிந்து பயன் பெறுவதாக.

"நாதன் மாட்சிமை கேட்க நவிலுங்கால்
ஓது மெல்லை யுலப்பில வாதலின்
யாது மாராய்ச்சி யில்லையா மென்றதாம்" (ஞான-புரா.832=2731)

"கந்தை மிகையாங் கருத்து" உடைய முழுத் துறவு மூர்த்திகளாகிய திரு நாவுக்கரசரையும் அவரது யாத்திரையில் தொடர்ந்து கொண்டு காசிவரை அந்நாள் அவர்பின் அணைந்தவர்களாகிய உலகர்களுமுண்டு. "பின்ன ணைந்தவர் தம்மை யங்க ணொழிந்து கங்கை கடந்து போய்" (திருநா - புராண 253=1618) என்பது அவர் சரிதம். உலகத்தைச் சிறிதும் பற்றாது உலகத்துள் வாழும் பெரியோர்களையும் உலகத்துள் சிலர் பற்றாநின்று வழிபடுவர். அதனாலே அந் நிலைகள் வழிவழிவருகின்றன. ஆதலின் திருமூலரையும் சுற்றியும் சூழ்ந்தும் உலகரிற்பலர் அந்நாளில் நிகழ்ந்திருந்தார் என்று கூறுதலும் பொருந்துவதேயாகும். சிவயோக நிட்டை கலந்த காலங்களிற் பெரியோர், அடியாரும் ஆலயமுமே பொருளாகக் கண்டு, உலகருடன் கூடி வாழ்வர் என்ற உண்மையினையும் நாம் மறக்கலாகாது.

முதற்றந்திரத்தின் அமைதி பற்றிச் சிறிது விரிவாக எழுதப்பட்டது. அதனைப்பின்பற்றியே மேல்வரும் தந்திரங்களின் அமைதியும் நிலையும் ஆராய்ந்து கொள்ளற்பாலன. கடைப்பிடிக்க. மேல்வரும் தந்திரங்களின் அமைதியும் கருத்தும் மட்டுமே சுருக்கமாகக் கூறிச் செல்வோமாக.

சைவத்திறத்தின் வந்தடைந்து ஞானம்பெற்றுய்யும் முறையினைக் கீழ்வரும் திருப்பாட்டு நன்கு ஆணையிடுகின்றது.

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம
அறத்துறைக ளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள்பல தெரிந்து மாரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் **சென்றாற் சைவத்**
திறத்தடைவர் இதிற்சரியை கிரியா யோகஞ்
செலுத்தியபின் **ஞானத்தாற் சிவனடியைச்** சேர்வர். (சித்தி-8-11)

இதனை நன்கு மனங்கொண்டு சிந்தித்தும், தசகாரிய முறையினையும் மனங்கொண்டும் ஊன்றிநோக்கினால் திருமந்திரத்துள் தந்திரங்களினமைதி நன்கு புலப்படும். **முதற் றந்திர**மானது, மேலே கூறியபடி "அகச்சமயம் புக்கும் புகல்மிருதி வழியுழன்றும், புகலு மாச்சிரம அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் பயின்றும், அருங்கலைகள் பல தெரிந்தும்" என்ற அளவில் வரும் பயிற்சிகளைக் கூறுகின்றது.

(13) இரண்டாந் தந்திரம்

இனி, **இரண்டாந் தந்திரத்துள்,** இலிங்கபுராணம், தக்கன்வேள்வி, பிரளயம், சக்கரப் பேறு, அடிமுடிதேடல், ஐந்தொழில், கர்ப்பக் கிரியை, மூவகை உயிர், பாத்திரம், அபாத்திரம், தீர்த்தம், திருக்கோயிலிழிவு, அதோ முக தரிசனம், சிவ - குரு - மாகேசுவர நிந்தை, பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் என்ற பொருள்கள் அவ்வப்பகுதிகளுள் வகுத்துப் பேசப்படுகின்றன. சிவஞானம் பெற நின்ற சாதகன் மேலே சொன்ன முறையானே வைத்து மேற் சென்று நெறி சார வேண்டியவனாதலால் முன்னே வேதங்களை ஓதியவன் அதனை அடுத்து மாபுராணங்களின் உண்மைப் பொருளையும் முறையிற் றெரிந்து அதற்குத்தக்கபடி ஒழுகுதல் வேண்டும். இங்குக் கூறும் பொருள்களுள் முதலில் வரும் வீரட்டம், இலிங்க புராணம் முதல் அடிமுடி தேடல் வரை உள்ளவை (2 முதல் 8 வரை பகுதிகள்) மாபுராணங்களின் சாரமாவன. இவற்ற தியல்பினைத் திருநாவுக்கரசு நாயனார் தசபுராணம் (பண் - பழம் பஞ்சுரம்) என்னும் பதிகத்துள் நன்கு விரித்து அருளியுள்ளார். இதனைத் திருஞான சம்பந்த நாயனாரும் திருப்பாசுரத்துள் "**சூதன் ஒலி மாலை** யென்றே கலிக்கோவை சொல்லே" என்று ஆணையிட்டு உபதேசித்தருளினர். "பதினெண் புராணங்க ளென்றே ஓது" (பெரியபுரா - திருஞான - புராண - 840,2730). வேத சிவாகமங்களின் ஒன்றுபட்ட துணிபு சிவனே பரமபதி என்று பொது வகையால் பாயிரத்துள் உபதேசித்த பொருளை, ஈண்டுச் சிறப்பு வகையால் அப்பரமபதியாகிய சிவபெருமான் தனக்கென ஒரு செயலும் வேண்டானாயினும், நம் போன்ற உயிர்களின் பொருட்டுப் பெருங்கருணையினாலே படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்து கொண்டிருக்கின்றான் என்று மேல் வரும் படைத்தல் முதலாகிய ஐந்து பகுதிகளும் 19—137 உபதேசிக்கின்றன. அவ்வாறு படைத்தலாகிய தொழிலுட்படுவன உடலும் அதன் உட்புறக்

கரணங்களும், உயிர் வாழும் புவனங்களும், அவை நுகரும் போகங்களும் ஆம். அவற்றுள் உடலும் உயிருமாகச் சேர்ந்து உற்பத்தியில் வரும் நிலை **கருவுற்பத்தி** என்ற (14) பகுதியில் பேசப்படும். அவ்வாறு படைப்பினுள் வரும் உயிர்கள் ஒருமலச் சார்வு, இருமலச் சார்வு, மும் மலச் சார்வு உடையன என்ற பாகுபாட்டினுலே விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்று மூவகைப்படுவர் என்றும், அவற்றுள் மேற்கூறிய முத்தி வேட்கையுடையவன் மும்மலமுடைய சகலவர்க்கத்துள்ளே படுபவன் என்றும் சாதகனுக்கு அறிவித்து உபதேசிக்கின்றது 15-வது மூவகைச் சீவவர்க்கம் என்ற பகுதி. அதன்மேல், அவ்வாறு மும்மல சகிதனுய்வரும் அறிவுடை உயிர், தான் உலகிலே நன்னெறியறிந்து ஒழுகி மேம்பட வேண்டியவனுகையினுலே சற்பாத்திரங்களை அறிந்தும், தீர்த்தத்தின் இயல்பு தெரிந்தும் தன்னைத் தூய்மை செய்துகொள்ள வேண்டும். திருக்கோயிலின் பண்புதெரிந்தும், ஆண்டுக் கருணையினுல்வெளிப்பட வீற்றிருந்தருளி, உயிர்களுக்கு வரும் துன்பம் போக்கி இன்பமளிப்பது இறைவரது அதோமுகம் (20) என்று உணர்ந்தும் வழிபட்டு (21) சிவநிந்தை, (22) குரு நிந்தை (23) மாகேசுவர நிந்தை ஆகிய கொடிய தீமைகளினீங்கிப் (24), பொறை (கருணை) என்னும் அணிகலனைப் பூண்டு, பெரியாரை அறிந்து அவர்களைத் துணைக் கொண்டு நன் மாணவன் ஒழுக்கடவன் என்று மேல்வரும் பகுதிகளால் உபதேசித்தருளுகின்றுர் ஆசிரியர். இப்பகுதிகளுக்குரிய சில திருமந்திரங்கள் இதனடியிற் திருமந்திரத் திரட்டினுட் குறிக்கப்படுவன. கண்டுகொள்க. மேலும் இவ்வாறே காண்க.

இந்த இரண்டாந்தந்திரத்துள் முன்கூறிய பாட்டிற் கண்டவாறு படிமுறையிலே **"சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றுல்"** என்ற நிலையினை யடைந்து மேற்செல்லும் தன்மை பேசப்பட்டது கண்டுகொள்க. இவற்றுல் சைவ நன்னெறியின் நாற்பாதங்களுள் வைத்துச் சாதகன் முதலாவதாகிய சரியையுட்புகுவதன் முன்னுகத் தன்னை அதற்குத் தகுதியுடையவனுக ஆக்கிக் கொள்ளும் அளவு கூறப்பட்டது.

(14) மூன்றுந் தந்திரம்

இனி, நிறுத்த முறையானே, மூன்றுந் தந்திரத்துள் சாதகன் கிரியை என்ற பாதத்துட் புகுதத் தன்னைத் தகுதியாக்கும் முறைகள் மேல் **"அருந்தவங்கள் புரிந்தும்"** என்றதற்கிணங்க வரவேண்டிய நிலைகளிற் பேசப்படுவன. இத் தந்திரப் பகுதியின் உள்ளுறையாவது **சரீரசித்தி யுபாயமாகும்;** என்னை; ஒரு சரீரத்துள் நிலைபெற நின்றுலன்றிச் சிவதானங்களைப் பெறவும், பெற்றவற்றை நிலைபெறுத்திப் பயனடையவும் இயலாததாதலான் என்பது. உயிர்களுக்கு இருப்பிடமாக அவ்வவற்றின் கன்மத்துக்கேற்ப ஒவ்வோர் உடலை இறைவன் தருவது இதன் பொருட்டேயாம். உடலின்றி உயிர் தனித்து நின்று செயல் செய்தல் இயலாது. உடலின் இழிபினையும் நிலையாமையினையும் முன்னர் முதல் தந்திரத்துள் வற்புறுத்திக் கூறிய ஆசிரியர், உறுதிப் பொருளைப் பெறுதற்குத் துணை செய்யும் அளவிற் அந்த உடல் பேணத்தக்கதேயாம் என்றுர்.

காயசித்தி

"உடம்பினை முன்ன மிழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்பினி லுத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே" (725)

"உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தேன்
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே" (724)

பாடம் : **அறிந்தபின்**

இத்தந்திரத்துட் கூறும் **அட்டாங்க யோகம், அட்டமாசித்தி, கலைநிலை, சரீர சித்தியுபாயம்** என்ற பகுதிகளும், மேல்வரும் **அமுரிதாரணை** முதலிய யோக நிலைகளும் இக்கருத்தினையே உள்ளுறையாகக் கொண்டிருத்தல் வெளிப்படை.

(15) நாலாந் தந்திரம்

இனி, நிறுத்த முறையானே, 4-ம் **தந்திரப்பகுதி**கள் மேற் கூறியபடி சரீர சித்திபெறும் சாதகன் அவ்வாறு காயசித்தி மட்டும் பெற்று நிற்றல் போதிய தன்று. சரியை கிரியைகளுக்கு அடுத்துள்ள **சிவயோக** காண்டத்துள்ளே புகுதவும், அங்கு நிலைபெற்று நின்று மேற்பயனைப் பெறவும் தகுதிபெற மந்திரங்களின் சாதகமும் அவற்றின் வலிமையும் பெறுதல் வேண்டும். ஆதலால் இத்தந்திரத்துள் **திருவம்பலச்சக்கரம்** முதலாக வரும் மந்திரச் சக்கரங்களின் உபாசனையியல்புகள் விரிவாக உபதேசிக்கப்படுகின்றன. அவ்வச் சக்கரங்களின் வடிவம், அளவு, வரைகள், அவற்றுள் எழுதப்படும் அட்சரங்கள், உரிய மந்திரங்கள், வழிபாட்டு வகைகள், அவ்வவற்றின் அதி தெய்வங்கள், வலிமைகள், பயன்கள் முதலாகிய இவற்றையெல்லாம் விரித்துப் பேசுகின்றுர் ஆசிரியர். இன்ன சக்கரத்தை இன்ன சாதனத்தில் எழுதி இன்ன இடத்தில் இன்னபடி மேற்பூச்சும் அணியும் அலரும் முதலியவை சாத்தி இன்னபடி இத்தனை காலம் வழிபட்டால் (வசியம் முதலாக வரும்) இன்னின்னபடி உலகியற் பலன்கள் கிடைக்கும் என்ற விவரங்களும் இவற்றுட் காணலாம். ஏரொளி, வயிரவம், சாம்பவி, புவனுபதி, நவாக்கரி முதலிய சக்கரங்களைக் கூறும் பகுதிகளில் இறுதிப்பாகங்களைப் பார்க்க. ஆகமப்பொருளாம் சிவஞான வீட்டு நெறியினை உபதேசிக்க வந்த இத்திருமந்திர நூலினுள் இவ்வாறு உலகியற் பயன்களையும் கூறுவானேன்? இவையும் சிவாகமங்களுள் உள்ளனவோ? எனின், அற்றன்று; நன்னெறி பெறவுள்ள சாதகன் ஓர் உடலினுள் நின்றே பெற வேண்டியவன். அதனுல் அவன் உலகினினுள் வாழ்தலும் வேண்டும். அவ்வாறு வாழ்வதற்கு உலகியற் பயன்களையும் சிலபோது இன்றியமையாது அவாவி நிற்பன்; ஆதலின் என்க. சிவாகமங்களுள் இவையும் பேசப்படுவனவே. உலகநல்லொழுக்கங்கள், போசனவிதி முதலியவற்றையும் ஆங்குக்காண்கின்றோமல்லவா? மறைந்து கிடக்கும் நிதிகளைக் கண்டு எடுக்கும் வழிகளையும் சில ஆகமங்கள் கூறும் என்பதும் காண்க. இச் சக்கரங்கள் பெரும்பாலும் சத்தி பேதங்களைப் பற்றி நிற்பதும் ஈண்டுக் கருதத்

தக்கது. மந்திரங்கள் சத்தி சொரூபமுடையன என்றும், அவற்றுள்ளே நின்று இறைவன் தன் சத்திமூலம் வெளிப்பட்டு அருளுகின்றான் என்றும் கூறுவர் ஆன்றோர்.

(16) ஐந்தாந் தந்திரம்

இனி, நிறுத்த முறையானே, **ஐந்தாந் தந்திர**த்தைப் பார்ப்போமானால், அஃதே இந்த ஞானநூலுக்கு உயிர் நாடியாம் என்பதும், அதற்குச் சாதனமும் பயனுமாக முன் பின் உள்ள நந்நான்கு தந்திரங்களும் அமைந்துள்ளன என்பதும் மேலேகூறப்பட்டன. கண்டு கொள்க.

இதனுள், சுத்தம், அசுத்தம், மார்க்கம், கடுஞ்சுத்தம் என்னும் நால்வகைச் சைவ நிலைகளும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நால்வகைச் சைவ நெறிகளும், அவற்றின் மேல் எதிர் நிரனிறையாக அந்நானெறிகளுக்குரிய சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், என்ற நிலைகளும், அவற்றுள் நிற்போர் முறையே பெறும் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்னும் பதங்களும் நிலைகளும் உபதேசிக்கப்படுகின்றன. இந்நானெறிகள் வழிநின்ற நன்மாணுக்கனது மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம் என்னும் சத்தி நிபாதப் பக்குவ நிலைகளும், விவரிக்கப்படுவன. அதன்மேல் சாதகன் அறிந்து விலகவேண்டிய புறச் சமயங்களினியல்பைப் புறச்சமய **தூடணம்** என்ற தலைப்பிற் பேசுகின்றார்; மேற்கூறியபடி சைவ நன்னெறியின் வரும் சாதகங்களெல்லாம் முற்றிச் சைவத் திறத்தடைந்த மாணவகன் முழுவுண்மையும் காணமாட்டாது, தாந்தாங் கண்ட ஒவ்வோர் பொருளுண்மைகளையே பற்றிச் சாதித்துச் சமயம் கற்பிக்கும் புறச்சமயப் பகட்டான படுகுழியில் தவறி வீழ்ந்துவிடாதபடி எச்சரிக்கையாக இஃது ஈண்டுப் பேசப்படுவதாயிற்று. "சமயங்க ளானவற்றின், நல்லாறு தெரிந்துணர நம்பரரு ளாமையினாற், கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகுவார்" (1302) என்னும் திருநாவுக்கரசு நாயனார் சரித வரலாறு ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. இதன் மேல் நிராசாரம், உட்சமயம் என்ற பகுதிகளால் ஏனை அகப்புறம் அகம் என்ற சமயங்களின் நிலையினை உணர்த்தி இத் தந்திரம் முடிவு செய்யப்படுகின்றது.

முன்சொன்ன சாதன முறைகளினின்ற சாதகன் சைவத்திறத்தடைந்த பின்னர், இத்தந்திரக் கூற்றுக்களால் சைவத்தின் சாரமாகிய நான்கு நெறிகளையும், அவற்றினியல்பு பயன் முதலியவற்றையும் முறையே ஈண்டு உபதேசிக்கப் பெறுகின்றான். இதிற் சரியை கிரியை யோகம் செலுத்தியபின் ஞானத்தால் வீடடையும் பக்குவமுடையவனவன். சைவ சமய நாற்பாத நெறிகளினியல்புகளைத் திருமூலர் அழகாகவும் செறிவாகவும் சுருக்கமாகவும் உபதேசிக்கின்றார். அவை அம்முறையே பற்றிப் பின்வந்த சிவஞான சித்தியார் முதலிய ஞான நூல்களுள் விரித்துப் பேசப்படுவன. நால்வகை நெறிகளும் தத்தமக்குள் நந்நான்காய் விரியும் தன்மைகளையும், அவற்றுள் சமயம் விசேடம் நிருவாணம் அபிடேகம் என்னும் நால்வகைத் தீக்கைப் பேறுபற்றி விரவிவரும் பாகுபாடுகளையும் ஒருங்கே அவ்வப்பகுதிகளுள் திருமூலர் வகுத்து அருளியிருப்பதனால் அவைபற்றிப் பல்வேறிடங்களில் சிதைந்து தேறப்படும் பொருள்களை யெல்லாம் ஓரிடத்தே சுருங்கக்கண்டு மனங்கொள்வது மிக இலகுவாகின்றது. தீக்கைவழக்கைப் புறக்கணிக்கும் உள்ளமுடையோர் இவற்றைக் குறிக்கொள்வார்களாயிற் பயன்பெறுவர். புறச்சமய தூடணம் உட்சமயம் என்னும் பகுதிகளுள் வருவன புறச்சமயங்களையும் அகப்புறசமயங்களையும் நிந்திக்கும் இயல்புடையன

போலத் தோன்றும். அற்றன்று, சைவம் எல்லாச் சமயங்களின் கோட்பாடுகளேயும் தன்னுளடக்கி அவ்வவற்றுக்கும் படிமுறை காட்டி யமைத்துத் தான் ஒன்றினுமடங்காது முழுமையாய் நிற்றலால், ஒரு சமயத்தையும் வெறுப்பதும் ஒறுப்பதுமில்லே. சைவம் மேற்கொள்ளும் சமய வாதங்கள் யாவும் உண்மை நிலேயினே அறிவுறுத்தி மக்களே எச்சரித்து அவ்வவர்க் கேற்றவாறு முறையில் அமைவுபடுத்தற்கே யாவன. இவற்றை அவ்வாறே பொருள் கொள்ளுதல் வேண்டும். எல்லாச் சமயங்களும் இறைவர் உயிர்களின் பக்குவபேதம் நோக்கி அவ்வவற்றின் உண்ணின்று உயர்த்தி யியக்குதலினுல் வெளிப்போந்தனவேயாம்.

"... ... ... கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளால்
அருளிய கலேகள் அலகில வால்; அவை
பலபல சமயப் பான்மைத் தன்றே;
அஃதால் அந்நூற் றன்மை யுன்னிய
மாந்த ரிதுவே பொருளென் றதனிலே
அறைதலின் வேற்ருேர் பனுவ லேற்ருேர்க்
கிசையா மாறுபாடு கூறுவ ரதனுற்
புறச்சம யங்கள் சிறப்பில வாகி
அருளில் மாந்தரை வெருளுற மயக்கி
யலகைத் தேரி னிலேயிற் றீரும்"

(என்பது சங்கற்ப நிராகரணம் - பாயிரம்-2-14)

(17) சிவாகம முடிபுகள்

சிவாகம முடிபுகளாவன:—பதி,பசு,பாசம் என்ற முப்பொருள்களுண்டு - அவற்றின் இலக்கணம் இவை - என்பது அடிப்படையானது. அவற்றுள் பசுக்களாகிய உயிர்கள் பல; பதி ஒருவரேயாம். உயிர்கள் அநாதியே மலத்தாற் கட்டுப்பட்டு நிற்பன. அவையுய்யும் பொருட்டுக் கன்மத்துக் கீடாகிய பிறவிகளில் இறைவன் கருணேயினுற் செலுத்த, இப்பிறவியில் வந்து கர்மங்களேச் செய்து மென்மேலும் பிறவிகளில் வந்து உழல்வன. இவ்வாறு வரும் பிறவித் துன்பங்கள் நீங்கி நித்தியமான இன்பத்துள் இருக்க முயல்வதுவே உயிர்களின் முயற்சி செயல்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அதற்குச் சற்குருவி னருளும், சீபஞ்சாக்கரம், திருநீறு முதலாகிய சாதனங்களேத் தவிரத் துணேயாவன வேறில்லே. அத்துணே கொண்டு சைவ நன்னெறிகளில் சென்ருல் உயிர்கள் துன்பம்நீங்கி நித்தியமாகிய வின்பம் பெறும். அவ்வனுபவம் மாருதிருக்க அடியார்களுட னிருக்கும் தன்மையும் வேண்டும்: என்பனவாம்.

இவற்றுள், முப்பொருளுண்மையும் இலக்கணமும் என்றவற்றைப்,

முப்பொருள்

"பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினேப் போற்பசு பாச மநாதி;
பதியினேச் சென்றணு காப்பசு பாசம்;
பதியணு கிற்பசு பாச நிலாவே"

என்ற மந்திரம் 7-ம் தந்திரம் பசு - பசுவிலக்கணம்; எட்டாந் தந்திரம் 16-ம் பகுதி பதிபசுபாசம் வேறின்மை என்ற பகுதிகளில் திருமூலர் விளக்குகின்றார்.

சரியை

"நாடு நகரமு நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெருமா னென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" (1445)

கிரியை

"பத்துத் திசையும் பரமொரு தெய்வமுண்
டெத்திக் கிலரில்லை யென்ப தினமலர்க்
கொத்துத் திருவடி நீழல் சரணெனத்
தத்தும் வினைக்கடல் சாராது காணுமே" (1451)

யோகம்

"நெறிவழி யேசென்று நேர்மையு ளொன்றித்
தறியிருந் தாற்போற் றம்மை இருத்திச்
சொறியினுந் தாக்கினுந் துண்ணென் றுணராக்
குறியறி வாளர்க்குக் கூடலு மாமே" (1457)

"பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோற்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல வுணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே" (1459)

ஞானம்

"சத்தமுஞ் சத்த மனமுந் தகுமனம்
உய்த்த வுணர்வு முணர்த்து மகந்தையுஞ்
சித்தமென் றிம்மூன்றுஞ் சிந்திக்குஞ் செய்கையுஞ்
சத்தங் கடந்தவர் பெற்றசன் மார்க்கமே" (1468)

சன் மார்க்கம்

"சைவப் பெருமைத் தனிநா யகனந்தி
உய்ய வகுத்த குருநெறி யொன்றுண்டு
தெய்வச் சிவநெறி **சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய**
வையத்துள் ளார்க்கு வகுத்துவைத் தானே" (1478)

மேற்கூறிய இவை சைவ நானெறிகளையும் வகுத்துக் கூறுமவற்றுள் வருவன. புறச்சயமக் குழிகளாகிய அபாயங்களி னீங்கி வரவேண்டிய அவசியம் பற்றிய நிலைகளை உணர்த்துவது.

"ஆயத்துள் நின்ற அறுசமய யங்களும்
காயத்துள் நின்ற கடவுளைக் காண்கிலா
மாயக் குழியில் விழுவர் மனைமக்கள்
பாசத்தி லுற்றுப் பதைக்கின்ற வாறே" (1530)

என்ற திருமந்திரமும், பிறவுமாம்.

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தாற் றன்செய லற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனாவ னாமே" (1527)

என்பதும், பிறவும் இருவினை யொப்பு மலபரிபாகத்தையும் சத்திநிபாத நிலைகளையும், குருவின் உபகாரத்தையும், அதனால் வரும் ஞானத்தினலே கூடும் தன்செயலற்ற சமாதி நிலையினையும், அதனால் கிடைக்கும் பாசநீக்கம், சிவப்பேறு என்ற பயன்களையும் உபதேசிப்பன. சமாதி நிலைகளைப் பற்றி 9-ஆம் தந்திரம் பிரணவ சமாதி - மோன சமாதி என்னும் பகுதிகளையும் அவைபோன்ற பிறவற்றையும் பார்க்க. இவை சிவஞானபோதம் 8 முதல் 11-ஆம் சூத்திரங்களுட் பேசப்படுவன. ஞான சமாதி நிலைகள் கைகூடினும் அவை நீங்கிய காலத்து அத் தன்மைகளினின்றும் பிறழாமற் றுணைசெய்யும் பொருட்டு அடியார் கூட்டம் வேண்டப்படுவது என்று 12-ஆம் சூத்திரத்துட் பேசப்படும் (சிவஞான போதம்) உண்மையினை 9-ஆம் தந்திரத்தில் அணைந்தோர் தன்மை முதலிய பகுதிகளில் திருமந்திரம் எடுத்து உபதேசிக்கின்றது காணலாம். இவ்வாறு சிவாகமங்களிற் றுணிந்தவாறு சைவத்திறத்தின் முடிந்த உண்மைகளை ஐந்தாம் தந்திரத்துட் கண்டு கொள்க.

(18) ஆறாந்தந்திரம்

"சரியை கிரியாயோகம் முற்றியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" என்று ஆணையிட்டபடி, 5-ஆம் தந்திரத்துள் சைவோபதேசம் செய்யப்பெற்ற நன்மாணவகன் வீடுபெறும் நிலையில் நிற்கின்றுன். அதன் பொருட்டு அவன்மேலும் விதித்த சாதனங்களின் வழியே கைப்பற்ற உள்ள பொருள்களாகிய ஞானம் பெறும் சாதனங்களை **ஆறுந்தந்திரம்** உபதேசிக்கின்றது. **சிவகுரு தரிசனம்,** திருவடிப்பேறு, ஞாதிரு ஞான ஞேயம், **துறவு, தவம், அருளுடைமையின் ஞானம் வருதல்,** அவவேடம் **தவவேடம், திருநீறு,** ஞானவேடம், **சிவவேடம்,** அபக்குவன், பக்குவன் என்ற பகுதிகளுள் வைத்து அப்பொருள்கள் பேசப்படுகின்றன. அவை ஞானம் பெறுதற்குரிய சாதனங்களாமாறு இனிது விளங்கும். ஐந்தாந் தந்திரத்துள்ளே கண்டவாறு சைவசித்தாந்த முடிபுகளை உபதேசிக்கப்பட்டு அறிந்துகொண்ட நன்மாணவகனுக்கு மேலும் இவ்வாறு வரும் ஞானசாதனைகளும் வேண்டப்படுமோ? எனின், வேண்டப்படுவனவேயாம் என்க. என்னை? **கேட்டல்** என்ற நிலைபெற்றதனேடு நின்றுவிட்டால் பயன் கைகூடாது. கேட்டபொருளைத் தன் அனுபவத்தில் வைத்துச் சிந்தித்ததனைத் தெளிதலும், தெளிந்ததனை அதன் வழியே நின்று நிட்டை கூடுதலும் வேண்டப்படுவனவாதல் காண்க. ஆன்மாக்களுக்காக இறைவன் செய்யும் பத்து உபகாரங்களினுள்ளே (தசகாரியம்) பாசத்தினைப் பற்றியும், பசுவைப் பற்றியும் செய்யப்படுவன ஆறு உபகாரங்களும், அவற்றினிறுதியில் வரும் ஆன்ம சுத்தியின் மேலே சிவரூபம் முதலாகிய நான்கும் நிறைவேறிய வழியே, உயிர் சிவானுபவம் பெற்று நீங்காதிருப்பன என்ற உண்மையையும் கண்டு கொள்க. இந்நான்கு நிலைகளும் முறையே இத்தந்திரத்துள்ளும் மேல்வரும் 7-8-9-ஆம் தந்திரங்களுள்ளும் உபதேசிக்கப் பெறுகின்ற வகை உய்த்துணர்ந்து கொள்ளத்தக்கவை. ஈண்டுத் திருவேடமும், திருநீறு கண்டிகை முதலிய சிவ சாதனங்களும், சிவகுரு தரிசனமும், துறவொழுக்கமும், தவமும்,

சிவனருளால் ஞானம் வரும் என்ற உணர்ச்சியும் வேண்டப்படுவன என்றுணர்த்தப்படுகின்றது. "எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறும் சாதனமுங் கண்டா லுள்கி" (தேவாரம்); "திருமுண்டந் தீட்டமாட்டா, தஞ்சுவா ரவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே" (திருவா); "தீய நசிக்கவெண் ணீற தாடும் நமர்களை நணுகா நாய்கள்", "திருநீ றிடாவுருத் தீண்டே னென்னும்" (திருவிசைப்பா); "உற்ற **திருநீறுஞ் சிவாலயமு** முள்ளத்துச், செற்ற புலையர்பாற் செல்லாதே—**நற்றவஞ்**சேர், **வேட**முடன் பூசை **யருள்** மெய்ஞ்ஞான மில்லாத, மூடருடன் கூடி முயங்காதே—நீட, அழித்துப் பிறப்ப தறியா தரனைப், பழித்துத் திரிபவர்ப் பாராதே..." (நெஞ்சு விடுதூது) என்பன முதலிய திருவாக்குக்கள் ஈண்டுச் சிந்திக்கத்தக்கன.

(19) ஏழாந்தந்திரம்

இதனுள் உபதேசிக்கப்படும் சிறந்த பொருள்கள், ஆறுதாரம், அண்டலிங்கம் முதலாகிய சிவலிங்க பேதங்கள், **அருளொளி, குருலிங்க சங்கம பூசைகள்,** பிண்டம் - மனம் - ஞானம் - சிவன் - இவற்றுள் முறையே விளங்கும் ஆதித்தர் வகை, ஐந்து இந்திரிய மடக்குமுறை, சற்குரு, இதோபதேசம் முதலாயின. இவையும் முன் தந்திரத்துட் கூறும் நிலைகளின் மேலால் வரும் ஞானம் பெறுவிக்கும் சாதனங்களாம். இவை **தசகாரியங்களுள்** சிவரூபம், சிவதரிசனம் என்னும் இரண்டையும் விளக்குவன. போசன விதி, பிட்சா விதி, பூரணக் குகைநெறிச் சமாதி, சமாதிக்கிரியை விந்து சயம் என்பனவும், இவற்றுக்கு அனுகூலமான ஒழுக்க நிலைகாட்டும் பொருள்களாக வைத்து ஈண்டுப் பேசப்படுவன. ஆறுதாரங்க ளுள்ளாக அண்டலிங்கம் முதலிய அறுவகை இலிங்கங்களையும் வைத்துக் கண்டு வழிபடுதலும், அருளொளிக்குள் ஒடுங்கிக் குரு லிங்க சங்கமம் என்னும் மூன்றிடங்களிலும் சிவனை வெளிப்படக்கண்டு வழிபடுதலும் ஆகிய இவை அகமும் புறமுமாகிய இரண்டு நிலைகளிலும் செய்யத்தக்கன என்பது சைவஞான நூல்களுள் விதித்த பெரும் பொருள்களாம். ஐந்து இந்திரிய மடக்குமுறை, கூடாவொழுக்க நீத்தல், கேடு கண்டிரங்கல் என்ற இவை இந்நிலைபெற்ற சற்சீடன் கைக்கொண்டொழுகத்தக்க பண்புகளாகும். குரு லிங்க சங்கம வழிபாடுகளையும், சிவசாதனங்களையும், பற்றிப் பெரியபுராணத்துள்வரும் உண்மை நாயன்மார்களின் சரிதங்கள் பலவற்றுள்ளும் கண்டு கொள்க. இதன் முடிவில் இதோபதேசம் செய்து முடிக்கின்றார் ஆசிரியர். அதனுள் "சாகின்ற போதுந் தலைவனை நாடுமின்", "எம்பிரானென்று, நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்", "சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்", "**ஒன்றே குலமும்** ஒருவனே தேவனும்" என்பன முதலியவை சிறந்த உபதேச ரத்தினங்களாகும். இங்கு "**ஒன்றே குலமும்**" என்றதற்கு உயிர்கள் எல்லாம் பசுக்கள் என்ற ஒரே குலத்தை - வகுப்பைச் - சேர்ந்தவை என்பது பொருள். இனி, இறைவனும் உயிர்களும் சித்துப் பொருள்கள் என்ற - குலத்தை - வகுப்பைச் சார்ந்தவை; ஆயினும், அந்த வகுப்பில் பதி ஒருவனே தேவனுவான். ஏனைய உயிர்கள் அவனுக்கடிமைகள் என்றுரைத்தலும் பொருந்தும். "சிவன்சீவனென் றிரண்டுஞ் சித்தொன்று மென்னில் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ் சித்து" (சித்தி - 11-11) என்ற திருப்பாட்டு

ஈண்டு நினைக்கத் தக்கது. இவ்வாறன்றி, ஒன்றே குலம் என்பதற்கு தத்தம் மனம்போனவாறெல்லாம் தாந்தாம் கொண்டபடி உலகில் மக்களுள்ளே குலநலம் முதலிய வொரு வேறுபாடுகளுமில்லை. எல்லாம் ஒன்று என்ற கொள்கைக்கு ஆதரவாக மேற்கொண்டு பேசுவாரும் எழுதுவாரும் பலருளர். அது பொருளல்லாமை கண்டுகொள்க.

(20) எட்டாந் தந்திரம்

இனிச், சாக்கிரர் முதலிய அவத்தை பேதங்களும், கேவல சகல சுத்தம் என்ற நிலைகளும், **அறிவுதயம், உபசாந்தம், ஆறந்தம், மகாவாக்கியம்,** வாய்மை, அவாவறுத்தல், பத்தி முத்தியுடைமை முதலாகிய ஞானி செயல்கள் முதலிய அரும்பெரும் பொருள்களும் பேசப்பெறுவன. தசகாரியங்களுள் சிவதரிசனத்தின்மேல் சிவனோடு கூடுதல் என்னும் சிவயோகம் என்ற நிலையினை உபதேசித்தல் இவ்வெட்டாந்தந்திரத்தின் கருத்து. இதிற் பேசப்படும் சிவயோக நிலைகள் அனுபவமுள்ள சிவயோகியர்களை அடுத்து அனுசந்தானத்திற் றெரியத்தக்கன. மேல் கூறி அட்டாங்கயோகம் முதலியனவும் அவ்வாறே அனுபவத்திற் றெளியத்தக்கனவன்றிச் சொல்லால் எடுத்துக்காட்டக் கூடியனவல்ல. **மகாவாக்கியம்** என்னும் பகுதி மிக அரிய பொருள்களை அடக்கி நிற்கின்றது. ''தத்துவமசி'' யென்றும், சிவாத்துவிதம் என்றும் பலதிறப்பட வேதத்துட் பேசப்படும் சித்தாந்தப் பேருண்மையின் பொருள் இதில் விரிக்கப்படுவதாம். **சோதனை** என்ற இதன் கடைசிப்பகுதி **சிவயோகத்**தின் முடிந்த நிலையினை உணர்த்தி, அதனை அடுத்துவரும் **சிவபோக** நிலையின் தொடக்கத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றமை கண்டு கொள்ளத்தக்கது.

> ''பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்
> தம்மா னடிதந் தருட்கட லாடினோம்
> எம்மா யமும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்
> சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே'' (2635)

(21) ஒன்பதாந் தந்திரம்

இனி, **''ஞானத்தாற் சிவனடியைச் சேர்வேன்''** என்னும் முடிந்த நிலை இத்தந்திரத்துள் உபதேசிக்கப்படுகின்றது. இஃதே தசகாரியத்துள் **''சிவபோகம்''** எனப்படும் இறுதி நிலை. இஃது ஆன்மா சிவத்தினை யோகத்தாற் கூடியபின் அவனையே அனுபவித்துக் கொண்டு அங்கே கிடக்கும் நிலையாகும். சிவசாயுச்சியம் என்பது மிது. இதில் வரும் குருமட தரிசனம் - ஞானகுரு தரிசனம் - திருக்கூத்துத் தரிசனம், ஆகாசப்பேறு, ஞானோதயம், சத்திய ஞானானந்தம். சொரூப உதயம் - சிவதரிசனம் - சிவரூபதரிசனம் - என்னும் பகுதிகள் சாதன நிலைகளையன்றி அனுபவ நிலைகளைக் குறிக்கின்றன. பிரணவசமாதி - தூல சூக்கும - அதிசூக்கும - பஞ்சாக்கரங்கள் - மோனசமாதி என்பன பஞ்சாக்கரங்களை, எல்லாப் பொருளும் அவற்றுள் அடங்குகையினாலே, அவ்வத்தானங்களில் வைத்து அழுந்திய நிலையிலே அனுபவித்து நின்று அதுவதுவாகவே நிற்கும் தன்மைகளைக் கூறுகின்றன. இவைபற்றி ''எவ்வெவகோட் படுபொருளு மஞ்செழுத்தி னடக்கியவற் றியல்பு காட்டி, மெய்வகையஞ் சவத்தையினு நிற்குமுறை யோதுமுறை விளங்கத் தேற்றி, அவ்வெழுத்தி

னுள்ளீடு மறிவித்துச் **சிவயோகத்** தழுத்தி...'' என்ற காஞ்சிப்புராணம் இங்குச் சிந்திக்கத்தக்கது. **பஞ்சாக்கரப் பயில்வு சிவபோகத்தழுத்தும் என்பதும் கண்டு கொள்க.** மேலும் இவை பற்றி உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட் பயன் முதலிய சிவஞான நூல்களிலும் கண்டுகொள்க.

வரையுரை மாட்சி, அணைந்தோர் தன்மை, தோத்திரம், சர்வ வியாபி என்னும் பகுதிகள் சிவபோகத்திற் றிளைக்கும் பெரியோர் தன்மைகளை எடுத்துக் கூறுகின்றன.

அணைந்தோர் தன்மை

''மலமில்லை மாசில்லை மானுபி மானங்
குலமில்லை கொள்ளுங் குணங்களுமங் கில்லை
நலமில்லை நந்தியை ஞானத்தி ஞலே
பலமன்னி யன்பிற் பதித்துவைப் போர்க்கே'' (2957)

''ஆராலு மென்னை யமட்டவொட் டாதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
''சீராடி யங்கே திரிவதல் லாலினி
யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே'' (2960)

''நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்
சிவன்வரி ஞனுடன் போவது திண்ணம்'' (2968)

''...செய்வன வெல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் தேனே'' (2977)

சர்வ வியாபி

''உணர்வு மவனே உயிரு மவனே
புணர்வு மவனே புலனு மவனே
இணர்வு மவன்றன்னை யெண்ணலு மாகான்
துணரின் மலர்க்கந்தந் துன்னிநின் ருனே'' (3035)

இப்பகுதிகளுள் சிவஞான போதம் 10 - 11-ஆம் சூத்திர உண்மைகள் விளக்கப்படுகின்றன. திருக்கூத்துத் தரிசனமென்ற பகுதி மிகச் சிறந்த ஞானப் பொருள்களை விளக்குகின்றது. இதில் **சிவானந்தக் கூத்து** என்பது ஞானிகள் கண்டு அனுபவித்து நிற்கும் நித்தியமாகிய ஆனந்தக்கூத்து. இதனை ''நின்றயங்கியாடலே நினைப்பதே நியமமே'' (தேவா) என்று ஆளுடைய பிள்ளையார் விளக்கி யருளுகின்றார். ஐந்தொழிலுடன் விளைக்கும் நித்தியமாகியதும், ஏனை ஆன்மாக்களின் பொருட்டு நிகழ்த்தப்படுவதுமாகிய திருக்கூத்து வேறு. அது சுந்தரக் கூத்து, பொற்பதிக்கூத்து, பொற்றில்லைக்கூத்து, **அற்புதக் கூத்து** என்ற பகுதிகளுள் வைத்து உபதேசிக்கப்படும். இத்தன்மைகள் அனுபவமுடைய தேசிகர் வாய்க் கேட்டுத் தெளியத் தக்கன.

சுந்தரக் கூத்து

''அண்டங்க ளேழினுக் கப்புறத் தப்பான்
உண்டென்ற சத்தி சதாசிவத் துச்சிமேற்
கண்டங் கரியான் கருணை திருவுருக்
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தானே'' (2732)

பொற்பதிக் கூத்து

"தெற்கு வடக்குக் கிழக்குமேற் குச்சியில்
அற்புத மானதோர் **அஞ்சு முகத்திலும்**
ஒப்பில் பேரின்பத் துபய வுபயத்துள்
தற்பர னின்று தனிநடஞ் செய்யுமே" (2739)

பொற்றில்லைக் கூத்து

"அண்டங்க ளோரேழு மம்பொற் பதியாகப்
பண்டையா காசங்க ளைந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்தி திருவம் பலமாகக்
கொண்டு அரஞ்சோதி கூத்துகந் தானே" (2749)

அற்புதக் கூத்து

"நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க வொளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்ருய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே" (2770)

"அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவ தஞ்செழுத் தாமே" (2775)

சூனிய சம்பாஷணை

இத்தந்திரத்துள் **சூனிய சம்பாஷணை** என்ரெரு பகுதியுண்டு. அதனை **மறை பொருட்கிளவி** என்று சொல்லலாம். அதனுள் உயர்ந்தனான ஏதுவான பொருள்கள் எளிதில் புலப்படாத வகையில் வேறு மொழிகளால் வைத்துப் பேசப்பட்டுள்ளன. **சூனியம் என்ருல் இல்பொருள் - ஒன்று மற்றது - என்பது பொருளன்று; விளங்காது மறைந்தது என்பது பொருள்.** "யாவையும் **சூனியம்** சத்தெதிர்" (போதம் - 7) என்புழிப்போல. மருத்துவ நூல்களுள் இவ்வாறு வருதல் மரபு. அனுபவமுள்ள தேசிகனுணர்த்த அறிதலே மரபு. அல்லாதவழிப் பொருள் பிறழ்வுபட்டு அபாயத்துக் கிடமாகுதலின் இம்மரபு ஆன்ருேராற் கையாளப்பட்டு வருகின்றது.

"வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினுர் தோட்டக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே"

வழுதலை - (வழுதுணை) கத்தரி வகையினைச் சேர்ந்த ஓர் மூலிகை வகையுட்பட்ட செடி; சத்துவ உணவாகச் சாதகர்கள் உண்பது; வழுதலை வித்திடுதல் என்பது சைவசாதனைகளுள் முதற்பகுதியாகிய உணவு முதலிய ஒழுக்கத்தையும், சரியை நிலைகளையும் குறிக்கும். **பாகல் -** உவர்ப்பு; முதற் சாதனையின்மேல் இருவினைகளையும் ஒன்றுபோலவே உவர்த்து வருதலாகிய இருவினை ஒப்புநிலை பெறுதல் குறித்தது. **புழுதியைத் தோண்டுதல் -** மேலே கிரியை யோகம் முதலிய சாதனைகளுட் சிவபோக விளைவுக்குரியவற்றைச் செய்தல்; **புழுதி** -என்றதனுல் முன்னரே ஒருவகைச் சாதனையினுல் பண்பட்டநிலை பெறவைத்தார். **தோண்டுதல் -** மேலும் சாதித்தல்; **பூசணி பூத்தது-** சிவம் பிரகாசிக்கத் தொடங்கிற்று. பூத்தல் என்றதனுல் மேல் விளைவுக்குரிய தொடக்கநிலை குறிப்பிட்டவாறு;

தொழுது கொண்டோடினர் தோட்டக்குடிகள் - நிலத்தில் முன்னே விளைவுக்குரிய செயல்களைச் செய்தவர்கள் குடிகள் எனப்படுவர். இங்குத் தோட்டக் குடிகள் என்பது முன்னர்ப் பாச சம்பந்தப்பட்டிருந்த ஆன்ம முயற்சிக்குத் துணைசெய்த கருவி கரணங்கள்; அந்தக்கரண - புறக்கரணங்கள்; இவற்றைத் **தொழுதுகொண்டோடு**தல் என்றது, முன் இந்திரிய வயப்பட்டிருந்த ஆன்மாச் சிவசாதனங்களை மேற்கொண்டபோது அதற்குத் துணையாக நிற்குமளவும் அடங்கி நின்று, பின்னர் செயலற்ற சிவபோக நிலையில், தம் வலியிழந்து, அந்நிலையில் ஒடுங்கிப் போதல்; **முழுதும் பழுத்தது வாழைக்கனி** - என்றது சிவபோக முதிர்ச்சியின் ஆனந்த விளைவைக் குறித்தது. "வாழைப் பழத்தின் மனங் கசிவித்து" என்பது திருவாசகம். (2869)

இதுபோலவே 2874-ல் "பட்டிப் பசுக்கள்" என்பது ஆன்ம தத்துவங்கள் இருபத்து நான்கனையும், "குட்டிப் பசுக்கள் ஓரேழுள வைந்துள" என்பது முறையே வித்யாதத்துவ சிவதத்துவங்களையும், 'குடப்பால்" என்றது பயன் மிகுதியினையும், **பனவன்** என்றது ஆன்ம தத்துவ அளவில் கொண்டு நின்றுபடும் மாயாவாத, ஏகான்ம வாதிகளையும் குறித்தமையும் காண்க. பிறவும், இவ்வாறே கண்டுகொள்க. இவையெல்லாம் அனுபவமுடைய தேசிகர்களை அடுத்துக்கேட்டு விளக்கிக் கொள்ளத்தக்கன.

(22) திருமந்திரத்தின் உரைகள்

திரு.விசுவநாதபிள்ளை (Dr. V.V.R.சாஸ்திரிகள்) பதிப்பிலும், திரு. துடிசை கிழார் திருமந்திரமணி சிதம்பரனுர் அவர்கள் பதிப்பிலும் திருமந்திர முழுமைக்கும் குறிப்புரைகள் தரப்பட்டுள்ளன. 1912-ம் ஆண்டில் வெளியான விசுவநாதபிள்ளை பதிப்பில் "திரிசிரபுரம் பிரமஸ்ரீ அ. சிவானந்த சாகரயோகீசுவரர் முதலிய தத்துவவிசார வித்துவ சிரேஷ்டர்கள் முன்னிலையில் புதிதா யெழுதப்பட்ட குறிப்புரை" என்று கண்டிருக்கிறது. பின் வந்த பதிப்புக்களிலும் அதைப் பெரும்பாலும் பின்பற்றியே குறிப்புரைகள் வெளிவந்துள்ளன. திரு.விசுவநாதபிள்ளை பதிப்புரையில் திருமந்திர முழுமைக்கும் பழையதொரு பேருரை உள்ள தென்று எழுதி, உதாரணத்துக்காக, அவ்வுரையில் உள்ளதென்று கண்டு, "ஐந்து கரத்தனை" என்ற காப்புத் துதிக்கு ஒரு விருத்தியுரையும் வெளியிட்டுள்ளார்கள். அந்த முழுமைப்பேருரையின்நிலை இப்போது எவ்வாறுள்ளதோ என்று அறியப்படவில்லை. திருமந்திரமணி அவர்களும் தம்வசம் பலபகுதிகளுக்கும் பழைய உரையுள்ளன என்றும், "முந்நூறு மந்திரம்" என்னும் நூல் உள்ளதென்றும் சொல்கின்றார்கள். இவை பலவும் வெளிவரத் திருவருள் கூட்டிவைப்பின் சைவ உலகத்துக்குப் பேருபகாரமாக இருக்கும். **"முப்பது உபதேசம்"** என்ற பகுதிக்கு ஒரு நல்ல உரை அச்சியற்றப்பட்டுள்ளதனை மேலே குறித்துள்ளேன். முழுமையும் உரை இல்லாத இடத்துக் குறிப்புரைகள் எல்லாம் குருடனுக்கு ஊன்றுகோல் போல உதவுவனவே யன்றி, சூரியன்முன் கண்கொண்டு காண்பதுபோல வெளிப்படக்காண உதவி செய்யமாட்டா. மேலும், திருமந்திரம் பெரும்பாலும் மந்திரங்களாகவும் யோகம் பற்றிய பொருள்களாகவும், அனுபவயோக சமாதி பற்றிய பொருள்களாகவும் உள்ளமையால், யோக அனுபவமும், ஞானசாத்திர விசாரணையும் இலக்கண இலக்கிய ஞானமும் சிவாகம ஒழுக்கமும் ஒருங்கே நிரம்பிய தேசிகர்களின் துணைகொண்டே பக்குவமுடையோர் அறியத் தக்கது.

(23) முழுத் தமிழ்நூல்

இனி, இந்நாளில் திருமந்திரத்துப் பயிலும் ஆசிரியன்மார்களும் தாந்தாங் கண்ட பொருள்களை அச்சில் வெளிவரச் செய்தலும் இன்றியமையாத பேருதவியாகும். இத்திருமந்திரத்துப் பயில்வோர் மிகச் சிலரேயாகக் காணப்படுதல் வருந்தத்தக்கது. திருமந்திரம் தமிழ் மொழிநலமும் பெரிதும் உடையது; "தன்னைநன் றாகத் தமிழ்ச் செய்யுமாறே" "மூவாயிரந் தமிழ்" (மந்திரம்), "தமிழ் வகுப்பு" (புரா) என்பவாதலின் தமிழ்ச் சுவையிலும் பெரிதும் இன்பந் தருவதாம். திருமூலரது தமிழ்ப் பண்புக்கு ஒரு தனிப்பெருமையும், அழகும் உறுதியுமுண்டு. அஃது இலக்கிய வகையாலும் பேணுதற்குரியது. பொருள் விளக்கங் காட்டும் உவமைகள் மிக உறுதியும் நயப்பாடு முடையன. செய்யுள் நடையில், இரக்கம் முதலிய பல சுவைகளையும் அங்கங்கே காணலாம். திருமூலர், ஓராண்டுக்கொரு மந்திரமாக 3000 ஆண்டுகளில் இத்திருமந்திரமாலையினைச் சொன்னாரேனும், அதனைச் சிவாகமப் பொருள்களின் சாரமாய் விளங்கும் முப்பொருளுண்மையினையும் ஞான முதலாம் நான்கு நெறிகளையும், அவற்றுக்குரிய சாதனங்களையும்,தொடர்புபட வகுத்துக் கூறுவதாய்க், கடவுள் வாழ்த்து, பாயிரம், நூல் வந்தவழி முதலியவை பொருந்தியதாய்த், தொடர்புடைய ஓர் மாலையாக வருவதாய், "ஒன்றவன்றான்" என்று தொடங்கி, (பெரியபுராணத்தின்படி "ஒன்றவன்றான்" என்பது தான் திருமந்திர முதற்செய்யுள்.) "வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே" என்ற மங்கலவாழ்த்துடன் முடிவதாய், உலகத்துயிர்கள் பிறவிவிடம் தீர்ந்துய்ந்து வீடுபெறும் உறுதிப்பொருள் பயப்பதனை உள்ளுறையாகக் கொண்டதாய் வரும் ஒரு தனித்தமிழ் முதல்நூலாய் **வகுத்தியற்றி** யருளினர் எனவே கூறலாம். இயற்றமிழ் வல்லார்கள் என்ற பாகுபாட்டிலே திருமூலரை ஒருவராக உமாபதி சிவனார் வகுத்தருளுகின்றார். அவருடைய திருவடிகளில் செய்யும் சிறிய **தமிழ்த் தொண்டாகச்** சிறியேன் இந்த முன்னுரையினை எழுதினேன். பிழையுள்ளன பொறுத்திடுதல் பெரியோர் கடனாகும்.

"வாழ்க திருமூலர் மாமலர்ப் பாதங்கள் - வாழ்க திருமந்திரம்"

சேக்கிழார் நிலையம்.
கோயம்புத்தூர்
15—11—52

C.K. சுப்பிரமணிய முதலியார்

உ

சிவமயம்

திருமந்திரமாலைத் திரட்டு

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

திருமூலர் - 300 மந்திரம்

நூல்

பாயிரம்

1. கடவுள் வாழ்த்து

ஒன்றவன் றானே யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தானைந்து
வென்றன னாறு விரிந்தன னேழும்பர்ச்
சென்றனன் றானிருந் தானுணர்ந் தெட்டே. 1

சிவனொடொக் குந்தெய்வந் தேடினு மில்லை;
அவனையொப் பாரிங் கியாவரு மில்லை;
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 5

பா-ம். அவனோ டொப்பார்.

(2) **வேதச் சிறப்பு**

வேதத்தை விட்ட **அறமில்லை** வேதத்தின்
ஓதத் தகுமற மெல்லா முளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே. 51

குறிப்பு: அறம் - வேதம்.

(3) **ஆகமச் சிறப்பு**

அஞ்சன மேனி யரிவையோர் **பாகத்தன்**
அஞ்சொ டிருபத்து மூன்றுள வாகமம்
அஞ்சலி கூப்பி யறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தி லரும்பொருள் கேட்டதே. 57

குறிப்பு: **அறுபத்தறுவர்** - *பிரணவாதியோர்.*

பரனாய்ப் பராபரங் காட்டி யுலகிற்
றரனாய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்(து)
அரனா யமரர்க ளர்ச்சிக்கு நந்தி
உரனாகி யாகம மோங்கிநின் றானே. 61

குறிப்பு: **சிவதன்மம்** - சிவாகமங்கள்.

(5) திருமூலர் வரலாறு

நந்தி யிணையடி நான்றலை மேற்கொண்டு
புத்தியி னுள்ளே புகப்பெய்து போற்றிசெய்(து)
அந்தி மதிபுனை யரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. 73

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியி னீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவ நாமங்க ளோதியே. 79

முதல் தந்திரம்

(1) உபதேசம்

பதிபசு பாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாச மநாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாச நிலாவே. 115

சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் றோற்றமு னற்ற மலங்களே. 117

குறிப்பு: முதற் றந்திரத்துள், மேலும், இப்பகுதித் திருமந்திரங்கள் பல முன்னுரையில் தரப்பட்டுள்ளன.

(3) செல்வ நிலையாமை

அருளு மரசனு மானையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னந்
தெருளு முயிரொடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே. 168

(8) பிறர்மனை நயவாமை

ஆத்த மனையா ளகத்தி லிருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாதார்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. 201

(12) அந்தணர்

சத்திய மின்றித் தனிஞானந் தானின்றி
யொத்த விடயம்விட் டோரு முணர்வின்றிப்

ஒழுக்கம்
பத்திய மின்றிப் பரனுண்மை யின்றியூண்
பித்தேறு மூடர் பிராமணர் தாமன்றே. 231

(13) அரசாட்சி முறை
கல்லா வரசனுங் காலனு நேரொப்பர்
கல்லா வரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா வரச னறமோரான் கொல்லென்பான்
நல்லாரைக் கால னணுகிநில் லானே. 238

நாடோறு மன்னவ ளுட்டிற் றவநெறி
நாடோறு நாடி யவனெறி நாடானேல்
நாடோறு நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே. 239

(15) தானச் சிறப்பு
ஆர்க்கு மிடுமி னவரிவ ரென்னன்மின்
பாத்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை யுண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் கால மறிமினே. 250

(16) அறஞ் செய்வான் றிறம்
யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமுண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 252

(17) அறஞ் செயான் றிறம்
இருமலுஞ் சோகையு மீளையும் வெப்பும்
தருமஞ்செய் யாதவர் தம்பால வாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கற் ருழகி லாவே. 263

(18) அன்புடைமை
அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே. 270

குறிப்பு: **அன்பேசிவம்** *என்னுமல் அன்பே* **சிவமாவது** *என்றல் பொருளுடையது.*

இரண்டாந் தந்திரம்

(8) அடிமுடி தேடல்
வாள்கொடுத் தானை வழிபட்ட தேவர்கள்
ஆள்கொடுத் தெம்போ லரனை யறிகிலர்
ஆள்கொடுத் தின்பங் கொடுத்துக் கோளாகத்
தாள்கொடுத் தானடி சாரகி லாரே. 379

(9) படைத்தல்
ஒருவனு மேயுல கேழும் படைத்தான்
ஒருவனு மேயுல கேழு மளித்தான்
ஒருவனு மேயுல கேழுந் துடைத்தான்
ஒருவனு மேயுல கோடுயிர் தானே. 404

ஆதித்தன் சந்திர னங்கியெண் பாலர்கள்
போதித்த வானெலி பொங்கிய நீர்புவி
வாதித்த சத்தாதி வாக்கு மனுதிகள்
ஓதுற்ற மாயையின் விந்துவி னுற்றதே. 410

(10) காத்தல்

தானே திசையொடு தேவரு மாய்நிற்குந்
தானே உடலுயிர்தத்துவ மாய்நிற்கும்
தானே கடன்மலை யாதியு மாய்நிற்குந்
தானே யுலகிற் றலைவனு மாமே. 412

(11) அழித்தல்

அங்கிசெய் தீச னகலிடஞ் சுட்டது
அங்கிசெய் தீச னலைகடற் சுட்டது
அங்கிசெய் தீச னசுரரைச் சுட்டது
அங்கியல் வீசற்குக் கையம்பு தானே. 421

(12) மறைத்தல்

உள்ளத் தொருவனை யுள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா வொருவனை
உள்ளமுந் தானு முடனே யிருக்கினும்
உள்ள மவனை யுருவறி யாதே. 431

(13) அருளல்

ஆரு மறியாத அண்டத் திருவுருப்
பார்முத லாகப் பயிலுங் கடத்திலே
நீரினிற் பால்போல நிற்கின்ற நேர்மையைச்
சோராமற் காணுஞ் சுகமறிந் தேனே. 450

(15) மூவகைச் சீவவர்க்கம்

விஞ்ஞானர் நால்வரு மெய்ப்பிரள யாகலத்
தஞ்ஞானர் மூவருந் தாங்கு சகலத்தின்
அஞ்ஞானர் மூவரு மாகும்ப தின்மராம்
விஞ்ஞான ராதியர் வேற்றுமை தானே. 493

விஞ்ஞானர் கேவலத் தாரது விட்டவர்
தஞ்ஞான ரட்டவித் தேசுரஞ் சார்ந்துளோர்
எஞ்ஞானரேழ்கோடி மந்திர நாயகர்
மெய்ஞ்ஞான ராணவம் விட்டுநின் றாரே. 494

(16) பாத்திரம்

திலமத் தனையே சிவஞானிக் கீந்தால்
பலமுத்தி சித்தி பரபோக முந்தரும்;
நிலமத் தனைபொன்னை நின்மூடர்க் கீந்தால்
பலமுமற் றேபர போகமுங் குன்றுமே. 501

(17) அபாத்திரம்

மண்மலை யத்தனை மாதன மீயினும்
அண்ண லிவனென்றே யஞ்சலி யத்தனாய்
எண்ணி யிறைஞ்சாதார்க் கீந்த விருவரும்
நண்ணுவ ரேழா நரகக் குழியிலே. 508

குறிப்பு: **இருவர்** - கொள்வோரும் கொடுப்போரும்.

(18) தீர்த்தம்

உள்ளத்தி னுள்ளே யுளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்துநின் ருடார் வினைகெடப்
பள்ளமு மேடும் பரந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி லோரே. 509

(19) திருக் கோயிலிழிவு

தாவர லிங்கம் பறித்தொன்றிற் ருபித்தால்
ஆவதன் முன்னே யரசு நிலைகெடுஞ்
சாவதன் முன்னே பெருநோ யடுத்திடும்
காவலன் பேர்நந்தி கட்டுரைத் தானே. 515

கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்மபி டேகத் தரசரை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவ ஞணையே. 516

ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற் ருனே. 517

முன்னவனுர் கோயிற் பூசைகண் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி யெடுத்துரைத் தானே. 518

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னை யர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாமென்றே.
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத் தானே. 519

(20) அதோமுக தரிசனம்

எம்பெரு மானிறை வாமுறை யோவென்று
வம்பவிழ் வானே ரசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி **யறுமுகன்!** போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் ருனே. 520

குறிப்பு: *அறுமுகன்* பெருமையும் புராணமும்.

(21) சிவ நிந்தை

அப்பகை யாலே யசுரருந் தேவரும்
நற்பகை செய்து நடுவே முடிந்தனர்
எப்பகை யாகிலு மெய்தா ரிறைவனைப்
பொய்ப்பகை செய்யினு மொன்றுபத் தாமே. 528

(22) குரு நிந்தை

பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாவியு மாண்டொன்றின் மாண்டிடுஞ்
சத்திய மீது சதாநந்தி யாணையே. 532

மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையி னொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங்கனாய்ப் பிறந்து நூறுரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே. 533

ஈச னடியா ரிதயங் கலங்கிடத்
தேசமு நாடுஞ் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமு மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நந்நந்தி யாணையே. 534

(25) பெரியாரைத் துணைக் கோடல்

உடையா னடியா ரடியா ருடன்போய்ப்
படையா ரழன்மேனிப் பதிசென்று புக்கேன்
கடையார நின்றவர் கண்டறி விப்ப
உடையான் வருகென வோலமென்றாரே 547

மூன்றாந் தந்திரம்

(1) அட்டாங்க யோகம்

இயம நியமமே எண்ணிலா வாதனம்
நயமுறு பிராணயா மம்பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறு மட்டாங்க மாவது மாமே. 552

(2) இயமம்

கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குணன்
நல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் **இயமத்** திடையினின் றானே. 554

(3) நியமம்

தூய்மை யருளூண் சுருக்கம் பொறைசெம்மை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமி யீரைந்து **நியமத்த** னாமே. 556

தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்து
நிவம்பல செய்யின் **நியமத்த** னாமே. 557

(4) ஆதனம்

பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதன மோரேழும்
உத்தம மாமுது வாசன மெட்டெட்டுப்
பத்தொடு நூறு பலவா சனமே. 563

(5) பிராணாயாமம்

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டு மிரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக விவ்விரண்
டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க உண்மையே. 573

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குலம்
நீடுவ ரெண்விரல் கண்டிப்பர் நால்விரல்
கூடிக் கொளிற்கோல வஞ்செழுத் தாமே. 576

(6) பிரத்தியாகாரம்

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேல்
மாசித்த மாயோகம் வந்துதலைப் பெய்துந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாமே. 581

மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே. 583

எருவிடும் வாசற் கிருவிரன் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
உருவிடுஞ் சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்து நின்றானே. 584

(7) தாரணை

கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே வெளியுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணா ளடைக்கும் வழியது வாமே. 588

(8) தியானம்

நயன மிரண்டும் நாசிமேல் வைத்திட்(டு)
உயர்வெழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரற நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே. 605

பத்து நாதங்கள்

மணிகடல் யானை வளர்குழல் மேகம்
அணிவண்டு தும்பி வளைபே ரிகையாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே. 606

குறிப்பு: *சேரமானார் சரிதமும், திருவாசகம் - திருப்படையாட்சி - "நன் மணி நாதம்" (4); வீணை முரன்றெழு மோசை (6); "சொல்லிய லாதெழு தூமணி யோசை" (7); "சங்கு திரண்டு முரன்றெழு மோசை" (8) என்பன முதலியவையும் பார்க்க.*

நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக் கிருவிர லுள்ளே
கடலத் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. 616

குறிப்பு: *``நாடுவ னாடுவ னாபிக்கு மேலேயொர் நால்விரல், மாடுவன் மாடுவன் வன்கை பிடித்து மகிழ்ந்துளே, ஆடுவன்'' -நம்பி -தேவா - ஆமாத்தூர் - 9.*

(9) சமாதி

மூல நாடி முகட்டல குச்சியுள்
நாலு வாச னடுவு ளிருப்பிர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனாவிலு மில்லையே. 622

குறிப்பு: *``நாலுகரணங் களுமொன்றாய் நல்ல வறிவு மேற்கொண்டு, காலும் பிரம நாடிவழிக் கருத்துச் செலுத்தக் கபாலநடு, ஏல வேமுன் பயின்றநெறி யெடுத்த மறைமூ லந்திறப்ப''—பெரியபு - பெருமிழலைக் குறும்பர் புரா 10,1715 பார்க்க.* **மேலைவாசல்-** *சொர்க்கவாசல் என்னும் வழக்கு.*

(11) அட்டமா சித்தி

தானே யணுவுஞ் சகத்துத்தன் நொய்ம்மையும்
மாணாக் ககனமும் **பரகாயத் தேகமுந்**
தானாவ தும்பர காயஞ்சேர் தன்மையும்
ஆனாத வுண்மையும் வியாபியு மாமெட்டே. 649

குறிப்பு: திருமூலர் சரிதம் - பரகாயப் பிரவேச சித்தி. **பா-ம்.** கனமும்.

(13) காய சித்தி உபாயம்

உடம்பா ரழியி லுயிரா ரழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கு முபாய மறிந்தே
உடம்பை வளர்த்தே னுயிர்வளர்த் தேனே. 724

(14) கால சக்கரம்

உகங்கோடி கண்டு மொசிவற நின்று
அகங்கோடி கண்டு ளயலறக் காண்பர்கள்
சிவங்கோடி விட்டுச் செறிய விருந்தங்
குகங்கோடி கண்டங் குயருறு வார்களே. 759

குறிப்பு: *திருமூலர் சரிதம் கருதுக.*

(15) ஆயுள் பரிட்சை

வைத்தகை சென்னியி **னேரிதாய்த் தோன்றிடில்**
உத்தமம்; **மிக்கிடில் ஓராறு திங்களாம்**
அத்த **மிகுத்திட் டிரட்டிய தாயிடில்**
நித்தல் உயிர்க்**கொரு திங்களி லோசையே.** 770

(16) வாரசரம்

வெள்ளிவெண் டிங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்த னிரவி செவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே. 790

(17) வாரசூலம்

வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நேரொத்த **திங்கள் சனிகிழக்** கேயாகும்;
பாரொத்த **சேய்புதன் உத்தரம்;** பானுநாள்
நேரொத்த வெள்ளி குடக்காக நிற்குமே. 797

தெக்கண மாகும் வியாழத்துச் சேர் திசை
அக்கணி சூலமு **மாமிடம் பின்னுகில்**
துக்கமு மில்லை; **வலமுன்னே தோன்றிடில்**
மிக்கது மேல்வினை மேன்மேல் விளையுமே. 798

ஊனீர் வழியாக **வுண்ணுவை யேறிட்டுத்**
(18) **கேசரி யோகம்**
தேனீர் **பருகிச் சிவாய நமவென்று**
கானீர் வரும்வழி கங்கை தருவிக்கும்
வானீர் வரும்வழி வாய்ந்தறி வீரே. 809

பாரில்லை நீரில்லை பங்கய மொன்றுண்டு
(19) **பரியங்க யோகம்**
தாரில்லை வேரில்லை தாமரை பூத்தது
ஊரில்லை காணு மொளியது வொன்றுண்டு
கீழில்லை மேலில்லை கேள்வியிற் பூவே. 844

(அந்தாதித் தொடை)

அளக நன்னுத லாயோ ரதிசயம்
(20) **அமுரி தாரணை**
களவு காயங் கலந்தவிந் நீரிலே
மிளகு நெல்லியும் மஞ்சளும் வேம்பிடில்
இளகிடு மேனி யிருளுங் கபாலமே. 849

முற்பதி னைஞ்சின் முளைத்துப் பெருத்திடும்
(21) **சந்திர யோகம்**
பிற்பதி னைஞ்சிற் பெருத்துச் சிறுத்திடும்
அப்பதி னைஞ்சு மறியவல் லார்கட்குச்
செப்பரி யான்கழல் சேர்தலு மாமே. 861

ஈராறு பெண்கலை யெண்ணிரண் டாண்கலை
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்று நெருப்புற வேபெய்யில்
ஆராத வானந்த மானந்த மானதே. 865

சசியுதிக் கும்மள வுந்துயி லின்றிச்
சசியுதித் தானேற் றனதூ ணருந்திச்
சசிசரிக் கின்றள வுந்துயி லாமற்
சசிசரிப் பின்கட்டன் கண்டுயில் கொண்டதே. 873

நாலாந் தந்திரம்

குறிப்பு: இத்தந்திர முழுதும் மந்திரச்சக்கரங்களைப் பற்றியனவாதலின் சில மந்திரங்களே தரப்படுவன; மேலும் வேண்டுவோர் முழு நூலையும் பார்க்க.

அமலம் பதிபசு பாசங்க ளாகமம்

(1) அசபை அமலந் திரோதாயி யாகுமா னந்தமாம்
அமலஞ்சொ லாணவ மாயை காமியம்
அமலந் திருக்கூத்தங் காமிடந் தானே. 895

பொற்பாதங் காணலாம் புத்திர ருண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னுயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே. 907

அரகர வென்ன வரியதொன் றில்லை
(2) திருவம் பலச் சக்கரம் அரகர வென்ன வறிகிலர் மாந்தர்
அரகர வென்ன வமரரு மாவர்
அரகர வென்ன வறும்பிறப் பன்றே. 916

அண்ண லிருப்ப தவளக் கரத்துளே
பெண்ணினல் லாளும் பிரானக் கரத்துளே
எண்ணி யிருவ ரிசைந்தங் கிருந்திடப்
புண்ணிய வாளர் பொருளறி வார்களே. 931

குறிப்பு: "*உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையா ணடுவு ணீயிருத்தி*"- (*திருவாசகம் - கோழ.பதி - 1*). "*பெண்ணினல்லா ளொடும்*" (*தேவா*).

ஓது மெழுத்தோ டுயிர்க்கலை மூவைஞ்சும்
ஆதி யெழுத்தவை யைம்பதோ டொன்றென்பர்
சோதி யெழுத்தினி லையிரு மூன்றுள
நாத வெழுத்திட்டு நாடிக்கொள் வீரே. 963

ஐம்ப தெழுத்தே யனைத்தும் வேதங்களும்
ஐம்ப தெழுத்தே யனைத்தா கமங்களும்
ஐம்ப தெழுத்தேயு மாவ தறிந்தபின்
ஐம்ப தெழுத்தும்போ யஞ்செழுத் தாமே. 965

மருவுஞ் **சிவாயமே** மன்னு முயிரும்
அருமந்த யோகமு ஞானமு மாகும்
தெருள்வந்த **சீவனார்** சென்றிவற் றாலே
அருள் தங்கி **யச்சிவ** மாவது வீடே. 979

எட்டு மிரண்டு மினிதறி கின்றிலர்
எட்டு மிரண்டு மறியாத வேழையர்
எட்டு மிரண்டு மிருமூன்று நான்கெனப்
பட்டது சித்தாந்த சன்மார்க்க பாதமே. 986

எட்டு வரையின்மே லெட்டு வரைகீறி
யிட்ட நடுவுள் இறைவனெழுத் தொன்றில்

வட்டத்தி லேயறை நாற்பத்தெட் டுமிட்டுச்
சிட்டஞ் செழுத்துஞ் செபிசீக் கிரமே. 987

ஆறெழுத் தாவன வாறு சமயங்கள்
ஆறுக்கு நாலே யிருபத்து நாலென்பர்
சாவித் திரியிற் றலையெழுத் தொன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற் றார்களே. 994

அம்புய நீலங் கழுநீ ரணிநெய்தல்
(3) அருச்சனை வம்பவிழ் பூகமும் மாதவி மந்தாரந்
தும்பை வகுளஞ் சுரபுன்னை மல்லிகை
செண்பகம் பாதிரி செவ்வந்தி சாத்திடே. 1003

சாங்கம தாகவே சந்தொடு சந்தனந்
தேங்கமழ் குங்குமம் கர்ப்பூரங் காரகிற்
பாங்கு படப்பனி நீராற் குழைத்துவைத்(து)
ஆங்கே யணிந்துநீ ரர்ச்சியு மன்பொடே. 1004

எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
(4) நவ குண்டம் **தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்**
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலால்
மைந்த னிவனென்ன மாட்டிக்கொள் ளீரே. 1026

குறிப்பு: *கந்தன் பெருமை.*

மாமாயை மாயை வயிந்தவம் வைகரி
(5) சத்திபேதம் -திரிபுரை சக்கரம் ஓமாயை யுள்ளொளி யோராறு கோடியில்
தாமான மந்திரஞ் சத்திதன் மூர்த்திகள்
யாமாயலவாந் **திரிபுரை** யாங்கே. 1045

குறிப்பு: *அந்தாதித் தொடை.*

ஏடங்கை நங்கை யிறையெங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்புவெண் டாமரை
பாடுந் திருமுறை பார்ப்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய் தோத்திரஞ் சொல்லுமே. 1067

குறிப்பு: **திருமுறை** *என்ற பெயர் குறிக்க. வேதநாதம் - கீதம்.*

ஓங்காரி யென்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவள்
ஆங்காரி யாகியே யைவரைப் பெற்றிட்டு
ஹ்ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. 1073

குறிப்பு: **ஐவர்** - *படைப்பாதி ஐந்தொழில் செய்யும் கடவுளர்.*

(6) பைரவி மந்திரம்

பன்னிரன் டாங்கலை யாதி பயிரவி
தன்னி லகாரமு மாயையுங் கற்பித்துப்
பன்னிரண் டாதியோ டந்தம் பதினாலுஞ்
சொன்னிலை சோடச மந்தமென் றேதிடே. 1075

ஆவின் கிழத்திநல் **லாவடு தண்டுறை**
நாவின் கிழத்தி நலம்புகழ்ந் தேத்திடுந்
தேவின் கிழத்தி திருவாஞ் சிவமங்கை
மேவுஞ் கிழத்தி வினைகடிந் தாளே. 1122

(7) பூரணசத்தி

தாமே லுறைவிட மாறித ழானது
பார்மே லிதழ்பதி னெட்டிரு நூறுள
பூமே லுறைகின்ற புண்ணியம் வந்தனள்
பார்மே லுறைகின்ற பைந்தொடி யாளே. 1141

போற்றியென் பேன்புவ னாபதி யம்மையென்
ஆற்றலுள் நிற்கு மருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றந் துரக்கின்ற கொள்பைந் தொடியே. 1150

(8) ஆதார ஆதேயம்

தானே யிருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே யிடுமங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே வடவரைத் தண்கடற் கண்ணே. 1165

யோகநற் சத்தி யொளிபீடந் தானாகும்
யோகநற் சத்தி யொளிமுகந் தெற்காகும்
யோகநற் சத்தி யுதர நடுவாகும்
யோகநற் சத்திதா ளுத்தரந் தேரே. 1172

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயு மறிவுங் கடந்த வரனுக்குத்
தாயு மகளுநற் றாரமு மாவளே. 1179

குறிப்பு: "இமவான் மகட்குத், தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன் றமையன் எம்மையன்" திருவாசகம் - (பொற்சு-13) பார்க்க.

முத்து வதனத்தி முகந்தொறு முக்கண்ணி
சத்தி சதிரி சகளி சடாதரி
பத்துக் கரத்தி பராபரன் பைந்தொடி
வித்தகி யென்னுள்ள மேவிநின் றாளே. 1194

ஆமத் தினிதிருந் தன்ன மயத்தினள்
ஓமத்தி லேயு மொருத்தி பொருந்தினள்
நாம நமசிவ வென்றிருப் பார்க்கு
நேமத் துணைவி நிலாவிநின் றாளே. 1213

சத்தியு நானுஞ் சயம்புவு மல்லது
முத்தியை யாரு முதலறி வாரில்லை
அத்திமேல் வித்திடி லத்தி பழுத்தக்கான்
மத்தியி லேற வழியது வாமே. 1230

அம்மையு மத்தனு மன்புற்ற தல்லது
அம்மையு மத்தனு மாரறிவா ரென்னை
அம்மையொ டத்தனு மியானு முடனிருந்
தம்மையொ டத்தனை யான்புரிந் தேனே. 1254

(9) ஏரொளிச் சக்கரம்

ஏரொளி யுள்ளெழு தாமரை நாலிதழ்
ஏரொளி விந்துவி னாலெழு நாதமாம்
ஏரொளி யக்கலை யெங்கு நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர மந்நடு வன்னியே. 1255

கொண்டவிம் மந்திரங் கூத்த னெழுத்தாய்ப்
பண்டையுள் நாவிற் பகையற விண்டபின்
மன்று ணிறைந்த மணிவிளக் காயிடும்
இன்று மிதயத் தெழுந்து நமவெனே. 1290

(10) வயிரவச் சக்கரம்

ஆமேவப் பூண்டரு ளாதி வயிரவன்
ஆமே கபாலமுஞ் சூலமுங் கைக்கொண்டங்
காமே தமருக பாசமுங் கையது
வாமே சிரத்தொடு வாளது கையே. 1293

(11) சாம்பவி மண்டலச் சக்கரம்

நாலைந் திடவகை யுள்ளதோர் மண்டலம்
நாலுநல் வீதியுள் நல்ல விலிங்கமாய்
நாலுநற் கோணமு நந்நா விலிங்கமாய்
நாலுநற் பூநடு நண்ணலவ் வாறே. 1299

(12) புவனாபதி சக்கரம்

பூசிக்கும் போது புவனா பதிதன்னை
ஆசற் றகத்தினி லாவா கனம்பண்ணிப்
பேசிய பிராணப் பிரதிட்டை யதுசெய்து
தேசுற் றிடவே தியான மதுசெய்யே. 1315

(13) நவாக்கரி சக்கரம்

சௌமுதல் அவ்வொடு ஹௌவுட னுங்கிரீம்
கௌவுளு மையுளுங் கலந்திரீம் சிரீமென்
றெவ்வில் எழுங்கிலீ மந்திர பாதமாச்
செவ்வு ளெழுந்து **சிவாய நமவெனே.** 1320

குறிப்பு: *நவ - அக்கரி = நவ - அட்சரி - (ஒன்ப தெழுத்து.); பஞ்சதசாட் சரி - என்பன முதலிய மந்திரப் பெயர்கள் காண்க.*

வகுத்திடு **நாவுக் கரசிவ டன்னைப்**
பகுத்திடும் **வேதமெய் யாகம** மெல்லாந்
தொகுத்தொரு நாவிடைச் சொல்ல வல்லாளை
முகத்துளு முன்னெழக் கண்டுகொ ளீரே. 1335

குறிப்பு: *நாவுக்கரசு - வாகீசுவரி.*

நடந்திடு நாவினுள் நன்மைக ளெல்லாந்
தொடர்ந்திடுஞ் சொல்லொடு சொற்பொரு டானுங்
கடந்திடுங் கல்விக் கரசிவ ளாகப்
படர்ந்திடும் பாரிற் பகையில்லை தானே. 1338

ஆமே **சதாசிவ நாயகி** யானவள்
ஆமே **யதோமுகத் துள்ளறி** வானவள்
ஆமே சுவையொளி யூறோசை கண்டவள்
ஆமே யனைத்துயிர் தன்னுளு மாமே. 1350

இருந்தவிச் சத்தி யிருநாலு கையிற்
பரந்தவிப் பூங்கிளி பாச மழுவாள்
கரந்திடு கேடகம் வில்லம்பு கொண்டங்
குரந்தங் கிருந்தவள் கூத்துகந் தானே. 1392

ஆனை மயக்கு மறுபத்து நாற்றறி
ஆனை யிருக்கு மறுபத்து நாலொளி
ஆனை யிருக்கு மறுபத்து நாலறை
ஆனையுங் கோடு மறுபத்து நாலிலே. 1418

ஐந்தாம் தந்திரம்

(1) சுத்த சைவம்

சத்து மசத்துஞ் சதசத்துந் தான்கண்டு
சித்து மசித்துஞ் சேர்வுறு மேநீத்த
சுத்த மசுத்தமுந் தோய்வுறு மேநின்று
நித்தம் பரஞ்**சுத்த சைவர்க்கு** நேயமே. 1420

(4) கடுஞ்சுத்த சைவம்

வேடங் கடந்து விகிர்தன்றன் பான்மேனி
ஆடம் பரமின்றி யாசாபா சஞ்செற்றுப்
பாடொன்று பாசம் **பசுத்துவம் பாழ்பட**ச்
சாடுஞ் **சிவபோதகர் சுத்த சைவரே.** 1438

(5) சரியை

சார்ந்தமெய்ஞ் **ஞானத்**தோர் தானவ னுயினோர்
சேர்ந்தவெண் **யோகத்தர்** சித்தர் சமாதியோர்
ஆய்ந்த **கிரியை**யோர் அருச்சனை தப்பாதோர்
நேர்ந்த **சரியை**யோர் நீணிலத் தோரே. 1447

சரியாதி நான்குந் தருஞான நான்கும்
விரிவான வேதாந்த சித்தாந்த மாறும்
பொருளா னதுநந்தி பொன்னகர் போந்து
மருளாகு மாந்தர் வணங்கவைத் தானே. 1449

(6) கிரியை

பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த வருளாற் றுரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறியுற் றுணர்கின்ற ஞானத்தாற்
சித்தங் குருவரு ளாற்சிவ மாகுமே. 1455

(9) சன்-மார்க்கம்

பசுபாச நீக்கிப் பதியுடன் கூட்டிக்
கசியாத நெஞ்சங் கசியக் கசிவித்
தொசியாத வுண்மைச் சொரூபோ தயத்துற்
றசைவான தில்லாமை யானசன் மார்க்கமே. 1486

(11) சற்புத்திர மார்க்கம்

பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்
ஆசற்ற நற்றவம் வாய்மை யழுக்கின்மை
நேசித்திட் டன்னமு நீசுத்தி செய்தன்மற்
றுசற்ற சற்புத்திர மார்க்க மாகுமே. 1496

(12) தாச மார்க்கம்

எளியன றீப மிடல்மலர் கொய்தல்
அளிதின் மெழுக லதுதூர்த்தல் வாழ்த்தல்
பளிமணி பற்றல் பன்மஞ் சனமாதி
தளிதொழில் செய்வது தான்சக **மார்க்கமே.** 1502

குறிப்பு: *சேரமான் பெருமாளுயனூர் சரிதம் பார்க்க.*

(15) சாயுச்சியம்

சைவஞ் சிவனுடன் சம்பந்த மாவது
சைவந் தனையறிந் தேசிவஞ் சாருதல்
சைவஞ் சிவமன்றிச் சாராமல் நீவுதல்
சைவஞ் சிவானந்தஞ் சாயுச் சியமே. 1512

(17) சத்தி நிபாதம் தீவிரதரம்

இருவினை நேரொப்பி லின்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமெனு ஞானத்தாற் றன்செய லற்றுற்
றிரிமல நீங்கிச் சிவனவ ளுமே. 1527

(18) புறச்சமய தூடணம்

உள்ளத்து முள்ளன் புறத்துள்ள னென்பவர்க்
குள்ளத்து முள்ளன் புறத்துள்ள னெம்மிறை
உள்ளத்து மில்லை புறத்தில்லை யென்பவர்க்
குள்ளத்து மில்லை புறத்தில்லை தானே. 1532

சிவகதி யேகதி மற்றுள்ள வெல்லாம்
பவகதி பாசப் பிறவியொன் றுண்டு

தவகதி தன்ெனுடு நேரொன்று தோன்றில்
அவகதி மூவரும் அவ்வகை யாமே. 1536

ஓங்காரத் துள்ளொளி யுள்ளே யுதயமுற்(று)
(19) நிராகாரம் ஆங்கார மற்ற வனுபவங் கைகூடார்
சாங்கால முன்னுர் பிறவாமை சார்வுருர்
நீங்காச் சமயத்து ணின்ெருழிந் தாரே. 1556

ஒன்றது பேரூர் வழியா றதற்குள
(20) உட்சமயம் **என்றது போல விருமுச் சமயமும்**
நன்றிது தீதிது வென்றுரை யாளர்கள்
குன்று குரைத்தெழு நாயையொத் தார்களே. 1558

தேர்ந்த வரனை யடைந்த **சிவநெறி**
பேர்ந்தவ ருன்னிப் பெயர்ந்த **பெருவழி**
ஆர்ந்தவ ரண்டத்துப் புக்க **வருணெறி**
போந்து புனைந்து புணர்நெறி யாமே. 1563

சைவ சமயத் தனிநாயக னந்தி
உய்ய வகுத்த **குருநெறி** யொன்றுண்டு
தெய்வச் **சிவநெறி** சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய
வையத்து ளார்க்கு வகுத்துவைத் தானே. 1567

ஆருந் தந்திரம்

பத்திப் பதித்துப் பரவு மடிநல்கிச்
(1) சிவகுரு தரிசனம் சுத்த வுரையாற் றுரிசறச் சோதித்துச்
சத்து மசத்துஞ் சதசத்துங் காட்டலாற்
சித்த மிறையே சிவகுரு வாமே. 1573

குருவே சிவமெனக் கூறின னந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே. 1581

தாடந்த போதே தலைதந்த வெம்மிறை
(2) திருவடிப் பேறு வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு
வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்
பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே. 1591

குறிப்பு: "*வணங்கத் தலைவைத்து*", "*ஞானவா ளேந்து மையர்*"(திருவா)

உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்
திரையற்ற நீர்போற் சிவமாதல் தீர்த்துக்

கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த
சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோமே. 1593

இதயத்தும் நாட்டத்து மென்றன் சிரத்தும்
பதிவித்த பாதப் பராபர னந்தி
கதிவைத்த வாறுமெய் காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணுதே. 1596

திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே. 1598

மந்திர மாவதும் **மாமருந்** தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்ற னிணையடி தானே. 1604

குறிப்பு: "*மந்திர மாவது நீறு*" என்ற தேவாரம் பார்க்க.

(3) ஞாதுரு ஞானஞேயம்

தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்
தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு
தானென்ற பூவை யவனடிச் சாத்தினல்
நானென் றவனென்கை நல்லதொன் றன்றே. 1607

(4) துறவு

நெறியைப் படைத்தா னெருஞ்சில் படைத்தான்
நெறியில் வழுவில் நெருஞ்சில்முட் பாயும்
நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு
நெறியி னெருஞ்சில்முட் பாயகி லாவே. 1617

(5) தவம்

ஒடுங்கி நிலைபெற்ற வுத்தம ருள்ளம்
நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை
இடும்பையு மில்லை யிராப்பக லில்லை
படும்பய னில்லை பற்றுவிட் டோர்க்கே. 1624

குறிப்பு: "*கூற்றங் குமைத்தலும் கைகூடும்*" - தவம் - குறள்.

(7) சிவனருளுடைமையின் ஞானம்வருதல்

பிரானரு ளுண்டெனி லுண்டுநற் செல்வம்
பிரானரு ளுண்டெனி லுண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையு முண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே. 1645

(8) அவவேடம்

ஆடம்ப ரங்கொண் டடிசிலுண் பான்பயன்
வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்
ஆடியும் பாடியு மழுது மரற்றியுந்
தேடியுங் காணீர் சிவனவன் ருள்களே. 1655

பூதி யணிவது சாதன மாதியிற்
(9) **தவவேடம்** காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கு முருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே. 1662

கங்காளன் பூசுங் **கவசத் திருநீற்றை**
(10) **திருநீறு** மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. 1666

தானற்ற தன்மையுந் தானவ னுதலும்
(11) **ஞான** ஏனைய வச்சிவ மான வியற்கையுந்
வேடம் தானுறு சாதக முத்திரை சாத்தலு
மேனமு நந்தி பதமுத்தி பெற்றதே. 1675

மயலற் றிருளற்று மாமன மற்றுக்
(12) **சிவ** கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்றுத்
வேடம் தயலற் றவரோடுந் தாமே தாமாகிச்
செயலற் றிருப்பார் சிவவேடத் தாரே. 1678

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
(13) **அபக்குவன்** **குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்**
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே. 1680

வாயொன்று சொல்ல மனமொன்று சிந்திக்க
நீயொன்று செய்ய லுறுதி நெடுந்தகாய்
தீயென்றிங் குன்னைத் தெளிவன் றெளிந்தபின்
பேயென்றிங் கென்னைப் பிறர்தெளி யாரே. 1683

கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்கலும் பெருமை கூறலும்
என்றிவை யிறைபா லியற்கை யல்லவே. 1686

கொள்ளினு நல்ல குருவினைக் கொள்ளுக
(14) **பக்குவன்** உள்ள பொருளுடல் ஆவி யுடனீக
எள்ளத் தனையு மிடைவிடா தேநின்று
தெள்ளி யறியச் சிவபதந் தானே. 1693

சத்து மசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்
சித்தை யுருக்கிச் சிவனருள் கைகாட்டப்
பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்
சத்தியி லிச்சைத் தகுவோன்சற் சீடனே. 1697

சீராரு ஞானத்தி லிச்சை செலச்செல்ல
வாராத காதல் குருபரன் பாலாகச்
சாராத சாதக நான்குந்தன் பாலுற்ருேன்
ஆராயு ஞானத்த ஞமடி வைக்கவே 1699

உணர்த்து மதிபக்கு வர்க்கே யுணர்த்தி
இணக்கிற் பராபரத் தெல்லையு ளிட்டுக்
குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்கொண்
டுணர்த்துமி ஞவுடை யாள்தன்னை யுன்னியே. 1700

இறையடி தாழ்ந்தை வணக்கமு மெய்திக்
குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்
சிறையுட னீயறக் காட்டிச் சிவத்தோ
டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே. 1701

சற்குணம் வாய்மை தாயவிவே கந்தண்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்
அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே. 1703

ஏழாந் தந்திரம்

(1) ஆருதாரம்

ஈராறு நாதத்தி லீரெட்டா மந்தத்தின்
மேதாதி நாதாந்த மீதாம் பராசத்தி
போதா லயத்த விகாரந் தனிற்போத
மேதாதி யாதார மீதான வுண்மையே. 1705

(2) அண்ட லிங்கம்

தாபரத் துண்ணின் றருளவல் லான்சிவன்
மாபரத் துண்மை வழிபடு வாரில்லை
மாபரத் துண்மை வழிபடு வாளர்க்கும்
பூவகத் துண்ணின்ற பொற்கொடி யாகுமே. 1717

குறிப்பு: *தாபரம் - சிவலிங்கம்.*

தூய **விமானமுந் தூலம** தாகுமால்
ஆய **சதாசிவ மாகுநற் சூக்குமம்**
ஆய **பலிபீடம் பத்திர லிங்க**மாம்
ஆய **வரனிலை** யாய்ந்துகொள் வார்கட்கே. 1718

குறிப்பு: *விமானம் - தூலலிங்கம்;* ***சதாசிவம்*** *(அஃதாவது மூலலிங்கம்) - சூக்கும லிங்கம்;* ***பலிபீடம்*** *- பத்திர லிங்கம்; இடபம்; இவை அரனிலை.*

முத்துடன் மாணிக்கம் மொய்த்த பவளமுங்
கொத்துமக் கொம்பு சிலைநீறு கோமளம்
அத்தன்றன் ஞகம மன்ன மரிசியாம்
உய்த்ததின் சாதனம் பூமண லிங்கமே. 1719

துன்றுந் தயிர்நெய் பால்துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனலிர தஞ்சலம்
வன்றிறற் செங்கல் வடிவுடை வில்லம்பொன்
றென்றியங் கொன்றை தெளிசிவ லிங்கமே. 1720

குறிப்பு: *சிறப்பாய் இவ்விரண்டு திருமந்திரங்களிலும், இப்பகுதியுள் ஏனைய வற்றிலும் சிவாகமங்களின் அந்தரங்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னின்ன பொருள்களாற் சிவலிங்கந்தாபித்து வழிபடலாம் என்பது ஈண்டுக்கூறப்பட்டது. 1719-* **கொத்துமக் கொம்பு** - *சித்திர வேலைப்பாடுடைய மரம்;* **சிலை** - *பளிங்கு கல் முதலியவை;* **அத்தன்றனுகமம்** - *சிவாகமமும் திருமுறைகளும் எழுதிய சுவடி;* **லிங்கமே** - *சிவ வடிவமே; 1720-***மெழுகு** - *பசுவின் சாணம்;* **கன்றிய இரதம்** - *கட்டிய வாலரசம்;* **வில்லம்** - *வில்வம்;* **தென்தியங்கு ஒன்று;** *மேற்சொல்லிய பொருள்களுள் அழகிய தொன்றை; 1721 -* **கோமளம்** - *மரகதலிங்கம்;* **வாணலிங்கம்** - *பாணலிங்கம்.*

மறையவ ரர்ச்சனை வண்படி கந்தான்
இறையவ ரர்ச்சனை யேயபொன் னுகுங்
குறைவிலா வசியர்க்குக் கோமள மாகுந்
துறையுடைச் சூத்திரர் தொல்வாண லிங்கமே. 1721

தரையுற்ற சத்தி தனிலிங்கம் விண்ணுந்
திரைபொரு நீரது மஞ்சன சாலை
வரைதவிழ் மஞ்சுநீர் வானுடு மாலை
கரையற்ற நந்தி கலையுந் திக்காமே. 1725

குறிப்பு: *இஃது அண்டமாகிய லிங்கத்துக்குத் திருமஞ்சன முதலியவை கூறியபடி.*

(3) பிண்ட லிங்கம்

மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்
மானுட ராக்கை வடிவு சிதம்பரம்
மானுட ராக்கை வடிவு சதாசிவம்
மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே. 1726

(4) சதாசிவ லிங்கம்

நடுவு கிழக்குத் தெற்குத் தரமேற்கு
நடுவு படிகநற் குங்கும வன்னம்
அடையுள வஞ்சனஞ் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை யஞ்சே. 1735

அஞ்சு முகமுள வைம்மூன்று கண்ணுள
அஞ்சினெ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுட னஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்து நின்றானே. 1736

இருளார்ந்த கண்டமு மேந்து மழுவுஞ்
சுருளார்ந்த செஞ்சடைச் சோதிப் பிறையும்
அருளார்ந்த சிந்தையெம் மாதிப் பிரானைத்
தெருளார்ந்தென் னுள்ளே தெளிந்திருந் தேனே. 1740

சத்திதா னிற்கின்ற வைம்முகஞ் சாற்றிடில்
உத்தரம் வாம **முரையத் திருந்திடுந்**
தத்துவம் பூருவந் தற்புரு **டன்சிர**
மத்தகு கோர மகுடத்தீ சானனே. 1741

பா-ம். *உத்தமம்; உரைத்திடுஞ் சத்தி - டன்னுரை - தெற்கி லகோரந் தென்கிழக் கீசனே.*

நாணுநல் லீச னடுவுச்சி தாஞகுந்
தாணுவின் றன்முகந் தற்புருட மாகுங்
காணு மகோரம் இருதயங் குய்யமாம்
மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே. 1742

நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவ சங்கண்ணும்
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாஞ்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னுகுஞ்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. 1743

எண்ணில் இதயம் இறைஞான சத்தியாம்
விண்ணிற் பரைசிர மிக்க சிகையாதி
வண்ணக் கவசம் வனப்புடை இச்சையாம்
பண்ணுங் கிரியை பரநேத் திரத்திலே. 1744

இலிங்கநற் பீட மிசையுமோங் காரம்
இலிங்கநற் கண்ட நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையு முகாரம்
இலிங்க மகார நிறைவிந்து நாதமே. 1752

சத்தி சிவமா மிலிங்கமே தாபரம்
சத்தி சிவமா மிலிங்கமே சங்கமம்
(5) ஆத்ம லிங்கம் சத்தி சிவமா மிலிங்கஞ் சதாசிவம்
சத்தி சிவமாகுந் தாபரந் தானே. 1755

சத்தி சிவன்விளை யாட்டாம் உயிராகி
(6) ஞான லிங்கம் ஒத்த வருமாயா கூட்டத் திடையூட்டிச்
சுத்தம தாகுந் துரியம் பிறிவித்துச்
சித்தம் புகுந்து சிவமக மாக்குமே. 1771

மலர்ந்த வயன்மா லுருத்திரன் மகேசன்
(7) சிவலிங்கம் பலந்தரு மைம்முகன் பரவிந்து நாதம்
நலந்தருஞ் சத்தி சிவன்வடி வாகிப்
பலந்தரு லிங்கம் பராநந்தி யாமே. 1776

குறிப்பு: *2 முதல் 7 வரை இலிங்க வகைகள்.*

(8) சம்பிரதாயம் தீக்கைவகை

உடல்பொரு ளாவி உதகத்தாற் கொண்டு
படர்வினை பற்றறப் **பார்த்துக்கை வைத்து**
நொடியி னடிவைத்து நுண்**ணுணர் வாக்கிக்**
கடிய பிறப்பறக் காட்டினன் நந்தியே. 1777

குறிப்பு: "*அன்றே யென்றன் ஆவியு முடலு முடைமை யெல்லாமும்... கொண்டிலையோ?*" *(திருவா.)*

பெட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
ஒட்டடித் துள்ள**மர் மாசெலாம்** வாங்கிப்பின்
தட்டொக்க மாறினன் றன்னையு மென்னையும்
வட்டம தொத்தது வாணிபம் வாய்த்ததே. 1781

குறிப்பு: *அமர்நீதி நாயனுர் புராணம் பார்க்க.*

அவனு மவனு மவனை யறியார்
அவனை யறியி லறிவானு மில்லை
அவனு மவனு மவனை யறியில்
அவனு மவனு மவனிவ ஞமே. 1789

(9) திருவருள் வைப்பு அருள்

அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்(டு)
அருளி லழிந்திளைப் பாறி மறைந்திட்(டு)
அருளான வானந்தத் தாரமு தூட்டி
அருளாலென் னந்தி யகம்புகுந் தானே. 1800

பாசத்தி லிட்ட **தருளந்**தப் பாசத்தின்
நேசத்தை விட்ட **தருளந்**த நேசத்திற்
கூசற்ற முத்தி **யருளந்**தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்று **நிலையரு** ளாமே. 1802

குறிப்பு: சித்தியார் *1 - 47 "உருவருள்"*

பிறவா நெறிதந்த பேரரு ளாளன்
மறவா வருடந்த மாதவ னந்தி
அறவாழி யந்தண ஞதிப் பராபரன்
உறவாகி வந்தெ னுளம்புகுந் தானே. 1803

குறிப்பு: "**அறவாழி அந்தணன்**" *குறள்.*

சிவமொடு சத்தி திகழ்நாதம் விந்து
தவமான வைம்முக னீச னரனும்
பவமுறு மாலும் பதுமத்தோ னீரு
நவமவை யாகி நடிப்பவன் ருனே. 1807

குறிப்பு: "*சிவஞ்சத்தி*" *சித்தி - 2 - 74.*

தானே படைத்திடுந் தானே யளித்திடுந்
தானே துடைத்திடுந் தானே மறைத்திடுந்
தானே யிவைசெய்து தான்முத்தி தந்திடுந்
தானே வியாபித் தலைவனு மாமே. 1809

தலையான நான்குந் தனதரு வாகும்
அலையா வருவுரு வாகுஞ் சதாசிவம்
நிலையான கீழ்நான்கு நீடுரு வாகுந்
துலையா விவைமுற்று மாயல்ல தொன்றே. 1810

அருளொளி

விளக்கினை யேற்றி வெளியை யறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே 1818

(11) சிவபூசை

உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே. 1823

புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ண லதுகண் டருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிக ளெம்மிறை யீசனை
நண்ணறி யாது நழுவுகின் றாரே. 1828

விண்ணப்பம்

மறப்புற்று விவ்வழி மன்னிநின் றாலுஞ்
சிறப்பொடு பூநீர் திருந்தமுன் னேந்தி
மறப்பின்றி யுன்னை வழிபடும் வண்ணம்
அறப்பெற வேண்டு மமரர் பிரானே. 1830

(12) குருபூசை

ஆகின்ற நந்தி யடித்தா மரைபற்றிப்
போகின் றுபதேசம் பூசிக்கும் பூசையும்
ஆகின்ற வாதார மாறு றதனின்மேற்
போகின்ற பொற்பையும் போற்றுவன் யானே. 1847

(13) மகேசுவர பூசை

படமாடுங் கோயிற் பகவற்கொன் றீயில்
நடமாடுங் கோயி னம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயில்
படமாடுங் கோயிற் பகவற்க தாமே. 1857

குறிப்பு: **பகவன்** - *சிவன்;* **நம்பர்** - *மாகேசுரர்.*

தண்டறு சிந்தைத் தபோதனர் தாமகிழ்ந்
துண்டது மூன்று புவனமு முண்டது
கொண்டது மூன்று புவனமுங் கொண்டதென்
றெண்டரு நந்தி யெடுத்துரைத் தானே. 1858

அகர மாயிர மந்தணர்க் கீயிலென்
சிகர மாயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரில்லை யென்பது நிச்சயந் தானே. 1860

குறிப்பு: **அகரம்** - *பிராமணர் வசிக்குமிடம்.* **சிகரம்** - *கோயில்.*

ஆறிடும் வேள்வி யருமறை நூலவர்
கூறிடு மந்தணர் கோடிபே ருண்பதில்
நீறிடுந் தொண்டர் நினைவின் பயனில்லை
பேறெனி லோர்பிடி பேறது வாகுமே. 1861

ஏறுடை யாயிறை வாவெம் பிரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ண லிவனென்று
வேறணி வார்க்கு வினையில்லை தானே. 1862

வித்தக மாகிய வேடத்த ருண்டவூண்
அத்த னயன்மா லருந்திய வண்ணமாஞ்
சித்தந் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியா மென்றுநம் மூலன் மொழிந்ததே. 1866

குறிப்பு: *"அடியே, னுண்டவூ ணுனக்காம் வகையென துள்ள முள்கலந் தெழு பரஞ்சோதி"— திருவிசை - கருவூர் - கங்.சோ.6.*

(14) அடியார் பெருமை

என்றுயோ டென்னப்ப னேழேழ் பிறவியும்
அன்றே சிவனுக் கெழுதிய வாவணம்
நன்று யுலகம் படைத்தா னெழுதினன்
நின்றுன் முகில்வண்ண னேரெழுத் தாயே. 1876

குறிப்பு: *பெரியபுராணம் - தடுத்தாட்கொண்ட புராணம் - வழக்கில் சான்று காட்டிய ஆவணம் காண்க. "உயிர் ஆவணம் செய்திட்டுன் கைத்தந்தால்" (தேவா)*

சிவயோகி ஞானி செறிந்தவத் தேசம்
அவயோக மின்றி அறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே. 1882

(15) போசன விதி

அச்சிவ னுண்ணின்ற வருளை அறிந்தவர்
உச்சியம் போதாக வுள்ளமர் கோவிற்குப்
பிச்சை பிடித்துண்டு பேத மறநினைந்
திச்சைவிட் டேகாந்தத் தேறி யிருப்பரே. 1885

(16) பிட்சா விதி

பரந்துல கேழும் படைத்த பிரானை
யிரந்துணி யென்பர்க ளெற்றுக் கிரக்கும்
நிரந்தர மாக நினையு மடியார்
இரந்துண்டு தன்கழ லெட்டச்செய் தானே. 1888

(18) பூரணக் குகை நெறிச் சமாதி

வளர்பிறை யிற்றேவர் தம்பாலின் மன்னி
உளரொளி பானுவி னுள்ளே யொடுங்கத்
தளர்விற் பிதிர்பதிந் தங்கிச் சசியுள்
உளதுறும் யோகி யுடல்விட்டாற் றுனே. 1902

(19) சமாதிக் கிரியை

அந்தமில் ஞானிதன் னுகந் தீயினில்
வெந்திடி னுடெலாம் வெப்புத் தீயினில்
நொந்தது நாய்நரி நுகரி னுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும்வை யகமே. 1910

அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோரும்
அந்தமி லின்ப வருள்பெறு வாரே. 1913

நவமிகு சாணுலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழவைஞ் சாணுகக் கோட்டித்
தவமிகு குகைமுக் கோணமுச் சாணுக்கி
பவமறு நற்குகை பத்மா சனமே. 1914

தன்மனை சாலை குளங்கரை யாற்றிடை
நன்மலர்ச் சோலை நகரினற் பூமி
உன்னருங் கான முயர்ந்த மலைச்சாரல்
இந்நிலந் தான்குகைக் கெய்து மிடங்களே. 1915

நற்குவை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம ரோசமு மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யு நேர்மைய தாமே. 1916

பஞ்சலோ கங்கள் நவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
முஞ்சி படுத்து வெண்ணீறிட் டதன்மேலே
பொன்செய்த நற்சுண்ணம் பொதியலு மாமே. 1917

நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுந்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
ஒள்ளிய தூப முவந்திடு வீரே. 1918

ஓதிடும் வெண்ணீற்று லுத்தூளங் குப்பாயம்
மீதினி லிட்டா சனத்தினின் மேல்வைத்துப்
போதறு சுண்ணமு நீறும் பொலிவித்து
மீதி லிருத்தி விரித்திடு வீரே. 1919

விரித்தபின் னுற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமிள நீருங்
குருத்தலம் வைத்தோர் குகைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே. 1920

மீது சொரிந்திடும் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்வமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீது மூன்றுக்கு மூன்றணிநிலஞ் செய்யுமே. 1921

ஆதன மீதி லரசு சிவலிங்கம்
போது மிரண்டினி லொன்றைத் தாபித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வங்
காதலிற் சோடசங் காணுப சாரமே. 1922

(20) விந்துற்பனம்

வித்தினி லன்றி முளையில்லை யம்முளை
வித்தினி லன்றி வெளிப்படு மாறில்லை
வித்தும் முளையு முடனன்றி வேறல்ல
அத்தன்மை யாகு மரனெறி காணுமே. 1932

(21) விந்து ஜயம்-போக சரவோட்டம்

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
ஓர்க்கின்ற வுள்ள முருக வழல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணுசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே. 1937

ஒழியாத விந்து வுடனிற்க நிற்கும்
அழியாப் **பிராண னதிபலஞ் சத்தி**
ஒழியாத புத்தி தபஞ்செப மோனம்
அழியாத சித்தியுண் டாம்விந்து வற்றிலே. 1948

அறியா தழிகின்ற வாதலால் நாளும்
பொறியா லழிந்து புலம்புகின் றூர்கள்
அறிவாய் நனவி லதீதம் புரியச்
செறிவா யிருந்து சேரவே மாயுமே. 1952

மாதரை மாய வருங்கூற்ற மென்றுன்னக்
காதல தாகிய காமங் கழிந்திடுஞ்
சாதலு மில்லை சதகோடி யாண்டினுஞ்
சோதியி னுள்ளே துரிசறுங் காலமே. 1953

கலக்குநாள் முன்னாள் தன்னிடைக் காதல்
நலத்தக வேண்டிலந் நாரி யுதரக்
கலத்தின் மலத்தைத்தண் சீதத்தைப் பித்தை
விலக்கு வனசெய்து மேலணை வீரே 1955

மேலா நிலத்தெழு விந்துவு நாதமுங்
கோலால் நடத்திக் குறிவழி யேசென்று
பாலா மமிர்துண்டு பற்றறப் பற்றினுல்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே. 1956

யோக மவ்விந்து வொழியா வகையுணர்ந்
தாக மிரண்டுங் கலந்தாலு மாங்குருப்
போகஞ் சிவபோகம் போகிநற் போகமா
மோகங் கெடமுயங் கார்மூடர் மாதர்க்கே. 1960

மாத ரிடத்தே செலுத்தினு மவ்விந்து
காதலி ஞல்விடார் யோகங் கலந்தவர்
மாத ருயிராசை கைக்கொண்டே வாடுவர்
காதலர் போன்றங்ஙன் காதலாஞ் சாற்றிலே. 1961

வித்துக்குற் றுண்பான் விளைவறி யாதவன்
வித்துக்குற் றுண்ணுமல் வித்துச்சுட் டுண்பவன்
வித்துக்குற் றுண்பானில் வேறல னீற்றவன்
வித்துக்குற் றுண்ணுமல் வித்துவித் தானன்றே. 1964

விந்துவு நாதமு மேவி யுடன்கூடிச்
சந்திர னேடே தலைப்படு மாயிடில்
அந்தர வானத் தமுதம்வந் தூறிடும்
அங்குதி மந்திர மாகுதி யாகுமே. 1971

(22) ஆதித்தன் நிலை

(1) அண்டா தித்தன்

செஞ்சுட ரோன்முத லாகிய தேவர்கள்
மஞ்சுடை மேரு வலம்வருங் காரணம்
எஞ்சுட ரீச னிறைவ னிணையடி
தஞ்சுட ராக வணங்குந் தவமே. 1975

குறிப்பு: *"வலனேர்பு திரிதரு...ஞாயிறு" (முருகு).*

பாரை யிடந்து பகலோன் வரும்வழி
யாரு மறியா ரருங்கடை நூலவர்
தீர னிருந்த **திருமலை சூழென்**பர்
ஊரை யுணர்ந்தா ருணர்ந்திருந் தாரே. 1984

குறிப்பு: *திருமலை - கயிலைமலை.*

(2)

(23) பிண்டா தித்தன்

ஆதித்த னேடி யடங்கு மிடங்கண்டு
சாதிக்க வல்லவர் தம்மை யுணர்ந்தவர்
பேதித் துலகம் பிதற்றும் பிதற்றெலாம்
ஆதித்த னேடே யடங்குகின் றாரே. 1986

ஆகுங் கலையோ டருக்க னனல்மதி
(3) ஆகுங் கலையிடை நான்கென லாமென்பார்
(24) மன ஆகு மருக்க னனல்மதி யோடொன்ற
வாதித்தன் ஆகுமப் பூரணை யாமென் றறியுமே. 1900

உள்ள வருணோ தயத்தெழு மோசைதான்
(4) தெள்ளும் பரநாதத் தின்செய லென்பதால்
(25) ஞானு வள்ளல் பரவிந்து வைகரி யாதிவாக்
தித்தன் குள்ளன வைங்கலைக் கொன்ரு முதயமே. 1994

நாபிக்கண் ணூசி நயன நடுவினுந்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்க ளீசன் றிருமால் பிரமனும்
மூவரு மாக வுணர்ந்திருந் தாரே. 2000

அன்றிய பாச **விருளுமஞ் ஞானமுஞ்**
(5) சென்றிடு ஞானச் **சிவப்பிர காசத்தால்**
(26) **சிவா** ஒன்று **மிருசுட ராமரு ணோதயந்**
தித்தன் **துன்றிரு ணீங்குதல் போலத்** தொலைந்ததே. 2001

குறிப்பு: *முன் இலிங்கங்கள், அண்டலிங்கம் முதலாக அறுவகையாக உபதேசித்தார். இங்கு ஆதித்த னிலையை ஐந்து வகைப்பட உபதேசிக்கின்ருர்.* **ஆதித்தன்** *என்பது பௌதிக ஆதித்தனன்று; சிவசூரிய ஞானஒளிப் பொருள்.*

அன்ன மிரண்டுள வாற்றங் கரையினில்
(27) **பசுவிலக்** துன்னி யிரண்டுந் துணைப்பிரியா தன்னந்
கணம் தன்னிலை யன்னந் தனியொன்ற தென்றக்கால்
பிராணன் பின்ன மடவன்னம் பேறணு காதே. 2006

குறிப்பு: *துணைப் பிரியாத இரு புட்கள் (சீவான்மா - பரமான்மா) ஒரே மரத்தில் (உடம்பு) பொருந்தியுள்ளன; ஒன்று (சீவன்) இனிய கனியை நுகர்கின்றது; மற்றது நுகராமல் பார்த்துக் கொண்டுள்ளது. (ருக் வேதம் - முண்டகோபநிடதம்).*

அணுவு ளவனு மவனு ளணுவுங்
(28) **புருடன்** கணுவற நின்ற கலப்ப துணரார்
அணு இணையிலி யீச னவனெங்கு மாகித்
தணிவற நின்ற சராசரந் தானே. 2010

மேவிய **சீவன் வடிவது** சொல்லிடில்
(29) **சீவன்** **கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு**
மேவிய கூறது வாயிர மானல்
ஆவியின் கூறுநூ ருயிரத் தொன்றே. 2011

(30) பசு

கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
உற்ற பசுக்க ளொருகுடம் பால்போதும்
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே. 2015

(31) போதன்

சீவ னெனச்சிவ னென்ன வேறில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பரே. 2017

(32) ஐந் திந்திரியம் அடக்கும் அருமை

அஞ்சுள சிங்க மடவியில் வாழ்வன
அஞ்சும்போய் மேய்ந்துதம் அஞ்சக மேபுகும்
அஞ்சி னுகிரு மெயிறு மறுத்திட்டால்
எஞ்சா திறைவனை யெய்தலு மாமே. 2026

சொல்லகில் லேன்சுடர்ச் சோதியை நாடொறுஞ்
சொல்லகில் லேன்றிரு மங்கையு மங்குள
வெல்லகில் லேன்புல னைந்துடன் றன்னையுங்
கொல்லநின் றோடுங் குதிரையொத் தேனே. 2028

(33) ஐந்திந் திரியம் அடக்கு முறைமை

அஞ்சு மடக்கடக் கென்ப ரறிவிலார்
அஞ்சு மடக்கு மமரரு மங்கில்லை
அஞ்சு மடக்கி லசேதன மாமென்றிட்(டு)
அஞ்சு மடக்கா வறிவறிந் தேனே. 2033

பெருக்கப் பிதற்றிலென் பேய்த்தேர் நினைந்தென்
விரித்த பொருட்கெல்லாம் வித்தாவ துள்ளம்
பெருக்கிற் பெருக்குஞ் சுருக்கிற் சுருக்கும்
அருத்தமும் அத்தனை யாய்ந்துகொள் வார்க்கே. 2036

(34) அசற் குருநெறி

உணர்வொன் றிலாமூட னுண்மையோ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணான்
பணிவொன் றிலாதோன் பரநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோ னசற்குரு வாமே. 2044

(35) சற்குரு நெறி

தாடந் தளிக்குந் தலைவனே சற்குரு
தாடந்து தன்னை யறியத் தரவல்லோன்
தாடந்து தத்துவா தீதத்துச் சார்சீவன்
தாடந்து பாசந் தணிக்கு மவன்சத்தே. 2049

பரிசன வேதி பரிசித்த தெல்லாம்
வரிசை தரும்பொன் வகையாகு மாபோற்
குருபரி சித்த குவலய மெல்லாம்
திரிமலந் தீர்ந்து சிவகதி யாமே. 2054

(36) கூடா வொழுக்கம்

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா விடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே. 2067

குறிப்பு: "வஞ்சித் தொழுகு மதியிலிகாள்!... ..." (குமரகுருபரர்)

(37) கேடுகண் டிரங்கல்

போது சடக்கெனப் போகின் றதுகண்டும்
வாதுசெய் தென்னோ மனிதர் பெறுவது
நீதியு ளேநின்று நின்மலன் றாள்பணிந்
தாதியை யன்பி லறியகில் லார்களே. 2085

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே. 2090

(38) இதோப தேசம்

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுள னெம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. 2103

ஒன்றே குலமு மொருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. 2104

குறிப்பு: ஒன்றே குலம் - உயிர்வருக்க மெல்லாம் பசுக்கள் என்ற ஒரே குலத்தைச் சேர்ந்தவை. பாசபந்தப் பட்டவை என்றவகை. இதற்கு மனிதருட் காணும் - பேசப்படும் - சாதி குலம் என்று பொருள் கொள்ளுதல் பிழை. முன்னுரை பார்க்க.

ஏறுடை யாயிறை வாவெம்பி ரானென்று
நீறிடு வாரடி யார்நிகழ் தேவர்கள்
ஆறணி செஞ்சடை யண்ணல் திருவடி
வேறணி வார்க்கு வினையில்லை தானே. 2111

சார்ந்தவர்க் கின்பங் கொடுக்குந் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க் கின்னாப் பிறவி கொடுத்திடுங்
கூர்ந்தவர்க் கங்கே குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே. 2114

குறிப்பு: "சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும் வண்ணம், நேர்ந்தவன்"(தேவா. திருஞான - திருவல்லம்-வியாழக்குறிஞ்சி 5);"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனுதல்" போதம்-10. 2. உதாரணம். "தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானை" (தேவா ஞான. சீகாமரம் - பிரமபுரம் - 11).

சிவனை வழிபட்டா ரெண்ணிலி தேவர்
அவனை வழிபட்டங் காமாரென் றில்லை
அவனை வழிபட்டங் காமாறு காட்டுங்
குருவை வழிபடிற் கூடலு மாமே. 2119

எட்டாந் தந்திரம்

(1) **உடலிற் பஞ்ச பேதம்**

அத்த னமைத்த வுடலிரு கூறினிற்
சுத்தம தாகிய **சூக்குமஞ்** சொல்லுங்காற்
சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திமா னுங்காரம் புரியட்ட காயமே. 2123

(3) **அவத்தை பேதம்- கீழாலவத்தை**

ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்
கைகண்ட பன்னான்கிற் கண்டங் கனவென்பர்
பொய்கண் டிலாத புருடனித யஞ்சுழுனை
மெய்கண் டவனுந்தி யாகுந் துரியமே. 2142

ஊமை யெழுத்தொடு பேசு மெழுத்துறில்
ஆமை யகத்தினி லஞ்சு மடங்கிடும்
ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது
நாமய மற்றது நாமறி யோமே. 2158

குறிப்பு: ***ஊமை எழுத்து*** - *பேசா எழுத்து - சிகரம்;* ***பேசும் எழுத்து*** - *சத்தியக்ஷரம் - வகரம். "பேசும் எழுத்துடன் பேசா எழுத்தையும்" (கொடிக்கவி), "ஒருமையு ளாமை போலைந் தடக்கல்" (குறள்).*

ஆசான் முன்னே துயில்மா ணவகரைத்
தேசாய தண்டா லெழுப்புஞ் செயல்போல்
நேசாய **வீசனு நீடா ணவத்தரை**
ஏசாத மாயாடன் றலே யெழுப்புமே. 2163

படியுடை மன்னவன் பாய்பரி யேறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
அடியுடை யைவரு மங்குறை வோருந்
துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே. 2165

குறிப்பு: *மாணிக்கவாசகர் சரிதம் பார்க்க.*

(4) **மத்திய சாக்கிரா வத்தை**

மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்
ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாபோல்
அத்தனு மைம்பொறி யாடகத் துண்ணின்று
சத்த முதலைந்துந் தானுண்ணு மாறே. 2170

ஆவன வாவ வழிவ வழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யு மிளங்கிளை யோனே. 2175

ஆகின்ற தொண்ணுூரே டாறும் பொதுவென்பர்
ஆகின்ற வாரு ரருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்
காகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே. 2179

தத்துவ மானது தன்வழி நின்றிடில்
வித்தக ஞகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி
தத்துவ மாவ தகார வெழுத்தே. 2180

அறிவொன் றிலாதன வையேழு மொன்றும்
அறிகின்ற வென்னை யறியா திருந்தேன்
அறிகின்ருய் நீயென் றருள்செய்தா னந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. 2181

ஆவண மாதி மலமைந் தலரோனுக்
காணவ மாதிநான் காமாற் கரனுக்கு
ஆணவ மாதிமுன் றீசர்க் கிரண்டென்ப
ஆணவ மொன்றே சதாசிவற் கானதே. 2183

(5) அத்துவாக்கள்

தத்துவ மாருறு தன்மனு வேழ்கோடி
மெய்த்தகு வன்னமைம் பாஞென்று மேதினி
ஒத்திரு நூற்றிரு பாஞன்கெண் பாஞென்று
வைத்த பதங்கலை யோரைந்தும் வந்தவே. 2184

தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவம்
ஈசனனல் வித்தை யிராகங் கலைகாலம்
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி யான்மா வீருறே. 2191

(6) சுத்த நன வாதி பருவம்

ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்
காணு முளைக்குத் தவிடுமி யான்மாவுந்
தாணுவை யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே. 2192

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற வாய ஞெருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற வாயன் கோல்போடிற்
பசுக்க டலைவனைப் பற்றி விடாவே. 2193

தற்றெரி யாத வதீதந்தற் காணவஞ்
சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காமியம்
பெற்ற சுழுத்திப்பின் பேசுறுங் காதலா
மற்றது வுண்டிக் கனநன வாதலே. 2195

ஐயைந்து பத்துட னனது சாக்கிரங்
கைகண்ட வையைந்திற் கண்டங் கனவென்பர்
பொய்கண்ட மூவர் புருடர் சுழுனையின்
மெய்கண் டவனுந்தி மேவ லிருவரே. 2200

ஈதென் றறிந்தில னித்தனை காலமும்
ஈதென் றறிந்தபி னேது மறிந்திலேன்
ஈதென் றறியு மறிவை யறிந்தபின்
ஈதென் றறியு மியல்புடை யோனே. 2209

மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் றானு
மலக்கலப் பற்றான் மதியொளி யாமே. 2213

திகைக்கின்ற சிந்தையுட் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன் றைந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண் டாமே. 2214

குறிப்பு: ***சிங்கம்*** - *குணங்கள்;* ***நரிக்குட்டி*** - *அந்தக்கரணங்கள்;* ***ஆனைக்கன்று*** - *ஐம்புலன்;* ***பால்*** - *மேல் கீழ்.*

(7) கேவல சகல சுத்தம்

தன்னை யறிசுத்தன் றற்கே வலன்றானும்
பின்ன முறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்தசத் துச்சத சத்துடன்
துன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே. 2227

தாவிய மாயையிற் றங்கும் பிரளய
மேவிய மற்ற துடம்பாய்மிக் குள்ளன
ஓவ லிலக்கண ரொன்றிய சீகண்டர்
ஆவயி னூற்றெட் டுருத்திர ராமே. 2231

ஆகின்ற கேவலத் தாணவத் தானவர்
ஆகின்ற வித்தேச ராமனந் தாதியர்
ஆகின்ற வெண்ம ரெழுகோடி மந்திரர்
ஆகின்ற வீச ரனேகரு மாமே. 2232

ஆணவத் தாரொன் றறியாத கேவலர்
பேணிய மாயை பிரளயா கலருக்கே
ஆணவ மாயையுங் கன்ம மூன்றுமே
காணுஞ் சகலர்க்குக் காட்டு மலங்களே. 2241

மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தோர் தேவர் நரர்சுரர்
மெய்ம்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்
தம்முறை யோனிபுக் கார்க்குஞ் சகலரே. 2244

மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட
வாய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயு முயிர்க்கே வலசக லத்தெய்தி
ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே. 2268

(8) பரா வத்தை

துரியப் பரியி லிருந்தவச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு
நரிகளை யோடத் துரத்திய நாதர்க்
குரிய வினைகளின் றேலமிட் டன்றே. 2276

குறிப்பு: *மாணிக்கவாசகர் சரிதம் பார்க்க.* **துரியப்பரி** - *துரியாதீதம்;* **பெரிய வியாக்கிரம்** - *சிவம்;* **நரிகள்** - *அந்தக்கரண முதலிய தத்துவக் கூட்டம் என்பர்.* **ஜாக்கரம்** - *யாக்கரம்.*

உன்னை யறியா துடலைமுன் றுனென்றாய்
உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்
தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்
அன்ன வியாத்த னமலனென் றறிதியே. 2279

பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே. 2289

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. 2290

ஆரு றகன்று **நமவிட் டறிவாகி**
வேருன தானே **யகார**மாய் மிக்கோங்கி
ஈருர் பரையி னிருளற்ற தற்பரன்
பேருர் **சிவாய** வடங்கும்பின் **முத்தியே.** 2291

(9) முக்குண பேதம்

சாத்திக மெய்து **நன**வெனச் சாற்றுங்கால்
வாய்த்த **விராசத** மன்னுங் கனவென்ப
ஓய்த்திடுந் **தாமத** முற்ற சுழுத்தியாம்
மாய்த்திடு **நிர்க்குண** மாசில் **துரிதமே.** 2296

குறிப்பு: *பிரமன் - விட்டுணு - உருத்திரன் - சிவம்.*

(12) கலவு செலவு

வெல்லும் மளவில் விடுமின் வெகுளியைச்
செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலு மருளுடன் றூங்கினுற்
கல்லும் பிளந்து கடுவெளி யாகுமே. 2303

குறிப்பு: *"வெல்வது வேண்டின் வெகுளி விடல்".*

(13) நின்மலா வத்தை

காய்ந்த விரும்பு கனலை யகன்றாலும்
வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்
ஏய்ந்த கரண மிறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத் துரிசக லாதே. 2309

ஆடிய காலில் அசைகின்ற வாயுவுந்
தாடித் தெழுந்த தமருக வோசையும்
பாடி யெழுகின்ற வேதா கமங்களும்
நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே. 2317

அறிகின் றிலாதன வையேழு மொன்றும்
அறிகின்ற வென்னை யறியா திருந்தேன்
அறிகின்றாய் நீயென் றருள் செய்தா னந்தி
அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே. 2323

அறிவிக்க வேண்டா மறிவற் றயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டா மறிவிற் செறிவோர்க்கும்
அறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே
அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே. 2327

குறிப்பு: *"போதமிகுத் தோர்தொகுத்த பேத மைக்கே பொருந்தினோ ரிவர்க்கன்றிக், கதிப்பாற் செல்ல, ஏதுநெறி யெனுமவர்கட் கறிய"— (சித்தி - பரபக் - 10 பார்க்க). 2323 - "என்னையேது மறிந்தில னெம்பிரான்"(தேவா - அரசு).*

ஆதித்தன் றோன்ற வரும்பது மாதிகள்
பேதித்த தவ்வினை யாற்செயல் சேதிப்ப
ஆதித்த றன்கதி ராலவை சேட்டிப்பப்
பேதித்துப் பேதியா வாறருட் பேதமே. 2342

குறிப்பு: *"கதிரோ னிற்கத் தாமரை யலரும்"(சித்தி - 1-53)*

(14) அறி வுதயம்

தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை யறியாமற் றானே கெடுகின்றான்
தன்னை யறியு மறிவை யறிந்தபின்
தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் தானே. 2355

அறிவு வடிவென் றறியாத வென்னை
அறிவு வடிவென் றருள்செய்தா னந்தி
அறிவு வடிவென் றருளா லறிந்தே
அறிவு வடிவென் றறிந்திருந் தேனே. 2357

குறிப்பு: *"அறியாமை யறிவகற்றி..." (சித்தி - 8-30). "என்னையறி வென்றான்" (சிவபோகசாரம்).*

என்னை யறிந்திலே னித்தனை காலமும்
என்னை யறிந்தபி னேது மறிந்திலேன்
என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா(து)
என்னையிட் டென்னை யுசாவுகின் றானே. 2366

(15) ஆறந்தம்

வேதத்தி னந்தமு மிக்கசித் தாந்தமும்
நாதத்தி னந்தமு நற்போத வந்தமும்
ஓதத் தகுமெட் டியோகாந்த வந்தமும்
ஆதிக் கலாந்தமு மாறந்த மாமே. 2370

சித்தாந்தத் தேசீவன் முத்திசித் தித்தலாற்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்
சித்தாந்தம் வேதாந்தஞ் செம்பொரு ளாதலால்
சித்தாந்தம் வேதாந்தங் காட்டுஞ் சிவனையே. 2394

வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன;
நாத னுரையவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்பர்; பெரியோர்க் கபேதமே. 2397

குறிப்பு: *முன்னுரை பார்க்க.*

(16) பதிபசு பாசம் வேறின்மை

அறிவறி வென்ற வறிவு மனாதி
அறிவுக் கறிவாம் பதியு மனாதி
அறிவினைக் கட்டிய பாச மனாதி
அறிவு பதியிற் பிறப்பறுந் தானே. 2405

நாடும் பதியுட னற்பசு பாசமும்
நீடுமா நித்தன் நிலையறி வாரில்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே. 2410

ஆய **பதி**தா னருட்**சிவ லிங்**கமாம்
ஆய **பசுவு** மடலே றெனநிற்கும்
ஆய **பலிபீட** மாகுநற் **பாச**மாம்
ஆய **வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே.** 2411

படைப்பு மளிப்பும் பயலினைப் பாற்றுந்
துடைப்பு மறைப்புமுன் றேன்ற வருளுஞ்
சடத்தை விடுத்த வருளுஞ் சகலத்
தடைத்த வனாதியை யைந்தென லாமே. 2418

(17) அடிதலை யறியும் திறம் கூறல்

காலுந் தலையு மறியார் கலதிகள்
காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்
காலந்த ஞானத்தை காட்டவீ டாகுமே. 2425

(18) முக்குற்றம்

காமம் வெகுளி மயக்க மிவை கடிந்(து)
ஏமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி
ஓமெனு மோசையி னுள்ளே யுறைவதோர்
தாம மதனைத் தலைப்பட்ட வாறே. 2436

குறிப்பு: *"காமம் வெகுளி மயக்க மிவை மூன்றன் நாமங் கெட"* (குறள்).

(19) முப்பதம்

தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர
ஏன்ற வசிபத மிம்மூன்றூே டெய்திஞேன்
ஆன்ற பராபர மாகும் பிறப்பற
ஏன்றனன் மாளச் சிவமா யிருக்குமே. 2437

(21) பர லட்சணம்

ஆதீதத்து ளாகி யகன்றவ னந்தி
ஆதீதத்து ளாகி யறிவிலோ ஞன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்றும்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. 2452

(22) முத்துரியம்

நனவாதி மூன்றினிற் **சீவ** துரியம்
தனதாதி மூன்றினிற் **பர**துரி யந்தான்
நனவாதி மூன்றி னிற்**சிவ** துரியமாம்
இனதாகுந் தொந்தத் தசிபதத் தீடே. 2466

(25) முக்கரணம்

இடஞெரு மூன்றி லியைந்த வொருவன்
கடனுறு மவ்வுரு வேறெனக் காணுந்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுறை பேதமு மொன்றென லாமே. 2485

(27) முப்பாழ்

காரிய மேழ்கண் டறு**மாயப் பாழ்**விடக்
காரண மேழ்கண் டறும்**போதப்** பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறுஞ்
சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே. 2495

மாயப்பாழ் சீவன் **வியோமப்பாழ்** மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தியிற் சீவன்
ஆய வியாப்தமெனு முப்பாழா மந்தத்
தூய சொரூபத்தின் சொல்முடி வாகுமே. 2496

ஆருறு நீங்க **நம**வாதி யகன்றிட்டு
வேரு கியபரை **யா**வென்று மெய்ப்பரன்
ஈருன **வாசி**யிற் கூட்டு மதுவன்றூே
தேருச் **சிவாய நம**வெனத் தேறிலே. 2499

(28) காரிய காரண உபாதி

அகார முயிரே யுகாரம் பரமே
மகாரஞ் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரஞ் **சிவ**மே வகாரம் **பர**மே
யகார முயிரென் றறையலு மாமே. 2503

(29) உபசாந்தம்

முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே
பத்திக்கு வித்துப் பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரந் தானுதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. 2506

குறிப்பு: *"ஞானத்தால் வீடென்றே" (சித்தி)*

(30) புறங்கூருமை

என்னிலு மென்னுயி ராய விறைவனை
பொன்னிலு மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னிலு முன்னு முறுவகை யாலே. 2516

குறிப்பு: "*என்னி லும்மினி யாரொரு வன்னுளன்*" (*அரசு - தேவா*)

(31) எட்டிதழ்க் கமல முக்குண அவத்தை

ஊறு மறுவி யுயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயு மருங்குள மொன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே. 2535

(33) சுத்தா சுத்தம்

நாசி நுனியினின் நான்மூ விரலிடை
ஈச னிருப்பிட மாரு மறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே. 2546

மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படு மப்பொருள்
மாயை மறைய மறையவல் லார்கட்குக்
காயமு மில்லை கருத்தில்லை தானே. 2548

காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித் திரிவார்கள்
காயத்து ணின்ற கருத்தறி யாரே. 2550

ஆசூச மில்லை யருநிய மத்தருக்
காசூச மில்லை யரனையர்ச் சிப்பவர்க்
காசூச மில்லையா மங்கி வளர்ப்போர்க்
காசூச மில்லை யருமறை ஞானிக்கே. 2552

குறிப்பு: "*ஞானநிட்டை யுடையோர்க்கு* ... "*சீலமில்லை தவமில்லை...*" சித்தி - 8 - 32.

(34) முத்தி நிந்தை

பரகதி யுண்டென வில்லையென் போர்கள்
நரகதி செல்வது ஞால மறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறுந்
துரகதி யுண்ணத் தொடங்குவர் தாமே. 2558

(36) தத்துவமசி வாக்கியம்

சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு **பரதுரி** யத்தினில் தற்பதம்
மேவு சிவதுரி யத்**தசி** மெய்ப்பதம்
ஓவி விடுந்**தத் துவமசி** யுண்மையே. 2568

மகாவாக்கியம்

நீயது வானு யெனநின்ற **பேருரை**
ஆயது நானுனேன் என்னச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாகுமே. 2577

குறிப்பு: **பேருரை** - *மகாவாக்கியம் = "பெரும் பெயர்" (முருகு - சித்தி).*

வாய்நாசி யேபுரு மத்தக முச்சியில்
ஆய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்குந்
தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி
சேய்நா டொளியெனச் சிவகதி யைந்துமே. 2579

(37) விசுவக் கிராசம்

அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்
பொழிகின்ற விவ்வுடற் போமப் பரத்தே. 2587

குறிப்பு: *மாணிக்கவாசகர் - நந்தனுர் - சரிதங்களும் அவ்வாறு வருவன பிறவும் காண்க.*

உடலு முயிரு மொழிவற வொன்றிற்
படருஞ் சிவசக்தி தாமே பரமாம்
உடலைவிட் டிந்த உயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ் சிவத்தே. 2588

களிறுண் விளவின் கனிபோ லுயிரும்
உரிய பரமுமுன் னேதுஞ் சிவமும்
அரிய துரியமேல் அகிலமு மெல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே. 2593

(39) ஞானி செயல்

தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே. 2611

வாசியு மூசியும் பேசி வகையினுற்
பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை
ஆசையு மன்பு மறுமி னறுத்தபின்
ஈசனிருந்த விடமெளி தாமே. 2613

குறிப்பு: **ஊசி** - *சுழுமுனை.*

மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலு ளானலன்
வேடத்து ளானலன் **வேட்கைவிட் டார்நெஞ்சின்**
மூடத்து ளேநின்று முத்திதந் தானே. 2614

ஆசை யறுமின்க ளாசை யறுமின்கள்
ஈசனோ டாயினு மாசை யறுமின்கள்
ஆசை படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வானந்த மாமே. 2615

(41) பத்தி யுடைமை

அடியா ரடியா ரடியார்க் கடிமைக்
கடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்
அடியா ரருளா லவனடி கூட
அடியா னிவனென் றடிமை கொண்டானே. 2624

குறிப்பு: *பெரியபுராண சரிதங்களின் உள்ளுறை.*

ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்
ஊன்கன்றா னுடிவந் துள்புகுந் தானே. 2627

(43) சோதனை

காலினி லூறுங் கரும்பினிற் கட்டியும்
பாலினு ணெய்யும் பழத்து ளிரதமும்
பூவினு ணாற்றமும் போலுள னெம்மிறை
காவல னெங்குங் கலந்து நின்றானே.

குறிப்பு: *"விறகிற் றீயினன்...மறைய நின்றுளன்" (அரசு - தேவா)*

விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல
இருப்பர் மனத்திடை யெங்கள் பிரானார்
நெருப்புரு வாகி நிகழ்ந்துநின் றாரே. 2640

நந்தி பெருமான் நடுவுள் வியோமத்து
வந்தெ னகம்படி கோயில்கொண் டான்கொள்ள
எந்தைவந் தான்என்று எழுந்தேன் எழுதலும்
சிந்தை யினுள்ளே சிவனிருந் தானே. 2641

உரையற்ற தொன்றை யுரைத்தா னெனக்குக்
கரையற் றெழுந்த கலைவேட் டறுத்துத்
திரையொத்த வென்னுடல் நீங்கா திருத்திப்
புரையற்ற வென்னுட் புகுந்து நின்றானே. 2648

ஒன்பதாந் தந்திரம்

(2) ஞானகுரு தரிசனம்

ஆயன நந்தி **யடிக்கென் றலை**பெற்றேன்
வாயன நந்தியை **வாழ்த்த**வென் **வாய்**பெற்றேன்
காயன நந்தியைக் **காண**வென் **கண்**பெற்றேன்
சேயன **நந்திக்கென் சிந்தை**பெற் றேனே. 2658

குறிப்பு: *"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்தச் சென்னியுந் தந்ததலைவன்" (தேவா);*
"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத் திணங்கத்தன் சீரடியார்

கூட்டமும் வைத்து" (திருவா); "மானிடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காய, தானிடத் தைந்து மாடு மரன்பணிக் காக வன்றே" (சித்தி) என்பன முதலியவை காண்க.

கருட னுருவங் கருது மளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவி னுருவங் குறித்தவப் போதே
திரிமலந் தீர்ந்து சிவனவ னாமே. 2650

குறிப்பு: ***கருடனுருவங் கருதுதல்*** *- கருடோகம் பாவனை என்பர்.* ***கருதுதல்*** *- தியானித்தல்; அழுந்தி யறிதல்.*

(3) **பிரணவ சமாதி**

ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண்முத்தி சித்தியே. 2676

(4) **ஒளி**

ஒளியை யறியி லுருவு மொளியும்
ஒளியு முருவ மறியி லுருவாம்
ஒளியி னுருவ மறியி னொளியே
ஒளியு முருக வுடனிருந் தானே. 2681

(5) **தூல பஞ்சாக்கரம்**

ஐம்ப தெழுத்தே யனைத்துவே **தங்களும்**
ஐம்ப தெழுத்தே யனைத்தா **கமங்களும்**
ஐம்ப தெழுத்தி னுடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தே யஞ்செழுத் தாமே. 2698

அகார முதலாக வைம்பத்தொன் றாகி
உகார முதலாக வோங்கி யுதித்து
மகார விறுதியாய் மாய்ந்துமாய்ந் தேறி
நகார முதலாகு நந்திதன் னாமமே. 2699

கிரணங்க ளேழுங் கிளர்ந்தெரி பொங்கிக்
கரணங்கள் விட்டுயிர் தானெழும் போது
மரணங்கை வைத்துயிர் மாற்றிடும் போது
மரணங்கை கூட்டுவ தஞ்செழுத் தாமே. 2702

குறிப்பு: *கிரணங்களேழு - சூரியன் கதிரில் சேர்ந்துள்ள ஏழு நிறங்கள்; இதற்கு அக்கினியின் நாக்கு என்பாருமுண்டு. அதன் பொருத்தம் ஆராயத்தக்கது. மேற்பாட்டுப் பார்க்க.*

ஞாயிறு திங்க ணவின்றெழு காலத்தில்
ஆயுறு மந்திர மாரு மறிகிலர்
சேயுறு கண்ணி **திருவெழுத் தஞ்சை**யும்
வாயுற வோதி வழுத்தலு மாமே. 2703

குறிப்பு: ***ஞாயிறு திங்கள் நவின்றெழு காலம்*** *- மேற்பாட்டிற் கூறிய "கிரணங்க ளேழுங் கிளர்ந்தெரி பொங்கிக், கரணங்கள் விட்டுயிர் தானெழும்போது" என்றது. "ஆதித்தன்*

சந்திரன் போலே வெளிச்சமதாம்பொழுது" - பட்டினத் தடிகளார். இதற்கு **ஞாயிறு** - பிங்கலை; **திங்கள்** - இடகலை அஃதாவது சூரியகலை - சந்திரகலை என்று பொருள் கூறினர் முன்னுரைகாரர். **சேயுறு கண்ணி** - சிவசித்சக்தி.

நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் பொழுதுன் றுணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறை
அஞ்சி லிறைவ னருள்பெற லாமே. 2707

குறிப்பு: "நெஞ்ச மென்பதோர் நீள்கயந் தன்னுளே, வஞ்ச மென்பதோர் வான்சுழிப் பட்டு நான், **துஞ்சும் போதுநின் னமத் திருவெழுத்**, தஞ்சந் தோன்ற வருளுமை யாறரே" *(அரசு - குறுந்)*; "நின், நாமம் பரவி நமச்சிவா யவென்னு மஞ்செழுத்துஞ், சாமன் றுரைக்கத் தருதிகண் டாயெங்கள் சங்கரனே" *(அரசு - நாகைக்காரோணம் - திருவிருத்-3)*; "நின்றனும, முரையா வுயிர்போகப் பெறுவே னகிலுறு நோய்வந் தெத்தனையு முற்று லென்னே..." *(அரசு - தாண் - திருவாவடுதுறை -3)*

(5) சூக்கும பஞ்சாக்கரம் சிவாயநம:

சிவனரு ளாய சிவன்றிரு நாமம்
சிவனரு ளான்மாத் திரோத மலமாயை
சிவன்முத லாகச் சிறந்து நிரோதம்
பவம தகன்று பரசிவ னுமே. 2711

குறிப்பு: "சிவனரு ளாவி திரோத மலமைந்தும், அவனெழுத் தஞ்சினடை வாம்" *(உண்மை விளக் - 41)*; "இறைசத்தி பாச மெழில்மாயை யாவி, யுறநிற்கு மோங்காரத் துள்" *(திருவருட்பயன் - ஐந்தெழுத்தருணிலை - 2=82)*; **நிரோதம்** - ஒழித்தல்.

சிவாய:

ஓதிய நம்மல மெல்லா மொழித்திட்டவ்
வாதி தனைவிட் டிறையருட் சத்தியால்
தீதில் சிவஞான யோகமே சித்திக்கும்
ஓதுஞ் **சிவாய மலமற்ற வுண்மையே.** 2712

சிவசிவ:

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே. 2716

(7) அதிசூக்கும பஞ்சாக்கரம்: சிவாயசிவசிவ

சிவாய நமவெனச் சித்த மொருக்கி
அவாய மறவே யடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்கை யானந்த மாமே. 2718

அங்கமு மாகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட் **டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்**
அங்கரை சேர்ந்த வருங்கல மாமே. 2720

குறிப்பு: **எழுத்தொன்று** - சிகாரம் என்பர். **சாதித்தல்** அழுந்தி யுணர்தல் "திருத்தோணிச் **சிகரம் பார்த்து**" - பெரியபுரா - 1963 திருஞான. புரா. 63. "நாயோட்டு மந்திரம்" *(திருமந்)*.

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறி வாரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே. 2721

(8) **திருக்கூத்துத் தரிசனம்**

எங்குந் திருமேனி யெங்குஞ் சிவசத்தி
எங்குஞ் சிதம்பர மெங்குந் திருநட்டம்
எங்குஞ் சிவமா யிருத்தலா லெங்கெங்குந்
தங்குஞ் சிவனருட் டன்விளை யாட்டதே. 2722

(i) **சிவானந்தக் கூத்து**

ஆனந்த மாடரங் கானந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லிய மானந்த வாச்சியம்
ஆனந்த மாக வகில சராசரம்
ஆனந்த **மானந்தக் கூத்துகந் தானுக்கே.** 2725

குறிப்பு: *"ஆனந்த நடன நோக்கி யனைவரு நம்மைப் போல, ஆனந்த முளத்தி னீட வாட்டயர்ந் தனர்க ளன்றே" - பேரூர்ப்புரா (நிருத்த - 110.)*

வேதங்க ளாட மிகுமா கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்ட மேழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினான் ஞானானந்தக் கூத்தே. 2728

தேவர் சுரர்நரர் சித்தர்வித் தியாதரர்
மூவர்க ளாதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயஞ் **சராசரம்**
யாவையு மாடிடு மெம்மிறை யாடவே. 2731

(ii) **சுந்தரக் கூத்து**

அண்டங்க ளேழினுக் கப்புறத் தப்பால்
உண்டென்ற சத்தி **சதாசிவத் துச்சிமேற்**
கண்டங் கரியன் **கருணை திருவுருக்**
கொண்டங் குமைகாணக் கூத்துகந் தாடுமே. 2732

மேரு நடுநாடி மிக்கிடை பிங்கலை
கூருமிவ் வானின் இலங்கைக் குறியுறுஞ்
சாருந் தில்லைவனத் தண்மா மலயத்து(டு)
ஏறுஞ் சுழுனை யிவைசிவ **பூமியே.** 2747

(iii) **பொற்றில்லைக் கூத்து**

அண்டங் ளோரேழும் அம்பொற் பதியாகப்
பண்டையா காசங்க ளைந்தும் பதியாகத்
தெண்டினிற் சத்தி **திருவம் பலமாகக்**
கொண்டு பரஞ்சோதி கூத்துகந் தானே. 2749

ஈருன கன்னி குமரியே காவிரி
வேரு நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழும்
பேருன வேதா கமமே பிறத்தலால்
மாருத தென்றிசை வையகஞ் சுத்தமே. 2755

குறிப்பு: *"பூசனைக்குப் பொருந்து மிடம்பல, பேசி லத்திசை யொவ்வா பிறதிசை" - பெரியபுரா - திருமலைச்சிறப்பு - 36 = 46.*

ஆறு முகத்தி லதிபதி நானென்றுங்
கூறு சமயக் குருபர னானென்றுந்
தேறினர் தெற்குத் திருவம் பலத்துளே
வேறின்றி யண்ணல் விளங்கிநின் றானே. 2758

ஆடிய காலு மதிற்**சிலம் போசை**யும்
பாடிய பாட்டும் பலவான நட்டமுங்
கூடிய கோலங் குருபரன் கொண்டாடத்
தேடியு ளேகண்டு தீர்ந்தற்ற வாறே. 2760

குறிப்பு: *சேரமான் பெருமாணயனர் சரிதங் காண்க.*

(iv) அற்புதக் கூத்து

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுற்றுப் பார்க்க **வொளிவிடு மந்திரம்**
பற்றுக்குப் பற்றாய்ப் பரம னிருந்திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண் டேனே. 2770

அண்ட மெழுகோடி பிண்டமெழு கோடி
தெண்டிரை சூழ்ந்த திசைக ளெழுகோடி
எண்டிசை சூழ்ந்த விலிங்க மெழுகோடி
அண்ட னடஞ்செய்யு மாலயந் தானே. 2772

அம்பல மாவ தகில சராசரம்
அம்பல மாவ(து) ஆதிப் பிரானடி
அம்பல மாவ(து) அப்புத்தீ மண்டலம்
அம்பல மாவ(து) அஞ்செழுத் தாமே. 2775

புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோல்
களிக்குந் திருக்கூத்துக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கு மருட்கண்ணீர் சோர்நெஞ் சுருக்கும்
ஒளிக்கு ளானந்தத் தமுதூறு முள்ளத்தே. 2778

ஒன்பது மாட வொருபதி னாருட
அன்புறு மார்க்கங்க ளாறு முடனாட
இன்புறு மேழினு மேழைம்பத் தாருட
அன்பது மாடின னானந்தக் கூத்தே. 2782

சிவமாடச் சத்தியு மாடச் சகத்தில்
அவமாட வாடாத வம்பர மாட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத் துள்ளே. 2791

ஐந்தெழுத் துருவம்

திருந்துநற் சீயென் றுதறிய கையும்
அருந்தவர் **வா**வென் றழைத்த மலர்க்கையும்
பொருந்தி லிமைப்பிலி **யவ்**வென்ற பொற்கையும்
திருந்த**நத்** தீயாகுந் திரு**நிலை மவ்**வே. 2797

குறிப்பு: *சிவாயநம வென்னுந் திருவெழுத்தஞ் சாலே, அவாயமற நின்றாடுவான் (31); ஆடும்படி கேள்... (32) - உண்மை விளக்கம்.*

ஐந்தொழில் அங்கம்

அரன்றுடி **தோற்ற மமைத்த** றிதியாம்
அரனங்கி **தன்னி லறையிற்சங் காரம்**
அரனுற் **றணைப்பி லமருந் திரோதாயி**
அரனடி யென்று **மனுக்கிரக** மென்னே. 2799

குறிப்பு: *"சேர்க்குந் **துடிசிகரம்...**" (33) "ஓங்கார மேநற் றிருவாசி" (34) "தோற்றந் துடியதனில்" (35); "மாயை தனையுதறி" (36) - (உண்மை விளக்கம்) என்ற திருப்பாட்டுக்களும் பிறவும் இங்குக் கருதத்தக்கன.*

(9) ஆகாசப் பேறு

புறத்துளா காசம் புவன **முலகம்**
அகத்துளா காசமெம் **மாதி யறிவு**
சிவத்துளா காசஞ் **செழுஞ்சடர்ச் சோதி**
சகத்துளா காசந் **தானஞ் சமாதியே.** 2812

(10) ஞானேதயம்

கரியட்ட கையன் கபாலங்கை யேந்தி
எரியு மிளம்பிறை சூடுமெம் மானை
அரியன் பெரியனென் ருட்பட்ட தல்லாற்
கரியன்கொல் சேயன்கொல் காண்கின்றி லேனே. 2814

குறிப்பு: *"அன்றுந் திருவுருவங் காணதே யாட்பட்டேன், இன்றுந் திருவுருவங் காண்கிலேன்...எவ்வுருவோ நின்னுருவ மேது" - அம்மை -அற்-அந்தாதி-61.*

விளக்கைப் பிளந்து விளக்கினை யேற்றி
விளக்கினுக் குள்ளே விளக்கினைத் தூண்டி
விளக்கில் விளக்கை விளக்க வல்லார்க்கு
விளக்குடை யான்கழல் மேவலு மாமே. 2816

குறிப்பு: ***விளக்கைப் பிளந்து*** *- சித்துருவமாகிய ஆன்மாவைத், தத்துவங்களின் வேருகக் கண்டு;* ***விளக்கினுக்குள்ளே விளக்கினைத் தூண்டி*** *- ஆன்மாவில் உயிர்க்குயிராய் விளங்கும் சிவஞானத்தை முறுகவாங்கிக் கடைந்து பிரகாசிக்கச் செய்து;* ***விளக்கை விளக்க*** *- சிவம் பிரகாசிக்கச் செய்ய,* ***விளக்குடையான்*** *- ஆன்ம நாயகனை சிவன் என்பர்.*

(11) சத்திய ஞானனந்தம்

பாலொடு தேனும் **பழத்து ளிரதமும்**
வாலிய **பேரமு தாகு மதுரமும்**
போலுந் **துரியம்** பொடிபட வுள்புகச்
***சீல* மயிர்க்கா றெறுந்தேக் கிடுமே.** 2891

குறிப்பு: *"முத்தி தனையடைந்தோர் முந்துபழம் போதங்கி, வித்தகமாம் வீணை யிவையிற்றின் - ஒத்த, இரதமணம் வெம்மை யெழிலுதம் போல், விரவுவரென்றேதும் விதி" (45) - (உண்மை விளக்கம்); "நீர் உள்ளகந் ததும்ப வாக்கிறந் தமுத மயிர்க்கா றேறுந், தேக்கிடச் செய்தனன்" - திருவா - அண்டப்பகுதி 169 - 171.*

(12) சொரூப உதயம்

உருவன்றி யேநின் றுருவம் புணர்க்குங்
கருவன்றி யேநின்று தான்கரு வாகும்
மருவன்றி யேநின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்குங் கூடவொண் ணதே. 2841

குறிப்பு: "கருவினு லன்றியே கருவெலா மாயவன், **உருவினு லன்றியே யுருவு செய் தானிடம்**" - பிள். தேவா - கொல்லி - தென்குடித்திட்டை - 3.

தலைநின்ற தாழ்வரை மீது தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனிற் கண்டுகொண் டேனே. 2845

ஆமா றறிந்தே னகத்தி னரும்பொருள்
போமா றறிந்தேன் புகுமாறு மீதென்றே
ஏமாப்ப தில்லை யினியோ ரிடரில்லை
நாமா முதல்வனு நானென லாமே. 2846

(13) ஊழ்

ஆறிட்ட நுண்மண லாறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறி வாரில்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டென் னுள்ளம் பிரியகி லாவே. 2849

(14) சிவ தரிசனம்

வாக்கு மனமு மறைந்த மறைப்பொருள்
நோக்குமின் நோக்கப் படும்பொரு ணுண்ணிது
போக்கொன்று மில்லை வரவில்லை கேடில்லை
ஆக்கமு மத்தனை யாய்ந்துகொள் வார்க்கே. 2854

(15) சிவ சொரூப தரிசனம்

துன்னிநின் ருன்றன்னை **யுன்னிமுன் னுவிரு**
முன்னி யவர்தங் குறையை முடித்திடும்
மன்னிய வேள்வி மறையவன் மாதவன்
சென்னியு ணின்றதோர் தேற்றத்த னுமே. 2858

(17) சூனிய சம்பாஷணை

பட்டிப் பசுக்க ளிருபத்து நாலுள
குட்டிப் பசுக்களோ ரேழுள வைஞ்சுள
குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே. 2874

குறிப்பு: **பட்டிப்பசுக்கள்** - ஆன்ம தத்துவங்கள் 24; **குட்டிப் பசுக்கள்** ஏழு - வித்தியா தத்துவங்கள்; **ஐந்து** - சிவ தத்துவங்கள் ஐந்து; இவையெல்லாவற்றையும் ஒன்று போலவே பசுக்கள் என்றார். இவை விளக்குப் போல உதவுதலின்; **பட்டிப்பசு**-வறள் பசு - ஆன்ம தத்துவங்கள் - மிகுபயன் றராமை கருத்து; பனவன் - ஆன்ம தத்துவங்களோடு நிற்கும் ஏகான்மவாதி; **ஆன்மா** என்பாருமுளர். அதன் பொருத்தம் ஆராயத்தக்கது. **பனவன்** - பார்ப்பான், "மனைவியைப் பனவற்கீந்தோர்" (பெரியபுரா -421); "பேர்கொண்ட பார்ப்பான்" (திருமந் - 519). **பார்ப்பான்** - வேதாந்தத்தையே பொருளாகக் கொண்டு எப்போதும் பார்ப்பவன் என்பர் நச்சினார்க்கினியர்.

பார்ப்பா னகத்திலே பாற்பசு வைந்துண்டு
மேய்ப்பாரு மின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரு முண்டாய் வெறியு மடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே. 2883

குறிப்பு: **பார்ப்பான்** - ஆன்ம விசாரம் செய்யவுள்ள ஆன்மா; **பார்த்தல்** - ஆராய்தல்; **பாற்பசு ஐந்து** - பால் - ஐந்து இந்திரியங்களும் புலன்களும்; சிவானந்த விளைவுக்குக் கருவியாதல்; **மேய்ப்பான்** - புலன் வழிச்செல்லாது தடுத்து நல்வழிபடுத்துபவன்; சற்குரு- போதகன்; **வெறி** - புலன்வழிச் செல்லும் சீவபோதம்; **பால்** - சிவபோதம், சிவஞானம். இவ்வாறன்றிப் **பார்ப்பான் - அகம்** - பிரமனுற் படைக்கப்பட்ட சரீரம் என்றும் பசு 5, பஞ்சப்பிராணன் என்றும், **பால்** - அமுதம் - ஆனந்தம் - என்று முரைப்பாருமுளர். அவற்றின் பொருத்தங்கள் ஆராயத்தக்கன. **மேய்ப்பான்** - "தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையார்" - பெரியபுராணம் சண்டீசர் புரா-2.

கும்ப மலைமே லெழுந்ததோர் கொம்புண்டு
கொம்புக்கு மப்பா லடிப்பதோர் காற்றுண்டு
வம்பாய் மலர்ந்ததோர் பூவுண்டப் பூவுக்குள்
வண்டாய்க் கிடந்து மணங்கொள்வ னீசனே. 2928

குறிப்பு: **கும்பமலை** - தத்துவக் கூட்டம்; **மேலெழுந்ததோர் கொம்பு** - தத்துவங் கடந்த நிலையின்மேல் வரும் ஆன்ம சுத்தி; **கொம்புக்கு மப்பால் அடிப்பதோர் காற்று** - ஆன்ம சுத்திக்குமேல் வரும் சிவரூப சிவதரிசனங்கள்; **வம்பாய் மலர்ந்த தோர் - பூ** - சிவயோகம்..வேறுமுரைப்பர். பூவுக்குள் மணங்கொள்வது சிவபோகம் என்று பொருள் தோன்றுகின்றது. "ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்" 2535 பார்க்க. "அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர், உண்டு போலுமொ ரொண்சுட ரச்சுடர், கண்டிங் காரறி வாரறி வாரெலாம், வெண்டிங்கட் கண்ணி வேதிய னென்பரே" - அரசு - தேவா - குறுந் - சித்தத்தொகை - 2.

(18) மோன சமாதி

துரியங்கண் மூன்றுங் கடந்தொளிர் சோதி
அரிய துரிய மதன்மீது மூன்றாய்
விரிவு குவிவு விழுங்கி யுமிழ்ந்தே
உரையி லனுபூ திகத்துள் ளானே. 2940

குறிப்பு: **முத்துரியம்** 2466; அதன் **மீது மூன்று** - அம்மூன்றன் அதீதம்; **விரிவு குவிவு** - நினைப்பு மறப்பு; **விழுங்கி உமிழ்ந்து** - அதன் மேல் நிகழ்ச்சி.

முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்துக் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுவ தெங்ஙனே. 2944

கண்டார்க் கழகிது காஞ்சிரத் தின்பழம்
தின்றார்க் கறியலா மப்பழத் தின்சுவை
பெண்டா னிரம்பி மடவிய ளானாற்
கொண்டா னறிவன் குணம்பல தானே. 2946

அதுக்கென் றிருவ ரமைந்தசொற் கேட்டும்
பொதுக்கெனக் காமம் புலப்படு மாபோல்
சதுக்கென்று வேறே சமைந்தாரைக் காண

மதுக்கொன்றைத் தாரான் வளந்தரு மன்றே. 2950

தானு மழிந்து தனமு மழிந்துநீ(டு)
ஊனு மழிந்து உயிரு மழிந்துடன்
வானு மழிந்து மனமு மழிந்தபின்
நானு மழிந்தமை நானறி யேனே. 2951

குறிப்பு: "ஊன்கெட் டுணர்வுகெட்டு...நான்கெட்டவா" - *(திருவா - தெள் -18)*; "தன்னுமங் கெட்டாள்" *(அரசு - தாண்)*.

(19) வரை யுரைமாட்சி

உரையற்ற தொன்றை யுரைசெய்யு மூமர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண லாகுமோ
திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான் புரிசடை யானே. 2955

(20) அணைந் தோர் தன்மை

ஆராலு மென்னை யமட்டவொண் ணுதினிச்
சீரார் பிரான்வந்தென் சிந்தை புகுந்தனன்
சீராடி யங்கே திரிவதல் லாலினி
யார்பாடுஞ் சாரா வறிவறிந் தேனே. 2960

ஒன்றுகண் டீருல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீருல குக்குயி ராவது
நன்றுகண் டீரினி **நமச்சிவா யப்பழந்**
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. 2962

நமன்வரின் ஞானவாள் கொண்டே யெறிவன்
சிவன்வரி னுனுடன் போவது திண்ணம்
பவம்வரும் வல்வினை பண்டே யறுத்தேன்
தவம்வருஞ் சிந்தைக்குத் தானெதி ராமே. 2968

குறிப்பு: "ஞானவா ளேந்துமையர்" *(திருவா - திருப்படை எழுச்சி - 1)*

கரும்புந் தேனுங் கலந்ததோர் காயத்தில்
அரும்புங் கந்தமு மாகிய வானந்தம்
விரும்பியே யுள்ளம் வெளியுறக் கண்டபின்
கரும்புங் கைத்தது தேனும் புளித்ததே. 2976

உள்ள சரியாதி ஒட்டியே மீட்டென்பால்
வள்ள லருத்தியே வைத்த வளம்பாடிச்
செய்வன வெல்லாஞ் சிவமாகக் காண்டலாற்
கைவள மின்றிக் கருக்கடந் தேனே. 2977

அன்புள் ளுருகி யழுவ னரற்றுவன்
என்பு முருக விராப்பக லேத்துவன்

என்பொன் மணியை யிறைவனை யீசனைத்
தின்பன் கடிப்பன் றிருத்துவன் றானே. 2980

(21) தோத்திரம்

போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகழ் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் றன்னடி
சாற்றுகின் றேனறை யோசிவ யோகத்தைப்
போற்றுகின் றேனெம் பிரானென்று நானே. 2988

வள்ளற் றலைவனை வானநன் னாடனை
வெள்ளப் புனற்சடை வேத முதல்வனைக்
கள்ளப் பெருமக்கள் காண்பர்கொ லோவென்று
உள்ளத்தி னுள்ளே யொளித்திருந் தானுமே. 2994

ஆளு மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளு வழிபட்டு நன்மையு ணின்றவர்
கோளும் வினையு மறுக்குங் குரிசிலின்
வாளு மனத்தொடும் வைத்தொழிந் தேனே. 2995

குறிப்பு: *"கோட்பா லனவும் வினையுங் குறுகாமை" (திருஞா - திருப்பாசுரம்)*

படிகால் பிரமன்செய் பாச மறுத்து
நெடியான் குறுமைசெய் நேச மறுத்துச்
செடியார் தவத்தினிற் செய்தொழி னீக்கி
அடியேனை யுய்யவைத் தன்புகொண் டானே. 3013

குறிப்பு: **பிரமன் செய்பாசம்** - *பிறப்புக் கேதுவாகிய சஞ்சிதம்;* **நெடியான் குறுமை செய்நேசம்** - *ஆகாமிய வினைப்பற்று* - **செய்தொழில்** - *பிராரத்தவினை என்பர். இவை சிருட்டி திதி சம்மார திரோபவத் தொழிலுள் வரும் நிலைகளைக் குறிப்பன.* **உய்யவைத்து** - *அனுக்கிரகம் - அன்பு கொள்ளுதல் - சிவானந்த போக விளைவு.*

விண்ணிலும் வந்த வெளியிலன் மேனியன்
கண்ணிலும் வந்த புலனல்லன் காட்சியன்
பண்ணிலும் வந்த பயனல்லன் பான்மையன்
எண்ணிலா னந்தமு மெங்கள் பிரானே. 3018

நிறம்பல வெவ்வண்ண மவ்வண்ண மீசன்
அறம்பல வெவ்வண்ண மவ்வண்ண மின்பம்
மறம்பல வெவ்வண்ண மவ்வண்ணம் பாவம்
புறம்பல காணிலும் போற்றகி லாரே. 3020

ஏனோர் பெருமைய னாகிலு மெம்மிறை
ஊனே சிறுமையு ளுட்கலந் தங்குளன்
வானோ ரறியு மளவல்லன் மாதேவன்
தானே யறியுந் தவத்தி னளவே. 3024

உண்ணின் றொளிரு முதவாப் பிராணனும்

(22) சர்வ வியாபி

விண்ணின் றியங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்ணின் றியங்கும் வாயுவு மாய்நிற்குங்
கண்ணின் றிலங்கும் கருத்தவன் றானே.

நீரு நிலனும் விசும்பங்கி மாருதந்
தூரு முடம்புறு சோதியு மாயுளன்
பேரும் பராபரன் பிஞ்ஞக னெம்மிறை
ஊரும் சகல னுலப்பிலி தானே.

(23) வாழ்த்து

வாழ்கவே வாழ்கவென் னந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்க மெய்ஞ்ஞானத் தான்றாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

முடிபு

மூல னுரைசெய்த **மூவா யிரந்தமிழ்**
மூல னுரைசெய்த **முந்நூறு மந்திரம்**
மூல னுரைசெய்த **முப்ப துபதேசம்**
மூல னுரைசெய்த **மூன்றுமொன் றாமே.**

குறிப்பு: *இப்பாட்டுத் திருமூலர் வழிவந்த சான்றோர் வாக்கெனக் கருத இடமிருக்கின்றது. மூலன் என்று படர்க்கையிற் கூறுதலும் காண்க. இதனை ஆதாரமாகக்கொண்டு திருமந்திரப் பாடற்றொகை 3333 என்பாருமுண்டு. 3000 தமிழும் 300 மந்திரமும் 30 உபதேசமும் வெவ்வேறு நூல்கள் என்று கருதவும் இடமுண்டு. இவை ஆராய்ச்சிக்குரியன. இவ்வாராய்ச்சியிற் புகுதலிற் பெரும் பயனில்லை என்பது அறிஞர் கருத்து.*

திருமூலர் திருமந்திரத் திரட்டு முற்றிற்று.

திருமூல தேவ நாயனார் திருவடி வாழ்க

தொகுப்புரை

உ


சிவமயம்

திருச்சிற்றம்பலம்

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
காவிரிசூழ் **சாத்தனூர்** கருது **மூலன்**
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடும்
பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்து போத
அயலாகப் பண்டையுட லருளான் மேவி
யாவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரு **மரசடியி** லிருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகி னூரே.

—திருத்தொண்டர் புராண சாரம் - 34

திருமூலதேவ நாயனர் சரிதம் பல அற்புதங்களை அறிவுறுத்துவது. அவர் அருளிய திருமந்திரம் சகலாகம சாரமாகிய ஞான சாத்திரமாகும். அது 3000 பாடல்களாக உள்ளபடியால் முற்றும் பயில இயலாதவர்களுக்கு உதவும் பொருட்டு அவற்றுள் 350 பாடல்கள் வரை திரட்டி இதனுள் தரப்பட்டுள்ளன. திருமூலரது சரித நுட்பங்களையும் திருமந்திர நுட்பங்களையும் தொகுப்பாக அன்பர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு ஆராய்ச்சிக் குறிப்புக்களும் சற்று விரிவாகவே எழுதப்பட்டிருக்கின்றன. சைவவுலகமும் தமிழுலகமும் ஆதரிப்பனவாக.



தண்டியடிகள் நாயனார் (பங்குனி - சதயம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

31. தண்டியடிகணாயனார் புராணம் (26 திருப்பாடல்கள்)

தொகை

"நாட்டமிகு தண்டிக்கு (மூர்க்கர்க்கு) மடியேன்"

—*திருத்தொண்டத்தொகை-(5)*

வகை

கண்ணார் மணியொன்று மின்றிக் கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனற்றடந் **தொட்டலுந்** தன்னை **நகுமமணர்**
கண்ணாங் கிழப்ப **வமணர் கலக்கங்கண்** டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவ **ளூரூர் விறற்றண்டியே**"

—*திருத்தொண்டர் திருவந்தாதி-(37)*

விரி

3592. **தண்டி யடிக டிருவாரூர்ப் பிறக்கும்** பெருமைத் தவமுடையார்
அண்ட வாணர் மறைபாட வாடுஞ் செம்பொற் கழன்மனத்துக்
கொண்ட கருத்தி **னகநோக்குங் குறிப்பே யன்றிப் புறநோக்குங்**
கண்ட வுணர்வு துறந்தார்போற் பிறந்த பொழுதே கண்காணார். 1

புராணம்:- தண்டியடிகள் என்னும் நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி; இனி, ஆசிரியர் நிறுத்த முறையானே வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் நான்காவது தண்டியடிகள் நாயனார் புராணம் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:- நாட்டம் மிகுகின்ற தண்டியடிகளுக்கும் அடியேனாவேன்;—**நாட்டம்** -கண்; **மிகுதல் -** முன் இல்லாதிருந்து பின் உண்டாகப் பெறுதல்; முன்னர்ப் புறநோக்கின்றிச் சிவன் கழலே அகநோக்கும் குறிப்புமட்டு முடையாராய் இருந்து, பின்னர், அவ் வகநோக்குடன் அப்பொருளிற் புறநோக்குமாக இரண்டும் கூடப் பெற்றதனால் **நாட்டமிகு** என்ற சரிதக் குறிப்புப்படக் கூறுதலுமாம்; **தண்டி** - நாயனார் பெயர்; **உம்மை** - எண்ணும்மை. தண்டிக்கும் மூர்க்கர்க்கும் என்க. முன் கூறிய அடியார்களுடன் என இறந்தது தழுவிய எச்சவும்மையுமாம்.

வகை:- கண்ணார்...தொட்டலும் - கண்மணியின் ஒளி சிறிது மில்லாமையாலே கயிற்றினைப் பிடித்துத் தடவிச் சிவபெருமானுக்காகக் குளிர்ந்த நீரினையுடைய தடாகத்தினை அகழ்ந்து தோண்டுதலும்; தன்னை...கண்ட-வெஞ்சொற்கள் கூறி இகழ்ந்து கொடுமை செய்த அமணர்களது நிலை கலங்குதலைக் கண்ட; அம்மலர்க்கண்... தண்டியே-(அவர்கள் ஒட்டிய) அந்த மலர்போன்ற தமது கண் ஒளியினைத் தேவர் தலைவராகிய சிவபெருமானிடம் வரப்பெற்றவர் திருவாரூரில் அவதரித்த வலிமையுடைய தண்டியடிகளாவர்.

கண்ணார் மணி - கண்ணாரில் ஒளிகாட்டும் கண்மணி என்ற அங்கக் கூறு; "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" (தேவா); **ஒன்றும்**-ஒரு சிறிதும்; **கண்ணார்... இன்றி**-கட்பார்வை யில்லாத அந்தகராகியும்; **கயிறு பிடித்து** - குளக்கரையிலிருந்து அடிவரை தறிநட்டுக் கயிறு கட்டி அந்தக் கயிற்றைத் துணையாகப் பிடித்து ஏறியும் இறங்கியும்; **தடம் தொட்டலும்** - கரையில் இடத்தாற் குறைபாடுபட்ட கமலாலயக் குளத்தை அகலமாக்கக் கல்லுதலும்; **தொடலும்** என்றது **தொட்டலும்** என வந்தது செய்யுள் விகாரம்; யாப்பமைதி நோக்கி வந்தது; **நகும் அமணர்** - வன்கண்மையால் இழிசொற் கூறிச் சிரித்த அமணர்கள்; புராணம் பார்க்க; **ஆங்கு** - அப்பொழுதே; அவ்விடத்தே; அமணர்கள் கண் இழப்பத் தாம் கண் பெற்றவர்; வரலாறு புராணத்துள் விரிக்கப்படும்; **அம்மலர்க் கண்** - அமணர்கள் விழி இழந்தாய் என்று இகழ்ந்ததும், உன் கடவுளருளால் பெற்றனையேல் ஊரிலிரோம் என்று ஒட்டியதும், அந்த ஒட்டுதலில் கலக்கம் காணப்பெற்றதும் ஆகிய அந்த என முன்னறிசுட்டு; கண்ட அம்மலர்க்கண் என்றது கண்டம்மலர்க்கண் என வந்தது - கண்ட என்றதில் ஈற்றகரம் கெட்டது செய்யுள் விகாரம்; **விறல்** - திருத்தொண்டின் உறைப்பாகிய அஞ்சா வீரம்; தண்டியே பெற்றவன் என்க.

கலக்கம் -ஒட்டிக்கெட்டுத் தம் நிலையிழந்து கலங்கிய கேடு; **கண்ட**-தம் கண்ணாற் கண்ட; **கலங்கங் கண்ட** என்பதும், **விறல்**-என்பதும் ஆசிரியர் எடுத்தாண்டருளினர் (3591). **கண்ட**-காரணராயிருந்த-செய்த என்றலுமாம். "முனைவன் கண்டது முதனூல்" (தொல்) என்புழிப் போல.

பேரும் பண்பும் தொகைநூல் தொகுத்துப் பேசிற்று; ஊரும், பேரும், சரித வரலாறும் பண்பும் வகைநூல் வகுத்தது; இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டுகொள்க.

விரி : 3592. (இ-ள்) தண்டி அடிகள் - தண்டியடிகள் என்னும் பெயருடையார்; திருவாரூர்... தவமுடையார் - திருவாரூரிலே பிறக்கும் பேறுடைய பெருமையாகிய முன்னைத் தவத்தினை உடையவர்; அண்டவாணர்...குறிப்பேயன்றி - தேவர்கள் வேத முழக்கங்களைச் செய்ய ஆடுகின்ற சிவந்த பொன்போன்ற திருவடிகளை மனத்தினுள்ளே கொண்ட அகக்கண்ணாற் காண்கின்ற குறிப்பொன்றே யல்லாது; புற நோக்கும்...போல் - வெளிப்பார்வையால் நோக்கும் அளவுபட்ட வுணர்வினை ஒழித்தவர்போல; பிறந்த...காணார் - அவதரித்த நாளினின்றே புறக்கண் பார்வை யில்லாதவர்.

(வி-ரை) தண்டியடிகள் - உடையார் - கண்காணார் - என்று முடிக்க.

தண்டியடிகள் - நாயனாரது பெயருடனே புராணந் தொடங்குவது ஓர் சிறப்பு.

திருவாரூர்...தவமுடையார் - திருவாரூர்ப் பிறக்க முத்தி என்பவாதலின், அவ்வாறு பிறத்தல் தவமுதிர்ச்சியினால் முத்திபெறும் தகுதி வாய்ந்தவர்க்கல்லது கிட்டாது; அங்குப் பிறக்கப் பெறுதலே வீடு பெறும் தகுதி கொடுக்கும். தவங்களுள் எல்லாம் பெருந்தவமாதலாலன்றே பெருநன்மையாகிய வீடுதரும் வகையால் திருவாரூரிற் பிறப்பைக் கொடுக்கும் என்பதாம்.

அண்டவாணர்-தேவர்கள்; **அண்டவாணர்... ஆடும் செம்பொற்கழல்** - இது தியாகேசரது ஆடல் குறித்தது. தியாகேசர் தேவலோகத்தினின்றும் இங்குப்

போந்தருளினாராதல் குறிப்பு; "அமரர்நா டாளாதே யாரூ ராண்ட" (தேவா). அண்ணவாணர் தியாகேசர் என்று கொண்டு அவரது கழல் என்பது மொன்று. **செம்பொன்** - மாற்றுயர்ந்த பொன்.

கழல்... குறிப்பேயன்றி - கருத்தினகம்-மனக்கண்; **கருத்தி னகநோக்கும் குறிப்பா**வது மனத்தில் இறைவன் திருவடியை ஊன்றிப் பதித்து வைத்து அதனையே குறியாகக் கொண்டு அழுந்தியறிதல்; **குறிப்பு** - குறிக்கோள் - இலக்கு; "குறிப்பினாலே கூப்பினான் றபரத்தை" (தேவா).

புறநோக்கும் கண்டவுணர்வு - புறத்திலே உலகப் பொருள்களைக் காணும் அளவுபட்ட உணர்ச்சி; இதனால் அகநோக்கும் குறிப்பு அளவுபடாத அகண்டிதமாகிய காட்சி என்பது பெற்றும்; **கண்டம்** - அளவுப்பட்டது. (**அகண்டிதம்**-அளவுப்படாதது.)

துறந்தார்போல்-புறக்கண் பார்வையாகிய கண்டித உணர்வு வேண்டாம்; அதனினும் பெரிய அகண்டித வுணர்வே வேண்டும் என்று புறக்கண் பார்வையைத் தாமே துறந்துவிட்டவர்போல.

பிறந்த பொழுதே கண்காணர் - பிறவிக் குருடர்; பிறந்தபோதே கண்காணராதலின் அகண்டிதமாகிய அகநோக்கே வேண்டும்; கண்டித வுணர்வாகிய புறக்கண் பார்வை வேண்டாம் என்று கொண்டு துறந்ததெப்போது? எனின், முன்னைத் தவத்தால் முன்னைப் பிறவியில் வேண்டி என்று குறிப்பார்போலப் **பிறக்கும் பெருமைத் தவமுடையார்** என்றார். **பிறந்த பொழுதே** - ஏகாரம் பிரிநிலை.

அகநோக்கும் குறிப்பாவது இறைவன் திருவடிகளையே தியானிப்பது; அவையே யன்றிப் பிறிதொன்றனையும் காண்பதில்லை என்ற நிலை; இந்நிலையினை வரும் பாட்டில் "காணுங் கண்ணாற் காண்பது மெய்த் தொண்டே யான கருத்துடையார்" (3593) என விரித்தல் காண்க. அகநோக்கால் திருவடியையே யன்றிப் பிறவற்றை நோக்காதவாறு போலப் புறநோக்காலும் நோக்கும் விடயங்களை நீக்கினவர் போலக் கண்காணதவர் என்றலுமாம்.

பிறவிக் குருடராய் வந்த நிலையினைப் பின்னர் இவ்வரலாற்றில் அமணர் இழிவுபட எண்ணிக்கெட்டதுபோல, எளிதாய் எண்ணி, உலகம் அபசாரப்படாமைப் பொருட்டு இக்குறைபாட்டினை மிக்க மேம்பாடாகக் காட்டுவித்து வரலாறு தொடங்கியது ஆசிரியரது தெய்வக் கவிநலம்; குறைவை நிறைவாக உண்மை கண்டு காட்டும் கவிவன்மையும் காண்க. புறக்கண் பார்வை கண்டிதமாதலின் அகண்டிதமாகிய அகக்கண் அதனினும் **மிக்கது;** பின்னர்ச் சிவன் தொண்டன்றி வேறு காணாத அக்குறிப்புடனே புறக்கண்ணும் பெற்றபோது அந்நாட்டம் அதனினும் **மிக்கது** என **நாட்டமிகு தண்டி** என்ற தொகைநூற் பொருளை விரித்தவாறும் கண்டுகொள்க. கண்டிதம் - துன்பம் செய்யப்பட்டது; தண்டனை.

கருத்தின் கண்ணோக்கும்—என்பதும் பாடம். 1

3593. **(இ-ள்)** காணும்... உடையார் - காணுதற்குரிய கண்ணினாலே காணப்பெறுவது இறைவரது மெய்த் திருத்தொண்டேயாம் என்னும் கருத்துடையவர்; பேணும்...

3593. **காணும் கண்ணாற் காண்பதுமெய்த் தொண்டே யான கருத்துடையார்**
பேணுஞ் செல்வத் திருவாரூர்ப் பெருமா னடிக டிருவடிக்கே
பூணு மன்பி னாற்பரவிப் போற்று நிலைமை புரிந்தமரர்
சேணு மறிய வரியதிருத் தொண்டிற் செறியச் சிறந்துள்ளார். 2

திருவடிக்கே - பேணுதற்குரிய செல்வத் திருவாரூரில் வீற்றிருந்தருளும் தியாகேசப் பெருமானாரின் திருவடிகளையே; பூணும்... புரிந்து - மேற்கொண்ட அன்பினாலே துதித்து வழிபடும் நிலைமையினை விரும்பி; அமரர்... சிறந்துள்ளார் - தேவர்கள் தூரத்தி லேனும் அறிதற்கரிய திருத்தொண்டிலே உறைப்புடையாராகிச் சிறந்துள்ளாராயினார்.

(வி-ரை) **காணும் கண்ணாற் காண்பது** - காணுதற்குரிய கண்ணினாலே காணப்படுவது; "காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே", "காணா கண்வாய் பேசாதப் பேய்களோடே" (திருவிசைப்பா); "கண்ணிணையு மரமாம்" (திருவா); "கண்காள் காண்மின்களோ" (தேவா); "அரன்பணிக் காக வன்றே" (சித்தி) என்பனவாதியாக வரும் எண்ணிறந்த திருவாக்குக்களால் உணரப்படுகின்றபடி கண்ணாற் காணுதற்குரியது சிவன் திருத்தொண்டேயாம் என்பது துணிபு.

காணும் கண்ணால் - அகக்கண் -புறக்கண் என்றவற்றுள் எதுவாயினும் அதனால்; ஈண்டுச் சிறப்புடைய அகக்கண்ணினாலே என்பது; **காணும் கண்** - அகக்கண் - ஞானக்கண்.

காண்பது மெய்த்தொண்டே - தொண்டினைக் காண்பதாவது தொண்டுசெய்யும் நிலைகளை மனத்துட் கொள்ளுதல்; **நிலைமை புரிந்து** என்பது காண்க; முன்னர் விருப்பம் நிகழ்தலும், அதனை இன்னபடி செய்வேம் என்று அகத்துட் கருதி நிச்சயித்தலும் முன்னர் உளவாதலன்றிப் புறத்தே காணலும் செய்தலும் நிகழாவாகலின் **தொண்டினைக் காண்பது** என்றார்.

மெய்த் தொண்டேயான கருத்து - மெய்யினது தொண்டு; **மெய்**-சத் எனப் படும் இறைவர். மெய்யினாற் செய்யப்படும் தொண்டு என்றலுமாம். இப்பொருளில் அகக்கண்ணாற் **காண்பதும்** தொண்டேயாகும் என்க. தொண்டே **ஆன** -ஏகாரம் பிரிநிலை; "அல்லால் வேறு காணேன் யான்" (3600) என்பதும் காண்க. **மெய்த் தொண்டு** - உண்மையாக; பொய்யல்லாத என்றலுமாம். "பொய்த்தொண்டு பேசி"; "பொக்கமிக்கவர் பூவு நீரும்" (தேவா.)

பேணும் திருவடிக்கே - என்று கூட்டுக; **பேணுதல்**-மனமொழி மெய்களால் வழிபடுதல்.

பெருமானடிகள் - பெருமானாகிய இறைவர் "கடவூர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே" (தேவா).

திருவடிக்கே-ஏகாரம் பிரிநிலை; திருவடிகளை; உருபுமயக்கம்.

பூணும் - இடையறாது-நியதியாக மேற்கொண்ட; பூணாகக்கொண்ட என்ற குறிப்புமாம்.

போற்றும்-தவறாது செய்யும். **புரிந்து**-விரும்பி.

3594. பூவார் சடிலத் திருமுடியார் மகிழ்ந்த செல்வப் பூங்கோயிற்
றேவா சிரியன் முன்னிறைஞ்சி வலஞ்செய் வாராய்ச் **செம்மைபுரி**
நாவா **லின்ப முறுங்காத னமச்சி வாய** நற்பதமே
ஓவா வன்பி லெடுத்தோதி **யொருநாள் போல வருநாளில்,** 3

அமரர் சேணும் அறிய அரிய திருத்தொண்டு - சிவன் திருத்தொண்டு-அடியார்பணி; இவற்றின் பெருமைகளைத் தேவர்கள் சிறிதும் அறியார் என்பது; **சேணும்** -நெடுந்தூரத்தினும்; சிறிதேனும்; பசு புண்ணியம் முதலிய கருமங்களைச் செய்து சொர்க்காதி போகங்களைப் பெற்றும், அவற்றுட் பல துன்பங்களுக்கும் எண்ணிறந்த பிறவிகளுக்கும் ஆளாகியும் அலைவதற்கே உரியவர்கள் தேவர்கள்; சிவபுண்ணியங்களைச் செய்து பிறவியறப் பெற்று மீளா இன்பநிலை எய்தும் தன்மைக்கும் அவர்களுக்கும் நெடுந்தூரம் என்பதாம்; "புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம் போக்குகின் றேமவமே" (திருவா) என்ற திருவாக்கு இந்நிலையை நன்கு விளக்குகின்றது. "**சென்றுற்** சைவத் திறத்தடைவர்" (சித்தி); (செல்லுதற் கருமை நோக்கிச் சென்றால் என்றார்) "அண்ட றறிதற் கரியதிரு வலகு" (1585) என்றதும் காண்க; "தேவாசிரியன் முறையிருக்கும் தேவர்."

செறிதல்-அழுந்திய உறைப்புடையராகுதல். இவ்வுறைப்புப் பின்னர்ச் சரித நிகழ்ச்சியிற் காணப்பெறும்; (3600).

புரிந்தமர்வார்—என்பதும் பாடம். 2

3594. **(இ-ள்)** பூவார்...பூங்கோயில்-பூக்கள் பொருந்திய சடைத் திருமுடியினையு டைய இறைவர் மகிழ்ந்தெழுந் தருளிய செல்வநிறைந்த பூங்கோயிலின்கண்; தேவாசிரியன்... வலஞ்செய்வாராய் - திருத்தேவாசிரிய மண்டபத்தினை முன்னே வணங்கி வலம் வருவாராய்; செம்மைபுரி... ஓதி - செம்மைபெறப் புரிகின்ற நாவினாலே இன்பம் பொருந்தும் காதலோடு நமச்சிவாய என்னும் நற்பதத்தினையே ஒழியாத அன்பினாலே எடுத்து ஓதிக்கொண்டு; ஒருநாள் போல வருநாளில்-ஒருநாள் போலப் பலகாலமும் வலஞ் செய்து வருகின்ற நாட்களிலே;

(வி-ரை) பூ-கொன்றை; பொதுப்படக் கூறியதனால் தும்பை வெள்ளெருக்கு முதலியனவுங் கொள்ளலாம்; ஆயின் உரிமையாகிய சிறப்புப் பற்றி கொன்றை எனப்பட்டது.

தேவாசிரியன் முன்னிறைஞ்சி தேவாசிரியனை முன்னால் வணங்கி; **முன்**-திருக்கோபுர வாயிலினைக் கடந்து உட்புக்கவுடன் முதலில் காண உள்ளது தேவாசிரியன்; "மூதெ யிற்றிரு வாயின்**முன்** னுயது" (136); அன்றியும் அடியார்கள் நிறைந்துள்ளது. இத்தன்மைகளால் அது முன்னர் வணங்குதற்குரிய தாம்.

முன் என்றதனால் இறைவர் எழுந்தருளிய பூங்கோயிலினை அதன்பின் இறைஞ்சி என்பது போதரும்; அடியார் வணக்கம் முன்னும், அதன் துணைகொண்டு ஆண்டவர் வணக்கம் பின்னும் நிகழவரும் மரபும் குறிக்கப்பட்டது காண்க.

வலஞ் செல்வாராய் வருநாளில் - என்று கூட்டுக.

3595. செங்கண் விடையார் **திருக்கோயிற் குடபாற் றீர்த்தக் குளத்தின்பாங்**
கெங்கு மமணர் பாழிகளா **யிடத்தாற் குறைபா டெய்து**தலால்
அங்கந் நிலைமை தனைத்தண்டி யடிக ளறிந்தே யாதரவால்
"இங்கு நானிக் குளம்பெருகக் கல்ல வேண்டும்" மென்றெழுந்தார். 4

செம்மைபுரி-செம்மை-சிவத்தன்மை; புரிதல் இடைவிடாது சொல்லுதல்; **செம்மைபுரி நா**-எப்பொழுது இடைவிடாது சிவன் றிறமே சொல்லும் தன்மையிற் பழகிய நா; "நான் மறக்கினுஞ் சொல்லு**நா** நமச்சிவாயவே" (தேவா) என்ற கருத்து இங்குப் பொருந்தக் காணத்தக்கது; "அண்ணலா ரடிகண் மறக்கினு நாம வஞ்செழுத் தறிய**வெப் பொழுது, மெண்ணிய நாவே யின்சுவை பெருக விடையறு தியம்பும்**" (3241) என்று ஆசிரியர் விரித்தருளியமையும் காண்க.

இன்பமுறும் காதல்-பஞ்சாக்கரத்தினை எண்ணும்போது இன்பம் வருகின்ற காதலுடன் பயிலல் வேண்டும் என்பதாம். "காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, யோதுவார்." (தேவா.)

நமச்சிவாய நற்பதமே-அஞ்செழுத்து இறைவரது திருநாமமாதலின் பதம் என்றார்; "திருநாம மஞ்செழுத்தும் செப்பா ராகில்", "அஞ்சுபதம்" (தேவா); **நன்மை**யாவது வீடுபேறு தரும் தன்மை. ஏகாரம் பிரிநிலை.

எடுத்து ஓதி-உரிய ஒலிபெற ஓதி; மானதம் மந்தம் உரை என்ற மூன்றனுள் **உரை** - எனப்படும் நிலையில் ஓதி. வாசகம்=பாஷியம்; மந்தம்-உபாஞ்சு என்பர்.

ஒருநாள் போல் வருநாளில் - ஒருநாள் போலவே எல்லா நாள்களினும்; வலம் வரும் நாட்களில் எல்லா நாட்களினும் என்பது குறிப்பெச்சம்; **வருதல்** - வலம் வருதல். ஒழுகிவரும் என்றலுமாம். **நாளில்** - காலத்தில் என்ற பொருளில் வந்தது.

நாளில் எழுந்தார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 3

3595. **(இ-ள்)** செங்கண்... எய்துதலால்-சிவந்த கண்ணுடைய இடபத்தினையுடைய இறைவரது திருக்கோயிலின் மேற்புறத்திலே உள்ள கமலாலயத் தீர்த்தக் குளத்தின் பக்கங்களில் எங்கும் அமணர்களின் பாழிகளாக ஆக்கித் தூர்க்கப்பட்டு இடத்தினாற் குறைபாடு உண்டாயினமையாலே; அங்கு...அறிந்தே-அவ்விடத்தில் அந்த நிலைமையினைத் தண்டியடிகள் தெரிந்தே; ஆதரவால்...என்றெழுந்தார்-அன்பினாலே இங்கு நான் இந்தக் குளத்தினை அகலமாகப் பெருகும்படிக் கல்லியிட வேண்டும் என்ற துணிவுடன் அதனை மேற்கொண்டெழுந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) குடபால் தீர்த்தக் குளம்-கமலாலயம் என வழங்கும் அழகிய தீர்த்தக்குளம். இஃது இலக்குமி தவஞ் செய்த தீர்த்தம் என்ப.

பாங்கு எங்கும்-கீழ்ப் பக்கம் திருக்கோயில் இருத்தலால் சுற்றுப்புறம் ஏனைய மூன்று பக்கமும் எல்லாவிடத்தும்.

3596. குழிவா யதனிற் குறிநட்டுங் கட்டுங் கயிறு குளக்கரையில்
இழிவாய்ப் புறத்து நடுதறியோ டிசையக் கட்டி யிடைதடவி
வழியால் வந்து மண்கல்லி யெடுத்து மறித்துந் தடவிப்போய்
ஒழியா முயற்சி யாலுய்த்தா ரோது மெழுத்தஞ் சுடனுய்ப்பார், 5

அமணர் பாழிகளாய் -அமணர்களின் மடங்களும் குகைகளும் இருக்கைகளுமாக ஆக்கப்பட்டு.

இடத்தாற் குறைபாடு எய்துதலால்-அஃதாவது அமணர் அங்குக் குளத்தின் பரப்பைக் குறுக்கித் தூர்த்துத் தங்கள் பாழிகளாக்கி அமைத்துக்கொண்டமையால் குளத்தின் பரப்புக் குறுகிற்றுஎன்பதாம். திருவாரூரில் கோயிலும், குளமும், ஓடையும் முறையே ஐயைந்து வேலிப் பரப்புடையன என்பர். சுயநலத்துக்காக இவ்வாறு பொதுவிடங்களில் இடங்களை ஆக்கிரமித்துத் தங்கள் சொந்த இருக்கை இடங்களைப் பரப்பிக் கொள்ளுதல் முன்னை நாளினும், இந்நாளினுங் காணும் மனிதரின் கேடான இயல்புகளுள் ஒன்று; இடம் சுருங்கிய காரணத்தாலே என்க.

அங்கு அந்நிலைமைதனை-அறிந்தே-அந்த இடத்திற் சென்று அந்நிலையின் உண்மையினையும், அதனை நீக்கும் இன்றியமையாத தகுதியினையும் அறிந்து கொண்ட பின்னரே; ஏகாரம் தேற்றம். கண்டு என்னுது **அறிந்து** என்றது சரிதக் குறிப்பு.

ஆதரவு-மிக்க அன்பு; தண்டியடிகள் செயல், அழுக்காறு, குரோதம் முதலிய எவ்விதத் தீய எண்ணங்களாலும் தூண்டப்பட்டதன்று என்பது.

பெருகக் கல்ல வேண்டும் - குளத்தின் இடப்பரப்பு முன்போலப் பெருகிய அளவில் அமைவதாக ஆக்குதற்குக் கல்லியிடுதல் வேண்டும்; **கல்லுதல்** - தோண்டுதல்; குடைதல்; வெட்டுதல்.

எழுந்தார்-முயற்சியினை மேற்கொண்டார்; முயன்ற நிலை வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

குறிப்பு:— அமணர்கள் இங்குக் கமலாலயத்தின் கரையில், குடிபுகுந்து, அந்நாளில் ஏனை, நடு நாடு-பாண்டிநாடு-தொண்டை நாடுகளிற் போலவே சைவத் திறத்திற்குப் பெருங்கேடு சூழ்ந்து கெடுதி செய்து வந்தனர் என்பது நாட்டுச் சரித ஆதரவுகளால் அறியக்கிடக்கும் உண்மை. நமிநந்தி நாயனர் புராண வரலாறும் பார்க்க. 4

3596. **(இ-ள்)** குழிவாய்... கட்டி - குளத்தினுள் அகழுங் குழியின் ஓரத்தில் குறியாகிய கோல்நட்டு அதிற் கட்டிய கயிற்றினைக் குளத்தின் கரையின்மேல் தணிவான உயரத்தில் புறத்திலே நட்ட தறியினுடனே பொருந்தும்படி கட்டி; இடைதடவி... போய் - இடையிலே அக்கயிற்றைத் தொட்டுத்தடவிக் கொண்டு அவ்வழியினலே வழிபிழையாது இறங்கி வந்து மண்ணைத் தோண்டிஎடுத்துப் பின்னும் முன்தடவிய அவ்வழியே மேலே போய் இவ்வாறு; ஒழியா... உய்ப்பார் - இடையருத முயற்சியுடன் மண்ணைக் கொட்டினர்; ஓதும் எழுத்து அஞ்சுடன் உய்ப்பார் - இச்செயலில் இடையருது ஓதும் திருவஞ் செழுத்தினேடு தம்மைச் செலுத்துவாராய்,

(வி-ரை) கண்காணாத தண்டியடிகள் குளத்தினுள் ஒழுங்குபட இறங்கிக் கரையினை அகழ்ந்து எங்ஙனம் மண்ணை யெடுத்து மேல் இட்டனர் என்ற தொழில் செய் விவரம் கூறப்பட்டது. அவர் மனக்கண்கொண்டு உள்ளே நிச்சயித்துத் திட்டம் செய்து பின்னர்ப் புறத்திற் செயல் செய்தனர். பூசலார் நாயனாரும், வாயிலார் நாயனாரும் மனவாலயங்களை அமைத்து வழிபட்ட வரலாறுகள் காண்க. சிவாகமங்களுள் சிவபூசை முறையில் அந்தரியாகம் என்ற பகுதி இத்தன்மை கொண்டது; "அந்தரியாகந் தன்னை முத்தி சாதனமாக வறைகுவர்" என்பது சிவஞான சித்தியார்; புறச்செயலுக்கு முற்பட அகச் செயல் யாவர்க்கும் வேண்டுமாயினும், இங்குத் தண்டியடிகள் புறக்கண் காணாராயினும் அகக்கண் கொண்டு செய்த திருத்தொண்டினது இச்சிறப்பின் அருமையினைத் தனித் தனிப் பகுதிகளாப் பிரித்து இவ்வாறு விரிவாய் ஒரு பாட்டினுற் கூறியருளி இதன் பெருமையினை உபதேசித்தருளியது ஆசிரியரது தெய்வக் கவிநலம். இது குறிக்கவே முன்னர்க் "காணுங் கண்ணுற் காண்பதுமெய்த் தொண்டே யான கருத்துடையார்" (3593) என்று எடுத்துக்காட்டிய திறமும் காண்க.

குழிவாய்-குளத்தினுள்ளே மண்ணை அகழ்ந்து குழியாக்கும் இடம்.

குறி நட்டு-குறியாக-குறி காட்டுதற்கு ஒரு தறியினை நட்டு; கரையின்மேல் முதலில் தறிநட்டுப் பின்னர்க் குழிவாயின் நடுவராயின் வழி பிழைத்து நேர் காணலாகாமையின் முதலில் அகழவேண்டிய குழிவாயிற் குறிநட்டார், அகழ்ந்தெடுத்தலே செயற்குறிப்பாதலின்; இது தொழிற் குறிப்பின் நுட்பம்.

குளக்கரையின் இழிவாய்-இழிவு-கையாற் பற்றித் தடவுதற்குரிய தணிந்த இறக்கமான இடம் என்பதுமாம்.

குளக் குலையின்-என்பது பாடமாயின் **குலை**-கரை என்க. **புறத்து**-கரையின் மேலே புறத்தே; கரையின் புறத்தே குறி நடுதலே கயிற்றைத் தளரவிடாது தாங்கும் வலிமை தருவதாம்.

இடை தடவுதல்-கண் காணாராதலின் வழி பிழையாது உதவும் இந்தக் சாதனம் வேண்டற்பாலதாயிற்று.

ஓதும் எழுத்தஞ்சு உடன் உய்ப்பார்-மண் அகழ்ந்து கொட்டும் இத்தொண்டினை உடல் செய்ய அதனுடனே வாயினல் திருவஞ் செழுத்தினை ஓதும் தொண்டும் செய்தனர் என்பது; இங்கு **உய்த்தல்** தம்மைச் செலுத்துதல் என்ற பொருளில் வந்தது; இறைபணி நிற்பாரெல்லாரும் எப்போதும் திருநாமமாகிய திருவைந்தெழுத்தினை உரு எண்ணியே செய்தல் வேண்டும் என்பது விதி. முன்னர்த் திருக்கோயில் வலம் வரும்போதும் இவ்வாறு செய்தமை கூறப்பட்டது (3594) காண்க; வாயினுலும் மனத்தினுலும் வேறு வேறு பேசியும் எண்ணியும் தொண்டு செய்தல் பயன்தராததுடன் அபசாரமுமாம்; திருத்தொண்டு செய்வோர் இதனைக் குறிக்கொள்வாராக என்று ஆசிரியர் இங்கு இருமுறை வற்புறுத்திக் காட்டி உபதேசித்தருளினர். மேலும் (3610) இவ்வாறே காண்க.

உய்ப்பார்-முற்றெச்சம்; **உய்ப்பார்-கல்ல** என வரும் பாட்டுடன் முடிக்க. 5

3597. நண்ணி நாளு நற்றொண்டர் நயந்த விருப்பான் மிகப்பெருகி
அண்ண நீர்த்தக் குளங்கல்லக் கண்ட **வமணர் பொறாராகி**
எண்ணித் தண்டி யடிகள்பா லெய்தி முன்னின் றியம்புவார்
"மண்ணைக் கல்லிற் பிராணிபடும் வருந்த வேண்டா"வென்றுரைத்தார். 6

3597. **(இ-ள்)** நண்ணி... கல்ல - பொருந்தி நாள்தோறும் மிகுந்த நல்ல தொண்டராகிய தண்டியடிகள் உட்கொண்ட விருப்பத்தினாலே செய்யும் இத்திருத்தொண்டில் மிக மேம்பட்டு இறைவரது தீர்த்தக் குளத்தினை அகழ; கண்ட... இயம்புவார்-அதனைக் கண்ட அமணர்கள் பொறுக்க லாற்றாதவர்களாகித் தமக்குள்ளே ஆலோசித்துத் தண்டியடிகளிடம் வந்து அவர் முன்பு நின்று சொல்வார்களாய்; மண்ணை... என்றுரைத்தார் - மண்ணை அகழ்ந்து எடுத்தால் அதனுள் வாழும் பிராணிகள் மடியும்; நீரும் வீணே வருந்தவேண்டாம் என்று கூறினார்கள்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) நயந்த விருப்பு - மேற்கொண்ட அழுந்திய பெருவிருப்பம்.

நற்றொண்டர் - நன்மையாவது உண்மையினின்றும் மாறுபட்ட கருத்தொன்று மில்லாது சிவன் திருவடியிலே செலுத்திய மனநிலை; "ஆதரவால்" (3595) என்ற கருத்து.

மிகப் பெருகி-தொடக்கத்தில் ஓர் ஆளின் சிறுவேலையாய்க் காட்டியது பின்னர் முயற்சியினாற் பெரிய பணியாக உலகுக்கு வெளிப்பட்டு.

கண்ட-கண்ணில்பட்டு மாறுபாடு கொண்டு உறுத்த.

பொறாராகி -பொறாமையுடையாராகி; "அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத், தீயுழி யுய்த்து விடும்" என்றபடி இஃது இவ்வமணர்களின் கேட்டுக்குக் காரணமாயினமை காண்க. இங்குப் பொறாமை, சைவம் விளங்குதலின் மேற்பூண்ட சீற்றம்; இனி அஃதேயுமன்றித் தம் ஆக்கிரமிப்பாகிய அனுபவ இடங்களை இழக்க வேண்டி வரும் சுயநலம் பற்றிய சீற்றமுமாம்.

எண்ணி - தம்மில் கூடிச் சதியாலோசனை செய்து; இஃது அவர் இயல்பு; அரசுகள் சரிதத்தில் தம்வயப்பட்ட பல்லவ அரசன்பால் வஞ்சனையாக அறிவித்த நிலையும், பிள்ளையார் சரிதத்திலும் அவ்வாறே தம் வயப்பட்ட பாண்டியன்பால் அறிவித்த நிலையும், பிறவும் இங்குக் கருதத்தக்கன.

மண்ணை...வேண்டா என்று - இஃது இதோபதேசம் போலக்காட்டி உலகை ஏமாற்றும் வஞ்சகச் சொல்லாதல் காண்க. இவ்வாறே தத்தம் சுயநலத்தை உள்ளே பொதிந்து மறைத்து உலகை ஏமாற்றி, வஞ்சிக்கும் நீதி மொழிகளைக் கூறிச், சீவனோபாயம் காணும் மக்கள் பலரை உலகியலிற் காணலாம்; ஆனால் இவர்கள் வஞ்சனை, ஏமாந்த மக்களிடையேயும் சிலகாலம் செல்லுமேயன்றி முற்றும் செல்லாமை பலதிறத்தானும் அறியப்படும். மறைந்து எங்குமுள்ளவராகிய இறைவரை வஞ்சிக்க எவ்வாற்றானும் இயலாமை ஈண்டுச் சரித விளைவில் உடன் காணப்படும்; உண்மை யனுபவமும் அவ்வாறேயாம். உண்மை என்றும் பிழையாது!

3598. மாசு சேர்ந்த முடையுடலார் மாற்றங் கேட்ட மறுமாற்றந்
தேசு பெருகுந் திருத்தொண்டர் செப்பு கின்றார் "திருவிலிகள்!
பூசு நீறு சாந்தமெனப் புனைந்த **பிரானுக் கானபணி**
ஆசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்?" கென்றார். 7

வருந்த வேண்டாம் - நீரும் வீணே வருந்த வேண்டா என்று அவர்பால் கருணையாகக் காட்டிய பொய்யாகிய சீவகாருணிய வொழுக்கம்; **வருத்த** என்பது பாடமாயின் பிராணிகளை வருத்துதல் பாவம் என்று பொய் உபதேசநிலை மேற் கொண்டவாறும். 6

3598. **(இ-ள்)** மாசு... கேட்டு-அழுக்குப் படிந்த முடைநாற்றம் பொருந்திய உடலினையுடைய அமணர்கள் கூறிய மாற்றத்தினைக் கேட்டு; மறுமாற்றம்... செப்புகின்றார் - அதற்கு எதிர்மொழியாக ஒளிபெருகும் திருத்தொண்டர் சொல்கின்றாராகி; "திருவிலிகாள்!... உமக்கு" என்றார்-மெய்த்திரு வில்லாதவர்களே! பூசும் நீற்றினையே சாந்தம் என்று அணிந்த சிவபெருமானுக்கு ஆகிய திருப்பணிகள் எவையாயினும் அவையெல்லாம் குற்றமில்லையாகிய நல்ல அறமே யாவனவாம் என்ற உண்மை உமக்கு அறியவருமோ?" என்று சொன்னார்.

(வி-ரை) மாசு சேர்ந்த முடை உடலார்-கழுவாமையினால் அழுக்குப் பொதிந்த உடல் உடையவர்கள் அமணர்; உடல் கழுவும்போது அங்கங்கும் உள்ள புழுக்கள் முதலியவை சாகும் என்பது அவர்களது கொல்லாமை எனும் கொள்கையின் ஒழுக்க அளவு. **முடை** - முடைநாற்றம்.

மாற்றம் - சொல்; உண்மையின் மாறுபாடு என்ற குறிப்புமாம்.

மறுமாற்றம்-அமணர் சொல் மாற்றம் (மாறுபாடு) என்னில், அதற்கு மறுதலை - (உண்மை) என்ற குறிப்பும் காண்க.

தேசுபெருகும் - தேசு - ஞான ஒளி. **பெருகும்** - இனி, இச்சரித நிகழ்ச்சியிலே கண் ஒளியும் பெற்றுமிகும் நிலைக்குறிப்பு. "நாட்டமிகு தண்டி" (தொகை)

திருவிலிகாள் - திரு-சிவனடிமைத்திறம்; சிவச்சார்பு. "உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத், **திருவிலார்** - தங்களைத் தெருட்டலாகுமே" (தேவா) என்ற திருவாக்கு ஈண்டுக் கருதத் தக்கது.

பூசுநீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக்கு - நீறு - சங்காரத்தையும், **சாந்தமெனப் புனைதல்** -மகிழ்ச்சிக் குறிப்பாகிய சிருட்டியினையும் குறிப்பாலுணர்த்தின; எனவே இவை இறைவர் தொழில்களாக, அவரது பணியிலே பிராணிகள் இறந்துபட நேரிட்டால் அஃது அவற்றுக்கு உய்தி தரும் தொழிலே யாதலின் அறமெனப்படும் என்றதாம். ஆதலின் சிவன்றிருப்பணியிற் கொலைபற்றி உயிர்க்கு இம்சை முதலிய குற்றங்கள் கூறுதற்கு இயைபில்லை என்றபடி. **ஆன பணி-** என்றது மிக்கருத்து. திருநந்தவனம் திருக்கோயில் முதலிய இறைவர் தலங்களுக்கு இடையூறாக உள்ள அரசமரம் முதலிய புண்ணிய மரங்களையும் வெட்டி அப்புறப் படுத்தலாம் என்ற விதி இக்கருத்துடையது. எறிபத்த நாயனார் - கோட்புலி நாயனார் முதலிய பெரியார் சரிதங்களின் நிகழ்ச்சிகளின் உள்ளுறையும்

3599. **அந்த மில்லா வறிவுடையா** ருரைப்பக் கேட்ட **வறிவில்லார்**
சிந்தித் "திந்த வறங்கேளாய் செவியு மிழந்தா யோ?"வென்ன
"மந்த வுணர்வும் விழிக்குருடுங் கேளாச் செவியு மற்றுமக்கே
இந்த உலகத் துள்ளன"வென் றன்பர் பின்னு மியம்புவார், 8

---

*கருதுக; சீவகாருண்ணியம் என்றதன்பாற் பட்ட பசு தர்மங்களுக்கும் சிவன் பணிகளாகிய பதி தர்மங்களுக்கும் உள்ள வேறுபாடு ஈண்டு உணர்ந்து மனங் கொள்ளுதற்பாலது; இவை முன்னர் அரசுகள் புராணத்துள் "அறங்கள் செய்வாராய்" (1300), "காவளர்த்தும்" (**1301**) என்ற இடத்தும், பிறுண்டும் விளக்கப்பட்டன. இந்நுட்ப மறியாதார் உலகியலுள் வைத்துப் பலவாறு பிதற்றி யொழிகுவர்; சிவனுக்காக உள்ள பதி புண்ணியப் பொருள்களைச் சீவர்களுக்கு ஆக்கிப், பசு புண்ணியங்களாகச் செய்தல் சிறந்ததென்று முழக்கம் செய்து உலகை மயக்கி யுழல்கின்றார்கள்;இது காலக் கொடுமை!; இங்குத் தீர்த்தக் குளத்தின் இடத்தின் குறைபாட்டினை நீக்க மக்கள் குடியிருந்த மனையிடங்களை அகழ்ந் தெறிந்தார் தண்டியடிகள்! இஃது இறைவர் திருவுள்ளக் குறிப்பினை அணுகி அங்கீகாரமும் பெற்றது. ஆனால் இந்நாள் மாக்கள் கோயில் குளங்களைத் தூர்த்துக் குடியிருக்கும் இடமாக்க முற்படுகின்றனர். அந்தோ! கொடிது! கொடிது!!*

__ஆசிலா நல் அறமாவது-ஆசு இல்லாமை__யாவது-குற்றங்களைப் போக்குதல், இல்லையாகச் செய்தல்; __நன்மை__யாவது வீடுபேறாகிய நிலைத்த இன்பத்தைத் தருதல். அஃதாவது சிவனுக்கான பணிகளாகிய இவை பாச நீக்கமும் சிவப்பேறும் தந்து பரம்பரையில் வீடு பெறுவிப்பன; இதனால் ஏனை அறமெனப்பட்டன எல்லாம் அவ்வாறன்றித் துன்பம் தந்து பிறவிக் கேதுவாவன என்பதும் போதரும்.

__அறியவருமோ உமக்கு__ - நீரும், உம்மைப்போன்ற பிறரும் இந்நுட்பமாகிய உண்மைகளை உணரும் ஆற்றல் இல்லீர் என்பது. இஃதே இந்நாள் மாக்கள் தன்மையுமாயிற்று.

__மாசுபடர்ந்த__—என்பதும் பாடம். *7*

*3599. (**இ-ள்**) அந்தம்...உரைப்ப-எல்லையில்லாத அறிவினையுடைய தண்டியடிகள் முன்கூறியபடி சொல்ல; கேட்ட...என்ன-கேட்ட அறிவில்லார்களாகிய அமணர்கள் எண்ணமிட்டு நாங்கள் கூறிய இந்த அறச் சொல்லினைக் கோளா தொழிந்தாய்; (கண் இழந்ததோடு) செவியும் இழந்தனையோ? என்று கூற; மந்த...என்று-மந்தமாகிய உணர்வும் விழியின் குருட்டுத் தன்மையும் கேளாத செவிகளும் மற்று உங்களுக்கே இந்த உலகத்தில் உள்ளன என்று கூறி; அன்பர்... இயம்புவார் - அன்பராகிய தண்டியடிகள் மேலும் சொல்வராகி,*

__(வி-ரை) அந்தமில்லா அறிவுடையார் - அறிவில்லார்__ - அழிவில்லாத அறிவும், சிறிதும் அறிவின்மையும் என்றது உண்மையறிவின் இயல்பு குறித்ததற்கு; ஈண்டு __அறிவு__ உண்மை ஞானம்; உலகியலில் அறிவெனப்பட்டு நிலவுவனவெல்லாம் உண்மை யறிவில்லாத மடமையின்பாற் பட்டன என்று பாகுபடுத்தப்பட வேண்டுமென் றறிவித்தவாறு.

3600. "வில்லா லெயின்மூன் றெரித்தபிரான் விரையார் கமலச் சேவடிகள்
அல்லால் வேறு காணேன்யா: னதுநீ ரறிதற் கா?"ரென்பார்,
"நில்லா நிலையீ ருணர்வின்றி நுங்கண் குருடா யென்கணுல
கெல்லாங்காண்பான் யான் கண்டாலென்செய்வீ"ரென் றெடுத்துரைத்தார் 9

சிந்தித்து-மேற்சொல்ல லாவதனை எண்ணி; **அறிவில்லார் சிந்தித்து**-சிந்தித்தும் மேல் வருமாறு அவச்சொல்லே கூறி அவமே செய்கின்றார்களாதலின் அதற்கு உண்மை அறிவின்மையே காரணம் என்று காட்டியவாறு.

இந்த அறம்-அவ்வமணர் கொள்கையின்படி கண்ட அறம் எனப்பட்ட ஒழுக்கம். இஃது அறமல்லாமை முன் உரைக்கப்பட்டது.

செவியும் இழந்தாயோ?-செவியும்-கண்ணிழந்த தன்றி என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; **செவியு மிழத்தல்**-தமது அறமொழி கேட்டு அமைந்து உடன்படாமையாற் பெறப்படுமென்பது அவர்கள் கூறும் குறிப்பு; இவ்வாறு காரணமின்றி வசைமொழி கூறி வருத்தம் விளைப்பதும், மேல் (3601) கொட்டினையும் கயிறு, தறி, யிவற்றையும் உடன் பறித்து வன்கண்மை செய்வதும் அமணர்களது அறம் கூறும் வெற்றுரைகள் போலியா யொழியும் தன்மையினைப் புலப்படுத்துவன. அரசுகள் பிள்ளையார் சரிதங்களினும் இவ்வாறே இவ்வமணர்களின் போலி அறவுரைகளும், கொல்லாமையுள் மறைந்து செய்யும் கொடுமைகளும் காணப்படும்.

"**மந்த...உள்ளன**" **என்று-மந்த வுணர்வு** -உண்மை நிலையினை உட்கொள்ளாதபடி தடுக்கும் வகையில் தடித்த உணர்வு; **விழிக்குருடும் கேளாச்செவியும்**-அமணர்கள் தண்டியடிகள் பால் ஏற்றிய குறைகள்; **மற்று உமக்கே**-நீவிர் கூறியபடி என தன்று; என்னின் மாறுபட்ட உமக்கே அவை உண்டு என்பது. **மற்று**-வேறாகிய; ஏகாரம் பிரிநிலை; இறைவன் புகழ் உட்புகாமையால் மந்தவுணர்வும், திருப்பணியின் உண்மைத் தன்மையினைக் காணாமையால் குருடும், ஞானநூன் முடிபுகளைச் சொல்லியும் கேளாமையால் செவிடும் உமக்கே என்றார்.

இந்த உலகத்து உள்ளன-நேர் காணும்படி இங்கும் உள்ளன எனின் மறுமையில் உங்கள் கீழ் நிலைக்கு இதனினும் வேறு கண்கண்ட சான்று வேண்டுமோ என்றது குறிப்பு.

இயம்புவார்-முற்றெச்சம்; இயம்புவார் - என்பார்-எடுத்துரைத்தார் என வரும் பாட்டுடன் முடியும்.

அன்பர்-அன்பு காரணமாகக் கூறியதன்றிச் சினம் முதலிய மாறுகோள் நிலையாற் கூறியதன்று என்பது குறிப்பு.
8

3600. **(இ-ள்)** வில்லால்... என்பார் - (மேரு) வில்லினாலே மும்மதில்களையும் எரித்த இறைவரின் மணம் பொருந்திய தாமரை போன்ற செம்மையுடைய திருவடிகளை யல்லாது வேறு ஒன்றையும் நான் காணமாட்டேன்; அத்தன்மையினை அறிதற்கு நீர் யாவர்?" என்பாராய்; நில்லா நிலையீர்... எடுத்துரைத்தார் - நிலையில்லாத நிலையினை யுடையீர்களே!

3601. அருக ரதுகேட் "டுன்றெய்வத் தருளாற் கண்ணீ பெற்றாயேற்
பெருகு மிவ்வூ ரினிநாங்கள் பின்னை யிருக்கி லோ"மென்று
கருகு முருட்டுக் கைகளாற் கொட்டை வாங்கிக் கருத்தின்வழித்
தருகைக் கயிறுந் தறியுமுடன் பறித்தார் தங்க டலைபறித்தார். 10

உணர்விழந்து உம் கண்கள் குருடாக ஆகி "உலகமெலாம் காணும் பொருட்டு என் கண்கள் யான் காண நேர்பட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று எடுத்துச் சொன்னார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வில்லார்... ஆர் என்பார்-எரித்தபிரான் என்று இத்தன்மையாற் கூறியது மாறுபட்டாரது மும்மதிலும் ஒரு நொடியில் அழித்தமைபோல நுங்களையும் இன்னே அழிவுபடுத்த உள்ளவர் என்து குறிக்க.

அல்லால் வேறு - காணேன்-எதிர்மறை உறுதி குறித்தது.

அது அறிதற்கு நீர் ஆர் - அதனை அறிதற்கு உமக்கு என்ன தகுதி; "அடியார்களில் யா னாரா வணைவாய்" (569); "என்மனங் குடிகொண் டிருப்பதற் கியானாரென்னுடை யயடிமைதான் யாதே" (திருவி); **அது**-அதனை; அடிமைத் திறத்தினை அறிதல் சிவன் அருளுடையார்க் கன்றி யியலா தென்பதாம். **வேறு காணேன்** - காண்பதாவது- "கழல் மனத்துக்கொண்ட கருத்தினை நோக்கும் குறிப்பு" (3592) என்ற மனக்கண் காட்சி.

"நில்லா நிலையீர்... என்செய்வீர்?" - இது தண்டியடிகள் அமணர்பாற் கூறிய சூளுரை. இந்தச் சூள் உரைத்தல் சிவன் றிருவடிகளே பதிந்த திண்ணிய பேரன்பின் உறைப்பினாலன்றி இயைவதன்று. **நில்லா நிலை**-தெளியாதொரு பொருளே பொய்யு மெய்யுமாம் என்னும் புரை நெறியாகிய அமண் சமயக் கொள்கை. "அத்தி நாத்தி" என்னும் அமணர்களது மந்திரப்பொருள். இவையெல்லாம் முன்னர் விரித்துரைக்கப் பட்டன. **உணர்வின்றி** - உங்களுக்கு உணர்வு இல்லாமற் போகவும்; **கண் குருடாய்**-உங்களது இப்போது ஒளியுள்ள கண்கள் ஒளியிழந்து குருடாகவும்; **உலகெல்லாம் காண்பான்**-உலகத்தார் முன்பு எல்லாரும் காணும்படி; "நாட்டாரறிய" (1898); இனி, நான் இதுவரை இறைவன் திருவடியினையே மனக்கண்ணாற் கண்டிருந்தேன்; அதனோடு அத்திருவடியினை உலகெல்லாப் பொருள்களிலும் புறக்கண்ணாலும் யான் காணும்படி என்றுரைத்தலுமாம். **காண்பான்** - காணும்பொருட்டு.

என் செய்வீர் என்று எடுத்துரைத்தார்-அவர்கள் ஏற்ற மறுமொழி சொல்லும்படி வினவி எடுத்துச் சொன்னார்.

நிலையீர்க் குணர்வின்றி—என்பதும் பாடம். 9

3601. **(இ-ள்)** அருகர் அதுகேட்டு-அமணர்கள் அதனைக் கேட்டு; "உன் தெய்வத்து... இருக்கிலோம்" என்று-"உன் தெய்வத்தின் அருளினாலே நீ கண்பெற்றாயானால் பெருகுகின்ற இந்தவூரில் நாங்கள் அதன் பின்னர் இருக்கமாட்டோம்" என்று சொல்லி; கருகு... உடன் பறித்தார்-கரிய முருடுகளை யுடைய கைகளினாலே அடிகளின் கொட்டினை வலிந்து பற்றிக்

கருத்தின் வழியே நிலை தருகின்ற கயிற்றினையும் நடுதறியினையும் உடனே பறித்தார்கள்; தங்கள் தலை பறித்தார் - தங்கள் தலைமயிரைப் பறிக்கும் நோன்புடையார்கள்.

(வி-ரை) **உன் தெய்வத்து... இருக்கிலோம் என்று**-இஃது அடிகளுக்கு அமணர் கூறிய மறுமொழி; கோபமிகுதியாற் கூறியவாறு காண்க; திருவாலவாயிலும் இவ்வாறே "தவாரிவாதி லழிந்தோ மாகில் வெங்கழு வேற்று வானிவ் வேந்தனே" (2697) யென்று அமணர் கூறியதும், அதற்கு அரசன் "செற்றத் தாலுரைத்தீ ருங்கள் செய்கையு மறந்தீர்" (2698) என்றதும் இங்கு நினைவு கூர்தற் பாலன.

உன் தெய்வத்து-"உன்றெய்வ மென்றெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றது" (தாயுமா); தெய்வத்தன்மையினையும் இவ்வாறு வேறுபடுத்துக் கூறும் அமணர்களது வன்கண்மை காண்க.

பெருகும்...இருக்கிலோம்-பெருகும் இவ்வூர் - திருவாரூர்; **பெருகுதல்**-ஈண்டு அமணர் உட்கொண்டு கூறிய கொள்கையாவது தங்களுக்கு இதுவரை உலகிய லாக்கமும் ஊக்கமும் தந்து பெருகுதல்; **பின்னை இருக்கிலோம்** -அருள் வெளிப்படக் கண்ட பின்னர் அவ்வழியே சார்ந்து அறிவுடை மக்கள் உய்ய நினைப்பார். இவ்வமணர் கடுந்தீவினை வயத்தராதலானும், அவர்கள் தீவினைகளுக் கேற்ற துன்பம் அனுபவிக்க வுள்ளாராதலானும் அருள் கண்டபின்னர் அங்கிருந்து அகல்வோம் என்றனர். இவ்வாறு வருவது இறைவரது திரோதான சத்தியின் செயல். அமணர்களது கொடுமையும் புலனும். அவர்கள் செயல்களின் பொருமையையும் காண்க. **கருகு...உடன் பறித்தார்**-அந்தகராய், ஒருவராய், வலிமையின்றி நின்றுரென்ற எண்ணத்தால் அடிகளாரை இவ்வாறு கொடிய வன்கண்மை செய்தது அமணர்களது வன்கண்மையாகிய கீழ்மையினைப் புலப்படுத்தும். **கொட்டு**-கூடை; **தறி**-கரையினும் குழிவாயினும் கயிறு பிணிக்கும் நடுதறி (3596); **கயிறும் தறியும் உடன்**-இவை இறுகப் பிணிக்கப்பட் டிருந்தமையால் இரண்டையும் உடன்சேர்த்துப் பறிக்க வேண்டியதாயிற்று; **உடன்** என்றது இக்கருத்து.

தங்கள் தலைபறித்தார்-வினைப்பெயர்; தலைபறிக்கும் நிலையுடைய அமணர்; இதனையும் **உடன் பறித்தார்** என்பதுபோல வினைமுற்றாகவே கொண்டு கொட்டும் கயிறும் தறியும் பறித்ததனுலே தமது தலையினையே பறித்தவாராயினர்; அஃதாவது தம் கண் - செவி - உணர்வு - நிலை முதலிய தன்மைகளை எல்லாம் இழக்க நேர்ந்தவராயினர் என்ற குறிப்புப்பட உரைக்கவும் நின்றது; இப்பொருளில் இறந்த காலம் விரைவுப் பொருட்டு.

கருத்தின் வழித் தரு-கருதிய வழிச் செல்லும் நிலையினைப்பெற உதவும்.

தலை பறித்தார்-தீர்த்தக் குளத்தில் இடம் ஆக்கிரமித்தல், அதனைச் செம்மை செய்வோரைத் தடுத்து அறம்போல வஞ்சமொழி கூறுதல், அவரை வைதுரைத்து இகழ்தல், வன்கண்மை செய்தல் இத்துணைக் கேடுகளையும் தம் நலங்கருதி செய்தாராதலின் அதன் பொருட்டுத் தெய்வத்தால் தண்டிக்கப்படுதலைத் தாமே தேடிக் கொண்டனர் என்பதாம். இத்துணையும் உட்கொண்டு "வெய்ய தொழிலார் செய்கை" (3602) என்பது காண்க. இத்துணையும் கொடுமைகளுக்குள்ளாகிப் பின் திருவருள் துணை செய்யச் சமணர் நிலையிழந்தனர் என்பது கண்டும், சைவத்திறத்தினர்மேல் சமயச் சகிப்பில்லாத

3602. **வெய்ய தொழிலார் செய்கையின்மேல் வெகுண்ட தண்டி யடிகடாம்**
மைகொள் கண்டர் பூங்கோயின் மணிவா யிலின்முன் வந்திறைஞ்சி
"ஐய னேயின் றமணர்கடா மென்னை யவமா னஞ்செய்ய
நைவ தானே னிதுதீர நல்கு மடியேற்" கெனவீழ்ந்தார். 11

கொடுமையாளர் என்று அடாது தூற்றி யலைவாரும் பலர்; கருணையின் உருவேயாகிய ஆளுடைய பிள்ளையார்பால் சீவகாருண்யமின்றி அமணரைக் கழுவேற்றினர் என்று கூசாது அடாப்பழி கூறும் பாதகர் வேறெதுதான் சொல்லமாட்டார்? **10**

3602. **(இ-ள்)** வெய்ய...அடிகள் தாம்-கொடிய தொழிலினையுடைய அமணர்களது இச்செய்கையின் மேல் வெகுண்ட தண்டியடிகளார் தாம்; மைகொள்...இறைஞ்சி - விடம் விளங்கும் கண்டத்தினையுடைய இறைவரது பூங்கோயிலின் முன்னே வந்து வணங்கி; "ஐயனே!...அடியேற்கென" வீழ்ந்தார்-எம் பெருமானே! இன்று அமணர்கள் தாம் வலியவந்து என்னை அவமானஞ் செய்ததனுலே நான் மனம் நைவதாயினேன்; இதனுக்குத் தீர்வு அடியேற்கு நல்கியருள வேண்டும் என்று முறையிட்டு நிலமுற வீழ்ந்தார்.

(வி-ரை) வெய்ய தொழிலார் செய்கையின்மேல் வெகுண்ட-இதுவரை வெருட்சியின்றிப் பணியே தலைநின்ற அடிகள் வெகுண்டமை அமணர்களது வெய்யதொழிற் செய்கை காரணமாக அதன் பின்பே நிகழ்ந்தது என்பதும், இதுவரை அமணர்களின் சொற்செயல்கள் கொடுமையானவை என்பதும் ஆம்.

பூங்கோயிலின் முன்வந்து இறைஞ்சி...வீழ்ந்தார்-சிவனையன்றி வேறு பற்றுக் கோடில்லாதவர்கள் அடியார்களாதலின் அடிகள் பூங்கோயிலின்முன் போய் வணங்கி முறையிட்டு வீழ்ந்தனர்; திருவிளையாடற் புராணத்துள் வரும் வரலாறுகள் பலவும் காண்க. **வீழ்தல்**-முறைகிடத்தல்.

என்னை அவமானம் செய்ய-சிவன் பணியும் தாமும் இணைபிரியாது பிணைக்கப் பட்டுள்ளமையால் திருப்பணிக்கு நேர்ந்த முட்டுப்பாடு தமக்கு நேர்ந்த அவமதிப்பாகக் கருதினர் அடிகள். **நைவதானேன்-நைதல்**-மனம் உடைதல்; **இது**-அவமானத்தால் திருப்பணிக்கு நேர்ந்த முட்டுப்பாடு; **அடியேற்கு நல்கும்**-இதற்குத் தீர்வினை அடியேன் பெறவருளும்; அஃதாவது அங்குக்கூறிய சூளுறவு முற்றுப்பெற அருளுவதனுல் அத்திருப்பணி முற்றுப்பெறக் காணும் பேறு **அடியேன்** பெற; பின்னர் அரசனுக்கு இறைவராணை "அவன் கருத்தை முடிப்பாய்" *(3605)* என நிகழ, அவ்வாறே சூளுறவு முற்றக்கண்டு அரசன் முறை செய்து தானே சமணரது "பாழி பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து" *(3615)* வந்து அடிகளடி பணியும் நிகழ்ச்சி காண்க. **11**

3603. **(இ-ள்)** பழுது... துயில-குற்றத்தினைப் போக்குவாராகித் திருத்தொண்டர் முன் கூறியவாறு துதித்து விண்ணப்பஞ் செய்து வணங்கிப் போய்த் தமது திருமடத்தினுள்ளே புகுந்து தூய்மையாக்கும் திருப்பணியினைச் செய்யப் பெறுமையினுலே அழுது அன்று இரவு அவர் துயில்கொள்ள; கனவில்-அவரது கனவிலே; அகில... அருளிச்செய்கின்றார் - எல்லா உலகங்களையும் முற்றும் காக்கின்ற முதல்வராகிய சிவபெருமான் அவர் முன்னே தோன்றி நின்று அருளிச் செய்கின்றாராகி,

3603. பழுது தீர்ப்பார் திருத்தொண்டர் பரவி விண்ணப் பஞ்செய்து
தொழுது போந்து மடம்புகுந்து தூய பணிசெய் யப்பெரு
தழுது கங்கு லவர்துயிலக் கனவி லகில லோகங்கண்
முழுது மளித்த முதல்வனார் முன்னின் றருளிச் செய்கின்றார், 12

(வி-ரை) பழுது **தீர்ப்பார்-விண்ணப்பஞ் செய்து** என்று கூட்டுக; இறைவர்பால் விண்ணப்பஞ் செய்தலே பழுது தீர்க்கும் வழியாம் என்று கண்டு அதனை செய்து; **தீர்ப்பார்**-தீரும் வழியினைத் தேடுவார்.

தூயபணி செய்யப் பெறாது அழுது-தாம் செய்யும் பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்து பணிசெய்ய இயலாதபோது பெரிதும் வருந்துவது அடியார் தன்மை. அவர்கள் இஃதேயன்றி வேறு வருத்தம் அறியார்; உலகர் பல துறையிலும் காணும் பாசஅழுகை அவர்பால் நிகழாது; இவ்வாறே சமணச் சார்புடைய மன்னன் தமது சந்தனப் பணியை முட்டுப்படுத்தியபோது மூர்த்தி நாயனார் சிந்தை நொந்து "இப்பாதகன் மாய்ந்திட இப்புவி திருநீற்று நெறிநிற்கும் மன்னரைச் சார்வது எப்போது?" என்று இறைவரை வேண்டிய வரலாறும், பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

அகில லோகங்கள் முழுதும் அளித்த முதல்வனார்-அகிலம்-என்றதனால் அண்டங்களின் எண்ணிக்கை முற்றும் என்பதும், **முழுதும்** என்றதனால் அவற்றிற் செல்லும் ஆணைவகைகள் முற்றும் என்பதும் பெறவைத்தார்; எல்லாவுலகங்களிலும் எல்லா ஆணையும் என்க.

அளித்தல்-இங்கு ஆக்குதலும் காத்தலும் குறித்தது. "நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான், நெறியில் வழுவில் நெருஞ்சில்முட் பாயும்" (திருமந்) என்றபடி முருட்டு அமணர்களை அளித்தவரும் சிவநெறியினை வகுத்தவரும் அவ்விறைவரே; ஆயின், உயிர்களின் பக்குவ நிலைக்கேற்பக் கன்மானுபவத்தின் பொருட்டுப் படைக்கப்பட்ட புறச்சமயங்கள் தம்மளவினைத் தவறி மீறிக் கேடு விளைக்கும்போது அவற்றை ஆக்கிய அவரே அவற்றை முறை செய்வர் என்பது தெளிவிக்க இங்க "முழுதும் அளித்த" என்ற தன்மையாற் கூறினார்.

முன்னின்று-தாமாந்தன்மை அறிய வெளிப்பட்டு எழுந்தருளி; **முன்னிற்றல் -** மறைந்த நிலையினின்றும் வெளிப்படுதல்; **நீங்கி**-(3604) என்றது மிவ்வாறே வெளிப்பட்ட நிலையின்றும் மறைதல் குறித்தது.

அருளிச் செய்கின்றார்-முற்றெச்சம். அருளிச் செய்கின்றாராய்-என்றருளி என மேல்வரும் பாட்டின் எச்சவினையுடன் இயைக்க. 12

3604. **(இ - ள்)** "நெஞ்சில்... ...அஞ்சவேண்டாம்" என்றருளி - மனத்துட் பொருந்தும் கவலையினை நீ தீர்வாயாக; உன் கண்கள் விழித்து அந்த அமணர்கள் தமது கண்கள் மறையுமாறு நீ காண்பாய்; அஞ்ச வேண்டாம் என்று அருளிச் செய்து; அவர்பால் நீங்கி - அவரிடம் நின்று மறைந்தருளி; அவ்விரவே... அருள்புரிவார்-அந்த இரவிலே

3604. "நெஞ்சின் மருவுங் **கவலையினை யொழிநீ; நின்கண் விழித்தந்த**
வஞ்ச வமணர் தங்கண்கண் மறையு மாறு காண்கின்றாய்;
அஞ்ச வேண்டா"வென்றருளி, யவர்பா னீங்கி யவ்விரவே
துஞ்சு மிருளி லரசன்பாற் றோன்றிக் கனவி லருள்புரிவார், 13

உறங்கியிருக்கும் இராப்போதிலே அரசனிடத்தில் கனவில் தோன்றி அருள் செய்வாராய்,

(வி-ரை) நெஞ்சி... நீ-"தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது" (குறள்) என்ற கருத்து ஈண்டுச் சிந்திக்கற்பாலது; மனக்கவலையினை மாற்றும் ஆற்றல் இறைவனுக்கும் அவனருள் வழி அவனேயாய் நிற்கும் எந்தம் பெருமக்களாகிய பரமாசாரியர்களுக்குமே இயல்வதாகும். ஏனையோர் செய்வனவெல்லாம் உபசார மாத்திரையா யொழியுமென்க; **நீ ஒழி**-என்பது ஒழி நீ என வந்தது விரைவுபற்றி; அன்றியும் கண்விழித்துக் காண்கின்றாய் எனப் பின்வரும் வினைகட்கும் எழுவாயாகிய நீ என்பது அவற்றின் அணிமையில் நிற்கவேண்டிய நிலைபற்றியுமாம். "கவலை ஒழி" என்ற துன்ப நீக்கத்தினும் "காண்கின்றாய்" என்ற இன்ப ஆக்கத்தின் அணிமையில் அடிகளாரை ஆக்கும் கவிநயக் குறிப்பும் காண்க.

காண்கின்றாய்-காண்பாய் என்னும் எதிர்காலத்தை நிகழ்காலத்தாற் கூறியது விரைவும் உறுதியும் குறித்தற்கு.

நின்...மறையுமாறு-இஃதே அடிகள் அமணர்கள்பால் உரைத்த சூளுறவு; இறைவரருளை முன்னிட்டு உரைத்தாராதலின் அதனை உண்ணின்று கேட்ட இறைவர் அவர்தாம் வேண்டுமதனையே யருளுகின்றார். **வஞ்ச அமணர்**-வஞ்சனையாற் கூறிய அறவுரையினைக் குறித்தது. **மறையும் ஆறு**-மறையும் நிலை; **மறையும் மாறு** எனப்பிரித்து அடிகளின் விழியா நிலை அமணர்களது விழித்த கண்ணிற் கண்டது மாறி, அவர்களது விழியாதநிலை அடிகளது விழித்த கண்ணிற் காண என்று, இடமும் நிலையும் மாறப் பெறும் என்ற குறிப்புப்பட உரைக்கவும் நின்றது.

அஞ்ச வேண்டா-இவ்வாறு அபயங்கொடுக்கும் வன்மை சிவபெருமானுக்கே யியைவதாம், முழுமுதற்றன்மையும் எல்லாம் வல்லவ ராதற்றன்மையும் உடைமையால் என்க. "வெஞ்சம னஞ்ச வேலொ டெதிர்ந்தால் நமரங்காள், அஞ்சலெனுஞ்சொ லார்சொல வல்லார் நமரங்காள், மஞ்சிவ ரிஞ்சி மன்ற மிறைஞ்சீர் நமரங்காள், நஞ்ச மயின்றார் நல்குவர் மாதோ நமரங்காள்" (குமரகுருபர்-சிதம்பரச் செய்யுள் கோவை-40). அரனருள் பெற்றாரும் அஞ்சலளிக்க வல்லார்: "பயப்படேல்" (2377).

அவ்விரவே அரசன்பால்...அருள் புரிவார்-அடிகளையும் அரசனையும் இருவரையும் பொருத்தல் செய்யும் நிலையாதலின் இருவர்பாலும் சாரும் வகையை இவ்வொரு பாட்டிற் கூறிய நயம் காண்க **அவ்விரவே**-என்ற கருத்துமிது. இறைவரது திருவருளின் விரைவும் குறிப்பு. **துஞ்சும் இருளில்**-துயிலும் வேளை.

தங்கள் கண்—என்பதும் பாடம். *13*

3605. "தண்டி **நமக்குக் குளங்கல்லக் கண்ட வமணர்** தரியாராய்
மிண்டு செய்து **பணிவிலக்க வெகுண்டா** னவன்பா னீமேவிக்
கொண்ட குறிப்பா லவன்கருத்தை முடிப்பா" யென்று கொளவருளித்
தொண்ட ரிடுக்க ணீங்கவெழுந் தருளினரைத் தொழிலுவப்பார், 14

3605. **(இ-ள்)** "தண்டி...முடிப்பாய்" என்று கொள அருளி-தண்டி நமக்காகக் குளம் கல்லுதலைக் கண்ட அமணர்கள் பொறுதவர்களாகி வலிமை செய்து அந்தத் திருப்பணியைத் தடுத்துவிட அவன் வெகுண்டிருந்தான், அவனிடம் நீ சென்று அவன் உட்கொண்ட குறிப்பினலே அவனது கருத்தினை நீ முடிப்பாயாக! என்று அரசன் மனத்துட் கொள்ளும்படி அருளிச் செய்து; தொண்டர்...உவப்பார் - தொண்டரது இடுக்கண் நீங்கும்படி பண்ணி எழுந்தருளினர் அத்தொழிலினை மகிழ்வாராகிய இறைவர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) தண்டி...என்று-இஃது அரசனுக்கு இறைவர் உணர்த்தியருளியது.

தண்டி என்றதனல் அவர் பெயரும், **நமக்குக்குளம் கல்ல** என்றதனல் அது சிவன் பணியாதலும், **கண்ட அமணர் விலக்க**-என்றதனல் புறச்சமயிகள் தீக்குணம் தலைநின்று செய்த கொடுமையும் சிவன்பணிக்கு இடையூறும், **அவன்பால் நீ மேவி** என்றதனல் அரசனை நடைபெறும் முறையும், **கொண்ட குறிப்பால்**- என்றதனல் சூளுறவு தெரிந்து முடிக்கவேண்டிய அமைவும், **அவன் கருத்தை முடிப்பாய்** - என்றதனல் அவர்மேற் கொண்ட பணிவிடையினை நீயே முற்றுவித்தலுடன் புறச்சமயி களால் இனி இடையூறு நேராதவகை பண்ணவேண்டிய முடிபும் கூறிய நயம் கண்டு கொள்க; **கொள** - மனங்கொள்ள; கனவிற் கண்ட பொருள் நனவில் மறத்தலுமுளதாத லின் அவ்வாறு மாறுது மனத்தினுள் நிலைபெற்றுணரும்படியும், ஐயங் கொள்ளாதபடியும்.

அத்தொழில் உவப்பார்-அடியார் இடுக்கண் நீங்கச் செய்யும் அத்தொழிலின் கண்மகிழ்ந்து அருளுவாராகிய இறைவர். **தொழில்**-திருப்பணி என்றலுமாம்.

நீங்க-நீங்கும்படி நியமித்த படியினல் அது நீங்கியதாக. **14**

3606. **(இ-ள்)** வேந்தன்...போற்றி-அரசன் அக்கனவினைக் கண்டு அப்போதே துயில் நீங்கி உடம்பில் மயிர்க் கூச்செறிய அழகிய கொன்றைப் பூவினைச் சூடிய இறைவரைத் துதித்து; புலர-பொழுது விடிய; தொண்டர்...விளம்பத் - திருத்தொண்டரிடத்துச் சார்ந்து தன்பாற் கனவில் நிகழ்ந்ததனைச் சொல்ல; (அதுகேட்டுத்) தம்பிரானர்...இயம்புவார் - தம் பெருமானரது திருவருளை நினைந்து பொருந்திய அரசன் கேட்க இவ்வாறு புகுந்த நிலையினைச் சொல்வாராகி,

(வி-ரை) அது கண்டு-கண்டு-கனவில் கண்டதும் கேட்டதுமாகிய நிகழ்ச்சிகளையும் குறித்தது.

3606. வேந்தனதுகண் டப்பொழுதே விழித்து மெய்யின் மயிர்முகிழ்ப்பப்
பூந்தண் கொன்றை வேய்ந்தவரைப் போற்றிப்புலரத் தொண்டர்பாற்
சார்ந்து புகுந்த படிவிளம்பத் தம்பி ராணு ருணினைந்தே
ஏய்ந்த மன்னன் கேட்பவிது புகுந்த வண்ண மியம்புவார், 15

3607. "மன்ன! கேள்யான் மழவிடையார் மகிழுந் தீர்த்தக் குளங்கல்லத்
துன்னு மமண ரங்கணைந்"தீ தறமன்" றென்று பலசொல்லிப்
பின்னுங் கயிறு தடவுதற்கியான் பிணித்த தறிக ளவைவாங்கி
என்னை வலிசெய்தியான்கல்லுங் கொட்டைப்பறித்தா" ரென்றியம்பி 16

அப்பொழுதே விழித்து-நல்ல கனுக்கள் கண்ட உடனே விழித்துப் பின்தூங்காது விழித்திருந்து திருநீறு அணிந்து இறைவரை நினைந்திருத்தல் வேண்டும் என்பது விதி.

புலர-பொழுது விடிய; விடிந்தவுடன் முதற் செயலாக அரசன் அக்கனவின்படி செயல் செய்யத் தொடங்கினுன்; **புலர** என்றதனுல் இக்கனவு வைகறைப் போதில் நிகழ்ந்த தென்பதும் கருதப்படும்.

தொண்டர்பாற் சார்ந்து-"அவன்பால் நீ மேவி" (3605) என்று ஏவல் பெற்றுனதலினுல் அவரைத் தன்னிடத்துக்கு அழைக்காது அவனிடம் சென்று சேர்ந்து. "அவரழைக்க வொட்டான்" (பூசல்-புரா-13) பார்க்க.

புகுந்தபடி-இறைவர் தனது கனுவில் அருளிய வரலாற்றின் படியினை.

புகுந்த வண்ணம்-நிகழ்ந்த செய்திகளை; **இது - இயம்புவார்** என்று கூட்டுக. இது இவ்வாறு. *15*

3607. **(இ-ள்)** மன்னகேள்-அரசனே நீ கேட்பாயாக; யான்...கல்ல-நான் இளமை பொருந்திய விடையினையுடைய இறைவர் மகிழும் தீர்த்தக் குளத்தைத் தோண்டி அகழ; துன்னும்... சொல்லி - நெருங்கும் அமணர்கள் அங்கு வந்து ஈது அறமன்று என்று பலவாறும் வாயினுற் கூறி; பின்னும்... என்றியம்பி-அதன்மேலும், கையாற்றடவி வழி கண்பதற்காக யான் கயிறு கட்டிய நடுதறிகளையும் பறித்து என்னை வன்மை செய்து யான் மண் கல்லுதற்கு வைத்திருந்த கொட்டையும் பறித்தார்கள் என்று சொல்லி,

(வி-ரை) மழவிடையார் மகிழும்-இறைவர் மகிழ்ந்து விழாக் கொண்டு வீற்றிருந்தருளும்.

துன்னும் அமணர் அங்கு அணைந்து-யான் ஒருவன் பணி செய்ய, அமணர் தொகுதியாய்க் கூடி வந்தனர் என்றும், அவர்கள் அங்கு வரவேண்டா நிலையினராயினும் வலிந்து இகலுக்காக வந்தனர் என்றும் குறித்தவாறு.

விடையார்... கல்ல - என்றதனுல் அது சிறு பணியாதலும், **ஈது அறமன்று என்று பலசொல்லி** - என்றதனுல் சிவதருமத்தை அவர் இகழ்ந்தனர் என்பதும் குறிப்பிட்டவாறு; **பல சொல்லி**-என்றதனுல் அவ்வாறு பல நிந்தை மொழிகளைக்

3608. **அந்தணனை வுனக்கறிவு மில்லை** யென்றார்; யானதனுக்
"கெந்தை பெருமா னருளால்யான் விழிக்கி லென்செய்வீ"ரென்ன
"இந்த வூரி லிருக்கிலோ" மென்றே யொட்டி னா;ரிதுமேல்
வந்த வாறு கண்டிந்த வழக்கை முடிப்ப"தெனமொழிந்தார். 17

கூறியதுவும், அவற்றை வாக்கினாற் சொல்லலும் ஆகாது என்பதும் போந்தபடி.

பின்னும் - இகழ்ந்து நிந்தை பகர்ந்ததன்றி மேலும் தொடர்ந்து; **வாங்கி** - வலிந்து பிடுங்கி. **வலி செய்து**-வன்கண்மை செய்து.

இயம்பி-மொழிந்தார்-என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *16*

3608. **(இ-ள்)** அந்தணனை...என்றார்-விழிக்குருடாகிய உனக்கு அறிவு மில்லை என்றார்கள்; யான்... என்ன - அதற்கு நான் எம் பெருமானருளினால் நான் கண் பெற்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று கூற; இந்த... ஒட்டினார் - இந்த ஊரில் பின்னை நாங்கள் இருக்கமாட்டோம் என்றே ஒட்டிக் கூறினார்கள்; இது... மொழிந்தார் என்றார் - "இஃதே மேல் நிகழ்ந்தபடியாம்; இதன் உண்மை நிலை கண்டு இந்த வழக்கினை முடிப்பாயாக" என்று கூறினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) முன்பாட்டிற் கூறியவை அமணர் செய்த சிவாபசாரம். இப்பாட்டிற் கூறுபவை அடியார்பால் அவர்கள் செய்த அபசாரம்.

அந்தணனை...என்றார்-காரணமின்றி வலியவந்து ஒருவரை - அதன்மேலும் சிவன்பணி செய்யும் ஒருவரை-இகழ்ந்த செயல் என்பது.

எந்தை... ஒட்டினார்-அரசன் கண்டு தீர்க்கவேண்டிய வழக்கின் நிலையினை முடித்து எடுத்துக் கூறியபடி.

விழிக்கில்-கண் ஒளிபெற்றால். "**நுங்கண் குருடாய்**" (3600) என்று அமணர் கண்ணிழக்கக் கூறியதனை மேற்சூளுறவு கூறும் இடத்து எடுத்துக் கூறப்படுதலாற் பெறவைத்தார்; வேறு கூறவேண்டாத சிறுபொருளாதலின் இங்குக் கூறாது விடுத்தனர். **ஒட்டினார் - ஒட்டுதல்** - பந்தயம் வைத்து நிபந்தனை கூறுதல். "ஒட்டியே செய்வது" (2696).

கண்டு-ஒப்பநாடி வழக்கின் உண்மை கண்டு.

முடிப்பது-தகவொறுத்து நிறைவாக்குக. *17*

3609. **(இ-ள்)** அருகர்...இசைந்தார்-அமணர்களை அரசனும் அவ்விடத்தே அழைப்பித்துக் கேட்க அவர்களும் அதனுக்கு இசைந்தார்கள்; மருவும்... நின்று - பொருந்திய தொண்டராகிய தண்டியடிகள் முன்னே செல்ல, அரசன் அவர்பின்னே சென்று கமலாலயக் குளத்தின் அருகில் நின்றுகொண்டு; விறல்... காட்டும் என- விறலுடைய

3609. அருகர் தம்மை யரசனுமங் **கழைத்துக் கேட்க வதற்கிசைந்தார்**
மருவுந் **தொண்டர் முன்போக,** மன்னன் பின்போய் மலர்வாவி
அருகு நின்று **விறற்றண்டி யடிக** டம்மை முகநோக்கிப்
"பெறுகுந் தவத்தீர்! **கண்ணருளாற் பெறுமா**காட்டு"மெனப்பெரியோர், 18

தண்டியடிகளாரது முகத்தினை நோக்கிப் பெருகும் தவத்தினை உடையவரே! திரு அருளினாலே நீர் கண்பெறும் நிலையினைக் காட்டுவீ ராக! என்று கூற; பெரியோர்-பெரியவராகிய தண்டியடிகள்.

(வி-ரை) அருகர்... இசைந்தார்-முன் "தொண்டர்பாற் சார்ந்து" (3606) என்றதும், இங்கு "**அருகர் தம்மை அங்கு அழைத்து**" என்றதும் ஆகிய வேறுபாடு கருதத்தக்கது. முறை சொல்வானும் முறை சொல்லப்பட்டானும் நீதி அரசன் முன்பு ஒன்று போலவே சாரவும் செலுத்தப்படவும் கடவர் என்பது அரச நீதி முறையாயிருப்பவும், இங்கு இவ்வேறுபாட்டினால் அரசன் நீதிமுறை கோடினான் என்ன வாராதோ? எனின், வாராது; என்னை? இறைவரால் "அவன் பால் நீ மேவி" (3605) என்று கட்டளையிட் டருளப் பெற்றானதலின் அரசனே அவர்பாற் செல்லவேண்டியதாயினது நியதியாதலின் என்க; அன்றியும் ஈண்டுத் "திருவாரூர் காவல்கொண்டு தனியாளுங் கடவுட்பெருமா" னாகிய தியாக ராசர் திருவாயில் முன்பு தொண்டர் சென்று (3602) முறையிட்டுள்ளா ராதலின் அரச நீதிமுறை பிறழாமையும் கண்டுகொள்க. இராசாதி ராசராகிய தியாகராசரது ஆணையின் முறைவழியே அமைந்து முறை செய்யவுள்ளவன் நிலவேந்தனாதலின் ஆணைப்படி அவர் சேவகனாக இங்குத் தொண்டர்பால் வந்து சார்ந்தான். இதனால் திருத்தொண்டின் பெருமை உணர்த்தியவாறு மாயிற்று.

அங்கு அழைத்துக் கேட்க-தம்முள் மாறுபட்டு வழக்கினுட்பட்ட இருதிறத் தவரையும் அரசன் தன் முன்னே எதிர் எதிர்நிறுத்தி அவ்வவர் வாய்மொழி கேட்டு முறை செய்யும் நீதிமுறை பற்றியது. "அரசனுஞ் செய்வ தீசனருள்வழி" (சித்தி).

அதற்கு இசைந்தார் - அதற்கு-தண்டியடிகள் கூறிய வழக்கின் நிலைக்கு; **இசைந்தார்;** வழக்கின் நிகழ்ச்சியின் உண்மையினை ஒப்பியதன்றி, எடுத்துக்கூறிய சூளுறவு நிலைக்கும் தமது இசைவினை அறிவித்தார். வழக்கு நிலைபெறுத்தி முடிக்கும் முறைகள் இரண்டு; (1) வழக்கு மேலிட்டணைந்த இருதிறத்தினரின் இசைவு இருக்குமாயின், அஃது உலகியல் நீதிக்குப் பொருந்துமாயின் அவ்வழியே முடித்தல் ஒன்று; இதனை Decision on admission என்பர் நவீனர். (2) அவ்வாறு இசைவு இல்லாத போது ஆட்சி-ஆவணம்-அயலார் காட்சி என்ற சான்று முறைகளை ஊன்றிக் கண்டு முடித்தல் மற்றொன்று. ஈண்டு அமணர்கள் வழக்கு நேர்ந்த நிகழ்ச்சியினையும் ஒப்பினர்; ஒட்டிய சூளுறவின்படி அரசன் கண்டு செய்யும் முடிவுக்கும் உட்பட உடன்பட்டனர். ஆதலின் அரசன் அவ்வாறே கண்டு முடிக்கும் நிலை காண்க. திருவாலவாயில் புனல் வாதத்தில் அமணர் ஒட்டி இசைந்தபடி முறை செய்த நிலை ஈண்டுக் கருதத்தக்கது; வழக்கு முடிக்கும் நீதிமுறை பற்றி முன்னர்த் தடுத்தாட்கொண்ட புராணத்துள் உரைத்தவை பார்க்க (197-209 பார்க்க.) ★

★ இவைபற்றி சேக்கிழார் 64 - 73 பக்கங்கள் பார்க்க.

3610. "**ஏய்ந்த வடிமை சிவனுக்கியா னென்னி** லின்றென் கண்பெற்று
வேந்த னெதிரே திருவாரூர் விரவுஞ் சமணர் கண்ணிழப்பார்;
ஆய்ந்த பொருளுஞ் சிவபதமே யாவ" தென்றே யஞ்செழுத்தை
வாய்ந்த தொண்ட ரெடுத்தோதி மணிநீர் வாவி மூழ்கினுர். 19

தொண்டர் முன்போக-தாம் முறைபாடிட்டவ ராதலானும் திருவருள்பெற்ற திருத்தொண்டின் உறைப்பாகிய வீரத்தானும் தண்டியடிகள் முன் சென்றனர் என்க. தடுத்தாட்கொண்ட புராணத்திலும் வழக்குரைத்த வேதியர் தண்டூன்றி முன் சென்றமையும் ஏனையோர் அவர்பின் சென்றமையும் (195-196) கருதுக.

மலர்வாவி-தண்டியடிகள் மண் கல்லி எடுத்த தீர்த்தக் குளமாகிய கமலாலயம்.

மன்னன்-திருவாரூர், சோழமன்னர் அரசு புரியும் தலைநகரங்களுட் சிறந்த தாதலின் சோழ அரசர் என்பது கருதப்படும்; திருநகரச் சிறப்புக் காண்க.

முகநோக்கி-கண்காணுராதலின் முகநோக்கிக் கேட்கலாயினன்.

பெருகும் தவத்தீர்-பெருகும்-(3592) பெருமைத்தவம் என்ற முன்னைத் தவமும், திருவருளால் மேலும் பெருகவுள்ளது என்ற மேற்சரித விளைவுக்குறிப்பும் காண்க. இறைவரது திருவருளை அரசன் கனவில் உணர்ந்தானுதலின் இவ்வாறு கூறினுன் என்க.

நீர் அருளாற் கண் பெறுமா காட்டும்-என்க; **ஆ**-ஆறு என்பது கடை குறைந்து நின்றது.

பெரியோர்-செயற்கருஞ் செயல் உலகறிய நிகழச் செய்யும் இடம் இஃதாதல் குறிக்க இப்பெயராற் கூறினுர்; "செயற்கரிய செய்வார் பெரியர்" (குறள்).

பெரியோர்-என்றே-ஓதி-மூழ்கினுர் என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 18

3610. **(இ - ள்)** ஏய்ந்த...என்னில்-சிவனுக்கு யான் பொருந்திய அடியவனே யாகில்; இன்று... இழப்பார்-இன்று இவ்வேந்தனெதிரே யான் என் கண் பெற்றுத் திருவாரூர் விரவும் சமணர்கள் கண்களை யிழப்பார்கள்; ஆய்ந்த...ஆவது என்றே-ஆய்ந்து துணிந்த முடிபாகிய பொருளும் சிவபதமேயாவதாம் என்ற சூளுறவு மொழிந்து; அஞ்செழுத்தை... மூழ்கினுர்-திருவைந்தெழுத்தினை வாய்ந்த திருத்தொண்டர் எடுத்து ஓதி அழகிய நீர்வாவியினுள்ளே முழுகினுர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) ஏய்ந்த-முன்பொருந்திய அடிமைத் திறத்தால் வந்தது; "தவமும் தவமுடையார்க் காகும்" (குறள்).

என் கண் பெற்று-நான் என்ற எழுவாய் தொக்கு நின்றது.

வேந்தனெதிரே-என்றதனை ஈரிடத்தும் கூட்டுக.

திருவாரூர் விரவும்-முன்னின்றித் திருவாரூரில் புதிதாக வந்து புகுந்து உள்ள என்றது

3611. தொழுது புனன்மே **லெழுந்தொண்டர் தூயமலர்க்கண்** பெற்றெழுந்தார்;
பொழுது தெரியா வகையமரர் பொழிந்தார் செழுந்தண் பூமாரி;
இழுதை யமணர் விழித்தேகண் ணிழந்து தடுமா றக்கண்டு
"பழுது செய்த வமண்கெட்ட" தென்று மன்னன் பகர்கின்றான்; 20

குறிப்பு. புதிதின் வந்தவராதலின் தமது தீச்செயல் காரணமாக அதனின்றும் துரத்தப்படவும் உள்ள நிலைக்குறிப்பு.

ஆய்ந்த பொருள்-வேதாகம முதலிய எல்லா ஞான நூல்களானும் ஆய்ந்து கண்ட முடிவான பொருள்.

சிவபதம்-திருவைந்தெழுத்து;வேதாகமங்களின் முடிந்த முடிபு எல்லாம் அதனுள் அடங்குதல் பெரியோர் வாய்க் கேட்டுணரத்தக்கது.

சிவபதம்-சிவன் திருவடி என்றலும் குறிப்பு.

அஞ்செழுத்தை ஓதி-திருவருள் வெளிப்படும் நிலை காணும் செயலாதலின் அஞ்செழுத் தோதினர்; "தழைத்த வஞ்செழுத் தோதின ரேறினர் தட்டில்" *(544)*; "அஞ்செழுத்தோதி...பொய்கையின் மூழ்கினர்" *(1635)*; "அஞ்செழுத்தோதி யேறினர்" *(2114)* என்பன முதலியவை பார்க்க.

எடுத்து-உச்ச சுரத்தில் கூறி உச்சாடன கர்மத்திற்கு இங்ஙனம் உரத்த சுரத்தில் காயிக முறையில் மந்திரங்களைச் செபித்தல் வேண்டும் என்பர். தமது புறக்கண்ணின் அந்தத் தன்மை நீங்கிக் கண் காணுதலும், அமணர் அந்தராதலும் உச்சாடன கர்மத்தின்பாற்படும். வரும் பாட்டிற் பார்க்க;—(இது சிவப்பிரகாச தேசிகர் குறிப்பு.)

இன்னே கண் பெற்று—என்பதும் பாடம். *19*

3611. **(இ-ள்)** தொழுது...எழுந்தார்-இறைவரருளைத் தொழுது நீரின் மேல் எழுகின்ற தொண்டர் தம் தூய மலர்போன்ற கண்களின் ஒளிபெற்று எழுந்தார்; பொழுது... பூமாரி - ஞாயிற்றினை மறைத்தலால் பொழுது தெரியக்கூடாதபடி தேவர்கள் செழிய குளிர்ந்த (மந்தார முதலிய) தெய்வ தருக்களின் மலர்மாரி பொழிந்தனர்; இழுதை... கண்டு-அறிவில்லாத அமணர்கள் விழித் திருந்தபடியே தம் கண்களை இழந்து தடுமாறுதலைக் கண்டு; பழுது...பகர்கின்றான்-தீமை செய்த அமண் சமயம் கெட்டது என்று முடித்து அரசன் சொல்வானாகி;

(வி-ரை) தொழுது - இறைவரருளைத் தொழுது கொண்டவாறே.

தூய மலர்க்கண் பெற்று-தூய-என்பது அவருடைய கண்களின் முன்னை நிலையினையும், **மலர்க்கண்**-என்றது அழகும் ஒளியும் பெற்ற பின்னிலையினையும் குறித்தன.

பொழுது-பொழுதினை-காலத்தினை-அறிவிக்கும் சூரியனைக் குறித்தது; ஆகுபெயர்.

இழுதை-அறிவில்லாதவர்களாகிய. "இழுதையர்க் கெளியே னலேன்" (பிள். தேவா).

விழித்தே கண் இழத்தல்-என்றது கண்கள் செவ்வே யிருப்பவே ஒளியிழத்தல்.

3612. "தண்டி யடிக டம்முடனே யொட்டிக் கெட்ட சமண்குண்டர்
அண்டர் போற்றுந் திருவாரூர் நின்று மகன்று போய்க்கழியக்
கண்ட வமணர் தமையெங்குங் காணு வண்ணந் துரக்க"வென
மண்டி வயவர் சாடுதலும் கண்கள் காணூர் மனங்கலங்கி, 21

பழுது செய்த அமண் கெட்டது என்று-இஃது அரசன் நேரே கண்டு கூறிய முடிபு.

பகர்கின்றுன்-முற்றெச்சம்; **பகர்கின்றுனுகி - என** என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

20

3612. **(இ- ள்)** தண்டியடிகள்...துரக்க என-தண்டியடிகளோடு ஒட்டித் தாமே கெட்ட சமணர்களாகிய கீழ்மக்கள், தேவர்கள் போற்றுகின்ற இத்திருவாரூரினின்றும் நீங்கிப் போய்க் கழியும்படிக் கண்ட விடத்தே அமணர்களை எங்கும் இனிக் காணுதபடி துரத்துக என்று சொல்ல; வயவர் மண்டிச் சாடுதலும்-வீரர்கள் நெருங்கிச் சாடியதனுலே; கண்கள் காணூர் மனங்கலங்கி-கண்ணொளியிழந்தவர்களாகிய அவ்வமணர் மனங்கலங்கி.

(வி-ரை) ஒட்டிக் கெட்ட-ஒட்டிச் சபதம் கூறியதனுல் தங்களைத் தாங்களே கேடு செய்துகொண்ட.

அண்டர் போற்றும் திருவாரூர் நின்றும்-அகன்று-தேவர்களும் போற்றும் பெருமையுடைமையால் கீழ் மக்களாகிய இவர்கள் அங்கிருக்கும் தகுதியற்றவர்கள் என்பது குறிப்பு. **அண்டர்களும்**-எனச் சிறப்பும்மை தொக்கது.

கண்ட அமணர் காணுவண்ணம் சொல் அணிநயம்; முரண்டொடை; **கண்ட**-பல இடத்தும் இருக்கக்கண்ட; **எங்கும் காணுவண்ணம்**-எவ்விடத்தும் இல்லாதபடி.

துரக்க-இருக்கவொட்டாமல் ஓட்டுக.

வயவர் மண்டி என்க. **மண்டி** - நெருங்கி; கூடி; **சாடுதல்**-புடைத்தல்.

கண்கள் காணூர்-கண் ஒளியிழந்தமையால் காண இயலாதவர்களாய்; சினைவினை முதலுடன் முடிந்தது; **காணூர்**-வினைப்பெயர்; முற்றெச்சமாகக் கொள்ளலுமாம்.

மனம் கலங்கி-விழுவாரும்...மயங்குவாரும் ஆயினர் என மேல்வரும் இரண்டு பாட்டுக்களுடனும் கூட்டி முடிக்க.

21

3613. **(இ- ள்)** வெளிப்படை. குழியில் விழுவார்களும், நிலைதளர்வார்களும், (தடவிச் செல்ல) ஊன்றுகோலும் இல்லையே என்று கூறுவார்களும், ஈதுவழி என்று எண்ணிச் சென்று புதர்களை அடைவார்களும், நாம் இறந்து போனேம் என்று சொல்வார்களும், மதிகெட்டவர்களே! அழியும் பொருளை நம்பிச் சபதம் செய்து இங்கு நாம் அழிந்தோம் என்பார்களும், ஈது அரசனுக்குப் பழியாகுமோ? (ஆகாது) என்பார்களும், (உடுத்த) பாய்களையும் இழப்பார்களுமாகி அந்தப் பறிதலையுடைய அமணர்கள்.

3613. குழியில் விழுவார்; நிலைதளர்வார்;"கோலுமில்லை"யெனவுரைப்பார்
"வழியீ"தென்று தூறடைவார்;"மாண்டோ"மென்பார்; மதிகெட்டீர்
"**அழியும்பொருளை வட்டித்திங் கழிந்தோ**"மென்பா;"**ரரசனுக்குப்**
பழியீதாமோ? வென்றுரைப்பார்; பாய்க ளிழப்பார் பறிதலையர்; 22

(வி-ரை) குழியில் விழுவார்...வழியீதென்று தூறடைவார் - கண் காணாமையால் வழிநடப்பார் இவ்வாறு துன்புறுவர்; கண்ணுளார்க்கும் இருளிரவில் இவ்வாறு நிகழ்வதுண்டு; "கட்புலன் றெரியாது கொட்புறு மொருவதற்குக், குழி வழி யாகி வழிகுழி யாகி, யொழிவின் றுன்றி ஞென்றுதடு மாற, வந்தாற் போல" (பட்டினத்தார்-திருக்கழுமல மும்மணிக்கோவை-10)

கோலுமில்லை-கோல்-ஊன்றுகோல்; கோல் வழிதடவி யறிந்து செல்லவுதவுவது; ஆளுடைய நம்பிகளுக்குத் திருவொற்றியூரில் கண் மறையத் திருவெண்பாக்கத்தில் இறைவர் ஊன்றுகோல் அருளிய வரலாறு காண்க; ஊன்றுகோலிலாதார் காலினற் றடவிச்சென்று வழியறிவர். "காலினற் றடவிச் சென்று" (457)

தூறு-புதர்; இவை வழியருகில் முளைத்துள்ள குறுமுட் செடிகள்; **தூறு-**கல்லும் மண்ணு மொதுக்கித் தூற்றப்பட்டமையால் வழிகளி னருகில் குவிந்துள்ள சிறுமேடுகள் என்றலுமாம்.

மாண்டோம்-வழி யறியாது செல்வதனல் இடறி வீழ்ந்து மாள்வது நிச்சயம் என்ற கருத்து; உறுதி பற்றி இறந்த காலத்தாற் கூறியதாம்; மாள்வது போன்ற துன்பம் எனவந்த இரக்கச்சொல் லென்றலுமாம்.

மதி கெட்டீர்-தம்மினத்தவரை நோக்கித் தாமே இழித்துரைத்துக் கொண்டது; **மதிகெட்டோம்** என்ற பாடமுமுண்டு.

அழியும் பொருளை வட்டித்து இங்கு அழிந்தோம் - வட்டித்தல் - ஒட்டுதல்; சபதம் கூறுதல். **அழியும் பொருள்-**நம்பியிருந்த தம்மைக் காப்பாற்ற வியலாது தமக்கு அழிவு தேடித் தந்துவிட்ட தம் சமயக் கொள்கைகள்; **பொருள்-**பொருளை "நம்பி" என்க. "நம்பி"என்பது இசையெச்சம். **வழிபட்டு-**என்ற பாடமுமுண்டு.

அரசனுக்குப் பழியீதாமோ?- ஆமோ?வின ஆகாது என எதிர்மறை குறித்தது; **ஈது-**இவ்வாறு வயவரைக் கொண்டு சாடித் தம்மை ஊரினின்றும் துரத்துதல்.

பாய்கள்-சமணர்களின் உடையாகிய தடுக்குக்கள். பாய் உடுப்பது அவர்கள் வழக்கு; வழிச் செலவுக்கு உதவும் உடையாகப் பாய் வேண்டினர் என்பது. "பறிதலைக் கையர் பாயுடுப் பார்களை" (பிள். தேவா).

பறிதலையர்-அமணர்கள் தலைமயிர் பறித்தல் அவர்கள் சமய ஒழுக்கங்களுள் ஒன்று; இங்கு நேரிட்டதுன்பத்தினலே தலைமயிர் பறித்துத் துக்கித்தவர் என்றலுமாம். 22

3614. **(இ-ள்)** வெளிப்படை. (தாம் கையில் ஏந்தும்) மயிற்பீலிக் கற்றையினைக் காணது பெயர்ந்து செல்வார்களும். (சொல்லாது) நின்று மயங்குவார்களும், காலினேடு

3614. பீலி தடவிக் காணுது பெயர்வார்;நின்று பேதுறுவார்;
காலி ஞேடு கைமுறியக் கன்மே லிடறி வீழ்வார்கள்
சால நெருங்கி யெதிரெதிரே தம்மிற் ருமே முட்டிடுவார்;
மாலு மனமு மழிந்தோடி வழிக ளறியார் மயங்குவார்; 23

கைகள் முறியும்படிக் கல்லின்மேல் இடறி வீழ்வார்களும் மிகவும் நெருக்கமாகச் சென்று எதிரெதிரே தம்மில் தாமே முட்டிக் கொள்வார்களும், மயங்கும் மனமும் உடைந்து வழிகள் அறியார்களாய் மயங்குவார்களும் (ஆயினர்);

(வி-ரை) பீலி-மயிற்பீலிக் கற்றை; மயிற் பீலியினைக் கையிலேந்திச் செல்லுதல் அமணர் வழக்கு. இதனுல் வழியில் எறும்பு முதலிய பிராணிகள் பட்டிறவாது வழி தடவிச் செல்வரென்ப. இங்கு ஊரைவிட்டுத் துரத்தப்பட்டு வழிச் செல்கின்ருராதலின் இதனை வேண்டினர் என்பது; தடவித்தேடி என்றதுமிது.

நின்று-பீலி காணுது பெயர்வார் சிலரும், அதனுல் பெயராது நிற்பார் சிலரும் என்பதாம். **பேதுறுதல்**-செயலறியாது திகைத்தல்; **பேது**-பேதைத்தன்மை.

தம்மிற்ருமே முட்டிடுவார் - உடல் மோதுதலுடன், அறிவினுன் மயங்கி ஒருவரையொருவர் மாறுகொண்டு கலாய்ப்பர் என்றலுமாம்; "கந்தியர் தம்மிற் ருமே கனன்றெழு கலாங்கள் கொள்ள வந்தவா றமணர் தம்மின் மாறுகொண் டூறு செய்ய" (2538); தண்டியடிகளுடன் கலாய்த்து ஒட்டி இவ்வாறு அரச தண்டனை விளைவித்தார் அவர்களுள் ஒருசிலரேயாக, அவர்களால் எல்லாருக்கும் நேர்ந்த துன்ப நோக்கி அவருள்ளே கலாய்த்தல் இயல்பாம்.

மாலும்-மயங்கும்; பெயரெச்சம். **மனமும்** - இவ்வாறு பலவும் சிந்தித்து வழிதேடுதற்குத் துணை காண மயங்கிய நிலையிலேனும் துணை காணும் கருவியாய் எஞ்சி நின்ற மனமும் உடைந்து மேலே சிந்திக்கவும் இயலாமல் என்று உம்மை சிறப்பும் எச்சமுமாம்.

வழிகள்-மேற்செயலாவன வழிகள். 23

3615. **(இ-ள்)** அன்ன...கண்டு-அவ்வாருகிய நிலையில் திருவாரூரில் உள்ள அமணர்களது கலக்கத்தினைக் கண்டு; அவர்...துரந்ததற்பின்-அவர்கள் தாங்களே ஒட்டிச் சபதங் கூறி யிசைந்தபடி அவர்களை ஊரில் இல்லாத வண்ணம் ஓடத் தொடர்ந்து துரத்தியபின்; பன்னும்...கரைபடுத்து-சொல்லிய அமணர்களின் பாழிகளையும் பள்ளிகளையும் பறித்து இடித்துக் குளத்தினைச் சூழ்ந்த கரையினை உரியபடி அகலமாகச் செய்து; மன்னனவனும்...பணிந்தான்-அரசனவனும் மனமிக மகிழ்ந்து வந்து தண்டியடிகளை அடிவணங்கினுன்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) அன்னவண்ணம் ஆரூரில் அமணர் கலக்கம் கண்டு-அன்ன வண்ணம் (மன்னன்)-கண்டு என்க; அரசன் கண்ட நிலையினை வைத்து ஆசிரியர் சரித வரலாறு

3615. அன்ன வண்ண மாரூரி **லமணர் கலக்கங் கண்டவர்தாஞ்**
சொன்ன வண்ண மேயவரை யோடத் தொடர்ந்து **துரந்ததற்பின்**
பன்னும் **பாழி பள்ளிகளும் பறித்துக் குளஞ்சூழ் கரைபடுத்து**
மன்ன னவனு மனமகிழ்ந்து வந்து தொண்ட ரடிபணிந்தான். 24

கூறுகின்றாராதலின் இன்ன வண்ணம் என்னாது அன்ன என்றார். சேய்மையாராதலின் சேய்மைச் சுட்டினுற் கூறிய குறிப்புமாம்.

அமணர் கலக்கங் கண்டு- "அமணர் கண்ணுங் கிழப்ப வமணர் கலக்கங் கண்ட"(திருவந்தாதி 37)என்ற வகைநூ லாட்சி போற்றப்பட்டது; **கலக்கம்** - ஈண்டுச் சபதம் கூறியவாறே கண்ணிழந்தமையால் அமணர் கொண்ட மயக்கம் என்ற பொருளில் வந்தது; **கண்டு** - கண்டமையால்; **கண்டு துரந்ததற்பின்** என்று கூட்டுக; (3591) பார்க்க; கனவில் இறைவராணைவழி நின்றுனுயினும் அரசநீதி முறைப்படி உலகறியச் சபதத்தின்படி அமணர்கள் கண்ணிழந்ததனை நேரே கண்டபின்பே முறை செய்தனன் என்க.

அவர்தாம் சொன்ன வண்ணமே-அவர் தாமே தண்டியடிகளிடம் ஒட்டிய தன்றித் தன் முன்னரும் இசைந்தபடியே; "அதற்கிசைந்தார்" (3609); **தாம்**-தாமே; பிரிநிலை ஏகாரம் தொக்கது; பிறரெவரும் சொல்லாது தாமே; **வண்ணமே**-அரசன் விதிக்கும் குற்றத் தண்டனையின் அளவு அவர் தாம் கூறிய அளவே என்றபடி; அந்த அளவு ஊரில் இரோம் என்றபடி அவ்வூரில் நில்லாது செய்தல்; இஃது மிகையும் குறைவுமின்றி அக்குற்றத்துக்கேற்றபடி அமைதலான் என்பது; "தீங்கு செய்த தன்மையாற் சாலு மென்றே, மிகையிலா வேந்தன் செய்கை" (2752) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. "நீமெய் கண்ட தீமை காணின், ஒப்ப நாடி யத்தக வொறுத்தி" (புறம்).

ஓடத்தொடர்ந்து துரந்ததற் பின்-ஓடும்படி சாடித் தொடர்ந்து நகரெல்லைப் புறம் கடக்கத் துரத்தியபின்.

பன்னும் பாழி பள்ளிகளும் பறித்து...கரை படுத்து-பன்னும்-குளத்தின் கரை யெல்லையை ஆக்கிரமித்து இடத்தாற் குறைபாடு செய்து அங்குப் பாழியும் பள்ளிகளும் அமைத்துக் கொண்டனர் என்று முன் கூறப்பட்ட (3595); எடுத்துச் சொல்லப்பட்ட; **பள்ளிகளும் பறித்துக் - கரைபடுத்து**-இடத்தின் குறைபாட்டை நீக்கி அகல மாக்கும்படி குளம் கல்ல எண்ணினுர் தண்டியடிகள். ஆயின் அதனைச் செய்வதற்கு அவ்விடத்தில் அமணர் நிலையாக அமைத்துக்கொண்ட பாழி பள்ளிகளைப் பறித்தாலன்றி இயலாதாதலானும், அதனைச் செய்து கரை எல்லையினை அளவு படுத்துதல் அரசனுலன்றி யமையாமையானும் அரசன் அதனைச் செய்தனன் என்க; இந்நாளிலும் பொதுப் பயன்களுக்கு இடம் வேண்டின் அரசாங்கம் அதனை எடுத்து அளவுபடுத்தும் சட்டமுறை காண்க; (Acquisition of land for Public purposes; Land Acquisition Act). **கரைபடுத்தல்-**கரையினை எல்லைகண்டு அளவு படுத்துதல். (வழக்கு வென்ற அம்பலம் கடடுதற்கு வீடுகள் வாங்கியது காண்க.)

மன்னன் அவனும்-நில வேந்தனுன தன்மையேயன்றி, இறைவரருளப் பெற்ற தன்மையும் கூடியவன் என்பார் மன்னனும் என்னுது மன்ன**வனும்** என்றுர்; **அவன்-**முன் கூறியபடி அருளப்பெற்ற அவன் என முன்னறிசுட்டு.

3616. மன்னன் வணங்கிப் போயினபின் மாலு மயனு மறியாத
பொன்னங் கழல்கள் **போற்றிசைத்துப் புரிந்த பணியுங்குறைமுடித்தே**
உன்னு **மனத்தா லஞ்செழுத்து மோதி வழுவா தொழுகியே**
மின்னுஞ் சடையா ரடிநீழன் மிக்க சிறப்பின் மேவினர். 25

மன மகிழ்ந்து வந்து-அரச நீதிமுறையேயன்றி அருள் முறையும் முற்றியதால் உளதாகிய மகிழ்ச்சி.

அடி பணிந்தான்-இறைவரருள் பெற்ற தொண்டரை வணங்கு முகத்தானும் விடைபெறும் பொருட்டானும் பணிந்தனன் என்க; **தொண்டர்பால் சார்ந்து**-என முன்னர்ப் **பணிதல்** கூறாமை என்னை? எனின், அங்கு இருபாலும் வழக்கறுத்து உலகியல் நீதிமுறை செய்யப் போந்தானாதலின் வெளிப்பட வணக்கங் கூறிலர்; தானே சென்று அவர்பாற் சார்ந்தமையே வணக்கமாயிற் றென்பது. 24

3616. **(இ-ள்)** மன்னன்...பின்-முன் கூறியபடி அரசன் வணங்கி விடை பெற்றுச் சென்ற பின்னர்; மாலும்...போற்றிசைத்து-விட்டுணுவும் பிரமனும் அறியாத பொற்பாதங்களை வந்தித்து; புரிந்த...குறை முடித்தே-தாம் செய்த திருப்பணியின் குறையினை நிறைவாக்கி பின்பே; உன்னும்...ஒழுகியே-இடைவிடாது நினைக்கும் மனத்தினால் திருவைந் தெழுத்தினையும் ஓதி இவ்வொழுக்கத்தில் வழுவாத நிலையின் நின்றபடியே; மின்னும்... மேவினர்-ஒளி வீசும் சடையினை உடைய சிவபெருமானின் திருவடி நீழலாகிய மிகுந்த சிறப்பின்கண்ணே பொருந்தினர்.

(வி-ரை) மன்னன் வணங்கிப் போயினபின்-பணிந்தான் என்று (3615) முன்கூறி, இங்கு **வணங்கிப் போயின பின்** என்றமையால் **பணிந்து போயின** நிகழ்ச்சி இடையில் நிகழ்ந்தது என்பது குறிப்பெச்சம்.

போற்றிசைத்தல்-ஈண்டு இறைவர் தம்பாற் செய்த பேரருளின் பொருட்டு நன்றியினால் வந்தித்துத் துதித்தலைக் குறித்தது.

புரிந்த பணியும் குறை முடித்தே-புரிந்த பணி-அமணர்களால் இடையூறு வருவதன்முன் ஒழியா முயற்சியா லுய்த்த பணி. (3596); **குறை முடித்தல்**-செய்ய நின்ற குறையினை நிறைவாக்குதல்; **குறையாவது** அப்போதைக்கு அளவுபடுத்திச் செய்த செய்கைகளை நிலைபெற நிறைவாக்க எஞ்சிநின்ற பணிகள். **பணியும்**-உம்மை உயர்வு சிறப்பு; அமண்வென்று தூய்மையாக்கியதன்றி என்று எச்சவும்மையுமாம்.

உன்னும்...ஓதி-அஞ்செழுத் தோதியவாறே பணிசெய்து; "ஓது மெழுத்தஞ் சுடனுய்ப்பார்" (3596).

வழுவாது ஒழுகியே-சிவநெறியில் இடையறாது ஒழுகி; **வழுவுதல்**-இடையறுதல். ஏகாரம் தேற்றம்.

அடிநீழல் மிக்க சிறப்பின்-அடி நீழலே சிறப்பு எனப்படுவது; எல்லாப் பேறுகளிலுஞ் சிறந்தமைபற்றி வீடு சிறப்பெனப்பட்டது. "சிறப்பென்னுஞ் செம்பொருள்" (குறள்) 25

3617. **கண்ணின் மணிக ளவையின்றிக் கயிறு தடவிக் குளந்தொட்ட**
எண்ணில் பெருமைத் திருத்தொண்டர் பாத **மிறைஞ்சி யிடர்நீங்கி**
விண்ணில் வாழ்வார்தாம் வேண்டப் புரங்கள் வெகுண்டார் வேற்காட்டூர்
உண்ணி லாவும் புகழ்த்தொண்டர் மூர்க்கர் செய்கை யுரைக்கின்றும். 26

3617. **(இ-ள்)** கண்ணின் மணிகள்...இடர் நீங்கி-கண்ணின் மணிகளாகிய ஒளி யின்றிக் கயிற்றினைத் தடவி வழிகண்டு சென்று திருக்குளத்தினைக் கல்லிய எண்ணில்லாத பெருமையுடைய திருத்தொண்டராகிய தண்டியடிகளின் திருவடிகளை வணங்கி இடையூறு நீங்கப் பெற்று; விண்ணில்...உரைக்கின்றும்-வானுலகில் வாழும் தேவர்கள் வேண்டுதலுக் கிரங்கி முப்புரங்களையும் எரித்த இறைவரது திருவேற்காட்டூரில் அவதரித்த உள்ளே பெருகும் புகழினையுடைய தொண்டராகிய மூர்க்க நாயனாரது திருத்தொண்டாகிய செய்கையினைச் சொல்லப்புகுகின்றேம்.

(வி-ரை) இஃது ஆசிரியர் தமது முறையின்படி இதுவரைக் கூறிப்போந்த சரிதத்தினை முடித்துக்காட்டி, இனி வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தவாறு.

கண்ணின் மணிகள்-கண்களுள் ஒளி செய்யும் கூறு கண்மணியெனப்படும்.

கண்ணின்...குளந்தொட்ட-சரிதச் சுருக்கமும் சாரமுமாய் வடித்தெடுத்துக் காட்டியவாறு.

தொட்ட-தொடுதல்-தோண்டுதல்; கல்லுதல். "தொட்டனைத் தூறு மணற்கேணி" *(குறள்)*

எண்ணில் பெருமை-எண்ணத்தில் நிலவி நிற்கும் தன்மையுடைய பெருமை என்றலுமாம். (எண்-நில்)

இடர் நீங்கி-இடர்-இடையூறு; மேற் சரிதங் கூறுதற்கு வரக்கூடிய அறியாமை முதலிய அக இடர்களும், பிறரால் வரும் புற இடர்களுமாம்; **இறைஞ்சி** - இறைஞ்சு தலால் எனக் காரணங் குறித்தது; அவர் செய்த திருப்பணிக்கு விலக்காக வந்த இடையூறுகள் நீங்கித் திருப்பணி முற்றியவாறே அவர் சரிதங் கூறி எமக்கு அவரைப் பணிந்ததன் பயனை-துணையாக-மேற்சரிதங் கூறும் பணியில் வரும் இடையூறுகள் நீங்கி எமது பணியும் நிறைவேறும் என்பது "**இடர் நீங்கி**" என்றதனுற் போந்த குறிப்பு.

உள் நிலாவும் புகழ்-சூது என்ற தன்மையாற் புறத்தில் இகழ்ச்சியாய்க் காணும் செயலே அகத்துள் அடியார் பணியாகிய புகழாக நிலவிற்று என்று சரிதக் குறிப்புப்பட நிற்பது காண்க. ***26***

சரிதச் சுருக்கம்: தண்டியடிகள் திருவாரூரில் பிறக்கும் தவமுடையார்; சிவன் கழலல்லது வேறு காணாத அகநோக்குடைமை யன்றிப் புறநோக்கில் வேறு காணார் என்ற குறிப்பினாற் கண் துறந்தார் போலப் பிறவியந்தகராய் அவதரித்தவர்; சிவன் மெய்த்தொண்டினையே காணும் கண்ணாற் காண்பது என்ற துணிவினாலே சிவன் கழலே போற்றிப் பரவித் திருத்தொண்டிற் சிறந்தனர்.

நாடோறும் திருத்தேவாசிரியன் முன் வணங்கித் திருவைந்தெழுத்தினை ஓதித் திருக்கோயிலினை வலஞ் செய்து வந்தனர்.

அந்நாளில் திருக்கோயிலின் மேல்பால் இறைவரது தீர்த்தக் குளமாகிய கமலாலயத்தின் கரையில் எங்கும் ஆக்கிரமித்து அமணர் பாழிகளும் பள்ளிகளுமாய் அமைத்தனராதலின் குளம் இடத்தாற் குறைபாடுற்றது. அதனை அறிந்த தண்டியடிகள் அக்குளத்தினை உரியபடி கல்லி அகலப்படுத்திப் பணிசெய்ய எண்ணினார். அதற்கு வழியறிதற்காகக் குளத்தினை அகலமாக்கும் குழிவாயில் தறிநட்டுக் கயிறு பிணித்து, அதனைக் கரையின்மேல் நட்ட தறியினுடன் இறுகப் பிணித்து, அதனைத் தடவி வழியறிந்து மண் கல்லி எடுத்து மேலே கொட்டித் திருவைந்தெழுத்தினையும் இடையறாது உடன் ஓதிக்கொண்டு பணி செய்தனர்.

அதனைக் கண்ட அமணர்கள் பொறாராகித் தண்டியடிகள்பால் வந்து "மண்ணைக் கல்லிற் பிராணிபடும்; வருந்தவேண்டாம்" என்று தருமோபதேசம் செய்தனர்; அடிகள் அதற்குச் "சிவன் பணி எதுவோ அஃதே அறமாவது; அதனை நீர் அறிவீரோ?" என்றார். அதுகேட்ட அமணர் அவரை இகழ்ச்சி செய்து, "நாங்கள் சொன்ன அறத்தினைக் கேளாய்! கண்ணிழந்தது போலக் காதும் இழந்தனையோ?" என்று அவமதித்துரைத்தனர். அது கேட்டு அடிகளார் "மந்த உணர்வும் குருட்டுக்கண்ணும் செவிட்டுக் காதும் உங்களுக்கே இந்த உலகத்துள்ளன; சிவபெருமானின் திருவடிகளல்லாது வேறு ஒன்றனையும் கண்ணாற் காணா நிலையுடையேன் யான்; அதனை அறிதற்கு உமக்கு என்ன தகுதி; நீங்கள் உணர்வும் கண்ணுமிழந்து, என் கண் காணப்பெற்றால் நீங்கள் யாது செய்வீர்?" என்று கேட்டனர். அதுகேட்டு, அவ்வமணர் "உன் தெய்வத்தின் அருளால் நீ கண் பெற்றாற் பின்னை நாங்கள் இவ்வூரில் இருக்கமாட்டோம்" என்று எதிர் மொழி கூறி அவர் கையினின்றும் கொட்டை வலிந்து பற்றி எறிந்து அவர் வழியறியக் கட்டிய தறியுடன் கயிற்றையும் பறித்தெறிந்தனர்.

அது கண்டு தண்டியடிகள் வெகுண்டு, இறைவரது பூங்கோயிலின் முன் வந்து வணங்கி, "ஐயனே! இன்று அமணர் என்னை அவமானஞ் செய்ததனால் மனமுடைந்தேன்; அது தீர அருளவேண்டும்" என்று முறையிட்டு வீழ்ந்தனர்; பின்பு தமது மடத்துட் புகுந்து, தூய பணிசெய்யப் பெறாமையின் அழுது துயின்றனர். இறைவர் அன்றிரவு கனவில் எழுந்தருளி "உன் கவலை ஒழிக! உன் கண் விழித்து அந்த வஞ்ச அமணர் கண் மறைதல் காண்பாய்" என்று அருளினர். அவ்விரவே அரசன் கனவிலும் இறைவர் எழுந்தருளி "தண்டி நமக்குக் குளங்கல்லக் கண்ட அமணர் மிண்டுசெய்து பணி விலக்கினர்; அவனிடம் நீ சென்று அவன் உட்கொண்ட குறிப்பினால் அவனது கருத்தை முற்றுவிப்பாய்" என்றருளிச்செய்தனர்.

அரசன் உடனே விழித்து உடல் சிலிர்த்து எழுந்து இறைவரை வணங்கிப், பொழுது புலர்ந்ததும் அடிகள்பால் வந்து, கனா நிகழ்ச்சியினைச் சொல்லினன். அது கேட்ட அடிகள்

அவனிடம் அந்நாள் முன் நிகழ்ந்தவற்றை எல்லாம் கூறித், தம்மிடம் அமணர் ஒட்டிய செய்தியினையும் அறிவித்து, இந்த வழக்கின் உண்மை கண்டு முடிக்க என்று வேண்டினர். அரசன் அமணர்களை அங்கு அழைத்துக் கேட்க அவர்களும் அதற்கு இசைந்தனர்.

அரசன் அடிகளாரை "நீவிர் கண்பெறு நிலையினைக் காட்டுவீராக" என்றான். அவர் திருவைந்தெழுத்தை ஓதி, நிகழ்ந்த சூளுறவை எடுத்துக் கூறிக் குளத்தின் மூழ்கிக், கண் செவ்வே விழித்து எழுந்தனர்; வானவர் பூமாரி பொழிந்தனர். உடனே அமணர்கள் கண்ணிழந்து மயங்கினர்.

அரசன் பழுது புரிந்த அமணர்களே குற்றப்பட்டார்கள் என்று கண்டனன்; வயவர்களை ஏவி அமணர்களை அவர் இசைந்தவாறே அத்திருநகரத்தில் எங்கும் இல்லாதவாறு ஓடத்துரத்தினன். அவர்கள் குளக்கரையினை ஆக்கிரமித்துக் கட்டிய பாழிகளையும் பள்ளிகளையும் இடித்து எறிந்து குளக்கரையினை எல்லைப்படுத்தி, அடிகளாரை வந்து பணிந்து விடைகொண்டு சென்றனன்.

அடிகளார் சிவபெருமான் திருவடிகளைத் துதித்துப், பணியினையும் குறை முடித்துத், திருவைந்தெழுத்தினை இடையறாது ஓதித் திருத்தொண்டினெறி வழாது ஒழுகிச் சிவன் றிருவடி நீழலை அடைந்தனர்.

கற்பனை:

1. திருவாரூரில் பிறக்கும் தன்மை முன்னைப் பெருந்தவத் தாலன்றி வராது. *(3592)*

2. தவமுடைய பெரியோர் அகநோக்கிலே சிவன் கழலே கண்டு கொண்டிருப்பர்; வேறு காணார். *(3592-3600)*

3. புறநோக்கம் பெறின் பரத்தினையன்றிப் பதார்த்தங்களையும் பார்க்க வருமாதலின் அகநோக்கிற் சிவமே கண்டிருக்கும் தவமுடையோர் புறநோக்காகிய கண் பார்வையினையும் வேண்டார் *(3592)*; ஆனால் அத்தன்மையோர் புறநோக்கும் வரப் பெற்றால் அகம் புற மிரண்டினாலும் சிவனையே காண்பாராதலின் நாட்ட மிக்கவராவார். *(3593)*

4. சிவன் பணிகள் செய்யும்போது ஓயாது நாவினால் திருவைந்தெழுத்தினைக் ஓதிக்கொண்டே செய்தல் வேண்டும்; அப்போது மனத்தாற் சிவன் கழல் சிந்தை செய்தலும் வேண்டும். *(3494-3495-3616)*

5. ஆறு-குளம் முதலிய தீர்த்தக் கரைகளில் இடத்தாற் குறைபாடு நேரும்படி ஆக்கிரமித்து மக்கள் குடியிருப்புத் தானங்களை அமைத்துக்கொள்ளுதல் மாபெருஞ் சிவாபராதம் *(3595)*; இந்நாளில் இச்செயல்களே உலகில் மிக்குக் காணப்படுவதும், விரும்பப்படுவதும் மிக வருந்தத்தக்கன.

6. தண்டியடிகள் பிறவியந்தகராயிருந்தும், குளம் கல்லும் கடிய வேலையினைக் கண்டு, மேலும் கீழும் தறிநட்டுக் கயிறு பிணித்துத் தடவி ஏறியும் இறங்கியும் பணி செய்தனர். இது சிவன் பணியில் வைத்த உறைப்பினாலன்றி இயலாத தொன்று *(3596)*; கண்ணும், பிற கருவி கரணங்களும் வசதியாகப் பெற்றிருந்தும் மக்கள் அரன் பணியின் பால் சிறிதும் அவற்றை ஆக்காமல் வீணே நாள் கழித்து இறந்தொழிகின்றார்; அந்தோ!

7. சுயநலத்தை உள்வைத்து மறைத்துச் சிவன் பணிக்கு இடையூறாகிய சொற் செயல்களை நிகழ்த்திப் புறத்தே பற்பல அறவுரைகளைக் காட்டி உண்மையை மறைத்து நடிக்கும் வஞ்சமாக்கள் அநேகர் உண்டு; அவர்கள்பால் சிவாபராதம் செய்த குற்றமும், வஞ்சித்த குற்றமும் கூடிப் பன்மடங்கு சிவன் றண்டம் வரும். *(3590 - 3601 - 3613 - 3614)*.

8. சிவாபராதத்தை நீக்கச் சிவன்பால் முழுநினைவுடன் முறைப்பட்டால் சிவன்றானே வெளிப்பட்டு மக்கள் யாராலும் இயலாத வண்ணம் அவ்வபராதங்களுக் கேற்ற தண்டம் செய்வன். *(3602-3605)*

9. மனம்வருந்திச் சிவன்பால் முறைப்பட்ட தண்டியடிகளிடம் இறைவர் கனவில் தோன்றி "நெஞ்சின் மருவுங் கவலையினை ஒழிநீ" என்று தேற்றி, அவர் சொன்னவாறே சூளுறவு நிறைவேற அருளினர். *(3604)* "தனக்குவமை யில்லாதான் றாள் சேர்ந்தார்க் கல்லான், **மனக்கவலை மாற்ற** லரிது" (குறள்); ஒருவர்க்கு நேர்ந்த மனக்கவலையினைச் சிவனையே யன்றி ஏனைப்பிறர் எவரும் மாற்றுவர் என்பதெல்லாம் உபசாரமாத்திரையேயாம்.


10. சிவன் கட்டளைப்படியே செல்வானாயினும், அரசன் நீதிமுறை செய்யுங்கால் வழக்குட்பட்ட இருதிறத்தவரையும் முன் வைத்து நீதிப்படி விசாரித்து உண்மை கண்ட பின்னரே நூல்முறை விதிப்படி உரியதண்டஞ் செய்தல் வேண்டும். *(3606-3611)*

11. மன்னன் நீதிமுறைத் தண்டம் செய்யுங்கால் வழக்குட்பட்ட இருவரிசைவு கொண்டேனும்; அன்றி, ஆட்சி-ஆவணம்-காட்சி என்ற தக்க சான்றுகள் கண்டேனும்; உண்மைகண்டே தீர்ப்புச் செய்தல் வேண்டும். *(3609-3615)* "அதற்கிசைந்தார்", "அவர் தாம் சொன்ன வண்ணம்."

12. குற்றத்தண்டம் மிகையும் குறையுமின்றி அவ்வக் குற்றத்துக் கேற்றவாறு நூன்முறை வழக்குத் தகுதியுடைத்தாய் அமைதல் வேண்டும். *(3613)*

13. குற்றத் தண்டம் அக்குற்றம் செய்தாரும் ஒப்பும்படி அமைதல் வேண்டும்.


14. தீர்த்தக்குளம், ஆறு முதலிய தெய்வத் தானங்களில் இடங்களின் எல்லைகளை அளவறுத்துப் பாதுகாத்துவருதல் அரசன் கடமையும் மக்கள் கடமையும் ஆம். *(3615)*



மூர்க்க நாயனார் (கார்த்திகை - மூலம்)

திருவேற்காடு

பாட்டு-3618




திருவேற்காடு கோயில் கருப்பக்கிருகம் தெற்குப்புறம் மதிலிலிருந்து பார்வை




திருவேற்காடு-சுவாமி சந்நிதி



திருவேற்காடு-வேலாயுத தீர்த்தம்



திருவேற்காடு-கோயில் உள்தோற்றம்



கச்சித் திரு அநேகங்காவதம் (உள்ளிருந்து பார்வை) - பாட்டு-3346

படம்-20

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

32. மூர்க்க நாயனார் புராணம் (12 திருப்பாடல்கள்)

தொகை

"(நாட்டமிகு தண்டிக்கு) மூர்க்கர்க்கு மடியேன்"

—*திருத்தொண்டத்தொகை-(5)*

வகை

தண்டலை சூழ்**திரு வேற்காட்டூர்** மன்னன் **றகுகவற்றுற்**
கொண்டவல் லாயம்வன் **சூதரை வென்று**முன் கொண்டபொருண்
முண்டநன் னீற்ற **னடியவர்க் கீபவன் மூர்க்க**னென்பர்
நண்டலை நீரொண் **குடந்தையின்** மேவுநற் **சூதனையே.**''

—*திருத்தொண்டர் திருவந்தாதி-(38)*

விரி

3618. மன்னிப்பெருகும் பெருந்**தொண்டை வளநாட**தனில்வயல்பரப்பும்
நன்னித் திலவெண் டிரைப்பாலி **நதியின் வடபா லைங்கொள்பதி**
அன்னப் பெடைகள் குடைவாவி யலர்புக் காட வரங்கினிடை
மின்னுக் கொடிக டுகிற்**கொடிகள் விழவிற்காடு வேற்காடு.** 1

புராணம்:- இனி, நிறுத்த முறையானே, ஆறுவது வம்பறு வரிவண்டுச் சருக்கத்துள், ஐந்தாவது மூர்க்க நாயனுர் புராணம் கூறத் தொடங்குகின்றுர். மூர்க்க நாயனுரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி.

தொகை:- மூர்க்கர் என்ற பெயரினையுடைய நாயனுருக்கும் நான் அடியேனுவேன்; **மூர்க்கர்க்கும்**-தண்டிக்கும் மூர்க்கர்க்கும் என்ற உம்மை எண்ணும்மை. இதனுல் இந்நாயனுரது பெயரும் பண்புக் குறிப்பும் கூறப்பட்டன.

வகை:- தண்டலை...மன்னன்-சோலைகள் சூழுந் திருவேற்காட்டூரின் தலைவர்; தகு கவற்றுல்...வென்று - தக்க சூதாடுதலில் சூதாடு கருவியால் வரும் பந்தயப் பொருளை வலிய சூதர்களை வென்று; முன்...ஈபவன் - முன் தான் ஈட்டிய பொருளை எல்லாம் திருநெற்றியில் நல்ல நீற்றினை உடைய சிவனடியவர்களுக்குக் கொடுப்பவன்; மூர்க்கனென்பர் ... சூதனையே -நண்டுகள் அலைதற்கிடமாகிய நீர்வளமுடைய திருக்குடந்தைப் பதியில் வாழும் நற்சூதனை மூர்க்கன் என்று பெயர் சொல்லுவர்.

குடந்தையின் மேவு நற்சூதனைத் திருவேற் காட்டூர் மன்னன், தகுகவற்றுற் கொண்ட பொருள் அடியவர்க்கீபவன், மூர்க்கன் என்பர் என்று முடிபுகொள்க.

கவறு-சூதாட்டம். கவறு-சூதாடுதல்; கவறுங் கழகமும்" (குறள்); இஃது இங்கு ஆகுபெயராய்ச் சூதாட்டத்தைக் குறித்தது; சூதாட்டத்திற் கைக்கொண்ட என்க; உருபுமயக்கம்; வல்-சூதாடு கருவி; "வல்லப் பலகை" (கலித்); ஆயம்-ஊதியம்; லாபம்; சூதாடு கருவியால் வரும் பந்தயப் பொருளாகிய தாயம் என்க; வல் ஆயம்-வல்லால் வந்த ஆயம்; ஆதாயம்; பரிமேலழகர் வடமொழித் திரிசொல் என்பர்; "உருளாயம்... பொருளாயம்" (குறள்); கவருடல்-சூதாடுதல்; நண்டு அலை நீர்-நண்டுகள் அலைதல் கவருடு கருவிகளின் அசைவுபோல உள்ளதென்பர்; சரித முற்குறிப்புப்பட இத்தன்மையால் நகர்வளங் கூறினார். "அலவனாடும் வகைபோல் அரும்பொற் கவறங் குருள" (சீவக); ஆயம்-சூதாடு கருவி; வன்சூதர்-சூதில் வலிந்து வஞ்சித்து மறுப்போர் (3626); முண்ட நன்னீற்றன்-சிவன்; குடந்தையின் மேவும் - திருவேற்காட்டூரினின்றும் குடந்தையிற் சென்று சேர்ந்த; நற்சூதன்-சூதாடுதல் ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்றென்பது நீதிநூல்; ஆயினும் அதனைச் சிவன் அடியார்க் கமுதாக்க எண்ணிப் பயன்படுத்தி, அதனால் தீமையினையே நல்லதாக ஆக்கினவர்; "நற்சூதர் மூர்க்கரெனும் பெயர்" (3626).

தொகை நூல் நாயனாரது பெயரினை எடுத்துரைத்தது; வகை நூல்-ஊரும் பெயரும் சரிதவரலாறும் திருத்தொண்டின் றிறமும் வகுத்தோதிற்று; இவை விரிந்தபடியை விரிநூலுட் கண்டுகொள்க.

3618. (இ-ள்) மன்னி...அதனில்-நிலைபெற்றுப் பெருகும் பெரிய தொண்டை வளநாட்டிலே, வயல் பரப்பும்...நலங்கொள் பதி-வயல்களில் பரப்புகின்ற நல்ல முத்துக்களை வீசும் அலைகளையுடைய பாலி ஆற்றின் வடகரையில் நன்மையுடைய பதியானது; அன்னப்பெடைகள்...புக்காட-பெட்டை அன்னங்கள் தாம் நீர்குடைந்தாடுகின்ற வாவிகளில் உள்ள தாமரை முதலிய பூக்களிற் புகுந்து நின்று ஆட; அரங்கினிடை... வேற்காடு-ஆடரங்குகளில் மின்னுக் கொடி போன்ற பெண்களும் துகிற் கொடிகளும் விழாக்களின்போது ஆடுதற்குரிய திருவேற்காடு என்பதாம்.

(வி-ரை) வேற்காடு-பதி-என்று பெயர்ப் பயனிலை கொண்டு முடிந்தது.

மன்னி...பதி-நாட்டுச் சிறப்பும் நகரச் சிறப்பும் ஆற்றுச் சிறப்பும் உடன் கூறும் நயமும், அதனை, வளநாடு-நித்திலத்திரை நதி-நலம் கொள்பதி என்ற ஒவ்வோர் அடைமொழிகளாற் கூறும் நயமும் கண்டுகொள்க. வயல் பரப்பும்-7-ம் வேற்றுமைத்தொகை.

கொடிகள் விழவிற்கு ஆடுதல்-நகரத்தின் மங்கல அணிச்சிறப்பு.

பெருந் தொண்டை வளநாடு - பெருமையாவது வாய்மை வழுவாத நன் மக்களுடைமை; வளநாடு -அந்நாளில் நாடுகளின் பெயர் வழங்குமுறை.

நித்தில வெண்திரைப் பாலி நதி-பாலி நதியின் வெள்ளப் பெருக்கினால் நீர் தெளிவின்றி வருதல் சில நாட்களேயாய்த், தெளிந்து வருதலே பல நாட்களாதலின் அக்குறிப்புப்பட வெண் திரை-என்ற சிறப்புடன் கூறினார்.

நலங்கொள் பதி-நன்மையல்லாத சூதினையும் நன்மையாய்ச் செய்துகொண்ட நாயனார் அவதரித்த பதி என்பது நலங்கொள் என்றதன் குறிப்பு; "தாம்முன்பு கற்ற தன்மை

3619. செம்பொற் புரிசைத்திருவேற்கா டமர்ந்த செய்ய சடைக்கற்றை
நம்பர்க் கும்பர்க் கமுதளித்து நஞ்சை யமுது செய்தவருக்
கிம்பர்த் தலத்தில் **வழியடிமை யென்றுங் குன்ரு வியல்பில்வருந்**
தம்பற் றுடைய நிலேவேளாண் குலத்திற் றலைமை சார்ந்துள்ளார். 2

நற்சூதால் (3623) என்பது காண்க. **நலங்கொள்**-நன்மை மிக்க. "நலங் கொள் காழி" (பிள்.தேவா).

குடைவாவி அலர்புக்கு-குடையும் வாவிகளில் உள்ள அலர்களின் மேற்புகுந்து என்று விரிக்க; **குடைதல்**-நீராடுதல்; "மாதரார் குடையும் பொய்கை."

அன்னப் பெடைகள் அலர் புக்கு ஆட - தாமரைப் பூக்களில் ஏறியிருந்து அசைய-ஊசலாட; **புகுதல்**-நீரினுள் நீந்திச் சென்று பூக்களில் ஏறி; "சேற்றெழுந்த மலர்க்கமலச் செஞ்சாலி கதிர்வீச, வீற்றிருந்த, வன்னங்காள்!" (தோணிபு-பழந்தக்-6); "செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு மிலைக் குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல், வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம் வீற்றிருக்கும் மிழலையாமே" (மேகரா-2.)

அன்னம் ஆட - கொடிகள் ஆடும்-அன்னங்கள் பொய்கைகளுள் வாவிகளாகிய நீரரங்கினிடை அலர் மேலாட, கொடிகள் நில அரங்கினிடை ஆடும் என்பது அணி நயம்.

மின்னுக் கொடிகள்-துகிற் கொடிகள்-மின்கொடி போன்ற பெண்களும், துகிற்கொடிகளும் என்று எண்ணும்மை விரிக்க. முன்னது உவமையாகுபெயர்; பின்னது பண்புத்தொகை.

விழவிற்கு ஆடும்-விழாவின் பொருட்டு ஆடுகின்ற; **துகிற் கொடிகள்**-வெண் கொடிகள்; "வீதித், தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடமாடுந் திருவையாறே" (மேகரா-6); "மாடந் தோறுங், கோதை சூழளகபாரக் குழைக்கொடி யாட மீது, சோதிவெண் கொடிக ளாடுஞ் சுடர்நெடு மறுகில்" (474).

அலர்புக்காட-விழவிற்காடு -இச்சரிதமுடைய நாயனர் முதலில் இங்கு ஆடிப், பின்னர், விழவிற் குடந்தையிற் சூதாடிய சரிதக் குறிப்புப்பட நகர்வளங் கூறிய கவிநயம் காண்க. இஃது ஆசிரியரது சிறப்பு.

விழ-விற்காடு வேற்காடு-சொல்லணி.

வேற்காடு-வேலமரங்களின் அடர்ச்சி பற்றியும், முருகப்பெருமான்திருக்கை வேல்பற்றியும் வந்த பெயர். தலவிசேடம் பார்க்க.

புடை வாவி—என்பதும் பாடம். *1*

3619. **(இ-ள்)** செம்பொன்...செய்தவருக்கு-செம்பொன் அணிந்த மதிலையுடைய திருவேற்காட்டில் விரும்பி யெழுந்தருளிய சிவந்த சடைக் கற்றையினையுடைய நம்பரும், தேவர்களுக்கு அமுதம் அளித்துத் தாம் விடத்தை அமுதாக உண்ட வரும் ஆகிய சிவபெருமானுக்கு; இம்பர்த் தலத்தில்...நிலை-இவ்வுலகத்தில் இம்மையிலே வழி வழியாக

வரும் அடிமைத் திறத்தினில் என்றும் வழுவாத தன்மையில் வருகின்ற தமது பற்றுடைய நிலையினையுடைய; வேளாண்...உள்ளார்-வேளாளர் குலத்தில் தலைமையாகிய நிலையினைப் பெற்றுள்ளார்.

(வி-ரை) நம்பர்க்கு அமுது செய்தவருக்கு-என்ற இரண்டும் சிவபெருமான் என்ற ஒரு பொருள்மேனின்ற அடையடுக்கு; **நம்பர்க்கு-செய்தவருக்குச் செய்யும்-அடிமை** என்க. "ஊரெரித்த, வப்பர்க் கமுதத் திருநடர்க் கந்திப் பிறை யணிந்த, துப்பர்க் குரிமைத் தொழில்புரி வோர்" (திருத்தொண்டர் திருவந்தாதி-1); இவ்வாறே "அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை" என்பது முதலாக இரண்டனுருபில் வரும் அடையடுக்குச் சிறப்பு அரசுகள் திருத்தாண்டகங்களுட் சிறக்கக் காணலாம்.

உம்பர்க்கு...செய்தவருக்கு-சிவனது கருணைத்திறங் குறித்தது; "பொங்கி நின்றெழுந் தகட னஞ்சினைப், பங்கி யுண்டதோர் தெய்வமுண் டோசொலாய்" (அரசு); **உம்பர்க்கு அமுதளித்து-நஞ்சை அமுது செய்தவர்**-தாம் விதித்த அறநூல் விதிப்படி சூதினால் வரும் தீமையினைத் தாம் ஏற்று, அதனை அடியவர்க்காக்கிய நலத்தினை நாயனாருக்கு அளித்த இச்சரித அருட்குறிப்புப்பட நின்றது.

இம்பர்த் தலம்-இந்நிலவுலகில்; இம்மையில்.

வழியடிமை என்றும் குன்றா இயல்பு -வழிவழி இருமரபும் சிவனடிமையி னின்றும் வழுவாத தன்மை; "மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையினார்" (*1915*); "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (முருகு); "சைவத்துறையின் வழிவந்த குடிவளவர்"(*1900*); "மறிவளருங் கையார் பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மையினா னதலினால்" (*2210*) என்பன முதலியவை காண்க. இவ்வாறு வழிவழி வரும் பெருமை வேளாண் குடிகளின் சிறப்புத் தொண்டை நாட்டிற்குச் சிறப்பாயுரியது; பழயனூர்த் திருவாலங்காட்டு வரலாறு பற்றி முன் கூறியவை காண்க. **இயல்பு**-செயற்கையானன்றித் தம்மோடுடனாய் மாறாது வரும் இயற்கை என்பது.

தம் பற்றுடைய நிலை-வழியடிமையாகும் இயல்புடனே தாந்தாமும் அப்பற்றுடன் வாழ்வார் என்பது; வழிவரு மியல்பேயன்றித், தம்பற்றின்றி வாழ்வாரும் உலகிற் பலராகுதல் காண்டலின் இவ்வாறு கூறினார்.

வரும் தம் குலத்தில்-என்க; **தம்** என்பது குலத்தை விசேடித்தது; **பற்றுடை நிலை**-அன்பின் உறுதியுடைய நிலைமையான என்க; **இயல்பின் வரும்**-முறைமைப்படி வரும் அன்பு என்க; "எம்பிரா னெந்தை தந்தை தந்தையெங் கூட்டமெல்லாம், தம்பிரா னீரே யென்று வழிவழிச் சார்ந்து வாழும்" (*3546*) என்றபடி இயல்பின் முறையால் வந்த பற்று;—(இவை ந.சிவப்பிரகாச தேசிகர் குறிப்புக்கள்.)

நிலை வேளாண் குலம்-வழியடிமையும் தம்பற்றும் உடைய நிலையே தமது பெருமையாம் என்று இறுமாக்கும் எண்ணம் வேளாண்மக்களுக்கு இந்நாளிலிருப்பக் காண்பு தரிதாகின்றது!

தலைமை சார்தலாவது-அக்குலத்தின் அப்பெருமையிற் சிறந்தொழுகுதல்.

3620. **கோதின்** மரபிற் பிறந்துவளர்ந்த **தறிவு கொண்ட நாட்டொடங்கி**
"ஆதி முதல்வர் **திருநீற்றி னடைவே பொரு**"ளென் றறிந்தரனர்
காத லடியார்க் கமுதாக்கி யமுது செய்யக் கண்டுண்ணும்
நீதி முறைமை வழுவாத நியதி பூண்ட நிலைமையார். 3

தலைமை சார்ந்துள்ளார்-இவரது இயற்பெயர் இன்னதென்று சொல்லப் பெறவில்லை. ***மூர்க்கர்*** என்பது பின்னர்ச் சரித நிகழ்ச்சியிற் போந்த காரணப் பெயர்; "நற்சூதர் மூர்க்கரெனும் பெயர்பெற்றார் நானிலத்தில்" (3626) என்பது காண்க; இயற்பகையார்-மெய்ப்பொருளார்-எறிபத்தர்-நாளைப் போவார்-என்பன முதலாகிய பெயர்களுங் காண்க. மெய்ப்பொருணாயனார் புராணம் பார்க்க; இயற்பெயர் வழங்காது காரணப் பெயர் வழங்குதல் ஒரு சிறப்பு என்க.

சார்ந்துள்ளார்-நிலைமையார்-(3620) என்பன அவர்தம் பண்புகளாற் சரிதங் கூறியவாறு. 2

3620. (இ-ள்) கோதில்...தொடங்கி-குற்றமில்லாத மரபிலே பிறந்து வளர்ந்து அறிவு தெரிந்த நாள் முதலாக; ஆதி...அறிந்து-ஆதி முதல்வராகிய சிவபெருமானது திருநீற்றின் சார்பே உண்மைப் பொருளாவது என்று அறிந்தாராகி; அரனர்... நிலைமையார்-சிவபெருமானடியார்களுக்கு அமுது ஆக்கி அவர்கள் முன்னே அமுதுண்ணக் கண்டு அதன்பின் தாம் உண்ணும் நீதிமுறை தவறாத நியமத்தினை மேற்கொண்ட தன்மையினை உடையாராயினர்.

(வி-ரை) கோதில் மரபு-வேளாளர் மரபு; ***மரபு***-குலத்தின் உட்பிரிவு என்றலுமாம்.

அறிவு கொண்ட நாள் தொடங்கி-அறிவு தொடங்கிய சிறுபருவ முதலே சிவநெறியி லன்பு கொண்டார்; இது முன்னைத் தவத்தால் வருவதாம். "பிறந்துணர்வு தொடங்கியபின்" (1052) என்றதும், "பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம்" (அற். அந்.) என்றதும், பிறவும் பார்க்க.

திருநீற்றின் அடைவே பொருள்-திருநீற்று நெறியாகிய சார்வே மெய்ப்பொருளாவது. ***அடைவு***-சார்பு. ***ஆதி முதல்வர்***-ஆதியாகிய முதல்வர்; ஆதிசத்தியுடன் கூடிய முதல்வர் என்றலுமாம்.

திருநீற்றின் அடைவே பொருள் என்றறிந்து அடியார்க் கமுது ஆக்கி அமுது செய்யக் கண்டுண்ணும்-நியதி-திருநீற்று நெறி நிற்பதில் ஒழுகும் சைவநெறி பலவற்றுள்ளும் இந்நாயனார் சிறந்ததென மேற்கொண்டு ஒழுகியது இந்நியமம் என்பது; அடியார்க்குத் திருஓடு கொடுத்தார், கீளும் கோவணமும் கொடுத்தார், வேண்டுவன கொடுத்தார் என் றித்திறத்தினர் பலர்; அடியார் பணியே யன்றிச் சிவன்பணி மேற்கொண்டாரும் பலர்; அவருள்ளே அடியார்க்காக அமுது ஆக்கி அடியாரை முன் ஊட்டிப் பின் உண்ணும் நியதியினை இந்நாயனார் மேற்கொண் டொழுகினர் என்க; இவர் சங்கமத்தால் முக்தியடைந்தவர் என்று வகுக்கப்பட்டனர்.

3621. **தூய** வடிசி நெய்கன்னல் **சுவையின்** கறிக ளவையமைத்து
மேய வடியார் தமைப்**போற்றி விருப்பா லமுது செய்வித்தே**
ஆய பொருளு மவர்வேண்டும் படியா லுதவி யன்புமிக
ஏயு மாறு நாடோறு **மினைய பணிசெய் தின்புற்றார்.** 4

3622. இன்ன செயலி னொழுகுநா ளடியார் மிகவு மெழுந்தருள
முன்ன முடைமை யானபொருண் முழுது மாள வடிமையுடன்
மன்னு காணி யான**நில மற்று முள்ள திறம்விற்றே**
அன்ன மளித்தே மேன்மேலு மாரா மனத்தா ராயினர். 5

காதலடியார்-தாம் காதல் பூண்டு ஒழுகிய அடியார்; சிவன்பாற் காதல் பூண்ட அடியார் என்றலுமாம்.

அடியார்க்கு அமுதாக்கி-அடியார்களுக்கென்று திருவமுது வேறே ஆக்குவித்து; **ஆக்கி**-ஆக்குவித்து எனப் பிறவினை.

கண்டு உண்ணும்-அவர்கள் அமுது செய்தலைத் தான் கண்டு பின் உண்ணும்; **கண்டு**-ஊட்டுவித்து மகிழ்ந்து. **நியதி**-இடையறாத கடமையாக.

முதலாந் திருநீற்றின் அடைவே என்பதும் பாடமாயின் எவற்றிற்கு முதலாகிய பூதிசாதன வழியே என்க. 3

3621. (இ-ள்) தூய...அமைத்து - தூய்மையுடைய அன்னமும், நெய் - வெல்லம் - சுவையுடைய இனிய கறிகள் என்ற இவைகளும் நன்கு அமையச் செய்து; மேய... செய்வித்தே - வந்து பொருந்திய அடியார்களை உபசரித்து முகமன் கூறி விருப்புடனே அமுது செய்வித்தே; ஆய...உதவி-ஆகிய ஏனைப் பொருள்களையும் அவ்வடியவர்கள் வேண்டியவாறே உதவி; அன்புமிக... இன்புற்றார் - அன்புமிகவும் பொருந்தும்படி நாள்தோறும் இத்தகைய பணியினைச் செய்து இன்பமடைந்தார்.

(வி-ரை) தூய-என்றதனை ஏனையவற்றுடனும் கூட்டியுரைக்குமாறு முதலில் வைத்தார்.

சுவையின் கறிகள் - சுவை - அறுசுவை; **இன்** - இனிய;

ஆய பொருள்-ஆய-அவர்களுக்கு விருப்பமாகிய; **பொருள்**-துகில்-பொன் முதலியன. **மிக ஏயுமாறு**-மிகவும் பொருந்தும்படி. **ஆய**-தம்மிடம் உளவாகிய.

பணி செய்து இன்புற்றார்-பணி செய்தலின்கண் அது கண்டு இன்புறும் தன்மையே வேண்டப்படுவது; "அமுது செய்யப்பெற்று இங்கு அவர்தம் மலர்ந்த முக நன்று காண்பது" (சிறுத்-புரா. 57). "ஈத்துவக்கு மின்பம்" (குறள்). 4

3622. (இ-ள்) இன்ன... நாள் - இவ்வாறாகிய செய்கை செய்து ஒழுகி வரும் நாளில்; அடியார் மிகவும் எழுந்தருள - அடியார்கள் மிகுதியாக எழுந்தருளியபடியினாலே; முன்னம்... விற்றே-முன்னே தம் உடைமையாயின பொருள்கள் முழுதும் தீர்ந்துபோக, **அடிமையுடன்...விற்றே** - அடிமைகளுடனே நிலைபெற்ற காணியான நிலமும் மற்றும்

3623. அங்க ணவ்வூர் தமக்கொருபற் றடியார் தங்கட் கமுதாக்க
எங்குங் காணு வகைதோன்ற விலம்பா டெய்தி யிருந்தயர்வார்
தங்கும் வகையாற் **றுமுன்பு கற்ற தன்மை நற்சூதாற்**
பொங்கும் பொருளாக் கவுமங்குப் **பொருவா ரின்மை யினிற்**போவார். 6

உள்ள திறங்களை எல்லாமும் விற்றே; அன்னம் அளித்தே-அன்னம் அளித்தலை விடாது செய்தே; மேன்மேலும் - மேலும் மேலும்; ஆரா மனத்தார் ஆயினர்-ஆசை நிறைவு பெறாத மகிழ்ச்சி மிக்க மனத்தை யுடையவராயினர்.

(வி-ரை) அடியார் மிகவும் எழுந்தருள-நாளும் நாளும் மேன்மேலும் பெருகிய எண்ணிக்கையாக அடியார்கள் எழுந்தருளியதனாலே; உடைமைகளை விற்றும் அன்னமளிக்க நேர்ந்ததற்குக் காரணங் கூறியபடி.

முன்னம் உடைமையான பொருள் முழுதும் மாள-சேமநிதிகளும் தம் முன்னோர் தேடி வைத்தனவும் ஆகிய பொருள்கள் முழுதும்; இவை நேரே செலவு செய்ய நின்றன; ஆதலின் வேறு பிரித்து **மாள** என்று ஓதினர்; பின் வருவன அவ்வாறன்றிப் பிறர்பால் விற்றுப் பொருளாக மாற்றி அன்னமளிக்க உதவுவன; ஆதலின் அவற்றைப் பின்வைத்து வேறு பிரித்து **விற்றே** என்றோதினர். தம்வசம் பொருளாக உள்ளனவற்றைத் தாமே முன்னர்ச் செலவிட்டும், பின்பே அவ்வாறல்லா தவற்றை விற்றுச் செலவிட்டும் நிகழ்தல் உலக இயல்பாம் என்பது. **உடைமை-**சொந்தம்; **மாள-**செலவாகிவிட.

மற்றும் உள்ள-இவை அணிகலன்-ஆடை முதலிய சங்கமப் பொருள்கள். ***மற்றும்-***நிலமல்லாதன எல்லாம்; ***திறம்-***தாவரமும் சங்கமமு மல்லாதபிற உரிமைகள் முதலியவை எல்லாம் அடங்கத் ***திறம்*** என்றார். **காணி-**வழிவழி உரிமை.

விற்றே - அளித்தே-விற்றே-ஏகாரம் விற்றேயும் எனச் சிறப்புக் குறித்தது; ஏகாரம் பின்னது தேற்றம்.

ஆரா மனத்தார்-ஆர்தல்-நிறைதல்; ***ஆரா மனம்-***பொருள் எல்லாம் விற்றேயும் அமுதூட்டியும் நிறைவு பெறாது-அமையாது-மேலும் செய்ய விருப்பமுடைய மனம்.

ஆயினர்-ஆக்கச் சொல் தன்மை மிகுதல் குறித்தது. *5*

***3623.* (இ-ள்)** அடியார் தங்கட்கு அமுதாக்க-அடியார்களுக்கு அமுதாக்குதற்கு; அங்கண்... பற்று - அந்நாளில் அவ்வூரில் தமக்கு எவ்விதமாகிய பற்றுக்கோடும்; எங்கும்... அயர்வார் - எங்கும் பெறாத நிலை வெளிப்பட வறுமை சார்ந்து இருந்து மயங்குவாராய்; தங்கும்... ஆக்கவும் - மறவாது தம்மிடத்தில் தங்கியிருக்கும்படி தாம் முன்னாளில் கற்ற நற்றன்மையுடைய சூதினாலே மிகும் பொருள் ஆக்க முயற்சித்தும்; அங்குப்... போவார் - அங்குச் சூதாட்டம் செய்வாரில்லாமையால் வெளியே செல்வாராகி;

(வி-ரை) அமுதாக்கத் தமக்கு அங்கண் அவ்வூர் ஒரு பற்றும் எங்கும் காணாவகை

தோன்ற-மயக்க. **அமுதாக்க ஒரு பற்றும் காணுமையாவது** அமுதாக்குதற்குரிய சாதனங்கள் எவையும் பெறுதநிலைமை. **ஒரு பற்றும்**-முற்றும்மை தொக்கது.

அங்கண்-அப்போது-அக்காலத்தில். **பற்று**-பற்றுக்கோடு.

இலம்பாடு-வறுமை; **பாடு**-தொழிற் பெயர் விகுதி. **இலம்**-இல்லாநிலை.

தங்கும் வகையால் தாம் முன்பு கற்ற தன்மை நற்சூது-தங்கும் வகையாவது மறவாது மனத்துள் நிலைபெறப் பயிலுதல்; **முன்பு கற்ற தன்மை**-இளம்பிராயத்தில் கலை ஞானங்களுள் ஒன்ருகத் தன்மை தெரியக் கற்ற; **முன்பு** என்றதனுல் கற்றபின்பு அதனை ஊதியப் பயன்படச் செய்யவில்லை என்பது போதரும். **நற்சூது**-சூது என்ற தீமை அணுகாது முன்பு கலைஞான அளவுபெறும் அறிவினுக்கும், பின்பு சிவனடியார்க் கமுதுக்கும் ஆக்கவுமே பயன்படுத்தியமையால் நல் என்ற அடை மொழி தந்தோதினுர். **"கற்ற சூதன்"** (நம்பி-தேவாரம்) என்ற முன்னூற் சொல்லும் பொருளும் எடுத்தாண்டமை காண்க. "கற்ற சூதால் (*3624*) எனவும், "நற்சூதராம்" (*3629*) எனவும் மேல் வருவனவும் காண்க. ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்ருக வைத்தெண்ணி விலக்கப்படும் சூதுதானும் சிவனடியார்களுக்குப் பயன்பட்ட வகையால் நல்லதாக ஆயினமை கண்டுகொள்ளத்தக்கது. நளன் கதை-பாரதக் கதை முதலியவை ஈண்டு வைத்து வேற்றுமை கண்டு கொள்ளத் தக்கன.

பொங்கும் பொருளாக்கவும்-சூதினுல் ஒரோர் வழி வரும் ஊதியப் பொருள்களின் மிகுதி நோக்கியே மக்கள் சூதினில் ஆசைப்பட்டு மயங்கித் தம் பொருள் எல்லாம் இழந்து கேடுறவும் முற்படுகின்ருராதலின், முதலிற், பொங்குவதாகக் காட்டும் என்றும், கெட்ட ஆசை பொங்கும் என்றும் பல்லாறு உரைக்கப் **பொங்கும்** என்ருர். இந்நாளில் திட்டச் சீட்டு-குதிரைப் பந்தயம்-பணயம் முதலாகிய பலவகைப் பகட்டுச் சூதுகளுள்ளே அறிவிழந்து மயங்கிப் பெருநிலையினர் என்னும் மாக்களும் உழலும் தன்மை காணப்படுதல் மிக வருந்தத் தக்கது; **ஆக்கவும்**-ஆக்க முயன்றும் என்ற பொருள் தந்து நின்றது.

அங்குப் பொருவாரின்மையில்-"தீய வென்பன கனவிலு நினைவிலாச் சிந்தைத், தூய மாந்தர்வாழ் தொண்டைநாட் டியல்பு" (*1123*) என முன்னர்க் கூறிவிடுத்தாராகலின் அந்நாட்டிற் பணயத்துக்குச் சூது பொருவாரின்மை என்று கூறிய அளவிலமைந்தார்; "தெண்ணீர் வயற்றெண்டை, நன்னுடு சான்ருே ருடைத்து" என்ற தனிப்பாடலும் காண்க. ஆயின் இந்நாயனுர் அங்கு அதனைப் பயின்றனரே? எனின், அது கலைஞானங் கற்குமளவே என்பது முன் உரைக்கப்பட்டது.

போவார்-அங்குநின்றும் நீங்கி வேற்றூர்களிற் போவாராய். **அயர்வார் போவார்**-முற்றெச்சம்; அயர்ந்து போவாராய். **சென்று எய்தி**-என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

6

3624. **(இ-ள்)** பெற்றம்...தானங்கள்-இடபத்தில் ஏறிக்கொண்டு "அஞ்சொலீர்! பலி" என்று கேட்டு எழுந்தருளிவரும் இறைவர் விரும்பியிருக்கும் பலபகுதிகளிலும்; உற்ற...பணிந்து-பொருந்திய அன்பினுலே போய்ச் சேர்ந்து உருகும் மனத்துடன் வணங்கி;

3624. பெற்ற மேறிப் பலிக்குவரும் பெருமா னமருந் தானங்கள்
உற்ற வன்பாற் சென்றெய்தி யுருகு முள்ளத் தொடும்பணிந்து
கற்ற சூதா னியதியாங் கரும முடித்தே கருதாரூர்
செற்ற சிலையார் திருக்குடந்தை யடைந்தார் வந்து சிலநாளில். 7

கற்ற...முடித்தே-தாம் கற்ற நற்சூதினுல் வரும் பொருளினைக் கொண்டு நியதியாகிய தமது கருமத்தினை முடித்துக் கொண்டவாறே; கருதார் ஊர்...சிலநாளில்-பகைவர்களின் முப்புரங்களை அழித்த வில்லினையுடைய இறைவரது திருக்குடந்தைப் பதியினைச் சிலநாளில் வந்து அடைந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தானங்கள்...பணிந்து-அடியார்க் கமுதாக்க ஒருபற்றுக் கோடுமில்லாமையாலும், அங்குத் தாம் கற்றறிந்த சூதினுல் அதற்கு ஊதியம் பெற இயலாமையானும் வேற்றூர் தேடிப் புறப்பட்ட இந்நாயனுர், சிவனுறையும் பதி பலவும் அன்புடன் சென்று பணிந்தனர் என்க. சூதினுற் பொருளாக்கும் கருத்தன்றி எவ்வாற்ருனும் அடியாரைப்பேணும் அன்பினுற் சென்ருர் என்பது சிவன் பதிகளிடைச் சென்று அன்புடன் பணிந்தனர் என்றதனுற் பெறப்படும். **அன்பால்**-அன்புடனே; **ஆல்**-ஓடு உருபின் பொருளில் வந்தது.

கற்ற சூதால் நியதியாங் கருமம் முடித்தே-நியதியாம் கருமமாவது முன் (3620) உரைத்தவாறு, "காத லடியார்க் கமுதாக்கி யமுது செய்யக் கண்டுண்ணும் நீதிமுறை வழுவாத நியதி" என்றபடி, அடியார்க் கமுதாக்கி அவரை முன் ஊட்டிப் பின் தாம் உண்ணுதல்; மகேசுர பூசை; **கற்ற சூதால் முடித்தே**-அங்கங்கும் சூதுபொருது அதனுல் வரும் பொருள் கொண்டு நிறைவேற்றி.

இந்நாளினும் பல பதிகளுள் திருவிழாக் காலங்களில் மக்களை மயக்கும் சூதுவகையுட்பட பலப்பல ஆட்டங்கள் நிகழக் காணுதல் இதன் வழிவழி வந்த வழக்கம் போலும்; இத் தகாத செயல்கள் நம் இறைவர் திருவிழாக்களைப் பழுது படுத்தாது ஒழிக்கப்படுதல் வேண்டுமென்று அன்பர் பலரும் கருதுதல் தகுதியேயாம். ஆனுல் இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டிய செய்திகள் சில உண்டு; உலகில் நன்மை தீமை என இரண்டும் உண்டு; இரண்டும் சிவன் படைப்பினுட் பட்டவை; இவை உயிர்கள் தத்தம் கன்மங்களை அனுபவித்துக் கழித்துப் பண்படுவதற்காக இறைவர் படைத்தவை; உயிர்களின் பக்குவத்துக் கேற்ப அனுபவிக்கச் செய்தற் பொருட்டு இவையிரண்டும் வேண்டத்தக்கன. "மெய்ம்மையும் பொய்ம்மையும் மாயி னுர்க்குச், சோதியுமாயிரு ளாயி னுர்க்குத் துன்பமு மாயின்ப மாயினுர்க்கு...பந்தமு மாய்வீடு மாயினுருக்கு" (திருவா); "நன்மை தீமை நின்செய லாதலின், நானே யமையு நலமில் வழிக்கே" (பட்டினத்தார்); என்பவாதலின், சூது, முதலிய தீமைகள் தீயோர்களை அனுபவத்தினுல் பக்குவப்படுத்துவதற்கு இறைவர் வகுத்தவை; கைக்கும் மருந்தும் குற்றப்பட்டாரைச் சீர்திருத்தும் பள்ளிக்கூடங்கள் போல்பவையுமாம் எனலாம். பலதிறப்பட்ட பக்குவபேதமுடைய உயிர்கள் உள்ள அளவும்

வேறு

3625. இருளாரு மணிகண்ட **னடியார்க்கின் னமுதாக்கப்**
பொருளாய மெய்துதற்குப் புகழ்க்குடந்தை யம்பலத்தே
உருளாயச் சூதாடி யுறும்பொருள்வென் **றனநம்பர்**
அருளாக வேகொண்டங் கமுதுசெய்வித் தின்புறுவார், 8

நன்மையும் தீமையும் உலகில் இறைவராணைவழி இருந்தே தீரும். பக்குவபேதம் கருதாது யாவரையும் ஒன்று போலவே நலப்படுத்தி விடுவோம் என்று கூறுதலும் முயலுதலும் மடமையின் பாலதாகும். இறைவ ராணைவழி நின்றாலன்றி, ஒரு தீமையை நீக்கி எல்லாவுயிரையும் ஒன்றுபோல நலப்படுத்துவோமெனப்புகின் முன்பு புலப்படாத மற்றொரு தீமை அம்முயற்சியினின்றும் வெளிப்பட்டுத் தோன்றும்.

உலகில் ஏனை யிடங்களில் பயிலும் சூது வகைகளுக்கும் தலங்களிலும் விழாக்களில் பயில்வனவற்றுக்கும் வேறுபாடுண்டு; ஏனை யிடங்களில் சூது பயில்வோர் அதனுட்பட்டே ஒழிந்து விடுவர்; ஆனால் தலங்களில் விழாக்களில் சூது பயில்வோர் அவ்வாறன்றித் தூய தலங்களின் நினைவும், விழாக்களின் நினைவும், அடியவர்நினைவும், ஆண்டவன் நினைவும் காட்சியும் அபுத்திபூர்வமாயேனும் ஒரோர்கால் வரப்பெறும் நல்லூழ் வாய்க்கப் பெறுகின்றார்கள்; ஆதலின் அதன்மூலம் உய்தி பெறும் வழியில் நிற்கின்றார்கள்; இவ்வாறுள்ள ஊழிற்பட்டுச் சூதர் கூட்டத்தினின்றும் முகந்தெடுக்கப்பட்டவர்களே தலங்களிலும் விழாக்களிலும் சூது பயில்பவர்கள் என்பதும் கருதுதல் வேண்டும்; ஆனால் இவ்வாறு சூது முதலியவற்றாலும் நலப்படுத்தும் தலங்கள் சிலவே என்க.

கருதார்-(சிவனினைவில்லாத) பகைவர்களாகிய முப்புரவாணர்.

சில நாளில் வந்து திருக்குடந்தை அடைந்தார்-என்க.

திருக்குடந்தை அடைந்தார்-திருக்குடந்தை அந்நாளிலும் சூதாட்டம் முதலியவற்றாலும் சிறந்து விளங்கிற்றுப் போலும்; அதுபற்றிய இந்நாள் விளக்கம் முன்னை வழிவழி வந்த வழக்கும் போலும். இதனைப் பற்றி மேல்வரும் பாட்டில் "**பொருளாய மெய்துததற்குப் புகழ்க்குடந்தை யம்பலத்தே,** யுருளாயச் சூதாடி" (3625) என்னும் கருத்தும் கருதத் தக்கது.

கடனு முடித்தே—என்பதும் பாடம். 7

3625. (இ-ள்) இருளாரும்...அமுதாக்க - நீலம் நிறைந்த அழகிய கண்டத்தினை உடைய சிவபெருமானின் அடியவர்களுக்கு இனிய திருவமுது அளிப்பதற்காக; பொருள் ஆயம் எய்துதற்கு-பொருளீட்டம் பொருந்துதற்கு; புகழ்...சூதாடி-புகழினை உடைய திருக்குடந்தைப் பொதுவிடத்திலே உருளும் கருவியினால் சூதாடி; உறும்...கொண்டு - அதனால் வரும் பொருள்கள் வெற்றி பெற்றனவற்றை இறைவரது திருவருளாகவே மதித்து; அங்கு... உறுவார் - அங்கு அடியார்க்கு அமுது செய்வித்து இன்பமடைவாராகி,

(வி-ரை) இருள்-இங்குக் கருமை-நீல நிறம் குறித்தது.

3626. முற்சூது தாந்தோற்று முதற்பணய மவர்கொள்ளப்
பிற்சூது பலமுறையும் வென்றுபெரும் பொருளாக்கிச்
சொற்சூதான் மறுத்தாரைச் சுரிகையுரு விக்குத்தி
நற்சூதர் மூர்க்கரெனும் பெயர்பெற்றார் நானிலத்தில் 9

மணிகண்டர்க்கும் அடியார்க்கும்-என உம்மை விரித்துரைத்தலுமாம்; என்னை? அடியவர்க்குள் நின்று சிவனே உண்கின்றார் என்பது சிவாகம ஆணையாதலின்; "நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயிற், படமாடக் கோயிற் பரமர்க்கங் காமே".

பொருள் ஆயம்-ஆயம்-பெருக்கு; ஈட்டம். **பொருளாயம்**-பொருள் வருவாய்; (பொருளும் பொருள் வருவாயும்); உம்மைத்தொகை; **ஆயம்**-வடமொழித் திரிபென்பர் பரிமேலழகர்; **ஆயம்**-ஆதாயம்; **உருளாயம்**-உருளுகின்ற பாச்சிகையினாற் சூதை ஆடி; "உருளும் கவற்றின்கட்பட்ட ஆயம்; கவற்றினது உருட்சியை அதனினுய ஆயத்தின்மேல் ஏற்றி...கூறினார்" (பரிமே).

அம்பலம்-ஊர்ப் பொதுவிடம்; பலர் கூடும் பொது இடம்; பொதியில்; "மன்றமும் பொதியினும்" (முருகு); **புகழ்**-சூதாட்டத்தினும் பெயர் பெற்ற என்ற குறிப்புமாம். சூதாடும் பொதுவிடங்களும் அந்நாளில் வெளிப்படையாய் அமைந்திருந்தன போலும்; இந்நாளிலும் அவை வழிவழி வேறு வேறு உருவங்களுள் மறைந்து விளங்குதல் கண்டுகொள்ளத் தக்கது.

உருள் ஆயச் சூது ஆடி-ஆயம்-சூதாடு கருவி; **வல்**-என்பர்; **உருள் ஆயம்**-ஆயத்தினை உருட்டி ஆடுதல் சூதின் வகை; "உருளாய மோவது கூறிற் பொருளாயம்,போஒய்ப் புறமே படும்" (குறள்).

வென்றன உறும் பொருள்-வென்றனவாகப் பெறும் பொருள்கள் எல்லாம்; **அருள்**-அருளால் வந்த பொருளை அருள் என்றது உபசாரம்.

நம்பர் அருளாகவே -சிவனருட் பிரசாதமாகவே; சிவன் அருளிய பொருளாக; ஏகாரம் தம் முயற்சியாற் செய் சூதான் வந்ததென்பதன்றிச் சிவன் தந்ததாகவே எனப் பிரிநிலை; தேற்றமென்பதுமாம்.

அமுது செய்வித்து இன்புறுவார்-அமுது செய்வித்து அதனைக் கண்டு தாம் மகிழ்வார்; **இன்புறுவார்**-முற்றெச்சம், வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

அம்பலம்-சூதாடு களங் குறித்தது. "கழகத்துக் காலை புகின்" (குறள்). 8

3626. **(இ-ள்)** முற்சூது...கொள்ள-முதல் ஆட்டத்தில் தாம் தோல்வியை ஏற்று முதற்பந்தயப் பணத்தை ஒட்டினவர் கொள்ளச் செய்து; பிற்சூது...ஆக்கி-பின்பு ஆடும் சூதாட்டத்தில் பலமுறையும் தாமே வென்று பெரும் பொருளைத் தம்மதாக்கி; சொற்சூதால்... நானிலத்தில்-வஞ்சச் சொற்களால் மறுத்தவர்களை உடைவாளுருவிக் குத்தி, நற்சூதராகிய இந்நாயனார் நானிலத்தில் மூர்க்கர் என்னும் பெயர் பெற்றனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) முற்சூது-முதல் ஆட்டத்தில் 7-ம் வேற்றுமைத் தொகை.

3627. **சூதினில்**வென் றெய்துபொருள் துரிசற்ற **நல்லுணர்விற்**
றீதகல வமுதாக்கு வார்கொள்ளத் தாந்தீண்டார்
காதலுட னடியார்க ளமுதுசெயக் **கடைப்பந்தி**
ஏதமிலா வகைதாமு மமுதுசெய்தங் கிருக்குநாள், 10

தாம் தோற்று-தாமே தோல்வியை ஏற்று; தோல்வியைக் காட்டி; **பணயம்**-பந்தயப் பொருளே. **அவர்**-எதிராக ஆடுவோர்; பலரறி சுட்டு.

பிற்சூது-பின்பு ஆடும் ஆட்டங்கள்.

முற்சூது...ஆக்கி-இது சூதாட்டத்திற் கைதேர்ந்தோர் செய்யும் முறை; **தோற்று**-தோல்விப் பட்டார்போற் காட்டி; முதலிற் சிறு பொருளின் வெற்றி தந்து ஆசைகாட்டி அவ்வாசை காரணமாக அவர் கைப்பொருளினைப் பலமுறையும் இழக்கச் செய்தல் சூதின் நுட்பங்களுள் ஒன்று. **ஆக்கி**-விருத்தியாக்கி.

சொற்சூதால் மறுத்தாரை-சூதுச் சொல்லால் மறுத்தார்களை என்பது; இங்குச் **சூது** என்பது வஞ்சச்சொல் என்ற பொருளில் வந்தது.

நற்சூதர்-"நற்சூதால்" (3623); **மூர்க்கர் எனும் பெயர் பெற்றார்** - மூர்க்கர் என்பது இந்நாயனாருக்குக் காரணப்பெயர். நற்சூதர் என்றும், மூர்க்கர் என்றும் வழங்கப்படும் பெயர்களைப் பெற்றார்; "கற்ற சூதன்" (நம்பி. தேவா)

நற்சூதால்—என்பதும் பாடம். 9

3627. (இ-ள்) சூதினில்...தீதகல-(முன் கூறியவாறு) சூதாட்டத்தினில் வெற்றிகொண்டு பொருந்தும் பொருள் குற்றமற்ற நல்லுணர்வின் பயனாகத் தீமை நீங்க; அமுதாக்குவார்...தீண்டார்-தாம் கையாலும் தீண்டாது அமுது ஆக்குவோர்கள் கைக்கொள்ளச் செய்து; காதலுடன்...அமுது செய்து-பெரு விருப்பத்துடனே அடியார்கள் அமுது செய்ய அதன்பின்பு குற்றமில்லாதவகையால் கடைப்பந்தியில் இருந்து தாமும் அமுது செய்து; அங்கு இருக்கும் நாள்-அப்பதியில் தங்கியிருக்கும் நாள்களிலே,

(வி-ரை) சூதினில் வென்று-முன் கூறியவாறு ஆடிய சூதில் வென்று; இங்குச் **சூது** என்றது சூதாட்டம் என்றும், முற்சூது தோற்று,பிற்சூது பலமுறையும் வென்று என்றவை சூதுத்தந்திரம் என்றும் பொருள்பட நின்றன.

துரிசற்ற நல்லுணர்வில் தீதகல-துரிசு-சூது முயல்வதனால் வரும் குற்றமும், சூதின்வரும் பொருளை அனுபவிப்பதனால் வரும் குற்றமும்; **அற்ற**-அறுதற்கேதுவான; அறுவித்த என்க. **உணர்வில்**-உணர்வினாலே; **தீது**-முன்சொன்ன துரிசு; **அகல**-அகலும்படி. **பொருள்**-பொருளை; 2-ம் வேற்றுமைத்தொகை.

அமுது ஆக்குவார்...தீண்டார்-சூதின் வந்த பொருளினைத் தாம் கையாற் றீண்டுதலும் செய்யாராகி; அதனை முழுதும் அந்நிலையினின்றவாறே திருவமுது ஆக்குவோர்

3628. நாதன்ற னடியார்க்கு நல்லடிசி ஞடோறும்
ஆதரவி ஞலமுது செய்தவித்தங் **கருளாலே**
ஏதங்கள் போயகல விவ்வுலகை விட்டதற்பின்
பூதங்க ளிசைபாட வாடுவார் புரம்புக்கார். 11

கைக்கொள்ளச் செய்து; அவர் கைக்கொள்ளுதல் அமுதாக்குதற்குரிய பண்டங்கள் பெறுதற் பொருட்டு.

ஏதுமிலா வகை கடைப்பந்தி தாமும் அமுது செய்து என்க. **ஏதமாவது**-சூதின் வந்த பொருளினுல் உண்டு உயிர் வாழ்தல்; **கடைப்பந்தி**-அடியார்கள் எல்லாம் அமுது செய்தபின் இறுதியில் உண்போர் வரிசை; இதனுல் **ஏதம் இல்லா வகை** யாவது அடியார் உண்ட சேடம் உண்பதனுலும், அவர்க்கு அமுது ஆக்கும் பணி செய்யத் தாம் உளராதற் பொருட்டு உண்பதனுலும் கடைப்பந்தி அமுது செய்தலால் ஏதம் இல்லையாகும்.

அங்கு இருக்கும் நாள்-உலகை விட்டபின்-புரம் புக்கார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. **அங்கு**-திருக்குடந்தைப் பதியிலே; எனவே இந்நாயனுர் தொண்டை நாட்டில் திருவேற்காட்டூரில் அவதரித்துச் சோழநாட்டிலே திருக்குடந்தையில் இறைவன் திருவடி சேர்ந்தருளினர் என்க. *10*

3628. **(இ-ள்)** நாதன்றன்... அமுது செய்வித்து-தலைவராகிய சிவபெருமானின் அடியவர்களுக்கு நல்ல திருஅமுதினை நாடோறும் அன்போடும் அமுது செய்வித்து; அங்கு... விட்டதற்பின் - அங்குத் திருவருளினுலே குற்றங்கள் நீங்கப் பெற்றதனுல்; இவ்வுலகை... புரம்புக்கார்-இவ்வுலகை விட்டபின்பு பூதகணங்கள் சூழ்ந்து இசைபாட ஆடுகின்ற சிவபெருமானது உலகமாகிய சிவபுரத்தினிற் புகுந்தமர்ந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) நல் அடிசில்-முன் (*3621*) கூறியவை.

ஆதரவு - மிக்க அன்பு.

அருளாலே ஏதங்கள் போயகல - சிவனருள் வழிநின்று தாமற்ற தன்மையாலே சூதினுல் வரும் தீமைகள் தாக்காதொழிய. உடலுடன் வந்த ஏதங்கள் என்றலுமாம்.

அருளாலே-தனக்கென்று செயல் ஒன்று மில்லாது ஏகனுகி இறைபணி நிற்கும் அடியவர் செய்கைகளைத் தம் செயலே யாக்கி, அச்செயல்களால் வரும் துரிசுகளை அவர்பாற்சாராமற் செய்வது இறைவர் அருளாம். பாதகங்கள் செய்திடினும்...நெறியல்லா நெறி பயிற்றிவரினும்-தவறுகள் வந்திடினும், தனக்கெனவோர் செயலற்றுத் தானதுவாய் நிற்கில், **நாதனவ னுடலுயிரா** யுண்டுறங்கி நடந்து நானுபோகங்களையுந் தானுகச் செய்து, பேதமற நின்றிவனைத் தானுக்கி விடுவன்" (உண்மை நெறி விளக்கம்-6) என்பது முதலிய சிவாகமத் திருவாக்குக்கள் காண்க.

பூதங்கள்-இசைபாட ஆடுவார் - இறைவன் றிருக்கூத்துக் கிசையச் சிவபூதங்கள் பாடியும் முழக்கியும் ஆடியும் பயில்வன என்பது; **புரம்**-சிவபுரம்.

3629. வல்லார்க டமைவென்று சூதினுல் வந்தபொருள்
அல்லாருங் கறைக்கண்ட ரடியவர்க டமக்காக்கும்
நல்லார்**நற் சூதரா மூர்க்கர்**கழ றும்வணங்கிச்
சொல்லார்சீர்ச் **சோமாசி மாறர்திறஞ்** சொல்லுவாம். 12

இவ்வுலகை விட்டதற்பின்-புரம்புக்கார்-இவ்வுலக வாழ்வு நீத்தவுடன் வேறு பிறவியிற் சேராது சிவனுலக வாழ்விற் றலைப்பட்டு நின்றார் என்பது. *11*

3629. **(இ-ள்)** வல்லார்கள்...நல்லார்-சூதாடுபவர்களை வெற்றிகொண்டு சூதினுல் வந்த பொருள்களை யெல்லாம் கருமை பொருந்திய விடமுடைய கண்டராகிய சிவபெருமானது அடியவர்களுக்கே திருவமுதுக்கு ஆக்குகின்ற நல்லாராதலின்; நற்சூதராம்... வணங்கி -நற்சூதர் எனப்பெறும் மூர்க்கரது திருவடிகளை நாம் வணங்கி; சொல்லார்... சொல்லுவாம்- நிறைந்த சொற்களாற் புகழும் வேத வாய்மைச் சிறப்பினையுடைய சோமாசிமாற நாயனாரின் திறத்தினைச் சொல்லப் புகுகின்றோம்.

(வி-ரை) இது கவிக் கூற்று. ஆசிரியர் தமது மரபின்படி இதுவரைக் கூறி வந்த புராணத்தை வடித்தெடுத்து முடித்துக்காட்டி, இனிக் கூறப்புகும் புராணத்திற்குத் தோற்றுவாய் செய்தருளுகின்றார்.

வல்லார்கள்-வல்லினை உடையவர்கள்; சூதாடுபவர்கள்; **வல்**-சூது; சூதாடு கருவி; வலியவர்கள் என்று கொண்டு இப்புராணத் தொடர்பால் சூதில் வலியவர்கள் என்று கொள்வதுமாம்; அப்பொருளில் **வல்லார்கள் தமையும்** என்று சிறப்பும்மை விரிக்க.

அல்லாரும் கறைக்கண்டர்-"இருளாரு மணிகண்டர்" (3625); தீய விடத்தினை ஏற்றருளியது போலத் தீய சூதில் வந்த பொருளினையும் ஏற்றவர் என்பது குறிப்பு.

ஆக்கும்-அமுதாக்கும் என்றும், ஆகச்செய்யும்-பயன்படுத்தும்-என்றும் உரைக்க நின்றது.

நல்லார் நற்சூதராம்-நல்லாராதலின் நற்சூதர் எனப்பெற்றார் என்பது (3626) பார்க்க.

வணங்கிச்-சொல்லுவாம்-வணங்கி அத்துணையாற் பெற்ற வலிமைகொண்டு சொல்லப் புகுவோம்.

சொல்லார் சீர்-"வேதம் பயிலும் மறையாளர் குலத்தின்வந்த மேலோராகிய சிறப்பு" (3630) என இதனை மேல் விரிப்பது காண்க. **சொல்** இங்கு இறைமொழியாகிய வேதத்திற் சிறந்த ஐந்தெழுத்தாகிய சொற்களின் தொகுதி என்ற பொருள் தந்து நின்றது; வேதச் சொல் நிறைந்த சிறப்பு; எடுத்துச் சொல்லத்தக்க சிறப்பு என்றலுமாம். முடிபும் தோற்றுவாயும் இவ்வாறு கண்டுகொள்க. "வேதப் பொருளஞ் செழுத்தும் விளம்பி யல்லான் மொழியான்"(திருத்தொண்டர் திருவந்தாதி-39). *12*

சரிதச் சுருக்கம்:— தொண்டை வள நாட்டில் பாலியாற்றின் வடபாலில் உள்ளது **திருவேற்காடு** என்னும் பதி; அதிற் சிவனடிமைத் திறத்தில் வழிவழி வந்த வேளாண் மரபில் அவதரித்தவர் பெரியார் ஒருவர்.

அவர் திருநீற்றின் அடைவே பொருள் என்று அறிந்து அடியார்க் கமுது முன் ஊட்டி மகிழ்ந்து பின்பு தாம் அமுது செய்யும் நியதியில் வழுவாத நிலையின் ஒழுகி வந்தனர்.

இவ்வாறு ஒழுகும் நாளில் அடியவர்கள் நாணும் மிகவும் பெருகி வந்தமையாலே தம் உடைமை முழுதும் மாள விற்றும் அப்பணி செய்தனர். மேலும் செய்து வருவதற்கு அவ்வூரில் ஒரு பற்றுக்கோடும் இல்லாமையால் தாம் முன்பு கற்ற தன்மை நற்சூதினுற் பொருளாக்க முயன்றனர். ஆனுல் அங்குச் சூதுபொருவார் இல்லாமையால் அங்கு நின்றும் வேற்றூர்க்குப் போவாராயினர்.

பல பதிகளிலும் சென்று சிவனை உள்ளுருகிப் பணிந்து அங்கங்கும் சூதாடுதலினுல் வந்த பொருளினைக் கொண்டு தமது நியமமாகிய அடியார் பணியினை நியதியாய் முடித்துச் சென்று திருக்குடந்தையினைச் சேர்ந்தனர்.

அங்குத் தாம் வல்ல சூதினுல் வந்த பொருளைக் கொண்டு நாடோறும் அடியார்க் கமுதூட்டி இருந்தனர். சூதினில் வல்ல தன்மையாமாறு, முதற்சூது தாம் தோற்றும், பிற்சூது பலமுறையும் தாம் வென்று பெரும் பொருள் ஆக்குதலும், சூதினுல் மறுத்தாரைச் சுரிகை உருவிக் குத்துதலும் ஆம். இதனுல் இவர் **நற்சூதர்- மூர்க்கர்**-என்னும் பெயர்களைப் பெற்று உலகில் விளங்கினுர்.

இவ்வாறு பணிசெய்து அருளாலே ஏதங்கள் போய் அகல-இவ்வுலகை விட்டதற்பின், இறைவரது சிவபுரம் அடைந்தனர்.

கற்பனை:

1. சிவபெருமானிடத்துச் செய்யும் வழியடிமைத் திறம் என்றும் குன்றுத இயல்பில் வரும் பற்றுடையது வேளாளர் குலம். (*3619*).

2. இறைவரது திருநீற்றின் அடைவே மெய்ப்பொருளாவது (*3620*); ஏனையவை பொருளல்ல.

3. அந்த மெய்ப்பொருளை அடைதற்குரிய வழிகளுள் சிறந்தது சிவனடியார்க்கு அமுதூட்டி வழிபடுதலாம். (*3620*)


4. அடியாரை ஊட்டி மகிழும் நியமத்தினை நியதியாக மேற்கொண்ட பெரியோர் தமது உடைமை முழுதும் மாளக் கண்டாலும் விடாது, உள்ளனவற்றை விற்றும் அப்பணி செய்து அந்நியமத்தினிற்பர் (*3622*). உலகியல் உடைமைகள் எவற்றினும், அப்பணியே பெரிதெனக் கொண்டு ஒழுகுவர். உறுதிப்பொருளைப் பெற வேண்டுமாயின் உலகியற் பொருள்களைப் பெரியனவாக எண்ணும் தன்மை அறவேண்டும். இளையான்குடி மாற நாயனுர் புராணம், சிறுத்தொண்ட நாயனுர்,

இயற்பகையார் முதலிய பெரியோர் சரிதங்கள் எல்லாவற்றின் உள்ளுறையும் காண்க.

5. சூது என்பது ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்று; அஃதும் பயன்படுத்தும் வகையால் நற்சூதாகும் நிலையும், அஃதே வீடு பேற்றுக்கு வழியாகும் நிலையும் உண்டு (3623-3627).

6. சூது ஆடுதல் என்பதும் ஓர் கலை அறிவு; அதனைப் பயில்வதனால் கேடின்று; ஆனால் பயன்படுத்தும் வகையாற்றான் கேடுவரும். மூர்க்கநாயனார் தங்கும் வகையாற் றும் முன்பு நற்சூது கற்றிருந்தார். ஆனால் உடைமைகளிருந்தபோது அதனைப் பயன்படுத்தவில்லை. இலம்பாடு நேர்ந்து அடியார்க்கமுது முன் ஊட்டிப் பின் உண்ணும் தம் நியதி பிழையாத வகையே அதனைப் பயன்படுத்தி, அதனால் வந்த பொருள் முற்றும் அப்பணியிற் செலுத்தினார். அஃதே வீடுபேற்றுக்குச் சாதனமாயிற்று.

7. சிவன் பதிகளிலும் விழாக்களிலும் சூதாடுதல் மிகப்பெரும் பாவம்; அஃது அறவே விலக்கத் தக்கது. ஆனால் ஒரோ வழி அவ்வூதியத்தைச் சிவனுக்கும் அடியாருக்கும் பயன்படுத்தும் வகையாய் அவ்வாறு பயிலும் சூதினுக்கு அத்தொழிலுடையாரை உறுதிப் பொருள்பெற வழியாய் நிற்றலாகியதொரு பயனும் உண்டு.



சோமாசிமாற நாயனார் (வைகாசி - ஆயில்யம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

33. சோமாசி மாற நாயனார் புராணம் (5 திருப்பாடல்கள்)

தொகை

"அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்"

—*திருத்தொண்டத்தொகை-(5)*

வகை

சூதப் பொழிலம்ப **ரந்தணன் சோமாசி மாறனென்பான்**
வேதப் பொருளஞ் செழுத்தும் விளம்பியல் லான்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னு
மாதுக்குக் காந்தன்வன் **றெண்டன் றனக்கு மகிழ்துணையே.**


—*திருத்தொண்டர் திருவந்தாதி-(39)*

விரி

3630. சூதம்பயி லும்பொழி லம்பரிற் **றூய வாய்மை**
வேதம்பயி லும்மறை யாளர் குலத்தின் மேலோர்
ஏதம்புரி யும்மெயில் செற்றவர்க் **கன்பர் வந்தாற்**
பாதம்பணிந் தாரமு தூட்டுநற் பண்பின் மிக்கார். 1

புராணம்:- சோமாசி மாற நாயனரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்த முறையானே, ஆசிரியர், வம்பறு வரிவண்டுச் சருக்கத்துள் ஆருவது சோமாசி மாற நாயனுர் சரிதங் கூறத்தொடங்குகின்ருர்.

தொகை:- திரு அம்பர் என்னும் பதியில் அவதரித்த சோமாசி மாற நாயனுருக்கும் நான் அடியேனுவேன். **அம்பர்**-பதி; திரு இன்னம்பர் என்று வழங்கப்படும்; தலவிசேடம் பார்க்க. வேதாகமங்களின் விதித்தவாறு சிவயாகங்களை நியம நியதியாகச் செய்யும் மறையோர் **சோமாசி** (சோமயாசி) எனப் பட்டப் பெயர் வழங்கப்பெறுவர்; **மாறர்**-என்பது இந்நாயனுரது இயற்பெயர்; இவர் சிவயாகம் செய்த பெருமையும் தன்மையும் விரிநூலினுள் (*3631*) விரிக்கப்படுதல் காண்க. வகைநூல் வகுத்த நிலையும் ஆண்டுக் கண்டுகொள்க.—இவர் செய்த பெருயாகத்தில் சிவபெருமான் தேவியாரும் தாமுமாக நீச வடிவத்துடன் வந்து அவிகொண்டருளினர் என்றதொரு வரலாறு திருவம்பர்த் தலமான்மியங்களுள் சிறப்பாக வழங்கப்படுகின்றது. அதன் பொருட்டு **அம்பர் யாகம்** என்றதொரு விழாவும் சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப் படுகின்றது. ஆசிரியர் அதனைக் குறிப்பாலுணர்த்தியதன்றி விரித்துக் கூறிற்றிலர். அது, தல மான்மியங்களாக அங்கங்கும் வழங்கும் பலவற்றுள் ஒன்ருகிய அளவிற் கொள்ளத்தக்கதாகும்.—ஊரும் பண்பும் பேரும் தொகைநூல் உணர்த்திற்று. **மாறனுக்கும்**-முன் அடிமைப்பட்ட பெரியோர்களுடன் இவருக்கும் என்று உம்மை எச்சவும்மை; எண் உம்மையுமாம்.



சோமாசிமாற நாயனார் (வைகாசி - ஆயில்யம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

33. சோமாசி மாற நாயனார் புராணம் (5 திருப்பாடல்கள்)

தொகை

"அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்"

—திருத்தொண்டத்தொகை-(5)

வகை

சூதப் பொழிலம்ப **ரந்தணன் சோமாசி மாறனென்பான்**
வேதப் பொருளஞ் செழுத்தும் விளம்பியல் லான்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னு
மாதுக்குக் காந்தன்வன் **றொண்டன் றனக்கு மகிழ்துணையே.**

—திருத்தொண்டர் திருவந்தாதி-(39)

விரி

3630. சூதம்பயி லும்பொழி லம்பரிற் **றூய வாய்மை**
வேதம்பயி லும்மறை யாளர் குலத்தின் மேலோர்
ஏதம்புரி யும்மெயில் செற்றவர்க் **கன்பர் வந்தாற்**
பாதம்பணிந் தாரமு தூட்டுநற் பண்பின் மிக்கார். 1

புராணம்:- சோமாசி மாற நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி. இனி, நிறுத்த முறையானே, ஆசிரியர், வம்பறு வரிவண்டுச் சருக்கத்துள் ஆறாவது சோமாசி மாற நாயனார் சரிதங் கூறத்தொடங்குகின்றார்.

தொகை:- திரு அம்பர் என்னும் பதியில் அவதரித்த சோமாசி மாற நாயனாருக்கும் நான் அடியேனாவேன். **அம்பர்-**பதி; திரு இன்னம்பர் என்று வழங்கப்படும்; தலவிசேடம் பார்க்க. வேதாகமங்களின் விதித்தவாறு சிவயாகங்களை நியம நியதியாகச் செய்யும் மறையோர் **சோமாசி** (சோமயாசி) எனப் பட்டப் பெயர் வழங்கப்பெறுவர்; **மாறர்-**என்பது இந்நாயனாரது இயற்பெயர்; இவர் சிவயாகம் செய்த பெருமையும் தன்மையும் விரிநூலினுள் (*3631*) விரிக்கப்படுதல் காண்க. வகைநூல் வகுத்த நிலையும் ஆண்டுக் கண்டுகொள்க.—இவர் செய்த பெருயாகத்தில் சிவபெருமான் தேவியாரும் தாமுமாக நீச வடிவத்துடன் வந்து அவிகொண்டருளினர் என்றதொரு வரலாறு திருவம்பர்த் தலமான்மியங்களுள் சிறப்பாக வழங்கப்படுகின்றது. அதன் பொருட்டு **அம்பர் யாகம்** என்றதொரு விழாவும் சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப் படுகின்றது. ஆசிரியர் அதனைக் குறிப்பாலுணர்த்தியதன்றி விரித்துக் கூறிற்றிலர். அது, தல மான்மியங்களாக அங்கங்கும் வழங்கும் பலவற்றுள் ஒன்றாகிய அளவிற் கொள்ளத்தக்கதாகும்.—ஊரும் பண்பும் பேரும் தொகைநூல் உணர்த்திற்று. **மாறனுக்கும்-**முன் அடிமைப்பட்ட பெரியோர்களுடன் இவருக்கும் என்று உம்மை எச்சவும்மை; எண் உம்மையுமாம்.

வகை:- சூதப்பொழில்...என்பான்-மாமரங்கள் மிக்க சோலைகள் சூழும் திருவம்பர் பதியில் வாழும் மறையவர், சோமாசி மாறன் என்று சொல்லப் படுபவர்; வேதப்பொருள்... மொழியான்-அவர் வேதங்களின் உட்பொருளாய் விளங்கும் திருவைந்தெழுத்தினை இடையறுது சொல்லுவதன்றி வேறு மொழி பயிலாத (நித்த நியமன்); நீதி...நியமன்-சிவன்பாற் பொருந்திய நியதியில் வரும் நித்த நியமம் பூண்டவர்; பரவை யென்னும்...துணையே-பரவையார் என்று சொல்லப்படுகின்ற அம்மையாரின் கணவராகிய வன்றொண்டருக்கு மகிழ்ச்சி பொருந்திய துணைவராவார்.

சூதப்பொழில் அம்பர் - நகர்வளம்; **சூதம்**-மா; இந்நாட்டு இப்பக்கம் மாஞ்சோலைகளின் வளங் குறித்தது; இஃது இந்நாளினும் காணத்தக்கது; விரிநூலாசிரியரும் இதனையே எடுத்துப் போற்றியது காண்க (3630); **அந்தணன்**-குலம் பற்றியது; "மறையாளர் குலம் (3630); **என்பான்**-எனப்படுவான்; "இல்வாழ்வானென்பான்" (குறள்) என்புழிப்போலக் கொள்க. **வேதப்பொருள் அஞ்செழுத்து**-வேதங்களின் பொருள் திருவைந்தெழுத்தே என்பது. **விளம்பியல்லான் மொழியான்-விளம்புதல்**-பலமுறையும் பயின்று கொண்டிருத்தல்; **அல்லால்-மொழியான்**-வேறு சொல்லாதவர். எதிர்மறை உறுதி குறித்தது; இதனையே ஆசிரியர் முன் "சொல்லார் சீர்ச் சோமாசி மாறர்" (3629) என்று காட்டித் தோற்றுவாய் செய்தருளினர்; **பரன் மன்னும்**-பரமன்பாற் பொருந்தும்; **மன்னுதல்**-பிறழாது நிலை பெறுதல்; ஏழனுருபு தொக்கது; **நீதி-நியமன்**-என்று கூட்டுக; **நீதிப்பரன்** என்றே கொண்டுரைத்தலுமாம்; "நீதி பலவுந் தன்னதுரு வாமென மிகுந்ததவ நீதியொடு தானமர்விடம்" (தேவா-வைகா-சாதாரி-4); **பரன்மன்னும் நித்த நியம**மாவது சிவாகம விதிப்படி இடையறுத சிவவழிபாடு; "வாழுந் திறமீசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்பார்" (3631) என்றும், "அஞ்செழுத் தோதும் வாய்மை, நித்தந் நியமம் எனப்போற்றும் நெறியில் நின்றூர்" என்றும் (3632) ஆசிரியர் இதனை விரித்தருளினர்; **காந்தன் வன்றொண்டன்**-காந்தனுகிய வன்றொண்டர்; பண்புத் தொகை; **காந்தன்**-கணவர்; நாயகர்; **மகிழ்துணை**-"அன்பால் பெருநண்பு சிறப்ப அடைந்து"என்பது விரிநூல் (3633); **துணை**-துணைவர்.

ஊரும் பேரும் பண்பும் அடிமைத் திறமும் வகைநூல் வகுத்துக் காட்டிற்று இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டு கொள்க.

3630. **(இ- ள்)** சூதம்...அம்பரில்-மாமரங்கள் மிக்கு விளங்கும் சோலைகள் சூழ்ந்த திருவம்பர் நகரின் கண்ணே; தூய வாய்மை...மேலோர்-தூய்மை செய்யும் வாய்மையுடைய வேதங்களைப் பயிலும் மறையவர்களது குலத்தில் மிக மேம்பட்டு விளங்குபவர்; ஏதம்... வந்தால்- உலகுக்குக் கேடு செய்த மும்மதில்களையும் எரித்த இறைவருக்கு அன்பர்கள் வந்தால்; பாதம்...மிக்கார்-அவர்களது திருவடிகளிற் பணிந்து திருஅமுதூட்டுகின்ற நல்ல பண்பில் மிகுந்தவர்.

(வி - ரை) சூதம் பயிலும் பொழில்-"சூதப்பொழி லம்பரில்" என்ற வகை நூலின் (திருவந்தாதி) சொல்லும் பொருளும் விரித்துப் போற்றப்பட்டது; **பயிலுதல்**-மிகுதல்; **சூதம்**-மா.

3631\. **யாழின் மொழியா டனிப்பாகரைப் போற்றும் யாகம்**
ஊழின் முறைமை வழுவா துலகங்க ளான
ஏழு முவப்பப் புரிந்தின் புறச்செய்த பேற்ருல்
"**வாழுந் திறமீசர் மலர்க்கழல் வாழ்த்த**" லென்பார், 2

தூய வாய்மை வேதம் பயிலும் மறையாளர்-மறையாளர் என்றலே அமையு மாயினும் இவ்வாறு கூறியது பிறப்பினளவா னன்றி வேதப்பயிற்சி ஒழுக்கத்தானும் மிக்கவர் என்று குறிப்பதற்கு.

ஏதம் புரியும் எயில் செற்றவர்-ஏதம்-உலகுக்குக் கேடு; ஏதம் புரிந்தமையால் அவ்வெயில்களைச் செற்றவர் எனக் காரணக் குறிப்புடன் நின்றது.

ஆர் அமுது-ஆர்தல்-தூய்மை-சுவை-பண்பு முதலியவற்ருலும், அன்பினுலும் நிறைவுடையதாதல்; இத்தன்மைகள் இளையான்குடி மாறர்-மூர்க்கர்-புராணங்களுள்ளும், பிறுண்டும் காண்க.

நற்பண்பு-நன்மையாவது சிவசம்பந்தமாக நின்று வீடுபேற்றுக்குத் துணை செய்யும் தன்மை.

எயில் எய்தவர்க்கு—என்பதும் பாடம். 1

3631\. **(இ-ள்)** யாழின்...பேற்ருல்-யாழ்போன்ற இனிய மொழியினை உடைய உமையம்மையாரின் ஒரு தனிப்பாகராகிய சிவபெருமானைப் போற்றும் சிவயாகத்தினை வழிபடும் விதிமுறை தவருது, ஏழுலகங்களும் மகிழ்ந்தின்புறும்படி செய்த பேற்றினுலே; வாழும் என்பார்-உயிர்கள் நல்வாழ்வடையும் வழியாவது சிவனது மலரடிகளை வாழ்த்துதலேயாம் என்று துணிவாராகி,

(வி-ரை) யாழ் இன் மொழியாள்-இனிய இசைபோன்ற மொழியினை உடைய உமாதேவியார்; உவம வுருபு தொக்கது; "யாழைப்பழித் தன்னமொழி மங்கையொரு பங்கன்" (நம்பி-தேவா).

பாகரைப் போற்றும் யாகம்-சிவனையே நோக்கிச் செய்யும் சிவயாகம்; இந்திரன்-பிரமன்-மால் முதலிய ஏனைக் கடவுளரை நோக்கிச் செய்யும் வேறுகாமிய யாகங்களினின்றும் பிரித்துணர வைத்தலின் பாகரைப் போற்றும் யாகம் என்றது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; ஏனை யாகங்கள் சொர்க்காதி போகங்களைத் தந்து நாளெல்லையில் பிறவியில் வீழ்ப்பன, சிவயாகங்கள் அவ்வாறன்றி, மீளா நெறியாகிய வீடுபேற்றுக்கு ஏதுவாவன; "ஆதி மாமறை விதியினு லாறுசூழ் வேணி, நாதனுரை முன்னுகவே புரியுநல் வேள்வி, தீது நீங்கநீர் செய்யவும்" (2327) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. சிவபாதவிருதயர் இதனைச் செய்ததுவும், அதன் பொருட்டு ஆளுடைய பிள்ளையார் சிவன்பால் வேண்டிப் பொருள் பெற்று ஈந்ததுவும், பிறவும் இதன் சிறப்புணர்த்துவன.

ஊழின் முறைமை-விதி முறைகள்.

3632. "**எத்தன்மைய ராயினு மீசனுக் கன்பர்** என்றால்
அத்தன்மைய ராநமை யாள்பவ" ரென்று கொள்வார்
"சித்தந்தெளி **யச்சிவ னஞ்செழுத் தோதும் வாய்மை**
நித்தந் நியம"மெனப் போற்று நெறியி னின்றார். 3

உலகங்களான ஏழும் உவப்பப் புரிந்தின்புறச் செய்த - இந்தச் சிவயாகங்களால் அருங்கலி நீங்கி உலகம் இன்புற்று ஓங்கும் என்பது; "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே, செற்றார்" (தேவா) என்பது முதலியவை காண்க.

செய்த பேற்றால்...வாழ்த்தல் என்பார்-சிவயாகங்கள் செய்யப் பேறு பெற்றமையால் இத்துணிபு வரப்பெற்றனர். இத்துணிபு வருதற்கு முன்னைத் தவம் வேண்டுமென்பது.

கழல் வாழ்த்தல் வாழுந்திறம் என்பதாம்; **வாழும் திறம்**-வாழ்வு பெறுதற்குரிய சாதனம்; "பரன் மன்னும்" என்ற வகைநூலினை விரித்தவாறு.

என்பார்-கொள்வார்-நின்றார்-என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க; என்பாரும்-கொள்வாரும் ஆகி-நெறிநின்றார்-என எண் உம்மைகளும் ஆக்கச் சொல்லும் வருவிக்க.

சோமாசி மாற நாயனார் இத்தலத்துச் செய்த யாகத்தினைப் பற்றி வழங்கும் தலமான்மியச் சிறப்பு வரலாறு இத்தன்மை பற்றி இதுனுள் வைத்து முரணுதவாறு அடக்கிக் கொள்ளத் தக்கது; வகை நூலுள்ளும் இவ்வரலாறுபற்றிக் குறிக்கப்படாமையால் ஆசிரியரும் கூறிற்றிலர் என்க. 2

***3632.* (இ-ள்)** எத்தன்மையராயினும்...என்றால் - குலம், முதலியவற்றால் என்ன தன்மையுடையோர்களே யானாலும் சிவபெருமானுக்கு அன்பர்கள் என்னப் பட்டார்களானால்; அத்தன்மையராம்...கொள்வார்-அவரே நம்மையாளாகவுடையவர்கள் என்ற துணிபும் கொள்வாராய்; சித்தம்...நின்றார்-சித்தம் தெளிவு பெறும் பொருட்டுச் சிவனது திருவைந் தெழுத்தினையும் விதிப்படி ஓதுகின்ற வாய்மையினையே நித்தமும் தமது நியமமெனக் கொண்டு போற்றுகின்ற ஒழுக்கத்தின் நின்றார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) எத்தன்மையராயினும்-குலம்-நலம்-பண்பு முதலியவற்றால் தீழோராயினும் என்பது குறிப்பு. உம்மை இழிவு சிறப்பு; "நலமில ராக நலமதுண்டாக நாடவர் நாடறி கின்ற, குலமில ராகக் குலமதுண்டாக" (தேவா);

என்றால்-என்று சொல்லப்பட நின்றாராயின்; காணப்பட்டாராயின்.

அத்தன்மையர்-ஈசனன்பர் என்ற அத்தன்மையுடையோர்; அகரம் முன்னறி சுட்டு.

ஆள்பவர்-தலைவர்; நாயனார் என்ற கருத்து.

கொள்வார்-துணிவு கொள்வாராகி.

3633. சீருந் திருவும் பொழியுந் **திருவாரூ ரெய்தி**
ஆரந் திகழ்மார்பி **னணுக்கவன் றொண்டர்க் கன்பால்**
சாரும் பெருநண்பு சிறப்ப வடைந்து தங்கிப்
பாரும் விசும்பும்பணி யும்பதம் பற்றி யுள்ளார். 4

நித்தம்...நியமம் எனப் போற்றும் நெறி- "அஞ்செழுத்தும் விளம்பியல்லான் மொழியான்-நித்த நியமன்" என்ற வகைநூலின் கருத்தை விரித்தவாறு. திருவைந் தெழுத்தை ஓதும் நித்த நியமமானது சித்தந் தெளிவிக்கும் சிறந்த சாதனமா மென்பது "விதி யெண்ணு மஞ்செழுத்தே" என்ற ஞானசாத்திரத்தானு முணர்க. அஃதாமாறு அனுபவமுடைய தேசிகர்வாய்க் கேட் டுணர்க. சிவன் அஞ்செழுத்தினால் இறைவர் சித்தந் தெளிவிக்கு நிலைபற்றி "வைத்த நிதி பெண்டீர் மக்கள் குலங் கல்வியென்னும், பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ், **சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த**, வித்தகத் தேவர்" (திருவா-கோத்-6) என்பது முதலிய திருவாக்குக்கள் காண்க. தெளிதலாவது காமாதி குற்றங்களி னீங்கிச், சிவனே பொருளென்ற துணிவு பெறுதல்.

சிவன் அஞ்செழுத்து-"அஞ்செழுத்தி னமைத்தான்", "திருநாம மஞ்செழுத்து" என்றபடி சிவன் திருநாமமாவது.

நித்த நியமம்-நாடோறும் வழுவாது செய்யும் கடமை.

போற்றுதல்-காத்தல்; துதித்தல் என்றலுமாம்.

அத்தன்மையர்தாம்-தெளியத் திருவஞ்செழுத்தும்-என்பனவும் பாடங்கள். 3

3633. (இ-ள்) சீரும்... எய்தி - சிறப்பும் சைவமெய்த் திருவும் மிக நல்கும் திருவாரூரிற் சார்ந்து; ஆரம்... சாரும் - ஆரங்கள் விளங்கும் மார்பினையுடைய அணுக்கன் றொண்டராகிய வன்றொண்டருக்கு அன்பினாலே சார்கின்ற; பெருநண்பு...... தங்கி - பெருநண்பினைச் சிறப்பாகப் பெற்று அங்குத் தங்கி; பாரும்... உள்ளார்- நிலவுலகும் விண்ணுலகும் பணிகின்ற அவரது திருவடிகளைப் பற்றாக அடைந்துள்ளார். (அந்நாயனார்).

(வி-ரை) சீரும் திருவும் பொழியும்-சீர்-சைவச் சிறப்பு; இஃது அடியார் கூட்டத்தால் வரும் நலம் குறித்தது. **திரு**-சைவமெய்த் திரு-முத்தித் திரு; இஃது இறைவர் சார்பால் வருவது. **பொழிதல்**-எளிதின் மிக வழங்குதல்; தேச முய்யத் திருத்தொண்டத்தொகை யருளியமையால் சீரும், திருவாரூர்ப் பிறக்க முத்தி என்ற விதியினால் முத்தித்திருவும் இப்பதியில் வழங்கும் நிலை காண்க.

ஆரம் திகழ் மார்பின்-நம்பிகள் அரசர் திருவும் வைதிகத் திருவும் விளங்கும் கோலத்துடன் இறைவர் ஆணைப்படி பயின்று நிகழ்ந்தாராதல் குறிப்பு. **ஆரம்**-மணி மாலையும் மலர்மாலையும்.

அணுக்க வன்றொண்டர்-மரபுரிமையாலே இறைவருக்கு அணுக்கத் தொண்டராம் நிலை பெற்றவர்.

3634. துன்றும்புல னைந்துட னாறு தொகுத்த குற்றம்
வென் "றிங்கிது நன்னெறி சேரும் விளக்க" மென்றே
வன்றொண்டர் பாதந் தொழுதான சிறப்பு வாய்ப்ப
என்றுந்நில வுஞ்சிவ லோகத்தி லின்ப முற்றார். 5

அன்பால்...அடைந்து-அன்பினால் பெருநண்பராகும் நிலை பெற்று. **தங்கி**- திருவாரூரில் தங்கி.

பாரும் விசும்பும் பணியும் பதம்-நம்பிகள் பதங்களை விசும்புள்ளோரும் பணிவர் என்பது, முன்னைநிலையில் ஆலால விடத்தைச் சிறு அளவினதாக ஆக்கி இறைவர்பால் கொணர்ந்து தேவரைத் காத்தமையாலும், இம்மை நிலையில், இனி, இந்திரன் மால் பிரமன் முதலிய வானவரும் வந்து போற்றி எதிர்கொண்டு அழைத்துச் செல்ல வெள்ளையானையின் மேல் திருக்கயிலை யடைகின்றமையாலும் பெறப்படும்.

பற்றி-பற்றாகக் கொண்டு.

மூன் மூன்று பாட்டுக்களால் இந்நாயனாரது வைதிக சைவ ஒழுக்கமும், இப்பாட்டினாலும் மேல்வரும் பாட்டினாலும் அவரது வரலாறும் கூறும் திறம் காண்க. 4

3634. (இ-ள்) துன்றும்... வென்றும் - பொருந்திய ஐம்புலச் சேட்டைகளுடன் ஆறு குற்றங்களையும் வெற்றிகொண்டு; இங்கு... என்றே - இம்மையில் சைவ நன்னெறியிற்சேர்ந்து உய்யும் விளக்கம் இஃதே என்று துணிந்து; வன்றொண்டர்... வாய்ப்ப-வன்றொண்டரது திருவடிகளைத் தொழுது அதனாற் பெற்ற சிறப்பு வாய்க்கப் பெற்றமையாலே; என்றும்...உற்றார்-என்றும் அழியாத நித்தியமாகிய சிவலோகத்தில் வாழும் இன்பத்தினைப் பெற்றனர்.

(வி-ரை) துன்றுதல்-செறிந்து அடர்த்தல்.

புலன் ஐந்தினையும் வென்று-புலனை வெல்லுதலாவது அவற்றின் வழியே தாம் செல்லாது அவை தம்வழியில் நிற்கும்படி அடக்கி ஆளுதல். "தன்மையைந்து புலனும்பின் செல்லுந் தகையார்" (1207); "மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்து" (திருவா). **அடக்குதல்** செயல் செய்ய ஆற்றலிலா தொடுக்குதலன்று; "ஐந்து மடக்கில் அசேதன மாமென்றிட், டைந்து மடக்காவறிவறிந் தேனே" (திருமந்) "கண்காள் காண்மின்களோ" "செவிகாள் கேண்மின்களோ" என்பன வாதியாக வரும் ஆணையின்படி ஐம்புலங்களும் பணிகேட்டு ஒழுகிநிற்கப் பணித்தலே ஈண்டு வெற்றி எனப்பட்டது. இவ்வாறு வெற்றிகொள்ளாவிடில், முன் கூறியபடி அன்பர் வந்தாற் பாதம்பணிந் தாரமு தூட்டு நற்பண்பும், வாழுந் திறமீசர் மலர்க்கழல் வாழ்த்தல் என்னும் துணிபும், சித்தந் தெளியச் சிவனஞ் செழுத்தோதும் நித்த நியமமும், வன்றொண்டர் பாதம் பற்றுநிலையும் கைகூடா என்க.

ஆறு தொகுத்த குற்றம்-ஆறு என்று தொகுக்கப்பட்ட குற்றங்கள்; **தொகுத்த**-தொகுக்கப்பட்ட; படு விகுதி தொக்கது; இவை காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாச்சரியம் என்பன; இவற்றை **வெல்லு**தலாவது தம்பால் அணுகாமற்

காத்தல்; "பொய்கடிந் தறத்தின் வாழ்வார்" (361); "களவுபொய் காமங் கோப முதலிய குற்றங் காய்ந்தார்" (1784). "அறுபகைசெற் றைம்புலனு மடக்கி" (பிள்-தேவா).

இது...விளக்கம்-இது-இஃதே; வேறில்லை; என்று பிரிநிலை ஏகாரம் தொக்கது; **நெறிசேரும் விளக்கம்**-இருளில் வழிச்செல்வாருக்குக் குழியும் வழியும் காட்டி உதவும் விளக்குப்போல, இருளுருவமாகிய ஆணவம், புலவின்பங்கள், காம முதலிய குற்றங்கள், முதலாகிய கேடுகள் நிறைந்த உலக யாத்திரையில் வழி காட்டி, நல்ல வழியிலே படுத்தும் உதவி வன்றொண்டர் பாதம் பணிவது என்பதாம்; **சேரும்**-சேரவுதவும்; சேர்விக்கும்; சேரச் செலுத்தும்; பிறவினை.

வன்றொண்டர் பாதம் தொழுது ஆன சிறப்பு-தொழுது ஆன-தொழுதலால் விளைவான; **தொழுது**-தொழுதலால் எனக் காரணக் குறிப்புப்பட நின்ற வினையெச்சம். **ஆன**-ஆக்கம் விளைந்த என்ற பொருள் தந்தது; இஃதே ஆன-நலமான சிறப்பு; ஏனையவை அல்லாதன என்ற குறிப்புமாம். "திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன், வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்" (1265); இக்கருத்தினையே தொடர்ந்து இவ்வாறே நாமும் ஒழுகி உய்தி பெறுவோம் என்று மேல்வரும் பாட்டில் "ஒருவர் சரணமே யரணமாக வடைந்தோமே" (3635) என்று ஆசிரியர் முடித்துக் காட்டி யருளியது காண்க.

என்றும் நிலவும் இன்பம்-மீளாத இன்பநிலை என்று கூட்டி யுரைக்கவும் நின்றது; **என்றும் நிலவும் சிவலோகம்**-அழிவில்லாத உலகம்; ஏனைக்கடவுளர் உலகங்களெல்லாம் அவ்வவ் வூழிகளில் அழிவு பெறும் என்பது; "நொடித் தான்மலை".

இனி, இப்புராணத்தினுள் "வேதம் பயிலும் மறையாளர் குலத்தின்" மேன்மையால் அன்பர் பணியும், (3630), யாகம் புரிந்தமையால் பரனுணர்வான வாழ்வும் (3631) இவ்விரண்டினாலும் முறையே அடியார்களைத் தலைவராகக் கொண்டு அடுக்கும் நிலையும், சிவன் ஐந்தெழுத்து ஓதும் நித்த நியமமும், கை வரப் பெற்றனர் என்றும், இவற்றின் பயனாக வன்றொண்டரது பெருநண்பும், அதனால் அவர் பாதம் பற்றும் நிலையும், அதனால் அஃதே துணையாகச் சிவலோக வாழ்வும் பெற்றனர் இந்நாயனார் எனக் காரண காரிய முறையாக வைத்து ஓதும் சிறப்பும் கண்டு கொள்க. 5

சரிதச் சுருக்கம்:— திருஅம்பரில் வேதம் பயிலும் மறையாளர் குலத்தில் வந்து மேம்பட்டு விளங்கியவர் **மாறர்;** அவர் சிவன் அன்பர்க்கு அமுதூட்டும் பண்புடையவர்; சிவயாகங்கள் விதி வழுவாமற் செய்து, உலகமெல்லா மின்படையப் புரிந்து சிவன் கழலே வாழ்வாவது என்ற துணிபு பெற்றார்.

இவ்வாறு வாழும் பண்பினாற் சிவன் அடியவர்களே தமது தலைவராவார் என்ற கொள்கையில் உறைப்புடையவராய்த் திருவைந்தெழுத்தினை ஓதும் நித்த நியம நெறியில்

நின்றனர்; இதன் பயனாகத் திருவாரூரிற் சார்ந்து வன்றொண்டப் பெருமானுருக்கு அன்பு செய்து அவரது பெருநண்பு பெற்று அங்குத் தங்கினர்.

அவர் பாதமே பற்றுக்கோடாகக் கொண்டு ஐம்புலனும் ஆறு குற்றமும் வென்றனர். அப்பாதங்கள் தந்த விளக்கத்தின் துணையாலே சிவலோகத்தில் என்றும் நிலவும் இன்பம் பெற்றனர்.

கற்பனை:

1. வேதங்கள் தூய வாய்மை தெரிப்பன.

2. வேதங்களின் உள்ளுறையாவன சிவனடியார் வழிபாடும் சிவ வழிபாடும் என்றிரண்டுமேயாம். 1832-ம் பார்க்க; (3631-3632).

3. வேதாகமங்களுள் விதிக்கப்படுவன சிவனை முன்னாகச் செய்யும் சிவ யாகங்களேயாம்.

4. அந்த யாகங்களின் பயனாகக் கலிநீங்கி உலக மின்புறும்.

5. சிவனடியார்களே உலகையாளும் தலைவர்கள். "அகில காரணர் தாள் பணி வார்கடாம், அகில லோகமு மாடற் குரியவர்" (139)


6. சிவனஞ்செழுத் தோதும் வாய்மை நித்த நியமமாகக் கொண்டொழுகுதல் சித்தந் தெளியச் செய்யும் சிறந்த சாதனம்.

7. வன்றொண்டர் பாதம் தொழுது பற்றுதல் நன்னெறி சேரும் விளக்கமாக உதவிச் சிவலோகம் அடைவிக்கும்.

தலவிசேடம்:—திருவம்பர்-இது திருவின்னம்பர் எனவும், **அம்பர் மாகாளம்** எனவும் வழங்கும்; 2427-2430 பாட்டுக்களின் கீழ் உரைத்தவை பார்க்க.

சோமாசி மாற நாயனார் புராணம் முற்றும்

24A



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி நாயனார் துதி

தொகை

"ஆரூர ஞரூரி லம்மானுக் காளே"

—திருத்தொண்டத்தொகை-(5)

வகை

"துணையு மளவுமில் லாதவன் றன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர்நெடு வேலுங் கறுத்த கயலிணையும்
பிணையு நிகர்த்தகட் சங்கிலி பேரமைத் தோளிரண்டும்
அணையு மவன்றிரு வாரூர ஞகின்ற வற்புதனே"

—திருத்தொண்டர் திருவந்தாதி-(40)

விரி

வேறு

3635. பணையுந் தடமும் புடைசூழு மொற்றி யூரிற் பாகத்தோர்
துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ராஞரை
யிணையுங் கொங்கைச் சங்கிலியா ரெழில்மென் பணைத்தோ ளெய்துவிக்க
வணையு **மொருவர் சரணமே யரண மாக வடைந்தோமே.** 1

துதி - இனி, நிறுத்த முறையானே, "வம்பரு வரிவண்டு" என்ற திருத்தொண்டத் தொகை ஐந்தாவது பாசுரத்தினுள், "அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்" என்ற பகுதியின் சரிதத்துக் கருத்து "ஆரூர ஞரூரி லம்மானுக்காளே" என்றதனுள் போந்தபடி, திருவாரூர்ப் பெருமானுக்கு நம்பிகள் ஆளாயின சரிதப் பகுதியைக் கூறத் தொடங்கிய ஆசிரியர் நம்பிகள் சரிதத்தினுள் மற்றுமோர் பகுதியினை உள்ளமைத்து ஆளாந் தன்மையைக் காட்டும் முகத்தால் அதனை நம்பிகளின் துதியாகக் கூறுகின்றர். இவ்வாறு நம்பியாண்டார் நம்பிகளால் வகுத்துக் காட்டப்பட்டது.

தொகை: "வம்பரு வரிவண்டு" என்னுமித் திருப்பாட்டினுள் துதிக்கப் பட்ட ஆறு அடியார்களுக்கும் தனித்தனி அடியேனுகிய ஆரூரனுகிய நான் திருஆரூர் அம்மானுக்கும் ஆள் என்று முடிக்க. அம்மானுக்காளே யாகிய ஆரூரன் முன் கூறிய ஆறு அடியவர்களுக்கும் தனித்தனி யடியேனுனேன் என்று கூட்டி முடித்தலுமாம். இவை பற்றி முன் உரைத்தவையும் பார்க்க.

வகை: துணையும்...துணையா-ஒப்பும் அளவும் இல்லாத இறைவரது திருவருளே துணையாகக் கொண்டு; கணையும்...அணையும்-அம்பினையும் ஒளி பொருந்திய நெடிய

வேலினையும் கறுத்த இரண்டு கயல்மீன்களையும் ஒத்த கண்களையுடைய சங்கிலியாரின் பெரிய மூங்கில் போன்ற இரண்டு தோள்களையும் அணைந்த; அவன்...அற்புதனே - அவர் திருவாரூரர் என்று சொல்லப்படும் அற்புதராவார்.

துணை - ஒப்பு; "தனக்குவமை யில்லாதான்" (குறள்); **கணை- வேல்- கயல்- பிணை-** இவை கண்களுக்கு ஒப்பாக உவமிக்கப்பட்டன; **கணை-வேல்-**இரண்டும் ஊடுருவிப்பாயும் நிலைக்கும், **கயல்** - கண்ணின் பிறழ்ச்சிக்கும் உவமைகள்; இவை வடிவும் தொழிலும்பற்றி வந்தன;"காட்சியிற் கண்ணினுர்" (35) என்று முன்னை நிலையினும், "என்னை யுள்ளந் திரிவித்தாள்" (3382) என்று இம்மை நிலையினும் பாய்ந்த நிலைகுறிக்க இரண்டு ஒற்றைப் பொருள்களால் உவமித்தார்; "காவியினேர் கண்ணுருங் கண்டுமிக மனங்கலங்கிப், பாவியே னிதுகண்டேன்" (3415) என்ற கண்ணீர்மை குறிக்கக் **கயல்** என்ருர்; நீரினில் வாழ்வதும் பிறழ்வதும் பொதுத்தன்மை; **பிணை** - பெண்மான்; அன்புக் கறிகுறியாவன; "அன்புறு காதல்கூர வணையுமான் பிணைக ளோடும்" (653); மகிழடியின் ஒன்றும், மணத்திறத்தினில் ஒன்றும் ஆக இரண்டு நிகழ்ச்சிகளின் பார்வைக்கு இவை இரண்டும் இணைகளாகக் கூறிய நயமும் கண்டுகொள்க. **அமை** - மூங்கில்; **அற்புதன்** - இன்னபடியென் றறியலாகாத பெருமையன்.

3635. (இ-ள்) பணையும்...ஒற்றியூரில்; வயல்களும் வாவிகளும் பக்கமெங்கும் சூழும் திருவொற்றியூரிலே; பாகத்தோர்...பிரியாதார்-தம் ஒரு பாகத்திலே துணைவியாகிய உமையம்மையாரும் தாமும் பிரியாதுள்ளவராகிய இறைவர்; தோழத் தம்பிரானுரை... அணையும் - தம்பிரான் றோழரை இணையாகிய தனங்களையுடைய சங்கிலியாரின் அழகிய மெல்லிய பணைத்த தோள்களை அடையும்படிச் செய்ய, அதனுற் சென்றணையும்; ஒருவர்...அடைந்தோமே - ஒருவராகிய நம்பிகளின் திருவடிகளையே நமக்குக் காப்பாக அடைந்தோம்.

(வி-ரை) ஒற்றியூரில் - எய்துவிக்க - அணையும் என்று கூட்டுக; **ஒற்றியூரில் பிரியாதார்** என்று கூட்டி யுரைக்கவும் நின்றது.

ஓர் பாகத்துத் துணையும் என்க; **துணை** - உமையம்மையார்; துணைவியார்; **தம்பிரான் றோழரை** - என்க; தோழனுராதலின் எய்துவிக்க என்ற காரணக் குறிப்புடன் நின்றது.

எய்துவிக்க அணையும் - எய்துவித்தலால் அணையும்.

அரணம் - காவல்; ஆணவத் தீங்கு வராமற் காக்கும் மதில்.

வகை நூலுட் போந்த கருத்தினையே ஒட்டிக் கூறிய பண்பும் பொருளும் காண்க. யாப்பின் எதுகையும் அவ்வாறே அமைத்தநிலை எத்துணையளவு வகை நூலாசிரியரை ஆசிரியர் அடியொற்றிச் செல்கின்ருர் என்பதனை உணர்த்தும். இத்துதியின் விரிவு இச்சருக்கத்துட் போந்த நம்பிகளது சரிதப் பகுதியாதலும் கண்டு கொள்க.

ஆறாவது-வம்பரு வரிவண்டுச் சருக்கம் முற்றிற்று

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏழாவது


வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (6)

— திருத்தொண்டத் தொகை

திருச்சிற்றம்பலம்



சாக்கிய நாயனார் (மார்கழி - பூராடம்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஏழாவது


வார்கொண்ட வனமுலையாள் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கு மடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்
கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கு மடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கு மடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூர னாரூரி லம்மானுக் காளே. (6)

— திருத்தொண்டத் தொகை

திருச்சிற்றம்பலம்



சாக்கிய நாயனார் (மார்கழி - பூராடம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

34. சாக்கிய நாயனார் புராணம் (18 திருப்பாடல்கள்)

தொகை

"வார்கொண்ட வனமுலையா ளுமைபங்கன் **கழலே**
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கு மடியேன்"

—*திருத்தொண்டத்தொகை-(6)*

வகை

தகடன வாடையன் சாக்கியன் மாக்கட் டடவரையின்
மகடனந் தாக்கக் குழைந்ததிண் டோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு **மேனியிற் செங்கல் லெறிந்து சிவபுரத்துப்**
புகழ்தரப் புக்கவ னூர்சங்க மங்கை புவனியிலே.

—*திருத்தொண்டர் திருவந்தாதி-(41)*

விரி

3636. **அறுசமயத் தலைவராய் நின்றவருக் கன்பராய்**
மறுசமயச் சாக்கியர்தம் வடிவினால் வருந்தொண்டர்
உறுதிவரச் சிவலிங்கங் கண்டுவந்து **கல்லெறிந்து**
மறுவில்**சரண் பெற்றதிற** மறிந்தபடி வழுத்துவாம். 1

சருக்கம்:—"வார்கொண்ட வனமுலையாள்" என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகை ஆறுவது திருப்பாட்டிற் போற்றப்படும் சாக்கியர்-சிறப்புலியார் - சிறுத்தொண்டர் - கழறிற்றறிவார் - கணநாதர் - கூற்றுவனர் என்ற ஆறு நாயன்மார்கள் சரிதவரலாறும் பண்பும் கூறும் பகுதி; **சருக்கம் -** சிறு பிரிவு; **புராணம் -** அதனுட் பிரிவு. இம்முறையே முதலாவது சாக்கிய நாயனர் புராணங்கூறத் தொடங்குகின்றார்.

புராணம்:—சாக்கிய நாயனரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி; இனி,ஆசிரியர் நிறுத்த முறையானே, வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தில் கூறப்படும் ஆறு அடியார்களின் சரிதங்களுள் முதலாவதாகச் சாக்கிய நாயனரது சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:—வாரினைக் கட்டிய அழகிய முலையினையுடைய உமையம்மையாரைப் பங்கினில் உடையவராகிய சிவபெருமான் கழல்களையே மறவாமற் கல் எறிந்து அதனற் கதி கூடிய சாக்கிய நாயனருக்கும் நான் அடியேனுவேன்.

வார்-முலைக்கச்சு; **கழல் மறவாது கல்லெறிந்தது** நாயனரது சரிதவரலாறு; **ஏகாரம் -** பிரிநிலை; தேற்றமுமாம்; **எறிந்த -** எறிந்த அதனற் கதி பெற்ற; **உமை பங்கன் கழல்களையே**

மறக்காமல் கல் எறிந்த - என்றது அம்மை மூலைகளுக்குக் குழைந்து சுவடு கொண்டருளிய இறைவர், சாக்கிய நாயனுர் எறிந்த கல்லுக்கும் குழைந்து அதனை ஏற்று அருளினர் என்ற குறிப்புப்பெற **மூலையாள்** உமைபங்கன் கழலே-கல் எறிந்த என்று கூறினுர்; இக்கருத்தினை வகைநூல் வகுப்பது காண்க. **மறத்தல்** - அயர்த்தல்; **எறிந்த** - எறிந்த அஃதே யாருகச் சிவகதி பெற்ற என்க. **சாக்கியர்** - இவரது இயற்பெயரன்று; இவர் சமய விசாரிப்புக் கொண்டு சாக்கியராயினர் என்பது சரிதம்; **சாக்கியர்** - புத்தர்; அவ்வேடந் துறவாதே சிவனன்பு செய்தாராதலின் அப்பெயராற் கூறியருளினர். சிவனே எல்லாச் சமயங்களுக்கும் தாமே தலைவராய் இயங்குகின்ருர் என்பது; இதனை விரிநூல் விரித்துக் காட்டியருளிய நிலை "அறுசமயத் தலைவராய் நின்றவர்" (3636) என்றதனுற் குறித்தமை காண்க.

வகை:—தகடன...சாக்கியன் - தகடு போன்ற ஆடையினை உடைய சாக்கியர்; மாக்கல்...கம்பர் - பெரிய கற்களாலாகிய பெரிய இமயமலையின் மகளாராகிய பார்வதியம்மையாரின் தனம் தழுவுதலினுற் குழைந்த திண்ணிய தோள்களையுடைய திருவேகம்பரது; செம்பொன்...எறிந்து - செம்பொன் போன்று விளங்கும் திருமேனிமேல் செங்கல்லினை எறிந்தவஃதே வழியாக; சிவபுரத்து...புக்கவன்- சிவலோகத்திலே புகழ் பொருந்தப் புகுதப் பெற்றவரது; ஊர்...புவனியிலே - ஊர் இவ்வுலகில் சங்கமங்கைப் பகுதியாகும்.

தகடன ஆடை - புத்தர்கள் போர்க்கும் துவராடை; **தகடு** - மெல்லிய பொற்றகடு; "துவராடைப் படம்" (3647) என்பது விரிநூல்; **சாக்கியன்-**புத்தன்; இந்நாயனுர் புத்த சமயத்தில் இருந்து பின் சிவநெறி யுணர்ந்து அவ்வேடத்துடனே சிவவழிபாட்டினின் றமையால் இப்பெயரால் வழங்கப்பெற்றனர்; **சாக்கியன்** - கவுதம சாக்கியமுனி என்ற புத்தனது பெயர்; அவனது சமயக் கோட்பட்டார் சாக்கியர் எனப்படுவர்; **சாக்கியன் - புக்கவன் - (அவனது) ஊர் சங்க மங்கைப் பதி** என்று கூட்டுக; **மாக்கல்... மகள்- மாக்கல்-தடவரை** - இமய மால்வரை; **வரையின் மகள்** - மலையரசன் மகளாய் வந்த பார்வதி; **தனம்...கம்பர்-**திருவேகம்பர்; இந்நாயனுர் கச்சிப்பதியில் வந்திருந்து தொண்டு செய்து பேறு பெற்ருராதலின் "**உமைபங்கன்**" என்ற தொகை நூலுக்கு வகை நூலாசிரியர் இவ்வாறு பொருள்வகுத்தார்; இதனை விரிநூல் ஆசிரியர் "காஞ்சியணிநகரஞ் சென்றடைந்து" (3638) என விரித்தருளுதல் காண்க. காஞ்சிபுரத்தில் இந்நாயனுர் கல்லெறிந்து பேறு பெற்ற **ஆலயம் "முத்தீசர் கோயில்"** என்று வழங்கப்பட்டு வழிபடப் பெறுகின்றது; **செம்பொன் திகழ்தருமேனி** - பொன்னுர் மேனியனே" (தேவாரம் - நம்பி); "பொன்வண்ண மெய்வண்ண மவ்வண்ண மேனி" (பொன் - அந். 1-சேரமான்); **சிவபுரத்துப் புகப்பெற்றவன்;** "மிக்க சிவலோகத்திற் பழவடிமைப் பாங்கருளி" (3652) என்பது விரிநூல். **சங்கமங்கை** - பதியின் பெயர்; (3636)

விரி:— 3636. **(இ-ள்)** அறுசமயத் தலைவராய்...அன்பராய் - ஆறு சமயங்கட்கும் தலைவராகி நின்ற சிவபெருமானுக்கு அன்பராகி;மறுசமய...தொண்டர் - புறச்சமயச் சாக்கியர்களது வடிவினேடே வரும் தொண்டராகி; உறுதி...திறம் -உறுதி (சைவ சமயமே மெய்ச்சமய மென்ற துணிவு) வருதலினுலே சிவலிங்கத்தினைக் கண்டு மகிழ்ந்து கல் எறிந்து குற்ற நீக்கும் திருவடியினைப் பெற்ற தன்மையை; அறிந்தபடி வழுத்துவாம் - அறிந்த அளவினுலே துதிப்போம்.

(வி-ரை) இது கவிக்கூற்று; இனிக் கூறப்புகும் புராணத்தின் உள்ளுறை கூறி வகுத்துத் தோற்றுவாய் செய்தருளினர்.

அறுசமயத் தலைவராய் நின்றவர் - சிவபெருமான்; அறுசமயம் - சமயங்களெல்லாம் புறப்புறம் - புறம் - அகப்புறம் - அகம் என நான்கு வகையாகப் பகுக்கப்படும். அவற்றுள் ஒவ்வொன்றும் முறையே அறுவகைப்படும்; புறப்புறம் - உலகாயதமும் நால்வகைப் பௌத்தமும் ஆருகதமும் என அறுவகைப்படும்; புறம் - தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாக்கியம், யோகம், பாஞ்சராத்திரம் என அறுவகைப்படும்; அகப்புறம் - பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் என அறுவகைப்படும்; அகம் - பாடாணவாத சைவம், பேதவாத சைவம், சிவசமவாத சைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவர அவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என அறுவகைப்படும். இவற்றின் தன்மைகளையும் இவற்றுள் பேதங்களையும் சாரமாக வடித்தெடுத்து மாதவச் சிவஞான முனிவர் சிவஞானமாபாடியத்தில் அவையடக்கப் பகுதியில் புறன் என்ற விடத்துக் காட்டியருளினர்; கடைப்பிடிக்க. (கழகப் பதிப்பு- பக்கம் 42-45); முடிந்த முடிபாகிய சித்தாந்த சைவத்திற்கும் இவற்றுக்கும் உள்ள வேறுபாடுகளும், இவை ஏன் சமயங்கள் என வகுக்கப்பட்டன என்ற நிலைகளும், பிறவும் ஆண்டே கண்டு கொள்க. இங்கு அறுசமயம் என்றது ஒவ்வொன்றும் அறுவகையாக வகுக்கப்பட்ட நால்வகைச் சமயங்களை என்க; சமயம் - சமயங்களுக்கும் என முற்றும்மையும் நான்கனுருபும் விரிக்க.

அறுசமயத் தலைவராய் நின்றவர் சிவபெருமானே என்றது "ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்" (பிள் - தேவா); "ஆறு சமயத் தவரவரைத், தேற்றுந் தகையன" (தேவா - அரசு); "அறிவினன் மிக்க வறுவகைச் சமயத் தவ்வவர்க்கங்கே யாரருள் புரிந்து" (தேவா - நம்பி); "அறுவகைச் சமயத் தோர்க்கு மவ்வவர் பொருளாய்" (சித்தி) என்பன முதலிய திருவாக்குக்களால் அறியக் கிடக்கும் உண்மை; இத்தனை சமயபேதங்களெதற்காக வகுக்கப் பட்டன? இவை வேண்டுமா? இவை மக்களுள்ளே பிணக்கமும் கலாமும் விளையக்காரணமா கின்றனவே? என்று வினவிப் பிணங்குவோர் பலர்; உயிர்களின் பக்குவ பேதங்கள் பலப்பலவாதலின் அவ்வப்பக்குவங்களுக் கேற்ப அத்துணையும் வேண்டப் படுவனவே என்பது சிவாகம உண்மை ஞான நூற்றுணிபு. அவற்றுற் பிணங்கி ஒழியாது ஞானநூற்றுணிபு பற்றி அவ்வவற்றுக் கேற்றவாறு படிமுறையில் வைத்துக் கண்டு, ஆன்றோர் வாய்க்கேட்டமைந் தொழுகலே அறிவுடைமை.

அறுசமயத் தலைவராய் நின்றவர் - "ஆறொன் றியசம யங்களி னவ்வவர்க் கப் பொருள்கள், வேறொன் றிலாதன" (அரசு. இன்னம்பர். திருவிருத்-4) என்றபடி அவ்வச் சமயத்தவரும் அவ்வவர் தத்தம் சமயக் கொள்கையுள் அமைந்து அஃதஃதே முடிபு என்று கொள்ளும்படி அவரவர் பக்குவத்துக் கேற்றபடி விளக்கஞ் செய்து அங்கங்கும் நிற்றல். "அவ்வவர் பொருளாய்" (சித்தி); நின்றவர் - விளங்க நின்றவர்; தலைவராதல் - தமது நிறைவுக்குள் அவை ஒவ்வோர் அங்கமாக அமையத் தாம் அவற்றுள் அடங்காது மேலோங்குதல்; "வேறாங் குறியது வுடைத்தாய்" (சித்தி). "சமயகோ டிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமென், றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது" என்று இக்கருத்தை

3637. தாளாளர் திருச்சங்க மங்கையினிற் றகவுடைய
வேளாளர் குலத்துதித்தார் **மிக்கபொரு டெரிந்துணர்ந்து**
கேளாகிப் பல்லுயிர்க்கு மருளுடைய ராய்க்கெழுமி
"**நீளாது பிறந்திறக்கு நிலையொழிவே**" னெனநிற்பார், 2

அழகாக விரித்தனர் தாயுமானுர்.

இங்கு இவ்வாற்றல் இறைவரைக் கூறி எடுத்தது இப்புராணமுடைய நாயனுருக்குச் சாக்கியமாகிய புறப்புறச் சமயத்துள்ளேயும் தாமே தலைவராக நின்றமை காட்டி யருள்செய்தமை குறிப்பு; (3640-3641).

இந்நாயனுர் சாக்கிய வேடத்துடன் நின்றபடியே சிவனை வழிபட்ட செயல் அச்சமயத் தலைவரும் சிவனேயாதலால் சமயநெறியினின்றும் விபசரித்தமையாகாதென்பது காட்டுதற் பொருட்டு இவ்வாற்ருற் ருெடங்கிய தகுதியும் காண்க.

மறுசமயச் சாக்கியர் தம் வடிவு - புறப்புறச் சமயமாகிய புத்த சமயத்தவர்களது வேடம்; துவராடை முதலியவை; "பொல்லா வேடம்" (3642) என்பது காண்க. "தகடன வாடையன்"(அந்தாதி).

வடிவினுல் வரும் தொண்டர் - புறப்புறச்சமய வேடம் துறவாதே சிவத் தொண்டின் நிகழ்பவர்.

உறுதிவர -உறுதி வரப்பெற்றதனுல்; **உறுதி**யாவது; "ஈறில்சிவ நன்னெறியே பொருளாவ"" தென்றும் (3639), "எந்நிலையி னின்ருலு மெக்கோலங் கொண்டாலும், மன்னியசீர்ச் சங்கரன்ருள் மறவாமை பொருள்" என்றும் (3641) கொண்ட மெய்யுணர்வின் உறைப்பு; **வர** - வருதலினுல்; காரணக் குறிப்பு.

மறுவில் சரண் - **மறு** -குற்றம்; மலமறைப்பு; **இல்** - இல்லையாக்கும்; **சரண்** - சிவன்றிருவடி. *1*

3637. **(இ-ள்)** தாளாளர்...உதித்தார் - திருச்சங்கமங்கை என்னும் பதியில் தாளாண்மையுடையவர்களாய் வாழ்கின்ற வேளாளர் குலத்தில் வந்தவதரித்தார்; மிக்க பொருள் தெரிந்துணர்ந்து - உண்மைப் பொருளினைத் தெரிந்து (அதன் பயனுய்) அதனை உணர்ந்தும்; கேள் ஆகி...கெழுமி - அன்புடையராயும் எல்லாவுயிர்களிடத்தும் அருள் உடையராயும் இணங்க ஒழுகி; நீளாது...நிற்பார் - பிறந்தும் இறந்தும் வரும் நிலையின் தன்மை மேலும் நீண்டு செல்லாது இப்பிறப்பிலேயே அதனின்றும் நீங்குவேன் என்ற கருத்துடன் அவ்வொழுக்கத்தின் நிற்பாராய்.

(வி-ரை) தாளாளர் - தாளாண்மை மிக்கவர்; **தாளாண்மை - தாள்** - முயற்சி; **ஆளர்** - ஆள்பவர். "வேளாளர்...தாளாளர்" (பிள். தேவா - ஆக்கூர்).

தகவு - தகைமை; மேன்மை; பெருமை; **தக**வாவது உயிர்களை எல்லாம் கருணையுடன் கண்டு புரப்பதாகிய உழவுத் தொழில் உடைமை; தாளாளராகிய வேளாளர் என்க; "இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது, கைசெய்தூண் மாலையவர்"; "உழுவா ருலகத்தார்க் காணி

3638. அந்நாளி லெயிற்காஞ்சி யணிநகரஞ் சென்றடைந்து
நன்ஞான மடைவதற்குப் பலவழியு நாடுவார்
முன்னுகச் சாக்கியர்தா மொழியறத்தின் வழிச்சார்ந்து
மன்னுத **பிறப்பறுக்குந் தத்துவத்தின் வழியுணர்வார்,** 3

யஃதாற்று, தெழுவாரை யெல்லாம் பொறுத்து" (குறள்) என்பன முதலிய உண்மைகள் காண்க. "இது குடியுயர்தற்கேதுவென்ற ஆள்வினை வகையாம்" என்பர் பரிமேலழகர். **அருள்** - எல்லாவுயிர்களிடத்தும் இயல்பாகவே செல்லும் கருணை.

மிக்க பொருள் - மெய்ப்பொருள்; உறுதிப் பொருள் என்றலுமாம்;**மிகுதல்** - ஏனை எல்லாவற்றிலும் சிறத்தல்; எஞ்சுதல் என்றலுமாம்; உலகியல் வாழ்க்கையில் வரும் ஏனைய பொய் எல்லாங் கழிய எஞ்சி நிற்கும் என்றதாம்.

தெரிந்துணர்ந்து - கெழுமி - ஒழிவேன் என - என்ற இவை சமய விசாரத்தில் மனம் வைத்த நாயனுர் முதலிற் செய்த முயற்சிகள்; **தெரிந்துணர்ந்து** - இஃது விசாரித்து அறிகின்ற சித்தத்தின் செயல்; **கெழுமி** - இஃது உடல் முயற்சி; **ஒழிவேன் என** - இது முன்னை முயற்சிகளை ஆக்கும் மனத்துணிவு; "சமயங்க ளானவற்றி னல்லாறு தெரிந்துணர" (*1302*) என்ற கருத்துக் காண்க.

கேளாகி... கெழுமி - கேள் - உறவு - நட்பு. **கேள்** என்பது மக்கட் கூட்டத்துக்கும், **பல்லுயிர்க்கும்** என்பது ஏனையுயிர் வகைக்குமாம். **கெழுமுதல்** - நண்ணுதல்;இணைந்து ஒழுகுதல்.

பிறந்திறக்கும் நிலை நீளாது ஒழிவேன் - என்க. **நீளுதல்** - மீள மீளப் பிறந்தும் இறந்தும் வரும் நிலை காரண காரியத் தொடர்பாய்ச் சங்கிலிபோல வளர்ந்து வருதல்.

ஒழிவேன் - நிலையினின்றும் நீங்குவேன். நிலையினை ஒழிப்பேன் என்றலுமாம்.

நிற்பார் - அவ்வழியின் முயற்சியினை மேற்கொள்வாராய்; முற்றெச்சம்.

நிற்பார் - நாடுவார் - உணர்வார் - (*3638*), தெளிந்து - நாட்டுவார் - (*3639*) கொண்டே - என அறிந்தார்- என்று மேற்பாட்டுக்களுடன் கூட்டி முடிக்க.

கேளாகிப் பல்லுயிர்க்கும் அருளுடையராய்க் கெழுமிப் - பிறந்திறக்கும் நிலை ஒழிவேன் என்றதற்கு உயிர்களிடத்து அருளுடையராய் வாழ்ந்து பிறவிப் பிணியினின்றும் விடுதலை யடைவது என்று உரைப்பாரு முண்டு. இது புத்தர் கூறும் அறம். நாயனுர் இங்கு மேற்கொண்ட நிலை அஃதன்று; அதனைப் பின்னரே ஓதிச் சார்ந்தமை மேற்கூறப்படும். இங்குக் கூறியது புத்த தர்மமாகிய அறம் பற்றுது பொதுப்படக் கூறப்படும் சீவகாருண்ய ஒழுக்கம். "'தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்...கருணையினுல் ஆசிலறச் சாலைகளும் தண்ணீர்ப் பந்தல்களும் அமைப்பார்" (*1300*); "காவளர்த்துங் குளந்தொட்டும்... நானிலத்துள்ளோர், யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்ருர்"(*1301*) என்று வரும் அரசுகள் சரித வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது. ஆளுடைய அரசுகளும் இவ்வாறே அறங்கள் செய்து சமய விசாரணையுட் புக்குச், சமணம் புகுந்து பின் திருவருளாற்

சைவநெறியின் மேன்மையை கருதுக. இங்குக் கூறியநிலை இறைவன் நினைவும் பற்றுமின்றிச் செய்யும் பசுதருமங்கள்; இவை போகங்களைத் தந்து பிறவிக்கேதுவாம். சிவதருமங்கள் எனப்படும் பதிதருமங்கள் இவற்றின் வேறும். அவையே பிறவியை நீக்குவன; அந்நிலையின் உண்மையறிவு பெறுதலை மேற் (3640) கூறுதல் காண்க; இவ்வேறுபாடுணராத இந்நாண் மாக்கள் பதிதருமங்களை இகழ்ந்தும், பசுதருமங்களை உயர்த்தியும் கொண்டு பலவாறும் இழுக்கடைந்து, மிக்க பெருமிதம் வந்து உலகிற் றம்மையே சாலமதித்துக் கழிகுவர். இவை பற்றி முன் உரைத்தவை பார்க்க. 2

3638. **(இ-ள்)** அந்நாளில்...நாடுவார் - (ஒழுகும்) அந்நாளில் (அதன் பொருட்டுத் தமது ஊரைவிட்டு) மதில் சூழ்ந்த காஞ்சிபுரம் என்கின்ற அழகிய நகரத்தின்கண் சென்று அடைந்து நல்ல உண்மை ஞானத்தினைப் பெறுவதற்குரிய பலவழிகளையும் நாடுவாராய்; முன்னுகை...சார்ந்து - அதன் பொருட்டு முதலாகச் சாக்கியர் என்பார்கள் மொழியும் புத்த தருமங்களின் வழியிலே சார்ந்து; மன்னுத... உணர்வார் - நிலையில்லாத பிறப்பினை அறுக்கும் உறுதிப்பாட்டின் வழியினை ஆராய்வாராய்,

(வி-ரை) காஞ்சி அணிநகரம் சென்றடைந்து - அந்நாளில் காஞ்சிபுரமானது சமய விசாரணை செய்வோர்க்கு உதவியாகப் பலவகைச் சமய நிலயங்களுக்கும் கலைஞான சாதனங்களுக்கும் இருப்பிடமாய் விளங்கியது என்பது நாட்டுச் சரிதங்களாலும், மணிமேகலையில் கச்சிமாகநகர் புக்க காதையாலும் அறியக் கிடக்கின்றது. "மெய்வளந்தரு சிறப்பினு லுலகெலாம் வியப்ப" (*1125*); "ஆண்ட நாயகி **சமயங்க ளாறு** மகில யோனியு மளிக்குமந் நகரம்" (*1161*) என்றவையும் காண்க. "முன்னொரு சமயந் தன்னைப் பொருளென முற்றி நின்றோர், பின்னர்வான் சைவ மெய்தப் பெறினவர் பேசு மாபோல்" (நகரப் படலம் - *4*) என்று உவமை முகத்தால் இவ்வுண்மையினையும் இந்நாயனுர் வரலாற்றுக் குறிப்புப்படக் குறிப்பிற் கூறுவதும், "வளரிலைத் தருப்பை நுனியெனக் கூர்த்த மதியினர் தொன்றுதொட்டு டுடைய, பளகறு கேள்விப் பயிற்சியர் மேற்கோண் முதற்பகர் மூன்றினுந் தெருட்டி, இளையருக் குணர்த்து மிலக்கண நெறியோ ரீரிரு புலமையோர் தம்முட், களவிக லிகந்து குழாங்குழா மாகிக் கலைதெரி கழகமும் பலவால்" (மேற்படி - 108) என்று விளங்கக் கூறுவதும் ஆகிய காஞ்சிப் புராணவுரைகளும் காண்க; பல்கலைக் கழகங்கள், சமயக்கல்வி நிலையங்கள் முதலியவை (Universities - Institutions of religious learning & research) அந்நகரிலிருந்ததனோடு, புத்த சமணுதி புறச்சமய நிலையங்களும் சங்கங்கள் பாழிகள் பள்ளிகளை நாட்டித் தமது சமய வலைகளை நீளவீசி மக்களைப் புறச் சமயிகள் தம் வயப்படுத்தவும் ஏதுவாயின என்ற வரலாறுகளும் அறியப்படும். கி.பி. 640-ல் நம் நாட்டுக்கு வந்த சீன யாத்திரிகன் **யுவாங் சுவாங்** என்பவன் காஞ்சியில் தங்கியிருந்தான்; அவன் அங்கும் புத்தர்களின் பள்ளிகள் நூற்றுக்குமேல் இருந்தன என்றும், பௌத்த சந்நியாசிகள் ஆயிரக்கணக்காக இருந்தனர் என்றும் எழுதியுள்ளான். இந்நிலையினுலேதான் இந்நாயனுரும் சமய விசாரணை மேற்கொண்டு உண்மையறியக் காஞ்சியினைச் சென்றடைந்தனர். இதுபோலவே நடுநாட்டினும் அந்நா ணிகழ்ந்தமையின் ஆளுடைய அரசுகளும் பாடலிபுத்திரத்தில் அணைந்து சமண்நெறி புக்கமையும் காண்க. **எயிற் காஞ்சி**- "பொன்னெயிற் காஞ்சிநகர்" (மணிமே).

3639. அந்நிலைமைச் சாக்கியர்தம் மருங்கலைநூ லோதியது
தன்னிலையும் புறச்சமயச் சார்வுகளும் பொருளல்ல
என்னுமது தெளிந்தீச **ரருள்கூட** "வீறில்சிவ
நன்னெறியே பொருளாவ" தெனவுணர்வு நாட்டுவார், 4

நன்ஞானம்...நாடுவார் - "கதிப்பாற் செல்ல ஏதுநெறி?" என்று வீடு காதலித்து "வஞ்சப் பிறவிக் கஞ்சிவந் தொருவன், ஏதிறை யருளென"த் தேடி வந்தோர்க்கே உண்மை ஞானமானது இறைவரருளால் குருமுகமாக யருளப்படும் என்பது சிவாகமத் துணிபு; திருவாதவூரடிகள் தம்மிடம் வரும் அறிவுடையோரை ஆன்ம ஞானமும் வீடுபேறும் பற்றி வினவி வினவி வந்தனர்; "எண்ணிலாரிடத் தளந்தளந்தறிபொரு ளெல்லாம், உண்ணு நீர்விடாய்க் குவரிநீ ருண்டவ ரொப்ப" மன அமைதி பெறுமல் சற்குருவை நாடிச் சென்றனர் என்றறிகின்றேம். இவை போன்றன வெல்லாம் ஈண்டு நினைவுகூர்தற்பாலன. **நன்ஞானம்**- தத்துவ ஞானம்; மெய்யுணர்வு.

முன்னுக...சார்ந்து - காஞ்சிபுரத்தில் சமயவிசாரந் தொடங்கி நன்ஞானம் அடைவதற்குப் பலவழியும் நாடிச் சென்ற இந்நாயனர்க்கு முதலில் எதிர்ப்பட்டுச் சாரக் கிடைத்தது சாக்கியர் சங்கம்; இதனுற் புத்தர்கள் தமது சமயப் பரப்பினை மிகுதியும் காஞ்சியில் அந்நாளிற் செய்திருந்தனர் என்பதறியப்படும்.

மொழி அறத்தின் வழிச்சார்ந்து - "**புத்ததருமம்**" என்ற தலைப்பின் கீழ் அறமே பொருளென உபதேசிப்பது பௌத்தம்; **சாக்கியர்** - புத்தர்கள்; **தாம் மொழி அறம்** - முன்னூல் வழிநூல் இல்லாது தாமே மொழிந்த; **மொழி அறம்** - உட்கிடை யில்லாது சொன்மாத்திரையாய் நின்றெழியும் என்ற குறிப்புடனும் நின்றது; இவர் கூற்றுக்களின் தன்மைகளை மாபாடியத்துள் பௌத்தம் என்ற தலைப்பில் தொகுத்துள்ளவற்றுட் காண்க. சிவஞானசித்தியார் பரபக்கத்துள்ளும் பார்க்க. **அறம்** - அறநூல்; ஆகுபெயர்;"அறங்கூறு மாக்கம்" (குறள்).

வழிச்சார்தலாவது -புத்தர்களுள் ஒருவராகக் கூடி அவர் கூறும் ஒழுக்கங்களுள் நிற்றல். அவை துவராடை உடுத்தல் முதலாயின; "தகடனவாடையன்" (திருவந்தாதி); "துவராடைப் படம்புனைவே டந்தவிரார்" *(3647)*.

மன்னுத பிறப்பு - நிலையாமையினை உடைய பிறப்பு; அஃதாவது சாதலை உடையது; **தத்துவம்** - உறுதி - உள்ளுறை - காரணம் என்ற பொருளில் வந்தது; **வழி** - கூடும்வழி.

ஞானமறிவதற்கு—வழியுணர—என்பனவும் பாடங்கள். *3*

3639. **(இ-ள்)** அந்நிலையில்...ஓதி-அந்த நிலையிலே சாக்கியர்களுடைய அரிய கலைநூலினைக் கற்று; அது...தெளிந்து - அதன் துணிபாகப் பெறப்பட்ட முடிபும் இன்னும் ஏனைப் புறமாகிய சமயங்களிற் சார்வாகக் கூறும் முடிபுகளும் உண்மைப் பொருளல்ல என்ற உண்மையினைத் தெளிந்தாராய்; ஈசர்...நாட்டுவார் - சிவபெருமானது திருவருள் கூடியதனுலே "அழிவில்லாத சிவநன்னெறியே உண்மைப் பொருளாவது" எனப்பெறும் நல்லுணர்வில் சிந்தையினை நிலைபெற நிறுத்துவாராய்,

(வி-ரை) **அருங்கலை நூல்** - திரிபிடகம் என்பது; இஃதொன்றே புத்தர்களின் பிரமாண நூலாம். ஆதலின் **நூல்** என ஒருமையாற் கூறினர். **அது தன் நிலை**யும் என்றதும் காண்க. **அது தன்நிலை** - அதனால் நிலையிட்ட முடிபு.

புறச் சமய சார்வுகளும் - அதனோடு அமைவுறாது, மேலும் தாம் அதனைப் போலவே ஆய்ந்தறிந்த எல்லாச் சமணம் முதலிய புறச்சமயங்களின் முடிபுகளும்; **சார்வு** - ஈண்டுச் சார்பினாற் பெறப்படும் முடிபு என்ற பொருள் குறித்து நின்றது.

பொருள் - உண்மைப் பொருள். **தெளிந்து** - தெளிவு பெற்று; விளங்கப் பெற்று.

ஈசர் அருள் கூட - **கூட** - கூடுதலால்; காரணப் பொருளில் வந்தது; **கூட** - **உணர்வு நாட்டுவர்** - என்று கூட்டுக; **அருள் கூடுதலாவது** - சிவசத்தி பதிதல்; சத்தி நிபாதம் என்பர். "நம்பர் அருளாமையினால் - அமண் சமயங் குறுகுவார்" (1302) எனச் சைவவுண்மை உணராமைக்கும், அதனாற் பரசமயம் புகுவதற்கும் **அருள் கூடாமை** - எதிர்மறைக் காரணமாகக் கூறியமை போலவே, ஈண்டுப் புறச் சமயத்தினின்றும் உண்மையுணர்ந்து சைவ நெறியிற் புகுவதற்கு உடன்பாட்டு முகத்தால் **அருள்கூட** என உணர்த்தியமை காண்க; எனவே உண்மைச் சமய அறிவு கொள்வதற்கும் கொள்ளாமைக்கும், அருள் கூடுதலும் கூடாமையுமே காரணமாம் என்பது உடன்பாடு எதிர்மறை இருவகையானும் காட்டப்பட்டது. இறைவர் யாவர்மாட்டும் ஒப்ப அருளுடையவ னன்றோ? அஃதாயின் ஒருவர்க்கருளுவதும் ஒருவர்க் கருளாமையும் என்னை? எனின் அஃது அவ்வவர் வினைகளின் பக்குவ பேதம்பற்றி என்க.

ஈறுஇல் சிவநன்னெறியே பொருளாவது- **ஈறு** - முடிபு; அழிவு; **பொருள்** - மெய்ப்பொருள்; ஈறு இல்லாமையாவது என்றும் எங்கும் ஒரு படித்தாய் நிகழ்தல்.

உணர்வு நாட்டுவார் - **நாட்டுதல்** - உணர்ந்த பொருளைக் கடாவிடைகளால் பலவாற்றாலும் உறுதிப்படுத்துதல்; **உணர்வு** என இங்குக் கூறியது பரபக்கத்தால் புறச் சமயச் சார்வுகள் எவையும் பொருளல்ல - ஆதலின் அவை போக எஞ்சி நின்ற சிவநெறியே பொருள் என்ற பொதுவுணர்வு. பரபக்க நிராகரணத்தால் நிகழ்வது. **நாட்டுதல்** - அதன்மேல் அம்முடிபினைச் சுபக்க ஞானத்தால் உறுதிப்படுத்துதல்; அது மேற்பாட்டாற் கூறப்படுதல் காண்க.

அந்நிலையில்—என்பதும் பாடம். 4

3640. **(இ-ள்)** செய்வினையும்...எனக்கொண்டே - செய்யும் வினை ஒன்று; செய்பவனாகிய கருத்தா ஒன்று - அதன் பயன் ஒன்று-அதனைக் கொடுத்து ஊட்டுவானாகிய முதல்வன் ஒன்று ஆக உண்மை காணும் வகையினால் விதியினாற் கிடைக்கும் பொருள்கள் நான்காகும் என்ற தெளிவு கொண்டே ; இவ்வியல்பு... உணர்ந்தறிந்தார் - இந்தச் சிறப்பு இயல்புநிலை சைவநெறி யல்லாத ஏனைநெறிகளுக்கு இல்லை என்று துணிபினையும் உய்திபெறும் தவத்தாலே சிவனருளின் துணையினால் பொருளாவது சிவனேயாம் என்பதனையும் உணர்ந்து அறிந்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3640. **"செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானு**
மெய்வகையா னான்காகும் விதித்தபொரு" ளெனக்கொண்டே
"இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லை"யென
உய்வகையாற் **"பொருள்சிவ"**னென் **றருளாலே யுணர்ந்தறிந்தார்.** 5

(வி-ரை) ஏனை எச்சமயத்தினுக்கும் இல்லாது சைவத்திற்குமட்டும் உளதாகிய தனிச்சிறப்பு இலக்கணத்தை எடுத்துக்காட்டிய சிறந்த இடம் இஃதாம். புறச்சமயத்தி னின்றவாறே ஒருவர் ஒப்புநோக்கி ஆய்ந்து கண்ட முடிபாவது இஃது; ஆதலின் இது மேலும் சிறந்ததாம்; பரசமய நிராகரணமும் சிவசமயத் தாபனமும் ஒருங்கே காணப்படும் இச்சிறந்த பொருளை ஈண்டுச் சாக்கியர் வாயிலாக வெளிப்படவைத்து இப்புராணத்தில் விளக்கிய தகுதியும் பெருமையும் உய்த்துணர்ந்து களிக்கற்பாலது.

செய்வினை... விதித்தபொருள் - செய்வினை - செய்வான் - வினைப்பயன் - கொடுப்பான் - என நான்கு பொருள்களும் ஓர் உண்மைச் சமயத்திற்கு வேண்டப்படுவன; செய்வினை என்றதனுற் பெறப்படும் காரகங்கள் எட்டனுள்ளே சிறப்புப்பற்றி இங்குக் கூறப்பட்டன வினைமுதலும் பயனுமாம்; **விதித்த** - உண்மை முடிபு கண்டு கூறிய; இந்நான்கும் ஒருங்கு முற்றும் பெறப்படாமையின் ஏனைச் சமயங்கள் எல்லாம் அவ்வவ்வாற்ருற் குறைபாடுடையன என்பதும், சைவமே முழுமை யுண்மையும் பெற்றுடையதென்பதும் நாயனுர் கண்ட **மெய்வகை** - உண்மைகண்ட நிலை. வினை ஒப்பாத சமயங்கள்; வினை செய்பவனுகிய ஆன்மாவை ஒப்பாத சமயங்கள்; வினைப்பயனை ஒப்பாத சமயங்கள்; வினைப்பயனை அவ்வவ்வுயிர்கள்பாற் சேர்ப்பானுகிய இறைவனை ஒப்பாத சமயங்கள் என ஏனை எல்லாச் சமயங்களும் அவ்வக் குறைபாட்டால் ஒழியத்தக்கன என்பதாம். உலகாயதம், ஏகான்மவாதம், சாங்கியம், பவுத்தம், ஆருகதம் என்பனவாதி சமயக்கொள்கைகளின் வைத்து உற்றுநோக்கி இக்குறைபாடுகளையும், சைவத்தின் முழுமையும் உண்மையாகிய மேன்மையினையும் கண்டுகொள்க. சித்தியார் பரபக்கமும், மாபாடியமும் பார்க்க.

இவ்வியல்பு...என - இவ்வியல்பு - முன்கூறியபடி விதித்த பொருள் நான்கனையும் கண்டு பொருள் நிச்சயம் செய்து ஞானமும் வீடும் அடைய வழிகாட்டும் இயல்பு; **அல்லவற்றுக் கில்லை** - எதிர்மறையாற் கூறியது உறுதி குறித்தற்கு.

உய்வகையாற் பொருள் சிவன் - இஃது இதுகாறும் கூறிய பரபக்க நிராகரணத்தாலும் சிவ சமய உறுதிப்பாட்டுணர்வினுலும் போந்த முடிபாகிய பயன்; **உய்வகை** - மெய்ஞ்ஞான முணர்ந்து பிறந்திறக்கும் நிலை நீளாது ஒழிந்து (3637) உய்யும்வகை; வீடுபெறும் தவம். வகையால் வருவதனை வகை என்ருர்.

பொருள் சிவன் - பொருள் - உண்மைப் பொருளாவார் சிவபெருமானேயாம் என்ற முடிபு; **சிவன்** - ஈண்டுச் சிவநெறியினைக் குறித்தது.

இப்பாட்டிற்கு இவ்வாறன்றி வேறுவேருக உரைத்தனர் முன் உரைகாரர்கள்.

இதனுலே பதிபசு பாசமாகிய முப்பொருளுண்மையும், அவற்றின் இலக்கணமும்,

சாதனமும், பயனுமாகிய சைவசித்தாந்த உண்மைகள் முற்றும் பெறவைத்த ஆசிரியரது தெய்வக் கவிநலமும் கண்டுகொள்க.

அல்லவருக்கல்லே—கொடுப்பானும்—என்பனவும் பாடங்கள்.

"**செய்வினையுஞ் செய்வானும்**" 3640 என்ற இத்திருப்பாட்டுக்கு *பெரியார் ஒருவரின் உரை வருமாறு:—

(இ-ள்) மெய்வகையால் விதித்த பொருள் உண்மைக் கூறுபாட்டால் துணியப்பட்ட பொருள்களாவன; செய்வானும் செய்வினையும் அதன் பயனும் சேர்ப்பவனும் நான்கு ஆகும் என - வினை முதலாகிய உயிரும் அதனாற் செய்யப்படும் தொழிலும் அத்தொழிலின் பயனும் அவற்றை அவ்வுயிர்க்குக் கூட்டுபவனுமாகிய நான்குமாம் எனவும்; இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கில்லையென - இப்பெற்றித்தாய பொருட்டுணிபு சைவ சித்தாந்த நெறியல்லாத ஏனை நெறிகள் எவற்றினுக்கும் இல்லையெனவும்; சிவன் பொருள் என்று - இங்ஙனமாதலின் சிவ நெறியொன்றே உண்மை நெறியென்றும்; உய்வகையால் கொண்டு - உய்தற் கேதுவாக முன்பு செய்துகொண்ட தவத்தின் றிறத்தால் உளங்கொண்டு சிந்தித்து; அருளாலே உணர்ந்து அறிந்தார் - முதல்வனருளாலே தெளிந்து அநுபவமாக அறியப் பெற்றார். (எ-று).

(வி-ரை) உய்வகை என்புழி **வகை** என்பது கூறுபாடு. அஃ தாகுபெயராய்த் தவத்தினை உணர்த்தி நின்றது. "[1]இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞானநிகழும்" என்பவாகலின் உளங்கொண்டு சிந்தித்தல்,தெளிதல் முதலாய ஞான நிகழ்ச்சிக்குத் தவங் காரணமா மென்பதறிக. **பொருள்** முன்னையது பதார்த்தம்; பின்னையது உண்மை. **சிவன்** என்பது ஆகுபெயராய்ச் சிவநெறியை உணர்த்திற்று. பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் றொக்கது. **அருளாலே** என்புழியும் ஏகாரம், தம்மறிவுகொண்டு உணர்தலைப் பிரித்தமையின் பிரிநிலை. **உணர்தல்** - தெளிதல். **அறிதல்** - அனுபவமாக அழுந்தியறிதல். "[2]செய்வோரின்றிச் செய்வினையின்மையின்" என்னும் ஏதுவால் செய்வினை கூறவே, "[3]வினையே செய்வது செயப்படு பொருளே, நிலனே காலங் கருவி யென்றா, இன்னதற் கிதுபயனாக வென்றும், அன்ன மரபினிரண்டொடுந் தொகைஇ, ஆயெட் டென்ப தொழின்முத னிலையே" என்ற காரகங்கள் அனைத்தும் பெறப்படுமாயினும் தலைமையுஞ் சிறப்பும் பற்றி வினை முதலும் பயனும் கிளர்ந்தெடுத் தோதப்பட்டன. இதனுள் தொழின்முத னிலையென்றது காரகத்தை. தொழில் செய்தற்கு முன்னே உளவாய் நிற்றலின் அப்பெயர் பெற்றன. உயிரையின்றி யமைந்து தொழிற்பட மாட்டாத சடமாகிய ஏனைக் காரகங்களாதல் அவற்றை யின்றி அறியமாட்டாத உயிராதல் தாமே கூடமாட்டாமையின் பாரிசேட வளவையால் சுந்திர அறிவனாகிய முதல்வனே அவற்றை உயிர்க்குப் பொருத்தியருளுவன். ஆதலின் **சேர்ப்பவ**னையும் உடன் ஓதினார்.

வினையுண்மை பெறப்படவே அதற்குப்பற்றுக் கோடாகிய மாயை யுண்மையும், அவ்விரண்டும், இருள் வயிற்பட்ட கண்ணுக்கு விளக்குதவுவார்போல உயிர்கட்கு

★ இப்பெரியார் தம் பெயரை வெளியிட வேண்டா வென்றமையால் இவ்வாறு குறிக்கப்பட்டது.

[1]சிவஞான போதம் சூ. 8, அ. 2. 1. - [2]சூ. 1. அ. 2. - [3]தொல்-சொல்

முதல்வனுல் உதவப்பட்டன வாதலின் அவற்றை உயிர் அவாய் நிற்றற் கேதுவாய் நின்ற மூலமல முண்மையும் பெறப்படு மென்னுங் கருத்தால் "[4]வினையி னீங்கி விளங்கிய அறிவின் முதல்வன்" எனச் செய்வினையும் சேர்ப்பவனுமாகிய இரண்டுமே கூறினுர் ஆசிரியர் தொல்காப்பியனுர். "[5]உலகுடல் கரணங் கால முறுபல நியதி செய்தி, பலவினை கொண்டு கன்மம் பண்ணுவ துண்ப தாலைல், நிலவிடா விவைதாஞ் சென்று நினைந்துயிர் நிறுத்திக் கொள்ளா, தலகிலா வறிவ ஞணை யணைத்திடு மருளி ஞலே" என அவ்வாசிரிய வசனத்தின் பொருளை விரித்துரைத்தனர் ஆசிரியர் சகலாகம பண்டிதர். இதன்கண் நியதி என்றதனுல் இன்னதற்கு இதுபயன் என்னு மிரண்டும் தழுவப்பட்டன.

கொடுப்பானும் எனப் பாடங் கொள்வாரு முளர். இங்குக் கிடந்தவாறே திருவருட் பயனுள் வழிமொழிந்து கொண்டு உபதேசித்தருளுதலின் அது பாடமன்றென்க. சைவநெறி யல்லவருக்கென்ற பாடஞ் சிறப்பின்று.

இத்திருப்பாட்டுக்குச் செப்பறை, ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் உரை வருமாறு:

உண்மைக் கூறுபாட்டான் உள்பொருள் ஆவன செய்வினை முதலிய நான்குமாம், அல்லது வேறில்லை எனவும், இப்பெற்றித்தாய **இஃதும்** சைவ நெறியொன்றற்கே யுளதாமன்றி அதனின் வேருய நெறியனைத்திற்கும் இலதாமன்றி உளதாமாறில்லை யெனவும், இருந்தவாற்ருன் சைவ நெறியொன்றே உண்மை நெறி அதனின் வேருய நெறியனைத்தும் பொய்ந்நெறியெனவும், உய்தற் கேதுவாய் முற்செய்து கொண்ட தவக்கூறுபாட்டானே தம்முட்டாமே யுடம்பட்டுக்கொண்டு, இங்ஙனம் கொண்டதாய அம்முறை தன்னறிவு கொண்டறியாது அவனருளா னறிந்து துணிந்து அதனுல் தன் பணி நீத்து அவன் பணியினின்ருர்.

மெய்வகையான் விதித்த பொருள் நான்காகுமென அல்லவற்றிற் கில்லை யென பொருள் சிவமென்று உய்வகையாற் கொண்டு உணர்ந்து அறிந்தார் எனக்கொண்டு கூட்டப்பட்டது. **என, என்று,** என்பன எண்ணிடைச் சொற்கள். கூறுபாட்டை உணர்த்துவனவாய வகை இரண்டனுள் பின்னையது ஆகுபெயர்; **சிவமே** என்புழிப் பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற் ருெக்கது. **பொருள்** முன்னையது **திரவியம்.** பின்னையது உண்மை. **பொய்யெனக்** கூறுபாடிரண்டாகலின் மெய்வகையான் எனப்பட்டது. உய்யா வகையுமுண்மையின் **உய்வகையா**னென்பது **மதுவிதித்த** என்னும் பிறவினை தன்வினைப் பொருள் தந்து நின்றது. **அறிதல்** ஈண்டுத்துணிதல். **அதனுல்** என்பது முதற்குறிப்பெச்சம். செய்வினை கூறவே செய்வான் முதலிய காரகங்கள் எட்டும் பெறப்படுமாயினும் தலைமையும் சிறப்பும் பற்றி வினைமுதலும் பயனும் வேறெடுத் தோதப்பட்டன. செய்வினை, வினைமுதலை யின்றி யாமென்பதூஉம், வினைதம் பயனைப் பயவா தென்பதூஉம், மலர் தன் பயனைப் பயவா தென்பதனே டொக்கும். ஆகலின் அது பொய்வகையாதல் **போலாகாமையின்** அதனின் வேருய இம்முறை மெய்வகை எனப்பட்டது. இஃது இற்றெனச் சிறிது ஆய்தல் செய்யின் மந்தர்தாமும் அறியக் கிடக்குமாகலின் அஃதியார்க்கும் இனிது விளங்குமென்பது தோன்ற **"இவ்வியல்பு"** எனவும், இத்தன்மைத்தாய உண்மையறிவு முற்செய் தவத்தானன்றி நிகழாதென்பது தோன்ற "உய்வகையா" னெனவும், மேற்கூறிய நெறி சிவத்தோடியைபுடைமையாற் பெற்ற பெயராகலின் அதுவேயிதுவென மேற்கூறிய

3641. **"எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலும்**
மன்னியசீர்ச் சங்கரன்றாண் மறவாமை பொரு"ளென்றே
துன்னியவே டந்தன்னைத் துறவாதே தூயசிவந்
தன்னைமிகு மன்பினான் மறவாமை தலைநிற்பார், 6

மேற்கோளுக்கு உபநயம் பண்ணப்பட்டதென்பது தோன்ற **"சிவமே பொரு"** ளெனவும், இங்ஙனமாகலின் அது துணியப்பட்டதென்பது தோன்ற உணர்ந்தென்றொழியாது அறிந்தாரெனவும் உபதேசித்தருளினார். உடன்பாடு எதிர்மறை யிரண்டானுங் கூறினார் வலியுறுத்தற் பொருட்டு.

திரு. ந. சிவப்பிரகாச தேசிகர் குறிப்பு: செய்வானும்...எனக்கொண்டே - செய்யப்படும் புண்ணிய பாவங்களான கன்மங்களும், அவற்றைச் செய்யும் ஆன்மாக்களும், அக் கன்மங்களால் விளையும் சுகதுக்கங்களாகிய பயன்களும், அப்பயன்களை அவ்வான்மாக்களுக்கு ஊட்டுகின்ற சர்வக்ஞனாகிய பதியும் என்ற வேதாகமங்களில் விதிக்கப்பட்ட பொருள்கள் நான்காகுமென்று கருதி; **நெறி** - சமயம்; சேர்ப்பானாகிய உண்மைப் பரம்பொருள் சிவனே; **அருளாலே உணர்ந்து அறிந்தார்** - "அருளினா லாகமத்தே யறியலாம்" (சித்தி); **செய்வான் - சேர்ப்பான் - அல்ல** - வினையாலணையும் பெயர்கள்; **அருளாலே**-அச் சிவனருளாலே; "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா); **செல்வினை**-வினைத்தொகை. 5

3641. **(இ-ள்)** "எந்நிலையில்...பொருள்" என்றே - எந்த நிலைமையில் ஒருவன் நின்றானாயினும், என்ன வேடத்தைக் கொண்டானாயினும், நிலைபெற்ற சிறப்பினை யுடைய சங்கரனுடைய திருவடியை மறவாதிருத்தலே உண்மையாகிய உறுதிப் பொருள் என்றே துணிந்து; துன்னிய...துறவாதே - தாம் மேற்கொண்டு தாங்கிய அந்தச் சாக்கிய வேடத்தினை நீக்காமலே; தூய...தலைநிற்பார்-தூய்மை செய்யும் சிவலிங்கக் குறியினை மிக்க அன்பினாலே மறவாத நிலையினில் சிறந்து விளங்குவாராய்,

(வி-ரை) நிலை - நிலைமை; சமயம்; ஆச்சிரமம்., **கோலம்** - உருவம்; வேடம். **சங்கரன்** - இன்பம் செய்பவன்; **சம்** - சுகம், இன்பம். **கரன்** - செய்பவன். பற்றி. "**கால்** அந்தச்சத்தி **அருள்** என்பர்" திருமந்திரம் 2425. "அழகு எழுதல் ஆகா **அருட்சேவடி**" - அரசுகள் தேவாரம் - திருவதிகை வீரட்டானம். திருவடித் தாண்டகம் - (4); "அடியாவதும் முடியாவதும் **அருள்** ஞானம்" - தாயுமான அடிகள். "சிவன் **அடி** என்றது உபசாரம்." சித்தி - 2. சிவஞான முனிவர்.

மறவாமை - மறவாதிருத்தல்; இடைவிடாது சிந்தித்தல்; எதிர்மறைத் தொழிற்பெயர். "மறவாமையால் அமைத்த மனக்கோயில் உள்இருத்தி" - வாயிலார் நாயனார் புராணம் - அ. "பத்தியினான் **மறவாது** ஏத்த, அவனது சீ பாதத்தை அடையும் என்றது" சிவஞானபோதம் - சூ, 11 அதி - 35 - வார்த் - 49. (**ஏத்தல்** - முதல்வனது அருள்வழி நிற்றல்; உபசார வழக்கு.)

பொருள் - உண்மை; அறிவு, பயன், ஆன்மலாபமாகிய வீடுபேறு. மறவாமை பொருள் என்றே - மறவாது செய்யும் அயரா **அன்பான்** அவன் அருள்வழி நிற்றலே உண்மை ஞானமாம் என்று துணிந்து "**ஞானம்** - ஈசன்பால் அன்பு என்றனர் ஞானம் உண்டார்". பெரியபுராணம் - 2742. மறவாமை பொருள் என்றே - மறவாமையே பொருள் என்று - என விகுதி பிரித்துக் கூட்டி உரைக்க. ஏகாரம் தேற்றம். துன்னிய - கொண்ட; பொருந்திய.

வேடந்தன்னை - வேடத்தை என்றது ஈண்டுச் சாக்கிய புத்த சமயத்தாருக்குரிய சின்னமாகிய வேடங்களை. அவை, சீவரம் (துவராடை), குடை முதலியன. "இலைமலி **மருதப்பூப் - புட்டத்தே** அட்டிட்டுப் புதைக்கும் மெய்க்கொள் **புத்தரும்**" - திருஞான - தேவாரம் - இந்தளம் - கழுமலம் - (10) "**சீவரம்** மூடிப் - பிடக்கே உரை செய்வாரொடு பேணுர் நமர் பெரியோர்" - திருஞான - தேவாரம் - நட்டபாடை - திருவியலூர் (10) "குண்டாடிய சமண் ஆதர்கள் **குடைச் சாக்கியர்**" நம்பிகள் - தேவாரம் - நட்டபாடை - திருச்சுழியல் (9) "**பட்டைத் துவராடைப் படிமங்** கொண்டாடும் முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே." திருஞான - தேவாரம் - குறிஞ்சி - கோயில் (10) "துக்கமாகிய **சீவரத்துவர் ஆடை** உடம்பினர்" - திருவாதவூரடிகள் புராணம்; புத்தரை வாதில் வென்ற சருக்கம் - 88.

சீவரம் - மருதம் பட்டைத்துவர் தோய்த்த சீலை.

புட்டம் - சீலை. **சீ** - நரகம், **இவரம்** - கேடு. வருமொழி முதல் இகரம், புணர்ச்சி விகாரத்தாற் கெட்டுச் சீவரம் என முடிந்தது. தன்னை உடுத்திப் போர்த்திக்கொள்பவரது நரகத் துன்பத்தைக் கெடுப்பது என்பது சாக்கிய புத்த சமயத்தாரின் கருத்து.

குண்டிகை - கமண்டலம்.

துறவாதே - (தாம் முன்னர்ச் சார்ந்திருந்த சாக்கிய சமயத்துக்குரிய வேடத்தை) நீக்காமலேயே மேற்கொண்டு.

தூயசிவம் - சுத்த சிவம்; "நோண்மையால் தன்னை ஒன்றும் கலத்தல் இன்மையின் தூயதாய்" - திருக்குறள் 358 - பரிமேலழகர் உரை.

மறவாமை தலைநிற்பார் - சிறந்த விரதமாகக் கொண்டு இறைபணியில் வழுவாமல் நிலைநிற்பாரயினுர். **மறவாமை** - மறவாமல்; வழுவாமல்; சலியாமல் . இந்நாயனுர் சிவகாமங்களில் விதிக்கப்பட்ட திருநீறு, கண்மணிவடம் முதலாகிய சைவ வேடங்களைப் புனைந்து கொள்ளாமல் சாக்கிய வேடத்தையே மேற்கொண்டொழுகி இறை பணியில் அயரா அன்பானே நிலைத்து நின்ருர் என்க.

அயரா அன்பு - அயராமைக்குக் காரணமாகிய அன்பு.

"அயரா அன்பின் அரன்கழல் செலுமே." - சிவஞானபோதம்-சூத்-11.

அயறாமை - மறவாமை.

---

[4]தொல். பொருள். மரபியல். [5]சித்தி. சூ. 2.

வேறு

3642. "எல்லா முடைய வீசனே யிறைவ" னென்ன வறியாதார்
பொல்லா வேடச் சாக்கியரே யாகிப் புல்ல ராகுவார்
அல்லார் கண்டர் தமக்கிந்த வகில மெல்லா மாளென்ன
வல்லா ரிவரவ் வேடத்தை மாற்ற தன்பின் வழிநிற்பார், 7

"ஞானம் இலார் வேடம் பூண்டும் நரகத்தர்
ஞானம் உள்ளார் வேடம் இன்று எனில் நல்முத்தர்" - திருமந்திரம் - 1668

"ஞாலமதில் ஞானநிட்டை உடையோர்க்கு......
சீலம்இலை, விரதமொடு ஆச்சிரமச் செயல்இல்லை
தியானம் இலை, சித்தமயம் இல்லை - கோலம் இலை" - சித்தியார் 284

"**கோலம்இலை** - சமயத்துக் கேற்றவேடம் தரிக்க வேண்டுவது இல்லை" - உரை

என்பனவற்றால், முறுகிய பக்தி ஞானவைராக்கிய நெறி நிற்பாருக்கு நியமமாக வேடம் வேண்டாமையையும் உணர்க. இந்நியதி, தற்போதமற்றிருக்கும் முத்தர்களுக்கே யன்றி, ஏனைப் பெத்தர் இடத்து உண்டாகில், அவர்கள் சமயாசாரங்களை விட்டவர்களும், ஒழுக்கத்தினின்றும் வழுவினவர்களுமான பதிதர் ஆவர் என்க.

குறிப்பு: இத்திருப்பாட்டின் (3641) விளக்கவுரை சித்தாந்தப் புலவர் - வித்துவான் - **ந.சிவப்பிரகாச தேசிகர்** அவர்கள் உதவியவை. 6

3642. **(இ-ள்)** எல்லாம்...அறியாதார்-உலகம் எல்லாம் தமது வடிவமாக உடைய ஈசன் என்ற பதத்திற்கு வாச்சியமாகிய சிவபெருமானே முழுமுதலாம் தலைவர் என்ற உண்மை யுணர மாட்டாதவர்களே; பொல்லா...ஆகுவார்-பொல்லாங்கு துய்க்கும் பொறியிலிகளாய்த் தமது வேடத்தினை அவனில் வேறு என்று கொண்டொழியும் சாக்கியர்களாகிப் புன்மையின் நிற்றொழுகுவர்; அல்லார்...வல்லார் - கரிய விடம் பொருந்திய கண்டத்தினையுடைய சிவபெருமானுக்கு இந்த உலகமெல்லாம் ஆளாவதன்றி மற்றில்லை என்று காணவல்லவராகி;இவர்...நிற்பார் - இந்நாயனார் அந்தச் சாக்கிய சமயத்தவர் தாங்கும் வேடத்தை மாற்றாமலே சிவன்பா லன்பின்வழியிலே நின்றொழுகுவாராய்,

(வி-ரை) எல்லாம் உடைய - உடைய - வடிவாக உடைய; **ஈசன் -** ஈசன் என்ற சத்தத்தின் பொருளாக உள்ளவன் எவனோ அவனே; **இறைவன் -** முழு முதல்வனாகிய சிவன்; "எவனுக்கு முற்றும் வடிவங்களாகும்" (காஞ்சிப்புராணம்- அமரேசப்படலம் 15) என்ற கேனோபநிடதப் பொருள் காண்க. சிவபிரானுக்குச், சர்வலோகங்களும் உடைமைப் பொருளாயும், அடிமைப் பொருளாயும் இருத்தல் பற்றி "எல்லாமுடைய ஈசன்" என்றருளினார் என்ற குறிப்புமாம். "எப்பொருளுமாக்குவான் ஈசனே யெனுமுணர்வும் அப்பொருள்தான் ஆளுடையார் அடியார்கள் எனுமறிவும்"

(திருஞா. புரா. 71); "எல்லாமுன் னடிமையே எல்லா முன்னுடைமையே எல்லாமுன் னுடைய செயலே" (தாயு).

வேறு

3643. "**காணாத வருவினுக்கு முருவினுக்குங் காரணமாய்**
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம்
நாணாது நேடியமா லுான்முகனுங் காணநடுச்
சேணாருந் தழற்பிழம்பாய்த் தோன்றியது தெளிந்தாராய், 8

அறியாதார்...ஆகுவார் - அவ்வறி வறியாதார் சாக்கிய வேடம் சிவன் வடிவின் வேறு என்று புன்மையா யொழுகுவர்; **பொல்லாவேடம்**-என்றது முழுமுதல்வன் வேடத்தின் வேறு யெண்ணப் படுதலிற் பொல்லாமை புகுந்தது என்க.

அல்லார்...ஆள் - "எவனெப் பொருட்கு மாதார மாகி யெவருந் தொழப்படுபவன்" (காஞ்சிப் புராணம் மேற்படி 15) என்ற உபநிடதக் கருத்தும் காண்க.

வல்லார் இவர்-சாக்கியர்களுள் - அறியாதார் பொல்லா வேடப்புல்லராகுவர்; ஆனல் இவரோ ஆள் என்ன வல்லாராயினராதலின் அஃதே நல்ல வேடமாக அவ்வேடத் தினின்றவாறே அன்பரானர்.

இப்பாட்டுத் திருவாவடுதுறைப் பிரதிகளிலும் சிதம்பரப் பிரதியிலுமில்லை; முன்பின் தொடர்ந்து செல்லும் கொச்சகக் கலிப்பா யாப்பினுடன் தனிப்புகுந்து நிற்றலானும், முன்பாட்டின் பொருளும் கருத்துமே கொள்வதனாலும், இஃதன்றியே சரிதம் செல்லலானும், பிறவாற்றானும் சிலர் இதனை ஐயங்கொள்வர்.* 7

3643. **(இ-ள்)** காணாத...காரணமாய்-கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனிக்கும், (கட்புலப்படும்) உருவத் திருமேனிக்கும் மூலமாகிய இருப்பிடமாகி; நீள் நாகம்... சிவலிங்கம் - நீண்ட பாம்பினை அணிந்த சிவபெருமானை அறிந்து வழிபடுதற்குச் சிறந்த அடையாளமாகிய குறியாக விளங்கும் சிவலிங்கம்; நாணாது... தெளிந்தாராய்-நாணமின்றித் தேடிய மாலும் பிரமனும் காணும்படி அருளாலே அவர்கள் நடுவே விசும்பையும் பாதாலத்தையும் அளாவும் அனற்றூணாகித் தோன்றிய வடிவமேயாம் என்று தெளிந்தவாராகி,

(வி-ரை) காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் - சிவலிங்கம் இறைவரது அருவுருவத் திருமேனி எனப்படும்; சதாசிவத் திருமேனி என்பர். "உருமேனி தரித்துக் கொண்ட தென்றலு முருவிறந்த, அருமேனி யதுவுங் கண்டோ, மருவுரு வானபோது திருமேனி யுபயம் பெற்றோம்" (சித்தி) என்ற இக்கருத்தை ஆசாரியர் விளக்குதல் காண்க. **காரணம்** - மூலம்; ஒன்றும் புலப்படாத அருவினின்றும் புலப்படும் ஓர் அண்டவடிவான பிழம்புருவமானது பற்றி உருவமும், கைகால் முகம் முதலிய அங்கம் எவையும் புலப்படாமை பற்றி அருவமும் ஒரு சேரக் காணப்படுதலின் இதனை அருவுருவம் என்பர்; **காணாத அரு** - என்றது அருவுருவம்; காண்பதற்கு முன்னையின் நிலை; அருவினின்று அருவுருத் தோன்ற அம் முறையே அருவுருவினின்று உருவம் தோன்றும். ஆதலின் இடையே நின்ற அருவுருவம் மேலுள்ள அருவநிலையினையும், கீழ்உள்ள உருவ

---

*சேக்கிழார் - பக்கம் 220 பார்க்க.

3644. **நாடோறுஞ் சிவலிங்கங் கண்டுண்ணு மதுநயந்து**
மாடோர்வெள் ளிடைமன்னுஞ் சிவலிங்கங் கண்டுமனம்
நீடோடு களியுவகை நிலைமைவரச் செயலறியார்
பாடோர்கற் கண்டதனைப் பதைப்போடு மெடுத்தெறிந்தார். 9

நிலையினையும் காட்டி நிற்குமாதலின் **காரணமாய்** என்றார்; "அருவுரு வான போது திருமேனி யுபயம் பெற்றோம்" என்றது இக்கருத்து : **காணாத அரு** என்றதனாற் **காணும்** உரு என்று கொள்க ; இதனை உருமேனி தரித்த தென்றலால் உருவிறந்த அருமேனியுள்ள தெனப்பெற்றாம் என்றனர்.

இறைவர்க்குத் தடத்தம் சொரூபம் என இரண்டு நிலைகள் உண்டு : **சொரூபம்** தன்னியல்பு; **தடத்தம்** சிறப்பு. தடத்தம் அரு - அருவுரு - உரு என மூன்று திருமேனிகளாய் வரும். இவற்றினியல்புகள் "உலகெலாம்" என்ற முதற்பாட்டின் உரையில் உரைக்கப்பட்டன. கடைப்பிடிக்க.

நாகமணிந்தார்க்கு நிகழ் குறியாம் சிவலிங்கம் - குணங் குறி கடந்த பேரொளியாகிய இறைவரை ஒரு குறியின்கண் வைத்து வழிபடும் பொருட்டு நிகழ்வது சிவலிங்கமாம் சிவக்குறி எனப்படும். "குறித்த பூசை" (*1241*) "அண்ணல் பாதங், கொண்டவன் குறிப்பி னாலே கூப்பினான் ரூப ரத்தை" (அரசு. நேரிசை - ஆப்பாடி 4). **லிங்கம்**-லிம்(லயம்); கம்-ஒடுக்கமும் தோற்றமும் குறிப்பது.

நாணாது...தோன்றியது-நாணாது-காண என்க. **நாணு**தலாவது மேலோராக எண்ணியிருந்த தம் அறிவுக்கு எட்டமாட்டாமை பற்றி நாணம் கொள்ளுதல் : **நடு** - இகலிநின்ற அவ் விருவரிடையே, **தழற்பிழம்பாய்த் தோன்றியது** - இலிங்க புராணத் திருக்குறுந்தொகையும், கந்தபுராணமும் பார்க்க. "செங்க ணானும் பிரமனுந் தம்முளே, எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலார்; "**இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்,** பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே" (தேவா-அரசுஇலிங்கபுராணத் திருக்குறுந்தொகை-*11*).

தெளிந்தாராய் - தூய சிவத்தை அன்பினால் மறவாமை தலைநிற்பாராகிய (*3641*) நாயனார் அச்சிவத்தை வழிபடற்குரிய குறி சிவலிங்கமாம் என்பது தெளிந்துகொண்டவகை இப்பாட்டாற் கூறினார்; அவ்வாறு தெளிந்தவர் அதனை வழிபட்டநிலை மேற்பாட்டிற் கூறுதல் காண்க. சிவமே பொருள் என்று துணிதற்கேதுவாகிய சமய விசாரணையினை அதன் முன்பு விரித்தமையும் காண்க.
8

3644. **(இ-ள்)** நாடோறும்...நயந்து- நாள்தோறும் சிவலிங்கத்தைக் கண்டு தொழுதபின்பே உணவு உட்கொள்ள வேண்டும் என்னும் நியமத்தினை மேற்கொள்ள விரும்பி; மாடு ஓர்...நிலைமை வர - பக்கத்திலே ஒரு வெளியிடத்திலே நிலைபெற்ற சிவலிங்கத்தினைக் கண்டு மனத்தில் நீடு செல்கின்ற மிக்க மகிழ்ச்சி பொருந்திய நிலைமை கைவரப் பெற்றமையாலே; செயல் அறியார் - இன்னது செய்வதென் றறியாராகி; பாடு ஓர்...எறிந்தார் - பக்கத்தில் ஒரு கல்லினைக் கண்டு அதனையே மலராக அன்பினில் விளைந்த பதைப்புடனே எடுத்து அச்சிவலிங்கத்தின் மேல் எறிந்தனர்.

இந் நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) நாடோறும்...அது நயந்து - அது அந்நியமம். சிவ வழிபாடுகளின் வகை பலதிறப்படுவன; அவற்றுள் நாயனர் மேற்கொண்டது ஒன்றேயாம்; அஃதாவது "சிவலிங்க தரிசனத்தின் பின்னே உணவு கொள்வது" என்ற ஒன்றேயாம்; "அரும்போடு மலர்பறித்திட் டுண்ணு ராகில்" "உண்பதன் முன் மலர்பறித்திட் டுண்ணு ராகில்" (தேவா-அரச-தனித். தாண்); நாள்தோறும் **உண்பதன் முன் சிவலிங்கம் காண்**பதும், கைவந்தவாறே வழிபடுவதும், அதன்பின் உண்ணுதலுமாகிய இவற்றையே **நியமமாக மறவாது** கொண்டு இந்நாயனர் அஃதே யாருக முத்தியடைந்தனர். நியமமாகிய சிவலிங்க வழிபாட்டின் சிறப்பு இதனல் அறியக் கிடக்கின்றது; **நயந்து** - மிக விரும்பி.

மாடு... கண்டு - பக்கத்தில் வெளியில் இருந்ததொரு சிவலிங்கத்தினைக் கண்டு அதனை பற்றி.

மனம்... நிலைமைவர - மனத்துட்கொண்ட நியமத்தின் உறைப்பினுலே கண்ட மாத்திரத்திலே நீண்டு செல்லும் பெருமகிழ்வாகிய நிலை கூடுதலால்; இது சடுதியில் வரும் அழுந்திய மனநிலை; இவ்வாறு நல்ல நிலையும் உண்டு - தீமை பயக்கும் நிலைகளும் வருவதுண்டு. தீமைபற்றிச் சடுதியில் எழும் இந்நிலைகளின் மூலமே உலகர் இதனை அறிகுவர்: (நன்னிலை வரப்பெறும் பக்குவம் வேண்டுமன்றே?) இதனை Temproary Insanity என்று கொள்வது நவீன மருத்துவச் சட்ட தத்துவம்.

செயலறியார்-தாம் மிக்க அம்மகிழ்வினுல் இன்னது செய்கின்றே மென்றறியாராகி; இறைவர் திருமேனிமேல் கல்லெறிதல் விலக்கப்பட்ட பாவங்களுள் ஒன்றென்பதனையும் மறந்தாராகி; இதன் உண்மைத் தத்துவத்தினை மேல்வரும் பாட்டில் உணர்த்துதல் காண்க.

வெள்ளிடை-வெளியிடம் : கோயில் கட்டட முதலியவற்றுல் மூடாதவெளி: இவ்வாறு வெள்ளிடையில் காணும் சிவலிங்கங்கள் அனேகம் காஞ்சியிலும், பிற பதிகளிலும் உண்டு; அவை சைவ மக்களின் நல் உணர்ச்சி யின்மையினையே புலப்படுத்துவன; வெள்ளிடையிருத்தலால், அவ்விலிங்கத்துக்காவது அக் குறியினுள் நின்று வேட்டார்க்கு வேட்டவளிக்கும் இறைவருக்காவது ஆக்கப்பாடேனும் அழிவேனும் இல்லை. இச் சிவக் குறிகளை அவ்வாறு கவன மின்றிக் கிடக்கவைத்தலால் அது கண்டிருக்கும் மக்களுக்குத்தான் கேடுறும் என்பது நூற்றுணிபு. இறைவர் வடிவங்களாகிய குறிகளை நிழல் செய்து ஏற்றபடி காவல் செய்யவேண்டும் மென்பது சிவாகம விதி.

நீடோடு - நீண்டு செல்லும்; நாயனர் இறுதியில் முத்திபெறும்வரை இத்தன்மையே இடையருது நிகழ்ந்த குறிப்பு.

களியுவகை நிலைமைவர - களி உவகை - ஒருபொருட் பன்மொழி மிகுதி குறித்தது: **களி** - கள்ளுண்டான்போலத் தன்னிலை யிழக்கச் செய்யும் அளவும் குறித்தது: **உவகை** என்னது **உவகை நிலைமை** - என்றது அன்றுடனெழியாது அத்தன்மையேயாகி மாறிய பண்பு நிலைபெற்றது என்று குறித்தற்கு.

3645. அகநிறைந்த **பேருவகை யடங்காத வாதரவான்**
மகவுமகிழ்ந் துவப்பார்கள் வன்மைபுரி செயலினால்
இகழ்வனவே செய்தாலு மிளம்புதல்வர்க் கின்பமே
நிகழுமது போலதற்கு நீள்சடையோர் தாமகிழ்வார். 10

பாடு...எறிந்தார் - பாடு - பக்கம்; படு - விகுதியடியாகக் கொண்டு துன்பம் தரத்தக்க என்றலுமாம். **கல் கண்டு அதனைப் பறித்து** - கல்லினைக் கண்டு அதனையே பறித்து; **கற்கண்டு** - ஒரு சொல்லாகக் கொண்டு உண்ண இனிக்கும் கற்கண்டாக அதனையே எண்ணி என்ற தொனிப்பொருளும் கொண்டு, துன்பம் விளைக்கும் அப்பொருளினையே இன்பம் தரும் பண்டமாக எண்ணி என்றலுமாம்.

பதைப்போடு - பதைப்பாவது மிக்க களிப்பினால் வரும் உடல் நடுக்கம், உடல் அசைவு - "கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்" (திருவா. சத. 21)

எடுத்து - மலர் எடுத்தல் போல என்பது குறிப்பு. **எறிதல் -** அருச்சிப்பார் போல வீசுதல். 9

3645. **(இ-ள்)** அகநிறைந்த...ஆதரவால்-மனநிறைந்து பெருகிய பெருமகிழ்ச்சியினால் வந்த அளவுகடந்த அன்பினாலே; மகவுமகிழ்ந்து...செய்தாலும் - தம் மகவினை மகிழ்ந்து களிப்பவர்கள் அம்மகார்கள்பால் வலிமை செய்யும் செயல்களின் மூலம் இகழ்வனவற்றைச் செய்தாலும்; இளம்புதல்வர்க்கு...நிகழும் - அவ்விளம் புதல்வர்களுக்கு இன்பமே உண்டாகுமன்றி அவ்வலிய செயல்களால் துன்பமுண்டாகாது; அதுபோல்...மகிழ்வார் - அதுபோல இந்நாயனார் செய்ததாகிய கல்லெறிந்த வன்மைச் செயலுக்கு நீண்ட சடையினையுடைய இறைவர் மகிழ்ச்சியே யடைவார் (ஆயினார்.)

(வி-ரை) நாயனார் நீள் களியுவகை மிகப் பதைப்போடும் கல் எறிந்த வலிந்த செயலுக்கு இறைவர் மகிழ்வாராயினார் என்றதன் உண்மையினை உவமை முகத்தால் விளக்கியவாறு.

அகநிறைந்த...நிகழும் - என்றது உவமிக்கப்படும் பொருளாகும் ஓர் உண்மை. அஃதாவது சிறுவர்பால் பேரன்புகொண்டு களித்து மகிழும் பெற்றோர்கள் அம்மகிழ்ச்சி மீக்கூர்ந்தெழுதலினால் சிலபோது அம்மகார்களைச் சிறிதே அடித்தல் - கிள்ளுதல் - இறுகப்பற்றுதல் முதலிய வன்மைச் செயல்களையும் செய்வர். மிக்க அன்பு காரணமாகத் தம்பால் மகிழ்தலால் இவற்றையும் அத் தாய் தந்தையர் செய்கின்றார் என்பதை அம்மகாரும் அறிகுவர். ஆதலின் அவ்வன்மைச் செயல்களும் அவர்க்குத் துன்பம் பயவாது இன்பமே பயக்கும் : இஃது உலகியல் நிலையிற் கண்கூடாக அறியக்கிடக்கும் உண்மை. **இகழ்வன** - செய்யக்கூடாத வலிந்த செயல்கள்; அடித்தல், கிள்ளுதல் முதலாயின.

இதற்கு இவ்வாறன்றி, தம் மகார்கள் தம்பால் அன்பினால் வலிந்த செயல்கள் செய்தாலும் பெற்றோர்கள் அதனால் இகழாது அம் மகவுகளை மகிழ்ந்தே உவப்படைவார்கள்; அதுகண்டு அவ் விளம்புதல்வர்க்கு இன்பமே உண்டாகும் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள்; இப்பொருளில் புதல்வர்க்கு என்பதிற் குவ்வுருபு ஏழனுருபின் பொருளில்

3646. அன்றுபோய்ப் பிற்றைநா **ளந்நியதிக் கணையுங்காற்**
கொன்றைமுடி யார்மேற்றாங் **கல்லெறிந்த குறிப்பதனை**
நின்றுணர்வா "ரெனக்கப்போ திதுநிகழ்ந்த தவரருளே"
என்றதுவே தொண்டாக வென்றுமது செயநினைந்தார். 11

வந்ததென்ப; செய்தாலும் - உவப்பார்கள் என்று கூட்டுவர்; இப்பொருளை உவமத்திற் காட்டும்போது கல் எறிந்த நாயனர் வன்மைபுரி இளம் புதல்வராகவும் இறைவர் அதற்கு மகிழும் தாய்தந்தையாகவும் கொள்ளப்படும். இப்பொருளில் தம் பெற்றோர் மாட்டுப் புதல்வர் வன்மை புரியும் இகழ்ச்சிச் செயல் அன்பினுற் செய்ய வாராமையின், இதன் பொருத்தம் ஆராயத் தக்கது.

புதல்வர்க் கின்பமே நிகழும் - அதுபோல் சடையோர் தாமகிழ்வார் என்ற சொற்கிடக்கை முறையினாலும், இச் செயலில் மகிழ்வு நிகழ்வது இறைவரிடத்தாதலானும் இறைவரை அன்பினுல் வன்மை புரியப்பெற்ற இளம் புதல்வராக வுரைக்கப்பட்டது.

அதுபோல் அதற்கு - அது - புதல்வர்க்கு இன்பம் நிகழுமது; **அதற்கு -** வன்மை புரி செயலினுல் இகழ்வனவே செய்ததற்கு; ஈண்டுச் சிவநெறி விதியினுல் விலக்கப்பட்ட கல் எறிந்த வலிய செயலுக்கு.

மகிழ்வார் - மகிழ்வாராயினர் என ஆக்கச்சொல் வருவிக்க.

மகிழ்ந் துரைப்பார்கள்—என்பதும் பாடம். *10*

3646. **(இ-ள்)** அன்றுபோய்... அணையும்கால் - அந்நாள் சென்று பின்னுளில் (சிவலிங்கம் கண்டபின் உண்ணுவது எனத் தாம் மேற்கொண்ட) அந்த நியதியின்படி செய்வதற்காக அணைந்தபோது; கொன்றைமுடியார்...நின்றுணர்வார் - கொன்றை மாலை சூடிய முடியினையுடைய இறைவரது திருமேனியின்மேல் தாம் முன்னை நாளில் கல் எறிந்த திருக்குறிப்பினைப் பற்றி நின்று உணர்வினிற் கொள்பவராய்; எனக்கு...என்று - "எனக்கு அப்போ திவ்வெண்ணம் நிகழ்வித்தது அவ்விறைவரது திருவருளேயாம்" என்று துணிந்து; அஃதே...நினைந்தார் - அதுவே தாம் செய்யும் திருத்தொண்டாக மேற்கொண்டு இனி நாள்தோறும் அதனையே செய்ய எண்ணினுர்.

(வி-ரை) அன்று - கற் கண்டு அதனைப் பதைப்போடும் எடுத்தெறிந்த அன்று என முன்னறிசுட்டு; **போய் -** நாட்சென்று; கழித்து.

அந்நியதிக்கு - நாடோறும் சிவலிங்கம் முன் கண்டு உண்பேன் என்று நயந்து *(3644)* மேற்கொண்ட அந்த நியமமாகிய நியதியின் என முன்னறிசுட்டு; **நியதிக்கு -** நியமத்தின்படி செய்வதற்கு.

குறிப்பதனை நின்றுணர்வார் - குறிப்பு - தாம் வழிபட்டுய்ய எண்ணிய கடவுளின் திருமேனிமேல் கல்லெறியும்படி நிகழ்ந்த அந்த ஒவ்வாத செயலின் காரணமாகிய திருக்குறிப்பு; அந்நிகழ்ச்சியின்போது "நீடோடு களியுவகை நிலைமைவர" அதன் வயமேயாகி, இது செய்வது இது தவிர்வது என்ற செயல் அறியாது - ஆராய்ந்து உணராது-

3647. **தொடங்கியநா ளருளியவத் தொழிலொழியா வழிதொடருங்
கடன்புரிவா ரதுகண்டு** கல்லெறிவார் **துவராடைப்
படம்புனைவே டந்தவிரார்; பசுபதியார் தஞ்செயலே
அடங்கலுமென் பதுதெளிந்தா** ராதலினால் மாதவர்தாம்; 12

செயல் செய்தனர்; அது நிகழ்ந்ததற்கோர் ஏதுவேண்டும்; அஃதெது? "அவனன்றி யோரணுவு மசையாது" என்ற உண்மைப்படி தம் செயலால் நிகழாமையின் அதனை நிகழ்வித்தவன் அனைத்துயிர்க்கு உள்ளே நின்று நியமிக்கும் சங்கரனேயாம் என்று இவ்வாறு நினைந்து உணர்ச்சியிற் றெளிவாராகி. முன்னை நாள் நினையாது செயல் புரிந்தனர்; பிற்றைநாள் அதன் காரணத்தினை ஆய்ந்து உணர்வாராயினர்; என்பதாம். **நின்று** - தீர நிதானித்து ஆய்ந்து; **உணர்வார்** - முற்றெச்சம்; உணர்வாராகி; உணர்வார்-நினைந்தார் என்று முடிக்க.

"எனக்கு...அருளே" என்று - நின்று உணர்வார் துணிந்த நிலை; **எனக்கு இது நிகழ்ந்தது - இது** - கல்எறிந்த இவ்வொவ்வாத செயல்; **எனக்கு** - சிவலிங்கத்தினைக் கண்டு வழிபட்டு உய்ய எண்ணிய எனக்கு; **நிகழ்ந்தது** - ஒவ்வாச் செயல் நான் நினையாமலே செய்ய நேர்ந்தநிலை; **அவர்** - "பொருள் சிவன்" என் றருளாலே உணர்ந்தறிந்த (3640) அப்பெருமான் என முன்னறிசுட்டு; **அருளே** - ஏகாரம் பிரிநிலை; தேற்றமுமாம்; **என்று** - என்று உணர்ந்து தெளிந்து துணிந்து.

அதுவே தொண்டாக என்றும் அதுசெய - அதனைத் தொண்டாக மேற்கொண்டு இனி வருநாள் எல்லாம் அதனையே செய்ய; அதுவே தொண்டாக - **அது** தொண்டுக்கு மாறுபட்ட அதனையே தொண்டாகக் கொண்டு; ஏகாரம் தேற்றம்; **அது** - அதனையே; இரண்டனுருபும் பிரிநிலை யேகாரமும் தொக்கன. **அதுவே தொண்டாக** ஆகும் நிலையின் தன்மையினை மேல்வரும் மூன்று பாட்டுக்களினால் விரித்துக் கூறுகின்றார்.

நினைந்தார் - துணிந்தார்; இதனை அருளே நிகழ்வித்தமையால் இதனையே அவரது அருளாணையாம்; ஆதலின் அவ்வாணையின்வழி நிற்பேன் என்பது துணிந்தனர்.

அதுவே தொண்டாக என்றும் செய—என்க.

11

3647. **(இ-ள்)** தொடங்கிய நாள்...கடன் புரிவார் - தொடங்கிய நாளில் இறைவர் அருளிய அத்தொழில் இடையறாது தொடர்ந்து செல்லும் கடமைப் பாட்டினை எண்ணுவாராய்; அது கண்டு கல்எறிவார் - அதனைக் கண்டு கல்லினை எறிவாராகி; துவராடைப் படம்புனை வேடம் தவிரார் - துவராடையாகிய உடையினைப் புனையும் புத்தர் வேடத்தினையும் விடாது மேற்கொள்வார்; மாதவர்தாம்-பெருந்தவமுடைய நாயனார்; பசுபதியார்...ஆதலினால் - பசுபதியாராகிய சிவபெருமானுடைய அருட்செயலே எல்லாம் ஆகும் என்ற உண்மையினைத் தெளிந்துணர்ந்தா ராதலினாலே;

(வி-ரை) தொடங்கிய நாள் - வழிபடத் தொடங்கிய முதல் நாளில்.

அருளிய - அப்போது இது நிகழ்ந்தது அவர் அருளே (3646) என்று முன்பாட்டிற் றுணிந்தபடி சிவன் அருளிய.

அத்தொழில் - அன்பு நிறைவாகி இறைவர் திருமேனிமேற் கல்எறிந்து வழிபடும் முறைச்செயல்.

ஒழியா... கடன் - இடையறுது தொடர்ந்து நியதியாகிய கடமையாக; **புரிதல்** - செய்தல் என்றலுமாம்.

அது கண்டு - அருளால் வந்த செயல் என்ற உண்மையினைக் கண்டு; அவ்வழிபாட்டு நியதியினுடன் சிவலிங்கத்தினைக் **கண்டு** என்றதும் குறிப்பு;சிவலிங்கங் கண்டுண்ணும் அது நயந்து மேற்கொண்ட (3644) கருத்தினைச் செயல் முறையில் ஆற்றுநெறி **அது** என்று கண்டு என்ற குறிப்புமாம்.

எறிவார் - தவிரார் - தவிராமே எறிவார் என்க; தவிராராகி எறிவாராய் - **இவர் செய்ய** என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

மாதவர்தாம் - பசுபதியார்...ஆதலினுல் - வேடம் தவிராமைக்கும், கல் எறிவதனுக்கும் நியதியாகத் தொடர்ந்து அச்செயலே செய்வதனுக்கும், மாதவர் திருமனத்தில், துணிந்த நிலைக்குங் காரணங்கூறியவாறு; துவராடை வேடத்துடன் சிவவழிபாடு செய்தல் விதிமுரண்; வழிபடும் இறைவன் மேனிமேற் கல்லெறிதலும் அவ்வாறே; அதனை வழிபாடாகிய நியதியாய்த் தொடர்ந்து செய்தலும் முரணாம்; ஆயின் இவையெல்லாம் பசுபதியார் தஞ்செயலே என்ற தெளிவு பிறந்தமையால் அமைவன என்பது துணிந்தாராதலின் அவ்வாறே செய்து வந்தனர். "நன்மை தீமை நின்செய லாதலின், நானே யமையும் நலமில் வழிக்கே" என்ற பட்டினத்து அடிகளார் திருவாக்கு இங்கு நினைவுகூர்தற் பாலது.

மாதவர் ஆம் இவர் - தெளிந்தாராதலினுல் - வேடங் தவிரார் - கல் எறிவார் - செய்யத் தொண்டாகி முடிந்தபடி மொழிதல்- வழக்கினுல் - வினை - பூசனையாம் என்று இவ்விரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

துவராடைப் படம் - புத்தர்களணியும் செந்நிறப் போர்வை; இதனுல் அவர்களுடைய ஏனைக்கோல நியமங்களும் கொள்ளப்படும். அவற்றுள் திருநீறணியாமையும் கருதவைத்தார், அதனை வாக்கினுற் சொல்லலும் தகாதென்ற நியமமுடைய ஆசிரியர் என்க. இதன் உள்ளுறையினை முன் (3641) விளக்கியவாறு காண்க. இச்சரிதத்தாற் போந்த சிறந்த உண்மை இஃதேயாதலின் இவ்வாறு விதந்து கூறி முடித்துக் காட்டினுர். முன்னர்த் தம் தொடக்கத்தில் "சாக்கியர் தம் வடிவினுல் வரும்" (3636) என்று மேற்கொண்டதும், பின்னும் "துன்னிய வேடந் தன்னைத் துறவாதே" (3641) என்றதும் இவ்வுண்மையினைச் சிறப்பா யுணர்த்துதற்கென்க. வகை நூலுடையார் "தகடன வாடையன்" என்று தொடங்கிக் காட்டிய கருத்தினை விரித்தருளினுர். "பட்டைத் துவராடைப் படிமம்" (பிள். தேவா).

பசுபதியார் - பசுக்களுக்கெல்லாம் பதியாகிய தலைவர் என்ற இத்தன்மையாற் கூறியது உயிர்களின் பக்குவத்துக்கு ஏற்ப உணர்த்திச் செலுத்தும் இறைவரது தன்மையினை ஈண்டு உட்கொள்வதன் பொருட்டு.

தம் செயலே அடங்கலும் ஆம் - ஏகாரம் பிரிநிலை; **அடங்கலும்** - முரண்பாடு களாகக் காணப்படினும் அவை முழுதும்.

3648. இந்நியதி பரிவோடு வழுவாம லிவர்செய்ய
முன்னுதிருத் தொண்டாகி முடிந்தபடி தான்மொழியிற்
றுன்னியமெய் யன்புடனே யெழுந்தவினை தூயவர்க்கு
மன்னுமிகு பூசனையா மன்புநெறி வழக்கினால். 13

மாதவர் தாம் - தவமுதிர்ச்சியினாலே என்று அவர் தெளிந்தமைக்கும், ஏனையோர் தெளியாமைக்கும் காரணங் கூறியபடி.

கடன் புரிவால்—என்பதும் பாடம். *12*

3648. **(இ-ள்)** இந்நியதி...செய்ய - இந்த நியதியாகிய தமது நியமச் செயலை மிக்க அன்புடனே இவர் செய்துவர; முன்னும்...மொழியில் - (அச்செயல்) எண்ணப்படுகின்ற திருத்தொண்டேயாகி முடிந்த அத்தன்மையினைச் சொல்வோமானால்; அன்புநெறி வழக்கினால் - அன்பினில் எழுந்த நெறியின் நியாயத்தினாலே; துன்னிய...பூசனையாம் - பொருந்திய மெய்யன்பு காரணமாகத் தொடங்கி அஃதே யாருகச் செய்த செயல் தூயவராகிய சிவபெருமானுக்கு நிலைபெற்ற சிறப்பு மிக்க பூசனையே யாகும்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) நியதி - நியதியாகிய நியமச் செயலை; இரண்டனுருபு தொக்கது.

முன்னு திருத்தொண்டாகி முடிந்தபடி - முன்னுதல் - நினைத்தல்; நினைப்பின் தன்மையே திருத்தொண்டு நிற்கும் இடம் என்றது குறிப்பு; **ஆகி** - ஆக்கச் சொல் அல்லாதனவாகியவையே இவ்வாறு ஆயின என்ற விளைவு குறித்தது. "சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும், அத்தன்" (திருவாசகம்) என்ற இடத்து இது சிறந்து விளக்கப்படுதல் காண்க; **முடிந்தபடி மொழியில்** - முடிந்தது; அதன் படியினைக் கூறுங்கால் - என்று பிரித்துரைத்துக் கொள்க; **படியினை** என இரண்டனுருபு விரிக்க; **முடிந்த** - விளைந்த.

அன்புநெறி வழக்கு - விதிவழக்கு, அன்பு வழக்கு என்றிரண்டனுள் இது பின்னைய வழக்காறுட் பட்டதென்க; இது விதி கடந்ததாகக் காணப்படினும் அன்பினால் இறைவர் ஏற்றுக் கொள்வதாம்; வைனகிகர் - மார்க்கர் என்ற வகையினர் கைக்கொள்வது **விதிநெறி** (விதி -மார்க்கம்) யாம் என்பர்.

துன்னிய மெய் அன்புடனே எழுந்தவினை - துன்னுதல் - நிறைதல்; **எழுந்த** - உள்ளூற நிறைந்து தூண்டப்பட்ட; **வினை** - வழிபாடு. கல் எறிதலாகிய அத்தொழில்; அத்தொழில் பூசனையாம்; எதனாலெனின், அன்புநெறி வழக்கால் என்க. **வழக்கு** - முறைமை; இது கவிக்கூற்று. "அருளொடும் தாழ்வுறும் வழக்கால்" (அமர்நீதி. புரா-536)

தூயவர் -சிவபெருமான்; இயல்பாகவே பாசங்களி னீங்கியவர்; தூய்மையைச் செய்பவர் என்ற குறிப்புமாம்; வினை தூய்மையற்றதாயினும் அத் தன்மையினைப் போக்கித் தூய்மை செய்து ஏற்றுக்கொள்பவர் என்ற குறிப்புமாம்.

3649. கல்லாலே யெறிந்ததுவு மன்பான படிகாணில்
வில்வேடர் செருப்படியுந் திருமுடியின் மேவிற்ருல்;
நல்லார்மற் றவர்செய்கை யன்பாலே நயந்ததனை
அல்லாதார் கல்லென்ப ரரனுர்க்கஃ தலராமால். 14

மன்னும் மிகு பூசனை - மன்னுதல் - நிலைபேறு பெறுவித்தல்; **மிகுதல்** - தன்னியல்பின் மிக்குச் சிறத்தல்.

தொண்டர் நிலை - பூசனையே யாமன்பு வழக்கினுல் - என்பனவும் பாடங்கள். *13*

3649. (இ-ள்) கல்லாலே...காணில் - கல்லினுலே எறிந்த செயலும் அன்பினுற் செய்யும் திருத்தொண்டேயாயின தன்மையினை ஆராய்ந்தால்; வில்வேடர்...மேவிற்ருல் - வில் ஏந்திய கண்ணப்ப நாயனுரது செருப்படியும் இறைவரது திருமுடியிற் பொருந்தப் பெற்றதாயின தன்மை கண்டோ மாதலின்; நல்லார்...கல்லென்பர் - நல்லாராகிய மற்று அச்சாக்கிய நாயனுர் அன்பினுலே விரும்பிய அச்செய்கையினை அல்லாதவர்கள் அவர் எறிந்தது கல் என்று சொல்வார்கள்;அரனுர்க்கு அஃது அலர் ஆம் (ஆல்) - சிவபெருமானுக்கு அஃது அலரே ஆகும். (ஆல் - அசை)

(வி-ரை) முன் பாட்டிற் கூறிய முடிபினை உதாரண முகத்தால் மேலும் விளக்கி முடித்துக் காட்டியவாறு.

இப்பாட்டும் முன் "அக நிறைந்த" (3645) என்ற பாட்டும் சிதம்பரத்துப் பிரதியில் இல்லை.

அன்பான - அன்பினுற் செய்யும் தொண்டாகிய; **அன்பு** - அன்பாற் செய்யும் தொழிலுக்காகி வந்தது; **படி** - படியினை - நிலையினை; இரண்டனுருபு விரிக்க.

காணில் - ஆராய்ந்து உண்மை காண்போமானுல்.

வில் வேடர்...மேவிற்ருல் - இது கண்ணப்ப நாயனுர் சரித நிகழ்ச்சியினை உதாரண முகத்தாற் காட்டியவாறு; உபலக்கணத்தால் வாய்நீர் உமிழ்ந்ததுவும், தலைச் செருகிய பள்ளித்தாமம் சூட்டியதுவும், ஊனமுது ஊட்டியதுவும் உடன் கொள்க; **செருப்படியும்** - செருப்படி முதலாயினவையும் என்க. செருப்படி திருமுடியில் மேவிய செயல் அச்சரிதத்தினுள் காண்க. "முடிமிசை மலரைக் காலில் வளைத்தபொற் செருப்பான் மாற்றி" (772); "திருக்கண்ணி லிடக்கா லூன்றி" (826); **மேவிற்று** - பொருந்தியது - பொருத்தமென இறைவரால் உவந்து மேற்கொள்ளப் பெற்றது; **மேவுதல்** - அங்கீகரிக்கப்பெறுதல்; திருவாதவூரடிகள் முதலிய பெரியோர்களாலும் போற்றப் படுதலுமாம்.

மற்று நல்லார் அவர் - என்க; **மற்று** - வேற்று வேடத்தால்- வேறுபட்ட செயலால் நின்ற என்பது குறிப்பு; **நல்லார்** - நன்மையினை உட்கொண்டவர்.

அன்பாலே நயந்த அச் செய்கையினை என்க - அன்பாலே நயந்தமை முன் (3644 - 3648) உரைக்கப்பட்டது.

3650. அங்கொருநா ளருளாலே **யயர்த்துண்ணப் புகுகின்றார்**
"எங்கள்பிரான் றனையெறியா தயர்த்தேன்யா"னெனவெழுந்து
பொங்கியதோர் காதலுடன் மிகவிரைந்து புறப்பட்டு
வெங்கரியி னுரிபுனைந்தார் திருமுன்பு மேவினார். 15

அல்லாதார் - அன்புநெறி வழக்காற்றில் வாராதவர்; புறனுரைப்போர்; மூடர்கள்; **கல்** - கல்லெறிதல் குறித்தது.

அஃது - அஃதே; தேற்றேகாரம் தொக்கது; **அஃது அலர் ஆம்** - அஃதே மலராகும் என்றதாம்; "புத்தன் மறவா தோடி யெறிசல்லி புதுமலர்க ளாக்கி னான்காண்" (அரசு தேவா). **ஆம்**- ஆக்கச்சொல் விளைவு குறித்தது. **அலர்** - பழிச்சொல் என்று கொண்டு அஃது - கல் என்று சொல்வது - அரனார்க்குப் பழிச் சொல்லாம் என்று முரைக்கநின்றது; அன்பரைப் பழித்தது அரனைப் பழித்ததேயாம்; அன்பினில் விளையும் ஆரமுதாகிய அரனாரது கருணையினையும் பழித்ததேயாம் என்பனவும் குறிப்பு.

கானில்—என்பதும் பாடம். 14

3650. (இ-ள்) அங்கொருநாள்...புகுகின்றார் - அந்நியதி ஒழுக்கத்திலே ஒருநாள் திருவருளினாலே மறந்து உண்ணத் தொடங்குகின்றார்; எங்கள்...எழுந்து -எம் பெருமானை கல்லெறிந்து வழிபடாது யான் மறந்தேனே என்று உண்ணாது எழுந்து; பொங்கியதோர்... மேவினார் - மேன்மேலும் பொங்கியதாகிய ஒப்பற்ற பெருவிருப்பத்துடன் மிகவும் விரைந்து புறப்பட்டு வந்து கொடிய யானையின் தோலினை உடுத்த இறைவரது திருமுன்பு சேர்ந்தனர்.

(வி-ரை) அருளாலே அயர்த்து - அயர்த்தல் - மறத்தல்; நியமத்தினை மறந்த மறப்பும் இறைவர் கொடுத்தருளியது; "மறப்பித்துப் பெயர்த்தொன்று நாடுவித்தி" (திருவா); உணவு உண்ணத் தொடங்குகின்றார் அந்நிலையில் நினைந்து என்க. இந்நாயனார் இறைவன்மேற் கொண்ட "அயரா அன்பி" னராதலின் அயர்த்தற்கு ஏதுக் கூறுவராய் **அருளால்** என்றருளினார். "உண்பதன்முன் மலர்பறித்திட்டுண்ணாராகில்" (அரசு-தேவா) **புகுகின்றார்**- வினையாலணையும் பெயர்.

எங்கள்...என - இது நாயனார் நினைந்தருளியது. நினைப்பித்த இஃதுந் திருவருளால் வந்தது; மறத்தலும் உடன் நினைத்தலும் அன்று திருவடி சாரும் நிலைதரும் பருவமாதலின் அதன் பொருட்டு அருளால் தரப்பட்டன என்பதாம். **எழுந்து** - உண்ணப்புக்க நிலையினின்றும் மேல் எழுந்து.

பொங்கியதோர்...புறப்பட்டு-முன் அயர்த்துப் பின் நினைந்தமையால் தமது நியதி பிழைத்த நிலையை நினைந்து பதைத்து வந்த விரைவும், ஆசை கூர்தலும் குறித்தன. **புறப்பட்டு**- தம் மனையில் உண்ணப் புகுந்த இடத்தினின்றும் புறப்பட்டு. "கழலே மறவாது கல்லெறிந்த" (தேவா).

கரி - கரத்தையுடையது.

3651. கொண்டதொரு கல்லெடுத்துக் **குறிகூடும் வகையெறிய**
உண்டிவினை யொழித்தஞ்சி யோடிவரும் வேட்கையொடுங்
கண்டருளுங் கண்ணுதலார் கருணைபொழி திருநோக்காற்
றெண்டரெதிர் நெடுவிசும்பிற் **றுணைவியொடுந் தோன்றுவார்;** 16

அயர்ந்து - அயர்ந்தேன் - என்பனவும் பாடங்கள். இவை பாடமாயின் அன்று மறத்தல் உடல் உபாதியாகிய இளைப்பின் காரணமாக வந்தது என்று உரைக்க. 15

3651. (இ-ள்) கொண்டது...எறிய - அங்குக் கிடைத்தெடுத்துக் கொண்டதாகிய ஒரு கல்லினைக் குறிகூடும் வகையினாலே (அவர்) எறிய; உண்டிவினை...கண்டருளும் - உணவு உண்ணும் வினையினையும் ஒழித்து, அச்சத்தோடும், ஓடி வரும் பெருவிருப்பத்தோடும் அவரைக் கண்டு, அருள் புரிகின்ற; கண்ணுதலார்...தோன்றுவார் - நுதலிற் கண்ணுடைய இறைவர் அருள் பொழியும் திருநோக்கத்துடனே அத்திருத்தொண்டரெதிரே நீண்ட வானின் கண்ணே தம் துணைவியாராகிய உமையம்மையாருடன் தோன்றுவாராகி,

(வி-ரை) கொண்டது ஒரு கல் - அன்று அங்குக் கிடந்து தாம் எடுத்துக் கொண்டதாகியதொரு கல்லினை; **ஒரு -** சிவபெருமான் வெளிப்படக் காணவும், இனிக் கல்லெறியும் செயல் இதனோடொழியச் சிவலோகத்திற் சேரவும் தரும் கல்லாதலின் முன்னாள்களின் எறிந்த கற்களினும் தனிச் சிறப்புடைய தென்பார் **ஒரு** கல் என்றார். **ஒரு** -ஒப்பற்ற.

குறிகூடும் வகை - குறியாவது தாம் இதுவரை மேற்கொண்ட துணிபும் செயலும், அதனால் உட்கொண்ட குறிக்கோளும் ஆகிய குறிப்பு; வழிபாட்டின் இலக்கு; அஃதாவது "உய்வகையாற் பொருள்சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்து" அப்பொருளை அடைய முயலுதல். **கூடும் வகை -** கைகூடப் பெறும் வகையினாலே. இதுவரை குறித்த உட்கோள் நிறைவேறும் வகை; "கொண்ட குறிப்பினை" (3653) என்பதும் காண்க. **குறி** - சிவலிங்கம் என்பதுமாம்.

எறிய அதனை வேட்கையொடும் - கண்டு - என்க. எறிந்த செயலினையும், அதனுள் நின்ற வேட்கையினையும் உடன் கண்டு; **வேட்கை**யாவது "பொங்கியதோர் காதல்" (3650) என முன்கூறப்பட்டது. எறிந்ததனை மட்டும் கண்டு அதனுட்கிடந்து பொங்கிய காதலினைக் காணார் உலகர்; ஆதலின் "அல்லாதார் கல் என்பர்" என்றார்; "உள்ளத்திற் றெளிகின்ற அன்பின் மெய்ம்மை யுருவினையு மவ்வன்பினுள்ளே மன்னும், வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண் விமலரையு முடன்கண்ட" (292) என்ற நிலை ஈண்டுக் கருதத் தக்கது.

கண்டு அருளும் - கண்டமையால் அருளும்; **கண்டு -** காரணப் பொருளில் வந்தது; **கண்ணுதலார் -** அருட் கண்ணுடையாராதலிற் கண்டு என்ற குறிப்புடன் இங்கு இப்பெயராற் கூறினார். நுதலிற் பொருந்திய கண்ணுடையவர். முன்பின்னாகத் தொக்க ஏழாம் வேற்றுமைத்தொகை.

3652. மழவிடைமே லெழுந்தருளி வந்ததொரு செயலாலே
கழலடைந்த திருத்தொண்டர் கண்டுகரங் குவித்திறைஞ்சி
விழவருளேக் களித்தருளி மிக்கசிவ லோகத்திற்
பழவடிமைப் பாங்கருளிப் பரமரெழுந் தருளினர். 17

கருணைபொழி திருநோக்கால் - இதுவரையும் இவர் தொழிலினைக் கண்டிருந்த நிலை காலம் பார்த்துக் கொண்டிருந்த நிலை; இப்போது அருள்புரியும் நிலையாதலின் **கருணைபொழி திருநோக்கால் கண்டு** என்றார்.

தோன்றுவார்- தோன்றுவாராகி; முற்றெச்சம். **தோன்றுவார் - வந்த செயல்** என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

உண்டிவினை ஒழித்து - அஞ்சி ஓடிவரும் வேட்கை - இனி இவ்வுலகில் உண்ணுகின்ற - வினை அனுபவிக்கின்ற - நிலையினை ஒழித்து என்றும், பிறவிக்கு அஞ்சி என்றும் குறிப்புப்பட நின்ற அழகு கண்டு களிக்க. **ஓடி வருதல்** - பாம்பு - புலி முதலிய கொடுவிலங்குகளைக் கண்டு அஞ்சிப் புகலிடம் தேடுவார் போல; "இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் கொடுஞ்சூழலி"னின்றும் பிழைக்க இறைவன் றிருவடியாகிய புகலிடம் நோக்கி ஓடிவருதல் பக்குவ முதிர்ச்சியினைக் காட்டும்.

நெடு விசும்பில் - நீண்ட ஆகாயம்; பூதாகாயமன்று - ஞானகாயம் என்பார் நெடுவிசும்பு என்றார். "நீள் விசும்பு" (அரசு - தேவா);"**மிக்கசிவ லோகத்திற்** பழஅடிமைப் பாங்கருள" வருகின்றாராதலும் குறிப்பு.

உண்டிவினை ஒழித்து - "கல்லினா லெறிந்து கஞ்சி தாமுணுஞ் சாக்கியனார், நெல்லினாற் சோறு ணாமை நீள்விசும் பாள வைத்தார்" (அரசு. தேவா - நேரிசை) என்ற திருவாக்கின் விரிவு; சிறந்த சரிதச்சான்றாக இச்சரிதத்தினை இங்கு விளக்குதல்காண்க. இந்நாயனார் காலம் ஆளுடைய அரசுகளுக்கு முற்பட்டது.

தோன்றினார்—என்பதும் பாடம்.

16

3652. **(இ-ள்)** மழவிடைமேல்...செயலாலே - இளமை பொருந்திய விடையின் மேலே எழுந்தருளி வந்த ஒப்பற்ற செய்கையினாலே; கழலடைந்த... விழ - திருவடியடைந்த திருத்தொண்டராகிய நாயனார் கண்டு கைகள் கூப்பி நலமுறப் பணிந்து வீழ; அருள் நோக்கு...எழுந்தருளி - அருளேக்கம் பாலித்தருளிச் சிறப்பினான் மிக்க சிவலோகத்திலே பழைய அடிமைத் திறத்தினைக் கொடுத்தருளிப் பரமனார் எழுந்தருளினார்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) கழல் அடைந்த - முன்கூறியவாறு முன் உண்மைநெறி கண்ட குறிப்பினால் வந்து வழிபட்டுக் கழலிற் புகழ் அடைந்த; இப்போது கழல் அடைந்து பணிதல் மேல் **இறைஞ்சி விழ** என்றதனாற் கூறப்படுதல் காண்க; **கழலடைந்த** என்ப சாதனமாக என்னும் பொருள்தந்து நின்றது. **கழலடைந்த** - திருவடியைத் தியானித்த. "தன்னடைந்தார்க் கின்பங்க டருவானை" (பிள். தேவா); "மாணடி சேர்ந்தார்"; **சேர்தல்** - இடைவிடாது

வேறு

3653. ஆதியார் தம்மை நாளுங் கல்லெறிந் தணுகப் பெற்ற
கோதில்சீர்த் தொண்டர் கொண்ட குறிப்பினை யவர்க்கு நல்குஞ்
சோதியா ரறித லன்றித் துணிவதென்? னவர்தாள் சூடித்
தீதினை நீக்க லுற்றேன் சிறப்புலி யாரைச் செப்பி. 18

தியானித்தல் என்பர் பரிமேலழகர்; **இறைஞ்சி விழ** - கீழே விழுந்து வணங்க.

வந்ததொரு செயலாலே (தொண்டர்) கண்டு - அவர் அருளால் எழுந்தருளி வராவிடிற் காணுதற் கரியார் என்பது **செயலாலே** - செயல் தந்து காணக் காட்டுதலாலே - என்றதனுல் காண்க.

அருள் நோக்கு - சிவப்பேறு தரும் பார்வை.

மிக்க சிவலோகத்திற் பழ அடிமைப் பாங்கு - மிக்க - ஏனை எல்லாப் பதங்களினும் மிகுந்த சிறப்புடைய; மீளாத; **பழ அடிமைப் பாங்கு** - "பழ அடியார் கூட்டம் அத்தா காண ஆசைப் பட்டேன்" (திருவா); "தம்மைவிடுத் தாயும் பழய வடியாருடன் கூட்டித், தோயும் பரபோகந் துய்ப்பித்து" (கந்தர் கலிவெண்பா); **பாங்கு**-பண்பு நிலை; உரிமை; **எழுந்தருளுதல்**-தம் நிலையில் மறைதல். *17*

3653. **(இ-ள்)** ஆதியார் தம்மை...குறிப்பினை - நாள்தோறும் கல்எறிந்து ஆதி முதல்வனுகிய சிவபெருமானை அணுகப்பெற்ற குற்றமில்லையாகிய சிறப்புடைய தொண்டராம் சாக்கிய நாயனுர் உட்கொண்டு வழிபட்ட குறிப்பினை; அவர்க்கு... அறிதலன்றி - அவருக்கு அருள் செய்யும் சோதியா ராகிய சிவபெருமான் அறிதலன்றி நாம் துணிவது எவ்வாறு?; அவர் தாள்சூடி... செப்பி- அவர் திருவடிகளைச் சிரமேல் வைத்துக்கொண்டு அத்துணைகொண்டு சிறப்புலியாரது சரிதம் கூறப்புகுந்து தீமையை நீக்கலுற்றேன்.

(வி-ரை) இது கவிக்கூற்று.

இதுவரைக் கூறிவந்த சரிதத்தை வடித்து எடுத்துக் காட்டி முடிபு கூறி இனி வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றுர் ஆசிரியர்.

நாளுங் கல் எறிந்து - ஆதியார் தம்மை - அணுகப்பெற்ற - என்க; ஆதியார் தம்மை எறிந்து என்றும், ஆதியார் தம்மை அணுக என்றும், கூட்டியுரைக்க நின்றது; **எறிந்து** - எறிந்த அஃதே ஆருக - சாதனமாக. **கோதில் சீர்** - "நற்சாக்கியர்" (நம்பி. தேவா). **ஆதி** - சிவலிங்கம்.

கொண்ட குறிப்பு-உட்கொண்ட குறிக்கோள்; முன் உய்வகையாற் பொருள் சிவன் என்றும் *(3641)*, சிவலிங்கங் கண்டபின் உண்ணும் அது நியதியாகிய உய்வகை என்றும் *(3643)*, அவ்வாறு சிவலிங்கம் கண்டநாள் நீண்ட களியுவகைநிலையிற் செயலறியாது பதைப்போடு கல்எறிய நேர்ந்த அஃதே திருவருள் ஆணை என்றும், ஆதலின் அதனையே தொடர்ந்து தவிராது செய்தல் வேண்டுமென்றும், பசுபதியார் தஞ்செயலே

அடங்கலுமாமாதலின் துவராடைவேடம் களையாது அவ்வேடத்துடனே சிவன்பணி செய்யத் தக்கதென்றும் (3647), அயர்த்துண்ணப் புகுந்தபோதும் நினைவு வந்து எழுந்து எறிதல் வேண்டுமென்றும் (3651) கூடிய இவை **கொண்ட குறிப்பு** எனப்பட்டன. **குறிப்பு** - கொள்கை.

அவர்க்கு நல்கும்... துணிவதென் - முன் கூறியவை யெல்லாம் மனத்துள் நிழ்ந்தனவே யாதலாலும், புறச்செயல்கள் உலகரறியாதபடி உலக நிலைக்கும் விதிக்கும் மாறுபாடாவன வாதலாலும், உயிர்க்குயிராக நின்று கண்டு அருளும் இறைவரே அறிவார்; உலகரால் இன்னதென்று கண்டு துணியலாகா தென்பது. "நாளுமற் றவர்க்கு நல்கு நம்பர்தா மளக்கி லன்றி, நீளுமித் தொண்டி னீர்மை நினைக்கிலா ரளக்க வல்லார்" (606) என்ற நிலையினை இங்கு நினைவு கூர்க.

அவர் தாள்சூடி - மேற்சரிதம் கூறுதற்குத் துணை செய்ய என்பது குறிப்பு.

சூடிச் செப்பித் - தீது - நீக்கலுற்றேன் என்க.

"கல்லா லெறிந்த பொல்லாப் புத்த, னின்னினைந் தெறிந்த வதனு, லன்னவன்றனக்கு மருள் பிழைத் தன்றே" (திருவிடை - மும் - கோ. 25) என்ற திருவாக்கும் ஈண்டு இச் சரித ஆதரவாகக் காணத்தக்கது. *18*

சரிதச் சுருக்கம்:— திருச்சங்க மங்கைப் பதியிலே வேளாளர் குலத்திலே பெரியவர் ஒருவர் அவதரித்தார். அவர் எல்லா உயிர்களிடத்தும் அருள் பூண்டு ஒழுகி வந்தார். பிறவிச் சூழல் நீக்கும் வழியினை ஆராய்வாராய்த் திருக்காஞ்சி நகரில் வந்தார். முதலிற் சாக்கியர் புத்தர்களது அறத்தின் வழிச்சார்ந்து நல்ல ஞான மடைவதற்குப் பல வழிகளையும் அவர்கள் நூல்களைப் பயின்று ஆராய்ந்தனர். ஏனையவற்றையும் பயின்றுராய்ந்தார். புத்தரது சமய ஞானமும் சமண முதலாகிய ஏனைப் புறச்சமய முடிவுகளாகிய ஞானங்களும் பொருளல்ல என்றும், ஈறில் சிவநன்னெறியே பொருளாவதென்றும் உணர்ந்தார். சிவனை அடைவதே உய்யும் வகையென்று அருளாலே உணர்ந்தார்.

எந்நிலையினின்றுலும் எந்தக் கோலம் கொண்டாலும் சிவன்றுள் மறவாமையே பொருள் என்றும் துணிந்தார். ஆதலினுல் புத்த வேடமாகிய துவராடை முதலியன வற்றைத்துறவாதே, சிவனை மறவாது பணிசெய்வாராயினுர். சிவனை அடைவதற்குச் சிவலிங்க வழிபாடு சிறந்த வழி என்று தெளிந்தார். நாடோறும் சிவலிங்கம் கண்டு உண்ணும் நியதியினை அவ்வழிபாடாகக் கொண்டனர்.

அத்துணிபால் வெளியிடையே ஒரு சிவலிங்கங் கண்டார்; கண்ட உடன் நீளும் களிஉவகை நிலைமை வந்தது; செய்வதின்னதென்றறியாராயினர்; பதைத்தனர்; பக்கத்திருந்ததோர் கல்லினைப் பறித்து அன்புடனே சிவலிங்கத் திரு மேனிமேல் அருச்சனை வழிபாடாக எறிந்தார். பிற்றை நாள் வழிபடச் சென்ற போது முன்னை நாள் நிகழ்ச்சியின் குறிப்பினை நினைந்தனர். அது சிவனருளால் நிகழ்ந்ததென்று உணர்ந்து அதனைத்தவிராது

தொடர்ந்து நாடோறும் செய்துவந்தனர். அன்புநெறி வழக்கினல் அஃதே சிவனுக்குச் சிறந்த பூசனையாயிற்று.

ஒருநாள் நினைந்த அந்நியதியினை மறந்து உண்ணப்புகுந்தனர்; உடனே உண்டி வினை ஒழித்து எழுந்து காதலுடன் ஓடிவந்து கல் எறிந்தனர். இறைவர் அவரது செயலினையும் வேட்கையினையும் உடன்கண்டு விடைமேல் எழுந்தருளிக் காட்சி கொடுத்து அவருக்குச் சிவலோகத்தில் பழவடிமைப் பாங்கு அருளினர்.

கற்பனை:

1. எல்லா வுயிர்களிடத்தும் அருளுடையாராக வாழ்தல் பெரியோரியல்பு. *(3637)*
2. பிறந்திறக்கும் நிலை ஒழிவேன் என்று அஞ்சி அதற்கு உரிய வழி தேடுதல் அறிவுடைய மக்கள் செயல். *(3637)*
3. காஞ்சிபுரம் முன்னளில் பல சமயத்தவர்களும் சமய விசாரணை நடத்தும் கழகங்களைக் கொண்டிருந்தது.
4. பல சமயங்களையும் ஆய்ந்தும் ஈறில் சிவநன்னெறியே பொருளாவதென்று உணர்வு நாட்ட பெறுதல் ஈசரருளானன்றிக் கூடாது. *(3639).*
5. ஞான நூல்களால் விதித்த பொருள், செய்வினை - செய்வான் - பயன் - கொடுப்பான் என்று நான்காகும். இவ்வாறு கண்டு உண்மைப் பொருள் நிச்சயம் செய்வது சைவசமயத்தி லன்றி வேறெந்தச் சமயத்திலும் இல்லை. *(3640)*
6. ஆதலினல் உய்யும் வகை வேண்டுவோர் அடையத் தக்கபொருளாவார் சிவபெருமானே என்றுணரத்தக்கது. *(3640)*
7. இவ்வுணர்ச்சி சிவனருளாலன்றி வராது.
8. சிவனை மறவாது பணி செய்தல் எந்த நிலையினின்றும் எந்தக் கோலத்தினின்றும் செய்யலாம். எல்லாக் கோலங்களும் சிவனிறைவுக்குள் அடங்குவன. புத்தர் வேடத்துடனேயும் சிவனை வழிபடலாம். *(3641)*
9. சிவ வழிபாட்டுக்குரிய சிறந்த இடம் சிவலிங்கத் திருமேனியாம். *(3643)*
10. சிவ வழிபாட்டிற் சிறந்ததொரு நியதியாய் உய்வகையிற் செலுத்துவது சிவலிங்கங் கண்டுண்ணும் நியமமாகும்.
11. சிவலிங்கங் கண்ட அப்போதே நீடு களியுவகை நிலைவரத் தம் செயலறியாது கல் எடுத்துப் பதைப்போடு எறிந்தார் சாக்கியனர். அஃதே சிவனுக்குகந்த பூசையாயிற்று.

12. முதல் நாளின் செயல் அருட்குறிப்பு என்றறிந்ததனாலே இந்நாயனார் அதனையே தொடர்ந்து நாடோறும் பூசனையாகக்கொண்டனர்.

13. ஒருநாள் அந்நியதி மறந்துண்ணப் புகுந்தபோது நினைந்து வருந்தி ஓடி வந்து நியதியினை நிறைவேற்றி அருள் பெற்றனர்.

14. உணவுண்பதினும் சிவநியமமாகிய சிவ வழிபாடு சிறந்தது.

தலவிசேடம்:- சங்கமங்கைப்பதி - இது தொண்டைநாட்டில் காஞ்சியை அடுத்து உள்ள ஊர்.

சாக்கிய நாயனார் புராணம் முற்றிற்று.



சிறப்புலி நாயனார் (கார்த்திகை - பூராடம்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

35. சிறப்புலி நாயனார் புராணம் (6 திருப்பாடல்கள்)

தொகை

"சீர்கொண்ட புகழ்வள்ளல் **சிறப்புலிக்கு மடியேன்**"

—*திருத்தொண்டத்தொகை-(6)*

வகை

"புவனியிற் பூதியுஞ் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மர்க்குச் சிறப்புச்செய் தத்துவ காரணனும்
அவனியிற் கீர்த்தித்தென் னுக்கூ ரதிப னருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே"

—*திருத்தொண்டர் திருவந்தாதி-(42)*

விரி

3654. **பொன்னிநீர்** நாட்டி னீடும் பொற்பதி புவனத் துள்ளோர்
"இன்மையா லிரந்து சென்றோர்க் கில்லையென் னாதே யீயுந்
தன்மையா"ரென்று நன்மை சார்ந்தவே தியரைச் **சண்பை**
மன்னனா ரருளிச் செய்த மறைத்திரு வாக்கூ ராக்கூர். 1

புராணம்:- இனி, நிறுத்த முறையானே ஏழாவது, வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்தில், இரண்டாவதாகச் சிறப்புலி நாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார் ஆசிரியர்; சிறப்புலி நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி.

தொகை:- சிறப்பினைக்கொண்ட புகழையுடைய வள்ளலாகிய சிறப்புலி நாயனாருக்கும் நான் அடியேனாவேன்.

சீர்கொண்ட* - *சீர் - சிறப்பு; சீராவது சிவனடியாரை வழிபட்டு வேண்டுவன நல்கும் பதிபுண்ணியச் சிறப்பு; "தவநியமர்க்குச் சிறப்புச் செய் தத்துவன்"(வகை); **புகழ் வள்ளல்** - "இரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" (குறள்) என்றபடி இரப்போர்க் கில்லையென்னாது ஈயும் கொடைத் தன்மையால் வள்ளல் எனப் பெற்றவர். இது பசு புண்ணியம்;"அவனியிற் கீர்த்தி" (வகை); இவற்றை ஆசிரியர் இம்முறையே (3657-3668) பின்னர் விரித்தல் காண்க. ***சிறப்புலி*** - நாயனார் பெயர்; உம்மை - முன் துதிக்கப்பட்டோர் களுடன் இவருக்கும் என இறந்தது தழுவிய எச்சவும்மை எண்ணும்மையுமாம்.

வகை:- புவனியில்... காரணனும் - இவ்வுலகத்திலே திருநீறும் அக்கமணியும் விளங்க வணிந்து வந்த மாதவ நியமமுடைய அடியார்களுக்குச் சிறப்புச் செய்கின்ற தத்துவத்தின் காரணராய் விளங்கும் பண்புடையவர்; அவனியில்...மறையோன் -

நிலவுலகத்தில் கீர்த்தியையுடைய தென் ஆக்கூரில் அவதரித்த தலைவராகிய அரிய வேதியாராகிய; சிவநியமம் .... சிறப்புலியே - சிவனது நியமமாகிய ஒழுக்கத்திலே சிறந்து நின்ற பழமையாகிய சிறப்பினையுடைய நம் சிறப்புலியார்.

சாதனம் - உருத்திராக்க மணி; "திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி" (தேவா - அரசு); **பொலிவார்தல் -** அணிபெற நிறைய அணிதல். **தவநியமத்தவர் -** சிவனடியார்கள்; **சிவன்... சீர் -** "**சீர்**கொண்ட" என்ற தொகைநூற் பொருளை விளக்கியபடி; இதனை ஆசிரியர் விரித்தல் மேற் (3657 -3658) காண்க. மறையோன் - சிறப்புலியே - தத்துவ காரணனும் என்று முடிக்க.

தொகைநூல் பேரும் பண்பும் அடிமைத் திறமாகிய சரிதக் குறிப்பும் பேசிற்று; வகைநூல் ஊரும் மரபும் பேரும் பண்பும் சரிதச் சிறப்பும் அடிமைத் திறமும் வகுத்தது. இவை விரிந்தபடி விரிநூலுட் கண்டுகொள்க.

விரி:— (இ- ள்) பொன்னி...பதி-காவிரியின் நீர்பாய்ந்து செழிப்புச் செய்யும் சோழ நாட்டிலே பழமையாகிய அழகிய பதி; புவனத்துள்ளோர்...என்று - "உலகத்துள்ளோர் வறுமையினலே இரந்து (யாசித்து) சென்றோர்களுக்கு இல்லை என்னுதே வேண்டுவனவற்றை வரையாது கொடுக்கும் தன்மையினை உடையவர்கள்" என்று; சண்பை...வாக்கூர் - சீகாழித் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் நன்மை பொருந்திய வேதியர்களைப் பற்றி அருளிச் செய்த வேதத் திருவாக்கினைப் பெறும் பேறுடைய ஊராகிய; ஆக்கூர் - திருவாக்கூர் என்பதாகும்.

(வி-ரை) திருவாக்கூராகிய - ஆக்கூர் - பதி என்று கூட்டி முடிக்க; **ஆக்கூர் பதி** - யாகும் என்க. பெயர்ப் பயனிலை; **திருவாக்கூ ராக்கூர் -** சொல்லணி நயம் பெறக்கூறியது;"திருவாமூர் திருவாமூர்" (1277); இஃது ஆசிரியரது தெய்வக் கவிநயங்களுள் ஒன்று. **திருவாக்கு ஊர் -** திருவாக்கினுற் பரவப்பெற்ற ஊர்.

இன்மையால்...தன்மையார் - ஆளுடைய பிள்ளையார் தேவாரம். "இன்மையாற் சென்றிரந்தோர்க் கில்லையென்னு தீந்துவக்குந், தன்மையா ராக்கூறிற் றுன்றோன்றி மாடமே" (பிள் - சீகாமரம் - 9)

நன்மை சார்ந்த வேதியரை - அருளிச்செய்த - அப்பதியின் வேளாளர்களை முன்னரே (பதிகம்- (3)) கூறியமையாலும், அப்பதி அந்தணர்கள் நிறைந்த பதியாகலானும் இத்தன்மை வேதியரைப் பற்றிய தென்றருளினர் ஆசிரியர்; இந்நாயனுர் மறையவராதலின் இதனைக் குறித்தனர் என்க. இச் சரிதமுடைய நாயனுரது மரபின் பெருமைக் குறிப்பு. மறையவர்க்குரிய அறுவகைத் தொழில்களுள் ஈதலும் ஒன்றுதல் காண்க. **சென்றோர் -** வினையாலணையும் பெயர்.

மன்னனுர் அருளிச் செய்த - மன்னவராற் பாராட்டப் பெற்றவர் என்றது குறிப்பு.

மறைத்திருவாக்கூர் - மறை - தேவாரங்கள். **மறை -** இறைவரருளிய வேதம் - போல்வன என்பது; **வாக்கு ஊர் -** வாக்கினைப் பெற்ற பேறுடைய ஊர். அத்திருவாக்

3655. தூமலர்ச் சோலை தோறுஞ் சுடர்நெடு மாடந் தோறும்
மாமழை முழக்கந் தாழ மறையொலி முழக்க மோங்கும்
பூமலி மறுகி லிட்ட புகையகிற் **றூபந் தாழ**
ஓமநல் வேள்விச் சாலை **ஆகுதித் தூப மோங்கும்.** 2

கின் பெருமை பற்றி "அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (*2986*), "பிள்ளையார்தந் திருவாக்கிற் பிறத்த லாலே" (*2881*) என்பனவும், ஆண்டுரைத்தனவும், பிறவும் பார்க்க.

பொன்னி நீர் நாடு - சோழநாடு; இதுநாட்டுச் சிறப்பு.

மறைத்திருவாக்கூர் - இது குடிவளமும் மேன்மையும் பற்றி ஆளுடைய பிள்ளையார் திருவாக்கின் பெருமை கொண்டு நகரச் சிறப்புரைத்ததாம்.

வாக்கூரவ்வூர்—வாக்கூராகும்—என்பனவும் பாடங்கள். *1*

3655. **(இ-ள்)** தூமலர்...தோறும் - தூய மலர்கள் நிறைந்த சோலைகள் தோறும் ஒளி விளங்கும் நீண்ட மாடங்கள் தோறும்; மாமழை...முழக்கம் ஓங்கும் - பெரிய மேக முழக்கம் கீழ்ப்படும்படி வேத ஒலிகள் கூடிய முழக்கம் மேலோங்கும்; பூமலி... தாழ - அணி பொருந்திய வீதிகளில் இட்ட அகிற்புகைத் தூபமணம் கீழ்ப்படும்படி; ஓமம்... தூபம் ஓங்கும் - ஓமங்கள் செய்யும் வேள்விச் சாலைகளின் ஆகுதிகளின் புகை மேல் ஓங்கும்.

(வி-ரை) மறை ஒலிமுழக்கம் - ஆகுதித்தூபம் - மறையவர்களின் பதியாதலின் இச்சிறப்புக்களாற் கூறினர். ஆளுடைய பிள்ளையார் புராணம், சண்டேச நாயனர் புராணம் முதலியவை பார்க்க.

சோலைதோறும் - மாடம்தோறும் - மறைஒலி முழக்கம் - சோலைகளில் உள்ள மறைமுழக்கம் வேதம் பயிற்றப் பெறும் மறைச் சிறுர்களின் கிடைகளினின் றெழும் முழக்கம்; மாடந்தோறும் உள்ள மறைமுழக்கம் மறையவர் மனைகள் தோறும் செய்யும் முத்தீ வேள்விகளில் சொல்லப்படும் வேத மந்திரங்களின் முழக்கம்.

மழை முழக்கம் - மேக வோசைகள்;வேத மந்திரங்கள் உயர்ந்த நிஷாத சுரத்தில் ஓதப்படும்போது மேக வோசை, யானையின் பிளிறேசை என்ற இவற்றை ஒப்பன என்பதாம். "மேகமுங் களிறு மெங்கும் வேதமுங் கிடையு மெங்கும்" (*81*) என்பன முதலியவை பார்க்க. **ஒலி முழக்கம்** - பொருளுள்ள சத்தமே யாயினும் பலர்கூடி உயர்ந்த சுரத்தில் ஒலித்தலால் **முழக்க** மாயிற்று என்றார்.

மறுகில் இட்ட அகிற்புகைத் தூபம் - வீதிகளில் நன் மணத்தின் பொருட்டும் மக்களின் உடல் சுகத்தின் பொருட்டும் நறும்புகை இடும் மரபு குறித்தது.

ஓம...தூபம் ஓங்கும் - ஓங்குதல் - அளவாலும் பயனாலும் மிகுதல் குறித்தது. **நல்வேள்வி** - சிவனை முன்னாகச் செய்யும் வேள்வியாதலின் **நல்** என்றார்.

மாமழை முழக்கம் - பருவந்தவறுது மாத மூன்று முறையாகப் பெய்யும் மேக ஓசை; இஃதும் அகிற்புகைத் தூபமும் உலகியல் நலங்களின் பெருமை குறித்தன.

3656. ஆலைசூழ் பூக வேலி யத்திரு வாக்கூர் தன்னில்
ஞாலமார் புகழின் மிக்கார் நான்மறைக் குலத்தி னுள்ளார்
நீலமார் கண்டத் தெண்டோ ணிருத்தர்தந் **திருத்தொண் டேற்ற**
சீலராய்ச் சாலு மீகைத் திறத்தினிற் சிறந்த நீரார். 3

மறைஒலி - ஆகுதித்தூபம் - இவை வைதிக ஒழுக்கப் பெருமை குறித்தன. இவை **ஓங்கும்** என்றதனல் இவ்விரண்டனுள் உலக நிலைச் சிறப்பினும் வைதிகச் சிறப்பே மிக்கது என்றதாம். இந்நாயனுர் இரண்டானும் சிறந்து விளங்கியமையும், அவற்றுள் சிவநியமத்தினுல் வீடுபெற்ற நிலையும் குறிப்பா லுணர்த்தப்பட்டவாறு கண்டு கொள்க.

சுடர் தொடு—என்பதும் பாடம்.

2

3656. (இ-ள்) ஆலை... தன்னில் - கரும்பு ஆலைகளைச் சூழ்ந்த கமுகுகள் வேலிபோல அமைந்த அந்தத் திரு ஆக்கூரில்; ஞாலம்...உள்ளார் - உலகில் நிறைந்த புகழினுலே மிகுந்தவர்; நான் மறைகளையும் ஓதும் வேதியர்களது குலத்தின் வந்தவர்; நீலமார்...சீலராய் - விடம் பொருந்திய கண்டத்தினையும் எட்டுத் தோள்களையும் உடையவராகிய கூத்தப் பெருமானது திருத்தொண்டினை மேற்கொண்டொழுகும் சீலமுடையவராகி; சாலும்...நீரார் - சால்பு பொருந்திய ஈகைத் திறத்திலே சிறந்த தன்மை வாய்ந்தவர்.

(வி-ரை) ஆலை - கரும்பு ஆலை;இங்குக் கரும்புப் பயிர்களையுடைய சோலைகளைக் குறித்தது;"கரும்பல்ல...கமுகென்ன" (65); **பூகவேலி - பூகம்** - கமுகு; **வேலி** - வேலிபோலச் சூழ்ந்த.

ஞாலமார்புகழ் - உலகியல்;நிலையினுல் வரும் புகழ்;இஃது ஈகையினுல் வருவது.

திருத்தொண்டு ஏற்ற சீலர் - சிவபெருமான் திருத்தொண்டினை மேற்கொண்ட நியம ஒழுக்கம்.

சாலும் ஈகைத்திறம் - ஈகையின் சால்பாவது திறம் தெரிந்து கொடுத்தல். "தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர் போல" (திருவிளை - வாதவூ - பட.) இஃது உலகியல் நிலையில் வறுமையாளர்க்கீவது; அளவுபட வருவது; இது பசு புண்ணியம். பதிபுண்ணியமாகிய சிவனடியார்க்குக் கொடுத்தல் வேறு. அது மேல்வரும் பாட்டிற் கூறப்படும்.

3

3657. (இ-ள்) ஆளும்...தாழ்ந்து - உலகங்களெல்லாவற்றையும் ஆளுகின்ற அங்கணராகிய சிவபெருமானுடைய அன்பர்கள் வந்தணைந்தபோது அவர்களடியில் வீழ்ந்து பணிந்து; மூளும்...தங்கி-மூண்டெழுகின்ற அன்பு மேன்மேற் பொங்க, அவர்கள் திருமுன்பு நின்று இனிய மொழிகளைக் கூறி, நாள்தோறும் நல்ல உணவு ஊட்டி, அவர்கள் விரும்பிய வெல்லாவற்றையும் கொடுத்து அதனுல் மேன்மேலும் பெருகிவளர்கின்ற இன்பத்துள்ளே வாழ்ந்து; நிதிமழை மாரிபோன்ருர் - நிதியை மழைபோலச் சொரிகின்ற மேகம் போன்றிருந்தனர்.

3657. ஆளுமங் கணருக் **கன்ப ரணைந்தபோ** தடியிற் ருழ்ந்து
மூளுமா தரவு பொங்க முன்புநின் றினிய கூறி
நாளுநல் லமுத மூட்டி நயந்தன வெல்லா நல்கி
நீளுமின் பத்துட் டங்கி **நிதிமழை மாரி** போன்ருர். 4

(வி-ரை) ஆளும் - உலகுயிர்களை யெல்லாம் உடைமையாகவும் அடிமையாகவும் கொண்டு ஆளுகின்ற.

அடியில்...நல்கி - இவை அடியார்களை வழிபடும் முறை; அன்பர்களைச் சிவனுகவே எண்ணி வழிபடுதல் வேண்டு மென்பது சிவாகம விதி.

நயந்தன - அன்பர்கள் விரும்பியவற்றை;அவர்களுக்கு வேண்டுவன வென்று தாம் விரும்பியவற்றை என்ற குறிப்புமாம்.

நீளும் இன்பத்துள் தங்கி-அன்பர்களை நாடோறும் உபசரித்து வழிபட்டமையால் இன்பம் பெருகிவரும்; அந்த இன்பத்துள்ளே திளைத்து வாழ்ந்தனர். "ஆளுநாயக ரன்ப ரானவர்" (244) என்ற விடத்து இளையான் குடிமாறனர் வரலாறும், பிறுண்டும் இவ்வாறே வருவனவும் இங்கு நினைவு கூர்தற்பாலன; சிவன் அடியார்களை ஆதரவுடன் வழிபட் டுபசரித்தவர்களே இவ்வின்ப விளைவினை அறிய வல்லுநரன்றி, ஏனை உலகர்க்கு இஃது அறியவாராது என்க. **நீளும் இன்பம்** - இது முடிவில் வரும் முத்தியின்பம் வரையில் நீள்வது என்பது குறிப்பு. "ஞாலமார் புகழ்" தரும் ஈகைக்கும் இதற்கும் உள்ள உயர்வு தாழ்வு ஒப்பிட்டுக் கண்டு கொள்ள வைத்த கவிநலங் கண்டுகொள்க.

நிதிமழை மாரி போன்ருர் - மழை - மழை போலப் பெய்யும்; **மாரி** - மேகம்; **நிதிமழை**-பொன் மழை; கைம்மாறு கருதாது கொடுத்தலின் **மாரி**போல என்ருர்.

இன்னமுதம்—தங்கும்—என்பனவும் பாடங்கள். **4**

3658. **(இ-ள்)** அஞ்செழுத்து...வேட்டும் - திருவைந்தெழுத்தை நியதியாக ஓதி முத்தீ வளர்த்து; நல்...செய்து - நல்ல வேள்விகளை எல்லாம் விடம் விளங்கும் கண்டராகிய சிவபெருமான் பாதங்களிற் பொருந்தும் வண்ணமாகவே செய்து; ஞாலத்து...வாய்ப்ப - உலகத்திலே குறைதல் இல்லாத சிவனடியார்களுக்கு எக்காலத்திலும் இடையருது செய்யும் அன்பினலே வள்ளல்களின் வரையாது கொடுக்கும் தன்மை தமது செயலில் பொருந்தச் செய்து; ஈசர்... தங்கினுரே - இறைவரது திருவடி நிழலிலே நிலைபெற்றிருந்தனர்.

(வி-ரை) அஞ்செழுத்தோதி அங்கிவேட்டு - இவை நித்த நியமம்; **அங்கி** - மறையவர்கள் மனையில் வளர்க்கும் நித்தியாக்கினி எனப்படும் முத்தீ.

வேட்டு - நல் வேள்வி...செய்து - வேள்வி - இவை நித்தியாக்கினியின் வேருய் அவ்வப்போது குறித்த பயன் கருதிச் செய்யப்படுவன. இவ் வேள்விச் சாலைகள் நகர்ப்புறத்தில் பொதுவில் அமைவன. **சண்டீச நாயனுர்புராணம் பார்க்க. நஞ்சணி கண்டர் பாத நண்ணிடுதல்** இவ் வேள்விகள் குறித்த பயன். இவை சிவயாகங்கள்.

3658. அஞ்செழுத் தோதி யங்கி வேட்டுநல் **வேள்வி யெல்லாம்**
நஞ்சணி கண்டர் **பாத நண்ணிடச் செய்து** ஞாலத்
தெஞ்சலி லடியார்க் கென்று மிடையரு வன்பால் **வள்ளற்**
றஞ்செயல் வாய்ப்ப வீசர் தாணிழற் றங்கி னாரே. 5

3659. அறத்தினின் மிக்க மேன்மை யந்தண ராக்கூர் தன்னின்
மறைப்பெரு **வள்ள லார்வண் சிறப்புலி யாரை** வாழ்த்திச்
சிறப்புடைத் திருச்செங் காட்டங் குடியினிற் **செம்மை வாய்த்த**
விறற்சிறுத் தொண்டர் செய்த திருத்தொழில் விளம்ப லுற்றேன். 6

"ஆறுசூழ் வேணி, நாத னுரைமுன் னுகவே புரியுநல் **வேள்வி**" (2327) என்ற விடத்துரைத்தவை பார்க்க. **நல்வேள்வி** - என்ற கருத்துமிது; ஏனைத் தேவர்களைக் குறித்தும்,ஏனைப் பயன்களைக் குறித்தும் செய்யப்படும் பிற வேள்விகளினின்றும் பிரித்தலின் **நல்** என்றது பிறிதினியைபு நீக்கிய விசேடணம்.

எஞ்சலில் அடியார் - குறைபாடுகளில்லாத; "ஈர வன்பினர் யாதுங்குறைவிலார்" (**144**), "ஒன்றினுற் குறையுடையோ மல்லோ மன்றே" (அரசு); குறைபாடுகளை நீக்குபவர் என்ற குறிப்புமாம்.

வள்ளல் தம் செயல் வாய்ப்ப -வள்ளல் - வள்ளற்றன்மை; அது தமது செயலில் பொருந்த. "சீர்கொண்டபுகழ் **வள்ளல்**" என்ற தொகைநூற் பொருளை விரித்தவாறு.

தங்கினர் - மீளாதபடி அடைந்து நிலைபெற்றனர். 5

3659. **(இ-ள்)** அறத்தினின்...வாழ்த்தி - சிவதருமங்களால் மிகுந்த மேன்மை பெற்ற அந்தணர்கள் வாழும் திருவாக்கூரில் வந்த வேதியராகிய பெருவள்ளலார் வண்மையுடைய சிறப்புலியாரை வாழ்த்தி; சிறப்புடை....விளம்பலுற்றேன் - (அத்துணை கொண்டு) சிறப்பினையுடைய திருச்செங்காட்டங்குடியிலே செம்மை நலம் பொருந்திய விறலினையுடைய சிறுத்தொண்ட நாயனார் செய்த திருத்தொழிலினைச் சொல்லப் புகுகின்றேன்.

(வி-ரை) இது கவிக்கூற்று. ஆசிரியர் தம் மரபின்படி, இதுவரை கூறி வந்த சரிதத்தை வடித்தெடுத்து முடித்துக்காட்டி இனி வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்கின்றார்.

அறம் - சிவதருமம். வைதிக தருமமுமாம்.

மேன்மை அந்தணர் ஆக்கூர்- மேன்மையுடைய அந்தணர்கள் வாழும் திரு ஆக்கூர். ஆளுடைய பிள்ளையார் திருவாக்கிற்பட்ட மேன்மை குறித்துத் தொடங்கியவாறே முடித்தபடி; மீண்டும் குறிப்பிட்டது அச்சிறப்பினை மறவாது உட்கொண்டு நினைவு கூர்தற் பொருட்டு.

வள்ளலார் - தொகைநூற் கருத்தினை வற்புறுத்தி மனங்கொள வைத்தார்.

வள்ளலார் வண்சிறப்புலியார் - வள்ளலார் என்றது பண்பினையும், **வண்மை** என்றது செயலினையும் குறித்தன; **வள்ளற் றஞ்செயல் வாய்ப்ப**-என முன்கூறியது

காண்க; இஃது இச் சரிதச் சிறப்பாகிய பகுதி என அறிவித்தவாறு. **வள்ளலார்** என்றது புகழ்தரும் ஈகைத்திறத்தினையும், **வண்மை** என்றது அடியார்களைப் பேணிய நிலையினையுங் குறித்தன என்றலுமாம்.

சிறப்புடை - பழஞ் சரிதத் தொடர்பாகிய சிறப்பு.

செம்மை வாய்த்த விறல் - **செம்மை** - "தெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன் கழலிற் செறிவென்றே...அன்பு பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்பு" உடைமை (3663); **விறல்** - அப்பண்பில் ஒழுகும் ஆற்றல்; செவ்விய நெறியின் படைத் தொழில் விறலுமாம். (3666)

திருத்தொழில் - **திரு** - இவர் செய்த செயலின் பேரருமைப்பாடு குறித்த அடைமொழி. 6

சரிதச் சுருக்கம்:- காவிரிபாயும் **சோழநாட்டி**லே சிறந்த பதி **திருஆக்கூர்** என்பது; அப்பதி, ஆளுடைய பிள்ளையார் திருவாக்கினுல் ஈகைத் திறம் பற்றிப் பாராட்டப் பெற்ற சிறப்புடைய அந்தணர்கள் வாழும் பெருமையுடையது. அதில் **வேதியர்குலத்து** வந்தவர் **சிறப்புலிநாயனுர்.**

அவர் ஈகையினுற் புகழ்பெற்று விளங்கியதனோடு அடியார்க்களிக்கும் சிவ பெருமான் திருத்தொண்டிலும் சிறந்து விளங்கினுர். சிவன் அடியார்களை விதிப்படி வழிபட்டு அமுதூட்டி அவர்கட்கு வேண்டுவன நல்கி வந்தார்; திருவைந் தெழுத்தினை ஓதி முத்தீ வேட்டனர்; சிவ நல் வேள்விகளைச் செய்தனர்; உலகில் வள்ளற்றன்மை பொருந்த நிதிமழை மாரிபோல அத்திறத்தினின் மேம்பட்டு நிகழ்ந்தனர். இவ்வாறு புகழும் சிறப்பும் பொருந்தப் பணிசெய்து சிவனடி சார்ந்து நிலைபெற்றனர்.

கற்பனை:

1. ஆளுடைய பிள்ளையாரது திருவாக்கினுற் பாராட்டும் பெருமை பெறுவது, ஒரு பதி பெறும் சிறந்த பேறு.
2. சால்புடைய ஈகைத்திறம் உலகிற் சீர்கொண்ட புகழினை விளைக்கும்.
3. சிவன்றிருத் தொண்டும் சிவனடியார் வழிபாடும் சிவனடி சார்விக்கும் தன்மையன.
4. அஞ்செழுத் தோதி அங்கி வேட்டலும், சிவனை நோக்கி நல்வேள்வி செய்தலும் மறையவரின் சிறந்த ஒழுக்கங்கள்.
5. வள்ளற்றன்மை பொருந்த அடியார்களுக்கு அன்பினுற் கொடுத்தல் சிறப்புடையது.

தலவிசேடம்: திருஆக்கூர்த் தாந்தோன்றி மாடம்: II - பார்க்க.

சிறப்புலி நாயனுர் புராணம் முற்றிற்று



சிறுத்தொண்ட நாயனார் (சித்திரை - பரணி)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

36. சிறுத்தொண்ட நாயனார் புராணம் (88 திருப்பாடல்கள்)

தொகை

"செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டர்க் கடியேன்"

—திருத்தொண்டத்தொகை-(6)

வகை

"புலியி னதளுடைப் புண்ணியர்க் கின்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வ னுடறுணித்துக்
கலியின் வலிகெடுத் தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழிலொண்செங் காட்டங் குடியவர் மன்னவனே"

—திருத்தொண்டர் திருவந்தாதி-(43)

விரி

3660. **உருநாட்டுஞ் செயல்காம னொழியவிழி** பொழிசெந்தீ
வருநாட்டத் திருநுதலார் மகிழ்ந்தருளும் பதிவயலிற்
கருநாட்டக் கடைசியர்தங் களிகாட்டுங் **காவேரித்**
திருநாட்டு வளங்காட்டுஞ் **செங்காட்டங் குடியாகும்**.. 1

புராணம்:- சிறுத்தொண்ட நாயனாரது சரித வரலாறும் பண்பும் கூறும் பகுதி; இனி, நிறுத்த முறையானே, ஆசிரியர், ஏழாவது, வார்கொண்ட வனமுலையாள் சருக்கத்துள் மூன்றாவதாகச் சிறுத்தொண்ட நாயனார் புராணங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:- திருச்செங்காட்டங் குடியிலே பொருந்திய சிறுத்தொண்ட நாயனாருக்கும் நான் அடியேனாவேன்.

செங்காட்டங்குடி - நாயனாரது பதி; **சிறுத்தொண்டர்** - தொண்டர்களின்முன் தம்மை மிகச் சிறியவராய் வைத்து ஒழுகி வந்த காரணத்தாற் போந்த காரணப் பெயர் *(3674)*; இவரது இயற்பெயர் பரஞ்சோதியா ரென்பது. *(2661)*.

வகை:- புலியின்...துணித்து-புலியின் தோலினை உடையாகக் கொண்ட புண்ணியராகிய சிவபெருமானுக்கு இனிய அமுதாகும்படி தன் ஒலிக்கும் சதங்கை பூண்ட குதலை மொழியினையுடைய ஒரே புதல்வனின் உடலை அறுத்து; கலியின்...கண்டீர் - கலியினது வலியினை ஒழித்த மேலோங்கும் புகழினை உடைய சிறுத்தொண்டர் காண்மின்; மலியும்...மன்னவனே - மிகுந்த பொழில்கள் சூழ்ந்த திருச்செங்காட்டங்குடிப் பதியவர்களின் தலைவராவார்.

புலியின்...புண்ணியர் - உத்தராபதியாராகிப் பயிரவக் கோலத்துடன் வந்த

சிவபெருமான்; **அமுதா - உடல் துணித்து - ஆ -** ஆக என்பது ஈறுகெட்டு ஆ என நின்றது; ஆக்கும் பொருட்டு; **ஓர் - புதல்வன்** என்று கூட்டுக. ஒப்பற்ற மகன் - ஒரே புதல்வன் என்றிரண்டும் கொள்ள நின்றது; **கலி** - மலவன்மை மலக்கட்டினால் வரும் பிறவிப்பிணி. **துணித்து** - அமுதாக்கி என்க.

விரி:—3660. **(இ-ள்)** உருநாட்டும்...திருநுதலார் - உருவுடையனாயிருந்து உயிர்கள் மேல் செலுத்துகின்ற தன் ஆணைச் செயலினை மன்மதன் ஒழியும்படி கண்ணினின்றும் பொழிகின்ற செந்தீ வரும் நாட்டத்தினைப் பொருந்திய திருநெற்றியினையுடைய சிவபெருமான்; மகிழ்ந்தருளும் பதி - மகிழ்ந்து வீற்றிருந்தருளும் பதி; வயலில்... காட்டும் - வயல்களில் கரிய கண்களையுடைய கடைசியர்கள் தமது களியாடல்களைக் காட்டுதற்கிடமாகிய; காவேரி...செங்காட்டங் குடியாகும் - காவேரித் திருநாடு என்று சொல்லப்படும் சோழநாட்டிலே வளம்பொருந்திய திருச்செங்காட்டங்குடி என்பதாகும்.

(வி-ரை) பதி (யாதெனில்) **செங்காட்டங்குடியாகும்** என்று கூட்டுக.

உருநாட்டும் செயல் - உருவுடையனாயிருந்து செலுத்துகின்ற செயல் - ஆணை; **ஒழிதலா**வது-உருவில்லாதவனாதல். **காமன் செயல் ஒழிய** என்னாது **உருநாட்டும் செயல் ஒழிய** என்றது இறைவரது நெற்றிக்கண்ணால் எரிக்கப்படுவதற்கு முன்னும் காமனது செயல் உண்டு; பின்னும் உண்டு. ஆனால் முன்னர் உருவுடன் நின்று செய்தனன்;பின்னர் இப்போது உருவிலியாய் நின்று செய்கின்றான் என்பதே வேறுபாடு என்று குறிக்க **உருநாட்டும்** செயல் ஒழிய என்ற அடைமொழி தந்தோதினர். உமையம்மையாரது திருவுருவத்திற் கருத்தை நாட்டி அவரைத் திருமணம் செய்துகொள்ளும்படி செய்த செயல் என்ற கந்தபுராண சரிதக் குறிப்புப் பட உரைத்தலுமாம்.

ஒழியப் பொழி செந்தீ - அவ்வேறுபாட்டுக்குக் காரணம் விழியினின்றும் பொழிந்த செந்தீ என்பதாம்; **ஒழிய** - ஒழியும் பொருட்டு; உருவிலியாதல் ஏனையோர் காட்சிக்கு மாத்திரமாம்; தன் மனைவி இரதிக்கு உருவுடையனாயிருப்பன். இதுபற்றிய வரலாறுகள் கந்தபுராணம் - காமதகனப்படலம் முதலியவற்றுட் காண்க.

உருநாட்டும் செயல் காமன் ஒழிய-நுதலார் மகிழ்ந்தருளும் பதி என்று கூட்டி இப்பதியின் சிறப்பும் பின்வரும் சரிதக் குறிப்பும் பெற உரைக்கவும் நின்றது; என்னை? மக்கள் முதலிய எல்லாவுயிர்களும் தத்தம் போகங்களைப் புல்லுதலில் கருத்தை நாட்டுதல் ஆண் பெண் என்ற உரு வேறுபாடு பற்றி வருவதேயாம். அப்போகங்களினால் பெறப்படும் மக்கள் முதலியவாகிய தம் பொருள்களின் மேல்வரும் நாட்டம் ஆசை முதலிய வலிய உலகப் பற்றுக்களும் அப்போகங்கள் பற்றித் தொடர்ந்து வருவனவேயாம். இங்குச் சிறுத்தொண்ட நாயனாரும், மனைவியாரும் இல்லறத்தில் வாழ்ந்தனர்; பெறுதற்கு அரிய சிறந்த மகப்பேறும் பெற்றனர்; ஆனால் அந்த உருவங்களின்மேல் வைத்த கருத்தினைவிட இறைவனது உருவின்மேல் நாட்டிய கருத்து மிக்கது ;"காதலாலே தேடியும் முன் காணேன் றவத்தாலுமைக் கண்டேன்" (3704) "இருவர் மனமும் பேருவகை யெய்தி யரியவினை செய்வார்" (3723) "திருமனையில் மனைவியார் தாமாதலரை, முந்தவெதிர் சென்றுபடி வணங்கி அமுது அமுது செய்த பின்" (3729) என்பனவும் பிறவும் காண்க. எனவே உயிர்களுக்கு உலகத்திலே காதலை நாட்டுவிக்கும் செயலினைக் காமன் இப்பதியிலே நாயனார் - மனைவியார்

3661. நிலவியவத்திருப்பதியி னெடுஞ்சடையார் **நீற்றடைவால்**
உலகில்வள ருயிர்க்கெல்லா முயர்காவற் றொழில்பூண்டு
மலர்புகழ்**மா மாத்திரர்தங் குலம்**பெருக வந்துள்ளார்
பலர்புகழுந் திருநாமம் **பரஞ்சோதி** யாரென்பார். 2

- மைந்தரை - தாதியார் மாட்டு நிகழாமல் ஒழியும்படி நுதலார் அருளும் என்ற குறிப்பும் காண்க. **அருளுதல்**-பக்குவம் நோக்கி அருள் செய்தல்.

விழிபொழி செந்தீ வரும் நாட்டம் - சிரிப்பினும், கையினும் தீயிருத்தலால் அவற்றினின்றும் பிரித்துணர்தற்கு **விழி பொழி** என்றார். அருளும் தருதலால் **செந்தீ வரும்** என்றார்; **நாட்டம்** - கண்; "நுதல் விழி நாட்டத்திறையோன்" (மணிமே).

விழிபொழி - வருநாட்டம் - என்றதில் **விழிபொழி** என்றது எரித்தற் கண்ணும், **வருநாட்டம்** - என்றது பின்னர் அருள் செய்து உயிர் பெற்றெழுந்து வருதலை நாடிய அருள் நோக்கத்தின் கண்ணும் குறிப்புக்கள் பெற நின்றன; "நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என, இந்நெற்றித் திருவிழி அழித்தற்காகவன்றி அடியார்க்கருள் பயத்தற்காகவும் செயற்படும் என்று அரசுகள் போற்றியதனாலும் காண்க; **வரும்** என்ற அடைமொழியின் குறிப்பும் இது. **விழிபொழி செந்தீ வருநாட்டம்** - "**கட்டழல்** பொதிந்த நெற்றி**க்கண்**" (காமதக -89) என்று இதனை இவ்வாறே கந்தபுராணம் கூறுதலும் காண்க. தீப்பொழிந்ததும் அருளே யாமென்பதும் குறிப்பு. "யாமுனை முனியி னன்றே பின்பது தணிவ துள்ளம் பேதுறன் மைந்த!" என்ற (திருக்கல்யாணப் படலம் - 8) கந்தபுராணம் காண்க. பார்வையினாலே பொழிகின்ற அக்கினி தோற்றும் கண் என்பர் இராமநாதச்செட்டியார்.

கருநாட்டம் - கரிய கண்கள்; களித்தலாலே தெள்ளிய நாட்டமில்லாத என்பதும் குறிப்பு.

களிகாட்டும் - களியாடற் செயல்கள். குரவையாடல் முதலியன என்பாருமுண்டு.

காவேரித் திருநாட்டு - சோழ வளநாட்டின்கண்; **நாட்டு** - நாட்டின்கண்; ஏழனுருபு தொக்கது. நாட்டின் குடியாகும் என்க. இதனால் நாட்டு வளமும், **வளங்காட்டும்** என்றதனால் நகர வளமும் கூறியவாறு காண்க. இனி இவ்வாறன்றி **நாட்டுவளங் காட்டும்** என்று கூட்டி நாட்டின் வளங்கள் முற்றும் தன்னகத்தே விளங்கக் காட்டும் **குடி** என்று இருவளமுஞ் சேர்த்துரைத்ததாக உரைப்பினுமமையும்.

களிநாட்டும்—என்பதும் பாடம். 1

3661. (இ-ள்) நிலவிய அத்திருப்பதியில் - நிலைபெற்ற அந்தத் திருப்பதியிலே; நெடுஞ்சடையார்...தொழில் பூண்டு -நீண்ட சடையினையுடைய சிவபெருமானது திருநீற்றுச் சார்பினாலே உலகிற் பிறந்து வளர்கின்ற எல்லாவுயிர்களுக்கும் உயர்வாகிய காவல் தொழிலை மேற்கொண்டு; மலர்புகழ்...வந்துள்ளார்- மலர்கின்ற புகழினையுடைய மாமாத்திரர்குலம் பெருகும்படி வந்தவதரித்துள்ளவர்; பலர் புகழும்...என்பார் - பலரும் புகழ்கின்ற பரஞ்சோதியார் என்று சொல்லப்படும் திருநாமத்தினை யுடை யவர்.

(வி-ரை) நிலவிய - சிறப்பினால் நிலைபெற்ற.

நீற்று அடைவால் - திருநீற்றுச் சார்பின்கண் நின்றமையாலே; அத்துணையாற் பெற்ற வலிமையினாலே; "மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்த வலியுடைமையினால்" (3666) என்பது காண்க; **நீற்று அடைவால் - தொழில் பூண்டு** - என்று கூட்டுக. அஃதாவது உயிர்க்கெல்லாம் காவற்றொழில் பூணும் வலிமை திருநீற்றுச் சார்பினாற் பெற்று என்க.

உயிர்க்கெல்லாம் உயர் காவற்றொழில் - இங்கு மருத்துவத் தொழில் குறித்து நின்றது. "ஆயுள் வேதக்கலையும்" என மேல்வரும் பாட்டிற் குறித்தல் காண்க.

மாமாத்திரர் குலம் என்பது வழிவழி மருத்துவன் றொழில் செய்யும் ஓர்மரபு; "ஆமாத்தியர்" என்ற மரபுடன் மயங்கற்பாலதன்று; அது மறையவர் குல வகையுள் ஒன்று. உண்மை நாயன்மார்களுள்ளே மறையோர் பதின்மூவர் என்றும், சிவவேதியர் இருவர் என்றும், கூறி வகைப்படுத்திய ஆசிரியர் உமாபதியார் "மாமத்திரர் மரபிற் சிறுத்தொண்டர் ஒருவர்" (புராணவரலாறு-28) என்று வேறு பிரித்துக் கூறியருளியது காண்க. இம்மரபு வேதியர்க்கும் அரசர்க்கும் இடையில் வைத்தோதப்பட்ட வைப்பு முறையுங் கருதுக. இது முப்புரி நூலணியும் மரபென்றும் கருதவுள்ளது. "வெந்த நீறணிமார்பன்", "சிறப்புலவன் சிறுத்தொண்டன்", "பொடி நுகருஞ் சிறுத்தொண்டன்" (பிள். தேவா) என வரும் திருவாக்குக்களுடன் "முந்நூல் சேர் பொன்மார்பிற் சிறுத்தொண்டர்" என்ற ஆசிரியர் திருவாக்கும் கருதுக; ஒருசார் வேதியர் மரபு போன்று முந்நூலணியும் சார்புடையதொரு மரபு என்பதாம்.

உயர் காவற்றொழில்-படைக்கலத்தின் பயிற்சியால் வரும் சேனாபதித் தொழிலும் குறிப்பு; **உயர்**-செவ்விய நெறியிற் செலுத்தப்படுதல்.

மாமாத்திரர் - நாயனாரது மரபு; **குலம்பெருக - பெருகுதல்** - விளங்குதல்.

வந்துள்ளார் - வருதல் - அவதரித்தல்.

பலர்புகழும் திருநாமம்-பல சமயத்தாராலும் புகழப்படும் திருநாமம்; **பரஞ்சோதி** யென்பது பல சமயத்தார்களாலும் மேற்கொண்டு புகழப்படுவதொன்றாம். ஆயினும் "சோதி யாயெழுஞ் சோதியுட் சோதிய" "ஒளியா யொளியதனொளியா யொளியத னொளியுந் தணிதரு மொளியாகி" (பேரூர்ப்புராணம்) என்றபடி எல்லாச் சோதிகட்கும் பரமாய் - அப்பாற் பட்டதாய்-உள்ள சிவச்சோதிக்கு இப்பெயர் பொதுவாயும் சிறப்பாயு முரியதாம். "பலர்புகழ் ஞாயிறு" (முருகு.)

என்பார் - எனப்படுவார். 2

3662. **(இ-ள்)** ஆயுள் வேதக் கலையும்...பயின்றவற்றாற் - ஆயுள் வேதம் எனப்படும் மருத்துவ நூற்கலையும் அளவில்லாத வட நூல்களில் உள்ள மற்றும் பலவிதமாகிய கலைகளையும், தூய்மையுடைய படைக்கலங்களின் தொழிற்கலையும், ஆகிய இவற்றை யெல்லாம் அவ்வவற்றின் எல்லை நிரம்பும் அளவும் பயின்றுள்ளார்; பாயும்...மேலானார் -

3662. **ஆயுள்வேத தக்கலையு** மலகில்வட நூற்கலையுந்
தூயபடைக் கலத்தொழிலுந் துறைநிரம்பப் பயின்றவற்றுற்
பாயுமத குஞ்சரமும் பரியுமுகைக் கும்பண்பு
மேயதெழில் விஞ்சையினு மேதினியின் மேலானூர். 3

(அந்தக் கலைகளைப் பயின்றததனோடு) பாய்கின்ற மதம்பொழியும் யானைகளையும் குதிரைகளையும் செலுத்தும் தன்மை பொருந்திய தொழில்புரி வித்தையிலும் உலகில் மேம்பட்டவராயினர்.

(வி-ரை) ஆயுள் வேதக்கலை - மருத்துவக் கலை; **அலகில் வடநூற் கலை** - வடமொழி நூல்களிற் பேசப்படும் ஏனைக் கலைஞானங்கள்; இவற்றை வேறு பிரித்து **வடநூல்** என்று தொகுத்தமையால் ஆயுள் வேதக் கலை தென்மொழியாகிய தமிழில் உள்ளது என்பதும், அதனையே பரஞ்சோதியார் பயின்றனர் என்பதும் கருதப்படும். தமிழில் உள்ளவை சித்த மருத்துவ நூல்கள். போகர் முதலிய மருத்துவப் பெரியார்கள் செய்தவை; மருத்துவன் றாமோதரனூர் என்றொரு சங்கப் புலவர் வரலாறும் காண்க; தேவாரங்களை வேதம் என்பதுபோல மருத்துவக் கலையினை **ஆயுள்வேத** மென்றார்; அது வேதாங்கங்கள் ஆறனுள் ஒரு பகுதியாதலும் குறிப்பு.

வடநூற் கலை-நாயனூரது குலநலம் பற்றிய ஏனைக் கலைஞானங்கள்; இவற்றிற்குரிய நூல்கள் வடமொழியில் உள்ளன என்பது. **ஆயுள் வேதம்** - இவரது குலத் தொழிற்குரியது பற்றித் தனியே எடுத்துக் கூறினர். உபவேதங்களுள் ஒன்று இது.

தூய படைக்கலத் தொழில் - இந்நாளிற் செய்வதுபோல் மக்களின் பெரு நாசத்திற்கும் ஒவ்வாத கேட்டுக்கும் காரணமாகிய பாவத்திற்கும் கொலைக்கும் உட்படாது உலகங் காவலாகிய **தூய**தொழிலுக்குத் தூயமுறையில் விதிப்படி பயன்படுவன என்பார் **தூய** என்றார். "இடையிரு வகையோ ரல்லது நாடிற், படைவகை பெறாஅ ரென்மனூர் புலவர்" (தொல் பொருள். மரபு -75) என்றமையாலும் இவர் வேதியர் மரபன்றென்பதும் பெறப்படும்.

துறை நிரம்புதல் - அவ்வக் கலைகளின் எல்லை அளவு படும்படி நிறைதல்.

பாயும்... தொழில் விஞ்சை - யானை ஏற்றம் குதிரையேற்றம் என்ற இவற்றைக் கலைஞான அளவில் மட்டும் நில்லாது சேனைத் தலைவராயிருந்து பகைவர் வந்தால் அவர்மேற் செலுத்தி வெல்லும் படை ஆளும் தன்மையுடைய ஒரு தொழிலாகவும் கைவர; **தொழில் விஞ்சையினும்** - கலையே யன்றித் தொழிலிலும் என உம்மை இறந்தது தழுவியது.

இப்பண்பினல் அரசர்க்குப் போரில் வெற்றிவரச் செய்தமை மேல் (3664-3665) உரைத்தல் காண்க.

பயின்றுள்ளார் - **பண்பின்** - **விஞ்சையினில்** - என்பனவும் பாடங்கள். 3

3663. **(இ-ள்)** உள்ளநிறை...பயின்று-தமது உள்ளம் நிறைவு பெறுவிக்கும் கலைத்துறைகளை எல்லாம் இடையறுது பயின்று தேர்ந்து;அவற்றல்...உணர்வினில் -அவை

3663. உள்ளநிறை கலைத்துறைக ளொழிவின்றிப் பயின்றவற்றாற்
"றெள்ளிவடித் தறிந்தபொருள் சிவன்கழலிற் செறி"வென்றே
கொள்ளுமுணர் வினின்முன்னே கூற்றுதைத்த கழற்கன்பு
பள்ளமடை யாயென்றும் பயின்றுவரும் பண்புடையார். 4

எல்லாவற்றாலும் தெளிவுபெற வடித்து எடுத்த பொருளாவது சிவன்றிருவடியிலே செறிந்த அன்புடைமையாகிய ஒழுக்கமேயாம் என்றே கொள்ளும் உணர்வினாலே; முன்னே-முதன்மை பெற; கூற்றுதைத்த...பண்புடையார்-இயமனை உதைத்த திருவடியினிடத்தே அன்பு பூண்ட ஒழுக்கம் பள்ளமடையில் நீர் ஓடுதல் போலத் தடையில்லாது விரைவாக என்றும் பயின்று வரும் பண்பினை உடையாராயினார்.

(வி-ரை) உள்ள நிறை கலைத்துறைகள் - இவை வேறு;முன்பாட்டிற் கூறியவை வேறு. அவை உடலையும் உலகினையும் பற்றியவை;இவை உயிரினையும் அதன் உட்பற்றாகிய இறைவனையும் பற்றியவை; இவை புறத்திலன்றி உள்ளத்தினுள் ஆராய்ந்து தெளிதற்குரியனவாதலின் **உள்ள நிறை** கலைத்துறைகள் என்றார்; **நிறை**-நிறைதற்கு ஏதுவாகிய; **நிறைவு-**அமைதி.

அவற்றால்-அவற்றின் துணையாலே.

தெள்ளி வடித்து அறிந்த பொருள்-தெள்ளுதல்-ஆராய்ந்து தெளிதல்; **வடித்தல்** -முடித்தல்; **பொருள்-**உண்மைப் பொருள்.

செறிவு - செறிந்த - உறைப்புடைய - அன்பின் ஒழுக்கம். **செறிவு -** அதனை உடைய ஒழுக்கத்துக்கு வந்தது. **சிவன் கழலிற் செறிவு -** இடையறாத சிவத் தியானமுமாம்.

செறிவே என்று கொள்ளும் - என்று பிரிநிலை ஏகாரம் பிரித்துக் கூட்டுக. தேற்றேகாரமுமாம். **கொள்ளுதல்-**விடாது உட்கொள்ளுதல்; பற்றுதல். **உணர்வினில்-**உணர்வினாலே. "கற்றதனா லாய பயன்" என்ற கருத்து.

முன்னே பயின்று - முன் - முதன்மையாக; முன்கூறிய உலகியல் நிலைகளின் பயிற்சி பின்னாக என்பதாம்.

பள்ள மடையாய் - இஃது உழவுத் தொழிலின் மரபு வழக்கு. மதகு கால் வாய்களினின்றும் நிலத்துக்கு நீர் செல்லும் துவாரம் **மடை** எனப்படும்; **மடை -** நீர்வாய்; மடுத்தற்குரியது மடை. பள்ளமடையினின்று நீர்பாய உள்ளதாய் அமைந்த நிலம் நீர்க் குறைவில்லாமையால் தண்டாத விளையுள் தரும் ஏற்றமுடைய தென்பர்;அன்பின் ஒழுக்கமானது இவர் உள்ளத்திலும் மெய் மொழிகளிலும் இடையறாது மேலிருந்து நீர் கீழே பாய்வதுபோலப் பாய்ந்து வரும் தன்மைக் குறிப்பு; "பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகும் அவர்" (திருவா); **பள்ள மடை-**பள்ள நிலத்துக்கு நீர்பாய அமைத்த மடை.

என்றும்-இடையறாது.

கலைத்தொழில்கள்—என்ற பாடம் பிழை. 4

3664. ஈசனடி யார்க்கென்று **மியல்பான பணிசெய்தே**
ஆசில்புகழ் மன்னவன்பா லணுக்கரா யவற்காகப்
பூசன்முனைக் களிறுகைத்துப் **போர்வென்று பொருமரசர்**
தேசங்கள் பலகொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்தார். 5

3664. (இ-ள்) ஈசனடியார்க்கு...செய்தே -சிவனடியார்க்கு எந்நாளும் இயல்பால் ஆன பணிகளைச் செய்தே; ஆசில்...அணுக்கராய் - குற்றமில்லாத புகழினையுடைய அரசனிடத்து அன்பினலே பக்கத் துணையாயிருந்து; அவற்காக...வென்று - அவனுக்காகப் போரிலே செலுத்தப்படும் யானைப் படையினைச் செலுத்திப் பல போர்களில் வெற்றிகொண்டு; பொரும் அரசர்...சிறந்தார்-போரில் எதிர்த்து நிற்கும் அரசர்களது தேசங்கள் பலவற்றையும் கைக்கொண்டு தேர்ப்படையினையுடைய தமது அரசனிடம் சிறப்புப் பெற்றனர்.

(வி-ரை) இயல்பான பணி - தம்மியற்கையாய் உள்ளத்தெழும் அன்பினலே ஆகிய பணிகள் எல்லாவற்றையும்; **இயல்பு** -உரிமையுமாம்.

ஆசில் புகழ் மன்னவன் - ஆசு இல்புகழ் - குற்றமற்ற புகழாவது நீதிப்படி அரசு புரிந்து குடிகாத்தலும், அநீதியான போர்களால் பிற அரசர்களையும் மக்களையும் அலைக்காமையுமாம். இந்த நாளில் நிகழ்ந்த பெரும் போர்களையும் அவற்றுள் மன்னர்களும் மன்னராய்ச் செயல் செய்வார்களும் செய்த கொடுந் தொழில்களையும் கருதுக. **மன்னவன் -** இவ்வரசன் மகேந்திரவர்மன் மகனுகிய நரசிம்மவர்மன் என்னும் பல்லவ அரசன் என்பது சரித்திர ஆசிரியர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது; மேற்பாட்டில் வரும் **வடபுலத்து வாதாபிப் போர்** (Battle of Badami) என்பது கல்வெட்டுகளால் ஆரும் நூற்றுண்டின் பிற்பகுதியில் கி. பி. 640-க்கும் 643-க்கும் இடையே நடந்திருக்க வேண்டுமென்றும், 642-ம் ஆண்டாயிருக்கலாம் என்றும் துணியப்படுகின்ற படியால், இம்மன்னனது காலமும், அதனல் பரஞ்சோதியாரது (சிறுத்தொண்டர்) காலமும், அதன் துணையாலே அவருடன் ஒரு காலத்தவரான திருஞானசம்பந்த நாயனரது காலமும் இதுவே யெனச் சரித ஆசிரியர்கள் துணிந்துள்ளார்கள். *நாயன்மார்கள் வாழ்ந்த கால ஆராய்ச்சிக்கு முதலாவதாகப் பெருந்துணையாய்க் கிடைத்தது இச்செய்தியேயாம். (மகேந்திரவர்மன் - கி. பி. 625-650 என்ப.)

அணுக்கர்-பக்கத்திருந்து அந்தரங்கமான உரிமைப்பாட்டுடன் ஆலோசிக்கவும் தொழிலில் ஏவப்படுதற்கும் உரியவர்கள்.

பூசல் முனை - போர் முகத்திலே; **முனை**-முகம்.

சிறந்தார்-சிறப்புச் செய்யப்பட்டு அரச சேவையில் அமர்ந்தனர்.

போய் வென்று— என்பதும் பாடம். 5

---

*இவ்வாராய்ச்சியினை முதன்முதற் செய்தவர் ஆசிரியர் P. சுந்தரம்பிள்ளை அவர்கள்; அவர்கண்ட முடிபுகளைப் பற்றி ஆளுடைய அரசுகள் சரித ஆராய்ச்சிக் குறிப்பு-III பார்க்க.

3665. மன்னவற்குத் **தண்டுபோய் வடபுலத்து வாதாவித்**
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியு நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனவெண் ணிலகவர்ந்தங் கியலரசன் முன்கொணர்ந்தார். 6

3665. **(இ-ள்)** மன்னவற்கு...துகளாக -அரசனுக்காகப் படை யெடுத்துச் சென்று வடபுலத்திலே வாதாபி என்னும் பழைய நகரம் தூளாக இடிபடும்படி; துளை நெடுங்கை வரை உகைத்து-யானைப்படையினைச் செலுத்தி வென்று; பன்மணியும்...முன் கொணர்ந்தார்-பல மணிகளையும் நிதிக்குவைகளையும் யானைக் கூட்டங்களையும் குதிரைத் தொகுதிகளையும் இன்னும் இவ்வாறான எண்ணில்லா தனவற்றையும் கைக்கொண்டு இவ்விடத்துத் தமது அரசன்முன் கொண்டுவந்தனர்.

(வி-ரை) மன்னவற்குத் தண்டுபோய் - மன்னவற்கு - அரசனுக்காக; அரசனேவலால்; **தண்டு போதல்**-பகைவர் மேற் படை செலுத்திச் செல்லுதல்.

வடபுலத்து வாதாவித் தொன்னகரம்-இது Badami என்று வழங்கப்படும்; பம்பாய் ராஜதானியில் பெல்காம் என்ற சில்லாப் பிரதேசத்தில் உள்ளதென்பர். இது சாளுக்கிய அரசன் புலிகேசியினுடைய தலைநகரமாயிருந்த தென்றும், அவனுக்கும் பல்லவ மன்னன் நரசிங்கவர்மனுக்கும் நேர்ந்த போரில் சேனாபதி பரஞ்சோதியாரால் (சிறுத்தொண்டர்) வென்று தகர்க்கப்பட்டதென்றும் கல்வெட்டுக்களால் அறிகின்றோம்; இடிந்த பலமான அக்கோட்டைப் பகுதிகள் இன்றும் காண உள்ளன.

துகளாக - துகளாகும்படி; **உகைத்து**- (சேனை) செலுத்தி; **உகைத்தல்** - செலுத்துதல், ஏவுதல்; **பகடு**-யானையின் ஆண்; **கைவரை**-யானை.

பன்மணியும்...கவர்ந்தே - கொணர்ந்தார்-இது முன்னுள் போரில் வென்றார் செய்யும் மரபு;"மன்னர்முன்னுப், பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமுங் கொண்டுவண்டேர், அணிவார் முரசினொ டொலிக்கும் மாவோ டணுகினரே" (கோவை-330) என்று இதனைச் சுவைபெறக் கூறுதல் காண்க. பகை அரசர் பணிந்தால் அவர்பாற் றிறைகொண்டு மீளுதலும், பணியாது போர் செய்யின் அவர்களது சின்னங்களைக் கைக்கொண்டு மீளுதலும் வென்ற படைத்தலைவர் செயலாம். இங்குப் பகையரசன் பணியாமையால் அவனது தலைநகரக் கோட்டையைத் தகர்த்துப் போர்ச் சின்னங்களாக இப்பண்டங்களைக் கொணர்ந்தனர். **கவர்ந்து** - என்ற குறிப்புமிது. புகழ்ச்சோழ நாயனார் புராணவரலாறும் பார்க்க.

எண்ணில கவர்ந்தே - இப்பொருள்களுடன், "பரஞ்சோதியார் அந்நகரினின்றும் ஒரு விநாயகப் பெருமான் றிருவுருவத்தையும் நினைவுக் குறியாகக் கொணர்ந்து அவரைத் தமது நகரமாகிய திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலாகிய கணபதீச்சரத்தில் தாபித்தனர் என்றும், அவரே இப்போது "வாதாபி கணபதி" என்று அங்கு விளக்கமாக அறியப்பட்டு வழிபடப் பெறுகின்றார் என்றும் கூறுவர்.

இயல் அரசன் - இகலினாலன்றி நீதியியல்பினால் அரசு புரிபவன்.

பரிநிரையும்—இகலரசன்—என்பனவும் பாடங்கள். 6

3666. கதிர்முடிமன் னனுமிவர்தங் களிற்றுரிமை யாண்மையினை
அதிசயித்துப் புகழ்ந்துரைப்ப, வறிந்தவமைச் சர்களுரைப்பார்
**``மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்தவலி யுடைமையினால்
எதிரிவருக் கிவ்வுலகி லில்லை``**யென வெடுத்துரைத்தார். 7

3666. **(இ-ள்)** கதிர்முடி மன்னனும்...உரைப்ப - ஒளிமுடியுடைய அரசனும் இவரது யானைப்படை செலுத்துதற்கு உரிய வல்லமையினைக் கண்டு அதிசயப்பட்டுப் புகழ்ந்து சொல்ல; அறிந்த... உரைப்பார் - அதனை அறிந்த மந்திரிகள் எடுத்துச் சொல்வார்களாகி; மதியணிந்தார்... உரைத்தார் - சந்திரனை அணிந்த சிவபெருமானது திருத்தொண்டு வாய்க்கப் பெற்ற வல்லமையினாலே இவரை எதிர்த்து நிற்போர் இவ்வுலகில் இல்லை என்று எடுத்துச் சொன்னார்கள்.

(வி-ரை) கதிர்முடி மன்னன் - முடி துளங்குதலில்லாத தன்மை வெற்றிப்பாடு குறித்தது.

களிற்றுரிமை ஆண்மை - யானைச் சேனையைச் செலுத்துதலின் இவருக்கே சிறப்புரிமையாகவுள்ள ஆளுந்தன்மை. "பாயுமதக் குஞ்சரமும்...விஞ்சை" (*3662*) என இதனை முன்வைத்து விதந்து கூறியது காண்க.

அதிசயித்து - தகர்க்க முடியாத வலிய அந்த வாதாவிக் கோட்டையினைத் தூளாகத் தகர்த்தும், யானை முதலிய சின்னங்களை நிறையக் கவர்ந்து கொணர்ந்ததுவும் கண்டு அதிசயித்து; **அதிசயம் -** இன்னதென் றறியவரும் விம்மிதமாகிய பெருமித உணர்ச்சி. "அதிசயம் கண்டாமே" (திருவா).

புகழ்ந்துரைத்தல் - சேனைத் தலைவர்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்து அணைக்கும் வகை.

அறிந்த அமைச்சர் - அறிந்த - அவ்வெற்றிப் பாட்டின் உண்மைக் காரணத்தை அறிந்த; மதியுடைய அமைச்சர்களாதலின் வெளிக் காரணமாகிய களிற்றுரிமை ஆண்மையினை யன்றி அதற்கு உள்நின்ற காரணமாகிய திருத்தொண்டி னுறைப்பாகிய நிலையினை உணர்ந்து எடுத்துக் கூறினர்.

"மதியணிந்தார்...இல்லை" என எடுத்து - சிவன் றிருத்தொண்டின் உறைப்புடைய வலிமை பெற்றவர்கள் உலகில் யாரையும் வெற்றிகொள்ள வல்லவர். இவரை எவரும் வெல்லுதல் அரிது என்பது உண்மை; "நாணில் அமண் பதகருடன் ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி திருத்தொண்டி னுறைப்பாலே, வென்றவர்" (*1795*) என்றமை காண்க. "அகில காரணர் தாள்பணி வார்கடாம் அகில லோகமுமாடற்குரியர்" என்பது முதலாக வரும் திருக்கூட்டச் சிறப்பும் பார்க்க. **எடுத்து -** விளங்க எடுத்து. *7*

3667. **(இ-ள்)** தம்பெருமான்...தார்வேந்தன்-தமது இறைவரின் திருத்தொண்டர் இவர் என்று கேட்ட, மாலை யணிந்த அரசன்; எம்பெருமானடியாரை...வெருவுற்று-எமது பெருமானின் அடியாராகிய இவரை இன்னார் என்றறியாதே, கெட்டொழிந்தேன்,

3667. தம்பெருமான் றிருத்தொண்ட ரெனக்கேட்ட தார்வேந்தன்
"உம்பர்பிரா **னடியாரை யுணராதே, கெட்டொழிந்தேன்!**
வெம்புகொடும் **போர்முனையில் விட்டிருந்தே**" னெனவெருவுற்
"**றெம்பெருமா! னிதுபொறுக்க வேண்டு**"மென விறைஞ்சினான். 8

வெம்மையாகிய கொடிய போர் முனையில் சென்று போர் செய்யும்படி விட்டிருந்தேனே! என்று நடுக்கமுற்று; எம்பெருமான்!...இறைஞ்சினான் - எம் பெருமானே இப்பிழையினைப் பொறுத்தருள வேண்டும் என்று வணங்கினான்.

(வி-ரை) தம்பெருமான்...கேட்ட - இவர் தொண்டர் என்று அமைச்சர்கள் சொல்லக் கேட்ட. திருத்தொண்டு வாய்த்த வலிமையுடைமையால் இவருக்கு எவரும் எதிர் நில்லார் என்று அமைச்சர்கள் இவரது வெற்றிக்குக் காரணமாகிய அளவே எடுத்துக் கூறினர்; அது கேட்டவுடன் அரசனும் சிவன்பாற் பேரன்புடையவனாதலின், அவ்வெற்றியின் எண்ணத்தை அறவே விடுத்து, இவர் திருத்தொண்டராம் பெரிய தன்மையினையும் அவரை அறியாதே போர்முனையில் விடுத்த தனது அபசாரத்தையுமே எண்ணி நடுங்கினான். இஃது அன்பின் றிறத்தாலாயது.

கெட்டொழிந்தேன் - ஒரு சொன்னீர்மைத்தாய்க் கெட்டேன் என்னும் பொருள் தந்து நின்றது. மிகக்கெட்டேன் எனினுமமையும்; **தார்வேந்தன் - தார்** - சேனையுமாம்;

வெருவுற்று - சடுதியில் நேர்ந்த அச்சத்தால் மெய்ந் நடுங்குதல்.

எம்பெருமான்! - தலைவரே!; முன்னே அவரைப் புகழ்ந்துரைத்த (3666) போது தன் கீழே தொழில்புரியும் சேனைத் தலைவர் என்ற நிலையினையே உட்கொண்டு புகழ்ச்சி மொழி கூறினான். இப்போது அவர் திருத்தொண்டு வாய்த்த வலியுடையார் என அறிந்தபோது அவர் கீழே தான் அமைந்து அவரைத் தனது தலைவர் என்ற நிலையினை மேற்கொண்டான். இஃது அவனது பழுத்த சிவனடிமைப் பண்பின் றிறம்; அவர்பால் பிழை பொறுக்க வேண்டுவதும் அவ்வாறேயாம். இது - தொண்டராதலை அறியாமே போரில் விட்டிருந்த பிழை; "மதக்களிற் றெதிரேயிந்த, மெய்த்தவர் சென்ற போது வேறொன்றும் புகுதா விட்ட, அத்தவ முடையேனானேன்" (588) என்ற அரசர் பெருமான் புகழ்ச் சோழனாரது மனநிலை ஈண்டு வைத்துக் காணற்பாலது. 8

3668. **(இ-ள்)** இறைஞ்சுதலும்...என்ன - அரசன் பணிந்ததும் அதன் முன்பு தாம் இறைஞ்சி எனது உரிமையாகிய படைத்தொழிலுக் கேற்றதாகப் பொருந்திய திறத்தினையே நான் செய்வேன்; அதனால் என்ன தீங்கு வரும்? என்று கூற; ஆங்கு... அளித்தே - அங்கு (அப்பொழுதே) அவருக்கு நிறைந்த நிதியின் குவைகளுடனே நீடுசெல்லும் சர்வ மானியங்களையும் கொடுத்து; அறம்புரி... உரைக்கின்றான் - அறத்தின் வழியே அரசுபுரியும் செங்கோலரசன் அவரைக் கைகூப்பி வணங்கி உரைப்பானாகி,

(வி-ரை) முன்னிறைஞ்சி - முறைமையின் முன்னே பணிந்து.

3668. இறைஞ்சுதலு முன்னிறைஞ்சி **"என்னுரிமைத் தொழிற்கடுத்த**
திறம்புரிவே னதற்கென்னோ தீங்"கென்ன வாங்கவர்க்கு
நிறைந்தநிதிக் குவைகளுட **னீடுவிருத் திகளளித்தே**
அறம்புரிசெங் கோலரச **னஞ்சலிசெய் துரைக்கின்றான்.** 9

"என்...தீங்கு" என்ன - இது பரஞ்சோதியார் கூறிய விடை; உரிமைத் தொழிலாகிய படைக்கல விஞ்சைத் திறமும் சேனைத் தலைமையும் ஏற்று அரசர் சேவகத்தில் அணுக்கராய் அமர்ந்தமையால் அதற்கு அடுத்த கடமையாகிய செயலினையே செய்தேனே யன்றி வேறு அடாத எந்தச் செயலினிலும் ஏவப்பெற்றே னில்லை; ஆதலின் தீங்கு ஒன்றும் உம்மைச் சாராது என்றபடி. **தீங்கு** - தவறு.

ஆங்கவர்க்கு...அளித்தே - **ஆங்கு** - அப்பொழுதே; **நிதிக் குவைகளும் நீடு விருத்திகளும் அளித்தல்** - இனி அவர் தமது சீவனத்துக்காக வேறெந்தத் தொழிலையும் எவரிடத்தும் சேவகம் பூண்டு செய்யாது கவலையின்றிச் சேவித்துச் சிவனது சேவகமே செய்து வாழும் பொருட்டு; **நீடு விருத்திகள்** - சர்வ மான்யமாகிய நிலங்கள்; இறையிலி - முற்றூட்டு என்பர்; **நீடு** - நிதிக்குவைகள் போல அவ்வப்போது செலவழிந்து விடாதபடி, நிலமாதலின் நீடிச்செல்வது என்றது குறிப்பு; **அளித்து** - அளியுடன் தந்து என்றது குறிப்பு.

அறம்புரி செங்கோல் அரசன் - பரஞ்சோதியார்க்கு அப்போது மணமாகாத இளவயது (3671); சிறந்த படைக்கலப் பயிற்சியும் ஒப்பற்ற சேனைத் தலைமைத் திறமும் வாய்ந்தவர்; பல போர்களில் வென்று பொருமரசர் தேசங்கள் பல வென்று அரசாங்கத்தினை வளர்த்தார்; வெல்லுதற்கரிய வாதாவித் தொன்னகரத்தைத் துகளாக்கிப் பகைவனை வென்று அரசனுக்குப்புகழும் பெருமையும் தேடித் தந்தனர்; இவர் இன்னும் பன்னாள் தமது அரசசேவையில் இருந்தால் அரசு சிறந்து ஓங்கும்;அரசசேவையிலிருந்து விடுதி பெறுங்காலம் இன்னும் பல ஆண்டுகள் உண்டு; (இந்நாளினும் 55 வயது அரசாங்க சேவகர்கள் விடுதி பெறுங்காலம் என வகுத்துள்ளது கருதுக.) இவையெல்லாம் அறிந்து வைத்தும் அரசன் உலகியல் அரசினும் சிவன்றொண்டே பெரிது என்றும், சிவன் றொண்டரை வணங்கி, அவர் வழியொழுகுவதன்றித் தன்கீழ்ச் சேவகத்தில் வைத்து ஏவல் கொள்ளுதல் அடாத பாவம் என்றும் உண்மை நீதியினை உணர்ந்தானுதலின் அவ்வழி ஒழுகினான் என்பார் **அறம்புரி செங்கோல் அரசன்** என்று சிறப்பித்தார். **செங்கோல்** - அரசின் உலகியல் நிலை; **அறம்புரி-** அரசின் உயர்ந்த தெய்வநிலை. **அறம்** - சிவனியமமாகிய வேத சிவாகமங்களின் மேலாக முடித்துக் கூறும் சிவ தரும விதிகள் என்ற பொருளில் வந்தது.

உரைக்கின்றான் - சொல்வானாகி, முற்றெச்சம்; உரைக்கின்றானாகி - என - விடை கொடுத்தான் என்று மேல் வரும் பாட்டுடன் முடிக்க.

எதிரிறைஞ்சி—என்பதும் பாடம். 9

3669. "உம்முடைய **நிலைமையினை யறியாமற் கொண்டுய்த்தீர்;**
எம்முடைய மனக்கருத்துக் கினிதாக விசைந்துமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க **வேண்டியவா றேசரித்துச்**
செம்மைநெறித் திருத்தொண்டு செய்யு"மென விடைகொடுத்தான். 10

3669. ***(இ-ள்)*** *உம்முடைய...உய்த்தீர் - உமது உண்மை நிலையாகிய திருத்தொண்டின் உறைத்த பண்பினை அறியாதபடி கொண்டு செலுத்தினீர்; எம்முடைய...இசைந்து - இனி எமது மனக்கருத்துக்கு இனிமைபெற இசைந்தருளி; உமது... செய்யும் என - உம்முடைய மெய்ம்மைத் தன்மையிற் செல்கின்ற திருத்தொண்டின் செயல்கள் உலகில் விளங்கும்படி உம் கருத்துக்கு வேண்டியபடியே ஒழுகிச் செம்மைதரும் நெறியாகிய சிவநெறியின் திருத்தொண்டு செய்யும் என்று கூறி; விடைகொடுத்தான் - அவரைத் தன்கீழ் அப் படைத் தொழிலினின்று விடுதலை செய்து விடை கொடுத்தனன்.*

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) *இது அரசன் கூறிய முடிவும் தீர்ப்பும் ஆகும். பரஞ்சோதியார், தமது உரிமைத் தொழிலின் கடமையே செய்தேன், அதனிற் நீங்கில்லை என்று கூறியதனை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை. உலகியற் கடமைகளினியல் வேறு; சிவனடிமைத்திறத்தின் பண்பு வேறு; பின்னையது அதனினும் சிறந்தது; மேலாய்க்கொண்டுய்க்கத் தகுந்தது. அரசியல்,மக்களின் உடம்பின் நன்மைகளையே கருதி அதனோடொழிவது; சிவனியலாகிய பண்பு அதனின் மேம்பட்ட உயிரின் நன்மை பற்றியது என்பதாம்.*

உம்முடைய...உய்த்தீர் - நிலைமை *- உயர்ந்த நிலை;* ***அறியாமை*** *- பிறர் அறியாத வண்ணம்.* ***உய்த்தல்*** *- செலுத்துதல்;* ***அறியாமற் கொண்டுய்த்தோம்*** *என்ற பாடம் சிறப்பின்று. சிவன் திருத்தொண்டு, அன்பினாலே சிவனும் உயிருமே அறியச் செய்வதன்றி, உலகரறிய ஆரவாரமாகச் செய்வதன்று என்பது சிறந்த ஒழுக்கமாம்.*

எம்முடைய...இசைந்து *- இதனை நீர் மறுக்கலாகாது என்று அரசன் வேண்டியபடி.*

மெய்ம்மை புரி உமது செயல் *- என்க;* ***மெய்ம்மை புரி*** *- மெய்யாகிய (சத்) இறைவர்பாற் செய்யும் அன்பின் றிறங்கள்.*

வேண்டியவாறே சரித்து *- அன்பின்றிறம் வெளிப்பாடாகும் நிலைகளும், அதுபற்றி மேற்கொள்ளும் செயல்களும் பலவாதலின் அவற்றுள் உமது கருத்துக்கிசையுமாறு வேண்டியவாறே என்பது;* ***சரித்தல்****-உலகத்தில் ஒழுகி வாழ்தல். இஃது உலகியல் பற்றியது.* ***இசைந்து - உய்த்தீர்*** *- என்று கூட்டியுரைக்கவும் நின்றது.*

செம்மை நெறி...செய்யும் *- இஃது உயிரினியல் பற்றி அரசன் கொண்ட விருப்பம்.* ***செம்மை*** *- சிவத்தன்மை.*

விடைகொடுத்தான் - விடை *- அரச சேவையினின்றும் விடுதி.*

இசையுமிது*—என்பதும் பாடம்.* ***10***

3670. மன்னவனை விடைகொண்டு தம்பதியில் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையின்வழுவா முறையன்பிற் செய்கின்றார், 11

3670. (இ-ள்) மன்னவனை...அடைந்து - அரசனை விடை கொண்டு தமது பதியின்கண் வந்து சேர்ந்து; பன்னும்...இறைஞ்சி - எடுத்துச் சொல்லப்பெறும் புகழினையுடைய பரஞ்சோதியாரும் குளிர்ச்சியுடைய சந்திரனைச் சூடிய சிரத்தினை உடைய இறைவரைக் கணபதீச் சரத்திலே வணங்கி; திருத்தொண்டு...செய்கின்றார் - திருத்தொண்டினை முன்னை நிலைமையினின்றும் வழுவாமல் முறைப்படி அன்பினுற் செய்கின்றாராய்;

(வி-ரை) தம்பதியில் வந்து அடைந்து - அரசனது நகரத்தினின்றும் தமது பதியாகிய திருச் செங்காட்டங்குடியில் வந்து என்க. அரசன் தலை நகரம் காஞ்சிபுரமென்று சரித ஆராய்ச்சியாளரால் கருதப்படுகின்றது.

பனிமதிவாழ் சென்னியரைக் கணபதீச்சரத் திறைஞ்சி - பனிமதிவாழ் சென்னியர் - சிவபெருமான். அவரைக் **கணபதீச்சரத்தில் இறைஞ்சி** என்றது அவரை எங்கும் எவ்விடத்தும் எப்பொருளிலும் வணங்கலாம்; "எவனுக்கு முற்றும் வடிவங்களாகும்" (காஞ்சிப்புரா) என்பது கேனோபநிடதம்; இங்கு அவரைக் கணபதீச்சரத் திருக்கோயிலிற் கண்டு வணங்கி; **கணபதீச்சரம்** என்பது திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலின் பெயர். "கன்னவிறோட் சிறுத்தொண்டன் (உடைய) கணபதீச் சரமேய, இன்னமுதன்" (பிள். தேவா); விநாயக மூர்த்தி கயமுகாசுரனைக் கொன்றபோது இரத்த வெள்ளம் பெருகிய காரணத்தால் திருச்செங்காட்டங்குடி என்ற ஊர்ப்பெயரும், அப்போது கணபதியினுற் சிவலிங்கம் தாபிக்கப்பட்டமையால் கணபதீச்சரம் என்ற கோயிலின் பெயரும் போந்தன. (கந்தபுராணம் - கயமுகனுற்பத்திப் படலம்);"...இபமுகத் தவுணன் மார்பி, னீடிய குருதிச் செந்நீர் நீத்தமா யொழுகும் வேலைப், பாடுற வருங்கா ஞென்றிற் பரத்தலி னதுவே **செய்ய காடெனப்** பெயர்பெற்று" (250); "மீண்டுசெங் காட்டிலோர்சார் மேவிமெய்ஞ் ஞானத் தும்பர், தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித் தேத்திப், பூண்டபே ரன்பிற் **பூசை புரிந்தனன்** புவியு ளோர்க்குக், காண்டகு **மனைய தானங் கணபதீச்** சரம தென்பர்" (மேற்படி 264).

முன்னை நிலைமையின் - முன்னை - அரசன்பால் படைத்தொழிலில் அமர்ந்து சென்றதன்முன்; 3663 - 3664 - பார்க்க. **முன்னை நிலைமையின்** - என்றது முன்னைப் பிறவியிற் செய்த தவ நிலைமை காரணமாக என்ற குறிப்பும் தருவதாம்.

முறை - சிவாகம விதிமுறை.

செய்கின்றார் - முற்றெச்சம்; செய்கின்றாராகித்-நிலை நிற்பாருமாகித் (3671), தூய - தொழிற்றலை நின்றார் (3672) என்று வரும் பாட்டுக்களுடன்முடிக்க.

பனிமதி - சிவனை அடைவதன் முன்னே முனி சாபத்தாற் றுளங்கிய மதி என்றலுமாம். **பனித்தல்** - துளங்குதல் - நடுங்குதல்.

3669. "உம்முடைய **நிலைமையினை யறியாமற் கொண்டுய்த்தீர்;**
எம்முடைய மனக்கருத்துக் கினிதாக விசைந்துமது
மெய்ம்மைபுரி செயல்விளங்க **வேண்டியவா றேசரித்துச்**
செம்மைநெறித் திருத்தொண்டு செய்யு"மென விடைகொடுத்தான். 10

3669. (இ-ள்) உம்முடைய...உய்த்தீர் - உமது உண்மை நிலையாகிய திருத்தொண்டின் உறைத்த பண்பினை அறியாதபடி கொண்டு செலுத்தினீர்; எம்முடைய...இசைந்து - இனி எமது மனக்கருத்துக்கு இனிமைபெற இசைந்தருளி; உமது... செய்யும் என - உம்முடைய மெய்ம்மைத் தன்மையிற் செல்கின்ற திருத்தொண்டின் செயல்கள் உலகில் விளங்கும்படி உம் கருத்துக்கு வேண்டியபடியே ஒழுகிச் செம்மைதரும் நெறியாகிய சிவநெறியின் திருத்தொண்டு செய்யும் என்று கூறி; விடைகொடுத்தான் - அவரைத் தன்கீழ் அப் படைத் தொழிலினின்று விடுதலை செய்து விடை கொடுத்தனன்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) இது அரசன் கூறிய முடிவும் தீர்ப்பும் ஆகும். பரஞ்சோதியார், தமது உரிமைத் தொழிலின் கடமையே செய்தேன், அதனிற் நீங்கில்லை என்று கூறியதனை அரசன் ஏற்றுக் கொள்ளவில்லை. உலகியற் கடமைகளினியல் வேறு; சிவனடிமைத்திறத்தின் பண்பு வேறு; பின்னையது அதனினும் சிறந்தது; மேலாய்க்கொண்டுய்க்கத் தகுந்தது. அரசியல்,மக்களின் உடம்பின் நன்மைகளையே கருதி அதனோடொழிவது; சிவனியலாகிய பண்பு அதனின் மேம்பட்ட உயிரின் நன்மை பற்றியது என்பதாம்.

உம்முடைய...உய்த்தீர் - நிலைமை - உயர்ந்த நிலை; **அறியாமை** - பிறர் அறியாத வண்ணம். **உய்த்தல்** - செலுத்துதல்; **அறியாமற் கொண்டுய்த்தோம்** என்ற பாடம் சிறப்பின்று. சிவன் திருத்தொண்டு, அன்பினாலே சிவனும் உயிருமே அறியச் செய்வதன்றி, உலகறிய ஆரவாரமாகச் செய்வதன்று என்பது சிறந்த ஒழுக்கமாம்.

எம்முடைய...இசைந்து - இதனை நீர் மறுக்கலாகாது என்று அரசன் வேண்டியபடி.

மெய்ம்மை புரி உமது செயல் - என்க; **மெய்ம்மை புரி** - மெய்யாகிய (சத்) இறைவர்பாற் செய்யும் அன்பின் றிறங்கள்.

வேண்டியவாறே சரித்து - அன்பின்றிறம் வெளிப்பாடாகும் நிலைகளும், அதுபற்றி மேற்கொள்ளும் செயல்களும் பலவாதலின் அவற்றுள் உமது கருத்துக்கிசையுமாறு வேண்டியவாறே என்பது; **சரித்தல்**-உலகத்தில் ஒழுகி வாழ்தல். இஃது உலகியல் பற்றியது. **இசைந்து - உய்த்தீர்** - என்று கூட்டியுரைக்கவும் நின்றது.

செம்மை நெறி...செய்யும் - இஃது உயிரினியல் பற்றி அரசன் கொண்ட விருப்பம். **செம்மை** - சிவத்தன்மை.

விடைகொடுத்தான் - விடை - அரச சேவையினின்றும் விடுதி.

இசையுமிது—என்பதும் பாடம். 10

3670. மன்னவனை விடைகொண்டு தம்பதியில் வந்தடைந்து
பன்னுபுகழ்ப் பரஞ்சோதி யார்தாமும் பனிமதிவாழ்
சென்னியரைக் கணபதீச் சரத்திறைஞ்சித் திருத்தொண்டு
முன்னைநிலை மையின்வழுவா முறையன்பிற் செய்கின்றார், 11

3670. **(இ-ள்)** மன்னவனை...அடைந்து - அரசனை விடை கொண்டு தமது பதியின்கண் வந்து சேர்ந்து; பன்னும்...இறைஞ்சி - எடுத்துச் சொல்லப்பெறும் புகழினையுடைய பரஞ்சோதியாரும் குளிர்ச்சியுடைய சந்திரனைச் சூடிய சிரத்தினை உடைய இறைவரைக் கணபதீச் சரத்திலே வணங்கி; திருத்தொண்டு...செய்கின்றார் - திருத்தொண்டினை முன்னை நிலைமையினின்றும் வழுவாமல் முறைப்படி அன்பினாற் செய்கின்றாராய்;

(வி-ரை) தம்பதியில் வந்து அடைந்து - அரசனது நகரத்தினின்றும் தமது பதியாகிய திருச் செங்காட்டங்குடியில் வந்து என்க. அரசன் தலை நகரம் காஞ்சிபுரமென்று சரித ஆராய்ச்சியாளராற் கருதப்படுகின்றது.

பனிமதிவாழ் சென்னியரைக் கணபதீச்சரத் திறைஞ்சி - பனிமதிவாழ் சென்னியர் - சிவபெருமான். அவரைக் **கணபதீச்சரத்தில் இறைஞ்சி** என்றது அவரை எங்கும் எவ்விடத்தும் எப்பொருளிலும் வணங்கலாம்; "எவனுக்கு முற்றும் வடிவங்களாகும்" (காஞ்சிப்புரா) என்பது கேளுபநிடதம்; இங்கு அவரைக் கணபதீச்சரத் திருக்கோயிலிற் கண்டு வணங்கி; **கணபதீச்சரம்** என்பது திருச்செங்காட்டங்குடித் திருக்கோயிலின் பெயர். "கன்னவிலேட் சிறுத்தொண்டன் (உடைய) கணபதீச் சரமேய, இன்னமுதன்" (பிள். தேவா); விநாயக மூர்த்தி கயமுகாசுரனைக் கொன்றபோது இரத்த வெள்ளம் பெருகிய காரணத்தால் திருச்செங்காட்டங்குடி என்ற ஊர்ப்பெயரும், அப்போது கணபதியினாற் சிவலிங்கம் தாபிக்கப்பட்டமையால் கணபதீச்சரம் என்ற கோயிலின் பெயரும் போந்தன. (கந்தபுராணம் - கயமுகனுற்பத்திப் படலம்);"...இபமுகத் தவுணன் மார்பி, னீடிய குருதிச் செந்நீர் நீத்தமா யொழுகும் வேலைப், பாடுற வருங்கா னென்றிற் பரத்தலி னதுவே **செய்ய கா**டெனப் பெயர்பெற்று" (250); "மீண்டுசெங் காட்டிலோர்சார் மேவிமெய்ஞ் ஞானத் தும்பர், தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித் தேத்திப், பூண்டபே ரன்பிற் **பூசை புரிந்தனன்** புவியு ளோர்க்குக், காண்டகு **மனைய தானங் கணபதீச்** சரம தென்பர்" (மேற்படி 264).

முன்னை நிலைமையின் - முன்னை - அரசன்பால் படைத்தொழிலில் அமர்ந்து சென்றதன்முன்; 3663 - 3664 - பார்க்க. **முன்னை நிலைமையின் -** என்றது முன்னைப் பிறவியிற் செய்த தவ நிலைமை காரணமாக என்ற குறிப்பும் தருவதாம்.

முறை - சிவாகம விதிமுறை.

செய்கின்றார் - முற்றெச்சம்; செய்கின்றாராகித்-நிலை நிற்பாருமாகித் (3671), தூய - தொழிற்றலை நின்றார் (3672) என்று வரும் பாட்டுக்களுடன்முடிக்க.

பனிமதி - சிவனை அடைவதன் முன்னே முனி சாபத்தாற் றுளங்கிய மதி என்றலுமாம். **பனித்தல்** - துளங்குதல் - நடுங்குதல்.

11

3671. **வேதகா ரணரடியார் வேண்டியமெய்ப் பணிசெய்யத்**
தீதில்குடிப் பிறந்ததிரு வெண்காட்டு நங்கையெனுங்
காதன்மனைக் கிழத்தியார் **கருத்தொன்ற வரும்பெருமை**
நீதிமனை யறம்புரியு நீர்மையினை நிலைநிற்பார், 12

3671. (இ-ள்) வேதகாரணர் அடியார்...செய்வார்- வேதங்களுக்குக் காரணராகிய சிவபெருமானடியார்களுக்கு வேண்டிய உண்மைப் பணிகளை யெல்லாம் செய்வாராய்; *தீதில்குடி...நிலை நிற்பார்-* குற்றமில்லாத குடியிலே பிறந்த திரு வெண்காட்டு நங்கை என்கின்ற காதலையுடைய மனைக்கிழத்தியாருடனே கூட இருவர் கருத்தும் ஒன்றுகப் பொருந்த வரும் பெருமையுடையதாய் அறநீதியின் வழியே இல்லறம் புரிந்து வாழும் தன்மையினை நிலை நிற்பாராய்,

(வி-ரை) அடியார் - பணிசெய்ய - நீதி மனை அறம்புரியும் நீர்மை - சிவன் திருத்தொண்டு முறை அன்பிற் செய்கின்ற நாயனுர் அடியார்களுக்குப் பணி செய்வதற்காக மனையறத்தை மேற்கொண்டார் என்பது ஈண்டுக் கவனிக்கற்பாலது; "தென்புலத்தார் தெய்வம்" என்றும், "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்" என்றும், "இயல்புடைய மூவர்க்கும்" என்றும்(குறள்) இல்வாழ்வான் கடமைகளை நீதிநூல் வகுத்துக் கூறும். அவை வேறு; இங்குக் கூறிய அடியார் பணியாகிய அறம்புரி நீர்மை வேறு; முன்கூறியவை உலகியற் பயத்தன. உரிய போகங்களைத் தந்து இறுதியிற் பிறவிக்கேதுவாவன; ஆனுல் அடியார் பணியோ! எனின், அவற்றின் வேருய்ச், சிவன் பணியேயாய் முடிவில் வீடுபேற்றுக் கேதுவாவன. இங்கு நாயனுர் உலகியற் போகங்கள் பற்றியேனும் மகப்பேறு பற்றியேனும் மணஞ்செய்து கொண்டனர் என்பார், **அடியார் மெய்ப்பணி செய்ய** என்ருர். பின்வரும் சரித நிகழ்ச்சி யிதனை உறுதிப்படுத்துதல்காண்க. இல்வாழ்க்கை நிலையின் அடியார்களுக்குப் பணிசெய்த இளையான்குடிமாறர், இயற்பகையார், குங்கிலியக்கலயர் முதலாகிய இப்புராணப் பெரியோர்களது சரிதங்களையும் இங்கு நினைவு கூர்க.

தீதில் குடிப் பிறந்த - இருமரபுந் தூயராய் வரும் நல்ல குடிப்பிறப்பு வேண்டப்படுவது. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (முருகு). குடிப்பிறந்தார் - குலத்தின்கண் - என்று பலவாறும் இதனை எடுத்து ஓதுவார் திருவள்ளுவர்.

திருவெண்காட்டு நங்கை - இவ்வம்மையின் இயற்பெயர் விளங்கவில்லை; ஊர்ப்பெயர் பற்றியே விளக்கமாய் வழங்கப் பெற்றனர் போலும்;"காரைக்காலம்மை" என்ற வழக்குக் காண்க.

காதன்மனைக்கிழத்தியார்... பெருமை - காதல் மனைக்கிழத்தியார் - இவர்களது இல்லறம் அகப்பொருணூல்களில் கூறியபடி காதற்றன்மையும் பொருந்தியிருந்தது என்றபடி; **கருத்தொன்ற வரும் பெருமை -** "காதலிருவர் கருத்தொருமித் - தாதரவு, பட்டதே யின்பம்" என்பது காண்க. இருவர் மனமும் ஒன்றியிராவிடில் அஃது இல்லறமாகாது; "இருவரும் பூண்டேர்ப்பி னல்லால், இல்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்,

3672. நறையிதழித் திருமுடியா **ரடியாரை நாடோறும்**
முறைமையினிற் றிருவமுது முன்னூட்டிப் பின்னுண்ணும்
நிறையுடைய பெருவிருப்பா **னியதியா** கக்கொள்ளுந்
துறைவழுவா வகையொழுகுந் **தூயதொழிற் றலைநின்றார்.** 13

செல்லாது" என்ப; அருமை நோக்கிப் **பெருமை** என்றார்; கருத்தொன்றவரும் உலகிறந்த அரிய பெருமையினை இச்சரித நிகழ்ச்சியிற் கண்டுகொள்க.

நீர்மையினில்—என்பதும் பாடம். *12*

3672. **(இ-ள்)** நறையிதழி...அடியாரை - தேன்பொருந்திய கொன்றை மாலையைச் சூடிய திருமுடியினையுடைய சிவபெருமானின் அடியார்களை;நாடோறும்...துறை - நூல்விதிப்படி நாடோறும் முறைப்படி முன்னே திருவமுதூட்டிப் பின்னே தாம் உண்ணுதலாகிய நிறைவுடைய பெரிய விருப்பத்தினாலே அதனை நியதியாகிய நியமமாகக் கொண்டு ஒழுகும் துறையினில்; வழுவா ...தலைநின்றார் - தவறாமல் ஒழுகுவதாகிய தூய்மையுடைய தொழிலிற் சிறந்து விளங்கினார்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) நாடோறும் அடியாரைத் திருஅமுது முன் ஊட்டிப் பின் உண்ணும்-நியதி - அடியார்க்கு அமுதூட்டியபின்பே தாம் உணவு கொள்வதாகிய நித்த நியமத்தினை நியதியாகக் கொள்வது; சாக்கியனார் சிவலிங்கங் கண்டுண்ணும் நியதி கைக்கொண்டனர். இங்கு நாயனார் சிவனடியாரை முன்னூட்டிப் பின் உண்ணும் நியதியைக் கொண்டனர். ஈரிடத்தும் ஒப்ப இந்நியதியே சரித விளைவுக்குக் காரணமாய் வீடுபேறளித்த நிலை கண்டு கொள்ளத்தக்கது.

திருவமுது என்றார் அடியார்களேயின்றி அரனும் உள்நின்று அமுதுண்கின்றா ராதல் குறிக்க. பின்னர் அரனே அவ்வமுதுண்ண வருதலும் குறிப்பு.

துறை - நெறி- ஒழுக்கம்.

தூயதொழில் - தூய்மை செய்து உதவும் தொழில்; தூய்மை செய்தலாவது பாசம் போக்குதல்.

இம்மூன்று பாட்டுக்களானும் சிவன் பணி முதலிற் கூறி, அதன் பின் அடியார் பணிக்காக மனையறம் பூண்ட நீர்மை கூறி, அதன்பின் அந்த மனையறத்தினின்று செய்த அடியார் பணியினைத் தொடர்ந்து கூறிய பொருத்தம் கண்டு கொள்க. திருவமுதளித்த நிலை வரும் பாட்டிற் கூறுவார்.

பெருவிருப்பு—என்பதும் பாடம். *13*

3673. **(இ-ள்)** தூய...உண்ணீர் அமுதம் - தூய்மையாகிய திருவமுதும், கனிவகையும், சர்க்கரையும், ஆறு சுவைகளையுடைய கறி வகைகளும்,நெய்யும், உறைந்த தயிரும், பாலும்,இனிய பலகாரங்களும், அமுதம்போன்ற உண்ணீரும் ஆகிய இவைகளை;

3673. **தூய**திரு வமுதுகனி கன்னலறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பாலினிய பண்ணியமுண் ணீரமுத
மேயபடி யாலமுது செய்விக்க விசைந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருமிவர்பான் மனமகிழ்ந்தார். 14

மேய...செய்விக்க - பொருந்தியவாற்ருல் திரு அமுது செய்விக்க; இசைந்து...மகிழ்ந்தார் - அதற்கிசைந்து அடியார்கள் வந்து அமுதுண்டு பெரிய உலகம் போற்றவரும் இவரிடத்து மனமகிழ்ச்சி கொண்டார்கள்.

(வி-ரை) தூய...உண்ணீரமுதம் - உரியவாறு திருவமுது அமைக்க வேண்டிய பகுதிகளைக் குறித்தவாறு. அரசர்பாற் சிறந்த சேனைத் தலைவராயும் பேரன்புடையராயு மிருந்தாராதலின் பரஞ்சோதியார் ஒன்றும் குறைபாடின்றி இவ்வெல்லாவற்ருனும் அமைத்தூட்டினுர் என்பார் இவ்வாறு விரித்துக் கூறினுர்; "உண்டி நாலு விதத்திலாறு சுவைத் திறத்தினில்" (443) எனப் பொதுவகையால் முன்கூறியதனை ஈண்டு இடநோக்கி விரித்துரைத்தபடி; இதனை வற்புறுத்தி உபதேசிக்கும் வகையாலும் விரித்துக்காட்டும் வகையாலும், கூறினுர். "அன்று முத ஞடோறு நாடோறு மண்ண லடியரள விறந்தபெயர் வந்தவர்க ளெல்லாஞ், சென்றுறையத் திருமடங்க டிருமடங்க டோறுந் திருவிளக்கங் கவர்சாத்த வுள்ளுடைமேற் போர்வை, துன்றியசெந் நெலினடிசில் கன்னனறுங் கனிக டுயவறு சுவைக்கறிநெய் தயிர் திரண்ட பாறேன், நன்றுதிருப் பண்ணியந்தண் ணீரமுத மடைக்காய் நரபதியே வலினமைச்சர் நாடோறு நடத்த" (புராண வரலாறு - 72) என்று உமாபதியார் இதனை எடுத்துக்கூறுதல் காண்க.

திருவமுது - செந்நெல்லின் அடிசில்; **பால்** - திரட்டிக்காய்ச்சிய பால்; **உண்ணீர் அமுதம்** - உண்பதற்கு (தாகத்திற்குக் குடிப்பதற்கு) வேருகப் பக்குவப்படுத்திய நீர்;இது மிக முக்கியமாகக் கவனிக்கத்தக்க தொன்றென்பார் **நீர்அமுதம்** என்றடைமொழி புணர்த்தி ஓதினுர்; "வெயிலின்வைத் தாற்றிய தண்ணீர் நாற்றமிட் டிருப்ப" என்பர் பட்டினத்தடிகள்; உண்ணல் என்னும் பொதுவினை ஈண்டுப் பருகுதலைக் குறித்தது; **பாய தயிர்** - பிரையிட்டுக் கட்டியாக்கிய தயிர். இவை நியமமாக நாடோறும் செய்யும் வகை. இதன்மேல் அடியார்கள் வேண்டியவாறு செய்தல் வேறு சிறப்புவகை; அதனை இந்நாயனுர் சரிதத்துள் மேற் கண்டு கொள்க.

மாயிரு ஞாலம் - மா - இரு - ஒருபொருட் பன்மொழி; மிகுதி குறித்தது.

மேயபடி—மிசைந்தடியார்—என்பனவும் பாடங்கள். ***14***

3674. **(இ-ள்)** சீதமதி...தம்மை - குளிர்ந்த சந்திரனைப் பாம்பினுடனே சிவந்த சடையின்மேல் நெருங்கும்படி வைத்த சிவபெருமானது அடியார்களுக்கு; நயப்பாட்டு வழிபாட்டால்- விருப்பத்துடன் செய்யும் வழிபாட்டு வகையினுலே; மேதகையார்... அடைந்தார் - மேன்மையுடையோராகிய அவ்வடியார்களின் முன்பு தம்மை மிகவும் சிறியாராய் வைத்து, அடைந்து, ஒழுகிவந்தனர்; ஆதலினுல்...அவனியின் மேல் - ஆதலாலே **சிறுத்தொண்டர்** என்ற பெயருடனே உலகில் நிகழ்வதாயினர்.

3674. சீதமதி யரவினுடன் செஞ்சடைமேற் செறிவித்த
நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டான்
மேதகையா ரவர்முன்பு மிகச்சிறிய ராயடைந்தார்
ஆதலினாற் சிறுத்தொண்ட ரெனநிகழ்ந்தா ரவனியின்மேல்.

(வி-ரை) இந்நாயனாரது இயற்பெயர் பரஞ்சோதியா ரென்றிருப்பவும், ("பலர்புகழுந் திருநாமம் பரஞ்சோதியா ரென்பார்"-3661) **சிறுத்தொண்டர்** என்றே உலகில் வழங்கவும், திருத்தொண்டத் தொகையினுள் போற்றப்படவும் போந்த காரணங் கூறியவாறு; காரணம் பற்றிய பெயராதலானும், சிறப்புடைமையானும், நாயனாரது விருப்பத்துக் கிணங்கிய பெயராதலானும் இயற்பெயரினும், இஃதே உலகிற் பெரியோர்பால் வழங்கலாயிற்று என்க.

அடியார் தம்மை நயப்பாட்டு வழிபாட்டால் -நயப்பாடு - நயப்பு - விருப்பம்; **தம்மை**-தமக்கு; வேற்றுமை உருபு மயக்கம். தம்பாற் செய்யும் என ஏழனுருபாகக் கொள்ளலுமாம். **வழிபாட்டால்** - வழிபடும் வகையால்; **வழிபாட்டால் - அடைந்தார்** - என்று கூட்டுக.

மேதகையார் - மேதகைமை - மேம்பாடு; சினடியாராதலே மேம்பாடென்பது; திருக்கூட்டச் சிறப்புப் பார்க்க.

அவர்முன்பு மிகச்சிறியரா யடைந்தார் - அடியார்களது பெருமையின் முன்பு தம்மை மிகச்சிறிய ராகவே கண்டு அடைந்து ஒழுகினார்;அடியார்களைக் காணுந்தோறும் இவர்களது பெருமை எங்கே! அடியேனது சிறுமை எங்கே! இவர் கருணையினால் தமது பெருமைபாராது சிறியேனை ஆட்கொள்ள எழுந்தருளினர் என எண்ணி அதற்குத்தக வொழுகுதல் இதன் தன்மை; "எத்தனையு மரியநீ யெளியை யானாய்! எளியேனை வந்திரங்கி யேன்று கொண்டாய்...இத்தனையு மெம்பரமோ! ஐய! ஐயோ! எம்பெருமான் றிருக்கருணை யிருந்த வாறே" (அரசு. தேவா) என்பது இவ்வியல்பினைக் காட்டுவதாம்.

அவனியின்மேல் -உலகில்; **மேல்** - உயர்வாக; உயர்ந்தோரிடத்து என்ற குறிப்புமாம்; "பூதி சாதனத்தவர் முன் போற்றப் போதே னயிடினும், நாத னடியார் கருணையினா லருளிச் செய்வர் நானென்று" (3703) என்று பின்னர் நாயனார் திருவாக்கிற் கூறுதல் காண்க.

3675. **(இ-ள்)** கண்ணுதலார்...ஒழுகுவார் - நுதலிற் கண் உடைய இறைவரது கணபதீச்சரத்தின் கண்ணே கருத்துப் பதிய விரும்பி உள்ளே நிறையும் அன்பினாலே திருப்பணிகள் செய்து ஒழுகுவாராகி அவர்; வழுவின்றி - குறை வில்லாமல்; எண்ணில் பெரும்...செய - அளவில்லாத பெருமையுடைய சிறந்த அடியார்கள் இடையறாது வந்து அமுது செய்தருள; நண்ணிய...நாளின் கண் - பொருந்திய பெரிய மகிழ்ச்சியுடனே விரும்பி அமர்ந்திருந்த நாளிலே. 15

(வி-ரை) கருத்தமர உள்நிறை அன்பினில் - கருத்து அமர்தல் - மனம் ஊன்றி நிற்றல்; பணி செய்யும் ஆசையில் அழுந்துதல்; **அமர** - அமர்தலினால்; விரும்புதலினால்; **அன்பினில்** - அன்பு காரணமாக; **உள்நிறை** - மனத்தினுள் நிறையும்.

3675. கண்ணுதலார் கணபதீச் சரத்தினன்கட் **கருத்தமர**
உண்ணிறையன் பினிற்பணிசெய் தொழுகுவார் வழுவின்றி
எண்ணில்பெருஞ் **சீரடியா ரிடைவிடா தமுதுசெய**
நண்ணியபே ருவகையுட னயந்துறையு நாளின்கண், 16

3676. நீராருஞ் சடைமுடியா ரருளிஞ னிறைதவத்துப்
பேராள ரவர்தமக்குப் பெருகுதிரு **மனையறத்தின்**
வேராகி விளங்குதிரு வெண்காட்டு நங்கைபாற்
சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார். 17

ஒழுகுவார்-ஒழுகுவாராகிய நாயஞர்; வினையாலணையும் பெயர்; ஒழுகுவார் - உறையும் நாளின்கண் என்று முடிக்க.

வழுவின்றி - வழுவின்றிப் பணிசெய்து என்றும், வழுவின்றி அமுதுசெய என்றும், முன்னும் பின்னும் கூட்டி உரைக்க நின்றது. **வழு** - குறை.

எண்ணில் பெருஞ்சீர் - எண்ணில் - தொகையின் பெருமை; **பெருஞ்சீர்** - சிறப்பின் பெருமை.

நயந்து - அளவில்லாத அடியார்கள் இடையருது அமுது செய்தல் கண்டு அதனில் மேலும் விருப்பம் மிகுந்து. *16*

3676. **(இ-ள்)** நீராரும்...அருளிஞல் - கங்கையாறு பொருந்திய சடை யினையுடைய சிவபெருமானது திருவருளிஞலே; நிறைதவத்து...நங்கைபால் - நிறை தவத்தினை உடைய அவருக்குப் (சிறுத்தொண்டருக்கு) பெருகும் சிறந்த இல்லறத்தின் வேராகி விளங்கும் திருவெண்காட்டு நங்கை என்னும் மனைவியாரது மணிவயிற்றினிடமாக; சீராள தேவரெனும்...அவதரித்தார்-சீராள தேவர் என்னும் திருமகஞர் வந்தவதரித் தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அருளிஞல்-மைந்தர் அவதரித்தார் - என்க. "**கூத்தஞரருளாலே...** பெண் கொடியைப் பெற்றெடுத்தார்" (876) என்றது காண்க; **அருளிஞல்**-சிவன் பணியும், அடியாரை அமுதூட்டிய பணியும் கூடச் சிவனருள் சுரந்தமையால் என்க. "அடியார்க் குரிய வர்ச்சனை யுலப்பில் செய்த" (2938).

நிறைதவத்துப் பேராளர் - தவம் - அரன்பூசையும் அடியார் பூசையும்; **நிறைதவம்**- அவரது தவம் இம் மகப் பேற்றிஞலே நிறைவெய்த உள்ளது என்ற குறிப்புப்பெற இவ்வாற்ருல் உரைத்தமை காண்க. **பேராளர்** - பெரியவர்; தவம் நிறைதற் கேதுவாகிய அடியார் பூசை; **சிறுத்தொண்டர்** என்ற காரணப் பெயரினைப் பூண்டவர் என்றலுமாம். **பேர்** - புகழுமாம்.

திருமனையறத்தின் வேராகி - மனையறமாகிய தவத்துக்கு மனைக்கிழத்தியாரே வேர் போன்றவர் என்பது; இவர்களது இல்லறச் சிறப்பும் மேல் வரும் சரித நிழ்ச்சிக் குறிப்புமாம்.

3677. **அருமையினிற் றனிப்புதல்வர்** பிறந்தபொழு தலங்கரித்த
பெருமையினிற் கிளைகளிப்பப் **பெறற்கரிய மணிபெற்று**
வருமகிழ்ச்சி **தாதையார் மனத்தடங்கா வகைவளரத்**
திருமலி**நெய் யாடல்விழாச் செங்காட்டங் குடியெடுப்ப.** 18

"கருத்தொன்ற வரும்பெருமை நீதிமனை யறம்புரியும்" (*3671*). **பெரும்திரு** - பேரழகு பொருந்திய என்றலுமாம். **வேர்**-மூலம்;

அவர்தமக்கு - நங்கைபால் - மைந்தர் - அவதரித்தார் என்று தந்தையர் தாயர் இருவரையும் உடன் கூறியது இருவர் அன்பும் ஒருமித்துப் பின் நிகழும் சரிதக் குறிப்புப் பெறுதற்கு; "**தொண்டர் மனைவியார் நீடு மகனார்**" (*3746*) என்று இறுதியில் ஒன்றுசேர்த்துக் கூறும் திறமும் காண்க.

சீராளதேவரெனும் திருமைந்தர் - சிறந்த இச் சரித விளைவுக்கு மூலமாய், இறைவர் தாமே விரும்பிய பண்டமெனச் சொல்லப்பெறும் பேறு பெற்றவராய், "சீராளன் சிறுத்தொண்டன்" என்று ஆளுடைய பிள்ளையாரது மறைத்திரு வாக்கினிற் பிறக்கும் பேறுடையவராய் (*3682*), முருகப் பெருமானுடன் வந்து இறைவர் ஆட்கொள்ளும் தனிச் சிறப்புடைய பேறுபெறுபவராய் உள்ள பெருமைகள் எல்லாம் குறிக்க இங்கு இவ்வாறு அருமைபெறக் கூறினார். பின்னரும், "**நீடு** மகனார்" என்பது காண்க. *17*

3677. **(இ-ள்)** அருமையினில்...பொழுது; அருமையாக ஒப்பற்ற மகனார் பிறந்த பொழுது; அலங்கரித்த...களிப்ப - அலங்காரங்கள் செய்து அப்பெருமையினால் சுற்றத் தார்கள் களிப்புற; பெறற்கரிய...வளர - பெறுதற்கரிய நாயனார் மனத்துள்ளே அடங்காத வகை மேலோங்கி வளர; திருமலி...எடுப்ப - சிறப்பு மிக்க நெய்யாடல் விழாவைத் திருச்செங்காட்டங்குடியில் உள்ளோர் எல்லாரும் செய்து கொண்டாட,

(வி-ரை) இந்த இரண்டு பாட்டுக்களாலும் சீராள தேவரது திருஅவதாரத்தில் நிகழ்ந்த மகிழ்ச்சிச் செயல்களும் சடங்குகளும் கூறப்பட்டன.

அலங்கரித்த...கிளைகளிப்ப - மனை அலங்காரங்கள் முதலியவை செய்து மகிழ்ந்தனர் கிளைஞர்கள் என்க.

பெறற்கரிய வளர-தந்தையார் பெறற்கரிய மகனைப் பெற்றதனால் மகிழ்ந்தார் என்க. **மணி** -மணிபோன்ற மகவு; "இந் நடைமணியைத் தந்தபின்னர்" (திருக்கோவை - *385*); **பெற்று** - பெறுதலால்; **பெறற்கரிய** - என்றது பிறந்த பொழுதே சோதிடம், உடற்கூற்று இலக்கண நூல் முதலிய அளவைகளால் கண்டு அறிந்தவாறு அம்மகவின் அருமை குறித்தது.

நெய்யாடல் விழா - நன்மகப் பேற்றில் அயலோர் செய்வதொரு மகிழ்ச்சிச் சடங்கு. "மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார்" (*1933*) என்று ஆளுடைய பிள்ளையார் திருவவதாரத்துக் கூறுதல் காண்க. எண்ணெயாடல் விழா என்பாரு முண்டு.

3678. மங்கலநல் லியமுழக்க **மறைமுழக்கம்** வானளப்ப
அங்கணர் தஞ் சீரடியார்க் களவிறந்த நிதியளித்துத்
தங்கண்மர பினிலுரிமைச் சடங்குதச **தினத்தினிலும்**
பொங்குபெரு மகிழ்ச்சியுடன் புரிந்து**காப் பணி**புனைந்தார். 19

அலங்கரித்த பெருமை - என்பதற்கு இவ்வாறன்றி, அம்மகப்பேறு அந்த மனைவாழ்க்கையை அணிகலம் போன்று அலங்கரித்த மேன்மையால் என்று உரைத்து, "மற்றத னன்கல நன்மக்கட் பேறு" (குறள்) என்று தர்க்கிப்பாரு முண்டு.

அலங்கரித்து—மகப்பெற்று—என்பனவும் பாடங்கள். *18*

3678. **(இ-ள்)** மங்கல... வானளப்ப - மங்கலமாகிய நல்ல இயங்களின் முழக்கமும் மறைகளின் முழக்கமும் வானின் ஓங்க; அங்கணர்தம்... அளித்து - இறைவருடைய சிறப்புடைய அடியார்களுக்கு அளவில்லாத நிதிகளைக் கொடுத்து; தங்கள்... புரிந்து - தங்கள் குல மரபினுக்கும் உரிமையாகிய சடங்குகளைப் பத்துநாட்களிலும் மேன்மேல் அதிகரிக்கும் மகிழ்ச்சியுடனே புரிந்து; காப்பு அணிந்தார் - காப்புச் சாத்தினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) மங்கல...அளப்ப -மங்கல இயங்கள் முழக்குதலும், வேதமந்திரங்களை ஓதி வாழ்த்துதலும் மகப்பேற்றின் மகிழ்ச்சிச் செயல்கள். **மறை முழக்கம்** - மாமாத்திரர் என்ற இவரது குலம் அந்தணர்க்கும் அரசர்க்கும் இடையில் வைத்து ஒருசார் வேத மந்திரச் சடங்குகளுக்கு உரியாராதல் பெறக் கூறியவாறு. பிறர் உச்சரிக்காமலே தாமாகவே முழங்கிய மறைகளின் முழக்கம் என்றலும் குறிப்பு; இருவகை முழக்கங்களையும் சேர்த்துக் கூறியதனால் இரண்டும் தாமாகவே முழங்கின என்றலுமாம். "எங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பு, மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம்" (*1931*); "ஓவா, வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும்" (*1929*) என்றவையும், பிறவும் காண்க. **வான் அளப்ப** - வான் அளவும் ஓங்க; பெருமையினாலும் வானையும் தம்முட்பட மேலோங்கி அளவுபடுத்தி நிற்க.

அங்கணர்தம்...நிதியளித்து - இஃது இச்சடங்கிற் செய்த சிறந்த செயலாம்; நாயனாரது அன்பின் மேன்மை காட்டுவது; சிறந்த பயன் தருவது. இதனை ஏனை உலகவரும் கைக்கொண்டொழுகுதல் பயன்றரும்.

மரபினில் உரிமைச் சடங்கு - தமது குலமரபுக்கு உரிய விதிச் சடங்குகள்; **தசதினத்தினிலும்** பிறவி, யிறவிகளில் பத்துநாட் சடங்குக்குரிய மரபு என்பது; இவற்றிற் பதினாறுநாட் சடங்குக் குரிய வேறு குலங்களுமுண்மை நூல்களுட் காண்க. "தூய திரு மாமறை தொடர்ந்தநடை நூலின், மேயவிதி யையிரு தினத்திலும் விளைத்தார்" (*1938*) என்றது காண்க. இவை "**சாதக முறைப்பல சடங்கு**" என்ப. ஆளுடைய பிள்ளையார் புராணம் பார்க்க.

காப்பணி -திருநீற்றுக்காப்பு. வேறு உலகர் கொள்ளும் காவல் முறைகளும் உடன் கொள்ளலாம். *19*

3679. ஆர்வநிறை பெருஞ்சுற்ற மகமலர வளித்தவர்தாம்
பார்பெருகு மகிழ்ச்சியுடன் **பருவமுறைப் பாராட்டுச்**
சீர்பெருகச் செய்யவளர் திருமகனுர் சீறடியிற்
ருர்வளர்கிண் கிணியசையத் **தளர்நடையின் பதஞ்**சார்ந்தார். 20

3680. சுருளுமயிர் நுதற்சுட்டி துணைக்காதின் மணிக்குதம்பை
மருவுதிருக் கண்டநாண் மார்பினிலைம் படைகையிற்
பொருவில்வயி ரச்சரிகள் பொன்னரைஞாண் புனைசதங்கை
தெருவிலொளி விளங்கவளர் திருவிளையாட் டினிலமர்ந்தார். 21

3679. **(இ-ள்)** ஆர்வ...அளித்து-பெருவிருப்புடைய பெருஞ் சுற்றத்தார்களெல்லாம் மனமகிழக் கொடுத்து; அவர் தாம்...செய்ய - அந் நாயனுர், உலகத்திற் பெருகும் மகிழ்ச்சியுடனே அவ்வப் பருவங்கடோறும் செய்யப் பெறும் சடங்குகளை எல்லாம் சிறப்புப் பெருகச் செய்ய; வளர்...சார்ந்தார் - வளரும் திருமகனுராகிய சீராள தேவர் தமது சிறிய திருப்பாதங்களில் மாலையாகக் கோத்த கிங்கிணிச் சதங்கை அசையும்படி தளர்நடைப் பருவத்தினைச் சார்ந்தனர்.

(வி-ரை) ஆர்வநிறை...அளித்து - சுற்றத்தார்க்கு மிகச் சிறப்புடன் வரிசைகள் தந்து; இஃது இம்மகிழ்ச்சிச் சடங்குகளுள் ஒன்று; அடியார்க்கு நிதியளித்தலைச் சிறப்பும் பயனும் பற்றி முன்னர்க் கூறினுர்.

பார்பெருகு மகிழ்ச்சி - உலகில் உள்ளார்களும் பெருமகிழ்ச்சி கொள்ளுதல் ஈகைத் திறத்தினுலாவது.

பருவமுறைப்பாராட்டு - செங்கீரைப் பருவ முதலாக வகுத்துச் சொல்லப்பட்ட பிள்ளைப் பருவங்களிற் செய்யும் சிறப்புக்கள்; ஆளுடைய பிள்ளையார் புராணம் பார்க்க. **சீர்** -இவை சந்தி மிதிப்பித்தல் - அன்னமூட்டுதல் முதலியவை என்பாருமுண்டு.

கிண்கிணி - சதங்கை; ஒலிக் குறிப்புப் பெயர். இங்குக் கூறியது திருவடியிற் சாத்தும் அணி.

தளர் நடையின் பதம் - ஓராண்டு நிறைவு அணையும் பருவம்.

தார்வளர்- தார்போல என்றலுமாம். *20*

3680. **(இ-ள்)** வெளிப்படை. சுருளுடைய மயிர் நிறைந்த நெற்றியிலே சுட்டியும், இரண்டு காதுகளிலும் குதம்பைக் காதணிகளும், திருக்கழுத்திற் பொருந்தும் கண்ட சரமும், மார்பில் ஐம்படைத் தாலியும், கைகளில் ஒப்பற்ற வயிரத்தாலாகிய சரிகளும், (இடையில்) பொன்னரை ஞாணும், திருவடியிற் பூணுகின்ற சதங்கையும் ஆகிய இவற்றைப் பூண்டு தெருவிலே ஒளிவிளங்க வளரும் பிள்ளைத் திருவிளையாட்டிலே விரும்பியிருந்தனர் (*சீராள தேவர்*).

3681. வந்துவளர் **மூவாண்டின்** மயிர்விணைமங் கலஞ்செய்து
தந்தையா ரும்பயந்த தாயாருந் தனிச்சிறுவர்
சிந்தைமலர் சொற்றெளிவிற் **செழுங்கலைகள் பயிலத்தம்**
பந்தமற வந்தவரைப் பள்ளியினி லிருத்தினார். 22

(வி-ரை) இத்திருப்பாட்டினாலே சீராளதேவரைப் பிள்ளைப் பருவத்தே அணி செய்த திருக்கோலம் கேசாதிபாதம் கூறப்பட்டது. திருவுரு அணிசெய் தரிசனர்.

சுருளுமயிர் நுதல் - மயிர் சுருண்டிருத்தலும், நெற்றியிற் சுருண்டு வீழ்தலும் உடல் அழகிலக்கணங்கள் என்பர்.

குதம்பை - காது வளர்ச்சிக் கிடும் காதணி என்பர்; ஈண்டு (மணி - அழகு); அழகிய காதணி என்ற அளவில் பொருள் தந்து நின்றது; மணி -இரத்தினமுமாம்.

திருக்கண்ட நாண் - திருக்கண்டத்தில் - நாண் என்க. நாண் - பொற்சரம்.

ஐம்படை - 150-வது பாட்டுப் பார்க்க. திருமாலின் சங்கு சக்கரம் வாள் தண்டு வில் என்ற ஐந்து படைகள் பொலியப் பொன் முதலியவற்றாற் செய்யப்படுவது; இது காவல் செய்யும் என்பது மரபு.

சரி - கைவளை; தோளில் அணிவதுமுண்டு.

சுட்டி முதலாகச் ***சதங்கை*** யீறாகக் கூறப்பட்ட இந்த அணிகலங்களை யெல்லாம் பூட்டப்பெற்று என்க.

அமர்தல் - விரும்பிச் செய்தல். 21

3681. ***(இ-ள்)*** வந்து...செய் - முறைமையில் வந்து வளர்ச்சி பெறும் மூன்றாண்டிலே மயிர் நீக்கு மணவினை என்னும் மங்கலச் சடங்கினைச் செய்வித்து; தந்தையாரும்... இருத்தினார் - தந்தையாரும் ஈன்றெடுத்த தாயாரும் தம் ஒப்பற்ற சிறிய தோன்றலாராகிய மகனாருக்கு மனம் மலர்தற்கேதுவாகிய சொற்களின் தெளிவினையுடைய செழுங்கலைகளைப் பயில்வதற்காகத், தமது பிறவிப்பந்தம் நீங்க வந்த அவரைப் பள்ளியினில் அமர்த்தினார்.

(வி-ரை) தந்தையாரும் - தாயாரும் - செய்து - வந்தவரைப் பயில இருத்தினார் என்று கூட்டுக.

மூவாண்டில்... செய்து - "மயிர் நீக்கும் மணவினை" (*1285*) என இது சவுளக் கல்யாணம் எனப்படும் சிறப்புடையது என்பார் **மயிர்வினை மங்கலம்** என்றார். இது மூன்றாண்டிற் செய்யப்பெறுவது; **செய்து** - செய்வித்து.

சிந்தை...கலைகள் - சிந்தை மலர் - மனத்தை மலரச் செய்யும்; ***மலர்*** - மலர்த்தும் எனப் பிறவினைப் பொருள் கொள்க, "புலன் கொளுவ **மனமுகிழ்த்த கருணைக்கி மலர்விக்கும்** கலைபயில" (*1285*) என்றது காண்க. **சொற்றெளிவு** - கருவி; **சிந்தை மலர்தல்** - பயன்; கலை - சாதனம்.

3682. அந்நாளிற் **சண்பைநக ராண்டகையா ரெழுந்தருள**
முன்னாக வெதிர்கொண்டு கொடுபுகுந்து **முந்நூல்சேர்**
பொன்மார்பிற் சிறுத்தொண்டர் புகலிகா வலனார்தந்
நன்னாமச் சேவடிகள் போற்றிசைத்து நலஞ்சிறந்தார். 23

செழுங்கலைகள் - பல்வேறு கலைஞானங்கள். **தம் பந்தம் அற வந்தவர்** - தம் பொருட்டாலன்றித், தம்மை ஈன்ற இருவரது பந்தமும் அது காரணமாக வரும் பிறவியும் அறும்பொருட்டே அவதரித்தவர் என்பதாம்; மகன் என்னும் உலகப் பற்றை அறுத்தற்கு நிலைக்களமாய் வந்த இவர் அதன் மூலமே ஈன்றோர் பிறவி யறுக்க ஏதுவாயினமை சரித விளைவாம். "என்றும் பிரியாதே யிறைஞ்சி யிருக்கும்" நிலை (3746) பெறுதற் கேதுவாயினர் என்பது.

வந்துவிளை — பந்தமறப்பிறந்தவரை — பள்ளியினில் அமர்த்தினர்— என்பனவும் பாடங்கள். 22

3682. **(இ-ள்)** அந்நாளில்...எழுந்தருள - அந்நாளில் சீகாழி ஆண்டகையா ராகிய ஆளுடைய பிள்ளையார் அங்கு எழுந்தருள; முந்நூல் சேர்...சிறுத்தொண்டர் -முப்புரி நூலணிந்த பொன் பூண்ட மார்பினையுடைய சிறுத்தொண்டர்; முன்னாக...புகுந்து - முன்னாகச் சென்று எதிர்கொண்டு அழைத்துக்கொண்டு வந்து நகரினுட் புக்குத் தம் மனையில் எழுந்தருளுவித்து; புகலிகாவலனார்தம்...நலஞ் சிறந்தார் - சீகாழித் தலைவரது நல்ல பெருமையுடைய திருவடிகளைத் துதித்து நன்மை சிறக்கப் பெற்றார்.

(வி-ரை) அந்நாளில்...கொடுபுகுந்து...போற்றிசைத்து - இவ்வரலாற்றினை ஆளுடைய பிள்ளையார் புராணத்தினுள் தகுதியும் சிறப்பும் பற்றி விரிவாக (2366—2369) உரைத்தருளியமையால் ஈண்டுச் சுருக்கிக் கூறினார்; ஆண்டுக் கண்டு கொள்க.

ஆண்டகையார் - பெரு வீரராகிய இந் நாயனாரைத் தொண்டாகக் கொண்டுடைய பேராற்றல் ஆண்டகைமை எனப்பட்டது.

முந்நூல்சேர் பொன்மார்பில் - என்றதனால் இவர் மரபுக்குப் பூணூல் அணியும் உரிமை உண்டு என்பது பெறப்படும்; முன் (3662) உரைத்தவை பார்க்க.

போற்றிசைத்து நலஞ் சிறந்தார் - தமது திருமனையில் எழுந்தருளுவித்து உபசரித்தனர். "போந்து மாமாத்திரர்தம்...திருமனையிற் புகுந்து...மாதவரவர் தாம் மகிழ்ந்தருள வமர்ந்தருளி" (2369) என்றது காண்க. நலம் சிறத்தலாவது உபசரித்த அந் நன்மையில் விளங்குதல். 23

3683. **(இ-ள்)** சண்பையர் தம் பெருமானும்...பயின்று - சீகாழியர்களது தலைவராகிய ஆளுடைய பிள்ளையாரும் தாங்குதற் கரிதாய் மேன்மேலும் ஓங்கிவளரும் பெரிய காதற் பண்பினையுடைய சிறுத்தொண்டருடன் பயின்று இனிதமர்ந்தருளி; மற்றவரை... சிறப்பித்து- அவரை உலகம் போற்றும் திருப்பதிகத்திலே பாராட்டி வைத்தருளிச் சிறப்புச் செய்து;

3683. சண்பையர்தம் பெருமானுந் தாங்கிய பெருங்காதற்
பண்புடைய சிறுத்தொண்ட **ருடன் பயின்று மற்றவை**
மண்பரவுந் **திருப்பதிகத் தினில்வைத்துச் சிறப்பித்து**
நண்பருளி யெழுந்தருளத் தாமினிது நயப்புற்றார். 24

நண்பருளி எழுந்தருள - தமது நண்பராகும் பேற்றினையும் அவருக்குத் தந்தருளி எழுந்தருள; தாம் இனிது நயப்புற்றார்-தாம் இன்பத்துடனே பெருவிருப்பமும் பொருந்த அமர்ந்தருளினார்.

(வி-ரை) தாங்கரிய பெருங்காதற் பண்பு - முன் 3671 - 3672 - 3673 பாட்டுக்களில் சிவன் அடியார்கள்பால் இவர்கொண்ட பெருங்காதலின் உறைப்பு உரைக்கப்பட்டது; சிவன் கழலில் அன்பு "பள்ளமடை யாயென்றும் பயின்று வரும் பண்பும்" முன் (3663) உரைக்கப்பட்டது; பிள்ளையார் வருகை கேட்டு எதிர்கொண்டு வரவேற்று அழைத்து வந்த பண்பு முன் "பெருகியஞானம் பெற்ற பிள்ளையா ரெழுந்தருளும் பெருமை கேட்டுத், திருமருவு செங்காட்டங் குடிநின்றுஞ் சிறுத்தொண்ட **ரோடிச் சென்றங்,** குருகுமனங் களிசிறப்ப எதிர் கொண்டு தம்பதியுட் கொண்டு புக்கார்" (2366) என்பதாதியாக உரைக்கப்பட்டதும் காண்க.

உடன் பயின்று - இஃது அணைந்தோர் தன்மை குறித்தது. "அன்பரொடு மரீஇ" (போதம். 12).

மண்பரவும் - மண் - மண்ணுலகத்தவர்; புண்ணியப் பேற்றினால் இப் புவனியில் வந்து பிறந்து சிவநெறி வந்தொழுகுவோர்களே இத்திருப்பதிகங்களைப் பரவி உய்யும் திறத்தவ ராவர் என்பது; ஏனை விண்ணவரும் பிறரும் அறிந்து பரவும் ஆற்றலிலர்; **மண்** - அதில் வாழும் நன்மக்களுக்கு வந்தது - ஆகுபெயர். **பரவும்** - போற்றும்; போற்றியுய்யும்.

திருப்பதிகத்தினில் வைத்து - இது பெரும்பேறு. பிள்ளையாரது திருவாக்கினில் வரும் பேற்றினாலே தாவரங்களாகிய பனைகளும் பிறவி நீங்கி வீடு பெறுவன; எலும்பும் பெண்ணாகுவது என்பனவாதி எண்ணிறந்த அருளிப்பாடுகளை இங்கு நினைவு கூர்க. "பொடிநுகருஞ் **சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்,** கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே" "**சீராளன் சிறுத் தொண்டன்** செங்காட்டங் குடிமேய, பேராளன்" என்பன வாதியாக வரும் திருப்பதிகங்கள் காண்க. இறைவர், இனி வயிரவராய் வெளிவந்து இவர்க்குச் செய்ய நின்ற பேரருளும் அச்சரித நிகழ்ச்சியில் வெளிப்படக் காணும் சீராள தேவரது சிறப்பும் திருவருட் குறிப்பினால் இத்திருப்பதிகங்களுள் முற்குறிப்பாகப் பெறப்பட வைத்தருளிய திறமும் கண்டு கொள்க.

நண்பருளி - தமது நண்பர் என்னப்படும் பெருமையை அவர்க்கு அருளிச் செய்து - ஈந்து; இத்திறத்தினை நம்பியாண்டார் நம்பிகள் ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியுள் வைத்து "விரும்பும் புதல்வனை மெய்யறிந் தாக்கிய வின்னமிர்தம், அரும்பும் புனற்சடை யாயுண் டருளென் றடிபணிந்த, **இரும்பின் சுடர்க்களிற்றான்** சிறுத் தொண்டனை

வயிரவர் வருகை

3684. இத்தன்மை நிகழுநா **ளிவர்திருத்தொண் டிருங்கயிலை**
அத்தர்திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய வவருடைய
மெய்த்தன்மை யன்புநுகர்ந் தருளுதற்கு விடையவர்தாஞ்
சித்தநிகழ் **வயிரவராய்த்** திருமலைநின் றணைகின்றார், 25

யேத்துதிரேற், சுரும்பின் மலர்த்தமி ழாகரன் பாதத் தொடர் வெளிதே"—(72) என்று போற்றிய திறமும் காண்க. "உணர்ச்சி தான் நட்பாங் கிழமை தரும்" (குறள்). தம் திருவடிக்கடியாராய் ஒழுகிய சிறுத்தொண்டருக்கு "நண்பர்" என்ற பெருமை ஈந்தருளியது எந்தம் பரமசாரியரது பெருங்கருணைத் திறம்.

இனிது நயப்புற்றார் - பிள்ளையாரது திறங்களை எப்போதும் எண்ணி விரும்பியின்புற்று இருந்தனர். திருமருக னகரில் மீண்டும் சென்று பிள்ளையாரைப் பணிந்தழைத்ததுவும் (2384—2385), திருப்புகலூரில் மீண்டும் சென்று அவர் திருவடிகளைப் பணிந்து உடனுறைந்து "திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளிய நாடி" (2421) யிருந்ததும், பிறவும் இங்கு நினைவு கூர்தற்பாலன. இவை முன் விரிக்கப்பட்டமையின் இவ்வாறு சுருங்கக் குறித்தருளினர். *24*

3684. **(இ-ள்)** இத்தன்மை...அணைய - இத்தன்மையில் நிகழும் இவரது திருத்தொண்டு பெரிய கயிலை மலையில் எழுந்தருளிய இறைவரது திருவடியிணைகளின் கீழே சென்று அணைய; விடையவர் தாம் - இடபத்தையுடைய அவ்விறைவர் தாமே; அவருடைய...அருளுதற்கு - அவருடைய மெய்யாந் தன்மையினையுடைய அன்பினை நுகர்ந்து அருள் புரிவதன் பொருட்டு; சித்தமகிழ்... அணைகின்றார் - மனமகிழ்வுடைய வயிரவத் திருக்கோலத்துடனே திருமலையினின்றும் எழுந்தருளி அணைவாராகி,

விடையவர்- அணைகின்றாராய் (3684), பரப்பி (3685), மலர் தோன்ற (3686), திகழ்ந்திலங்க (8687), புடைசிறக்க (3688), வடந்திகழ (3689), விளங்க, (3690), தயங்க (3691), ஒலிப்ப (3692), பொலிய, தழைப்ப, சூட (3693), எறிப்ப, ஏத்த சேர்ந்தார் (3694) என இவற்றைக் கூட்டி முடித்துக் கொள்க.

இவற்றால் சிறுத்தொண்டரது அன்பினை நுகர்ந்து அவருக்கு அருள் செய்யும் பொருட்டாக இறைவர் திருக்கயிலையினின்றும் வயிரவ சங்கமத் திருவேடத்துடன் அதற்குரிய வேடம் பூண்டு திருச்செங்காட்டங்குடி சேர்ந்த பண்பு விரிக்கப்பட்டது; **தலைமுதல் அடிவரை** வருணனையாக அவரது திருவேடத் தியல்பும் பொலிவும் ஆசிரியர் கண்டு நாமும் வழிபட்டுய்யும் பொருட்டுக் காட்டி யருளுகின்றார்.

(வி-ரை) திருத்தொண்டு...அணைய - என்றது திருவடிக்கேற்ப முற்றி விளைய என்றதாம்; திருவடியின் வியாபக நிறைவுக்குள்ளாகச் செறிய.

மெய்த்தன்மை அன்பு நுகர்ந்து அருளுதற்கு - மெய்த் தன்மை - என்றும் எவ்விடத்தும் எதனாலும் மாறாத ஒருபடித்தாகிய சத்தாம் தன்மை; **அன்பு நுகர்ந்து** -

3685. மடல்கொண்ட மணியிதழி **நெடுஞ்சடையை** வனப்பெய்தக்
கடல்மண்டி முகந்தெழுந்த காளமே கச்சுருள்போற்
றொடர்பங்கி சுருண்டிருண்டு தூறிநெறித் தசைந்துசெறி
படர் துஞ்சின் **கருங்குஞ்சி கொந்தளமா** கப்பரப்பி, 26

அன்பினுக்குள்ளே தாம் விரும்பி எழுந்தருளியிருந்து; "அன்பே சிவமாவது", "அன்பே சிவமாய்" (திருமந்). **அருளுதல்** - அருள்புரிதல்;

திருமலை - திருக்கயிலைமலை; திருமலைச் சருக்கம் பார்க்க.

சித்தநிகழ் வயிரவராய் - சித்த நிகழ்தலாவது அருள் புரியத் திருவுளங்கொள்ளுதல்; **வயிரவர்** - வயிரவம் என்னும் அகச் சமயத்தின் கொள்கை பூண்ட சங்கமர்; மாவிரதம், காபாலம், வைரவம் முதலியவை காண்க. வயிரவ சங்கமர் என்னாது வயிரவர் என்றே கூறியது அடியவரை ஆண்டானாகவே கூறும் வழக்குப் பற்றியும், இங்கு உண்மை பற்றியும் வந்தது; ***சித்தநிகழ்*** - அடியவர் சித்தத்தே சிந்திக்க நிகழும் என்றலுமாம். 25

3685. **(இ-ள்)** மடல்கொண்ட...சடையை - இதழ்கள் பொருந்திய கொன்றை மலர்களைச் சூடிய நீண்ட சடையினையே; கடல் மண்டி...சுருள்போல் - கருங்கடலிற் கூடி நீரினை மொண்டு மேலெழுந்த கருமேகத்தினது சுருள்போல்; தொடர்பங்கி...கொந்தளமாக - தொடர்ந்து நீண்ட தலைமயிர் சுருண்டு காடடர்ந்து நெறிப்பும் அசைவும் உடையதாய்ச் செறிந்து படரும் வரிசையுடைய கருங்குஞ்சிக் கொத்துப்போல (ஆக்கி); வனப்பெய்த - அழகுபட; பரப்பி முடித்து,

(வி-ரை) சடையைக், காளமேகச் சுருள்போல், பங்கி-கருங்குஞ்சி - கொந்தளமாகப் பரப்பி எனக் கூட்டுக; இறைவர் தமது சிவந்த நீண்ட சடையினையே கருமேகச் சுருள்போல ஆக்கி, அதனையே கரிய நீண்ட செறிந்த தலைமயிராக வரிசை பெற்ற கொத்தாகப் பரப்பி முடித்து என்க. ஏகாரமும் ஆக்கச் சொல்லும் தொக்கன.

ஈண்டு, இது முதல் திருவடிக்காட்சி வருமளவும் கூறும் திருக்கோலங்கள் எல்லாம் இறைவர் தம் உண்மைத் திருக்கோலத்தாலேயே, அந்தந்த அங்கங்களில் பூணும் பொருள்களையே கொண்டு, எழுந்தருளினர் எனவும், ஆனல் அவற்றை உலகர் அறியா வகையில் வயிரவச் சங்கமத்திருவேடத்திற் கேற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டு வந்தருளினர் எனவும் காரணங்காட்டும் அழகு கண்டு களிக்க.

இதழி - கொன்றை; **இதழி நெடுஞ்சடையை** - கொன்றை சூடிய நீண்ட சிவந்த சடையினையே; பிரிநிலை ஏகாரம் விரிக்க; இவ்வாறே மேல் வருவனவற்றிலும் கொள்க.

கடல்...போல் - மண்டுதல் - உண்ணுதல்; **காளமேகம்** - கரியமேகம்; கருமையைச் சிவப்பாக்கி; **பங்கி...குஞ்சி.** நீண்ட சடையினையே நீண்ட பங்கிக் கருங் குஞ்சியாக்கிப் பரப்பி என்க; **குஞ்சி** - ஆண் மக்கள் தலைமயிர்; **பங்கி-** (சுருள்) மயிர்; **சுருண்டு - இரண்டு - தூறி - நெறிந்து - அசைந்து - செறி** - சுருண்டிருத்தல் - கருத்தல் - தூறுபோலக் காடடர்ந்திருத்தல்; கருமணலின் அலைகளைப்போல நெறித்தல், அசைவுடைத்தாதல், அடர்ந்திருத்தல் என்ற இவை பங்கியின் அழகிய இயல்பும் காட்சியுமாம்.

3686. அஞ்சனமஞ் சனஞ்செய்த தனையவணி கிளர்பம்பை
மஞ்சினிடை யிடையெழுந்த **வானமீன் பரப்பென்ன**
புஞ்சநிறை வண்டுதேன் சுரும்புபுடை பரந்தார்ப்பத்
துஞ்சினுனித் தனிப்பரப்புந் **தும்பைநறு மலர்**தோன்ற, 27

படர்துஞ்சின் - படர்ந்த வரிசைகளின் நிலையினையுடைய; மேல் "துஞ்சினுனி" (3686) என்பதும் காண்க. **கொந்தளம்**-கொத்து. கேசாதிபாதம் என்பதற் கேற்பக் கேசத்தை முதலிற் கூறி எடுத்தருளினர்.

அடர்துஞ்சின்—என்பதும் பாடம். **26**

3686. **(இ-ள்)** அஞ்சனம்...பம்பை-மைக்குழம்பை முழுக்குச் செய்தது போல அழகுமிகும் கருமயிராகிய;மஞ்சினிடை....பரப்பென்ன - மேகத்தி னிடையிடையே எழுந்து தோன்றும் விண்மீன்களின் பரப்புப்போல; புஞ்சநிறை...ஆர்ப்ப - திரட்சியாக வரிசையாய்ப் பலவகை வண்டின் கூட்டங்கள் பக்கங்களிற் சூழ்ந்து ஒலிக்க; துஞ்சின் நுனி - நிலைபெறும் வரிசைகளின் விளிம்பிலே; தனி...தோன்ற - தனித்தனி பரப்பிய மணமுடைய தும்பை மலர்கள் விளங்க,

(வி-ரை) மஞ்சினிடையிடை எழுந்த - வான மீன் பரப்பென்ன - பம்பை-துஞ்சின் நுனிப் பரப்பும்-தும்பைமலர் தோன்ற என்று கூட்டுக. தும்பை மலர் - வானமீன் போலத் தோன்ற என்பது மெய்யும் வினையும் பற்றி எழுந்த உவமம்.

பம்பைமஞ்சி னிடையினை - பம்பை - சுருண்ட விரிந்த மயிர். முன் "காளமேகச் சுருள்போல்" (3685) என்றதனைத் தொடர்ந்து கொண்டவாறு; பம்பை மேகமாக, அம்மேகத்தின் இடைவெளியில் தோன்றும் விண்மீன்கள்போல் தும்பை மலர்கள் விளங்கின. **மஞ்சு**-மேகம்; இங்குக் கருமேகம் குறித்தது.

புஞ்சம்-திரட்சி; **வண்டு - தேன் சுரும்பு**- கருவண்டும் தேன்வண்டும் பொறி வண்டும் என வண்டுகளின் வகை; வண்டுகள் கூட்டமாக மொய்க்கும் நிலை குறித்தபடி.

தும்பை நறுமலர் - தும்பை இறைவர்க் குகந்த மலர்களுள் ஒன்று; **நறிய** - என்றதனால் புதுமையும் தேனுடைமையும் பெறப்படும். **27**

3687. **(இ-ள்)** அருகு...என்னை - திருமுடியின் ஒருபக்கத்திற் செருகும் அந்தி மாலையில் காணும் இளம்பிறையினையே ஒளிபெருகும் சிறிய முழுமதிபோல ஆக்கி மீண்டும் (நெற்றியிலே) தரித்தது போல; விரிசுடர்...திருநுதல் மேல் - விரியும் ஒளி பொருந்திய செம்பவளச் சோதியின் கதிர்களை விரித்து வீசும் விளக்கமுடைய சுடர்த்திருநெற்றியின் மேலே; திருநீற்று...இலங்க - திரு நீற்றின் ஒற்றைப் பொட்டு ஒளிவீசி விளங்க,

(வி-ரை) அருகு - நெற்றியின் அருகு; **பிறை தன்னை மதியாக்கிச் சாத்திய தென்னத் - திருநீற்றுப் பொட்டு - இலங்க** - பிறையினையே சிறிய முழுமதி யாக்கிச் சாத்தியது போல விளங்கிற்று வெள்ளிய திருநீற்றுத் தனிப் பொட்டு என்பது. **பெருகு சிறு** - முரண் அணி.

3687. அருகுதிரு முடிச்செருகு **மந்தியிளம் பிறைதன்னைப்**
பெருகுசிறு மதியாக்கிப் பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்செம் பவளவொளி வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேற் **றிருநீற்றுத் தனிப்பொட்டுத்** திகழ்ந்திலங்க, 28

3688. **வெவ்வருக்கன்** மண்டலமும் விளங்குமதி மண்டலமும்
அவ்வனற்செய் மண்டலமும் **முடனணைந்த தென**வழகை
வவ்வுதிருக் **காதின்**மணிக் குழைச்**சங்கு** வளைத்ததனுட்
செவ்வரத்த மலர்செறித்த **திருத்தோடு** புடைசிறக்க, 29

பெருகு சிறுமதி ஆக்கி - இளம்பிறையினையே நிறைமதியாக்கியதனால் சிறுமதியாயிற்று என்பது குறிப்பு. சிறிய வடிவுடைய நிறைமதி. **பெருகு** - வளரும்.

பெயர்த்து - நெற்றி அருகில் முடிவில் இருந்ததனை இடம் பெயர்த்து நெற்றியிற் சாத்தியது போல: திரும்பவும்.

விரிசுடர்...நுதல் - ஒளி வீசும் செவ்விய நிறமுடைய திருநெற்றி; **பவளவொளி** - திருமேனியின் செவ்வொளி; **வெயில்** - ஒளி; **திருநீற்றுத் தனிப்பொட்டு** - வயிரவ சமயிகள் திருநீற்றினை நெற்றி விரவ முழுமையும் பூசாது பெரிதாய் ஒற்றை நீற்றுப் பொட்டு மட்டும் வைப்பர்; **தனிப்பொட்டு** - ஒப்பற்ற பொட்டுமாம்; திருநீற்றுப் பொட்டின் **விளக்கத்துக்கு மதியை** உவமித்தது பற்றித் "தோற்று மன்னுயிர்கட்கெலாந் தூய்மையே, சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய், ஆற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண், ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா" *(308)*; "திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதி,லிரண்டு நில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோல்" *(1498)* என்றனவும், பிறவும் காண்க. 28

3688. **(இ-ள்)** வெவ்வருக்கன்...என - வெப்பமுடைய சூரிய மண்டலமும் விளக்கமுடைய சந்திர மண்டலமும் அந்த அக்கினி மண்டமும் ஒருங்கு கூடியதுபோல; அழகை...சிறக்க - அழகைத் தன்வயமாக்கும் திருச்செவியிலே அழகிய சங்கக் குழையினை வளைத்து அணிந்து, அதனுள்ளே செவ்வரத்தம் பூவைச் செறித்த திருத்தோடு இருபக்கங்களிலும் சிறந்து விளங்க;

(வி-ரை) அவ் அருக்கன் மண்டலமும்...உடன் அணைந்ததென - அருக்கனும் மதியும் அனலும் உடன் அணைந்ததென என்னாது அவ்வவர்களின் **மண்டலங்களும் உடன் அணைந்தது** என்றார்; அவை மூன்றும் கண்களாய் மேலே விளங்குகின்றன; அக்குறிப்பினை முன்பாட்டில் **மதி - விரிசுடர் - வெயில்** - என்று கூறியருளினாராதலின், அவ்வொளிகள் விளங்குதற் கிருப்பிடமாயுள்ள மண்டலங்கள் கீழே மூலம் போலக் **காது**களில் அமைந்தனபோல என்று கவி நயம்படக் கூறியருளிய திறம் காணத்தக்கது; **மண்டலம்** - தோற்றத்திற் கிடம்; புவனம் (பு-தோன்றுதல்;) என்பதும் குறிப்பு.

3689. களங்கொள்விட மறைத்தருளக் கடலமுதக் **குமிழிநிரைத்**
துளங்கொளி**வெண் டிரட்கோவைத் தூயவட** மணிந்ததென
உளங்கொள்பவர் கரைந்துடலு முயிருமுரு கப்பெருக
விளங்குதிருக் **கழுத்தினிடை வெண்பளிங்கின் வடந்திகழ,** 30

வெவ் அருக்கன் - விளங்குமதி - அவ் அனல் - வெம்மை - சூடு; **விளங்குதல்** - முன்பாட்டில் விளக்கம் கூறியது குறிப்பு;**அவ்வனல்** -முன்னர்க் கூறிய; **விரி... சுடர்த் திருநுதல்** என்று விரித்ததனாற் குறிப்புப் பெற்ற அந்த என முன்னறிசுட்டு; முன் பாட்டில் திருநீற்றுப் பொட்டின் தூய ஒளிக்கு உவமிக்கப்படும் **பெருமை** பெறுதல் குறிக்க **விளங்கும்** என்றார் என்றலுமாம். **உடனணைந்ததென** - உடன் அணையலாகாத இவை மூன்றும் உடனியைந்ததென என்று அபூத உவமைத்திறம் வெளிப்படக் கூறியவாறு.

அழகை வவ்வுதல் - உலகில் உள்ள அழகெல்லாந் தாமே கவர்ந்து கொள்ளுதல்; **காது** - காதுகள்.

சங்குக் குழை - என்க. **மணி** - மணிபோன்ற அழகிய;"சங்கக் குழையார் செவியா! வழகா!" (தேவா), சங்கு மணிக் குழையை வளைத்து.

செவ்வரத்த மலர் செறித்த - குழையினுள் மலரைப் புகுத்திய; **செறித்தல்** திணித்தல்.

காதும்-அதனுள் **குழையும்** அதனுள் **மலரும்** ஆக விளங்குதல் அருக்கன் மண்டலம், மதிமண்டலம், அனல் மண்டலம் மூன்றும் முறையே பட ஒருங்கு தோன்றுதல் போல உள்ளன என்பது; **மண்டலம்** வளைவும் குறிப்பது. மணிக்குழை சங்கு என்று வேறுபிரித்துக் கூறுவாருமுளர். **வளைத்து**-துளைத்து வளைவு பட ஆக்கி; **புடை** - இருபக்கங்களிலும். 29

3689. **(இ-ள்)** களங்கொள் விடம்...அணிந்ததென-திருக்கண்டத்தில் கொண்ட விடத்தினை மறைத்தருளும் பொருட்டுப் பாற்கடலில் எழுந்த அமுதத்தின் குமிழ்களின் வரிசையாகிய வாய்ந்த ஒளியினையுடைய வெள்ளிய திரட்சிகளின் தூயவடத்தினை அணிந்தாற்போல; உளங்கொள்பவர்...உருக - மனத்தினுள்ளே சிந்திப்பவர்களுடைய உடலும் உயிரும் உருகும்படி; பெருக...வடந்திகழ - மிக விளங்குகின்ற திருக்கழுத்திலே வெள்ளிய பளிங்குமாலை விளங்க.

(வி-ரை) களம் கொள்விடம் - ஏற்றுக்கொண்டு கழுத்திலே வைத்தருளிய விடம்.

மறைத்தருள - தாமாந்தன்மை அறிய வாராதவாறு கழுத்தின் விடத்தினை மறைத்தல் வேண்டப்பட்டது என்பது; **திருநீலகண்டம்** - சிவனுக்குரிய சிறப்பு.

விடம் மறைத்தருள அமுதக் குமிழிநிரை - விடத்தின் தன்மை போக்க அமுதம் வைத்து என்ற நயமும் காண்க; அமுதமே விடத்தினை மறைக்கவல்லது என்பது. **அமுதம்** வெண்மை நிறமாதலின் கரிய விடத்தினை மறைக்கும் என்றதுமாம். **களம்** - கயரி என்ற குறிப்புமுடையது: **கடல்** - பாற்கடல்; நிரை - நிரையாகிய; **துளங்கு ஒலி** - விண்மீன் போல விட்டிமைக்கும் ஒளி.

3687. அருகுதிரு முடிச்செருகு **மந்தியிளம் பிறைதன்னைப்**
பெருகுசிறு மதியாக்கிப் பெயர்த்துச்சாத் தியதென்ன
விரிசுடர்ச்செம் பவளவொளி வெயில்விரிக்கும் விளங்குசுடர்த்
திருநுதன்மேற் **றிருநீற்றுத் தனிப்பொட்டுத்** திகழ்ந்திலங்க, 28

3688. **வெவ்வருக்கன்** மண்டலமும் விளங்குமதி மண்டலமும்
அவ்வனற்செய் மண்டலமும் **முடனணைந்த தென**வழகை
வவ்வுதிருக் **காதின்**மணிக் **குழைச்சங்கு** வளைத்ததனுட்
செவ்வரத்த மலர்செறித்த **திருத்தோடு** புடைசிறக்க, 29

பெருகு சிறுமதி ஆக்கி - இளம்பிறையினையே நிறைமதியாக்கியதனுல் சிறுமதியாயிற்று என்பது குறிப்பு. சிறிய வடிவுடைய நிறைமதி. **பெருகு** - வளரும்.

பெயர்த்து - நெற்றி அருகில் முடிவில் இருந்ததனை இடம் பெயர்த்து நெற்றியிற் சாத்தியது போல: திரும்பவும்.

விரிசுடர்...நுதல் - ஒளி வீசும் செவ்விய நிறமுடைய திருநெற்றி; **வெயில்** - ஒளி; **பவளவொளி** - திருமேனியின் செவ்வொளி; **திருநீற்றுத் தனிப்பொட்டு** - வயிரவ சமயிகள் திருநீற்றினை நெற்றி விரவ முழுமையும் பூசாது பெரிதாய் ஒற்றை நீற்றுப் பொட்டு மட்டும் வைப்பர்; **தனிப்பொட்டு** - ஒப்பற்ற பொட்டுமாம்; திருநீற்றுப் பொட்டின் **விளக்கத்துக்கு மதியை** உவமித்தது பற்றித் "தோற்று மன்னுயிர்கட்கெலாந் தூய்மையே, சாற்று மின்பமுந் தண்மையுந் தந்துபோய், ஆற்ற வண்டமெ லாம்பரந் தண்ணல்வெண், ணீற்றின் பேரொளி போன்றது நீணிலா" *(308)*; "திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதி,லிரண்டு நில வின்கடல்க ளொன்ருகி யணைந்தனபோல்" *(1498)* என்றனவும், பிறவும் காண்க. *28*

3688. **(இ-ள்)** வெவ்வருக்கன்...என - வெப்பமுடைய சூரிய மண்டலமும் விளக்கமுடைய சந்திர மண்டலமும் அந்த அக்கினி மண்டமும் ஒருங்கு கூடியதுபோல; அழகை...சிறக்க - அழகைத் தன்வயமாக்கும் திருச்செவியிலே அழகிய சங்கக் குழையினை வளைத்து அணிந்து, அதனுள்ளே செவ்வரத்தம் பூவைச் செறித்த திருத்தோடு இருபக்கங்களிலும் சிறந்து விளங்க;

(வி-ரை) அவ் அருக்கன் மண்டலமும்...உடன் அணைந்ததென - அருக்கனும் மதியும் அனலும் உடன் அணைந்ததென என்னுது அவ்வவர்களின் **மண்டலங்களும் உடன் அணைந்தது** என்ருர்; அவை மூன்றும் கண்களாய் மேலே விளங்குகின்றன; அக்குறிப்பினை முன்பாட்டில் **மதி - விரிசுடர் - வெயில்** - என்று கூறியருளிஞராதலின், அவ்வொளிகள் விளங்குதற் கிருப்பிடமாயுள்ள மண்டலங்கள் கீழே மூலம் போலக் **காது**களில் அமைந்தனபோல என்று கவி நயம்படக் கூறியருளிய திறம் காணத்தக்கது; **மண்டலம்** - தோற்றத்திற் கிடம்; புவனம் (பு-தோன்றதல்;) என்பதும் குறிப்பு.

3689. களங்கொள்விட மறைத்தருளக் கடல**முதக் குமிழிநிரைத்**
துளங்கொளி**வெண் டிரட்கோவைத் தூயவட** மணிந்ததென
உளங்கொள்பவர் கரைந்துடலு முயிருமுரு கப்பெருக
விளங்குதிருக் **கழுத்தினிடை வெண்பளிங்கின் வடந்திகழ.** 30

வெவ் அருக்கன் - விளங்குமதி - அவ் அனல் - வெம்மை - சூடு; **விளங்குதல்** - முன்பாட்டில் விளக்கம் கூறியது குறிப்பு;**அவ்வனல்** -முன்னர்க் கூறிய; **விரி... சுடர்த் திருநுதல்** என்று விரித்ததனுற் குறிப்புப் பெற்ற அந்த என முன்னறிசுட்டு; முன் பாட்டில் திருநீற்றுப் பொட்டின் தூய ஒளிக்கு உவமிக்கப்படும் **பெருமை** பெறுதல் குறிக்க **விளங்கும்** என்றார் என்றலுமாம். **உடனணைந்ததென** - உடன் அணையலாகாத இவை மூன்றும் உடனியைந்ததென என்று அபூத உவமைத்திறம் வெளிப்படக் கூறியவாறு.

அழகை வவ்வுதல் - உலகில் உள்ள அழகெல்லாந் தாமே கவர்ந்து கொள்ளுதல்; **காது** - காதுகள்.

சங்குக் குழை - என்க. **மணி** - மணிபோன்ற அழகிய;"சங்கக் குழையார் செவியா! வழகா!" (தேவா), சங்கு மணிக் குழையை வளைத்து.

செவ்வரத்த மலர் செறித்த - குழையினுள் மலரைப் புகுத்திய; **செறித்தல்** திணித்தல்.

காதும்-அதனுள் **குழையும்** அதனுள் **மலரும்** ஆக விளங்குதல் அருக்கன் மண்டலம், மதிமண்டலம், அனல் மண்டலம் மூன்றும் முறையே பட ஒருங்கு தோன்றுதல் போல உள்ளன என்பது; **மண்டலம்** வளைவும் குறிப்பது. மணிக்குழை சங்கு என்று வேறுபிரித்துக் கூறுவாருமுளர். **வளைத்து**-துளைத்து வளைவு பட ஆக்கி; **புடை** - இருபக்கங்களிலும். 29

3689. **(இ-ள்)** களங்கொள் விடம்...அணிந்ததென-திருக்கண்டத்தில் கொண்ட விடத்தினை மறைத்தருளும் பொருட்டுப் பாற்கடலில் எழுந்த அமுதத்தின் குமிழ்களின் வரிசையாகிய வாய்ந்த ஒளியினையுடைய வெள்ளிய திரட்சிகளின் தூயவடத்தினை அணிந்தாற்போல; உளங்கொள்பவர்...உருக - மனத்தினுள்ளே சிந்திப்பவர்களுடைய உடலும் உயிரும் உருகும்படி; பெருக...வடந்திகழ - மிக விளங்குகின்ற திருக்கழுத்திலே வெள்ளிய பளிங்குமாலை விளங்க.

(வி-ரை) களம் கொள்விடம் - ஏற்றுக்கொண்டு கழுத்திலே வைத்தருளிய விடம்.

மறைத்தருள - தாமாந்தன்மை அறிய வாராதவாறு கழுத்தின் விடத்தினை மறைத்தல் வேண்டப்பட்டது என்பது; **திருநீலகண்டம்** - சிவனுக்குரிய சிறப்பு.

விடம் மறைத்தருள அமுதக் குமிழிநிரை - விடத்தின் தன்மை போக்க அமுதம் வைத்து என்ற நயமும் காண்க; அமுதமே விடத்தினை மறைக்கவல்லது என்பது. **அமுதம்** வெண்மை நிறமாதலின் கரிய விடத்தினை மறைக்கும் என்றதுமாம். **களம்** - கயரி என்ற குறிப்புமுடையது: **கடல்** - பாற்கடல்; நிரை - நிரையாகிய; **துளங்கு ஒலி** - விண்மீன் போல விட்டிமைக்கும் ஒளி.

3690. செம்பரிதி கடலளித்த **செக்க**ரொளி யினையந்திப்
பம்பு**மிருள் செறிபொழுது** படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய **கரியுரிவை கொண்டுசமைத்** ததுசாத்தும்
அம்பவளத்திருமேனிக் கஞ்சுகத்தி னணிவிளங்க, 31

உளங்கொள்பவர் - மனத்தில் வைத்துத் தியானிப்பவர்; **கரைந்து** - அன்பினால் நெக்குருகி.

பளிங்கின் வடம் - பெரும்பளிங்கு மணிகளாலாகிய கழுத்து வடம் கழுத்தில் உள்ள விடத்தினை மறைக்க அமுதக் குமிழிகளின் வரிசைக் கோவை போல விளங்க என்பது உவமை; உருவம் பற்றி வந்த உவமை. தற்குறிப்பேற்றமும் காண்க. **பெருக** - பெருகும்படி ; பெரிதும். **30**

3690. **(இ - ள்)** செம்பரிதி...ஒளியினை - சிவந்த சூரியன் கடலிற் குளிக்கும்போது தரும் செவ்வான ஒளியினை; அந்தி..சூழ்வதென - அந்தி முதிர வரும் இருளடர்ந்த இராப்போது படர்ந்து வந்து சூழ்வது போல; அம்பவளத் திருமேனி - அழகிய பவளம் போன்ற திருமேனியின் மேல்; தம் பழைய...சாத்தும் - தமது பழைய யானைத்தோற் போர்வையினையே கொண்டு ஆக்கியதனையே சாத்தும்; கஞ்சுகத்தின் அணிவிளங்க - சட்டையினது அழகு விளங்க,

(வி-ரை) செக்கர் ஒளியினை - இருள் செறிபொழுது - சூழ்வது எனப் பவளத் திருமேனியிற் - கரியுரிவைக் கஞ்சுகம் - விளங்க என்பது உவமை. உருவுபற்றி வந்தது. "சினப்பரி யழல்மீது போர்த்திடும் அஞ்சனப்புகை" (கந்தபு).

செக்கர் ஒளி - செவ்வான ஒளி; **செம்பரிதி கடல் அளித்த** என்பது மாலையிற் கடலில் விழும்போது சூரியன் சிவந்து விளங்குதலும், அவன்கடலில் விழுதலாற் பரப்ப வருவது செவ்வான வொளியாதலும் குறித்தது.

இருள் செறி பொழுது - இருண்ட இரவுக் காலம்; செவ்வானத்தை இருள் இரவு சூழ்ந்து மறைப்பது போலக் கரிய கஞ்சுகம் செம்மேனியை மறைக்க என்றார். **பொழுது** - இரவு; காலக் கூறு; பெயர்; **படர்தல்** - வருதலும் விரித்தலுமாம்; **சூழ்தல்** - சுற்றி மறைத்தல்.

பழைய கரி உரிவை கொண்டு சமைத்தது-கஞ்சுகம் - பழைய கரிய யானைத் தோலினையே கரிய கஞ்சுகமாக ஆக்கினர் என்பது; **கொண்டு** - சாதனமாகக் கொண்டு; **சமைத்தல்** - உளதாக்குதல். "மாமணிக் கஞ்சுகம்" (கந்தபு). கஞ்சுகம் - உடை.

கடல் குளித்த—என்பது பாடம். **31**

3691. **(இ-ள்)** மிக்கெழும்...விளைந்ததென - அன்பர்களிடத்தே மேல் ஓங்கி எழுகின்ற அன்பானது தம் திருமேனியின்மேல் அங்கங்கும் உருவமைந்து விளைந்தது போல; அக்குமணியால்...காற்சரியும் - எலும்பு மணிகளாலமைத்த வெற்றி மாலையும், ஆரங்களும், கோவைகளும், கைக்கு அணிகின்ற அழகிய கங்கணங்களும், திருவரையில் அணியும்

3691. **மிக்கெழுமன் பர்களன்பு திருமேனி விளைந்ததென**
அக்குமணி யாற்**சன்ன வீரமுமா ரமும்**வடமுங்
கைக்கணிகொள் **வளைச்சரியு** மரைக்**கடிசூத்** திரச்சரியுந்
தக்கதிருக் **காற்சரியுஞ்** சாத்தியவொண் சுடர்தயங்க, 32

அரைஞாணும்,திருக்கால்களில் அணியும் தக்க காலணிகளும்; சாத்திய ஒண்சுடர் தயங்க - அணிந்த ஒன்றிய சோதி விளங்க,

(வி-ரை) சன்ன வீரம் - ஆரம் - வடம் - கைச்சரி - கடி சூத்திரச்சரி - காற்சரி என்ற இவைகள் திருமேனியில் முறையே கழுத்து - மார்பு - கை - அரை - கால் என்ற இடங்களில் விளங்குதல் அன்பர்களின் மிக்கு எழும் அன்பே விளைந்து திருமேனியில் அங்கங்கும் அழகுபட வெளிப்பட்டன என்பது போல என்க.

அன்பு திருமேனி விளைதலாவது - அன்பே அவ்வாறு அணிகலன்களாக விளைந்து திருமேனியில் அவ்வவ் விடங்களில் விளங்குதல்; வெள்ளிய அக்குமணிகளால் ஆக்கப்பட்டு விளங்குதலின் அன்புக்கு உவமித்தார்; அன்புக்குத் தூய வெண்மை நிறம் உவமை. மேலும் திருநீலகண்ட நாயனுர், திருக்கழுத்தில் அழுந்திய அன்பு வைத்தமைபோல ஒவ்வோர் அடியார்கள் திருமேனியில் ஒவ்வோர் அங்கங்களில் அழுந்திய அன்பு செலுத்தி அவ்வவற்றை அணி செய்வார்களாதலின் அன்பே - திருமேனி விளைந்ததென என்றுர் என்றலும் குறிப்பு.

சன்ன வீரம் - வெற்றிமாலை;வீரசங்கிலியுமாம்; சன்ன வீரம் - ஆரம் - வடம் இவை மார்பில் அணிவது; **வடம்** - கண்மணிகளாலாகிய கொத்துத் தாழ்வடம். **ஆரம்** - நீண்டு ஒற்றையாகத் தொங்கும் முத்து மாலை.

சரி-சரித்தல்-நிலைத்தல் என்ற பொருட் காரணத்தால் அவ்வவ் வணிகளுக்கு வந்தது.

கைச்சரி - கையில் சரிப்பது;இயங்குவது; **கடி சூத்திரம்** - அரைஞாண்; **கடிசூத்திர அரைச்சரி** - என்க. **கடி** - அரை; **கைவளைச்சரி** - கடகம்; தொடி.

ஒண்சுடர் - ஒள்ளிய தூய வெண்மை நிறம்.

தயங்குதல் - விளங்குதல்; மிகுதலுமாம். 32

3692. **(இ-ள்)** பொருவில்...கண்டு - ஒப்பற்ற திருத்தொண்டராகிய சிறுத் தொண்டருக்காக இவ்வுலகத்திலே வந்து அருள்புரியும் பெருகிய அருளின் தன்மையைக் கண்டு; பிரானருளே...அறைவனபோல் - இறைவரது திருவருளினையே விரும்பிப் போற்றுவீர்! வளரும் அன்பின் வழியே நிற்கக் கடவீர்! என்று வேதங்கள் பூண்டு சாற்றுவனபோல; திருவடிமேல்...ஒலிப்ப-திருவடியின் மேல் திருச்சிலம்பு எல்லாத் திசையும் செல்லும்படி ஒலி செய்ய,

(வி-ரை) திருவடிமேல் திருச்சிலம்பு ஒலித்தல் "அருளின் திறங் கண்டு பேணுவீர்

3690. செம்பரிதி கடலளித்த **செக்க**ரொளி யினையந்திப்
பம்பு**மிருள் செறிபொழுது** படர்ந்தணைந்து சூழ்வதெனத்
தம்பழைய **கரியுரிவை கொண்டுசமைத்** ததுசாத்தும்
அம்பவளத்திருமேனிக் கஞ்சுகத்தி னணிவிளங்க, 31

உளங்கொள்பவர் - மனத்தில் வைத்துத் தியானிப்பவர்; **கரைந்து** - அன்பினால் நெக்குருகி.

பளிங்கின் வடம் - பெரும்பளிங்கு மணிகளாலாகிய கழுத்து வடம் கழுத்தில் உள்ள விடத்தினை மறைக்க அமுதக் குமிழிகளின் வரிசைக் கோவை போல விளங்க என்பது உவமை; உருவம் பற்றி வந்த உவமை. தற்குறிப்பேற்றமும் காண்க. **பெருக** - பெருகும்படி; பெரிதும். **30**

3690. **(இ - ள்)** செம்பரிதி...ஒளியினை - சிவந்த சூரியன் கடலிற் குளிக்கும்போது தரும் செவ்வான ஒளியினை; அந்தி..சூழ்வதென - அந்தி முதிர வரும் இருளடர்ந்த இராப்போது படர்ந்து வந்து சூழ்வது போல; அம்பவளத் திருமேனி - அழகிய பவளம் போன்ற திருமேனியின் மேல்; தம் பழைய...சாத்தும் - தமது பழைய யானைத்தோற் போர்வையினையே கொண்டு ஆக்கியதனையே சாத்தும்; கஞ்சுகத்தின் அணிவிளங்க - சட்டையினது அழகு விளங்க,

(வி-ரை) செக்கர் ஒளியினை - இருள் செறிபொழுது - சூழ்வது எனப் பவளத் திருமேனியிற் - கரியுரிவைக் கஞ்சுகம் - விளங்க என்பது உவமை. உருவுபற்றி வந்தது. "சினப்பரி யழல்மீது போர்த்திடும் அஞ்சனப்புகை" (கந்தபு).

செக்கர் ஒளி - செவ்வான ஒளி; **செம்பரிதி கடல் அளித்த** என்பது மாலையிற் கடலில் விழும்போது சூரியன் சிவந்து விளங்குதலும், அவன்கடலில் விழுதலாற் பரப்ப வருவது செவ்வான வொளியாதலும் குறித்தது.

இருள் செறி பொழுது - இருண்ட இரவுக் காலம்; செவ்வானத்தை இருள் இரவு சூழ்ந்து மறைப்பது போலக் கரிய கஞ்சுகம் செம்மேனியை மறைக்க என்றார். **பொழுது** - இரவு; காலக் கூறு; பெயர்; **படர்தல்** - வருதலும் விரித்தலுமாம்; **சூழ்தல்** - சுற்றி மறைத்தல்.

பழைய கரி உரிவை கொண்டு சமைத்தது-கஞ்சுகம் - பழைய கரிய யானைத் தோலினையே கரிய கஞ்சுகமாக ஆக்கினர் என்பது; **கொண்டு** - சாதனமாகக் கொண்டு; **சமைத்தல்** - உளதாக்குதல். "மாமணிக் கஞ்சுகம்" (கந்தபு). கஞ்சுகம் - உடை.

கடல் குளித்த—என்பது பாடம். **31**

3691. **(இ-ள்)** மிக்கெழும்...விளைந்ததென - அன்பர்களிடத்தே மேல் ஓங்கி எழுகின்ற அன்பானது தம் திருமேனியின்மேல் அங்கங்கும் உருவமைந்து விளைந்தது போல; அக்குமணியால்...காற்சரியும் - எலும்பு மணிகளாலமைத்த வெற்றி மாலையும், ஆரங்களும், கோவைகளும், கைக்கு அணிகின்ற அழகிய கங்கணங்களும், திருவரையில் அணியும்

3691. மிக்கெழுமன் **பர்களன்பு திருமேனி விளைந்ததென**
அக்குமணி யாற்**சன்ன வீரமுமா ரமும்**வடமுங்
கைக்கணிகொள் **வளைச்சரியு** மரைக்**கடிசூத்** திரச்சரியுந்
தக்கதிருக் **காற்சரியுஞ்** சாத்தியவொண் சுடர்தயங்க, 32

அரைஞாணும்,திருக்கால்களில் அணியும் தக்க காலணிகளும்; சாத்திய ஒண்சுடர் தயங்க - அணிந்த ஒன்றிய சோதி விளங்க,

(வி-ரை) சன்ன வீரம் - ஆரம் - வடம் - கைச்சரி - கடி சூத்திரச்சரி - காற்சரி என்ற இவைகள் திருமேனியில் முறையே கழுத்து - மார்பு - கை - அரை - கால் என்ற இடங்களில் விளங்குதல் அன்பர்களின் மிக்கு எழும் அன்பே விளைந்து திருமேனியில் அங்கங்கும் அழகுபட வெளிப்பட்டன என்பது போல என்க.

அன்பு திருமேனி விளைதலாவது - அன்பே அவ்வாறு அணிகலன்களாக விளைந்து திருமேனியில் அவ்வவ் விடங்களில் விளங்குதல்; வெள்ளிய அக்குமணிகளால் ஆக்கப்பட்டு விளங்குதலின் அன்புக்கு உவமித்தார்; அன்புக்குத் தூய வெண்மை நிறம் உவமை. மேலும் திருநீலகண்ட நாயனுர், திருக்கழுத்தில் அழுந்திய அன்பு வைத்தமைபோல ஒவ்வோர் அடியார்கள் திருமேனியில் ஒவ்வோர் அங்கங்களில் அழுந்திய அன்பு செலுத்தி அவ்வவற்றை அணி செய்வார்களாதலின் அன்பே - திருமேனி விளைந்ததென என்றூர் என்றலும் குறிப்பு.

சன்ன வீரம் - வெற்றிமாலை;வீரசங்கிலியுமாம்; சன்ன வீரம் - ஆரம் - வடம் இவை மார்பில் அணிவது; **வடம்** - கண்மணிகளாலாகிய கொத்துத் தாழ்வடம். **ஆரம்** - நீண்டு ஒற்றையாகத் தொங்கும் முத்து மாலை.

சரி-சரித்தல்-நிலைத்தல் என்ற பொருட் காரணத்தால் அவ்வவ் வணிகளுக்கு வந்தது.

கைச்சரி - கையில் சரிப்பது;இயங்குவது; **கடி சூத்திரம்** - அரைஞாண்; **கடிசூத்திர அரைச்சரி** - என்க. **கடி** - அரை; **கைவளைச்சரி** - கடகம்; தொடி.

ஒண்சுடர் - ஒள்ளிய தூய வெண்மை நிறம்.

தயங்குதல் - விளங்குதல்; மிகுதலுமாம். *32*

3692. **(இ-ள்)** பொருவில்...கண்டு - ஒப்பற்ற திருத்தொண்டராகிய சிறுத் தொண்டருக்காக இவ்வுலகத்திலே வந்து அருள்புரியும் பெருகிய அருளின் தன்மையைக் கண்டு; பிரானருளே...அறைவனபோல் - இறைவரது திருவருளினையே விரும்பிப் போற்றுவீர்! வளரும் அன்பின் வழியே நிற்கக் கடவீர்! என்று வேதங்கள் பூண்டு சாற்றுவனபோல; திருவடிமேல்...ஒலிப்ப-திருவடியின் மேல் திருச்சிலம்பு எல்லாத் திசையும் செல்லும்படி ஒலி செய்ய,

(வி-ரை) திருவடிமேல் திருச்சிலம்பு ஒலித்தல் "அருளின் திறங் கண்டு பேணுவீர்

3692. "**பொருவிறிருத்** தொண்டர்க்குப் **புவிமேல்வந்** தருள்புரியும்
பெருகருளின் றிறங்கண்டு பிரானருளே பேணுவீர்!
வரும்பின் வழிநிற்பீ!" **றெனமறைபூண் டறைவனபோற்**
றிருவடிமேற் றிருச்சிலம்பு திசைமுழுதுஞ் செலவொலிப்ப, 33

3693. அயன்**கபா லந்தரித்த விடத்திருக்கை** யாலணைத்த
வயங்கொளி**மூ விலைச்சூல** மணித்திருத்தோண் மிசைப்பொலியத்
தயங்குசுடர் **வலத்திருக்கைத் தமருகத்தி** னொலிதழைப்பப்
பயன்றவத்தாற் பெறும்புவியும் **பாததா மரைசூட,** 34

வழிநிற்பீர்" என மறை அறைவனபோல - என உவமித்தார்; **ஒலித்தல்** - வினைபற்றி எழுந்த உவமை.

திருச்சிலம்பு - வேதமே சிலம்பு; நாதமே சிலம்பு என்பர்; **சிலம்புதல்** - (ஒலித்தல்) காரணமாகப் போந்த பெயர். "மறைச்சிலம்பு புலம்ப நடஞ் செய்."

"பொருவில்...வழிநிற்பீர்!" என - இது மறைகள் அறையும் ஒலியின் பொருள்.

வந்தருள் புரியும் திறம் - கண்டு - வந்து - திருக்கயிலையினின்றும் புவிமேல் வந்து; **கண்டு** - நேரே கண்ணுற் கண்டும் சிந்தித்துணர்ந்தும்.

பேணுவீர்!-பேணுவீர்களே!; வினைப் பெயர்; விளி; **கடவீர்!** - கடவீராக!

அறைவனபோல் சிலம்பு திசை முழுதும் செலஒலிப்ப - "இறைஞ்சுங் காலமிதுவென் றங்கவரை அழைத்தா லென்ன... அடித்தாமரைமேற் சிலம் பொலிப்ப" *(3488)*.

திசை முழுதும் செல - எவ்வுலகத்தாரும் அறிந்துய்ய.

மறை...அறைவன - மறைகளின் உபதேச உள்ளுறையு மிதுவே யாதலும் காண்க. "ஆரண நூபுரஞ் சிலம்பு மடிகள்." *33*

3693. **(இ-ள்)** அயன்... பொலிய - பிரம கபாலத்தை ஏந்திய இடது திருக்கையினாலே அணைத்த விளங்கும் ஒளியினையுடைய மூவிலைச் சூலமானது அழகிய திருத்தோளின் மேலே விளங்க; தயங்கு... தழைப்ப-மலிந்து - வீசும் ஒளியினை உடைய வலத் திருக்கையிலே பிடித்த தமருகத்தின் ஒலி ஓங்க; பயன்... சூட - முன்னைத் தவத்தினாலே பயன் பெறும் நிலமும் பாத தாமரைகளைத் தாங்க,

(வி-ரை) இத்திருப்பாட்டாற் றிருக்கைக ளிரண்டன் நிலை போற்றப்பட்டது.

அயன்...இடத்திருக்கை - முன்னர்ப் பிரம கபாலத்தைத் தாங்கிய இடது திருக்கை. **கை அணைத்த** - கையினால் அணைக்கப் பெற்ற; பிறவினை.

3694. அருள் பொழியுந் திருமுகத்தி லணிமுறுவ னிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப
பொருள் பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவியேத்தத்
தெருள்பொழிவண் டமிழ்நாட்டுச் செங்காட்டங் குடிசேர்ந்தார். 35

அணைத்த சூலம் தோள்மிசை பொலிய - என்க. இடது திருக்கையால் அணைக்கப்பெற்ற சூலம் தோள்மேல் சாத்தி விளங்கப்பெற்றது.

வலத்திருக்கை...தழைப்ப - வலது திருக்கையில் ஏந்திய தமருகத்தின் ஒலி ஓங்கிப் பரவ; **தழைப்ப** என்றார் "தோற்றம் துடியதனில்" (உண்மை விளக்கம்) என்றபடி துடியின் ஒலியே ஒடுங்கிய உலகம் மீளத் தோன்றித் தழைத்தற்குக் காரணமாயிருக்கும் குறிப்புப் பெறுதற்கு; **தமருகம்** - உடுக்கை;துடி; "இருதலை யொருநா இயங்க" வரும் ஓர் வகை இயம்; **தயங்குசுடர்** - விளங்கும் ஒளி; இது வலத்திருக்கையின் விளக்கம்; தமருகத்துக்கும் ஆம். "கடுத்தாடுங் கரநலத்திற் றமருகமும்" (நம்பி).

தவத்தாற் பயன்பெறும் புவியும் என்க. இறைவரின் இத்திருக்கோலத்திற் பாதங்களைச் சூடி நிற்றற்கு நிலம் முன்னைத் தவம் செய்திருந்தமையால் அதன்பயனாக அப்பேறு பெற்றது. **பெறும்** - பெறும் வகையினாலே; மண் சுமந்த திருவிளையாடலில் "நிலமகள் தீண்டித் திளைப்பெய்த" என்று கூறும் கருத்தை இங்கு நினைவு கூர்க. 34

3694. **(இ-ள்)** அருள்...எறிப்ப - அருள் பொழிகின்ற திருமுகத்திலே அழகிய புன்முறுவலானது நிலவு போன்ற குளிர்ந்த ஒளி வீச; மருள்...வெயிலெறிப்ப - மயக்கம் பெருகச் செய்யும் மும்மலங்களின் வலியினையும் போக்கும் கூரிய சூலம் வெயில் ஒளி வீச; பொருள்...ஏத்த-உண்மைப் பொருளை விளக்கும் பெருகுகின்ற அன்பு மேன்மேலும் தழைத்து ஓங்கி இவ்வுலகம் ஏத்த; தெருள்...சேர்ந்தார் - அறிவு விளக்கம் செய்யும் வளப்பமுடைய தமிழ்நாட்டில் உள்ள திருச்செங்காட்டங் குடியினிற் சேர்ந்தருளினார்.

இப்பதினொரு திருப்பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) முறுவல் நிலவு - புன்முறுவலாகிய நிலவொளி (சந்திரிகை) வீச; **முறுவல்** - பல் வரிசையின் தோற்றம் சிறிது வெளிப்படும் நிலை.

மருள் பொழி மும்மலம் - பொழிதல் - மிகுதியாகத் தருதல்;மழைபொழிதல் என்புழிப்போல்; **மருள்** - மயக்கம்; "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும், மருள்"(குறள்); கன்மமலம் நியதியின் வழியாய் வருவதாயினும் அதன் இச்சை நீங்கிய தீர்வின்போது வீடுபேறு வரவுள்ளதாதலானும்,"முன்னமே யான்மா வின்றன் மும்மலத் தொன்ற தாகிக், கன்மமு மூலங் காட்டிக் காமிய மலமாய் நிற்கும்" (சித்தி. 2-39) என்பவாதலானும் கன்மமும் சிதைக்கப்படுதல் வேண்டும். மாயாமலம் இரவிற் கைவிளக்குப்போல் விளக்கத்தின் பொருட்டு இறைவராற் றரப்படினும், "வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே" (சித்தி. 2-53) என வருதலின் அதுவும் சிதைக்கப்படுதல் வேண்டும்; "ஆன்மா வின்றன் அறிவொடு தொழிலை யார்த்து நின்று...

என்று மஞ்ஞானங் காட்டும் ஆணவம்" (சித்தி. 2-80) ஆதலின் அதனைச் சிதைத்தாலன்றி உயிர் வீடுபெறுது; ஆதலின் **மருள் பொழி மும்மலம் சிதைக்கும்** என்றார்; "சாருமல மூன்று மற (803) என்றதும், ஆண்டும், பிருண்டு முரைத்தவையும் காண்க.

மும்மலம் சிதைக்கும் வடிச்சூலம் - மும்மலங்களையும் சிதைத்தல் எஃகிலைச் சூல மேந்திய கருத்து என்பதாம். **சூலம்-** சிவனது படை - பாசுபதம் - என்க. சிவமந்திரங்களுள் அஸ்திர மந்திரம் பற்றி வகுக்கப்படும் நிலைகள் எல்லாம் கருதுக.

பொருள் பொழியும் பெருகு அன்பு - பொருள் - உண்மைப் பொருள்; **பொழிதல்-** தருதல்; உண்மைப் பொருளைப் பெறுதற்குக் காரணமாகி மேன் மேல் பெருகும் அன்பு; அன்பே பொருளெனப்படும் தன்மையினை அடைதற்குக் காரணமாய் நிற்பது.

பொருள்...புவி ஏத்த - இச்சரித விளைவின் பயனுகை உலகம் அன்பின் பயனைக் கண்டு ஏத்தி உண்மைப் பொருளை அடைய முயல்வதாம் என்றபடி; "மக்களே மணந்த தாரம்" என்பவாதியாக வரும் பொருள்களைப் பற்றிக் கொண்டு கழிந்து பிறவியில் வீழும் மாக்கள் மருள்பொழி மும்மலம் சிதைக்கப்பெறுதலாற் பொருள் பொழியும் பெருகன்பு தழைத்தோங்கப் பெறுவர் என்று தொடர்புபெறக் கூறியதும் காண்க. இச்சரிதங் கண்ட அறியா மாக்கள் இதனல் உலகன்புக் கிடையூறுகும் என்று பழிப்பர்; அஃதுண்மை யன்று; இதனல் பொருள் பொழியும் பெருகு அன்பு தழைத்தோங்குதலே சிறந்த பயனும் என்பதாம். "உருநாட்டும் செயல்காமனெழிய" (3660) என்று தொடக்கத்துக் கூறிய குறிப்பினையும் காண்க.

தெருள்பொழி வண்டமிழ் - அறிவு மிகக் கொடுக்கும் வள்ளன்மையுடைய **தமிழ்** என்று தமிழ்ச் சிறப்புக் கூறியவாறு; **தெருளாவது -** சிவனடிமைத் திறம் பற்றிய அறிவு விளக்கம். "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" (970).

தமிழ் நாட்டுச் செங்காட்டங்குடி - "செந்தமி ழோர்கள் பரவி யேத்துஞ் சீர்கொள் செங்காட்டங்குடி" (தேவா. பிள். நட்டபாடை - திருமருகலும், செங்காட்டங்குடியும்-9) என்ற கருத்துக் காண்க. "உத்தரா பதியுள்ளோம்" (3699); "வடதேசத்தோம்" (3702) என்பதனல் வடநாட்டினின்றும் வருவாராய்ப் போந்த இறைவர் தென்றமிழ் நாட்டிற் சேர்ந்தார் என்ற குறிப்பும் காண்க. அன்பும் அதனுற் சிவத்தன்மையும் பெருக நிகழ்வது தமிழ் நாட்டின் சிறப்பாம் என்பது; (46).

இவற்றின் சுருக்கம்: வயிரவக் கோலங்கொண்டு போந்த திறமாவது; தமது சிவந்து நீண்ட சடையினையே மேகம்போல அடர்ந்த கரிய தலைமயிராக்கியது போலக் கருங்குஞ்சி பரப்பி முடித்தனர்; அப்பரப்பினுள் இடையிடைவைத்த தும்பை மலர்கள் அக்கருமேகத்தி னிடையிடை விளங்கும் வீண்மீன் போன்றன; முடியிற் செருகிய பிறையினையே சிறு முழுமதியாக்கிச் சாத்தியது போல நெற்றியில் தனித் திருநீற்றுப் பொட்டுத் திகழ்ந்தது; சூரிய மண்டலம், சந்திர மண்டலம், தீ மண்டலம் என்ற மூன்றும் ஒருங்கே அணைந்தது போல இரு காதுகளும் சங்கக் குழையும் அவற்றுட் செறித்த செவ்வரத்த மலரும் தோன்றின;விடமுடைய திருநீலகண்டத்தின் கொடுமையினை மறைக்க அமுதக் குமிழிகளைக் கோவை செய்து கழுத்தில் தரித்தது போல அதிற் பூண்ட வெண்பளிங்கின் வடம்

விளங்கிற்று; அத்திருமேனியிற் போர்த்த கரிய கஞ்சுகம் அத் திருமேனியின் அந்திச் செக்கர் ஒளியினை இருட்பொழுது சூழ்வது போன்றிருந்தது; பழைய கரியுரிவைப் போர்வை போலத் தோன்றிற்று அக்கஞ்சுகம்; சன்ன வீரம் - ஆரம் - வடம் - கைச்சரி - அரைச்சரி - காற்சரி இவைகள் அன்பர்களது மிக்கு எழும் அன்பு திருமேனியில் அவ்வவ்விடங்களில் விளைந்தது போல விளங்கின: திருக்காலிற் பூண்ட மறைச்சிலம்பு ஒலித்தல், "பெருமான் திருத்தொண்டர்க்குப் புவிமேல் வந்தருள் புரியும் பெருகு அருளின் திறங்கண்டு பேணி அன்பின்வழி நிற்பீராக" என உலகினர்க்கு எடுத்துச் சொல்வனபோன்றது; இடது திருக்கையால் அணைத்த திரிசூலத்தினைத் தோளிற் சார்த்தி விளங்க, வலத்திருக் கையிலே கொண்ட தமருகத்தின் ஒலி தழைத்தது; பாதத்தாமரை நிலம் பொருந்தியது; திருமுகத்தில் முறுவல் நிலவெறித்தது; சூலம் வெயில் வீசிற்று; இது கண்டு புவி ஏத்தத் தமிழ் நாட்டுச் செங்காட்டங்குடியிற் சேர்ந்தருளினர் - என்பதாம்.

இத்திருக்கோலங் காட்டி உலகுய்ய இறைவர் எழுந்தருளி வருதலால், அதனைத் திருமுடி முதல் திருவடி வரை தாம் கண்டு வழிபட்டு நாமும் காணக்காட்டி உய்யச் செய்தல் ஆசிரியரது தெய்வ அருட் கவிநலம். "...இறைவன் கிளர்கின்ற காலமிக் காலம்..." "காலமுன் டாகவே காதல்செய் துய்மின்...பிரான்றன் னடியவர்க்கு, மூலபண் டாரம் வழங்குகின் றுன்வந்து முந்துமினே" (5) என்ற திருவாசகங்கள் (பாண்டிப்பதிகம்) ஈண்டு நினைவு கூர்தற் பாலன.

இத்திருக்கோலம் இறைவர் தம் மிச்சையாற் பூண்டது. பசுக்களாகிய ஏனைத் தேவர்களும், மக்கள் முதலிய உயிர்களும் கொள்வன போன்று மாயையிற் றோன்றி வரும் உடல் போல்வதன்று.

"குறித்ததொன் றுக மாட்டாக் குறைவில ஞதை லானும்
நெறிப்பட நிறைந்த ஞானத் தொழிலுடை நிலைமை யானும்
வெறுப்பொடு விருப்புத் தன்பான் மேவுத லிலாமை யானும்
நிறுத்திடு நினைந்த மேனி நின்மல னருளி ஞலே" - (சித்தி. 1. 65.)

என்பதும், (சிவப்பிரகாசம் - 15)ம் பார்க்க. திருவிளையாடற் புராணத்துள் இறைவன் மேற்கொண்ட பற்பல திருமேனிகளையும் இவ்வாறே கண்டுகொள்க. இவ்வாறு வருவன அவ்வப் பெருந் தொண்டர்க் கருள்புரிய வெளிப்பட்டுத் தோன்றிவரினும், (அவர் காரணமாக) தவப்பயனுலே அவ்வவ் விடங்களில் அவ்வக்காலத்து நிகழும் ஏனை மக்களும் காணவருவனவாம். "கண்டாரைச் சிறுத்தொண்டர் மனை வினவி" (3695) என மேல்வருவது காண்க; ஆயின் இவ்வாறு அவர் திருமேனி புறக் கண்ணுற் காண வரும்போது, அவர் இறைவர் தாமாந் தன்மை அறியவாராது அத்திருக்கோலம் மறைந்த பின்னரே அறிய நிற்பது இதன் தன்மையாதலும் கண்டுகொள்க. 35

3695. **(இ-ள்)** தண்டாதது... போலு - தணியாததாகிய ஒரு பெரும் பசியினை யுடையவர் போல; கண்டாரை... அணைந்து - கண்டார்களை நோக்கிச் சிறுத்தொண்டரது மனையைக் கேட்டறிந்து விரைவில் அங்கு வந்தணைந்து; "தொண்டனுர்க்கு... உள்ளாரோ?" என்ன - சிவபெருமானது தொண்டரானுர்க்கு எந்நாளிலும் சோறு அளிக்கின்ற

3695. **தண்டாத தொருவேட்கைப் பசியுடையார் தமைப்போலக்**
கண்டாரைச் சிறுத்தொண்டர் மனைவினவிக் கடிதணைந்து
"தொண்டனார்க் கெந்நாளுஞ் சோறளிக்குந் திருத்தொண்டர்
வண்டார்பூந் தாராரிம் **மனைக்குள்ளா ரோ?**"வென்ன, 36

3696. "**வந்தணைந்து** வினவுவார் மாதவரே யா"மென்று
சந்தனமாந் தையலார் முன்வந்து தாள்வணங்கி
"அந்தமில்சீ ரடியாரைத் தேடியவர் புறத்தணைந்தார்;
எந்தமையா **ளுடையவரே! யகத்துளெழுந் தருளு**"மென, 37

திருத்தொண்டராகிய, வண்டுகள் மொய்க்கும் பூமாலையினை அணிந்த சிறுத்தொண்டனார் இம்மனைக்கண் உள்ளாரோ? என்று கேட்க,

(வி-ரை) தண்டாதது ஒரு வேட்கை - பெரும்பசி; **தண்டாத** - தணியாத; **ஒரு**-ஒப்பற்ற; அளவற்ற.

போல - பசியில்லாராயினும் பசியுடையார் போல நடித்தனர் என்க. சோறிடுவர் மனை வினவும் தொழில் பற்றி வந்த உவமம்.

கண்டாரை -தம்மாற் காணப்பட்டார்களை; தம்மைக் கண்டுவினவும் பேறு பெற்றாரை என்றலுமாம்.

தொண்டனார்க்கு...திருத்தொண்டர்-இவ்வாறு அழைத்துக்கூறுதல் அவரது தன்மையறிந்த நிலையும், சோறு வேட்ட தமது பசியினையும் புலப்படுத்தலாம்.

இம்மனைக் குள்ளாரோ? - இங்கு மனையில் இருக்கின்றாரோ? என்று வினவியபடி. **மனைக்கு** - மனையில்; நான்கனுருபு ஏழன்பொருட்டு; உருபு மயக்கம்.

சோறளிக்குஞ் சிறுத்தொண்டர்—என்பதும் பாடம். 36

3696. (இ-ள்) வந்தணைந்து...வணங்கி - வந்து சேர்ந்து கேட்கின்றவர் மாதவராகிய அடியவரே யாவர் என்று உட்கொண்டு சந்தனத்தாதியார் என்ற அம்மையார் முன்னால் வந்து அவரது திருவடிகளை வணங்கி; அந்தமில்...அருளும் என - எல்லையில்லாச் சிறப்பினையுடைய அடியவர்களைத் தேடும் பொருட்டு அவர் புறத்தே சென்றனர்; எம்மையாளுடைய முதல்வரே அகத்துள்ளே எழுந்தருளுவீராக என்று சொல்ல,

(வி-ரை) வந்து...என்று -இஃது அவர் வினவுதல் கேட்டுத் தாதியார் கொண்ட கருத்து; **மாதவர்** - அடியார்; **தவம்** - சிவனடிமைத் திறத்தின்நிலை; சிவவழிபாடு; மாதினை ஒரு கூறுடைய சிவனேயாம் என்ற குறிப்புமாம்.

சந்தனமாம் மையலார்- சந்தனத்தார் என்னும் பெயருடைய தாதியார் "சந்தனத்தாரெனும் தாதியார்" (3734); **முன்வந்து** - வெளியிலிருந்து உசாவி வந்தவர்களுக்கு விடை கூறி அறிவிப்பது முதலில் தாதியார் கடமை என்பது.

தாள் வணங்கி-அடியாரை வணங்கி விடை கூறும் மரபு.

3697. மடவரலை முகநோக்கி "**மாதரார் தாமிருந்த**
இடவகையிற் றனிபுகுதோ" மென்றருள வதுகேட்டு
"விடவகல்வார் போலிருந்தா" ரெனவெருவி **விரைந்துமனைக்**
கடனுடைய திருவெண்காட் டம்மைகடைத் தலையெய்தி, 38

அந்தமில் சீர் அடியாரைத் தேடி - அடியார் பெருமைகளை அக்குடும்பம் அறிந்து ஒழுகிய நிலை புலப்படக் கூறிய திறமும் மரபும் காண்க.

எந்தமை ஆளுடையவரே -இஃது அடியார்களிடத்து அவர் பத்தியுடன் ஒழுகும் நிலை காட்டியபடி; இங்கு வந்தவர் இறைவரே என்பதும், அவர் இத்தாதியாரை யுள்ளிட்டு இக்குடும்ப முழுமையும் அன்று ஆட்கொள்ள வந்தவர் என்பதும் உட்குறிப்புப் படத் தாதியார் வாக்கில் அவரை அறியாமலே போந்தவாறும் கண்டுகொள்க.

அகத்துள் எழுந்தருளும்-எம் அகம் (மனம்) நீங்காதுறையும் என்ற குறிப்பும் காண்க.

மாதவரேயோ வென்று—என்பதும் பாடம். 37

3697. **(இ-ள்)** மடவரலை...என்றருள - அவ்வம்மையாரைப் பார்த்துப் "பெண்கள் தாம் தனியே இருந்த இடத்தில் நாம் தனியே புகுத மாட்டோம்" என்று அருளிச் செய்ய; அதுகேட்டு... எய்தி - அதனைக் கேட்டு அவர் அவ்விடம் விட்டுச் சென்று விடுவார்போல இருந்தார் என அஞ்சி விரைந்து மனையின் கடமை முற்றும் உடையவராகிய திருவெண்காட்டு அம்மையார் உள்ளிருந்து மனையின் முன்கடையில் வந்து,

(வி-ரை) "மாதரார்...தனிபுகுதோம்"-இஃது சிறப்புடையதோர் உலகியல் நீதி: உலகர் பின்பற்றி ஒழுகத்தக்க பெருநீதியும் நாகரீகத் தன்மையுமாம்.

தனிபுகுதோம் -நம் அருட்சத்தியாகிய தேவியுடனும் திருமகனுருடனும் பின்னர் வரவுள்ளோம் என்பது குறிப்பு.

விட அகல்வார் போலிருந்தார் என வெருவி -விட - அவ்விடத்தை விட்டு நீங்கிவிட; **அகல்வார்** - வேறிடம் சென்று விடுவார்; **வெருவி** - அன்று அடியாரைக் காணாது தேடியிருந்த நிலையில் தாமாகவே போந்தவரையும் நழுவவிட நேருமோ என்று அஞ்சி; **விரைந்து -விரைவு-** இல்லறம் வழுவாதியற்றுதலின் ஆர்வம்; அவர் அகன்று விடும் முன்பே வரும் விரைவுமாம்.

மனைக்கடனுடைய - இல்லறப் பாரம் முழுமையும் தாமே கடமையாகப் பூண்ட; திருக்குறள் பார்க்க. "மனையறத்தின் வேராகி" (3676).

கடைத்தலை எய்தி - முற்றத்தின் முன்வாயிலில்;மனைப்புறம் போகாது இயல்பினுலே மனையினுள் இருந்து ஏவலர் மூலம் மனையின் நிகழ்ச்சிகளைச் செலுத்துவது, உயர்ந்த வாழ்க்கைத் திறமுடைய மனைக்கிழதியரது நிலைமை; இங்கு முன்கூறியபடி வெருவுதலால் அதனை நீக்கத் தாமே வெளிப்போந்தனர் என இச்செயலால் அவ்வில்லறத்தினும், அடியார் பணியில் வழுவாவகை வைத்த உறைப்புப் புலப்படுதல் காண்க.

மடவரல்-பெண்மை நாற்குணங்களுள் மடமை யுடையவள். 38

3698. "அம்பலவ ரடியாரை யமுதுசெய்விப் பாரிற்றைக்
கெம்பெருமா னியாவரையுங் கண்டிலர்தே டிப்போனார்;
வம்பெனநீ ரெழுந்தருளி வருந்திருவே டங்கண்டாற்
றம்பெரிய பேறென்றே மிகமகிழ்வ; ரினித்தாழார், 39

3699. "இப்பொழுதே வந்தணைவ ரெழுந்தருளி யிரு"மென்ன,
"ஒப்பில்மனை யறம்புரப்பீர்; ருத்தரா பதியுள்ளோஞ்;
செப்பருஞ்சீர்ச் சிறுத்தொண்டர் தமைக்காணச் சேர்ந்தனம்யாம்;
எப்பரிசு மவரொழிய விங்கிரோ" மென்றருளி, 40

3698. **(இ-ள்)** அம்பலவர் அடியாரை...போனார் -திருவம்பலமுடைய இறைவரடியார்களைத் திருவமுது செய்விக்கும் நியமமுடைய அவர், அந்நியம முடித்தற்கு, எமது பெருமானே! இன்று அடியார் எவரையும் காணாமையால் தேடிச் சென்றார்; வம்பென...மகிழ்வர் -புதிதாக நீர் எழுந்தருளி வரும் இத்திருவேடத்தினைக் கண்டால் தமது பெரும் பேறென்றே மிகவும் மகிழ்ச்சி யடைவர்; இனித் தாழார்-இனித் தாமதிக்க மாட்டார்,

(வி-ரை) இப்பாட்டு முழுதும், மேலும் வருவன, திருவெண்காட்டு நங்கையம்மையார் வயிரவ சங்கமரை நோக்கிக் கூறும் விண்ணப்பம்; அவரை அங்கு நின்றும் அகலாதிருக்கும் வகையாற் கூற வேண்டிய உயர்ந்த பொருளும்,சிறந்த ஏற்ற சொல்லாற்றலும் பொருந்திய உயர்குடிப் பண்பாடு கண்டுகொள்க. இப்பாட்டினில் "வளவ நின்புதல்வன்" (116) என்ற பாட்டினிற் போலச்சிறந்த மந்திரித் தன்மையாகிய அறிவு நுட்பமும் புலப்படுதல் காண்க.

அமுது செய்விப்பார் - இற்றைக்குக் கண்டிலர் போனார் - தேவரீர் விரும்பி வந்த காரியமே அவர் தேடிப் போயின காரியம் என்றது அவரது விருப்பத்தைக் கவரச் செப்பியபடி; **இற்றைக்கு யாவரையுங் கண்டிலர்** - இஃதோர் புதுமை என்றதனோடு உமது அருமைப்பாடு மிகுவதாம் என்றதும் குறிப்பு.

வம்பென - வம்பு - புதுமை; **வம்பென** - உலகியலினிலில்லாத வழக்கு என்ற குறிப்பும் காண்க. "வம்ப மாரியைக் காரென."

பெரிய பேறு - பெறுதற்கரிய பெரும் பேறு.

தாழார் - பயிரவர் அகன்று விடாமைக்குரிய காரணங் காட்டியபடி; இவ் வேளைக்குள் அறிந்திருப்பர் ஆதலின் தாழார் என்பது குறிப்பு. 39

3699. **(இ-ள்)** இப்பொழுதே...என்ன - இப்போதே விரைவில் வந்து அணைகுவர்; அவ்வளவும் தேவரீர் இங்கு எழுந்தருளி யிருக்கவேண்டும் என்று கூற; ஒப்பில் மனை...என்றருளி - ஒப்பற்ற இல்லறத்தை வழுவாது காத்து நடத்துகின்றவர்களே! வடதேசத்தில் உள்ளோம்; சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய சிறுத்தொண்டரைக் காணும்பொருட்டு இங்கு வந்து சேர்ந்தோம் யாம்; எவ்வகையாலும் அவர் இல்லாதபோது இங்கு இரோம் என்று அருளிச் செய்து,

3700. கண்ணுதலிற் காட்டாதார் "**கணபதீச் சரத்தின்கண்**
வண்ணமல ராத்தியின் கீழிருக்கின்றோம்; மற்றவர்தா
நண்ணினு ணுமிருந்த பரிசுரைப்பீ" ரென்றருளி
அண்ணலார் திருவாத்தி யணைந்தருளி யமர்ந்திருந்தார். 41

(வி-ரை) இப்பொழுதே வந்தணைவர் - "இனித் தாழார்" என முன்பாட்டிற் கூறியதனைத் தொடர்ந்து கூறியது அக்கருத்து.

ஒப்பில் மனையறம் புரப்பீர் - சரிதமேல் நிகழ்ச்சிக் குறிப்பு.

உத்தராபதி-வடதேயம். "வடதேசத்தோம்" (3702); "உத்தராபதியார்" என்று இக்கோயிலில் இம்மூர்த்தி இன்றும் வழங்கப்படுதல் காண்க.

காண - "அன்பு நுகர்ந் தருளுதற்கு" (3684); உலகத்தார்க்கு வெளிப்படக் காட்டும் பொருட்டுத் தாம் காண என்ற குறிப்பும் காண்க. "கண்டு காட்டலின்" (போதம்); அறியச் செய்ய - காட்ட என்னும் பொருட்டு.

எப்பரிசும்-நீவிர் கூறிய எக்காரணங் கொண்டும். **40**

3700. **(இ-ள்)** கண்ணுதலிற் காட்டாதார் - நுதற்கண்ணை மறைத்து வந்த அவர்; கணபதீச்சரத்தின்கண்... என்றருளி - கணபதீச்சரத்திலே அழகிய மலர்களை உடைய திருவாத்தியின் கீழே சென்று அமர்கின்றோம்; அவர் வந்தால் நாம் அங்கிருக்கும் தன்மையினைச் சொல்வீராக என்றருளிச் செய்து; அண்ணலார்...இருந்தார்-இறைவனார் திருவாத்தி மரத்தினடியிற் சேர்ந்தருளி விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

இந்த ஆறுபாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) கண்ணுதலிற் காட்டாதார்-நுதற் கண்ணை மறைத்து வந்த வயிரவ சங்கமக் கோலத்தர்.

இருக்கின்றோம்-இருப்போம்; தங்குவோம்; எதிர்காலம் நிகழ்காலமாய் வந்தது.

இருந்த - இருக்கும்; எதிர்காலம் இறந்தகாலப் பொருளில் வந்தது.

திருவாத்தி-இம்மரம் இன்றும் இக்கோயிலிற் காணவுள்ளதாம். அதன்கீழ் உத்தராபதியார் சந்நிதியும் உண்டு. இஃது ஆத்தியின் ஒருவகை. காட்டாத்தி என்பர்.

இந்த ஆறு பாட்டுக்களாலும், முன் பாட்டுக்களாலும் சிவனருளும் தசகாரியங்களுள் சிவரூபம், சிவதரிசனம் என்ற காரியங்கள் நிழ்ந்தமையும் குறிப்பு. **41**

3701. **(இ-ள்)** நீரார்...எய்தி - கங்கையினைச் சூடிய சடையவரது அடியார்களைத்தேடி எங்கும் காணப்பெறுமையால் சிறந்த தவத்தினையுடைய சிறுத்தொண்டர் மீட்டும் தமது செல்வம் பொருந்திய திருமனையினிடத்தே வந்து சேர்ந்து; ஆரா... அழிவெய்திட - அளவு பெறுத இன்ப மனைவியார்க்குச் சொல்லி வருந்த; அவரும்... பகர்ந்தார் - அவரும், உலகம் அன்பு கூரும் திருவேடம் பூண்ட ஒருவர் வந்த படியினை அவர்க்குச் சொன்னார்.

வேறு

3701. நீரார் சடையா ரடியாரை நேடி யெங்குங் காணுது
சீரார் தவத்துச் சிறுத்தொண்டர்மீண்டுஞ் செல்வ மனையெய்தி
ஆரா வின்ப மனைவியார்க் கியம்பி யழிவெய் திட, வவரும்
பாரா தரிக்குந் திருவேடத் தொருவர் வந்த படிபகர்ந்தார். 42

(வி-ரை) நேடி - தேடி; **எங்கும் நேடியும்** -என்று உம்மை விரிக்க.

காணுது - காணுமையால்; காரணப் பொருளில் வந்த வினையெச்சம்.

சீரார் தவத்து - அற்றை நாள் அதுவரை அடியாரைக் காணுமையும் தவமே என்பது குறிப்பு. என்னை? அடியவர் ஒருவரும் வாராது செய்தருளி இறைவர் தாமே வந்து அருள்புரிய எழுந்தருளப் பெற்றது இவரது பெருந்தவப் பயனும் என்பதாம்.

மீண்டும்...எய்தி - மீண்டும் என்றதனுல் முன்னரும் இவ்வாறு போவதும் மீள்வதுமாயினர் என்பது குறிப்பு. **செல்வமனை** - சிவனருட் செல்வம் நிறைந்த திருமனை; அரனுக்கும் அடியார்க்குமாக உலகியற் செல்வங்களும் அவ்வியல்பிலே நிறைந்த; மனமொழி மெய்களாகிய கரணங்களும் அருள்பற்றி நிறைந்த குறிப்புமாம்.

ஆரா இன்ப மனைவியார் - ஆர்தல் - நிறைதல்; **ஆரா** - நிறைவுபடாத - அளக்க லாகாத; **இன்பம்** - இன்பத்துக்குக் காரணமாகிய வயிரவச் சங்கமரை வரக் கண்டமையால் அளவில்லா மகிழ்ச்சி யடைந்திருந்த என்றுரைப்பாரு முண்டு.

அழிவெய்திட - அமுது செய்விக்க அற்றைக்கு அடியார் எவரையும் காணப் பெருமையால் மனமழிந்து வருந்த.

பார் ஆதரிக்கும் திருவேடம் - உலகிற் கண்டார் எவரும்அன்பு கூரும் அழகிய திருவேடம்; அத்திருவேடத்தின் அழகு முன்னர்க் கூறியவாற்று ணறிக. "உளங்கொள்பவர் கரைந்துடலு முயிருமுரு கப்பெருக" (3689) என்றும், "அருள்பொழியுந் திருமுகத்தி லணிமுறுவ னிலவெறிப்ப" "புவி ஏத்த" (3694) என்றும் வருவன காண்க. பாரிலுள்ளோரை ஆதரிக்கும் என்பதும் குறிப்பு.

திருவேடத்து ஒருவர் - திருவேடம் உலகர் காணத் தாங்கியவரே யன்றி, அவர் "ஒன்றே பதி" என மறைகள் பேசும் ஒருவராகிய சிவபெருமானே என்ற குறிப்பும் காண்க. **ஒருவரே** - தேற்றமும் பிரிநிலையும் படநின்ற ஏகாரம் தொக்கது. பலரின்றி ஓர் அடியவர் வந்தார் என்ற எண்ணுக் குறிப்புமாம்.

ஆரா அன்பின்—என்பதும் பாடம். 42

3702. (இ-ள்) அடியேன்... என்ன - அடியேன் உய்தி பெற்றேன்; அவர் எங்கு இருக்கின்ருர்! சொல்வாயாக! என்று கூற; அவர் மொழிவார் - அவ்வம்மையார் மொழிவாராகி; வடிசேர்...கணபதீச்சரத்து -வடித்த கூர்மையுடைய சூலத்தினையும் கபாலத்தினையும் ஏந்தியவர்; நாம் வடதேசத்திலுள்ளோம் என்ருர்; அவர் வளமையுடைய

3702. ``**அடியே னுய்ந்தே!** னெங்குற்று யுரையா``யென்ன,வவர்மொழிவார்
``வடிசேர் சூல கபாலத்தார்; ``வடதே சத்தோ``மென்றார்; வண்
டுடிசேர் கரத்துப் பயிரவர்யாஞ் சொல்ல விங்கு மிராதேபோய்க்
கடிசேர் திருவாத் தியினிழற்கீ ழிருந்தார் கணப தீச்சரத்து;`` 43

3703. என்று மனைவி யாரியம்ப, வெழுந்த விருப்பால் விரைந்தெய்திச்
சென்று கண்டு திருப்பாதம் பணிந்து நின்றார் சிறுத்தொண்டர்;
நின்ற தொண்டர் தமைநோக்கி ``**நீரோ பெரிய சிறுத்தொண்டர்?**``
என்று திருவாய் மலர்ந்தருள,விறைவர் தம்மைத்தொழுதுரைப்பார், 44

துடியினை ஒரு கையினிற் பிடித்த வயிரவச் சங்கமர்; நாங்கள் மனையில் எழுந்தருளி யிருக்கும்படி சொல்லி வேண்டவும் இங்குத் தங்கி இருக்காமல் சென்று கணபதீச் சரத்தில் மணமுடைய திருவாத்தியின் நிழற்கீழ் இருந்தார்.

(வி-ரை) அடியேன் உய்ந்தேன் - எனது நியமம் பிழையாது செய்யப் பெறுதலின் உய்தி பெற்றேன். இறந்தகாலம் விரைவு குறித்தது. சரித விளைவின் முற்குறிப்புமாம்.

வடிகொள்...கணபதீச்சரத்து - இத்துணையும் நிகழ்ந்தவற்றை யெல்லாம் சுருக்கி வடித்து அம்மையார் தமது நாயகனுர்க்குக் கூறியது. கவிநயமும் பொருளமைதியின் அழகும் கண்டு களிக்க.

வடிகொள் சூல கபாலத்தர் - ``வயங்கொளிமூ விலைச்சூலம்...பொலிய`` (*3693*) ``மருள்மொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப`` (*3694*) என்று கூறியபடி, அது காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது. சூலமும் கபாலமும் வயிரவ சங்கமர் என்பதனை அறிவிக்கும் அடையாளங்கள். முன்னர்த் ``**திருவேடத்து ஒருவர்**`` (*3701*) என்றது அவரது சிவனடியார் வேடத்தைப் பொதுமையி லுணர்த்தியது.

துடிசேர் கரத்துப் பயிரவர் என்றது அவர் இதுவரை வந்த அடியார்களின் வேறாய், அகப்புறச் சமயத்து வைரவ சமயச் சார்புடைய சங்கமர் என்று முடித்துக் கூறி அறிவித்த நயம் கண்டுகொள்க. ***43***

3703. (இ-ள்) என்று...இயம்ப -என்றிவ்வாறு மனைவியார் சொல்ல (அதுகேட்டு) எழுந்த... சிறுத்தொண்டர் - சிறுத்தொண்டர் மேன்மேல் எழுந்த விருப்பத்தினாலே விரைந்து சென்று சேர்ந்து அவரைக் கண்டு திருப்பாதங்களிற் பணிந்து நின்றார்; நின்ற.. திருவாய் மலர்ந்தருள-(அவ்வாறு) நின்ற தொண்டரை நோக்கி "நீர்தாமோ பெரியவராய்ச் சொல்லப்படுகின்ற சிறுத்தொண்டர் என்பவர்?" என்று திருவாய் மலர்ந்தருளி வினவியருள; இறைவர்... உரைப்பார்- (அவர்) இறைவரை வணங்கி உரைப்பாராகி,

(வி-ரை) எழுந்த...நின்றார் - அடியாரைக் காணுதற் கிருந்த பேரார்வத்தினை, **விரைந்து எய்திச் சென்று - கண்டு - பணிந்து - நின்றார்** என்று கூறிய செறிவும் விரைவும் பற்றி விளங்கிய கவிநயம் காண்க. **நின்றார் சிறுத்தொண்டர்** என்று எழுவாயைப் பின் வைத்த நிலையும் வினை முடிபின் விரைவு குறித்தது.

3704. **"பூதி யணிசா தனத்தவர்முன் போற்றப் போதே னாயிடினும்**
நாத னடியார் கருணையினா லருளிச் செய்வர் நானென்று;
கோதி லன்பர் தமையமுது செய்விப் பதற்குக் குலப்பதியிற்
காத லாலே தேடியுமுன் காணேன் றவத்தா லுமைக்கண்டேன்," 45

நின்ற - அவ்வாறு பணிந்து நின்ற.

நீரோ பெரிய சிறுத் தொண்டர்? - பெரிய - சிறு - முரண் தொடைச்சுவைபடக் கூறியது நயம்; **பெருமை** புகழாலும் அடிமைப் பண்பினாலுமாம்; அவற்றுள்ளே **சிறுத்தொண்டர்** - என்ற அவர் பெயரால் அறிந்தமை புலப்படக் கூறியபடி; "தொண்டானார்க் கெந்நாளுஞ் சோறளிக்கும் திருத்தொண்டர்" (3698) என முன்னர் அறிவித்தமையும் காண்க.

திருவாய் மலர்ந்தருள - பெரியவர்கள் முன், தாம் முன்னே பேசாது, அவர்கள் வாய்மொழியை எதிர்பார்த்து வணங்கி நிற்றலும், வந்த நிலையைக் குறிப்பாலுணர்த்தலும், கேட்டவற்றிற்கு அவ்வளவில் விடைமொழிந்து நிற்றலும் மரபு; இங்கு வயிரவர் வினவியபின்பே நாயனார் விடைமொழிந்து தமது கருத்தினை உணர்த்தும் நிலை கண்டுகொள்க. "கைதொழு தவருமுன் னிற்ப" (2556); ***44***

3704. (இ-ள்) பூதி...நான் என்று - திருநீற்றுத் தொண்டர்களின் முன் சென்று துதிக்கவும் நான் தகுதியில்லேனானாலும் சிவனடியார்கள் தங்கள் கருணையினால் அப்பெயருடையவன் நான் என்று சொல்லுவார்கள்; கோதில்...காணேன் - குற்றத்தினை இல்லையாகச் செய்யும் அடியார்களை அமுது செய்விப்பதற்காக இப்பழமையாகிய பதியில் பெருவிருப்பத்தாலே எங்கும் தேடியும் இதன்முன் கண்டிலேன்; தவத்தால் உ(ம்)மைக் கண்டேன் - முன்னைத் தவத்தின் பயனாலே உம்மைக் கண்டேன்;

(வி-ரை) பூதி அணி சாதனத்தவர்...போதேன்-பூதி அணி சாதனத்தவர் -திருநீறணிந்த சிவனடியார்கள்; **சாதனம்** - சிவசாதனம்; **அணி** -அணியும்; அழகிய என்றலுமாம். பூதியாகிய அணி - சாதனம்; **சாதனம்** - உருத்திராக்கம் என்று கொண்டு பூதியும் அணி-அக்கமணியும் என்று உம்மைத் தொகையாக உரைத்தலுமாம்; "திருநீறுஞ் சாதனமுங் கண்டா லுள்கி" (தேவா); **பூதி**-ஐசுவரியம்; விபூதி-திருநீறு; இவையே அடிமைத் தன்மையைக் காட்டும் திருஅடையாளங்கள் எனக்கொண்டு அவ்வாறே தாம் வழிபட்டு வந்த நிலையினைக் குறித்தபடி.

முன் போற்றப் போதேன் - முன்னின்று துதிக்கவும் தகுதியில்லேன்; **போதுதல்** - தகுதி பெறுதல்.

நாதன்...என்று கருணையினால் - தகுதி யில்லாதாரையும் தக்கவர்களாக ஆக்கும் கருணை நோக்கம் செய்து உய்விக்கும் அருள் காரணமாக.

கோதில் - கோது குற்றம், தீமை; தீமையை இல்லையாக்கும்; **குலப்பதி** - இந்தப் பழம்பதி; சிறந்த இப்பதி என்றலுமாம்.

காதலாலே தேடியும் - காதலாலே என்றது முயற்சியின் மிகு குறித்தற்கு.

3705. "**அடியேன் மனையி லெழுந்தருளி யமுது செய்ய வேண்டு**"மென,
நெடியோ னறியா வடியவர்தாம்,"நிகழுந் தவத்தீ ருமைக்காணும்
படியால் வந்தோ; முத்தரா பதியோ; மெம்மைப் பரிந்தூட்ட
முடியா துமக்குச் செய்கையரி தொண்ணு" தென்று மொழிந்தருள; 46

தவத்தால் கண்டேன் - "முன்புசெய் தவத்தி னீட்ட" த்தின் பயனுக; உண்மை! உண்மை!! முற்றும் உண்மை!!!; இவரது "அன்பு நுகர்ந் தருளுதற்குச் சித்தநிகழ் **வயிரவராய்த்** திருமேலநின்று" இறைவர் தாமே வருதற்கும், புவிவாழக் காண்பதற்கும் மிகப் பெருந்தவம் வேண்டும்! இவரைப் போலத் தவப்பெருந் தொண்டு செய்தாரும் மிகப்பெரிய அருள் பெற்றாரும் அரிது! அரிது! என்க. **45**

3705. **(இ-ள்)** அடியேன்...என - அடியேனது மனையில் தேவரீர் எழுந்தருளி வந்து திருவமுது செய்தல் வேண்டும் என்று வேண்ட; நெடியோன்...மொழிந்தருள - நீண்ட மாலும் அறிய மாட்டாத அவ்வடியவர்தாம் விளங்கும் தவத்தினை உடையவரே! உம்மைக் காணும் பொருட்டாக வந்தோம்; வடநாட்டில் உள்ளோம்; எம்மை அன்புடன் அமுது ஊட்டுவதற்கு உமக்கு முடியாது; அச்செய்கை செய்தல் அரிதாகும்; ஆதலின் உம்மால் செய்யவொண்ணாது என்று மொழிந்தருள,

(வி-ரை) அடியேன்...வேண்டும் - இது சிறுத்தொண்டர் செய்து கொண்ட விண்ணப்பம்.

நிகழும் தவத்தீர் - நிகழ்தல்- விளங்குதல்; **காண** - காணும் பொருட்டே; பிரி நிலை ஏகாரம் தொக்கது. **காணுதல்** - விளக்கங் காணச் செய்தல். உலகுக்குக் காட்டக் காணுதல் என்க; "தொண்டரை விளக்கங் காண...உய்யுமந் நெறிகாட்டு மாற்றால்" (369); "காட்டுவான் வந்தார்" (407) "வல்லரென் றறிவிக்கவே" (445) என்பன முதலியவை காண்க.

உத்தரா பதியோம் - வடநாட்டில் வாழ்விடம் உடையோம்: இம்மூர்த்தியார் இப்பெயராலே இப்பதியில் இன்றும் வழங்கி வழிபடப் பெறுகின்றார்.

எம்மைப் பரிந்தூட்ட உமக்கு முடியாது என்க. **ஊட்டுதல்** - அமுது உண்ணச் செய்தல்; **பரிவு** - அன்பு; **உமக்கு** - உம்மால்; உருபு மயக்கம். **செய்கை உமக்கு அரிது** - என்று பின்னருங் கூட்டி உரைக்க நின்றது.

பரிந்தூட்ட உமக்கு முடியாது; செய்கை அரிது; ஒண்ணாது - அரிது - உமக்கு மட்டிலன்றி இச்செய்கை வேறு எவர்க்கும் அரிது; ஆதலின் எவர்க்கும் ஒண்ணாது என்று முடித்தவாறு; மும்முறை கூறிய உறுதிப்பாடுமாம். **46**

3706. **(இ-ள்)** எண்ணாது...அடியேன் - அடியேன் தீர ஆலோசியாமற் சொல்ல மாட்டேன்; நீர்...கடிதமைக்க - கண்ணிறைந்த அழகினை உடைய நிறைந்த தவத்தினையுடையவரே! தேவரீர் திருவமுது செய்யும் இயல்பினை, விரைவில் அமைப்பதன் பொருட்டு, அருளிச் செய்வீராக!; தண்ணார்...என உரைத்தார். குளிர்ந்த கொன்றை

3706. "**எண்ணு தடியேன் மொழியேனீ** ரமுது செய்யு மியல்பதனைக்
கண்ணுர் வேட நிறைதவத்தீ! ரருளிச் செய்யுங் கடிதமைக்கத்,
தண்ணு ரிதழி முடியார்தம் **மடியார் தலைப்பட்ட** டாற்றேட
ஒண்ணு தனவு முளவாகு; மருமை யில்லை" யெனவுரைத்தார். 47

மாலையை முடியில்தரித்த இறைவரது அடியார்கள் கிடைக்கப் பெற்றால் தேடினும் கிடைக்காதனவும் கிடைக்க உள்ளனவாகும்; எனக்கு அருமையில்லை என்று சொன்னார்.

இந்த ஐந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) எண்ணாது - தீர ஆலோசியாமல்; அரசாங்க சேனைத் தலைவராயிருந்த நிலைக்குறிப்பும் காண்க; "எண்ணித் துணிக கருமம்" (குறள்) என்பது அரசநீதியுமாம்.

இயல்பதனை அருளிச் செய்யும் என்று கூட்டுக. **இயல்பு** - அமுதுக்குரிய சாதனமும் அமைக்கும் பிற இயல்புகளுமாம்.

கடிதமைக்க - ஆர்வத்தின் அளவு குறித்தது.

தண்ணார்...இல்லை - தலைப்பட்டால் - தலைப்படுதல் - கிடைக்கப் பேறு பெறுதல்; **தேட ஒண்ணாதனவும் உளவாகும்** - அஃது அடியார் பெருமையாலாவதொன் றன்றித் தற்போத முனைப்பாற் கூறுவதன்று என்றபடி.

ஒண்ணாதனவு முளவாகும் - "ஒண்ணாது" (3705) என்று அவர் கூறியதனைத் தொடர்ந்து கொண்டு விடை கூறியபடி; **தலைப்பட்டால் - அருமையில்லை** என்ற பின்னும் கூட்டுக. **முடியாது - அரிது - ஒண்ணாது** - என்று மும்முறை கூறிய உத்தராபதியாரை மறுத்துக் கூறுதல் அடியார் பெருமைக்கும், தமது சிறுத்தொண்டராம் தன்மைக்கும் பொருந்தாதாதலின், அதற்கு விடை, அடியார் தலைப்படும் அருமையின் பாலும் அவர்தம் பெருமையின் பாலும் சார்த்திக் கூறி மாறாது மறுத்து விண்ணப்பித்த மரபு நுட்பம் கண்டுகொள்க.

கண்ணார் வேட நிறை தவத்தீர் - "பாராதரிக்கும் திருவேடத் தொருவர்" (3701); தவநிறை வேடத்தீர் என்க; இறைவரே தவவேடம் தாங்கி வந்தவர் என்ற குறிப்பும் போதருதல் காண்க.

ஒண்ணாதனவும் - நீர் கூறியபடி ஒண்ணாதன என்பதுண்மையாயினும் என உடன்பட்டு, மறுமொழி கூறியவாறு; **ஒண்ணாதனவும்- உளவாகும் - அருமையில்லை - என்பன முடியாது - அரிது** - ஒண்ணாது என்று அவர் கூறிய மூன்றிற்கும் முறையே விடையாவது கண்டுகொள்க. 47

3707. **(இ-ள்)** அரியதில்லை...பொழுதில் - அருமையில்லை என்று சிறுத்தொண்டர் சொல்லக் கேட்ட பொழுதிலே; அழகு...அருளிச் செய்வார் - அழகினைச் சொரிகின்ற பெரிய வயிரவத் திருக்கோலங்கொண்டெழுந்தருளிய இறைவர் அருளிச் செய்வாராய்; யாம்...என்றார் - பரிவுடைய தொண்டரே! நாம் மூன்று இருதுக்காலம் கழித்தால் ஒருபோது

3707. ``அரிய தில்லை`` யெனக்கேட்ட பொழுதி லழகு **பொழிகின்ற**
பெரிய பயிர வக்கோலப் பெருமா னருளிச் செய்வார்``யாம்,
பரியுந் தொண்டீர்! மூவிருது கழித்தாற் பசுவீழ்த் திடவுண்ப;
துரிய நாளு மதற்கின்று; லூட்ட வரிதா முமக்`` கென்றார். 48

பசுவினை வீழ்த்து அமுது இட உண்பது நியமம்: அவ்வாறு உண்பதற்குரிய நாளும் இன்றைய நாளே யாகும். ஆனால் உமக்கு அவ்வாறு எம்மை ஊட்டுதல் அரிதாகும் என்று அருளிச் செய்தார்.

(வி-ரை) **அழகு பொழிகின்ற...பெருமான்** - முன் ``கண்ணார் வேடம்`` ``பாராதரிக்கும் திருவேடம்`` என்றவை காண்க.

அருளிச் செய்வார் - அருளிச் செய்வாராய்; முற்றெச்சம்; **அருளிச் செய்வாராய் - என்றார்** என்று முடிக்க.

பரியும் தொண்டீர் - பரிவு - சிவனடியாரை அமுது செய்வித்தலின்கண் மிக்க அன்பு; **பரியும்** - எம்மை ஊட்டுவித்தலின் மிகப்பரிவு பூண்ட என்ற குறிப்புமாம்.

மூவிருது - இருது - இரண்டுமாத எல்லையுடைய காலக் கூறு; **மூவிருது - ஆறு** மாத எல்லை.

பசு வீழ்த்து இட உண்பது - பசுவினை வீழ்த்து அமுதாக்கி இட அதனையே நாம் உண்பது நியமம் என்க; **பசு** - இங்குப் பயிரவ சமயத்தார் அமுது செய்யும் உணவுப் பொதுமை குறித்தது. ``யாகப் பசு`` என்பது போலக் கொள்க. ஆன் (பசு) என்பதன்று. **வைரவம்** என்பது அகப்புறச் சமயங்களாறனுள் ஒன்று. இது ``பெரும்பாலும் வாம மதத்தோடொத்துச், சிறுபான்மை ஆசாரங்களால் வேறுபட்டு, வைரவனே பரம்பொருள் எனக்கொண்டு வைரவ மதத்திற் சேர்தலே முத்தி என்பதாம்`` (மாபாடியம்); இதனுள் ஒரு ஒருசார் மாமிச உணவும் உடன் படுவர்; வாமிகளுள் ஒருசாரார் கள்ளுண்ணுதல் போல; வயிரவர், கபாலத்தில் விட்டுணுவின் இரத்த பிச்சை ஏற்ற புராண வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது; ஆன்புலால் உணவு எவ்வகை அகச் சமயத்துக்கும் உடன்பாடன்று; இங்குப் பசு என்பது ஆன் என்றுரைப்பாரு முண்டு; ``அமுதாம் பசுத்தான் இன்னதென`` ``மேல், **நரப்பசுவாம்**`` என்பனவும் பசு என்பதன் பொதுமைப் பொருளை விளக்குதல் காண்க. **யாம் உண்பது** என்று கூட்டுக; நியமம் என்பது குறிப்பெச்சம்.

அதற்கு உரிய நாளும் இன்றே - என்க; **அதற்கு** - அவ்வாறு மூவிருது கழித்துண்பதற்கு;**இன்றே** - தேற்றேகாரம் வரிக்க; **ஆல்** - அசை.

ஊட்ட உமக்கு அரிதாம்- இதனை மீண்டும் சொன்னது தொண்டரது ஆசையினையும் ஆர்வத்தினையும் உறுதிப்பாட்டினையும் மிகுவித்தற்கு. *48*

3708. **(இ-ள்)** வெளிப்படை. (அதுகேட்ட சிறுத்தொண்டர்) ``மிகவும் நன்று அடியேன் மூன்றுவகை நிரைகளையும் உடையேன்; எனக்கு இங்குக் குறைவில்லை;

3708. "சால நன்று! **முந்நிரையு முடையேன்;** தாழ்விங் கெனக்கில்லை;
ஆல முண்டா ரன்பருமக் **கமுதாம் பசுத்தா னின்னதென**
ஏல வருளிச் செயப்பெற்றால் யான்போ யமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருவே"னென்று மொழிந்து கைதொழுதார். 49

விடத்தினை உண்டருளிய சிவபெருமா னன்பர் உமக்கு அமுதாகின்ற அந்தப் பசுத்தான் இன்னதென்று பொருந்தும்படி அருளிச் செய்யப் பெற்றேனேல் அடியேன் சென்று விரைவில் அமுது அமைத்து உணவுக்குரிய காலம் தப்பாமே வருவேன்" என்று கைதொழுது உரைத்தனர்.

(வி-ரை) சால நன்று - பசு வீழ்த்திட உண்பது என்றாராதலின், தாம் பசுவின் நிரைகளாற் குறைவின்றி உடையராதலின் **மிக நன்று** என்று மகிழ்ந்தார்.

முந்நிரை - நிரை; பசுக்கூட்டம், ஆட்டுக் கூட்டம், எருமைக் கூட்டம் என்ற இவை முந்நிரை எனப்படும்.

இங்கு எனக்குத் தாழ்வில்லை - என்க. **தாழ்வு** - குறைவு.

ஆலமுண்டார் அன்பர் உமக்கு அமுதாம் பசுத்தான் - ஆலால முண்ட பெருமானடியாராதலின் நீர் பசுப்படுத்துப் பெறும் அமுது உண்பதில் குறைவில்லை என்றதும் குறிப்பு. **பசு** - உணவுப் பொதுமை குறித்தது. **அன்பர்** - அன்பராகிய.

இன்னது என - அந்தப் பிராணி வகையுள் எது என்று.

கடிதமைத்துக் காலம் தப்பாமே வருவேன் - அடியாரை அமுதூட்டும் ஆர்வமும் பெருமுயற்சியும் குறித்தது.

முன்நிரையும் உடையேன் - இங்கு வடநாட்டு அடியார் மாமிசம் உண்பவர்கள் என்றும், கோமாம்சம் கேட்பதற்கென்றே வடநாட்டு அடியார் வேடம் பூண்டு இறைவர் வந்தனர் போலும் என்றும், பசுவூன் இதுவரை எந்த அடியாரும் கேட்டதில்லை என்றும், இப்போது இது கேட்டபோது இது தகாதென்று மறுத்திருப்பின் அடியார் வேண்டிய தளித்து அமுதூட்டும் நியமம் தவறிவிடும் என்றும், ஆதலின் அதனை மறுது **முந்நிரையும் உடையேன்** என்றார் என்றும் இங்கு, விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு; இங்குப் **பசு** என்பது ஆன் (கோ) என்ற பொருள் பட வந்ததன்று என்பது முன் உரைக்கப்பட்டது. நாயனார், தம் மாமாத்திரர் குலமரபின் றன்மையால் புலாலுணவு விலக்கியவரல்லர் என்பது, புலாலுணவைத் தாமே அமைக்கும் திறத்தானும், சந்தனத் தாதியார் தலையிறைச்சி யமைத்த திறத்தானும், இவை பற்றியே உத்திராபதியார் இவர்பால் பசுப்படுத்த (புலால்) அமுது வேண்டினார் என்ற நிலையாலும் கருத உள்ளன.

கடிதமைத்து - என்றதனாலும் இவரது மரபின் உணவு வழக்கம் புலப்படுமாறு காண்க. இங்கு, இறைவர் கண்டு, உலகுக்குக் காட்டி யுய்யச் செய்யப் போந்த உண்மையாவது, பசு மாம்சப் புலால் உணவு பற்றிய தன்மையன்று; உலக நிலையில் மக்கள்பாற் கொள்ளும் திணிந்த பற்றுச் சிவன் அடியார் பணியின் முன் நில்லா தொழியும்

3709. பண்புமிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்,
``நண்பு மிக்கீர்! நாமுண்ணப் படுக்கும் **பசுவு நரப்பசுவாம்;**
உண்ப **தஞ்சு பிராயத்துள் ளுறுப்பின் மறுவின் றேலின்னம்**
புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வதொன்``றென்றார். 50

பேரன்பு மிகுந்த நிலையையேயாம் என்க.

காலம் தப்பாமே - காலம் உணவு கொள்ளுதற்குரிய காலம்;``உரிய நாளும் அதற்கு இன்றி`` என்று உத்திராபதியார் உணவு கொள்ளும் காலம் குறித்தாராதலின் அந்நியமம் தவறாமே என்க. **49**

3709. **(இ-ள்)** பண்பு... கண்டு-அடிமைப் பண்பின் மிகுந்த சிறுத்தொண்டரது அன்பினைக் கண்டு; பயிரவரும் - பயிரவச் சங்கமராக வந்த இறைவரும்; நண்பு மிக்கீர்!...ஒன்று என்றார் -அடியவர்பால் அன்பு மிகுந்தவரே! நாம் உண்பதற்குச் சேதிக்கப்படுகின்ற பசுவும் மானிடப் பசுவாகும்; அஞ்சு வயதாயும் உறுப்பில் மறு இல்லையேல் நாம் உண்பது; நோய் செய்யும் புண்ணிலே வேலினைப் பாய்ச்சியது போல மேலும் சொல்லலாவது ஒன்று உண்டு என்றார்.

(வி-ரை) இது நீர் உண்ணும் பசு இன்னதென்று அருள்வீர் என்று விண்ணப்பித்த தொண்டருக்கு உத்தராபதியார் கூறும் விடை.

உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம் - உண்ண - உண்ணும் பொருட்டு உண்பதற்காக; **படுத்தல்** - சேதித்தல், கொல்லுதல்; **நரப்பசு** - மனித வகையுள்ளே பட்டது.

அஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறு இன்றேல் உண்பது - அந்த நரப்பசுவின் இலக்கணம் கூறுகின்றார். **அஞ்சு** - ஐந்து என்பதன் மரூஉ; **பிராயம்** - வயது.

உறுப்பில் மறு-மறு -அங்கங்களிற் கேடு, குற்றம் முதலியவை; குறை **இன்றேல் - உண்பதாம்** - என்க; வெளியில் காணும் மறு வடு முதலியவை உள்ளே உள் தசையினும் அவ்வவற்கு ஏற்ற குறைபாடுகளை உளதாக்குவன என்பது உடற் கூற்று நூலார் துணிபு; இது புலாலுண்போர் பார்க்கும் உண்மைகளுள் ஒன்று.

நோ(தல்) செய் புண்ணில் என்று விகுதி பிரித்து மாற்றிப் பொருள் கொள்க. முன்னமே நோதலைச் செய்யும் புண்ணினுள்; **வேல் எறிதல்**-வேலினாற் குத்துதல்.

புண் செய்...போலும்-இஃது உவமை; நோய் ஒன்றும், அதன் மேல் அதனுள் வேலெறிதலால் உளதாம் நோய் மற்றொன்றும் ஆக மிகத் துன்பந்தரும் இருநிலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக மிகுதல் உவமை. ஈண்டு நரப்பசு -ஐந்து பிராயம் - மறுவிலா உறுப்பு என்றவை நோவு செய்யும் புண்ணாக உவமிக்கப் பட்டன, இனி, மேல்வரும் பாட்டில்; ஒரு குடிக்கு நல்ல ஒரு மகனைத் தாய் பிடிக்கத் தந்தை தம்மில் உவந்து அரிந்து அமைத்தல் அப்புண்ணில் கூரிய வேலினை எறிவதாக உவமிக்கப் படுதல் கண்டு கொள்க. ``நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல் ஒருவனைத்தந் திடுக`` என, ``அருந்தவத்தோன்

3708. "சால நன்று! **முந்நிரையு முடையேன்;** தாழ்விங் கெனக்கில்லை;
ஆல முண்டா ரன்பருமக் **கமுதாம் பசுத்தா னின்னதென**
ஏல வருளிச் செயப்பெற்றால் யான்போ யமுது கடிதமைத்துக்
காலந் தப்பா மேவருவே"னென்று மொழிந்து கைதொழுதார். 49

விடத்தினை உண்டருளிய சிவபெருமா னன்பர் உமக்கு அமுதாகின்ற அந்தப் பசுத்தான் இன்னதென்று பொருந்தும்படி அருளிச் செய்யப் பெற்றேனேல் அடியேன் சென்று விரைவில் அமுது அமைத்து உணவுக்குரிய காலம் தப்பாமே வருவேன்" என்று கைதொழுது உரைத்தனர்.

(வி-ரை) சால நன்று - பசு வீழ்த்திட உண்பது என்றாராதலின், தாம் பசுவின் நிரைகளாற் குறைவின்றி உடையராதலின் **மிக நன்று** என்று மகிழ்ந்தார்.

முந்நிரை - நிரை; பசுக்கூட்டம், ஆட்டுக் கூட்டம், எருமைக் கூட்டம் என்ற இவை முந்நிரை எனப்படும்.

இங்கு எனக்குத் தாழ்வில்லை - என்க. **தாழ்வு** - குறைவு.

ஆலமுண்டார் அன்பர் உமக்கு அமுதாம் பசுத்தான் - ஆலால முண்ட பெருமானடியாராதலின் நீர் பசுப்படுத்துப் பெறும் அமுது உண்பதில் குறைவில்லை என்றதும் குறிப்பு. **பசு** - உணவுப் பொதுமை குறித்தது. **அன்பர்** - அன்பராகிய.

இன்னது என - அந்தப் பிராணி வகையுள் எது என்று.

கடிதமைத்துக் காலம் தப்பாமே வருவேன் - அடியாரை அமுதூட்டும் ஆர்வமும் பெருமுயற்சியும் குறித்தது.

முன்நிரையும் உடையேன் - இங்கு வடநாட்டு அடியார் மாமிசம் உண்பவர்கள் என்றும், கோமாம்சம் கேட்பதற்கென்றே வடநாட்டு அடியார் வேடம் பூண்டு இறைவர் வந்தனர் போலும் என்றும், பசுவூன் இதுவரை எந்த அடியாரும் கேட்டதில்லை என்றும், இப்போது இது கேட்டபோது இது தகாதென்று மறுத்திருப்பின் அடியார் வேண்டிய தளித்து அமுதூட்டும் நியமம் தவறிவிடும் என்றும், ஆதலின் அதனை மறுது **முந்நிரையும் உடையேன்** என்றார் என்றும் இங்கு, விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு; இங்குப் **பசு** என்பது ஆன் (கோ) என்ற பொருள் பட வந்ததன்று என்பது முன் உரைக்கப்பட்டது. நாயனார், தம் மாமாத்திரர் குலமரபின் றன்மையால் புலாலுணவு விலக்கியவரல்லர் என்பது, புலாலுணவைத் தாமே அமைக்கும் திறத்தானும், சந்தனத் தாதியார் தலையிறைச்சி யமைத்த திறத்தானும், இவை பற்றியே உத்திராபதியார் இவர்பால் பசுப்படுத்த (புலால்) அமுது வேண்டினர் என்ற நிலையாலும் கருத உள்ளன.

கடிதமைத்து - என்றதனாலும் இவரது மரபின் உணவு வழக்கம் புலப்படுமாறு காண்க. இங்கு, இறைவர் கண்டு, உலகுக்குக் காட்டி யுய்யச் செய்யப் போந்த உண்மையாவது, பசு மாம்சப் புலால் உணவு பற்றிய தன்மையன்று; உலக நிலையில் மக்கள்பாற் கொள்ளும் திணிந்த பற்றுச் சிவன் அடியார் பணியின் முன் நில்லா தொழியும்

3709. பண்புமிக்க சிறுத்தொண்டர் பரிவு கண்டு பயிரவரும்,
``நண்பு மிக்கீர்! நாமுண்ணப் படுக்கும் **பசுவு நரப்பசுவாம்;**
உண்ப **தஞ்சு பிராயத்துள் ளுறுப்பின் மறுவின் றேலின்னம்**
புண்செய் நோவில் வேலெறிந்தாற் போலும் புகல்வதொன்``றென்றார். 50

பேரன்பு மிகுந்த நிலையையேயாம் என்க.

காலம் தப்பாமே - காலம் உணவு கொள்ளுதற்குரிய காலம்;``உரிய நாளும் அதற்கு இன்று`` என்று உத்திராபதியார் உணவு கொள்ளும் காலம் குறித்தாராதலின் அந்நியமம் தவறாமே என்க. **49**

3709. **(இ-ள்)** பண்பு... கண்டு-அடிமைப் பண்பின் மிகுந்த சிறுத்தொண்டரது அன்பினைக் கண்டு; பயிரவரும் - பயிரவச் சங்கமராக வந்த இறைவரும்; நண்பு மிக்கீர்!...ஒன்று என்றார் -அடியவர்பால் அன்பு மிகுந்தவரே! நாம் உண்பதற்குச் சேதிக்கப்படுகின்ற பசுவும் மானிடப் பசுவாகும்; அஞ்சு வயதாயும் உறுப்பில் மறு இல்லையேல் நாம் உண்பது; நோய் செய்யும் புண்ணிலே வேலினைப் பாய்ச்சியது போல மேலும் சொல்லலாவது ஒன்று உண்டு என்றார்.

(வி-ரை) இது நீர் உண்ணும் பசு இன்னதென்று அருள்வீர் என்று விண்ணப்பித்த தொண்டருக்கு உத்தராபதியார் கூறும் விடை.

உண்ணப் படுக்கும் பசுவும் நரப்பசுவாம் - உண்ண - உண்ணும் பொருட்டு உண்பதற்காக; **படுத்தல்** - சேதித்தல், கொல்லுதல்; **நரப்பசு** - மனித வகையுள்ளே பட்டது.

அஞ்சு பிராயத்துள் உறுப்பில் மறு இன்றேல் உண்பது - அந்த நரப்பசுவின் இலக்கணம் கூறுகின்றார். **அஞ்சு** - ஐந்து என்பதன் மரூஉ; **பிராயம்** - வயது.

உறுப்பில் மறு-மறு -அங்கங்களிற் கேடு, குற்றம் முதலியவை; குறை **இன்றேல் - உண்பதாம்** - என்க; வெளியில் காணும் மறு வடு முதலியவை உள்ளே உள் தசையினும் அவ்வவற்கு ஏற்ற குறைபாடுகளை உளதாக்குவன என்பது உடற் கூற்று நூலார் துணிபு; இது புலாலுண்போர் பார்க்கும் உண்மைகளுள் ஒன்று.

நோ(தல்) செய் புண்ணில் என்று விகுதி பிரித்து மாற்றிப் பொருள் கொள்க. முன்னமே நோதலைச் செய்யும் புண்ணினுள்; **வேல் எறிதல்**-வேலினாற் குத்துதல்.

புண் செய்...போலும்-இஃது உவமை; நோய் ஒன்றும், அதன் மேல் அதனுள் வேலெறிதலால் உளதாம் நோய் மற்றொன்றும் ஆக மிகத் துன்பந்தரும் இருநிலைகள் ஒன்றன்மேல் ஒன்றாக மிகுதல் உவமை. ஈண்டு நரப்பசு -ஐந்து பிராயம் - மறுவிலா உறுப்பு என்றவை நோவு செய்யும் புண்ணாக உவமிக்கப் பட்டன, இனி, மேல்வரும் பாட்டில்; ஒரு குடிக்கு நல்ல ஒரு மகனைத் தாய் பிடிக்கத் தந்தை தம்மில் உவந்து அரிந்து அமைத்தல் அப்புண்ணில் கூரிய வேலினை எறிவதாக உவமிக்கப் படுதல் கண்டு கொள்க. ``நின்சிறுவர் நால்வரினுங் கரிய செம்மல் ஒருவனைத்தந் திடுக`` என, ``அருந்தவத்தோன்

3710. "யாது மரிய தில்லையினி யீண்ட வருளிச் செய்யு"மென,
நாதன் றானு "**மொருகுடிக்கு நல்ல சிறுவ னொருமகனைத்**
தாதை யரியத் தாய்பிடிக்கும் பொழுதிற் றம்மின் மனமுவந்தே
ஏத மின்றி யமைத்தகறி யாமிட் டுண்ப" தெனமொழிந்தார். 51

(விசுவா மித்திரன்) இயம்பிய சொல் "**மருமத்தி** னெறிவேல் பாய்ந்த, புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தாலென" என்ற கம்பன் இவ்வரிய உவமையினை எடுத்துப் புதுப்பொன்னே போற் புதுக்கிப் போற்றி வைத்த திறம் இதன் அருமையினை விளக்குவதாம்.

பிராயத்தில்—என்பதும் பாடம். 50

3710. **(இ-ள்)** (அது கேட்ட தொண்டனார்) யாதும்...என - யாதும் அடியேனுக்கு அரியதில்லை; இனி, விரைவாக அருளிச் செய்யும் என்று கூற; நாதன் தானும் - இறைவரும்; ஒரு குடிக்கு...என மொழிந்தார்- ஒரு குடிக்கு நல்ல சிறுவனாய், ஒரே மகனாயுள்ள அவனைத் தந்தை அரியவும், அப்போது தாய் பிடிக்கும் பொழுதில் இவரும் தம்மில் மனமகிழ்ந்தே குற்றமின்றி அமைத்த கறியே நாம் இட்டு உண்பதாம் என்று மொழிந்தருளினர்.

(வி-ரை) இனி ஈண்ட அருளிச் செய்யும் - இனியும் தாமதமின்றி விரைவில் அருள் செய்யும் என்றது இதுவரை "ஒண்ணுது" (3705) என்றும், "ஊட்ட அரிதாம்" (3707) என்றும், "புகல்வதொன்று" (3709) என்றும் அங்கங்கும் உலகியலுக்கு மாறுன கொடிய செய்தியாதலிற் றாழ்த்துத் தயங்கிய உரைப்பார் போன்று ஒன்றொன்றாக மேன்மேல் ஏற்றிக் கூறி வருதலின், இனி அவ்வாறு ஒன்றும் அஞ்சாதே விரைந்து கூறுவீர் என்ற குறிப்பு; இறைவர் அவ்வாறு தயங்கிக் கூறியது உலகியல் நிலையில் இத்தகைய பெருஞ் செயலுக்கு ஒருவர் மனத்துணிவு கொள்ளப் படிப்படியாய் கொளுத்தும் முறையிற் கூறியபடி.

ஈண்ட - அணிமையாக - விரைவாக.

ஒரு குடிக்கு...இட்டு உண்பது - தாம் உண்ணும் இயல்பினை, வயதும் அங்கக் கூறும் பற்றி முன்பாட்டிற் கூறினர்; இங்கு மேல் உள்ள பேரியல்பினை முடித்துத் தொகுத்துக் கூறுகின்றார். **குடி** - குடும்பம். **தம்மில்** - தாதை, தாய், மகன் மூவருள்ளும்.

ஏதம்-துன்பம்-மனவருத்தம் முதலிய எவ்வகைக் கேடுகளும். 51

3711. **(இ-ள்)** அதுவும்...தொண்டர் - அதனையும் முதல்வர் சொல்லியருளக் கேட்ட சிறுத்தொண்டர்; அடியேனுக்கு...என்று - எமது பெருமானாராகிய தேவரீர் திரு அமுது செய்யும் பேறுபெற்றால் அடியேனுக்கு இதுவும் அரிதன்று என்று கூறி; கதுமென்...பெற்று - கதும் என விரைவினோடும் அவரது விடை பெற்று; களிப்பால்...வந்தணைந்தார் - பெருமகிழ்ச்சியினாலே ஆசையோடும் அவரது தேன்பொருந்திய மெல்லிய தாமரை போன்ற பாதங்களைப் பணிந்து போந்து தமது திருமனையில் வந்து அணைந்தனர்.

3711. அதுவு முனைவர்மொழிந்தருளக் கேட்ட தொண்ட "ரடியேனுக்
கிதுவு மரிதன் றெம்பெருமா னமுது செய்யப் பெறி" லென்று
கதுமென் விரைவி லவரிசையப் பெற்றுக் களிப்பாற் காதலொடு
மதுமென் கமல மலர்ப்பாதம் பணிந்து மனையில் வந்தணைந்தார். 52

3712. அன்பு மிக்க பெருங்கற்பி னணங்கு திருவெண் காட்டம்மை
முன்பு வந்து சிறுத்தொண்டர் வரவு நோக்கி முன்னின்றே
இன்பம் பெருக மலர்ந்தமுகங் கண்டு பாத மிசையிறைஞ்சிப்
பின்பு கணவர் முகநோக்கிப் பெருகுந் தவத்தோர் செயல் வினவ, 53

(வி-ரை) அதுவும் - அத்தகைய பெருந் துன்பச் சொல்லினையும்; **முனைவர்** - தலைவர்.

அமுது செய்யப் பெறில் இஃதும் அரிதன்று என்க. **இதுவும்** - செய்கையரிது - ஒண்ணாது - ஊட்ட அரிது என்று எடுத்துக் கூறிய இதுவும் என அண்மைச் சுட்டு; இது - இறுதியாய் மிக அரிதெனக் குறித்து முடித்த இது என்க. கேட்ட அப்போதே நாயனார் தம் மகனாரை அமுதாக்க உறுதி கொண்டனராதலின் **அரிதன்று** எனத் திண்ணமாகக் கூறினர் என்க. (3715) பார்க்க.

பெறில் அரிதன்று - பெறுதலே மிக அரிது; அதனைப் பெறில் ஏனைவழி அரிதாம் இதுவும் அரிதன்றாய் எளிதில் கைவரும் என்றபடி.

கதுமென் விரைவு - மிக்க விரைவு; ஒருபொருட் பன்மொழி; மிகுதி குறித்தது.

மதுமென் கமலம்-புதிதின் மலர்ந்த தாமரை; அழகு, செம்மை, மென்மை, இனிமை, நறுமை முதலிய எல்லாம் பொருந்தியதென்பது; எல்லாம் தருவது என்ற குறிப்புமாம். சிவானந்தத் தேனை யளிக்கும் மலர் என்பது குறிப்பு.

எம்பெருமான்! - அண்மைவிளி; உண்மைக் குறிப்பும்பட நின்றது. 52

3712. **(இ-ள்)** வெளிப்படை. அன்பு மிகுந்த பெரிய கற்பினிற் சிறந்த தெய்வத்தன்மை வாய்ந்த திருவெண்காட் டம்மையார் மனையின் முன் வாயிலில் வந்து சிறுத்தொண்டரது வரவை எதிர்நோக்கி முன்னே நின்றே, இன்பம் பெருக மலர்ந்திருந்த அவரது திருமுக விளக்கத்தினைக் கண்டு, அவரது திருவடிகளில் வணங்கிப் பின்னர்த் தமது கணவராகிய அவரை முகம் நோக்கி மாதவரது செயலைப் பற்றி வினவுதலும்;

(வி-ரை) அன்பு...அம்மை - அன்பு - சிவனடியார் அடிமைத் திறத்தின் அன்பு; **கற்பு** - கணவனார் வழிநின் றொழுகும் திறம்;முன்னையது தம்மியல்பால் வருவதும், பின்னையது கணவர் சார்பு பற்றி வருவதுமாம்; **அணங்கு** - தெய்வத்தன்மை குறித்தது.

முன்பு வந்து...முகநோக்கி - அடியாரை அமுதூட்டலின் அம்மையாருக்கிருந்த ஆர்வமும் உறைப்பும் குறித்தது; முன்பு வந்து - முன் கடைவாயிலின் வந்து நின்று; கணவனார் மனைக்குள் வந்தபின் வினவி அறிதற்குரிய காலத்தாழ்வும் நேராது அறியும் அவாவினால் முன்கடையில் நின்றார் என்க. "வந்தபின் மனைவியாரும் **வாய்தலி னின்று வாங்கி**" (4581).

3713. வள்ள லாரு மனையாரை நோக்கி "வந்த மாதவர்தாம்
உள்ள மகிழ வமுதுசெய்ய விசைந்தார்; குடிக்கோர் சிறுவனுமாய்க்
கொள்ளும் பிராய மைந்துளனா யுறுப்பிற் குறைபா டின்றித்தாய்
பிள்ளை பிடிக்க வுவந்துபிதா வரிந்து சமைக்கப் பெறி"னென்றார். 54

வரவு நோக்கி முன்னின்றே - காத்து; "முன்நின்று" என்பதும் அக்கருத்து; **மலர்ந்த முகம் கண்டு** - அவர் சொல்வதற்கு **முன்** முகக் குறியினால் **அகக்** குறிப்புணரும் ஆர்வம். "அகத்தி னழகு முகத்திற் றெரியும்" (பழமொழி); "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சம், கடுத்தது காட்டும் முகம்" (குறள்). "முன்னம், முகம் போல முன்னுரைப்ப தில்."

முகம் கண்டு-என்றது தாமாகக் கருதலளவையாற் குறிப்பினா லறிதற்கும், **முகநோக்கி** (வினவ) என்றது தாம் அறிந்ததனை உறுதியாக்குதற்கு அவர் வாக்கினாற் கேட்பதன் பொருட்டு நோக்குதற்கும் வந்தன வாதலின் கூறியது கூறலன்மை யுணர்க.

தவத்தோர் - அடியவர்; இங்கு வயிரவ மாதவக் கோலச் சங்கமர் திறம் குறித்தது.

அன்பின் மிக்க—என்பதும் பாடம். 53

3713. **(இ-ள்)** வள்ளலாரும்...மனையாரை நோக்கி - வள்ளலாராகிய சிறுத்தொண்டரும் மனைவியார் திருவெண்காட்டம்மையாரைப் பார்த்து; வந்த...பெறின் என்றார் - வந்தெழுந்தருளிய மாதவர் தாம், ஒருகுடிக்கு ஒரு மகனாக ஐந்து வயதுள்ளவனாய், உறுப்புக்களிற் குறை எவையும் இல்லாதவனாகிய பிள்ளையைத் தாய்பிடிக்க மகிழ்வுடன் தந்தை அரிந்து அமுது சமைக்கப் பெற்றால்; உள்ள மகிழும்படி திருவமுது செய்ய இசைந்தருளினார் என்றனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வந்த...இசைந்தார் - என்று முன்னர்க் கூறி மேல்வருவனவற்றைப் பின்வைத்தது அவரது இசைவினை முன்கூறி அம்மையாரது பேர் ஆர்வத்தினை அமைவுபடுத்தற் பொருட்டு; **சமைக்கப் பெறின் - இசைந்தார்** - என்று கூட்டுக. **இசைந்தார்** - இசைவேன் என்றார்.

குடிக்கோர்...பெறின் - மாதவர் முன் (3709-3710) கூறியவற்றின் சாரமாய்ச் சுருக்கி உரைத்த திறம் காண்க.

கொள்ளும் - நிரம்பும்; **இன்றி** - இல்லாதவனாய்; உள்ள பிள்ளை என்க; **பிள்ளை** - பிள்ளையை, **உவந்து** - தாய் - பிதா என்ற இருபாலும் சார்வதனால் இடையில் வைத்தார்; "**தம்மில் மனமுவந்தே**" (3710).

பெறின் - என்றார் இவ்வளவும் பெறுதற்கருமை குறித்தற்கு; "அகனமர்ந்து... முகனமர்ந் தின்சொல னாகப் பெறின்" (குறள்) என்புழிப்போல. 54

3714. அரிய கற்பின் மனைவியா ரவரை நோக்கி யுரைசெய்வார்
"பெரிய பயிர வத்தொண்ட ரமுது செய்யப் பெறுவதற்கிங்
குரிய வகையா லமுதமைப்போ மொருவ னாகி யொருகுடிக்கு;
வருமச் சிறுவன் றனைப்பெறுமா றெவ்வா?" றென்று வணங்குதலும் 55

3714. **(இ-ள்)** அரிய...உரை செய்வார் - அருமையாகிய பெருங் கற்பினையுடைய மனைவியார் அவ்வாறுரைக்க அவரைப் பார்த்து உரை செய்வாராகி; பெரிய...அமைப்போம் - பெருமையுடைய பயிரவத் தொண்டர் திருஅமுது செய்யும் பெறுவதற்காக வகையினாலே திருவமுது அமைப்போமாகிய நாம்; ஒருவனாகி... வணங்குதல் - ஒரு குடிக்கு ஒரே மகனாகி வரும் அந்தச் சிறுவனை நாம் பெறுவது எவ்வாறு? என்று சொல்லி வணங்குதலும்,

(வி-ரை) இது மாதவர் கருத்தினை நாயனார் கூறக்கேட்ட மனைவியார் சொல்லியது. தாய்த்தன்மையின் தண்ணளி கூர்ந்தறிந்த அம்மையாராதலின் "ஒருவனாகி வரும் அச்சிறுவனைப் பெறுவ தெவ்வாறு?" என்ற ஒன்றே தமது உள்ளத்தில் முன்வந்து நிற்கப்பெற்று வினவியபடி; அதன்மேல் **அரிய** வினை செய்யும் நிலையளவு அவர் மனம் மேற்சென்றிலது; ஆனால், மனத்திண்மை பெற்றாராதலின், நாயனார் உள்ளம் அதன்மேலும் அவ் அரிய வினையின்பாற் சென்று அது பிறரெவர் பாலும் எவ்வாற்றானும் கிடைத்தற் கருமையினை எண்ணித் தாமே துணிந்தமை மேல்வரும் பாட்டிற் கூறப்படுதல் காண்க; அடியாரை ஊட்டும் அன்பின்றிறம் இவ்விருவர் பாலும் ஒன்றுபோல நிகழப்பெறினும் உலகியலிற் பெண்பாலாரின் அன்பின் திறமும் ஆண்பாலரின் அவ்வன்பினுடன் தண்ணிய உறைப்பின் திறமும் ஈண்டு விளங்கக்கிடத்தல் கண்டு கொள்க.

அமுதமைப்போம் - அமைப்போமாகிய; அமைக்க ஒருப்பட்டோ மாகிய யாம்; வினைப்பெயர். அமைப்போமாகிய யாம் பெறுவ தெவ்வாறு? என்று கூட்டுக; வினைமுற்றாகவே கொண்டு உரைத்தனர் முன் உரைகாரர்.

என்று வணங்குதலும்-அதுகேட்டு - **என்றார்** என வரும் பாட்டுடன் முடிக்க. 55

3715. **(இ-ள்)** மனைவியார் தம் முகநோக்கி-(அது கேட்ட நாயனார்) மனைவியாரின் முகத்தினை நோக்கி; மற்றித் திறத்து...உளரே-மற்று இத்தன்மை வாய்ந்த மைந்தர்களை அவ்வவர் எண்ணம் நிரம்பும் அளவு நிதியம் கொடுத்தால் கொடுப்பாரும் உளராவர்; நேர் நின்று...இல்லை (ஆனால்) நேரே எதிரில் நின்று தம் மைந்தனைத் தந்தையும் தாயரும் அரிவார்கள் (இவ்வுலகத்தில்) இல்லை; தாழாமே...யாம் என்றார் - (ஆகையினால்) இனியும் தாமதிக்காமல் இங்கு என்னை உய்யச் செய்தற்கு நீ பெற்ற மகனை நாம் (இதன் பொருட்டு) அழைப்போம் என்று கூறினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) மற்றித் திறத்து...உளரே - மற்று - உலகியலுக்கு மாறுபட்ட என்பதாம். ஏகாரம் - தேற்றம்.

3715. மனைவி யார்தம் முகநோக்கி "மற்றித் திறத்து மைந்தர்தமை
நினைவு நிரம்ப நிதிகொடுத்தாற் றருவா ருளரே! நேர்நின்று
தனையன் றன்னைத் தந்தைதா யரிவா ரில்லைத்; தாழாதே
எனையிங் குய்ய நீபயந்தான் றன்னை யழைப்போம் யா"மென்றார். 56

நினைவு நிரம்ப - தாம் எண்ணிய அளவும் நிரம்ப; மனம் நிரம்ப எனினுமாம்.

உளரே - உளராவர்; ஏகாரம் - இதனைச் செய்வாரும் உளராவர் என்று சிறப்பின்கண் வந்தது.

நேர் நின்று - நேரே முன்னர் நின்று; மைந்தனைப் பிறர் அரிய நேரிடினும் அப்போது நேர் நிற்றலும் பெற்றோர்க்கரிது என்பதாம்.

அரிவார் இல்லை - இவ்வுலகில் இல்லை; ஆதலின் என்பது குறிப்பெச்சம்.

உய்ய - உய்யச் செய்ய - உய்விக்க என்ற பிறவினை விவ்விகுதி தொக்குத் தன்வினையாய் வந்தது.

எனை உய்ய - என்னை உய்விக்கும் பொருட்டு; **உய்யப் - பயந்தான்** என்க. **எனை** என்று ஒருமையாற் கூறினார் தாம் உய்வதனால் நாயகநாயகி நிலைமையால் அம்மையாரும் உய்வதற் கேதுவாதல் பற்றி; **நீ பயந்தான்** - எனது உய்தி நீ பயந்ததனாலாயிற்று என்று அவரையும் உளப்படுத்தியவாறு மாயிற்று; நான் இங்குய்ய நீ பயந்தோனை.

அழைப்போம் - இக்காரியத்தில் பயிரவர்க்குத் திருவமுதாக்கப் பசுவாய்ப் பயன்படுவதற்காக என்பன குறிப்பெச்சம் **அழைப்போம் யாம்** - என்று தம்மோடு அவரையும் உளப்படுத்திக் கூறியதனால் **தம்மில் மனமுவந்தே** (3710) என்றபடி காதல் இருவர் கருத்தும் ஒருமித்து இச்செயல் செய்ய வேண்டி நின்ற தன்மை குறிப்பிடப்பட்டது. மேல் "**இசைந்து - நயந்து - கொண்டுவாரும்**" என்று தமது உடன்பாட்டினை அறிவித்தவாறு காண்க. "அழைப்போம் யாம்" என்றது அதற்கு உனது உடன்பாட்டினை அறியவேண்டும் என்ற குறிப்புடன் கூறியதும் காண்க.

பயந்தான் - பெற்றெடுத்தவன்; சீராளதேவர்; **உய்ய** -"பிழைக்குநெறி தமக்குதவ" (876) என்ற கருத்தும் ஈண்டுக் கருதற்பாலது. 56

3716. **(இ-ள்)** என்று கணவர் கூறுதலும் - முன் கூறியவாறு தமது கணவனார் சொல்லுதலும்; அதனுக்கு இசைந்து - அதற்குத் தாமும் உடன்பட்டு; எம்பிரான்..காண்பது என நயந்து- எமது சிவபெருமானார் திருத்தொண்டர் இன்று காலதாமதமின்றி அமுது செய்யப் பெற்று இங்கு அவருடைய மகிழ்ச்சி மலர்ந்த திருமுகத்தை நன்று நேர் காண்பது செய்யத்தக்க கடமையாம் என்று விரும்பி; திருவனையார் - திருவைப் போன்றவராகிய திருவெண்காட்டு நங்கையார்; நம்மை...கொண்டு வாரும் என்றார் - (கணவரை நோக்கி) நம்மைக் காக்க வரும் மணி போன்ற மகனைப் பள்ளியிற் சென்று கொண்டு வாருங்கள் என்றார்.

3716. என்று கணவர் கூறுதலு மதனுக் கிசைந்``தெம் பிரானன்றெண்டர்
இன்று தாழா தமுதுசெய்யப் பெற்றிங் கவர்த மலர்ந்தமுகம்
நன்று காண்ப``தென நயந்து,``நம்மைக் காக்க வருமணியைச்
சென்று பள்ளி யினிற்கொண்டு வாரு``மென்றார் திருவனையார். 57

(வி-ரை) **இசைந்து** - தாமும் உடன் பட்டு; தாய்தந்தைய ரிருவரும் மனம் ஒருப்பட்டு உவந்து இவ்வரிய வினை செய்தல் வேண்டுமென்று ராதலின் தாம் உடன்பட்டார் என்க. ``அழைப்போம் யாம்`` என்று தமது இசைவினைக் கணவனார் எதிர்நோக்கிய குறிப்பும் கண்டாராதலினாலும் ``இசைந்து`` என்றார்.

மலர்ந்த முகம் நன்று காண்பது - உண்பவர் இனிதுண்டபின் அவரது இன்முகம் காணுமளவே விருந்தின் பயனு மென்பர்; அவ்வாறே இங்கு அமுது செய்யப்பெற்ற அவரது மலர்ந்த முகங் காண்பதே தமது பேருகக் கருதினார். காண்பதுவே நமது செயத்தக்க கடமை என்பது குறிப்பெச்சம்; பிரிநிலையேகாரம் தொக்கது. இஃது அம்மையார் மனத்திற் கண்ட துணிபு.

நம்மை...கொண்டு வாரும் - மனத்துணிபினைத் தொடர்ந்து புறநிகழ்ச்சி.

மணி - மணிபோன்ற மகனார்; ``உலாத்தருமிந் நடைமணி`` (கோவை - 385).

நம்மைக் காக்கவரும் - ``எனை யிங்குய்ய நீ பயந்தான்`` என்ற கருத்தினைத் தொடர்ந்து மனைவியாரையும் உளப்படுத்திக் கூறியது.

காக்க - உய்ய என்றதுபோல அடியார்க் கமுதூட்டும் நியமந் தவறுதிருக்க உதவுதலால் அச்சிவ புண்ணியப் பேற்றுக்குத் துணையாய் வீடுபேறு தரும் சாதனமாதல் குறிப்பு; சரித முற்குறிப்புமாம். நாயனார், கோயிலினின்று நேரே பள்ளிக்குச் சென்று தாமே சீராளரை அழைத்துவராமல் மனைக்கு வந்து அம்மையை வினவியது அவரிசைவு பெறுதற் பொருட்டாம்.

பள்ளியினிற் சென்று - என்க. சென்று பள்ளியினின்றும் என்பதுமாம்.

திருஅனையார்- திரு - முத்தித் திருவுக்கு முதல்வியாகிய ஞானம்பிகை; இங்குத் தமது இசைவினால் அனைவருக்கும் வீடு தருவதற்கு மூலமாகும் சரித விளைவுக் குறிப்புமாம். **திரு-** இலக்குமி என்பாருமுண்டு. 57

3717. **(இ-ள்)** காதல்...கூற - காதலுடைய மனைவியார் முன்கூறியவாறு கூற; கணவனாரும்...போல - கணவனாராகிய சிறுத்தொண்டனாரும் குற்றம் நீங்கப் பெற்ற எல்லாப் பேறும் அப்போதே பெற்றுவிட்டனர் போல (மகிழ்ந்து); நாதர்...கடிதணைந்தார் - நாதருக்கு அங்குத் திருஅமுதாக ஆக்குதற்கு நறிய மெல்லிய குதலை மொழி பயிலும் புதல்வர் கல்வி பயில அணைந்த பள்ளியினின்றும் உடன் கூடக் கொண்டு வருதற் பொருட்டு விரைந்து சென்றனர்.

(வி-ரை) காதல் மனையார் - கணவனாரும் - காதலனை - இல்லறத்தின் நிலையில் மிக்க காதல் கொண்ட துணிபில் ஒழுக்கமுடையோர்; மகன்மீதும் மிக்க காதலை உடையோர்

3717. காதன் மனையார் தாங்கூறக் கணவ ருருங் காதலனை
ஏத மகலப் பெற்றபே றெல்லா மெய்தி னார்போல
நாதர் தமக்கங் கமுதாக்க நறுமென் குதலை மொழிப்புதல்வன்
ஓத வணைந்த பள்ளியினி லுடன் கொண் டெய்தக் கடிதணைந்தார். 58

என்றது இங்குக் கொண்ட துணிபின் நிகரற்ற அருமை குறித்ததற்கு; **காதலன் - காதல் -** ஊன்றிய - அழுந்திய - காதலுக்குப் பற்றுக்கோடாகிய இருப்பிடமானவன். **கணவர் -** பங்குடையவர்; **மனையார் -** "மனையறத்தின் வேர்"; இப்பொருட்கள் எல்லாம் பொருந்த வைத்து இச்செய்கையின் ஏற்றம் அறிவித்தபடி.

ஏதம் அகல - அமுதூட்டும் நியமம் பிழைக்காது.

பேறும் எல்லாம் - நியமமும் அதனால் வரும் பயனும் ஆகிய எல்லாம்.

எய்தினர் போல - ஈண்டு அம்மையாரது இசைவுபெறப் பெற்றதனாலே மற்று எல்லாம் பெறுதல் உறுதி என்பார் இறந்த காலத்தாற் கூறினர். அப்போதே அடைந்துவிட்டார் போல எண்ணி.

நறுமென் குதலை மொழிப் புதல்வன் - "திருவாய் நீரின், உண்ணனைந் தமுதமூறி யொழுகிய மழலைத் தீஞ்சொல்" (671); **நறுமை -** திருவாயின் பால்மாறா மணம்; **மென்மை-**மெல்லிய குரல். **குதலை -** மழலை மாறாத இன்மொழி; அவர்பால் இவரது காதல் மிகுதிகொள்ள நின்ற தன்மையும் இச்செயலி னருமையும் புலப்படக் கூறிய குறிப்பு.

பள்ளி - இது வடக்கில் நகர்ப்புறத்தில் அணிமையில் 1/2 நாழிகை யளவில் உள்ள கிராமத்தில் இருந்ததென்பது கர்ணபரம்பரை. அந்நினைவுக் கறிகுறியாக அங்குச் சீராளதேவருக்கு ஒரு சிறு ஆலயமும் வகுத்து, அதில் அவரது அரிய அழகிய குழந்தைத் திருவுருவம் தாபித்து வழிபடப் பெறுகின்றது.

கடிது-ஆர்வத்தின் மனவிரைவுக் கேற்றபடி உடல்வேகமும் ஒன்றித்து நிகழ. 58

3718. **(இ-ள்)** பள்ளியினில்...தழுவ-பள்ளியில் போய்ச் சேர்தலும் பாதத்தில் அணிந்த சதங்கை மணிகள் சத்திக்கப் பிள்ளை அவர் எதிரே ஓடிவந்து தழுவிக்கொள்ள; எடுத்து... புகுத - அவரை எடுத்துத் தோளில் மேல்வைத்துப் பொருந்தும்படி அணைத்துக் கொண்டு மீண்டு வந்து தமது திருமனையினுள்ளே (நாயனர்) புகுதவும்; குலமாதர்... வாங்கி - குலமாதாராகிய திருவெண்காட்டு நங்கையார் வள்ளலார் சிறுத்தொண்டரின் முன்பு சென்று அம்மைந்தன் றன்னை எதிரில்தாம் வாங்கிக்கொண்டு,

(வி-ரை) பாத...தழுவ - ஓடிவந்து தழுவுதல் - இது, வேற்றிடங்களில் தாய் தந்தையர் வரக் கண்டபோது சிறுவர் செய்யும் செயல்; தன்மையணி; **பாதச் சலங்கை மணி ஒலிப்ப-** ஓடி வருதலால் சலங்கை மணிகள் ஒலித்தன; **பாதம் -** இங்குச் சரிதப் போக்கிலே ஆசிரியர் அத்திருப்பாதங்களைப் போற்றி வணங்கிக்கொள்ளும் உட்குறிப்பும்

3718. பள்ளி யினிற்சென் றெய்துதலும் **பாதச் சதங்கை மணியொலிப்பப்**
பிள்ளை யோடி வந்தெதிரே தழுவ வெடுத்துப் பியலின்மேற்
கொள்ள வணைத்துக் கொண்டுமீண் டில்லம் புகுதக் **குலமாதர்**
வள்ள லார்தம் முன்சென்று மைந்தன் றன்னை யெதிர்வாங்கி, 59

3719. குஞ்சி திருத்தி முகந்துடைத்துக் கொட்டை யரைஞாண் டுகணீக்கி
மஞ்ச ளழிந்த வதற்கிரங்கி மையுங் கண்ணின் மருங்கொதுக்கிப்
பஞ்சி யஞ்சு மெல்லடியார் பரிந்து திருமஞ் சனமாட்டி
எஞ்ச லில்லாக் கோலஞ்செய் தெடுத்துக் கணவர் கைக்கொடுத்தார். 60

கண்டுகொள்க; இது தெய்வக் கவிநயம்; வேறு நிலைகளாற் கூறுது இதுபற்றிக் கூறியது மிக்கருத்து; இவ்வாறு இங்கு ஓடிவந்து தழுவியதுடன் முடிந்த இவ்வோட்டமே, பின்னர்த் திருவருளால் மீள உயிர்பெற்றபோது "பள்ளியினின் றோடி வருவான் போல்வந்த" (*3741*) ஓட்டமாகத் தொடர்ந்து வரும் தன்மையும் உட்குறிப்பினு லுணர்த்தியவாறும் கண்டு கொள்க.

பியல்-தோள்; தோளின்மேல் வைத்து அணைத்துக்கொண்டு மீண்டது திருவமுதாக்குதற்குக் காலம் தாழ்த்தாது விரைந்து கொண்டு சேறும் பொருட்டாம்; அன்றியும் அடியவரது திருஅமுதுக்குரிய பண்டமாதலின் அவ்வுடல் நடந்துவரச் செய்து வருந்தின் உடல் நைந்து தன்மை மாறுமாதலின் அதன் பொருட்டுமாம். "எந்தை பியன்மே லிருந்து" (தே-பிள்),

குலமாதர் - குலநலம் பெரிதும் படைத்த அம்மையார்; **குலம்** - இல்வாழ்க்கைக்குரிய குணநலங்களும் குறித்தது.

வள்ளலார் - செயற்கரிய செய்து வரையாது கொடுக்கும் இத்தன்மை குறிக்க இங்கு இப்பெயராற் கூறினர்.

முன் சென்று எதிர் வாங்கி - முன் செல்லுதல் - அம்மையாரின் ஆர்வ மிகுதியும் மேலும் காலந்தாழ்த்தலைத் தவிர்க்கும் கருத்துமாம். "முன் வந்து" (*3712*) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

எதிர் வாங்குதல் - அவர் தருதற்கு முன் தாமே வாங்குதல் குறித்ததும் அக் கருத்து.
59

3719. (இ-ள்) குஞ்சி...ஒதுக்கி-தலைமயிரினைத் திருத்தி, முகத்தைத் துடைத்து, கொட்டையிலும் அரைஞாணிலும் படிந்த துகளை நீக்கி; அணிந்த கலவைச் சாந்தம் அழிந்ததற்கு வருந்தி, கண்ணில் அணிந்த மையினையும் கண்ணிற் படாமல் ஒழுங்காகப் பக்கத்தில் நிற்கும்படி ஒதுக்கி; பஞ்சி...அடியார் - பஞ்சும் அஞ்சத்தக்க மென்மையுடைய அடியினையுடைய அம்மையார்; பரிந்து...எடுத்து - அன்புடனே திருமஞ்சனம் ஆட்டுவித்துக் குறைதலில்லாத கோலத்தினைச் செய்து எடுத்து; கணவர் கைக்கொடுத்தார் - கணவராகிய நாயனர் கையிலே கொடுத்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) அடியார், திருத்துதல் முதலியவற்றைச் செய்து, எடுத்துக் கணவர் கையிற் கொடுத்தார் என்று கூட்டி முடிக்க.

குஞ்சி திருத்தல் - முதலியவை குழந்தைகளைத் தாய்மார் கண்டுழிப் பரிந்து செய்யும் செயல்கள் என்பர்; இவை தன்மையணி நயம்; அவ்வியல்பு பற்றி இவை செய்தார் திருவெண்காட்டு நங்கையார் என்பாருமுண்டு; அடியார்க் கமுதாக ஆக்கும் பண்டமாக அம்மைந்தரது திருவுடம்பு அப்போது கொள்ளப்பட்டமையால் அப்பண்டத்தினைக் கழுவிச் செப்பமாக்கும் வகையால் அவ்வெண்ணத்துடன் இவை செய்யப்பட்டன என்பதாம். "அச்சமெய்திக் கறியமுதா மென்னு மதனுல்-உச்சி மோவார்-அணைத்தே-யுத்தந்தாழுண்ணார்" என மேற்கூறுமாற்ருல் இக்கருத்துப் புலப்படுமாறறிக.

குஞ்சி - ஆண் மக்களின் தலைமயிர்; **முகந்துடைத்தல்** - வியர்வையினையும், படிந்த மாசுகளையும் போக்குதற்கு; "குஞ்சியழகும்...மஞ்சள் அழகும்" (நாலடி) என்பதும் காண்க. **குஞ்சி**-குடுமி. **குஞ்சி-முகம்**-உம்- வேற்றுமைத் தொகை.

கொட்டை - அரைநாண் - கொட்டை - கடுக்கன் - காதணி; உம்மைத் தொகை; கொட்டையிலும் அரைஞாணிலும்.

மஞ்சள் - குங்குமப்பூக் கலந்த கலவைச் சாந்து; **அழிதல்**-முன்னர்ப் பூசினபடி யன்றி விளையாட்டு. வியர்வை முதலிய காரணத்தாற் கோலம் சிதைதல்.

மையும் - மஞ்சளோடு அவ்வாறே தீட்டிய கோலம் சிதைந்த மையினையும் என உம்மை இறந்தது தழுவியது; **மருங்கு ஒதுக்குதல்**-கண்ணிற்படாமல் இமைகளின் பக்கமே இருக்கும்படி ஒதுக்குதல்.

பஞ்சி அஞ்சும் மெல் அடியார் - அம்மையார்;இவ் அடை மொழிகள் அவர் திருவடியின் மெல்லிய தன்மை குறித்தன; இத்தகைய மென்மை தனக்கில்லை என்று இலவம்பஞ்சும் அஞ்சி ஒதுங்கக் கூடியபடி உள்ள மெல்லிய அடி என்க; **அஞ்சுதல்** - உடைந்து வெட்குதல்; தற்குறிப்பேற்றம். பஞ்சியிற் படினும் வருந்தும் அடி என்றலுமாம். "பஞ்சிதனின் மெல்லடி பதைப்ப" (கந்தபு - தெய்வ - மண-231).

பரிந்து - என்பதனை எல்லாவினைகளுடனும் கூட்டுக.

எஞ்சலில்லாக் கோலம் - எவ்வாற்ருலும் ஒரு குறையும் இல்லாதவாறு செய்யும் அலங்காரம்; இவ்வாறு குறைபாடில்லாக் கோலஞ் செய்ததனை இங்கு இவ்வளவும் விரித்துக் கூறியது, இக்கோலத்தோடும் தரமில் வனப்பில் தனிப் புதல்வர் உயிர் பெற்று மீள வருதலும், இத்திருக்கோலத்துடனே என்றும் பிரியாதே இறைஞ்சி, இறைவர் - மலைமகளார் - சரவணத்துத் தனயர் - இவர்களுடனே திருக்கயிலையில் வீற்றிருக்கப் பெறுவாராதலும் குறித்தற்கு.

எடுத்துக் கணவர் கைக்கொடுத்தார் - பள்ளியினிற் சென்று கணவனுற் எடுத்துக் கொடுவந்த பிள்ளையை அம்மையார் தாமே அவரிடமிருந்து எதிர் வாங்கினர்; கோலம் செய்தார் - மீள அவர் கையிற் கொடுத்தார் என்றது அம்மைந்த னுடலினைக் கழுவித்

3720. **அச்ச மெய்திக் கறியமுதா மென்னு மதனு லரும்புதல்வன்**
உச்சி மோவார்; மார்பின்கண் ணணைத்தே முத்தந் தாமுண்ணுர்;
பொச்ச மில்லாத் திருத்தொண்டர் **புனிதர் தமக்குக் கறியமைக்க**
மெச்சு மனத்தா லடுக்களையின் மேவார்; வேறுகொண்டணைவார், 61

திருவமுதாக்குதற்குத் தக்கபடி செய்ய வேண்டிய நிலை மனைவியாராகிய தமது கடமை என்றதனுலும், அமுதுக்குத்தக்கதாக ஆக்க வேண்டுமென்ற தமது அன்பினுலும் ஆம் என்றதாம். அன்றியும் இக்கோலங்கள் செய்து திருத்துதல் மெய்த்தாயர் தொழிலாதலும் காண்க. இவ்வாறு கோலஞ் செய்து **எடுத்துக் கணவர் கைக்கொடுத்தது** அம்மையாரது உலகியல் கடந்த சிவனடிமைத் திறம் பற்றிய பேரன்பின் நிலை குறித்தது. இனிப், பின்னர்த், தாம் அழைக்கத் தம் மகனை மீள உயிர் பெற்று ஓடிவந்தபோதும் அம்மையார் "எடுத்துத் தழுவித் தம் கரமுன் அணைத்துக் கணவனுர் கையிற் கொடுப்ப"க் காண்கின்றேம்; அந்நிலை வேறு; அது தமது புதல்வன் என்ற தன்மையாற் மேற்கொண்ட **உலகியல் அன்புநிலை;** இங்குக் கணவர் கைக்கொடுத்தது ஆண்மக்கள் செய்யும் மேல்வினை செய்தற்கு; அங்குக் கணவர் கையில் கொடுத்தது வைரவர் "நாமிங் குண்ப தவன்வந்தால்" என்ருராதலின் அவன் வந்தமையை அவர் அடியார்க்குக் காட்டி அவரை உண்ணச் செய்தற்கு; முன்னர் அம்மைந்தன் உடல் அடியவரது திருவமுதுக்குரிய கறிப்பண்டம்; பின்னர் அவ்வுடல், அவர் காணக்காட்டும் தம் புதல்வன்; என்றிவ்வாறு இவற்றின் வெவ்வேருயின தன்மைகளைக் கண்டு கொள்க. 60

3720. **(இ-ள்)** அச்சம்...அதனுல்-திருத்தொண்டர்க்கு ஆக்கும் அமுதுக்காக உதவும் பண்டம் என்ற அதனுல் பயமெய்தி; அரும் புதல்வன்...தாம் உண்ணுர் - அரிய புதல்வனை உச்சிமோவார்; மார்பில் அணைத்தே முத்தந் தாம் உண்ணுர்; பொச்சமில்லா...மேவார் - குற்றமற்ற திருத்தொண்டராம் நாயனுர் புனிதராகிய அடியவருக்குக் கறியாக்குதற்கு விரும்பும் மனத்தாலே அடுக்களையில் மேவாராகி; வேறு கொண்டு அணைவார் - வேறு தனியிடத்திற் கொண்டு சேர்வாராய்,

(வி-ரை) கறியமுதாம் என்னும் அதனுல் அச்சம் எய்தி-என்க. அச்சமாவது அரனுக்கும் அடியார்க்கும் ஆக்கும் பொருள்களை எவ்வாற்ருனும் தாம் நுகராமைக் காத்தல் வேண்டுமென்ற நியமங்காத்தலான் வரும் பயம். நுகர்தல் - மூக்கினுல் நுகர்தல், கண்ணுல் இச்சைகொண்டு நோக்குதல், அவ்வாற்ருற் பரிசித்தல் என்ற எவ்வாற்ருனும் நேரும்; ஆதலால் அந்த எவ்வழியேனும் நுகர்தலின்றிக் காக்க அச்சம் வேண்டுவதாயிற்று; இங்கு அக்காரணத்தால் தம் மகனுரை உச்சி மோத்தல் - மார்போடு அணைத்தல்- முத்த முண்ணுதல் என்ற இவை தானும் செய்தாரிலர் என்பதாம்.

உச்சி மோத்தல் - மார்பில் அணைத்தல் - முத்தம் உண்ணல் - இவை மகப்பெற்ருேர் குழவிகளைப் பாராட்டி மகிழ்வுறும் செயல்கள்; **முத்த முண்ணல்**-முத்தந் தரக்கொண்டு மகிழ்தல்; "**முத்தந் தருகவே**" என்பது பிள்ளைத் தமிழ் வழக்கு; இங்கு அம்மகனுரைத் தம் மகனுர் என்ற நிலையினை மாற்றி அடியார்க்காகக் கறியமுதாம் என எண்ணி விட்டாராலதலின் இவ்வாறு மகிழும் முன்னை நிலையும் மாறிற்று; **பொச்சம்** - குற்றம்; தவறு;

3721. **ஒன்று மனத்தா** ரிருவர்களு **"முலக ரறியா"**ரெனமறைவிற்
சென்று புக்குப் பிள்ளைதனைப் பெற்ற தாயார் செழுங்கலங்கள்
நன்று கழுவிக் கொடுசெல்ல **நல்ல மகனை யெடுத்துலகை**
வென்ற தாதை யார்தலையைப் பிடிக்க விரைந்து **மெய்த்தாயர்,** 62

பொய்; **பொச்சமில்லா** என்றது மிக்குறிப்பு. தாம் உச்சி மோந்தும் அணைத்தும் முத்தம் உண்டு நுகர்ந்தால் கறியமுதாம் அப்பண்டம் எச்சில்படும் என்பது **அச்சமெய்தி** என்ற கருத்து. வேறு - மற்றோரிடத்தில்:

மெச்சு மனம் - மகிழும் உள்ளம். **இல்லா -** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

புனிதர்க்குக் கறியமைக்க-அடுக்களையின் மேவார்-வேறு கொண்டணைவார் - புனிதர்-தூய்மை செய்பவர்; தூயர்; ஆதலின் அவருக்கு அமுது அமைக்கும் இடம் புனிதமாக இருத்தல் வேண்டும். மைந்தனாரைச் செய்யும் அரியவினைகள் அங்குச் செய்யின் புனிதத் தன்மைக்கு இழுக்காகும் என்ற அடுக்களையில் அவற்றைச் செய்யாது வேறு தனியிடத்துக் கொண்டனர் என்பதாம். **அடுக்களை -** அடுதல் - அமுது சமைத்தல் - செய்யும் இடம். *61*

3721. **(இ-ள்)** ஒன்றும்...புக்கு-ஒன்றித்த மனமுடைய அவ்விருவர்களும் உலகத்தார்கள் இதன் உண்மைத் தன்மையினை அறியமாட்டார்கள் என்று எண்ணி மறைவாகிய இடத்திற் சென்று புகுந்து; பிள்ளைதனை...செல்ல - பிள்ளையைப் பெற்ற தாயார் திருவெண்காட்டு நங்கையார் செழிய கொள்கலங்களை (பாத்திரங்களை) நன்றாகக் கழுவிக் கொண்டு செல்ல; நல்ல மகனை...பிடிக்க - நல்ல திருமகனாரை எடுத்து உலகியலை முற்றும் வென்ற தாதையாராகிய நாயனார் தலையைப் பிடித்துக்கொள்ள; விரைந்து மெய்த்தாயர் - மெய்த்தாயாராகிய அம்மையார் விரைந்து;

(வி-ரை) ஒன்றும்மனம்- ஒன்றும் - ஒன்றித்த; ஒன்றாகிய; ஒரு தன்மைப்பட்ட "ஒன்றி யிருந்து நினைமின்கள்" (தேவா); **இருவர் -** நாயனாரும் மனைவியாரும்.

உலகர்...புக்கு - இதனை உலகர் பார்க்கில் இதன் உண்மையினை **அறியாமையால்** பழித்தும் தடுத்தும் பிறவாறு இடையூறு விளைத்தும் செயல் செய்தல் கூடும். அதனால் காலத்தாழ்வு முதலியனவும் நேர்ந்து அடியார் திருவமுது செய்ய இடையூறாம் என்பது மறைவிற் கொண்டு வினைசெய்யச் சென்றதன் கருத்து, எவ்வாற்றானும் மகனது உடம்பினைத் திருவமுதுக்கு விரைவில் ஆக்க வேண்டுமென்பது ஆர்வம்; பின்னர்ப் பிள்ளை பிழைத்து ஓடிவந்தபோதும் அதற்காக மகிழாது "திருத்தொண்டர் உண்ணப்பெற்றோம் எனும் பொலிவால்" மகிழ்ந்தார் *(3741)* என்னும் கருத்தினை இங்கு வைத்துக் காண்க.

செழுங் கலங்கள் -இறைச்சி முதலிய வகைகளை ஏற்கத்தக்க நல்ல கொள்கலங்கள்; பாத்திரங்கள்; **செம்மை -** செம்பொன் - வெண்பொன் முதலிய உயர்ந்த உலோகங்களால்

3722. இனிய மழலைக் **கிண்கிணிக்கா லிரண்டு மடியின் புடையிடுக்கிக்**
கனிவாய் மைந்தன் கையிரண்டுங் கையாற் பிடிக்கக் காதலனு
"நனிநீடு டுவகை யுறுகின்ரு" ரென்று மகிழ்ந்து **நகைசெய்யத்**
தனிமா மகனைத் **தாதையார் கருவி கொண்டு தலையரிவார்,** 63

இயலுதல். தூயனவாதல்.

நன்று கழுவி - திருவமுதுக்கு உரிய பண்டங்களை வைக்கும் கலங்கள் நன்கு கழுவித் தூய்மை செய்யப் பட்டிருத்தல் வேண்டும். இன்றேல் மாசுபடிந்தும் களிம்பு முதலிய குற்றங்கள் சேர்ந்தும் திருவமுது பழுதுபட்டு விடத்தன்மையை யடையும் என்பது மருத்துவநூல் பாகநூல்களின் உண்மைகள்; சரிதம் செல்லும் நிலையில் இவ்வுலகியலின் போதனைகளையும் கூறிச் செல்லுதல் உயர்ந்த கவிமாண்பு. "நீரிற் சேற்றினை **யலம்பி யூற்றி**" (458), "கறிக ளாய்ந்து புனலிடைக் கழுவித் தக்க புனித பாத்திரத்து" (461) முதலியவை காண்க.

நல்லமகனை - நன்மை - இறைவர்க்குத் திருவமுதாக்க உதவும் தன்மையும், பெற்ருேர்கள் கொண்ட அடியார்க் கமுதூட்டும் விரதங் குலையாமற் காத்து மேனிலை எய்த உதவும் தன்மையும், ஆளுடைய பிள்ளையார் திருவாக்கில் வந்த பெருந்தன்மையும், பிறவுமாம். "**சீராள தேவரெனுந் திருமைந்தர்**" (3676); பெற்ருேர்க்குப் பேறுதர வரும் மகனே நல்ல மகன் எனப்படுவது உலகியல்புமாம். "சீராளன்" (தேவா).

உலகை வென்ற தாதையார்- உலகு - உலகியலிற் றிணிந்த புத்திர வாஞ்சை என்னும் கடத்தற்கரிய காதல்; தசரதன் சரிதம் முதலியவை இங்கு நினைவு கூர்தற் பாலன. "உருநாட்டுஞ் செயல் காமனொழிய" (3660) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. "அடியேனுக் கிதுவு மரிதன்று" (3711) எனத் துணிவு கொண்டபோதே அவ்வெற்றி போந்ததாதலின் **வென்ற** என இறந்த காலத்தாற் கூறினர். அரியவினை முதலிய ஏனைப் பின்னிகழ்ச்சிகள் அதன் பயனுகப் போந்தனவேயாம்.

தலையைப் பிடிக்க - அரிய வினைக்கு முதற்கண் செய்யும் வினை இதுவாம்.

மெய்த்தாயர் - இடுக்கி - பிடிக்க - என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக. 62

3722. **(இ - ள்)** இனிய...பிடிக்க - இனிய மழலை ஓசைதரும் கிண்கிணியை அணிந்த கால்கள் இரண்டினையும் மடியின் இடையே இடுக்கிக்கொண்டு கனிபோன்ற வாயினையுடைய மகனின் கைகளிரண்டினையும் கையாற் பிடித்துக்கொள்ள; காதலனும்...நகை செய்ய - மைந்தனும் தனது பெற்ருேர்கள் மிகவும் பெரிய மகிழ்ச்சி யடைகின்றுர்கள் என்ற மகிழ்ந்து நகைக்க; தனி...அரிவார் - ஒப்பற்ற பெருமையுடைய மகனுரைத் தாதையாராகிய சிறுத்தொண்டர் கருவியினுல் தலையினை அரிவாராகி,

(வி-ரை) மழலைக் கிங்கிணி - மழலை - மகார்களின் சொற்போல ஒலிக்கும் என்ற பொருளில் வந்தது. **மதலை** - (கிங்கிணிக்) **கால்** என்பது பாடமாயின் (**மதலை** - மகன்)

மதலையின் கால் என்க. **மதலை** - தூண்; தூண்போலக் குலத்தைத் தாங்குதலின் மகனுக்கு வரும்; ஆகுபெயர்;

மடியின் புடை இடுக்கி - மடியின் இடையே மகனின் இரண்டு கால்களையும் பிறழாமல் இடுக்கிக் கொண்டு; **இடுக்குதல்** - இருபிடிப்பும் படுத்தி அமுத்தி வைத்தல். **காதலன்** - (**காதல்** - விருப்பம்). ஈண்டு மகன் என்ற பொருளில் வந்தது.

கையால் - தம் கையினாலே; காலினை இடுக்குதலும் கைகளிரண்டினையும் பிடித்துக் கொள்ளுதலும், தலையை அரியவினை செய்தற்கண் உடல் பிறழ்ந்து அவ்வினைக்கு இடையூறு விளைக்கா வண்ணம் செய்யும் எச்சரிக்கைத் தொழில்கள். கருவியினை லறுத்தல் செய்யும் மருத்துவர் இவ்வாறு உடல் அசையாமல் முன்னர்ச் செய்துகொள்ளும் எச்சரிக்கைச் செயல்களாதல் காண்க.

தனிமாமகன் - "நல்ல மகன்" என முன் கூறியதனைத் தொடர்ந்து, ஈண்டு இந்நிலையின் முடித்துக் கூறியது, இவரை இனிப் பேசும் நிலை, இவர், மேல், உயிர் பெற்றுவரும் நிலையில் அமைதல் குறிக்க; "மாறின்மகவு-மைந்தன்" (3738) என்று இறைவரும்,"மைந்தா, செய்யமணியே சீராளா" (3740) என்று பெற்றோரும் "தரமில் வனப்பிற் றனிப்புதல்வன்" (3741) "மகனார்" (3746) என்று ஆசிரியரும் மேற் பாராட்டும் நிலைகள் கண்டுகொள்க.

நனி...நகை செய்ய - இது மகனார் உள்ளத்து மகிழ்ந்த கருத்து. இதனால் மகனாரது உள்ளத்தில் தம்மைப் பெற்றோரது முகத்துவகை கண்டு இவர் தம்பால் பேருவகை கொள்கின்றார் என்று தாமும் நகை செய்து மகிழும் அளவு அவர்கள் மனங்கள் மகிழ்ந்தன என்பது குறிப்பு. "தம்மில் மனமுவந்தே" (3710) என்ற நிலை உள்ளபடி விளக்கங் காணப்பெற்ற தென்பது. **கருவி** - தலை அரியும் வாள் - கத்தி. **மகிழ்ச்சி** - அகத்தும், **நகை** - அது காரணமாகப் புறத்தும் நிகழ்வன.

அரிவார் - அரிவார் என்று எதிர்கால வினைமுற்றாற் கூறி,மேற், செய்த செயலைத் தாம் எடுத்துச் சொல்லாமலே கருதியறிந்துகொள்ள வைத்த கவிநயம் கண்டுகொள்க. மேல் **அரியவினை செய்தார்** என்றது அதன்மேல் நிகழ்ந்த அறுத்தல், கூறுபடச் சேதித்தல் முதலியவற்றையும் உள்ளடக்கி நின்றது.* 63

3723. **(இ-ள்)** அவர் - அத்தந்தையார்; பொருவில்...மகிழ்ச்சி யெய்த - ஒப்பற்ற

---

* **குறிப்பு:** ஈண்டுக் "**குடியர்கள் வெறி**யால் தங்களை மறந்து செய்யும் செயல்களை ஈண்டுக் கருதிக் கொள்க" என்றும், "இங்கே இவர் கொண்ட**வெறி** அன்புக் குடியினால் எழுந்தது" என்றும், "அடியவர்மீது கொண்ட அன்பு வெறிமேலிட்டு நின்று அவ்விருவரையுஞ் செயற்கருஞ் செய்கையைச் செய்ய உந்து கின்றது. அது மேலுமேலும் **களிப்பு** ஊட்டிக்கொண்டே போகிறது" என்றும், இவ்வாறு விசேட ஆராய்ச்சி செய்வாருமுளர். இவ்வாராய்ச்சியின் பொருந்தாமை சிறிது ஊன்றி உண்மை காண்பார்க்கும் விளங்கும்; முதலாவது கட்குடியர்கள் கீழ்நோக்கிய நிலையில் நின்று, ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்றாகிய **கள்ளைப்** பயின்று தம்மையும் தாம் செய்யும் செயலையும் **அறியாது மயங்கிக்** கீழாயின பாதகச் செயல்களைச் செய்வர்; நாயனாரும் மனைவியரும் அவர் போன்ற பெரியார்களும் அவ்வாறு கீழ்மைத்தன்மையில் பயின்றாரிலர். **தம்மையும் தாம் செய்யும் செயலையும் நன்கு அறிந்து** கொண்டவாறே ஞானநூன் முடிபுகளாகிய மேம்பட்ட செயல்களைச்

3723. "பொருவில் பெருமைப் புத்திரன்மெய்த் தன்மை யளித்தா"னெனப் பொலிந்து
மருவு மகிழ்ச்சி யெய்த, "வவர் மனைவி யாருங் கணவனார்
அருமை யுயிரை யெனக்களித்தா"னென்று மிகவு மகமலர
இருவர் மனமும் பேருவகை யெய்தி யரிய வினைசெய்தார். 64

பெருமைப் புத்திரன் மெய்யாந் தன்மையினை எனக்கு அளித்தான் என்று விளங்கிப் பொருந்திய மகிழ்ச்சியினை அடைய; மனைவியாரும்...அகமலர - அவரது மனைவியாராகிய அம்மையாரும் கணவனாரது அரிய உயிரை எனக்கு இப்புதல்வன் அளித்தான் என்று மிகவும் மனம் மலர்ந்து மகிழ; இருவர்...எய்தி - இவ்வாறு இருவருடைய மனங்களும் பெருமகிழ்ச்சி பொருந்தி; அரியவினை செய்தார்- அரிய செய்கையினைச் செய்தனர்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) அவர் - நாயனார்; **அவர்- மகிழ்ச்சி - எய்த** என்று கூட்டுக. அவர் **மனைவியாரும் -** என்று கூட்டி அவருடைய என்றலுமாம். இப்பொருளில் நாயனார் என்பது வருவித்து முடிக்க.

பொருவில்...அளித்தான்- இது நாயனார் கருதி உண் மகிழ்ந்தது; **மெய்த்தன்மை** - மண்ணினிற் பிறந்தார் பெறும் உறுதியாகிய உண்மைநிலை. அடியார்க் கமுதூட்டும் விரதந் தவறாத தன்மை. **மெய்-** மெய்மையைத் தரும்; இது சிவத்தன்மையாகிய செம்மை; **அளித்தான் -** உரிய சாதனமாக வந்து பெறுவித்தான்.

கணவனார்...எனக் களித்தான் - அடியாரை ஊட்டும் நியமமும் தமது வாக்கும்

செய்தனர். "மற்றித்திறத்து மைந்தர் தமை, நினைவு நிரம்ப நிதிகொடுத்தாற் றருவா ருளரே; நேர்நின்று, தனயன் றன்னைத் தந்தைதா யரிவா ரில்லை" (3715) என்றும், "உலகரறியா ரென மறைவிற் கொண்டு புக்கு" (3721) என்றும் வருவனவாற்றால் நாயனாரும் மனைவியாரும் தமது அரிய ஞான நூற்றுணிபின் வந்த செயலையும் உலகியல்மாக்க ளதனை அறியாநிலையினையும் நன்கு அறிந்தே வினைசெய்தமை தெளியப்படும். (2) "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை" என்ப திலக்கணமாதலின் உயர்ந்த பொருளுக்குத் தாழ்ந்த பொருளை உவமித்தல் பிழையாம். (3) இங்கு இவ்விருவரும்செய்த வினை உலக இயலில் **கொலையே போற்** காணப்படினும் அது கொலையாகாது அருளின் வழிச் செய்யப்படும் **ஞான சாதனச் செயலாம்** என்பது உண்மை அறிவோர் துணிபு; என்னை? இம்மகனார் இச்செயலின் அரியவினைக்குட்படாது நின்றிருப்பின் ஏனை மாந்தர் போலச் சிலநாள் வாழ்ந்து, பின் இறந்து, பின்னும் பிறந்திறக்கும் நிலையே பெற்றிருப்பர்; ஆனால் இவ்வரிய வினையினால் பிறவியினின்றும் நீங்கி என்றும் பிரியாதே உடனிருக்கும்படி கொள்ளும் மீளா நிலைபெற்றனர். இவ்வரிய வினையால் உலகில் வரும் மக்கட் பந்தம் நீங்கி இவ் இருவரும் அந்நிலையினைப் பெற்றனர். இதுபோழ்து செய்யாது நின்றிருப்பின் வாளா பிறந்திறந் துழலும் ஏனை மாந்தரின் வேறல்லாராவார் என்பதும் காண்க. இயற்பகையார் முதலாகிய எல்லா நாயன்மார்களது வரலாறுகளையும் இவ்வாறே சிந்திக்க (4) மனித உடலைத் துன்பத்துட் படுத்துவதும் உயிர் பிரித்தலும் **எஞ்ஞான்றும்** சீவ இம்சையும் கொலையுமேயாம் என்ற போலிச் சமண பௌத்த கொள்கையினை மேற்கொண்டு அதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது இவ்வாராய்ச்சி; இவ்வுலகில் பலரும் இம்மயக்க வுணர்வே கொள்கின்றார்கள். மக்கட் கூட்டத் தலைவர்களாய் அறிவாளிகள் எனப்படுவோரும் இவ்வாறே மயங்குகின்றனர். இதன் உண்மை நிலை முன்னர்ப் பலவிடத்தும் எடுத்துக்காட்டப்பட்டது; ஈண்டும் சிறிது விளக்குவாம்; உடலில் நோய் கண்டபோது அவ்வவ்

தவறின் கணவனு ருயிர் வாழாராதலின் அவ்வாறு நிகழாமற் காத்து அவர் உயிரைத் தாக்கு இப்புதல்வன் அளித்தான் என்று அம்மையார் மகிழ்ந்தனர். அரிவாட்டாயர், கலியர் முதலிய நாயன்மார்களது சரித நிகழ்ச்சிகள் காண்க.

அரிய வினை - பிறர் எவராலும் செய்தற்கரிய செயல். இத்தகைய வல்வினைகளை வெளிப்படக் கூருமல் இவ்வாறு கூறுதல் ஆசிரியரது மரபு; இதுபற்றி "வரங் கடருஞ் செய்ய வயிரவர்க்குத் தங்கள், கரங்களினு லன்றுகறி யாக்க - விரங்காதே, கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானவற்றை, வல்வினையே யென்றதுநாமற்று" *(18)* என்றும், "வல்வினையே யென்ன வருமிரண்டுஞ் சொல்லிற் சிவதன்மமாம் *(16)* என்றும் *(களிறு)* வரும் ஞான சாத்திரமும் காண்க.

இருவர் மனமும் பேருவகை எய்தி - "தம்மில் மனமுவந்தே" *(3710)* என்ற நிலையைக் கூறியதன்மை.

மனைவியார் - கணவனுர் - புதல்வர் - என்ற உடற் சுற்றத் தொடர்பு பற்றிக் கூறினுர்,"மகனைத் தாதை யரியத் தாய்பிடிக்கும் பொழுது" *(3710)* என்றது இறைவர் கட்டளையாதலின் அந்நிலையினை மனத்துட் கொண்டு வைத்தவாறே நிறைவேற்றிய குறிப்புத் தருதற்கு. *64*

வுறுப்புக்களைக் கருவிகொண்டு மருத்துவன் அறுத்தும் சிதைத்தும் வேறு கூறுபடுத்தித் துண்டித்தும் வினை செய்கின்றுன்; மக்களையும் மனைவியாரையும் தம்மையும் இவ்வாறு துண்டிக்க மருத்துவனுக்கு மகிழ்ந்து பெருநிதியும் தருகின்றுர்கள். மகப்பேற்றுக் காலத்தில் இயல்பிற் பெற இயலாதபோது மகவைச் சிதைத்துத் துண்டித்துத் தாயரைக் காக்க முற்பட்டு மகிழ்வதையும் காண்கின்றேம். "எந்நாளிலோ ஒருநாள் இறந்தே படும் உடலினைப் பின்னும் சிலநாள் உலகில் வைத்திருக்கவே இவை உலகியலில் மனம் ஒப்பிச் செய்யப்படுவன ஆகில், என்றும் மீளா இன்பத்தினை உயிர் பெறுதற்கு இவ்வகை அரியவினை செய்தல் எவ்வளவும் பொருந்துவன வாகுமன்றே? இவ்வுண்மைநிலை யறியாத போலிச் சீவகாருணியம் கைக்கொள்வதனுல் எத்தனை உயிர்கள் வீணே இறந்து கழியக் காண மனம் வருந்தாமலிருக்க முடியுமா? *(5)* இனி, இறைவுன்பாலும், அடியார் பாலும் செய்யத்தகும் பணிவிடைகளில் வருவன உத்தமச் சிவபுண்ணியமாயும் அவ்வுயிர்க்கும் அவற்றை இறக்கச் செய்த அவ்வுயிர்க்கும் வீடுபேறும் தருவனவாயும் கொலை என்ற **பாதகப்** பகுதியில் வராது அருட்செயல் என்ற **சாதகப்**பகுதியில் வருவனவாயும் உள்ளன என்பதும் அறிவோர் கொள்கை; "ஒருவழிநின்றேறுதுறை ஒளிநின்று **கொன்றருளி**" *(791)* என்று கண்ணப்ப நாயனுர் சிவபூசைக்குத் திருவமுதாக்கப் பிராணிகளைக் கொன்றமை அருட் செயலாகக் **கொன்றருளி** எனப்பட்டமை காண்க. ஆண்டுரைத்தவையும் பார்க்க. தண்டியடிக ளுயனுர் இறைவருக்குத் தீர்த்தக் குளங் கல்லக் கண்ட அமணர் பொருது "மண்ணைக் கல்லிற் பிராணிபடும்; வருத்தவேண்டா" என்றபோது, "பூசு நீறு சாந்தமெனப் புனைந்த பிரானுக் கானபணி, யாசி லாநல் லறமாவ தறிய வருமோ வுமக்கு" *(3598)* என்றதும் அங்கு உரைத்தவையும் இங்கு நினைவு கூர்தற்பாலன. *(6)* இனி, ஒரு பொருளால் வரும் நன்மை தீமை அப்பொருள் கொண்டு செய்யப்படும் செயல்களின் நன்மை தீமையைப் பற்றியே விளைகின்றன என்றதும் மறுக்கலாகாத உண்மை; *(7)* "முன்னுடிக், கண்டு கடன் கழித்தல் காரியமா மென்றெண்ணிக், கொண்டுவரு நோயின் குறிப்பறிவர்—மண்டெரியிற்,

3724. அறுத்த **தலையி னிறைச்சிதிரு வமுதுக் காகா தெனக்கழித்து**
மறைத்து நீக்கச் சந்தனத்தார் கையிற் கொடுத்து மற்றையுறுப்
பிறைச்சி யெல்லாங் கொத்தியறுத் தெலும்பு மூளை திறந்திட்டுக்
கறிக்கு வேண்டும் பலகாய மரைத்துக் கூட்டிக் கடிதமைப்பார், 65

3724. **(இ-ள்)** அறுத்த... கழித்து - கூறுபடுத்தி எடுத்த தலையின் இறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று கழித்து; மறைத்து நீக்க... கொடுத்து - அதனை மறைத்து ஒதுக்கும் பொருட்டுச் சந்தனத்தாரின் கையிலே கொடுத்து; மற்றை... கடிது அமைப்பார் - மற்றை உறுப்புக்களின் இறைச்சி எல்லாவற்றையும் கொத்தியும் அறுத்தும் எலும்பினுள்ளே உள்ள மூளைப்பகுதியைத் திறந்து எடுத்து இட்டும் கறியாக்குதற்கு வேண்டும் பலவாகிய காயவகைகளை அமைத்துக் கூட்டியும் விரைவில் திருவமுது அமைப்பாராகி,

(வி-ரை) **அறுத்த...கொடுத்து** - **அரிவார்** - **(3722)** **அரியவினை செய்தார்** - **(3723)** என்று அவ்வினையைக் கூறுமற் கூறிய ஆசிரியர், **அறுத்த** - என்று இறந்தகாலத்தாற் கூறிய நிலையினாலும், அச்செயல் நிகழ்ந்ததனை அறிவித்த மரபும் கவிநயமும் கண்டுகொள்க.

தலையிறைச்சி திருவமுதுக் காகாது எனக்கழித்து - இது புலால் உணவின் பொது நியமம் போலும். ஆதலின் அம்மையார் அதனைக் கழித்தனர் என்பது கருதப்படும்; தலையில் உள்ள எலும்புக்கூடும் ஏனைய அவயவங்களின் அமைப்பும் உள்ளீடும் பற்றி இவ்வாறு

காய்ச்சிச் சுடவறுக்கக் கண்ணுரிக்க நன்னிதியம் ஈத்துத்தாய் தந்தைதம ரின்புறுதல் - வாய்த்தநெறி, **ஓடியதே ரின்கீ ழுயிர்போன கன்றாலே, நீடுபெரும் பாவமின்றே நீங்குமென—** நாடித்தன், **மைந்தனையு மூர்ந்தோன்** வழக்கே வழக்காக, நஞ்சனைய சிந்தை நமன்றூதர், வெஞ்சினத்தால், அல்ல லுறுத்த மருநரகங் கண்டுநிற்க, வல்ல **கருணை மறம்** போற்றி'' *(48 - 54 போற்றிப் பஃறொடை)* என்ற ஞானநூற் கருத்துக்களும் ஈண்டுக் கருதத் தக்கன. *(8)* ஈண்டு, நாயனாரும் மனைவியாரும், உலகப் பொருள்களும் உடலுயிர்களும் இறைவன துடைமை; இவற்றை நம்மதென் றெண்ணுவது **மருள்;** இவை அரனுக்கும் அடியார்க்குமே உடைமையா மென்ற உண்மை கண்டு அவர்க்கு ஆக்குதல் ஞான முடிபு; அதுவே உயிர்க்குறுதி செய்வன என்ற பேரறி வொளி விளங்கப் பெற்று அவ்வழி ஒழுகியவர்கள். *(9)* எந்தமது பெருமக்களாகிய உண்மை நாயன்மார்களெல்லாரும் அவ்வாறே வாழ்ந்த சீவன் முத்தர்கள். அவர்களது அருட் செயல்களை உலகியற் கண்ணாகிய அளவுகோல் கொண்டு அன்புப் பித்தென்றும் அன்புக் குடி**வெறி** யென்றும் **களிப்பு** என்றும் கூறுதல் கூறுவோரது பிழைப்பட்ட மருளினைப் புலப்படுத்துவதேயா மன்றி உண்மைத்தத்துவ நெறியினைப் புலப்படுத்தாது. "பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண மிதுகேளீர்"(திருவா) என்றும், "பித்துப் பத்தரினத்தாய்" (போதம் - 12) என்றும். "பாலருட னுன்மத்தர் பசாசர்குண மருவிப், பாடலுட னாடலிவை பயின்றிடினும் பயில்வர்" (சித்தி - 832) என்றும் வருவனவும் அவைபோல்வனவும் கூறும் பித்தர் நிலை என்னும் நிலை வேறு; அவையெல்லாம் அவ்வப் பண்புகளை விளக்க எழுந்தனவும் உலகம் அவரைப் பற்றிக் கொள்ளும் நிலைகளை மறுத்து உண்மை உணரக் கொளுத்த எழுந்தனவுமாம். ஈண்டு நாயனார் மனைவியார் செய்கைகள் இத் தன்மையுட்படாத வேறு நிலையினவாதல் கண்டு கொள்ளத் தக்கது. நாயன்மார்களது அருள் ஞானச் செயல்களை **வெறி** என்று கொண்டொதுக்கினால் அவை உலகுக்கு ஞானசாதன இலக்கியங்களாய் விளங்குதல் யாங்ஙன மென்க. இவைபோல இன்னும் பலவும் கண்டுகொள்க.

3725. மட்டு விரிபூங் குழன்மடவா ரடுப்பி லேற்றி மனமகிழ்ந்தே
அட்ட கறியின் பதமறிந்தங் கிழிச்சி வேறோ ரருங்கலத்துப்
பட்ட நறையாற் றாளித்துப் பலவு மற்றுங் கறிசமைத்துச்
சட்ட விரைந்து போனகமுஞ் சமைத்துக் **கணவர் தமக்குரைத்தார்.** 66

கொள்வர் என்பது கருதப்படும்; ஆட்டிறைச்சி முதலியவற்றைக் கொள்வோரும் இறைச்சியுடன் சேர்க்காது தலையினை வேறு ஏக தேசத்திற் கொள்வதும் காணத்தக்கது. ஆனால் ஈண்டு வயிரவ அடியார் "அதுவுங் கூட நாமுண்பது" (3733) என்பது சிறப்பு விதிபோலும். சந்தனத் தாதியம்மையார் இங்குத் தலையிறைச்சி "நிலைக்க வருமென்றே, முந்த வமைத்தேன் கறியமுது" (3734) என்று கூறுவதனாலும் சிறு பான்மை சிறப்பு விதியாக அதுவும் உணவு வகையுட்படும் என்பது கருதப்படும்.

மற்றை உறுப்பு இறைச்சி எல்லாம் கொத்தி அறுத்து எலும்பு மூளை திறந்திட்டு-இதனால் கைகால் மார்பு முதலிய பல உறுப்புக்களில் உள்ள இறைச்சித் தசைப் பகுதிகளையும் சேகரிக்கும் தன்மை கூறப்பட்டபடி; **கொத்துதல்** - தசை பற்றியிருக்கும் எலும்பு முதலிய பற்றுக்களிலிருந்து பிரித்தற் பொருட்டும், **அறுத்தல்** பின்னர் வேறு படுத்தி எடுத்தற் பொருட்டும் ஆம். "தசைகள் வெவ்வே றம்பினிலீர்ந்து கொண்டு", (766) "மிருகங்கள் கொந்தியயி லம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து" (794) என்பன முதலியவை காண்க. **எலும்பு மூளை திறந்திடுதல்** - எலும்புகள் குழாய்கள் போன்றிருக்கும்; அவற்றின் உள்ளே நடுவில் மூளைப்பகுதி உண்டு. அது உணவுக்குரியதாம் என்ப; எலும்பினைத் திறந்து அப்பகுதியினை எடுத்து. "என்பு திறந்து மூளை புல்லும்படி" (988)

கறிக்கு வேண்டும் - பலகாயம் - காயம் - இறைச்சிக் கறிக்குக் கூட்டும் பெருங்காயம், சோம்பு, இலவங்கப்பட்டை முதலாகிய வாசனைப் பண்டங்கள் காயம் எனப்படும் என்ப.

கடிதமைப்பார் - நாதனடியார் பசியினை விரைவில் தீர்க்கும் ஆவல் குறித்தது; "காலந் தப்பாமே வருவேன்" (3708); "பசியினாலே அழிவுறுமையன்" (460) "இனிய வெம்பிரானார் சாலப் பசிப்ப ரென்றிரங்கி யேங்கி, நனிவிரைந்து" (771), "நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பேன்" (1734) என்பன காண்க.

அமைப்பார் - அமைப்பாராகிய; முற்றெச்சம்;அமைப்பாராகி - மடவார் - ஏற்றி, இழிச்சித், தாளித்துச், சமைத்து, சமைத்து உரைத்தார் என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 65

3725. **(இ-ள்)** மட்டு...இழிச்சி - மணம் வீசும் கூந்தலினையுடைய அம்மையார் அவற்றை ஒருபாத்திரத்தில் இட்டு அடுப்பில் ஏற்றி மனமகிழ்ந்தே சமைத்த கறியினைப் பக்குவம் தெரிந்து அடுப்பினின்றும் இறக்கி வைத்து வேறோர்...தாளித்து - வேறு ஓர் அரிய பாத்திரத்தில் உரிய பண்டங்களாலே தாளிதம் செய்து; பலவும் மற்றும் கறிசமைத்து - மேலும் பலவாகிய கறிகளையும் சமைத்து; சட்ட ...அமைத்து - செப்பமாக விரைந்து சோற்றினையும் சமைத்து; கணவர் தமக்கு உரைத்தார் - கணவராகிய நாயனாருக்கு அறிவித்தார்.

3726. உடைய நாத ரமுதுசெய **உரைத்த படியே அமைத்தவதற்**
கடையு **மின்ப முன்னேயிலு மார்வம் பெருகிக் களிகூர**
விடையின் வருவார் தொண்டர் தாம் விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையு மாத்தியின்கீ ழிருந்த **புனிதர் முன்சென்ருர்.** 67

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி- ரை) அம்மையாரது ஆர்வத்துக் கேற்ப இப்பாட்டால் திருவமுது ஆக்கிய வகையெல்லாம் விரைவில் கூறி முடித்த கவிநயம் கண்டுகொள்க.

மட்டும் - மணம்;**விரி** - என்றதனுல் இங்கு இயற்கை மணங் குறித்தது.

பதம் - கறி அடப்பட்டு உணவுக்குரியதாகிய பக்குவம். **இழிச்சி** - அடுப்பினின்றும் கீழே இறக்கி.

வேருேர்...தாளித்து-தாளிதம் வேறு கலத்திற் செய்து உணவுடன் கூட்டும் சமையல் முறை குறித்தது.

நறையால் - நறுமணப் புகை கமழ; தாளிதம் வறுபடாமை, முறுகுதல், கருகுதல் முதலியன இன்றிப் பதத்தில் மணம் பொருந்தும் நிலே குறித்தது.

சட்ட - செப்பமாக. "**சட்ட** என்பது செப்பப் பொருட்டாயதோர் அகர வீற்றிடைச் சொல்; அது சட்டம் என மரீஇயது" (போதம் - மாபாடியம் -9 - 2 வெண்பா).

மற்றுங் கறி பலவும் என்க. இவை பொரிக் **கறி** முதலிய கூட்டுணவு வகைகள்.

கணவர் தமக்கு உரைத்தார் - "கணவனுர் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி" (462); மனேவியார் தமது செயல்கள் முற்றின என்றும், இனி அடியாரை அழைத்துத் திருஅமுது செய்விக்க வேண்டுவன செய்தல் வேண்டுமென்றும் குறித்தபடி. *66*

3726. **(இ-ள்)** உடையநாதர்.....களிகூர - ஆளுடைய நாதர் திருவமுது செய்வதற்குச் சொன்னபடியே அமைத்ததற்குப் பெற்ற மகிழ்ச்சி முன்னிருந்ததனினும் மிக ஆசை மேன்மேலும் பெருகி ஆனந்தம் மிகவும் அடைந்து; விடையின்........சென்று - இடபத்தின் மேல்வருவாராகிய சிவபெருமான் றிருத்தொண்டராகிய சிறுத்தொண்டர் தாம் விரைவாகப் போய்; மென்மலரின்......சென்ருர் - மெல்லிய பூக்களின் பக்கங்களில் வண்டுகள் சத்தித்தற்கிடமாகிய திருவாத்தியின் கீழே வீற்றிருந்தருளிய புனிதராகிய வயிரவரிடம் சென்றனர்.

(வி-ரை) உடைய நாதர் - அடியாரை ஆண்டவனுகவே கொள்ளும் மரபு பற்றி **நாதர்** என்ருர், இங்கு அப் பாவனே அவ்வாறே பலித்ததும் காண்க; அன்றியும் அடியாரை அமுதூட்டும் போது அவர்களுக்குள்ளே நின்று பரமரே உண்டருளுகின்ருர் என்பதும் துணிபு.

உரைத்தபடியே - அவர் கூறியபடியே.

3725. மட்டு விரிபூங் குழன்மடவா ரடுப்பி லேற்றி மனமகிழ்ந்தே
அட்ட கறியின் பதமறிந்தங் கிழிச்சி வேரூ ரருங்கலத்துப்
பட்ட நறையாற் ருளித்துப் பலவு மற்றுங் கறிசமைத்துச்
சட்ட விரைந்து போனகமுஞ் சமைத்துக் **கணவர் தமக்குரைத்தார்.** 66

கொள்வர் என்பது கருதப்படும்; ஆட்டிறைச்சி முதலியவற்றைக் கொள்வோர் இறைச்சியுடன் சேர்க்காது தலையினை வேறு ஏக தேசத்திற் கொள்வதும் காணத்தக்கது. ஆனல் ஈண்டு வயிரவ அடியார் "அதுவுங் கூட நாமுண்பது" (3733) என்பது சிறப்பு விதிபோலும். சந்தனத் தாதியம்மையார் இங்குத் தலையிறைச்சி "நிலைக்க வேண்டுமென்றே, மூந்த வமைத்தேன் கறியமுது" (3734) என்று கூறுவதனாலும் சிறுபான்மை சிறப்பு விதியாக அதுவும் உணவு வகையுட்படும் என்பது கருதப்படும்.

மற்றை உறுப்பு இறைச்சி எல்லாம் கொத்தி அறுத்து எலும்பு மூளை திறந்திட்டு-இதனல் கைகால் மார்பு முதலிய பல உறுப்புக்களில் உள்ள இறைச்சித் தசைப் பகுதிகளையும் சேகரிக்கும் தன்மை கூறப்பட்டபடி; **கொத்துதல்** - தசை பற்றியிருக்கும் எலும்பு முதலிய பற்றுக்களிலிருந்து பிரித்தற் பொருட்டும், **அறுத்தல்** பின்னர் வேறு படுத்தி எடுத்தற் பொருட்டும் ஆம். "தசைகள் வெவ்வே றம்பினிலீர்ந்து கொண்டு", (766) "மிருகங்கள் கொந்தியயி லம்பாற் குட்டமிட்டுக் கொழுப்பரிந்து" (794) என்பன முதலியவை காண்க. **எலும்பு மூளை திறந்திடுதல்** - எலும்புகள் குழாய்கள் போன்றிருக்கும்; அவற்றின் உள்ளே நடுவில் மூளைப்பகுதி உண்டு. அது உணவுக்குரியதாம் என்ப; எலும்பினைத் திறந்து அப்பகுதியினை எடுத்து. "என்பு திறந்து மூளை புல்லும்படி" (988)

கறிக்கு வேண்டும் - பலகாயம் - காயம் - இறைச்சிக் கறிக்குக் கூட்டும் பெருங்காயம், சோம்பு, இலவங்கப்பட்டை முதலாகிய வாசனைப் பண்டங்கள் காயம் எனப்படும் என்ப.

கடிதமைப்பார் - நாதனடியார் பசியினை விரைவில் தீர்க்கும் ஆவல் குறித்தது; "காலந் தப்பாமே வருவேன்" (3708); "பசியினலே அழிவுறுமையன்" (460) "இனிய வெம்பிரானுர் சாலப் பசிப்ப ரென்றிரங்கி யேங்கி, நனிவிரைந்து" (771), "நாதன்ற னடியாரைப் பசிதீர்ப்பேன்" (1734) என்பன காண்க.

அமைப்பார் - அமைப்பாராகிய; முற்றெச்சம்;அமைப்பாராகி - மடவார் - ஏற்றி, இழிச்சித், தாளித்துச், சமைத்து, சமைத்து உரைத்தார் என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

65

3725. **(இ-ள்)** மட்டு...இழிச்சி - மணம் வீசும் கூந்தலினையுடைய அம்மையார் அவற்றை ஒருபாத்திரத்தில் இட்டு அடுப்பில் ஏற்றி மனமகிழ்ந்தே சமைத்த கறியினைப் பக்குவம் தெரிந்து அடுப்பினின்றும் இறக்கி வைத்து வேரூர்...தாளித்து - வேறு ஓர் அரிய பாத்திரத்தில் உரிய பண்டங்களாலே தாளிதம் செய்து; பலவும் மற்றும் கறிசமைத்து - மேலும் பலவாகிய கறிகளையும் சமைத்து; சட்ட....அமைத்து - செப்பமாக விரைந்து சோற்றினையும் சமைத்து; கணவர் தமக்கு உரைத்தார் - கணவராகிய நாயனருக்கு அறிவித்தார்.

3726. உடைய நாத ரமுதுசெய **உரைத்த படியே அமைத்தவதற்**
கடையு **மின்ப முன்னையிலு மார்வம் பெருகிக் களிகூர**
விடையின் வருவார் தொண்டர் தாம் விரைந்து சென்று மென்மலரின்
புடைவண் டறையு மாத்தியின்கீ ழிருந்த **புனிதர் முன்சென்றார்.** 67

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி- ரை) அம்மையாரது ஆர்வத்துக் கேற்ப இப்பாட்டால் திருவமுது ஆக்கிய வகையெல்லாம் விரைவில் கூறி முடித்த கவிநயம் கண்டுகொள்க.

மட்டும் - மணம்;**விரி** - என்றதனால் இங்கு இயற்கை மணங் குறித்தது.

பதம் - கறி அடப்பட்டு உணவுக்குரியதாகிய பக்குவம். **இழிச்சி** - அடுப்பினின்றும் கீழே இறக்கி.

வேறோர்...தாளித்து-தாளிதம் வேறு கலத்திற் செய்து உணவுடன் கூட்டும் சமையல் முறை குறித்தது.

நறையால் - நறுமணப் புகை கமழ; தாளிதம் வறுபடாமை, முறுகுதல், கருகுதல் முதலியன இன்றிப் பதத்தில் மணம் பொருந்தும் நிலை குறித்தது.

சட்ட - செப்பமாக. "**சட்ட** என்பது செப்பப் பொருட்டாயதோர் அகர வீற்றிடைச் சொல்; அது சட்டம் என மரீஇயது" (போதம் - மாபாடியம் -9 - 2 வெண்பா).

மற்றுங் கறி பலவும் என்க. இவை பொரிக் **கறி** முதலிய கூட்டுணவு வகைகள்.

கணவர் தமக்கு உரைத்தார் - "கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி" (462); மனைவியார் தமது செயல்கள் முற்றின என்றும், இனி அடியாரை அழைத்துத் திருஅமுது செய்விக்க வேண்டுவன செய்தல் வேண்டுமென்றும் குறித்தபடி. **66**

3726. ***(இ-ள்)*** உடையநாதர்.....களிகூர - ஆளுடைய நாதர் திருவமுது செய்வதற்குச் சொன்னபடியே அமைத்ததற்குப் பெற்ற மகிழ்ச்சி முன்னிருந்ததனினும் மிக ஆசை மேன்மேலும் பெருகி ஆனந்தம் மிகவும் அடைந்து; விடையின்........சென்று - இடபத்தின் மேல்வருவாராகிய சிவபெருமான் றிருத்தொண்டராகிய சிறுத்தொண்டர் தாம் விரைவாகப் போய்; மென்மலரின்......சென்றார் - மெல்லிய பூக்களின் பக்கங்களில் வண்டுகள் சத்தித்தற் கிடமாகிய திருவாத்தியின் கீழே வீற்றிருந்தருளிய புனிதராகிய வயிரவரிடம் சென்றனர்.

(வி-ரை) **உடைய நாதர்** - அடியாரை ஆண்டவனாகவே கொள்ளும் மரபு பற்றி **நாதர்** என்றார், இங்கு அப் பாவனை அவ்வாறே பலித்ததும் காண்க; அன்றியும் அடியாரை அமுதூட்டும் போது அவர்களுக்குள்ளே நின்று பரமரே உண்டருளுகின்றார் என்பதும் துணிபு.

உரைத்தபடியே - அவர் கூறியபடியே.

3727 அண்ண றிருமுன் பணைந்திறைஞ்சி யன்பர் மொழிவா ``ரடியேன்பால்
நண்ணி நீரிங் கமுதுசெய வேண்டு மென்று நான்பரிவு
பண்ணி னேனுய்ப் **பசித்தருளத் தாழ்த்த தெனினும் பணிசமைத்தேன்**
எண்ணம் வாய்ப்ப வெழுந்தருளவேண்டு''மென்றங் கெடுத்துரைப்பார். 68

அமைத்த அதற்கு முன்னையினும்......பெருகி - அவர் உரைத்ததும், தாம் எண்ணியதுமாகிய இன்பத்தினும் அவ்வாறே செயலில் செய்தும் முடித்ததன் பொருட்டு மேலும் பெருகிய இன்பமடைந்து.

விடையில் வருவார் தொண்டர் - சிறுத்தொண்டர். **வருவார்** - வினையாலணையும் பெயர்.

மென்மலரின்.....ஆத்தி - ஆத்தி மலர்களின் பக்கம் வண்டுகள் அத்தேனை உண்ணும் பொருட்டு அவை மலரும் பருவம் பார்த்துப் பக்கத்தே ஊதி, அவை மலர்தற் குதவி புரிகின்றன என்பது.

புனிதர் - இறைச்சி யுண்பது - அதனினும் மனிதர் இறைச்சி உண்பது - அதனினும் ஐந்து வயதுச் சிறுவன் கொலைக்குக் காரணமாவது - அதனினும் அவனைப் பெற்றோரே பிடித்து அரியவினை செய்யும் கொடுமையினை ஏவுவது - என்றின்னோரன்ன புனிதமற்றனவாய்க் காணப்படும் செயல்களைச் செய்யினும் அவர் புனிதத் தன்மைக்கு இழுக்கில்லை; புனிதர் புனிதரே என்பது குறிக்க இங்கு இப்பெயராற் கூறினர். புனிதத்தை விளைப்பவர். 67

3727. **(இ-ள்)** அண்ணல்......மொழிவார் - இறைவரின் திருமுன்பிற் சார்ந்து வணங்கி அன்பராகிய சிறுத்தொண்டர் மொழிவாராய்; ''அடியேன்பால்...... வேண்டும்'' என்று அங்கு எடுத்துரைப்பார் - ''அடியேனிடத்து எழுந்தருளி நீர் இங்குத் திருவமுது செய்தருள வேண்டுமென்று அடியேன் அன்பு செய்து விரும்பி வேண்டினேனாக, அதன் பொருட்டுத் தேவரீர் பசித்தருளிக் காலந்தாழ்க்க இதுவரைக் காத்திருக்க வேண்டி வந்த தென்றாலும், தேவரீர் பணியின்படி சமைத்தேன்; அடியேனது விருப்பம் நிறைவேறும்படி எழுந்தருள வேண்டும்'' என்று கூறி, மேலும் உரைப்பாராகி,

(வி-ரை) பரிவு பண்ணினேனாய் - பரிவு - அன்பு; **பரிவு......தாழ்த்தது** - உமது பசி தீர்க்க வேண்டு மென்று பரிந்து கொண்டதனால் அதற்கு நீர் இணங்கி நிற்க, அதற்கு மாறாகப் பசியினை அதிகப்படுத்திய செயலேயாய்க் காலம் தாழ்த்தது.

எனினும் - என்றது, காலத்தாழ்வாயினும் காரியம் நிறைவேறியது ஆறுதல் என்பது குறிப்பு.

பணி சமைத்தேன் - பணி - பணித்தபடி; கட்டளை யிட்டபடி; அமுதூட்டும் திருப்பணியாக என்ற குறிப்புமாம்.

3728. "இறையுந் தாழா தெழுந்தருளி யமுது செய்யு" மென்றிறைஞ்சக்
கறையுங் கண்டத் தினின்மறைத்துக் கண்ணு நுதலிற் காட்டாதார்
"நிறையும் பெருமைச் சிறுத்தொண்டீர்! போது" மென்ன, நிதியிரண்டுங்
குறைவ னொருவன் பெற்றுவந்தாற் போலக்கொண்டு மனைபுகுந்தார். 69

எண்ணம் வாய்ப்ப - தேவரீரை எவ்வாற்றாலும் திரு அமுதூட்டுதல் வேண்டுமென்ற அடியேனது எண்ணம் நிறைவேறும் பொருட்டு; தேவரீர் எங்களை யாட்கொள்ளச் சங்கற்பித்து எழுந்தருளிய திருவுள்ளக் கருத்துப்படி அருள் எங்களுக்கு வாய்க்கும் பொருட்டு என்ற பிற்சரித விளைவின் உண்மைக் குறிப்புமாம்.

உரைப்பாராகி - **இறைஞ்ச** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; **உரைப்பார்** - முற்றெச்சம். 68

3728. **(இ-ள்)** இறையும்.......இறைஞ்ச - "இனிச் சிறிதும் தாழ்க்காது தேவரீர் எழுந்தருளித் திருவமுது செய்தருளுதல் வேண்டும்" என்று கூறி வணங்க; கறையும்.....காட்டாதார் - கண்டத்திலே விடத்தின் கருமையினை மறைத்தும் நுதலில் உள்ள கண்ணினையுங் காட்டாது மறைத்தும் வந்தவராகிய இறைவர்; நிறையும்.....போதும் என்ன -நிறைவாகும் பெருமை பொருந்திய சிறுத்தொண்டரே! போதும் என்று அருள; நிதியிரண்டும்.....மனைபுகுந்தார் - வறியவன் ஒருவன் இரண்டு நிதிகளையும் ஒருங்கே பெற்றுவந்தாற் போல உடன் அழைத்துக் கொண்டு தமது மனையினிற் புகுந்தனர்.

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) இறையும் - ஒரு சிறிதும்.

கறையும்..... காட்டாதார் - இறைவர் காட்டி வந்தருளிய திருவடிவக் குறிப்பு; **கறையும் கண்டத்தினின் மறைத்து** - இதனை முன் (3689) விரித்தருளியதனை ஈண்டு நினைவு கூர்க. வயிரவர், தலையினின்று திருவடிவரையும் கொண்ட திருவேடத்தினை (3685 முதல் 3694) பத்துத் திருப்பாட்டுக்களால் விரித்துக் கூறிக் காட்டித் தரிசனம் செய்வித்தருளினாராதலின் ஈண்டு அவற்றை நினைவுகூர்தற் பொருட்டு அவற்றுட் சிறந்த இரண்டு நிலைகளைக் காட்டுவித்தருளுகின்றார்; **மறைத்து** - **"விட மறைத்தருள"** (3689); விடத்தினை மறைத்து அமிழ்தக் குமிழி நிறைத்தனர் எனக் கூறிய குறிப்பின்படித், திருநீலகண்டம், "வெவ்விட முன்றடுத்தெம் மிடர் நீக்கிய வெற்றியினா, லெவ்விடத் தும்மடி யாரிடர் காப்பது கண்ட மென்றே" (2233) என்றபடி அருள் புரிவதற் கடையாளமாம்; திருநீலகண்ட நாயனார் புராணம் பார்க்க. (363); **கறையும்** - **கண்ணும்** - உம்மைகள் எண்ணும்மைகள்.

கண்ணும் நுதலிற் காட்டாதார் - நெற்றிக் கண்ணை மறைத்து வந்தவர் என்பது; **காட்டாதார்** - வெளியே தெரியாது மறைத்தவர்; "திருநுதன்மேற் றிருநீற்றுத் தனிப்பொட்டுத் திகழ்ந்திலங்க" (3687); திருநீலகண்டம் மறைந்தமை பொதுவும், நுதற்கண் மறைத்தமை சிறப்பும் ஆகிய அருட்குறிப்புக்கள் பெற இவற்றை ஈண்டு விதந்து

3729. வந்து புகுந்து திருமனையின் **மனைவி யார்தா மாதவரை**
முந்த **வெதிர்சென் றடிவணங்கி முழுது மழகு செய்தமனைச்**
சந்த மலர்மா லைகள்முத்தின் றும நாற்றித் தவிசடுத்த
கந்த மலரா **சனங்காட்டிக் கமழ்நீர்க் கரக மெடுத்தேந்த,** 70

எடுத்தோதியருளினர். நுதற்கண்ணின் அருள் இச்சரித விளைவுக்குரிய சிறப்புடையது தெய்வப்பது இப் புராணத் தொடக்கத்தில் "செயல்காம னெழியவிழி பொழிசெந்தீ, வெருநாட்டத் திருநுதலார்" *(3660)* என்று உரைத்தமை காண்க. "கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி, மண்ணிடையின் மாக்கள் மலமகற்றும்" (இருபா - *1*) என்ற ஞானநூலினும் இவ்விரண்டுமே எடுத்துக்கூறி யருளியது காண்க. இனம்பற்றி ஏனையவும் கொள்ளப்படும்.

முன்னர் விரித்துக் கூறியவையே அமையும்; இவற்றை மீண்டும் இங்குக் கூற வேண்டிய தென்னை? எனின், முன் கூறியவை அருள்புரிய **வந்த** நிலை; இங்குக் கூறுவது அன்பு நுகர்ந்து அருளினைச் **செய்ய** எழுந்தருளும் நிலை; "அன்பு **நுகர்ந்தருளுதற்குத்....** திருமலைநின் றணைகின்றார்" *(3684)*.

நிறையும்..... போதும் - நிறையும் - இப்போது உமது பெருமை நிறைவாகும் நிலையில் உள்ளது என்பது. **போதும்** - போதுவோம் - போவோம் என்று எழுந்து சென்ற குறிப்பு; **போதும் -** அமையும்; அன்பு செலுத்திய எல்லை இவ்வளவே சாலும் என்ற குறிப்பும் காண்க. **குறைவன் ஒருவன் இரண்டு நிதியும் பெற்று வந்தாற் போல -** என்க. **குறைவன்-** வறியவன். குறைவு உடையவன். **ஒருவன் - இரண்டும்** எண்ணணிச்சுவை.

நிதி இரண்டும் - 'சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து" (தேவா); உம்மை முற்றும்மை.

பெற்று வந்தாற்போல - பெற்று எடுத்துக் கொண்டு வந்தது போல வயிரவரை அழைத்துக் கொண்டு என்க. வினையும் பயனும் பற்றிவந்த உவமம். "இகத்தும் பரத்தும் இனியார்" *(3736)* என்றபடி இருபயனும் தரவருவது நிதி **யிரண்டும்** என்றதன் குறிப்பு. **கொண்டு** - உடன் அழைத்துக் கொண்டு. *69*

3729. **(இ-ள்)** வந்து.....திருமனையில் - அவ்வாறு வந்து புகுந்து தமது திருமனையிலே; மனைவியார்தாம்....காட்டி - மனைவியார் தாம் வயிரவ அடியாரை முன்பு வந்து எதிர்கொண்டு சென்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கி முற்றும் அழகு செய்வித்த அந்த மனையில் மணமுடைய மலர் மாலைகளும் முத்தினலியன்ற மாலைகளும் தொங்கவைத்து மணமுடைய மலர்கள் பரப்பிய இருக்கையாகிய ஆசனத்தை அமைத்துக் காட்டி (அமரச் செய்து); கமழ் நீர்க் கரகம் எடுத்து ஏந்த - மணம் கமழும் நீர் நிறைந்த கரகத்தினை எடுத்து ஏந்தி நின்று நீர்வார்க்க:

(வி-ரை) புகுந்து - மனைவியார் - எடுத்தேந்தத் *(3729)* - **தூய நீரால் - விளக்கி** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

3730. தூய நீராற் சிறுத்தொண்டர் சோதி யார்தங் கழல்விளக்கி,
ஆய புனிதப் புனல்தங்க டலைமே லாரத் தெளித்தின்ப
மேய வில்ல மெம்மருங்கும் வீசி விரைமென் மலர்சாந்தம்
ஏயுந் தூப தீபங்கண் முதற்பூ சனைசெய் திறைஞ்சுவார், 71

மனைவியார்....காட்டி - என்பன வெல்லாம் இடைப் பிறவரலாய் இடையில் மனைவியார் செய்த செயல்களைக் குறித்தன; இடையில் என்பது நாயனுர் - இறைவர் தமைக்கொண்டு வருதலுக்கும், அவர்கழல் நீரால் விளக்குதற்கும் இடையில்;

முந்த - அவர் மனையுட் புகுது முன்பு; திருமுன்பு என்றலுமாம்.

முழுதும் அழகு செய்த மனை - முன்னமே எஞ்ஞான்றும் அழகாக அணி செய்யப்பட்ட மனை; **அழகு செய்தல்** - ஏனையோர் போலத் தம் பொருட்டன்றி, நாடோறும் அமுதூட்டும் அடியார்களுக் கேற்கும் பொருட்டு.

முழுதும் - எல்லாவகையாலும், எல்லாக் காலத்திலும்.

கந்த மலர்மாலை....நாற்றி - இவை இப்போது வயிரவர் வருகையின் பொருட்டுச் செய்யப்பெற்றன. மணமுடைய பூமாலைகளும் முத்து மாலைகளும் தொங்கவைத்தல் அணிசெய்வகை ; **நாற்றி** - தொங்க வைத்து.

கந்த மலர் அடுத்த தவிசு ஆசனம் காட்டி - என்க. தவிசினை அமர்தற்குரிய ஆசனமாகக் காட்டி; **தவிசு** - இருக்கை; **ஆசனம் காட்டுதல்** - ஆசனம் - மூர்த்தி - மூர்த்திமான் என்ற பூசையின் அங்கம் மூன்றனுள் ஆசனங் கற்பித்தல் குறித்தது. சிவபூசை ஆகம விதிகள் பார்க்க. இங்கு மூர்த்தி, வயிரவ அடியார் திருமேனியும், மூர்த்திமான் அவ்வடியார் திருவேடத்தினுள் எழுந்தருளிப் பூசை ஏற்றுக்கொள்ளும் சிவபெருமானுமாகப் பாவிக்கப்படுவர்.

கரகம் - சிறிய மூக்குள்ள பாத்திரம்; குண்டிகை; சிறிய மூக்கு, நீர், இடையறுது வார்த்தற்குதவுவது. நீர்க்கலம் என்றலுமாம். **கமழ்** - மலர் - குங்குமப்பூ முதலிய வாசனைப் பண்டங்களிடும் மரபு குறித்தது. **எடுத்து ஏந்த - ஏந்த** - என்றது ஈண்டு ஏந்தி நீர்வார்க்க என்ற பொருளில் வந்தது. அடியார்களின் அடி விளக்க மனைவியார் நீர்வார்க்கக் கணவனுர் அடியார் பாதம் கழுவுதல் பற்றிக் கலிக்கம்ப நாயனுர் புராண வரலாறு பார்க்க.

ஏந்தி வார்க்க அத்தூய நீரால் - என்று மேற்பாட்டுடன் தொடர்ந்து கூட்டி யுரைத்துக் கொள்க.

70

3730. **(இ-ள்)** தூய.....விளக்கி - அவ்வாறு மனைவியார் வார்த்த தூய நீரினுல் சிறுத்தொண்டர் சோதியாருடைய திருவடிகளை விளக்கி; ஆய...வீசி - அவ்வாறு விளக்குதலாற் பெறலாகிய தூய தீர்த்தத்தினைத் தங்கள் தலையின்மேல் நிறையத் தெளித்துக் கொண்டு, இன்பம் பொருந்திய மனையின் எப்பக்கத்தினும் வீசி இறைத்து; விரை....செய்து- மணமுடைய மெல்லிய மலர்களால் அருச்சித்துச் சந்தனக் கலவை சாத்திப் பொருந்தியவாறு தூப தீபங் காட்டி, இவை முதலாகிய பூசனை விதிகளை எல்லாம் செய்து; இறைஞ்சுவார்- வணங்குவாராகி,

3731. பனிவெண் டிங்கட் சடைவிரித்த பயில்பூங் குஞ்சிப் பயிரவராம்
புனிதர் தம்மைப் **போனகமுங் கறியும் படைக்கும் படிபொற்பின்**
வனிதை யாருங் கணவருமுன் வணங்கிக் கேட்ப மற்றவர்தாம்
"இனிய வன்ன முடன்கறிக ளெல்லா மொக்கப் படைக்க" வென, 72

(வி-ரை) கழல் விளக்குதல் - பாத்தியம் எனப்படும் பூசைஅங்கம்; ஆய - அவ்வாறு கழல் விளக்கியதனால் ஆகிய - பெறப்பட்ட. ஆர - நிறைய -மனம் அமைதி பெறும் அளவும்.

இன்பம் மேய இல்லம் - சிவ தருமங்களாகிய அடியார் பூசனைக்கும் அரன் பூசைக்கும் பயன்படுவதாயும், அதற்குரிய இல்வாழ்க்கைக்கு இருப்பிடமாயும் நின்றமையால் இன்பம் பொருந்திய மனை என்பதாம்; ஏனையோர் எண்ணுவது போலப் பாசபந்தப் போகப் பொருள்கள் நிறைந்த உலக இன்பங்கள் பொருந்துவது என்பதன்று.

இல்லம் எம்மருங்கும் வீசுதல் - மனையெங்கும் நீண்ட நற்பயன் தந்து விளங்கும் பொருட்டு; இவைபற்றி அப்பூதி நாயனார் புராணம் (1802-1803), இளையான்குடி மாறநாயனார் புராணம் (443) முதலியவை பார்க்க.

விரை........பூசனை செய்து - இவை பூசை செய்யும்முறை; அருச்சித்தல்- மலர் சாத்தி அலங்கரித்தல், புகைத்தூபம் காட்டுதல், விளக்கேந்துதல் முதலியன. "விதிமுறை தீபமேந்தி" (851) "நறைமலி தருமள றெடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி, நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடும் அடியவர்" (பிள் - நட்டபாடை - திருவிரா - சிவபுரம் 4). விரை - விரை எனப்படும் என்றலுமாம். "முல்லையிரு வாட்சிபிச்சி முகைநெகிழ்மல் லிகைபன்னீர், நல்லமருக் கொழுந்துவெட்டி வேரிவைநற் சுகந்தங்கள், சொல்லுமிவை யோரேழும்" (பேரூர்ப்புரா - மருதவரை. 35).

இறைஞ்சுவார் - வணங்கிக் கேட்ப - என வரும்பாட்டுடன் முடிக்க நின்ற முற்றெச்சம். 71

3731. **(இ-ள்)** பனி வெண்.....புனிதர் தம்மை - குளிர்ந்த வெண்பிறையினைச் சூடிய சடையினையே குஞ்சியாக ஆக்கி விரித்த அழகிய விளக்கமுடைய பூச்சூடிய தலைமயிரினை உடைய வயிரவராம் தூயபெருமானை; போனகமும்...படி - சோற்றினையும் கறிவகைகளையும் படைக்கும் படியினை; பொற்பின்.......கேட்ப - அழகிய மாதராரும் கணவனும் வணங்கிக் (இன்னவாறென்றருள் செய்யவேண்டு மென்று) கேட்க; மற்றவர்தாம்....படைக்க என - மற்று அவர்தாம் இனிய சோறுடனே கறிகளையும் எல்லாவற்றையும் ஒரு சேரவே படைப்பீராக என்று கூற,

(வி-ரை) பனி - குளிர்ந்த; **பனித்தல்** - நடுங்குதல் - அசைதல் - எனக் கொண்டு முனிசாபத்தால் நேர்ந்த குறை நோய்க் கஞ்சி நடுங்கி வந்த என்றலுமாம். "பனி வெண்டிங்கள்" (3744) என மேலும் கூறுதல் காண்க. சரண்புக்க மதியினைத் தலையிற்சூடி உயிரளித்த இவ்வருட் பெருமையினையும் எளிமையினையும் விளக்கத்தையும் இங்குக் காணக் குறித்தல் கருத்து.

3732. பரிசு விளங்கப் பரிகலமுந் திருத்திப் பாவா டையிலேற்றித்
தெரியும் வண்ணஞ் செஞ்சாலிச் செழும்போ னகமுங் கறியமுதும்
வரிசை யினின்முன் படைத்தெடுத்து மன்னும் பரிக லக்கான்மேல்
விரிவெண் டுகிலின் மிசைவைக்க விமலர் பார்த்தங் கருள்செய்வார், 73

சடைவிரித்த பயில்பூங் குஞ்சி - சடையினையே இவ்வாறு மாற்றி விரித்து அழகுபடுத்திய தலைமயிர்; "சடையை வனப்பெய்த....படர்துஞ்சின் கருங்குஞ்சி கொந்தளமாகப் பரப்பி" (3685) என இதனை முன் விரித்தனர்; **விரித்தல்** - பரப்பியமைத்தல்.

புனிதர் - "புனிதர் முன்பு" (3726); "புனிதர் தமக்கு" (3720).

படைக்கும்படி - படைக்கின்ற படியினை; திறத்தினை, விதத்தை; படி - இயல்பு - தன்மை; இரண்டனுருபு தொக்கது. படி (யினைக்) - கேட்ப என்க.

கேட்ப - அறிவித்தருளும்படி கேட்க - அமுது அமைக்கும் வகையினை அவரே சொல்ல அறிவித்தாராதலின், படைத்தலிற் பிழை நேராவண்ணம் அதனையும் அவரே சொல்ல அறிந்து அவ்வாறு செய்தல் வேண்டுமென்பது. உலகியலி லிதுவரை காண இயலாத நிலையாதலானும் அறியவேண்டியதாயிற்று.

வனிதையார் - அழகுடைய மாதரார்; திருவெண்காட்டு நங்கையார்.

இனிய அன்னம் - "செஞ்சாலிச் செழும் போனகம்" (3732) என்று மேற் கூறுதல் காண்க. **ஒக்க** - ஒருசேர.

இனிய வண்ணமுடன் - என்பதும் பாடம். 72

3732. **(இ-ள்)** பரிசு......ஏற்றி - பண்புவிளங்கும்படி உண்கலத்தை விளக்கி அதனைப் பாவாடையின் மேல் வைத்து; தெரியும்....எடுத்து - அமுதுவகைகள் வெவ்வேறுகத் தெரியும்படி செந்நெல்லரிசியாலாகிய செழுஞ் சோற்றினையும் கறியமுது வகைகளையும் வரிசையாக முன்னே படைத்து அப்பரிகலத்தினை எடுத்து; மன்னும்.....வைக்க - நிலையான முக்காலியின்மேல் விரித்த வெண்மையான ஆடையின்மீது வைக்க; விமலர்......அருள்செய்வார் - விமலராகிய இறைவர் பார்த்து அப்போது அருள் செய்வாராகி,

(வி-ரை) பரிசு விளங்க - இவை யிவை இன்ன இன்ன என்ற தன்மை விளங்கும்படி. **விளங்குதல்** - அவற்றைச் சுவைக்கு ஏற்றபடி இடையிடை கூட்டி உண்பதற்கு உதவுதல்.

பரிகலம் - உண்கலம்; **திருத்துதல்** - நன்கு கழுவுதலும் திருந்த அமைத்தலும்.

பாவாடையில் ஏற்றி - பாவாடை - பரவிய - பரப்பிய ஆடையின் (சீலையில்) மேல்வைத்தல்; பரவிய நிலையில் அமைத்தலுமாம்.

முன் - பாவாடையில் ஏற்றுதலின் முன்.

3733. "சொன்ன முறையிற் படுத்தபசுத் தொடர்ந்த வுறுப்பெல் லாங்கொண்டு
மன்னு சுவையிற் கறியாக்கி மாண வமைத்தீ ரே?"யென்ன
"அன்ன மனையார் தலையிறைச்சி யமுதுக் காகா தெனக்கழித்தோம்"
என்ன,"வதுவுங் கூடநா முண்ப"தென்ரு ரிடர்தீர்ப்பார். 74

படைத்து - பரிகலத்தில் வரிசையாகப் படைத்து.

பரிகலக் கால் - பரிகலம் வைத்துண்ணும் ஆசனம்; மூன்று கால்களுடைய ஆசனம். மூக்காலியில் ஏற்றி வைத்துண்பது வழக்கு. இஃது இன்றும் மக்களின் சிறப்புக்களுள் வழங்குவது.

பரிகலக்கான் மேல் - விரி வெண்துகிலின் மிசை - பரிகலத்திற் வரிசைபெற முன்வைத்து எடுத்து ஏற்றி என்று கூட்டுக. இந்நாளின் நாகரிகம் படைத்தோர் என்போர் நாற்காலியின்மேல் வெண்டுகில் விரித்து அதில் எச்சிற் பரிகலங்களில் உணவுப் பண்டங்களை வைத்து அமைத்துண்ணும் வழக்கு இதன் வழிவழிப் போலியாய் வந்த எச்ச வழக்குப் போலும்.

விமலர் - புனிதர் என்றதற் கேற்ப உரைத்தது நயம்.

அருள் செய்வார் - முற்றெச்சம். அருளிச்செய்வாராகி - என்ன - என வரும்பாட்டுடன் கூட்டி உரைக்க. 73

3733. **(இ-ள்) சொன்ன முறையில்.....**அமைத்தீரே? என்ன - யாம் சொன்ன முறையிலே படுத்த பசுவினது தொடர்ந்த உறுப்புக்கள் எல்லாவற்றினையும் கொண்டு பொருந்தும் சுவைபெறச் சிறப்பாக அமைத்தீர்களோ? என்று வினவ; அன்னம் அனையார்...என்ன - அன்னம் போன்ற அம்மையார் தலையிறைச்சி திருவமுதுக்கு ஆகாது என்று எண்ணி அதனை நீக்கினேம் என்று கூற; இடர் தீர்ப்பார் - அடியார்களின் இடர்களை எல்லாம் தீர்ப்பவராகிய இறைவர்; அதுவும்.....என்றார் - அதனையும் நாம் உண்பது ஆம் என்றருளினர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருவினை முடிபுகொண் டுரைக்க நின்றன.

(வி-ரை) சொன்ன முறையிற் படுத்த பசு - சொன்ன - முன் உரைத்த பசுவும், அதனைப் படுத்தலும், படுத்தல் செய்யும் முறையும். (3707 - 3709 - 3710)

தொடர்ந்த உறுப்பெல்லாம் - முடிமுதல் அடிவரை எலும்பினைப் பற்றி நின்ற எல்லா உறுப்புக்களின் இறைச்சி மூளை முதலிய எல்லாம்.

சொன்ன....எல்லாம் - சொன்ன - சொன்ன நிலை என் பாலும், **ஆக்கி அமைத்தீரே? -** ஆக்கி யமைக்கும் நிலையும் கடமையும் உங்கள்பாலும் நின்றன என்பதாம். உலகுய்ய மறைக ளாகமம் வகுத்தல் இறைவர் கருணைச் செயல்; அவற்றின் வழி நின்று அவரைச் சார்ந்துய்தல் உயிர்களின் கடமைச் செயல் என்ற குறிப்புங்காண்க.

3734. சிந்தை கலங்கிச் சிறுத்தொண்டர் மனையாரோடுந் திகைத்தயரச்
சந்த னத்தா ரெனுந்தாதி யார்தா `**மந்தத் தலையிறைச்சி**
வந்த தொண்ட ரமுதுசெயும் பொழுது நினைக்க வருமென்றே
முந்த வமைத்தேன் கறியமு`தென் றெடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார். 75

அமைத்தீரே? - ஏகாரம் வினு; அமைத்தீர்களோ? என்க. உலகர் எவர்க்கும் அரியவாறு அமைத்து முடித்தீர்களே! என்று தாம் அறிந்து கொண்ட நிலையினை விளக்கம்படச் சிறப்புக் கூறிய உடன்பாட்டுத் தேற்றேகாரக் குறிப்பும் காண்க.

அன்னம் அனையார் - திருவெண்காட்டு நங்கையார்; இருவரையும் நோக்கி வினு எழுந்ததாயினும், அமுது படைத்தல் வினுவிய பொருளாதலானும், அதனை உரைத்தல் அம்மையார் கடனுதலானும் அவ்விருவருள் அவர் விடை பகர்ந்தனர் என்க.

தலை..... கழித்தோம் - *3724* பார்க்க.

அதுவும் கூட நாம் உண்பது - உம்மை, நீரும் பிறரும் கழித்து ஒதுக்கும் அதுவும் என்று இழிவு சிறப்பும்மை. உண்பது ஆகும் என்க. ஆகும் குறிப்பெச்சம்.

இடர் தீர்ப்பார் - அதனைக் கழித்தமை பற்றி இருவரும் திகைத் தயர நிற்கும் அவ்விடரும் வாராவண்ணம் முன்னமே சந்தனத் தாதியார்பால் நின்று நினைவூட்டி அதனையும் கறியமைத்து வைப்பாராகிய என்றதும் குறிப்பு; **இடர்** - அடைந்த அடியவர்களின் பிறவி நோய் என்பது உள்ளுறை.
74

3734. **(இ-ள்)** சிந்தை......திகைத்தயர - மனங் கலங்கிச் சிறுத்தொண்டர் மனைவியாருடனே மயங்கி வருந்த; சந்தனத்தாரெனும் தாதியார் தாம் - சந்தனத்தார் என்கின்ற தாதியார்; அந்த.....கறியமுது என்று - அந்தத் தலையின் இறைச்சியானது அருள் புரிய வந்த திருத்தொண்டர் திருவமுது செய்யும் பொழுது நினைக்க நேரிடும் என்று எண்ணியே (எச்சரிக்கையாக) முன்னமே அதனைக் கறியமுதாக அமைத்துள்ளேன் என்று சொல்லி; எடுத்துக் கொடுக்க முகமலர்ந்தார் - எடுத்துக் கொடுக்கக் கண்டு முகமலர்ந்து மகிழ்ந்தார்கள்.

(வி-ரை) சிந்தை.....அயர - வயிரவர் சொல்லிய அரிய வினை அத்தனையும் செய்தும் இக்குறையால் திருவமுதூட்டத் தாழ்க்க நேரும் நிலையை எண்ணிக் கலங்கி மயங்கி வருந்தினர்; **திகைத்தல்** - இனி யாது செய்வ தென்றறியாது மயங்குதல்.

சந்தனத்தார்....கொடுக்க - உற்றவிடத் துதவும் ஊன்றுகோல் போலவும், உடுக்கை யிழந்தவன் கை போலவும், வேண்டும்போது அங்கு அந்நேரம் உதவும் நண்பர்களை - ஏவலர்களைப் - பெற்றவர்க்குக் குறைவு வாராது; ஏவாமே குறிப்பறிந்தும், தாமாகவும் செய்யும்நிலை தொண்டின் அரிய நிலையாம். திருக்குறிப்புத் தொண்ட நாயனுர் வரலாறு பார்க்க. "புண்ணியமெய்த் தொண்டர் திருக்குறிப்பறிந்து போற்றுநிலைத் திண்மை." *(1189)*.

தாதியார்....கொடுக்க - இவ்வாறு தொண்டர்க் கேவல் குறிப்பறிந்து செய்த திறத்தாலும், சிறுத்தொண்டனுரும் நங்கையாரும் செய்த சிவ புண்ணியங்களில் அவர் கீழ்

3735. வாங்கி மகிழ்ந்து படைத்ததற்பின் வணங்குஞ் சிறுத்தொண்டரை நோக்கி
"ஈங்கு நமக்குத் தனியுண்ண வொண்ணு; தீச னடியாரிப்
பாங்கு நின்ருர் தமைக்கொணர்வீ" ரென்று பரமர் பணித்தருள
ஏங்கிக் "கெட்டே னமுதுசெய விடையூ றிதுவோ?" வெனநினைவார். 76

நின்று பணி செய்த புண்ணியப் பேற்றிஞலும், "நின்சீ ரடியார் தஞ்சீ ரடியார்க் கடிமைபூண்டு நெடுநாட் பழகி, முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர், காற்றலை (போவெலென் ஞய்த்தலை யேற்றுக், கண்டது காணி னல்லதொன், றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே" என்று பட்டினத்தடிகள் இந்நிலையினையே விரும்பி வேண்டுவதும் காண்க. "தொண்டர்த்தொண் டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே" (கோயிறுெள்-38); "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே" (அரசு - தேவா); "அடியார்க்கு மடியேன்" என்பது முதலிய திருவாக்குக்களின் கருத்தும் காண்க.

இப் பெருமைபற்றி யன்றே நாயனுரும் நங்கையாரும் நீடு மகனுரும் பெற்ற அப்பேற்றினையே இத் தாதியாரும் உடனே பெற்று, என்றும் பிரியாதேயிருக்கத் திருக்கயிலைக்கு உடன்செல்லும் பேறு பெற்றனர். இஃது இவ்வுண்மைக்கு இலக்கியமாய் விளங்குதல் காண்க.

நானத்தலை யிறைச்சி - என்பதும் பாடம். 75

3735. **(இ-ள்)** வாங்கி....நோக்கி - சந்தனத்தார் கொடுத்த தலையிறைச்சியை வாங்கி மகிழ்ந்து படைத்ததன் பின்னே, வணங்கிநின்ற சிறுத்தொண்டரை நோக்கி; ஈங்கு....பணித்தருள - இப்போது தனித்து உண்ண நமக்கு இயலாது; சிவபெருமானடி யார்கள் இப்பக்கத்தில் யாரேனும் இருக்கக் கூடியவர்களை அழைத்து வருவீர் என்று வயிரவர் கட்டளையிட; ஏங்கி....நினைவார் - மனம் வருந்திக், கெட்டேன்!; இவர் திருவமுது செய்வதற்கு இதுவோ இடையூருய் வருவது? என்று நினைவாராகி,

(வி-ரை) வாங்கி - தாதியார் எடுத்துக் **கொடுக்க - வாங்கி** என முன்பாட்டுடன் தொடர்ந்து கொள்க. கொடுத்தலும் வாங்குதலும் இடையீடின்றி நிகழ்ந்த இருசெயல்கள்; இவற்றினிடையே **முகமலர்வார்** என்றது மகிழ்ச்சியினை வைத்து முடித்துக்கூறி இங்குத் தொடர்ந்து அன்பின் செறிவினை உணர்த்தும் கவிநயம்.

படைத்ததன் பின் - அந்தத் தலையிறைச்சிக் கறியமுதினைப் பரிகலத்தினிற் படைத்தபின் என்று வருவித்துரைத்துக் கொள்க.

வணங்கும் - அமுது உண்ணவேண்டும் என்று விண்ணப்பிக்கும் நிலையினை உட்கொண்டு வணங்கும்.

ஈண்டு இவ்வாறு விரித்துக்கொள்ளும் வகையாற் ருெகுத்துக் கூறுதல் சிறுத்தொண்டரின் மனத்தினுட்கொண்ட அவரை ஊட்டுந் தீவிரம் குறித்தது.

நோக்கி - ஓர் குறிப்பினை உட்கொண்டு ஊன்றிப் பார்த்து என்பது.

3736. அகத்தின் புறத்துப் போயருளா லெங்குங் காணா ரழிந்தணைந்து
முகத்தில் வாட்ட மிகப்பெருகப் பணிந்து முதல்வர்க் குரைசெய்வார்
**"இகத்தும் பரத்து மினியாரைக் காணேன்; யானுந் திருநீறு
சகத்தி லிடுவார் தமைக்கண்டே யிடுவே"** னென்று தாழ்ந்திறைஞ்ச, 77

தனி உண்ண ஒண்ணாது; ஈசன்....கொணர்வீர் - தனிமையில் உண்ணலாகாது என்பது உலகியல் அறநூல் விதியும் ஆம். உண்ணுங்கால் சிவன் அடியாருடன் உண்ணுதல் வேண்டும் என்பது வேத சிவாகமங்களாகிய பதி புண்ணியப் பெருநூல்களின் விதி. "கண்ணுதற் கன்பரோடும்" (851) என்றது முதலியவை பார்க்க.

இப்பாங்கு நின்றார்தமை - அணிமையில் உள்ளார் யாரேனும் ஒருவரை என்றது தொண்டரின் மனவிளைவினைத் தெரிந்துரைப்பார் போன்று விரைந்து பெறுதற் குறிப்புணர்த்தும் வகையாற் கூறியது. அன்றியும் "எவரேனும் தாமாக" (தேவா - அரசு) என்ற குறிப்புமாம். **இப்பாங்கு** - நாயனாரையே குறிப்பா லுணர்த்துதலும் காண்க.

ஏங்கி....நினைவார் - அன்று முன்பு தேடியும் காணா தலைந்துள்ளாராதலானும், அப்போது பொழுது மேலும் கழிந்துள்ள நேரமாதலானும் இனிக் கிடைப்பதரிது ஆதலின் இவர் உண்பதும் கூடாதாகிவிடும் என்று நினைந்தமையால் மனத்துள் ஏக்கமும், அதுபற்றிய "கெட்டேன்!" என்று போந்த அவலக் குறிப்பு மொழியும் எழுந்தன. "காத லாலே தேடியுமுன் காணேன்" (3704).

தனியுண்ணுமை - "சாட்சி போசனம்" என்பது வடமொழி வழக்கு. 76

3736. **(இ-ள்)** அகத்தின்....உரை செய்வார் - மனையின்வெளியே போய்த் தேடியும் திருவருட் செயலால் எங்கும் அடியவரைக் காணாது முகத்திலே மிகவும் வாட்டம் பெருக வந்து முதல்வனாருக்கு உரை செய்வாராய்; இகத்தும்....தாழ்ந்திறைஞ்ச - இகத்தினிலும் பரத்தினிலும் இனியவர்களாகிய சிவனடியார்களைத் தேடியும் கண்டிலேன்; நான் அறியேனாயினும் உலகிலே திருநீறிடுவார்களைப் பார்த்து நானும் திருநீற்றினை இடுவேன் என்று கூறித் தாழ்ந்து வணங்க,

(வி-ரை) அகத்தின் புறத்து - அகத்துள்ளே புறம் - என்ற குறிப்புப்படுவது சொன்னயம்; மனத்துள் அடியார் காணப்பெறார் என்று மனமாழ்கினும் அக்கருத்துடனே நின்றுபடாது புறத்துப் போயினார் என்ற குறிப்பும் காண்க.

அருளால் - பரமனின் ஆணைப்படியே; **அருள் - ஆணை - கட்டளை; அருளாற்** போய் என்று கூட்டுக; அடியார்கள் காணக்கிடையார் என்று துணிந்துள்ளாராயினும், பரமர் ஏவினபடி செய்தல் வேண்டும் என்ற கடப்பாட்டினாலே சென்றனர் என்பதாம். இவ்வாறே கறியாக்கிய மகன் வருவானென்பது கூடாத காரியமென் றுணர்ந்தும், பின்னர் **"அழையும்"** (3739) என்ற ஆணைக்குட்பட்டு **"அருளாற்"** புறம்போய் அழைத்த செயலும் காண்க.

அருளாற் - காணார் - என்று கூட்டி, அன்று முன்னரும், அப்போதும் அடியார் காணாராயினமையும் திருவருளால் நிகழ்ந்தன என்ற குறிப்புப்படக் கூட்டியுரைக்கவும் நின்றது;

என்றும் வரத்தக்க அடியார்கள் காணுமையும், கறியாக்கப்பட்ட தன்மையால் மீண்டுவரத் தகாத மகன் வரக் காணப்படுவதும் ஒக்கவே திருவருளால் நிகழ்ந்தன என்ற அருட் பெருமை உணர நிற்பதும் காண்க.

அழிந்து....உரைசெய்வார் - அடியாரை உடன் பெறாத நிலையால் நேர்ந்த மனவருத்தத்தின் செறிவு.

இகத்தும் பரத்தும் இனியார் - சிவனடியார்கள்; குரு லிங்க சங்கமம் என்ற இறைவரின் மூவகைத் திருமேனிகளுள்ளே சங்கமத்தி னியல்பும், சிவனடியார்களின் வழிபாட்டால் வரும் உபகாரமும் சுருக்கி வடித்தெடுத்துக் காட்டப்பட்ட நயமும் கண்டுகொள்க; இதனை ஈண்டுப் பெரிய சிறுத்தொண்டரது திருவாக்கில் வைத்துணர்த்திய சிறப்பும் தகுதியும் காணத்தக்கது; **இகத்து - இனிமை**யாவது "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்து" (போதம் -12 வெண்பா) என்றபடி, காணக்கிடையாத இறைவனைக் காணும்படி காட்டி நிற்றலானும், **பரத்தின் இனிமை** "தன்னுணரத் தன்னுள் இருத்தலால்" என்றபடி அவர்களது சற்பாவனையான திருவுள்ளக்கிடையாற் பெறும் பயனும் பெறப்படும். **இகத்தும் பரத்தும்** - உம்மை எண்ணும்மை.

யானும்....இடுவேன் - திருநீறிடுதல் அடியாரிலக்கணம். "நீறிடுவார் அடியார்" (திருமந்.7-159); "எவரேனுந் தாமாக விலாடத் திட்ட திருநீறுஞ் சாதனமுங் கண்டா - லுள்கி" (தேவா - அரசு) என்றபடி அடியேனும் திருநீறிடுவே னுதலால் அடியேனை உடனுண்பதற்கு ஏற்றுக் கொள்ளலாமோ? என்ற குறிப்புடன் விண்ணப்பித்தவாறு; பரமர் பணித்தருளிய "ஈசன்அடியா"ருள் (3735) ஒருவராகத் தம்மை எண்ணி வைத்துக்கொள்ளச் சிறுத்தொண்டருக்கு மனமிசையாமல், இவ்வாறு தகுதியற்றவனுயினும் திருநீறிடுதலால் அடியாருள் ஒருவராகக் கொள்ளத்தகும் என்று கூறிய எளிமை காண்க. "நீரோ பெரிய சிறுத்தொண்டர்?" (3703) எனக் கேட்டபோது "பூசிசா தனத்தவர்முன் போற்றப் போதே னுயிடினும்" (3704) என்றுரைத்தமை இங்கு நினைவு கூர்தற்பாலது. நாயனரது திருநீற்றின் அன்பு பற்றிப் "பொடி நுகரும் சிறுத்தொண்டன்" "வெந்தநீ றணி மார்பன் சிறுத்தொண்டன்" என்று ஆளுடைய பிள்ளையார் தாமே கண்டு சிறப்பித்தமையும் காண்க. திருநீறே அடியாராந் தன்மைக்கு அடையாளம் எனக் கொள்வது சைவத்திறத்தில் உயர்ந்தோர் மரபு; மெய்ப்பொருள் நாயனர் - ஏனாதிநாத நாயனர் வரலாறுகள் காண்க. "வெண்டிருநீற் றின்பொலிவு மேற்கண்டேன்; வேறினியென்?, அண்டர்பிரான் சீரடியா ராயினுர்'; (645); **'திருநீற்று நெறி'** என்பனவும் காண்க. **யானும்** - உம்மை இழிவு சிறப்பு.

தாழ்ந்திறைஞ்ச - உடன்உண்ணும் அடியாராய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பிக்கும் குறிப்புடன் வணங்க.

அகத்தும் புறத்தும் - என்பதும் பாடம். 77

3737. **(இ-ள்)** உம்மைப்போல....என்று - (அதுகேட்ட வயிரவர்) உம்மைப் போலத் திருநீற்றினைச் சிறக்க இட்ட அடியவர்களும் உண்டோ? நீரே என்னுடனிருந்து உண்பீராக என்று கூறி; செம்மை....என - செம்மை பொருந்திய கற்பினை உடைய திருவெண்காட்டு

3737. "**உம்மைப் போல நீறிட்டா ருளரோ? வுண்பீர் நீ**"ரென்று
செம்மைக் கற்பிற் றிருவெண்காட் டம்மைதம்மைக்"கலந்திருத்தி
வெம்மை யிறைச்சி சோறதனின் மீட்டும் படையு"மெனப்படைத்தார்;
தம்மை யூட்ட வேண்டியவ ருண்ணப் புகலுந் தடுத்தருளி, 78

அம்மையாரை நோக்கிப் பரிகலந் திருத்தி விரும்பத்தக்க இறைச்சியும் சோறும் ஆகிய இவற்றின் ஏனைப் பகுதியை இவர்க்கும் படைப்பீராக என்று இறைவர் கட்டளையிட; படைத்தார் - அவரும் அவ்வாறே படைத்தனர்; தம்மை....தடுத்தருளி - தம்மை உண்பிக்கவேண்டி அவர் விரைந்து உண்ணத் தொடங்குதலும் தடுத்தருளி,

(வி-ரை) உம்மைப்போல நீறிட்டார் உளரோ? - சிறுத்தொண்டர் திருநீற்றினைப் பேணும் சிறப்பினை இறைவர் திருவாக்கினாற் பாராட்டி எடுத்துக்காட்டியபடி; "பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டாக" (தேவா) என்று ஆளுடைய பிள்ளையார் பாராட்டிய திறமும் இங்கு நினைவு கூர்தற்பாலது.

நீர் உண்பீர் - என்க. உடனிருந்து உண்பீர் என்றபடி.

செம்மை - செம்மைதரும் தன்மை; **செம்மை**யாவது "திருநின்ற செம்மையே செம்மை" என்றபடி சிவத்தன்மையினில் விளங்கும் சிறப்பு.

அம்மை தம்மை....என - அம்மையாரை நோக்கி இறைவர் பணித்தருள.

படைத்தார் - அவரும் அவ்வாறே அனைத்தையும் திருந்தப் படைத்தார்; விரைவு பற்றி ஒரு சொல்லாற் சுருங்க உரைத்தது கவிநயம்.

தம்மை ஊட்ட வேண்டி அவர் உண்ணப் புகலும் - இறைவர் உண்ணத் தொடங்கு முன்பே அவர் உண்ணப் புகுந்ததன் கருத்தினை ஆசிரியர் எடுத்துக் காட்டியவாறு. இறைவர் தாமும், புனைவாக வாயினும், சிறுத்தொண்டர்பால் குற்றமாக ஒன்றைச் சொல்லக் கேட்கப் பொறு நிலைமையில், ஆசிரியர், எச்சரிக்கையாக இக்கருத்தினைக் கூற முற்படுகின்ற தெய்வக் கவிநலம் கண்டு கொள்க; தாம் முன் உண்ணப்புக்க நிலையின் காரணத்தைச் சிறுத்தொண்டர்பின் உரைப்பதில்லை; ஆதலின் அது சொல்லப்படாமலும், தாம் காட்டாவிடில் உலகம் காணுமலும் போய்விடு மாதலின் எடுத்துக்காட்டிய படியுமாம்.

தம்மை ஊட்ட வேண்டி - புகலும் - உள்ளத்தி னுள்ளிருக்கும் கள்வர் இதனை உணர்ந்தாராயினும் இவ்வாறு மாறுகூறுவார் என்றும், ஆயினும், அது "தடுத்தருளி" என்றவாறு, பழியாகாது பின்வரும் அருளிப் பாட்டுக் கேதுவாவது என்றும் உணர்த்திய நயமும் கண்டுகொள்க.

புகலும் - தொடங்குதலும்; முன் உண்ணப்புகுதல் இறைவரை ஊட்டுதலில் இருந்த ஆர்வத்தின் விரைவு குறித்தது.

3738. "ஆறு திங்கள் கழித்துண்போ முண்ணு மளவுந் தாழாது
சோறு நாளு முண்பீர்முன் னுண்ப தென்?**நம் முடன்றுய்ப்ப**
மாறின் மகவு பெற்றீரேன் மைந்தன் றன்னை யழையு"மென
ஈறு முதலு மில்லாதார்க் "**கிப்போ துதவா னவ**" னென்றார் 79

3738. **(இ-ள்)** ஆறு....அழையுமென - ஆறுமாத காலம் இடைகழிய நாம் ஒருமுறை உண்போம்; நீர் ஒவ்வொரு நாளும் சோறு உண்பீர்; அப்படியிருந்தும் நாம் உண்ணுமுன் நீர் உண்ணப்புகுந்த தென்னை?; நம்முடனே இருந்து உண்பதற்கு ஒப்பற்ற மகனைப் பெற்றீரானால் அம்மகனை அழையும் என்று வயிரவர் கூற; ஈறும்....என்றும் - அவ்வாறு கூறிய அந்தமுமாதியும் இல்லாத இறைவருக்கு அவன் இப்போது உதவமாட்டான் என்று (தொண்டனார்) விடை கூறினர்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) ஆறு திங்கள் ஒழிந்து உண்போம் - "மூவிருது கழித்தாற் பசு வீழ்த்திட உண்பது; உரிய நாளும் அதற்கு இன்று" (3707) என முன்கூறியது காண்க. இங்கு மீண்டும் அதனையே "**ஆறு திங்கள் ஒழிந்து**" என்று கூறியது அமுது கொள்ளும் இடைக்காலத்தின் நீட்டிப்பை வற்புறுத்துதற்கு; முன்னர் **மூவிருது** என்றதும், ஈண்டு அதனையே ஆறுதிங்கள் என்றதும் இக்கருத்து; "சோறு **நாளும்** உண்பீர்" என்று இடித்து இழித்துக் கூறுதல் போலக் கூறுதலும் இக்கருத்துக் காட்டும் கவிநயம். **திங்கள்** - மாதம்; **திங்கள்** - சந்திரனைக் குறிக்கும்; சந்திரன் வளர்வதும் மறைவதும் கூடிய முப்பதுநாட்கூறு எல்லை கண்ட கால அளவுபற்றி முதலில் காலக்கணக்கு இட்டு அறியப்பட்டமையின் திங்கள் என்பது ஒருமாத கால எல்லையைக் குறிக்க வழங்குவதாயிற்று; **மாதம்** என்பதும் அவ்வாறேயாம்; மதியினைப் பற்றி அளவுகொண்ட காலக்கூறு **மாதம்** என்பர்; **ஒழிந்து** - கழிய; ஒழிய என்னும் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் செய்து என்ற எச்சமாய் வந்தது. **நாளும்** - ஒவ்வோர் நாளும்; உம்மை முற்றும்மை.

முன் - ஆறுமாதம் உண்ணாது பசித்திருக்கும் நாம் உண்பதற்கு முன் என்பது குறிப்பு.

நம்முடன் துய்ப்ப - நம்முடன் கூட இருந்து அமுதுண்ண; **துய்த்தல்** - உண்ணுதல், உணவுகொள்ளுதல், மக்களுடன் உண்ணுதல் உலகியல் இன்பமாகிய மரபு பற்றியது.

மாறின் மகவு பெற்றீரேல் மைந்தன் றன்னை அழையும் - மகவு - (பின் **மைந்தன்** என்பதனால்) ஈண்டு இடநோக்கி ஆண் மகவு குறித்தது. **பெற்றீரேல்**- பெற்றுள்ளீராகில்.

ஈறும் முதலும் இல்லாதார் - என்றுமுள்ளவர். "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" (திருவா);

அவன் இப்போது உதவான் - என்க; உண்மைக்கு மாறுபடாமற் கூறிய நயமும் திறமும் காண்க. "விளைந்த தன்மை, யாதுமொன் றுரையா ரிப்போ திங்கவ னுதவா னென்றார்" (1814) என்ற அப்பூதியார் புராணமும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. 79

3739. **"நாமிங் குண்ப தவன்வந்தா ஞடி யழையு"** மெனநம்பர்
தாமங் கருளிச் செயத்தரியார் "தலைவ ரமுது செய்தருள
யாமிங் கென்செய் தாலாகு?" மென்பார், விரைவுற்றெழுந்தருளாற்
பூமென் குழலார் தம்மோடும் புறம்போ **யழைக்கப் புகும்பொழுது.** 80

3739. **(இ-ள்)** நாம் இங்கு....அருளிச் செய - அவன் வந்தால் நாம் இங்கு உண்பதியலும்; ஆதலால் அவன் வருகையினை நாடி அழையுங்கள் என்று இறைவர் அப்போது அருளிச் செய்யவே; **தரியார்** - தரிக்கலாற்ருதவராகி; தலைவர்....என்பார் - தலைவராகிய அடியார் திருஅமுது செய்தருள இங்கு நாம் என்ன செய்தால் அது முடியும்? என்று ஏங்குவாராகி; விரைவுற்று....புகும் பொழுது - விரைவாக எழுந்து இறைவரது அருள் ஆணைவழியே நின்று பூ முடித்த மெல்லிய மலர்களைச் சூடிய கூந்தலினை உடைய அம்மையாருடனே மனையின் புறத்தே போய் மகனை வா என்று அழைக்கத் தொடங்கும்போது,

(வி-ரை) அவன் வந்தால் நாம் இங்கு உண்பது என்க; அவன் வந்த பின்பே நாம் உண்ணக்கடவோம்; இதனல் அவன் வருதல் உறுதி என்று உணர்த்தியது குறிப்பு; **நாடி** - இக்குறிப்பினை நாடி என்ற குறிப்பும் காண்க. **நாடி** - என்பதற்குத் தேடி என்று உரைத்தனர் முன் உரைகாரர்கள். அது பொருந்தாமை, நாயனர் வேறெங்கும் செல்லாது அகத்தின் புறம் போய் அழைத்த செயலானும் காண்க. தாமே அரிந்து அமைத்தாராதலின் தேடுதல் கருத்தன்ருகி, அழைத்தலே கருத்தும் ஆணையுமா மென்க. **தேடல்** - உடலின் வினை; **நாடல்** - உளம் கருவியாக அறிவா லாராய்தல்; "நாடி நான்முகன் நாரணனென்றிவர், தேடியுந்திரிந் துங்காண வல்லரோ?" (தேவா - அரசு) என்புழியும் நாடுதல் இப்பொருட்டாதல் அறிக; ஈண்டு நாடலும் தேடலும் வெவ்வேறு பொருட்கண் வந்தமையும் காண்க.

நம்பர் - நம்பி அடைந்தவர்க்கு அருள்பவர் என்ற குறிப்பு. அவர் சொல்வழியே நம்பி அமைந்து நின்று அழைத்தனர் என்பதாம்.

இங்கு **அன்பு வெறியாற் களித்து,** அதனில் **மயங்கி** நின்று தம்மையும் செயலையும் அறியாது செய்தனர் நாயனரும் மனைவியாரும் என்று முன் (3722) பாட்டிற் கண்டவாறே தொடர்ந்து ஆராய்ச்சி செய்வாரு முண்டு; அவ்வாராய்ச்சிகள் பிழையாதல் முன்னரே ஆண்டு விளக்கப்பட்டது; "தம் கையால் அரிந்த புதல்வரை மீட்டும் அழைக்க எவரே புறப்படுவர்....அவர் சொல்வழியே இருவரும் உழன்றது உறுகரியா மென்க" என்பர் இப்பிழையாராய்ச்சியாளர். முன்னர் அடியார்கள் என்று காணக்கிடையார் என்று தாம் அறிந்திருந்தும் வயிரவர் "பாங்கு நின்ருர் தமைக் கொணர்வீர்" என்ற சொல்வழி நின்று புறத்துப்போய்த் தேடிக்காணது மீண்டனர் என்பதும் காண்க. (3736); அவ்வாறு அடியாரைக் காணுதபோது அவர்க்கு ஈடாக நீறிடும் தன்மைபற்றித் தம்மையே அடியவராக ஏற்றுக்கொள்ள வேண்டினர். அதற்கும் வயிரவர் இசையவும் பெற்றனர். அவ்வாறே ஈண்டும், வயிரவர் சொல்வழி நின்று நடப்பது முதற்கடமை; அது இயல்வதாமோ? சரியோ? பிழையோ? என்ருராய்தல் ஈண்டுச் சிவநெறி யொழுக்கமுறையும் மரபுமன்று. "ஆசையொடு மரனடியா ரடியாரை யடைந்திட் டவர்கரும முன்கருமமாகச் செய்து கூசிமொழிந் தருள்ஞானக் குறியி னின்று கும்பிட்டுத் தட்டமிட்டுக் கூத்தாடித் திரியே" (சித்தி-12-2)என்பது அணைந்தோர்

3740. வைய நிகழுஞ் சிறுத்தொண்டர் "**மைந்தா வருவா!**" யெனவழைத்தார்
தைய லாருந் தலைவர்பணி தலைநிற் பாராய்த் தாமழைப்பார்
"செய்ய மணியே! சீராளா! வாராய்! சிவனு ரடியார்யாம்
உய்யும் வகையா லுடனுண்ண வழைக்கின் றா"ரென் றேலமிட, 81

தன்மை. (சீவன் முத்தரியல்பு) இங்கு நாயனாரும் மனைவியாரு மிவ்வியல்பினர். இஃது அன்பு வெறியாலாவது என்று கூறுதல் முழுதும் பிழைபாடு. ஈண்டு அடியார் "நாடி அழையும்" என்ற ஆணை பெற்றனர். அதன்படி அவ்வாறே அழைத்தார்; அவன் இங்கு உதவான் என்று தாமே முடித்துக்கூறிய மகன் வருவானோ? என்ற எண்ணம் நாயனார் மனத்துள் எழுதலுக்கு இடமேயில்லை; அவர் குறிப்பின் வழிநிற்போம். பின்னர் நிகழ்வது எவ்வாறாயினும் திருவருள் வழி நிகழட்டும் என்பதே அவர் மனநிலை. ஆணைவழி நின்ற பின்னை முன் வேறு அடியார் காணாத போது நிகழ்ந்த முறையே இதற்கும் ஏதேனும் ஒருவழி கிடைத்து **அடியார் திருவமுது**ண்ணும் **பேறு** பெறுவோம் என்பதொன்றே கருதி நாயனாரும் மனைவியாரும் செயல்கள் செய்தனர் என்பது ஈண்டுத் "**தலைவரமுது செய்தருள** யாம் இங்கு **என் செய்தாலாகும் என்பார்**" - என்றதனால் இஃது இனிது விளங்குதல் காண்க. **தரியார் - புறம்போய் அழைக்க - தரியார்** - என்றதனாலும், "தலைவர்பணி தலைநிற் பாராய்" "சிவனுரடியார்.... அழைக்கின்றார்" என்றவற்றாலும் இக்கருத்து நன்கு விளங்குதல் காண்க.

அருளால் - இறைவரது அருள் ஆணைவழியே நின்றுபோய் அழைத்தனர் என்பதனாலும் நாயனாரது கருத்து விளங்கும்; அவ்வாறு அழைத்தலே மகன் வருதற்கு வழியாய் அருள் வெளிப்பட்டு விளையும் தன்மையாம் என்பதும் குறிப்பு.

அழைக்கப் புகும்பொழுது - புகும் அப்பொழுதே **அழைத்தார்** என வரும்பாட்டுடன் முடிக்க; தரியாமையும் ஊட்டும் ஆர்வமும் தமது செயலில்லாமையும் பற்றி எழுந்த விரைவுக் குறிப்பு. *80*

3740. **(இ-ள்)** வையம்....அழைத்தார் - உலகிலே புகழ் என்றும் நிலவிய சிறுத்தொண்டர், மைந்தா! வருவாய்! என்று கூவி அழைத்தார்; தலைவர் பணி தலைநிற்பாராய் - தலைவரது ஆணையின்படி அதனைத் தலையாற் றாங்கியே ஒழுகுவாராகி; தையலாரும் தாம் அழைப்பார் - அம்மையார் தாமும் அழைப்பாராய்; செய்ய....என்று ஓலமிட - செம்மையுடைய மணியே! சீராளா! சிவனுரடியார் நாம் உய்யும்படி உடன் உண்பதற்கு அழைக்கின்றார், வாராய்! என்று அழைத்து ஓலமிடவே,

(வி-ரை) வைய நிகழ்தல் - உலகில் புகழ் என்றும் விளங்குதல்.

மைந்தா வருவாய் - "**மைந்தன்** றன்னை அழையும்" என்று அடியவர் ஆணையிட்டமையால் மைந்தா என்றழைத்தார். நாயனார் புத்திரவாஞ்சையின் வாசனையினால் இவ்வாறு அழைத்தார் என்றும், அம்மையார் அழைத்த திறத்தில் அவ்வாசனையும் இல்லை என்றும் இங்கும் பிழைபடும் தற்போத முனைந்த ஆராய்ச்சியிற்றலைப்பட்டு அபசாரப் படுவாரு முண்டு; வயிரவர் உண்ணும் நரபசுவைப் பற்றி உரைத்த அப்பொழுதே மகனை அவ்வடியவரது உணவுப்பொருள் என்று கொண்டு மகனும் பற்று அறவே ஒழித்தனர்

3741 பரம **ரருளாற்** பள்ளியினின் ரேடி வருவான் போல்வந்த
தரமில் வனப்பிற் றனிப்புதல்வன் றன்னை யெடுத்துத் தழுவித்தங்
கரமுன் னணைத்துக் கணவனூர் கையிற் கொடுப்பக் களிகூர்ந்தார்
'புரமூன்றெரித்தார் திருத்தொண்ட ருண்ணப்பெற்றோ'மெனும் பொலிவால். 82

என்பது இதுவரை நிகழ்ச்சிகளால் நன்கு உணரப்படும். "**கறியமுதா மென்னு மதனுல் -** உச்சி மோவார்...." (3710) என்பதும் காண்க; மகனுர் மீள ஓடிவரக் காணும் நிலையில், இத்தன்மை மாறி, அம்மையார் அவரை எடுத்துத் தழுவுதலும் நாயனுர் மகிழ்தலும் அடியவர் உமது மகனை அழையும் என்று ஆணை தந்தருளிய வாற்றுல் அவரால் மீளத் தரப்பட்ட தமது **மைந்தனைக்** காணும் வேறுபாடு பற்றியதாகும் என்பதும் ஓர்க.

தையலாரும் - உம்மை; கணவனுர் அழைத்ததே யன்றித் தையலாரும் என இறந்தது தழுவிய எச்சவும்மை.

தலைவர் பணி தலைநிற்பாராய்த் தாம் அழைப்ப - தலைவர் பணித்தபடி செய்யும் கடப்பாடு பற்றி அழைத்ததே யன்றிப் பிள்ளை வருவான் என்ற எண்ணத்தாலன்று என்பது நன்கு விளங்குதல் காண்க; தலைநிற்றல் - வழியே அமைந்து ஒழுகுதல். உறுதியாய் நிற்றல்;

சிவனுர்....அழைக்கின்றூர் - நான் அழைக்கவில்லை; அடியார் அழைக்கின்றூர். அவருக்காக வருவாய் என்பது குறிப்பு.

யாம் உய்யும் வகையால் உடனுண்ண - யாம் உய்யும் வகை என்று சீராள தேவரையும் உள்ளிட்ட உளப்பாட்டுத் தன்மைப்பன்மை உண்மையின் குறிப்பு; "எங் குடிமுழு துய்யக் கொள்வீர்" (1812) என்று இவ்வாறே அப்பூதியார் திருவாக்கில் வந்தமையும் ஆண்டுரைத்தவையும் காண்க.

சிவனடியார் - அடியார் வேடத்தில் வந்த சிவனுர் என்பது குறிப்பு.

உடனுண்ண - உடனே கூடச் சிவலோகச் சார்வாகிய இன்பத்தை நாம் எல்லாரும் கூடி அனுபவிக்கும் பொருட்டு என்ற சரிதவிளைவுக் குறிப்பும் காண்க.

அழைப்பார் - ஓலமிட - அழைத்தல் மட்டுமன்றி மணியே - சீராளா - அழைக்கின்றூர் - வாராய் என்று உரத்துப் பலவாறும் ஓலமிட்டனர் என்பது அவரை ஊட்டும் ஆர்வத்தின் மிகுதி குறித்தது.

81

***3741.* (இ-ள்)** பரமர்....புதல்வன்தன்னை - அப்போது இறைவரருளினுலே அழைக்கும் ஒலிகேட்டுப் பள்ளிக்கூடத்தினின்றும் ஓடிவருபவர்போல எதிரே ஓடிவந்த ஒப்பற்ற அழகுடன் விளங்கிய ஒப்பற்ற மகனுரை; எடுத்து....கொடுப்ப - (அம்மையார்) எடுத்துத் தழுவிக்கொண்டு தமது கையால் முன்பு அணைத்துக் கணவனுரின் கையிலே கொடுப்ப; புரமூன்று....பொலிவால் - திரிபுரங்களையும் எரித்த இறைவர் திருத்தொண்டர் அமுது உண்ணும் பேறுபெற்றோம் என்ற மகிழ்ச்சியாலாகிய துணிபினுலே; களிகூர்ந்தார் - மிகவும் மகிழ் சிறந்தார்.

3742. வந்த மகனைக் **கடிதிற்கொண் டமுது செய்விப் பான்**வந்தார்;
முந்த வேயப் பயிரவரா முதல்வ ரங்கண் மறைந்தருளச்
சிந்தை கலங்கிக் காணாது திகைத்தார்; வீழ்ந்தார்; தெருமந்தார்;
வெந்த விறைச்சிக் கறியமுதுங் கலத்திற் காணார், வெருவுற்றார். 83

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

(வி-ரை) பரமர் அருளால் - பரமர் - அப்பாற்பட்டவர் - கடந்தவர்; விசேடமும் இச்செயலின் காரணமாகும் முழுமுதற் றன்மைக் குறிப்பு.

தரமில் வனப்பிற் றனிப்புதல்வன் - எஞ்சலில்லாக் கோலத்துடன் மறைந்து இறைவர் பாலாயின அவர், இறைவரால் மீளத் தரப்பட்ட வனப்புடன் வருகின்றாராதலின் அவ்வனப்புத் தரங்கடந்ததாய்த் தெய்வத்தன்மையுடன் விளங்கிற்று என்பது; "அதிமதுரக் கனி" (*1741*) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

எடுத்தல் - தழுவுதல் - அணைத்தல் - கொடுத்தல் - என்ற இவை இப்போது இறைவராற் றரப்பட்ட தம் மைந்தனாராந் தன்மையும், அவருடன் உண்ணவரும் தம் மைந்தராந் தன்மையும் பற்றி நிகழ்ந்தன.

பொலிவால் களிகூர்ந்தார் - மகனை மீளப் பெற்றதன் பொருட்டு அன்றி, அவன் வருகையினால் அடியார் அமுதுசெய்யும் பேறு பெற்றோ மென்ற காரணத்தால் மகிழ்ந்தனர் என்று சிறுத்தொண்ட நாயனாரது பெரிய மனநிலை பற்றி அறிவுறுத்தி உலகினரை எச்சரித்து ஆசிரியர் காட்டும் திறம். "சிறிதிடை யூறு செய்தானிவன் என்று சிந்தை நொந்தார்" (*1819*) என்ற அப்பூதியார் - மனைவியார் மன நிலைகளை ஈண்டு ஒப்புநோக்குக.

பொலிவு - விளக்கம்; மன மலர்வு; அகநிகழ்ச்சி 82

3742. **(இ-ள்)** வந்த....வந்தார் - முன்கூறியவாறு வந்த மகனாரைக் கொண்டு இறைவரைத் திருவமுது செய்வித்தற் பொருட்டு விரைவாக வந்தார்; முந்தவே... மறைந்தருள-அதற்கு முன்பே அந்த வயிரவராய் வந்த முதல்வனார் அங்கு நின்றும் மறைந்தருளினாராக; சிந்தை....தெருமந்தார் - அவரைக் காணாமல் மனங்கலங்கித் திகைப்படைந்தார்; விழுந்தார்; மனஞ் சுழலப்பெற்றார்; வெந்த....வெருவுற்றார் - வெந்த இறைச்சிக் கறியமுதினையும் பரிகலத்திற் காணாதவராய் திடுக்கிட்டார்.

(வி-ரை) வந்த - முன்பாட்டிற் கூறியவாறு ஓடிவந்த; **செய்விப்பான்** - செய்விப்பதன் பொருட்டு; **வந்தார்** - சிறுத்தொண்டர் வந்தார்; **முந்தவே** - அவர் வருமுன்னமே; **அங்கண்** - அவ்விடத்தினின்றும்;

திகைத்தார் - வீழ்ந்தார் - தெருமந்தார் - தொடர்ந்து தனித்தனி நிகழ்ந்த துன்பச் செயல்களைத் தனி வினையெச்சங்களாற் கூறாது வினைமுற்றுக்களாற் கூறியது கவிநயம்; தனித்தனி அவற்றை மனங்கொளற் பொருட்டாம்.

3743. "செய்ய மேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ் சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய வமுது செய்யாதே யொளித்த தெங்கே?" யெனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த வவர்தா **மலைபயந்த**
தைய லோடுஞ் சரவணத்துத் தனய ரோடுந் தாமணைவார், 84

வெந்த....வெருவுற்றார் - வெருவுறுதல் - சடுதியில் திடுக்கிட்டு நேரிடும் அச்சம். திகைத்தார் முதலிய மூன்றும் வயிரவரைக் காணாமையால் நிகழ்ந்தவை; இத்துணையும் அவர் அமுது செய்யும் பொருட்டே செய்யப்பட்டனவாதலின் அவரைக் காணாமை பெருமயக்கமும் துன்பமும் ஆகி விளைந்தது; மேற்பாட்டுப் பார்க்க; இறைச்சி அமுது காணாது வெருவுற்ற நிலையினைப் பிரித்துணர வேறு கூறினார்.

கலத்தில் - படைக்கப்பட்ட பரிகலத்தில்; **தெருமருதல்** - மனஞ் சுழலுதல்; **திகைத்தல்** - போயின வகை காணமாட்டாது மயங்குதல்.

பயிரவராம் முதல்வர் - பயிரவச் சங்கம வேடந்தாங்கி வந்த இறைவனார். 83

3743. **(இ-ள்)** செய்ய....தேடி - சிவந்த திருமேனியும் கரியகுஞ்சியும் செழிய போர்வையும் தாங்கிய வயிரவர் யாம் உய்யும்படி திருவமுது செய்யாமல் எங்கே ஒளித்தனர்? என்று தேடுவாராகி; மையல் கொண்டு புறத்தணைய - மயங்கி வெளியே வர; மறைந்த....அணைவார் - மறைந்தருளிய அவ்வயிரவர் தாமே, மலை மகளாராகிய உமையம்மையாரோடும் சரவணத்தில் வளர்ந்த திருமகனாராகிய முருகப் பெருமானோடும் அணைவாராகி,

(வி-ரை) செய்ய....பயிரவர் - அவரது திருவுருவத்தை கண்குளிர நன்கு கண்டு வழிபட்டாராதலின் அதனை ஈண்டுத் தமது மனத்துள் கண்டு கொள்கின்றார். 3690 பார்க்க. இக்கருத்துப் பற்றியே, "வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும், அஞ்சனப் புகையென வால மாமெனச், செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக், கஞ்சுகக் கடவுள்பொற் கழல்கள் போற்றுவாம்" என்று கந்த புராணமுடையார் துதித்தலும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. **செம்மை - கருமை** முரண்தொடை.

யாமுய்ய அமுது செய்யாதே - அடியார்க்கு அமுதூட்டுவோர் அவரது பசிதீர உண்கின்றார் என்பதன்றித் தாம் உய்ய அவர் உண்கின்றார் என்ற எண்ணம் வரப் பெறுதல் வேண்டு மென்பது.

எங்கே ஒளித்தது எனத்தேடி....அணைய - அவர்மனையின் புறத்தே சென்று ஒளித்தனர் எனக்கருதித் தேடும் பொருட்டு வெளியில் அணைந்தனர்.

அவர்தாம் - அவர்தாமே; தேற்றேகாரம் தொக்கது.

மலைபயந்த தையல் - உமையம்மையார்.

சரவணத்துத் தனயர் - முருகப்பெருமான். இவ்வாறு உமையம்மையாரும் முருகப்பெருமானும் தாமுமாகக் கூடிச் சோமாஸ்கந்த மூர்த்தமாக வெளிப்பட்டு இறைவர்

3744. **தனிவெள் விடைமே னெடுவிசும்பிற் றலைவர்** பூதகண நாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கண் முதலா னோர்கள் போற்றிசைப்ப
இனிய கறியும் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பனிவெண் டிங்கண் முடிதுளங்கப் பரந்த கருணை நோக்களித்தார். 85

அருள் புரிந்தது பெரிய சிறுத்தொண்டருக்கு அருள வந்த **இவ்வோரிடத்தேதான்** என்பது ஈண்டுப் பெருஞ் சிறப்பாகக் கருதத்தக்கது; அம்மையும் தாயுமாக விடை யேறிவந் தருள்வதே பெரும்பான்மை ஏனைத் தொண்டரிடங்களாம்; தொண்டர்க் கருளத் தாமும், நங்கைக்கும் தாதியார்க்கும் அருள அம்மையாரும், சீராளதேவருக்கருள வேல்மைந்தனுருமாக எழுந்தருளினர் என்பது, பின்னர் (3746), இம்முறையே நிரனிறையாக வைத்துக் கூறிக் காட்டியருளுதலாற் கருதிக்கொள்ளத் தக்கது.

சரவணம் - நாணற்காடு; நாணற்காட்டினிடையே உள்ள பொய்கைக்காகி வந்தது; சரம் - நாணல்; வனம் என்பது வணம் என வந்தது உத்தராயணம், ராமாயணம் என்புழிப்போல; ***சரவணத்துக் தனயர்*** - சரவணப் பொய்கையுள் வளர்ந்த குமாரக் கடவுள் என்க. "நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை" (முருகு).

தாம் - தலைவர் தாமும் கூடி என்று, மேல் பாட்டில் தலைவர் என்பதுடன் கூட்டி முடிக்க.

அணைவார் - அணைவாராகி; முற்றெச்சம். **அணைவார்** - எழுந்தருளி என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *84*

3744. **(இ-ள்)** தலைவர் - இறைவர், பூதகண நாதர்.....போற்றிசைப்ப - சிவபூத கணத்தலைவர்களும் முனிவர்களும் தேவர்களும் விஞ்சையர்களும் முதலாக உள்ளவர்கள் துதி செய்ய; இனிய....காண - இனிய கறியினையும் திருவமுதினையும் அமைத்த அவர்கள் காணும்படி; நெடுவிசும்பில் - நீண்ட ஆகாய வெளியிலே; தனி வெள் விடைமேல் -ஒப்பற்ற வெண்மையான இடபத்தின் மேலே; எழுந்தருளி..... நோக்களித்தார் - வெளிப்பட்டு எழுந்தருளிக் குளிர்ந்த வெள்ளிய சந்திரனை அணிந்த திருமுடி அசையப் பரந்த அருணோக்கத்தினை அளித்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) தலைவர் - பூதகண நாதர்....போற்றிசைப்ப - காண - விசும்பில் - விடைமேல் எழுந்தருளி - **அளித்தார்** என்று மாற்றிக் கூட்டி உரைத்துக் கொள்க. **போற்றிசைப்பவும் - காணவும்** என்க.

நெடுவிசும்பு - ஞான வொளியுடைய ஆகாயம் என்பார் **நெடு** என்றார்.

போற்றிசைப்ப - அடியார்க்கெளிவந்து இறைவர் அருளும் திறத்தினைப் போற்ற.

அமைத்தார் - நாயனார் - மனைவியார் - தாதியார். வினையாலணையும் பெயர்.

முடிதுளங்க - துளக்கி என்பது துளங்க என வந்தது. **முடிதுளக்குதல்** - திருத்தொண்டினை ஏற்றருளுதற் குறிப்பு. மகிழ்ச்சிக் குறிப்புமாம்.

3745. **அன்பின் வென்ற தொண்டரவர்க் கமைந்த மனைவி யார்மைந்தர்**
முன்பு தோன்றும் பெருவாழ்வை முழுதுங் கண்டு பரவசமாய்
என்பு மனமுங் கரைந்துருக **விழுந்தா; றெழுந்தா; ரேத்தினுர்;**
பின்பு பரமர் தகுதியினுற் **பெரியோ ரவருக் கருள்புரிவார்,** 86

பரந்த நோக்கு - நிரம்பிப் பரவிய ஊன்றிய பார்வை.

கருணைநோக்கு - அருட்பார்வை; இதுவரை "மடவரலை முகநோக்கி" (3697) - "தொண்டர்தமை நோக்கி" (3703) என்று வந்தனவெல்லாம் அருள்களே யாயினும், அவை திரோதானமாகிய அருள்நோக்கம்; இங்கு செய்தது சிவாநந்த வாழ்வுதரும் அருள் நோக்கம் என்பார் **பரந்த கருணை** நோக்கு என்முர்.

அளித்தார் - அளியுடன் கொடுத்தற் குறிப்பு. 85

3745. **(இ-ள்)** அன்பின்....மைந்தர் - அன்பின் உறைப்பினுலே பாச உலகியலை வென்ற தொண்டரும், அவருக்கேற்ப அவ்வாறே அமைந்த மனைவியாரும், (அவ்வாறே அமைந்த) மைந்தனுரும்; முன்பு....பரவசமாய்- தம்முன்பு வெளிப்பட்டுத் தோன்றியருளிய பெருவாழ்வாகிய சிவபெருமானது காட்சியை முற்றும் கண்டு தம்வசமிழந்து அக்காட்சியின் வயமாகவே நின்று; என்பும்....ஏத்தினுர் - எலும்பும் மனமும் கரைந்து உருக விழுந்தார்கள்; எழுந்தார்கள்; துதித்தார்கள்; பின்பு.... அருள்புரிவார் - அதன்பின்பு இறைவர் அவர்களுக்கேற்றபடி உள்ள தகுதியினாலே பெரியோர்களாகிய அவர்களுக்கு அருள்புரிவாராகி,

(வி-ரை) அன்பின் வென்ற தொண்டர் - அன்பின் - அன்பின் உறைப்பினுலே; **இன்** - ஐந்தனுருபு; ஏதுப்பொருட்டு. **வென்ற - வெல்லுதல்** - கடந்த ஞானிகளாலும் கடத்தற்கரிய மக்கட் பாசத்தினைக் கடந்து பாச வெற்றி கொள்ளுதல் - பாசத்தினை அறுத்தல். "உலகை வென்ற" என்றது காண்க. மக்கட் பாசத்தைப் புத்திர ஏடணை என்பர்.

அவர்க்கு அமைந்த மனைவியார் - அவர் தகுதிக்கேற்றவாறே ஒப்ப அமைந்த என்பது; "தாதை அரியத் தாய் பிடிக்க" (3710) என்று இருவரையும் ஒப்ப வைத்துப் பணித்ததனுக்கேற்பப், பணிபுரிய அமைந்த என்பது. **அமைந்த** என்பதனை மைந்தர் என்பதனுடனும் கூட்டுக. **அமைத்த** என்பது பாடமாயின் அமுதமைத்த என்க.

பெருவாழ்வு - பெருவாழ்வு தரும் இறைவரது காட்சியினை வாழ்வென்முர்.

முழுதும் கண்டு - முன்னரும் இவ்விறைவரே முன்பு தோன்றக் காட்சியளிக்கத் தாமே கண்டார். அங்கு அவரியல் முற்றும் கண்டாரில்லை. ஆனுல் இப்போது காண எழுந்தருளிக் கருணை நோக்களிக்க **முழுதும்** கண்டார் என்பதாம். "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே" "காட்டுவித்தா லாரொருவர் காணு தாரே" (தேவா).

என்பும் கரைந்துருகுதல் - உடலுக்கு ஆதரவாயுள்ள வலிய எலும்பும் உள்ளுருகிக் கரைதல்.

3746. கொன்றை வேணி யார்தாமும் பாகங் கொண்ட குலக்கொடியும்
வென்றி நெடுவேன் மைந்தருந்தம் விரைப்பூங் கமலச் சேவடிக்கீழ்
நின்ற **தொண்டர் மனைவியார் நீடு மகனார் தாதியார்**
என்றும் பிரியா தேயிறைஞ்சி யிருக்க வுடன்கொண் டேகினார். 87

என்பும் மனமும் கரைந்துருக - என்றதனால் அந்தக்கரண புறக்கரணங்கள் எல்லாம் கரைய என்பதாம். "என்பூ டுருகக் குனிக்கும் பிரான்."

விழுந்தார் - எழுந்தார் - ஏத்தினார் - முன்னர்க் (3742) காணாமையால் நிகழ்ந்தவற்றுக்கெல்லாம் வேறாக, ஈண்டுக் கண்டமையால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறிய நயமும் திறமும் கண்டுகொள்க.

பின்பு - அவ்வாறு அவர்கள் காட்சி கண்டு துதித்து இவ்வுலக இயலின் நிகழ்ச்சிகள் முடிந்து நிறைவாயின பின்பு என்பது குறிப்பு.

தகுதியினால் - திருத்தொண்டின் தகுதிப்பாட்டினாலே அது காரணமாக.

பெரியோர் அவருக்கு - பெரியோர்களாகிய அந்நால்வருக்கும்.

அருள் புரிவார் - முற்றெச்சம். மேல் ஏகினார் என்றதனுடன் வினைமுடிபு கொள்க. 86

3746. **(இ-ள்)** கொன்றை.....மைந்தரும் - கொன்றை மலரைச் சூடிய சடையினை உடைய சிவபெருமானும், அவருடைய ஒரு பாகத்தை யிடமாகக் கொண்ட குலக்கொடியாராகிய உமையம்மையாரும், வெற்றி பொருந்திய நீண்ட வேலேந்திய மைந்தராகிய முருகப் பெருமானும்; தம்....நின்ற - தம் மணமுடைய தாமரைப் பூப் போன்ற சேவடிகளின் கீழ் வீழ்ந்து எழுந்து துதித்து நின்ற; தொண்டர்....தாதியார் - சிறுத்தொண்டரையும் திருவெண்காட்டு நங்கையாரையும் நீடும் மகனாராகிய சீராள தேவரையும் சந்தனத் தாதியாரையும்; என்றும்....ஏகினார் - நித்தியமாய் என்றைக்கும் தம்மைப் பிரியாதே வணங்கி யிருக்கும்படி தமது சிவலோகத்துக்குத் தம்முடனே கொண்டு சென்றருளினார்கள்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

(வி-ரை) வேணியார் - கொடி - மைந்தர் - என்ற மூவரும் தொண்டர் - மனைவியார் - மகனார்; தாதியார் என்ற நால்வருக்கும் முறையே அருள் புரிந்தனர் என்று கொள்ள வைத்தது கண்டுகொள்க. வேல் மைந்தர் அருள் மகனார் தாதியார் இருவருக்குமாகக் கொள்ளுதல் குறிப்பு. என்னை? தாதியார் மகனாரை வளர்த்த - பண்பு பற்றி அவருடன் கூட்டி யுரைத்தவாறும்.

நீடுமகனார் - நீடு - சீராள தேவரது சிறப்புக் குறித்த அடைமொழி; "சீராள தேவர்" (3676) என்று தொடங்கியதற் கேற்ப முடித்துக் காட்டியவாறு; ஆண்டுரைத்தவை பார்க்க.

மகனார் - தாதியார் - தாதியாரும் ஐவகைத் தாயர்களும் ஒருவராய், மகனாரை வளர்த்தெடுத்தமையாலும், அடியார்க் கடியாராய்ப் பணிசெய்தமையாலும் தாயர்க்குப்

3747. ஆறு முடிமே லணிந்தவருக் **கடியா ரென்று** கறியமுதா
ஊறி லாத தனிப்புதல்வன் றன்னை யரிந்தங் கமுதூட்டப்
பேறு பெற்றார் சேவடிக டலைமேற் கொண்டு பிறவுயிர்கள்
வேறு கழறிற் றறிவார்தம் பெருமை தொழுது விளம்பவாம். 88

போலவே தாதியர்க்கும் ஒத்த பயன் தரப் பெற்றார் என்பதும் முன் தகுதியினால் (3743) என்ற குறிப்பு.

என்றும் பிரியாதே - இருக்க - மீளாநெறி; உடன்கொண்டு - ஏத்தி நின்ற அந்நிலையே; **இருக்க** - இருக்கும்படி. **இறைஞ்சி** - முத்தியிலும் ஆன்மாவின்அடிமைப் பண்பு. *87*

3747. **(இ-ள்)** ஆறு....என்று - கங்கை யாற்றினைச் சடையிற் சூடிய இறைவருக்கு அடியவர் என்று; கறி அமுதா....பெற்றார் - கறியமுதாகத் தம் மறுவில்லாத தனி மாமகனாரை அரிந்து அங்கு அமுதூட்ட வரும் அப்பெரும் பேற்றினைப் பெற்றாராகிய சிறுத்தொண்ட நாயனாரது; சேவடிகள் தலைமேற் கொண்டு - திருவடிகளை எமது சிரத்தின்மேலே தாங்கிக்கொண்டு; தொழுது - வணங்கி; (அத்துணையாலே); பிறவுயிர்கள்....பெருமை - பிற உயிர்கள் எல்லாம் வெவ்வேறாகப் பேசும் மொழிகளையெல்லாம் அறியுந் தன்மையாற் **கழறிற்றறிவார்** எனப் பெயர் பெறும் நாயனாரது பெருமையினை; விளம்புவாம் - சொல்வோம்.

(வி-ரை) அடியார் என்று - அடியார் என்ற கருத்தினாலே அவருக்கு, அமுதூட்ட என்க.

புதல்வன்றன்னைக் கறியமுதா அரிந்து ஊட்டப்பேறு என்க.

அமுதா - அமுதாக; ஈறுகெட்டு நின்றது.

ஊறு இலாத - "உறுப்பின் மறுவின்றேல்" (3709) என்ற கருத்து, **தனி** - ஒப்பற்ற; ஒரு குடிக்கு ஒரு மகனாக என்றலுமாம்.

அமுதூட்டப் பேறு பெற்றார் - அடியார் அமுதுண்ண வில்லையே? எனில், "அன்புநுகர்ந் தருளுதற்கே" (3684) இறைவர் திருமலைநின் றணைந்தாராதலானும், அவ்வாறே அன்புச் செயலினை நிகழ்த்திக் கண்டு நுகர்ந்தாராதலானும், ஊட்டப் பேறு பெற்றார் என்பதுண்மையாம் என்க. அரிந்தமுதாக்கிய அன்புச் செயலின் உள்ளேயும் அவர்கள் மனத்துள்ளேயும் நின்று இறைவர் உண்டருளினார் என்க; **ஊட்டு அப் பேறு** - ஊட்டும் அப்பேறு என்க.

பேறு பெற்றார் - நாயனார் மனைவியார் மகனார் தாதியார் என்ற நால்வரையும் உட்படக் கூறியது குறிப்பு.

தலைமேற் கொண்டு - தொழுது - என்று கூட்டுக. சேவடிகள் தலைமேற் கொண்டு அத்துணையானே, பெருமையினை; உடன்தொடங்காது, தொழுது சொல்வோம் என்றலுமாம்.

பிற உயிர்கள் வேறு கழறிற் றறிவார் - வேறு - வெவ்வேறு; ஒவ்வோருயிர்

வருக்கத்தின் மொழியும் வேறுவேறாவன; **அவற்றின் எல்லாப் பொருளையும் அறியும் பேறுபெற்ற கழறிற்றறிவார்** என்ற, திருத்தொண்டத் தொகையுள் வருவார் பெயர்க்காரணமும் சரிதச் சுருக்கமும் கூறித் தோற்றுவாய் செய்த நயமும் காண்க.

அடியார் என்று.....ஊட்டப்பேறு - சிறுத்தொண்ட நாயனார் சரிதசாரமாய் எடுத்து எடுத்து முடித்துக் காட்டியவாறு.

இப்பாட்டுக் கவிக்கூற்று; ஆசிரியர் தமது மரபுப்படி இதுவரை கூறிவந்த சரிதத்தை முடித்துக்காட்டி, மேல் வரும் சரிதத்துக்குத் தோற்றுவாய் செய்தருளுகின்றார். 88

சரிதச் சுருக்கம்: - காவேரி பாய்ந்து வளம் செய்யும் **சோழநாட்டில்** வளமுடைய சிறந்தஊர் **திருச்செங்காட்டங்குடி** யாகும். அதில் **மாமாத்திரர்** குடியிலே திருநீற்றுச் சார்புடையராய் உயிர்களுக்கெல்லாம் உயர் காவற்றொழில் பூண்டு விளங்கியவர் **பரஞ்சோதியார்.**

அவர் ஆயுள்வேதக் கலையும், வடநூற் கலையும், படைக்கலத் தொழிற் கலையும், குதிரை யானைப் படைத் தொழிற் கலையும் அறிந்து சிறந்தனர். கலைத் துறைகளின் தெள்ளி வடித்தறிந்த பொருளாவது சிவன் கழலிற் செறிவாகிய அன்பேயாம் என்று துணிந்து, சிவனடிமைத் திறத்தில் பூண்ட அன்பு பள்ளமடையாய் என்றும் பயின்று வந்தனர். சிவன் அடியார்களுக்கு என்றும் இயல்பான பணி செய்து வந்தார்.

அரசன்பால் அணுக்கச் சேவகத்தில் அமர்ந்து அவருக்காக யானைப்படைகளைப் போரிற்கொண்டு செலுத்திப் பகைவரது தேசங்கள் பலவற்றையும் வென்று தம் அரசனிடம் சிறப்புப் பெற்றார். அரசனுக்காகத் தண்டெடுத்துச் சென்று வடபுலத்திலே (Badami & Bhijapur Dt & Bombay Presidency) பகைவனுடைய **வாதாவி** என்னும் வலிய கோட்டையினையும் நகரினையும் யானைப் படை செலுத்தி அழித்துப் பல அரிய சின்னங்களையும், யானை முதலிய பொருள்களையும் கொண்டு வந்து அரசனாற் சிறப்பாகப் பாராட்டப் பெற்றார். அப்போது ஏனை மந்திரிகள், இவர்பெருஞ் சிவத்தொண்டு வாய்த்த வலியுடைமையினால் இவ்வுலகில் இவருக்கு எதிர் எவருமில்லை என்றார்கள்.

அது கேட்ட அரசன், சிவனடியாரை அறியாதே போர்முனையில் விட்டேன்! நான் கெட்டேன்! என்று அஞ்சி அதனைப் பொறுக்க வேண்டுமென்று அவரை வேண்டினான்; அவர் எனது உரிமைத் தொழிலுக் கடுத்தவாறே வினைபுரிவேன்; அதனால் என்ன தீங்கு? என்றார்; அரசன் அவருக்கு வேண்டியவாறு நிறைந்த செல்வங்களையும், இறையிலி மானியங்களையும் கொடுத்தே, "உம்முடைய உயர் நிலையினை உலகறியா வண்ணம் கொண்டு செலுத்தினீர்! இனி உமது மனக்கருத்துக்கிசையவே வாழ்ந்து, உமது மெய்யன்பு விளங்கும்படி ஒழுகி வாழ்வீராக!" என்று வேண்டி விடைகொடுத்தனன். அவர் அரசன்பால் விடைகொண்டு தமது பதியினில் வந்து சேர்ந்து அரன்பணியும், அடியார் பணியும் முன்போலவே முறையன்பினால் வழுவாது செய்து வருவாராயினார்; தீதில் குடிப்பிறந்த

திருவெண்காட்டு நங்கை என்னும் அம்மையாரை மணந்து இருவர் கருத்தும் ஒன்றவரும் பெருமை நீதி மனையறத்தில் ஒழுகினர். நாடோறும் சிவனடியார்களை முறைமைப்படி முன்னர்த் திருவமுதூட்டிப் பின்னரே தாம் உண்ணும் நிலையினை நித்த நியமமாக வழுவாது கைக்கொண்டொழுகி வந்தனர். சிவனடியார்கள் எண்ணிறந்தோர் இவர்பால் வந்து அமுதுண்டு மனமகிழ்ந்தனர். **அடியார்களின் முன்னே தம்மை மிகச் சிறியராய் வைத்து ஒழுகி வந்த காரணத்தால்** உலகில் இவர் சிறுத்தொண்டர் என்று வழங்கப்பெற்றனர். அந்நாளில் இறைவரருளால் நிறை தவத்தினையுடைய இவருக்குத் திருவெண்காட்டு நங்கைபால் **சீராளதேவர்** என்னும் திருமைந்தர் அவதரித்தனர். அவர் அவதரித்த மகிழ்ச்சியினால் நகரமுழுதும் பெருஞ் சிறப்புக் கொண்டாடப் பெற்றது. அம்மைந்தர் பெருஞ் சிறப்புடன் எல்லாச் சடங்குகளும் செய்யப் பெற்று ஐந்து வயதாகிய உரியபிராயத்தில் கலைகள் பயிலப் பள்ளியினில் அமர்த்தப் பெற்று வளர்வாராயினர்.

அந்நாளில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமருகல் நகரில் வரக்கேட்டுச் சிறுத்தொண்டர் ஓடிச் சென்று பணிந்து, அவரை வேண்டித் தமது பதிக்கு அழைத்து வந்து தமது திருமனையில் வைத்து உபசரித்தனர். அவர் பாடியருளிய திருப்பதிகத்தில் சீராளதேவரையும் தம்மையும் வைத்துப் பாராட்டும் பேறு பெற்றனர்.

இவ்வாறு இவர் செய்துவந்த திருத்தொண்டு திருக்கயிலை அத்தர் திருவடிக்கீழ்ச் சார்வாயிற்று. இவருடைய மெய்த்தன்மை யன்பு நுகர்ந்தருளுதற்கு இறைவர் தாமே பயிரவச் சங்கமத் திருவேடம் தாங்கி இங்கு எழுந்தருளி வருவாராயினர்; அவர் கொண்டெழுந்தருளிய **பயிரவ வேடமாவது;** தம் நீண்ட சடையினையே காளமேகச் சுருள்போலக் கருங் குஞ்சியாகக் கொந்தளமாகப் பரப்பினர்; அம்மேகத்தினிடையே விளங்கும் விண்மீன்கள் போலத் தும்பை மலர்களை இடையே செருகினர்; சடையில் அணிந்த இளம்பிறையினைச் சிறுமதியாக்கியது போலத் திருநுதலிற் திருநீற்றுப் பொட்டு விளங்கிற்று; சூரியமண்டலமும், சந்திர மண்டலமும் அக்கினி மண்டலமும் உடன் அணைந்தது போலக் காதில் சங்குக் குழையினிடையே செவ்வரத்த மலரினைச் செருகினர்; கழுத்தில் உள்ள விடத்தினை மறைத்த அமுதக் குமிழிகள் போலப் பளிங்குமணி வடத்தினைக் கழுத்தில் அணிந்தனர்; மேற்கடலிற் குளித்த செங்கதிரவனைப் புடைசூழும் இருள்போலச் செம்மேனிமேல் கரிய கரியுரிப்போர்வையே கஞ்சுகமாக ஆயிற்று; அன்பர்களின் அன்பே அவர் திருமேனியில் பல இடத்திலும் விளைந்தன என்னும்படி சன்ன வீரம், ஆரம், கைச்சரி, இடைச்சரி, காற்சரி இவைகள் விளங்கின; இவர் அன்பர்க்கு அருள்புரிய வரும் திறங்கண்டு அன்பின்வழி நில்லுங்கள் என்று உலகினரை அழைத்ததுபோல மறைச்சிலம்புகள் காலில் ஒலித்தன; பிரம கபாலத்தினை ஏந்திய இடத் திருக்கையினால் திரிசூலத்தினை விளங்க அணைத்தனர்; வலத்திருக்கையில் உடுக்கையினைப் பிடித்து ஒலி செய்தனர்; திருமுகத்தில் முறுவல் நிலவெறித்தது; இவ்வாறாகிய திருவேடத்துடன் உலகம் அன்பு தழைத்தோங்கி ஏத்தும்படி தமிழ்நாட்டுத் திருச்செங்காட்டங்குடியிற் சேர்ந்தருளினர்.

மிக்க பசியுடையவர் போல வழியிற் கண்ட சனங்களைச் சிறுத்தொண்டர் மனை எங்கே? என்று கேட்டு விரைவில் வந்து, "தொண்டர்க்கு எந்நாளும்சோறு அளிக்கும் தொண்டனார் இவ்வீட்டினுள் உள்ளாரோ?" என்று வினவினர்; சந்தனத் தாதியார் புறத்து வந்து "அவர்

அடியாரைத் தேடிப் போனுர்; தேவரீர் மனையினுள்ளே எழுந்தருளுநர்'' என்றார். அதற்கு அவர் ''பெண்கள் இருந்த இடத்தில் நாம் தனியே புகுதமாட்டோம்'' என்று மறுப்பவர் போலக் காட்டத், திருவெண்காட்டு நங்கையார் முன்வந்து மனையில் எழுந்தருளியிருக்க வேண்டினர். அதற்கு, ''நாம் உத்தராபதி யுள்ளோம்; சிறுத்தொண்டரைக் காண வந்தோம்; அவரில்லாமல் இங்கு இரோம்; கணபதீச்சரத்தில் ஆத்தியின் கீழே இருப்போம்; அவர் வந்தால் நாமிருக்கும் தன்மையினைச் சொல்லுவீர்'' என்று சொல்லிச், சென்று, திருவாத்தியின் கீழ் அமர்ந்தருளினர்.

அடியவரைத் தேடிப்போன சிறுத்தொண்டர் அடியார் எவரையும் காணப் பெறாது மீண்டு மனையில் வந்து மனைவியார்க்குரைத்து மயங்கி நிற்ப, அவர் பயிரவர் வந்த தன்மையினைச் சொல்லக் கேட்டுச், சென்று, திருவாத்தியின் கீழ் இருந்த பயிரவரைக் கண்டு பணிந்து நின்றனர். அவர், அவரை நோக்கி ''நீரோ பெரிய சிறுத்தொண்டர்?'' என்று கேட்க, ''அடியேன் அடியார் முன் நின்று துதிக்கவும் தகுதியில்லேன்; ஆனாலும் அடியார்கள் கருணையினால் அப்பெயருடையவன் நான் என்று சொல்வார்கள்'' என்று கூறித் தொழுது, ''இன்று அமுது செய்விப்பதற்காக அடியார்களை இப்பதியில் எங்குத் தேடியும் காணவில்லை; தவப்பயனாகத் தேவரீரைக் கண்டேன்; அடியேன் மனையில் எழுந்தருளி அமுது செய்தருள வேண்டும்'' என்று விண்ணப்பித்தனர். அதுகேட்டு அவர், ''நிகழும் தவமுடையீரே! நாம் உத்தராபதியோம்; உம்மைக் காண வந்தனம், எம்மைப் பரிந்தூட்ட உமக்கு முடியாது'' என்றார்; சிறுத்தொண்டர் அதுகேட்டு ''எவ்வாறாயினும் தேவரீரை அமுது செய்விக்க அடியேனால் இயலும். தேவரீர் அமுது செய்யும் இயல்புதனைக் கடிதமைக்க உரைசெய்யுங்கள்'' என்று சாலவும் வேண்ட, அவர் ''தொண்டரே! மூவிருது கழித்தால் பசுப்படுத்து உண்போம்; அதற்குரிய நாளும் இன்றேயாம்; நாம் உண்பது நரப்பசு; ஒரு குடிக்கு ஒரு மகனாய் ஐந்துவய துள்ளவனாய் உறுப்பில் மறு இல்லாதவனாய் உள்ள மகனைத் தம் முன் உவந்து தாய்பிடிக்கத் தந்தை அரிந்து சமைத்த கறி நாம் உண்பது என்றார்; ''அதுவும் அடியேனால் இயையும், தேவரீர் அமுதுசெய்யப் பெற்றால்'' என்று கூறி, விடைபெற்று மனையிற் போந்து மனைவியாருக் கறிவித்தனர். அவரும் இசையச், சென்று, சீராள தேவரைப் பள்ளியினின்று கொண்டுவந்து மஞ்சனம் ஆட்டிக் கோலஞ் செய்து, இறைவர் பணித்தவாறே கறி சமைத்து அவர்பால் சென்று, வணங்கி, யறிவித்துத், தாழாது அமுது செய்ய எழுந்தருள வேண்டினர். அவரும் எழுந்தருளி வர, மனை யலங்கரித்து, ஆசனத்தமர்த்தி, முறையாற் பூசனைகள் செய்து, முக்காலியின் மேல் வெண்டுகில் விரித்து, அதன்மேல் பரிகலம் வைத்து, அவர் பணித்தவாறே கறியமுதும் செஞ்சாலிச் சோறும் கறிவகைகளும் எல்லாம் ஒக்கப்படைத்து அமுது செய்யும்படி வேண்டினர்; அவர் அப்போது ''நமக்குத் தனி உண்ண ஒண்ணாது; உடன் உண்ண அடியாரை அழைத்து வாரும்'' என்றார்; அது கேட்டுத் தொண்டனார் போய்த் தேடிக் காணாமையால், மீண்டு வந்து பணிந்து, வேறு அடியார்களைக் காணாமையால் தாமும் திருநீறிடுந் தன்மை பற்றித் தம்மையே அடியாராகக் கொள்ளும்படி குறிப்பிக்க, அவரும் இசைந்து, பணித்தபடி, அம்மையார் அமுது படைக்க, உண்ணப் புகுந்தனர். அப்போதில், அவர் தடுத்து, ''மைந்தனைப் பெற்றீரேல் எம்முடன் உண்ண அழையுங்கள்'' என்று கூற, அவன் இப்போது இங்கு உதவான் என்று தொண்டனார் சொல்ல, ''அவன் வந்தாலே நாம்

உண்பது; நாடி யழையும்" என்று ஆணையிட, அவ்வாணையின்படியே நாயனாரும் மனைவியாரும் மனைப்புறம் போய் மகனாரை அழைத்தனர். உடனே, சீராளதேவர் பள்ளியினின்றும் ஓடிவருவார் போல எதிரே ஓடி வந்தனர். அவரை நங்கையார் எடுத்து அணைத்துக் கணவனார் கையிற் கொடுப்பத், தொண்டர் அமுதுசெய்யப் பெற்றோம் என்னும் பொலிவாற் களிகூர்ந்து அன்பரை அமுது செய்விப்பதற்காக மகனாரைக் கொண்டு விரைந்து உள்ளே வந்தனர். அதன் முன் பயிரவர் மறைந்தருளினர். பரிகலத்திற் படைத்த இறைச்சிக் கறியமுது வகைகளும் காணப்படவில்லை. அடியார் எங்கே ஒளித்தனர் எனத் தேடிப் புறத்தே அணைந்தனர். மறைந்த அவர் தாம் உமையம்மையாரோடும், முருகப்பெருமானோடும், வெள்ளைவிடையின்மேல் ஆகாய வீதியிற் காட்சி கொடுத்தருளக் கண்டுகளித்து வீழ்ந்து வணங்கினர். அவ்வாறு வணங்கித் துதித்துநின்ற தொண்டனார், மனைவியார், நீடுமகனார், தாதியார் இவர்கள் என்றும் பிரியாதே இறைஞ்சியிருக்க இறைவர் தம்முடன் சிவலோகத்தே கொண்டு சேர்ந்தருளினர்.

கற்பனை:

1. சிறுத்தொண்ட நாயனாரது இயற்பெயர் பரஞ்சோதியார் என்பது. இவ்வாறு அவ்வவர்களது உண்மைத் தன்மைப் புலப்பட இயற்பெயரமைவது பெரியோராந் தன்மை யுடையோர்களது சிறப்பு; திண்ணனார் - புனிதவதியார் - மங்கையர்க்கரசியார் முதலிய திருப்பெயர்கள் காண்க.

2. தமக்குபகாரமாக, உள்ளநிலைக்கலைத் துறைகளாகிய நூற்கலையும் ஏற்றதொரு தொழிற்கலையும், பிற உயிர்களுக்கு உபகாரமாக ஆயுள்வேதக்கலை முதலிய பிறிதொரு கலையும் கற்கவேண்டியது யாவருக்கும் கடமை; இங்குப் பரஞ்சோதியார் பிறர் பொருட்டு ஆயுள்வேதக் கலையும், தம்பொருட்டு வடநூற்களையும், படைக்கலத் தொழிலும், பரி கரிப் படைத்தொழிலும் கற்று விளங்கினர் (3662).

3. உள்ளநிறை கலைத்துறைகள் எல்லாவற்றுலும் தெள்ளி வடித்தெறிந்த பொருள்சிவன் கழலிற் செறிந்த அன்புடைமையே யாம். அதனைச் செலுத்தி யுய்த்தி தேடும் ஒழுக்கமாவது அரன்பணியும் அடியார் பணியுமேயாம் (3663-3664).

4. பரஞ்சோதியார் அரசனிடம் சேனைத் தலைமை பூண்டு களிற்றுப்படை செலுத்திப் பகையரசர் பலரையும் வென்று வடபுலத்து வலிய **வாதாவிப்** போரிலும் வெற்றிகொண்டு தமது அரசனுக்குச் சிறப்பு வருவித்தனர். இஃது உலகியல் **ஆண்மையாகிய வீரம்.** அஞ்சாநெஞ்சு படைத்த அவரே சிவனடியார்களைப் பணிந்து உபசரித்து அமுதூட்டி அவர்கள் முன் தம்மை மிகச் சிறியரா யடைந்தார். அதனால் சிறுத்தொண்டர் எனப் பெயர் பெற்றார். இஃது அன்பினியலில் அடியார்பாற் காணும் வீரம்; "வீர மென்னால் விளம்புந் தகையதோ?" உலகினியலில் வீரம் வேண்டும்; அஃது சிவன் அடிமைப் பண்பில் பணிதல் வேண்டும்; (3664-3665-3672.)

5. சிவன் றிருத்தொண்டு வாய்த்த வலியுடைய தொண்டர்களை இவ்வுலகில் மாறுகொண்டு எதிர்த்து நிற்பார் இல்லை (3666).

6. சிவனடியார்களை உலகியல் நிலையில் ஏவல் கொள்ளுதல் தகாத செயல் (3667).

7. கற்புநெறி வழுவாது இல்வாழ்க்கை நடத்தி உலகியலில் இல்லறம் பேணுவோர் நன்மக்கட் பேறு பெறவும் கன்னியை மணஞ்செய்து கொள்க என்று வேத முதலிய அறநூல்கள் விதிக்கும். அவை உலகியல் அறங்களேயாம்; இங்குப் பரஞ்சோதியார் அவற்றுடனே கூடி, அவற்றினுக்கும் மேலாகிய சிவதருமங்கள் செய்யவும், வேதகாரணரடியார் வேண்டிய மெய்ப்பணி செய்யவும் தீதில் குடிப்பிறந்த திருவெண்காட்டு நங்கையம்மையாரை மணந்துகொண்டனர். இஃது இல்லறத்தின் உயர்ந்த குறிக்கோள் (3671).

8. காதன் மனைக்கிழத்தியாரும் தாமும் கருத்தொன்ற வரும் பெருமை நீதி மனையறம் புரியும் நீர்மையே மிகச் சிறப்புடையது (3671).

9. நாடோறும் சிவனடியார்களை விதி முறைப்படி இனியவாறு அன்புடன் முன்னே திருவமுதூட்டிப் பின்னே தாம் உண்ணும் நியதியினைக் கொள்ளுதல் சிறந்த சிவதருமமாம். அதுவே வீடு பயப்பிக்கும் நெறியாம் (3672).

10. சிவனடியார்களின் முன்பு கூசிமொழிந்து மிகச் சிறியராய் அடைந்தொழுகுதல் முறை. இஃது உலகியற் பெரியாராகிய சிறுத்தொண்டர் (3675) காட்டிய நெறி. அதனாலே அவர் சிறப்புப் பெற்றுப் "பெரிய சிறுத்தொண்டர்" எனப்பட்டார்.

11. கற்புடைய மனைவியே மனையறத்தின் **வேராகி** விளங்குபவர். (3676).

12. சிவனருளினாலும் சிவ தருமங்களும் அடியார் பணியும் செய்த நலத்தினாலும் நன்மகப்பேறு வாய்க்கும்; மானக்கஞ்சாறனாரும், சிவநேசரும் நன்மகப் பேறு பெற்ற நிலைகள் கருதத்தக்கன. "அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தரனடியார்க், குரிய வருச்சனை யுலப்பில செய்தவந் நலத்தால்..... பெண்கொடி யுதித்தாள்" (2939); "கூத்தனா ரருளாலே, இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் கொடுஞ் சூழல், பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்" (876).

13. உலகில் மகப்பேறு பெறுவார் அப்பாசத்திற் பட்டுப் பிறப்பு இறப்புக்களுள் வந்துழலுவர். ஆனால் சிறுத்தொண்டர் பெற்ற மகப்பேறு அவரது பந்தமறவும் குடும்பத்துடன் வீடுபெறவும் ஏதுவாயிற்று; "தம் பந்தமற வந்தவரை" (3681).

14. ஆளுடைய பிள்ளையாரை வணங்கித் திருமனையில் உபசரித்து அவரது அருளுக்கும், பாராட்டுதற்கும் உரியவராகப் பெறும்பேறு முன்னைத் தவமுதிர்ச்சியால் வீடுபெறும் தகுதியுடைய சீவன் முத்தருக்கே வாய்க்கப் பெறுவதொன்றாகும். (3682 - 3683).

15. சிறுத்தொண்டரும் சீராள தேவரும் இறைவர்பாற் பெரும்பேறு பெற உள்ள நிலைமையினை முற்குறிப்பாக ஆளுடைய பிள்ளையார் தமது திருவாக்கினால்

ஆசிபுரிந்தருளினார். இது பெரியோரின் தன்மை. "பொடிநுகரும் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக், கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே" "சீராளன் சிறுத்தொண்டன் செங்காட்டாங் குடிமேய, பேராளன்" (தேவா).

16. அடியார்களின் அன்புச் செயல்கள் மிக்கபோது அந்தப் பக்குவ நோக்கி **அவ்வன்பினை நுகர்ந்து** அருள்புரியும் பொருட்டு அரன் தாமே வெளிப்பட்டு வந்தருள் புரிவர்.

17. பயிரவச் சங்கமத் திருவேடம் சிவனடியார் திருவேடங்களுள் ஒன்று.

18. அடியார்களின் அன்பின் திறத்தினை உலகறிய வெளிப்படுத்துதற்குச் சிவபெருமான் புரியும் அருளின் வகைகள் அளப்பிலவாம். அவை அவ்வவர் திறத்துக் கேற்றபடி அமைவன; திருக்குறிப்புத் தொண்டர்பால் கந்தையினைக் கழுவக்கொடுத்த செயலும், திருநீலகண்டருக்கு ஓடு கொடுத்ததும், இயற்பகையார்பால் மனைவியாரைக் கொடுக்கக் கேட்டதும், கண்ணப்பர்பால் கண்பற்றிய நினைவருளியதும் ஆக அவ்வவர்க்கேற்ற நிலைபற்றி அமைவதுபோலவே, ஈண்டு மகனைக் கறியாக்க இறைவர் கேட்ட செயலுமாம். இவை உலகியற் பாசநிலை பற்றி யாராயப் படுவனவல்ல.

19. திருத்தொண்டர்களின் செயல் இறைவரருள் வழிப்படும் நிலைகளை வன்றொண்டு என்றும், மென்றொண்டு என்றும் இருவகையாகக் கூறுவது திருக்களிற்றுப் படியார். அவற்றுள் சிறுத்தொண்டர் செயல் பிறருக்கரியதாகிய வன்றொண்டின்பாற் படுமென்று வகுத்தனர்.

20. மக்கள்மே லாசை என்பது மிகவலியபாசம்; அதனை அறுத்து வெல்லுதல் யார்க்கும் அரிது; இயல்பான காரணங்களால் மகனை இழக்க நேர்ந்தாலும் உயிர்விடும் மாக்களும் உளர். ஈண்டுத் தாயரும் தந்தையும் மகனை மனமுவந்து தாமே அரிந்து கறியமுதாக்கியது **செயற்கரிய** பெருஞ் செயலாம்.

21. மாதர்கள் இருக்குமிடத்தில் ஆண்மக்கள் தனி புகுதலாகாது என்பது நம் நாட்டின் உலகியல் அறநூல் விதியும் மரபுமாம். (3697)

22. இறைவருக்கும் அடியாருக்கும் ஆக்கும் திருவமுதுப் பொருள்களையும் பிற பொருள்களையும் எவ்வாற்றானும் முகர்தல் முதலாகவேனும் அனுபவித்தல் கூடாது. (3720)

23. அடியாராகிய பெரியோர்கள் மற்றும் சிவனடியார்களுடனன்றித் தாம் திருவமுது தனியுண்ணார்கள்.

24. இல்லறத்தில் வாழ்வோர் அடியார்க்கமுதூட்டுதல் முதலிய அடியார் பணி அரன்பணிகளைக் கணவன் மனைவியிருவரும் தம்மில் மனமுவந்து கருத்தொன்றிச் செய்தல் வேண்டும்.

25. இல்லறத்தில் நிற்போர்பால் திருவமுதுண்ணும் அடியார்கள் அவ்வில்லற முடையாரின் மைந்தரையும் அவ்வில்ல முடையவரையும் உடனிருத்தி உண்ணுதலும் மரபு.

26. சிறுத்தொண்டரும், மனைவியாரும் பயிரவர் சொற்படி அழைத்தபடி, சீராள தேவர் மீள உயிர் பெற்று ஓடிவரக் கண்டபோது, எடுத்து அணைத்துக் களி கூர்ந்தனர்; ஆனால் தமது மகனை மீளப்பெற்றதன் பொருட்டன்றி, அத்தொண்டர் உண்ணப் பெற்றேம் என்னும் பொலிவால் மகிழ்ந்தனர்; முன்னர் மகனைக் கறியாக்கிய போதும் அடியார்க்குத் திருவமுதுக்கு இம்மைந்தன் உதவினன் என்று மகிழ்ந்தனர்; உலகில் மக்கள் தமது உயிர்ச்சார்பு பொருட் சார்புகளை யெல்லாம் தம்பொருள் என்று பற்றி நோக்காது, அவை அரனுடைமையே - அரனடியாருடைமையே யாவன என்று கருதி வாழ்தல் விதிமுறை.

27. உமையம்மையாரோடும் சரவணத்துத் தனயரோடும் வந்தருளிச் சிறுத்தொண்டருக்கும் குடும்பத்துக்கும் தாதியருக்கும் இறைவர் திருவருள் புரிந்து, உடனிறைஞ்சி யிருக்கும் பேறு நல்கியருளினர். இது சிறுத்தொண்டரது **பெருந்தனிச் சிறப்பு.**

தலவிசேடம்: **திருச்செங்காட்டாங்குடி** - III - பார்க்க.

குறிப்பு: பைரவவிரதம் - சிவாகமங்களில் இவ்விரத நாட்கள் சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி என இரண்டும் குறிக்கப்பெற்றுள்ளன. இவை ஆறு மாதத்துக் கொன்றாக அமைந்துள்ளதும், இப்புராணத்துள் வந்த பயிரவர் ஆறு திங்கட் கொருமுறை நாம் உண்போம் என்றதும், சித்திரைப் பரணியே சிறுத்தொண்ட நாயனார் திருவடிபெற்ற நாளாதலும், அந்நாளில் திருச்செங்காட்டங்குடியில் "அமுது படை" என்று விளக்கமாக அறியப்பட்டு நிகழும் இவ்வரலாற்று விழாவும் கருதுக.

"விரும்பும் புதல்வனை மெய்யரிந் தாக்கிய வின்னமிர்தம்
அரும்பும் புனற்சடை யாயுண் டருளென் றடிபணிந்த
இரும்பின் சுடர்க்**களிற் றன்சிறுத் தொண்டனை** யேத்துதிரேற்
சுரும்பின் மலர்த்தமி ழாகரன் பாதத் தொடர்வெளிதே"

-11-ம் திருமுறை-ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி-72

சிறுத்தொண்ட நாயனார் புராணம் முற்றும்

ஆறும் பகுதி முற்றியது

சிவமயம்

இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள, நம்பியாரூரர் பாடிய ஏழாம் திருமுறைத் தேவாரப் பதிகங்கள்

வ. எண்	தலம்	பதிக முதற்குறிப்பு	சிறப்புக் குறிப்புகள்	பக்க எண்
1.	திருக்கோளிலி	நீள நினைந்தடியேன்	நட்டராகம் (ஆள் வேண்டிப் பாடியது)	44
2.	திருநாட்டியத்தான்குடி	பூணாணாவ	தக்கராகம்	62
3.	திருவலிவலம்	ஊனங்கத்துயிர்	தக்கேசி	67
4.	திருப்புகலூர்	தம்மையே	கொல்லி	75
5.	திருப்பனையூர்	மாடமாளிகை	சீகாமரம்	78
6.	திருநன்னிலத்துப் பெருங்கோயில்	தண்ணியல்	பஞ்சமம்	81
7.	திருவீழிமிழலை	நம்பினார்க்கு	சீகாமரம்	85
8.	திருநறையூர்ச் சித்தீச்சரம்	நீரும்மலரு	குறிஞ்சி	87
9.	திருஅரிசிற்கரைப்புத்தூர்	மலைக்கு மகள்	இந்தளம்	89
10.	திருவாவடுதுறை	மறையவனொரு	தக்கேசி	91
11.	திருவிடைமருதூர்	கழுதை குங்குமந்	தக்கேசி	93
12.	திருநாகேச்சரம்	பிறையணி	பஞ்சமம்	95
13.	திருக்கலய நல்லூர்	குரும்பை முலை	தக்கராகம்	97
14.	திருச்சோற்றுத்துறை	அழனீரொழுகி	கௌசிகம்	103
15.	திருமழபாடி	பொன்னார் மேனியனே	நட்டராகம்	105
16.	திருவானைக்கா	மறைகளாயின	காந்தாரம்	108
17.	திருப்பாச்சிலாச்சிராமம்	வைத்தனன்	தக்கராகம்	113
18.	திருப்பைஞ்ஞீலி	காருலாவிய	கொல்லி	117
19.	திருப்பாண்டிக் கொடுமுடி	மற்றுப்பற்றென்	பழம்பஞ்சுரம்	123
20.	திருவெஞ்சமாக் கூடல்	எறிக்குங்கதிர்	கொல்லிக் கௌவாணம்	139
21.	திருக்கற்குடி	விடையாரும்	நட்டராகம்	143
22.	திருப்புறம்பயம்	அங்கமோதி	கொல்லி	146
23.	திருக்கூடலையாற்றூர்	வடிவுடை	புறநீர்மை	154
24.	திருமுதுகுன்றம் I	நஞ்சியிடை	கொல்லிக் கௌவாணம்	161
25.	திருமுதுகுன்றம் II	மெய்யை முற்ற	தக்கேசி ('நம்பி' என்ற திருப்பதிகம்)	163
26.	கோயில் (தில்லை)	மடித்தாடு	குறிஞ்சி	169
27.	திருக்கருப்பறியலூர்	சிம்மாந்து	நட்டராகம்	172
28.	திருப்பழமண்ணிப்படிக்கரை	முன்னவன்	நட்டராகம்	175
29.	திருவாழ்கொளிப்புத்தூர்	தலைக்கலன்	தக்கேசி	176
30.	திருக்கானாட்டு முள்ளூர்	வள்வாயமதி	கொல்லிக் கௌவாணம்	180
31.	திருஎதிர்கொள்பாடி	மத்தயானை	இந்தளம்	183
32.	திருவேள்விக்குடியும் திருத்துருத்தியும்	மூப்பதுமில்லை	நட்டராகம் (முதல் முறை பாடியது)	185

33.	திருமுதுகுன்றம்	பொன்செய்த	நட்டராகம் (திருவாரூரில் குளக்கரையில் நின்றபடி முதுகுன்றரைப் பாடியது)	200
34.	திருவாரூர்	பாறுதாங்கிய	கொல்லி ('நமக்கடிகளாகிய அடிகள்' என்ற பதிகம்)	208
35.	திருநள்ளாறு	செம்பொன்மேனி	தக்கேசி	213
36.	திருக்கடவூர்த் திருமயானம்	மருவார் கொன்றை	பழம்பஞ்சுரம்	215
37.	திருக்கடவூர்	பொடியார் மேனியனே	நட்டராகம்	216
38.	திருவலம்புரம்	எனக்கினி	காந்தாரம்	218
39.	திருவெண்காடு	படங்கொணாக	இந்தளம்	220
40.	திருநனிபள்ளி	ஆதியன்	பஞ்சமம்	222
41.	திருநின்றியூர்	திருவும் வண்மையும்	தக்கேசி	223
42.	திருக்கோலக்கா	புற்றில்	தக்கேசி	229
43.	திருக்குருகாவூர் வெள்ளடை	இத்தனையா	நட்டராகம்	240
44.	திருக்கழிப்பாலை	செடியேன்	நட்டராகம்	244
45.	திருக்கழுக்குன்றம்	கொன்றுசெய்த	நட்டபாடை	254
46.	திருக்கச்சூர் ஆலக்கோயில்	முதுவாயோரி	கொல்லிக் கௌவாணம்	265
47.	திருக்கச்சி மேற்றளி	நுந்தா வொண்சுடரே	நட்டராகம்	274
48.	திருவோண காந்தன்றளி	நெய்யும் பாலுந்	இந்தளம்	278
49.	திருக்கச்சி அனேக தங்காவதம்	தேனெய்	இந்தளம்	282
50.	திருவன்பார்த்தான் பனங்காட்டூர்	விடையின்மேல்	சீகாமரம்	285
51.	திருக்காளத்தி	செண்டாடும்	நட்டராகம்	289
52.	சீபர்ப்பதம்	மானும்மரை	நட்டபாடை	291
53.	திருக்கேதாரம்	வாழ்வாவது	நட்டபாடை	292
54.	திருவொற்றியூர்	பாட்டும்பாடி	குறிஞ்சி	300
55.	திருவாரூர்	பத்திமையும்	பழம்பஞ்சுரம் (திருவொற்றியூரிற் பாடியது)	379
56.	திருவொற்றியூர்	அழுக்கு மெய்	தக்கேசி	386
57.	(வட) திருமுல்லைவாயில்	திருவுமெய்ப்	தக்கேசி	393
58.	திருவெண்பாக்கம்	பிழையுளன	சீகாமரம்	397
59.	திருவாலங்காடு	முத்தாமுத்தி	பழம்பஞ்சுரம்	402
60.	திருக்கச்சியேகம்பம்	ஆலந்தானுகந்	தக்கேசி	409
61.	திருவாரூர்	அந்தியும்	புறநீர்மை	413
62.	திருஆமாத்தூர்	காண்டனன்	கொல்லிக் கௌவாணம்	416
63.	திருநெல்வாயிலரத்துறை	கல்வாயகிலும்	இந்தளம்	419
64.	திருவாவடுதுறை	கங்கைவாழ்	தக்கேசி	423
65.	திருத்துருத்தியும் வேள்விக்குடியும்	மின்னுமா	காந்தாரம்	428
66.	திருஆரூர்ப் பரவையுண் மண்டளி	தூவாயா	பஞ்சமம்	433
67.	திருவாரூர்	குருகுபாய	கொல்லி	438
68.	திருவாரூர்	மீளாவடிமை	செந்துருத்தி	442
69.	திருப்புன்கூர்	அந்தணாளன்	தக்கேசி	535

சிவமயம்

பாட்டு முதற்குறிப் பகராதி



பன்னிரு திருமுறை ஆய்வு மையம்,

கற்பகம் உயர்கல்விகலைக்கழகம், கோயம்புத்தூர்.